
ஸ்ரீ :

ஸ்ரீமதே லக்ஷ்மீ ஹயக்ரீவாய நம:

ஸ்ரீயை நம :



அரசாணிபாலை

வெங்கடாத்வரி ஸ்வாமி அருளிய

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

கோயில், சப்தம், வங்கீபுரம்,

வீராபுரம் சடகோபாசாரியர்

இயற்றிய

ரத்நப்ரபா என்னும் உரையுடன்

ஸ்ரீ ரங்கநாத பாதுகா

முன்னுரை

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தை இயற்றியவர் வேங்கடாத்வரி என்பவராவர். 1590 – 1660 A. D. காலத்தவர். வேங்கடாசார்ய தீக்ஷிதர் எனவும் வழங்கப்பட்டார். காஞ்சியை அடுத்துள்ள அரசாணிபாலை என்ற ஊரில் பிறந்தவர். இவர் முன்னோர்களும் இவரும் காஞ்சியில் யதோக்தகாரி ஸந்நிதியைச் சுற்றிலும் வாழ்ந்து வந்தனர். இன்றும் இவர் வழியினர் அகம் அங்குள்ளது. "காஞ்சீபுரவாஸ்தவ்யஸ்ய" என இவர் விச்வகுணாதர்ச சம்புவின் முடிவுரையில் கூறியுள்ளார்.

இவர் பாட்டனார் ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர். இவர் 'ஸர்வப்ருஷ்ட:', 'அப்தோர்யாம:' 'வாஜபேய:' என்ற யாகங்களைச் செய்தவர். இவர் தந்தை ரகுநாத தீக்ஷிதர். 'ச்லேஷயமக சக்ரவர்த்தி'' என்ற விருது பெற்றவரிவர். இவர் தாய் ஸீதாலக்ஷ்மி. இவர்கள் பரம்பரை யாகம் செய்த பரம்பரை. அதனாலேயே தீக்ஷிதர் என்ற விருதையும் பெற்றனர். யாகம் செய்த இடம் என்ற பொருளுடைய "யாகசாலை" என்ற சொல் அரசாணிபாலையில் ஓரிடத்திற்கு இன்றும் வழங்கப்படுகிறது. அந்நாள் அங்கு நட்ட 'யூபஸ்தம்பம்' என்னும் கற்கம்பம் இன்றும் காட்சி தருகிறது. 'அஸ்தோகாத்வரி, கவிகித்வன்மணி, வாதிஹம்ஸாம்புதம்' என்பன போன்ற விருதுகளைப் பெற்றது இவர் குலம். ஆத்ரேய கோத்திரத்தினர். தர்க்கம் வ்யாகரணம், மீமாம்ஸை, வேதாந்தம், ஜோதிடம், மந்த்ர சாஸ்த்ரம் போன்ற பல பல கலைகளைக் கசடறக் கற்றவர் வேங்கடாத்வரி.

இயற்றிய நூல்கள்

நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை இவர் இயற்றியுள்ளதாக இவர் வழியினர் கூறுகின்றனர். அவற்றுள் பெரும்பாலனவற்றின் பெயரே தெரியவில்லை. "ஆசார்ய பஞ்சாசத், ச்ரவணாநந்தம், யாதவராகவீயம் தாமே செய்த உரையுடன், சுபாஷித கௌஸ்துபம், விச்வகுணாதர்ச சம்பூ, உத்தர சம்பூ, வரதாப்யுதய சம்பூ, ப்ரத்யும்நாநந்த நாடகம், லக்ஷ்மீ ஸஹஸ்ரம் என்பவை அச்சேறியுள்ளன. நம்மாழ்வார் இயற்றிய 'திருவாய்மொழி' என்ற ஆயிரம் பாசுரங்களையும் வடமொழியில் மாற்றியதாகவும் அவற்றுள் 'ஒரு நாயகமாய்' என்ற பாசுரத்தின் மாற்றலாகிய

"லோகம் புஷ்கல மேகநாயக தயா லே சாஸிதாரோந்ருபா:
ச்யாமாங்கேந சுநாப்ரதஷ்டசரணா: தேபிந்த பிக்ஷாகடா: 1
அஸ்மிந் அத்மதி ஸார்வபௌமிகதயா பிக்ஷாமடந்தி ஸ்வயம்
ஸ்ரீ நாராயண பாதஸேவந ரதா: போபோ: ஸமுத்ஞ்ஜ் ''தாம் 11

என்பது மட்டும் கிடைக்கின்றதென்பர்.

அரசவைப் புலவர்

அந்நாளில் இந்தியாவை ஆண்டுகொண்டிருந்த முகலாய அரசனது அவையில் தலைமைப் புலவராக வீற்றிருந்தாரென்பது இவர் வாக்காலேயே அறியலாகிறது. "நாயே கவிகளின் கொட்டத்தை அடக்குவதிலும், வாதிகளின் கர்வத்தை பங்கம் செய்வதிலும், அரசவையில் மிடுக்குடன் வீற்றிருப்பதிலுமே வாழ்நாள்களைக் கழித்தேன்! உன்னைப் புகழ்க்கவில்லையே, வாயார உன் புகழ் பாடவில்லையே", என்பன போன்ற பல செய்யுள்களை இந்நூலில் பல இடங்களில் அமைத்துள்ளார்.

தீர்த்த யாத்திரை என்ற பெயரில் இந்தியா முழுவதும் சுற்றினாரென்பதும், ஆங்காங்கிருந்த அக்கால அரசர்களால் மிகவும் போற்றப்பட்டார் எனவும் தெரிகிறது.

கர்ண பரம்பரைக் கதைகள்

டில்லி பாதுஷா பூசணிக்காயைத் துளைத்து அதனுள் பொற்காசுகளை இட்டு மூடி இவருக்கு வெகுமதியாக வழங்க அதைப் பெற்றுத் திரும்பும்போது எதிர்ப்பட்ட ஒருவர் இதென்ன என அதற்கிவர் "சாகாய வாஸ்யாத் லவணாய வாஸ்யாத்" என்றாராம். சமைத்தால் சாப்பிடும் கறியாயிற்று, விற்றால் உப்பு வாங்க உதவிற்று என்றார். இதைக் கேட்டவர் பாதுஷாவிடம் அப்படியே கூற, பாதுஷா இவரைத் திரும்பவும் அழைத்து எமது வெகுமதியைப் பற்றி என்ன சொன்னீரென வினவ, உடன்

"தில்லீச்வரோ வா ஜகதீச்வரோ வா மநோரதாந் பூரயிதும் ஸமர்த்த: I அந்யேந கேநாபி ந்ருபேண தத்தம் சாகாய வாஸ்யாத் லவணாயவாஸ்யாத் II" என்றேசொன்னாராம்.

உலகுக்கெல்லாம் தலைவனான பரம் பொருளோ, டில்லிக்கு அரசனோ தான் மக்கள் மனோரதங்களைப் பூர்த்தி செய்யும் வல்லமை வாய்ந்தவராவர். ஏனைய அரசர்களால் அளிக்கப்படுவது கறியமுதுக்காகவோ, உப்புக்காகவோ ஆகும் என்றேயென்பது இதன் பொருள். இவரது சமயத்துக்கேற்ப விளக்கம் தரும் புத்தி நுட்பத்தைக் கண்டு வியந்து மேலும் வெகுமதியளித்தனனாம்.

எப்போதும் கவிகளைப் புனைந்து கொண்டிருந்த இவரிடம் இவர் மனைவி ஒருகால் என்னைப் பற்றியும் ஒரு கவி பாடுங்களேன் என வினவ, உடனிவர்

"இந்திவர தல விசால லோசநா மேருமந்தர ஸமாந
மத்யமா I
அர்க கஞ்சுபவ கோமலஸ்தநீ வ்ருத்த வாதர முகீ விராஜதே II

என பாடித் தந்தாராம். புளிய மரத்தின் இலை போன்று பரந்து நீண்ட கண்களையும், மேரு மலை, மந்தரமலை போன்ற இடுப்பையும் நன்கு முற்றி உலர்ந்த எருக்கன் காய் போன்று மென்மையான கொங்கைகளையும், கிழக்குரங்கின் முகம் போன்ற முகத்தையும் பெற்றுப் பொலிவுடன் விளங்குகிறாய் என்பதிதன் பொருள். இப் படிப் பல கதைகள். விரிவுக்கஞ்சுகிறோம்.

லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

இவரது விச்வகுணதர்ச சம்பூ மிகப் புகழ் பெற்றது. அதில் க்ருசாநு, விச்வாவசு எனுமிரண்டு பாத்திரங்களைப் படைத்தார். இவ்விருவரும் ஊரூராகச் சுற்றுவர். க்ருசாநு ஊரிலுள்ள குறை களைக் கூறுவன். விச்வாவசு ஆங்குள்ள நிறைகளைக் கூறுவன். இவ் வகையில் நூலமைந்துள்ளது. இப்படி வருணித்துக் கொண்டு வரும் போது திருவேங்கடத்தை (திருப்பதியை) க்ருசாநு குறை கூறுவ தாக வருணித்ததும் இவரிரண்டு கண்களும் தெரியாமற் போயின. பின் ஸ்ரீநிவாஸ்மஹிஷியைப் பற்றி ஆயிரம் செய்யுள் கொண்ட இந்நூலை இயற்றி இழந்த கண்களைப் பெற்றனரென்பர் பெரி யோர்.

இதன் உட்பிரிவுக்கு "ஸ்தபகம்" என்பது பெயர். ஸ்தபகம்—பூங்கொத்து. இருபத்தைந்து ஸ்தபகங்கள். ஸ்வாமி தேசிகன். இருபத்தைந்து ச்லோகங்களால் ஸ்ரீயைத் துதித்திருப்பதால் ஒவ் வொரு ச்லோகத்துக்கு ஒவ்வொரு ஸ்தபகம் என இருபத்தைந்து ஸ்தபகங்களைப் படைத்தாரோ இவரெனத் தோன்றுகிறது. இந் நூலை தினமும் பாராயணம் செய்வது-படிப்பது-லக்ஷ்மீயை அர்ச் சிப்பது போலாம் என்ற கருத்தில் ஸ்தபகம் என்ற பெயரை இட் டுள்ளார் போலும். இவர் மந்திரத்தில் வல்லுநராதலின் லக்ஷ்மீயை வசம் செய்யத் தக்க மந்திரத்திலுள்ள எழுத்துக்களைத் தக்க இடங் களிலமைத்து இந்நூலை இயற்றியுள்ளாரென்பர். இதனைப் பாராயணம் செய்து நன்மை பெற்றவர் பலராவர். ஸ்வாமி தேசிகன் பாதுகா ஸஹஸ்ரத்தில் ஒவ்வொரு பத்ததியிலும் ச்லோகங்களை அநுஷ்டுப் என்னும் வ்ருத்தத்திலும் இடை யிலுள்ளவைகளைப் பல வ்ருத்தங்களிலும் அமைத்திருப்பதுபோல் இவரும் தமது ஸ்தபகங்களில் அவ்வாறே அமைத்துள்ளார். ஸ்ரீ தேசிகனைப் போன்றே இடையில் காகாசுரன் வரலாறு, அரக்கி களின் கொடுமை போன்ற ராமாயண வரலாறுகளை அமைத்து லக்ஷ்மீயின் தயையை வருணிக்கின்றார். இந்நூலிலுள்ள மங்களச் ச்லோகங்களுள் ஸ்வாமி தேசிகனுக்கெனவுள்ள மங்கள ச்லோகத் தைப் படிப்பவர் ஸ்வாமி தேசிகனிடம் இவருக்குள்ள பக்தியின் மேன்மையை நன்கறிவர். இவைகளால் இந்நூலை இயற்றும்போது

பாதுகா ஸஹஸ்ரத்தின் பாணி நிழலாடியதென்பது தெற்றென விளங்குகின்றது.

அபரதேசிகன் எனச் சொல்லத் தக்கவராலியற்றப்பட்டதும் பல்வகைகளில் சிறப்புற்றதுமான இதற்குப் புல்லறிவினனான அடியேன் உரை எழுதத் துணிவது மிகவும் ஸாஹஸமான செயலாம். இருப்பினும் அன்பர்களின் அன்புமிக்க ஆணையால் கட்டுண்டவனாய் ஆசார்யன் திருவடியிணைகளின் துணை கொண்டும் உலகத்தாயான லக்ஷ்மீ அவள் குழந்தையான அடியேன் மழலை மொழியைக் கேட்டு மகிழ்வளேயன்றி சீற்றம் கொள்ளாள் என்ற துணிவு கொண்டும் இதை எழுதத் துணிந்தேன்.

ஸம்ஸ்க்ருதம் அறியாதவரும் இதை எளிதில் புரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை முக்கியமாகக் கொண்டு தமிழ் மொழியையே பயன்படுத்தியுள்ளேன். இன்றியமையாத கருத்துக்களன்றி பிற கருத்துக்கள் விரிவுக்கஞ்சி புறக்கணிக்கப்பட்டுள்ளன. இதில் மனிதருக்கு இன்றியமையாத குணமாகிய மறதியாலும், நிறைந்த அறிவின்மையாலும் பல பிழைகள் இருக்கலாம். அவைகளை அடியேனுடையவனவாகக் கொண்டு குணமிருப்பின் அவற்றை ஆசார்யர்களுடையனவாகக் கொண்டு பிழை பொறுத்து நூலைப் படித்து பயன் பெற வேண்டுகின்றேன்.

श्रीः

पद्मावतीसमेत श्रीनिवासपरब्रह्मणे नमः

श्रीमते हयग्रीवाय नमः

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

ரத்நப்ரபா என்னும் உரையுடன்

ப்ராரம்ப ஸ்தபகம்

अञ्जनाद्रि शिरोरत्नं अञ्जनाभमहर्निशम् ।
कञ्जालयाञ्चितोरस्कं कलये कलिनाशनम् ॥

संश्रये सततं श्रेष्ठां श्रीनिवास प्रियां दयाम् ।
यत्कटाक्षेङ्गितं दृष्ट्वा करोति सकलं प्रभुः ॥

श्रीशैलवंशकलशोदधिपूर्णचन्द्र
श्रीवासतातपितृभ्रातृकृपासमन्नम् ।
श्रीतातयार्यं निजतातपदाब्जभृङ्गं
नारायणार्यमखिलं विबुधं प्रपद्ये ॥

दीक्षितस्य शठारातेः वंशीशान्वय जन्मनः ।
व्याख्या पद्मासहस्रस्य विबुधानां मनोहरा ॥

इति निश्चित्य सहसा यते चापल चोदितः ।
नाहं तत्फलभागीस्यां प्रेरकः श्रीनिधिर्यतः ॥

आदौ पदपदार्थोक्तिः पश्चाद्भावविवर्णनम् ।
ततो गूढार्थविवृतिः इति रीत्या विलिख्यते ॥

नामूलं लिख्यते किंचित् नानपेक्षितमुच्यते ।
प्रतिज्ञा मल्लिनाथीया सादरं पाल्यतेऽपि च ॥

"मंगलादीनि मंगलमध्यानि मंगलान्तानि शास्त्राणि प्रथन्ते" என்பது ஆலங்காரிகர்களின் கொள்கை. ஒருவர் காவ்யம் இயற்றத் துவங்கினால் நூலின் முதலிடை கடைகளில் மங்கள ச்லோகம் செய்யவேண்டும் என்பர் பெரியோர். மேற்கொண்ட செயல் விக்நமின்றி முடிவதற்கு மங்கள ச்லோகம் ஆவச்யகம் என்பது கவிமரபு. இந்த ச்லோகத்தைப் பின்புள்ளவர்களுக்குப் பாடமாக அமையவேண்டும் என்ற கருத்தால் நூலின் முகத்தில் அமைப்பது சிஷ்டாசாரப்ராப்தம். ஸ்ரீநிவாஸ மஹரிஷியை இக்கவி இந்நூலில் துதிக்கப் போகின்றாராதலால் ஸ்ரீநிவாஸனைப் பற்றிய மங்கள ச்லோகத்தைத் துவங்குகின்றார்.

लक्ष्मीचरण राजीव लाक्षालक्षित वक्षसे ।
विश्वसर्गादि लीलाय वेङ्कट ब्रह्मणे नमः ॥ १ ॥

லக்ஷ்மீ சரணராஜீவ லாக்ஷாலக்ஷித வக்ஷஸே |
விச்வ ஸர்காதி லீலாய வேங்கட ப்ரஹ்மணே நம: ||

லக்ஷ்மீ—லக்ஷ்மியினுடைய
சரணராஜீவ—திருவடித்தாமரையின்
லாக்ஷா—செம்பஞ்சுக் குழம்பினால்
லக்ஷித—களங்கமாக்கப்பட்ட
வக்ஷஸே—மார்பையுடையவரும்
விச்வ—உலகில்
ஸர்காதி—படைத்தல் காத்தல் அழித்தல்களை
லீலாய—விளையாட்டாகக் கொண்டவரும்
வேங்கட ப்ரஹ்மணே—திருவேங்கட மலையில்
வாழ்பவருமான பரம் பொருளுக்கு
நம:—நமஸ்காரம்
பவது—ஆகட்டும்.

திருப்பாற்கடலில் தோன்றியவுடன் நாராயணன் திருமார்பை அடைந்த போதோ, ப்ரணய கலஹகாலத்திலோ மஹாலக்ஷ்மியின் தாமரை போன்ற திருவடிகளில் பூசப்பட்ட செம்பஞ்சுக் குழம்பு அவன் மார்பில் பட்டிருக்குமல்லவா ? அதையே ஸ்வரூப நிரூபக தர்மமாகக் கொண்டவனும் நம் போன்ற சேதநர்களிடம் கொண்ட அபார கருணையில் நான்முகன் ருத்ரன் முதலியவர்களுள் அநுப்ரவேசித்து - புகுந்து - உலகைப் படைத்து அழித்து அழியாச் செல்வமாம் மோக்ஷம் என்றும் உயர் ஸ்தாநத்தைக் கொடுத்துக் காப்பவனும் மாம்ஸக் கண்ணினர்களான நம் போன்றோருக்கும் ஸேவை ஸாதித்து அநுக்ரஹிக்கத் திருவேங்கடமலையில் எழுந்தருளி இருப்பவரும் பரம் பொருளுமான ஸ்ரீநிவாஸனுக்கு நமஸ்காரங்கள் உண்டாகுக என்பது கருத்து.

பரம்பொருள் நம் கண்களுக்குப் புலப்படாதது. வேதத்தைக் கொண்டே அதை அறியவேண்டும். வேதம் பரம்பொருளை விளக்கும் போது என்றும் அழியாததும், அறிவு வடிவானதும், தேசத்தாலும் காலத்தாலும் அளவிட முடியாததுமாக எது இருக் கின்றதோ அது பரம் பொருள் என்கின்றது. இவ் விதம் விளக்கப்படும் தன்மைகள் ஸ்வரூபநிரூபக தர்மங்கள் எனப்படும். இத்தர்மங்களுள் ச்ரிய: பதித்வம் - இலக்குமிக்கணவனானமை - என்பது ஒரு தர்மம். இத்தர்மத்தையே ‘அகலகில்லேன் இறையு மென்றலர் மேல் மங்கையுறைமார்பா’ என ஆழ்வார் போற்றிப் பேசினார். இந்த தர்மத்தை விளக்குவது முதலடி.

விச்வஸர்காதி என்பது உலகைப் படைத்துக் காத்துத் துடைப்பது ஒரு விளையாட்டு என்பதன் மூலம் எனது தடங்கல்களைப் போக்குவதைச் சொல்லவும் வேண்டுமோ என்கின்றது. வேங்கட ப்ரஹ்மணே என்பது குணம் விபூதி முதலியவற்றில் மிக உயர்ந்த மேன்மையை பெற்றபகவான் நம் போன்ற சேதநர்களைக் காப்பதற்காகவும் அவரவர் வேண்டும் வரங்களை வழங்குவதற்காகவும் திரு வேங்கட மலையில் அர்ச்சா வடிவமாக அவதரித் துள்ளாள் என்பதால் எனது மனோரதமான லக்ஷ்மீ ஸஹஸ்ர நூலைப் பூர்த்தி செய்ய வல்லவன் என்பது விளக்கப்படுகிறது. இந்நூலைப் படிப்பவரின் விருப் பத்தை இந்நூல் நிறைவேற்றும் என்பதும் இதனால் விளக்கப்படுகிறது. ‘பகுஸ்தபகபாசுர: ஸ்தவநவ ஸ்வஸ்தரு: என்பதால் இந்நூல் முடிவில் இக்கருத்தை கவியும் விளக்கியுள்ளார்.

உபமாலங்காரம் முதலியவை அர்த்தத்தை அடிப்படையாகக் கொண்டவை. அநுப்ராஸம் முதலியவை சப்தத்தை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால் ச்லேஷை என்பது சப்தம் அர்த்தம் என்றுமிரண்டையும் அடிப்படையாகக் கொண்டது. கவி இந்நூலில் ச்லேஷாலங்காரத்தை மிகுதியாகக் கைப்பற்றப் போகிறார். எனவே ச்லேஷை அணியில் திவ்ய தம்பதிகள் விஷயமாக மற்றுமோர் மங்களம் இயற்றுகிறார்.

असदृशमरुणाब्जदृशं प्रस्विन्नपयोधर स्फुरन्मूर्तिम् ।
मनसि दधीमहि सततं मातारं मातरं च लोकानाम् ॥

அஸத்ருச மருணாப்ஜ த்ருசம்
ப்ரஸ்விந்நபயோதரஸ்புரந்மூர்த்திம் ।
மநஸி ததீமஹிஸததம்
மாதாரம் மாதரஞ்ச லோகாநாம் ॥

இந்த ச்லோகம் நாராயணனையும் லக்ஷ்மியையும் சிலேடையில் துதித்து வணங்குவதாக அமைந்துள்ளது. எனவே இரண்டு பொருள்கள் தனித்தனியாக எழுதப்படுகின்றன. முதலில் நாராயணனைப் பற்றியது.

அஸத்ருசம்—ஒப்பற்றவரும்
அருண—சூர்யனையும்
அப்ஜ—சந்திரனையும்
த்ருசம்—கண்களாகக் கொண்டவரும்
ப்ரஸ்விந்ந—ஜலம் நிறைந்த
பயோதர—மேகம் போல்
ஸ்புரத்—விளங்கும்
மூர்த்திம்—திருமேனியை உடையவரும்

லோகாதாம்—மூன்று உலகங்களையும்

மாதாரம்—(த்ரிவிக்ரமாவதாரத்தில்) அளந்தவருமான நாராயணனையும்.

இனி லக்ஷ்மியைப் பற்றிய பொருள்

அ—நாராயணனுக்கு
ஸத்ருசம்—ஒப்பானவளும்
அருண—சிவந்த
அப்ஜ—தாமரை போன்ற
த்ருசம்—கண்களையுடையவளும்
ப்ரஸ்விந்ந—பால்பெருக்கையுடைய
பயோதர—கொங்கைகளால்
ஸ்புரத்—விளங்கும்
மூர்த்திம்—திருமேனியை உடையவளும்
லோகாதாம்—மூன்று உலகங்களுக்கும்
மாதரம்—தாயுமான மஹாலக்ஷ்மியையும்
ஸததம்—எப்போதும்
மநஸி—மனதில்
ததிமஹி—த்யானிப்போம்

மூன்று உலகங்களிலும் தமக்கு ஒப்பான புருஷர்கள் இல்லாதவனும் சூர்ய சந்திரர்களைத் தமது கண்களாகக் கொண்டவனும், நீருண்ட மேகம் போன்ற நிறத்தவனுமான ஸ்ரீமந்நாராயணனையும், ஸ்ரீமந்நாராயணனுக்கென்றே தோன்றியவளும், சிவந்த தாமரை போன்று மகிழ்விக்கத்தக்க கண்களை உடையவளும், மூவுலகங்களையும் காக்க வல்ல பால் பெருக்குடைய கொங்கைகளை உடையவளுமான லக்ஷ்மியையும் இடைவிடாது மனதில் த்யானம் செய்வோம்.

'மாதாரம்' என்பது 'மா மாநே' என்ற தாதுவின் த்ருஜந்தமான உருவம். அளப்பவன் என்பது பொருள். மூவுலகங்களையும் அளந்த வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட சப்தம்.

அஸத்ருசம் என்பதை ஒரே சொல்லாகவும் அ+ ஸத்ருசம் எனப் பிரித்தும் பொருள் கொள்ள வேண்டும். அப்ஜம் என்ற சொல்லுக்கு நீரிலிருந்து தோன்றியது என்பது பொருள். தாமரை நீரில் தோன்றுவது கண்கூடு. சந்திரன் பாற்கடலில் தோன்றியவன் என்பது புராண வரலாறு.

பய: என்னும் சொல் நீரையும் பாலையும் குறிக்கும். அவற்றைத் தாங்குவது - தரிப்பது - பயோதரமாம். எனவே பயோதரசப்தம் மேகத்தையும் கொங்கைகளையும் குறித்தது.

கவிகாளிதாஸன் தாம் இயற்றிய ரகுவம்ச மஹா காவ்யத்தில் 'ஜகத: பிதரௌ வந்தே பார்வதீ பரமேச்வரௌ' என்ற அடியால் வேதத்தில் சொல்லப்படாத உலகத் தாய் தந்தையாம் தன்மையை பார்வதி பரம சிவன்மீது ஏறிட்டுக் கூறினான். உலகத்தாய் தந்தை விஷயமாக மங்களம் இயற்ற வேண்டுமெனில் இப்படியல்லவா அது அமைய வேண்டும் என்று அவனுக்கு வழிகாட்டுவது போலவும் உள்ளது இந்த ச்லோகம். 2

இனித்தாம் இயற்றவிருக்கும் காப்பியம் முழுவதிலும் லக்ஷ்மியை வர்ணிக்கப் போவதைக் காட்டவும் அவள் மீதுள்ள தமது ஆதரத்தை வெளிப்படுத்தவும்

லக்ஷ்மிக்கு மட்டும் தனித்ததோர் மங்களமருளிச் செய்கிறார்.

प्रातरम्बुजविडम्बिलोचनां मातरं त्रिजगतामुपास्महे ।
शीतरम्य करुणावलोकनैः यातरङ्गयति मंगलानि नः ।।

ப்ராதரம்புஜ விடம்பி லோசநாம்
மாதரம்த்ரிஜகதாம் உபாஸ்மஹே ।
சீதரம்ய கருணாவலோகநை:
யாதரங்கயதிமங்களாநி ந: ॥

ப்ராத:—விடியற்காலத்தில் (அப்போதலர்ந்த)
அம்புஜ—தாமரையை
விடம்பி—அநுஸரிக்கின்ற
லோசநாம்—கண்களை உடையவளும்
த்ரிஜகதாம்—மூவுலகங்களுக்கும்
மாதரம்—தாயுமான லக்ஷ்மியை
உபாஸ்மஹே—த்யாநம் செய்வோம்
யா—மிக்கப் புகழ்வாய்ந்த எந்த இலக்குமியானவள்
சீத—தாபத்தைப் போக்குவதும்
ரம்ய—மனதை மகிழ்விக்கத்தக்கதுமான
கருணா—க்ருபையால் நனைந்த
அவலோகநை:—கடாக்ஷங்களால்
ந:—அவள் குழந்தைகளான நமக்கு
மங்களாநி—மங்களங்களை
தரங்கயதி—அலைகள் போல் மேன்மேலும் வளர்க்கின்றாளோ.

விடியற்காலையில் சிறிது மலர்ந்த தாமரை போன்ற கண்களை உடையவள் லக்ஷ்மி. உலகிலுள்ள மக்கள் யாவரையும் தம் குழந்தைகளாகப் போற்றிக் காக்கும் தன்மை வாய்ந்தவள். மங்கள தேவதை

என்று புகழப் பெற்றவளவள். அவள் கடாக்ஷம் தயை நிரம்பியது. அக்கடாக்ஷத்துக்கு எவர் இலக்காகின்றனரோ அவர் தம் துன்பமாம் தாபத்திலிருந்து விடுபடுவர். க்ரீஷ்மருதுவில் நடுப்பகல் வெயிலில் மிகவும் துன்பப்பட்டவர்க்குத் தாமரை நிறைந்ததொரு குளம் கிடைத்தால் அதில் அமிழ்ந்து தாபம் தீர்ந்து எத்தகைய மனமகிழ்ச்சியை அடைவாரோ அத்தகைய மனமகிழ்ச்சியைப் பெறுவர் அவள் கடாக்ஷம் பெற்றவர். இத்தகைய லக்ஷ்மி நமக்கு மங்களங்களைத் தருபவளாகட்டும்.

நன்கலர்ந்த தாமரை மிகுந்த பரப்பைப் பெற்றிருக்கும்; வெயிலில் வாடியிருக்கும்; அதனால் அதன் செம்மை குறைந்திருக்கும்; அப்போதலர்ந்தமலர் இவற்றுக்கெல்லாம் நேரிடையாக இருக்கும். தேன் நிறைந்திருக்கும். நன்கலர்ந்த தாமரை போன்ற பெரிய கண்கள் அழகை அளிக்காதல்லவா ? அதிலும் பெண்ணுங்களுக்குக் கேட்க வேண்டுமோ. எனவே 'ப்ராதரம்புஜ' என்றார்.

அலை மேன்மேலும் ஓயாது வந்து கொண்டிருப்பது போல் லக்ஷ்மியின் கடாக்ஷம் அளவற்ற நன்மைகளை விளைவித்துக் கொண்டே இருக்கும் என்பது உட்கருத்து. 3

ஸ்ரீ குண வர்ணனம் செய்ய இழிந்தவிவர் அதற்கு வேண்டிய அறிவு வளமும், அவ்வப்போது புத்தம் புதிய கருத்துக்கள் தோன்றுவதற்கு வேண்டிய 'ஸ்பூர்த்தி' என வழங்கப்படும் அறிவு மேன்மையும்

பெறுவதற்கு ஆசார்யாநுக்ரஹம் இன்றியமையாத தாகையால் அதை ப்ரார்த்திக்கின்றார்.

आचक्रायुधमाच मामकगुरोः आचार्यवर्गं भजे
मध्यस्थैरिह नाथयामुनमुखैः मान्यैः सनाथीकृतम् ।
क्षीराम्बोधिसुतापयोधर पयःपूराइव उदित्वराः
यद्वाचो विसराः जगंति नितरां उज्जीवयन्ति स्वयम् ॥

ஆசக்ராயுதம் ஆசமாமககுரோ:
ஆசார்யவர்கம் பஜே
மத்யஸ்த்தைரிஹ நாதயாமுந
முகை: மாந்யை: ஸநாதீ க்ருதம் ।
க்ஷீராம்போதி சுதா பயோதர
பய:பூரா இவோதித்வரா:
யத்வாசாம்விஸரா: ஜகந்தி
நிதராம் உஜ்ஜீவயந்தி ஸ்வயம் ||

உதித்வரா:—(நூல்வடிவில்) தோன்றியுள்ள
யத்—யாதொரு ஆசார்யர்களது
வாசாம் விஸரா:—ஸரஸ்வதியின் ப்ரவாஹங்கள்
க்ஷீராம்போதி சுதா—பாற்கடல் மகளான லக்ஷ்மியினுடைய
பயோதர—கொங்கைகளின்
பய:பூராஇவ—பால் பெருக்குகளைப் போல
ஜகந்தி—உலக மக்களை
ஸ்வயம்—(அவர்கள் வேண்டுகோளின்றித்) தாமாகவே
நிதராம்—மிகவும்
உஜ்ஜீவயந்தி—(தத்வஹித புருஷார்த்தங்களை வெளியிட்டு) பிழைக்கச் செய்கின்றனவோ
மத்யஸ்தை:— ஆசார்யபரம்பரையின் நடுவிலிருப்பவர்களும்
மாந்யை:—உலகத்தாரால் பூஜிக்கத்தகுந்தவர்களுமான

நாதயாமுந முகை:—நாதமுநிகள், ஆளவந்தார், ஸ்ரீ பாஷ்ய காரர், தேசிகர் முதலியவர்களாம்

ஸநாதீக்ருதம்—மேன்மை பெற்றதாயிற்றோ (அத்தகைய)

ஆசார்யவர்கம்—ஆசார்யபரம்பரையை

ஆசக்ராயுதம்—நாராயணன் தொடங்கி

ஆசமாமகஞரே:—எனது நேரிடை ஆசார்யன் வரை

இஹ—இந்த க்ரந்தத்தை ஆரம்பிக்கும் ஸமயத்தில்

பஜே—ஸேவிக்கின்றேன்.

ஆசார்யர்களை துதிக்க இழிந்தவிவர் அவர்கள் செய்த ஸதுபதேசங்களடங்கிய நூல்களைப் போற்றுகின்றார் அவற்றின் வழியாகவே அவர்களுக்குப் பெருமையாதலால். அவர்களை நாம் இழந்து பலபல வருஷங்கள் ஆயினும் அவர்கள் உபதேசங்கள் இன்றும் நம்மை வாழ்விக்கின்றன. அவைகளைப் புகழ்ந்தாலே ஆசார்யர்கள் புகழ்ந்தவராவர். தமது ஸாக்ஷாத் ஆசார்யனை துவக்கமாகக் கொண்டதும் நாதமுனிகள் முதலானவர்களை இடையில் கொண்டதும் ஸ்ரீமந் நாராயணன் வரை உள்ளதுமான ஆசார்யபரம்பரையை ஸேவிக்கின்றேன் என்கின்றார்.

உலகிலுள்ள மனிதர்களுள் சிலரை ஸத் என்றும் சிலரை அஸத் என்றும் சொல்லுகிறோம். இப்படிச் சொல்ல அடிப்படை யாது என்பதை 'அஸந் நேவ ஸ பவதி, அஸத் ப்ரஹ்மேதி வேதசேத், அஸ்தி ப்ரஹ்மேதி சேத்வேத, ஸந்தமேநம் ததோவிது:' என்கின்ற பகுதியால் உபநிஷத்து விளக்குகிறது. பரம்பொருள் இல்லை என எண்ணுபவன் அஸத் ஆவான். அப்படி எண்ணுபவனே அஸத் என்றால் அப்படிச் சொல்லுபவனைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ! பரம்

பொருள் உளது என நினைப்பவன் ஸத் ஆவான் என்பது உபநிஷத்தின் கருத்து.

இவ்வெண்ணத்தைத் தான் பெறுவது எப்படி யெனில் தத்வ ஹித புருஷார்த்தங்களைத் தெளிவாக விளக்கும் ஸதா சார்ய ஸ்ரீஸூக்திகளைக் கற்றலாலே யாம். ப்ரஹ்ம ஜ்ஞாநத்தைப் பெறுவது கடின மானது. அதை உபதேசிப்பவர்கள் ஆசார்யர்களே. அவர்களிடம் உபதேசம் பெற்று நேர்மையாக நடப்ப வனே ஸத் ஆவான். எனவே ஆசார்யர்கள் மிக வுயர்ந்தவராவர்.

இக்கருத்தைதான் 'க்ஷீராம்போதி என்' திலிருந்து ஸ்வயம் என்பது வரையுள்ள பகுதியால் விளக்கினார்.

'பய: பூரா:' என ஆசார்ய ஸ்ரீ ஸூக்திக்கு உபமான மொன்றும் கொடுத்தார். பால் நாவில் பட்டவுடன் இனிப்பு. குழந்தை முதல் முதியவர் வரை உபயோ கிக்கக் கூடியது. ஸத்வ குணத்தையே வளரச் செய் வது. எத்தீமையையும் விளைவிக்காதது. இத் தகையது நமது ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகள் என்பது உவமையால் கிடைக்கிறது.

மண்ணுலகப் பாலின் பெருமை இஃதெனில் உபமாநமாகக் கொடுக்கப்பட்ட ஜகந்மாதவின் பாலின் பெருமையும் ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகளின் பெருமையும் பேசவும் பெறுமோ.

(தொடரும்)

கவி இந்நூலில் ஸீதையின் சரித்திரத்தை வர்ணிக்கப் போகின்றாராகையால் அதற்கு வழிகாட்டியாய் மிகவும் உபகரிப்ப தான வால்மீகியின் காப்பியமாகிய ஸ்ரீமத் ராமாயணத்தை நமஸ்கரிக்கின்றார்.

भुवन जननीं तुष्टूषन्ती पुरो रसनाधुना
रचयति नमोवाचे प्राचेतसानन जन्मने ।
जनकतनया दिव्योदन्तामृत द्रव वर्षिणीं
जगति कवयः श्राव्यं काव्यं गृणन्त्यवलंब्य याम् ॥

புவந ஜநநீம் துஷ்டூஷந்தீ புரோ ரஸநாதுநா
ரசயதி நமோவாசே ப்ராசேதஸாநந ஜந்மநே ।
ஜநகதநயா திவ்யோதந்தாம்ருத த்ரவ வர்ஷிணீம்
ஜகதி கவய: ச்ராவ்யம் காவ்யம் க்ருணந்தி அவலம்ப்ய யாம் ॥

ஜகதி—உலகில்
கவய:—காளிதாஸன் முதலிய கவிகள்
ஜநகதநயா—ஸீதையின்
திவ்ய—மிக ஆச்சர்யமான
உதந்த—சரித்திரமாகிய
அம்ருத த்ரவ அம்ருத ரஸத்தை
வர்ஷிணீம் —பொழிகின்ற
யாமவலம்ப்ய—எந்த வால்மீகி வகுத்த வழியைப் பின்பற்றி
ச்ராவ்யம்—கேட்பதற்கினிய
காவ்யம்—காவ்யங்களை
க்ருணந்தி—செய்கின்றனரோ
அதுநா—தற்போது
புவநஜநநீம்—உலகத்தாயான லக்ஷ்மியை
துஷ்டூஷந்தீ—துதிக்க விரும்பிய
ரஸநா—நாக்கு
புர: - முதலில்

ப்ராசேதஸ்—வால்மீகியின்
ஆநந—முகத்திலிருந்து
ஜந்மதே—வெளியில் வந்த
தஸ்யைவாசே—அந்த ஸ்ரீமத் ராமாயணத்துக்கு
நம:—நமஸ்காரம் என்ற சப்தத்தை
ரசயதி—ப்ரயோகம் செய்கிறது.

ஸ்ரீமத் ராமாயணத்துக்கு ஆதிகாவ்யம் என்பது பெயர். அதற்கு முன் தோன்றிய காவ்யம் எதுவுமில்லை. "சத கோடி ப்ரவிஸ்தரம்" என்னும்படி நூறு கோடியளவியதாய் ஸத்ய லோகத்தில் ஸ்ரீமத் ராமாயணம் நடையாடிக் கொண்டிருந்தது. அதை மண்ணுலகுக்குக் கொண்டு வர விரும்பிய ப்ரஹ்மா வால்மீகி வாயிலாக, வால்மீகியும் அறியாதே வெளிவரச் செய்தார். "மாநிஷாத" எனத் தொடங்கும் ஸ்ரீமத் ராமாயண ச்லோகம் வால்மீகியின் வாயிலிருந்து திடீரென வெளிவந்தது. இந்த ச்லோகத்தைக் கூறி முடித்தபின் வால்மீகி எப்படி ஏன் என் வாயில் இது வந்ததெனச் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது ப்ரஹ்மா அவர் முன் தோன்றி என் விருப்பத்தாலேயே இந்த ஸரஸ்வதீ—ச்லோகம்—உன் வாயில் வெளிவந்தது. இதை அடிப்படையாகக் கொண்டு ராமாயணத்தை இயற்றுவாயாக என்ற பொருளுடைய "மச்சந்தாதேவ தே ப்ரஹ்மந்" என்ற ச்லோகத்தைக் கூறிப் போந்தார். இக்கருத்தையே 'ப்ராசேதஸாநந ஜந்மதே' என்பதால் கவி வெளிப்படுத்தினார். ஸ்ரீமத் ராமாயணம் ஸீதையின் வரலாற்றையே மிகுதியாக வர்ணிக்கிறதென்பதை 'ஸீதாயா: சரிதம்மஹத்' என்பதால் வால்மீகியே ஸாதித்தருளினார்.

முதல் நூலாகிய இதைப் பார்த்தே பின்வந்த கவிகளெல்லாம் இதன் நடையைப் பின்பற்றித் தாமும் இனிய நூல்களைச் செய்தனர். 'மதுமய பணிதிநாம் மார்க தர்சீ மஹர்ஷி:' என்பதால் போஜனும் இக்கருத்தை வெளிப்படுத்தினன். காவியம் இயற்றவும் ஸ்ரீ விஷயமான ஸ்தோத்ரம் செய்யவும் வழிவகுத்தவர் வால்மீகியாதலால் அவற்றைச் செய்பவரனைவரும் அவரை வணங்க வேண்டுமென்பது உட்கருத்து. 5

லக்ஷ்மி, க்ஷீர ஸமுத்திரத்தில் பிறந்தமை முதலான வரலாறு அவளது எங்கும்பரந்துள்ள-வ்யாபித்துள்ள-தன்மை முதலியவற்றைக் கவிவிளக்கிக் கூறப்போகிறார். இவைகளைப் பராசர முனிவர்

தமது விஷ்ணு புராணத்தில் விவரமாகப் பேசியுள்ளார், அது இவருக்கு வழி காட்டியாய் அமைந்துள்ளது. எனவே அம் முனிவரை வணங்குகிறார்.

पराशर मुनीशितुः प्रणतिकर्म कुर्मस्तरां
अहीन गुण शोभितैः अमृत साधनोत्कण्ठिभिः ।
यदीय कृति सिन्धुना विमथि तेन यत्नात् बुधैः
प्रकाशमिह नीयते परम पूरुष प्रेयसी ॥

பராசர முநீசிது: ப்ரணதிகர்ம குர்மஸ்தராம்
அஹீந குண சோபிதை: அம்ருத ஸாதநோத்கண்டிபி: ।
யதீய க்ருதி ஸிந்துநா விமதி தேந யத்நாத் புதை:
ப்ரகாசமிஹ நீயதே பரம பூருஷ ப்ரேயஸீ ॥

ஸ்ரீ விஷ்ணுபுராணத்துக்கும் ஸமுத்திரத்துக்கும் ச்லேஷையில் அமைந்துள்ளது இந்த ச்லோகம். எனவே இரு பொருள்கள் தரப் படுகின்றன.

அஹீநகுண—(மந்தர மலையைக் கடைவதற்குப் பயன்பட்ட) வாசுகியாகிய கயிறுடன்
சோபிதை:—அழகுடன் விளங்கியவர்களும்
அம்ருத—அம்ருதத்தை
ஸாதந—பெறுவதில்
உத்கண்டிபி:—ஊக்கம் உடையவர்களுமான
புதை:—தேவர்களால்
அவி—மந்தர மலையால்
விமதிதேந—கடையப்பட்ட

(ஸமுத்திரத்திற்குரிய பொருளிது)

அஹீந—பரிபூர்ணமான
குண—காவிய குணங்களால்
சோபிதை:—சிறப்புடன் விளங்குவதும்
அம்ருத—அழிவற்ற மோக்ஷத்தை
ஸாதந—பெறுவதில்
உத்கண்டிபி:—விருப்பமுள்ளவர்களுமான

புதை:—மஹான்களால்
விமதிதே—நன்கு ஆராயப்பட்ட (என்பது நூலுக்குரிய பொருள்)

(இனி பொதுப் பொருள்)

யதீப்க்ருதி—யாதொரு பராசர முனிவின் நூலாகிய விஷ்ணு புராணமென்னும்
ஸிந்துநா—கடலினால்
பரமபூருஷ—பகவானுடைய
ப்ரேயஸீ—மனைவியான லக்ஷ்மி
இஹ—இவ்வுலகில்
யத்நாத் ப்ரகாசம்—மேன்மையுள்ள பிறப்பு, குணம், ஐச்வர் யம், முதலியவற்றுடன் கூடியவளாய் எல்லோருக்கும் விளங்கும்படி
நீயதே—செய்விக்கப்படுகிறளோ
தஸ்ய பராசரமுநீசித்:—அந்த பராசர முனிவருக்கு
ப்ரணதிகர்ம—நமஸ்காரத்தை
குர்மஸ்தராம்—மிகுதியாகச் செய்வோம்.

ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் லக்ஷ்மியின் பிறப்பு அவள் குணம் விக்ரஹம் ஐச்வர்யம் முதலியன பரக்கப் பேசப்பட்டுள்ளன. அம்ருதத்தைப் பெற விரும்பிய தேவர்கள் மந்தர மலையை மத்தாக இட்டுக் கடலைக் கடைந்தனர். பேரறிவு படைத்த மஹான்கள் லக்ஷ்மியின் பெருமைகளாகிற அம்ருதத்தைப் பெற வேண்டி மதியாகிய மலையை இட்டு ஸ்ரீவிஷ்ணுபுராணமாம் கடலைக் கடைவதுபோல் அலசி அலசிப் பார்க்கின்றனர். துர்வாஸரின் சாபத்தால் மறைந்த மஹாலக்ஷ்மி திரும்பவும் வெளிப்படப் பாற்கடல் கடைந்தது எப்படிக் காரணமாக இருந்ததோ அது போல் பலருக்கும் புலப்படாதிருந்த லக்ஷ்மியின் குணம் ஐச்வர்யம் முதலியவற்றின் மேன்மை பலருக்குத் தெரியக் காரணமாயிற்று ஸ்ரீ விஷ்ணுபுராணம். எனவே தற்போது அதனைச் செய்த பராசரரை வணங்குகிறார். 6

லக்ஷ்மி மனிதர்களாகிய நம்போல் ஜீவகோடியில் சேர்ந்த வளே. எனவே அவள் அணுத் தன்மையுடையவளே. விஷ்ணுவைப் போல் எங்கும் பரந்திருப்பவளல்லள் என ஒரு சிலர் கூறுகின்ற னர். அவர்கள் கருத்தை ஸ்வாமி தேசிகன் தமது நூலில் பலவகை களில் ப்ரமாணத்துடன் கண்டித்துள்ளார். கவி இந்நூலில் அக்

கருத்துக்களை அமைத்து ஸ்ரீயைத் துதிக்கப் போகிறாராகையால் ஸ்ரீ தேசிகனை வணங்குகிறார்.

दध्याद्य कुदृष्टि सर्पे गरुडः त्रैय्यन्त विद्यागुरुः
श्रीमान् वेंकटनाथ देशिकमणिः श्रेयांसि भूयांसि नः ।
दत्से दृष्टिवशेन देवि भजतां या त्वं विभुत्वं रमे
तस्या हन्त तवापि येन विभुता सुष्ठु प्रतिष्ठापिता ॥

தத்யாதத்ய குத்ருஷ்டி ஸர்ப கருட: த்ரைய்யந்த வித்யாகுரு:
ஸ்ரீமாந் வேங்கடநாத தேசிகமணி: ச்ரேயாம்ஸி பூயாம்ஸிந:।
தத்ஸே த்ருஷ்டிவசேந தேவிபஜதாம் யா த்வம் விபுத்வம் ரமே
தஸ்யா ஹந்த தவாபி யேந விபுதா ஸுஷ்டுப்ரதிஷ்டாபிதா ॥

குத்ருஷ்டி—நல்லறிவற்றவர்களாகிற
ஸர்ப—(தமது குயுக்திகளாகிய விஷத்தால் ஜகத்தை அழிக்கும்) பாம்புகளுக்கு
கருட:—(கண்டதுமே பாம்புகளுக்கும் பயத்தை விளைவிக்கும்) கருடன் போன்றவரும்]
த்ரையந்த. வித்யா—வேதாந்த வித்யைக்கு
குரு:—ஆசிரியன் (என்ற பொருளுடைய விருதை ஸ்ரீரங்கநாதனால் அளிக்கப்பட்டவரும்)
ஸ்ரீமான்—ஞானம், பக்தி, வைராக்யம் முதலிய செல்வங்களை உடையவரும்
வேங்கடநாத தேசிகமணி:—திருவேங்கடமுடையானின் மறு அவதாரமாகையால் வேங்கட நாதன் என்ற பெயர் கொண்ட ஆசார்ய ச்ரேஷ்டர்

ந:—நமக்கு
பூயாம்ஸி—மிகுதியான
ச்ரேயாம்ஸி—நன்மைகளை
தத்யாத் —அளிப்பவராகுக
ரமே—லக்ஷ்மியே யா த்வம்—மிக்க புகழுடைய நீ
பஜதாம்—உன்னிடம் பக்தி பண்ணியவர்களுக்கு

திருஷ்டிவேத—கடாக்ஷ விக்ஷணத்தாலேயே
விபுத்வம்—பேரரசனாக இருக்கும் தன்மை முதலியவற்றை
ததஸே—அளிக்கின்றாயோ
தஸ்யா: தவாபி—அத்தகைய பெருமை வாய்ந்த உனக்கும்
விபுதா - நாராயணனைப் போல் குணத்தாலும், ஸ்வருபத்தாலும் எங்கும் பரந்திருக்கும் தன்மையை
கஷ்டு — எவராலும் அசைக்க முடியாத வகையில்
ப்ரதிஷ்டாபிதா—அதற்குரிய ப்ரமாணங்களைக் கொண்டு நிலையாக்கப்பட்டதோ
ஹந்த—ஆச்சரியம்.

லோக மாதாவான லக்ஷ்மியும் மனிதர்களான நம்மைப் போன்று ஜீவாத்மா வகுப்பைச் சேர்ந்தவளே. நாராயணனைப் போல் அவளுக்குப் பரமாத்மாவாக இருக்கும் தன்மை கிடையாது. எனவே அவள் அணுவானவள். விபுவாகாள் என் ஒரு சிலர் வாதிடுகின்றனர். அங்ஙனம் அவர்கள் வாதிடுவதற்குக் காரணம் ப்ரமாணங்களில் தெளிந்த அறிவு பெறுமையே. அதனால் சில குயுக்திகளாகிய விஷங்களால் மக்கள் நல்லறிவு பெறவொட்டாது மயக்குகின்றனர். எனவே அவர்கள் போக்கு வக்ரமாக-கோணலாக-உள்ளது. எனவே வக்ரகதியையுடைய பாம்பாக அவர்களை உருவகித்தார். ஸ்வாமி தேசிகன் ச்ருதி, ஸ்ம்ருதி, முதலிய ப்ரமாணங்களைக் காட்டி அவர்களாலும் அசைக்க முடியாத வகையில் வேதம் முதலியவற்றில் ஓதப்பட்ட ஸ்ரீயின் விபுத்வம் முதலியவற்றை நிலை நிறுத்தினார். அவர்கள் கூறும் வாதம் கருடனைக் கண்ட பாம்பு போலாயிற்று. எனவே தேசிகனைப் கருடனாக உருவகித்தார். அத்தேசிகன் நமக்கு நன்மைகளை அளிக்கட்டும் என்கிறார்.

இதில் விபுதா என்பது சப்தச்லேஷை லக்ஷ்மியளிக்கும் விபுத்வம் யாதெனில் தாய், தந்தை, மக்கள், புத்திரர், நண்பர், தநம், தான்யம் என்றிப்படி எல்லாச் செல்வங்களையும் பெற்று குடும்பத் தலைவனாக இருப்பது முதல், பல சிற்றரசர்களைப் பெற்று மாபெரும் பேரரசனாக உள்ளது வரையாகும்.

ஸ்வாமி தேசிகன் அளித்த விபுத்வமாவது லக்ஷ்மி ஜீவனல்லள் நாராயணனைப் போன்று விபுவாய்--எங்கும் பரந்தவளாய் இருப்பவள் என்றும் விபுத்வமாம்.

உன்னடி பணிந்தவர்களுக்கு உனது கடைக்கண் பார்வை

யாலேயே விபுத்வத்தை அளிக்கவல்ல உனக்கு தேசிகன் விபுத்வத்தை அளித்தது ஆச்சரியம் என சப்தச்லேஷையை வைத்துக் கூறுகிறார். ॥ 7 ॥

மங்களங்களைச் செய்து முடித்து இனி துதிக்கப் போவதை ஸ்ரீயிடம் விண்ணப்பிக்கின்றார்.

शीत ज्योतिः शिखरि नगरी सागरांभोधरादेः
जल्पं जल्पं जलधि तनये हन्तमिथ्या समृद्धिम् ।
निर्विण्णामे ननु भगवती भारतीयं त्वदीयं
स्तोत्रं चित्रं स्फुरति जननि स्वैर मारब्धुकामा ॥

ஶீத ஜ்யோதி: ஶிகரி நகரீ ஸாகராம்போதராதே:
ஜல்பம் ஜல்பம் ஜலதி தநயே ஹந்தமித்யா ஸம்ருத்திம் ।
நிர்விண்ணாமே நநு பகவதீ பாரதீயம் த்வதீயம்
ஸ்தோத்ரம் சித்ரம் ஸ்புரதி ஜநநீ ஸ்வைர மாரப்துகாமா ॥

ஶீதஜ்யோதி:—சந்திரன்
ஶிகரி—மலை
நகரீ—பட்டணம்
ஸாகர—கடல்
அம்போ தராதே:—மேகம் முதலியவைகளின்
மித்யாஸம்ருத்திம்—அவைகளுக்கில்லாத குணங்களை ஏறிட்டுப் பொய்யாக
ஜல்பம் ஜல்பம்—துதித்துத் துதித்து
நிர்விண்ணா—தன் பிறப்பே பயனற்றதாக ஆயிற்றென்று எண்ணியவளும்
பகவதீ—பூஜைக்குரியவளுமான
இயம்பாரதீ—எனது இந்த வாக்கு
த்வதீயம்—உனது
சித்ரம்—சொல்லாலும், பொருளாலும் மிக ஆச்சரியத்தை விளைவிக்கும்
ஸ்தோத்ரம்—துதி நூலை

ஆரப்துகாமா ஸ்த்ரீ—ஆரம்பிக்க விரும்பியவளாய்
ஸ்வைரம்—தானாகவே
ஸ்புரதி—ப்ரகாசிக்கின்றாள்.

மகா காவ்யம், கண்டகாவ்யம்-பெருங்காப்பியம், சிறு காப்பியம்-எனக் காவ்யம் இரு வகைப்படும். நகரம், கடல், மலை முதலிய உறுப்புக்கள் யாவும் வர்ணிக்கப்பட்டுள்ள காப்பியம், பெருங் காப்பியமாம் முழு உறுப்புகளும் வர்ணிக்கப்படாது, சில மட்டும் வர்ணிக்கப்பட்டுள்ளவை சிறு காப்பியமாம். வருணனை உயர்ந்த நிலையில் இருக்க வேண்டுமெனின் கருத்துச் செறிவு இன்றியமையாததன்றோ! ஆகவே இயல்பாக இல்லாத தன்மைகளையெல்லாம் ஏற்றிட்டு வர்ணிப்பர் கவிகள். எனவே "மித்யாஸம்ருத்திம்" பொய்புரை என்றார். இப்படிப் பலகால் பலரைப் பலபடிப் புகழ்ந்து பாடியதால் என் பாரதீ-வாக்கு-தன் பிறப்பே பொய் பேசிப் பொய் பேசிப் பிழைத்ததாக ஆகி விட்டதென வருத்தமடைந்துள்ளது. தற்போது அவை யாவற்றையும் விட்டொழித்துச் சொல் பொருள் அலங்காரம் உள்ளுறை பொருள் முதலிய சிறப்பமைந்த உனது தோத்திரத்தைச் செய்ய நினைத்தபோதே பிறர் தூண்டுதலின்றி தாமாகவே நன்கு ப்ரகாசிக்க ஆரம்பித்து விட்டதென்கிறார். நகரம் முதலிய வர்ணனைகளை விட்டு உனது குணகீர்த்தனமான ஸ்தோத்திரத்தையே செய்யப் போகிறேன் என்பது கருத்து.

8

இத்துணை நாள்கள் வயிற்றை வளர்ப்பதற்காகப் பெருந்தீங்கு செயலும் பெரும்புலவர் செய்யத்தகாததுமான நீசர்களைத் துதித்தல் என்ற செயலைச் செய்து வந்த நான் இனி அச்செயலை விட்டு ஸமஸ்த பாபத்தையும் போக்கவல்லதும் ஐஹிகம் ஆமுஷ்மிகம் என்படும் இவ்வுலக மேலுலக நன்மைகளைத் தருவதுமான உனது ஸ்தோத்திரத்தை ஆரம்பிக்கிறேன் என்கிறார்.

मदान्ध क्षोणीपत्यपशद मनः प्रीणन कृते
नमस्कारान् ब्रूमो भगवति चमत्कार वचसे ।
विधात्रीमानन्दं विपुल मिहचामुत्र च तव
स्तुतिं प्रस्तौत्वंहो भरनिरसनायाद्य रसना ॥ (9)

மதாந்த க்ஷோணீபத்யபசத மந: ப்ரீணந க்ருதே
நமஸ்காராந் ப்ரூமோ பகவதி சமத்கார வசஸே ।
விதாத்ரீ மாநந்தம் விபுல மிஹசாமுத்ர ச தவ
ஸ்துதிம் ப்ரஸ்தௌது அம்ஹோபர நிரஸநாயாத்ய ரஸநா ॥

பகவதி—ஞானம் முதலிய ஆறு குணங்கள் நிரம்பியவளே
மத—செல்வம் படைத்த கர்வத்தால்
அந்த—விவேகமற்ற
அபசத க்ஷோணீபதி—நீச அரசர்களின்
மந:—மனதை
ப்ரீணந க்ருதே—மகிழ்விப்பதற்காகச் சொல்லி வந்த
சமத்கார வசஸே—செல்விய வாக்குகளுக்கு
நமஸ்காராந்—வணக்கங்களை
ப்ரூம:—சொல்கின்றோம்
அத்ய—(நல்வினைப் பயனால் உன் தோத்திரத்தைச் செய்ய முனைந்துள்ள) இப்போது
ரஸநா—நாக்கு
இஹ ச அமுத்ர ச—இம்மையிலும் மறுமையிலும்
விபுலம்—மிகுதியான
ஆநந்தம்—ஸந்தோஷத்தை
விதாத்ரீம்—செய்யவல்ல
தவ—உனது
ஸ்துதிம்—ஸ்தோத்திரத்தை
அம்ஹோபர நிரஸநாய—பாபச் சுமை கழிவதற்காக
ப்ரஸ்தௌது—ஆரம்பிக்கட்டும்.

இக்கவி ஓர் முஸ்லிம் அரசனிடம் ஆஸ்தான வித்வானாக இருந்தார். அரசர்கள் பணமதமுடையவர்கள் எனச் சொல்லவும் வேண்டுமோ? அவர் மன மகிழ்ச்சியை உண்டு பண்ணினாலன்றி வெகுமதியளியார். எனவே நீ சந்திரன், இந்திரன் என்றிப்படி அவர்களிடம் சிறிதும் இல்லாத தன்மைகளை எல்லாம் ஏறிட்டுப் புகழ்ந்துதானாக வேண்டும். எனவே இதுவரை நான் செய்து வந்த இத்தகைய செயல்களுக்கு ஓர் நமஸ்காரம் என்கிறார். வாயால் சொல்வது எளிது. அதைச் செயல்முறையில் கொண்டு வர மன உறுதி மிகவும் வேண்டும். உயிரினும் உயர்ந்தது செல்வம் அதுவும் அரசன் மதிப்புக்குரியவனாக இருந்து பெறப்படுகின்றதெனின் அதைவிட எவ்வளவு துணிவு வேண்டும். இத்துணிவு முன்பு ஏன் வரவில்லை? இப்போதெப்படி வந்தது? எனின் கழிந்த நாள்கள் என் தீவினைக்குட்பட்ட நாள்கள். அதனால் என் மதி மயங்கி நீச அரசனையண்டி நின்றேன். எனது பரிசுத்தமான வாக்கை குறைபடுத்தினேன். நீசனைப் புகழ்ந்து பாபச் சுமையைப் பெற்றேன். தற்போது நல்வினை காலம் தொடங்கியுள்ளது. அதனால்தான் அச்செயல்களைவிடத் துணிவு தோன்றியுள்ளது. மேலும் மனைவி மக்கள் வீடு வாசல் முதலிய இவ்வுலக இன்பங்களையும் மோக்ஷமாகிய பேரானந்தமாம் மறுமையையும் தரத்தக்க உனது தோத்திரத்தைச் செய்ய புத்தி இசைந்துள்ளது. எனவே உன்னைத் துதிக்க நீ அருள் என்கிறார். 9

உன் விஷயமான காவியத்தைத் துவங்குகிறேன் என ஸ்ரீயிடம் விண்ணப்பிக்கிறார்.

तत्तादृक् रचना विदग्ध रसना कण्डूति निर्धूतये
केचिन्नीच विचार गोचर गिरः ग्रथ्नन्ति मिथ्याकृतिम् ।
स्वं वाग्ब्रह्म पुराण जिह्मगशिरः कंपावहं पावनी
कर्तुं देवि वयंपुन स्तव कथारंभाय जृंभामहे ॥ (10)

தத்தாத்ருக் ரசநா விதக்த ரஸநா கண்டூதி நிர்தூதயே
கேசித் நீச விசார கோசரகிர: க்ரத்நந்தி மித்யாக்ருதிம் ।
ஸ்வம் வாக்ப்ரஹ்ம புராண ஜிஹ்மகசிர: கம்பாவஹம் பாவநீ
கர்தும் தேவி வயம்புந: தவ கதாரம்பாய ஜ்ரும்பாமஹே ॥

ஹேதேவி—நாராயண மஹிஷியே
கேசித்கவய:—ஒரு சில பெயரிட்டு வழங்கும் தகுதிபெற்ற
கவிகள்
தத்தார்த்ருக்—நிகரற்ற
ரசஜ்ஞா—கவிதை இயற்றுவதில் வல்லமை பெற்ற
ரஸஜ்ஞா—நாக்கின்
கண்டூதி (கவிதை இயற்றுமவிருப்பதாகிய) தினவை
நிர்தூதயே—போக்குவதற்கு
நிர்விசார—மதுபானம் முதலிய நீச காப்பிய உறுப்புகளை
வர்ணிப்பதில்
கோசர—ஈடுபட்ட
கிர:—வாக்கையுடையவர்களாய்
மித்யா—(இயற்கை வர்ணனையை விட்டுச் செயற்கையாக
வர்ணிப்பதால்) பொய்யான
க்ருதிம்—நூலை
க்ரத்நந்தி—தோற்றுவிக்கின்றனர்
(ஆனால்)
வயம்புந:—நாமோ வெனில்
புராணஜிஹ்வக—(வடமொழி இலக்கணத்தில் நல்ல புலமை
பெற்றவரும்) பழமையானவருமான பாம்
பரசான ஆதிசேஷனும்
கிர: ஸம்பாவநாம்—தமது ஆயிரம் தலைகளையும் அசைத்து
நன்று எனப் போற்றத்தக்க
ஸ்வம்—என்னுடைய
வாக்ப்ரஹ்ம—வாக்காகிய ப்ரஹ்மத்தை
பாவநீகர்தும்—பரிசுத்தம் ஆக்குவதற்காக
தவ—உமது
கதாரம்பாய—வரலாற்றை வர்ணிப்பதற்காக
ஆரும்பாமஹே—முயல்கிறோம்.

ஜந்மாந்தரத்தில் செய்த புண்ணிய வசத்தால் ஒரு சில கவி கள் சுவையான காவியங்களைப் படைப்பதற்கு வேண்டிய சக்தி யைப் பெற்றிருந்தபோதும் அச்சக்தியைப் பயன்படுத்தி நற்காப்பி யங்களைச் சமைக்காது கவிதை இயற்றத் துடிக்கும் தமது நாக்கின் தினவைப் போக்கிக் கொள்ள நீச விளையாட்டு, மதுபானம் முத லிய காப்பிய உறுப்புகள் அடங்கிய காவியத்தை அமைக்கின்றனர் நானும் இன்றுவரை அப்படித்தான் இருந்தேன். ஆனால் இப்போது உன்னுடைய க்ருபா கடாக்ஷத்துக்கு இலக்கானேன். அதனால் கெட்ட வழியில் என் வாக்கைப் பயன்படுத்தாது உனது ஸ்தோத்

திரத்தை இயற்றி எனது வாக்கைத் தூய்மையாக்கிக் கொள்ள முனைகிறேன் என்கிறார்.

ஸா இவ த்ருச்யமாநா—தாத்ருக், ஸாசஸாதாத்ருக்ச தத் தாத்ருக் என்பது விக்ரஹவாக்யம் தனக்குத்தானே ஒப்புமை யானது என்ற பொருளையுடைய சொல்.

வாக்குகளும் அநந்தம். ப்ரஹ்மமும் அநந்தம். எனவே வாக்கை ப்ரஹ்மமாக உருவகித்தார். அநந்தமான-முடிவில்லாததான-ப்ரஹ்மத்தோடு அநந்தமான வாக்கைப் பயன்படுத்துதல் தகுதி யுடைத்தென்றதாயிற்று. 10

லக்ஷ்மீ பண்டிதக் கூட்டத்துடன் வாழ்பவளென்றும் தாம் பூரண அறிவில்லாதவனென்றும், அதனால் தாம் அவளைப் பற்றிய காவியமியற்றுவது தகுதியுடைத்தன்று எனவும் அதனால் ஏளனத்துக்குள்ளாகப் போகிறேனென்றும் அவையடக்கம் பேசுகிறார்.

शय्या शब्द गुणानुशासनचणा छन्दोमयं वाहनं
सोदर्यस्तु कलानिधिः तव रमे सूनुश्च वाणीपतिः ।
तस्या स्ते पुरतः स्तवं मितमतिः प्रज्ञोचितं श्रावयन्
गुंजाविक्रयिणः श्रयामि पदवीं माणिक्य पुंजापणे (11)

சய்யா சப்த குணாநுசாஸநசணா சந்தோமயம் வாஹநம்
ஸோதர்யஸ்து கலாநிதி: தவ ரமே ஸூநுச்ச வாணீபதி: ।
தஸ்யாஸ்தே புரத: ஸ்தவம்மிதமதி: ப்ரஜ்ஞோசிதம் ச்ராவயந்
குஞ்ஜாவிக்ரயிண: ச்ரயாமி பதவீம் மாணிக்ய புஞ்ஜாபணே ॥

ரமே—லக்ஷ்மியே
தவ சய்யா—உமது படுக்கையான ஆதிசேஷன்
சப்த எல்லா சொற்களின் குண—தன்மையை
அநுசாஸநசணா—தெரிவிக்கும் வ்யாகரணமான ஸூத்திரங்களை இயற்றியவராவர்.
வாஹநம்—தேவரீர் வாஹநமான கருடன்
சந்தோமயம்—பத்யங்களுக்கு மூல காரணமான சந்தஸ்

எனும் சாஸ்திரமாம் வேதஸ்வரூபி.

ஸோதர்யஸ்து—உடன் பிறந்த சந்திரனோ

கலாநிதி:—கல்விகளின் நிதியானவன்

ஞ்ச—பின்ளையான ப்ரஹ்மாவும்

வாணீபதி:—வாக்குகளின் தலைவியான ஸரஸ்வதியின் கணவன்

மிதமதி:—அல்பஜ்ஞனை அஹம்—நான்

தஸ்யா:தே இத்தகைய புலவர் கூட்டத்திடையே உள்ள உனது புரத:—எதிரில்

ப்ரஜ்ஞோசிதம்—என் அறிவுக்கெட்டிய வரை

ஸ்தவம்—உமது தோத்திரத்தை

ச்ராவயந்—உன்னுடனுள்ள புலவர்களையும் உன்னையும் கேட்பிக்கப் போகிறவனாய்

மாணிக்ய புஞ்ச—நவமணிகளின் குவியல் நிறைந்த

ஆபணே—கடைவீதியில் குஞ்சா—குன்றி மணியை

விக்ரயிண:—விற்பவனது பதவீம்—நிலையை

ச்ரயாமி—அநுஸரிக்கிறேன்

“விசேஷத: ஸர்வவிதாம் ஸமாஜே விபூஷணம் மௌநம் அபண்டிதாநாம்” என்ற முறையில் நன்கு கற்றவர் கூட்டத்தில் அறிவிலிகள் வாய் திறவாது மௌனமாக இருப்பது அவர்களுக்கு அணிகலனும் என்பராகையாலே பண்டித மண்டலம் சூழ்ந்த உமது திருமுன்பே வாய் திறவாதிருப்பதே நன்மை என்கின்றார். பண்டித மண்டலியை ஒவ்வொன்றாக விளக்கிக் காட்டுகின்றார். “சய்யா” எனத் தொடங்கி, சய்யா என்றால் படுக்கை. அறிவற்ற பொருள்களுள் ஒன்றாய் மிகத் தாழ்ந்ததாக இருப்பவைகளுள் ஒன்று படுக்கை, உமது படுக்கையோவெனில் சப்தகுணநு சாஸை மாக உள்ளதென்கிறார். சப்தங்களுக்குக் குணமாவது, பெயர்வினை எனப் பலவாக உள்ள அந்தந்த சொற்களிலுள்ள நிலைபால் முதலியவை இப்படித்தான் அமைய வேண்டும் என ஆணையிடுவதேயாம். இதையே அநுசாஸனமென்பர். ஸம்ஸ்க்ருதத்தில் இப்படியொரு அநுசாஸனம் செய்தவர் பாணிநியாவார். இவர் செய்த சூத்திரங்களே வடமொழிக்குரிய இலக்கணச் சூத்திரங்களாகும். இவர் ஆதிசேஷனின் அவதாரமாகக் கருதப்படுபவர். லக்ஷ்மி ஆதிசேஷனில் உறங்குபவளன்றோ! ஆதலால் உன் படுக்கையே சப்தங்களின் நன்மையை விளக்குவதாக உள்ளதென்கிறார். அறிவற்ற படுக்கையே இத்தகையது எனின் உறவினர்களைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ என்பதாயிற்று.

இதேபோன்று வாஹநத்தின் மேன்மையை விளக்குகிறார், "சந்தோமயம்" என்பதால். பத்யம், கத்யம்-செய்யுள், உரை நடை என இரண்டு வகைகளுண்டு இலக்கியத்தில். இவற்றுள் பத்யம்-செய்யுள் "சந்தஸ்" எனப்படும் யாப்பிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டது அந்த சந்தஸ்ஸே உனது வாஹந மாக உள்ளது என வாஹநத்தின் மேன்மையை விளக்கினார்.

சந்தஸ் என்பதற்கு வேதம் என்ற பொருளுமுண்டு. விருப்பம், வேதம், செய்யுள் எனப் பல பொருள் கொண்ட ஒரு சொல் அது லக்ஷ்மிக்கு வாஹநமாக இருப்பவர் கருடனன்றோ. அக்கருடனை "சுபர்ணோஸி கருத்மாந், த்ருவ்ருத்தேசிர: தஸ்ய காயத்ரீ ச ஜகதி ச பக்ஷாவபவதாம்" என்பன போன்ற வேத வாக்யங்கள் காயத்ரீ ஜகதீ என்னும் இரண்டு சந்தஸ்களும் உனக்கு இரு இறக்கைகளாம். த்ரிவ்ருத் என்பது உனது தலை எனப் புகழ்கின்றன- காயத்ரீ ஜகதீ த்ரிவ்ருத் என்பன வேத சந்தஸ்களாம். எனவே வாஹனமான கருடன் வேதவடிவினனாயினன்.

உடன் பிறந்தவன் பெருமையைப் பேசுகிறார். "கலாநிதி:" என்பதால். அனைத்துக் கலைகளுக்கும் நிதி போன்றவன் என்றதாயிற்று. அம்ருதத்துக்காகப் பாற்கடலைக் கடைந்தபோது சந்திரனும் லக்ஷ்மியுடன் தோன்றியவனாதலால் அவன் இலக்குமிக்கு உடன் பிறந்தவன் ஆயினன். அவன் கலாநிதியாக உள்ளான். சந்திரனிடம் பதினாறு கலைகள் உள. க்ருஷ்ண பக்ஷத்தில் இழந்த கலைகளை சுக்ல பக்ஷத்தில் நாளுக் கொன்றாகப் பெற்று பௌர்ணமியன்று அனைத்து கலைகளையும் பெற்றவனாகின்றான்: இப்படி நாளுக் கொன்றாய் பெறும் பகுதி கலை எனப்படும்.எனவே அவன் கலாநிதியாயினன்.

மகனின் கல்வி மேன்மை பேசப்படுகிறது."வாணீபதி:" என்பதால். உண்மைகளான நான்முகன் வாணிக்கு-சொற்களுக்குப் பதியாக-தலைவனாக உள்ளான் என்கின்றார். வாணீ என்பதற்கு ஸரஸ்வதி என்ற பொருளுமுண்டு. ஸரஸ்வதியின் கணவன் என்பது உண்மைப் பொருள். இப்படி சப்த ச்லேடையில் லக்ஷ்மியைச் சுற்றிலுமுள்ளவர்கள் பண்டிதர்கள் என விளக்கினார்.

இப்படிப் பெரும் புலவர்கள் கோஷ்டியில் அடியேன் விண்ணப்பிப்பது சொல்லாலும் பொருளாலும் அணியாலும் குறையுடைத்தாயிருக்குமென்றும் கூறியது கூறல் குறைபடக் கூறல் முதலாய குற்றங்கள் நிறைந்திருக்குமென்பதும் கருத்து. குஞ்சா-குன்றிமணி

எதற்கும் உபயோகமற்றது. விநாயக சதுர்த்தியன்று செய்யப்படும் மண் பிள்ளையாருக்குக் கண்களாகப் பயன்படுவதைத் தான் இதன் பயனாகக் காண்கிறோம். மரகதம் மாணிக்கம் முதலிய நவமணிகளைக் குவியல் குவியல்களாக வைத்து விற்கும் மிகப் பெரிய கடைவீதியில் வெட்கமின்றியொருவன் இக்குன்றியைப் பரப்பிக் கொண்டு விற்கத் தொடங்கினால் அவன் நிலை எப்படி இருக்குமோ அந்நிலையை நானும் பின்பற்றுகிறேன். புலவர் கூட்டத்து வாழும் உன்னைத் துதிக்கத் தொடங்குவதால் என் அவையடக்கம் கூறினார்
11

ஏளனம் செய்யப்படுவீர் என்பது எண்ணமாயின் விண்ணப்பிக்காது விட்டு விடும், ஏன் அச்செயலைச் செய்கின்றீர்! எனப் பிராட்டி கேட்டதாகக் கொண்டு உலக வழக்கத்தை உவமானமாகக் காட்டி தான் விண்ணப்பிக்கத் தொடங்குவது தகுதியுடைத்தே என உறுதிப்படுத்துகிறார்.

कवीनां प्रत्नानां कवलित सुधास्वादिम मदैः
अनूचीनैः स्तोत्रैः श्रुति जडिमभाजो जननि ते ।
अजामित्वायैव स्तवमिमं अकूपारतनये
वियाता ग्रथ्नीमो विहसन्न पदैः कैरपि पदैः ॥ (12)

கவீநாம் ப்ரத்நாநாம் கபளித ஸுதாஸ்வாதிம மதை:
அநூசீநை: ஸ்தோத்ரை: ச்ருதி ஜடிமபாஜோ ஜநநி தே ।
அஜாமி த்வாயைவ ஸ்தவமிமம் அகூபார தநயே
வியாதா க்ரத்நீமோ விஹஸந பதை: கைரபி பதை: ॥

அகூபார தநயே—பாற்கடல் கன்னியான ஜநநி—தாயே
வியாதா:—பரிஹாஸத்தில் பயமற்றுப் போன போக்கில்
சொல்வதென்றும் தைர்யமுடையவர்களால்
வயா—யாம் ப்ரத்நாநாம்—பழமையான
கவீநாம்—வால்மீகி பராசரர் முதலிய கவிகளின்
கபளித—போக்கடிக்கப்பட்ட ஸுதா—அம்ருதத்தின்
ஆஸ்வாதிம மதை:—சுவையின் கர்வத்தை உடையதும்
அநூசீநை:—தொடர்ந்து வருவதுமான

ஸ்தோத்ரை:—ராமாயணம் முதலியவற்றிலுள்ள உன் குண வர்ணனபரங்களான ஸ்தோத்ரங்களால்
ச்ருதிஜடிமபாஜ:—மந்தமாகிய காதுகளுக்கு
அஜாமித்வாயைவ—அம்மாந்தியத்தை போக்குவதற்காகவே
விஹஸநபதை:—வித்வான்களால் பரிஹஸிக்கத் தக்க
கைரபி பதை:—சில கடுஞ்சொற்களால்
இமம் ஸ்தவம்—இந்தத் தோத்திரத்தை
க்ரத்நிம:—செய்கின்றோம்.

நாடகத்திலுள்ள பல பாத்திரங்களுள் விதூஷகன் என்ற பெயர் பெற்ற பாத்திரமுமொன்றுண்டு, அவன் ப்ரதானமான நடனல்லனாயினும் நாடகத்தில் முக்கியமான பங்கு அவனுக்குண்டு. சில மணி நேரம் நாடகத்தைத் தொடர்ந்து பார்த்தால் ஏற்பட்டுள்ள சோர்வையும் சோம்பலையும் போக்கி பரிஹாஸமான பேச்சு நடிப்பு முதலியவை மூலம் புத்துணர்ச்சியை உண்டுபண்ணுவதுடன் வயிறு குலுங்கச் சிரிக்க வைத்து கதைப் போக்கில் ஆர்வத்துடன் எதிர்பார்க்கத்தக்க நிலையையும் அவன் தோற்றுவிப்பன். அது போல் வால்மீகி பராசரர் சுகர் முதலியவர்களால் இயற்றப்பட்டதும் அம்ருத ரஸத்தையும் விட மேன்மையான ரஸமுடையனவுமான ஸ்தோத்திரங்களைப் பலமுறை கேட்டுக் கேட்டுச் சோர்வடைந்துள்ள உன் காதுகளுக்கு விதூஷகன் வாக்கு போன்ற எனது ஸ்தோத்ரம் ஸந்தோஷத்தை விளைவிக்கும். ஆகையால் நான் ஸ்தோத்ரம் செய்வது மிகவும் பொருத்தமுடையதே என்கிறார்.

12

நைச்யாநு ஸந்தாநத்தை—அவையடக்கத்தை—உட்கருத்தாகக்—கொண்டு கூறப்பட்ட முன் ச்லோகத்தால் நமது ஸ்தோத்திரத்துக்கு உண்டாகியுள்ள சிறு குறையைப் போக்கி இதைப் படிப்பதில் தூண்டுவிக்கவும் நிறைந்த அறிவு பெறாதவர்களுக்குத் தெள்ளென விளங்காத சில பகுதிகள் தம் நூலிலிருப்பின் அவை நூலுக்குக் குறையாகாதென உபமானத்துடன் விளக்குகிறார்.

विद्वद्भ्यः स्वदमानया यदनया विश्वाम्ब नाधीयते
स्तुत्या ते सुखमज्ञ चेतसि दृषत्प्राये न दूये ततः ।
गान्धर्वी हि पुरन्दरादि शिरसां आन्दोलयित्री चिरं
गीतिस्सा बधिरान् न नन्दयतिचेत् किं छिन्नमेतावता ॥

வித்வத்ப்ய: ஸ்வதமாநயா யத்நயா விச்வாம்ப நாதீயதே
ஸ்துத்யா தே ஸுகமஜ்ஞ சேதஸி த்ருஷத்ப்ராயே ந தூயே
தத: ।
காந்தர்வீஹி புரந்தராதி சிரஸாம் ஆந்தோலயித்ரீ சிரம்
கீதிஸ்ஸா பதிராந் ந நந்தயதிசேத் கிம் சிந்நமேதாவதா ॥

விச்வாம்ப—உலகத் தாயே
வித்வத்ப்ய:—அறிவு மிக்க புலவர்களுக்கு
ஸ்வதமாநயா—சொல், பொருள் அணி முதலிய
மேன்மைகளைப் பெற்று சுவையூட்டுகின்ற
அநயா தே ஸ்துத்யா—உன்னுடைய இந்தத் தோத்திரத்தால்
த்ருஷத்ப்ராயே—சிறப்பை அறியத்தக்க திறனற்றதால் கல்
போன்ற
அஜ்ஞசேதஸி—அறிவிலியின் மனதில்
ஸுகம்நாதீயத இதி யத்தத:—சுவையூட்ட முடியவில்லை
என்பதால்
அஹம்—நான் ந தூயே—வருத்தப்படவில்லை
(ததாஹி—அது பொருத்தமுடைத்தே)
காந்தர்வீ கீதி:—இந்திரன் ஸபையிலுள்ள தேவமாதர்களால்
பாடப்படும் பாட்டு
புரந்தராதி:—இந்திரன் முதலிய ரஸிகர்களின்
சிரஸாம்—தலைகளை
சிரம்—வெகுநேரம்
ஆந்தோளயித்ரீஹி—ஆட்ட வைக்க வல்லதென்பது
ப்ரஸித்தமானதன்றோ
ஸாகீதி:—அதே பாடல்
பதிராந்—அதே அவையிலுள்ள செவிடர்களை
ந நந்தயதிசேத்—ஸந்தோஷிப்பிக்கவில்லை எனின்

ஏதாவதா—இச்செயலால்
கிம் சிந்நம்—அப்பாட்டிற்கு என்ன குறை உண்டாகி விட்டது.

பல்வகையான நூல்களில் துறைபோகிய பெரும் புலவர்களால் சுவைக்கத் தக்க எனது நூல் சிறிதளவு கற்ற அறிவிலிக்குச் சுவை யூட்டவில்லையெனின்து என் நூலுக்குக் குறையாகாது. உயர்ந்த தேவமாதுகள் பாடும் பாட்டைக் கேட்டு இந்திரன் முதலாய தேவர்கள் ஆனந்தத்துடன் தலையசைத்துக் கேட்டிருப்ப அந்த அவையிலுள்ள செவிடர்களுக்கு அப்பாட்டு ஸந்தோஷத்தை யூட்டவில்லை என்றால் அப்பாட்டிற்கு அதனால் குறையுண்டோ!
13

ஸ்தோத்ரிக்கப் போகிறேன் என நிச்சயித்தபோதும் ஸ்ரீயின் குணங்களை எல்லையிப் பார்க்கும் போது அவை அளவிட அரியன வாதலால் தம்மால் ஸ்தோத்ரிக்க முடியாதென எண்ணிய வராய் தொடங்கிய செயல் முடிவு பெறுமா என ஸந்தேஹிக்கின் றார்.

वक्तुं नैव चतुर्विधा श्रुतिरसौ ईष्टे नचाष्ट श्रुतिः
नोचक्षुः श्रुति रप्यहो तवगुणान्नारायण प्रेयसि ।
स्तोतुं त्वामपि तामहं व्यवसितो दूरं हनूमन्मुखैः
दुर्लङ्घ्यं जलधिं तरीतु मनसः पङ्गोर्दधे चापलम् ॥

வக்தும் நைவ சதுர்விதா ச்ருதிரஸௌ ஈஷ்டே ந சாஷ்ட ச்ருதி:
நோசக்ஷு ச்ருதி ரப்யஹோ தவகுணாந் நாராயண ப்ரேயஸி ।
ஸ்தோதும் த்வாமபி தாமஹம் வ்யவஸிதோ தூரம் ஹநூமந் முகை:
துர்லங்க்யம் ஜலதிம் தரீது மநஸ: பங்கோர்ததே சாபலம் ॥

நாராயணப்ரேயஸி—நாராயணன் மனைவியே
சதுர்விதா—நால்வகையானவையும்
அஸௌ—தற்போது வழங்கப்படுவதுமான
ச்ருதி:—வேதம்
தவகுணாந்—உனது குணங்களை
வக்தும்—குறைவின்றி வர்ணிப்பதற்கு
நைவேஷ்டே—சக்தியுடையதல்ல

அஷ்டச்ருதிச்ச:—எட்டு காதுகளையுடைய நான்முகனும்
நைவேஷ்டே—சக்தியுடையனல்லன்
சக்ஷுச்ருதி—கண்ணையே காதாகக் கொண்ட ஆதிசேஷனும்
வக்தும்—புகழ்வதற்கு
நைவேஷ்டே—சக்தியுடையவனல்லன்
அஹோ—இது மிகவும் ஆச்சரியம்
த்வாம் த்வாமபி—அத்தகைய உன்னையும்
ஸ்தோதும்—ஸ்தோத்தரிப்பதற்கு
வ்யவஸித:—முயற்சியுடைய
அஹம்—அற்பஜ்ஞானவடியேன்
ஹநூமத்முகை:—ஹநுமன், அங்கதன், ஜாம்பவான் முதலிய
உயர்ந்தவர்களாலும்
துர்லங்கம்—முழுவதும் தாண்ட முடியாத
தூரம்—மிக நீண்ட
ஜலதிம்—ஸமுத்திரத்தை
தரிதுமநஸ:—தாண்ட விருப்பங்கொண்ட
பங்கோ:—முடவனுடைய
சாபலம்—பேராசையை
ததே—தரித்துள்ளேன்.

ஆநந்த குணம் ஒன்றை மட்டும் வர்ணிக்கப் புகுந்த உபநிஷத் அதொன்றையும் முழுவதும் வர்ணிக்க முடியாமல் "யதோவாசோ நிவர்த்தந்தே" என ஓய்ந்து விட்டது. அபௌருஷேயமான வேதத்தாலேயே வர்ணிக்க முடியாத தேவரீர் குணகணங்களை சோர்வு, அயர்வு, மறதி முதலிய துர்குணங்களை உடைய அறிவிலியான நான் எப்படி வர்ணிக்கப் போகிறேன்? நான்கு முகங்களாலும் நான்கு வேதங்களை ஓதும் வல்லமை வாய்ந்த ப்ரஹ்மாவும், ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேஷனும் வர்ணிக்க முடியாத தேவரீர் குண வர்ணனையில் பேராசை கொண்டுள்ளேனடியேன். இது எப்படியுள்ளதெனில் கடலின் சிறு பகுதியைக் கடந்த அநுமனாலும் கடக்க முடியாத முழுமையான கடலை காலற்ற நொண்டி கடக்க ஆசை கொண்டது போலாம். நூறு யோசனை தூரம் மட்டும் கொண்ட மஹேந்திர மலைக்கும் திரிகூட மலைக்கும் உள்ள இடைப் பகுதியை ஹநுமான் கடந்தாரேயன்றி அவரும் கடல் முழுதும் கடக்க வல்லர் அல்லர் என்பது கருத்து.

அளவிட முடியா ஆழமும் பரப்பும் காம்பீர்யமும் கடல் பெற்றிருப்பதுபோல், ஸ்ரீயின் குணங்களும் அத்தன்மைகளைப் பெற்றிருக்கின்றன என்பது உவமையால் பெறப்படுவதாம்.

நான் தற்போது உன் குணங்கள் முழுவதையும் வர்ணிக்கப் புகுந்தேனில்லேன். அங்ஙனமாயின் பரிஹாஸத்துக்கும் கைகூடாப் பயனுடையன் ஆகைக்கும் ஆளாவேன். இதுவரை நீச ஜநங்களை வர்ணித்து வாழ்ந்ததால் வருந்திய மனத்தினனும் உனது குணங்களாகிய அம்ருதக் கடலிலிருந்து லேசம் அலைகளின் திவலைகளை ப்ரோக்ஷித்துக் கொள்ள விரும்புகிறேன். இச்செயல் எல்லோருக்கும் தகுதியுடைத்தே. எனவே நான் ஸ்தோத்திரிக்கப் புகுவது நியாயமே என்கிறார்.

गर्वद् दुर्वसुधाधिप स्तुतिपर व्याहार कूहान्धता
निर्विण्णाशय एष वेंकटकविः पंकेरुहावासिनि ।
अद्यत्वद्गुण वर्णनामृतरसैः आनन्दितुं जृम्भते
चिंचापर्ण रसावसन्न रसनः पुण्ड्रेक्षु सारैरिव ॥

கர்வத் துர்வஸுதாதிப ஸ்துதிபர வ்யாஹார குஹாந்ததா
நிர்விண்ணாசய ஏஷ வேங்கடகவி: பங்கேருஹா வாஸிநி ।
அத்யத்வத்குண வர்ணநாம்ருதரஸை: ஆநந்திதும் ஜ்ரும்பதே
சிஞ்சாபர்ண ரஸாவஸந்ந ரஸந: புண்ட்ரேக்ஷு ஸாரைரிவ ॥1

பங்கேருஹா வாஸிநி—குளிர்ந்த தாமரையில் வாழ்பவளே
கர்வத்—கர்வம் கொண்ட
துர்வஸுதாதிப—நீச அரசர்களின்
ஸ்துதிபர—துதிகளில் ஈடுபட்ட
வ்யாஹார—பேச்சுகளாகிற
குஹ—பெரும்பனியினுலுண்டான
அந்ததா—போதிய அறிவின்மையால்
நிர்விண்ணாசய:—வாழ்வையே பயனற்றதாக எண்ணும்
ஏஷவேங்கட கவி:—வேங்கட கவியாகிய நான்
த்வத்குணவர்ணந—என் அறிவுக்கு எட்டிய வரை உன் குண வர்ணனையாகிய
அம்ருதரஸை:—அம்ருதத் திவலைகளால்
சிஞ்சாபர்ணரஸ—புளியன் இலையின் சுவையைப் பருகியதால்
அவஸந்ந—துன்பமுற்ற
ரஸந:—நாக்கையுடையவன்
புண்ட்ரேக் க்ஷஸாரைரிவ—கரும்பின் சுவையால் போல்
அத்ய—தற்போது

ஆநந்திதும்—ஸந்தோஷமடைவதற்கு
ஜ்ரும்பதே—ஆரம்பிக்கிறேன்.

தை மாதம் பின்பனிக் காலமாம். இம்மாதத்தில் பின் மாலையில் வெளியில் சென்றால் எதிரிலுள்ள பொருள்களும் கண்களுக்குப் புலப்படா. மிக அருகில் சென்றால்தான் புலனாகும். உலகுக்கெல்லாம் வெளிச்சம் தரும் சூரியனையே இப்பனி காலை எட்டு நாழிகை வரை மறைத்து விடும். அறிவும் இச்சமயத்தில் தெளிவு பெறாது. அதுபோல் நாம் பெற்ற அறிவைக் கொண்டு பகவானின் குணகீர்த்தனம் செய்ய வேண்டியிருக்க அதைச் செய்யாது விடுத்து புத்தி மயங்கி நீச அரசர்களைப் புகழ்ந்து பாடி வாழ்ந்த நாள் அந்த காலத்தைப் பனிக் காலமாகவும் அப்புகழுரைகளைப் பெரும் பனியாகவும் உருவகித்தார். ஆனால் தற்போது நல்வினைப் பயனால் தெளிந்த அறிவு பெற்றேன். கடந்த காலத்தை எண்ணி மிகவும் துன்பமடைந்தேன். என் நாக்கைத் தூய்மையாக்க உன் குணங்களைப் பல வகையில் பாடத் துணிந்தேன். இவ்வறிவு தற்போதாவது பிறந்ததே என்றெண்ணி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் என்கிறார். இதற்கு ஒரு உவமை காட்டுகிறார். "ஸிஞ்சா பர்ண" என்பதால்.

முற்கால மக்கள் பெரும்பாலும் கிராமங்களில் வாழ்ந்தனர். ஒரு பொருள் வாங்க வேண்டியிருப்பின் தொலைவிலிருந்த நகரத்துக்குச் சென்றே வாங்க வேண்டும். ஆகவே அகத்தில் புளி இல்லாமற் போய் விட்டதெனின் புளியன் மரத்திலிருந்து இலைகளைக் கொணர்ந்து அவற்றை நீரிலிட்டுக் கொதிக்க வைத்தால் இலையிலுள்ள புளி நீரில் கலக்கும். புளிக்குப் பதிலாக அந்நீரை வைத்துக் கொள்வர் இத்தகைய உணவையே உண்டு நாக்கின் சுவையை இழந்தவனுக்குத் தன்னடைவாக இனிய கரும்பின் சாறு பருகுவதற்குக் கிடைக்குமேல் அவன் எப்படி பரபரப்புடன் ஆர்வமாக உண்ணத் துவங்குவானோ அதுபோல் நானுமுள்ளேன் என்கிறார்.

கரும்பு வகைகளில் "நாமக் கரும்பு" என்பது ஒரு வகை. இது சுவையில் சிறப்புடையது. எனவே "புண்ட்ரேக்ஷு" என்றார். "ஜ்ரும்பதே" என ப்ரதம புருஷ ப்ரயோகம் பண்ணியது. இங்ஙனம் நான் ஆரம்பித்தது உன் அதீநமே, என்னுடையதன்று என இலக்குமியிடம் விண்ணப்பத்தைக் காட்டுகிறது. 14

காவ்யத்துக்கு அழகு தருபவைகளான ரஸம், அலங்காரம் முதலியவற்றை நானறியேன், இருப்பினும் தேவரீர் விஷயமான காவ்யத்தைச் செய்ய வேண்டும் என்கின்ற பக்தியால் தூண்டப்

பட்டவனும் ஏதோ பிதற்றப் போகிறேன். இவ்வபராதத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்கிறார்.

नाहं जाने नवरस गतीः नार्थ मक्षुण्णमन्यैः
नालंकारानपि च न वचो गुंभ गंभीरिमाणम् ।
स्तोतुं मातः तदपि भवतीं त्यक्त लज्जो यतेहं
मन्तुं किन्तु प्रथित करुणा क्षन्तुमर्हसि अमुं त्वम् ॥

நாஹம் ஜாநே நவரஸ கதீ: நார்த்த மக்ஷுண்ண மந்யை:
நாலங்காரா நபிச ந வசோ கும்ப கம்பீரிமாணம் ।
ஸ்தோதும் மாத: ததபி பவதீம் த்யக்த லஜ்ஜோ யதேஹம்
மந்தும் கிந்து ப்ரதித கருணே க்ஷந்து மர்ஹஸி அமும் த்வம் ।

அஹம்—நான்
நவ—ஒன்பது வகைகளான
ரஸாநாம்—ச்ருங்காரம் வீரம் முதலிய ரஸங்களையும் விபாவம் அநுபாவம் முதலிய ஸ்தாயிபாவங்களையும்
கதீ:—அவற்றின் போக்கு, சொல்லால் அவற்றை வெளிப் படுத்தும் முறை, வகைகள் முதலியவற்றை
நஜாநே—அறியேன்
அந்யை:—முன்பிருந்த கவிகளால்
அக்ஷுண்ணம் பல வகைகளில் கயாளப்படாத
அர்த்தம்—(சக்யம், லக்ஷ்யம், வ்யங்க்யம் என மூவகையான) பொருள்களையும்
நஜாநே—அறியேன்
அலங்காராந்—(சொற்களைப் பற்றியதும் பொருள்களைப் பற்றியனவுமான உவமை சிலேடை முதலிய) அணிகளையும்
நஜாநே—அறியேன்
வசோகும்ப—சொற்குவியலின்
கம்பீரிமாணம்—தொனிப் பொருளையும்
நஜாநே—அறியேன்
ததபி—அப்படியிருந்தும்
த்யக்தலஜ்ஜ: - வெட்கமற்றவனும்
பவதீம் ஸ்தோதும்—தேவரீரைப் பற்றிய காவியத்தைச் செய்ய

யதே—முயற்சிக்கிறேன்
இம்து—எனவே
ப்ரதிதகருணு—அபராதங்களைப் பொறுப்பீர் என்ற ப்ரஸித்தி பெற்ற
த்வம்—தேவரீர்
அமும்—இந்த
மந்தும்—அபராதத்தை
க்ஷந்தும்—பொறுத்துக் கொள்ள
அர்ஹஸி—தகுதியுடையை ஆவீர்.

ஒரு காவ்யம் உயர்ந்த நிலையைப் பெற வேண்டுமெனின் அதில் சொல்லைப் பற்றியனவும் பொருளைப் பற்றியனவும், இரண்டையும் பற்றியனவுமான உவமை, உருவகம், சிலேடை முதலிய அணிகள் அமையப் பெற்றிருக்க வேண்டும். விபாவம், அநுபாவம் முதலிய ஸ்தாயிபாவங்கள் அமைந்திருக்க வேண்டும். சொல்லப் படும் கருத்து பிற கவிகளால் கையாளப்படாததாக இருக்க வேண் டும். காவியத்தின் குற்றங்களான கூறியது கூறல். குறைபடக் கூறல் முதலிய குற்றங்களில்லாமலிருக்க வேண்டும். சொற்குவியல்களா கிய ச்லோகங்கள் உள்ளுறை பொருள், தொனிப் பொருள் முதலி யன உடைத்தாயிருத்தல் வேண்டும். தக்க இடத்தில் செம்மை யான முறையில் இவைகளைக் கையாள வேண்டிய திறன் பெற்றி ருக்க வேண்டும். என்னிடம் இவற்றுள் எதுவும் சிறிதுமில்லை. அப் படி இருந்தும் பக்தி பரவசனும் வெட்கமற்று காப்பியம் இயற் றத் துணிந்துள்ளேன். அதற்குக் காரணம் நீ மஹாபராதங்களை எல்லாம் பொறுப்பவள் எனப் புகழ் பெற்றுள்ளமையேயாம். எனவே நான் செய்யும் இக்குற்றத்தையும் தயையால் பொறுப் பாயாக. 15

விசித்திரமான சக்தி பெற்றவர்களாலேயே வர்ணிக்கத் தக்க உன் குணங்களை அறிவற்றவடியேன் புகழத் துணிந்துள்ளேன். எல் லோரும் என்னைப் பரிஹஸிப்பார் என்கிறார்.

श्मश्रुष्मन्तः चरणकमले चक्षुषा श्रोत्रवन्तः
गोत्रे भूमेः जननि जगतां जन्मवन्तोपि नस्मः ।
वक्त्राण्यासन् भगवति न षट् पञ्च चत्वारि वा नः
कस्मादस्मान् न हसतु जनः स्तोष्यतः त्वद् गुणौघम् ॥

சக்ஷுஷ்மந்த: சரணகமலே சக்ஷுஷா ச்ரோத்ரவந்த:
ச்ரோத்ரே பூமே: ஜநநி ஜகதாம் ஜந்மவந்தோபி நஸ்ம: |
வக்த்ரைர்யாவத் பகவதி ந ஷட்பஞ்ச சத்வாரிவா ந:
கஸ்மாதஸ்மாந் ந ஜஹது ஜநா: ஸ்தோஷ்யத: த்வத் குணௌகம் ||

பகவதி—ஞானம் முதலாய ஆறு குணங்கள் நிறைந்த
ஜகதாம் ஜநநி—உலகத்தாயே
சரணகமலே—காலில்
சக்ஷுஷ்மந்த:- கண்ணுடைய கௌதமராக
நஸ்ம:—ஆக மாட்டோம் சக்ஷுஷா—கண்ணாலே
ச்ரோத்ரவந்த: காதுடைய பதஞ்சலியாகவும்
நஸ்ம:—ஆக மாட்டோம்
பூமே:—பூமிக்கு ச்ரோத்ரே—காதான புற்றிலிருந்து
ஜந்மவந்த:—பிறப்புடைய வால்மீகியாகவும்
நஸ்ம:—ஆக மாட்டோம் ந:—எமக்கு
ஷட்பஞ்ச சத்வாரிவா—ஆறோ, ஐந்தோ, நான்கோ
வக்த்ராணி—முகங்கள்
நாவத்—இல்லை (அப்படி இருந்தும்)
த்வத்குணௌகம்—உனது குணக் குவியலை
ஸ்தோஷ்யத:—துதிக்கப் புகுந்த
அஸ்மாந்—சக்தியற்ற எம்மை
ஜநா:—உலக மக்கள் கஸ்மாத்—ஏன்
ந ஜஹது—பரிஹஸிக்க மாட்டார்கள்.

காலில் கண் பெற்ற கௌதமரோ, கண்களையே காதுகளாகக் கொண்ட ஆதிசேஷனின் அவதாரமாகிய பதஞ்சலியோ, பூமிக்குக் காதென வேதத்தால் புகழப்பட்ட புற்றிலிருந்து தோன்றிய வால்மீகியோ ஆறுமுகனோ, ஐந்து தலைகளையுடைய சிவனோ, நான்கு தலைகளையுடைய ப்ரஹ்மதேவனோ மற்றும் இவர்களைப் போன்ற சிறந்த சக்தி பெற்றவரோ தான் உம்மைத் துதிக்கத் தகுந்தவராவர். அடியேனோ இவர்களில் ஒருவனும் அல்லாததோடு அவர்களின் சக்தியையும் பெறாதவன். எதிரிடையான அசக்தியை உடையவன். ஆனாலும் துதிக்கத் துவங்குகிறேன். பரிஹஸிக்க வேண்டிய காரணங்களை மிகுதியாகப் பெற்றவடியேன் எப்படி உலக மக்களால் பரிஹஸிக்கப் பெறாமலிருப்பேன். பரிஹஸித்தே தீருவர். 17

துவங்கியுள்ள செயல் "தமது" என்னும் அஹங்காரம் அழிவதற்காக அதில் தமக்கு சக்தியின்மையை உதாஹரண பூர்வமாக மூதலித்துக் காட்டுகிறார்.

अभूमिः त्वद्भूमा जननि जरतीनामपि गिरां
असौ कस्मादस्मादृश कृश मनीषोक्ति विषयः ।
अशक्यानां और्वाग्निभिरपि निपातुं निधिमपां
अपारं तं पातुं मशकशिशुकः किं प्रभवति ॥ [18]

அபூமி: த்வத் பூமா ஜநநி ஜரதீநாமபி கிராம்
அஸௌ கஸ்மாத் அஸ்மாத்ருச க்ருச மநீஷோக்தி விஷய: ।
அசக்யாநாம் ஔர்வாக்நிபிரபி நிபாதும் நிதிமபாம்
அபாரம் தம் பாதும் மசகசிசுக: கிம் ப்ரபவதி ॥

ஜநநி—தாயே
ஜரதீநாம்—மிகப் பழமையான
கிராமபி—வாக்கான வேதங்களாலும்
அபூமி:—இவ்வளவென்று அளவிட்டுச் சொல்ல முடியாதது.
அஸௌ த்வத் பூமா—உனது குணங்களின் பெருமை (அங்ஙனமாக)
கஸ்மாத்—எப்படி
அஸ்மாத்ருச—என் போன்ற
க்ருச—அல்பமான
மநீஷா—புத்தியை உடையவர்களது
உக்தி—பேச்சுக்கு
விஷய:—அடங்கும்
(ததாஹி—அது தகுதியுடைத்தே)
ஔர்வாக்நிபிரபி—படபாக்நியாலும்
நிபாதும்—எஞ்சாது பருகுவதற்கு
அசக்யாநாம்—முடியாத
அபாம்—ஜலங்களின்
தம் அபாரம் நிதிம்—சொல்ல முடியாத பெருமை பெற்ற அளவிறந்த நீர் நிலையை
பாதும்—பருகுவதற்கு
மசகசிசுக:—அப்போது பிறந்த கொசுக்குட்டி
கிம் ப்ரபவதி—சக்தியுடையதாக ஆகுமா என்ன.

பகவானைப் போல் லக்ஷ்மியும் எண்ணிலடங்கா குணங்களைப் பெற்றவள். ஒவ்வொரு குணமும் கடல் போன்றது. அநாதி

யாய் அபௌருஷேயமான வேதம் ஓர் குணத்தை மட்டும் துதிக்கத் தொடங்கி அது மாட்டாது வாயொழிந்து மாய்ந்தது. அப்படியிருக்க இன்று பிறந்தவனும் அயர்வு சோர்வுகள் உடையவனும் அல்ப சக்தியை உடையவனுமான என்னால் மட்டும் எப்படி உமது குணங்களைத் துதிக்க முடியும்? உலகில் ஆங்காங்கு அவ்வப்பொழுது பெய்யும் நீர் யாவும் ஒன்றுகிக் கடலில் தானே கலக்கின்றன. அதனுல் அக்கடல் பொங்கி எழுந்து உலகை அழிக்கலாமல்லவா? அப்படி அழிக்க மாட்டாது காத்துக் கொண்டிருப்பது கடலிலுள்ள "படபா" என்னும் அக்னி. இது தமது ஜ்வாலைகளால் கடல் நீரை வற்றச் செய்கிறது. அவ்வக்னியும் கடல் நீர் முழுவதையும் வற்ற வைக்க முடியாததே. உயிரினங்களுள் மிகச் சிறியதும் அல்ப சக்தியை உடையதுமாயிருப்பது கொசுக்குட்டி. அது அக்கடல் நீர் முழுவதையும் பருகும் தன்மையுடையதாக ஆகுமா என்ன? அதுபோல் உமது கடல் போன்ற குணகணங்களை கொசுக்குட்டி போன்ற அடியேன் எப்படிப் புகழ வல்லேனுவேன்! (18)

அளவில்லாத பெருமையை எப்படி "இவ்வளவினது" என அளவிட்டுக் கூற முடியும்? அதனை அளவற்றது என்றுதானே சொல்ல முடியும். லக்ஷ்மியின் பெருமை அளவற்றதென்பதால் ஸர்வஜ்ஞரான ப்ரஹ்மா முதலானவர்கள் புகழாது விடவில்லையே அவரவர் சக்திக்கு ஏற்பப் புகழத்தானே செய்தனர். அதுபோல் நானும் புகழ்கிறேன் என்கிருர்.

प्रकृष्यन्तां अस्मत्परं इतरकाले विधिमुखाः
वयं मातः ते वा तव नुति दशायां समधियः ।
निकर्षोत्कर्षौ स्तां निशितु शशि खद्योत महसोः
दिवा को वा भेदो दिनकर करव्रात जटिले ॥ [19]

ப்ரக்ருஷ்யந்தாம் அஸ்மத்பரம் இதரகாலே விதிமுகா:
வயம் மாத: தே வா தவ நுதி தசாயாம் ஸமதிய: ।
நிகர்ஷோத்கர்ஷௌ ஸ்தாம் நிசிது சசி கத்யோத மஹஸோ:
திவா கோ வா பேதோ திநகர கரவ்ராத ஜடிலே ॥

மாத:—தாயே

விதிமுகா:—ஸர்வஜ்ஞர்களான நான்முகன் முதலியவர்கள்

இதரகாலே—அல்பமான பெருமையுடைய ஒன்றைப்பற்றி வர்ணிக்கும்போது

அஸ்மத்—சிற்றறிவினரான எம்மை விட
ப்ரக்ருஷ்யந்தாம்—ஸர்வஜ்ஞர் என்றதனுலாய
பெருமையைப் பெறட்டும்
வயம் வா—சிற்றறிவினரான நாங்களும்
தேவா—ஸர்வஜ்ஞரான அவர்களும்
தவநுதி தசாயாம்—அளவற்ற உமது குணத்தை
வர்ணிக்கும்போது
ஸமதிய:—முழுமையும் வர்ணிக்க முடியாததால் ஸமமான
புத்தியுடையவர்களே
(ததாஹி—அப்படியிருக்கை ந்யாய்யமே)
நிசி—வெளிச்சமற்ற ராத்ரியில்
சசி—மிகவும் ப்ரகாசமான சந்திரனுக்கும்
கத்யோத—அல்ப ப்ரகாசமுள்ள விட்டில் பூச்சிக்குமுள்ள
மஹஸோ:—ஒளிகளுக்கு
நிகர்ஷ உத்கர்ஷௌ—பெருமையும் சிறுமையும்
ஸ்தாம்—இருக்கட்டும்
திநகர—ஸூர்யனது
கரவ்ராத ஜுஷி—கிரணத் தொகுதிகள் மிக்க
திவா—பகலில்
கோ வா பேத:—என்ன வேறுபாடு உள்ளது? ப்ரகாசமின்மை
இருவருக்கும் ஸமமேயன்றோ.

சந்திரன் மிகவும் ப்ரகாசமானவன் என்பதாலும் மின்மினிப் பூச்சி ப்ரகாசமற்றது என்பதாலும் சந்திரனை உயர்த்தியும் மின் மினியைக் குறைத்தும் உலகில் வழங்குகிறோம். இவ்வழக்கு ராத்ரி யில்தான் பொருந்தும். பகலில் சந்திரனும் ப்ரகாசிப்பதில்லை, மின் மினியும் ப்ரகாசிப்பதில்லை. என்ன வேறுபாடு பகலிரண்டுக்கு முள்ளது? இரண்டும்தான் ப்ரகாசிப்பதில்லையே! அதுபோல் அற்ப மான ஒன்றை வர்ணிக்கும்போது ஸர்வஜ்ஞரான ப்ரஹ்மன் போன்றவர்களுக்கும் குறைந்த அறிவுடைய எங்களுக்கும் வர்ண னையில் வேறுபாடு தோன்றலாம். அதனடியாக அவர்களுக்கும் எங்களுக்கும் வ்யத்யாஸம் தெரியத்தான் செய்யும். அதனுல் எங் களுள் வேறுபாடு தோன்றலாம். ஆனுல் தேவரீர் குணங்களோ எவருடைய வர்ணனைக்கும் அடங்காதவை. ஸர்வஜ்ஞரான நான் முகனுலும் உமது குணம் முழுமையும் வர்ணிக்க முடியாததே. அறிவிலியான எனக்குமப்படியே. ஆக முடியாமையில் இருவரும் ஒத்தவரானேம். என்ன மேன்மை அவர்களுக்கு மட்டும்?

“அஸ்மத்” என்பது பஞ்சமீ பஹுவசனம். “வயம்வா தேவா”| என்றவிடத்து “வா” என்பது “ச” என்றும் பொருளுடையது.

"நிகர்ஷோத்கர்ஷௌ" சசி கத்யோத மஹஸோ:" என்ற விடத்தில் முறையே அந்வயம் கொண்டால் சசிக்கு நிகர்ஷம்—குறை என்றும், கத்யோதத்துக்கு உத்கர்ஷம்—மேன்மை—என்றும் கிடைக்கின்றதே அது பொருத்தமுடைத்தன்றே என எண்ண வேண்டா. "நிகர்ஷச்ச உத்கர்ஷச்ச நிகர்ஷோத்கர்ஷௌ" "சசிச்ச கத்யோதச்ச சசிகத்யோதௌ" என "த்வந்த்வ" ஸமாஸம் சொல்ல வேண்டும். த்வந்த்வ ஸமாஸத்திலுள்ள பதங்கள் ஒவ்வொன்றும் தம்முடனுள்ள மறு பதத்தின் பொருளையும் உணர்த்தும் என ஒரு நியமமுண்டு. ஆகையால் நிகர்ஷ சப்தம் உத்கர்ஷ சப்தத்தின் பொருளையும் உத்கர்ஷ சப்தம் நிகர்ஷ சப்தத்தின் பொருளையும் தரவல்லன. எனவே குறையாதொன்றும் இல்லை. (19)

ஸர்வஜ்ஞருக்கும் அல்பஜ்ஞருக்கும் அளவிடற்கரிய பெருமை வாய்ந்த பொருளை வர்ணிக்க முடியாமை என்ற விஷயத்தில் ஒப்புமை இருந்தாலும் வர்ணிக்கும் முறையில் வேறுபாடு தோன்றுமல்லவா? அதனடியாக மேன்மை தாழ்மை தோன்றத்தானே செய்யும்? ஆகவே இருவருக்குமுள்ள வேற்றுமை தவிர்க்க முடியாததே என்றெண்ணி அதுவுமில்லை என்கிறார்.

वाग्भिः कोरकितानि ते रचयतः स्तोत्राणि वाणीपतेः
अस्माकं सुमितां स्तु तिं कलयतां अप्यंब तुल्यं फलम् ।
कौबेरीं श्रिय मानशे बहुतरैः कश्चित् तपोभिः चिरात्
एनामाशु कुचेल एव जगृहे धाना प्रदानादपि ॥ [20]

வாக்பி: கோரகிதாநி தே ரசயத: ஸ்தோத்ராணி வாணீபதே:
அஸ்மாகம் சுமிதாம் ஸ்துதிம் கலயதாம் அப்யம்ப துல்யம்
பலம் ।
கௌபேரீம் ச்ரிய மாநசே பஹுதரை: கச்சித் தபோபி: சிராத்
ஏதாமாசு குசேல ஏவ ஜக்ருஹே தாநா ப்ரதாநாதபி ॥

அம்ப—தாயே
வாக்பி:—நான்கு முகங்களிலுமுள்ள சொற்குவியல்களால்
கோரகிதாநி—அளவு கடந்த
தேஸ்தோத்ராணி—உமது தோத்திரங்களை
ரசயத:—தமதறிவுக்குத் தக்கபடி செய்யும்
வாணீபதே:—ஸர்வஜ்ஞனை நான்முகனுக்கும்

கமிதாம்—அத்யல்பமான ஸ்துதிம்—தோத்திரத்தை
கலயதாம்—தமதறிவுக்கு ஏற்பச் செய்யும்
அஸ்மாகமபி—அல்பஜ்ஞரான எங்களுக்கும்
பலம்—பயன் துல்யம்—ஸமமானதே
கச்சித்—ஒரு யக்ஷன்
பஹுதரை:—உணவருந்தாமை முதலிய கடுந்தவங்களால்
கௌபேரம்—குபேரனது ச்ரியம்—ஸம்பத்தை
சிராத்—பல நாள்கள் கழித்து ஆநசே—அடைந்தான்
குசேல:—நல்ல ஆடையுமில்லாத பரம தரித்திரரான குசேலரும்
தாநாப்ரதாநா தபி—எளிய அவலைக் கொடுத்ததாலேயே
ஏநாமேவ—இதே குபேரஸம்பத்தை
ஆசு—சீக்கிரமாக, அவலைக் கொடுத்த உடனே
ஜக்ருஹே—க்ருஷ்ணனிடமிருந்து அடைந்தார்

ஸரஸ்வதியின் கணவராய் வச்யவாக்கான ப்ரஹ்மா லக்ஷ்மியை தோத்தரித்தார். அவர் ஸர்வஜ்ஞரானதால் அந்தத் துதி மிக உயர்ந்த நிலையில் அமையும். அடியேனும் ஸ்ரீயின் துதி செய்தேன். அல்பஜ்ஞனான எனது துதிக்கும் ப்ரஹ்மனின் துதிக்குமுள்ள வாசி மலைக்கும் மடுவுக்குமுள்ள வாசி போன்றதே. அதனாலென்? ஸ்ரீயின் அருளைப் பெறுதல் என்ற பயன் இருவருக்கும் ஒன்றே. யக்ஷனொருவன் மழை காலத்தில் கழுத்தளவு நீரில் நின்று தவம் செய்தல், வெயிற் காலத்தில் நாற்புறமும் தீ சூழத் தவம் செய்தல், வருடத்துக்கு ஒரு முறை உணவு உண்ணல் போன்ற கொடுந்தவங்களால் வெகு நாள் கழித்து குபேர ஸம்பத்தைப் பெற்றான். அதே குபேர ஸம்பத்தைக் குசேலர் எவ்வித ச்ரமமுமின்றி மிக எளிய அவலைக் கண்ணனுக்குக் கொடுத்து மிகவும் சீக்கிரமாகப் பெற்று விட்டார். இதற்கென்னென்பது? அதிகாரி பேதம்தான் காரணமாமேயன்றி மற்றவை காரணங்களாகா. (20)

ஸர்வஜ்ஞருக்கும் அல்பஜ்ஞருக்கும் தோத்திரம் செய்வதால் கிட்டும் பலன் ஸமமாகுலாகட்டும். ஸர்வஜ்ஞர் பல குணங்களைப் பற்றிப் பல வழிகளில் புகழ்ந்து பேசி இன்புறுதலென்பது முடியாததலால் குணநுபவ வேறுபாடு இருக்கத்தானே செய்யுமெனின் அதுவுமில்லை. புகழ்ந்ததால் உண்டாம் இன்பம் இருவருக்கும் ஸமமானதே. இன்பமடைவதில் வேறுபாடு என்னுளது என்கிறார்.

आसन् धन्यतमाः गुणान् तव बहून् आस्वाद्य शक्रादयः
गृह्णन्तोऽपि गुणार्णवामृत कणान् मातः कृतार्थाः वयम् ।

आचामन्ति सुधाकरान् सुमनसः द्वित्रान् चकोराः करान्
ऐणांकान् अविशेष मार्ति शमनं तत्र उभयेषामपि ॥

[21]

ஆஸந் தந்யதமா: குணாந் தவ பஹூந் ஆஸ்வாத்ய சக்ராதய:
க்ருஷ்ணந்தோபி குணார்ணவாம்ருத கணாந் மாத:
க்ருதார்த்தா வயம் ।
ஆசாமந்தி ஸுதாகராந் ஸுமநஸ: த்வித்ராந் சகோரா:
கராந்
ஐணாங்காந் அவிசேஷ மார்த்தி சமநம் தத்ரோப யேஷாமபி ॥

மாத:—தாயே
சக்ராதய:—இந்திரன் முதலிய வர்கள்
தவ—உமது
பஹூந்—பல
குணாந்—குணங்களை
ஆஸ்வாத்ய—அநுபவித்து
தந்யதமா:—உடல் பெற்ற பயனைப் பெற்றவராக
ஆஸந்—ஆயினர்
வயம்—நாங்கள்
குணார்ணவ—குணக்கடலின்
அம்ருத கணாந்—அம்ருதத் திவலைகளை
க்ருஷ்ணந் தோபி—அநுபவித்த போதிலும்
க்ருதார்த்தாம்—அப்பயனைப் பெற்றவரேயாவோம்
ஸுமநஸ:—தேவர்கள்
ஐணாங்காந்—சந்திரனுடைய
ஸுதாகராந்—அம்ருதப் பெருக்கை
ஆசாமந்தி—பருகுகின்றனர் (ஆனால்)
சகோரா:—சகோர பக்ஷிகள், த்வித்ராந்—இரண்டு அல்லது மூன்று
கராந்—கிரணங்களையே
ஆசாமந்தி—பருகுகின்றன
தத்ர—அம்ருதத்தைப் பருகுதல் கிரணத்தைப் பருகுதல் என்பதில்
உபயேஷாமபி—தேவருக்கும் சகோர பக்ஷிக்கும்
ஆர்த்திசமநம்—பசிபோதல் என்பதில்
நவிசேஷம்—வேறுபாடில்லை.

சந்திரனது கிரணங்களில் அம்ருதம் இருக்கிறது தேவர்கள் முதலில் அதைப் பருகுகின்றனர். "ப்ரதமாம் பிபதே வஹ்நி:" என்பது முதல் கிரணாம்ருதத்தை அக்நி பருகுகிறான் என்கிறது. இப்படிப் பலபல கிரணங்களின் அம்ருதத்தை தேவர் மிகுதியாகப் பருகுகின்றனர். அவ்வளவு பருகிய பின்தான் அவர்கள் பசி தணி

கின்றது. சகோரம் என ஒரு பறவையுள்ளது. அதுவும் சந்திர கிரணங்களையே பருகும். அன்றில் என்பர் இதனை. இரண்டு மூன்று கலைகளைப் பருகினாலே அதன் பசிக்குப் போதுமானது. இப்படிப் பசிபோதல் என்னும் தன்மை தேவர், அன்றில் இருவருக்கும் ஒன்றுயினும் பருகும் சந்திர கலைகளில்—கிரணங்களில்—வேறுபாடு உள்ளது. அதுபோல் தேவரீர் பாற்கடலில் தோன்றியவுடன் இந்திரன் முதலாய தேவர் அவரவர் சக்திக்கேற்பப் புகழ்ந்து பாடி இன்பங் கொண்டனர். அவர்கள் ஸர்வஜ்ஞராகையால் அவர்களால் அப்படி அநுபவிக்க முடிந்தது. என் போன்றவர் தேவரீர் குண கணங்களாகிய கடலிலிருந்து தோன்றும் திவலைகளைத்தான் அநுபவிக்க முடியும். அதனால் என்ன குறை? அதுவே எங்களுக்கு திருப்தியை உண்டுபண்ணுகிறது. திருப்தியடைதல் என்கிற தர்மம் இருவருக்கும் ஸமம். ஆகவே தேவரீரை அடியேன் துதிக்கப் புகுவதுப் பொருத்தமுடைத்தே என்றாயிற்று. (21)

இந்த ஸ்தோத்ரம் ஆரம்பிப்பது தக்கதன்று என்கின்ற அநுபபத்தியைப் பலவழிகளில் உதாஹரணத்துடன் விலக்கி இனித் தமது காவ்யத்தை ஸத்துக்கள் ஏற்க வேண்டுமென்பதற்காக ஸரஸமான கவிதைகளைச் செய்ய வல்ல சக்தியை அநுக்ரஹிக்க ஸ்ரீயிடம் ப்ரார்த்திக்கிறார்.

देवि श्रीः वृषशैलदेव दयिते दाक्षिण्य पुण्यक्षिते
मातः साहसतः तव स्तवमिमं कर्तुं प्रवृत्तस्य मे ।
उन्मीलंतु परं गिरः तव करालंकार पंकेरुह
प्रेंखत्तुंग षडंघ्रि संघ विसरत् झंकार शंकाकराः ॥

[22]

தேவி ஸ்ரீ: வ்ருஷசைலதேவ தயிதே தாக்ஷிண்ய புண்யக்ஷிதே
மாத: ஸாஹஸத: தவ ஸ்தவமிமம் கர்தும் ப்ரவ்ருத்தஸ்ய மே
உந்மீலந்து பரம் கிர: தவ கராலங்கார பங்கேருஹ
ப்ரேங்கத்துங்க ஷடங்க்ரி ஸங்க விஸரத் ஜங்கார சங்காகரா:

வ்ருஷசைலதேவ—ருஷபாசலநாதனான ஸ்ரீநிவாஸனின்
தயிதே—மனைவியே
தேவி—மூவுலகுக்கும் தலைவியே
தாக்ஷிண்ய—பிறர் கருத்தைப் பற்றுவதில்
புண்யக்ஷிதே—அழகிய ஸ்தானத்தை வஹிப்பவளே

மாத:—தாய் போல் குழந்தைகளிடம் அன்புடையவளே
ஸ்ரீ:—பல குணங்களுக்கு இருப்பிடமானவளே
ஸாஹஸத:—சாதிக்க முடியாததை சாதிக்க வேண்டும் என்ற
இமம்—எளிதில் செய்ய முடியாத முயற்சியால்
தவஸ்தவம்—தேவரீர் ஸ்தோத்திரத்தை
கர்தும்—செய்வதற்கு ப்ரவ்ருத்தஸ்ய—ஆரம்பித்துள்ள
மே—சக்தியற்ற எனக்கு தவ—உமது
கராலங்கார—கைகளுக்கு அழகை விளைவிக்கும்
பங்கேருஹ—தாமரைகளில் ப்ரேங்கத்—ரீங்காரமிடும்
துங்க—உயர்ந்த ஷடங்க்ரிஸங்க - வண்டுக்கூட்டங்களின்
விஸரத்— நாற்புறமும் பரவும்
ஜங்கார—இனிய ரீங்காரத்தின்
சங்காகரா:—ஸந்தேஹத்தைத் தோற்றுவிக்கும்
கிர:...வாக்குகள் பரம்...மிகுதியாக
ஆநிர்யாந்து...உமது க்ருபையால் நூல் முடியும் வரை வெளிவரட்டும்.

தேனுள்ள பூக்களில்தான் வாஸனை இருக்கும். வாஸனையுள்ள பூக்களில்தான் வண்டுகள் தங்கும். தேனைப் பருகுவதற்காக. தேனைப் பருகிய மகிழ்வால் அது செய்யும் ரீங்காரத்தைப் புலவர் புகழ்ந்து பாடுவர். அந்த ரீங்காரமோ இது என்னும் ஸந்தேஹத்தைத் தோற்றுவிக்கத்தக்க வாக்விலாஸத்தை அடியேனுக்கு ஸ்தோத்ரம் முடியும் வரை அருள வேண்டும் என ப்ரார்த்திக்கிறார். தேன் நாக்கில் பட்டவுடனே இனிப்பது; உயர்ந்த இனிப்பை உடையது; உடலுக்கு நன்மையைத் தருவது; நோயைப் போக்க வல்லது; பருகிய வண்டுகளை ரீங்கரிக்க வைப்பது. அதுபோல் எனது நூலும் படிக்கும்போதே பொருள் விளங்குவதாய்; இனிய த்ராக்ஷாபாகத்தையுடையதாய்; இம்மைப் பயனைத் தருவதாய்; ஸம்ஸார நோயைப் போக்குவதாய்; படித்த புலவர்களால் தாமடைந்த இன்ப மிகுதியால் வாயாரப் புகழத் தக்கதாய்; பூவுள்ள இடத்தை வண்டுகள் தேடி வருவது போல் புலவர்களால் ஆதரவுடன் கைக்கொள்ளத் தக்கதாய் அமைய வேண்டுமென்பது உட்பொருளாம். (22)

வாரீர் கவியே! நிகமாந்த குரு பகவானின் பாதுகை ஒன்றையே பொருளாகக் கொண்டு இலக்கணம் அனைத்தும் பொருந்திய ஆயிரம் ச்லோகம் கொண்ட நூலை இரவின் ஒரு யாமத்தில் இயற்றியிருக்க, ஒவ்வொன்றைப் பற்றியும் ஆயிரம் ஆயிரம் ச்லோகங்கள் செய்யத்தக்க கரசரணாதிகளைக் கொண்ட என்னையே துதிப்பதாகக் கொண்டு ஏன் இவ்வளவு கஷ்டப்படுகின்றீர் எனக் கேட்டதாக உத்ப்ரேக்ஷை செய்து பதில் சொல்லுகிறார்.

पद्यानां दशभिः यदस्तुत शतैः त्वत्प्रेयसः पादुकां
त्रय्यन्तार्य गुरुः परो हयमुखः तत्राम्ब को विस्मयः ।
स्तोकप्रज्ञं अतीव मूकमपि मां श्लोकैः सहस्रेण ते
स्तोतारं सम वेक्ष्य सूक्ष्ममतिभिः कस्मान्न विस्मीयते ॥

பத்யாநாம் தசபி: யதஸ்துத சதை: த்வத்ப்ரேயஸ: பாதுகாம்

த்ரய்யந்தார்ய குரு: பரோ ஹயமுக: தத்ராம்ப கோ விஸ்மய:

ஸ்தோக ப்ரஜ்ஞம் அதீவமூகமபி மாம் ச்லோகை: ஸஹஸ்ரேண தே

ஸ்தோதாரம் ஸமவேக்ஷ்ய ஸூக்ஷ்ம மதிபி: கஸ்மாந் ந விஸ்மீயதே ॥

அம்ப—தாயே
த்ரய்யந்தார்யகுரு:—வேதாந்த தேசிகன் என்னும்
பரோ ஹயமுக:—ஹயக்ரீவனின் மறு உருவமானவர்
பத்யாநாம்—பத்யங்களின்
தசபி: சதை:—பத்து நூறுகளால்
த்வத் ப்ரேயஸ:—உமது பர்தாவின்
பாதுகாம்—பாதுகையை
அஸ்துதேதியத்—ஸ்தோத்தரித்தார் என்பது யாதொன்றுண்டோ
தத்ர—அவ்விஷயத்தில்
க:விஸ்மய:—என்ன வியப்பு?
அதீவ—மிகவும்
ஸ்தோக—அல்பமான
ப்ரஜ்ஞம்—அறிவையுடையவனும்
மூகமபி—பேசுவதற்கும் தகுதியற்ற ஊமையாயும்
ஸஹஸ்ரேண ச்லோகை:—ஆயிரம் பத்யங்களால்
தேஸ்தோதாரம்—உம்மைத் துதிப்பவனுமான
மாம்—என்னை
ஸமவேக்ஷ்ய—பார்த்து
ஸூக்ஷ்மமதிபி:—நுண்ணறிவு பெற்றவர்களால்
கஸ்மாத்—எப்படி
ந விஸ்மீயதே—ஆச்சரியப்படாமல் இருக்க முடியும்.

ஸ்வாமி தேசிகன் ஸர்வ சக்தியும் வாய்ந்தவர். ஹயக்ரீவனின் அபராவதாரரவர். அவர் ஸ்ரீரங்கத்திலிருந்த பாகவதர்களின் வேண்டுகோளுக்கிணங்கி பாதுகா ஸஹஸ்ரம் என்ற நூலை இயற்றியதில் என்ன வியப்பு? ஸர்வ தந்த்ரங்களிலும் ஸ்வாதந்த்ரியம் பெற்றவரால் செய்ய முடியாதது யாதுளது? அவருடன் என்னை ஒப்பிடும் போது அடியேன் ஜ்ஞாந சூந்யன். உதடையசைப்பதற்கும் தகுதியற்ற ஊமை போன்றவன். அப்படியிருக்க என்னை ஆயிரம் பத்யங்களால் ஸ்தோத்தரிக்கச் செய்தீர் என்றால் அறிவு பெற்றவர் எப்படி ஆச்சரியப்படாமலிருப்பர். ஆச்சரியப்படத் தான் செய்வர். 23

தமது காவ்யத்துக்குள்ள விஷய வைலக்ஷண்யத்தை வெளியிடுகிறார்.

मन्ये सत्स्वपि वाङ्मयेषु विदुषां अन्येषु धन्यैः बुधैः
उक्तिर्मे भुवि देवि तावक गुण स्पर्शादुपादीयते ।
भद्रे त्वद्रमण प्रशस्त चरण द्वन्द्वैक संसर्गतः
भर्गः स्वर्धुनीं बिभर्ति शिरसा भूयस्तु सत्स्वंबुषु ॥

மந்யே ஸத்ஸ்வபி வாங்மயேஷு விதுஷாம் அந்யேஷு
தந்யை: புதை:
உக்திர்மே புவி தேவி தாவக குண ஸ்பர்சாதுபாதீயதே ।
பத்ரே த்வத்ரமண ப்ரசஸ்த சரண த்வந்த்வைக ஸம்ஸர்கத:
பர்க: ஸ்வர்துநீம் பிபர்திசிரஸா பூயஸ்துஸத்ஸ் வம்புஷு ॥

தேவி—பகவானின் மஹிஷியே
விதுஷாம்—காளிதாஸன் போன்ற பெரும் புலவரின்
அந்யேஷு—பிற
வாங்மயேஷு—வாக்கின் வடிவமான காவ்யங்கள்
ஸத்ஸ்வபி—இருந்த போதும் (அவற்றை அநாதரித்து)
மே—என்னுடைய
உக்தி:—ரஸமற்ற பேச்சு
புவி—உலகில்
தாவக—உமது
குணஸ்பர்சாத்—உயர்ந்த குணத்தை விளக்குவதால்
தந்யை:—பகவானிடம் ஈடுபாடு கொண்ட

புதை:—புலவரால்
உபாதீயதே—ஏற்றுக் கொள்ளபடுகிறதென்று
மந்யே—என்னுகிறேன் (அது தகுந்ததே)
பத்ரே—உலகுக்கு நன்மை தருபவளே!
பர்க:—சிவன்
பூயஸ்து—மிகுதியான
அம்புஷு—புண்ணிய தீர்தங்கள்
ஸத்ஸ்வபி—இருந்த போதும் (அவற்றை விட்டு)
ஸ்வர்கதுநீம்—கங்கையையே
த்வத்ரமண—உமது கணவனுனதால் மேன்மை பெற்ற
நாராயணனது
ப்ரசஸ்த சரண த்வந் த்வ—உயர்ந்த திருவடிகளிரண்டின்
ஏகஸம்ஸர்கத:—ஒன்றின் ஸம்பந்தத்தைப் பெற்றதாலேயே
சிரஸா—தமது தலையால்
பிபர்தி—தாங்குகிருன்

ஒரு காவ்யத்துக்கு மேன்மை உண்டாக வேண்டுமாயின் அது அதில் விளக்கப்பட்டுள்ள விஷயத்தின் ஏற்றத்தைக் கொண்டே அமைய வேண்டும். சுவையற்றவை புற்றீசல் போல் தோன்றி மறைய வேண்டியவையே. ரஸமுடையனவும் காளிதாஸன் போன்ற பெரும் புலவரால் இயற்றப்பட்டனவுமான பல காவ்யங்கள் இன்னுமுள. அவற்றை விடுத்து மஹான்கள் ஒரு நூலை கைக் கொள்ளின் அது தேவரீரின் குணத்தை வர்ணிப்பதாலேயே அமைய வேண்டும். விளக்கப்படும் விஷயத்தின் மேன்மையை அடிப்படையாகக் கொண்டதே விளக்குவதின் மேன்மை. உலகிலும் இதைக் காண்கின்ருேம். யமுனை ஸரஸ்வதி முதலிய புண்ய தீர்த்தங்கள் இருந்த போதும் அவைகளை விட்டு சிவன் கங்கையொன்றையே தமது தலையால் தாங்குகிருன். அதற்குக் காரணம் பரம்பரையாக தேவரீர் ஸம்பந்தம் அதற்குள்ளதேயாம். பல பல குணங்களைப் பெற்றமையால் ஸ்ரீ: என்ற பெயரைப் பெற்ற உமது கையைப் பிடித்ததால் நாராயணன் உயர்ந்தவனுகிறன். அவன் திருவடி ஸம்பந்தம் பெற்றதால் தேவ கங்கை உயர்வைப் பெற்றது. எனவே சிவன் அதைத் தாங்குகிருன். பரம்பரையாக ஸம்பந்தம் பெற்ற கங்கையே பெருமை பெற்றதெனின் நேராக உம்மையே வர்ணிக்கும் என் காவ்யத்தை ஏன் புலவர் கைக் கொள்ளாதொழிவர். 24

பிற தெய்வங்களை வணங்குபவரும் பொறுமை உடையவரும் என் நூலைப் போற்ருதொழியின் அது குற்றமாகாது என்கிருர்.

तव स्तोत्रे मन्दाः कतिचित् अति चित्रेऽपि कमले
नविन्दन्ति आनन्दं यदि तदपि न म्लायति मनः ।
स्रजेदेव स्रष्टा स किल विपुलेस्मिन् क्षितितले
चमत्कार आनन्दानुभव चतुरान् द्वि त्रि चतुरान् ॥

தவ ஸ்தோத்ரே மந்தா: கதிசித் அதிசித்ரேऽபி கமலே
ந விந்தந்தி ஆநந்தம் யதி ததபி ந ம்லாயதி மந: ।
ஸ்ரஜே தேவ ஸ்ரஷ்டா ஸ கில விபுலேஸ்மிந் க்ஷிதிதலே
சமத்காராநந்தாநுபவ சதுரான் த்வி த்ரி சதுரான் ॥

கமலே—லக்ஷ்மியே
மந்தா:—பராவரதத்வஜ்ஞானமற்ற
கதிசித்—பிற தெய்வங்களைத் தொழும் மாந்தர்
அதிசித்ரேऽபி—எல்லா வகைகளிலும் மிகச் சிறந்த
தவஸ்தோத்ரே—உமது ஸ்தோத்திரத்தில்
ஆநந்தம் ந விந்தந்தி யதி—ஆனந்தமடைய வில்லையெனின்
ததபி—அதுவும்
மந:—மனதை
ந ம்லாயதி—வருத்துவதில்லை
ஸ்ரஷ்டா—உலகைப் படைக்கும்
ஸ:—புகழ் பெற்ற ப்ரஹ்மா
விபுலே—பரந்த
அஸ்மிந் க்ஷிதிதலே—இந்த பூலோகத்தில் எப்போதாவது எங்காவது
சமத்கார—சொல் பொருள் முதலியவற்றின் மேன்மையால் உண்டாகும்
ஆநந்த—ஸந்தோஷத்தை
அநுபவ சதுராந்—அநுபவத்தில் வல்லமை பெற்ற
த்வி த்ரி சதுராந்—இரண்டு, மூன்று அல்லது நால்வரை
ஸ்ருஜேதேவ கில—படைத்தே திருவரல்லவா?

ஒட்டகம் மிகக் கைப்புடைய வேப்பிலையைத் தான் விரும்பி யுண்ணும். மென்மையான இளைய மாந்தளிரைப் பறந்துத் திரிந்துத் தேடியுண்பது குயிலேயல்லவா? அதுபோல் தேவதாந்தரத்தை வழிபடுபவரும் பொறுமை கொண்டவரும் உன் ஸ்தோத்திரத்தைப் படித்து ஆனந்தங் கொள்ளாவிடின் அதற்காக நான் வருந்

தேன். ரஸாநுபவம் பண்ணத் தெரியாதவர்களையே தற்போது நான்முகன் படைத்தாலும் என்றோ எங்கோ இரண்டு மூன்று சுவையறியும் தன்மை பெற்றவரைப் படைப்பரல்லவா? அவர்கள் என் நூலைப் படித்து சுவைத்தே தீருவர். அதுவே போதுமானது. 25

தமது நூலிலுள்ள மேன்மையைக் கூறி அதைப் படிக்கும்படி உபதேசிக்கிறார்.

सुचारु मधु वीचिका रस मुचो वचो देवता
कुचामृत कचाकचि प्रथन चातुरी मेदुराः ।
नरास्सततमिन्दिरा गुण कथा सुधा दोहिनीः
उपाध्वमिह वेंकटाध्वरि कवेः उदारा गिरः ॥

ஸுசாரு மது வீசிகா ரஸமுசோ வசோதேவதா
குசாம்ருத கசாகசி ப்ரதந சாதுரீ மேதுரா: ।
நராஸ் ஸததமிந்திரா குணகதா சுதா தோஹிநீ:
உபாத்வமிஹ வேங்கடாத்வரி கவே: உதாரா கிர: ॥

நரா:—மனிதர்களே
ஸுசாரு—மிகவும் இனிய
மதுவீசிகா—மகரந்தப் பெருக்கின்
ரஸ—ரஸத்துக்கு ஒப்பான காவியச் சுவையை
முச:—வெளியிடுவதும்
வசோதேவதா—வாக் தேவதையான ஸரஸ்வதியின்
குசாம்ருத—கொங்கைகளிலுள்ள பாலோடு
கசாகசி ப்ரதந—தலையிலுள்ள குழல்களைப் பிடித்துச் சண்டை செய்வதில்
சாதுரீமேதுரா:—மிக்க வல்லமை உடையதும்
இந்திரா—ஸ்ரீயின்
குண கதாசுதா—கல்யாண குணங்களைப் புகழ்வதாகிய தேனை
தோஹிநீ:—பெருக்குவதும்
உதாரா:—பல பொருள்கள் அடங்கியதும்
வேங்கடாத்வரி கவே:—கவியான வேங்கடாத்வரி என்பவருடைய
கிர:—வாக்குமான லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தை

ஸததம்—எப்பொழுதும்
ஸப்ராத்வம்—பக்தியுடன் படியுங்கள்

எனது காப்பியத்திலுள்ள பொருட்சுவை மகரந்தப் பெருக்கின் சுவை போன்றதாய் இருக்கும். சொற்சுவையோவெனில் கல்விக்குத் தலைவியான கலைமகளின் கொங்கைகளிலுள்ள பாலுடன் குடுமி பிடித்துச் சண்டை செய்யுமளவுக்குப் பெருமை பெற்றிருக்கும். வர்ணனை செய்யப்படும் பொருளோ உலகுக்கெல்லாம் தாயான ஸ்ரீயின் குணமாகிய தேனுகும். இத்தகைய பெருமை வாய்ந்த வேங்கடாத்வரி இயற்றிய காவியத்தை இம்மை மறுமைப் பயன்களை அடைவதற்காக தப்பாது எப்போதும் படியுங்கள் என்கிறார். 26

ஆராய்ந்தறியும் தன்மையற்றவனும் காவியமியற்றுவதற்கு வேண்டிய திறனற்றவனும் சிறியவனுமான அடியேன் மனதில் பக்தியின் மிகுதியால் தோன்றியுள்ள "தேவரீர் விஷயமாக ஆயிரம் ச்லோகங்கள் செய்ய வேண்டும்" என்கின்ற ஆசையை தேவரீரே முடித்து வைக்க வேண்டுமென்கிறார்.

स्वैरं प्ररोहयतु पद्य सहस्रमेतत्
दासस्य मे वदनसीम्नि तवावलोकः ।
यः क्वापि हंत सकृदंजलि बंध भाजि
जन्तौ जगत्जननि सौति सहस्रमक्ष्णाम् ॥

ஸ்வைரம் ப்ரரோஹயது பத்ய ஸஹஸ்ர மேதத்
தாஸஸ்ய மே வதநஸீம்நி தவாவலோக:
ய: க்வாபி ஹந்த ஸக்ருதஞ்ஜலி பந்த பாஜி
ஜந்தௌ ஜகஜ்ஜநநி ஸௌதி ஸஹஸ்ரமக்ஷ்ணாம் ॥

ஜகஜ்ஜநநி—உலகுக்கெல்லாம் தாயானவளே
தவாவலோக:—உமது கடாக்ஷம்
தாஸஸ்ய—தேவரீரின் அடிமையான
மே வதநஸீம்நி—எனது முகத்தில்
ஏதத்பத்ய ஸஹஸ்ரம்—துவங்கியுள்ள ஆயிரம் பத்யங்களையும்
ஸ்வைரம்—தடங்கலின்றி
ப்ரரோஹயது—உண்டு பண்ணட்டும்
ய:—யாதொரு கடாக்ஷம்

க்வாபி—எங்காவது
ஸக்ருத்—ஒரு முறை
அஞ்சலி பந்தபாஜி—கை கூப்பிய
ஜந்தௌ—ப்ராணிக்கு
அக்ஷ்ணாம் ஸஹஸ்ரம்—ஆயிரம் கண்களை
லௌஷி—உண்டுபண்ணுகின்றதோ
ஹந்த ஆச்சரியம்

"யதா ததாவாऽபி ஸக்ருத் க்ருதோஞ்ஜலி:" என்கிற முறையில் கைகளைக் கூப்ப வேண்டும் என்னும் எண்ணமில்லாமலே ஏதோ ஒரு காரணத்தால் இரு கைகளையும் ஒன்றாகச் சேர்த்தால் அதை தேவரீர் உம்மை நோக்கிக் கை கூப்பியதாக எண்ணி அதையே கைம் முதலாகக் கொண்டு அவனது ஜாதி குணம் நடத்தை முதலிய ஒன்றையும் கணிசியாது ஏதோ ஒரு ப்ராணி மாத்திரத்தில் உமது கடாக்ஷத்தைப் பரவச் செய்து அவனை ஆயிரம் கண்களுடைய இந்திரனாக ஆக்குகிறீர். இது வியப்புக்குரியதல்லவா! அத்தகைய உமக்கு எல்லா வகைகளிலும் அடிமையான அடியேனிடம் ஆயிரம் பத்யங்களை உண்டாக்குவது ஒரு பொருட்டாமோ? 27

தேவரீர் க்ருபையால் தோன்றவிருக்கும் ஸஹஸ்ரத்தை தேவரீர் அங்கீகரிக்க வேண்டும் என ப்ரார்த்திக்கின்றார். தாமரைக்கும் காவ்யத்துக்கும் ச்லேஷையில் அமைந்துள்ளது இது.

रसिकालिभिः आस्वाद्यं रम्यं श्रीकर विलसदलंकरणम् ।
विकसतु सूर्यालोकात् पद्मसहस्रं सहस्र पत्रमिव ॥

ரஸிகாலிபி: ஆஸ்வாத்யம் ரம்யம் ஸ்ரீகரவிலஸத் அலங்கரணம்
விகஸது ஸூர்யாலோகாத் பத்யஸஹஸ்ரம் ஸஹஸ்ர பத்ரமிவ ।

इत्यात्रेय रघुनाथ दीक्षित विरचित लक्ष्मी सहस्रे प्रारंभ
स्तबकः समाप्तः ॥

தாமரையைப் பற்றியது

ரஸிக—ரஸத்தை (தேனை) க்ரஹிக்க வல்ல
அலிபி:—வண்டுகளால்

நூலைப் பற்றியது

ரஸிக—ரஸிகர்களான புலவர்களின்
ஆலிபி:—கூட்டங்களால்

ஆஸ்வாத்யம்—சுவைக்கத் தக்கதும்	ஆஸ்வாத்யம்—சுவைக்கத் தக்கதும்
ரம்யம்—ரமையான லக்ஷ்மிக்கு உரியதும்	ரம்யம்—அழகியதும்
ஸ்ரீகர:—லக்ஷ்மியின் கையில்	ஸ்ரீகரம்—படிப்பவர்களுக்குச் செல்வத்தைத் தருவதும்
விலஸத்—மேன்மையுடன் விளங்கும்	விலஸத்—நன்கு விளங்கும்
அலங்கரணம்—ஆபரணம் போன்றதும்	அலங்கரணம்—சொற் பொருள்களைப் பற்றிய அலங்காரங்களுடன் கூடியதுமான
சூர்யாலோகாத்—சூரியன் கிரணங்களால்	பத்யஸஹஸ்ரம்—இவ்வாயிரம் பத்யங்கள்
ஸஹஸ்ரபத்ரமிவ—தாமரையைப்போன்று	சூரி—வித்வான்களுக்கு
	ஆலோகாத்—நன்கு ஆராய்ந்து படிப்பதால்
விகஸது—மலரட்டும்	ஸஹஸ்ர பத்ரமிவ—தாமரையைப்போல்
	விகஸது...விளங்கட்டும்

தாமரையில் வண்டுகள் உட்கார்ந்து கொண்டு அதிலுள்ள தேனைச் சுவைத்துக் கொண்டிருக்கும். தாமரையில் லக்ஷ்மி வீற்றிருப்பள். அவள் கைகளுக்கு அது ஆபரணம் போல் அழகு தரும். சூரியன் கிரணங்களால் மலருவது தாமரை.

காப்பியத்தை ரஸிகர்களான புலவர்கள் கூட்டமாகக் கூடிப் படித்துச் சுவைப்பர். படிப்பதற்கும் கேழ்ப்பதற்கும் பொருள் புரியா விடினும் காதுகளுக்கு இன்பம் பயக்கும். படிப்பவர்களுக்குச் செல்வத்தைத் தரவல்லது இக்காப்பியம். சப்தாலங்காரம் அர்த்தாலங்காரம் தொனிப் பொருள் முதலிய காவ்யத்துக்கு இன்றியமையாதவைகளைப் பெற்றிருக்கும். இத்தகைய எனது ஆயிரம் பத்யங்களுடைய நூலை வித்வான்கள் நுண்மாண் நுழை புலன் கொண்டு ஆராய்ந்தால் ஆயிரம் இதழ் கொண்ட தாமரை போன்று சிறப்புற்று விளங்கும்.

வீராபுரம் சடகோபாசாரியர் இயற்றிய
ரத்நப்ரபா என்னும் உரையில்
ப்ராரம்ப ஸ்தபகம் முடிவுற்றது

श्रीः

श्रीहयग्रीवाय नमः

श्रियै नमः

प्रादुर्भाव स्तबकः

(2)

துர்வாஸ சாபத்தால் மறைந்திருந்த லக்ஷ்மி அம்ருதம் பெற விரும்பிய தேவர்கள் க்ஷீர ஸமுத்ரத்தைக் கடைந்த போது தோன்றினள். அவ்வரலாற்றை இந்த ஸ்தபகத்தில் வர்ணிக்கின்றார். எனவே "ப்ராதுர்பாவ ஸ்தபகம்" எனப் பெயர் பெற்றது. ப்ராதுர்பாவ: — தோற்றம். லக்ஷ்மி தோன்றிய இடம் பாற்கடல் ஆனதால் முதலில் அக்கடலை நமஸ்கரிக்கின்றார்.

भजे दुग्धांबुधिं यत्र परिष्कर्तुं हरेरुरः ।
कठिनं सुकुमारं च रत्नं प्रादुरभूद्द्विधा ॥ 1 ॥

பஜே துக்தாம்புதிம் யத்ர பரிஷ்கர்தும் ஹரே: உர: ।
கடிநம் ஸுகுமாரம்ச ரத்நம் ப்ராதுரபூத் த்விதா ॥ 1 ॥

யத்ர—எந்த பாற்கடலில்
ஹரே:—விஷ்ணுவின்
உர:—மார்பை
பரிஷ்கர்தும்—அலங்கரிக்க
கடிநம்—கெட்டியானதும்
ஸுகுமாரம்—மென்மையானதுமாய்
த்விதா—இரண்டு வகைப்பட்ட
ரத்நம்—ரத்நங்கள்
ப்ராதுரபூத்—உண்டாயினவோ
துக்தாம்புதிம்—அந்த பாற்கடலை
பஜே—ஸேவிக்கின்றேன்.

அம்ருதத்தைப் பெற வேண்டி தேவர்கள் பாற்கடலைக் கடைந்தனர். அப்போது கௌஸ்துபமணி என்கிற ரத்நமும், ஸ்த்ரீ ரத்ந

மான லக்ஷ்மியும், சந்திரன், உச்சைச்ரவஸ் என்னும் குதிரை முதலான பல பல பொருள்கள் தோன்றின. அவற்றுள் கௌஸ்துபமும் ஸ்ரீயும் ஸ்ரீமந் நாராயணனின் மார்பை அடைந்தன. ஆகவே அவ்விரண்டையும் ஒன்றாக இந்த ச்லோகத்தில் துதிக்கின்றார். கௌஸ்துபம் என்பது ரத்தினக் கல்லாதலால் அது கடினமாக இருக்கும். ஸ்ரீ உத்தமப் பெண்ணானமையால் மென்மையாக இருப்பள். உயர்ந்த வஸ்துக்களை ரத்நம் என வர்ணிப்பது கவி மரபு. எனவே லக்ஷ்மியை ரத்நமாக உருவகித்தார். கடலில் தோன்றியவுடன் லக்ஷ்மி "புச்யதாம் ஸர்வதேவாநாம் யயௌ வக்ஷஸ்தலம் ஹரே:" என நாராயணன் மார்பை அடைந்தனளென விஷ்ணு புராணம் கூறுகிறது. கௌஸ்துபமும் பகவானின் மார்பில் விளங்குவதே. பகவானின் மார்பு அழகாக விளங்குவதற்குக் காரணங்களான இவ்விரண்டும் தோன்றி பாற்கடலை இந்த ச்லோகத்தால் வணங்கினார். 1

இவை வேறிடத்தில் தோன்றாது பாற்கடலில் தோன்றியதற்குக் காரணத்தை உருவகிக்கின்றார்.

चतुर्मुखादीन् जगदंब डिंभान् दुग्धैः बहून् वर्धयितुं समृद्धैः

पयः पयोधेः भवती दयालुः सत्यं प्रजज्ञे सह कामधेन्वा ॥ 2 ॥

சதுர்முகாதீந் ஜகதம்ப டிம்பாந் துக்தை: பஹூந் வர்தயிதும் ஸம்ருத்தை: 1

பய: பயோதே: பவதீ தயாலு: ஸத்யம் ப்ரஜ்ஞே ஸஹ காமதேந்வா

ஜகதம்ப—உலகங்களின் தாயே
தயாளு:—குழந்தைகளிடம் தயை கொண்ட
பவதீ—நீர்
சதுர்முகாதீந்—நான்முகன், ஐந்து முகன், ஆறுமுகன் முதலாய
பஹூந்—எண்ணற்ற
டிம்பாந்—சிசுக்களை
ஸம்ருத்தை:—மிகுதியான
துக்தை:—பாலால்

வர்தயிதும்—வளர்க்க
பய: பயோதே:—பாற்கடலிலிருந்து
காம தேநுவா ஸஹ—காம தேனுவுடன் கூட
ப்ரஸூதே—உண்டானீர்
ஸத்யம்—இது உண்மை.

பாற்கடலுள் தோன்றிய பொருள்களுள் காம தேனுவும் ஒன்று. விரும்பியவை யாவற்றையும் தமது சக்தியால் உடன் அளிக்க வல்லது அது. மிக்க பாலையும் பெற்றது. "நாராயணாத் ப்ரஹ்மாஜாயதே" "நாராயணாத் ருத்ரோ ஜாயதே" என்கின்ற வகையில் மிக அல்பமான புல் முதலாக மிக உயர்ந்தவரான ப்ரஹ்மா வரையுள்ள வர்க்கங்களெல்லாம் நாராயணனிடமிருந்து தோன்றினவென்று நாராயணோபநிஷத்துக் கூறுகின்றது. எனவே உலகிலுள்ள ஜீவராசிகள் யாவும் ஸ்ரீயின் மக்களாயினர். தாய்க்குத் தம் மக்களிடம் அன்புடைமையைச் சொல்லவும் வேண்டுமோ? அவர்களுள் ப்ரஹ்மா நான்கு முகங்களையும், சிவன் ஐந்து முகங்களையும் ஷண்முகன் ஆறு முகங்களையும் உடையவராயினர். இவர்களுக்கே மிகுதியான பால் தேவை. உலக மக்கள் வேறு உள்ளனர். எனவே மிகுதியான பாலை உடையவளாகத் தோன்ற வேண்டும் என்ற எண்ணங் கொண்டவளாய் பாற்கடலிலிருந்தும், எல்லா வல்லமை வாய்ந்த காம தேனுவுடனும் தோன்றினாய். இல்லையேல் எங்கு வேண்டுமானாலும் தோன்றியிருப்பாய் என வர்ணித்தார். 2

त्वयोज्वलत् दुग्ध पयोधि मध्ये महो द्वयं देवि सहोदियाय ।
हरे: उरो भूषणं एकमासीत् अन्यत् शिरो भूषणं अष्ट मूर्तेः
॥ 3 ॥

த்வயோஜ்வலத் துக்த பயோதிமத்யே மஹோத்வயம் தேவி
ஸஹோதியாய ।

ஹரே: உரோ பூஷணம் ஏகமாஸீத் அந்யத் சிரோ பூஷணம்
அஷ்ட மூர்த்தே: ।

தேவி—சிறப்புடன் விளங்குபவளே
துக்தபயோதே:—பாற்கடலின்
மத்யே—வயிற்றில்
உஜ்வலத்—மிக ப்ரகாசமுள்ள

மஹோத்வயம்—இரு ஒளி வடிவமான கௌஸ்துபமும், சந்திர
த்வயாஸஹ—உன்னுடன் னும்
உதியாய—உண்டாயின
ஏகம்—அவற்றுள் ஒன்றான கௌஸ்துபம் என்னும் ஒளி
ஹரே:—நாராயணனுக்கு
உரோ பூஷணம்— மார்பலங்காரமாகவும்
அந்யத்—பிறிதான சந்திர ஒளி
அஷ்ட மூர்தே:— சிவனுக்கு
சிரோபூஷணம்—தலையலங்காரமாகவும்
ஆஸீத்—ஆயிற்று.

சிறப்பு மிக்க பாற்கடலிலிருந்து லக்ஷ்மி தோன்றிய போது அவளுடன் கௌஸ்துபமும் சந்திரனும் தோன்றின. கௌஸ்துபத்தை நாராயணன் தமது மார்பில் தரித்துக் கொண்டான். சந்திரனை சிவன் தமது தலைக்கு அணிகலனாக்கிக் கொண்டான். 3

जीवं जीवं प्रत्युदारां समृद्धिं कर्तुं हर्तुं कंजधामे तमांसि ।
सर्वं त्रातुं सत्कदंभं पुराब्धेः चान्द्री मूर्तिः जायते तावकी
च ॥

ஜீவம் ஜீவம் ப்ரத்யுதாராம் ஸம்ருத்திம் கர்தும் ஹர்தும்
கஞ்ஜதாமே தமாம்ஸி 1
ஸர்வம் த்ராதும் ஸத்கதம்பம் புராப்தே: சாந்த்ரீ மூர்த்தி:
ஜாயதே தாவகீ ச ॥ 4 ॥

கஞ்ஜதாமே - தாமரையில் வீற்றிருப்பவளே
சாந்த்ரீ—சந்திரனுடையதும்
தாவகீச—உம்முடையதுமான
மூர்த்தி:—உருவம்
ஜீவம் ஜீவம் ப்ரதி—ஒவ்வொரு சகோர பக்ஷிக்கும் ஒவ்வொரு
ஜீவாத்மாவிற்கும்
உதாராம்—மிகுதியான
ஸம்ருத்திம்—உணவின் மிகுதியை மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை
கர்தும்—செய்வதற்கும்
தமாம்ஸி—இருளை, ஜீவாத்மாக்களின் அஜ்ஞானத்தை
ஹர்தும்—போக்குவதற்கும்
ஸதாம்—நக்ஷத்திரங்களுடைய, ஸத்துக்களுடைய

கதம்பம்—ஸமூஹத்தை
த்ராதும்—தன்னை தாங்குவதற்கும், காப்பதற்கும்
புரா—முன்பு
ஜாயதே—தோன்றிற்று.

பாற்கடலிலிருந்து லக்ஷ்மியும் சந்திரனும் தோன்றியதற்குக் காரணத்தை விடையில் வர்ணிக்கிறார்.

லக்ஷ்மீ ஜீவாத்மாக்கள் செய்யும் அநந்தமான அபசாரங்களை க்ஷமித்து புருஷகாரம் செய்து மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அளிப்பள் அறிவின்மையைப் போக்குவள். ஸாதுக்களை அநுக்ரஹம் செய்து காப்பள்.

சந்திரன், அம்ருத மயமான தனது கிரணங்களையே ஆஹாரமாகக் கொண்ட சகோர பக்ஷிகளின் ஸமூகத்துக்கு அவற்றை அளித்துக் காப்பவன். இருளைப் போக்குபவன் நக்ஷத்திரங்களுக்குத் தலைவனானவன். இவைகளைச் செய்வதற்காகத்தான் நீங்கள் இருவரும் பாற்கடலிலிருந்து தோன்றினீர்கள் என்கின்றார். சந்திரனை பிறருக்கு உபகாரம் செய்வதுபோல் லக்ஷ்மியும் பிறருக்கு உதவுவதற்கே அவதாரம் செய்தவள் என்பது கருத்து.

"சம் ஜாயதஇதி சந்த்ரம், கந்த்ரம், தாம், யஸ்யாஸௌ" என்பது விக்ரஹ வாக்யம். "சம்" என்பது மகாராந்தமான அவ்யயம். ஜீவேத—ஸஹ-சரேணஸஹ; ஜீவதி-க்ரீடதி இதி, ஜீவம் ஜீவம் என்பது விக்ரஹ வாக்யம். சகோர பக்ஷியை அன்றில் என்பர் தமிழர். இப்பறவை ஆணும் பெண்ணுமாக எப்போதும் சேர்ந்தே வாழும். சந்திர கிரண அமிழ்தைப் பருகும் என்றும் கவிகள் வருணிப்பர்.

இருளைச் சந்திரன் போக்குவது கண் கூடானது. இலக்குமி அஜ்ஞானமாம் இருளைப் போக்கி அறிவு ஒளியை அளிப்பள் என்பது "லச்லாக்ய: ஸகுணீ தத்ய: ஸுர: ஸச புத்திமாந்" என்னும் ஸ்ரீ விஷ்ணு புராணத்திலுள்ள ஸ்ரீ ஸ்துதி வாக்யத்தால் தெரிய வருகிறது.

"ஸத்" என்ற சொல் ஸத் புருஷர்களைச் சொல்வதுபோல் நக்ஷத்திரங்களையும் சொல்லும் என்பது "ஸத்க்லீபம் குலே" என்கின்ற ரத்நமாலையால் அறியப்படுகிறது.

"ஜாயதே—உண்டாகிறது" என நிகழ்கால வினைச்சொல்

போல் தோன்றுகிறது. ''புரி லுங்சாஸ்மே'' என்கின்ற பாணினியின் சூத்திரப்படி இறந்தகாலம் காட்டும் ''லட்'' டாயிற்று. இறந்த காலத்தைக் காட்டும் ''லுங்'' போலவே ''புரா'' என்ற சொல் லுடன் சேர்ந்தால் ''லட்'' உம் வரலாம் என்பது மேற்கூறிய சூத்திரப் பொருளாம்.

विश्वासेचनकं मुखं तव पयस्सिन्धोः उदंचत्तदा
शंकित्वा विगलत्कलंकमपरं चन्द्रांकुरं शंकरः ।
न्यस्तं मस्तपदे विधुं प्रथमतः नूनं भृशं न्यून इति
अंब भ्रंशयितुं स्तुवन्निव शिरः कंपं रमे निर्ममे ॥

விச்வாஸேசநகம் முகம் தவ பயஸ்ஸிந்தோ: உதஞ்சத்ததா
சங்கித்வா விகலத் கலங்கமபரம் சந்த்ராங்குரம் சங்கர: ।
ந்யஸ்தம் மஸ்தபதே விதும் ப்ரதமத: நூநம் ப்ருசம் ந்யூநஇதி
அம்ப ப்ரம்சயிதும் ஸ்துவந்நிவ சிர: கம்பம் ரமே நிர்மமே ॥ 5

அம்ப—ஜகந்மாதாவான
ரமே—லக்ஷ்மியே
சங்கர:—சிவன்
பயஸ்ஸிந்தோ:—பாற்கடலிலிருந்து
உதஞ்சத்—உண்டாகியதும்
விச்வாஸேசநகம் எவ்வளவு நாழிகை பார்த்தாலும் அத்ருப்தியை உண்டாக்காததுமான
தவ முகம்—உமது முகத்தை
விகலத் கலங்கம்—களங்கமற்ற
அபரம் சந்த்ரம்—வேறொரு சந்திரன் என்று
சங்கித்வா—மருண்டு
ப்ரதமத:—முதலில்
மஸ்தபதே—தம் தலையில்
ந்யஸ்தம்—உயர்ந்தது என்ற எண்ணத்தால் வைத்த
விதும்—களங்கமுள்ள சந்திர கலையை
ப்ருசம்ந்யூந:—இது எல்லாவகையிலும் மிகவும் குறையுடையது
இதி—என்றெண்ணி
ப்ரம்சயிதும்—தன் தலையிலிருந்து கீழே விழ்த்துவதற்குப்போல்
ஸ்துவந்—தேவரீர் முகத்தைத் துதி செய்து கொண்டு

சிர: கம்பம்—தலையசைத்தலை
நிர்மமே—செய்தான்
நூநம்—இது நிச்சயம்.

இயல்பாக நடந்த செயலில் கவி தமது கருத்தை ஏற்றிக் கூறுகிறார். பாற்கடலிலிருந்து தோன்றிய லக்ஷ்மியின் அப்பழுக்கற்ற சந்திரன் போன்றதும், எவ்வளவு நாழிகை கண்டு கொண்டிருந்தாலும் போதும் என்ற எண்ணத்தை அளிக்காததுமான லக்ஷ்மியின் முகத்தை சேவித்த சந்திரன் மிகுந்த ஸந்தோஷத்தால் தலையை அசைத்து அசைத்துத் துதித்தான். அப்படியவன் அசைத்ததை கவி உத்ப்ரேக்ஷை செய்கிறார். சிறந்ததாக எண்ணி முன்பு நமது தலையில் சந்திரனது ஒரு கலையைத் தரித்தோமே இது என்ன மருள் என ஏங்கினன் என்று. சிவன் தலையிலுள்ள சந்திரன் களங்கமுடையவன். தேயும் தன்மையுடையவன். லக்ஷ்மியின் முகமோவெனில் எப்போதும் களங்கமற்றது, பரிபூர்ணமானது. எனவே குறையுடைய சந்திரனைத் தலையில் தாங்கியது மடமை என்றெண்ணி அதைக் கீழே விழுத்துவதற்காகப் போலிருந்தது அவன் தலையை அசைத்தது என்கிறார்.

दातुं त्वां पुरुषोत्तमाय तनयां पद्मे गृहीतव्रतः
प्रादात् कामगवीं मुदे सुमनसां पानीयमप्यंबुधिः ।
कंचित् सप्तिमनुत्तमं मघवते कल्पद्रुमं चेष्टदं
सर्वज्ञाय सितांशुकं धृतजटावर्गाय दिग्वाससे ॥

தாதும் த்வாம் புருஷோத்தமாய தநயாம் பத்மே க்ருஹீத வ்ரத:
ப்ராதாத் காம கவீம் முதே ஸுமநஸாம் பாநீயமபி அம்புதி: ।
கஞ்சித் ஸப்திம் அநுத்தமம் மகவதே கல்பத்ருமம் ச இஷ்டதம்
ஸர்வஜ்ஞாய ஸிதாம் சுகம் த்ருத ஜடாவர்காய திக்வாஸஸே ॥ 6

பத்மே—தாமரையாளே
அம்புதி:—ஸமுத்ரம்
புருஷோத்தமாய—நாராயணனுக்கு உயர்ந்த வரனுக்கு
தநயாம் த்வாம்—தமது பெண்ணை தேவரீரை
தாதும்—கொடுக்க வேண்டுமென்று
க்ருஹீதவ்ரத:—உறுதி கொண்டவராய்
ஸுமநஸாம்—தேவதைகளின் நன்மனமுள்ளவர்களின்

முதே—ஸந்தோஷத்துக்காக
காம தவிம்—காமதேனுவையும், பால் மிக்க பசுவையும்
பாதீயமபி—தாநம் செய்வதற்கு வேண்டிய அம்ருதத்தையும், ஜலத்தையும்
ப்ராதாத்—ஜலம் விட்டுத் தானம் செய்து கொடுத்தான்
மகவதே—பல யாகங்கள் செய்த
இந்த்ராய—இந்திரனுக்கு ஏதோ ஒரு ப்ராம்மணனுக்கு
கஞ்சித்—மிகப் பெருமை வாய்ந்த
ஸப்திம்—குதிரையையும்
இஷ்டதம்—விரும்பியதை அளிக்கவல்ல
கல்பத்ருமம்ச—கற்பக வ்ருக்ஷத்தையும்
ப்ராதாத்—தானம் செய்தான்
த்ருத ஜடாவர் காய—தலையில் ஜடை தரித்த, ஜடை, வர்ண க்ரமம், கநம், முதலிய வேதப் பகுதிகளை அறிந்த
நிர்வாஸஸே—துணியில்லாமையால் இகம் பரமுமுள்ள
ஸர்வஜ்ஞாய—சிவனுக்கு, நல்ல ஞானமுள்ளவனுக்கு
ஸிதாம் சுகம்—சந்திரனை, வெண்மையான வஸ்த்ரத்தை
ப்ராதாத்—சத்பாத்ர தாநம் செய்வதற்கு அங்கமாகக் கொடுத்தான்.

தாயே தேவரிருக்கு நாராயணனுடன் விவாஹம் பண்ணி வைக்க நிச்சயித்த ஸமுத்ரராஜன் அதற்கங்கமாக கோதானம், வஸ்த்ரதாநம் முதலியவைகளைச் செய்தான் என்று சிலேடையாக வர்ணனை செய்கிறார்.

பாற்கடலிலிருந்து லக்ஷ்மி தோன்றியபோது அவளுடன் அம்ருதம், காமதேனு, உச்சைச்ரவஸ் என்னும் குதிரை, கற்பக வ்ருக்ஷம் சந்திரன் போன்றவை தோன்றின. காமதேனுவையும் அம்ருதத்தையும் தேவர்கள் எடுத்துக் கொண்டார்கள். குதிரையையும் கல்பக வ்ருக்ஷத்தையும் இந்திரன் கொண்டான். சந்திர கலையை சிவன் தனது சிரோ பூஷணமாகக் கொண்டான். கவி தமது கவிதா ஸாமர்த்யத்தால் மேற்கூறியவர்களுக்கேயன்றிப் பிறருக்கும் இவைகளை தாநம் செய்தான் எனச்சிலேடையில் வர்ணித்துள்ளார்.

வேதம் ஓதுபவர்கள் முதலில் வேதம் முழுவதையும் ஓதியபின் அதிலுள்ள பதம், க்ரமம், கநம், ஜடை, வர்ணம் க்ரமம் போன்ற பிரிவுகளை ஓதுவர். அதைக் குறிக்கின்றது "த்ருத ஜடாவர்காய" என்பது. ஏனைய சிலேடைகள் தெளிவானவையே,

ஹர்ஷாதப்தே: அம்ருதகலசம் து ஆததே தேவஸங்க:
ஸ்ரீமானுச்சைர்ஶ்ரவஸம் அமரக்ஷ்மாபதி: சந்த்ரமீச:।
தேஷாமேகம் ந கில ஜக்ருஹே த்வாம் ஸுபாமேவ சார்ங்கீ
பத்மே ஸாரக்ரஹண நிபுண: பாரிசேஷ்யாத்
க்ருஹீதும்॥ 7

பத்மே - தாமரையாளே
தேவஸங்கஸ்து - தேவதைகளின் கூட்டமோ வெனில்
அப்தே: - கந்யகாதானம் செய்ய நிச்சயித்த ஸமுத்ரராஜனிடமிருந்து
அம்ருதகலசம் - அம்ருதம் நிறைந்த கலசத்தை
ஹர்ஷாத் - ஸந்தோஷத்துடன்
ஆததே - வாங்கிக்கொண்டது.
ஸ்ரீமான் - செல்வம் மிகுந்தவனான
அமரக்ஷ்மாபதி: - தேவேந்திரன்
உச்சைச்ரவஸம் - உச்சைச்ச்ரவஸ் என்ற குதிரையையும்
ஈச: - சிவன்
சந்த்ரம் - சந்திரனையும்
அக்ருஹ்ணாத் - வாங்கிகொண்டான்.
ஸாரக்ரஹண நிபுண: - ரத்னத்தானதை எடுத்துக் கொள்ளும் திறமை வாய்ந்த.

சார்ங்கீ - நாராயணன்
பாரிசேஷ்யாத் - எஞ்சிய
ஸுபாம் - அப்ராக்ருத திவ்ய மங்கள விக்ரஹத்தையுடைய
த்வாமேவ - உன்னையே
க்ருஹீதும்இவ - ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்குப் போல்
தேஷாம்மத்யே - ப்ராக்ருதமான அவைகளுள்
ஏகமபி - ஒன்றையும்
ந ஜக்ருஹே - ஏற்கவில்லை.

தேவர்கள் முப்பத்து மூன்று கோடியராவர். இந்திரன் அவர்கள் தலைவன். தேவர்கூட்டம் அம்ருதத்தைஸந்தோஷத்

துடன் ஏற்றது. இந்திரன் செல்வம் மிக்கவனாதலின் சிறந்த குதிரையில் ஏறிச்செல்வது தமக்குத் தகுதியுடையதென அதை ஏற்றுக்கொண்டான். நாராயணன் இவற்றுள் எதையும் ஆசைப்பட வில்லை. நாராயணனுக்கு "ஸாரக்ரஹண நிபுணன்'' என்ற விருதை கொடுத்துள்ளார்கவி. பாற்கடலுள் தோன்றியவற்றுள் நீதான் ஸாரமானவள். மற்றவற்றின் ஸாரம் உனது அதீன மானது என்பதையறிந்த நாராயணன் அவைகளை ஏற்காது உன்னையே ஏற்றான் என்கிறார்.

முப்பத்து மூன்று கோடி மக்கள் இருந்தும் தேவர்களுள் எவர்க்கும் ஸாரத்தை ஏற்க விருப்பம் தோன்றவில்லை. வயிற்றுக்கு வேண்டியதையே அத்துணைபேரும் முக்கியமாக எண்ணினர். எனவே அரஸிகர்கள் என்பதுகருத்து.

ஈச சப்தம் சந்திரனை க்ரஹிக்கும் வல்லமையுடையவன் என்ற பொருளையும் தரவல்லது. எனவே சிவன் சந்திரனை ஏற்றான்,

சாயாமுகே ஜநநி சாந்த்ரமஸீ தவாஸீத்
கல்பத்ரு பல்லவருசி: கரயோ: பதோச்ச।
ஸௌதாரஸீ வசஸி ஸம்பததோ நமித்ய:
ப்ராத்ரு ச்ரியம் ஸஹபுவ: பரிபிப்ரதீதி॥ 8

ஹே! ஜநநி - தாயே
சாந்த்ரமஸீ – சந்திரனுடையதான
சாயா - காந்தி
தவ முகே - உனது முகத்தில்
ஆஸீத் - தோன்றியது
கரயோ; பதோச்ச - கைகளிலும், கால்களிலும்
கல்பத்ரு – கற்பகவ்ருக்ஷத்தின்
பல்லவருசி: - தளிரின்சோபை
ஆஸீத் - தோன்றியது
ஸௌதாரஸீ - அம்ருதரஸத்தைப்பற்றிய
ஸம்பத் - இனிமை முதலிய சுவை
வசஸி - வாக்கில்
ஆஸீத் - உண்டாயிற்று

அத: - ஸஹோதர குணம் உன்னிடம் தோன்றுவதால்
ஸஹபுவ: - உடன் பிறந்தவர்கள்
ப்ராத்ருச்ரியம் - உடன் பிறந்தவர் அழகை
பரிபிப்ரதி - உடலில் தரிக்கின்றனர்
இதி - என்கிற உலக வழக்கு
ந மித்யா - பொய்யன்று.

சந்திரனை சிறுகுழந்தைமுதல் முதியோர்வரை கண்டுகளிக்கின்றனர். எவ்வளவு நாழிகை பார்த்துக்கொண்டிருந்தாலும் போதும் என்ற எண்ணம் தோன்றுவதில்லை. கற்பகவ்ருக்ஷத் தளிர்கள் சிவந்திருக்கும். மென்மையாக இருக்கும், பளபளவென்றிருக்கும். அம்ருதம் அதிமதுரம் என்பதை சிறந்த ஒரு வஸ்துவை "அம்ருதமாக இருக்கிறது" என்னும் உலகவழக்கே மூதலிக்கும்.

தாயே: உனது திருமுகமண்டலத்திலும், கைகளிலும், திருவடிகளிலும், வாக்கிலும், உன்னுடன் பிறந்தவர்களான சந்திரன் கற்பகவ்ருக்ஷத்தின் தளிர் அம்ருதம், இவைகளின் சாயைதென்படுவதால் உடன்பிறந்தவர் தம்முள் ஒத்திருப்பர் என்றஉலகவழக்கு மெய்யாயிற்றென்றபடி.

சுதாதய : ஸந்து ததாபி தோயதி :
த்ருவம் பவத்யைவ பவத்யபத்யவாந் ।
குணாரமே ஜாக்ரதுவிக்ரமாதய :
குணீமஹோதார தயைவ பூபதி: ॥ 9

ரமே - லக்ஷ்மியே
சுதாதய: - அம்ருதம், கௌஸ்துபம் பாரிஜாதம் முதலியவை
ஸந்து - ஸமுத்திரத்திலிருந்து தோன்றினவையாதலின் அதன் மக்களாயினும்
தோயதி: - பாற்கடல்
பவத்யைவ - உன்னுலேயே
அபத்யவாந் - சிறந்த மக்களை உடையதாக
பவதி - ஆகிறது.

விக்ரமாதய: } வீரம் முதலிய குணங்கள்
குணா (அரசனிடம்)
ஜாக்ரது - மிகுதியாக விளங்கட்டும்
பூபதி - அரசன்
மஹோதாரதயைவ - வள்ளல் தன்மையாலேயே
குணீ - சிறந்த குணமுடையவனாக
பவதி - ஆகிறான்.

அரசனுக்குரிய குணங்களான வீரம் முதலியவற்றுள்ளும் வள்ளன்மை அவனது மேன்மைக்கு எப்படி மிகமுக்கியமாகின்றதோ அதுபோல் பாற்கடலுள் தோன்றிய பலவற்றுள்ளும் தேவரீரே அதன் மேன்மைக்கு மிகமுக்கியமானவராகின்றீர்.

அம்ருதம் முதலியவை அசேதனமானமையின் அவை கடலில் தோன்றினவென்பதால் மட்டும் கடலரசன் மக்களையுடையவனாகான். தேவரீர் ஸர்வேச்வரியானபடியாலும் பாற்கடலில் வெளிப்பட்டதாலும் அவன் புத்ரவான் ஆனான் என்பது கருத்து.–9

ச்ராம்யத் பந்நக வக்த்ர கோடர மருத் நுந்நோர்மி ஸங்கட்டநா
ஜாடித்யோர்த்வ விஸாரி துக்த கணிகா நிஷ்பந்ந புஷ்பாஞ்ஜலி: ।
ஸிந்து: மந்தவசுந்தராப்ருதுதயத் தூம் தூம் த்வநிச் சத்மநா
ஸ்த்துத்வா மாதவம் அத்புதாமலபத த்வாமம்ப கந்யாமணிம். 10.

அம்ப - தாயே
ஸிந்து: - கடல்
ச்ராம்யத் - (மந்தரமலையில் கட்டி இழுத்ததால்) துன்பமடைந்த
பந்நகவக்த்ர - வாசுகியின் முகமாகிய
கோடரமருத் - பொந்திலிருந்துதோன்றிய காற்றால்
ஸங்கட்டநா - உராய்தலின்
ஜாடித்ய - வேகத்தால்

ஸார்த்வவிலாஸி - மேலேபரவிய

துக்தகணிகா - பாலின்திவலைகளால்

திஷ்டந்த - செய்யப்பட்ட

புஷ்பாஞ்சலி: - இரண்டுகைகளின் சேர்க்கையால் ஸமர்பிக்கப் பட்டபுஷ்பத்தை உடையதாம்.

மந்த வகத்தரா ப்ருத் } மத்தாக இருந்த மந்தர மலையிலிருந்து

உதயத் - கடையும் போது உண்டான

தும்தும்த்வநிச் சத்மநா } தும்தும் என்கிற ஓசை யின் வ்யாஜத்தால்

மாதவம் - அருகிலிருந்த நாராயணனை

ஸ்துத்வா - ஸ்தோத்தரித்து

அத்புதாம் - ஆச்சரியகரமான

கந்யாமணிம் - உயர்ந்த பெண்ணாகிய

த்வாம் - உம்மை

அலபத - அடைந்தது.

கௌஸ்துபம், கல்பகவ்ருக்ஷம், போன்ற பிற பொருள்களை பாற்கடல் எளிதில் தம்மக்களாக அடைந்ததுபோல் தேவரீரை எளிதில் அடையவில்லை. நாராயணனை அர்ச்சனை செய்தும் பூஜித்துமே தேவரீரை மகளாகப் பாற்கடல் பெற்றதென்கிறுர். அர்ச்சித்த முறையை விளக்குகிறுர் ப்ராம்யத் என்பதால்.

மந்தர மலையாகிய மத்தை வாசுகியைக் கயிறாகக் கொண்டு கடையும்போது வாசுகிக்குப் பெரும் துன்ப முண்டாயிற்றாம். அதனைப்பொறுக்க முடியாமல் அது குகைபோன்ற தம் வாயால் பெருமூச்சு விட்டதாம். அக்காற்றின் வேகத்தால கடலில் பல பேரலைகள் தோன்றி அவை ஒன்றோடொன்று உராய்ந்தனவாம். அவ்வேகத்தால் பல பால்திவலைகள் ஆகாயத்தில் எழுந்தனவாம், அவைபுஷ்பம்போல் இருந்தனவாம். வெண்மையான அவ்வலைத்திவலையாம் புஷ்பங்கள் அப்போதருகிலிருந்த நாராயணன்மேல்பட்டன. அதனால் கடலரசன் நாராயணனை அர்ச்சித்தது போன்றிருந்ததாம்.

தோத்தரித்தவகையை மந்தவசந்த்ரா என்பதால் விளக்குகின்றார். மத்தைத் தயிரிலிட்டு முன்னும் பின்னுமாக அதைக் கைகளால்செலுத்தி அகத்தில் நாம் கடையும்போது ஒருவகை ஓசை உண்டாவதுடன் சுற்றிலும் தயிர் மேலெழும்பிக் கடைவர் கைகளிலும் உடலிலும் தெளிப்பது கண்கூடானதே. அதுபோல் மந்தரத்தால் கடைந்தபோது உண்டான ஓசையை "தும்தும் த்வநி" என அநுவதிக்கின்றார். அவ்வோசை கடலிலிருந்து உண்டானமையின் கடல் அவ்வோசையால் தோத்தரித்த தென்கிறார்.

லக்ஷ்மியைத் தன் மகளாகப் பெறுதற்குக் கடலரசனுக்கும் மாதவ பூஜையின்றி முடியாதென்பது விளக்கியதாயிற்று.

ஸிந்து க்ரோட ஸ்தபுட விலுடத் மந்த லப்தாவதாரை:
தும் தும்காரை: த்வதுதயமஹே துந்துபி ஸ்ரீமதி ஸ்ரீ:!
ப்ராஞ்சோ ஜஞ்ஜாநில படுநடோத்தாடிதப்ரௌடவீசீ
வல்லீ ஹல்லீஸகம் அகலயந் அந்தருல்லீட அப்த
ஹர்ஷா || 11

ஹே ஸ்ரீ: - லக்ஷ்மியே
ப்ராஞ்ச: - (நீ அவதரித்த போதிருந்த) தேவர்களும் அசுரர்களுமாகிய முன்னோர்கள்

ஸிந்து - கடலின்
க்ரோட - மத்யதேசமாகிய
ஸ்தபுட - அலையிருந்த இடத்தில்
விலுடத் - சுழல்கிற
மந்த - மந்தரமலையால்
லப்தாவதாரை: - உண்டாக்கப்பட்ட
தும்தும் காரை: - ஒலியால்
துந்துபி ஸ்ரீமதி - பேரிகையின் ஒலியுடைத்தான
த்வது தயமஹே - உனது அவதாரோத்ஸவத்தில்
ஜஞ்ஜாநில - மந்தர மலைச் சுழற்சியின் வேகத்தாலுண்டான பெருங் காற்றாகிய
படுநட - திறமைவாய்ந்த நடன ஆசிரியரால்
உத்தாடித - உயர்த்தி நடிப்பிக்கப்பட்ட
ப்ரௌடவீசீவல்லீ - வட்டமான பேரலைகளாகிய பெண்களின்
ஹல்லீஸகம் - கோலாட்டத்தை
அந்த: - மனதில்

உல்லிட நிரர்ஷா: - உண்டான மகிழ்ச்சியை உடையவர்களாய் அவையத் - பார்த்தனர்.

பெருங்காற்று வீசும்போது கடலில் அலைகள் மிகஉயர்ந் தெழுந்து அவை ஒன்றோடொன்று மோதுவது இயல்பே. அங்ஙனம் இயல்பான அலைமோதலைப்பெண்கள் பலர் ஒன்று கூடிவட்டமாக நின்று விளையாடும் கோலாட்டமாக உத்ப்ரேக்ஷை செய்கிறார்.

பெரியதோர் மஹோத்ஸவம் நடக்கும்போது பேரிகைமுதலிய வாத்யங்கள் வாசிக்கப்படும், பெண்கள்பலர் ஒன்று கூடிவட்டமாக நின்றுகோலாட்டமாடுவர். அதைப் பல பெரியோர் கண்டு களிப்பர். அதுபோல் லக்ஷ்மியின் அவதாரமாகிய மஹோத்ஸவ ஸமயத்திலும் பேரிகை வாசிக்கப்பட்டதென்றும் பெண்கள் கோலாட்ட மாடினரென்றும் வர்ணிக்கிறார்.

பேரிகை என்பது பெரியதொரு தோல்கருவி. அதன் ஒலியும் மிக்கிருக்கும். அதுபோல் மந்தரமலையும் பெரிதே. அதைக் [illegible]விகிட்டுக் கடையும்போது எழுந்த ஒலியும் பெரிதாகத்தானே இருக்கும், எனவே அவ்வொலி பேரிகை ஒலி போன்றிருந்ததாம். அதுபோல் மலைச்சுழற்சியின் வேகத்தால் காற்று மிக்கெழுந்தது. இதுவே, கைதேர்ந்த நடன ஆசிரியனாயிற்று. பெரிய பெரிய அலைகள் உயர்ந்தெழுந்தன. அவை ஒன்றோடொன்று மோதி ஒலியை எழுப்பின. இது கோலாட்ட ஒலிபோலிருந்தது. வட்டமான மலையைக்கொண்டு கடையும்போது அலைகளும் வட்டமாகத்தானே தோன்றும். ஆகவே அலைகளின் மோதலொலியை வட்டப் பெண்கள் கோலாட்டமாக்கினர். கண்ட பெரியோர் அப்போது அங்கிருந்த தேவர்களும் அசுரர்களுமாவர்.

பர்ஜும் ப்ராந்த்வா சிகுரமுததே: உத்பவந்த்யா;
பவத்யா;
பத்தா: மந்த்ரக்ஷிதிப்ருதி கரை: பந்தகா: ஸ்விந்த
காத்ரா: |
தத்காலலோசித மதிஜுஷ: த்ராஸத: த்யக்த
சேஷ்டா:
ராஜீவாக்ஷப்ரணயிநி ப்ருசம் சங்கதாம்
அப்யதைக: || 12.

ராஜீவாக்ஷ — பகவானின், ப்ரணயிநி - பத்நியே
கரை: — தேவர்களால்

மந்தக்ஷிதிப்ருதி — மந்தர மலையில்
பத்தா: — (கடையும் கயிருக அமைந்த வாசுகியின் உறுதிக்காக அதன் இடையிடையே தேவர்களால்) கட்டப்பட்ட
பந்நகா: — பாம்புகள்
உததே: — கடலிலிருந்து
உத்பவந்தயா: — உண்டாகின்ற
பவத்யா: — உன்னுடைய
சிகுரம் — முன்நெற்றி மயிர்களை
பர்ஹம் — மயில்தோகையென
ப்ராந்த்வா — மருண்டு
த்ராஸத: — மயில் என்கின்ற பயத்தால் (உண்டாகிய வியர் வையால்)
ஸ்விந்நகாத்ரா: — நனைந்த உடலுடையவைகளாய்
தத்காலோசித — மயிலைக்கண்ட காலத்துக்கு மிகவும் பொருத்தமான
மதிசுஷ: — புத்தியை (ப்ரதிபை) உடையனவாய்
த்யக்த சேஷ்டா: — விடப்பட்ட (பாம்புகளுக்குரிய சீறுதல் கடிதல் முதலாய) தொழில்களை உடையனவாய்.
ரஜ்சுதாம் — மந்தரையின் கடை கயிறாம் தன்மையை
ப்ருசம் — பலவகையிலும்
அப்யநைக: — அநுகரித்தன.

வாசுகியைக் கடை கயிருகப் பயன்படுத்தியபோது அவ்வாசுகிக்குத் துன்பம் தோன்ருமைக்காகவும், உறுதிக்காகவும் இடையிடையே பலபல பாம்புகளை அதன் உடலில் சுற்றிவைத்தனர் தேவர். கடையும் துன்பத்தால் அவற்றின் உடலில் வியர்வை தோன்றியதோடு அவை தமக்கே உரிய படமெடுத்தாடுதல், சீறுதல், கடித்தல், போன்ற தொழில்களை விடுத்து ஒய்ந்திருந்தன. அங்ஙனமவை ஒய்ந்திருந்தது துன்பத்தாலன்று என்று கவி தமது அறிவு மேன்மையில் காரணமொன்றைக் கூறுகிருர் (உத்ப்ரேக்ஷயில்)

லக்ஷ்மி கடலில் தோன்றியபோது அவள் தலைப்பகுதியில் இருந்த முன் நெற்றி மயிர்கள் வெளிப்பட்டன. அவற்றின் பளபளப்பு, மென்மை, அழகு முதலியவற்றைக் கண்ட இச்சிறு பாம்புகள் அவற்றை மயில் தோகை என மருண்டன. அம்மருட்சியால் உண்டான பயத்தால் உடல் வியர்த்தது, சீறிஞல் அவ்வோசையைக் கேட்டு மயில் தம்மைக் கவ்விக் கொள்ளப்போகின்றதே என்ற பயத்தால் சீறுதல் முதலிய தத்தம் தொழில்களை விட்டொழித்தன வென்கிருர் கவி.

ஆலோக்ய தத்ரபவதீம் அவதீர்ண ரூபாம் வ்ருஷ்டா
முதா சுமநஸ: சுமந: ப்ரதானை: ।
பிண்டிபவத்பிரகிலாம்பபய: பயோதே: டிண்டிர கண்ட
நிவஹை: ஸமமாப்லவந்த ।

அகிலாம்ப - உலகத்தாயே
சுமந: ப்ரதானை: - இந்திரன் முதலிய தேவர்களால்
தத்ர - அப்பாற்கடலில்
அவதீர்ணபோம் - உண்டாகிய திருமேனியை உடைய
பவதீமாலோக்ய - தேவரீரைபார்த்து
முதா-(தமது முயற்சி பலித்தது) என்றஸந்தோஷத்தால்
வ்ருஷ்டா: - பொழியப்பட்ட
சுமநஸ: - கற்பகப்பூக்கள்
பிண்டிபவத்பி: - கடைந்ததால் வெண்ணெய்யாகத்திரண்டு வந்த
பய: பயோதே;- க்ஷீரஸ்முத்திரத்தின்
டிண்டிர கண்ட நிவஹஸ்ஸமம் - நுரைகளின் குவியல்களுடன்
ஆப்லவந்த - மிதந்தன.

பாற்கடலைக்கடைந்தபோது நுறைகள் சிறியவடிவினவும் பெரிய வடிவினவுமாய் மிகுதியாக மிதந்தன. அலற்றைக்கவி தம்புத்தி சாதுர்யத்தால் வெண்ணெய் என உத்ப்ரேக்ஷிக்கின்றார். கடைந்த வேகத்தால் பாற்கடலின்பாலிலிருந்த வெண்ணெய் பல வடிவில் திரண்டெழுந்ததாம். அதுவே அப்படி மிதந்ததாம். மஹாலக்ஷ்மி தோன்றியவுடன். மந்தரமலையைக் கடைந்ததால் தாமடைந்த கஷ்டத்திற்குப் பயன்கிடைத்தது என்று மகிழ்ந்த தேவர்கள் அம்மகிழ்ச்சியின் போக்கு வீடாகக் கற்பகப்பூவைப் பாற்கடலில் பொழிந்தனராம். அப்பூக்களும் பாற்கடல் நுறையாகிய வெண் ணெய்க் கட்டிகளும் தமக்குள் வேறுபாடு தெரியாமல் மிதந்தன என்கிறார்.

ஆப்லவந்த என்பதற்கு நர்த்தனம் செய்தன என்றபொருளு முண்டு. இலக்குமி தோன்றியதால் தேவர்மகிழ்ந்தது போல் அவர்களால் பொழியப்பட்ட பூக்களுக்கும் நுரைகளுக்கும் மகிழ்ச்

உண்டாயின. எனவே அவ்விரண்டும் கடலில் நர்த்தித்தன எனக்கருத்து கொள்ளவேண்டும். அவ்வேகத்தால் நுரைகளும் பூக்களும் ஆடுவது இயல்பே.

13

அம்பஸ்வயம் த்வயி சிரா தவதீர்ணவத்யாம்
மந்த்ரம வ்யய தயாய மகாசநாநாம் ।
ச்ராந்தாஹி ரஜ்ஜு கபலீக்ருதி சங்கயேவ க்ஷீரோத
ரோதஸி சனை அநில: சசார ॥

அம்ப - தாயே
த்வயி - நீர்
ஸ்வயம் - உமதுவிருப்பத்தால்
சிராத் - வெகுநேரம் கடந்து
அவதீர்ண வத்யாம் - அவதரித்தபோது
க்ஷீரோதரோதஸி - பாற்கடலின்கரையில்
அநில; - காற்று
மகாசநாநாம் - தேவர்களுடைய
மந்த்ரமவ்ய பநயாய - கடலைக் கடைந்ததால் உண்டான சிரமத்தைப்போக்குவதற்காக
ச்ராந்த - பசிதாகம் முதலியவற்றால் களைத்த
அஹி - கடைகயிறான வாசுகி என்ற பாம்பு
கபலீக்ருதி சங்கயேவ - தம்மை உண்டுவிடுமோ என்ற ஸந்தேகத்தால்போல்
சனை; - ஓசையின்றி மெதுவாக
சசார - சஞ்சரித்தது.

தென்றலில் வாசனையிருக்கும், தென்றல், மெதுவாக வீசும் இயல்புடையது. காற்று பாம்புகளின் உணவாம். லக்ஷ்மி கடலைக் கடைந்தவுடனே அவதரிக்கவில்லை. வெகுநேரம் கழித்தே அவதரித்தார். தேவரின் பொறுமையை சோதிக்க வேண்டும் என்றும் எண்ணம் போலும் அவருக்கு. ஆகவே வெகுநேரம் கடைய வேண்டியதாயிற்று அதனால் களைப்புற்ற பாம்புக்கு மிகவும் பசியும் தாகமும் உண்டாயினவாம்.

இப்படியே வெகுநேரம் கடைந்ததால் களைத்திருந்த தேவர்கள் களைப்பைப் போக்கித் தானும் பயன் பெற்றவனாக ஆகவேண்டும் என்கின்ற எண்ணமாம் காற்றுக்கு. ஆனால் அதே சமயம் வேகமாக வீசினால் ஓசையுண்டாமாகையால் பசித்த பாம்புகள் தம்மை விழுங்கி விடப் போகின்றனவே என்றுபயமும் தோன்றிற்றும். எனவே காற்று சத்தமின்றி நிதானமாக வீசியது என உத்ப்ரேக்ஷையாக வர்ணிக்கின்றார்.

> ஸாந்த்ரோத்கண்டா மஞ்சுள மதுஜித் ஸாதர
> பாங்க தாரா
> ஸத்ரீசீ: ச்வஸந விஸரத் துக்த வீசிபிரத்பி: ।
> உத்வாஹாக்யம் கமபிபவதீம் உத்ஸவம் லப்ஸ்
> யமாநாம்
> மாதஸ்த்வாதோ மதுரமநயத் மங்கல ஸ்நாந கர்ம ॥

மாத: - தாயே
தாத: அப்தி: - உமது தந்தையான கடல்
உத்வாஹாக்யம் - கல்யாண மென்னும்
கமபி - சொல்லொணுமதிமை வாய்ந்த
உத்ஸவம் - பேரின்பத்தை
லப்ஸ்யமாநாம் - அடையவிருக்கும்
பவதீம் - உம்மை
ஸாந்த்ர - மிகுதியான
உத்கண்ட - ஆசையால்
மஞ்சுள - ரமணீயமான
மதுஜித் - மது என்ற அரக்கனை வென்ற நாராயணனுடைய
ஸாதர - அநுகூலமான
அபாங்கதாரா - கடைக்கண்பார்வையுடன்
ஸத்ரீசீ: - கூடிய (ஸமானமான)
ச்வஸந - காற்றின்
விஸரத் - வீசப்பட்ட
துக்தவீசி : - பாற்திவலைகளால்
மதுரம் - அழகிய

மங்கலஸ்நாந கர்ம - கலியாணத்தின் போது செய்யப்படும் மங்கள ஸ்நானத்தை

அநயத் - செய்வித்தான்

பாற்கடலில் லக்ஷ்மி தோன்றியபோது நாராயணனுடைய கடாக்ஷமும் பாற்கடல் திவலைகளும் அவள்மீதுவிழுந்தன என்று வர்ணிக்கிறார்.

கலியாணத்துக்கு முன் கலியாணப்பெண்ணை சுமங்கலிகள் ஒன்று கூடி மங்களநன்னீராட்டுவிப்பது உலகவழக்கு. அதுபோல் நாராயணனை மணக்கவிருக்கும் தம்மகளாகிய லக்ஷ்மிக்குப் பாற்கடல் மங்களஸ் நாநம் செய்வித்ததாம். காற்றால் வீசப்பட்டபாற்கடல் திவலைகளே நீராயினவாம். அவைதாம் எத்தகையல வெனின் அளவிடற்கரிய அநுராகத்துடன் கூடியதும். நாராயணனின் அன்பு கலந்ததுமான கடைக்கண் பார்வைக்கு ஒப்பானவையாம். அத்தகைய திவலைகளால் மங்களஸ்நாநத்தைப் பாற்கடல் செய்வித்ததாம். 15

கடாக்ஷ வீக்ஷணத்தை வெண்மையாக வர்ணிப்பது கவிகள் மரபு பாற்கடல் திவலை வெண்மையானமையின் அதற்குக் கடைக்கண் பார்வையை உவமையாக்கினார்.

> சுதோதி ஸமுத்பவத் சுரதருச் சடாந்தர்கதே
> மனோஞ்ஞ மணிமண்டபே மஹாதிரத்ந
> ஸிம்ஹாஸநே ।
> ஸதிதாம் மணிஸரோருஹி த்ரிதசசுந்தரீ ஸேவிதாம்
> ஜயாய பவதீமஹம் ஜநநி ஸந்ததம் சிந்தயே ॥

ஜநநி - தாயே
சுதோதநி - பாற்கடலில்
ஸமுத்பவத் - உண்டான
சுரதருச்சடா -கற்பகவ்ருக்ஷக் கூட்டங்களின்
அந்தர்கதே - இடையிலுள்ள
மநோஜ்ஞ - அழகிய
மணிமண்டபே - ரத்நமயமான மண்டபத்திலுள்ள

மஹதி - பரந்த
ரத்நவிம் ஹாஸநே - ரத்தினம் இழைத்த ஸிம்ஹாசனத்தில்
மணிமயரோருஹே - ரத்னமயமான தாமரையில்
ஸ்திதாம் - வீற்றிருப்பவளும்
த்ரிதசஸுந்தரீ - தேவமாதுகளால்
ஸேவிதாம் - வணங்கப்பட்டவளுமான
பவதீம் - உம்மை.
ஜயாய - ஸம்ஸார வெற்றிபெற
ஸந்ததம் - எப்போதும்
சிந்தயே - தியானிக்கிறேன்.

கற்பகவ்ருக்ஷம் பாற்கடலில் தோன்றியது. அது குளிர்ச்சியும் வாஸனையும் உள்ளது. அம்மரக் கூட்டத்தின் இடையிலுள்ள அழகிய ரத்ந மண்டபத்தின் நடுவில் ரத்னத்தால் செய்யப்பட்ட தாமரை மலரில் வீற்றிருப்பவளும் தேவமாதுகளால் தாமரை முதலியனவால் சிசுருஷை பண்ணப்படுபவளுமான தாயே எப்போதும் தேவரீரைத் த்யானம் செய்து கொண்டிருக்கிறேன். தேவரீர் அடியேனுக்கு ஸம்ஸாரஜயத்தைத் தரவேண்டுமென வேண்டிக்கொள்ளா பித்து. 16

அப்ஜன்ம ஸம்புதப்ரப கரத்வயோதை: உத்தாம
துக்தாம்புதி
ஸம்பவரோத்புருத்தர வீசீ ஸமூஹகை:
ஸம்ப்ருத்தாம் ஸமந்தா: |
ஹஸ்தாரவிந்த பங்கஜாம் அபிநவ கல்பை:
அநல்பைச் சுபாம்
அம்பத்ஸ்வ முக்ஷதீ ஸம்ராஜி ஆகர்ணம் ஆகல்ப
ஸௌந்தர்யம் || 17

அப்ஜன்ம உடுவின்
ஸமுத்ரவிருந்தும்
கராப்ஜ ஸ்ரேணை: - அம்ருதத்தை கைகளில் ஏந்தியவளும்
[illegible]
துக்தாம்புதி - பாற்கடலில்

ஸ்வைரோத் ஸ்ருத்வர - தடையின்றி வெளிக்கிளம்பும்
வீசிகாஸஹ சரை: - அலைகளோடு ஸமமானதுமான
சாமரை;- சாமரங்களால்
ஸம்விஜிதாம் - வீசப்பட்டவளும்
ஹஸ்த - தம் கையில் ஏந்தியதால்
அலங்க்ருத - அழ கூட்டப்பட்ட
பங்கஜாம் - தாமரையை உடையவளும்
அநல்ப்பை: - மிகுதியான
அபிநவாகல்பை: - அப்போது (விச்வ கர்மா செய்த ஆபரணம் முதலிய அலங்காரங்களால்,
சுபாம் - அழகிய திருமேனியை உடையவரும்
ஜகதாம் - மக்களின்
ஆதங்க கூலங்கஷாம் - தாபத்தைப் போக்குபவருமான
த்வாம் - உம்மை
உஷஸி - விடியற்காலையில்
ஸ்மராமி - தியானம் செய்கிறேன்

தேவமாதுகளால் சாமரை வீசுதல் முதலாய பணிவிடைகளால் ஸேவிக்கப்பட்டவரும். கைகளில் தாமரை ஏந்திய வரும் அளவில்லா ஆபரணங்களை அணிந்துள்ளவரும் உலக மக்கள் துன்பத்தைப் போக்குவருமான உம்மை உயர்ந்த காலமாகிய விடியற்காலையில் த்யானிக்கிறேன் என்கிறார்.

வெண்மையான சாமரையை மேலும் கீழுமாக வீசுவது பாற்கடலில் பெருங்காற்றால் மிக்கெழும் வெண்மையான அலை உயர்ந்து கீழே வீழ்வது போலுள்ளதாம். இருகரைகளையும் முட்டிப் பெருகும் நதியை கூலங்கஷா என்பர் அதை லக்ஷ்மிக்கு உவமையாகக் கூறியதால் நதி கம்பீரமாகவும் பரிசுத்தமாகவும் வெப்பத்தில் வாடியவர்களால் அடையப்படுவதாகவும் இருக்குமோ அதுபோல் லக்ஷ்மியும் தோற்றப்பொலிவுடையவளாயும் தூயவளாகவும், ஸம்ஸார தாப முடையவரால் அடையப்படுபவளாகவும், இருப்பாள் என்பது உள்ளுறைப் பொருளாம்.

பூயாஸுஸ்தே த்வதீயா: மயி ஹரிதயிதே ஸ்துரலக்ஷா:
கடாக்ஷா:

யல்லிப்ஸா வ்யக்ர பார்த்திவாமர விரசிதை: அஞ்ஜலீ-
நாம் ப்ரபந்தை: |

மந்த்ராத்ரி க்ஷோப துஸ்தம் கலச ஜலநிதே:
மத்யமுத்ஸ்ருஜ்ய வேலாம்

ப்ராப்தை: ரேகே ஸரோஜைரிவ நவாஜநி
நாயகாலோக மூகை: ||

ஹரிதயிதே - நாராயணபத்நியே
யல்லிப்ஸா - எக்கடாக்ஷத்தைப் பெறுவதில்
வ்யக்ர - ஊக்கம் கொண்ட
பார்த்திவாமர - சிவன் முதலான தேவரால்
விரசிதை: - செய்யப்பட்ட
அஞ்ஜலீநாம் - கைகூப்புதலின்
ப்ரபந்தை: - கூட்டங்களால்
மந்த்ராத்ரிக்ஷோப - மந்தரமலையால் கடைந்ததால்
துஸ்தம் - வாழத்தகுதியற்ற
கலசஜலநிதே: - கடைதற்குப்பானை போன்றிருந்த பாற்கடலின்
மத்யமுத்ஸ்ருஜ்ய - நடுப்பகுதியை விடுத்து
வேலாம்ப்ராப்தை: - கரையை அடைந்தவும்
நவாஜநிநாயக - புதிதாகத் தோன்றிய சந்திரனது
ஆலோக - கிரணங்களால்
மூகை: - வாய்திறக்காதவைகளுமான
ஸரோஜைரிவ - தாமரைகள்போல்
ரேகே - விளங்குகைபோ
தேவ்துரலக்ஷா: - தேவரால் விரும்பப்பட்ட அந்த மிகுதியான
த்வதீயா: - உனது
கடாக்ஷா: - கடாக்ஷங்கள்
மயிபூயாஸு: - என்னிடம் விழவேண்டும்.

ஸம்ஸ்க்ருதத்தில் பாவேப்ரயோகம் என்று ஒன்றுண்டு. அதால் அமைந்தது இந்தச்லோகம் செயப்பாட்டு வினைவாக்கியம் என்பர்

தமிழில் இதனை எக்கடாக்ஷத்தைப்பெற விரும்பிய தேவர்களால் கூப்பிய கைகளால் தாமரை மொட்டுப்போல் விளங்குகையோ அந்த கடாக்ஷங்கள் எனக்குக் கிடைக்க வேண்டும் எனப்பொருள் கொள்ள வேண்டும்.

சிவன் முதலாய் தேவர்கள் பாற்கடலையடைந்து நாராயணன் மனைவியான லக்ஷ்மியின் கடாக்ஷத்தைப்பெறவேண்டிக் கைகளைக் கூப்பித் துதித்தார்களாம். அக்கூப்பிய கைகள் தாமரை மொட்டு போன்றிருந்தனவாம். அங்குத்தாமரை மொட்டு தோன்றியதற்குக் கவி சுவையான காரணமொன்றைக்கற்பனை செய்கின்றார், கடலைக் கடைவதற்கு முன் கடலின் நடுவில் எண்ணற்ற தாமரை பூத்திருந்தனவாம் கடலைக் கடந்தபோது அந்நடுப்பகுதி கலங்கி விட்டதால் தாம் வாழத் தகுதியற்றது இப்பகுதி என அவை எண்ணினவாம் எனவே அப்பகுதியை விட்டு அப்பூக்கள் கரையை அடைந்தனவாம். அச்சமயம் அக்கடலில் சந்திரன் தோன்றினனாதால் அவனைக்கண்ட மலர்ந்த தாமரைகள் மூடினவாம். அம்மொட்டேயாம் தேவர்களின் அஞ்ஜலி, தேவராலும் விரும்பப்பட்ட அக்கருணைக்கடாக்ஷம் எனக்குக்கிடைக்க வேண்டும் என ப்ரார்த்தித்தாராயிற்று. 18

அக்ரே முராரேரவிந்த பீடே ஹரித்கரீந்த்ரை:
அபிஷிச்யமாநாம் ।
அவேக்ஷ்ய புத்ரீம் அகிலேச்வரீம் த்வாம் ஆநந்த
ஸிந்தௌ நிமமஜ்ஜ ஸிந்து: ॥ 19

ஸிந்து: - ஸமுத்திரராஜன்
அரவிந்தபீடே - பத்மம் போன்ற ஆஸநத்தில்
ஹரித்கரீந்த்ரை: - ஐராவதம், புண்டரீகம் முதலிய திக்கஜங்களால்
முராரேரக்ரே - நாராயணனெதிரில்
அபிஷிச்யமா நாம் - ஸ்நாநம் பண்ணிவைக்கப்பட்டவளும்
(அதஏவ - ஆதலாலேயே)
அகிலேச்வரீம் - அனைத்துலகங்களுக்கும் தலைவியாயும்
புத்ரீம் - தமக்குப் பெண்ணானவருமான
த்வாமவேக்ஷ்ய - தேவரீரைப்பார்த்து

ஆநந்தஸிந்தௌ - பேரானந்தமாகிய கடலில்
நிமமஜ்ஜ - மூழ்கினன்

பாற்கடலில் லக்ஷ்மி தோன்றியதும் அவளை எட்டு திக்க ஜங்களும் ஸ்வர்ணமயமான குடத்தில் ஜலம் கொணர்ந்து நாராயணனுக்கெதிரில் தாமரை போன்ற பீடத்தில் மூவுலகங் களையும் காப்பதற்காகப் பட்டாபிஷேகம் செய்து வைத்தன வென ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் கூறப்பட்டுள்ளது. அதை அப்படியே கவி இந்த ச்லோகத்தில் கூறியுள்ளார். பாற்கடலும் ஆனந்த கடலில் மூழ்கினன் என்பது ரஸாவஹம் 19

ப்ரஸப முததி கந்யே பச்யதாம் தைவதாநாம்
பரமபுருஷ வக்ஷ: பீடமாடௌ கதா: த்வம் I
ஸஹ தயிததமேந ஸ்வைர கேலௌ ஸதீநாம்
நகலு நிஜசிசூ நாம் ஸந்நிதி:
வ்ரீடஹேது: II II 20 II

உததிகந்யே - ஸமுத்ர குமாரியே
பச்யதாம் தைவதாநாம் - பார்த்துக்கொண்டிருக்கும் தேவர்களை அநாதரித்து
பரமபுருஷ - உத்தம புருஷனான நாராயணனுடைய
வக்ஷ: பீடம் - மார்பாகிய ஆஸநத்தை
ப்ரஸபம் - அவர் வேண்டுதலின்றியே
ஆடௌகதா: - அடைந்தாய்
ஸதீநாம் - பதிவ்ரதைகளுக்கு
தயிததமேநஸஹ - பர்த்தாவோடு
ஸ்வைரகேலௌ - விருப்பத்தால் செய்யும் செயலில்
நிஜ சிசூநாம் - தமது குழந்தைகளின்
ஸந்நிதி: - அருகிருத்தல்
வ்ரீடஹேது: - வெட்கத்தைச் செய்வதாக
நகலு - ஆகாதன்றோ?

க்ஷீரஸமுத்ரத்தில் தோன்றியவுடன் அங்கிருந்த தேவர்களின் எதிரிலேயே நாராயணன் மார்பை லக்ஷ்மி அடைந்தாள், தேவ

ரெதிரில் இப்படிச்செய்வது தகுமா? அவளுக்கு அதுவெட்கத்தை உண்டு பண்ணுதா என்ெருரு கேள்வியை மனதிற்கொண்டு கவி உலகவழக்கைக் காட்டி அது ந்யாயமே என முதலிக்கின்ருர். தமது குழந்தைகள் பக்கத்திலிருக்கும்போது பதிவ்ரதையான பெண்கள் தம் கணவன் எதிரில் உட்கார்ந்திருப்பது பேசுவதுபோன்ற செயல்களைச் செய்துகொண்டு தானே இருக்கின்றனர், அதில் வெட்கப்படுவதற்கு எதுவும் இல்லையே? அதுபோல் தம் குழந்தைகளான தேவர் எதிரில் லக்ஷ்மி நாராயணன் மார்பை அடைவதில் தவறில்லையே என்கின்ருர்.

கலித கலச ஸாகரோர்மி கங்கம், கமபி முகுந்த
மஹ: கலிந்த ஜௌகம் I
கனக சுஹ்ருத பூஷயத் தவாபாவிததிரதீவ ரமே
ஸரஸ்வதீவ II 21 II

ரமே - லக்ஷ்மியே
கநகசுஹ்ருத் - சுவர்ணத்தோடொத்த
தவ - உமது
ஆபாவிததி: - (பாற்கடலில் பரவும்) சரீர காந்தியானது
கலித - தம்முடன் கலந்த
கலசசாகர - பாற்கடலின்
ஊர்மி - அலைகளாகிற
கங்கம் - கங்கையை உடையதாயும்
கமபி - மிகவுயர்ந்த
முகுந்தமஹ: - முகுந்தனின் ஒளியாகிய
கலிந்த - யமுனையின்
ஓகம் - ப்ரவாஹத்தையுடைய
ஸரஸ்வதீவ - ஸரஸ்வதீ நதியின் ப்ரவாஹம் போல்
அபூஷயத் - அலங்கரித்தது.

கங்கை நிறம் வெண்மையானது யமுனையின் நிறம் நீலம் ஸரஸ்வதியின் நிறம் பொன் போன்றது. பொன்போன்ற லக்ஷ்மியின் சரீர காந்தி பாற்கடலில் பரவுகிறது. நீலமேக நிபனுவ நாராயணனின் காந்தி யமுனை போன்றுள்ளது, பாற்கடல் கங்கை போலுள்ளது, இம்மூன்றும் ஒன்ருேடொன்று சேர்வதால் த்ரிவேணி போல் இருந்ததாம்.

21

த்யுநதீ சிசிரம் சிர: புராரே: வஹதீந்து: பவதீ,
தயா ஜலார்த்ரம் ।
ஹ்ருதயம் முரஹர்து:அப்திஜே வாம் உசிதைவ
ஸ்திதி: உத்பவாநு ரூபா ॥ 22

அப்திஜே - கடலில் தோன்றியவளே
த்யுநதீ - தேவகங்கைச் சேர்ந்தவள்
சிசிரம் - குளிர்ந்த
புராரே: சிர: - சிவன் தலையை
இந்து: வஹதி - சந்திரன் அடைகிறான்
பவதீ - தேவரீர்
தயாஜலார்த்ரம் - தயையாம் ஜலத்தால் குளிர்ந்த
முரஹர்து: - நாராயணனின்
ஹ்ருதயம் - மார்பை
வஹதி - அடைகிறீர்
வாம் - உங்களிருவருக்கும்
உத்பவாநு ரூபா - பிறப்பிடமான பாற்கடல் போன்று குளிர்ந்த
இடத்தில்
ஸ்திதி: - இருக்கை
உசிதைவ - தகுதியுடையதே

சந்திர னையை சிவன் தமது சிரத்தில் தரித்துக்கொண்டான், லக்ஷ்மியை நாராயணன் தமது மார்பில் தரித்துக்கொண்டான். இது மிகவும் பொருத்தமானதெனக்கவி சமத்காரமாகக் கூறுகிறார். இருவருக்கும் பிறப்பிடம் பாற்கடல், அது குளிர்ச்சியானது. நாராயணனின் மார்பு தயை என்னும் ஜலம் தங்குமிடமாதலால் குளிர்ந்திருக்கும் சிவனின் சிரம் கங்கையின் ஸம்பந்தத்தால் குளிர்ச்சியானது. குளிர்ந்த இடத்தில் பிறந்த நீங்களிருவரும் குளிர்ந்த இடத்தை அடைந்தது தகுதியுடையதே என்கிறார்.

கடிமேவ தோஷவிதும் த்வாம் காந்த புஜாந்தர
நிசாந்த முப்யந்தீம் ।
ப்ரயுத்நக்த ... ஹஸ்தை: ப்ரதமம் சந்தகனாம்
அம்புநிதாரமணி ॥ 23

கமலே - லக்ஷ்மியே
அம்புதி: - கடலரசன்
காந்த - கணவனான நாராயணனின்
புஜாந்தர நிசாந்தம் - மார்பாகிய கணவன் வீட்டை
உபயாந்தீம் த்வாம் - அடையவிருக்கும் உம்மை
தோஷயிதும் - ஸந்தோஷிப்பிப்பதற்காக
ஊர்மிஹஸ்தை: - அலைகளாகிற கைகளால்
ப்ரத்நம் - வெகுகாலமாகச்சேர்க்கப்பட்டுப் பழமையான
ரத்நகணம் - கௌஸ்துபம் முதலாகிய மணிக்கூட்டங்களை
ஹரணம் - வரதக்ஷிணையாக
ப்ராயச்சத் - கொடுத்தான்

மார்பைக் கணவன் வீடாகக் கூறியதால் பர்த்தாவின் பரிவும், அலையாகிற கைகள் எனப்பன்மையில் கூறியதால் சமுத்திரராஜனின் கொடைமிகுதியும் புலப்படுகின்றன ரத்னங்களின் கூட்டம் என்பதால் நாராயணனின் சிறந்த மார்பணிகலனாகிய கௌஸ்துபமும் அவனுடையதன்று. மாமனாரால் சீதனமாகக் கொடுக்கப்பட்டதே என்பது புலப்படுகிறது.

வரதக்ஷிணைக்கு "ஹரணம்" எனப் பெயரிட்டிருப்பதை நோக்க வேண்டும், "ஹரணம்" என்பதற்கு அடித்துப்பிடுங்குவது என்பது பொருளாம்.

என்னற்ற யாகங்களைச் செய்து, கச்சி, கடாம்பு
வித்வன்மணி என்கின்ற விருதுகளைப் பெற்ற
அரசாணிபாலை என்ற ஊரில் வாழ்ந்தவர் வம்சத்தில்
தோன்றிய ஸ்ரீவேங்கடாத்வரி இயற்றிய ஸ்ரீ லக்ஷ்மீ
ஸஹஸ்ரத்தில் ப்ராதுர் பாவஸ்தபகம் என்ற
இரண்டாம் ஸ்தபகம் முற்றிற்று

வாஜபேயம், அப்தோர்யாமம் முதலிய யாகங்கள் செய்த விராபுரம், ராமாநுஜ தீக்ஷிதர் வம்சத்தில் தோன்றிய ராமாநுஜ தீக்ஷிதர் குமாரரான சடகோபாசாரியர் இயற்றிய ரத்நப்ரபா என்ற உரையில் இரண்டாம் ஸ்தபக உரை முற்றுப்பெற்றது.

ஸ்ரீ:

அரசாணிப்பாலை ஸ்ரீ வேங்கடாத்வரி அருளிச்செய்த

ஸ்ரீ லக்ஷ்மீஸஹஸ்ரம்

வக்ஷஸ்தல அவஸ்தாந ஸ்தபகம்

(மூன்றாவது ஸ்தபகம்)

தமிழ் வ்யாக்யானம்

ஸ்ரீ உ.ப.வே. வீராபுரம் - சடகோபாசார்யர்

॥ अथ वक्षःस्थलावस्थानस्तबकः ॥ ३

வக்ஷஸ்தலாவஸ்தாநஸ்தபக: (மூன்றுவது)

श्रये शेषाचलमणेः शार्ङ्गिणो हृदयङ्गमाम् ।
अनुकम्पामिवाकम्पामम्बामम्बुजवासिनीम् ॥ १

ஶ்ரயே ஶேஷாசலமணே: ஶார்ங்கிணோ ஹ்ருதயங்கமாம் ।
அநுகம்பாமிவாகம்பாமம்பாமம்புஜவாஸிநீம் ॥ 1

லக்ஷ்மி பாற்கடலில் தோன்றியவுடன் நாராயணன் மார்பகத்தைச் சென்றடைந்தனள் என்ற வரலாற்றைக் கூறுவதால் இப்பெயரை இந்த ஸ்தபகம் பெற்றது.

சேஷாசல-சேஷாத்ரி என்னும் மலைக்கு

மணே: - ரத்நம் போன்ற	அநுகம்பாமிவ - தயைபோன்று
சார்ங்கிண:- பகவானுடைய	இருப்பவளும்
ஹ்ருதயங்கமாம் மநதிற்குப் பிடித்தவளும்	அம்புஜவாஸிநீம் தாமரையில்
	அம்பாம் - தாயை
அகம்பாம்-ஸ்திரமான	ச்ரயே - ஸேவிக்கின்றேன்.

சேஷாத்ரி என்னும் வேங்கடமலைக்கு அலங்காரமணி போன்ற ஸ்ரீநிவாஸன் மனதில் வாழ்பவளான தயை போன்றவரும், தாமரையில் வாழ்பவருமான உலகமாதாவை ஸேவிக்கிறேன்.

''ஹ்ருதயங்கமாம்'' என்பதற்கு மார்பில் வாழ்பவள் என்றும், மநதில் வாழ்பவள் என்றும், மனதுக்குப் பிடித்தவள் என்றும் பொருள்கள் சொல்லலாம். இது ஒரு தொகைச்சொல். இது ஹ்ருதயம் கச்சந்தீதி ஹ்ருதயம்கமா என விரியும் 1

कल्याणि दिव्यकरुणादिगुणाम्बुराशे
काङ्क्षाधिकाभ्युदयदायिकटाक्षलेशे ।
भद्राय दैत्यजिदुरःकृतनित्यवासे
भक्तिस्थिरेण मनसा भवतीमुपासे ॥ २

கல்யாணி திவ்யகருணாதிகுணாம்புராசே
காங்க்ஷாதிகாப்யுதயதாயிகடாக்ஷலேசே ।
பத்ராய தைத்யஜிதுர: க்ருதநித்யவாஸே
பக்திஸ்திரேண மநஸா பவதீமுபாஸே ॥ 2

கல்யாண - நன்மையை விளை விப்பதும்
திவ்ய - அத்புதமானதுமான
கருணாதிகுண - கருணை, தாக்ஷிண்யம், ஔதார்யம் முதலிய குணங்களுக்கு
அம்புராசே - கடல் போன்றவளே
காங்க்ஷாதிக - விரும்பியதற்கும் மேலான பலமான
அப்யுதயதாயி - மோக்ஷத்தைத் தரும்
கடாக்ஷலேசே - கடைக்கண் பார்வையைப் பெற்றவளே
தைத்யஜிதுர: - அரக்கர்களை வென்ற நாராயணன் மார்பில்
க்ருத - செய்யப்பட்ட
நித்ய - நித்யமான வாழ்க் கையை உடையவளே
பவதீம் - தேவரீரை
பக்திஸ்திரேண - உறுதியான பக்தியுடன் கூடிய
மநஸா - மனத்தால்
பத்ராய - மோக்ஷத்துக்காக
உபாஸே - இடைவிடாது நினைக்கிறேன்

சிறந்த குணங்களில் கடல்போன்றவளே கடைக்கண்பார்வையாலேயே வேண்டியவர் வேண்டியதையெல்லாம் தருவதோடன்றி மோக்ஷத்தையும் தருபவளே பர்தாவுக்கு மிகவும் வேண்டியவளாதலால் அவன் மார்பில் வஸிப்பவளே திடமான பக்தியுடன் மோக்ஷத்தை விரும்பி எப்போதும் தேவரீரை த்யானிக்கிறேன். 2

नालीकसम्भवभवादिसुराभिवाद्ये
नानाविधाकृतकवाङ्मयमौलिवेद्ये ।
पाथोधिपुत्रि पतिवक्षसि नित्यहृद्ये
भान्तीमनन्यशरणो भवतीं प्रपद्ये ॥ ३

நாளீகஸம்பவபவாதிஸுராபிவாத்யே
நாநாவிதாக்ருதகவாங்மயமௌலிவேத்யே ।
பாதோதிபுத்ரி பதிவக்ஷஸி நித்யஹ்ருத்யே
பாந்தீமநந்யஶரணோ பவதீம் ப்ரபத்யே ॥ 3

அநந்யசரண: - பிறிதொரு அடைக்கலமற்றவடியேன்
நாளீகஸம்பவ - நாபிக்கமலத்தில் தோன்றிய ப்ரஹ்மன்
பவாதிகர - சிவன் முதலாய தேவர்களால்
அபிவாத்யே - ஸேவிக்கப் படுபவளே
நாநாவித - பல்வகையான
அக்ருதகவாங்மய - செயற்கையல்லாத வாக்கான வேதத்தின்
மௌலி - சிரஸான உபநிஷத்துகளால்
வேத்யே - அறியத்தக்கவளே
பாதோதி புத்ரி - கடலின் கன்னி!
நித்யஹ்ருத்ய - மிகவும் பிடித்தமான
தயிதோரஸி - கணவன் மார்பில்
பாந்தீம் - அழகாக விளங்கும்
பவதீம் - தேவரீரை
ப்ரபத்யே - சரணமாக அடைகிறேன்.

பெரியோரை வணங்கும்போது நமது கோத்ரம் ப்ரவரம் முதலியவற்றைச் சொல்வது அபிவாதநம் எனப்படும். லக்ஷ்மி ஜகந்மாதாவாகையால் நான்முகன் ருத்ரன் முதலாய தேவர்கள் தமதுதாயை வணங்கி அபிவாதனம் செய்கின்றனர். பலவகைகளான உபநிஷத்துக்களால் துதிக்கப்படுபவள். கடலரசனான பாற்கடலின் புத்ரியும் ஆவாள். தம் மீது கொண்டுள்ள கணவனின் வால்லப்யத்தால் அவன் மார்பிலேயே தம் வாழுமிடமாகக்கொண்டு நீருண்டமேகத்தில் மின்னல்போன்று நீலமேகச்யாமளனான நாராயணன் மார்பில் மின்னல்கொடிபோல் விளங்குகிறாள். அத்தகைய லக்ஷ்மியை சரணமாகவடைகிறேன் என்கிறார். முன் ச்லோகத்தில் பக்தி சொல்லப்பட்டது. இதில் ப்ரபத்தி சொல்லப்படுகிறது. 3

शय्यागृहं तव पिता जगतां नियन्तु-
र्भ्राता दृगेक इतरः पुनरङ्गभूषा ।
वक्षस्यमुष्य वरदे त्वमवस्थिता तद्-
वाल्लभ्यमम्ब भवदीयमनन्यलभ्यम् ॥ ४

சய்யாக்ருஹம் தவ பிதா ஜகதாம் நியந்துர்-
ப்ராதா த்ருகேக இதர: புநரங்கபூஷா ।
வக்ஷஸ்யமுஷ்ய வரதே த்வமவஸ்திதா தத்-
வால்லப்யமம்ப பவதீயமநந்யலப்யம் ॥ 4

வரதே - விரும்பியதைத் தருபவளான
அம்ப - தாயே
ஜகதாம் நியந்து: - நாராயணனுக்கு
தவபிதா - உமது தந்தை
சய்யாக்ருஹம் - படுக்குமிடம்
ஏகோப்ராதா - உடன் பிறந்தவருள் ஒருவனான சந்திரன்
நயநம் - கண்ணாவான்
இதர: ப்ராதா - மற்றொருடன் பிறந்ததான
புந: - கௌஸ்துபமணியோவெனின்
அங்கபூஷா - ஆபரணமாம்
த்வம் - நீர்
அமுஷ்ய - இந்த நாராயணனுடைய
வக்ஷஸி - ப்ராணனிருப்பிடமான மார்பில்
அவஸ்திதா - வீற்றிருக்கின்றீர்
தத் - ஆகையால்
த்வதீயம் - உமது
வால்லப்யம் - பர்தாவுக்கு ப்ரியமாக இருக்கும் தன்மை
அநந்ய லப்யம் - வேறுமனைவிகளான பூமி நீளைகளுக்குக் கிடைத்தற்கரியது.

வேறுமனைவிகளான பூதேவி நீளாதேவிகளைவிட ஸ்ரீதேவியிடம் நாராயணனுக்கு ப்ரீதி அதிகம் என காரணத்துடன் விளக்குகிறார். ஜகந் நாதனான நாராயணனுக்கு உத்தமோத்தமமான பலபல ஸ்தாநங்கள் இருந்தும் அவற்றை விட்டு உமது பிறப்பிடம் என்றதனால் பாற்கடலைப் பள்ளியறையாகக் கொண்டவன். உமதுடன் பிறந்தவர்களுள் ஒருவனான சந்திரனை உமது ப்ரீதிக்காகவே கண்ணாகக் கொண்டான். மற்றுமோர் உடன்பிறப்பான கௌஸ்துபமணியை எப்போதும் பிரியாது தரிப்பதான ஆபரணமாக்கிக்கொண்டான். நீரோ வெனில் அவன் ப்ராணஸ்தானமான மார்பை ஆக்ரமித்துக்கொண்டீர். இத்தகைய பரிவு பிற மனைவிகளிடம் இல்லையே என்கிறார். 4

भ्रातुर्विधोर्वसुसमृद्ध्यसहेषु पद्मे-
ष्वास्ते रमेत्यपयशः प्रशमाय नूनम् ।
सोदर्यकौस्तुभशुभावहमध्धिकन्ये
वक्षस्त्वमावससि वेङ्कटनायकस्य ॥ ५

ப்ராதுர்விதோர்வஸுஸம்ருத்த்யஸஹேஷு பத்மே-
ஷ்வாஸ்தே ரமேத்யபயஶ: ப்ரஶமாய நூநம் ।
ஸோதர்யகௌஸ்துபஶுபாவஹமப்திகந்யே
வக்ஷஸ்த்வமாவஸஸி வேங்கடநாயகஸ்ய ॥ 5

அப்திகந்யே - கடற்கன்னியே
த்வம் - நீர்
ப்ராது: விதோ: - ஸஹோதர னான சந்திரனது
வகலம்ருத்திம் - செல்வச்சிறப்பை
அஸஹேஷு - பொருக்கமாட் டாத
பத்மேஷு - தாமரையில்
ரமா ஆஸ்தே - லக்ஷ்மி வீற்றிருக் கிறாள்
இதி - என்கிற
அபயச: - அகீர்த்தியை (இகழ்ச் சியை)
ப்ரசமாய - போக்குவதற்காக
ஸோதர்ய - உடன்பிறந்ததான
கௌஸ்துப - கௌஸ்துபமணிக்கு
சுபாவஹம் - மேன்மையைத்தரும்
வேங்கட நாயகஸ்ய - வேங்கட நாதனுடைய
வக்ஷ: - மார்பில்
ஆவஸஸி - வாழ்கின்றாயா
கிம் - என்ன!

சந்த்ரோதயமானால் தாமரை மூடிக்கொள்வதற்கு ஒரு காரணத் தைக் கல்பித்தார். அக்கல்பனையால் உண்டாம் தோஷத்தைப் போக்க வேண்டி ஸ்ரீநிவாஸன்மார்பில் லக்ஷ்மி வாழ்கின்றாள் என உத்ப்ரேக்ஷை செய்கிறார். இதனைத் தமிழர் தற்குறிப்பேற்றம் என்பர். சந்த் ரோதயமானால் தாமரைமூடிக்கொள்வது இயற்கை. சந்திரன் உதயமா னதும் அவன் கிரணங்களாம் செல்வங்கள் உலகம் முழுவதும் பரவு கின்றன. இச்சிறப்பைத் தாமரையால் தாங்கமுடியவில்லையாம். எனவே அவை மூடிக்கொள்கின்றனவாம். மலர்ந்திருந்தால் - விழித்தி ருந்தால் - தானே காணமுடியும்! இப்படி உடன்பிறந்த சந்திரனிடம் பொறாமைகொண்ட தாமரையுடன் நட்புக்கொண்டு அங்கு லக்ஷ்மி வீற்றிருக்கின்றாள் என்றொரு இகழ்வு லக்ஷ்மிக்கு உண்டாயிற்றாம். அதைப்போக்குவதற்காகத் தாமரையைவிட்டு வேங்கட நாயகன் மார்பை வாஸஸ்தலம் ஆக்கிக்கொண்டாளாம். அதனால் அகீர்த்தி எப்படிப் போக்கப்பட்டதெனின் தமதுடன்பிறந்தவற்றுள் ஒன்றான கௌஸ்துபம் நீங்காது வாழுமிடமன்றோ ஸ்ரீநிவாஸன்மார்பம். அங்கு வாழ்ந்தால் உடன்பிறந்தவன் பெருமையைப் பொறாத இடத்தை விட்டு உடன்பிறந்தவன் மேன்மை விளங்குமிடத்தில் வாழ்கிறாள் என்ற பெயர் உண்டாமன்றோ! 5

भगवतः प्रतिघो हृदि मा स्म भूत्
समुदयद्वृजिनेषु जनेष्विति ।
अवहिता जगदम्ब हिताय नो
हृदयमेव हरेरधितिष्ठसि ॥ ६

பகவத: ப்ரதிகோ ஹ்ருதி மாஸ்ம பூத்
ஸமுதயத்வ்ருஜிநேஷு ஜநேஷ்விதி ।
அலஹிதா ஜகதம்ப ஹிதாய நோ
ஹ்ருதயமேவ ஹரேரதிதிஷ்டஸி ॥ 6

ஜகதம்ப - உலகத்தாயே
ஸமுதயத் வ்ருஜிநேஷு - பாபக் குவியல்களை உடைய
ஜநேஷு - என்போலியரிடம்
பகவத: - பகவானுடைய
ஹ்ருதி - மனதில்
ப்ரதிக: -கோபம்
மாஸ்மபூத் - உண்டாகவேண் டாம் என்றெண்ணி
ந: - எங்களுடைய
ஹிதாய - நன்மைக்காக
ஹரே: - நாராயணனுடைய
ஹ்ருதயமேவ - மநதுக்கு ஸமீபத்திலுள்ள மார்பிலேயே
அலஹிதா - எப்போதும் விழித் துக்கொண்டிருப்பவளாய்
அதிதிஷ்டஸி - வஸிக்கின் றாயா என்ன!

உலகுக்கெல்லாம் தந்தை நாராயணன். நாமெல்லாம் அவன் மக்கள். தவறு செய்தால் தண்டித்தல் தந்தையின் தன்மை, நாமோ ஓயாது தவறு செய்வதையே தொழிலாகக் கொண்டவர்கள். லக்ஷ்மி உலகுக்கெல்லாம் தாய். மக்கள் செய்யும் தவறை உணராதவள் தாய். மக்கள்மீது அன்பைப்பொழிவதே தாயின் தன்மை. எனவே நாம் செய்யும் தவறைக்கண்டு தந்தையான நாராயணன் நம்மீது சீற்றங்கொண்டு தண்டிக்கப் போகின்றானே என அஞ்சினாளாம் தாயான லக்ஷ்மி. அச்சீற்றம் எழாது காக்கவேண்டும் என்பதற்காக சீற்றத்துக்கான எண்ணம் தோன்றுமிடமான மனதுக்கு அருகிலுள்ள மார்பையே தமது வாழிடமாகக் கொண்டாளாம். சீற்றம் தோன்றியபின் அதைத்தணிப்பதைவிட அச்சீற்றம் எழாமலே தடுப்பது சிறந்ததாகையால் சீற்றமெழக்காரணமான எண்ணம் தோன்றுமிடத்தருகிலிருந்துகொண்டு அதைத் தடுப்பதற்காகவே மார்பில் வாழ்கிறாய்போலும் என உத்ப்ரேக்ஷிக்கின்றார். 6

फणिशैलपतेस्त्वमिन्दिरे
भवसि प्राणसमेति साम्प्रतम् ।
अमुना भवती यतः स्वयं
हृदये प्राणपदे निवेशिता ॥ ७

பணிஶைலபதேஸ்த்வமிந்திரே
பவஸி ப்ராணஸமேதி ஸாம்ப்ரதம் ।
அமுநா பவதீ யத: ஸ்வயம்
ஹ்ருதயே ப்ராணபதே நிவேஶிதா ॥ 7

இந்திரே - லக்ஷ்மியே
த்வம் - நீர்
பணிசைலபதே: - சேஷாத்ரிநாத
னுடைய
ப்ராணஸமா பவஸிதி - ப்ரா
ணன் போன்றவர் என்பது
ஸாம்ப்ரதம் - யுக்தமானதே
யத: ஏனெனில்
அமுநா - இந்த ஸ்ரீநிவாஸனால்
பவதீ - நீர்
ப்ராணபதே - ப்ராணனுக்கு
இருப்பிடமான
ஹ்ருதயே - மார்பில்
ஸ்வயம் -தம்விருப்பத்தாலேயே
நிவேசிதா - வைக்கப்பட்டீர்.

தாயான லக்ஷ்மியே நீர் ஸ்ரீநிவாஸனுடைய ப்ராணனுக்கு இருப்பிடமான அவன் மனதிலும் மார்பிலும் வாழ்கின்றீர். பிறர் தூண்டுதலின்றி அவனே உம்மைத்தமது மார்பகத்தில் நீர் அவதரித்தபோது ஏற்றுக் கொண்டான். எனவே தேவரீர் அவனுக்கு ப்ராணன் போன்றவராவீர் என்னும் உலகவழக்குப் பொருத்தமானதே. 7

उरगाद्रिपतेरुरः स्थलस्था भवती तद्गलशङ्खगर्भमुक्तैः ।
शुचिहारमहःसुरस्रवन्तीसलिलैरम्ब सदाभिषिच्यसे त्वम् ॥ 8

உரகாத்ரிபதேருர: ஸ்தலஸ்தா பவதீ தத்கலஶங்ககர்பமுக்தை: ।
ஶுசிஹாரமஹ: ஸுரஸ்ரவந்தீஸலிலைரம்ப ஸதாபிஷிச்யஸே த்வம் ॥ 8

அம்ப கமலே - தாயான லக்ஷ்மியே
உரகாத்ரிபதே: - சேஷாத்ரிநாதனது
உரஸ்தலஸ்தா - மார்பகத்தில் வீற்றி
ருக்கும்
த்வம் - நீர்
தத்கல - அவன் கழுத்தாகிய
சங்ககர்ப - உயர்ந்ததான வலம்பு
ரிச் சங்கின் தடுப்பகுதியிலிருந்து
முக்தை:-வெளியில் விடப்பட்ட
சுசி - வெண்மையான
ஹாரமஹ: -
முக்தாஹாரகாந்தியாகிய
சுரஸ்ரவந்தீ - தேவகங்கையின்
ஸலிலை: ஜலங்களால்
ஸதா - எப்போதும்
அபிஷிச்யஸே - அபிஷேகம் செய்
விக்கப்படுகிறீர்.

லக்ஷ்மீ ஸஹஸ்ரம் மூன்றாவது ஸ்தபகம்

(தொடர்ச்சி)

சங்கத்திலுள்ள கங்காஜலத்தால் ஒருமுறை ஸ்நாநம் செய்வதே மிகவும் பரிசுத்தமானது. அந்த ஸ்நாநம் தேவரீருக்கு என்றென்றும் எப்போதும் கிடைக்கிறதென்கிறார். கழுத்தை சங்கத்துக்கு ஒப்பாக வர்ணிப்பது கவிமரபு. ஆகவே ஸ்ரீநிவாஸன் கழுத்தே சங்கமாம். கங்கா ஜலம் வெண்மையானதென்பர். எனவே ஸ்ரீநிவாஸன் மார்பில் அணிந்துள்ள முக்தாஹாரத்திலிருந்து வீசும் காந்தியே கங்காஜலமாம். எனவே ஸ்ரீநிவாஸன் மார்பில் வீற்றிருக்கும் நீர் அவன் கழுத்தாம் வலம்புரி என்னும் உயர்ந்த சங்கின் நடுவிலிருந்து வெளிவருவதும் வெண்மையான முத்துமாலையின் காந்தியுமாகிய கங்கையின் வெண்மையான ஜலத்தால் எப்போதும் அபிஷேகம் செய்விக்கப் படுகின்றீர் என்கிறார்.

''கர்ப'' என்ற சொல்லுக்கு நடுப்பகுதி என்பது போல் ''உயர்ந்த'' என்ற பொருளும் உண்டு என்கிறது நிகண்டு. ஆகவே ''சங்ககர்ப'' என ஒருபதமாகக் கொண்டு உயர்ந்ததான வலம்புரிச் சங்கு எனப் பொருள் கொள்ளப்பட்டது. அதேபோல ''சுசிஹார மஹஸ்சுர ஸ்ரவந்தீ'' என்ற தொகைச் சொல்லிலுள்ள ''சுசி'' என்ற சொல்லிலும் சேரத் தகுதியுடைத்ததாகையால் வெண்மையான முத்து என்றும் வெண்மையான கங்கை என்றும் பொருள் உரைக்கப் பட்டது. 8

कुमारिक्षीराब्धेः कुसुमसुकुमाराङ्गि भवती
नवं पद्मं सद्म प्रदिमरमणीयं विजहती ।
शरण्ये त्रातुं न : शरकिणघनं कौस्तुभशिला-
कठोरं गाढोरः श्रयसि कृपया कैटभरिपोः ॥

**குமாரி க்ஷீராப்தே: குஸுமஸுகுமாராங்கி பவதீ
நவம் பத்மம் ஸத்ம ம்ரதிமரமணீயம் விஜஹதீ।
ஶரண்யே த்ராதும் ந: ஶரகிணகநம்கௌஸ்துபஶிலா-
கடோரம் காடோர: ஶ்ரயஸி க்ருபயா கைடபரிபோ:॥9**

க்ஷீராப்தே: -
குமாரி-பாற்கடல் கன்னியே
குசும - புஷ்பத்திலும்
சுகுமார - மென்மையான
அங்கி - சரீரத்தை உடையவரும்
சரண்யே-உலகைக்காப்பவருமான
பவதீ - நீர்
ந: - பாபிகளான எங்களை
த்ராதும் - காப்பதற்கு
நவம் - அப்போதலர்ந்ததும்
ம்ரதிமரமணீயம்-மென்மையால் அழகியதுமான
பத்மம் ஸத்ம - தாமரையாம் அகத்தை
விஜஹதீ-விட்டவளாய்
சர - கைடபர் முதலான அரக்கர்களால் விடப்பட்ட பாணங்களாலுண்டான
கிண - தழும்பால்
கநம் - மேடுபள்ளமானதும்
கௌஸ்துப - கௌஸ்துபம் என்ற
சிலா - கல்தங்கியுள்ளதால்
கடோரம் - மேலும் கடினமானதுமான
கைடபரிபோ: - நாராயணனுடைய
காடோர: - இயல்பாகவே உருதியான மார்பை
ச்ரயஸி - அடைந்துள்ளாய்.

க்ஷீர ஸமுத்ரத்தின் குமாரியே உனது உடல் புஷ்பத்திலும் மென்மையானது. ஆகவே தங்குவதற்கேற்ற இடம் அப்போதலர்ந்த தாமரையேல வாடியதாமரையில் மென்மை போய்விடுமாகையால் அது உன் உடலை உருத்தும். அத்தகைய நீ எங்களைக் காக்கக் கங்கணம் கட்டியுள்ளாய். நாங்களோ மஹாபராதிகள். நாராயணனும் அபராதிகளை தண்டிப்பவன். அப்படித் தண்டித்தால் அதைப் பொறுக்க மாட்டாமையாம் தயைக்கு இருப்பிடமானவள் நீ. எனவே உனக்கேற்ற வாழிடமான தாமரையை விட்டு நாராயணனின் சீற்றத்தைத் தடைசெய்ய அவன் மார்பை அடைந்துள்ளாய். அவன் மார்போ இயல்பாகவே கடினமானது. மேலும் பல அரக்கருடன் பொருத போது அவர்கள் விட்ட பாணங்களால் அடிபட்டுத் தழும்பேறி மேடுபள்ளமாயுள்ளது. அதன் மேலும் கௌஸ்துபம் என்னும் கல் வேறு இடைவிடாது தங்கி அம்மார்பைக் கடினமாக்கியுள்ளது. இத்துணை கடினமான

மார்பை பூபோன்ற உடல் உடைய நீ உனது துன்த்தையும் கணிசியாது ஆச்ரிதர்களின் துன்பத்தைத் துடைப்பதற்காக அடைந்துள்ளாய். என்னே உன் தயை !

श्रीवत्साङ्कं चिरतरमुरः सीमगोष्ठं मुरारे-
रध्यासीनामनघहरितोदारकान्त्याभिरामम् ।
कल्याणि त्वामतुलममृतं संश्रितानां दुहानां
क्षीराम्भोधेः समुदितवतीं ब्रूमहे कामधेनुम् ॥ १०

ஶ்ரீவத்ஸாங்கம் சிரதரமுர: ஸீமகோஷ்டம் முராரே-
ரத்யாஸீநாமநகஹரிதோதாரகாந்த்யாபிராமம் ।
கல்யாணி த்வாமதுலமம்ருதம் ஸம்ஶ்ரிதாநாம் துஹாநாம்
க்ஷீராம்போதே: ஸமுதிதவதீம் ப்ரூமஹே காமதேநும் ॥ 10

கல்யாணி - சுபமானவளே
ஶ்ரீவத்ஸ - ஶ்ரீவத்ஸம் என்ற மருவை
அங்கம் - மஹாபுருஷனின் அடையாளமாகக் கொண்டதும்
ஶ்ரீ - அழகுடன் விளங்குவதும்
வத்ஸ - கன்றை
அங்கம் - ஸம்பத்திலுடையதும்
அநக - நிர்மலமானதும்
ஹரித - கரும் பச்சைநிற முடையதும் பகம்புற்களை உடையதும்
உதாரகாந்த்யா-மிக்க ஒளியால்
அபிராமம் - அழகானதுமான
முராரே: - நாராயணனுடைய
உர:ஸீம - மார்பாகிய
கோஷ்டம் - கொட்டிலை
சிரதரம் - வெகுகாலமாக
அத்யாஸீநாம் - அடைந்துள்ள
த்வாம் - தேவரீரை
ஸம்ச்ரிதாநாம் - சரணமாக அடைந்தவர்களுக்கு - பலன் விரும்பி வந்தவர்களுக்கு
அதுலம் - கடினமான பக்தி முதலியவை இன்றி எளிதாக - பின் காலைக்கட்டுதல் முதலியதுன்பமின்றி.
அம்ருதம் - மோக்ஷத்தை - பாலை
துஹாநாம் - தருபவளான
க்ஷீராம்போதே: - பாற்கடலிலிருந்து
ஸமுதிதவதீம் - தோன்றிய
காமதேநும் - காமதேநுவாக
ப்ரூமஹே - சொல்கிறோம்.

லக்ஷ்மியைக் காமதேநுவாக சிலேடையில் பேசுகிறார். லக்ஷ்மீ பாற்கடலில் தோன்றியவள். காமதேநுவுமப்படியே. காமதேநு கொட்டிலில் - கொட்டகையில் - வாழும். லக்ஷ்மீ நாராயணன் மார்பாம் கொட்டிலில் வாழ்கிறாள். கொட்டில் அழகியவத்ஸத்தை - கன்றை - பெற்றிருக்கும். மார்பு ஸ்ரீ வத்ஸத்தைப் பெற்றிருக்கிறது. கொட்டகையில் பசுமையான புற்களிருக்கும். மார்பு நீருண்ட மேகம் போல் கரும் பச்சையாயுள்ளது. அத்தகைய மார்பாம் கொட்டிலை காமதேனுவாகிய நீர் வெகுகாலமாக அடைந்துள்ளீர். காமதேனுவிடம் பாலை விரும்பி வந்தவர்க்குத் தாமாகவே அது பாலைத் தந்துவிடும். கால்களைக் கட்டுதல் பாலைக் கறத்தல் முதலிய துன்பங்களில்லை. தேவரீரும் சரணமடைந்தவர் கட்கு கர்மயோகம் பக்தியோகம் முதலான கஷ்டமான கார்யங்களைச் செய்யவைக்காமல் சரணாகதி என்னும் எளிய உபாயத்தால் மோக்ஷத்தை அளிக்கின்றீர். இத்தகைய காரணங்களால் தேவரீரைக் காமதேனு என்னலாம். 10

विश्वातीतः जयति वृजिनह्रासदे वासुदेवः
पद्मे तस्याप्युपरि महिमा भासते तावकीनः ।
क्षेत्रज्ञानां हृदयमनिशं कञ्जनाभोऽधिशेते ।
तस्यापि त्वं हृदि हततमो राजसे राजसे यत् ॥ ११

விஶ்வாதீதோ ஜயதி வ்ருஜிநஹ்ராஸதே வாஸுதேவ:
பத்மே தஸ்யாப்யுபரி மஹிமா பாஸதே தாவகீந:
க்ஷேத்ரஜ்ஞாநாம்ஹ்ருதயமநிஶம்கஞ்ஜநாபோ(அ)திஶேதே
தஸ்யாபி த்வம் ஹ்ருதி ஹ்ருததமோராஜஸே ராஜஸே யத்

வ்ருஜிநஹ்ராஸதே - பாபத்தைப் போக்கும்	ஜயதி - விளங்குகிறான்
பத்மே - தாமரையாளே	தாவகீந-உம்முடைய
வாஸுதேவ: - உலகம் முழுதும் உள்ளும் புறமும் வ்யாபித்துள்ள நாராயணன்.	மஹிமா - எங்கும் பரந்துள்ள தன்மை
விச்வாதீத: - மிகவுயர்ந்தவனாக	தஸ்யாபி-அப்பகவானுடையதைவிட
	உபரி - மேம்பட்டதாக
	பாஸதே - விளங்குகிறது
	யத் - ஏனெனில்

கஞ்ஜநாப: - நாராயணன்
க்ஷேத்ரஜ்ஞாநாம் -
ஜீவராசிகளுடைய
ஹ்ருதயம் - மனதில்
அநிசம் - எப்போதும்
அதிசேஷே - தங்கியுள்ளான்
த்வம் - நீரோவெனில்

தஸ்யாபி - அவ்வாஸு-
தேவனுடையவும்
அராஜஸே - ஸத்வகுணம் மிகுந்த
ஹ்ருதி - மனதில்
ஹ்ருத - போக்கப்பட்ட
தம: - தமோகுணமுடையவனாய்
ராஜஸே - விளங்குகிறீர்.

உலகில்காணப்படுவதாயும் கேழ்க்கப் படுவதாயும் உள்ளபொருள்ளகள் யாவற்றின் உள்ளும் புறமும் வ்யாபித்து அவற்றைத் தாங்குவதால் அவனுக்கு வாசுதேவன் என்ற பெயர் உண்டாயிற்று. அப்படி அவன் இருப்பதால் எல்லாவற்றிலும் மேன்மையானவனாக அவன் விளங்குகிறான். ஆகையால் நீர் அவனிலும் சிறந்தவர், எப்படியெனில் ரஜோகுணம் தமோகுணம் கலசாது சுத்தஸத்வ குணமுள்ளவனாய் அவன் எங்கெங்கெல்லாம் வ்யாபித்துள்ளானோ அங்கெல்லாம் ''அகலகில்லேன் இறையும் என்று'' க்ஷணமும் அவனைவிட்டுப் பிரியாதவளாய் நீரும் பரந்திருப்பதோடு அல்லாமல் அவன் மனத்துள்ளும் நீவிர்பரந்துள்ளீர். எனவே உமது பரப்பும் பெரிதாயிற்று. ஆகவே அவனிலும் நீர் சிறந்தவர். 11

वीक्षन्ते ये वेङ्कटक्ष्माभृदिन्दोः सूरस्थाने शोभमानामिह त्वाम् ।
दुग्धोदन्वत्पुत्रि दिव्यं पदं ते सूरस्थानं हंत भित्वा विशन्ति ॥

வீக்ஷந்தே யே வேங்கட க்ஷ்மாப்ருதிந்தோ:
ஶூரஸ்தாநே சோபமாநாமிஹ த்வாம் ।
துக்தோதந்வத் புத்ரி திவ்யம் பதம் தே
ஶூர ஸ்தாநம் ஹந்த பித்வா விசந்தி ॥ (12)

துக்தோதந்வத் - க்ஷீர ஸமுத்ரபுத்ரியே
புத்ரி
வேங்கட க்ஷ்மாப்ருத்
- வேங்கடமலைக்கு
இந்தோ: - சந்திரனை
யுத்திவாஸருடைய
ஶூரஸ்தாநே - அழகியமார்பில்
சோபமாநாம் - மின்னல்
போல்விளங்கும்
த்வாம் - உம்மை
இஹ - இவ்வுலகில்
யே வீக்ஷந்தே
- எவர்ஸேவிக்கின்றனரோ
தே - அவர்கள்
ஶூர - ஸூர்யனுடைய
ஸ்தாநம் - மண்டலத்தை
பித்வா - பிளந்து
திவ்யம் பதம் - தேவத்தன்மை
வாய்ந்த மோக்ஷத்தை
விசந்தி - ப்ரவேசிக்கின்றனர்
ஹந்த - ஆச்சர்யம்.

நீருண்ட மேகத்தினிடையேயுள்ள மின்னல்போல் வேங்கடாத்ரி நாதன் மார்பில் விளங்கும் தேவரீரை எவரொருவர் ஸேவிக்கின்றனரோ அவர் மோக்ஷமார்கமாகிய அர்ச்சிராதி மார்கமாய் சென்று இடையில் வரும் ஸூர்யமண்டலத்தில் தங்கி அங்கிருந்துக் கிளம்பி அழகிய இடமாகிய மோக்ஷத்தை அடைகின்றனர்.

இது "அதிசயோக்தி" என்னும் அலங்காரமாகும். 12

बलिवसुमुषः प्रहर्षात् उच्चोरस्थलमुपेत्य कमले त्वम् ।
अस्माकमपथगानां हरसे चिरकालसंचितानर्थान् ॥

பலிவஸுமுஷ: ப்ரஹர்ஷாத் உச்சோரஸ்தலமுபேத்ய கமலே த்வம் ।
அஸ்மாகமபதகாநாம் ஹரஸே சிரகாலஸஞ்சிதாநர்த்தாந் ॥ (13)

கமலே - லக்ஷ்மியே
பலிவஸுமுஷ: - பலிச்சக்ரவர்த்தியின்
மேன்மையைப் போக்கிய
பகவானுடைய
உச்சோரஸ்தலம் -
உயர்ந்தமார்பாகிய இடத்தை
உபேத்ய - அடைந்து
அபதகாநாம் - சாஸ்த்ரநிஷித்த
செயலைச் செய்பவர்களை

அஸ்மாகம் - எங்களது
சிரகால - பலபிறவிகளில்
ஸஞ்சிதாந் - சேர்க்கப்பட்ட
அநர்த்தாந் - அபசாரங்களை
ப்ரஹர்ஷாத் - மிக்க ஸந்தோஷத்துடன்
ஹரஸி - போக்குகிறாய்.

நாராயணனது மார்பாகிய உயர்ந்த இடத்தை அடைந்த நீ சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கர்மாக்களைச் செய்யாது விலக்கப்பட்ட செயல்களைச் செய்துப் பல ஜந்மங்களாகச் சேர்த்துவைத்த ஆச்ரிதர் பாபங்களை எப்பயனையும் எதிர்பாராது அழிக்கின்றாய்.

ப்லம் வாய்ந்த ஒருவனது செல்வத்தை அபஹரித்த திருடர் வாழும் இடமாகிய காட்டையடைந்து ராஜமார்க்கத்தில் செல்லாது காட்டு வழியில் செல்பவன் பலநாள்களாகச் சேர்த்து வைத்த செல்வத்தை அபஹரிக்கிறாய் என்ற மற்றொரு பொருள் தொனிப்பொருளாய் கிடைக்கின்றது. (13)

शशिरेखा भवती च श्रीः अब्धेः उद्गते तयोराद्या।
धारयति कृष्णमन्तः कृष्णेनान्तस्तु धार्यते चरमा ॥

சசிரேகா பவதீ ச ஸ்ரீ: அப்தே: உத்கதே தயோராத்யா।
தாரயதி க்ருஷ்ணமந்த: க்ருஷ்ணேநாந்தஸ்து தார்யதே
சரமா ॥ (14)

ஸ்ரீ: - லக்ஷ்மியே
சசிரேகா - சந்திரகலையும்
பவதீ ச - நீவிரும்
அப்தே: - பாற்கடலிலிருந்து
உத்கதே - தோன்றினீர்கள்
தயோ: - அவ்விரண்டினுள்
ஆத்யா - முதலாவதான சந்திரகலை
அந்த: - தமக்குள்
க்ருஷ்ணம் - கருமையான களங்கத்தை
தாரயதி - தரிக்கின்றது
சரமா - இரண்டாவதான நீர்
க்ருஷ்ணேந - கண்ணனால்
அந்த: - மனதில்
தார்யதே - தரிக்கப்படுகின்றீர்.

ஸமுத்ரத்தில் சந்திரகலை லக்ஷ்மி என்னும் இரண்டு பொருள்கள் தோன்றின. அவற்றுள் முதலதான சந்திரன் க்ருஷ்ணத்தை தரிக்கிறது. இரண்டாவது க்ருஷ்ணத்தால் தரிக்கப்படுகிறது என்பது கருத்து. கடலில் தோன்றிய இரண்டு பொருள்களுக்கும் க்ருஷ்ணத்தைத் தரித்தல், க்ருஷ்ணத்தால்

தரிக்கப்படுதல் என்கின்ற தொடர்பு இருக்கின்றது என்ற கருத்து கிடைக்கின்றது. இது சப்த ச்லேடை. க்ருஷ்ணத்தைத் தரித்தலாவது கருமையான களங்கத்தைத் தரித்தலாம். க்ருஷ்ணத்தைத் தரித்தலாவது பகவானான கண்ணனால் மனதில் தரிக்கப்படுதலாம். (14)

वनमालायामुषितां विश्वविभोः भुजतमालविटपान्तः।
कामपि कनकलतां त्वां कलशाकूपारकन्यके मन्ये॥

வநமாலாயாமுஷிதாம் விச்வவிபோ: புஜதமால விடபாந்த:।
காமபி கநகலதாம் த்வாம் கலசாகூபார கந்யகே மந்யே॥ (15)

கலசாகூபார - க்ஷீராப்திபுத்ரியே கந்யகே
விச்வவிபோ: - உலகுக்கெல்லாம் ப்ரபுவான நாராயணனுடைய
வநமாலாயாம் - வைஜயந்தி என்னும் மாலையின் இடையில்
புஜ - கைகளாகிற
தமாலவிடப - கரபுன்னைமரத்தின்
அந்த: - நடுவில் (மார்பில்)
உஷிதாம் - வஸிக்கும்
காமபி - நடமாடும்
கநகலதாம் - தங்கக் கொடியாக
த்வாம் - உம்மை
மந்யே - என்னுகிறேன்
மற்றொரு பொருள்
விச்வவிபோ: - பேரரசனது
வநமாலாயாம் - விளையாட்டுத் தோட்டவரிசைகளிலுள்ள
தமாலவிடப - கரபுன்னைமரத்தின்
அந்த: - கிளைகளில்
உஷிதாம் - இருக்கும்
கநகலதாம் - கநகவல்லியாக
த்வாம் - உம்மை
மந்யே - என்னுகிறேன்.

கநகவல்லீ என ஜகந்மாதாவுக்குப் பெயருண்டு. தங்கக் கொடி என்பது அதன் பொருள். மாதாவுக்கும் கொடிக்கும் பொதுவான ச்லேடைச் சொற்களால் துதிக்கின்றார். லக்ஷ்மி உலகத் தலைவனான நாராயணன் மார்பிலணிந்துள்ள வைஜயந்தி என்ற மாலையின் நடுவிலுள்ளதும், நீண்ட தமால வ்ருக்ஷம் போன்ற இரண்டு கைகளின் நடுவிலுள்ளதுமாகிய மார்பில் வஸிப்பவள். கனகவல்லி என்னும் கொடி பேரரசனது உத்யானவனத்திலுள்ள மரங்களின் கிளைகளில் படர்ந்திருக்கும். எனவே விச்வவிபோ: தமால விடபாந்த: வநமாலாயாமுஷிதாம் கநகலதாம்'' என்ற சப்த ச்லேடையை இட்டு லக்ஷ்மியைக் கொடியாகப் போற்றினார். ச்லேடைப் பொருள் உரையுள் காட்டப் பட்டுள்ளது:

(15)

परमतुलसीतमनघे वनमालाप्तं सुलक्ष्मणा कलितम्।
कलयसि सद्रूपयुतं कमले वक्षो हरेः महारामम्॥

பரம துளஸீதமநகே வநமாலாப்தம் ஸுலக்ஷ்மணா கலிதம்।
கலயஸி ஸத்ரூபயுதம் கமலே வக்ஷோ ஹரே: மஹாராமம்॥ (16)

அநகே கமலே - அழகிய லக்ஷ்மியே
த்வம் - நீர்
பரமதுளஸீ - உயர்ந்த துளஸியால்
இதம் - சூழ்ந்ததும்
வநமாலா ஆப்தம் - பல வண்ணப் பூக்களால் தொடுக்கப்பட்ட வநமாலை என்ற மாலைக்குத் தோழனும்
ஸுலக்ஷ்மணா - அழகிய ஸ்ரீவத்ஸம் என்ற மருவால்
கலிதம் - அலங்கரிக்கப்பட்டதும்
ஸத்ரூபயுதம் - மிக்க அழகியதுமான
ஹரே: வக்ஷ: - நாராயணன் மார்பு
மஹாராமமபி - மிக்க அழகியதாக இருந்தபோதும்
கலயஸி - நீ அதில் வீற்றிருந்து அதை மேலும் அழகு உடையதாக்குகிறாய்.

லக்ஷ்மியே
அதுல - இணையற்ற
ஸீதம் - பனிரையுடையதும்
வநமாலா - நீராகிய மாலையுடன்
ஆப்தம் - கூடியதும்
ஸு-லக்ஷ்மணா - அழகிய ஸாரஸ பக்ஷியுடன்
கலிதம் - கூடியதும்
ஸத்ரு - சம்பகம் அசோகம் போன்ற சிறந்த மரங்களுடன்
உபயுதம் - கூடியதுமான
மஹாராமம் - உயர்ந்த பூந்தோட்டமாக
பரம் - மிகவும்
கலயஸி - அறிகின்றாய் ஆகவே அம்மார்பை சிறிதும் விடுவதில்லை.

இருவகையான பொருள்கள் சொல்வதற்கேற்ப இந்த ச்லோகம் சிலேடையில் அமைந்துள்ளது. ''பரம துளஸீதம்'' என்பதைப் பரம + துளஸீ + இதம் என்றும், பரம் + அதுல + ஸீதம் என்றும், ''வநமாலாப்தம்'' வநமாலா + ஆப்தம் என்றும் வந + மாலா + ஆப்தம் என்றும் ''ஸுலக்ஷ்மணாகலிதம்'' என்பதை ஸு+லக்ஷ்மணா + கலிதம் எனவும் ஸு + லக்ஷ்மண + ஆகலிதம் எனவும் பிரிக்க வேண்டும். பொருள்கள் மேலே காட்டப் பட்டுள்ளன.

நாராயணன் தன்மார்பில் துளஸி மாலையையும் பல வர்ணப் பூக்களால் சமைக்கப்பட்ட வநமாலை என்ற பெயருடைய மாலையையும் அணிந்துள்ளான். ஸ்ரீவத்ஸம் என்ற மருவும் அவன் மார்பிலுள்ளது. இயல்பாகவே அது அழகாக இருப்பதுடன் இவை சேர்ந்ததால் மிக்க அழகாகியது. அதில் நீ வீற்றிருந்து அம்மார்பை மிகமிக அழகுடையதாக ஆக்குகின்றாய்.

दृष्टान्तप्रतिबिंबितेषु मणिषु द्रागिन्दिरे मास्मभूत्
अन्तस्तेष्वबलान्तरस्थितिधिया कोपस्तवेत्यच्युतः ।
शंकोन्मेषकथापथातिपतितं संत्यक्तरत्नान्तरः
तं त्वत्सोदरमेव कौस्तुभमणिं धत्ते भुजाभ्यन्तरे ॥

த்ருஷ்டாந்த ப்ரதிபிம்பிதேஷு மணிஷு த்ராகிந்திரே மாஸ்மபூத்
அந்தஸ்தேஷ்வபலாந்தர ஸ்திதிதியா கோபஸ்தவேதி அச்யுத: ।
சங்கோந்மேஷ கதாபதாதிபதிதம் ஸம்த்யக்த ரத்நாந்தர:
தம் த்வத் ஸோதரமேவ கௌஸ்துபமணிம் தத்தே
புஜாப்யந்தரே ॥ (17)

இந்திரே - லக்ஷ்மியே
அச்யுத: - உன்னைவிட்டுப் பிரியாத பகவான்
கதாசிதபி - ஒரு ஸமயத்திலும்
மணிஷு - மார்பில் தரித்துள்ள கௌஸ்துபம் தவிர்த்த பிறமணிகளில்
த்ருஷ்ட - லக்ஷ்மியால் பார்க்கப்பட்ட
ஆத்ம - தனது
ப்ரதிபிம்பிதேஷு ஸத்ஸு - ப்ரதிபிம்பத்தை உடைத்தாயிருந்தபோது
தேஷு - அம்மணிகளின்
அந்த: - உள்ளே
அபலாந்தரஸ்திதிதியா - வேறு பெண்ணொருவள் இருக்கின்றாள் என்ற எண்ணம் உண்டாகிவிடப் போகின்றதே என்ற எண்ணத்தால்
த்ராக் - சீக்கிரமாக
கோப: - தம்மைவிட்டுப் பிரிந்துவிடும் அளவுக்கான கோபம்
தவ - உனக்கு
மாஸ்மபூத் இதி - உண்டாக வேண்டாம் என்பதற்காக
ஸம்த்யக்த ரத்நாந்தர: - கௌஸ்துபம் தவிர்த்த பிறமணிகளை அணியாதவரும்
தம் - கடலில் பிறந்ததாக ப்ரஸித்தமானதும்
த்வத்ஸோதரம் - உன்னுடன் பிறந்ததும்
(அத ஏவ - ஆனமையாலே)
சங்கோந்மேஷகதாபத - பிற பெண்ணுள்ளாள் என்ற ஸந்தேகத்துக்கு
அதிபதிதம் - வெகு தூரத்தில் உள்ளதுமான
கௌஸ்துப மணிமேவ - கௌஸ்துபமணி யொன்றையே
புஜாப்யந்தரே - மார்பில்
தத்தே கிம் - தரிக்கின்றாரா என்ன

ஸ்ரீமந்நாராயணன் தமது மார்பில் கௌஸ்துபம் என்ற சிலையை மட்டும் எப்போதும் விடாது தரித்துக் கொண்டுள்ளார். பிற மணிகளை அப்படி தரிப்பதில்லை. அதற்கொரு காரணத்தை கவி உத்ப்ரேக்ஷிக்கின்றார். பிறமணிகளை அணிந்து

கொண்டால் அம்மணிகளில் மார்பிலமர்ந்துள்ள லக்ஷ்மியின் ப்ரதிபிம்பம் தெரியுமாகையால் அதை லக்ஷ்மி பார்ப்பளேல் பகவான் பிற பெண்களையும் மனைவிகளாக ஏற்றுள்ளானென எண்ணிக் கோபம் கொண்டு விட்டுப் பிரிந்து போயின் என் செய்வது என்றும் எண்ணத்தால் பிற மணிகளை அணியவில்லையாம். கௌஸ்துபம் தம்முடன் பிறந்த தானமையால் அதன்மீது கோபம் உண்டாகாது என்பதால் அதை மட்டும் தரித்துள்ளாராம்.

ஒன்று உண்டாகியபின் அதைத் தணிப்பதற்கு வேண்டிய வழி தேடுவதினும், உண்டாகாது தடுப்பது சிறந்தது என்று எண்ணிய பகவான் உனக்கு கோபம் உண்டாகாமைக்காகவே பிறமணிகளை தரிக்கவில்லை என்பது கருத்து.

இதில் லக்ஷ்மியினிடம், பெண்களுக்கின்றியமையாக் குணமாகச் சொல்லப் பட்ட மடமை என்ற குணத்தின் நடிப்பும், மறுமனைவியை ஏற்காமை என்ற நடிப்பும் பகவானிடம் வருமுன் காத்தல் என்பதன் நடிப்பும் தொனிக்கின்றன. (17)

सस्नेहपूर्तिरुदितत्रिदशोपसेवः
दीप्तो हरेरुरसि देवि तवेष्टगेहे ।
अस्माकमान्तरतमः प्रशमय्य मुक्तेः
मार्गं प्रकाशयतु कौस्तुभरत्नदीपः ॥

ஸஸ்நேஹ பூர்த்திருதித த்ரிதசோபஸேவ:
தீப்தோ ஹரேருரஸி தேவி தவேஷ்டகேஹே ।
அஸ்மாக மாந்தரதம: ப்ரசமய்ய முக்தே:
மார்கம் ப்ரகாசயது கௌஸ்துப ரத்நதீப: ॥ (18)

தேவி - பகவானின் மனைவியே
ஸஸ்நேஹ பூர்த்தி - நிரம்ப எண்ணெயை உடையதும்
உதித - உண்டாகியுள்ள
த்ரிதச - இமையோர்
உபஸேவ: - தொடர்புடையதும்
தவ - உனக்கு
இஷ்டகேஹே - விருப்பமான ஆலயமுமான
ஹரேருரஸி - நாராயணன் மார்பில்
தீப்த - ப்ரகாசித்துக் கொண்டிருக்கும்
கௌஸ்துபரத்நதீப: - தீபம் போன்ற கௌஸ்துப ரத்நம்
அஸ்மாகம் - அவிவேகிகளான நமது
ஆந்தரதம: - அஜ்ஞாநமாகிய இருளை
ப்ரசமய்ய - போக்கி
முக்தே: மார்கம் - அர்ச்சிராதி மார்க்கத்தை

ப்ரகாசயது - ஞாபகப்படுத்தட்டும்
தேவி - பகவன் மஹிஷியே
ஸ்நேஹ பூர்த்தி: - நாராயணன் அன்பை மிகுதியாகப் பெற்றதும்
உதித - தோன்றியுள்ள
த்ரிதச உபஸேவ்ய: - நாராயணனின் ஆபரணமானதால் தேவதைகளின் வணக்கத்தை யுடையதும்
ஹரேருரஸி - நாராயணன் மார்பாகிய
தவ - உமது
இஷ்டகேஹே - விருப்பமான வீட்டில்
தீப: - ப்ரகாசிக்கும்
கௌஸ்துப ரத்நதீப: - கௌஸ்துபமாகிய விளக்கு
அஸ்மாகம் - நமது
ஆந்தரதம: - வீட்டினுள்ளிருக்கும் இருளை
ப்ரசமய்ய - போக்கி
மார்கம் - வழியை
ப்ரகாசயது - ப்ரகாசிப்பிக்கட்டும்.

கௌஸ்துப ரத்நத்துக்கும் தீபத்துக்கும் சிலேடை இந்த ச்லோகம். தீபத்தில் ஸ்நேஹம் - எண்ணெய் நிரம்பியிருக்கும். திரிபோடப் பட்டிருக்கும். கௌஸ்துபம் ஸ்நேஹத்தை -பகவானின் அன்பைப் பெற்றிருக்கிறது. தேவர்களால் வணங்கப்பட்டதாயுமிருக்கும். நாராயணன் மார்பாகிய லக்ஷ்மிக்கு விருப்பமான வீட்டில் இவை இரண்டும் விளங்கும். கௌஸ்துபம் நமக்குள் இருக்கும் அக்ஞாநமாம் இருளையகற்றி மோக்ஷ மார்கமாகிய அர்ச்சிராதி மார்கத்தையும் ஸித்தோபாய ஸ்வரூபத்தையும் ஸாத்யோபாய ஸ்வரூபத்தையும் காட்டட்டும். தீபம் வீட்டினுள் இருக்கும் இருளைப் போக்கி வழியை ப்ரகாசமாகக் காட்டட்டும். (18)

19. सरसिजनिलयापि वैभवेन, स्फुरसि
निरेनसि मानसे मुनीनाम् ।
उरसि मुररिपोः उपोढहारे
शिरसि च देवि गिरां पुरातनीनाम् ॥

ஸரஸிஜநிலயாபி வைபவேந
ஸ்புரஸி நிரேநஸி மாநஸே முநீநாம் ।
உரஸி முராரிபோ: உபோடஹாரே
சிரஸி ச தேவி கிராம் புராதநீநாம் ॥

தேவி - நாராயணன் மஹிஷியே
த்வம் - நீர்
ஸரஸிஜ - தாமரையை
நிலயாபி - வீடாகக்கொண்டவளாக ப்ரஸித்தி பெற்றிருந்த போதும்
வைபவேந - எங்கும் வ்யாபித்து இருக்கும் தன்மையால்
நிரேநஸி - பாபமற்ற
முநீநாம் - மோக்ஷத்தை விரும்புபவர்களது
மாநஸே - மனதில்
ஸ்புரஸி - த்யாநத்தில் ப்ரகாசிக்கின்றீர்
உபோடஹாரே - முக்தாஹாரமணிந்துள்ள
முராரிபோ: - நாராயணனது
உரஸி - மார்பில்
ஸ்புரஸி - விளங்குகின்றீர்
புராதநீநாம் - மிகப்பழமையான
கிராம் - வாக்காகிய வேதங்களின்
சிரஸி - சிரஸ்ஸாகிய உபநிஷத்தில்
ஸ்புரஸி - விளக்கப்படுகின்றீர்.

வேதம் லக்ஷ்மியை "பத்மாலயா" தாமரையில் வாழ்பவள் எனப்புகழ்கிறது. உலகத்தவரும் அப்படியே துதிக்கின்றனர். தாமரை 'வீடு' என்றால் அவள் அந்த ஒரே இடத்திலல்லவோ இருக்கவேண்டும். அப்படியின்றிப் பலவிடங்களில் லக்ஷ்மி ப்ரகாசிக்கின்றாள். "விஷ்ணோரேஷாநபாயிநீ" - நாராயணனை எப்போதும் விட்டுப் பிரியாள் - ஆகையாலே அவன் பரந்துள்ள இடங்களிலெல்லாம் இவளும் இருப்பதோடு, மோக்ஷத்தை விரும்பி நாராயணனை த்யானிப்பவர் மனதில் அவனுடன் இவளும் த்யானத்தில் விளங்குகிறாள். நாராயணன் மார்பில் தங்கியுள்ளாளாதலின் அங்கும் விளங்குகின்றாள். நாராயணனைப் போல் இவளும் பரம்பொருளாகையால் அவனை விளக்கிக் கூறும் உபநிஷத்துகளில் இவளும் விளங்குகிறாள். ஓரிடத்தவள் எனச் சொல்லப்பட்டபோதும் பல விடங்களில் விளங்குகின்றாள்.

(19)

20. शुभश्रीवत्साङ्कं शुचिरुचिरहारं मुररिपोः
तमालाभं वक्षः तरल वनमालासुरभिलम् ।
परिष्कुर्वाणां त्वां भवजलधिशोषाय कलये,
जगन्मातः प्रातस्तनजलजदायाद वदनाम् ॥

சுபஸ்ரீவத்ஸாங்கம் சுசிருசிரஹாரம் முராரிபோ:
தமாலாபம் வக்ஷ: தரல வநமாலா ஸுரபிலம் ।
பரிஷ்குர்வாணாம் த்வாம் பவஜலதி சோஷாய கலயே
ஜகந்மாத: ப்ராதஸ்தநஜலஜ தாயாதவதநாம் ॥

ஜகந்மாத: - உலகத்தாயே
சுப - நன்மையான
ஸ்ரீவத்ஸ - ஸ்ரீவத்ஸம் என்னும் மருவை
அங்கம் - அடையாளமாக உடையதும்.
சுசி - வெண்மையானதும்
ருசிர - அழகியதுமான
ஹாரம் - முத்தாஹாரத்தை உடையதும்
தமாலாபம் - பச்சைகிச்சிலிமரம்போல் கருமையானதும்
தரல - அசைந்துகொண்டிருக்கும்
வநமாலா - வைஜயந்தீ என்னும் மாலையால்
ஸுரபிலம் - வாஸனையுடையதுமான
முராரிபோ: வக்ஷ: - நாராயணன் மார்பை
பரிஷ்குர்வாணாம் - அலங்கரிப்பவரும்
ப்ராதஸ்தந - விடியற்காலத்திலலர்ந்த
ஜலஜதாயாத - தாமரைக்கொப்பான
வதநாம் - முகத்தையுடைய
த்வாம் - தேவரீரை
பவஜலதி - ஸம்ஸாரக்கடலை
சோஷாய - வற்றச்செய்வதற்காக
கலயே - த்யானிக்கிறேன்.

சுபங்களைத் தரவல்ல ஸ்ரீவத்ஸம் என்னும் மருவைப் பெற்றதும் வெண்மையாயும் அழகாயுமுள்ள முத்துமாலைகளால் அலங்கரிக்கப்பட்டதும் பச்சை கிச்சிலி மரம்போல் கரும்பச்சை நிறமுடையதும் பல வண்ணப் பூக்களால் அமைக்கப்பட்ட வைஜயந்தீ என்னும் மாலையில் மிக்க மணமுடையதுமான நாராயணன் மார்பை அலங்கரித்துக் கொண்டிருப்பவரும் அப்போதலர்ந்த தாமரைபோல் ஒளிமிக்க முகத்தை உடையவருமான லக்ஷ்மியை த்யானம் செய்தால் ஸம்ஸாரக் கடலை வற்றச்செய்து மோக்ஷம் என்னும் அந்தமில் பேரின்பத்தை அடையலாம் என்கிறார். (20)

21. प्राचीनवाक्परिषदां परतत्त्वचिन्तां
व्यालेन्द्रभूधरपतिः व्यपनेतुकामः ।
कान्तो बिभर्ति भवतीं कलशाब्धिकन्ये
भूषाविशेषमिव देवि भुजान्तराले ॥

ப்ராசீநவாக் பரிஷதாம் பரதத்வ சிந்தாம்
வ்யாலேந்த்ர பூதரபதி: வ்யபநேதுகாம: ।
காந்தோ பிபர்த்தி பவதீம் கலசாப்திகந்யே
பூஷாவிசேஷமிவ தேவி புஜாந்தராலே ॥

கலசாப்தி கந்யே - பாற்கடல் கன்னியே
தேவி - தாயே
காந்த: - கணவனான
வ்யாலேந்த்ர பூதரபதி: - சேஷாத்ரிநாதனான ஸ்ரீநிவாஸன்
ப்ராசீநவாக் - பழைய வாக்கான பல வேதங்களின்
பரிஷதாம் - ஸபையில் உண்டான
பரதத்வசிந்தாம் - ப்ரஹ்மா, விஷ்ணு, சிவர்களுள் யார் பரம்பொருள் என்ற வாதத்தை
வ்யபநேதுகாம: - போக்க விரும்பியவராய்
பவதீம் - உம்மை
பூஷாவிசேஷமிவ - திருவாபரணம் போல்
புஜாந்தராலே - மார்பில்
பிபர்த்தி கிம் - தரிக்கின்றாரா என்ன!

ருக் வேதம், யஜுர் வேதம் முதலான பல வேதங்கள் ஒன்றுகூடினவாம். அச்சபையில் ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் என்னும் மூவருள் யார் உயர்ந்த தத்வம் என்ற வாதம் தோன்றியதாம். அவ்வாதத்தைப் போக்கித் தாமே பரதத்வம் என்பதை மூதலிப்பதற்காக உம்மை மார்பிலணிந்து கொண்டாரா என உத்ப்ரேக்ஷிக்கின்றார். ஸ்ரீயை மார்பில் அணிந்து கொண்டமையால் அது எப்படி நாராயணன் தான் பரதத்வம் என்பதை மூதலித்ததென்னில் அது வருமாறு.

வேதங்கள் பல வகையாக வாதிட்டுப் பின் ஸ்ரீநிவாஸனை ஸேவித்தனவாம். அப்போதவன் மார்பிலிருந்த லக்ஷ்மியையும் ஸேவித்தன. உடன் அவைகளுக்கு "பூமியும் லக்ஷ்மியும் உமது மனைவிகள்" என்ற பொருள்கொண்ட "ஹ்ரீச் ச தே லக்ஷ்மீச் ச பத்ந்யௌ" என்னும் வாக்யம் ஞாபகத்துக்கு வந்ததாம். அந்த வாக்யம் புருஷஸூக்தத்திலுள்ளது. "ஸஹஸ்ர சீர்ஷா புருஷ:" எனத்தொடங்கும் வேதப்பகுதி நாராயணன் மஹிமையைப் பல படியாய் பேசும்போது "சந்தாம்ஸி ஜஜ்ஞிரே

தஸ்மாத்'' எனத்தொடங்கி உலகிலுள்ள பொருள்களெல்லாம் நாராயணன் உடலில் ஒவ்வோரிடத்தில் தோன்றின எனக்கூறியதுடன் கண்களால் காணப்படுவதும் காதுகளால் கேழ்க்கப்படுவதுமாகிய பொருள்கள் எவை எவையுள்ளனவோ அவை அனைத்தின் உள்ளும் புறமும் நாராயணன் வ்யாபித்துள்ளான் என்பதை ''யச்ச கிஞ்சித் ஜகத்யஸ்மிந் த்ருச்யதே ச்ருயதேபி வா, அந்த: பஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:'' என்ற வாக்யங்களால் நாராயணனே பரதத்வம் என விளக்கிப் போந்துள்ளது. புருஷஸூக்தம் இல்லாத வேதமேதுமில்லை. எனவே ஸ்ரிய: பதித்வம் — லக்ஷ்மிக்குக் கணவனாம் தன்மை — பரதத்வநிர்ணாயகம் - பரம்பொருள் எனநிர்ணயம் செய்வதாக - ஆயிற்று. (21)

22. स्वभावादुन्मीलत् बकुलसुमनः कोमलतनोः
नव क्लेशाशंकाकुलितहृदयेनापि हरिणा ।
त्वदाक्रान्ते हन्त व्युदसितुं उरस्यंब पुलकाः
न शक्यन्ते पद्मे न खलु सुलभः कंटकजयः ॥

ஸ்வபாவாதுந்மீலத் வகுலஸுமந: கோமலதநோ:
தவ க்லேசா சங்காகுலித ஹ்ருதயேநாபி ஹரிணா ।
த்வதாக்ராந்தே ஹந்த வ்யுதஸிதும் உரஸ்யம்ப புலகா:
ந சக்யந்தே பத்மே ந கலு ஸுலப: கண்டகஜய: ॥

அம்ப பத்மே - தாயான லக்ஷ்மியே
த்வதாக்ராந்தே - உம்மால் வீற்றிருக்கப்பட்ட
உரஸி - மார்பில்
புலகா: - பெண்ஸம்பந்தத்தால் தோன்றும் ஸாத்விக பாவமான மயிர் கூச்சல்
ஸ்வபாவாத் - இயற்கையாகவே
உந்மீலத் - மலர்வதான
வகுலஸுமந: - கேஸரபுஷ்பங்களைக் காட்டிலும்
கோமல - மென்மையான
தநோ: - உடலையுடைய
தவ - உமக்கு
க்லேசாசங்கா - மயிர்களால் துன்பம் உண்டாமோ என்ற எண்ணத்தால்
ஆகுலித - கலங்கிய
ஹ்ருதயேந - மனமுடைய
ஹரிணாபி - நாராயணனாலும்
வ்யுதஸிதும் - போக்குவதற்கு
ந சக்யந்தே - முடியவில்லை
ஹந்த - ஆச்சர்யம்
கண்டகஜய: - அவ்பர்களை ஜயிப்பதும்
ந ஸுலபா: கலு - எளிதல்லவல்லவா

லக்ஷ்மி, பாற்கடலில் தோன்றியதும் நாராயணன் மார்பை அடைந்தாள். அவள் உடல் மலரினும் மென்மையானது. அத்தகைய அவளது ஸம்பந்தத்தால் மயிர்க் கூச்சாகிய மெய்ப்பாடு தோன்றிற்றாம். மலரினும் மென்மையான லக்ஷ்மியின் உடல் மயிர்க்கூச்சால் துன்பப்படுமே, எனவே அதைப் போக்க வேண்டும் என நாராயணன் எண்ணியும் அவளது தொடர்பு இருந்துகொண்டிருப்பதால் அவனால் அதைப் போக்கமுடியவில்லையாம். மிக வல்லவனான நாராயணனாலும் அற்பப் பகையான மெய்ப்பாட்டை அடக்கமுடியவில்லையே ஆச்சரியம் என்றார். பின், ஆனால் இது இயல்பே, வியப்புக்குரியதல்ல என உலக வழக்கைக்காட்டி ஸமாதானிக்கிறார். மிக அற்பனான ஒரு பகைவனை மிகவல்லவனான பேரரசன் படைஎடுத்தழித்தால் அவனை உலகம் தூற்றும். அவன் பலம் எங்கே! இவன் பலம் எங்கே! இவன் அவனை அழித்து நகத்தால் கிள்ள வேண்டியதைக் கோடாரி கொண்டு வெட்டுவது போன்றதன்றோ என உலகம் பழிக்கும். அதற்கஞ்சியாவது அவன் நேராய் போர் செய்யான். அது போன்றுதானே இதுவும் என்கிறார். அர்த்தாந்தரந்யாஸம். வேற்றுப் பொருள் வைப்பணி. (22)

23. निरत्ययं नीलमहोनिधानं, कान्तं मुकुन्दाभिधं इन्दिरे त्वम् ।
निरंजनैरेव जनैः गृहीतं, वीक्ष्य स्थिता वक्षसि रक्षितुं किम् ॥

நிரத்யயம் நீலமஹோநிதாநம், காந்தம் முகுந்தாபிதம் இந்திரே த்வம் ।
நிரஞ்ஜனைரேவ ஜனை: க்ருஹீதம், வீக்ஷ்ய ஸ்திதா வக்ஷஸி ரக்ஷிதும் கிம் ॥

இந்திரே - லக்ஷ்மியே
த்வம் - நீ
நிரத்யயம் - குற்றமற்றதும்
நீலமஹ: - நீலநிறத்துக்கு
நிதாநம் - இருப்பிடமாயும்
முகுந்தாபிதம் - முகுந்தன் என்ற பெயருடையதுமான
காந்தம் - பர்த்தாவை
நிரஞ்ஜனைரேவ ஜனை: - குற்றமில்லாதவர்களாலேயே
க்ருஹீதம் - தமதாக்கிக் கொள்வதை
வீக்ஷ்ய - பார்த்து
ரக்ஷிதும் - குற்றமுடைய எங்களைக் காப்பதற்காக
வக்ஷஸி - அவன் மார்பில்
ஸ்திதா கிம் - வீற்றிருக்கின்றாயா
அஹோ - ஆச்சரியம்

வேறொரு பொருள் இந்திரே த்வம்
காந்தம் - விருப்பமானதும்
நிரத்யயம் - எவ்வளவு செலவு
    செய்தாலும் அழியாததும்
நீலம், முகுந்தம் - நீலமென்றும்
    முகுந்தமென்றும்
அபிதம் - பெயர்களை உடையதுமான
நிதானம் - புதையலை
நிரஞ்ஜனைரேவ ஜனை: - புதையலைக்
    காணவல்ல மைபூசாத
    கண்ணுடையவர்களாலும்
க்ருஹீதம் - அபஹரிப்பதை
வீக்ஷ்ய - பார்த்து
ரக்ஷிதும் - அவர் அபஹரித்துச்
    செல்லாமல் காப்பதற்காக
வக்ஷஸி - புதையலின்
    நடுப்பகுதியில்
ஸ்திதா கிம் - வீற்றிருக்கின்றாயா?
அஹோ - ஆச்சரியம்

நாராயணனைப் புதையலாக உருவகிக்கின்றார். மஹாபத்மம், பத்மம், கூர்மம், கமடம், கச்சபம், முகுந்தம், குந்தம், நீலம், வரம் என ஒன்பது நிதிகள் உள. கண்ணில் ஒருவகை மையைப் பூசிக்கொண்டால் அது பூமியில் மறைந்து கிடக்கும் நிதியைத் தெள்ளெனக் காட்டுமாம். நாராயணனாம் ''நிதி'' எல்லோராலும் அடைய விரும்பப்படுவது. எவ்வளவு செலவு செய்தாலும் செலவு ஆகாதது - எவ்வளவு துதித்தாலும் துதிக்க முடியாதது. ஒன்பது நிதிகளுள் நீலம் என்றும் முகுந்தம் என்றும் பெயருடைய இரண்டு நிதியைச் சார்ந்தது. அஞ்சனம் - மை. அது பூசப்படாதவர்களால் அபஹரித்துச் செல்வதைப் பார்த்து அப்படி எடுத்துச் செல்லாது காப்பதற்காக நீலம் முகுந்தம் என்ற நிதியின் நடுப்பகுதியில் (மார்பில்) நீ வீற்றிருக்கின்றாயா? என்பது நிதியைப் பற்றிய கருத்து.

நாராயணனைப் பற்றிய கருத்து. நாராயணன் எத்தகைய தோஷமுமில்லாதவன். ஆகவே அபஹதபாப்மா எனப்படுகிறான். நீருண்டமேகம் போன்ற நீல நிறத்தவன். முகுந்தன் என அவனுக்குப் பெயருண்டு. அவன் லக்ஷ்மியின் கணவன். இத்தகைய நாராயணனை நிரஞ்ஜனர் — பாபமில்லாதவர் — எளிதாக அடைந்துவிடுகிறார்கள். பாபிகளான என்போன்றவரும் அவனை அடையவேண்டும் என்பதற்காக நீ அவன் மார்பில் வீற்றிருக்கின்றாயா என்பதாம்.

(23)

24. जननि पुष्यसि तामरसं पदं वितनुषे च नतामरसंपदम् ।
परमुरस्स्फुरणप्रतिरोधिनं परमुरस्स्फुरणं नयसेऽद्भुतम् ॥

ஜநநிபுஷ்யஸி தாமரஸம்பதம், விதநுஷே ச நதாமரஸம்பதம் ।
பரமுரஸ்புரணே ப்ரதிரோதிநம் பரமுரஸ்புரணம் நயஸேத்புதம் ॥

ஜநநி - தாயே
தாமரஸம் - தாமரையாகிய
பதம் - உனது இருப்பிடத்தை
புஷ்யஸி - நீ வீற்றிருப்பதால் அழகுபடுத்துகிறாய்
தாமரஸம் பதம் - தாமரைக்கு அழகை
நவிதநுஷே - செய்வதில்லை (என்பது விரோதம்)
நத - வணங்கியவர்களுக்கு
அமர - இந்திரன் முதலான தேவர்களின்
ஸம்பதம் - செல்வமாம் போகத்தை
விதநுஷே - செய்கின்றாய் (என்பது பரிஹாரம்)
உரஸ்புரணம் - மார்பின் ப்ரகாசத்தை
ப்ரதிரோதிநம் - விரும்பாத
பரம் - பரமாத்மாவை
பரம் - மிகவும்
உரஸ்புரணம் - மார்பின் ப்ரகாசத்தை
நயஸே - அவன் மார்பிலிருந்துகொண்டு அடைவிக்கின்றாய் (என்பது விரோதம்)
பர - சத்ருவான
முர - முரன் என்ற அசுரனுடைய
ஸ்புரணம் - மேன்மையை
ப்ரதிரோதிநம் - அழித்தவனான நாராயணனில்
உரஸ்புரணம் - மார்பின் ப்ரகாசத்தை
நயஸே - அடைவிக்கின்றாய் (என்பது பரிஹாரம்)

இது விரோதாபாஸம் என்னும் அலங்காரத்தைச் சார்ந்தது ஒரேவடிவத்ததான இரண்டு சொற்றொடர்கள் எதிரிடையான கருத்துகளைத் தெரிவிப்பதுபோல் அமைப்பது விரோதாபாஸம். ஆபாஸம் என்பதற்குத் தோற்றம் என்பது பொருள். விரோதம்போல் தோன்றுமேயன்றி உண்மையில் விரோதம் இராது. சொற்றொடர்களிலுள்ள பதங்களை வெவ்வேறு வகைகளாகப் பிரித்துப் பொருள்கொண்டால் விரோதம் போய்விடும். கவியின் கவிதா ஸாமர்த்யத்தை விளக்குவதாமிது.

தாமரஸம்பதம் புஷ்யஸி, தாமரஸம் பதம் நவிதநுஷே என்பதும் உரஸ்புரணப்ரதிரோதிநம் உரஸ்புரணம் நயஸே என்பதும் விரோதங்களாம். அவற்றின் விரோதப் பொருள்களும், பரிஹாரங்களும் பதவுரையில் காட்டப்பட்டுள.

(24)

25. यदि नाम विष्णुवक्षः क्षणमत्यक्षः क्षमामयि रमे त्वम् ।
आगस्विनः तदा नः नैवमक्षिप्यत् कृपालो नाथः ॥

யதி நாம விஷ்ணு வக்ஷ: க்ஷணமத்யக்ஷ:
க்ஷமாமயி ரமே த்வம் ।
ஆகஸ்விந: ததா ந: நைவாரக்ஷிஷ்யத் ஊஷ்மலோ நாத: ॥

க்ஷமாமயி - பொறுமைவடிவினளான
ரமே - லக்ஷ்மியே
த்வம் - நீர்
விஷ்ணுவக்ஷ: - விஷ்ணுவின்
மார்பை, மனதை
க்ஷணம் - நொடிப்பொழுதாவது
அத்யக்ஷ:யதி நாம -
விட்டிருப்பாயாகில்

ததா - அப்போது
ஊஷ்மல: -
கொடுங்கோபக்காரரான
நாத: - ஸர்வேச்வரன்
ஆகஸ்விந: - மிக்க பாபிகளான
ந: - என்போன்றவர்களை
நைவ அரக்ஷிஷ்யத் -
காப்பாற்றியே
இருக்கமாட்டான்.

தாயே நீ கருணை மிக்கவளாக இருப்பதுடன் பகவானின் கருணையாகவுள்ளாய். நீ அவன் மார்பையும் அதன் அருகிலுள்ள அவன் மனதையும் நொடிப்பொழுதாவது பிரிந்திருப்பாயேயாகில் அவனால் அதுவரை காப்பாற்றப்பட்ட மக்கள் காக்கப்பட்டிருக்க மாட்டார்கள். ஏனெனில் நாங்கள் செய்யும் தவறுகளையே கவனிப்பவனவன். அதனால் பாபிகளான என்போன்றவர்மேல் கொடிய கோபமே கொள்வன். ஆனால் நீ அவன் மார்பிலும் உள்ளத்துமிருந்து தவறு செய்யாதவர் எவருமிலர் எனக்கூறி இதுவரை காப்பாற்றியதுபோல் மேலும் காப்பதற்காக அவன் மார்பைவிட்டகலாதுள்ளாய். (25)

26. हृदये कमलदलाक्षि त्वत्पदलाक्षीयलक्ष्म भवतीं च ।
दधदूष्मलोपि कृष्णः अप्यधिकारुण्यं वहत्यहिगिरीशः ॥

ஹ்ருதயே கமலதலாக்ஷி த்வத்பதலாக்ஷீயலக்ஷ்ம பவதீம் ச ।
ததத்ஊஷ்மலோபி க்ருஷ்ண: அப்யதிகாருண்யம் வஹதி
அஹிகிரீச: ॥

அஸ்தோகாத்வரி, கச்சி, கடாம்பு, கவிவித்வந்மணி, வாதிஹம்ஸாம்புதம், யமகசக்ரவர்த்தி என்ற விருதுகளைப்பெற்ற வேங்கடாத்வரியின் ஸ்ரீலக்ஷ்மீ ஸஹஸ்ரத்தில் மூன்றாவதான வக்ஷஸ்தல அவஸ்தாநஸ்தபகம் முடிவுற்றது.

கமலதலாக்ஷி - தாமரையிதழ் கண்ணியளே
அஹிகிரீச: - சேஷாத்ரிநாதன்
க்ருஷ்ணோபி - கருமை நிறமுடையனாயினும்
ஹ்ருதயே - மார்பில்
த்வத்பத - உனது காலில் பூசப்பட்ட
லாக்ஷிய - செம்பஞ்சுக் குழம்பின்
லக்ஷ்ம - அடையாளத்தை
ததத் - தரித்தவனாய்
(தஸ்மிந் - அதில்)
அதிக - மிகுதியான
ஆருண்யம் - சிவப்புத் தன்மையை
வஹதி - தரிக்கிறான்
(ததா - அப்படி)
ஸஷ்மலோபி - அபராதிகளிடம் கோபம் உடையவனுன போதும்
பவந்தம் - தேவரீரை
ஹ்ருதயே - மனதில்
ததத் - தரித்திருப்பதால் (அவர்களைத் தண்டிப்பதால் உமது மனம் வருந்துமே என்பதற்காக).
(தேஷு - அவர்களிடம்)
அதி - மிகுதியான
காருண்யம் - தயையை
வஹதி - தரிக்கிறான்.

ஸ்ரீநிவாஸன் நீருண்டமேகம்போல் ச்யாமளமானவன். நீ அவன் மார்பில் வீற்றிருக்கின்றாய். எனவே உனது பாதங்களில் பூசப்பட்டுள்ள செம்பஞ்சுக் குழம்பு அவன்மார்பில் பட்டுள்ளது. நீலத்தில் பட்ட சிவப்புப் பொலிவுடன் விளங்குகிறது. அவன் மனதிலும் நீ புகுந்துள்ளாய். அபராதிகளை தண்டிப்பதையே தமதியல்பாகக் கொண்டவனாயினும் அப்படித் தண்டித்தால் அவன் மனத்திலுள்ள உன்மனம் வருந்தும். அது அவனுக்கு வருத்தத்தைத் தரும். அதனால் அபராதிகளிடமும் உனக்காக மிக்க தயையைச் செலுத்துகிறான் என்கிறார்.

அதிகாருண்யம் என்பது அதிக+ஆருண்யம் என்றும் அதி+காருண்யம் என்றும் பிரிந்து இரு பொருளைத் தருகின்றது.
(26)

வாஜபேயாதி யாகங்களால் யஜ்ஞபுருஷனை ஆராதித்த கோயில், சப்தம், வங்கீபுரம், ராமாநுஜ தீக்ஷிதர் வம்சத்தில் உதித்த சடகோபாசாரியரால் இயற்றப்பட்ட ரத்நப்ரபா என்ற லக்ஷ்மீஸஹஸ்ர உரையில் மூன்றாவதான வக்ஷஸ்தலாவஸ்தாநஸ்தபக உரை முடிவுற்றது.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ஹயக்ரீவாய நம:
ஶ்ரீ ஶ்ரீநிவாஸ திவ்ய மஹிஷ்யை நம:

லக்ஷ்மீஸஹஸ்ரம்.

காருண்யஸ்தபகம்

1. भजे भुजंगशैलेश - भुजान्तर - परिष्क्रियाम् ।
तनयां दुग्धजलधेः दयामिव कृतोदयाम् ॥

பஜே புஜங்கசைலேச புஜாந்தர பரிஷ்க்ரியாம் ।
தநயாம் துக்த ஜலதே: தயாமிவ க்ருதோதயாம் ॥

புஜங்கசைலேச - சேஷாத்ரி நாதனுடைய
புஜாந்தர - மார்புக்கு
பரிஷ்க்ரியாம் - அலங்கார பூஷையாயும்
க்ருதோதயாம் - கைகால் முதலிய உறுப்புகளுடன் கண்ணுக்குப் புலப்படும்படித் தோன்றிய
தயாமிவ - ஶ்ரீநிவாஸனின் தயை போன்றுள்ளவளுமான
துக்தஜலதே: - பாற்கடலின்
தநயாம் - பெண்ணை
பஜே - ஸேவிக்கிறேன்.

குற்றம் செய்தவனான காகாஸுரனைக் காத்தமை, ராக்ஷஸிகளை ஹனுமானிடமிருந்து காத்தமை, முதலிய வரலாற்றால் ப்ரஸித்த கருணையைப் பெற்றவளான ஶ்ரீதேவியை இந்த ஸ்தபகத்தில் புகழ்கிறார். எனவே இது காருண்ய ஸ்தபகம் எனப்பெயர் பெற்றது. காருண்யம் = தயை.

ஶ்ரீநிவாஸனின் தயையே கை முதலாய உறுப்புகளைப் பெற்றுக் கண்ணுக்குப் புலப்படத் தோன்றினளோ என்றெண்ணும்படிக் கருணை வடிவினளான க்ஷீரஸாகரக் குமாரியை ஸேவிக்கிறேன். (1)

2. जननि जीवयितुं जगदर्दितं दशमुखप्रमुखैः त्रिदशारिभिः ।
जनकयज्ञ महीजठरे जनिं कृतवती भवती कृपया रमे ॥

ஜநநி ஜீவயிதும் ஜகதர்திதம் தசமுகப்ரமுகை: த்ரிதசாரிபி: ।
ஜநகயஜ்ஞ மஹீஜடரே ஜநிம் க்ருதவதீபவதீ க்ருபயா ரமே ॥

ஜநநி ரமே - தாயான இலக்குமியே
தசமுக ப்ரமுகை: - ராவணன் முதலான
த்ரிதசாரிபி: - அரக்கர்களால்
அர்திதம் - துன்புறுத்தப் பட்ட
ஜகத் - உலக மக்களை
ஜீவயிதும் - காப்பதற்காக
க்ருபயா - தயையால்
ஜநகயஜ்ஞமஹீ - ஜநகரின் யாக பூமியின்
ஜடரே - கர்பத்தில்
ஜநிம் - அவதாரத்தை
பவதீ - நீர்
க்ருதவதீ - செய்தீர்

ராவணன் முதலான கொடிய அரக்கர்களால் துன்புறுத்தப்பட்ட மக்களை, அவ்வரக்கர்களை அழித்துக் காப்பதற்கென நீ பூமியின் பெண்ணாகப் பிறந்தாய். பிறர் துன்பத்தைப் போக்க வேண்டி நீ கர்பவாஸம், அரக்கரிடையே கொடியவாஸம், போன்ற பல துன்பங்களை அநுபவித்தாய் என்னே உன் பொறுமை! பொறுமையைப் பெற வேண்டித்தான் பூமியின் பெண்ணாகப் பிறந்தாயோ! (2)

3. अकरुणा करुणा ध्रुवमंब ते क्षितितले भवतीमवतीर्य या ।
अहह यातुपुरस्थितिवेदनामगमयत् जगदार्तिनिवृत्तये ॥

அகருணா கருணா த்ருவம் அம்ப தே க்ஷிதிதலே பவதீம் அவதீர்யயா ।
அஹஹ யாதுபுரஸ்திதிவேதநாம் அகமயத் ஜகதார்தி நிவ்ருத்தயே ॥

அம்ப - தாயே
தே - உமது
கருணா - கருணை என்னும் குணம்
அகருணா - சப்தத்தால் மட்டும் கருணை உண்மையில் அகருணை
த்ருவம் - இது நிச்சயம் (ஏனெனில்)
யா - எந்த கருணை
ஜகதார்தி - உலகத்துன்பத்தை
நிவ்ருத்தயே - போக்குவதற்காக
க்ஷிதிதலே - பூமியில்
பவதீம் - உம்மை
அவதீர்ய - அவதரிப்பித்து
யாதுபுரஸ்திதி வேதநாம் - அரக்கர் பட்டினத்தில் இருத்தல் முதலாய துன்பங்களை
அகமயத் - அடைவிப்பித்ததோ
அஹஹ - ஆச்சரியம்.

பிறர்படும் துன்பத்தைப் பார்த்துத் தாம் அதைப் பொறுக்க முடியாமையால் அதனைப் போக்க உலகில் பலர் முற்படுகின்றனரன்றோ! இதுதானே கருணையின் இலக்கணம்! ஆனால் நீர் கொண்டுள்ள கருணை சொல்லளவில் கருணையேயன்றி உண்மையில் அகருணையேயாம். ஏனெனில் ஆநந்த மயமாய் அப்ராக்ருதமான ஸ்ரீவைகுண்டத்தில் சுகமாக இருந்த தேவரீரை இக்கர்ம பூமியில் பிறக்கச் செய்து, ராவணன் வீட்டில் வாழச்செய்து, ராக்ஷஸிகளைக்கொண்டு மிரட்டுவித்து, மேலும் இவைபோன்ற பல துன்பங்களை அக்கருணையன்றோ

அநுபவிக்கச் செய்தது! மக்கள் படும் துன்பங்களைக் கண்டு மனம் வருந்தி அவற்றைப் போக்கக் கருணையினால் மண்ணில் பிறந்தீர் உமது கணவனுடன், அதனால் பட்டபாடுதான் எத்துணை! எனவே உலகுக்கு அது கருணையாயினும் உமக்கு அது அகருணையேயாம். உமது கருணை ஆச்சரியத்துக்கு இடமானது. (3)

4. अविरतविविधापकारिण्यपि मयि देवि दयां करिष्यसीति ।
जननि मम भयातुरस्य धैर्यं जनयति वायसदानवापदानम् ॥

அவிரத விவிதாபகாரிண்யபிமயி தேவி தயாம் கரிஷ்யஸீதி ।
ஜநநி மம பயாதுரஸ்ய தைர்யம் ஜநயதி வாயஸ
தாநவாபதாநம் ॥

தேவி ஜநநி - நாராயணன் பத்நியாகிய தாயே!
பயாதுரஸ்ய - நான் செய்யும் தீஞ்செயல்களை எண்ணி பயந்த
மம - எனக்கு
வாயஸதாநவ - காகாசுரனிடம்
அபதாநம் - நீ முன்செய்த செயல்
அவிரத - ஓய்வில்லாது
விவித - பல்வகையான
அபகாரிணி - தீஞ்செயல்களைச் செய்யும்
மய்யபி - என்னிடமும்
தயாம் கரிஷ்யஸி - தயையைச் செய்தே தீருவாய்
இதி தைர்யம் - என்றும் தைர்யத்தை
ஜநயதி - உண்டாக்குகின்றது.

உனது உடலையே தமது அலகால் குத்திப் புண்படுத்திய காக்கையைக் கொல்லத்துணிந்த ராமனிடமிருந்து நீ காப்பாற்றி அதற்குயிர் பிச்சை கொடுத்த செய்தி பல்வகையான பாபங்களை ஓயாது செய்யும் என்னையும் காப்பாய் என்ற தைர்யத்தை உண்டு பண்ணுகின்றது. ஏனெனில் நான் செய்யும் தீமைகள் யாவும் காகாசுரன் செய்த தீமையில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட ஆகாதன்றோ. (4)

5. राघवस्य हृदयं स्थिराघवद्वायसं प्रति नवायसक्रमम् ।
देवि जानकि दयारसात् त्वया पादयोजनकृता द्रवीकृतम् ॥

ராகவஸ்ய ஹ்ருதயம் ஸ்திராகவத் வாயஸம்ப்ரதி
நவாயஸக்ரமம் ।
தேவி ஜாநகி தயாரஸாத் த்வயா பாதயோஜநக்ருதா
த்ரவீக்ருதம் ॥

தேவி ஜாநகி - ராகவமஹிஷியான ஜாநகியே!
ஸ்திர - பரிஹாரம் செய்ய முடியாத
அகவத் - பாபத்தை உடைய
வாயஸம் ப்ரதி - காக்கையைக் குறித்து
நவ - புதிதாகச் செய்யப்பட்ட
ஆயஸக்ரமம் - கத்தி முதலிய ஆயுதத்தின் கூர்மையாயிருத்தல் முதலாய தன்மையைப் பெற்ற
ராகவஸ்ய - ராமனுடைய
ஹ்ருதயம் - மனம்
தயாரஸாத் - உமது தயா ரஸத்தால்
பாதயோஜஜ க்ருதா - அவன் திருவடிகளில் அதைச்சேர்ப்பித்ததால்
த்ரவீக்ருதம் - நீர்ப்பண்டமாக்கப்பட்டது.

முன் ச்லோகத்தில் சுருங்கச் சொன்னதை இதில் விரிவாகக் கூறுகிறார். காக்கை ஸீதையின் மார்பகத்தைத் தமது அலகால் குத்திப் புண்படுத்தி ரத்தம் சொட்டவைத்தது. அதைக் கண்ட ராமன் காகத்தைக் கொல்லத் துணிந்தான். தமக்கு அப்போது படுக்கையாக இருந்த தர்பப்புல்லிலிருந்து ஒன்றை எடுத்து ப்ரஹ்மாஸ்திர மந்திரத்தால் மந்திரித்து அதன் மேல் ஏவினான். பயந்த காகம் தன்னைக் காப்பாரைத் தேடி மூவுலகையும் சுற்றியது. எங்கும் காக்கவல்லார் கிடையாமையால் ராமனிடமே வந்து அவன் காலில் விழாது வேறு முகமாக விழுந்தது. ஆனால் ஸீதை அக்கொடிய காகத்தையும் ராமன் காலில் தாமே சேர்ப்பித்தாள். இரும்பினால் செய்த புதிய ஆயுதம் போன்று கடினமான மனமுடைய ராமனும் ஸீதையின் செயலைக் கண்டு மனமுருகி அதற்கு உயிர்ப்பிச்சையளித்தான் என்பது வரலாறு. இங்ஙனம் தமது உடலையே துன்புறுத்தியதோடு வேறு திசைநோக்கி விழுந்த காகத்தைத் தாமே எடுத்து ராமன் திருவடியில் சேர்த்து அதனைக் காத்தளித்த ஜகந்மாதாவுக்கு நம் போன்ற அத்தகைய கொடுமையற்ற அபராதிகளைக் காத்தலில் ஸந்தேகம் ஏன் என்கிறார். இவ்வரலாற்றை ''தமீசபாதாபிமுகம் நிதாய ஸ்வயம் கராப்யாம் உபக்ருஹ்ணதி ஸா'' என்ற பகுதியால் காளிதாஸன் ரகுவம்சத்தில் வெளிப்படுத்தினான்.

நவ+ஆயஸ+க்ரமம் என்பதை, ந+வாயஸ+க்ரமம் எனப்பிரித்தால் கல்லால் அடித்துக் கொல்லத்தக்க அற்பமான காகத்தின்மீது செலுத்தத் தகுதியற்ற ப்ரஹ்மாஸ்திரத்தைச் செலுத்தினான் என்ற பொருளும் கிடைக்கும். இதனால் செய்யத் தகாத இடத்தில் செய்த குற்றத்தின் கொடுமை விளங்கும். அப்படிப்பட்ட அபராதியையும் காத்தனர் இருவருமெனில் அவர்களின் கருணையுள்ளத்தின் மேன்மை

தெற்றென விளங்கும்.

''ரஸாத் பாதயோஜநக்ருதா த்ரவீக்ருதம்'' என்ற அடி காய்ச்சிய இரும்பில் கால் பகுதி பாதரஸத்தைச் சேர்த்தால் அவ்விரும்பு உருகும் என்ற முறையை வெளிப்படுத்துகின்றது. (5)

6. अब्धेः कन्ये जननि महतां आगसां जन्मगेहेषु
अस्मादृक्षेष्वपि च करुणां आदधासि ध्रुवं त्वम् ।
साक्षी तस्मिन् युधि दशमुखे सारसाक्षि व्यपेते
यातुस्त्रीणां कबलनविधिं याचमानो हनूमान् ॥

அப்தே: கந்யே ஜநநி மஹதாம் ஆகஸாம் ஜந்மகேஹேஷு
அஸ்மாத்ருக்ஷேஷ்வபி ச கருணாமாததாஸி த்ருவம் த்வம் ।
ஸாக்ஷீ தஸ்மிந் யுதி தசமுகே ஸாரஸாக்ஷி வ்யபேதே
யாதுஸ்த்ரீணாம் கபளநவிதிம் யாசமாநோ ஹநூமாந் ॥

அப்தே: கந்யே - கடல் கன்னியே
ஜநநி - உலகத்தாயே
ஸாரஸாக்ஷி - தாமரைக் கண்ணியே
மஹதாம் - மிகப்பெரிய
ஆகஸாம் - பாபங்களுக்கு
ஜந்ம கேஹேஷு - பிறப்பிடமான
அஸ்மாத்ருக்ஷேஷு - என் போன்றவரிடம்
கருணாம் - தயையை
ஆததாஸி - செலுத்தப் போகிறாய் என்பது
த்ருவம் - நிச்சயம்
(த்ருவம் - அது தகுதியுடையதே)
தசமுகே - ராவணன்
யுதி - யுத்தத்தில்
வ்யபேதே - சுற்றத்துடன் அழிந்த போது
யாதுஸ்த்ரீணாம் - முன்பு நிந்தித்த அரக்கிகளின்
கபளநவிதிம் - அழித்தலை
யாசமாந: - வேண்டிய
ஹநூமாந் - ஆஞ்சநேயன்
தஸ்மிந் - மஹாபராதிகளிடமும் நீ தயை உடையை என்பதை
ஸாக்ஷீ - நேராகக் கண்டவன்.

பாற்கடலின் கன்னியே! எத்தனை ப்ராயச்சித்தங்களைச் செய்தாலும் அழிக்க முடியாததான கொடிய பாபங்களைச் செய்த என் போன்றவர்களிடமும் நீ தயையைக் காட்டியே தீருவாய் என நான் திடமாக நம்புகிறேன். ஏனெனில் போர்க்களத்தில் புத்ர மித்ராதி பந்துக்களுடன் ராவணன் நிர்மூலமாக்கப்பட்ட பின் அச்செய்தியை உன்னிடம் தெரிவிக்க வந்த ஹநுமான் தான் தெரிவித்த ஸந்தோஷச் செய்திக்கு வெகுமதியாக ராவணனிருந்த போது உன்னைப் பல பல வழிகளில்

துன்பப்படுத்திய ராக்ஷஸிகளை அழிக்க நீ நியமநம் தரவேண்டுமென வேண்டியபோது நீ தலைவன் கட்டளைப்படி நடந்த இவர்மீது என்ன குற்றமுள்ளது? இவர்களை ஏன் அழிக்க வேண்டும்? எனத்தடுத்த உன்கருணைக் கடலின் பெருக்கைக் கண்கூடாகக் கண்டவனல்லனோ ஹநுமான்.; அரக்கிகள் போன்ற நாங்கள் நேரிடையாகத் தேவரீருக்குத் துன்பம் விளைவிக்கிறோம்! எனவே நாங்கள் காப்பாற்றப்படுவது நிச்சயமான விஷயம். (6)

7. रामस्तिष्ठतु नाम यो न विदयो जिह्रेति निर्हेतुकं
सुग्रीवैक-विरोधिनं क्षितिसुते संहृत्य तं वालिनम् ।
कारुण्यांबुनिधिः त्वमेवनियतं क्लृप्तात्मपीडं यतः
रक्षस्त्रीनिकरं ररक्षिथ तमप्यार्द्रागसं वायसम् ॥

ராமஸ்திஷ்டது நாம யோ ந விதய: ஜிஹ்ரேதி நிர்ஹேதுகம்
ஸுக்ரீவைகவிரோதிநம் க்ஷிதிஸுதே ஸம்ஹ்ருத்ய தம்வாலிநம் ।
காருண்யாம்புநிதி: த்வமேவ நியதம் க்லுப்தாத்மபீடம் யத:
ரக்ஷஸ்த்ரீ நிகரம் ரரக்ஷித தமப்யார்த்ராகஸம் வாயஸம் ॥

க்ஷிதிஸுதே - பூமியின் பெண்ணே
ய: - எந்தராமன்
ஸுக்ரீவைக விரோதிநம் - ஸுக்ரீவன் ஒருவனுக்கே விரோதியும்
தம் - மிக்க புகழுடையவனுமான
வாலிநம் - வாலியை
நிர்ஹேதுகம் - எக்காரணமுமின்றி
விதய: - கருணையற்றவனாய்
ஸம்ஹ்ருத்ய - மறைந்து கொன்று
ந ஜிஹ்ரேதி - வெட்கப்பட வில்லையோ
ஸ: திஷ்டது நாம - அந்தராமன் ஒருபுறமிருக்கட்டும்
யத: - எக்காரணத்தால்
நியதம் - தப்பாமல்
க்லுப்தாத்ம பீடம் - தம்மைத் துன்புறுத்திய
ரக்ஷஸ்த்ரீ நிகரம் - ராக்ஷஸிகளின் கூட்டத்தையும்
தம் ஆர்த்ராகஸம் - அப்போதுதான் துன்புறுத்தியவனான
வாயஸம் - காக்கையையும்
ரரக்ஷித - ஹநுமானிடமிருந்தும், ராமனிடமிருந்தும் காப்பாற்றினாயோ
அத: - ஆதலால்
காருண்யாம்புநிதி: - கருணைக்கடல்
த்வமேவ - நீயேயாவாய்.

வாலி, ஸுக்ரீவனுக்குத் தீமை செய்தான் என்பதற்காக ராமன் அவனைக் கொன்றான். வாலி ராமனுக்கோ மற்றையருக்கோ எத்தகைய துன்பத்தையும் செய்யாததோடு ராவணன் கொட்டத்தை அடக்கியவனாவான். அப்படிப்பட்டவனை

வீரனுக்குத் தகாத முறையில் மறைந்து கொன்றதோடன்றித் தாம் செய்தது நேர்மையானதே என வாதிட்டான். ஆகையால் அவன் கருணாகரன் எனச் சொல்லத் தகாதவன். கருணையற்றவர் கூட்டத் தலைவன். ஆனால் நீயோ கருணைக் கடலானாய். ஏனெனில் அல்லும் பகலும் தம்முடனேயே இருந்து ஓயாது துன்புறுத்திக் கொண்டிருந்த ராக்ஷஸிகளைக் கொல்ல முயன்ற ஹநுமானிடமிருந்து காப்பாற்றினாய். அப்போதுதான் உன் மார்பகத்தைக் குத்திச் சொட்டச் சொட்ட ரத்தப்பெருக்குண்டாக்கிய காகத்தை ராமனிடமிருந்து காப்பாற்றினாய், எனவே நீயே கருணைக் கடல்.

"மாதர் மைதிலி ராக்ஷஸீ:" என்ற ஸ்ரீகுணரத்நகோச ச்லோகத்தில் பட்டரும் இக்கருத்தை வெளியிட்டுள்ளார். ஈண்டது நினைக்கற்பாலது. (7)

8. गुरुणा प्लवेन करुणात्मना विना हरिणांकसोदरि गुणांबुधे तव ।
जननाधिरोगमरणादिवेदना वरुणालयस्य तरणाय का गतिः ॥

குருணா ப்லவேந கருணாத்மநா விநா ஹரிணாங்க ஸோதரி குணாம்புதே தவ ।
ஜநநாதிரோக மரணாதிவேதநா வருணாலயஸ்ய தரணாய கா கதி: ॥

ஹரிணாங்க ஸோதரி - சந்திரனுடன் பிறந்தவளே
குணாம்புதே - நற்குணக் கடலே
தவ கருணாத்மநா - உமது கருணையாகிய
குருணா - பெரிய
ப்லவேந விநா - கப்பலைவிடுத்து
ஜநந, ஆதி, ரோக, மரணாதி வேதநா - பிறப்பு, மனோவ்யாதி, பிணி, இறப்பு முதலான வேதனைகளாகிய
வருணாலயஸ்ய - கடலை
தரணாய - கடப்பதற்கு
கா கதி: - வேறு வழி ஏது?

பிறப்பு இறப்பு முதலான வ்யாதிகளுக்கு இருப்பிடமான ஸம்ஸார ஸாகரத்தைக் கடப்பதற்கு உமது கருணையாகிய தோணியை விடுத்து வேறுவழி இல்லை. "குருணா" என்பதற்குப் பெரிய என்ற பொருள் கொள்ளாது ஆசார்யன் என்ற பொருள் கொண்டால் ஆசார்யனாகிய தோணி கடலைக் கடக்க உதவும் என்ற பொருளும் கிடைக்கும்.

அமிழ்தத்தை விரும்பிய தேவர்கள் பாற்கடலைக்

கடைந்தபோது அதனின்றும் இலக்குமியும் சந்திரனும் தோன்றியவர்களானமையின் இலக்குமிக்கு சந்திரன் உடன் பிறந்தவளாவாள். (8)

9. त्वय्येवायतते कृपा रघुपतेः देवस्य सत्यं यतः
वैदेहि त्वदसन्निधौ भगवता वालीनिरागा हतः ।
निन्ये कापि वधं वधूस्तव तु सान्निध्ये त्वदंगव्यथां
कुर्वाणोप्यवितः पतन्नशरणः काको विवेकोज्झितः ॥

த்வய்யேவாயததே க்ருபா ரகுபதே: தேவஸ்ய ஸத்யம் யத:
வைதேஹி த்வதஸந்நிதௌ பகவதா வாலீ நிராகா ஹத: ।
நிந்யே காபிவதம் வதூ: தவது ஸாந்நித்யே த்வதங்கவ்யதாம்
குர்வாணோப்யவித: பதந்நசரண: காகோ விவேகோஜ்ஜித: ॥

வைதேஹி - விதேஹ நாட்டுப் பெண்ணே
தேவஸ்ய - அரசனான
ரகுபதே: - ராமனுடைய
க்ருபா - கருணை
த்வய்யேவ ஆயததே - உன்னிடமே தங்கியதாகக் கொண்டுள்ளதென்பது
ஸத்யம் - ஸத்யமானது
யத: - ஏனெனில்
பகவதா - ஸர்வஜ்ஞனான ராமனால்
த்வதஸந்நிதௌ - நீ அருகில் இல்லாதபோது
நிராகா: - எக்குற்றமுமற்றவனான
வாலீ ஹத: - வாலி கொல்லப்பட்டான்
காபி வதூ: - தாடகை என்னும் ஒரு பெண்
வதம் நிந்யே - கொல்லப்பட்டாள்
தவ - உமது
ஸாந்நித்யே து - அருகிலிருக்கையிலோ வெனில்
விவேகோஜ்ஜித: காக: - அறிவற்ற காகாசுரன்
த்வதங்கவ்யதாம் - உமதங்கத்துக்குத் துன்பத்தை
குர்வாணோபி - செய்தபோதும்
அசரண: - மூவுலகிலும் காப்பவரற்றவனாய்
பதந் - ராமனிடம் விழுந்தபோது
அவித: - காப்பாற்றப்பட்டான்
அத: - ஆதலால் ராமன் கருணை உன்வசமானது.

வைதேஹி! ராமனது கருணை அவனிடமிருந்தபோதும் அது அவன் வசமன்று. உன் சொல்படி நடப்பதாதலால் அது உன் வசமானதே என்கின்றார். இரண்டு உதாரணங்களுடன் அதை மூதலிக்கின்றார். உன்னை அவன் கைப்பிடிப்பதற்கு முன், செய்யத்தகாத செயலாகியப் பெண்வதமாம் தாடகாவதத்தைச் செய்தான். நீ அவன் கரத்தைப் பற்றியபின் அவனைவிட்டுப் பிரிந்திருந்தபோது குற்றமற்றவனான வாலி கொல்லப்பட்டான். ஆனால் உன் உடலுறுப்பைக் குத்திக் கிளறி துன்புறுத்தியதால் கொல்லத்தக்க காகம் ராமனால் கொல்லத்துணிந்த போதும், நேரிடையாக ராமன் காலில் வேறுதிசையில் விழுந்தபோதும் உன்னால் அது காக்கப்பட்டது. எனவே ராமன் கருணை உனதீனமானது.

''யத்'' ''தத்'' என்னும் சொற்கள் விட்டுப் பிரியாதவை. ஒன்றைச் சொன்னாலே மற்றொன்று கிடைக்கும். எனவே ''யத:'' என்பது மூலத்திலுள்ளதால் ''தத:'' என்பது வருவித்துப் பொருளுரைக்கப்பட்டது.

10. द्विपंचग्रीवाज्ञाचकितसमुदंचन्निशिचर-
प्रपंचप्रक्षिप्तः पवनसुतवाले हुतवहः ।
यतो जातः शीतः तमिह भवसंतापविवशे
कृपापूरं स्वैरं किरतु मयि लोकांब भवती ॥

த்விபஞ்ச க்ரீவாஜ்ஞாசகிதஸமுதஞ்சந்நிசிசர
ப்ரபஞ்ச ப்ரக்ஷிப்த: பவநஸுத வாலே ஹுதவஹ: ।
யதோ ஜாத: சீத: தமிஹ பவஸந்தாப விவசே
க்ருபாபூரம் ஸ்வைரம் கிரது மயி லோகாம்ப பவதீ ॥

லோகாம்ப - உலகத்தாயே
பவதீ - பூஜிக்கத்தக்கவளே
த்விபஞ்ச க்ரீவ - பத்துத்தலையனான ராவணனது
ஆஜ்ஞா - கட்டளையால்
சகிதா: - பயந்தவர்களாய்
ஸமுதஞ்சந் - ஒன்றாகக்கூடிய
நிசிசரப்ரபஞ்ச - அரக்கர் கூட்டத்தால்
ப்ரக்ஷிப்த: - வைக்கப்பட்டதும்
பவநஸுதவாலே - ஹநுமானுடைய வாலில் உள்ளதுமான
ஹுதவஹ: - அக்நி
யத: - எந்த தயையால்
சீதோஜாத: - குளிர்ச்சியாயிற்றோ
தம் க்ருபாபூரம் - அந்த கருணை வெள்ளத்தை
பவஸந்தாப - ஸம்ஸாரமாகிய தாபத்தால்
விவசே - செயலற்றுள்ள
மயி - என்னிடம்
ஸ்வைரம் - தட்டின்றி
கிரது - ப்ரவஹிக்கச் செய்யட்டும்.

ராவணன் கட்டளைக்குப் பயந்த அரக்கர் கூட்டத்தால் ஹநுமத் வாலில் வைக்கப்பட்ட அக்நி எவளுடைய கருணையால் அவனைச் சுடாது தட்பத்தையே தந்ததோ அக்கருணைவெள்ளம் ஸம்ஸாரமாம் வெப்பத்தில் வாடும் என்மீது எவ்விதத் தட்டுத் தடங்கலுமின்றி பாயட்டும் என வேண்டுகின்றார்.

"லோகாம்ப" — உலகுக்கெல்லாம் தாய் — என்றமையால் அநுமனைப்போல் நானும் ஒரு மகனானதால் அவன் மேல் கருணை வெள்ளத்தைப் பாய்ச்சியதுபோல் நானும் அவ்வெள்ளத்தைப் பெற தகுதியுடையன் என்பதும், "த்விபஞ்சக்ரீவ" என்று ராவணன் தமது பத்து தலைகளால் கத்தினன் என்றதால் ஒலி மிகுதியாக இருந்ததென்றும், பயத்தாலேயே அப்படிக் கத்தினன் என்றும் "சகிதநிசர (என்றதால் ராவணனிடமுள்ள பயத்தால் வாலில் தீயிட்டார்களேயன்றி அரக்கர்களுக்கு விருப்பம் இல்லை என்பதும், "ப்ரபஞ்ச ப்ரக்ஷிப்த:" என்பதால் வைத்த தீ மிகுதியாக இருந்தது என்பதும் தொனிப் பொருள்களாகக் கிடைக்கின்றன.

"பவநசுத" — காற்றின் பிள்ளை — என்பதால் காற்றும் நெருப்பும் தோழர்களாதலால் தோழனான காற்றின் மகன் அநுமனுக்கு தீக்கடவுள் தீமை செய்யான் என்பது உள்ளுறை பொருள்.

11. विष्णोर्विष्णोरंशं गतवति विबुधद्वेषिशोषाय रोषात्
एष्यत्पोषितागः शतमपि कृपया हंतुकामेव नूनं ।
धत्ते कन्या जनन्या गुणमिति निपुणं किंवदंतीं विदन्ती
पूर्वं सर्वंसहायां उदयमकुरुथा भोगिशैलेन्द्रकान्ते ॥

விஷ்ணோர்விஷ்ணோரம்சம் கதவதி விபுதத்வேஷி-
சோஷாய ரோஷாத்
ஏஷ்யத்தத்போஷிதாக:சதமபி க்ருபயா ஹந்துகாமேவ
நூநம் ।
தத்தே கந்யா ஜநந்யா குணமிதி நிபுணம் கிம்வதந்தீம்
விதந்தீ
பூர்வம் ஸர்வம்ஸஹாயாம் உதயமகுருதா:
போகிசைலேந்த்ர காந்தே ॥

போகிசைலேந்த்ர காந்தே - சேஷாத்ரி நாதன் மனைவியே
பூர்வம் - த்ரேதாயுகத்தில்
விஷ்ணோ - நாராயணன்
ரோஷாத் - அரக்கர் செய்யும் கொடுமையாலுண்டான கோபத்தால்
விபுதத்வேஷி - ராவணன் முதலியவரை
சோஷாய - நிர்மூலமாக்குவதற்கு
உஷ்ணாம்சு வம்சம் - சூர்ய வம்சத்தை
கதவதி - அடைந்தபோது
த்வம் - நீர்
க்ருபயா - தயையால்
ஏஷ்யத் - வரவிருக்கும்
தத்போஷித் - ராவணன் முதலியவர் மனைவிகளின்
ஆகஃஸதமபி - பல பல பாபங்களையும்
சுஷ்ந்துகாமா - பொறுத்துக்கொள்ள விரும்பியவளாய்
ஜநந்யா: - தாயின்
குணம் - தன்மையை
கந்யா - மகள்
தத்தே - தரிக்கிறாள் என்கிற
லிம்வதந்தீம் - மக்களின் பேச்சை
நிபுணம் - நன்கு
விதந்தீ - அறிந்தவளாய்
ஸர்வம்ஸஹாயாம் - பூமியில்
உதயம் - தோற்றத்தை
அகுருதா: - செய்தாய்
நநம் - இது உண்மை

ராவணன், இந்திரஜித், முதலிய அரக்கர்கள் மூவுலகங்களையும் மிகவும் துன்புறுத்தினர். அதனைத் தாங்காத இந்திரன் முதலாய தேவர் கூட்டம் நாராயணனிடம் முறையிட்டது. அதைக்கேட்ட நாராயணன் கோபமடைந்து அவ்வரக்கர்களை வேருடன் அழிக்க எண்ணங்கொண்டான். மூவுலகையும் வாட்டத்தக்க கொடிய குணங்களைப் பெற்ற சூரியனது குலமே அதற்கேற்ற குலமென எண்ணி அக்குலத்தில் பிறந்தான். கணமும் அவனைவிட்டுப் பிரியாதவளன்றோ நீ, எனவே நீயும் பிறக்க வேண்டுமே. எங்கு பிறப்பதென எண்ணினாய். ஜநக மஹாராஜரின் யாகபூமியில் பிறப்பதென முடிவு செய்தாய். பலர் பலவகைகளில் செய்யும் தீமைகளை எல்லாம் பொறுத்துக்கொண்டு அவர்களுக்கும் நன்மையைச் செய்வதால் ஸர்வம்-ஸஹா- என்ற பெயர் பெற்றவளன்றோ பூ மாதா! நீயும் அசோகவனத்தில் பல அரக்கிகளால் செய்யவிருக்கும் துன்பங்களைப் பொறுத்து அவர்களுக்கும் நன்மை செய்ய வேண்டியவளல்லவா! எனவே அவ்விடத்தைத் தேர்ந்தெடுத்தாய். இயல்பாகவே கருணை வடிவினளான நீ ராஜர்ஷிவம்சத்தில் பிறந்தாலும் உன் கருணையைக் காட்டியே இருவாய், இருப்பினும் தாயின் குணத்தைப் பெண்ணும் தந்தையின் குணத்தை மகனும் பின்பற்றுவர் என்ற உலக வழக்கை மெய்ப்பிக்கவல்லவா பூமியில் பிறந்தாய் என உத்ப்ரேக்ஷையால் கூறுகிறார்.

இயல்பாக நடந்த பிறப்புகளில் கவி தமது அறிவுத் திறமையால் இப்படியொரு காரணம் கற்பிக்கின்றார்.

12. अवितुमिह दया ते देवि मार्गत्यशक्तान्
अहमपि शरणार्थी हन्त मज्जन्भवाब्धौ ।
घटनमुचितमासीत् आवयो र्दैवयोगात्
कलशजलधि कन्ये हातुमेतन्नयुक्तम् ॥

அவிதுமிஹ தயா தே தேவி மார்கத்யசக்தாந்
அஹமபி சரணார்த்தீ ஹந்த மஜ்ஜந்பவாப்தெள ।
கடநமுசிதமாஸீத் ஆவயோ: தைவயோகாத்
கலசஜலதிகந்யே ஹாதுமேதந் ந யுக்தம் ॥

தேவி கலசஜலதி கந்யே - பாற்கடல் கன்னியான நாராயண மஹிஷியே
இஹ - இந்த ஸம்ஸார மண்டலத்தில்
தே தயா - பிறர் துன்பத்தைப் பொறுக்கமாட்டாத உமது தயை
அவிதும் - காப்பதற்கு
அசக்தாந் - உன் தயையையே எதிர் பார்த்திருப்பவரை.
மார்கதி - தேடுகின்றது.
பவாப்தெள - ஸம்ஸாரமாகிய கடலில்
நிமஜ்ஜன் - கரைகாணாது மூழ்கிக்கொண்டிருக்கும்
அஹமபி - நானும்
சரணார்த்தீ - சரணமாக அடைவதற்கு உன் தயையை எதிர்பார்ப்பவனாக
(அஸ்மி - உள்ளேன்)
ஆவயோ: - (இப்படிப் பிறரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்) நம் இருவருக்கும்
தைவயோகாத் - பகவானின் ஸங்கல்பத்தால்
உசிதம் - தகுதியான
கடநம் - சேர்க்கை
ஆஸீத் - உண்டாயிற்று
ஹந்த - ஆச்சரியம்
ஏதத் - இச்சேர்க்கை
ஹாதும் - விடுவதற்கு
நயுக்தம் - தகுதியுடையதல்ல.

பிறர் படும் துன்பத்தைக் கண்டு பொறுக்க மாட்டாது அதைப் போக்குவதையே தமது தன்மையாகக் கொண்ட தேவரீர் தயை, வேறு கதியைப் பற்றாது நம்மையே சரணமாகப் பற்றியவர் எங்குளர் என தேடிக் கொண்டிருக்கின்றது அவரைக் காப்பதற்கு. அடியேனும் ஸம்ஸாரக் கடலின் கரையைக் காணாதவனாய் அதில் பிறப்பு இறப்பு பின்னும் பிறப்பு இறப்பு என முழுகுவதும் எழுவதுமாக உமது தயையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். நம்மிருவருக்கும் பகவத் ஸங்கல்பத்தால்

தற்போது சேர்க்கை கிடைத்துள்ளது. இதை நீர் நழுவவிடாதீர் என் போன்றவர் பின்பு கிடைப்பது அரிது என வேண்டுகிறார்.

13. कार्येषु कारणगुणाः नियतं भवन्ती-
त्युक्तिं सतां अवितथां अवधारयामः ।
चान्द्री कला च भवती च पयोधिमध्यात्
जाते यदंब सुधया दयया च शीते ॥

கார்யேஷு காரணகுணா: நியதம் பவந்தீத்—
யுக்திம் ஸதாமவிததாம் அவதாரயாம: ।
சாந்த்ரீ கலா ச பவதீ ச பயோதிமத்யாத்
ஜாதே யதம்ப சுதயா தயயா ச சீதே ॥

அம்ப - தாயே
காரணகுணா: - மூலப்பொருளிலுள்ள குணங்களெல்லாம்
கார்யேஷு - அதனால் உண்டாக்கப்பட்ட பொருள்களில்
நியதம் - தப்பாமல்
பவந்தி - தோன்றுகின்ற
இதி - என்கின்ற
ஸதாம் உக்திம் - ஸத்துக்களின் பேச்சை
அவிததாம் - தப்புடையதல்லதாக
அவதாரயாம: - நிச்சயிக்கின்றோம்.
யத் - ஏதனாலெனின்
பயோதி மத்யாத் - குளிர்ந்த கடலின் அடிப்பகுதியிலிருந்து
ஜாதே - தோன்றியவர்களான
சாந்த்ரீ கலா ச - சந்திரனுடைய கிரணங்களும்
பவதீ ச - தேவரீரும்
சுதயா - அம்ருதத்தாலும்
தயயா ச - தயையாலும்
சீதே - குளிர்ந்தவர்களாக உள்ளீர்களன்றோ

ஒரு வஸ்துவின் மூலப்பொருள் — காரணமாக இருப்பது — எந்த மணம் நிறம் முதலிய குணங்களைப் பெற்றிருக்கிறதோ அது அதிலிருந்து தோன்றிய பொருளிலும் இருக்கும் என்பது உலக வழக்கு. இது மிகவும் பொருத்தமுடையதென்கிறார். ஏனெனில் பாற்கடலின் அடிப்பகுதியிலிருந்து சந்திரனும் இலக்குமியும் தோன்றினர். கடலடிப்பகுதி குளிர்ச்சியானது. எனவே அங்கு தோன்றிய சந்திரனும் குளிர்ந்த கிரணங்களைப் பெற்று குளிர்ந்தவனாக இருக்கிறான். தேவரீரும் கருணை என்னும் குணத்தால் குளிர்ந்து நாராயணனருள் கிடையாமை என்னும் கொடுமையை நிக்ரஹத்தை - போக்கும் சக்தியுடையவராக உள்ளீர்.

14. आसादितोन्नतपदेषु गिरीशमुख्येषु
आरोढुमब्जनिलये शिथिलाभिलाषा ।
नीचे तु मादृशि दयारसनिम्नगा ते
प्राप्तादरा प्रवहतीत्यनुरूपमेतत् ॥

ஆஸாதிதோந்நத பதேஷு கிரிசமுக்யேஷு
ஆரோடுமப்ஜநிலயே சிதிலாபிலாஷா ।
நீசே து மாத்ருசி தயாரஸநிம்நகா தே
ப்ராப்தாதரா ப்ரவஹதீத்யநுரூபமேதத் ॥

அப்ஜநிலயே - தாமரையில் வீற்றிருப்பவளே
தயாரஸ - உனது தயை என்னும்
நிம்நகா - பள்ளத்தில் பாயும் தன்மையுடைய நதி
ஆஸாதித - அடைந்த
உந்நத - உயர்ந்த
பதேஷு - அதிகாரமாகிய பதவியை உடைய
கிரீச முக்யேஷு - ருத்ரன் இந்திரன் முதலிய மலைபோல் உயர்ந்தவர்களிடம்
ஆரோடும் ஏறிப்பாய்வதற்கு
சிதிலாபிலாஷா - சக்தியற்றதென்பதும்
மாத்ருசி - என்போன்ற
நீசே து - தாழ்ந்தவராகிய பள்ளத்தில்
ப்ராப்தாதரா - அன்பாகிய வேகத்தையுடையதாய்
ப்ரவஹதீதி - பெருகுகின்றது என்பதுமாகிய
ஏதத் - இவ்விரண்டும்
அநுரூபம் - தகுதியுடையதே.

மேடான உயர்ந்த இடத்தில் நதி ஏறிப் பெருக முடியாததென்பதும், தாழ்மையான பள்ளத்தில் மிக வேகமாக நதி பாயும் என்பதும் அதற்கியல்பான தன்மைகள். ருத்ரன் இந்திரன் முதலியவர்கள் தத்தமக்கென்று அவரவர்களுக்குரிய ஒவ்வொரு பதவியைப் பெற்றிருக்கின்றனர். அப்பதவிகளே மலைபோலுயர்ந்த மேடாகும். எனவே அவர்களிடம் உமது கருணை எளிதில் பாய்வதில்லை. அடியேனோ மிகவும் நீசன்; தாழ்ந்த பள்ளம் போன்றவன். ஆகையால் வழி கிடைத்தால் போதும். உமது தயை என்னும் நீர் மிக வேகமாய் பாயும். அருளாம் நீருக்கு இது தகுதியுடையதே.

ருத்ராதிகள் ஒரு பதவியில் பகவானால் நியமிக்கப்பட்டவர்கள். அப்பதவி காலம் முடியும் வரை அவர்கள் அவ்விடங்களில் இருக்க வேண்டியவர்கள். அதன் பின்னரே அவர்களால் மோக்ஷத்தைப் பெறமுடியும். ஆனால் நம் போன்ற மனிதர்களால் இந்த சரீரம் அழிந்தவுடனே முக்தியைப் பெறமுடியும். மோக்ஷத்தைப் பெறுவதற்கு இலக்குமியின் கடாக்ஷம் தேவையானதே.

இங்ஙனம் முக்தி சீக்ரமாகக் கிடைக்கின்றது, நாள் கடந்து கிடைக்கின்றது என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டதே. அகிஞ்சனரிடம் க்ருபையுள்ளது அதிகாரிகளிடம் க்ருபை இல்லை என்று சொன்னது.

15. शौरिः चकास्ति हृदयेषु शरीरभाजां
तस्यापि देवि हृदयं त्वमनुप्रविष्टा ।
पद्मे तवापिहृदये प्रथते दयेयं
तामेव जाग्रदखिलातिशयां श्रयामः ॥

சௌரி: சகாஸ்தி ஹ்ருதயேஷு சரீரபாஜாம்
தஸ்யாபி தேவி ஹ்ருதயம் த்வமநுப்ரவிஷ்டா ।
பத்மே தவாபிஹ்ருதயே ப்ரததே தயேயம்
தாமேவ ஜாக்ரதகிலாதிசயாம் ச்ரயாம: ॥

தேவி பத்மே - நாராயணன் மஹிஷியான லக்குமியே
சௌரி: - நாராயணன்
சரீரபாஜாம் - ஜீவராசிகளின்
ஹ்ருதயேஷு - தஹராகாசம் என்னும் ஹ்ருதயத்தில்
சகாஸ்தி - அந்தர்யாமியாய் விளங்குகிறான்
த்வம் : நீயோவெனில்
தஸ்யாபி ஹ்ருதயம் - அந்த நாராயணன் மனத்துள்
அநுப்ரவிஷ்டா - புகுந்துள்ளாய்
இயம் தயா - நான் துதிக்குமிக் கருணை
தவாபி ஹ்ருதயே - உமது மனதுள்
ப்ரததே - ப்ரபலமாகவுள்ளது
ஜாக்ரத் - மக்களைக் காப்பதில் எப்போதும் விழித்திருப்பதும்
அகிலாதிசயாம் - எல்லா ஜீவன்களிலும், நாராயணனிடத்திலும் உம்மிடத்திலும் புகுந்து பரந்துள்ளமையால் மிக்க வ்யாப்தியையுடைய
தாமேவ - அந்த தயையையே
ச்ரயாம: - சரணமாகப் பற்றுகிறோம்.

இவ்வுலகில் எத்துணை பொருள்கள் கண்ணால் காணப்படுகின்றனவோ, எத்துணை பொருள்கள் காதால் கேட்கப்படுகின்றனவோ அத்துணையுள்ளும் நாராயணன் புகுந்து உலகம் முழுதும் பரந்துள்ளான் என "புருஷ ஸூக்தம்" என்னும் வேதப்பகுதி ஓதுகின்றது. அந்நாராயணன் மனைவியான நீயும் அவன் மனதில் புகுந்து அவன் மூலமாக உலகம் முழுவதும் பரவியவளானாய். நான் துதிக்குமித் தயையோ வெனில் உன் மனதுள் புகுந்து உன்னையே தன் வயமாகக் கொண்டுள்ளது. எனவே முதலில் உன் மனதுள் பரந்து, உன் வழிநாராயணன் மனதுள் பரந்து, அவன் வழி உலகம் முழுவதிலும் வ்யாபித்து - பரந்து - உளது. பரப்பில் உங்களிருவரினும் தயை சிறந்து

விளங்குகின்றமையால் அது உங்களைவிட உயர்ந்ததாயிற்று. மேலும் இத்தயை எவரேனும் நம்மைத் தஞ்சமாகப் பற்றமாட்டார்களா, நாம் அவரை துன்பக்கடலாம் ஸம்ஸாரத்திலிருந்து கரை ஏற்றமாட்டோமா, என்ற எண்ணத்துடன் எப்போதும் விழித்துக் கொண்டிருக்கின்றது. நாராயணனோ அவரவர் செய்யும் கொடுமைகளைக் கண்டு அவர்களை தண்டிப்பதையே தமது தொழிலாகாக் கொண்டவன். நீர் அருகிலிருந்து பரிந்து பேசாதிருப்பீராகில் அவன் அண்டியவர் முகத்தையும் பாரான். இத்தகைய உமது மனதை தயை ஆட்கொள்ளாவிடில் நீரும் பரிந்து பேசீர். உலகில் தமது காரியம் கைகூடுவதை விரும்புவர் பெரியோராயும் வல்லவராயுமுள்ளவரையன்றோ நாடுவர். எனவே நானும் அத்தகைய தயோதேவியையே சரணமாகப் பற்றுகிறேன்.

16. नित्यं विश्वं वशयति हरिः निग्रहानुग्रहाभ्यां
आद्ये शक्तिं विघटयति ते हंत कारुण्यपूरः ।
ईषन्न्यूनं तदिहदयितात् ईशितृत्वं भवत्याः
तच्छेषत्वं कथमितरथा देवि तुल्येपि भूम्नि ।

நித்யம் விச்வம் வசயதி ஹரி: நிக்ரஹாநுக்ரஹாப்யாம்
ஆத்யே சக்திம் விகடயதி தே ஹந்த காருண்யபூர: ।
ஈஷத் ந்யூநம் ததிஹ தயிதாத் ஈசித்ருத்வம் பவத்யா:
தச்சேஷத்வம் கதமிதரதா தேவி துல்யேபி பூம்நி ॥

தேஹ தேவி - நாராயணன் மனைவியே
ஹரி: - பகவான்
விச்வம் - கொடியவரும் நல்லவரும் நிறைந்தவுலகை
நித்யம் - எப்போதும்
நிக்ரஹ அநுக்ரஹாப்யாம் - சிக்ஷித்தல் ரக்ஷித்தல்களால்
வசயதி - தன் வயமாக்கிக் கொண்டுள்ளார்
காருண்யபூர: - தயைவெள்ளம்
ஆத்யே - தண்டித்தலில்
தே - உமது
தவ - உமக்கு
ஈஷத் - சிறிது
ந்யூநம் - குறைவுடைத்து
இதரதா - இப்படியொப்புக் கொள்ளாவிடில்
சக்திம் - அநுக்ரஹத் திறமையை
விகடயதி - பிரித்துவிடுகிறது
ஹந்த - "பிறரைத் தண்டித்தலையே அறியாய்" என்ற பட்டப் பெயர் ஆச்சரியத்துக்குரியது.
தத் - ஆகையால்
இஹ - இவ்வுலக விஷயத்தில்
பவத்யா: ஈசித்ருத்வம் - உமது ஆளுகை
தயிதாத் - உமது கணவனானபரம புருஷனைவிட
பூம்நி - பெருமை
துல்யேபி - இருவருக்கும் ஸமமான போது
தச்சேஷத்வம் - நாராயணனுக்கு நீ சேஷபூதை என்பது
கதம் - எப்படிப் பொருந்தும்.

உலகம் தீயவர் நல்லவர் என்னும் இருவகையான மக்களை உடையது. இருவருமே நாராயணனதடிமைகள். தீயவரை தண்டித்தும் நல்லவரை அநுக்ரஹித்தும் தன் வசத்தில் அவன் வைத்துள்ளான். தாயான நீர் தண்டனைக்குரியவர் தண்டிக்கத் தகாதவர் என்ற வேறுபாடின்றி எல்லோரிடமும் கருணையைப் பொழிபவராக உள்ளீர். தண்டனைக்குரியவனிடமும் உமது கருணை பரவுமாயின் அவன் உரிய தண்டனையைப் பெறாமற்போய்விடுவன். எனவே தண்டனைக்குரியவனிடம் உமது சக்தி செல்லாதவாறு கருணை வெள்ளம் தடுத்து விடுகிறது. எனவே உமது ஆளுகைக்கு தண்டிக்கத் தக்கவன் அகப்படாமல் போய்விடுகிறான் ஆகையால் உமது

தகுதியாம் தன்மை அத்தகையவளிடம் குறைந்துவிடுகிறது. நாராயணன் அத்தகையவர்களை தண்டித்துத் தன் அடிமையாக்கிக் கொள்கிறான். — நிக்ரஹம் — தண்டித்தல் — அறியாமை என்கின்ற ஒரு குறையால்தான் நீர் நாராயணனுக்குச் சேஷபூதையாகின்றீர். இப்படி ஒத்துக்கொள்ளாவிட்டால் பெருமை வ்யாபகத்வம் முதலான யாவற்றிலும் நாராயணனைப் போன்றவளான உமக்கு நாராயணன் சேஷையாக இருத்தல் சொல்லமுடியாமற்போம்.

17. विहितं जहतं विवेकहानात् अहितं कर्म च नित्यं आचरन्तं । अपयातगुणं हरिप्रिये मां कृपया केवलयैव पालयेथाः ॥

விஹிதம் ஜஹதம் விவேகஹாநாத் அஹிதம் கர்ம ச நித்யமாசரந்தம் ।
அபயாத குணம் ஹரிப்ரியே மாம் க்ருபயா கேவலயைவ பாலயேதா: ॥

ஹே ஹரிப்ரியே - நாராயணனின் மனைவியே
விவேகஹாநாத் - நல்லறிவு இன்மையால்
விஹிதம் கர்ம - வேதத்தில் விதித்துள்ள பல்வகைச் சடங்குகளை
நித்யம் - தினமும்
ஜஹதம் - விடுபவனும்
அஹிதம் கர்ம - பாபச் செயல்களை
நித்யமாசரந்தம் - தினமும் செய்பவனும்
அபயாதகுணம் - ஆத்மகுணம் இல்லாதவனுமான
மாம் - என்னை
கேவலயா க்ருபயைவ - தயை ஒன்றால் மட்டும்
பாலயேதா: - காப்பாற்றக் கடவாய்.

தினமும் தப்பாது செய்யவேண்டியவையாதலால் "நித்யம்" என்ற பெயர் பெற்ற "ஸந்த்யா வந்தநம்" முதலிய கர்மாக்களையும், குறிப்பிட்ட விசேஷகாலத்தில் செய்யவேண்டியவையான ஆவணியவிட்டம் — உபாகர்மா - முதலான "நைமித்திகம்" என்ற கர்மாக்களையும் வேதம் ஸ்ம்ருதி முதலியவைகள் "செய்"யென விதித்துள்ளன. பாபம் விளைவிக்கும் பிறர் சொத்தை ஆசைப்படுதல் போன்ற சிலவற்றை "செய்யாதே" என விலக்கியுள்ளன. நானோ விதித்தவற்றை செய்யாது விலக்கியுள்ளதை தினமும் தப்பாமல் செய்துவருகிறேன். புலனடக்கம் முதலிய எவ்வித குணமுமற்றவனாயுமுள்ளேன். எனவே நான் எவ்விதத்திலும் அவளது கருணையைப் பெறத்தகுதியற்றவன், ஆகையால் உனது இயல்பான தயையை மட்டும் என்மீது செலுத்திக் காப்பாயாக.

18. क्षणमप्यसहस्थितौ जनागः कमिता न क्षमितेति सानुकंपा ।
अवतारदशासु देविरूपैः अनुरूपैः अनुगाहसे मुकुन्दम् ॥

க்ஷணமப்யஸஹஸ்திதௌ ஜநாக: கமிதா ந க்ஷமிதேதி ஸாநுகம்பா ।
அவதாரதசாஸு தேவிரூபை: அநுரூபை: அநுகாஹஸே முகுந்தம் ॥

தேவி - நாராயணன் மனைவியே
கமிதா - காமுகனான பகவான்
க்ஷணமபி - க்ஷணப்பொழுதும்
அஸஹ ஸ்திதௌ - அவனோடு இராவிடில்
ஜநாக: - ஜநங்களின் பாபம் ஒவ்வொன்றையும்
ந க்ஷமிதா - க்ஷமிக்கமாட்டான்
இதி - என்று
ஸாநுகம்பா - அபராதிகளிடம் தயை உடையவளாய்
முகுந்தம் - முகுந்தனை
அவதார தசாஸு - ராமன் க்ருஷ்ணன் முதலான அவதாரகாலங்களில்
அநுரூபை: - அந்தந்த அவதாரத்துக்கேற்ற
ரூபை: - தேவமநுஷ்ய உருவங்களாய்
அநுகாஹஸே - அநுஸரிக்கின்றாய்.

க்ஷணப்பொழுது நாம் முகுந்தனை விட்டுப் பிரிந்திருந்தால் அந்த ஸமயத்தில் எவனேனுமொருபாவி அவனைச் சரணம் புகின் அந்த பாபி அவன் செய்த பாபத்துக்காக தண்டிக்கப்படுவானோ என்ற பயத்தால், நாராயணன் மனிதனாகவும் விலங்காகவும் பிறக்கும்போதெல்லாம் அவனை விட்டுப் பிரியாது அவனுக்கேற்ற குணம் முதலியவையுடையவளாய் அவனுடன் தோன்றுகின்றாய்.

"ராகவத்வேபவத்ஸீதா ருக்மிணீக்ருஷ்ணஜந்மநி ।
அந்யேஷு சாவதாரேஷு விஷ்ணோரேஷா நபாயிநீ ॥
தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ ।
விஷ்ணோர் தேஹாநுரூபம் வை கரோத்யேஷாத்மநஸ்தநும்"
என்ற விஷ்ணுபுராணம் இவ்விடத்து அநுஸந்திக்க ப்ராப்தம்.

19. गलति कलितायासे श्वासे कफार्गलिते गले
भ्रमति नयने भ्रांते स्वान्ते धियासुषु चासुषु ।
त्वरयति दया जंतोः अन्त्योत्क्रमे भवती रमे
त्वमपि कृपणत्राणे प्राणेश्वरं च पराङ्मुखम् ॥

களதி கலிதாயாஸே ச்வாஸே கபார்களிதே களே
ப்ரமதி நயநே ப்ராந்தே ஸ்வாந்தே தியாஸுஷு சாஸுஷு ।

த்வரயதி தயா ஜந்தோரந்தோத்க்ரமே பவதீம் ரமே
த்வமபிக்ருபணத்ராணே ப்ராணேச்வரம் ச பராங்முகம் ॥

ஹே ரமே - இலக்குமியே
கலிதாயாஸே - உடல் மரணதுன்பம் அடைந்தபோது
ச்வாஸே - மேல் மூச்சு
கனதி - மிகுதியாக எழும்போதும்
கலே - கழுத்து
கபை: - ச்லேஷ்மத்தால்
அர்கலிதே - தொளியிழுந்தபோதும்
நயநே - கண்கள் ப்ரமதி - சுற்றும் போதும்
ஸ்வாந்தே - மனம்
ப்ராந்தே - மாறுபட்டபோதும்
அஸவ: - ப்ராணன்
வியாகுல: - வெளிவர இருக்கும்போதும்
ஜந்தோ: - ஜீவனுடைய
அந்தோத்க்ரமே - மரணகாலத்தில்
தயா - அவன் படும் துன்பத்தைக் கண்டு உண்டான தயை
பவதீம் - உம்மை
த்வரயதி - ரக்ஷிக்கத்தூண்டுகிறது
த்வமபி - நீரும்
க்ருபணத்ராணே - துன்பப்படுபவனைக் காப்பதில்
பராங்முகம் - கவனம் செலுத்தாத
ப்ராணேச்வரம் - பர்த்தாவை
த்வரயஸி - தூண்டுகின்றீர்.

ஜீவன் மரிப்பதற்கு முன் அவன்படும் மரணாவஸ்தையைக் கண்டு, அவன் படும் கஷ்டத்தைப் பொறுக்கமாட்டாத உமது தயை அவனைக் காக்கத் தூண்டுகின்றது. நீரும், அவன் முன்பு செய்த பாபங்களை எண்ணிப்பார்த்து உதாஸீநமாக இருந்த உமது ப்ராணநாயகனை அவன் செய்த தவறெல்லாம் மறந்து அவனைக் காப்பாற்றத் தூண்டுகின்றீர்.

20. दुःखाक्रान्तं भवजलनिधिं दुस्तरं योगिवर्यैः
पापानां नः तरितुमधुना का कथा लोकधात्रि ।
एवं यद्यप्युदयति मतिः तावकीमब्धिकन्ये
धन्ये दृष्ट्वा तदपिकरुणां धैर्यमेत्यन्तरात्मा ॥

துஃக்காக்ராந்தம் பவஜலநிதிம் துஸ்தரம் யோகிவர்யை:
பாபாநாம் ந: தரிதுமதுநா கா கதா லோகதாத்ரி ।
ஏவம் யத்யப்யுதயதி மதி: தாவகீமப்திகந்யே
தந்யேத்ருஷ்ட்வாததபிகருணாம்தைர்யமேதி அந்தராத்மா ॥

அப்திகந்யே - பாற்கடல்பெண்ணான
லோகதாத்ரி - உலகத்தாயே
துக்காக்ராந்தம் - துக்கமயமானதும்
யோகிவர்யை: - உயர்ந்தயோகிகளாலும்
துஸ்தரம் - கடக்கமுடியாததுமான
பவஜலநிதிம் - ஸம்ஸாரக் கடலை
தரிதும் - கடப்பதற்கு
பாபாநாம் - பாபிகளான
ந: - நமக்கு

அதுநா - கொடிய இக் கலியுகத்தில்
கா கதா - கடக்க வழியேது
ஏவம் மதி: - என்ற சிந்தனையை
யத்யப்யுதயதி - உண்டாகச் செய்கிறது
ததபி - அப்படியிருந்த போதும்
தந்யே - சில புண்ணியவான்களிடம்
தாவகீம் - உமது
கருணாம் - தயை பரவியுள்ளதை
நிருக்ஷ்ய - பார்த்து
அந்தராத்மா - மனம்
தைர்யம் - என் போன்ற பாபிகளையும் காப்பாய் என்கின்ற தைர்யத்தை
ஏதி - அடைகின்றது.

துக்கமயமான ஸம்ஸாரத்தை ஜ்ஞாநிகளான விச்வாமித்ரர் போன்ற முனிவர்களாலும் கடக்க முடியாமற் போனதைப் பார்த்து மஹா பாபிகளான நமக்கு தோஷம் மிக்க இக்கலியுகத்தில் கடப்பதற்கு வழியேது ! எனவே கடப்பதற்கு வேண்டிய முயற்சிசெய்ய வேண்டுமென எண்ணம் தோன்றுகிறது. அப்படித் தோன்றியபோதும் சில புண்ணியவான்களிடம் உமது தடையற்ற கருணை இயல்பாகச் செல்வதைப்பார்த்து அதுபோல் பாபியான நம்மையும் தாயானவள் எப்படிக் காக்காமற் போவாள்? என்றும் தைர்யம் தோன்றுகிறது. அதனால் பயமும் போய்விடுகிறது. ஸம்ஸாரத்தை தாண்டுவோம் என்ற தைர்யமும் தோன்றுகிறது. அப்திகந்யே + தந்யே எனப்பதம் பிரித்துத் தற்போது பொருள் கூறப்பட்டது. அப்திகந்யே + அதந்யே என்றும் பதம் பிரிக்க ஈண்டு இயலுமாகையால் அதந்யே எனப்பிரிந்து அதந்யனான - கொடியனான காகாசுரனிடமும் உமது கருணை வெள்ளம் பாய்ந்தபோது என்ற பொருளும் கூறலாம்.

21. तपोभिरिह योगिनः तव दयामविन्दन्त यां
अकिंचनतयैव तां अमृतसोदरि प्राप्नुमः ।
समाधिपटवः श्रमात् अनुभवन्ति यद्दैवतं
तदेव यमुनातटीतरुगणः सुखेनान्वभूत् ॥

தபோபிரிஹ யோகிந: தவ தயாமவிந்தந்த யாம்
அகிஞ்சநதயைவ தாமம்ருதஸோதரி ப்ராப்நும: ।
ஸமாதி படவ: ச்ரமாதநுபவந்தி யத் தைவதம்
ததேவ யமுநாதடீதருகண: ஸுகேநாந்வபூத் ॥

அம்ருதஸோதரி - அம்ருதத்துடன் தோன்றியவளே
யோகிந: - பக்தியோகம் செய்கிறவர்கள்
தபோபி: - பொறியடக்கம் முதலிய தவங்களால்
யாம் தவ தயாம் - எந்த தேவரீரது தயையை

அவிந்தந்த - அடைந்தனரோ
தாம் - அந்தவையையே
அகிஞ்சந ஜநாயவ - எவ்விதக்
கஷ்டமுமின்றி எளிமையாலேயே
ப்ராப்ஸ்யாம: - நாங்களுமடையப்
போகிறோம்
(தத்ராபி - அதுதக்கதே)
ஸமாதி - மனதை
ஒருமுகப்படுத்துவதில்
படவ: - திறமைவாய்ந்த யோகிகள்
ச்ரமாத் - உண்மை ஐம்பொறியடக்கம்
முதலிய துன்பங்களால்

யத் தைவதம் - எந்த கண்ணனை
அநுபவந்தி - ஜ்ஞாநக் கண்ணுடன்
தம் மனதில்
கண்டநுபவிக்கின்றனரோ
யமுநாதட - யமுனை நதியின்
கரையிலிருந்த
தருகணா: - கதம்பம் முதலாய
மரங்களின் கூட்டம்
தத்தேவ - அந்த கண்ணனென்னும்
தெய்வத்தையே
தடேந - யமுனையின் கரையில்
முளைத்திருந்தமையாலேயே
அந்வபூத் - அநுபவித்தது.

யோகிகள் ஐம்பொறிகளை அடக்கல் உணவருந்தாமை முதலிய தவங்களால் உடலை வருத்தி பக்தியோகம் செய்து தேவரீர் தயையால் கிடைப்பதற்கரிய எந்த மோக்ஷஸாம்ராஜ்யத்தை அடைந்தனரோ, அதே மோக்ஷத்தை அத்தகைய காயக்லேசம் முதலியவற்றைச் செய்ய சக்தியற்ற அகிஞ்சனர்களாகிய நாங்களும் எளிய ''ப்ரபத்தி'' என்னும் துணையைக்கொண்டு அடையப்போகிறோம். இப்படியடைவது தகுதியுடைத்தே. ஏனெனில் ஐம்பொறிகளையும் மூச்சையும் அடக்கி மனதை ஒருமுகப்படுத்தி யோகம் செய்து எந்த கண்ணனை யோகிகள் அவரவர் ஹ்ருதய கமலத்தில் - மனதுள் - ஜ்ஞாநக் கண்களால் கண்டனுபவித்தனரோ அதே கண்ணனின் உடலின் ஸம்பந்தத்தையே யமுனைநதியின் கரையில் முளைத்திருந்தமை என்ற எளிய வழியால் கதம்பம் குந்தம் முதலிய மரங்களின் கூட்டம் எளிதாக அநுபவித்தனவன்றோ! அதிகாரி பேதத்தை அடிப்படையாகக் கொண்டது உபாயபேதம் என்பது கருத்து.

22. अपारपरितापकृद्भवतपातपान्था वयं
प्रपामिव सुपावनीं तवकृपां उपासीमहि ।
उदंचितधनंजयः प्रभुरुदारहेतिर्यया
ययावुदधिकन्यके तपनमध्यगः शीततात् ॥

அபாரபரிதாபக்ருத் பவதபாதபாந்தா வயம்
ப்ரபாமிவ ஸுபாவநீம் தவ க்ருபாம் உபாஸிமஹி ।
உதஞ்சித தநஞ்ஜய: ப்ரபுருதாரஹேதிர் யயா
யயாவுததிகந்யகே தபநமத்யக: சீததாம் ॥

உததிகந்யகே - கடற்கன்னியே
உதஞ்சித தநஞ்ஜய: - முகத்தில் தோற்றுவிக்கப்பட்ட அக்நியை உடையவனும். கௌரவிக்கப்பட்ட அர்ஜுனனை உடையவனும்
உதாரஹேதி: - மிக்க சுடருடையவனும் பெரிய சங்கம் முதலிய ஆயுதங்களை உடையவனும்
தபநமத்யக: - ஸூர்யமண்டலத்தின் நடுவில் வஸிப்பவனுமான
ப்ரபு: - பகவான்
யயா - எந்த உனது தயையால்
சீதாம் - தாபமின்மையையும் அடியவரிடம் கருணையுடைமையையும்
யயௌ - அடைந்தானோ
அபார - அளவிடமுடியாத
பரிதாப க்ருத் - ஆத்யாத்மிகம் முதலியதுன்பத்தைச் செய்யும்
பவ - ஸம்ஸாரமென்னும்
ஆதப - வெயிலால்
அந்தா: - அறிவற்ற
வயம் - நாங்கள்
ப்ரபாமிவ - தண்ணீர் பந்தல் போன்று
ஸுபாவதீம் - தென்றல் காற்றையுடையதும், பரிசுத்தமாக்குவதுமான
தாம் தவ க்ருபாம் - அதே உமது கருணையை
உபாஸ்மஹே - தாபத்தைப் போக்க சரணமாகப் பற்றுகிறோம்.

பகவானின் தாபத்தையும் போக்கவல்ல உமது தயையாம் தண்ணீர் பந்தலை எங்கள் ஸம்ஸாரதாபத்தைப் போக்கிக்கொள்ள சரணமாக வடைகிறோம் என்கிறார். பகவான் ஏன் தாபமுடையவனானான் என்பதை ''உதஞ்சித தநஞ்ஜய:'' உதாரஹேதி:, தபநமத்யக:'' என்னும் மூன்று அடைமொழிகளால் - விசேஷணங்களால் - விளக்குகிறார். தநஞ்சய: என்ற சொல் அக்நி, அர்ஜுனன் என்னுமிரண்டைக் குறிக்கும். உதஞ்சித என்பதற்கு உண்டுபண்ணப்பட்ட, கௌரவிக்கப்பட்ட என்ற அர்த்தங்களுண்டு. பகவானின் முகத்திலிருந்து அக்நி பிறந்தான் என்கிறது ''புருஷஸூக்தம். அவன் அர்ஜுனனுக்குத் தேரோட்டி அவனை கௌரவித்தான். எனவே உதஞ்சிததஞ்ஜயனானான். இதுபோல் ''உதாரஹேதி:'' என்பதில் உதார என்பதற்கு மிகுதியான, பெரிய என இரண்டு பொருள்களும் ஹேதி: என்பதற்கு சுடர்-ஜ்வாலை- ஆயுதம் என்னுமிரண்டு பொருள்களுண்டு. நாராயணன் உடலிலிருந்து ஒளி-ஜ்வாலை வீசும், சங்கம், சக்ரம் முதலான பெரிய ஆயுதங்களை உடையவன். எனவே உதாரஹேதியாயினன். ''ய ஏஷோந்தராதித்யே ஹிரண்மய: புருஷ: த்ருச்யதே'' என்று உபநிஷத்வாக்யம் அவன் ஸூர்ய மண்டலத்தில் வஸிப்பவன்

என்கிறது. இப்படிப் பல படிகளில் தாபத்தைப்பெற்றவன் தமது தாபத்தைப் போக்கி அடியவரிடம் கருணையாம் தட்பத்தைச் செலுத்த அவனுக்கு இலக்குமியின் கருணை இன்றியமையாததாக ஆகிறது.

ஜீவராசிகளாகிய நாங்களும் க்ரீஷ்ம ருதுவின் · ஆனி ஆடி மாதங்களின் — பிற்பகல் வெயில் போல் மிக்க தாபமுடையதும் ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் என்னும் மூன்று துன்பங்களையுடையதுமான ஸம்ஸாரமென்னும் வெயிலால் நல்லறிவற்றவர்களாயுள்ளோம்.

முன் காலத்தில் வெளியூர் செல்பவர் பெரும்பாலும் நடந்தே செல்வர். வெயிற்காலத்தில் அப்படிச் செல்பவர் நடந்து சென்ற களைப்பாலும் வெயிலின் கொடுமையாலும் வாடி வதங்கியிருப்பர். அத்தகையவர் துன்பத்தைப் போக்க வழிநடைபாதையின் அருகில் ஓலையால் பெரிய கொட்டகை வேய்ந்து அதில் பெரிய பெரிய மண்பாண்டங்களில் தட்பமிக்க நீரும், நீர் மோரும் வைத்துக் களைப்பாக வருபவர்களுக்கு வழங்குவர். அவர்களும் வாங்கிப் பருகி களைப்பை போக்கிக் கொள்வர். இதற்குத் தண்ணீர்ப் பந்தல் என்று அக்காலத்தில் பெயர்வழங்கப்பட்டது. இதில் தென்றல் காற்று மிகுதியாக வீசுவதோடு குளிர்ந்துமிருக்கும்.

ஸம்ஸாரமாம் வெயிலில் தாபமடைந்த நாங்களும் அத்தாபத்தைப் போக்கிக்கொள்ளத் தண்ணீர் பந்தல் போன்று தட்பமிக்கதும் பரிசுத்தமானதுமான உமது கருணையைத் தஞ்சமாகப் பற்றுகிறோம் என்கிறார்.

23. कंसारातिप्रेयसि संसाराध्वीं भ्रमन्ननाथोऽहम् ।
अंब तव साध्वकंपां अनुकंपां नावमवलंबे ॥

इति वेंकटाध्वरिकृतलक्ष्मीसहस्रे
कारुण्यस्तबकः संपूर्णः

கம்ஸாராதி ப்ரேயஸி ஸம்ஸாராத்வநி ப்ரமந்நநாதோऽஹம் ।
அம்ப தவ ஸாத்வகம்பாம் அநுகம்பாம் நாவமவலம்பே ॥

ஸம்ஸாராப்தி ப்ரேயஸி அம்ப - க்ருஷ்ணனின் மகிஷியான தாயே
ஸம்ஸாராப்தென - ஸம்ஸாரக் கடலில்
ப்ரமத் - கரைகாணாது உழல்பவனும்
அநாத: - வேறுகாப்பவரற்றவனுமான
அஹம் - நான்
தவ - உமது
அகம்பாம் - அசைவற்ற
அநுகம்பாம் - தயையாகிற
நாவம் - கப்பலை
ஸாது - உறுதியாக
அவலம்பே - பற்றுகிறேன்.

நாராயணனின்றி வேறு காப்பவரற்றவனும் ஸம்ஸாரம் என்னும் கடலில் வெகுநாள்களாக உழல்பவனுமானவடியேன் அதனைக் கடப்பதற்கு கப்பல் போன்ற உமது தயையைத் தஞ்சமாக அடைகிறேன்.

வீராபுரம் சடகோபசாரியர் இயற்றிய ரத்நப்ரபா என்னும் உரையில் காருண்ய ஸ்தபகம் முடிவுற்றது.

CORRECTION

Advertisement appeared in Nov. 1995 issue on Page 85 was erroneously printed as EFFECTIVE TRADE LINK PRIVATED LIMITED which please read as **EFFECTIVE TRADE LINC PRIVATE LIMITED.**

श्रीः

कटाक्षस्तबकः ५ கடாக்ஷஸ்தபக: 5

1. लक्ष्मीवदनलावण्यसुधोदधिकृतोदयः ।
कल्पवृक्षः कटाक्षात्मा कांक्षितानि करोतु नः ॥

லக்ஷ்மீவதந லாவண்ய ஸுதோததி க்ருதோதய: ।
கல்ப வ்ருக்ஷ: கடாக்ஷாத்மா காங்க்ஷிதாநி கரோது ந: ॥

இந்த ஸ்தபகத்தில் லக்ஷ்மியின் கடைக்கண் நோக்கம் வருணிக்கப்படுகிறது.

லக்ஷ்மீவதந - லக்ஷ்மீ முகத்தினுடைய
லாவண்ய - பளபளப்பாகிய
ஸுதோததி - பாற்கடலில்
க்ருதோதய: - தோன்றிய
கடாக்ஷாத்மா - அருள் பார்வையாகிய
கல்பவ்ருக்ஷ: - கற்பகமரம்
ந: - தமக்கு
காங்க்ஷிதாநி - இம்மை மறுமைகளுக்குத் தேவையானவற்றை
கரோது - கொடுக்கட்டும்.

லக்ஷ்மியின் முகத்தில் வீசும் தேஜோவிசேஷமாகிய பாற்கடலில் பிறந்த கடாக்ஷவீக்ஷணமென்னும் கற்பக வ்ருக்ஷம் இவ்வுலக வாழ்க்கைக்குத் தேவையான யாவற்றையும் அளிப்பதோடு மோக்ஷத்தையும் அளிக்கட்டும். முக ஒளியை பாற்கடலாகவும், அருட் பார்வையை கற்பக மரமாகவும் உருவகித்துள்ளார். *1*

2. क्षमाकुमारि क्षणमीक्षणं त्वं यदृच्छया न्यस्यसि यत्र जन्तौ ।
स ईक्षणानां त्रयमष्टकं वा सहस्रकं वा सहसा दधाति ॥

க்ஷமாகுமாரி க்ஷணமீக்ஷணம் த்வம் யத்ருச்சயா ந்யஸ்யஸி யத்ர ஜந்தௌ ।
ஸ ஈக்ஷணாநாம் த்ரயம் அஷ்டகம் வா ஸஹஸ்ரகம் வா ஸஹஸா ததாதி ॥

க்ஷமாகுமாரி - பூதேவியின் பெண்ணே
த்வம் - தேவரீர்
யத்ர ஜந்தௌ - எந்த உயிரினத்தில்
ஈக்ஷணம் - பார்வையை
யத்ருச்சயா - தன்னடைவாக
ந்யஸ்யஸி - செலுத்துகின்றீரோ
ஸ: - அந்த உயிரினம்
ஈக்ஷணாநாம் - பார்வைகளின்
த்ரயம் வா - மூன்றையோ
அஷ்டகம் வா - எட்டையோ
ஸஹஸ்ரகம் வா - ஆயிரத்தையோ
ஸஹஸா - உமது பார்வை பட்டவுடன்
ததாதி - தரிக்கிறது.

பூதேவியின் குமாரியே! இவ்வுயிரை நம் கடைக்கண் பார்வைக்கு இலக்காக்க வேண்டும் என்னும் எண்ணம்

இல்லாதிருந்த போதும் யாத்ருச்சிகமாக - தன்னடைவாக - எந்த ஜந்து உமது கடாக்ஷத்துக்கு இலக்காகின்றதோ அது உடனேயே முக்கண்ணனான சிவனாகவோ, எண் கண்ணனான நான்முகனாகவோ, ஆயிரம் கண்ணனான இந்திரனாகவோ மாறிவிடுகிறது.

ஒரு கணப்பொழுது உமது கடாக்ஷலேசத்தைப் பெற்ற பயன் நான்முகன் அதிகாரத்தை அடைதலேயாவது என்பது கருத்து. 2

3. अंब स्तोकालोकसुधाशीकरलेशैः
अंगं जन्तोः आर्द्रियसे स एषः ।
हस्तात् स्वीयात् वारणमस्ताच गलद्भिः
दानांभोभिः पंकिलगेहांगणभूः स्यात् ॥

அம்பஸ்தோகாலோக ஸுதாசீகர லேசை:
அங்கம் ஜந்தோ: ஆர்த்ரியஸே ஸ ஏஷ: ।
ஹஸ்தாத் ஸ்வீயாத் வாரணமஸ்தாச்ச கலத்பி:
தாநாம்போபி: பங்கிலகேஹாங்கண பூ: ஸ்யாத் ॥

அம்ப - தாயே
ஸ்தோக - சிறிதளவான
ஆலோக - பார்வையாகிற
ஸுதாசீகர லேசை: - அம்ருதத் திவலேயின் சிறு துளியால்
யஸ்ய ஜந்தோ: - எந்த புண்ணியவானின்
அங்கம் ஆர்த்ரியஸே - உடலை நனைக்கின்றாயோ
ஸ ஏஷ: - அத்தகைய பாக்யத்தைப் பெற்றவன்
ஸ்வீயாத் ஹஸ்தாத் - தமது கையிலிருந்தும்
வாரணமஸ்தாத் ச - யானையின் தலையிலிருந்தும்
கலத்பி: - பெருகுகின்ற
தாநாம்போபி: - பிறருக்குத் தானம் செய்யும் போது வார்க்கப்படும் நீராலும், மத ஜலத்தாலும்.
பங்கில - சேறாக்கப்பட்ட
கேஹாங்கணபூ: - வீட்டின் நடுப்பகுதியை உடையவனாக
ஸ்யாத் - ஆகிறான்.

மிக்க புண்ணியத்தைச் செய்த எவனொருவன் உமது கடாக்ஷமாகிற அம்ருதத்தி வலேயின் பிந்துவைப் பெறுகின்றானோ அவன் யானை கட்டிவாழும் அறைக்குச் செல்வந்தனாகவும் பெரும் வள்ளலாகவும் வாழ்கிறான். அவன் வீட்டின் சதுரமான பகுதி (ஹால்) இவன் பிறருக்குத் தானம் செய்யும் போது வார்க்கும் ஜலத்தாலும் யானையின் உறுப்புக்களிலிருந்து பெருகும் மதஜலத்தாலும் சேறாக்கப்பட்டிருக்கும்.

முற்கால அகங்களின் இடையே முற்றம் என்றதொரு பகுதியுண்டு. அது மேலே மூடப்படாது திறந்திருக்கும். அதற்கு அங்கணம் என வடமொழிப்பெயர். ''கண்ணன் முற்றம் கலந்தளராயிற்றே'' என்பது பெரியாழ்வாரின் முற்ற மங்களாசாஸநம். 3

4. त्वद्वीक्षणामृतकणोऽपि न येषु तेषां
सद्मानि जीर्णशिथिलच्छदिराप्तिरक्तैः ।
अभ्रच्युतैः उदकबिन्दुभि रश्रुमिश्रैः
जंबालितानि जगदंब चिरं भवन्ति ॥

த்வத் வீக்ஷணாம்ருதகணோபி ந யேஷு தேஷாம்
ஸத்மாநி ஜீர்ண சிதிலச்சதிராப்தி ரக்தை: ।
அப்ரச்யுதை: உதகபிந்துபி: அச்ருமிச்ரை:
ஜம்பாலிதாநி ஜகதம்ப சிரம் பவந்தி ॥

ஜகதம்ப - உலகத்தாயே
யேஷு - எந்த தரித்ரரிடம்
த்வத்வீக்ஷண - உமது பார்வையாகிற
அம்ருதகணோபி - அம்ருதத்தின் திவலையும்
ந - விழவில்லையோ
தேஷாம் ஸத்மாநி - அவர் வீடுகளில்
ஜீர்ண - நடுக்கும் தன்மையவையும்
சிதிலச்சதிராப்தி - மேல் கூரைபழுதடைந்து ஆங்காங்கு மிகுதியாகப் பொத்தல் விழுந்துள்ளமையால்
ரக்தை: - மாறுபட்ட நிறத்தை உடையவையும்
அப்ரச்யுதை: - மேகத்திலிருந்து நழுவவையும்
அச்ருமிச்ரை: - கண்ணீருடன் கலந்தவையுமான
உதகபிந்துபி: - நீர் சொட்டுகளால்
சிரம் - வெகுகாலம்
ஜம்பாலிதாநி - சேறாக்கப்பட்டவையாக
பவந்தி - ஆகின்றன.

முன் ச்லோகத்தில் லக்ஷ்மியின் கடாக்ஷத்தைப் பெற்றவர் பெருமையைப் பேசினார். அதனால் பெறாதவர் இழிவு இதில் சொல்லப்படுகிறது. ஏழை வாழும் வீடு கூரைவீடு. அதுவும் மிகவும் பழுதுபட்டுவிட்டது. அதை செப்பனிட வழியில்லை. ஆங்காங்கு மிகுதியாகக் கூரையில் பொத்தல் விழுந்துள்ளன. அதனால் வீட்டின் பொலிவே போய்விட்டது. அப்பொத்தல்கள் வழியாக மழைநீர் விழுகின்றது. ஏழை தமது துன்பம் தாளாது அழுவதால் கண்ணீர் மழைநீருடன் சேர்ந்துத் தரையில் விழுகின்றது. அதனால் வீடு முழுவதும் சேறாக்கப்பட்டுள்ளது.

லக்ஷ்மியின் கடாக்ஷம் பெற்றவர் பெறாதவர் ஆகிய இருவர் வீட்டுக்கும் சேருகுதல் என்பது ஸமானம். ஆனால் சேருகும் காரணத்தில்தான் வேற்றுமை. 4

5. कनकशिबिकारूढाः प्रौढाधिराज्यपदे स्थिताः
कतिचिदतुलं मन्याः धन्याः चरन्ति यदिन्दिरे ।
यदपि च वहन्त्येनान् दीनाः परे फलमंब तत्
द्वयमपि तव स्तोकालोकान्वयव्यतिरेकयोः ॥

கநகசிபிகாரூடா: ப்ரௌடாதிராஜ்யபதே ஸ்திதா:
கதிசிததுலம் மந்யா: தந்யா: சரந்தி யதிந்திரே ।
யதபி ச வஹந்தி ஏநாந் தீநா: பரே பலமம்ப தத்
த்வயமபி தவ ஸ்தோகாலோகாந்வய வ்யதிரேகயோ: ॥

அம்ப இந்திரே - தாயாகிய லக்ஷ்மியே
கதிசிந் - சிலமனிதர்
ப்ரௌடாதிராஜ்யபதே - மிக உயர்ந்த பதவியாகிய அரசாம் இப்பதவியில்
ஸ்திதா: - இருப்பவர்களாய்
தந்யா: - அதனால் மிக்க செல்வமுடையவராய்
கநகசிபிகா ரூடா: - தங்கப் பல்லக்கில் வீற்றிருப்வர்களாய்
அதுலம்மந்யா: - ஒப்பற்றவராகத் தம்மை எண்ணியவராய்
சரந்தி யத் - எங்கும் திரிகின்றனர் என்பதும்
பரே - மற்றும் சிலர்
தீநா: - தரித்ரர்களாய்
ஏநாந் - பல்லக்கில் வீற்றிருப்பவர்களை
வஹந்தி யத் - தூக்கிச் செல்கின்றனர் என்ற இவ்விரண்டும்.
தவ - உமது
ஸ்தோக - மிகச் சிறிய
ஆலோக - கடாக்ஷத்தை
அந்வய வ்யதிரேகயோ: - பெற்றமை பெறாமை என்பதன்
பலம் - பயனாம்.

ஒரு சிலர் பேரரசனுயிருக்கை என்னும் மிகவுயர்ந்த பதவியை அடைகின்றனர். அதனால் மிக்க செல்வத்தைப் பெற்று தங்கப் பல்லக்கில் ஏறிக்கொண்டு நமக்குச் சமமானவர் எவருமிலர் என்ற எண்ணத்துடன் எவ்விதக் கவலையுமின்றி நான்கு புறங்களிலும் சுற்றுகின்றனர். ஆனால் ஒரு சிலர் பரம ஏழைகளாய் பல்லக்கில் வீற்றிருப்பவரைத் தூக்கிச் செல்கின்றனர். இருவரும் மனிதரே. அப்படியிருக்க ஏன் இவ்வேறுபாடெனில் உமது கடாக்ஷத்தைப் பெற்றவன் லக்ஷாதிபதியாயினன். அதனைப் பெறாதவன் பிக்ஷாதிபதியாயினன். இதுவன்றி வேறொன்றுமில்லை காரணம். கடைக்கண் பார்வையின் பயனே இத்தகையதெனின் முழுப் பார்வையின் பயனை என்னென்றுரைப்பது!

தந்யா: என்பதற்கு தநம்லப்தார: என்பதும், ஆதி ராஜ்யம் என்பதற்கு அதிகோ ராட் அதிராட். தஸ்ய பாவ: என்பதும் விக்ரஹங்களாம்.

6. जडं मामप्यार्तं जननि शिशिरापाङ्गविसरैः
कृपापूरस्मेरैः क्षणमिह कृतार्थीकुरु मुदा ।
ततः को वा दोषः तव भवति दैत्यारिदयिते
मरौ वा मेरौ वा भगवति समं वर्षति घनः ॥

ஜடம் மாமப்யார்த்தம் ஜநநி சிசிராபாங்க விஸரை:
க்ருபாபூரஸ்மேரை: க்ஷணமிஹ க்ருதார்த்தீகுரு முதா ।
தத: கோ வா தோஷ: தவ பவதி தைத்யாரி தயிதே
மரௌ வா மேரௌ வா பகவதி ஸமம் வர்ஷதி கந: ॥

ஜநநி - தாயே
ஆர்த்தம் மாமபி - தாரித்ர்யத்தால் பீடிக்கப்பட்ட என்னையும்
க்ருபாபூரஸ்மேரை: - தயைப் பெருக்குடன் சேர்ந்தழகாய
சிசிராபாங்க விஸரை: - குளிர்ந்த கடாக்ஷ ப்ரவாஹத்தால்
முதா - ஸந்தோஷமுடையவளாய்
க்ஷணம் - நொடிப்பொழுது
இஹ - இவ்வுலகில்
க்ருதார்த்தம் குரு - அநுக்ரஹம் செய்
தைத்யாரிதயிதே - பகவானின் மஹிஷியே
தத: - உயர்ந்தவரைப்போல் தாழ்ந்த ஏழையான, என்னையும் அநுக்ரஹித்ததால்
தவ கோ வா தோஷ: பவதி உனக்கென்ன குற்றம் நேர்ந்துவிடும்
பகவதி - ஸர்வஜ்ஞையானவளே
கந: - மேகம்
மரௌ - ஜலமில்லாத பாலைவனத்திலும்
மேரௌ வா - செல்வச்செழிப்புற்ற மேருமலையிலும்
ஸமம் - எவ்வித வேறுபாடுமின்றி
வர்ஷதி - நீரைப் பொழிகின்றதன்றோ!

செல்வத்தை சேர்ப்பதற்கு வேண்டிய வழி தெரியாதவனும் அதனால் தரித்ரனாயும் ஆணவமுடையவனுமான என்னையும் அநுக்ரஹி. எப்படி என்கிறாயா? உனது தயாப்ரவாஹத்துடன் சேர்ந்து குளிர்ந்த கடாக்ஷத்தால் மகிழ்ச்சியுடன் இந்திரன் முதலான பெரியோர்களை எப்படி அநுக்ரஹித்தாயோ அப்படி. இவ்வநுக்ரஹத்தையும் நொடிப் பொழுது என்மீது செலுத்தினால் போதும். அதனாலேயே எல்லாம் கிடைத்துவிடும். பிறிதொன்று வேண்டாம். நீ உலகத்தவரைப் போல் தாழ்ந்த என்னையும் அநுக்ரஹித்தால் உனக்கென்ன தீமை நேர்ந்து விடும்! எல்லோரிடமும் பக்ஷபாதமின்றி ஸமமாக இருக்கின்றாய் என்ற சிறப்பே கிடைக்கும். மேருமலை எல்லாச் செல்வங்களும் நிரம்பப் பெற்றதாய் உயர்ந்த தேவர் வாழுமிடமாயுள்ளது. பாலைவனமோ தண்ணீருமற்று மனிதர்

வாழவும் தகுதியற்றுள்ளது. ஆனால் மழையோ எந்த வேறு பாட்டையும் காணாது ஈரிடத்திலும் ஸமமாகவே நீரைப் பொழிகின்றது. ஸர்வஜ்ஞையான உனக்கு இதை நான் எடுத்தியம்ப வேண்டும்? 6

7. द्वारि द्वारि दुरीशकिंकरकृतैः आतङ्कदैः हुंकृतैः
अत्युच्चैरतिमात्रवेत्रपरुषाघातैः अनुचाटितः ।
दुर्दारिद्र्यदशापिशाचनिचयः दूरात्समुत्सार्यते
देवि त्वत्करुणाकटाक्षतटिनीस्नानार्जवेनाधुना ॥

த்வாரி த்வாரி துரீசகிங்கர க்ருதை: ஆதங்கதை: ஹுங்க்ருதை:
அத்யுத்சைரதிமாத்ரவேத்ரபருஷாகாதை: அநுச்சாடித: ।
துர்தாரித்ர்ய தசா பிசாச நிசய: தூராத்ஸமுத்ஸார்யதே
தேவி த்வத் கருணா கடாக்ஷதடிநீ ஸ்நாநார்ஜவேநாதுநா ॥

தேவி - பகவன்மஹிஷியே
த்வாரி த்வாரி - ஒவ்வொரு வாயிலிலும்
துரீசகிங்கர - கெட்ட அரசர்களின் சேவகர்களால்
க்ருதை: - செய்யப்பட்டதும்
ஆதங்கதை: - மனோவேதனையை அளிப்பதும்
உச்சை: - உயர்ந்த தொனியை உடையதுமான
ஹுங்க்ருதை: - விரட்டும் சப்தங்களாலும்
அதிமாத்ர - எண்ணிக்கையற்ற
வேத்ரபருஷாகாதை: - கொடிய பிரம்பின் அடிகளாலும்
அநுச்சாடித: - ஓட்டமாட்டாத
துர்தாரித்ர்யதசா - கொடிய ஏழ்மை என்னும்
பிசாசநிசய: - பூதங்களின் கூட்டம்
அதுநா - தற்காலமாகிய தற்போது
த்வத்கருணா கடாக்ஷதடிநீ - உமது கருணைப் பார்வையாம் குளத்தில்
ஸ்நாநார்ஜவேந - நேர்மையாக ஸ்நானம் செய்ததால்
தூராத் - வெகு தூரத்தில்
ஸமுத்ஸார்யதே - துரத்தப்படுகிறது.

ஒருவனை கெட்டக்ரஹங்களின் சேர்க்கையாம் பேய் பிடித்துக்கொண்டால் அவன் மீது மந்திரவாதிகள் விபூதி வீசியும் மந்திரங்களைச் சொல்லி உரத்த குரலில் ஹுங்காரம் செய்து விரட்டியும் அவனுக்கு அளவில்லாது பிரம்படி கொடுத்து பேயை விரட்ட முயல்வர். அப்படியும் போகாத பேய் இயல்பாய் எளியதான ஸேதுஸ்நானம் முதலான உபாயங்களால் போம். அதுபோல் ஏழ்மை என்றும் பிசாசு ஒருவனைப் பிடித்துக்கொண்டால் அவன் அதனை விரட்ட

முயல்பவனாய் ஒவ்வொரு நீச அரசர்களின் வாயில்களை அடைவான். அங்குள்ள வாயில் காவலர்கள் வாயில் வந்தபடி வைய்து உரத்த குரலில் போ போவென விரட்டுவர். விடாப்பிடியாக நின்றால் அவன் கையிலுள்ள பிரம்பை இவன்மீது வைத்து நெட்டித் தள்ளுவன். அப்போது அவ்வேழை மனம் படும் பாட்டை அவனேயறிவன். அவ்வேழை ஒரு நாள் நல்ல காலம் வாய்த்தால் லக்ஷ்மியின் கடைக்கண் பார்வையாம் வெள்ளத்தில் அமிழ்ந்தான் அதே வேளையில் வெகுதூரம் பறந்தோடியது அவனது ஏழ்மை. எனவே ராஜஸேவை செய்து ஏழ்மையைப் போக்கவியலாது லக்ஷ்மீகடாக்ஷம் ஒன்றே அதனைப் போக்கும் என்கின்றார். 7

8. शुचौ वंशे जन्म श्रुतिनयमतिः मातरतुला
विकंपा संपत्तिः विशदमविगीता च कविता ।
प्रपत्तिः दैत्यारौ हितपरमपत्यं शुभयशः
विवर्ताः सप्तामी ध्रुवमसदृशां तावकदृशाम् ॥

சுசௌ வம்சே ஜந்ம ச்ருதிநயமதி: மாதரதுலா
விகம்பா ஸம்பத்தி: விசதமவிகீதா ச கவிதா ।
ப்ரபத்தி: தைத்யாரௌ ஹிதபரமபத்யம் சுபயச:
விவர்த்தா: ஸப்தாமீ த்ருவமஸத்ருசாம் தாவகத்ருசாம் ॥

மாத - தாயே
சுசௌ வம்சே ஜந்ம - நற்கல்வி நல்லொழுக்கம் முதலியவற்றால் உயர்ந்த குடிப்பிறப்பு
ச்ருதிநயமதி: - வேதத்திலும் சாஸ்த்ரத்திலும் செல்லும் புத்தி
விகம்பா ஸம்பத்தி: - அழிவற்ற செல்வம்
அவிகீதா கவிதா - உயர்ந்த கவிதைகளை இயற்றும் திறமை
தைத்யாரௌ ப்ரபத்தி: - நாராயணனிடம் பரந்யாஸம்
ஹிதபரம் அபத்யம் - நன் மக்கள் பேறு
சுபயச: - தூய புகழ்
அமீ ஸப்த - என்றும் தனித்தன்மை வாய்ந்த இவ்வேழும் ஓரிடத்தில் சேர்த்தல்
அஸத்ருசாம் - ஒப்பற்ற
தாவகத்ருசாம் - உமது கடாக்ஷத்தின்
விவர்த்தா: - மறு உருவம்
த்ருவம் - ஸத்யம்
விசதம் - பலமுறை பார்த்துமுள்ளேன்.

மேற்கூறிய ஏழும் உமது கருணையின்றி ஸித்திக்கமாட்டாதவை என்பதை நான் ஸத்யமாகச் சொல்வேன். கண்கூடாகவும் கண்டுள்ளேன். 8

9. अलमलमनुसृत्य स्वामिनि ज्ञानहीनान्
अकलितबहुमानान् अन्वहं किंपचानान् ।
शरणमुपगतं मां चारुकारुण्यतुंगैः
स्नपय जननि संपन्नृत्तरङ्गै रपाङ्गैः ॥

அலமல மநுஸ்ருத்ய ஸ்வாமிநி ஜ்ஞாந ஹீநாந்
அகலித பஹு"மாநாந் அந்வஹம் கிம்பசாநாந் ।
சரணமுபகதம் மாம் சாருகாருண்ய துங்கை:
ஸ்நபய ஜநநி ஸம்பத் ந்ருத்தரங்கைரபாங்கை: ॥

ஸ்வாமிநி - தலைவியே
ஜ்ஞாநஹீநாந் - விவேகமற்றவரும்
அகலிதபஹு"மாநாந் - பெரியோர்களை
அவமதிப்பவருமான
கிம்பசாநாந் - பயனற்றவர்களை
அந்வஹம் - தினமும்
அநுஸ்ருத்ய - பின்தொடர்ந்து
அலமலம் - போதும் போதும்
ஜநநி - தாயே
த்வாம் சரணம் கதம் - உம்மைத்
தஞ்சமாகப் பற்றிய
மாம் - என்னை
காருண்ய துங்கை: - கருணைமிக்க
ஸம்பத்ந்ருத்த ரங்கை: -
செல்வமாம் நடிகையின்
விளையாடுமிடமான
அபாங்கை: -
கடைக்கண்பார்வைகளால்
சாரு - அழகாக
ஸ்நபய - நீராட்டுவி.

பிறரை மதித்தல் என்பதை அறியாத அவிவேகிகளை ஸேவை செய்தது போதும். இனிச் செய்யேன். உம்மையே தஞ்சமாகப் பற்றினேன். நீர் உமது தயாப்ரவாஹத்தில் என்னை மூழ்கச் செய்யும் என விண்ணப்பிக்கிறார்.

''அந்வஹம்'' என்பதால் ச்ரமத்தின் மிகுதியும், ''கிம்பசாநாந்'' என்பதால் பட்ட ச்ரமம் பயனற்றமையும், ''அநுஸ்ருத்ய'' என்பதால் ஏழ்மையின் மிகுதியும், ''ஸ்நபய'' என்பதால் கடாக்ஷத்துக்கு தாய்மை தன்மை முதலியவற்றால் நதியுடன் ஒப்புமையும் ''காருண்யதுங்கை:'' என்பதால் தயையாம் நதியுடன் சேர்ந்து கடாக்ஷம் மேன்மை பெற்றது என்பதும் தொனிப்பொருளாய் கிடைக்கின்றன.

''சரணம்'' என்ற சொல்லுக்கு வீடு என்ற பொருளுண்டு. ஆகவே நீசர்களின் ஸேவையை விடுத்து வீட்டையடைந்த என்னை என்ற பொருளும் கிடைக்கின்றது.

10. कृती वसुमतीपतीन् कृतचटुस्तवः सेवतां
दिशः स्फुटमटाट्यतां दिशतु धातुवादे दृशाम् ।
जपत्वपि मनून् बहून् जलनिधेः सुते यस्तुते
दृशामिह दयास्पृशां अविषयो दरिद्राति सः ॥

க்ருதீ வஸுமதீபதீந் க்ருதசடுஸ்தவ: ஸேவதாம்
திச: ஸ்புடம் அடாட்யதாம் திசது தாதுவாதே த்ருசம் ।
ஜபத்வபி மநூந் பஹூந் ஜலநிதே: ஸுதே யஸ்துதே
த்ருசாமிஹ தயாஸ்ப்ருசாம் அவிஷயோ தரித்ராதி ஸ: ॥

ஜலநிதே: ஸுதே - பாற்கடல் கன்னியே
க்ருதீ - பொருள் சேர்ப்பதில் வல்லவனான மனிதன்
க்ருதசடுஸ்தவ: - மனதை மகிழ்விக்கும் ஸ்தோத்திரங்களைச் செய்து
வஸுமதீபதீந் - அரசர்களை
ஸேவதாம் - பின்பற்றட்டும்
திச: - எட்டு திசைகளையும் கட்டியுள்ள பூமி முழுதும்
அடாட்யதாம் - சுற்றட்டும்
தாதுவாதே - உலோகங்களைத் தங்கமாக்கும் ரஸவாதத்தில்
த்ருசம் - புத்தியை
திசது - வைக்கட்டும்
பஹூந் - பல
மநூந் - பொருளைத் தரும் மந்த்ரங்களை
ஜபது - கோடிக்கணக்காக ஜபம் செய்யட்டும்
தயாஸ்ப்ருசாம் - உமது கடாக்ஷத்துக்கு
ய: அவிஷய: - இலக்காகாதவன் எவனோ
ஸ: - அவன்
தரித்ராதி - மிகவும் ஏழையாகிறான்.

சிறந்த கவிதைகளை இயற்றி மன்னன் மனதை மகிழ்வித்துத் தன் வயமாக்கி அவனுடன் உலகம் முழுதும் சுற்றுதல் போன்ற மேல் கூறியுள்ள செயல்களனைத்தையும் ஒருவன் செய்யவல்லவனாய் அவற்றைச் செய்தபோதும் உமது கடாக்ஷத்துக்கு இலக்காகாதவன் ஏழையாகத்தான் இருப்பான் என லக்ஷ்மியின் கடாக்ஷப் பெருமையைப் பேசுகிறார். 10

11. कृपणदशापिशाचगणमोचनवेत्रलताः
मधुरिपुभक्तिवल्लिपरिवृद्धिसुधांबुधराः ।
हृदयतमोविमोक्षहिमधामकराः कमले
भगवति नः पुनन्तु भवदीयकटाक्षलवाः ॥

க்ருபணதசா பிசாசகணமோசநவேத்ரலதா:
மதுரிபு பக்தி வல்லி பரிவ்ருத்தி ஸுதாம்புதரா: ।
ஹ்ருதயதமோ விமோக்ஷ ஹிமதாமகரா: கமலே
பகவதி ந: புநந்து பவதீய கடாக்ஷலவா: ॥

கமலே பகவதி - மிக்க குணங்களைப் பெற்ற லக்ஷ்மியே
க்ருபணதசா - மிக்க ஏழ்மையாகிற
பிசாசகண - பேய்க் கூட்டத்தை
மோசந - விடுவிப்பதில்
வேத்ரலதா: - பிரம்பு போன்றதும்
மதுரிபுபக்தி - நாராயண பக்தியாகிற
வல்லி பரிவ்ருத்தி - கொடியை வளர்ப்பதில்
ஸுதாம்புதரா: - அம்ருதத்தைப் பொழியும் மேகம் போன்றவையும்
ஹ்ருதய தமோ விமோக்ஷ - அஜ்ஞானமாம் இருளைப் போக்குவதில்
ஹிமதாம கரா: - சந்திரிகை போன்றவைுமான
பவதீய - உமது
கடாக்ஷலவா: - கடாக்ஷலேசங்கள்
ந: - எங்களை
புநந்து - பரிசுத்தமாக்கட்டும்

எங்களிடமுள்ள அநிஷ்டங்களைப் போக்கி எமது இஷ்டங்களை அடைவிக்கும் தன்மை வாய்ந்த உமது கடாக்ஷம் எங்கள் மீது ப்ரஸரித்துப் பரிசுத்தர்களாக்கட்டும் எனக் கடாக்ஷத்தை பிரம்பாகவும், மேகமாகவும், சந்த்ரிகையாகவும் உருவகித்து வேண்டுகிறார். அதற்கு வேண்டும் தன்மையனைத்துமுடையது கடாக்ஷம் என கடாக்ஷத்தின் மேன்மை பேசப்பட்டது. 11

12. उदीता दुग्धाब्धेः कुवलयपरीतापशमनी
पदे विष्णोः भान्ती रजनिचरचक्रव्यसनदा ।
दिशन्ती सार्वज्ञं भजति शिरसा कापि कमले
शुभालोकैः शोकं हरतु शशिरेखेव भवती ॥

உதீதா துக்தாப்தே: குவலய பரீதாப சமநீ
பதே விஷ்ணோ: பாந்தீ ரஜநிசரசக்ரவ்யஸநதா ।
திசந்தீ ஸார்வஜ்ஞ்ம் பஜதி சிரஸா க்வாபி கமலே
சுபாலோகை: சோகம் ஹரது சசிரேகேவ பவதீ ॥

கமலே - லக்ஷ்மீ
துக்தாப்தே: உதீதா - பாற்கடலினின்றும் வெளிவந்ததாலும் பாற்கடலில் தோன்றியதாலும்
குவலய - பூமண்டலத்துள்ள மக்களின், ஆம்பல் என்ற பூவின்
ஸந்தாப - துன்பத்தை, வெப்பத்தை
சமநீ - போக்குவதாலும்
விஷ்ணோ: பதே - விஷ்ணுவாழுமிடமான வைகுண்டத்திலும், ஸ்ரீரங்கம் முதலிய திவ்ய தேசங்களிலும், ஆகாயத்தில்

பாந்தீ - விளங்குவதாலும்
ரஜநிசரசக்ர - ராவணன் முதலான
அரக்கர் கூட்டத்துக்கு, சக்ரவாகம்
என்னும் பறவைக்கு
வ்யஸநதா - ஆபத்தைத் தருவதாலும்
துன்பத்தைத் தருவதாலும்
சிரஸா பஜதி - தலையால் வணங்கும்,
தம்மைத் தலையில்தாங்கும்
க்வாபி - எவனுக்கும்,
மிகவைபமுடைய சிலருக்கு
ஸார்வஜ்ஞ்யம் - எல்லாகலைகளையும்
அறிந்தவனாம் தன்மையை
திசந்தீ - கொடுப்பதாலும்,
உலகுக்கு
எடுத்துக்காட்டுதலாலும்
பவதீ - சந்திரன் போன்ற நீர்
சுபாலோகை: - இனிய
கடாக்ஷத்தால் தாபத்தைப்
போக்கும் சந்திரிகைகளால்
சோகம் - ஏழ்மையாம் துக்கத்தை
வெப்பத்தின் துன்பத்தை
ஹாது - போக்கக் கடவீர்.

லக்ஷ்மியை சந்திரனோடு ஒப்பிட்டு சிலேடையில் பேசுகிறார். லக்ஷ்மி சந்த்ரன் இருவரும் பாற்கடலில் தோன்றியவர்கள். கு+வலய= பூ+மண்டலத்தில் வாழும் மக்களின் துன்பத்தைத் துடைப்பவள் லக்ஷ்மி. பகலில் மூடி இரவில் மலரும் தன்மையது ''குவலயம்'' என்னும். ஆம்பல் பூ எனவே பகலிலுள்ள குவலயங்களின் — ஆம்பல்களின் துன்பத்தை சந்திரன் போக்குகிறான். விஷ்ணுபதங்களில் - விஷ்ணு வாழுமிடங்களான ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீரங்கம் முதலான திவ்ய தேசங்களில் தமது உருவத்துடனும், அர்ச்சாவதார வடிவத்தில் தோன்றுபவள் லக்ஷ்மி. சந்திரன் விஷ்ணு பதம் என்ற பெயர் கொண்ட ஆகாசத்தில் ப்ரகாசிப்பவள். இரவில் ஸஞ்சரிப்பவரான ராவணாதி ராக்ஷஸ ஸமூகத்துக்குத் துன்பத்தைத் தருபவள் லக்ஷ்மியாம் ஸீதை. இரவில் திரியும் சக்ரவாகம் என்ற பறவைக்குத் துன்பத்தைத் தருபவன் சந்திரன். சக்ரவாகம் என்னும் பறவை பகலில் ஆணும் பெண்ணும் சேர்ந்தே வாழும். இரவில் அதற்குக் கண் தெரியாததால் சற்றே விலகி விடினும் இரவு முழுவதும் அவை கதறிக்கொண்டிருக்கும். தலையால் வணங்குபவரனைவரையும் ஸகலகலா வல்லவராக்குவாள் லக்ஷ்மி. ''ஸ குலீந: ஸ புத்திமாந், யம் த்வம் தேவி நிரீக்ஷஸே'' என்பது விஷ்ணு புராண ஸ்ரீஸ்துதி. இது லக்ஷ்மி செல்வம் மட்டும் தருபவளன்று; மேன்மை, குணம், வீரம், புத்தி முதலாய அனைத்தையும் லக்ஷ்மி தருபவள் என்கிறது. சிவனுக்கு அடையாளமாக விளங்குவது சந்த்ரகலை. இத்தன்மைகளால் சந்திரன் போன்ற நீர் தாபத்தைப் போக்கவல்ல கிரணங்களால் வெயிலின் கொடுமையைப் போக்கும் சந்திரன் போல் க்ஷேமத்தைத் தருவதான கடாக்ஷங்களால் ஏழ்மையாம் துன்பத்தைப் போக்குவது பொருத்தமுடைத்தாம் என்கிறார்.

13. दूराजावसथाभिधाननिरयद्वाराग्रजाग्रन्नर—
क्रूरालापशराहतिव्यतिकरं दूरान्निराकुर्वती: ।
पारावारसुते तरङ्गय मयि स्मेराम्बुजस्पर्धिनी:
घोरापारसमस्तदुष्कृतपरीहारायधीरा दृश: ॥

தூராஜாவஸதாபிதாந நிரய த்வாராக்ர ஜாக்ரந்நர—
க்ரூராலாப சராஹதிவ்யதிகரம் தூராத் நிராகுர்வதீ: ।
பாராவாரஸுதே தரங்கய மயி ஸ்மேராம்புஜஸ்பர்திநீ:
கோராபார ஸமஸ்த துஷ்க்ருத பரீஹாராய தீரா த்ருச: ॥

பாராவாரஸுதே - ஸமுத்ரகுமாரி
த்வம் - நீர்
தூராஜ - கொடிய அரசர்களின்
ஆவஸதாபிதாந - வீடென்ற பெயர்பெற்ற
நிரயத்வார அக்ர - நரகத்தின் வாயிலே
ஜாக்ரத் - காத்துக்கொண்டிருக்கும்
நர - மனிதனின்
க்ரூராலாப - கொடிய பேச்சாகிய
சராஹதி வ்யதிகரம் - பாணங்களாலுண்டாகும் அடியின் தொடர்பை
தூராத் நிராகுர்வதீ: - தொலைவில் ஒதுக்குவதும்
ஸ்மேராம்புஜ - மலர்ந்த தாமரையுடன்
ஸ்பர்திநீ: - அழகில் போட்டியிடுவதும்
தீரா: - தன் இச்சைப்படி ப்ரஸரிப்பதுமான
த்ருச: - கடாக்ஷத்தைத் தருவதும்
கோர - அநிஷ்டத்தைத் தருவதும்
அபார - அளவற்றதுமான
ஸமஸ்ததுஷ்க்ருத - அனைத்துப் பாபங்களின்
பரீஹாராய - நிவ்ருத்திக்காக
மயி - என்னிடம்
தரங்கய - செலுத்துவாயாக.

லக்ஷ்மியே உமது கடாக்ஷத்தைச் சற்றே அடியேன் மீது செலுத்தும் என ப்ரார்த்திக்கின்றார். அப்படி வேண்டுவதன் காரணத்தை அழகாக விளக்குகிறார். கஞ்ச அரசர் வாழும் வீடு வீடன்றாம். அதுவே நரகமாம். அதன் வாயிற்காவலர்களின் பேச்சே கூர்மையான பாணத்தால் படும் அடியாம். அவர்களின் பேச்சின் தன்மைக்கு அம்பின் அடியை உவமையாக்கினார். அது தம்மீது படாமல் போக்க வேண்டுமாயின் லக்ஷ்மியின் கடாக்ஷம் இன்றியமையாததாம். அன்றலர்ந்த தாமரையின் அழகுடன் பகைமை கொள்ளத் தக்கதாம் கடாக்ஷத்தின் அழகு. மேன்மையில் தமக்கு ஈடாகப் பிறரொருவர் தோன்றின் அவர்மீது பகைமை கொள்வது உலக வழக்கமன்றோ! தங்குத்தடையின்றி எங்கும் செல்லத்தக்கதாம் அவள் கடாக்ஷம். இத்தகைய கடாக்ஷத்தை அநிஷ்டத்தைத் தரத்தக்க ஸமஸ்த பாபங்களின் நாசத்துக்காக என்மீது செலுத்து என்கிறார். 13

14. अघटितघटनापटीयसी ते हरिगृहिणि प्रकटा कटाक्षरेखा ।
स्थिरवसुं अवनीपकं विधत्ते जननि वनीपकमेव हंत जन्तुम् ॥

அகடிதகடநாபடீயஸீ தே, ஹரிக்ருஹிணி ப்ரகடா கடாக்ஷரேகா ।
ஸ்திரவஸும் அவநீபகம் விதத்தே, ஜநநி வநீபகமேவ
ஹந்த ஜந்தும் ॥

ஹரிக்ருஹிணி - ஹரியின் மனைவியான தாயே
ப்ரகடா - கண்ணுக்குப் புலப்படுவதும்
அகடிதகடநா - சேரத்தகாததை சேர்ப்பித்தல்
படீயஸீ - ஸமர்த்தங்களுமான
கடாக்ஷரேகா - கடைக்கண்பார்வையாம் எழுத்துக்களின் வரிசை
வநீபகம் - யாசகனான
ஜந்தும் - ஒருவனை
ஸ்திரவஸும் - அழிவற்ற செல்வத்தை உடைய
அவநீப - அரசர்களின்
கம் - தலைவனாக
விதத்தே - செய்கிறது.

இதில் விரோதாபாஸம் என்னும் அணிபயின்றுள்ளது. முதலில் பொருளில் விரோதம் இருப்பதுபோல் தோன்றும். பொருள் கண்டபின் விரோதம் தோன்றாது. இப்படிச் செய்யுள் அமைப்பதே விரோதாபாஸமாம். இதில் வநீபகம் அவநீபகம் விதத்தே என்பது விரோதம். இவ்விரோதம் போம் பொருள் மேலே கூறப்பட்டுள்ளது.

வரிசையாக எழுதப்பட்டுள்ள எழுத்துக்களின் வரிசைக்கு ரேகை எனப்பெயர். இது நாம் எழுதும் எழுத்துக்களின் ரேகை என்றும் ஒவ்வொருவர் தலைகளிலும் படைப்பவனால் எழுதப்பட்ட எழுத்துக்களின் ரேகை என்றும் இருவகைப்படும். கடைக்கண் பார்வையை புலப்படும் ரேகையாக உருவகித்துள்ளார். லக்ஷ்மியின் கடாக்ஷம் தலையெழுத்தினும் சிறந்தது சேர்ப்பிக்கும். ஆனால் லக்ஷ்மி கடாக்ஷம் சேரத்தகாததானவைகளையும் சேர்த்துவைக்கும் வல்லமை வாய்ந்தது. இக்கடாக்ஷம் வநீபகனை அவநீபகனாக - வநீபகனிலும் வேறுபட்டவனாகச் செய்கிறதென்பது விரோதம். பொருளைக் கண்டால் விரோதம் போம். பிச்சை எடுப்பவன் வநீபகன் எனப்படுவான். அவனிடம் உன் கடாக்ஷம் சென்றால் அவன் அவநீபர்களின் - அரசர்களின் கம்-தலைவனாக ஆகிவிடுகிறான் என்பது பரிஹாரம். சொல்லில் விரோதம். பொருளில் விரோதமில்லை. சேராததைச் சேர்ப்பிக்கும் தன்மையதானதால் உமது கடாக்ஷம் பிக்ஷாபதியை அரசர்க்கதிபதியாக ஆக்குகிறதென்பது கருத்து.

15. नयने फणीन्द्रशयनेष्टनायिके
यदि नादधासि सुदिनाब्जशोभने ।
वलभेदनोपि न लभेत संपदं
मरुतामयेत मरुतामपि स्थली ॥

நயநே பணீந்த்ர சயநேஷ்ட நாயிகே
யதி நாததாஸி ஸுதிநாப்ஜ சோபநே ।
வலபேதநோபி ந லபேத ஸம்பதம்
மருதாமயேத மருதாமபி ஸ்தலீ ॥

பணீந்த்ரசயந இஷ்டநாயிகே - ஆதிசேஷனில் சயநித்துள்ள நாராயணன் பத்நியே
த்வம் - நீர்
ஸுதிநாப்ஜ - மேகம் மூடாதநாளில் மலர்ந்ததாமரை போல்
சோபநே - அழகானவளே
நயநே - உமது இருகண்களின் கடாக்ஷங்களை
யதி நாததாஸி - வைக்காமற் போனால்
வலபேதநோபி - இந்த்ரனும்
ஸம்பதம் - செல்வத்தை
ந லபேத - அடைந்திரான்
மருதாம் - தேவர்களின்
ஸ்தலீ அபி - ஸ்வர்கமும்
மருதாம் - பாலைவநமாம் தன்மையை
அயேத - அடைந்திருக்கும்.

துர்வாஸமஹர்ஷியின் சாபத்தால் இந்த்ரன் செல்வமெல்லாம் இழந்தனனென்பதும் ஸ்வர்கலோகமும் சூன்யமாயிற்று என்பதும், இந்த்ரன் லக்ஷ்மியைத் துதித்து அவளருளால் இழந்த யாவற்றையும் திரும்பவும் அடைந்தனன் என்பது ஸ்ரீ விஷ்ணுபுராண வரலாறு. அக்கருத்தை அடிப்படையாகக் கொண்டது இந்த ச்லோகம்.

மேகத்தால் சூர்யன் மறைக்கப்பட்ட நாளுக்கு ''துர்திநம்'' எனப்பெயர். அதற்கெதிரான தினம் ஸுதிநம். ஆகவே ஸுதிநம் என்பதற்கு மேகம் மூடாதநாள் எனப் பொருள் உரைக்கப்பட்டது.
15

16. करुणारसेन वरुणालयात्मजे
प्रदिमानमेत्य यदि मामवेक्षसे ।
मलिनात्मनापि कलिना क्रियेत किं
मम किं करोतु यमकिंकरोपि वा ॥

கருணாரஸேந வருணாலயாத்மஜே
ம்ரதிமாந மேத்ய யதி மாமவேக்ஷஸே ।
மலிநாத்மநாபி கலிநா க்ரியேத கிம்
மம கிம் கரோது யமகிங்கரோபி வா ॥

வருணாலய ஆத்மஜே - கடல்குமாரீ!
கருணாரஸேந - கருணை என்ற ரஸத்தால்
ம்ரதிமாநம் - அபராதங்களைப் பொறுத்தலாம் மென்மையை
யுத்ய - அடைந்து
மாமவேக்ஷஸே யதி - என்னைக் கடாக்ஷிப்பாயாகில்
மலிநாத்மநா - மனிதர்களைக் கெட்டவர்களாக்கும் தன்மை பெற்ற
கலிநா - கலியுகத்தால்
மம - என்னை
கிம் க்ரியேத - எப்படிக் கெட்டவழி செலுத்தமுடியும்
அபி ச - மேலும்
யமகிங்கரா: - யமன் தூதுவர்கள்
கிம்கரோது - என்ன தண்டனைத் தரவியலும்!

மனிதர்களைக் கெட்ட வழியில் செலுத்தலே கலியின் தன்மை. லக்ஷ்மியின் கடாக்ஷம் பெற்றவர்களைக் கலியால் அபராதியாக்கமுடியாது. அதனால் அவர்கள் பாபிகள் ஆகார். எனவே எமன் பாபிகளுக்கு விதிக்கும் தண்டனையும் அவர்களுக்குக் கிடைக்காது.

இக்கருத்தை ''பரிஹரமதுஸூதந ப்ரபந்நாந் ப்ரபுரஹம் அந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம்'' என்பது கூறும். மலிந: ஆத்மா யேந ஸ: மலிநாத்மா. தேந என்பது விக்ரஹமாம். 16

17. मामपाङ्गलहरी गरीयसी तावकीस्पृशतु देवकीस्नुषे ।
अन्तकस्य तु रुषा कषायिताः मा पतन्तु मयि दृष्टिवृष्टयः ॥

மாமபாங்கலஹரீ கரீயஸீ, தாவகீ ஸ்ப்ருசது தேவகீஸ்நுஷே ।
அந்தகஸ்ய து ருஷா கஷாயிதா: மா பதந்து மயி
த்ருஷ்டிவ்ருஷ்டய: ॥

தேவகீஸ்நுஷே - ருக்மணியே
தாவகீ - உமது
கரீயஸீ - குணங்களால் உயர்ந்த
அபாங்கலஹரீ - கடாக்ஷதாரை
மாம்ஸ்ப்ருசது - என்னைத் தொடட்டும்
ருஷாகஷாயிதா: - கோபத்தால் சிவந்த
அந்தகஸ்ய - எமனது
த்ருஷ்டிவ்ருஷ்டய: - பார்வையாம் மழையோவெனில்
மயி - என்னிடம்
மா பதந்து - விழவேண்டாம்.

முதலில் உமது கடாக்ஷத்தை என்மீது ஸம்பந்திக்கச் செய்து அதனால் எமனது கொடிய பார்வையிலிருந்து காப்பாற்றுவாயாக என வேண்டுகிறார்.

''ஸ்ப்ருசது'' ''பதந்து'' என்கின்ற சப்தங்களால் முறையே லக்ஷ்மியின் கடாக்ஷமென்பதையும், யமனின் பார்வைகளின் கொடுமையும் தொனிக்கின்றன. 17

18. बन्धुरगुणे कृपणबन्धुमनपायं
सिन्धुतनये तव कटाक्षमकरन्दम् ।
इन्दुकरबृन्दजडचन्दनमहीभृत्
कन्दरमरुच्छिशिरसुन्दरमुपासे ॥

பந்துரகுணே க்ருபணபந்து மநபாயம்
ஸிந்துதநயே தவ கடாக்ஷ மகரந்தம் ।
இந்துகரப்ருந்த ஜடசந்தந மஹீப்ருத்
கந்தர மருத்சிசிர ஸுந்தர முபாஸே ॥

பந்துரகுணே - அழகிய குணமுடைய
ஸிந்துதநயே - ஸமுத்ரமகளே!
க்ருபணபந்து - அநாதர்களைக் காப்பதும்
அநபாயம் - ஆபத்துக்களைப் போக்குவதும்
இந்துகரப்ருந்த - சந்திரகிரணக் கூட்டங்களால்
ஜட - குளிர்ந்த
சந்தநமஹீப்ருத் - பொதிகைமலையின்
கந்தரமருதிவ - குகைகளினின்று வீசும் காற்று போல்
சிசிர - குளிர்ந்ததும்
ஸுந்தர - அழகியதுமான
தவ கடாக்ஷ - உமது கடைக்கண் பார்வையாகிய
மகரந்தம் - தேனை
உபாஸே - ஸேவிக்கிறேன்.

சந்தன மரங்கள் மிக்கதும் தென் திசையிலிருப்பதுமான மலயமலையிலிருந்து மாலை மென்மையாக வீசுவது தென்றல். அனைத்துப் புஷ்பங்களும் புஷ்பிக்கும் காலமாம் வஸந்தருதுவில் அப்புஷ்பங்களின் மகரந்தங்களையும் தேனையும் வாரிக்கொண்டு நறுமணத்துடன் வீசும் தென்றல் உடலில் பட்டால் பகலில் வெப்பத்தால் பட்ட பாடெல்லாம் பட்டுப்போம். உடல் குளிர்ந்து மனம் மகிழும். அதுபோன்றதாம் லக்ஷ்மியின் கடாக்ஷ வீக்ஷணங்களாம் தேன். அதனை என் துன்பமெல்லாம் தொலைய ஸேவிக்கின்றேன் என்கின்றார்.

கடாக்ஷத்தைத் தேனாக உருவகித்ததால் தேன் எப்படி எண்ணற்ற ஈக்களுக்கு உணவளித்துக் காக்கின்றதோ அதுபோல் தம்மை தஞ்சமாக அடைந்தவராம் ஈக்களை கடாக்ஷம் காக்கும் என்பது தொனிபொருளாம். தேன் இனிய உணவாவதோடு மருந்துமாதலாலும், வ்யாதியாம் ஆபத்தைப் போக்குவதாலும் மலைகளில் மிகுதியாக உற்பத்தியாவதாலும், குளிர்ச்சியைத் தருவதாலும் கடாக்ஷத்தைத் தேனாக உருவகித்தார். 18

19. आर्तिं लुंपत्वंब तवापाङ्ग-सुधात्मा
गङ्गा सैषा चित्रगतिर्वर्जितभंगा ।
नेत्रीशोषं प्रत्युत पद्मे भवमेव
प्राज्ञानां या भासितरूपं च विधत्ते ॥

ஆர்த்திம் லும்பத்வம்ப தவாபாங்கஸுதாத்மா
கங்கா ஸைஷா சித்ரகதி: வர்ஜித பங்கா ।
நேத்ரீசோஷம் ப்ரத்யுத பத்மே பவமேவ
ப்ராஜ்ஞாநாம் யா பாஸிதரூபம் ச விதத்தே ॥

அம்ப பத்மே - தாயான லக்ஷ்மீ
வர்ஜிதபங்கா - அலைகளற்றதும் போக்கப்பட்ட சரணாகதர் தோல்வியை உடையதும்
ப்ரத்யுத - ப்ரஸித்த கங்கைக்கு எதிராக
பவமேவ - சிவனையே ஸம்ஸாரத்தை
சோஷம்நேத்ரீ - இல்லாததாக ஆக்குவதுமாகிய
யா - எந்த கங்கையாகிய கடாக்ஷம்
ப்ர-அஜ்ஞாநாம் - சிறிதும் அறிவில்லாது கபிலரிடம் அபசாரப்பட்ட ஸகரபுத்ரர்களுக்கு
ப்ராஜ்ஞாநாம் - நல்ல புலவருக்கு
பாஸிதரூபம் - சாம்பற் குவியலாக இருக்கும் தன்மையை, புகழுடன் விளங்கும் உருவத்தை
விதத்தே - செய்கின்றதோ
தவாபாங்கஸுதாத்மா - உமது கடாக்ஷமாம் அம்ருத வடிவமுடையதாய், ஜல ரூபமில்லாத
சித்ரகதி: - ஆச்சர்யகரமான பரவுதலை உடைய
ஸைஷா கங்கா - இக்கங்கை
ஆர்த்திம் - எனது ஸம்ஸாரத் துன்பத்தை
லும்பது - போக்கட்டும்.

தாயின் கடாக்ஷத்தை கங்கையாக வர்ணிக்கின்றார். கங்கையில் ஸ்நானம் செய்தவர் பாபத்தை அது போக்கும் என்பது புராண ப்ரஸித்தம். அக்கங்கை போன்ற உமது கடாக்ஷம் என் ஸம்ஸாரமாம் பாபத்தைப் போக்கட்டும் என வேண்டுகிறார். ஆனால் கவி தமது கவிதாஸாமர்த்யத்தால், கங்கை சில குறைகளைப் பெற்றது, உமது கடாக்ஷ கங்கை அக்குறைகளற்றதெனப் பொருள் புலப்படுமாறு ச்லேடையில் அமைத்துள்ளார்.

அக்குறையும் நிறையும் வருமாறு. கங்கை பங்கத்தை அலையை வர்ஜித்து-விட்டது. அலையற்றது. கடாக்ஷ கங்கை வர்ஜித-போக்கப்பட்ட, பங்கத்தை - அடிபணிந்தோர் குறைகளை உடையது. அசேதநத்தின் பங்கத்தை போக்குவதில் சிறப்பான சிவன் தலையில் விழுந்தபின் அவனால் சடையில் மறைக்கப்பட்டு இல்லையாக்கப் பட்டது கங்கை. கடாக்ஷ கங்கை பவத்தையே-சிவனையே இல்லையாக்குவது. பவம் என்பதற்கு சிவன் என்றும் ஸம்ஸாரம் என்றும் இரு பொருள்களுண்டு. பவன்-சிவன்-கங்கையை இல்லை யாக்கினான். ஆனால் உமது

கடாக்ஷ கங்கை பவனையே இல்லையாக்கிவிட்டது என நேர் எதிரிடையான பொருளைச் சொல்வது போல் சொல்வடிவமிருந்தாலும் பொருள் பவம் என்பதற்கு இப்போது ஸம்ஸாரம் எனக்கொள்ள வேண்டும். ஸகரமன்னன் தமது வேள்விக்காக குதிரையை விட அக்குதிரையை இந்திரன் மறைத்துப் போய் கபிலரருகில் விட, அக்குதிரையைத் தேடிச் சென்ற ஸகர புத்திரர் நூற்றுவர் கபிலரருகில் குதிரையைக் கண்டு கபிலரைத் துன்புறுத்த, யாதுமறியாத கபிலர் தவம் கலைந்துக்கண் விழித்தபோது அனைவரும் சாம்பலாயினர். அச்சாம்பலை கங்கையின் புனித நீரால் நனைத்து அவர்களை உய்வித்தனன் பகீரதன் என்பது ஸ்ரீமத் ராமாயண வரலாறு. எனவே இறந்தவருக்கு நன்மையைச் செய்தது கங்கை. கடாக்ஷம் இவ்வுலகிலேயே நல்ல புகழுடன் விளங்கச் செய்வதாம் புலவர் பெருமக்களை.

பஸிதாநாம் ஸமூஹ: - பாஸிதம் - சாம்பற்குவியல். பாஸிதம் - நன்கு விளங்கும். கங்கை ஜலவடிவமானது; கடாக்ஷம் அம்ருத ரூபமானது. இத்தன்மைகளால் விலக்ஷணமான கடாக்ஷம் எனது பாபத்தைப் போக்கட்டும் என்கிறார்.

20. उच्चकोरकनवाभ्युदयं ते, वीक्षितं मनुमहे मकरन्दम् ।
यत्र तल्लगतिषट्पदमन्त्रः, तत्र भाति शतपत्रगृहे यत् ॥

உச்சகோரக நவாப்யுதம் தே, வீக்ஷிதம் மநுமஹே மகரந்தம் ।
யத்ர தல்லகதி ஷட்பத மந்த்ர: தத்ர பாதி சதபத்ரக்ருஹே யத் ॥

சதபத்ரக்ருஹே - தாமரையை வீடாகக்கொண்டவளே!
உத் - உயர்ந்த
சகோரக - சகோரபக்ஷி போன்ற கண்களிலிருந்து
நவாப்யுதயம் - புதிது புதிதாகத் தோன்றும்
தே வீக்ஷிதம் - உமது பார்வையை
உச்ச - மலரும் தருவாயிலுள்ள
கோரக - மொட்டிலிருந்து
நவாப்யுதயம் - புதிதாகத் தோன்றும்
மகரந்தம் - மதுவாக
மநுமஹே - நினைக்கின்றோம்
யத் - ஏனெனில்
தத் - அப்பார்வை
யத்ர - எந்த பகவானிடத்தில்
லகதி - எளிதாய், தன்னடைவாய் மிகுதியாகச் சேர்கிறதோ
தத்ர - அங்கு
ஷட்பத - ஆறுகால்களுடைய வண்டுகளின்
மந்த்ர: - ரீங்காரம்
ஷட்படமந்த்ர: - ஆறுபதங்களையுடைய த்வயம் என்ற மந்த்ரம்
பாதி - விளங்குகின்றதோ (அதனால்).

லக்ஷ்மியின் கடாக்ஷத்தைத் தேனாக உருவகிக்கின்றார். மொட்டு மலரும்போது அதில் தோன்றுவது தேன். கடாக்ஷம் சகோரபக்ஷி

போல் கருமையான கண்களில் தோன்றுவது. மொட்டு மலரும் போதே அறுகால் வண்டினங்கள் அதனுள் சென்று அங்குள்ள தேனை ரீங்காரம் செய்துகொண்டு பருகுவது கண்கூடானது. கடாக்ஷமாகிய தேன் ஸ்வரஸமாய் எளிதாய் மிகுதியாக நாராயணனிடம் பரவுகிறது. அங்கு ஆறு பதங்களைக் கொண்ட த்வயம் என்ற மந்த்ரம் அவளை ப்ரதிபாதிப்பதாய் விளங்குகிறது.

உச்சகோரக நவாப்யுதயத்தாலும், ஷட்பதமந்த்ரச் சேர்க்கையாலும் உமது பார்வையை தேனாக உருவகிக்கின்றேன் என்கிறார். சப்தச்லேஷை.

''அபாங்கா பூயாம்ஸோ, யதுபரி, பரம் ப்ரஹ்ம, ததபூத்'' என்பது '' ஸ்ரீ குணரத்ந கோச'' ஸ்ரீஸூக்தி. தாயே எதன்மீது உமது மிகுதியான கடாக்ஷம் சென்றதோ அது பரப்ரஹ்மம் ஆயிற்று எனத் தாயின் கடாக்ஷத்தைப் போற்றுகிறார். (20)

21. वीक्षितानि तव वारिधिकन्ये यत्र पालितजगन्ति लगन्ति ।
चित्रमत्र स परत्रच देही देहिशब्दमपहाय चकास्ति ॥

வீக்ஷிதாநி தவ வாரிதிகந்யே யத்ர பாலிதஜகந்தி லகந்தி ।
சித்ரம் அத்ர ஸ பரத்ர ச தேஹீ தேஹிசப்தம் அபஹாய சகாஸ்தி ॥

வாரிதிகந்யே - க்ஷீரஸமுத்ரபுத்ரீ
பாலிதஜகந்தி - காப்பாற்றப்பட்ட உலகத்தையுடைய
தவ வீக்ஷிதாநி - உமது கடாக்ஷம்
யத்ர - எம்மனிதனிடம்
லகந்தி - செல்கிறதோ
ஸ தேஹீ - அம்மனிதன்
அத்ர - இவ்வுலகில்
தேஹிசப்தம் - பிறரிடம் தேஹி கொடு என யாசித்தலை
அபஹாய - விட்டும்
பரத்ர - மேலுலகில்
தேஹிசப்தம் - புண்ய பாபங்களை அநுபவிக்கத்தக்க உடலை உடையவன் என்ற வழக்கை
அபஹாய - விட்டும்
சகாஸ்தி - விளக்குகிறான்
சித்ரம் - ஆச்சர்யம்.

லக்ஷ்மியின் கடாக்ஷம் பெற்றவன் இவ்வுலகில் அடையவேண்டிய யாவற்றையும் குறைவின்றி அடைந்துவிடுகிறான். எனவே பிறரிடம் ''தேஹி'' - கொடு - என்று யாசிக்கமாட்டான். அவனே கர்மத்தின் அடிப்படையாக எழுந்த இவ்வுடலை உதறிவிட்டு மேலுலகத்தில் அப்ராக்ருத உடலுடன் மோக்ஷத்தில் விளங்குகிறான். எனவே உமது கடாக்ஷம் இம்மை மறுமை என்னும் ஈரிடத்துக்கும் நன்மை பயக்கவல்லதாகின்றது. தேஹீ தேஹி- சப்தத்தை விடுகிறான் என்பது ஆச்சரியம் விரோதாபாஸாலங்காரம். (21)

22. दुग्धाब्धिकन्ये त्वदपाङ्गभृत्याः वित्ताधिपत्यादिपदाभिषिक्ताः ।
हृत्तापयुक्ताः तव देव्यभक्ताः मर्त्या जगत्यां विलपन्ति रिक्ताः ॥

துக்தாப்திகந்யே த்வதபாங்கப்ருத்யா: வித்தாதிபத்யாதி பதாபிஷிக்தா: ।
ஹ்ருத்தாபயுக்தா: தவ தேவ்யபக்தா: மர்த்யா ஜகத்யாம் விலபந்தி ரிக்தா: ॥

துக்தாப்திகந்யே - கடல் கன்னியே
த்வதபாங்க - உமது கண்ணால் காட்டப்பட்ட செயல்களைச் செய்யும்
ப்ருத்யா: - தொண்டர்கள்
வித்தாதிபத்யாதி - செல்வத் தலைவனாம் குபேரன், இந்திரன் முதலிய பதவிகளில்
அபிஷிக்தா: - பட்டாபிஷேகம் பண்ணப்பட்டவர்களாக
(பவந்தி - ஆகின்றனர்.)
தேவி - நாராயணமஹிஷியே
தவ அபக்தா: - உம்மிடம் பக்தி இல்லாத
மர்த்யா: - மனிதர்கள் - மரணமெய்தும் தன்மையுடைவர்களாய்
ரிக்தா: - தரித்ரர்களாய்
ஹ்ருத்தாபயுக்தா: - மனப்புழுக்கம் உடையவர்களாய்
ஜகத்யாம் - மண்ணுலகில்
விலபந்தி - அழுகின்றனர்.

லக்ஷ்மியே உமது கடாக்ஷத்துக்கு இலக்கானவர்கள் செல்வத் தலைவனும் குபேரப்பதவி, இந்திரப்பதவி போன்ற தேவதைகளின் இடத்தை அடைந்து நீண்டநாள் இன்பமாக வாழ்கின்றனர். அதனைப் பெறாதவர் சீக்கிரத்தில் மரிப்பவரான மனிதர்களாய், ஏழைகளாய், அதனால் எப்போதும் கவலையுள்ள மனத்தராய் மண்ணுலகில் வாழ்கின்றார்கள்.

செல்வத்தைப் பெறுதல் அதனைப் பெறாமை என்னுமிரண்டும் உமது கருணையைப் பெறுதல் பெறாமை என்பதன் விளைவுகள் என்பது — கருத்து. (22)

23. यक्षश्रीजननचणैः तवावलोकैः लक्ष्मिश्रीक्षयपिशुना निरस्यमाना ।
नालीकासनलिपिरप्यलीकलीना नालीका भवति नृणां प्रतीपगत्या ॥

யக்ஷஸ்ரீஜநநசணை: தவாவலோகை: லக்ஷ்மிஸ்ரீக்ஷயபிசுநா நிரஸ்யமாநா ।
நாலீகாஸநலிபிரபி அலீகலீநா நாலீகா பவதி ந்ருணாம்ப்ரதீபகத்யா ॥

ஹே லக்ஷ்மி - லக்ஷ்மியே
ஸ்ரீக்ஷயபிசுநா - செல்வமின்மையை விளக்குவதான
ந்ருணாம் - மனிதர்களின்
அலீகலீநா - தலைமயிரில் மறைந்துள்ள
நிரஸ்யமாநாபி - பயனற்றதாக்கப்பட்ட போதும்
அலீகலீநா - அதனால் அது பொய்யாக்கப்பட்டு புலப்படாது மறைந்து போனதாய்
நாலீகாஸநலிபி: - நான்முகனின்
ஸ்ரீக்ஷய:ஸ்யாத் என்ற எழுத்து
யக்ஷஸ்ரீஜநநசணை: - குபேரசெல்வத்தைத் தரும் சக்தி வாய்ந்த
தவாவலோகை: - உமது கடாக்ஷத்தால்
ப்ரதீபகத்யா - அவன் எழுதியதையே திருப்பிப் படிப்பதால் யக்ஷ ஸ்ரீஸ்யாத் எனமாறி
ந அலீகா - பொய் ஆகாததாய் உண்மையானதாக
பவதி - ஆகுகிறது.

நான்முகன் மக்களைப் படைக்கும்போது அவரவர் வாழ்நாள் முழுமைக்குமான நிகழ்ச்சிகளை அவனவன் தலையில் எழுதுகிறான். அவன் ஒருவனை ஏழையாகப் படைத்தால் அவன் தலையில் ஸ்ரீக்ஷய: ஸ்யாத் - ஸ்ரீ-செல்வத்தின். க்ஷய:— நாசம் ஸ்யாத்-உண்டாகும் என்று எழுதுகிறான். அந்த ப்ரஹ்மதேவனின் தலையெழுத்தையும் மாற்றவல்லது உமது கருணை. அக்கருணை அந்த ஏழையின் மீது பட்டால் அவன் தலையெழுத்து யக்ஷஸ்ரீ ஸ்யாத் எனத் தலைகீழாக மாறிவிடுகிறது. யக்ஷனான குபேரனின் செல்வமுடையவன் ஆவான் என்பது அதன் பொருளாம். விதியையும் மாற்றவல்லது உமது கருணை என கருணையைப் புகழ்ந்ததாயிற்று.

அலீகலீநா என்ற பதம் ஒரு முறைதான் ச்லோகத்தில் படிக்கப்பட்டுள்ளது. அதை மறு முறை பெருக்கிக்கொள்ள கேசங்களில் மறைந்த என்பது பொருள். பெருக்கிக்கொண்டதற்கு அலீக-பொய்யானதாய். லீநா-அதனால் அது மறைந்ததாய் என்பது பொருள். அப்படிப் பொய்யாக்கப்பட்ட போதும் அது பொய்யாகாது வேறொரு வகையில் - யக்ஷ ஸ்ரீஸ்யாத் என்ற முறையில் உண்மையாக உள்ளது எனக் கவி தமது திறமையைப் புலப்படுத்தினார்.

ப்ரபலனான ஒருவனால் அவமானம் பண்ணப்பட்ட துர்பலன் அவன் கண்களுக்குப் புலப்படாது மறைந்து வாழச் சக்தியற்றவனாய் வலிமையுள்ளவன் கருத்தை ஏதோ ஒரு வகையில் பின் தொடர்ந்து வாழ்ந்து தன்மானத்தை காத்துக்கொள்வது போல் என்ற உபமானம் தொனிப்பொருளாய் கிடைக்கிறது.

ப்ரபலையான லக்ஷ்மியின் கடாக்ஷத்தால் பாதிக்கப்பட்ட ப்ரஹ்மனின் ஸ்ரீக்ஷய: ஸ்யாத் என்ற தலை எழுத்து முன்போல் வாழச்சக்தியற்றதாய் யக்ஷ ஸ்ரீஸ்யாத் என மாறி ஏதோ ஒருவகையில் வாழ்கிறது என்ற உபமேயம் ச்லோகத்திலுள்ளது. (23)

24. तव देवि पटु र्नटः कटाक्षः गुणवत्तालसदुच्छ्रयः स नूनम् ।
नतु नर्तयसे सरस्वतीं यः सततं संश्रितमंजुलास्यरङ्गे ॥

தவதேவி படு: நட: கடாக்ஷ: குணவத்தாலஸதுச்ரய: ஸ நூநம் ।
நநு நர்த்தயஸே ஸரஸ்வதீம் ய: ஸததம் ஸம்ச்ரித
மஞ்ஜுலாஸ்யரங்கே ॥

<u>உண்மைப் பொருள்</u>

தேவி - பகவத்மஹிஷியே

குணவத்தா - செல்வம், க்ஷேமம் முதலான நன்மைகளைப் பெற்றிருப்பதில்

லஸதுச்ரய: - மிகச் சிறந்து மேன்மையையுடைய

தவ கடாக்ஷ: - உமது கடாக்ஷம்
படு:நட: - ஆங்காங்கு நடந்து செல்லும் தன்மையை உடையதாய்
ஸம்ச்ரித - சரணமடைந்தவர்களின்
மஞ்சுள - அழகிய
ஆஸ்யரங்கே - முகமாகிய அரங்கில்
ஸரஸ்வதீம் - பதினான்கு வகை வித்யைகளையும்
ஸததம் - எப்போதும்
நர்த்தயதே - நடிப்பிக்கிறது
நூநம் - நிச்சயம்

<u>தொனிப்பொருள்</u>

தேவி - பகவானின் பத்நியே
ய: - யாதொரு கடாக்ஷம்
ஸம்ச்ரித - அடைந்த
மஞ்சு - அழகிய
லாஸ்ய - நர்த்தனத்தையுடைய
ரங்கே - நடனமாடுமிடத்தில்
ஸரஸ்வதீம் - ஓர் நடியை
ஸததம் - வீணை முதலானவாத்யக் கூட்டங்களுடன்.
நர்த்தயதே - நடனமாடச் செய்கிறதோ
குணவத் - கயிறுடன் சேர்ந்துள்ள
தாள - தாளத்தை வாசிப்பதில்
ஸமுச்ரய: - சிறப்பை அடைந்துள்ளதோ
ஸ: தவ கடாக்ஷ: - அத்தகைய தேவரீர்கடாக்ஷம்
படு: - சிறந்த
நட: - நடிகனாக
பவதி - ஆகின்றது
நூநம் - நிச்சயம்.

லக்ஷ்மியின் கடாக்ஷம் செல்வத்தை அளிப்பதுபோல் கல்வி முதலாயவற்றையும் அளிக்க வல்லது என்ற கருத்தைத் தெரிவிக்கும் முகத்தால் அக்கடாக்ஷம் சிறந்த நடிகனாகவும் ஆகிறது என்ற கருத்தையும் வெளியிடும் அளவுக்குத் தகுதி வாய்ந்த சொற்களைப் பெய்து இந்த ச்லோகத்தைக் கவி இயற்றியுள்ளார். ''ஸ ச்லாக்ய: ஸ குணீ தந்ய: ஸ குலீந: ஸ புத்திமாந் । ஸ சூர: ஸ ச விக்ராந்த: யம் த்வம் தேவி நிரீக்ஷஸே'' என்பது ஸ்ரீவிஷ்ணு புராணச்லோகம். எவன்மேல் லக்ஷ்மியின் கடாக்ஷம் விழுகிறதோ அவன் புகழுடையனாயும், குணமுடையனாயும், பெறவேண்டிய யாவற்றையும் பெற்றவனாயும், உயர்குலமுடையவனாயும், புத்தியுடையனாயும், சூரனாயும் ஆகிறான் என்கிறது இது. இவைகளைத் தருவதால் லக்ஷ்மியின் கடாக்ஷம் யாவற்றிலும் மேன்மை உடையதாயுள்ளது. எவரெவர் எங்கெங்கு லக்ஷ்மியை வணங்குகின்றனரோ அவரவர் இருப்பிடங்களுக்குச் சென்று அவர்கள் முகமாகிய நடனவரங்கில் பதினான்கு கலைகளையும் விளங்கச் செய்கிறது என்கிறார்.

இதில் வாயை அரங்காக உருவகித்தும். கல்வி என்பதற்குப் பதிலாக ஸரஸ்வதி என்று ஒரு பெண்ணின் பெயர்ச்சொல்லையமைத்தும் ச்லோகத்தை அமைத்ததோடு ''ரங்கே'' என்ற சொல்லையும் பெய்து அரங்கத்தை நினைவில் கொண்டு வருதலாலும் இரு பொருள்கள் கூறப்பட்டன. ச்லேடைச் சொல்லாததால் பெருளுக்கேற்ப சொல்லைப் பிரித்துக்கொள்ள வேண்டும், பிரித்துப் பொருளும் மேலே கூறப்பட்டுள்ளது. (24)

25. भावत्कैर्भगवति कज्जलानुविद्धैः कृष्णो यैर्भवति विधुः कटाक्षपूरैः ।
तल्लेशैः अधिकतमश्रियां निदानैः मालिन्यं हरसि विचित्रं आन्तरं नः ॥

**பாவத்கை: பகவதி கஜ்ஜலாநுவித்தை: க்ருஷ்ணோ யை: பவதி விது: கடாக்ஷபூரை: ।
தல்லேசை: அதிகதமச்ரியாம் நிதாநை: மாலிந்யம் ஹரஸி விசித்ரமாந்தரம் ந: ॥**

பகவதி - பூஜிக்கத் தக்கவளே
விது: - (சுத்த ஸத்வமயமான திருமேனியாதலால் வெண்மையாக இருக்கவேண்டிய) பகவான்
கஜ்ஜல அநுவித்தை: - மையுடன் கலந்த
பாவத்கை: - உமது
யை: கடாக்ஷ பூரை: - யாதொரு கடைக்கண்பார்வையாம் வெள்ளத்தால்
க்ருஷ்ண: பவதி - கருமை நிறமுடையவனாகிறானோ
அதிக - மிகுதியான
தமச்ரியாம் - அடர்ந்த இருள்போன்ற நீல காந்திக்கு
நிதாநை: - முக்கிய காரணமான
தல்லேசை: - அந்த கடாக்ஷத் திவலைகளால்
ந: - எங்களது
மாலிந்யம் - உடல் கருமையை
ஹரஸி - போக்குகிறாய்
விசித்ரம் - ஆச்சரியம்
அதிகதம - மிகுதியான
கடாக்ஷலேசை: - கடாக்ஷத்திவலைகளால்
ஆந்தரம் - மனதிலிருக்கும்
விசித்ரம் - பலவகையான
மாலிந்யம் - மோக்ஷவிரோதியான பாபங்களை
ஹரஸி - போக்குகிறாள்.

கர்ம வச்யர்களாய் ரஜோகுணம் தமோகுணம் மிகுந்த நம் போன்றவர் உடல்போன்றதன்று பகவானின் திருமேனி. அது சுத்தஸத்வமயமானது. ஸத்வத்தின் நிறம் வெண்மை. ஆகவே அவர் திருமேனிவெண்மையானதே. ஆனால் மைபூசிய உமது கடைக்கண் பார்வை அவர்மேல் மிகுதியாகப் பட்டதால் மையின் காந்தியால் அவர் உடல் நீல நிறமுடைத்தாயிற்று. ''காபி லக்ஷ்மீகடாக்ஷ: பூய: ச்யாமா'' என்பதால் இக்கருத்தை ஸ்வாமி தேசிகன் அநுஸந்தித்தார். உமது கடாக்ஷத்தைப் பெற்றதால் கருநிறமுடையவனாகி க்ருஷ்ணன்-கருநிறமுடையவன் — என்ற காரணப் பெயரைப் பெற்றான் பகவான் என்பது கருத்து. பகவான் உடலை நீலநிறமுடையதாக்கிய உமது கடாக்ஷத்தால் எங்கள் உடலின் கருமையைப் போக்குகிறீர் என்பது ஆச்சரியப் பொருள். 'விசித்ரம்' என்ற சொல்லை அமைத்துள்ளதால் இப்படி ஒரு பொருள் விளக்கம் தரப்படுகிறது. இந்திரன் முதலான தேவர்களின் செல்வப் பெருக்குக் காரணமான உமது கடாக்ஷத்தால் மோக்ஷவிரோதியான எங்கள் பாபங்களைப் போக்குகின்றாய் என்பது உண்மைப் பொருள். ''அமீ யத்ர த்வித்ரா: ஸ ச சதமகாதி:'' என்பதால் லக்ஷ்மியின் கடாக்ஷத்தால் இந்திரன் செல்வம் பெற்றான் எனப் பட்டர் அநுஸந்தித்தார் ஸ்ரீ குணரத்ந கோசத்தில். (25)

26. विकस्वरामोदभरं वितन्वती पुरोवसंतं प्रथितागमांचिता ।
कटाक्षवल्ली तव माधवप्रिये प्रसौत्यनन्तं सुमिताप्यसौ फलम् ॥

விகஸ்வராமோதபரம் விதந்வதீ, புரோவஸந்தம் ப்ரதிதாகமாஞ்சிதா ।
கடாக்ஷவல்லீ தவ மாதவப்ரியே ப்ரஸௌத்யநந்தம் ஸுமிதாபி அஸௌ பலம் ॥

மாதவப்ரியே - மாதவன் மனைவியே, வைகாசி மாதத்தில் விருப்பமுள்ளவளே
வஸந்தம் - வஸந்தருதுவை
விகஸ்வர - நாற்புறமும் பரவும்
ஆமோதபரம் - வாஸனையின் மேன்மையை உடையதாய்
புர: விதந்வதீ - முதலில் செய்வதாயும்
புரோவஸந்தம் - எதிரிலிருப்பவனை
விகஸ்வராமோத பரம் - மிகுந்த ஸந்தோஷம் உடையவனாக
விதந்வதீ - செய்பவளாயும்
ப்ரதித - பெரிய
அகம - மரத்தில்
அஞ்சிதா - படர்ந்ததாயுமுள்ள
ப்ரதித ஆகம - ஆகமங்களைக் கற்ற ஞானிகளால்
அஞ்சிதா - பூஜிக்கப்பட்டதாயுமுள்ள
தவகடாக்ஷவல்லீ - உமது கடாக்ஷமாகிற கொடி. கொடிபோன்ற உமது கடாக்ஷம்
ஸுமிதா - புஷ்பங்களுடையதாய்
அநந்தம் - அளவில்லாத
பலமபி - பழத்தையும்
ப்ரஸௌதி - தருகிறது
ஸுமிதாபி - மிகச்சிறியதாக இருந்த போதும்
அநந்தம் - எங்கும் பரந்து என்றென்றுமிருப்பதான
பலம் - ப்ரஹ்மத்தை அடைதல் என்ற பலத்தை
ப்ரஸௌதி - உண்டுபண்ணுகிறது.

லக்ஷ்மியின் கடாக்ஷத்தைப் பூங்கொடியாக உருவகிக்கிறார் ஆகவே ''கடாக்ஷவல்லீ தவ மாதவப்ரியே'' என்ற பகுதி நீங்க மற்ற அடிகளிலுள்ள சொற்களை இருவகைகளாகப் பிரித்தும் பிரிக்காதும் இரு வகைப்பொருள் சொல்லப்பட்டுள்ளன.

வஸந்த ருதுவில் (சித்திரை, வைகாசியில்) பூங்கொடிகள் பழைய இலைகளை உதிர்த்துப் புதிதாகத் தளிர்த்து மிகுதியாகப் புஷ்பித்து நான்கு பக்கங்களிலும் வாஸனையை பரவச் செய்யும். லக்ஷ்மி தமதெதிரில் வந்து ப்ரார்த்திப்பவனுக்குத் தம் கடாக்ஷத்தால் நன்மைகளைச் செய்து அவனை ஸந்தோஷிப்பிப்பள். கொடி மரத்தில் படரும் தன்மையது. ஆகமங்களைக் கசடறக்கற்ற ஞானிகளால் லக்ஷ்மிகடாக்ஷம் புகழப்படும். கொடி பூக்களைத் தந்தது போல் மிக்க பழங்களையும் கொடுக்கும் கடாக்ஷமாம் கொடி தேசம் காலம் முதலியவற்றால் அளவிடமுடியாத பரப்ரஹ்மத்தைப் பெறுதல் என்றும் பலத்தைத் தரும். சப்த ச்லேடையிலமைந்த இந்த கருத்துக்களால் லக்ஷ்மியின் கடாக்ஷம் பூங்கொடி போன்றதாயிற்று.

(26)

குறிப்பு:- சென்ற மாதம் லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தில் 145-ஆம் பக்கத்தில் கருத்துரை இரண்டாவது பத்தியில் 7-வது வரியில் சிறந்தது சேர்ப்பிக்கும் என உள்ளது. அதில் சிறந்தது என்றதற்குப்பின் ''அவரவற்கென ஏற்பட்ட பயனைத்தான் தலை எழுத்து'' என்பதைச் சேர்த்துக்கொள்க. 147-ஆம் பக்கத்தில் கடை வரிக்கு முன்வரியில் 'கடாக்ஷமென்பதையும்' என்ற சொல்லை 'கடாக்ஷமென்மையும்' என திருத்திக்கொள்க.

27. न विप्रयोगि व्यसनाय कल्पते
न मार्गणानां सहते च पंचताम् ।
भवं जवात् प्रत्युत दन्दहीत्ययं
जयत्यपाङ्गः तव चित्रमिन्दिरे ॥

ந விப்ரயோகி வ்யஸநாய கல்பதே
ந மார்கணாநாம் ஸஹதே ச பஞ்சதாம் ।
பவம் ஜவாத் ப்ரத்யுத தந்தஹீத்யயம்
ஜயத்யபாங்க: தவ சித்ரமிந்திரே ॥

இந்திரே - லக்ஷ்மீ
தவ அயம் அபாங்க: - மன்மதனிலும் வேறான மன்மதனாம் உமது கடாக்ஷம்
வி(ப்ர)யோகிநாம் - பிரிந்து வாழும் தம்பதிகளுக்கு
விப்ர யோகிநாம் - பகவானின் தன்மைகளை அறிந்தவர்க்கும். யோகம் செய்பவர்களுக்கும்
வ்யஸநாய ந கல்பதே - துன்பத்தை விளைவிப்பதில்லை
மார்கணாநாம் - பாணங்களின், யாசகர்களின்
பஞ்சதாம் - ஐந்தாயிருப்பதை, மிகுதியாக்கி உள்ளமையை
ந ஸஹதே - பொறுப்பதில்லை
ப்ரத்யுத - மாறாக
பவம் - சிவனை, ஸம்ஸாரத்தை
ஜவாத் - சீக்கிரமாக
தந்தஹீதி - பலமுறை எரிக்கிறது
ஜயதி - ஆகவே ப்ரஸித்த மன்மதனிலும் சிறப்புற விளங்குகிறது.

லக்ஷ்மியின் கடாக்ஷத்தை ப்ரஸித்த மன்மதனிலும் வேறான மன்மதனாக சிலேடையில் உருவகித்து அந்த மன்மதன் செயல்களுக்கு மாறான செயல்களை கடாக்ஷம் செய்வதுடன் அவனிலும் சிறப்புற்று விளங்குகிறதென்கிறார். மன்மதன் வியோகிகளுக்கு - பிரிந்த தம்பதிகளுக்குத் துன்பத்தை தோற்றுவிப்பவன் ச்லோகத்தில் விப்ரயோக என்னும் பதம் தான் உள்ளது ஆனால் மன்மதனைப் பற்றிய கருத்தை விளக்கும்போது சொல்லின் இடையிலுள்ள ப்ர என்பதற்குப் பொருளில்லை. மன்மதன் துன்பம் தருபவன். கடாக்ஷமோ வெனின் விப்ரர்களுக்கும் — ஜ்ஞாநிகளுக்கும் யோகிகளுக்கும் துன்பம் விளைவிக்காது. மார்கணங்களின் - பாணங்களின் பஞ்சதையை - ஐந்தா இருப்பதை, தாமரை, அசோகம், மா, மல்லிகை, கருநெய்தல் என்ற ஐந்தின் பூக்களும் மன்மதன் பாணங்களாகும். எனவே அவனுக்குப் பஞ்ச பாணன் என்ற பெயரும் உண்டு. இவ்வைந்தையும் அவன் தமக்குப் பாணமாக இருப்பதற்கு இசைந்துள்ளான். ஆனால் கடாக்ஷமோ மார்கணர்களின் — ஏழைகளின் — மிகுதியைப் பொறுக்காது

அவர்களைச் செல்வந்தர்கள் ஆக்கிவிடுகின்றது. பவனால் - சிவனால் மன்மதன் ஒருமுறை எரிக்கப்பட்டான். கடாக்ஷம் பவத்தை - ஸம்ஸாரத்தை - பலமுறை எரிக்கிறது - அழிக்கிறது. இவ்வகைகளில் மன்மதனோடும் வேறுபட்டிருந்தும் அவனிலும் சிறப்புற்று விளங்குகிறது.

அபகதம் அங்கம் யஸ்ய ஸ: - அபாங்க: - சரீரமிழந்தவன் மன்மதன். (27)

28. विकच कमलशोभा विभ्रमोद्भूतिसीमा
विधुमिह सदुपास्यं तन्वती सुप्रसन्नम् ।
शरदिव नववीक्षा शार्ङ्गिणः प्राणकान्ते
शमयति किल मेघाटोपं उज्जृम्भितापम् ॥

விகச கமல சோபா விப்ரமோத்பூதி ஸீமா
விதுமிஹ ஸதுபாஸ்யம் தந்வதீ ஸுப்ரஸந்நம் ।
சரதிவ நவவீக்ஷா சார்ங்கிண: ப்ராணகாந்தே
சமயதி கில மேகாடோபம் உஜ்ஜ்ரும்பி தாபம் ॥

சார்ங்கிண: - நாராயணனின்
ப்ராணகாந்தே - மனைவியே
விகச - அலர்ந்த
கமலசோபா - தாமரையின் அழகையுடையதும்
விப்ரம - கடாக்ஷ விலாஸங்களுக்கு
உத்பூதிஸீமா - பிறப்பிடமாயும்
விகசகமல - மலர்ந்த தாமரையின்
சோபாவிப்ரம - அழகின் ஆடம்பரத்துக்கு
உத்பூதிஸீமா - உண்டாகும் காலமாயும்
இஹ - இவ்வேளை மகிமையுள்ள
விதும் - பகவானை, சந்திரனை
ஸதுபாஸ்யம் - யோகிகளால் த்யானம் செய்யத்தக்கவனாகவும். நக்ஷத்ரங்களுடன் சேர்ந்து விளங்கும்படியும்.
ஸுப்ரஸந்நம் - யோகிகளிடம் மகிழ்ச்சியுடன் இருப்பவனாகவும் மேகங்கள் போய்விட்டமையால் ப்ரகாசமாக இருப்பவனாகவும்
தந்வதீ - செய்கின்ற
நவ வீக்ஷா - உமது கடாக்ஷம்
சரதிவ - சரத்ருதுவைப்போல்
உஜ்ஜ்ரும்பி - உயர்ந்தெழும்
தாபம் - ஆத்யாத்மிகாதி தாபங்களையுடைய
உஜ்ஜ்ரும்பித ஆடம்பம் - நிலைமுறந்து மேலெழும்
மே - என்னுடைய
அகாடோபம் - கெட்ட நடத்தையை உடையவனாக்குதல் போன்ற பாபங்களின் ஆடம்பரத்தை.
மேக, ஆடோபம் - மின்னல் இடி முதலான மேகங்களின் ஆடம்பரத்தை
சமயதி - போக்குகிறது.

லக்ஷ்மியின் கடாக்ஷத்தை சரத்ருதுவாக வர்ணிக்கிறார். ஐப்பசி கார்த்திகை மாதங்கள் சரத்ருதுவைச் சார்ந்தன. ஐப்பசியோடு மழை முடிந்துவிடும். ஆகாயத்தை மூடிக்கிடந்த மேகமெல்லாம் அகன்றுவிடும். எனவே ஆகாயம் நிர்மலமாய் கருநீலமாய் தோன்றும். சந்திரனும். நக்ஷத்ரங்களுடன் கூடியவனாய் மிக ஒளியுடன் விளங்குவன். சரத்கால சந்திரனை வர்ணிக்காத புலவரிலர். நீர் நிறைந்த தடாகங்களில் செழித்து வளர்ந்த தாமரைகள் செழுமையான தாமரைப் பூக்களைப் புஷ்பிக்கும். இதுவரை இருந்து வந்த மின்னல்களும் இடியோசைகளும் இப்போது இராது. இத்தன்மைகளை விளக்கும் சொற்றொடர்களாலேயே லக்ஷ்மியின் கடாக்ஷத்தன்மைகளை விளக்கும்படி சிலேடையில் வர்ணிக்கிறார். கடாக்ஷத்திலுள்ள அழகின் சிறு திவலையைப் பெற்றதால் தாமரை அழகியதாயிற்று. ச்ருங்கார பாவத்தை வெளியிடும் சிறந்த பார்வை விப்ரமம் எனப்படும். அவ்விப்ரமத்துக்குப் பிறப்பிடம் கடாக்ஷம். வேங்கடவன் லக்ஷ்மியின் கடாக்ஷத்துக்கு இலக்கானமையாலேயே யோகிகள் அவனை த்யானிக்கின்றனர். அவர்களிடம் அவன் எப்போதும் இனியனாக இருக்கும் வண்ணம் அக்கடாக்ஷம் செய்கிறது. என்னிடமுள்ள ஆத்யாத்மிகம் ஆதிதைவிகம் ஆதிபௌதிகம் என்ற தாபங்கள் மிக்கெழுந்துத் தீயவழிகளில் என்னை அவை செலுத்தாவண்ணம் கடாக்ஷம் அவற்றின் ஆடம்பரத்தை அடக்குகிறது. இத்தன்மைகளால் கடாக்ஷம் சரத்ருதுவோடு ஒக்கும். ''விதும் ஸுப்ரஸந்நம் தந்வதீ'' என்றதால் வர்ஷகாலத்தில் தூக்கக் கலக்கத்திலிருந்த பகவானை சரத்ருது தூக்கத்தைப் போக்கித் தெளிவிக்கிறதென்ற பொருள் புலப்படுகிறது. (28)

29. नित्यामेव विभूतिमंब ददतः निर्व्याजबन्धोर्भवत्
दिव्यापाङ्गलवस्य वर्णनविधौ को लब्धवर्णो भुवि ।
जुष्टो दृष्टिभिरष्टभिश्च तिसृभिः प्रायस्सहस्रेणवा
देवि द्वादशभिश्च दैवतगणः यस्मै चिरं तिष्ठते ॥

நித்யாமேவ விபூதிமம்ப ததத: நிர்வ்யாஜ பந்தோ: பவத்
திவ்யாபாங்க லவஸ்யவர்ணநவிதௌ கோலப்தவர்ணோபுவி ।
ஜுஷ்ட: த்ருஷ்டிபி: அஷ்டபிச்ச திஸ்ருபி: ப்ராய:
ஸஹஸ்ரேணவா
தேவித்வாதசபி. ச தைவதகண: யஸ்மை சிரம் திஷ்டதே ॥

அம்ப தேவி - தாயான தேவியே
நிர்வ்யாஜ பந்தோ: - பதிலுதவியை
    எதிர்பாராது உதவி செய்பவரும்
நித்யாமேவ விபூதிம் - கலங்காப்
    பெருநகரான வைகுந்தத்தை
தத்த: - கொடுத்தே நிருபவருன
    நாராயணன் கடாக்ஷத்தையும்
பவத் - உமது
திவ்ய - மேற்கூறியது போல்
    அத்புதமான
அபாங்க லவஸ்ய - கடாக்ஷத்தின்
    சிறுதுளியையும்
வர்ணநவிதௌ - வர்ணிப்பதில்
புவி - உலகில்
க: லப்தவர்ண: - எவன் வல்லவன்
அஷ்டபி: - எட்டு
திஸ்ருபி: - மூன்று
ப்ராய: ஸஹஸ்ரேண
    மிகுதியான ஆயிரம்
த்வாதசபி: - பன்னிரண்டு என்ற
    எண்களுடைய
த்ருஷ்டிபி: - கண்களுடன்
ஜுஷ்ட: - கூடியுள்ள
தைவதகண: - தேவர்களின்
    கூட்டம்
யஸ்மை - எந்த கடாக்ஷத்தின்
    அருளுக்காக
சிரம் - வெகுகாலம்
திஷ்டதே -
    காத்துக்கொண்டிருக்கின்றதோ.

எவ்வித கைம்மாறும் - ப்ரதிப்ரயோஜநமும் - கருதாமல், அழிவற்றதாய் ஆனந்தமயமான மோக்ஷத்தை திவ்ய தம்பதிகள் இருவரும் சேதநவர்கங்களுக்கு அளிக்கின்றனர். நாராயணன் தண்டிப்பவனானமையால் அவன் அருள் கிடைப்பது கஷ்டம் ஆனால் தேவரீர் ஆர்த்ராபராதிகளான காகாஸுரன் ராக்ஷஸ ஸ்த்ரீகள் முதலியவர்களின் கொடுமைகளை மறந்து அவர்களைக் கடாக்ஷித்துக் காப்பாற்றியவராவீர். ஆகையால் அவன் கடாக்ஷத்திலும் சிறப்புடைத்து உமது கடாக்ஷம். இதை வர்ணிப்பதென்பது மனிதன் திறமைக்குட்பட்டதன்று. ஏனெனில் எண்கண்ணினர்களான நான்முகர் கூட்டமும், முக்கண்ணினர்களான ருத்ரர் கூட்டமும் ஆயிரம் கண்ணினர்களான இந்த்ரர்களின் கூட்டமும் பனிரண்டு கண்ணினர்களான ஆறுமுகர் கூட்டமும் பலகண்களைத்தாம் பெற்றிருந்தும் அவற்றை அவர் சுமையாகத் தாங்குபவர்களாய் தாம் கண்படைத்த பயனைப் பெற எந்த லக்ஷ்மியின் கடாக்ஷத்துக்கு இலக்காக வேண்டியவர்களாக இருக்கின்றனரோ அத்தகைய கடாக்ஷத்தை எப்படி வர்ணிக்க முடியும்?

தேவ ஏவ தேவதா: தேவதா ஏவ தைவதாநி. தைவதாநாம் கண: தைவகண: என்பது விக்ரஹம். அண்டங்கள் பலவாகையால் தேவர்களின் எண்ணிக்கையும் பலவாயின. (29)

30. तत्तादृक्षकटाक्षकंकटधरः श्रीवेङ्कटाद्रीशितुः
प्राणप्रेयसि भूयसीं प्रभजते शौर्याभिमुख्यं श्रियम् ।
सत्कीर्त्या सहसामरोत्तमजयं प्राप्तस्तवोपाश्रितः
वाग्बाणैः न विहन्यते क्षितिभुजा निर्जित्य नित्यद्विषः ॥

தத்தாத்ருக்ஷ கடாக்ஷகங்கடதர: ஸ்ரீவேங்கடாத்ரீசிது:
ப்ராணப்ரேயஸிபூயஸிம்ப்ர பஜதே சௌர்யாபிமுக்யம் ச்ரியம் ।
ஸத்கீர்த்யா ஸஹஸாமரோத்தமஜயம் ப்ராப்தஸ்தவோபார்சித:
வாக்பாணை: ந விஹந்யதே க்ஷிதிபுஜாந்நிர்ஜித்யநித்யத்விஷ: ॥

ஸ்ரீ வேங்கடாத்ரிசிது:
ஸ்ரீநிவாஸனின்
ப்ராணப்ரியே -
ப்ராணனிலும்ப்ரியமான மனைவியே
தத்தாத்ருக்ஷ - சொல்லொணாஸ்வரூப ஸ்வபாவங்களையுடைய
கடாக்ஷகங்கடதர: - உமது கடாக்ஷம் என்னும் கவசத்தை (உருவகம், கவசம் போன்ற கடாக்ஷத்தை (உபமை) தரிப்பவன்
சௌர்யாபி முக்ய ச்ரியம் - தான் பராக்ரமத்தைப்பெற்றதால் இதில் பின் சொல்லவிருக்கும் செல்வத்தை
சௌரி - நாராயணனுக்கு
ஆபிமுக்ய - அநுகூலமாவதால்
ச்ரியம் - செல்வத்தையும்
பஜதே - அடைகிறான்
நித்யத்விஷ: - என்றும் பகைமையே பாராட்டுபவர்களை
நிர்ஜித்ய - தமது பலத்தால் வெற்றிகண்டு
ஸாமரம் - போரில் கிடைப்பதும்
உத்தமம் - உயர்ந்ததுமான
ஜயம் - வெற்றியை
ஸத்கீர்த்யாஸஹ - நல்ல புகழுடன்
ப்ராப்த: - அடைந்தவனாய்
ஸ்தவோபார்ஜித: -
எல்லோராலும் புகழப்படுவனாய்
ப்ராப்த: - அடைந்தவனாய்
ஸ்தவோபார்ஜித: -
எல்லோராலும் புகழப்படுபவனாய்
நித்யத்விஷ: - காமம் க்ரோதம் முதலியறு சத்ருக்களை
நிர்ஜித்ய - வென்று
க்ஷிதிபுஜாம் - அரசர்களின்
பாணை: - பாணங்களால்
நவிஹந்யதே -
அடிபடுகிறானில்லை.
உவமைப்பொருள்
ஸஹஸா - கவசம் போன்ற கடாக்ஷத்தைப் பெற்றவுடன்
ஸத்-கீர்த்யா - அவர் ஸத்புருஷர் என்ற புகழுடன்
அமரோத்தம ஜயம் - இந்திரன், ஸநகர் முதலிய ப்ரஹ்மத்தை அறிந்தவர்களிலும் மேன்மையை
க்ஷிதிபுஜாம் - அரசர்களின்
வாக்பாணை: - சொற்களாகிய பாணங்களால்
ந விஹந்யதே - அடிபடுவதில்லை.

லக்ஷ்மியின் கடாக்ஷத்தைக் கவசமாக உருவகித்தும் கவசம் போன்றது உமது கடாக்ஷம் என உவமையாகக் கூறியும் அதைப் பெற்ற இருவரின் மேன்மையை சிலேடையில் கூறுகிறார். தத்தாத்ருக்ஷ என்பதற்கு ஸ சாஸௌ தாத்ருக்ஷப்ச எனவிக்ரஹம் சொல்லவேண்டும். எனவே ஸ: என்பதற்கு (கவசத்தின்) ஸ்வரூபம் என்றும் தாத்ருக்ஷ என்பதற்கு கடாக்ஷத்தின் தன்மை என்றும் பொருள் சொல்லப்பட்டுள. இனிஉருவாகப் பொருளைக்காண்போம்.

கவசத்தை அணிந்திருப்பவன் பகைவரின் பாணங்களால் அடிபடுவதில்லை. எனவே கடாக்ஷமாம் கவசத்தை அணிந்தவன் நீண்டநாளாகப் பகைமை பாராட்டியவர்களை இப்போது எளிதில் வெற்றிபெறுகிறான். அதனால் நல்ல புகழுடன் பலர்பாராட்டையும் அடைகிறான். இனி உவமைப்பொருள்.

''அஸ்தி ப்ரஹ்ம இதி சேத் வேத, ஸந்தமேநம் ததோ விது:'' என்ற உபநிஷத், ப்ரஹ்மம் உளது என எண்ணி அதனை நன்கறிபவன் ''ப்ரஹ்மவித்'' ஆவான் என்கிறது. வேதத்தால் இப்படிப் புகழப்படும் ''ஸத்'' என்ற பெயரைக் கவசம் போன்ற கடாக்ஷத்தைப் பெற்றவன் பெறுகிறான். தேவர் தலைவனான இந்திரனுடையவும் ஸநக ஸநந்தநாதி மஹர்ஷிகளினுடையதுமான மேன்மைகளை இவனும் பெறுகிறான். எல்லோராலும் புகழப்படுகிறான். மனிதனுடனேயே பிறந்து என்றும் சத்ருவாயுள்ள காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்னும் ஆறினையும் வெல்கிறான், வென்றதால் அரசனருகில் செல்லவேண்டிய காரணமில்லை இவனுக்கு ஆகவே அரசச் சேவகர்களின் கொடுஞ்சொற்களால் துன்பப்படுவதில்லை. ஆக லக்ஷ்மியின் கடாக்ஷம் ஐஹிகம் ஆமுஷ்மிகம் என்ற இரு பயன்களையும் தரவல்லதாயிற்று. (30)

31. यावद्भावत्कवीक्षा विशति तनुभृतां इन्दिरे मन्दिरेषु
व्यक्तं नृत्तं विधत्ते धनपतिविभवादुत्तरा वित्तराजिः ।
द्वारे तारेशगौराः तुरगपरिबृढा बन्धुरा स्सिन्धुरावा
गर्वाद्धुष्यन्त्यखर्वाभ्युदयमधिमुखं राजते राजतेजः ॥

யாவத்பாவத்கவீக்ஷா விசதி தநுப்ருதாமிந்திரே மந்திரேஷு
வ்யக்தம் ந்ருத்தம் விதத்தே தநபதிவிபவாதுத்தராவித்தராஜி: ।
த்வாரே தாரேசகௌரா: துரகபரிப்ருடா: பந்துரா: ஸிந்துராவா
கர்வாத் உத் குஷ்யந்த்யகர்வாப்யுதயமதிமுகம் ராஜதே ராஜதேஜ: ॥

இந்திரே - லக்ஷ்மியே
பாவத்கவீக்ஷா - உமது கடாக்ஷம்
தநுப்ருதாம் - மனிதருடைய
மந்திரேஷு - வீடுகளில்
யாவத் விசதி - எப்போது ப்ரவேசிக்கின்றதோ
தாவத் - அப்போதே
தநபதிவிபவாத் - குபேர செல்வத்திலும்
உத்தரா - உயர்ந்த
வித்தராஜி: - செல்வக்குவியல்
வ்யக்தம் - பலரறிய
ந்ருத்தம் விதத்தே - நர்த்தனம் செய்கின்றது
தாரேச - சந்திரன்போல்
கௌரா: - வெண்மையான
துரகபரிப்ருடா: - உயர்ந்த குதிரைகளும்
த்வாரே - வாயிலருகில்
ந்ருத்தம்விதத்த: - நடனமாடுகின்றன
பந்துரா: - அழகிய
ஸிந்துரா வா - யானைகளும்
கர்வாத் - மதத்தால்
குஷ்யந்தி - பிளிறுகின்றன
அதிமுகம் - யானைகுதிரைகளின் முகங்களில்
அகர்வாப்யுதயம் - குறைவின்றி
ராஜதேஜ: - அரசனுடையது போன்ற ஒளி
ராஜதே - மிளிருகின்றது

உமது கடாக்ஷத்துக்கு எவனொருவன் எப்பொழுது இலக்கா ஆயினனோ அப்போதே அவன் வீட்டில் நவநிதிகள் நவமணிகள் போன்ற குபேரச் செல்வ வகைகள் குவியல் குவியல்களாய் வந்தடைந்துக் குபேரன் வீட்டினும் மேன்மையுற்றதாய் விளங்குகிறது அவன் வீடு. அவன் வீட்டு வாயில் வெண்மையான உயர்ந்த குதிரைகளின் குளம்படிகளால் அலங்கரிக்கப்படுகிறது. ஸிந்துரம் என்ற உயர்ந்த ஜாதியைச் சார்ந்த யானைகள் மதத்தால் பிளிறிக்கொண்டிருக்கின்றன ஆங்கே. இப்பிராணிகளின் முகங்களில் அரசனின் ஒளி விளங்குகிறது.

''ந்ருத்தம் விதத்தே'' என்ற விடத்து ''விதத்தே'' என்பது ஒருமை வினைமுற்று. அது ''வித்தராசி: ந்ருத்தம் விதத்தே'' எனப்பொருள்கொள்ளத் தகுதியுடைத்து. ''துரகபரிப்ருடா:'' என்பது பன்மைச்சொல். அதற்கு எற்பப்பன்மைச் சொல் ச்லோகத்தில் இல்லை. எனவே ''விதத்தே'' என்ற ஒருமைச் சொல்லை ''விதததே:'' எனப்பன்மையாகமாற்றிப் பொருள்கொள்ள வேண்டும். (31)

32. धन्यः कश्चित् जगति विषयः तावकालोकितानां
अत्रामुत्राप्यखिलजननि प्राप्य गोत्राधिकृत्वम् ।
सत्सन्तानप्रभवसुमनस्सेवयाऽऽमोदशाली
जैत्रस्थानं किमपि जगति श्रीमदुच्चामरं च ॥

தந்ய: கச்சித் ஜகதி விஷய: தாவகாலோகிதாநாம்
அத்ராமுத்ராபி அகில ஜநநி ப்ராப்யகோத்ராதிக்ருத்வம் ।
ஸத்ஸந்தாநப்ரபவ ஸுமநஸ்ஸேவயாऽऽ மோதசாலீ
ஜைத்ரஸ்தாநம் கிமபி ஜகதி ஸ்ரீமதுச்சாமரஞ்ச ॥

அகிலஜநநி - உலகமாதாவே
தந்ய: - உமது கடாக்ஷத்தைப் பெறத்தக்க நன்மையைச் செய்த
கச்சித் - மிக்க எளியவனும்
தாவக - உமது
ஆலோகிதாநாம் - கடாக்ஷங்களுக்கு
விஷய: - இலக்கானவனாய்
அத்ர - இவ்வுலகில்
கோத்ர - பூமண்டலத்தின்
அதிக்ருத்வம் - அதிகாரியாய் இருக்கும் தன்மையை
ப்ராப்ய - அடைந்து
ஸத்ஸந்தாந ப்ரபவ - உயர்ந்த குடியில் பிறந்த
ஸுமநஸ்ஸேவயா - அறிவாளிகளின் வழிபாட்டால்
ஆமோதசாலீ - ஸந்தோஷத்தை உடையவனாய்
ஸ்ரீமத் - அழகிய
உச்சாமரம் - உயர்த்திய சாமரைகுடை முதலியவற்றை உடையவனாய்.
கிமபி - உயர்ந்த

ஜைத்ர ஸ்தாநம் - ஸிம்ஹாஸநத்தை
பஜதி - அடைகிறான்.
அமுத்ராபி - மேலுலகிலும்
கோத்ர - மலைகளுக்கு
ஆதிக்ருத்வம் - மணத்துன்பத்தை
விளைவித்த இந்திரப் பதவியை
ஸத் - புகழுடைய
ஸந்தாந - கல்பவ்ருக்ஷத்தில்
ப்ரபவா: - புஷ்பித்த
ஸு^மந: - புஷ்பங்களின்
ஸேவயா - அநுபவத்தால்
ஆமோதசாலீ -
நறுமணமுடையவனாய்
உச்ச அமரஞ்ச - உயர்ந்த
குபேரன் வருணன்
முதலியவரின்
ஜைத்ர - ஜயசாலியாயும்
கிமபி - மிக்க புகழுடையதுமான
ஸ்தாநம் - ஸு^தர்மா என்ற
ஸபையை
பஜதி - அடைகிறான்.

தாயேமிக்க எளியவனும் உமது கடாக்ஷத்துக்கு இலக்காயினனேல் இம்மை மறுமை என்னும் இருமையிலும் அவன் மேன்மை அடைகிறான் என்கிறார். இம்மையில் சக்ரவர்த்தியாய் பூமண்டலம் முழுவதையும் ஆள்கிறான். அப்போது உயர்குடிப்பிறப்பும் நற்குணநல்லொழுக்கங்களுமுடைய . பல புலவர்களின் தொடர்பு கிடைக்கப் பெற்றவனாய் அவர்கள் வாயிலாக இலக்கியம் முதலிய பல வகைகளில் ஆனந்தமடைகிறான். சாமரை குடை முதலிய அரச சின்னங்களையடைந்து ஸிம்ஹாஸநத்தில் வீற்றிருந்து அரசாள்கிறான்.

மறுமையில் தேவேந்திரப் பதவியை அடைகிறான். கற்பகத் தோட்டத்தில் அமர்ந்து அப்புஷ்பங்களை அணிந்து அம்மலரின் மணம் வீசத் திகழ்கிறான். குபேரன் வருணன் முதலானதேவர் வீற்றிருப்பதாய் மிக்க புகழுடையதாய் உயர்ந்ததான ஸு^தர்மா எனப்பெயர்பெற்ற ஸபையில் அமர்கிறான்.

முற்காலத்தில் மலைகள் இறக்கைகளையுடையனவாய் தம்மிஷ்டப்படி பறந்து க்ராமங்களின் மீதமர்ந்து மக்களை அழித்தன. இதனைக் கண்ட இந்திரன் அவற்றின் சிறகை வெட்டி வீழ்த்தினன். எனவே இந்திரன் மலைகளின் பகைவனாயினன்.(32)

33. शय्योत्थायं जननि धनिनां वासमासायमित्थं
गत्वागत्वापि अनुदिन मनुच्छिन्न तृष्णोद्गमोहम् ।
हृद्यापांगामिव भवदवप्लोषशान्त्यै रमे त्वां
हृद्यापांगां मधुरिपुवशीकारविद्ये प्रपद्ये ॥

சய்யோத்தாயம் ஜநநி தநிநாம் வாஸமாஸாயமித்தம்
கத்வாகத்வாபி அநுதிநமநுச்சிந்ந த்ருஷ்ணோத்கமோஹம் ।
ஹ்ருத்யாபாங்காமிவ பவதவப்லோஷசாந்த்யை ரமே த்வாம்
ஹ்ருத்யாபாங்காம் மதுரிபுவசீகாரவித்யே ப்ரபத்யே ॥

மதுரிபுவசீகார வித்யே - தஞ்சம் புகுந்தவற்கு நாராயணனை வசீகரிப்பதற்குரிய வழியை வகுப்பவளாயும்
ஜநநி ரமே - தாயுமான லக்ஷ்மி!
அநுதிநம் - ஒவ்வொரு நாளும்
சய்யோத்தாயம் - படுக்கையிலிருந்து எழுந்தது முதல்
ஆஸாயம் - ஸாயங்காலம் வரை
தநிநாம்வாஸம் - செல்வந்தர் மாளிகைகளுக்கு
இத்தம் கத்வா கத்வாபி - ஒவ்வொரு நாளும் பலமுறை இதுபோல் சென்றுசென்று
அநுச்சிந்த - நிவ்ருத்தி ஆகாத
த்ருஷ்ணோத்கம: - செல்வம் அடையவேண்டும் என்ற ஆசையை உடைய
அஹம் - நான்
பவதவ - ஸம்ஸாரமென்னும் காட்டுத்தீயிலுண்டான
ப்லோஷ சாந்த்யை - தாபத்தைத் தணிப்பதற்கு
ஹ்ருத்ய - மனோஹரமான
அபாங்காம் - கடாக்ஷத்தையுடைய
த்வாம் - தேவரீரை
ஹ்ருத்யாபாம் - நீர் நிறைந்த ஆழமான குளத்தையுடைய
காமிவ - பூமியைப்போல்
ப்ரபத்யே - சரணமாகப்பற்றுகிறேன்.

''ப்ரபந்நாதந்யேஷாம் ந திசதி முகுந்த: நிஜபதம்'' என்பது ஸ்வாமி தேசிகன் திருவாக்கு. ப்ரபத்தி செய்யாதவருக்கு ஒருகாலும் மோக்ஷமளியான் நாராயணன். சேதநர் செய்தபாபங்கள் அளவற்றதானமையால் அவற்றைப் பார்த்து நாராயணன் ப்ரஸன்னனாகான். அவனை அணுகுவதே இயலாதது. எனவே அவன் கோபத்தைப் போக்குவதற்காக முதலில் புருஷகார ப்ரபத்தி எனப்படும் ஸ்ரீ ப்ரபத்தியை பெரியோர் அநுஷ்டிப்பர். ''சரணாகதிகத்யத்தில்'' ஸ்ரீ பாஷ்யகாரர் முதலில் ஸ்ரீப்ரபத்தியைச் செய்துள்ளார். இக்கருத்தை உள்ளடக்கிய ஸம்போதனம் - விளி - ஆம் ''மதுரிபுவசீகாரவித்யே'' என்பது.

படுக்கையிலிருந்து சீக்கிரமாக எழுந்து எத்துனை செல்வந்தர் மாளிகைகள் உளவோ அத்துனைகளிலும் ஒவ்வொரு நாளும்

ஏறி ஏறி இறங்கியும் போதிய செல்வம் கிடைக்காததால் பணத்தைப் பெறவேண்டும் என்ற ஆசை ஓய்வுபெறவில்லை. மாறாக ஓடியோடித்திரிந்ததால் தாஹம்தான் மிகுதியாயிற்று. அடியேனோ ஸம்ஸாரம் என்ற பெயரால் மறைக்கப்பட்ட காட்டுத்தீயில் சிக்கி அதனால் தஹிக்கப்பட்டு மிகுந்த தாபத்தையுடையவனாக உள்ளேன். க்ரீஷ்மகால வெயிலிலடிபட்டவன் ஆழமான நீர்நிலையைப் பெற்றதாய் குளிர்ந்ததான இடத்தை அடைவது போல் க்ஷேமத்தைத் தரும் கடாக்ஷத்தையுடைய தேவரீரை சரணமடைகிறேன். (33)

34. वितन्वन्त्यामिष्टं विविधमचिरात् ईक्षणलवैः
भवत्यां जाग्रत्यां भगवति नरान् सेवितुमनाः ।
क्षरन्तीमभ्यर्णे कमलसुरभि स्वादुसलिलां
स्रवन्ती मुल्लंघ्य श्रयति मृगतृष्णां अति तृषा ॥

விதந்வந்த்யாமிஷ்டம் விவித மசிராத் ஈக்ஷணலவை:
பவத்யாம் ஜாக்ரத்யாம் பகவதி நராந் ஸேவிதுமநா: ।
க்ஷரந்தீமப்யர்ணே கமல ஸௌரபி ஸ்வாதுஸலிலாம்
ஸ்ரவந்தீமுல்லங்க்ய ச்ரயதி ம்ருகத்ருஷ்ணாம் அதி த்ருஷா ॥

பகவதி - ஷட்குணபூர்ணையே
ஈக்ஷணலவை: - கடாக்ஷலேசத்தால்
அசிராத் - சீக்ரமாக
விவிதமிஷ்டம் - பல்வகையான ஐஹிக ஆமுஷ்மிகங்களை
விதந்வந்த்யாம் - விசேஷமாக அளிக்க
பவத்யாம் - தேவரீர்
ஜாக்ரத்யாம் - எவன் எப்போது என்ன கேட்கப்போகிறான் என்று எண்ணி அவற்றை அளிக்கக் காத்திருக்கும் உம்மை அநாதரித்து
நராந் - அல்பமனிதர்களை
அதித்ருஷா - செல்வத்தைப்பெறவேண்டுமென்ற மிக்க ஆசையால்
ஸேவிதுமநா: - வழிபட விரும்பிய அறிவிலியொருவன்
அப்யர்ணே - அருகிலேயே
க்ஷரந்தீம் - பெருகுவதும்
கமலஸௌரபி - தாமரைப் பூவின் மணமுள்ளதும்
ஸ்வாதுஸலிலாம் - இனிய ஜலத்தை உடையதுமான
ஸ்ரவந்தீம் - நதியை
உல்லங்க்ய - இந்நீர் நம்வேட்கையைத் தீர்க்காது என்ற எண்ணத்தாலதைக் கைவிட்டு
அதித்ருஷா - மிக்க நீர்வேட்கையால்
ம்ருகத்ருஷ்ணாம் - கானல் நீரை
ச்ரயதி - அடைகிறான்.

பசு, புத்ர, தநாதி ஐஹிகங்களையும், மோக்ஷாந்தமான ஆமுஷ்மிகங்களையும் எப்போது எந்த பக்தன் நம்மிடம் யாசிக்கப்போகிறன் என்ற எண்ணத்துடன் அவன் விரும்பியவைகளை அப்போதே அளிக்கத் தேவரீர் காத்துக்கொண்டிருக்கத் தேவரீரை வழிபட்டு அவைகளைப்

பெறாது அல்பசக்தியுடைய மனிதனிடம் சென்று அவன் நம் எண்ணங்களை எல்லாம் பூர்த்தி செய்வன் என்ற எண்ணத்துடன் அவனை வழிபடுவது மிக்க நீர் வேட்கைகொண்ட ஒருவன் தாமரைப் பூக்களின் வாஸனை மிக்கதும் இனிமையான நீரையுடையதும், அருகிலே இருப்பதுமான நதியை இந்நதி நமது தாகத்தைத் தீர்க்காதென உபேக்ஷித்து, இது நம் தாகத்தைத் தீர்க்குமென்ற எண்ணத்துடன் கானல் நீரைக் கண்டு ஒருவன் ஓடுவதற்குச் சமமாகும். *(34)*

35. अजीर्यदघनाशनं दृढगदाकरं देवियत्
पुराणमपि पूरुषं पुनरलंघनं पुष्यति ।
तदेतदिह पातु नः तव कटाक्षदिव्यौषधं
फणीन्द्रशयजीविके भवविपन्मयादामयात् ॥

அஜீர்யதகநாசநம் த்ருடகதாகரம் தேவியத்
புராணமபி பூருஷம் புநரலங்கநம் புஷ்யதி ।
ததேததிஹ பாதுந: தவ கடாக்ஷ திவ்யௌஷதம்
பணீந்த்ரசயஜீவிகே பவவிபந்மயாதாமயாத் ॥

பணீந்த்ரசய - ஆதிசேஷனில் படுத்துள்ள நாராயணனை
ஜீவிகே தேவி - விஷத்திலிருந்து காக்கும் தேவியே
யத்கடாக்ஷ - தேவரீர் கடாக்ஷமாகிய யாதொரு
திவ்யௌஷதம் - வீர்யமுள்ள மருந்துண்டோ அது.
அஜீர்யத் - நன்கு ஜெரிக்காததும்
அகந - அல்பமுமான
அசநம் - ஆஹாரத்தையுடையவனும்
த்ருட - அழிக்கமுடியாத
கத - வ்யாதிகளுக்கு
ஆகரம் - இருப்பிடமானவனுமான
புராணம் பூருஷமபி - மிகக் கிழவனையும்
அலங்கநம் - உபவாஸமில்லாமலே
புஷ்யதி - தமது வீர்யத்தால் நோயைப் போக்குகிறதோ
அஜீர்யத் - ப்ராயச்சித்தம் முதலியவற்றால் அழிக்க முடியாத
அக - பாபங்களை
நாசநம் - கடாக்ஷத்தாலேயே அழிப்பவனும்
த்ருடகதாகரம் - உறுதியான கதையைக் கையில் கொண்டவனும்
கநம் - மேகம் போன்ற நிறமுடையவனுமான
புராண பூருஷம் - பழைமையான புருஷனையும்
அலம்புஷ்யதி - மிகவும் புஷ்டியுடையவனாக்குகின்றதோ
ததேதத் - வீர்யமுடையதெனக் கண்கூடாக் காணப்பட்ட அந்தகைய
தவ கடாக்ஷ - உமது கடாக்ஷமாம்
திவ்யௌஷதம் - வீர்யமுள்ள மருந்து
பவவிபந்மயாத் - ஸம்ஸாரமென்றும் ஆபத்துடன் கூடிய
ஆமயாத் - வியாதியிலிருந்து
இஹ - இந்த ஜந்மத்தில்
ந: - எங்களை
பாது - காக்கட்டும்.

லக்ஷ்மியின் கடாக்ஷத்தை மருந்தாகச் சிலேடையில் உருவகம் செய்கிறார். ரக்தபுஷ்டியுள்ளவர்களுக்கு வியாதி சீக்கிரமாகவும் எளிதாகவும் குணப்படுத்த முடியும். வயதானவர்களுக்கு அப்படி குணமாக்க முடியவில்லை. வயதாகிவிட்டது. ரக்த வலி குன்றிவிட்டது. அவ்வளவுதான் முடியும் என உலகில் சொல்வது யாவருமறிந்ததே. மருந்து ஸாப்பிடும்போது ஆஹாரம் கூடாது. பத்யம் உண்டு. கஞ்சிதான் ஸாப்பிடவேண்டும் என்றெல்லாம் வைத்யர் உபவாஸதுல்யமாக ஆஹாரநியமம் சொல்வதையும் காண்கிறோம். ஆனால் லக்ஷ்மியின் கடாக்ஷமாம் மருந்து இவ்விதம் உபவாஸாதி ச்ரமமில்லாமல் புராணபுருஷனான - மிகவயதான - நாராயணனையும் எக்குறையுமில்லாது ஸர்வ ஸம்பத்தும் உடையவனாக ஆக்குவிக்கும் வீர்யமுள்ள மருந்தாகவுள்ளது. அம்மருந்து எங்களது ஆபத்துமிக்க ஸம்ஸாரமாம் வியாதியைப் போக்கட்டும். உமது கடாக்ஷம் ஒன்றாலேயே அவ்வியாதி போக்கமுடியும் என வேண்டுகின்றார். (35)

36. दुर्लंघसंसृति दुर्णव कर्णधाराः
संपद्वधू सततनर्तन सूत्रधाराः ।
अज्ञान कानन विदार कुठार धाराः
पद्मे जयन्ति भवदीय कटाक्षधाः ॥

துர்லங்க ஸம்ஸ்ருதி துரர்ணவ கர்ணதாரா:
ஸம்பத் வதூ ஸததநர்தந ஸூத்ரதாரா: ।
அஜ்ஞாந காநந விதார குடாரதாரா:
பத்மே ஜயந்தி பவதீய கடாக்ஷதாரா: ॥

பத்மே - லக்ஷ்மி!
துர்லங்க - கஷ்டப்பட்டும் கடக்க முடியாத
ஸம்ஸ்ருதி - ஸம்ஸாரமென்றும்
துரர்ணவ - துக்கமய ஸமுத்ரத்தைக் கடப்பதற்கு
கர்ணதாரா: - மாலுமிபோன்றவைகளும்
ஸம்பத்வதூ - செல்வமாம் பெண்ணின்
ஸததநர்த்தந - வாத்யங்களுடன் சேர்ந்த நடனத்துக்கு
ஸூத்ரதாரா: - நாடகாசிரியன் போன்றவைகளும்
அஜ்ஞாந - அஜ்ஞாந, அந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாநங்களாகிய
காநந - காடுகளை
விதார - அழிப்பதில்
குடாரதாரா: - கோடரியின் நுனிபோன்றவைகளுமான
பவதீய - தேவரீரது
கடாக்ஷதாரா: - கடாக்ஷவரிசைகள்
ஜயந்தி - விசேஷமாக விளங்குகின்றன.

லக்ஷ்மியின் கடாக்ஷம் பலபல தொழில்களில் வல்லமைபெற்ற பலரினும் மேன்மையுற்று விளங்குகின்றது என்கிறார். (36)

37. देवि कटाक्षलवस्तव रिक्ते संपद माधिपदेपि निधत्ते ।
सिन्धुकुमारि तथाप्यतमस्के सिध्यति तत्र समाधिरदृप्ते ॥

தேவிகடாக்ஷலவஸ்தவ ரிக்தே
ஸம்பதமாதிபதேபி நிதத்தே ।
ஸிந்து குமாரி ததாப்யதமஸ்கே
ஸித்யதி தத்ர ஸமாதி ரத்ருப்தே ॥

ஸிந்துகுமாரி - பாற்கடல் கன்னியான
தேவி - பகவானின் மஹிஷியே
தவ கடாக்ஷ லவ: - உமது கடைக்கண் பார்வை
ரிக்தே - ஏழையாயும்
ஆதிபதே - மனோவ்யாதிக்கு இருப்பிடமானவனுமான புருஷனிடம்
ஸம்பதம் - அவற்றைப் போக்க வல்ல செல்வத்தை
நிதத்தே - அடையச்செய்கிறது
ததாபி - இருந்தபோதும்
தத்ர - அந்த ஏழையிடம்
ஸம்-ஆதி: ஸித்யதி - மநோவ்யாதி உறுதியாக உள்ளது வியாதியைப் போக்கக் கொடுத்த மருந்து வியாதியை நிலைபெறச் செய்தது என்றன்றோ பொருள் தோன்றுகின்றது. அதுவல்ல பொருள் உண்மைப்பொருள் வருமாறு
அதமஸ்கே - தாமஸகுணமில்லாதவனும்
அத்ருப்தே - அஹங்காரமற்றவனும்
தத்ர - உன் கடாக்ஷத்தால் கிடைக்கப்பெற்ற செல்வத்தை உடையவனுமான புருஷனிடம்
ஸமாதி: - பகவானை த்யானம் செய்வதாகிய ஸமாதி யோகம்
ஸித்யதி - ஸித்திக்கிறது.

ஏழையின் மனம் மனோவ்யாதிநிறைந்திருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? அவன் கஷ்டத்தைக் கண்ட உமது கடாக்ஷம் அவனைமிக்க செல்வத்தை அடையச் செய்கிறது. தேவதாந்தரங்களை வழிபட்டுப்பெற்ற செல்வம் தாமஸச் செயல்களான கெட்டநடத்தைகளில் செலுத்துவதுபோல் உமது அருளால் பெற்ற செல்வம் கெட்ட நடத்தைகளில் செலுத்துவதில்லை. ஆணவத்தையும் தாமஸ குணத்தையும் அழித்து பகவானைத் தியானிப்பது போன்ற மோக்ஷமார்கத்துக்கு வழிவகுக்குகிறதென்பது கருத்து. (37)

38. करुणया कलशोदधि कन्यके जडतमेष्ववलोक मघापहम् ।
विततुषे सकृदेष पुनस्तनोति अनवलोक मधन्य दुरासदम् ॥

கருணயா கலசோததி கந்யகே ஜடதமேஷ்வவலோகம் அகாபஹம் ।
விதநுஷே ஸக்ருதேஷபுநஸ்தநோதி அநவலோகமதந்யதுராஸதம் ॥

கலசோததிகந்யகே - க்ஷீராப்திபுத்ரீ
ஜடதமேஷு - அஜ்ஞாநிகளிடம்
கருணயா - தயையால்
அகாபஹம் - அறிவின்மைக்குக் காரணமான பாபத்தைப் போக்கவல்ல
அவலோகம் - கடாக்ஷத்தை
ஸக்ருத் - ஒருமுறை
விதநுஷே - செலுத்துகிறீர்
ஏஷபுந: - இக்கடாக்ஷமோவெனில்
அதந்ய துராஸதம் - பாபிகளால் அடையமுடியாத
அநவலோகம் - பழமையான உலகமான ஸ்ரீவைகுண்டத்தை
தநோதி - உண்டுபண்ணுகிறது.

கடற்கன்னியே! தேவரீர் ஜடர்களின் - பாபிகளிடம் - அறிவிலிகளிடம் கருணைகொண்டு அவர்களின் குறையைப் போக்க ஒருமுறை கடாக்ஷத்தைச் செலுத்தினால் போதும். அக்கடாக்ஷம் அவர்களுக்கு மேல் செய்யவேண்டியவைகளான மோக்ஷமடைதலளவான எல்லாச் செயல்களையும் தாமே செய்து முடித்துவிடுகிறது. ஆகவே கடாக்ஷமே உம்மிலும் அந்தரங்கமானது முமுக்ஷுக்களுக்கு என்பது கருத்து. (38)

39. **स्वादुशीतल दयारसपूर्णं सेवितं द्विजवरैः अमृतोत्कैः ।**
देवि तावककटाक्षतटाकं विश्वताप विगमाय विगाहे ॥

ஸ்வாதுசீதலதயாரஸ பூர்ணம்
ஸேவிதம் த்விஜவரை: அம்ருதோத்கை: ।
தேவி தாவக கடாக்ஷ தடாகம்
விச்வதாப விகமாய விகாஹே ॥

தேவி - நாராயணமஹிஷியே
ஸ்வாது - இனிமையானதும்
சீதல - தாபத்தைப் போக்கவல்லதும் குளிர்ந்ததும்
தயாரஸ - தயையாம்ஜலத்தால்
பூர்ணம் - நிறைந்ததும்
அம்ருத உத்கை: - மோக்ஷத்தில் விருப்பமுடைய, நீர் வேட்கையுடைய
த்விஜவரை: - ப்ராஹ்மணர்களால் பக்ஷிகளால்
ஸேவிதம் - தஞ்சமாகக் கொள்ளப்பட்டதும், நீர் பருகப்பட்டதும்
தாவகம் - உம்முடையதுமான
கடாக்ஷ தடாகம் - கடாக்ஷமாகிய குளத்தை
விச்வதாப விகமாய - உள்ளும் புறமுமுள்ள தாபத்தைப் போக்க
விகாஹே - ப்ரவேசிக்கிறேன்.

தேவியின் கடாக்ஷத்தைக் குளமாக உருவகிக்கிறார். குளம் தெளிந்ததும், குளிர்ந்ததும், வெயில்தாபத்தைப் போக்கத்தக்கதுமான ஜலத்தால் நிறைந்திருக்கும். நீர் வேட்கையுடைய பறவைகள் அதிலுள்ள நீரைப் பருகி

வேட்கையைப் போக்கிக்கொள்ளும். அதுபோல் லக்ஷ்மியின் கடாக்ஷமும் ஆத்யாத்மிகம் முதலாய தாபத்தைப் போக்கவல்லதாதலால் இனிமையானது. தயை என்னும் நீரால் நிறைந்தது. மோக்ஷம் விரும்பும் ப்ராஹ்மணர்களால் தமக்குத் தஞ்சமாகக் கொள்ளப்படுவது. அத்தகைய உமது கடாக்ஷமாம் தடாகத்தை உள்ளும் புறமுமுள்ள தாபத்தைப் போக்கிக்கொள்ளப் புகுகிறேன்.

ப்ரஸித்தகுளம் உள்தாபத்தைப் போக்காது. கடாக்ஷகுளம் அத்தாபத்தையுமகற்றும். கடாக்ஷத்தைக் குளமாக உருவகித்தமையால் குளம் ஊர் மக்களால் பருக்கப்பட்டு அனைவரையும் காப்பது போல் கடாக்ஷமும் தஞ்சமடைந்த அனைவரையும் காக்கும் என்பது புலப்படுகிறது. (39)

40. प्रागेव स्यात् प्रार्थितार्थस्य सिद्धिः
पश्चादंब त्वत्कटाक्षोपलंभः ।
दृष्टान्तो नः तत्र ते दृष्टिपातात्
प्रागंभोधिं लंघयन् पावमानिः ॥

ப்ராகேவ ஸ்யாத் ப்ரார்த்திதார்த்தஸ்ய ஸித்தி:
பச்சாதம்ப த்வத்கடாக்ஷோபலம்ப: ।
த்ருஷ்டாந்தோ ந: தத்ர தே த்ருஷ்டி பாதாத்
ப்ராகம்போதிம் லங்கயந் பாவமாநி: ॥

அம்ப - தாயே
ப்ரார்த்தித அர்த்தஸ்ய - விரும்பிய பொருளின்
ஸித்தி: - கை கூடுதல்
ப்ராகேவ ஸ்யாத் - முன்னதாகவே கிடைத்துவிடுகிறது
த்வத்கடாக்ஷ - உமது கடாக்ஷத்தின்
உபலம்ப: - சேர்க்கை
பச்சாத் - பின்பே உண்டாகின்றது
தத்ர - இக்கருத்தில்
தே - உமது
த்ருஷ்டிபாதாத் ப்ராக் - கடாக்ஷத்தைப் பெறுவதற்கு முன்பே
அம்போதிம் - எவராலும் கடக்க முடியாத கடலை
லங்கயந் - எளிதாகக் கடந்த
பாவமாநி: - வாயுபுத்ரனான அநுமான்
ந: - எங்களுக்கு
த்ருஷ்டாந்த: - எடுத்துக்காட்டு ஆவான்.

உலகில் காரணத்தை முதலிலும் கார்யத்தைப் பின்பும் காண்கிறோம். ஆனால் உமது விஷயத்தில் அது மாறுபட்டுள்ளது. உமது கடாக்ஷத்தால் நிறைவேறவேண்டிய செயல் முதலில் நிறைவுபெற்றுவிடுகிறது. பின்பே உமது கடாக்ஷம் கிடைக்கிறது. சீக்கிரம் கைகூடிவிடுகின்றது என்ற கருத்தில் நான் புகழ்கிறேனென எண்ணவேண்டாம்.

உண்மையையே உரைக்கிறேன். கடலைத் தாண்டிக் கடத்தல் என்பது எவர்க்கும் இயலாத செயல். உமது கடாக்ஷத்தைப் பெற்றவனால்தான் அதைச் செய்யமுடியும். ஆனால் ஹநுமான் கடலைத் தாவிக்கடந்தபின்பே உமது பார்வைக்கு இலக்கானான் எனவே நான் சொல்வது பொய்யுரையோ புகழ்ச்சியுரையோ அன்று. மெய்யுரையேயாகும். *(40)*

41. वक्षोरक्षे शार्ङ्गिणः स्थूललक्षे, तत्तादृक्षे जाग्रति त्वत्कटाक्षे ।
सूनश्रीभिः सान्द्रगन्धे परोक्षे कुर्यादास्था मल्पधीः कल्पवृक्षे ॥

வக்ஷோரக்ஷே சார்ங்கிண: ஸ்த்தூல லக்ஷே
தத்தாத்ருக்ஷே ஜாக்ரதி த்வத்கடாக்ஷே ।
ஸூநஶ்ரீபி: ஸாந்த்ர கந்தே பரோக்ஷே
குர்யாதாஸ்த்தாம் அல்பதீ: கல்பவ்ருக்ஷே ॥

சார்ங்கிண: - நாராயணனின்
வக்ஷோரக்ஷே - மார்பைக் காப்பவளே
ஸ்தூலலக்ஷே - வள்ளல் தன்மை உடையதும்
தத்தாத்ருக்ஷே - உவமையற்றதுமான
த்வத்கடாக்ஷே - உமது கடாக்ஷம்
ஜாக்ரதி - பயனளிக்கக் காத்துக்கொண்டிருக்க
ஸூந - அல்பமான
ஶ்ரீபி: - செல்வத்தால்
ஸாந்த்ர - மிகுந்த
கந்தே - கர்வத்தையுடையவனும்
ஸூநஶ்ரீபி: - மிகுந்த புஷ்பங்களால்
ஸாந்த்ர - மிகுதியான
கந்தே - வாஸனையுடையதும்
பரோக்ஷே - கண்களுக்குப் புலப்படாததுமான
கல்பவ்ருக்ஷே - கர்ப்பக மரத்தில்
அல்பதீ: - அறிவிலிதான்
ஆஸ்தாம் - பயனடையும் ஆசையை
குர்யாத் - செய்வன்.

அருகில் சென்று பழகத்தக்க எளிமையுடையவனும் வள்ளலுமான ஒருவன் அருகிலே இருக்க அவனைவிட்டுப் புறத்தவனும் நெருங்கமுடியாதவனும் கஞ்ஜனுமான ஒருவனிடம் பயனடைய விருப்பம் கொள்பவன் முட்டாளாவன். அதுபோல் கேட்டவர் கேட்டதையளிக்கத்தக்க தேவரீர் அருகிலிருக்க உம்மைவிட்டு வள்ளலை வழிபடுபவன் முட்டாள் என்பது கருத்து.

''ஸூநஶ்ரீபி: ஸாந்த்ரகந்தே'' என்பது கஞ்ஜன் என்ற கருத்தையும் தெரிவிக்கும் வகையில் அமைந்துள்ளது வியக்கத்தக்கது. *(41)*

42. रचयति तव वीक्षां नूनमज्ञेपि रक्षां
दुरितचरितभेदी देशिको मन्त्रवादी ।
तदिह गलितमोहः द्रागयं पद्मगेहे
विषयरुचिपिशाचीविक्रियाभिः व्यमोचि ॥

ரசயதி தவ வீக்ஷாம் நூநமஜ்ஞேபி ரக்ஷாம்
துரித சரித பேதீ தேசிகோ மந்த்ர வாதீ ।
ததிஹ கலிதமோஹ: த்ராகயம் பத்ம கேஹே
விஷயருசிபிசாசீவிக்ரியாபி: வ்யமோசி ॥

பத்மகேஹே - தாமரையில் வாழ்பவளே
துரித சரித - சீடனின் கெட்ட நடத்தைகளை, பிசாசு பிடித்தவன் தீய செயல்களை
பேதீ - போக்குபவரும் போக்கவல்லவரும்
மந்த்ரவாதீ தேசிக: - த்வயமந்த்ரத்தை உச்சரித்து அறிவிலியான சிஷ்யனின் சுமையை உம்மிடம் ஒப்படைப்பவருமான ஆசார்யன். ஆசார்யனாகிய மந்திரவாதி
அஜ்ஞேபி - அறிவிலியிடமும் பிசாசம் பிடித்ததால் நல்லறிவிழந்தவனிடம்
ரக்ஷாம் - காக்கும் தன்மை வாய்ந்த
தவ வீக்ஷாம் - உமது கடாக்ஷத்தை
வீக்ஷாரக்ஷாம் - காப்பாற்றவல்ல மூலிகையை
கரோதி - செய்கிறான்
தத் - ஆகையால்
இஹ - இங்கு
அயம் - அறிவிலியும், பிசாசத்தால் பிடிபட்டவனும்
கலிதமோஹ: - ஒழிந்த தேஹாபிமானம் முதலிய மோஹத்தை உடையவனாய், புத்தி மாறுபாடு அற்றவனாய்
விஷயருசி - ஐம்பொறிகளின் சுவையாகிய
பிசாசீ - பிசாசத்தின்
விக்ரியாபி: - பலவகைச் செயல்களால்
த்ராக் - சீக்கிரமாக
வ்யமோசி விடுவிக்கப்பட்டவனாய் ஆகிறான்
நூநம் - நிச்சயம்.

மூன்று உருவகங்களுள இதில். ஆசார்யன் மந்த்ரவாதி என்பதும், தேவிகடாக்ஷம் ரக்ஷை என்பதும், ஐம்பொறிகளின் ஆசை பிசாசு என்பதும்ாமவை. மந்திரவாதி பிசாசு பிடித்தவனுக்கு மூலிகைகளைக் கொடுத்தும் மந்திரித்தும் ரக்ஷை கட்டியும் அவன் செய்யும் கெட்ட செயல்களிலிருந்து காத்து அவன் சுய அறிவின்மையைப் போக்கி நல்லறிவு உடையவனாக்குகிறான். அதுபோல் ஆசார்யனும் தேஹாத்மானமுடைய அறிவிலியான சிஷ்யனுக்கு த்வயம் எனப்படும் மந்திரத்தை உபதேசம் செய்து லக்ஷ்மியிடம் புருஷகார ப்ரபத்தி செய்து அவள் கடாக்ஷத்துக்கு இலக்காக்கி அவனுக்கு நல்லறிவு கொடுத்து அவனைக் காக்கின்றான். உபதேசத்தைப் பெற்ற சிஷ்யனும்

தேஹாத்மாபிமானம் ஒழிந்து பிசாசம் போன்ற பொறிகளுக்கு வசமாகாமல் சீக்கிரமாக, விடுபடுகிறான். எனவே ஆசார்யன் மந்த்ரவாதி என்பதும் உமது கடாக்ஷம் ரக்ஷை என்பதும் ஐம்பொறிகள் பிசாசங்கள் என்பதும் ஸந்தேஹமற்றவையாம் என்கிறார். (42)

43. जगदंब तवापाङ्गो जलजातशरः प्रपुष्ट मधुकालः ।
कमले कथय कथं वा करोत्यसौ सर्वमंगलेनाप्तिम् ॥

ஜகதம்ப தவாபாங்க: ஜலஜாதசர: ப்ரபுஷ்டமதுகால: ।
கமலே கதய் கதம் வா கரோத்யஸௌ ஸர்வமங்களேநாப்திம் ॥

ஜகதம்பகமலே - உலகத்தாயான லக்ஷ்மியே
ஜலஜாத - தாமரையை
சர: - பாணமாக உடையவனும்
ஜட - அறிவிலியான ராவணன் முதலியவரின்
ஜாத - கூட்டத்தை
சர: - அழித்ததும்
ப்ரபுஷ்ட - நன்கு வ்ருத்தி பண்ணப்பட்ட
மதுகால: - வஸந்தகாலத்தை உடையவனுமான
ப்ரபுஷ்ட - போஷிக்கப்பட்ட
மது - மது என்ற அரக்கனின்
கால: - ம்ருத்யுவான பகவானை உடையதுமான
அஸௌ தவ அபாங்க: - உமது புத்ரனான மன்மதன், உமது கடாக்ஷம்
ஸர்வமங்கலா - பார்வதியின்
இனேந - பர்த்தாவான ருத்ரனுடன்
ஆப்திம் - ஸ்நேஹத்தை
கதம் வா - எப்படி
கரோதி - செய்கிறான்
கதய - சொல்
ஸர்வ மங்களேந - அனைத்து க்ஷேமங்களுடனும்
ஆப்திம் - ஸம்பந்தத்தை
கதம் வா - எப்படி
கரோதி - செய்கிறது.

விரோதாபாஸமும் உருவகமும் இதிலுள. லக்ஷ்மியின் கடாக்ஷம் மன்மதனாக உருவகிக்கப்பட்டுள்ளது. ஜலஜாத என்ற சொல் ஜடஜாத என்ற சொல்லாகவும் கொண்டு பொருளுரைக்கப் பட்டுள்ளது.

மன்மதன் தாமரை, அசோகம், மா, மல்லிகை, கருநெய்தல் என்ற பூக்களை பாணங்களாகக் கொண்டவன். இவை யாவும் வஸந்த ருதுவில் செழிப்பாகப் பூப்பவையானமையின் மன்மதனால் இவை வ்ருத்தி பண்ணப்பட்டவை என்றார். லக்ஷ்மியான ஸீதையின் கடாக்ஷத்திலுள்ள ஆசையால் ராவணன் முதலான அரக்கர்களை ராமனான நாராயணன் அழித்தான். மது என்னுமரக்கனை அழித்த நாராயணன் லக்ஷ்மியின் கடாக்ஷத்தால் மிகவும் போஷிக்கப்பட்டவனானான். இத்தகைய உமது கடாக்ஷமாம் மன்மதன் ஸர்வமங்களா என்ற பெயர் பூண்ட பார்வதியின் கணவனான ருத்ரனுடன் எப்படி

நட்புகொண்டுள்ளான்? ருத்ரன் அவன்மீது கோபம் கொண்டு அவனை நெற்றிக்கண்ணால் பொசுக்கியவனன்றோ! என்பது விரோதம். உமது கடாக்ஷம் ஸர்வமங்களங்களின் தொடர்பை உண்டுபண்ணும் என்பது பரிஹாரம்.

''லடயோரபேத:, வபயோரபேத:'' என்பது கவிமரபு. எந்த ஒரு சொல்லில் எவ்விடத்தில் ''ல'' வோ, அன்றி ''வ''வோ உள்ளனவோ அந்த இடத்தில் முறையே ''ட''வும் ''ப''வும் இருந்தால் அச்சொல்லுக்கு என்ன பொருள் கொள்ளலாமோ அப்பொருளையும் கொள்ளத்தகும் என்பது அதன் கருத்து. எனவே ''ஜலஜாத'' என்பது ''ஜடஜாத'' என்பதாகவும் கொண்டு பொருள் உரைக்கப்பட்டுள்ளது.

''சர:'' என்றும் சொல் ''ச்ரு ஹிம்ஸாயாம்'' என்னும் தாதுவிலிருந்துத் தோன்றியதாகும். ''ச்ருணாதீதி சர:'' என அதற்கு விக்ரஹ வாக்யமாம். பிறருக்குத் துன்பம் தருவது என்பது பொருள். எனவே ''சர:'' என்ற சொல்லுக்கு பாணம் என்ற பொருளுடன் கொன்ற என்ற பொருளும் கொள்ளப்பட்டது.

''ஜலஜாதசர:'' ''ப்ரபுஷ்டமதுகால:'' எனுமிரண்டு சொற்களுக்கும் இரண்டு பொருள்கள் கூறப்பட்டுள. ''ஸர்வ மங்களைநாப்திம்'' என்பதற்கு விரோதம் தோன்றும் பொருளும், அதனைப் பரிஹரிக்கும் பொருளுமென இரண்டு பொருள்கள் கூறப்பட்டுள. (43)

44. तिष्ठन्तु अष्टम एव भूसुतशनि स्पृष्टाश्च दुष्टा ग्रहाः
फाले कामपि लेलिखीतु जगतः स्रष्टापि कष्टां दशाम् ।
ते किं कुर्युः अपाङ्गतो मयि सकृद्देवि त्वयाङ्गीकृते
नीहारो न करस्थमंबरमणेः लीलांबुजं बाधते ॥

திஷ்டந்து அஷ்டம ஏவ பூஸுதசநி ஸ்ப்ருஷ்டாச்ச துஷ்டா: க்ரஹா:
பாலே காமபி லேலிகீது ஜகத: ஸ்ரஷ்டாபி கஷ்டாம் தசாம் ।
தே கிம் குர்யுரபாங்கதோ மயிஸக்ருத் தேவி த்வயாங்கீக்ருதே
நீஹாரோ ந கரஸ்தமம்பரமணே: லீலாம்புஜம் பாததே ॥

தேவி - பகவானின் மஹிஷியே!
பூஸுத - செவ்வாயும்
சநி - சனியும்
ஸ்ப்ருஷ்டா: - ஸம்பந்தப்படுவதால்
துஷ்டா: க்ரஹா: - கொடியக்ரஹங்கள்
அஷ்டம ஏவ - எட்டாமிடத்திலே
திஷ்டந்து - இருக்கட்டும்
ஜகத: ஸ்ரஷ்டா - உலகைப் படைப்பவனான நான்முகனும்

பாலே - தலையில்
காமபி - சொல்லமுடியாத
கஷ்டாம் தசாம் - துக்கானுபவத்தை தெரிவிக்கும் எழுத்து வரிசைகளை
லேலிகேது - மிகுதியாக எழுதட்டும்
த்வயா - உமது
அபாங்கத: - கடைக்கண்ணால்
ஸக்ருத் - ஒருமுறை
அங்கீக்ருதே - அநுக்ரஹிக்கப்பட்ட
மயி - என்னிடம்
தே - அத்துஷ்டக்ரஹங்களும் தலை எழுத்தும்
கிம் குர்யு: - எத்துன்பத்தை விளைவிக்க முடியும்
நீஹார: - பனி
அம்பரமணே: - பனிக்குசத்ருவான சூர்யனது
கரஸ்தம் - கையிலுள்ள
லீலாம்புஜம் - அலங்காரத் தாமரையை
ந பாததே - பாதிப்பதில்லை.

"த்வாதச அஷ்டம ஜந்மஸ்தா: சநி அர்க்க அங்காரகோ குரு: ।
குர்வந்தி ப்ராண ஸந்தேஹம் ஸ்தாநப்ரஷ்டம் தநக்ஷயம் ॥"

என்பது ஜ்யோதிஷ ச்லோகம். ஜாதகியின் ஜந்ம லக்நத்திலிருந்து பனிரண்டாமிடம், எட்டாமிடம், ஜன்மராசி ஆகியவைகளில் பாபிகளான சனி சூர்யன் செவ்வாய் குரு ஆகியவர்களிருந்தால் ப்ராண பயத்தையும் இடமாற்றலையும் பண வ்ரயத்தையும் செய்வர் என்பதிதன் பொருள். மேற்படி க்ரஹங்கள் தமது ஸஞ்சாரக்ரமத்தையும் தவிர்த்து எனக்குத் தீங்கு விளைவிக்கவேண்டும் என்ற எண்ணத்தால் எட்டாமிடத்திலேயே இருந்தாலும், ப்ரஹ்ம தேவன் படைக்கும்போது உலகிலுள்ள அனைவர் கஷ்டங்களையும் என் ஒருவன் தலையிலேயே எழுதி வைத்திருந்தாலும், உமது அநுக்ரஹம் கிட்டிற்றேயாகில் இவை என்ன செய்யமுடியும்! எதுவும் செய்ய முடியாது. பனிக்காலம் தாமரைக்குத் தீமை விளைவிப்பதே ஆயினும் அப்பனி தமக்கு விரோதியான சூரியன் தமது கையில் அழகுக்காகத் தாங்கியுள்ள தாமரைக்குத் தீமை விளைவிக்கவல்லதாக ஆகுமோ? முடியாதன்றோ? அப்படி உமது கடாக்ஷத்துக்கு இலக்கு ஆகாதவன்தான் துஷ்டக்ரஹங்களுக்கும் துர்விபிக்கும் இலக்காவன்.

எளியனான ஒருவன் வலியவனை ஆச்சரயித்திருந்தால் பிற வலியனால் அவனுக்கு எதுவும் செய்யவியலாது என்பது கருத்து.

"தே கிம் குர்யு:" என்றவிடத்தில் கிம்+குர்யு: என இரண்டு பதமாகக் கொண்டால் என்ன செய்யவியலும் என்ற பொருள் கிடைக்கும். இப்பொருளே உரையில் கூறப்பட்டுள்ளது. அதையே "கிங்குர்யு:" என்று ஒரே பதமாகக் கொண்டால் பணிவிடை செய்வர் என்ற பொருள் கிடைக்கும்.

"த்விபுஜம் பத்ம ஹஸ்தம் ச வரதம் மகுடாந்விதம் । த்யாயேத் திவாகரம் தேவம்" என்ற ச்லோகத்தால் சூர்யன் கையில் தாமரை வைத்துள்ளான் என்பது விளங்கும். (44)

45. विजयापजयौ रमे भवेतां त्वदपाङ्गान्वय तद्विपर्ययाभ्याम् ।
अजयत्तववीक्षया हनूमान् अधिलंकं विकटाक्षराक्षसौघम् ॥

விஜயாபஜயௌ ரமே பவேதாம்
த்வதபாங்காந்வய தத்விபர்ய யாப்யாம் ।
அஜயத் தவ வீக்ஷயா ஹநூமாந்
அதிலங்கம் விகடாக்ஷ ராக்ஷஸௌகம் ॥

ரமே - லக்ஷ்மியே
த்வதபாங்காந்வய - உமது கடாக்ஷத்தைப் பெற்றதாலும்
தத்விபர்யயாப்யாம் - அதனைப் பெறாததாலும்
விஜயாபஜயௌ - வெற்றியும் தோல்வியும்
பவேதாம் - உண்டாகின்றன
(ததா ஹி - அது உண்மையே)
ஹநூமான் - அநுமான்
அதிலங்கம் - இலங்கையில்
தவவீக்ஷயா - உமது கடாக்ஷத்தால்
வி-கடாக்ஷ - கடாக்ஷத்துக்கு இலக்காகாத
ராக்ஷஸௌகம் - அரக்கர்களின் கூட்டத்தை
அஜயத் - ஜெயித்தார்
விகட - பருத்த
அக்ஷ - சரீரத்தையுடைய
ராக்ஷஸௌகம் - ராக்ஷஸக்கூட்டத்தை
அஜயத் - வென்றார்.

ஹநுமான் தாமொருவராகத் தனித்திருந்தும் ராக்ஷஸர்களுக்கு வாழுமிடமாயும் ஹநுமனுக்கு வேறிடமுமான லங்கையிலிருந்தும் அரக்கர் கூட்டத்தை அழித்தாரெனின் அதற்குக் காரணம் உமது கடாக்ஷத்துக்கு அவர் இலக்கானமையேயாம். அரக்கர் பலரிருந்தும் தமதிருப்பிடத்திலிருந்தும் அவர்களை இவர் வெற்றிகொண்டது (அவர்கள் தோற்றது) உமது கடாக்ஷத்துக்கு அவர்கள் இலக்காகாமையே. எனவே உமது கடாக்ஷத்தைப் பெறுதலும் பெறாதலுமே வெற்றி தோல்விக்குக் காரணம். பிறிதொன்றில்லை.

"விகடாக்ஷராக்ஷஸௌகம்" என ஒரு தொடரிலேயே வெற்றிதோல்விகளை விளங்கவைத்தது சுவைத்தற்குரியது. (45)

46. प्रतिघोष्णमधीशितु र्न पद्मे भवदीक्षाविषयं प्रवेष्टुमीष्टे ।
त्वदपाङ्गसुधार्दितस्तुषारीभवदग्निर्हनुमानिह प्रमाणम् ॥

ப்ரதிகோஷ்ணமதீசிது: ந பத்மே
பவதீக்ஷாவிஷயம் ப்ரவேஷ்டு மீஷ்டே ।
த்வதபாங்கஸுதார்தித: துஷாரீ
பவதக்நிர் ஹநுமாநிஹ ப்ரமாணம் ॥

பத்மே - தாமரையாளே
அதீசிது: - உலகநாதனது
ப்ரதிக: - கோபவடிவமான
உஷ்ணம் - நெருப்பு

பவதீக்ஷா விஷயம் - உமது
 கடாக்ஷத்துக்கு இலக்கானவரிடம்
ப்ரவேஷ்டும் - செல்வதற்கு
நேஷ்டே - தகுதியுடையதன்று
இஹ - மேற்சொன்னவிஷயத்தில்
த்வதபாங்க - உமது கடாக்ஷமாகிற
ஸுதா - அம்ருதத்தால்
ஆர்த்ரித: - நனைக்கப்பட்டமையால்
துஷாரீபவத் - பனிக்கட்டியாக
 மாறிய
அக்நி: - நெருப்பையுடைய
ஹநுமான் - அநுமான்
ப்ரமாணம் - ஸாக்ஷியாவார்.

நெருப்பு எனத் தனித்ததொரு பொருளில்லை. அது பகவானின் கோபமேயாம். யாவற்றையும் எரிக்கும் தன்மை வாய்ந்த அக்நியும் உமது கடாக்ஷத்துக்கு இலக்கானவனிடம் எத்தீமையையும் செய்ய முடியாததாக ஆகிவிடுகின்றது. ஸீதையென்ற உமது கருணைக்குப் பாத்ர பூதனான ஹநுமான் வாலில் ராக்ஷஸர்களால் மிகுதியாக வைக்கப்பட்ட தீ இலங்கை முழுவதையும் அழித்த போதிலும் அவனுக்குச் சிறிதும் துன்பம் தரவில்லையே. இதனினும் பிறிதொரு சான்று இவ்விஷயத்துக்கு வேண்டுமோ! (46)

47. कटाक्षप्रत्यूषे तव मिषति कंसारि दयिते
 तमः शाम्यत्यन्तर्गतमपि च सूर्याकलनतः ।
 स्वयं दोषोन्मेषो विरमति पुनस्सारसवन
 श्रियस्संपद्यन्ते दिवि च भविता भासनमपि ॥

கடாக்ஷப்ரத்யூஷே தவ மிஷதி கம்ஸாரி தயிதே
 தம: சாம்யதி அந்தர்கதமபி ச ஸூர்யாகலநத: ।
ஸ்வயம் தோஷோந்மேஷோ விரமதிபுந: ஸாரஸவந
ச்ரிய: ஸம்பத்யந்தே திவி ச பவிதா பாஸநமபி ॥

கம்ஸாரிதயிதே -
 நாராயணமஹிஷியே
தவ - உமது
கடாக்ஷப்ரத்யூஷே - கடாக்ஷமாகிய
 விடியற்காலை
மிஷதி - தோன்றும்போது
ஸூர்ய - சூரியனது
ஆகலநத: - அநுக்ரஹத்தால்
அந்தர்கதமபிச - வீட்டினுள்
 இருந்தபோதிலும், மனதில்
 இருந்தபோதிலும்
தம: - இருள், பாபம்
சாம்யதி - நீங்கிவிடுகிறது
தோஷோந்மேஷ: - இரவின்
 மிகுதியும் அக்ருத்ய
 கரணத்தால் உண்டான பகவன்
 நிக்ரஹமும்
ஸ்வயம் விரமதி -
 தன்னடைவாகக்
 கழிந்துவிடுகின்றது.
ச்ரிய: - சோபைகள்
ஸம்பத்யந்தே - உண்டாகின்றன
திவி - ஆகாசத்தில், மோக்ஷத்தில்
பாஸநம் - ப்ரகாசமும்,
 எண்குணங்களையுடைய
 ஜீவாத்மாவின் ஸ்வரூப
 ப்ரகாசமும்
பவிதா - உண்டாகின்றது

லக்ஷ்மியின் கடாக்ஷத்தை விடியற்காலையாக உருவகித்து பேசுகிறார்.

விடியலின் தன்மைகள்: விடிந்ததும் ஸூர்யன் உதிக்கிறான் புறத்தேயும் அகத்தினுள்ளும் இருந்த இருள் அவனால் சூழ்கின்றது. இரவும் கழிந்துவிடுகிறது. இரவில் மூடியிருந்த தாமரைகள் இப்போது நன்கு மலர்ந்து தமது அழகைப் பரப்புகின்றன. சூர்யன் மேலே ஏழஏழ ஆகாசத்தில் ப்ரகாசமும் அதிசமாகிறது.

இனிகடாக்ஷத்தின் தன்மை:- ஸ்ரீயின் கடாக்ஷத்தைப் பெற்றவனுக்கு நல்லொழுக்க நற்கல்வி பெற்றவரின் தொடர்பு ஏற்படுகிறது. அவர் நல்லுபதேசங்களால் அகத்தில் - மனதில் - இருந்த அஜ்ஞாநமாம் இருள்-பாபம்-போகின்றது. தகாத செயல்களை அறிவின்மையால் செய்ததாலுண்டான பகவானின் கருணைக்கு இலக்காகாமை என்ற பாபம் கழிகின்றது. இம்மைப் பயன்களைக் கருதாது பகவானின் ப்ரீதிக்காக பஞ்ச மஹாயஜ்ஞம் முதலான யாகங்களைச் செய்கிறான். சரீரம் கழிந்தபின் ஸ்ரீவைகுண்டத்தை அடைந்து அபஹதபாப்மத்வம் முதலிய எட்டு குணங்களுடன் கூடிய ஜீவாத்மாவின் உண்மையான ஸ்வரூபப்ரகாசத்தைப் பெறுகிறான். (47)

48. सुरभिस्तनुते तवावलोकः सुमनस्संपदं अंब भूमिजानाम् ।
अविपल्लवितां विधाय पुष्णात्यपिचामोदं अदीप्तिकाननानाम् ।

ஸுரபிஸ்தநுதே தவாவ லோக:
ஸுமநஸ்ஸம்பதம் அம்ப பூமிஜாநாம் ।
அவிபல்லவிதாம் விதாய புஷ்ணாதி
அபிசாமோதமதீப்தி காநநாநாம் ॥

அம்ப - தாயே
தவாவலோக: - உமது கடாக்ஷமாகிற
ஸுரபி: - சித்திரை மாதம்
பூமிஜாநாம் - மரங்களுடைய
ஸுமநஸ்ஸம்பதம் - புஷ்பமிகுதியை
தநுதே - செய்கிறது
அபி ச - மேலும்
அதீப்தி - இலைகளை உதிர்த்ததால் ஒளியிழந்த
காநநாநாம் - காடுகளை
அவிபல்லவிதாம் - தளிர்த்த இலைகளை உடையதாய் இருக்கும் தன்மையை
அவிபல்லவதாம் - சிறிதும் ஆபத்தில்லாமலிருக்கும் தன்மையை
விதாய - செய்து
ஆமோதம் - புஷ்பங்களின் வாஸனையை
புஷ்ணாதி - மிகுவிக்கிறது

அம்ப - தாயே
ஸுரபி: - அழகிய
தவாவலோக: - உமது கடாக்ஷம்
பூமிஜாநாம் - மனிதர்களுக்கு
ஸுமநஸ்ஸம்பதம் - தேவர் தன்மையை
தநுதே - உண்டாக்குகின்றது
அபிச - மேலும்
அதிப்திகம் - ஏழ்மை முதலான தொல்லைகளால் ஒளியிழந்த
ஆநநாநாம் - முகத்தை உடையவர்களுக்கு
ஆமோதம் - ஸந்தோஷத்தை
புஷ்ணாதி - மிகுவிக்கிறது.

லக்ஷ்மியின் கடாக்ஷத்தை சித்திரை மாஸமாக வருணிக்கிறார். சித்திரை மாதம் வஸந்த ருதுவைச் சார்ந்தது. எல்லா புஷ்பங்களும் அப்போது மிகுதியாகப் புஷ்பிக்கும். மழை காலத்தில் செழித்து வளர்ந்து முற்றிய இலைகள் இப்போது பழுத்து உதிர்ந்து புதிதாகத் தளிர்த்துப் புஷ்பிக்கும். அவற்றின் வாஸனை எங்கும் பரவும். இது சைத்திரத்தின் தன்மை.

லக்ஷ்மியின் கடாக்ஷத்துக்கு இலக்கானவர் நற்குண நல்லொழுக்கங்களால் மனிதத் தன்மையை இழந்துத் தேவத்தன்மையைப் பெறுகின்றனர். ஏழ்மையாலும் பற்பல தொல்லைகளாலும் வாடிய முகம் தற்போது எல்லாத் தொல்லைகளையும் தவிர்த்து ஸமஸ்த நன்மைகளையும் பெற்று ஸந்தோஷத்தால் ஒளிமிக்குத் திகழ்கிறது.

''அவிபல்லவிதாம்'' என்பதன் இருவகைப் பொருள்பின் வருமாறு. சைத்திரத்தின் பொருளின் போது அ+வி+ பல்லவிதாம் எனப்பிரிக்க வேண்டும். பல்லவிதா = தளிர்த்திருக்கை. வி-பல்லவதா = தளிர்த்திருக்கை இன்மை. ''வி'' இன்மை என்றமையைக் குறிக்கும். அவிபல்லவதா - தளிர்த்திருக்கையின்மையின் இன்மை. அதாவது தளிர்களைப் பெற்றிருக்கை.

கடாக்ஷமாய் பொருள் கொள்ளும் போது அ+விபத்+லவதா எனப் பிறிக்கவேண்டும். விபத்=ஆபத்து. லவ:=சிறிது. விபல்லவதா சிறிது ஆபத்துடைமை. அவிபல்லவதா சிறிதும் ஆபத்தின்மையாம். இருபொருள்களிலும் ''விபல்லவதா'' என்ற சொற்றொடரில் வேறுபாடின்மை கவைக்கத்தக்கதாம். ''பூமிஜா:''=மண்ணில் தோன்றுபவை. மனிதர் மரம் இரண்டும் மண்ணில் தோன்றுபவையே. (48)

49. कमले गभीर करुणाजलधे त्वयि मन्दरक्षण विकासिहृदि ।
कलितोदया मृदुकटाक्षसुधा प्रथयत्यसौ सुमनसां प्रमदम् ॥

கமலே கபீர கருணா ஜலதே
த்வயி மந்தரக்ஷண விகாஸிஹ்ருதி ।
கலிதோதயா ம்ருது கடாக்ஷஸுதா
ப்ரதயத்யஸௌ ஸுமனஸாம் ப்ரமதம் ॥

கமலே - லக்ஷ்மியே
கபீர - ஆழமான
கருணா ஜலதே - கருணைக் கடலே
மந்த - அறிவிலிகளை
ரக்ஷண - காப்பதில்
விகாஸி - மகிழ்ச்சிகொண்ட
ஹ்ருதி - மனமுடைய
த்வயி - உம்மிடம்
கலிதோதயா - தோன்றிய
ம்ருது - அனுக்ரஹத்துடன் சேர்ந்த
அஸௌகடாக்ஷஸுதா - கடாக்ஷமென்னும் இவ்வமிர்தம்
ஸுமனஸாம் - நன் மனமுடையவர்களுக்கு
ப்ரமதம் - ஸந்தோஷத்தை
ப்ரதயதி - மிகுவிக்கிறது
மந்தரா - மந்தரமலையால் கடைந்தபோதுண்டான
க்ஷண - கலக்கத்தால்
விகாஸி - பரந்த
ஹ்ருதி - நடுப்பகுதியில்
த்வயி - நீர்
கலிதோதயா - பிறப்புடையவர் ஆவீர்
ம்ருது - நிதானமாக (வெகுநாள் கழித்து)
கலிதோதயா - தோன்றிய
ஸுதா - அம்ருதம்
ஸுமனஸாம் - தேவர்களுக்கு
ப்ரமதம் - ஸந்தோஷத்தை
ப்ரதயதி - மிகுவிக்கிறது.

கடாக்ஷத்தை அமிர்தமாகக் கூறுகிறார். மிக மிக ஆழமான ஸமுத்ரம் போன்ற நீர் நிலையில் நடுப்பகுதியை எவ்வளவு கலக்கினாலும் அது கலங்காது தெளிவாகவே இருக்கும். லக்ஷ்மியின் மனமும் அனுக்ரஹத்தால் நிரம்பியுள்ளதால் கலக்கப்படமாட்டாதது. அத்தகைய நீர் பாற்கடலின் நடுப்பகுதியில் மந்தர மலையை இட்டுக் கடைந்தபோது தோன்றினீர். அக்கடலை மேலும் பலகாலம் தேவர் வருந்தி கடைந்தபோது அமிர்தம் தோன்றியது. அது அவர் வருத்தத்தைப் போக்கி மகிழ்வித்தது. அதுபோல் தேவரீர் சில அறிவிலிகளை உமது கருணைக்கிலக்காக்கிக் காப்பது ஸத்துக்களை மகிழ்விக்கிறது. (49)

50. प्रतिघानलं भुजगशैलपतेः प्रशमं नयन्त्यतितरां शिशिरा ।
कमलालये तव कटाक्षझरी विधुनोतु मे व्रजिनतापभरम् ॥

**ப்ரதிகாநலம் புஜகசைலபதே: ப்ரசமம் நயந்தி அதிதராம் சிசிரா ।
கமலாலயே தவ கடாக்ஷஜரீ விதுநோது மே வ்ரஜிநதாபபரம் ॥**

கமலாலயே - தாமரையாளே
புஜகசைலபதே: - சேஷாத்ரி நாதனுடைய
ப்ரதிக அநலம் - கோபமாகிய அக்நியை
ப்ரசமம் நயந்தீ - சமநம்செய்வதாய்
அதிதராம் சிசிரா - மிக்க குளிர்ச்சியால் தாபத்தைப் போக்குவதான
தவ கடாக்ஷ - உமது கடாக்ஷமாகிற
ஜரீ - நீர்வீழ்ச்சி
மே - என்னுடைய
வ்ரஜிநதாப - ஆத்யாத்மிகம் முதலிய பாபங்களாலுண்டான தாபத்தின்
பரம் - சுமையை
விதுநோது - அகற்றட்டும்.

ஜலப்ரவாஹம் அக்நியை அணைக்கும். சூட்டினாலுண்டான தாபத்தைப் போக்கும் உமது கடாக்ஷம் ப்ரவாஹம் போன்றது. நான் எண்ணற்ற பலவகைப் பாபச் செயல்களைப் புரிந்துள்ளேன். அது எனக்கு மிக்க தாபத்தை உண்டுபண்ணியுள்ளது. தேவரீர் கடாக்ஷப்ரவாஹம் அத்தாபத்தைப் போக்கவேண்டும் என வேண்டினாராயிற்று. (50)

51. दृशो लेशं देयाः त्रियुगसखि देयं कियदिदं
महोदारायास्ते मम तु सुमहानेष विभवः ।
कणानत्र द्वित्रान् गणयति न वारां जलधरः
प्रपद्यन्ते शुक्तौ परिणतिममी मौक्तिकतया ॥

**த்ருசோ லேசம் தேயா: த்ரியுகஸகி தேயம் கியதிதம்
மஹோதாராயாஸ்தே மம து ஸுமஹாநேஷ விபவ: ।
கணாநத்ர த்வித்ராந் கணயதி ந வாராம் ஜலதர:
ப்ரபத்யந்தே சுக்தௌ பரிணதிமமீ மௌக்திகதயா ॥**

த்ரியுக - ஆறு குணங்கள் நிறைந்த நாராயணனின்
ஸகி - தோழியே
த்ருசோலேசம் - கடாக்ஷத்தின் சிறிய பகுதியை
தேயா: - அருள்வாயாக
மஹோதாராயா: - பெருங்கொடையாளியாகிற
தே - உனக்கு
இதம் தேயம் - நான்வேண்டும் இச்சிறு கடாக்ஷமாம் கொடுக்கவிருப்பது
கியத் - உனக்கு ஒருபொருளாக மாட்டாது.
ஏஷ: - இச்சிறுபகுதி
மம து - எனக்கோவெனில்
ஸுமஹாந் விபவ: - மிகப்பெரும் செல்வம்
ஜலதர: - கைம்மாறு கருதாது பொழியும் மேகம்
அத்ர - இவ்வுலகில்
வாராம் - ஜலங்களின்
த்வித்ராந் - இரண்டு மூன்று
கணாந் - துளிகளை
ந கணயதி - ஒரு பொருளுமாக, மதிப்பதில்லை ஆயின்
அமீ - இத்துளிகள்
சுக்தௌ - சிப்பியில் விழுந்தவைகளாய்
மௌக்திகதயா - முத்துகளாக
பரிணதிம் - மாறுபாட்டை
ப்ரபத்யந்தே - அடைகின்றன.

நாராயண மஹிஷியே உமது கடைக்கண் பார்வையை நொடிப்பொழுது என்மேல் செலுத்துவீராக. நான் வேண்டுவது இத்துணையே பிறிதொன்றில்லை. இது உமக்கு ஒரு பொருளல்ல. ஆனால் எனக்கோ மிகப்பெரும் செல்வத்தையது தரவல்லதாம். நான் சொல்வது தகுதியுடைத்து மேடுபள்ளம் நாடுகாடு நண்பர் பகைவர் என்றெல்லாம் கருதாது பதில் உதவியும் கருதாது எங்கெங்கும் நீரைப் பொழிகின்றது மேகம். அம்மேகத்திற்கு ஓரிரண்டு துளிகள் பொருளேயல்ல. ஆனாலத்துளிகள் சிப்பியிலுள்ளே விழுந்துவிடுமாகில் மதிப்பற்ற முத்தாக மாறிவிடுகிறது. இங்ஙனம் ஒருவருக்கு ஒரு பொருளாகமாட்டாத ஒரு வஸ்து பிறிதொருவனுக்கு இணையற்ற பொருளாக மாறுவதை உலகில் காண்கின்றோம். ஆகவே உமது கடாக்ஷமென்றே அடியேனுக்குப் போதுமானதாம். *(51)*

52. बिलेशयकुलेशभूधरपतिप्रिये त्वद्दया
तरङ्गितमपाङ्गितं धृतवतः चिरं दृश्यते ।
विकस्वरपिकस्वरव्यतिकरस्फुरन्निष्कुटं
नटद्युवतिनूपुरक्वणितसुन्दरं मन्दिरम् ॥

பிலேசய குலேச பூதரபதி ப்ரியே த்வத்தயா
தரங்கித மபாங்கிதம் த்ருதவத: சிரம் த்ருச்யதே ।
விகஸ்வர பிகஸ்வர வ்யதிகர ஸ்புரந் நிஷ்குடம்
நடத்யுவதி நூபுரக்வணிதஸுந்தரம் மந்திரம் ॥

பிலேசய குல - பாம்புக்கூட்டங்களின்
ஈச - தலைவனான ஆதிசேஷன் பெயர்கொண்ட
பூதரபதி - மலைக்கு நாயகனான ஸ்ரீநிவாஸனின்
ப்ரியே - மனைவியே
த்வத் தயா - உமது தயைபோல்
தரங்கிதம் - தாண்டப்பட்ட
அபாங்கிதம் - கடைக்கண் பார்வையை
த்ருதவத: - தரித்திருப்பவனது
மந்திரம் - வீடு
விகஸ்வர - நாற்புறமும் பரவும்
பிகஸ்வர - குயிலினொலிகளின்
வ்யதிகர - ஒன்றோடொன்று சேர்க்கையால்
ஸ்புரத் - நன்கு விளங்கும்
நிஷ்குடம் - சிறு தோட்டத்தைப் பெற்றதாயும்
நடத் - நடனமாடும்
யுவதி - பெண்களின்
நூபுர - சிலம்புகளின்
க்வணித - ஓசையால்
ஸுந்தரம் - அழகியதாயும்
த்ருச்யதே - காணப்படுகிறது.

சேஷாத்ரியின் தலைவனான ஸ்ரீநிவாஸனின் மனைவியே உமது கடாக்ஷத்துக்கு இலக்கானவன் செல்வம் கொழிக்கும் வீட்டையும் அதனருகில் இளைப்பாறுவதற்கொரு உபவநத்தையும் உடையவனாக வாழ்கிறான். அத்தோட்டம் பல மரங்களால் செழிப்புற்று விளங்கப்படுகிறது. அதில் பல

குயில்களும் பல பல கிளிகளும் வாழ்கின்றன. அவை அவ்வப்போது மகிழ்வாய் சத்தமிடுகின்றன. அவ்வொலிகள் ஒன்றோடு பிறிதொன்று கலந்து காதுகளுக்கினிமையாக விருக்கின்றன. அவன் வீட்டில் நடனமாடுபவர்கள் சிலம்பணிந்து நடனமாடுகின்றனர். அவ்வொலியால் பொலிவுற்று விளங்குகின்றதவ்வீடு. (52)

53. नारायण प्रणयिनि त्वमपाङ्गदुग्ध
धाराभिराभि रभिषिंच दयांबुधे माम् ।
स्मेरानवद्य निरुपाख्य सुखं यतो मे
स्वाराज्यभाग्यमपि सेत्स्यति शाश्वतं तत् ॥

நாராயண ப்ரணயிநி த்வமபாங்க துக்த
தாராபிராபி ரபிஷிஞ்ச தயாம்புதே மாம் ।
ஸ்மேராநவத்ய நிருபாக்ய ஸுகம் யதோ மே
ஸ்வாராஜ்ய பாக்யமபி ஸேத்ஸ்யதி சாத்வதம் தத் ॥

நாராயண ப்ரணயிநி - நாராயணன் பத்நியே
த்வம் - நீர்
ஸ்மேர - அளவற்றதும்
அநவத்ய - துன்பம் கலசாததும்
நிருபாக்ய - சொல்லொணாத
ஸுகம் : ஸுகத்தையுடையதும்
சாச்வதம் - அழிவற்றதும்
தத் - வேதத்தால் புகழப்பட்டதுமான
ஸ்வாராஜ்ய பாக்யமபி - நல்வினை தீவினைகளுக்கு வயமாகாத மோக்ஷமாம் பாக்யமும்
யத: - யாதொரு
அபாங்க - கடைக்கண் பார்வையாகிய
துக்ததாராபி: - பால் பெருக்கால்
மே - எனக்கு
ஸேத்ஸ்யதி - ஸித்திக்குமோ
தயாம்புதே - கருணைக்கடலே
ஆபி: - அத்தகைய பார்வையாம் பால் பெருக்கால்
மாம் - என்னை
அபிஷிஞ்ச - ஸ்நானம் செய்துவை.

நான் மோக்ஷஸாம்ராஜ்யத்தை அடையத்தக்க உனது கடைக்கண் பார்வையால் அடியேனை கடாக்ஷி என வேண்டுகிறார். அந்த மோக்ஷம் தான் எத்தகையதெனின் ''ஸ:ஸ்வராட் பவதி'' என வேதத்தால் புகழப்பட்டது. இவ்வுலகில் நாம் வாழ்வது நாம் பல பிறவிகளில் செய்த வினைப்பயன்களை அனுபவிக்கவே. ஆகவே இவ்வுலக வாழ்க்கை வினைகளின் வயப்பட்டது. ஆனால் மோக்ஷ வாழ்க்கை அத்தகையதன்று. அங்கு நல்லதோ தீயதோ எவ்வினையும் கிடையாது. பந்தத்திலிருந்து விடுபட்ட சுதந்திர வாழ்க்கை அது. துன்பம் கலசாதது. ஆனந்தமயமானது அவ்வாழ்க்கை. எழுபது எண்பது போன்ற கால அளவுக்கு உட்பட்ட வாழ்க்கையன்று. மோக்ஷத்தை அடைந்தால் திரும்பவும் பிறப்பென்பதே கிடையாது. அத்தகைய மோக்ஷஸாம்ராஜ்யத்தை அருளால் அருள்வாயாக என ப்ரார்த்திக்கிறார். (53)

54. भो भूपभूमौ भ्रम भीमपापभूमेति मे मूर्ध्निलिपिं विधातुः ।
पवर्गगर्भां परिमृज्य पद्मे लिखस्यपाङ्गैरपवर्गगर्भाम् ॥

போபூபபூமௌ ப்ரமபீமபாப பூமேதி மே மூர்த்நி லிபிம் விதாது: ।
பவர்க கர்பாம் பரிம்ருஜ்ய பத்மே லிகஸ்யபாங்கை ரபவர்க கர்பாம் ॥

பத்மே - பத்மையே
போ - மனிதனே
பீம - மிக பயங்கரமான
பாபபூமா - பாபங்களை மிகுதியாகப் பெற்ற
(த்வம் - நீ)
பூபபூமௌ - அரசன் வாயினாலேயே
ப்ரம - சுற்றக்கடவாய்
இதி - என்ற கருத்துடைய
பவர்க கர்பாம் - ப', ப, ம, என்ற எழுத்துக்களைக் கொண்ட
மே மூர்த்நி - எனது தலையிலுள்ள
விதாது:லிபிம் - நான்முகன் எழுதிய எழுத்துக்களை
அபாங்கை: - கடாக்ஷத்தால்
பரிம்ருஜ்ய - அழித்து
அபவர்க கர்பாம் - ப', ப, ம, என்ற எழுத்துக்களன்றி வேறு எழுத்துக்களாலாகிய
லிபிம் - சொல்லை (எழுத்துக்கோவையை)
லிகஸி - எழுதுகிறாய்
அபவர்ககர்பாம் - மோக்ஷத்தைத் - தரத்தக்க எழுத்துக்களை
லிகஸி - எழுதுகிறாய்.

வடமொழியில் மெய் எழுத்துக்கள் மட்டும் முப்பத்து மூன்று உள. க, ச, ட, த, ப என்ற எழுத்துக்கள் ஐந்திலும் ஒவ்வொன்றிலும் நன்னான்காக 5x4=20. எழுத்துக்களாயின. இவற்றை முறையே கவர்கம், சவர்கம், டவர்கம் தவர்கம், பவர்கம் என்பர். ஒவ்வொரு வர்கத்தின் முடிவிலும் ங, ஞ, ண, ந, ம என்ற எழுத்துக்களும், ய, ர, ல, வ, ஶ, ஷ, ஸ, ஹ என்ற எழுத்துக்களுமாக மெய்யெழுத்துக்கள் முப்பத்து மூன்றும். இவற்றுள் பவர்கத்தைச் சார்ந்த எழுத்துக்கள் ப^{1}, ப^{2}, ப^{3}, ப^{4}, ம, என்ற ஐந்தாம். ''போபூபபூமௌ ப்ரம பீமபாப'' என்ற தொடரில் பவர்கத்தைச் சார்ந்த எழுத்துக்களையன்றிப் பிறவர்க எழுத்துக்கள் கலசவில்லை. ஆகவே இப்பகுதி ''பவர்ககர்பம்'' ஆயிற்று. மிக்க பாபத்தைப் பெற்றதன் பயன் எப்போதும் சுற்றிக்கொண்டிருத்தல். ஆகவேதான் ஒவ்வொரு அரசன் மாளிகை வாயிலில் சுற்றிக்கொண்டிருந்தேன்யான். இப்படிச் சுற்றும்படி நான்முகன் என் தலையில் எழுதிய எழுத்தை அழித்து உன் கருணையால் அபவர்க-கர்பமான -பவர்கத்தைச் சார்ந்த எழுத்துக்களல்லாத வேறு எழுத்துகளால் அபவர்ககர்பாம் - மோக்ஷத்தைப் பெறுவதற்குரிய கருத்தைத் தெரிவிக்கும் எழுத்துக்களாலான சொற்றொடரை தற்போது நீ எழுதியுள்ளாய். ஆகவேதான் நான் முன் செய்து வந்த ராஜ ஸேவையை விடுத்து நல்லொழுக்க முடையவனாகி மோக்ஷத்தைப் பெற விரும்புகிறேன் என்கின்றார்.

அபாங்கை: என்பதற்குக் கடாக்ஷத்தால் எனப்பொருள் கூறியுள்ளோம். இதனை அப+அங்கை: எனப் பிரித்து அப-பவர்கமல்லாத எழுத்துக்களை அங்கை: - எழுதுபவர்களால் எனவும் பொருள் கொள்ளலாம். (54)

55. यं त्वं देवि निरीक्षसे यदुपतेः कान्ते दृशा तादृशा
तत्र स्तोत्रगिरश्चरन्ति विदुषां तत्रैव चित्रा गुणाः ।
तेनैव व्यपदेशमृच्छति कुलं तस्मै मतिस्तिष्ठते
द्रष्टा पृष्ठमरेः स एव न पुनः धन्यं तदन्यं विदुः ॥

யம் த்வம் தேவி நிரீக்ஷஸே யதுபதே: காந்தே த்ருசா தாத்ருசா
தத்ரஸ்தோஸ்ரகிர: சரந்தி விதுஷாம் தத்ரைவ சித்ரா குணா: ।
தேநைவ வ்யபதேசம்ருச்சதிகுலம் தஸ்மை மதிஸ்திஷ்டதே
த்ரஷ்டா ப்ருஷ்டமரே: ஸ ஏவ ந புந: தந்யம் ததந்யம் விது: ॥

யதுபதே: காந்தே - கண்ணன் மனைவியே
தேவி - பூஜிக்கத்தக்கவளே
தாத்ருசா - ஒப்பற்ற
த்ருசா - கடாக்ஷத்தால்
த்வம் - நீர்
யம் - எந்த ப்ராணியை
நிரீக்ஷஸே - கடாக்ஷிக்கின்றீரோ
விதுஷாம் - புலவரின்
ஸ்தோத்ரகிர: - புகழ்மொழி
தத்ர - அங்கு
சரந்தி - தன்னடைவாக நடையாடுகின்றன
சித்ரா குணா: - ஆச்சர்யத்தைத் தரும் ஜ்ஞாநம், சக்தி, புலனடக்கம் முதலிய குணங்கள்
தத்ரைவ - அங்கே உண்டாகின்றன
குலம் - தூய வம்சமும்
தேநைவ - அவன் பெயரையிட்டே
வ்யபதேசம் - வழக்கை
ருச்சதி - அடைகிறது
மதி: - புத்தியும்
தஸ்மை திஷ்டதே - அவனை விளங்கச் செய்கிறது
அரே: - பகைவனின்
ப்ருஷ்டம் த்ரஷ்டா - புறமுதுகு காண்பவனும்
ஸ ஏவ - அவனே
ததந்யம் தந்யம் புந: - அவனைவிட்டுப் பிறிதொரு புண்யவானை
ந விது: - உலக மக்கள் கண்டதில்லை.

நாராயண மஹிஷியே உமது கடாக்ஷம் யாவற்றையும் தரவல்லது. அதற்கிணையானது பிறிதொன்றில்லை. அக்கடாக்ஷத்தை நீர் எவனிடம் செலுத்துகின்றீரோ அவன் புலவர்களால் புகழப்படுகிறான். வியக்கத்தக்க குணங்களைப் பெற்றவனெனப் புகழப்படுகிறான். சூரியவம்சம், சந்திர வம்சம், சேர, சோழ, பாண்டி வம்சம் என்பன போன்று உமது கருணையைப் பெற்றவன் பெயரையிட்டே அவன் வம்சம் புகழடைகிறது. சிறந்த புத்தியுடையவனவனேயாவன். பகைவரை வெற்றி பெறுபவனுமவனே. பன்னியுரைந்தென்பயன்! அவனுக்குச் சமம் அவனே.

வேறொருவனை உலகு இன்றுவரை கண்டதில்லை. விஷ்ணுபுராணத்திலுள்ள ஸ்ரீஸ்துதியில் ''ஸ ச்லாக்ய:, ஸ குணீ, தந்ய:, ஸ குலீந:, ஸ புத்திமாந் ஸ சூர: ஸ ச விக்ராந்த: யம் த்வம் தேவி நிரீக்ஷஸே'' என்பதொரு ச்லோகமுள்ளது அதன் கருத்தை இந்த ச்லோகத்தால் விளக்கினாராயிற்று. (55)

56. अपार-संसार-तपातपार्तिव्यपायदच्छायमपास्तदोषम् ।
कृपामरन्दैः शिशिरं रमे त्वं अपाङ्गकल्पद्रुमुपाश्रयामः ॥

அபார ஸம்ஸார தபாதபார்த்தி வ்யபாயதச்சாயமபாஸ்ததோஷம் ।
க்ருபாமரந்தை: சிசிரம் ரமே த்வம் அபாங்க கல்பத்ருமுபாச்ரயாம: ॥

ரமே - லக்ஷ்மியே
அபார - அளவில்லாத
ஸம்ஸார - ஸம்ஸாரமாகிற
தபாதப - க்ரீஷ்மகாலதாபத்தாலுண்டான
ஆர்த்தி - துன்பத்தை
வ்யபாயத - போக்கடிக்கவல்ல
சாயம் - நிழலையுடையதும்
அப - போக்கடிக்கப்பட்ட
அஸ்த - அழிவாகிற
தோஷம் - குற்றத்தையுடையதும்
அபாஸ்த - போக்கப்பட்ட
தோஷம் - விருப்பு வெறுப்பு முதலிய குற்றங்களையுடைய
க்ருபா - கருணையாகிற
மரந்தை: - தேனால்
சிசிரம் - குளிர்ந்ததுமான, அநுக்ரஹத்தையுடையதுமான
த்வதபாங்க - உமது கடைக்கண் பார்வையாம்
கல்பத்ரும் - கற்பகமரத்தை
உபாச்ரயாம: - அடையக்கடவீர்.

லக்ஷ்மியின் கடாக்ஷத்தைக் கற்பகமரமாகக் கூறுகிறார். க்ரீஷ்மகாலத்து (ஆனி, ஆடி) வெயில் மிகக் கொடுமையானது. தாபத்தை மிகுதியாக விளைவிப்பது. ''க்ரீஷ்மே மத்யந்திநே'' என்ற வேதப்பகுதி க்ரீஷ்ம ருதுவின் வெயிற்கொடுமை விளக்குவதாம். அது போன்றது ஸம்ஸாரம். அந்த ஸம்ஸார தாபத்தைப் போக்கவல்ல நிழலையுடையது கற்பக மரம். இம்மரம் தேவலோகத்தில் உள்ளதாதலால் அதன் கீழ் அமர்பவர்களை அழிதல் என்னும் தன்மைபெற்ற மனிதத்தன்மையுடையவர் அல்லவராக ஆக்குமது. அதன் பூக்களில் தேன் மிகுதியாக இருக்குமாதலால் குளிர்ந்திருக்கும். இவை கற்பகத்தின் தன்மை.

லக்ஷ்மியின் கடாக்ஷம் ஸம்ஸார தாபத்தை போக்கி நன்கு காக்கும் தன்மை வாய்ந்தது. விருப்பு வெறுப்பு வேண்டியவர், வேண்டாதவர் முதலிய குற்றங்களைப் போக்கவல்லது. தேன் போன்று இனிய கருணையைப் பெற்றது. இத்தகைய உமது கடாக்ஷமாம் கற்பக மரத்தை ஆச்ரயிக்கிறேன் என்கிறார். சாயா என்பதற்கு நிழல், காப்பாற்றுதல் என்ற இரு பொருள் உண்டு. (56)

57. भावत्कमार्तिशमनं विरजातरङ्गं पश्याम्यपाङ्गमखिलांब यदाप्लुताङ्गः ।
पीताम्बराकलितदीप्तिपदं परार्ध्यं मुक्तादि भूषितमुपेत्य मुदन्दधाति ॥

பாவத்கமார்த்திசமநம் விரஜாதரங்கம்
பச்யாம்யபாங்கமகிலாம்ப யதாப்லுதாங்க: ।
பீதாம்பராகலிததீப்திபதம் பரார்த்யம்
முக்தாதி பூஷித முபேத்ய முதம் ததாதி ॥

அகிலாம்ப - உலகத்தாயே
ஆர்த்தி - ஸம்ஸாரபீடையை
சமநம் - போக்கவல்ல
பாவத்கம் - உமது
அபாங்கம் - கடைக்கண்பார்வையை
விரஜாதரங்கம் - விரஜை என்னும் நதியின் அலையாக (புனெனில்)
யத் - எந்த கடாக்ஷ அலையில்
ஆப்லுதாங்க: - அமிழ்ந்த உடலுடையவன்
பீதாம்பர - நாராயணனால்
ஆகலிததீப்தி - உண்டாக்கப்பட்ட மேன்மையுடையதும்
முக்தாதி - முக்தர் நித்யர் முதலியவரால்
பூஷிதம் - அலங்கரிக்கப்பட்டதும்
பரார்த்யம் - உயர்ந்ததுமான
பதம் - மோக்ஷத்தை
உபேத்ய - அடைந்து
முதம் - ப்ரஹ்மாநந்தத்தை
ததாதி - தரிக்கிறானோ
பீதாம்பர - பீதாம்பரம் என்ற உயர்ந்த வஸ்த்ரத்தால்
ஆகலிததீப்தி: - உண்டுபண்ணப்பட்ட ப்ரகாசத்தை உடையவனாய்
முக்தாதி - முத்து, மணி, வைடூர்யம் முதலிய நவமணிகளால்
பூஷிதம் - அலங்கரிக்கப்பட்டதும்
பரார்த்யம் - உயர்ந்ததுமான
பதம் - வீட்டை
உபேத்ய - அடைந்து
முதம் - ஸந்தோஷத்தை
ததாதி - தருகின்றானோ (ஆகையால்)

விரஜா நதியாக உத்ப்ரேக்ஷிக்கின்றார் லக்ஷ்மியின் கடாக்ஷத்தை. விரஜை என்பதொரு நதி. இது மோக்ஷ உலகின் எல்லையிலுள்ளது. மோக்ஷம் புகுபவர் இந்நதியில் நீராடியபின்பே மனித உடலின் தொடர்பற்று அப்ராக்ருதமான உடலைப் பெறுவர். பின் நாராயணனால் ஒளியுடையதும் அனந்த கருட விஷ்வக் ஸேநாதி நித்யர்களாலும் ஸம்ஸாரபந்தமற்று மோக்ஷமடைந்த முக்தர்களாலும் அலங்கரிக்கப்பட்டதும் மிக உயர்ந்ததுமான மோக்ஷ உலகமடைந்து ப்ரஹ்மானந்தத்தைப் பெறுவர். லக்ஷ்மியின் கடாக்ஷம் பெற்றவருக்கு இவ்வானந்தாநுபவம் எளிதாகக் கிடைக்குமாகையால் அவள் கடாக்ஷத்தை விரஜையாக உத்ப்ரேக்ஷித்தார். லக்ஷ்மியின் கடாக்ஷம் ஆமுஷ்மிக(மறுமை)த்தோடு ஐஹிகத்(இம்மை)தையும் தரவல்லதாதலால் பின்னடியை ச்லேஷையில் அமைத்து ஐஹிகபலனும் கிடைக்கிறதென்கிறார். அவள் கடாக்ஷத்துக்கு இலக்கானவன் இவ்வுலகில் வாழும்போது தங்கத்தகடியணிந்து ப்ரகாசிக்கிறான். அவன் வீடு முத்துமாணிக்கம் மரகதம் போன்ற நவமணிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சிறப்பு பெற்ற உயர்ந்த வீட்டைப் பெற்று ஸந்தோஷமாக வாழ்கிறான். ஆகவே இம்மை மறுமைப்பயன்களை அளிக்கவல்லதவள் கடாக்ஷம் என்றார். (57)

58. दुर्वर्णमर्णवसुते नमतां ललाटे
लोकांब लुंपति कटाक्षझरः त्वदीयः ।
ते राजताभ्युदयिनः पुनरुल्लसन्तीति
एतत्करोति हृदि विस्मयमस्मदीये ॥

துர்வணமர்ணவஸுதே நமதாம் லலாடே
லோகாம்ப லும்பதி கடாக்ஷஜர: த்வதீய: ।
தே ராஜதாப்யுதயிந: புநருல்லஸந்தீதி
ஏதத்கரோதி ஹ்ருதி விஸ்மயம் அஸ்மதீயே ॥

லோகாம்ப - உலகத்தாயான
அர்ணவஸுதே - க்ஷீராப்திபுத்ரியே
த்வதீய: - உமது
கடாக்ஷஜர: - கடாக்ஷமாகிய நீர் பெருக்கு
நமதாம் - வணங்குபவரது
லலாடே - தலையிலெழுதப் பட்டுள்ள
துர்வர்ணம் - துர்தசையை வெளிப்படுத்தும் வரிகளை
லும்பதி - அழித்துவிடுகிறது
தே - உன்னை வணங்கியவர்
ராஜத - சக்ரவர்த்தித் தன்மையால்
அப்யுதயிந: - மேன்மை பெற்றவராய்
புநருல்லஸந்தி - மேன்மையுடன் விளங்குகின்றனர் என்பது
அஸ்மதீயே ஹ்ருதி - எமது மனதில்
விஸ்மயம் - ஆச்சர்யத்தை
கரோதி - உண்டாக்குகிறது
துர்வர்ணம் - சில வெள்ளிக் காசுகளை
லும்பதி - போக்கிவிடுகிறது
புந: - பின்பு
ராஜத - வெள்ளிக் குவியல்களாய்
அப்யுதயிந: - மேன்மை பெற்றவராய்
உல்லஸந்தி - விளங்குகின்றனர்.

லக்ஷ்மியின் கடாக்ஷம் நீர்ப் பெருக்காகக் கூறப்பட்டுள்ளது. நீரோட்டத்தில் எவரொருவர் ஸ்நாநம் செய்கின்றனரோ அவர் தலையிலுள்ள அழுக்கை அவ்வோட்டம் அடித்துப் போவது கண் கூடானது. படைப்புக் கடவுள் ஒருவன் தலையில் உனது வாழ்நாளை துன்பமயமாகக் கழிக்கக் கடவாய் என எழுதியிருப்பின் அவன் உமது கடாக்ஷமாம் நீரோட்டத்தில் அமிழ்ந்தால் அது அவ்வெழுத்தை அடியோடு போக்கிவிடுகிறது. நேர்மாறாக அவனைப் பல சிற்றரசர்களுக்குத் தலைவனாய் சக்ரவர்த்தியாய் ஆக்கிவிடுகிறது. இது கண்கூடானது. இத்தகைய உமது கடாக்ஷ மேன்மையை எண்ணிப்பார்க்கும் போது மிகவும் ஆச்சர்யம் உண்டாகிறது.

துர்வர்ணம் என்பதற்கு வெள்ளி, காசு, என்ற பொருள்களுமுண்டு. ராஜத என்பதற்கு வெள்ளிக்குவியல், என்பது பொருள், துர் வர்ணத்தைப் போக்கி ராஜதத்தை உண்டாக்குகிறது - அல்பமான செல்வத்தைப் போக்கி மிகுந்த செல்வக் குவியலின் தலைவனாக்குகிறது - என்ற பொருளும்

கிடைக்கும். மற்றுமோர் பொருள் சொல்லலாமாகிலும் விரிவுக்கஞ்சி விடப்படுகிறது. (58)

59. देवि दुर्गतमरौ तव वीक्षा कालिका दिशति कांचन वृष्टिम् ।
तस्य सिध्यति सुकीर्तिरुदंचत् धीरसस्य विभवश्च ततः स्यात् ॥

தேவிதுர்கதமரௌ தவ வீக்ஷா
காலிகா திசதி காஞ்சநவ்ருஷ்டிம் ।
தஸ்ய ஸித்யதி ஸுகீர்த்தி ருதஞ்சத்
தீரஸஸ்ய விபவஶ்ச தத: ஸ்யாத் ॥

தேவி தவ வீக்ஷா காலிகா - பூஜைக்குரிய உமது கடாக்ஷமாம் மேகக்கூட்டம், மேகக்கூட்டம் போன்ற, உமது கடாக்ஷம்
துர்கதமரௌ - தரித்ரனாகிய பாலை வனத்தில், பாலைவநம் போன்று வற்றிய தரித்ரனிடத்தில்
காஞ்சந - இவ்வளவெனச் சொல்ல முடியாத
வ்ருஷ்டிம் - தங்கமயமான மழையை
திசதி - கொடுக்கிறது
தஸ்ய - பாலைவனத்தில்
ஸுகீர்தி: - முழங்காலளவுள்ள சேர்
ஸித்யதி - தோன்றுகிறது
உதஞ்சத்
தீர - ஜலஸ்தம்பம் செய்பவர்களுடையவும்
ஸஸ்ய - பயிர்களுடையவும்
விபவஶ்ச - மேன்மையும்
தத: - பாலை முழுவதும் பரவியதாக
ஸ்யாத் - கட்டாயம் தோன்றுகின்றது (எனப் பாலைவனத்துக்கும்)
தத: - தங்கமழையைப் பெற்றபின்
உதஞ்சத் - தன்னடைவாகத் தோன்றிய
தீரஸ - சிறந்த அறிவும்
ஸுகீர்த்தி: - நல்ல புகழும்
விபவ: - ஸம்ஸாரமின்மையம்
ஸ்யாத் - உண்டாகிறது.(என ஏழைக்கும் பொருள்)

கடைக்கண் பார்வையாகிய நீருண்ட மேகம் என உருவகமாகவும், நீருண்ட மேகம்போன்ற கடைக்கண்பார்வை என உவமையாகவும், ஏழையாகிய பாலை வனம் என உவமையாகவும், ஏழையாகிய பாலை வனம் என உருவகமாகவும், பாலை போன்ற ஏழை என உவமையாகவும் கூறப்பட்டுள.

கடாக்ஷமாகிய மேகம் பாலைவனத்தில் அளவிட்டுச் சொல்ல முடியாத மழையைப் பொழிகிறது. அதனுல் நீண்ட நாள் வற்றாது. தண்ணீர் தேங்கியவிடத்தில் தோன்றுவதாகிய முழங்காலளவு சேர் பாலை முழுவதும் உண்டாகிவிடுகிறது. அந்நீர் பரப்பில் புகழ் வாய்ந்த பலர் ஜலஸ்தம்பம் செய்வர். பாலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் பயிர்கள் செழித்து இனி கட்டாயம் விளங்கும் என்றும், மேகம் போன்ற உமது கடாக்ஷம் பாலைவநம் போல் ஜீவநம் - நல்வாழ்க்கையாம் நீர் அற்றிருந்த

ஏழைக்கு மிகுதியான தங்கக் காசுகளான மழையைப் பொழிகிறது. அதை அவன் பெற்றமையால் நல்ல ஜ்ஞாநத்தையும், செல்வத்தை வழங்கியதாலாகிய புகழையும், தேஹாவஸாநத்தில் மோக்ஷத்தையும் பெறுவர் என்றும் பொருள்களாம். கடாக்ஷத்தால் உண்டாகிய செல்வம் நல்வழிவகுக்க உதவும் என்பது கருத்து. (59)

60. वरुणालयसार्वभौमकन्ये करुणापाङ्गमधुव्रतः त्वदीयः ।
मधुनाशनमेत्य वृद्धिमृच्छन् अधुना नीरजसंगतिं विधत्ताम् ॥

வருணாலயஸார்வபௌம கந்யே
கருணாபாங்க மதுவ்ரத: த்வதீய: ।
மதுநாசநமேத்ய வ்ருத்தி ம்ருச்சந்
அதுநா நீரஜஸங்கதிம் விதத்தாம் ॥

வருணாலய ஸார்வபௌம கந்யே - கடலரசன் பெண்ணே
மதுநா - தேனால்
அசநம் - உணவை
ஏத்ய - அடந்து (தேனை உண்டு)
வ்ருத்திம் - உடல் வளர்ச்சியை
ருச்சந் - அடைந்த
த்வதீய: - உமது
கருணாபாங்க - தயை நிறைந்த கடைக்கண் பார்வையாகிய
மதுவ்ரத: - வண்டு
அதுநா - இப்போதே
நீரஜ - தேன்நிறைந்ததோடு
ஸங்கதிம் - ஸம்பந்தத்தை
விதத்தாம் - உண்டு பண்ணட்டும்

(மற்றுமோர் பொருள்)
மது-நாசநம் - மது என்ற அரக்கனை அழித்த நாராயணனை
ஏத்ய - அடைந்து
வ்ருத்திம் - கறுநிறமிகுதியை
ருச்சந் - அடைந்து
மதுவ்ரதம் - வண்டு போன்ற
கருணாபாங்க: - தயை நிறைந்த கடைக்கண் பார்வை
அதுநா - இப்போதே
நீரஜஸம் - ரஜஸ் தமஸ் என்ற குணமில்லாத
கதிம் - மோக்ஷ உலகத்தை
விதத்தாம் - உண்டுபண்ணட்டும்.

கடாக்ஷத்தை வண்டாகக் கூறுகிறார். வண்டின் உணவு தேனாகும். பூக்களிருக்குமிட மெல்லாம் சென்று அவற்றிலுள்ள தேனையுண்டு உடலை வளர்க்கும் தன்மையது வண்டு. ஆகவே உமது கடாக்ஷமாம் வண்டு இப்போதே தேன் நிறைந்த இடத்தை நாடிச் செல்லட்டும் என்னும் பொருள் தோன்றும் போல் சொல்லமைந்துள்ளது ச்லோகத்தில். உண்மைப் பொருள்வருமாறு:- நீல நிறத்தவனான நாராயணனோடு சேர்ந்தமையால் மேலும் கறுநிறமாகிய அழகுமிக்கதாகிய வண்டுபோன்ற உமது கடாக்ஷம் ரஜோகுண தமோ குணங்களற்றதாய் சுத்தஸத்வமயமான மோக்ஷத்தைக் காலவிளம்பத்தைப் பொறுக்கமாட்டாத எங்களுக்கு இப்போதே அளிக்கட்டும் என்பது கருத்தாம்.

''மதுநாசநம்'' என்ற தொடரை மநுநா + அசநம் என்றும் மது நாசநம் ஏன்றும், ''நீரஜஸங்கதிம்'' என்ற தொடரை நீரஜ

+ ஸங்கதிம் என்றும் நீரஜஸம் + கதிம் என்றும் பிரித்து இருவகைப் பொருள்கள் சொல்லப்பட்டுள்ளதால் பிரிமொழிச் சிலேடை. (60)

61. निद्राजुषां भवविषादमये निशीथे
स्वापाङ्गमर्पयसि शोभनमौषधं नः ।
चित्रं ततोपि जगदंब चिरं विनिद्रं
वेत्स्यामहे विगतदुःखपदं प्रबोधम् ॥

நித்ராஜுஷாம் பவவிஷாதமயே நிசீதே
ஸ்வாபாங்கமர்பயஸி சோபநமௌஷதம் ந: ।
சித்ரம் ததோபி ஜகதம்ப சிரம் விநித்ரம்
வேத்ஸ்யாமஹே விகத துக்கபதம் ப்ரபோதம் ॥

ஜகதம்ப - உலகத்தாயே
பவவிஷாதமயே - ஸம்ஸாரத் துன்பமாம்
நிசீதே - நள்ளிரவில்
நித்ராஜுஷாம் - உறங்குகின்ற
ந: - எங்களுக்கு
ஸ்வாப-அங்கம் - தூக்கத்தை மிகுவிக்கத் தக்கதும்
சோபநம் - (மதத்தையூட்டும் பழச்சாற்றின் சேர்க்கையால்) இன்பமான
ஔஷதம் - மருந்தை
அர்பயஸி - கொடுக்கிறார் என்பர்
ததோபி - தூக்கம் மிகுவிக்கும் மருந்தைக் கொடுத்த போதும்
விநித்ரம் - தூக்கமின்றி
ப்ரபோதம் - விழித்திருத்தலையே
சிரம் - மிகுதியாக
வேத்ஸ்யாமஹே - அடைகின்றோமென்பது
சித்ரம் - ஆச்சரியம்
(இது நேரான பொருள்)

(உண்மைப் பொருள்)
நித்ராஜுஷாம் - ஸம்ஸாரத் துன்பத்தால் குறைந்த ஜ்ஞானமுடைய
ந: - எங்களுக்கு
சோபநம் - அழகிய
ஸ்வ-அபாங்க - உமது கடாக்ஷமாகிய
ஔஷதம் - ஸம்ஸாரத் துன்பத்தைப் போக்கும் மருந்தை
அர்பயஸி - தருகின்றாய்
தத: - ஆனமையால்
விநித்ரம் - ஜ்ஞானத்தின் ஸங்கோசமில்லாததும்
விகத துக்க பதம் - துன்பம் என்ற சொல்லுக்கே இடமில்லாததும்
சித்ரம் - ஆச்சரியமானதுமான
ப்ரபோதம் - ஜ்ஞாநவிகாஸத்தை
வேத்ஸ்யாமஹே - அடைகிறோம்.

உலகம் முழுதும் நள்ளிரவிலுறங்கும்; அப்போது எவருக்கும் சுய அறிவிராது. அது போல் ஸம்ஸாரத் துன்பத்தில் உழல்பவனுக்கும் நல்ல அறிவிருக்காது. எனவே ஸம்ஸாரத் துன்பத்தை நள்ளிரவாகக் கூறினார். இரவில் உறங்குபவருக்கு பகலில் பட்ட துன்பமெல்லாம் போய் உடலில் தெம்பு உண்டாக்கத் தக்கதும் உறக்கத்தை மிகுவிக்கத் தக்கதுமான மருந்தை நீ தருவதாகச் சொல்வர். அப்படி உறக்கம் மிகுவிக்கக் கொடுத்த மருந்து எங்களுக்குத் தூக்கத்தை

உண்டுபண்ணுவதில்லை. விழித்துக்கொண்டே இருக்கிறோம் என்பது ஆச்சரியமான செயல் அல்லவா என்பது விரோதம் போல் தோன்றுகிறது. இது உண்மை பொருளல்ல.

ஜீவாத்மாக்களின் ஞானம் உண்மையில் மறதி மயக்கம் போன்ற குறையற்றது. ஆனந்தமயமானது. முக்காலத்தையும் உணரத்தக்கது. இத்தன்மைகளெல்லாம் துன்பமயமான ஸம்ஸாரத்தொடர்பில் அழிந்து விடுகின்றன. எனவே மனிதன் ஜ்ஞாந ஸங்கோசம் உடையவனாகிறான். அவன் உன்னருளுக்கு இலக்கானால் ஸம்ஸாரத் தொல்லை நீங்கப் பெற்றவனாய் ஜ்ஞானத் தன்மைகள் அனைத்தையும் பெற்றவனாய் ஜ்ஞாநவிகாஸம் உள்ளவனாய் விளங்குகிறான் என்பது உண்மைப்பொருள். *(61)*

62. स्वालोकं शिशिरं चिराय नयसे यं जायमानं जनं
संपश्येन्मधुकाल एव सुमनः सत्वावहस्तं ततः ।
पाथोजायतने रजांसि जनयन् वेधा दृगूष्मागमः
रौद्रालोकघनागमश्च तमसां कर्ता न तत्रास्पदी ॥

ஸ்வாலோகம் சிசிரம் சிராய நயஸே யம் ஜாயமாநம் ஜநம்
ஸம்பச்யேத் மதுகால ஏவ ஸுமந: ஸத்வாவஹஸ் தம் தத: ।
பாதோஜாயதநே ரஜாம்ஸி ஜநயந் வேதா த்ருகூஷ்மாகம:
ரௌத்ராலோக கநாகமச்ச தமஸாம் கர்த்தா ந தத்ராஸ்பதீ ॥

பாதோஜாயதநே - தாமரையில் வாழ்பவளே
சிராய - ஸுக்ருதம்பயனளிக்கத் தொடங்கும் போது
ஜாயமாநம் - பிறக்கும் தருவாயிலுள்ள
யம் - எவனை
சிசிரம் - குளிர்ந்த
ஸ்வாலோகம் - உமது கடாக்ஷத்துக்கு
நயஸே - இலக்காக ஆக்குகின்றீரோ
தத: - அதே ஸமயத்தில்
ஸுமந: ஸத் வாவஹ: - மனதில் ஸத்வகுணத்தை மிகுதியாக உண்டுபண்ணத் தக்க
மதுகால ஏவ - மது என்ற அரக்கனுக்கு எமனான நாராயணனும்
தம் - அம்மனிதனை
ஸம்பச்யேத் - குளிரக் கடாக்ஷிக்கின்றான்
ரஜாம்ஸி ஜநயந் - ரஜோகுண கார்யமான வேண்டுதல் வேண்டாமை முதலியவற்றை வளர்க்கும்
வேதா த்ருக் ஊஷ்மாகம: - நான்முகன் கொடிய பார்வைக்கு இலக்காகுதல்
தத்ர - அவனிடத்தில்
நாஸ்பதீ - உண்டாவதில்லை
ச - மேலும்
தமஸாம் - தமோ குணச்செயல்களை
கர்தா - உண்டுபண்ணும்
ரௌத்ர: - ருத்ரனுடையதும், கொடியதுமான
ஆலோக - பார்வையின்
கநாகம: - கொடிய வீழ்ச்சியும்
தத்ர - அம்மனிதனிடம்
நாஸ்பதீ - உண்டாவதில்லை.

''புநரபி ஜநநம் புநரபிமரணம்'' எனப்பிறப்பதும் இறப்பதுமாகப் பல பிறப்பெடுத்த ஒருவன் திரும்பவும் பிறக்கும் தருவாயிலிருக்கும் போது முன் செய்த ஸுக்ருதம் பயனளிக்கத் தொடங்கியதால் ஸ்ரீமந் நாராயணன் கடாக்ஷம் அவனுக்குக் கிடைக்கிறது. அதனால் அவன் ஸத்வகுணம் மிக்கவனாய் மோக்ஷத்தில் விருப்பமுடையவன் ஆவான் என்றும், பிறக்க இருப்பவனை ப்ரஹ்மாவும் ருத்ரனும் பார்ப்பராகில் முறையே ரஜோ குணத்தாலும் தமோகுணத்தாலும் அவன் மனம் கலங்கும் என்றும் ''ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேத் மதுஸூதந: । ஸாத்விக: ஸ து விஜ்ஞேய: ஸ வை மோக்ஷார்த்த சிந்தக: ॥ பச்யத்யேநம் ஜாயமாநம் ப்ரஹ்மா ருத்ரோத வா புந: । ரஜஸா தமஸாசாஸ்ய மாநஸம் ஸமபிப்லுதம் । என்கிற வசநங்கள் கூறுகின்றன. நாராயணன் கடாக்ஷத்துக்கு இலக்காகுகையும் ஏனையோர் கடாக்ஷத்துக்கு இலக்கானமையும், முதலில் அவன் ஸ்ரீ கடாக்ஷத்துக்கு இலக்கானமையைக் காரணமாகக் கொண்டவை என்கிறார்.

ச்லேடைச் சொற்களைக் கொண்டு ச்லோகத்தை அமைத்துள்ளதால் மற்றுமொரு பொருள் கிடைக்கிறது. அதுவருமாறு.

ஸ்வாலோகம் - (மேகத்தால் மறைப்பு இல்லாமையால்) நல்ல வெளிச்சத்துடன் கூடிய
சிசிரம் - சிசிர ருதுவை
யம் தேசம் - எந்த இடத்தில்
நயஸே - சேர்ப்பிக்கின்றாயோ
ஸுமந: ஸத்வாவஹ: - மிகுதியாகப் புஷ்பிக்கக் காரணமான
மதுகால ஏவ - சித்திரைமாஸமே
தத: - சிசிர ருதுவுக்குப் பின்
தம் - அவ்விடத்துக்கு
ஸம்பச்யேத் - செல்ல விரும்பும்
ரஜாம்ஸி - துகள்களை
ஜநயந் - உண்டாக்கும்
ஊஷ்மாகம: - வெயில்மிக்க க்ரீஷ்ம ருதுவும்
தமஸாம் கர்த்தா - வானம் முழுதும் மேகம் பரவியுள்ளதால் பகலையும் இருளாக்கும்
கநாகம: - வர்ஷருதுவை
தத்ர - அவ்விடத்துக்கு
நாஸ்பதி - செல்லுவதில்லை.

மாசியும் பங்குனியும் சிசிர ருது. சித்திரையும் வைகாசியும் வஸந்த ருது. ஆனியும் ஆடியும் க்ரீஷ்ம ருது. ஆவணியும் புரட்டாசியும் வர்ஷ ருது. சிசிர ருதுவில் வானத்தில் மப்பே இராததால் வானம் நன்கு வெளிச்சமாக இருக்கும். அதற்கடுத்து இந்த ருதுவில் புஷ்பங்கள் மிகுதியாகப் புஷ்பிக்கும். சிசிரத்துக்குப் பின் வஸந்தம்தான் வருமேயன்றி வெயிற்காலமான க்ரீஷ்மமும் மழை காலமான வர்ஷ ருதுவும் வராது என்பது கருத்து. (௬௨)

63. प्रायः कंचिददृष्टवन्तमवनौ पद्मे दृशा स्वीयया
संयोज्य प्रसभं क्षणेन तनुषे जंतुं सहस्रेक्षणम् ।
आधित्ससि असदृक्पदे त्रिदशनेत्राकारभाजं तमपि
एणाङ्कस्वसरीदृशं घटयितुं द्रागीशिषे दुर्घटम् ॥

ப்ராய: கிஞ்சிதத்ருஷ்டவந்தமவநௌ பத்மே த்ருசா ஸ்வீயயா
ஸம்யோஜ்ய ப்ரஸபம் க்ஷணேந தநுஷே ஜந்தும் ஸஹஸ்ரேக்ஷணம் ।
ஆதித்ஸஸ்யஸத்ருக்பதே த்ரிசநேத்ராகாரபாஜம் தமபி
ஏணாங்கஸ்வஸ: ஈத்ருசம் கடயிதும் த்ராகீசிஷே துர்கடம் ॥

ஏணாங்கஸ்வஸ: - சந்திரஸோதரியான
பத்மே - லக்ஷ்மியே
அவநௌ - பூமியில்
அத்ருஷ்டவந்தம் - பாக்கியவானான
கஞ்சித் ஜந்தும் - ஏதோ ஒரு ப்ராணியை
ஸ்வீயயா த்ருசா - உமது கடாக்ஷத்தை
ப்ரஸபம் ஸம்யோஜ்ய - அவன் வேண்டுதலின்றி நீராகவே அவன் மேல் செலுத்தி
க்ஷணேந - நொடிப்பொழுதில்
ஸஹஸ்ரேக்ஷணம் - ஆயிரம் கண்களுடைய இந்திரனாக
தநுஷே - செய்கின்றீர்
த்ரி, தச, நேத்ராகாரபாஜம் - மூன்று கண்களுடைய ருத்ரனாகவும், பத்துக் கண்ணனான ப்ரஹ்மனாகவும் ஆக்கிய
தம் - அந்த ப்ராணியை
அஸத்ருக் பதேபி - ஒப்பற்ற இடமாகிய ஸ்ரீ வைகுண்டத்திலும்
ஆதித்ஸஸி - சேர்ப்பிக்கின்றீர்
ஈத்ருசம் - இத்தகைய
துர்கடம் - சேரமுடியாததை
கடயிதும் - சேர்ப்பிக்க
த்ராகீசிஷே - சீக்கிரத்தில் வல்லமை உடையவராகின்றீர்.

லக்ஷ்மீ! உமது கடாக்ஷத்தை ஒருவரும் ப்ரார்த்திக்காமலிருந்தும் ஒரு ப்ராணி (தாம் செய்த புண்ணிய விசேஷத்தால் உமது கடாக்ஷத்தைத் தாமாகவே பெறுகின்றது. அடுத்த நொடியில் அப்ராணியை ஆயிரம் கண்ணனான இந்திரன்போல் மிக்க செல்வந்தனாகவும் பேரரசனாகவும் ஆக்குகின்றர். ஏன் இந்திர பதவியையும் தந்துவிடுகின்றீர். இம்மட்டுமா! முக்கண்ணனான சிவனாகவும் பத்துக் கண்ணனான * ப்ரஹ்மனாகவும் ஆக்குவதோடன்றி ஒப்பற்ற ஸ்ரீ வைகுண்டத்தையும் அவனுக்கு அளிக்கின்றீர். ஒருவன் மனதாலும் நினைத்துப் பார்க்க முடியாத இந்திர பதவி, ருத்ர பதவி, ப்ரஹ்ம பதவி முதலான முறையே உயர்ந்த பதவிகளை பொருளல்லாத ஒரு ப்ராணிக்குத் தந்து அதனை உயர்த்தியதோடன்றி கிடைக்கவொண்ணாத மோக்ஷ பதவியையும் தந்துவிடுகின்றீர். நாராயணனைப் போல் அகடித கடநா ஸாமர்த்யம் - சேராதனவற்றைச் சேர்த்துவைக்கும் வன்மை ஸத்யஸங்கல்பத்வம், மோக்ஷப்ரதத்வம் முதலிய விசித்ர சக்தியை நீர் பெற்றிருக்கின்றீர் என்கிறார். ''யஸ்யாஸ்தேமஹிமாநம்'' என்ற சதுச்லோகீ ச்லோகார்த்தம் வர்ணிக்கப் பட்டதாயிற்று.

சிவனைப் போல் ப்ரஹ்மனும் ஐந்து தலைகளுடனிருந்தனன் என்பதும், என்போல் உனக்கும் ஐந்து தலைகளா என வெகுண்ட ருத்ரன் ப்ரஹ்மனின் ஒரு தலையைக் கிள்ளினனென்பதும், அக்கபாலம் அவன் கையில் ஒட்டிக்கொள்ளவே அவன் கபாலியாயினன் என்பதும் இவன் நான்முகனாயினன் என்பதும் புராண வரலாறு. மற்றுமோர் பொருள் சொல்லலாமாயினும் விரிவுக்கஞ்சி விடப்படுகிறது. (63)

64. मुखरुचि सरित्तरङ्गाः स्मितशतपत्र लोलकलभृङ्गाः ।
संपन्नर्तनरङ्गाः जयन्ति जगदंब तावकापाङ्गाः ॥
इति श्रीवेङ्कटाध्वारिकृत लक्ष्मीसहस्रे कटाक्षस्तबकः संपूर्णः ॥

முகருசி ஸரித்தரங்கா: ஸ்மித சதபத்ரலோல கல ப்ருங்கா: ।
ஸம்பந்தநர்த்நரங்கா: ஜயந்தி ஜகதம்ப தாவகாபாங்கா: ॥

ஜகதம்ப - உலகத்தாயே
முகருசி - முகக்காந்தி பரம்பரையாகிய
ஸரித்தரங்கா: - ஜலப்ரவாஹத்தின் அலை போல் சஞ்சலங்களாயும்
ஸ்மித - புன்சிரிப்பாகிய
சதபத்ரலோல - வெண்தாமரையில் விருப்பமுடைய
கல - அவ்யக்தமதுரமாக சப்திக்கும்
ப்ருங்கா: - வண்டுகள் போன்றவையாயும்
ஸம்பத் - செல்வமாகிய பெண்
நர்தந - நடனமாடும்
ரங்கா: - அரங்கங்கள் போன்றவையுமாக
தாவக - உமது
அபாங்கா: - கடாக்ஷங்கள்
ஜயந்தி - சிறப்புற்று விளங்குகின்றன.

நீர் பெருக்குக்கு அழகூட்டுவது சிற்றலை வரிசைகள். ஜலம் ஓடிக்கொண்டிருக்கும் போது காற்றால் சிற்றலைகள் கிளம்பி அழிந்துகொண்டிருக்கும். அதில் சூர்ய கிரணம் பட்டால் பளபளவென்று மின்னும். அது காட்சிக்கு அழகாக இருக்கும். அதுபோன்றது பெண்களின் மருண்டபார்வை என்பது கவி மரபு. எனவேதான் மானின் மருண்ட பார்வையை பெண் பார்வைக்கு உவமையாகக் கூறுவர். அதுபோல் முகத்திலிருந்து வரிசையாக வீசும் ஒளிப்ரவாஹத்தின் அலைபோல் சஞ்சலங்களாக இருக்கின்றனவாம் லக்ஷ்மியின் கடாக்ஷங்கள் - வெள்ளையில் பட்ட கறுப்பு போல்'' என்பது பழமொழி. வெண்மையில் கறுமை கலந்தால் பளிச்செனத் தெரியுமன்றோ! லக்ஷ்மியின் மந்தமிதமாகிய வெண் தாமரையில் ரீங்காரம் செய்து கொண்டிருக்கும் வண்டுகள் போன்றுள்ளனவாம் கடாக்ஷங்கள். நடனத்தின் உயர்வால்தான் அரங்கத்துக்கு மேன்மை. உமது கடாக்ஷமாகிய அரங்கம் செல்வமாகிய நடிகை நடனமாடுமிடமாக இருக்கின்றது என்கிறார். (64)

வீராபுரம், சடகோபாசாரியர் இயற்றிய ரத்நப்ராபா என்ற லக்ஷ்மீ ஸஹஸ்ர உரையில் கடாக்ஷஸ்தபக உரை முடிவுற்றது.

லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

ப்ரயத்ந ஸ்தபகம் (6)

உரை

ஸ்ரீ உ.வே. வீராபுரம் சடகோபாசாரியார்

1. श्रीनिवासस्य महिषीं श्रेयसे तामुपास्महे ।
यदर्थमेव विदधे यत्नं भूयांसमच्युतः

ஸ்ரீநிவாஸஸ்ய மஹிஷீம் ச்ரேயஸே தாம் உபாஸ்மஹே ।
யதர்த்தமேவ விததே யத்நம் பூயாம்ஸம் அச்யுத: ॥

அச்யுத: - நாராயணன்
பூயாம்ஸம் - ஸாதிக்க முடியாததை ஸாதிக்கவல்ல
யத்நம் - பெரும் ப்ரயத்நத்தை
யதர்த்தமேவ - எவள் முகமலர்ச்சிக்காக
விததே - அந்தந்த அவதாரங்களில் செய்தானோ
தாம் - மிகப்பெருமை வாய்ந்த
ஸ்ரீநிவாஸஸ்ய - ஸ்ரீநிவாஸனின்
மஹிஷீம் - பத்நியை
ச்ரேயஸே - மோக்ஷஸம்பத்துக்காக
உபாஸ்மஹே - தொடர்ந்து த்யாநிக்கிறேன்.

ஸ்ரீமந்நாராயணன் தாம் எடுத்த ஒவ்வொரு அவதாரங்களிலும் எந்த லக்ஷ்மியின் முகமலர்ச்சியைக்கான ஆசைகொண்டு படாதபாடு பட்டானோ, அத்தகைய நாராயணன் அன்புக்கு இருப்பிடமான ஸ்ரீநிவாஸ மஹிஷியை மோக்ஷஸாம்ராஜ்யத்தை அடைய விரும்பி இடைவிடாது த்யானிக்கிறேன். (1)

2. कमले कमलेक्षणः त्वदर्थे कठिनं कर्म करोत्यसौ न किं वा ।
कलशोदधिमन्थन प्रयासात् अपरं किं श्रमदायि कर्मलोके ॥

கமலே கமலேக்ஷண: த்வதர்த்தே கடிநம் கர்ம
கரோத்யஸௌ ந கிம் வா ।
கலசோததிமந்தநப்ரயாஸாத் அபரம் கிம் ச்ரமதாயி கர்மலோகே ॥

கமலே - தாமரையாளே
அஸௌ கமலேக்ஷண: - இப்புண்டரீகாக்ஷன்
த்வதர்த்தே - உன்முகமலர்ச்சியைக் காணவிரும்பி
கடிநம் - செய்யமுடியாத
கிம் கர்ம வா - எச்செயலைத்தான்
ந கரோதி - செய்யவில்லை
கலசோததிமந்தந - பாற்கடலைக் கடைந்தபோது மேற்கொண்ட
ப்ரயாஸாத் - முயற்சியைவிட
ச்ரமதாயி - துன்பம் தரத்தக்க
அபரம் கிம் கர்ம - வேறு என்ன செயல்
லோகே - உலகில்
(வித்யதே - உள்ளது).

தாமரையில் வாழ்பவளே! உன் முகமலர்ச்சியைக்கான ஆசைகொண்ட நாராயணன் மேற்கொள்ளாத கொடுஞ்செயல் உலகில் ஏதாவது உளதோ? பாற்கடலைக் கடைந்தபோது மந்தரமலை கடலுள் அமிழாது நிற்பதற்காகத்தான் ஆமை வடிவெடுத்து அதைத் தாங்கினான். வாஸுகியின் உடல் உறுதியாக இருப்பதற்காகத் தான் அதனுள் புகுந்தான். எளிதாகக்

கடைவதற்காக அரக்கர்களுள் தானும் ஒருவனாக நின்றுக் கடைந்தான். தேவர்களுக்குள் அநுப்ரவேசித்தான். இப்படி ஒருவனே பலபல செயல்களைச் செய்தானே. இதனினும் வேறுகஷ்டமுளதோ! இப்பாடுகளை எதற்காகப் பட்டான்?

3. तव गुरुस्तनशैलभरं सदा जननि वोढुमना जगतां पिता ।
उरुभरोद्वहनाभ्यसनाय किं तमपि मन्दरमम्बुनिधौ दधौ ॥

தவ குருஸ்தநசைலபரம் ஸதா ஜநநி வோடுமநா ஜகதாம் பிதா ।
உருபரோத்வஹநாப்யஸநாய கிம் தமபிமந்தரமம்புநிதௌ ததௌ ॥

ஜநநி - தாயே!
ஜகதாம் பிதா - உலகங்களைப் படைத்தவன்
தவ - உமது
குரு - பெரிய
ஸ்தநசைல - கொங்கைகளாகிய மலையின்
பரம் - சுமையை
ஸதா - எப்போதும்
வோடுமநா: - தாங்க விரும்பியவனாய்
உருபர - மிகப்பெரும் சுமையை
உத்வஹநாப்யஸநாய - தாங்கும் பயிற்சியைப்பெற
தமபிமந்தரம் - அந்த மந்திர மலையை
அம்புநிதௌ - பாற்கடலுள்
ததௌ கிம் - தாங்கினனோ?

மந்தரமலையை நாராயணன் தாங்கியதற்கொரு காரணம் கற்பிக்கின்றார் கவி. தேவி! நீ பாற்கடலிலிருந்து தோன்றியவுடன் நாராயணன் மார்பை அலங்கரிக்கப் போகிறாய் என்பது அவனுக்குத் தெரியும். மலைபோல் பருத்த உமது ஸ்தநங்களின் சுமையை எப்போதும் தாங்கவேண்டியிருப்பதால் அதற்கு வேண்டிய பயிற்சி பெறுவதற்காக முன்னமே மந்தரமலையைத் தாங்கினனோவென்ன, தேவருக்குச் சஹாயம் செய்வதற்காக பகவான் மந்தரத்தைத் தாங்கியதில் கவி தம் மனதில் தோன்றிய கருத்தை ஏற்றிக் கூறுகின்றார். (3)

4. नादत्तमध्वनि सिध्यति किञ्चनेति
निश्चिन्वता भगवतापि विवित्सता त्वाम् ।
वैदेहि कामपि शिलां अबलां विधाय
कन्याप्रदानविधिः अक्षपदाय चक्रे ॥

நாதத்தமத்யவநி ஸித்யதி கிஞ்சநேதி
நிஶ்சிந்வதா பகவதாபி விவித்ஸதா த்வாம் ।
வைதேஹி காமபிசிலாம் அபலாம் விதாய
கந்யா ப்ரதாநவிதி: அக்ஷபதாய சக்ரே ॥

வைதேஹி - ஜனகராஜன் பெண்ணே!
த்வாம் - உம்மை
லிலிப்ஸதா - அடையவிரும்பியவனும்
அத்யவநி - உலகில்
அதத்தம் - முதலில் பிறருக்குக் கொடுக்காதது
கிஞ்சந - யாதொன்றும்
ந லப்யதே - கிடைப்பதில்லை
இதி நிச்சிதவதா - என்ற நிச்சயம் உடையவனுமான
பகவதாபி - ராமனாலும்
காமபி சிலாம் - ஒரு கல்துண்டை
அபலாம் - பெண்ணாக
விதாய - செய்து
கந்யாப்ரதாநவிதி: - கந்யகாதாநம் என்று சாஸ்த்ரவிஹிதமான செயல்
சக்ரே - செய்யப்பட்டது.

இந்த ச்லோகம் முதல் இந்த ஸ்தபகம் முழுவதும் ஸீதையைத் தான் அடைவதற்காக பகவானால் செய்யப்பட்ட முயற்சிகளைத் தெரிவிக்கும் வாயிலாக ராமாயண கதையைச் சுருக்கிக் கூறுகிறார்.

ஜநகராஜன் மகளே உம்மைத்தான் அடையவிரும்பினான் ராமன். இம் மண்ணுலகில் ஸத்பாத்திரத்தில் முதலில் தாம் தானம் செய்தால் தான் பின் அது தமக்குக் கிடைக்கும் என்ற கருத்துகொண்ட "அடந்நபி மஹீம் க்ருத்ஸ்நாம் நாதத்தம் உபதிஷ்டதே" என்ற சாஸ்த்திரத்தை அவன் அறிவன். எனவே சிறந்த ஒருவருக்கு சிறந்த பெண்ணை தானம் செய்ய வேண்டும் என நிச்சயித்தான் பகவானான ராமன், காட்டிடையே செல்லுமிவனுக்குப் பெண் எங்கிருந்து கிடைப்பள்? கௌதம ஆச்ரமத்தில் ஒரு கல்லைப் பார்த்தான். அதைப் பெண்ணாகமாற்றிவிட்டான். இப்படிச் சிறப்பான பிறப்புடைய பெண்ணுக்கேற்ப சிறந்த வரன் எவரென ஆராய்ந்தான். அக்ஷபாதரை - காலில் கண்ணுடையவரை கௌதமரை ஏற்றவராகத் தேர்ந்தெடுத்தான். கல்லில் பிறந்த பெண்ணுக்குக் காலில் கண்ணுடையவர் தக்கவரன் தானே! எனவே கன்யகாதாநம் என சாஸ்திரத்தில் கூறியுள்ள ஒரு செயலை அவருக்குச் செய்துகொடுத்தான். சிறந்த இச்செயலை முதலில் செய்து பின் சிறப்புடைய உம்மை அடைந்தான் எனக்கவி உத்ப்ரேக்ஷை செய்கிறார்.

அக்ஷபாதர் என்பது அவர் இயற்பெயர். காலில் கண்ணுடையவர் என்பது அச்சொல்லின் பொருளாம். காலில் கண்ணுடையரல்லரவர். (4)

5. विद्यां बलां रघुपतिः पथि गाधिपुत्रात्
संप्राप्य निहतसमस्ततनुक्रमोऽपि ।
अम्बतनु क्रमहरां अबलामिह त्वाम्
स्वस्य ध्रुवं घटयितुं तमुपास्त भूयः ॥

வித்யாம் பலாம் ரகுபதி: பதி காதிபுத்ராத்
ஸம்ப்ராப்ய நிஹ்நுத ஸமஸ்த தநுக்லமோபி ।
அம்பாதநுக்லமஹராம் அபலாம் இஹ த்வாம்
ஸ்வஸ்ய த்ருவம் கடயிதும் தம் உபாஸ்த பூய: ॥

அம்ப - தாயே
ரகுபதி: - ராமன்
பதி - ஸித்தாச்ரமம் செல்லும் வழியில்
காதிபுத்ராத் - விஸ்வாமித்ரரிடமிருந்து
பலாம் - பலே என்ற பெயருடைய வித்யையை, பலமுடையதை
ஸம்ப்ராப்ய - அடைந்து
நிஹ்நுத - போக்கப்பட்ட
தநு - உடலின், அல்பமான
க்லமோபி - ச்ரமத்தை உடையவராக ஆனபோதும்
அதநு - உடலற்றமன்மதனது, அல்பமல்லாத
க்லம - ச்ரமத்தை
ஹராம் - போக்கவல்ல
அபலாம் - முன் சொன்னபலே என்ற வித்யையினும் வேறான வித்யையை, பலமற்ற பெண்ணான
த்வாம் - உன்னை
ஸ்வஸ்ய கடயிதும் - தான் அடைவதற்காக
இஹ - இங்கு
பூய: - மேலும்
தம் - அந்த விச்வாமித்ரரை
உபாஸ்த - பணிவிடை செய்துத் தொடர்ந்தார்
த்ருவம் - நிஸ்சயம்.

ஸ்ரீராமபிரான் ஸித்தாஸ்ரமம் செல்லும் வழியில் விஸ்வாமித்ரரிடமிருந்து வழிநடைத் துன்பம் தெரியாதிருக்க "பலே" என்னும் மந்திரத்தை உபதேசமாகப் பெற்றார். பலே என்பது மந்திரத்தின் பெயராயினும் பலம் உடையது என்ற பொருளும் அச்சொல்லிற்கு உண்டு, பலே என்ற மந்த்ர மகிமையால் நடந்து சென்றதால் தநு - உடலிலுண்டான ச்ரமத்தைப் போக்கிக்கொண்டார். பலேயால் - பலமுடையதால் தநுவான அற்பமானதைப் போக்கிக்கொண்டரர் என்ற விரோதம் தோன்றுகிறது பலாம் என்றதற்கும் தநு என்றதற்கும் முறையே மந்த்ரம் என்றும் உடல் என்றும் பொருளைக் கொண்டு மேற் கூறிய பொருளைக்கொண்டால் விரோதம் போகிறது. பலாமந்த்ர உபதேஸம் பெற்றபின் அபலே என்ற மந்த்ரத்தையும் உபதேஸம் செய்துகொண்டார் என்றும் விஸ்வாமித்ரரின் யாகத்தை இடையூறு இன்றி முடிக்க வேண்டி அவரை மேலும் பின்தொடர்ந்தார் என்றும் ராமாயணம் கூறுகின்றது ஆனால் கவி வேறுகாரணம் கற்பிக்கின்றார் மேலும் பின்தொடர்ந்ததற்கு. ராமனுக்கு அதநுவால் உடலற்ற மன்மதனால் துன்பம் தோன்றிற்றாம். இத்துன்பம் அதநு வானதாம் - அல்பமல்லாததாம் - வலிமையானதாம். இத்துன்பத்தைப் போக்கி முன்சொன்ன பலா என்ற மந்திரத்திலும் வேறான "அபலா" என்ற மந்திரத்தின் - அபலேயான - பலமற்றவளான - ஸீதையின் - துணைவேண்டியிருந்ததாம். இச்சீதையை விஸ்வாமித்திரரால்தான் அடைவிக்க முடியுமாம். எனவே அவரைப்பின் தொடர்ந்தார்

என்கிறார். இங்கும் அபலேயால் - பலமற்றதால் அதநுவான - அல்பமல்லாது பலமுடைய ச்ரமத்தைப் போக்கிக்கொண்டார் என விரோதாபாஸம் தோன்றுகிறது. அபலேயால் - ஸீதையால் அதநுவான மன்மதன் ச்ரமத்தைப் போக்கிக்கொண்டார் எனப் பொருள் கொண்டதால் விரோதம் போகின்றது. விஷ்ணுவான ராமன் லக்ஷ்மியான ஸீதையை அடையப் பலபாடுபட்டார் என்றாயிற்று. (5)

6. शंसन्ति पंक्तिरथयागविधेः फलं यं
 सोयं मखावनिभवां जनकात्मजे त्वाम् ।
प्राप्तुं व्यधात् कुशिकनन्दनयज्ञरक्षां
 रक्षांसि हन्त दमयन् युधि रामचन्द्रः ॥

ஶம்ஸந்தி பங்க்திரத யாகவிதே: பலம் யம்
 ஸோயம் மகாவநிபவாம் ஜநகாத்மஜே த்வாம் ।
ப்ராப்தும் வ்யதாத் குஶிகநந்தந யஜ்ஞரக்ஷாம்
 ரக்ஷாம்ஸி ஹந்த தமயந் யுதி ராமசந்த்ர: ॥

ஹே ஜநகாத்மஜே - ஜநகரின் பெண்ணே
யம் - எந்த ராமனை
பங்க்திரத - தசரதரது
யாகவிதே: - அச்வமேதயாகத்தின்
பலம் - பயனாக
ஶம்ஸந்தி - வால்மீகி முதலானவர் சொல்கின்றனரோ
ஸ: - அந்தராமனும்
மகாவநிபவாம் - ஜநகரின் யாக பூமியில் தோன்றிய

த்வாம் - உன்னை
ப்ராப்தும் - அடைவதற்காக
யுதி - போரில்
ரக்ஷாம்ஸி - ஸுபாஹு முதலிய அரக்கர்களை
தமயந் - அழித்துக்கொண்டு
குஶிகநந்தந - விச்வாமித்ரரது
யஜ்ஞரக்ஷாம் - யாகப் பாதுகாவலை
வ்யதாத் - செய்தார்
ஹந்த - ஆச்சர்யம்.

உன்னை அடைவதற்காகவே ராமன் விச்வாமித்ர யாகரக்ஷணம் செய்தார் என்கிறார். இங்கு அடைபவனான ராமன் யாகத்தால் தோன்றியவன். அடைய வேண்டியவளாகிய ஸீதை ஜநகயாக பூமியில் தோன்றியவள். இவ்விருவரும் ஒன்றாகச் சேர்வதற்கு வேண்டிய வழிவகுத்ததும் விச்வாமித்ரயாகம். இங்ஙனம் அடைபவன் அடைய வேண்டியவள் அடைவதற்கான வழி ஆகிய மூன்றும் யாகத்தொடர்பு உடையதென்பது ஆச்சர்யம் என்கிறார் "ஹந்த" என்பதால். (6)

7. भगवति क्षितिपुत्रि भवत्कृते भवहरोऽपि भवन् रघुनन्दनः ।
 समभवद्भवचापलतांतधीः स इति विस्मयवंतः इहास्महे ॥

**பகவதி க்ஷிதிபுத்ரி பவத்க்ருதே பவஹரோபி பவந் ரகுநந்தந: ।
ஸமபவத் பவ சாபலதாந்ததீ: ஸ இதி விஸ்மயவந்த
இஹாஸ்மஹே ॥**

ஹே க்ஷிதிபுத்ரி - பூமியின் பெண்ணே!
ஸ: ரகுநந்தந: - அந்த ராமன்
பவஹரோபி - பவ:ஹர: என்னும் பெயர்களைப் பெற்றிருப்பினும்
பவந்நபி - இருந்த போதும்
பவத் க்ருதே - உமக்காக
பவ - ருத்ரனது
சாபலதா - வில்லாகிய கொடியை
அந்த - அழிப்பதில்
தீ: - புத்தியுடையவனாய்
ஸமபவத் - ஆயிவன்
இதி இஹ - என்னும் விஷயத்தில்
வயம் - யாம்
விஸ்மயவந்த: - ஆச்சர்யமுடையவர்களாய்
ஆஸ்மஹே - உள்ளோம் (என்பது விரோதாபாஸம்)
பவத்க்ருதே - உமக்காக
பவஹர: - ஆச்ரிதர்களின் ஸம்ஸாரமாம் துன்பத்தைப் போக்குபவனாக
பவந்அபி - இருந்போதும்
பவசாபல - ஸம்ஸார நப்பாசையில்
தாந்த - மிகுதியான
தீ: - புத்தியுடையவனாக
ஸமபவத் - ஆயினன்
இதி இஹ - என்னும் இவ்விஷயத்தில்
விஸ்மயவந்த: - ஆச்சர்ய முடையவர்களாய்
ஆஸ்மஹே - உள்ளோம்.

பூமியின் பெண்ணே இவ்வுலகிலுள்ள வஸ்துக்கள் ஒவ்வொன்றின் உள்ளும் புறமும் நாராயணன் வ்யாபித்துள்ளான் என்கிறது புருஷஸூக்தம். ஆகவே கோவிந்தன் என்ற பெயர்ச்சொல் கோவிந்தன் என்பவன் ஆத்மாவைக் குறிப்பது போல் அவ்வாத்மாவினுள் வாழும் நாராயணனைக் குறிப்பதால் ராமனையும் குறிப்பனவாயின. எனவே பவ:ஹர: என்ற பெயரை உடையவனாக ராமன் ஆயினான். "யதோவா இமாநிபூதாநி ஜாயந்தே" எனத்தொடங்கும் உபநிஷத்து எதிலிருந்து இவ்வுலகம் தோன்றுகின்றதோ, எதனால் உலகம் வாழ்கின்றதோ ப்ரளய காலத்தில் உலகம் எதில் லயமடைகிறதோ அதை ப்ரஹ்மம் என அறி எனப்போதிப்பதோடு அவன் நாராயணனே என்கிறது. ஆகவே ராமனும் உலகை அழிக்கும் போது சிவனின் செயலை உடையவனாயினன். அத்தகைய இவ்விராமன் தமது வில்லாகிய ருத்ர தநுஸ்ஸை உடைத்தாயினன். அத்தகைய இவ்விராமன் தமது வில்லாகிய ருத்ரதநுஸ்ஸை உடைத்தானே இது ந்யாயமோ? தமது பொருளைத் தாமே நாசம்செய்பவர் எவரேனுமுளரோ? இப்படி உலக விருத்தமான செயலைச் செய்தது வியப்புக்கு உரியதாகிறது என்பது விரோதாபாஸம். இதன் பரிஹாரம் வருமாறு. பூமிஸுதையே ராமன் தம்மைச் சரணம் புகுந்தவரின் ஸம்ஸார தாபத்தைப் போக்குபவனாக . பவஹரனாக இருந்தபோதிலும் உம்மைப் பிரிந்தபோது

ஸம்ஸாரத்தில் மிகுந்த நப்பாசை உடையவன் போல் மரங்களே! நதிகளே! பறவைகளே! நீங்கள் ஸீதையைக் கண்டீர்களா? எங்கே அவள்? எப்பக்கம் போனாள்? என்றெல்லாம் நடித்தானே! இதை எண்ணும்போது அளவுகடந்த ஆச்சர்யம் தோன்றுகின்றது என்பது பரிஹாரம். இவையெல்லாம் உனக்காகவன்றோ? (7)

8\. त्वद्भ्रूभटस्य धनुषा विजितः सुमेषोः
रामस्तमेव नितरां अभिराद्धुकामः ।
तत्प्रीतये जनकनन्दिनि तद्विपक्ष
कोदण्डभंगमुपहारमिवाजहार ॥

த்வத்ப்ரூ படஸ்ய தநுஷா விஜித: ஸுமேஷோ:
ராமஸ்தமேவ நிதராம் அபிராத்துகாம: ।
தத்ப்ரீதயே ஜநக நந்திநி தத்விபக்ஷ
கோதண்டபங்கம் உபஹாரம் இவாஜஹார ॥

ஜநகநந்திநி - ஜநகரின் பெண்ணே!
த்வத்ப்ரூ படஸ்ய - உன் புருவத்தால் ஸங்கிப்பித்ததைத் தட்டாது செய்யும் சூரரான
ஸுமேஷோ: - மன்மதனது
தநுஷா - அம்பானபுஷ்பத்தால்
விஜித: - ஜெயிக்கப்பட்ட
ராம: - ராமன்
தமேவ - தம்மை ஜெயித்தமன்மதனையே
அபிராத்துகாம: - தன்வயமாக்கிக் கொள்ள எண்ணங்கொண்டவனாய்
தத்ப்ரீதயே - அந்த மன்மதன் ப்ரீதியை ஸம்பாதிப்பதற்காக
தத்விபக்ஷ - அம் மன்மதன் எதிரியான சிவனது
கோதண்டபங்கம் - வில்லின் உடைப்பை
உபஹாரம் - உபஹாரமாக (கையுறைப் பொருளாக)
ஆஜஹார இவ - ஸம்பாதித்தான் போலும்

ராமன் செய்த கோதண்ட பங்கத்துக்கு ஒரு காரணம் கற்பிக்கிறார் கவி. ஜானகியே உன் அழகை எப்போது கண்டானோ ராமன் அப்போதே உன்மீது காதல் கொண்டான். மன்மதன் தொல்லையை அவனால் வெற்றி பெறமுடியவில்லை. மன்மதன் ராமனை வெற்றிகண்டான். எனவே அவனுடன் தாம் விரோதம் கொள்ளக்கூடாது என எண்ணினான். எப்படியாவது அவனைத் தன் வசமாக்கிக்கொள்ள வேண்டும் என நினைத்தான். அதற்கென்னவழி என்று சிந்தித்தான். தன் நெற்றிக் கண்ணால் சுட்டெரித்ததனால் மன்மதனுக்குப் பகைவனான சிவனது வில்லை முதலில் உடைத்து அவன் நட்புக்கு இதை தேங்காய், பழம், கற்கண்டு போன்ற உபஹாரமாக - கையுறை பொருளாக - ஆக்குவோம் என எண்ணி சிவன் வில்லை உடைத்தான். இப்படி உன்னை அடைய ராமன் பல ப்ரயத்தனங்கள் செய்ய வேண்டியதாயிற்று. (8)

குபேர-தர்பத்தில், ஶயத்வம்-படுப்பதை அடைந்தான். தர்பத்தில் படுத்தான் என்பது உண்மைப்பொருள். சப்த ச்லேடை.

தனது மஹிமையை அறியாத ஜடனான ஸமுத்ரத்தை உலக ரக்ஷகனான ராமன் தனக்கு ரக்ஷகனாக எவ்வளிச் சரணமடைந்தான். ஹம்ஸ தூளிகையில் படுக்க வேண்டியவன் மோசமான மணலில் படுத்தான் இவையெல்லாம் உனக்காகவன்றோ?

21. प्रत्यानेतुमुपागताय भवतीं आसन्न लंकोषितां
वात्सल्यादिव ते विभागचकितः वारान्निधिः त्वद्गुरुः ।
काकुस्थाय चिराय मार्गमदिशत् कालाग्निनेवामुना
शोणाक्षेण रुषा शुशोषयिषितः सीते शितैः सायकैः ॥

ப்ரத்யாநேது முபாகதாய பவதீம் ஆஸந்நலங்கோஷிதாம்
வாத்ஸல்யாதிவ தே விபாக சகித: வாராந்நிதி: த்வத்குரு: ।
காகுத்ஸ்தாய சிராய மார்கமதிஶத் காலாக்நி நேவாமுநா
ஶோணாக்ஷேண ருஷா ஶுஶோஷயிஷித: ஸீதே ஶிதை:ஸாயகை: ॥

ஹே ஸீதே - ஸீதாதேவியே!
த்வத்குரு: - உனது தந்தையான
வாராந்நிதி: - ஸமுத்ரராஜன்
ஆஸந்நலங்கோஷிதாம் - தன்னிடையே உள்ளங்கையில் வஸிப்பவளான
பவதீம் - உம்மை
ப்ரத்யாநேதும் - தமதகத்துக்கு அழைத்துவருவதற்காக
உபாகதாய - தமது கரையை வந்தடைந்த ராமனுக்கு
வாத்ஸல்யாத் - மகள் என்ற ப்ரேமையால் வழிவிடாதவனாய்
ருஷா - கோபத்தால்
ஶோண - சிவந்த
அக்ஷேண - கண்களை உடைமையால்
காலாக்நிநேவ - ப்ரளய கால அக்நி போன்றிருந்த
அமுநா - ராமனாலே
ஶிதை: - கூர்மையான
ஸாயகை: - பாணங்களால்
ஶுஶோஷயிஷித: - வற்றச் செய்ய விரும்பியவனாய்
காகுத்ஸ்தாய - ராமனின் பொருட்டு
சிராய - வெகு நேரம் கழித்து
மார்கம் - வழியை
அதிஶத் - தந்தான்.

லக்ஷ்மியாகிய ஸீதை பாற்கடலில் பிறந்தவள், லங்கை இருக்கும் இடமாகிய உப்புக்கடலும் கடலினத்தைச் சார்ந்ததால் தன்னுள் இருக்கும் லங்கையைத் தன் வீடாகவும் ஸீதையை மகளாகவும் அவள் லங்கையில் தற்போது இருப்பதைப் பிற்காலத்தில் வாழ்வதாகவும் எண்ணினானாம் கடலரசன். வழிவிட்டால் பெண்ணை அழைத்துச் சென்றுவிடுவன் ஆகையால் பெண்ணைப் பிரியநேரிடுமே என்ற அச்சத்தால்

உடன் வழிவிடவில்லை. ஆனால் மருமகனான ராமன் கோபத்தால் கண்கள் சிவக்க ப்ரளய கால அக்நிபோல் ஜ்வலித்த ஆக்நேய அஸ்த்ரத்தை விட்டு உன்னை வற்றச் செய்கிறேன் எனச் சொன்னபின்பே அவனுக்கு வழிவிட்டானாம். வழிவிட்டதாவது அணைகட்டுவதற்காக அலைவீசாது கடல் நீரை ஸ்தம்பநம் செய்ததே. தன் வம்சத்தில் பிறந்த முன்னோர்களால் தோற்றுவிக்கப்பட்டதும் தமது மாமனாருமான கடலையும் உனக்காக வற்றடிக்கத் துவங்கினான்.

22. प्रपात्य महतो गिरीन् प्रसभमंतरिन्द्रेण यः
 प्यधायि वसुधासुते तदनुजः त्वदर्थं प्रभुः ।
अमुं बहिरिलाधरैः अपिदधत् निधिं पाथसां
 कपिव्रजकरार्पितैः किमिह शेषपूर्तिं व्यधात् ॥

ப்ரபாத்ய மஹதோ கிரீந் ப்ரஸபமந்தரிந்த்ரேணய:
ப்யதாயி வஸுதாஸுதே ததநுஜ: த்வதர்த்தம் ப்ரபு: ।
அமும் பஹிரிலாதரை: அபிதத் நிதிம் பாதஸாம்
கபிவ்ரஜ கரார்பிதை: கிமிஹ சேஷபூர்த்திம் வ்யதாத் ॥

வஸுதாஸுதே - பூமகளே
இந்த்ரேண - தலைமையான இந்திரனாலே
ய: - எந்த ஸமுத்ரம்
(பூர்வம் - முன்பு)
மஹத: கிரீந் - மைனாகம் முதலான பெரிய மலைகளை
ப்ரஸபம் - காரணமின்றியே
ப்ரபாத்ய - ரக்கைகளை வெட்டுகின்ற பயத்தால் விழுவித்து
அந்த: - ஸமுத்திரத்தின் ஆழமான இடம்
ப்யதாயி - மறைக்கப்பட்டதோ
ததநுஜ: - அந்த இந்திரன் தம்பி உபேந்த்ரனான ராமன்
அமும் பாதஸாம்நிதிம் - இந்த ஸமுத்ரத்தை
கபிவ்ரஜ - வானரக் கூட்டங்களின்
கரார்பிதை: - கூட்டங்களால் போடப்பட்ட
இலாதரை: - மலைகளால்
த்வதர்த்தம் - உனக்காக
பஹி: - வெளியிலும்
அபிதத் ஸத் - மறைப்பவராய்
இஹ - ஸமுத்ரத்தில்
சேஷபூர்த்திம் - மறைபடாது உள்ள இடத்தையும் மறைப்பதை
வ்யதாத் கிம் - செய்தானா என்ன?

முன் காலத்தில் மலைகள் ரக்கைகளுடன் இருந்தன. இஷ்டம் போல் பறந்து சென்று மக்கள் வாழுமிடங்களின்மேல் விழுந்து நகரங்களை நாசம் செய்தன. இதனால் வெகுண்ட இந்திரன் அவற்றின் ரக்கைகளை வெட்டி வீழ்த்தியபோது மைனாகம் போன்ற சில மலைகளை காற்று வேகமாக அடித்து வந்து ஸமுத்திரத்தில் வீழ்த்தியது. பகவான் இந்திரனுக்குத் தம்பியாக உபேந்திரன் என்ற பெயரில் அவதரித்தான். தோண்டிய பள்ளத்தைத் தூர்த்தல் என்ற அதர்ம செயலைத் தலைமையுள்ள

இந்திரன் முதலில் துவங்கியுள்ளானாகையால் தம்பியான ராமன் அதே ஸமுத்ரத்தில் வானரர்களால் மலைகளைக் கொணர்ந்து வீழ்த்தி தமையன் முடிக்காத செயலை உனக்காகப் பலரறியும்படி வெளியிலும் தூர்த்து முடித்தானோ என உத்ப்ரேக்ஷையாகக் கூறுகிறார்.

"அந்தரிந்த்ர:" என்றவிடத்து "அந்த: - உள்ளே - மறைவில், என்ற சப்தமும் "பஹிரிலாதரை:" என்றவிடத்து "பஹி:" வெளியில் என்ற ப்ரயோகம் செய்யப்பட்டுள்ளன. இதனால் இந்திரன் அதர்மத்துக்குப் பயந்து மறைவில் செய்தான் என்றும் பகவானுக்கு அதைச் செய்வதில் பயமில்லை என்றும் ஸூசிக்கப்பட்டன. தமது முன்னோரான ஸகரர்களால் தோண்டப்பட்ட ஸமுத்ரத்தையும் தனக்காகப் பலரறியத் தூர்த்துவிட்டான் என்பது கருத்து.

23. अंघ्रोरक्ष्णोरपि किल फलं वानराणां नराणाम्
आराद्राशिं तरितुमनसां अंभसामंहसां च ।
मानार्हः त्वामहित भवनात् मानिनीमानिनीषुः
काकुत्स्थोसौ जननि विदधे कौतुकात् सेतुकार्यम् ॥

அங்க்ரியோரக்ஷ்ணோ: அபி கில பலம் வாநராணாம் நராணாம்
ஆராத்ராஶிம் தரிதுமநஸாம் அம்பஸாம் அம்ஹஸாஞ்ச ।
மாநார்ஹ: த்வாமஹித பவநாத் மாநிநீமாநிநீஷு:
காகுத்ஸ்தோஸௌ ஜநநி விதேதே கௌதுகாத் ஸேதுகார்யம் ॥

ஜநநி - தாயே!
மாநார்ஹ: - பூஜிக்கத்தக்க
அஸௌ - இந்த ராமன்
மாநிநீம் - மனவேறுபாடடைந்த
த்வாம் - உன்னை
அஹிதபவநாத் - ஶத்ருவின் வீட்டிலிருந்து
ஆநிநீஷு: - அழைத்துவர விரும்பியவனாய்
அம்பஸாம் ராஶிம் - ஸமுத்ரத்தை
ஆராத் - ஶீக்ரமாக
தரிதுமநஸாம் - கடக்க விரும்பிய
வாநராணாம் - குரங்குகளின்
அங்க்ரியோ: பலம் - கால்களுக்குப் பயன் போன்றதும்
ததா - அப்படியே
அம்ஹஸாம் - பாபங்களுடைய
ராஶிம் - குவியலை
ஆராத் - ஶீக்ரமாக
தரிதுமநஸாம் - போக்க விரும்பும்
நராணாம் - மனிதரின்
அக்ஷ்ணோரபி பலம் - கண்களுக்கு ப்ரயோஜநம் போன்றதுமான
ஸேதுகார்யம் - ஸேதுபந்தநம் என்ற செயலை
கௌதுகாத் - ஆசையால்
விததே கில - செய்தானன்றோ.

தாயே நீ வாழுமிடத்தை ராமன் அறியாததால் உன்னை சீக்கிரம் ஶத்ருவின் வீட்டிலிருந்து அழைத்துவர முடியவில்லை. அதனால் நீ ராமனும் என்னை வெறுத்து வேறு பெண்ணை மணந்தானோ என்ற அளவுக்கு மனவேறுபாடு அடைந்தாய். இருப்பிடம் தெரிந்ததும் உன்னை அழைத்துவர வானர முதலிகளுடன் கிளம்பிவிட்டான் ராமன். ஶத்ருவை அப்போதே அழித்துவிட வேண்டும் என்ற ஆசை வாநரர்களுக்கு. அதற்குத் தடையாக இருந்தது வழியில் கடல். அதைக் கடக்க வேண்டுமே! அதற்காக அணைகட்டத் தொடங்கினர். அதற்கு மலை எவ்வளவு தேவைப்பட்டது? அவை என்ன அருகிலேயா கிடைத்தன! வெகுதூரமன்றோ செல்லவேண்டியிருந்தது! அப்படிப்பலமுறை சென்று சென்று மலைகளைக் கொணர்ந்த அக்கால்களுக்குப் பயன் ஏதாவது வேண்டாமா? இப்போது வானரர்களுக்குப் பெரும்பயன் ராவணவதமேயன்றோ! அதற்குத் துணையாக இருப்பது ஸேதுதானே! ஆகவே இதுவே பெறும் பயனாயிற்று அவர்களுக்கு. ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல் கடலைக் கடக்கவிரும்பிய மனிதர்களுக்கும் பயனை விளைவிப்பதாக இவ்வணையை ராமன் அமைத்தார் என்கிறார் கவி. மனிதர் எக்கடலைக் கடக்கவிரும்பினர்? பஞ்ச மஹாபாபிகளும் ஸேதுவை தர்ஶித்தாராகில் அப்பாபக் கடலைக்கடந்துவிடுவர் ''ஏதத் பவித்ரம் பரமம் மஹாபாதக நாஶநம்'' என்பதன்றோ ராமபிரான் வாக்கு! கடலைக் கடக்க விரும்பிய வாநரர்களுக்கும், பாபக்கடலைக் கடக்க விரும்பும் மக்களுக்கும் பயன்படுவதாய் இம்மை மறுமைப் பயன்களைப் பயப்பதாயிற்று அணை என்றவாறு.

ஜகத்பூஜ்யராக இருந்தும் ராமன் உனக்காகப் பள்ளத்தைத் தூர்த்தல் என்ற இழிசெயலைச் செய்தார் என்கிறார்.

17. द्रष्टुं त्वां ननु हनुमन्तमग्निदाहादि
आतङ्कं बहुमधिलंकमाप्तवन्तम् ।
सर्वस्वायित परिरंभ सौख्य दानात्
काकुत्स्थो जननि चकार निर्व्रणं तम् ॥

த்ரஷ்டும் த்வாம் நநு ஹநுமந்தமக்நி தாஹாதி
ஆதங்கம் பஹுமதிலங்கம் ஆப்தவந்தம் ।
ஸர்வஸ்வாயித பரிரம்ப ஸௌக்ய தாநாத்
காகுஸ்தோ ஜநநி சகார நிர்வ்ரணம்தம் ॥

ஜநநி - தாயே!
காகுஸ்த்த: - ராமன்
அதிலங்கம் - இலங்கையில்
த்வாம் த்ரஷ்டும் - உன்னைப் பார்ப்பதற்காக
அக்நிதாஹாதி - அக்நியால் கொளுத்தப்படுதல் முதலான
பஹு ஆதங்கம் - பல துன்பங்களை
ஆப்தவந்தம் - அநுபவித்த
தம் ஹநுமந்தம் - போற்றற்குரிய ஹநுமனை
ஸர்வஸ்வாயித - அனைத்துவகைச் செல்வங்களுக்கும் ஒப்பான
பரிரம்ப - அணைத்துக் கொள்ளுதலாகிய
ஸௌக்யம் - போகத்தை
தாநாத் - அளித்ததாலே
நிர்வ்ரணம் - புண்ணற்றவனாக
சகார நநு - செய்தானன்றோ.

தாயே! முன் சொன்ன ஹநுமன் உனக்காக எத்துணைத் துன்பத்தை அடைந்தான் தெரியுமோ? அவன் வாலில் நெருப்பையேயன்றோ வைத்துவிட்டனர் அரக்கர். எந்த அஸ்த்ரத்தாலும் கட்டுப்படமாட்டாத ஹநுமன் மேல் ப்ரஹ்மாஸ்த்ரத்தை விடுத்து அவனைக் கட்டிவிட்டானே அரக்கன். எத்துணை புண் அவன் உடலில் அப்போது தோன்றியிருக்கும்! யாருக்காக இத்துணைத் துன்ப அனுபவங்கள்? இத்துணைத்துன்பம் அடைந்ததற்கு ராமன் அப்போது நாட்டில் இருந்திருப்பனேல் நாட்டையே அனுமனுக்கு அளித்திருப்பன். இப்போதவன் துறவி வேடத்தில் காட்டிலன்றோ உளன். ஆனால் உண்மையில் ராமன் காட்டிலிருந்துதான் அநுமனுக்குக் கிடைத்தற்கரிய பரிசு கிடைக்க வாய்ப்பளித்தது. உன்னையன்றிப் பிறருக்குக் கிடைத்தற்கரியதாயும் செல்வமனைத்தும் பெற்றேன் யான் என என்னத்தக்கதாயும் மிக உயர்ந்த ஆநந்தத்தை அநுமனுக்கு அளித்ததுமான ராமனது அழுந்தத்தழுவலன்றோ கிட்டியது! வாரியணைத்துக்கொண்டனே ராமன்' புண்ணெல்லாம் பறந்தோடினவே! ''ஏஷஸர்வஸ்வ பூதஸ்து பரிஷ்வங்கோ ஹநூமத: । மயா காலமிதம் ப்ராப்ய தத்தஸ் தஸ்ய

மஹாத்மந: ॥'' என ஆதிகவியும் மஹர்ஷியுமான வால்மீகியே புகழ்ந்துள்ளாரே. மஹாத்மா ஆகிவிட்டானே ஹநுமான்.

உன் க்ஷேமஸமாசாரத்தைச் சொன்ன தூதனிடம் உனக்கிடான அன்பையே செலுத்திவிட்டானே! ஆகவேதான் ''காந்தா ஶ்லேஷாத் அதிக ஸு்பக: காமிநாம் தூதலாப:'' என்றான் போலும் காளிதாஸன்.

18. दरादुपगतं रमे दशशिरोनुजः त्वत्कृते
समस्तनयकोविदः सपदि संग्रहीतुं प्रभुः ।
असाधित रिपुस्थलोपि अभिषिषेच तं तत्पदे
नरः कुशलमश्नुते न खलु साहसिक्याहते ॥

தராதுபகதம் ரமே தஶஶிரோநுஜ: த்வத்க்ருதே
ஸமஸ்த நயகோவித: ஸபதி ஸங்க்ரஹீதும் ப்ரபு: ।
அஸாதிதரிபுஸ்தலோபி அபிஷிஷேச தம் தத்பதே
நர: குஶலமஶ்நுதே ந கலு ஸாஹஸிக்யாத்ருதே ॥

ரமே - லக்ஷ்மீ!
ஸமஸ்த நய கோவித: - அனைத்து நீதி சாஸ்த்ரங்களை அறிந்தவரும்
ப்ரபு: - அரசனுமான ராமன்
தராத் - ராவண அவமான பயத்தால்
உபகதம் - தானாகச் சரணமடைந்தவனும்
தஶஶிரோநுஜம் - ராவணன் தம்பியான விபீஷணனை
ஸங்க்ரஹீதும் - நண்பனாக ஏற்க
தத்பதே - ராவணன் அதிகார பீடத்தில்
தம் - விபீஷணனை
ஸபதி - சரண்புகுந்தவுடன்
த்வத்க்ருதே - உனக்காக
அபிஷிஷேச - பட்டாபிஷேகம் செய்துவைத்தான்
நர: - மனிதன்
ஸாஹஸிக்யாத்ருதே ஸாஹஸமான செயலைச் செய்யாது
குஶலம் - க்ஷேமத்தை
நாஶ்நுதே - அடைகிறானில்லை

யுத்தகாண்ட வரலாறு தொடங்குகின்றது. லக்ஷ்மீ! ராவணனால் அவமானப்படுத்தப்பட்ட விபீஷணன் அவனைப் பிரிந்து கடற்கரையில் ராமனைத் தஞ்சம் புகுந்தபோது பலர் அவனை ஏற்க மறுத்தும் காலதாமதம் செய்யாது உடனே நண்பனாக ஏற்றானே! எதற்கு? ஒருக்கால் ராவணன்மீதுள்ள கோபம் தணிந்து திரும்பவும் நம்மைச் சார்ந்தவன் அவன் என்றெண்ணித் திரும்பிப் போய்விட்டால் என்செய்வது? சத்ருவான ராவணனின் நெளிவு சுளுக்குகளை அவன் நன்கறிந்தவன். ஆகவே இவனை நண்பனாக ஏற்றால் எவ்வளவு நன்மை கிடைக்கும்! தேடிப்பிடிக்க வேண்டியதுத் தானாகக் கிட்டினால் விடுவனோ வெற்றி விரும்புபவனும், ஸந்தி, விக்ரஹம் முதலான ராஜ நீதிகளை அறிந்தவனுமான மனிதன்!

ஏற்றுக்கொண்டதோடா விட்டான்? ராவணனது ஸிம்ஹாஸநப் பட்டாபிஷேகமும் செய்து வைத்தான். ராவணன் நாட்டை ராமன் கைப்பற்றினானா? கைப்பற்றுவது எளிது என எண்ணினானா? கடலேயே கடக்கவில்லேயே? ராவணனைக் கண்ணாலும் காணவில்லேயே! அவன் ஸேனேயின் பலாபலங்களை அறியவில்லேயே! அப்படியிருக்க எப்படிப் பட்டாபிஷேகம் செய்தாய் என வினவுகின்றார் ஆழ்வான் ''அப்திம் நதேரித, நஜிக்யித ராக்ஷஸேந்த்ரம் நைவாஸ்ய ஜஞ்ஜித யதாச பலாபலம் த்வம்! நிஸ்ஸம்ஶய: ஸபதி தஸ்யபதே அப்யஷிஞ்ச: தஸ்யாநுகம் கதம் இதம் ஹி விபீஷணம் ச'' என்ற ச்லோகத்தால் இப்படிச் செய்தது பொருத்தமுடைத்தே என்கிருர் கவி. பயந்து ஒரு செயலேச் செய்யாது ஒதுங்கி இருப்பதினும் தைர்யமாக ஸாஹஸச் செயலேச் செய்வது தைர்யஶாலிக்கு அழகு. ஆகவேதான் மனிதனாக நடித்த போதும் ராமன் இப்படியோர் துணிவுச் செயலேச் செய்தான் என்கிறார் கவி.

ஸஹஸா வர்த்தத இதி ஸாஹஸிக: । தஸ்ய கர்ம ஸாஹஸிக்யம் என்பது விக்ரஹ வாக்யம்.

19. स्त्रीहेतोः प्रथमन्निजेन गुरुणा व्युत्पादितं ज्यायसः
साम्राज्यानुभवे भवेदनुज इत्येतत् विगीतक्रमम् ।
सुग्रीवे च विभीणे च भगवान् आम्रेडयामास तम्
भूमेः पुत्रि भवत्कृते पितृगुणः पुत्रेभिधत्ते पदम् ॥

ஸ்த்ரீ ஹேதோ: ப்ரதமம் நிஜேந குருணாவ்யுத்பாதிதம் ஜ்யாயஸ:
ஸாம்ராஜ்யாநுபவே பவேதநுஜ இத்யேதத் விகீதக்ரமம் ।
ஸுக்ரீவே ச விபீஷணே ச பகவாந் ஆம்ரேடயாமாஸ தம்
பூமே: புத்ரி பவத்க்ருதே பித்ரு குண: புத்ரேபிऽதத்தே பதம் ॥

பூமே: புத்ரி - பூமியின் பெண்ணே!
பகவான் - ராமன்
நிஜேந குருணா - தன் தந்தையால்
ப்ரதமம் - முன்பில்லாது அபூர்வமாக
ஸ்த்ரீஹேதோ: - மனேவியான கைகேயிக்காக
வ்யுத்பாதிதம் - கல்பிக்கப்பட்ட
ஜ்யாயஸ: - மூத்தோனுக்கு முறைப்படி கிடைத்த
ஸாம்ராஜ்யாநுபவே - பூர்ண உலக ஆட்சியில்
அநுஜ - தம்பி
பவேத் - இருக்கக்கடவன் என்ற
தம் - உலகப் புகழ்பெற்ற
விகீதக்ரமம் - முறையற்ற செயலே
ஸுக்ரீவே - வாலியின் தம்பியிடமும்
விபீஷணே - ராவணன் தம்பியிடமும்
பவத்க்ருதே - மனேவியான உனக்காக
ஆம்ரேடயாமாஸ - திரும்பத் திரும்பச் செய்தான்
புத்ரே - பிள்ளேயிடம்
பித்ருகுணா: - தந்தையின் குணங்கள்
பதம் - வந்து சேருவதை
தத்தே ஹி - தரிக்கின்றனவன்றோ!

முன் கேளாததும் காணாததுமான மூத்தோனிருக்க இளவல் நாடாளுதல் என்ற ராஜ நீதிக்கு முரணான முறையைத் தன் மனைவி கைகேயி மனமகிழ்ச்சிக்காகத் தோற்றுவித்தான் தந்தை தசரதன். அதே முறையைத் தன் மனைவியான உனக்காக வாலி ராவணர்களுக்குச் செய்துவைத்ததான் ராமன். இதில் குற்றம் ஒன்றுமில்லை. நல்லனவோ தீயனவோ தந்தையின் குணங்கள் தனயனிடம் தங்குதல் தகுதியுடைத்தே. தந்தை ஒரு முறை செய்தான் மகன் இருமுறை செய்தான். இத்துணையே வேறுபாடு.

20. देवि त्वदर्थे दयितमदिनां सतां शरण्यः शरणं स गच्छन् ।
कुशेशयाक्षोपि कुशेशयत्वं प्राप त्वदावास पदाशयेव ॥

தேவி த்வதர்த்தே தயிதம் நதீநாம் - ஸதாம் ஶரண்ய: ஶரணம் ஸ கச்சந் ।
குஶேஶயாக்ஷோபி குஶேஶயத்வம் ப்ராப த்வதாவாஸ பதாஶயேவ ॥

தேவி - பகவன் மஹிஷீ
ஸதாம் - உபாஸனம் செய்பவர்களை
ஶரண்ய: - காக்க வல்லவனான ராமன்
குஶேஶய - தாமரை போன்ற
அக்ஷோபி - கண்களைப் பெற்றிருந்தபோதும்
ஸ: - ராமன்
த்வதர்த்தே - உம்மைப் பெறுவதற்காக
நதீநாம் தயிதம் - நதிகளின் கணவனான ஸமுத்ரத்தை
ஶரணம் கச்சந் - தஞ்சம் புகுந்தவனாய்
த்வதாவாஸபதே - நீ வாழும் இடத்தைச் சொல்வதாகிய குஶேஶய ஶப்தத்தைத் தானும் பெறவேண்டுமென்ற
ஆஶயேவ - ஆசையால் போல்
குஶேஶயத்வம் - தாமரையாம் தன்மையை, தர்பப் பரப்பில் படுப்பதை
ப்ராப - அடைந்தார்.

குஶம் = ஜலம். குஶத்தில் - ஜலத்தில், ஶயம் - படுத்திருப்பது குஶேஶயம். அதாவது தாமரை. அதுபோன்ற அக்ஷன் கண்ணுடையவன். குஶேஶயாக்ஷன் எனப்படுகிறான். ஏற்கெனவே இப்பெயர் ராமனுக்கு உண்டு "தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகம் ஏவம் அக்ஷிணீ" என்பது உபநிஷத்து. தாமரை போன்ற கண்ணுடையவன் என்பது இதன் பொருள் இதில் அவனுக்கு த்ருப்தி உண்டாகவில்லையாம். குஶேஶயாக்ஷன் என்ற பெயருடன் குஶேஶயன் என்ற பெயரையும் அடைய வேண்டும் என்றெண்ணினானாம். ஏனெனில் குஶேஶயமான தாமரை லக்ஷ்மி வாழுமிடமன்றோ! இவன் மார்பிலும்தான் லக்ஷ்மி வாழ்கிறாள். ஆகவே அப்பெயரைப்பெற ஆசைப்பட்டான். அதனால் குஶேஶயத்வத்தை அடைந்தானாம். அதாவது

குஶே-தர்பத்தில். ஶயத்வம்-படுப்பதை அடைந்தான். தர்பத்தில் படுத்தான் என்பது உண்மைப்பொருள். சப்த ச்லேடை.

தனது மஹிமையை அறியாத ஜடனான ஸமுத்ரத்தை உலக ரக்ஷகனான ராமன் தனக்கு ரக்ஷகனாக எண்ணிச் சரணமடைந்தான். ஹம்ஸ தூலிகையில் படுக்க வேண்டியவன் மோசமான மணலில் படுத்தான் இவையெல்லாம் உனக்காகவன்றோ?

21. प्रत्यानेतुमुपागताय भवतीं आसन्न लंकोषितां
वात्सल्यादिव ते विभागचकितः वारान्निधिः त्वद्गुरुः ।
काकुत्स्थाय चिराय मार्गमदिशत् कालाग्निनेवामुना
शोणाक्षेण रुषा शुशोषयिषितः सीते शितैः सायकैः ॥

ப்ரத்யாநேது முபாகதாய பவதீம் ஆஸந்நலங்கோஷிதாம்
வாத்ஸல்யாதிவ தே விபாக சகித: வாராந்நிதி: த்வத்குரு: ।
காகுத்ஸ்தாய சிராய மார்கமதிஶத் காலாக்நி நேவாமுநா
ஶோணாக்ஷேண ருஷா ஶுஶோஷயிஷித: ஸீதே ஶிதை:ஸாயகை: ॥

ஹே ஸீதே - ஸீதாதேவியே!
த்வத்குரு: - உனது தந்தையான
வாராந்நிதி: - ஸமுத்ரராஜன்
ஆஸந்நலங்கோஷிதாம் - தன்னிடையே உள்ள லங்கையில் வஸிப்பவளான
பவதீம் - உம்மை
ப்ரத்யாநேதும் - தமதகத்துக்கு அழைத்துவருவதற்காக
உபாகதாய - தமது கரையை வந்தடைந்த ராமனுக்கு
வாத்ஸல்யாத் - மகள் என்ற ப்ரேமையால் வழிவிடாதவனாய்
ருஷா - கோபத்தால்
ஶோண - சிவந்த
அக்ஷேண - கண்களை உடைமையால்
காலாக்நிநேவ - ப்ரளய கால அக்நி போன்றிருந்த
அமுநா - ராமனாலே
ஶிதை: - கூர்மையான
ஸாயகை: - பாணங்களால்
ஶுஶோஷயிஷித: - வற்றச் செய்ய விரும்பியவனாய்
காகுத்ஸ்தாய - ராமனின் பொருட்டு
சிராய - வெகு நேரம் கழித்து
மார்கம் - வழியை
அதிஶத் - ஈந்தான்.

லக்ஷ்மியாகிய ஸீதை பாற்கடலில் பிறந்தவள், லங்கை இருக்கும் இடமாகிய உப்புக்கடலும் கடலினத்தைச் சார்ந்ததால் தன்னுள் இருக்கும் லங்கையைத் தன் வீடாகவும் ஸீதையை மகளாகவும் அவள் லங்கையில் தற்போது இருப்பதைப் பிற்காலத்தில் வாழ்வதாகவும் எண்ணினானாம் கடலரசன். வழிவிட்டால் பெண்ணை அழைத்துச் சென்றுவிடுவன் ஆகையால் பெண்ணைப் பிரியநேரிடுமே என்ற அச்சத்தால்

உடன் வழிவிடவில்லை. ஆனால் மருமகனான ராமன் கோபத்தால் கண்கள் சிவக்க ப்ரளய கால அக்நிபோல் ஜ்வலித்த ஆக்நேய அஸ்த்ரத்தை விட்டு உன்னை வற்றச் செய்கிறேன் எனச் சொன்னபின்பே அவனுக்கு வழிவிட்டானாம். வழிவிட்டதாவது அணைகட்டுவதற்காக அலைவீசாது கடல் நீரை ஸ்தபநம் செய்ததே. தன் வம்சத்தில் பிறந்த முன்னோர்களால் தோற்றுவிக்கப்பட்டதும் தமது மாமனாருமான கடலையும் உனக்காக வற்றடிக்கத் துவங்கினான்.

22. प्रपात्य महतो गिरीन् प्रसभमंतरिन्द्रेण यः
प्यधायि वसुधासुते तदनुजः त्वदर्थं प्रभुः ।
अमुं बहिरिलाधरैः अपिदधत् निधिं पाथसां
कपिव्रजकरार्पितैः किमिह शेषपूर्तिं व्यधात् ॥

ப்ரபாத்ய மஹதோ கிரீந் ப்ரஸபமந்தரிந்த்ரேணய:
ப்யதாயி வஸுதாஸுதே ததநுஜ: த்வதர்த்தம் ப்ரபு: ।
அமும் பஹிரிலாதரை: அபிதகத் நிதிம் பாதஸாம்
கபிவ்ரஜ கரார்பிதை: கிமிஹ ஶேஷபூர்த்திம் வ்யதாத் ॥

வஸுதாஸுதே - பூமகளே
இந்த்ரேண - தலைமையான இந்திரனாலே
ய: - எந்த ஸமுத்ரம்
(பூர்வம் - முன்பு)
மஹத: கிரீந் - மைனாகம் முதலான பெரிய மலைகளை
ப்ரஸபம் - காரணமின்றியே
ப்ரபாத்ய - ரக்கைகளை வெட்டுகின்ற பயத்தால் விழுவித்து
அந்த: - ஸமுத்திரத்தின் ஆழமான இடம்
ப்யதாயி - மறைக்கப்பட்டதோ
ததநுஜ: - அந்த இந்திரன் தம்பி உபேந்த்ரனான ராமன்
அமும் பாதஸாம்நிதிம் - இந்த ஸமுத்ரத்தை
கபிவ்ரஜ - வானரக் கூட்டங்களின்
கரார்பிதை: - கூட்டங்களால் போடப்பட்ட
இலாதரா: - மலைகளால்
த்வதர்த்தம் - உனக்காக
பஹி: - வெளியிலும்
அபிதகத் ஸந் - மறைப்பவராய்
இஹ - ஸமுத்ரத்தில்
ஶேஷபூர்திம் - மறைபடாது உள்ள இடத்தையும் மறைப்பதை
வ்யதாத் கிம் - செய்தானா என்ன?

முன் காலத்தில் மலைகள் ரக்கைகளுடன் இருந்தன. இஷ்டம் போல் பறந்து சென்று மக்கள் வாழுமிடங்களின்மேல் விழுந்து நகரங்களை நாசம் செய்தன. இதனால் வெகுண்ட இந்திரன் அவற்றின் ரக்கைகளை வெட்டி வீழ்த்தியபோது மைனாகம் போன்ற சில மலைகளை காற்று வேகமாக அடித்து வந்து ஸமுத்திரத்தில் வீழ்த்தியது. பகவான் இந்திரனுக்குத் தம்பியாக உபேந்திரன் என்ற பெயரில் அவதரித்தான். தோண்டிய பள்ளத்தைத் துற்றல் என்ற அதர்ம செயலைத் தலைமையுளை

இந்திரன் முதலில் துவங்கியுள்ளானாகையால் தம்பியான ராமன் அதே ஸமுத்ரத்தில் வானரர்களால் மலைகளைக் கொணர்ந்து வீழ்த்தி தமையன் முடிக்காத செயலை உனக்காகப் பலரறியும்படி வெளியிலும் தூர்த்து முடித்தானோ என உத்ப்ரேக்ஷையாகக் கூறுகிறார்.

''அந்தரிந்த்ர:'' என்றவிடத்து ''அந்த:-உள்ளே-மறைவில், என்ற சப்தமும் ''பஹிரிலாதரை:'' என்றவிடத்து ''பஹி:'' வெளியில் என்ற ப்ரயோகம் செய்யப்பட்டுள்ளன. இதனால் இந்திரன் அதர்மத்துக்குப் பயந்து மறைவில் செய்தான் என்றும் பகவானுக்கு அதைச் செய்வதில் பயமில்லை என்றும் ஸூசிக்கப்பட்டன. தமது முன்னோரான ஸகரர்களால் தோண்டப்பட்ட ஸமுத்ரத்தையும் தனக்காகப் பலரறியத் தூர்த்துவிட்டான் என்பது கருத்து.

23. अंघ्र्योरक्ष्णोरपि किल फलं वानराणां नराणाम्
आराद्राशिं तरितुमनसां अंभसामंहसां च ।
मानार्हः त्वामहित भवनात् मानिनीमानिनीषुः
काकुत्स्थोसौ जननि विदधे कौतुकात् सेतुकार्यम् ॥

அங்க்ரியோரக்ஷ்ணோ: அபி கில பலம் வாநராணாம் நராணாம்
ஆராத்ராசிம் தரிதுமநஸாம் அம்பஸாம் அம்ஹஸாஞ்ச ।
மாநார்ஹ: த்வாமஹித பவநாத் மாநிநீமாநிநீஷு:
காகுத்ஸ்தோஸௌ ஜநநி விதகே கௌதுகாத் ஸேதுகார்யம் ॥

ஜநநி - தாயே!
மாநார்ஹ: - பூஜிக்கத்தக்க
அஸௌ - இந்த ராமன்
மாநிநீம் - மனவேறுபாடடைந்த
த்வாம் - உன்னை
அஹிதபவநாத் - சத்ருவின் வீட்டிலிருந்து
ஆநிநீஷு: - அழைத்துவர விரும்பியவனாய்
அம்பஸாம் ராசிம் - ஸமுத்ரத்தை
ஆராத் - சீக்ரமாக
தரிதமநஸாம் - கடக்க விரும்பிய
வாநராணாம் - குரங்குகளின்
அங்க்ரியோ: பலம் - கால்களுக்குப் பயன் போன்றதும்
ததா - அப்படியே
அம்ஹஸாம் - பாபங்களுடைய
ராசிம் - குவியலை
ஆராத் - சீக்ரமாக
தரிதுமநஸாம் - போக்க விரும்பும்
நராணாம் - மனிதரின்
அக்ஷ்ணோரபி பலம் - கண்களுக்கு ப்ரயோஜநம் போன்றதுமான
ஸேதுகார்யம் - ஸேதுபந்தநம் என்ற செயலை
கௌதுகாத் - ஆசையால்
விதகே கில - செய்தானன்றோ.

தாயே நீ வாழுமிடத்தை ராமன் அறியாததால் உன்னை சீக்கிரம் ஶத்ருவின் வீட்டிலிருந்து அழைத்துவர முடியவில்லை. அதனால் நீ ராமனும் என்னை வெறுத்து வேறு பெண்ணை மணந்தானோ என்ற அளவுக்கு மனவேறுபாடு அடைந்தாய். இருப்பிடம் தெரிந்ததும் உன்னை அழைத்துவர வானர முதலிகளுடன் கிளம்பிவிட்டான் ராமன். ஶத்ருவை அப்போதே அழித்துவிட வேண்டும் என்ற ஆசை வாநரர்களுக்கு. அதற்குத் தடையாக இருந்தது வழியில் கடல். அதைக் கடக்க வேண்டுமே! அதற்காக அணைகட்டத் தொடங்கினர். அதற்கு மலை எவ்வளவு தேவைப்பட்டது? அவை என்ன அருகிலேயா கிடைத்தன! வெகுதூரமன்றோ செல்லவேண்டியிருந்தது! அப்படிப்பலமுறை சென்று சென்று மலைகளைக் கொணர்ந்த அக்கால்களுக்குப் பயன் ஏதாவது வேண்டாமா? இப்போது வானரர்களுக்குப் பெரும்பயன் ராவணவதமேயன்றோ! அதற்குத் துணையாக இருப்பது ஸேதுதானே! ஆகவே இதுவே பெரும் பயனாயிற்று அவர்களுக்கு. ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல் கடலைக் கடக்கவிரும்பிய மனிதர்களுக்கும் பயனை விளைவிப்பதாக இவ்வணையை ராமன் அமைத்தார் என்கிறார் கவி. மனிதர் எக்கடலைக் கடக்கவிரும்பினர்? பஞ்ச மஹாபாபிகளும் ஸேதுவை தர்ஶித்தாராகில் அப்பாபக் கடலைக்கடந்துவிடுவர் "ஏதத் பவித்ரம் பரமம் மஹாபாதக நாஶநம்" என்பதன்றோ ராமபிரான் வாக்கு! கடலைக் கடக்க விரும்பிய வாநரர்களுக்கும், பாபக்கடலைக் கடக்க விரும்பும் மக்களுக்கும் பயன்படுவதாய் இம்மை மறுமைப் பயன்களைப் பயப்பதாயிற்று அணை என்றவாறு.

ஜகத்பூஜ்யராக இருந்தும் ராமன் உனக்காகப் பள்ளத்தைத் தூற்றல் என்ற இழிசெயலைச் செய்தார் என்கிறார்.

24. अन्तर्यः स्फुटमनलेन वारितोभूत्
विश्वेषां जननि विधातुं एष सेतुम् ।
त्वल्लिप्साकुलरघुनाथचेतनातः
पाथोधिः बहिरपि वारितो नलेन ॥

அந்தர்ய: ஸ்புடமநலேந வாரிதோபூத்
விஶ்வேஷாம் ஜநநி விதாதும் ஏஷ ஸேதும் ।
த்வல்லிப்ஸாகுல ரகுநாத சேதநாத:
பாதோதி: பஹிரபி வாரிதோ நலேந ॥

விஶ்வேஷாம் - உலகத் தாயே
ய:பாதோதி: - எந்த ஸமுத்ரம்
அநலேந - படபா என்ற அக்நியாலே
அந்த: - ஸமுத்ரத்தின் அடியில்
வாரித: - நீரை வற்றச் செய்து
கரையைக் கடக்கமாட்டாமல்
செய்யப்பட்டதோ
ஏஷ: - அந்த ஸமுத்ரமே
த்வல்லிப்ஸா - உன்னைத் திரும்பவும்
பெறவேண்டுமென்ற ஆசையால்
ஆகுல - கலங்கிய மனமுடைய
ரகுநாத - ராமனுடைய
சேதநாத: - இஷ்டப்படி
பஹிரபி - வெளியிலும்
அநலேந - அதே அக்நியால்
வாரித: - கரையைக் கடக்காமல்
செய்யப்பட்டது.
நலேந - நளனால்
வாரித: - அலை வீசாமல் தடை
செய்யப்பட்டது.

இவ்வுலகில் மழைக்காலத்தில் எவ்வளவு மழை பொழிகின்றது எத்தனை ஏரிகள் கலங்கல் போகின்றன! எத்தனை ஆறுகளும் நதிகளும் இரு கரையைத் தொட்டுக்கொண்டு நீரைப் பெருக்கெடுக்கின்றன! இந்நீர் யாவும் எங்கு செல்கின்றன? கடலினுள்தானே? அப்படியிருக்க ஏன் கடல் கரையைக் கடக்காமல் அப்படியே உள்ளது? காரணம் ஸமுத்ரத்தின் அடிப்பகுதியில் வடவாக்நி என்றொரு தீ எரிந்துகொண்டுள்ளது. அது அதன் நீரை வற்றச்செய்து விடுகிறது. அதனால் அது கரைபுரளுவதில்லை. ஆனால் அது எவர் கண்களுக்கும் புலப்படுவதில்லை. நூல்களைக்கொண்டு அறிகிறோம். இப்படி மறைவில் துன்பப்படுகிறது ஸமுத்ரம். தாயே உன்னைப் பிரிந்த வருத்தத்தால் கலக்கமடைந்த ராமன் அக்கடலை பலரறிய மேலும் துன்பப்படுத்திவிட்டான் நலத்தாலேயே என ராமன் முயற்சியை வர்ணிக்கின்றார். விஶ்வகர்மாவின் பிள்ளையான நளனாலேயே ஸேது கட்டுவித்தான் என்பது கருத்து.

"வாரிதோநலேந" என்பதை வாரித: + அநலேந என்றும் வாரித: + நலேந என்றும் இருவகையாக பிரிக்கலாம்.

25. सेतुं देवि भवत्कृते रघुपतिः सृष्ट्वा जनांश्चापुनात्
एतेषां सगरान्ववायजनुषां एष स्वभावो ध्रुवम् ।
स्वर्गादेव भगीरथः पितृकृते भर्गाच्च रोषाविलात्
आनीतैः अपुनीत लोकमखिलं गांगैः तरंगैः कृती ॥

ஸேதும் தேவி பவத்க்ருதே ரகுபதி: ஸ்ருஷ்ட்வா ஜநாந்சாபுநாத்
ஏதேஷாம் ஸகராந்வவாய ஜநுஷாம் ஏஷஸ்வபாவோ த்ருவம் ।
ஸ்வர்காதேவ பகீரத: பித்ருக்ருதே பர்காச்ச ரோஷாவிலாத்
ஆநீதை: அபுநீத லோகமகிலம் காங்கை: தரங்கை: க்ருதீ ॥

தேவி - பகவன் மஹிஷியே!
ரகுபதி: - ராமன்
பவத்க்ருதே - உனக்காகவே
ஸேதும் - ஸேதுவை
ஸ்ருஷ்ட்வா - படைத்து
ஜநாந்ச - மக்களையும்
அபுநாத் - பரிசுத்தமாக்கினான்
ஸகராந்வவாய - ஸகர வம்சத்தில்
ஜநுஷாம் - பிறந்த
ஏதேஷாம் - ராமன்
போன்றவர்களுக்கு
ஏஷ: - தமக்காக துவங்கியதை உலக
நன்மைக்கு ஆக்குதல்
ஸ்வபாவ: - இயல்பான குணமாம்
என்பது
த்ருவம் - நிச்சயமானது

க்ருதீ - ஒரு முயற்சியால் பல
பயனை விளைவிக்க
வல்லவனான
பகீரத: - பகீரதன்
பித்ருக்ருதே ஏவ - தமது
முன்னோருக்காகவே
ஸ்வர்காத் - ஸ்வர்கத்திலிருந்தும்
ரோஷாவிலாத் - சினத்தால்
கலங்கிய
பர்காத் - சிவனிடமிருந்தும்
ஆநீதை: - கொணர்ந்த
காங்கை: - கங்கையின்
தரங்கை: - ப்ரவாஹத்தால்
அகிலம் - அனைத்து
லோகம் - உலகங்களையும்
அபுநீத - பரிசுத்தமாக்கினான்.

ரகு வம்சத்தில் பிறந்தவர் தமக்காக மட்டும் முயலார். தாம் ஸாதிக்கும் பயனை அனைத்து மக்களுக்கும் உரியதாக்குபவரவர்கள். கடலைக் கடப்பதற்குக் கட்டினான் ஸேதுவை ராமன். ஆனால் பல மக்கள் இன்னும் அதனை தர்சித்தும் அதனருகில் ஸ்நானம் செய்தும் தமது பாபங்களைப் போக்கிக்கொள்கின்றனர். இது வியப்பிற்கு உரியதன்றோ! இக்குணம் ராமனுக்கு மட்டும் உரியதன்று. அவ்வம்மசத்தில் பிறந்தவர் அனைவர்க்கும் உரியதே. ராமனது முன்னோனான பகீரதன், கபிலரின் கோபாக்நியால் கொளுத்தப்பட்டு சாம்பலான தமது முன்னோர் நன்னெறி அடைவதற்கென்றே பலகால் தவம்புரிந்துத் தேவலோகிலிருந்துக் கொணர்ந்த கங்கை சிவனின் ஜடாமண்டலத்துள் மறைந்துவிடத் திரும்பவும் தவம் செய்துச் சிவனை மகிழ்வித்து அவனிடமிருந்து கங்கையைப் பெற்றான் என்பதுப் பலரறிந்ததே. ஆனால் அந்த கங்கையில்

பலர் ஸ்நாநம் செய்துத் தத்தம் பாபங்களைப் போக்கிக் கொள்கின்றனரன்றோ? ஆகவே ஸகர வம்சத்தவர் தமக்காக மட்டும் முயலார்.

26. प्रभोरलं कोपनिरोधमंब कृतेपराधेपि करिष्यसीति ।
लंकोपरोधं रघुवीरदासाः हन्त त्वदर्थं हरयो वितेनुः ॥

ப்ரபோரலம் கோபநிரோதமம்ப க்ருதேபராதேபி கரிஷ்யஸீதி ।
லங்கோபரோதம் ரகுவீரதாஸா: ஹந்த த்வதர்த்தம் ஹரயோ விதேநு: ॥

அம்ப - தாயே!
அபராதே - உன்னை அபஹரித்துச் சென்றதாகிய மஹாபாபத்தை
க்ருதேபி - ராவணன் செய்தபோதும்
ப்ரபோரபி - ராமனுக்கும்
கோபநிரோதம் - ராவணனிடமுள்ள கோப சாந்தியையும்
கரிஷ்யஸீதி - நீ செய்துவிடுவாயோ என்றெண்ணி
ரகுவீரதாஸா: - ராமனின் கருத்தைப் பின்பற்றும்
ஹரய: - வாநரர்கள்
த்வதர்த்தம் - லங்கையை முற்றுகை இடுவதை நீ தடைசெய்யாமலிருக்க
லங்கோபரோதம் - லங்கையின் முற்றுகையை
விதேநு: - செய்தனர்
ஹந்த - ஆச்சர்யம்.

அனுக்ரஹமே வடிவெடுத்தவளன்றோ தாய். தன் உடலையே புண்ணாக்கிய காகாஸுரனையும் காத்தவளன்றோ அவள். ஆகவே தற்போதும் அவளை அபஹரித்துச் சென்றதாகிய கொடிய பாபத்தைச் செய்த ராவணனிடம் உள்ள ராமனது கோபத்தையும் முன்போல் போக்கிவிட்டால் பல பாடுபட்டு லங்கையை அடைந்த முயற்சியெல்லாம் வீணாகிவிடுமே என்றெண்ணியவர்களாய் ராமன் கருத்தைப் பின்வருவதையே முக்கிய நோக்காகக் கொண்ட வாநர வீரர்கள் ராமனுக்கும் முன்னதாகத் தாமே முற்றுகையிட்டனர் என்பது ஒரு பொருள்.

நீ ராமனருகிலிருந்தால் வாநரர்களால் ஏதேனும் குற்றம் நேர்ந்தால் அப்போதுத் தங்கள் மேல் தோன்றும் ராமன் கோபத்தை நீ போக்குவாய் என்றெண்ணி பகவானிடம் உன்னைச் சேர்ப்பிப்பதற்காக லங்கையை முற்றுகையிட்டு ராவண வதத்துக்கு வேண்டிய செயலைச் செய்தனர் என்ற பொருளும் சொல்லலாம். இப் பொருளில் அபராதேக்ருதேபி என்ற சொல்லுக்கு வாநரர் தவறு செய்தபோதும் என்றும் த்வதர்த்தம் என்பதற்கு உன்னை ராமனிடம் சேர்ப்பதற்கு என்றும் லங்கோபரோதம் என்றவிடத்து அ என்ற ஒரு எழுத்தைச் சேர்த்து அலங்கோபரோதம் எனவாக்கி எங்களிடமுள்ள

கோபம் போவதற்கு வேண்டிய மாந்தியையும் என்றும் பொருள் கொள்ள வேண்டும்.

27. प्रीतिं निनीषुः प्रियदेवतां त्वां समुद्रतीरेऽभिचरन् स रामः ।
महाहवं मैथिलि वर्धयिष्यन् अयोमुखेन व्यलुनत् पलाशान् ॥

ப்ரீதிம் நிநீஷு: ப்ரியதேவதாம் த்வாம் ஸமுத்ரதீரேஅபிசரந் ஸ ராம: ।
மஹாஹவம் மைதிலி வர்தயிஷ்யந் அயோமுகேந வ்யலுநத் பலாஸாந் ॥

மைதிலி! - மிதிலா தேசப் பெண்ணே!
ஸமுத்ரதீரே - ஸமுத்ரத்தின் தென் கரையில்
அபிசரந் - ஸேனைகளுடன் லங்கையின் அருகிலிருந்த
ஸ: ராம: - அந்த ராமன்
ப்ரியதேவதாம் - தேவதைகளின் பக்ஷபாதியான
த்வாம் - உனக்கு
ப்ரீதிம் நிநீஷு: - ப்ரீதியை செய்ய விரும்பியவனாய்
மஹாஹவம் - பெரும்போரை
வர்தயிஷ்யந் - மிகுவித்துக்கொண்டு
அயோமுகேந - பாணங்களால்
பலாஸாந் - ரஸ்மிகேது முதலான அரக்கர்களை
வ்யலுநத் - வெட்டினான்

வேறு பொருள்

ஸ ராம: - பக்தியுடன் கூடிய ஒருவன்
ப்ரியதேவதாம் - தாம் விரும்பிய ஶ்யேநயாக தேவதையை
ஸமுத்ர தீரே - ஸமுத்ரக் கரையில்
அபிசரந் - ஶ்யேநயாகம் செய்ய ஸங்கல்பம் கொண்டவனாய்
மஹாஹவம் - பெரிய ஹோமத்தைச் செய்ய
அயோமுகேந - கத்தியின் நுனியால்
பலாஸாந் - பலாஸ மரத்தின் குச்சிகளை
வ்யலுநத் - வெட்டினான்.

மைதிலீ! ராமன் வாநர ஸேனைகளுடன் ஸமுத்ரத்தின் தென்கரையை ஆக்ரமித்துக்கொண்டு வீற்றிருந்தான். ராவணனைக் கொன்று அதனால் தேவர்களை மகிழ்விக்க வேண்டும் என்ற எண்ணமுடையவளன்றோ நீ! ஆகவே அதற்காகப் பெரும் போர் செய்ய எண்ணியிருந்தான். அப்போது அங்கு ரஸ்மி கேது முதலான நான்கு அரக்கர் வந்தனர். அவர்களைக் கூர்மையான நுனியை உடைய பாணங்களால் அவர்களை அழித்தான். இவ்வரலாறு ராமாயணத்திலும் உள்ளது.

ஶ்யேநயாகம் என்பது ஒரு யாகம். இதனை அபிசாரகர்ம என்பர். அபிசாரமாவது பிறருக்குத் தீமை விளைப்பதாகும். அதை ஸமுத்ரக் கரையில்தான் செய்ய வேண்டும். அந்த யாகத்தை எவனோ ஒருவன் செய்தான் என்றபொருளும்

கிடைக்கின்றது. இப் பொருளில் ஸராம: என்பது ஒரே பதமாய் மனைவியுடன் சேர்ந்த எவனோ ஒருவன் என்ற பொருளைத் தரும். யாகம் செய்யும் போது, மனைவியும் அருகில் இருக்க வேண்டுமன்றோ! எனவே மனைவியுடன் ஒருவன் கடற்கரைக்கு வந்து யாகத்துக்கு வேண்டிய பலாஶக் குச்சிகளை வெட்டினான் என்ற பொருளும் கிடைக்கிறது. இக்கருத்து ப்ரக்ருதத்துக்குத் தொடர்பற்றது.

28. त्वल्लिप्सयैव धर्मेष्वासक्तः विप्रयोगिवद्व्यसनी ।
काञ्चनदानसमृद्धिं भुवि वरदेवि प्रहस्तमनयदिनः ॥ ॥

த்வல்லிப்ஸயைவ தர்மேஷு ஆஸக்த:
விப்ரயோகிவத் வ்யஸநீ।
காஞ்சநதாந ஸம்ருத்திம் புவி வரதேவி
ப்ரஹஸ்த மநய இந: ॥

வ்யஸநீ - உன்னைப் பிரிந்த
இந: - ப்ரபுவான ராமன்
விப்ர-யோகிவத் - தத்வஜ்ஞாநமுடைய யோகியைப் போல்
த்வத்லிப்ஸயைவ - பிரிந்த உன்னை அடையவேண்டுமென்ற எண்ணத்தால் போல், மோக்ஷமடைய வேண்டுமென்ற ஆசையால்
தர்மே - தநுஸ்ஸிலும்
இஷு - பாணத்திலும் (யுத்தத்திலும்)
ஆஸக்த: - ஈடுபட்டவனாய்
தர்மேஷு - நற்செயல்களைச் செய்வதில்
ஆஸக்த: - ஈடுபட்டவனாய்
வரதேவி - பெருந்தேவியே!
ப்ரஹஸ்தம் - ப்ரஹஸ்தன் என்ற அரக்கனை
காஞ்சந - இத்துணை எனச்சொல்ல முடியாத
தாநஸம்ருத்திம் - கக்குநூறாகப் பிளத்தலை
அநயத் - அடைவித்தார்
புவி - பூலோகத்தில்
காஞ்சநதாநஸம்ருத்திம் - மிகுந்த ஸ்வர்ண தானத்தை
விப்ர-ஹஸ்தம் - ப்ராஹ்மணன் கையில்
அநயத் - அடைவித்தார்.

தத்வ க்ஞாநமுடைய ப்ராஹ்மண யோகி ஒருவன் லக்ஷ்மி வாழுமிடமான மோக்ஷத்தைப் பெறவிருப்பமுடையவனாய் நற் செயல்களில் ஈடுபட்டுத் தான தர்மங்களைச் செய்கிறானோ அப்படியே பிறிந்த உன்னை அடைவதற்காகப் போரில் ஈடுபட்ட ராமன் ப்ரஹஸ்தன் என்ற ராவண ஸேநாதிபதியைக் கொல்லுதல் என்ற நல்ல செயலை நீலன் என்ற வாநரனாலே செய்வித்தார் என்ற கருத்தை ச்லேடையில் கூறியுள்ளார்.

தநு: என்ற புல்லிங்க மப்தம் யாகம், தநுஸ், என்ற இரு பொருளைச் சொல்லும் என நிகண்டு கூறுகின்றது. ஆகவே ''தர்மேஷ்வாஸக்த: '' என்றவிடத்துள்ள இஷு என்ற

ஶப்தத்துக்கு தநுஸ் என்ற பொருள் கூறப்பட்டுள்ளது. ''தாநம் கஜமதே த்யாகே, பாலநச் சேத ஶுத்திஷு'' என்ற நிகண்டு தாநஶப்தத்துக்கு பிளத்தல் என்ற பொருள் உண்டு என்கிறது. ''பிபேத பஹுதா கோரா ப்ரஹஸ்தஸ்ய ஶிர: ததா என்ற ராமாயண ஶ்லோகம் பல துண்டுகளாகப் பிளந்தது என்கிறது. ஆகவே ''தாநஸம்ருத்திம்'' என்பதற்கு சுக்குநூறாகப் பிளத்தல் என்ற பொருள் கூறப்பட்டது. ''வரதேவிப்ரஹஸ்தம்'' என்பது வரதேவி + ப்ரஹஸ்தம் என்றும், வரதே + விப்ரஹஸ்தம் என்றும் பிரித்து இருபொருள் கொள்ளப்பட்டுள்ளது.

29. सदस्युदारेष्यतिकायमान महालये सत्यभितो रणाग्रे ।
जयश्रिया हन्त बलाद्धृतोपि त्वय्येव विन्यस्तमनाः स रामः ॥

ஸதஸ்யுதாரேப்யதிகாயமாந
மஹாலயே ஸத்யபிதோ ரணாக்ரே ।
ஜயஶ்ரியா ஹந்த பலாத் வ்ருதோபி
த்வய்யேவ விந்யஸ்த மநா: ஸராம: ॥

ஹே ஸதி - உயர்ந்த பதிவ்ரதையே!
ஸ: ராம: - கதாநாயகனான ராமன்
அபி-தோரண-அக்ரே - மேற்புறத்தில் கட்டப்பட்ட மாவிலைத் தோரணங்களை உடைய
அதி-காயமாந - பருத்து உயர்ந்த தூண்களை நட்டுக் கட்டப்பட்ட வீட்டினுள் உள்ள மண்டபத்துடன் கூடிய
மஹாலயே - பெரிய மாளிகையிலிருந்த
உதாரே ஸதஸி - பெரியோர்களைக் கொண்ட ஸதஸ்ஸில்
ஜயஶ்ரியா - ஜய ஸ்ரீ எனப்பெயர் கொண்ட பெண்ணால்
பலாத் - தைர்யமாக
வ்ருதோபி - கையைப் பற்றியபோதும்
த்வய்யேவ - உன்னிடமே
விந்யஸ்தமநா: - வைத்த மனமுடையவனாய் அவளை ஏற்கவில்லை
ஹந்த - ஆஶ்சர்யம்
இது தோற்றப் பொருள்

இனி உண்மைப் பொருள்

அபித: - நால்புறமும்
ஸத், அஸி, உத், ஆரே - கட்கங்களுடன் ப்ரகாஶிக்கும் ராக்ஷஸ ஸமூஹத்தை உடைய
ரணாக்ரே - போர்க்களத்தில்
அதிகாயமாந மஹாலயே - உயர்ந்துப் பருத்த ஶரீரமுடைய அதிகாயனின் வதத்தில்
ஜயஶ்ரியா - வெற்றித் திருமகளால்
வ்ருதோபி - அடையப்பட்டபோதும்
த்வய்யேவ - உன்னிடமே
விந்யஸ்தமநா: - வைத்த மனமுடையவனாயினன்.
ஹந்த - ஆஶ்சர்யம்.

மஹா பதிவ்ரதையே! ராமன் அரண்மனையிலுள்ள கலியாண மண்டபத்தில் அமர்ந்திருந்தான். அம்மண்டபம் அவன்

மாளிகையின் இடையிலிருந்தது. அது மிக உயர்ந்ததும் பருத்ததுமான தூண்களை நாட்டிக் கட்டப்பட்டு இருந்தது. அதன் மேற்புறத்தில் மாவிலைத் தோரணங்கள் நாற்புறத்தும் கட்டப்பட்டு இருந்தன. அப்பரந்த இடத்தில் கற்றுத் துறைபோகிய அந்தணர்கள் கூட்டம் கூட்டமாக அமர்ந்திருந்தனர். இத்தருணத்தில் ஜய ஸ்ரீ என்ற பெயர் கொண்ட பெண்ணொருத்தித் தைர்யமாக வந்து ராமன் கையைப் பற்றினள். ஶாஸ்த்ர முறைப்படி அவள் ஏற்கத்தக்கவளாயினும் அவன் எண்ணம் முழுதும் உன்னிடமிருந்ததால் அவளை அவன் ஏற்கவில்லை. தமக்கென்று ஒரு பெண்ணைப் பெறாத நிலையில் வலிய வந்து கைப்பற்றிய பெண்ணை விடுத்தது ஆஶ்சர்யமன்றோ என்பது மேலெழுந்தவாரியான பொருள்.

கட்கம் முதலான போர்க்கருவிகளைக் கையிலேந்திய வீரம் மிக்க ராக்ஷஸக் கூட்டங்களால் நாற்புறமும் சூழ்ந்த போர்க்களத்தில் மிகவுயர்ந்தும் பருத்ததுமான உடலைப்பெற்ற அதிகாயன் என்ற ராவணன் மகனைக் கொன்றதாலுண்டான ஜய ஸ்ரீ அவனை அடைந்த போதும் உன்னை எண்ணி வருந்திக்கொண்டிருந்தானேயன்றி மகிழ்ந்தானில்லை என்பது உண்மைப் பொருள்.

முன் காலத்தில் வீட்டின் நடுவில் விஶாலமான வெற்றிடம் ஒன்றிருக்கும். இதனைக் கலியாண கூடம் என வழங்குவர். அது பெரிய கம்பங்களால் உயரமாகத் தூக்கி கட்டப்பட்டிருக்கும். இதனை வடமொழியில் காயமாநம் என்பர்.

30. विष्णुः स्वयं त्वद्विरहासहिष्णुः अपांसुले हंस कुलावतंसः ।
तपस्वरूपस्य कृतप्रभेदं निनिन्द भूनन्दिनि मेघनादम् ॥

விஷ்ணு: ஸ்வயம் த்வத் விரஹாஸஹிஷ்ணு:
அபாம்ஸுலே ஹம்ஸ குலாவதம்ஸ: ।
தபஸ்வரூபஸ்ய க்ருதப்ரபேதம்
நிநிந்த பூநந்திநி மேகநாதம் ॥

அபாம்ஸுலே! - குற்றமற்றவளே!
பூநந்திநி - பூமிஸுதையே!
ஹம்ஸகுல - ஸூர்யகுலத்துக்கு
அவதம்ஸ: - பூஷணமான ராமன்
ஸ்வயம் - தான்
த்வத்விரஹ - உனது பிரிவை
அஸஹிஷ்ணு: - பொறுக்கமாட்டாதவனாய்
தபஸ்வரூபஸ்ய - தர்மகார்யங்களுக்கு
க்ருதப்ரபேதம் - விக்நம் செய்வதனான
மேகநாதம் - இந்த்ரஜித்தை
நிநிந்த - கொன்றார்.

ஸூர்ய குலத்தின் அணிகலனான ராமன் உனது பிரிவைத் தாளமாட்டாதவனாய், தர்ம கார்யங்களுக்கு விக்நத்தை விளைவித்த இந்த்ரஜித்தை இலக்குவனைக்கொண்டு மாய்த்தான்.

31. उच्चैरावणपुष्टः कुंभस्तव देवि कुंभिनीतनये ।
सद्यस्तनवैरीति क्रोधादेनं जघान रघुनाथः ॥

உச்சை ராவண புஷ்ட: கும்ப: தவதேவி கும்பிநீதநயே ।
ஸத்யஸ்தந வைரீதி க்ரோதா தேநம் ஜகாந ரகுநாத: ॥

தேவிகும்பிநீதநயே - பூமி ஸுதையே!
ரகுநாத: - ராமன்
ராவணபுஷ்ட: - ராவணனால் வளர்க்கப்பட்டவனும்
உச்சை: - நீண்ட உடலுடையவனுமான
கும்ப: - கும்பன் என்ற அரக்கன்
தவ - உனக்கு
ஸத்யஸ்தந - புதிதாக உண்டான
வைரிதி - மத்ரு என்கிற
கோபாத் - கோபத்தால்
ஏநம் - இந்த கும்பனை
ஜகாந - ஸுக்ரீவனால் கொன்றுவித்தான்.

கும்பகர்ணன் பிள்ளையான கும்பன் உன்னைப் பெறுதற்குச் சத்ருவாக அப்போது வந்தமையால் ஸுக்ரீவனால் அவனைக் கொன்றான் ராமன்.

32. लोकव्रातालंभकं कुंभकर्णं लुंपन्नंब त्वत्कृते रामचन्द्रः ।
अर्थादेष त्वज्जनन्याः धरण्याः भूरिभारं देवि दूरीचकार ॥

லோகவ்ராதாலம்பகம் கும்பகர்ணம்
லும்பந் நம்ப த்வத் க்ருதே ராமச்ந்த்ர: ।
அர்த்தாதேஷ த்வத்ஜநந்யா: தரண்யா:
பூரிம்பாரம் தேவி தூரீ சகார ॥

அம்ப - தாயே!
ராமசந்த்ர: - ராமன்
லோகவ்ராதம் - மக்கள் தொகையை
ஆலம்பகம் - அழிப்பவனான
கும்பகர்ணம் - கும்பர்ணனை
த்வத்க்ருதே - உன்னை அடைவதற்காக
லும்பந் - அழிப்பவனாய்
த்வத்ஜநந்யா: - உனது தாயான
தரண்யா: - பூமிக்கு உண்டான
பூரி - தாங்கமாட்டாத
பாரம் - சுமையை
அர்த்தாத் - தன்னடைவாக
தூரீசகார - போக்கினான்.

தாயே! மக்கள் ஸமூஹத்துக்கே துன்பத்தை விளைவித்துக் கொண்டிருந்தான் கும்பகர்ணன். உன்னைப் பெறுவதற்காக அவனை அழிக்க வேண்டியதாயிற்று ராமனுக்கு. இருப்பினும் அது பாபிகளை சுமப்பதால் உன் தாயான பூமிக்கு உண்டாம் பெரும் சுமையை போக்கவும் செய்தது. ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பது போலாயிற்று.

33. निर्णीय भूयस्तर पुण्यलभ्यं रामः क्षमापुत्रि समागमं ते।
नीत्वाहवं पुण्यजनान् अनेकान् अकारयत्स्वर्वनिता विवाहम्॥

நிர்ணீய பூயஸ்தர புண்ய லப்யம்
ராம:க்ஷமா புத்ரி ஸமாகமம் தே।
நீத்வாஹவம் புண்யஜநாந் அநேகாந்
அகாரயத்ஸ்வர்வநிதா விவாஹம்॥

க்ஷமாபுத்ரி - அயோநிஜையே!	புண்யஜநாந் - நன்மக்களால்
ராம: - ராமன்	ஹவம் - யாகத்தை
தே ஸமாகமம் - உன்னுடன் திரும்பவும் ஸந்தித்தலே	நீத்வா - செய்வித்து
பூயஸ்தரபுண்ய - உயர்ந்த புண்யத்தால்	புண்யஜநாந் - ராக்ஷஸர்களை
லப்யம் - அடையத்தகுந்ததாக	ஆஹவம் நீத்வா - போர் செய்து
நிர்ணீய - முடிவெடுத்து	ஸ்வர்வநிதா - தேவமாதுகளுடன்
அநேகாந் - பல	விவாஹம் - கல்யாணத்தை
	அகாரயத் - செய்வித்தான்.

யாகம் செய்பவர் அப்புண்யத்தின் பயனாய் தேவருலகம் சென்று தேவ ஸ்த்ரீகளுடன் இன்புற்றிருப்பர் என்பதும். போரில் வீரமரணம் எய்துபவரும் ஸ்வர்கம் சென்று தேவதாஸ்த்ரீகளுடன் ஸந்தோஷித்து இருப்பர் என்பதும் நூலோர் கொள்கை. இக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டெழுந்தது இந்த ஶ்லோகம். ஸீதை ஏனைய பெண்களைப்போல் கர்பத்தில் தங்கிப் பிறந்தவளல்லள். அவள் பூமியில் தோன்றியவள். ஆகவே அவளை அடைய வேண்டுமாயின் மிகுதியான யாகங்களைத் தாம் செய்தல். பிறரைக் கொண்டு செய்வித்தல் போன்ற நற்செயல்களின் பயனைப் பெற்றிருக்க வேண்டும் என எண்ணினான் ராமன். ஆக வேறு பல புண்யஜநங்களைக் கொண்டு அரக்கர்களைக் கொண்டு — ஹவத்தையும், ஆஹவத்தையும் - யாகத்தையும், போரையும் - செய்வித்து தேவமாதுகளுடன் திருமணம் செய்வித்தார். யாகம் செய்தவர் அப்புண்யத்தின் பயனாய் தேவர் உலகம் சென்று தேவமாதை மணந்தனர். அதுபோல் ராமன் போரில் மடிந்தவர்களுக்கும் அப்புண்யம் உண்டு ஆதலால் இவர்களும் தேவருலகில் தேவமாதரை மணந்தனர் என்கிறார். ''நீத்வாஹவம்'' என்ற விடத்தில் நீத்வா+ஹவம் என்றும், நீத்வா+ஆஹவம் என்றும் இருவகைகளாகப் பிரிக்கலாம். ''புண்யஜந:'' என்ற பதம் புண்ணியம் செய்த மக்களையும் அரக்கரையும் சொல்லும். ஆகவே அரக்கர்களைக்

கொன்றதையே சப்த ச்லேடையால் புண்ய ஜநங்களைக் கொண்டு யாகத்தை செய்வித்தார் என்கிறார்.

34\. धर्मं हि पूर्वमवलम्ब्य कृते जनन्याः
कालन्निनाय कुतुकादधि काननं यः।
देवि त्वदर्थमवलम्ब्य तमेव रामः
कालन्निनाय कुतुकादधिकाननं यः॥

தர்மம் ஹி பூர்வ மவலம்ப்ய க்ருதே ஜநந்யா:
காலந்நியாய குதுகாததி காநநம்ய:।
தேவி த்வதர்த்த மவலம்ப்ய தமேவ ராம:
காலந்நியாய குதுகாததி காநநம் ய:॥

ஹே தேவி - பகவானின் மனைவியே!
ய: ராம: - எந்த ராமன்
ஜநந்யா: க்ருதே - தாயான கைகேயிக்காக
தர்மம் அவலம்ப்ய - தந்தை சொல் காத்தல் என்ற தர்மத்தைப் பின்பற்றி
குதுகாத் - ஸந்தோஷத்தோடு
அதி-காநநம் - தண்டகாவநத்தில்
காலம் - பதினான்கு வர்ஷங்களை
நிநாய ஹி - கழித்தானன்றோ
ய: - அதே ராமனே
த்வதர்த்தம் - உன்னைத் திரும்பவும் அடைவதற்காக
தம் தர்மமேவ - அதே தர்மத்தையே, வில்லை
அவலம்ப்ய - கைபிடித்து, கையிலேந்தி
குதுகாத் - எக்கஷ்டமுமின்றி
அதிகாநநம் - காட்டில்
அதிக ஆநநம் - பல முகங்களுடைய ராவணனை
காலம் - காலத்தை, யமனை
நிநாய - கழித்தார், அடைவித்தார்.

தாயான கைகேயிக்காகத் தந்தை சொல்லை ஏற்ற ராமன் பதினான்கு ஆண்டுகள் காட்டில் வாழ்ந்தது போல் உனக்காகவும் பதினான்கு ஆண்டுகள் காட்டில் வாழ்ந்தான் என்ற பொருள் புலப்படும். அது தோற்றப் பொருள். உனக்காக ராவணனைக் கொன்றான் என்பது உண்மைப் பொருள்.

முதலடியிலுள்ள ''அதிகாநநம்'' என்ற சொல் அதி+காநநம் எனப் பிரியும். பின்னடியிலுள்ள ''அதிகாநநம்'' என்பது அதிக+ஆநநம் எனப் பிரியும். பத்துத் தலையன் என்பது பொருள். தர்மசப்தம் தர்மம், வில், என்ற இரு பொருள்களை உடையது.

35. पापपंचकनिरास हेतुना सेतुना तव कृते महीसुते।
एत्य पापदशकं विनाशयन् ईशिता चतुरतामदर्शयत्॥

பாபபஞ்சக நிராஸ ஹேதுநா ஸேதுநா தவ க்ருதே மஹீஸுதே।
ஏத்ய பாப தஶகம் விநாஶயந் ஈஶிதா சதுரதாமதர்சயத்॥

மஹீஸுதே! - பூமியின் பெண்ணே!
ஈஶிதா - ஸர்வேஶ்வரனான பகவான்
பாபபஞ்சக - ப்ரஹ்மஹத்யாதி மஹாபாதகங்களுடைய
நிராஸஹேதுநா - நாசத்துக்குக் காரணமான
ஸேதுநா - ஸேதுவினாலே
ஏத்ய - லங்கையை அடைந்து
தவ க்ருதே - உனக்காக
பாப-தஶகம் - பாபியாயும், பத்து தலையுமுமான ராவணனை
விநாஶயந் - அழித்தவனாய்
சதுரதாம் - தனது மஹிமையை
அதர்ஶயத் - புலப்படுத்தினான்.

"ஸேதும் த்ருஷ்ட்வா ஸமுத்ரஸ்ய கங்கா ஸாகரஸங்கமம்। ப்ரஹ்மஹத்யா ப்ரமுச்யேத" என்ற ஶ்லோகம் ஸேது தர்ஶநம் மஹா பாபங்களைப் போக்கும் என்கிறது. அத்தகைய பெருமைவாய்ந்த ஸேதுவை ஜலத்தினிடையே ஸமுத்ரத்தில் கட்டுவதென்பது மனிதர்களால் முடியாத செயலாம். அதேபோல் ராவணனை மனிதன் கொல்வதென்பதும் மனிதனால் செய்ய முடியாத செயலாம். அவ்விரண்டு செயல்களையும் மனிதனுக மறைந்து நின்று அச்செயல்களைச் செய்துத் தனது மஹிமையை உனக்காக வெளிப்படுத்தினான்.

36. परमार्थयितुं हुताशनात् श्रियमिच्छेदिति साधुभाषितम्।
भवतीं श्रियमम्ब पावकात् जगृहे जानकि लक्ष्मणाग्रजः॥

பரமார்த்தயிதும் ஹுதாஶநாத் ஶ்ரியமிச்சேதிதி ஸாதுபாஷிதம்।
பவதீம் ஶ்ரியமம்ப பாவகாத் ஜக்ருஹே ஜாநகி லக்ஷ்மணாக்ரஜ:॥

அம்ப ஜாநகி! - தாயே! ஜநகரின் பெண்ணே!
லக்ஷ்மணாக்ரஜ: - ராமன்
ஹுதாஶநாத் - அக்நியிடமிருந்து
ஶ்ரியமிச்சேத் - செல்வத்தைப் பெற வேண்டுமென்கிற
ஸாது பாஷிதம் - பெரியவர் பேச்சை
பரமார்த்தயிதும் - மெய்ப்பிப்பதற்காக
பவதீம் - நீயாகிய ஶ்ரீயை
பாவகாத் - அக்நியிடமிருந்து
ஜக்ருஹே - பெற்றுக்கொண்டார்.

தாயே! நீ ராஜர்ஷியான ஜனகரின் மகளானமையின் பிறப்பினாலேயே பரிசுத்தமானவள் என்பதை ராமன்

நன்கறிவன். இருந்தும் அக்நியில் உன்னை ப்ரவேசம் செய்வித்துப் பின் பெற்றுக்கொண்டது எதற்கெனின் "ஆரோக்யம் பாஸ்கராதிச்சேத் ச்ரியமிச்சேத் ஹுதாசநாத்। ஹயாஸ்யாத் ஜ்ஞாநமந்விச்சேத் மோக்ஷமிச்சேத் ஜநார்தநாத்"। என்கிற வ்யாஸ பகவானின் வாக்யம் "உடல் நலத்தை ஸூர்யனை வேண்டிப் பெறவேண்டும், ஸ்ரீயை-செல்வத்தை அக்நியை வேண்டிப் பெறவேண்டும், ஜ்ஞாநத்தை ஹயக்ரீவனை வேண்டிப் பெறவேண்டும், மோக்ஷத்தை விஷ்ணுவை வேண்டிப்பெற வேண்டும்" என்கிறது. இக்கருத்தை உண்மையாக்க வேண்டும் என்பதற்காகவே அசோகவனத்திலிருந்து உம்மை விபீஷணன் அழைத்து வந்த போது ஸ்ரீயாகிய உன்னை அக்நியில் ப்ரவேசிக்கச் செய்து அவன் ஸமர்ப்பித்த பின் பெற்றுக் கொண்டானேயன்றி சுத்திக்காகவன்று.

37. प्राणव्ययं कृतवतः प्लवगान् त्वदर्थं
भूयोपि जानकि जिजीवयिषुः स रामः ।
वव्रे वरं त्रिजगतां वरदोऽपि देवान्
कार्यार्थिनो हि पुरुषस्य कुतोऽवलेपः ॥

ப்ராணவ்யயம் க்ருதவ: ப்லவகாந் த்வதர்த்தம்
பூயோபி ஜாநகி ஜிஜீவயிஷு: ஸ ராம: ।
வவ்ரே வரம் த்ரிஜகதாம் வரதோபி தேவாந்
கார்யார்த்திநோ ஹி புருஷஸ்ய குதோऽவலேப: ॥

ஜாநகி! - ஜநகரின் மகளே!
த்ரிஜகதாம் - மூவுலக மக்களுக்கும்
வரதோபி - வேண்டியதைத் தரவல்லவனாயிருந்தும்
த்வதர்த்தம் - உனக்காக
ப்ராணவ்யயம் க்ருதவத: - உயிரை மாய்த்த
ப்லவகாந் - வாநரர்களை
பூயோபி - திரும்பவும்
ஜிஜீவயிஷு: - பிழைப்பிக்க விரும்பியவனாய்
ஸ: ராம: - அந்த ராமன்
தேவாந் - இந்த்ராதி தேவர்களிடம்
வரம் - இறந்துபட்டவர் பிழைக்கும் வரத்தை
வவ்ரே - வேண்டினான்
கார்யார்த்திந: - ஒரு செயலை முடிக்க விரும்பும்
புருஷஸ்ய - மனிதனுக்கு
அவலேப: - அவமானம்
குதோ ஹி - எப்படித் தோன்றும்!

ஜாநகி! பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் எனப்படும் மூவுலகங்களிலும் வாழும் மக்களானவருக்கும் அவரவர்

விரும்புவது அனைத்தையும் தர வல்லமையுடைய பரம புருஷன் ராமனாவன். இருப்பினும் தற்போது மானிடனாக நடக்கின்றானே! இப்போதப்படிச் செய்ய முடியாதே! ஆகவே ராவணவதமானதும் ராமனைத் துதிக்க வந்த இந்த்ராதி தேவரிடம் உனக்காக ராவணனுடன் செய்த போரில் மாண்டொழிந்த அனைத்து வானரர்களும் பிழைத்தெழ வரம் வேண்டினன். ஆம் அது சிறந்ததே. ஆயினும் அனைவரிலும் உயர்ந்த பரமபுருஷன் தன்னிலும் குறைந்த வல்லமையுடைய இந்திரனிடம் யாசிப்பது இழிவான செயலாகாதோவெனின் உலக வழக்கைக் காட்டி இழிவாகாதென்கிறார். எடுத்த செயலை முடித்தேதீர வேண்டும் என்ற திட சித்தமுடையவன் மானாவமானங்களை உலகில் கணிசிப்பதில்லையன்றோ! என்ற விடையால் உனக்காக அவமானமும் அடைந்தான் என்கிறார்.

38. काकुस्थः कमनीयभूषणमणि क्षौमाग्र्य हेमादिभिः
तोषन्देवि निनाय वानरभटान् त्वत्कार्य धुर्यान् प्रभुः।
एतयुक्तमिदं तु विस्मयकरं यत्सर्वनिर्वाहिणे
रङ्गं हन्त विभीषणाय दिदिशे रत्नादियोग्यायसः॥

காகுஸ்த்த: கமநீய பூஷணமணி க்ஷௌமாக்ர்ய ஹேமாதிபி:
தோஷந் தேவி நிநாய வாநரபடாந் த்வத்கார்யதுர்யாந் ப்ரபு:।
ஏதத்யுக்தமிதம் து விஸ்மயகரம் யத்ஸர்வ நிர்வாஹிணே
ரங்கம் ஹந்த விபீஷணாய திதிஶே ரத்நாதியோக்யாய ஸ:॥

தேவி - பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்டவளே!
ப்ரபு: - ராஜ்யத்தையடைந்த
காகுஸ்த்த: - ராமன்
த்வத்கார்ய - ராவணனைக் கொன்று உன்னை மீட்கும் செயலில்
துர்யாந் - துரந்தரர்களான
வாநரபடாந் - வானரவீரர்களை
பூஷண மணி ஆதிபி: - நகை, ரத்நம், பட்டு, தங்கம் முதலியவற்றை ஈதலால்
தோஷம் நிநாய - ஸந்தோஷிப்பித்தான் (இது தகுதியுடையதே ஆயின்)
ஸர்வ நிர்வாஹிணே - அனைத்தையும் முன்நின்று நடத்திய
ரத்நாதியோக்யாய - மணிமுதலான அனைத்தையும் தரத் தகுதியுடைய
விபீஷணாய - விபீஷணனுக்கு
ரங்கம் - ஈயத்தை
திதேஶ - கொடுத்தான்
இதம் - இச்செயல்
விஸ்மயகரம் - ஆஶ்சர்யம்

முடிசூடிய ராமனின் தேவியே! தமது ராஜ்யத்தைப் பெற்றபின் ராமன் உன்னை மீட்டு வரும் செயல்களில் ஒவ்வொன்றிலீடுபட்ட ஒவ்வொரு வானர வீரர்களை அவரவருக்குத் தக்கபடி ஆபரணம் மணி, ஸுவர்ணம் முதலியன கொடுத்து மகிழ்வித்தானென்பது மிகவும் பொருத்தமுடையதே. ஆனால் விபீஷணன் ஸேது பந்தனம் தொடங்கி ராவணவதம் வரை அனைத்து செயல்களிலும் தலைமை தாங்கி ஸமயத்துக்கேற்ற யோசனைகளைக் கூறிச் செயல்களை முடிவித்தவன். ஆனமையின் வாநரர்களுக்கு அளித்த ஆபரணம் முதலான அனைத்தையும் இவன் ஒருவனுக்கே கொடுத்து மகிழ்விக்க வேண்டியவன். ஆனால் ராமன் அவனுக்கு என்ன கொடுத்தான் தெரியுமா? ரங்கத்தை ஈயத்தைக் கொடுத்தான். சிறிதே உதவியவர்களுக்கு உயர்ந்தவற்றைக் கொடுத்தும், மஹோபகாரிக்கு அல்பமானதை ஈதல் அவிவேகிகள் செயலாதலின் இது பரிஹஸிக்கத் தக்கது என்பது ஸாமாந்யப் பொருள். ரங்கம் என்பதற்கு இக்ஷ்வாகு வம்சத்தவர் குலதநமான ஸ்ரீ ரங்கவிமானத்தையே அளித்தார் என்பது உண்மைப் பொருள்.

ஒவ்வொரு செயலை நிர்வஹித்த ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வஸ்துவைக் கொடுத்தது போல் ஸர்வ கார்ய நிர்வாஹகனுக்கு அனைத்து வஸ்துக்களையும் கொடுக்கத் தகுதி இருந்த போதிலும் தமது குலத்துக்கே தநமாகிய ஸ்ரீரங்கநாதனைத் தந்தது, அதி ஸர்வத்ர கர்ஹிதா அளவுக்கு மீறியளித்தல் தக்கதன்று என்கிற ந்யாயப்படி தக்கதன்றாதலின் இப்படிச் செய்தது அத்புதமே என்ற மற்றொரு பொருளும் கிடைக்கின்றது.

39. अवतारान् दश भगवान् अपत्यभूतं जगत्समस्तं ते।
त्रातुं मातरकार्षीत् त्वदिष्टकरणादृते न तस्य फलम्।

इत्यात्रेय वेंकटार्य दीक्षित कृतिषु लक्ष्मीसहस्रे प्रयत्नस्तबकः समाप्तः।

அவதாராந் தச பகவாந் அபத்யபூதம் ஜகத்ஸமஸ்தம் தே।
த்ராதும் மாதரகார்ஷீத் த்வதிஷ்டகரணாத்ருதே ந தஸ்ய பலம்॥

மாத: - உலகத்தாயே
தே - உனது
அபத்யபூதாம் - மக்கள் போன்ற பரிவையும் பெற்ற
ஸமஸ்தம் ஜகத் - உயிரினங்களனைத்தையும்
த்ராதும் - காப்பதற்காகவே
தசாவதாரான் - பத்து அவதாரங்களை
பகவாந் அகார்ஷீத் - பகவான் செய்தவன்
தஸ்ய - அந்த பகவானுக்கு
த்வதிஷ்ட - நீ விரும்பியதை
கரணாத்ருதே - செய்வது தவிர்த்து
பலம் - வேறு பயன்
நாஸ்தி - இல்லை.

"பரித்ராணாய ஸாதூநாம்" எனச் சொன்ன க்ருஷ்ணாவதாரத்தில் செய்த ஸாதுபரித்ராணத்துக்கும், மத்ஸ்யம் முதலான அவதாரங்களில் செய்த ஸாது பரித்ராணங்களுக்கும், லக்ஷ்மியான உனது முகமலர்ச்சியே பரமப்ரயோஜநம் எனச் சொல்லி ஸ்தபகத்தை முடித்தார்.

வீராபுரம், வாஜபேயம், வங்கீபுரம், சடகோபாசாரியர் இயற்றிய ரத்நப்ரபா என்ற லக்ஷ்மீஸஹஸ்ர உரையில் ப்ரயத்நஸ்தபக உரை முடிவுற்றது.

श्रीः

श्रीलक्ष्मीहयवदन परब्रह्मणे नमः

मङ्गल स्तबकः

1. भागधेयं भजेयं तत् फणिशैलकुटुंबिनः ।
मनीषिणो यदेवाहुः मङ्गलानां च मङ्गलम् ॥

பாகதேயம் பஜேயம் தத் பணிசைல குடும்பிந: ।
மநீஷிணோ யதேவாஹு: மங்களாநாம் ச மங்களம் ॥

மநீஷிண: - உயர்ந்த புலவர்கள்,
யதேவ - எந்த லக்ஷ்மி என்ற பகவானின் பார்வையையே
மங்களாநாம் ச மங்களம் - மங்களத்தைத் தரும் பொருள்களுக்கும் மங்களத்தைத் தருவதாக
ஆஹு: - சொன்னார்களோ
பணிசைல - சேஷாத்ரியில் வாழ்பவரும்
குடும்பிந: - உலக மக்களைத் தம் குடும்பமாகக் கொண்ட ஸ்ரீநிவாஸனுடைய
தத் பாகதேயம் - உயர்ந்த பாக்யமான லக்ஷ்மியை
பஜேயம் - ஸேவிக்கக்கடவேன்.

"ஸர்வமங்களமாங்கல்யா, மங்களம் மங்களாநாம்" என்பன போன்றுப் பலவிடங்களில் ப்ரஸித்தமான உலகுக்கு நன்மை

மாத: - உலகத்தாயே
தே - உனது
அபத்யபூதம் - மக்கள் போன்ற பரிவையும் பெற்ற
ஸமஸ்தம் ஜகத் - உயிரினமனைத்தையும்
த்ராதும் - காப்பதற்காகவே
தசாவதாரான் - பத்து அவதாரங்களை
பகவாந் அகார்ஷீத் - பகவான் செய்தனன்
தஸ்ய - அந்த பகவானுக்கு
த்வதிஷ்ட - நீ விரும்பியதை
கரணாத்ருதே - செய்வது தவிர்த்து
பலம் - வேறு பயன்
நாஸ்தி - இல்லை.

"பரித்ராணாய ஸாதூநாம்" எனச் சொன்ன க்ருஷ்ணாவதாரத்தில் செய்த ஸாதுபரித்ராணத்துக்கும், மத்ஸ்யம் முதலான அவதாரங்களில் செய்த ஸாது பரித்ராணங்களுக்கும், லக்ஷ்மியான உனது முகமலர்ச்சியே பரமப்ரயோஜநம் எனச் சொல்லி ஸ்தபகத்தை முடித்தார்.

வீராபுரம், வாஜபேயம், வங்கீபுரம், சடகோபாசாரியர் இயற்றிய ரத்நப்ரபா என்ற லக்ஷ்மீஸஹஸ்ர உரையில் ப்ரயத்நஸ்தபக உரை முடிவுற்றது.

श्रीः

श्रीलक्ष्मीहयवदन परब्रह्मणे नमः

मङ्गल स्तबकः

1. भागधेयं भजेयं तत् फणिशैलकुटुंबिनः ।
मनीषिणो यदेवाहुः मङ्गलानां च मङ्गलम् ॥

பாகதேயம் பஜேயம் தத் பணிஸைல குடும்பிந: ।
மநீஷிணோ யதேவாஹு: மங்களாநாம் ச மங்களம் ॥

மநீஷிண: - உயர்ந்த புலவர்கள்,
யதேவ - எந்த லக்ஷ்மி என்ற பகவானின் பார்வையே
மங்களாநாம் ச மங்களம் - மங்களத்தைத் தரும் பொருள்களுக்கும் மங்களத்தைத் தருவதாக
ஆஹு: - சொன்னார்களோ
பணிஸைல - சேஷாத்ரியில் வாழ்பவரும்
குடும்பிந: - உலக மக்களைத் தம் குடும்பமாகக் கொண்ட ஸ்ரீநிவாஸனுடைய
தத் பாகதேயம் - உயர்ந்த பாக்யமான லக்ஷ்மியை
பஜேயம் - ஸேவிக்கக்கடவேன்.

"ஸர்வமங்களமாங்கல்யா, மங்களம் மங்களாநாம்" என்பன போன்றுப் பலவிடங்களில் ப்ரஸித்தமான உலகுக்கு நன்மை

விளைவிக்கும் தன்மையை துதிக்கிறார். எனவே மங்கள ஸ்தபகம் எனப்பெயர் பெற்றது.

தயிர், புஷ்பம், அருகம்புல், அக்ஷதை முதலியவற்றை மங்கள த்ரவ்யமாகச் சொல்வர். இவை மங்களங்களாயினமைக்குக் காரணம் இவற்றுள் லக்ஷ்மியின் அநுப்ரவேசம் இருப்பதே. ஆகவேதான் ''ஸர்வமங்கள மாங்கல்யா'' என லக்ஷ்மீஸஹஸ்ர நாமத்தில் இவள் பெயர் ஓதப்பட்டது. இத்தகைய லக்ஷ்மீ உலகமனைத்தையும் தம் குடும்பமாகக் கொண்ட ஸ்ரீநிவாஸனின் பாக்யமே, அத்ருஷ்டமே உருவெடுத்தவள் போலுள்ளாள். அவளை இந்த ஸ்தபகம் குறைவின்றி முடிய ஸேவிக்கிறேன் என்கின்றார்.

2. करोति सिन्धोः तनये कथंचित् तवांशलेशो यदि सन्निधानम्।
तृणेपि मांगल्य मुदेत्यखर्वं दूर्वादिरेवात्र निदर्शनं नः ॥

கரோதி ஸிந்தோ: தநயே கதஞ்சித் தவாம்சலேசோ யதி ஸந்நிதாநம்।
த்ருணேபி மாங்கள்ய முதேத்யகர்வம் தூர்வாதிரேவாத்ர நிதர்சநம் ந:॥

ஸிந்தோ: தநயே! - கடல் கன்னியே!
த்ருணேபி - அல்பப் பொருளான புல்லிலும்
தவாம்சலேசம் - உனது மஹிமைத்துளியின் ஒரு சிறு பகுதி
ஸந்நிதானம் - அநுப்ரவேசத்தை
கதஞ்சித் - ஏதோ ஒரு வழியில்
கரோதி யதி - செய்யுமேயாகில்
ததா - அப்போது
த்ருணேபி - புல்லிலும்
அகர்வம் - குறைவற்ற
மாங்கல்யம் - நன்மையை விளைவிக்கும் தன்மை
உதேதி - தோன்றுகின்றது
அத்ர - இவ்விஷயத்தில்
தூர்வாதிரேவ - புல் முதலியவையே
ந: - எமக்கு
நிதர்சநம் - எடுத்துக்காட்டாம்.

கடலின் பெண்ணே! உலகிலுள்ள பொருள்களுள் மிக அற்பமானது புல்லே. ஆனால் ஹயக்ரீவ ஆராதநத்தில் அருகம்புல், சந்தனம், புஷ்பம், மஞ்சள் முதலியன பயன்படுகின்றன. அற்ப சருகுக்கு அத்துணை சிறப்பு எதனால் எனின் அது உனது மஹிமையின் சிறு துளியைப் பெற்றதாலேயாம். அற்பப் பொருளும் மேன்மை அடைவதற்கு இதனினும் வேறு உதாஹரணம் வேண்டுமோ? ''தூர்வா துஸ்வப்ந நாசிநீ, ஸர்வ புஷ்பமயீ தூர்வா'' போன்ற இடங்களில் அருகின் மேன்மை ஸுப்ரஸித்தம்.

3. गरुडध्वजवल्लभे शुभे गणवर्णादिजदोषशान्तये ।
वरदे तव वाचकं पदं कवयः काव्यमुखे प्रयुंजते ॥

கருடத்வஜவல்லபே ஶுபே கணவர்ணாதிஜ தோஷஶாந்தயே ।
வரதே தவவாசகம் பதம் கவய: காவ்யமுகே ப்ரயுஞ்ஜதே ॥

கருட - க்ஷேமத்தைத் தருபவனாக ஶகுந ஶாஸ்த்ரத்தில் சொன்ன கருடனை
த்வஜ - கொடியாகக் கொண்ட நாராயணனின்
வல்லபே - மனைவியே!
ஶுபே - இயல்பாகவே மங்களமானவளே!
வரதே - வேண்டியதெல்லாம் வழங்குபவளே
கவய: - காப்பியமியற்றும் கவிகள்
காவ்யமுகே - தமது காவ்யத்தின் ஆரம்பத்தில்
தவ வாசகம் - உன்னைச் சொல்வதால் மங்களமான பதத்தை
கணவர்ணாதி - கணம் எழுத்து முதலியவைகளிலுள்ள
தோஷஶாந்தயே - தோஷம் கழிவதற்கு
ப்ரயுஞ்ஜதே - ப்ரயோகிக்கின்றனர்.

''வர்ணம் கணஞ்ச காவ்யஸ்ய முகே குர்யாத் ஶுபாபதம்'' எனக் காவ்ய ப்ரகாஶம் என்ற நூல் கூறுகின்றது. வடமொழியிலுள்ள எழுத்துக்களுள் ஒரு சில எழுத்துக்களைச் சேர்த்து ''யகணம்'' என்றும், மேலும் சில எழுத்துக்களைச் சேர்த்து ''ரகணம்'' என்றும், மேலும் சிலவற்றைச் சேர்த்து ''தகணம்'' என்றும் பெயரிட்டுள்ளனர். இப்படிப் பல கணங்களுள் அதேபோல் ''குரு'' ''லகு'' எனவும் பிரித்துள்ளனர். கணங்களிலும் எழுத்துகளிலும் சிலவற்றையே மங்களகரமாகக் கருதியுள்ளனர். ஆகவே காவ்யத்தைத் தொடங்கும்போது தொடக்கத்தில் மங்களமான கணத்தையும் எழுத்தையும் அமைக்க வேண்டும் என்பது மேற்காட்டிய மேற்கோளின் பொருள். முதலில் இப்படிக் கட்டளையிட்ட ''காவ்யப்ரகாஶம்'' கடைசியில் லக்ஷ்மியைச் சொல்வதாகிய பதங்களை அவஶ்யம் சொல்ல வேண்டும் என்றும், அச் சொல்லில் மேற்சொன்ன கணவர்ணங்களின் சுத்தி இல்லாவிடினும் தோஷமற்றதாக ஆவதோடு மிக்க நன்மையை விளைவிக்குமது எனவும் சொல்லியுள்ளது. இதைக் கருத்தில் கொண்டே போஜராஜன் தாம் இயற்றிய சம்பூராமாயணத்தில் முதலில் ''லக்ஷ்மீம் தநோது'' எனத் துவங்கினன். இதில் உள்ள அந்த லகுவான தகணமும் லகாரமும் ஶுத்தமற்றவை. ஆயினும் லக்ஷ்மீயைச் சொன்னதால் ஶுத்தம் உடையதாயிற்று. இது போன்றே ''ஶ்ரிய:பதி: ஶ்ரீமதி'' என்று ஆரம்பித்தார் மகா கவியும்.

4. विदुःपदाब्जं तव विश्वमंगलं हरिप्रिये यत्परिचार वैभवात् ।
समाश्रितास्थाणुमपि श्मशानगं जगत्यपर्णा जनिसर्वमंगला ॥

விது: பதாப்ஜம் தவ விச்வமங்களம் ஹரிப்ரியே யத்பரிசாரவைபவாத் ।
ஸமாச்ரிதாஸ்தாணுமபி ச்மசாநகம் ஜகத்யபர்ணாஜநி ஸர்வமங்களா ॥

ஹரிப்ரியே - பகவானின் மஹிஷியே
தவபதாப்ஜம் - தாமரை போன்ற உனது திருவடியை
விச்வமங்களம் - உலகுக்கு க்ஷேமத்தை விளைவிப்பதாக
விது: - புலவர் அறிகின்றனர்
ச்மசாநகம் - இடுகாட்டில் வாழும்
ஸ்தாணும் - சிவனுடன்
ஸமாச்ரிதா - ஒரே சரீரமாக இணைந்த
அபர்ணா - பார்வதி
யத்பரிசார வைபவாத் - எந்தத் திருவடிகளின் பூஜாமஹிமையால்
ஜகதி - உலகில்
ஸர்வமங்களா - ஸமஸ்த மங்களையும் உடையவளாக
அஜநி - ஆயினளோ.

நாராயண பத்நி! சிவன் இடுகாட்டில் வாழ்பவன் இடுகாட்டில் எங்கேனும் மங்கள் இருப்பதுண்டோ அமங்களமான இடமன்றோ அது! அங்கு வாழ்பவனிடம் மட்டும் மங்களம் எப்படி உண்டாம்? இருப்பினும் அச்சிவனிடம் இரண்டறக் கலந்தாள் பார்வதி. எனவே அவளிடம் மங்களம் தங்குமோ? இருப்பினும் அவள் ஸர்வமங்களையாக — ஸர்வஸம்பத்தையும் உடையவளாக ஆயினள். இதற்குக் காரணம் உனது திருவடிகளில் அவள் பணிவிடை செய்தமையே. ஆகவேதான் புலவர் உன்னை விச்வமங்களையாகக் கூறுகின்றனர்.

பார்வதிக்கு ஸர்வமங்களா என்பது ஒரு பெயர். அதனைக் கருத்தில்கொண்டு இப்படிச் சமத்காரமாகக் கவி பேசுகிறார்.

5. तातो दुग्धपयोनिधिः सहभुवः ते कौस्तुभाद्याः शुभाः
देवस्तु अव्ययदिव्यमंगलवपुः श्रीवत्सलक्ष्मा पतिः ।
नाम श्रीरिति धाम पद्मं अखिल क्षेमंकरः पक्षिराट्
वाहः को हरिवल्लभे कथयितुं मांगल्यमीष्टे तव ॥

தாதோ துக்தபயோநிதி: ஸஹபுவ: தே கௌஸ்துபாத்யா: சுபா:
தேவஸ்து அவ்யய திவ்யமங்களவபு: ஸ்ரீவத்ஸலக்ஷ்மா பதி: ।
நாம ஸ்ரீரிதி தாம பத்மம் அகிலக்ஷேமங்கர: பக்ஷிராட்
வாஹ: கோ ஹரிவல்லபே கதயிதும் மாங்கள்யம் ஈஷ்டே தவ ॥

ஹரிவல்லபே - நாராயணன் பத்நீ!
தே தாத: - உனது தந்தையான
துக்தபயோநிதி: - பாற்கடல்
ஶுப: - மங்களமானது
தே - பகவானின் உருவங்களாக ப்ரஸித்தி பெற்ற
கௌஸ்துபாத்யா: - அம்ருதம், கௌஸ்துபம், பாரிஜாதம் முதலிய
ஸஹபுவ: - உடன்பிறந்தவைகளும்
ஶுபா: - மங்களமானவைகளே
அவ்யய - நித்யமானதும்
திவ்ய - அப்ராக்ருதமானதும்
மங்களவபு: - ஶுபாஸ்ரயமுமான திருமேனியை உடையவனும்
ஸ்ரீவத்ஸ லக்ஷ்மா - பாக்யங்களுக்கு ஸூசகமான ஸ்ரீவத்ஸத்தை அடையாளமாக உடையவனும்
தேவ: - நன்கு ப்ரகாஶிப்பவனுமான
பதிஸ்து - பர்த்தாவும்
ஶுப: - ஶுபமானவன்
நாம - உனது பெயரோ
ஸ்ரீ: - ஸர்வாநிஷ்டத்தையும் போக்கவல்லது என்பது போன்ற பல பொருள்கள் பெற்ற ஸ்ரீ என்பதும் ஶுபமானதே
தாம - வீடான
பத்மம் ஶுபம் - தாமரையும் ஶுபமானது
அகில க்ஷேமங்கர: - அனைவருக்கும் க்ஷேமத்தை விளைவிப்பவனாயும்
வாஹ: - வாஹனமுமான
பக்ஷிராட் ஶுப: - புள்ளரசனான கருடனும் ஶுபனே
ஈத்ருஶ்யா: - இப்படிப் பல மங்களங்களை உடைய
தவ - உனது
மாங்கள்யம் - உயர்ந்த மங்களங்களை உடைமையை
கவயிதும் - தனது கவிதை மூலம் வெளியிட
க: ஈஷ்டே - எவன் வல்லமை உடையவன்? எவனுமிலன் என்றபடி.

ஶரணமடைந்த ஸர்வரது துக்கத்தையும் அபஹரிப்பதால் ஹரி: எனப் புகழ்பெற்ற பகவானின் மனைவியே! பகவானாலேயே "ஸ்மரத்திமம ரூபாணி" என்பதால் தனது உருவமாய் புகழப்பட்ட உனது தந்தையான பாற்கடலும் உன் உடன்பிறந்தவைகளான அம்ருதம், கௌஸ்துபம், பாரிஜாதம் முதலியனவும் மங்கள கரங்கள் என்பது நிர்விவாதம். அழிவற்றதும், அப்ராக்ருதமானதும் ஶுபங்கள் அனைத்துக்கும் பிறப்பிடமானதுமான திருமேனியை உடையவனும் பாக்யமே வடிவெடுத்தது போன்ற ஸ்ரீவத்ஸத்தை மருவாகக் கொண்டவனும் தேவனாகிய பதியும் மங்கள கரனாயினன். ஸர்வாநிஷ்டத்தையும் அழிக்கவல்லது. எட்டு குணங்களுக்குப் பிறப்பிடமானது என்பது போன்ற பல பொருள்களைத் தரவல்ல ஸ்ரீ: என்ற பெயரை உடையை நீ உன் வாழ்விடமான தாமரையும் "பத்மப்ரியே" என்பது போன்ற ஶ்ருதியால் மங்களகரமாகப் புகழப்பட்டது. ஶகுநஶாஸ்த்ரத்தில் அனைவருக்கும் க்ஷேமத்தை விளைவிப்பவனாகப்

புகழப்பட்டவனும் ''ஸுபர்ணோஸிகருத்மான்'' என வேதத்தால் புகழப்பட்டவனுமான கருடன் உன் வாஹனம். இப்படித் தந்தை, உடன்பிறந்தவர், பர்த்தா, வாஹநம் என்னும் அனைத்தும் மங்களங்களாக இருப்பதோடு நீயும் மங்களகரமான பெயரையுடையை. எனவே எவன்தான் கவிதையால் உன்னைப் புகழத் தகுதி உடையவனாவன்? எவனுமாகான்.

6. यस्तु श्रीः न पुरस्करोत्यविनयात् वस्तु त्वदीयं शुभं
तस्मिन् नृत्यति दुर्गतिः चिरतरं तत्र प्रमाणं तु नः ।
दुर्वासप्रतिघोद्गमादधिगतस्वर्वासवत्वच्युतिः
दिव्यं माल्यमहो मदादगणयन् देवः शचीवल्लभः ॥

யஸ்து ஸ்ரீ: நபுரஸ்கரோத்யவிநயாத் வஸ்து த்வதீயம் ஶுபம்
தஸ்மிந் ந்ருத்யதி துர்கதி: சிரதரம் தத்ர ப்ரமாணம் து ந: ।
துர்வாஸப்ரதிகோத்கமாததிகத ஸ்ர்வாஸவத்வ ச்யுதி:
திவ்யம் மால்யமஹோ மதாதகணயந் தேவ: ஶசீவல்லப: ॥

ஹே ஸ்ரீ: - லக்ஷ்மியே!
ய: - எந்த புருஷன்
த்வதீயம் - உன் தொடர்புடையதும்
ஶுபம் - அதனால் மங்களகரமானதுமான
வஸ்து - சந்தனம், புஷ்பம் முதலான பொருள்களை
அவிநயாத் - அஹங்காரத்தால்
ந புரஸ்கரோதி - மதிப்பதில்லையோ
தஸ்மிந் - அப்புருஷனிடம்
துர்கதி: - அலக்ஷ்மி
சிரதரம் - வெகு நாள்கள்
ந்ருத்யதி - தாண்டவமாடுகிறாள்
திவ்யம் மால்யம் - தேவருலகப் பூவாலான பாரிஜாத மாலையை
மதாத் - திமிராலே
அகணயந் - பொருட்படுத்தாதவனாய்
துர்வாஸ - துர்வாஸ முனியின்
ப்ரதிகோத்கமாத் - மிக்க கோபத்தால்
அதிகத - அடைந்த
ஸ்வர்வாஸவத்வச்யுதி: - இழந்த ஸ்வர்கவாஸத்தை உடைய
தேவ: ஶசீவல்லப: - புகழ் பெற்ற இந்திரனே
ப்ரமாணம் - ஸாக்ஷியாவன்.

லக்ஷ்மீ! உனது ஸம்பந்தமுடைய புஷ்பம், சந்தனம், மஞ்சள் போன்ற வஸ்துக்களை அஹங்காரத்தால் அவமதிப்பவனை உனது அக்காளான மூதேவி அப்போதே சென்றடைந்து வெகுகாலம் தமது வல்லமை அனைத்தையும் வெளிப்படுத்தி மகிழ்வோடு வாழ்கிறாள். கோபமே வடிவெடுத்தவரான துர்வாஸர் தம்மிடமிருந்த பாரிஜாத மாலையை ஐராவதத்தின் மேலிருந்த இந்திரனிடம் கொடுக்க . அதனை வாங்கிய இந்திரன் அஹங்காரத்தால் அதைத்தாம் ஏற்காது யானையின் மத்தகத்தின் மீது வைக்க துர்வாஸருக்குக் கோபம் பொங்கி எழுந்தது.

உடனே சாபத்தால் இந்திரனை ஸ்வர்கவாஸம் இழந்தவனாக ஆக்கிவிட்டார் என்பது புகழ்பெற்ற வரலாறு. இது ஒன்று போதுமே சான்று.

7. दृष्टिः शिवोदयकरी करुणाभिःआर्द्रा
   युक्तं तवाम्ब भजते भवतारकत्वम् ।
ज्येष्ठाश्रयोऽपि मघवान् स्तुतिभिस्तवाहो
   प्राप्यातुलोजनि पुनर्वसु वर्गमुच्चम् ॥

த்ருஷ்டி: சிவோதய கரீ கருணாபிரார்த்ரா
   யுக்தம் தவாம்ப பஜதே பவதாரகத்வம் ।
ஜ்யேஷ்டாச்ரயோபி மகவாந் ஸ்துதிபி: தவாஹோ
   ப்ராப்யாதுலோஜநி புநர்வஸு வர்கமுச்சம் ॥

அம்ப - தாயே!
சிவ, உதய, கரீ - மங்களம், மிகுவதற்குக் காரணமானதும்
கருணாபி: - தயையாலே
ஆர்த்ரா - ஈரமானதுமான
தவ த்ருஷ்டி: - உனது கடாக்ஷம்
பவதாரகத்வம் - ஸம்ஸாரமாம் அபாயத்தைப் போக்கும் தன்மையை
பஜதேதி யத் - அடைவதென்பது
யுக்தம் - தகுதியுடைத்தே
ஜ்யேஷ்டா - மூதேவியின்
ஆச்ரயோபி - வாழுமிடமானவனாக இருந்தபோதும்
இந்த்ர: - இந்திரன்
தவ - உனது மனை
ஸ்துதிபி: - துதித்ததாலே
புந: - திரும்பவும்
உச்சம் - மிகவுயர்ந்த
வஸுவர்கம் - செல்வக் குவியல்களை
ப்ராப்ய - அடைந்து
அதுல: - ஒப்பற்றவனாக
அஜநி இத்யேதத் - ஆயினனென்பது
அஹோ - ஆச்சர்யம்.

தாயே! மங்களமனைத்தையும் விளைவிப்பதும் தயை மிக்கதுமான உனது கடாக்ஷம் ஸம்ஸாரம் போன்ற அபாயத்தைப் போக்குகின்றதென்பது மிகவும் பொருத்தமுடைத்தே, மங்களத்தை மிகுவிப்பதற்கு அமங்களத்தை அழிப்பதென்பது ந்யாய்யம்தானே! துர்வாஸ சாபத்தால் உனது அக்காவான மூதேவிக்கு வாழிடமான இந்திரன் உன்னைத் துதித்துத் திரும்பவும் இழந்த அனைத்தையும் பெற்று ஒப்புயர்வற்றவன் ஆயினனன்றோ! உனது துதி மஹர்ஷி சாபத்தையும் போக்கவல்லதென்பது ஆச்சர்யம்.

ஜ்யோதிஷ சாஸ்த்ர ரீதியில் ஒரு பொருள் இதற்குச் சொல்லலாமாயினும் விரிவுக்கு அஞ்சி விடுத்தனம்.

8. फणिपतिदयिते तव स्तुतिः भगवति पावन रीतिमाश्रिता ।
अवितथमत एव तद्बलात् शुभमगतोपि सुमंगलत्यहो ॥

பணிபதிதயிதே தவஸ்துதி: பகவதி பாவநரீதிமாஶ்ரிதா ।
அவிததமத ஏவ தத்பலாத் ஶுபமகதோபி ஸுமங்கலத்யஹோ ॥

பகவதி - குணக்கடலே!
பணிபதிதயிதே - நாராயண மகிஷியே!
தவ ஸ்துதி: - உமது துதி
பாவநரீதிம் - அபஶப்தத்தைப் போக்கும் தன்மையை
ஆஶ்ரிதா - அடைந்துள்ளதென்பது
அவிததம் - ஸத்யமானதே
அத ஏவ - சுபத்தை விளைவிக்கும் தன்மையைப் பெற்றதால்
தத்பலாத் - உமது தோத்திர பலத்தால்
ஶுபமகதோபி - நன்மையை இழந்த இந்திரன் போல் யாரும்
ஸுமங்களதி - மிக்க மங்களம் உள்ளவனாகிறான்
அஹோ - ஆஶ்சர்யம்

லக்ஷ்மியின் தோத்திரம் ஸர்வ மங்களத்தையும் ஸர்வருக்கும் தரும் என்கிறார்.

9. त्वद्भ्रातुरिन्दोः अनुचारयोगात् प्रायेण मूढोपि अशुभः कुजन्मा ।
स्वभूविभूषे स बुधाग्रगण्यः बभूव जग्राह च मंगलाख्याम् ॥

த்வத்ப்ராதுரிந்தோரநுசாரயோகாத்
ப்ராயேண மூடோபி அஶுப: குஜந்மா ।
ஸ்வபூவிபூஷே ஸ புதாக்ரகண்ய:
பபூவ ஜக்ராஹ ச மங்களாக்யாம் ॥

ஸ்வபூவிபூஷே - பகவானுக்கு அலங்காரமானவளே!
குஜந்மா - இழிந்த பிறப்புடையவன் பூமியின் பிள்ளையான அங்காரகன்
ப்ராயேண - பெரும்பாலும்
மூடோபி - அறிவற்றவனாயினும் அஜ்ஞாநதனாக இருந்தபோதும்
அஶுபோபி - அமங்கலத்தைச் செய்பவனாயினும் பாப க்ரஹமாயினும்
த்வத்ப்ராது: - உன்னுடன் பிறந்தவனான
இந்தோ: - சந்திரனின்
அநுசாரயோகாத் - அநுஸரித்து நடப்பதால், பின் தொடர்வதால்
ஸ: - அம்மனிதன், அங்காரகன்
புதாக்ரகண்ய: - பெரும் புலவனாய், புதனுக்கு முன்பாக எண்ணப்படுபவனாய்
பபூவ - ஆயினன்
மங்களாக்யாம் - நன்மை செய்பவன் என்ற பெயரையும், மங்களவாரம் என்ற பெயரையும்
ஜக்ராஹ ச - பெற்றான்.

நாராயணனையே அழகுபடுத்துபவளே! இழிந்த மனிதன் ஒருவனும் கிழமைகளுள் நல்லதல்லாததான செவ்வாயும் தாம் நல்லவர்களல்லராக இருந்தும் மங்கள காரிணியான உன்னுடன் ஸம்பந்தம் உடைய வேறொருவருடன் இவ்விருவரும் தொடர்பு கொண்டதால் இவ்விருவரும் உயர்ந்தவராகிவிட்டனர் என்கின்றார். ச்லேடையில் இக்கருத்தைக் கூறுகிறார். செவ்வாய்க்குக் குஜன் என்பது வடமொழிப் பெயர். இது கு + ஜந் எனப்பிரியும். கு - பூமியினிடம் ஜந் - தோன்றியவன் என்பது பொருள். செவ்வாய் பூமியின் பிள்ளை. கு - குத்ஸிதமான - நல்லதல்லாத - ஜந் - பிறப்பை உடையவன் என்ற பொருளும் உண்டு குஜந் என்பதற்கு. நவக்ரஹங்களுள் சிலவற்றை பாப க்ரஹம் என ஜோஸிடர் கூறுவர். அதன்படி குஜன் பாபக்ரஹத்தைச் சார்ந்தவன். இதேபோல் சில க்ரஹத்தை உச்சம் என்பர். அந்த க்ரஹணம் உள்ள இடத்தை அடிப்படையாகக் கொண்டு. இதே போல் சில க்ரஹங்களை மூடம் என்பர், இதனையே அஸ்தங்கதன் என்றும் சொல்வர். வெள்ளி மூடம் புகழ்பெற்றதன்றோ? இப்படி மூடமான - முட்டாளான, அஸ்தமித்த மனிதனும். குஜனும், அமங்களத்தைச் செய்பவனாகவும், பாபியாகவும் இருந்தபோதும், மங்கள தேவதையான லக்ஷ்மியின் உடன் பிறந்தவனான சந்திரனைப் பின்பற்றுவதாலே அந்த மனிதனும் குஜனும் புதாக்ரகண்யனாக - புலவருள் உயர்ந்தவனாகவும், புதன்கிழமைக்கு முன்னால் சொல்லப்படுபவனாகவும் ஆயினன். லக்ஷ்மீயின் அருள்பெற்ற சந்திரன் என்றாலும் திங்கள் என்றாலும் ஒன்றே. கிழமைகளை வரிசையாகச் சொல்லும் போது திங்களுக்கு அடுத்து செவ்வாயைச் சொல்கிறோம். எனவே குஜன் சந்திரனைப் பின்பற்றினவனாயினன். அதன் பயன் புதாக்ரகண்யன் ஆயினன். மனிதன் புலவருள் சிறந்தவனாகவும் குஜன் புதனுக்கு முன்னும் எண்ணப்படுகிறான். செவ்வாய்க்கு அடுத்தது தானே புதன் ஆகவே புதாக்ரகண்யன் ஆயினன். இதோடன்றி மங்களவாரம் என்ற பெயரையும் செவ்வாய் பெற்றான்.

மூடனும் புதாக்ரகண்யன் ஆயினன், அகபனும் மங்களம் என்ற பெயர்பெற்றனன். எல்லாம் உன் உடன் பிறப்பின்

தொடர்பின் மேன்மை.

10. जगृहे क्वचिदच्युतोऽवतारे जगतां मातः इनान्वयं पुरा यः ।
तमजस्रमिनान्वयं नयन्ती शिवतातं शिवतातिमातनोति ॥

ஜக்ருஹே க்வசிதச்யுதோவதாரே
ஜகதாம் மாத: இநாந்வயம் புரா ய: ।
தமஜஸ்ரம் இநாந்வயம் நயந்தீ
ஶிவதாதம் ஶிவதாதிமாததோதி ॥

ஜகதாம் மாத: - உலகத்தாயே!
ய: அச்யுத: - எந்த அச்யுதன்
க்வசித் - ராமாவதாரத்தில்
இநாந்வயம் - ஸூர்ய வம்ஸத்தை
நயந்தீ - அடைவிப்பவளாய்
இநா - மன்மதனுடன்
அந்வயம் - ஸம்பந்தத்தை
நயந்தீ ஸதீ - அடைவிப்பவளாய்
ஜக்ருஹே - தனக்குப் பிறப்பிடமாகப் பற்றினானோ
தம் - அந்த அச்யுதனை
அஜஸ்ரம் - எல்லா காலங்களிலும்
இநாந்வயம் - ஸூர்ய வம்ஸத்தை
ஶிவதாதம் - ஶிவனுக்குத் தந்தையை
ஶிவதாதிம் - உலகங்களுக்கெல்லாம் நன்மையைச் செய்பவனாக
ஆதநோதி - செய்கிறாய்.

மூவுலகங்களுக்கும் தாயே! அச்யுதனான பகவான் ராமாவதாரம் செய்த போது ஸூர்ய வம்ஸத்தைப் பிறப்பிடமாகக் கொண்டான். ஆகையால் அந்த அச்யுதனுக்கு எப்போதும் ஸூர்ய வம்ஸத்தோடு தொடர்பை நீ உண்டுபண்ணினாய் என்ற பொருள் மேலெழுந்தவாரியாகத் தோன்றுவதாம். உண்மைப் பொருள் வருமாறு "இ" என்ற ஓரெழுத்தொருமொழிக்கு ஸூர்யன் மன்மதன் என்ற இரண்டு பொருள்களுண்டு. மன்மதன் லக்ஷ்மியின் பிள்ளை. ஆகவே ஸூர்ய வம்ஸத்தில் பிறந்த ராமனுக்கு எல்லா காலங்களிலும் இனனோடு மன்மதனோடு தந்தை என்ற ஸம்பந்தத்தை உண்டுபண்ணினாய். மேலும் ஶிவதாதனை - ஶிவனின் தந்தையை - நாராயணனை - ஶிவதாதியாக உலகங்களுக்கெல்லாம் நன்மையைச் செய்பவனாக ஆக்கினாய். ஶிவன் நாராயணன் பிள்ளையாவான்.

ராமாவதாரம் செய்த காலத்தே மட்டும் உலகைக் காத்த பகவானை தன் வயமாக்கிக்கொண்டு எக்காலத்திலும் உலகைக் காப்பதில் தூண்டுகிறாய் என்பது கருத்து.

(தொடரும்)

மண்டையோட்டின் ஸம்பந்தத்தால் அபரிசுத்தனான சிவனையும் சுத்தனாகச் செய்ததுமான கங்கா தீர்த்தத்தை உண்டுபண்ணிற்று.

உண்மையில் அசுத்தமான பகவானின் பதங்கள் உனது கைகளின் தொடர்பால் உலகங்களையே பரிசுத்தமாக்கும் தீர்த்தத்தை உண்டுபண்ணும் சக்தியைப் பெற்றன என்பது கருத்து "தீர்த்தேந மூர்த்நி வித்ருதேந சிவ: சிவோபூத்" என்பன போன்ற ச்லோகங்கள் எண்ணத்தக்கவை.

कन्ये दुग्धोदन्वतः तावकीनं मन्ये रूपं मंगलं मंगलानाम् ।
यत्सावर्ण्यप्राप्त भद्रा हरिद्रा सौमंगल्यं संविधत्ते वधूनाम् ॥

கந்யே துக்தோதந்வத: தாவகீநம்
மந்யே ரூபம் மங்களம் மங்களாநாம் ।
யத்ஸாவர்ண்ய ப்ராப்த பத்ரா ஹரித்ரா
ஸௌமங்கல்யம் ஸம்வித்தே வதூநாம் ।

துக்தோதந்வத: கந்யே - பாற்கடல் புத்ரி!
தாவகீநம் - உமது
ரூபம் - திருமேனியை
மங்களாநாம் ச - மங்களத்தைத் தருபவைகளுக்கும்
மங்களம் - மங்களத்தைத் தருவதாக
மந்யே - எண்ணுகிறேன் (மனதில்)
யத்ஸாவர்ண்ய - எந்தத் திருமேனியின் ஒப்புமையால்
ப்ராப்தபத்ரா - பெற்றமங்களத்தையுடைய
ஹரித்ரா - மஞ்சள்
வதூநாம் - சுமங்கலிகளுக்கு
ஸௌமங்கல்யம் - மங்களமுடையதாய் இருக்கும் தன்மையை
ஸம்விதத்தே - வ்ருத்தி, அடையச் செய்கிறதோ

தாயே! நீ மங்களமான பாற்கடலில் தோன்றினவளானமையின் மிக்க மங்களமுடையளாயினை. அத்தகைய உனது உடல் உலகத்தில் மங்களகரமான ப்ரஸித்தமான மஞ்சள் முதலான பொருள்களுக்கும் மங்களத்தைத் தருவதாக உள்ளது. காரணம் அவை உனது திருமேனியின் சாயலைப் பெற்றிருப்பதே. ஸுவர்ணம் போன்ற நிறமுடையவள் லக்ஷ்மி என்கிறது ஸ்ரீ ஸூக்தம். மஞ்சளுள் ஸுவர்ண ஜாடை புலப்படுகின்றதன்றோ! ஆகவேதான் மஞ்சள் ஸுமங்கலிகளின் ஸுமங்கலிகளாக இருக்கும் தன்மையை வளர்க்கிறது. தன்னுடன் நேரான தொடர்பைப் பெறாத மஞ்சளுக்கும் மங்களமாம் தன்மையை

விளைவிக்கும் லக்ஷ்மிக்கு, தான் மிக்க மங்களமுடையவளாக இருக்கும் தன்மையைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ என்பது கருத்து.

ஸுமங்கலிகள் தினம் மஞ்சள் பூசிக் கொள்வது தம் கணவன் ஆயுளை வளர்ப்பதாம்.

यस्तेरूपमुपास्ते शुभं प्रपन्नं श्रियं हरिद्राजाम् ।
तत्क्रतुनयेन स वहेत् अमुत्र जननि श्रियं हरिद्राजाम् ॥

யஸ்தே ரூபமுபாஸ்தே ஶுபம் ப்ரபந்நம் ஶ்ரியம் ஹரித்ராஜாம் ।
தத்க்ரதுநயேந ஸ வஹேத் அமுத்ர ஜநநி ஶ்ரியம் ஹரித்ராஜாம் ॥

इत्यात्रेय वेङ्कटार्यदीक्षितकृतिषु लक्ष्मीसहस्रे
मङ्गलस्तबकः सप्तमः समाप्तः ॥

ஜநநி - தாயே
ஶுபம் - அப்ராக்ருதமான
ஹரித்ராஜாம் - மஞ்சளில் தோன்றிய
ஶ்ரியம் - ஶோபையை
ப்ரபந்நம் - அடைந்துள்ள
தே ரூபம் - உனது திருமேனியை
ய: உபாஸ்தே - எவன் த்யானிக்கிறானோ
ஸ: - அவன்
அமுத்ர - மேலுலகில்
தத்க்ரதுந்யாயேந - யதாக்ரதுந்யாயத்தால்
ஹரித்ராஜாம் ஶ்ரியம் - மஞ்சளின் நிறத்தை
வஹேத் - அடைவன்
ஹரித் - திசைகளின்
ராஜாம் - பாலகர்களின்
ஶ்ரியம் - ஸம்பத்தை
வஹேத் - அடைவன்

வேதாந்தத்தில் பயன்படுவது யதாக்ரது ந்யாயம் என்பது. இவ்வுலகில் பகவானை த்யானம் செய்யும்போது அவனை எந்த குணங்களை உடையவனாக த்யாநம் செய்கிறானோ அதே குணமுடையவனாக மேலுலகில் அவன் ஆகிறான் என்பது அந்த ந்யாயத்தின் பொருள். மஞ்சள் போன்ற தெய்வீக ஶோபையைப் பெற்றவளாக எவன் லக்ஷ்மியை இவ்வுலகில் த்யானம் செய்கிறானோ அவன் மேலுலகில் அதே நிறத்தை அடைகிறான் என்பது மேலெழுந்த வாரியான பொருள். திசைகளின் அதிபதிகளான குபேரன் போன்றவர்களின் செல்வத்தை அடைவன் என்பது உண்மைப் பொருள்.

வங்கீபுரம், வாஜபேயம், வீராபுரம், ஶடகோபாசாரியர்
இயற்றிய ரத்நப்ரபா என்ற லக்ஷ்மீ ஸஹஸ்ர உரையில்
மங்களஸ்தபகம் முடிவுற்றது.

श्री लक्ष्मीसहस्रम् ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

सौन्दर्यस्तबकः ஸௌந்தர்ய ஸ்தபகம்

वन्दे सौन्दर्य पर्याप्ति भूमिं कामपि देवताम् ।
अब्जं सहोदरं यस्याः शंसन्ति अब्जभवं सुतम् ॥

வந்தே ஸௌந்தர்ய பர்யாப்தி பூமிம் காமபிதேவதாம் ।
அப்ஜம் ஸஹோதரம் யஸ்யா: சம்ஸந்தி அப்ஜபவம் ஸுதம் ॥

ஸௌந்தர்ய - அழகின்
பர்யாப்தி பூமிம் - வாழுமிடமாயும்
காமபி - சொல்லொணாமஹிமை உடையவளும்
தேவதாம் - பரம ப்ராப்யை யானவளுமான
ச்ரியம் - லக்ஷ்மியை
வந்தே - சேவிக்கிறேன்
அப்ஜம் - சந்திரனை
யஸ்யா: - எவளுக்கு
ஸஹோதரம் - உடன் பிறந்தவனாகவும்
அப்ஜபவம் - மன்மதனை
ஸுதம் - பிள்ளையாகவும்
சம்ஸந்தி - பௌராணிகர் சொல்கின்றனரோ.

லக்ஷ்மி பல வகையான அழகிற்கும் வாழ்விடமானவள். அவளது மஹிமை நம் வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாதது. சிறுவர் முதல் முதியோர் வரையுள்ள அனைவரையும் மகிழ்விப்பவனான சந்திரனும், அழகருள் முதல்வனான மன்மதனும் உடன் பிறந்தவனாகவும், மகனாகவுமுள்ளனரோ, அத்தகைய ஸௌந்தர்ய குடும்பியான லக்ஷ்மியை ஸேவிக்கிறேன் என்கிறார் - !

अद्वैतमक्षिभिरिह श्रवसां यदि स्यात्
द्वैतं पृथग्यदि पुना रसनासु च स्यात् ।
ईशीय वर्णयितुं अर्णवराजकन्ये
तत्तादृशंकिल तवावयवाभिरूप्यम् ॥

அத்வைதம் அக்ஷிபிரிஹ ச்ரவஸாம் யதி ஸ்யாத்
த்வைதம் ப்ருதக்யதி புந ரஸநாஸு ச ஸ்யாத் ।
ஈசீய வர்ணயிதும் அர்ணவராஜ கந்யே
தத்தாத்ருசம் கில தவாவயவாபிரூப்யம்.

அர்ணவராஜகந்யே - பாற்கடல் குமரியே!
இஹ - உன்னை வர்ணிக்கப் புகுமித்தருணத்தில்
(மம - எனக்கு)
அக்ஷிபி: - இரண்டாயிரம் கண்களுடன்
ச்ரவஸாம் - இரண்டாயிரம் காதுகளுக்கும்
ப்ருதக் - ஒவ்வொன்றுடனும்
அத்வைதம் - ஐக்கியமாம் தன்மை
ஸ்யாத் யதி - இருக்குமேல்

ரஸநாஸ - ஆயிரம் நாக்குகளுள்
ப்ருதக் - ஒவ்வொன்றிலும்
த்வைதம் - இரண்டாகும் தன்மை
யதி ஸ்யாத் - இருக்குமேல்
(ததா - அப்போது)
தத்தாத்ருமம் - ஒப்புமையற்ற
தவ அயவ அபிரூப்யம் - உனது உடலுறுப்புகளில் ஒன்றின் அழகையேனும்
வர்ணயிதும் - முறைப்படி வர்ணிக்க
ஈமீய கில - மக்தி உடையவன் ஆவேன் என எண்ணுகிறேன்.

ஆதிஶேஷனாலும் உன் உடல் அழகு முழுவதையும் வர்ணிக்க முடியாது. ஆதிஶேஷனுக்கு ஆயிரம் தலைகள் உள. ஒரு தலைக்கு இரண்டு கண்கள் வீதம் இரண்டாயிரம் கண்கள் உடையவனவன். அவனுக்குக் காதெனத் தனித்தொரு இந்த்ரியம் கிடையாது. கண்களே காதுகளாம். இரண்டாயிரம் கண்களையும் காதுகளையும் அவன் பெற்றிருப்பதுபோல் தலையொன்றுக்கு இரண்டு நாக்குகளாக இரண்டாயிரம் நாக்குகளையும் அவன் பெற்றுள்ளான். அவனைப்போல நானும் ஆவேனேயாகில் ஒருக்கால் உனது உடலின் ஒரு உறுப்பையாவது வர்ணிக்க மக்தி உடையவன் ஆனாலும் ஆகலாம் என்கிறார்.

> ''நிஶ்ஶேஷமம் பரதம் யதி பத்ரிகா ஸ்யாத்
> ஸப்தார்ணவீ யதி ஸமேத்ய மஷீ பவித்ரீ।
> வக்தாஸஹஸ்ரவதந: புருஷ: ஸ்வயம் சேத்
> லிக்யேத ரங்கபதி பாதுகயோ: ப்ரபாவ:

என்ற ஸ்வாமி தேஶிகன் பாதுகா ஸஹஸ்ரத்திருவாக்கு இக்கவிக்கு வழிகாட்டியாக அமைந்தது கவனிக்கற்பாலது.

पुना रसना என்ற விடத்து புந: + ரஸநா என்றிருக்கும்போது ரோரி'' என்ற ஸூத்ரத்தால் விஸர்க லோபம் வர ''ட்ரலோபே'' என்ற ஸூத்ரத்தால் தீர்கம் வர ''புநாரஸநா'' என்றாயிற்று.

मौलौ त्वयापि विधृतः मधुपौघमैत्री
चित्रं करोति कमले चिकुर प्रपंचः ।

माने कृतेऽपि भुवने मलिनैकसख्यं
प्रायेण देवि कुटिलप्रकृतेः स्वभावः ॥

மௌலௌ த்வயாபி வித்ருத: மதுபௌக மைத்ரீ
சித்ரம் பிபர்தி கமலே சிகுர ப்ரபந்த: ।
மாநே க்ருதேபி புவநே மலிநைக ஸக்யம்
ப்ராயேண தேவி குடில ப்ரக்ருதே: ஸ்வபாவ: ॥

கமலே - லக்ஷ்மியே
த்வயா - உன்னால்
சிகுர - கேசங்களின்
ப்ரபந்த: - தொகுதி; ஒரு பகுதன்
மௌலௌ - சிரஸில்
வித்ருதேபி - வஹிக்கப்பட்ட போதும் நன்கு கௌரவிக்கப்பட்ட போதும்
மதுப ஓக மைத்ரீ - மதுவைப் பருகுபவர், கூட்டத்துடன், நட்பைப்போ; வண்டுக் கூட்டத்தின் ஒப்புமையை
பிபர்தி - வெளியிடத் தெரிவது
சித்ரம் - ஆச்சர்யம்
புவநே - உலகில்
குடில ப்ரக்ருதே: கோணல் வழியில் செல்லும் ஸ்வபாவ முடையவருக்கு
மாநே - உயர்ந்த மதிப்பு/உரிய முறை செய்த போதும்
மலிநைகஸக்யம் - கெட்டவர் தொடர்பு பெறுவதே
ப்ராயேண - பெரும்பாலும்
ஸ்வபாவ - இயல்பான குணமாம்
மலிநைகஸக்யம் - நீலமான வண்டுகளைப் போன்றிருத்தல்
ப்ராயேண - பெரும்பாலும்
ஸ்வபாவ: - இயல்பான குணமாம்

பகவானை வர்ணிக்கும் போது திருமுடி முதல் திருவடி வரை வர்ணிக்க வேண்டும் என்பது மரபு. இதனை "அநுலோமம்" என்பர். அதுபோல் த்யானம் செய்யும்போது திருவடி முதல் திருமுடி வரை த்யானிக்க வேண்டும் என்பதும் மரபு. இதனை "ப்ரதிலோமம்" என்பர். தற்போது அநுலோமத்தைப் பின்பற்றி வர்ணிக்கத் தொடங்குபவராய் முதலில் லக்ஷ்மியின் கேசத்தை இருபத்திரண்டு ச்லோகங்களால் வர்ணிக்கிறார்.

லக்ஷ்மியே! நீ உனது மிகுந்த கேசங்களின் தொகுப்பை உறுப்புகளுள் உயர்ந்த உறுப்பான தலையால் தாங்கி அதற்கு மிகுந்த கௌரவமளிக்கின்றாய். இருப்பினும் அது மதுவை (கள்ளை)ப் பருகும் கெட்ட மனிதக் கூட்டத்துடனேயே (வண்டுகளுடன்) நட்பையுடையதாய் உள்ளது. இது மிகவும் வேடிக்கையாக உள்ளது. ஆனால் உண்மையில் இதில் வியப்பேதுமில்லை. ஏனெனில் கயவர்களை நாம் எவ்வளவு போற்றினாலும் அவர்கள் நல்லவரோடு சேராது

தன்னொத்தகயவரோடே இணங்குவர். உலக இயற்கை இது என அர்த்தாந்தர ந்யாஸத்தால் ஸமர்த்திக்கின்றார்.

''மதுப ஓக மைத்ரீ'' என்பதற்கு மதுவை - தேனைப் பருகும் வண்டுக் கூட்டத்தை ஒத்துள்ளது என்பதும் ''மலிநைக ஸக்யம்'' என்பதற்கு நீலநிறத்ததான வஸ்துவை ஒத்துள்ளது என்பதும் உண்மைப் பொருள்களாம்.

न त्वं दधासि नवचंपकमाल्यमंब,
कर्तुं निसर्गसुरभौ कबरे सुगन्धम् ।
किन्तर्हि कुन्तल परीमल सारलाभ,
लोभ भ्रमद्भ्रमरलोक निवारणाय ॥

நத்வம் ததாஸி நவ சம்பகமால்யமம்ப,
கர்த்தும் நிஸர்கஸுரபௌ கபரே ஸுகந்தம்!
கிம் தர்ஹி குந்தல பரீமல ஸாரலாப,
லோப ப்ரமத் ப்ரமர லோக நிவாரணாய ॥

அம்ப - தாயே
த்வம் - நீர்
நிஸர்க - இயல்பாகவே
ஸுரப - நறுமணமுடைய
கபரே - கேசத்தில்
ஸுகந்தம் கர்த்தும் - மண முடையதாக்கவல்ல
நவசம்பகமால்யம் - அன்றலர்ந்த செண்பகப் பூமாலையை
நததாஸி - தரிக்கின்றீரில்லீர்
கிம் தர்ஹி - பின் எதற்கெனில்
குந்தல - கேசத்திலுள்ள
பரீமலஸார - இயல்பான மணத்தை
லாபலோப - பெறலாம் என்ற நப்பாசையால்
ப்ரமத்ப்ரமரலோக - சுற்றும் வண்டுக் கூட்டங்களை
நிவாரணாய - விரட்டுவதற்காக
ததாஸி - தரிக்கின்றீர்.

உலகமாதாவின் கேசம் இயல்பாகவே நறுமண முடையதாக உள்ளது. மணமற்ற கேசத்துக்கு மணமூட்ட வன்றோ பூமாலை சூடுவது. இயற்கை மணமுடையதற்கு செயற்கைமணம் ஏன் தேவை! ஆயின் மலர்மாலை ஏன் அணிகின்றாள் எனின் அது வேறு ஒன்றிற்காக. நறுமண முள்ள பல பொருள்களைப் பிழிந்து அவை அனைத்தையும் ஒன்றாகக் கூட்டினால் கிடைக்கும் இயல்பான மணம் உமது கேசத்தில் கிடைக்கும். அதை நாம் சுவைக்கலாம் என்ற நப்பாசையால் கேசத்தைச் சுற்றும் வண்டுகளின் கூட்டத்தைப் போக்கி வாஸனையை அவை அபஹரிக்காமல் காப்பதற்கும்.

அவற்றால் முகத்துக்கு உண்டாம் தொல்லையைப் போக்குவதற்காகவும் ஆம். சண்பகப் பூமணம் வண்டுகளை அழித்துவிடும்.

रुचं रचयितुं कचे रुचिरपुष्पवर्गैस्समं
सदा वहसि भूषणं सह सुधांशुना भूषणम् ।
उभावभवतामतो जननि पुष्पवन्ताविमौ
तयोर्घटनयोत्तमश्रियमुपैषि तत्रार्थिकीम् ॥

ருசம் ரசயிதும் கசே ருசிர புஷ்ப வர்கைஸ்ஸமம்
ஸதா வஹஸி பூஷணம் ஸஹ ஸுதாம்சுநா பூஷணம் ।
உபாவபவதாமதோ ஜநநி புஷ்பவந்தாவிமௌ
தயோர் கடநயோத்தம ச்ரியமுபைஷி தத்ர ஆர்த்திகீம் ॥

ஜநநீ - தாயே
கசே - கேசத்தில்
ருசம் ரசயிதும் - சோபையை உண்டாக்குவதற்கு
ஸுதாம்சுநா - சந்திரனை போன்ற வடிவமுடைய தங்க ஆபரணத்துடன்
பூஷணம் - ஸூர்யன் போன்ற ஆபரணத்தையும்
ருசிர - சிறந்த
புஷ்பவர்கைஸ்ஸமம் - பலவகைப் புஷ்பங்களுடன்
ஸதா வஹஸி - எப்போதும் தரித்துள்ளாய்
இமௌ உபௌ - ஸூர்யன் சந்திரன் என்னும் இரண்டு ஆபரணங்களும்
அத: - புஷ்பத்துடன் சேர்ந்ததால்
புஷ்பவந்தௌ - தாமும் புஷ்பமுடையவைகளாக
அபவதாம் - ஆயின
தயோ: - அவ்விரண்டு ஆபரணங்களையும்
கடநயா - புஷ்பத்துடன் சேர்த்து வைத்துக் கொண்டதால்
தத்ர - கேசத்தில்
உத்தம ஸ்ரியம் - உயர்ந்த சோபையை
உபைஷி - அடைகின்றாய்.

கோவில்களில் தாயாருக்கு சவுரி ஸமர்பித்து அதில் சூர்ய சந்திரவடிவ முடைய கல்லிழைத்த தங்கத் திருவாபரணத்தை ஸமர்ப்பித்து அதில் புஷ்பத்தையும் வட்டமாகச் சுற்றியிருப்பர். அதனை ஸேவித்து அப்படியே மங்களாஸாஸநம் செய்கிறேன். உனக்கு அழகு வேண்டும். என்பதற்காக இவ்வாபரணங்களுடன் புஷ்பத்தையும் அணிகிறாய். அதனால் ஆபரணங்கள் மாலையுடன் சேர்ந்துத் தாமும் மணமுறுகின்றன நீயும் அழகு பெறுகின்றாய்.

மற்று மோர் பொருள்

முதலிலிருந்து ''ஸதாவஹஸி'' என்பதுவரை அதே பொருளே. எவ்வித வேறுபாடுமில்லை. மேல்தான் வேறுபொருள்.

அத: - புஷ்பத்துடன் சேர்ந்ததால்
உபாவிமௌ - இச்சந்திர ஸூர்யர் இருவரும்
புஷ்பவந்தௌ - ''புஷ்பவந்தௌ'' என்ற ஒரே சொல்லாலேயே இருவரையும் போதிக்கும் தன்மை உடையவர்களாக
அபவதாம் - ஆயினர்
தத்ர - அக்ஷேபத்தில்

தயோ: - அவ்விருவரையும்
கடநயா - ஒன்றாகச் சேர்ந்ததால்
ஆர்த்திகேம் - ஸூரிய சந்திரர்கள் சேர்வதால் உண்டாம் அமாவாஸ்யை தற்போது தற்செயலாய் அவ்விருவரும் சேர்ந்ததால் உண்டான
உத். தம: - அடர்ந்த இருளில்
ச்ரியம் - சோபையை
உபைஷி - அடைகின்றாய்.

''புஷ்பவந்தௌ'' என்ற ஒரே சொல்லே சூர்ய சந்திரர் இருவரையும் சேர்த்து சொல்லவல்லது, ''ஏக யோக்த்யா புஷ்பவந்தௌ, திவாகரநிசாகரௌ'' என்பது நிகண்டு. ஒளியால் தம்மை அழகு படுத்திக் கொள்ள வேண்டும் என எண்ணினாய். அதற்காக மிக்க ஒளியுள்ளவர்களான சந்திர சூர்யர்களைப் புஷ்பத்துடன் சேர்த்து சிரஸில் அணிந்து கொண்டாய். இதனால் அவ்விருவரும் புஷ்பவான்களாக - புஷ்ப முடையவர்களாக ஆயினர். அதனால் புஷ்பவந்தௌ என்ற ஒரே சொல்லே அவ்விருவரையும் போதிக்கும் என்பது பொருத்த முடையதாயிற்று. ஆனால் உன் எண்ணம் நிறை வேறவில்லே. இவ்விருவரும் ஒன்றாகச் சேர்வதுதானே அமாவாஸ்யை. இப்போது இவ்விருவரும் தன்னடைவாகச் சேர்ந்துவிட்டனரே உனது சிரஸில். அமாவாஸை உண்டாகி விட்டதே! அதனால் என்னவாயிற்று. ஒரே அடர்ந்த இருள்தான் உண்டாயிற்று. எண்ணியது வேறு. விளைந்ததுவேறு. பெண்களுக்கே உரிய மடப்பத்தை வெளியிட்டுவிட்டாய். விந்தையிலும் விந்தை

सुमनोवर वास वासनाप्युषिता: कृष्ण घनाभिशालित: ।
वरदे विजयंति कुन्तला: भवदीया: सकलाप भृज्जया: ॥

ஸுமநோவரவாஸவாஸநாத்யுஷிதா: க்ருஷ்ண கநாப்தி ஶாலிந: ।
வரதே விஜயந்தி குந்தலா: பவதீயா: ஸகலாப ப்ருத்ஜயா: ॥

பரதேவி - உயர்ந்த தேவதையே!
ஸாமதேநாவர - உயர்ந்த புஷ்பத்தில்
வாஸ - நிலைத்து வாழ்வதால்
வாஸநாத்யுஷிதா: -
கட்டப்பட்ட வாஸனையை
உடைய வளவாயும்
க்ருஷ்ணைத - நீருண்ட மேகத்துடன்
ஆப்தியைவிதா:
நட்புடையனவாயும்
ஸகலாபப்ருத்ஜயா: - கர்ணத்தில்
வெற்றிகண்ட மகிமை
உடையனவைகளும்
பதிதா: குந்தலா: - உமது
கேசங்கள்
ஜயந்தி - உயர்ந்து விளங்குகின்றன.

பரதேவதையே நீருண்ட மேகம் போல் மிகக் கறுநிற முடையனவாயும் தோகைபோல் பல வண்ணமுடையன வாயும் நறுமண முடையனவாயும் உள்ள உமது கேசங்கள்.

இன்னும் ஓர் பொருள்

ஸாமதேநாவர - தேவச்ரேஷ்டனான
வாஸவ - இந்திரனுடைய
ஆஸந - ஸிம்ஹாஸநத்தில்
அத்யுஷிதா: - வீற்றிருந்தவரும்
க்ருஷ்ண - கண்ணனுடன்
க்ருத ஆப்தியைவிதா: - நெருங்கிய
நட்புடையவனாயும்
ஸகலாப ப்ருத்ஜயா: - வெற்றி
கண்டபிறை நிலவை
உடையனவாகவும்
பதிதா: - உமது
குந்தலா: - கேசங்கள்
விஜயந்தி - அர்ஜுனனைப்போல் -
தயங்கின்றன.

நிவாதகவசர் போன்ற அரக்கர்களை வெல்ல அர்ஜுனன் தேவலோகம் சென்றபோது இந்திரன் ஸிம்ஹாஸநத்தில் அமர்ந்திருந்த வரலாறு "ஸாமதேநாவர" என்பதால் கூறப்பட்டது. கண்ணனுடன் அர்ஜுனன் கொண்ட தோழமை யாவருமறிந்ததே. பாசுபதாஸ்த்ரத்தைப் பெற இமயமலையில் சிவனைக் குறித்துத் தவம் செய்த போது சிவனை வெற்றி கண்டமை "ஸகலாப ப்ருத்ஜயா:" என்பது கூறுகிறது. கலா: பாநிதி கலாப: சந்திரன். சந்திரன் பதினாறு கலைகளை உடையவன். அவனை தரிப்பவன் சிவன். எனவே சிவன் கலாபப்ருத் எனப்பட்டான்.

"ஸாமதேநாவர, க்ருஷ்ணைத, ஸகலாப" என்ற தொடர் கள்சிலேடையில் லக்ஷ்மியின் கேசங்களையும் அர்ஜுனனையும் விளக்குகின்றன. இரு பொருள்களும் மேலே கூறப்பட்டுள்ளன. சப்தஶ்லேடை இதில் பயின்றுள்ளது.

जलमुचिविभाजि सिन्धुकन्ये शिखिषु द्वेष मुपेयुषि प्रकामम् ।
नमसाकलिते नवोपपन्नः कुटिले कुन्तल मण्डले हि बन्धः ॥

ஜலமுசி விபாஜி ஸிந்துகந்யே
ஶிகிஷு த்வேஷமுபேயுஷி ப்ரகாமம்।

தமஸா கலிதே தவோபயுக்த:
குடிலே குந்தல மண்டலே ஹி பந்த: ॥

க்ஷீராப்தே - பாற் கடல் புத்ரி
ஜலப்ருத் - நீருண்ட மேகத்தின்; அவிவேகிகளைக் காப்பதில்
ருசிபாஜி - காந்தியை உடைய: ஆசையுடையவரும்
பர்ஹிஷு - மயில்களிடம்; குடுமி, பூணூல்களை உடையவரிடம்
ப்ரகாமம் - மிகுதியாக
த்வேஷமுபேயுஷி - த்வேஷ முடையதும்
தமஸா கலிதே - இருள் போன்றதும் தமோகுண முடையவரும்
குடிலே - வளைந்ததுமான, கோணலான ஸ்வபாவம் உடையவருமான
குந்தல மண்டலே - கேசங்களில், குந்தலம் என்ற தேசத்தில் இருப்பவருமான யவனரிடம்
பந்த: தடைவிதித்தல்: - பின்னலிடுதல்,
யுக்தம் ஹி - பொருத்தமுடையதன்றோ॥

"குந்தல மண்டலம்" என்ற சொல் கேசங்களின் தொகுதியையும், குந்தலம் என்ற தேசத்தில் வாழ்பவரான யவனரையும் குறிக்கின்றது. கடல் கன்னியின் கேசத்தொகுதி நீருண்ட மேகம்போல் ஒளிர்கிறது. மயில் தோகையை வெற்றி கண்டுள்ளது. அடர்ந்த இருள் போன்ற நிறத்தது. பின்னலிட்டிருப்பதால் வளைந்து வளைந்துள்ளது. இத்துணை சிறப்புடைய கேசத்தொகுதியைப் பின்னலிடாது விடுவது அமங்கலமாகு மன்றோ! ஆகவே பின்னலிட்டிருப்பது தகுதியுடையதே என்கிறார்.

"லடயோரபேத:" என்பது வடமொழி வழக்கு. எச்சொல்லில் "ல" என்ற எழுத்து உளதோ, அல்லது "ட" உளதோ அந்த இடத்தில் "ல" விற்குப் பதிலாக "ட"வும் "ட" விற்குப் பதிலாக "ல"வும் இருப்பின் என்ன பொருள் கொள்ளலாமோ அதைக் கொள்ளலாம் என்பது கருத்து.

அதன்படி "ஜலப்ருத்" ஜடப்ருத் என்பதாக ஆகி ஜடர்களைக் காப்பதில் விருப்பமுடையவரும் என்ற பொருளைத் தருகிறது. குந்தல தேசத்தில் வாழ்பவர் யவனர்கள். அவர் விவேக மற்றவரை விரும்புவர். அவர் தலையை மழுப்பிக் கொண்டிருப்பவராகையால் குடுமி போன்றவற்றை உடையவரிடம் த்வேஷம் கொள்வர். தமோகுண முடையவர். கெட்ட நடத்தையுடையவர். இத்தன்மைகளை உடையவர்களுக்கு பந்தம் - தடை - விதிப்பதும் பொருத்த முடையதுதானே என்ற பொருளும் தொனிக்கிறது.

8. अलकाकृतिरस्य पुष्पकान्ता, प्रबल श्रीवतया तव प्रसिद्धा ।
नवनीलकचोज्ज्वला मुरारेः, वनिते भाति मुकुन्दलालितश्रीः ॥

அலகாக்ருதி: அஸ்ய புஷ்பகாந்தா, ப்ரபலஸ்ரீ தயா தவ ப்ரஸித்தா।
நவநீல குசோஜ்வலா முராரே: வநிதே பாதி முகுந்தலாலிதஸ்ரீ:॥

முராரே: வநிதே — நாராயணனின் மனைவி!
அஸ்ய புஷ்ப - உயர்ந்த புஷ்பத்தால் அலங்கரித்திருப்பதால்
காந்தா - அழகியதாயும்
ப்ரபலஸ்ரீதயா - உயர்ந்த ஸௌமங்கலிகளின் சோபையைத் தருவதால்
ப்ரஸித்தா - புகழ்பெற்றதாயும்
தவ - உனக்கும்
நீலகுசா - ச்யாமல வர்ணத்தால்
உஜ்வலா - ப்ரகாசமானதும்
முகுந்தலாலிதா - முகுந்தனால் புகழப்பட்ட
தவ அலகாக்ருதி: - உனது முன் நெற்றிக் கேசம்
பாதி - விளங்குகின்றது

தலையில் முடியுடைமையும் அதில் பூச்சூடுவதும் ஸுமங்கலிக்கே உரிய தொன்றுதலின் லக்ஷ்மியின் கேசங்கள் ஸுமங்கலிகளின் சோபையைத் தருகின்றன. அதன் மேன்மையைக் கண்ட நாராயணன் அதனை புகழ்கிறான் மகிழ்கிறான்.

அலகா என குபேரன் தலை நகருக்குப் பெயர். அந்நகரம் புகழப்படுவதாகவும் ஒரு பொருள் தொனிக்கின்றது. ஆனால் ப்ரக்ருதத்துடன் தொடர்பு இல்லாததால் அதை விடுக்கனம்

9. भुवनोत्तरसिन्धुभूषितः घनशैवालकवत् कचोद्भवम् ।
सुरुचामहितो हिमालयः उदितयोद्भासितमीनलांछनः ॥

புவநோத்தரஸிந்துபூஷித: கநசைவாலகவத் கசோத்பவம்।
ஸுருசாமஹிதோஹிமாலய: உதிதயோத்பாஸிதமீநலாஞ்சந:॥

புவநோத்தர - உலகிலேயே உயர்ந்ததான
ஸிந்து - கடல்களின் பரப்பில்
உதித: - இருப்பதும்
மாலயா - பூச்சூடினவளாய்
உதிதயா - தோன்றிய
ஸுருசா - நல்ல அழகை உடைமையால்
மஹித: - கொண்டாடப்பட்டதும்
உத்பாஸித - பகலவனிடம் தோற்றுவிக்கப்பட்ட
மீநலாஞ்சந: - மன்மதனின் அடையாளத்தை உடையதுமான
கச: - கேசங்கள்
கந - அடர்ந்த
சைவாலகவத் - சேவலப்பாசி போன்று உள்ளன.
த்ருவம் - நிச்சயம்

வேலம்பாசி என்றொரு வகைப் பாசி. அது நீரினுள் அமிழ்ந்திருக்கும். ஒன்றோடொன்று பின்னிக் கொண்டிருக்கும். நீண்டிருக்கும். அரை செண்டி மீட்டர் அகலம் இருக்கும். சற்று நீளமாயுமிருக்கும். ஒரே கும்பலாக இருக்கும் இதே நிலையில் குளம் முழுதும் பரவும் தன்மையது. அதுபோல் உனது லக்ஷ்மியின் கேசங்கள் என்கிறார். மற்றைய பொருள்கள் தெளிவானவையே.

மற்றுமோர் பொருள்

புவந - புண்ணிய நீர்த் தலங்கள்
உத்தமா - உயர்ந்த
வித்து - கல்லைகளும்
பூஷிதா: - அலங்கரிக்கப்பட்டதும்
ஸாருசா - அழகிய ஒளி உடையவளும்
ஹிமாலயோத்பவா - இமய மலையில் பிறந்த பார்வதியால்
மஹிதா - புகழப்பட்டதும்
உத்பாலீ - இரண்டு மூன்று பிறைகளுடன் தோன்றும்
தமிஸ்ரபக்ஷகா: - சந்திரனை அடையாளமாகக் கொண்டதுமான
கசா: - லக்ஷ்மியின் கேசங்கள்
சைவலவலயைத் அடர்ந்த வேலம்பாசி போல் கட்டையாகப் பின்னிக் கிடக்கின்றன.

கருத்துத் தெளிவானதே

10. सुतरामलकजः प्रसूनानि अलमम्लानिविशोभितानि बिभ्रत् ।
सुरभिस्फुरितः सुपुष्पिताढ्यः सुमहारामविभूषितो विभाति ॥

ஸுதராமலகஜ: ப்ரஸூநாநி அலமம்லாநி விசோபிதாநி பிப்ரத்।
ஸுரபிஸ்புரித: ஸுபுஷ்பிதாட்ய: ஸுமஹாராம விபூஷிதோ விபாதி।

தாத்பர்ய: புஷ்பி - பூக்களோ
ராமவிபூஷித: - ராமனால் பல வகைகளாக அலங்கரிக்கப்பட்டதும்
அம்லாநிவிசோபிதாநி - வாடாது ஒளியுடன் ப்ரகாசிப்பதான
ப்ரஸூநாநி - புஷ்பங்களை
அலம் - அலங்காரமாகப் போதியவை
பிப்ரத் - தரித்திருப்பதும்
ஸுரபி: - இயற்கையான மணமுடையதும்
ஸ்புரித: - நிறைந்த புஷ்பத்தால் ப்ரகாசிப்பதும்
ஸுமஹதா: - இயல்பாகவே குணமுடையதுமான
ஸுதராம் விபாதி - மிக்கு ஒளிர்கின்றன

கேசத்தின் அழகு ராமனையும் கவர்ந்தது. ஆகவே அவன் அதனை சீவி முடித்து சிங்காரித்தான் என்கிறார்.

11. हन्त लक्ष्मि तव कुन्तलाञ्चलं चामरं वदति चामरोऽपि कः ।
प्राक्तनस्तु हरिणोपलालितं पश्चिमं पशुपुरस्कृतं मृगः ॥

ஹந்த லக்ஷ்மி தவ குந்தலாஞ்சலம் சாமரம் வததி பாமரோபி க: ।
ப்ராக்தநஸ்து ஹரிணோபலாலிதம் பச்சிமம் பசுபுரஸ்க்ருதம்
ம்ருக: ॥

ஹந்த லக்ஷ்மி - லக்ஷ்மியே!
பாமரோபி - அறிவிலியாகிலும்
க: தவ குந்தலாஞ்சலம் - எவன் உமது கேசத்தொகுதியை
சாமரம் - கவரிமானின் வாலுக்கு ஒப்பாக
வததி - சொல்லுவான், எவனும் சொல்லமாட்டான்
யத: - ஏனெனில்
ப்ராக்தநம் - முதலில் சொன்ன கேசத் தொகுதி
ஹரிணா - பகவானாலேயே; சிங்கத்தால்
உபலாலித: - கொண்டாடப்பட்டதோ
பச்சிமம் - பின் சொன்ன சாமரம்
ம்ருக: - அறிவற்ற மிருகத்தாலும்
அபுரஸ்க்ருதம்
போற்றப்படவில்லையே.

லக்ஷ்மியின் கூந்தல் சாமரைபோல் அடர்ந்துள்ளது என்கிறார். சாமரை என்பது ஒரு மான். அதன் வாலில் அடர்ந்தும் மிருந்தும் இருக்கும் ரோமங்கள் அதுவே கோயில்களில் சாமரையாக பகவானுக்கு வீசப்படுவது. இதனைத் தமிழில் கவரிமான் என்பர். இக் கவரிமான் இத்தனை உயர்ந்த ரோமத் தொகுதியைத் தன் உடலின் முன்புறத்தே வைத்துப் போற்றாது மதிப்பிழந்த பின்புறத்தே தாங்குகின்றதே! ஹே லக்ஷ்மீ உனது கூந்தல் பகவானாலேயே மதிக்கப்பட்டதன்றோ! ஆகவே இப்படிச் சிறந்த உமது கூந்தலை எந்த மடையந்தான் சாமரைபோடு ஒப்பிடுவான்? ஹரி: என்பதற்கு சிங்கம் என்ற பொருளு முண்டு சிங்கம் ப்ராக்தநமான தன் உடலின் முன்புறமான பிடரியில் கேசத்தைத் தாங்கி கௌரவிக்கிறது என்ற பொருளும் கிடைக்கிறது. கவரிமான் தன் வாலாகிய சாமரையை தமதுடலின் முன்புறத்தே தாங்கி அதை "புரஸ்கரிக்காது" - கௌரவிக்காது உடலின் மதிப்பற்ற "பச்சிமத்தால்" பின்புறத்தால் தாங்கி திரஸ்கரித்துவிட்டது. ஆகவே அது உன் கூந்தலுக்கு உவமையாகாது எனச் சொல்லி சாமரையினும் அடர்த்தும் மிருந்துமுள்ளது உன் கூந்தல் என்கிறார்.

12. सिन्दूरकान्तां जगदम्ब मल्ली सराभिरामां चिकुरावलिं ते ।
मन्यामहे देवि कलिन्द कन्यां गंगासरस्वत्युदितानुषंगाम् ॥

ஸிந்தூரகாந்தாம் ஜகதம்ப மல்லீ ஸராபிராமாம் சிகுராவலிம் தே
மந்யாமஹே தேவி கலிந்தகந்யாம் கங்காஸரஸ்வத்யுதிதாநுஷங்காம் ॥

தேவி ஜகதம்ப - நாராயண புத்ரியான ஜகன்மாதாவே!
ஸிந்தூர - ஸிந்தூர ரேகையால்
காந்தாம் - அலங்கரிக்கப்பட்டதும்
மல்லீஸர - மல்லிப் பூமாலையால்
அபிராமாம் - அழகியதுமான
தே சிகுராவலிம் - உனது கேசங்களின் வரிசையை
கங்காஸரஸ்வதீ - கங்கைஸரஸ்வதி என்ற இரு நதி ப்ரவாஹங்களுடன்
உதித - தோன்றிய
அநுஷங்காம் - ஸம்பந்தத்தை உடைய
கலிந்தகந்யாம் - யமுனையாக மந்யாமஹே - எண்ணுகிறோம்.

கேசங்களின் வரிசையை த்ரிவேணீ ஸங்கமமாக உத்ப்ரேக்ஷிக்கின்றார். த்ரிவேணியில் வெள்ளையான கங்கையும், சிவந்த ஸரஸ்வதியும் நீல யமுனையும் ஒன்றாகின்றன. அதுபோல் வெண்மையான மல்லிகையும், சிவந்த வகிடு என்ற ஸிந்தூரமும், நீல கூந்தலும் சேர்ந்துள்ளதால் இப்படிக் கூறினார். த்ரிவேணியில் கங்கைக்கு ப்ராதாந்யம் இங்கு யமுனைக்கு ப்ராதாந்யம்

13. अपीडयन्ति कुसुमेषु शरानिकामं
आत्मानमित्यखिलधात्रि रुषेव देवः ।
आपीडयत्यनुदिनं तव कुन्तलात्मनि
अन्धे तमस्यहह सूनकुलं मुकुन्दः ॥

ஆபீடயந்தி குஸுமேஷு ஸராநிகாமம்
ஆத்மாநமித்யகிலதாத்ரி ருஷேவ தேவ:
ஆபீடயத்யநுதிநம் தவ குந்தலாத்மநி
அந்தே தமஸ்யஹஹ ஸூநகுலம் முகுந்த: ॥

அகிலதாத்ரி - உலகமாதாவே
தேவ: முகுந்த: - ஸ்ரீமந் முகுந்தன்
குஸுமேஷு - மன்மதனின்
ஸரா: - பாணங்களான புஷ்பங்கள்
ஆத்மாநம் - தன்னை
நிகாமம் - மிகவும்
ஆபீடயந்தி - துன்புறுத்துகின்றன
இதி ருஷேவ - என்ற கோபத்தால் போல்
ஸூநகுலம் - மலர்க்கூட்டங்களை

புஷ்ப வர்க்கங்களை	ஆபீடயதி - மிகவும்
அருந்தும் - ஒவ்வொருதாரும்	துன்புறுத்துகிறாள்
தவருந்தவாதமதி - அடர்ந்த இருளில்	அஹஹ - ஆச்சர்யம்

அரவிந்தம், அசோகம், மாமல்லிகை, நீலோத்பலம் என்ற ஐந்து புஷ்பங்களையும் பாணங்களாகக் கொண்டவன் மன்மதன். ராஜாவான ராமன் காட்டில் இருந்தபோது காடு முழுவதுமிருந்த பாணங்களாகிய புஷ்பங்கள் அவனைத் துன்புறுத்தின. அதனால் கோபம் கொண்டான் ராமன். எனவே எவருமறியாது இருளில் புஷ்பவர்க்கங்களுக்குத் துன்பத்தை விளைவிக்கிறாள். ஸு + மந — குலம் எனப் பிரித்து மிக அல்பமான குலத்துக்குத் துன்பத்தை செய்கிறாள். வலியவன் எளியதற்குத் தீமை தருவது ஆச்சர்யம் என்ற பொருளும் கிடைக்கின்றது. அடர்ந்த இருள்போல் கருப்பான கூந்தலில் பூவைச் சூட்டுகிறாள் என்பது உண்மைப் பொருள்.

14. बध्नासि हंत सुरभी सुमनोभिरंब साकं हरेरपि मनः नव केशपाशे ।
आमोदमग्र्यमत एव तदेत्यनन्तं, किन्नक्षमं गुणवदाश्रयणं गुणाय ॥

பத்நாஸி ஹந்த ஸுரபௌ ஸுமநோபிரம்ப
ஸாகம் ஹரேரபி மந: தவ கேசபாசே।
ஆமோதமக்ர்யம் அத ஏவ ததேத்யநந்தம்
கிம் ந க்ஷமம் குணவதாச்ரயணம் குணாய॥

அம்ப - ஸமயப்போதத்தாயே	அக்ர்யம் - உயர்ந்தும்
ஸுரபௌ - வாஸனையுள்ள	அநந்தம் - அளவிடமுடியாததுமான
தவ கேசபாசே - உனது கூந்தலில்	ஆமோதமேதி - வாஸனையை அடைகிறது
ஸுமநோபி: ஸாகம் - புஷ்பங்களுடன்,	குணவதாச்ரயணம் - குணமுள்ள பொருளைச் சார்தல்
ஹரே: மநோபி - பகவானின் மனதையும்	குணாய - சார்ந்ததற்கும் குணமுண்டாவதற்கு
பத்நாஸி - இணைத்துக் கொள்கிறாய்	ந க்ஷம: கிம் - தகுதி உடையதன்றோ என்ன!
தத் - அப்பகவானின் மனம்	
அத ஏவ - மணமுள்ள வஸ்துவுடன் சேர்ந்ததால்	

லக்ஷ்மி உத்தம ஸ்த்ரீயாதலின் அவள் கூந்தல் இயற்கையான வாஸனையைப் பெற்றிருக்கிறது. பகவான் அதை எப்போதும் மனதால் நினைத்துக் கொண்டிருப்பதால் பகவானின் மனமும் பூச்சூடிய கேசத்துடன் இணைந்ததாயிற்று. மனதுக்கு உண்மையில் மணமில்லையாயினும் மணமுள்ள கேசத்துடன்

சேர்ந்து இதுவும் மணத்தைப் பெற்றது. ஸந்தோஷப்பட்டது என்பது கருத்து. ஆமோதம் என்ற சொல் ஸந்தோஷம், வாஸனை என்ற இரண்டு பொருள்களும் உடையது.

மணமெங்கேனும் மணத்தை அடையுமா எனின் ஏன் அடையாது? அடைந்தே தீரும். குணமுள்ள ஒன்றோடு இணைந்த குணமற்றப் பிறது சேர்ந்து அதன் குணத்தைப் பெறுதல் கண்டதுதானே என அர்த்தாந்தர ந்யாஸத்தால் நிலை நாட்டுகின்றார்.

15. त्रैलोक्यमातः अजहत्तरुमाश्रमेव,
दृष्टं कुलं सुमनसां फलवद्धि लोके।
अप्याहृतं बहिरहो सफलं प्रसूनं,
काल्पद्रुमं तु भवती कचमण्डनेन॥

த்ரைலோக்யமாத: அஜஹத்தருமாச்ரமேவ
த்ருஷ்டம் குலம் ஸுமநஸாம் பலவத்ஹி லோகே।
அப்யாஹ்ருதம் பஹிரஹோ ஸபலம் ப்ரஸூநம்
காஸ்பத்ருமம் து பவதீ கசமண்டனேந॥

த்ரைலோக்யமாத: - மூவுலகத்தாயே!
ஸுமநஸாம் குலம் - அனைத்துப் பூக்களும்
அஜஹத் தருமாச்ரமேவ - கிளைகளிலிருந்து பறிக்கப்படாமலேயே
பலவத் - பழத்தை உண்டு பண்ணுவதாக
லோகே த்ருஷ்டம் ஹி - உலகில் கண்டுள்ளோமன்றோ!
காஸ்பத்ருமம் - கற்பக விருக்ஷங்களின்
ப்ரஸூநம் - பூங்கொத்தோவெனில்
பஹி: ஆஹ்ருதமபி - பறித்துப் பிரித்தபோதும்
பவதீ கசமண்டநேந - உமது கேசத்தை அலங்கரித்ததால்
ஸபலம் - பலமுடையதாகின்றது
அஹோ - ஆச்சர்யம்.

செடிகளிலோ மரங்களிலோ உள்ள பூக்களைப் பறிக்காது வைத்திருந்தால்தான் அவை தத்தமது கனிகளைத் தருமென்பது உலகில் கண்கூடானது. ஆனால் மரத்திலிருந்து பறித்த கற்பக வ்ருக்ஷப் பூக்களோவெனில் லக்ஷ்மியின் கூந்தலை அலங்கரித்தலால் பல முடையன வாகின்றன. மரத்தைப் பிரிந்த பூ பல முடையதாதல் ஆச்சர்யமன்றோ? என்கிறார் கற்பகப் பூ தாம் பெற வேண்டிய நற்பயனைப் பெற்றதென்பது

கருத்து. ''பலம்'' என்ற சொல் பழம், பயன் என்ற இருபொருளுடையது.

16. सैरैर्दिव्यैराम्रेडित सहजसौरभ्य सुभगं,
कचं ते कल्याणि भ्रमति परितो भृंगनिचयः ।
ध्रुवं तत्सारूप्यं स्वयमभिलषन् झंकृतिमिषात्,
स्तुवन् प्रादक्षिण्यक्रममखिलमातः कलयति ॥

ஸரைர்திவ்யைராம்ரேடித ஸஹஜ ஸௌரப்ய ஸுபகம்
கசம் தே கல்யாணி ப்ரமதி பரிதோ ப்ருங்கநிசய: ।
த்ருவம் தத்ஸாரூப்யம் ஸ்வயமபிலஷந் ஜங்க்ருதிமிஷாத்
ஸ்துவந் ப்ராதக்ஷிண்ய க்ரமமகிலமாத: கலயதி ॥

கல்யாணி - மங்கள உருவமுடையவளே
அகிலமாத: - மூவுலகத்தாயே! (யத் - எக்காரணத்தால்)
ப்ருங்கநிசய: - வண்டுக் கூட்டம்
திவ்யை: ஸரை: - உயர்ந்த கற்பகப் பூமாலையால்
ஆம்ரேடித - மிகுதியாக்கப்பட்ட
ஸஹஜ ஸௌரப்ய - இயற்கையான வாஸனையால்
ஸுபகம் - மனோக்ஞமான
தே கசம் பரித: - உனது கூந்தல்களின் நாற்புறமும்
ப்ரமதி - சுற்றுகிறதோ
(தத: - ஆகையால்!)
தத்ஸாரூப்யம் - கேசத்தின் ஒற்றுமையை
ஸ்வயம் - தான்
அபிலஷந் - விரும்பியதாய்
ஜங்க்ருதிமிஷாத் - ரீங்காரம் என்ற வ்யாஜத்தால்
ப்ராதக்ஷிண்யக்ரமம் ப்ரதக்ஷிணமாகச் சுற்றுதலை
கலயதி - திரும்பத் திரும்பச் செய்கிறது
த்ருவம் - நிச்சயம்.

தாயின் கேசங்கள் இயற்கையிலேயே நல்ல வாஸனையுடையவை. அத்துடன் கற்பகப் பூவையும் சூடியதால் மணமிருமடங்காகியது. தேனுள்ளதற்கு மணமுண்டன்றோ! எனவே கற்பக ஸரத்திலுள்ள தேனைப் பருகுவதற்கு வண்டுகள் வந்து மொய்த்துக் கொண்டும் ரீங்காரமிட்டுக் கொண்டும் சுற்றிச் சுற்றி வருகின்றனவாம். இதிலொரு கற்பனை செய்கிறார் கவி. வண்டுகள் எப்படிச் சுற்றுகின்றன வெனின் கூந்தலோடு ஸாரூப்யத்தை - ஸமானமான ரூபத்தைப் பெற வேண்டி அப்படிச் சுற்றுகின்றனவாம். வண்டுகளிலும் கறுநிறத்தன தாயின் கேசங்கள் என்பது கருத்து.

ஸாருப்யம் என்பதற்கு மோக்ஷம் என்ற பொருளும் உண்டு. எண்ணற்ற ப்ரதக்ஷிண ப்ரணாமங்களாலேயே மோக்ஷம் ஸாதிக்க வல்லதாதலால் வண்டுகள் பலகால் சுற்றுகின்றன என்ற தொனிப் பொருளும் கிடைக்கிறது. வேண்டுபவர் வேண்டியதைத் தரவல்லவளான தாயுடன் தொடர்பு கொண்டமையால் கூந்தலுக்கும் வரமளிக்கும் தன்மை உண்டு என்பது ஸூசிப்பிக்கிறது.

17. प्रमोदा नाभीपद्मं भ्रमरततिरुत्सृज्य पतति,
स्थिरामोदालम्बे चिकुरनिकुरम्बे जननि ते
मनागप्येः कन्ये मधुरिपुसमीपे परिचयः
न रोचेत प्रायो नु मधुप वर्गस्य मनसे ॥

ப்ரமோதா: நாபீபத்மம் ப்ரமரததிருத்ஸ்ருஜ்ய பததி
ஸ்திராமோதாலம்பே சிகுரநிகுரும்பே ஜநநி தே।
மநாகப்யே: கந்யே மதுரிபுஸமீபே பரிசய:
ந ரோசேதப்ராயோ ந து மதுப வர்கஸ்யமநஸே॥

ஜநநி - உலகத்தாயான
கந்யே - கன்னிப் பெண்ணே!
ப்ரமரததி: - வண்டுகளின் கூட்டம்
ப்ரமோதா: - மகிழ்வுற்றவை
நாபீபத்மம் - கொப்பூழ் தாமரையை
உத்ஸ்ருஜ்ய - விட்டுவிட்டு
ஸ்திராமோத - நிலைத்த மணத்துக்கு
ஆலம்பே - இருப்பிடமான
சிகுரநிகுரும்பே - கேசங்களில்
பததி - போட்டியிட்டு விழுகின்றன.
மதுப - தேன் உண்ணிகளின்
வர்கஸ்ய - கூட்டத்தின்
மநஸே - மனதிற்கு
மதுரிபுஸமீபே - பகவானுடன்
பரிசய: - வாழ்வது
ப்ராய: - பெரும்பாலும்
மநாகபி - சிறிதும்
ந ரோசேத நு - சுவைக்காது அன்றோ

பகவானின் நாபித் தாமரையைச் சுற்றிக் கொண்டும் மொய்த்துக் கொண்டும் இருந்த வண்டினங்கள் அதனை விடுத்துத் தாயின் கேசபாசத்தினிடம் ஓடோடி வருகின்றனவாம் போட்டியிட்டுக் கொண்டு. ஏனைப்படி? பகவானிடம் இருப்பது தாமரையன்றோ! அதன் இயல்பு மூடுவதும் மலர்வதுமன்றோ! மூடிய போது மணமேது! தாயின் கேசங்களில் எப்போதும் மணமுண்டே!

18. क्षममिदं कलशोदधिकन्यके तव कचस्थिर सौरभ लोभतः ।
विकचसूनविशेषपरीमलं जहदिहव्रजति भ्रमरव्रजः ॥

க்ஷமமிதம் கலசோததி கந்யகே கவகசஸ்திர ஸௌரப லோபத:।
விகச ஸூந விசேஷ பரிமலம் ஜஹதிஹவ்ரஜதி ப்ரமரவ்ரஜ: ॥

கலசோததி - பாற்கடலின்
கந்யகே - பெண்ணே
ப்ரமரவ்ரஜ: - வண்டுகளின் கூட்டம்
தவ கச - உமது கேசங்களிலுள்ள
ஸ்திரஸௌரப - நிலைத்த மணத்தின்
லோபத: - நப்பாசையால்

விகச - நன்கு மலர்ந்த
ஸூநவிசேஷ - விசேஷ புஷ்பங்களின
பரிமளம் - வாஸனையை
ஜஹத் - விட்டுக்கொண்டு
இஹ - உமது கூந்தலை
வ்ரஜதி - வந்தடைகிறது தேன்படை
க்ஷமம் - தகுதியுடையதே

அல்பமான ப்ரயோஜநம் கிடைக்குமிடத்தை விட்டு மிக்க ப்ரயோஜநம் கிட்டுமிடத்தை நாடுவது யுக்தம்தானே!

निहिताः तव कुन्तलांधकारे निबिडे मारजनि स्थिरप्रकर्षे ।
कलयन्ति तव स्रजो विचित्रं कमले कामपि सौरभानुवृत्तिम् ॥

நிஹிதா: குந்தலாந்தகாரே நிபிடே மாரஜநிஸ்திரப்ரகர்ஷே।
கலயந்தி தவ ஸ்ரஜோவிசித்ரம் கமலே காமபி ஸௌரபாநு வ்ருத்திம் ॥

கமலே - தாமரையாளே
மாரஜநி - அமாவாஸை இரவானமை யாய்
ஸ்திரப்ரகர்ஷே - குறைவற்ற மேன்மையை உடையதும்
நிபிடே - நன்கு அடர்ந்ததுமான
அந்தகாரே - இருளில்
நிஹிதா: - வைக்கப்பட்ட
தவஸ்ரஜ: - புதிய புஷ்பங்கள்
காமபி - ஆச்சர்யமான
ஸௌரபாநு - வாஸனை வகையில்
வ்ருத்திம் - தாங்கும் தன்மையை
கலயந்தி - தரிக்கின்றன.

விசித்ரம் ஆச்சர்யம் (விசேஷ-மானம்)
நிபிட மிக்க
மாரஜநி - மன்மதன் விலாஸத்தைத் தூண்டுவதில்
ஸ்திரப்ரகர்ஷே - உயர்ந்த ஸாமர்த்யத்தை உடைய
அந்தகாரே குந்தலே - இருள் போன்ற கேசத்தில்
நிஹிதா: ஸ்ரஜ: - வைக்கப்பட்ட புதிய பூ மாலைகள்
ஸௌரப அநுவ்ருத்திம் - நறுமணத்தின் தொடர்பை
கலயந்தி - தாங்குகின்றன (பரிமளம்)

கமலையின் குந்தலங்கள் மிகக் கறுமையானவை. அவை கருமையில் அமாவாஸை நள்ளிரவில் அடர்ந்துள்ள இருளை

ஒத்தவையாம்.' அதில் வெண்மையான மல்லிகைச் சாந்தை வைப்பது சூர்யனது கைகளில் வைத்தது போன்றுளது என பொருள் தோற்றுவிக்கவல்ல முறையில் ஸௌர - பாநு - வ்ருத்திம் என்று ச்லோகத்தை அமைத்துள்ளார் கவி. பூச்சரத்தை இருளில் வைப்பது சூர்யன்கரத்தில் வைப்பது போன்றுள்ளது என்பது ஆச்சர்யம். நல்ல இருளில் வெண்மையான ஸூர்ய கிரணங்களின் தொடர்பு எப்படி உண்டாகும்? இது விரோதாபாஸம். இதைப் போக்க வேண்டும். இப்போது ''நிபிடேமாரஜநி'' என்பதை நிபிடே மார - ஜநி எனப்பிரித்தும் ''ஸௌரபாநுவ்ருத்திம்'' என்பதை ''ஸௌரப-அநுவ்ருத்திம்'' எனவும் பிரித்தும் மேற் சொன்ன பொருள்களைக் கொள்ள வேண்டும். இயல்பாக நறுமணமுள்ள கேஸத்தில் மல்லிகையை வைத்தமையால் அதன் மணம் நீண்ட நேரம் தொடர்கிறது என்பது உண்மைப் பொருளானமையால் விரோதமில்லை.

कुन्तलो नियमितोऽपि भवत्या चंचलो भवति तामसरुच्या ।
न्यक्करोति परिशोभितमालोत्कर्षमंब परिपुष्यति चैनम् ॥

குந்தலோ நியமிதோபி பவத்யா சஞ்சலோ பவதி தாமஸ ருச்யா।
ந்யக்கரோதி பரிஶோபிதமாலோத்கர்ஷ மம்ப பரிபுஷ்யதி சைநம்॥

அம்ப - தாயே
பவத்யா - உனது
குந்தல - கூந்தல்
நியமிதோபி - பின்னலிட்டுப் பறக்காதிருக்கச் செய்தும்
தாமஸருச்யா - கருநிறத்தின் பலமைப் பால்
சஞ்சலோ பவதி - பறப்பது போல் மிளிர்கிறது
நிஞ்ச - மேலும் கூந்தல்
பரிஶோபி - நன்று ப்ரகாஶிக்கும்
தமால - தமாலப் பூங்கொத்தின்
உத்கர்ஷம் - நீல நிறமேன்மையை
ந்யக்கரோதி - வென்றுவிடுகிறது
ஏநம் - இத்தமால சோலையை
பரிபுஷ்யதி ச - வளரவும் செய்கிறது (என்பது விரோதம்)
பரிஶோபி - நாலுபுறமும் ஒளிவீசும்
தமால - திலகத்தின்
உத்கர்ஷம் - மேன்மையை
பரிபுஷ்யதி - வளர்க்கிறது (என்பது பரிஹாரம்) விரோதாபாஸம்

அடர்ந்த இருள் போன்று மிகக் கறுநிற முடையது தாயின் கூந்தல். அதனை நெய் பூசிச் சீவிப் பின்னலிட்டுப் பறக்க வொட்டாது அலங்கரித்துள்ளனர். இருப்பினும் அதிலிருந்து

தமாலப்பூ மிக்க நீலமாக ஒளிர்வது. ஆனால் புகழ்பெற்ற அதன் நீலத்தையும் கூந்தலின் நீலம் அடக்கியாள்கிறதாம். நீலத்திலும் கருமையானது கூந்தல் என்பது கருத்து. கூந்தலின் ஒளி தமாலத்தின் - பூவின் கொட்டத்தை அடக்கிய போதும் தமாலத்தின் மேன்மையை வளர்க்கிறது என்றால் விரோதம் தோன்றுகிறது. தமால ஶப்தம் திலகம் என்ற பொருளும் உடையது. திலகம் பாதி நெற்றிக்கு மேல் ஆரம்பித்து கூந்தல் அருகுவரை இருப்பது. ஆகவே திலகதமாலம் கூந்தலின் அருகில் இருப்பதால் நன்கு ஒளிர்கின்றது என்றால் விரோதம் பரிஹரிக்கப்படுகிறது. ''நியமிதோபி தாமஸருச்யா சஞ்சலோபவதி'' என்ற அடியிலிருந்து ஒருவனைக் கெட்ட வழிகளிலிருந்துத் திருத்திக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த போதும் அவன் தாமஸ குணச் செயலின் சுவையால் கெட்ட நடத்தையில் ஊக்கம் உடையவனாயுள்ளான் என்ற பொருள் தொனிப்பொருளாய் தோன்றுகின்றது.

இக்கால நவநாகரிக மாமேதைகள் இரு புருவங்களுக் கிடையில் பொட்டை ஒட்டிக் கொள்வது அழகு தராது என்ற கருத்தும் தொனிப் பொருளாய் தோன்றுகிறது.

कञ्जालये कमपि तावक फालभागं
  संजातशोभं अलकावलिमेलनेन।
उत्प्रेक्षते भुवि न कः तरुणेन्दुमब्धेः
  उत्थानकालभवशैवलभारयोगम्॥

கஞ்ஜாலயே கமபி தாவக பாலபாகம்
  ஸஞ்ஜாதஶோபம் அலகாவலி மேலநேந।
உத்ப்ரேக்ஷதே புவி ந க: தருணேந்தும் அப்தே:
  உத்தாந காலபவ ஶைவல பாரயோகம் ॥

கஞ்ஜாலயே - தாமரையில் வாழ்பவளே!
அலகாவலி - கூந்தல் வரிசைகளுடன்
மேலநேந - சேர்ந்துள்ளதால்
ஸஞ்ஜாதஶோபம்
  உண்டானஶோபையை உடையதும்
கமபி - ஒப்பற்றதுமான
தாவக பாலபாகம் - உனது நெற்றியை
அப்தே: - ஸமுத்ரத்திலிருந்து
உத்தாநகாலே - வெளிவரும்போது
பவ - உண்டான
ஶைவாலபாரயோகம் - வேலம் பாசி
  கொத்துடன் கூடிய

தருணேந்தும் - இளஞ்சந்திரனாக

க: நோத்ப்ரேக்ஷேத வென்
 எண்ணமாட்டான்.

இனி இரண்டு ஶ்லோகங்களால் நெற்றியை வர்ணிக்கின்றார். பெண்களின் முகத்தை அர்த்த சந்திரனோடு ஒப்பிட்டுப் பேசுவது கவிமரபு. லக்ஷ்மியின் முதல் அஷ்டமீ சந்திரன்போல் பாதி வட்டத்தில் உள்ளதாம். அதன்மேல் கூந்தல் சுருள். அம்முகம் தற்போதுக் காண்பதற்கு நீல நிறத்தனவான வேலம்பாசிகளைச் சுமந்து கொண்டுக் கடலின்றிழும் அரைச்சந்திரனின் சோபையைப் பெற்றுள்ளது போல் காட்சியளிக்கிறது என்கிறார்.

கம் ஜாயத் இதி கஞ்ஜம் என்பது விக்ரஹவாக்யம். கமிதி மாந்தம் அவ்யயம். "கமவ்யயம்" இதி ரத்நமாலா.

चिरन्ते वक्त्रेण श्रितचिकुरवर्गेण कमले
 तुलाचेदारेढुं तुहिन किरणोयं स्पृहयते ।
तदा गाढं सख्यं तिमिरनिकरैः विन्दतु जवात्
 अवाप्नोतु प्रावृट् जलमुगविनाभावमपि वा ॥

சிரந்தே வக்த்ரேண ச்ரிதசிகுரவர்கேண கமலே
 துலா சேதாரோடும் துஹிநகிரணோயம் ஸ்ப்ருஹயதே।
ததாகாடம் ஸக்யம் திமிரநிகரை: விந்தது ஜவாத்
 அவாப்நோது ப்ராவ்ருட் ஜலமுகவிநாபாவமபி வா॥

கமலே - தாமரையில் வாழ்பவளே!
அயம் - எதிரில் தோன்றும்
துஹிநகிரண: - சந்திரன்
ஶ்ரித சிகுரவர்கேண - நெற்றிக் கேசங்களுடன் கூடிய
தேவக்த்ரேண ஸஹ - உனது முகத்துடன்
துலாம் - ஒப்புமையை; துலாக்கோலில்
ஆரோடும் - அடைவதற்குக் ஸமமாக நிற்பதற்கு
சிரம் - வெகுநாள்களாக
ஸ்ப்ருஹய தே சேத் விரும்பினானாகில்
ததா - அப்போது
திமிரநிகரை: - இருளின் கூட்டத்துடன்
காடம் ஸக்யம் - அடர்ந்தபிணிப்பை
ஜவாத் - சீக்ரமாக
விந்தது - பெறட்டும்
அபி வா - அல்லது
ப்ராவ்ருட் - வர்ஷாகாலத்தில்
ஜலமுக் - நீருண்ட மேகத்துடன்
அவிநாபாவம் வா- விட்டுப் பிரியாமையை யாவது
அவாப்நோது - அடையட்டும்.

கமலையே இதோ கண்களுக்குப் புலப்படும் இச்சந்திரன் உன் நெற்றிக்கு ஒப்பாகான். தராசிலிட்டு எடை போட்டாலும் எடையிலும் ஸமமாகான். ஏனெனில் உனது நெற்றி சிறிய கூந்தல்களுடன், சேர்ந்து நீல நிறத்துடன் பொலிவு பெறுகிறது. சந்திரனிடம் களங்க நிறமிருந்தபோதும் அது நெற்றியில் இல்லையே. எனவே பயனற்ற தாயிற்று. ஒப்புமை இல்லா விடினும் எடையிலாவது ஸரியாக இருக்குமோவெனில் அதுவுமிராது. அதனிடம் கேசங்களில்லாததாலும், உன்னிடம் அது உள்ளதாலும் எடை பொருந்தாது. ஆகவே இவ்விரண்டிலும் ஒப்புமையை சந்திரன் விரும்பின் அடர்ந்த இருளின் சுமையை அவன் தாங்க வேண்டும். அப்போதுதான் கேசத்தழகும் எடையும் கூடும். இயல்பாகவே விரோதமான ஒளிக்கும் இருளுக்கும் நட்பு எப்படிக் கூடுமெனின் அப்போது வர்ஷாகாலத்தில் மேல் எழும் நீருண்ட மேகத்தின் தொடர்பை யாவது பெற வேண்டும். இல்லையேல் ஒப்புமையும் ஸம எடையும் பெறவரிதாம்.

पुरुष नयन युग्मं पुष्पवन्तात्मकं ते सह निवसति हर्षात् सन्ततं वक्त्रबिंबे ।
तदिह जलधिकन्ये तन्महादर्शलीलां भजत इति कवीनां भारती सूनृतैव ॥

புருஷ நயநயுக்மம் புஷ்பவந்தாத்மகம் தே
ஸஹ நிவஸதி ஹர்ஷாத் ஸந்ததம் வக்த்ரபிம்பே ।
ததிஹ ஜலதி கந்யே தந்மஹாதர்ச லீலாம்
பஜத இதி கவீநாம் பாரதீ ஸூந்ருதைவ ॥

ஜலதிகந்யே - பாற்கடல் கன்னிகையே
தே வக்த்ரபிம்பே - மண்டலம் போன்ற உனது முகத்தில்
புஷ்பவந்தாத்மகம் - சந்திர ஸூர்யர்களின் வடிவமான
புருஷநயநயுக்மம் - பரமபுருஷனின் இரண்டு கண்கள்
ஹர்ஷாத் - அழகை அநுபவித்ததா லுண்டான மகிழ்ச்சியால்
ஸந்ததம் - எக்காலத்திலும்
ஸஹ நிவஸதி - சேர்ந்தே வாழ்கின்றன
தத் - அவ்விருவரும் எப்போதும் இப்படிச் சேர்ந்து வாழ்வதால்
தத் - உனது முகமண்டலமும்
மஹாதர்சலீலாம் - ஸூர்ய சந்திரர்களின் சேர்க்கையையுண்டாக்கும் அமாவாஸையை

உன்முகத்தில் எப்போதும் இருக்கும் விளையாட்டை
பஜதே - அடைகிறது
இதி - என்ற காரணத்தால்
இஹ - முகத்தின் விஷயத்தில்
கவிநாம் ப்ரதா - உன் முகம் மஹாதர்ம லீலையை அனுபவிக்கின்றது என்ற கவிகளின் வர்ணனை
யுக்தைவ - தகுதியுடையதே
மஹா - பெரிய
ஆதர்ஸலீலம் - கண்ணாடியின் எப்போதும் நிர்மலமாக இருக்கும் தன்மையை
பஜதே - அடைகிறது என்பது உண்மைப் பொருள்.

இது முதல் ஒன்பது ஶ்லோகங்களால் லக்ஷ்மியின் முகத்தை வர்ணிக்கின்றார். இந்த ஶ்லோகத்தில் முகத்தின் நிர்மலமாம் தன்மையும் பகவானின் கண்களைக் கவரும் தன்மையும் வர்ணிக்கப்பட்டுள்ளன.

ஸூர்யனும் சந்திரனும் பகவானுக்கு கண்களானவர். லக்ஷ்மியின் முகம் மண்டலம் போல் வட்டமாயுள்ளது. அதைக் காணும் போதெல்லாம் அமுதை அனுபவிப்பதானுண்டாம் களை பகவானுக்குக் கிடைக்கின்றது. அந்த ரஸத்தைக் களைப்பதற்காகத் தமது கண்களை எப்போதும் லக்ஷ்மியின் முகத்திலேயே பதித்துள்ளாரவர். ஸூர்யன் ஸூர்ய மண்டலத்துள்ளும் சந்த்ரன் சந்த்ர மண்டலத்துள்ளும் இருப்பது இயல்பு. ஆனால் லக்ஷ்மியின் முகமண்டலத்தில் ஸூர்ய சந்திரர்களாகிய பகவானின் இரு கண்களும் எப்போதும் சேர்ந்தே வாழ்கின்றன. ஸூர்ய சந்திரர்களுக்குச் சேர்க்கை உண்மையில் உண்டாவது தர்மத்தன்றே அமாவாஸ்யையன்றே. ஆனால் தாயின் முகத்தில் இந்த தர்ம லீலை இருவரும் ஒன்றாகச் சேர்ந்திருக்கும் விளையாட்டு எப்போதும் நிகழ்கின்றது. ஆகவே கவிகள் கூடல் கன்னியின் முகத்தை மஹாதர்ம லீலாம் பஜதே என வர்ணிப்பது தகுதியுடையதேயாம்.

மஹா, ஆதர்ம, லீலாம், பஜதே, எனப் பிரித்து மேற் சொன்ன பொருளைச் சொல்லித் தகுதியுடைமையை விளக்க வேண்டும்.

आदर्शे प्रतिबिम्ब मात्रकलनात् आरोप्य मुग्धाजनाः
मातस्त्वन्मुख कान्तिचौर्यमनघे मध्नन्ति यं पाणिभिः ।

94

हा संक्रामति साधुतन्मलिनिमा हस्तेषु तेषां स्वयं
मघ्नान्नूनं अनेनसां हि कलुषं मिथ्याभिशंसन् जनः ॥

ஆதர்ஸப்ரதிபிம்பமாத்ர கலநாத் ஆரோப்ய முக்தா ஜநா:
மாதஸ்வதந்முககாந்திசௌர்யமநகே மத்நந்தி தம் பாணிபி: ।
ஹா ஸம்க்ராமதி ஸாது தந்மலிநிமா ஹஸ்தேஷு தேஷாம் ஸ்வயம்
மத்நாந் நூநம் அநேநாஸாம் ஹி கலுஷம் மித்யாபிஸம்ஸந் ஜந: ॥

ஹே மாத: - தாயே!
முக்தா: ஜநா: - மதியிலிகள்; பணிப் பெண்கள்
அநகே - இருட்டு தோஷமற்ற; அப்பழுக்கற்ற
ஆதர்ஸே - கண்ணாடியில்
ப்ரதிபிம்ப மாத்ர கலநாத் - முகம்மட்டும் ப்ரதிபலிப்பதால் உனது முகக் காந்தியில்
சௌர்யம் - திருட்டை
ஆரோப்ய - கண்ணாடியிலேற்றிட்டு
தம் - அக்கண்ணாடியை
பாணிபி: - கைகளால்
மத்நந்தி - அடிக்கின்றனர். துடைக்கின்றனர்
தத் - உண்மையில் திருடாத அதனுடைய
மலிநிமா - வேறு வழியில் வந்த பாபமும்
தேஷாம் - பாபத்தை யதிட்டவரது
ஹஸ்தேஷு - கைகளில்
ஸங்க்ராமதி - ஸம்பந்த மடைகிறது
ஹா - ஐயகோ!
மித்யாபிஸம்ஸந் - குற்றத்தை யதிடுபவன்
அநேநஸாம் - குற்ற மற்றவரது
பாபம் - வேறு வழியில் வந்த பாபத்தையும்
தத்யாத்ஹி - அபஹரித்துக் கொள்வனன்றோ
நூநம் - நிச்சயம்.

லோகமாதாவின் முன் உபசாரத்துக்காகப் பெரியதொரு கண்ணாடியை பணிப் பெண்கள் வைக்கின்றனர். தினமும் அதில் தாயின் முகம் மட்டும் ப்ரதிபலிக்கின்றது. முக ஒளி புலப்படுவதில்லை. ஆனால் கண்ணாடி தமது இயற்கையால் பளபளக்கிறது. இதன் உண்மையை கண்ணாடிக்குப் பளபளத்தல் இயல்பு என்பதை அறியமாட்டாத அறிவிலியான பணிப் பெண்கள் தாயின் முக ஒளியைக் கண்ணாடித் திருடிவிட்டது என எண்ணி அதைக் கைகளால் அடிக்கின்றனர். மார்கழி, போன்ற பின்பனிக் காலத்தில் நாம் நெற்றியில் திருமண் தரித்துக் கொள்ளும் போது நம் மூச்சுக்காற்று கண்ணாடியில் படின் அது மங்கிப் போகும். நன்கு துடைத்த பின்பே அது பளபளக்கும். அதுபோல் நன்கு ஒளிர்வதற்காகத் துடைப்பதை, ஒளியைத் திருடியதற்காகக் கொடுக்கும்

தண்டனையாக - உதையாக - கற்பிக்கிறார் கவி. அப்படித் துடைக்கும்போது கண்ணாடியிலிருந்த அழுக்கு துடைப்பவர் கையை அடைகிறது. அதுபோல் ஒருவர்மீதுப் பொய்யாகக் குற்றத்தை ஏறிட்டாலும் ஏறிட்டுப் பேசுபவர் குற்றம் பற்றப்பட்டவர் செய்த பாபத்தை அடைந்தே தீர்வர். இது வருத்தத்துக்கு உரியதன்றோ! என்கிறார்.

विकचस्य कचोज्ज्वलेन पद्मे विकलत्वेन कथं नु पङ्कभाजः ।
सरसेन गतस्य नीरसत्वं जलजातस्य भवेन्मुखेन सख्यम् ॥

விகசஸ்ய கசோஜ்ஜ்வலேந பத்மே விகலத்வேந கதம் நு பங்கபாஜ:। ஸரஸேந கதஸ்ய நீரஸத்வம் ஜலஜாதஸ்ய பவேந் முகேந ஸக்யம்॥

பத்மே தாமரையாளே		பங்கபாஜ: - சேற்றுறைவிடமுடையதுடனும்
கசோஜ்ஜ்வலேந ஒளிர்பவளுக்கு	கேசத்தால்	ஸரஸேந - ரஸிகனாலு
		நீரஸத்வம் கதஸ்ய - வரண்டதாகவும்
விகசஸ்ய மொட்டை போன்றும்	செழித்த	பவேத் முகேந - உன் முகத்துடன்
		ஜலஜாதஸ்ய - தாமரைக்கும்
விகலத்வேந இல்லாதவளுக்கு	சேறுபோல	கதம் நு - எப்படி
		ஸக்யம் - தோழமை
		பவேத் உண்டாகும்

மாறுபட்ட தன்மைகளை உடைய இருவர் ஒன்றாகச் சேர்வதே உலகில் காண இயலாதது. அப்படியிருக்க அவ்விருவர் நண்பராவர் என்பது எதிர்பார்க்கவும் இயலாதது. தாமரை செழுமையுடன் ஒளிர்வதற்கு இன்றியமையாதது ஆழமான நீர் நிலையும் மிக்க சேறுமே. மிருதுவான சேற்றில் நாற்புறமும் வேரைப் பரவவிட்டு ஐந்தடி உயர நீர் நிலையின் மேல் வனப்புடன் விளங்கும் தாமரையும் அம்பிகையின் முகத்துக்கு ஒப்புமை உடையதாகாது என்ற கருத்தை பல உதாரணங்களுடன் வெளிப்படுத்தினார்.

२५. नदवनजमहो महातपश्रीकृतरुचि ते मुखजन्म लिप्समानम्।
अपि यदि नदध:शिरस्तपस्येज्जनवदनं कमले भवेत्तथापि ॥

நதவநஜமஹோ மஹாதபஶ்ரீ க்ருதருசி தே முகஜந்ம லிப்ஸமாநம்।
அபி யதி நதத:ஶிரஸ்தபஸ்யேஜ்ஜநவதநம் கமலே பவேத்ததாபி ॥

கமலே - தாமரையில் வாழ்பவளே!
நத - மேற்கு நோக்கிச் செல்லும்
வநஜம் - நதியில் தோன்றிய தாமரை
தே - உனது
முகஜந்ம - முகமாகப் பிறப்பை
லிப்ஸமாநம் ஸத் - விரும்பியதாய்
மஹா-தப-ஶ்ரீ - யாவராலும் எளிதில் செய்ய முடியாத, உயர்ந்த தவ நிலையில்
க்ருதருசி: - விருப்பமுள்ளதாள்
வர்த்தே - உனது
அஹோ - இது மிக வியப்பாம்
நத் - அத்தாமரை
அத:ஶிர: - தலைகீழாகத் தண்ணீரில் நின்று
தபஸ்யேதபி - மேலும் முயர்ந்த தவத்தைச் செய்யினும்
ததாபி - அப்போதும்
ஜநவதநம் பவேத் - ஏனைய மக்களின் முகமான பிறப்பை அடையுமேயன்றி உன்முகப்பிறப்பைப் பெறாது.

கிழக்கு நோக்கிப் பாய்வதை "நதி" என்றும் மேற்கு நோக்கிப் பாய்வதை "நதம்" என்றும் சொல்வர் வடமொழியில் நதம் என்ற சொல்லுக்கு ஸமுத்ரம் என்ற பொருளும் உண்டு எனவே ஸமுத்ரம் போன்ற மிக அழகான நீர்நிலையின் மேல் தாமரை விளங்குவதை, தாமரை கழுத்தளவு நீரினுள் நின்று எளிதில் செய்யாத தவத்தைச் செய்கிறது உன் முகமாகத் தான் பிறக்க வேண்டுமென்றெண்ணி என்கிறார். "மஹாதபஶ்ரீ க்ருதருசி:" என்பதை மஹா ஆதபஶ்ரீ க்ருதருசி: எனப்பிரித்தால் மேகமூட்டமில்லாத நல்ல வெயிலால் அளிக்கப்பட்ட காந்தியை உடைய தாமரை எனப் பொருள் கிடைக்கும். இப்படி செழுமைக்கு வேண்டிய அனைத்துக் காரணங்களையும் பெற்று சிறப்பாக விளங்கும் தாமரையும் எத்தவம் செய்யினும் உன் முகத்துக்கு ஒவ்வாது என்பது கருத்து. இத்தாமரையே தண்ணீரில் தலைகீழாக மாறிநின்று மேலும் முயர்ந்த தவத்தைச் செயின் "நதவநஜ" மானதாமரை தலை கீழாக "ஜநவதந" மாக மாறி ஏனைய மக்களின் முகமான பிறப்பைப் பெறலாமே யன்றி உன் முகப் பிறப்பைப் பெறாது. நதவநஜ என்பதைத் திருப்பிப் படித்தால் ஜநவதந என மாறும்.

26

विजिते तनुते मुखेन राजन्यपि दुर्गेश्वर मौलिपूज्यपादे ।
वनवासितया तपस्पृहाणां विजये को विशयः कुशेशयानाम् ॥

விஜிதே தநுதே முகேந ராஜந்யபி
துர்கேச்வர மௌலி பூஜ்யபாதே ।
வநவாஸிதயா தபஸ்ப்ருஹாணாம்
விஜயே கோ விசய: குசேசயாநாம் ॥

துர்க ஈச்வர - மலை காடு முதலிய அரண்கள் சூழ்ந்த நாட்டரசர்களின், பார்வதி பதியின்
மௌலி - கிரீடங்களால்
பூஜ்ய - அர்ச்சிக்கத் தக்க
ராஜந்யபி - ஸார்வபௌமனும், சந்திரனும்
விஜிதே ஸதி - ஜயிக்கப்பட்ட போது
வநவாஸிதயா - காட்டில் வாழ்வதால் ஜலத்தில் வாழ்வதால்
தபஸ்ப்ருஹாணாம் - தவத்தில் விருப்பமுடையவர்களும்
ஆதபஸ்ப்ருஹாணாம் - வெயிலில் விருப்பமுடைய
குசேசயாநாம் - தர்ப்பத்தில் படுப்பவருமான தவசிகளின், தாமரைகளின்
விஜயே - வெற்றியைப் பெறுவதில்
விசய: க: - ஸந்தேஹம் ஏன்?

லக்ஷ்மியின் முகத்தைப் பேரரசனோடு ஒப்பிட்டுச் சிலேடையில் பேசுகின்றார். தமது கோட்டையைப் பகைவர் எளிதில் சூழாத அளவுக்கு இயற்கைப் பாதுகாவல் சூழ்ந்த இடத்தே அமைத்திருந்தனர் அக்காலத்தில். நாற்புறமும் உயர்ந்த மலைகள், முதலை போன்ற கொடிய ஜல ஜந்துக்கள் வாழும் நீர், சிங்கம் புலி போன்ற கொடிய விலங்குகள் வாழும் காடு முதலியவற்றால் சூழ்ந்த இடத்தில் கோட்டை இருந்ததை இலக்கியங்களில் காணலாம். இதனை "துர்கம்" என ஸம்ஸ்க்ருதத்திலும் "அரண்" எனத் தமிழிலும் வழங்குவர். இத்தகைய இடங்களில் வாழும் பேரரசர்களும் பூஜிக்கும் கால்களை உடைய ஒரு பேரரச ஸார்வபௌமனை ஒருவன் எளிதாக ஜயித்து விட்டான் என்றால், அவனுக்கு காட்டில் வாழ்பவரும், இன்பமனைத்தையும் விட்டொழித்துத் தவம் செய்பவர்களும், தர்பத்தில் படுத்திருப்பவருமான தவசிகளை வெல்வதில் ஸந்தேஹம் ஏன் என்பது அரசர்க்குரிய கருத்தாகும். துர்கா - பார்வதி - பதியான சிவனாலும் மிக பஹுமானத்துடன் தமது சிரஸில் தரித்துக் கொள்ளத்தக்க கிரணங்களை உடைய சந்திரனும் உமது முகத்தால் வெற்றி காணப்பட்ட போது, ஜலத்தில் வாழ்வதும் வெயிலில் விருப்பமுடையவையு மான தாமரையை வெற்றி பெறுவதில் ஐயமேன் என்பது

முகத்துக்குரிய கருத்து. பத்மத்தை பாதிப்பவனான சந்திரனையே ஜயித்தபோது பத்மத்தை ஜயிப்பது ஒருபொருளா என்பது கருத்து. (27)

तदब्जमब्जश्च तवाननद्विषौ मुरारिपत्नि व्रजतः पराभवम् ।
द्विधा सहैकेन मिथो विरोधिनोर्न योद्धुमस्ति प्रभुता द्वयोरपि ॥

ததப்ஜமப்ஜஸ்ச தவாநநத்விஷௌ முராரிபத்நி வ்ரஜத: பராபவம்।
த்விதா ஸஹைகேந மிதோ விரோதிநோர் ந யோத்துமஸ்தி ப்ரபுதா த்வயோரபி॥

முராரிபத்நி - நாராயண மஹிஷி
தவ ஆநநத்விஷௌ - உனது முக ஒளியின் விரோதிகளான
தத் அப்ஜம் - அந்த தாமரையும்
ஸ: அப்ஜஸ்ச - அச்சந்திரனும்
பராபவம் - போரில் தோல்வியை
வ்ரஜத: அடையத்தான் போகின்றனர்
மிதோவிரோதிநோ: - ஒருவருக்கொருவர் பகைவரான
த்வயோரபி - இருவருக்கும்
ஏகேநாபி த்விதாஸஹ - ஒரே பக்ஷத்திலிருப்பதும்
யோத்தும் - எதிர்த்திட
ப்ரபுதா நாஸ்தி - சக்தி கிடையாது.

முகத்துக்கு உவமையாகச் சந்திரனையும் தாமரையையும்தான் கவிக் கூறுவர். தாயே! இவ்விருவரும் உனது முக ஒளிக்கு விரோதிகளே. இருப்பினும் அவ்விருவராலும் உனது முகத்தை வெற்றிகாண இயலாது. முகம்தான் அவ்விருவரையும் வெல்லும். ஒருவரால் இருவரையும் எப்படி ஜயிக்க முடியும் என்கிறீரா? அவர்கள் இருவராக இருப்பினும் உம்முடன் போரிடும்போது ஒருவர்தான் ஆவர். இருவரும்தான் பகைவராயிற்றே! ஒன்று சேராரே! ஒருவர் காலையிலும் மற்றொருவர் ராத்ரியிலும்தானே தோன்றுவர்! ஆக இருவராக எப்படி ஆவர்? பகைவர் பலராயினும் அவர்கள் ஒன்று சேராவிடில் பலவானான பகைவனை வெற்றிபெறுவது எளிதன்றோ! சேராத இவ்விருவரும் சேர்ந்து உனது முகவெற்றியைக் காண்பதென்பது என்றுமே இயலாதது என்பது கருத்து. முகத்துக்கு உவமைகளாகக் கவிகளால் கூறப்படும் சந்திரனையும் பத்மத்தையும் வெற்றிகண்ட நாராயண பத்நி முகத்துக்கு உவமையே கிடையாது என்பது உட்கருத்து (28)

त्वदास्यवसुतस्करं ध्रुवमवैमि जैवातृकं
पयोजनिलये यतः पिहितमन्दिरायां त्वयि।
असौ निशि विजृम्भते पुनरपावृते धाम्नि ते
पराचलवने रवेर्घृणिषु वा दिवा लीयते॥

த்வதாஸ்யவஸுதஸ்கரம் த்ருவமவைமி ஜைவாத்ருகம்
பயோஜநிலயே யத: பிஹிதமந்திராயாம் த்வயி।
அஸௌ நிசி விஜ்ரும்பதே புநரபாவ்ருதே தாம்நி தே
பராசலவநே ரவேர் க்ருணிஷு வா திவா லீயதே॥

ஜைவாத்ருகம் - சந்திரனை
த்வதாஸ்யவஸு - உனது முகக் காந்தியாகிய
தஸ்கரம் - திருடனாக
அவைமி - அறிகிறேன்
யத: - ஏனெனில்
அஸௌ - இச்சந்திரன்
நிசி - இரவில்
த்வயி பிஹித மந்திராயாம் ஸத்யாம் - உனது மாளிகைக் கதவைச் சாத்தியபோது
விஜ்ரும்பதே - வெளிவருகிறான்
தே தாம்நி - உனது மாளிகை
திவா - பகலில்
புநரபி - திரும்பவும்
அபாவ்ருதே ஸதி - திறக்கப்பட்டபோது
பராசலவநே - அஸ்தமய மலைக்காடுகளிலும்
ரவே: - சூர்யனுடைய
க்ருணிஷு - கிரணங்களிலும்
லீயதே - மறைகிறான் (ஒளிக்கிறான்)

சந்திரனைத் திருடனாக உத்ப்ரேக்ஷிக்கிறார். லக்ஷ்மியின் முக ஒளியாகிய செல்வத்தை சந்திரன் திருடிவிட்டானாம். திருடன் பகலில் மறைந்து வாழ்வதும் இரவில் ஸஞ்சரிப்பதும் இயற்கை. அதுபோல் சந்திரனும் இரவில் லக்ஷ்மியின் திருமாளிகைக் கதவு சாத்திய பின்பே வெளிவருகிறான். உதிக்கிறான். திரும்பவும் அவளது மாளிகைக் கதவு பகலில் திறந்தபோது, பௌர்ணமியன்று அஸ்தமயமலைக் காடுகளிலும் மற்றைய நாள்களில் சூர்யனின் கிரணங்களிலும் மறைந்து கொள்கிறான்.

பௌர்ணமியன்று ஸூர்யோதயம் வரை சந்திரன் ப்ரகாசிப்பதால் அன்று அஸ்தமய மலைக் காட்டில் மறைகிறான் என்றும், க்ருஷ்ண பக்ஷங்களில் ஸூர்யோதய மானபின்பும் சந்திரன் புலப்படுவனாகையால் ஸூர்ய கிரணங்களில் மறைகிறான் என்றும் சொன்னார். மறைதல் அவனது ஒளி வீசாமையே. இப்படி இருளில் வெளிவந்தும்

பகலில் மறைவதாலும் அச்சமயம் லக்ஷ்மி மந்திரத்தின் கதவுகள் சாத்துவதற்கும் திறப்பதற்கும் ஏற்றதாக இருப்பதாலும் சந்திரனைத் திருடனாகக் கற்பனை செய்தார். 29

जन्ममन्दिरमशोकसम्पदः सालकान्तमुरुकान्तिकन्दलम् ।
आननं मदनकेलिकाननं मन्यते जननि माधवस्तव ॥

ஜந்மமந்திரமசோகஸம்பத: ஸாலகாந்தமுருகாந்திகந்தலம் ।
ஆநநம் மதநகேலிகாநநம் மந்யதே ஜநநி மாதவஸ்தவ ॥

ஜநநி - தாயே
மாதவ: - பகவான், லக்ஷ்மி நாதன்
அசோக - துக்கம் களைவது: வஞ்சுள மரங்களின்
ஸம்பத: - செல்வமாகிய போகத்துக்கு பிருதிக்கு
ஜந்ம மந்திரம் - பிறப்பிடமாகவும்
ஸாலக - அந்தம் - முன் நெற்றி மயிர்களுடன் சேர்ந்து அழகியதும்
ஸால-காந்தம் - ஸாலமரங்களால் அழகியதும்
உருகாந்தி - மிக்க ஒளியுடைய அதிக அழகிய
கந்தலம் - முளைபோன்றதுமான
ஆநநம் - உமது முகத்தை
கேலிகாநநம் - விளையாட்டுத் தோட்டமாக
மந்யதே - எண்ணுகிறான்.

தாயே! ஒளிமிக்கதும் முன் நெற்றிக் கூந்தல்களால் அழகியதும் போகாநந்தத்தைத் தருவதுமான உமது முகத்தை பகவான் காணும்போது அது அவருக்கு மிக்க மகிழ்ச்சியூட்டுவதாக உள்ளதால் பகவான் அதை மன்மதன் வாழுமிடமாக எண்ணுகிறான் என்கிறார்.

வஸந்த ருது: அசோகம் முதலான பல மரங்களால் அழகிய தோட்டத்தில் மன்மத பக்ஷபாதியாக வாழ்கிறது என்பது சொல்லமைப்பால் தோன்றும். ப்ரக்ருதத்தோடு தொடர்பற்ற கருத்தாம். 30

स्वरूपतस्त्वद्वदनात्मना तथा द्विधा सुधांशुर्जलधावजायत ।
तदेष राजा द्विजराज इत्यदः पदं दधात्यर्थवदच्युतप्रिये ॥

ஸ்வரூபதஸ்த்வத்வதநாத்மநா ததா
த்விதா ஸுதாம்சுர்ஜலதாவஜாயத ।
ததேஷ ராஜா த்விஜராஜ இத்யத:
பதம் ததாத்யர்த்தவதச்யுதப்ரியே ॥

அத்புதப்ரியே - அற்புதம் மனைவியே!
ஸுதாம்சு: - சந்திரன்
ஸ்வரூபத: - வட்டமாய், வெள்ளையான தனது வடிவத்துடனும் உனது முகம் என்ற உருவத்துடனுமாக
த்விதா - இரண்டு வகையில்
ஜலதௌ - சமுத்ரத்தில்
அமரமத - கடைந்தபோது தோன்றினன்
ஏஷ: - இச்சந்திரன்
ராஜா - ராஜா என்ற பெயரை உடையவனும்
த்விஜராஜ இதி அத: பதம் - த்விஜராஜன் என்ற பெயரை
அர்த்தவத் - பொருள் பொதிந்ததாக
தநோதி - தரிக்கிறான்.

அற்புத மனைவியே! தேவர் கடலைக் கடைந்தபோது சந்திரன் இரண்டு வடிவமுள்ளவனாகத் தோன்றினன். அவற்றுள் ஒன்று வட்டவடிவத்ததாய் பதினாறு கலைகளும் நிறைந்து வெளிரென்று விளங்குவதாய், மனதை மகிழ்விப்பதாய் நட்ப முடையதாய் தற்போதும் நாம் பௌர்ணமியன்று காணும் வடிவம். மற்று ஒன்று இத்தன்மைகள் அனைத்தும் பொருந்திய லக்ஷ்மியாகிய உமது முகம். ஆகவே அவன் த்வி - இரண்டு விதமாக, ஜாத் - தோன்றியவனாயினன். மேலும் அவனுக்கு ராஜா என்ற பெயருண்டு என "ராஜா து க்ஷத்ரியே சந்த்ரே" என்ற நிகண்டு கூறுகின்றது. ஆகவே "த்விஜராஜன்" என்கின்றன அவன் பெயர் காரணப் பெயராய் பொருத்த முடையதாயிற்று.

"த்விஜராஜ:" என்ற பதம் த்விஜ: ராஜா, என்ற இரண்டு சொற்கள் சேர்ந்து உண்டாகிய பதம். அதனை "த்விஜச்சாஸௌ ராஜாச" என விரிப்பர் வடமொழியாளர். இவ்விரிவை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததே மேற் சொன்ன கருத்து.

"த்விஜராஜ:" என்ற சொல்லுக்கு ப்ராஹ்மணர்களின் அரசன் என்பது உண்மைப் பொருள். இப்போது இச்சொல்லை "த்விஜாநாம் ராஜா" என விரிக்க வேண்டும். த்விஜர்கள் ப்ராஹ்மணர்கள்" கர்பவாஸத்தால் தோன்றும் பிறப்பொன்று, தாய்போன்ற "காயத்ரீ" என்ற மந்திரத்தை உபதேசமாகப் பெற்றதால் உண்டாம் பிறப்பொன்று, ஆக ப்ராஹ்மணர்களுக்கும் த்விஜர் என்ற பெயருண்டு. அவர்களுக்குச் சந்திரன் அரசனாவான். எனவே த்வி ஜராஜனாயினன். இக்கருத்தை "தஸ்மாத் ஸோமராஜாநோ

ப்ராஹ்மணா:" என்ற வேதம் விளக்குகின்றது. கவி தமது ஸாமர்த்யத்தால் த்விஜ: என்ற சொல்லுக்கு மேல் முதலில் சொன்ன பொருளைக் கற்பித்து இச் ச்லோகத்தை அமைத்துள்ளார். 31

मातः सरोजसदने वदने त्वदीये
संफुल्लमुत्पलमिवाच्छसरोविशेषे ।
चन्द्रे कलङ्क इव भृङ्ग इवारविन्दे
मन्देतरद्युतिरसौ तिलकः समिन्धे ॥

மாத: ஸரோஜஸதநே வதநே த்வதீயே
ஸம்புல்லமுத்பலமிவாச்சஸரோவிசேஷே ।
சந்த்ரே கலங்க இவ ப்ருங்க இவாரவிந்தே
மந்தேதரத்யுதிரஸௌ திலக: ஸமிந்தே ॥

ஸரோஜஸதநே - தாமரையில் வாழும்
மாத: - தாயே
த்வதீயே - உமது
வதநே - முகத்தில்
மந்தேதரத்யுதி - மிகுதியாக ஒளிரும்
அஸௌ திலக: - இத்திலகம்
அச்சஸரோ விசேஷே - தெளிந்த நீரை உடைய மானஸஸரோவர் போன்றவற்றில்
ஸம்புல்ல - மலர்ந்துள்ள
உத்பலமிவ - நீலோத்பலம் போன்றும்
சந்த்ரே - பூர்ண சந்திரனில்
கலங்க இவ - கலங்கம் போன்றும்
அரவிந்தே - மலர்ந்த தாமரையில்
ப்ருங்க இவ - வண்டு போன்றும்
ஸமிந்தே - நன்கு விளங்குகின்றது.

தாமரை போன்ற முகமுள்ள தாயே! தேவரீர் முகத்துள்ள இத்திலகம் எப்போதும் தெளிந்த நீரை உடைய மானஸ ஸரோவர் போன்ற குளத்தில் பூத்த நீலோத்பலம் போன்றும், பூர்ண சந்திரனில் உள்ள கலங்கம் போன்றும் தாமரைப் பூவிலிருக்கும் வண்டு போன்றும் மிக்க பொலிவுடன் விளங்குகிறது.

மூன்று உவமைகள் கொடுத்துள்ளார். முதலுவமையால் நீலமாக இருத்தல் சிறிதாக இருத்தல், அழகாக இருத்தல் போன்ற தன்மைகளையும், இரண்டாவதால் ஒன்றோடொன்று இணையத்தகாத வெண்மையும் கருமையும் இணைந்திருத்தல் போன்ற தன்மையும், மூன்றாவதால் வட்டமாக இருத்தல்

போன்ற தன்மைகளையும் இத்திலகம் பெற்றிருக்கின்ற தென்பது தொனிப் பொருள்களாய் தோன்றுகின்றன.

அதேபோல் முகத்துக்கும் நிர்மலமாக இருத்தல், மிருதுவாகப் பளபளத்தல், மனதை மகிழ்வித்தல், கண்களுக்கு இனிதாதல், மங்களமாம் தன்மை முதலியன தொனிப் பொருளாய் விளங்குகின்றன. 32

उपाश्रितानवयवमुद्गतश्रियं प्रियङ्गुणाधिकमणुमध्यमाशुभम् ।
त्वमेयुषी वरतिलकानना रमे सुधान्यभूरुचिरसुधाधराप्यसि ॥

உபாஶ்ரிதாநவயவமுத்கதஶ்ரியம்
ப்ரியங்குணாதிகமணுமத்யமாஶுபம் ।
த்வமேயுஷீ வரதிலகாநநா ரமே
ஸுதாந்யபூருசிரஸுதாதராப்யஸி ॥

ஹே ரமே - ரமையே!
அணு - நுண்ணிய
மத்யமா - இடையை உடையவளாயும்
வரதிலக - உயர்ந்த திலகமணிந்த
ஆநநா - முகமுடையவளாயும்
ருசிர - இனிமையான
ஸுதாதரா - அம்ருதமமைந்த உதடு உள்ளவளாயும்
ஸுதா - அம்ருதத்தில் அந்யபூ: - மற்றொரு பிறப்பிடமாயுமுள்ள

த்வம் - நீர்
உபாஶ்ரித அநவயவம் - [illegible] உடையவனும்
உத்கதஶ்ரியம் - அதிகமான சோபை உடையவனும்
குணாதிகம் - சிறந்த குணங்களுள்ளவனும்
ஶுபம் - மங்களமான சரீரத்தை உடையவனுமான
ப்ரியம் - கணவனையும்
ஏயுஷீ - அடைந்துள்ளீர்.

ரமையே நீர் நல்ல அழகையும் அதற்கேற்ற பர்த்தாவையும் பெற்றுள்ளீர் என்கிறார். 33

(தொடரும்)

२५. नलिनशशिनौ सिन्धोः कन्ये सरोगनभोगता-
त्यजनकुतुकादेतौ जातौ त्वदक्षिमुखात्मना ।
सह निवसतः सेतूकृत्य भ्रुवोर्युगमन्तरे
सहजरिपुताभाजोर्जन्मान्तरेऽपि न सङ्गतिः ॥ ॥

நலிநஶஶிநௌ ஸிந்தோ: கந்யே ஸரோகநபோகதா-
த்யஜநகுதுகாதேதௌ ஜாதௌ த்வதக்ஷிமுகாத்மநா।
ஸஹ நிவஸத: ஸேதூக்ருத்ய ப்ருவோர்யுகமந்தரே
ஸஹஜரிபுதாபாஜோர்ஜந்மாந்தரே(அ)பி ந ஸங்கதி: ॥ 34

கமலே - தாமரையில் வாழ்பவளே!
ஸிந்தோகந்யே - கடலரசன் பெண்ணே!
ஏதௌ - விரோதிகளாக ப்ரஸித்திபெற்ற
நலிநஶஶிநௌ - தாமரையும் சந்திரனும்
ஸரோகநபோகதா - குளத்திலேயே வாழ்தல் ஆகாயத்திலேயே இருத்தல் என்ற இரண்டையும்
த்யஜநகுதுகாத் - விட்டுவிட்டு வேறிடத்தில் வாழ வேண்டும் என்ற பேராசையால்
த்வதக்ஷி முகாத்மநா - உனது கண், உனது முகம், என்ற உருவத்தில்
ஜாதௌ - தோன்றியுள்ளன
அந்தரே - முகத்தின் நடுவில்
ப்ருவோ: யுகம் - இரண்டு புருவங்களை
ஸேதூக்ருத்ய - எல்லைச் சுவர்களாகக் கொண்டு
ஸஹநிவஸத: - ஓரிடத்தில் வாழ்கின்றன
ஸஹஜரிபுதாபாஜோ: - பிறப்பிலேயே பகைமைகொண்ட இரு பொருள்களுக்கு
ஜந்மாந்தரே(அ)பி ந ஸங்கதி: மறுபிறவியிலும் பகைமை யழிந்து ஒன்று சேர்தல் என்பது கிடையாது.

மூன்று ஶ்லோகங்களால் இனி புருவ வர்ணனை செய்கிறார்! கடல் குமரியே! தாமரையும் சந்திரனும் ஒன்றோடொன்று பகைமை உடையது என்பதும், சேர்ந்து வாழா என்பதும் உலகறிந்த உண்மை. இருப்பினும் இருவருக்கும் ஒரு வெறுப்பு உண்டாயிற்றாம். எத்தனை நாள்கள் வெவ்வேறு இடங்களில் வாழாது குளத்திலே வாழ்ந்து கொண்டிருப்பது என்பதும், பிறபிற இடங்களில் சுற்றித்திரியாது ஆகாயத்திலேயே எத்தனை நாட்கள் திரிவது? என்பதேயாமது. ஆகவே இரண்டும் அவ்வவற்றின் இடங்களைவிட்டு உனது கண்களாகவும் முகமாகவும் தோன்றின. ஆம், இருக்கட்டும். அவை இரண்டும் என்னிடம் மட்டும் எப்படி ஒன்றி

வாழவிரும்பினை என என்கின்றீரோ? ஒன்றி வாழவில்லையோ இங்கும் பிரிந்தேதானே வாழ்கின்றன. முகத்தினிடையே தாம் வாழும் இடங்களைச் சுற்றிலும் சுவர் அமைத்துக் கொண்டு அதனுள்தான் வாழ்கின்றன தாமரைகள். அச்சுவர்களைத்தான் புருவம் என வழங்குகின்றனர்.

இருக்கட்டும். ஒருவன் மரணம் அடையும்வரைதான் அவனிடம் பகைமை. அவன் மரண மடைந்தபின் பகைமைக்கு வழி ஏது? என்கின்றதே. "மரணாந்தாநி வைராணி" என்கின்ற பழமொழி. அப்படி இருக்க இவற்றிற்கு மட்டும் ஏன் மறுபிறவியிலும் பகைமை என்கின்றீரோ? பிறவியிலே பகைமை கொண்டவை மறு பிறவியிலும் அப்படியேதான் வாழும். பகைமை நீக்கா. ஒன்று சேரா. "மரணாந்தாநி" என்ற பழமொழி செயற்கைப் பகைமைப் பற்றியதேயன்றி இயற்கைப் பகைமைப் பற்றியதன்று என்று சமத்காரமாகக் கூறுகிறார்.

नयनयुगलाक्रान्तं कर्णान्तयुग्ममधोक्षज-
प्रणयिनि तव स्रष्टा सृष्ट्वा भयाकुलमानसः ।
अहह मुखमप्याभ्यां मा क्राम्यशेषमिति व्यधात्
किमुपरि तयोर्धीमान् सीमाविभागशिले प्रभुः ॥ ३५

நயநயுகலாக்ராந்தம் கர்ணாந்தயுக்மமதோக்ஷஜ-
ப்ரணயிநி தவ ஸ்ரஷ்டா ஸ்ருஷ்ட்வா பயாகுலமாநஸ: ।
அஹஹ முகமப்யாப்யாம் மா க்ராம்யசேஷமிதி வ்யதாத்
கிமுபரி தயோர்தீமாந் ஸீமாவிபாகசிலே ப்ரபு: ॥ 35

அதோக்ஷஜப்ரிய - பகவானுக்குப் பிரியமானவளே
ஸ்ரீமாந் - புத்திமானான
நயநயுகல - இரு கண்களால்
ஆக்ராந்தம் - கவரப்பட்ட
கர்ணாந்தயுக்மம் - இரண்டு காதுகளுக்கும் இடையிலுள்ள பகுதியை
ஸ்ருஷ்ட்வா - பார்த்து
பயாகுல - பயத்தால் கலங்கிய
மாநஸ: - மனமுடையவனாய்
அஹஹ - மிகவும் வருந்தியவனாய்
அசேஷம் முகம் - அனைத்து முகமும்
மாக்ராமி - கவரப்படாதிருக்கட்டும் என எண்ணியவனாய்
தயோருபரி - இரு கண்களின் மேற்புறத்தில்
ப்ருவௌ - புருவங்களை
ஸீமாவிபாக - எல்லையைக் காட்டும்
சிலே - கற்களாக
வ்யதாத் கிம் - அமைத்தானா என்ன

பகவன் மஹிஷியே! சராசரமயமான இவ்வுலகைப் படைக்கும் தொழிலை பகவான் நான்முகனிடம் ஒப்படைத்திருப்பதாலும் வேதமனைத்தையும் அவனுக்கு உபதேசித்திருப்பதாலும் நான்முகன் பேரறிவினன் என்பர் பலர். இது மட்டும் அவன் அறிவின் மேன்மைக்குச் சான்றன்று. தாயே! உன்னை அவன் படைக்கும் போது, உனது யௌவனப் பருவம் நொடிக்கு நொடி வளர்ந்து இரு கண்களுக்கும் காதுகளுக்கும் இடைப்பட்ட இடத்தை இரு கண்களும் கவரவிருப்பதைக் கண்டான். ஐயகோ. இவற்றை இப்படியே விட்டால் இவைமேல் நோக்கி வளர்ந்து முகத்தையே இல்லை யாக்கிவிடின் என் செய்வது எனப் பயந்தான். அப்படி அவற்றை மேல் நோக்கி வளராமல் தடுக்க வேண்டும் என்ற எண்ணத்தால்தான் கண்களுக்கும் முகத்துக்கு மிடையே எல்லையை விளக்கும் எல்லைக்கல்லாக புருவத்தை அமைத்தான் என எண்ணுகிறேன். இது வன்றோ அவன் அறிவுடைமைக்கு நல்லசான்று என உத்ப்ரேக்ஷிக்கிறார்.

கண்களின் விசாலமும் புருவத்தின் அழகும் விளக்கப்பட்டன. 35

यत्किङ्कराः सरसिजासनशङ्कराद्या देवाः स एव दनुजारिरपि भ्रुवोस्ते ।
जागर्ति किङ्करतया जगदम्ब नित्यं छन्दानुवर्तनकृतः कुटिलस्य सर्वे ॥

யத்கிங்கரா: ஸரஸிஜாஸநஶங்கராத்யா:
தேவா: ஸ ஏவ தநுஜாரிரபி ப்ருவோஸ்தே ।
ஜாகர்த்தி கிங்கரதயா ஜகதம்ப நித்யம்
சந்தாநுவர்த்தநக்ருத: குடிலஸ்ய ஸர்வே ॥

ஹே ஜகதம்ப - ஜகன்மாதாவே
ஸரஸிஜாஸநஶங்கராத்யா: தேவா: - நான்முகன், சிவன், இந்திரன் முதலான தேவர்கள்
யத்கிங்கரா: - எந்த பகவானின் ஏவலாளர்களோ
ஸ ஏவ தநுஜாரிரபி - அத்தகைய அசுரர் சத்ருவும்
தே ப்ருவோ: கிங்கரதயா - உன் புருவ நெறிப்பால் தெரிவிப்பதைச் செய்ய
ஜாகர்த்தி - ஜாக்கிரதையாக இருக்கிறான்
குடிலஸ்ய - கோணல் புத்தியுள்ள பிராணிகளுக்குத் தொல்லை தருபவனுக்கு
ஸர்வே - யாவரும்
சந்தாநுவர்த்தந க்ருத: - அவளது கருத்தைப் பின்பற்றுபவராகவே இருப்பவர்.

மூவுலகத்தாயே! ப்ரஹ்மா சிவன் இந்திரன் தேவர் குழாம் அனைத்தும் நாராயணனின் ஏவலர்களே. இவர் மட்டுமல்லர், நாராயணன் தண்டனைக்குப் பயந்து அரக்கர் அனைவரும் ஏவலராகவே உள்ளனர். ("பீஷாஸ்மாத் வாத: பவதே" என்பவை போன்ற ஸ்ருதிகள் நினைக்கத் தக்கவை) அத்தகைய பகவானும் நீ எப்போது எச்செயலை புருவ நெறிப்பாகிய இங்கிதத்தால் செய்யச் சொல்வாயோ என்று எண்ணத்துடன் அதைத் தப்பாது செய்வதற்கு மிக்க விழிப்புடன் எதிர்பார்த்துக் கொண்டுள்ளான். இதனால் உனக்கு உலகம் முழுதும் அடிமையாயின. இத்தகையதொரு பெருமை புருவத்துக்கு எப்படித் தோன்றிற்று எனின் அதை கவி அர்த்தாந்தர ந்யாஸத்தால் ஸமர்த்திக்கின்றார். நேர்மையற்ற புத்தியை உடையவனாய் பிறரைத் துன்புறுத்துபவனைக் கண்டு பலவாறும் நமக்கும் ஏதாவது தொல்லை விளைவிப்பானோ என்று அச்சத்தால் அவன் கருத்துக்கு இசைந்து நடப்பது உலகில் கண்கூடுதானே. புருவங்கள் வளைவாகத்தானே உள. நேராக உள்ளனவா? ஆகவே இத்தகையதொரு நிலை தோன்றிற்று என புருவத்தின் கோணலை வர்ணிக்கின்றார். 36

श्रुत्यन्तजुष्टममलोत्पलकान्तियोगादत्यन्तसुन्दरमनङ्गजनेर्निदानम् ।
उद्भासितामरसभामहितं मदम्ब को न स्तुवीत नयनं तव कृष्णरूपम् ॥

ச்ருத்யந்தஜுஷ்டமமலோத்பலகாந்தியோகா-
தத்யந்தஸுந்தரமநங்கஜநேர்நிதாநம் ।
உத்பாஸிதாமரஸபாமஹிதம் மதம்ப
கோ ந ஸ்துவீத நயநம் தவ க்ருஷ்ணரூபம் ॥ 37

மம மாத: - எனது தாயே!
ச்ருத்யந்த ஜுஷ்டம் - காதுகள் வரை நீண்டவையும், வேதாந்தங்களால் புகழப்படுவதும்
அமலோத்பல - நிர்மலமானதும், காதுகளில் அணியப் பட்டுள்ளதுமான நெய்தல் பூக்களின்
காந்தியோகத் - கருமை படர்ந்துள்ளதால்
அத்யந்த ஸுந்தரம் - மிக அழகியதும்
அநங்கஜநே: - மன்மதக் கேளிகளுக்கு ப்ரத்யும்நன் தோற்றத்துக்கு
நிதாநம் - இருப்பிடமாயும், காரண பூதமும்
உத்பாஸி - நன்கு ஒளிரும்
தாமரஸ - தாமரைப் பூவினை போன்ற
பா - ஒளியால்
மஹிதம் - கொண்டாடத்தக்கதும்
உத்பாஸித - தோற்றுவிக்கப்பட்ட

அமரஸ்ரேணீ - தேவர் கூட்டங்களால்
மஹிதம் - பூஜிக்கப்பட்டதும்
க்ருஷ்ணரூபம் - கண்ணனைப்
போன்றதும் நீலநிறமுடையதுமான

தவ நயநம் - உமது கண்களை
க: நு ஸ்துவீத - எவன்தான்
துதிப்பான்? எல்லோரும்
துதிப்பர்

பதினொரு ச்லோகங்களால் கண்களை வர்ணிக்கின்றார். தாயின் கண்களைக் கண்ணனாகச் சிலேடையில் பேசுகிறார். தாயே உமது கண்கள் ப்ருதி - அந்தம் வரை - காதுகள் வரை உள்ள இடத்தில் நீண்டு பரந்துள்ளன. கண்ணன் ச்ருத்யந்தம் - வேதாந்தமான உபநிஷத்துகளில் புகழப்படுகிறான். கருவிழிப் படலங்களால் கண்கள் நீல நெய்தல் போல் மிகவும் அழகாக உள்ளன. காதுகளில் அழகுக்காக அணிந்துள்ள நீலப் பூக்களின் நிறம் உடல் முழுவதும் வீசுவதால் கண்ணனும் நீல நிறத்தனாக உள்ளன். அதுவே அவனுக்கு மிக அழகைத் தோற்றுவிக்கின்றது. தாயின் கண்கள் அனங்கனை - உடலற்றவனை - மன்மதனின் வேலிக்கைகளைத் தாண்டுவனவாயுள்ளன. மன்மதனே ப்ரத்யும்னனாகப் பிறந்தான் என்பதால் கண்ணன் ப்ரத்யும்னனின் பிறப்புக்குக் காரணமாயுள்ளான். நன்கு மலர்ந்த தாமரையின் நிறமான செம்மையைச் செவ்வரி படர்ந்த கண்கள் பெற்றிருப்பதால் அவை புகழ்ச்சிக்கு உரியனவாயுள. தேவர் கூட்டங்களால் கண்ணன் பூஜிக்கப்பட்டவன் ஆவன் இக்காரணங்களால் கண்ணன் போன்ற உமது கருநிறக் கண்ணை யாரே புகழார்? 37

दुग्धाम्भोधिसुते त्वदक्षिविजितो राजानमेणो गत-
स्त्यक्त्वासावपि मण्डलं मुखजितो दुर्गीशमेणाश्रय: ।
स त्वेकं करत: परं च शिरसा धृत्वा दृगास्यद्विषो-
र्दुर्गेश: स्वयमीश्वरोऽप्ययमटत्त्वयापि भिक्षामहो ॥ ३८

துக்தாம்போதிஸுதே த்வதக்ஷிவிஜிதோ ராஜாநமேணோ கதஸ்-
த்யக்த்வாஸாவபி மண்டலம் முகஜிதோ துர்கேசமேணாச்ரய: ।
ஸ த்வேகம் கரத: பரம் ச சிரஸா த்ருத்வா த்ருகாஸ்யத்விஷோர்-
துர்கேச: ஸ்வயமீச்வரோ(அ)ப்யயமடத்த்வயாபி பிக்ஷாமஹோ ॥
38

துக்தாம்போதிஸுதே - க்ஷீரஸாகர ஸுதையே!
ம்ருகா: - நீண்ட கண்களுடையமான்
த்வதக்ஷி - உமது கண்களால்
விஜித: - வெற்றி காணப்பட்ட கண்களை உடையதாய்
ராஜாநம் - சந்திரனை
ப்ரவேசகத: - களங்கமான மானுகச் சென்றடைந்து விட்டது
முகஜித: - உமது முகத்தால் பரிபவமடைந்த
ம்ருகப்ரய: - மானை தரித்த
அஸௌவா - இச்சந்திரனும்
மண்டலம் - வட்டமான தன்மையை
த்யக்த்வா - விட்டிட்டு அரை சந்திரனாகி
துர்கேசம் - பார்வதீ பதியை
கத: - சென்றடைந்தான்
ஸ து - அப்பார்வதீபதியும்
த்ருசா: ஸ்யத்விஷோ: கண்ணுக்கும் முகத்துக்கும் விரோதிகளான இருவருள்
மகம் - ஒன்றான மானை
கரத: - கையாலும்
அபரம் - பிரிதான சந்திரனை
சிரஸா - தலையாலும்
த்ருத்வா - தரித்துக் கொண்டு
அத்யாபி - இப்போதும்
பிக்ஷாமடாதி ஹா - பிச்சை எடுக்கின்றானன்றோ
அஹோ - கஷ்டம்

பெண்களின் பார்வை நெறித்ததாக இல்லாது மருண்டதாக இருக்குமாம். ஆகவே அத்தகையதான மானின் பார்வையைப் பெண்களின் பார்வைக்கு உவமையாகக் கவிகள் கூறுவர். இப்படிக் கவிகள் கொண்டாடும் மானின் பார்வையும் லக்ஷ்மியின் பார்வைக்கு ஈடாக ஆகமாட்டாது போயிற்றாம். தோற்ற கண்களைப் பெற்றமான் வெட்கம் தாளாது சந்திரனைக் களங்கமாகச் சென்றடைந்ததாம். சந்திரனிலுள்ள களங்கத்தை மானாகச் சொல்வது கவிமரபு. அந்த மானை ஏந்திய சந்திரனும் லக்ஷ்மியின் முகத்தால் வெற்றி காணப்பட்டவனாய் தமது வட்டவடிவத்தை விட்டு மானபங்கத்தால் உடல் மெலிந்து பிறைச் சந்திரனாகிச் சிவனின் தலையைப் பற்றிக் கொண்டான். அச்சிவனும் உமது விரோதிகளுக்குப் பெருமை உண்டாக்கியதால் இன்றும் அவன் பிச்சை எடுத்துக் கொண்டுள்ளான் என்கிறார். அவன் கையில் கபாலம் உடையவன். ஆகலில் இப்படிக் கூறினார். இயல்பான மூன்று செயல்களுக்கும் மூன்று காரணங்களைக் கவி உத்ப்ரேக்ஷித்துள்ளார். (38)

निशायामम्ब त्वन्नयनसुषुमामोषकमिति
क्रुधा राज्ञा नूनं कुवलयमिहाकारि विकचम् ।
चकोरास्तच्चोराश्चकितमनसः प्रेक्ष्य तदिदं
सुतमास्तत्पादग्रहणमभितन्वन्त्यशरणाः ॥ ३९

திமிரயாமம்ப த்வந்நயநலக்ஷ்மமோஷகமிதி
க்ருதா ராஜ்ஞா நூநம் குவலயமிதூராகாரி விகசம் ।
சகோராஸ்தச்சோராஸ்ஸகிதமநஸ: ப்ரேக்ஷ்ய ததிதம்
ஸாதுப்தாஸ்தத்பாதக்ரஹணமபிதந்வந்த்யபயத: ॥ 39

ஹே அம்ப - தாயே!
குவலயம் - சகோரமாகிய திருடர் கூட்டம் நீலோத்பலம்
திமிரயாமம் - திருடுவதற்குத் தக்க காலத்தில் - தான் மலரும் காலத்தில்
த்வந்நயந - உமது கண்களின்
லக்ஷ்ம - காந்தியை
மோஷகம் - திருடுபவர்களாக ஆகின்றனர்? உமது கண்களைப் போல் விளங்குகின்றன.
இதி - என்கிற காரணத்தால்
இஹ - இவ்விஷயத்தில்
க்ருதா - கோபம் கொண்ட
ராஜ்ஞா - சந்திரனாலே, அரசனாலே
விகசம் - பாதுகாப்புக் கவசமற்றதாக மலர்ந்ததாக
அகாரி - செய்யப்பட்டது.
தச்சோரா: - கண் காந்தியைத் திருடுபவர்களான சகோர பக்ஷிகள்
ததிதம் - தம்மைப் போல் கண்ணழகைத் திருடியவரை மற்றொருவருக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையை
ப்ரேக்ஷ்ய - பார்த்து
சகிதமநஸ: - பயந்த மனமுடையவராய்
ஸாதுப்தா: - பயத்தால் ஜ்வரமுடையவராய் உடலில் ஸந்தாபங்களால் தபிக்கப்பட்டவராய்
அபயத: - காப்பாற்றுபவராய் தீயைத்தவிர்த்த வேறு உபாயம் அற்றவராய்
தத்பாத க்ரஹணம் - அரசன் கால்களில் விழுவதை நிலைப்படுத்துவதை
அபிதந்வந்தி - செய்கின்றனர்.

சகோரமாகிய திருடனுக்கும், நீலோத்பலப் பூவிற்கும் சிலேடை. உத்பலத்தை நெய்தற் பூவைப் பெண்களின் கண்களுக்கு உவமையாகக் கூறுவது கவிமரபு. அது இரவில் மலர்வது. இரவே திருடுவதற்கு ஏற்ற காலமானதையால் அது இரவில் மலர்கிறதாம். மலர்ந்ததும் லக்ஷ்மியின் கண்கள் காந்தியைத் திருடி அவள் கண்களுக்குச் சமமாக விளங்குகின்றதாம். இதனைக் கண்டானும் ராஜாவான சந்திரன். கண்டுமிகக் கோபம் கொண்டானாம். திருடரைத் தண்டிப்பது அரசனின் கடமையாதலால் திருடனின் கவசத்தைக் கழட்டிக் கொண்டானாம். சந்திர கிரணங்கள் பட்டதும் மலர்கின்றதென்பது கருத்து. மலரும் மொட்டிலிருந்து கட்டுப் போய்விடுவதால் கட்டாகிய கவசத்தைக் கழட்டிக் கொண்டான் என்கிறார்? இதனைக் கண்டனவாம் சகோர பக்ஷிகள். அவைகளும் கண்ணழகைத் திருடுவனவே.

சகோரத்தையும் கண்ணிற்கு உவமையாக்குவர் புலவர். திருட்டுத் தொழிலில் தமக்கு நண்பனான நீலோத்பலமான மற்றொருவனுக்கு நேர்ந்த தண்டனையைப் பார்த்தனவாம் சகோரங்கள். உடனே நமக்கும் இப்படி ஓர் தண்டனை உண்டாமோ எனப் பயந்தனவாம். ஜ்வரமே வந்துவிட்டதாம் பயத்தால் அவற்றிக்கு. பகலில் வெயிலில் திரிந்ததால் தோன்றும் சூட்டை இப்படிக் கூறுகிறார். நானுளன் அஞ்சேல் எனக் கூறிக் காப்பவரற்றத் திருடர்கள் இருவரும், பகல் முழுவதும் வெயிலில் திரிந்து வாடியவராய் நிலவைத் தவிர்த்த வேறு காப்பவர் அற்றவராய் ராஜபாத ஸேவையைச் செய்கின்றனராம். நான் செய்த பிழையை பொறுத்து மன்னிக்க வேண்டும் என உத்பலமாகிய திருடன் அரசனாகிய சந்திரன் கால்களில் வீழ்ந்து வணங்கி வேண்டுகிறானாம். சந்த்ரோதயம் ஆனதும் மலர்ந்ததை இப்படிக் கற்பிக்கின்றார். சகோரமும் ராஜாவான சந்த்ரனின் பாதங்களான கிரணங்களைப் பருகுகின்றன. சந்திரகிரணங்களால் மலர்விக்கப்பட்ட உத்பலத்துக்குச் சமமாகவும், சந்திரிகையைப் பருகியதால் மதங்கொண்ட சகோரத்துக்குச் சமமாகவும் லக்ஷ்மியின் கண்கள் உள என்பது கருத்து.

குவலயம் என்ற சொல் கு+வலயம் எனப் பிரிந்து, கு-குத்ஸிதமான கோணலான செயலைச் செய்பவரின், வலயம் கூட்டம் எனப் பொருள்தந்து, திருடனை உணர்த்துகிறது. (39)

(தொடரும்)

४०. नयनं तव देवि वर्णरीतेर्विपरीतेऽपि विपर्ययं न याति।
कमलं तु समेति कञ्जगेहे कथमाहुः समतां तयोः कवीन्द्राः ॥

நயநம் தவ தேவி வர்ணரீதேர் விபரீதே(அ)பி விபர்யயம் ந யாதி।
கமலம் து ஸமேதி கஞ்ஜகேஹே கதமாஹு: ஸமதாம் தயோ: கவீந்த்ரா: ॥

தேவி ! தேவி - தேவனின் மனைவியே
தவ நயநம் - உமது கண்கள்
விபரீதே - இரவிலும்
வர்ணரீதே: - அதன் அழகிலிருந்து
விபர்யயம் - மாற்றத்தை
யாதி - அடைவதில்லை
கஞ்ஜகேஹே தாமரையில் வாழ்பவளே
கமலம் து - தாமரையோ வெனில்
ஸமேதி - அழகு மாற்றத்தை அடைகிறது (அங்ஙனமிருக்க)
கவீந்த்ரா: - புலவர்கள்
தயோ: - தாமரைக்கும் கண்ணுக்கும்
ஸமதாம் - ஒப்புமையை
கதம் - எப்படி
ஆஹு: - சொல்கின்றனர்?

தேவர் இரவிலும் தூங்கார். எனவே அவர் கண்கள் எப்பொழுதும் நல்லொளியுடனேயே இருக்கும். இலக்குமி தேவனின் மனைவியானமையின் அவர் கண்கள் எப்போதும் ஒளிகுன்றாது விளங்குகின்றது. புலவர் கண்களுக்கு உவமையாகத் தாமரையைக் கூறுகின்றார். தாமரை இரவில் மூடிவிடுவதால அதன் ஒளியை இழந்து விடுகிறது. எப்போதும் ஒளியுடன் விளங்கும் இலக்குமியின் கண்களுக்கு சிறுபோது ஒளியிழக்கும் தாமரை எப்படி உபமானமாகும்? உபமானம் உபமேயத்தை விட உயர்ந்ததாக இருக்கவேண்டும் என்பதன்றோ கவிமரபு? அப்படியாக இது எப்படிப் பொருந்தும்! தேவதேவியின் கண்களுக்குத் தாமரையும் ஈடாகாது என்கிறார். (40)

चक्षुः प्रमाणेन समुद्रकन्ये सीमा श्रुतेः संकुचिता तवाभूत्।
न तत्र कैमुत्यनयात् कथञ्चिद् उन्मेषमृच्छत्युपमानवार्ता ॥

சக்ஷு: ப்ரமாணேந ஸமுத்ரகந்யே
ஸீமா ச்ருதே: ஸங்குசிதா தவாபூத்।
ந தத்ர கைமுத்யநயாத் கதஞ்சித் உந்மேஷம்ருச்சத்யுபமாநவார்த்தா ॥

ஹே ஸமுத்ரகந்யே - பாற்கடல் புதல்வி
தவ - உமது
சக்ஷு: ப்ரமாணேந - கண்களின் பரப்பால்
ச்ருதே: ஸீமா - காதின் எல்லை
ஸங்குசிதா அபூத் - குறுகிவிட்டதோ
தத்ர - அக்கண்களின் விஷயத்தில
உபமாநவார்த்தா - இது கண்ணுக்கு உவமையாம் என்ற சொல்
கைமுத்யநயாத் - கைமுதிகந்யாயத்தால்
உந்மேஷம் - எடுத்தியம்பும் தன்மையை
ந ருச்சதி - அடைவதில்லை

பரந்த லக்ஷ்மீயின் கண்களுக்கு உவமையே கிடையா தென்கிறார். (41)

अमर्षाल्लोकाम्ब स्ववसुहरनीलोत्पलभृतो-
रपि श्रुत्योः सीमां कबलयति ते नेत्रयुगलम् ।
कृतः कल्पेष्वार्तिरपरमपराधः फलति त-
द्विपक्षाणां पक्षीकृतिरपि विषादाय भवति ॥

அமர்ஷால்லோகாம்ப ஸ்வவஸுஹரநீலோத்பலப்ருதோ-
ரபி ஸ்ருத்யோ: ஸீமாம் கபலயதி தே நேத்ரயுகலம்।
க்ருத: கல்பேஷ்வார்த்திரபரமபராத: பலதி தத்-
விபக்ஷாணாம் பக்ஷீக்ருதிரபி விஷாதாய பவதி॥

ஹே லோகாம்ப - உலகத்தாயே
தே நேத்ரயுகலம் - உமது இரு கண்கள்
ஸ்வவஸுஹர - தமது காந்தியாகிய செல்வத்தைத் திருடிய
நீலோத்பலப்ருதோ: - நெய்தல் பூவைப் பாதுகாப்பவரான
ஸ்ருத்யோ: - இரண்டு காதுகளுடைய
ஸீமாம் - இடத்தையும்
அமர்ஷாத் - கோபத்தால்
கபலயதி - ஆக்ரமிக்கின்றன
கல்பேஷு - உபாயங்களை அறிந்தவரிடம்
க்ருத: அபராத: பரம் - செய்த குற்றம் மட்டும்
ஆர்த்திம் - துன்பத்தை
ந பலதி - உண்டு பண்ணுகிறது என்பதில்லை (ஆனால்)
தத் விபக்ஷாணாம் - அவரது பகைவர்களை
பக்ஷீக்ருதிரபி - நண்பராக ஆக்கிக் கொள்வதும்
விஷாதாய - மனத்துன்பத்தை விளைவிப்பதற்காக
பவதி - ஆகின்றது.

உலகமாதாவின் கண்கள் ஒளிமிக்கவை. அவ்வொளியைத் திருடித் தமதாக ஆக்கிக் கொள்கின்றன நீலோத்பலங்கள். தம் செல்வத்தைத் திருடுபவரிடம் கோபம் உண்டாவது இயற்கைதானே! ஆகவே தாயின் கண்களுக்கு நீலங்கள் விரோதியாயின. தமக்கு அழகுவேண்டும் என்பதற்காக அந்நெய்தலை தரிக்கின்றன சில காதுகள். ஆகவே காதுகளுக்கு நீலங்கள் நண்பராயின. தமது விரோதிகளான நீலங்களின் நண்பரான காதுகளும் தாயின் கண்களுக்கு விரோதியாயின. ஆகவே தமது செல்வத்தைத் திருடியவனின் நண்பர்களான காதுகளின் இடத்தைக் கண்கள் ஆக்ரமிக்கத் தொடங்கின. காதுகள் வரை கண்கள் விசாலமாக நீண்டுள என்பது கருத்து. இது தகுதி

உடையதே என அர்த்தாந்தரத்தை உலகியல்பைக் காட்டி வாதிக்கிறார் கவி. உபாயங்கள் அனைத்தையும் அறிந்த ஒருவனை ஒருவன் பகைத்துக் கொண்டால் அப்பகைமை அவனுக்கு மட்டும் துன்பத்தை விளைவிப்பது என்பதில்லை. உலகியலறிந்தவனது விரோதியை எவன் நண்பனாக ஏற்கின்றானோ அவனையும் தமது விரோதியின் நண்பனிவன் என்பதால் அவனுக்கும் தீமை விளைவிப்பது உலகியல்பு. ஆகவே தமது விரோதியான நீலங்களின் நண்பரான காதுகளின் இடங்களைக் கண்கள் கவர்வது இயல்பே என்கிறார். (42)

त्रैलोक्यसंत्रायिणि तावकीनो ध्रुवं कटाक्षो धृतराष्ट्रजातः ।
कल्याणि कर्णप्रणयी कथं वा पुष्णाति कृष्णार्जुनदीप्तियोगम् ॥

த்ரைலோக்யஸந்த்ராயிணி தாவகீநோ
த்ருவம் கடாக்ஷ: த்ருதராஷ்ட்ரஜாத: ।
கல்யாணி கர்ணப்ரணயீ கதம் வா
புஷ்ணாதி க்ருஷ்ணார்ஜுநதீப்தியோகம் ॥

த்ரைலோக்ய ஸந்த்ராயிணி கல்யாணி - மூவுலகங்களையும் காக்கும் மங்களமூர்த்தி!
தாவகீந: - உமது
கடாக்ஷ: - கடைக்கண் பார்வை
த்ருதராஷ்ட்ர ஜாத: - த்ருதராஷ்டிரன் பிள்ளையான துர்யோதனனே
த்ருவம் - நிச்சயம்
கர்ணப்ரணயீ - கர்ணனின் நண்பனான
(அவன் - துர்யோதனனாயிருக்கையில்)
க்ருஷ்ணார்ஜுந - க்ருஷ்ண அர்ஜுநர்களின்
தீப்தியோகம் - தேஜஸ்ஸின் சேர்க்கையை
கதம் வா - எப்படி
புஷ்ணாதி - மேன்மை அடையச் செய்கிறது விரோதபாவம் (விரோதபரிஹாரம்)
கடாக்ஷ: - கடைக்கண் பார்வை.
த்ருதராஷ்ட்ரஜாத: - காக்கப்பட்ட மூவுலக மக்களையுமுடையதே
கர்ணப்ரணயீ - காதுவரை நீண்டுள்ளது
க்ருஷ்ணார்ஜுந - கருவிழிப்படலங்களின் நீல நிறம்
தீப்தி - கண்ணின் வெண்மை என்ற இரு ஒளிகளின்
யோகம் - சேர்க்கையை
புஷ்ணாதி - மேன்மை அடையச்செய்கிறது

மூவுலகத்தாயே! மங்களமான உருவமுடையவளே! உமது கடைக்கண் பார்வை த்ருதராஷ்ட்ரன் பிள்ளையான துர்யோதனனேயாம். மூவுலகிலும் தோன்றிய சராசரங்களை அது தரித்துக் காக்கின்றது. உமது கடாக்ஷம் விட்டவில்லையேல் அவை வாழாவென்பது ஸத்யமானது. துர்யோதனன் கர்ணனுக்கு

நண்பன். கண் கர்ணங்களுக்கு நண்பன். ஆகவேதான் காதுவரை நீண்டுள்ளது. கடாக்ஷமாகிய துர்யோதனன் தமது சத்ருக்களான க்ருஷ்ண அர்ஜுநர்களின் புகழை எப்படி வளர்விக்கிறது? என்பது விரோதம். கடைக்கண் கருவிழிப்படலத்தின் ஒளியையும் கண்ணின் வெண்மை ஒளியையும் ஒன்று சேர்த்து ஒளிரவிடுகின்றது என்பது உண்மைப்பொருள். (43)

आकर्णदेशादुदितप्रकर्षं तवाक्षि मन्येऽतनुवाणरूपम् ।
यत्कङ्कटं वेङ्कटनायकस्य धैर्यात्मकं कृन्तति सिन्धुकन्ये ॥

ஆகர்ணதேஶாதுதிதப்ரகர்ஷம் தவாக்ஷி மந்யே(அ)தநுபாணரூபம்।
யத்கங்கடம் வேங்கடநாயகஸ்ய தைர்யாத்மகம் க்ருந்ததி ஸிந்துகந்யே॥

ஹே ஸிந்துகந்யே - கடல் கன்னி
ஆகர்ண தேஶாத் - காதுவரை
உதிதப்ரகர்ஷம் - வளர்ந்துள்ளதால் மேன்மையான
தவாக்ஷி - உமது கண்களை
அதநோ: - மிகப்பெரிதான
பாணரூபம் - அம்பின் வடிவமாக
மந்யே - எண்ணுகிறேன்
யத் - எந்த கண்கள்
வேங்கடநாயகஸ்ய - திருவேங்கடமுடையவனுடைய
தைர்யாத்மகம் - நப்பாசைக்கு வயமாகாத நிலையாகிய
கங்கடம் - கவசத்தை
க்ருந்ததி - அறுத்துவிடுகின்றதோ

பாற்கடல் பெண்ணே! உமது கண்களை பலம் வாய்ந்ததும் மிகப் பெரியதுமான அம்பாகவே எண்ணுகிறேன். நாணை வில்லில் மீட்டி அம்பையுமதில் ஏற்றிக் காதுவரை அதனை இழுத்தால் அதன் உந்துவிசை மிக மிக அதிகமாக இருக்குமன்றோ? இது தானே அம்பிற்கு பலம்? திருவேங்கடமுடையானுடைய உறுதியான மனத்திட்பத்தை அறுத்து விடுகின்றதே உமது கண்கள்! ஆகவே பலமுடையதென்பதில் ஸந்தேஹம் என்ன? இவன் மஹாபராதி மோக்ஷம் கொடேன் எனத் திட ஸங்கல்பமுடைய ஸ்ரீநிவாஸனுக்கு உலகில் தவறு செய்யாதவன் எவன்? உண்மையான தகுதியுடையவன் எவருமில்லை என எடுத்துரைத்து அவன் மன உறுதியைத் தூளாக ஆக்கி விடுகின்றன கண்கள். (44)

गुप्ता वनेषु विहरन्ति सुहृद्यमीनाः कस्यापि नो कुवलयेषु दिवा प्रकाशः ।
राज्ञो बिभेति जगदम्ब कुशेशयालिः कर्णे जपे जयति नेत्रयुगे भवत्याः ॥

குப்தா வதேஷு விஹரந்தி ஸஹ்ருத்பயமீநா:
  கல்யாபி தே குவலயேஷு நிவா ப்ரகாஸ:।
ராஜ்ஞோ பிபேதி ஜலதம்ப குஸேஸயாலி:
  கர்ணே ஜபே ஜயதி நேத்ரயுகே பவத்யா:॥

ஜலதம்ப - குவளைத் தாயே!
கர்ணே ஜபே - காதுவரை நீண்ட
பவத்யா: - உனது
நேத்ரயுகே - இரு கண்கள்
ஜயதி - வெற்றி கொள்ள விரும்பியபோது
ஸஹ்ருத்பயா: - நண்பர்களால
மீநா: - மீன்கள்
வதேஷு - நீரில்
குப்தா: - மறைந்தவைகளாய்
விஹரந்தி - சஞ்சரிக்கின்றன
குவலயேஷு - குவளைப்பூக்களிலோவெனில்
கல்யாபி - ஒரு பூவிற்கும்
நிவா ப்ரகாஸோ - பகலில் புலப்படுவதில்லை
குஸேஸயாலி: - தாமரைகளின் வரிசை
ராஜ்ஞ: - சந்திரனிடமிருந்து
பிபேதி - பயப்படுகிறது

தாமரை, குவளை, மீன், என்பனவற்றைக் கண்களுக்கு உவமைகளாகக் கூறுவது புலவர் மரபு. இவை நமக்குச் சமமாக இருப்பதால் தானே இவற்றை உவமைகளாக ஆக்குகின்றனர். இவற்றை நாம் வெற்றி கொண்டால் அப்படி இனிக் கூறமாட்டார்கள் அல்லவோ என எண்ணிய உலகமாதாவின் கண்கள் அவற்றைத் தோல்வியுறச் செய்ய வேண்டிக் கிளம்பின. இதனை அறிந்தவாமவை ஒவ்வொன்றும், ஒவ்வொரு வகைகளில் தம் தம்மைப் பாதுகாத்துக் கொண்டனவாமவை. அவற்றுள் மீன் தண்ணீரில் மறைந்து கொண்டு பயமற்றுத் திரிகின்றதாம். குவளைகளோப பகலில் ஒன்று கூடப் புலப்படுவதில்லையாம் இரவிலே மலர்வதிது. தாமரையோ வெனின் அரசனது - சந்திரனது பயத்தால் மறைந்துள்ளது.

மீன்பயத்தால் நீரில் மறைந்திருப்பதாலும் தாமரையும் குவளையும் ஏதோ ஒரு போதில் மட்டும் மலர்வதாலும் எப்போதும் மலர்ந்துள்ள தாயின் கண்களுக்கு இவை உவமையாக மாட்டா என்பது கருத்து. (45

आस्वादने कृतरुची मुखसौरभस्य मातस्त्वदक्षिमधुपौ बत मार्गमध्ये।
नासाख्यचम्पकमवेक्ष्य निवृत्तयत्नौ दृष्टेप्सितग्रहणतस्तरलौ सदा स्तः॥

ஆஸ்வாதநே க்ருதருசௌ முகஸௌரபஸ்ய
  மாதஸ்த்வதக்ஷிமதுபௌ பத மார்க்கமத்யே।

நாஸாக்²யசம்பகமவேக்ஷ்ய நிவ்ருத்தயத்நௌ
த்ருஷ்டேப்ஸிதார்த்தாக்ரஹணாத்தரலௌ ஸதா ஸ்த: ॥

ஹே மாத: - தாயே
அதராம்ருதஸ்ய - உதடின் அமிழ்தத்தின்
ஆஸ்வாதநே - சுவைப்பதில்
க்ருதரஸௌ - விருப்பத்துடன் கூடிய
த்வதக்ஷி - உமது கண்களாகிய
மதுபௌ - வண்டுகள்
மார்க்கமத்யே - இடைவழியில்
நாஸாக்²ய - உமது மூக்காகிய
சம்பகம் - செண்பகத்தை
அவேக்ஷ்ய - பார்த்து
நிவ்ருத்த - விடப்பட்ட
யத்நௌ - முயற்சியை உடையவைகள்
த்ருஷ்டே - கண்களுக்கும் புலப்பட்டதும்
ஈப்ஸித - தாம் விரும்பியதுமான பொருளை
அக்ரஹணாத் - பெற முடியாமற் போனதால்
தரலௌ - விடுவதற்கும் அருகில் செல்வதற்கும் திடமற்றவர்களாய்
ஸதா ஸ்த: - எப்போதும் உள்ளனர்
பத - மிகக் கஷ்டமாயிற்று

தாயே உமது உதடிலுள்ள தேனைப் பருகவேண்டுமென எண்ணின இரு கண்களாகிய வண்டுகள், உடன் புறப்பட்டன. ஆனால் என்னவாயிற்று! இடைவழியில் மூக்கு என்ற செண்பகப்பூவைக் கண்டன வண்டுகள். வண்டுகளை அழிப்பது செண்பகம். உதட்டினருகே பகைவனிருப்பதைக் கண்டதால் பயந்து தமது முயற்சியை கைவிட்டன. தாம் மிக விரும்பியதும் தமக்கு மிகவும் பிடித்தமான பொருளை ஏதோ ஒரு தடங்கலால் அடைய முடியாது போய்விடவே மிகவும் சஞ்சலமாக இருக்கின்றன அவை. வேண்டாமென ஒதுக்கவும் முடியவில்லை; தைர்யமாக அருகில் செல்லவும் முடியவில்லை; இது மிகவும் கஷ்டம். (46)

जातोन्मेषौ मुखरुचिसुधासागरे तावकीनौ
नेत्रात्मानौ जननि भुवनोज्जीवनौ दिव्यमीनौ ।
न्यूनाकारौ भगवति निजापेक्षया राक्षसारे-
श्चक्षुर्मीनौ कबलयत इत्येष जातिस्वभावः ॥

ஜாதோந்மேஷௌ முகருசிஸுதாஸாகரே தாவகீநௌ
நேத்ராத்மாநௌ ஜநநி புவநோஜ்ஜீவநௌ திவ்யமீநௌ।
ந்யூநாகாரௌ பகவதி நிஜாபேக்ஷயா ராக்ஷஸாரே:
சக்ஷுர்மீநௌ கபலயத இத்யேஷ ஜாதிஸ்வபாவ: ॥

பகவதி - ஜுவலிக்கின்ற
லோகஜுஷ் - மூவுலகத்தாயே
முக ருசி - முக ஒளியாகிய
ஸுதாஜலதௌ - அம்ருதமயமுகத்தில அம்ருதக் கடல் போன்ற முக ஒளியில்
ஜாதோத்ஸேகௌ - தோன்றியவையும் நிறைந்த செம்மையை பெற்றவையும்
புவனத்ரய்யவனௌ - உலகத்தைக் காப்பவையும் மூவுலகைக் காப்பவையும்
மத்ஸ்யாத்மானௌ - மீன் குலத்தலைவர்களுமான கண்களுமாகிய
தாவகீநௌ - உமது
நேத்ரமீனௌ - உயர்ந்த மீன்கள் போன்ற கண்கள்
நிஜாபேக்ஷயா - தம்மைக் காட்டிலும்
ந்யூநாகாரான் - குறுகிய வடிவமுள்ள
சகாமீநாந் - தம் குட்டிகளை
கபளயத: - உண்கின்ற
இதிவேத: - என்கிற இத்தன்மை
ஜாதிஸ்வபாவ: - மீன் குலத்தின் தன்மையாம்
நிஜாநநாகாராத் - கண்களின் வடிவத்தைக் காட்டிலும்
ந்யூநாகாராந் - சிறிய வடிவமுள்ள
நாராயணாக்ஷே: - நாராயணனுடைய
கடாக்ஷமீநாந் - மீன் போன்ற பார்வைகளை
கபளயத: - விழுங்கிவிடுகின்றன

லக்ஷ்மியின் கண்களை மீனோடு ஒப்பிட்டுப் பேசுகின்றார் இச்செய்யுளில். மீன்கள் ஜலத்தில் தோன்றுவன. லக்ஷ்மியின் கண்களாகிய மீன்களும் அவளது முக ஒளியாகிய அம்ருதக் கடலில் தோன்றியுள்ளன. அம்ருதம் பருகுவதற்குச் சுவையாக இருப்பது. தூயது. அளவிடற்கரியது. தாயின் ஒளியும் அத்தகையதானமையின் அது அம்ருதக் கடலாயிற்று. இத்தகைய கடலில் தோன்றியதால் அது பெரிதாக உள்ளது. மீன்கள் ஜலத்திலுள்ள அழுக்கை அகற்றி அதன் தூய்மையை பாதுகாப்பன. மீன்களின் கூட்டத்திற்கே இவை தலைவர்கள் என்னலாம் போலுள்ளன. இத்தகைய உமது இரண்டு மீன்களும் உருவத்தில் இவற்றைவிடச் சிறியனவான தம்மினக் குட்டிகளை விழுங்கி விடுகின்றன. என்பதில் வியப்பேதுமில்லை. சிறிய மீனைப் பெரிய மீன் விழுங்குவது மீன் குலத்தின் இயல்பேயன்றோ.

இனி கண்களைப் பற்றியக் கருத்து. லக்ஷ்மியின் கண்கள் அவளது முகத்தில் உள. அம்முகத்திலிருந்து ஒளியானது வீசுகின்றது. அது வெண்மையான அம்ருதக்கடல் போன்றுள்ளது. அதனுள் இக்கண்கள் இருப்பதால் அவ்வமிழ்தைப் பருகித் தமது இயல்பான நீலநிறத்தை மிகுதியாக்கிக் கொண்டுள்ளன. மூவுலகங்களையும் இவை காக்கின்றன. இத்தகைய உமது கண்களாகிய மீன்கள் குறைந்த ஒளிப்பெருக்கை உடையனவும் சிறியனவுமான நாராயணனின் கண்களாகிய மீன்களின் பார்வைகளை விழுங்கி விடுகின்றன.

பகவான் வேறு விஷயங்களில் தம் கண்களைச் செலுத்தாது லக்ஷ்மீயின் ஸௌந்தர்ய ரஸத்தை எப்போதும் அனுபவிக்கின்றார் என்பது கருத்து. (47)

सौवर्णे ते सिन्धुकन्ये निरुन्ध्यादातङ्कं नः कर्णताटङ्कयुग्मम् ।
नृत्यन्तीनां यत्र नेत्रद्युतीनां जालं नीलग्रावभावं बिभर्ति ॥

ஸௌவர்ணே தே ஸிந்துகந்யே நிருந்த்யாத்
ஆதங்கம் ந: கர்ணதாடங்கயுக்மம் ।
ந்ருத்யந்தீநாம் யத்ர நேத்ரத்யுதீநாம்
ஜாலம் நீலக்ராவபாவம் பிபர்த்தி ॥

ஹே ஸிந்து கந்யே - பாற்கடல் கன்னி
ஸௌவர்ணம் - ஸ்வர்ணமயமான
கர்ண தாடங்கயுக்மம் - இரண்டு காதணிகள்
ந: ஆதங்கம் - எங்களது தாபத்தை
நிருந்த்யாத் - போக்கக் கடவதாகட்டும்
யத்ர - எந்த காதணிகளில்
ந்ருத்யந்தீநாம் - பள பளவென வெளிவரும்
நேத்ரத்யுதீநாம் - அருகிலுள்ள கண்கள் காந்திகளின்
ஜாலம் - கூட்டம்
நீலக்ராவபாவம் - நீலரத்னமான தன்மையை
பிபர்த்தி - தரிக்கின்றதோ

இனி இரண்டு ச்லோகங்கள் காதணிகளின் வர்ணனை. லக்ஷ்மியின் காதணிகள் தங்கத்தால் செய்யப்பட்டவை. அக்காதணிகளின் அருகிலேயே தாயின் கண்களுமுள. அக்கண்களிலிருந்து நீல நிற ஒளிகள் பள பள வென வெளிவருகின்றன. அவை அக்காதணிகளிலும் படுகின்றன. அது அக்காதணிகளில் நீலநிற கோமேதகத்தை அமைத்தது போன்றுள்ளது. அத்தகைய காதணிகள் எங்கள் ஆத்யாத்மிகம் முதலிய தாபத்தைப் போக்கட்டும். (48)

(தொடரும்)

भूषा कर्णे स्वर्णताटङ्कभूषा वेषादिन्धे पुत्रनामादरेण ।
तत्सामीप्यादेव देवि प्रसादं नित्यं धत्ते नेत्रपङ्केरुहं ते ॥ ७९

பூஷா கர்ணே ஸ்வர்ண தாடங்கபூஷா
வேஷாதிந்தே புத்ரநாமாதரேண ।
தத் ஸாமீப்யாதேவ தேவி ப்ரஸாதம்
நித்யம் தத்தே நேத்ர பங்கேருஹம் தே ।

தேவ தேவி - தேவ மஹிஷியே!
பூஷா - ஸூர்யனே
புத்ரநாம ஆதரேண - மகனான கர்ணனின் பெயரைத் தரிக்க வேண்டுமென ஆசையால்
ஸ்வர்ணதாடங்க பூஷாவேஷாத் - ஸ்வர்ணமயமான காதணிகள் என்ற வடிவத்தை அடைந்து
இந்தே கிம் - விளங்குகின்றானோ!

நேத்ரபங்கேருஹம் - கண்களாகிய தாமரை போன்ற கண்கள்
தத்ஸாமீப்யாதேவ - மாறு வேஷத்திலுள்ள ஸூர்யன் அருகில் இருப்பதாலேயே
நித்யம் - இரவு பகலின்றி எப்போதும்
ப்ரஸாதம் - மலர்ந்திருத்தல் நிர்மலமாக இருத்தல்
தத்தே கிம் - தரிக்கின்றதா என்ன

தன் மகனான கர்ணன் மீது பேரன்பு பொங்கியதாம் ஸூர்யனுக்கு. ஆகவே அவன் பெயரைத் தாம் தரிக்க ஆசைப்பட்டானும். எனவே கர்ண என்ற சப்தத்துடன் சேர்ந்த கர்ணபூஷணம் என்ற அணியாக உருக்கொண்டு தாயின் காதுகளை அடைந்து ஒளிர்கின்றானாம் ஸூர்யன். மாறு வேடம் கொண்ட ஸூர்யன் தமது அருகில் இருப்பதால்தான் கண்களாகிய தாமரையும் தாமரை போன்ற கண்களும் இரவு பகல் வேறுபாடின்றி எக்காலத்தும் மலர்ந்திருப்பதோடு எப்போதும் அநுக்ரஹத்தைச் செய்துக் கொண்டு தாய்மையுடன் விளங்குகின்றனவா? என உத்ப்ரேக்ஷிக்கின்றார்.

त्रैलोक्याम्ब त्वद्वतंसोत्पलान्ते गुञ्जं गुञ्जं सञ्चरंश्चञ्चरीकः ।
किं व्याचष्टे कान्तसन्देशहारी कर्णाभ्यर्णे काममन्त्रार्थतत्त्वम् ॥ ८०

த்ரைலோக்யாம்ப த்வத்வதம்ஸோத்பலாந்தே
குஞ்ஜம் குஞ்ஜம் ஸஞ்சரந் சஞ்சரீக:
கிம் வ்யாசஷ்டே காந்த ஸந்தேசஹாரீ
கர்ணாப்யர்ணே காம மந்த்ரார்த்த தத்வம் ॥

ஸுதந்வாநு: - உலகத்தாயே
நீலோத்பலம் - உன் காதணியான
உத்பலாந்தே - நெய்தலின் அருகில்
குஞ்ஜம் குஞ்ஜம் - ஏதும் புலப்படாததொரு தொனியை உடையதாய்
ஸஞ்சரந் - சுற்றிக் கொண்டிருக்கும்
ஸஞ்சரீக: - வண்டு
காந்த மந்த்ரேஷூதேசரி - கணவன்
சொல்ல செய்தியை உனக்குத் தெரிவிக்க விரும்பிய தூதனாக ஆகி
காம மந்த்ராந்த தத்வம் - காமமந்த்ரத்தின் ரஹஸ்யமான அர்த்தங்களின் உண்மையை
கர்ணாப்யர்ணே - காதுகளின் அருகில்
கலயதே கிம் - விளக்குகின்றதா என்ன

இனி பதினொன்று ச்லோகங்களால் காதணி வர்ணிக்கப்படுகிறது. காதிற்கு அழகு ஊட்ட நெய்தல் பூவை அணிந்துள்ளாள் தாய். அதிலுள்ள தேனைப் பருகிக் களித்து ரீங்காரம் செய்கிறது வண்டு. அதனைக் கவி கணவருடன் ஊடல் கொண்டுள்ள உன்னை ஸமாதானம் செய்வதற்காகக் கணவனால் தூதாக அனுப்பப்பட்ட இவ்வண்டு ஊடலைப் போக்குதற்கு உரியதாயும், மன்மதன் லீலையைத் தூண்டத் தக்கதாயும் நீ அறியாததையுமாகிய காம மந்த்ர ரஹஸ்ய அர்த்தங்களைப் பிறரறியாது விளக்குகின்றதா எனக் கற்பனை செய்கிறார் (50)

काचिद्भाति वतंसकोत्पलमयी कल्याणताटङ्कसत्-
प्राकाराञ्चितकर्णपिप्पलनिहिता प्रायः शतघ्नी रमे ।
तद्गत्वाग्निकचारुणः स्मृतिभुवा तस्या मुखात् प्रेर्यते
लोलम्बायसगोलकः प्रणयिनो दुर्मानवर्मार्दनः ॥

காசித் பாதி வதம்ஸகோத்பலமயீ கல்யாணதாடங்கஸத்-
ப்ராகாராஞ்சிதகர்ணபிப்பலநிஹிதா ப்ராய: சதக்னீ ரமே ।
தத்கத்வாக்நிகசாருண: ஸ்ம்ருதிபுவா தஸ்யா முகாத் ப்ரேர்யதே
லோலம்பாயஸகோலக: ப்ரணயிநோ துர்மாநவர்மார்தந: ॥

ஹே ரமே - இலக்குமியே
வதம்ஸ - காதணியாயும்
உத்பலமயீ - நெய்தற்பூவாலமைந்ததாயும்
கல்யாண - தங்கத்தால் செய்த
தாடங்க - தோடாகியதும்
ஸத்ப்ராகார - சுற்றுச் சுவரை
அஞ்சிதா - அடைந்துள்ளதும்
கர்ணபிப்பல - காதுகளாகிய வீட்டில்
நிஹிதா - வைக்கப்பட்டுள்ளதும்
ப்ராய: - உயர்ந்ததுமான
சதக்னீ - வஜ்ராயுதம்
காசித் - மிக அரியதாய்
பாதி - விளங்குகிறது. (ஏனெனில்)

ரக்தாந்த - அக்னிஜ்வாலையின் ரத்தமாகிய
அக்திருசா - அக்னியின் ஒளிகளால்
அருணா: - சிவந்த
ப்ரணயித: - ஊடல் உடையவனது
துர்மாத: - வெறுப்பைப் போன்ற
நடிப்பாகிய
வர்ம - கவசத்தை
அந்தது: - பிளப்பதனை

ரோலம்ப - வண்டாகிய
ஆயஸ கோளகா: - இரும்பு
உருண்டைகள்
தம்போளிமுகாத் - வஜ்ராயுதத்தின்
மூலமாக
ஸ்ம்ருதிபுவா - மன்மதனாலே
ப்ரேர்யந்தே - விடப்படுகின்றனவோ
(அதனால்)

பகவான் ப்ரணய கலஹம் உடையவனாயுள்ளான் ஊடலாடுகிறான். அக்கோபத்தை கமலையின் கருவிழிகளால் மன்மத வசமானவனாய் விட்டு விடுகிறான். என வர்ணிக்கிறார். கவி கவிதாலாமர்த்யத்தால் உத்ப்ரேக்ஷையில் இதை விளக்குகின்றார். ப்ரணய கலஹத்தின்போது கோபமுடையராய் இருப்பாரன்றோ! அக்கோபமே கவசமாம். எத்தகையது? தமக்குச் சிற்றின்பத்தில் பற்றே இல்லை என்பது போல் நடிப்பிக்குமாம். அக்கவசத்தை இரும்பினால் செய்த குண்டுகள் பிளந்து விடுகின்றனவாம். அக்குண்டுகள் தாம் எவை? கருநிற வண்டுகள் தாமவை (தாயின் விழிகள்) வண்டுகள் எங்கிருந்து வந்தன என்கின்றீரோ! வஜ்ராயுதத்தின் மூலமாக வந்தன. எது வஜ்ராயுதம்? எய்தவனெவன் என்ற ஸந்தேஹமா? இதோ விடை கமலையின் காதணிகளே வஜ்ராயுதம். எய்தவனோ ஒப்பற்ற வீரனாகிய மன்மதன். குண்டு வெடிப்பதற்குத் தீப்பொறி வேண்டாவோ? அதுவுமுளதிங்கு. கமலா காதுகளில் அணிந்துள்ள தோடுகளில் ரத்நங்கள் இழைக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து வீசும் ஒளிக்கற்றைகள் தம் மேல்பட்டதால் கவசம் சிவந்துள்ளது. அதன் மேல் வண்டாகிய குண்டுகள் பட்டதால் கவசம் சிவந்துள்ளது. அதன் மேல் வண்டாகிய குண்டுகள் பட்டதால் கவசம் வெடித்தது.

குண்டுக்கு "ஶதக்நீ" என்பது வடமொழிப்பெயர் நூற்றுக்கணக்கானவரை அழிக்க வல்லது.என்பது பொருள். நான்கு இரும்புத்தகடுகளால் வட்டமாகச் செய்யப்பட்டதும் வெடித்துப் பலரை அழிக்க வல்லதும் மதில் சுவரைப் பாதுகாக்க அதில் வைக்கப்படுவதுமாகிய யந்திரம் ஶதக்நீ என்கிறது நிகண்டு. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வடமொழியில் குண்டின் வடிவம் முதலியன விளக்கப்பட்டிருப்பது சிந்திக்கத் தக்கது.

இங்கு ஶதக்நீயாக அமைவது காதுகளில் வைக்கப்பட்டுள்ள நீலோத்பலங்களாம். இக்குண்டு காதாகிய வீட்டில் வைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து எழுந்த வண்டு போன்ற கமலையின் விழிகள் நாராயணனின் ஊடல் கோபமாம் கவசத்தை வெடித்து விடுகிறதென்கிறார்.

(கல்யாணம் மங்களே ஸ்வர்ணே என்ற நிகண்டு கல்யாண ஶப்தத்துக்கு ஸ்வர்ணம் என்ற அர்த்தமுள்ளதை வெளியிடுகிறது)

कंसारातेश्चाटुमाध्वीझरैस्ते कर्णौ पूर्णावर्णवेन्द्रस्य कन्ये ।
जानन्तस्तत्सन्निधौ चञ्चरीकाश्चञ्चूर्यन्ते नोत्पलं तत्र हेतुः ॥

கம்ஸாராதே:சாடுமாத்வீஜ்ஜரைஸ்தே
கர்ணௌ பூர்ணாவர்ணவேந்த்ரஸ்ய கந்யே ।
ஜாநந்தஸ்தத்ஸந்நிதௌ சஞ்சரீகா:
சஞ்சூர்யந்தே நோத்பலம் தத்ர ஹேது: ।

அர்ணவேந்த்ரஸ்யகந்யே - பாற்கடலின் பெண்ணே
சஞ்சரீகா: - வண்டுகள்
தே கர்ணௌ - உமது காதுகளை
பகவத: - பகவானுடைய
சாடுமாத்வீ ஜரை: - இனிய பேச்சாகிய தேன் பெருக்குகளால்
பூர்ணௌ - நிறைந்தவை என
ஜாநந்த: - அறிந்தவைகளாய்
தத்ஸமீபே - அக்காதுகளின் அருகில்
சஞ்சூர்யந்தே - சுற்றுகின்றன.
தத்ர - அப்படிச் சுற்றுவதில்
உத்பலம் - நெய்தல்
ந ஹேது: - காரணமன்று

பகவான் எப்போதும் சுவையுள்ளதும் மகிழ்விப்பதுமாகிய வாக்குகளால் லக்ஷ்மீயுடன் பேசிக்கொண்டுள்ளான். அவ்வாக்குகளே தேன் வெள்ளப் பெருக்காம். அப் பெருக்கால் ரமையின் காதுகள் நிறைந்துள்ளன. தேனிருக்குமிடத்தை அறிவதில் வல்லவைகளான வண்டுகள் அதனை அறிந்துகொண்டன. ஆகவே அதனை பருக ஆவல் உடையனவாய் அக்காதுகளின் அருகே சுற்றுகின்றனவேயன்றிக் குறைந்த தேனுடையதும் சிறியதுமான நெய்தல் அப்படிச் சுற்றக் காரணம் ஆக மாட்டாது.

பகவானால் பேசப்பட்ட எண்ணற்ற சுவையான வாக்யங்கள் மறக்கத்தக்கன அல்லவாம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன என்பது முன்னடியின் கருத்து. (52)

ग्रस्तवतंसकुवलयं दृग्युगमुपकूजदलिरवमिषात्ते ।
मद्वसुचोर इहेति प्रवदति किल कर्णपत्त्रमित्राय ॥

க்ரஸ்தவதம்ஸ குவலயம் த்ருக்யுகம் உபகூஜதலிரவ மிஷாத் தே
மத்வஸுசோர: இஹேதி ப்ரவததி கில கர்ணபத்ர மித்ராய ॥

மாதா - தாயே
த்ருக் யுகம் - உனது இரு கண்களும்
க்ரஸ்தவதம்ஸ குவலயம் - தமது காதில் முழுவதையும் திருடிய குவளையை
கர்ணபத்ரமித்ராய - தோடு என்ற உருவில் தமதருகிலுள்ள நண்பனிடம்
உபகூஜத் - அருகில் சத்தமிடும்
அலிரவமிஷாத் - வண்டுகளின் சப்தம் என்கின்ற வ்யாஜத்தால்
மத்வஸுசோர: - என் செல்வத்தைத் திருடியவன்
இஹ - உனக்குமேல் பகுதியில் (ஜாகர்த்தி - இருக்கிறான் என்று)
ப்ரவததி கில - சொல்லுகின்றதன்றோ

தாயின் கண்களிரண்டும் கருத்தும் நீண்டும் இருப்பதால் குவளை போன்றே உள்ளனவாம். உண்மையில் தமது கண்களின் செல்வங்களான கருமையையும் மேல் நீட்சியையும் திருடிக் கொண்ட குவளை வேறிடம் செல்லாது காதுகளின் மேல் அமர்ந்துள்ளனவாம். இத்திருட்டுச் செய்தியைத் தமது நண்பனிடம் சொல்லித் திருடர்களைத் தண்டிக்கச் சொல்லவேண்டுமென கண்கள் எண்ணினவாம். எப்போதும் தமதருகிலேயே இருப்பதால் தமக்கு நண்பனும் குவளைகளுக்குப் பகைவனும் காதணி என்ற மாறு வேடத்தில் உள்ளவனுமான சூர்யனிடம் இதைச் சொல்வதென கண்கள் முடிவெடுத்துள்ளனவாம். எனவே வண்டுகளின் ரீங்காரம் என்ற வ்யாஜத்தால் என் செல்வத்தைத் திருடியவன் வேறிடம் செல்லாது உன் மேற் புறத்தேயே உள்ளான். அவனை தண்டிக்கச் சொல்வது போலுள்ளது என்கிறார். "கர்ணபத்ரமித்ராய" என்பதிலுள்ள மித்ர சப்தம் ஸூர்யன் என்ற பொருளையும் உடையது. (53)

इमामवमां श्रुतिमिन्दिरे तव स्तुवन्ति सन्तः स्मृतिजन्मकारणम् ।
शिरस्यमुष्याः सुमनोभिरञ्चिते चकास्ति दृष्टिर्जगतामधीशितुः ॥ ५४

இமாமவமாம் ச்ருதிமிந்திரே தவ ஸ்துவந்தி ஸந்த: ஸ்ம்ருதி ஜந்ம காரணம் ।
சிரஸ்யமுஷ்யா: ஸுமநோபிரஞ்சிதே சகாஸ்தி த்ருஷ்டி: ஜகதாமதீசிது: ।

ஹே இந்திரே - லக்ஷ்மியே
ஸ்ம்ருதிஜந்ம - ஸ்மிருதிகளை
காரணம் - தூண்டுவதும்
அவமாம் ச்ருதிம் - மேலானதில்லாததுமான வலக்காதை
ஸந்த: - வித்வான்கள்
ஸ்துவந்தி - ஸ்தோத்திரிக்கின்றனர்
ஸுமநோபி: - காதுவரை தொங்கும் சிரஸில் சூடிய பூச்சரத்துடன்
அஞ்சிதே - சேர்ந்த
அமுஷ்யா: - இக்காதின்
சிரஸி - நுனியில்
ஜகதாமதீசிது: - பகவானுடைய
த்ருஷ்டி: - கடாக்ஷவீக்ஷணம்
சகாஸ்தி - ப்ரகாசிக்கின்றது

சிரஸில் சூடிய பூச்சரத்தால் அழகிய வலக்காதின் அழகை எப்போதும் பகவான் காண்கிறார்.

மேலுமோர் பொருள்

அவமாம் - ச்ரேஷ்டமாக
இமாம் - அத்யயன முறையில் இன்று வரை காப்பாற்றப்படுவதும்
ஸ்ம்ருதிஜந்ம காரணம் - ஸ்ம்ருதிகள் தோன்றக் காரணமாயுள்ள
ச்ருதிம் - வேதத்தை
ஸந்த: - பக்தர்கள்
ஸ்துவந்தி - ஸ்தோத்திரிக்கின்றனர்
ஸுமநோபி: - வித்வான்களால்
அஞ்சிதே - ஆதரிக்கப்பட்ட
அமுஷ்யா: சிரஸி - வேத முடிவாகிய உபநிஷத்தில்
ஜகதாமதீசிது: - பகவானைப்பற்றி
தீ: - ஞானம்
சகாஸ்தி - நன்கு துலக்கின்றதோ

புத்தர் முதலியவர்களால் செய்யப்பட்ட ஆகமங்களில் அஜ்ஞானம் அந்யதாஜ்ஞானம் விபரீத ஜ்ஞானம் முதலியவற்றால் தோன்றிய கருத்துக்களிருக்கும். ஏனெனில் அவை மனிதரால் இயற்றப்பட்டவை. ஆனால் மனிதரால் இயற்றப்படாததாய் என்றென்றும் அழியாது உள்ளதான இவ்வேதத்தில் மேல் சொன்னவற்றிற்கு இடமே இல்லை. மேலும் இன்றுவரை ஓரெழுத்தையும் மாற்றாது பல்லாண்டுகளாக ஒரே முறையில் ஓதுதல் - அத்யயனம் செய்தல் என்ற முறையிலேயே வைதிகர்கள் காத்து வருகின்றனர்கள். மநுஸ்ம்ருதி முதலான தர்ம சாஸ்திரங்கள் வேதக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை.

எனவே வேதத்தை வேதாத் சாஸ்த்ரம் பரம் நாஸ்தி வேதத்திலும் உயர்ந்த பிறிதொரு சாஸ்த்ரமில்லை எனப்புலவர் புகழ்கின்றனர். மேலும் இவ்வேதத்தின் முடிவாகிய உபநிஷத்துக்களில் பகவானைப் பற்றிய குணங்கள் செல்வங்கள் உருவம் முதலியவை விளக்கப்பட்டுள்ளன வாதலால் அவற்றினறிவு நமக்குக் கிடைக்கின்றது. எனவே இதனை அறிவில் சிறந்தோர் போற்றுகின்றனர். (54)

तव द्वितीया श्रुतिरुच्चकैरसावनङ्गभावानुगुणा गुणाम्बुधे ।
वशे निधायैतमशेषशेषिणं करोति मातस्तव कर्मकारकम् ॥

தவ த்விதீயா ச்ருதிருச்சகைரஸௌ
அநங்கபாவாநுகுணா குணாம்புதே ।
வசே நிதாயைதம் அசேஷசேஷிணாம்
கரோதி மாதஸ்தவ கர்மகாரகம் ॥

குணாம்புதே - குணக்கடலான
மாத: - தாயே
உச்சகை: - உயர்ந்து தோன்ற உள்ளதும்
அநங்க - மன்மதனின்
பாவ - பிறப்புக்கு
அநுகுணா - அதற்கு அநுகுணமாக உள்ள
அஸௌ த்விதீயா ச்ருதி: - முன் சொன்ன யஜுஸ்ஸும் வேதமுமான இவ்விடக்காது
அசேஷசேஷிணாம் - அகில உலகங்களுக்கும் தலைவரான
ஏதம் - இந்நாராயணனை
தவ வசே - உனக்கு அதீனமாக இருக்கும் நிலையில்
நிதாய - வைத்து
கர்மகாரகம் - தன்னைத் தோத்திரிப்பவனாக
கரோதி - செய்கிறது.

காது தமதழகின் மிகுதியால் பகவானை வசீகரித்துத் தம்மைத் தோத்திரம் செய்யும்படிச் செய்கின்றது என்பது கருத்து. (55)

दीव्यत्कर्णसुवर्णकुण्डलमये दीप्ताग्निकुण्डे ज्वल-
द्रत्नाङ्गारघने हरेर्धृतिमयीं हुत्वाहुतिं तावके ।
भृङ्गाध्वर्युरनङ्गदीक्षितवृतो झङ्कारमन्त्रान् जपन्
वाराशेर्दुहितुः प्रदक्षिणविधिं वारान् विधत्ते बहून् ॥ ५६

தீவ்யத் கர்ண ஸுவர்ண குண்டலமயே தீப்தாக்நிகுண்டே, ஜ்வலத்
ரத்நாங்காரகநே ஹரே: த்ருதிமயீம் ஹுத்வாஹுதிம் தாவகே
ப்ருங்காத்வர்யுர் அநங்க தீக்ஷிதவ்ருத: ஜுங்கார மந்த்ராந் ஜபந்
வாராசே: துஹிது: ப்ரதக்ஷிண விதிம் வாராந் விதத்தே பஹூந் ॥

வாராசே: - பாற்கடலின்
துஹிது: - பெண்ணே

அநங்க நிக்ஷித வ்ருத: - யாகம் செய்யவேண்டும் என்ற வ்ரதத்தை மேற்கொண்ட மன்மதனுல் துணையாக வேண்டப்பட்ட
ப்ருங்க - வண்டாகிய
அத்வர்யு: - யாகத் துணைவன்
குண்டலமயே - காதிலுள்ள தங்கத்தோடாகிய
ஜ்வலத் - ஜ்வாலைகளுடன் கூடிய
ரத்நாங்கார - ரத்நமாகிய நெருப்பில்
கடே - அடர்ந்ததும்
தாவகே - உன்னுடையதும்
தீப்த அக்நி குண்டே - ஒளிவிடுவதும் வட்ட வடிவத்ததுமான அக்நி குண்டத்தில்
ஹரே: - பகவானுடைய
த்ருதிமயீம் - மநோதைர்யமாகிய
ஆஹுதிம் - ஹோமத்ரவ்யத்தை
ஹுத்வா - ஹோமம் செய்து
ஜங்கார - ரீங்காரமாகிய
மந்த்ராந் - மந்த்ரங்களை
ஜபந் - மெல்லிய குரலில் ஒலித்துக் கொண்டு
பஹுஶ்வாராந் - பலமுறை
ப்ரதக்ஷிண விதிம் - வலம் வருவதை
வித்தே கிம் - செய்கின்றதா?

ரத்நங்கள் இழைத்துச் செய்யப்பட்ட காதணியினருகில் ரீங்காரமிட்டுக் கொண்டு சுற்றும் வண்டைக்கண்ட பகவான் மன்மத சாபல்யத்தால் கவரப்பட்ட மனமுடையவனுனன் என்கின்றுர். இக்கருத்தை யாக வடிவத்தில் உத்ப்ரேக்ஷிக்கின்றுர்.

சதுரம், வட்டம் போன்ற வடிவத்ததான குண்டங்களில் நெய், ஸமித், போன்ற பொருள்களை மந்த்ரத்துடன் ஹோமம் செய்வதே யாகமாம். நான் இப்பெயர் கொண்ட யாகத்தைச் செயயப் போகிறேன் என ஸங்கல்பம் செய்தபின் அதற்குரிய வ்ரதங்களை மேற் கொள்பவன் யஜமாநன் அல்லது கர்த்தா என வழங்கப்படுவன். இந்த யாகத்தைச் செய்வதற்கு அத்வர்யு, ஹோதா, ஆக்நீத்ரன், ப்ரஹ்மா போன்ற பெயர்களைக் கொண்ட பலரின் துணை வேண்டும். இவர்களுள் அத்வர்யு என்பவன்தான் யாகாக்நியில் பொருள்களைச் சேர்ப்பவன். தற்போது நடக்க இருக்கும் யாகத்தில் முக்கியமான யஜமாநன் மன்மதன். அவன் செய்யவிருக்கும் யாகம் ஆணையும் பெண்ணையும் சேர்த்து வைப்பது. இதை ஸங்கல்பம் செய்து கொண்டு வண்டை அத்வர்யுவாக வரித்துக் கொண்டான். துணைவனாக்கிக் கொண்டான். அவ்வேண்டுகோளை ஏற்ற வண்டாகிய அத்வர்யு ஹோமம் செய்யத் தொடங்கினுன். அதற்கு வேண்டிய ஹோம குண்டமாக இந்திராவின் வட்டவடிவமான காதணி ஆயிற்று. நப்பாசைக்கு இடங்கொடேன் என்ற மனேநிலையாம் தைர்யமாகிய ஆஹுதியை - ஹோமப்பொருளை - ஹோமம் செய்து யாகத்தை முடித்துவிட்டான் வண்டத்வர்யு. யாகம் முடிந்தபின் "அக்நே நய" என்ற மந்த்ரத்தை மெல்லிய குரலில் சொல்லிக் கொண்டு வலம் வருவதாகிய - உபஸ்தாநம் - என்ற செயலைத் தமது ரீங்காரத்தால் செய்து கொண்டு காதினருகில் பலமுறை சுற்றுகிறுனா என்ன? என்று உத்ப்ரேக்ஷிக்கின்றுர்.

देवानां मधुरं स्वतः स्तुतिवचो देवि स्वतोऽसुन्दरं
मादृग्बालकजल्पितं च जगतीमातः श्रुती याति ते ।
तत्राद्यं तदवस्थमेव चरमं तत्तुल्यतां गाहते
मुक्तं शुक्तिषु मौक्तिकं घनपयोमुक्ता तु नैवान्यथा ॥

தேவானாம் மதுரம் ஸ்வத: ஸ்துதிவசோ தேவி ஸ்வதோ (அ) ஸுந்தரம்
மாத்ருக்பாலகஜல்பிதம் ச ஜகதீமாத: ஶ்ருதீ யாதி தே ।
தத்ராத்யம் ததவஸ்தமேவ சரமம் தத்துல்யதாம் காஹதே
முக்தம் ஶுக்திஷு மௌக்திகம் கநபயோ முக்தா து நைவாந்யதா ॥

ஜகதீமாத : உலகத்தாயான
தேவி - தேவமனைவியே!
தேவானாம் - தேவர்களுடைய
ஸ்வத:மதுரம் - இயல்பாகவே இனிய
ஸ்துதிவச: - தோத்திர வாக்குகளும்
ஸ்வத: அஸுந்தரம் - இயல்பாகவே இனிமையற்ற
மாத்ருக் - என்போன்ற
பாலகஜல்பிதம் ச - சிறுவரின் உளறலுமாகிய இரண்டும்
தே ஶ்ருதீ - உனது காதுகளை
யாதி: - அடைகின்றன
தத்ர - அவ்விரண்டினுள்
ஆத்யம் - முதலான தேவர்துதி
ததவஸ்தமேவ - முன்போலவே உள்ளது
சரமம் - கடையதான
[illegible] எனது உரைகள்
தத்துல்யதாம் - மதுரமாக இருக்கும் தன்மையை
காஹதே - அடைகின்றது
ஶுக்திஷு - சிப்பிகளுள்
கநபயோமுக்தம் - மேகத்தால் விடப்பட்ட
மௌக்திகம் - முத்தாம் உயர்நிலையை
பஜதே - அடைகின்றது
முக்தா து - முத்தோவெனின்
நைவாந்யதா - வேறு நிலையை அடைவதே இல்லை

நான்முகன் இந்திரன் போன்ற தேவர் உலக மாதாவைப் போற்றுகின்றனர். அவர் யாவும் அறிந்தவரானமையின் அவர் செய்யும் செயலும் இயல்பிலேயே இனிதாய் அமைந்துள்ளது. என் போன்றோர் யாதுமறியாதவரானமையின் எங்கள் துதி அப்படி அமைவதில்லை. அப்படியிருந்தும் யாமனைவரும் உனது குழந்தைகளானமையின் இரண்டையும் நீ கேட்கத்தான் செய்கிறாய். உயர்வற்ற எனது துதியும் தேவர் துதியைப் போல் உனக்கு மகிழ்வைத்தரத்தான் செய்கின்றது. இது உலகியற்கை. முத்துச் சிப்பியினுள் மழைத்துளி விழுந்தால் அவ்வெளிய நீரே உயர்ந்த முத்தாக மாற்றமடைகின்றது. முத்தோவெனின் அதே நிலையில் நிற்கின்றதேயன்றி உயர்ந்த வேறு நிலையை

स्फुरन्मुक्ताकान्तिस्फुटसलिलमग्र्यारुणमणि
प्रभाकल्हाराढ्यं प्रियनयनमीनैकशरणम् ।
हृताशेषक्लान्तिं हरितुपलनीलोत्पलघनं
तटाकं ताटङ्कान्तरमुषसि सेवे तव रमे ॥

ஸ்புரந்முக்தாகாந்திஸ்புடஸலிலமக்ர்யாருணமணி -
ப்ரபாகல்ஹாராட்யம் ப்ரியநயநமீநைகஶரணம் ।
ஹ்ருதாஶேஷக்லாந்திம் ஹரிதுபலநீலோத்பலகநம்
தடாகம் தாடங்காந்தரமுஷஸி ஸேவே தவ ரமே ॥

ரமே - இலக்குமியே
ஸ்புரத் - ஒளிரும்
முக்தாகாந்தி - முத்தின் காந்திபோல்
ஸ்புட - நிர்மலமான
ஸலிலம் - ஜலத்தை உடையதும் நிர்மலஜலம்போல் ஒளிவிடும் முத்தின்காந்தியை உடையதும்
அக்ர்ய - உயர்ந்த
அருணமணி - சிவந்தமணியின்
ப்ரபா - காந்திபோன்ற
கல்ஹாராட்யம் - வாஸனையை உடையதும் கல்ஹாரப்பூ போன்ற உயர்ந்தரத்தின் ஒளியை உடையதும்
ப்ரிய - பகவானுடைய
நயநமீந - கண்போன்ற மீன்களுக்கு
ஏகஶரணம் - எப்போதும் வாழுமிடமானதும்: மீன் போன்ற பகவானின் கண்களின் பார்வைக்கு முக்கிய விஷயமானதும்
ஹ்ருத - போக்கடிக்கப்பட்ட
அஶேஷக்லாந்திம் - அனைவரின் களைப்பை உடையதும்
ஹரிதுபல - மரகதம் போன்ற
நீலோத்பல - நீலமான குவளைகளால் அடர்ந்ததும் கரும்பச்சை நிறமுடைய மரகதக்கற்களை பதிபாக உடையதும்
தாடங்காந்தரம் - காதணியின் நடுப்பகுதியாகிய
தடாகம் - குளத்தை
உஷஸி - விடியற்காலையில்
ஸேவே - குடைந்தாடுகிறேன் மனதால் நினைக்கிறேன்

கமலையின் காதணியையும் அதன் நடுப்பக்கத்தையும் வர்ணிக்கின்றார். நடுப்பகுதியைக் குளமாக உருவகித்துள்ளார். இரண்டிற்கும் பொதுவான சிலேடைச் சொற்களால் அமைந்துள்ளது செய்யுள். முதலில் குளத்தின் கருத்து விளக்கப்படுகிறது

குளத்திலுள்ள ஜலம் அழுக்கற்றுத் தூயதாய் தெளிந்ததாய் முத்துபோல் ஒளிர்கிறது. உயர்ந்த சிவந்த ரத்னத்தின் ஒளிபோல் மனதை மகிழ்விக்கும் சிவந்த கல்ஹாரப்பூவின் மணமுடையதாய் உள்ளது. பகவானின் கண் போன்றது. நீண்டு

யகன்ற மீன்களுக்கு முக்கிய வாழிடமாய் உள்ளது. அதில் ராடுபவரின் களைப்பைப் போக்குவதாக உள்ளது. ரும்பச்சை நிறமுள்ள மரகத மணிபோல் நீலமான ந்பலப்பூக்கள் மிகுதியாக அடர்ந்துள்ளன. இத்தகைய ாதணியின் நடுப்பகுதியாகிய குளத்தில் விடியற்காலத்தில் நடைந்தாடுகிறேன் என்கிறார். (56)

ணி காதணியைப் பற்றிய கருத்துக்கள்

தூய ஜலம் போல் வெண்மையான முத்துக்கள் ாதணியிலுள். கல்ஹாரம் எனப்படும் பூ போன்ற படிவமுடைய உயர்ந்த மணியின் ஒளி அதில் வீசுகின்றது. மீன் போன்ற பகவானின் கண்கள் இதிலேயே அமிழ்ந்துள்ளன. யனைவர் ஆர்த்தியையும் துன்பத்தையும் - அழிக்கவல்லது. ச்சைமரகதக் கற்கள் மிகுதியாக அதில் இழைக்கப் பட்டுள்ளன. இத்தகைய காண பூஷணத்தை பின்மாலையில் யானிக்கிறேன் என்கிறார்.

ஸௌகந்திகந்து கல்ஹாரம் என்ற நிகண்டு கல்ஹாரம் என்ற சொல் ஸௌகந்தம் என்ற பொருளையும் உடையது என்கிறது.

सुवर्णताटङ्कमुनिः श्रुतो स्थिरः प्रपञ्चमुक्ताभ्युदयो दयोदधे ।
प्रकाशितार्चिः सरणिः प्रिये हरेः - चकास्ति ते चक्रधराभिनन्दितः ॥

ஸுவர்ணதாடங்கமுநி: ச்ருதௌ ஸ்திர:
ப்ரபஞ்சமுக்தாப்யுதயோ தயோததே ।
ப்ரகாசிதார்ச்சி: ஸரணி: ப்ரியே ஹரேர்
சகாஸ்தி தே சக்ரதராபிநந்தித: ॥

தயோததே - கருணைக்கடலே
ஹரிப்ரியே - நாராயணபத்நீ
ஸுவர்ணதாடங்கம் - தங்கக்காதணி
ச்ருதௌஸ்திரம் ப்ரபஞ்ச - காதை விட்டுப் பிரியாது நிலைத்திருப்பதாய்
முக்தாப்யுதய: - முகத்தின ஒளியுடைய
ப்ரகாசிதார்ச்சி - புலப்படும் ஒளிவீச்சை உடையதாய்
சக்ரதராபிநந்தித: - பகவானால் போற்றப்படுவதாய்
சகாஸ்தி - விளங்குகிறது

மற்றொரு பொருள்

ருதௌஸ்திர: வேதத்தில் விதிக்கப்பட்ட வர்ணாச்ரம தர்மங்களை என்றும் செய்பவனாய்
ஸவர்ண - உயர்ந்த ஜாதியைச் சார்ந்த
டங்கமுநி - காதணியாகிய யோகி
ரபந்த முத்து - தீவினை தொலைந்தபின் கிட்டவிருக்கும் மோக்ஷச்செல்வத்தை உடையவனாய்

ப்ரகாபிதார்ச்சிஸ்ஸரணி கருணையால் புலப்படுத்தப் பட்ட அர்ச்சிராதி என்ற வழியை உடையவனாய்
ஸக்ரதாராபிநந்தித: ஸ்ரீ வைகுண்டத்தை அடைந்து பகவானால் ஸந்தோஷிப்பவர் மோக்ஷஸாம் ராஜ்யத்தைப் பெற்று
ஸகாஸ்தி ஜ்ஞானவிகாஸ முடையவனாய் விளங்குகிறான்.

காதணியை உயர்ந்த யோகியாக உருவஹிக்கிறார். இந்த யோகி அவரவர்களுக்கு வேதத்தில் விதிக்கப்பட்டுள்ள சடங்குகள் அனைத்தையும் தப்பாமல் செய்பவனாம். ஆகவே இவன் தீவினை தொலைந்தபின் மோக்ஷம் போகும்போது இவ்வாத்மா ''அர்ச்சிராதி'' என்ற வழியாகச் செல்லவேண்டும். எனவே பகவான் இவனிடம் கருணைகொண்டு அவ்வழியைப் புலப்படுத்தினான். பின் அவ்வழியே சென்று ஸ்ரீ வைகுண்டத்தை அடைந்து மோக்ஷஸாம்ராஜ்யமாகிய கைங்கர்யத்தைப் பெற்று ஜ்ஞான விகாஸமுடையவனாய் விளங்குகிறான் எனக் காதணியை முக்தனுக்குச் சமமாக புகழ்கிறார். முதலில் சொன்ன கருத்து எளிதானதே

तिलप्रसूनं तुलयत्यसौ जगत् सवित्रि नासा तव सारसालये।
तदञ्चलोदञ्चि तुषारविप्रुषा समानतामेति तदग्रमौक्तिकम्॥

திலப்ரஸூநம் துலயத்யஸௌ ஜகத்
ஸவித்ரி நாஸா தவ ஸாரஸாலயே
ததஞ்சலோதஞ்சி துஷாரவிப்ருஷா
ஸமாநதாமேதி ததக்ரமௌக்திகம்

ஸாரஸாலயே - தாமரையில் வாழ்பவளே
ஜகத்ஸவித்ரி - உலகமாதாவே
அஸௌ தவ நாஸா - உமது இம்மூக்கு
திலப்ரஸூநம் - எள்ளுப்பூவை
துலயதி - ஒத்துள்ளது

ததக்ர - அம்மூக்கின் நுனியிலுள்ள
மௌக்திகம் - முத்து
ததஞ்சலே - எள்ளுப்பூ நுனியில்
உதஞ்சி - ஸம்பந்தித்துள்ள
துஷார விப்ருஷா பனித்திவலையுடன்

மகரந்தம் - தேனாக இருக்கும் ஏதி - அடைந்துள்ளது
தன்மையை

இனி ஐந்து ச்லோகங்களால் மூக்கை வர்ணிக்கிறார். மூக்கு எள்ளுப்பூ போன்றுள்ளது என்கிறார். எள்ளுப்பூ அடியில் குறுகி நுனியில் விரிந்து இரு பொத்தல் உள்ளதாக இருக்கும். மூக்கும் அது போலிருப்பதால் அது மூக்குக்கு உபமானமாயிற்று. அப்பூவின் நுனியில் தங்கியுள்ள பனித்துளி வெயிலில் பளபளக்குமாகையால் அது மூக்கின் நுனியிலுள்ள முத்து போன்றதாயிற்று.

नासा तवासौ नववंशवल्ली कासारजावासिनि कात्र शङ्का ।
प्रलम्बते तत्र यदम्ब मुक्ताफलं न तेदं गलितं हि तस्याः ॥

நாஸா தவாஸௌ நவ வம்சவல்லீ காஸாரஜாவாஸிநி காத்ர சங்கா
ப்ரலம்பதே தத்ர யதம்ப முக்தா பலம் நதேதம் கலிதம் ஹி தஸ்யா: ॥

காஸாரஜாவாஸிநி - தாமரையில் வாழ்பவளே
அம்ப - தாயே
தவ - அஸௌ நாஸா - உமது இம்மூக்கு
நவ வம்சவல்லீ - புதிதாக முளைத்த மூங்கிலின் முளையாம்
காத்ர சங்கா - இதில் ஸந்தேஹம் ஏன்!
தத்ர - முளையில்
தஸ்யா: - மூங்கிலிருந்து
கலிதம் - நழுவிய
இதம் முக்தாபலம் - இம்முத்து
தத்ர - அம்மூக்கில்
ப்ரலம்பதே நநு - புலப்படுகின்றதன்றோ
ஹி - ஆச்சர்யம்

தாயின் மூக்கைப் புதிதாக முளைத்த மூங்கில் முளையாக உத்ப்ரேக்ஷிக்கின்றார். கடல், கரும்பு, மூங்கில், போன்றவற்றை முத்தின் பிறப்பிடங்களாகப் புலவர் கூறுவர். தாயின் மூக்கிலிருந்த முத்து முன்பு நழுவிவிட்டது. ஆனால் அம்முத்து இப்போது மூக்கில் புலப்படுகிறது. ஆகவே இம்மூக்கைப் புதிதாக முளைத்த மூங்கிலின் முளை என்கின்றார். முளையாக இருந்தும் தமது முத்தை விட்டுப் பிரியாது விளங்குவது ஆச்சரியம் என்கிறார். (61)

श्रीरास्यकान्तिजलधौ स विभाति नासासेतुस्तवाद्भुतगतिः कलनेन यस्य ।
नाथः समेति न विदेहजयान्वयं हा लङ्केशपाशकलनादपयातधैर्यः ॥

ஸ்ரீ ராஸ்யகாந்திஜலதௌ ஸ விபாதி நாஸாஸேதுஸ்தவாத்புதகதி: கலநேந யஸ்ய
நாத: ஸமேதி ந விதேஹஜயாந்வயம் ஹா லங்கேசபாசகலநாதபயாததைர்ய: ॥

ஹே ! ஸ்ரீ - இலக்ஷ்மியே!
வ - உமது-
ஸ்யகாந்தி முக ஒளியாகிய
லதௌ - கடலில்
அத்புத - ஆஶ்சர்யத்தை
தி: - அடையும் வழி
ப: - ப்ரஸித்தமான
ஸாஸேது - மூக்காகிய பாலம்
பாதி - விலக்ஷணமாக விளங்குகிறது
ஸ்ய - ப்ரஸித்த ஸேதுவை
ங்க்ஷேபபாப - நீசனான ராவணனைப் பார்த்து
லநாத் - கட்டியதால்
அபயாததைர்ய - தைர்யமிழந்து பயந்த
நாத: - ராமன்
விதேஹஜயா - ராவணனால் அபஹரிக்கப்பட்ட ஸீதை
அந்வயம் - ஸம்பந்தத்தை
நைதி - அடையவில்லையோ
கேஶபாஶ - கூந்தல் தொகுதியை
கலநாத் - கண்டதால்
அலம் அபயாததைர்ய - முன்பே தைர்யம் இழந்த
நாத: - ராமன்
யஸ்ய கலநேந - மூக்காகிய ஸேதுவைக் கண்டதால்
விதேஹஸ்ய - மன்மதனுடைய
ஜயாந்வயம் - வெற்றித் தொடர்பை
ந ஸமேதி - அடையவில்லையோ
ஹா - ஆஶ்சர்யம்

ஸீதையின் மூக்கை அணையாக உருவகிக்கின்றார். இம்மூக்காகிய ஸேது லக்ஷ்மியின் அளவிடற்கரிய முக ஒளியாகியக் கடலில் அமைந்துள்ளது. அதன் வழியே சென்றால் உயர்ந்ததோராஶ்சர்யம் கிட்டும். ஆகவே இது ராமன் கட்டிய ப்ரஸித்த ஸேதுவிலும் உயர்ந்தது. ராமன் தான் கட்டிய ஸேதுவின் வழியாக லங்கையை அடைந்தான். அங்கு அவன் பார்த்தது நீசனான ராவணனை. அவனைக் கண்டதும் ராமனிடமிருந்த தைர்யமெல்லாம் பறந்ததோடு அவ்விடத்தே பயம் குடி கொண்டது. எனவே ராவணன் அபஹரித்துச் சென்ற ஸீதையை ஏற்க மறுத்தான். ப்ரஸித்த ஸேதுவின் சிறப்பாவது ராவணன் பயத்துக்கு ராமனை உள்ளாக்குகையும், ஸீதையை அணுகமுடியாமற் செய்ததுமே. மூக்கு ஸேதுவின் வழியே சென்ற ராமன் கூந்தலழகைக் கண்டதுடன் மன்மதனுக்கு வயமாயினன். ஆகவே ராமஸேதுவினும் உயர்ந்தது இந்த ஸேது என்கிறார்.

''பாரோ ரஜ்ஜௌ ஸ நிந்தார்த்த: க்ஷத்ராதிப்ய: பரோ யதி'' என்ற ரத்நமாலை என்கிற நிகண்டு பார: ஶப்தத்துக்கு நீசம் என்ற பொருளுடைமையைத் தெரிவிக்கிறது.

(தொடரும்)

भ्रूसूत्राभ्यामूर्ध्वमाबध्य मिन्वन्
नासावंशस्तम्भमम्भोधिजे ते ।
तत्र स्थित्वा ताण्डवं संविधत्ते
चित्रं क्रीडंश्चित्तभूर्नाट्य जीवी ॥

ப்ரூஸூத்ராப்யாமூர்த்வமாபத்ய மிந்வந்
நாஸாவாம்ஶஸ்தம்பமம்போதிஜே தே ।
தத்ர ஸ்தித்வா தாண்டவம் ஸம்விதத்தே
சித்ரம் க்ரீடம்ஶ்சித்தபூர் நாட்யஜீவீ ॥

அம்போதிஜே - பாற்கடலின் பெண்ணே!
சித்த பூ: - மன்மதனாகிய
நாட்யஜீவி - நடனமாடுபவன்
நாஸாவம்ஶஸ்தம்பம் - மூங்கில் போன்ற மூக்கையே கம்பமாகக் கொண்டு
ப்ரூஸூத்ராப்யாம் - புருவமாகிய கயிறுகளால்
ஊர்த்வம் - நுனியில்
ஆபத்ய - இருபுறமும் கட்டி
மிந்வந் - பள்ளத்தில் அசையாது நட்டு
தத்ரஸ்தித்வா - நுனியில் பயமற்று நின்று
சித்ரக்ரீடம் - ஆப்சர்யத்தை விளைவிக்கும்
தாண்டவம் - நடனத்தை
விதத்தே கிம் - செய்கின்றானா?

முன் காலத்தே க்ராமங்களில் கழைக்கூத்தாடி என்ற சிலர் கூட்டம் கூட்டமாக நெல் அறுவடை காலங்களில் வருவர். இந்த ஊர் இந்த கூத்தாடியைச் சார்ந்துள்ளது என்ற கட்டுப்பாடும் அவர்களுள் உண்டு. முப்பது அடிக்குக் குறைவில்லாத மூங்கிலைப் பள்ளத்தில் நட்டு அதன் நுனியிலிருந்து கயிறால் இரு புறமும் இழுத்துக் கட்டியிருப்பர். அதன் நுனியிலிருந்து ஏறி நின்று கொண்டு நடனமாடுவர். கழைமீது - மூங்கில் மீது கூத்தாடுவதால் கழைக்கூத்தாடி எனப்பட்டனர். கிராமத்தவர் ஒவ்வொருவரும் நெல் தருவர். அதுபோல் இருபுறங்களில் புருவங்களாகிய கயிறால் கட்டப்பட்ட கழை போன்ற மூக்கு பகவானுக்கு மகிழ்ச்சியைத் தருகிறதென்கிறார்.

(63)

दिव्यं ददाति नवचम्पकमम्ब गन्धं
त्वद्घ्राणजन्मनि तदेव सुधाब्धिकन्ये ।
गृह्णाति ते बहुविधं कृतिनो ददानाः
जन्मान्तरे समधिकं विभवं लभन्ते ॥

திவ்யம் ததாதி நவசம்பகமம்ப கந்தம்
த்வத்க்ராணஜந்மநி ததேவ ஸுதாப்திகந்யே
க்ருஹ்ணாதி தே பஹுவிதம் க்ருதிநோ ததாநா:
ஜந்மாந்தரே ஸமதிகம் விபவம் லபந்தே ॥

ஸுதாப்திகந்யே - பாற்கடல் குமரியான
அம்ப - தாயே
நவசம்பகம் - அப்போதலர்ந்த செண்பகப்பூ
திவ்யம் - மிகவுயர்ந்த
கந்தம் ததாதி - அச்செண்பகமே
த்வத்க்ராண ஜந்மநி - உனது மூக்காகப் பிறப்பு எடுத்தபோது
தம் - முன்பு தான் தந்த ஏகவிதவாஸனையையே
பஹுவிதம் - பல புஷ்பங்களின் வாஸனைகளாக
க்ருஹ்ணாதி - க்ரஹிக்கின்றது (இதுதக்கதே)
க்ருதிநா: - வல்லவர்களாய்
ததாநா: - நல்லவருக்கு ஒன்றை அளிப்பவர்
ஜந்மாந்தரே - மறுபிறவியில்
ஸமதிகம் - பல்வகையான
விபவம் - மேன்மைகளை
லபந்தே - அடைகின்றனர்

கடல் குமரியின் மூக்கைச் செண்பகப்பூவாக உருவகிக்கின்றார். இப்போது ஸ்ரீயின் மூக்காக மாற்றமடைந்துள்ள செண்பகம் தாம் முன்பு செண்பகப்பூவாக இருந்தபோது தமது வாஸனை ஒன்றை மட்டுமே நுகர்வோர்க்கு ஈந்து வந்தது. ஒன்றை மட்டும் ஈந்த செண்பகம் உன் மூக்காகப் பிறப்பெடுத்துள்ள தற்போது முன்புதாம் தந்த வாஸனையோடு ஒத்த பல பல புஷ்பங்களின் வாஸனைகளை நுகர்கின்றது. அனுபவிக்கின்றது. இது தகுதியுடையதே. நல்ல ஸாமர்த்யம் உள்ளவர்கள் மறுபிறவியில் தாம் பல நன்மைகளைப் பெற வேண்டும் என்ற எண்ணம் உடையவர்களாய் நன் மனிதரைத்தேடி அவர்களுக்குத் தம்மால் முடிந்ததைத் தருகின்றனர். அவர் தமது மறுபிறவியில் தாம் முன்புதானம் செய்த இடத்தின் மேன்மையால் பல்வகை நன்மைகளைப் பெறுகின்றனர். அவர் அப்படிப் பெறுவர் என்பதை ஶாஸ்த்ரங்கள் கூறுகின்றன. ஆகவே இது தக்கதே. (64)

मदनजननि नासामौक्तिकं वेद्मि मल्ली-
मुकुलमिति सुगन्धिश्वासमन्दानिलेन ।
तदुपरि यदजस्रं तद्विकासप्रतीक्षं
दृगलियुगलमेतद् दृश्यते सावधानम् ॥

மதநஜநநி நாஸாமௌக்திகம் வேத்மி மல்லீ
முகுலமிதி ஸுகந்திச்வாஸமந்தாநிலேந
ததுபரி யதஜஸ்ரம் தத்விகாஸப்ரதீக்ஷம்
த்ருகலியுகலமேதத் த்ருச்யதே ஸாவதாநம் ॥

மதநஜநநி - மன்மதன் தாயே
ச்வாஸமந்தாநிலேந - மூச்சுக் காற்றாகிய மணமுள்ள மெல்லிய காற்றின் தொடர்பால்
ஸுகந்தி - நறுமணமுள்ள
மந்தாநிலேந - ஸாயம் வீசும் தென்றலால் பெற்ற
ஸுகந்தி - மிகுதியாகத் தோன்றிய மணத்தைப் பெற்ற
நாஸாமௌக்திகம் - மூக்கின் நுனியிலுள்ள முத்தை
மல்லீமுகுலமிதி - மல்லிகை மொட்டு என
வேத்மி - கூறுவேன்
ஏதத் - இந்த
த்ருகலியுகலம் - இரு கண்களாகிய வண்டுகள்
அஜஸ்ரம் - வேறிடமும் கவனிக்காததாய்
தத்விகாஸ - அதன் மலர்ச்சியையே
ப்ரதீக்ஷம் - எதிர்பார்த்துக் கொண்டு
த்ருச்யதே - காத்துக் கொண்டுள்ளதோ

இனி நான்கு ச்லோகங்கள் மூக்கின் நுனியிலுள்ள முத்தினை வர்ணிப்பவை

தாயின் மூக்கு நுனியிலுள்ள முத்தை மல்லிகையின் மொட்டென்கிறார். முத்து ஸ்ரீயின் மெல்லியதும் நறுமணமுள்ளதுமான மூச்சுக்காற்றால் தானும் மணத்தைப் பெற்றுள்ளது. மொட்டோவெனில் ஸாயங்காலத்தில் வீசும் மெல்லிய தென்றலின் தொடர்பால் மலரவிருப்பதால் மிக்கமணம் உடையதாக உள்ளது. மேலும் இம்முத்தின் மேல்புறத்தில் இரு கண்களாகிய வண்டுகள் இம்மல்லிகை மொட்டு எப்போது மலரப்போகிறது; மலர்ந்ததும் மதுவைப் பருகவேண்டும் என்ற எண்ணத்தால் வேறெங்கும் கருத்தைச் செலுத்தாது இதையே உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றன. இக்காரணங்களால் முத்தை மல்லிகை மொட்டெனக் கூறுகிறேன் என்கிறார். (65)

हसितरुचिसितांशुकं वसाना
श्वसितसमीरनटेन नाटयमाना ।
जनयति जननि त्वदीयनासा-
मणिगणिका मधुसूदनस्य मोदम् ॥

ஹஸிதருசிஸிதாம்ஶுகம் வஸாநா
ஶ்வஸிதஸமீரநடேந நாட்யமாநா ।
ஜநயதி ஜநநி த்வதீயநாஸா-
மணிகணிகா மதுஸூதநஸ்ய மோதம் ॥

ஜநநி - உலகத்தாயே!
ஹஸிதருசி - சிரிப்பின் வெண்மைபோல்
ஸிதாம்ஶுகம் - மெல்லிய வெண்மையான காந்தியை
வஸாநா - தாங்குவதாய்
ஶ்வஸிதஸமீர - மூக்குக்காற்றாகிய
நடேந - நட்டுவனாராலே
நாட்யமாநா - கற்றுத்தரப்பட்ட நாட்டியமுடையவளாய்
ஸமீரநாட்யமாநா - மூக்குக்காற்றால் அசைவதாய்
த்வதீயநாஸாமணி - உனது மூக்கு முத்தாகிய நாட்டியப்பெண்
மதுஸூதநஸ்ய - பகவானுக்கு
மோதம் - தனது நடனத்தைக் கண்டதால் உண்டாகும் ஸந்தோஷத்தை - தனது அழகைக் கண்டதால் உண்டாகும் ஸந்தோஷத்தை
ஜநயதி - தோற்றுவிக்கின்றது

மூக்கிலுள்ள முத்தை உருவகிக்கின்றார் நடனமாதர்கள் வெண்மையானதும் மெல்லியதுமான ஆடையை அணிந்துகொண்டு நடிப்பர். முத்து மந்தஹாஸக் காந்தியாலே மேலும் வெண்மையைப் பெறுகிறது. அம்ஶுகம் - வஸ்த்ரம், காந்தி. மூச்சுக்காற்றாம் நட்டுவனார் முத்தாகிய நடனப் பெண்ணுக்கு நாட்டியத்தைக் கற்பிக்கின்றார். முத்து மூச்சுக் காற்றால் அசைந்தாடுகிறது. மூக்கு நுனியிலுள்ள முத்தாகிய தாஸி, தாஸிபோன்ற முத்து பகவானுக்கு தனது நடனத்தை கண்டதால் உண்டாகும் ஸந்தோஷத்தையும், தனது மேன்மையைக் கண்டதால் உண்டாகும் ஸந்தோஷத்தையும் தோற்றுவிக்கின்றது.

கணிகா என்ற ஒருவகைப்பூ மதுஸூதனனாகிய வண்டுக்கு ஸந்தோஷத்தை தோற்றுவிக்கின்றது என்ற அர்த்தமும் தொனிக்கின்றது.

मुखविधुमधुराधरोष्ठसन्ध्या-
परिसरसीम्नि हरिप्रिये भवत्याः ।
भजति जननि नासिकाग्रमुक्ता-
फलमिह तामुदारतारलीलाम् ॥

முகவிதுமதுராதரோஷ்டஸந்த்யா-
பரிஸரஸீம்நி ஹரிப்ரியே பவத்யா: ।
பஜதி ஜநநி நாஸிகாக்ரமுக்தா-
பலமிஹ தாமுதாரதாரலீலாம் ॥

ஹரிப்ரியே - நாராயணபத்நீ	நாஸிகாக்ர - மூக்கின் நுனியிலுள்ளதுமான
பவத்யா: - எதிரில் புலப்படும் உமது	முக்தாபலம் - முத்து
முகவிது - முகமாகிய சந்திரனின்	உதார - ஒளியாலும், உருவத்தாலும் பெரிய
மதுர - அழகியதும்	தார - நக்ஷத்திரத்தின்
அதரோஷ்ட - கீழுதடு போன்ற	லீலாம் - விலாஸத்தை
ஸந்த்யா - ஸாயங்கால சிவப்பின்	பஜதி - அடைகின்றது
பரிஸரஸீம்நி - ஸமீபத்தில்	
தாரம் - தோஷமற்றதும்	

கிழக்கில் தோன்றிய சந்திரனின் கிரணங்களின் பரவலால் அழகுற்று விளங்கும், மேற்கு திசையிலுள்ள ஸாயங்காலச் சிவப்பின் ஸமீபத்திலிருக்கும் பெரிய நக்ஷத்திரத்துக்கு ஒப்பானது உமது முகத்திலுள்ள கொவ்வைக் கனி போன்ற உதட்டழகின் ஸமீபத்திலுள்ள முத்து என்பது கருத்து.

சந்திரனும், ஸாயங்காலச் செம்மையும் நக்ஷத்திரமும் உபமாநங்கள். முகமும் கொவ்வை போன்ற உதடும், முத்தும் உபமேயங்களாம்.

தாரம் என்ற சொல் குற்றமற்ற முத்தைக் குறிக்கும் என்று "தாரேத்யுக்சை" எனத் துடங்கி "கத்தமௌக்திகே" என முடிக்கிறது ரத்நமாலா என்ற நிகண்டு.

(67)

स्वरिपुरदभिया विवस्तु नासा-
बिलमिव मौक्तिकमेदतदग्रलग्नम् ।
सरसिजभवने निजप्रतीप-
श्वसितनिवारितमम्ब कम्पमेति ॥

ஸ்வரிபுரதபியா விலகுநாஸா-
பிலமிவ மௌக்திகமேதத்க்ரலக்நம் ।
ஸரஸிஜபவநே நிஜப்ரதீப-
ப்ஸ்வஸிதநிவாரிதமம்ப கம்பமேதி ॥

ஸரஸிஜ பவநே - தாமரையில் வாழ்பவளே
அம்ப - தாயே
மௌக்திகம் - முன்சொன்ன முத்து
ஸ்வரிபு - ஒளியில் தனக்குச் சத்ருக்களான
ரத - பற்களிடமிருந்துத் தோன்றிய
பியா - பயத்தால்
நாஸாபிலம் - மூக்குத்துளையுள்
விலகுரிய - புகுந்து மறைவதற்குப்போல்
ஏதத்க்ரலக்நம் - மூக்கின் நுனியில் ஸம்பந்தித்ததால்
நிஜப்ரதீப - தனக்கு எதிரியான
ப்ஸ்வஸித - மூச்சுக்காற்றால்
நிவாரிதமிவ - உந்தித்தள்ளப்பட்டதுபோல்
கம்பமேதி - நடுங்குகின்றது

தாமரையாளின் மூக்கு முத்தைப்போல், அவள் பற்களும் வெண்மைகளாயுள்ளன. இப்படி ஒத்த ஒளியுடைமையின் பற்கள் சத்ருக்களாயின. முத்தோ ஒன்று பற்களோ பல. எனவே பகைவர்களிடமிருந்து தனக்குத் துன்பம் உண்டாமோ என அஞ்சுவது இயல்பே. ஆகவே அம்மூக்கிலுள்ள துளையுள் புகுந்து மறைந்து கொள்வோம் என எண்ணிற்றாம் முத்து. எனவே லக்ஷ்மீயின் மூக்கு நுனியுடன் தொடர்பு கொண்டிருந்ததாம். ஆனால் என்னவாயிற்றெனின் மூக்கினுள் முன்னமே வாழ்ந்து கொண்டிருக்கும் மற்றொரு பகைவனாகிய மூச்சுக்காற்றால் உந்தி வெளியே தள்ளப்பட்டுவிட்டது. ஆகவே உள்ளே புகுவதற்கும் வழி இல்லாது போயிற்று இப்போது என் செய்யும் முத்து!! மூக்கின் உள்ளேயும் சத்ரு உள்ளான். அதன் புறத்தேயும் சத்ரு உள்ளான். இருபுறமும் சத்ருக்களின் தகைதலால் - முற்றுகையால் - நடுங்குகின்றதாம்!! மூச்சுக் காற்றால் உண்டாம் அசைவை இப்படிக் கற்பனை செய்துள்ளார்.

भवती स्मितचन्द्रिकाम्ब ते भवती सुन्दरदन्तरश्मिभिः ।
भवतीयमकिञ्चनस्य मे भवतीभवतापखेदशान्तये ॥

பவதீ ஸ்மிதசந்த்ரிகாம்ப தே பவதீ ஸுந்தரதந்தரச்மிபி: ।
பவதீயமகிஞ்சநஸ்ய மே பவதீபவதாபகேதசாந்தயே ॥

ஹே ச்ரியே - லக்ஷ்மியே	அகிஞ்சநஸ்ய - துயரத்தைப் போக்குவதற்குரிய வேறொன்றுமற்ற
ஸுந்தர - அழகிய	மே - எனக்கு
தந்தரச்மிபி: - பற்களின் காந்திகளால்	பவதாபகேதசாந்தயே - ஸம்ஸாரமாகிய கொடிய துன்பத்தைப் போக்குவதாக
பவதீ - நக்ஷத்ரங்களைப் பெற்றுள்ளதும்	பவதி - ஆகின்றது.
இயம் - கண்களுக்குப் புலப்படுவது மாகிய	
பவதீ - உனது	
ஸ்மிதசந்த்ரிகா - சிரிப்பாகிய நிலவு	

இனி ஆறு ஸ்லோகங்கள் சிரிப்பின் வர்ணனை. சிரிப்பை நிலவாக உருவகித்துள்ளார். சிரிக்கும்போது புலப்படும் பற்களின் காந்திகளை நக்ஷத்ரங்களாக உருவகித்துள்ளார். இதனால் சிரிப்பு இரவில் தோன்றியது என விளக்கியதாயிற்று. நான் ஸம்ஸாரமாம் கொடிய துன்பத்தால் வாட்டப்பட்டவன். அவ்வாட்டத்தைப் போக்குதற்கு வழியொன்றும் அறியாதவன். ப்ரபத்தி ஒன்றுக்கே உரியவன் என்றாராயிற்று. ஆகவே இச்சந்த்ரிகை எனது துன்பத்தைப் போக்குவதாக உள்ளது என்கிறார் மந்தஹாஸத்துடன் சேர்ந்த ஸ்ரீமுக ஸேவை ஸம்ஸாரதாபத்தை தணிப்பிக்கும் என்பது கருத்து. ❀

हसितं भवदीयमाद्यवर्णं जहदेतज्जननि स्वरूपगत्या ।
विदधे विधुपादजातमैत्रीमतिमन्दस्य किलोचितापराद्धिः ॥

ஹஸிதம் பவதீயமாத்யவர்ணம் ஜஹதேதஜ்ஜநநி ஸ்வரூபகத்யா ।
விததே விதுபாதஜாதமைத்ரீமதிமந்தஸ்ய கிலோசிதாபராத்தி: ॥

ஹே ஜநநி - தாயே	பாதஜாத - கிரணங்களின் கூட்டத்துடன்
பவதீயம் - உனது	மைத்ரீம் - நட்பினைத்தான்
ஹஸிதம் - மந்தஹாஸம்	விததே - செய்கின்றது
ஸ்வரூபகத்யா - தனது வடிவமைப்பில்	அதி - புன் சிரிப்புக்கு
ஆத்ய வர்ணம் - முதலெழுத்தான "ஹ"வை	அபராத்தி: உதட்டின் கடைசியிலிருக்கும்
ஜஹத் - விட்டதால் ஸிதம் என்ற வடிவத்தால்	உசிதா - அழகு கூட்டுவதாம்.
விதோ: - சந்திரனுடைய	

ஹஸிதம் என்ற சொல் சிரிப்பு என்ற பொருளுடையது. இதில் "ஹ" என்ற எழுத்துப்போய் விட்டால் "ஸிதம்" என்றாகிறது. இதற்கு வெளுப்பு என்று பொருள். புன் சிரிப்பு வெளுத்திருத்தலாலும், மகிழ்ச்சியைத் தருவதாலும் சந்த்ரிகையுடன் தோழமை உள்ளதாக விருக்கிறது. வாய்விட்டுச் சிரிக்காது மென்மையாகச் சிரிக்கும் போது உதடு நீள்வதால் இச்சிரிப்புக்கு உதட்டின் ஓரத்திலிருப்பது அழகைத் தருவதாய் உள்ளது.

மற்றுமோர் பொருள்

ஸ்வரூபகத்யா ப்ராஹ்மணன் ஒருவன் தனது துராசாரத்தால் ஆத்யவர்ணம் பிறப்பால் கிடைத்த ப்ராஹ்மண ஜாதியை.

த்யஜன் - விட்டதால் கர்ம ப்ரஷ்டன் ஆகி
த்விஜை: - பல்லுகளுடைய
பாதஜாதே - நிலவுகளில் தோன்றிய சூத்ரனோடு
மைத்ரீம் - நட்பு கொண்டு எப்போதும் அவனோடு சேர்ந்து வாழ்வதை
விதந்தே - செய்தவன்
அபிமத்ஸம்ய - தன் ஜாதிக்குரிய ஒழுக்கத்தை விட்டதால் புறக்கணிக்கப்பட்ட முட்டாள் தன்மையை உடையவனுக்கு
அதனாப்தி - இழிந்தவன் நட்பு
உசிதா - ஏற்றதேயன்றோ.

வர்ணாச்ரம தர்மத்தினின்றும் நழுவியவனுடன் கல்வி கேள்விகளில் மேலோர் பழகார் 70

मनोजमातः स्मरमन्दहासं, मन्ये मधुध्वंसन कीर्तिभासम् ।
विसृत्वरं त्वद्रसनाग्रवृत्तेर्वाग्देवताया वपुरंशुपूरम् ॥

மநோஜமாத: ஸ்மரமந்தஹாஸம் மந்யே
மதுத்வம்ஸநகீர்த்திபாஸம் ।
விஸ்ருத்வரம்த்வத்ரஸநாக்ரவ்ருத்தேர்வாக்தேவதாயா
வபுரம்ஶுபூரம் ॥

மநோஜமாத: - மன்மதன் தாயே!
மதுத்வம்ஸந - [illegible]
கீர்த்திபாஸம் - கீர்த்தியெனும் [illegible] ஒளியை உடைய
தவ ஸ்மரமந்தஹாஸம் - உனது புன் சிரிப்பை
த்வத்ரஸநா - உனது நாக்கின்
அக்ரவ்ருத்தே: - நுனியில் உள்ள
வாக்தேவதாயா: - ஸரஸ்வதியின்
விஸ்ருத்வரம் - வெளியே பரவுகின்ற
வபுரம்ஶுபூரம் - காந்தியின் உருவமாக [illegible]
மந்யே - எண்ணுகிறேன்.

லக்ஷ்மியின் மந்தஹாஸம் மாதவன் கீர்த்திபோல் வெண்மையாகவும் தூயதாகவுமுள்ளதாம். மேலுமது லக்ஷ்மியின் நாக்கில் வீற்றிருக்கும் ஸரஸ்வதியின் வெண்மையான உருவம்போல் உள்ள தெனக்கற்பனை செய்கிறார்.

नासोरुमौक्तिकघृणिद्विगुणीकृतेन हासोदयेन हसता सुषमां हिमांशोः।
हा हन्त सुन्दरि तवाधरबन्धुजीवः पद्मे परिस्फुटमदीकत पाटलत्वम्॥

நாஸோரு மௌக்திகக்ருணித்விகுணீக்ருதேந
ஹாஸோதயேந ஹஸதா ஸுஷமாம் ஹிமாம்சோ:।
ஹா ஹந்த ஸுந்தரி தவாதரபந்துஜீவ:
பத்மே பரிஸ்புடமகத பாடலத்வம்॥

ஸுந்தரி - அழகிய உடலுடைய
பத்மே - தாமரையாளே
நாஸா - மூக்கின் நுனியில் தொங்கும்
உருமௌக்திக - பெரிய முத்தின்
க்ருணி - வெளிய ஒளியால்
த்விகுணீக்ருத - இரண்டு மடங்காக்கப்பட்டதும்
ஹிமாம்சோ: - சந்திரனின்
ஸுஷமாம் - சோபையை
ஹஸதா - பரிஹஸிப்பதுமான
தவ - உனது
ஹாஸோதயேந - புன் சிரிப்பின் காந்திப் பரவலால்
அதர - உதடாகிய
பந்துஜீவ: - பந்துஜீவம் என்ற சிவந்த புஷ்பம்
பாடலத்வம் - வெண்மையான புஷ்பமாக இருக்கும் தன்மையை
பரிஸ்புடம் - அனைவரும் அறியும்படி
அகத - அடைந்தது
ஹாஹந்த - ஆச்சர்யம்

பத்மையின் மூக்கில் பெரியதொரு முத்துத் தொங்குகின்றது. அது இயல்பிலேயே வெண்மையானது. அதன் வெண்மை ஒளி ஸ்ரீயின் மந்தஹாஸ ஒளியில் பட்டதால் மந்தஹாஸத்தின் ஒளி மேலும் வளர்ந்து விட்டது. ஆகவே அது சந்திரனின் ஒளியைப் பரிஹஸிக்கின்றதாம். லக்ஷ்மியின் உதடு பந்தூகப்பூப் போல் சிவந்திருப்பது. அதில் சிரிப்பின் ஒளிபட்டதும் வெளிர்த்துவிட்டது. இப்படித் தமக்கியல்பான தன்மையை விட்டுப் பிறிதின் தன்மையைப் பலரறிய ஏற்றது. ஆச்சர்யம் என்கிறார். சிவந்த உதடு சிரிப்பின் ஒளியால் வெளிறிப்பாயிற்று என்பது உண்மைப் பொருள்.

बालेन्दुकान्तिरिव पश्चिमसान्ध्यरागे पद्मालये स्फटिकभा इव पद्मरागे
प्रत्यग्रपुष्पसुषमेव च पल्लवाग्रे भाति स्मितद्युतिरसावधरे भवत्याः॥

83

பாலேந்துகாந்திரிவ பஶ்சிமஸந்த்யராகே
பத்மாலயா ஸ்படிகபா இவ பத்மராகே ।
ப்ரத்யக்ரபுஷ்பஸஹைவ ச பல்லவாக்ரே
பாதி ஸ்மிதத்யுதிரஸாவதரே பவத்யா: ॥

பத்மாலயே - தாமரையில் வாழ்பவளே
பவத்யா: - உனது
அதரே - உதட்டிலுள்ள
ஸ்மிதத்யுதி: - சிரிப்பின் சோபை
பஶ்சிமஸந்த்ய - ஸாயம் ஸந்த்யா காலத்தின்
ராகே - சிவப்பில்
பாலேந்து - மேற்கில் அப்போதுதான் தோன்றிய பிறைச் சந்திரனின்
காந்திரிவ - ஒளிபோன்றும்
பல்லவாக்ரே - தளிரின் நுனியில் விளங்கும்
ப்ரத்யக்ரபுஷ்ப - அப்போதலர்ந்தபூவின்
ஸஹைவ ச - ஒளி போன்றும்
பாதி - விளங்குகின்றது.

ஸாயங்காலத்தில் வானம் சிவந்திருக்கும். அப்போது அதனிடையே மேற்குதிசையில் பிறைச்சந்திரன் தோன்றினால் சிவப்பினிடையேயுள்ள வெளுப்பு காண்பதற்கு அழகாகத் தோற்றமளிக்கும். பத்மராகம் என்பது சிவந்த ஓர் பூ. படிகத்தின் ஒளி அழகிய தூய வெள்ளையானது. அவ்வொளி அச்சிவப்பில் படுமேல் அழகியதோர் வர்ணமாக அது விளங்கும். தளிருடன் சேர்ந்து அப்போதலர்ந்தபூ மங்களகரமானது. இம்மூன்று உவமைகள் போல் பதுமையின் மந்தஹாஸம் விளங்குகின்றது.

स्वाद्वी सुधा स्मितमिषेण सुधाब्धिकन्ये प्रत्यक्षतस्त्वदधरे परिदृश्यतेऽसौ ।
सिक्ता यया तव सदा स्वदते चरित्रमतिः शुभाय मनसे मधुवैरिणोऽपि ॥

ஸ்வாத்வீ ஸுதா ஸ்மிதமிஷேண ஸுதாப்திகந்யே
ப்ரத்யக்ஷதஸ்த்வததரே பரித்ருஶ்யதே(அ)ஸௌ ।
ஸிக்தா யயா தவ ஸதா ஸ்வததே சரித்ர-
மதி: ஶுபாய மநஸே மதுவைரிணோ(அ)பி ॥

ஸுதாப்திகந்யே - க்ஷீரஸாகர கன்யகையே!
ஸ்வாத்வீ - மிகவும் இனிய
அஸௌ ஸுதா - உதட்டிலுள்ள அமிர்தம்
ஸ்மிதமிஷேண - மந்தஹாஸம் என்ற வியாஜத்தால்
த்வததரே - உனது உதட்டில்
ப்ரத்யக்ஷத: - கண்களுக்குப் புலனாம்படி
பரித்ருஶ்யதே - காணப்படுகிறது
ஸதா - [illegible]
தவசரித்ர: - உனது வல்லமையைப் போல
யயா - எந்த அமிர்தத்தால்
ஸிக்தா ஸதீ - நனைக்கப்பட்டதாய்
மதுவைரிண: - பகவானுடைய
மநஸே - மனதிற்கும்
ஶுபாய - நல் பேரின்பத் தன்மைக்காக
ஸ்வததே - ருசியுள்ளதாக உள்ளதே

மிகச்சுவையான அமிர்தம் லக்ஷ்மியின் உதட்டிலுள்ளது இருக்கிறது. அது உதட்டால் மறைக்கப்பட்டிருந்ததால் இன்று வரை எவர்க்கும் புலப்படவில்லை. ஆனால் இப்போது மந்தஹாஸம் என்ற வ்யாஜத்தால் புலப்படுகிறது. நம் போன்றவர் செய்யும் அடாத செயல்களால் கோபம் கொண்ட பகவான் நம்மை தண்டிக்கக் காத்துக் கொண்டுள்ளான். ஆனால் தாயார் அக் கோபத்தைப் போக்க விரும்பியவளாய் சமத்காரமான பேச்சுகளை அவனுடன் பேசுகின்றாள். அதைக் கேட்பதற்கு அவன் விருப்பம் கொள்ளாவிடினும் அப்பேச்சுக்கள் உமது உதட்டின் அமிர்தத்தால் நனைக்கப்பட்டுள்ளதால் அவனையும் கேட்கச் செய்கிறது. இது எங்களுடைய நன்மைக்கு வழி வகுப்பதாக ஆகின்றதே.

मृद्वीकेयं न खलु भजते मृद्विकाराविशेषं
मन्ये पूरं मलिनमलिनामाकरं माकरन्दम् ।
मातर्नैवाकलयति सुधामाधुरी साधुरीतिं
हन्ताहन्तां तव सुवचने भाति मेधा मुमोच ॥

ம்ருத்வீகேயம் ந கலு பஜதே ம்ருத்விகாராத்விசேஷம்
மந்யே பூரம் மலிநமலிநாமகரம் மாகரந்தம் ।
மாதர்நைவாகலயதி ஸுதாமாதுரீ ஸாதுரீதிம்
ஹந்தாஹந்தாம் தவ ஸுவசநே பாதி மேதா முமோச ॥

மாத: - தாயே!
தவ ஸுவசநே - உமது இனிய பேச்சு
பாதி ஸதி - தன் இனிமையைப் புலப்படுத்தியபோது
இயம் ம்ருத்வீகா - சுவைமிக்க த்ராக்ஷாபழம்
ம்ருத்விகாராத் - மண்ணுருவுடைமையும்
விசேஷம் - அதிகச் சுவையை
ந பஜதே கலு - அடையவில்லையன்றோ
மாகரந்தம் பூரம் - தேன்பெருக்கு
மலிநம் ஆகரம் - சுவை அறிந்த வண்டுகளின் கூட்டமாகிறது
மலிநம் மந்யே - அழுக்கு அடைந்ததாகிறதென எண்ணுகிறேன்
ஸுதாமாதுரீ - அமிர்தத்தின் இனிமை
ஸாதுரீதிம் - நல்ல பேச்சுவழக்கை
நைவாகலயதி - புலப்படுத்துவதில்லை
மேதா - ப்ரம்ம ஞானமும்
அஹந்தாம் - தான் மிக்க சுவை உடையவள் என்ற ஆணவத்தை
முமோச - விட்டுவிட்டது
ஹந்த - ஆச்சர்யம்

இனி ஐந்து ஶ்லோகங்களால் பேச்சின் மேன்மைப் புகழ்ச்சி. கவிதையின் சுவையை எளிதில் புலப்படுத்துவதில் "த்ராக்ஷாபாகம்" எனக் கவிகளால் புகழப்படும் த்ராக்ஷாபலமும் அறிவற்ற வண்டுகளாலும் சுவைக்கப்படும் தேன்பெருக்கும் நாக்கின் உள்ளிலும் இனிமையை ஊட்டும் "பூரா" சர்க்கரையும் "பசியைப் போக்க ஏதோ ஒன்று சாப்பிட்டால் போதும்" என்று உணவில் நப்பாசை அற்றவர் மனதையும் கவரவல்லது என்று "வாசாமவிஷய நிசாபலகர மோசாபலம்" எனக்கவிகளால் புகழப்பட்ட பச்சை வாழையும், தத்தம் நிலையில் மாற்றமடைந்தவையாம் எப்போது? லக்ஷ்மியின் இனிய பேச்சு செவிப்பட்டபோது. எப்படி மாறின? கொலுவில் வைக்கும் த்ராக்ஷைக் குலைபோல் ஆயிற்றாம் உண்மை த்ராக்ஷை. தாயின் பேச்சால் பரிபவப்படுத்தப் பட்டதால்தான், தேனின் முகத்தை வண்டுகள் மொய்த்து அழுக்காக்கி விட்டனவாம். ஆகவேதான் தேன் காண்பதற்கு அழுக்குடையதாய் புலப்படுகின்றதாம். பூராசர்க்கரை தற்போது கிடைப்பதே அரிதாகிவிட்டது. வாழையில் என்போல் சுவை உடைய இனம் வேறு எதுவுமில்லை எனப் பச்சை வாழை கொண்டிருந்த அகந்தை அடியோடு அழிந்ததாம். எனவேதான் அவ்வாழைமரம் மிகவும் தாழ்ந்துள்ளதாம். இப்படித்தாயின் பேச்சு ஒன்றால் பலவற்றுக்குப் பரிபவம் உண்டானது ஆச்சர்யம் என்கிறார்.

हत्वा वाचां रसमसदृशं हन्त पुण्ड्रेक्षवस्ते
मूढं मध्ये जठरकुहरं पाटवाद्रुन्धन्तः।
तं कृच्छ्रात्ते ददति च पुनर्दारिता दारुयन्त्रे
मातर्देयं स्वयमददतां मर्दनं मार्दवाय॥

ஹத்வா வாசாம் ரஸமஸத்ருசம் ஹந்த புண்ட்ரேக்ஷவஸ்தே
மூடம் மத்யே ஜடரகுஹரம் பாடவாத்ருந்தந்த:।
தம் க்ருச்ச்ராத் தே தததி ச புநர் தாரிதா தாருயந்த்ரே
மாதர் தேயம் ஸ்வயமததாம் மர்த்தநம் மார்த்தவாய॥

மாத - தாயே!
புண்ட்ரேக்ஷவ: - நாமக்கரும்பு
அஸத்ருசம் - ஒப்பற்ற
தே வாசாம் ரஸம் - உமது பேச்சின் தன்மையை
ஹத்வா - பலவந்தமாகத் திருடி
பாடவாத் - திருடியதைக் காப்பதில் வல்லமை
மூடம் - பிறரறியாது
மத்யே ஜடர குஹரம் - வயிற்றின்

இடை என்ற குழையில்
ஊடமர்ந்த: - வைத்துக் கொண்டிருந்தன
தே - அந்த நாமக் கரும்புகள்
தாருயந்த்ரை: - மர இயந்திரங்களால்
தளிதா: - பிழக்கப்பட்டவைகளாய்
க்ருச்ராத் - மிகத்துன்பமடைந்து
தம் - அப்பேச்சின் சுவையை
புநரபி - திரும்பவும் அளிக்கின்றன.
தேயம் - அவசியம் கொடுக்க வேண்டியதை
ஸ்வயம் அதத்வம் - தானாகக் கொடுக்காதவரை
மர்த்தநம் - நசிப்பிப்பது
மர்த்யாய - கொடுக்கத் தூண்டுகிறது
ஹந்த - ஆச்சர்யம்

கரும்பில் நாமக் கரும்பு என்றொருவகை. அது சற்று வெளுத்திருக்கும். அதன் ரஸம் நற்சுவையுள்ளது. சர்க்கரை அதிலிருந்துதான் தயாரிக்கப்படுகிறது. அதற்கு அச்சுவை உண்மையானதன்றாம். தாயின் பேச்சிலுள்ள சுவையைத் திருடியதோடன்றி அதைப் பிறரறியாது மிகவும் பாதுகாவலாகத் தமது வயிற்றினுள் மறைத்து வைத்துக் கொண்டதாம். இப்படி இதைத் திருடித் தம்முள் மறைத்து வைத்துள்ளதை அறிந்தவர் அக்கரும்பை இயந்திரத்திலிட்டுத் தூளாக்கிய பின்போ அவை அச்சுவையைத் திரும்பவும் அளிக்கின்றனவாம். இதுத் தகுதியுடையதே. கொடுக்கப்பட வேண்டியதைக் கொடுக்காவிடின் துன்பமடையத்தான் நேரும்.

अभ्यातन्व्य क्षीरधिमिन्दोरमृतैरामथ्यैनं देवि मथा सेतुमयेन।
तस्मादेवैर्यदुपनीतं नवनीतं तिक्तीकुर्यादुक्तिरियं ते तदपि श्रीः॥

அப்யாதந்வ்ய க்ஷீரதிமிந்தோரம்ருதைரா-
மத்யைநம் தேவி மதா சேதுமயேந।
தஸ்மாத்தேவைர் யதுபநீதம் நவநீதம்
திக்தீகுர்யாதுக்திரியம் தே ததபி ஸ்ரீ:॥

தேவிஸ்ரீ: - தாயாரே!
இயம் தே உக்தி: - உமது பேச்சு
தேவை: - இந்திர உபேந்திராதி தேவர்களால்
இந்தோ: - சந்திர கிரணங்களாகிய
அம்ருதைகை: - அம்ருதவெள்ளத்தால்
க்ஷீராப்திம் - பாற்கடலை
அப்யாதந்வ்ய - தோயச் செய்து
சேதுமயேந - கரும்பாகிய
மதா - மத்தால்
ஆமத்ய - இப்பாற்கடலைக் கடைந்து
தஸ்மாத் - அக்கடலிலிருந்து
நவநீதம் உபநீதம் யத் - புதிய வெண்ணெயெடுக்கப்படுமேல்
ததபி - அவ்வெண்ணெயையும்
திக்தீகுர்யாத் - [illegible] செய்யும்

லக்ஷ்மியின் சொற்சுவைக்கு உவமையே கிடைக்காது என்கிறார். இந்திரன் உபேந்திரன் முதலான வானவரும் ஒன்று

சேர்ந்து சந்திரகிரணத்திலுள்ள அம்ருதப் பெருக்கை புரையாகக் குத்திப் பாற்கடல் முழுவதையும் தோயச்செய்து அந்த தயிரை ஸாதாரண மரத்தாலான மத்தால் கடையாது இனிய கரும்பாலாகிய மத்தைக் கொண்டு கடைந்து பலவகையில் மேலும் பாடுபட்டு வெண்ணெய் திரட்டப்படுமேல் அவ்வெண்ணெயையும் உமது சொற்களையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் சிறிது கைக்கத்தான் செய்யும். சிறியதொரு பாத்திரத்தில் புளிப்பு மோரைப்புரையாகச் சேர்த்து மாமரத்தால் கடைந்தெடுத்த வெண்ணெய்யின் சுவையைப் பற்றிப் பேசவும் வேண்டுமோ?.

मातः समस्तजगतामसि माधवी त्वं मन्ये तवाधरदलं मृदुलं प्रवालम्।
दन्तावलिं सुमनसां ततिमुल्लिखामि स्वादूनि वेद्मि च मधूनि सुभाषितानि॥

மாத: ஸமஸ்தஜகதாமஸி மாதவீ த்வம்
மந்யே தவாதரதலம் ம்ருதுலம் ப்ரவாலம்।
தந்தாவலிம் ஸுமநஸாம் ததிமுல்லிகாமி
ஸ்வாதூநி வேத்மி ச மதூநி ஸுபாஷிதாநி॥

ஸமஸ்தஜகதாம் மாத: - அனைத்துலகத்தாயே
த்வம் மாதவீ அஸி - மாதவீ என்ற பெயரைப் பெற்றிருப்பதால்
ம்ருதுலம் - மென்மையான
தவாதரதலம் - துளிர்போன்ற உமது உதடு
ப்ரவாளம் மந்யே - பவழமாக எண்ணுகிறேன்
தந்தாவலிம் - பற்களின் வரிசையை
ஸுமநஸாம் ததிம் - புஷ்பஸமூஹமாக
உல்லிகாமி - கற்பனை செய்கிறேன்
ஸ்வாதூநி - சுவையான
ஸுபாஷிதாநி - கருத்துப் பொதிந்த சொற்களை
மதூநி - தேனாக
வேத்மி - உத்ப்ரேக்ஷிக்கிறேன்

மாதவீ என்பதொரு பூங்கொடி அது மென்மையாகவும் அழகாவுமிருக்கும். லக்ஷ்மீ அப்படியுள்ளாள். மேலும் மாதவீ மாதவன் மனைவி என்ற பெயரையும் கொண்டுள்ளாள். இவளது உதடை மாதவிக்கொடியின் துளிரிலுள்ளதும் மென்மையானதும் பவழம்போல் சிவந்ததுமானத் தளிராகக் கருதுகிறேன். இவள் பற்களின் வரிசையை உதடாகிய தளிர்களின் உள்ளே இருப்பதாலும் வெண்மையாக இருப்பதாலும் புஷ்பஸமூஹமாக உத்ப்ரேக்ஷிக்கிறேன். மதுரங்களாயும் வியப்பை விளைவிப்பனவுமாகிய பேச்சுக்களை அப்பூவிலிருந்துத் தோன்றிய தேனாக உத்ப்ரேக்ஷிக்கிறேன் என்கிறார்.

मातर्भवन्मुखमयूखसुधाब्धिमध्ये
बिम्बाधरामृतमभूद्वचनामृतं च ।
आद्यं तयोः पिबति सादरमाननेन
श्रोत्रद्वयेन चरमं परमः पुमान् सः ॥

மாதர்பவந்முகமயூகஸுதாப்திமத்யே
பிம்பாதராம்ருதமபூத் வசநாம்ருதம் ச ।
ஆத்யம் தயோ: பிபதி ஸாதரமாநநேந
ச்ரோத்ரத்வயேந சரமம் பரம: புமாந் ஸ: ॥ (79)

மாத: - தாயே
பவந்முகமயூக - உனது முக ஒளியாகிய
ஸுதாப்திமத்யே - பாற்கடலின் நடுவே
பிம்பாதர - கொவ்வைக்கனி போன்ற உதட்டினுடைய
அம்ருதம் - அம்ருதமும்
வசநாம்ருதம் ச - பேச்சாகிய அம்ருதமும்
அபூத் - தோன்றிய
ஸ: பரம: புமாந் - ப்ரஸித்தரான பரமபுருஷன்
தயோ: - அவ்விரண்டினுள்
ஆத்யம் - முன்னதான உதட்டின் அமிர்தத்தை
ஆநநேந - முகத்தால்
ஸாதரம் - மிகவும் ஆசையுடன்
பிபதி - பருகுகிறான்
சரமம் - அடுத்த பேச்சமிர்தத்தை
ச்ரோத்ரத்வயேந - இருகாதுகளால்

ப்ரஸித்தமான பாற்கடலினும் ஸ்ரீமுக ஒளியாகிய பாற்கடல் மிக உயர்ந்தது. பாற்கடலில் ஒரே அமிர்தம்தான் தோன்றிற்று. முக ஒளிக்கடலில் இரண்டு அமிர்தங்கள் உள்ளன. இவ்விரண்டு அமிர்தங்களும் பரமபுருஷனான நாராயணனால் சுவைக்கப்படுகின்றன. இவ்விரண்டினுள்ளும் அதர அம்ருதம் முகம் ஒன்றால்தான் பருகத்தக்கது. எனவே இரண்டமிர்தங்களிலும் ப்ரக்ருதமான சொல்லம்ருதம் உயர்ந்ததாயிற்று.

परिहृतभवशब्दा भारती तावकीना
परिहसतु निकामं कालकण्ठाभिलापम् ।
श्रुतिपथमधुरेयं सिन्धुकन्ये कथं वा
शुकमुखफणितीनां दोषमाविष्करोति ॥

பரிஹ்ருதபவசப்தா பாரதீ தாவகீநா
பரிஹஸது நிகாமம் காலகண்டாபிலாபம் ।
ச்ருதிபதமதுரேயம் ஸிந்துகந்யே கதம் வா
சுகமுகபணிதீநாம் தோஷமாவிஷ்கரோதி (80)

விந்துமத்யே - ஸமுத்ரகுமாரி
பரிஹ்ருத - விடப்பட்ட
பலசப்தா - சிவன் முதலான சொல்லை உடைய
தாவகீநா பாரதீ - உமது வாக்கு
காலகண்டபிலாபம் - பிறர்சொல்லும் சொல்லை உச்சரிப்பை
காமம் பரிஹரது - பரிஹரித்தால் பரிஹரிக்கட்டும் (ஆனால்)
ஸ்ருதிபதமதுரா - வேதம் போலுயர்ந்த
இயம் - இந்த வாக்கு
பராசரமுக - பராசர் பராசரர் முதலியவர்கள்
பணிதீநாம் - வாக்குகளில்
தோஷம் - குற்றத்தை
கதம் - எப்படி
ஆவிஷ்கரோதி - தோற்றுவிக்கின்றது

லக்ஷ்மீயின் வாய் மறந்தும் சிவன் முதலான பிறதேவதைகளின் பெயரை உச்சரிப்பதே இல்லையாம். உத்தம ஸ்த்ரீகளான பதிவ்ரதைகளுக்கு பிற புருஷர்களின் பெயரைச் சொல்வதும் இழுக்காம். ஆகவே பரம்பொருளான நாராயணன் மனைவியான லக்ஷ்மீக்குப் பிறதேவதைகளான இந்த்ரருத்ராதி பெயர்களைச் சொன்னாலும் பாதிவ்ரத்யபங்கம் வந்துவிடுமாம். எனவே அப்பெயர்களையும் சொல்வதில்லை. இது ஸரி இதேபோல் பிறர் நீலகண்டன் என்று சொல்வதைப் பரிஹாஸம் செய்தாலும் செய்யட்டும் அப்படிப் பரிஹஸிப்பது தம் பதிவ்ரதா பக்தியின் மேன்மையினாலானதால் பொருத்தமுடையதாகலாம். ஆனால் வேதம் போலுயர்ந்த இவ்வாக்கு பகவானின் மஹிமையைப் பாடுவதும் வேதத்தின் விரிவுரை போன்றதுமான பராசரர், வ்யாஸர் சுகர் போன்றவர்களின் வாக்குகளில் எப்படிக் குற்றத்தைத் தோற்றுவிக்கின்றது? நாராயணன் அடியார்க்கு நாராயணனைப்பாடும் நூல்களை இகழ்தல் குற்றமன்றோ என்ற பொருள் மேலெழுந்த வாரியாகத் தோன்றுவதாம்.

உண்மைப் பொருள் வருமாறு

பரிஹ்ருத பலசப்தா - தன்னும் புருஷனுக்கு ஸம்ஹாரம் என்ற சொல்லின் தொடர்பையும் போக்கவல்லதான
தாவகீநா - உமது
பாரதீ - வாக்கு
காலகண்டம் - குயிலின் குரலான
ஆலாபம் - பஞ்சமம் என்றால் ஸ்வரமாம்
ஆவிஷ்கரோதி - புலப்படுத்துகிறது
லேசம் - அத்தனைய உமது வாக்கு
ஸ்ருதிபதமதுரா - காதுக்கினிய
பராசரமுக - கிளியின் முகத்திலிருந்து வந்த
பணிதீநாம் - பேச்சுகளிலுள்ள
தோஷம் - தாழ்வை
ஆவிஷ்கரோதி - புலப்படுத்துகிறது

நிஷாதம், ருஷபம், காந்தாரம், ஷட்ஜம், மத்யமம், தைவதம் பஞ்சமம் என ஸ்வரங்கள் ஏழு பெயர்களைப் பெற்றிருக்கும்

அவற்றுள் பஞ்சமஸ்வரம் என்பதற்கு உவமையாகக் குயிலின் குரலைக்கூறுவர். பிக: கூஜதி பஞ்சமம் என்பது நிகண்டு. லக்ஷ்மீயின் குரல் அப்பஞ்சம ஸ்வரமாம். ஆகவே அவள் குரல் பிற குரல்களைப் பரிஹஸிப்பது சரியே. பறவைகளுள் பேசும் பறவை கிளிப்பிள்ளை குழந்தைகளின் மழலைப்போல் செவிக்கினியதாக இருக்குமது. எனவே கிளியின் மொழியைப் புலவர் புகழ்வர். லக்ஷ்மீயின் சொல் கிளியின் சொல்லினும் உயர்ந்ததானதால் அதனை இழிவுபடுத்துகிறது என்பது உண்மைப்பொருள்.

असंकोचां मोचामधुरिम मदोन्मोचनविधा-
वनीचां ते वाचामहमहरहर्नौमि लहरीम् ।
उदूहे यां श्रोतुं कुतुकमुदधेः पुत्रि दधती
श्रुतीभावं चक्षुः श्रुतिपतिदृशां विंशतिशती ॥

அஸங்கோசாம் மோசாமதுரிமமதோந்மோசநவிதா-
வநீசாம் தே வாசாமஹமஹரஹர்நௌமி லஹரீம் ।
உதூஹே யாம் ச்ரோதும் குதுகமுததே: புத்ரி ததீ
ச்ருதீபாவம் சக்ஷு: ச்ருதிபதித்ருசாம் விம்சதிசதீ ॥ (81)

உததே: புத்ரி - பாற்கடலின் கன்னிகையே
அஹம் - நான்
மோசா - பச்சை வாழையின்
மதம் - அதன் இனிமையால் உண்டாகும் ஆணவத்தை
உந்மோசந விதௌ - அழிப்பதில்
அஸங்கோசம் - தடையற்றதும்
அநீசாம் - உயர்ந்ததுமான
தே வாசாம் லஹரீம் - உன்னைப் பற்றிய சொல்வரிசையை
அஹரஹ: - ஒவ்வொரு நாளும்
நௌமி - துதிக்கிறேன்
சக்ஷு: ச்ருதி - கண்களே காதுகளாகக் கொண்ட பாம்புகளின்
பதி - தலைவனான ஆதிசேஷனுடைய
த்ருசாம் - கண்களின்
விம்சதிசதீ - இரண்டாயிரங்களும்
யாம் - உனது புகழைப்பற்றிய பேசிய பேச்சை
ச்ரோதும் - கேட்பதற்கு
குதுகம் ததீ ஸதீ - ஆசை கொண்டவளாய்
ச்ருதீபாவம் - காதுகளாக இருக்கும் தன்மையையும்
உதூஹே ஸ்ம - தரித்தவை அல்லவா?

வாழைகளுள் பச்சைவாழைக்கு இனிப்புச்சுவை அதிகம். ஆகவே கவிகள் அதை இன்சுவைக்கு உவமையாகக் கூறுவர். லக்ஷ்மீயைப்பற்றி இக்கவிப்புகழ்ந்து பாடும் ஒவ்வொரு ச்லோகங்களிலுள்ள சுவை பச்சை வாழையின் இன்சுவையால்

தோன்றிய கொட்டத்தை அடக்குவதில் தங்கு தடையற்றவையாம். மேலும் அவை லக்ஷ்மியைப் பற்றியவையாகையால் உத்தமமானவைகளாம். அத்தகைய வாக்கால் நான் ஒவ்வொரு நாளும் உன்னைத் துதிக்கிறேன். இருந்தும் அக்குணங்கள் முழுவதையும் துதித்தவனாக நாணுகேன். வாக்குக்குள் அடங்காதவை அவை. பாம்புகளின் தலைவனான ஆதிசேஷன் தமது ஆயிரம் தலைகளிலும் தலைக்கு இரண்டு கண்களாக இரண்டாயிரம் கண்களைப் பெற்றிருந்தார் ஆனால் அவை பார்ப்பதற்கு மட்டுமே பயன்பட்டன. உன் புகழ்பாடும் வெள்ளம் போன்ற வாக்கைக் காதுகளால் கேட்க ஆசை கொண்டார் போலும். தமக்கெனத்தனியே காதுகளைப் பெறாததால் அவர்தம் கண்களையே காதுகளாகவும் மாற்றிக் கொண்டாரோ! எனக் கற்பனை செய்கிறார்.

पर्यायः शर्करायाः प्रतिकृतिरमृतस्रोतसां तादृशानां
साक्षी गोक्षीरभूम्नां सुरतरुसुमनोमाक्षिकाणां विकारः।
पुण्ड्रेक्षूणां प्रणाली परिणतिरतुला नारिकेलोदकानां
सोऽयं नालीकगेहे जयति तव वचः संपदां संप्रदायः ॥

பர்யாய: சர்க்கராயா: ப்ரதிக்ருதிரம்ருதஸ்ரோதஸாம் தாத்ருசாநாம்
ஸாக்ஷீ கோக்ஷீரபூம்நாம் ஸுரதருஸுமநோமாக்ஷிகாணாம் விகார:।
புண்ட்ரேக்ஷூணாம் ப்ரணாலீ பரிணதிரதுலா நாரிகேலோதகாநாம்
ஸோ(அ)யம் நாளீககேஹே ஜயதி தவ வச: ஸம்பதாம் ஸம்ப்ரதாய:।

நாளீககேஹே - தாமரையில் வாழ்பவளே!
சர்க்கராயா: - சர்க்கரையின்
பர்யாய: - மறுவடிவமாயும்
தாத்ருசாநாம் - ஒப்பற்ற
அம்ருதஸ்ரோதஸாம் - அம்ருதப் பெருக்கின்
ப்ரதிக்ருதி: - ப்ரதிபிம்பமாகவும்
கோக்ஷீர - காமதேனுப்பாலின்
பூம்நாம் - அளவுமிகுதிக்கு
ஸாக்ஷீ - ஒப்புதலாயும்
ஸுரதருஸுமநோ - கற்பகப்பூவின்
மாக்ஷிகாணாம் - தேனுக்கு
விகார: - மறுவடிவமாயும்
புண்ட்ரேக்ஷூணாம் - நாமக்கரும்பின் கழைக்கு
ப்ரணாலீ - வாய்க்காலாயும்
நாரிகேலோதகாநாம் - தேங்காய்ப்பாலின்
அதுலா பரிணதி: - ஒப்பற்ற மறுவடிவமாயும்
ஸோ(அ)யம் - ப்ரஸித்தமான
தவ வச: ஸம்பதாம் - உமது சொற்களின்
ஸம்ப்ரதாய: - உபதேசங்கள்
ஜயதி - மிக உயர்ந்து விளங்குகின்றன

லக்ஷ்மியின் பேச்சின் சுவை சுவையுள்ளவைகளுள் புகழ்பெற்றவைகளாகக் கீழே சொன்ன சர்க்கரை முதலியவற்றின் சுவைகளை விஞ்சியுள்ளது என்கிறார்.

सुता सुधाब्धेः सहजा हिमांशो-
र्मातः प्रिया त्वं मधुराधिपस्य ।
तथाविधायास्तव के नु वीची-
माचान्तमोचां न वदन्ति वाचाम् ॥

ஸுதா ஸுதாப்தே: ஸஹஜா ஹிமாம்சோர்-
மாத: ப்ரியா த்வம் மதுராதிபஸ்ய।
ததாவிதாயாஸ்தவ கே நு வீசீ-
மாசாந்தமோசாம் ந வதந்தி வாசாம் ॥ (83)

மாத: - தாயே
த்வம் - நீர்
ஸுதாப்தே: - அமிர்தக்கடலின்
ஸுதா - பெண் ஆவீர்
ஹிமாம்சோ: - அம்ருதங்களைக் கிரணங்களாகக் கொண்ட சந்திரனின்
ஸஹஜா - உடன்பிறந்தவளாவீர்
மதுர - இனிப்பை
அதி - அதிகமாக
பஸ்ய - பருகுபவனான நாராயணனின்
ப்ரியா - மனைவியாவீர்
ததாவிதாயா: - இப்படி மதுரமயமான சம்பந்தம் உடையவளான உமது
வாசாம் வீசிம் - சொற்களின் வீச்சை
ஆசாந்தம் - பருகப்பட்ட
மோசாம் - பச்சை வாழையின் சுவையை உடையதாக
கே - எவர்தான்
ந வதந்தி - சொல்லார்

பிறப்பிடம், உடன்பிறப்பு, கணவன் முதலான யாவுமே ரஸமயம். இவற்றால் இங்குதான் ரஸம் - சுவை - உண்டு இங்கு ரஸம் கிடையாது எனச் சொல்லவொண்ணாது - பிறப்பிடம் பாற்கடல் மிகவும் போக்யமானது. உள்ளும் புறமும் ரஸமானவை யாவும் கிரணங்களே அம்ருதங்களாக இருக்கின்றன என்றால் உடன்பிறப்பான சந்திரனைப் பற்றிப் பேசவும் வேண்டுமோ? சந்திரன் இப்படி எனின் நாராயணனை ரஸோ வை ஸ: என உபநிஷத்தே ரஸ வடிவனாக ஓதுகின்றது - சுவையிலே பிறந்து சுவையோடு வாழும் நீர் மட்டும் எப்படிச்சுவையற்றவராக இருக்கமுடியும்? ஆகவே உமது பேச்சு வீச்சு பழங்களிலுள்ள இனிமையை எல்லாம் விழுங்கிவிட்டது என எவர்தான் சொல்லமாட்டார்? "மதுராதிபஸ்ய" என்பதற்கு மதுரா என்ற நகரத்தின் தலைவனான என்ற பொருளும் கொள்ளலாம்.

द्राक्षाऽऽलिरादौ किल रूपयुक्ता मध्येऽधिकेक्षुप्रभवा सिता च।
हास्या सुधा ऽप्यग्रजनोपयुक्ता स्वादौ रमे जाग्रति वाग्रसे ते॥

த்ராக்ஷாஆலிராதௌ கில ரூபயுக்தா
மத்யே(அ)திகேக்ஷுப்ரபவா ஸிதா ச
ஹாஸ்யா ஸுதா(அ)ப்யக்ரஜநோபயுக்தா
ஸ்வாதௌ ரமே ஜாக்ரதி வாக்ரஸே தே (84)

ரமே - ரமையே
ஸ்வாதௌ - உயர்ந்த சுவையுடைய
தே வாக்ரஸே - உனது சொற்சுவை
ஜாக்ரதி - பெரிதும் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும்போது
ஆதௌ - துவக்கத்தில்
ரூபயுக்தா - சுவையற்று உருவ அமைப்பை மட்டும் உடைய
த்ராக்ஷாலி: - திராக்ஷைக்கொத்து
மத்யே - அதன் இடைக்காலத்தில்
அதிகா - மிக்க சுவையுடையதாய்
இக்ஷுப்ரபவா - கரும்பிலுண்டாம்
ஸிதா - சர்க்கரையும்
அக்ரே - கடைசியில் மட்டும்தான்
ஜநோபயுக்தா - மக்களால் உபயோகிக்கப்படுகிறது
ஸுதாபி - அம்ருதமும்
ஹாஸ்யா - பரிஹாஸத்துக்கு உரியதாக உள்ளது

எவ்விடத்தும், எக்காலத்தும், எந்நிலையிலும், சுவைமிக்கதாக உள்ளது லக்ஷ்மியின் வாக்கு என்கிறார். சுவையுள்ளவைகளுள் ப்ரஸித்தங்களான த்ராக்ஷை சர்க்கரை, அம்ருதங்களும் உன் வாக்குக்கு ஒப்பாகா. ஏனெனில் த்ராக்ஷையின் முற்காலத்தில் உருவம் மட்டும் உள்ளதேயன்றி அதில் சுவை இருப்பதில்லை. பழுத்தபின் மேலும் சில நாள் வைத்திருந்தால் அழுகிவிடுகின்றது. ஆகவே அதன் முற்காலத்தும் பிற்காலத்தும் பயனற்றதாய் சுவை உடைய இடைக்காலத்து மட்டும் பயன்படுகிறது. சர்க்கரை கரும்பிலிருந்து உண்டாவதேயாயினும் கரும்பு கரும்பின் செடிப்பருவத்திலும் ரஸம் முழுதும் பெற்று முதிர்ந்த பருவமாகிய இடைப்பருவத்திலும் மக்களுக்குப் பயன்படுவதில்லை. சர்க்கரையாக மாறிய கடைநிலையில்தான் அது அனைவருக்கும் பயன்படுகிறது. உன் சொற்சுவையையும் அமிர்தத்தின் சுவையையும் ஒப்புநோக்கில் அமிர்தத்தின் சுவை பரிஹஸிக்கத் தக்கதாயுள்ளது.

மற்றுமோர் பொருள்

த்ராக்ஷாலி: - (திராக்ஷைப்பழக்கொத்து) த்ராக்ஷாலி என்ற சொல்
ஆதௌ - சொல்லின் முதலில்
ரு உபயுக்தா - ரு என்ற எழுத்துடன்
சேர்ந்து ருத்ராக்ஷாலி என மாறுகிறது
இக்ஷுப்ரபவா - கரும்பின் உண்டாம்

ஸிதா - (சர்க்கரை) ஸிதா என்ற சொல்
மத்யே - ஸகார தகாரங்களின் இடையே
அதிக: - க என்ற எழுத்தை அதிகமாகப் பெற்று ஸிகதா என்று ஆகின்றது

ஸுதாபி - (அம்ருதமும்) ஸுதா என்ற சொல்லும்
அக்ரே - அச்சொல்லின் நுனியில்
ஜநோபயுக்தா - ஜந என்ற சொல்லுடன் சேர்ந்து ஸுதா ஜந என மாறுகிறது.

சுவைமிக்க த்ராக்ஷைப் பழக்கொத்து என்ற பொருளை தரும் த்ராக்ஷாலி என்ற சொல் ருத்ராக்ஷாலியாக மாறிவிடுகிறது. ருத்ராக்ஷாலி என்ற சொல்லிற்கு எவ்வித ரஸமுமற்ற பழம் என்பது பொருள். அதுபோல் சுவைமிக்க தாயின் சொல்லிற்கு எதிரில் த்ராக்ஷை த்ராக்ஷாலியாகி விடுகிறதாம். சர்க்கரை என்ற பொருளுடைய ஸிதா என்ற சொல்தனக் இடையில் "க" என்ற எழுத்தை அதிகமாகப் பெற்று ஸிகதா என மாறிவிடுகிறதாம். ஸிகதா என்பதற்கு மணல் என்பது பொருள். மணல் போல் சுவையற்றதாகி விடுகிறது சர்க்கரை. அம்ருதம் என்ற பொருள் கொண்ட "ஸுதா" என்ற சொல் ஜந என்ற சொல்லுடன் சேர்ந்து ஸுதாஜந: என ஆகிவிடுகிறது. ஸுதாஜந: என்பது கஞ்சி என்ற பொருள் உடையது.

உண்மைப்பொருள்

திராக்ஷை புதிதாகப் பழுத்தவுடன் சுவைமிக்கிருக்குமாதலால் அது அனைவரையும் கவரும். கரும்பின் சாறே சர்க்கரையாகவும் கற்கண்டாகவும் மாறுவதாயினும் சாறு, சர்க்கரை, கற்கண்டு என்ற மூன்று நிலைகளுள் இடைநிலையதான சர்க்கரையே வாயில்பட்டவுடன் சுவை தருவதாயும், மிக்க சுவையுடையதாகவுமிருப்பதால் மற்றைய இரண்டு நிலைகளிலுள்ளவைகளிலும் உயர்ந்ததாயுள்ளது. அம்ருதம் அக்ரஜநர்களான - உயர்ந்தவர்களான தேவர்களுக்கு உபயோகப்படுவது என்பது உண்மைப் பொருளாம்.

निःसारवंशजठरे न्यविशन्त हन्त
दन्तद्युतिप्रतिभटास्तव मौक्तिकौघाः
मातर्द्विजव्रजविरोधितया स्थितानां
मातङ्गमौलिकलनाप्युचितैव तेषाम् ॥

நி:ஸாரவம்ஶஜடரே நயவிரஹந்த ஹந்த
தந்தத்யுதிப்ரதிபடாஸ்தவ மௌக்திகௌகா:
மாதர்த்விஜவ்ரஜவிரோதிதயா ஸ்திதாநாம்
மாதங்கமௌலிகலநப்யுசிதைவ தேஷாம் ॥ (85)

மாத: -தாயே
தவ -உனது
தந்தத்யுதி -பற்களின் ஒளியுடன்
ப்ரதிபடா: -பகைமைகொள்வதான
மௌக்திகௌகா: -முத்துக்களின் கூட்டம்
நி:ஸார -உள்ளீடற்ற
வம்ஶ -மூங்கிலின்
ஜடரே -வயிற்றில்
நயவிரஹந்த -வைக்கப்பட்டுள்ள
த்விஜவ்ரஜ -உனது கூட்டத்துடன் பற்களின்
விரோதிதயா ஸ்திதாநாம் -விரோதம் உடையவைகளாயுள்ள
தேஷாம் -முத்துகளுக்கு
மாதங்க -அருகில் செல்ல முடியாத யானையின்
மௌலி -தலையில்
கலநா அபி -தொடர்புள்ளதும்
உசிதைவ -தகுதியுடையதே

இனி ஐந்து ஸ்லோகங்களில் பற்களின் வர்ணனை

மூங்கிலினுள்ளும், யானையின் தலையிலும் கரும்பிலும் முத்து பிறக்கும் என இலக்கியங்கள் கூறுகின்றன. அக்கருத்தை அடிப்படையாகக் கொண்டெழுந்தது இந்த ஸ்லோகம். வெண்மையான முத்துக்கள் தன்னைவிட மிக்க ஒளிரும் தாயின் பற்களுடன் பகைமை கொண்டன. உயர்ந்தவரோடு பகைமை கொண்டதால் தான் வெளியில் மட்டும் பகட்டானதாய் உள்ளே எவ்வித வாரமுமில்லாத மூங்கிலினுள்ளும், எளிதில் அருகிலும் செல்லவியலாத யானையின் தலையிலும் அவை உண்டாகின்றன. பெரியோரிடம் அபசாரப்பட்டதன் பயனிது.

रमे रसज्ञाञ्चलशारदाया रदावली ते रमणीयरूपा ।
मधुप्रतिक्षेपिमनोऽनुकूले मन्दारमालेव शुभा विभाति ॥

ரமே ரஸஜ்ஞாஞ்சல ஶாரதாயா ரதாவலீ தே ரமணீய ரூபா ।
மதுப்ரதிக்ஷேபிமநோ(அ)நுகூலே மந்தாரமாலேவ ஶுபா விபாதி ॥

மதுப்ரதிக்ஷேபி - மது என்ற அரக்கனின் சத்ருவான நாராயணனின்
மநோநுகூலே - கருத்தைப் பின்பற்றுபவளான
ரமே - லக்ஷ்மியே
ரமணீயரூபா - அழகிய வடிவுடைய
தே ரதாவலீ - உனது பற்களின் வரிசை
ரஸஜ்ஞாஞ்சல - நாக்கின் நுனியிலுள்ள
ஶாரதாயா: - ஸரஸ்வதியின்
ஶுபா - அழகிய
மந்தாரமாலேவ - பாரிஜாத மாலைபோல்
விபாதி - விளங்குகின்றது

வெண்ணிறப் பற்களின் வரிசைக்கு வெண்மையான பாரிஜாதப் பூக்களின் மாலை உவமையாக்கப்பட்டுள்ளது

प्रकाशते सज्जघनागमे त्वयि प्रगल्भसोमोदधिनीरदावलिः ।
रमे मुकुन्देन किलामुनाधृता द्युतिर्यदीया सहसोन्मिषन्मुदा ॥

ப்ரகாஶதே ஸஜ்ஜகநாகமே த்வயி
ப்ரகல்பஸோமோதநீரதாவலி:
ரமே முகுந்தேந கிலாமுநா த்ருதா
த்யுதிர் யதீயா ஸஹஸோந்மிஷந் முதா ॥

ஹே ரமே - இலக்குமியே
ஸத் - உயர்ந்த
ஜகந - பின்புறமாகிய
அகமே - மலைகளை உடையவளே
த்வயி - உன்னிடம்
ப்ரகல்ப - உயர்ந்த
ஸோமோதநி - குளிர்ச்சியும்
ரதநாவலி: - பற்களின் வரிசை
ப்ரகாஶதே - உயர்ந்து விளங்குகின்றது
ஸஹஸா - தொடர்ந்த குழுவாகவே
உந்மிஷந் முதா - அப்போதலர்ந்து கொண்டிருக்கும்
அமுநா - "மு" என்ற எழுத்தால்
மு - குந்தேந - குந்தம் என்னும் பூவால்
ஸஹஸா - சிரிப்புடன் சேர்ந்த
யதீயா - எந்த பற்களின்
த்யுதி: - வெண்மையான காந்தி
த்ருதா - தரிக்கப்பட்டதோ

இன்றுமொருபொருள்

மலைகளை உடையவளே விளக்கம்
த்வயி - உன்னிடத்திலேயே
ஸஜ்ஜ - தயாராக இருந்த
கநாகமே - மழை காலத்தில்
ப்ரகல்பஸோமோதநீ - உயர்ந்த குளி
நீரத - மேகங்களின்
ஆவலி: - வரிசை போன்ற பேரு பாறைகள்

89

ப்ரகாஸந்தே - விளங்குகின்றனவோ
உந்மிஷந்முதா - மிக்க மகிழ்ச்சியுடைய
அமுநாமுகுந்தேந - இம் முகுந்தனாலே
யதீயா - எந்த கேசங்களின் நீலநிறம்
ஸஹஸா - சீக்கிரமாக
த்ருதா - தரிக்கப்பட்டதோ

மழைகாலத்தில் மழைபெய்து ஏரி, குளம் முதலியவை நீர் நிறைந்து அவற்றின் தாமரை, ஆம்பல், நெய்தல் போன்ற புஷ்பங்கள் செழிப்பாகவும் மிகுதியாகவும் பூத்துக் குலுங்கும். ஆம்பல் என்பது வெண்மையான ஒருவகைப்பூ. இப்பூ லக்ஷ்மியினிடமிருந்து அவள் பற்களின் வெண்மையைப் பெற்றுக் கொண்டவையாம். ஆகவேதான் சிறப்புற்று விளங்குகின்றவையாம். இப்பொருளில் ஶ்லோகத்திலுள்ள "ஸஹஸா" என்ற சொல்லை மறுமுறையும் பெருக்கிக்கொள்ள வேண்டும். ஶ்லோகத்திலுள்ள 'ஸஹஸா' என்ற சொல் மூன்றும் வேற்றுமை ஏற்றது. ஹாஸத்தோடு - சிரிப்போடு - கூடிய என்பது இதன் பொருள். இதனால் லக்ஷ்மியின் பற்களின் வெண்மை ஆம்பலால் தரிக்கப்பட்டது என்பது விளக்கப்பட்டது. மற்றொரு பொருளில் இலக்குமிக் கூந்தலின் கருமை நீலநிறத்தினனான முகுந்தனால் தரிக்கப்பட்டது என்பது விளக்கப்படுகிறது. பொருள்களுக்கேற்ப சொற்கள் பிரிக்கப்பட்டுள்ளது உரையில் விளங்கும்.

आप्तीकृतानाममुकेन विन्दन् - मुदा मुकुन्देन सदादृतानाम् ।
शुचिद्विजानां ननु तावकानां मुक्ताकृतिर्विश्वसवित्रि युक्ता ॥

ஆப்தீக்ருதாநாம் நாமமுகேந விந்தந்-
முதா முகுந்தேந ஸதாத்ருதாநாம்
ஶுசித்விஜாநாம் நநு தாவகாநாம்
முக்தாக்ருதிர் விஶ்வஸவித்ரி யுக்தா ॥

பொருள்- 1

ஹே விஶ்வஸவித்ரி - உலகைப் படைத்தவளே!
அமுகேந - மு என்ற எழுத்தில்லாத
முகுந்தேந - குந்த புஷ்பத்தால்
ஸதா - எப்போதும்
ஆப்தீக்ருதாநாம் - தனக்கு நண்பர்களாக ஆக்கிக் கொள்ளப்பட்டவையும்
ஶுசிபி: - நக்ஷத்ரங்களால்
ஆத்ருதாநாம் பூஜிக்கப்பட்டவையுமான
தாவகாநாம் - உம்முடைய
ஶுசித்விஜாநாம் - வெண்மையான பற்களுக்கு
முக்தாக்ருதி: - முத்தாக இருக்கும் தன்மை
யுக்தா - பொருத்தமுடையதே

பொருள் - 2

ப்ரஸித்தே - மிகப்ரஸித்தமான
முகுந்தேந - முகுந்தனாலே
ஹார்தாத் - ஸ்நேஹத்தால்
ஆப்தீக்ருதாநாம் - ஸாத்விகராக இருக்கும் தன்மையைத் தோற்றுவிக்கப்பட்டவரும்
ஸத்பி: - ப்ரஹ்மவித்துகளால்
ஆத்ருதாநாம் அநுக்ரஹிக்கப்பட்டவரும்
தாவகாநாம் - உன்னைச் சரணமடைந்தவரும்
ஸம்ஸித்திஜுஷாம் - சித்தர்களான ப்ராஹ்மணர்களுக்கு
முக்தாக்ருதி: - முக்தராக ஆதல்
யுக்தம் - தகுதியுடையதே

செம்மைக்குத் தாமரையும், கருமைக்கு நெய்தலையும் உவமையாகக்கூறுவது போல் வெண்மைக்கு ஆம்பலையும், சந்திரனையும் நக்ஷத்ரங்களையும் உவமையாகக் கூறுவது கவிமரபு. உவமைப் பயன்படுவளான இலக்குமியின் பற்களை வர்ணிக்கப் புகுந்த கவி அதன் வெண்மைக்கு இம்மூன்றையும் உவமையாக்கிவிட்டார் ஒரே ஸ்லோகத்தில். ஆம்பல்கள் லக்ஷ்மியின் பற்களிடம் வேண்டிக் கொண்டனவாம். உங்களைப்போல் நாங்களும் வெளுப்பாக இருப்பதால் நீங்கள் எங்கள் நண்பர்கள் ஆக வேண்டும் என. அதுபோல் நக்ஷத்ரங்கள் தங்களிலும் சிறந்ததான தாயின்பற்களின் ஒளிக்குப் பூஜையே செய்தனவாம். ஆகவே குந்தம் போன்ற வெண்மையையும் விண்மீன் போன்ற ஒளியையுமுடையதான பற்களுக்கு முகத்தோடு ஒப்புமை கூறுவதில் ஆச்சர்யம் என்னவுளதென்கிறார். "ஸதாத்ருதாநாம்" என்பது ஒரே சொல் அது ஸத்பி: ஆத்ருதாநாம் என விரியும்.

முகுந்தன் பரமகாருணிகன் ஒரு சில ஜீவர்கள் செய்த நன்மையைக் கருத்தில் கொண்டு அஜ்ஜீவன் மறுபிறவி எடுக்கும்போது அவன் முன்பிறவியில் செய்த நற்றவத்தின் பயனாக இப்பிறவியில் ஸாத்விகனாக வாழும்படி அருள் பாலிக்கிறான். இப்படி முகுந்த கடாக்ஷத்தைப் பெற்று ஸாத்விகனாகவுமுள்ளவனை ப்ரஹ்மத்தை நன்குணர்ந்த பெரியோர் அவன் மீது அருள்கொண்டு ஸதுபதேசங்களைச் செய்து நல்லறிவை மிகுவிப்பர். நல்லறிவு பெற்றதால் அந்த ஜீவன் உம்மையும் உமது மணாளனையும் . சரணம் புகுகிறான். அதனால் இச்சரீரம் ஒழிந்தபின் முக்தனாகிறான்.

हन्तारस्तमसां दिशन्तु कमले दन्ता मुदं तावकाः
येषूद्दामजपाप्रसूनसरसच्छायोपरक्तांशुषु ।
उच्चैः पक्तिमदाडिमभ्रमवशादुत्पित्सुकेलीशुक-
प्रत्यावर्तनखेदनिःसहतया पाणिर्विशेषारुणः ॥

ஹந்தாரஸ்தமஸாம் திஶந்து கமலே தந்தா முதம் தாவகா:
யேஷூத்தாமஜபாப்ரஸூநஸரஸச்சாயோபரக்தாம்ஶுஷு
உச்சை: பக்திமதாடிமப்ரமவஶாதுத்பித்ஸுகேலீஶுக-
ப்ரத்யாவர்த்தநகேதநி: ஸஹதயா பாணிர்விஶேஷாருண:

கமலே - தாமரையாளே
தமஸாம் - புறவிருள் அகவிருள் என்ற இருஇருள்களையும்
ஹந்தார: - தமது ஒளிகளால் அழிப்பவைகளான
தாவகா: - உமது
தந்தா: - பற்கள்
முதம் - இம்மை மறுமைகளில் உள்ள ஸந்தோஷங்களை
திஶந்து - கொடுக்கட்டும்
உத்தாம - நன்கு மலர்ந்த
ஜபாப்ரஸூந - ஜபா என்ற பூப்போல் சிவந்த
ரஸந - நாக்கின்
சாயா - காந்தியாலே
உபரக்த - நன்கு சிவந்த
அம்ஶுஷு - காந்தியை உடையவைகளான
யேஷு - எந்த பற்களில்
பக்திம - நன்கு பழுத்த
தாடிம - மாதுளையின் முத்துகள் என்ற
ப்ரமவஶாத் - ஐயமுற்றதால்
உச்சை: - அடிக்கடி
உத்பித்ஸு - உயரப் பறக்க விரும்பும்
கேலிஶுக - கையிலுள்ள விளையாட்டுக் கிளிகளை
ப்ரத்யாவர்த்தந - போகாமல் தடுப்பதால் உண்டாகும்
கேத - களைப்பை
நிஸ்ஸஹதயா - பொறுக்க முடியாததால்
பாணி: - கையானது
விஶேஷாருண: - மிகவும் சிவந்ததாக ஆகிறதே

கமலையின் பற்கள் தமது இயல்பான வெளிய ஒளியால் அறிவின்மையாம் அகவிருளையும் புறவிருளையும் போக்கவல்லன. ஆயினும் தற்போது அப்பல்லில் ஓர் மாற்றம் தோன்றியுள்ளது. ஜபாபுஷ்பம் என ஒரு வகைப் புஷ்பமுளது. அது செக்கச் செவேலென்றிருப்பது. கமலையின் நாக்கு அப்புஷ்பம்போல் சிவந்துள்ளது. அச்சிவந்த நாக்கின் அருகில் பற்கள் வரிசையாக இருப்பதால் அச்சிவப்பொளி பற்களின் மேல் பட்டுப் பற்களும் சிவந்திருக்கின்றன. கமலை தம் கையில் விளையாட்டுக் கிளியொன்றை ஏந்தியுள்ளாள். அக்கிளி மேலே நோக்கியபோது இச்சிவந்த பற்களைக் கண்டதோடு அவற்றை

நன்கு பழுத்த மாதுளையின் முத்துக்கள் என எண்ணிவிட்டது. உடனே அவற்றைக் கொத்தித் தின்பதற்கு மேலெழுகின்றது. கிளியின் மருட்சியை அறிந்த கமலை அவ்வாறு எழவொட்டாது அதைத் தடுத்து நிறுத்துகிறாள். அத்துன்பத்தைத் தாளாத கை சிவந்து விட்டதாம். கையின் செம்மையை இப்படி கவி வெளியிடுகிறார். இந்நிகழ்ச்சிக்குக் காரணமாக பற்கள் நன்மையையுங் காட்டும் என்கிறார்.

कन्ये सिन्धोः कापि मृद्वी सुहृद्यां दद्याद्विद्यां त्वद्रसज्ञा मनोज्ञा ।
यत्र व्यक्तो रक्तिमा वक्ति मात र्वाचां देव्या नित्यनृत्ताभिघातम् ॥

கந்யே ஸிந்தோ: காபி ம்ருத்வீ ஸுஹ்ருத்யாம்
தத்யாத் வித்யாம் த்வத்ரஸஜ்ஞா மநோஜ்ஞா ।
யத்ர வ்யக்தோ ரக்திமா வக்தி மாதர்-
வாசாம் தேவ்யா நித்யந்ருத்தாபிகாதம் ॥

தேவ ஸிந்தோ: கந்யே - கடல் கன்னிகையே
மாத: - தாயே
ம்ருத்வீ - மிக மென்மையானதும் உனது
மநோஜ்ஞா - மிக அழகியதும் உன்
த்வத்ரஸஜ்ஞா - உனது நாக்கு
ஸுஹ்ருத்யாம் மனதுக்கு மகிழ்ச்சி தருவதாகிய
வித்யாம் - ப்ரஹ்மவித்யையை
தத்யாத் - உபதேசிக்கட்டும்

யத்ர - எந்த நாக்கில்
வ்யக்த: - நன்கு ப்ரகாசிக்கும்
ரக்திமா - சிவப்பானது
வாசாம் தேவ்யா: வாக்தேவதையின்
நித்ய - எப்போதும் நடப்பதான
ந்ருத்தாபிகாதம் நடனத்தால் உண்டாகும் உபாதையை
வக்தி - சொல்லுகின்றதோ

இனி நான்கு ச்லோகங்களால் நாக்கை வருணிக்கின்றார். தாயின் நாக்கு மிகவும் மென்மையானதுடன் மனதைக் கவரத் தக்கதாகவுமுளதாம். அந்நாக்கு எங்கள் மனதை மகிழ்விப்பதான ப்ரஹ்மவித்யையை - நாராயணனைப்பற்றி தெளிந்த அறிவை - உபதேசம் செய்வதாக ஆகவேண்டும் என வேண்டினார். நாக்கு அறிவற்ற தாயிற்றே! அதற்கு எப்படி உபதேசிக்கும் திறமை உண்டு? எனின் அதற்குச் சொல்கிறார் யத்ரேதி. தாயின் நாக்கை நீர் காணவில்லை போலும். ஆகவேதான் இப்படிக் கேட்டீர். தாயின் நாக்கு செக்கச் செவேல் என்றன்றோ உளது. செம்மை அதற்கு எப்படி வந்தது? வாக்தேவதை எப்போதுமே அந்நாக்கில் நடனமாடிக் கொண்டுள்ளாள். அப்படி ஆடுவதால் தோன்றிய

துன்பத்தால் தான் நாக்கு சிவந்துள்ளது. ஆகவே எப்போது மிருப்பவளான சுத்த வாக்தேவதை உபதேசிக்கின்றாள் என்கிறார்.

प्रह्वाः जिह्वां तव तु शरणीकुर्महे शर्महेतुं
रागादागांस्युपचितवतो रक्षितुं या रमे नः।
वारं वारं वृषगिरिपतेः कोपलोपानुरूपाः
सूक्तीः कृत्वा नियतमयते शोणिमानं श्रमेण ॥

ப்ரஹ்வா: ஜிஹ்வாம் தவ து ஶரணீகுர்மஹே ஶர்மஹேதும்
ராகாதாகாம்ஸ்யுபசிதவதோ ரக்ஷிதும் யா ரமே ந:।
வாரம் வாரம் வ்ருஷகிரிபதே: கோபலோபாநுரூபா:
ஸூக்தீ: க்ருத்வா நியதமயதே ஶோணிமாநம் ஶ்ரமேண ॥

ஹே ரமே - லக்ஷ்மி!
வயம் - நாங்கள்
ப்ரஹ்வா: - மிக வணங்கியவர்கள்
ஶர்மஹேதும் - மோக்ஷானந்தம் பெறுவதற்குக் காரணமான
தவ ஜிஹ்வாம் - உனது நாக்கை
ஶரணீகுர்மஹே - ரக்ஷகக் காப்பாக எண்ணியுள்ளோம்
யா - எந்த நாக்கு
ராகாத் - விருப்பத்துடன் செய்த
ஆகாம்ஸி - பாபங்களின்
உபசிதவத: - சுமையை உடையவர்களான
ந: - எங்களையும்
ரக்ஷிதும் - காப்பதற்காக
வ்ருஷகிரிபதே: - ஸ்ரீநிவாஸனுடைய
கோபலோப அநுரூபா: - கோபத்தைப் போக்கத்தக்க
ஸூக்தீ: - அழகிய பேச்சுக்களை
வாரம் வாரம் - அவ்வப்போது
க்ருத்வா - சொல்லியதால்
ஶோணிமாநம் - செம்மையை
அயதே - அடைகிறதோ

அடாத செயல்களைச் செய்வதில்தான் புத்தி மக்களுக்கு எளிதாகச் செல்கிறது. அறிவாளிக்கும் இச்செயல் தவறுடையது எனத்தெரிந்தே செய்கின்றனர். ஒன்றா இரண்டா!! கணக்குமுண்டோ இவைகட்கு!!! இவற்றைக் கண்ட தந்தை ஸ்ரீநிவாஸன் தக்க தண்டனை தரத் தீர்மானித்துள்ளான். இதையறிந்த தாய் லக்ஷ்மி தன் மகன் கொடும்பாவியாயினும் அவனைத் தண்டிக்க விடுவளோ தாய். அவள் கண்களுக்கு குற்றங்கள் புலப்படவே செய்யாதே. இதுதானே தாயின் தனிச்சிறப்பு! எனவே மன்னிக்கும்படி வேண்டுகிறாள் கணவனிடம் அவன் காதுகளில் அச்சொல் விழவே இல்லை. இப்படி காலம் கிடைத்த போதெல்லாம் வேண்டுகிறாள். இப்படி வேண்டியே அவள் நாக்குச் சிவந்துவிட்டது. இந்நாக்கே எங்கள்

மோக்ஷானந்தத்துக்கு காரணமாக இருப்பதால் மிக வணக்கத்துடன் அதனைத் தஞ்சமாகப் பற்றுகிறோம் என்கிறார்.

कंसद्विषो महिषि काननचन्द्रिकेति
दोषं विहाय रसनामवनात्मिकां ते ।
प्राप्तापि पद्मजवधूर्वनजौकसस्ते
सङ्गादिवाधिकवनस्थितिमेति भूयः ॥

கம்ஸத்விஷோ மஹிஷி காநநசந்த்ரிகேதி
தோஷம் விஹாய ரஸநாமவநாத்மிகாம் தே।
ப்ராப்தாபி பத்மஜவதூர் வநஜௌகஸஸ்தே
ஸங்காதிவாதிகவநஸ்திதிமேதி பூய: ॥

ஹே கம்ஸத்விஷோ மஹிஷி - கம்ஸசத்ருவின் மனைவி
பத்மஜவதூ: - வாக்தேவி
காநநசந்த்ரிகேதி - காட்டில் காய்ந்த நிலவுபோல் பயனற்றவள் என்ற
தோஷம் - அபப்பெயரை
விஹாய - விட்டு
அவநாத்மிகாம் - காட்டுதலும் வேறாய் நல்ல இடமான
தே ரஸநாம் - உனது நாக்கை
ப்ராப்தாபி - அடைந்தவளான போதும்
வநஜௌகஸ: - காட்டில் வீடுடையவரான
தே ஸங்காத் - உம் ஸம்பந்தத்தால்
பூய: - பின்பும்
அதிக - அதிகமான
வநஸ்திதிம் - காட்டு வாழ்க்கையை
ஏதி - அடைகிறாள் (இது விரோதாபாஸப்பொருள்)
ஹே கம்ஸத்விஷோ மஹிஷி - கம்ஸசத்ருவின் மனைவியே
க ஆநந சந்த்ரிகா - நான்முகன் முகத்தை நிலவுபோல ப்ரகாசிப்பிப்பவளை
பத்மஜவதூ: - வாக்தேவி
விஹாய - ப்ரஹ்மதேவன் முகமான காட்டை விட்டு
அவந ஆத்மிகாம் - பாதுகாக்கும் தன்மையாயும்
வநஜ - தாமரையை
ஓகஸ: - வீடாக உடையவருமான உம்மை
ப்ராப்தா - அடைந்தவளாய்
அதி கவநே - மிக்க கவிதைகளை இயற்றுவதில்
ஸ்திதிம் - நிலையை
ஏதி - அடைகிறாள் (இது விரோத பரிஹாரப்பொருள்)

விரோதாபாஸாலங்காரமுடைய ச்லோகமிது நாராயணனின் நாபி - பத்மத்தில் ஜனித்தவன் நான்முகன் எனவே அவன் பத்மஜனாயினான். அவன் மனைவி வாக்தேவியான ஸரஸ்வதி பிறருக்கு வாக்தேவியாயினும் நான்முகனின் வாக்கில் அவள் வாழும்போது அவள் நிலை காட்டில் காய்ந்த நிலவுபோல்

பயனற்றதாயிற்று என்ற அவப்பெயர் உண்டாயிற்றவனுக்கு. எப்படியேனும் இப்பெயரைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்றெண்ணி அவன் முகத்தை விடுத்துக் காட்டிலும் வேறானதாய், பிறரைப் பாதுகாக்க வல்லதான உமது நாக்கை வந்தடைந்தான். அடைந்தும் பயனற்றுப் போயிற்று - ஏனெனில் தாமரையாகும் வநஜமான - காட்டில் தோன்றியதான ஓகஸ்ஸை - வீட்டை உடையவளாயிற்றே! முன்பு முகம் மட்டும் காடாக இருந்தது. தற்போது வீடே காட்டின் இடையே இருப்பதாயிற்று. தேளுக்குப் பயந்தோடி மலைப்பாம்பின் வாயில் விழுந்தது போலன்றோ ஆயிற்று என்பது விரோதப் பொருள். உண்மைப் பொருள் வருமாறு. முன்பு காந்த + சந்த்ரிகா எனப் பிரித்து காட்டில் காய்ந்த நிலவு எனப்பொருள் கொண்டோம். தற்போது க + ஆநந்த + சந்த்ரிகா எனப் பிரிக்கின்றோம். க:பிரம்மன் அவன் ஆநந்தத்தை - முகத்தை சந்த்ரிகை போல் நிலவுபோல் ப்ரகாசிப்பிக்கும் தன்மையுடையவளாய் உள்ளான் ஸரஸ்வதி அவள் வநம் + ஜம் + ஓகஸ், வநத்தில் ஜலத்தில் ஜம் தோன்றிய தாமரையை ஓகஸ்ஸாக வீடாக உடையவளான லக்ஷ்மியின் முகத்தை அடைந்தவளாய் பல கவிதைகளை இயற்றுவதில் நிலைத்துள்ளாள் என்பது விரோத பரிஹாரப் பொருளாம். லக்ஷ்மியின் வாக்குகள் ஸாஹித்யங்களாகப் பரிணமிக்கின்றன என்பது கருத்து.

अभ्यर्चतामनघवाङ्मयसारदायाः
रूपं रुचा तुलितशारदनीरदायाः ।
वन्दीभवत्प्रथिततुम्बुरुनारदायाः
वन्दे तवाम्ब रसनाञ्चलशारदायाः ॥

அப்யர்ச்சதாமநகவாங்மயஸாரதாயா:
ரூபம் ருசா துலிதசாரதநீரதாயா: ।
வந்தீபவத்ப்ரதிததும்புருநாரதாயா:
வந்தே தவாம்ப ரஸநாஞ்சலசாரதாயா: ॥ 93 ॥

ஹே அம்ப - தாயே
அப்யர்ச்சதாம் - உன்னைப் பூஜிப்பவருக்கு
அநக - குற்றமற்ற
வாங்மய - வாக்காகிய
ஸாரதாயா: - ஸாரத்தைத் தருபவளும்
வந்தீபவத் - துதிப்பவர்களாக ஆக்கிக் கொள்ளப்பட்டவரும்
ப்ரதித - புகழ்பெற்றவருமான
தும்புருநாரதாயா: - தும்புரு நாரதர் என்பவர்களை உடையவளுமான
தவ - உன்னுடைய
ருசா - உடல் காந்தியோடு
துலித - ஒப்பிடப்பட்ட
சாரத - சரத் ருதுவின்
நீரதாயா: - மேகத்தை உடையவளாம்
ரஸநாஞ்சல - உமது நாவின் நுனியில் இருப்பவருமான
சாரதாயா: - ஸரஸ்வதியின்
ரூபம் - [illegible] ப்ரஸித்தமாகிய உருவத்தை
வந்தே - நமஸ்கரிக்கின்றேன்

தம்மைத் தஞ்சமாகப் பற்றியவர்களுக்கு எக்குற்றமற்றதும், பிறர் மனதை மகிழ்விக்கத்தக்கதுமாகிய நல்ல சுவையுடைய வாக்கை அளிப்பவள் லக்ஷ்மி. பாடகரெனப் புகழ்பெற்ற தும்புருவும் நாரதரும் இலக்குமியின் புகழையே பாடிக் கொண்டிருக்கின்றனர். இவள் நாக்கின் நுனியில் வாழ்கின்றவள் ஸரஸ்வதி. அவள், சொற்களையே தமக்கு வடிவமாகக் கொண்டவள். ருதுவில் மழைபெய்து ஓய்ந்தபின் சரத்ருதுவில் மேகங்கள் வெளுப்பாக இருக்கும். அதுபோல் வெண்மையான ஸரஸ்வதியின் உருவத்தை சேவிக்கிறேன் என்கிறார்.

वैकुण्ठकान्ते वचनाधरी श्री
वक्त्रे तवास्तामृतावतारी ।

आद्ये तु वर्णः शुकलालितोऽभू-
दन्त्ये पुनः किंशुकलालनीयः ॥

வைகுண்டகாந்தே வசநதளௌ த்வௌ
வக்த்ரே தவாஸ்தாமம்ருதாவதாரௌ ।
ஆத்யே து வர்ணः சுகலாலிதோ(அ)பூ-
தந்த்யே புநः கிம்சுகலாலநீய: ॥ 94 ॥

வைகுண்டகாந்தே - பகவத்பத்நி
அம்ருதாவதாரௌ - அம்ருதத்தின் மறு உருவமவை
வசநதளௌ - சொல் உதடு என்ற
த்வௌ - இரண்டும்
தவ வக்த்ரே - உமது முகத்தில்
ஆஸ்தாம் - தோன்றியவைகளே
ஆத்யே - இரண்டனுள் முதலான சொல்லிலுள்ள
சுகலாலித - கிளியால் கொண்டாடப்பட்டதாக
அபூத் - ஆயிற்று
அந்த்யே - அடுத்த உதட்டிலுள்ள
வர்ண - ரூபம்
கிம்சுகலாலநீய: - பலாசப் பூவால் கொண்டாடத்தக்கதாயிற்று

இனி எட்டு ச்லோகங்களால் உதடை வர்ணிக்கிறார். சொல் உதடு என்ற இரண்டும் லக்ஷ்மியின் முகத்தில் உண்டானவை ஆகவே பிறப்பிடம் இரண்டிற்கும் ஒன்றாயிற்று. அதேபோல் இரண்டும் அமிர்தத்தின் மறு வடிவங்களாம். அமிர்தம் போல் இனிப்பவை என்பது கருத்து. இப்படிப் பிறப்பிடத்திலும் வடிவ அமைப்பிலும் ஒத்துமை இருந்தபோதும் வர்ணத்தில் மட்டும் ஒப்புமையின்றி வேறுபட்டுள்ளன. வர்ணம் என்ற சொல்லுக்கு எழுத்து, நிறம் என்ற இரண்டு பொருள்கள் உள்ளதால் அதனை அடிப்படையாகக் கொண்டு வேறுபாட்டைக் கற்பிக்கின்றார். அவ்விரண்டனுள் முதலான சொல்லிலுள்ள வர்ணம் எழுத்து கிளிகளால் துதிக்கத்தக்கதாயுள்ளது. கிளியின் பேச்சையும் - சொல்லையும் - குழந்தைகளின் மழலைச் சொற்களையும் கவிகள் புகழ்வர். கிளியின் பேச்சிலும் மிக அழகியது பகவானின் மனையாள் மணிமொழி என்பது கருத்து. பிந்தியதாகிய உதடு, பலாசம் பூவால் கொண்டாடத்தக்கதாயுள்ளது. பலாசம் பூ செக்கச்செவேலெனச் செவந்திருக்கும். உதடும் அதுபோதுள்ளது என்பது கருத்து.

"ஆஸ்தாம்" என்பது அஸதாதுவின் லோட்டின் ப்ரதமபுருஷ த்விவசநம்.

रागावनेरपि तवाधरजीवकस्य
राजीववासिनि निराकृतपल्लवस्य ।
अच्छैर्द्विजैः परिचयादमृतस्य रीति-
मारोहतः समुचितोऽरुणबिम्बभेदः ॥

ராகாவநேரபி தவாதரஜீவகஸ்ய
ராஜீவவாஸிநி நிராக்ருதபல்லவஸ்ய ।
அச்சைர் த்விஜை: பரிசயாதம்ருதஸ்ய ரீதி-
மாரோஹத: ஸமுசிதோ(அ)ருணபிம்பபேத: ॥ 95 ॥

ஹே ராஜீவவாஸிநி - தாமரையில் வாழ்பவளே
நிராக்ருத - வெற்றி பெறப்பட்ட
பல்லவஸ்ய - தளிரையுடையதும்
ராக - சிவப்புக்கு
அவநே அபி - பிறப்பிடமாயிருந்த போதும்
அச்சை: - வெண்மையான
த்விஜை: - பற்களுடன்
பரிசயாத் - தொடர்பால்
அம்ருதஸ்ய - அமிர்தத்தினுடைய
ரீதிம் - தன்மையான வெண்மையையும், இனிமையையும்
ஆரோஹத: - அடைந்துள்ள
தவ அதர - உனது உதடாகிய
ஜீவகஸ்ய - ஜீவக புஷ்பத்துக்கு
அருணபிம்ப - சிவந்த கோவைக்கனியின்
பேத: - வேற்றுமை
உசித: - தகுதியுடையதே

மா போன்ற சில செடிகளின் இளந்தளிர் செக்கச் செவேலென்றச் சிவந்திருக்கும். அவற்றின் செம்மையை தோல்வியுறச் செய்துவிட்டதாம் தாமரையாளின் உதட்டின் சிவப்பு. ஆனமையால் அவ்வுதடு சிவப்புக்குப் பிறப்பிடமாயிற்றாம். அப்படிச் சிவந்திருந்த போதும் அது பற்களுடன் பழகுவதால் பற்களின் காந்தி உதட்டிலும் படுகின்றது. மேலும் அமிழ்தத்தின் தன்மையான இனிமையை உதடு பெற்றிருப்பதோடு அதன் நிறமாகிய வெள்ளைமையையும் பெற்றுள்ளது. ஆகவே உதடு வெள்சிவப்பு நிறத்ததாக ஆகியது. இப்போது காண்பதற்கு வெள்சிவப்பு நிறமுடைய ஜீவக புஷ்பம் போல் காட்சி தருகிறது. எனவே சிவந்ததான

கொவ்வைக் கனியிலும் இதற்கு வேறுபாடுத் தோன்றுகின்றது. இது மிகவும் பொருத்தமுடையதே. ஏனெனில் கோவைப் பழத்தில் சிவப்பு மட்டும்தான் உண்டு. ஆனால் தாமரையாள் உதட்டில் அமிழ்தத்தின் சுவையும் கிடைக்கின்றதே. ஆகவேதான்.

बिम्बोष्ठयोः पृथगवस्थितयोः कदाचित्
सन्धौ कृते जननि साधुपदे निविष्टैः ।
ओष्ठस्तवैष वितरन्निजमुख्यवर्णं
बिम्बाय लुम्पति च तस्य जघन्यवर्णम् ॥

பிம்போஷ்டயோ: ப்ருதகவஸ்திதயோ: கதாசித்
ஸந்தௌ க்ருதே ஜநநி ஸாதுபதே நிவிஷ்டை: ।
ஓஷ்டஸ்தவைஷ விதரந் நிஜமுக்யவர்ணம்
பிம்பாய லும்பதி ச தஸ்ய ஜகந்யவர்ணம் ॥ 96 ॥

ஜநநி - தாயே
ப்ருதகவஸ்திதயோ: - வெவ்வேறாகத் தனித்து வாழ்பவைகளான
பிம்ப - கொவ்வைக்கனி
ஓஷ்டயோ: - உதடு என்ற இரண்டும்
கதாசித் - எப்பொழுதாவது
ஸாதுபதே நிவிஷ்டை: - பக்ஷபாதமற்றவர்களால்
ஸந்தௌ க்ருதே ஸதி - ஸமாதானம் செய்யப்படுமானால்
தவ ஏஷ ஓஷ்ட - உனது இவ்வுதடு
நிஜ - தனது
முக்யவர்ணம் - உயர்ந்த நிறத்தை
பிம்பாய - கொவ்வைக்கனி
விதரன் - அளித்து
தஸ்ய - அக்கனியின்
ஜகந்ய வர்ணம் - தாழ்ந்த நிறத்தை
லும்பதி - அழித்து விடும்

கொவ்வைக்கனிக்குத் தாயின் உதட்டோடு சிறிய பூசல். காரணம் லக்ஷ்மியுதட்டின் நிறம் போன்ற சிவந்த நிறம் தனக்குக் கிடைக்கவில்லை என்ற மனவேதனையோடு உதடும் தன் செம்மையை கொவ்வைக்கு கொடாது பூசலை வளர்த்துக்கொண்டு போகிறது. ஆகவே இரண்டும் ஒன்று சேராது தனித்தே வாழ்கின்றன. இவற்றின் பூசலைக் கண்டனர் ஸாதுக்களான பெரியோர் ''ஸந்திமிச்சந்தி ஸாதவ:'' என்பது பழமொழி. பக்ஷபாதமற்ற பெரியோர் இருவர் பகைமையை காண விரும்பார். ஸமாதானம் செய்வித்து ஒன்றுபடுத்தவே முயல்வர். எனவே கொவ்வை விரும்பியதை கொடுக்கச்

செய்து அதனோடுள்ள பூசலைப் போக்க எண்ணி ஸாதுக்கள் ஒரு காலத்தில் ஸமாதானம் செய்ய முயல்வரேல் அப்போது உமது கீழுதடு நடுவர் சொன்னபடியே தம்முடன் போட்டியிடும் கொவ்வைக்குத் தமது உயர்ந்த நிறத்தைக் கொடுத்து அதன் வர்ணக் குறையைப் போக்கி அதனுடன் நட்பு கொள்ளும். அத்துணை நற்குணமுடையது உமது உதடு என்கிறார்.

தனித்திருக்கும் கொவ்வை உதடுகளின் வர்ண வேறுபாட்டை காணவிரும்பிய நடுநிலைமைக் காரர்கள் கொவ்வையை உதடின் ஸமீபத்தில் வைத்தபோது உதடின் ஒளி கொவ்வையில் படிஷியதால் கொவ்வையும் உதடோடு ஸமமாகியதால் வர்ண வேறுபாடுக் காண முடியாததாயிற்றென்பது உண்மைக்கருத்து.

இன்னும் ஓர் பொருள்

ஸாது - நல்ல முறையில்
படித - ஶப்தஶாஸ்த்ரமான வ்யாகரணத்தில்
நிபுணை: - கரை கண்டவர்களால்
ப்ருதக் அவஸ்திதயோ: - ஸந்தி இல்லாமல் பிம்ப + ஓஷ்ட என இருக்கும்
பிம்போஷ்டயோ: - பிம்பஓஷ்ட சப்தங்களுக்கு
ஸந்தேளக்ருதே - ஸந்தியாகிய ஸம்ஹிதையைச் செய்தால் அப்போது
ஓஷ்ட: - ஓஷ்டஶப்தம்
நிஜம் - தனது
முக்ய வர்ணம் - முதலெழுத்தான ஓ என்பதை
பிம்பாய விதரந் - பிம்பஶப்தத்துக் கொடுத்து
தஸ்ய - அந்த பிம்ப சப்தத்தினுடைய
அந்த்யவர்ணம் - கடைசி எழுத்தான அ என்பதை
கதாசித் - (விகல்பத்தால் ஒரு ஸமயம்)
லும்பதி - லோபமடைகிறது

ஶப்தஶாஸ்த்ரமான வ்யாகரணத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது இக்கருத்து ''ओत्वोष्ठयो समासेवा'' என்பது வ்யாகரண ஸூத்ரம். ஸமாஸத்தில் அகாரத்தை கடைசியில் கொண்ட ஶப்தம் முதலிருக்க அதன் பக்கத்தில் ஓஷ்ட ஶப்தம் வருமாகில் முதல் ஶப்தத்தின் கடைசியிலுள்ள அகாரத்தையும், ஓஷ்ட சப்தத்தின் இடத்தில் பரரூபமாக ஓகாரம் மட்டும் விகல்பமாக வரும் என்பது இந்த ஸூத்ரத்தின் அர்த்தம். பிம்ப + ஓஷ்ட என பிம்பஶப்தத்துக்கும் ஸமாஸம் செய்தால் முதல் பதமான பிம்பஶப்தத்தின் கடைசியில் அகாரம் இருக்கிறது.

அதன் பக்கத்தில் ஓஷ்ட ஶப்தம் வருகிறது. முதல் பதமான பிம்பஶப்தத்திலுள்ள அகாரத்தை எடுத்துவிட்டால் "பிம்ப்" என்றாயிற்று. ஓஷ்ட ஶப்தத்தின் ஓகாரத்தை எடுத்து விட்டுப்பின் இரண்டு எழுத்துகளுக்கும் பதிலாக ஒரே ஓ காரம் வந்தால் பிம்ப் + ஓஷ்ட - பிம்போஷ்ட என்ற ரூபம் ஸித்திக்கிறது என்பது கருத்து.

तव रदवसने गुणोत्तरेस्मि-
न्नधरपदस्य विरोधिलक्षणैव ।
अमृतकृदपि माधवो मुनीना-
ममृतमुपेतुममुं निषेवते यत् ॥

தவ ரதவஸநே குணோத்தரே(அ)ஸ்மிந்-
நதரபதஸ்ய விரோதிலக்ஷணைவ ।
அம்ருதக்ருதபி மாதவோ முநீநா-
மம்ருதமுபேதுமமும் நிஷேவதே யத் ॥ 97 ॥

குணோத்தரே - குணங்களாலுயர்ந்ததான,
அஸ்மிந்ரதவஸநே - உனது இந்த உதட்டின் விஷயத்தில்
அதரபதஸ்ய - கீழானது என்ற பொருளுள்ள அதர ஶப்தத்துக்கு
விரோதி - கீழானதற்கு விரோதியான மேன்மை என்ற பொருளில்
லக்ஷணைவ - லக்ஷணைதான் சொல்ல வேண்டும்
யத் - யாதொரு காரணத்தால்
மாதவ: - பகவான்
முநீநாம் - யோகிகளுக்கு
அம்ருதக்ருதபி - மோக்ஷமளிப்பவனாக இருந்தும்
அம்ருதம் - மோக்ஷத்தை (அம்ருதத்தை)
உபேதும் - அடைவதற்கு
அமும் அதரம் - இவ்வுதட்டையே
நிஷேவதே - அடைகின்றானோ!

அதரம் என்ற சொல் கீழ் உதடு தாழ்ந்தது என்ற இரண்டு பொருள்களையும் குறிக்கும். தற்போது லக்ஷ்மியின் விஷயத்தில் "தாழ்ந்தது" என்ற பொருள் கொள்வது தக்கதன்று. தாயின் உதடு தாழ்ந்ததாகுமோ? உயர்ந்தது எனச் சொன்னால் தான் பொருந்தும்.

அப்பொருளை இச்சொல் இயல்பாய் குறிக்காது. ஆகவே இலக்கணையால்தான் அப்பொருளைச் சொல்ல வேண்டும். அதரம் என்ற சொல்லுக்கு உதடு என்ற பொருள் இருப்பினும் அதனைத் தற்போது கொள்ளாது கீழ்மை என்பதை மட்டும்

கொண்டு கவி சமத்காரமாகப் பேசியுள்ளார். உதடு மேன்மை பொருந்தியது என்பதற்கு உதாஹரணம் காட்டுகிறார். பகவான் தம்மைத் த்யானிப்பவர்களுக்கு அம்ருதத்தை - மோக்ஷத்தைப் பெறுவதற்கு - அம்ருதத்தைப் பருகுவதற்கு - உமது உதடுகளிடமன்றோ வருகிறார். ஆகவே பகவானால் பருகப்படும் உதடு உயர்ந்து தானே இருக்கும்!

हरिगृहिणि हरिद्रालिप्तया शम्पया ते
तनुमतनुत वेधास्तप्तकार्तस्वराभाम् ।
अधरमथ च तत्राप्यम्ब लिम्पन् सुधीधै-
रनयदनणिमानं शोणिमानं किमेनम् ॥

ஹரிக்ருஹிணி ஹரித்ராலிப்தயா சம்பயா தே
தநுமதநுத வேதாஸ் தப்தகார்த்தஸ்வராபாம் ।
அதரமதச தத்ராப்யம்ப லிம்பந் ஸுதீதை-
ரநயதணிமாநம் சோணிமாநம் கிமேநம் ॥

ஹரிக்ருஹிணி - பகவானின் பத்னியான
அம்ப - தாயே
வேதா - ப்ரஹ்மா
ஹரித்ரா லிப்தயா - மஞ்சள் பூசப்பட்டதும் மிக்க மஞ்சள் நிறமுடைய
சம்பயா - மின்னலாலே
தே தநும் - உமது சரீரத்தை
தப்தகார்த்தஸ்வர - பழுக்கக் காய்ச்சியதால் அழுக்கற்ற தங்கத்தின்
ஆபாம் - ஒளியை உடையதாக
அதநுத கிம் - படைத்தானோ என்ன?
அத - இப்படி படைத்த பின்
தத்ராபி - அந்த சரீரத்திலும்
அதரம் - இதழ்களை
ஸுதீதை - அம்ருதம் என்கிற பூச்சுப்பொருளால்
லிம்பன் - பூசியவனாய்
அநணிமானம் - மிகுதியான
சோணிமாநம் - சிவப்பு நிறத்தை
அநயத் கிம் - அடைவித்தானோ என்ன?

உலகமனைத்தும் தாயான நாராயண மனைவியை நான்முகன் படைத்தானாம். எப்படிப் படைத்தான்? சிவந்த ஒளியை உடைய மின்னலின் மீது மஞ்சளை மிகுதியாகப் பூசி மின்னலை மஞ்சள் நிறமுடையதாக்கி அம்மின்னலால் தாயின் உடலைப் படைத்தானாம். ஆகவேதான் அவ்வுடல் தங்கு காய்ச்சியதால் அழுக்கெல்லாம் அகன்ற பின் பளபளவென ஒளிரும் தங்கம் போல் மின்னுகிறதாம். இது ஒரு உத்ப்ரேக்ஷை. இப்படி உடல் முழுவதையும் மஞ்சள் நிறம் உடையதாய் படைத்துவிட்டு

உதடின் மேல் ஸுதா என்ற பெயர் கொண்ட ஒரு பூச்சைப் பூசினானாம். இனிமை கிடைப்பதற்காக அம்ருதத்தைப் பூசினான் என்பது கருத்து. இப்படிப் பூசி அளவற்ற சிவப்பை உடையதாக உதடை ஆக்கினானா என்கிறூர். இது மற்றுமோர் உத்ப்ரேக்ஷை.

அம்ருதத்தின் நிறம் வெண்மை. மஞ்சள் கலந்த ஜலத்தில் வெண்மையான சுண்ணத்தின் துகளைப் போட்டால் அது எப்படி சிவப்பாக மாறி விடுகிறதோ அப்படி மஞ்சளான உதடில் வெண்மையான அம்ருதத்தைப் பூசியதால் சிவந்து விட்டது உதடு என்பது கருத்து.

இப்போதைப் போல் அப்போதும் உதடுப்பூச்சு உண்டோ என ஐயம் வேண்டாம். இக்காலத்தில் எக்காலத்துக்கும் ஒரே பூச்சே. ஆனால் அக்காலத்தே ருதுவுக்கு ருது பூச்சு மாறுபடும். நன்மை பயக்கும்.

(தொடரும்)

சென்னை பல்கலைக்கழகம் ஸம்ஸ்க்ருத தேர்வுகளில் பதக்கம்

திருவேற்காடு சிரஞ்ஜீவி S. நரசிம்மன் ஸம்ஸ்க்ருதம் M.A (விவேகானந்தா கல்லூரி மாணவர்) 96-97 ஆண்டு தேர்வில் முதல் மதிப்பெண்கள் பெற்று 12-2-98 அன்று பல்கலைக்கழகம் நடத்திய பட்டமளிப்பு விழாவில் ஆளுநரிடமிருந்து 4 பதக்கமும் ரூ 2100 மதிப்புள்ள புத்தகங்களும் பரிசாகப் பெற்றூர். நம் ஆச்ரமத்துச் சிஷ்யரான இவர் மேல்மேலும் அபிவ்ருத்தியடைய ஸ்ரீமத் ஆண்டவன் அனுக்ரஹித்தாயிற்று.

—ஸம்பாதகர்

प्रायस्ते जगदम्ब चुम्बनविधौ बिम्बाधरालम्बनं
संक्रान्तं मधु नन्दनन्दनमुखे सङ्गीतकाले पुनः ।
तस्माद्वेणुमवाप तद्गतरसास्वादी तदादित्सया
वंशान् कृष्णपुरन्ध्रि रन्ध्रयति किं तद्वंशजातानलिः ॥ १००

ப்ராயஸ்தே ஜகதம்ப சும்பநவிதௌ பிம்பாதராலம்பநம்
ஸம்க்ராந்தம் மது நந்தநந்தமுகே ஸங்கீதகாலே புந: ।
தஸ்மாத்வேணுமவாப தத்கதரஸாஸ்வாதீ ததாதித்ஸயா
வம்ஶாந் க்ருஷ்ணபுரந்த்ரி ரந்த்ரயதி கிம்
தத்வம்ஶஜாதாநலி: ॥ 100

க்ருஷ்ணபுரந்த்ரி - கிருஷ்ணனின் மனைவியான
ஹே ஜகதம்ப - உலகத்தாயே
தே - உமது
பிம்பாதர - கொவ்வை போன்ற கீழ் உதட்டினை
ஆலம்பநம் - பற்றியுள்ள
மது - தேன்
சும்பநவிதௌ - பகவான் உதட்டைப் பருகும்போது
ப்ராய: - பெரும்பாலும்
நந்தநந்தமுகே - கண்ணனின் வாயில்
ஸங்க்ராந்தம் - வந்துவிட்டது
ஸங்கீதகாலே - புல்லாங்குழலை ஊதும்போது
தஸ்மாத் - கண்ணனின் வாயிலிருந்து
புநரபி - திரும்பவும்
வேணுமவாப - புல்லாங்குழலை அடைந்தது
தத்கத - அப்புல்லாங்குழலிலுள்ள
ரஸ - உமது உதட்டின் சுவையை
ஆஸ்வாதீ - சுவைக்கவிரும்பிய
அலி: - வண்டுகளின் கூட்டம்
ததாதித்ஸயா அப்புல்லாங்குழலிலுள்ள சுவையைப்பருக ஆசை கொண்டவாய்
தத்வம்ஶஜாதாந் அப்புல்லாங்குழலின் இனத்தைச் சார்ந்த
வம்ஶாந் - தற்போதைய மூங்கில்களையும்
ரந்த்ரயதி கிம் - துளைக்கின்றதா என்ன?

கண்ணன் கொவ்வைகள் போன்ற தமது மனைவியின் அதரத்தைப் பானம் பண்ணினான். அப்போது அவ்வுதட்டிலுள்ள அமிர்தம் கண்ணன் வாய்க்கு மாறிவிட்டது. பின் அவன் புல்லாங்குழல் ஊதும்போது அவன் முகத்தை விடுத்துக் குழலுக்கு மாறிவிட்டது. ஆகவேதான் கண்ணன் குழலினோசை மிக்க புகழ் உடையதாயிற்று. அச்சுவையைத் தாமும் பருகவிரும்பின இக்கால வண்டுகளின் கூட்டம். ஆயின் அக்குழல் இப்போது எப்படி கிடைக்கும்? கிடைக்காதன்றோ! என் செய்வதென யோசித்தன. இதனால் ஒரு கருத்து அவற்றிற்குத் தோன்றிற்று. கண்ணன் குழல்

மூங்கிலாகியதுதானே! இப்போதுள்ள மூங்கில்களும் அதன் குணத்தைச் சார்ந்தவைதானே. எதிலிருந்து எது தோன்றிற்றோ அது அதன் குணத்தைப் பெற்றிருக்க வேண்டுமன்றோ? ஆகவே இம்மூங்கிலுள்ளும் அவ்வதரஸம் இருந்தே தீரும் என்றே எண்ணங்கொண்டவையாகத் தற்போதும் வண்டுகள் மூங்கிலைத் துளைக்கின்றன என உத்ப்ரேக்ஷை செய்கிறார்.

विद्वज्जनैः रुचिरविद्रुमपङ्क्तिरेषा
विज्ञापतां मदधरादधरा किलेति ।
प्रत्यक्षतः प्रकटनाय पयोधिकन्ये
कण्ठे बिभर्षि किल विद्रुममालिकां त्वम् ॥

வித்வஜ்ஜனை: ருசிரவித்ருமபங்க்திரேஷா
விஜ்ஞாபதாம் மததராததரா கிலேதி ।
ப்ரத்யக்ஷத: ப்ரகடநாய பயோதிகன்யே
கண்டே பிபர்ஷி கில வித்ருமமாலிகாம் த்வம் ॥ (100)

ஹே பயோதிகன்யே - கடல்கன்னி
ஏஷா - உமது கழுத்திலுள்ள
ருசிர - அழகிய
வித்ருமபங்க்தி: - பவழ மாலை
மததராத் - எனது கீழுதட்டிலும்
அதரா கில - குறைந்த வர்ணத்தை உடையதே, கீழாக இருப்பதே என
வித்வஜ்ஜனை: - பரீக்ஷை செய்பவரால்
விஜ்ஞாப்யதாமிதி - நிச்சயம் செய்யப்படட்டும் என
ப்ரத்யக்ஷத: - கண்களுக்குப் புலப்படும்படி
ப்ரகடநாய - வெளிப்படுத்த
வித்ருமமாலிகாம் - பவழமாலையை
கண்டே - கழுத்தில், தாழ்ந்த பகுதியில்
பிபர்ஷி கிம் - தரிக்கின்றாயா?

பாற்கடல் குமரி தமது கழுத்தில் தூய பவழமாலையை அணிந்துள்ளாள். பவழம் கடலில் தோன்றுவதுதானே! இவளும் கடலில் தோன்றியவள் தானே! தூய இடத்தில் தோன்றிய இரண்டும் தூய்மையானதாகத் தானே இருக்கும்? சிவந்த உதடுக்குத் தூய சிவந்த பவழத்தை உவமையாகக் கூறுவது கவி மரபு. லக்ஷ்மீ அதைப் பொறுக்கவில்லையாம். பவழம் தனித்து இருந்தபோது எனது உதடுக்கு அது ஸமம் என எண்ணலாம் ஆனால் அது உண்மையன்று. ஒவ்வொரு பொருளையும் நன்கு ஆராய்ந்து பார்த்து அதன் தன்மையை மதிப்பிடும் பரீக்ஷகர்களே! இதோ என் கழுத்திலுள்ளது பவழம். உதடும் அதனருகிலுள்ளது. இப்போது இரண்டையும் பக்கத்தே வைத்து ஒப்பிடுங்கள்.

''இப்போது புலப்படும்! எது உயர்ந்தது எது தாழ்ந்தது என'' எனக்கூறுபவள் போல அவர்கள் கண்களுக்குப் புலப்படும்படியும், உண்மையில் பவழம் தாழ்ந்ததே, அது ஒப்பாகாது என்பதை விளக்குபவள் போலும் பவழமாலையை கழுத்தில் அணிந்துள்ளாயா என்ன? என உத்ப்ரேக்ஷிக்கிறார்.

कपोलौ ते भातः कनकमयताटङ्कसुषमा-
झराघाता रक्तौ जनजननि यत्रैव निहिताः ।
अपि प्रौढेन्द्रद्विट्परिवृढवपुः पाटनखराः
समाख्यामन्वर्थां दधति नरसिंहस्य नखराः ॥

கபோலௌ தே பாத: கநகமயதாடங்கஸுஷமா-
ஜராகாதா ரக்தௌ ஜநஜநநி யத்ரைவ நிஹிதா: ।
அபி ப்ரௌடேந்த்ரத்விட்பரிப்ருடவபு: பாடநகரா:
ஸமாக்யாமந்வர்த்தாம் தததி நரஸிம்ஹஸ்ய நகரா: ॥

ஜநஜநநி - மக்களின் தாயே!
கநகமய - தங்கத்தாலான
தாடங்க - காதணிகளின்
ஸுஷமா - உயர்ந்த சோபையாகிய
ஜர - வெள்ளத்தின்
ஆகாதேந - மிக்கி பரவலாலே
ரக்தௌ - நாற்புறமும் சிவந்துள்ள
தே கபோலௌ - உனது கன்னங்கள்
பாத: - நன்கு ப்ரகாசிக்கின்றன
நரஸிம்ஹஸ்ய - நரஸிம்ஹரையுடைய
நகரா: - நகங்கள்
ப்ரௌட - மிக்க பலமுடையவனும்
இந்த்ர த்விட் - இந்திரனின் சத்ருக்குள்
பரிப்ருட: - உயர்ந்தவனான ஹிரண்யகசிபுவின்
வபு: பாடந - மார்பைப்பிளப்பதில்
கரா அபி - மிகக்கொடியதாயினும்
யத்ர - எந்த லக்ஷ்மியின் கன்னங்களில்
நிஹிதா: - வைக்கப்பட்டவைாய்
ஸமாக்யாம் - நகரா: என்ற பெயரை
அந்வர்த்தாம் - பொருளுடையதாக
தததி - தரிக்கின்றதோ

இரண்டு ச்லோகங்களால் கன்னங்கள் வர்ணிக்கப்படுகின்றன. உலகத்தாய் தனது இரு காதுகளிலும் செம்பொன்னாலான காதணிகளை அணிந்துள்ளாள். அவ்வணிகளின் உயர்ந்த சோபை இரண்டு கன்னங்களிலும் பரவுகின்றது. அச்சோபையின் வீழ்ச்சியால் உண்டாம் துன்பத்தைத் தாளாது கன்னங்கள் சிவந்து விட்டனவாம். அத்துணை மென்மையானவை கன்னங்கள். தமக்கே இயல்பான சோபையோடு காதணியின் சோபையும் சேர்ந்ததால் மிக மிக அழகாக உள்ளன கன்னங்கள். முன்பு பகவான் நரசிங்கமாக அவதரித்து மிக்க பலவானான ஹிரண்யனைக் கொன்ற போது ஆயுதம் எதையும்

கைகளிலேந்தாது தமது நகரங்களையே - நகங்களையே - ஆயுதங்களாகக் கொண்டு அவன் மார்பைக் கீண்டுக் கொன்றான். அத்துணை வலிமை வாய்ந்த அந்நகங்களே தாயின் கன்னங்களில் பட்ட போது அவை தம் வலிமையை இழந்து மெல்லியவையாகி ந + கரா = கொடியவையல்ல, என்ற பொருளுடையவையாகிக் காரணப் பெயராக மாறிவிட்டன.

மிகக் கடினங்களான பகவானின் நகங்களுக்கு மிக மென்மையாக இருக்கும் தன்மையை உபதேசித்த கன்னங்களின் பெருமை சொல்லொணாத மேன்மையை உடையவளாம் என்பது கருத்து.

कान्तौ भातः कपोलौ तव यदुपगतं कर्णरत्नांशुपूरं
संप्राप्तं चुम्बनेषु प्रियतमवदनादम्ब ताम्बूलरागम् ।
मत्वा हस्ताङ्गुलीभिस्त्वमसनरुचिभिर्मार्जनैर्द्विस्त्रिकस्तं
तं दृष्ट्वा दर्पणे ह्रीभरनमितमुखी हास्यसे प्रातरालया ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ (103)

ஹே மாத: - தாயே!
காந்தௌ - மிகுந்த மிளிர்கின்றன
தே கபோலௌ - உமது கன்னங்கள்
பாத: - ப்ரகாசிக்கின்றன
யத் - எந்த கன்னங்களில்
உபகதம் - வந்தடைந்த
கர்ணரத்ந - ரத்னமயமான காதணிகளின்
அம்ஶுபூரம் - ஒளிக்குவியலை
சும்பநேஷு - இறைவன் முத்தமிடும் போது
ப்ரியதமவதநாத் - கணவன் முகத்திலிருந்து
ஸம்ப்ராப்தம் - அடையப்பட்ட
தாம்பூலராகம் - வெற்றிலையின் சிவப்பாக
மத்வா - எண்ணி
அஸநருசிபி: - பத்தைப் பூபோல் ஒளிர்ந்த
ஹஸ்தாங்குலீபி: - கை விரல்களால்
மார்ஜநை: - துடைத்தல்
த்வி: த்ரி: - இருமுறை மும்முறையாகப்பட்ட
தம் - அக்காதணியின் ஒளிக்குவியலை
ப்ராத: - காலையில்
தர்பணே - கண்ணாடியில்
த்ருஷ்ட்வா - பார்த்து
ஹ்ரீபர - வெட்கத்தின் சுமையால்
நமிதமுகீ ஸதீ - கவிழ்ந்த முகத்தை உடையவளாய்
ஆல்யா - தோழியாலேயே
ஹாஸ்யஸே - பரிஹஸிக்கப்படுகிறாய்.

(தொடரும்)

தாயின் கன்னங்கள் இயல்பாகவே அழகானவை. அதில் தாம் அணிந்துள்ளவையும் ரத்தினங்களை இழைத்துச் செய்யப் பட்டவையுமான காதணிகளின் சிவந்த காந்திக்குவியல்கள் வந்தடைந்தன. அதனால் அவை செக்கச் செவேலென்றாயின. இச்சிவப்பை இரவில் அன்பார்ந்த கணவன் முத்தமிடும்போது அவன் வாயிலிருந்த வெற்றிலையின் சிவப்பு தான் இது என மிரண்டாள் அன்னை. அதனைப் போக்க வேண்டும் என்ற காரணத்தால் பந்தூகப் பூபோல் மிகச்சிவந்த தம் கை விரல்களால் பல தடவை துடைத்தாள். இயல்பாகவே சிவந்த கன்னங்களை மிகச்சிவந்த விரல்களால் பலமுறை துடைத்ததால் அது மேலும் சிவந்ததேயன்றி சிவப்பு அகலவில்லை. காலை எழுந்ததும் அங்கு உபசாரத்துக்காக வைக்கப்பட்டிருந்த கண்ணாடியில் தமது முகத்தைப் பார்த்தாள். அப்பு கணவன் வாயிலிருந்து வந்தேறியது இச்சிவப்பு என்ற புத்தியால் தோன்றிய வெட்கத்தில் கடையாய் வணங்கிய முகத்தினள் ஆயினள். இதனைக் கண்ட தோழிகளும் இவளைப் பரிஹஸித்தனர்.

இங்கு காதணிகளின் மணிகள் மதிப்பிடமுடியாதவை என்பதும், விரல்களின் சிவப்பு மென்மையும், பெண்களுக்குரிய மடமை என்ற குணமான மூட நடப்பும் புலப்படுத்தப்பட்டன. (102)

पाण्डिम्ना हसतेव कैटभरिपुः पाणिस्थशङ्खेन तं
पद्मावासिनि पर्वजीवसदृशी स्यालं हि जैवातृकम् ।
हित्वेशं प्रभुरित्यमुं प्रति परीहासाय वक्रात्मना
जातेनैवमधः कृतो हिमरुचा त्वत्कन्धरात्मा दरः ॥

பாண்டிம்நா ஹஸதேவ கைடபரிபு: பாணிஸ்தசங்கேந தம்
பத்மாவாஸிநி பர்வஜீவஸத்ருசீ ஸ்யாலம் ஹி ஜைவாத்ருகம் ।
ஹித்வேசம் ப்ரபுரித்யமும் ப்ரதி பரீஹாஸாய வக்ராத்மநா
ஜாதேநைவமத: க்ருதோ ஹிமருசா த்வத்கந்தராத்மா தர:

பத்மாவாஸிநி - தாமரையில் வசிப்பவளே
கைடபரிபு: - இறைவன்
பாண்டிம்நா - தனது வெண்மையால்
ஹஸதேவ - சிரிப்பது போன்று
பாணிஸ்த - தம் கையிலுள்ள
சங்கேந - சங்கினால்
ஸ்யாலம் - தமது மைத்துனனை
ஜைவாத்ருகம் - சந்திரனை
ஹி - நிச்சயமாக

பர்யஹஸத் - பரிஹஸித்தவனோ
அத: - ஆகையால்
வக்த்ராத்மநா - உன் முகமாக மாறியுள்ள
வக்து: + ஆத்மநா - குறை கூறுவதற்காகவே பேசும் திறன் பெற்றுள்ள
ஹிமருசா - சந்திரனாலே
அமும் பரம் - இந்த பகவானை
ப்ரபுரிதி - உயர்ந்தவரென்று
ஹஸித்வா - பரிஹஸிக்காமல் விடுத்து
த்வத்கந்தராத்மநா - உன் கழுத்து வடிவம் கொண்ட
தர: - பாஞ்சஜந்யத்தை
ப்ரதிபரிஹாஸாய - ஒருவர் செய்ததைத் திரும்பவும் அவருக்குச் செய்வதற்காக
ஏவம் - தற்போது காணப்படுவது போல்
அதாக்ருத: - இழிவாக்கப்பட்டது.

மூன்று ஸ்லோகங்கள் இனி கழுத்தை வர்ணிக்கின்றன. நாராயணன் கையில் பாஞ்சஜந்யம் என்ற ஸங்கம் உள்ளது. அது தூய வெண்மையானது. நாராயணன் சிரிப்புப் போன்றது. சந்த்ரனின் இடையில் சிறிது களங்கமிருப்பதால் பாஞ்சஜந்யத்தில் எக்குறைவுமில்லாததால் தமது ஸங்கத்தோடு ஒப்பிட்டுச் சந்திரனை நாராயணன் பரிஹஸித்தான். மேலும் சந்த்ரன் தமது மனைவியுடன் பாற்கடலில் தோன்றி மைத்துனன் ஆயினான். மருமகன்கள் மைத்துனனை பரிஹஸிப்பது உலக இயல்பு. ஆகவே அவரும் பரிஹஸித்தார். ஆனால் சந்த்ரன் அந்தபரிஹாஸத்திற்குதக்க பதில் செய்ய உடனே லக்ஷ்மியின் முகமாக மாறினான். சந்த்ரன், தற்போது அவனிடம் எக்குறையுமில்லை. இருந்தும் தம்மைப் பரிஹாஸம் செய்த நாராயணன் உயர்ந்தவர் என்பதால் நேராக அவரை பரிஹஸிக்காது விடுத்துத் தம்மைப் பரிஹஸிக்க உதவியதும் நாராயணனைச் சார்ந்ததுமாகிய பாஞ்சஜந்யத்தைக் கழுத்தாக மாற்றித் தமக்குக் கீழிருக்கச் செய்ததோடு வாயினாலும் பரிஹஸித்தானாம். சிரிப்பால் மட்டும் ஏளனம் செய்த ஸங்கத்தைத் தமக்குக் கீழ் இருப்பதாக ஆக்கி அதன்மேல் தாம் உட்கார்ந்ததோடன்றி வாயால் குற்றம் கூறியும் பதிலடி கொடுத்து விட்டான் என்பது கருத்து. சந்த்ரன் போன்ற முகம் ஸங்கு போன்ற கழுத்தின் மேலுள்ளதென்பது உண்மைப் பொருள்.

உலகில் பெரியவர் தம் கௌரவத்துக்கு இழுக்கு வாராமைக்காக ஏளனம் செய்யப்பட வேண்டியவனை நேராக

ஏளனம் செய்யாது அவரைச் சார்ந்தவளை பரிஹஸிக்கின்றனர். இங்கு அதே போல் நடந்துள்ளது.

“வக்த்ராத்மநா” என்பது இரு வகைகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. பாண்டோ: பாவ: - பாண்டிமா.

अन्तः स्थोष्मोद्गाराद् गृहीतमखिलाम्ब कंसदमनेन ।
पाञ्चशरजन्यमभितः प्रतिगर्जति कन्धरा त्वदीयेयम् ॥

அந்தஸ்தோஷ்மோத்காராத் க்ருஹீதமகிலாம்ப கம்ஸதமநேந
பாஞ்சசரஜந்யமபித: ப்ரதிகர்ஜதி கந்தராத்வதீயேயம் ॥

கம்ஸதமநேந - ஸ்ரீ க்ருஷ்ணனாலே
அந்தஸ்த - மனதிலுள்ள
ஊஷ்ம - மன்மததாபத்தை
உத்காராத் - போக்குவதற்காக
க்ருஹீதம் - செய்யப்பட்ட

பாஞ்சசர - மன்மதன் ஸம்பந்தமான
ஜந்யம் - யுத்தம்
அபித: - முடியும் வரை
ப்ரதிகர்ஜதி - ஒவ்வொரு தொடியும் ஹுங்காரம் செய்கின்றது.

கண்ணனுக்கு மன்மத ஜ்வரம் தோன்றிற்றாம். அதைப்போக்க வேண்டி மன்மதப்போர் புரிந்தாராம். அதாவது ஸுரத கேளியும் அதர ஆஸ்வாதமுமாம். “காமிநாம் அதராஸ்வாத: ஸுரதாத் அதிரிச்யதே” என்பது காமசாஸ்த்ரம். காமவேட்கை கொண்டவர்க்கு உதடு சுவைப்பது புணர்ச்சியினும் உகந்தது என்பது கருத்து. இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டெழுந்தது இந்த ஸ்லோகம். உதடு சம்பந்தத்துடன் மன்மதப்போர் முடியும் வரை கழுத்து ஹூம், ஹூம், என்ற ஒலியை எழுப்பியதாம். இவ்வொலியை “மணிதம்” என்பர் காமசாஸ்த்ரக்காரர்.

(104)

चक्राहतामुपगतं स्तनमुन्नतं ते
वीक्ष्यातितिक्षुरयमुच्छ्रयवांस्ततोऽपि ।
कण्ठत्वमेत्य शिरसा निजमुक्तमुक्ता-
हारं च वाहयति तेन तवाम्ब शंखः ॥

சக்ராஹதாமுபகதம் ஸ்தநமுந்நதம் தே
வீக்ஷ்யாதிதிக்ஷுரயமுச்ச்ரயவாம்ஸ்ததோ (அ)பி ।
கண்டத்வமேத்ய ஶிரஸா நிஜமுக்தமுக்தா-
ஹாரம் ச வாஹயதி தேந தவாம்ப ஶங்க: ॥

தே அம்ப - தாயே
ஶங்க: - சங்கு
சக்ராஹ்வயத்வம் - சக்ரம் என்ற பெருமையை மட்டும்
உபகதம் - அடைந்ததாம்
அத ஏவ - ஆதலாலேயே
உத்ததம் - வட்டவடிவைக் பருத்தெழுந்துமான
தே ஸ்தனம் - உமது கொங்கையின
வீக்ஷ்ய - பார்த்து
அஸஹிஷ்ணு: - கொங்கையின் கர்வத்தைப் பொறுக்காததாய்
தவ கண்டத்வம் - உமது கழுத்தாக இருக்கும் தன்மையை
ஏத்ய - அடைந்து
ததோபி - அக்கொங்கையிலும்
உச்ச்ரயவதீ - கர்வம் கொண்ட தாய்
நிருபத்த முக்த - தனதுண்டபின் ஏத்திய
ஆஹாரம் - உணவை
நிருபுக்த - தானனுபவித்த
முக்தாஹாரம் - முத்துமாலையை
தேஷ ஶிரஸா - அக்கொங்கையின் தலையாலே
வாஹயதி - தாங்கச் செய்கிறது

சங்கத்துக்கும் கொங்கைக்குமிடையே நடந்ததொரு பொறாமைச் செயல் இச்செய்யுளில் கற்பனை செய்யப் பட்டுள்ளது. கொங்கை வட்டமாக இருந்ததால் சக்ரம் என்ற பெயரை அது உவமையால் பெற்றதாம். ஆதலாலேயே அதற்கு கர்வம் தோன்றி மேலும் பருத்து ஓங்கி வளர்ந்ததாம் இதனைப் பார்த்ததாம் சங்கு. கொங்கையின் கர்வத்தை சங்கால் பொறுக்கவே முடியவில்லையாம். சக்ரம் என உவமையால் வந்த பெயரைப் பெற்றதாலோ இத்துணை கர்வம். என்னைப்பார், உறுப்பாகவே மாறி விடுகிறேன் என்றெண்ணித் தாயின் கழுத்தாகவே மாறிவிட்டதாம். சங்கை கழுத்துக்கு உவமையாகக் கூறுவது கவிமரபு. மேலும் அதனினும் உயர்ந்த இடத்தைப் பிடித்துக் கொண்டதோடுத் தாம் உண்ட உணவின் எஞ்சிய பாகத்தைத் தலையில் தரிக்கச் செய்கிறதாம் கொங்கையை.

உண்மைப் பொருள் வருமாறு: - கொங்கை உண்மையில் சக்ரம் என்ற பெயரைப் பெறவில்லை. சக்ரம் என்ற சொல் சக்ரவாகம் என்ற பறவையைச் சொல்லும், கொங்கை இச்சக்ரவாகத்தின் ஒப்புமையைப் பெற்றது. எப்படியெனின் சக்ரவாகப்பறவை எப்போது ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து விட்டுப் பிரியாது ஒன்றாகவே வாழும். எனவேதான் சக்ர: என்ற ஏகவசனச் சொல்லாலேயே இரண்டையும் சேர்த்து வழங்குகிறோம். இதேபோல் கொங்கை இரண்டாக இருந்தாலும் அதைப் பன்மைச் சொல்லால் கூறாது ஸ்தநம் என ஏகவசனச் சொல்லே ஜாத்யேகவசனச் சொல்லாகக் கொண்டு இரு

கொங்கைகளையும் ஸ்தநம் என்ற சொல்லாலேயே குறிக்கிறோம். இரண்டும் சேர்ந்தே இருப்பவையாகையின் சக்ரவாகத்தோடு ஒப்புமை உடையதாயிற்று. கழுத்துக்கு சங்கத்தை உவமையாகக் கூறுவது கவிமரபாகையால் அது உண்மையானதே. அது கர்வம் கொண்டதென்பது கற்பனை. கொங்கை இருக்கும் இடத்திலும் உயர்ந்த இடத்தில் கழுத்து இருப்பதால் அதை "உச்ரயவாந்" என மேலிடத்திலிருப்பதாகக் கூறினார். முத்தாரத்தை கழுத்தில்தான் அணிவராதலால் முதலில் தான் அநுபவித்து எஞ்சிய முத்தாரத்தையே கொங்கை தம் தலையாகிய நுனியால் தாங்குகிறது எனக்கற்பனையாகக் கூறினார். (105)

जनस्त्रिलोकीजननि स्तनौ ते
कथं पयोजे कथयत्यशेषः ।
चतुर्मुखाद्यर्भकजीवनाय
जातं तयोरेव पयो हि भूयः ॥

ஜநஸ்த்ரிலோகீஜநநி ஸ்தநௌ தே
கதம் பயோஜே கதயத்யசேஷ: ।
சதுர்முகாத்யர்பகஜீவநாய
ஜாதம் தயோரேவ பயோ ஹி பூய: ॥ (106)

த்ரிலோகீ ஜநநி - மூவுலகங்களின் தாயே
அசேஷ: ஜந: - அனைத்து ஜநங்களும்
தே ஸ்தநௌ - உமது கொங்கைகளை
பயோஜே - பாற்கடலில் தோன்றியதாக
கதம் கதயதி - எப்படிச் சொல்லலாம்?
ஹி - ஏனெனில்
சதுர்முகாதி - நான்முகன் முதலான
அர்பக - குழந்தைகளின்
ஜீவநாய - பிழைப்பிற்காக
தயோரேவ - அக்கொங்கைகளிலிருந்தே
பூய: - மிகுதியான
பய: - பால்
ஜாதம் - உண்டாயிற்றோ

இது முதல் 21 ச்லோகங்கள் கொங்கை வர்ணனை. உலக மாதாவே! அறிவிலி முதல் ஸர்வஜ்ஞன் வரையுள்ள அனைத்து மக்களும் உமது கொங்கைகளை பாற்கடலில் தோன்றியவை. என்கின்றனர். ஆனால் இது எப்படிப் பொருத்தம் உடைத்தாம்? எது பாலைத் தோற்றுவிக்கிறதோ அதற்குப் பாலிலிருந்து தோன்றுதல் எப்படிப் பொருந்தும்? நான்முகன் முதலான அனைத்துக் குழந்தைகளுக்கும் போதியதான பால் உன்

கொங்கைகளிலிருந்துத் தோன்றிற்றேயன்றிக் கொங்கை பாலிலிருந்துத் தோன்றவில்லை. இது விரோதாபாஸாலங்காரம் "பயோஜே" என்பதற்குப் பாற்கடலில் தோன்றியவை எனப் பொருள் சொன்னால் தான் விரோதம் தோன்றும். அச்சொல்லுக்கு ஈண்டு உண்மைப்பொருள் தாமரைமொட்டு போன்றவை என்பதாம். இப்படிச் சொன்னால் கொங்கைகளின் இயல்பான தன்மைச் சொன்னதாமேயன்றி விரோதம் தோன்றாது.

अमृतकलशव्यूहेष्वात्मोद्भवेषु पयोधिना
त्वयि कुचमिषौ निक्षिप्तौ द्वौ विवर्धयितुं जगत् ।
अमृतसहजे यद्दुग्धास्वादनोल्बणपाण्डिम-
द्रुहिणरसनावासाद्गौरी बभूव सरस्वती ॥

அம்ருதகலசவ்யூஹேஷ்வாத்மோத்பவேஷு பயோதிநா
த்வயி குசமிஷௌ நிக்ஷிப்தௌ த்வௌ விவர்த்தயிதும் ஜகத் ।
அம்ருதஸஹஜே யத்துக்தாஸ்வாதநோல்பணபாண்டிம-
த்ருஹிணரஸநாவாஸாத்கௌரீ பபூவ ஸரஸ்வதீ ॥

ஹே அம்ருதஸஹஜே - அம்ருதத்தின் உடன்பிறந்தவளே
பயோதிநா - பாற்கடலால்
ஆத்மோத்பவேஷு - தன்னிடம் தோன்றிய
அம்ருதகலச - அம்ருதம் நிறைந்த குடங்களின்
வ்யூஹேஷு - கூட்டங்களுள்
த்வௌ - இரண்டு குடங்கள்
ஜகத் வர்த்தயிதும் - உலகை வளர்ப்பதற்காக
த்வயி - உன்னிடத்தில்
குசமிஷாத் - கொங்கை என்ற வ்யாஜத்தால்
நிக்ஷிப்தௌ கில - வைக்கப்பட்டவை அன்றோ
ஸரஸ்வதீ - நாம் ஸரஸ்வதீ என்ற நதியாக உள்ளபோது சிவந்தவளோ உலகிலும் வேதங்களிலும் புகழ்பெற்ற கலைமகள்
யத் - எந்த குடங்களிலுள்ள
துக்தாஸ்வாத - பாலைப்பருகியதால்
உல்பண - நன்கு ப்ரகாசமான
பாண்டிம - வெண்மையை உடைய
த்ருஹிண ரஸநா - நான்முகன் நாவில்
வாஸாத் - எப்போதும் வசிப்பதால்
கௌரீ - வெண்மை நிறமுடையவளாக
பபூவ - ஆகிவிட்டாள்

முன்பு தேவரும் அஸுரரும் சேர்ந்து பாற்கடலைக் கடைந்த போது பலபல அம்ருதக் குடங்கள் தோன்றின. அவற்றுள் இரண்டு கும்பங்கள் மட்டும் பாற்கடல் உன்னிடம் வைக்கப்பட்டன. அவற்றையே உலகம் கொங்கை என

வழங்குகிறது. இப்படி வைத்ததற்குக் காரணம் நான்முகன் அளவாயுள்ள அனைத்து உயிரினங்களையும் காப்பதற்காகவே. வெண்மையான அமுதமாகிய தாமின்பாலை நான்முகன் பருகியபோது அவன் வாய் முழுதும் வெண்மையாகிவிட்டது. ஸரஸ்வதீ எனும் பெயர் கொண்ட நதியொன்றுளது. அதன் நீர் எப்போதும் சிவந்திருக்கும். ஸரஸ்வதீ எனப்பெயர் கொண்ட கலைமகளும் ஸரஸ்வதியின் நீர்போல் சிவந்திருக்க வேண்டியவளாயிருக்க அவள் வெண்மை நிறத்தளாயினள். இதற்குக் காரணம் பாற்கடலில் பால் பருகியபோது வெண்மையான நான்முகன் நாக்கில் எப்போதும் இவள் வாழ்வதேயாம்.

न जातुचिद्वर्णविपर्ययं गते
गुणोत्तरे कन्दुककञ्चुके तयोः ।
स्वमित्रमाद्यं कुरुते रमेऽन्तिमं
बिभर्ति मूर्ध्ना त्वदुरोजभूमिभृत् ॥

ந ஜாதுசித்வர்ணவிபர்யயம் கதே
குணோத்தரே கந்துக கஞ்சுகே தயோ: ।
ஸ்வமித்ரமாத்யம் குருதே ரமே(அ)ந்திமம்
பிபர்த்தி மூர்த்நா த்வதுரோஜபூமிப்ருத் ॥

ரமே - லக்ஷ்மியே!
கந்துக கஞ்சுகே - பந்து, ரவிக்கை ஆகிய இரண்டும்
ஜாதுசித் - எப்போதும்
வர்ணவிபர்யயம் - வேறு ஜாதியை
ந கதே - அடையவில்லை
குணோத்தரே - ஸமதமாதிகுணங்களில்
உத்தரே - உயர்ந்தவையுமான
அத ஏவ - ஆகவேதான்
த்வதுரோஜ - உனது கொங்கைகளாகிய
பூமிப்ருத் - அரசன், மலை போன்ற கொங்கை
தயோ: - அவ்விரண்டினுள்
ஆத்யம் - முதலான பந்தை
ஸ்வமித்ரம் குருதே - தனது நண்பனாக்கிக் கொள்கிறது
அந்திமம் - ரவிக்கையை
மூர்த்நா பிபர்த்தி - தலையால் தாங்குகிறது

தாயே! கந்துகம் கஞ்சுகம் என்னும் இரண்டும் தமக்குரிய ஜாதியை விடுத்து வேறு ஜாதியைக் கைப்பற்றியதில்லை. வர்ணாஸ்ரம தர்மத்தை விடவில்லை என்பது பொருள். ஸமம் தமம் முதலிய குணங்களிலும் உயர்ந்துள்ளன. தேஜ

ப்ரத்யந்தத்வமும், கல்யாண குணாகரத்வமும் சொல்லப்பட்டதாயிற்று. பரமைகாந்திகள் என்பது கருத்து. இவை இப்படி இருப்பதால் தான் வர்ணாஸ்ரம தர்மத்தைக் காப்பதையே கடமையாகக் கொண்ட உனது கொங்கையாகிய அரசன் அவ்விரண்டனுள் முதலாகிய பந்தைத் தமக்கு நண்பனாகக் கொண்டது. பந்தைப் போலுள்ளது கொங்கை என்பது கருத்து ஏகவயதாகிய ரவிக்கையைத் தமது தலையால் தாங்குகிறது நல்லொழுக்கமும் நற்குணமுமுடையவர்களே அரசரால் கொண்டாடப்படுகின்றனர் என்பது கருத்து.

कन्दुक कंबुक ங்கள் வர்ண விபர்யயம் செய்யவில்லை என்பதற்கு இவ்விரண்டு சப்தங்களையும் தலை கீழாகப் படித்தாலும் வர்ணத்தில் - எழுத்தில் - விபர்யயம் எவ்வித மாறுபாடும் இல்லாது ஒரே மாதிரியாகவே உள்ளது என்பது கருத்து गुणोत्तरी என்பதற்கு गुण பதத்தால் - நூலால் செய்யப்பட்டு உயர்ந்தது, உன்னை என்பது கருத்து. भूमिभृत् என்பதற்கு அரசன் மலை என்ற இரு பொருள்களுண்டு. தாயின் கொங்கை மலைபோல் பெரிதாய் உளதென்பது கருத்து.

पुरस्त्वदीयाङ्गपुरप्रवेशे
पुराणगोपालभृतावनङ्गः ।
उरोरुहक्षीरघटौ च पश्य-
न्नुचैस्तरां नन्दति सिन्धुकन्ये ॥ १०९ ॥

புரஸ்த்வதீயாங்கபுரப்ரவேஶே
புராணகோபாலப்ருதாவநங்க: ।
உரோருஹக்ஷீரகடௌ ச பஶ்யந்-
நுச்சைஸ்தராம் நந்ததி ஸிந்துகந்யே ॥

ஹே ஸிந்துகன்யே! -பாற்கடல்குமரி!
ஸ: அநங்க: - புகழ்பெற்ற மன்மதன்
த்வதீய - உமது
அங்கபுர - உடலாகிய பட்டணத்தில்
ப்ரவேஶே - புகுரும்போது
புராண - வயதான
கோபாலப்ருதௌ - இடையனால் இரண்டு கைகளில் தாங்கப்பட்ட
உரோருஹ - கொங்கைகளாகிய
க்ஷீரகடௌ - பாற்குடங்களை
புர: -தமக்கு எதிரில்
பஶ்யந் ஸந் - பார்த்தவனாய்
உச்சைஸ்தராம் - மிகவும்
நந்ததி - ஸந்தோஷப்படுகிறான்

பாற்கடல் குமரி சிறுமியாக இருந்தபோது அவள் உடலைத் தொட்டும் பார்க்கவில்லை மன்மதன். ஆனால் தற்போதவள் யுவதியாக மாறிவிட்டாள். ஆகவே அவள் உடலாகிய பட்டிணத்தில் குடியிருக்கக் கிளம்பினான் மன்மதன். அப்படி அவன் செல்லும்போது அவனெதிரில் வயதான இடையனொருவன் தமது இருகைகளில் இரண்டு பாற்குடங்களை ஏந்திக் கொண்டு எதிரில் வந்தானாம். இப்படி பாற்குடமேந்திய இடையன் எதிரே வரும்போது ஶகுந ஶாஸ்த்ரத்தில் உயர்ந்ததாக கூறப்பட்டுள்ளன போல் தற்போது நல்ல சகுநமாவதால் நீண்ட நாள் நிம்மதியாக வாழலாமிங்கென ஸந்தோஷம் கொண்டானாம் மன்மதன்.

पुष्पेषु पूजाविधिमाचरिष्यन्
पुण्याहकुम्भाविव पद्मनाभः ।
पयोनिधेः पुत्रि महाक्षतैस्ते
पयोधरावम्ब परिष्करोति ॥

புஞ்ஸேதமே பூஜாவிதிமாசிஸ்ரீஷயந்
புண்யாஹகும்பாவிவ பத்மநாப: ।
பயோநிதே: புத்ரி மஹாக்ஷதைஸ்தே
பயோதராவம்ப பரிஷ்கரோதி ॥

ஹே பயோநிதே: புத்ரி அம்ப! -பாற்கடல் பெண்ணான தாயே!
பத்மநாப -நாராயணன்
புஞ்ஸேதமே - மன்மதனுக்குரிய
பூஜாவிதிம் - பூஜையை
ஆசிஸ்ரீஷயந் - செய்ய விரும்பியவனாய்
பயோதரௌ - ஜலம் நிறைந்த
புண்யாஹ -புண்யாஹவாசநம் செய்வதற்காக வைக்கப்பட்ட
கும்பாவிவ - குடம் போன்றுள்ள
தே பயோதரௌ - உனது கொங்கைகளை
மஹாக்ஷதை: -பேரக்ஷதைகளால்
பரிஷ்கரோதி - அலங்கரிக்கிறான்.

பய: என்ற சொல் ஜலம், பால், என்ற இரண்டையும் சொல்லும். ஆகவே பயோதரௌ என்ற சொல்லிற்கு நீர் நிறைந்த குடம் என்றும், பால் நிறைந்த கொங்கை என்றும் இரு பொருள்கள் சொல்லப்பட்டுள்ளன.

மங்களகரமானதொரு செயலைச் செய்யும்போது முதலில் புண்யாஹவாசநம் என்ற செயலைச் செய்வர். அப்போது ஜலம் நிறைந்த குடத்தை வைத்து அதை சந்தனம் அக்ஷதை புஷ்பம் முதலியனவற்றால் அலங்கரிப்பர். நாராயணன் மங்களகரமான மன்மத பூஜை செய்யவிரும்பினான். அதற்காக நீர் நிறைந்த குடம் போன்ற உமது கொங்கைகளை அக்ஷதைகளால் அலங்கரித்தான். என்கிறார்.

महाक्षतैः என்பதற்கு பல நகக்ஷதங்களால் என்பது உண்மைப்பொருள். க்ஷதம் என்பதற்கு நகத்தால் தோன்றும் சிறிய புண் என்பது பொருள்.

परामिमामुन्नतिमश्नुवाते
स्मराम्ब सद्यस्तनभूभृतौ ते ।
चराचराणामधिपोऽपि चक्री
करार्पणं देवि ययोः करोति ॥

பராமிமாமுந்நதிமச்நுவாதே
ஸ்மராம்ப ஸத்யஸ்தநபூப்ருதௌ தே ।
சராசராணாமதிபோ(அ)பி சக்ரீ
கரார்ப்பணம் தேவி யயோ: கரோதி ॥

ஹே ஸ்மராம்பதேவி! -மன்மதன் தாயான நாராயண பத்நீ! தே -உன்னைச் சார்ந்தவரும் ஸத்யஸ்தந - தற்போது தான் ராஜ்யம் அடைந்தவருமான பூப்ருதௌ -இரண்டு அரசர்கள் பராம் -மிக உயர்ந்ததும் இமாம் -சொல்ல விருப்பதுமான உந்நதிம்-இணையற்ற மேன்மையை ஆப்நுவாதே -அடைந்துள்ளனர்.

சராசராணாம் - ஸமஸ்தஜங்கமஸ்தாவரங்களுக்கும் அதிப: -தலைவனாயும் சக்ரீ அபி -பல நாடுகளை உடையவனுமானப் பேரரசனும் யயோ: -இவ்விரண்டு அரசர்களுக்கும் கரார்ப்பணம் -கப்பம் கட்டுவதை கரோதி -செய்கின்றனரோ

பேரரசர்களான சக்ரவர்த்திகளும் எவரின் ஆணையைக் காக்க வேண்டியவர்களாய் உள்ளனரோ அவர் மேன்மை சொல்லி வியலாதது என்பது ஶ்லோக கருத்து. பட்டாபிஷேகம் செய்தபோதே இந்நிலையிலுள்ள இவ்விருவர் நாளை நன்கு நிலை பெற்றபின் என்னவென்ன வாகுமோ என அறியோம் என்பதும் கருத்தாம். ஶ்லோகத்தின் பொருள் இவ்விடத்திற்கு ஏற்ப வருமாறு सद्यस्तन भूभृतौ என்பதை सद्यः என்றும் स्तनभूभृतौ என்றும் பிரிக்க வேண்டும். முன் பொருளில் ஒரே பதம் उन्नतिं என்பதற்கு வளையாமை என்பதும் स्तनभूभृतौ என்பதற்குக் கொங்கைகளாகிய மலை என்பதும் பொருளாம். மலைக்கும் கொங்கைக்கும் ஒப்புமை பெரியதாக உள்ளமையும், கடினமாக உள்ளமையும், நெரித்து நிற்பதுமாம். चराचरणां என்பதற்கு சேதநா சேதநாத்மகமான உலகுக்கு என்றும் चक्रि என்பதற்கு சக்ரம் ஏந்திய கையன் என்பதும் करं என்பதற்கு கை என்பதும் பொருள்களாம். ஆக உலகநாதனும் சக்ரம் ஏந்திய கையை உடையவனுமான பகவானது கைகளால் தொடும் பாக்யம் பெற்ற தேவியின் கொங்கைகளின் மஹிமை வர்ணிக்க இயலாதது என்பது பொருளாம்.

हन्त स्तनौ तव विभागकथानभिज्ञौ
कन्दर्पमातरत एव करादिषु त्वम् ।
अङ्गान्तरेषु पृथगाभरणं दधाना
हारं द्वयोरपि तयोरपृथग् ददासि ॥

ஹந்த ஸ்தனௌ தவ விபாககதாநபிஜ்ஞௌ
கந்தர்ப்பமாதரத ஏவ கராதிஷு த்வம்
அங்காந்தரேஷு ப்ருதகாபரணம் ததாநா
ஹாரம் த்வயோரபி தயோரப்ருதக் ததாஸி ॥

ஹே கந்தர்பமாத: - மன்மதன் தாயே!
தவ ஸ்தனௌ - உமது கொங்கைகள்
விபாககதா - பிரித்துக் கொள்ளுதல் என்பதை
அநபிஜ்ஞௌ - அறியாதவை
அத ஏவ - ஆகவேதான்
த்வம் - நீர்
கராதிஷு - கை முதலாகிய
அங்காந்தரேஷு - வேறு உறுப்புகளுக்கு
ஆபரணம் - வளைமோதிரம் போன்றவற்றை
ப்ருதக் - ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக
ததாநா - கொடுத்தபோதும்
தயோ: த்வயோ: - அவ்விரண்டுக்கு மட்டும்
ஹாரம் - முத்தாஹாரத்தை
ததாஸி - கொடுக்கின்றாய்
ஹந்த - ஆச்சர்யம்

உலகில் ஒரு தந்தைக்குப் பல மகன்கள் இருப்பின் அவர்கள் பிரிந்து வாழத்தொடங்கும்போது அவரவர்க்கு உரிய பிதுரார்ஜித ஸொத்தைத் தந்தை பிரித்துக் கொடுப்பதையும் எவரேனு மிருவர் பிரியாது இணைந்து வாழ விரும்பின் அவர்க்குரிய ஸொத்தைச் சேர்த்தே வழங்குவதையும் உலகில் காண்கிறோம். உலக மாதாவுக்குக் கை, கால், விரல், காது என்றிப்படி பல உறுப்புகள் உள. அவை தனித்தனியாகப் பிரிந்து வாழ்கின்றன. ஆனால் பிராட்டியின் கொங்கைகள் ஒன்றோடு மற்றொன்று இணைந்தே வாழ்கின்றன. ஆகவே ஏனைய உறுப்புகளுக்குரிய வளை, சதங்கை, மோதிரம் போன்ற பல பல அணிகளைத் தனித்தனியாக ஒவ்வொன்றுக்கும் கொடுத்த போதும் கொங்கைகளுக்கு மட்டும் முத்து மாலையை ஒன்றாகவே இரண்டிற்கும் சேர்த்து அளித்துள்ளாய். அவரவர்களுக்கு உரிய முறையில் தனித்தனியாகவும் சேர்த்தும் வழங்குகிறாய். ஒரு தாயினிடம் பிறந்த இருவர் இப்படி இணைந்து வாழ்வது ஆச்சர்யம்.

मुष्णाति मेदिनिभृतां श्रियमुद्धतानां ।
सूर्याश्रितं परिहसत्यपि साधुचक्रम् ।
ऊर्ध्वं च पश्यति रमे त्वदुरोजयुग्म-
मीदृक् चरित्रमविवेकिनि नैव चित्रम् ॥

முஷ்ணாதி மேதிநிப்ருதாம் ச்ரியமுத்ததாநாம்
ஸூர்யாச்ரிதம் பரிஹஸத்யபி ஸாதுசக்ரம் ।
ஊர்த்வம் ச பச்யதி ரமே த்வதுரோஜயுக்ம-
மீத்ருக் சரித்ரமவிவேகிநி நைவ சித்ரம் ॥

ஹே ரமே - ரமா தேவியே
த்வதுரோஜயுக்மம் - உனது இரண்டு கொங்கைகள்
உத்ததாநாம் - அகந்தைக்காரர்களது உயர்ந்த
மேதிநிப்ருதாம் - அரசர்களுடைய
ச்ரியம் - செல்வத்தை
முஷ்ணாதி - திருடிவிடுகிறது
ஸூர்யாச்ரிதம் - பலருக்குக் கல்வி போதிக்கும்
ஸாதுசக்ரம் - ஸாதுக்களின் கூட்டத்தை
பரிஹஸந்த்யபி - ஏளனமும் செய்கிறது
ஊர்த்வம் பச்யதி ச - மிகவும் நிமிர்ந்துள்ளது
அவிவேகிநி - நல்லறிவற்றவளிடம்
ஈத்ருக் சரித்ரம் - இத்தகைய செயல்கள்
நைவ சித்ரம் - ஆச்சர்யம் விளைவிப்பவையல்ல.

பலமுடையவர்களின் செல்வங்களைத் தமக்கு வரும் தீங்கையும் நோக்காதுத் திருடுதல், ஆசார்யர்களான மஹான்களிடம் அபசாரப்படுதல், வணக்கமின்மை போன்ற செயல்கள், செய்யத்தக்கதெது, செய்யத்தகாதெது என்ற பாகுபாடற்ற அறிவிலிகளுக்கு இயல்பானதே. ஆகையால் எக்குற்றமுமில்லை என்பதும் பொதுவான கருத்து.

உண்மைப்பொருள்: मेदिनिभृतां - என்பதற்குப் பர்வதங்களுடைய என்பது தற்போது பொருள். அரசனும் மேதினியை - பூமியைப் பாதுகாக்கிறான். பர்வதங்களும் பூமி சாயாது ஒரே நிலையில் நிறுத்தி அதைக் காக்கின்றன. பூமியின் கனம் ஒரு பக்கம் அதிகமாயின் அப்பக்கம் கவிழ்ந்து விடுமாகையால் அதன் எடை மாறாதிருப்பதற்காக மலைகள் வைக்கப்பட்டுள்ளன. மலையின் ஸ்ரீயாவது ஓங்கி உயர்ந்திருத்தலே. ரமையின் கொங்கை உன்னித்து எழுந்துள. ஆகவே மலையின் செல்வத்தை திருடியது என்றார். "ஸாது சக்ரம்" என்பதற்கு

அழகிய சக்ரவாகம் எனப்பொருள். சக்ரவாகம் என்கிற பக்ஷி பகலில் ஆணும் பெண்ணும் இணைந்தே வாழ்ந்து கொண்டிருக்கும். இக்கருத்து ''ஸௌர்யாஸ்ரிதம்'' என்பதால் விளக்கப்படுகிறது. சக்ரவாகப்பறவை போல் ஸ்தநங்கள் இணைந்துள்ளன என்பது கருத்து. சக்ரவாகத்துக்கு இரவில் கண் தெரியாது. ஆகவே அவை படுக்கும்போது தமது அலகுகளை கோத்துக்கொண்டு படுக்குமாம். உறங்கியதும் அலகு பிரிந்து விடின் மற்றொன்றைக் காணேமே என கத்திக் கொண்டே இருக்குமாம். விடிந்தபின் இரண்டும் சேர்ந்து கொள்ளுமாம். அதுபோல் கொங்கைகளுக்குப்பிரிவு இல்லையாததால் கொங்கை சக்ரவாகத்தைப் பரிஹாஸம் செய்கிறதாம். ''ஊர்த்வம் பச்யதி'' என்பதற்குக் கீழ்முகமாகத் தாழாதது என்பது கருத்து. தாழ்தல் கொங்கைக்கிழுக்கு.

उच्चैरतन्वाज्यवतीर्णशक्त्यो-
र्भूयांसि पातुं क्षमयोः पयांसि ।
मातर्महाहारसमृद्धिभाजो-
र्युक्तं हि पीनत्वमुरोजयोस्ते ॥

உச்சைரதந்வாஜ்யவதீர்ணமக்த்யோர்-
பூயாம்ஸி பாதும் க்ஷமயோ: பயாம்ஸி ।
மாதர்மஹாஹாரஸம்ருத்திபாஜோர்-
யுக்தம் ஹி பீநத்வமுரோஜயோஸ்தே ॥

ஹேமாது - தாயே!
அதநு - மிகுதியான
ஆஜ்ய - நெய்யைப் பருகியதாலே
வதீர்ண - தோன்றியுள்ள
மக்த்யோ - மக்தியை உடையனவும்
பூயாம்ஸி - மிகுதியான
பயாம்ஸி - பசுவின் பாலே
பாதும் - பருகுவதற்கு
க்ஷமயோ - மக்தி உடையனவும்
மஹாஹாரா - அறுசுவை உண்டியின்
ஸம்ருத்தி - நிறைவை
பாஜோ: - அடைந்தவைகளுமான
உரோஜயோ - ஔரஸ புத்திரனுக்கு
கொங்கைகளுக்கு
உச்சை - பீநத்வம்
உயர்ந்திருப்பதோடு
பருத்திருத்தல்
யுக்தம் ஹி - தகுதியுடையதே.

பிள்ளைகள் இரு வகைப்படுவர். பெற்று வளர்த்தவர். ஓரினத்தவர். ஸ்வீகாரம் செய்து கொண்டவர் வேறோரினத்தவர். பெற்ற பிள்ளையிடமுள்ள அன்பும் வாங்கிக் கொண்ட பிள்ளையிடமுள்ள அன்பும் ஒன்றாக இருக்குமோ? ஆகவே

பெற்ற பிள்ளையோடு தாயின் ஸ்தனங்களை ஒப்பிட்டுப் பேசுகிறார். மகன் தனது குழந்தைப் பருவத்தே மிகுதியான நெய்யைப் பருகினான். "ஆயுர்வை க்ருதம்" என நெய்யை ஆயுளாகவே உருவகம் செய்கிறது வேதம். வீட்டில் பசுவின் பாலுக்கும் எக்குறையுமில்லை. அதையும் முடிந்தவரைப் பருகியாயிற்று. இம்மட்டோ! அறு வகைச் சுவைகளுடன் கூடிய உணவுக்கும் எப்போதும் பஞ்சமில்லை. அதையும் ஆர அமர்ந்து உண்டாயிற்று. இத்தனையும் ஜெரிப்பதற்கு வேண்டிய ஜீரண ஸக்திக்கும் பஞ்சமில்லை. இப்படி வளர்ந்த பெத்த மகன் உயர்ந்து பருத்திருப்பதில் வியப்பேது மில்லை. காரணங்கள் மிகுந்திருந்த போது காரியமும் மிகுந்து தானே இருக்கும்! எனவே தாயின் கொங்கை உயர்ந்து பருத்திருப்பது தக்கதே என்கிறார். கொங்கைக் குரிய பொருள் வருமாறு.

அதநு - மன்மதனின் ஆஜி - போரில், அவதீர்ண - தோன்றிய ஸக்தேோ: - ஸக்தியைப் பெற்றனவும் பயாம்ஸி - தாய்ப்பாலை, பாதும் - காப்பதற்குரிய - கோஶயோ: - இடமாக இருப்பதும், மஹார்ஹா - பெரிய முத்து மாலைகளின், ஸம்ருத்தி - மிகுதியை பாஜோ: - அடைந்தனவுமான உரோஜயோ: - கொங்கைகளுக்கு உச்சை: பீநத்வம் - உயர்ந்திருப்பதோடு பருத்திருத்தல், யுக்தம் - தகுதியுடையது என்பதாம்.

विवेकवार्ताविरहेऽपि पद्मे
गुरुत्वभाजोऽस्य कुचद्वयस्य ।
गिर्युत्तमा बिभ्रति शिष्यभावं
क्षमाधराणां क्षममेतदेषाम् ॥

விவேகவார்த்தாவிரஹே(அ)பி பத்மே
குருத்வபாஜோ(அ)ஸ்ய குசத்வயஸ்ய ।
கிர்யுத்தமா பிப்ரதி ஶிஷ்யபாவம்
க்ஷமாதராணாம் க்ஷமமேதத்தேஷாம் ॥

ஹே பத்மே - தாமரையாளே
விவேக வார்த்தா விரஹேபி - அறிவு என்ற செல்வுக்குச் சிறிதும் இடமில்லாதவளாயினும்
குருத்வபாஜ: - ஆசார்யனாக இருக்கும்

நிலையைப்பெற்றுள்ள
குசத்வயஸ்ய - ஆசார்ய புருஷனுக்கும், இரு ஸ்தனங்களுக்கு
கிரி - மலைகளில்

உத்தமா - உயர்ந்தவர்கள்
ஶிஷ்யபாவம் - சீடனாக இருக்கும் தன்மையை
பிப்ரதீதி யத் - தாங்குவது என்பது யாதொன்றுண்டோ
தத் - அது
க்ஷமாதராணாம் - கல்விச் செருக்கற்ற
ஏஷாம் - சீடர்களுக்கு
க்ஷமா - தகுதியுடைத்தே.

ஆசார்ய புருஷர்கள் எனவும் சிஷ்யர்கள் எனவும் பாகுபாடுண்டு. இதில் ஆசார்ய புருஷன் என்பவன் சீடர்களுக்கு ஸமாச்ரயணம் செய்தல் மந்த்ரங்கள் உபதேஶித்தல் உயர்கல்வி கற்பித்தல், நன்னெறி காட்டுதல் போன்றவற்றைச் செய்பவனானவன். இவற்றைப் பெற்றுக் கொள்பவன் சீடன் எனப்பட்டான். இந்நிலை பரம்பரையாக வருவது. ஒரு ஸமயம் ஆசார்யனாக ஆக வேண்டியவன் நக்கது தகாது என்பதையும் அறியும் ஆற்றலற்றவனாக இருந்த போதும், வழி வழியாக வந்த முறையில் ஆசார்யன் என்ற நிலையைப் பெற்றான் எனக்கொள்வோம். அதே போல் அவன் சீடன் வழியில் வந்த ஒருவன் கல்வி கேள்விகளில் உயர்ந்தவனாக அப்போது வந்தான் என்றும் கொள்வோம். இப்போது இச்சீடன் தம் கல்விச் செருக்கை விடுத்து அறிவற்றவனையே முன் வந்த முறையைப் பின்பற்றி குருவாகக் கொண்டால் அது அவனது மேன்மையை விளக்கும். இது உலகில் காணத்தான் கிடைக்கின்றது என்கிறார். உண்மைப் பொருளோவெனின் ''விவேகவார்த்தாவிரஹோ'' என்பது இடைவெளி என்ற பேச்சுக்கே இடமில்லாதது. இரு கொங்கைகளும் இணைந்துள்ளன என்பதையும், குருத்வம் என்பது பருமனாக இருக்குகையையும் கிர்யுத்தமா: என்பது உயர்ந்த மலைகள் என்பதையும் குறிக்கின்றன. தற்போது கிர்யுத்தமா: என்பதை கிரி + உத்தமா: பிரிக்காது ஒரே பதமாகக் கொண்டு ஏனையவற்றோடு சேர்த்துப் பொருள் காண்க. உயர்ந்த மலைகள் கொங்கைகளுக்குச் சீடனாகையாவது தாங்கள் எப்படிக் கொங்கை போல் பருப்பது என்பதைக் கற்பதேயாம். அதிசயோக்தி என்றும் அலங்காரமாம். உயர்வு நவிற்சி யணி என்பர் தமிழர். இதை சிறிதே உள்ளதை மிகுதி படுத்தி கூறுவது என்பது பொருளாம்.

116. रमे कराभ्यां रचितार्दनस्य त्रैलोक्यभिक्षोरतनुप्रदानम् ।
स्तनावुदारौ तनुतस्तवेमौ तृणीकृताष्टापदशैलशृङ्गौ ॥

ரமே கராப்யாம் ரசிதார்த்தநஸ்ய
த்ரைலோக்யபிக்ஷோரதநுப்ரதாநம் ।
ஸ்தநாவுதாரௌ தநுதஸ்தவேமௌ
த்ருணீக்ருதாஷ்டாபதஶைலஶ்ருங்கௌ ॥

ஹே ரமே! - லக்ஷ்மி!
உதாரௌ - வள்ளல்களாயும்
அத ஏவ - ஆதலாலேயே
த்ருணீக்ருத - புல்போல் மதிப்பில்லாததாக்கப்பட்ட
அஷ்டாபதஶைல - மேருமலையின்
ஶ்ருங்கௌ - நுனிபோன்று தங்கக் குவியல்களை உடையவுமான
தவேமௌ ஸ்தநௌ - உமது இக்கொங்கைகள்
த்ரைலோக்யபிக்ஷோ: - முன்பு மூவுலகங்களையும் யாசித்தவரும்
அத ஏவ - மூவுலகைப் பெறுவதற்காகவே
கராப்யாம் - கைகளால்
ரசித - செய்யப்பட்ட
அர்த்தநஸ்ய - கைகளைவிரித்து யாசித்தலை உடையவருமான பகவானுக்கு
அதநு ப்ரதாநம் - மிகுதியாக அளிப்பதை
தநுத: - செய்கின்றன.

முன்பொருகால் பகவான் மஹாபலியிடம் யாசிக்கச் சென்றான். அவன் யாசித்தது மூவுலகங்களையும். ஆகவே மூவுலகங்களையும் பெறுவதற்கேற்ப தமதிருகைகளையும் பெரிதாக விரித்து யாசித்தான். மேருமலையின் நுனியில் தங்கக் குவியல்கள் எண்ணிறந்து உள்ளன. அக்குவியல்களைப் போன்ற பல குவியல்களை புல் போல் லக்ஷ்யமில்லாமல் யாசகர்களுக்கு வழங்குபவை அன்னையின் கொங்கைகள். ஆகவே நாராயணனின் பேராசை குறை இல்லாமல் நிறை வேறுமளவிற்கு மிகுதியாக அளித்தவையாம் கொங்கைகள். பகவானின் ஆசையைப் பூர்த்தி செய்விக்கத் தக்க வள்ளன்மை வாய்ந்தவை என்பது கருத்து. கொங்கைக் குரிய பொருள் வருமாறு.

உதாரௌ - பெரியவையும்
த்ருணீக்ருத - தமதுயர்வால் புல்லுக்குச் சமமாக்கப்பட்ட
அஷ்டாபதஶைல - மேருமலையின்
ஶ்ருங்கௌ - நுனியை உடையவையுமான
தவேமௌ - உமது கொங்கைகள்
கராப்யாம் - கைகளால்
ரசித - செய்யப்பட்ட
அர்த்தநஸ்ய - பிடித்தலையுடைய
த்ரைலோக்யபிக்ஷோ: நாராயணனுக்கு
அதநுப்ரதாநம் - மன்மத விகாரத்தை

தநுதே - செய்கின்றான் என்பதாம்.

கருத்து தெளிவானதே

117. कुचौहिरण्याचलसंपदं ते प्रह्लादहेतू नियतं भजेते ।
तनोति मातस्तत एव नूनं नृकेसरी तत्र नखक्षतानि ॥

குசௌ ஹிரண்யாசலஸம்பதம் தே
ப்ரஹ்லாத ஹேதூ நியதம் பஜேதே।
தநோதி மாதஸ்தத ஏவ நூநம்
ந்ருகேஸரீ தத்ர நகக்ஷதாநி॥

ஹே மாத: - உலகத் தாயே!
ப்ரஹ்லாத ஹேதூ - ப்ரஹ்லாதனை உண்டு பண்ணிய
தே குசௌ - உமது ஸ்தநங்கள்
ஹிரண்யாசல - மலை போன்ற ஹிரண்யனுடைய
ஸம்பதம் - ஒப்புமையை
நியதம் - எப்போதும்
பஜேதே - அடைகின்றன
தத ஏவ - எனவேதான்
ந்ருகேஸரீ - நரஸிம்ஹமான பகவான்
தத்ர - அக்கொங்கைகளில்
நகக்ஷதானி - நகங்களால் கீறுதலை
தநுதே - செய்கிறார்
நூநம் - நிச்சயம்

தாயே! உமது ஸ்தநங்கள் ப்ரஹ்லாதனை உண்டுபண்ணியவை. ப்ர + ஆஹ்லாத + ஹேது - உயர்ந்த, ஆநந்தத்தை, உண்டு பண்ணுபவை என்பது உண்மைப் பொருள். இவை மலை போன்ற ஹிரண்யனின் ஒப்புமையைப் பெற்றுள்ளன. மேருமலையின் முடிகள் தங்கமயமானவை என்பது நூலோர் கொள்கை. ஆகவே தங்கமலையின் செல்வங்களான பளபளக்கும் தன்மையையும் உயர்ந்துள்ளமையையும் கொங்கைகள் அடைந்துள்ளன என்பது ஹிரண்யாசல ஸம்பதம் என்பதன் கருத்து. எனவேதான் நரசிங்கமான பகவான் அவற்றுள் தமது நகங்களால் கீறுதலைச் செய்கின்றார். பகவானின் நகங்கள் ஹிரண்யாஸுரனின் மார்பைப் பிளந்த போதும் லக்ஷ்மியின் ஸ்தநங்களில் புண்ணை மட்டும்தான் உண்டுபண்ணின. ஸ்தநங்களின் கடினத் தன்மை ஆச்சர்யத்துக்கு உரியது என்பது திண்ணம்.

118. उत्तुंगयोः तुल्यं उरोजयोस्ते,
गदन्ति सर्वे कथमम्ब कुम्भम् ।
तत्कार्यभूतः कथयत्यगस्त्य-
स्तत्र स्वहेतौ परिमाणमेतत् ॥

உத்துங்கயோஸ்துல்யமுரோஜயோஸ்தே
  கதந்தி கர்வம் கதமம்ப கும்பம் ।
தத்காரிபூத: கதயத்யகஸ்த்யஸ்-
  தத்ர ஸ்வஹேதௌ பரிமாணமேதத் ॥

ஹே அம்ப - தாயே!
ஜநா: - மக்கள்
கர்வம் - குள்ளமான
கும்பம் - குடத்தை
உத்துங்கயோ: - உயர்ந்த
தே உரோஜயோ: - உமது கொங்கைக்கு
ஸமம் - ஒப்பாக
கதம் வதந்தி - எப்படிச் சொல்கின்றனர்?
தத்காரிபூத: - குடத்தால் தோற்றுவிக்கப்பட்ட
அகஸ்த்ய: - அகஸ்த்ய மஹர்ஷி
ஸ்வஹேதௌ - தன்னை உண்டு பண்ணிய
தத்ர - அக்குடத்தின்
ஏதத்பரிமாணம் - குள்ளமாக இருக்குமதை
வ்யநக்தி - புலப்படுத்துகின்றார்.

கவிகள் கொங்கைக்குக் குடத்தை உவமையாகக் கூறுகின்றனர். அது உம்மிடம் எப்படிப் பொருந்தும்? உமது ஸ்தனம் உயர்ந்தவை. குடமோ சிறியது. ஆகவே ஒன்று உயர்ந்துள்ளதற்கும் குள்ளமானதற்கும் ஒப்புமை எப்படிப் பொருந்தும்? இரண்டிற்கும் ஒப்புமை வேண்டாவோ? குடமும் பெரியதாகத்தானே உள்ளது? சிறியதாக இல்லையே! என்கின்றீர்களா! அதுதான் இல்லை. குடத்தில் பிறந்த அகஸ்த்யர் தன்னைத் தோற்றுவித்த குடத்துக்கு சிறுமையைப் புலப்படுத்திவிட்டாரேயன்றி குடம் உண்மையில் சிறியதில்லை.

தோன்றியதன் அளவுக்கு ஏற்பத்தான் தோற்றுவித்ததன் அளவுமிருக்கும். இதை ஏற்க வேண்டும் என்பது கருத்து. 118

119. रतव्रतारम्भकृते रतीशो हरिद्रया लिप्तमधोक्षजाय ।
माता रमे मङ्गलनारिकेलयुगं ददौ किं त्वदुरोजयुग्मम् ॥

ரதவ்ரதாரம்பக்ருதே ரதீசோ
  ஹரித்ரயா லிப்தமதோக்ஷஜாய ।
மாதா ரமே மங்கலநாரிகேல-
  யுகம் ததௌ கிம் த்வதுரோஜயுக்மம் ॥

ஹே ரமே மாதா: - தாயான லக்ஷ்மியே
ரதீச: - ரதிதேவியின் கணவன் மதியைத் தூண்டுபவன்
ஹரித்ராலிப்தம் - மஞ்சள் பூசிய
த்வதுரோஜ யுக்மம் - உமது கொங்கையாகிய
மங்கள - மங்களகரமான
நாரிகேலயுகம் - இரண்டு தேங்காய்களை
ரதவ்ரத - புணர்ச்சியாகிய அவ்விரதத்தின்

ஆரம்பக்ருதே - தொடக்கத்தை அனுமதிப்பதற்காக
அதோக்ஷஜாய - நாராயணனுக்கு
ததவதீம் - கொடுத்தனை அன்றோ?

உலகில் எப்படிப் பெண்ணின் தந்தை தமதகம் தம் பெண்ணை மணக்கவந்துள்ளவனிடம், ப்ராஜாபத்யம் முதலான எட்டு வ்ரதங்களைச் செய்துகொள்ள அநுமதி வழங்குவதாக மங்களமான மஞ்சள் பூசிய இரண்டு தேங்காய்களை இன்றும் தருகின்றனரோ அதுபோல் அதோக்ஷஜனுக்கு மண்மகள் மஞ்சள் பூசிய உமது கொங்கைகளாகிற இரண்டு தேங்காய்களைக் கொடுத்தாளா?

அக்ஷம் - ஐம்பொறிகள் - அக்ஷஜம் - ஐம்பொறிகளால் உண்டாகும் உணர்ச்சி - அது எவனால் அத: க்ருதமோ அழிக்கப்பட்டதோ அவன் அதோக்ஷஜனாவான் *119*

120. उरोजयुग्मं तव युक्तिभूम्ना करीन्द्रकुम्भौ कथयन्ति मन्ताः ।
आभाति तत्रोपरि मौक्तिकश्री रोमालिशुण्डा च लसत्युपान्ते ॥

உரோஜயுக்மம் தவ யுக்திபூம்நா
கரீந்த்ரகும்பௌ கதயந்தி மந்தா: ।
ஆபாதி தத்ரோபரி மௌக்திகஶ்ரீ
ரோமாலிஶுண்டா ச லஸத்யுபாந்தே ॥

மாத: தாயே!
தவ உரோஜயுக்மம் - உமது இரண்டு ஸ்தனங்களை
யுக்தி பூம்நா - பல காரணங்களால்
கரீந்த்ர - யானையின்
கும்பௌ - மத்தகங்களாக
கதயந்தி - சொல்கின்றனர்
தத்ரோபரி - அதன் மேல்
மௌக்திகஶ்ரீ: - முத்துகளின் சோபை
ஆபாதி - விளங்குகின்றது
உபாந்தே - அருகிலேயே
ரோமாளி - உரோமங்களின் வரிசையாகிய
ஶுண்டா - துதிக்கையும்
லஸதி - விளங்குகிறது.

தாயே! உமது ஸ்தனங்களை இணைந்திருத்தல் முதலான காரணங்களால் யானையின் மத்தகத்தோடு ஒப்பிடுகின்றனர் புலவர். அது தகுதியுடையதே. ஏனெனில் யானையின் தலையில் முத்துகளின் சோபை உள்ளது. யானையின் தலையுள் முத்து பிறப்பது ப்ரஸித்தம். உமது ஸ்தனங்களில் முத்துமாலை சோபை உள்ளது. மேலும் மத்தகத்தின் கீழ் யானைக்குத் துதிக்கை உள்ளதுபோல் உமது ஸ்தனங்களின் கீழ் ரோம வரிசை

துதிக்கை போல் நாபிவரை உள்ளது. இவ்விரு காரணங்களால் உலகத்தவர் சொல்வது பொருத்த முடைத்தே. 120

121. तवायमम्ब स्तनयोः सखायौ दधाति कुम्भौ शिरसेति नूनम् ।
ग्राहग्रहात् त्रातुमहो गजेन्द्रं त्वरा हरेः कापि पुराविरासीत् ॥

தவாயமம்ப ஸ்தநயோ: ஸகாயௌ
ததாதி கும்பௌ சிரஸேதி நூநம் ।
க்ராஹக்ரஹாத் த்ராதுமஹோ கஜேந்த்ரம்
த்வரா ஹரே: காபி புராவிராஸீத் ॥

ஹே அம்ப - தாயே!
அயம் - தற்போது பேசப்படும் யானை
தவ ஸ்தநயோ: - உமது ஸ்தனங்களின்
ஸகாயௌ - நண்பர்களை
சிரஸா ததாதி - மிகவும் கொண்டாடுகிறது. தலையால் தாங்குகிறது. (ஸ்லேஷையால்)
கஜேந்த்ரம் - உயர்ந்த யானையை
க்ராஹக்ரஹாத் - முதலையின் பிடியிலிருந்து
த்ராதும் - விடுவிப்பதற்காக
காபி - வர்ணிக்க முடியாத
த்வரா - வேகம்
புரா - முன் காலத்தில்
ஆவிராஸீத் - தோன்றிற்று
நூநம் - நிச்சயம்

தாயே! இந்த யானை உமது நண்பர்களான இரு கும்பங்களை மத்தகங்களை - மிகவும் புகழ்கிறது. அதிகம் ஏன்? தலையாலேயே தாங்குகிறது. இக்காரணத்தால்தான் முன்பொருகால் த்ரிகூடமலையின் நுனியில் அழகிய தாமரைக் குளத்தில் முதலையால் கவ்வப்பட்ட கஜேந்திரனை அம்முதலையைக் கொன்று காப்பதற்காக மனதிற்கும் எட்டாத தோர் பரபரப்பு பகவானிடம் தோன்றியது.

பக்தன் துன்பத்தைத் துடைப்பதில் பகவானுக்கு உள்ள வேகத்தைக் கண்ட அவனது பக்தர்களான பட்டர் போன்றவர். ''अतन्द्रित चमूपति'' முதலான ச்லோகங்களால் அவ்வேகத்தையே நமஸ்கரித்துள்ளனர். 121

चन्द्रेण चक्रमिथुनं कृतविप्रयोगं
प्रासादपेक्षिततदीयजनावलम्बम् ।
वक्षोरुहद्वयमिषेण विधुन्वसस्ते
प्राप्याद्यमृच्छति निरन्तरसङ्गतिं तत् ॥

சந்த்ரேண சக்ரமிதுநம் க்ருதவிப்ரயோகம்
த்ராஸாதபேக்ஷிததநீயஜநாவலம்பம் ।
வக்ஷோருஹத்வயமிஷேண விதுஸ்வஸஸ்தே
ப்ராப்யாங்கம்ருச்சதி நிரந்தரஸங்கதிம் தத் ॥

ஹே விதுஸ்வஸ: - சந்த்ரனின் ஸஹோதரி!
சந்த்ரேண - பிரிப்பவனாகிய சந்திரனாலே
க்ருத - ஒவ்வொரு இரவும் செய்யப்படும்
விப்ரயோக - பிரிவினையுடைய
த்ராஸாத் - பயத்தாலே
அபேக்ஷித - எதிர்பார்த்த
ததீயஜந - சந்த்ரனைச் சார்ந்தவரின்
அவலம்பம் - துணையை உடையவைகளான
சக்ரமிதுநம் - இரு சக்ரவாகப் பறவை
வக்ஷோருஹத்வய - இரண்டு ஸ்தநங்கள் என்கிற
மிஷேண - வியாஜத்தாலே
தே - சந்த்ரன் ஸஹோதரியான உனது
அங்கம் ப்ராப்ய - உடலை அடைந்து
நிரந்தர ஸங்கதிம் - பிரிவற்ற சேர்க்கையை
ருச்சதி - அடைந்துள்ளது

பகல் முழுதும் இணைந்தே வாழும் சக்கரவாக தம்பதிகள் இரவில் கண் தெரியாததால் பிரிந்துவிடும். ஒவ்வொரு நாளும் இங்ஙனம் பிரித்துவிடுபவனாகிய சந்த்ரனிடம் உண்டான பயத்தால் சந்திரனைச் சார்ந்தவர் யாரேனும் கிடைப்பின் அவர் மூலம் தமது துன்பத்தைப் போக்கிக் கொள்ளலாம் என அவை எண்ணின. எனவே சந்த்ரனின் உடன் பிறந்தவளான லக்ஷ்மியின் உடலை ஸ்தநங்கள் என்ற வ்யாஜத்தால் சென்றடைந்தன. நீண்ட நாள்களாக எதிர்பார்த்த துணையைத் தற்போது பெற்று, சந்த்ரன் செய்யும் பிரிவு அற்றதாய் எப்போதும் இணைந்தே வாழ்வதைப் பெற்றுள்ளன.

ப்ரஸித்த சக்ரவாகத்திலும் ஸ்தந சக்ரவாகத்துக்கு பகல் இரவு என்ற வேறுபாடின்றி எப்போதும் இணைந்திருத்தல் என்ற மேன்மை விளக்கப்பட்டதாயிற்று.

सोढुं कराभिहतिमप्रभवन् वधूनां
प्राक् कन्दुकः स्तनतयाम्ब तवावतीर्णः ।
तत्राप्यहो भजति शौरिकरोपमर्दं
क्षिप्तः सुहृद्भिरयते क्व न मर्दनानि ॥

86

கேளிம் கராஹதிமப்ரபவந் வதூநாம்
த்ராக் கந்துக: ஸ்தநதயாம்ப தவாவதீர்ண: ।
தத்ராப்யஹோ பஜதி ஶௌரிகரோபமர்த்தம்
க்ஷிப்த: ஸாஹ்ருத்பிரபதே க்வ நு மந்ததாதி ॥

அம்ப - தாயே
கந்துக: - பந்து
வதூநாம் - பெண்களின்
கராஹதிம் - விளையாட்டும் அடிப்பதையும்
அப்ரபவன் - தாங்க முடியாதவனாய்
த்ராக் - சீக்கிரமாக
தவஸ்தநதயா - உனது ஸ்தநமாக
அவதீர்ண: - பிறவி எடுத்தனன்
தத்ராபி - அந்த ஸ்தநப்பிறவியிலும்

அஸௌ - இப்பந்து
ஶௌரி - நாராயணனின்
கரோபமர்த்தம் - கைகளின் அடியை
பஜதி - அடைகின்றது
ததாஹி - அது யுக்தமே
ஸாஹ்ருத்பி: - ஸாதுக்களால்
க்ஷிப்த: - ஒதுக்கப்பட்டவன்
க்வநு - எங்குதான்
மந்ததாதி - தொல்லையை
ந பஜதே - அடைவதில்லை

பெண்களுக்கு அபலா: என்றொரு பெயருண்டு. பலமற்றவர் என்பதுதன் பொருள். இப்பெண்கள் பந்தைக் கொண்டு விளையாடும் போது அதைத் தட்டுவரன்றோ? அந்த அடியைக் கூட பந்தால் தாங்க முடியவில்லையாம். ஆகவே பந்து அப்பிறவியை விடுத்து லக்ஷ்மியின் ஸ்தநமாக வேறு பிறவி எடுத்ததாம். எடுத்தென்ன பயன்? தேளுக்குப் பயந்தோடியவன் மலைப்பாம்பின் வாயில் விழுந்தான் என்ற நிலைதான். இப்பிறவியில் பலவானான நாராயணனுடைய நான்கு கைகளின் பிடியிலன்றோ கிடைத்தது. இது தக்கதே. ஏனெனில் ஸாது ஜநங்களால் ஒதுக்கப்பட்ட துர்ஜநன் எங்குதான் தொல்லையை அடையமாட்டான்? அடைந்தே தீருவன்.

ஸாஹ்ருக்குத்பிரபதே" என்ற விடத்துள்ள பாடபேதமான ஸாத்ருக் என்பதற்குப் பெண்கள் என்ற பொருளுமுண்டு. பொறுமை குணமுடைய பெண்களிடமே வாழ முடியாதவனுக்கு வேறிடத்தில் எப்படி நல்ல வாழ்வு கிட்டும் என்ற பொருளும் கிடைக்கிறது.

नित्योल्लसद्घुसृणधातुनिवेशहृद्यो
मातस्तव स्तनगिरि: कठिनो विभाति ।
अध्यापितं कठिनतामरविन्दनाभे-
रालिङ्गनेषु किल येन भुजान्तरालम् ॥

நித்யோல்லஸத்குஸ்ருணதாதுநிலேபஹ்ருத்யோ
மாதஸ்தவ ஸ்தநகிரீ கடிநோ விபாதி ।
அத்யாபிதம் கடிநதாமரவிந்தநாபே-
ராலிங்கநேஷு கில யேந புஜாந்தராலம் ॥

ஹேமாத: - தாயே
நித்ய - எப்போதும்
உல்லஸத் - ப்ரகாசிக்கும்
குஸ்ருண - குங்குமப் பூ குழம்பால் எழுதப்பட்ட
தாது திலேப - மீன் வடிவச் சித்திரத்தால்
ஹ்ருத்யௌ - அழகிய
தவ - உனது
கடோரௌ - கடினமான
ஸ்தநகிரீ - ஸ்தநங்களாகிய மலைகள்
விபாத: - உயர்ந்து விளங்குகின்றன
யேந - எக்காரணத்தால்
ஆலிங்கநேஷு - பகவான் ஆலிங்கனம் செய்து கொள்ளும் போதெல்லாம்
அரவிந்தநாபே: - பத்மநாபனுடைய
புஜாந்தராலம் - மார்பு
கடிநதாம் - உறுதியாக இருக்கும் தன்மையை
அத்யாபிதம் - கற்பிக்கப்பட்டதோ

பகவான் அஸுரர்களுடனும் ராக்ஷஸர்களுடனும் போரிடும் போது அவர்களால் விடப்பட்ட அஸ்த்ரங்களால் நாராயணனுடைய மார்பை புண்படுத்தவும் முடியவில்லை. அத்துணை உறுதி வாய்ந்தது மார்பகம். உண்மையில் பகவான் மார்பு மிக மென்மையது. அரவிந்தநாபனன்றோ அவன். அரவிந்தம் - தாமரை - வாழுமிடம் எப்படிக் கடினமானதாக இருக்கும். இதற்கு இத்தகையதொரு கடினத்தன்மை எப்படிக்கிட்டியதெனின் தாயின் மலை போன்று உயர்ந்த ஸ்தநங்களை அவன் அவ்வப்போது அணைத்துக் கொள்ளும் போதெல்லாம் அக்கொங்கைகள் மார்புக்கு உறுதியை ஊட்டினவாம். இயல்பாகவே உறுதியான ஸ்தநங்களில் மேல் மேலும் உறுதியைத் தோற்றுவிக்க அதன்மேல் குங்குமப்பூக் குழம்பு வேறு ஓவிய வடிவத்தில் பூசப்பட்டுள்ளதாம். இப்படி இயற்கைச் செயற்கையான கடினங்களைப் பெற்ற ஸ்தநங்கள் பகவானின் மார்புக்கு கடினத்தன்மையை புகட்டி மிக்கு ஒளிர்கின்றன.

घटिकाशतविश्रुतोच्छ्रयं
घनसाहित्यमदः स्तनद्वयम् ।
कुरुते कविचक्रकौतुकं
कमले कान्तगुरुप्रभोदयम् ॥

கடிகாசதவிச்ருதோச்ச்ரயம்
கநஸாஹித்யமத: ஸ்தநத்வயம் ।
குருதே கவிசக்ரகௌதுகம்
கமலே காந்தகுருப்ரபோதயம் ॥ 25

கமலே - தாமரையாளே
கடிகாசதம் - எண்ணற்ற குடங்களிலும்
விச்ருத - ப்ரஸித்தமான
உச்ச்ரயம் - மேன்மையை உடையதும்
கநஸாஹித்யம் - மிகவும் நெருங்கியிருப்பதும்
காந்த - அழகியதும்
குரு - விஞ்சியதுமான
ப்ரபா - ஒளிக்கு
உதயம் - பிறப்பிடமான
ஸ்தநத்வயம் - பெருமை கொண்டிருக்கும் ஸ்தநங்களிரண்டும்
கவி - நீரில் வாழும்
சக்ர - சக்ரவாக பக்ஷிகளின்
கௌதுகம் - வெற்றியை
குருதே - செய்கின்றது.

தாமரையில் வாழ்பவளே! உயர்ந்தவையும் எண்ணற்றவையுமான குடங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் அமைப்பு அழகு முதலியவற்றைக் காணும் போது அவற்றுள் ஒன்று கூட ஈடாகாத மேன்மையை உடையதும், எப்போதும் இணைந்தே இருப்பதும் அழகியதும் உயர்ந்ததுமாகிய ஒளிக்குப் பிறப்பிடமானதுமான உமது ஸ்தநங்கள் நீரில் வாழ்பவைகளான சக்ரவாகப் பக்ஷிகளை இணைந்து வாழும் விஷயத்தில் திரஸ்காரம் செய்கின்றன. சக்ரவாகங்கள் பகலில் மட்டும் இணைந்திருப்பவை. இவை எப்போதும் இணைந்திருப்பவை.

கேவித்யமாநா: வய: - கவய: என்பது விக்ரஹ வாக்யம். கே - ஜலத்தில் வித்யமாநா: - நடமாடும் வய: - பக்ஷிகள் என்பது பொருள்.

இன்னுமோர் பொருள்

கடிகா - ஒரு நாழிகையில்
சத - நூறு ச்லோகங்கள் இயற்றும் ஸாமர்த்தியத்தால்
விச்ருத - புகழ்பெற்ற
உச்ச்ரயம் - மேன்மை உடையவரும்
காந்த - ஏ ... [illegible]

கடைசியில் உடையவரான
குபேர: - குபேர: என்ற குருவிற்குடைய
ப்ரபோதயம் - ஒளி போன்ற ஒளி உடையவரும்
கத - மிகுதியான
ஸாஹித்யத - கவிதை இயற்றும் வல்லமை பெற்ற கல்வித்தம்
ஸ்தநத் - கற்றீப்பவருமான
த்வயம் - இரண்டு கவிகள்
கவீந்த்ர - வித்வான்களின் கூட்டத்துக்கு
நிஜயம் - நிலையானதை
குருதே - செய்கின்றாள்.

இப்படியோர் பொருள் ப்ஸ்லோகத்தில் கிடைக்கின்றது. 125

सुरतरुचिरलीलाशोभितोऽसाविति श्रीः
पृथुलकुचयुगं त्वं प्रेयसे देवि दत्से ।
स तु तदपि गृहीत्वा चापलादम्बरं ते
हरति परहिरण्यं हर्तुरेष स्वभावः ॥

ஸுரதருசிரலீலாசோபிதோ(அ)ஸாவிதி ஸ்ரீ:
ப்ருதுலகுசயுகம் த்வம் ப்ரேயஸே தேவி தத்ஸே ।
ஸ து ததபி க்ருஹீத்வா சாபலாதம்பரம் தே
ஹரதி பரஹிரண்யம் ஹர்த்துரேஷ ஸ்வபாவ: ॥ 26

ஹே தேவி ஸ்ரீ: - தாயான இலக்ஷ்மியே!
அஸௌ - உனது கணவன்
ஸுரத - புணர்தல் என்ற
ருசிரலீலா - அழகிய விளையாட்டுகள்
ஆஸ: - விருப்பமுடையவனாய்
அபிஸ இதி - ஊக்கமுடையவனாய் உள்ளான் என்பதால்
ப்ருதுலம் - பருத்த
குசயுகம் - இரண்டு ஸ்தனங்களை
ப்ரேயஸே - கணவனுக்கு
தத்ஸே - கொடுக்கின்றாய்
ஸ து - அப்படியானபோதிலும்
தத் க்ருஹீத்வா - அவற்றை வாங்கிக் கொண்டதோடு
சாபலாத் - தப்பாசையால்
தே அம்பரம் - உனது வஸ்த்ரத்தையும்
ஹரதி - இழுக்கின்றான்
பர - மற்றவரான
ஹிரண்ய - ஹிரண்யமானவற்றின்
ஹர்த்து: - கொள்ளையடிப்பவனுக்கு
ஏஷ: - இது
ஸ்வபாவ: - இயற்கையானது

இன்னுமோர் பொருள்

ஸுரதரு - கற்பக விருக்ஷத்தின்
சிர - வெகுகாலமாகவே ப்ரஸித்தமான
லீலா - வழங்குதல் என்ற விளையாட்டுகள்
சோபித: - மிக்க விளங்குபவன் என எண்ணி
ப்ருது - பெரிய
லகுச யுகம் - இரண்டு லகுசிகை பழங்களை
தத்ஸே - உபஹாரமாகக் கொடுக்கின்றாய்

ததபி - இவ்விரண்டு பழங்களையும்
க்ருஹீத்வா - வாங்கிக் கொண்டு
சபலாத் - உன் த்ரவ்யத்தை அபஹரிக்க வேண்டும் என்ற பேராசையால்
தே அம்பரம் - உனது வஸ்த்ரத்தையும்
ஹரதி - அபஹரித்துக்கொண்டுபோகிறான்
பரஸ்வைஷிணாம் - அன்னார் சொத்தை
ஹர்த்து: - அபஹரிப்பவனுக்கு
புந: - இது
ஸ்வபாவ: - இயல்பானதே

கற்பக வ்ருக்ஷம் என்பது தேவருலகிலிருப்பது. அதனிடம் யார் எதை வேண்டினாலும் தட்டாது தருவது அது என்பது வெகு நாள்களாக உலகறிந்த செய்தி. அதுபோல் இவனும் தமக்கு வழங்குவன் என்ற எண்ணத்தால் இரண்டு எலுமிச்சை பழங்களை ஒருவனுக்குக் காணிக்கையாகக் கொடுத்தான் ஒருவன். வள்ளல்களையும் பார்க்கப் போகும்போது எலுமிச்சம் பழத்தை எடுத்துப் போவது பண்டைய வழக்கம். அம்மனிதன் இப்பழங்களை வாங்கிக் கொண்டதோடு விடாது, இவனது துணியையும் இழுத்தானாம். இதில் ஆச்சர்யமில்லை என்கிறார். பிறர் செல்வத்தைக் கொள்ளை கொள்பவனுக்கு இயல்பானதுதானே என்கிறார் 125

उत्तमत्सरमनुत्तमत्सरं कन्दुके कलशसिन्धुकन्यके ।
पीनतोषितमपीततोषितं भाति ते युगमुरोरुहो रहो ॥

உத்தமத்ஸரமநுத்தமத்ஸரம்
கந்துகே கலசஸிந்துகந்யகே ।
பீநதோஷிதமபீததோஷிதம்
பாதி தே யுகமுரோருஹோ ரஹோ ॥

ஹே கலசஸிந்துகந்யகே - பாற்கடல் கன்னி!
தே உரோருஹோ: - உனது ஸ்தநங்களின்
யுகம் - இரண்டு
உத்தமத் - உயர்ந்த தமது நுனிப்பகுதியில் இருப்பதால் உயர்ந்ததான
ஸரம் - முத்துமாலையை உடையதாக இருந்த போதும்
அநுத்தமத்ஸரம் - உயர்ந்த முத்துமாலையைப் பெறவில்லை என்பது விரோதாபாஸம்
கந்துகே - பந்து போன்ற கொங்கைகள்
அநுத்த - தம்மை விட்டுப் பிரியாத
மத்ஸரம் - தமக்கு இணை பிறிதொன்று இல்லை என்ற கர்வமுடையதாக உள்ளது என்பது பரிஹாரம்
பீநா - பருத்திருக்கும் தன்மையோடு
உஷிதம் - சேர்ந்திருக்கும்

அப்ரதோஷிதம் - என்பது விரோதம் | அபி + ப்ரதி + தோஷிதம் - பகவானால் கொண்டாடப்பட்டது என்பது பரிஹாரம்.

உந்நமத்ஸரம் அநுந்நமத்ஸரம் ஆகாதன்றோ! அ என்பது விரோதத்தைப் புலப்படுத்துவது. அஜ்ஞாநம் என்பது ஜ்ஞாநமின்மையைப் புலப்படுத்துவது போன்றது. அதேபோல் ப்ரதோஷிதம் அப்ரதோஷிதம் என்பதும் விரோதங்கள் ஆகவே விரோதாபாஸமாயிற்று. அதன் பரிஹாரம் உரையில் உள்ளது. 127

उदग्रहारं कुचमण्डलं ते
जनार्दनो देवि जगत्यधीशः ।
निपीडयत्येष करग्रहेण
कारुण्यवार्ता क्व हिरण्यहर्तुः ॥

உதக்ரஹாரம் குசமண்டலம் தே
ஜநார்த்தநோ தேவி ஜகத்யதீச: ।
நிபீடயத்யேஷ கரக்ரஹேண
காருண்யவார்த்தா க்வ ஹிரண்யஹர்த்து: 128

தேவி - தேவனின் மனைவியே!
ஜகத்யதீச: - உலக அரசனான
ஜநார்த்த: - பகவான்
ஜந - அர்த்த: - மக்களைத் துன்புறுத்தும்
ஜகதி அதீச: - பூமியின் அரசன்
உதக்ர - ஹாரம் - உயர்ந்த முத்து மாலையை உடையதும்
உத் - உயர்ந்த
அக்ரஹாரம் - ப்ராம்ஹணர்கள் வாழும் க்ராமங்களை, ஸ்தலங்களையுடைய நாட்டை.
கரக்ரஹேண - கையால் பிடிப்பதால் விதித்த கப்பம் வாங்குவதால்
நிபீடயதி - மிகவும் துன்புறுத்துகிறான்
ஹிரண்யஹர்த்து: - ஹிரண்யனைக் கொன்ற பகவானுக்கு, பொருளைக் கவரும் எண்ணமுடையவனுக்கு.
காருண்ய வார்த்தா - கருணை என்ற பேச்சுக்கு இடமில்லாது அரசனிடம் தயையும்
க்வ - எங்குள்ளது?

பகவானோடுக் கொடிய அரசனை ஒப்பிட்டும் - ஸ்தநங்களை க்ராமத்தோடு ஒப்பிட்டும் பேசுகிறார். மூவுலகங்களுக்கும் அரசனான பகவான் முத்துமாலையணிந்தும் வட்ட

வடிவமானதுமான தாயின் ஸ்தனங்களைத் தமது நான்கு கைகளாலும் பிடித்து துன்புறுத்துகிறான். அப்படியவன் செய்வது அவனுக்குத் தக்கதே. ஹிரண்யன் என்பவனைக் கொன்றவனன்றோ அவன். அவனிடம் தயை எப்படியிருக்கும்? என்கிறார்.

கொடுங்கோலாட்சி புரியும் மன்னன் பல ப்ராஹ்மணர்களுக்குச் சொந்தமான அக்ரஹாரம் நிறைந்த தமது வட்டத்தில் வரியை மிகுதியாக விதித்து அங்கு வாழ்பவர்களை வாட்டுகிறான். இது அவனுக்குத் தக்கதோ கொடுங்கோலனுக்குக் கருணை எங்கு பிறக்கும்? தாக்ஷிண்யம் தநநாசநம் என்பதும் பழமொழியன்றோ! பல நோக்குடையவன் பிறர் துன்பமறியான் 128

मदम्ब भोग्यायतमाल्यजुष्टे
तव स्तनद्वन्द्वगिरीशमौली ।
निकाममुद्वृत्ततया निपत्य
लुठत्यसौ हारसुरस्रवन्ती ॥

மதம்ப போக்யாயதமால்யஜுஷ்டே
தவ ஸ்தநத்வந்த்வகிரீசமௌலௌ ।
நிகாமமுத்வ்ருத்ததயா நிபத்ய
லுடத்யஸௌ ஹாரஸுரஸ்ரவந்தீ ॥ 129

ஹே மதம்ப - அடியேன் தாயே
ஹார - முத்தாரமாகிய
ஸுரஸ்ரவந்தீ - தேவ கங்கை கங்கை போன்ற முத்துமாலை
போகி - ஆயத - மால்ய - பாம்பாகிய நீண்ட மாலைகள்
போக்ய - ஆயத - மால்ய - அழகிய நீண்ட மாலைகள்
ஜுஷ்டே - அடையப்பட்ட
தவஸ்தநத்வந்த்வ - உமது இரண்டு ஸ்தநங்களாகிய
கிரீசமௌலௌ - சிவன் தலையில் பர்வதம் போன்ற ஸ்தநங்களின் மேல்
நிகாமம் உத்வ்ருத்ததயா - மிகவும் கொழுப்புடன்
நிபத்ய - ஆகாயத்திலிருந்து விழுந்து
லுடதி - சுற்றிக் கொண்டுள்ளது.
நிபத்ய - கொங்கைகளின் நுனி வரை சென்று
உத்வ்ருத்ததயா
வட்டவடிவ முத்துக்களை
லுடதி - நாற்புறமும் சுற்றுகிறது.

முத்தாரத்துக்கும் கங்கைக்கும், பாம்புக்கும் மாலைக்கும்

ஸ்தநங்களுக்கும் பர்வதத்துக்கும் ஒப்புமை பேசப்பட்டுள்ளது. இதில் தேவகங்கை பாம்பாகிய நீண்ட மாலைகளால் நிறைந்ததாய் ஸ்தநங்களாகிய சிவன் ஜடையில் விழுந்தது அது அஹங்காரத்தோடு விழுந்ததால் சிவன் அதைத் தமது சடையில் உள்ளேயே அமிழ்த்திவிட்டார். ஆகவே வெளிவர இயலாது ஜடையிலுள்ளேயே சுற்றிக் கொண்டுள்ளது என்பது கங்கையைச் சார்ந்த பொருள்.

கங்கை போல் வெண்மையான முத்து மாலை மனோஜ்ஞமானதும் நீண்டதுமான மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட மலை போன்ற ஸ்தநங்களின் மேல் மிகவும் அஹம்பாவத்துடன் விழுந்து ஸ்தந நுனிவரை பரவி வட்ட வடிவ முத்துகளாக இங்குமங்கும் சுற்றுகிறது என்பது ஆரத்தைச் சார்ந்த பொருளாம் 129

पीतस्तनस्ते कमले शिशुत्वे
पद्मासनः सोऽजनि नित्यतृप्तः ।
सदा तदास्वादकरस्तु मुक्ता-
हारो न केनापि तथाभिधानः ॥

பீதஸ்தநஸ்தே கமலே ஶிஶுத்வே
பத்மாஸந: ஸோ(அ)ஜநி நித்யத்ருப்த: ।
ஸதா ததாஸ்வாதகரஸ்து முக்தா-
ஹாரோ ந கேநாபி ததாபிதாந: ॥ 30

ஹே கமலே அம்ப - தாமரை வாழ் தாயே!
ஸ: பத்மாஸந: - ப்ரஸித்தமான ப்ரஹ்மா
ஶிஶுத்வே - தமது இளம்பிராயத்தில்
தே பீதஸ்தந: - தாயாகிய உனது பாலைப் பருகி
நித்யத்ருப்த: - எப்போதும் நிரம்பிய வயிறனாய்
அஜநி - ஆயினன்
ஸ: முக்தாஹார: - ப்ரஸித்த முத்து மாலை
ஸதா - எப்போதும்
ததாஸ்வாதகரோ(அ)பி - அப்பாலைப் பருகிய போதும்
கேந - எக்காரணத்தால்
ததாபிதாநம் - முக்தாஹாரம் என்ற பெயரை
ஆப - அடைந்தது?

ஒவ்வொரு கல்பத்தின் துவக்கத்திலும் நான்முகனை நாராயணன் படைக்கின்றான். ஆகவே அவன் சிறு பிராயத்தில் தாயின் பாலைப் பருகினன். தாயான உனது பாலின் பெருமையால்

அவள் என்றென்றும் ஆஹாரம் வேண்டாதவள் ஆயினள். தேவர் அமிர்தத்தையே உண்பர். அந்நம் அருந்தார். ஆகவே அவள் முக்த + ஆஹார: விடப்பட்ட உணவை உடையவளாயினள். ஆனால் உனது முத்து ஆரம் என்றென்றும் எப்போதும் உமது ஸ்தநங்களின் பாலைப் பருகுவதால் அது அமுக்த - ஆஹாரமாக - விடாத ஆஹாரத்தை உடையதாக இருந்த போதும் அது எப்படி முக்தாஹாரம் என்ற பெயரைப் பெற்றது என்கிறார்.

எவள் முக்த ஆஹாரயோ அவளுக்கு முக்தாஹாரா: என்ற பெயரில்லை. எது எப்போதும் உண்டு கொண்டே இருக்கிறதோ அதற்கு முக்தாஹாரம் என்ற பெயர் தோன்றியுள்ளது ஆச்சர்யமானது என்பது கருத்து. விரோதா பாஸாலங்காரம் 130

कल्याणि भावत्क कुचाग्र जाग्रत्
प्रत्यग्रहार स्फुट मौक्तिकानि ।
प्रायः सुमेरुं परितः चरन्ति
पद्न्युडूनीव परिस्फुरन्ति ॥

கல்யாணி பாவத்க குசாக்ர ஜாக்ரத்,
ப்ரத்யக்ரஹார ஸ்புட மௌக்திகாநி ।
ப்ராய: ஸுமேரும் பரித: சரந்தி
பதந்தி உடூநீவ பரிஸ்புரந்தி. 131

ஹே கல்யாணி - மங்கள தேவதையே!
பாவத்க - உம்முடைய
குசாக்ர - கொங்கையின் மேல்
ஜாக்ரத் - ப்ரகாசிக்கும்
ப்ரத்யக்ர - புதிய
ஹார - முத்து மாலையில்
ஸ்புட - நன்கு விளங்குவதான
மௌக்திகாநி - முத்துக்கள்
ப்ராய: - பெரும்பாலும்
ஸுமேரும் - மேருமலையின்
பரித: - நான்கு புறங்களிலும்
சரந்தி - ஸஞ்சரிப்பவைகளாயும்
பதந்தி - மிக்க ஒளியுடையவையுமான
உடூநி - அச்வினி முதலிய நக்ஷத்ரங்கள் போல்
பரிஸ்புரந்தி - ப்ரகாசிக்கின்றன.

மேரு மலைக்கும் ஸ்தநங்களுக்கும் நக்ஷத்ரங்களுக்கும் முத்துக்கும் உவமை விளக்கப்பட்டுள்ளது. நக்ஷத்ரங்களால் சூழப்பட்ட மேருவை உவமையாகக் காட்டியதால் முத்து மாலையை விட்டுப் பிரியாமை ஸ்தநங்களுக்குப் புலப்படுகிறது. 131

स्तनयोरनयोस्तवाम्बुराशे-
स्तनये दीव्यति दिव्यहारयष्टिः ।
परितः पृथुलारविन्दकोशौ
प्रचलन्ती कलहंसमालिकेव ॥

ஸ்தநயோரநயோஸ்தவாம்புராஸேஸ்-
தநயே தீவ்யதி திவ்யஹாரயஷ்டி: ।
பரித: ப்ருதுலாரவிந்தகோஸௌ
ப்ரசலந்தீ கலஹம்ஸமாலிகேவ ॥ 132

அம்புராஸே: - பாற்கடலின்
தநயே - பெண்ணே
அநயோ: தவ ஸ்தநயோ: - உனது இவ்விரண்டு ஸ்தநங்களின் மீதுள்ள
திவ்ய - மனோக்ஞமான
ஹாரயஷ்டி: - முத்து மாலை
ப்ருதுல - பருத்த
அரவிந்த கோஸௌ - தாமரை மொட்டுகள்
பரித: - நாற்புறமும்
ப்ரசலந்தீ - வட்டமிட்டுக் கொண்டிருக்கும்
கல - தெளிவாகாததும் இனிமையுமான ஓசையை உடைய
ஹம்ஸமாலிகேவ - ஹம்ஸங்களின் வரிசை போல்
தீவ்யதி - ப்ரகாசிக்கின்றது.

தாமரையைச் சார்ந்தவை யாவும் அன்னங்களுக்கு ஆதாரமாம். ஆகவே எங்கு தாமரை மிகுதியாக இருக்கின்றதோ அங்கு அன்னம் விரும்பி வாழும். பெரிய தாமரை மொட்டுக்கள் மலரும் தருவாயிலுள்ளன. அவை மலர்ந்தால் அதனுள்ளிருக்கும் கிஞ்சல்கம், தேன், முதலியவற்றை உண்போம் என, அவற்றை உண்ணவிரும்பிய அன்னங்கள் மிக மகிழ்ச்சியால் இனிய ஓசையை எழுப்பிக் கொண்டு அவற்றைச் சுற்றி வந்து கொண்டிருக்கின்றன எனக்கொள்வோம். அது போன்றுள்ளதாம் தாயின் பருத்த ஸ்தநங்களின் மீது படிந்துள்ள முத்துமாலை. அன்னத்தின் குரல் மனிதர் பாடுவது போல் தெளிவாகப் புலப்படாது போயினும் இனியதாக இருக்கும். எனவே குயில் அன்னம் போன்ற பறவையொலியை அவ்யக்த மதுரம் என்பர். வ்யக்தம் - தெளிவானதும் அவ்யக்தம் - தெளிவற்றதும் ஆகிய மதுரம் - மதுரமானது. 132

(முன் இதழ்த் தொடர்ச்சி)

மேலுமோர் பொருள்

தேவி! - உன் கமலக்கையிலிருந்து பெற்ற தநத்தாலேயே ஸ்வர்ணமுத்வம் யாவற்றாலும் நிறைந்து ஸமுத்ரமாம் தன்மையை
ப்ரபன்னா: - அடைந்தவர்களாய்
நதீ இநா: - நதிகளின் கணவர்களாய்
ஆஸந்நிதி - ஆயினரென்பது
ஸ்தாநே - தகுதியுடையதே
யதே - ஸமுத்ரத்தின் தன்மையை அடைந்தவர்கள்
லக்ஷ்மீகுமாரா: - லக்ஷ்மியின் பிள்ளைகளாக
பாத்தி யத் - விளங்குவதென்பது
சித்ரம் - ஆச்சர்யம்

இலக்குமியின் கையின் மேன்மையால் அவளிடம் தாநம் பெற்றவர் கடல் போல் நவமணிகள் பிறக்குமிடமாம் தன்மையை அடைந்தார்கள் என்பது தக்கதே. "ஸமுத்ராய வயுநாய ஸிந்தூநாம் பதயே நம:" என உபநிஷத்து கடலை அழைத்து நதிகளின் கணவனாகக் கூறியுள்ளதால் அவர்கள் நதிகளின் கணவராயினர் என்பதும் தவறன்று. ஆனால் லக்ஷ்மியின் பிள்ளைகள் ஆயினர் என்பது தான் விரோதம். கடல் இலக்குமிக்குத் தந்தையன்றோ! எப்படி அவர்களால் லக்ஷ்மியின் பிள்ளைகளாக ஆக முடியும்! என்பது விரோதாபாஸம். இதன் பரிஹாரம் முதலில் சொல்லியுள்ள (லக்ஷ்மீ குமார: என்பதற்கு) பொருளே. லக்ஷ்மீபுத்ரன் என்ற சப்தம் மன்மதனையும் மிகுந்த செல்வந்தர்களையும் புலப்படுத்தும் என்கிறது "வைஜயந்தீ" என்கிற நிகண்டு.

कणत्कनककङ्कणोज्ज्वलमणीघृणिश्रेणिका-
महासरिदुदञ्चितं मकरमत्स्यरेखावृतम् ।
प्रसह्य मधुनाशनं कृतवतीव कृष्णेन ते
कराम्बुरुहमिन्दिरे कलितपीडनं राजते ॥ १४२

க்வணத்கநககங்கணோஜ்ஜ்வலமணீக்ருணிச்ரேணிகா-
மஹாஸரிதுதஞ்சிதம் மகரமத்ஸ்யரேகாவ்ருதம்
ப்ரஸஹ்ய மதுநாஸநம் க்ருதவதீவ க்ருஷ்ணேந தே
கராம்புருஹமிந்திரே கலிதபீடநம் ராஜதே ॥ 142

ஹே இந்திரே - லக்ஷ்மீ!
க்வணத் - சப்திக்கும்
கநககங்கண - ஸ்வர்ண வளையிலுள்ள

உல்பணமணி - மிகுந்த ப்ரகாசமுள்ள மணிகளின்
ச்ருணிச்ரேணிகா - காந்திகளின் வரிசையாகிய
மஹாதடினீ - பெரிய நதியில்
உதஞ்சிதம் - உண்டானதும்
மகர மத்ஸ்யரேகா - மகர ரேகையாலும் மத்ஸ்ய ரேகையாலும்
ஆஸ்ருதம் - சூழ்ந்ததுமான
கராம்புருஹம் - கையாகிய தாமரை
க்ருத்ஸ்னேன - உடல் முழுவதும் கடித்தும்
ப்ரஸஹ்ய - பலாத்காரத்தால் பெற்ற
மதுநாசதம் க்ருத்வா - தேனை ஆதாரமுடைய வண்டால்
கலிதாபீடதம் - கடிக்கப்பட்டதால்
ராஜதே - ப்ரகாசிக்கிறது.

தாமரை மொட்டு சிறிதே மலர்ந்தவாறே - அது முழுவதும் மலர்ந்து விரிவதற்குள் கருநிறவண்டு தாமரை இதழ்களின் நுனியை கடித்துத் தமக்கு வழி தேடிக் கொண்டு தாமரையின் உள்ளே புகுந்து அதனுள் இருக்கும் தேனைப் பருகிக் களிக்கும். இப்படி வண்டால் கடிபட்ட தாமரையே சிறந்த தாமரையாம். அதுதான் ஏனெனில் அத்தாமரையில் தான் தேன் மிகுதியாக இருக்கும். தேன் நிறைந்த தாமரைக்கே வாஸனை அதிகம். அத்தாமரையையே வண்டு கடிக்கும். ஆக வண்டு கடித்த தாமரையே சிறந்ததென தேறிற்று. இலக்குமியின் கையிலணிந்துள்ள ஸ்வர்ணவளைகளில் உயர்ந்த நவரத்நங்களே இழைக்கப்பட்டுள்ளன.

அவற்றிலிருந்து வரிசையாக ஒளிக்கதிர்கள் வீசுகின்றன. அக்காந்திகளின் வரிசைகளே பெரியதோர் நதியாம். அந்நதியினிடையே தோன்றியுள்ளது இந்திராவின் கையாகிய தாமரை. அக்கைத்தாமரைகள் மகர ரேகைகளாலும் மத்ஸ்ய ரேகைகளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன என்பது செய்யுளின் கருத்து.

இவ்விடத்துக்கு ஏற்ற பொருள் பெரிய நதிபோல் விளங்கும் காந்தி பரம்பரையின் இடையிலிருப்பதும் மகர ரேகை மத்ஸ்ய ரேகைகள் பரந்துள்ளதுமான மஹா பாக்யமுடைய ருக்மிணியாகப் பிறந்த உமது கையை, மது என்ற அரக்கனைக் கொன்றவரும் உமது அளவற்ற அன்பை அறிந்தவருமான கண்ணன் உம்மிடம் வந்து பலாத்காரத்தால் சிசுபாலன் முதலியவரைக் கொன்று உமது கையைப் பற்றியதே மிகவும் அழகாயுள்ளது. உமது தந்தையின் முடிவுபோல் சிசுபாலனால் உமது கைபற்றப்பட்டிருப்பின் நன்கு விளங்காது என்பதாம்.

स्वर्णस्फुरद्बहुविधोर्मिकमब्धिकन्ये
रत्नाकरं तव करं निगदन्ति सन्तः ।
आक्रान्तसर्वभुवनो हि जनार्दनोऽसौ
दुर्धर्षतां व्रजति यस्य परिग्रहेण ॥ १४३

ஸ்வர்ணஸ்புரத்பஹு விதோர்மிகமப்திகந்யே
ரத்நாகரம் தவ கரம் நிகதந்தி ஸந்த: ।
ஆக்ராந்த ஸர்வபுவநோ ஹி ஜநார்த்தனோ(அ)ஸௌ
துர்தர்ஷதாம் வ்ரஜதி யஸ்ய பரிக்ரஹேண ॥ 143

ஹே அப்திகந்யே - கடல் கன்னி
ஸ்வர்ண - தங்கத்தால் செய்யப்பட்டதும்
ஸ்புரத் - நன்கு ப்ரகாசிப்பதும்
பஹுவித - பல ரத்னங்கள் இழைக்கப்பட்டதுமான
ஊர்மிகம் - மோதிரமணிந்த
தவ கரம் - உமது கையை
ரத்நாகரம் - ஸமுத்ரமாக
ஸந்த: - நன்கு அறிந்தவர்கள்
நிகதந்தி - சொல்லுகின்றனர்
யத: - யாதொரு காரணத்தால்
ஆக்ராந்த ஸர்வபுவந: - உலகம் முழுவதும் வியாபித்துள்ள
ஜநார்த்தந: - பகவான்
யஸ்ய - எந்தகையை
பரிக்ரஹேண - பற்றியதால்
துர்தர்ஷதாம் - வேறாரும் அசைக்க முடியாத தன்மையை
வ்ரஜதி - அடைகின்றாரோ

கடலிற்குரிய பொருள்

ஸு அர்ண - அழகிய ஜலத்தில்
ஸ்புரத் - எழுவதாலும் விழுவதாலும் அசைவதான
பஹுவித - ஆண் அலை பெண் அலை எனப் பல் வகைப்பட்ட
ஊர்மிகம் - அலைகளை உடைய
ரத்நாகரம் - ரத்நாகரம் என்ற பெயருடைய ஸமுத்ரமாக நவரத்னங்களுக்கு இருப்பிடமாக
தவகரம் - உமது கையை
ஸந்த: - யாவையுமறிந்தவர்
ஆக்ராந்த ஸர்வ புவந: - ஜலம் முழுதும் பரந்துள்ள
அஹிஜநார்த்தந: - பாம்புடன் சேர்ந்த முதலை
யஸ்ய பரிக்ரஹேண - எந்த ஸமுத்ரத்தைத் தமக்கு இடமாகக் கொண்டதால்
துர்தர்ஷதாம் - பிறரால் அடக்கிப் பிடிக்க முடியாத தன்மையை
வ்ரஜதி - அடைகின்றதோ

பாற்கடல் புத்ரியான லக்ஷ்மியின் கையை ரத்நாகரம் என்ற ஸமுத்ரமாக, நவரத்னங்களுக்கு இருப்பிடமாகப் பெரியோர்

சொல்கின்றனர். ரத்நாகரம் என ஒரு ஸமுத்ரத்துக்குப் பெயர் அது தநுஷ்கோடி என்ற இடத்தில் இருப்பது. அங்குதான் இந்து மஹா ஸமுத்ரத்துடன் ரத்நாகரம் சேர்கின்றது. ரத்நாகரத்தில் அலைகள் மிகவும் அதிகமாக இருப்பதோடு மிகப்பெரிய தாகவுமிருக்கும். பார்ப்பதற்கே பயமாக இருக்கும். ஆகவே அச்சமுத்ரத்தில் மீனவர் செல்லமாட்டார். எனவே அக்கடலில் அடியிலிருக்கும் ரத்நங்கள் எவராலும் கைப்பற்றப் படாததால் அப்படியே தேங்கிக் கிடக்கும். ஆகவேதான் அது ரத்நாகரம் ரத்நங்களின் இருப்பிடம் - ஆயிற்று. இலக்குமியின் கையிலும் நவரத்நங்கள் மிகுதியாகக் காண்பதால் கையை ரத்நாகரமாகப் புலவர்கள் சொல்கின்றனர். பெரிய அலைகளை ஆண் அலை என்றும் சிறிய அலைகளை பெண் அலை என்றும் சொல்வர். ஊர்மிகம் என்ற சொல் அலை மோதிரம் என்று இரு பொருளையும் சொல்லும். இக்காரணங்களால் அறிவோரின் 'ரத்நாகரம்' என்ற பேச்சுப் பொருத்தமானதே என்றாயிற்று.

உலகம் முழுதும் உள்ளும் புறமும் பரந்துள்ள நாராயணனே உலகுக்கு மூல காரணமானவன் என்பதை நிலைநாட்ட ஸ்ரீயின் பதியானமைதான் இன்றியமையாத காரணமாய்த் திகழ்கிறது. ச்ரிய: பதித்வம் ஸ்வரூப நிரூபக தர்மம் என்பர் பெரியோர் 'ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ' என புருஷ ஸூக்தம் கூறுகிறது. பூதேவியும் லக்ஷ்மியும் உனது மனைவிகள் என்பது இதன் பொருள். அதே புருஷ ஸூக்தம் தான் நாராயணன்தான் உலகுக்கு முழு முதற் காரணன் எனப் பலவகைகளில் மூதலித்துள்ளது. எனவே ச்ரிய: பதித்வம் நினைவுக்கு வர அது புருஷ ஸூக்தத்தில் சொல்லப்பட்டிருப்பதால் புருஷ ஸூக்தம் நினைவுக்கு வந்து அப்புருஷ ஸூக்தம் நாராயணன்தான் மூலகாரணம் என முடிவெடுத்துள்ளதால் ச்ரிய: பதித்வம் ஸ்வரூப நிரூபக தர்மமாயிற்று.

ரத்நாகரம் என்ற ஸமுத்ரத்தில் ஜல ஜந்துக்களான முதலை, திமிங்கிலம் போன்றக் கொடிய ஜந்துக்கள் வாழ்வதால் மீனவர் போன்றோரால் அக்கடலிலுள்ளவை கவர முடியாததாக ஆகின்றன. அதுபோல் ஜகத் காரண விஷயத்தில் சைவர் போன்ற பிற மதத்தவரால் நாராயணன் அசைக்க முடியாத நிலையைப் பெற்றவனாகிறான். ச்ரீயின் கையைப்

பற்றியதால்தான் நாராயணன் ஜகத் காரண விஷயத்தில் இந்நிலையை எய்தினான் என்றதால் 'ச்ரத்தயா தேவ: தேவத்வம் அச்நுதே'' என்பன போன்ற ப்ரமாணங்கள் நினைவூட்டப்பட்டன.

'ஜநார்த்தநன்' என்ற சொல் நாராயணனையும் முதலையையும் குறிக்கும் என 'கவிதர்பணம்' என்ற நூல் இயம்புகிறது.

पालकं सुमनसां तव स्थिर-
च्छायमब्धितनये समाश्रये ।
पञ्चशाखमिह भव्यकल्पकं
दानवारिपदपोषणक्षमम् ॥ १४४

பாலகம் ஸுமநஸாம் தவ ஸ்திரச்
சாயமப்திதநயே ஸமாச்ரயே ।
பஞ்சசாகமிஹ பவ்யகல்பகம்
தாநவாரிபத போஷணக்ஷமம் ॥ 144

ஹே அப்திதநயே - கடல்கன்னி!
ஸுமநஸாம் - தேவர்களை
பாலகம் - பாதுகாப்பதும்
ஸ்திரச்சாயம் - குறைபடாத சோபை உடையதும்
தாநவாரிபத - நாராயணன் திருவடிகளுக்கு
போஷண - ஊட்டமூட்டுவதில்
க்ஷமம் - தகுதிவாய்ந்ததுமாகிய
தே பஞ்சசாகம் - உனது கையை
ஸமாச்ரயே - தஞ்சமாகப் பற்றுகிறேன்

கற்பகத்தைப் பற்றிய பொருள்

ஸுமநஸாம் - புஷ்பங்களை
பாலகம் - பாதுகாப்பதும்
ஸ்திரச்சாயம் - அழியாத நிழலை உடையதும்
தாநவாரிபத - தேவருலகமாகிய ஸ்வர்க்கத்தை
போஷண - பாதுகாப்பதில் (போக க்ஷேமசக்தியில்)
க்ஷமம் - தகுதியுடையதும்
பஞ்ச - நாற்புறமும் பரந்த
சாகம் - கிளைகளை உடையதும்
பவ்யகல்பகம் - ச்ரேயஸைத் தருவதுமாகிய
கல்பகம் - கற்பகமாகிய வ்ருக்ஷத்தை
ஸமாச்ரயே - சாருகிறேன்

கடல் கன்னியின் கையை இவ்விடையில் கற்பக வ்ருக்ஷமாக வர்ணிக்கிறார். ஆகவே கைக்கு ஒரு கருத்தும் கற்பகத்துக்கு ஒரு கருத்தும் சொல்ல வேண்டியுள்ளது. முதலில் கையைப் பற்றி

லக்ஷ்மியின் கை தேவர்களைப் பாதுகாக்கவல்லது. அதன் ஒளிக்கு என்றென்றும் குறை இடையாது. நாராயணன் திருவடிகளுக்கு வருடுதல் போன்ற செயல்களால் ஊட்டம் ஊட்டுவது. ஐந்து விரல்களை உடையது. இத்தகைய கையைச் சரணமாகப் பற்றுகிறேன்.

கற்பகமரம் வாடாத புஷ்பங்களை உடையது. அடர்ந்த நிழல் தருவது. தேவருலக யோக க்ஷேமங்கள் அம்மரத்தின் அதீனமானது. அதன் கிளைகள் நான்கு புறமும் செழித்துப் படர்ந்திருக்கும். வேண்டுபவர். வேண்டியதையெல்லாம் நல்குவது. இத்தகைய கற்பகத்தை நாடுகிறேன்.

जननि मरकताद्यैः सार्धमारक्तरत्नै-
र्विधुमुखि निहितास्ते व्यर्थ एवोर्मिकासु ।
प्रसृमरकरदीप्त्यङ्कुरैरङ्गुलीनां
परिभजति यतोऽसौ पद्मरागाविशेषम् ॥ १४५

ஜநநி மரகதாத்யை: ஸார்த்தமாரக்தரத்நைர்-
விதுமுகி நிஹிதாஸ்தே வ்யர்த்த ஏவோர்மிகாஸு ।
ப்ரஸ்ருமரகரதீப்த்யங்குரைரங்குலீநாம்
பரிபஜதி யதோ(அ)ஸௌ பத்மராகாவிசேஷம் ॥ 145

ஹே விதுமுகி - சந்திரன் போன்ற முகமுடையவளே!
ஹே ஜநநி - தாயே
தே ஊர்மிகாஸு - உனது கைகளில்
மரகதாத்யை: - வைடூர்யம் காருத்மதம் நீலம் போன்றவை
ரக்த ரத்நைர் ஸார்த்தம் - சிவந்த பத்மராகத்துடன்
வ்யர்த்தம் - பயனற்றதாகவே
நிஹிதா: - இழைக்கப்பட்டுள்ளவை
ஏவ - மிகவும் கொடுமை
அஸௌ - இம்மரகதம் முதலியவை
அங்குலீநாம் - விரல்களின்
ப்ரஸ்ருமர - நாற்புறமும் பரவுவதும்
கர - சிற கிரணங்களை மறைக்க வல்லமை கொண்டவை
தீப்தி - ஒளிகளின்
அங்குரை: முளைகளால்
பத்மராக அவிசேஷம் - சிவந்த பத்மராகத்தின் ஒப்புமையே
பரிபஜதி - நாற்புறங்களிலும் அடைகின்றதே!

தாயின் கைகளில் கவசம் அணிக்கப்பட்டுள்ளது. அதில் காருத்மதம், வைடூர்யம், இந்த்ர நீலம் போன்ற கற்கள் இழைக்கப்பட்டிருக்கின்றன. இவை வெவ்வேறு நிறமுடையன. இவற்றுடன் பத்மராகம் என்ற சிவப்பு

நிறக்கல்லும் இழைக்கப்பட்டுள்ளது. இப் பத்ம ராகத்துடன் பச்சை நிறமுடைய மரகதம் முதலியன இழைத்திருப்பது மிகக் கொடுமை என்கிறார். ஏனெனில் சந்த்ர முகத்தினளின் கைகளிலுள்ள ஒவ்வொரு விரல்களிலிருந்தும் நாற்புறமும் பரவுவதும், பிறபிற வண்ணங்களை இல்லையாக்குவதில் வல்லவைகளும், சிவந்த பத்மராகத்தின் ஒளியோடு ஒப்புமை உடையவைகளுமான ஒளிகளின் முறைகள் நான்கு பக்கங்களிலும் வீசுகின்றன. அவற்றால் மரகதம் போன்றவை மறைக்கப்படுகின்றன. ஆகவே இவை பயனற்றவைகளாக ஆகி விடுகின்றன.

விரல்களின் ஒளியிலும் இரு மடங்கு சோபையை உடைய பத்ம ராகங்களே இழைக்கத் தகுதி வாய்ந்தவை. அதன் ஒளியால் மறைக்கப்படும் ஒளியை உடைய ஏனையவை இழைக்கத் தகுதி வாய்ந்தவையல்ல வாகையால் அவற்றை இழைத்துள்ள சிற்பிகளின் முயற்சி வீணாயிற்று என்பது கருத்து

रागं रमे तव शुभाङ्गुलिसङ्गलब्धं
वीटी मुरान्तकमुखे प्रकटीकरोति ।
मुक्तासवर्णनवचूर्णगनागवल्ली-
पर्णात्मनो न खलु रागकथान्यथास्याः ॥ १४६

ராகம் ரமே தவ சுபாங்குலிஸங்கலப்தம்
வீடீ முராந்தகமுகே ப்ரகடீகரோதி ।
முக்தாஸவர்ணநவசூர்ணகநாகவல்லீ-
பர்ணாத்மனோ ந கலு ராககதாந்யதாஸ்யா: ॥ 146

ரமே - லக்ஷ்மியே!
வீடீ - தாம்பூலம் (சுண்ணாம்பு) பூசப்பட்ட வெற்றிலை
தவ - உனது
சுபாங்குலி - கைவிரல்களுடன்
ஸங்கலப்தம் - சேர்க்கையில் பெற்ற
ராகம் - சிவப்பை
முராந்தகமுகே - பகவானின் முகத்தில்
ப்ரகடீகரோதி - புலப்படுத்துகிறது
அந்யதா - இப்படி இல்லாவிடில்
முக்தாஸவர்ண - முத்துப்போல் வெளுத்த
நவசூர்ணக - சுண்ணாம்புடன் சேர்ந்த
நாகவல்லீ பர்ணாத்மன: - வெற்றிலை போல் வெளுப்பான
அஸ்யா: - இவ்வெற்றிலை பாக்குக்கு
ராககதா - சிவப்பின் பேச்சும்
ந கலு - இல்லாது போமன்றோ!

வெற்றிலை போட்டுக் கொண்டதால் பகவானின் வாய் சிவந்துள்ளது. அச்சிவப்பு அவர் வாய்க்கு எப்படிக் கிட்டியது எனில் லக்ஷ்மி தமது கைகளால் வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவி மடித்துக் கொடுத்தாள். அப்படி அவள் மடிக்கும் போது அவள் கைகளின் செம்மை அவ் வெற்றிலையிலும் படிந்து விட்டது. அவ்வெற்றிலையை பகவான் வாயில் மென்று விழுங்கும் போது அவர் வாயில் அச்செம்மை ப்ரகாசிக்கின்றன. இதுதான் உண்மை. அப்படி இல்லையேல் சுண்ணாம்பு பூசப்பட்டதால் வெளுத்த வெற்றிலைக்கும் சிவப்புக்கும் சம்பந்தமே இல்லையன்றோ! இது உலகமறிந்த தன்றோ. வெண்மையிலிருந்து செம்மை எப்படிக் கிடைக்கும்!

भवान्धकूपे पतिताय मह्यं दुर्मोचकर्मोत्करकर्कशाय ।
करावलम्बं कमले ददासि तदञ्चलं ते तत एव रक्तम् ॥ १४७

பவாந்தகூபே பதிதாய மஹ்யம் துர்மோசகர்மோத்கரகர்க்கசாய ।
கராவலம்பம் கமலே ததாஸி தத்தஞ்சலம் தே தத ஏவ ரக்தம் ॥ 147

கமலே - தாமரையில் வாழ்பவளே
துர்மோச - எளிய உபாயத்தால் போக்க முடியாத
கர்மோத்கர - முன்வினைப்பயனால் கட்டுண்டமையால்
கர்க்கசாய - தொடுவதற்கும் தகுதி அற்றவனும்
பவ - ஸம்ஸாரமாகிற
அந்தகூபே - மிக ஆழமான கிணற்றில்
பதிதாய - விதியால் தள்ளப்பட்டவனுமான
மஹ்யம் - எனக்கு
கராவலம்பம் - உனது கையாகிய மேல் எழுவதற்கு வேண்டிய பிடிப்பை
ததாஸி - அருளுகிறாய்
தே தத்தஞ்சலம் - உனது கையின் நுனி
தத ஏவ - எனக்கு உதவியதாலேயே
ரக்தம் - சிவந்ததாக
பவதி - ஆகிறது

ப்ராயச்சித்தம் போன்ற எளிமையான உபாயத்தால் எளிதில் போக்க முடியாத பாபக்குவியல்கள் பல ஜந்மாந்தரங்களில் அடியேன் செய்துள்ளேன். ஆகையால் கையால் தொடுவதற்கும் தகுதியற்றவன். அக்கொடிய வினையின் பயனாய் மிக ஆழமான ஸம்ஸாரமாம் கிணற்றில் தள்ளப்பட்டுள்ளேன். என் மேல் அருள் கொண்ட நீ அக்கிணற்றிலிருந்து மேல் எழுவதற்கு கை கொடுத்துத் தூக்குகின்றாய். அதனால் உன் கை சிவந்து விட்டது.

ஸம்ஸாரமாம் ஸமுத்ரத்தில் விழுந்து உழல்பவனும் கர்மத்தால் கட்டுண்டமையால் தானாக கரை ஏற முடியாதவனுமாகிய எனக்கு அதிலிருந்து விடுபடுவதற்கு வழி வகுப்பதான ஸதாசார்ய கடாக்ஷத்தைக் கல்பிக்கின்றாய் என்பது கருத்து கராவலம்பம் ததாஸி என்பதற்கு.

(தொடரும்)

मदनोपवने मदंबदेहे
तव बाहे कृत वल्लिकाविमोहे ।
नव पल्लव फुल्लपुष्पभूयं
यदुपर्यंगुलयो नखाश्च यान्ति ॥ १३३

மதநோபவநே மதம்ப தேஹே
தவ பாஹே க்ருத வல்லிகா விமோஹே ।
நவ பல்லவ புல்ல புஷ்பபூயம்
யதுபர்யங்குலயோ நவாஸ்ச யாந்தி ॥ 133

ஹே மதம்ப - எனது தாயே!
மதநோபவநே - மன்மதனுக்கு விளையாடுமிடமான
தவ தேஹே - உமது உடலிலுள்ள
பாஹே - இரு கைகள்
க்ருத - செய்யப்பட்ட
வல்லிகா - பூங்கொடியின்
விமோஹே - மோகத்தை உண்டாக்குகின்றவை
யதுபரி - கைகளின் நுனிகளிலுள்ள
அங்குலய: - விரல்களாகிய மொட்டுகளும்
நகா: நகங்களும் (முறையே)
நவ பல்லவ - புதிய தளிர்களுடைய அரும்
புல்ல புஷ்பபூயம் - மலர்ந்த புஷ்பங்களின் தன்மையையும்
யாந்தி - அடைகின்றன

கையை வர்ணிக்கின்றார். உலக மாதாவின் உடலில் பசுமைச்செழிப்பு கொழித்தெழுகின்றது. எனவே மன்மதன் விளையாடுமிடமான அவளது திருமேனி சிறு சோலையோ இது எனச் சொல்லலாம் போலுள்ளது. மெலிந்து நீண்ட இரு கைகளும் அச்சோலையிலுள்ள பூங்கொடி போன்றுள்ளன. விரல்களும் நகங்களும் சிவந்திருக்கின்றனவாகையால் விரல்கள் தளிர்களின் எண்ணத்தையும் நகங்கள் பூக்களின் எண்ணத்தையும் தோற்றுவிக்கின்றன.

பூந்தோட்டத்திலிருப்பதாலும் தளிரையும் பூவையும் பெற்றிருப்பதாலும் உனது கை மெல்லிய கொடி என்பதில் சிறிதும் ஐயமில்லை என்பது கருத்து 133

अम्भोजबन्धुरपमम्बुरुहान्दवीयान्
तत्सन्निधिं जिगमिषुस्तनयो पयोधेः ।
अम्भोजमम्ब तव हस्ततयावतीर्णो
सौवर्णकङ्कणमिषात्किलका समिन्धे ॥ १३४

அம்போஜபந்துரயமம்புருஹாம் தவீயான்-
தத்ஸந்நிதிம் ஜிகமிஷு: ஸ்தநயே பயோதே: ।
அம்போஜமம்ப தவ பாணிதயாவதீர்ணம்
ஸௌவர்ணகங்கணமிஷாந்நிகஷா ஸமித்தே ॥ 134

பயோதே: தநயே அம்ப ! - பாற்கடல் குமாரியான உலகத்தாயே !
அம்புருஹாம் - தாமரைகளுக்கு
தவீயாந் - வெகு தொலைவிலுள்ள
அயம் - இந்த
அம்போஜபந்து: - ஸூர்யன்
தத் ஸந்நிதிம் - அத்தாமரையின் அருகில்
ஜிகமிஷு: - செல்ல விரும்பியவனாய்
தவபாணிதயா - உனது கையாக
அவதீர்ணம் - வேறு வடிவம் எடுத்துள்ள
அம்போஜம் நிகஷா - தாமரையினருகில்
ஸௌவர்ண - ஸ்வர்ணமயமான
கங்கணமிஷாத் - வளை என்ற வ்யாஜத்தால்
ஸமித்தே - நன்கு விளங்குகிறான்.

தாமரை ஸூர்யனுக்கு நெருங்கிய நண்பன் ஸூர்யன். வாழும் வரைதான் தாமும் ஸந்தோஷமாக மலர்ந்திருக்கும் அவன் மறைவின் தாமரையும் மூடிக்கொள்ளும். அத்தகைய நண்பனின் பக்கத்தில் வாழ வேண்டுமென எண்ணினான் கதிரவன். நேரிடையாக வாழ இயலாததால் வேறு வழியைக் கடைபிடித்தான். தாமரையே கமலையின் கரங்களாக மறுபிறவி எடுத்துள்ளது என அறிந்தான். உடனே தானும் மறுபிறவி எடுப்பது எனத் தீர்மானித்தான். உடனே தாயின் கையில் அணிந்துள்ளத் தங்க வளைகளாக மாறி சேர்ந்து வாழ்கிறான் தற்போது. அதனால் மிகவும் ப்ரகாசிக்கிறான் ஸூர்யனைப் போல் ஒளிர்கின்றன வளைகள் என்றவாறு.

ஒளியுள்ளவற்றுள் உயர்ந்தவனும், உயர்ந்த தேவனும், அதிகாரி புருஷனாயுமுள்ள ஸூர்யன் தமது உண்மை வடிவத்தோடு அறிவற்ற தாமரையின் அருகில் செல்ல முடியாதவனாய், வேறு வடிவம் எடுத்துள்ள தாமரையின் ஸமீபத்தில் தானும் வேறு வடிவில் வந்திணைந்து பந்துவுடன் சேர்ந்த ஸந்தோஷத்தால் மிகவும் ப்ரகாசிக்கிறான் என்பது கருத்து. 134

आम्रेडितस्त्वत्करपद्मरागै-
रत्युज्ज्वलैः कङ्कणपद्मरागैः।
लीलाशुको दाडिमबीजलुब्धो
विषण्णप्रेयसि विप्रलब्धः ॥ १३५

ஆம்ரேடிதைஸ்த்வத்கரபத்மராகை-
ரத்யுஜ்ஜ்வலை: கங்கணபத்மராகை: ।
லீலாசுகோ தாடிமபீஜலுப்தோ
விச்வம்பரப்ரேயஸி விப்ரலப்த: ॥ 135

ஹே விச்வம்பர ப்ரேயஸி - நாராயண பத்நி
தாடிமபீஜ - மாதுளம் பழக்கனியில்
லுப்த: - ஆசை கொண்ட
லீலாசுக: - உமது கையிலுள்ள கிளி
அத்யுஜ்ஜ்வலை: - மிகவும் ப்ரகாசமானதும்
அதஏவ - ஆகையால்
ஆம்ரேடித - பன்மடங்காக்கப்பட்ட
த்வத்கரபத்ம - தாமரை போன்ற உமது கையின்
ராகை: - செம்மையாலும்
கங்கண - வளைகளிலுள்ள
பத்மராகை: - சிவந்த மணிகளாலும்
விப்ரலப்த: - ஏமாற்றப்பட்டது

மஹாலக்ஷ்மியின் கைகள் நன்கு சிவந்துள்ளதால் மாதுளம் பழம் போலுள்ளது. அக்கைகளிலுள்ள வளைகளில் சிவந்த பத்மராகக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. அவை மாதுளையிலுள்ள மணிகள் போன்றுள. அன்னை தமது கையில் விளையாட்டுக்காக வைத்திருக்கும் கிளி இவற்றை மாதுளை என மருண்டு அதைக் கவ்வ அடிக்கடி மேலெழும்பி வாடி விட்டது, புஷ்பராகம் வெளுப்பானது. பத்மராகம் சிவந்தது. 135

कृताञ्जली काञ्चनकङ्कणस्थ-
सङ्क्रन्दनग्रावमहस्तरङ्गैः ।
कल्याणि पाणी कनतस्तरां ते
शैवालमालाभिरिवारविन्दे ॥ १३६

க்ருதாஞ்ஜலீ காஞ்சநகங்கணஸ்த-
ஸங்க்ரந்தநக்ராவமஹஸ்தரங்கை: ।
கல்யாணி பாணீ கநதஸ்தராம் தே
சைவாலமாலாபிரிவாரவிந்தே ॥ 136

ஹே கல்யாணி - மங்கள ஸ்வரூபியே
காஞ்சந - பொன்மயமான
கங்கணஸ்த - வளைகளிலுள்ள
ஸங்க்ரந்தந க்ராவ - இந்த்ர நீலக்கல்லுடைய
மஹஸ்தரங்கை: - ஒளிக் குவியல்களால்
க்ருதாஞ்ஜலீ - கூப்பப்பட்ட
தே பாணீ - உமது கைகள்
சைவால மாலாபி: - பாசிக்கொடிகளால்
க்ருதாஞ்ஜலீ - கூப்பப்பட்ட
அரவிந்தே இவ - தாமரைபோல்
கநதஸ்தராம் - மிக்கு ஒளிர்கிறது

மங்களதேவதையான ஸ்ரீ தமது கைகளில் அணிந்துள்ள வளைகள் இந்த்ர நீலக்கற்கள் இழைத்துச் செய்யப்பட்டவை. அக்கல்களிலிருந்து கரும்பச்சை நிற ஒளி வீசுகின்றது. கை தாமரை போல் சிவந்துள்ளது. நீல ஒளியால் சூழப்பட்ட பாசியால் சூழப்பட்ட தாமரை போலுள்ளதென்கிறார். வேலம்பாசி நீலநிறமுடையது *136*

इन्धे तावकपाणिशोणिमभरः कल्याणि नैसर्गिकः
पद्मे कङ्कणपद्मरागकिरणश्रेणीभिराप्यायितः ।
तत्संरूढबिडाललोचनसुहृद्वैदूर्यवीक्षाभयो-
द्गच्छद्विभ्रमकीरवारणघनायासेन चाम्रेडितः ॥ १३७

இந்தே தாவகபாணிசோணிமபர: கல்யாணி நைஸர்க்கிக:
பத்மே கங்கணபத்மராககிரணச்ரேணீபிராப்யாயித: ।
தத்ஸம்ரூடபிடாலலோசனஸுஹ்ருத்வைதூர்யவீக்ஷாபயோத்-
கச்சத்விப்ரமகீரவாரணகநாயாஸேந சாம்ரேடித: ॥ 137

ஹே கல்யாணி - மங்கள தேவதையே
கங்கண - வளையில் இழைக்கப்பட்டுள்ள
பத்மராக - பத்மராகக் கற்களின்
கிரண ச்ரேணீபி: - கிரணங்களின் வரிசைகளால்
ஆப்யாயித: - விருத்தி பண்ணப்பட்டதாயும்
தத்ஸம்ரூட - அவ்வளைகளில் இழைக்கப்பட்டதாயும்
பிடால - பூனையின்
லோசன ஸுஹ்ருத் - கண் போன்று மஞ்சளாக இருப்பவையுமான
வைடூர்ய - வைடூர்யங்களை
வீக்ஷா பய - பார்த்த பயத்தால்
உத்கச்சத் - மேலெழும்
விப்ரமகீர - விளையாட்டுக்கிளிகளை
வாரண - மேலெழாது தடுப்பதாலுண்டான
கநாயாஸேந - மிக்க ப்ரயத்னத்தால்
ஆம்ரேடித: - பன்மடங்காக்கப்பட்ட
நைஸர்க்கிக: - இயல்பான
தாவகபாணி - உனது கையின்
சோணிமபர: - சிவப்பின் மிகுதி
இந்தே - மேலும் வளர்கிறது.

கல்யாண தேவதையின் கைகளிலுள்ள கங்கணங்களில் பத்மராகம் வைடூர்யம் போன்ற நவமணிகள் இழைக்கப்பட்டுள்ளன. பத்மராகம் சிவப்பானது வைடூர்யம் மஞ்சள் நிறமுடையது. பத்மராகத்தின் ஒளி வைடூர்யக்கற்களின் மேல் பரவுகிறது. செம்மை கலந்த மஞ்சளாகப் புலப்படுகிறது அப்போது. பூனையின் கண்கள் அவை போன்றிருப்பன. இவ்வைடூர்யத்தைப் பார்த்து ஸ்ரீயின் கையிலேந்தியுள்ள

விளையாட்டுக்கிளி. உடனே பூனைதான் வந்துள்ளது என மிரண்டு அதனிடமிருந்துத் தப்ப வேண்டும் என்ற எண்ணத்தால் பறப்பதற்கு கிளம்புகிறது. இப்படிப் பலமுறை மருள்கிறது கிளி. அவ்வப்போது அதைத் தடுப்பதை தாளாத கைகள் மிகுதியாக சிவந்து விட்டன. வளையல்களிலுள்ள ரத்நங்களின் ப்ரகாச மிகுதியும் கையின் மென்மையும் விளக்கப்பட்டது. 137

काञ्चीकवीन्द्रकवनादपि कोमलं ते
कल्याणि पाणितलमम्बुजनाभकान्ते ।
अभ्रान्तमर्थिषु बहुष्वभितन्यमान-
दानश्रमादरुणिमानमुपैति नूनम् ॥ १३८

காஞ்சீகவீந்த்ரகவநாதபி கோமலம் தே
கல்யாணி பாணிதலமம்புஜநாபகாந்தே ।
அப்ராந்தமர்த்திஷு பஹுஷ்வபிதந்யமாந-
தாநச்ரமாதருணிமாநமுபைதி நூநம் ॥ 139

கல்யாணி - மங்களமூர்த்தியான
அம்புஜநாப - பத்மநாபனின்
காந்தே - மனைவி
காஞ்சீ - காஞ்சியில் வாழ்ந்தவரும்
கவீந்த்ர - பாணம் என்ற இலக்கியத்தைப் படைத்துப் புகழ்பெற்ற வாத்ஸ்ய வரதாசார்யருடைய
கவநாதபி - இலக்கியத்திலும்
கோமலம் - மென்மையான
தே பாணிதலம் - உமது கைகளின் உட்பகுதி
பஹுஷு அர்த்திஷு - எண்ணற்ற யாசகர்களுக்கு
அப்ராந்தம் - இடைவெளி இல்லாது
அபித: - நான்கு புறங்களிலும்
தந்யமாந - மிகுதியாகச் செய்யப்படுகிற
தாந ச்ரமாத் - வழங்குவதாலுண்டான ச்ரமத்தால்
அருணிமாநம் - செம்மையை
உபைதி - அடைகிறது
நூநம் - நிச்சயம்

அக்காலத்தே காஞ்சியில் வாத்ஸ்ய வரதகுரு எனப் ப்ரஸித்தி பெற்ற பெரும் பண்டிதர் வாழ்ந்து வந்தார். பல இலக்கிய வகைகளுள் ஒன்றான 'பாணம்' என்ற இலக்கியத்தைப் படைத்தவரவர். அந்நூல் இலக்கியத்துக்கு உரியனவாகச் சொல்லப்பட்டுள்ள இத்தனை உறுப்புக்களையும் பெற்றிருந்ததோடு படிக்கும் பொழுதே எளிதாய் பொருள் புரியும் நயத்தையும் பெற்றிருந்தது. அவ்விலக்கியத்திலும் மென்மையானவைகளாம் பத்மநாப காந்தையின் உள்ளங்கைகள்

அவை இயற்கையிலேயே செம்மையானவை. இருந்தும் தற்போது மேலும் மிகுதியாகச் சிவந்திருக்கின்றன. அதற்குக் காரணம் அவனைச் சுற்றி நால் புறங்களிலும் வசிப்பவர்களுக்குச் சிறிதேனும் கால தாமதமின்றி நான்கு கரங்களாலும் தங்கக் காசுகளை வாரி வாரி வழங்கியதேயாம் என்கிறார்.

பிறர் துன்பம் துடைக்க முயன்று தானும் துன்பப்படும் தன்மை விளக்கப்பட்டது 136

न केवलं नागनगेशकान्ते
हस्तो ननु स्वर्णगतोऽधिकस्ते ।
यं संप्रदानीकुरुते स निःस्वं
सोऽपि क्षितौ स्वर्णगतोऽधिकः स्यात् ॥ १३९

ந கேவலம் நாகநகேசகாந்தே
ஹஸ்தோ நநு ஸ்வர்ணகதோ(அ)திகஸ்தே ।
யம் ஸம்ப்ரதாநீகுருதே ஸ நிஸ்வம்
ஸோ(அ)பி க்ஷிதௌ ஸ்வர்ணகதோ(அ)திக: ஸ்யாத் ॥ 139

நநு லக்ஷ்மி - லக்ஷ்மியே
நாகநகேச - வேங்கடேச்வரனை
பதியாயுடையவள்
காந்தே - பத்மாவதித் தாயாரே!
தே ஹஸ்த: கேவலம் - உமது கை
மட்டும்
ந ஸ்வர்ண கத: - தங்க வளையைத்
தரித்ததாக இல்லை
அதிக: - எல்லோரிலும்
உயர்ந்ததாகவுமில்லை
கிந்து - ஆனால்
ஸ: - அந்த கை
க்ஷிதௌ - பூமியில்
யம் நிஸ்வம் - எந்த தரித்ரனை
ஸம்ப்ரதாநீகுருதே - தனது
தானத்துக்கு இலக்காக
ஆக்கியதோ
ஸோபி - அந்த தரித்ரனும்
ஸ்வர்ண கத: - தங்கக் குவியலை
உடையவனாயும்
அத ஏவ - ஆகையாலேயே
அதி. க: - மிக்க கைமுதலுடையவனாயும்
அதனால் எல்லோரிலும்
உயர்ந்தவனாயும்
ஸ்யாத் - ஆகிறான்

ஹே பத்மாவதி! உமது கை எப்போதும் ஸ்வர்ணத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறது என்பதிலும் அது மிகவும் உயர்ந்தது என்பதிலும் யாதொரு விசேஷமுமில்லை. ஆனால் எந்த ஒரு ஏழை அக்கையிலிருந்து ஒரு பொருளைப் பெற்றாரோ அவரும் தாம் தங்கக் குவியல்களை உடையவராகவும் உயர்ந்த சுகங்களை அநுபவிப்பவராகவும் அதனால் எல்லோரிலும் உயர்ந்தவராகவும் ஆகிறார் என்பதுதான் வியப்புக்கு உரியதாக இருக்கிறது.

நாக - நக - ஈச - காந்தே - என்ற பதத்திலுள்ள நாக என்னும் சொல்லுக்கு அக: நபவதி இதி . நாக: என விக்ரஹம் சொன்னால் ஜங்கமம் என்ற பொருளும் நக - என்ற சொல்லுக்கு ந கச்சதி நக: என விக்ரஹம் சொன்னால் ஸ்தாவரம் என்ற பொருளும் கிடைக்கும் · ஆக ஸ்தாவரஜங்கமமயமாக இவ்வுலகிற்கு ஈசன் என்ற வேறொரு பொருளும் கிடைக்கும். அதிக: என்பதற்கு அதி, கம் யஸ்ய ஸ: என விக்ரஹம் சொன்னால் மிக்க சுகமுடையவன் என்ற பொருள் கிடைக்கும் கம் - சுகம். எல்லோரிலும் உயர்ந்திருத்தல் தானம் செய்வதற்காக எப்போதும் தங்கத்தை கையில் தாங்கி இருத்தல் என்ற பத்மாவதி கைகளின் தன்மை அவளிடம் தானம் பெற்ற கைகளையும் வந்தடைகிறது என்கிறார்.

மேலுமோர் பொருள்

அத ஹஸ்த - கேவலம், ஸ்வர்நகத: - சுவர்கமாகிய கற்பகத்திலும். நாதிக: - தான விஷயத்தில் உயர்ந்ததாக ஆவதில்லை. உன் கையிலிருந்து பொருளைப் பெற்ற கையும் பூமியில் ஸ்வர், நகத: - கற்ப வ்ருக்ஷத்திலும் அதிக தானம் செய்கிறான் என்ற பொருளும் கிடைக்கும். கற்பக மரத்திலும் மிகுதியாகக் கொடுக்கிறான் என்றதாயிற்று. அத்யுக்தி என்னும் அலங்காரம். 139

असावनष्टापदमर्थिनं द्रा-
गष्टापदावासमहो विधाय ।
आपत्कथादूरगमब्धिकन्ये
करोति कल्याणि करस्त्वदीयः ॥ १४०

அஸாவநஷ்டாபதமர்த்திநம் த்ரா-
கஷ்டாபதாவாஸமஹோ விதாய ।
ஆபத்கதாதூரகமப்திகந்யே
கரோதி கல்யாணி கரஸ்த்வதீய: ॥ 140

ஹே அப்திகந்யே - கடலின் பெண்ணே
அஸௌ த்வதீய: கல்யாணகர: - நல்லம் செய்யும் உடைய கை
அநஷ்டாபதம் - கைவிடப்படாத பொருளை
அர்த்திநம் - யாசகனை
அஷ்டாபதாவாஸம் - தங்கம் வாழுமிடமாக
த்ராக் - சீக்கிரத்தில்
விதாய - செய்து.
ஆபத்கதா - தாரித்ரியம் என்ற ஆபத்துக்கு
தூரகம் - வெகு தூரத்திலிருப்பவனாக
கரோதி - செய்கிறது
அஹோ - ஆச்சர்யம்

காசைக் கண்ணாலும் காணாத தரித்ர மனுஷ்யர் உம்மிடம் வந்து யாசித்தவளவிலே அவனை அப்போதே தங்கக் கரங்கமுடையவனாக ஆக்கி தாரித்ரியம் என்ற ஆபத்தைப் போக்கி விடுகிறது உமது கை. 140

दीना दानैस्त्वत्कराब्जादुपात्तै-
र्देवि स्थाने स्वर्णवत्त्वं प्रपन्नाः ।
आसन्नेते सिन्धुकन्ये नदीना-
श्चित्रं नित्यं भान्ति लक्ष्मीकुमाराः ॥ १४१

தீநா தாநைஸ்த்வத்கராப்ஜாதுபாத்தைர்-
தேவி ஸ்தாநே ஸ்வர்ணவத்த்வம் ப்ரபந்நா: ।
ஆஸந்நேதே ஸிந்துகந்யே நதீநாஶ்-
சித்ரம் நித்யம் பாந்தி லக்ஷ்மீகுமாரா: ॥ 141

ஹே தேவி ஸிந்து கந்யே - கடலின் பெண்ணான மகாலக்ஷ்மியே
தீநா: - தரித்ரர்கள்
த்வத்கராப்ஜாத் - உமது தாமரைக் கையிலிருந்து
உபாத்தை: - பெற்றுக் கொள்ளப்பட்ட
தாநை: - தாந த்ரவ்யங்களால்
ஸ்வர்ணவத்த்வம் - தங்கக் குவியல்களுடைமையை
ப்ரபந்நா: - அடைந்தவர்களாக
ஆஸந் - ஆயினாரென்பது
ஸ்தாநே - தகுதியுடையதே
அத ஏவ - ஆகவேதான்
நதீநா: - தரித்ரர்கள் அல்லாத
ஏதே - உம்மிடம் பணம் பெற்றவர்கள்
நித்யம் - எப்போதும்
லக்ஷ்மீகுமாரா: - செல்வந்தர்களாகவே
பாந்தி - விளங்குகின்றனரென்பது
சித்ரம் - ஆச்சரியம்

தாயே! உமது கையிலிருந்து தானம் பெற்றவர் குவியல் குவியல்களாக தங்கக் காசை உடையவர்களாயினர் என்பதில் எவ்வித ஆச்சரியமுமில்லை. ஏனெனில் அது உமது கையின் மேன்மையினாலானது. ஆனால் அவர்கள் எப்போதும் செல்வந்தர்களாக வாழ்வது ஆச்சர்யத்துக்கு உரியது. ஏனெனில் செல்வம் ஒரே இடத்தில் நிலைத்து நில்லாது சென்று கொண்டே இருப்பதன்றோ! ஆகவேதான் செல்வம் "செல்வோம்" - என்று பெயர். எனவே நிலைத்த செல்வம் உடைமை வியப்புக்குரியது.

தொடரும்

दधति नखास्तवाम्ब तनुहेमलतायुजा-
रुचिरकरारविन्ददलदङ्गुलिकोटिजुषः ।
सरयसरस्वतीझरसमापतनोपनत-
ह्रदतनुवीचिकाञ्चलसमुज्ज्वलफेनतुलाम् ॥

தததி நகாஸ்தவாம்ப தநுஹேமலதாயுஜா-
ருசிரகராரவிந்ததலதங்குலிகோடிஜுஷ: ।
ஸரயஸரஸ்வதீஜரஸமாபதநோபநத-
ஹ்ரததநுவீசிகாஞ்சலஸமுஜ்ஜ்வலபேநதுலாம் ॥

அம்ப - தாயே
தநு - மெல்லிய
ஹேமலதா - தங்கக்கொடி போன்ற
யுஜா - கையிலுள்ள
ருசிர - அழகிய
கராரவிந்த - கையாகிய தாமரையில்
தலத் - அலர்கின்ற
அங்குலிகோடி - விரல்களின் நுனியை
ஜுஷ: - பற்றியுள்ள
நகா: - நகங்கள்
ஸரய - வேகத்துடன் கூடிய
ஸரஸ்வதீஜர - ஸரஸ்வதீ நதி ப்ரவாஹத்தின்
ஸமாபதந - வருகையால்
உபநத - தோன்றிய
ஹ்ரத - சிறிய குளத்திலுள்ள
தநுவீசிகா - சிறிய அலைகளின்
அஞ்சல - நுனியில்
ஸமுஜ்ஜ்வல - ப்ரகாசிப்பதான
பேநதுலாம் - நுரையின் ஒப்புமையை
ததி - தரிக்கின்றது

தாயின் கைகள் மிக மெல்லியவையாய் தங்கக் கொடிகள் போன்று ஒளிர்கின்றன. அவற்றின் நுனியிலுள்ள கைகள் தாமரை போல் சிவந்துள்ளன. அக்கைகளின் நுனியிலுள்ள விரல்கள் அப்பூவின் இதழ்கள் போன்றுள்ளன. அவ்விதழ்களின் நுனியில் நகங்கள் வெளுப்பாக விளங்குகின்றன. ஸரஸ்வதீ என்ற நதியின் ஜலம் சிவப்பானது. வேகமாக ப்ரவஹிப்பது. அதன் வெள்ளம் மிக வேகமாக வந்ததாலுண்டான சிறிய குளத்தில் தேங்கியுள்ள ஸரஸ்வதீ நீரின் அலைகளின் நுனியில் காணும் வெண்மையான நுரைக்கட்டி போன்றுள்ளனவாம் தாயின் விரல்களின் நகங்கள். 148

समाननामा स विधुः समानशो
दशेह भवानिति मातरीर्ष्यया ।
प्रशस्तयोस्तावकहस्तयोर्विधु-
र्दशावतारान्विदधे नखात्मना ॥

ஸமாநநாமா ஸ விது: ஸமாநஶோ
தஶேஹ பாவாநிதி மாதரீர்ஷ்யயா ।
ப்ரஶஸ்தயோஸ்தாவகஹஸ்தயோர்விதுர்-
தஶாவதாராந்விதத்தே நகாத்மநா ॥

ஹே மாத - தாயே!
விது: - சந்திரன்
ஸமாநநாமா - தன் பெயரோடு ஒத்த
பெயரையுடைய
ஸ: விது: - அந்த பகவான்
இஹ - இவ்வுலகில்
தஶ பவாந் - பத்து அவதாரங்களை
ஸமாநஶ - அடைந்தார்
இதி ஈர்ஷ்யயா - என்ற பொறாமையில்
ப்ரஶஸ்தயோ: - மிகவுமுயர்ந்த
தாவக - உம்முடைய
ஹஸ்தயோ: - கைகளில்
நகாத்மநா - நகங்கள் என்ற
வடிவத்தில்
ந + க + ஆத்மநா - ஆகாச
ஸம்பந்தமற்றவனாய்
தஶாவதாராந் - பத்து பிறப்புகளை
விதத்தே - அடைத்தான்.

விது: என்ற சொல் சந்திரனையும் பகவானையும் சொல்லவல்லது. பகவானான விது இம்மண்ணுலகில் துஷ்டர்களை அழித்து சிஷ்டர்களைக் காப்பதற்காக மத்ஸ்யம் முதல் கல்கி வரை உள்ள பத்து அவதாரங்களைச் செய்தான். இருவருக்கும் பெயர் ஒன்றாக இருந்தும் பகவானுக்கு மட்டும் பத்து அவதாரங்களும் இத்தனை மேன்மையுமோ! எனச் சந்திரனுக்கு மிகப் பொறாமை உண்டாயிற்றாம். பகவானின் மத்ஸ்ய கூர்ம நரஸிம்ஹாவதாரங்கள்செய்த இடம் உயர்ந்தது அன்றாதலின் உம்மினும் உயர்ந்த இடத்தில் ஆகாச ஸம்பந்தம் இன்றியே நானும் உம்மைப்போல பிறக்கிறேன் காணும் எனக் கருதியவனாய் உயர்ந்தவைகளான லக்ஷ்மியின் கைகளிலுள்ள விரல்களில் பத்து பிறவியைப் பெற்றான் 149

बिभाति वाराशिवरेण्यकन्या-
प्रशस्तहस्तोल्लसितो नखात्मा ।
विधुर्विचित्रागम एव नूनं
नासौ तुलामेति यतः कदापि ॥

விபாதி வாராஶி வரேண்யகந்யா-
ப்ரஶஸ்தஹஸ்தோல்லஸிதோ நகாத்மா ।
விதுர்விசித்ராகம ஏவ நூநம்
நாஸௌ துலாமேதி யத: கதாபி ॥

வாராஶி வரேண்யா - ஸமுத்ரராஜனின்
கந்யா - பெண்ணின்
ப்ரஶஸ்தஹஸ்த - உயர்ந்த கைகளில்
உல்லஸித: - விளங்குபவனான
நகாத்மா - நக வடிவம் கொண்ட
விது: - சந்திரன்
விசித்ர - ஆச்சர்யமான
ஆகம ஏவ - பிறப்புடையவனாக
விபாதி - விளங்குகிறான்
நூநம் - நிச்சயம்
யத: - ஏனெனில்
அஸௌ - இந்நகமாகிய சந்திரன்
துலாம் - தன்னோடு ஒப்புமை உள்ள
பொருளை
கதாபி - எப்போதும்
ந ஏதி - பெறுவதில்லை.

நகமாகிய சந்திரன் ஒப்புமையற்றவனாக விளங்குவதால் அத்புதமான பிறப்புடையவனவன் என்கிறார் 150

क्षत्रं तदेव कथयन्ति बुधाः क्षतेभ्यो
यत्त्रायते यदुपतेर्दयिते ततोऽहम् ।
यत्प्रत्युत क्षतशतं तनुते प्रियाङ्गे
नक्षत्रमेव तदवैमि नखं त्वदीयम् ॥

க்ஷத்ரம் ததேவ கதயந்தி புதா: க்ஷதேப்யோ
யத்ராயதே யதுபதேர்தயிதே அதோ (அ)ஹம் ।
யத்ப்ரத்யுத க்ஷதஶதம் தநுதே ப்ரியாங்கே
நக்ஷத்ரமேவ ததவைமி நகம் த்வதீயம் ॥

ஹே யதுபதே: நரதே - ருக்மணி
யத் - எந்த ஒரு வஸ்து
க்ஷதேப்ய: - துன்பங்களிலிருந்து
த்ராயதே - ஜனங்களைக் காக்கின்றதோ
தமேவ - அந்த வஸ்துவையே
புதா: - சப்த சாஸ்த்ரம் அறிந்தவர்கள்
க்ஷத்ரம் - க்ஷத்ர சப்தத்தால் சொல்லத்தக்கதாக
கதயந்தி - சொல்கின்றனர்
தத: - இப்படிச் சொல்வதால்
அஹம் - நான்
யத் - எந்த நகம்
ப்ரத்யுத - விபரீதமாக
ப்ரியாங்கே - பர்த்தாவின் சரீரத்தில்
க்ஷததம் - எண்ணற்ற புண்களை
தநுதே - பரப்புகின்றதோ
தத் த்வதீயம் நகம் - அந்தவை உமது நகத்தை
நக்ஷத்ரமேவ - க்ஷத்ர சப்தத்தால் சொல்லத்தகாததாக
அவைமி - அறிகிறேன்.

ருக்மணியின் கை நகங்கள் நக்ஷத்ரங்கள் போன்று உள என்பது ச்லோகத்தின் கருத்து. க்ஷத்ரம் என்ற சொல் க்ஷத்ரிய ஜாதியைச் சொல்வது - க்ஷதாத், த்ராயதே இதி க்ஷத்ரம் என விக்ரஹம் சொல்வர். க்ஷணுஹிம்ஸாயாம் என்ற தாதுவிலிருந்து - வினைச் சொல்லிலிருந்து க்ஷத் - என்ற சொல் தோன்றுகிறது. அதற்குப் பொருள் தொல்லை என்பது. அக்கால அரசர்கள் மக்களைத் தொல்லைகளிலிருந்துக் காத்து வந்தமையால் க்ஷத்ரியர் என வழங்கப்பட்டனர். ஆகவே இது காரணப் பெயராயிற்று. ஆனால் உமது நகமோவெனின் உமக்குப் ப்ரியரான பர்தாவின் உடலிலேயே எண்ணற்ற புண்களைத் தோற்றுவித்துள்ளது. அன்புக்குரிய உடலிலேயே புண்களைத் தோற்றுவித்தது எனின் பிறர் விஷயத்தில் புண்ணை உண்டாக்குவதில் ஸந்தேஹம் தோன்றுமோ! துன்பத்திலிருந்துக் காப்பதே உண்மையில் செய்ய வேண்டியதாம். அதைச் செய்யாதிருந்தாலும் குற்றமில்லை எனச் சொல்லலாம். அதற்கு விபரீதமாகப் புண்ணையன்றோ உண்டாக்கியுள்ளது! ஆகவே நானதை ந - க்ஷத்ரம் - க்ஷத்ரிய ஜாதியன்று என்றே சொல்கிறேன். என்பது சமத்காரமான பேச்சு இப்பொருள் கிடைப்பதற்கு ந + க்ஷத்ரம் க்ஷத்ரிய ஜாதியன்று என்றே சொல்கிறேன் என்பது சமத்காரமான பேச்சு. இப்பொருள் கிடைப்பதற்கு ந + க்ஷத்ரம் எனப் பிரிக்க வேண்டும். நக்ஷத்ரம் என ஒரே சொல்லாகக் கொண்டு நகம் நக்ஷத்ரம் போலுள்ளது என்பது உண்மை பொருளாம்.

पाथोजाक्षभुजान्तरालवसतेः पद्मालयायाश्चिरं
पाण्योर्दक्षिणवामयोः स्थितिमती पद्मे दिशेतां श्रियम् ।
तत्रैकं हरिदृक्पयोर्मुकुलितं खेदाददाक्षिण्यव-
द्योगोत्थाद्ध्रुवमन्यदेति हसितं दाक्षिण्यशाल्याश्रयात् ॥

பாதோஜாக்ஷபுஜாந்தராலவஸதே: பத்மாலயாயாச்சிரம்
பாண்யோர்தக்ஷிணவாமயோ: ஸ்திதிமதீ பத்மே திசேதாம் ச்ரியம் ।
தத்ரைகம் ஹரித்ருக்பயோர் முகுலிதம் கேதாததாக்ஷிண்யவத்-
யோகோத்தாத் த்ருவமந்யதேதி ஹஸிதம் தாக்ஷிண்ய சாலிச்ரயாத் ॥

பாதோஜாக்ஷ - தாமரைக் கண்ணனின்
புஜாந்தரால - மார்பில்
வஸதே: - வாழ்பவரும்
பத்மாலயாயா: - தாமரையில் வீற்றிருப்பவளுமான லக்ஷ்மியின்
தக்ஷிணவாமயோ: பாண்யோ: - வலக்கையிலும் இடது கையிலும்
ஸ்திதிமதீ - இருப்பவைகளான
பத்மே - இரு தாமரைகளும்
ச்ரியம் - அழியாத செல்வத்தை
திசேதாம் - அநுக்ரஹிக்கட்டும்
ஹரித்ருக்பயோ: - ஹரியால் பார்க்கத்தக்கவைகளான
தத்ர - அவ்விரண்டினுள்
ஏகம் - ஒன்றான இடது கைத்தாமரை
அதாக்ஷிண்யவத்யோக - லக்ஷ்மியின் இடது கையிலிருப்பதால், பகவானின் இடது கண்ணால் பார்க்கப்படுவதால்
உத்தம் - உண்டான
கேதாத் - துக்கத்தாலே போல்
முகுலிதம் பவதி - தெளிவற்ற முகம் உடையதாய் உள்ளது
அந்யத் - மற்றொன்றான வலக்கை தாமரை
தாக்ஷிண்யசாலி ஆச்ரயாத் - வலப்பக்கம் இருப்பதால் பகவானின் வலக்கண்ணுக்குப் புலப்படுவதால்
ஹஸிதம் ஏதி - மலர்ந்த முகமுடையதாய் உள்ளது
த்ருவம் - நிச்சயம்.

தாமரைக் கண்ணனான நாராயணன் மார்பில் வாழ்பவள் லக்ஷ்மீ. அங்கும் அவள் தமது இருப்பிடமான தாமரையுடனேயே வீற்றிருக்கிறாள் - அவள் தமது இரு கைகளிலும் தாமரையை ஏந்தியுள்ளாள். இவ்விரண்டு தாமரைகளும் குறைவற்ற செல்வத்தை அளிக்கட்டும் என வேண்டுகின்றார்.

லக்ஷ்மியின் வலக்கைத் தாமரையில் நாராயணனின் வலக்கண் பார்வை படுகிறது. இடதில் இடக்கண் பார்வை விழுகிறது. பகவானின் வலக்கண் சூரியன். இடக்கண் சந்திரன்.

தக்ஷிணம் - வலம், அதக்ஷிணம் வலம் அல்லாதது, அதாவது இடப்பக்கம். அதக்ஷிணாமலை, இடது கைப் - பூவிற்கு பகவானின் இடக்கண்ணான சந்திரன் பார்வை கிடைப்பதால் மிகவும் மனக்கவலை உண்டாகிற்றாம் அதற்கு. அதனால் அதன் முகம் வாடிவிட்டதாம். சந்திர ஒளி பட்டதால் மூடி விட்டது என்பதை இப்படிக் கற்பனை செய்கிறார். அதாக்ஷிண்யவத் யோகாத்'' எனக் கூறியிருப்பதால் சுவு இரக்கமற்றவனுடன் சேர்ந்ததால் என்ற பொருளும் கிடைக்கின்றது. மற்றொன்றான வலத்தாமரை சூர்யனான பகவானின் வலக்கண் பார்வையைப் பெறுவதாலும் தாக்ஷிண்ய குணமுடையதுடன் சேர்வதாலும் நன்கு மலர்ந்து காணப்படுகிறது என்கிறார்.

பாத: - ஜலம் - பாதோஜம் - ஜலத்தில் தோன்றிய தாமரை. 'நிசேசாம் - ப்ரார்த்தநாயாம் லிங். ஹரி: - சந்திர சூர்யர் இருவரையும் குறிக்கும் சொல். ஹரி: யமார்க்க சந்த்ரேஷு'' என்பது ரத்நமாலை என்கிற நிகண்டு. அதிசயோக்தி அலங்காரம்.

रोमालिं द्रागुद्गतां नाभिरन्ध्राद्
व्यालीं विद्मः पद्मगेहे भवत्याः ।
गाढोरोजस्मेरहाराम्बुजाग्र-
रत्नं नूत्नं तच्छिरः स्वं प्रतीमः ॥

ரோமாலிம் த்ராகுத்கதாம் நாபிரந்த்ராத்
வ்யாலீம் வித்ம: பத்மகேஹே பவத்யா: ।
கடோரோஜஸ்மேரஹாராம்புஜாக்ர-
ரத்நம் நூத்நம் தச்சிர: ஸ்வம் ப்ரதீம: ॥

ஹே பத்மகேஹே - தாமரையில் வாழ்பவளே
நாபிரந்த்ராத் - கொப்பூழாகிய புற்றிலிருந்து
உத்கதாம் - கொங்கைகள் வரை எழும்பியுள்ள
பவத்யா: - உனது
ரோமாலிம் - ரோம வரிசையை
[illegible] - பெண்பாம்பு

குட்டியாக
த்ராக் வித்ம: - யாங்கள் அறிகின்றோம்
கடோர [illegible] - கடினமான
கொங்கை [illegible]
[illegible] - [illegible]
[illegible] - [illegible]
[illegible]
[illegible] - [illegible]

நூதனம் - எப்பொழுதும் புதிது போல் விளங்குவதாயுமுள்ள
ரத்நம் - நாயகமணியை
தச்சிகாம்ய - அப்பாம்பின் தலையிலிருப்பதான
ரத்நம் - ரத்தினமாக
மந்யே - நினைக்கிறேன்.

இனிப் பதினொன்று ச்லோகங்களால் ரோமாவளியை வர்ணிக்கின்றார். தாமரையாளின் கொப்பூழ் (தொப்புள்) ஆகிய பொந்திலிருந்து ஆரம்பித்துக் கொங்கைகளின் நடுப்பகுதி வரை எழும்பியுள்ளதுடன் கருப்பாயும், நீண்டும், முன்னையில் பருத்துமுள்ளது ரோமாவளி. அதை மெல்லிய உடலையுடைய பாம்புக்குட்டி என்கிறார். கடினமானக் கொங்கைகளின் மேல் இருப்பதும் வெண்மையானதுமான முத்துமாலையின் நடுவில் எப்போதும் புதியதாகவே விளங்கிக் கொண்டிருக்கும் ரத்நத்தை - நாயகமணியை அப்பாம்பின் தலையிலுள்ள ரத்னமாக எண்ணுகிறேன் என்கிறார்

शौरेः सूरात्मनोऽक्ष्णः समजनि यमुनेत्युद्गतेव गङ्गा
जाताङ्घ्रौ तस्य गौणी किल तदपि तवापत्यतेऽत्यत्र निन्दाम् ।
तस्याः कर्तुं तवासौ किमभवदुदरे भानुजा रोमराजि-
व्याजाद्विश्वाम्ब पत्न्याः विदुरुदरभवं मुख्यवृत्त्या ह्यपत्यम् ॥

ஶௌரே: ஸூராத்மநோ(அ)க்ஷ்ண: ஸமஜநி யமுநேத்யுத்கதேவ கங்கா
ஜாதாங்க்ரௌ தஸ்ய கௌணீ கில ததபி தவாபத்யதேத்யத்ர நிந்தாம் ।
தஸ்யா: கர்த்தும் தவாஸௌ கிமபவதுதரே பாநுஜா ரோமராஜி-
வ்யாஜாத் விச்வாம்ப பத்ந்யா விதுருதரபவம் முக்யவ்ருத்யா ஹ்யபத்யம் ॥

விச்வாம்ப - உலக மாதாவே
யமுநா - காளிந்தி நதி
கௌணீ - பலவழியுடைய
ஸூராத்மந: - ஸூர்ய குமாரனான
அக்ஷ்ண: - கண்ணிலிருந்து
ஸமஜநி - தோன்றியது
இதி - என்பதால்
உத்கதா - தோன்றிய
ஈர்ஷ்யயா இவ - அசூயையால் போல்
கங்கா - கங்கை
தஸ்ய அங்க்ரௌ - அப் பகவானின்

திருவடியில்
ஜாதா - தோன்றியவள்
அபிவைர பாநுஜா - இந்த யமுனை
தநயா - திருவடியில் தோன்றிய பெண்ணும்
தவ - உனக்கு
அபத்யதா - பிள்ளையாம் தன்மை
மௌளி - முக்கியமானதற்கு என
அத்ர - இப்பிறவி விஷயத்தில்
தன்யாம் - கங்கையை
நிந்தயந்தீம் - நிந்திப்பதுபோல
தவ உதரே - உனது வயிற்றில்

சௌவர்ணேயபாஜாம் - சோமகனின் மகிமை என்ற பாக்யத்தைக்
அபவத் கிம் - தோன்றியவளோ என்ன ?
பத்ம்யா: - மகிமையில்
உதரபவம் - வயிற்றில் பிறப்பதுவே
முக்ய ஸ்ருதிர் - உண்மைப் பொருளாக
அபத்யம் - அபத்ய சப்தத்தின் அர்த்தத்தை
புதா: விதுர் ஹி - புலவர் அறிகின்றனரன்றோ!

யமுநா நதியின் மறுபெயர் காளிந்தி என்பது. யமுனை சூர்யனின் பெண். பகவானின் வலக்கண் சூர்யனானமையின் யமுனை பகவானின் மகளாகவும் ஆயினாள். கங்கை இதனை எண்ணினாள். நம் போல் அவளும் ஒரு நதிதானே! அப்படியிருக்க பகவானின் கண்களில் பிறந்தவள் எனத் தனிச்சிறப்பு அவளுக்கு மட்டும் ஏன்? என்ற அசூயை உண்டாயிற்று. தாமும் நாராயணன் உடலிலிருந்து தோன்ற வேண்டும் என்ற முடிவெடுத்தாள். பகவானின் உறுப்புகளுள் உயர்ந்தது திருவடியே யன்றோ! அதைத்தானே யாவரும் தஞ்சமாகப் பற்றுகின்றனர். ஆகவே அத்திருவடியிலிருந்து தோன்றி யமுனையிலும் உயர்ந்தவள் ஆவேன் என எண்ணி அப்படியே பிறந்து யமுனையிலும் மேன்மையை அடைந்தாள். இவள் எண்ணத்தையும் சொல்லமறிந்த யமுனை அவன் மட்டும் வாளாவிருப்பவளோ! பகவானின் திருவடியில் பிறந்ததாலே அவன் மகளாக ஆகிவிட முடியுமோ! ஆணாயினும் பெண்ணாயினும் மனைவியின் வயிற்றில் பிறந்தாலன்றோ பிள்ளையாவர். உலகம் அப்படித்தானே கூறுகின்றது! ஆகவே நான் லக்ஷ்மியின் வயிற்றில் பிறந்து உனக்கு இழிவை உண்டாக்குகிறேன் காண் என எண்ணியவளாய் உன் வயிற்றில் ரோமாவளியாகத் தோன்றினாளோ என உத்ப்ரேக்ஷை செய்கின்றார். யமுனையின் நிறம் கருநீலம்.

जेतुं कंसारिमारात् व्यवसितमधिकामाजि सन्नद्धस्तनक्ष्मा-
भृद्भ्यामभ्याशदेशे तव जयति रमे रोमरूपा शतघ्नी ।
दत्ते नाभी रमे सज्जघनधरणिभृन्मण्डले यन्त्रकोद्य-
त्तप्तायःपिण्डपातस्थलनियमकृते क्लृप्तगर्तप्रतीतिम् ॥ १५५

ஜேதும் கம்ஸாரிமாராத் வ்யவஸிதமதிகாமாஜி ஸந்நத்தஸ்தநக்ஷ்மா-
ப்ருத்ப்யாமப்யாஶதேஶே தவ ஜயதி ரமே ரோமரூபா ஶதக்நீ ।
தத்தே நாபீ ரமே ஸஜ்ஜகநதரணிப்ருந்மண்டலே யந்த்ரகோத்ய-
த்தப்தாய: பிண்டபாதஸ்தலநியமக்ருதே க்லுப்தகர்தப்ரதீதிம் ॥ 155

ஹே ரமே - லக்ஷ்மியே
ஸந்நத்தக்ஷ்மாப்ருத்ப்யாம் - கொங்கைகளாகிய மலைகள்
அதிகமாஜி - மன்மதப்போரில்
கம்ஸாரிம் - நாராயணனை
ஸத்ய: ஜேதும் - தற்போதே ஜயிக்க வேண்டுமென்று
ஆராத் - சற்று முன்புறம்
வ்யவஸிதம் - நிச்சயிக்கப்பட்டது
ஜகநதரணிப்ருத் - பாம்பின் படம் போன்ற பெண்களின் மறைவிடத்தைச் சார்ந்த
மண்டலே - பகுதியிலேயே
ஸஜ்ஜ - தயாராக இருப்பதும்
கட - கடினமாக இருப்பதும்
தரணிப்ருத் - மலையைச் சார்ந்ததுமான
மண்டலே - பகுதியிலேயே
யந்த்ரக - யந்த்ர வெடிகுண்டின் வழியாக
உத்யத் - மேலெழுவதும்
தப்த - பழுக்கக் காய்ச்சியதுமான
அய: பிண்ட - இரும்புகுண்டை
பாதஸ்தலநியமக்ருதே - விழுவதற்குரிய இடம் நிதானிக்க
க்லுப்த - ஏற்படுத்தப்பட்டுள்ள
கர்த ப்ரதீதிம் - பள்ளத்தின் ப்ரமத்தை
நாபி: - கொப்பூழ் (தொப்புள்)
தத்தே - பார்ப்பவருக்கு உண்டு பண்ணுகிறது
தவ ரோமாவலீ ஶதக்நீ - நூறு மனிதரைக் கொல்லவல்ல அந்த ரோமாவலியாகிய குண்டு
ஸந்நத்த - தயாராகத் தோன்றியுள்ள
க்ஷ்மாப்ருத் - மலைகளின்
அப்யாஶதேஶே - அருகிலேயே
ஜயதி - விளங்குகிறது

வெடிகுண்டு வெடிப்பதற்குப் பழகுபவர்கள் ஜன நடமாட்டம் இல்லாததும் கடினமாக இருப்பதுமாகிய மலையைச் சார்ந்த பகுதிக்குச் சென்று அங்கு பள்ளம் ஒன்று தோண்டி அதனுள் வெடிகுண்டை வைத்து அதனுடன் தொடர்புடைய திரி ஒன்றை வெகுதூரம் வரை கொண்டு போய் அங்கு அதன் முனையில் தீ வைப்பர். தாம் வெகுதூரம் சென்று மலைப்பகுதியில் மறைந்து கொள்வர். அத் தீ திரி வழியே சென்று குண்டில் படும். பட்டவுடன் குண்டு வெடித்து அதனின்றும் பழுக்கக் காய்ச்சிய இரும்புகுண்டை போன்ற

பொருளொன்று மேலெழுந்து வெடிக்கும். அது அருகிலிருக்கும் நூற்றுக் கணக்கான மனிதரைக் கொல்லும். அது போன்றதொரு பயிற்சி ரமையின் உடலில் நடப்பது போல் தோன்றுகின்றதாம். இரண்டு கொங்கைகளும் மலைகளாகும். தொப்பூழ்தான் குண்டு வைப்பதற்குரிய பள்ளமாம். அப்பகுதியிலிருந்து கொங்கை மலை வரை செல்லும் ரோமாவலிதான் வெடி குண்டுடன் தொடர்பு கொண்ட திரியாம். இரு கொங்கைகளும் இரு யுவராஜாக்களாம். ஸத்யஸ்தந + க்ஷமாப்ருத்ப்யாம் - எனப் பதம் பிரித்தால் புதிய அரசர்கள் என்ற பொருள் கிடைக்கும். இவ்விருவரசர்கள் கம்பாரியைப் போரில் வெல்ல முடிவெடுத்தனராம். அதற்காக வெடிகுண்டுப் பயிற்சி பெறுவது போல் தோன்றுகின்றதாம். 155

अभ्युद्यताधररससंग्रहणाय रोम-
रेखाषडङ्घ्रिततिरम्ब पथि प्ररूढम् ।
उत्तुङ्गसङ्गतमुरोजगिरीन्द्रयुग्म-
मुल्लङ्घितुं चिरमुपायमुदीक्षते किम् ॥ १५६

அப்யுத்யதாதரரஸஸங்க்ரஹணாய ரோம-
ரேகாஷடங்க்ரிததிரம்ப பதி ப்ரரூடம் ।
உத்துங்கஸங்கதமுரோஜகிரீந்த்ரயுக்ம-
முல்லங்கிதும் சிரமுபாயமுதீக்ஷதே கிம் ॥ 156

அம்ப - தாயே!
அதர - உனது உதடிலுள்ள
ரஸ ஸங்க்ரஹணாய - அம்ருதத்தைப் பருக
அப்யுத்யதா - கிளர்ந்தெழுந்த
ரோமரேகா - ரோமாவலியாகிய
ஷடங்க்ரி ததி: - வண்டுகளின் வரிசை
பதி - வழியினிடையே
ப்ரரூடம் - எழுந்துள்ளதும்
உத்துங்க - மிக உயர்ந்துள்ளதால் தாண்டிச் செல்ல முடியாததுமான
ஸங்கதம் - இணைந்தே இருப்பதால் இடையே செல்ல முடியாததுமான
உரோஜ - ஸ்தனங்களாகிய
கிரீந்த்ர யுக்மம் - இரு மலைகளை
உல்லங்கிதும் - தாண்டுவதற்குரிய
உபாயம் - வழியை
சிரம் - வெகு நாட்களாக
உதீக்ஷதே கிம் - யோசிக்கின்றதா என்ன?

ரோமாவலியை வண்டுகளாக உருவகிக்கின்றார். தாயின் உதடிலுள்ள அம்ருதத்தைப் பருக, எண்ணங் கொண்டன பல வண்டுகள், அவை யாவும் ஒன்று சேர்ந்து, வரிசையாகச் சென்றன. ஆனால் அவற்றால் தொடர்ந்து செல்ல முடியவில்லை.

காரணம் வழி இடையே இரண்டு மலைகள் புலப்பட்டன. அவை மிக உயரமாக இருந்ததோடு சேர்ந்தே இருந்தன. ஆகவே தாண்டிச் செல்லவும் இடையே செல்லவும் முடியாமற் போயிற்று. எனவே இவற்றை எப்படிக் கடப்பதென அதற்குரிய வழியை வெகு நாள்களாக இவ்வண்டுகள் சிந்திக்கின்றனவாம். ஸ்தநங்களே மலைகள். ரோமராஜியே வண்டு. 156

रत्नावली तव रमे वरमेखलाया-
मङ्गारपङ्क्तिरविदूरगता तु तस्याः ।
रोमावली तदुपजातविशीर्णमूल-
धूमाकृतिं वहति शक्रमणीव नीला ॥ १५७

ரத்நாவலீ தவ ரமே வரமேகலாயா-
மங்காரபங்க்திரவிதூரகதா து தஸ்யா: ।
ரோமாவலீ ததுபஜாதவிசீர்ணமூல-
தூமாக்ருதிம் வஹதி சக்ரமணிவ நீலா ॥ 157

ரமே - ரமாதேவி
வரமேகலாயாம் - உயர்ந்த ஒட்டியாணத்திலுள்ள
ரத்நாவலீ - ரத்தினங்களின் வரிசையே
அங்காரபங்க்தி: - நெருப்பின் வரிசையாம்
(பஸ்மாந் - புகையில்)
தஸ்யா: - அந்த ரத்ந வரிசைகளின்
அவிதூரகதா - அருகிலுள்ள
சக்ரமணிவ நீலா - இந்த்ர நீல மணிபோல் கருத்த
ரோமாவலீ - ரோமவரிசை
ததுபஜாத - அதனாலேயும் தோன்றியதும்
விசீர்ண மூல - அதன் தொடர்பு அற்றதுமேயே
தூமாக்ருதிம் - புகையின் உருவத்தை
வஹதி - தாங்கியுள்ளது!

ரமை இடையில் ஒட்டியாணம் என்ற ஆபரணம் அணிந்துள்ளாள். அதன் முகப்பில் எண்ணற்ற ரத்நங்கள் இழைக்கப்பட்டுள்ளன. அவை சிவந்து விளங்குகின்றன. அவற்றை நெருப்பாக எண்ணுகிறேன். ஏனெனில் அதன் அருகிலேயே இந்த்ர நீல மணிபோல் கருப்பான ரோமாவளி உள்ளது. அது அந்த ரத்நத்திலிருந்துக் கிளம்பிப் பின் அதன் கொம்பு அற்ற புகை போல் காணப்படுகிறது. தொடர்பற்ற புகையின் அருகிலிருப்பதாலும் மிக ப்ரகாசமாக இருப்பதாலும் தந்த வரிசையை நெருப்புத் துண்டுகளின் வரிசை என எண்ணுகிறேன் என உத்ப்ரேக்ஷிக்கிறார் 157

निःश्रेणिका नाथदृशोरुरोज-
दुर्गाधिरोहे तव रोमरेखा
लावण्यलक्ष्मीवरवेणिका वा
रतीशभूपालकृपाणिका वा ॥ १५८

நிஃச்ரேணிகா நாதத்ருசோருரோஜ-
துர்க்காதிரோஹே தவ ரோமரேகா ।
லாவண்யலக்ஷ்மீவரவேணிகா வா
ரதீசபூபாலக்ருபாணிகா வா ॥ 158

நாத த்ருசோ: - பகவானின் கண்களுக்கு
உரோஜ - ஸ்தனங்களாகிய
துர்க - ஏற முடியாத இடத்தில்
அதிரோஹே - ஏறுவதற்குரிய
நிச்ரேணிகா - படி போன்றுள்ள
தவ ரோமரேகா - உனது ரோமாவலி
லாவண்யலக்ஷ்மீ - காந்தி விசேஷமாகிய லக்ஷ்மிக்கு
வர வேணிகா வா - உயர்ந்த பின்னலோ
ரதீச பூபால - மன்மதனாகிய அரசனின்
க்ருபாணிகா வா - சிறிய கத்தியோ

எளிதில் ஏற முடியாத உயரமுடையதாக உள்ளது லக்ஷ்மியின் ஸ்தநங்கள். ஆகவே அதில் ஏறுவதற்கு வேண்டிய படிகள் போன்றுள்ளது ரோமாவலி. பகவானின் கண்கள் ரோமாவலியை கண்டபின் ஸ்தநங்களைக் காண்கின்றன என்பது கருத்து. அழகாகிய லக்ஷ்மிக்கும் பின்னல் போல் உள்ளதாம் ரோமாவலி. அல்லது மன்மதனின் தூண்டுதலை ஏலாத பகவானின் மன உறுதியை வெட்டுவதற்குரிய மன்மதனின் கத்தி போன்றும் உள்ளதாம். 158

स त्वद्गर्भसमुद्भवोऽपि अयुत शुक् संदायकैः सायकैः
पञ्चेषुः पितरं च वञ्चयति यत्पञ्चायुधं माधवम् ।
लज्जा नूनमतो जगज्जननि ते रोमावलिच्छद्मना ।
तातद्रोहिसुतप्रसूत्युपनता दुष्कीर्तिरेवोदरे ॥ १५९

ஸ த்வத்கர்ப்பஸமுத்பவோ(அ)பி அயுத சுக் ஸந்தாயகை: ஸாயகை:
பஞ்சேஷு: பிதரம் ச வஞ்சயதி யத்பஞ்சாயுதம் மாதவம் ।
லஜ்ஜா நூநமதோ ஜகஜ்ஜநநி தே ரோமாவலிச்சத்மநா
தாதத்ரோஹிஸுதப்ரஸூத்யுபநதா துஷ்கீர்த்தி ரேவோதரே 159

ஜெய ஜகத் ஜநநீ - உலகத்தாயே!
ய: - உலகை மயக்குவதில் புகழ்பெற்ற
பஞ்சேஷு: - மன்மதன்
த்வத்கர்ப - உனது கர்ப்பத்தில்
ஸம்பவோபூத் - பிறந்திருந்தும்
பஞ்சாயுதம் - சங்கம் முதலான ஐந்து ஆயுதங்களை உடையவனும்
தாதம் - தந்தையுமான
மாதவம் - கண்ணனையும்
யத் - எந்த காரணத்தால்
அஹத ருக் - வெல்லாற்ற துன்பத்தை
ஸத்ராயுதை: - தரவல்ல
பாணை: - பாணங்களால்
வ்யதாபயத் - துன்புறுத்தினானோ
அத: - இப்படித் துன்பப்படுத்துபவனை
தாத நிரோதி - தந்தைக்கே தீமை செய்யும்
ஸுத ப்ரஸூதி - பிள்ளையைப் பெற்றதால்
ஸம்பந்த - உண்டான
அபகீர்த்திரேவ - அபகீர்த்தியே
ரோமாவளி - ரோமவரிசை என்ற
வ்யாஜேந - வ்யாஜத்தாலே
தே உதரே - உனது வயிற்றில்
லக்நா - ஸம்பந்தித்துள்ளது.

உலகத்தாயே! தாமரை அசோகம், மா, மல்லிகை, நெய்தல் என்ற ஐந்து புஷ்பங்களை ஐந்து பாணங்களாகக் கொண்டவன் மன்மதன். அவன் ஸ்ரீ ருக்மணியாக அவதரித்த போது உன் வயிற்றில் ப்ரத்யும்னனாகப் பிறந்தான். ஆகவே கண்ணன் அவனுக்குத் தந்தை ஆயினன். தாம் ஐந்து பூப்பாணங்கள் வைத்திருப்பது போல் கண்ணனும் சங்கம் சக்ரம் போன்ற ஐந்து ஆயுதங்களை வைத்துள்ளான் என்ற பொறாமையால் ஆயுதங்களை - சேராது பிரிந்து வாழ்பவர்களை - வாட்டுபவனான மன்மதன், தந்தை எனப் பாராது அவனையும் மிகவும் துன்புறுத்தினான். இப்படித் தந்தைக்கு தீமையை தோற்றுவிக்கும் பிள்ளையைப் பெற்றதால் நீர் பெற்ற அபகீர்த்தியே உமது வயிற்றில் ரோமாவளியாகப் புலப்படுகிறது. தாம் தேடிய இகழ்ச்சித் தன்மை எப்போதும் விடாது என்பது கருத்து.

அபகீர்த்தியை கருப்பாக வர்ணிப்பது கவிமரபு. மாதவ: என்ற சப்தம் ச்லேஷத்தில் அமைந்துள்ளது. மாதவ: என்பதற்கு வஸந்தம் என்ற பொருளும் உண்டு. வஸந்தருது மன்மதனுக்கு நண்பன். தம் நண்பனின் பெயரை வைத்துக் கொண்டுள்ளான் என்ற காரணத்தாலும் மன்மதன் கண்ணனுக்கு நன்மை செய்ய வேண்டியவன் இருந்தும் தீமையைச் செய்தது தௌர்ஜன்யத்தின் எல்லை என்பது தொனிப் பொருளாம். க்ருஷ்ணனின் மன்மதப் பீடை பாகவதத்தில் ப்ரஸித்தம். 189

रज्जुं रोमालिरूपां गुरुकुचकलशालम्बिनीं जीवनार्थी
मातस्त्वन्नाभिवापीपरिसरमनयन्मन्मथो जाततृष्णः ।
दृष्ट्वा तामत्यगाधामिह न पुनरलं दैर्घ्यमस्या इति श्री-
स्तामौज्झत्तत्र रज्जुं न तृष उपरतिः शम्बरध्वंसिनः स्यात् ॥ १६०

ரஜ்ஜும் ரோமாலிரூபாம் குருகுசகலசாலம்பிநீம் ஜீவநார்த்தீ
மாதஸ்த்வந்நாபிவாபீபரிஸரமநயந்மந்மதோ ஜாதத்ருஷ்ணா: ।
த்ருஷ்ட்வா தாமத்யகாதாமிஹ ந புநரலம் தைர்க்யமஸ்யா இதி ஸ்ரீஸ்
தாமௌஜ்ஜத்தத்ர ரஜ்ஜும் ந த்ருஷ உபரதி: ஶம்பரத்வம்ஸிந: ஸ்யாத் ॥ 160

[illegible] - [illegible]
ஜாதத்ருஷ்ணா: - நீர் வேட்கை உடையவனான
மந்மத: - மன்மதன்
குரு - பெரிதான
குசகலச - ஸ்தனமாகிய குடத்தில்
ஆலம்பிநீம் - கழுத்தில் கட்டப்பட்ட
ரோமாலிரூபாம் - ரோமவரிசையாகிற
ரஜ்ஜும் - கயிறை
தவ நாபி - உனது கொப்பூழாகிய
வாபீ பரிஸரம் - கிணற்றின் அருகில்
அநயத் - அடைவித்தான் போலும்
அத்யகாதாம் - மிகவும் ஆழமான
தாம் த்ருஷ்ட்வா - அக்கிணற்றைப் பார்த்து
அஸ்யா: - இக்கயிற்றுக்குள்ள
தைர்க்யம் - நீளம்
இஹ ந அலம் - இக்கிணற்றுக்குப் போதாது
இதி மத்வா - என்றெண்ணி
தாம் - குடத்தில் கட்டிய கயிறை
தத்ர - கிணற்றின் அருகிலேயே
ஔஜ்ஜத் - விட்டுவிட்டான் போலும்
ஶம்பரத்வம்ஸிந: - ஜலத்தை பாழடிப்பவனுக்கு
த்ருஷ உபரதி: - தாஹ சாந்தி
ந ஸ்யாத் - உண்டாகாது.

மக்களுக்கெல்லாம் சிற்றின்ப வேட்கையை உண்டு பண்ணுபவனான மன்மதனுக்கு ஒரு கால் தாஹம் தோன்றியது போலும். அவன் அத்தாஹத்தைப் போக்கிக் கொள்ள விரும்பியவனாய் குடம் போன்ற உனது ஸ்தநங்களின் கழுத்தில்ரோமாவலியாகிய கயிறைக் கட்டி அதை எடுத்துக் கொண்டு உன் கொப்பூழாகிய கிணற்றின் ஸமீபம் சென்றான் போலும். ஆனால் அக்கிணறும் மிகவும் கம்பீரமாக ஆழமாக - இருப்பதைக் கண்டு இக்கயிறு இக்கிணற்றின் ஆழத்துக்குப் போதாது என எண்ணி அதை கிணற்றின் அருகிலேயே போட்டு விட்டான் போலும். இத்துணை பாடு பட்டும் மன்மதன் நீர் வேட்கை போகவில்லை. அது தகுதியுடையதே. சம்பரத்தை - தண்ணீரை த்வம்ஸம் செய்பவனுக்கு - அழிப்பவனுக்கு நீர்

வேட்கை எப்படிப் போம்? நீர் இருந்தாலன்றோ பருக முடியும்? (சம்பராஸுரனை அழித்தவன் ப்ரத்யும்னன்; ஸம்பர த்வம்ஸீ என்பதற்கு மன்மதன் என்ற பொருளும் உண்டு.) மேலும்

சம்பரம் என்ற சொல், ஜலம் முடிக்க என்ற இரு பொருளைத் தரும் முன் காலத்தில் ஸ்ரீ வைஷ்ணவப் பெண்கள் தாம் ஆடை அணியும் போது, ஆண்கள் வேஷ்டி உடுத்தும் போது முன்பக்கம் கச்சம் வைப்பது போல், அவர்களும் புடவையில் கச்சம் செருகுவர். ஆணுடன் சேரும்போது அதை அகற்ற வேண்டியிருப்பதால் மன்மதன் சம்பரத்வம்ஸீ ஆயினன். சம்பரம் என்பதற்கு ஜலம் என்ற பொருள் உள்ளதால் கவி சிலேடையில் சம்பரத்தை அழிப்பவனுக்கு சம்பரம் எப்படிக் கிட்டும் என சமத்காரமாகப் பேசுகிறார் 160

ऋत्विग्रमे रतिमखे ननु यौवनात्मा
नाभीबिलावटप्लुतोदरवेदिकायाम् ।
यूपं मिनोति तव रोमलतास्वरूपं
शङ्केऽस्य सङ्गतमुरोजयुगं चषालम् १६१

ருத்விக் ரமே ரதிமகே நநு யௌவநாத்மா
நாபீபிலாவடப்லுதோதரவேதிகாயாம் ।
யூபம் மிநோதி தவ ரோமலதாஸ்வரூபம்
சங்கே(அ)ஸ்ய ஸங்கதமுரோஜயுகம் சஷாலம் ॥ 161

ஹே ரமே - லக்ஷ்மீ
ரதிமகே - புணர்ச்சியாகிற யாகத்தில்
யௌவநாத்மா - யௌவனப் பருவமாகிய
ருத்விக் - வேள்வி செய்பவன்
நாபீ பில - கொப்பூழாகிய
அவட ப்லுத - யூபஸ்தம்பம் நடுவதற்கு வேண்டிய பள்ளத்துடன் கூடிய
உதர வேதிகாயாம் - வயிறாகிய யாகம் செய்யுமிடத்தில்
ரோமலதாஸ்வரூபம் - ரோமாவளியாகிய
யூபம் - ஆடு கட்டுவதற்குரிய கம்பத்தை
மிநோதி கிம் - நட்டானா என்ன ?
அஸ்ய ஸங்கதம் - யூபத்துடன் சேர்ந்த
உரோஜ யுக்மம் - கொங்கைகள் இரண்டையும்
சஷாலம் - யூப கடகமாக
மந்யே - எண்ணுகிறேன்

யௌவனப் பருவ ஆரம்பத்தை யாகமாக வர்ணிக்கிறார். இதில் பயன்படும் பொருள்களின் பெயர்கள் அமைந்துள்ளன. அவற்றின் விளக்கத்துடன் கருத்தும் கூறப்படுகிறது.

யாகம் செய்வதற்கு வேண்டிய விசாலமான பூமிக்கு "வேதி" எனப்பெயர். இங்கு வயிறு வேதியாக வர்ணிக்கப்பட்டுள்ளது. ஹோமம் செய்பவர்கள் "ருத்விக்" என அழைக்கப்படுபவர். இங்கு ருத்விக்காக இருப்பது யௌவனப் பருவம். வேதியின் அருகில் உயரமான கம்பம் நடப்படும். இதற்கு "யூபஸ்தம்பம்" எனப்பெயர். இங்கு யூபம் நடுவதற்குரிய பள்ளமாகக் கொப்பூழும் "சஷாலம்" என்பது ஒரு பொருளின் பெயர். நெல் குத்தும் உரலைப் போல் எனவும் சொல்லலாம். ஈண்டு வட்டமாகவும், பருத்தும், ஒன்றோடொன்று சேர்ந்தும் நடுவில் மெல்லியதாயுமுள்ள இரண்டு ஸ்தநங்கள் சஷாலமாகக் கூறப்பட்டுள. இச்சஷாலத்தை யூப ஸ்தம்பத்தின் நுனியில் கட்டி வைப்பர். இங்கு யூப ஸ்தம்பமாகிற ரோமராஜியின் நுனியுடன் ஸ்தநங்கள் ஸம்பந்தித்துள. ஆகவே அவை சஷாலங்களாயின. இவ்வமைப்புகளெல்லாவற்றையும் யௌவனப் பருவமாகிய ருத்விக் செய்தான் என்கிறார். யாவற்றையும் உருவகப் படுத்தியுள்ளார். 161

रतीशमातस्तव रोमवल्लिका- मयी मनोज्ञा यमुना पुनातु माम् ।
वलित्रयं यत्र तरङ्गविभ्रमं बिभर्ति हारांशुचयश्च फेनताम् ॥ १६२

ரதீசமாதஸ்தவ ரோமவல்லிகா- மயீ மனோஜ்ஞா யமுநா புநாது மாம்।
வலித்ரயம் யத்ர தரங்கவிப்ரமம் பிபர்த்தி ஹாராம்சுசயச்ச பேநதாம்।

ஹே ரதீச மாத: - மன்மதன் தாயே
தவ - உமது
ரோமவல்லிகா மயீ - ரோமாவளியாகிய
மனோஜ்ஞா யமுநா - அழகியகாளிந்தி
புநாது மாம் - என்னைப் பரிசுத்தமாக்கட்டும்
யத்ர - எங்கே ரோமாவளி காளிந்தியில்
வலி த்ரயம் - மூன்று வயிறு மடிப்புகள்
தரங்க - அலைகள்
விப்ரமம் - சோபையை
பிபர்த்தி - தரிக்கின்றனவோ
ஹாராம்சு சய - முத்தாரமாலை ஒளிக்கறைகள்
பேநதாம் - நுரையாக இருக்கும் தன்மையை
பிபர்த்தி - தரிக்கின்றனவோ

வலித்ரயங்களாகிய அலைகளையும் முத்தொளியாகிய நுரையையும் கொண்ட ரோமராஜியாகிய காளிந்தி நதி என்னைத் தூயவனாக ஆக்கட்டும் என வேண்டுகிறார்.

स्तनाद्रिभाजि स्थिरहारशोभा सुधाम्बुधौ रोमलता मुरारेः ।
वटच्छदः स्यादुदरं तवाम्ब वलित्रयं चित्रमिहोपधानम् ॥ १६३

ஸ்தநாத்ரிபாஜி ஸ்திரஹாரஶோபா-
ஸுதாம்புதௌ ரோமலதா முராரே: ।
வடச்சத: ஸ்யாதுதரம் தவாம்ப
வலித்ரயம் சித்ரமிஹோபதாநம் ॥ 163

ஹே அம்ப - தாயே!
தவ உதரம் - உனது வயிறு
ஸ்தநாத்ரிபாஜி - ஸ்தநங்களாகிற மந்தரமலையை இடையில் கொண்டதும் பால்கடல் போன்ற ஸ்தநங்கள் வரை பரவியுள்ளதுமான
ஸ்திரஹாரஶோபா - முக்தாஹாரத்தின் ஒளியாகிற
ஸுதாம்புதௌ - அலையற்ற பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள
ரோமலதா - கொடி போன்ற ரோமாவளியாகிய
முராரே: - பகவானுக்கு
வடச்சத: ஸ்யாத் - ஆலிலையாம்
சித்ர - பல வர்ணங்களை உடைய
வலித்ரயம் - வயிற்றின் மடிப்புகள்
இஹ - இவ்விலே இங்குப் படுக்கையில்
உபதாநம் - தலையணையாக
ஸ்யாத் - ஆகும்

தாயே! உன் வயிறு முழுதும் நீ அணிந்துள்ள முத்து மாலைகளின் ஒளிகற்றைகள் பரந்துள்ளன. ஆகவே அது வெளுப்பாயிருக்கிறது. எனவே அது அலையற்ற பாற்கடல் போலுள்ளது. அதன் இடையில் உள்ள ஸ்தநங்கள் மந்தர மலைகளாம். அப்பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள காலமேகம் போன்றுள்ளது ரோமாவளி. அப்பகவானுக்கு மெல்லிய உன் வயிறு ஆலை இலையாம். இயல்பாய் சுவர்ணத்தின் வர்ணம் போன்றதாலும், ரோமராஜியின் நீல நிறக் கலப்பாலும், முத்தார ஒளியின் வெண்மைப் படர்வாலும் பல வர்ணமுடைய அழகிய வலித்ரயம் பள்ளி கொண்டுள்ள பரமனுக்குத் தலையணை ஆமென உத்ப்ரேக்ஷை செய்கிறார் 163

नाभीसरोरोधसि नारिकेल द्रुमभ्रमं रोमलता ददाति ।
तदग्रलग्नौ तनुतस्तव श्रीः स्तनौ पुनस्तत्फलयुग्मशङ्काम् ॥ १६४

நாபீஸரோரோதஸி நாரிகேல-
த்ருமப்ரமம் ரோமலதா ததாதி ।
ததக்ரலக்நௌ தநுதஸ்தவ ஶ்ரீ:
ஸ்தநௌ புநஸ்தத்பலயுக்மஶங்காம் ॥ 164

ஹே ஸ்ரீ: - லக்ஷ்மியே
தவ ரோமலதா - உனது ரோமாவளி
நாபிஸர: - கொப்பூழாகிய குளத்தின்
தீரதலே - கரையில் உள்ள
நாலிகேரத்ரும - தென்னை மரத்தின்
ப்ரமம் - ப்ரமத்தை
தநோதி - உண்டு பண்ணுகிறது
தத்ர லக்ந - ரோமாவளியின் நுனியில் இணைந்துள்ள
ஸ்தநௌ புத: - கொங்கைகளைப்போலிருப்பவைகள்
தத் - அத்தென்னை மரத்தில்
பலயுக்ம - இரண்டு பழங்களின்
ஸங்காம் - ஸந்தேகத்தை
தநோதி - உண்டு பண்ணுகிறது

தாயே உனது கொப்பூழ் ஆழமாயும், கம்பீரமாயும் இருப்பதால் குளத்தின் மருட்சியைத் தோற்றுவிக்கின்றது. அதன் அருகில் மெல்லியதாயும், நீளமும், கருத்தும் நுனியில் படர்ந்தும் உள்ள ரோமாவளி தென்னை மரத்தின் ப்ரமத்தை உண்டாக்குகிறது. அதன் நுனியில் இணைந்தும் வட்டமாயுமுள்ள ஸ்தநங்கள் தேங்காயின் ப்ரமத்தைத் தருகின்றன 164

नाभीसरश्चिरमगाधतरं विधाय
नारायणप्रणयिनि भ्रमिणा विधात्रा ।
रोमावली तव विभाति तटे तदीये
क्षिप्तेव तत्खननहेतुरियं शलाका ॥ १६५

நாபீஸரச்சிரமகாததரம் விதாய
நாராயணப்ரணயிநி ப்ரமிணா விதாத்ரா।
ரோமாவலீ தவ விபாதி தடே ததீயே
க்ஷிப்தேவ தத்கநநஹேதுரியம் ஶலாகா॥ 165

ஹே நாராயணப்ரணயிநி - நாராயணனின் பத்னியே
நாபீஸர: - நாபியாகிற குளத்தை
அகாத தரம் - மிக ஆழமாக
சிரம் - வெகு காலமாக
விதாய - அமைத்ததால்
ப்ரமிணா - களைத்த
விதாத்ரா - ப்ரம்மாவால்
ததீயதடே - அக்குளக்கரையிலேயே
க்ஷிப்தா - விடப்பட்ட
தத்கநந - அக்குளத்தைத் தோண்ட
ஹேது: - காரணமான
இயம் சலாகா இவ - கடப்பாரையைப் போல்
ரோமாவலீ - ரோமவரிசை
விபாதி - விளங்குகின்றது

நாபியைக் குளமாகவும், ப்ரம்மாவை அக்குளத்தைத் தோண்டியவனாகவும் ரோமாவலியை கடப்பாரையாகவும் வர்ணித்துள்ளார் 165

सरितो गिरितोऽवतीर्य निम्नं
प्रविशन्त्यम्ब तवात्र नाभिगर्तात् ।
तनुलोमलता कलिन्दजाहो
स्तनशैलान्तिकमारुरुक्षतीव ॥ १६६

ஸரிதோ கிரிதோ(அ)வதீர்ய நிம்நம்
ப்ரவிசந்த்யம்ப தவாத்ர நாபிகர்த்தாத் ।
தநுலோமலதா கலிந்தஜாஹோ
ஸ்தநசைலாந்திகமாருருக்ஷதீவ ॥ 166

தோ அம்ப - தாயே
ஸரித: - நதிகள் யாவும்
கிரித: - மலையிலிருந்து
அவதீர்ய - கீழே வீழ்ந்து
நிம்நம் - அவ்விடத்திலும் தாழ்ந்த இடத்தில்
ப்ரவிசந்தி - பெருகுகின்றன
தநு - மெல்லியதாகவும் சிறிதே வியர்வை ஜலத்தை உடையதுமான
லோமலதா - கொடி போன்ற ரோமாவளியாகிய
கலிந்தஜா - யமுனா நதி
நாபிகர்த்தாத் - நாபியாகிற பள்ளத்திலிருந்து
ஸ்தநசைல - ஸ்தநங்களாகிற மலைகளின்
அந்திகம் - ஸமீபம் வரை உள்ள உயர்ந்த பாகத்தை
ஆருருக்ஷதீவ - ஏற விரும்புவது போலுள்ளது.

உலகிலுள்ள அநேக நதிகள் மலைகளிலேயே தோன்றி, அங்கிருந்துக் கீழே அருவியாக விழ்ந்து அவ்விடத்திலும் தாழ்ந்த இடத்தில் பெருகிப் போவதைதான் உலகில் காண்கிறோம். பள்ளத்திலிருந்து உயர்ந்த இடத்துக்கு ஏறிப்பாயும் நதியை கண்டதே இல்லை. கேட்டதுமில்லை. ஆனால் உடலில் கொப்பூழில் தோன்றிதாயும் பரப்பே இல்லாது மிக மெல்லியதாயும் சிறிதே ஜலத்தை உடையதுமான ரோமாவளியாகிய கருத்த காளிந்தீநதி தான் தோன்றிய இடத்திலும் மேடானதாயும் ஸ்தநங்களாகிற மலை வரையுள்ள வரிதாகிய ஸமமான இடத்தில் ஏறிப்பாய்வதற்கு விரும்புவது போன்றுள்ளது.

दायादः पितुरेष नाभिकमले दामोदरस्यैधते
धातेत्येवमसूययेव जननि प्रेप्सुस्ततोऽप्युच्छ्रयम् ।
नाभीकूपसमुत्थरोमलतिकानालाग्रजाग्रन्नव-
स्फारोरोजसरोजकोशयुगमध्यास्ते सुतस्ते स्मरः ॥ १६७

**தாயாத: பிதுரேஷ நாபிகமலே தாமோதரஸ்யைததே
தாதாத்யேவமஸஹ்யயேவ ஜநநி ப்ராப்ஸ்யம்ஸ்ததோ(அ)ப்யுச்சயம் ।
நாபீகூபஸமுத்த ரோமலதிகாநாலாக்ரஜாதாத்புத-
ஸ்பாரோரோஜ ஸரோஜ கோசயுகமத்யாஸ்தே ஸுதஸ்தே ஸ்மர: ॥ 187**

ஹே ஜநநி - தாயே!
ஏஷ ஸுத: ஸ்மர: - உன் மகனான மன்மதன்
தாயாத: - ஞாதியான
தாதா - ப்ரஹ்மா
பிது: - தந்தையான
தாமோதரஸ்ய - நாராயணனின்
நாபிகமலே - நாபி பத்மத்தில்
ஏததே - உயர்ந்து விளங்குகிறான்
இத்யேவம் - என்கிற
அஸஹ்யயேவ - பொறாமையாலே
ததோபி - ப்ரம்மா விட
உச்சயம் - உயர்வை
ப்ராப்ஸ்யந் - அடைய விரும்புவது போல்
தே - (பகவானால் அவன் மார்பில் தரித்துக் கொண்டுள்ள) உனது
நாபீகூப - நாபியாகிய சிறு குளத்தில்
ஸமுத்த - தோன்றியுள்ள
ரோமலதிகா நால - ரோமமாகிய கொடித்தண்டும்
அக்ரஜாத - நுனியில் தோன்றியுள்ளதும்
அத்புதஸ்பார - ஆச்சர்யகரமாயும் பருத்துமுள்ள
உரோஜஸரோஜ - ஸ்தநங்களாகிய தாமரைகளின்
கோசயுகம் - இரண்டுமொட்டுகளிலும்
அத்யாஸ்தே - வீற்றிருக்கிறான்

மன்மதன் ருக்மணியாக அவதரித்த லக்ஷ்மியின் பிள்ளையானவன். எனவே அவனிடம் லக்ஷ்மிக்குப் பற்று மிகுதியாக உண்டு. பிரம்மா நாராயணனின் நாபி கமலத்தில் தோன்றியவன். எனவே அவன் பங்காளி ஆகிறான். பங்காளிக் காய்ச்சல் உலகில் இயற்கை தானே! பகவானின் நாபியில் தோன்றி உயர்ந்து சென்றுள்ள தாமரையில் அமர்ந்து கொண்டு ப்ரம்மன் மட்டும் உயர்ந்து விளங்குவதா! என்ற காய்ச்சல் உண்டாயிற்றாம் மன்மதனுக்கு. ஆகவே அவனிடத்திலும் உயர்ந்த இடத்தில் தாம் இருக்க வேண்டும் என எண்ணினனாம். அதனால் பகவான் நாபியிலும் உயர்ந்த இடமான அவன் மார்பில் அவனால் தாங்கப்பட்டுள்ள லக்ஷ்மியின் நாபியாகிய சிறுகுளத்தில் தோன்றியதும் கொடி போன்றதுமான ரோமாவளியின் நுனியில் இரண்டு பூக்களாகப் பூத்துள்ளதால் ஆச்சர்யகரமானவையும், பருத்தவையுமான ஸ்தநங்களாகிய இரண்டு தாமரை மொட்டுகளின் நுனியில் அவன் வீற்றிருக்கின்றானாம்.

பகவான் ஒருவர் நாபியில் தோன்றிய கமலத்தில் வாழ்வதால் பெற்ற உயர்வைக் காட்டிலும் அப்பகவானையே உயர்ந்த இடத்தில் தாங்கப்படும் லக்ஷ்மியின் நாபியில் தோன்றிய ஒரே தண்டில் பூத்த இரண்டு தாமரைகளில் வாழ்வதால் பெற்ற உயர்வு மிகவும் உயர்ந்தது என்பது கருத்து 167

जित्वा जगन्ति विशिखैर्जगदम्ब जैत्र-
स्तम्भं तवाङ्गभुवि रोमलताच्छलेन ।
बिभ्रन् मनोजनृपतिर्जितलोकसंख्यां
मूले किमस्य तिसृभिर्वलिरेखिकाभिः ॥ १६९

ஜித்வா ஜகந்தி விசிகைர் ஜகதம்ப ஜைத்ர-
ஸ்தம்பம் தவாங்கபுவி ரோமலதாச்சலேந ।
பிப்ரந் மனோஜந்ருபதிர் ஜிதலோகஸங்க்யாம்
மூலே கிமஸ்ய திஸ்ருபிர் வ்யலிகத் வலீபி: ॥ 169

ஜெகதம்ப - ஜகன்மாதாவே! மநோஜந்ருபதி: - மன்மத மஹாராஜா விசிகை: - பாணங்களால் ஜகந்தி - உலகமனைத்தையும் ஜித்வா - வெற்றி கண்டு ஜைத்ரஸ்தம்பம் - தன் வெற்றியை வெளியிடும் கம்பத்தை தவாங்கபுவி - உன் உடலாகிய பூமியில் ரோமலதாச்சலேந - ரோமாவலி என்ற வ்யாஜத்தால் பிப்ரந் து - புதைத்தவனாய் ஜித - தம்மால் வெற்றி பெறப்பட்ட லோகஸங்க்யாம் - உலகின் எண்ணிக்கையை திஸ்ருபி: - மூன்று வலீபி: - கோடுகளால் அஸ்ய மூலே - வெற்றிக் கம்பத்தின் கீழே வ்யலிகத் கிம்? எழுதினானா என்ன

ஜகந்மாதா! மன்மதன் ஒப்பற்ற பேரரசன். உலகில் அரசர்கள் கூர்மையான பாணங்களால் பகைவரை மாய்த்து வெற்றி பெறுவர். ஆனால் இவன் கூர்மையற்றவையும் (விசிகை: என்பதற்குக் கூர்மையற்றது என்ற பொருளும் உண்டு) மிகவும் மென்மையானவைகளுமான ஐந்து புஷ்பங்களையே பாணங்களாகக் கொண்டு அனைத்து உலக மக்களையும் வென்று விட்டான்! இவன் வீரந்தான் என் என்பது!! வெற்றி கம்பம் நாட்ட எண்ணம் கொண்டவனாய் உன் உடலாகிய பூமியில் ரோமாவலியாகிய கம்பத்தை நாட்டியதோடு அவற்றின் கீழ் மூன்று ரேகைகளால் தாம் வெற்றி பெற்ற வரலாற்றை ப்ரகடித்திடவோ எழுதி வைத்தனனோ என்ன! 169

जगत्त्रयीचेतनजन्महेतौ
वलित्रयी भाति तवोदरेऽस्मिन्।
नारायणश्रेयसि नाभिकूप-
निपानसोपानपरम्परेव॥ १६८

ஜகத்த்ரயீசேதநஜந்மஹேதௌ
வலித்ரயீ பாதி தவோதரே(அ)ஸ்மிந்।
நாராயணச்ரேயஸி நாபிகூப
நிபாநஸோபாநபரம்பரேவ॥ 168

நாராயண ச்ரேயஸி - நாராயணன் மகிமையில்
ஜகத்த்ரயீ சேதந - மூவுலக மக்களின்
ஜந்மஹேதௌ - பிறப்புக்குக் காரணமான
தவ உதரே - உனது வயிற்றில்
வலித்ரயீ - மூன்று கோடுகள்
நாபிகூப - நாபியாகிய கிணற்றில்
நிபாந - மிக்க நீரைப் பருகுவதற்குரிய
ஸோபாந - படிகளின்
பரம்பரேவ - வரிசைகள் போல
பாதி - ப்ரகாசிக்கின்றது.

நாபியைக் கிணறாகவும் கோடுகளை படிகளாகவும் உத்ப்ரேக்ஷை செய்துள்ளார் 169

स्नातस्य नाभिसरसि ध्रुवमब्धिकन्ये
संजग्मुषो रतिपतिव्रतिनः समाधिम्।
आपातमेव कलये तव रोमराजि-
मस्या वलित्रितयमस्य च दर्भकूर्चम्॥ १७०

ஸ்நாதஸ்ய நாபிஸரஸி த்ருவமப்திகந்யே
ஸஞ்ஜக்முஷோ ரதிபதிவ்ரதிந: ஸமாதிம்।
ஆபாதமேவ கலயே தவ ரோமராஜி-
மஸ்யா வலித்ரிதயமஸ்ய ச தர்பகூர்ச்சம்॥ 170

அப்திகந்யே - கடலரசன் புதல்வி
தவ ரோமராஜிம் - உன் ரோமவரிசையை
நாபி ஸரஸி - நாபியாகிய பொய்கை தீர்த்தத்தில்
ஸ்நாதஸ்ய - நீராடியதும்
ஸமாதிம் - மனதை ஒருமுகப்படுத்துவதை
ஸஞ்ஜக்முஷ: - அடைந்தவன்
ரதிபதி - மன்மதனாகிய
வ்ரதிந: - ப்ரம்மசரியம் வேண்டிய
ஆபாதம் - மேலோட்டமாக
கலயே - நினைக்கிறேன்

வலித்ரயம் - மூன்று ரேகைகளையும்
அர்ப்ய - ப்ரம்மசாரிக்கு
ஆஸ்யம் - உட்காருவதற்கு வேண்டிய
தர்பகல்ப்தம் - தர்ப்பத்தால் செய்யப்பட்ட பீடமாக
கலயே - எண்ணுகிறேன்.

ப்ரம்மசாரிகள் விடியற்காலையில் குளத்தில் ஸ்நானம் செய்து ஸந்த்யாவந்தனம் செய்யும் போது பலாசதண்டம், மௌஞ்சீ மான் தோலை அணிந்திருக்க வேண்டும். மன்மத ப்ரம்மசாரி லக்ஷ்மியின் நாபியாகிய புண்ய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தானாம். ஐம்பொறிகளையும் மனதால் அடக்கி மந்த்ரஜபம் செய்யத் தொடங்கினானாம். அப்போது அவனுக்கு வேண்டிய முற்றிய கரும் பச்சை நிறமுள்ள தோலுடைய நீண்ட பலாசக் கொம்பு போன்று இருந்ததாம் தாயின் ரோமாவளி. கீழே உட்காருவதற்கு வேண்டிய பீடம் போன்றிருந்தனவாம் வயிற்றிலுள்ள நீண்ட மூன்று கோடுகள் 170

नाभीवापीसविधभुवि ते यौवनारामकृत्यै
न्यस्तं रोमावलिमयघटीयन्त्रदारु स्मरेण ।
मूले तस्य स्फुरति रचितं पादविन्यासहेतोः
सोपानानां त्रितयमुदधेः पुत्रि वल्यात्मना किम् ॥ १७१

நாபீவாபீஸவிதபுவி தே யௌவநாராமக்ருத்யை
ந்யஸ்தம் ரோமாவலிமயகடீயந்த்ரதாரு ஸ்மரேண ।
மூலே தஸ்ய ஸ்புரதி ரசிதம் பாதவிந்யாஸஹேதோ:
ஸோபாநாநாம் த்ரிதயமுததே: புத்ரி வல்யாத்மநா கிம் ॥ 171

உததே: புத்ரி - பாற்கடல் பெண்ணே
தே - உனது
யௌவநாராம - யௌவனப்பருவ மாம்பூந்தோட்டத்தில்
நாபீவாபீ - நாபியாகிய கிணற்றின்
ஸவித புவி - சமீப தேசத்தில்
ஸ்மரேண - தோட்டக் காவலனான மன்மதனால்
ரோமாவலீமயம் - ரோமாவளியை
கடீயந்த்ரதாரு - நீர் இறைக்கும் இயந்திரத்துக்கும் ஆதாரமான நீண்ட கம்பம்
ந்யஸ்தம் கிம் - வைக்கப்பட்டுள்ளதா என்ன ?
தஸ்ய மூலே - அக்கம்பத்தின் அடியில்
பாதவிந்யாஸ ஹேதோ: - நீர் இறைப்பவன் கால்களை வைத்துக் கொள்வதற்கு ஏதுவாக
ரசிதம் - செய்யப்பட்ட

ஸோபாநதாம் - படிக்கட்டுக்களின்
ஸ்புடமிதம் - பிரகாசிக்கின்றதா
த்ரிதயம் - மூன்று
வல்யாத்மநா - வயிற்றின் ரேகை என்ற வடிவத்தில்

லக்ஷ்மியின் யௌவனப் பருவத்தைப் பூந்தோட்டமாகவும் மன்மதனை அத்தோட்டக் காவலனாகவும் தோட்டத்துக்கு வேண்டிய நீரைத் தரும் கிணறாக நாபியையும், நீர் இறைப்பதற்குரிய ஏத்த கோலாக ரோமாவலியையும், நீர் இறைப்பவர் கால்களை வைத்துக் கொள்வதற்கு வேண்டிய படிகல்லாக வயிற்றுக் கோடுகளையும் கற்பனை செய்துள்ளார் வேங்கடாத்வரி. இக் காலத்தவர் மின்சார என்ஜின்களின் துணை கொண்டு நீர் இறைப்பதைக் கனவிலும் கண்டிரார்.

அக்காலத்தே கிணறின் கரை மீது சுமார் நாலடி உயரமுள்ள கற்கம்பம் நடப்பட்டிருக்கும். அதன் மையப்பகுதியில் மேலும் கீழுமாக மூன்று நான்கு துளைகள் செய்யப்பட்டிருக்கும். அக்கல்லின் இரண்டு பக்கங்களிலும் சுமார் நாலடி உயரமும் ஓரடி அகலமும் மூன்றங்குல கனமுமுள்ள இரு மரத்துண்டுகள் துளைகளின் உதவியைக் கொண்டு இணைக்கப்பட்டிருக்கும். இதை மடல் என்பர். இம்மடலின் நுனி தற்போது எட்டு அடி உயரம் இருக்கும். இவற்றின் நுனியில் பனைமரத்தை பெரியதாகச் சீவி கீழும் மேலும் சாய்வதற்கேற்ற வகையில் அமைத்திருப்பர். இதனை "துலாம்" என்பர். இதன் நுனியில் இருபது முப்பது அடி நீளமுள்ள மூங்கில் கொம்பு இணைக்கப்பட்டிருக்கும். இதன் நுனியில் நீரை முகர்ந்து எடுப்பதற்கு வேண்டிய சால் என்ற பொருள் இணைக்கப்பட்டிருக்கும். நீர் இறைப்பவர் தம் கால்களை வைத்துக் கொள்வதற்காக இரண்டு அல்லது மூன்று கல்கள் நடப்பட்டிருக்கும். இதில் கால்களை வைத்துக் கொண்டு மூங்கில் கோலை கிணறில் அமிழ்த்துவர். கோலுடன் சேர்ந்த துலாம் சாய்ந்து கீழே வரும் சாலில் நீர்மொண்டதும் கோலை மேலே தூக்குவர் துலாமும், கோலும் சாலும் மேலே எழும். சாலின் நீரைக் கால் வாயில் கவிழ்ப்பர். அது பாய வேண்டிய இடத்துக்குச் சென்று நீரைப் பாய்ச்சும். கடல் கன்னியின் யௌவனப் பருவமாம் தோட்டக் காவலனான மன்மதன் அத்தோட்டத்துக்கு வேண்டிய நீரை இறைப்பதற்குக் கிணறு முதலியவற்றை அவள் உடலில் அமைத்துள்ளானா என்கிறார் 171

दीर्घं नाभीविवरसरसो देवि गम्भीरिमाणं
स्पष्टं द्रष्टुं वृषगिरिपतेरक्षमावक्षिमीनौ ।
गाम्भीर्यैकास्पदमपि रसैः पूरितं मानसं यत्
तस्य स्थैर्यं पतति जलधेः पुत्रि तत्रैव नित्यम् ॥

தீர்க்கம் நாபீவிவரஸரஸோ தேவி கம்பீரிமாணம்
ஸ்பஷ்டம் த்ரஷ்டும் வ்ருஷகிரிபதேரக்ஷமாவக்ஷிமீநௌ ।
காம்பீர்யைகாஸ்பதமபி ரஸை: பூரிதம் மாநஸம் யத்
தஸ்ய ஸ்தைர்யம் பததி ஜலதே: புத்ரி தத்ரைவ நித்யம் ॥ 172

தேவி - பகவானின் மஹிஷியான
ஜலதே: புத்ரி - ஸமுத்ரப் புத்ரியே
வ்ருஷகிரிபதே: - ஸ்ரீ நிவாஸனுடைய
அக்ஷிமீநௌ - கண்களாகிய மீன்கள்
தீர்க்கம் - அளவிட முடியாத
நாபீவிவர - நாபிப் பள்ளமாகிய
ஸரஸ: - குளத்தின்
கம்பீரிமாணம் - ஆழத்தை
த்ரஷ்டும் - அளவிடுவதற்கு
அக்ஷமௌ - தகுதியற்றவை என்பது
ஸ்பஷ்டம் - வெளிப்படையானது
யத் - எதனாலெனில்
ரஸை: பூரிதம் - விருப்பத்தால் நிறைந்த ஜலத்தால் நிறைந்த
தஸ்ய - அந்த பகவானுடைய
மாநஸம் - மனமும், மானஸ ஸரஸும்
காம்பீர்யம் - மாறுபாடு அடைவதற்கு வேண்டிய காரணங்களிலிருந்தும் மாறாத தன்மைக்கு மிக ஆழமான இருக்கைக்கு
ஏகாஸ்பதமபி - மாறுபடுவதற்கு இருப்பிடமாக இருந்த போதும்
நித்யம் - எப்போதும்
தத்ரைவ - அந்த நாபீஸரஸிலேயே
பததி - விழுந்து கொண்டிருக்கிறது

பகவானின் மனமும் கண்களும் எப்போதும் மஹிஷியினுடைய நாபியின் அழகை அநுபவித்துக் கொண்டிருக்கின்றன என்கிறார். தேவியின் நாபியே கம்பீரமான குளமாம். ஜலத்தில் வாழும் மீன்களுக்குத் தாம் வாழுமிடத்தின் ஆழத்தைத் தெளிவாக அறிய முடியுமென்பது உலக ப்ரஸித்தம். ஆனால் கடல் கன்னியின் நாபியாகிய குளத்தின் ஆழத்தை பகவானின் கண்களாகிய மீன்களால் இத்துணை என அளவிட முடியவில்லையாம். இது வெளிப்படை. இதில் சிறிதும் ஸந்தேஹமில்லை. ஏனெனில் ஸ்ரீநிவாஸனின் மனம் விருப்பங்கள் நிறைந்ததாக இருந்தாலும் மாறுபடுவதற்கு வேண்டிய காரணங்கள் இருந்த போதும் அது எளிதில் மாறுபாடு அடையாது. அத்தகைய மனமும் தற்போது

நாபியையே வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றது. எனவே நாபியின் மேன்மை சொல்லில் அடங்காததாயிற்று. அதே போல் பகவானின் கண்களாகிய மீன்கள் நாபியாகிய என்றும் வற்றாத நீரைப் பெற்ற மாநஸ ஸரோவரில் திளைத்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே அதன் ஆழமும் அளவிட முடியாததாக உள்ளது.

आश्रित्य सजलघनहस्तिगिरिस्थितायां
पञ्चायुधो भृशमुदञ्चति देवि काञ्च्याम् ।
नाभीमनन्तसरसीं कलये खगेन्द्र-
स्तम्भं च रोमलतिकां वलिधिष्ण्यभाजम् ॥

ஆச்ரித்ய ஸஜ்ஜகநஹஸ்திகிரிஸ்திதாயாம்
பஞ்சாயுதோ ப்ருசமுதஞ்சதி தேவி காஞ்ச்யாம் ।
நாபீமநந்தஸரஸீம் கலயே ககேந்த்ர-
ஸ்தம்பம் ச ரோமலதிகாம் வலிதிஷ்ண்யபாஜம் ॥ 173

ஹே தேவி - பகவானின் மனைவியே
ஸஜ்ஜகந - மழைபொழியும் மேகத்துடன் சேர்ந்த
ஹஸ்திகிரிம் - ஹஸ்திகிரி என்கிற மலையை
ஆச்ரித்ய ஸ்திதாயாம் - இடையில் கொண்டுள்ள
காஞ்ச்யாம் - காஞ்சீபுரத்தில்
பஞ்சாயுத: - பகவான்
ப்ருசம் - மிகவும்
உதஞ்சதி - மேன்மையை அடைகிறான்
தஸ்மாத் - ஆகையால்
நாபீம் - கொப்பூழை
அநந்தஸரஸீம் - அநந்தஸரஸ் என்கிற புஷ்கரணியாகவும்
வலி - வயிற்றின் கோடுகளாகிய
திஷ்ண்ய பாஜம் - கட்டத்துடன் சேர்ந்த
ரோமலதிகாம் - ரோமவரிசையை
ககேந்த்ரஸ்தம்பம் - கருட ஸ்தம்பமாகவும்
கலயே - எண்ணுகிறேன்

கருதிய வரத்தை வழங்குவதால் வரதன் என்ற பெயர் பூண்ட முக்தி மழை பொழியும் முகில் வண்ணனை இடையிலே கொண்டுள்ள காஞ்சீபுரம் மிகவுயர்ந்து விளங்குகிறது. தேவியே உமது நாபியை அனந்த ஸரஸ் என்ற பெயருடைய வரதன் ஸந்நிதியிலுள்ள புஷ்கரிணியாக எண்ணுகிறேன். அதே போல் கம்பம் சாய்ந்து விழாமல் இருப்பதற்காக அதன் அடியிலுள்ள கட்டடம் போன்ற உமது வயிற்றிலுள்ள கோடுகளுடன்

இணைந்த ரோமாவளியை கருட ஸ்தம்பமாகவும் எண்ணுகிறேன்.

ஸக்த - உயர்ந்த
நலந்திசி - நலந்திசைப் போன்ற
ஜகநபார்த்வ - பின்புறத்துடன் சேர்ந்துள்ள
காஞ்சயாம் - ஒட்டியாணம் என்ற ஆபரணத்தில்
பஞ்சமயூக - மன்மதன்
ப்ருசம் - மிகவும்
உதஞ்சதி - நடமாடுகிறான்

என்பது முன்னடிகளின் உண்மைப்பொருள்

जघनपुलिनवत्यां केशशैवालभाजि
त्रियुगनयनमीनैस्तृष्णया सेवितायाम् ।
त्वयि रसभरितायां देवि सौन्दर्यसिन्धौ
नलिनमुखि विधत्ते नाभिरावर्तशोभाम् ॥

ஜகநபுலிநவத்யாம் கேசசைவாலபாஜி
த்ரியுகநயநமீநைஸ்த்ருஷ்ணயா ஸேவிதாயாம் ।
த்வயி ரஸபரிதாயாம் தேவி ஸௌந்தர்யஸிந்தௌ
நலிநமுகி விதத்தே நாபிராவர்த்தசோபாம் ॥ 174

ஹே நலிநமுகி - அழகிய முகம் உடையவளே
ஜகந - இடுப்பின் முன்பகுதியாகிய
புலிநவத்யாம் - மணல் திட்டை உடையதும்
த்ரியுகநயந - விராட் புருஷனின் ஆயிரம் கண்களாகிற
மீநை: - மீன்களால்
த்ருஷ்ணயா - தாஹத்தால், வேட்கையால்
ஸேவிதாயாம் - அடையப்பட்டதும் சூழப்பட்டதும்
ரஸபரிதாயாம் - இனிய ஜலத்தால் நிறைந்ததும், சிருங்கார ரஸத்தால் பூர்ணமானதும்
த்வயி - நீயாகிய
ஸௌந்தர்ய ஸிந்தௌ - கொண்டாடத்தக்க அழகிய வடிவில்
நாபி - கொப்பூழ்
ஆவர்த்தசோபாம் - சுழியின் அழகை
விதத்தே - தரிக்கின்றது.

பதுமையின் திருமேனி அழகை நதியாக உருவகிக்கிறார். அதற்கேற்ப உடலுறுப்புகளை நதியின் உறுப்புகளாகவும் உருவகிக்கின்றார். இந் நதிக்கு இடையின் முன் பகுதியான மணல் திட்டாம். கேசங்கள் பாசியாம். ஆறு குணங்களால் நிறைந்தவனான விராட் புருஷனது ஆயிரக் கண்களை

கண்களாகிய மீன்களால் நீரைப் பருகும் ஆசையால் அடையப்பட்டதாம். பதுமை விராட் புருஷன் வேட்கையால் அடையப் படுபவளாவள், இனிய ஜலத்தால் நிறைந்திருக்கும் நதி. ச்ருங்கார ரஸத்தால் நிறைந்திருப்பவள் பத்மாவதி. இத்தகைய பதுமையாகிய மிக உயர்ந்த அழகு நதியில் அவளது நாபி சுழலின் அழகைத் தரிக்கின்றது.

त्वन्मध्ययष्टिं परिवेष्ट्य शेते
नाभीबिलान्ते रसनाप्रदाकुः ।
असावपूर्वः कमले यदीया-
न्यङ्गानि सर्वाणि च रत्नवन्ति ॥

த்வந்மத்யயஷ்டிம் பரிவேஷ்ட்ய சேதே
நாபீபிலாந்தே ரஸநாப்ரதாகு: ।
அஸாவபூர்வ: கமலே யதீயாந்-
யங்காநி ஸர்வாணி ச ரத்நவந்தி ॥ 175

ஹே கமலே - தாமரையில் வாழ்பவளே
அஸௌ - முன் குறிப்பிட்ட
ரஸநா - ஒட்டியாணமாகிய
ப்ரதாகு: - பாம்பு
நாபீபில - நாபியாகிய புற்றின்
அந்தே - அருகிலுள்ள
த்வந்மத்ய - உனது இடுப்பாகிய
யஷ்டிம் - கொம்பை
பரிவேஷ்ட்ய - சுற்றிக் கொண்டு
சேதே - உறங்குவதான
அஸௌ - இப்பாம்பு
அபூர்வ: - எப்போதும் காணாதது
யதீயாநி - எப்பாம்பினுடைய
ஸர்வாணி - அனைத்து
அங்காநி ச - அங்கங்களும்
ரத்நவந்தி - ரத்னம் உடையதாக உள்ளனவோ

இனி ஒன்பது ச்லோகங்களால் ஒட்டியாண வர்ணனை செய்யப்படுகிறது. காஞ்சியை - ஒட்டியாணத்தை பாம்பாக உருவகம் செய்கிறார். பாம்பு புற்றில் வாழ்வதோடு ஏதாவதொன்று புலப்பட்டால் அதை உடன் சுற்றிக்கொள்ளும். பின்பே கடிக்கும். இது பாம்பின் இயல்பு. காஞ்சியாகிய பாம்பு கமலையின் நாபியாகிய புற்றில் வாழ்வதோடு அதன் அருகிலுள்ள கொம்பு போல் மெல்லிய இடுப்பைச் சுற்றிக்கொண்டு உறங்குகின்றதாம். காஞ்சி அசையாமல் இருப்பதால் தூங்குகின்றதென்றார். மேலும் உலகில் பாம்பின் தலையில் மட்டும்தான் ரத்னம் இருப்பதாகச் சொல்வர். ஆனால்

ஸதா ஸர்ப்பத்தின் உடல் முழுவதுமே ரத்னமயமாக உள்ளது. ஆகவே இந்த ஸர்ப்பம் அபூர்வமானதாம். இடை ஒரு பிடிக்குள் அடங்குவதாக உள்ளதென்பதும், காஞ்சீ நவரத்னம் இழைக்கப்பட்டது என்பதும், அது வளைந்திருப்பது உறங்குவது போலுள்ளது என்பதும் கூறப்பட்டது.

मध्यात्मना जननि शब्दगुणेन योगा-
जग्राह शब्दमतुलं रसनागुणस्ते ।
शौरेः श्रवो वियति सौति सुखं सशब्दै-
स्तुष्ट्यै विशिष्य किल शिष्यगिरो गुरोः स्युः ॥

மத்யாத்மநா ஜநநி ஶப்தகுணேந யோகாஜ்
ஜக்ராஹ ஶப்தமதுலம் ரஸநாகுணஸ்தே ।
ஶௌரே: ச்ரவோ வியதி ஸௌதி ஸுகம் ஸஶப்தைஸ்-
துஷ்ட்யை விஶிஷ்ய கில ஶிஷ்யகிரோ குரோ: ஸ்யு: ॥ 176

ஹே ஜநநி - தாயே
தே ரஸநாகுண: - உனது ஒட்டியாணமாகிய அரைநாண் கயிறு, அதனை விரும்புபவன்
மத்யாத்மநா - இடுப்பாகிற
ஶப்தகுணேந - ஆகாசத்தோடு ஸம்பர்க்கத்தை நன்கு பெற்றதனால்
யோகாத் - ஸம்பந்தித்ததால், உடன் வாழ்வதால்
அதுலம் - இணையற்ற பாரம்பரியமாக வந்த
ஶப்தம் - ஒலியை, ஶப்த ஶாஸ்த்ரத்தை
ஜக்ராஹ - க்ரஹித்தது, அறிந்தவன்
ஸ: - அந்த அரை நாண் கயிறு, வ்யாகரணத்தை அறிந்தவன் அவன்
ஸஶப்தை: - இனிய ஒலியால் ஶப்த ஶாஸ்த்ரத்தைப் பற்றிய ப்ரமாணங்களால்
ஶௌரே: - பெருமாளுடைய
ச்ரவோ - காதானது
வியதி - ஆகாயத்தில்
ஸுகம் ஸௌதி - ஸுகத்தை உண்டு பண்ணுகிறது. ஸுகத்தை உண்டு பண்ணிற்று
ஶிஷ்யகிர: - சீடனின் ப்ரமாணங்கள்
குரோ: - ஆசிரியருக்கு
விஶிஷ்ய - சிறந்த
துஷ்ட்யை - ஸந்தோஷத்தின் பொருட்டு
ஸ்யு: கில - ஆகுமன்றோ

காஞ்சியை - ஒட்டியாணத்தை - அதனை விரும்புபவருடன் ஒப்பிடுகின்றார். தாயின் இடை ஆகாசம் போல் மிக நுண்ணியதாய் கண்களுக்குப் புலப்படாமல் உள்ளதாம். அனைத்து ஒலியும் ஆகாசத்தின் வழியாகவே வெளியில் பரவுவதால் சப்தத்தை - ஒலியை - ஆகாசத்தின் குணமாகக்

கூறுவர். தாயின் காஞ்சி ஆகாசத்தோடு - இடுப்போடு பழகுவதால் அதன் நிறமாகிய சப்தத்தைக் காஞ்சியும் பெற்றதாம் - ஒட்டியாணத்தில் தங்கத்தாலான சிறிய சிறிய சலங்கைகள் இணைக்கப்பட்டிருக்கும். அவை அசங்கும் போது ஒலிக்கும் - ஆகவே ஆகாசம் போன்ற இடையினிடமிருந்து காஞ்சி ஒலியைப் பெற்றதென்றார். மாணவனும் சப்த சாஸ்த்ரமாகிற வ்யாகரணத்தை பல முறை படித்துத் தேறியவனோடு வாஸம் செய்வதால் பல பரம்பரையின் வழி வழியாக வந்த சப்த சாஸ்த்ர விசேஷங்களை அறிகிறான். காஞ்சி தமது இனிய ஒலியால் பகவானின் காதாகிய ஆகாசத்துக்கு சுகத்தை உண்டாக்குகிறது. மாணவனும் தம் இனிய ப்ரஸங்கங்களால் ஆசிரியரை மகிழ்விக்கிறான். இடையாகிய ஆகாசமாம் ஆசிரியரிடமிருந்து தாம் கற்ற கல்வியாகிய சப்தத்தை ஒட்டியாணமாகிய மாணவன் தம் சலங்கை ஒலியாகிய ப்ரஸங்கத்தை பகவானின் காதாகிய ஆகாச ஆசிரியரை கேட்கச் செய்து மகிழ்விக்கிறான் என்றதாயிற்று. நல்ல ப்ரஸங்கத்தைக் கேட்டு நல்லாசிரியர் மகிழ்வரன்றோ!

காது என்கிற இந்த்ரியத்தோடு சேர்ந்த ஆகாசமே சப்தத்தை க்ரஹிக்கின்றது. ஆகையால் காதை ஆகாசமாகக் கூறினார்.

रतितन्त्ररहस्यमम्ब शब्दैः रमणीयैर्विशदं प्रकाशयन्ती ।
रसनैव रतिप्रियस्य नूनं रशनासाविति लेखकप्रमादः ॥

ரதிதந்த்ரரஹஸ்யமம்ப சப்தை: ரமணீயைர்விசதம் ப்ரகாசயந்தீ ।
ரஸநைவ ரதிப்ரியஸ்ய நூநம் ரசநாஸாவிதி லேககப்ரமாத: ॥ 177

ஹே அம்ப - தாயே
ரமணீயை: - மனோஜ்ஞமான
சப்தை: - தமது ஒலியால்
ரதி தந்த்ரஸ்ய - காம சாஸ்த்ரத்தின்
ரஹஸ்யம் - ரஹஸ்யமான செய்கைகளை
விசதம் - வெளிப்படையாக
ப்ரகாசயந்தீ - தெளிவும் வெட்டவெளிச்சத் தெரிவிக்கும் ரசநா என்ற ஆபரணம்
ரதிப்ரியம் - ரதிதேவியின் பர்த்தாவாகிய மன்மதன்
ரஸநைவ - நாக்கேயாகும்
அஸௌ - இந்த ரசனையை
ஸா இதி - ரசநா எனச் சொல்வது
லேகக - எழுதுபவர்களுடைய
ப்ரமாத: - கவனக்குறைவால் உண்டானதாகும்

रसना - என்றால் நாக்கு எனப்பொருள் रशना என்பது ஒட்டியாணம் என்ற பொருளைத் தரும். स श, என்ற எழுத்தின் வேறுபாட்டால் பொருள் மாறுகிறது. रशना என்பது உண்மையில் रसनैயேயாம். ஏனெனில் அணைத்துக் கொள்ளுதல், கட்டிப்புரளுதல், புணர்தல், போன்ற காம சாஸ்த்ர ரஹஸ்ய செயல்களைத் தமது ஒலி வேறுபாட்டால் இச்செயல் நிகழ்கிறது என வெளியிலிருப்பவர்களுக்குத் தெரிவித்து விடுகிறது. வெட்கத்துக்கு உரிய செயல்களை க்ராமியச் சொற்களால் சிறிதும் வெட்கமின்றிச் சொல்பவன் விடனே. எனவே அவனது நாக்கு எனலாம் இதனை. ஆனால் रशना எனச் சொல்வது எப்படி வந்ததெனின் அச்சொல்லை எழுதுபவன் கவனக்குறைவால் உண்டான பிழையே என்கிறார்.

उपाश्रिता मध्यममब्धिकन्यके निजप्रभाभिः शमितोत्तमस्थितिः ।
असौ कृतश्रीमदनादरा रमे न मेखला न प्रतिभाति मे खला ॥

உபாஸ்ரிதா மத்யமமப்திகந்யகே நிஜப்ரபாபி: ஶமிதோத்தமஸ்திதி: ।
அஸௌ க்ருதஶ்ரீமதநாதரா ரமே ந மேகலா ந ப்ரதிபாதி மே கலா ॥ 178

ரமே அப்திகந்யகே - பாற்கடல் பெண்ணே
மத்யமம் - ஜாதிகுண ஒழுக்கங்களில் குறைந்த ஒருவனை இடுப்பை
உபாச்ரிதா - அடைந்துள்ளதும், வளைத்துக் கொண்டுள்ளதும்
சமித - போக்கிக் கொள்ளப்பட்ட
உத்தமஸ்திதி: - உயர்ந்த நிலையை உடையதும்
மணிப்ரபாபி: - ரத்தினங்களின் ஒளியால்
சமிதா நாசம் செய்யப்பட்ட
உத். தம அடர்ந்த இருட்டின்
ஸ்திதி: - இருப்பை உடையதும்
க்ருத - செய்யப்பட்ட
ஸ்ரீமத் - ஞானம், பக்தி, முதலியன மிக்க பெரியோர்களின்
அநாதரா - பரிபவத்தை உடையதும்
க்ருத - செய்யப்பட்ட
ஸ்ரீமதந - ஸ்ரீமானான மன்மதனின்
ஆதரா - ஆதரவை உடையதுமான
மேகலா - ஒட்டியாணம்
மே - எனக்கு
கலா - துர்ஜனனாக
ந ப்ரதிபாதி ந - தோன்றவில்லை என்பதில்லை.

ஒட்டியாணத்தை நான் துர்ஜனன் எனத் திட்டவட்டமாகச் சொல்வேன் என்கிறார். மேகலையின் - காஞ்சியின் — ஒட்டியாணத்தின் குணங்கள் விளக்கும் சொல்லைக் கொண்டே துர்ஜனனின் குணங்களையும் வெளிப்படுத்தும் வகையில்

சுலோகத்தை அமைத்துள்ளார். அது சிலேடையில் அமைந்துள்ளது. எனவே இடத்துக்கேற்ப பதத்தைப் பிரித்துக் கொள்ள வேண்டும். பிரித்துப் பொருள் காட்டப்பட்டுள்ளது. மேகலையைப் பற்றிய உண்மைப் பொருள். காஞ்சி இடையைச் சுற்றிலும் அமைந்துள்ளது. தன்னில் இழைக்கப்பட்டுள்ள ரத்தினங்களின் ஒளியால் அடர்ந்த இருள் அனைத்தையும் அழித்துள்ளது. (மணிப்ரபாபி: என்ற சொல்லின் பொருள் இக்கருத்துக்கு மட்டும் உண்டு. துர்ஜனன் கருத்தில் சேராது. ஸ்ரீமானவா மன்மதன் எப்போதும் மிக ஆதரவோடு காஞ்சியிலே வாழ்கிறான் என்பதுமே கலையைப் பற்றிய பொருளாம். இனி துர்ஜனனைப் பற்றிய கருத்து. நற்குணமில்லாதவனும் ஒழுக்கம் கெட்டவனுமான ஒருவனுடன் சேர்ந்திருத்தல், தமது உயர்ந்த நிலையைத் தாமே அழித்துக் கொள்ளுதல், ஞானம், பக்தி, வைராக்யம், முதலியவற்றால் உயர்ந்த மஹான்களை பரிபவப்படுத்துதல் முதலியன கயவனின் செயல்களன்றோ? இவற்றுள் ஒன்றையேனும் நல்லவர் செய்வரேல் இவையனைத்தையும் காஞ்சி செய்கின்றதே. ஆகவே தான் அதை கயவன் என்கிறேன் எனச் சிலேடையில் வெளிப்படுத்துகிறார். இரண்டு நகாரத்தை அமைத்துள்ளது உறுதிப்பாட்டைத் தருவனவாம்.

यदनन्तपाणिनिहितं सुमध्यमे वलते सुवर्णमयसूत्रमम्ब ते ।
गुणवृद्धिमान् प्रकृतिशोभनोऽमुना नियतं सुशब्दनिचयोऽभिधीयते ॥ १७९

யதநந்தபாணிநிஹிதம் ஸுமத்யமே
வலதே ஸுவர்ணமயஸூத்ரமம்ப தே ।
குணவ்ருத்திமாந் ப்ரக்ருதி ஶோபநோ(அ)முநா
நியதம் ஸுஶப்தநிசயோ(அ)பிதீயதே ॥ 179

ஹே அம்ப - உலகத்தாயே
அநந்த - பகவானுடைய
பாணி - கைகளால்
நிஹிதம் - கட்டப்பட்ட
ஸுவர்ணமய ஸூத்ரம் - தங்கத்தாலான இந்த மேகலை
தே ஸுமத்யமே - உனது அழகிய இடையில்
வலதே - வளைத்துக் கொண்டுள்ளதோ
அமுநா - இம்மேகலையில்
குணவ்ருத்திமாந் - சொல் இனிமையாக இருப்பதற்கு வேண்டிய காரணங்கள் மிக்கதும்
ப்ரக்ருதி ஶோபந: - இயற்கையிலேயே அழகியதுமான
ஸு ஶப்த நிசய: - காதுகளுக்கு இனிமையான தங்களின் பரம்பரை
விதீயதே - செய்யப்படுகிறது

பகவானால் உமது இடையில் கட்டப்பட்ட மேகலையினின்றும் இனிய ஒலிகள் எழுகின்றன என்கிறார்

மேலும் ஓர் பொருள்

ஸுமத்யமே - புண்ணிய பூமியான ஆர்யாவர்த்தத்தில்
அநந்த - சேஷாவதாரமான பதஞ்சலிக்கும்
பாணிநி - வ்யாகரண ஸூத்ரகாரருக்கும்
ஹிதம் - அநுகூலமான
யத் ஸுவர்ணமய ஸூத்ரம் - குற்றமற்ற எழுத்துக்களின் கூட்டமாகிய अइउण् முதலிய ஸூத்ரங்கள்
வலதே - வ்யாகரண சாஸ்த்ரங்களில் ஸம்பந்தப்படுகின்றன
அமுநா - இந்த ஸூத்ரங்களால்
குணவ்ருத்திமாந் - அகார ஏகார ஒகாரங்களாகிய குணங்களையும் ஆகார ஐகார ஔகாரங்களாகிய வ்ருத்தியையும் உடையது
ப்ரக்ருதி - விகுதிக்கு முன்னுள்ள பகுதியால்

ஸோபந: - நல்ல உச்சரிப்பை உடைய
க, சப்த, நிசய: - ராம:, ஹரி: முதலிய சொற்களின் கூட்டம்
விதீயதே - உண்டு பண்ணப்படுகின்றன

விந்த்யமலைக்கும் ஹிமயமலைக்கும் இடைப்பட்ட பூமி ப்ரதேசத்தை புண்ணியபூமி, ஆர்யாவர்த்தம் என்றெல்லாம் வழங்கினர். இவ்விடத்தே வ்யாகரண சாஸ்த்ரமான சப்த சாஸ்த்ர ப்ரசாரம் மிகுதியாக உள்ளது என்கிறார். பாணிநி, பதஞ்சலி, என்ற இரண்டு ருஷிகள் சப்த சாஸ்த்ரத்துக்கு முக்கியமானவர்கள். பாணினி வ்யாகரண ஸூத்ரம் செய்தவர். பதஞ்சலி அதற்கு பாஷ்யமிட்டவர்.

வ்யாகரண ஸூத்ரங்கள் யாவும் 'அ இ உண், ருலுக், ஏ ஓங், என்பன போன்று வடமொழி எழுத்துக்களில் அமைந்த பதினான்கு ஸூத்ரங்களை அடிப்படையாகக் கொண்டெழுந்தவை. இச்ஸூத்ரங்களில் அ, இ, உ என்ற மூன்று எழுத்துக்களுக்கு குணம் என்று பெயர். ஆ, ஐ, ஔ என்பவை 'வ்ருத்தி' எனப்படும் என்பன போன்ற குறியீடுகள் விதிக்கப்படுகின்றன. மேலும் ஒவ்வொரு சொற்களுக்கும் ப்ரக்ருதி விக்ருதி என்பன போன்றவை கூறப்படுகின்றன.

இவற்றைத் தமிழில் பகுதி விகுதி எனக் கூறுகின்றனர். இலக்கணக்காரர்கள் இவை போன்றவற்றை அடிப்படைகளாகக் கொண்டு ராம: க்ருஷ்ண: ஹரி: என்பன போன்ற சொற்கள் தோற்றுவிக்கப்படுகின்றன என்றனர் 179

श्रुतिमञ्जुनादनिचयैरभिरामा सवलग्ननाभिजघनद्युतिहेतुः ।
विलसत्यनन्तसरसाक्षिधुगाय स्वदते मुकुन्ददयिते तव काञ्ची ॥ १८०

ச்ருதிமஞ்ஜுநாதநிசயைரபிராமா
ஸவலக்நநாபிஜகநத்யுதிஹேது: ।
விலஸத்யநந்தஸரஸாக்ஷிபுகாய
ஸ்வததே முகுந்ததயிதே தவ காஞ்சீ ॥ 180

ஹேம முக்தமணிரே - முத்துக்கள் மணிபோ
ச்ருதிமஞ்ஜு - செவிக்கினிய
நாதநிச்வை: - ஸங்கீத ஒலியால்
ச்ருதி - வேதத்தை
மஞ்சுநாதநிச்வை - அத்யயனம் செய்யும் ஒலியால்
அபிராமா - அழகியதும்
லக்ன - இடையுடன் இணைந்துள்ளகூடிய
நாபிஜக - நாபியினுடையவும் இடையின் முன்பகுதியுடையவும்
த்யுதி - ஒளிக்கு
ஹேது: - காரணமாயும்
ஹய - அச்வமேத யாகத்தில்
லக்ந - யஜமானனாக இருந்த
நாபிஜ - ப்ரம்மாவுக்கு
கநத்யுதி - திரண்ட மேகம் போன்ற
பகவானின் உற்பத்திக்கு
ஹேதூ - காரணமானதும்
விலஸந்தீ - ரத்னங்களால் ப்ரகாசிப்பதுமான
தவ காஞ்சீ - உனது ஒட்டியாணம் காஞ்சீ நகரம்
அநந்த - பகவானுடைய
ஸரஸ - அபிலாஷையுடன்
அக்ஷியுகாய - இரு கண்களுக்கும்
அநந்தஸரஸா - அநந்த ஸரஸ் என்ற புஷ்கரணியில்
விலஸந்தீ - ப்ரகாசிக்கிற
தவ காஞ்சீ - உனது காஞ்சீபுர நகரம்
ஸ்வததே - இனிமையாக விளங்குகிறது

மேகலையையும், காஞ்சி நகரத்தையும் சிலேடையில் ஒப்புமை படுத்திப் பேசுகிறார். மேகலை தனது சலங்கைகளின் மெல்லிய ஒலியால் அழகியதாக உள்ளது. காஞ்சிபுரத்தில் வாழும் அந்தணர்கள் வேதமோதிக் கொண்டிருக்கின்றனர். அதனால் நகரம் அழகாக உள்ளது. மேகலை இடுப்புக்கும் நாபியுடன் சேர்ந்த பகுதிக்கும் அழகைத் தருகிறது. அச்வமேதம் எனப் பெயர் கொண்ட யாகத்தை நான்முகன் காஞ்சிபுரத்தில் செய்தனன். அந்த யாகத்தில் நீருண்ட மேகம் போன்ற நிறமுடைய பகவான் அவதரித்தமையாகையால் அப்பகவானுக்கு காஞ்சீ நகரம் அழகைத் தருகிறது. மேகலையும் நகரமும் ரத்தினங்களால் ப்ரகாசிக்கின்றன. இத்தகைய உமது மேகலை விருப்பமுடைய பகவானின் கண்களுக்குப் ப்ரீதியைத் தருகிறது. அநந்த ஸரஸ் புஷ்கரிணியுடன் கூடியதாய காஞ்சீ அவரின் கண்களுக்கும் ப்ரியமாக இருக்கிறது

काञ्ची मुक्तिक्षेत्रमाहुर्जगत्या- मित्थं चित्रा तावकी देवि काञ्ची ।
अध्यायीणां योगिनां मुक्तिहेतो- श्चेतो यस्यां बध्यते तार्क्ष्यकेतोः ॥ १८१

காஞ்சீம் முக்திக்ஷேத்ரமாஹுர் ஜகத்யா-
மிந்தே சித்ரா தாவகீ தேவி காஞ்சீ ।
அப்யார்யாணாம் யோகிநாம் முக்திதோ யச்-
சேதோ யஸ்யாம் பத்யதே தார்க்ஷ்யகேதோ: ॥ (181)

தேவ தேவி - பகவான் மனைவியே
ஜகத்யாம் - உலகில்
காஞ்சீபுரம் - காஞ்சீ நகரத்தையே
முக்திக்ஷேத்ரம் - முக்திதரும் நகரமாக
ஆஹு: - சொல்கின்றனர்
தாவகீ - உனது
காஞ்சீ - மேகலை
சித்ரா - பல வர்ணங்களுடைய ரத்னங்களால் இழைக்கப்பட்டதாய், காஞ்சீ நகரத்திலும் வேறுபட்டதாய்
இந்தே - ப்ரகாசிக்கின்றது
ஆர்யாணாம் - ஆசார்யராக ஏற்றுக் கொள்ளத் தக்கவர்க்கும்
யோகிநாம் - பக்தியோகம் செய்பவர்களுக்கும்
முக்திதோ(அ)பி - மோக்ஷமளிப்பவரான
தார்க்ஷ்யகேதோ: - கருடனைக் கொடியாகக் கொண்ட பகவானுடைய
சேதோ - மனமும்
யஸ்யாம் - எந்தக் காஞ்சியில்
பத்யதே - கட்டுண்டுள்ளதோ

"அயோத்யா மதுரா மாயா காசீ காஞ்சீ ஹ்யவந்திகா । புரீ த்வாரவதீ சைவ ஸப்தைதா: முக்திதாயகா: ।" என்ற ச்லோகம் காஞ்சீ முக்தி தரும் ஏழு நகரங்களுள் ஒன்று என்கிறது. "முக்தி தரும் நகரேழில் முக்கியமாம் கச்சி" என்பது ஸ்வாமி தேசிகன் திருவாக்கு. இத்துணை சிறப்புடைய காஞ்சீ நகரத்திலும் விலக்ஷணமான தாம் தாயின் காஞ்சியாம் மேகலை, நவமணிகள் இழைக்கப்பட்டுள்ளதால் பல பல வர்ணங்களாய் ஒளிர்கிறது என்பது கருத்து. அனைவராலும் ஆசார்யனாக ஏற்கத் தக்க ஒழுக்கமுடையவரும், பக்தியோகம் செய்பவருமாகிய மஹான்களுக்கும் பரம மோக்ஷம் அளிக்கவல்லவனும் கருடக் கொடியுடையவனுமான நாராயணனின் மனமும் தாயின் காஞ்சியில் கட்டுண்டுள்ளதாம். ஸர்வரையும் ஸர்வவித பந்தங்களிலிருந்து விடுவிக்க வல்லவரான நாராயணன் மனதையும் கட்டுப்படுத்தும் வைலக்ஷண்யம் பெற்றமை காஞ்சீ நகரத்திலும் தாயின் காஞ்சிக்குள்ள சிறப்பு என்பது கருத்து.

लब्धवासमपि काञ्चि देवि स-
द्रत्नजातमभिजातदीप्तिकृत् ।
कंसहिंसनकटाक्षपात्रतां
विन्दतीति क इवात्र विस्मयः १८२

லப்தவாஸமதிகாஞ்சி தேவி ஸத்-
ரத்நஜாதமபிஜாததீப்திக்ருத் ।
கம்ஸஹிம்ஸநகடாக்ஷபாத்ரதாம்
விந்ததீதி க இவாத்ர விஸ்மய: ॥ 182

தேவி - தேவன் மனைவி!
அதிகாஞ்சி - மேகலையில், காஞ்சீ நகரத்தில்
லப்தவாஸம் - இழைக்கப்பட்டதும் இடமும் வாழ்வதும்
அபி - நான்கு புறமும்
ஜாத - பரவும்
தீப்திக்ருத்- ஒளியைச் செய்வதும்
அபிஜாத - உயர்ந்த குடிப்பிறப்பால்
தீப்திக்ருத் - ஒளியுடன் விளங்குபவருமான
ஸத் - ரத்ந - ஜாத - உயர்ந்த ரத்நங்களின் குவியல்
ஸத்ரத்ந - உயர்ந்த ஸத் புருஷர்களில்
ஜாதம் - ஸமூஹம்
கம்ஸஹிம்ஸந - கம்ஸனைக் கொன்ற பகவானுடைய
கடாக்ஷ - கடைக்கண் பார்வைக்கு
பாத்ரதாம் - இலக்கான தன்மையை
விந்ததி - அடைகின்றது
இஹ அத்ர - என்றும் விஷயத்தில்
க: விஸ்மய: - என்ன ஆச்சரியம்!

காஞ்சீ நகரத்தை காஞ்சி அணியோடு ஒப்பிட்டு சிலேடையில் பேசுகிறார். முக்திதரும் நகரமாகிய காஞ்சியிலே வாழ்பவரும் உயர் குடிப்பிறப்புடையவரும், குண ஒழுக்கங்களால் மிகவும் உயர்ந்தவருமான மஹான்களுக்கு மோக்ஷத்துக்கு மூல காரணமான பகவானின் கடாக்ஷம் கிட்டும் என்பதில் ஸந்தேஹம் ஏது? அதுபோல் நாற்புறமும் பரவும் ஒளியுடைய உயர்ந்த நவ ரத்நங்கள் இழைத்துச் செய்யப்பட்ட மேகலையை பகவான் பிரியாது கடைக்கண் பார்வையால் பார்க்கிறார் என்பதும் ஆச்சர்யமில்லை என்கிறார். 182

अल्पादल्पं त्वद्वलग्नं च लग्नं वासस्तस्मिन्दर्शितः शब्दतश्च ।
अम्ब क्षेदादम्बरं वीक्ष्य काञ्ची दंभाद्विद्युत्तत्र विद्योतते हि ॥

அல்பாதல்பம் த்வத்வலக்நம் ச லக்நம்,
வாஸஸ்தஸ்மிந் அர்த்ததஃ சப்ததஃ ச ।
அம்ப ஸ்நேஹாத் அம்பரம் வீக்ஷ்ய காஞ்சீ
தம்பாத்வித்யுத் தத்ர வித்யோததே கிம் ॥

ஹே அம்ப - தாயே!
வித்யுத் - மின்னல்கொடி
அல்பாதல்பம் - மிக நுண்ணிய
த்வத்வலக்நம் - உனது இடையும்
தஸ்மிந் - அவ்விடையில்
லக்நம் - உடுத்தியுள்ள
வாஸஃ - வஸ்த்ரத்தையும்
அர்த்ததஃ - மிக நுண்மையாக
இருப்பதாலும்
சப்ததஃ - அம்பர சப்தத்தால்
சொல்லப்படுவதாலும்
அம்பரம் - ஆகாசம் என
வீக்ஷ்ய - மருண்டு
ஸ்நேஹாத் - எப்போதும் உடன்
வாழ்வதால் உண்டான நட்பால்
காஞ்சீதம்பாத் - மேகலை என்ற
வ்யாஜத்தால்
தத்ர - வஸ்த்ரத்துடன் சேர்ந்த
இடையில்
வித்யோததே கிம் -
ப்ரகாசிக்கின்றதோ என்ன!

தாயின், மேகலை, மின்னல் போல் மிகவும் ப்ரகாசமாக இருக்கின்றதாம். ஆகாசத்தில் மின்னுவது, அது எப்படிப் பதுமையின் இடையில் வந்ததெனின் அம்மின்னல் இடையையும் அதில் அணிந்துள்ள வஸ்த்ரத்தையும் ஆகாசம் என மருண்டு விட்டதாம். அதனால் இடையில் மின்னுகின்றதாம். மருட்சிக்குத்தான் காரணம் யாதெனின் அதற்கு இரண்டு காரணங்கள் கூறுகின்றனர். அம்பரம் என்ற சொல்லுக்கு ஆகாசம், வஸ்த்ரம் என்ற இரண்டு பொருள்கள் உண்டு. இடை ஆகாசம். இருக்கிறதா இல்லையா என்ற ஸந்தேஹத்துக்கு இருப்பிடமாக உள்ளது. ஆகவே அம்பர சப்தத்தின் பொருளை - சூன்யம்என்பதை - அடிப்படையாகக் கொண்ட மருட்சியொன்று. ஆகாசம் என்பது யாது? கண்களுக்குப் புலப்படாத சூன்ய ப்ரதேசம் தானே! மற்றொன்று சொல்லை அடிப்படையாகக் கொண்டுள்ளதே. அம்பரம் என்றால் வஸ்த்ரம். தாய் அம்பரத்தை அணிந்துள்ளாள். அம்பரத்தில் ஆகாசத்தில் - வாழ்வது மின்னல். ஆக அம்பரத்துடன் நட்புண்டு மின்னலுக்கு. ஆகவே இடை கண்களுக்குப் புலப்படாது மிக நுண்ணியதாய் அம்பரமாக - ஆகாசமாக - இருப்பதாலும், அம்பரமும் - வஸ்த்ரம் - இருப்பதாலும் இதுதான் மருண்டு மின்னல் என்ற வ்யாஜத்தால் மேகலை ப்ரகாசிக்கின்றது என உத்ப்ரேக்ஷை செய்கிறார்

अम्बपदादणुतरस्तव मध्यादस्य रमे परमम्बरमेव ।
अस्य हि वैभवमस्तविवादं विप्रतिपन्नमनैन्द्रियकत्वम् ॥

அம்பபததணுதரஸ்தவ மத்யாதம்பரமே பரமம்பரமேவ ।
அஸ்ய ஹி வைபவமஸ்தவிவாதம் விப்ரதிபந்நமநைந்த்ரியகத்வம் ॥

ஹே அம்ப ரமே! - தாயான ரமாதேவி
அணுதர: - மிக நுண்ணியதும், பரமாணுவின் அளவினதும்
[illegible] அபதாத் - கண்களுக்குப் புலப்படாததுமான
மத்யாத் - இடையினும் (வயிற்றினும்)
அம்பரமேவ - ஆகாசமே
பரம் - உயர்ந்தது, மஹத்பரிமாண முள்ளது
ஹி - ஏனெனில்
அஸ்ய - ஆகாசத்தின்
வைபவம் - விபுத்வம், மஹத்பரிமாணமுடைமை
அஸ்த விவாதம் - அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது
அநைந்த்ரியகத்வம் - கண்களுக்குப் புலப்படாமை
விப்ரதிபந்நம் - எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படாதது

இனி பத்து ச்லோகங்களால் இடையை வர்ணிக்கிறார். தாயே உனது இடை மிகவும் நுண்ணியதாய், பரமாணுவைப் போல் புலப்படாததாய் உள்ளது. ஆகவே உமது இடையை விட ஆகாயமே உயர்ந்ததாம். ஏனெனில் ஆகாயம் உலகமெங்கும் பரந்துள்ளதால் விபுவாக ஆயிற்று. அதனால் அது மஹத்பரிமாணம் உடையதாயுள்ளது. இதை ஏற்காத நூலோர் எவருமிலர். ஆனால் கண்களுக்கு ஆகாயம் புலப்படாதது என்பர் தார்க்கிகர்கள். ஆனால் வேதாந்திகள் அது புலப்படும் என்பர். இப்படிப் புலப்படுதலில் விவாதமிருந்தாலும் அது விபு என்பதில் எவ்வித விவாதமும் எவர்க்குமில்லை. ஆகவே இடையினும் ஆகாயமே மஹத்தானதாம். ஆகாயத்திலும் உமது இடை நுண்ணியதென்றாயிற்று. 164

अणवप्यदस्तव वलग्नमिहाम्ब काञ्चीमप्यम्बरं स्तनभरं च बिभर्ति युक्तम् ।
आहुर्यतो द्व्यणुककारणमप्यणुं तमाधारमत्र कतिचिज्जगतोऽखिलस्य ॥

அணவப்யதஸ்தவ வலக்நமிஹாம்ப காஞ்சீ-
மப்யம்பரம் ஸ்தநபரம் ச பிபர்த்தி யுக்தம் ।
ஆஹுர்யதோ த்வ்யணுககாரணமப்யணும் தம்-
ஆதாரமத்ர கதிசிஜ்ஜகதோ(அ)கிலஸ்ய ॥

ஹே அம்ப - தாயே!
இஹ - இவ்வுலகில்
அத: - தற்போது பேசிக் கொண்டிருக்கும்
வலக்நம் - உமது இடை
அல்பமபி - மிக ஸூக்ஷ்மமாக இருந்த போதும்
காஞ்சீம் - காஞ்சி நகரத்தையும்
வரம் - உயர்ந்த
அம் - பகவானையும்
ஸ்தநபரம் - தநங்களின் சுமையையும்
பிபர்தீதி யத் - தாங்குகிறதென்பது
யுக்தம் - பொருத்தமுடைய
யதா - ஏனெனில்
க்ஷிதிஜ் - கௌதம மதத்தைச் சார்ந்தவர்
த்வ்யணுக கரணம் - த்வ்யணுகம் என்கிற வஸ்து தோன்று வதற்குக் காரணமாக
தம் அணும் - அவ்வணுவையே
அவிகலம் - அமைந்து
ஜகத: - உலகங்களுக்கும் ஆதாரம் - இருப்பிடமாக
ஆஹு: - சொல்கின்றனரோ

தாயே உமது சரீரத்தில் உள்ளதும், தற்போது பேசிக் கொண்டிருப்பதுமான இடை பரமாணுவைப் போல் மிகமிக நுண்ணியதாக இருந்தபோதும், காஞ்சீ நகரத்தையும் அனைவரிலும் உயர்ந்து பரமாத்மாவான நாராயணனையும், தநங்களின் சுமையையும் தாங்குகின்றது என்பதில் எவ்வித ஆச்சர்யமுமில்லை. இது மிகவும் தகுதியுடையதே.

ஸம்ஸ்க்ருதத்தில் "வபயோரபேத:" என ஒரு ந்யாயம் உண்டு. அதாவது எந்த சொல்லில் 'வ' என்ற எழுத்தோ 'ப' என்ற எழுத்தோ அமைந்துள்ளதோ அச்சொல்லுக்கு "வ" என்ற இடத்தில் "ப" என்ற எடுத்து இருந்தால் என்ன பொருள் சொல்லலாமோ அப்பொருளையும் சொல்லலாம் என்பது கருத்து.

இந்த ந்யாயத்தை அடிப்படையாகக் கொண்டே "காஞ்சீம் அபி அம்பரம்" என்ற இடத்திலுள்ள அம்பரம் என்ற சப்தத்தை அம்வரம் என்ற சொல்லாகக் கொண்டு மேழ பொருள் உரைக்கப்பட்டது இக்கருத்தை உறுதிப் படுத்துவதே பின்வடி. காஞ்சீம் மேகலையையும், அம்பரம் - வஸ்த்ரத்தையும் என்பது உண்மைப் பொருள்.

அணு போன்ற இடை இச்சுமைகளைத் தாங்குவது பொருத்தம் உடையதே என நூலோர் கொள்கையின் மூலம் விளக்குகின்றார்.

கௌதமர் என்பவரின் கொள்கைகளைப் பின்பற்றுபவர் நையாயிகர் என்பவர். அவர்கள் உலகம் அணுவிலிருந்தே உண்டாகிறது. பரமாணுவே உலகுக்கு முதல் காரணம். அணு என்பது கண்களுக்குப் புலப்படாத மிக நுண்ணிய பொருள். அதுவே பரமாணு எனவும் வழங்கப்படுகிறது. இரண்டு அணுக்கள் ஒன்றாகச் சேர்ந்து "த்வி

அணுகம்" தோன்றுகிறது. மூன்று அணுக்கள் ஒன்று சேர்ந்து "த்ரி அணுகம்" தோன்றுகிறது. இப்படிப்பல பல அணுக்கள் ஒன்று சேர்ந்து உலகம் தோன்றுகிறது.

ஆகவே உலகில் எந்தெந்த பொருள்கள் தோன்றியுள்ளனவோ அந்தந்த பொருள்களுக்கும் உபாதாந காரணம் - மூல காரணம் அணுவே. இவ்வுலகம் ஸமவாய ஸம்பந்தம் போன்ற ஸம்பந்தங்களால் அணுவில் இருக்கின்றது என்கின்றனர். ஆகவே அவர்கள் கொள்கைப்படி உலகம் முழுமைக்கும் இருப்பிடமாக அணு ஆகியபோது, இரண்டு மூன்று பொருள்களுக்கு மட்டும் ஆதாரமாகத் தாயின் இடை ஆகியதில் வியப்பில்லை என்கிறார்.

காஞ்சீ நகரத்தை இடை தாங்குவதாவது காஞ்சீ நகர மக்களின் யோக க்ஷேமம் தாயின் அதீநம் என்பதாம் 185

काञ्चीं दृष्ट्वा कमलनयने नेत्रमेकं भवत्या
दत्तं मध्यं प्रति तव पतिस्तत्र तु स्पर्धयेव ।
नेत्रद्वन्द्वं रुचिरमदिशत्तद्विचित्रं त्रिनेत्रो
जातोऽप्येष प्रथयति कथं संपदं शम्बरारेः ॥

காஞ்சீம் த்ருஷ்ட்வா கமலநயநே நேத்ரமேகம் பவத்யா
தத்தம் மத்யம் ப்ரதி தவ பதிஸ்தத்ர து ஸ்பர்தயேவ ।
நேத்ரத்வந்த்வம் ருசிரமதிஶத் தத் விசித்ரம் த்ரிநேத்ரோ
ஜாதோ(அ)ப்யேஷ ப்ரதயதி கதம் ஸம்பதம் ஶம்பராரே: ॥

ஹே கமலநயநே - தாமரையில் வசிப்பவளே
பவத்யா - உன்னால்
மத்யம் ப்ரதி - இடுப்பைக் குறித்து
காஞ்சீம் த்ருஷ்ட்வா - அவன் ஒட்டியாணத்தைப் பார்த்து
ஏகம் நேத்ரம் - உயர்ந்த வஸ்த்ரம்
தத்தம் - கொடுக்கப்பட்டது
தவ பதி: - உனது பத்தா
தத்ர - நீ இடுப்புக்குக் கொடுத்ததில்
ஸ்பர்தயேவ - பொறாமையால் போல்
ருசிரம் - அழகிய
நேத்ரத்வந்த்வம் - இரண்டு வஸ்த்ரங்களை
அதிஶத் - கொடுத்தான்
தத் - இரண்டு வஸ்த்ரங்களைப் பெற்றதால்
த்ரிநேத்ரோ ஜாதோபி - மூன்று ஆடையை உடையதாக ஆன போதும் (சிவனாக ஆன போதும்)
ஏஷ: - இவள் - இந்த இடை
ஶம்பராரே: - மன்மதனின்
ஸம்பதம் - ஸம்பத்தினை
கதம் - எப்படி
ப்ரதயதி - விருத்தி அடையச் செய்கிறது
விசித்ரம் - ஆச்சர்யம்

நேத்ரம் என்ற சொல்லுக்கு வஸ்த்ரம் என்ற பொருளைக் கூறி இருப்பது புதுமையானது. தாமரையில் வாழ்பவளே குடிப்பிறப்பு ஒழுக்கம் முதலியவற்றில் தாழ்ந்த ஒருவனை நீ கண்டாய். அவன் உடல் ஆடை, முதலியன, அவனது ஏழ்மையைப் புலப்படுத்தின. அதனால் மனமிரங்கிய நீ உயர்ந்ததொரு வஸ்த்ரத்தை அவனுக்கு அளித்தாய். கருணா கடாக்ஷத்தை அவன் மீது செலுத்தினாய் என்பது கருத்து. இதைக் கண்டான் உனது கணவன். அவனுக்கு ஒன்று கொடுத்தது எப்படிப் போதும்? என எண்ணியவனும் தான் இரண்டு வஸ்த்ரங்களை அவனுக்குக் கொடுத்தானாம். மத்யம் என்ற சொல்லுக்குத் தாழ்ந்தவன் எனப்பொருள் சொல்லப்பட்டது. மத்யம் என்பதற்கு இடை என்ற பொருளும் உண்டாகையால் இடையை இரண்டு கண்களால் கண்டான் பகவான் என்பது கருத்து. தாய் கொடுத்தது ஒன்று தந்தை கொடுத்தது இரண்டு என மூன்று வஸ்த்ரம் உடையவன் ஆயினன் மத்யன். த்ரிநேத்ர: என்பதற்கு மூன்று ஆடை உடையவன் எனப்பொருள் சொன்னோம். ஆனால் அச்சொல்லுக்கு மூன்று கண்களை உடையவன் என்ற பொருளும் உண்டாகையால் முக்கண்ணனான சிவனாயிற்று இடை என்பது கருத்து. சிவன் மன்மதனை எரித்தவன். அப்படியிருக்க இவ்விடை மட்டும் எப்படி மன்மதனது ஸம்ருத்தியை பகவானுக்கு வளர்க்கிறது.

நேத்ரம் என்பதற்கு வஸ்த்ரம் என்ற பொருள் உண்டு என்பதை "நேத்ரம் து ஸ்யாத் தரோ: மூலே வஸ்த்ரே த்ருஶி ।" என வைஜயந்தி என்கிற நிகண்டு கூறுகின்றது. வஸ்த்ரம் (நேத்ரம்) அணிந்துள்ள இடையை இரண்டு கண்களால் (நேத்ரங்களால்) அழகாகக் கண்ட பகவானுக்கு பிராட்டியின் மேல் ப்ரீதி வளர்கிறது என்று கருத்து. ஒருவிதத்தில் த்ரிநேத்ரம் இடை. சிவேனடயில் த்ரிநேத்ரன் - சிவன், மன்மதனை அழிப்பவன் எப்படி மன்மத வர்த்தனம் செய்கிறான் என்று சமத்காரத்தில் வியப்பு. 186

पयोजनाभप्रियपत्नि विष्णुपदारविन्दव्यपदेशमेव ।
निरीक्ष्य मध्ये निपुणेन तत्र नेत्रं मुदा त्वं निदधासि नूनम् ॥

பயோஜநாப ப்ரியபத்நி விஷ்ணு பதாரவிந்தவ்யபதேசமேவ ।
நிரீக்ஷ்ய மத்யம் நிபுணேந தத்ர நேத்ரம் முதா த்வம் நிததாஸி நூநம் ॥

பங்கோருஹாய - பத்மநாபனின்
ப்ரியபத்நீ - ப்ரிய மனைவியே
த்வம் - நீ
மத்யேபி - தாழ்ந்தவனிடமும்
விஷ்ணுபதாச்ரித - நாராயணன் அடியவன் என்கிற
வ்யபதேசலேசை - வழக்கையே
நிர்விச்ய - நீங்கிடு
முதா - ஸந்தோஷத்தாலே

நிர்பேதம் - தப்பாமல்
நேத்ரம் - கடைக்கண் பார்வையை
நிதநோஷி - வைக்கின்றாய்
நாதம் - இங்ஙனம் தாயே! நீ பகவானின் ப்ரியபத்நீ ஆகையால் அவன் திருவடித் தாமரை அடியவனை ஆதரிக்கின்றாய்
மத்யே - வழியில்
நேத்ரம் - வஸ்த்ரத்தை
நிதநோஷி - அலங்கரிக்கின்றாய்

ஒழுக்கம் முதலியவற்றில் தாழ்ந்தவனாயினும் அவன் பகவானின் தாஸன் என்பதால் அவனை நல்லவனாக்க வேண்டும் என்ற எண்ணத்தால் அவனை அநுக்ரஹிக்கின்றாய். உனது வயிறும் நாராயணனுடைய தாமரையில் அதனை வஸ்த்ரத்தால் அலங்கரிக்கின்றாய் அன்றி உன்னுடைய உடல் என்ற எண்ணத்தாலன்று. உத்ப்ரேக்ஷாலங்காரம் 187

नेत्रेण नीरनिधिपुत्रि नितान्तयोगान्मध्यं न चाक्षुषमिति क्षममेव मातः ।
आसन्नमपि नितरामतिदूरतेव प्रत्यक्षतां प्रतिरुणद्धि यथाञ्जनादौ ॥

நேத்ரேண நீரநிதிபுத்ரி நிதாந்தயோகாந்-
மத்யம் ந சாக்ஷுஷமிதி க்ஷமமேவ மாத: ।
ஆஸந்நமபி நிதராமதிதூரதேவ
ப்ரத்யக்ஷதாம் ப்ரதிருணத்தி யதாஞ்ஜநாதௌ ॥

நீரநிதி புத்ரி - பாற்கடல் புத்ரியான
மாத: - தாயே
தவ மத்யம் - உமது இடை
நேத்ரேண - கருவிழியுடன்
நிதாந்தயோகாத் - நெருங்கிய தொடர்பு உடைமையால்
ந சாக்ஷுஷமிதி - கண்களுக்குப் புலப்படுவதில்லை என்பது

க்ஷமமேவ - பொருத்தமுடையதே
அதிதூரதேவ - வெகுதூரத்தில் இருப்பதைப்போல
நிதராம் - மிகவும்
ஆஸந்நமபி - அருகிலிருப்பதும்
ப்ரத்யக்ஷதாம் - புலப்படுதலை
அஞ்ஜநாதௌ யதா - மை முதலியவற்றைப் போல
ப்ரதிருணத்தி - தடை செய்கிறது

க்ஷீராப்தி புத்ரியே! உமது இடை கருவிழியுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது. (நேத்ரேண - வஸ்த்ரத்துடன் தொடர்புடையதாக உள்ளது என்பது உண்மைப் பொருள்.)

ஆகவேதான். உமது இடை கண்களுக்குப் புலப்படுவதில்லை. வெகுதூரத்தில் இருப்பது கண்ணுக்குப் புலப்படாது என்பது யாவரும் அறிந்ததே. அதேபோல மிகமிக அருகிலிருப்பதும் புலப்படுவதில்லை. கண்களுக்கு மை தீட்டிக் கொள்கிறோம். அம்மை எவர் கண்ணுக்காவது புலப்படுவதுண்டா? புலப்படாமைக்குக் காரணம் கண்மணியுடன் அது நெருங்கியிருப்பதே. அதேபோல் இடையும் நேத்ரத்தோடு நெருங்கிய தொடர்பு உடையதாக இருப்பதால் கண்களுக்குப் புலப்படவில்லை என்பது பொருத்தம் உடையதுதானே! நேத்ரம் என்பதற்கு வஸ்த்ரம் என்பது பொருள். வஸ்த்ரத்தால் சூழப்பட்டது புலப்படாததன்றோ

अत्यल्पभावात्तव देवि मध्यो
हरेः कटाक्षाविषयो यतोऽभूत् ।
अतुल्यकल्याणगुणाश्रयस्या-
प्यजस्रबन्धोऽस्य किलानुरूपः ॥

அத்யல்பபாவாத்தவ தேவி மத்யோ
ஹரே: கடாக்ஷாவிஷயோ யதோ(அ)பூத் ।
அதுல்யகல்யாண குணாச்ரயஸ்யா-
ப்யஜஸ்ரபந்தோ(அ)ஸ்ய கிலாநுரூப: ॥

ஹே தேவி!
தவ மத்ய: - உமது இடை
அத்யல்பபாவாத் - மிக நுண்ணியதாயுள்ளதால்
ஹரே: கடாக்ஷ விஷய: - பந்தம் அறுவதற்குக் காரணமான பகவானின் கடாக்ஷத்துக்கு இலக்கு ஆகாததாக
யத: அபூத் - ஆனதாயிற்றோ
அத: - ஆகையால்
அதுல்ய - ஒப்பற்ற
கல்யாணகுண - உயர்ந்த குணங்களுக்கு
ஆச்ரயஸ்யாபி - இருப்பிடமாக இருந்தபோதும்
அஸ்ய - இவ்விடைக்கு
அஜஸ்ரபந்த: - நீண்டநாள் ஸம்ஸாரம் தொடர்வது
அநுரூப: - தகுதியுடையதே

தேவி! உமது இடை மிகவும் அல்பமாக இருப்பதால் ஸம்ஸார பந்தம் கழிவதற்குக் காரணமான பகவானின் கடாக்ஷத்தைப் பெறத்தகுதி அற்றதாக ஆகிவிட்டது. எனவே ஒப்பற்ற மங்களமான உயர்ந்த குணங்களுக்கு இருப்பிடமாக இருந்தபோதும் இவ்விடைக்கு ஸம்ஸாரம் தொடர்வது தகுதியுடையதே. முக்திக்குக் காரணமான பகவானின் கருணா கடாக்ஷத்துக்கு இலக்காகாதவனுக்கு ஏனைய சிறப்புகள் இருந்தும் ஸம்ஸாரம் தொடரத்தான் செய்யும்.

தேவியின் இடை மிக நுண்ணியதாக இருக்கிறதென்பதும் ஒப்பற்ற கல்யாண குணத்தோடு - தங்க வஸ்த்ரத்தோடு - மேகலையோடு சேர்ந்துள்ளது என்பதும், எப்போதும் வஸ்த்ரத்தால் சூழப்பட்டு உள்ளது என்பதும் உண்மைப் பொருள்களாம் 189

सुरशनश्रीप्रपणे निदानमुपेन्द्रसंतोषकृदब्धिकन्ये ।
वलग्नमेतत् रुचिरोरुरम्भाविलग्ननेत्रं कलये बलघ्नम् ॥

ஸுராஶநஶ்ரீப்ரபதே நிதாநம் உபேந்த்ரஸந்தோஷக்ருதப்திகந்யே ।
வலக்நமேதத்ருசிரோருரம்பாவிலக்ந நேத்ரம் கலயே பலக்நம் ॥

ஹே அப்திகந்யே - பாற்கடல் புத்ரீ
ஸு - மிகுதியாக
ராஸநஶ்ரீ - மேகலையின் அழகை
ப்ரபதே - மிகுவிப்பதில்
நிதாநம் - காரணமானதும்
ஸுர - தேவரின்
அஶந - ஆஹாரமான அம்ருதத்தை
ப்ரபதே - தோற்றுவிப்பதில்
நிதாநம் - காரணமானவனும்
உபேந்த்ர - பகவானுக்கு - தமது தம்பிக்கு
ஸந்தோஷக்ருத் - ஸந்தோஷத்தைச் செய்வதும், அதைச் செய்பவனும்
ருசிர - அழகிய
ஊருரம்பா - வாழைமரம் போன்ற துடையில்
விலக்ந - நிறப்பாக ஈடுபட்ட
நேத்ரம் - வஸ்த்ரத்தை உடையதுமான
ருசிரோரு - அழகிய துடையை உடைய
ரம்பா - ரம்பை என்ற அப்ஸரஸிடம்
விலக்ந - விசேஷமாகப் பதிந்துள்ள
நேத்ரம் - கண்களை உடையவனுமான
வலக்நம் - இடையை
பலக்நம் - இந்திரனாக
கலயே - எண்ணுகிறேன்

கடல்கன்னியின் இடுப்பை இந்திரனாகக் கற்பனை செய்கிறேன் என்கின்றார். இக்கருத்தை சிலேடையில் கூறுகிறார். ஸுராஶந ஶ்ரீப்ரபதே நிதாநம், உபேந்த்ர ஸந்தோஷக்ருத் - ருசிரோரு ரம்பா விலக்நம் என்ற மூன்று தொடர்களில் இக்கருத்தை சிலேடையில் அமைத்துள்ளார். கருத்துக்கு ஏற்ப பதத்தைப் பிரித்துக் கொள்ள வேண்டும். பெண்கள் தமது இடுப்பை அலங்கரிக்க மேகலையை அணிவர் உலகில். ஆனால் கடற்கன்னியின் இடையை அடைந்து மேகலை அழகு பெற்றதாம். இந்திரன் தேவர் உணவான அமிழ்தம் உண்டாவதற்குக் காரணமாக இருந்தவன்.

நாராயணனுக்கு இடை வஜ்ரோபமைப்பதாக உள்ளது. உபேந்த்ரனாக - தமக்குத் தம்பி யாக அவதரித்த நாராயணனுக்கு மகிழ்ச்சித் தருகிறான் இந்திரன். இந்திரனின் துன்பத்தைத் துடைப்பதற்காகப் பாற்கடல் கடையப்பட்டது. கடையும் போது அம்ருதமும் லக்ஷ்மியும் தோன்றினர். இவ்விருவர் தோற்றத்துக்கு இந்திரன் காரணமானதாலும் லக்ஷ்மீ தோன்றியவுடன் நாராயணனை அடைந்தவளானதாலும் இந்திரன் தன் தம்பியான நாராயணனுக்கு மகிழ்ச்சியை உண்டு பண்ணியவன் ஆகினான். நாராயணன் இந்திரனுக்குத் தம்பியாக - உபேந்திரனாக ஆகினான். நாராயணன் இந்திரனுக்குத் தம்பியாக - உபேந்திரனாக அவதரித்தான். ரம்பா என்ற தேவமாதின் துடையில் பதிந்த கண்களை உடையவன் இந்திரன். வாழைமரம் போன்ற அழகிய துடையில் பதிந்துள்ள வஜ்ரத்தை உடையதாக இருக்கிறது இடுப்பு. இக்காரணங்களால் சொல் ஒப்புமையை அடிப்படையாகக் கொண்டு இடையை இந்திரனாக எண்ணுகிறேன் என்கிறார்.

கீழ்க்கூறிய காரணங்களால் वलग्नं என்றுதான் இடையைச் சொல்லவேண்டும் वलग्नं எனச் சொல்லுவது கவனம் இன்மையால் வந்த குற்றம் என்பது கருத்து 190

SRI RANGANATHA PADUKA SUBSCRIPTION RATES	
Annual Subscription :	Life Membership Subscription
Rs 50/- :	Rs. 500/-

Overseas Subscribers are requested to make an additional payment Rs. 240/- Annually towards Airmail cost

Please renew your Subscription from April 99

Please send your Subscription to : SRI RANGANATHA PADUKA

No. 21, Desikachari Road, Mylapore, Chennai - 600 004, India

परमाणुषु मातरादिमं यदिदं कोशकृदाह मध्यमम्।
अमरः किल पामरस्ततः स बभूव स्वयमेव मध्यमः ॥ १९१

பரமாணுஷு மாதராதிமம் யதிதம் கோசக்ருதாஹ மத்யமம்।
அமர: கில பாமரஸ்தத: ஸ பபூவ ஸ்வயமேவ மத்யம: ॥ 191

ஹே மாத: - தாயே!
பரமாணுஷு - பரமாணுவிலும்
ஆதிமம் - நுண்ணியதான, முதலில் "ம" என்ற எழுத்தை உடையதான
இதம் - இவ்விடையை
கோசக்ருத் - அமரஸிம்ஹன்
மத்யமம் - மத்யம் என்ற சொல்லால் சொல்லத்தக்கதாக
ஆஹ - சொன்னான்
தத: - அப்படிச் சொல்லியதால்
பாமர: - நிறைந்த அறிவில்லாத
ஸ: - அவ்வமரகவி
ஸ்வயமேவ - தானும்
மத்யம: - இடைப்பட்ட கவியாக தமது பெயரினிடையில் ம என்கிற எழுத்தை உடையவனாக
பபூவ - ஆயினான்

தார்க்கிகர்கள் பரமாணுதான் உலகுக்கு மூலகாரணம். அது மிக நுண்ணியது. கண்ணுக்குப் புலப்படாதது என்பர். இப்படி உலகுக்கே மூல காரணமான பரமாணுவிலும் நுண்ணியதாம் தாயின் இடை! நாமலிங்காநுசாஸநம் என்கிற நிகண்டுவை இயற்றியவன் அமரன் என்கிற கவி. இந்நூலை அவன் பெயரை இட்டு அமரம் என்றே உலகில் வழங்குகின்றனர். அவன் தானும் அவன் அந்நூலில் இடையைச் சொல்லும் சொற்களை எல்லாம் ஒன்றாகச் சேர்த்துக் கூறும் போதும் மத்யமம் என்ற சொல்லையும் சேர்த்து "மத்யமம் சாவலக்நம்" எனப் படித்துள்ளான்.

மத்யமம் என்ற சொல்லுக்கு இடுப்பு என்று பொருள் அதோடு மத்யத்திலே - நடுவிலே ம- மகாரத்தை உடையது என்ற பொருளும் கிடைக்கும். மத்யமம் என்ற சொல்லின் நடுவில் ம என்ற எழுத்து இருப்பதால் இடையிலே மவை உடையது என்ற வேறு பொருள் தொனிப் பொருளாகத் தோன்றுகிறது. இப்படிச் சொல்லியதால் அமரன் நிறைந்த அறிவற்றவனுமினன். ஏனெனில் மத்யமம் என்பதற்கு உயர்ந்ததும் தாழ்ந்தது மல்லாது இடைப்பட்டது என்ற பொருளும் உண்டு. தாயின் இடையை இப்படி அளவிலும் சிறியது எனச் சொல்லிவிட்டு அதற்கு மத்யமம் என்ற பெயர் உண்டு என்றால் அது எப்படி இடைப்பட்டதாகும்? அதுதான்

நுண்ணியதாயிற்றே. இடையை இப்படி மத்யமம் எனச் சொன்னதால் அக்கவிதான் மத்யமன் ஆயினன். உயர்ந்த கவி அல்லாதவனாயினன். தன் பெயரில் இடையே மகாரத்தை உடையவன் என்பது பொருள். உயர்ந்த இடையைத் தாழ்ந்ததாகச் சொல்லியதால் உண்டான பாபத்தால் உயர்ந்த ஜாதியில்லாத ஜைநஜாதியை அடைந்தான் என்பது கருத்து.

अधिकाञ्चितयाभिवृद्धिमत्याप्यभिजातश्रुतिमञ्जुशब्दपङ्क्त्या ।
अतिभङ्गुर एव शून्यवादं न जहौ माध्यमिकक्रमस्त्वदीयः ॥ १९२

அதிகாஞ்சிதயாபிவ்ருத்திமத்யா-
ப்யபிஜாதஶ்ருதிமஞ்ஜுஶப்தபங்க்த்யா।
அதிபங்குர ஏவ ஶூந்யவாதம்
ந ஜஹௌ மாத்யமிகக்ரமஸ் த்வதீய: ॥ 192

ஶ்ரீ: - லக்ஷ்மீ
தவ - உனது
அதிகாஞ்சி - மேகலையில்
அபிவ்ருத்திமத்யா - எப்போதும் ஒலிப்பனவும்
மஞ்ஜுமதுர - செவிக்கு இனியவையுமான
ஶப்த பங்க்த்யா - ஒலி அலைகளால்
த்வதீய: - உனது
மாத்யமிகக்ரம: - இடையின் ஸ்வபாவம்
அதிபங்குர: - மிகவும் வளைந்ததாய்
ஶூந்யவாதம் - இல்லை என்று சொல்லும் தகுதி உடைமையை
ந ஜஹௌ - விடவில்லை

லக்ஷ்மீ தமது இடையில் அணிந்த மேகலையிலிருந்து செவிக்கினியனவும் மனதுக்கு மகிழ்ச்சி தருவனவுமான ஒலிகள் எப்போதும் எழுந்து கொண்டே இருக்கின்றன. மேலும் அதன் மேற்புறத்தே உள்ள ஸ்தநங்களின் கனமதைத் தாளாது வளைந்துள்ளது அது. இத்தகைய இடை அதன் தன்மையாகிய இல்லை என்ற சொல்லால் - சூந்யம் என்ற சொல்லால் - சொல்லத்தக்க தகுதியை விடவில்லை மிக நுண்ணியதாக உள்ளமையால் இடையே இல்லை எனச் சொல்லும் தன்மையையே அடைந்தது என்பது கருத்து.

இன்னுமோர் பொருள்.

அதிகாஞ்சி - காஞ்சி நகரத்தில்
தயா - மிக உயர்ந்த நிலையில்
அபிவ்ருத்திமத்யா - மேன்மேலும் உயர்வை அடைந்துள்ள
அபிஜாத - ஸ்ரீ பாஷ்யகாரர், தேசிகன் போன்ற பூர்வாசார்யர்களுடைய

ஸ்ருதிமர்ம - வேதத்தோடொத்த கருத்துடைய
ஸப்தபங்க்யா - பல நூல்களால்
மாத்யமிக க்ரம: - பௌத்தர்களின் ஸம்ப்ரதாயம்
அதி பங்குர ஏவ - இல்லையாக்கப்பட்டதாய்
சூந்யவாதம் - தமது கொள்கையாகிய சூந்யவாதத்தை
ஜஹௌ ந - விடவில்லை.

காஞ்சீபுரத்தில் சொல்லுக் கடங்காத உயர்வைப் பெற்ற ஸ்ரீ பாஷ்யம், ஸ்ருத ப்ரகாசிகை, தத்வ முக்தாகலாபம் போன்ற மேன்மேலும் கருத்துச் செறிவு பெற்ற நூல்களை இயற்றியதால் ஓங்கி உயர்ந்தவர்களான ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் போன்றவர்களின் வேதத்தோடொத்த கருத்துக்களைத் தெளிவாக விளக்கும் "ஸர்வதா அநுபபத்தேச்ச" என்ற ப்ரஹ்ம ஸூத்ரம் போன்றவற்றின் விரிவுரைகளால் பௌத்தர்களின் கொள்கை அழிக்கப்பட்டது. கண்ணுக்குப் புலப்படாத ஜ்ஞாநம் போன்றவைகளும் புலப்படுவனவான அனைத்துப் பொருள்களும் உண்மையில் இல்லாதனவே. சூன்யம்தான் தத்வம். அபாவாபத்திதான் மோக்ஷம் என்பன போன்றவை அவர்கள் கொள்கை. இக்கொள்கை சூந்யமாக ஆக்கப்பட்டது. இப்படி சூந்யமாக ஆக்கப்பட்ட போதும் தம் கொள்கையான சூந்யவாதத்தை விடவில்லை என்பது விரோதாபாஸம். மாத்யமிகர் மதம் சூன்யமாக்கப்பட்டது என்ற ப்ரஸித்தியை அடைந்தது என்பது உண்மையான கருத்தால் விரோதபரிஹாரம்

जननि स्मृतिजन्ममूलभूतं तनु मध्यं तव सन्ततानुमेयम् ।
तदिहोपनतं पुरस्तनाली कृतसद्गौरवदर्शनानुरोधात् ॥

ஜநநி ஸ்ம்ருதிஜந்மமூலபூதம்
தநு மத்யம் தவ ஸந்ததாநுமேயம் ।
ததிஹோபநதம் புரஸ்தநாலீ-
க்ருதஸத்கௌரவதர்சநாநுரோதாத் ॥ 193

ஹே ஜநநி - தாயே
தவ - உமது
தநு மத்யம் - மெல்லிய இடைப்பகுதி
ஸ்ம்ருதிஜந்ம - மன்மதக்கிளர்ச்சிக்கு
மூலபூதம் - காரணமாயும்
ஸந்ததாநுமேயம் - எப்போதும் அநுமானிக்கத்தக்கதாயும்
பவதி - ஆகின்றது
தத் - அவ்விடை
புர: - மேல்பகுதியில்

ஸ்தநதௌர்லப்யங்களால்
அங்கீக்ருத - ஏற்றுக் கொள்ளப்பட்ட
ஸ்தநகௌரவதர்க்க - பருமனான காட்சியின்
அநுரோதாத் - ஆக்ரமிப்பால்
இஹ - இவ்வுடலில்
உபத்தம் வலதி - வணக்கம் உண்டாகியுள்ளது

தாயின் இடை கண்களுக்குப் புலப்படாததால் இல்லை என்றே சொல்லலாம் போலுள்ளது. ஆனால் உடல் செல்லும் போது மேல் பகுதியும் கீழ்ப் பகுதியும் இணைந்தே செல்வதால் இவ்விரண்டையும் சார்ந்துள்ள ஓர் பகுதி இருக்க வேண்டுமென அநுமாநம் செய்ய வேண்டியுள்ளது. இவ்விடம் பகவானுக்கு மன்மதக் கிளர்ச்சியைத் தூண்டுவதாக உள்ளது. மேலும் இவ்விடை அதன் மேல் பகுதியிலுள்ள பருத்தத் தநங்களின் கனமையைத் தாளவியலாததாய் சிறிதே வளைந்துள்ளது. மிகப்பெரிய மலையைக் கண்ட கண்களுக்கு அதனருகிலுள்ள சிறிய கற்கள் புலப்படாதது போல் பெரிய கொங்கைகளைக் கண்ட கண்களுக்கு அதன் அருகிலுள்ள வயிறு புலப்படவில்லை என்பது கருத்து.

न परं तव रम्यसीधुमित्रं वचनं पञ्चमभूतमब्धिकन्ये ।
अपि तु स्फुटमेखलाकलाप प्रसरच्छब्दगुणोज्ज्वलं वलग्नम् ॥ १९४

ந பரம் தவ ரம்யஸீதுமித்ரம்
வசநம் பஞ்சமபூதமப்திகந்யே।
அபி து ஸ்புடமேகலாகலாப-
ப்ரஸரச்சப்த குணோஜ்ஜ்வலம் வலக்நம்॥ 194

ஹே அப்திகந்யே - க்ஷீராப்தி புத்ரி
ரம்ய - இனியதாயும்
ஸீது - கண்டக் காய்ச்சப்பட்டதுமான கரும்பின் சாறுடன்
மித்ரம் - தோழமை கொண்டதுமான
தவ - உமது
வசநம் பரம் - பேச்சு மட்டும்
ந பஞ்சமபூதம் - பஞ்சமம் என்ற ஸ்வரம் போன்றதாக இல்லை
அபி து - [illegible]
ஸ்புட - ப்ரகாசமான
மேகலாகலாப - மேகலை என்ற அணிகலிலிருந்து
ப்ரஸரத் - பரவுதான
சப்தகுண - சப்தம் என்ற விசேஷ குணத்தால்
உஜ்ஜ்வலம் - மிக்கு விளங்குவதான
வலக்நம் - வயிறும்
பஞ்சமபூதம் - ஆகாசம் போலுள்ளது

லக்ஷ்மியின் பேச்சுக்கள் மிகவும் இனியவையாம். நன்கு பதத்தில் காய்ச்சிய கரும்பின் சாறு போல் இனிக்குமாம். நிஷாதம், ரிஷபம், காந்தாரம், ஷட்ஜம், மத்யமம், தைவதம், பஞ்சமம் என்ற ஏழு ஸ்வரங்களில் மிக உயர்ந்ததும், குயிலின் குரல் போன்றதுமான பஞ்சமம் போன்றதாம் அது. பஞ்ச மஹாபூதங்களுள் ஐந்தாவது ஆகாசம். ஆகவே பஞ்சமம் என்ற சொல்லுக்கு ஆகாசம் என்ற பொருளும் உண்டு. இவ்வாகாசத்துக்கு இலக்கணம் கூறும்போது சப்தகுணகம் ஆகாசம் என்றனர் தார்க்கிகர். ஆகாசம் என்ற த்ரவ்யம் இருக்கிறது என எப்படிக் கூற முடியும்? அதுதான் புலப்படவில்லையே என்ற ப்ரச்னை எழுமேல், அனைத்து ஒலிகளும் ஆகாசத்தின் வழியாகத் தான் எங்கும் பரவுவதால் அச்சப்தம் என்ற விசேஷ குணத்துக்கு அது ஆதாரமாக இருப்பதால் ஆகாயம் உண்டு எனத் தேறுகிறது என்பர் தார்க்கிகர். ஸ்ரீயின் வயிற்றில் அணிந்துள்ள மேகலையிலிருந்து எழும் சலங்கைகளின் ஒலியால் வயிறும் ஒலியைப் பெற்றிருப்பதால் அதுவும் ஆகாசமாயிற்று. அதாவது ஆகாசம் போல் கண்களுக்குப் புலப்படாததால் மிகவும் நுண்ணியதாயிற்று என்பதே கருத்து. இதையே உன் வசதம் மட்டும் பஞ்சமமன்று வயிறும் பஞ்சமமே என்றார்.

प्रबुद्धदीप्तौ प्रबलागमं ते हसत्यशेषांश्च गुरौ नितम्बे।
अन्ते वसंस्तस्य तु मध्यमोऽयं स्थाने समातिष्ठत शून्यवादम्॥ ॥ १९५

ப்ரபுத்ததீப்தௌ ப்ரபலாகமம் தே
ஹஸத்யசேஷாம்ச குரௌ நிதம்பே।
அந்தே வஸம்ஸ்தஸ்ய து மத்யமோ(அ)யம்
ஸ்தாநே ஸமாதிஷ்டத சூன்யவாதம்॥ 195

தேஜ அபேக்ஷயா॥ - உலகங்களின் த[illegible]வ
ப்ரபுத்ததீப்தௌ - மிக்க காந்தியுள்ளதும்
குரௌ - மிகப் பருத்ததுமான
நிதம்பே - இடையின் பின்புறம்
ப்ரபல - மிகப்பெரியவையான
அகம் - பெருமரத்தையும் போன்ற மலைகளை
ஹஸதி யதி - பரிஹாஸம் செய்யும் போது
தஸ்ய - அவ்விடைப் பின்புறத்தின்
அந்தே வஸத் - அருகிலேயே வாழ்வதான
அயம் மத்யம: - இவ்விடை
சூன்யவாதம் - இல்லை எனச் சொல்வதற்குரிய தன்மையை
ஸமாதிஷ்டத - அடைந்ததென்பது
ஸ்தாநே - தகுதியுடையதே

மூவுலக மக்களின் தாயே உனது ப்ருஷ்டபாகம் - இடையின் பின்புறம் - மிகவும் ப்ரகாசமாக இருப்பதோடு பருத்தும் இருக்கிறது. மிகுந்த செல்வமுடைமை போன்ற ப்ரஸித்தி பெற்ற மேருமலை மந்த்தர மலை போன்றவற்றைப் ப்ரயோஜந மற்றதாக ஆக்கி விடுகின்றது. மேருவின் மேல் தேவர் வாழ்கின்றனர் என்பதும், அங்குக் குறைவற்ற பல்வகைச் செல்வங்களும் உள என்பதும் ப்ரஸித்தம். அதையும் திரஸ்காரம் செய்கிறதா பின்புறம். இப்படி இது செய்து கொண்டு இருக்கும் போது அதன் அருகிலேயே உன் வயிறு மிக நுண்ணியதாய் இல்லை எனச் சொல்லலாம் போல் இருப்பது தகுதியுடைத்தே. ஏனெனில் மிகப்பெரிய ஒன்றின் அருகில் இருக்கும் மிகச்சிறிய பொருள் கண்ணுக்குப் புலப்படாததன்றோ. ஆகவே தகுதியுடையது என்றார்.

வேறு பொருள்

ஹே அம்ப - தாயே
ப்ர - உயர்ந்த
புத்த - புத்தர்
தீப்தேன - அறிவு போன்ற அறிவு பெற்ற
குசேரன - ஒரு ஆசார்யன்
ப்ரபுல - ப்ரமாணமெனவும் உயர்ந்த
ஆகமம் - வேதத்தை
நாஸயதி யதி - நாசிக்கும் போது
தஸ்ய அந்திக வர்த்தி - அவ்வாசார்யனின் சீடன்
மத்யமா - தானும் பௌத்த மதத்தைச் சார்ந்தவனாய்
சூந்யவாதம் - சூந்யம்தான் தத்வம் என்பதை
பயோதிஷ்டத - ப்ரகாசப்படுத்தினான் என்பது
ஸ்தானே - பொருத்தமுடையது

புத்த மதத்தைப் பின்பற்றுபவர் வேதத்தை ப்ரமாணமாக ஏற்றுக் கொள்ளார். அது ஒரு தூர்த்தனின் உளரல் என்பன போன்றவாறெல்லாம் தூஷிப்பர். சூன்யம்தான் தத்வம் என்பது அவர் கொள்கை. இவர்களுள் மாத்யமிகன் என்பவனும் ஒருவன். புத்தரோடொத்த அறிவு பெற்ற ஆசார்யர் ஒருவர் வேதத்தை தூஷித்து சூன்ய வாதத்தைப் ப்ரசாரம் செய்து கொண்டிருந்த போது வேறு ஒருவன் தானும் மாத்யாத்மிக மதத்தைப் பின்பற்றி சூன்யவாதத்தை பரப்பினான். இதுவும் தகுதியுடையதே. சீடன் ஆசிரியனைப் பின்பற்றுவதுதானே நியாயம்.

मकरध्वजराजभद्रपीठं पुलिनं भूषणकान्तिरत्नसिन्धोः ।
जलजायतने पृथु त्वदीयं जघनं यौवनहस्तिमस्तकं वा ॥ १९६ ॥

மகரத்வஜராஜபத்ரபீடம் புலிநம் பூஷணகாந்திரத்நஸிந்தோ: ।
ஜலஜாயதநே ப்ருது த்வதீயம் ஜகநம் யௌவநஹஸ்திமஸ்தகம் வா ॥ 196 ॥

ஹே ஜலஜாயதநே - தாமரையில் வசிப்பவளே
த்வதீயம் - உனது
ஜகநம் - இடையின் முன்புறம்
மகரத்வஜராஜ - மன்மதராஜனுடைய
பத்ரபீடம் வா - சிம்மாஸனமோ?
பூஷணரத்ந - ஆபரணங்களிலுள்ள ரத்நங்களிலிருந்து எழும்
காந்தி - ஸிந்தோ: - ஒளிகளாகிய நதியின்
புலிநம் வா - மணல் திட்டோ?
யௌவநஹஸ்தி - யௌவனப் பருவமாகிய யானையின்
மஸ்தகம் வா - கும்பம் போன்ற தலையோ?

மன்மதக் கிளர்ச்சியை ஊட்டுவதாக உள்ளது என்பதும், ரத்நங்களின் ஒளி பரவும் இடத்தில் இருக்கிறதென்பதுவும், யௌவனப் பருவத்துக்கு அலங்காரமாக இருக்கிறது தாயின் இடையின் முன்புறம் என்பதும் கருத்து. 196

कामाङ्कुशेन कलितक्षतमच्युतेन पाथोधिपुत्रि पृथुलं जघनं भवत्याः ।
हस्तीन्द्रमस्तकमपूर्वमिदं यदस्य हस्तावुभौ लसत ऊरुमिषादधस्तात् ॥ १९७ ॥

காமாங்குசேந கலிதக்ஷதமச்யுதேந
பாதோதிபுத்ரி ப்ருதுலம் ஜகநம் பவத்யா: ।
ஹஸ்தீந்த்ரமஸ்தகமபூர்வமிதம் யதஸ்ய
ஹஸ்தாவுபௌ லஸத ஊருமிஷாததஸ்தாத் ॥ 197 ॥

அச்யுதேந - பகவானாலே
காமாங்குசேந - நகங்களால்
அச்யுதேந - எப்போதும் காதின் அடிப்பகுதியிலேயே இருப்பதான
அங்குசேந - அங்குசம் என்ற யானை அடக்கியால்
கலித - உண்டாக்கப்பட்ட
க்ஷதம் - ரேகையை உடையதுமான, புண்ணை உடையதுமான
ப்ருதுலம் ஜகநம் - முன்புறம்
அபூர்வம் - வேறுபாடுடைய
ஹஸ்தீந்த்ர - யானையின்
மஸ்தகம் - மஸ்தகமாக
லஸதி - இருக்கிறது
யத் - ஏனெனில்
அஸ்ய - இம்மஸ்தகத்தின்
அதஸ்தாத் - கீழ்ப்பகுதியிலிருந்து
உபௌ - இரண்டு
ஹஸ்தௌ - துதிக்கைகள்
ஊருமிஷாத் - தொடை என்ற வியாஜத்தால்
லஸத: - ப்ரகாசிக்கின்றனவோ.

இடையின் முன்புறம் யானைத்தலை போலுள்ளதென சிலேடையில் வர்ணிக்கிறார். யானைக் காதின் அடிப்பக்கத்தில் எப்போதும் அங்குசம் என்ற யானையை அடக்கும் கருவியைத் தொங்கவிட்டிருப்பர். அவ்வங்குசத்தால் யானையின் தலை குத்தப்பட்டுப் புண்பட்டிருக்கும். பகவானின் கைவிரல் நகங்களால் இடைமுன்பகுதி கீறல் பெற்றிருக்கும். உமது இம்முன்புறம் உவமையில் காணும் யானையின் மத்தகத்திலும் வேறுபட்டதாக உள்ளது. ஏனெனின் யானையின் மத்தகத்திலிருந்து ஒரே கைதான். தொங்கும். இம்மத்தகத்தினின்றும் துடை என்ற மறு பெயராலே இரண்டு கைகள் தொங்குகின்றன. ஆகவே வேறுபாடுடையதாயிற்று "காமாங்குசா: கரருஹா:" என்ற நிகண்டு காமாங்குசம் என்ற சொல் நகம் என்ற பொருள் உடையது என்கிறது 197

प्रकाशयत् पद्मगृहे मदावहा: हरेरनेकाकृतिनेत्रसंपद: ।
शुभोरुरंभाद्वयशोभितं दिवं, जयत्युदारं जघनस्थलं तव ॥

ப்ரகாசயத் பத்மக்ருஹே மதாவஹா:
ஹரேரநேகாக்ருதி நேத்ர ஸம்பத: ।
சுபோருரம்பாத்வய சோபிதம் திவம்
ஜயத்யுதாரம் ஜகநஸ்தலம் தவ ॥

ஹே பத்மக்ருஹே - தாமரையில் வாழ்பவளே!
ஹரே: - பகவானுக்கு
மதாவஹா: - சந்தோஷத்தை உண்டு பண்ணுவதாய்
அநேகாக்ருதி - பல்வகைக்கான
நேத்ர ஸம்பத: - வஸ்த்ரங்களின் விருத்தியால்
ப்ரகாசயத் - பல்வகைகளாய் ப்ரகாசிக்கின்றதாயும்
சுப - அழகிய
ஊருரம்பாத்வய - வாழை மரம் போன்ற இரண்டு துடைகளால்
சோபிதம் - அழகுபடுத்தப்பட்டதாயும்
உதாரம் - பருத்துமுள்ள
தவ ஜகநஸ்தலம் - உமது இடையின் பகுதி
ஹரே: இந்த்ரனுக்கு அநேகாக்ருதி நேத்ர ஸம்பத: - பலவும் ஒரே மாதிரியான கண்களே எனப் புலப்படுத்தும் பெருமையை உடையதாயும்
சுபோரு - அழகிய துடையை உடைய
ரம்பா த்வய - அரம்பை இருவரானவளே
சோபிதம் - அழகு பெற்றதுமான
திவம் - ஸ்வர்க்க லோகத்தை
ஜயதி - வெற்றி காண்கிறது.

பதுமையின் இடை முன் பகுதி தேவருலகையும் திரஸ்காரம் செய்துவிட்டதென ச்லோகத்தில் பேசுகிறார். பதுமை அவ்வப்போது பல பல வகைகளான ஆடைகளை அணிந்து கொள்கிறாளாம். அவ்வாடைகள் பகவானுக்கு ஸந்தோஷத்தை உண்டு பண்ணுகின்றன. இரு துடைகளும் வாழை போன்ற தன்மை உடையனவாய் மிளிர்கின்ற. அத்துடையுடன் இணைந்துள்ளது இடையின் முன்பகுதி. இந்த்ரன் கௌதமராக மாறுவேடம் பூண்டு அஹல்யையைக் கெடுத்து விட்டான். செய்தியறிந்த கௌதமர் இந்த்ரன் உடல் முழுவதும் பெண் குறி நிறைந்ததாக ஆகக்கடவதென சபித்தார். பின் இந்த்ரன் வேண்டுகோளுக்கிணங்கி அவையாவும் ஒரே வகையான கண் போல் பிறருக்கு விளங்குமென வரமளித்தார் என்பது புராண வரலாறு. இவ்விந்திரனால் பெருமை பெற்று விளங்குவது தேவருலகம். ரம்பா என்றால் வாழை என்பது பொருள். வாழை போன்ற துடையைப் பெற்றதாலேயே ரம்பா என்ற பெயர் பெற்ற அரம்பை அவ்வுலகுக்கு அழகூட்டுகிறாள் இத்தகைய ஸ்வர்க லோகத்தை தாயின் இடைவென்று விட்டது என்கிறார் 146

करस्थीकर्तुं यां भगवति तवोरुश्रियमसौ
करी नित्यं काङ्क्षत्यभिलषति तामेव कदली ।
अतस्तामीर्ष्यातः प्रसभमभिमथ्नाति कलभो
द्वयोरेकत्रेच्छा जनयति मिथो द्वेषमधिकम् ॥ १९८

கரஸ்தீகர்த்தும் யாம் பகவதி தவோருச்ரியமஸௌ
கரீ நித்யம் காங்க்ஷத்யபிலஷதி தாமேவ கதலீ ।
அதஸ்தாமீர்ஷ்யாத: ப்ரஸபமபிமத்நாதி கலபோ
த்வயோரேகத்ரேச்சா ஜநயதி மிதோ த்வேஷமதிகம் ॥ 196 ॥

ஹே பகவதி - குணங்களின் குன்றே
அஸௌ கரீ - இந்த ஆண் யானை
தவ - உனது
யாம் ஊருச்ரியம் - எந்த மிக்க செல்வத்தை

ஊருச்ரியம் - துடைகளின் அழகையும்
கரஸ்தீகர்த்தும் - தன் வசமாக்கிக் கொள்ள துதிக்கையில் ஏந்திக் கொள்ள
நித்யம் காங்க்ஷதி - நிதமும்

விரும்புகின்றதோ
கதலீ - வாழையும்
தாமேவ - அச்செல்வத்தையும் துடை அழகையும்
அபிலஷதி - விரும்புகிறது
அத: - தாம் விரும்பியதை அதுவும் விரும்பியதால்
கரட: - ஆண் யானை
கார்ஷ்யாத் - பொறாமையால்
ப்ரஸபம் - பலாத்காரத்தால்
தாம் - அவ்வாழையை
அபிமந்நாதி - நாசமாக்குகின்றது (இது தக்கதே)
த்வயோ: - இருவருக்கு
ஏகத்ரேச்சா - ஒரே பொருளில் ஆசை
மித: - ஒருவருக்கொருவருள்
அதிகம் த்வேஷம் - கொடிய த்வேஷத்தை
ஜநயதி - உண்டாக்குகின்றது.

இனி ஆறு ச்லோகங்களால் துடை வர்ணனை. ஒரே பொருளை இருவர் விரும்பின் ஒருவர் மற்றவருக்கு மரணாந்தமான தீமையையும் விளைக்க முயல்வார் என்பது உலகில் கண்கூடானது. இவ்வியல்பை அடிப்படையாகக் கொண்டு இயல்பாக நிகழும் நிகழ்ச்சியை இது ந்யாயம் என ஸ்தாபிக்கின்றார். இதனை அர்த்தாந்தர ந்யாஸம் என்பர். ஆண் யானையின் துதிக்கையைப் பெண்களின் துடைக்கு உவமையாகக் கூறுவது கவிமரபு. துதிக்கை காலைக்கானத் தெவிட்டாத அழகு வாய்ந்தது. அதே போல் வாழையும் இத்தன்மை பெற்றதே. அதையும் துடைக்கு உவமையாகப் புலவர் கூறுவர். லக்ஷ்மித் துடையழகாம் செல்வத்தையும், தெவிட்டாத் தன்மையாம் மேன்மையையும் யானை விரும்பியது போல் வாழையும் விரும்புகின்றது. வாழை யானைக்கு எத்தீங்கையும் விளைவிக்காது. இருந்தும் யானை பலாத்காரமாக வாழையை அழிக்கின்றது. இதற்குக் காரணம் யானை விரும்பியதை வாழையும் விரும்பியதே என்கிறார். துடைக்கு உவமை கிடைப்பது அரிது என்பது கருத்து.

"த்வேஷேச்சயம்" என்றவிடத்து + உரு என்றும் தவ + உரு என்றும் இரண்டு விதமாகப் பிரிக்க முடியுமாதலால் இரு பொருள்கள் கூறப்பட்டுள்ளன. கரீ எனப் புல்லிங்கச் சொல்லையும் கதலீ என ஸ்த்ரீலிங்கச் சொல்லையும் ப்ரயோகித்ததால் துன்பப்படுவத்துவதற்குரிய பலமுடைமை ஆண்களுக்குரியதென்றும் பெண்களுக்குப் பெரும்பாலும் அப்பலம் இன்மையும் தொனிப்பொருளாகத் தோன்றுகிறது.

प्रकृतिः समदर्शिनी मृदूनां नितरामुन्नतिभाजि नीचके च ।
प्रथते समता यतः त्वदूर्वोः करभे देवि करे च कुंजराणाम् ॥

ப்ரக்ருதி: ஸமதர்சிநீ ம்ருதூநாம் நிதராமுந்நதிபாஜி நீசகே ச ।
ப்ரததே ஸமதா யத: த்வதூர்வோ: கரபே தேவி கரே ச குஞ்ஜராணாம்

நிதராமுந்நதிபாஜி - மிக நெடியதானதிலும், மிக்க மஹிமை பொருந்தியதிலும்
நீசகே ச - மிகவும் குள்ளமானதிலும், மஹிமையற்றதிலும்
ஸமதர்சிநீ - ஸமமான அளவை உடையதாக எண்ணுதல், வேற்றுமை அற்றதாக எண்ணுதல்
ம்ருதூநாம் - அறிவற்றவரின்
ப்ரக்ருதி: - ஸ்வபாவமாகும்
யத: - ஏனெனில்
கரபே - குட்டையானதும் பெருமை அற்றதுமான ஒட்டகக் குட்டியிலும்
குஞ்ஜராணாம் கரே - உயர்ந்ததும் பெருமை உடையதுமான யானையின் துதிக்கையிலும்
த்வதூர்வோ: - உனது துடையுடன்
ஸமதா - உயரத்திலும், பெருமையிலும் ஸமமாக உள்ளது என்ற அறிவு
ப்ரததே - உலகில் ப்ரஸித்தமாக இருக்கின்றதோ (அதனால்)

எட்டடி உயரமுடையவனும் ஐந்தடி உயரமுடையவனும் உயரத்தில் ஸமமானவர் என எண்ணுவதும், கல்வி, கேள்வி, ஒழுக்கம் முதலியவற்றில் உயர்ந்தவரும் எழுத்தறிவே இல்லாதவருமற்றவரும் மதிப்பில் ஒத்தவர் என எண்ணுவதும் அறிவற்றவர் செயலாம். இப்படியும் எண்ணுவரோ எவரேனுமெனின், இப்படி எண்ணுவதும் உலகில் ப்ரஸித்தமாக உள்ளதே என்கிறார்.

பெண்களின் கைகளுக்கும் கால்களுக்கும் உவமையாக யானையின் துதிக்கையைப் புலவர் கூறுவர். கை, கால், துதிக்கை யாவுமே அடி பெருத்து நுனி சிறுத்திருப்பன. ஆகவே இவை ஒன்றுக்கொன்று உவமையாயின. இதில் கையின் நுனி - அதாவது மணிக்கட்டுக்குக் கரப: என்ற சொல் அமைந்துள்ளது. இச்சொல் எப்படி மணிக்கட்டு என்ற பொருளைத் தருகிறதோ அப்படியே ஒட்டகம் என்ற பொருளையும் தருவதாம். "கரப: மணிபந்தாதி கரப்ராந்தே ததா உஷ்ட்ரகே" என்பது விச்வ ப்ரகாசம் என்ற நிகண்டு. விலங்கினங்களுக்குள் அழகற்றதும் மதிப்பற்றதுமாம் ஒட்டகம். யானையோவெனின்

அரசர்களாலும் பாராட்டப்பட்டு பெருமை மிக்கதாம். இத்தகைய யானையுடன் ஒட்டகத்தை ஒப்பிடுவது எப்படி மடமையோ அப்படித் தாயின் துடைக்கும் மணிக்கட்டிற்கும். யானையின் துதிக்கையை ஒப்பிடுவது கவிகளின் வழக்கமாக வந்துள்ளதே இது போதாதா உலக மடமைக்கு என்றார்.

करभः कलभः प्रशस्तहस्तः कदली चाप्युरवः स्युरम्ब कान्त्या ।
न तु तत्र च मुख्यवर्णदैर्घ्यात् कथयन्त्यूरुपदं त्वदीयसक्थ्नोः ॥ २०१

கரப: கலப: ப்ரசஸ்தஹஸ்த:
கதலீ சாப்யுரவ: ஸ்யுரம்ப காந்த்யா ।
ந து தத்ர ச முக்யவர்ணதைர்க்யாத்
கதயந்த்யூருபதம் த்வதீயஸக்த்நோ: ॥ 201 ॥

ஹே அம்ப - தாயே!
கரப: - மணிக்கட்டு வரையான கையும்
கலப - யானையின்
ப்ரசஸ்தஹஸ்த: - உயர்ந்த துதிக்கையும்
கதலீ சாபி - வாழையுமாகிய மூன்றும்
காந்த்யா - ஒளியால், புகழால்
உரவ: - உயர்ந்தவையாக
ஸ்யு: - ஆகின்றன
தத்ர ச - இவற்றுள்ளும்
த்வதீயஸக்த்நோ: - உனது துடைகளே முக்யவர்ணம் இன்றியமையாத ஒளியை
தைர்க்யாத் - கை முதலியவற்றிலும் மிகுதியாக இருப்பதால்
முக்யவர்ண - முகத்தில் தோன்றும் எழுத்தாகிய உ என்பதன்
தைர்க்யாத் - நெடிலான ஊ என்பதை உடைய
ஊருபதம் - ஊரு என்ற சொல்லால்
கதயந்தி ந து சொல்கின்றனரோ?

பெண்களின் கைக்கும் துடைக்கும் துதிக்கையும், வாழையையும் உவமானமாகக் கூறுவது கவிமரபு. ஆகவே இவை புகழில் உருவமிக்கனவாக - ஆயின. இவை உருவாக - பெரியதாக இருப்பதால் உரவ: என்ற பன்மைச் சொல்லால் இவற்றைச் சொல்லலாம். இவற்றுள்ளும் தொடை ஒளியில் மற்றையதிலும் விஞ்சியுள்ளது. ஆகையால் அவற்றிலும் இது சிறந்ததாயிற்று. இப்படி முக்கியமான - இன்றி அமையாததான வர்ணத்தில் - ஒளியில் - தைர்க்யமாக - நீண்டதாக - பெரியதாக இருப்பதால், முக்யமான - முகத்தில் தோன்றுவதான - வர்ணமான - எழுத்தான "உ" என்பதன் தைர்க்யாத் நெடியான "ஊ" என்ற எழுத்து சேர்ந்து உண்டான ஊரு என்ற சொல்லால் துடையைச் சொல்கின்றனர்.

வடமொழியில் உரு, ஊரு என்ற இரண்டு சொற்கள் உள்ளன. உரு என்பது பெரியது என்ற பொருளைத் தரும் ஒருமைச் சொல் ஊரு என்பது துடையைச் சொல்லும் ஒருமைச் சொல். கை, துதிக்கை வாழை என்ற மூன்றும் நீண்டுப் பெரியவையாக இருப்பதால் பெரியன என்ற பன்மைப் பொருளை உடைய உரவ: என்ற சொல்லால் அழைக்கப்படுகின்றன. ஆகையால் துடை - அவற்றினும் ஒளியில் விஞ்சி இருப்பதால் நீண்ட எழுத்தை உடைய ஊரு என்ற சொல்லால் அழைக்கப்படுகிறது. அததற்குரிய சொற்களால் அவை அவை சொல்லப்படுகின்றது என்கிறார்

तवोरुलक्ष्मीं द्विरदाः करस्थां कर्तुं कृताशा मधुपाय मत्ताः ।
दिशन्ति दानं तदभीष्टसिद्धिं नापत्रपात्रार्पणतो हि नार्थः ॥ २०२

தவோருலக்ஷ்மீம் த்விரதா: கரஸ்தாம்
கர்த்தும் க்ருதாசா: மதுபாய மத்தா: ।
திசந்தி தானம் ததபீஷ்டஸித்திம்
நாபந்நபாத்ரார்ப்பணதோ ஹி நார்ய: ॥ 202

மத்தா: - தாயே நல்லறிவற்று, மதம் பிடித்த
த்விரதா: - யானைகள்
தவ உருலக்ஷ்மீம் - உனது மிக்க செல்வத்தை
தவ ஊருலக்ஷ்மீம் - உனது துடையின் அழகை
கரஸ்தாம் கர்த்தும் - தன் வயமாக்கிக் கொள்ள, துதிக்கையில் தேக்கிக் கொள்ள
க்ருதாசா: - ஆசை உடையவையாய்
மதுபாய - கள்ளுக்குடியனுக்கு, வண்டிற்கு
தானம் திசந்தி - தானம் செய்கின்றன, மதநீரைச் சொரிகின்றன
ததபி - அப்படிச் செய்த போதும்
இஷ்டஸித்திம் - அவை விரும்பியதை
ந ஆபன் - அடையவில்லை
ஹி - ஏனெனில்
அபாத்ரேஷு - தானம் தரத்தகுதியற்றவர்கட்கு
அர்ப்பணத: - தானம் தருவதால்
அர்த்த: - பயன்
ந ஹி - இல்லையன்றோ?

பெண்களின் துடைக்கு யானையின் துதிக்கையை உவமையாகக் கூறுவது கவிமரபு. மதம் கொண்ட, யானைகளின் அறிவு நல்ல நிலையில் இராததால் உலகத்தாயின் துடையழகை தாம் பெற வேண்டும் என எண்ணலாயின. பிறருக்கு முதலில் ஒன்று கொடுத்தால்தான் பின் நமக்கொன்று

கிடைக்கும் என்ற எண்ணத்தால் வண்டுகளுக்கு தானம் தந்தனவாம். தானம் மதநீர். மதநீரைப் பெருக்கிற்று என்பது கருத்து. அப்படிச் செய்தும் பயனில்லாது போயிற்றாம். துடைகளின் அழகை யானைகளால் பெற முடியவில்லையாம். எப்படி ஆயிற்றெனின் தானம் கொடுத்த இடம் ஸரியான இடமில்லை. எப்போதும் தானத்தை நல்லொழுக்கம், கல்வி, குலம் முதலியனவற்றில் உயர்ந்தவர்களுக்குக் கொடுத்தால்தான் அத்தானம் பயன்தரும். கள் குடியனுக்குப் போய் தானத்தைச் செய்தன யானைகள். தானம் - மத நீரைப் பருகுபவை வண்டுகள், எனவே தான் பயன் கிடைக்கவில்லை என அர்த்தாந்தர ந்யாஸத்தால் பயன் கிடைக்காமை ஸத்தியப்படுத்தினார்.

தவோரு லக்ஷ்மீம் என்றவிடத்து தவ + உரு லக்ஷ்மீம், ஊரு லக்ஷ்மீம் என்ற இரு வகைகளாகவும் பதம் பிரிக்கலாம். கரம் = கை, துதிக்கை, மதுப: - கள்குடியன், தேன் குடிப்பது; தானம் - மதநீர், வெகுமதி;

असावसारोऽन्तरतीव कर्कशो मलीमसश्चोपरि कौञ्जरः करः ।
इति त्वदूरू हसतो हरिप्रिये करिण्यपास्ते करभस्तु दूरतः ॥ २०३

அஸாவஸாரோ(அ)ந்தரதீவ கர்க்கேசா
மலீமஸச்சோபரி கௌஞ்ஜர: கர: ।
இதி த்வதூரு ஹஸதோ ஹரிப்ரியே
கரிண்யபாஸ்தே கரபஸ்து தூரத: ॥ (203)

ஹரிப்ரியே - பகவானின் மனைவி!
த்வதூரு - உனது இரு தொடைகள்
கௌஞ்ஜர: - யானையினுடைய
அஸௌ கர: - இத்துதிக்கை
அந்த: - உட்புறத்தில்
அஸார: - உறுதியற்றது (பொத்தலானது)
உபரி - வெளிப்புறத்தில்
அதீவ - மிகவும்
கர்கச: - கடினமானது
மலீமஸ: - உடல் முழுவதும் அழுக்குடையது
இதி - என்று
ஹஸத: - பரிஹாஸிக்கின்றன
கரிணீ - பலமுடைய யானை
அபாஸ்தே - வழி ஜயிக்கப்பட்டபோது
கரப: - பலமற்ற ஒட்டகக்குட்டி (கையின் முன் பக்கம்)
தூரத: - தானாகவே பயத்தால் வெகு தூரம் ஓடி விடுகிறது.

லக்ஷ்மியின் தொடைகளுக்கு யானையின் துதிக்கை உபமானமாகத் தகுதியற்றது என்கிறார். துதிக்கையின் உள்ளே பொத்தலிருப்பதால், உள்ளே ஸாரமற்றதாயும், மேற்புறம் மிகவும் கடினமானதாயும், தூசி படிந்துமுள்ளது. தாயின் தொடைகளோ மென்மையானவை, சிவந்தவை, உட்புறம் ஸாரம் மிக்கவை. ஆகவே தொடைகள் துதிக்கையைப் பரிஹாஸம் செய்கின்றன. நீ எனக்கு எவ்வகையில் உவமை ஆவாய் என. ஆகவே உவமையாகக் கூறப்படும் துதிக்கையை வென்று விட்டன தொடைகள். இருக்கட்டும் அதனாலென்ன ? துதிக்கை ஒன்றை வென்றதால் அனைத்துப் பகைமையையும் வென்றதாக ஆகாதே! மற்றொன்றான ஒட்டகக் குட்டியுள்ளதே எனின் அதற்குப் பதில் பின்வருமாறு கூறுகிறார். பலம் மிக்க யானை வருவதைப் பார்த்ததாலே பறந்தோடுமே குட்டகக்குட்டி ! ஆகவே துதிக்கையை வென்றதாலேயே அனைத்துப் பகைவையும் வென்றதாயிற்று என்கிறார்.

विबुधास्तव वर्णयन्ति जङ्घे शरधी दाशरथिप्रिये स्मरस्य ।
न वयं बहुमन्महे तदेतत् यदि पृष्ठीकुरुते मनोभवस्ते ॥ २०४

விபுதாஸ்தவ வர்ணயந்தி ஜங்கே
ஸ்மரதூணீ தாஸரதிப்ரியே ஸ்மரஸ்ய ।
ந வயம் பஹுமந்மஹே ததேதத்
ந ஹி ப்ருஷ்டேகுருதே மநோபவஸ்தே ॥

ஹே தாஸரதி ப்ரியே! - ஸீதா தேவி!
விபுதா: - கவிஞர்கள்
தவ ஜங்கே - உமது முழங்கால்களின் கீழுள்ள பகுதியை
ஸ்மரஸ்ய - மன்மதனுடைய
ஸ்மரதூணீ - அம்பறாத்தூணியாக
வர்ணயந்தி - வர்ணிக்கின்றனர்
வயம் - யாம்
ததேதத் - இப்படி வர்ணித்ததை
ந பஹுமந்மஹே - போற்றுவதில்லை
மநோபவ: - மன்மதன்
தே ஜங்கே - கணைக்கால் பகுதிகளை
ந ப்ருஷ்டேகுருதே - தோளின்பின் புறத்தே தாங்குவதில்லையே.

இனி ஐந்து ச்லோகங்களால் கணைக் கால் வர்ணனை. முழங்காலின் கீழிருந்து பாதம் வரை உள்ள பகுதியை கணைக்கால் என்பர். இது முழங்காலின் கீழ் பருத்து அகன்றும் பாதங்களின் ஸமீபத்தில் சிறுத்தும் இருக்கும். அம்பு அறாத்தூணியும் வாய்புறம் அகன்று அடிப்புறம் சிறுத்திருக்குமாதலால் இதனை கணைக்கால்களுக்கு உவமையாகக் கூறுவது கவிமரபு. ஸீதாதேவியின் கணைக்கால்களை மன்மதனின் அம்பறாத் தூணியாகப் புலவர் பேசுவதை நான் புகழ மாட்டேன் என்கிறார். ஏனெனின் ஸீதாதேவியின் இரு கணைக்கால்களும் தூணியாக இருந்திருப்பின் அதை மன்மதன் தமது தோளின் பின்புறத்தில் தரித்திருப்பானன்றோ ! அப்படி அவன் தரிக்கவில்லையே! "ப்ருஷ்டே குருதே" என்பதற்குப் பின்புறம் தாங்குகிறான் என்ற பொருள் போல் அவமதிக்கிறான் என்ற பொருளும் உண்டு. மன்மதன் அவமதிக்காது அதனைப் போற்றுகிறான் என்பது ந ப்ருஷ்டே குருதே என்பதற்கு உண்மையான பொருள்.

தூணிகளாக இருந்திருப்பின் மன்மதன் அவற்றைப்பின் புறம் தாங்கியிருப்பான். தாங்காததால் தூணி ஒப்பாக ஆகாது எனத் தெரிகிறது. ஆகவே தாயின் கணைக்கால்கள் ஒப்பற்றவை என்பது கருத்து.

प्रमिलन्तु शतानि काहलानां शरधीनां समुदेतु वा सहस्रम् ।
कमले तव जङ्घयोस्ततः किं शतमन्धाः किमवेक्षितुं क्षमन्ते ॥

ப்ரமிலந்து ஶதாநி காஹலாநாம் ஶரதீநாம் ஸமுதேது வா ஸஹஸ்ரம் ।
கமலே தவ ஜங்கயோஸ்தத: கிம் ஶதமந்தா: கிமவேக்ஷிதும் க்ஷமந்தே ॥

ஹே கமலே - தாமரையாளே!
காஹலாநாம் - காஹளை என்ற வாத்யத்தின்
ஶதாநி - நூறு
ப்ரமிலந்து - ஒன்றாகச் சேரட்டும்
ஶரதீநாம் - அம்பறாத்தூணிகளின்
ஸஹஸ்ரம் வா - ஆயிரமாயினும்
ஸமுதேது - ஒன்று சேரட்டும்
தத: - அப்படிச் சேர்வதால்
தவ ஜங்கயோ: - உமது கணைக் கால்களுக்கு
தத: கிம் - அதனால் எதிர்ப்பு உண்டாகும்?
அந்தா: - குருடர்கள்
ஶதம் - நூற்றுக்கணக்கானவர் ஒன்று சேர்ந்தும்
அவேக்ஷிதும் - பார்ப்பதற்கு
க்ஷமந்தே கிம் - தகுதி உடையவர் ஆகுவரா என்ன!

காஹளம் என்பது ஒருவகை வாத்யம். அது திருச்சின்னம் போன்ற உருவமுடையதாய் ஐந்தடி நீளத்துக்கு இருக்கும். கௌரிகாளை எனவும் அதனை வழங்குவர். வாய் வைத்து ஊதுமிடம் திருச்சின்னம் போலவே வட்டமாயும் மெல்லியதாயும் கீழ்ப்பகுதி சிறிது சிறிதாகப் பெரிதாகி அடியில் வட்டமாக அகன்றிருக்கும். கணைக்காலும் பாதத்தின் அருகில் சிறுத்து முழங்காலின் ஸமீபத்தில் பருத்துமிருப்பதால் காஹளத்தை கணைக்காலுக்கு உவமையாகக் கூறுவர் புலவர். அம்பறாத்தூணியும் அதே போன்ற அமைப்புடையது. இவை இரண்டும் நூற்றுக் கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் ஒன்று கூடி லோகமாதாவின் கணைக்காலை வெற்றி காண முயன்றாலும் அது பயனற்றதே என்கிறார். ஓரிரண்டுகளால் வெற்றி காண முடியாது போகலாம். ஆயிரம் சேர்ந்துமா வெற்றி காண முடியாதெனின் அதற்கு விடையாக அமைந்தது "ஶதமந்தா:" என்பது. எப்படிப் பிறவிக்குருடன் ஆயிரமாகச் சேர்வதாலேயே காணும் திறமையைப் பெற முடியாதோ அப்படி, தனித்திருக்கும்போது ஒப்புமையற்ற பொருள் ஆயிரம் சேர்ந்தால் மட்டும் ஒப்புமையாம் திறமையைப் பெற முடியாதென்பது கருத்து.

எத்தனை காஹளம் கொண்டாலும் அவற்றுள் ஒன்று கூட தாயின் கனைக்காலுக்கு ஸமமாகாதென்பது உட்கருத்து.

काहलः कमलमन्दिरे भवजनयोः श्रियमपाहरद्यतः ।
तन्यते बहुमुखप्रभञ्जनक्षोभितेन निनदस्ततोऽमुना ॥ २०६

காஹல: கமலமந்திரே பவ ஜனயோ: ஶ்ரியமபாஹரத்யத: ।
தந்யதே பஹுமுகப்ரபஞ்ஜந க்ஷோபிதேந நிநதஸ்ததோ(அ)முநா ॥

கமலமந்திரே - தாமரையில் வாழ்பவளே!
காஹள: - காஹளம் என்ற வாத்யமும் நன்னடத்தை அற்றவனும்
யத: - எதனால்
பவஜ்ஜங்கயோ: - உமது கணைக்களின்
ஶ்ரியம் - சோபையாகிற செல்வத்தை
அபாஹரத் - திருடினதோ
தத: அதனால்
பஹுமுக - பல் வகைப்பட்ட
ப்ரபஞ்ஜந உதைகளால்
க்ஷோபிதேந - துன்புறுத்தப்படும்
பஹுமுக - பலர் வாயிலிருந்து உண்டான
ப்ரபஞ்ஜந - காற்றால்
க்ஷோபிதேந - அசைப்பட்ட
அமுநா - இந்த காஹளத்தால் கெட்டவனால்
நிநத - அழுகையும், ஒலியும்
தந்யதே - செய்யப்படுகிறது.

தாமரையில் வாழ்பவளே! காஹளம் என்ற வாத்யமும் அயோக்யன் ஒருவனும் உமது கணைகளின் அழகாகிய செல்வத்தைத் திருடிவிட்டனர். காஹளத்தின் வடிவ அமைப்பு கணை போலிருப்பதால் தாயின் செல்வத்தைத் திருடியதாகக் கூறுகிறார். நன்னடையற்றவனின் கருத்து சிலேடைச் சொல்லமைப்பால் கிடைப்பது. ஆகவே அவன் திருடியது செல்வத்தையே எனக் கொள்ள வேண்டும். இப்படித் திருடியதால் பலர் ஒன்று கூடித் திருடியவனை கைகளாலும் கால்களாலும் கம்புகளாலும் நையப் புடைத்து விட்டனர். அதனால் அவன் உடல் கட்டமைப்பே சிதைந்து விட்டது. காஹளத்தைப் பலர் தம் வாயிலிருந்து உண்டாம் காற்றால் ஊதுகின்றனர். இதனால் காஹளம் சத்தம் எழுப்புகிறது. காஹளத்தின் ஒலி இனிதாக இராததனால் அழுவது போலிருக்கிறது என்கிறார். செல்வத்தைத் திருடியவன் அடிபட்டவனும் ஓலமிடுகிறான் என்பது கருத்து

तनोति सिन्धोस्तनये मनोज तूणीरशङ्कां तव देवि जङ्घा ।
तद्बाणभूतं कमलं तदग्रे पादापदेशेन यदाविरस्ति ॥ २०७

தனோதி ஸிந்தோஸ்தநயே மனோஜ
தூணீரஶங்காம் தவ தேவி ஜங்கா ।
தத்பாணபூதம் கமலம் ததக்ரே
பாதாபதேஶேந யதாவிரஸ்தி ॥

ஸிந்தோ: தநயே - கடற்கன்னியான
தேவி - பகவானின் மனைவியே
தவ ஜங்கா - உமது கணைக்கால்
மநோஜ - மன்மதனுடைய
தூணீரஶங்காம் - தூணியின் ப்ரமத்தை
தநோதி - செய்கிறது
யத் - எதனால்
ததக்ரே - கணையின் நுனியில்
தத்பாணபூதம் - மன்மதனின் அம்பாகிய
கமலம் - தாமரை
பாதாபதேஶேந - கால் என்கிற வ்யாஜத்தால்
ஆவிரஸ்தி - விளங்குகின்றதோ

பாற்கடல் குமரியே! உமது கணைக்கால் மன்மதத்தூணியின் மருட்சியை - ப்ரமத்தை - மிகுவிக்கிறது. ஏனெனின் அக்கணைகளின் நுனியில் பாதம் என்கிற வ்யாஜத்தால் மன்மத பாணமான தாமரைப் பூ விளங்குகிறதே. எனவே தூணியாகப் புலவர் வர்ணிப்பது யுக்தியுடையதே என்கிறார்.

वृन्देन वृन्दारकसुन्दरीणां नन्देशसूनोः सखि वन्दनीये ।
मन्देतरानन्दथुमूलकन्दे वन्दे भवत्याश्चरणारविन्दे ॥ २०८

ப்ருந்தேந ப்ருந்தாரகஸுந்தரீணாம் நந்தேஶஸூநோ: ஸகி வந்தநீயே ।
மந்தேதராநந்தது மூலகந்தே வந்தே பவத்யாஶ்சரணாரவிந்தே ॥

நந்தேஶஸூநோ: - - நந்தகோபன் மகனுக்கு
ஸகி - - நெருக்கமான பழக்கத்தில் துணைவியாக இருப்பவளே
மந்தேதராநந்தது - - பேரின்பமாகிய பேரானந்தத்துக்கு
மூலகந்தே - - மூலகாரணமானவளே!
ப்ருந்தாரகஸுந்தரீணாம் - - தேவ மாதுகளின்
ப்ருந்தேந - - கூட்டங்களால்
வந்தநீயே - - வணங்கத் தக்கவளே!
பவத்யா: - - உமது
சரணாரவிந்தே - - திருவடித் தாமரைகளை
வந்தே - - நமஸ்கரிக்கிறேன்.

ஸௌந்தர்யம் என்ற சொல்லுக்குக் கண் காது போன்ற ஒவ்வொரு அவயவங்களின் அழகு என்பது கருத்து. இந்த ஸௌந்தர்ய வர்ணனையில் இழியும் கவி ஒவ்வொரு உறுப்பையும் வர்ணிக்க வேண்டும் என்பது கவி மரபு. ஆகவே அனைத்து உறுப்புகளையும் வர்ணிக்க வேண்டியது இன்றியமையாததாக ஆகிவிட்டது. உலக மாதாவான லக்ஷ்மியின் ஸௌந்தர்ய வர்ணனை மஹாபசாரமானதையால் அவ்வபசார பரிஹாரத்துக்காகத் தாயின் திருவடிகளை இனி இந்த ஸ்தபகம் முழுவதும் விஸ்தாரமாக வர்ணிக்க ஆரம்பிக்கின்றார்.

நந்தகோபரின் ப்ரியமகனான கண்ணபிரானது உலகங்களைப் பற்றிய தொழில்களில் துணை புரிபவளே ! அளவு கடந்த பேரின்பமாகிய மோக்ஷானந்தத்துக்கு முதற்காரணமானவளே! இப்படி விளிப்பதற்குக் காரணம் மோக்ஷத்தை விரும்பிச் செய்யப்படும் பகவத் ப்ரபத்தி ஸித்திக்கு ஸ்ரீயின் சரணாரவிந்த ப்ரபத்தி இன்றியமையாததாக இருப்பதேயாம். தேவ மாதுகளின் குழுக்களால் வணங்கப்படுபவளே ! எனது இஷ்டங்கள் நிறைவேறுவதற்கும், அநிஷ்டங்கள் அழிவதற்கும் உமது திருவடித் தாமரைகளை வணங்குகிறேன்.

"ஆநந்தது" என்ற சொல்லிற்கு ஆநந்தம் என்பது பொருள் "ஸ்யாத் ஆநந்தது: ஆநந்த:" என்பது அமரம்.

यौ यस्य पादौ यदुवर्यभार्ये तस्यैव दृष्टी गतिदायिनौ तौ ।
चित्रं तदेतच्चरणौ तवेमौ गजेन्द्रयोग्यां दिशतो गतिं नः ॥ २०९

யௌ யஸ்ய பாதௌ யதுவர்யபார்யே
தஸ்யைவ த்ருஷ்டௌ கதிதாயினௌ தௌ ।
சித்ரம் ததேதச்சரணௌ தவேமௌ
கஜேந்த்ரயோக்யாம் திஶதோ கதிம் ந: ॥ 209

ஹே யதுவர்யபார்யே - க்ருஷ்ணனின் மனைவியே
யௌ பாதௌ - எக்கால்கள்
யஸ்ய - எவனுடையதாக இருக்கின்றனவோ
தௌ - அக்கால்கள்
தஸ்யைவ - அவனுக்கே
கதி தாயினௌ - நடப்பதற்குத் துணையானதாக
த்ருஷ்டௌ

காணப்படுகின்ற ஆனால்
தவ இமே சரணே - உமது இத்திருவடிகள்
ந: - எங்களுக்கு
கஜேந்த்ர போக்யாம் கதிம் - யானையின் நடை போன்ற நடையை
ப்ரதா - தருகின்றன
தநுத: - என்னுமிச்செயல்
சித்ரம் - ஆச்சர்யம்

யதுவம்சத்தில் பிறந்த கண்ணனின் மனைவியே! எவ்விரண்டு கால்கள் எவரைச் சேர்ந்தவைகளாக உள்ளனவோ அக்கால்கள் அவனுக்கே நடப்பதற்குத் துணை புரிபவைகளாக உலகில் காணப்படுகின்றன. பிறர் கால்களால் பிறர் நடப்பது கண்டதே இல்லை. ஆனால் உமது இவ்விரண்டு திருவடிகளும் எங்களுக்கு யானையின் நடை போன்ற கம்பீரமான நடையைத் தருகின்றன என்பது ஆச்சர்யம். லக்ஷ்மியின் திருவடிகளால், தாம் நடப்பதென்பது அத்புதம் என்பது கருத்து.

''கஜேந்த்ர போக்யாம் கதிம்'' என்பதற்கு, முதலையால் கவ்வப்பட்டு விபத்துக்குள்ளாகி ஓலமிட்ட கஜேந்த்ரனுக்கு உரியதான மிக உயர்ந்த கதியை உயர்ந்த மோக்ஷத்தை - என்பது உண்மைப் பொருள். ந: - மிகப்பாபிகளான எங்களுக்கு உமது திருவடிகள் அன்று யானைக்கீந்த உயர்ந்த மோக்ஷத்தை அளிக்கின்றன என்பது கருத்து. விரோதாபாஸாலங்காரம். கம்யதே இதி கதி: என்பது விக்ரஹம்.

नलिनायतने मृदु प्रवालं पदयोस्तावकयोर्लवं प्रतीमः ।
अत एव बिभर्ति पल्लवाख्यां भजते पादपशब्दमस्य पाता ॥ २१०

நலிநாயதநே ம்ருது ப்ரவாலம்
பதயோஸ்தாவகயோர்லவம் ப்ரதீம: ।
அத ஏவ பிபர்த்தி பல்லவாக்யாம்
பஜதே பாதபசப்தமஸ்ய பாதா ॥

நலிநாயதநே - தாமரையில் வாழ்பவளே!
நவம் ப்ரவாலம் - புதிய தளிரை
தாவகயோ: - உமது
பதயோ: - கால்களின்
லவம் - தாளில் ஒரு பகுதியாக
ப்ரதீம: - அறிகின்றோம்
அத: - தாள்பாகமாக இருப்பதால்தான்
ஏஷ: - இத்தளிர்
பல்லவாக்யாம் - பல்லவம் என்ற பெயரை
பிபர்த்தி - தாங்குகின்றது
அஸ்யபாதா - இத்தளிரை

தளிர்ப்பதனை மறுபம் பகுதே - அடைகின்றது.
பாதபஸ்தக் - பாதபம் என்ற சப்தத்தை

தாமரையில் வீற்றிருப்பவளே! புதிதாகத் தோன்றிய தளிரை உமது திருவடிகளுக்குக் கவிகள் உவமையாகக் கூறுவர். ஆனால் அது உண்மையில் கூடாது. அத்தளிரை உமது இரண்டு அடிகளின் "லவமாக - கால்பாகமாகவே யாம் எண்ணுகின்றோம். எப்படி என்கின்றீரா! அதன் பெயரே அக்கருத்தைத்தானே சொல்கிறது "पल्लवः என்பதுதானே அதன் பெயர் पद् : + लवः என்ற இரண்டு சொற்களும் சேர்ந்ததுதானே पल्लवः என்று ஆகின்றது. पद् என்றால் பாதம் लवः என்றால் நாலிலொரு பாகம். ஆக இரண்டு சொற்களும் சேர்ந்து பாதத்தின் கால் பகுதி என்பதைத்தானே உணர்த்துகின்றன. எனவேதான் அப்படிச் சொன்னேன். இது மட்டுமன்று. மற்றொரு காரணமுமுண்டு நான் அப்படிச் சொன்னதற்கு. அக்காரணம் மரத்துக்கு "पादपः என்ற பெயர் உள்ளமையாம் पातीति पः - என்பது விக்ரஹ வாக்யம். அதாவது காப்பது என்பது பொருள். எதைக் காக்கிறது எனில் पादं பாதத்தை பாதமாவது - கால் பாகம் திருவடிகளின் கால்பாகமாகிய தளிரை மரம் காப்பதால்தான் மரத்துக்குப் பாதப: என்ற பெயர் உண்டாயிற்று இதனாலும் அப்படிச் சொன்னேன்.

पदयोर्द्वितयं ननु त्वदीयं भजति स्वामिनि बालमित्ररागम् ।
अथ पल्लवरूपमश्नुते तत् प्रतिक्षेपन्ति हि बालसख्यमार्याः ॥ २११

பதயோர்த்விதயம் நநு த்வதீயம் பஜதி ஸ்வாமிநி பாலமித்ரராகம் ।
அத பல்லவரூபமச்நுதே தத் ப்ரதிக்ஷேபந்தி ஹி பாலஸக்யமார்யா: ॥

நநு ஸ்வாமிநி - இரண்டு விபூதிகளுக்கும் நாயகியே

த்வதீயம் - உமது

பதயோ: - திருவடிகளின்

த்விதயம் - இரண்டும்

பாலமித்ர - விவேகமற்றவனின் உதித்து வரும் ஸூர்ய கிரணங்களின்

ராகம் - அனுராகத்தை (செம்மையை)

பஜதே - அடைகின்றன

தத் - அவ்விரு திருவடிகளும்

அத - அடுத்த க்ஷணமே

பல்லவரூபம் - கெட்ட ஒழுக்கத்தை (தளிரின் வடிவை)

அச்நுதே - அடைகிறது

ஆர்யா: - மஹான்கள்

பாலஸக்யம் - அவிவேகி நட்பை

ப்ரதிக்ஷேபந்தி ஹி - குறைகூறு கின்றனரன்றோ?

விபூதி என்றால் செல்வம். பகவானுக்கு இரு விபூதிகளுண்டு. அவை தாம் லீலாவிபூதி நித்யவிபூதி என்பனவாம். ஸ்ரீ வைகுண்ட லோகம் நித்ய விபூதியைச் சார்ந்தது. இவ்வுலகம் லீலா விபூதியைச் சார்ந்தது. இவ்விரு விபூதிகளுக்கும் நாயகியாவள் ஸ்ரீதேவி. ஆகவே ஸ்வாமிநி என விளித்தார்.

"बलेन सख्यं मलविरोधः என்பது இவ்வுலகப் பழமொழி. அறிவற்றவன் நட்பு தீமைக்குக் காரணம் என்பது இதற்குக் கருத்து. தீமைக்கும் அறிவிலி நட்புக்குமுள்ள கார்ய காரணபாவம் இவ்வுலகில் மட்டுமில்லை. விண்ணுலகிலுமுண்டு. எனவேதான் மஹான்கள் அவிவேகி நட்பை இகழ்கின்றனர் என்ற கருத்தை சிலேடைச் சொற்களை அமைத்துப் புலப்படுத்துகிறார்.

உலகத்தாயின் திருவடிகள் बाल - मित्र - தந்தை, राग ஸூர்யனின் - செம்மையைப் பெற்றிருக்கின்றன என்பது உண்மைப் பொருள் - இத்தொடரே நிபவஷின் - நட்பால்

உண்டாகும் அன்பை என்ற பொருளையும் தந்துக் கெட்டவரின் நட்பைப் பெற்ற மறுகணமே, பல்லவ ரூபத்தை - கெட்ட நடத்தையை மேற்கொள்கிறது என்பது சிலேடைப் பொருள். பல்லவத்தின் தளிரின் உருவத்தை ஒத்திருக்கிறது என்பது உண்மைப் பொருள்.

यद्वस्तु यद्गुणवता कलितानुषङ्गं
तत्तद्गुणीति विदितं तव पादपद्मे ।
अत्यन्तरागिणि कृतं हृदयं मुनीनां
वैराग्यमेव भजतीति विचित्रमेतत् ॥

யத்வஸ்து யத்குணவதா கலிதாநுஷங்கம்
தத்தத்குணீதி விதிதம் தவ பாதபத்மே ।
அத்யந்தராகிணி க்ருதம் ஹ்ருதயம் முநீநாம்
வைராக்யமேவ பஜதீதி விசித்ரமேதத் ॥ 212

ஹே அம்ப - தாயே
யத்வஸ்து - எந்த பொருள்
யத் குணவதா - எத்தகைய குணத்தைப் பெற்றவுடன்
கலிதாநுஷங்கம் - ஸம்பந்தம் பெற்றதோ
தத் - அப்பொருள்
தத்குணீதி - அதன் குணமுடையதாக ஆகின்றதென்பது
விதிதம் - உலகில் அறிந்ததே
அத்யந்தராகிணி - மிக்க காமப்பற்று உடைய (மிகச்சிறந்த)
தவ பாதபத்மே - உமது திருவடித் தாமரை
க்ருதம் - வைக்கப்பட்ட
முநீநாம் - யோகிகளின்
ஹ்ருதயம் - மனம்
வைராக்யம் - காமமின்மையை (சிவப்பின்மையை)
பஜதி இத்யேதத் - அடைகின்றதென்பது
விசித்ரம் - ஆச்சர்யம்

எந்த ஒரு பொருள் எக்குணத்தைப் பெற்றுள்ளதோடு - அதாவது ஸத்துக்களின் குணம் - அஸத்துக்களின் குணம், வெண்மை, சிவப்பு போன்ற குணம் முதலிய குணங்களைப் பெற்றுள்ளதோடு தொடர்பு கொள்கிறதோ அவ்வஸ்து சேர்ந்ததன் குணமுடையதாக ஆகின்றது என்பது உலகில் ப்ரஸித்தமானது பெரும்பாலும் கெட்ட குணங்கள் தொடர்பால்

தோன்றுவனவே. ஆனால் இப்பிரஸித்தி உம்மிடம் மாறுபாடு உடையதாக இருக்கிறது. அதுதானென்னவெனின் உமது திருவடிகள் மிகமிகச் சிவந்தவை. காமப்பற்று மிக்கவை. ராகம் என்ற வடசொல் "செம்மை" "காமம்" என்ற பொருள் உடையவை. அத்தகைய திருவடிகளில் தங்கள் மனங்களை வைத்து யோகிகள் த்யானம் செய்கின்றனர். உலக வழக்கப்படி அவர்கள் மனமும் சிவந்ததாகவும் காமம் மிக்கதாகவும் ஆக வேண்டுமன்றோ. செம்மையற்ற தன்மையை, காமமற்ற தன்மையை யன்றோ அடைகின்றது. இது உலகியலுக்கு மாறாகவன்றோ உள்ளது. எனவே வியப்புக்கு உரியதாகின்றது.

पादान् सहस्रमपि बालसरोजबन्धोः
पादद्वयी जयति ते जगदम्ब दीप्त्या ।
संहीयसामपि न सत्त्वसुहारकाणां
प्रायो जयः कुवलयार्तिकृतां कुतः स्यात् ॥

பாதாந் ஸஹஸ்ரமபி பாலஸரோஜபந்தோ:
பாதத்வயீ ஜயதி தே ஜகதம்ப தீப்த்யா ।
ஸம்ஹீயஸாமபி ந ஸத்வஸுஹாரகாணாம்
ப்ராயோ ஜய: குவலயார்த்திக்ருதாம் குத: ஸ்யாத் ॥ 213

தே ஜகதம்ப - அனைத்துலகத்தாயே!
தே பாதத்வயீ - உமது இரு திருவடிகள்
பாலஸரோஜ பந்தோ: - உதித்து வரும் சூரியனின்
ஸஹஸ்ரம் - ஆயிரக்கணக்கான
பாதாநபி - பாதங்களையும் கிரணங்களையும்
தீப்த்யா - ஒளியால்
ஜயதி - வென்று விடுகிறது
ஸத்வஸு - மஹான்களின் செல்வத்தை நக்ஷத்ரங்களை
ஹாரகாணாம் - அபஹரிப்பவர்களுக்கு
குவலய - பூமண்டலத்தில் வாழ்பவர்களுக்கு (குவளைப் பூவிற்கு)
ஆர்த்திக்ருதாம் - துன்பம் தரும் மக்களும்
ஸம்ஹீயஸாமபி - பலராக இருந்தாலும்
ப்ராய: - பெரும்பாலும்
ஜய: - வெற்றி
குத: ஸ்யாத் - எப்படித் தோன்றும்

அனைத்துலகத்தாயின் திருவடிகள் செம்மையில் இளஞ்சூரிய கிரணங்களின் ஒளியிலும் உயர்ந்தவை என்பது

சுலோகத்தின் முக்கிய கருத்து. இக்கருத்தைத் தெரிவிக்கும் சொல்லமைப்பு முறையிலிருந்து, இரண்டு கால்களால், கிடைக்கும் துன்பத்தை ஆயிரம் அடிகளாலும் தாங்க முடியவில்லை என்ற கருத்து உள் பொருளாகக் கிடைக்கின்றது. இவ்வுட் பொருளை நிலைப்படுத்த வந்தது தீமை விளைவிப்பவர் ஆயிரமாயிரமாகச் சேர்ந்தாலும் நன்மை செய்யும் சிலரை வெற்றி கொள்ள முடியாது என்ற நீதி.

பாதம் என்ற சொல் கால், கிரணம் என்ற இரு பொருள்களையும் உடையது. உலக மாதாவின் இரு பாதங்கள் - திருவடிகள் - ஸூர்யனின் ஆயிரக்கணக்கான பாதங்களை - கிரணங்களைத் தமது ஒளியால் வென்று விடுகின்றன. ஸூர்யன் உதிக்கும் போது அவன் வெளியே வருவதற்கு முன் வானத்தில் புலப்படும் அவன் கிரணங்களின் செம்மை மிக உயர்ந்திருக்கும். அதனிலும் சிறந்தது தாயின் திருவடி ஒளி என்கிறார் 'தே பாதத்வயீ பாத ஸஹஸ்ர மபி ஜயதி' என்ற அடியால் இக்கருத்தை வெளியிடுகிறார். இதிலிருந்து உமது இரண்டு கால்களால் உண்டாகும் துன்பத்தை ஸூர்யன் தனது ஆயிரம் கால்களாலும் தாங்க முடியவில்லை. என்ற கருத்து உள்ளுறை பொருளாகக் கிடைக்கின்றது இக்கருத்தை நிலைப்படுத்த வந்தது பங்கஜஸம்பாத என்ற மூன்றாமடி. ஸூர்யனது ஒளி நக்ஷத்ரங்களைக் கண்ணுக்குப் புலப்படாமல் மறைத்து விடுகிறது. குவளைப் பூவை குவியச் செய்து விடுகிறது. இப்படி நக்ஷத்ரம் போன்ற ஸத்துக்களின் செல்வமாம் ஒளியை அபஹரிப்பவர்களுக்கும் வலயத்துக்கும் பூ மண்டலத்துக்கும் துன்பம் விளைவிப்பவர் பல்லாயிரவராயினும் அவர்கள் அரக்கர் போன்றவராவர். எனவே, இத்தகையவர்களுக்கு வெற்றி எங்காவது எப்போதாவது கிடைத்தால் கிடைக்கலாம். பெரும்பாலும் கிடைக்காது.

லக்ஷ்மியின் திருவடிகளோவெனின் ஸத்வஸு தாயியாக - நற்செல்வங்களைத் தருபவையாக இருக்கின்றன. ஸூர்ய கிரணம் ஸத்வஸுஹாரியாக இருக்கிறது. இதே போல் திருவடிகள்கு வலய - ஆர்த்தி பூமண்டலத்தில் வாழ்பவரின் துன்பத்தை அபஹரிப்பனவாகவும் கிரணங்கள் குவளைக்குத் துன்பத்தைத் தருவனவாகவும் உள்ளன. திருவடிகள் தர்மத்தைச் செய்வனவாகவும் கிரணங்கள் அதர்மத்தைச் செய்வனவாகவும் உள்ளமை வெற்றி தோல்விகளுக்குக் காரணமாயின என்கிறார்.

नवपल्लवादपि कोमलं ते न वन्द्यते कश्चरणारविन्दम् ।
शनैश्शनैर् दृषदं यदम्ब स्पृशन् ससाध्वसं भगवान् विवाहे ॥

நவபல்லவாதபி கோமலம் தே ந வந்த்யதே கஶ்சரணாரவிந்தம்
ஶனைஶ்ஶனைர்த் த்ருஷதம் யதம்ப ஸ்ப்ருஶந் ஸஸாத்வஸம் பகவாந் விவாஹே ॥

தே அம்ப - தாயே

நவ - புதிய

பல்லவாதபி - முளையை விட

கோமலம் - மென்மையான

தே சரணாரவிந்தம் உமது திருவடி தாமரையின

க: ந வந்த்யதே - எவன் துதிப்பதில்லை

பகவாந் - ஸ்ரீ நிவாஸன்

விவாஹே - உன் கல்யாணத்தில்

யத் - எத்திருவடிகளை

ஸஸாத்வஸம் - பயத்துடன்

ஸ்ப்ருஶந் - தொட்டுக் கொண்டு

த்ருஷதம் - அம்மியின்மீது

ஶனைஶ்ஶனைத் - நிதானமாக

அழுத்தும் செய்தாரே !

தாயின் திருவடிகள் அப்போதுதான் விதையில் முளைத்துள்ள முளையைக் காட்டிலும் மென்மை வாய்ந்தவைகளாம். இத் திருவடிகளைப் போற்றாதவர் உலகில் எவரேனுமுண்டோ ? உமதடிகளின் மென்மையை அறிந்த ஸ்ரீநிவாஸன் உமது கல்யாணத்தில் லாஜஹோமத்தின் போது அம்மி மிதிப்பதற்குத் தம் கையால் மிக பயத்துடன் தொட்டுக் கொண்டனரே என்றார். பிடிக்கவே இல்லை. கல்யாணத்தில் கல்யாணப் பெண்ணின் காலை அம்மி மேல் தூக்கி வைக்கச் சொல்லி சாஸ்த்ரம் விதித்துள்ளது. ஆகவே அதைக் கையால் பிடிப்பதொடன்றிப் பாறை மீதும் வைத்தால் கால்கள் என்னவாகுமோ என்ற பயமாம். ஆகவே பயத்தோடு நிதானமாகவும் தொட்டுக் கொண்டும் சென்றார். ஆகவே உனது திருவடிகளை பகவானே போற்றினாரென்பது.

शुभतरलावण्यसुकुमारतनं जगतां
जननि शुचिद्विजैः श्रितमिदं पदमास्यमपि ।
परमियती भिदा प्रथममभ्युदयं दधता
त्वदिमकला समं हिमकला चरमं च रमे ॥

ப்ராப்தராகமலக்ஷ்மாஸ்பதமப்ஜலக்ஷ்மபதம் ஜகதாம்
ஜநநி பாபநிர்விலேஷை: ச்ரிதம் பதமாஸ்யமபி
பரமியத் பிதா ப்ரதமமப்யுதயம் தததா
த்வஹிமருசா ஸமம் ஹிமருசா ஸமம் ச ரமே 215

ஜகதாம் ஜநநி ரமே - உலகங்களுக்கெல்லாம் தாயான ரமையே!

பதம் - உமது திருவடி

ஆஸ்யம் - முகம் என்றவிரண்டும்

காந்த - மிகவுயர்ந்த

ராகம் - செம்பஞ்சுக் குழம்பால் பூசப்பட்டதாயும்

கம்ர - அழகிய

தால அக்ஷம் ச - சக்ரமான கண்களை உடையதாயுள

அப்ஜ - தாமரையின

லக்ஷ்மாஸ்பதம் - லக்ஷ்மிக்கு இருப்பிடமாகவும் உள்ளது

பாபநிர்விலேஷை: - குற்றமற்ற ப்ராம்மணர்களால் வேண்டப்பட்டதாய்

ச்ரிதம் - ஆஸ்ரயிக்கப்படுகிறது

பரம் து - ஆனால்

ப்ரதமம் - முதலில் சொன்ன திருவடி

அப்யுதயம் தததா - உதித்தெழும்

அஹிமருசா - ஸூர்யனுடன்

ஸமம் - ஒப்புமை உடையதாயுள்ளது

இதரத்து - இரண்டாவதான முகமோவெனில்

அப்யுதயம் தததா - பதினாறு கலைகளுடன் நிறைந்த

ஹிமருசா - சந்த்ரனோடு

ஸமம் - ஒத்திருக்கின்றது

இயத் பிதா - இதுவே வேற்றுமை

முகத்தாமரை சந்த்ரனோடும் திருவடித்தாமரை, ஸூர்யனோடும் ஒத்திருக்கின்றன. இத்துணையே வேறுபாடு. மற்றவைகளான தாமரை போல் சிவந்திருத்தல் முதலியவற்றில் ஒத்துள்ளன என்கிறார். சிலேடைச் சொற்களால் இரண்டிற்குமுள்ள ஒப்புமைகளைக் கூறியுள்ளார் 215

प्रदेहि यः पादरुचिं तवाग्र्यां तमिन्दिरे द्युमणेरन्यमाहुः ।
दृष्टान्तमत्र प्रतिबिम्बदृष्टिमुपन्तमादित्यमुदाहरामः ॥

ப்ரதேஹி ய: பாதருசிம் தவாக்ர்யாம் தமிந்திரே த்யுமணேரந்யமாஹு: ।
த்ருஷ்டாந்தமத்ர ப்ரதிபிம்பத்ருஷ்டிமுபந்தமாதித்யமுதாஹராம: ॥

ஹே இந்திரே - இலக்ஷ்மியே!

ய: - எவனொருவன்

அக்ர்யாம் - உயர்ந்த இடத்தை அடைவதற்கு வழி வகுப்பதாயும் உயர்ந்ததாயுமுள்ள

தவ - உனது

பதருசிம் - திருவடிகளின் பக்தியை திருவடிகளின் காந்தியை

ப்ரத்வேஷ்டி - நிந்திக்கிறானோ

தம் - அவனை

நாலோகநீயம் - பார்க்கக் கூடாதவனாக

ஆர்யா: - பெரியோர்கள்

அத்ர - பார்க்காததைச் சொல்வதில்

ப்ரதிஷித்த நிருக்ஷ்யம் - காணக் கூடாதவன் என நிஷேதிக்கப்பட்ட

உத்யந்தம் - உதித்தெழும்

ஆதித்யம் - சூரியனை

உதாஹரந்தி: - உதாஹரணமாகக் கூறுகிறோம்

அனைத்துப் பதவிகளிலும் உயர்ந்த பதவி ஸ்ரீ வைகுண்டம் என்ற பதவி. அப்பதத்தை அடைவதற்குக் காரணமாக இருப்பது பிராட்டியின் திருவடிகள். ஸ்ரீ ப்ரபத்தி செய்தபின்பே பகவானிடம் ப்ரபத்தி செய்வர். ஆகவே உயர்ந்த பதமான பரமபதத்தை அடைய ஸ்ரீயின் திருவடி காரணமாயிற்று. அத்தகைய திருவடிகளையும் அத்திருவடிகளின் பக்தியையும் எவன் நிந்தனை செய்கிறானோ அவன் முகத்தைப் பார்ப்பதும் பாபத்தை விளைவிக்குமாகையால் அவன் முகத்திலும் விழிக்கக் கூடாதென்பர் பெரியோர். இதற்குத் தக்க உதாஹரணம் சூர்யனேயாவான். அவன் உன் திருவடிகளின் செம்மையை பொறாதவன் போல் தானும் சிவப்பாக எழுகிறான். எனவே தான் नेक्षेतोद्यन्तमादित्यम् ॥ உதித்தெழும் சூர்யனை காணாதே எனப் பெரியார் தடை செய்துள்ளனர் என்கிறார்.

கல்யாணம் செய்து கொள்வதற்கு முன் வ்ரதம் செய்து கொண்ட ஸ்நாதக ப்ரஹ்மசாரி ஸூர்யனைப் பார்க்கக் கூடாது என மேலே குறித்த வாக்யத்தால் தடை செய்யப்பட்டுள்ளது. அதைக் கவி தமக்கேற்ப கற்பித்துக் கொண்டார்.

न वर्णतः केवलमीप्सितार्थदानादपि त्वच्चरणौ सुरागौ ।
श्रियैव नोदञ्चितपद्मजातौ इमौ जगत् पूज्यतयापि मातः ॥

ந வர்ணத: கேவலமீப்ஸிதார்த்த-
தாநாதபி த்வச்சரணௌ ஸுராகௌ ।
ச்ரியைவ நோதஞ்சித பத்மஜாதௌ
இமௌ ஜகத் பூஜ்யதயாபி மாத: ॥

ஹே மாத: - தாயே
த்வத் சரணௌ - உமது திருவடிகள்
வர்ணத: - கேவலம் நிறத்தால் மட்டும்
ந ஸுராகௌ - செம்மையானவை அல்ல
ஈப்ஸிதார்த்த - அவ்வ விரும்பிய பொருளை
தாநாதபி - வழங்குவதாலும்
ஸுர - அகௌ - தேவருலகமரமாம்
இமௌ - இத்திருவடிகள்
ச்ரியைவ - சோபையாலேயே
உதஞ்சித - பத்ம - ஜாதௌ - வெற்றி கண்ட தாமரையின் கூட்டத்தை உடையவைகள்
ந - இல்லை (ஆனால்)
ஜகத்பூஜ்யதயா - உலகிலுள்ள அனைவராலும் பூஜிக்கத் தக்கதாக இருப்பதால்
உத் - அஞ்சித - உயர்ந்த முறையில் பூஜித்த
பத்மஜாதௌ - நான்முகனையும் உடையதாக உள்ளன

சிவந்த வர்ணமுடைமை கற்பக மரம் போல் வேண்டிய தெல்லாம் வழங்கும் தன்மை, தாமரையையும் வென்ற சோபை உடைமை, நான்முகனால் பூஜிக்கப்பட்ட தன்மை ஆகியவை தாயின் திருவடிகளுக்கு உள்ளன என்கிறார்.

अजेन्द्रभर्गादिसुरव्रजेडिते भजे तव क्षीरधिजे पदाम्बुजे ।
व्यनक्ति सक्तं यदलक्तकं हरेरुरस्तटे तत्र परत्वमुच्चकैः ॥ २१९

அஜேந்த்ரபர்காதிஸுரவ்ரஜேடிதே
பஜே தவ க்ஷீரதிஜே பதாம்புஜே ।
வ்யநக்தி ஸக்தம் யதலக்தகம் ஹரே-
ருரஸ்தடே தத்ர பரத்வமுச்சகை: ॥

ஹே க்ஷீரதிஜே - பாற்கடலில் பிறந்தவளே
அஜ இந்த்ர பர்காதி - பிரமன், இந்திரன், சிவன் முதலான
ஸுரவ்ரஜ - தேவர் கூட்டத்தால்
ஈடிதே - துதிக்கப்பட்டவளே
தவ பதாம்புஜே - உமது திருவடித் தாமரைகளை
பஜே - சரணமாகப் பற்றுகிறேன்.
யதலக்தகம் - எத்திருவடிகளின் செம்பஞ்சுக் குழம்பு
ஹரே: - நாராயணனின்
உரஸ்தடே - மார்பில்
ஸக்தம் ஸத் - பூசப்பட்டதாய்
தஸ்ய - அந்த நாராயணனுடைய
பரத்வம் - மேன்மையை
வ்யநக்தி - புலப்படுத்துகின்றதோ

பிரமன், இந்த்ரன், சிவன் முதலான தேவர் கூட்டங்களால் அவ்வப்போது துதிக்கப்பட்டவர் இலக்குமி. தம் தம் காரியம் நிறைவு பெறும் பொருட்டு அவ்வப்போது இவர்கள் இலக்குமியை வணங்கியுள்ளனர். இத்தகைய பெருமை மிக்க உமது இணையடிகளை அடியேனும் வணங்குகிறேன். இவர்கள் உன்னை வணங்குவதில் மேன்மை யாதொன்றுமில்லை. உமக்கு மேன்மை தருவது வேறொன்றுளது. உமது திருவடியில் பூசப்பட்ட செம்பஞ்சுக் குழம்பு விளையாட்டு வேளையில் நாராயணன் திருமார்பில் பூசப்பட்டதால்தான் நாராயணன் அனைவரில் உயர்ந்தவளான ஸ்ரீயின் கணவன் என்ற குறியால்தான் **श्रियः पतित्वलिंग**த்தால்தான் பகவான் தேவதாந்தரங்களிலும் வேறுபட்டவனாகவும் அனைத்துலகுக்கும் காரணமாகவும் ஸித்திக்கிறான் என்பது கருத்து

उदारसन्देहमुखं वितन्वती मुदा रसं देहभृतां चिदात्मकम् ।
सदारविन्देऽप्युदयन्तमिन्दिरे पदारविन्दे हरतः श्रिया तव ॥ २१२

உதாரஸந்தேஹமுகம் விதந்வதீ
முதா ரஸம் தேஹப்ருதாம் சிதாத்மகம் ।
ஸதாரவிந்தே (அ)ப்யுதயந்தமிந்திரே
பதாரவிந்தே ஹரத: ச்ரியா தவ ॥

ஹே இந்திரே - இலக்குமியே

உதாரஸந்தேஹ முகம் - தேஹமே ஆத்மா என்பது போன்ற பரவலான அஜ்ஞானத்தைப் போக்குவதும்

சிதாத்மகம் ரஸம் - ப்ரஹ்மத்தைப் பற்றிய ஜ்ஞானத்தை

முதா - ஸந்தோஷத்துடன்

ஸதா விதந்வதீ - எப்போதும் செய்பவளான

தவ பதாரவிந்தே - உமது தாமரை போன்ற திருவடிகள்

தேஹப்ருதாம் - ஸர்வ ப்ராணிகளுக்கும்

உதார ஸந்தேஹ - இருளில் தோன்றும் ஸந்தேஹத்தை

முகம் - தமது ஒளியால் போக்குவதையும்

சிதாத்மகம் ரஸம் - கடம், படம், போன்ற நிச்சய ஜ்ஞானத்தை

விதந்வந்தம் - செய்பவனுமான

உதயந்தம் - உதித்தெழும் ஸூர்யனை

ச்ரியா - சோபையால்

ஹரத: - பரிஹாஸம் செய்கின்றன.

லக்ஷ்மியின் திருவடியில் எவனொருவன் பக்தியை செலுத்துகின்றானோ அவனுக்குள்ளதான தேஹமே ஆத்மா என்பது போன்ற மிக்க அஜ்ஞானத்தை அழிப்பதோடு அவனுக்கு பர ப்ரம்மத்தைப் பற்றிய உயர்ந்த ஜ்ஞானத்தைத் தந்து ஸந்தோஷத்தையும் தரவல்லது லக்ஷ்மியின் திருவடி பக்தி. இதே போல் இருளில் உள்ள பொருள்கள் கண்களுக்குப் புலப்படாத வரையில் அவைகளைப் பற்றிய அறிவு நமக்குத் தோன்றாது. ஸூர்யன் தமது கிரணங்களின் ஒளியால் அவ்விருளைப் போக்கி பொருள்களின் அறிவைத் தருகின்றான். இப்படி அறிவைத் தருதல் என்பது இரண்டுக்கும் பொதுவாக இருந்தாலும் ஸ்ரீயின் திருவடி தருமறிவு பகவானைப் பற்றிய தாகையால் அவ்வறிவு அளித்து அறிவின்மையையும் அழிக்கும்

வல்லமை வாய்ந்தது. அத்துடன் எல்லா ஸமயங்களிலும் தரவல்லது. அதற்கு இரவு பகல் என்ற வேறுபாடு கிடையாது. சூர்யன் தரும் அறிவோ வெளில் பகலில் மட்டுமே. ஆகவே அனைத்து மக்களுக்கும் அனைத்து அஜ்ஞானத்தையும் போக்கவல்ல ப்ரஹ்மத்தின் ஜ்ஞானத்தை எப்போதும் தரவல்ல உமது திருவடித் தாமரை ஒரு ஸமயம் உறுதியான அறிவை அளிக்கவல்ல உதய சூர்யனைத் தமது சோபையால் பரிஹஸிக்கின்றது என்பது கருத்து.

''उदार संदद्मुपं वितन्वती'' எனஸ்த்ரீலிங்கமாகத்தான் ச்லோகம் அமைந்துள்ளது. இருந்தும் அவ்வடியை ''उदार सन्देह मुपं वितन्वन्तं'' என லிங்கத்தையும் வேற்றுமையையும் மாற்றி சூர்யனிடம் அவ்வடி சேர்த்துக் கொள்ளப்பட்டது.

अपि नीरजस्फुरणहार्यहो रजः स्फुरणापहारि पदयोर्द्वयं तव ।
अपि हंसकप्रणयि धूतहंसकं गमनेन पद्मभवने विशोभते ॥ २२०

அபி நீரஜஸ்புரணஹார்யஹோ ரஜ:
ஸ்புரணாபஹாரி பதயோர்த்வயம் தவ ।
அபி ஹம்ஸகப்ரணயி தூதஹம்ஸகம்
கமநேந பத்மபவநே விசோபதே ॥

ஹே பத்மபவநே - தாமரையில் வாழ்பவளே!
தவ பதத்வயம் - உமது இரு திருவடிகள்
நீரஜஸ்புரணஹார்யபி - ரஜோ குணத்தின் பூரிப்பை அபஹரிக்காதிருந்தும்
ரஜஸ்புரணாபஹாரி - ரஜோ குணப் பூரிப்பை அபஹரிப்பதாகவும்
ஹம்ஸக - கால் தண்டைகளுடன்
ப்ரணயி அபி - நட்புடையதாக இருந்தும்
தூதஹம்ஸகம் - தண்டையை இழந்ததாக
விசோபதே - விளங்குகிறது (என்பது விரோதம்)
நீரஜ - தாமரையின்
ஸ்புரண - சோபையை
ஹாரி - அபஹரிக்கின்றது (எனப்பரிஹாரம்)
கமநே - நடையில்
தூத - வெற்றி கொண்ட
ஹம்ஸகம் - ஹம்ஸங்களை உடையதாக
விசோபதே - விளங்குகின்றது என்பது விரோத பரிஹாரம்.
விரோதாபாஸாலங்காரம்.

தாமரையில் வாழ்பவளே! உனது திருவடிகள் தாமரையை வென்றவைகளாயும் ரஜோ குணத்தால் தோன்றும் குற்றங்களை அழிப்பவையாயும் தண்டைகளால் அலங்கரிக்கப் பட்டவையாயும். வெற்றி கண்ட அன்ன நடையை உடையவையாயும் சிறப்புடன் விளங்குகின்றது என்பது கருத்து.

कौ चिदङ्घ्रिकमले तवाश्रितौ कंसहिंसनपुरन्ध्रि हंसकौ।
मञ्जुलैरखिलरञ्जकौ क्वणैर्मानसे विहरते मधुद्विषः ॥ २२१

கௌசிதங்க்ரிகமலே தவாஶ்ரிதௌ
கம்ஸஹிம்ஸநபுரந்த்ரி ஹம்ஸகௌ।
மஞ்ஜுலைரகிலரஞ்ஜகௌ க்வணை:
மாநஸே விஹரதே மதுத்விஷ: ॥

ஹே கம்ஸஹிம்ஸந புரந்த்ரி - கம்ஸனை அழித்தவனின் மனைவியே
தவ - உனது
அங்க்ரிகமலே - திருவடிகளாகிய தாமரைகளை
ச்ரிதௌ - அடைந்தவைகளும்
மஞ்சுளை: - அழகிய
க்வணை: - சப்தங்களால்
அகில - அனைவரையும்
ரஞ்சகௌ - மகிழ்விப்பவையாயும்
கௌசித் - மதிப்பற்றவைகளுமான
ஹம்ஸகௌ - தண்டைகள்
மதுத்விஷ: - மதுசூதனின்
மாநஸே - மனதில்
விஹரத: - விளையாடுகின்றன.

சதங்கைகளால் அலங்கரிக்கப்பட்ட பாதங்களின் அழகை பகவான் எப்போதும் த்யானித்துக் கொண்டிருக்கிறான் என்பது கருத்து.

மற்றுமோர் பொருள்

கண்ணன் மனைவியே உமது திருவடிகளாகிற தாமரைகளை சரணம் புகுந்தவர்களும் அழகிய தோத்திரத் தொனிகளால் அனைவரையும் மகிழ்விப்பவராயும் மதிப்பற்றவருமான ஸாத்விகர்கள் பகவானின் மனதை விடுவதில்லை என்ற கருத்தும் கூறலாம். இக்கருத்தில் ச்ரிதௌ என்ற சப்தத்துக்கு சரணம்

புகுந்தவர் என்ற அர்த்தமும் ஹம்ஸிகை என்ற பதத்துக்கு ஸந்யாஸிகள் என்ற பொருளும் கொள்ள வேண்டும்.

இதனால் தம்மைச் சரணம் புக்கவரிலும் லக்ஷ்மியை ஆச்ரயித்தவரிடம் பகவானுக்கு ப்ரீதி அதிகம் என்ற கருத்தும் கிடைக்கின்றது.

இன்னுமோர் கருத்து

செவிக்கினிய ஓசையால் ஸமஸ்தஜநங்களுக்கும் ஸந்தோஷத்தை விளைவிப்பனவும், திருவடியாகிய தாமரையில் வாழ்பனவுமான தண்டைகளாகிய ஹம்ஸ தம்பதிகள் மாதவன் மனமாகிய மாநஸஸரோவரில் விளையாடுகின்றன என்ற பொருளும் கிடைக்கின்றது.

राजच्छोभनखाञ्चितं शुभकरं राजीवराजीसुहृत्
पद्मे गाढतमोहरं तव पदं बालार्कबिम्बं च तत् ।
यद्यप्यम्ब समं तथापि विदितो भेदस्त्वियानेनयो-
रर्घ्यं संस्कृतमुत्तरस्य कलयन्त्याद्यस्य पाद्यं बुधाः ॥ २२२

ராஜச்சோபநகாஞ்சிதம் சுபகரம் ராஜீவராஜீஸுஹ்ருத்
பத்மே காடதமோஹரம் தவ பதம் பாலார்க்கபிம்பம் ச தத் ।
யத்யப்யம்ப ஸமம் ததாபி விதிதோ பேதஸ்த்வியாநேநயோ-
ரர்க்யம் ஸம்ஸ்க்ருதமுத்தரஸ்ய கலயந்த்யாத்யஸ்ய பாத்யம் புதா: ॥ 222

ஹே பத்மே! - பத்மையே!
ராஜச்சோப - நல்லொளியுடைய
நகாஞ்சிதம் - நகங்களை உடையதும்
ராஜச் சோபந - தமது ஒளியால் விளங்கும்
காஞ்சிதம் - ஆகாசத்தை அடைந்ததும்
சுபகரம் - மேன்மையைத் தருவதும்; கூடிய கிரணம் உடையதும்
ராஜீவராஜீ - தாமரைக் கூட்டத்துக்கு
ஸுஹ்ருத் - நண்பனாயும்
காடதமோஹரம் - போக்க வொண்ணாத ப்ரக்ருதி ஸம்பந்தத்தைப் போக்குவதும், அடர்ந்த இருளை அழிப்பதுமான
தவபதம் - உமது திருவடிகளும்
பாலார்க்கபிம்பம் - இளஞ்சூர்ய பிம்பமும்
யத்யபி ஸமம் - பெரும்பாலும் ஒப்பு உடையனவே

ததாபி - இருந்த போதும்
ஏதயோ: - இவ்விரண்டினுள்ளும்
இயாந் பேத: - இத்துணை வேறுபாடு
விதித: - அறியப்பட்டுள்ளது.
புதா: - பண்டிதர்கள்
ஸம்ஸ்க்ருதம் - மந்த்ரத்தால் பரிசுத்தமானதும், தர்ப நுனிகளை உடையதுமான
அர்க்யம் - அர்க்ய ஜலத்தை
உத்யதஸ்ய - உதயமாகும் ஸூர்யனுக்கு
கல்பயந்தி - மூன்று வேளைகளிலும் அளிக்கின்றனர்.
ஆத்யஸ்ய - திருவடிக்கு
பாத்யம் - பாத்ய தீர்த்தத்தை
கல்பயந்தி - அளிக்கின்றனர்.

பத்மாவதியே ! உமது திருவடியும் உதித்தெழும் இளஞ்சூர்யனும் பெரும்பாலும் ஒப்புமை உடையனவாக உள்ளன. உமது அடி இணை நல்லொளி மிக்க நகங்களை உடையனவாயுள, உதித்தெழும் சூர்யனும் தமது ஒளியால் விளங்கும் ஆகாயத்தை அடைந்துள்ளான். ஆக இருவரும் शोभनस्वामितர்களானவர்கள். உமது திருவடிகள் மக்களுக்கு சுபத்தைத் தருகின்றன. சூர்ய கிரணம் கூடியல்லாமலிருக்கிறது. ஆகவே இரண்டும் शुभकर ங்களாயின. कर கிரணம். தாமரைப் பூக்களின் ஒளி போல் திருவடியும் சிவந்த ஒளி உடைமையால் இருவரும் நண்பராயினர். இளஞ்சூர்யனைப் பார்த்ததும் தாமரை மலர்கிறது. எனவே தாமரைக்கும் நண்பனாயினன். முயன்றாலும் விட முடியாத வீடு, வாசல், மனைவி மக்கள் போன்ற ப்ரக்ருதி ஸம்பந்தத்தை அறுக்க வல்லது அடியிணை. அடர்த்த இருளை அழிப்பது இளஞ்சூர்யன். ப்ரக்ருதி, இருள் இவ்வகையில் இரண்டும் ஒப்புடையனவாயின. இருந்த போதிலும், சிறிது வேறுபாடும் காணப்படுகிறது. மஹான்கள் மந்த்ரத்தால் பரிசுத்தமாக்கப்பட்டதும் புஷ்பம், தர்ப நுனிகளுடன் சேர்ந்ததுமான "அர்க்யத்தை" உதித்தெழும் சூர்யனுக்கு அளிக்கின்றனர். திருவடிகளுக்கும் பாத்யம் அளிக்கின்றனர். சூர்யனுக்கு அர்க்யம் பிராட்டியின் திருவடிகளுக்கு பாத்யம். இத்துணையே வேற்றுமை. மற்றவை யாவும் ஒப்பு உடையனவே.

तव भगवति वन्दे दिव्यपादारविन्दे
सदसि यदभिषेकं शम्भुजम्भारिमुख्याः ।
स्वमकुटघटितस्वःशाखिनिष्यन्दपुष्प-
प्रसृमरमकरन्दैरन्वहं तन्वते ते ॥ २२३

தவ பகவதி வந்தே திவ்யபாதாரவிந்தே
ஸதஸி யதபிஷேகம் சம்புஜம்பாரிமுக்யா: ।
ஸ்வமகுடகடிதஸ்வ: சாகிநிஷ்யந்தபுஷ்ப-
ப்ரஸ்ருமரமகரந்தைரந்வஹம் தந்வதே தே ॥ 223

பகவதி - பகவானின் மனைவி
தவ - உமது
திவ்ய பாதாரவிந்தே - உயர்ந்த திருவடித் தாமரைகளை
வந்தே - ஸேவிக்கின்றேன்
தே - மூவுலகுக்கும் தலைவராகப் ப்ரஸித்தர்களான
சம்புஜம்பாரிமுக்யா: - ருத்ரன் இந்திரன் போன்றவர்கள்
ஸதஸி - உமது ஸந்நிதி தேவ கோஷ்டியில்
அன்வஹம் - ஒவ்வொரு நாளும்
ஸ்வமகுட - தங்கள் தலைகளில்
கடித - வைக்கப்பட்டுள்ள
ஸ்வ: சாகி - கற்பக வ்ருக்ஷங்களிலிருந்து உண்டான
புஷ்ப - பூக்களிலிருந்து
ப்ரஸ்ருமர - வழியும்
மகரந்தை: - தேன்களால்
யதபிஷேகம் - எத்திருவடிகளின் அபிஷேகத்தை
தந்வதே - செய்கின்றனரோ

ருத்ரன் இந்திரன் முதலிய தேவர் மூவுலகங்களிலும் ப்ரஸித்தமானவர். மிகப் பழமையானவருமாவார். இவர்கள் வேங்கட மலையிலுள்ள உமது ஸந்நிதியில் திகழும் தேவர்களின் கோஷ்டியில் தங்கள் சிரங்களில் சூடியுள்ள தேவமரமான கற்பகத்தின் பூக்களிலிருந்து வழியும் தேன்களால் ஒவ்வொரு நாளும் உமது திருவடிகளை அபிஷேகம் செய்கின்றனர். அத்தகைய உமது திருவடித் தாமரைகளை ஸேவிக்கிறேன்

प्रणतिषु तव पुण्यं जन्म आसीत् पुरारेः
प्रणिपतनत एकं लोकमातस्त्वदङ्घ्र्योः ।
चिरविरहकृशस्य स्वावतंसामृतांशो-
स्तव नखमयतारायोजनेन द्वितीयम् ॥ २२४

ப்ரணதிஷு தவ புண்யத்வந்த்வமாஸீத் புராரே:
ப்ரணிபதநத ஏகம் லோகமாதஸ் த்வதங்க்ர்யோ: |
சிரவிரஹக்ருஶஸ்ய ஸ்வாவதம்ஸாம்ருதாம்ஶோ:
தவ நகமயதாராயோஜநேந த்விதீயம் || 224

லோகமாத: - மூவுலகங்களுக்கும் தாயே !
புராரே: - சிவன்
த்வதங்க்ர்யோ: - உமது திருவடிகளில்
ப்ரணிபதநத - ஸாஷ்டாங்கமாக ஸேவிப்பதால்
ஏகம் - முதல் புண்யமும்
சிரவிரஹ - நீண்ட நாள் பிரிந்ததால்
க்ருஶஸ்ய - இளைத்த
ஸ்வாவதம்ஸ - தன் தலையில் ஆபரணமாயுள்ள
அம்ருதாம்ஶோ: - சந்த்ரனுக்கு
தவ நகமய - உமது திருவடி நகங்களாகிய
தாரா யோஜநேந - நக்ஷத்ரங்களுடன் சேர்வதால்
த்விதீயம் - இரண்டாம் புண்யம் என
புண்யத்வந்த்வ - இரண்டு ஸுக்ருதங்கள்
ஆஸீத் - உண்டாயின

அகிலத்துலகத் தாயான லக்ஷ்மியை சிவன் ஸாஷ்டாங்கமாகத் தரையில் விழுந்து ஸேவிக்கிறான். இப்படிச் சேவித்தால் அவன் பெரும் பயன் பெற்றான். இது ஓர் லாபம் சிவனுக்கு. இவன் ஸேவித்தபோது அவன் தலையில் சூடியுள்ள பிறைச் சந்த்ரனுடன் தான் ஸேவித்தான். அனைத்து நக்ஷத்ரங்களுக்கும் கணவன் சந்த்ரன். அவனை நீண்ட நாளாகத் தன் தலையில் வைத்துக் கொண்டதால் வெகு நாளாகத் தம் மனைவிகளை விட்டுப் பிரிந்தவனாகி விட்டான் அவன். அதனால் அவன் உடல் அடியோடு இளைத்து விட்டதாம். பிறையன்றோ தலையிலிருப்பது ! அது மெல்லியதாகத்தானே இருக்கும். அதனால் இப்படியொரு கற்பனை. தாயின் திருவடி விரல்களிலுள்ள நகங்கள் யாவும் நக்ஷத்திரங்களே. சிவன் ஸேவிக்கும் போது, அவன் தலை அன்னையின் கால்களில் பட்டதால் தன நக்ஷத்ரங்களாகிய தமது மனைவிகளுடன் பிறைச் சந்த்ரனும் சேர்ந்தவனாயினன். இது இரண்டாவது பயன். ஆக இப்படி இரண்டு பயன்கள் கிடைத்தன சிவனுக்கு. உலகில் எல்லோரும் அன்னையை ஸேவித்தல் என்ற ஒரு பயனையே பெறுவர். சிவன் உயர்ந்தவனானமையின் அதற்கேற்ப இரு பயன் பெற்றான்.

चरणनलिनयुग्मं संसृतिक्लेशसिन्धोः तव हरिसखि सन्तस्तारकं सङ्गिरन्ते ।
इदमुचितमवैमो येन तत्संश्रितानां ततिरपि च नखानां तारकत्वं बिभर्ति ॥

சரணநலிநயுக்மம் ஸம்ஸ்ருதிக்லேசஸிந்தோஸ்-
தவ ஹரிஸகி ஸந்தஸ்தாரகம் ஸங்கிரந்தே ।
இதமுசிதமவைமோ யேந தத்ஸம்ச்ரிதாநாம்
ததிரபி ச நகாநாம் தாரகத்வம் பிபர்த்தி ॥ 225

ஹே ஹரிஸகி - நாராயணன் மனைவி
ஸந்த - பெரியோர்கள்
தவ - உமது
சரணநலிநயுக்மம் - இரு திருவடித் தாமரைகளையும்
ஸம்ஸ்ருதிக்லேச ஸம்ஸாரத்துன்பமாகிய
ஸிந்தோ: - கடலை
தாரகம் - கடத்துவிப்பதாக
ஸங்கிரந்தே - சொல்லுகின்றனர்
இதம் - இப்படிச் சொல்வதை
உசிதம் - மிகவும் நியாயமாக
அவைம - நாம் எண்ணுகின்றோம்
யேந - எதனால்
தத் - அவ்விரண்டு திருவடிகளை
ஸம்ச்ரிதாநாம் - பற்றியுள்ள, சரணமாக அடைந்த
நகாநாம் - நகங்களுடைய பாகவதர்களுடைய
ததிரபி - வரிசையும்
தாரகத்வம் - நக்ஷத்ரமாம் தன்மையையும் ஸம்ஸாரக் கடலைக் கடத்துவிக்கும் தன்மையையும்
பிபர்த்தி - தரிக்கின்றனவோ

நாராயணன் பத்நியே ! வியாஸர் பராசரர் போன்ற ஸத்புருஷர்கள் உமது திருவடி இணைகள் ஸம்ஸாரமாம் துன்பக் கடலைக் கடத்துவிப்பன எனச் சொல்லுகின்றனர். இது மிகவும் பொருத்தமே. ஏனெனில் அத்திருவடி இணைகளைப் பற்றியுள்ள நகங்கள், பாகவதர் என்ற இரு வரிசைகளும் தாரகத்வம் - நக்ஷத்ரமாகும் தன்மையையும் ஸம்ஸாரத்தைக் கடத்துவிக்கும் தன்மையையும் தரிக்கின்றனவே. அதனால் அது பொருத்தமே திருவடிகளை பற்றியவர்க்கே தாரகத்வம் உண்டாகின்றதெனின் திருவடிக்குக் கேட்க வேண்டுமோ என்பது கருத்து.

अनिशं प्रकाशमधिगन्तुमिच्छया तव भाति सिन्धुतनये पदाम्बुजम् ।
अधिगम्य मूलमभवन् यतो नरास्तत एव खं च तदमूलमस्थलम् ॥

அதிசம் ப்ரகாசமதிகந்துமிச்சயா
தவ பாதி விந்துதநயே பதாம்புஜம் ।
அதிகம்ய நூநமபவந் யதோ நகா:
யத ஏவ கம் ச ததபூந்நபஸ்தலம் ॥ 226

ஹே விந்துதநயே - பாற்கடல் பெண்ணே !
பாதி - நக்ஷத்ரங்கள்
அதிசம் - எல்லாக் காலங்களிலும்
ப்ரகாசம் - ஒளியை
அதிகந்தும் - அடைவதற்கு
இச்சயா - விருப்பத்தால்
தவ - உமது
பதாம்புஜம் - திருவடித் தாமரைகளை
அதிகம்ய - அடைந்து திருவடிகளில் சரணமடைந்து
யத: - எக்காரணத்தால்
ந காநி - ஆகாசம் ஸம்பந்தம் அற்றவைகளாய்
நகாநி - நகங்களின் வடிவமுடையவைகளாய்
அபவந் - ஆயினவோ
அத: - ஆகையினால்தான்
தத் - நக்ஷத்ரத்துடன் சேர்ந்த இடமாக
ந கம் - ஆகவில்லை - நபஸ்தலம் என்ற பெயர் உடையதாயிற்று

"ந" என்பதும், "பம்" என்பதும் 'கம்' என்பதும் வடமொழியில் ஒரே எழுத்தாக இருப்பினும் அவை முறையே இல்லை என்ற பொருளையும் நக்ஷத்ரம் என்ற பொருளையும், ஆகாசம் என்ற பொருளையும் தருவன. "நபஸ்தலம்" என்ற சொல்லுக்கு ஆகாசம் என்பது பொருள். இச்சொற்களை அடிப்படையாகக் கொண்டு கவி தமது திறமையை வெளியிட்டுள்ளார்.

நக்ஷத்ரங்கள் இரவில் மட்டுமே ப்ரகாசிக்கின்றன. பகலில் ப்ரகாசிப்பதில்லை. இதை விடுத்து இரவு பகல் என்ற வேறுபாடின்றி எப்போதும் ஒளி விட வேண்டும் என எண்ணினவாமவை. அதற்காகத் தாயின் திருவடிகளை அடைந்து நகங்களாக மாறினவாம். நகங்கள் நக்ஷத்ரங்கள் போல் ஒளிர்கின்றன என்பது கருத்து. இதையே நக்ஷத்ரங்கள் தாயின் திருவடிகளை "தாங்கள் எப்போதும் ஒளிர வேண்டும்" என்பதற்காகச் சரணமடைந்தன என்கிறார் கவி. இப்படி நக்ஷத்ரங்கள் எல்லாம் தாயின் அடிகளைப் பற்றி விட்டதால் ஆகாசம் நக்ஷத்ரமற்றதாக ஆகிவிட்டது. நக்ஷத்ரங்களும்

நகங்களாக மாறிவிட்டன. ந + பஸ்தலம் ஆகி விட்டது-பஸ்தலமாக - நக்ஷத்ரம் இருக்கும் இடமாக 'ந' இல்லாததாயிற்று. ஆகாயத்துக்கு நப: என்பது வடமொழிச்சொல். அதை ந + ப என இரண்டாகப் பிரித்து இப்படி வேடிக்கையாகக் கூறியுள்ளார்.

मरालिकेड्याप्यमरालिकेड्या सुरद्रुमश्रीरपि विद्रुमश्रीः ।
खरांशुकान्ता नखरांशुकान्ताप्यम्ब द्वयीयं तव चित्रमङ्घ्र्योः ॥ २२७

மராலிகேட்யாப்யமராலிகேட்யா
ஸுரத்ருமஶ்ரீரபி வித்ருமஶ்ரீ: ।
கராம்ஶுகாந்தா நகராம்ஶுகாந்தா
ப்யம்ப த்வயீயம் தவ சித்ரமங்க்ர்யோ: ॥ 227

தவ அங்க்ர்யோ: த்வயீ - உமது இரு திருவடிகள்
மராளிகா - அன்னப் பேடுகளால்
ஈட்யாபி - கொண்டாடப்பட்ட போதும்
அமராளி கேட்யா - அன்னப்பேடுகளால் கொண்டாடப்பட்டதாக இல்லை என்பது விரோதம்
அமர ஆலி - தேவர் கூட்டத்தால்
க - நான்முகனாலும்
ஈட்யா - கொண்டாடப்படுவது என்பது பரிஹாரம்
ஸுரத்ரும - பாரிஜாதம் முதலான தேவர் மரங்களின்
ஶ்ரீரபி - தானம் செய்யும் சம்பந்தத்தைப் பெற்றிருந்த போதும்
வித்ருமஶ்ரீ: - தேவ மரங்களின் தாந சம்பந்தத்தை இழந்துள்ளது என்பது விரோதம்
வித்ரும - பவழம் போன்ற
ஶ்ரீ: - சோபையை உடையதென்பது பரிஹாரம்
கராம்ஶ - இளஞ்சூரியன் போல்
காந்தாபி - அழகியதாக இருப்பினும்
நகராம்ஶுகாந்தா - சூரியன் அழகைப் பெற்றிருக்கவில்லை என்பது விரோதம்
நகராம்ஶ - நகங்களின் ஒளியால்
காந்தா - அழகாக இருக்கிறது என்பது
சித்ரம் ஆச்சரியம்

பெண்களின் நடைக்கு அன்னப்பறவைகளின் நடையை உவமையாகக் கூறுவது கவிமரபு. ஆனால் தாயின் நடையழகு அன்னங்களால் புகழப்படுவதாக உள்ளதாம். அதனினும் உயர்ந்தது என்பது கருத்து. விரோதாபாஸாலங்காரம்.

चरणाविमौ हि करुणानिधे यतस्तरुणारुणप्रकिरणानुकारिणौ ।
अनुविन्दतस्तदरविन्दबन्धुतामपि साधुचक्रबहुमान्यतां रमे ॥ २२८

சரணாவிமௌ ஹி கருணாநிதே யதஸ்-
தருணாருணப்ரகிரணானுகாரிணௌ ।
அநுவிந்ததஸ்ததரவிந்தபந்துதா-
மபி ஸாதுசக்ரபஹு-மாந்யதாம் ரமே ॥ 228

கருணாநிதே - தயைக்கு இருப்பிடமான
ரமே - லக்ஷ்மியே!
இமௌ சரணௌ - உமது திருவடிகள்
யத: - எக்காரணத்தால்
தருணாருண - இளஞ்சூர்யனின்
ப்ரகிரண - முதல் கிரண ஒளியை
அநுகாரிணௌ - ஒத்திருக்கின்றனவோ
தத் - அதனால்
ஸாது - நன்கு
சக்ரபஹு-மாந்யதாம் - சக்ரவாகப் பறவைகளால் கொண்டாடப்படும்
ஸாதுசக்ர - வித்வான்களின் கூட்டத்தால்
பஹு-மாந்யதாம் - வணங்கப்படும் தன்மையை.
அநுவிந்தத: - அடைந்துள்ளன

கருணையின் இருப்பிடமே! உமது திருவடிகளின் ஒளி இளஞ்சூர்யனிலிருந்து எழும் முதல் ஒளியை எதனால் ஒத்திருக்கின்றனவோ அதனால் தாமரையை மலர்விப்பதோடு, அதனோடு தோழமை கொண்டுள்ள இரவில் பேடையைப் பிரிந்த சக்ரவாகங்களால் கொண்டாடத் தக்கவையாயும் புலவர்களால் வந்தனம் செய்யத்தக்கவையாயும் உள.

पदमाश्रितस्तव पयोधिकन्यके विपदं न जातु भजतीति साम्प्रतम् ।
अपि तत्परागमधिमौलि धारयन्नपरागतां व्रजति जन्तुरद्भुतम् ॥ २२९

பதமாச்ரிதஸ்தவ பயோதிகந்யகே
விபதம் ந ஜாது பஜதீதி ஸாம்ப்ரதம் ।
அபி தத்பராகமதிமௌலி தாரயந்-
நபராகதாம் வ்ரஜதி ஜந்துரத்புதம் ॥ 229

ஹே பயோதிஸுதயே - கடல் பெண்ணே
த்வத்பதமாச்ரித - உமது திருவடிகளைப் பற்றியவன்
ஜாது - ஒரு போதும்
விபதம் - பதவி இல்லாமையை ஆபத்தை
ந ப்ருதீதி - அடைதலில்லை என்பது
ஸாம்ப்ரதம் - யுக்தமே
கதிது - ஆனால்
அதிமௌலி - தலையில்
த்வத்பராகம் - திருவடித்துகளை
தாரயந் - தாங்கிக் கொண்டிருப்பவன்
அபராகதாம் - துகளில்லாத்தன்மையை
வைராக்யத்தை
வ்ரஜதீதி யத் - அடைகிறானென்பது
ஆச்சர்யம் - விந்தையாம்

பாற்கடல் பெண்ணே! உமது பதத்தைப் பற்றியவன், பதமில்லாதவனாக ஆவனோ! பதத்தை உடையவன் எப்படிப் பதவி இல்லாதவன் ஆவன்? விரோதமன்றோ அது! ஆபத்தற்றவனாவன் என்பது கருத்து. இதில் எவ்வித ஆச்சர்யமுமில்லை. தமது தலையில் உமது பாதத்துகளை தாங்கி இருப்பவன் அபராகதாம் - பாதத்துகள் அற்றவனாக ஆகிறான் என்பது ஆச்சரியம். வைராக்யம் உடையவனாக ஆகிறான் என்பது உண்மைப்பொருள்.

श्रितः परागं जरठः शशाङ्को दृष्टो ननत्र्यम्बकशीर्षगश्रीः ।
स्पृशन्नपि त्वत्पदयोः परागं न जातु तारुण्यमहो जहाति ॥ २३०

ச்ரித: பராகம் ஜரட: சசாங்க:
த்ருஷ்டோ நதத்ர்யம்பகசீர்ஷகஸ்ரீ: ।
ஸ்ப்ருசந்நபி த்வத்பதயோ: பராகம்
ந ஜாது தாருண்யமஹோ ஜஹாதி ॥ 230

ஹே ஸ்ரீ: - லக்ஷ்மியே!
சசாங்க: - சந்திரன்
பராகம் - உம் திருவடித்துகளை
அல்லது மகிமையை
ச்ரித: - தரிப்பவனாக,
அடைந்தவனாய்
ஜரட: - கிழவனாக, அஸ்தமிக்கப்
போகிறவனாக
த்ருஷ்ட: - காணப்பட்டான்
நத: - உமது திருவடிகளில் தமது
தலையை வைத்துள்ள
த்ர்யம்பக - சிவனுடைய
சீர்ஷக: - தலையிலுள்ள
சசாங்கஸ்து - சந்திரனோவெனில்
த்வத்பதயோ: - உமது திருவடிகளின்
பராகம் - துகளை, அல்லது மகிமையை

ஸ்ப்ருசந்நபி - அடைந்த போதும்
ந ஜஹாதி - விடுவதில்லை
ஜாத்வபி - ஒரு பொழுதும்
அஹோ - ஆச்சரியம்
தாருண்யம் - யௌவநத்தை. மூன்று நான்கு கலைகளை மட்டும் உடையவை

கிழக்கில் உதயகிரி என்ற பெயருடைய ஒரு மலையும் மேற்கில் அஸ்தமநகிரி என்ற பெயருடைய ஒரு மலையும் இருப்பதாகவும், ஸூர்ய சந்த்ரர்கள் உதயமாகும் போது உதயகிரியிலிருந்து தோன்றுவதாகவும் இவ்விருவரும் மறையும் போது அஸ்தமய கிரியில் மறைகின்றனர் என்பதும் மக்கள் கொள்கை. அஸ்தமய மலைக்கு பராகம் என்ற பெயரும் உண்டு. அதே போல 'பராகம்' என்ற சொல்லுக்கு மண் துகள் என்ற பொருளுமுண்டு. இவ்விரு பொருள்களை அடிப்படையாகக் கொண்டு கவி சிலேடையில் பேசுகிறார். லக்ஷ்மீ! ஆகாயத்திலுள்ள சந்த்ரன் பராகத்தை - திருவடித்துகளை - தரித்ததால், அஸ்தமயமலையை அடைந்ததால் கிழவனாகி விட்டான். அஸ்தமிக்கப் போகிறவனாக ஆகி விட்டான் என்பது கருத்து. ஆனால் சிவன் தலையிலுள்ள சந்த்ரனோ வெனில், சிவன் உமது திருவடிகளில் தம் தலையை வைத்து வணங்கும் போது உமது திருவடிகளின் துகளை - அஸ்தமய மலையை அடைந்த போதும், ஜரடனாகக் - கிழவனாக - அஸ்தமிக்கப் போகிறவனாக ஆகாது தாருண்யத்துடன் - யௌவனப் பருவத்துடன் - விளங்குகிறான். இப்படி உமது திருவடிப் பராகத்தை அடைந்த ஒரு சந்த்ரன் கிழவனாகி மறைவதும், மற்றொரு சந்த்ரன் அதே பராகத்தை அடைந்த போதும் கிழவனாகாது தருணனாக - யௌவந பருவம் உடையவனாக விளங்குகிறான் என்பதும் ஆச்சர்யம் என்கிறார். சிவன் தலையிலுள்ள சந்த்ரன் பிறைச் சந்த்ரன். ஆகையால் மூன்று நான்கு கலைகளை மட்டும்தான் பெற்றிருப்பவன் என்பது கருத்து. தருணன் என்பதற்கு விரோதாபாஸாலங்காரம்.

सुरादिमान्यं विधुतोपसर्गं शुभावहं ते मधु चारुवर्णम् ।
पदं रमे यः प्रणमेदपेक्षा दूरादपास्यत्यपरमापदं सः ॥ ३११

ஸுராதிமான்யம் விதுதோபஸர்கம்
ஸ்வாபாஸஹம் தே ம்ருது சாருவர்ணம் |
பதம் ரமே ய: ப்ரணமேஜ்ஜபேத்வா
தூராதபாஸ்யத்யரமாபதம் ஸ: || 231

ஹே ரமே - இலக்குமியே!
ஸுராதி - தேவர் முதலியவர்களால்
மான்யம் - கொண்டாடத்தக்கதும்
ஸா - அழகிய
ர - ர என்ற எழுத்தை
ஆதி - முதலாகக் கொண்டதும்
ம - ம என்கிற எழுத்தை
அந்த்யம் - கடைசி எழுத்தாக உடையதும்
விதுத - விடப்பட்ட
உபஸர்கம் - பற்றை உடையதும்
''[illegible]'' - [illegible] அற்றதும்
ஸ்வாபாஸஹம் - நமிப்பவர்களுக்கு
ஸ்வ - மங்களமான
ஆ[illegible]த்யத்தை
ஸஹம் - தாங்குவதும்
ம்ருது - மென்மையானதும், அழகியதும்
சாருவர்ணம் - மனதை மகிழ்விக்கும் காந்தியையுடையதும், அழகிய எழுத்தை உடையதுமான
பதம் - உமது திருவடியை, ரமா என்ற பதத்தை
ய: - ப்ரணமேத் - எவன் வணங்குகிறானோ
ம்ருது - உதடுகள் அசைவால் மட்டும் இவன் ஜபிக்கிறான் என அறிந்து கொள்ளுமளவில்
ஜபேத் வா - ஜபம் செய்கிறானோ
ஸ: - அவன்
ஆபதம் - ஆபத்துக்களை
அராத் - சீக்ரமாக
தூராதபாஸ்யதி - போக்குகிறான்
அரமாபதம் - ரமா என்ற பதத்திலும் வேறான லக்ஷ்மி முதலிய பதங்களை
தூராதபாஸ்யதி - தொலைவில் எறிந்து விடுகிறான்

இதில் லக்ஷ்மியின் திருவடிகளுக்கும் "ரமா" என்ற சொல்லுக்கும் சிலேடையில் கருத்துக்கள் அமைக்கப் பட்டுள்ளன. அவற்றுள் ரமா என்ற சொல்லைப்பற்றிய கருத்துக்கள் வடமொழி இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டவை.

திருவடி ஸுராதிகளால் - தேவர் முதலானோரால் - மான்யமாக உள்ளது - கொண்டாடப்படுவதாக உள்ளது. 'ரமா என்ற பதம் ஸா - ர - ஆதி - அழகிய 'ர' என்ற எழுத்தை முதலிலே

கொண்டுள்ளதும், ம - அந்தம் - ம என்ற எழுத்தைக் கடைசியில் கொண்டதுமாக உள்ளது. தப்பாசைகளைப் போக்கவல்லது திருவடி. வடமொழியில் "ப்ர, பரா, அப, ஸம்" என்பவை போன்ற சில உருவங்களுண்டு. அவற்றை உபஸர்க்கம் என வழங்குவர். ரமா என்ற சொல்லில் இவை போன்ற உபஸர்கம் ஏதுமில்லை. திருவடி ஜபம் செய்பவர்களுக்கு நன்மையை விளைவிக்கும். அதனால் அது ஸுபாவஹமாயிற்று. ரமா என்ற சொல் - "ஆ" என்ற "டாப்" ப்ரத்யயத்தைப் பெற்றிருக்கும். திருவடிகள் ம்ருதுவானவை மென்மையானவை - ரமா என்ற சொல் வல்லின எழுத்தைப் பெறாது மெல்லின எழுத்தைப் பெற்றது. திருவடி அழகிய ஒளியை உடையது. ரமா என்ற பதம் மன மகிழ்ச்சியை விளைவிக்க வல்லது. இத்தகைய திருவடிகளை எவன் வணங்குகிறானோ, ஜபம் செய்யும் போது மந்த்ரத்தை உரக்கக் கத்தாமல் "இவன் ஜபம் செய்கிறான்" என்பதை உதட்டசைவால் மட்டும் அறிந்து கொள்ளும்படி எவன் ஜபிக்கிறானோ அவ்விருவருள் வணங்குபவன் அனைத்து ஆபத்துக்களையும் வெகு சீக்ரமாகப் போக்கி விடுகிறான். ரமாபதத்தை ஜபிப்பவன் "லக்ஷ்மீ" போன்ற பிற பதங்களை ஜபம் செய்ய வேண்டாது இவ்வொன்றின் ஜபத்தாலேயே அனைத்துப் புருஷார்த்தங்களையும் அடைகிறான்.

पादं त्रपादं तव पङ्कजानां वन्दे भवं देवि तरीतुकामः ।
मस्ते समस्तेऽपि मञ्जुलाक्षारागं परागं वहते यदीयम् ॥ २३२

பாதம் த்ரபாதம் தவ பங்கஜாநாம் வந்தே பவம் தேவி தரீதுகாம: ।
மஸ்தே ஸமஸ்தேऽபி மஞ்ஜுலாக்ஷாராகம் பராகம் வஹதே யதீயம் ॥232॥

ஹே தேவி - பகவான் மஹிஷியே!
பங்கஜாநாம் - தாமரைகளுக்கு
த்ரபாதம் - வெட்கத்தை அளிக்கவல்ல
தவ பாதம் - உமது திருவடிகளை
பவம் - ஸம்ஸாரத்தை
தரீதுகாம: - கடக்க விரும்பியவனாய்
வந்தே - ஸேவிக்கிறேன்
ஸமஸ்தேऽபி - ஸர்வேச்வரனும்
மஞ்ஜு - அழகிய
லாக்ஷாராகம் - செம்பஞ்சுக் குழம்பால் சிவந்த
யதீயம் - எந்த லக்ஷ்மியின்
பராகம் - திருவடித்துகளை
மஸ்தே - தலையில்
வஹதே - தாங்குகின்றானோ

மென்மையிலும், மணமுடைமையிலும், வர்ணத்தில் அழகிலும், மனதைக் கவரும் தன்மையிலும் சிறந்து விளங்கும் தாமரையை உமது திருவடிகளுக்கு உவமையாகப் புலவர் கூறுவர். உபமேயத்தை விட உபமானம் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பது மரபு. உண்மையில் திருவடிகளுக்கு உபமானமாவதற்குத் தகுதியற்றதாகையால் தாமரை வெட்கப்படுகின்றவையாம். அத்தகைய உமது திருவடிகளை நான் ஸம்ஸாரக் கடலை கடந்து மோக்ஷமடைவதற்காக வணங்குகிறேன் என்றார். உடனே லக்ஷ்மீ "வாரீர் புலவீர்! மோக்ஷம் யாமே தனியாக அளிப்பதில்லையே! நாராயணனுடன் சேர்ந்தே யாம் அளிப்பது? அவரிடமுமன்றோ வேண்டவேணும்" மெனக் கேட்க பதில் அளிக்கிறார். "மஸ்தே" என்ற இரண்டாமடியால். உண்மைதான் நீர் சொல்வது. ஆயினும் உங்கள் இருவருக்கும் ப்ரணய கலகம் - ஊடல் - கோபம் - உண்டானபோது அவர் உமது திருவடிகளை வணங்க அப்போது அவர் தலையில் படிந்ததும், உமது திருவடி பஞ்சுக் குழம்பால் சிவந்ததுமான துகளை ப்ரஸாதமாகவன்றோ எண்ணித் தாங்கிக் கொண்டுள்ளார். ஆகையால் உம்மையே வணங்குகிறேன் என்கிறார்.

ஸர்வேச்வரனுக்கும் ஈச்வரியாக உள்ளதால் மோக்ஷம் விரும்புபவர் அவளையே தஞ்சம் புக வேண்டும் என்பது கருத்து.

पदद्वयं यस्तव देवि सेवते प्रभुः श्रितानां द्विपदो भवत्यसौ ।
विधुस्वसस्तद्विमुखस्तु यो नरश्चतुष्पदं हन्त वदन्ति तं बुधाः ॥

பதத்வயம் யஸ்தவ தேவி ஸேவதே
ப்ரபு: ச்ரிதாநாம் த்விபதோ பவத்யஸௌ ।
விதுஸ்வஸஸ்தத்விமுகஸ்து யோ நரச்-
சதுஷ்பதம் ஹந்த வதந்தி தம் புதா: ॥ 233

ஹே தேவி - நாராயண பத்னி!
யஸ் தவ பதத்வயம் - எவன் உனது இரண்டு திருவடிகளையும்
ஸேவதே - சரணமாகப் பற்றுகிறானோ
அஸௌ - அவன்
ப்ரபு: ஸந் - மிக்க செல்வந்தனாய்
ச்ரிதாநாம் - தம்மை அடைந்தவர்களுக்கு
த்விபத: - யானைப் பரிசு வழங்குபவனாக
பவதி - ஆகின்றான்.
விதுஸ்வஸ: - சந்திரனுடன் பிறந்தவளே!
யஸ்து நர: - எந்த மனிதன்
தத்விமுக: - உன் திருவடிகளை வணங்கவில்லையோ
தம் - அம்மனிதனை
புதா: - பண்டிதர்கள்
சதுஷ்பதம் - எருதுக்குச் சமமாக
வதந்தி - சொல்கின்றனர்

லக்ஷ்மியை வணங்குபவன் தான் மிக்க செல்வந்தனாக ஆவதோடு, யானையைப் பரிசாக அளிக்கும் அளவுக்குப் பெருவள்ளலாகவும் ஆகி விடுகின்றான். எவன் உன்னை வணங்கவில்லையோ அவனை அறிவாளிகள் எருதுக்குச் சமமாகச் சொல்கின்றனர்.

परमकरावलिरम्या बहुरागधराधरोरुविभ्रमभाक् ।
असि हंसहारिगतिका पितृवत् पितृप्रसूश्च ॥ २३५

इत्यात्रेय रघुनाथदीक्षित तनूज वेङ्कटाध्वरी
कृतिषु श्रीलक्ष्मी सहस्रे सौन्दर्य स्तबकः

பரமகராவலிரம்யா பஹுராகதராதரோருவிப்ரமபாக் ।
அஸி ஹம்ஸஹாரிகதிகா பித்ருவத் பித்ருப்ரஸூச்ச ॥

ஹே பத்மே - லக்ஷ்மீ!
பரம கர - போற்றத்தக்க கையை உடையவளாகவும்
வலி - வரித்திருக்கும் முக்கோடுகளால்
ரம்யா - அழகானவளாகவும்
பஹுராகதர - மிகச்சிவந்த

அதரா - உதடை உடையவளாகவும்
ஊரு - தொடைகளில்
விப்ரம - சோபையை
பாக் - அடைந்தவளாகவும்
ஹம்ஸ - அன்னப்பறவை போல்
ஹாரி - மனோஹரமான
கதி: - நடையை உடையவளாயுள்ள
த்வம் - நீ
பித்ருவத் - தந்தையான ஸமுத்ரம் போன்றும்
பித்ருப்ரஸூவத் - பிதாவைப் பெற்றவள் போலும்
அஸி - உள்ளாய்

இது இந்த ஸ்தபகத்தின் கடைசி ச்லோகமாவதால் சுருக்கமாக சில உறுப்புகளை வர்ணிக்கின்றார். வேண்டுபவர் வேண்டியவைகள் எல்லாம் வழங்குவதாக உள்ளதால் போற்றத்தக்க கையை உடையவளாயுள்ளாய். பெரும் பாக்யமுடைமையைத் தெரிவிக்கும் மூன்று மடிப்புகளை வயிற்றில் கொண்டுள்ளாய். உயர்ந்த பத்மிநீ என்ற ஜாதியைச் சார்ந்தவளானமையின் சிவந்த உதடை உடையவளாகின்றாய். ஒளி பொருந்திய தொடையைப் பெற்றிருக்கின்றாய். ஹம்ஸத்தின் நடை போன்றழகிய நடையை உடையவள் நீ. இத்தகைய நீ உனது தந்தையான ஸமுத்ரம் போன்றும் ஸாயங்கால ஸந்த்யை போலும் விளங்குகின்றாய்.

विभ्रमः भ्रान्तिशोभयोः इति विश्वः । सायं सन्ध्या पितृप्रसवः इत्यमरः ।

ஸமுத்ரத்துக்குரிய பொருள்.

பரா - நூறு யோஜனை நீண்டுள்ளதால்
மகராவலி - முதலைக் கூட்டங்களுக்கு
ரம்ய - விளையாடுவதற்கேற்றவிடம் உடையதாக உள்ளமை
பஹுளா - மிகுதியான
அகதரா - மலைகளை உடைமை
உருவிப்ரம - பல்வகை விளையாட்டை
பாக் - பெற்றுள்ளமை அல்லது
ஊரு - விஸ்தீர்ணமான
விப்ரம - சுழல்களை
பாக் - அடைந்துள்ளமை
ஹம்ஸஹாரி - ஹம்ஸன் என்ற அரக்கனைக் கொன்ற நாராயணனுக்கு
கதிகா - படுக்குமிடமான
ஜலத்தைப் பெற்றிருத்தல் என்ற ஸமுத்ரத்தின் தன்மைகள்
உன்னிடமுள்ளன - அதனால்
பித்ருவத் - தந்தையான கடல் போல்
அஸி - உள்ளாய்

ஸாயங்காலத்துக்குரிய பொருள்

பர - மேற்கு திசையிலுள்ள
ம - சந்திரனது
கராவலி - கிரணங்கள் படிவதால்
ரம்ய - அழகானதும்

பஹுராகா - மிகுந்த சிவப்பை

தரா - தரித்திருப்பதும்

தரா - பூமியில்

உருவி - சிக்க பக்ஷிகளில்

ப்ரசாரக் - ஸஞ்சாரத்தை உடையது

ஹம்ஸஹாரி - ஸூர்யனை அபஹரிக்கச் செய்யும்

கதிகா - நடையை உடையதுமாகிய

பித்ருப்ரஸூவேத் - ஸாயங்காலம் போல்

ஸமுத்ரம் எப்படி விசாலமாகப் பரந்து முதலை போன்ற நீரில் வாழும் ஜந்துக்கள் விளையாடுவதற்கேற்ற இடத்தை உடையதாக இருக்கின்றதோ அப்படியே நீயும் உலகம் முழுவதும் பரந்துள்ளாய் மக்களும் விளையாடிக் கொண்டிருக்கின்றனர் உலகில். பஹுராகா. என்பதை பஹுளாகா: எனக் கொள்ள வேண்டும். இப்படிக் கொள்வதை "ரலயோ: அபேத:" என்பர் வடமொழியாளர் ர,ல, என்ற எழுத்துக்கள் ஒரு எழுத்து இருக்குமிடத்தில் மறு எழுத்தையும் வைத்துக் கொண்டு பொருள் சொல்லலாம் என்பது கருத்து. அதன்படி பஹுராகா: என்பதை பஹுளாகா: எனக் கொண்டால் பஹுள மிகுதியான அகா: மலைகளைப் பெற்றிருக்கிறது கடல் என்பது கருத்து. ஸமுத்ரத்தில் ஏராளமான மலைகள் உள என்பது ஸ்ரீமத் ராமாயணத்தில் ப்ரஸித்தமே. பல்வகையான விளையாட்டை உடையதாகவுமுள்ளது கடல். கடல் சில இடத்தில் உறங்குவது போல் அமைதியாகவும் சிலவிடத்தே சிறுவர் விளையாடுவது போல் போவதும் வருவதுமான ஜலத்தையுடையதாயும். வேறோரிடத்தே மலையளவு உயர்ந்து விழும் ஜலத்தையுடையதாகவும் உள்ளதாம். மிகப்பெரிய சூழல்கள் உள்ளன. ஹம்ஸன் என்ற அரக்கனை அழித்தவன் படுக்குமிடமாகையால் அவன் வந்தடைய வேண்டிய இடமாக உள்ளது. இதுபோல் லக்ஷ்மியும் உள்ளாள். சப்தச்லேஷை.

ஸாயங்காலம் என்ற பொருளுக்குரிய கருத்து. அமாவாஸ்யை ஆனபின் ஒரு வாரம் கழித்து ஸாயம் மேற்கு திசையில் ஆகாசத்தில் சந்த்ரன் புலப்படுவான். அப்போது சிறிதளவு ஆகாசத்தில் சிவப்பு மிகுக்கும். அத்துடன் வெண்மையான சந்த்ரனும் புலப்படுவது அழகாக இருக்கும். உணவு தேடித் திரிந்து சென்ற பக்ஷிகளெல்லாம் இரவாகப் போவதால் தங்கள் தங்கள் இடங்களுக்குச் சென்று கொண்டிருக்கும். மறையச் செய்வதோடு தானும் மறையப் போகும் நடையை உடையதாக இருக்கும் ஸாயங்காலம் ஸ: यामी पातरीन्द्री च என்பது ரத்நமாலா.

கோயில், சந்தம், வங்கிபுரம், வாஜபேயம், வீரபுரம் சடகோபாச்சாரியார் இயற்றிய ரத்நப்ரபா என்ற விரிவுரையில் ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம் ஸௌந்தர்ய ஸ்தபக உரை முடிவடைந்தது சுபம்.

(தொடரும்)

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

शृंगार स्तबकः

ச்ருங்கார ஸ்தபகம் (ஒன்பதாவது)

दुर्ज्ञेयमहिमा सा मां क्षीराब्धिदुहितावतात्।
शृङ्गाररससर्वस्वं शेषशैलेश्वरस्य या॥ १

துர்ஜ்ஞேயமஹிமா ஸா மாம் க்ஷீராப்திதுஹிதாவதாத்
ஶ்ருங்காரரஸஸர்வஸ்வம் ஶேஷஶைலேஶ்வரஸ் யா॥

துர்ஜ்ஞேய - இத்துணை என அறிய முடியாத
மஹிமா - குணம், திருமேனி, செல்வங்களின் பெருமையை உடைய!
ஸா துக்தாப்தி துஹிதா - இப்பாற்கடல் குமரி
மாம் அவதாத் - அனைத்து பயங்களிலிருந்தும் என்னைக் காக்கட்டும்
யா - எவள்
ஶேஷஶைலேஶ்வரஸ்ய - சேஷாத்ரி நாதனுக்கு
ஶ்ருங்கார - ஸர்வஸ்வம் - ஶ்ருங்கார ரஸத்துக்குரிய அனைத்தையும் வழங்குபவளாய் உள்ளவளோ

பாற்கடல் புத்ரியின் அத்யத்புதமானத் திருமேனியழகை கீழ் ஸ்தபகத்தில் வர்ணித்தார். அவ்வழகுக்குப் பரம ப்ரயோஜநம் அநுரூப பர்த்தாவுடன் சேர்ந்து வாழ்வதே. ஆகவே இந்த ஸ்தபகத்தில் ஶ்ருங்கார ரஸத்தை வர்ணிக்கிறார். குணம், திருமேனி, ஐஶ்வர்யம், முதலியவற்றில் இத்துணை என்றறிய முடியாத பெருமை உடையவளும் ஶேஷாத்ரி நாதனான ஸ்ரீ நிவாஸனுக்கு விபாவ, அநுபாவ, ஸாத்விகபாவ, வ்யபிசார பாவங்களால் சுவையூட்டப்பட்ட ஸ்தாயீபாவம் என்ற ரஸத்தை வழங்குபவளுமான லக்ஷ்மீ அனைத்துப் பயங்களிலிருந்தும் என்னைக் காக்க என வேண்டுகிறார்.

विहितस्मरसौरभेण पद्मे विविधेनाम्ब विलासचेष्टितेन।
अतिविस्मयमादधासि शौरेरनुभूतापि चिरादपूर्ववत्वम्॥

விஹிதஸ்மரஸௌரபேண பத்மே
விவிதேநாம்ப விலாஸசேஷ்டிதேந।

அதிவிஸ்மயமாததாஸி ஶௌரே-
ரநுபூதாபி சிராதபூர்வவத் த்வம் ॥ 2

ஹே அம்ப பத்மே - தாயான தாமரையாளே !

த்வம் - நீர்

சிராத் அநுபூதாபி - நீண்ட நாள்களாக அநுபவிக்கப்பட்டிருந்தும்

விஹிதஸ்மர - மன்மத விகாரத்தைத் தோற்றுவிக்கும்

ஸௌரபேண - பல் வகையான ஶ்ருங்கார சேஷ்டைகளால்

ஶௌரே: - நாராயணனுக்கு

அபூர்வவத் - என்றுமே அநுபவிக்கப்படாதவள் போல்

அதிவிஸ்மயம் - புதியதொன்றைக் கண்டும் உண்டாகும் அத்புத ரஸத்தை

ஆததாஸி - தோற்று விக்கிறாய்

தாயே ! நாராயணன் பல ஆண்டுகளாக உன்னை அநுபவித்திருந்தும் உன்னை அவன் காணும் போது கண் உடல் முதலியவற்றைப் பற்றியுள்ளனவான ஶ்ருங்காரச் செயல்களால், என்றுமே காணாததும், அபூர்வமானதொன்றைக் கண்டால் மனதில் தோன்றுவதுமான அத்புத ரஸத்தைத் தோற்றுவிக்கின்றாய். 'ஸ்வவைஶ்வருப்யேண' என்கிற ஸ்தோத்ர ரத்ந ஶ்லோகம் அநுஸந்திக்க ப்ராப்தம்.

कमले तव हन्त वीक्षितानां कुटिलिम्ना कबलीकृतं सदापि ।
फणिशैलपतेर्न जातु चेतः प्रतिघोपज्ञमुपैति वक्रिमाणम् ॥ ३

கமலே தவ ஹந்த வீக்ஷிதாநாம் குடிலிம்நா கபலீக்ருதம் ஸதாபி ।
பணிஶைலபதேர் ந ஜாது சேத: ப்ரதிகோபஜ்ஞமுபைதி வக்ரிமாணம் ॥ 3

ஹே கமலே - தாமரையில் வாழ்பவளே!

பணிசைலபதே: - சேஷாத்ரி நாதனுடைய

சேத: - மனம்

தவ வீக்ஷிதாநாம் - உன் அரைக்கண் ஓரக்கண் முதலான பார்வைகளின்

குடிலிம்நா - கோணலாலே

ஸதா - எப்போதும்

கபளீக்ருதமபி - வசீகரிக்கப்பட்ட போதும்

ப்ரதிகோபஜ்ஞம் - ஊடலால் உண்டாகும்

வக்ரிமாணம் - வக்ரத்தை

ஜாத்வபி - ஒரு போதும்

நோபைதி - அடையவில்லை

ஹந்த - ஆஶ்சர்யம்

பத்மாவதியே ! ஸ்ரீநிவாஸனின் மனம் உன் கீழ்க்கண் பார்வை, ஓரக்கண் பார்வை, அரைக்கண் பார்வை போன்று பல வகைகளாகவும் பெண்கள் கண்களுக்கே உரியனவுமான கண்களின் கோணல்களால் ஏற்கெனவே ஆக்ரமிக்கப்பட்டு விட்டது. இருந்தும் ப்ரணய கலஹத்தால் ஊடலால் - உண்டாகும் கோணலை - விருப்பமில்லாது போல் நடிக்கும் கோணலை - ஒரு போதும் அடைந்ததில்லை.

வக்ரமான பார்வைகளால் கவரப்பட்ட போதும், ஊடலால் கவரப்படவில்லை என்பது ஆஶ்சர்யம். ஊடலாடிய போதும் பகவான் உன் பார்வைக்கும் வயப்பட்டவனாய் உன்னிடம் வெறுப்பு கொள்வதில்லை என்பது கருத்து.

विषमायुधास्त्रसुषमावहैरहो तव लोकमातरवलोकविभ्रमैः ।
भगवानहीन्द्रनगवास्युपाश्नुते तरसा मनोज्ञतरसात्विकश्रियम् ॥४

விஷமாயுதாஸ்த்ரஸுஷமாவஹைரஹோ
தவ லோகமாதரவலோகவிப்ரமை: ।
பகவாநஹீந்த்ரநகவாஸ்யுபாஶ்நுதே
தரஸா மனோஜ்ஞதரஸாத்விகஶ்ரியம் ॥ 4

ஹே லோகமாத : - அனைத்துலகத் தாயே !
அஹீந்த்ரநகவாஸீ - திருவயிந்தை மலையில் வாழும்
பகவான் - குணக்குன்றான ஸ்ரீநிவாஸன்
விஷம - ஒற்றைப் பட்டதும், கொடியதுமான
ஆயுத - ஆயுதங்களையுடைய மன்மதனின்
அஸ்த்ர - அஸ்த்ரமான தாமரை போன்றவற்றின்
ஸுஷமாவஹை: - சோபையைத் தாங்கியுள்ள
அவலோக விப்ரமை : கடாக்ஷவிலாஸங்களால்
தரஸா - சீக்ரமாக
மநோஜ்ஞதர - பார்வைக்கு மகிழ்ச்சியைத் தரும்
ஸாத்விகச்ரியம் - ஸாத்விக பாவத்தின் சோபையை
உபாச்நுதே - அடைகிறான்.
அஹோ - ஆஶ்சர்யம்

ஐந்து பூக்களை பாணங்களாகக் கொண்டவன் மன்மதன். எனவே ஒற்றைப்பட்ட பாணமுடையவனுயினன் மன்மதன். அவன் அம்புகள் பூவால் ஆனதாயினும் மிகக் கொடியவை அவை. அப்புஷ்பங்கள் தாம் தாமரை அசோகம், மா, மல்லிகை, நீலோத்பலம் என்பவைகளாம். இப் புஷ்பங்களின் சோபையைத் தாங்கியுள்ளன தாயின் கடாக்ஷ விளையாடல்கள். இவ்விலாஸங்கள், அலஸம், லலிதம் போன்ற பலவகைப் பெயர்களை உடையவை. இக்கடாக்ஷம் ஸ்ரீநிவாஸன் மீது பட்டதுமே ஸ்தம்ப: ப்ரலய: ரோமாஞ்ச: எனப் பல்வகைகளான ஸாத்விக பாவங்களை அடைகின்றானும். விளையாடத் தயாராகிறுன் என்பது கருத்து.

பிறருக்குத் தன் கடாக்ஷத்தால் ஸாத்விகத்தை உண்டு பண்ணுபவனுன பகவானுடைய ஸாத்விகதை லக்ஷ்மியின் கடாக்ஷத்துக்கு வசமாக இருக்கிறது என்பது ஆச்சர்யம்.

மன்மத விகாரத்தைத் தூண்டுபவைகளான பார்வைகளால் மிகுந்த ஸத்வம் தோன்றுகிறதென்பது விரோதம். அதனால் ஆச்சர்யம். நான்கு அடிகளிலும் யமகம் என்ற ஶப்தாலங்காரம் உள்ளது.

कलशाब्धिपुत्रि बलशासनादिभिर्निगमैरनादिविगमैरपि स्तुतः।
छलहेतुकेषु कलहेषु केशवः स भिया तवैकमभियाचते वचः॥

கலஶாப்திபுத்ரி பலஶாஸநாதிபிர்-
நிகமைர் அநாதி விகமைரபி ஸ்துத:।
சலஹேதுகேஷு கலஹேஷு கேஶவ:
ஸ பியா தவைகமபியாசதே வச:॥ 5

ஹே கலசாப்த்திபுத்ரி - க்ஷீராப்திப் பெண்ணே

பலஶாஸநாதிபி: - இந்த்ரன் முதலான உலகம் காப்பவர்களால்

அநாதி விகமை : - முதலும் முடிவுமற்ற

நிகமைரபி - வேதங்களாலும்

ஸ்துத: - துதிக்கப்பட்ட போதும்

கேஶவ: - பகவான்
சலஹேதுகேஷு - பொய்யான
கலஹேஷு - கலகங்களிலுள்ள
பியா - பயத்தால்
தவ கம் வச: - உன்னுடன் பேசுவது ஒன்றையே
அபியாசதே - வேண்டுகிருன்

பகவானை இந்திரன் முதலான திசைக் காவலர்கள் ஆதியும் அந்தமும் அற்ற - நித்யமான - வேத வாக்யங்களால் துதிக்கின்றனர் - இருந்தும் அவற்றில் அவனுக்கு விருப்பமில்லையாம். ப்ரணய கலஹ காலத்தில் ஏதேனுமொரு பொய்யான காரணத்தைக் கற்பித்துக் கொண்டு ஒருவருக்கொருவர் பேசாதவர் போல் நடிக்கும் பொய் கலஹங்களில் உண்மையான கலஹத்தால் பேசாத நிலை உண்டாகி விடுமோ என்ற பயத்தால் உன் எதிரில் நின்று கொண்டு தமது வினாவிற்கு விடை ரூபமான ஒரே ஒரு பேச்சை வேண்டுகின்ருன்.

இந்த்ரன் முதலான தேவர் துதிக்கும் வேதத்துதியிலும் தாயின் பேச்சில் பகவானுக்கு விருப்பமான இன்சுவை உள்ளது என்பதை வெளியிடுகிறது பாற்கடல் பெண்ணே என்ற விளி.

स्तम्भतः स्वयमावाप सम्भवं यः पुरा नरहरिर्हरिप्रिये।
शम्बराहितविलासडम्बरैः स्तम्भमम्ब जनयत्ययं त्वयि॥ ६

ஸ்தம்பத: ஸ்வயமவாப ஸம்பவம்
ய: புரா நரஹரிர் ஹரிப்ரியே।
ஶம்பராஹித விலாஸடம்பரை:
ஸ்தம்பமம்ப ஜநயத்யயம் த்வயி॥ 8

ஹே ஹரிப்ரியே! - நாராயணபத்நீ பெண் சிங்கமே!
ய: நரஹரி - எந்த ந்ருஸிம்ஹன்
புரா - ஹிரண்யனைக் கொன்ற போது
ஸ்தம்ப - அவன் வீட்டுக்கம்பத்திலிருந்து
ஸம்பவம் - தான் வெளி வந்ததை
ஸ்வயம் - தன் இஷ்டத்தாலேயே
அவாப - அடைந்தாரோ
அயம் - அந்த பகவான்
ஶம்பராஹித - சிங்கத்தின், மன்மதனின்

விலாஸடம்பரை: - ஸிம்ஹ ஜாதிக்கு உரிய மன்மத பாவத்தால் மன்மதாவேசத்தால் செய்யப்படும் பார்வை முதலியவற்றால்	த்வயி - பெண் சிங்கமான உன்னிடம் ஸ்தம்பம் - கம்பத்தை. செயலற்றிருப்பதை ஜநயதி - தோற்றுவிக்கின்றுன்

ஹிரண்யனைக் கொன்றபோது பகவான் அவன் வீட்டிலேயே உள்ள கம்பத்திலிருந்து வெளிப்பட்டார். பக்தனைக் காப்பதற்காக 'मृग दानव बुद्धेषु शंबर'' என்றதனால் ரத்நமாலா என்கிற நிகண்டு ஶம்பர ஶப்த்துக்கு சிங்கம் என்ற பொருள் உண்டு என்கிறது. ஆண் சிங்கமான தன்னைப் பெற்ற தாயான கம்பத்திற்கு நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தால் பெண் சிங்கமான உன்னிடம் ஸிம்ஹ ஜாதிக்குரிய மன்மத வ்யாபாரத்தைச் செய்து, பாடுபட்டும் புதிய ஸ்தம்பத்தைத் தோற்று வித்துப் பதிலுதவி செய்தார் என்கிருர்.

பகவான் தமக்குப் ப்ரியையான லக்ஷ்மியினிடம் மன்மதா வேசத்தால் உண்டாம் பலவகைச் செயல்களால் லக்ஷ்மியினிடம் ஸ்தம்பத்தைத் தோற்றுவித்தார் என்கிருர் ''स्तंभः प्रलयः रोमांचः'' என்பன போன்ற எட்டு நிலைகள் सात्विकभावः எனப்படும். அவற்றுள் स्तंभமாவது ஆசையாலும், பயத்தாலும் எவ்விதச் செயலையும் செய்யத் திறனற்ற உடல் நிலையைப் பெற்றிருத்தலாம். இதை பகவான் தோற்றுவித்தார் என்கிருர்.

முன் நான்காவது ச்லோகத்தில் லக்ஷ்மியால் பகவானுக்கு ஸ்தம்பம் உண்டாகிறது என்கிருர். இதில் பகவானால் லக்ஷ்மிக்கு உண்டாகிறது என்கிருர்.

अहारि नेत्रं मम पश्यतोऽनया प्रसह्य चोरस्थलसक्तयेति किम्।
प्रतिक्रियायै हरते रतेषु हरिर्हठादम्बरमम्ब रंहसा।। ७

அஹாரி நேத்ரம் மம பஶ்யதோ(அ)நயா
ப்ரஸஹ்ய சோரஸ்தலஸக்தயேதி கிம்।

ப்ரதிக்ரியாயை ஹரதே ரதேஷு தே
ஹரிர் ஹடாதம்பரமம்ப ரம்ஹஸா ॥ 7

ஹே அம்ப ! - தாயே !

சோரஸ்தலஸக்த்யா -
1. திருடர்களுடன் ஸஹவாசத்தால்
2. திருட்டைக் கற்றுக் கொண்ட உன்னால்
3. மார்பில் வாழ்பவளான உன்னால்

பஶ்யதோ மம - பார்த்துக் கொண்டே இருக்கும் என்னை அநாதரம் செய்து

ப்ரஸஹ்ய - பலாத்காரத்தால்

மம நேத்ரம் - எனது வஸ்த்ரமும், கண்களும்,

அஹாரி - அபஹரிக்கப்பட்டன,

இதி - என்கிற வைரத்தாலே

ஹரி: = பிறருடையதை அபஹரிக்கும் தன்மை உடைய நாராயணன்

ப்ரதிக்ரியாயை - பதிலுக்காக

ரதேஷு - ஸுரத காலத்தின் போது

அம்பரம் - வஸ்த்ரத்தை

ரம்ஹஸா - வேகத்துடன்

ஹடாத் - உன் அனுமதி அன்றியே

ஹரதே கிம் - அபஹரிக்கின்றானா ?

தாயே நீ இப்போதுதான் திருடுவதற்குக் கற்றுக் கொண்டுள்ளாய். அதுவும் எதனால் ? திருடன் வாழுமிடத்தின் அருகில் வாழ்வதால் என்ற பொருள் 'चोरस्थल सक्तया'' என்ற சொல் அமைப்பால் கிடைப்பதாம். பகவான் மார்பில் வாழ்பவளான உன்னால் என்பது உண்மைப் பொருள். கண் கொட்டாமல் நான் பார்த்து கொண்டிருக்கும் போதே என்னைப் பொருட்படுத்தாமல் உனது விருப்பம் போல் எனது நேத்ரத்தை - கண்களை - வஸ்த்ரத்தை - அபஹரித்து விட்டாயல்லவா ? இதை பார்த்துக் கொண்டிருந்தான் உன் கணவன் . அவன் ஏற்கெனவே பிறருடையதை - பாபத்தை - அபஹரிப்பவன். ஆகவே நீ செய்த என் கண்களை அபஹரித்த செயலுக்கு பதிலடி கொடுக்க வேண்டும் என எண்ணினவாய் ஸுரத காலம் கிடைத்த போது இதுதான் தக்க தருணம் என்றெண்ணி உன் அநுமதியின்றியே உன் வஸ்த்ரத்தை அபஹரித்து விடுகின்றானா என்ன? திருடருடன் வாழ்ந்ததால் மட்டும் பலாத்காரமாகத் திருடுவதை நீ செய்யத் தொடங்கிய போது அபஹரிப்பதையே ஸ்வபாவமாக

உடையவனுக்குக் கேழ்க்கவும் வேண்டுமா என்பது ஹரி: என்ற பதத்தை அமைத்ததால் கிடைக்கின்றது.

தாயைக் குளிரக் காணும் போது நம் கண்களிரண்டும் அவள் வயமாகி விடுகின்றன என்பது கருத்து தாய் கண்களைத் திருடுகிருள் என்பதற்கு.

முன் ச்லோகத்தில் செய்த உதவிக்குப் பதிலுதவி கூறப்பட்டது. இதில் முன் செய்த தீமைக்குப் பதில் தீமை கூறப்பட்டது.

अम्ब त्वमत्यन्तमुदारतोरुचमत्कृतिं दर्शयितुं प्रियाय।
अभ्यर्थयित्रे भृशमात्मनोऽपि कुचेलमित्राय ददासि चेलम् ॥ ८

அம்ப த்வமத்யந்த முதாரதோரு- சமத்க்ருதிம் தர்ஶயிதும் ப்ரியாய।
அப்யர்த்தயித்ரே ப்ருசமாத்மநோ(அ)பி குசேலமித்ராய ததாஸி சேலம்॥

அம்ப - தாயே
த்வம் - நீ
குசேலமித்ராய - குசேலருடன் படித்தவரான, குசேலர் போல்தரித்ரரான
அப்யர்த்தயித்ரே - உன்னிடம் யாசிக்க வந்த
ப்ரியாய - க்ருஷ்ணனுக்கு
உதாரதா - ஒளதார்யத்தின்
உரு சமத்க்ருதிம் - உயர்ந்த அத்புதத்தை
அத்யந்தம் தர்சயிதும் - உயர்த்திக் காட்டுவதற்காக

ஆத்மந: - நீ உடுத்தியிருந்த
சேலமபி - சேலையையும்
ததாஸி - கொடுக்கின்ருய்
அப்யர்த்தயித்ரே - வஸ்த்ரம் அவிழ்தலை விரும்பும்
ப்ரியாய - அன்பனுக்கு
அத்யந்த முதா - மிக்க மகிழ்ச்சியுடன்
ரத - ஸுரத காலத்தில்
உரு சமத்க்ருதிம் - துடைகளின் அழகை
தர்ஶயிதும் - காட்டுவதற்காக
சேலம் - வஸ்த்ரத்தை
ஆத்மநாபி ததாஸி - நீயே அவிழ்த்து விடுகின்ருய்

உன்னிடம் வந்து யாசிப்பவர்க்கு உன் வள்ளல் தன்மையை நன்கு விளக்கிக் காட்டுவதற்கு, கண்ணன் போல யாசகருக்கென்று தனித்ததொரு செல்வத்தைக் கற்பிக்காது உன்னுடைய ஆடை முதலான அனைத்து ஐச்வர்யங்களையும் வழங்குகின்ருய்

बहिस्त्वालीवर्गस्तव नवरतौ देवि हरिणा
करग्राहोन्मीलद्वलयरवशुश्रूषुरुषितः ।
प्रियस्पर्शानन्दोन्मिषित भवतीहस्तनिभृतैः
कलध्वानापेतैः कनकवलयैर्वञ्चित इव ॥

பஹிஸ்த்வாலீவர்க்கஸ்தவ நவரதௌ தேவி ஹரிணா
கரக்ராஹோந்மீலத்வலயரவஶுஶ்ருஷுருஷித: ।
ப்ரியஸ்பர்ஶாநந்தோந்மிஷித பவதீஹஸ்தநிப்ருதை:
கலத்வாநாபேதை: கநகவலயைர்வஞ்சித இவ ॥ 9

ஹே தேவி - விளையாடும் ஸ்வபாவம் உடையவளே !

தவ நவரதௌ - உன் முதலிரவு உத்ஸவத்தில்

ஆளீவர்க: - உன்னை உன் கணவனுடன் அறையிலிட்டுத் தாளிட்டத் தோழிகளின் கூட்டம்

ஹரிணா - பகவானின்

கரக்ராஹ - கைளால் ஸ்ரீயின் கையைப் பிடிக்கும் போது

உத்மீலத் - உயர்ந்து எழும்

வலயரவ - வளைகளின் ஒலியை

ஶுஶ்ருஷு: - கேட்க விரும்பியவர்களாய்

பஹி: உஷித - வெளியே விழித்துக் கொண்டிருந்தவர்கள்

ப்ரியஸ்பர்ஶ - கணவன் தொட்டதனாலுண்டான

ஆநந்த - ஆநந்தத்தால்

உந்மிஷித - பருத்து விட்ட

பவதீஹஸ்த - உனது கைகளின்

நிப்ருத - அசைவற்றத் தன்மையால்

கலத்வாந - இனிய ஓசையை

அபேதை: - இழந்த

கநகவலயை: - ஸ்வர்ண வளைகளால்

வஞ்சித இவ - ஏமாற்றப்பட்டவர் போலாயினர்

ராமன் க்ருஷ்ணன் போன்ற அவதார காலங்களில் ஸீதையாகவும் ருக்மணியாகவும் அவதரித்த லக்ஷ்மியின் கர்பாதான உத்ஸவ காலத்தில் ஸ்ரீயைக் கைபிடித்தழைத்து வந்து அவள் கணவனுடன் இவளையும் உள்ளே அழைத்து அவ்வறையை வெளிப்புறத் தாளிட்டு விட்டு, "ராமன் ஸீதையின் கையைத் தொடும் போது அவள் கைகளிலுள்ளத் தங்க வளையல்கள் ஒலிக்கும். நாளை காலை அவளை இவ்வொலியை அடிப்படையாகக் கொண்டுப் பரிஹஸிக்க வேண்டும் என எண்ணித் தூங்காது வெளியில் விழித்துக்

கொண்டிருந்தனர் தோழிகள். ஆனால் ஏமாற்றம் கிடைத்தது. யார் ஏமாற்றியது. தங்க வளையல்களே! எப்படி ? அன்புக் கணவன் கையைத் தொட்டானோ இல்லையோ அவ்வானந்த மிகுதியால் உடல் முழுவதும் பூரித்துப் போயிற்று. அதனால் வளைகளால் அசையவே முடியவில்லை. அசைந்தாலன்றோ ஒலியெழும் ? அதனால்.

हठात् क्रीडायुद्धे हरिसखि भवत्याः कचभरे
गृहीते कान्तेन ग्रहिलहृदयः काममदयः ।
मनोजन्मा मर्माविधमथ गलत्पुष्पकपटा-
दवर्षद् बाणौघं प्रसभमुपरिष्टान्मधुरिपोः ॥ १०

ஹடாத் க்ரீடாயுத்தே ஹரிஸகி பவத்யா: கசபரே
க்ருஹீதே காந்தேந க்ரஹிலஹ்ருதய: காமமதய: ।
மனோஜந்மா மர்மாவிதமத கலத்புஷ்பகபடா-
தவர்ஷத் பாணௌகம் ப்ரஸபமுபரிஷ்டாந்மதுரிபோ: ॥ 10

ஹே ஹரிஸகி - பகவான் விளையாட்டில் துணையாயிருப்பவளே!
க்ரீடாயுத்தே - விளையாட்டுப் போரில்
காந்தேந - கணவனால்
பவத்யா: - உமது
கசபரே - கேசங்களின் கூட்டம்
ஹடாத் - முரட்டுத் தனத்தால் போல
க்ருஹீதே ஸதி - தொட்ட போது
க்ரஹிலஹ்ருதய: - ஆக்ரஹம் கொண்டவனாய்
காமம் அதய: - மிகவும் தயையற்ற
மநோஜந்மா - மன்மதன்
அத - தொட்டவுடன்
களத் - தலை அவிழ்ந்ததால் நெகிழ்ந்து கீழே விழுந்த
புஷ்ப கபடாத் - பூக்கள் என்ற வ்யாஜத்தால்
மதுரிபோ: - பகவானுடைய
உபரிஷ்டாத் - மீது
மர்மாவிதம் - ஜீவ ஸ்தாநத்தைப் பிளக்கத் தக்க
பாணௌகம் - தனது பாணக் கூட்டத்தை
அவர்ஷத் - பொழிந்தான்

அடியவர்களின் பாபத்தைப் போக்கி அவர்களுக்கு அருள் பாலிப்பதாகிய பகவானின் விளையாட்டில் துணை புரிபவளே! உனக்கும் கணவனுக்கும் போராம். அது உண்மையானதன்று. அப்படி ஒரு விளையாட்டு. அதில் உன் ப்ரியனான உன் கணவர்

உனது கூந்தலைத் தொட்டான். அவ்வளவே. இழுக்கவே இல்லை. இருந்தும் அதைத் தனது ஸேனையில் முக்கியமான ஒரு பெண்ணின் தலைக் கூந்தலை ஒருவன் இழுத்தால் அது எப்படித் தன்னை அவமதித்ததாகுமோ அப்படி நினைத்தானாம் மன்மதன். அதனால் அவன் மனதில் ஆக்ரஹம் குடி கொண்டு விட்டதாம். ஏற்கனவே வேறு தீமை செய்துள்ளானாம் மன்மதனுக்கு பகவான். பகவானுக்கு மதுரிபு என்றொரு பெயர் உண்டன்றோ! மது என்றால் வஸந்தருது. வஸந்தத்தில்தான் புஷ்பங்கள் மிகுதியாகப் பூக்கும். பூக்கள் தானே இவனுக்கு பாணம். அந்த மதுவுக்கு இவன் ரிபுவாயிற்றே. ஆகவே ஆக்ரஹத்துக்கு அளவில்லாது போயிற்று. கூந்தலைத் தொட்டானோ இல்லையோ. அடுத்த க்ஷணமே கூந்தல் அவிழ்ந்து போயிற்று என்ற வ்யாஜத்தால் மதுரிபுவின் மீது பாதத்திலிருந்து உச்சி வரை தன் பாணங்களாகிய புஷ்பங்களை மர்மஸ்தானத்தைப் பிளக்கும் அளவுக்குப் பொழிந்து விட்டானாம்"

கேஶத்தை இழுத்ததால் நெகிழ்ந்த புஷ்பங்கள் பகவான் மீது மிகுதியாக விழுந்தன என்பது கருத்து.

आख्यया च महसा हरेः करस्पर्शनेन मृदितः पयोधरः ।
देवि विक्षिपति ते स्रगुद्गलत्पुष्पमौक्तिकमयान् पयः कणान् ॥

ஆக்யயா ச மஹஸா ஹரே: கரஸ்பர்ஶநேந ம்ருதித: பயோதர: ।
தேவி விக்ஷிபதி தே ஸ்ரகுத்கலத்புஷ்பமௌக்திகமயாந் பய: கணாந்॥

ஹே தேவி - தேவனின் மனைவி!
தே பயோதர: – உனது கொங்கை (மேகம்)
ஆக்யயா - பெயராலும்
மஹஸா – ஒளியாலும்
ஹரே: - பச்சையான ஹரியினுடைய, (சூர்யனுடைய)
கரஸ்பர்ஶநேந - கையால் தொட்டதால் (கிரணங்களைத் தந்ததால்)
ம்ருதித : - மர்தனம் பண்ணப்பட்ட (வாட்டப்பட்ட)
ஸ்ரக் - பூமாலையிலிருந்தும் முத்து மாலையிலிருந்தும்
உத்கலத் - வெளிவந்த
புஷ்பமௌக்திக மயாந் - புஷ்ப மயமாயும், முத்து மயமாயுமுள்ள,
பய: கணாந் - ஜலபிந்துகளை
விக்ஷிபதி - நாற்புறமும் வர்ஷிக்கிறது

ஸூர்ய கிரணங்கள் பூமியிலுள்ள நீரை இழுத்துச் சென்று அதை மேகத்துள் புகுரவிட்டு அதை வாட்டி மழை பெய்விக்கிறது என ஜ்யோதிஷ் சாஸ்த்ரம் கூறுகின்றது. वर्णश्च मे हरिः देवि तस्मात् हरिः अहं स्मृतः என்கிற பகவான் வாக்யம். "நான் பச்சை வண்ணத்தவன்" ஹரி: என்றால் பச்சை. ஆகவே நான் ஹரி: என்ற பெயரை உடையவன் ஆயினேன் என்கிறான் பகவான். பய: என்கிற சொல்லுக்கு நீர் பால் என்ற இரு பொருள் உண்டு. ஆகக் கொங்கை பாலைத் தாங்குவதால் பயோதரமாயிற்று. மேகம் நீரைத் தரிப்பதால் பயோதரமாயிற்று. கர: என்ற சொல் கை, கிரணம் என்ற இரு பொருளுடையது. ஹரி: என்ற சொல் பகவான் ஸூர்யன் என்ற இரண்டு பொருள் கொண்டது.

ஹரியான பகவான், தமது கரங்களால் தேவியின் பயோதரத்தைத் தொட்டான். ஸூர்யன் தன் கரங்களால் - கிரணங்களால் - பயோதரத்தை - மேகத்தை - வாட்டினான் அதனால் மேகம் பயஸ்ஸை - நீரை நாற்புறமும் பொழிந்தது. ஹரி என்ற பெயர், பச்சை நிறம், என்ற இரண்டுடைய பகவான் தாயின் பயோதரத்தைத் தொட்டதால் பூமயமாயும் முத்து மயமுமான இரண்டு மழையை நாற்புறமும் பொழிகின்றது என்கிறார்.

सरभसपरिरिप्सासम्भ्रमोच्छूनपीन-
स्तनशिथिलितबन्धा मञ्जुला कञ्चुकी ते।
अतनुसमरकेलावप्रयत्नात्प्रियेण
द्रुततरमपनीता दुग्धसिन्धोस्तनूजे॥ १२

ஸரபஸபரிரிப்ஸாஸம்ப்ரமோச்சூநபீந-
ஸ்தநசிதிலிதபந்தா மஞ்ஜுலா கஞ்சுகீ தே।
அதநுஸமரகேலாவப்ரயத்நாத் ப்ரியேண
த்ருததரமபநீதா துக்தஸிந்தோஸ்தநூஜே॥ 12

துக்தஸிந்தோ: தநூஜே - பாற்கடல் பெண்ணே!

அதநு - மன்மதனுடைய

ஸமர கேளௌ - போராகிய விளையாட்டில்

ம்ருதுளா - மென்மையானதும் மெல்லியதுமான

கஞ்சுகீ - ரவிக்கை

ஸரபஸ - வேகமாக

பரிரிப்ஸா - அணைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசையின்

ஸம்ப்ரம - வேகத்தாலே

உச்சூந - பெருத்தவையும்

பீந - இயல்பாகவே பெருமன் ஆனவையுமான

ஸ்தந - கொங்கைகளால்

சிதலித - அவிழ்க்கப்பட்ட

பந்தா - முடிச்சை உடையதாய்

ப்ரியேண - பர்த்தாவின்

அப்ரயத்நாத் - முயற்சியின்றியே

த்ருததரம் - சீக்கிரமாக

அபநீதா - அகற்றப்பட்டது

கருத்துத் தெளிவானதே

हरति तदिदमुच्चैर्हन्त चक्रावलेपं
दिशति जननि खेदं मध्यदेशस्य चेति ।
मदनयुधि कराभ्यां मर्दितं युग्ममेतत्
कुचधरणिभृतोस्ते कुप्यतेवाच्युतेन ॥ १२

ஹரதி ததிதமுச்சைர்ஹந்த சக்ராவலேபம்
திசதி ஜநநி கேதம் மத்யதேசஸ்ய சேதி ।
மதநயுதி கராப்யாம் மர்திதம் யுக்மமேதத்
குசதரணிப்ருதோஸ்தே குப்யதேவாச்யுதேந ॥ 13

ஹே ஜநநி - மூவுலகங்களின் தாயே!

உச்சை: - அடக்க முடியாத

ததிதம் - சொல்லவிருப்பதான

குசதரணிப்ருதோ: யுக்மம் - விரோதமுடைய அரசர்களின் இரட்டை

மத்யதேசஸ்ய - மத்ய தேசத்துள்ள ஸாது ஜநங்களுக்கு

கேதம் திசதி - ஈரசால் துன்பப்படுத்துகிறது

சக்ராவலேபம் ச - அடக்குவதற்காக வேளையை அனுப்பினால்

ஹரதி - அதையும் வென்று விடுகிறது

இதி குப்யதேவ - எனக்கோபம் உடையவன் போன்ற

அச்யுதேந - பகவானாலே

மதநயுதி - மன்மதனுடன் செய்த போரில்

ஏதத் - முன் சொன்ன

யுக்மம் - இரண்டு அரசுகளும்

கராப்யாம் - கைகளாலேயே

மர்திதம் - பிடிக்கப்பட்டு விட்டன

இச்செய்யுளிலுள்ள சக்ர: என்பது "சக்ரவாகம்" என்ற பறவையையும் मध्यदेशः என்பது வயிறையும் 'कुच धरणिभृत्' என்பது மலை போன்ற கொங்கைகளையும் சொல்கின்றன.

கு - குத்ஸிதமான, அதாவது விரோதம் கொண்ட தரணி ப்ருத்துக்களை - அரசர்கள், இமய மலைக்கும் விந்த்ய மலைக்கும் இடையே உள்ளதுமாகிய ஆர்யா வர்தத்தில் வாழும் ஸாது ஜநங்களுக்கு விரோதமுள்ள ஈரரசும் துன்பத்தைத் தந்தன. அடக்குவதற்காக ஸேனையை அனுப்பினால் அதையும் வெல்லுகிறது. மலை போன்ற தாயின் இரண்டு கொங்கைகளும் உன்னித்து எழுந்து கொண்டே இருந்தனவாம். அதன் சுமையைத் தாளாது மத்ய தேசமாகிய - வயிறிலிருந்து இடுப்பு வரை - மிகவும் வருந்தினவாம். "சக்ரவாகம்" என்பதொரு பக்ஷி. அதன் ஆணும் பெண்ணும் எப்போதும் இணைந்தே வாழுமாம். அவை போல் கொங்கைகளும் இணைந்திருக்குமாகையால் அதை இதற்கு உவமையாகக் கூறுவது கவிமரபு. ஆகவே நண்பனான அச்சக்ரவாகத்தை அனுப்பி உயராதிரு எனச் சொல்லிப் பார்த்தாலும் அதைப் பொருட் படுத்தவில்லை. எனவே சிறிது கோபம் உடையவன் போல் அச்யுதன் தக்க நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த போது போர் தோன்றிவிட்டது. யாருடன் ? மன்மதனுடன், இதுதான் தக்க ஸமயம் என்றெண்ணிய அச்யுதன் இவை இரண்டையும் எவ்வித ஆயுதத் துணையுமின்றி கைகளாலே அடக்கி விட்டான்.

कठिननखमुखक्षतानि शौरेः करयुगनिर्दयमर्दनानि चास्य।
भगवति सहमानयोः प्रकामं तव कुचयोरुचितं क्षमाधरत्वम् ॥ १४

கடிநநகமுகக்ஷதாநி ஶௌரே: கரயுகநிர்தயமர்தநாதி சாஸ்ய।
பகவதி ஸஹமாநயோ: ப்ரகாமம் தவ குசயோருசிதம் க்ஷமாதரத்வம் ॥

ஹே பகவதி - குணங்களால் பூர்ணமானவளே!
ஶௌரே: - மாதவனுடைய
கடிந - மிகவும் உறுதியான
நகமுக - நகங்களின் நுனியால் தோன்றிய
க்ஷதாநி - புண்களையும்
அஸ்ய - இந்த சௌரியினுடைய
கரயுக - இரு கைகளாலும்
நிர்தய - சிறிதும் தயையின்றிச் செய்யும்
மர்தநாநி ச - மீண்டும் மீண்டும் பிடிப்பதாகிய துன்பத்தையும்

ஸஹமாநயோ: - பொறுத்திருக்கும்
தவ குசயோ: - உமது கொங்கைகளுக்கு
க்ஷமாதரத்வம் - பொறுமை உடையவை என்ற பேச்சு
உசிதம் - தக்கதே
க்ஷமாதரத்வம் - மலை போல் கடினமாக இருக்கும் தன்மை
யுக்தம் - பொருத்தமுடையதே

தாயே ! நாராயணன், மலைபோல உறுதி வாய்ந்த ஹிரண்யனின் மார்பைத் தன் கை நகங்களாலேயே கிழித்துக் கொன்று விட்டானே ! அப்பப்பா எவ்வளவு உறுதி இருக்க வேண்டும் அந்த நகங்களுக்கு. அந்த நக நுனியாலே உன் கொங்கைகளில் உண்டாக்கும் புண்ணையும், சிறிதும் தயையின்றி அக்கைகளால் மேலும் மேலும் மர்தநம் செய்யும் துன்பத்தையும் உன் கொங்கைப் பொறுமையுடன் தாங்கிக் கொண்டிருக்கிறதே ! எத்தனை பொறுமை !! எனவே அவற்றை க்ஷமா - தரம் என அழைப்பது மிகவும் தக்கதே. பிறர் செய்யும் அபராதங்களைப் பொறுப்பவனைதானே க்ஷமாதரன் என அழைக்கிறோம். கீழ் சொன்ன புண், மர்தநம், இரண்டையும் தாங்கும் உனது கொங்கைகளுக்கு க்ஷமாதரத்வம் - பர்வதத்தின் தன்மையை - அதாவது கடினமாக இருக்கும் தன்மையைப் பெற்றிருப்பது யுக்தமே.

भीतं शीतकराद्रथाङ्गमिथुनं नित्यानुषङ्गाशाया
मातर्व्यातत तावकस्तनजनिं मानात् पुन श्चन्द्रमाः ।
त्वत्प्राणेशनखात्मना कृतजनिस्तत्र प्रदत्ते क्षतं
वैरं हन्त विरोधिनोः किल मिथो जन्मान्तरेऽप्यक्षतम् ॥ १९

பீதம் சீதகராத்ரதாங்கமிதுநம் நித்யாநுஷங்காசயா
மாதர்வ்யாதத தாவகஸ்தநஜநிம் மாநாத் புநச்சந்த்ரமா: ।
த்வத்ப்ராணேசநகாத்மநா க்ருதஜநிஸ்தத்ர ப்ரதத்தே க்ஷதம்
வைரம் ஹந்த விரோதிநோ: கில மிதோ ஜந்மாந்தரேப்யக்ஷதம் ॥

ஹே மாத: - தாயே
ரதாங்கமிதுநம் - சக்ரவாக தம்பதிகள்
சீதகராத் - சந்த்ரனிடமிருந்து
பீதம் - பயந்தவைகளாய்
நித்யாநுஷங்க ஆசயா - எப்போதும் சேர்ந்தே இருக்க வேண்டும் என்ற ஆசையால்
தாவக ஸ்தந ஜநிம் - உன் கொங்கை என்ற மறு பிறப்பை

வ்யாதத செய்தன

சந்த்ரமா: - (இதையறிந்த சந்த்ரன்)

மாநாத் - அஹங்காரத்தால்

த்வத்ப்ராணேசம - உனது பர்த்தாவின்

நகாத்மநா - நக உருவத்தில்

க்ருதஜநி: - எடுத்த பிறப்பை
உடையவனாய்

புநரபி - திரும்பவும்

தத்ர - ஸ்தந வடிவிலுள்ள
தம்பதிகளிடம்

க்ஷதம் - புண்ணை

ப்ரதத்தே - பல வடிவங்களில்
தருகிறான்

வைரம் - இயல்பான த்வேஷம்

ஜந்மாந்தரேபி - மறுபிறவி
எடுத்தாலும்

அக்ஷதம் கில - விடுபடுவதில்லை
என்பது ப்ரஸித்தமன்றோ?

சக்ரவாகம் என்பதொரு பக்ஷி. அன்றில் என்கின்றனர் தமிழிலிதனை. இந்த ஆணும் பெண்ணும் சேர்ந்தே வாழும். இவை இரவில் பனை மரத்தில் வாழுமாம். சந்த்ர ஒளியில் இவற்றிற்கு கண் தெரியாதாம். எனவே இவைகளுக்குச் சந்த்ரன் பகைவன் ஆயினன். இரவில் படுக்கும் போது தமது அலகுகளை ஒன்றோடு ஒன்று சேர்த்துக் கொண்டு படுக்குமாம். தூக்கத்தில் அலகு நெகிழ்ந்து விடின் அருகிலேயே இருந்தும் கண் தெரியாததால் பிரிவு தாளாது சத்தமிட்டுக் கொண்டே இருக்குமாம். இத்தகைய இவை இரண்டும் மறு பிறவி எடுத்தாவது எப்போதும் பிரியாது சேர்ந்தே வாழ வேண்டும் என்று எண்ணி லக்ஷ்மியின் ஸ்தந வடிவங்களை எடுத்தனவாம். இதை அறிந்தான் சந்த்ரன். அநாதி ஸித்தமானப் பகையால் உண்டான அஹங்காரத்தால் தானும் லக்ஷ்மியின் பர்தாவின் நக வடிவமாகப் பத்து அவதாரங்களிலும் பிறப்பெடுத்து ஸ்தந வடிவத்திலுள்ள சக்ரவாக தம்பதிகளுக்கு வர்ணத்தைப் பல வடிவங்களில் தருகிறானாம். இது தகுதியுடையதே. ஏனெனில் இருவரிடம் இயல்பாக உள்ளப் பகைமை மறு பிறவியிலும் மறைவதில்லை என்பது மநுஷ்யனாகப் பிறப்பெடுத்த தேவாஸுரர்களிடம் கண்கூடாகக் கண்டதன்றோ என்கிறார். அர்த்தாந்தரந்யாஸம்.

(தொடரும்)

सन्त्यज्य सुन्दरि सुदर्शनपाञ्चजन्यावेकेन कण्ठमितरेण करद्वयेन।
सङ्गृह्णतस्तव कुचौ च मदम्ब शौरेर्नो शङ्खचक्रधरता विरता रतेऽपि॥

ஸந்த்யஜ்ய ஸுந்தரி ஸுதர்ஶநபாஞ்சஜந்யா-
வேகேந கண்டமிதரேண கரத்வயேந।
ஸங்க்ருஹ்ணதஸ்தவ குசௌ ச மதம்ப ஶௌரேர்-
நோ ஶங்கசக்ரதரதா விரதா ரதே(அ)பி॥ 16

ஹே ஸுந்தரி மதம்ப - அழகிய தாயே! இதரேண - மறு இரண்டுகைகளால்
ஸுதர்ஶந பாஞ்ச ஜந்யௌ - சக்ரம், சங்கம் போன்ற ஆயுதங்களை
ஸந்த்யஜ்ய - அடியோடு விட்டு விட்டு
ஏகேந கரத்வயேந - ஒரு இரண்டு கைகளால்
கண்டம் - கழுத்தை
ஸங்க்ரஹ்ணத: - தழுவிக் கொள்பவனும்
தவ குசௌ - உனது கொங்கைகளை
ஸங்க்ருஹ்ணத: - பற்றிக் கொள்வதுமான
ஶௌரே: - நாராயணனுக்கு
ஶங்க சக்ர தரதா - சங்கு சக்ரங்களைப் பற்றிக் கொண்டுள்ள உருவமுடைமை
ரதேபி ந விரதா - புணர்ச்சியிலும் போகவில்லை

கோயில்களில் பகவானை ஸேவிக்கும் பொழுது அவனை சங்கம், சக்ரம் போன்ற ஆயுதங்களைத் தரித்திருக்கும் உருவம் உடையவனாகத் தரிசிக்கிறோம். லக்ஷ்மியுடன் கலந்தருளும் போது இவற்றை எல்லாம் விட்டுத் தானே இருப்பான். அப்படி அடியோடு விட்ட போதும் கலவியிலும் அவன் உருவம் அவ்வாயுதங்களை விடாது பற்றியே தான் இருக்கிறது என்பது விரோதம். இரண்டு கைகள் சங்கம் போன்ற கழுத்தைப் பற்றியுள்ள என்பதும், சக்ரவாகம் போன்ற இரண்டு ஸ்தநங்களை இரண்டு கைகள் பற்றியிருக்கின்றன என்பதும் பரிஹாரமாம். விரோதாபாஸாலங்காரம்.

भावत्कमाचरति देवि हरावपूर्वं पाणिग्रहं विजनकेलिगृहं प्रविश्य।
लाजायितं विमृदितस्तनलोलहारव्याकीर्णमौक्तिकचयैर्ज्वलति स्मराग्नौ॥

பாவத்கமாசரதி தேவி ஹராவபூர்வம்
பாணிக்ரஹம் விஜயகேலிக்ருஹம் ப்ரவிஶ்ய ।
லாஜாயிதம் விம்ருதிதஸ்தந லோலஹார-
வ்யாகீர்ணமௌக்திகசயைர் ஜ்வலதி ஸ்மராக்நௌ ॥ 17

ஹே தேவி - பகவானின் மஹிஷியே !
ஹரௌ - பகவான்
விஜநம் - மனிதரே இல்லாத
கேளிக்ருஹம் - விளையாட்டறையை
ப்ரவிச்ய - புகுந்து
அபூர்வம் - புதியதான
பாவத்கம் - உன்னுடைய
பாணிக்ரஹம் - விவாஹத்தை
ஆசரதி யதி - செய்யும் போது
ஜ்வலதி - கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கும்
ஸ்மராக்நௌ - மன்மதாக்நியில்
விம்ருதித - பகவான் மார்பில் உராய்ந்து
ஸ்தந - கொங்கைகளில்
லோல - அசைந்து கொண்டிருந்த
ஹார - முத்து மாலையிலிருந்து
வ்யாகீர்ண - நாற்புறமும் சிதறிய
மௌக்திக சயை: - முத்துக் குவியல்களால்
லாஜாயிதம் - பொறி ஹோமம் செய்யப்பட்டது

தாயே ! மக்கள் கூட்டம் நிறைந்ததாய் வீட்டின் வெளிப்புறத்து உள்ளதாய் பரந்ததுமான இடத்தில் செய்த விவாஹத்தின் போது செய்யப்பட்ட லக்ஷ்மியின் பாணிக்ரஹத்திலும் வேறானதாய் மனிதரே இல்லாத வீட்டினுள்ளே இருக்கும் ஓர் அறையில் செய்வதாய் அபூர்வமானதான உனது பாணிக்ரஹத்தை - கையைப் பிடித்திழுத்துத் தழுவுதல் போன்ற செயல்களை பகவான் செய்ததை புதிய விவாஹம் என்கிறார். விவாஹத்துக்குடலாக ஹோமம் அங்கமன்றோ ? அது செய்ய வேண்டாவோ ? எனவே அதுவும் நடந்தது என்கிறார். அக்நி எங்கிருந்தது ? உள்ளேயே இருந்தது. இது என்ன நேரம் ? மன்மதன் காதல் தீ சுடர் விட்டு ஒளிரும் நேரமன்றோ இது ! ஆகவே அதுதான் அக்நி. அதில் உனது ஸ்தநங்களில் அசைந்தாடிக் கொண்டிருக்கும் முத்து மாலை பகவான் மார்பில் பட்ட போது அதனின்று சிதறிய முத்துக் கூட்டங்களால் லாஜ ஹோமம் செய்யப்பட்டதாயிற்று 17

पञ्चायुधान्यपि विहाय तवाङ्गकेषु सञ्चारयन् स चतुरश्चतुरः स्वहस्तान् ।
रुञ्जालये कथमहो मधुकैटभारिः पञ्चायुधाजिमपि हर्षभरादकार्षीत् ॥

பஞ்சாயுதாந்யபி விஹாய தவாங்ககேஷு
ஸஞ்சாரயந் ஸ சதுரஸ்சதுர: ஸ்வஹஸ்தாந்।
கஞ்ஜாலயே கதமஹோ மதுகைடபாரி:
பஞ்சாயுதாஜிமபி ஹர்ஷபராதகார்ஷீத்॥

ஹே கஞ்சாலயே - தாமரையில் வாழ்பவளே !

சதுர : - ச்ருங்காரத்தில் வல்லவனாயும்

மதுகைடபாரி: - மது கைடபன் என்ற அரக்கனை அழித்த சூரனான பகவான்

பஞ்சாயுதாந்யபி - ஐந்து ஆயுதங்களையும்

விஸ்ருஜ்ய - விடுத்து

சதுர: - ஸ்வஹஸ்தாந் - தனது நான்கு கைகளையும்

தவ அங்ககேஷு - மென்மையான உனது அங்கங்களில்

ஹர்ஷ பராத் - மிக்க மகிழ்ச்சியால்

ஸஞ்சாரயந்நபி - ஒரே ஸமயத்தில் செலுத்திக் கொண்டிருந்த போதும்

பஞ்சாயுதாஜிம் - ஐந்து ஆயுதங்களால் செய்யப்படும் போரை (மன்மதன் போரை (மன்மதப் போரை)

கதமகார்ஷீத் - எப்படிச் செய்தான்.

ஆயுதங்களை இழந்தவனுக்கு ஐந்து ஆயுதங்களை ஏந்தியவனுடன் எப்படிப் போர் புரிய முடிந்தது என்பது கருத்து. என்றும் தன்னைப் பிரியாத ஆயுதங்களையும் வைத்து விட்டு மிக்க மகிழ்ச்சியுடன் விளையாடினான் என்பது பொருள் 18

क्रीडारणे तव कृतापजयः स्मरेण सन्त्याजितेष्वपि च शार्ङ्गमुखायुधेषु।
कल्याणि कंसदमनः कमले विचित्र मुत्तुङ्गचापलतया ननु योजितोऽभूत्॥

க்ரீடாரணே தவ க்ருதாபஜய: ஸ்மரேண
ஸந்த்யாஜிதேஷ்வபி ச ஶார்ங்கமுகாயுதேஷு।
கல்யாணி கம்ஸதமந: கமலே விசித்ர-
முத்துங்கசாபலதயா நநு யோஜிதோ(அ)பூத்॥

கல்யாணி - அழகிய

கமலே - லக்ஷ்மியே !

கம்ஸதமந: - கண்ணன்

தவ க்ரீடாரணே - உனது போர்க்களத்தில்

க்ருதாபஜய: - தோல்வியுறப் பட்டவனாய்

சார்ங்க முக ஆயுதேஷு - வில் முதலான ஆயுதங்களான

ஸம்த்யாஜிதேஷ்வபி - மன்மதனால் விடுவிக்கப்பட்ட போதும்

உத்துங்க சாபலதயா - கொடிபோல் நீண்டவில்லால்

யோஜித: அபத் - சேர்க்கப்பட்டவன் ஆயின்

விசித்ரம் - ஆச்சர்யம்

அழகான பெண்ணே ! உன்னுடன் செய்த போரில் கண்ணனை மன்மதன் வென்று விட்டான். தான் வெற்றி கண்டதற்கு அடையாளமாய் ஆயுதமனைத்தையும் மன்மதன் விடச் செய்து விட்டான். இருந்தும் பின் கொடி போல் நீண்ட வில்லுடன் தொடர்புடையவனாக ஆக்கப்பட்டான் ஆச்சர்யம்.

மன்மதன் தன்னால் ஜெயிக்கப்பட்ட பகவானை முதலில் ஆயுதமனைத்தையும் விடச் செய்வித்துப் பின் அவன் மீது தயையால் வில்லை அளித்தான் என்பது ஆச்சர்யம் என்பது கருத்து.

ஸர்வாயுதங்களையும் விட்டு விட்டு விளையாடிய போதும் பின்னும் மன்மத சபலம் உடையவனாயினன் என்பது உண்மைப் பொருள்.

उपमर्दितयोरुरोजयोस्ते दयिताश्लेषदशासु मौक्तिकानाम् ।
नवचन्दनरेणुनिर्विशेषं परिणामं प्रतिपेदिरे परागाः ॥ २०

உபமர்திதயோருரோஜயோஸ்தே
தயிதாஶ்லேஷதஶாஸு மௌக்திகாநாம் ।
நவசந்தநரேணு நிர்விஶேஷம்
பரிணாமம் ப்ரதிபேதிரே பராகா: ॥

ஹே தேவி - தேவனின் மனைவி !

தயிதாஶ்லேஷ தஶாஸு - பகவான் செய்த போதெல்லாம்

உபமர்திதயோ: - தன் மீதுள்ள முத்தாரத்துடன் உராயப்பட்டதும்

தே உரோஜயோ: - உனது ஸ்தநங்களுடன் ஸம்பந்தித்து இருந்தவைகளுமான

மௌக்திகாநாம் - முத்துக்களுடைய

நவசந்தந - ஈரமான சந்தனத்தின்

ரேணு - துகளுடன்

நிர்விசேஷம் - வேற்றுமையற்ற

பரிணாமம் - மிக நுண்ணியத் தன்மையை

ப்ரதிபேதிரே - அடைந்தன.

பராகா: - (முத்துக்) துகள்கள்

லக்ஷ்மியின் கொங்கைகளிலிருந்து முத்துக்களும் ஈரமான சந்தனமும் பகவான் மார்பில் உராயப்பட்டதால் நுண்ணிய துகளாம் தன்மையை அடைந்து ஒன்றோடொன்று கலந்து விட்டதால் இவற்றுள் வேறுபாடு தெரியாது போயின என்பது கருத்து.

मायावादैस्तव तु वशिते देवि मध्वार्तिकारि-
ण्यङ्गाभ्यां वां विघटितमभूद् द्वैतमालिङ्गनेषु।
आभिर्मुक्तावलिभिरचिरादाश्रितं निर्गुणत्वं
व्यक्ता चान्तः करणहरणात्तादृगानन्दपूर्तिः॥ २१

மாயாவாதைஸ்தவ து வஶிதே தேவி மத்வார்த்திகாரி-
ண்யங்காப்யாம் வாம் விகடிதமபூத் த்வைதமாலிங்கநேஷு
ஆபிர்முக்தாவலிபிரசிராதாஶ்ரிதம் நிர்குணத்வம்
வ்யக்தா சாந்த: கரணஹரணாத் தாத்ருகாநந்தபூர்த்தி: ॥

ஹே தேவி - பகவான் மஹிஷி
மதோ: - மது என்ற அரக்கனுக்கு
ஆர்த்திகாரிணி - துன்பம் தந்த பகவான்
மத்வ ஆர்த்தி காரிணி - மத்வமத தூஷகனும்
மாயா: + வாதை: - லக்ஷ்மி என்ற பெயருள்ள உனது வாதங்களாலும்
மாயாவாதை: - அத்வைத ஸித்தாந்த உபந்யாஸங்களாலும்
வஶிதே - வசீகரிக்கப்பட்ட போது
வாம் - உங்கள் இருவரின்
அங்காப்யாம் - உடல்களால்
ஆலிங்கநேஷு - அடிக்கடி ஆலிங்கநம் செய்யப்பட்ட போது
த்வைதம் - த்வைதிமதம்
விகடிதம் - நிரஸிக்கப்பட்டதாக
அபூத் - ஆயிற்று
ஆபி: - இந்த
முக்தாவலிபி: - முத்து மாலைகளால்
நிர்குணத்வம் - ப்ரஹ்ம நிர்குணம் என்ற கருத்து
ஆச்ரிதம் - ஏற்கப்பட்டது
அந்த: கரணஹரணாத் - அவித்யா நிவ்ருத்தி தோன்றிதாய்
தாத்ருக் - வேதத்தால் சொல்லப்பட்ட
ஆநந்த பூர்த்தி: - அகண்டானந்த ப்ரம்மம்
வ்யக்தா - திரோதாநம் அற்றதாக ஆயிற்று
அந்த: கரண ஹரணாத் - மனதை கொள்ளை கொள்ளும் சுரத வ்யாபாரங்களால்
தாத்ருக் - ப்ரம்மாநந்த ஸத்ருசமான
ஆநந்தபூர்த்தி: - சிற்றின்ப சுகம்
வ்யக்தா - நன்கு சுவைக்கப்பட்டது.

ஸ்ரீ ஸ்ரீசன் இருவரும் சங்கரமதத்தில் ப்ரவேசித்ததால் அம்மதத்துக்கு ப்ராபல்யமும் மற்றைய மதங்களுக்கு தௌர்பல்யமும் உண்டாயிற்று என்கிறார்.

''மத்வார்த்திகாரிணி'' என்ற பதத்தை மது + ஆர்த்திகாரிணி என்றும், மத்வ + ஆர்த்திகாரிணி என்றும் இரு வகைகளாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். ''மாயாவாதை:'' என ஒரே பதமாகவும், மாயா + வாதை: என இரண்டு பதங்களாகவும் கொள்ள வேண்டும். மது என்ற அரக்கனுக்குத் துன்பத்தைத் தந்தவன் பகவான், மத்வ மதத்தைக் கண்டித்துச் செய்யப்படுவதும் மாயா: வாத: - மாயாவாத: - என்பதால் லக்ஷ்மியின் வாதம் எனப்பொருள் தருவதுமான மாயா வாதங்களால் - அத்வைத ஸித்தாந்த உபந்யாஸங்களால் அத்வைதி மதத்தில் சேர்ந்து விட்டார். இதனால் ஸ்ரீ ஸ்ரீமன் இருவரும் அத்வைதிகள் ஆயினர் என்பது புலப்பட்டதாயிற்று. இவ்விருவரும், தமது உடல்களால் அடிக்கடி அணைத்துக் கொண்ட போது த்வைதிமதம் நிரஸிக்கப் பட்டதாயிற்று.

அழுந்தக் கட்டியதால் இரு உடல்களும் ஓர் உடல் போலாயின என்பது கருத்து. தாய் அணிந்திருந்த முத்து மாலைகளால் ப்ரம்மம் ஸகுணம் என்ற கருத்து ஏற்கப்பட்டது. குணம் என்றால் நூல் என்பது பொருள். மாலைகளில் நூல் அறுந்து போயிற்று. அப்போது நிர்குணம் ஆயிற்று.

ப்ரம்மமும் ஜீவாத்மாவும் ஒன்று என்ற ஜ்ஞானத்தால் அவித்யா நிவ்ருத்தி உண்டாகியது, அதனால் அகண்டானந்த ப்ரம்மம், நன்கு புலப்பட்டது. மனதைக் கொள்ளை கொள்ளும் சுரத வ்யாபாரங்களால் இம்மை இன்பம் நன்கு நுகரப்பட்டது என்பது கருத்து.

जलजायतेन समस्तनाग प्रवरप्रौढनिबन्धनभ्रमेण ।
प्रियपाणिनियन्त्रणोचिताया स्तव कण्ठादुदितास्तदा सुशब्दाः ॥

ஜலஜாயததே ஸமஸ்தநாக
ப்ரவரப்ரௌட நிபந்தநப்ரமேண ।
ப்ரியபாணிநியந்த்ரணோசிதாயாஸ்
தவ கண்டாதுதிதாஸ்ததா ஸுசப்தா: ॥

ஹே ஜலஜாயதநே - தாமரையாளே !
ப்ரிய - உன் பர்த்தாவினுடைய
பாணி - நான்கு கைகளாலும்
நியந்த்ரண - அழுந்தக் கட்டுவதற்கு வேண்டிய
உசிதாயா: - தகுதி வாய்ந்த
தவ கண்டாத் - உனது கழுத்திலிருந்து
ததா - ஆலிங்கனம் செய்த போது
ஸம் - ஒன்றோடொன்றொப்புமை உடையனவான
ஸ்தந - கொங்கைகளாகிற
அக ப்ரவர - உயர்ந்த மலைகளை
ப்ரௌட நிபந்தந - அழுந்தக்கட்டு வதாலுண்டான ச்ரமத்தால்
ஸுஹப்தா: - "உஸ்" என்ற சப்தம்
உதிதா: - உண்டாயின

பகவான் தமது நான்கு கைகளாலும் உன்னை இறுகக் கட்டியணைக்கும் போது அவ்வழுத்தைத் தாங்கவல்ல திறன் பெற்ற உனது கழுத்திலிருந்து அவன் அப்படி அணைக்கும் போது ஒப்புமையற்றனவும் மலை போன்றவையுமான உனது கொங்கைகளில் தோன்றும் அழுத்தத்தின் ஶ்ரமத்தால் "உஸ்" என ஒலிக்கும் ஶ்ரமத்தால் உண்டாம் ஒலி உண்டாயிற்று. லௌகிக ஸ்த்ரீகளைப் போலவே உனக்கும் ஆயாஸம் உண்டாயிற்று.

இன்னுமோர் பொருள்

ப்ரிய - அனைவருக்கும் ப்ரியமானதும்
பாணிநி - பாணிணி என்பவரது
யந்த்ரண - ஸூத்ரங்களை
உசிதாயா: - (படித்தவளான)
தவகண்டாத் - உன் கழுத்திலிருந்து
ஸமஸ்தநாகப்ரவர - சேஷாவதாரரான பதஞ்சலியினுடைய
ப்ரௌட நிபந்தந - உயர்ந்த நூலாகிய மஹா பாஷ்யத்தை
ச்ரமேண - ச்ரமப்பட்டுப் படித்ததால்
கண்டாத் - கழுத்து, கன்னம், உதடு போன்ற சப்தம் தோன்றும் இடங்களிலிருந்து
ஸுஹப்தா: - குற்றமற்ற சப்தங்கள்
உதிதா: - தோன்றின

வடமொழியில் பல வ்யாகரணங்கள் இருப்பினும் தற்போது எல்லோருக்கும் பயன்படுவது பாணிநி என்பவராது வ்யாகரணமே. எனவே அது மிகவும் ப்ரியமாயிற்று. இத்தகைய பாணிநி ஸூத்ரத்தை நன்கு பயின்றவளாம் லக்ஷ்மி. அத்துடன் இதன் வ்யாக்யானமான பதஞ்சலியின் உயர்ந்த நூலான "மஹாபாஷ்யத்"த்தையும் நன்கு அறிந்தவளாம். ஆகவே அவள் வாயிலிருந்து எவ்வித் தோஷமுமில்லாத சொற்களே உண்டாகின்றனவாம்.

योगे पयोधितनये युवयोस्तदानीं शम्पालताजलदयोरिव संप्रवृत्ते।
उज्जृम्भितातनुशुभाशुगवेगनीता युक्तं श्रमाम्बुकणिकामयवृष्टिरासीत्॥

யோகே பயோதிதநயே யுவயோஸ்ததாநீம்
ஶம்பாலதாஜலதயோரிவ ஸம்ப்ரவ்ருத்தே।
உஜ்ஜ்ரும்பிதாதநுஶுபாஶுகவேகநீதா
யுக்தம் ஶ்ரமாம்புகணிகாமயவ்ருஷ்டிராஸீத்॥ 23

ஹே பயோதிதநயே - பாற்கடல் புத்ரீ !
ஶம்பாலதா - மின்னல் கொடி போன்றும்
ஜலதயோரிவ - மேகம் போன்றுமுள்ள
யுவயோ: - உங்களின்
யோகே - ரதிப்புணர்ச்சி
ப்ரவ்ருத்தே ஸதி - உண்டாகிய போது
யோகே - மின்னலுக்கும் மேகத்துக்கும் ஸம்பந்தம்
ப்ரவ்ருத்தே ஸதி - தோன்றிய போது
உஜ்ஜ்ரும்பித - கிளர்ந்தெழுந்த
அதநு - மன்மதனுடைய
சுபாசுக - புஷ்ப மயபாணத்தின்
வேக - வேகத்தால்
நீதா: - தோற்றுவிக்கப்பட்டதும்
உஜ்ஜ்ரும்பித - மேல் நோக்கி எழுந்ததும்
அதநு - பெரிதானதும்
ஶுபாஶுக - பௌரஸ்த்யம் எனப்படுவதுமான காற்றின்
வேக - வேகத்தால்
உத்பாதிதா - தோற்றுவிக்கப்பட்ட
ஶ்ரமாம்பு - வியர்வையின்
கணிகாமய வ்ருஷ்டி: - சொட்டுகளான மழை
வ்யக்தமாஸீத் - புலப்பட்டது

லக்ஷ்மி மின்னல் கொடி போல் ப்ரகாசிப்பவள். ஸ்ரீசன் நீருண்ட மேகம் போல் விளங்குபவன். இவ்விருவரும் சேர்ந்த போது சுபமான பூக்களையே பாணங்களாகக் கொண்ட மன்மதனின் பாணத்தொடர்பு தோன்றியது. அத்தொடர்பால் சரீரத்தில் தோன்றிய முயற்சியால் தோற்றுவிக்கப்பட்டது வியர்வை யாகிய மழை. மழைக்குக் காரணமான மின்னலும் மேகமும் சேர்ந்தபோது உலகுக்கே நன்மை தருவதான ''பௌரஸ்த்யம்'' என்ற காற்று மிகுதியாகத் தோன்றிற்றாம். அதனால் தோற்றுவிக்கப்பட்டது வியர்வை என்ற மழை என்ற பொருளும் பத அமைப்பின் முறையில் கிடைக்கின்றது.

நீங்கள் இருவரும் பட்ட கஷ்டத்தால் உண்டான ச்ரம ஜலத்தால் ஸ்நாநம் செய்தவர் போல் ஆனீர்கள் என்பது கருத்து.

चलद्गुणेष्वत्र पयोधिजातेष्वत्रासमुक्तावलिषु प्रकम्पः।
रमे सदा राजकराप्तनानाहारेषु युक्तोऽतनुयुद्धकाले॥

சலத்குணேஷ்வத்ர பயோதிஜாதேஷ்-
வத்ராஸமுக்தாவலிஷு ப்ரகம்ப:।
ரமே ஸதா ராஜகராப்தநாநா-
ஹாரேஷு யுக்தோ(அ) தநுயுத்தகாலே॥ (24)

ஹே ரமே - லக்ஷ்மீ
அத்ர அதநு யுத்தகாலே - மன்மத யுத்த ஸமயத்தில்
சலத்குணேஷு - ஆடும் நூலை உடையதும்
பயோதிஜாதேஷு - கடலில் தோன்றியதும்
அத்ராஸ - தோஷமில்லாத
முக்தாவலிஷு - முத்து குவியலானதும்
ஸதார - மனைவியுடன் புணர்ந்துள்ள
அஜ - பகவானுடைய
கராப்த - கையில் அகப்பட்டதும்
நாநாஹாரேஷு - நவரத்நங்களில் செய்யப்பட்டதுமான ஹாரங்களில்
ப்ரகம்ப: - இப்புறமும் அப்புறமும் சுற்றுதல்
யுக்த: - தகுதியுடைத்தே

மற்றுமோர் பொருள்

ஸதா - எப்போதும்
ராஜகர - அரசனிடமிருந்து
ஆப்த - கிடைத்ததும்
நாநா - உணவு, இனிப்பு, காரம் எனப் பலவகையானதுமான
ஆஹாரேஷு - ஆஹாரம் உடையவரிடம்
அத்ராஸமுக்த - யுத்தம் செய்யப் பயப்படுபவரும்
அபலிஷு - போர் புரியும் ஸாமர்த்யம் அற்றவரும்
சலத்குணேஷு - நன்றி கெட்டவரும்
அத்ரப - போர் செய்யாது ஓடுவதில் வெட்கம் அற்றவருமான
யோதிஷு - சண்டை செய்யும் கூட்டத்திடம்
அதநு - மிருதியான
யுத்த காலே - போர்காலத்தில்
ப்ரகம்ப: - பயத்தால் ஓடுதல்
யுக்த: - தகுதி உடையதே

இரண்டு பொருள்களும் தெளிவானவையே

गाढं श्लिष्यति माधवे सकुतुकं क्रीडावनीं त्वां तदा
युक्तं चम्पकगर्भसौरभशुभैरस्पन्दि मन्दानिलैः ।
राजीवोपरि पर्यपाति सहसा लोलैरलीनां कुलै-
रासीदम्ब कदम्बकोलनिचयो यस्मादतो विस्मयः ॥

காடம் ஶ்லிஷ்யதி மாதவே ஸகுதுகிம் க்ரீடாவநீம் த்வாதம் ததா
யுக்தம் சம்பககர்ப்பஸௌரபஶுபைரஸ்பந்தி மந்தாநிலை: ।
ராஜீவோபரி பர்யபாதி ஸஹஸா லோலைரலீனாம் குலை-
ராஸீதம்ப கதம்பகோலநிசய: யஸ்மாததோ விஸ்மய: ॥ 25

ஹே அம்ப - தாயே
மாதவே - வைகாசி மாதமும் மாதவனும்
ஸகுதுகம் - மிக்க ஆசையுடன்
க்ரீடாவநீம் - விளையாட்டுத் தோட்டத்தை, புணர்ச்சி விளையாட்டுக்கு இருப்பிடமான
த்வாம் - உன்னை
காடம் - உடல் முழுவதும்
ச்லிஷ்யதி ஸதி - கவரப்பட்ட போது
ததா - அச்சமயம்
சம்பககர்ப - செண்பகப் பூவினுடையே உள்ள
ஸௌரப - உயர்ந்த மணத்தின் தொடர்பால்
சுபை: - வாஸனை ஊட்டப்பட்ட
மந்தா நிலை : - தென்றற் காற்றால்
அஸ்பந்நி - வீசுகை (பாவே ப்ரயோகம்)
லோலை: - விருப்பமுடையவும், அசைந்து ஆடுவனவுமான
அலீநாம் குலை: - வண்டுக் கூட்டங்களால் வண்டு போன்ற முன் நெற்றி மயிர்களால்
ராஜீவோபரி - தாமரையிலும், தாமரை போன்ற முகத்திலும்
பர்யபாதி - விழப்படுகை, பாவே ப்ரயோகம்
இத்யேதத் - என்றுமிச்செயல்
யுக்தம் - பொருத்தமுடையதே
யஸ்மாத் - எக்காரணத்தால்
கதம்ப - கதம்ப மரத்துக்கு
கோளநிசய: - அடி முதல் நுனி வரை வ்யாபித்த பூக்களால் இது பூவின் உருண்டை என்ற நிலை
ஆஸீத் - உண்டாயிற்றோ
அத: - அதனால்தான்
விஸ்மய: ஆஶ்சர்யம்

சித்திரையும், வைகாசியும் வஸந்தருதுவைச் சார்ந்தவை. வேதம் சித்திரைக்கு ''மது'' என்ற பெயரையும், வைகாசிக்கு ''மாதவன்'' என்ற பெயரையும் ஓதுகிறது. இவ்வஸந்தத்தில் அனைத்துப் பூஞ்செடிகளும் பூத்துக் குலுங்கும்.

ஸாயங்காலத்தில் மெல்லிய தென்றல் இதமாக வீசும். மதிய வெயிலில் வாடியவர் பூங்காங்களுக்குச் செல்வர். அங்கு செண்பகம் போன்ற உயர்ந்த பூக்களின் வாஸனையை வாரிக் கொண்டுத் தென்றல் வீசும். தேன் விரும்பியான வண்டுகள் தாமரை போன்ற தேனுள்ள மலர்களைத் தேடிச்சென்று அடையும். இவை யாவும் இயற்கையே. இதுபோல் மாதவன் மிக்க ஆசையுடன், தன் மனைவியான இலக்குமியை அழைத்து போய் விளையாட்டறையை அடைந்தான். பின் லக்ஷ்மியின் உடல் முழுவதையும் தன் உடலில் மறைத்து விட்டானாம். அச்சமயம் செண்பகப்பூ போன்ற மூக்கிலுண்டாவதும், நறுமணத்தால் மநோஹரமானதும், தென்றல் போன்று மெல்லியதுமான மூச்சுக் காற்று வீசியதாம். பத்மிநி என்ற வகுப்பைச் சார்ந்த உயர்ந்த இனப்பெண்களின் மூச்சு, மணமுள்ளதாக இருக்கும் என்கின்றன நூல்கள். வண்டு போன்று கருத்தும் சுருண்டும் முன் நெற்றி யிலுள்ள ரோமங்கள் தாமரை போன்ற மாதவன் முகத்தில் விழுமாம். இவை யாவும் இயல்பானவையாம். ஆனால் மழை காலத்தில் பூக்கும் கதம்ப மரம் அடி முதல் நுனிவரை பூத்துக் காண்பதற்கு இது ஒரு பூவினுருண்டை எனச்சொல்லும் படியாக இவ்வஸந்த காலத்தில் இருந்ததுதான் ஆஶ்சர்யம் என்கிறார்.

கதம்பப் பூவின் உருண்டை என்பதற்கு அவ்வுருண்டை போன்று உடல் முழுவதிலும் மயிர் கூச்சுத் தோன்றியிருந்ததென்பது கருத்து. பகவான் இறுகக் கட்டிய போது பெருமூச்சு உடையவளாயும், தலை அவிழ்ந்தவளாயும், மயிற்கூச்சால் கவரப்பட்ட உடல் உடையவளாகவும் ஆயினள் என்பது கருத்து.

प्रसभमरुणबिम्बं ग्रस्तमासीदकस्मात्
परिपतितमुडूनां पङ्क्तिभिर्मेरुशृङ्गात्।
अपि तिमिरवृताभूदिन्दिरे चन्द्ररेखा
तव च मधुजितश्च द्वन्द्वयुद्धे प्रवृद्धे ॥

ப்ரஸபமருணபிம்பம் க்ரஸ்தமாஸீதகஸ்மாத்
பரிபதிதமுடூநாம் பங்க்திபிர்மேருஶ்ருங்காத்।

திமிரவ்ருதாபூதிந்திரே சந்த்ரரேகா
தவ ச மதுஜிதஶ்ச த்வந்த்வயுத்தே ப்ரவ்ருத்தே॥ 26

ஹே இந்திரே - லக்ஷ்மீ !
த்வந்த்வயுத்தே - இருவர் மட்டும் செய்யும் போராகிய அணைத்தல் போன்ற சுரதப் போர்
தவ ச - உனக்கும்
மதுஜிதஶ்ச - மதுஸூதனனுக்கும்
ப்ரவ்ருத்தே ஸதி - நிகழ்ந்த போது
அருணபிம்பம் - சூர்ய மண்டம்
அகஸ்மாத் - காரணமின்றியே
ப்ரஸபம் பலாத்காரத்தால்
க்ரஸ்தமாஸீத் - ராகுவால் க்ரஹிக்கப்பட்டது
உடூநாம் - நக்ஷத்ரங்களுடைய
பங்க்திபி: - வரிசைகளால்
மேரு ஶ்ருங்காத் - மேரு மலையின் நுனியிலிருந்து
பதிதமபூத் - பூமியில் விழப்பட்டது
சந்த்ர ரேகாபி - பிறைச் சந்த்ரனும்
திமிராவ்ருதா - இருளால் மறைக்கப்பட்டதாய்
ஆஸீத் - ஆயிற்று.

லக்ஷ்மியே ! அணைத்தல் உதடு சுவைத்தல் போன்ற சுரதச் செயல்களாகிய இருவர் இணைந்து செய்யும் போர் உனக்கும் மதுசூதனனுக்கும் தொடங்கிய போது, சிவந்த சூர்ய மண்டலம் அமாவாஸை போன்ற காரணமின்றியே பலாத்காரத்தால் ராகுவால் க்ரஹிக்கப்பட்டதாயிற்ற. கொவ்வைப்போல் சிவந்ததாயின் உதடை பகவான் பலாத்காரத்தால் கடித்து விட்டார் என்பது கருத்து.

தாம் வாழுமிடமாகிய மேரு மலையின் நுனியிலிருந்து நழுவி நக்ஷத்ரங்கள் பூமியில் நாற்புறமும் சிதறின. நக்ஷத்ரங்கள் போன்ற முத்துக்கள் மேருவின் உச்சி போன்றவைகளான தாயின் தனங்களின் நுனியிலிருந்து பகவான் மார்புராய்தலால் கீழே விழுந்தன என்பது உண்மைப்பொருள். சந்த்ர ரேகை இருளால் மறைக்கப்பட்டது என்பதற்குப் பிறை போன்று நெற்றி அப்போதவிழ்ந்த கேசத்தால் மறைக்கப்பட்டதென்பது வாஸ்தவமான பொருள். (26)

वपुषि मृदुतमे ते वेदना मा जनीति
प्रशिशमयिषितापि प्रेयसा माधवेन।
विपुलपुलकपाली विश्वमातः त्वदङ्गे
तव दृढपरिरम्भात् स्वैरमुन्मेमिषीति ॥ (२७)

வபுஷி ம்ருதுதமே தே வேதநா மா ஜநீதி
ப்ரஸிஸமயிஷிதாபி ப்ரேயஸா மாதவேந ।
விபுலபுலகபாலீ விஸ்வமாத: த்வதங்கே
தவ த்ருடபரிரம்பாத் ஸ்வைரமுந்மேமிஷீதி ॥

ஹே விஸ்வமாத: - அனைத்துலகத் தாயே
ப்ரேயஸா - உன் ப்ரியனான
மாதவேந - மாதவனால்
ம்ருதுதமே - மிக மென்மையான
தே வபுஷி - உன் உடலில்
வேதநா - மயிர்க் கூச்சலால் உண்டாம் துன்பம்
மா ஜநீதி - தோன்ற வேண்டாமென்று
ப்ரஸிஸமயிஷிதாபி - தணிக்க விரும்பிய போதும்
த்வதங்கே - உன் உடலில்
விபுல - உடல் முழுவதுமிருந்த
புலக பாலீ - மயிர்கூச்சு
தவ - உனது
த்ருடபரிரம்பாத் - இறுகத் தழுவுதலால்
ஸ்வைரம் - மிகுதியாக
உந்மேமிஷீதி - வ்ருத்தி ஆகின்றது.

உனது ஆலிங்கநத்தின் ப்ரபாவம் பகவானின் ஸங்கல்பத்தையும் பயன் அற்றதாக்கி விடுகின்றது என்பதும், உடலில் துன்பம் தோற்றுவிக்கும் செயலைச் செய்யலாகாதென பகவான் நினைத்தபோதும் நீயாகவே அதைத் தோற்றுவித்துக் கொள்கிறாய் என்பதும் கருத்துக்கள் (27)

मधुमथनमनः प्रहर्षहेतोर्मनसिजयज्ञमनेकधा विधाय ।
ध्रुवमवभृथमज्जनं भवत्या जननि कृतं शुचिभिः श्रमाम्बुपूरैः ॥

மதுமதநமந: ப்ரஹர்ஷஹேதோர் மநஸிஜயஜ்ஞமநேகதா விதாய ।
த்ருவமவப்ருதமஜ்ஜநம் பவத்யா ஜநநி க்ருதம் ஶுசிபி: ஶ்ரமாம்புபூரை: ॥

ஹே ஜநநி - தாயே
மதுமதந - பகவானுடைய
மந: ப்ரஹர்ஷ ஹேதா: - மனதை மகிழ்விப்பதற்கு மட்டுமே
மநஸிஜ யஜ்ஞம் - மன்மதயஜ்ஞம் எனப்படும் கரத யாகத்தை
அநேகதா - பல வகைகளில்
விதாய - செய்து
ஶுசிபி: - பரிசுத்தமானதும்
ச்ரம - ரதி ச்ரமத்தால் தோன்றியதுமான
அம்புபூரை: - வியர்வை வெள்ளங்களால்
அவப்ருதமஜ்ஜநம் - அவப்ருத ஸ்நாநம்
க்ருதம் - செய்யப்பட்டது
த்ருவம் - நிச்சயம்

லக்ஷ்மி யாகமொன்று செய்தாளாம். அது மிக உயர்ந்ததாம். ஏனெனில் ஸ்வர்கம் போன்ற எப்பயனையும் எதிர்பார்க்காது பகவானின் மனமகிழ்ச்சி ஒன்றையே பயனாகக் கொண்டதாலாம். அந்த யாகத்துக்கு மந்மத யஜ்ஞம் எனப் பெயராம். யாகத்தில் ஜ்யோதிஷ்டோமம், தர்ச பூர்ணமாஸம் எனப் பலவகைகளுண்டு. அதுபோல் இந்த ஸுரத யாகத்திலும் பல வகைகள் உண்டு. அவை காம சாஸ்த்ரத்தைச் சார்ந்ததும் வாத்ஸ்யாயநர் என்பவரால் செய்யப்பட்டதுமான ஸூத்ரங்களில் கூறப்பட்டுள்ளன. அதைப் பின்பற்றிப் பல வகைகளாகச் செய்து முடித்தாளாம். யாகம் முடிந்தபின் செய்யும் ஸ்நாநத்துக்கு அவப்ருத ஸ்நாநம் எனப்பெயர். அதைத் தூயதான ஜலத்தில் செய்வர். லக்ஷ்மியும், ரதி ச்ரமத்தால் உண்டாகிய வியர்வை ப்ரவாஹத்தில் செய்தாளாம்.

सायासायाः सुरतविरतौ कान्तबाह्वान्तराले
विन्यस्यास्यं तव भगवति स्वापसौख्यं भजन्त्याः ।
फालोत्पन्नश्रमजलमिलच्चित्रकप्रसृतोऽस्मिन्
श्रीवत्सोऽन्यः स भवतु रमे यस्तु कस्तूरिबिन्दुः ॥

ஸாயாஸாயா: ஸுரதவிரதௌ காந்தபாஹ்வாந்தராலே
விந்யஸ்யாஸ்யம் தவ பகவதி ஸ்வாபஸௌக்யம் பஜந்த்யா: ।
பாலோத்பந்நச்ரமஜலமிலச்சித்ரகப்ரஸ்ருதோ(அ)ஸ்மிந்
ஸ்ரீ வத்ஸோ(அ)ந்ய: ஸ பவது ரமே யஸ்து கஸ்தூரிபிந்து: ॥

ஹே பகவதி ரமே! - மஹா பாக்யவதியான லக்ஷ்மியே!
ஸுரதவி ரதௌ - புணர்ச்சி முடிவில்
ஸ - ஆயாஸாயா: - மிகவும் களைத்து உள்ளதால்
காந்த - கணவனது
பாஹ்வாந்தராலே - மார்பில்
ஆஸ்யம் விந்யஸ்ய - முகத்தை வைத்துக் கொண்டு
ஸ்வாபஸௌக்யம் - உறக்கத்தின் ஸுகத்தை
பஜந்த்யா: - அடைந்துள்ள
தவ - உனது
பாலோத்பந்ந - நெற்றியில் தோன்றிய
ச்ரமஜல - வியர்வை ஜலத்துடன்
மிலத் - ஸம்பந்தித்த
சித்ரக - கஸ்தூரி திலகத்திலிருந்து
ப்ரஸ்ருத: - பெருகிய

அஸ்மிந் - இப்பகவானின் மார்பில்
ய: கஸ்தூரி பிந்து : - யாதொரு கஸ்தூரிச் சொட்டுண்டோ
ஸ: - அது
அந்ய: ஸ்ரீவத்ஸ - மற்றொரு ஸ்ரீவத்ஸம் என்ற மறுவாக
பவதி - ஆகின்றது

தாயே நீயும் உன் கணவனும் விபரீதப் புணர்ச்சி புணர்ந்தீர்கள். அதில் நீ மிகவும் களைத்துப் போனாய். ஆதலால் கணவன் மார்பிலேயே முகத்தை வைத்துக் கொண்டு படுத்து உறங்கி விட்டாய். சுரத ச்ரமத்தால் அப்போது உன் முகத்தில் வியர்வை தோன்றியது. அது நீ நெற்றியில் அணிந்துள்ள கஸ்தூரி திலகத்துடன் கலந்துப் பெருகி பகவான் மார்பில் சொட்டாகச் சொட்டியது. அது அவன் மார்பில் முன்பே உள்ள ஸ்ரீவத்ஸம் என்ற மறு போல் இதுவும் மறுவாகியது என்கிற அதிசயோக்தி என்னும் அலங்காரம்.

सञ्जातं नयनयुगे निरञ्जनत्वं नीरागः स्फुटमभवत्तवाधरेऽपि ।
सम्पन्ना जननि कचेऽपि बन्धमुक्तिः सानन्दं रहसि हरेरुपासनेन ॥

ஸஞ்ஜாதம் நயநயுகே நிரஜ்ஞநத்வம்
நீராக: ஸ்புடமபவத்தவாதரே(அ)பி।
ஸம்பந்நா ஜநநி கசே(அ)பி பந்தமுக்தி:
ஸாநந்தம் ரஹஸி ஹரேருபாஸநேந ॥

ஜநநி - தாயே !
ரஹஸி - ஜநமில்லாத இடத்தில்
ஸாநந்தம் - மிக மகிழ்ச்சியுடன்
ஹரே: - ஹரி செய்த
உபாஸநேந - செயல்களால்
தவ நயநயுகே - உனது இரு கண்களிலும்
நிரஜ்ஞநத்வம் - மையின்மை
ஸஞ்ஜாதம் - உண்டாயிற்று
தவ அதரேபி - உனது உதட்டிலும்
நீராக: - சிவப்பாக
ஸ்புடமபவத் - வெளிப்படையாகிறது
கசேபி - கேஶத்திலும்
பந்தமுக்தி: - கட்டு இன்மை
ஸம்பந்நா - தோன்றியது

பகவானும் நீயும் தனித்திருந்த இடத்தில் அவன் உன் கண்களை முத்தமிட்டான். அதனால் கண்களில் தீட்டியிருந்த மை கரைந்து போயிற்று. உதடைச் சுவைத்ததால் அதிலிருந்த

வெற்றிலையின் செம்மை மறைந்து போயிற்று. கேசத்தைப் பற்றியதால் தலை முடிச்சும் அவிழ்ந்தது.

வேறு பொருளொன்று

ரஹஸி - மனதில்
ஸாநந்தம் - ப்ரீதியுடன்
ஹரே: - பகவானை
உபாஸநேந - த்யாநம் செய்ததால்
நிரஞ்ஜநத்வம் - மனதில் அழுக்கின்மையும்
நீராக: - வைராக்யமும்
பந்தமுக்தி: - ஸம்ஸாரம் கழிதலும்
அபவத் - உண்டாயிற்று

அது அந்த காலம்....

शिष्टाकरणे प्रतिषिद्धसेवायां च नित्यं चेलपिण्डादूर्ध्वं स्वं हरणं ।

சாஸ்த்ரம் விதித்த நித்ய கர்மாக்களை (ஸந்த்யாவந்தனாதிகளை) செய்யாமல் விட்டாலும், சாஸ்த்ரம் விலக்கியவற்றை செய்தாலும் அதற்கு தண்டனையாக அவனுடைய சொத்தை பறிமுதல் செய்வது ராஜாவின் கடமை. ஆனால் உண்டு உடுக்க அளவான தனத்தை குற்றவாளிக்கு விட்டுவிட வேண்டும்.

—கௌதம தர்ம சாஸ்த்ரம்

ஸர்வாந்ந அநுமதி:

सप्तमीं च भुक्त्वा, अनिचयाय ।

ஏழ்மையினால் ஆறு வேளை அந்நம் இல்லாமல் பட்டினி கிடக்க நேரிட்டால் ஏழாவது வேளை யாரிடம் அந்நம் கிடைத்தாலும் உண்ணலாம். ஆனால் அதை மறு வேளைக்காக சேமிக்கக் கூடாது.

—கௌதம தர்ம ஸூத்ரம்

मलयमुकुटीवाटीपाटीरकोटरनाटिनः
सरसिजमधुस्पन्दामन्दाघमर्षणहर्षिणः ।
तव रतिभवं लुम्पन्त्यम्ब श्रमं शयनीभव-
त्फणिपतिभिया मन्दं मन्दं चरन्त इवानिलाः ॥ ३१

மலயமுகுடீவாடீபாடீர கோடரநாடிந:
ஸரஸிஜமதுஸ்பந்தாமந்தாகமர்ஷணஹர்ஷிண: ।
தவ ரதிபவம் லும்பந்த்யம்ப ச்ரமம் சயநீபவத்-
பணிபதிபியா மந்தம் மந்தம் சரந்த இவாநிலா: ॥ 31

ஹே அம்ப - தாயே !
மலயமகுட - சந்தன மலையின் கொடி முடியிலுள்ள
வாட - சிறு தோட்டத்தில் முளைத்துள்ள
பாடீரகோடர - சந்தன மரங்களின் நடுப்பகுதியில்
நாடிந: - நடிப்பவைகளும்
ஸரஸிஜ - தாமரைக் காட்டின்
மதுஸ்யந்த - தேன் பெருக்கில்
அகமர்ஷண - மந்த்ரம் சொல்லிக் கொண்டே ஸ்நாநம் செய்வதில்
ஹர்ஷிண: - ஸந்தோஷமுடைய
சயநீபவத் - படுக்கையான
பணிபதி - ஆதிசேஷன்
பியேவ - விழுங்கி விடுவானோ என்ற பயத்தால் போல்
மந்தம் மந்தம் - மிக மென்மையாக
சரந்த: - ஸஞ்சரிப்பவையுமான
அநிலா: - காற்றுக்கள்
தவ - உன்னுடைய
ரதிபவம் - புணர்ச்சியிலுண்டான
ச்ரமம் - ச்ரமத்தை
லும்பந்தி - போக்குகின்றன.

இதுவரை ரதியை வர்ணித்தார். இனி அந்த ரதியால் உண்டான ச்ரமத்தைப் போக்குவதால் உண்டாகும் சுகாநுபவத்தை வர்ணிக்கிறார்.

தாயே ! தென்றல் காற்று மிக மென்மையாக வீசி உனது ச்ரமத்தைப் போக்குகின்றது என்கிறார். அக்காற்று தாம் எத்தகையதெனின் அது மலய மலையினின்று நுனியில் அமர்ந்து வளர்ந்துள்ள சந்தன மரக் கூட்டங்களின் நடுப்பகுதியில் நடனமாடுவதாம். இதனால் அதன் மணமுடைமை கூறப்பட்டது. இதே போல் குவியல் குவியலாகக் காடு போல் பூத்திருக்கும் தாமரைகளினின்றும் வழிந்து ஓடுவனவான தேன்

வெள்ளத்தில் அகமர்ஷண சூக்தம் என்ற மந்த்ரங்களைச் சொல்லிக் கொண்டு அவற்றுள் குடைந்தாடும் வல்லமை வாய்ந்ததாம். இதனால் காற்றின் குளுமை சொல்லப்பட்டது. அகமர்ஷண ஸூக்தம் என்பது வேதத்தில் ஒரு பகுதி. காலையில் நீர் நிலையில் ஸ்நானம் செய்யும் போது அம்மந்த்ரங்களைச் சொல்லிக் கொண்டு ஸ்நானம் செய்வர் தூய பெரியோர். தென்றல் காற்று மிக மென்மையானது. அது நிதானமாக வீசுவது. அது உடலுக்கு இன்பத்தை விளைவிப்பது. அது பாம்பிற்கு ஆஹாரமாம். உலகத்தாய் தந்தையரின் படுக்கை ஆதிஶேஷனாவான். காற்று வேகமாக வீசினால் ஆதிசேஷன் விழுங்கி விடப் போகின்றானே என்ற பயத்தாலே போல் மென்மையாகவும் மிக நிதானமாகவும் வீசுகின்றதாம்.

இப்படி மணம், குளிர்ச்சி, மென்மை உடையனவாய் நிதானமாக வீசி உனது ரதி ச்ரமத்தைப் போக்குகின்றது என்கிறார்.

वनजनिलये वारिक्रीडादशासु दशानन-
द्विषि तव शनैरातन्वाने कुचे नखचेष्टितम् ।
क्षुभितमनसा दत्ता नाथे त्वया शफरीभिया
सरभसपरीरम्भारम्भा जयन्ति निरन्तराः ॥ ३२

வநஜநிலயே வாரிக்ரீடாதஶாஸு தஶாநந-
த்விஷி தவ ஶனைராதந்வாநே குசே நகசேஷ்டிதம்।
க்ஷுபிதமநஸா தத்தா நாதே த்வயா ஶபரீபியா
ஸரபஸபரீரம்பாரம்பா ஜயந்தி நிரந்தரா:॥ 32

ஹே வநஜநிலயே - தாமரையில் வாழ்பவளே!

தசாநநத்விஷி - பகவான்

வாரிக்ரீடாதஶாஸு - உன்னுடன் நீரில் விளையாடும் போது

தவ குசே - உனது கொங்கைகளில்

நக சேஷ்டிதம் - நக நுனிகளால் சிறு விளையாட்டை

ஶனை: - நீ அறியாத அளவில்

ஆதன்வாநே ஸதி - செய்த போது

ஶபரீபியா - மீன் குத்துகின்றன என்ற பயத்தால்

க்ஷுபிதமநஸா - கலங்கியமனமுடைய

த்வயா - உன்னால்

நாதே தத்தா: - உனது நாதனிடம் செய்யப்பட்டனவும்

நிரந்தரா : - இடைவெளி இல்லாதனவும் ஜயந்தி - மிக சுகமுடையனவாய்
ஸரபஸ - வேகமுடையனவுமான விளங்குகின்றன
பரீரம்பாரம்பா : - அப்போது
துவங்கப்பட்ட அணைப்புகள்

ரதி ச்ரமம் கழிவதற்காக பகவானால் செய்யப்பட்ட நீர் விளையாட்டை இரண்டு ச்லோகங்களால் வர்ணிக்கிறார்.

தாயே ! உன்னுடன் நீரில் பகவானும் விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது நீயுமறியாதபடி உனது கொங்கைகளில் பகவான் நக நுனியால் சிறிது சேஷ்டைகளைச் செய்தார். நீ அதை மீன்கள் குத்துகின்றன எனப் பயந்து பரபரப்புடன் உனது நாதனை அழுந்தத் தழுவினாய். இத்தழுவல் அல்ப ப்ரயத்நத்தால் கிடைத்ததும் ! சுகத்தை விளைவிப்பதுமாகியதால் ஏனையை தழுவலினும் சிறந்து விளங்குகின்றதென்கிறார்.

வநஜநிலயே என்ற சொல் காட்டில் கிடைத்த வாழ்க்கையை உடையவளே என்ற பொருளையும் தருமாதலால் ஸீதையை உணர்த்துவதாலும், தபாநநத்விட் என்ற சொல் பத்துத் தலை சத்ரு என்ற பொருளுடையதால் ராமனையும் உணர்த்துவதாலும் வநவாஸத்தில் ஸீதாராமர்களால் செய்யப்பட்ட ஜலக்ரீடையையும் நினைவூட்டுகிறது.

सरसिजवने संलीनायाः सकौतुकमिन्दिरे
सलिलविहृतौ शौरेर्लोलेक्षणस्य मुखस्य ते।
अलिकवलितालोलश्यामालकस्य सरोरुहा-
दलिकवलिताच्छैवालाढ्यादभून्न भिदाग्रहः॥ ३३

ஸரஸிஜவனே ஸம்லீநாயா: ஸகௌதுகமிந்திரே
ஸலிலவிஹ்ருதௌ ஶௌரேர்லோலேக்ஷணஸ்ய முகஸ்ய தே।
அலிகவலிதாலோலஶ்யாமாலகஸ்ய ஸரோருஹா-
தலிகவலிதாச்சைவாலாட்யாதபூந்ந பிதாக்ரஹ:॥ 33

ஹே இந்திரே - லக்ஷ்மியே!
ஸலில விஹ்ருதௌ - நீர் விளையாட்டில்
ஸகௌதுக - மிக விருப்பத்துடன்
ஸரஸிஜவநே - தாமரைக் காட்டில்

ஸம்லீநாயா : - மறைந்துள்ள
தே - உனது
அலிக - நெற்றியில்
வலித - சுருண்டுள்ளதும்
ஆலோல - அசைந்து கொண்டிருப்பதம்
ஶ்யாமா - கருப்பானதுமான
அலகஸ்ய - முன் நெற்றி மயிர்களை உடையதும்
லோல - சஞ்சலமான
ஈக்ஷணஸ்ய - கண்களுடன் கூடியதுமான
முகஸ்ய - முகத்துக்கு
சைவால - நீலம்பாசியால்
ஆட்யாத் - சூழப்பட்டதும்
அலி - வண்டுகளால்
கபலிதாத் - இடையே சூழப்பட்டதுமான
ஸரோருஹாத் - தாமரையிலிருந்து
பிதாக்ரஹ; - வேறுபாடு
பௌரே: - பகவானுக்கு
நாபூத் - தோன்றவில்லை

தாயே நீ ஸர்வஜ்ஞனான பகவானையும் ஒன்றுமறியாத அக்ஞனாக ஆக்கி விடுகின்றாய் என்கிறார். காரணம் தாமரைக்கும் லக்ஷ்மியின் முகத்துக்கும் வேறுபாடு காண முடியாது போயிற்றாம். ஏன் ? எப்படி ? பகவானுடன் நீரில் விளையாடச் சென்ற லக்ஷ்மி பகவானுக்கு அவ் விளையாட்டில் ஸந்தோஷத்தை மிகுவிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவளாய் தாமரைக் காட்டின் இடையில் மறைந்து கொண்டாளாம். அப்போது பகவானால் லக்ஷ்மி முகத்துக்கும் தாமரைக்கும் வேற்றுமை காண முடியாது போயிற்றாம். ஏன் ? லக்ஷ்மியின் நெற்றியில் சுருண்டும் கருத்தும் அசைந்து கொண்டு மிருந்தனவாம் முன் நெற்றி மயிர்கள். அதே போல் தாமரை நீலம்பாசியில் சூழப்பட்டும் இடையில் வண்டுகளால் சூழப்பட்டு மிருந்தனவாம். லக்ஷ்மியின் சிரஸில் கேசம் சூழ்ந்துள்ளது போல் தாமரையைச் சுற்றிலும் நீலம் பாசி சூழ்ந்துள்ளது. அவள் நெற்றியில் சுருண்டு கருத்த கேசம் அசைவது போல் தாமரையின் இடையில் வண்டுகள் அசைந்து கொண்டிருக்கின்றன. எனவே எது தாமரை என்றும் எது முகமென்றும் வேறு பாடு காண முடியாது போயிற்றாம்.

युगपदहिमहीभृत्युन्मिषन्तं समन्ताद्
ऋतुगणमपि कृत्स्नं निर्विशन्निर्विशङ्कः ।
सह विहरति लीलालाभवत्या भवत्या
मम जननि मुकुन्दो मञ्जुवल्लीगृहेषु ॥ ३४

யுகபதஹிமஹீப்ருத்யுந்மிஷந்தம் ஸமந்தாத்
ருதுகணமபி க்ருத்ஸ்நம் நிர்விஶந்நிர்விஶங்க: ।
ஸஹ விஹரதி லீலாலாபவத்யா பவத்யா
மம ஜநநி முகுந்தோ மஞ்ஜுவல்லீக்ருஹேஷு ॥ 34

ஹே மம ஜநநி - எனது தாயே !
முகுந்த - முகுந்தன்
அஹிமஹீப்ருதி - சேஷசைலத்தில்
யுகபத் - ஒரே ஸமயத்தில்
உந்மிஷந்தம் - தோன்றியுள்ள
க்ருத்ஸ்நம் ருதுகணம் - வஸந்தம் முதலான அனைத்து ருதுக் கூட்டங்களையும்
ஸமந்தாந் - நாற்புறங்களிலும்
நிர்விசந் ஸந் - அநுபவிப்பவனாய்
நிர்விசங்க: - எப்பயமுமற்றவனாய்
லீலா - விளையாட்டொன்றையே
லாபவத்யா - ப்ரயோஜநமாக எண்ணியுள்ள
பவத்யா ஸஹ - உன்னுடன்
மஞ்சு - அழகிய
வல்லீக்ருஹேஷு - வீடு போன்றமைந்துள்ள கொடிகளுக்கிடையில்
விஹரதி - விளையாடுகிறான்

வஸந்தம் க்ரீஷ்மம் என்பன போன்ற பெயர்களைக் கொண்டவை ஆறு ருதுக்கள். ஒரு சில ருதுவில்தான் ஒவ்வொரு மரமும் கொடியும் தளிர்த்துப் பூத்துக் காய்க்கும்.. ஆனால் சேஷாத்ரியாகிய வேங்கடவன் மலையிலுள்ள அனைத்து மரங்களும் ஒரே ஸமயத்தில் தோன்றியுள்ளன என்கிறார். இப்படி அம்மலையின் நாற்புறங்களிலுமுள்ளனவாம். பகவான் லக்ஷ்மியுடன் கூடினவனாய் நாற்புறங்களிலுமுள்ள புஷ்பம் பழம் முதலியவற்றை அநுபவிக்கின்றானும். இருவருக்குமே அடைய வேண்டியது யாதொன்றுமில்லாததால் விளையாட்டையே ப்ரயோஜநமாக எண்ணுபவர்களாயினர் அவ்விருவரும். ஆகவே அம்மலையில் வீடு போன்று அமைந்துள்ள கொடிகளுக்கிடையே எக்கவலையுமற்று விளையாடிக் கொண்டுள்ளனராம்.

कुसुमशरधनुर्ज्यातुङ्गटङ्कारशङ्का-
करमधुकरसङ्घारब्धझङ्कारहृद्यान् ।
फणिगिरिवनदेशान् पद्मनाभः स पद्मे
सफलयति गभीरैस्त्वत्सहायो विहारैः ॥

குஸுமஶரதநுர்ஜ்யாதுங்கடங்காரஶங்கா-
கரமதுகரஸங்காரப்தஜங்காரஹ்ருத்யாந் ।
பணிகிரிவநதேஶாந் பத்மநாப: ஸ பத்மே
ஸபலயதி கபீரைஸ்த்வத்ஸஹாயோ விஹாரை: ॥ 35

ஹே பத்மே - தாமரையாளே!
ஸ பத்மநாப: - இப்பத்மநாபன்
குஸுமஶர - மன்மதனது
தநுர்ஜ்யா - வில் நாணின்
துங்க டங்கார - உயர்ந்த ஓசையின்
ஶங்காகர - ப்ரமத்தை உண்டு பண்ணும்
மதுகர - வண்டுகளின்
ஸங்க ஆரப்த - கூட்டத்தால் ஆரம்பிக்கப்பட்ட
ஜங்கார - ரீங்காரத்தால்
ஹ்ருத்யான் - மனதுக்கிய
பணிகிரி - சேஷாத்ரியின்
வநதேஶாந் - காட்டுப் பகுதிகளை
த்வத்ஸஹாய: - உன்னுடன் சேர்ந்து
கபீரை: - முடிவில்லாத
விஹாரை: - விளையாட்டுக்களால்
ஸபலயதி - பயனுடையதாக ஆக்குகிறன்.

சேஷாத்ரி முழுதும் பல வகைகளான பூக்கள் பூத்துள்ளன. அவற்றிலுள்ள தேனைப்பருகிய வண்டுகள் மகிழ்ச்சியால் ரீங்காரம் செய்கின்றன. அவ்வொலி மனதுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. மன்மதன் வில்லுக்கு வண்டுகளை நாணாகக் கூறுவது கவி மரபு. ஆகவே நாணிலிருந்துத் தோன்றும் ஒலி, கிளர்ச்சி ஊட்டுவதாக உள்ளது என்பது கருத்து. இப்படி மகிழ்வுடன் காட்டுப் பகுதிகளில் உன்னுடன் விளையாடிக் காட்டுப் பகுதிகளைப் பயன் பெற்றனவாக ஆக்குகின்றான் என்கிறார்.

साकं लोकपतिस्त्वया विहरता काकोदराद्रौ रमे
सूनेषोरवने वने नयनयोरानन्दने चान्दने ।
शम्पाश्लिष्टनवाम्बुद भ्रमजुषामङ्के चिरं केकिनां
नृत्ताडम्बरनुन्नपन्नगतया निर्दोष मन्दानिले ॥ ३६

ஸாகம் லோகபதிஸ்த்வயா விஹரதே காகோதராத்ரௌ ரமே
ஸூநேஷோரவநே வநே நயநயோராநந்தநே சாந்தநே ।
ஶம்பாஶ்லிஷ்டநவாம்புதப்ரமஜுஷாமங்கே சிரம் கேகிநாம்
ந்ருத்தாடம்பரநுந்ந பந்நகதயா நிர்தோஷமந்தாநிலே ॥ 36

ஹே ரமே - லக்ஷ்மியே !
லோகபதி: - உலகத்தலைவன்
காகோதர அத்ரௌ - சேஷாத்ரியில்
நயநயோ: - கண்களுக்கு
ஆநந்தநே - ஆநந்தத்தைத் தருவதும்
சாந்தநே - சந்தந மரங்கள் அடர்ந்ததும்
அங்கே - ஆலயத்தின்
ஸமீபத்திலிருப்பதும்
ஸம்பாஸ்லிஷ்ட - மின்னல் சூழ்ந்த
நவாம்புத - நீருண்ட மேகத்தின்
ப்ரமஜுஷாம் - ப்ரமத்தை
ஸ்ரீநிவாஸனிடம் அடைந்துள்ள
கேகிநாம் - மயில்களுடைய
ந்ருத்தாடம்பர - நடனமாடுவதற்கு
வேண்டிய முன்னெச்சரிக்கையால்
நுந்ந - துரத்தப்பட்ட
பந்நகதயா - பாம்பை
உடைத்தாயிருப்பதால்
நிர்தோஷ - விஷக்காற்றின்
தோஷமற்ற
மந்தாநிலே - தென்றலுடன் கூடியதும்
ஸமநேஷோ: - மன்மதனுடைய
அவநே வநே - த்ருப்தியை உண்டு
பண்ணுவிப்பதுமாகிய
தோட்டத்தில்
த்வயா ஸாகம் - உன்னுடன்
விஹரதே - விளையாடுகிறான்

சேஷாத்ரியிலுள்ள வேங்கடவன், ஆலய அருகிலுள்ள பூந்தோட்டங்களில் லக்ஷ்மியுடன் விளையாடுகிறான் என்கிறார். அவன் தான் எத்தகையவனெனின் நித்ய விபூதி லீலா விபூதி எனப்படும் விண்ணுலக மண்ணுலகங்களுக்குத் தலைவன். அவன் ஆலயத்தின் அருகிலேயே உள்ளது பூந்தோட்டம். அடர்ந்த இருளால் கனத்த கருநிறத்தையும் மிக்க புஷ்பங்களையும் அத்தோட்டம் பெற்றிருப்பதால் கண்களுக்கு களிப்பை ஊட்டுகின்றது. அதில் சந்தன மரங்கள் அடர்ந்துள்ளன. அத்தோட்டத்தின் இடையே லக்ஷ்மியுடன் எழுந்தருளி இருந்தான் ஸ்ரீநிவாஸன். அவனைக் கண்டன அதிலிருந்த மயில்கள். மின்னலுடன் இணைந்த மேகமென மருண்டன அவை. நீருண்ட மேகத்தைக் கண்ட மயில்களுக்கு உண்டாகும் ஆநந்தத்துக்கு அளவே கிடையாது. ஆகவே மகிழ்ச்சியின் மிகுதியால் மிகவும் அகவினதுடன் நடிப்பதற்கும் தொடங்கின. இவ்வொலியையும் நடிப்பு ஆடம்பரத்தையும் கண்ட அங்கிருந்த பாம்புகள் வேறிடத்தே பறந்தோடின. அதனால் பாம்புகளின் சீறல் மூச்சுக்காற்று முதலிய விஷக்கலப்படமற்ற தூய தென்றல் காற்று அங்குக் கிடைத்தது. ஆகவே மகிழ்வுடன் உன்னுடன் விளையாடினான் உன் கணவன்.

எனவே இருள் என மருண்டான். கருப்பு என்ற பொருளைத் தருவதற்காக ''ஶ்யாமா'' என்ற சொல்லைக் கவி அமைத்துள்ளார். ஶ்யாமா என்ற சொல் கருப்பு என்பதோடு பதினாறு வயதுள்ள பெண்ணையும் குறிக்கும். ஆகவே ஶ்யாமாவைத் தன் விளையாட்டுக்குரிய தோட்டமாக எண்ணினான் என்பதும் கிடைக்கின்றது. வேங்கட மலையிலுள்ள மரங்கள் வானளாவி வளர்ந்துள்ளன. அவை தளிர்த்துள்ளன. அத்தளிர் ஸாயங்கால வானச் சிவப்பாக எண்ணினானாம். அம் மரங்களிலுள்ள வெண்மையான மொட்டுகளை நக்ஷத்ரங்களாக எண்ணினும் மிகுதியாகச் சுற்றிக் கொண்டுள்ள வண்டுகளின் கருமையை இருளாக மயங்கினானாம். காமத்தின் வேகம் பகவானையும் வயப்படுத்தி விட்டதெனின் ஐம்பொறிகளின் வன்மைக்கு உட்பட்ட மனிதர் நிலையைப் பற்றிச் சொல்ல வேண்டுமா என எச்சரிக்கின்றார்.

त्वन्नाथाख्यावहनविशदीभूततद्दास्यदार्ढ्यं
किंचित्कृत्या कलयितुमिवाकाङ्क्षता माधवेन।
पत्या साकं प्रणयकलहं तावकं छेत्तुकामे
कामे देवि स्वयमुपवने तन्यते बाणदानम्॥ ३८

த்வந்நாதாக்யாவஹநவிஶதீபூததத்தாஸ்யதார்ட்யம்
கிஞ்சித்க்ருத்வா கலயிதுமிவாகாங்க்ஷதா மாதவேந।
பத்யா ஸாகம் ப்ரணயகலஹம் தாவகம் சேத்துகாமே
காமே தேவி ஸ்யவமுபவநே தந்யதே பாணதாநம்॥ 38

ஹே தேவி - பகவத் பத்நீ !
உபவநே - சிறு தோட்டத்தில்
த்வந்நாதாக்யா - உன் கணவன் பெயரான மாதவன் என்ற பெயரை
ஆவஹந - தானும் வைத்துக் கொண்டதால்
விஶதீபூத - வெளிப்படை ஆக்கப்பட்ட
தத்தாஸ்ய - அவர் அடிமைத் தன்மையின்
தார்ட்யம் - உறுதிபாட்டை
கிஞ்சித்க்ருத்யா - அடிமைத் தொழிலாலே
கலயிதும் - செய்வதற்கு
ஆகாங்க்ஷதேவ - விரும்புவன் போலுள்ள
மாதவேந - வஸந்தனாலே
தாவகம் - உனது
பத்யா ஸாகம் ச - கணவனுடன்

ப்ரணயகலஹம் - ஊடலை
சேத்துகாமே - போக்க விரும்பிய
காமே - மன்மதனுக்கு
ஸ்வயம் - அவளால் வேண்டப்படாத
பாணதாநம் - அவன் பாணங்களாகிய புஷ்பதாநம்
தந்யதே - மிகுதியாகச் செய்யப்படுகிறது

வஸந்த ருதுவில் பூக்காத பூக்களே இல்லை எனலாம். வஸந்த ருதுவுக்கு மாதவன் என்பது வேதப்பெயர். அப்பெயர் பகவானுக்குரியது. தலைவனின் பெயரை அடிமை சூட்டிக் கொள்வதை அடிமையின் இலக்கணமாக ''तन्नामवहनं चेति दास्यमेतत् चतुर्विधम्'' என்ற வாக்யம் போதிக்கிறது. உலகம் முழுவதும் பகவானுக்கு அடிமையாயினமையின் இயல்பாகவே அடிமையான போதும் அவன் பெயரைத் தாங்கியதால் மேலும் அடியவனான மாதவனான வஸந்தன் தன்னடிமைக்கேற்ற சிறுதொழில் ஏதேனுமொன்றைச் செய்துத் தனது அடிமையை உறுதிப் படுத்திக் கொள்ள விரும்பினான். அச்சமயம் லக்ஷ்மி கணவன் மேல் கோபமுடையவள் போல நடித்துக் கொண்டு ஊடலாடினாள். அவ்வூடலைப் போக்க வேண்டும் என விரும்பினான் மதனன். அவன் எப்படிப் போக்குவன் ? தன் பாணங்களாகிய புஷ்பங்களைப் பெய்தே போக்குவன். ஆகவே அவனுக்கு வேண்டியதை அவன் வேண்டாதிருந்த போதும் தாமே வலியத் தந்து தமது அடிமைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்கிறானாம் வஸந்தன்.

सोऽयं गायन् स्मरमनुमलिः शश्वदव्यादभव्यात्
सम्पश्यन्ती यमिह कबरीसौरभादापतन्तम् ।
जातोद्वेगा जगदधिभुवे चित्रमप्रार्थितापि
स्वैरं दत्से सरभसपरीरम्भमम्भोधिकन्ये ॥ ३९

ஸோ(அ)யம் காயந் ஸ்மரமநுமலி: ஶஶ்வதவ்யாதபவ்யாத்
ஸம்பஶ்யந்தீ யமிஹ கபரீஸௌரபாதாபதந்தம் ।
ஜாதோத்வேகே ஜகததிபுவே சித்ரமப்ரார்த்திதாபி
ஸ்வைரம் தத்ஸே ஸரபஸபரீரம்பமம்போதிகந்யே ॥

ஹே அம்போதிகந்யே - கடல் கன்னி!	சித்ரம் - ஆச்சர்யத்தை விளைவிக்கும்
கபரீ - உனது கூந்தலிலுள்ள	ஸரபஸ - வேகத்துடன் கூடிய
ஸௌரபாத் - இயற்கையான மணத்தின்	பரிரம்பம் - ஆலிங்கனத்தை
நப்பாசையால்	ஸ்வைரம் - உனது இஷ்டத்தாலேயே
ஆபதந்தம் - உன்னிடம் வரும்	தத்ஸே - அளிக்கின்றாயே
யம் - எந்த வண்டை	ஸ்மரமநும் - மந்மத மந்திரத்தை
ஸம்பஸ்யந்தீ - பார்த்தவளாய்	காயத் - பாடுகின்ற
ஜாதோத்வேகா - உடல் நடுக்கம் கொண்ட நீ	ஸ அலி: - அவ்வண்டு
	அபவ்யாத் - தீமைகளிலிருந்து
ஜகததிபுவே - லோக நாதனுக்கு	பஸ்வத் - அப்பொழுது
அப்ரார்த்தாபி - வேண்டாத போதும்	அவ்யாத் - காக்கட்டும்

எந்த வண்டு பகவான் நெடுநாள்களாய் எதிர் பார்த்திருந்த தொன்றை முடித்து வைத்து அவனது ப்ரீதிக்கு இலக்காகியதோ அவ்வண்டு ஒன்றே நம் யாவரையும் காக்க வல்லது என்கிறார். பூக்களிலுள்ள தேனைப் பருகிக் கொண்டும், மணத்தை நுகர்ந்து கொண்டும் அவற்றுள் இருந்ததாம் வண்டு. அதற்கு அனைத்துப் பூக்களிலுள்ள மணத்திலும் மிக்கதாயும் இயல்பானதுமான பாற்கடல் புத்ரியின் கூந்தல் மணம் கிடைத்ததாம். உடனே பூவை விட்டிட்டுத் தாயின் கூந்தல் அருகில் வந்ததாம் அது. அதனைக் கண்ட ரமை அது தம்மைக் கடிக்கத்தான் வருகின்றது என்றெண்ணிய பயத்தால் உடலெல்லாம் நடுக்கம் தோன்றிற்றாம். அதனால் மிகவும் வேக வேகமாகப் பறந்தோடி அவஸர அவஸரமாகப் பதியை அணைத்துக் கொண்டாளாம். இப்படி நிகழும் என அவன் எதிர் பார்க்கவே இல்லை. வேண்டினும் எளிதில் கிடைக்காததொன்றுத் தாம் வேண்டாமலே கிடைத்தால் பகவானுக்கு ஆச்சர்யமாக இருந்தது. அது மன்மத மந்த்ரத்தைப் பாடுவது போன்று ரீங்காரமிடுவதும் பகவானின் விருப்பத்தையே பூர்த்தி பண்ணி வைத்ததுமாகிய வண்டு நமது துன்பங்களை அனைத்தையும் போக்கட்டும் என்கிறார்.

मन्दं मन्दं वृषगिरितटीं स्वैरमाटीकमानः
खेलं खेलं विमलहरिणाङ्गानने काननेषु ।
ग्राहं ग्राहं मृदुसुमनसः कौतुकी कैटभारि-
र्वारं वारं तव वितनुते देवि मूर्धाभिषेकम् ॥ ४०

மந்தம் மந்தம் வ்ருஷகிரிதடீம் ஸ்வைரமாடீகமாந:
கேலம் கேலம் விமலஹரிணாங்காநநே காநநேஷு ।
க்ராஹம் க்ராஹம் ம்ருதுஸுமநஸ: கௌதுகீ கைடபாரிர்
வாரம் வாரம் தவ விதநுதே தேவி மூர்த்தாபிஷேகம் ॥ 40

விமல - கலங்கமில்லாத
ஹரிணாங்க - சந்த்ரன் போன்ற
ஆநநே - முகத்தை உடைய
ஹே தேவி - பகவானின் பத்நியே
கௌதுகீ - மகிழ்ச்சி கொண்ட
கைடபாரி : - ஸ்ரீநிவாஸன்
வ்ருஷகிரீதடீம் - வ்ருஷாத்ரி தடவரைகளில்
மந்தம் மந்தம் - மிகவும் நிதானமாக
ஸ்வைரம் - விருப்பம் போல
ஆடீகமாந: - சென்று கொண்டும்
காநநேஷு - அங்குள்ள காடுகளில்
கேலம் கேலம் - விளையாடிக் கொண்டும்
ம்ருது - மென்மையான
ஸுமநஸ: - புஷ்பங்களை
க்ராஹம் க்ராஹம் - அங்கங்குத் பறித்துக் கொண்டும்
வாரம் வாரம் - ஒவ்வொரு நொடியும்
மூர்தாபிஷேகம் - சிரஸ்ஸின் அலங்காரத்தை
விதநுதே - செய்கின்றார்

கருத்துத் தெளிவானதே. விமல ஹரிணாங்க ஆநநே என்பது இயலாத பொருளை உவமையாகக் கூறியது அபூதோபமா என்பர்

रागेणोपर्यनिशमुषितं पुष्पवत्या लतायाः
प्रीत्या गृह्णन् कमपि कुतुकी पल्लवं फुल्लवक्त्रः ।
सान्द्रामोदं चिकुरसुमनः सन्निधानेन नीत्वा
शार्ङ्गी हन्त श्रुतिशिरसि ते स्थापयत्यब्धिकन्ये ॥ ४१

ராகேணோபர்யநிஶமுஷிதம் புஷ்பவத்யா லதாயா:
ப்ரீத்யா க்ருஹ்ணன் கமபி குதுகீ பல்லவம் புல்லவக்த்ர: ।
ஸாந்த்ராமோதம் சிகுரஸுமந: ஸந்நிதாநேந நீத்வா
ஶார்ங்கீ ஹந்த ஶ்ருதிஶிரஸி தே ஸ்தாபயத்யப்திகந்யே ॥ 41

ஹே அப்தி கந்யே- பாற்கடல் பெண்ணே!
குதுகீ - மிகவும் விருப்பமுடையவனும்
ரங்கீ - ஸ்ரீநிவாஸன்
புஷ்பவத்யா: - பூத்துள்ள
லதாயா: - கொடியின்
உபரி - நுனிப்பகுதியில்
ராகேண - சிவந்த நிறத்துடன்
உசிதம் - உள்ள
கமபி பல்லவம் - புதிய தளிரை
ப்ரீத்யா - மகிழ்வுடன்
க்ருஷ்ணன் - பறித்தவனும்
சிகுரசுமந: - தலைக்குரிய பூவின்
ஸந்நிதாநேந - அருகில்
நீத்வா - வைப்பதால்
ஸாந்த்ராமோதம் - மிக்க வாஸனை உடையதாக
நீத்வா - செய்வித்து
தே ஶ்ருதிஶிரஸி - உன் காதுகளின் மேல்
ஸ்தாபயதி - வைக்கின்றான்
ஹந்த - ஆச்சர்யம்

பகவான் தாமாகவே தே விவை அலங்கரிக்க வேண்டுமென ஆசை கொண்டான். அதனால் புன்சிரிப்புடன் இருந்த அவன் முகம் மிகவும் ஒளியுடையதாக இருந்தது. பின் தமது தோட்டத்தில் சென்று அங்குப் பூத்து குலுங்கும் கொடியின் நுனியிலிருந்த சிவந்த தளிரைப் பறித்து வந்தான். அதை தலையில் சூடுவதற்காக வைத்திருந்த பூவின் அருகில் வைத்தான். அதில் பூவின் மணம் படிவதற்காக. பின் அதை தேவியின் காதில் வைத்தான் அழகுக்காக.

மிக மோசமான நடத்தை உடையவனைத் திருத்திப் பணி கொள்ள எண்ணினான் பகவான். அதனால் அவன் முகம் மலர்ந்தது. அவனை மகான்களுடன் வாழவைத்து அவன் நடத்தையை மாற்றி எப்போதும் வேதாந்த விசாரம் செய்பவனாக்கி விட்டானாம் பகவான். அவன் அருளின் மேன்மை பேசப்பட்டது.

வேறு பொருள்

புல்லவக்த்ர: - மலர்ந்த முகமுடையவனாய்
புஷ்பவத்யா: - பெரியவளான
லதாயா: - லதா என்ற பெண்ணின்
உபரி - உடலின் மீதே
அநிசம் - பகல் இரவு என்று வேறுபாடின்றி
உஷிதம் - படுத்திருக்கும்
கமபி பல்லவம் - ஒரு விடனை
ப்ரீத்ய ச - விருப்பத்துடன்
அநுக்ருஷ்ணன் - அநுக்ரஹிப்பவனாய்
ஸுமந: - மஹான்களுடன்
ஸந்நிதாநேந - வசிக்க வைப்பதாலே
நீத்வா - செய்வித்து
ச்ருதிஶிரஸி - வேதாந்தத்தில்
ஸ்தாபயதி - வாழவைக்கின்றான்.
ஹந்த - ஆச்சர்யம்

दत्ते मातस्तव किल मुखे पाणिना दुर्निवार-
स्वेदेनासौ कमपि तिलकं कौतुकी श्रीनिवासः ।
त्वं तु स्वेदस्रुतिविघटितस्थानविन्यासमेनं
वीक्ष्यादर्शे हससि दयितं मोघयत्नं विदग्धा ॥ ४२

தத்தே மாதஸ்தவ கில முகே பாணிநா துர்நிவார-
ஸ்வேதேநாஸௌ கமபி திலகம் கௌதுகீ ஸ்ரீநிவாஸ: ।
த்வம் து ஸ்வேதஸ்ருதிவிகடிதஸ்தாநவிந்யாஸமேநம்
வீக்ஷ்யாதர்ஶே ஹஸஸி தயிதம் மோகயத்நம் விதக்தா ॥ 42

ஹே மாத: - தாயே
கௌதுகீ - ஆநந்தம் கொண்ட
அஸௌ ஸ்ரீநிவாஸ: - இந்த ஸ்ரீநிவாஸனின்
துர்நிவார - அடக்க முடியாத
ஸ்வேதேந - வியர்வையால்
கமபி திலகம் - இலையில் செய்த திலகத்தை
தவ முகே - உனது நெற்றியில்
தத்தே - ஒட்ட வைக்கிறான்
விதக்தா - வல்லவளான
த்வம் து - நீயோவெனின்
ஸ்வேதஸ்ருதி - வியர்வைப் பெருக்கால்
விகடித - போக்கடிக்கப்பட்ட
ஸ்தாநவிந்யாஸம் - அதற்குரிய இடத்தை உடையதாக
ஏநம் திலகம் - இத்திலகத்தை
ஆதர்ஶே வீக்ஷ்ய - கண்ணாடியில் கண்டு
மோகயத்நம் - வீணான முயற்சியை உடைய
தயிதம் - கணவனை
ஹஸஸி- பரிஹஸிக்கின்றாய்

ஆநந்தாநுபவம் கண்ட ஸ்ரீநிவாஸன் உடலிலிருந்து மிகுதியாய் வியர்வை வெளி வந்ததாம். அப்போதவன் தோட்டத்திலிருந்து தமாலபத்ரம் என்ற இலையை எடுத்து அதைத் திலகம் போல் கையில் செய்து அதை வியர்வையில் நனைத்துத் தாயின் நெற்றியில் ஒட்டி வைத்தானாம். முகாலங்காரம் செய்வதில் ஸ்ரீநிவாஸனிலும் வல்லவளான லக்ஷ்மீ அவள் நெற்றியில் பெருகும் வியர்வை வெள்ளத்தால் அத்திலகத்தை வேறு இடத்துக்கு அடித்துச் செல்ல வைத்துத் திலகம், தனக்குரிய தாநத்தை இழந்து விட்டது என்பதைக் கண்ணாடியில் கண்டு, நிலை நின்று பயனளிக்காது போன முயற்சியை உடைய கணவனைப் பரிஹாஸம் செய்கின்றாளாம்

शेषक्ष्माभृत्तटवनचरश्यामजीमूतसङ्घे
संलीय त्वां भ्रमयति हरिः कल्पिताभेदमोहः ।
तस्मिन् विद्युत्पटलजटिले तं विचेतुं विशन्त्या
व्यावृत्तिं ते विशदमविदन् स स्वयं वञ्चितोऽभूत् ॥ ४२

ஶேஷக்ஷ்மாப்ருத்தடவநசரஶ்யாமஜீமூதஸங்கே
ஸம்லீய த்வாம் ப்ரமயதி ஹரி: கல்பிதாபேதமோஹ: ।
தஸ்மிந் வித்யுத்படலஜடிலே தம் விசேதும் விஶந்த்யா
வ்யாவ்ருத்திம் தே விஶதமவிதந் ஸ ஸ்வயம் வஞ்சிதோऽபூத் ॥

ஹரி: - கருத்த பகவான்
ஶேஷக்ஷ்மாப்ருத் - சேஷாத்ரியின்
தடவந - தாழ்வரையிலுள்ள காடுகளில்
சர - ஸஞ்சரிப்பதான
ச்யாமஜீமூத - கருத்த மேகத்தின்
ஸங்கே - கூட்டத்துள்
ஸம்லீய - மறைந்து
கல்பித - உண்டாக்கப்பட்ட
அபேத - மேகத்திலுள வேறுபாடற்ற
மோஹ: - மயக்கத்தை உடையவளாய்
த்வாம் - உன்னை
ப்ரமயதி - நாற்புறமும் சுற்ற வைக்கிறன்
வித்யுத் படல - மின்னல் கூட்டத்தால்
ஜடிலே - அடர்ந்துள்ள
தம் - உன்னை ஏமாற்றிய பகவானை
விசேதும் - தேடுவதற்காக
விஶந்த்யா: - புகுந்துள்ள
தே - உன்னுடைய
வ்யாவ்ருத்திம் - மின்னலினின்றும் வேறுபாட்டை
விஶதம் - தெளிவாக
அவிதந் - அறியாதவனாய்
ஸ: - அந்த பகவான்
ஸ்வயம் வஞ்சித: - தான் ஏமாற்றப்பட்டவனாக
அபூத் - ஆயினன்

தாயும் தந்தையும் கண்ணாமூச்சி விளையாடினார்கள் என்கிறார். சேஷாத்ரியின் தடவரைகளில் பல காடுகளுள்ளன. அவற்றினிடையே புகுந்து செல்கின்றன நீருண்ட மேகங்கள். அவற்றிற்கிடையே புகுந்து கொண்டான் ஸ்ரீநிவாஸன். இவனும் மேகநிறத்தன் ஆனமையின் இவ்விருவரின் வேற்றுமையை அறியமாட்டாதவளான தாய் பலவிடங்கள் சுற்றிப் பின் அம்மலையில் மின்னும் மின்னற் கூட்டங்களுள் ஒருக்கால் உளனோ என எண்ணி அதனுள் புகுந்தாள் அவனைத்தேட. அதனால் மின்னல் நிறத்தினளான அவளை மின்னலினின்றும் வெளிப்படையாகத் தனித்தறிய இயலாத பகவான் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொண்டவனாயினன். பிறரை ஏமாற்றத் தொடங்கியவனல் தனது ஏமாற்றம் தேடிக் கொண்டாயிற்று.

बाले देहि पयोधरं करयुगे प्रावृट् त्वया याच्यता-
माश्लेषाभिरुचिं विधेहि न शशी तस्यास्मि किंतु स्वसा ।
आस्तामुत्तरमेतदीदृगधरं याचामि वाचा स्वयं
नास्त्यर्थोऽधरयाञ्चयेति चटुभिः पद्मे धिनोषि प्रियम् ॥ ४४

பாலே தேஹி பயோதரம் கரயுகே ப்ராவ்ருட் த்வயா வாச்யதா
மாஶ்லேஷாபிருசிம் விதேஹி ந ஶஶீ தஸ்யாஸ்மி கிம்து ஸ்வஸா ।
ஆஸ்தாமுத்தரமேதத்த்ருகதரம் யாசாமி வாசா ஸ்வயம்
நாஸ்த்யர்த்தோ(அ)தரயாஞ்சயேதி சடுபி: பத்மே திநோஷி ப்ரியம் ॥

ஹே பாலே - இளம் பெண்ணே !
கரயுகே - எனது இரு கைகளிலும்
பயோதரம் - கொங்கைகளை
தேஹி - கொடு
ப்ராவ்ருட் - வர்ஷாகாலம்
த்வயா - உம்மால்
வாச்யதாம் - யாசிக்கப்படட்டும்
ஹே பத்மே - லக்ஷ்மீ
ஆஶ்லேஷ - ஆலிங்கநம் செய்வதில்
அபிருசிம் - சுவையை
விதேஹி - செய்வாயாக
அஹம் ந ஶஶீ - நான் சந்திரனல்லள்
கிம்து - பின் போவெனின்
தஸ்ய ஸ்வஸா - அவன் உடன் பிறந்தவள்
ஏததுத்தரம் - வேறு பொருள் கொண்டு இப்படிக் கோவையான பதில்
ஆஸ்தாம் - இருக்கட்டும்
ஸ்வயம் - நானே
வாசா - சொல்லாலேயே
அதரம் - உதடை
யாசாமி - வேண்டுகிறேன்
அதர - கஞ்சனிடம்
யாச்நயா - வேண்டியதால்
அர்த்த: - பயன்
நாஸ்தி - கிடைக்காது
இதி - இம்முறையில்
சடுபி: - கோணலான பதில்களால்
ப்ரியம் - பர்த்தாவை
திநோஷி - ஸந்தோஷிப்பிக்கிருய்

பகவான் சொன்ன வார்த்தைகளுக்கு ச்லேஷையால் வேறு பொருள் கற்பித்து லக்ஷ்மி சொல்லும் கோணலான பதில்கள் இவை "பய:" என்ற சொல்லுக்கு பால், நீர் என்ற இரு பொருள்களுண்டு. பகவான் பால் என்ற பொருளைக் கொண்டு, பாலைத் தாங்குவதாகையால் "பயோதரம்" எனப்படும் உன் கொங்கைகளை எனது இரு கைகளால் பிடித்துக் கொள்ள அநுமதி தா என வேண்டினன். பதுமை பய: என்ற சொல்லிற்கு

நீர் என்ற பொருளைக் கொண்டு மேகம் வர்ஷருதுவிலன்றோ மிகுதியாகக் கிளம்பும். ஆகவே வர்ஷாகாலத்திடம் போய் நீர் வேண்டும் என்றாள். ''ப்ராவ்ருட்'' என்ற சப்தம் ஸ்த்ரீலிங்கம். ஆகவே வேறு பெண்ணிடம் கொங்கைகளை யாசியும் எனச் சொன்னதாகவும் கொள்ளலாம். ஹே லக்ஷ்மீ உன்னை அணைத்துக் கொள்வதன் சுவையைத் தா என வேண்டினன் பகவான். ஆச்லேஷம் என்ற சொல் அணைத்தல். ஆச்லேஷம் என்ற நக்ஷத்ரம் இரண்டையும் சொல்லுமாதலால், நக்ஷத்ரம் என்ற பொருளைக் கொண்டு நான் சந்திரனல்லன் என்கிறாள். சந்த்ரன் மனைவிகள் ஆச்லேஷ நக்ஷத்ரங்கள். ஆகவே தனது பத்நிகளான ஆச்லேஷ நக்ஷத்ரங்களுக்கு அணைப்பால் ஆநந்தத்தை அளிப்பது அவனால்தான் முடியும். நான் அவன் உடன் பிறந்தவள். அதனால் அவன் உடல் ஜாடை என்னிடமுள்ளது. அதைக்கண்டு நீர் சந்த்ரன் என மருண்டு விட்டீர். நாத்தனார்களுக்கு உடன் பிறந்தவர் மனைவிகளிடம் விருப்பம் எங்கேனும் இருக்குமோ என்கிறாள் இலக்குமி. ஏ பெண்ணே ! இப்படி வேறு பொருள்கள் கற்பித்து கோணலான பதில் சொல்வதை விடு. நானே நேராக என் வாயாலன்றோ வேண்டுகிறேன். பிறர் மூலம் வேண்டியிருப்பின் இப்படிக் கோணலான பதில்களைச் சொல்லியனுப்பலாம். ஆகவே அதை விடு. தற்போது நான் உன் அதரத்தை - உதடை - சுவைக்க விரும்புகிறேன் என்றான். அதற்கவள் அதர: என்பதற்குக் கீழ்ப்பட்டவன் - கஞ்ஜன் - என்ற பொருள் கொண்டு கஞ்சனிடம் வேண்டி எவரேனும் பயன் அடையமுடியுமோ? என்று இம்முறையில் கோணலான போதும் சுவையான பதில்களால் அவனை ஸந்தோஷிப்பித்தாளேயன்றி அவன் விரும்பியதை அளித்தல்ல.

पश्चादुपेत्य परिहासकृते कराभ्यां दृष्टी तवाम्ब विपुले स्थगयन् सशेषम्।
पाणिद्वयं मम न कृत्स्नपिधानकेलौ पर्याप्तमित्यहिगिरेः पतिरेति लज्जाम्॥

பஸ்சாதுபேத்ய பரிஹாஸக்ருதே கராப்யாம்
த்ருஷ்டீ தவாம்ப விபுலே ஸ்தகயந் ஸசேஷம் ।
பாணித்வயம் மம ந க்ருத்ஸ்நபிதாநகேலௌ
பர்யாப்தமித்யஹிகிரே: பதிரேதி லஜ்ஜாம் ॥

ஹே அம்ப - தாயே !
அஹிகிரே: - சேஷாத்ரியின்
பதி: - தலைவனான ஸ்ரீநிவாஸன்
பரிஹாஸக்ருதே - உன்னைப் பரிஹஸிப்பதற்காகவே
பஶ்சாத் - பின்புறமாக
உபேத்ய - உன் அருகில் வந்து
விபுலே - விசாலமான
தவ த்ருஶ்ஔ - உனது கண்களை
கராப்யாம் - இரு கைகளால்
ஸமேஷம் - அரை குறையாக
ஸ்தகயந் - மூடிக் கொண்டு
மம பாணித்வயம் - எனது இரு கைகள்
க்ருநாஸ்த்பிதாந - முழுவதும் மறைப்பதான
கேளௌ - விளையாட்டில்
ந பர்யாப்தம் - போதுமளவிற்கு இல்லை
இதி - என்றெண்ணி
லஜ்ஜாம் - வெட்கத்தை
ஏதி - அடைகின்றான்.

சிறிதும் சத்தமின்றிப் பின்புறமாக நிதானமாக வந்து அவஸர அவஸரமாகத் தாயின் கண்களைப் பொத்தித் தனது குரலை மாற்றிக் கொண்டு யார் எனச் சொல் பார்ப்போம் எனக் கேட்டும் பரிஹாஸம் செய்ய வேண்டும் என்று எண்ணிப் பின்புறம் வந்தான். தாயின் கண்களோ நான்கு கைகளாலும் மூடினாலும் மூட முடியாதபடி விசாலமானவை என்பதை அவஸரத்தில் மறந்து இரண்டு கைகளால் மட்டும் மூடினான் அதனால் முழுதும் மூட முடியாது போய் விட்டது. அதனால் கண்ணை மூடுவதற்கு வேண்டிய பரப்புத் தன் கைகளுக்கு இல்லாது போய் விட்டதே எனச் சிந்தித்து வெட்கமடைந்தானாம். லக்ஷ்மியைப் பரிஹாஸம் செய்ய முனைந்தவனுக்குத் தாமே வெட்கப்படும் நிலை தோன்றிற்று என்பது கருத்து.

तवलोकमात: अवलोकवागुरा
मृगजाल दृष्टि युगजाड्यकृद्गुणा ।
ननु भाति चित्रमनुभाव माश्रिता
हरिणादि तत्र हरिणायितं यत: ॥

தவலோகமாத: அவலோக வாகுரா
ம்ருகஜால த்ருஷ்டி யுக ஜாட்யக்ருத்குணா ।
நநு பாதி சித்ரமநுபாவ மாஶ்ரிதா
ஹரிணாபி தத்ர ஹரிணாயிதம் யத: ॥

லோகமாத: - அனைத்துலகத்தாயே!
ம்ருகஜால - மான கூட்டங்களின்
த்ருஷ்டியுக - இரு கண்களுக்கும் (இரு கண்களாலும்)
ஜாட்யக்ருத் - இழிவைத்தரும் (காண முடியாத)
குணா - அழகையுடைய (வலையுடைய)
தவ - உனது
அவலோக - பார்வையாகிற
வாகுரா - வலை
சித்ரம் - வியப்பைத்தரும்
அநுபாவம் - ப்ரபாவத்தை
ஆச்ரிதா - அடைந்ததாக
பாதி - விளங்குகின்றது
யத: - ஏனெனில்
தத்ர - மெல்லிய நூலான வலையில்
ஹரிணாபி - ஸிம்ஹத்தாலும் (பகவானாலும்)
ஹரிணாயிதம் நநு - மான் போல் கட்டப்பட்டதன்றோ!

லக்ஷ்மியின் பார்வையை வலையாக வர்ணிக்கின்றார். பெண்கள் பார்வைக்கு மான் பார்வையை உவமையாகக் கூறுவர் கவிகள். விலங்கு பயத்தால் மான் தன் பார்வையை ஓரிடத்திலேயே நிலைத்து வைக்காது நாற்புறமும் மருண்டு பார்க்குமாம். பெண்கள் பார்வையும் அது போலிருக்குமாம். அம்மான்களின் பார்வையையும் இழிவுபடுத்தி விடுகின்றதாம் தாயின் பார்வை. இப்பார்வை காண முடியாத மெல்லிய வால் ரோமத்தால் ஆகிய நுண்ணிய நூலால் செய்யப்பட்ட வலை போன்றதாம். இவ்வலை மிக்க பெருமையுடையதாம். ஏனெனில் மானைப் பிணைப்பதற்கான இவ்வலையில் ஹரியே - சிங்கமே - மான் போல் கட்டுண்டு கிடக்கின்றானாம். வலைக்கு வயப்பட்டு மான் இருப்பது போல் பகவான் லக்ஷ்மீயின் பார்வைக்கு வசப்பட்டுள்ளான் என்று கருத்து. ஹரி: என்பதற்கு நீலம் என்ற பொருளுமுண்டு. ஹரிண: - என்பதற்கு வெளுப்பு என்பது பொருள்: ''ஹரிண: - பாண்டு:'' என்பது அமரம். ஆகவே ''ஹரிணாபி தத்ர ஹரிணாயிதம்'' என்ற அடிக்குக் கருப்பானாலும் வெளுப்பன் ஆக்கப்பட்டான் என்ற பொருளும் கிடைக்குமாதலால் விரோதபாஸமுமாம்.

பார்வையில் பல வகைகள் உண்டு. காந்த த்ருஷ்டி எட்டு வகை, ஸ்நிக்தா முதலானவை எட்டு. சூந்யா முதலானவை இருபது என மொத்தம் முப்பத்தாறு வகைகளுள் பார்வையில் இம்முப்பத்தாறும் ''அவ லோக வாகுரா'' என்றவிடத்தில் உள்ள அவலோக சப்தத்துக்குப் பொருள்களாக கொள்ளத் தக்கவைகளாம்.

स्मितचन्द्रिकया कयापि देवि स्मरसंवृद्धिपुषा सदोन्मिषन्त्या।
मधुसूदनमानसेन्दुकान्ते द्रवतां चन्द्रमसः स्वसस्तनोषि॥ ४७

ஸ்மிதசந்த்ரிகயா கயாபி தேவி
ஸ்மரஸம்வ்ருத்திபுஷா ஸதோந்மிஷந்த்யா।
மதுஸூதநமாநஸேந்துகாந்தே
த்ரவதாம் சந்த்ரமஸ: ஸ்வஸஸ் தநோஷி॥

ஹே தேவி - பகவானின் பத்நியும்
சந்த்ரமஸ: - சந்த்ரனுடைய
ஸ்வஸ: - உடன் பிறந்தவளும் ஆனவளே!
ஸ்மரஸம்வ்ருத்தி - காமனின் தூண்டுதலை
புஷா - செய்வதும்
ஸதா - எப்போதும்
உன்மிஷந்த்யா - ப்ரகாசித்துக் கொண்டிருப்பதால்
கயாபி - ப்ரஸித்தசந்த்ரனிலும் வேறானதுமான
ஸ்மித சந்த்ரிகயா - சிரிப்பாகிய சந்த்ரனால்
மதுஸூதநமாநஸ - மதுசூதனன் மனமாகிய
இந்துகாந்தே - சந்த்ரகாந்தக் கல்லில்
த்ரவதாம் - மீண்டும் வேட்கையையும், நீர்ப்பெருக்கையும்
தநோஷி - உண்டு பண்ணுகின்றாய்

கருத்து தெளிவானதே

तव स्तनं शैलघनं विनोदात् प्रसह्य गृह्णन् प्रभुरब्धिकन्ये।
पुरा मुरारिः स्वकरोद्धृतस्य गोवर्धनस्य स्मृतवान् महाद्रेः॥

தவ ஸ்தநம் ஶைலகநம் விநோதாத்
ப்ரஸஹ்ய க்ருஹ்ணந் ப்ரபுரப்திகந்யே।
புரா முராரி: ஸ்வகரோத்த்ருதஸ்ய
கோவர்த்தநஸ்ய ஸ்ம்ருதவாந் மஹாத்ரே:॥

அப்திகந்யே - கடலின் பெண்ணே
ப்ரபு: - எதையும் செய்ய வல்லவனான
முராரி: - பகவான்
சைலகநம் - மலைபோல் கடினமான
தவ ஸ்தநம் - உனது கொங்கையை
விநோதாத் - மன்மதத் துன்பத்தைப் போக்குவதற்காக
ப்ரஸஹ்ய - பலாத்காரத்தால்

க்ருஹ்ணந் - பிடித்துக் கொண்டவனாய்
புரா - க்ருஷ்ணாவதார காலத்தில்
ஸ்வகர - தமது கையில்
உத்த்ருதஸ்ய - உயரத் தூக்கப்பட்ட
கோவர்த்தநஸ்ய - கோவர்தநம் என்ற பெயருடைய
மஹாத்ரே: - பெரிய மலையை
ஸம்ருதவாந் - நினைத்தான்

கருத்து தெளிவானதே

वल्लीतमालमिव विद्युदिवाम्बुवाहं
माहेन्द्रनीलभवनं मणिदीपिकेव ।
इन्दोः कलेव गगनाङ्गणमिन्दिरे त्व
माश्लिष्य शौरिमयसे महतीमभिख्याम् ॥ ४९

வல்லீ தமாலமிவ வித்யுதிவாம்புவாஹம்
மாஹேந்த்ரநீலபவநம் மணிதீபிகேவ ।
இந்தோ: கலேவ ககநாங்கணமிந்திரே த்வ-
மாஶ்லிஷ்ய ஶௌரிமயஸே மஹதீமபிக்யாம் ॥

ஹே இந்திரே - லக்ஷ்மியே
தமாலம் - பச்சைக்கிச்சிலி மரத்தை
ஆஶ்லிஷ்ய - சுற்றிக் கொண்டுள்ள
வல்லீவ - கொடி போலும்
அம்புவாஹ - நீருண்ட மேகத்தை
ஆஶ்லிஷ்ய - அடைந்துள்ள
வித்யுல்லதேவ - மின்னல் கொடி போன்றுள்ள
மாஹேந்த்ரநீல - இந்த்ரநீலக் கல்லால் செய்யப்பட்ட
பவநம் - வீட்டில் பரந்துள்ள
மணிதீபிகேவ - பத்மராக தீப ஒளி போலும்
ககநாங்கணம் - ஆகாயத்தை
ஆஶ்லிஷ்ய - அடைந்துள்ள
சந்த்ரகலேவ - சந்த்ர ஒளி போன்றும்
த்வம் - நீ
ஶௌரிம் - நாராயணனை
ஆஶ்லிஷ்ய - அணைத்துக் கொண்டு
மஹதீம் மிகுந்த
அபிக்யாம் - சோபையை
அயஸே - அடைவிக்கின்றாய்

கருத்து தெளிவானதே

தமாலம் முதலியவற்றை உவமையாகக் காட்டியதால் பகவானுக்கு முறையே பிறர் உதவியையே முக்கியப் பயனாகக் கொண்டமையும், வேண்டியதையும் மேலாக அளிக்கும் தன்மையும் நேர்மையான வழியில் நிற்கும் தன்மையும், எங்கும்

பரந்து நிற்கும் தன்மையும் உள்ளமை புலப்படுத்தியாயிற்று. அதே போல கொடி முதலியவற்றை எடுத்துக் காட்டாகக் கூறியமையால் லக்ஷ்மிக்கு முறையே பகவான் ஒருவனையே அண்டியிருக்கும் தன்மையும் மென்மைத்தன்மையும், ப்ரகாபமுடைமையும், கண்ணுக்குக் களிப்பூட்டும், தன்மையும் புலப்படுத்தியதாயிற்று.

मदनतरुपल्लवानां मधुसूदनमानसालिकुसुमानाम् ।
तत्कृततपः फलानां तव ललितानां तु जननि कः स्तोता ॥ ५०

மதநதருபல்லவாநாம்
மதுஸூதநமாநஸாலிகுஸுமாநாம் ।
தத்க்ருததப: பலாநாம்
தவ லலிதாநாம் து ஜநநி க: ஸ்தோதா ॥

ஹேஜநநி - தாயே !
மதநதரு - மன்மத மரத்தின்
பல்லவாநாம் - தளிர்களையும்
மதுஸூதந - மதுஸூதனனது
மாநஸ - மனமாகிய
அலி புஷ்பாநாம் - வண்டுப் பூவையும்
தத்க்ருத - பகவானால் செய்யப்பட்ட
தப: பலாநாம் - தவத்தின் பயன்களையும்
தவ - உன்னுடைய
லலிதாநாம் - ஶ்ருங்கார விலாஸங்களையும்
ஸ்தோதா - துதிப்பவன்
க: - எவன் உளன்

மன்மதனால் தோற்றுவிக்கப்பட்டதும், பகவான் மனதை ஈர்க்க வல்லதும், பகவான் ஒருவனாலேயே அநுபவிக்கத் தக்கதுமான ஶ்ருங்கார விளையாடல்களைத் துதிக்கும் வல்லமை வாய்ந்தவன் எவனுளன் ? எவருமில்லை என்பது கருத்து.

க: - நான்முகன் ஒருவனே. ஸ்தோதா - துதிக்கவல்லவன் என்னைப் போன்ற அறிவிலிகள் துதிக்க வல்லரல்லர் என்ற பொருள் கிடைக்கிறது.

கோயில் சப்தம் வங்கீபுரம், வாஜபேயம், வீராபுரம் ராமாநுஜ தீக்ஷிதர் குமாரரான சடகோபாசாரியர் இயற்றிய ரத்நப்ரபா என்கிற லக்ஷ்மீ ஸஹஸ்ர உரையில் ஶ்ருங்கார ஸ்தபகம் முடிவுற்றது

சுபம்

ऐश्वर्य स्तबकः

ஐய்ச்வர்ய ஸ்தபகம் 10

विश्वस्य जननीमेव विश्वस्य शरणं वृणे।
विश्वंभररसमैश्वर्यां विदुर्यां ब्रह्मवादिनः॥

விச்வஸ்ய ஜநநீமேவ விச்வஸ்ய மாரணம் வ்ருணே।
விச்வம்பரஸமைச்வர்யாம் விதுர்யாம் ப்ரஹ்மவாதிந:॥ 1

ப்ரஹ்மவாதிந:. வேதாந்தம் அறிந்தவர்கள்
யாம் - எந்த லக்ஷ்மியை
விச்வம்பரஸம - பகவானுக்கு ஒப்பான
ஐச்வர்யாம் - அனைத்து உலகங்களுக்கும் ஈச்வரியாகை, சேஷியாகை, காப்பவளாகுகை, மோக்ஷோபாயமாகுகை, மோக்ஷம் அளிப்பவளாகை முதலான செல்வங்களுடையவளாக
விது: - அறிகின்றார்களோ
தாம் விச்வஸ்ய ஜநநீமேவ - அவ்வுலக மாதாவையே
விச்வஸ்ய - இவள் காப்பாற்றுவள் என்ற விச்வாஸத்துடன்
மாரணம் வ்ருணே - பகவானுக்குத் தொண்டும் செய்யும் வாய்ப்பு வருக்க வேண்டித் தஞ்சம் புகுகின்றேன்
ஐச்வர்யம் - என்றால் செல்வம். தாயின் செல்வங்களைப் பற்றி இதில் பேசுகின்றார் எனவே இப்பெயர் பெற்றது.

பகவான் அனைத்துலகங்களுக்கும் அரசன், அவனே சேஷி - தலைவன் - "அவனே காப்பவன், மோக்ஷம் பெறும் வழி வகுப்பவனும், மோக்ஷமளிப்பவனும் அவனே என்கின்றனர். வேதமுணர்ந்தோர். அதே போல் அவர்களே இத்துணையும் லக்ஷ்மிக்கும் பொருந்தும் என்கின்றனர். அவள் அனைவருக்கும் தாயானதால் கருணையே வடிவு கொண்டவள். வெறுத்து ஒதுக்குதல் அறியாதவள் என்ற உறுதியான எண்ணத்துடன் பகவானருகில் சென்று அவனுக்குப் பணிவிடை செய்யும் வாய்ப்பை அளிக்க வேண்டித் தஞ்சம் புகுகிறேன் என்கிறார்.

இதில் ஸம்பூர்ணமான புருஷகார ப்ரபத்தியே பேசப்பட்டுள்ளது. விரிவுக்கு அஞ்சி விளக்கவில்லை.

अनुपाधिकमम्ब ते मुरारेरपि साधारणमाहुरीशितृत्वम् ।
स्फुटमत्र निदर्शनं प्रतीमो ननु मित्रावरुणादिदेवतात्वम् ॥

அநுபாதிகமம்ப தே முராரே ரபி
ஸாதாரணமாஹுரீசித்ருத்வம் ।
ஸ்புடமத்ர நிதர்சநம் ப்ரதீமோ
நநு மித்ராவருணாதிதேவதாத்வம் ॥

ஹே அம்ப - தாயே!
அநுபாதிகம் - இயற்கையான
ஈசித்ருத்வம் - உலகைமுழுவதும் ஈச்வரனாகுகை
முராரே: - பகவானுக்கும்
தே ச - உனக்கும்
ஸாதாரணம் - பொதுவாக
ஆஹு: - சொல்லினர் பெரியோர்
அத்ர - இருவருக்கும் பொதுவான ஒரு தர்மத்தை ஒத்துக் கொள்வதில்
மித்ராவருணாதி - மித்ராவருணர் இந்த்ராநீ முதலான இரட்டையர்களிடம்
தேவதாத்வம் - வேறுபடாத ஒரே தேவதை ஆகும் தன்மையை
ஸ்புடம் - வெளிப்படையான
நிதர்சநம் - எடுத்துக் காட்டாக
ப்ரதீம : நநு - அறிகிறோமன்றோ ?

இச் ச்லோகத்தில் விச்வம்பரனான பகவானுக்கு ஸமானமான ஐச்வர்யத்தை உடையவள் தாய் என்றார். அப்படியாயின் இரு ஈச்வரர்கள் என்றல்லவோ ஆயிற்று. உலகம் நாராயணன் ஒருவனையே ஈச்வரனாகக் கொண்டது என்றன்றோ பெரியோர் பகர்வர் என்று கேட்க அதற்கு விடை அருளுகிறார் இந்த ச்லோகத்தால்

உலகுக்கு ஈச்வரனாக இருக்கை என்ற தர்மத்தை உனக்கும் பகவானுக்கும் சேர்த்தே பெரியோர் சொல்கின்றனர். பகவானுக்கு மட்டுமன்று. அப்படி இருவர் சேர்ந்து ஒரே தேவதையாகக் கருதப்படுவதுண்டோ எனில் உண்டு என உதாஹரணம் காட்டுகிறார் மித்ராவருணாதி என்பதால். மித்ரன், வருணன் என்ற இருவர் சேர்ந்து, மித்ராவருணர் என ஒரே தேவதையாகவும், இந்த்ரன் அக்நி என்ற இருவர் சேர்ந்து இந்த்ராக்நி என ஒரே தேவதையாகவும் உலகில் ஏற்றுள்ளனரன்றோ? அப்படியே பகவானும் லக்ஷ்மியும்

சேர்ந்தே உலகுக்கு ஈச்வரர் ஆகின்றனர் என்பதால் எக்குற்றமுமில்லை.

अविशेषमशेषशेषिभावं युवयोर्यद्यपि वर्णयन्ति सन्तः ।
तनये जलधेर्मिथः प्रतीतः तदपि स्वामिनि शेषशेषिभावः ॥

அவிஶேஷமஶேஷஶேஷிபாவம்
யுவயோர்யத்யபி வர்ணயந்தி ஸந்த:।
தநயே ஜலதேர்மித: ப்ரதீதஸ்-
ததபி ஸ்வாமிநி ஶேஷஶேஷிபாவ:॥

ஹே ஜலதே: தநயே - கடல் குமாரியே
ஸந்த: - வித்வான்கள்
யுவயோ: - உங்களிருவருக்கும்
அஶேஷஶேஷிபாவம் - யாவற்றுக்கும் தலைவரான தன்மையை
யத்யபி வர்ணயந்தி - வர்ணிக்கத் தான் செய்கின்றனர்.
ததாபி - இருந்த போதும்
ஸ்வாமிநி - தலைவியே!
யுவயோ: - உங்கள் இருவருள்ளும்
ஶேஷஶேஷிபாவ: - நீ பகவானுக்கு அடிமையாவதும், பகவான் உனக்குத் தலைவனாவதும்
ப்ரதீத: - ப்ரஸித்தமாக உள்ளது

ஈரரக உண்டாகாது என்பதைத் திரும்பவும் உணர்த்துகிறார். ''அஸ்யா: மம ச சேஷம் ஹி விபூதி: உபயாத்மிகா:'' என்பது பகவான் வாக்யம். லோகவிபூதி நித்யவிபூதி எனப்படும் மண்ணுலக விண்ணுலகங்களிரண்டும் இவளையும் என்னையும், தலைவராகக் கொண்டவை என்ற பகவானின் வாக்ய கருத்தை உணர்ந்த பெரியோர்கள், ''நீங்கள் இருவருமே அனைத்துக்கும் தலைவர்'' என்கின்றனர். இதனால் ஈரரக தோன்றாதோ எனின் தோன்றாது என்கின்றனர். எப்படியெனின் ''தஸ்யாச்ச ஜகதச்ச அஹம் ஈச்வர: வேதவிச்ருத:'' என்பது போன்ற ப்ரமாண வாக்யங்கள் இலக்குமிக்கும் உலகுக்கும் யானே ஶேஷி என்பது வேதங்களில் கண்டது என்கிறது. இதனால் லக்ஷ்மி பகவானுக்கு அடிமை ஆயினள். பகவான் இவளுக்குத் தலைவன் ஆயினன். எனவே இவ்விருவருக்கும் ஶேஷ ஶேஷிபாவம் என்ற ஒன்றும் தன்மை இருப்பதால் எக்குறையுமில்லை என்கிறார்.

तुल्येऽपि ते नाथविशेषणत्वे व्यक्तं गुणादस्ति विशेष एषः ।
प्रत्यक्त्वमब्धेस्तनये भवत्याः प्राज्ञा गुणानां च पराक्त्वमाहुः ॥

துல்யே(அ)பி தே நாதவிஶேஷணத்வே
வ்யக்தம் குணாதஸ்தி விஶேஷ ஏஷ:।
ப்ரத்யக்த்வமப்தேஸ்தநயே பவத்யா:।
ப்ராஜ்ஞா குணாநாம் ச பராக்த்வமாஹு:॥

ஹே அப்தே: தநயே - கடல் பெண்ணே
நாதவிஶேஷணத்வே - பகவானை நொடியும் பிரியாமை என்ற சிறப்பு
தே துல்யேபி - உனக்கும் பொதுவாக இருந்த போதும்
குணாத் - ஏனைய குணங்களிலிருந்து
தே ஏஷ விஶேஷ: - உனக்கொரு சிறப்பு வேறுபாடுள்ளமை
வ்யக்தம் - யாவருமறிந்ததே
ப்ராஜ்ஞா - வேதமறிந்தவர்
பவத்யா: - உனக்கு
ப்ரத்யக்த்வம் - தனக்குத்தானே தோற்றுகையும்
குணாநாம் - குணங்களுக்கு
பராக்த்வம் - பிறரால் ப்ரகாசிக்கையும்
ஆஹு: - சொன்னார்கள்

பகவானிடமுள்ள எண்ணற்ற குணங்களுள் ஸ்ரீயையும் அடக்கி விடலாம் என்பது சிலர் கொள்கை. அது தவறு என்கிறார் ஒருவனது குணங்கள் எப்படி அவனை விட்டுப் பிரியாது எப்போதும் அவனுடனேயே இருக்கின்றதோ அப்படியே ''அகலகில்லேன் இறையும்'' என்றே பகவானுடனேயே இவளும் வாழ்வதால் இவளை அவன் குணமாகக் கூறலாம் என்கின்றனர் ஒரு சாரார். அது தவறு ஏனெனின் குணங்கள் அசேதநம். ஆனால் லக்ஷ்மி உயிருள்ளவள். இவளுக்குத் தனக்குத் தானே ''நான்'' எனத் தோற்றிக் கொள்ளும் தன்மை உண்டு. குணங்கள் அசேதநங்களாகையால் அவற்றுக்கு அது கிடையாது. ஆகவே அவர்கள் சொல்வது பொருந்தாது. அசேதநமான குணங்களுள் சேதநமான இலக்குமியைப் புகுத்த இயலாது.

संसाराब्धौ मज्जतां सज्जनानां रक्षायज्ञे दीक्षितो राक्षसारिः ।
अम्भोराशेः पुत्रि पद्यास्तवासा वन्यारम्भं नित्यमेत्यम्बुजाक्षः ॥

ஸம்ஸாராப்தௌ மஜ்ஜதாம் ஸஜ்ஜநாநாம்
ரக்ஷாயஜ்ஞே தீக்ஷிதோ ராக்ஷஸாரி: ।
அம்போராமே: புத்ரி பத்ந்யாஸ்தவாஸா-
வந்வாரம்பம் நித்யமேத்யம்புஜாக்ஷ: ॥

ஹே அம்போராமே : - புத்ரி கடல்கன்னி!
ஸம்ஸாரப்தௌ - ஸம்ஸாரமாகிற கடலில்
மஜ்ஜதாம் - நீண்ட நாள்களாக முழுகிக் கிடக்கும்
ஸஜ்ஜநாநாம் - பகவானருளால் நேர் வழி நடப்பவருடைய
ரக்ஷாயஜ்ஞே - காப்பதாகிய யாகத்தில்
தீக்ஷித: - கர்த்தாவாக உள்ள
ராக்ஷஸாரி: - ராக்ஷஸர்களை அழிப்பவனே
அஸௌ அம்புஜாக்ஷ: - இப்பகவான்
தவ : - உன்னுடன்
அந்வாரம்பம் - சேர்ந்து வாழ்வதை
ஸர்வதா - எப்போதும்
ப்ராப்நோதி - அடைகிறான்

ஸம்ஸாரம் என்பது பெரிய ஸமுத்ரம். அதில் தாம் செய்த வினைப்பயனால் கோடி கோடிக்கணக்கான உயிரினங்கள் அமிழ்ந்துத் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. தன்னடைவாகப் பகவானுடைய கடாக்ஷத்துக்கு இலக்கான சில ஜீவன்களைக் காப்பதை தன் வ்ரதமாகக் கொண்டுள்ளான் பகவான். அவர்களைக் காப்பது ஒரு யாகம் போன்றதாம். யாகம் செய்ய வேண்டுமென்றால் பத்நியின் துணை கட்டாயம் வேண்டும். யாகம் செய்பவனுடன் எப்போதும் சேர்ந்திருந்து அத்தர்மத்தைச் செய்ய வேண்டியவள் இவள். எனவேதான் ஸஹதர்ம சாரிணீ என மனைவிக்குப் பெயர். எனவே உன்னுடன் எப்போதும் சேர்ந்தே இருப்பன். உன்னுடன் சேர்ந்து அவன் உலகைக் காப்பதென்பது மனைவியற்றவன் யாகம் போல் ஆகாயத் தாமரையாம் என்பது கருத்து.

अस्येशानेत्यागमस्तावदास्तामैश्वर्येऽस्मिंस्तावदम्ब त्वदीये।
जागर्त्येव व्यासतातप्रणीतं श्लाघ्यं विष्णोस्तत् पुराणं प्रमाणम्॥

அஸ்யேஶாநேத்யாகமஸ்தாவதாஸ்தா-
மைஶ்வர்யே(அ)ஸ்மிம்ஸ்தாவதம்ப த்வதீயே ।
ஜாகர்த்யேவ வ்யாஸதாதப்ரணீதம்
ஶ்லாக்யம் விஷ்ணோஸ்தத் புராணம் ப்ரமாணம் ॥ 6

ஹே அம்பே - எமது தாயே !
த்வதீயே - உனது
அஸ்மிந் ஐஶ்வர்யே - முன் சொன்ன பகவானுக்கு ஸமமான செல்வத்தில் ப்ரமாணமான
அஸ்யேஶாநா - 'அஸ்யேஶாநா' என்கிற
ஆகம: - ச்ருதி
ஆஸ்தாம் தாவத் - ஒரு புறமிருக்கட்டும்
வ்யாஸதாத - வ்யாஸர் தந்தையால்
ப்ரணீதம் - செய்யப்பட்ட
ஶ்லாக்யம் - ஏனைய புராணங்களிலிருந்து உயர்ந்ததும்
தத் - மிகவும் ப்ரஸித்தமானதுமான
விஷ்ணோ: புராணம் - விஷ்ணு புராணம் என்ற நூல்
ஜாகர்த்யேவ - விளங்குகின்றதன்றோ.

''ஈஶாந: பூதபவ்யஸ்ய'' என்ற ஶ்ருதி விஷ்ணுவின் செல்வத்தை விளக்கிக் காட்டுகின்றது. அதனோடு ஒத்தது ''அஸ்யோஶாநா ஜகத: விஷ்ணுபத்நீ'' என்ற ஶ்ருதி. இந்த ஶ்ருதி ஒரு புறம் இருக்கட்டும். அது அத்துணைத் தெளிவானதன்று. ''ஸஹோவாச வ்யாஸ: பாராஶர்ய:'' என ஶ்ருதியாலே புகழப்பட்டவரான வ்யாஸருக்கும் தந்தையால் இயற்றப்பட்டதும் ஸாத்விக புராணமாதலால் மற்றைய புராணங்களினின்றும் உயர்ந்ததும், நண்பன் போல் தர்மோபதேசம் செய்வதும் எளியதாகிறதுமான விஷ்ணு புராணம் இருப்பதொன்றே போதுமானது லக்ஷ்மியின் பெருமையை அறிந்து கொள்வதற்கு.

जल्पाकास्ते जीवकोटिप्रवेशं स्वल्पप्रज्ञा ये रमे कल्पयन्ति।
विश्वं व्याप्तं विष्णुनाम्ब त्वया चेत्युक्तिस्तान् प्रत्युत्तरं शक्तिसूनोः॥ ७

ஜல்பாகாஸ்தே ஜீவகோடிப்ரவேஶம்
ஸ்வல்பப்ரஜ்ஞா யே ரமே கல்பயந்தி ।

விஶ்வம் வ்யாப்தம் விஷ்ணுநாம்ப த்வயா சேத்-
யுக்திஸ்தான் ப்ரத்யுத்தரம் ஶக்திஸூநோ: ॥ 7

ஜல்பாகா: - வீண் பேச்சு பேசுபவர்களும்
ஸ்வல்ப ப்ரஜ்ஞா: - சிற்றறிவினருமான
யே - எந்த மனிதர்கள்
தே - உனக்கு
ஜீவகோடி ப்ரவேசம் - ஜீவர்களுக அணுவாக இருக்கை முதலியவற்றை
கல்பயந்தி - ஏறிடுகின்றனர்களோ
தாந் ப்ரதி - அவர்களுக்கு
ஶக்திஸூநோ: - பராஶரருடைய
ஹே அம்ப - தாயே
த்வயா - உன்னாலும்
விஷ்ணுநா ச - விஷ்ணுவாலும்
விச்வம் - விச்வமானது
வ்யாப்தம் - வியாபிக்கப்பட்டுள்ளது
இத்யுக்தி: - என்ற வார்த்தை
உத்தரம் - தக்க பதிலாகும்

ஒரு சிலர் லக்ஷ்மி ஜீவர் கூட்டத்தைச் சேர்ந்தவள் என்கின்றனர். இப்படிப் பேசுவது ஶாஸ்த்ரத்துக்குக் கட்டுப்படாது மனம் போன போக்கில் இஷ்டம் போல் பேசுவதாகும். இப்படிப் பேசுபவர் உண்மை அறிவற்றவராவர். ஏனெனில் தமது நூலாகிய ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் "த்வயா ச விஷ்ணுநாசாம்ப ஜகத்வ்யாப்தம் சராசரம் "யதா ஸர்வகதோ விஷ்ணு: ததைவேயம் த்விஜோத்தம" என்பவை போன்ற வாக்யங்களால் தெளிவாக சராசர வடிவிலுள்ள இவ்வுலகம் முழுதும் உன்னாலும் விஷ்ணுவாலும் வ்யாபிக்கப்பட்டுள்ளது. விஷ்ணு எப்படி எங்கும் பரந்துள்ளாரே அப்படியே இவளும் பரந்துள்ளாள் என வெளிப்படையாகக் கூறியுள்ளார். இதனால் பகவானுக்கும் லக்ஷ்மிக்கும் எவ்வித வேறுபாடுமில்லை. ஸ்வரூபத்தாலும் ஸ்வபாவத்தாலும் இருவரும் விபுவானவர்களே எனக் கூறியிருக்க அதற்கு மாறாகக் கூறுபவர்க்கு இது ஒன்றே தக்க பதில் ஆகும். நம்மால் நிரூபிக்க வேண்டியது ஏதுமில்லை என்கிறார்.

वेदोद्याने पारिजातायमानं श्रीसूक्तं तज्जायतां श्रेयसे नः ।
पारे वाचां भासुरे त्वत्प्रभावे चक्षुष्मन्तो देवि येनैव सन्तः ॥ ९ ॥

வேதோத்யாநே பாரிஜாதாயமாநம்
ஸ்ரீ ஸூக்தம் தஜ்ஜாயதாம் ஶ்ரேயஸே ந: ।

பாரே வாசாம் பாஸுரே த்வத்ப்ரபாவே
சக்ஷுஷ்மந்தோ தேவி யேநைவை ஸந்த: ॥ 8

ஹே தேவி - பகவான் மஹிஷீ !
வேதோத்யாநே - வேதமாகிய கற்பகத் தோட்டத்தில்
பாரிஜாதாயமாநம் - பாரிஜாதமரம் போல் மிக உயர்ந்ததும்
தத் - மிக ப்ரஸித்தி பெற்றதுமான
ஸ்ரீ ஸூக்தம் - ஸ்ரீ ஸூக்தம் என்ற பகுதி
ந: ச்ரேயஸே - நமது நன்மைக்கு
ஜாயதாம் - உதவி புரியட்டும்
ஸந்த: - பராசரர் முதலியன மஹான்கள்
வாசாம் பாரோ - சொல்லிற்கும் மனதிற்கும் அடங்காததும்
பாஸுரே - ப்ரமாணமாகத் தக்கதுமான
த்வத் ப்ரபாவே - உமது மாஹாத்ம்யத்தில்
யேநைவ - எந்த ஸ்ரீ ஸூக்தத்தாலேயே
சக்ஷுஷ்மந்த: - கண்ணுடையவர்கள்
பவந்தி - ஆகின்றனரோ

பராசரர் முதலான ருஷிகளும் முதலில் ஸ்ரீ ஸூக்தத்திலிருந்தே ஸ்ரீயின் பெருமைகளை அறிந்து பின்பே அவளைப் பற்றிய புராணத்தை இயற்றினர் என்கிறார். வேதம் என்பது இவ்வளவினது என அளவிட்டுச் சொல்ல முடியாது. தற்போது நமக்குக் கிடைத்து இருப்பது மிக மிகக் குறைவான பகுதியே. இவ் வேதங்களே கற்பகமாம் தோட்டமாம். இத்தோட்டத்திற்கு இடையே உள்ள பாரிஜாதம் என்ற தேவருலகமரம் போன்றதாம் ஸ்ரீ ஸூக்தம். பாரிஜாதம் போல் இதனை ஜபம் செய்பவர்க்கு வேண்டியதை அளிக்க வல்லதாம் இதுவும். இப்படி ப்ரஸித்தி பெற்ற ஸ்ரீ ஸூக்தம் நமக்கு மோக்ஷம், வாதிகளின் வெற்றி போன்ற நன்மைகளை அளிக்கட்டும் என வேண்டுகிறார். இந்த ஸ்ரீ ஸூக்தம் பல உதவிகளைப் புரிந்துள்ளதாம். பராசரர் முதலான மஹான்கள் சொல்லிற்கும் மனதுக்கும் எட்டாததும், உண்மையானதுமான உனது மஹிமைகளான விஷ்ணுவிற்குச் சமமான ஐச்வர்யம் உடைமை, அமங்கலத்தைப் போக்குதல், இம்மைச் செல்வங்களை அளித்தல் மோக்ஷமளித்தல் போன்றவற்றை ஸ்ரீ ஸூக்தத்திலிருந்தே முதலில் அறிந்தனர் என்கிறார்.

दम्पत्योरिह युवयोरधीश्वरत्वं व्यासज्य स्थितमिति संमतं मतं नः ।
विश्वाम्ब श्रुतिविहितं विहाय पत्नीं कर्तृत्वं क्रतुषु न केवलस्य पुंसः ॥९

தம்பத்யோரிஹ யுவயோரதீச்வரத்வம்
வ்யாஸஜ்ஜ்ய ஸ்திதமிதி ஸம்மதம் மதம் ந: ।
விச்வாம்ப ச்ருதிவிஹிதம் விஹாய பத்நீம்
கர்த்ருத்வம் க்ரதுஷு ந கேவலஸ்ய பும்ஸ: ॥ 9

ஹே விச்வாம்ப - உலகத்தாயே!
இஹ - இவ்வுலக விஷயத்தில்
ச்ருதிகதிதம் - பகவானுக்கு உரியதாக வேதத்தில் சொல்லப்பட்ட
அதீச்வரத்வம் - ஈச்வரனாகும் தன்மை
தம்பத்யோ: யுவயோ: - தம்பதிகளான உங்களிருவரையும்
வ்யாஸஜ்ய ஸ்திதம் - சார்ந்துள்ளது
இதி மதம் ந: - என்பது எங்கள் கொள்கை
ச்ருதி விஹிதம் - வேதத்தில் சொல்லப்பட்ட
க்ரதுஷு கர்த்ருத்வம் - யாகம் செய்தல் என்பது
பத்நீம் விஹாய - பத்நி இன்றி
கேவலஸ்ய பும்ஸ: - புருஷனுக்கு மட்டும்
ந - இல்லை

உலகுக்கு ஈச்வரனாக இருப்பதும், உலகைப் படைப்பதும், பகவான் ஒருவனுக்கே உரியதாகவன்றோ வேதத்தில் பெரும்பாலும் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீக்குக் கூறப்படவில்லையே. அப்படியிருக்க ஈச்வரி ஆகுகை ஸ்ரீக்கு எப்படிப் பொருந்தும் ? எனின் வேதத்தில் அப்படிக் கூறப்படினும் அது உங்கள் இருவரையும் சார்ந்ததே என்பது எங்கள் மதம். இப்படிச் சொல்வதில் எவ்விதக் குற்றமுமில்லை. இதை எடுத்துக் காட்டால் விளக்குகின்றோம். வேதம் 'யஜேத ஸ்வர்க காம:' என்பதால் ஸ்வர்கம் விரும்புபவன் யாகம் செய்யக் கடவன் பத்நி இன்றி புருஷன் மட்டும் யாகம் செய்வதென்பது நடவாதாம். யாகம் செய்தல் என்பது பதி பத்நீ என்ற இருவரையும் சார்ந்ததே. பத்நி இல்லையேல் புருஷனால் யாகம் செய்ய இயலாது. அதே போன்றே உலகுக்கு ஈச்வரன் ஆகும் தன்மையும் இருவரையும் சார்ந்ததே.

वृत्ताशयासु भवतीमहिमोपदेशो-
त्तचादृशीषु निगमान्तसरस्वतीषु ।
नारायणप्रियतमे निखिलाभ्युपेतं
रामायणं ननु जयत्युपबृंहणं नः ॥ १०

தத்தாபயாஸு பவதீமஹிமோபதேஶே
தத்தாத்ருஶீஷு நிகமாந்தஸரஸ்வதீஷு ।
நாராயணப்ரியதமே நிகிலாப்யுபேதம்
ராமாயணம் நநு ஜயத்யுபப்ரும்ஹணம் ந: ॥ 10

ஹே நாராயணப்ரியதமே - நாராயணன் மனைவியே
பவதீ - உனது
மஹிமோபதேஶே - மஹிமையைப் பேசுவதிலும்
தத்தாபயாஸு - கருத்துடையதும
தத்தாத்ருஶீஷு - அபௌருஷேயம் ஆதலால் குற்றமற்றதுமான
நிகமாந்த - உபநிஷத்திலுள்ள
ஸரஸ்வதீஷு - உனது குணம் பாடும் பகுதிகளில்
நிகில - அனைவராலும்
அப்யுபேதம் - ப்ரமாணமாக ஏற்கப்பட்ட
ராமாயணம் - வால்மீகி ராமாயணம்
உப ப்ரும்ஹணம் - ஶ்ருதி சொல்லியதை விளக்கிக் காட்டுவதாக
ந: - எங்களுக்கு
ஜயதி நநு - விளங்குகின்றதன்றோ ?

லக்ஷ்மீ மாஹாத்ம்ய விஷயத்தில் ஶ்ருதியின் கருத்தை விளக்குவதான ஸ்ரீமத் ராமாயணம் ப்ரமாணமாக உள்ளது. எனவே அவள் பெருமையை இல்லையாக்க முடியாது என்கிறார் இந்த ஶ்லோகத்தால். வேதம் மனிதனால் இயற்றப்பட்டதன்று. அது என்றும் அழியாது நித்யமாக நிற்பது. ஆகையால் அதில் மருட்சி, அயர்வு போன்ற குற்றங்கள் கிடையா. அவ்வேதம் பகவானின் குணம் பாடும் இடங்களிலெல்லாம் உன் குணத்தையும் சேர்த்தே பாடுகின்றது எனக் கொள்ள வேண்டும். ஏனெனில் ஸ்ரீமத் ராமாயணம் மஹர்ஷி வால்மீகியால் இயற்றப்பட்டது. அதை இயற்றும்படி நியமித்தவர் ப்ரஹ்மா. ''இதை நீ இயற்றும் போது பொய்யானவாக்கு ஒன்று கூட உன் முகத்தில் தோன்றாது. ராமனது அனைத்து வரலாறும் உனக்குத் தற்போது தெளிவாக விளங்கும்.'' ''என்றெல்லாம் வரமளித்து ராமாயணத்தை இயற்றுவித்தார். வேதமே தன்னால் சொல்லப்பட்ட கருத்துகளை விரித்துரைக்கவே ராமாயணமாகத் தோன்றியுள்ளது. அதில் லக்ஷ்மியின் பெருமை பரக்கப் பேசப்பட்டுள்ளது. அது ஒன்று போதும் லக்ஷ்மியின் மஹிமையை விளக்க என்கிறார். 10

एकग्रीवैः निगमशिखरैरिन्दिरे निर्विशेषं
विश्वव्याप्तिर्जननि युवयोर्व्यक्तमुद्धुष्यमाणा।
ज्ञानद्वारा तव मधुरिपोरात्मनैवेत्यलीका
वैषम्योक्तिः कुत उपनता हन्त केषांचिदेषा॥ ११

ஏகக்ரீவை: நிகமஶிகரைரிந்திரே நிர்விசேஷம் ।
விஶ்வவ்யாப்திர்ஜநநி யுவயோர்வ்யக்தமுத்குஷ்யமாணா ।
ஜ்ஞாநத்வாரா தவ மதுரிபோராத்மநைவேத்யலீகா
வைஷம்யோக்தி: குத உபநதா ஹந்த கேஷாஞ்சிதேஷா ॥ 11

ஹே இந்திரே - லக்ஷ்மியே !
ஏக க்ரீவை: - புராணங்களுடன் ஒத்த கருத்துடைய
நிகமசிகரை: - உபநிஷத் வாக்யங்களால்
யுவயோ: - உங்கள் இருவருக்கும்
நிர்விஶேஷம் - ஶப்தபேதமில்லாமல்
வ்யக்தம் - வெளிப்படையாக
உத்குஷ்யமாணா - பேசப்படுகிற
விஶ்வவ்யாப்தி: - உலகை வ்யாபிக்கும் தன்மை
தவ - உனக்கு
ஜ்ஞாநத்வாரா - ஜ்ஞாநத்தைப் பற்ற
மதுரிபோ: - பகவானுக்கு
ஆத்மநைவ - ஸ்வரூபத்தாலும், ஜ்ஞாநத்தாலும்
இத்யலீகா - என ப்ரமாணமற்ற
கேஷாம்சித் - சிலரின்
ஏஷா - இந்த
வைஷம்யோக்தி: - வேறுபாட்டுப் பேச்சு
குத: - எப் ப்ரமாணத்தால்
உபநதா - தோன்றியது
ஹந்த - ஆஶ்சர்யம்

''யதா ஸர்வகத: விஷ்ணு'' என்கிற ஸ்ரீ விஷ்ணுபுராணம் விஷ்ணு எப்படி உலகம் முழுதும் வ்யாபித்துள்ளானோ அப்படியே பிராட்டியும் உலகம் முழுவதும் வ்யாபித்துள்ளாள் என்கிறது. ''த்வயா ச விஷ்ணுநா சாம்ப ஜகத்வ்யாப்தம்'' என்ற வாக்யத்தால் உன்னாலும் விஷ்ணுவாலும் உலகம் முழுதும் வ்யாபிக்கப்பட்டுள்ளது எனத் தெளிவாக எவ்வித மறைவுமின்றி ஓதுகின்றது. இப்படி உப ப்ரும்ஹணம் என்ற புராணக் கருத்து போலவே ''யச்ச கிஞ்சித்'' என்பது போன்ற உபநிஷத் வாக்யங்களாலும் ஸ்ரீயுடன் சேர்ந்த நாராயணனுக்கே விபுத்வம் - எங்கும் பரந்துள்ளமை - பேசப்பட்டுள்ளது. ஶ்ருதி

வாக்யத்திலும் எவ்வித ஒளிவு மறைவும் இல்லை. அப்படியிருந்தும் ஒரு சிலர் ஸ்ரீக்கு இந்த வ்யாப்தியை ஒத்துக் கொள்வதில்லை. முக்தருள ஜீவனுடைய ஜ்ஞாநம் எப்படி எங்கும் வ்யாபித்துள்ளதோ அப்படியேதான் ஸ்ரீயின் ஜ்ஞானமும் முழுதும் பரந்துள்ளது. பகவான் மட்டும் ஸ்வரூபத்தாலும், ஜ்ஞாநத்தாலும் பரந்துள்ளான் என்கின்றனர். எவ்வித ப்ரமாணமுமில்லாத இவ் வேற்றுமைக் கற்பனை மிகவும் வேடிக்கையாக உள்ளது.

वैभवं तव मुकुन्दपत्नि यो वेद वेदशिखरानुवर्णितम् ।
वैभवं भुवि स विन्दति स्थिरं दुस्त्यजं त्यजति वै भवं ततः ॥१२

வைபவம் தவ முகுந்தபத்நி யோ
வேத வேதஶிகராநுவர்ணிதம் ।
வைபவம் புவி ஸ விந்ததி ஸ்திரம்
துஸ்த்யஜம் த்யஜதி வை பவம் தத: ॥ 12

ஹே முகுந்தபத்நீ - பகவான் மஹிஷீ
வேதஶிகர - உபநிஷத்தில்
அநு வர்ணிதம் - ப்ரஸித்தமாக உள்ள
தவ வைபவம் - உனது விபுத்வத்தை
ய: வேத - எவன் அறிகின்றானோ
ஸ வை - அப்புருஷனே
ஸ்திரம் - அழிவில்லாத

வைபவம் - பெருமைகளை
விந்ததி - அடைகிறான்
தத: - இறக்கும் தருவாயில்
துஸ்த்யஜம் - எளிதில் கடக்க முடியாத
பவம் - ஸம்ஸாரத்தை
த்யஜதி - விட்டு நீங்குகிறான்.

உபநிஷத்தில் குணத்தாலும் ஸ்வரூபத்தாலும் வர்ணிக்கப்பட்டுள்ள விபுத்வத்தை அசூயை இல்லாத மனத்துள் உள்ளபடி எவன் அறிகின்றானோ அவனே இவ்வுலகில் அனைத்துப் பெருமைகளையும் பெற்று அநுபவித்துப் பின் சரீரம் அழியும் போது முயன்றும் கடக்க முடியாத ஸம்ஸாரத்தை அவளருளால் கடந்து மோக்ஷாநந்த மநுபவிக்கிறான். உனது உண்மை ஜ்ஞாநம் இம்மை மறுமைகளில் ஆநந்தம் பயப்பதாம்.

ऐश्वर्यमत्र मधुहन्तुरपह्नुते यो
यो वा तवापि जगदम्ब तयोः प्रतीच्यः ।

வாக்யத்திலும் எவ்வித ஒளிவு மறைவும் இல்லை. அப்படியிருந்தும் ஒரு சிலர் ஸ்ரீக்கு இந்த வ்யாப்தியை ஒத்துக் கொள்வதில்லை. முக்தனான ஜீவனுடைய ஜ்ஞாநம் எப்படி எங்கும் வ்யாபித்துள்ளதோ அப்படியேதான் ஸ்ரீயின் ஜ்ஞானமும் முழுதும் பரந்துள்ளது. பகவான் மட்டும் ஸ்வரூபத்தாலும், ஜ்ஞாநத்தாலும் பரந்துள்ளான் என்கின்றனர். எவ்வித ப்ரமாணமுமில்லாத இவ் வேற்றுமைக் கற்பனை மிகவும் வேடிக்கையாக உள்ளது.

वैभवं तव मुकुन्दपत्नि यो वेद वेदशिखरानुवर्णितम्।
वैभवं भुवि स विन्दति स्थिरं दुस्त्यजं त्यजति वै भवं ततः॥१२

வைபவம் தவ முகுந்தபத்நி யோ
வேத வேதஶிகராநுவர்ணிதம்।
வைபவம் புவி ஸ விந்ததி ஸ்திரம்
துஸ்த்யஜம் த்யஜதி வை பவம் தத:॥ 12

ஹே முகுந்தபத்நீ - பகவான் மஹிஷீ
வேதஶிகர - உபநிஷத்தில்
அநு வர்ணிதம் - ப்ரஸித்தமாக உள்ள
தவ வைபவம் - உனது விபுத்வத்தை
ய: வேத - எவன் அறிகின்றானோ
ஸ வை - அப்புருஷனே
ஸ்திரம் - அழிவில்லாத
வைபவம் - பெருமைகளை
விந்ததி - அடைகிறான்
தத: - இறக்கும் தருவாயில்
துஸ்த்யஜம் - எளிதில் கடக்க முடியாத
பவம் - ஸம்ஸாரத்தை
த்யஜதி - விட்டு நீங்குகிறான்.

உபநிஷத்தில் குணத்தாலும் ஸ்வரூபத்தாலும் வர்ணிக்கப்பட்டுள்ள விபுத்வத்தை அசூயை இல்லாத மனத்துள் உள்ளபடி எவன் அறிகின்றானோ அவனே இவ்வுலகில் அனைத்துப் பெருமைகளையும் பெற்று அநுபவித்துப் பின் சரீரம் அழியும் போது முயன்றும் கடக்க முடியாத ஸம்ஸாரத்தை அவளருளால் கடந்து மோக்ஷாநந்த மநுபவிக்கிறான். உனது உண்மை ஜ்ஞாநம் இம்மை மறுமைகளில் ஆநந்தம் பயப்பதாம்.

ऐश्वर्यमत्र मधुहन्तुरपहुते यो
यो वा तवापि जगदम्ब तयोः प्रतीच्यः।

प्राच्यात् प्रदुष्यति विशिष्य पितृद्विषोऽपि
मातृद्विषस्त्रिभुवने महती हि गर्हा ॥ १२

ஐஶ்வர்யமத்ர மதுஹந்துரபஹ்நுதே யோ
யோ வா தவாபி ஜகதம்ப தயோ: ப்ரதீச்ய: ।
ப்ராச்யாத் ப்ரதுஷ்யதி விஶிஷ்ய பித்ருத்விஷோ (அ)பி
மாத்ருத்விஷஸ்த்ரிபுவநே மஹதீ ஹி கர்ஹா ॥ 13

ஹே ஜகதம்ப - அனைத்துலகத்தாயே !
அத்ர - இவ்வுலக விஷயத்தில்
மதுஹந்து: - பகவானுடைய
ஐஶ்வர்யம் - ஈஶ்வரத்தன்மையை
ய: - எவனொருவன்
அபஹ்நுதே - இல்லையாக்குகின்றனே
யோ வா - எவன்தான்
தவ - உலக மாதாவான உனது
ஐஶ்வர்யமபி - ஈஶ்வரியாம் தன்மையையும்
அபஹ்நுதே - இல்லையாக்குகின்றனோ
தயோ: - அவ்விருவருள்
ப்ரதீச்ய: - பின் கூறப்பட்டவன்
ப்ராச்யாத் - முன் சொல்லப்பட்டவனிலும்
விஶிஷ்ய - சிறப்பான
ப்ரதுஷ்யதி - பாபத்தை அடைகிறன்
த்ரிபுவநே - மூவுலகங்களிலும்
பித்ருத்விஷோபி - தந்தைக்குத் தீமை விளைவிப்பவனிலும்
மாத்ருத்விஷ: - தாய்க்கு விரோதம் செய்பவனுக்கு
கர்ஹா - நிந்தனை
மஹதீ ஹி - பெரியதன்றோ

சைவர் கொள்கையில் குறை கூறுகின்றார். அவர்கள் விஷ்ணுவின் பெருமைகளை அழித்து சிவனைப் பெரியவனாகக் கூறுவர். எவன் ஒருவன் இவ்வுலகத்தில் விஷ்ணுவுக்கு உபநிஷத்தில் கூறப்பட்டுள்ள வ்யாப்தி ஈஶ்வரத்வம் முதலியவற்றை ஏற்காமலும் அதே போல் அனைத்துலக மாதாவான உன் பெருமைகளையும் எவனொருவன் இல்லை என்கிறானோ அவ்விருவருள் பகவானின் பெருமைகளை இல்லை என்ற சைவன் அடையும் பாபத்திலும் உயர்ந்த பாபத்தை உனது பெருமை இல்லை என்பவன் அடைகின்றான். இது நான் சொல்வதில்லை. உலகில் கண் கூடாகக் காண்பதே ''பிது: ஶத குணம் மாதா கௌரவேண அதிரிச்யதே'' என்ற வாக்யம் தந்தையிலும் தாய் நூறு மடங்கு உயர்ந்தவள் என்கிறது. ஆகவே மிக உயர்ந்தவளான தாய்க்கு வேதத்தால் ஓதப்பட்டதை இல்லை எனச் சொல்லுபவரினும் சைவர் உயர்ந்தவரே என்கிறார்.

श्रीमद्रामावरजसरणिं श्रेयसीमाश्रितानां-
माचार्याणामिह च कुहचिद्यस्तवाणुत्ववादः ।
तस्याकूतं परमपुरुषापेक्षया तेऽब्धिकन्ये
शेषत्वेन स्वत उपनतन्यूनतायां प्रतीमः ॥

ஸ்ரீமத் ராமாவரஜஸரணிம் ஶ்ரேயஸீமாஶ்ரிதாநா-
மாசார்யாணாமிஹ ச குஹசித் யஸ்தவாணுத்வவாத: ।
தஸ்யாகூதம் பரமபுருஷாபேக்ஷயா தேப்திகந்யே
ஶேஷத்வேந ஸ்வத உபநதந்யூநதாயாம் ப்ரதீம:

ஹே அப்திகந்யே ! - ஸமுத்ர புத்ரியே !
ஶ்ரேயஸீம் - உயர்ந்ததான
ஸ்ரீமத் - ஜ்ஞான பக்தி வைராக்யமாகிய ஸ்ரீயைப் பெற்ற
ராமாவரஜ - ராமாநுஜருடைய
ஸரணிம் - ஸித்தாந்தத்தை
ஆஶ்ரிதாநாம் - அடைந்துள்ள
ஆசார்யாணாமபி - ஆசார்யர்களுள்ளும்
தவ - உன்னுடைய விஷயத்தில்
ய: அணுத்வவாத: - நீ அணுவானவள் என்ற யாதொரு பேச்சு
குஹசித் - இவ்விடங்களில்
வர்த்ததே - உளதோ
பரம புருஷாபேக்ஷயா - நாராயணனைக் குறித்து அனைத்து ஜீவன்களுக்குமுள்ள
ஸ்வத: ஶேஷத்வேந - இயல்பாக உள்ள சேஷத்வத்தாலே
உபநதந்யூநதாயாம் - தோன்றிய அபகர்ஷமாக
தஸ்ய - அந்த அணுத்வவாதத்துக்கு
ஆகூதம் - கருத்தாக
ப்ரதீம: - அறிகிறோம்

உலகில் பல மதங்களுள. அவற்றுள் ஜ்ஞாநம், பக்தி, வைராக்யம் போன்றவற்றில் மிக உயர்ந்தவரான ஸ்ரீ ராமாநுஜரின் மதமுமொன்று. இம்மதத்தைச் சார்ந்த ஆசார்யர்களுள்ளும் இரு பிரிவினர் உள்ளனர். இவர்களுள் ஒரு சில ஆசார்யர்கள் தமது நூல்களில் ஸ்ரீ அணுவானவள் எனக் கூறியுள்ளனர். அப்படிக் கூறின் ச்ருதி முதலான ப்ரமாண நூல்களோடு விரோதம் வருகின்றது. இதை அவர்களும் அறிந்தவர்களே. ஆகவே அவர்கள் கூறியது வேறு ஒரு கருத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். அதாவது ஜீவர்கள் அனைவரும் இயல்பாகவே பகவானுக்கு சேஷ பூதர்கள். ஆகவே

பகவானிலும் ஜீவர் குறைந்தவர்கள் ; அது போல் லக்ஷ்மியும் பகவானுக்கு பத்நியானபடியால் பத்நி பர்த்தாவுக்கு அடிமை ஆகையால் அதை அடிப்படையாகக் கொண்டு அவ்வாசிரியர்கள் அப்படிக் கூறியிருக்கலாம் என்கிறார்.

राजन्वन्ति जगौ जगन्ति निगमो द्वाभ्यां युवाभ्यामपि
द्वैराज्यं न हि तावता प्रसजति क्षीराम्बुधेरात्मजे ।
आग्नावैष्णवशब्दभाजि यजनेऽधिष्ठानयुग्माश्रिता-
मेकामेव हि देवतां सुमनसः शंसन्ति मीमांसकाः ॥

ராஜந்வந்தி ஜகௌ ஜகந்தி நிகமோ த்வாப்யாம் யுவாப்யாமபி
த்வைராஜ்யம் ந ஹி தாவதா ப்ரஸஜதி க்ஷீராம்புதேராத்மஜே ।
ஆக்நாவைஷ்ணவஶப்தபாஜி யஜநே ऽதிஷ்டாநயுக்மாஶ்ரிதா-
மேகாமேவ ஹி தேவதாம் ஸுமநஸ: ஶம்ஸந்தி மீமாம்ஸகா: ॥

க்ஷீராம்புதேராத்மஜே - கடல் கன்னி !
நிகம: - அஸ்யேஶாநா ஈஶாநா பூதபல்யஸ்ய என்பவை போன்ற ஶ்ருதிகள்
ஜகந்தி - உலகங்கள்
த்வாப்யாம்யுவாப்யாமபி - உங்கள் இருவராலும்
ராஜந்வந்தி - நல்லரசனை உடையன ஆகின்றன என
ஜகௌ - கூறிற்று
தாவதா - உங்கள் இருவரையும் அரசராகக் கொண்டதால்
த்வைராஜ்யம் - சுதந்திரரான இரு அரசர்களை உடைமை
ந ஹி - தோன்றுவதில்லை
ஸுமநஸ: - வித்வான்களான
மீமாம்ஸகா: - மீமாம்ஸையை அறிந்தவர்கள்
ஆக்நாவைஷ்ணவம் - ஆக்நாவைஷ்ணவம் என்ற
ஶப்தபாஜி - பெயரைப் பெற்ற
யஜநே - யாகத்தில் உத்தேஶ்யமாக
அதிஷ்டாநயுக்மாஶ்ரிதாம் - அக்நி விஷ்ணு என்ற ஶப்தத்திலோ அல்லது அச்சொல்லின் பொருளிலோ இருப்பதான
தேவதாம் - ஒரே தேவதையையே
ஶம்ஸந்தி - தேவதையாகச் சொல்கின்றனர்.

முதலில் இரண்டாம் ச்லோகத்தில் சொன்ன கருத்தையே தெளிவாகக் கூறுகிறார். "அஸ்யேஶாநா ஜகதோ விஷ்ணு பத்நீ" என்பது ஒரு ஶ்ருதி. இது விஷ்ணுவின் பத்நியான லக்ஷ்மீ

இவ்வுலகுக்கு ஈஶ்வரி ஆவள் என்கிறது. அதே போல் ''ஈஶாந: பூதபவ்யஸ்ய ஸ ஏவாத்ய ஸ உ ஶ்வ:'' என்ற ஶ்ருதி கடந்த காலத்து உலகிற்கும் வரும் கால உலகிற்கும் நாராயணன் ஒருவனே ஈஶ்வரன் என்கின்றது. இரண்டுமே ஶ்ருதிகள். எனவே ஸமமான பலமுடையவை. எதையும் விடுவதற்கில்லை. இரண்டையும் ஏற்றால் இவ்வுலகம் இரண்டு ஆளுநர்களைக் கொண்டது என்றாயிற்று. அப்படியாயின் கருத்தொற்றுமை தோன்றுதாகையால் ஒருவர்க்கொருவர் விட்டுக் கொடுக்க இசையாராகையால் ஆட்சி நேராக இருக்காது. மக்கள் அல்லலுறுவர். இது இயற்கை. ஆனால் வேதம் இவ்விருவரால் உலகம் நல்லரசரைப் பெற்றதாயிற்று. சுதந்திரர்களான ஈரரசைப் பெற்ற தொல்லை பெறவில்லை என்கின்றது. ஏனெனில் இவ்வாளுகை உங்கள் இருவரையும் பற்றியுள்ளது. ஒவ்வொருவரையும் தனித்தனியாகப் பற்றி இருந்தாலன்றோ தொல்லை. அப்படியில்லையே. இருவரும் சேர்ந்துதானே ஆளுகின்றீர்கள் என்கிறது. இதற்கோர் உதாஹரணம் காட்டுகின்றாராசிரியர். ஆக்நாவைஷ்ணவம் என்பது ஒரு யாகம். இந்த யாகத்தில் அக்நி விஷ்ணு இருவரும் தேவதைகள் என ஆக்நா வைஷ்ணவம் என்ற சொல்லின் பொருளைக் கொண்டு சொல்வதா, அன்றி ஆக்நாவைஷ்ணவம் என்பது யாகத்தின் பெயரேயன்றி இருவர் தேவதை இல்லை எனச் சொல்வதா என விசாரித்து இந்த யாகத்துக்கு தேவதை ஆகும் தன்மை அக்நி விஷ்ணு என்ற இருவரையும் சார்ந்த ஒரே தன்மையே, இரண்டல்ல என முடிவெடுத்துள்ளனர் மீமாம்ஸா சாஸ்த்ரம் உணர்ந்தோர். அதே போல் இங்கும் கொள்ள வேண்டும் எனவே ஈரரசு படாது என்கின்றனர்.

रामाकारे जनकतनया रुक्मिणी कृष्णरूपे
भर्तुः कृष्णाजिनमुपगता ब्रह्मचर्येऽपि पद्मे।
अन्तर्यन्तुः सकलजगतामच्युतादच्युतां त्वं
धत्से मूर्तिं तदिह युवयोः प्रस्फुटो नित्ययोगः॥

ராமாகாரே ஜநகதயா ருக்மிணீ க்ருஷ்ணரூபே
பர்த்து: க்ருஷ்ணாஜிநமுபகதா ப்ரஹ்மசர்யேऽபி பத்மே।

அந்தர்யந்து: ஸகலஜகதாமச்யுதாதச்யுதாம் த்வாம்
தத்ஸே மூர்த்திம் ததிஹ யுவயோ: ப்ரஸ்புடோ நித்யயோக: ॥

ஹே பத்மே - பத்மாவதியே
த்வம் - நீ
பர்து: - பர்தாவினுடைய
ராமாகாரே - ராமவடிவில்
ஜநகதநயா - ஸீதையாக உள்ளாய்
க்ருஷ்ணரூபே - க்ருஷ்ண வடிவத்தில்
ருக்மிணீ - ருக்மிணியாக உள்ளாய்
ப்ரம்ஹசர்யே - ப்ரஹ்மசாரியாக ஆன போதும்
க்ருஷ்ணாஜிநமுபகதா - மான் தோலால் மறைக்கப் பட்டவளாய் அவன் மார்பிலே இருக்கிறுய்
ஸகலஜகதாம் - அனைத்து உலகங்களுக்கும்
அந்தர்யந்து: - அந்தர்யாமியாக உள்ள
அச்யுதாத் - நாராயணனை
அச்யுதாம் - பிரியாததான
மூர்த்திம் - வடிவத்தை
தத்ஸே - தரிக்கின்றாய்
தத் - இப்படி எப்போதும் பிரியாததால்
யுவயோ: - உங்கள் இருவருடைய
நித்யயோக: - விட்டுப் பிரியாமை
ப்ரஸ்புட: - உலகறிந்ததாம்
ஹே பகவதி - குணங்கள் மிக்கவளே !

முதல் ஶ்லோகத்தில் புருஷகார ப்ரபத்தியைச் சொன்னார். இதில் த்வய மந்த்ரத்தில் விளக்கப்படுவதும் ஸித்தோபாயனான நாராயணனை ஶரணம் புகுவதுமாகிய இருவரைச் சார்ந்த ப்ரபத்தியை விளக்குவதாய் அதற்கு இன்றியமையாததாயும் இருவரும் ஸமமான விபூதியை உடையவர்கள் எனக் கீழ் சொன்ன கருத்தைத் திடப்படுத்துவதாயுள்ள நாராயண ப்ரபத்தியில் ஸ்ரீ ப்ரபத்தியும் அடங்கியதே என்கிறுர் இந்த ஶ்லோகத்தால். பத்மாவதியே நீ பகவான் ராமனுக அவதரித்த போது ஸீதையாக அவதரித்தாய். அவன் கண்ணனுக உருவெடுத்த போது நீ ருக்மிணி ஆனுய். பெண்ணின் ஸம்பந்தத்திற்கு விரோதமான பிரம்மசாரியாக மாறிய போதும் மான் தோலால் மறைக்கப்பட்டவளாய் அவன் மார்பை விட்டு அகலாமலே இருந்தாய். இப்படி அனைத்துலகப் பொருள்களுள்ளும் விஷ்ணு அந்தர்யாமி என்ற பெயரில் புகுந்து அனைத்தையும் ஆட்டு விப்பவனுய் அச்யுதனான அவனை விட்டுக் கணப்போது அகலாய் நீ என்பது உலகமறிந்த செய்தியென்றதால் மோக்ஷத்திற்காகச் செய்யும் ப்ரபத்தி இவர்கள் இருவரையும் சார்ந்ததே என்கிறுர்.

पदव्यां भव्यायां कृतरुचिरमार्गं परिहरन्,
अकंपं विस्रंभं विदधत् अभिरक्षेदयमिति।
व्यवस्यन् गोप्तृत्वं व्यपसरदुपायान्तरकथः
भवत्या संश्लिष्टे भगवति निदध्यात् निजभरम्॥

பதவ்யாம் பவ்யாயாம் க்ருதருசிரமார்கம் பரிஹரந்
அகம்பம் விஸ்ரம்பம் விததத் அபிரக்ஷேதயமிதி ।
வ்யவஸ்யந் கோப்த்ருத்வம் வ்யபஸரதுபாயாந்தரகத:
பவத்யாஸம்ஶ்லிஷ்டே பகவதி நிதத்யாத் நிஜ பரம் ॥

வ்யபஸரத் - போக்கப்பட்ட
உபாயாந்தரகத: - வேறோர் உபாயமுடையவன் எனச் சொல்லதக்கவனாய்
பவ்யாம் பதவ்யாம் க்ருதருசி: - நித்ய நைமித்திக கைங்கர்யங்களில் சுவையுடையவனாய்
அமார்கம் பரிஹரந் - நிஷேதிக்கப் பட்ட காம்ய கர்மாவை விட்டவனாய்
அயமபிரக்ஷேதிதி - பகவான் காப்பாற்றுவான் என்கிற
அகம்பம் விஸ்ரம்பம் - அசைக்க முடியாத நம்பிக்கையை
விததத் - விசேஷமாக உடையவனாய்
கோப்த்ருத்வம் - தன்னைப் பாதுகாப்பதை
வ்யவஸ்யந் - ப்ரார்த்தித்துக் கொண்டும்
பவத்யா ஸம்ஶ்லிஷ்டே - ஸ்ரீயான உன்னுடன் சேர்ந்த
பகவதி - பகவானிடம்
நிஜபரம் - தன்னைக் காக்கும் பொறுப்பை
நிதத்யாத் - வைக்கக் கடவன்

ஸ்ரீ விஶிஷ்ட பகவானிடம் சரணாகதி எப்படிப் பண்ணுவது என்பதை இந்த ஶ்லோகத்தில் காட்டுகின்றார். ஆநுகூல்ய ஸங்கல்பம், ப்ராதிகூல்யவர்ஜநம், ரக்ஷிஷ்யதி என்கிற விஶ்வாஸம், கார்ப்பண்யம், கோப்த்ருத்வவரணம், என்பதாக ஐந்து அங்கங்களை உடையது ஶரணாகதி. அவற்றுள் ''பதவ்யாம் பவ்யாயம்'' என்பதால் ஆநுகூல்ய ஸங்கல்பம் சொல்லப்பட்டது. அதாவது ஶாஸ்த்ரங்களில் உனக்கு விருப்பமான கர்மாவாகச் சொல்லப்பட்டவைகளையே செய்வேன் என்கிற வ்ரதம் சொல்லப்பட்டது ''அமார்கம்'' என்பதால் ப்ராதி கூல்ய வர்ஜநம் சொல்லப்பட்டது. அதாவது

ஶாஸ்த்ரங்களில் செய்யாதே என விலக்கியவைகளைச் செய்யாமையேயாமது 'அயமபிரக்ஷேத்' என்பது மஹா விஶ்வாஸத்தைக் கூறுகிறது. ''வ்யவஸ்யந் கோப்த்ருத்வம்'' என்பது கோப்த்ருத்வ வரணத்தைச் சொல்லுகிறது வ்யபஸரத் என்பது கார்ப்பண்யத்தைத் தெரிவிக்கிறது. நிதத்த்யாத் - என்பதே நிக்ஷேபமாம். இப்படி எவனொருவன் ஸ்ரீ விஶிஷ்டனான பகவானிடம் ஶரணாகதி செய்கிறானோ அவனுக்கு விரும்பியது கிடைக்கும்.

न्यासक्रियाकरणमन्त्रपदानुरोधा-
दुद्देश्यमात्महविषि स्वयमर्प्यमाणे।
वाराशिपुत्रि भवती विशिनष्टि नाथं
यागे महेन्द्रमखिलाम्ब यथा महत्त्वम्॥ १७

ந்யாஸக்ரியாகரணமந்த்ரபதாநுரோதா-
துத்தேஶ்யமாத்மஹவிஷி ஸ்வயமர்ப்யமாணே।
வாராஶிபுத்ரி பவதீ விஶிநஷ்டி நாதம்
யாகே மஹேந்த்ரமகிலாம்ப யதா மஹத்த்வம்॥

ஹே வாராஶிபுத்ரி - கடல் குமரி!
பவதீ - நீ
அர்ப்யமாணே - ஆத்ம யாகத்தில் ஸமர்ப்பிக்கப்படுகிற
ஆத்மஹவிஷி - தனது ஆத்மாவாகிற ஹவிஸ்ஸில்
ஸ்வயம் உத்தேஶ்யம் - ஶேஷியானமையால் தானாகவே உத்தேஶ்யனை
நாதம் - உனது பர்த்தாவை
யாகே - மஹேந்த்ர யாகத்தில்
உத்தேஶ்யம் - உத்தேஶ்யனை
மஹத்த்வம் யதா - மஹத்த்வமான விஶேஷணம் போல்
ந்யாஸக்ரியா - பர ஸமர்ப்பணமாகிற செயலில்
கரணமந்த்ர - கரணமந்த்ரமான த்வயத்திலுள்ள
பத - பதமான ஸ்ரீமத் ஶப்தத்திலுல்
அநுரோதாத் - உண்டாக்கப்பட்ட ஸ்ரீயுடன் சேர்ந்த நாராயணன் என்ற எண்ணத்தைப் போல்
விஶிநஷ்டி - உன்னை விஶேஷணமாக உடையவனாக ஆக்குகின்றாய்

பரந்யாஸத்தை யாகமாக உருவகம் செய்கிறார். யாகத்தில் அக்நியில் நெய், ஸமித்து, புரோடாஶம், முதலியவற்றை ஹோமம் செய்கிறோம். அப்படிச் செய்யும் போது அக்நயே ஸ்வாஹா என்கிற மந்த்ரத்தைச் சொல்லி ஹோமம் செய்தால்

அது அக்நியைச் சார்ந்தது. ஸோமாய ஸ்வாஹா எனச் சொல்லிப் பண்ணால் அது ஸோமனைச் சேர்ந்தது என்கிறோம். ஹோமம் செய்த பொருள் எவனைச் சேர்கின்றதோ அவன் உத்தேஶ்யன் என வழங்கப்படுபவன். இம் முறையில் கீழே சொன்ன இரண்டு ஹோமங்களில் முறையே அக்நியும் ஸோமனும் உத்தேஶ்யம் ஆவர். இதே போல் மஹேந்த்ர யாகம். அதில் மஹேந்த்ராய ஸ்வாஹா என்ற மந்த்ரத்தைச் சொல்லி ஹோமம் செய்கின்றோம். அப்போது இந்த ஹோம த்ரவ்யத்துக்கு யார் உத்தேஶ்யன் எனின் கீழ்ச் சொன்னது போல் இந்த்ரன் மட்டுமல்லாது மஹத்வத்தோடு - பெருமையோடு - சேர்ந்த இந்த்ரனே உத்தேஶ்யன். இந்த்ரனிடம் மஹத்வம் விஶேஷணமாக இருக்கின்றது தற்போது. இது போல் நமது ஆத்மாவாகிய ஹவிஸ்ஸை பகவான் திருவடிகளில் ஸமர்ப்பிப்பதையே யாகமாக உருவஹிக்கின்றார். யார் உத்தேஶ்யன் என்றால் எல்லாத் தெய்வங்களுக்கும் தலைவனான நாராயணன் தான் என்பதில் எந்த ஸந்தேஹமும் இல்லை. அவனிடம் ஒரு விஶேஷணத்தைக் கூறுகின்றார். கவிதற்போது எப்படி மஹேந்த்ராய ஸ்வாஹா என்ற போது மஹத்வத்தோடு சேர்ந்த இந்த்ரன் உத்தேஶ்யன் ஆயினனோ அப்படியே இங்கும் ஸ்ரீயுடன் சேர்ந்த நாராயணனே உத்தேஶ்யன் என்கிறார். அதெப்படி எனின் இதை நான் புதிதாகச் சொல்லவில்லை, கற்பிக்கவுமில்லை, மந்த்ரமே சொல்கின்றதென்கிறார். நாம் தினமும் த்வயம் என்ற மந்த்ரம் ஜபம் செய்கின்றோம் அன்றோ. அந்த ஒரு மந்த்ரமே ஶரணாகதியில் சொல்லப்படும் மந்த்ரம், எனவே இதற்கு ஶரணாகதி மந்த்ரம் என்ற பெயருமுண்டு. இம் மந்த்ரத்தில் ஸ்ரீமதே நாராயணாய என்ற பதம் உள்ளதால் ஸமர்ப்பிக்கப்படும் இந்த ஆத்ம ஹவிஸ்ஸுக்கு உத்தேஶ்யமானவர் லக்ஷ்மீ நாராயணன் இருவருமே ஆவர் என்கிறார்.

इच्छार्जितबहुदेहामिन्द्रादिपदप्रदावलोकलवाम् ।
ईशानां भुवनानामीडीमहि नियतमिन्दिरे भवतीम् ॥

இச்சார்ஜிதபஹு-தேஹாமிந்த்ராதிபதப்ரதாவலோகலவாம் ।
ஈஶாநாம் லோகாநாமீடீமஹி நியதமிந்திரே பவதீம் ॥ 17

இச்சாச்ரித - தன் விருப்பத்தால் எடுத்துக் கொள்ளப்பட்ட

பஹுதேஹாம் - பல திருமேனிகளை உடையவரும்

இந்த்ராதிபத - இந்த்ரன் போன்ற மிக உயர்ந்த பதவிகளை

ப்ரத - அளிக்கவல்ல

அவலோகலவாம் - கடைக்கண் பார்வையை உடையவளும்

(அத ஏவ - ஆகையாலே)

புவநாநாம் - அனைத்து உலகங்களுக்கும்

ஈசாநாம் - ஈச்வரியான

இந்திரே - லக்ஷ்மியே

பவதீம் - உம்மை

நியதம் - எப்போதும்

ஈடிமஹி - துதிக்கக் கடவேன்

பகவானுக்கு ஸமமான ஐச்வர்யத்தை உடையவள் லக்ஷ்மி என்ற கருத்தை முடிக்கின்றார். பகவான் தனது ஸங்கல்பத்தாலேயே பல சரீரங்களை எடுத்துக் கொள்வது போல் இவளும் அவனுக்கேற்ற சரீரங்களை தாமே எடுத்துக் கொள்கிறாள். அவனைப் போலே ஸ்வர்கம் - மோக்ஷம் போன்றவற்றைத் தமது கடாக்ஷத்தாலேயே அளிக்கவல்லள். இக்காரணங்களாலேயே ஸர்வருக்கும் ஈச்வரியான உன்னை எப்போதும் ஸ்தோத்ரம் செய்யக் கடவேன் யான்.

கோயில் சப்தம், வங்கீபுரம், வாஜபேயம், வீராபுரம் ராமாநுஜ தீக்ஷிதரின் குமாரரான சடகோபாசாரியரால் இயற்றப்பட்ட ரத்நப்ரபா என்கிறத் தெளிவுரையில் ஐச்வர்ய ஸ்தபகம் முடிவுற்றது.

சுபம்

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

க்ஷாந்தி ஸ்தபக: – 11

त्रायतामायताक्षं तद्धाम तामरसालयम्।
मदागसां प्रतीकारः महतामपि यत्क्षमम्॥

த்ராயதாமாயதாக்ஷம் தத்தாம தாமரஸாலயம்।
மதாகஸாம் ப்ரதீகார: மஹதாமபி யத்க்ஷமம்॥

ஆயதாக்ஷம் - காது வரை நீண்ட கண்களை உடையதும்
தாமரஸாலயம் - தமக்கேற்ற தாமரைப் பூவில் வீற்றிருப்பதும்
தத்தாம - ஒப்பற்ற லக்ஷ்மியாகிய ஒளி
த்ராயதாம் - என்னைக் காக்கட்டும்
யத்க்ஷமா - எந்த லக்ஷ்மியின் பொறுமையானது
மஹதாமபி மதாகஸாம் - என்னுடைய மஹா பாதகங்களுக்கும்
ப்ரதீகார: - ப்ராயச்சித்தமாக ஆகுமோ

உத்தமப் பெண்களுக்குரிய அங்க லக்ஷணமாகிய காது வரை நீண்ட கண்களை உடையதாயிருத்தல் போன்றவற்றை உடையதும், தமக்கேற்றதான தாமரையை வாழ்விடமாகக் கொண்டதும் தற்போது பேசிக் கொண்டிருப்பதுமாகிய லக்ஷ்மி என்கிற ஒளியானது என்னைக் காக்கட்டும். எந்த லக்ஷ்மியின் பொறுமை என்பது என்னால் செய்யப்பட்டனவாய் எண்ணற்றவைகளான மஹா பாதகங்களையும் கெட்ட பயன்களைத் தரமாட்டாது தடுக்க வல்லனவோ அத்தகைய பொறுமையை அடியேனிடம் செலுத்தட்டும்.

இந்த ஸ்தபகத்தில் கொடும் பாவிகளான ராக்ஷஸிகள் காகம் போன்றவர்களைக் காப்பாற்றியதற்குக் காரணமாகிய கருணை என்ற குணத்துக்கு அடிப்படையான க்ஷமா என்பதை அடிப்படையாகக் கொண்டு ஸ்ரீயைத் துதிக்கின்றாராதலால் இந்த ஸ்தபகத்திற்கு க்ஷாந்தி ஸ்தபகம் எனப் பெயரிட்டார். க்ஷாந்தி - பொறுமை

अपराधपरम्परापारामहमेवं यदि नाम नार्चयेयम्।
कमलायतने क्षमागुणस्ते कथमात्मानमसौ लभेत मातः॥ २

அபராதபரம்பராமபாராமஹமேவம் யதி நாம நாரசேயம்:
கமலாயதநே க்ஷமாகுணஸ்தே கதமாத்மாநமஸௌ லபேதமாத: ॥

கமலாயதநே - தாமரையில் வாழ்பவளான
மாத: - தாயே !
அபாராம் - அளவு கடந்த
அபராத பரம்பராம் - அளவு கடந்த அபராதங்களை
ஏவம் யதி நாரசேயம் - இது போன்ற முறைகளில் நான் செய்யாவிடில்
தே க்ஷமாகுண: - உனது பொறுமை என்ற குணம்
ஆத்மாநம் - எண்ணற்ற அபராதங்களை ஸஹித்தல் என்ற தனது தன்மையை
கதம் லபேத - எப்படிப் பெறும்

தாயே ! உன்னுடைய க்ஷமா என்ற குணம் எத்தகையது எனின் மக்களால் செய்யப்படுவதும், பல பல வகைப்படுவதும் ஒவ்வொன்றையும் பலமுறை செய்யப்படுவதுமான அபராதக் கூட்டங்களை பொறுத்துக் கொள்வதையே முக்கியமாகக் கொண்டது. இத்தகைய பாபங்களை எவரும் செய்யாவிடில் க்ஷமையின் ஸ்வரூபமே ஸித்திக்காது போய் விடுமாதலால் அத்தகைய க்ஷாந்தியை நீ உடையை என்ற ப்ரஸித்தியே போய்விடும். எனவே உனக்கு அக்குணமுடைமை ஸித்திப்பதற்காக என்னால் பலபல அபராதங்கள் செய்யப்படுகின்றன என்கிறார்.

महतां मम घोरकिल्बिषाणामिह निःशेषगवेषणापि दूरे।
पततामवलम्बनाय मातर्भवपङ्के बत नस्तव क्षमातः ॥ ३

மஹதாம் மம கோரகில்பிஷாணாமிஹ நி:ஶேஷகவேஷணாபி தூரே ।
பததாமவலம்பநாய மாதர்பவபங்கே பத நஸ்தவ க்ஷமாத: ॥

ஹே மாத: - தாயே !
மஹதாம் - ப்ராயச்சித்தத்தாலும் போக்க முடியாத
மம கோராணம் கில்பிஷாணாம் - எனது கொடிய பாபங்களுக்கு
இஹ - இவ்வுலகில்
நிர்வேச கவேஷணாபி - அனுபவித்துப் போக்கி விடலாம் என எண்ணுவதும்
தூரே - முடியாதது
அத: - போக்க வழியில்லையாகையால்
பவ பங்கே பததாம் - நீண்ட நாள்களாக ஸம்ஸாரத்தில் சுழன்று கொண்டு இருக்கும்
ந: - எங்களுக்கு
தவ க்ஷமா - உனது கருணையே

அவலம்பநாய - தஞ்சமாகப் பற்றுவதற்குரியதாக

பவதி - ஆகின்றது

தாயே உலகில் பலர் பல்விதமான பாபங்களைச் செய்கின்றனர். அவை அவற்றுக்கு உரியதான ப்ராயச் சித்தங்களைச் செய்வதால் போக்கக் கூடியதாக இருக்கும். ஆனால் நான் செய்த பாபங்களை அப்படி ப்ராயச்சித்தத்தால் போக்கலாம் என எண்ணுவதற்கும் முடியாதது. இது இல்லாவிடினும் நரகாநுபவத்தால் போக்க முடியுமோ என எண்ணினால் எனது பாபங்களுக்கு ப்ராயச்சித்தமாக ஆவதற்குரிய நரகம் இன்னும் படைக்கப்படவே இல்லை. ஆகவே நான் பல்லாண்டுகளாகப் பல பிறவிகளை எடுத்து ஸம்ஸாரம் என்னும் சேறில் உழன்று கொண்டிருக்கிறேன். அத்தகைய எனக்குத் தற்போது ஸர்வ ப்ராயச்சித்த ரூபமான உமதுத் திருவடி எனக்குச் சேறிலிருந்து கரை ஏறுவதற்குத் துணையாகக் கிடைத்துள்ளது.

फणिशेखरशैलनाथकान्ते भवती मूर्तिमती क्षमैव नूनम्।
अभवत् कथमन्यथा न पापस्तव कोपप्रभवाय वायसोऽपि॥

பணிசேகரசைலநாதகாந்தே
பவதீ மூர்த்திமதீ க்ஷமைவ நூநம்
அபவத் கதமந்யதா ந பாபஸ் தவ
கோபப்ரபவாய வாயஸோ(அ)பி ॥

பணிசேகரசைல நாதகாந்தே - சேஷாத்ரி நாதனின் மனைவியே!

பவதீ - தேவரீர்

மூர்த்திமதீ க்ஷமைவ - பொறுமையின் வடிவமே

நூநம் - ஸந்தேஹமே இல்லை.

அந்யதா - க்ஷமையின் அவதாரமாக இல்லாவிடில்

பாப: - கொடும்பாவியான

வாயஸோபி - காகையும்

தவ - உமது

கோப ப்ரபவாய - கோபம் உண்டாவதற்கு காரணமாக

நாபவத் - ஆகவில்லை

தாயே நீர் பொறுமையின் வடிவமாகவே உள்ளீர் அப்படி இல்லையென்றால் மார்பகங்களைப் புண்ணாக்கிய

கொடும்பாவியான காகாசுரனும் உமக்குக் கோபம் உண்டாகக் காரணமாகவில்லையே ! ஆகவே நீர் க்ஷமையின் வடிவம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

குணத்தில் வேறோர் குணம் இருப்பதாக நூலோர் ஏற்பதில்லை - உதாஹரணமாக வெண்மை என்பது ஒரு குணம். அதில் செம்மை போன்ற பிற குணங்கள் இருக்காது. ஆகவே தாய் பொறுமை என்ற குணமே வடிவமானவள். ஆகவே அக்குணத்தில் கோபம் என்ற பிற குணம் எப்படி இருக்கும் என்பதும் கருத்து.

भवतीं प्रति विश्वमातरं भवसिन्धोस्तरणार्थमातरम् ।
स्वमहं प्रदिशामि रक्ष मामपराधेषु समाचर क्षमाम् ॥ ५

பவதீம் ப்ரதி விஸ்வமாதரம்
பவஸிந்தோஸ்தரணார்த்தமாதரம் ।
ஸ்வமஹம் ப்ரதிஶாமி ரக்ஷ மா-
மபராதேஷு ஸமாசர க்ஷமாம் ॥ 5

அஹம் - அடியேன்
விச்வமாதரம் - உலகுக்கெல்லாம் தாயான
பவதீம் ப்ரதி - உம்மைக் குறித்து
பவஸிந்தோ: - ஸம்ஸாரக்கடலை
தாரணார்த்தம் - கடப்பதற்காக
ஸ்வம் - எனது ஆத்மாவாகிய கூலியை
ப்ரதிசாமி - ஸமர்ப்பிக்கிறேன்
மாம் - என்னை
ரக்ஷ - இனியும் பாவம் செய்யாது காப்பாற்றக் கடவாயாக.
க்ஷமாம் - பொறுமையை
ஸமாசார - என்னிடம் செலுத்துவாயாக

தாயே ! நீர் உலகுக்கெல்லாம் தாயானமையின் அடியேனுக்கும் தாயாவீர். எனவே என்னைக் கடைத்தேற்றும் சுமை உம்மைச் சேர்ந்ததே. ஆகவே ஸம்ஸாரக் கடலிலிருந்துக் கரை ஏற்றுவதற்காகக் கப்பலின் கூலியாகக் கொடுக்கிறேன். ஜகந் மாதாவான உமது திருவடித் தாமரைகளிலே ஆத்ம ரக்ஷையாகிற பர ஸமர்ப்பணத்தைச் செய்கிறேன் என்பது உண்மைக் கருத்து . ஆகவே அடியேனை மேலும் பாபம் செய்யா வொட்டாது தடுத்து ஸம்ஸாரத்திலிருந்துக் கரை ஏற்றத்

தகுதியுள்ளவள் ஆகின்றாய். இப்படி உன்னைச் சரணமாகப் பற்றிய பின்பும் பாப கார்யங்களைச் செய்ய நேரிடின் தக்க பரிஹாரங்களைச் செய்ய வைத்து அடியேனைக் காப்பீராக

मातः क्षमा तव सखी मधुवैरिकान्ते
स्यातः क्षमाधरतया निलय स शेषः
त्वं तु क्षमानिधिरतः शतमागसां मे
क्षन्तुं तवोचितमशेषत एव तावत् ॥

மாத: க்ஷமா தவ ஸகீ மதுவைரிகாந்தே
க்யாத: க்ஷமாதரதயா நிலயஶ்ச ஶேஷ: ।
த்வம் து க்ஷமாநிதிரத: ஶதமாகஸாம் மே
க்ஷந்தும் தவோசிதமஶேஷத ஏவ தாவத் ॥

மதுவைரி - நாராயணனுடைய
காந்தே - உடலொளி போல் அவனைப் பிரியாத
மாத: - தாயே !
க்ஷமா - பொறுமை என்ற குணம்
தவ ஸகீ - உனது தோழியாம் !
நிலய: - வாழுமிடமான
ஸ: சேஷ: - ஆதிசேஷன்
க்ஷமாதரதயா - க்ஷாந்தியை உடையவனாக
க்யாத: - ப்ரஸித்தமானவன்
த்வம் து - நீரோவெனில்
க்ஷமாநிதிரத: - கருணைக்குச் சுரங்கம் போன்றவர்
அத: - ஆகையால்
மே - என்னுடைய

தாயே ! கருணை என்கிற குணம் உன் தோழியாம். ஆகவே சிறிது போதும் உன்னை விட்டுப் போகாதிருப்பதாம். க்ஷமா என்பதற்கு பூமி என்ற பொருளுண்டாமாதலால் பொறுமையுள்ள வளென்றே பெயர் பெற்ற பூமி தேவியான சக்களத்தி உனது செய்கைகளுக்கு தடங்கல் விளைவிக்க மாட்டாள் என்பது உன் கருத்து. உன் வாழுமிடமான ஆதிசேஷனும் கருணையுடையவன் எனப் புகழ் பெற்ற வன். சேஷாசலம் உன் வாழுமிடம் என்பது கருத்து. இவ்விருவரின் சேர்க்கையாலும் உனக்குக் கருணையுடைமை இன்றியமையாததாகிறது என்பது உன் கருத்து. மேலும் நீயோ கருணைக் கடலாகவுள்ளாய்.

ஆகவே கருணையுள்ள இருவர் தொடர்பாலும் இயல்பான உமது கருணையாலும் எனது பாபங்கள் யாவற்றையும் சிறிதும் விடாமல் போக்குவதில் தடங்கல் யாதொன்றுமில்லை என்பது கருத்து.

नित्यं त्वकृत्यमवशादपि न त्यजामि
कृत्यं घुणाक्षरनयादपि नाचरामि।
अत्यन्तमित्थमपराधमहोदधे मे
सत्यं शपे शरणमम्ब तव क्षमैव ॥ ७

நித்யம் த்வக்ருத்யமவஶாதபி ந த்யஜாமி
க்ருத்யம் குணாக்ஷரநயாதபி நாசராமி।
அத்யந்தமித்தமபராதமஹோததேர் மே
ஸத்யம் ஶபே ஶரணமம்ப தவ க்ஷமைவ ॥ 7

ஹே அம்ப - தாயே !
அஹம் து - விலக்ஷணனான அடியேன்
நித்யம் - ஒவ்வொரு நாளும்
அக்ருத்யம் - செய்யத்தகாதனவற்றை
அவசாதபி - மறந்தும்
ந த்யஜாமி - விடுவதில்லை
குணாக்ஷர நயாதபி - குணா என்ற பூச்சியின் எழுத்துப் போலாவது
க்ருத்யம் - விஹித கர்மாக்களை
நாசராமி - செய்வதில்லை

தாயே ! அடியேன் நாட்டிலுள்ள அனைவரிலும் வேறுபட்டவன். ஏனெனில் ஒவ்வொரு நாளும் செய்யக் கூடாதனவான காம்ய கர்மாக்களையும் விலக்கப்பட்ட கர்மாக்களையும் மறந்தும் செய்யாதிருப்பதில்லை. குணா என்பதொரு புழு. அது அதன் விருப்பம் போல் போனபோதும் அது சென்ற வழி மண்ணிலே எழுத்து போல் விளங்குமாம். அந்த எழுத்தை குணாக்ஷரம் என்பர் வடமொழியில். அதாவது இந்த எழுத்தை எழுத வேண்டும் என்ற எண்ணத்தோடு எழுதாத போதும் தன்னடைவாக எழுத்தாக அமைவது போல என்பது கருத்து. அது போல் கூட அடியேன் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட ஆஜ்ஞா அநுஜ்ஞா கைங்கர்யங்களைச் செய்வதில்லை. இப்படி அளவு கடந்த பாபங்களின் மூட்டையான அடியேனைக் காக்க வல்லது தேவரீரின் கருணையன்றி வேறொன்றில்லை என்பதை ஸத்யமாகச் சொல்வேன் என்கிறார்.

अस्मत्कृतामतितरामपराधपङ्क्तिं
यन्मृष्यसे जननि तत्र न विस्मयो नः ।
एवंविधोऽपि विलिलङ्घयिषे भवं यत्
तत्र क्षमा हि तव कस्य न विस्मयाय ॥

அஸ்மத்க்ருதாமதிதராமபராத பங்க்திம்
யந்ம்ருஷ்யஸே ஜநநி தத்ர ந விஸ்மயோ ந: ।
ஏவம்விதோ(அ) பி விலிலங்கயிஷே பவம் யத்
தத்ர க்ஷமா ஹி தவ கஸ்ய ந விஸ்மயாய ॥

ஹே ஜநநி - உலகத்தாயே !
அஸ்மத் க்ருதாம் - மிகத் துணிச்சலுடன் எம்மால் செய்யப்பட்ட
அதிதராம் - புத்தி பூர்வகமான
அபராதபங்க்திம் - பாபச் சுமைகளை
ம்ருஷ்யஸேதி யத் - பொறுத்துக் கொள்கிறாய் என்பதுயாது உண்டோ
தத்ர - அதில்
ந: - எங்களுக்கு
ந விஸ்மய: - வியப்பில்லை
ஏவம் விதோபி - இப்படித் தெரிந்தே பிழை செய்பவனாயினும்
பவம் - ஸம்ஸாரக்கடலை
விலிலங்கயிஷே இதி யத் - கடக்க விரும்புகிறேனென்கிற துணிச்சலில்
தவ க்ஷமா - உனது பொறுமை
கஸ்ய ஹி - எவருக்குத்தான்
விஸ்மயாய ந பவதி - ஆச்சர்யத்தைத் தோற்றுவிக்காது !

உலகத்தாயே நாங்கள் எண்ணற்ற பாபங்களைச் செய்கிறோம். இது தவறு செய்யக் கூடாது எனத் தெரிந்தும் தைர்யமாகச் செய்கிறோம். இருந்தும் நீ இவன் கர்மத்துக்கு வயப்பட்டு இப்படிச் செய்கிறான் என எண்ணி அவைகளைப் பொறுத்துக் கொள்கிறாய். இதில் சிறிதும் ஆச்சர்யமில்லை. இப்படித் தெரிந்தே கொடும் பாவங்களைச் செய்தும், அவற்றுக்குரிய ப்ராயச்சித்தங்களைச் செய்யாத அப்பாரச் சுமையுடனேயே ஸம்ஸாரத்தைக் கடக்க விரும்புகிறேனே. இவ்விஷயத்தில் உனது பொறுமை யாருக்குத்தான் ஆச்சர்யத்தை விளைவிக்காது.

तत्तद्विचित्रचरितानुगुणानि तीक्ष्णे ।
दातुं फलानि दयिते तव बद्धदीक्षे ।

कस्येह जीवितकथा कलशाब्धिकन्ये
क्षान्तिं न चेन्नयसि तं विविधैरुपायैः ॥

தத்தத்விசித்ரசரிதாநுகுணாநி தீக்ஷ்ணோ
தாதும் பலாநி தயிதே தவ பத்ததீக்ஷே।
கஸ்யேஹ ஜீவிதகதா கலசாப்திகந்யே
க்ஷாந்திம் ந சேந்நயஸி தம் விவிதைருபாயை: ॥

ஹே கலசாப்திகந்யே ! - பாற்கடல் பெண்ணே !
தீக்ஷ்ணே - அபராதிகளை தண்டிப்பதில் கொடியவனை
தவ தயிதே - உன் கணவன்
தத்தத்விசித்ரசரித = ப்ராணிகளால் செய்யப்பட்ட அந்தந்த பாபங்களுக்கு அநுகுணமான
பலாநி – ஸாம்ஸாரிக துக்கங்களை
தாதும் - கொடுப்பதற்கு
பத்த தீக்ஷே : முயலும் போது
தம் - அப்பகவானை
விவிதை: உபாயை: - கோபத்தைப் போக்க வல்ல பல உபாயங்களால்
க்ஷாந்திம் - அவரவர் செய்த அபராதத்தைப் பொறுப்பதை
ந நயஸி சேத் - அடைவிக்காவிடில்
இஹ - இந்த லீலா விபூதியில் வாழும் எவருக்குத்தான்
ஜீவித கதா - கடைத்தேறும் வழி வித்யதே உள்ளது

பாற்கடல் புத்ரீ உனது கணவன் ஸர்வஜ்ஞன், ஸர்வ சக்தன். அவன் அறியாததில்லை. அவனால் செய்ய முடியாததில்லை. ஜீவராசிகளோ தீமை செய்வதையே வ்ரதமாகக் கொண்டவை. எனவே அவரவர்க்கேற்ற பலன்களைத் தருவதற்கு அவன் முயலும் போது அவனிடம் சென்று மக்களின் ஸ்வபாவம் முதலியவற்றை இனிமையாக எடுத்துச் சொல்லி இவனை அநுக்ரஹியாது போனால் வேறு எவர் உளர் எவர்களுக்கு நன்மை செய்வது என்று எடுத்துச் சொல்லி மக்கள் செய்த பாபங்களைப் பொறுக்கப் பண்ணாது போனால் எவனுக்குத்தான் ஸம்ஸாரக் கடலிலிருந்து கரையேறும் நிலை உண்டாகும்.

अक्षान्तकारिणि दशास्यवधोक्तिदृप्ते भक्षाय राक्षसवधूरभियाचमाने।
हन्त क्षमोदयजुषोऽप्यनुकम्पयैवनक्षत्रनाथसहजे तव न क्षमाभूत्॥ १०॥

அக்ஷாந்தகாரிணி தஶாஸ்யவதோக்தித்ருப்தே
பக்ஷாய ராக்ஷஸவதூரபியாசமாநே ।
ஹந்த க்ஷமோதயஜுஷோऽப்யநுகம்பயைவ
நக்ஷத்ரநாதஸஹஜே தவ ந க்ஷமாபூத் ॥ 10 ॥

ஹே நக்ஷத்ரநாத ஸஹஜே ! சந்த்ரனுடன் பிறந்தவளே!
தஶாஸ்யவதோக்தி - ராவணன் கொல்லப்பட்ட செய்தியை உம்மிடம் தெரிவித்ததால்
த்ருப்தே - திமிர் உடையவனும்
ராக்ஷஸவதூ: - பாதுகாவலுக்காக உள்ள அரக்கிகளை
பக்ஷாய - சாப்பிட்டு விடுவதற்காக
அபியாசமாநே - அப்போது உம்மிடம் வேண்டுபவரும்
அக்ஷாந்தகாரிணி - பொறுமையற்ற செயலைச் செய்பவருமான அநுமான் விஷயத்தில்
அநுகம்பயைவ - க்ருபையாலேயே
க்ஷமா - பூமியில்
உதயஜுஷ: - அவதரித்துள்ள
தவ - உனக்கு
ந க்ஷமாபூத் - பொறுத்துக் கொள்ளமுடியாததாக இருந்தது.

சந்த்ரனுடன் பிறந்தவளே என அழைத்தார் சந்த்ரன் குளிர்ச்சியாக இருப்பது போல் தாயும் கருணையால் குளிர்ந்தவள் என்ற கருத்தை வெளியிடுவதற்காக.ராவண வதத்தை ஸீதைக்குத் தெரிவிக்கும்படி ராமன்தான் அநுமனை அனுப்பினான். அதில் ஒரு அளவற்ற பெருமை அநுமனுக்கு. அவன் ஸீதையிடம் ராவண வதத்தை விஜ்ஞாபித்து விட்டு பக்கத்தில் காவலுக்காக இதுவரை உட்கார்ந்து கொண்டு பல வகைகளில் துன்புறுத்திய அரக்கிகளை தண்டிப்பதற்கு அநுமதி வேண்டினான் தாயிடம் அநுமன். தமக்கு இன்று வரை தொல்லை தந்த அரக்கிகளுக்கு சிக்ஷையாகவும் அநுமன் வேண்டியது இன்றியமையாமல் செய்ய வேண்டியிருப்பினும் த்ரிஜடையின் மூலமாகத் தம்மைத் தஞ்சம் பற்றிய அரக்கிகளுக்கு அஞ்சேல் யான் காப்பன் என சரணமளித்து உள்ளதாலும் அவர்கள் விஷயத்தில் அந்த வேண்டுகோளும் தாயால் பொறுக்க முடியாததாயிற்று என்பது கருத்து.

धनपतिपुरुहूतस्थाणुवेधोमुखानामपि च दधति शांबं सम्पदः सम्परायम्।
इति गतिमवबुध्याप्यर्थकामाभिलाषादजहदघशतं मां रक्ष मातः क्षमातः॥ ११॥

தநபதிபுருஹூதஸ்தாணுவேதோமுகாநா-
மபி ச தததி ஶாம்பம் ஸம்பத: ஸம்பராயம் ।
இதி கதிமவபுத்யாப்யர்தகாமாபிலாஷா-
தஜஹதகஶதம் மாம் ரக்ஷ மாத: க்ஷமாத: ॥ 11 ॥

ஹே மாத: - தாயே !
தநபதி - குபேரன்
புருஹூத - இந்த்ரன்
ஸ்தாணு - ஶிவன்
வேத: - நான்முகன்
முகாநாமபி - முதலிய தேவர்களும்தான்
ஸம்பத: - ஐச்வர்யங்களும்
சாம்பம் ஸம்ப்ரதாயம் - மின்னல் போல் நிலையற்ற தன்மை
தததி - தரிக்கின்றன
இதிகதிம் - என்ற நிலையை
அவபுத்யாபி - அறிந்திருந்தும்
அர்த்தகாம அபிலாஷாத் - செல்வம், இன்பம் எனும் இருபுருஷார்த்தங்களின் நப்பாசையால்
அஜஸ்ரஹதக சதம் - அநந்த அபராதங்களைச் செய்பவனான
மாம் - கர்மபரவசனான என்னை
க்ஷமாத: - உனது இயல்பான கருணையால்
ரக்ஷ - காப்பீராக.

தாயே ! தநபதி, ஸுரபதி, பஶுபதி, ப்ரஜாபதி போன்ற லீலா விபூதியைச் சார்ந்த தேவர்களின் செல்வமும் ஒரு கால விஶேஷத்தில் அழிந்து விடுவதால் இவ்வுலகில் அழியாச் செல்வந்தன் எவருமிலர் என அறிந்தும் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்கிற நான்கு புருஷார்த்தங்களுள் இடையேயுள்ள இரண்டை மட்டும் விரும்பி எண்ணற்ற பாபங்களைச் செய்யும் என்னைக் காப்பாயாக. *(11)*

अनिश मुपचितानां आगसां भूयसां मे निगम विततिरीष्टे निष्कृतीः नाभिधातुम्।
प्रभवति फलमेषां पद्मनाभो न दातुं कलशजलधिकन्ये क्षान्ति रेवेह युक्ता ॥ १२ ॥

அநிஶ முபசிதாநாம் ஆகஸாம் பூயஸாம் மே
நிகம விததிரீஷ்டே நிஷ்க்ருதீ: நாபிதாதும் ।
ப்ரபவதி பலமேஷாம் பத்மநாபோ ந தாதும்
கலஶ ஜலதி கந்யே க்ஷாந்தி ரேவேஹ யுக்தா ॥ 12 ॥

ஹே கலச ஜலதி கந்யே ! க்ஷீர ஸமுத்ரபுத்ரி !
நிகம விததி: - அளவற்ற வேதங்களும்
அநிசம் - எப்போதும்
உபசிதாநாம் - குவியல்களாக ஸம்பாதிக்கப்பட்டனவும்
பூயஸாம் - அதனால் மிகுதியாக உள்ளனவுமான
மே ஆகஸம் - எனது பாபங்களுக்கு
நிஷ்க்ருதீ: - ப்ராயச்சித்தங்களை
அபிதாதும் - சொல்வதற்கு
நேஷ்டே - சக்தியற்றனவாக உள்ளன
பத்மநாப: - உலகையே படைப்பவனான நாராயணனும்
ஏஷாம் பலம் - இப்பாபங்களின் பலனை உண்டுபண்ணி
தாதும் - அளிப்பதற்கு
ந ப்ரபவதி - ஶக்தியற்றவராவர் (ஆதலால்)
இஹ - போக்க முடியாத இப்பாப விஷயத்தில்
க்ஷாந்தி: - பொறுப்பதே
யுக்தா - தக்கதாகும்.

க்ஷீராப்தி புத்ரியே ! அநந்தா வை வேதா: என்பது வேதம் அளவற்றது என்கிறது. அவ்வேதங்கள் யாவும் ஒன்று சேர்ந்தாலும் ஒவ்வொரு நாளும் நான் அவ்வப்போது செய்வனவாயும் அளவு கடந்தனவுமான பாபங்களுக்கு தக்க

ப்ராயச்சித்தங்களை விதிப்பதற்கு அவற்றால் முடியாது. பத்மநாபன் உலகைப் படைக்கும் சக்தியும் அறிவும் பெற்றிருந்த போதும் எனது பாபங்களுக்குத் தக்க அநிஷ்ட பலனை அளிப்பதற்கு சக்தியற்றவனே. ஏனெனில் குறிப்பிட்ட அளவு உடையதற்கு இதற்கு இது பதில் எனச் சொல்ல முடியும். அளவே இல்லாததற்கு எப்படி அதற்குச் ஸமமானதைச் சொல்லமுடியும்? ஆகவே தண்டனை கொடுத்துப் போக்க முடியாத பாபங்களை செய்துள்ள என் விஷயத்தில் உனது பொறுமை என்ற பெருங் குணத்தால் எல்லாவற்றையும் பொறுப்பதைத் தவிர்த்து வேறு வழி இல்லவே இல்லை. (12)

अमितदुरितकृद्भ्यो नित्यमस्मद्दृशेभ्यो हतहितचरितेभ्यो हन्त कुप्यन्तमुच्चैः ।
नियतमनुगुणेन न्याययुक्तेन पद्मे कलयति वचनेन क्षान्तिमन्तं प्रभुं तम् ॥१३॥

அமிததுரிதக்ருத்ப்யோ நித்யமஸ்மாத்ருஶேப்யோ
ஹதஹிதசரிதேப்யோ ஹந்த குப்யந்தமுச்சை: ।
நியதமநுகுணேந ந்யாயயுக்தேந பத்மே
கலயதி வசநேந க்ஷாந்திமந்தம் ப்ரபும் தம் ॥

ஹே பத்மே - பதுமையே !
அமித துரித க்ருத்ப்ய: - அளவற்ற பாபங்களைச் செய்பவரும்
ஹத - அடியோடு விடப்பட்ட
ஹிதசரிதேப்ய: - நற் செயல்களை உடையவருமான
அஸ்மாத்ருசேப்ய: - என் போன்றவர்களிடம்
நித்யம் உச்சை: குப்யந்தம் - கொடிய நிக்ரஹ ஸங்கல்பமுடையவனான
ப்ரபும் தம் - ஸர்வ வல்லவனான பகவானை
ந்யாய யுக்தேந - நல்ல காரணமுடையதும்
அநுகுணேந - அதனால் அவன் கோபத்தை போக்கவல்லதுமான
வசநேந - பேச்சாலே
க்ஷாந்திமந்தம் - அபராதங்களைப் பொறுப்பவனாக
கலயஸி - செய்வி விடுகிறாய்
ஹந்த - ஆஶ்சர்யம்.

பதுமையே ஜீவராசிகள் அவ்வப்பொழுது எண்ணற்ற பாபங்களைச் செய்கின்றனர். அது மட்டுமா! நற் செயல் என ஒன்று உண்டு என்பது அடியோடு மறந்தே போய்விட்டது. அத்தகைய எங்கள் முகத்தில் விழிக்கவும் கூடாது என மிகக் கோபத்துடன் உள்ளான். அவன் எதை வேண்டுமானாலும் செய்யவல்லமை படைத்தவன். எல்லோருக்கும் தலைவனவன். எனவே எதை வேண்டுமானாலும் செய்யலாம். ஆகவே நீ அவனிடம் சென்று எங்களுக்காகப் பரிந்து பேசுகிறாய். அப்பேச்சு தக்க காரணமுடையதாய், அவன் கோபிக்காமலிருப்பதற்கு வேண்டிய ந்யாய முடையதாயுள்ளது. அதனால் அவன் கோபத்தை விடுத்துப் பொறுமை குணம் உடையவனாய் அபராதங்களை எல்லாம்

போக்கிவிடுகிறான் என எண்ணுகிறேன். பாபிகளான எங்களைப் பிறரால் காக்க முடியாது. (13)

कलयति मनसा वा कर्मणा वा गिरा वा
मधुरिपुमहिले यन् मादृशो नित्यमागः।
तदिदमगणयन्ती त्रायसे संसृतेर्नः
शरणमिति गिरैव स्वामिनं क्षामयन्ती ॥ १३ ॥

கலயதி மநஸா வா கர்மணா வா கிரா வா
மதுரிபுமஹிலே யந் மாத்ருஶோ நித்யமாக: ।
ததிதமகணயந்தீ த்ராயஸே ஸம்ஸ்ருதேர் ந:
ஶரணமிதி கிரைவ ஸ்வாமிநம் க்ஷாமயந்தீ ॥ 14 ॥

ஹே மதுரிபு மஹிலே - நாராயணனின் மனைவி!
மாத்ருஶ: - என்போன்ற எளியவன்
மநஸா வா - மனதாலோ
கர்மணா வா - உடலின் செயலாலோ
கிரா வா - பேச்சாலோ
நித்யம் - ஒவ்வொரு நாளும்
யத் ஆக: கலயதி - பிறன் மனைவியை மனதால் எண்ணல், செல்லத்தகாத இடத்துச் செல்லுதல், பிறரை தூஷித்தல் போன்ற எந்தெந்த பாபங்களைச் செய்கிறானோ.
ததிதம் - அப்பாபங்களையெல்லாம்
ஶரணமிதி கிரைவ - உன்னை ஶரணமாகப் பற்றினேன் எனச் சொன்னதாலேயே.
அகணயந்தீ - அவற்றை குற்றமாகக் கருதாமலும்
ஸ்வாமிநமபி - உனது யஜமானனையும்
க்ஷாமயந்தீ - குற்றத்தைப் பொறுக்கச் செய்விப்பளான நீ
ஸம்ஸ்ருதே: - ஸம்ஸாரத்திலிருந்து
த்ராயஸே - கரையேற்றுகிறாய்

மனம் வாக்கு உடல் என்ற மூன்று உறுப்புகளால் மக்கள் பல வகைகளான சொல்லவும் முடியாததான பாபங்களைச் செய்கின்றனர். செய்துவிட்டு ஜகந்மாதாவிடம் தஞ்சம் புகுகின்றனர். உன்னை ஶரணமாகப் பற்றினேன் என்ற சொல்லாலேயே மிக மகிழ்ந்தவளாய் இவர்கள் செய்த பிழைகளெல்லாவற்றையும் மறந்து கணவனிடமும் மன்றாடிக் குற்றங்களைப் பொறுக்கச் செய்து ஸம்ஸாரக் கடலிலிருந்து கரையேற்றுகிறாய். (14)

नवनवं अपराधं साधयित्वा खलत्वात् जननि कृतवतो मे माधवं क्रोधवन्तम्।
वरुण निलय कन्ये क्षान्तिमत्या भवत्याः शरणवरणतोन्यत् केवलं नावलम्बः॥१५

நவநவம் அபராதம் ஸாதயித்வா கலத்வாத்
ஜநநி க்ருதவதோமே மாதவம் க்ரோதவந்தம் ।
வருண நிலய கந்யே க்ஷாந்திமத்யா பவத்யா:
ஶரணவரணதோந்யத் கேவலம் நாவலம்ப: ॥ 15 ॥

வருண நிலய கந்யே ஜநநி - கடல் குமாரியான தாயே !
கலத்வாத் - தர்மத்திலிருந்து நழுவியவனாதலால்
நவம் நவம் - புத்தம் புதியவைகளான
அபராதம் - அபசாரங்களை
ஸாதயித்வா - செய்து
மாதவம் - மாதவனை
க்ரோதவந்தம் - என்னிடம் மிக்க கோபமுடையவனாக
க்ருதவத: - செய்துள்ள
மே - எனக்க
க்ஷாந்திமத்யா: - ஸார்வ அபராதங்களையும் பொறுப்பவளான
பவத்யா: - உன்னிடம்
ஶரணவரணத: - புருஷகார ப்ரபத்தி செய்வதைவிட
அந்யத் - வேறு
கேவலம் - மிக்க
அவலம்ப: - பாதுகாவல்
ந - இல்லவே இல்லை.

தாயே ! நான் தர்மத்திலிருந்து விலகியவன் என்பதால் தைர்யமாகப் புத்தம் புதியனவான எண்ணற்ற பாபங்களைச் செய்துவிட்டு மாதவனை என் விஷயத்தில் மிக்க கோபம் உடையவனாக ஆக்கிக் கொண்டேன். அத்தகைய எனக்கு எல்லாப் பிழைகளையும் பொறுப்பவளான உன்னை ஶரணமடை வதை விட வேறுபற்றுக் கோடு உலகில் எதுவுமே இல்லை. (15)

प्रथिततमसि सर्गैः आगसां राग सान्द्रे
मयि यदि तु विधत्से नानुकम्पामकम्पाम् ।
उपचितिमतिचित्रां एनसो मे न सोढुं
प्रभवति सभवत्या नायकोऽजेयकोपः ॥ १६ ॥

ப்ரதித தமஸி ஸர்கை: ஆகஸாம் ராக ஸாந்த்ரே
மயி யதி து விதத்ஸே நாநுகம்பாமகம்பாம் ।
உபசிதிமதிசித்ராம் ஏநஸோ மே ந ஸோடும்
ப்ரபவதி ஸபவத்யா நாயகோऽஜேய கோப: ॥ 16 ॥

ஆகஸாம் - பாபங்களை
ஸர்கை: - அவ்வப்பொழுது செய்து கொண்டே இருப்பதால்
ப்ரதித - வ்ருத்தியடைந்துள்ள
தமஸி - அஜ்ஞாநமாகிய இருளை உடையவனாக இருப்பதால்
ராக ஸாந்த்ரே - காமம், க்ரோதம் போன்ற குணங்களால் திணிக்கப்பட்டுள்ள
மயி - என்னிடம்
அகம்பாம் - எவராலும் அசைக்க முடியாத
அநுகம்பாம் - தயையால்
ந விதத்ஸே யதி - பகவானின் கோபத்தைப் போக்காவிடில்
அஜேய கோப: - உன்னாலும், தன்னாலும், பிறராலும் போக்க முடியாத கோபமுடைய
பவத்யா நாயக: - உமது கணவன்
மே ஏநஸ: - எனது பாபங்களுக்கு ஏற்றதும்
அதிசித்ராம் - மிக வியப்பை விளைவிக்கத் தக்கதுமான
உபசிதம் - தண்டனைகளின் குவியல்களை
ஸோடும் - பொறுப்பதற்கு
ந ப்ரபவதி - ஶக்தி உடையவனல்லன்

தாயே ! நான் ஒவ்வொரு நாளும் முன் எவரும் செய்யாதவைவாய் புத்தம் புதியவைவான பாபக் குவியல்களை ஓயாது செய்து கொண்டே இருக்கிறேன். இதனால் உண்டாகும் பாபம் எனது நல்லறிவை அழித்து அஜ்ஞானத்தை மிகுதியாக்குகிறது. என்மீதுள்ள தயையினால் எனது பாபத்தாலும் அசைக்க முடியாத உன்தயையை என்மீது செலுத்தி பகவானின் கோபத்தை நீ போக்காவிடில் உன்னாலும் தன்னாலும் போக்கமுடியாத கோபமுடையவனாக உன் கணவன் கொடுக்கும் பெரிய மிகவும் ஆச்சர்யமான தண்டனைகளை அனுபவிக்கமுடியாதவனடியேன். ஆகையால் அதற்கு முன்னாகவே செய்ய வேண்டியதைச் செய் தாயே ! (16)

रचयति यदयन्ते नेतरागः सरागः

तदखिलमपि मृष्यन् त्राहि दीनं त्वमेनम् ।

ननु क इह विमर्शे नापराधीति शौरेः

कलशजलधिकन्ये कर्णयोः वर्णयोच्चैः ॥ १७ ॥

ரசயதி யதந்தே நேதராக: ஸராக:

தததிலமபி ம்ருஷ்யந் த்ராஹி தீநம் த்வமேநம் ।

நநு க இஹ விமர்சே நாபராதீதி சௌரே:

கலசஜலதிகந்யே வர்ணயோ: கர்ணயோச்சை: ॥ 17 ॥

ஹே நேத: - காப்பாற்றுபவனே !
அயம் - கர்மத்துக்கு அடிமையான இவ்வுலகம்
தே - உனது விஷயத்தில்
யத் ஆக: - ஆணையை மீறுவதாகிய பாபங்களை
ஸராக: - மிக விருப்பத்துடன்
ரசயதி - செய்கின்றதோ
தகில மபி தத் அம்ருஷ்யந் - அவையாவற்றையும் மறந்து
தீநம் - உன்னை சரணமாகப் பற்றியுள்ள
ஏநம் த்ராஹி - இவ்வுலகைக் காப்பாற்று
நநு - பகவானே !
விமர்சே - ஆராய்ந்தோமானால்
க: நிரபராதி - எவன் பிழையற்றவனுள்ளான் ?
ஹே கலச ஜலதி கந்யே - இந்த முறையில்
சௌரே: கர்ணயோ:- பகவானின் காதுகளில்
உச்சை: - உரக்க
வர்ணய - எடுத்துச் செல்லு

உலகை நடத்திச் செல்லும் தலைவ , தாம் செய்த வலிமையான முன் வினைக்கு அடிமையான இவ்வுலகம் உனது விஷயத்தில் செய்ய வேண்டியதைச் செய்யாதிருத்தல், செய்யக் கூடாததைச் செய்தல் போன்ற உன் ஆணையை மீறுவதாகிய பாபங்களை செய்கின்றதோ அவையாவற்றையும் மறந்து தற்போது

செயலற்று உனது திருவடிகளைத் தஞ்சம் புகுந்துள்ள இவனைக் காப்பாற்றுவாயாக. அப்படிக் காக்காவிடில் உலகில் பாபமே செய்யாத ஒருவனும் அகப்படமாட்டான். மஹான்களுக்கும் தாமறியாது தவறு செய்ய வேண்டிய நிலை வந்தே தீரும். ஆகவே கடல் பெண்ணே இச்செய்தியை பகவான் காதுகளில் உரக்க எடுத்துச் சொல்லு. ஏதாவது ஒன்றை வ்யாஜமாகக் கொண்டு அபராதிகளைக் காக்காவிடில் உலகில் பிழையற்றவனே இல்லை. ஆகையால் காப்பாற்ற வேண்டியவன் கிடைக்காது போவன். அதனால் நம்மிருவருக்கும் தீநனைக் காற்றல் என்ற தொழிலே அற்று போம் என்கிறாள். (17)

जल जटिल तटित्वत् दीप्ति कृष्णोपलाल्याऽऽ
कृतिः उरु कटक श्री रुज्ज्वलन्मेखलाभा।
वरतमवनमालालङ्कृतस्थानजुष्टा
वहसि हरिपुरन्ध्रि त्वं क्षमाभृत् त्वमर्हम्॥ १८॥

ஜலஜடில தடித்வத் தீப்தி க்ருஷ்ணோபலால்யா க்ருதி:
ஊரு கடக ஸ்ரீ ருஜ்வலந்மேகலாபா ।
வரதம வநமாலா லங்க்ருத ஸ்தாந ஜுஷ்டா
வஹஸி ஹரிபுரந்த்ரி த்வம் க்ஷமாப்ருத் த்வமர்ஹம்॥18॥

ஹே ஹரிபுரந்த்ரி - பகவானின் மனைவி
ஜலஜடில - நீர் நிறைந்த
தடித்வத்வத் - மேகம் போன்ற
தீப்திக்ருஷ்ண - கருநிறமுடைய பகவானாலே
உபலால்ய: - கொண்டாடத்தகுந்த
ஆக்ருதி: - உருவத்தை உடையவளும்
ஜலஜடில் - அருவிகள் மிகுந்த
தடித்வத் தீப்தி - மேகத்தின் ஒளியாலே
க்ருஷ்ணா - கருப்பான
உபல ஆலி ஆக்ருதி: - கற்களின் குவியல் போன்று ப்ரகாசிப்பதும்
உருகடகஸ்ரீ: - நாற்புறமும் பரவும்கங் கணத்தின் ஒளியை உடையவளும், பரந்த தாழ்வரையின் சோபையை உடையதும் -
உஜ்வலத் - ப்ரகாசிக்கும்
மேகலா - ஒட்டியாணத்தின்
ஆபா - ஒளியை உடையவளும் நன்கு ப்ரகாசிக்கும் பர்வதத்தின் தாழ்வரையை உடையதும்
வரதம - உயர்ந்த
வநமாலா - வைஜயந்தியால்
அலங்க்ருத - அலங்கரிக்கப்பட்ட
ஸ்தாந - இடமான மார்பை
ஜுஷ்டா - அடைந்தவளுமான நீ
வநமாலா - காட்டின் வரிசையையுடையவளுமான நீ
அர்ஹம் - ச்லோகத்தில் கீழே சொன்ன முறைப்படி தகுதியுடைய
க்ஷமாப்ருத்வம் - பர்வதமாம் தன்மையையும், பொறுமை உடைமையையும்
வஹஸி - தரிக்கின்றாய்

க்ஷமாப்ருத் என்ற பெயர் தாய்க்குண்டு. அச்சொல் பர்வதத்தையும், பொறுமை உடைமையையும் குறிக்கம். பூமி சுற்றும் போது சாய்ந்து விடாது. ஒரே நிலையில் சுழல்வதற்காக மலைகள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே அவை பூமியைக் காப்பனவாயின. பொறுமையுடையவளாகத் தாய்க்குலம் இருப்பதால் க்ஷமா ப்ருத் என்ற பெயரும் பெண்ணுக்குத் தோன்றியது. பர்வதத்துக்கு ஒப்பாகத் தாய் இருப்பதால் க்ஷமாப்ருத் என்ற பெயர் உனக்குத் தக்கதே என்கிறார் ச்லேடையில் முதலில் மலையைப் பற்றிய கருத்தைக் காண்போம். நீருண்ட மேகம் மிகக் கருநிறமுடையதாக இருக்கும். மலையின் மேல் அம்மேகம் ஸஞ்சரிக்கும் போது அம்மேகத்தின் ஒளிமலையிலும் பட்டுமலை கருப்பாகப் பளிச்சிடும். கற்களின் குவியலால் விளங்கும் உருவத்தைப் பெற்றிருக்கும், மலையின் அடியில் உள்ள பரந்த ஸமமான பாகத்துக்கு ஸாது என்று பெயர். அந்த ஸாதுவின் ஶோபையைப் பெற்றிருக்கிறது மலை. நன்கு ஒளிவிடும் பர்வதத்தின் அடிப்பகுதியை உடையதாக உள்ளது மலை. பல வகைகளான காடுகளின் வரிசைகளை உடையதாக இருக்கிறது மலை. இம்மலை இலக்குமிக்கு ஒப்பாக உள்ளது. அது எப்படி எனின் இலக்குமி நீர் நிறைந்த மேகம் போன்ற நிறமுடைய பகவானாலே கொண்டாடத்தக்க உருவத்தை உடையவளாக உள்ளாள். பகவானால் தனது மார்பில் வைத்துக் கொள்ளப் பட்டவள் என்பது கருத்து. அவள் அணிந்துள்ள கங்கணத்தின் ஒளி நாற்புறமும் பரவுகின்றது. இடையிலவள் அணிந்துள்ள ஒட்டியாணத்தின் ஶோபை நாற்புறமும் வீசுகின்றது. உயர்ந்ததான வநமாலை என்ற வைஜயந்தீ மாலையால் அலங்கரிக்கப்பட்ட பகவானின் மார்பை அடைந்துள்ளாள். இப்படி பர்வதத்துக்கும் லக்ஷ்மிக்கும் பொதுவான கருத்துகளைத் தரும் சொற்களால் தாய் மலையாம் தன்மையை உடையவளாக இருப்பதால் க்ஷமாப்ருத் என்ற பெயரை உடையவளாக இருக்கிறாள் என்கிறார். *(18)*

पापरण्यहिरण्यदानववपुर्व्यापाटनप्रज्वलत्-
कोपाटोपकृपीटसम्भवनवज्वालाकरालाननम्।
देवाद्यैरपि दुष्करप्रसदनं देवं नृऽसिंहं रमे
क्षान्तिं नीतवती क्षणेन भवती किं ते परं दुष्करम्॥ ११

பாபாரண்யஹிரண்யதாநவவபுர்வ்யாபாடநப்ரஜ்வலத்
கோபாடோபக்ருபீடஸம்பவநவஜ்வாலாகராலாநநம் ।
தேவாத்யைரபி துஷ்கரப்ரஸதநம் தேவம் ந்ருஸிம்ஹம் ரமே
க்ஷாந்திம் நீதவதீ க்ஷணேந பவதீ கிம் தே பரம் துஷ்கரம் ॥

ஹே ரமே ! - லக்ஷ்மியே
பாபாரண்ய - பாபங்களின் குவியல்களின் இருப்பிடமான
ஹிரண்யதாநவ - இரணியன் என்ற அரக்கனது
வபுர்வ்யாபாந - உடலைப் பிளப்பதில்
ப்ரஜ்வலத் - ப்ரகாசிக்கும்
கோபாடோப - கோபாடம்பரமாகிய
க்ருபீடஸம்பவ - அக்நியினுடைய
நவஜ்வாலா - புதிய ஜ்வாலையால்
கரால - பயங்கரமான
ஆநநம் - முகத்தையும்
தேவாத்யை: - பக்தர்களான தேவராலும்
துஷ்கர - செய்ய முடியாத
ப்ரஸதநம் - சாந்தத்தையுடையவரும்
தேவம் - ப்ரகாசிப்பவருமான
ந்ருஸிம்ஹமபி - நரசிங்கத்தையும்
பவதீ - நீர்
க்ஷணேந - நொடிப் போதில்
க்ஷாந்திம் நீதவதீ - பொறுமையுடையவளுக்கினுய்
தே - இத்தகைய உனக்கு
துஷ்கரம் - செய்ய முடியாத
பரம் - பிறிதொன்று
கிமஸ்தி - யாதுளது.

கருத்துத் தெளிவானதே

नियन्ता यः पद्मे निरवधिदुरागः शतकृता-
मपर्याप्तं जानात्यखिलनिरयव्रातमपि नः।
स एष त्वद्वाचा निखिलमपि सोढ्वापचरितं
फलं वेत्ति स्वल्पं तदपि शरणोक्तेर्निजपदम्॥ २०

நியந்தா: ய : பத்மே நிரவதிதுராகஃஶதக்ருதா-
மபர்யாப்தம் ஜாநாத்யகிலநிரயவ்ராதமபி ந: ।
ஸ ஏஷ த்வத்வாசா நிகிலமபி ஸோட்வாபசரிதம்
பலம் வேத்தி ஸ்வல்பம் ததபி ஶரணோக்தேர்நிஜபதம் ॥ 20

ஹே பத்மே - தாமரையாளே !
நியந்தா - தண்டிப்பவனாகிய
ய: - எந்த பகவான்
துராக: சதக்ருதாம் - நூற்றுக் கணக்கான குற்றங்களைச் செய்யும்
ந: - எங்களுக்கு
நிரவதி - கணக்கற்ற
அகிலநிரய வ்ராதமபி - எல்லா ப்ரம்மாண்டங்களிலுமுள்ள நரகங்களையும்
அபர்யாப்தம் - போதாததாக
ஜாநாதி - அறிகிறான்.

ஸ ஏஷ: - அந்த நாராயணன்
த்வத்வாசா - இப்படிச் செய்வீராக என்ற உன்னுடைய வாக்காலே
ஸகலமபி - அனைத்து
அபசரிதம் - அபசாரங்களையும்
ஸோட்வா - பொறுத்துக் கொண்டு
சரணோக்தே: - அடைக்கலம் அருளும் என்ற எனது பேச்சுக்கு
நிஜபதம் - தனது இடமான மோக்ஷத்தையும்
ஸ்வல்பம் பலம் - மிகக்குறைந்த பலமாக
மந்யதே - எண்ணுகிறார்.

உலகில் பல ப்ரம்மாண்டங்கள் உள்ளன. ஒவ்வொரு ப்ரம்மாண்டங்களிலும் பல நரகங்கள் உள. பிழைகளுக்கு ஏற்ப தண்டனை தருபவனான ஸர்வேச்வரன் ஒவ்வொரு மக்களும் செய்யும் தீமைகளுக்கு ஏற்ப தண்டனை கொடுக்கத் துவங்கினால் இத்தனை நரகங்களும் போதாதாம். எனவே அந்த ஸமயத்தில்தான் அவனிடம் சென்று இவன் பிழைகளைப் பொறுத்துக் காப்பாற்றுங்கள் என்று இவள் ஒரு பேச்சு சொன்னால் போதும் உடனே அவர்கள் அனைவரையும் மன்னித்துத் தமது வாஸஸ்தலமாகிய மோக்ஷத்தையே அளித்து விடுகிறானாம். அப்படி அளித்தும் உனது ஸமாதானத்துக்குத் தகுந்த பலனாக அதை அவன் எண்ணுவதில்லையாம். (இப்படிப்பட்ட பாபிகளைத் தள்ளுவதற்கு இடம் போதாத கஷ்டம். அவனுக்கல்லவா தெரியும் ?)

क्षमां मूर्तामुद्यत्करचरणयोगां च करुणां
हतावद्यां विद्यामवयववतीमम्ब भवतीम्।
समाश्रित्यापत्याभ्युदयधनधान्यादिनिबिडो
बिडौजः सम्पत्तिं परिहसति भूमावपि जनः॥ २१

க்ஷமாம் மூர்த்தாமுத்யத்கரசரணயோகாம் ச கருணாம்
ஹதாவத்யாம் வித்யாமவயவவதீமம்ப பவதீம்।
ஸமாஶ்ரித்யாபத்யாப்யுதயதநதாந்யாதிநிபிடோ
பிடௌஜ: ஸம்பத்திம் பரிஹஸதி பூமாவபி ஜந:॥

ஹே அம்ப - தாயே!
மூர்த்தாம் - உருவம் பெற்ற
க்ஷமாம் - பொறுமையாகவும்
உத்யத் - தோன்றியுள்ள
கரசரணயோகாம் - உடல் ஸம்பந்தம் உடையதும்
கருணாம் - கருணைக்கு மூலகாரணான தயையாகவும்
ஹதாவத்யாம் - ஸம்ஸாரமற்றவளும்
அவயவவதீம் - உடலுறுப்புகள் பெற்ற
வித்யாம் - மோக்ஷத்தை ஸாதிப்பதற்கு பகவத் பக்தி யாகியுமுள்ள
பவதீம் - உம்மை
ஸமாச்ரித்ய - சரணமாகப் பற்றி
பூமாவபி - பூமியிலும்
அபத்யாப்யுதய: - நன்மக்கள் செல்வத்தையும்
தநதாந்யாதி - செல்வம், நெல் முதலான தாந்யங்கள் முதலியவற்றாலும்
நிபிட: - மிக்கவனாய்
பிடௌஜ: - ஸம்பத்திம் - இந்த்ரன் செல்வத்தை
பரிஹஸதி - ஏளனம் செய்கிறான்.

பரமபதயாளுவாய், ஸர்வாபராதங்களையும், ஸஹிப்பவளாய், பகவத் பக்தியின் இடத்தை அடைந்துள்ளவளுமான உன்னைத் தஞ்சமாக வடைந்து சரீரம் விட்டபின் மோக்ஷம் பெறப் போவனாய் தற்போது மண்ணில் வாழும் போதும் மக்கள் செல்வம், பொருள் செல்வம், தான்ய செல்வம், போன்ற மண்ணுலக இன்பங்களையும் அநுபவிக்கிறான் உனது பக்தன்.

क्षान्ते मन्दौ जननि सकले क्षम्यतां शब्दमात्रात्
भूयो भूयः कमपि निचयं पाप्मनां निर्मिमाणः।

वक्तुं लज्जे पुनरपि सहस्वेति वाराशिकन्ये
क्षान्तिं सा त्वां तदपि नयते काप्यकम्पानुकम्पा ॥

**க்ஷாந்தே: மந்தௌ ஜநநி ஸகலே க்ஷம்யதாம் ஶப்தமாத்ராத்
பூயோ பூய: கமபி நிசயம் பாப்மநாம் நிர்மிமாண: ।
வக்தும் லஜ்ஜே புநரபி ஸஹஸ்வேதி வாராஶிகந்யே
க்ஷாந்திம் ஸா த்வாம் ததபி நயதே காப்யகம்பாநுகம்பா ॥ 22**

ஜநநி - தாயான
வாராசிகந்யே - கடல்குமரீ
க்ஷம்யதாம் - பொறுத்துக் கொள் என்ற
சப்தமாத்ர - சொல்லாலேயே
ஸகலே மந்தௌ - ஸர்வபாவமும்
க்ஷாந்தே ஸதி - பொறுக்கப்பட்ட போது
பூயோ பூய: - திரும்பவும் திரும்பவும்,
பாப்மநாம் - பாபங்களின்
கமபி - சொல்ல வொண்ணாத
நிசயம் - குவியல்களை
நிர்மிமாண:ஸந் - செய்து கொண்டே
ஸஹஸ்வேதி - பொறுத்துக் கொள் என
புநரபி வக்தும் - திரும்பவும் வேண்ட
லஜ்ஜே - வெட்கப்படுகிறேன்.
ததபி - அப்படிச் சொல்லா விடிலும்
ஸா - ப்ரஸித்தி பெற்றதும்
காபி - சொல்ல வொண்ணாத
பெருமையுடைய
அகம்பா - அசைக்க முடியாத
அநுகம்பா - தயையானது
த்வாம் - உன்னை
க்ஷாந்திம் - பொறுமையுடையவளாக
நயதே - ஆக்குகிறது.

பல பல பாபங்களைச் செய்த நான் ''பொறுத்துக் கொள் தாயே'' என வேண்டியவுடன் எல்லா பாபங்களையும் பொறுத்துக் கொள்கிறாய். இருந்தும் எனது தீயவினையால் மேலும் மேலும் பாபங்களைச் செய்கிறேன். ஆனால் இப்போதுதான் பொறுத்துக் கொள் என்ற வேண்டுதலைக் கொண்டே நான் எவ்வித ப்ராயஶ்சித்தமும் செய்து கொள்ளாத போதும் பொருத்தருளிய உன்னிடம் மறுபடியும் அப்படி வேண்டுவதற்கு லஜ்ஜைப்படுகிறேன். இருந்தும் தீவினைக்கு உட்பட்டவனான எனது பாபங்கள் தொலைக்கத் தொலையாதவை என்பதையும், மேலும் மேலும் பொறுக்க வேண்டுதலுக்கு வெட்கப்படுவதையும் ஆலோசித்து எனது வேண்டுகோளையும் எதிர்பாராது நீயே உனது தயையால் பொறுத்துக் கொள்கிறாய்.

कादाचित्कप्रपदनजुषां काङ्क्षतां पूरुषार्था-
नत्रामुत्राप्यखिलजननि प्राणिनामर्पयन्तीम्।
संत्यज्य त्वामपकृतिशतैरप्यशुष्यत्कटाक्षां
भिक्षार्कीं तु प्रसभमपरां देवतां सेवतां कः ॥

காதாசித்கப்ரபதநஜுஷாம் காங்க்ஷதாம் பூருஷார்த்தா-
நத்ராமுத்ராப்யகிலஜநநி ப்ராணிநாமர்ப்பயந்தீம்।
ஸம்த்யஜ்ய த்வாமபக்ருதிஶதைப்யஶுஷ்யத்கடாக்ஷாம்
பிக்ஷாகீம் து ப்ரஸபமபராம் தேவதாம் ஸேவதாம் க: ॥ 22

அகிலஜநநி - உலகத்தாயே !
காதாசித்க - வாழ்நாளில் ஒரே முறை சிறிது நேரம் செய்யத் தக்கதும்
ப்ரபதநஜுஷாம் - இம்மை மறுமை என்ற இரண்டு பலனுக்காகவும் செய்வதாகிய ப்ரபத்தியை செய்தவருமான
ப்ராணிநாம் - அனைத்து ஜீவராசிகளுக்கும்
காங்க்ஷிதாந் - அவரவர் விரும்பிய
பூருஷார்த்தாந் - இம்மை மறுமைப் பயன்களை
அர்பயந்தீம் - எவ்வித வேறுபாடுமின்றி அளிப்பவரும் அபசாரங்களாலும்
அசுஷ்யத் - போக்க முடியாத
கடாக்ஷாம் - கருணைக் கண் கடாக்ஷத்தையுடைவளுமான
த்வாம் - உள்ளன
ஸந்த்யஜ்ய - விட்டு விட்டு
பிக்ஷாகீம் - தாமே ஏழையானமையின் பிறருக்கு எதையும் அளிக்க முடியாத
அபராம் தேவதாம் - பிறதேவதைகளை
ப்ரஸபம் - மிக முயற்சியுடன்
க: - எவன்
ஸேவதாம் - ஸேவிப்பன்

அனைத்து ப்ராணிகளுக்கும் எவ்வித வேறுபாடுமின்றி அவளைத் தஞ்சம் பற்றுதல் என்ற எளிய உபாயத்தைச் செய்ததால் மோக்ஷம் வரையிலான மிக்க பலனை அளிப்பவளும், ஸர்வா பராதத்தையும் பொறுத்துக் கொள்பவளும், உலகத் தாயுமான லக்ஷ்மியை விட்டு விட்டு உயர்ந்த பயனை அளிக்கச் சக்தியற்றவரும், எளிதில் த்ருப்திபடுத்த முடியாதவருமான பிற தேவதைகளை உபாஸநம் செய்தல் என்ற பயனற்ற முயற்சியை மூடனும் செய்ய மாட்டான்.

कृत्याकृत्यत्यजनकरणोत्साहिनां मादृशानां
को वा दोषः कमलनिलये त्वत्क्षमायाः स दोषः ।
येनैतस्याः क्वचिदविषयो नापराधः समस्ती
त्युद्यद्धैर्या वयमिह बहूनाचरामोऽपचारान् ॥

க்ருத்யாக்ருத்யத்யஜநகரணோத்ஸாஹிநாம் மாத்ருஶாநாம்
கோ வா தோஷ: கமலநிலயே த்வத்க்ஷமாயா: ஸ தோஷ: ।
யேநைதஸ்யா: க்வசிதவிஷயோ நாபராத ஸமஸ்தீ
த்யுத்யத்தைர்யா வயமிஹ பஹூநாசராமோ (அ) பசாராந் ॥ 24

ஹே கமல நிலயே ! - தாமரையில் வாழ்பவளே !
க்ருத்யாக்ருத்ய - செய்யத் தக்கது செய்யத் தகாது என்ற செயல்களில்
த்யஜநகரண - விட்டு விடுவதற்கும், செய்வதற்கும்
உத்ஸாஹிநாம் - ஊக்கமுள்ள
மாத்ருஶாநாம் - என் போன்ற மூடர்களுக்கு
கோவா தோஷ: - என்ன தோஷமுள்ளது
ஸந்தோ: - அக்குற்றம்
த்வத்க்ஷமாயா: - உன்து கருணையைச் சார்ந்ததே
யேந - எந்த தோஷத்தாலே
வயம் - நாங்கள்
ஏதஸ்யா: இக்கருணைக்கு
அவிஷய: - உள்ளாகாத
அபராத: - குற்றம்
க்வசித் - எம்மனிதனிடமும்
ந ஸமஸ்தி - கிடையாது
இதி - என்று
உத்யத்தைர்யா - திமிர் படைத்தவர்களாய்
அதிபஹூன் - பலபல
அபசாரான் - குற்றங்களை
ஆசாரம: ! - செய்கின்றோம்

தாமரையில் வாழ்பவளே ! சாஸ்த்ரங்களால் தினமும் தப்பாது செய்யச் சொல்லி விதித்த கார்யங்களைச் செய்யாது விடுவதிலும் செய்யாதே என விலக்கிய கார்யங்களைச் செய்வதிலும் மிகுந்த ஊக்கமுடைய மூடர்களிடம் எக் குற்றமுமில்லை. அத்தோஷம் உனது பொறுமையைச் சார்ந்ததே. ஏனெனில் உனது இப்பொறுமைக்கு உட்படாததாய் - அப்பொறுமையால் போக்க முடியாததான - குற்றம் உலகில் எவரிடமும் இல்லை என்ற தைர்யத்தால் தோன்றிய திமிர் உடையவர்களாய் நாங்கள் கணக்கற்ற பாபங்களைச் செய்து கொண்டுள்ளோம்.

अशेषैर्निर्वेशैरखिलनरकावल्यभिभवै-
रघौघानस्माकानपि भृशमशक्यापनयनान् ।
क्षमस्वेत्युक्त्यैव क्षपयसि मधुध्वंसिदयिते
क एष क्षान्त्यात्मा कथय निरुपाख्यस्तव गुणः ॥

அஶேஷைர்நிர்வேஶைரகிலநரகாவல்யபிபவை-
ரகௌகாநஸ்மாகாநபி ப்ருஶமஶக்யாபநயநாந் ।
க்ஷமஸ்வேத்யுக்த்யைவ க்ஷபயஸி மதுத்வம்ஸிதயிதே
க ஏஷ க்ஷாந்த்யாத்மா கதய நிருபாக்யஸ்தவ குண: ॥

ஹே மதுத்வம்ஸிதயிதே - நாராயணன் மனைவி
அசேஷை: நிர்வேசை - இம்மையிலுள்ள ஸமஸ்த துக்கங்களின் அநுபவத்தாலும்
அகில நரகாவலி அநுபவை - அனைத்து ப்ரம்மாண்டங்களிலுள்ள ஸமஸ்த நரகாநுபவங்களாலும
ப்ருசம் - அசக்யாபநயநாந் அடியோடு அழிக்க முடியாத
அஸ்மாகான் - எங்களது
அகௌகான் - பாபக் குவியல்களையும்
க்ஷமஸ்வ - ஸமஸ்த அபராதங்களையும் பொறுப்பாயாக
இதி உக்த்யைவ - என உன்னிடம் வேண்டியதாலேயே
ய: - எந்த க்ஷமா என்ற குணம்
க்ஷபயதி - பொறுத்துக் கொள்கிறதோ
க்ஷாந்த்யாத்மா - க்ஷாந்தி என்ற பெயருள்ள
ஏஷ: - நிருபாக்ய: - சொல்ல ஒண்ணாப் பெருமையையுடைய
தவ குண: - உனது குணம்
க: - எப்படிப்பட்டது. அதன் குணம் யாது
கதய - சொல்வாயாக

மது என்ற அரக்கனை அழித்த நாராயணன் பத்நியே ! இவ்வுலகைச் சார்ந்த துக்கங்கள் எவ்வளவு உண்டோ அவ்வளவையும் அநுபவித்ததோடு, ஒவ்வொரு ப்ரம்மாண்டங்களிலுமுள்ள ஸமஸ்த நரக துக்கங்களையும் அநுபவித்தாலும் அழிக்கவே முடியாததான எங்களது அனைத்துப் பாபக் குவியல்களையும் "ஸமஸ்தாபராதாந் க்ஷமஸ்வ" என உன்னைப் பார்த்துச் சொன்ன மாத்ரத்தாலே அப்பாபங்களனைத்தையும் கொளுத்தப்பட்ட துணி போல் அத்தீமையையும் விளைவிக்க முடியாததாக ஆக்கி விடுகின்ற இதோ இப்படிப்பட்ட சொல்ல வொண்ணாத பெருமை பெற்ற

க்ஷமா என்ற உனது குணத்தின் வடிவம் எத்தகையதம்மா ! அதன் பெருமைதான் என்னென்ன அம்மா ! சற்றுச் சொல்வாயாக இவற்றைப் பிறரால் அறிய முடியாததலால் ஸர்வஜ்ஞையான நீயே சொல்ல வேண்டும். 25

निर्मातुं प्रभवेम कर्म न वयं नित्यं किमप्यन्ततो
यत्खल्वाचमनं तदप्यकुशलाः कर्तुं यथाचोदनम्।
दूरे ज्ञानकथा तथापि तु तवाक्षामक्षमावेदिनो
जानीमो मनसैव देवि सुगमौ स्वर्गापवर्गावपि ।। २६ ।।

நிர்மாதும் ப்ரபவே கர்ம ந வயம் நித்யம் கிமப்யந்ததோ
யத்கல்வாசமநம் ததப்யகுஶலா: கர்த்தும் யதாசோதநம் ।
தூரே ஜ்ஞாநகதா ததாபி து தவாக்ஷாமக்ஷமாவேதினோ-
ஜாநீமோ மநஸைவ தேவி ஸுகமௌ ஸ்வர்க்காபவர்க்காவபி 26

ஹே தேவி - தாயே !
நித்யம் கர்ம- ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டியதான ஸந்த்யாவந்தம் முதலியவற்றையும்
கர்தும் - செய்வதற்கு
ந ப்ரபவேம - சக்தியற்றவராக உள்ளோம்
யத: - ஏனெனில்
அந்தத: - ஒரு கர்மாவின் முழுவதும்
கிமபி - செய்யும் முறையை அறியாத
யத் ஆசமநம் - ஆசமநம் என்ற செயலுண்டோ
ததபி - அதையும்
யதாசோதநம் - விதித்த முறைப்படி
கர்தும் அகுசலா: - செய்ய முடியாதவர்களாயுள்ளோம்
தத: - அதனுல்
ஜ்ஞாநகதா - ஜ்ஞாநயோகத்தைக் கைக் கொள்ளல்
தூரே - மிகவும் முடியாததே
ததாபி - இப்படியிருந்த போதும்
தவ - உனது
அக்ஷமாக்ஷமாவேதிந: - எல்லா அபராதங்களையும் பொறுப்பதாகிய உனது க்ஷமையை அறிந்தவரான
வயம் - நாங்கள்
நமஸைவ - பரந்யாஸம் என்கிற வ்யாஜத்தால்
ஸ்வர்க அபவர்காவபி - இம்மை மறுமைப் பயன்களை
சுகமௌ - எளிதில் அடைய முடிவனவாக
ஜாநீம: - அறிகின்ரோம்

ஸந்த்யாவந்தனம் என்பது ஒரு செயல். அதை காலை பகல் மாலை என்ற மூன்று வேளைகளிலும் செய்ய வேண்டும். அதையும் செய்ய சக்தியற்றவர்களாயுள்ளோம். ஏனெனில் அக்கர்மாவின் முதல் இடை கடைகளில் செய்ய வேண்டிய ஆசமநம் என்பதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும் நாங்கள் அறியவில்லை என்கிறார். கையை பசுவின் காது போல் வைத்துக் கொண்டு நம் உள்ளங்கையிலுள்ள மாஷரேகை என்கிற ரேகை மறையுமளவுக்குத் தீர்த்தம் எடுத்துக் கொண்டு மந்த்ரத்துடன் அத்தீர்த்தத்தைச் சாப்பிடுவதே ஆசமன முறை. அத்தீர்த்தம் மாஷ ரேகை மறையுமளவுக்கு இருக்க வேண்டும். அதிகமாகவோ குறைவாகவோ இருக்கக் கூடாது. இதை முறைப்படிச் செய்ய முடியவில்லை என்கிறார். இதையே அறியாத எங்களுக்கு ஜ்ஞாந யோகம் செய்வதென்பது எப்படி முடியும் ? பக்தியோகத்தைப் பற்றிச் சொல்ல வேண்டாம். இப்படி எந்த உபாயத்தையும் செய்ய முடியாது இருந்த போதும் பரம புருஷனை அடைவதில் உறுதியான நிச்சயம் உடையோம். அதெப்படி எனில் ஸர்வாபராதங்களையும் பொறுத்துக் கொள்ள வல்லது உனது க்ஷமை என அதன் தன்மையை அறிந்துள்ளோமே! ஆகையால் ப்ரபத்தியால் யாவற்றையும் அடைவோம்.

कथयामि सारमिह किं कथया परमन्ययार्थितभवोपरमम्।
क्षमया त्वमेनमभिरक्ष मया विहितानि मा गणय देवि हिता ॥

கதயாமி ஸாரமிஹ கிம் கதயா
பரமந்யயார்த்திதபவோபரமம்।
க்ஷமயா த்வமேநமபிரக்ஷ மயா
விஹிதாநி மா கணய தேவி ஹிதா ॥ 27

ஹே தேவி - பகவன் மஹிஷியே
ஹிதா த்வம் - அநுகூலையான நீ
இஹ - உன்னிடம்
அர்த்தித - ப்ரார்த்திக்கப்பட்ட
பவோர்பரமம் - ஸம்ஸார நிவ்ருத்தியுடைய
ஏநம் - என்னை
ஸம்ஸாராத் - ஸம்ஸாரத்திலிருந்து
உத்தாரய - விடுவி
மயா விஹிதாநி - என்னால் செய்யப்பட்ட பாபங்களை
க்ஷமயா - பொறுமையாலே
மா கணய - போக்கி விடு
இஹ - இச்சமயத்தில்

பரம் ஸாரம் - விஜ்ஞாபிக்க வேண்டியவற்றுள் முக்கியமானதை
கதயாமி - தெரிவித்துக் கொள்கிறேன்
அந்யயா - இச்சமயத்துக்குப் பயன்படாததை
கதயா - சொல்வதாலே
கிம் ப்ரயோஜநம் - என்ன பயன்?

ஹே தேவி நீ சேதநர்களான எங்களுக்கு மிகவும் அநுகூலையாக இருக்கிறாய் என்பதால் அடியேன் ஒன்று விண்ணப்பிக்கிறேன். நீர்தான் அதை முடித்து வைக்க வேண்டும். அடியேனை ஸம்ஸாரத்திலிருந்து விடுவிக்க வேண்டுகிறேன். அதை முடித்து வைக்க வேண்டும். ''நீ கேட்டு விட்டாய். ஆனால் நீ செய்த பாபக் குவியல்கள் தடை செய்யும் போது, எப்படி விடுவிப்பது எனச் சொல்லிக் கழிக்காதே. மோக்ஷத்தை அடியேன் அடையாதபடித் தடை செய்யும் பாபங்களைப் பொறுக்கத்தான் தற்போது அடியேன் வேண்டுவது. தேவரீரிடம் விஜ்ஞாபிக்க வேண்டியவற்றுள் முக்கியமானதையன்றோ ப்ரார்த்திக்க வேண்டும். பாபங்களைப் பொறுக்க வேண்டியதுதான் மிக முக்கியமானது. அதைத்தான் வேண்டுகிறேன். 27

निगमविहितं प्रायश्चित्तं मदीयमहांहसां
निरसनकृते नालं मातस्तव क्षमया विना।
गुरुतरमयः पिण्डं गर्वान्निगीर्णमहो रमे
किमु जरयितुं शक्तं शुण्ठीकषायनिषेवणम् ॥ २८

நிகமவிஹிதம் ப்ராயஸ்சித்தம் மதீயமஹாம்ஹஸாம்
நிரஸநக்ருதே நாலம் மாதஸ்தவ க்ஷமயா விநா।
குருதரமய: பிண்டம் கர்வாந்நிகீர்ணம் அஹோ ரமே।
கிமு ஜரயிதும் ஶக்தம் ஶுண்டீகஷாயநிஷேவணம் ॥

ஹே மாத: - தாயே!
தவ க்ஷமயா விநா - உனது பொறுமையின்றி
நிகமவிஹிதம் - வேதத்தில் சொல்லப்பட்ட
ப்ராயச்சித்தம் - சாந்த்ராயணம் போன்றவை

மதீயமஹாம்ஹஸாம் - எனது மிகப்பெரிய பாபங்களை
நிரஸநக்ருதே - அழிப்பதில்
நாலம் - சக்தியற்றவை
அஹோ - ஆஸ்சர்யம் இத்தகைய அபசாரங்களைச் செய்தால்
கர்வாத் - இது என்னை என்ன செய்யும் என்ற கர்வத்தால்
நிகீர்ணம் - விழுங்கப்பட்ட
குருதரம் - பெரியதான
அய: பிண்டம் - இரும்பு உருண்டையை
ஜரயிதும் - ஜெரிப்பதற்கு
சுண்டீகஷாய நிஷேவணம் - சுக்குக் கஷாயம் பருகுதல்
சக்தம் கிமு - சக்தி உடையதா என்ன?

உலகில் பலர் பலவிதமாகச் செய்யும் பாபங்களுக்குத் தக்க ப்ராயஸ்சித்தம் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றால் நான் செய்த பாபங்களைப் போக்குவிப்பது என்பது முடியவே முடியாது. இதுபோன்ற பாபங்களைச் செய்வதென்பதே ஆச்சர்யமானது. அத்தகைய பாபங்களை யான் செய்துள்ளேன். ஒருவன் திமிரால் இவ்விரும்புருண்டை என்னை என்ன செய்யும் எனச் சொல்லிக் கொண்டு அதனை விழுங்கி விட்டு பின் அது ஜெரிப்பதற்காக சுக்குக் கஷாயம் பருகில் அக்கஷாயத்தின் நிலை என்னவாமோ அதே நிலைதான் எனது விஷயத்தில் வேதத்தில் ஓதப்பட்டுள்ள ப்ராயச்சித்தங்களின் நிலை. ஆகையால் தேவரீர் க்ஷமை ஒன்றாலேயே அடியேன் அபராதங்களெல்லாம் போக்க வல்லனவாம்.

भगवति वपुश्चेतोवाग्भिः प्रतिक्षणमर्जितं
नवनवमिमं पापस्तोमं क्षमस्व मम स्वयम् ।
कटकटरवक्रीडद्दंष्ट्रायुगीविकृताननं
पुनरपि यथा नो पश्येयं भयङ्करमन्तकम् ॥ २९

பகவதி வபுஸ்சேதோவாக்பி: ப்ரதிக்ஷணமர்ஜிதம்
நவநவமிமம் பாபஸ்தோமம் க்ஷமஸ்வ மம ஸ்வயம் ।
கடகடரவக்ரீடத்தம்ஷ்ட்ராயுகீ விக்ருதாநநம்
புநரபி யதா நோ பஸ்யேயம் பயங்கரமந்தகம் ॥ 29

ஹே பகவதி - குணங்கள் நிறைந்தவளே!

வபு: சேதோவாக்பி: - உடல் மனம் வாக்குகளால்

ப்ரதக்ஷிணம் - ஒவ்வொரு நொடியிலும்

ஆர்ஜிதம் - சேர்க்கப்பட்டதும்

நவநவம் - அவ்வப்போது வேண்டப்படுவதுமான

இமம் - இந்தப் பாபச்சுமையை

ஸ்வயம் - நீயாகவே

க்ஷமஸ்வ - பொறுத்துக் கொள்

கடகடரவ: - ஒன்றோடொன்று உராய்வதால் உண்டாகும் சப்ததால்

க்ரீடத் - பயங்கரமான விளையாட்டையுடைய

தம்ஷ்ட்ராயுகீ- இரு கோரைப் பற்களால்

விக்ருதாநநம் - வெறுப்பான முகமுடையவனும்

பயங்கரம் - பயத்தை உண்டு பண்ணுபவனுமான

அந்தகம் - எமனை

யதா புநரபி - முன் பல பிறவிகளில் பார்த்தது போல் இப்பிறவியிலும்

நோ பச்யேயம் - எப்படி நான் அவனைப் பாராமல் இருப்பதோ அப்படி அநுக்ஹரிக்க வேண்டும்.

பகவத் பத்நீ ! அடியேன் மநோ வாக்காயங்களால் ஒவ்வொரு நொடியிலும் அவ்வப்போது ஸம்பாதித்த பாபச்சுமைளை எனது வேண்டுகோளின்றி நீயே போக்க வேண்டும். ஏனெனில் அப்பாபம் எவ்வளவு உள்ளது என்பது எனக்கே தெரியாது. ஆகவே நான் எப்படி வேண்ட முடியும். ஆகவே முழுதும் அழியும்படி நீதான் அருள வேண்டும். கீழே பல பல பிறப்புகளில் மிகவும் கோபத்துடன் என்னைப் பார்த்த எமன் இவ்வைஷ்ணவப் பிறவியிலும் முன்பிறவி போல் நீ எப்படி அநுக்ரஹித்தால் பாராதிருப்பானோ அப்படி அநுக்ஹரிக்க வேண்டும்.

सहमानाहरहर्मे सहस्रमागांसि सागरेन्द्रसुते ।
स्थापयसि मां दयालो शरणव्रज्याधिराज्यपीठे त्वम् ॥ ३०

ஸ்தாபயஸி மாம் தயாலோ
ஸஹஸ்ரமாகாம்ஸி ஸாகரேந்த்ரஸுதே ।
ஸ்தாபயஸி மாம் தயாலோ
ஶரணவ்ரஜ்யாதிராஜ்யபீடே த்வம் ॥ 30

ஹே ஸாகரேந்த்ரஸுதே! - கடல் குமரியே!

ஹே தயாளோ - தயை மிக்கவளே!

த்வம் - நீ

அஹரஹ: - ஒவ்வொரு நாளும் செய்யும்

மே - எனது

ஸஹஸ்ரமாகாம்ஸி - எண்ணற்ற அபராதங்களை

ஸஹமாநா - பொறுப்பவளாய்

சரணவ்ரஜ்யா - ஶரணவரணமாகிற

ஆதிராஜ்ய - மோக்ஷஸாம்ராஜ்யத்தின்

பீடே - ஸிம்ஹாஸநத்தில்

ஸ்தாபயஸி - உட்கார வைத்துள்ளாய்

கடலரசனுன பாற்கடலின் பெண்ணே! தயா ஸ்வரூபியே! ஒவ்வொரு நாளும் நான் செய்யும் அநந்தாபசாரங்களையும் ஸஹித்துக் கொண்டு அடியேனை சரணவரணமாகிய மோக்ஷ ஸாம்ராஜ்ய பீட ஸிம்ஹாஸநத்தில் அமர்த்தியுள்ளாய்.

கோயில் சப்தம் வங்கீபுரம் – வாஜபேயம் மருத்துவான்பாடி ராமாநுஜ தீக்ஷிதர் வம்சத்தில் அவதரித்த ராமாநுஜ தீக்ஷிதரின் குமாரரான வீராபுரம் சடகோபாசார்யரால் இயற்றப்பட்ட லக்ஷ்மீ ஸஹஸ்ர உரையான ரத்ந ப்ரபையில் க்ஷாந்தி ஸ்தபகம் முடிவடைந்தது

சுபம்

உத்ஸவ ஸ்தபக: (12)

विख्यातविभवा सा मां विष्णुपत्नी विलोकताम् ।
विपुलानुत्सवान् यस्या विरिञ्चयाद्या वितन्वते ॥

விக்யாதவிபவா ஸா மாம் விஷ்ணுபத்நீ விலோகதாம் ।
விபுலாநுத்ஸவாந் யஸ்யா விரிஞ்ச்யாத்யா விதந்வதே ॥ 1 ॥

யஸ்யா:- எந்த லக்ஷ்மிக்கு
விரஞ்சாத்யா: - ப்ரம்மன், ருத்திரன் இந்த்ரன், முதலானோர்
விஷ்யாந் - மக்களுக்கு மகிழ்ச்சி தரும் திருவிழாக்களை
விதந்வதே - செய்கின்றனரோ
விக்யாதவிபவா - புகழ் பெற்ற பெருமையை உடைய
ஸா - அந்த விஷ்ணு பத்நீ
மாம் - எனக்கு
விலோகதாம் - அருள்பாலிக்க

இந்த ஸ்தபகத்தில் திருமலை முதலான இடங்களில் நான்முகன், சிவன் இந்த்ரன் முதலானவர்களால் செய்யப்பட்டதாக புராணங்களில் ப்ரஸித்தமாக உள்ள உத்ஸவத்தின் பெருமைகளை அடிப்படையாகக் கொண்டு லக்ஷ்மியைத் துதிக்கின்றாராகையால் இந்த ஸ்தபகத்திற்கு இப்பெயர் உண்டாயிற்று.

உத்ஸவ: என்ற சொல்லுக்கு மக்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் செயல் என்பது பொருள். உத்ஸவேதே ஹர்ஷ இதி ஏஷ: உத்ஸவ:ப்ரகீர்த்தித: என்பது ப்ரமாணம். எந்த லக்ஷ்மிக்கு மிகுந்த பணச்செலவில் பல நாள்கள் புகழ்பெற்ற உத்ஸவத்தை நான்முகன் முதலானோர் செய்து நின்றார்களோ அந்த லக்ஷ்மி என்னை கருணை கடாக்ஷத்தால் அநுக்ரஹிக்க வேண்டும் என வேண்டுகிறார்.

விஷ்ணு பத்நீ என்ற சொல்லை அமைத்து அதன் வழி ''அஸ்யேசாநா ஜாத: விஷ்ணு பத்நீ'' என்ற ச்ருதியை கவனத்தில் கொணர்ந்து ஸ்ரீ உலகங்களுக்கு எல்லாம் தலைவி என்பதனை வெளிப்படுத்துகிறார்.

विधिशिवप्रमुखाः विबुधेश्वराः विविधमच्युतपत्नि तवोत्सवम् ।
अकलयन् सकलस्य शरीरिणो निरवधीरवधीरयितुं व्यथाः ॥

விதிஶிவப்ரமுகா விபுதேஶ்வரா விவிதமச்யுதபத்நி தவோத்ஸவம் ।
அகலயந் ஸகலஸ்ய ஶரீரிணோ நிரவதீரவதீரயிதும் வ்யதா: ॥ 2

அச்யுதபத்நி - பகவானின் பத்நியே!
விதிசிவ ப்ரமுகா: - ப்ரம்மன் சிவன் முதலான
விபுதேச்வரா: - தேவர் தலைவர்கள்
ஸகலஸ்ய சரீரண: - உயிருள்ளவை அனைத்தினது
நிரவதீ: வ்யதா: - அளவற்ற துன்பங்களை
அவதீரயிதும் - போக்குவதற்காக
விவிதம் - பல வகை உத்ஸவங்களை
அகலயந் - செய்தார்கள்

உத்ஸவங்கள் நித்யோத்ஸவம், பக்ஷோத்ஸவம், மாஸோத்ஸவம், ஸம்வத்ஸரோத்ஸவம் எனப் பல வகை. அத்தகைய உத்ஸவங்களைக் கொண்டாடுதல் நாட்டின் நன்மைக்கே எனப் பாஞ்சராத்ரம் முதலான நூல்கள் கூறுகின்றன. அத்தகைய உத்ஸவங்களை தேவருக்கும் தேவரான நான்முகன் சிவன் இந்த்ரன் என்பவர்கள் உயிரினங்களின் நன்மைக்காகக் கொண்டாடினர்.

निरुपमं युवयोः शुभमुत्सवं जननि लोकयितुं धृतकौतुकाः ।
उपगता किल कापि परा त्वरं पुरवधूरवधूत गृहक्रियाः ।

நிருபமம் யுவயோ: ஶுப முத்ஸவம்
ஜநநி லோகயிதும் த்ருதகௌதுகா: ।
உபகதா கில காபி பரா த்வரம்
புரவதூரவதூதக்ருஹக்ரியா: ॥ 3

ஹே ஜநநி - தாயே
நிருபமம் - ஒப்புயர்வற்றதும்
சுபம் - உலகுக்கு நன்மை தருவதுமான
யுவயோ: உங்களிருவரின்
உத்ஸவம் - வீதியில் வலம் வருவதாகிய உத்ஸவத்தை
லோகயிதும் - காண்பதற்காக
த்ருதகௌதுகா: - ஆர்வம் உடையவர்களாய்

அவதூத - விடப்பட்ட
க்ருஹ க்ரியா: - வீட்டு வேலைகளை உடைய
புரவது: - பட்டிணத்துப் பெண்களை
காபி - சொல்லுவதற்கரியதும்
பரா - உயர்ந்ததுமாகிய
த்வரா - பரபரப்பு
உபகதா கில - அடைந்தல்லவா ?

இனிப் பத்தொன்பது ச்லோகங்களால் யாத்ரோத்ஸவ வர்ணனம் செய்கிறார். திவ்ய தம்பதிகள் இருவரும் வீதி வலம் வருவதாகிய உத்ஸவத்தில் ஈடுபட்டுள்ளனர். அதை ஸேவிப்பதில் ஆர்வம் உடையவர்களாய் பட்டிணத்தில் உள்ள நாட்டுப் பெண்கள் (மருமகள்கள்) வீட்டு வேலையை அப்படியே விட்டு விட்டு உத்ஸவத்தை ஸேவிப்பதில் ஆர்வம் உடையவராயினர்.

जननि सत्वरचङ्क्रमसम्भ्रमे चरणतः पतितौ मणिनुपरौ ।
तव महोत्स्वभूभजनोन्मिषत् कुतुकया तु कयाचिदनादृतौ ॥

ஜநநி ஸத்வரசங்க்ரமஸம்ப்ரமே
சரணத: பதிதௌ மணிநூபுரௌ ।
தவ மஹோத்ஸவபூபஜநோந்மிஷத்-
குதுகயா து கயாசிதநாத்ருதௌ ॥ 4

ஹே ஜநநி - தாயே !
தவ - உனது
மஹோத்ஸவபூ - உத்ஸவம் நடக்கும் வீதியை
பஜநே - அடைவதில்
உந்மிஷத் குதுகயா - மிகுதியான ஆவலை உடைய
கயாசித் - ஒரு பெண்ணால்
ஸத்வரசங்க்ரமே - வேகமாகச் செல்லும் அவஸரத்தில்
சரணத: - பதிதௌ - கால்களிலிருந்து நழுவி விழுந்த
மணிநூபுரௌ - மணிகளாலான அழகியசங்கைகள்
அநாத்ருதௌ - உபேக்ஷிக்கப்பட்டன

பெண்ணொருத்தி உத்ஸவத்தை ஸேவிப்பதற்கு மிக விருப்பத்துடன் ஓடோடி வந்தாள். வந்த வேகத்தில் கால்களில் அணிந்திருந்த விலைமிக்க சதங்கைகள் நழுவி பூமியில் விழுந்தன. அதை எடுத்தால் நேரமாகி விடும். உத்ஸவ ஸேவை போய் விடும் என்பதால் அவற்றை எடுக்காது விட்டு விட்டாள்.

तव महे गतिमान्यकृतौ कुचाविति रुषा चलिताशु रमेऽपरा ।
अनुगृहीततदञ्चलनिर्गलत्नवसरावसरात्ययभीरुका ॥ ५ ॥

தவ மஹோ கதிமாந்த்யக்ருதௌ குசா-
விதி ருஷா சலிதாऽऽஶு ரமே(அ)பரா ।
அநுக்ருஹீததஞ்சலநிர்கலந்நவ
ஸராவஸராத்யயபீருகா ॥ 5

ஹே ரமே - லக்ஷ்மியே !
தவ மஹே - உனது உத்ஸவத்தில்
அவஸராத்யய பீருகா - காலம் கடந்து விடுகிறது என்ற பயத்தால்
பரா - ஒரு பெண்
குசௌ - ஸ்தநங்கள்
கதிமாந்த்ய க்ருதௌ - பளுவாக இருப்பதால் வேகமாகச் செல்லத் தடங்கலாக இருக்கின்றன.

இதி ருஷா - என்ற கோபத்தால்
அநுக்ருஹீத - மிகவும் விரும்பிய
ததஞ்சல - கொங்கைகளின் நுனியிலிருந்து
நிர்கலத் - நழுவி விழுந்த
நவஸரா - புதிய முத்து மாலையை உடையவளாய்
ஆசு - சீக்கிரமாக
சரிதா - சென்றாள்.

தாயே உனது உத்ஸவம் நடக்கும் இடத்திற்குத் தக்க காலத்தில் செல்ல வேண்டும். சிறிதும் காலம் கடக்கக் கூடாது. கடந்தால் உத்ஸவ ஸேவையில் சிறிது இழக்க நேரும் என்ற பயத்தால் சீக்கிரமாகச் செல்ல விரும்பினாள். ஆனால் அவளால் வேகமாகச் செல்ல முடியவில்லை. காரணம் அவளது ஸ்தநங்கள் மிகவும் சுமையாக இருந்தன. எனவே அவற்றின் மீது அவளுக்கு மிகவும் கோபமுண்டாயிற்று. எனவே அவள் கொங்கைகளின் மேல் அணிந்திருந்த புதிய முத்து மாலைகள் நழுவிய போதும் அதனைப் பொருட் படுத்தாது நழுவியதில் விருப்பமுடையவளாய் வேகமாக ப்ரயத்நத்துடன் சென்றாள்.

श्रुतभवन्महवाद्यरवा जवात् पथि रमे चलिताभरणस्वनैः ।
श्रुतरुतेऽन्तरितेऽसि सुवञ्चिते त्यपरया परया हसिता वधूः ॥

ஶ்ருதபவந் மஹவாத்யரவா ஜவாத்
பதி ரமே சலிதாபரணஸ்வநை: ।
ஶ்ருதருதே (அ)ந்தரிதே (அ)ஸி ஸுவஞ்சிதே-
த்யபராயா பரயா ஹஸிதா வதூ: ॥

ஹே ரமே - லக்ஷ்மியே !
ச்ருத - கேழ்க்கப்பட்ட
பவந்மஹ - உனது உத்ஸவத்தில் வாசிக்கப்படும்
வாத்யரவா - வாத்யங்களின் ஓசையை உடையவளாய்
அத ஏவ - ஆதலாலேயே
ஜவாத் சலிதா - வேகமாகச் செல்பவளாய்
பதி - வழியில்
ஆபரண ஸ்வநை: - தனது ஆபரணங்களின் ஓசையால்
ச்ருதருதே - முன் கேட்ட வாத்ய ஓசை
அந்தரிதே ஸதி - மறைக்கப்பட்டபோது
ஸுவஞ்சிதாஸ்மி - ஏமாற்றப்பட்டவளானேன் இது உத்ஸவவாத்ய கோஷமில்லை என்று
அப - ரயா - வேகமற்றவளான போது
அபரயா - உடன் வந்த வேறொருவரால்
ஹஸிதா - பரிஹஸிக்கப்பட்டாள்.

இலக்குமியின் உத்ஸவத்தில் பல வாத்யங்கள் வாசித்தார்கள். அவற்றின் ஓசையைக் கேட்ட ஒருவள் மிக வேகமாக செல்லலானாள். அப்படிச் செல்லும் போது அவள் அணிந்திருந்த ஆபரணங்களால் உண்டான ஓசையில் வாத்ய ஓசை மறைந்து விட்டது. அப்போதவள் நான் வேறேதோ ஓசையால் ஏமாற்றப்பட்டேன். இது உத்ஸவவாத்யமில்லை என்றெண்ணி வேகத்தைக் குறைத்துக் கொண்டாள். உடன் வந்த மற்றொருத்தி இதைக் கண்டு உன் ஆபரண ஓசையில் மறைந்தது வாத்ய கோஷம் என்றறியாது காரணமின்றி வேகத்தைக் குறைத்தாயே எனப் பரிஹஸிக்கப்பட்டாள்

महमहीभजनोत्कलिकाकृतद्रुतगतिः श्लथपुष्पसरापरा ।
कृतवतीव मुदा कुसुमाञ्जलिं तव रमे वरमेखलमध्यमा ॥

மஹமஹீபஜநோத்கலிகாக்ருத-
த்ருதகதி: ஶ்லதபுஷ்பஸராபரா ।
க்ருதவதீவ முதா குஸுமாஞ்ஜலிம்
தவ ரமே வரமேகலமத்யமா ॥ 7

ஹே ரமே - ரமையே !
வர - உயர்ந்த
மேகலா - ஒட்டியாணத்தை
மத்யமா - இடுப்பில் அணிந்திருந்த
அபரா - வேறொருப்பெண்
மஹமஹீ - உத்ஸவம் நடக்குமிடத்தை
பஜந - அடைவதிலுள்ள
உத்கலிகா - அதிகமான ஆசையால்
க்ருத - தோன்றிய
த்ருத கதி - வேகமான நடையால்
ஶ்லத - வழியில் விழுந்த

புஷ்பஸரா - பூச்சரத்தையுடையவளாய்
தவ - உன்னைக் குறித்துச் செய்த
குஸுமாஞ்ஜலிம் - இரு கைகளாலும் புஷ்பம் ஸமர்ப்பித்தலை
முதா - ஸந்தோஷத்தால்
க்ருதவதீவ - வழியிலேயே செய்தாள் போலும்

உத்ஸவம் நடக்குமிடத்துக்கு சீக்ரமாகச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தால் வேகமாக நடந்தாளாம். அவள் ஒட்டியாணம் என்ற ஓர் ஆபரணத்தை இடுப்பில் அணிந்திருந்தாளாம் (இவ்வணி இக்காலத்தே மறைந்தே போயிற்று. இக்காலத்தே ஆண்கள் இடையில் கட்டிக் கொள்ளும் தோலாகிய ''பெல்ட்'' என்பது போன்றே எல்லா அமைப்பும் உடையது) நடந்த வேகத்தில் அவள் சூடியிருந்த பூச்சரம் நழுவி இடைவழியில் விழுந்து விட்டது. பூச்சரம் விழவில்லை. தாயின் திருவடிகளில் இரு கைகளாலும் ஸமர்ப்பிக்க வேண்டிய புஷ்பத்தை ஸந்தோஷ மிகுதியால் அருகில் வந்து ஸமர்ப்பிக்க வேண்டிய கால தாமதத்தைப் பொறாதவளாய் வழியிலேயே ஸமர்ப்பித்து விட்டாள் போலிருக்கிறது என கவி கற்பனையாகக் கூறுகிறார்.

महजुषस्तव देवि सिसेविषा दिशति मन्दगतेरपि सद्गतिम् ।
तदिह दिव्यगतिं वितरिष्यसि त्वममले देव ऽमम देवदुरासदाम् ॥

மஹஜுஷஸ்தவ தேவி ஸிஷேவிஷா திஶதி மந்தகதேரபி ஸத்கதிம்
ததிஹ திவ்யகதிம் விதரிஷ்யஸி த்வமமலே ऽமம தேவதுராஸதாம் ॥

ஹே தேவி - பகவானின் மனைவியே!
அமலே - குற்றமற்றவளே!
மஹஜுஷ: - யாத்திரோத்ஸவம் கண்டருளும்
தவ - உன்னை
ஸிஸேவிஷயா - ஸேவிக்க வேண்டும் என்ற ஆசையால்
மந்தகதேரபி: - பாலர்கள், கிழவர்கள் போன்றவர்களுக்கும்
ஸத்கதிம் - வேகமாகச் செல்லும் தன்மையை
திசதி - அளிக்கின்றது.
தத் - அவ்விருப்பமே அத்தகைய பலனைத் தருவதால்
இஹ - இவ்வுத்ஸவத்தில்
அமம - அஹங்கார மகாரங்களற்றவர்களான
தேவ - தேவர்களாலும்
துராஸதாம் - அடைய முடியாத
திவ்யகதிம் - மோக்ஷகதியை
தஸ்ய - பாலர் போன்றவர்களுக்கும்
விதரிஷ்யஸி - கொடுக்கத்தான் போகிறாய்

தீய குணமற்றவளாய் நற்குணக்குன்ருகிய (ஹேய ப்ரதிபடம் என்பர் வடமொழியில் இதனை) தாயே உனது யாத்ரோத்ஸவத்தை ஸேவிக்க வேண்டும் என்ற ஆசை வேகமாக நடக்க முடியாத சிறுவர் முதியோர் போன்றவர்களுக்கும் வேகமாகச் செல்லும் தன்மையைத் தருகிறது. முதியோர் போன்றவர்களும் ஆசையால் வேகமாகச் செல்கின்றனர் என்பது கருத்து. ''மந்தகதே: ஸத்கதிம் திசதி' என்பதற்கு மோக்ஷம் செல்வதற்குரிய வழியில் செல்லத் தகுதியற்றவனுக்கும் மோக்ஷத்திலும் தாழ்ந்த உலகிற்கும் போகும் தன்மையை அளிக்கிறது என்ற பொருள் சொல்லலாம். இத்தகைய பலனைத் தருகிறது என்றதால் உன்னை ஸேவித்தவர்களுக்கு ஆணவமற்ற தேவர்களாலும் பெற முடியாத மோக்ஷத்தை அளிக்கின்ருய்.

अभिचकाङ्क्ष मनः प्रभवं जवं चरणयोरपि काचन सादरा ।
कलयितुं भवतीं कलशाम्बुधेर्दुहितरं हितरम्यमहोत्सवाम् ॥९॥

அபிசகாங்க்ஷ மந: ப்ரபவம் ஜவம்
சரணயோரபி காசந ஸாதரா ।
கலயிதும் பவதீம் கலஶாம்புதேர்-
துஹிதரம் ஹிதரம்யமஹோத்ஸவாம் ॥ 9

காசந - ஒரு பெண்
கலசாம்புதே: - பாற்கடலின்
துஹிதரம் - பெண்ணாயும்
ஹித - மக்களுக்கு நன்மை தருவதும்
ரம்ய - அழகியதுமான
மஹோத்ஸவாம் - சிறந்த உத்ஸவத்தைக் கண்டருளுமான உன்னை
கலயிதும் - ஸேவிப்பதற்கு
ஸாதரா - ஆசை உடையவளாய்
மந: ப்ரபவம் - மனதில் தோன்றுவதான
ஜவம் - வேகத்தை
சரணயோபி - கால்களிலும்
அபிசகாங்க்ஷ - விரும்பினாள்.

மனோ வேகம் வாயு வேகம் என்பர். வேகமாகச் செல்லும் பொருள்களுள் இவை இரண்டும் உயர்ந்தவை. தாயின் உத்ஸவத்தைக் காண விரும்பிய ஒரு பெண் மனதின்வேகத்தைத் தமது கால்களிலும் அமைய வேண்டினாளாம்.

கலசாம்புதே: துஹிதரம் என்ற விடத்தில் துஹித: அம், எனப்பதம் பிரித்து துஹித: - பெண்ணே என ஸம்போதனமாக - விளியாக, ஆக்கி, பவதீம் - உன்னையும் அம் - பகவானையும், கலயிதும் என்றும் பொருள் கொள்ளலாம் .

जननि तामरसोदरसोदरश्रियमवेक्ष्य सविस्मयमुत्सवे।
न ततृपुर्नरदैवतयोषितः शुभवतीं भवतीं सह शौरिणा ॥ १० ॥

ஜநநி தாமரஸோதரஸோதர
ஶ்ரியமவேக்ஷ்ய ஸவிஸ்மயமுத்ஸவே।
ந தத்ருபுர்நரதைவதயோஷித:
ஶுபவதீம் பவதீம் ஸஹ ஶௌரிணா ॥ 10 ॥

ஹே ஜநநி - தாயே !
நர தைவத யோஷித: - மானிடப் பெண்களும் தேவ மாதுகளும்
சுபவதீம் - அழகிய அலங்காரத்தை உடையவளும்
தாமரஸ - தாமரைப் பூவின்
உதர - உட்பகுதியிலுள்ள நிறத்தோடு
ஸோதர - ஸமானமான
ச்ரியம் - நிறத்தை உடையவருமான
பவதீம் - உம்மை
சௌரிணா ஸஹ - பகவானுடன்
உத்ஸவே - உத்ஸவத்தில்
ஸவிஸ்மயம் - ஆச்சர்யத்துடன்
வீக்ஷ்ய - ஸேவித்து
ந தத்ருபு: - த்ருப்தியை அடையவில்லை.

தாமரையில் வாழ்பவள், தாமரை போன்ற செம்மையான நிறம் உடையவள் தாய் என்கிறது. பத்மே ஸ்திதாம் பத்மவர்ணாம் என்கிறது வேதம். அத்தகைய தாயுடன் நாராயணனுக்கும் சேர்ந்து உத்ஸவம் நடக்கிறது. இவ்விருவர் சேர்ந்த ஸேவை அப்ஸரஸுகளுக்கும் ஸேவித்தது - கண்டது - போதும் என்ற மன நிறைவைத் தரவில்லை.

प्रियतमार्पितयावकपादया तव महोत्सवभूर्न यया श्रिया।
द्रुतमगामि पदोर्न परं धृतः कुपितयापि तयारुणिमा दृशोः ॥ ११ ॥

ப்ரியதமார்ப்பிதயாவகபாதயா
தவ மஹோத்ஸவபூர்ந யயா ரமே।
த்ருதமகாமி பதோர்ந பரம் த்ருத:
குபிதயாபி தயாருணிமா த்ருஶோ: ॥ 12 ॥

ப்ரியதமார்பித - கணவனால் பூசப்பட்ட
யாவக - செம்பஞ்சு குழம்புடன் சேர்ந்த
பாதயா - பாதங்களை உடைய
யயா - எந்த பெண்ணால்
தவ - உன்னுடைய
மஹோத்ஸவபூ: - உத்ஸவம் நடக்குமிடம்
த்ருதம் - சீக்கிரமாக
நாகாமி - அடையப்படவில்லையோ
குபிதயா - சீக்கிரம் போக முடியாமையால் கோபங் கொண்ட
தயா - அந்த பெண்ணாலே
பதோ : பரம் - பாதங்களில் மட்டும்
அருணிமா - செம்மை
ந த்ருத: - தாங்கப்படவில்லை
த்ருசோரபி - கண்களிலும்
அருணிமா - கலக்கம்
த்ருத: - தாங்கப்பட்டது.

பெண்கள் பாதங்களிலும் ஒரு வகைப்பூச்சு பூசிக்கொள்வர். அது பாதங்களில் சிவப்பைத் தோற்றுவிக்கும். அதைப் பெண்கள் விரும்புவர். அவ்வகையில் ஒரு பெண்ணுக்கு அவள் கணவன் அப்பூச்சை பூசி விட்டான். அது உலர்வதற்குள் உத்ஸவம் தொடங்கி விட்டது. உலர்ந்த பின் தானே போக முடியும். அதனால் நேரமாகி விட்டது உத்ஸவத்துக்குப் போக. எனவே கோபமடைந்தாள் அந்தப் பெண். அதனால் கண் சிவந்தாள். இதனைக் கவி கால்களில் மட்டும் சிவப்பைப் பெறவில்லை கண்களிலும் பெற்றாள் என சமத்காரமாகக் கூறுகிறார். பெண்கள் விரும்பும் பூச்சும் விக்நம் விளைவித்ததால் விரும்பத்தகாததாயிற்று என்பது கருத்து.

अभिवृषाचलमापततां द्रुतं तव रमे परमोत्सवलिप्सया।
अजनि नो पथिभिः समयात्ययो दिविषदां विषदान्तरितैरपि ॥ १३ ॥

அபிவ்ருஷாசலமாபததாம் த்ருதம்
தவ ரமே பரமோத்ஸவலிப்ஸயா।
அஜநி நோ பதிபி: ஸமயாத்யயோ
திவிஷதாம் விஷதாந்தரிதைரபி ॥ 13 ॥

ஹே ரமே - லக்ஷ்மியே !
தவ - உன்னுடைய
பரமோத்ஸவ - உயர்ந்த உத்ஸவத்தை
லிப்ஸயா - அநுபவிக்க வேண்டும் என்ற ஆசையால்
அபிவ்ருஷாசலம் - வேங்கடமலையைக் குறித்து

த்ருதம் - சீக்கிரமாக
ஆபததாம் இறங்குகிற
திவிஷதாம் - தேவர்களுக்கு
விஷத - மேகங்களாலே
அந்தரிதைரபி - மறைக்கப்பட்டிருந்த போதிலும்
பதிபி: - ஆகாச வழிகளாலே
ஸமயாத்யய: - உத்ஸவ காலங்கடத்தல் என்பது
நாஜநி - உண்டாகவில்லை

திருமலையில் நடக்கும் லக்ஷ்மியின் மஹோத்ஸவத்தை ஸேவிக்க ஆசை கொண்ட தேவர்கள் வேகமாக விண்ணுலகிலிருந்து இறங்கி வருகிறார்களாம் அப்படி வரும் போது வழியெல்லாம் மேகம் சூழ்ந்திருந்ததாம். விஷதம் என்பதற்குப் பாம்பு என்று பொருளும் உண்டு. மேகத்தால் வழி சூழப்பட்டிருந்த போதும் மேகம் என்பது புகை ஜலம் போன்ற பொருள்களின் கூட்டமேயாதலால் அடர்ந்த பொருளுள்ளமையால் அப்புறப்படுத்த வேண்டிய தொல்லை இன்மையால் உத்ஸவத்துக்கு உரிய காலம் கடக்கவில்லை.

प्रसृमरागरुधूपपरम्परासुरभिताः शुभदीपशतावृताः।
त्रियुगपत्नि तवोत्सवभूमयः सुरचयं रचयन्ति सविस्मयम् ॥ १४॥

ப்ரஸ்ருமராகருதூபபரம்பரா-
ஸுரபிதா: ஶுபதீபஶதாவ்ருதா: ।
ஜநநி வேங்கடஶைலமபூஷயந்
ஸுரசயம் ரசயந்தி ஸவிஸ்மயம் ॥ 14 ॥

ஹே த்ரியுக பத்நி - நாராயணன் மனைவியே!
ப்ரஸ்ருமரா: - எங்கும் பரவியுள்ள
அகருதூப - அகரு என்ற வாசனைப் பொருளின் புகையின்
பரம்பரா: - வரிசைகளால்
ஸுரபிதா: - நறுமணமுள்ளதாக ஆக்கப்பட்ட
ஶுபதீபஶத - எண்ணற்ற உயர்ந்த தீபங்களால் சூழப்பட்ட
தவ - உனது
மஹோத்ஸவபூமய: - உத்ஸவம் நடக்கும் இடங்கள்
ஸுரசயம் - தேவர் கூட்டத்தையும்
ஸவிஸ்மயம் - ஆச்சர்யப்படும்படி
ரசயந்தி - செய்கின்றன

மிக உயர்ந்த மேன்மையைப் பெற்றவர்களான தேவர்களுக்கும் ஆச்சர்யப்படும் அளவக்கு தாயின் உத்ஸவத்தில் தூப தீபங்களின் உபசாரங்கள் இருந்தன என்பது கருத்து.

तव महप्रतिनन्दन कंपितैः सुरतरोः शिखरैः स्वयमर्पिताः ।
जननि वेङ्कट शैलमभूषयन् सुममसो मनसोहरण क्षमाः ॥ १४ ॥

தவமஹ ப்ரதிநந்ந கம்பிதை:
ஸுரதரோ: ஶிகரை: ஸ்வய மர்பிதா:।
ஜநநி வேங்கடசைல பூஷயந்
ஸுமநஸோ மநஸோ ஹரணக்ஷமா: ॥ 14

ஹே ஜநநி - தாயே !
தவ மஹ - உமது உத்ஸவத்தை
ப்ரதிநந்தந - தலையை அசைத்துக் கொண்டாடியதாலே
கம்பிதை: அசைக்கப்பட்ட
ஸுரதரோ: - பாரிஜாதத்தின்
சிகரை: - நுனியால்
ஸ்வயம் - தங்களாலேயே
அர்பிதா: - ஸமர்ப்பிக்கப்பட்டதும்
மநஸ: - ஹரண க்ஷமா: - மனோஹரங்களாகவும் உள்ள
ஸுமநஸ : - புஷ்பங்கள்
வேங்கடசைலம் - திருவேங்கடமலையை
ஆபூஷயந் - அலங்கரித்தன

தாய்க்குத் தேவருலகில் மஹோத்ஸவம் நடந்தது. அதை ஸேவித்தன தேவ மரங்களாகிய பாரிஜாதம் முதலியன. அதனால் உண்டான ஆனந்த மிகுதியால் தமது தலைகளாகிய நுனியை அசைத்துக் கொண்டாடின. அச்சமயத்தே மரம் அசைந்ததால் தேவர் பறித்து அலங்கரிக்காமல் மனதை அபஹரிக்கத் தக்க அதிலிருந்த இத்தகைய புஷ்பங்கள் வேங்கட மலையை தாமே அலங்கரித்தன.

शुभतराभरणाभरणात्मना रुचितरङ्गपिशङ्गितसद्मना ।
जननि सार्थयसे मरुतां महोत्सवपुषानिमिषा दृशः ॥ १५ ॥

ஶுபதராபரணபரணாத்மநா ருசிதரங்கபிஶங்கிதஸத்மநா ।
ஜநநி ஸார்த்தயஸே மருதாம் மஹோத்ஸவபுஷாவபுஷாநிமிஷா த்ருஶ: ॥ 15

ஹே ஜநநி - தாயே !
ஆபரண - அணிகலன்களுக்கும்
ஆபரண - அணிகளாக உள்ள
ஆத்மநா - உருவத்தாலும்
ருசி - கிரணங்களின்
தரங்க - அலைகளாலே
பிசங்கித - மஞ்சள் நிறமாக்கப்பட்ட
ஸத்மநா - உத்ஸவ க்ருஹத்தாலே
மஹோத்ஸவபுஷா - உத்ஸவத்துக்கு மேன்மையை விளைவிப்பதுமாகிய
வபுஷா - சரீரத்தால்
மருதாம் - தேவர்களின்
அநிமிஷா: - இமை கொட்டுதல் இல்லாத
த்ருச: - கண்களை
ஸார்த்தயஸே - பயன் உள்ளதாக ஆக்குகின்றாய்

உடலுக்கு அழகைத் தருவதற்காக அணிந்து உலக வழக்கம். ஆனால் ஆபரணத்துக்கு அழகு தருவதாக உள்ளது. உலகத்தாயின் திருமேனி. அவ்வுடலிலிருந்து வீசும் மஞ்சள் நிற ஒளிகளோ உத்ஸவம் நடைபெறும் வீட்டிற்கே மஞ்சள் நிறத்தைத் தருகிறது. இப்படி உத்ஸவத்துக்கே மேன்மை தரும் சரீரத்தாலே தேவர்களின் இயல்பான கண் கொட்டாமை என்றதைப் பயனுடையதாக ஆக்குகின்றாய். சிறிது நேரமும் தடையின்றி ஸேவிக்கின்றனர் அவர்கள்.

मधुजिता सममुत्सवमण्डपे स्थितवतीं भवतीमवलोकितुम् ।
अभिरुचिः पुनराप्तकुतूहलैर्निजगृहे जगृहे न वधूजनैः ॥ १६ ॥

மதுஜிதா ஸமமுத்ஸவமண்டபே
ஸ்திதவதீம் பவதீமவலோகிதும் ।
அபிருசி: புநராத்தகுதூஹலைர்
நிஜக்ருஹே ஜக்ருஹே ந வதூஜனை: ॥ 17 ॥

ஹே ஸ்ரீ: - இலக்குமியே !
உத்ஸவமண்டபே - உத்ஸவம் நடக்கும் மண்டபத்தில்
மதுஜிதாஸமம் - பகவானுடன்
ஸ்திதவதீம் - வீற்றிருக்கும்
பவதீம் - உம்மை
அவலோகிதும் - ஸேவிப்பதற்காக
ஆத்த குதூஹலை: - ஆவல் கொண்ட
வதூஜனை: - புதிதாகக் கலியாணம் ஆன பெண்களாலும்
நிஜ க்ருஹே - தன் வீட்டில்
அபிருசி: - விருப்பம்
ந ஜக்ருஹே - மேற்கொள்ளப்படவில்லை

புதிதாகக் கலியாணமாகிய பெண்கள் தத்தம் கணவருடன் சேர்ந்து வாழத்தானே இரவில் விருப்பமுடையவராக இருப்பர். ! இது உலக இயற்கையன்றோ ! ஆனால் மண்டபத்தில் தாயும் தந்தையும் கண்டருளும் உத்ஸவத்தை ஸேவிக்கத்தான் அத்தகைய பெண்களும் விரும்பினார்களேயாம். வீட்டில் வாழ விரும்பவில்லையாம்.

''வதூ: நவோடாஸ்நுஷேயோ'' என்பது ரத்நமாலா

अधिमहोत्सवमर्णवकन्यके परमभक्तिजुषा प्रणतिस्तव ।
तनुधनुर्लतया सुदृशां गुरुस्तनतया नतया सुकराभवत् ॥ १८ ॥

அதிமஹோத்ஸவமர்ணவகந்யகே
பரமபக்திஜுஷா ப்ரணதிஸ்தவ।
தநுதநுர்லதயா ஸுத்ருஶாம் குரு-
ஸ்தநதயா நதயா ஸுகராபவத் ॥ 18 ॥

ஹே அர்ணவகந்யகே - கடல் குமரியே !
அதிமஹோத்ஸவம் - உத்ஸவ ஸமயத்தில்
பரம பக்தி ஜுஷாம் - மிக்க பக்தி கொண்ட
ஸுத்ருசாம் - பெண்களுக்கு
குரு ஸ்தநதயா - பருத்த ஸ்தநங்களைப் பெற்றிருப்பதாலே
நதயா - இயல்பாகவே வணங்குகிறதாகவே
தநுதநு: லதயா - மெல்லிய வில்லின் கொடி போன்ற
தந்வா - உடலாலே
ப்ரணதி: - வணக்கம்
ஸுகரா: - எளிதில் செய்ய முடிந்ததாக
அபவத் - ஆயிற்று

உத்ஸவம் கண்டருளும் உன்னை ஸேவிக்க விரும்பினர் பெண்கள். அவர்கள் உடல் வில்லில் கட்டப்பட்டிருக்கும் நாண் போல் மெல்லியதாக இருந்தன. ஆனால் பருமனான ஸ்தநங்களை அவர்கள் பெற்றிருந்ததால் அப்பளுவால் உடல் இயல்பாக வணங்கி இருந்தன. அது இப்போது வணங்குவதற்கு துணையாக இருந்தது.

भजनहर्षजनाट्यजवोच्चलन् मुकुटलोलमरुत्सरिदुत्थितैः ।
जलकणैर्भवदुत्सवमेदिनी शशिशिराः शिशिराः कुरुते रमे ॥

பஜநஹர்ஷஜநாட்யஜவோச்சலந்-
முகுடலோலமருத்ஸரிதுத்திதை:।
ஜலகணைர்பவதுத்ஸவமேதிநீ
ஶஶிஶிரா: ஶிஶிரா: குருதே ரமே ॥ 18 ॥

ஹே ரமே - லக்ஷ்மியே !
சசிசிரா: - சந்த்ரனைச் சூடி யுள்ள சிவன்
பஜந ஹர்ஷஜ - உன்னை ஸேவித்த ஸந்தோஷ மிகுதியால் தோன்றிய
நாட்ய - தாண்டவத்தின்
ஜவ - வேகத்தால்
உச்சலத் - குலுங்குவதான
மகுட - கிரீடத்தில்
லோல - ஆடிக் கொண்டிருக்கும்
மருத்ஸரித் - தேவ கங்கையிலிருந்தும்
உத்தை: - வெளிவந்த நாற்புறமும் சிந்திய
ஜலகணை: - ஜலத்தின் திவலைகளால் உன்னுடைய
உத்ஸவமேதிநீ: - உத்ஸவம் நடக்கும் வீதிகளை
சிசிரா: - நனைக்கப்பட்டதாக
குருதே - செய்கிருன்

தாயின் உத்ஸவத்தை ஸேவித்தான் பிறைசூடி, அளவற்ற ஆனந்தம் தோன்றியது. அதன் போக்கு வீடாக நடனமாடத் துவங்கினானவன். அப்போதவன் ஜடா மகுடத்திலிருந்த கங்கை ஆட்டங் கண்டாள். அதனால் கங்கா ஜலம் வீதி முழுதும் சிந்தியது. இப்படியாக உத்ஸவ வீதி முழுவதையும் குளிரவைத்தான் சிவன் என்கிருர்.

त्रिनयनेन विनम्रशिरः क्षरन् त्रिदशसिन्धुमहोर्मिभिरुत्सवे ।
किमपि पाद्यमदायि पदाब्जयो र्नतवता तव तामरसानने ॥

த்ரிநயநேந விநம்ரஶிர: க்ஷரத்-
த்ரிதஶஸிந்தும் மஹோர்மிபிருத்ஸவே।
கிமபி பாத்யமதாயி பதாப்ஜயோர்
நதவதா தவ தாமரஸாநநே ॥ 19 ॥

தாமரஸாலயே - தாமரையில் வாழ்பவளே !
உத்ஸவே - உத்ஸவ காலத்தில்
தவபதாப்ஜயோ: - உமது திருவடித் தாமரைகளில்
நதவதா - நடமாடிய பின் வணங்கிய
த்ரிநயநேந- சிவனாலே
விநம்ர - வணங்கிய
சிர: - தனது தலையிலிருந்து
க்ஷரத் - பெருகிய
த்ரிதசஸிந்து - தேவ கங்கையின்
மஹோர்மிபி: - பேரலைகளால்
கிமபி - பெருமை மிக்க
பாத்யம் - கால் அலம்பும் ஜலம்
அதாயி - கொடுக்கப்பட்டது.

உத்ஸவத்தின் போது நீ வீதியில் உலா வந்த ச்ரமம் போவதற்காக நடனம் ஆடிய பின் சிவன் உன் திருவடிகளில் தலை வணங்கி தன் தலையில் தாங்கியுள்ள தேவ கங்கையின் ஜலத்தால் உன் திருவடிகளை அலம்பினான்.

तव महे मिलितात् त्रिदशीगणात् न च बिभेद नृलोक वधूजनः ।
त्वदवलोकनविस्मयतो यतः जननि ! मे न निमेषमवाप सः ॥ २० ॥

தவ மஹே மிலிதாத் த்ரிதஶீகணாத்
ந ச பிபேத ந்ருலோகவதூஜந: ।
த்வததவலோகநவிஸ்மயதோ யத:
ஜநநி ! மே ந நிமேஷமவாப ஸ: ॥ 20 ॥

ஹே ஜநநி ! - தாயே !
தவ மஹே - உனது உத்ஸவத்தில்
ந்ருலோகவதூஜந: - மனித உலகப் பெண்கள்
த்வததவலோகந - உன்னை ஸேவித்ததாலுண்டான
விஸ்மயத: - அத்புதத்தால்
நிமேஷம் - கண் இமைத்தலை
யத: ந ப்ராப - அடையவில்லையோ
தத: - இமைத்தலை அடையாததால்
மிலிதாத் - வீதியில் ஒன்று சேர்ந்த
த்ரிதஶீகணாத் - தேவப் பெண்களின் கூட்டத்திலிருந்து
ந பிபேத - வேறுபாட்டை அடையவில்லை.

தாயே ! உன் உத்ஸவத்தின் போது நீ வீதியில் வலம் வந்து கொண்டிருந்தாய். மானிடப் பெண்கள் உன்னை ஸேவிப்பதற்காக வீதியில் குழுமினர். உன்னை ஸேவித்த ஆஶ்சர்யத்தில் அவர்கள் கண் இமைத்தலையும் மறந்தனர். அதே ஸமயம் தேவருலகப் பெண்களும் இவர்களுடன் உத்ஸவம் ஸேவிப்பதற்காக வந்ததால் மானிடப் பெண்களுக்கும் அது இல்லாது போனதால் யார் மனிதர் ? யார் தேவர் ? என்ற வேறுபாடு அறிய முடியாது போயிற்று. மானிடப்பெண்களும் தேவமாது போன்றே இருந்தனர் என்கிறார்.

प्रणयिना समं उत्सव मण्टपे स्थितवतीं भवतीं प्रणिनंसवः ।
हरिगिरिं हरिपत्नि समाश्रिताः त्रिदिविनो दिवि नोपययुः स्पृहाम् ॥ २१ ॥

ப்ரணயிநா ஸமம் உத்ஸவ மண்டபே
ஸ்திதவதீம் பவதீம் ப்ரணிநம்ஸவ: ।
ஹரிகிரிம் ஹரிபத்நி ஸமாச்ரிதா:
த்ரிதிவிநோ திவி நோபயயு: ஸ்ப்ருஹாம் ॥

ஹரி பத்நி ! - பகவான் மனைவியே !
ஹரிகிரிம் - ஸிம்ஹாத்ரியை
ஸமாச்ரிதா: - வந்தடைந்த
த்ரிதிவிந: - தேவர்கள்
உத்ஸவ மண்டபே - உத்ஸவம் நடக்கும் மண்டபத்தில்
ப்ரணயிநா ஸமம் - கணவனுடன்
ஸ்திதவதீம் - எழுந்தருளியிருக்கும் உம்மை
ப்ரணிநம்ஸவ: - ஸேவிக்க விரும்பியவர்களாய்
திவி - ஸ்வர்கத்தில்
ஸ்ப்ருஹாம் - ஆசையை
நோபயயு: - அடையவில்லை

து:கம் என்பதே தெரியாது இன்ப மயமான ஸ்வர்கத்தைக் காட்டிலும் உயர்ந்திருந்தது தாய் தந்தைகளின் சேர்க்கையை ஸேவிக்கும் சுகம் என்பதால் தேவர் தேவலோக வாழ்க்கையை விரும்பவில்லை

अधिमहं कमले भवतीं स्तुवन्नभिमुखस्तिमितेक्षणमग्रतः ।
अपि सुरेष्वसुरेषु नरेषु वा शिरसि का रसिको न दधेऽञ्जलिम् ॥ २२ ॥

அதிமஹம் கமலே பவதீம் ஸ்துவ-
ந்நபிமுக: ஸ்திமிதேக்ஷணமக்ரத: ।
அபி ஸுரேஷ்வஸுரேஷு நரேஷு வா
ஶிரஸி கோ ரஸிகோ ந ததே(அ)ஞ்லிம் ॥

ஹே கமலே - தாமரையில் வாழ்பவளே !
அதிமஹம் - உத்ஸவத்தில்
ஸுரேஷு - தேவர்களிலும்
அஸுரேஷு - அசுரர்களிலும்
நரேஷு - மனிதர்களிலும்
ரஸிக: - க: - குணமுடைய எவன்தான்
அக்ரத: - எதிரில் நின்று
திமிதேக்ஷணம் - ஆச்சர்யத்தால் கண் இமையாதவனுய்
அபிமுக: ஸ்துவந் - எதிரில் நின்று கொண்டு தோத்தரிப்பவனாய்
சிரஸி - தலையில்
அஞ்ஜலிம் - இரு கைகளையும் கூப்புவதை
ந ததே - செய்யாமலிருந்தான் ?

கமலையே உங்கள் உத்ஸவத்தின் போது மிக்க அறிவுடையவரான தேவருள்ளும், அவர்களின் எதிரியான அசுரருள்ளும் குறைந்த அறிவுடைய மனிதருள்ளும் சுவையுடைய எவர்தான் உன் உத்ஸவ அழகை ஸேவித்துத் தலைக்கு மேல் இரு கைகளையும் கூப்பாதிருந்தனர் ?

உத்ஸவ அழகு ரஸிகரான தேவர்களுக்குப் போல் பகைவரான அரக்கர்களுக்கும் மனதைக் கவர்வதாக இருந்தது என்பது கருத்து

अधिमहोत्सवमप्सरसां गणैः सह रमे परभक्तिजुषस्त्वयि।
पुलकिनः कलगद्गदगीतयो मुनिजना निजनाट्यमदर्शयन्॥ २३॥

அதிமஹோத்ஸவமப்ஸரஸாம் கணை:
ஸஹ ரமே பரபக்திஜுஷஸ்த்வயி।
புலகிந: கலகத்கதகீதயோ
முநிஜநா நிஜநாட்யமதர்ஶயந்॥ 23॥

ஹே ரமே - ரமையே !
அதிமஹோத்ஸவம் - உத்ஸவத்தில்
த்வயி - உன்னிடம்
பரபக்திஜுஷ: - மிகுந்த பக்தி உடையவர்களாய்
அத ஏவ - ஆதலாலேயே
புளகிந: - மயிர்க் கூச்செரிந்தவர்களாய்
கல கத்கத - தெளிவற்றதாக இருப்பினும் இனியதான
கீதய: - பாட்டைப் பாடுபவர்களான
முநிஜநா: - முனிவர்கள்
அப்ஸரஸாம்கணை: - ரம்பை முதலான அப்ஸரசுகளுடன்
நிஜநாட்யம் - தங்களது நடனத்தையும்
அதர்சயன் - காண்பித்தனர்.

நடனமாடுவதில் வல்லவர்களான திலோத்தமை அரம்பை முதலான அப்ஸரஸ்ஸுகளின் நடனத்துடன் மிகுந்த பக்தியினால் நடனமறியாத முனிவர்களும் மனம் போனபடி ஆடினர் என்கிறார்.

उपनतोत्सवदिव्यगृहाङ्गणः कमलवासिनि संयमिनां गणः।
निगमसौरभशोभनया स्तुतिं स हि गिराहिगिरावकरोत्तव॥ २४॥

உபநதோத்ஸவதிவ்யக்ருஹாங்கண:
கமலவாஸிநி ஸம்யமிநாம் கண:।
நிகமஸௌரபஶோபநயா ஸ்துதிம்
ஸ ஹி கிராஹிகிராவகரோத் தவ॥

கமலவாஸிநி - தாமரையில் வாழ்பவளே !
அஹிகுரௌ - சேஷாத்ரியில்
உத்ஸவ திவ்யக்ருஹ - உத்ஸவம் நடக்கும் சிறந்த வீட்டின் நடுவிலுள்ள
அங்கண - கூடத்தை (ஹாலை)
உபகத: - அடைந்தவர்களான
ஸ: - முன் சொன்ன
ஸம்யமிநாம்கண: - முனிவர்களிடம்
நிகமஸௌரப - வேதமோதிய நறுமணத்தால்
சோபநயா - தானும் மணம் பெற்ற
கிரா - சொற்களாலே
தவ ஸ்துதிம் - உனது துதியை
அகரோத் ஹி - செய்ததன்றோ

பக்தியுடன் நீண்ட நேரம் நடனமாடி, பின் வேதத்தைப் பலமுறை ஒதியோதித் தூயதான வாக்கால் தோத்ரங்களையும் செய்தனர்.

मधुविरोधिपुरन्ध्रि महोत्सवे शुभगुणग्रथिता किल मालिका।
स्तवमयी स्तबकैस्तव कैर्गिरा न कलिता कलिताडनकाङ्क्षिभिः ॥ २५ ॥

மதுவிரோதிபுந்த்ரி மஹோத்ஸவே
ஶுபகுணக்ரதிதா கில மாலிகா।
ஸ்தவமயீ ஸ்தபகைஸ்தவ கைர்கிரா
ந கலிதா கலிதாடநகாங்க்ஷிபி: ॥ 25 ॥

மதுவிரோதிபுரந்த்ரி - மது என்ற அரக்கனை அழித்த நாராயணன் மனைவியே !
கலிதாடநகாங்க்ஷிபி: - கலியின் கல்மஷத்தைப் போக்க விரும்பிய
கை: புருஷை: - எவரால்தான்
சுபகுண - உனது கல்யாண குணங்களாகிய நூலினாலே
க்ரதிதா - தொடுக்கப்பட்ட
தவ ஸ்தவமயீ - உனது ஸ்தோத்திரமான
மாலிகா - பூச்சரம்
கிராம் - வாக்குகளின்
ஸ்தபகை: - ஸமூகமாகிய
ஸ்தபகை: - பூங்கொத்தால்
ந கலிதா - அமைக்கப்படவில்லை !

கலியின் பாபத்தைப் போக்க விரும்பிய ஒவ்வொருவரும் உனது கல்யாண குணங்களை வர்ணிப்பவைகளான ஸ்தோத்ரத்தை அவரவர் சக்திக்கேற்ப இயற்றினர்

तवहरेर्दयिते दृढभक्तितः चतसृभिः श्रुतिभिः चतुराननः।
अभिनुतिं तनुते स्म महोत्सवेषु अहरहर्हररहर्यभि नन्दिताम् ॥ २६ ॥

தவஹரேர் தயிதே த்ருடபக்தித:
சதஸ்ருபி: ஶ்ருதிபி: சதுராதந:।
அபிநுதிம் தநுதே ஸ்ம மஹோத்ஸவேஷு
அஹரஹர்ஹர ஹர்யபிநந்திதாம்॥

ஹே ஹரேர்தயிதே - ஹரியின் மனைவியே!
தவ மஹோத்ஸவேஷு - உனது உத்ஸவங்களில்
சதுராநந: - துதிப்பதில் வல்லமை மிக்க நான்முகங்களைக் கொண்ட ப்ரஹ்மன்
த்ருடபக்தித: - உயர்ந்த பக்தியால்
சதஸ்ருபி: ச்ருதிபி: - நான்கு வேதங்களின் மந்த்ரத்தாலும்
ஹரஹரி - சிவனாலும் விஷ்ணுவாலும்
அபிநந்திதாம் - புகழப்பட்ட
அபிநுதிம் - உன் எதிரில் நன்று ஸ்தோத்தரிப்பதை
அஹரஹ: - ஒவ்வொரு நாளும்
தநுதே ஸ்ம - செய்தான்

நான்கு முகங்களைப் பெற்ற பிரம்மன் ஒரே ஸமயத்தில் நான்கு வேத மந்த்ரங்களாலும் திறமையுடன் துதித்தானாம். இப்படி ஒரே ஸமயத்தில் துதிப்பதென்பது சிவனாலும் திருமாலாலும் இயலாததால் அவர்களும் வியந்தார்களாம். உத்ஸவம் நடக்கும் நாள்களில் எல்லாம் இப்படி உன் எதிரில் நின்று கொண்டு துதித்தான் ப்ரஹ்ம தேவன்.

तव महे स्तवकोटिचिकीर्षया दृगधिका रसनाश्वकमे रमे।
रचयितुं स्तवमेकरसज्ञया कृशतमं शतमन्युरतित्रपः ॥ २६ ॥

தவ மஹே ஸ்தவகோடிசிகீர்ஷயா
த்ருகதிகா ரஸநாஶ்சகமே ரமே।
ரசயிதும் ஸ்தவமேகரஸஜ்ஞயா
க்ருஶதமம் ஶதமந்யுரதித்ரப:॥

ஹே ரமே - ஸமயே!
சதமந்யு: - இந்த்ரன்
தவ மஹே - உனது தோத்திரத்தில்
ஏக ரஸஜ்ஞயா - ஒரு காக்கால்
க்ருசதமம் - அல்பமான
ஸ்தவம் - தோத்திரத்தை

ரசயிதும் - செய்வதற்கு
இதத்ரப: - வெட்கப்பட்டவனுய்
ஸ்தவகோடி - பல ஸ்தோத்ரங்களை
சிகீர்ஷயா - செய்ய விரும்பியவனுய்
த்ருகதிகா: - அவன் கண்களிலும் அதிகமான (ஆயிரக்கணக்கான)
ரஸநா: - நாக்குகளை
இயேஷ - விரும்பினான்.

ப்ரஹ்மதேவன் தமது நான்கு முகங்களாலும் தேவியைத் துதித்ததை இந்த்ரன் கண்டான். தானும் அப்படியே துதிக்க வேண்டம் என எண்ணினுன். ஆனால் ப்ரஹ்மனுக்கு நான்கு முகங்களும் நான்கு நாக்குகளும் உள. இந்த்ரனுக்கோ ஒரு முகம் தானே உள்ளது. அதனுல் எப்படி அவனுக்கு ஸமமாகத் துதிக்க முடியும் என வெட்கப்பட்டான். இந்த்ரனுக்கு ஆயிரம் கண்கள் இருப்பதால் அதனினும் அதிமாக நாக்கைப் பெற்றால் மிகுதியாகத் துதிக்கலாம் என்பதால் ஆயிரம் நாக்கை விரும்பினுனம்.

जननि गन्धवहैर्भवदुत्सवे खगपतिः श्रुतिसौरभशोभनैः ।
श्रमहरैर्जनितैः निजपक्षतिव्यजनतो जनतोषणमातनोत् ॥ २८ ॥

ஜநநி கந்தவஹைர்பவதுத்ஸவே
ககபதி: ஶ்ருதிஸௌரபஶோபநை: ।
ஶ்ரமஹரைர் ஜநிதை: நிஜபக்ஷதி-
வ்யஜநதோ ஜநதோஷணமாதநோத் ॥ 28 ॥

ஹே ஜநநி - தாயே!
பவதுத்ஸவே - உனது உத்ஸவத்தில்
ககபதி: - கருடன்
நிஜபக்ஷதி - தனது இரக்கையாகிற
வ்யஜநத: - விசிறியால்
ஜநிதை: - உண்டு பண்ணப்பட்டதும்
ச்ருதிஸௌர பசோபநை: - வேதமணம் கமழ்வதும்
ச்ரமஹரை: - களைப்பைப் போக்க வல்லதுமான
கந்தவஹை: - காற்றால்
ஜநதோஷணம் - மக்களின் ஸந்தோஷத்தை
ஆதநோத் - தோற்றுவித்தான்.

தாயே! உனக்குச் செய்யும் கைங்கர்யத்தினும் உன் அடியார்களுக்குச் செய்யும் கைங்கர்யமே உயர்ந்ததென எண்ணினான் கருடன். கருடனுடைய ஒவ்வொரு உறுப்பும்

ஒவ்வொரு வேதப்பகுதி என்பர். ப்ருஹத் ரதந்தரம்'' என்ற பெயர் கொண்ட ஸாமம் கருடனின் இறக்கைகளாம். எனவே அந்த வேதமணம் கமழும் இறக்கையின் காற்றால் வீதியில் உலா வருவதால் உண்டாகும் ச்ரமத்தை போக்கினான். அடியார்களுக்கு என்கிறார்.

तनुभृतां तव देवि महोत्सवे नटनगाननतिस्तवनादयः ।
परमभक्तिभरादिह नाभवन् श्रमकरा मकरालयकन्यके ॥ २९ ॥

தநுப்ருதாம் தவ தேவி மஹோத்ஸவே
நடநகாநநதிஸ்தவநாதய: ।
பரமபக்திபராதிஹ நாபவந்
ஶ்ரமகரா மகராலயகந்யகே ॥

ஹே தேவி - பகவானின் மஹிஷியே !!
மகராலய கன்யகே - கடல் குமரியே
தநு ப்ருதாம் - மக்களுக்கு
நடந காந, நதி ஸ்தவநாதய: - நடித்தல் பாடுதல் வணங்குதல் ஸ்தோத்தரித்தல் போன்ற கைங்கர்யங்கள்
பரமபக்திபராத் - மிகுந்த பக்தியின் மேன்மையால்
ச்ரமகரா : - உடலுக்கு களைப்பை உண்டு பண்ணுவனவாக
நாபவந் - ஆகவில்லை

கடல்குமரியின் உத்ஸவத்தில் அவரவர் சக்திக்கும் பக்திக்கும் ஏற்பட நடித்தல், பாடுதல், வணங்குதல் ஸ்தோத்தரித்தல் போன்ற செயல்களை மக்கள் அனைவரும் செய்தனர். இருப்பினும் எவ்வித ஶ்ரமமும் எவருக்கும்உண்டாகவில்லை.

पदयुगं तव भक्ति भरादहंप्रथमिकामुपगम्य सुरस्त्रिया ।
हरिपुरन्ध्रिमहेंगजितः स्फुरत्कनकया न कया परिचर्यते ॥ ३० ॥

பதயுகம் தவ பக்தி பரோதஹம்
ப்ரதமிகா முபகம்ய ஸுரஸ்த்ரியா
ஹரிபுரந்த்ரி மஹேஙகஜித: ஸ்புரந்
கநகயா ந கயா பரிசர்யதே ॥

ஹரிபுரந்த்ரி - ஹரியின் மஹிஷியே !
தவ மஹே - உனது உத்ஸவத்தில்
அங்க - உடலின் சோபையால்
ஜித - ஜெயிக்கப்பட்டதும்
ஸ்புரத் - நன்கு ப்ரகாசிப்பதுமான
கநகயா - தங்ககமணிந்தவளான
கயா - எந்த
ஸுரஸ்த்ரியா - தேவ மாதரால்
பக்திபாரத் - பகதியின் மிகுதியால
அஹம் ப்ரதமிகாம் - நான்முன்னே நான் முன்னே என்ற போட்டியை
ப்ராப்ய - அடைந்து
பதயுகம் - உனது இரண்டு திருவடிகள்
ந பரிசர்யதே - உபசரிக்கப்படவில்லே !

உயர்ந்தவர்களான உருப்பசி அரம்பை போன்ற அப்ஸரஸ்த்ரீகளும் போட்டி போட்டுக் போட்டுக் கொண்டு திருவடிக்குப் பணிவிடை செய்தனர். *(30)*

दिनकरं तमसामिव राजयः कमल वासिनि कल्मष पंक्तयः ।
अपिविलोकयितुं प्रभवन्ति ते जनमहो न महोत्सदर्शिनम् ॥ ३१ ॥

தி நகரம் தமஸாமிவராஜய: கமலவாஸி நி கல்மஷ பங்க்தய:
அபிவிலோகயிதும் ப்ரபவந்தி தே ஜநமஹோ ந மஹோத்ஸ்வ தர்சிநம்

கமலவாஸிநி - தாமரையில் வாழ்பவளே !
கல்மஷபங்க்தய: - பாபக்கூட்டங்கள்!
மஹோத்ஸவ தர்சிநம் - உனது உத்ஸவத்தை ஸேவிப்பவனான
ஜநம் - புருஷனை
தமஸாம் ராஜய: - இருளின் கூட்டம்
திநகரமிவ - சூர்யனைப் போல்
விலோகயிதும் - காண்பதற்கும்
ந ப்ரபவந்தி - தகுதி உடையனவாக இல்லே.

சூர்யனுடைய வெளிச்சத்தால் இருள் இல்லாமல் போய் விடுவது போல் தாமரையாளை ஸேவிப்பவனின் பாபம் அடியோடு அழிந்து விடுகிறது. *(31)*

तव महे सुरमानवदानव - प्रभृतिपादहतिप्रभवै रमे।
क्षितिरजोनिचयैः स्थगितातपो दिनकरो न करोति जनव्यथाम्॥ ३२॥

தவ மஹே ஸுரமாநவதாநவ -
ப்ரப்ருதிபாதஹதிப்ரபவை ரமே ।
க்ஷிதிரஜோநிசயை: ஸ்தகிதாதபோ
திநகரோ ந கரோதி ஜநவ்யதாம் ॥ 32 ॥

ஹே ரமே - லக்ஷ்மியே
தவ மஹே - உனது உத்ஸவத்தில்
திநகர: - சூரியன்
ஸுரதானவமானவ ப்ரப்ருதி - தேவர், அரக்கர், மனிதர் முதலானவர்களின்
பாதஹதி - கால்படுதலால்
ப்ரபவை: - உண்டான
க்ஷிதி - பூமியின்
ரஜோநிசயை: - துகள்களின் கூட்டத்தால்
ஸ்தகித - மறைக்கப்பட்ட
ஆதப: - கிரணங்களை உடையவனாய்
ஜநவ்யதாம் - மக்களின் துன்பத்தை
ந கரோதி - செய்யவில்லை.

லக்ஷ்மியின் உத்ஸவத்தை ஸேவிக்க வந்த தேவர் அரக்கர் மனிதர் கந்தர்வர் யக்ஷ ராக்ஷஸர்கள் முதலானோரின் கால் அடிவைப்பால் எழுப்பப்பட்ட தூசி சூரியனின் கிரணத்தையே மறைத்து விட்டது. கூட்டத்தின் மிகுதி வாக்குக்கும் எட்டாதது என்பது கருத்து.

अथ तवास्यविधोरवलोकनात् सुरकराम्बुरुहाणि महोत्सवे।
मुकुलितान्युडुपङ्क्तिपरिस्फुर - न्नवरदे वरदे कमलालये॥ ३३॥

அத தவாஸ்யவிதோரவலோகநாத்
ஸுரகராம்புருஹாணி மஹோத்ஸவே ।
முகுலிதாந்யுடுபங்க்திபரிஸ்புரந் -
நவரதே வரதே கமலாலயே ॥ 33 ॥

உடுபங்க்தி - நக்ஷத்திரங்களின் வரிசைபோல்
பரிஸ்புரத் - ப்ரகாசிக்கும்
நவரதே - அழகிய பற்களை உடையவளே !
வரதே - வேண்டியதைத்தருபவளே !
கமலாலயே - தாமரையில் வாழ்பவளே !!
மஹோத்ஸவே - உத்ஸவத்தில்
தவ ஆஸ்யவிதோ: - உனது முகமாகிய சந்திரனை
அவலோகநாத் - கண்டதால்
ஸுரகர - தேவர்கைகளாகிற
அம்புருஹாணி அத - தாமரைகள் முழுவதும்
முகுலிதாநி - மூடிக்கொண்டன.

கமலையின் முகமாகிய சந்திரனைக் கண்டனவாம் தேவர்களின் கைகளாகிய தாமரைகள். சந்திரனைக் கண்ட மலர்ந்த தாமரை மூடிக்கொள்வது இயல்பானமையின் கைகளாகிய தாமரைகளும் மூடிக்கொண்டன. கைகளைக் குவித்து வணங்கினார்கள் என்பது கருத்து.

मुकुलितं नियमेन कराम्बुजै - र्मुदितमक्षिचकोरकुलैः सताम्।
तव महेऽम्ब हरौ नयनीभवत् - रविविधौ विविधौजसि भात्यपि ॥ ३४ ॥

முகுலிதம் நியமேந கராம்புஜைர் -
முதிதமக்ஷிசகோரகுலை: ஸதாம் ।
தவ மஹே(அ)ம்ப ஹரௌ நயநீபவத் -
ரவிவிதௌ விவிதௌஜஸி பாத்யபி ॥ 34 ॥

ஹே அம்ப - தாயே!
தவ மஹே - உன் உத்ஸவத்தில்
நயநீபவத் - கண்களாக இருக்கும்
ரவிவிதௌ - சூர்ய சந்திரர்கள்
விவிதௌஜஸி - பலவகை ஒளியை உடையவர்களாக -
ஹரௌ - நாராயணனிடம்
பாத்யபி - ப்ரகாசித்த போதும்
ஸதாம் - ஸத்புருஷர்களின்
கராம்புஜை: - கைகளாகிய தாமரைகளாலே
நியமேந - எப்போதும்
முகுலிதம் - மூடப்பட்டே இருந்தன
அக்ஷிசகோரகுலை: - கண்களாகிய சக்ரவாகப் பக்ஷிகளால்
நியமேந - எப்போதும்
முதிதம் - மகிழ்ச்சியுடனேயே இருக்கப்பட்டன.

சூரிய சந்திரர்கள் நாராயணனின் வலக்கண்ணும் இடக்கண்ணுமாவர். இருவரது ஒளியும் சூடாக இருத்தல் குளிர்ந்திருத்தல் என்ற தன்மைகளால் வேறுபட்டனவே. தாய்தந்தையரிருவரும் சேர்ந்தே உத்ஸவம் கண்டருளுவதால் இவ்விரு ஒளிகளும் எப்போதும் ப்ரகாசித்துக் கொண்டேதான் இருக்கும். தாமரை சூரிய ஒளியில் மலர்ந்து சந்திர ஒளியில் குவிந்துவிடும். அதே போல் சந்திரனின் கிரணங்களைத்தமது கண்களாலேயே பருகும் ஒரு வகைப் பறவை உண்டு. அதற்கு பகலில் நிலவு கிடைக்காதலால் அது துன்பப்படும். சூரிய சந்திரர்களின் ஒளி உத்ஸவத்தில் ப்ரகாசித்துக் கோண்டே இருப்பதால் தாமரை பாதி மலர்ந்தும் பாதி குவிந்துமோ அல்லது சில நேரம் மலர்ந்தும் சிறிது நேரம் குவிந்துமோ இருக்க வேண்டும். பக்ஷிகளும் இன்ப துன்பங்களுடையனவாக இருக்க

வேண்டும். அப்படியின்றி எப்போதும் தாமரை குவிந்தே இருந்ததும், சகோர பக்ஷியும் எப்போதும் இன்பமாகவே இருந்ததும் ஆச்சர்யம்.

तव सिषेविषया विषयान्तर - त्यजननिश्चलचेतस उत्सवे।
प्रजहुरम्ब तपोऽपि पराशर - प्रभृतयो भृतयोगकलाः स्वयम्॥ ३५॥

தவ ஸிஷேவிஷயா விஷயாந்தர -
த்யஜநநிஸ்சலசேதஸ உத்ஸவே ।
ப்ரஜஹுரம்ப தபோ(அ)பி பராஶர -
ப்ரப்ருதயோ ப்ருதயோககலா: ஸ்வயம் ॥ 35 ॥

அம்ப - தாயே !

பராசரப்ரப்ருதய: - பராசரர் முதலான தவசிகளும்

விஷயாந்தர - தவம் தவிர்த்த பிறவற்றை

த்யஜந - விட்டதாலே

நிஸ்சல - சஞ்சலமற்ற

சேதஸ: - மனமுடையராய்

ஸ்வயம் - தனது ப்ரயோஜநத்துக்கு மட்டும்

ப்ருதயோககலா அபி - யோகாப்யாஸம் செய்தபோதும்

உத்ஸவே - உத்ஸவஸமயத்தில்

தவ ஸிஷேவிஷயா - உனக்கு பணிவிடை செய்ய விரும்பி

தப: - யோகாப்யாஸத்தையும்

ப்ரஜஹு: - விட்டனர்

தமது யோக ஸமாதியாலே உனது மஹிமையைக் கண்டறிந்தவரான வ்யாஸர் பராசரர் போன்ற மஹரிஷிகள் தவத்தைத் தவிர்த்து பிறவற்றில் மனதை செலுத்தாததால் சஞ்சலமற்ற மனமுடையவராக இருந்த போதும் உத்ஸவத்தின் போது உனக்குக் கைங்கர்யம் - பணிவிடை - செய்ய ஆவல் கொண்டவராய் யோகத்தையும் விட்டனர்.

सुमनसो मुनयश्च तवोत्सवे त्रिदिवधेनुपयोरसधारया।
विरचयन्त्यभिषेकविधानमृक्चयजुषां यजुषां प्रकरै रमे॥ ३६॥

ஸுமநஸோ முநயஸ்ச தவோத்ஸவே
த்ரிதிவதேநுபயோரஸதாரயா ।
விரசயந்த்யபிஷேகவிதாநம் -
ருக்சய ஜுஷாம் யஜுஷாம் ப்ரகரை ரமே ॥ 36 ॥

ரமே - லக்ஷ்மியே !

உத்ஸவே - உனது உத்ஸவத்தில்

ஸுமநஸ: - இந்திரன் முதலான தேவர்களும்

முநய: - வ்யாஸர் பராமரர் போன்ற ரிஷிகளும் ஒன்று கூடி

த்ரிதிவதேனு - காமதேனுவின்

பயோரஸதாரயா - பால் பெருக்கால்

ருக்சய ஜுஷாம் - அபிஷேகத்துக்கு உரியருக் மந்த்ரங்களுடன் சேர்ந்த

யஜுஷாம் - யஜுர் வேதத்தின்

ப்ரகரை: - மந்த்ரங்களுடன்

தவ - உன்னுடைய

அபிஷேகவிதாநம் - ஸ்நபநத்தை- அபிஷேக கலத்தை

விரசயந்தி - தயாராக்குகின்றனர்.

வீதி வலம் வந்த களைப்புத் தீருவதற்காக மிகஉயர்ந்த புருஷர்கள் மிகச்சிறந்த பாலால் மந்திரத்தை ஓதிக்கொண்டே உனக்கு அபிஷேகம் செய்வித்தனர்.

विधिशिवादिसुरेषु तवोत्सवे विरचयत्स्वभिषेचनमिन्दिरे।
मनुशतं मुनिमाणवकाः स्फुट - ध्वनि जगुर्निजगुर्वभिचोदिताः ॥ ३७॥

விதிமிவாதிஸுரேஷு தவோத்ஸவே
விரசயத்ஸ்வபிஷேசநமிந்திரே ।
மநுமதம் முநிமாணவகா: ஸ்புட -
த்வநி ஜகுர்நிஜகுர்வபிசோதிதா: ॥ 37 ॥

ஹே இந்திரே - லக்ஷ்மியே !

உத்ஸவே - உனது உத்ஸவத்தில்

முனிமாணவகா: - மஹரிஷிகளின் சீடர்கள்

நிஜகுரு - தங்களது ஆசிரியர்களால்

அபிசோதிதா: - ஏவப்பட்டவர்களால்

விதிமிவாதி - ப்ரம்மன் சிவன் முதலான

ஸுரேஷு - தேவர்கள்

தவ அபிஷேசநம் - உனது நீராட்டத்தை

விரசயத்ஸு - அவர்களே செய்யும் போது

மநுமதம் - பல மந்திரங்களை

ஸ்புடத்வநி - உயர்ந்தகுரலில்

ஜகு: - ஓதினர்

தேவரும் முனிவரும் ஒன்று கூடி அபிஷேகத்தைச் செய்யும் போது பதினாறு வயதுடைய ருஷிகுமாரர்கள் நீர், பால், தயிர் முதலியனவற்றிற்குரிய மந்திரங்களை போட்டியிட்டுக் கொண்டு உரத்தகுரலில் ஓதினர்.

तव महेष्वभिषेकविधौ कृते जगदशेषमगादपतापताम्।
तदिदमद्भुतमम्ब फलिस्थलात् फलगतिर्लगति स्म परत्र यत्॥ ३८॥

தவ மஹேஷ்வபிஷேகவிதௌ க்ருதே
ஜகதஸேஷமகாதபதாபதாம் ।
ததிதமத்புதமம்ப பலிஸ்தலாத்
பலகதிர் லகதி ஸ்ம பரத்ர யத் ॥ 38 ॥

அம்ப - தாயே !
மஹேஷு - உத்ஸவத்தில்
தவ - உனக்கு
அபிஷேகவிதௌ - அபிஷேகம்
க்ருதே ஸதி - செய்த வளவில்
அசேஷம் ஜகத் - உலகங்களிலுள்ள அனைத்து உயிரினங்களும்
அபதாபதாம் - வெப்பமின்மையை
அகாத் இதியத் - அடைந்தது என்பது
அத்புதம் - ஆச்சரியம்
யத் - ஏனென்றால்
பலிஸ்தலாத் - காரணமுள்ள இடத்தைக் காட்டிலும்
பாத்ர - வேறிடத்தில்
பலகதி: - கார்யம்
லகதி ஸ்ம - தோன்றின்றது அதனால் ஆச்சரியம் என்று அன்வயம் கொள்ள வேண்டும்

காரணம் கார்யம் இரண்டும் ஒரே இடத்தில் இருக்கவேண்டும். காரணம் இராது கார்யம் தோன்றாது. நீர்பட்டஇடத்தில்தான் வெப்பம் போகும். ஆனால் இங்கு அபிஷேகம் தாய்க்கு; வெப்பம் அகன்றது உலகுக்கு. ஆகவே ஆச்சர்யம் என்கிறார்.

உலகம் முழுவதும் தாயின் உடலானதால் இவள் அபிஷேகத்தால் உலகம் குளிர்ந்தது என்பது கருத்து.

अथ तवोत्सवधाम्नि बुधाः सुधा - करसहोदरि सादरमर्चयन्।
सुरहिते भवतीं श्रुतषट्पदा - रवकुलैर्वकुलैरपि चम्पकैः॥ ३९॥

அத தவோத்ஸவதாம்நி புதா: ஸுதா -
கரஸஹோதரி ஸாதரமர்ச்சயந் ।
ஸுரஹிதே பவதீம் ஸ்ருதஷட்பதா -
ரவகுலைர்வகுலைரபி சம்பகை: ॥ 39 ॥

ஸுதாகர ஸஹோதரி - சந்திரனுடன் பிறந்தவளே

தவ உத்ஸவ தாம்நி - உனது உத்ஸவ மண்டபத்தில்

புதா: - தேவர்

பவதீம் - உன்னை

ஸுரபிலை: - நறுமணமுள்ளதும்

ச்ரிதஷட்பதாரவ குலை: - வண்டுகள் ஒலிப்பதுமாகிய

வகுலை: - மகிழம் பூவாலும்

சம்பகை: - செண்பகப் பூவாலும்

ஸாதரம் - பக்தியுடன்

ஆர்சயந் - அர்ச்சனை செய்தனர்

அபிஷேகம் முடிந்ததும் தேவர் அர்ச்சனை செய்தனர்.

मधुलिहां भवदङ्घ्रिसमर्पित - प्रसववासवतां कमले तदा।
सुरकिरीटगताज्जगृहे भिदा रवलवैर्बलवैरिशिलाकुलात्॥ ४० ॥

மதுலிஹாம் பவதங்க்ரிஸமர்ப்பித -
ப்ரஸவவாஸவதாம் கமலே ததா ।
ஸுரகிரீடகதாஜ்ஜக்ருஹே பிதா
ரவலவைர் பலவைரிஶிலாகுலாத் ॥ 40 ॥

கமலே - தாமரையாளே !

ததா - உத்ஸவத்தின் போது

பவதங்க்ரி - உனது திருவடிகளில்

ஸமர்பித - ஸமர்பிக்கப்பட்ட புஷ்பத்தில்

ப்ரஸவ - உண்டான

வாஸவதாம் - தங்கள் வாஸத்தை உடைய

மதுலிஹாம் - வண்டுகளுக்கு

ஸுரகிரீட - தேவர்களின் கிரீடத்தில்

கதாத் - இழைக்கப்பட்டுள்ள

பலவைரிசிலா - இந்திரநீலக்கல்லின்

குலாத் - ஸமூஹத்திலிருந்து

பிதா - வேற்றுமை

ரவலவை: -வண்டுகளின் சப்தத்தால்

ஜக்ருஹே - மக்களால் அறியப்பட்டது.

அர்ச்சனையின் போது திருவடிகளில் ஸமர்ப்பிக்கப்பட்ட பூக்களில் தேன் மிகுதியாக இருக்கின்றன. அவற்றைப் பருகிக்கொண்டு வண்டுகள் ஆடாது அசையாது அமர்ந்துள்ளன. அதேஸமயம் தேவர்கள் கமலையை வணங்குகின்றனர். அவர்கள்

கிரீடங்களில் இந்திர நீலக்கல்கள் இழைக்கப்பட்டுள்ளன. இக்கற்களுக்கும் அசையாது அமர்ந்துள்ள வண்டுகளுக்கும் வேறுபாட்டை வண்டுகள் தேனுண்ட மகிழ்ச்சியால் செய்யும் ரீங்காரத்தாலேயே மக்கள் அறிந்தனர்.

தேவர் மது சிந்தும் புஷ்பங்களால் அர்ச்சித்துத் திருவடியை வணங்கினர் என்பது கருத்து.

सुमनसो भवदङ्घ्रिजुषां रमे सुमनसामनुषङ्गत उत्सवे।
तव पदाम्बुजभाजमपूजयन् सुमलिनामलिनामपि मण्डलीम् ॥ ४१ ॥

ஸுமநஸோ பவதங்க்ரிஜுஷாம் ரமே
ஸுமநஸாமநுஷங்கத உத்ஸவே ।
தவ பதாம்புஜபாஜமபூஜயந்
ஸுமலிநாமலிநாமபி மண்டலீம் ॥ 41 ॥

ஹே ரமே - ரமையே !
ஸுமநஸ: - தேவர்கள்
பவதங்க்ரி - உனது திருவடிகளை
பதாந்திகபாஜாம் - திருவடியை அடைந்ததும்
ஸுமலிநாம் - கருப்பானதுமான
அலிநாம் - வண்டுகளின்
ஜுஷாம் - அடைந்துள்ள
ஸுமநஸாம் - பூக்களுடைய
அநுஷங்கத: - ஸம்பந்தத்தால்
தவ - உன்னுடைய
மண்டலீம் - கூட்டத்தையும்
அபூஜயந் - பூஜித்தனர்

புஷ்பங்களுடன் லக்ஷ்மியின் திருவடிகளில் உட்கார்ந்து கொண்டிருக்கும் வண்டுகளின் மீது தேவர்களால் அர்ச்சனை செய்யப்பட்ட புஷ்பங்கள் விழுந்தன என்பது பொருள்.

பவதங்க்ரிஜுஷாம் - உனது திருவடிளில் ப்ரீதி உடையவர்களுடனும்
ஸுமநஸாம் - தூய்மையான மனம் உடையவர்களுடனும்
அநுஷங்கத: - ஸஹவாஸத்தால்
ஸுமலிநாம் - பாபிகளுடைய
மண்டலீம் - ஸமூகத்தையும்
அபூஜயந் - பூஜித்தனர்

முன் அஸத்தாக இருந்து லக்ஷ்மிபக்தர்களின் ஸஹவாஸத்தால் ஸத்தாக மாறியவர்களுக்கும் பூஜிப்பதற்கு உரியவராம் தன்மை உண்டாகின்றது என்ற கருத்தும் கிடைக்கின்றது.

स्वशिरसा दधतः कुसुमं मुदा सुमहिता इति नाद्भुतमुत्सवे।
चरणयोः सुरपङ्क्तिभिरर्पितं तव नरा वनराशितनूभवे॥ ४२॥

ஸ்வஶிரஸா தததः குஸுமம் முதா
ஸுமஹிதா இதி நாத்புதமுத்ஸவே ।
சரணயோ: ஸுரபங்க்திபிரர்ப்பிதம்
தவ நரா வநராஶிதநூபவே ॥ 42 ॥

வநராசிதநூபவே - கடல்குமரி !
உத்ஸவே - உனது உத்ஸவத்தில்
ஸுர - தேவர்களின்
பங்க்திபி: - கூட்டத்தால்
முதா - ஸந்தோஷத்துடன்
தவ - உன்னுடைய
சரணயோ: - திருவடிகளில்
அர்சிதம் - ஸமர்பிக்கப்பட்ட
குஸுமம் - புஷ்பத்தை
சிரஸா - தலையில்
தததः - சூடியுள்ள
நரா: - மனிதர்கள்
ஸுமஹிதா: - உலகால் பூஜிக்கப்பட்டவர்களாக
பவந்தி - ஆகின்றனர்
இதி - என்பது
நாத்புதம் - ஆச்சரியமன்று.

லக்ஷ்மியின் திருவடிகளால் ஸமர்பிக்கப்பட்ட பூ பூஜிப்பதற்கு உரியதாதலின் அதைச் சூடியவர்களும் பூஜிக்கத் தக்கவராகின்றனர் என்கிறார்.

எவரால் இப்பூசூடப்பட்டதோ அவர் நறுமணமுடையவர் ஆகின்றனர் என்பது உண்மைக் கருத்து.

पनसचूतफलादिभिरुज्ज्वलं सरससूपमपूपशतावृतम् ।
अथ निवेदनमम्ब सुरैःक्षरद् - घृतवरं तव रम्यमकल्प्यत ॥ ४३ ॥

பநஸசூதபலாதிபிருஜ்ஜ்வலம்
ஸரஸஸூபமபூபஶதாவ்ருதம் ।
அத நிவேதநமம்ப ஸுரை: க்ஷரத் -
க்ருதவரம் தவ ரம்யமகல்ப்யத ॥ 43 ॥

அத - அர்ச்சனைக்குப்பின்
அம்ப - தாயே
ஸுரை: - தேவரால்
பநஸசூதபலாதிபி: - பலா, மா, வாழைகளால்
ஸரஸ - மிக மதுரமான
ஸூபம் - பருப்பு முதலிய கறி அமுதுகளுடன் சேர்ந்ததும்
அபூபஶதாவ்ருதம் - வடை போன்ற நூற்றுக் கணக்கான பக்ஷணங்களுடன் சேர்ந்ததும்
க்ஷரத் - பெருகும்
க்ருதவரம் - நெய்யுடன் சேர்ந்ததும்
ரம்யம் - உயர்ந்ததுமாகிய
நிவேதநம் - நைவேத்யப் பொருள்கள்
அகல்ப்யத - எதிரில் ஸமர்ப்பிக்கப்பட்டன

அர்ச்சனை முடிந்தபின் முக்கனிகள், பருப்பு, நெய்யால் செய்யப்பட்டதும் நெய் சொட்டுவதுமாகிய தின்பண்டங்கள் முதலான நைவேத்யப் பொருள்கள் உனது மகிழ்ச்சிக்காக உன் எதிரில் வைக்கப்பட்டன.

जननि शेषतया भृशमुत्सुकै - स्तव निवेदितशेषमभुज्यत ।
सुमधुरं सुमनोभिरथोत्सवा - पवरके वरकेतनभूषिते ॥ ४४ ॥

ஜநநி ஶேஷதயா ப்ருஶமுத்ஸுகைஸ் -
தவ நிவேதிதஶேஷமபுஜ்யத ।
ஸுமதுரம் ஸுமநோபிரதோத்ஸவா -
பவரகே வரகேதநபூஷிதே ॥ 44 ॥

அத - நிவேதநத்துக்குப் பின்
ஶேஷதயா - இயல்பாய் அமைந்த உனதடிமை என்ற தன்மையாலே
கேதந - கொடிகளால்
அலங்க்ருதே - அலங்காரம் செய்யப்பட்ட
உத்ஸவ - உத்ஸவ வீட்டின்
அபவரகே - சாப்பிடும் ஹாலில்
ப்ருஶம் - மிகவும்
உத்ஸுகை: - சாப்பிடவிரும்பிய
ஸுமநோபி: - தேவராலே
வர - உயர்ந்த
ஸுமதுரம் - மிகவும் இனியதும்
தவநிவேதித ஶேஷம் - உனக்கு நைவேத்யம் செய்யப்பட்டு எஞ்சியதுமான பொருள்கள்
அபுஜ்யத - உண்ணப்பட்டன

உயிரினங்கள் யாவற்றுக்கும் இலக்குமி தலைவியானமையின் தலைவி உண்டது போக எஞ்சியதை உன்பது அடிமைக்கு உயர்ந்ததாதலின். தாய் அமுது செய்து எஞ்சியது என்ற பக்தியுடன் தாயுண்ட மீதியை எல்லோரும் உண்டனர்.

अथ सुधान्यभवं जनमोदनं जननि मानसरञ्जनमोदनम् ।
भवदवेक्षणसंस्कृतमत्ति यो रसनया स न याचति तां सुधाम् ॥ ४५ ॥

அத ஸுதாந்யபவம் ஜநமோதநம்
ஜநநி மாநஸரஞ்ஜநமோதநம் ।
பவதவேக்ஷணஸம்ஸ்க்ருதமத்தி யோ
ரஸநயா ஸ ந யாசதி தாம் ஸுதாம் ॥ 45 ॥

ஜநநி - தாயே
அத - நீ அமுது செய்தபின்
ஸுதாந்யபவம் - அம்ருதத்தின் மறு உருவமானதும்
ஜநமோதநம் - ஜநங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதும்
மாநஸரஞ்ஜநம் - மநோஜ்ஞமானதும்
பவதவேக்ஷண - நீ பார்த்ததால்
ஸம்ஸ்க்ருதம் - குணமுடையதாகிய-தூமான
ஓதநம் - உணவை
ரஸநயா - வாயால்
ய: அத்தி - எவன் உண்கிறானோ
ஸ: - அவன்
தாம் ஸுதாம் - தேவருணவான அமிழ்தத்தை
ந யாசதி - யாசிக்கமாட்டான்

"அந்நாத்யம் புரத: ந்யஸ்தம் சக்ஷுஷா க்ருஹ்யதே மயா" என எதிரில் வைக்கப்பட்ட உணவுப் பொருள்களை நான் கண்களால் ஏற்றுக் கொள்கிறேன் என்பது பகவானின் வாக்யம். தாய்க்கும் அது பொருந்துவதே. ஆகவே அவள் ஏற்ற மீதி சிறப்பான உணவாதலின் இங்ஙனம் கூறினார்.

अधिभवद्भवनाग्रवितर्दिकं जननि जाग्रत एव जयादयः ।
अगणयन्नमरानपि तावके घनमहे न महेन्द्रपुरःसरात् ॥ ४६ ॥

அதிபவத்பவநாக்ரவிதர்திகம்
ஜநநி ஜாக்ரத ஏவ ஜயாதய: ।
அகணயந்நமராநபி தாவகே
கநமஹே ந மஹேந்த்ரபுர: ஸராத் ॥ 46 ॥

ஜநநி - தாயே !

தாவகே - உன்னுடைய

கநமஹே - மக்கள் கூட்டம் மிக்க உத்ஸவத்தில்

அதிபவத்பவநாக்ர விதர்திகம் - உனது ஆலயவாயிலிலுள்ள திண்ணையில்

ஜாக்ரத ஏவ - கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தபோதும்

ஜயாதய: - ஜயவிஜயர் முதலான எட்டுத்வாரபாலகர்களும்

மஹேந்த்ர புரஸ்ஸராத் - இந்திரன் முதலான தேவர்களையும்

நாகணயந் - அறிய முடியவில்லை

உனது கோயில் வாயில்களில் உள்ள மேடைகளில் நின்று கொண்டு வாயில் காப்பவர்களான ஜயன் விஜயன் முதலான எட்டு வாயில்காவலர்களும் கண்களையும் கொட்டாது மிகக் கவனமாகக் காவல் புரிந்தபோதும் கோயிலுள்ளே உன்னையே ஸேவித்துவிட்டுத்தனது பரிவாரத்துடன் இந்திரன் முதலான தேவர்கள் வெளியே சென்றபோதும் அதனை இவர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை. அத்துணை மிகுதியாக இருந்தது மக்கள் தொகை என்பது கருத்து.

जनविमर्दशमोद्यतनिर्दयोद्भटचमूपतिवेत्रहतिस्पृशाम् ।
प्रहृतिरस्ति मदम्ब महे तवा - र्चनकृतां न कृतान्तकृतान्ततः ॥ ४७ ॥

ஜநவிமர்தஶமோத்யதநிர்தயோத் -
படசமூபதிவேத்ரஹதிஸ்ப்ருஶாம் ।
ப்ரஹ்ருதிரஸ்தி மதம்ப மஹே தவார் -
சநக்ருதாம் ந க்ருதாந்தக்ருதாந்தத: ॥ 47 ॥

ஹே மதம்ப - அடியேன் தாயே !

ஜந - உன்னை ஸேவிக்க வரும் மக்களின்

விமர்த - நெருக்கத்தை

சம - போக்குவதற்காக

உத்யத - முனைந்துள்ளவரும்

நிர்தய - தயையின்றி தண்டிப்பவரும்

உத்பட - சூரருமான

சமூபதி - விஷ்வக்ஸேநரது

வேத்ர - பிரம்பின்

ஹதிஸ்ப்ருசாம் - அடிபட்டவர் - களாய்

அர்சநக்ருதாம் - உனக்கு அர்ச்சனை செய்தவர்களுக்கு

அந்தத: - மரணகாலத்தில்

க்ருதாந்தக்ருதா - எமனுடைய

ப்ரஹ்ருதி: - தண்டனை

நாஸ்தி - கிடையாது

தாயின் உத்ஸவத்தை ஸேவிக்க வந்த மக்கள் கொகையை கையில் பிரம்பேந்தி ஒழுங்கு படுத்திச் செலுத்தும் ஸேநாதிபதியான விஷ்வக்ஸேநரின் பிரம்படிப்பட்டுச் சென்று தாய்க்கு அர்ச்சனை செய்தவர் தமது மரணகாலத்தில் எமனின் கையில் அகப்பட்டால் அவர்கள் மோக்ஷமடைவர்.

तव महोत्सववैभवदर्शिनां तनुभृतां विविधैः स्तवनादिभिः ।
प्रमुदिता कमले भवती सतीरपरिपूः परिपूरयति श्रियः ।। ४८ ।।

தவமஹோத்ஸவவைபவதர்ஶிநாம்
தநுப்ருதாம் விவிதை: ஸ்தவநாதிபி: ।
ப்ரமுதிதா கமலே பவதீ ஸதீ-
ரபரிபூ: பரிபூரயதி ஶ்ரிய: ॥ 48 ॥

ஹே கமலே - தாமரையாளே !
பவதீ - நீர்
தவ - உமது
மஹோத்ஸவ - சிறந்த உத்ஸவத்தின்
வைபவ - மேன்மையை
தர்சிநாம் - ஸேவித்த
தநுப்ருநாம் - மக்களுடைய
விவிதை: - பலவகைப்பட்ட
ஸ்தவநாதிபி: - ஸ்தோத்திரம் முதலான கைங்கர்யங்களால்
ப்ரமுதிதா - மகிழ்ந்தவராய்
ஸதீ: - அழிவற்றதும்
அபரிபூ: - நல்வழிவகுப்பது மாகிய
ச்ரிய: - செல்வங்களால்
பரிபூரயதி - நிரம்பச் செய்கிறாய்

உத்ஸவத்தை ஸேவிக்க வந்தவர்களுக்கு நற்பயன்களை அளித்து அவரவர் அகங்களுக்கு அனுப்புகிறாய்.

जननि तस्य जनस्य वृथा सुधासहभवे विदधे विधिरीक्षणे ।
य इह नानुभवेदलसस्तवोत्सवरसं वरसंमदकारणम् ।। ४९ ।।

ஜநநி தஸ்ய ஜநஸ்ய வ்ருதாஸுதா-
ஸஹபவே விததே விதிரீக்ஷணே ।
ய இஹ நாநுபவேதலஸஸ்தவோ-
த்ஸவ ரஸம் வரஸம்மத காரணம் ॥ 49 ॥

ஸுதாஸஹபவே - அம்ருதத்தின் உடன் பிறப்பே !
ய: அலஸ: - எந்த ஒரு மந்தன்
வர ஸம்மத காரணம் - இம்மை மறுமை இன்பங்களைத் தரவல்ல
தவ உத்ஸவரஸம் - உனது உத்ஸவ விசேஷங்களை

இஹ - இந்த வேங்கடாத்ரியில்
நாநுபவேத் - காணமாட்டானோ
விதி: - நான்முகன்
தஸ்ய ஜநஸ்ய - அவனது
ஈக்ஷணே - கண்களை
வ்ருதா விததே - பயனின்றிப் படைத்தான்

கண்படைத்த பயன் உத்ஸவத்தைக் காண்பதே.

भवदीयोत्सवविभवं फणिपतिवाचस्पतिप्रभृतिवर्ण्यम् ।
कथमल्पीयः कवयः कथयन्तु क्षीरनीरधेः कन्ये ॥ ५० ॥

பவதீயோத்ஸவவிபவம்
பணிபதிவாசஸ்பதிப்ரப்ருதிவர்ண்யம் ।
கதமல்பீய: கவய:
கதயந்து க்ஷீரநீரதே: கந்யே ॥ 50 ॥

इत्यात्रेय गोत्र रघुनाथ दीक्षित तनूज
वेंकटार्य दीक्षित कृतिषु
लक्ष्मीसहस्रे उत्सव स्तबकः ।

க்ஷீரதே: கந்யே - பாற்கடல் குமரியே !
பணிபதி - ஆதிசேஷன்
வாசஸ்பதி - ப்ருஹஸ்பதி
ப்ரப்ருதி - முதலானோரால்
வர்ண்யம் - வருணிக்கக்கூடிய
பவதீய - உமது
உத்ஸவவிபவம் - உத்ஸவ மேன்மையை
அல்பதிய: - முழுவறிவல்லாத
கவய: - கவிகள்
கதம் - எப்படி
கதயந்து - வர்ணிப்பர்

ஆயிரம் நாவுடைய ஆதிசேஷனோ வாக்குக்குத் தலைவனான ப்ருஹஸ்பதியோ ஸர்வஜ்ஞனான ருத்ரனோ தான் உனது உத்ஸவ மேன்மையை முழுதுமாக வர்ணிக்க வல்லவராவர். பிறர் சிறிதளவே காட்டுவர்.

கோயில் சப்தம் வங்கீபுரம் வாஜபேயம் (வீராபுரம் ராமானுஜ தீக்ஷிதரின் குமாரரான வீராபுரம் சடகோபாசாரியரால் இயற்றப்பட்ட ரத்நப்ரபா என்கிற லக்ஷ்மீ ஸஹஸ்ர விரிவுரையில் பனிரண்டாவதான மஹோத்ஸவ ஸ்தபகவுரை முடிவடைந்தது.

சுபம்.

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

वदान्यस्तबकः - १३ (வதான்யஸ்தபக:)

वाराशिदुहितुस्तस्या वरिवस्यां विदध्महे ।
अनन्यजनसामान्यामाहुर्यस्या वदान्यताम् ॥ १ ॥

வாராஶிதுஹிதுஸ்தஸ்யா வரிவஸ்யாம் விதத்மஹே ।
அநந்யஜநஸாமாந்யாமாஹுர்யஸ்யா வதாந்யதாம் ॥ 1 ॥

யஸ்யா: - எவருடைய
வதாந்யதாம் - இனிய பேச்சுடன் வழங்குவதை
அநந்யஜந ஸாமாந்யாம் - பிறரிடம் இல்லாததாக
ஆஹு: - சொன்னார்களோ
தஸ்யா: - அந்த
வாராஶிதுஹிது: - கடல் கன்னிக்கு
வரிவஸ்யாம் - பணிவிடைகளை
விதத்மஹே - செய்கிறோம்.

இந்த ஸ்தபகத்தில் இலக்குமியின் ஔதார்யத்தைப் பேசுகின்றாராதலால் இதற்கு வதாந்ய ஸ்தபகம் என்ற பெயர் வந்தது. இனிய பேச்சுடன் ஒருவருக்கு ஒன்று வழங்குவதை வதாந்யதா என்பர். இப்படி வழங்குவதை ஸ்ரீயிடம் மட்டும் தான் காணமுடியும் என பராசரர் போன்றோர் கூறியுள்ளனர். அத்தகைய இலக்குமிக்கு நம்மாலியன்ற அடிமைச் செயல்களை செய்வோம். *1*

द्वित्वं चेदधिरसनं विलोचनेषु
त्रित्वं वा यदि वदनेषु वा चतुष्ट्वम् ।
यद्वा स्यादधिभुजमेतदेव वक्तुं
दातृत्वं तव कवयस्तदा क्षमेरन् ॥ २ ॥

த்வித்வம் சேததிரஸநம் விலோசநேஷு
த்ரித்வம் வா யதி வதநேஷு வா சதுஷ்ட்வம் ।
யத்வா ஸ்யாததிபுஜமேததேவ வக்தும்
தாத்ருத்வம் தவ கவயஸ்ததா க்ஷமேரந் ॥ 2 ॥

ஹே அம்ப - தாயே !
கவய: - கவிக்கள்
அதிரஸநம் - தங்கள் நாக்கில்
த்வித்வம் சேத் - இரண்டையோ
விலோசநேஷு - கண்களில்
த்ரித்வம் வா - மூன்றையோ

வதநேஷு - முகங்களில்

சதுஷ்ட்வம் யதிவா - நான்கையோ

யத்வா - அல்லது

அதிபுஜம் - கைகளில்

ஏதத் - நான்கையோ

யதிவாஸ்யாத் - பெற்றிருப்பார்களேயானால்

ததா - அப்போது

தவதாத்ருத்வம் - உனது வழங்கும் தன்மையை

வக்தும் - வர்ணிப்பதற்கு

க்ஷமோன் - தகுதியுடையவர் ஆவர்.

விசித்ர சக்தி படைத்தவர்களான ஆதிசேஷன், சிவன் நான்முகன் நாராயணன் என்னுமிவர்களே உனது வள்ளல்தன்மையை வர்ணிப்பதற்கு தகுதியுடையவரேயன்றி என் போன்றோர் ஆகார். 2

य: पिबेज्जलधिमम्ब यस्तरेद्

यश्च तत्र नियतं शयीत वा।

तेन वर्णयितुमर्णवात्मजे

शक्यते तव वदान्यता न वा ॥ ३ ॥

ய: பிபேஜ்ஜலதிமம்ப யஸ்தரேத்

யஶ்ச தத்ர நியதம் ஶயீத வா ।

தேந வர்ணயிதுமர்ணவாத்மஜே

ஶக்யதே தவ வதாந்யதா ந வா ॥ 3 ॥

அம்ப - கடல் கன்னியான்தாயே !

ய: - எவர்

ஜலதிம் - ஸமுத்ரத்தை

பிபேத் - பருகுவரோ

ய: தரேத் - எவர் அதைத் தாண்டுவரோ

தத்ர - ஸமுத்ரத்தில்

நியதம் - எப்போதும்

சயீத - படுத்துக் கொண்டே இருப்பரோ

தேந - அகஸ்த்யர், ஹநுமான், பகவான் என்றுமிவரால்

தவ வதாந்யதா - உனது கொடையாளித் தன்மை

வக்தும் சக்யதே வா - சொல்லமுடியுமோ

ந வா - அல்லது முடியாது தான் போகுமோ.

மஹா ஸாஹஸங்களைச் செய்தவர்களுக்கும் உனது ஔதார்ய வர்ணந விஷயத்தில் ஸந்தேஹமே. 3

अम्ब त्वमेवाश्रितमृत्युहन्त्री
सनातनी सर्वफलप्रदासि ।
स्वयं च पञ्चत्वमुपाश्रितेभ्यो
देवद्रुमेभ्यो लभतां फलं कः ॥ ४ ॥

அம்ப த்வமேவாஸ்ரிதம்ருத்யுஹந்த்ரீ
ஸநாதநீ ஸர்வபலப்ரதாஸி ।
ஸ்வயம் ச பஞ்சத்வமுபாஸ்ரிதேப்யோ
தேவத்ருமேப்யோ லபதாம் பலம் க: ॥ 4 ॥

அம்ப - தாயே !
ஆப்ரித - தஞ்சமடைந்தவரின்
ம்ருத்யு - ஸம்ஸாரத்தை
ஹந்த்ரீ - அழிப்பவள்
த்வமேவ - நீயே
ஸநாதநீ - முக்காலத்துமிருப்பவரும்
ஸர்வபலப்ரதா - புருஷார்த்தங்களளிப்பவருமாக
அஸி - ஆகின்றாய்
ஸ்வயம் ச - தானே
பஞ்சத்வம் - மரணத்தை, ஐந்தாம் தன்மையை
உபாச்ரிதேப்ய: - அடைந்த
கல்பத்ருமேப்ய: - கல்பகாலம் வரை மட்டுமிருக்கும் மரங்களிடமிருந்து கற்பகவ்ருக்ஷத்திடமிருந்து
பலம் - பயனை, பழத்தை
க: லபதாம் - எவனால் அடையமுடியும்.

தாயே ! தஞ்சமடைந்தவரின் ஸம்ஸாரத்தை அழிப்பவரும் அழிவில்லாது முக்காலமுமிருப்பவளும் புருஷார்த்தங்களான தர்மார்த்த காம மோக்ஷங்களை அளிப்பவரும் நீயொருத்தியே பிறரிலர். ஏனெனில் தானே மரிப்பதும் குறிப்பிட்ட காலம் வரை இருப்பதுமாகிய மரத்திடமிருந்து மரணமின்மையை எப்படிப் பெற முடியும்.

மந்தாரம், பாரிஜாதம், ஸந்தானம், கல்பவ்ருக்ஷம், ஹரிசந்தனம் என்ற ஐந்தும் தேவமரங்கள். இவை பூவை மட்டும் அளிப்பன. பழம் இவற்றிடம் கிடையாது. ஆகவே கேட்டோர் கேட்டதையெல்லாம் அளிக்கும் தேவமரத்திடம் பழம் கிடைக்காத போது உன்னையன்றி பலமளிப்பவர் வேறெவருளர் என்கிறார். 4

तामत्युदारां कमले भजे त्वां
यया सुधाब्धौ सहजन्ममात्रात्।
एकस्तरुर्लुब्धवतंसकोऽन्यः
पशुश्च कश्चित्प्रथितो वदान्यः ॥ ५ ॥

தாமத்யுதாராம் கமலே பஜே த்வாம்
யயா ஸுதாப்தௌ ஸஹஜந்மமாத்ராத்।
ஏகஸ்தருர்லுப்தவதம்ஸகோऽந்ய:
பஶுஶ்ச கஶ்சித்ப்ரதிதோ வதாந்ய: ॥ 5 ॥

கமலே - தாமரையிலிருப்பவளே !
அத்யுதாராம் - மிகவும் வள்ளலாகிய
தாம த்வாம் - புகழ்பெற்ற உன்னை
பஜே - வணங்குகின்றேன்
ஏக: தரு: - அசேதனமாகிய மரமொன்று
ஆர்ய: - மற்றொன்று
லுப்த - வேடன் வேஷம்பூண்ட சிவனுடைய
வதம்ஸக: - தலையலங்காரமானது
கஶ்சித் - வேறொன்று
பஶு: - திர்யக்ஜந்துவான பசு என்னுமிவை
யயா ஸஹ - எந்த உன்னுடன்
ஸுதாப்தௌ - பாற்கடலில்
ஸஹஜன்மமாத்ராத் - உடன் பிறந்ததால் மட்டும்
வதாந்ய: - கொடையாளியாக
ப்ரதித: - புகழ் பெற்றனவோ.

கற்பகவ்ருக்ஷம் சந்திரன் காமதேனு என்னுமிவை லக்ஷ்மியுடன் தோன்றியவை. இவை வழங்குவதில் புகழ்பெற்றவை. இவை வள்ளலாவதற்குக் காரணம் உன்னுடன் பிறந்ததே. இப்படித் தான் மட்டுமன்றி உடன் பிறந்தவற்றையும் கொடையாளியாக்கும் உன்னை வணங்குகிறேன்.

சந்திரன் தன் அவயவங்களாகிய கிரணங்களை தேவருக்கு உணவாக அளிப்பவன். எனவே தாதாவாயினன் 5

त्वमम्ब दात्रीति किमत्र चित्रं
त्वद्दासदेशेऽपि न लोभवार्ता।
निदर्शनं तत्र भवन्निवासः
सर्वस्वदायी स वृषाद्रिनाथः ॥ ६ ॥

த்வமம்ப தாத்ரீதி கிமத்ர சித்ரம்
த்வத்வாஸதேஸேऽபி ந லோபவார்த்தா ।
நிதர்ஸநம் தத்ர பவந்நிவாஸ:
ஸர்வஸ்வதாயீ ஸ வ்ருஷாத்ரிநாத: ॥ 6 ॥

ஹே அம்ப - தாயே !
த்வம் தாத்ரீ - நீ வள்ளல்
இத்யத்ர - என்பதில்
கிம் சித்ரம் - என்ன ஆச்சரியம்
யத: - ஏனெனில்
த்வத்வாஸ தேஸேபி - நீ வாழுமிடத்திலும்
லோபவார்த்தா - லோபி என்ற பேச்சும்
ந - இல்லேயோ
பவந்நிவாஸ: நீ வாழுமிடமான
ஸ: - புகழ்பெற்ற
வ்ருஷாத்ரிநாத: - ஸ்ரீநிவாஸன்
ஸர்வார்த்த தாயீஸந் - தனது பக்தர்களுக்கு நான்கு புருஷார்த்தங்களேயும் கொடுப்பவனுய்
தத்ர - தற்போது சொன்ன விஷயத்தில்
த்ருஷ்டாந்த: - எடுத்துக்காட்டாக உள்ளானே

தாயே நீ திருவேங்கடவன் மார்பில் வாழ்கிறாய். அவனோ தமது செல்வம் முழுவதையும் - தர்மார்த்த காமமோக்ஷம் என்றும் நான்கு புருஷார்த்தங்களேயும் அவன் அடிபணிந்தவர்க்கு அளிக்கிறான். இப்படி நீ வாழுமிடமே யாவற்றையும் அளிக்கும் போது நீ அளிக்கிறாய் என்பதில் ஆச்சரியம் என்ன. 6

औदार्यमास्तां नृहरेर्य एष
हिरण्यदानावसरे सरोषः ।
सानन्दमिष्टं सकलं ददत्याः
स्तुत्यं वदान्यत्वमिदं भवत्याः ॥ ७ ॥

ஔதார்யமாஸ்தாம் ந்ருஹரேர்ய ஏஷ
ஹிரண்யதாநாவஸரே ஸரோஷ: ।
ஸாநந்தமிஷ்டம் ஸகலம் ததத்யா:
ஸ்துத்யம் வதாந்யத்வமிதம் பவத்யா: ॥ 7 ॥

ய ஏஷ ந்ருஹரி: - இந்த நரஸிம்மன்
ஹிரண்யதாநாவஸரே - செல்வத்தை வழங்கும் போது
ஸரோஷ: - கோபமுடையவராக உள்ளார் (எனவே)
ஔதார்யம் - அவர் வள்ளல் தன்மை

ஆஸ்தாம் - போற்றுவதற்கு உரியது அன்று

ஸகலம் - இஷ்டம் - பக்தர் விரும்பியவைகளையெல்லாம்

ஸாநந்தம் - மகிழ்ச்சியுடன்

ததத்யா: - வழங்குபவளான

பவத்யா: - உன்னுடைய

இதம் - இவ்வள்ளல்தன்மை

ஸ்துத்யம் - துதிக்கத்தகுந்தது.

நரஸிம்மன் செல்வத்தை வழங்கும்போது மிகவும் கோபம் உடையவராக உள்ளார். வழங்கும் போது இனிய பேச்சு இன்றியமையாதது. அது இல்லாது போனால் யாசிப்பவர் மனம் புண்படும். ஆகவே அவர் வள்ளல் தன்மை போற்றத்தக்கதன்று. ஹிரண்யாசுரனை அழிக்கும் போது கோபத்துடன் இருந்தார் என்பது உண்மைப் பொருள். நீயோ கேட்டவர் கேட்டதையெல்லாம் இனிய முகத்துடனும் ஸந்தோஷத்துடனும் வழங்குகிறாய். ஆகவே உனது வழங்கும் தன்மை போற்றுவதற்கு உரியது. 7

देहि देवि दयया निरामया-
मत्र च श्रियममुत्र च स्वयम्।
सञ्चरेम न यथा वयं मुहु-
र्याचका इह पिशाचका इव ॥ ८ ॥

தேஹி தேவி தயயா நிராமயா-
மத்ர ச ஶ்ரியமமுத்ர ச ஸ்வயம் ।
ஸஞ்சரேம ந யதா வயம் முஹுர்-
யாசகா இஹ பிஶாசகா இவ ॥ 8 ॥

ஹே தேவி - பகவான் மனைவியே !

இஹ - இப்பிறப்பில்

வயம் - நாங்கள்

யாசகாம் - பிச்சை எடுப்பவராகி

பிசாசகா இவ - பிசாசுகளைப்போல்

யதாமுஹு: நஸஞ்சரேம - பிச்சைக்காக எப்படி எங்கும் சுற்றாமலிருப் போமோ

ததா - அப்படி

தயயா - க்ருபையால்

அத்ர ச - இவ்வுலகில்

நிராமயாம் - வ்யாதியில்லாத

ச்ரியம் - செல்வத்தை

தேஹி - அளிப்பாயாக

அமுத்ரச - மேலுலகிலும்

நிராமயாம் - நாசமற்றதான

ச்ரியம் - மோக்ஷசெல்வத்தை

தேஹி - அருள்வாயாக.

இம்மை மறுமை என்ற ஈரிடங்களிலும் எங்களுக்கு நிலையான நன்மையைத்தருவாயாக. ஏழைகளாக எங்களைப் படைத்துப் பிசாசுகள் போல் தெருத்தெருவாக அலைய வைக்காதே. 8

त्वमेव सर्वकाङ्क्षितप्रदा पदाब्जसेविनां
वदान्यतागुणस्तु ते वदान्यतः क्व दृश्यते ।
सुधापयोधिकन्यके मुधा समुन्नतिस्पृशा
न दानवारिदारुणोत्तमेन विद्यते फलम् ॥ ९ ॥

த்வமேவ ஸர்வகாங்க்ஷிதப்ரதா பதாப்ஜஸேவிநாம்
வதாந்யதாகுணஸ்து தே வதாந்யத: க்வ த்ருஶ்யதே ।
ஸுதாபயோதிகந்யகே முதா ஸமுந்நதிஸ்ப்ருஶா
ந தாநவாரிதாருணோத்தமேந வித்யதே பலம் ॥ 9 ॥

ஸுதாபயோதிகந்யகே - பாற்கடல் புத்ரீ !
பதாப்ஜ - உனது திருவடித் தாமரைகளை
ஸேவிநாம் - வணங்குபவர்க்கு
த்வமேவ - நீயே
ஸர்வகாங்க்ஷிதப்ரதா - விரும்பிய யாவற்றையும் தருபவராக
பவஸி - ஆகின்றாய்
தே - உன்னுடைய
வதாந்யதாகுண: - வழங்கும் குணம்
அந்யத: - பிறரிடம்
க்வ - எங்கு
த்ருச்யதே - காணப் படுகிறது
வத - சொல்
வ்ருதாஸமுந்நதிஸ்ப்ருசா - நானே கொடையாளி என்ற எண்ணத்தைப் பயனின்றி பெற்றுள்ளதும்
தாந - பிறர் செய்யும் தாநத்தையும்
வாரி - தடுப்பதுமாகிய
தாருணோத்தமேந - கொடியவற்றுள் உயர்ந்ததான
உத்தமேந - மேலுலகிலுள்ள
தாநவாரிதாருணா - தேவவ்ருக்ஷத்தாலே
பலம் - பயன்
ந வித்யதே - இல்லை.

பாற்கடல் புத்ரியே வேண்டுபவர் வேண்டியதெல்லாம் தருபவள் நீயொருவளே. பிறர் எவருமிலர். கற்பகவ்ருக்ஷம் இருக்கின்றதே என்றால் அதுவும் பயனில்லை. நான் தான் கொடையாளி என்ற எண்ணத்தை அது பயனின்றி பெற்றுள்ளது.

அது பிறர் செய்யும் தானத்தையும் தடுப்பது. உந்நதிஸ்ப்ருசா ஓங்கி உயர்ந்து வளர்ந்துள்ள தேவருலகமரமாகிய கற்பகத்தாலே பயன் ஏதுமில்லை. கற்பகம் பூ மட்டும் தான் தரும், பழம் தராது.

श्रीवत्सजुष्टं स्थलमाश्रिता त्वं
मनोहराक्षीरचिताश्रितश्रीः ।
प्रवालदीधित्यवलम्बिताङ्घ्रिः
सत्यं रमे कामदुघास्युदारा ॥ १० ॥

ஸ்ரீவத்ஸஜுஷ்டம் ஸ்தலமாஶ்ரிதா த்வம்
மநோஹராக்ஷீரசிதாஶ்ரிதஶ்ரீ: ।
ப்ரவாலதீதித்யவலம்பிதாங்க்ரி:
ஸத்யம் ரமே காமதுகாஸ்யுதாரா ॥ 10 ॥

ஹே ரமே - ரமையே !
ஸ்ரீவத்ஸ - ஸ்ரீவத்ஸம் என்ற மறுவால்
ஜுஷ்டம் - அடையப்பட்டதும்
ஸ்தலம் - மார்பை
ஆச்ரிதா - அடைந்தவளும்
மநோஹராக்ஷீ - அழகிய கண்களை உடையவளும்
ரசித ஆஶ்ரிதஸ்ரீ: - பக்தருக்கு செல்வமளிப்பவளும்
ப்ரவாள - பவழத்தின்
தீதிதி - ஒளிபோல் சிவந்த ஒளியாலே
அவலம்பித - அடையப்பட்ட
அங்க்ரி: - திருவடிகளை உடையவளும்
உதாரா - வாரிவழங்குபவளுமாகி
த்வம் - நீ
காமதுகஸி - காமதேனுவேயாகிறாய்
ஸத்யம் - இது முற்றிலும்முண்மை.

காமதேனுக்கு உரிய பொருள்

ஸ்ரீ - அழகிய
வத்ஸ - கன்றாலே
ஜுஷ்டம் - அடையப்பட்டும்
ஸ்தலம் - கொட்டகையை
ஆச்ரிதா - அடைந்திருப்பதும்
மநோஹரா - மனதை மகிழ்விப்பதும்
க்ஷீர - பாலின்
சிதா - மிகுதியாலே
ஆச்ரித - அடையப்பட்ட
ஸ்ரீ: - சோபையை உடையதும்
ப்ரவாள - நீண்டவாலின்
தீதிதி - காந்தியாலே
அவலம்பித - அடையப்பட்ட
அங்க்ரி: - பின் கால்களை உடையதும்
உதாரா - வழங்குவதுமாகிய
த்வம் காமதேநுரஸி - நீ காமதேனுவே.

லக்ஷ்மியை காமதேனுவுடன் ஒப்பிட்டுப் பேசுகிறார். கருத்துத் தெளிவானதே.

ख्यातः कलामात्रद एष चन्द्रो
　　मातः शिबिश्चेत् पलमात्रदायी ।
विषप्रदो वारिधरः श्रितानां
　　कल्याणि काङ्क्षाधिकदा त्वमेव ॥ ११ ॥

க்யாத: கலாமாத்ரத ஏஷ சந்த்ரோ
　　மாத: ஶிபிஶ்சேத் பலமாத்ரதாயீ ।
விஷப்ரதோ வாரிதர: ஶ்ரிதாநாம்
　　கல்யாணி காங்க்ஷாதிகதா த்வமேவ ॥ 11 ॥

ஹே கல்யாணி - மங்கள தேவதையே !
மாத: - தாயே !
ஏஷ: சந்த்ர: - தேய்பிறைச் சந்திரன்
கலாமாத்ரத: - சிறிதே தருவன்
சிபிஶ்சேத் - சிபிச் சக்கரவர்த்தியோவெனில்
பலமாத்ரதாயீ - ஒரு பலம்தான் அளிப்பன்
வாரிதர: - மேகம்
விஷப்ரத: - ஜலத்தை மட்டும் கொடுக்கும்
த்வமேவ - நீயே
ச்ரிதாநாம் - சரணமடைந்தவர்களுக்கு
காங்க்ஷாதிகதா - விரும்பியதிலும் மிகுதியாக கொடுப்பவள்.

சந்திரனிடம் பதினாறு கலைகள் உள்ளன. தேய்பிறையில் ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு பிறைகளை தேவருக்கு அளிக்கிறானவன். முதல் கலையை அக்நி அருந்துகிறுன் என்கிறது ''ப்ரதமாம் பிபதே வஹ்நி:'' என்பது. ஆகவே அவன் சிறிதே அளிப்பவனாயினன். மாத்ரம் என்ற சொல்லுக்கும் அது மட்டும் என்றும், யாவும் என்றும் பொருள்கள் உண்டு. ஆகவே தனது கலைகள் யாவற்றையும் தேவருக்கு வழங்குகிறுன் என்பது உண்மைப் பொருள். சிபி என்ற அரசன் தன் உடலிலிருந்த ''பலம்'' என்றும் பெயர் கொண்ட சிறிய அளவு மாமிசத்தை வெட்டி எடுத்து பறவைக்கு வழங்கினான் என்பது புராண வரலாறு. பலம் என்ற சொல், சிறிய அளவையும், மாமிசம் என்பதையும் குறிக்கும். ஆகவே சிபி தனது மாமிசம் முழுவதையும் வழங்கினான் என்பது உண்மைப் பொருள் மேகம் எளிதாகக் கிடைக்கும் ஜலத்தைத் தருமேயன்றிப் பொருள் தராது. மரணத்தை உண்டாக்கும் விஷத்தைத் தரும்

என்ற பொருளும் கிடைக்கிறது. வேண்டியதைக் கொடுக்காது வேண்டாததைக் கொடுக்கும் என்பது கருத்து. நீ ஒருத்தி தான் வேண்டியதினும் மிகுதியாகத் தந்து இஷ்டமில்லாததைக் கொடுக்காமலிருக்கிருய். 11

कल्पद्रुमः सुमित एव घनोऽप्रदाता
कर्णोऽप्यपार्थकरुणः स बलिः कुदाता ।
नाथस्तवापि कमले स हिरण्यहारी
नातोऽस्ति ते वितरणे प्रतिवस्तुकिञ्चित् ॥ १२ ॥

கல்பத்ரும: ஸுமித ஏவ கநோऽப்ரதாதா
கர்ணோऽப்யபார்த்தகருண: ஸ பலி: குதாதா ।
நாதஸ்தவாபி கமலே ஸ ஹிரண்யஹாரீ
நாதோऽஸ்தி தே விதரணே ப்ரதிவஸ்து கிஞ்சித் ॥ 12 ॥

ஹே கமலே - தாமரையாளே !
கல்பத்ரும: - கல்பக மரம்
ஸுமித: - குறைந்த செல்வம் உடையது
கந: - மேகம்
அப்ரதாதா - உயர்ந்த கொடையாளி அல்ல
கர்ண: - கர்ணனும்
அபார்த்தகருண: - பயனற்ற கருணையுடையவன்
ஸ: பலி: - புகழ்பெற்ற பலிச் சக்கரவர்த்தியும்
குதாதா - நேர்மையற்ற தானம் செய்பவன்
தவ நாத: ச - உனது கணவனும்
ஹிரண்யஹாரீ - தங்கத்தை அபஹரிப்பவன் கொடுப்பவனல்லன்
அத: - எல்லோரும் தோஷமுடையவர்களாக இருப்பதால்
விதரணே - ஒன்றை வழங்குவதில்
தே - வள்ளலுக்கு உரிய குணங்கள் யாவும் நிறைந்த உனக்கு
ப்ரதிவஸ்து - ஸமமான பொருள்
ந - இல்லை.

சிலேடையில் பேசுகிருர் கவி. ஸுமித: என்பதற்கு சிறிதே பொருளுடையவள் பிறருக்கு எப்படி வழங்க முடியும் எனக் கூறப்பட்டுள்ளது. உண்மைப் பொருள் எப்போதும் புஷ்பத்துடன் இருப்பது என்பது உண்மைப் பொருள். மேகத்திடம் வழங்குபவனுக்கு வேண்டிய இன்சொல்

முதலியன இல்லை எனப்பட்டது. அபாம்+ப்ரதாதா = அப்ரதாதா - தண்ணீர் வழங்குவது என்பது பொருள். அபார்த்தகருண: என்பதற்குக் கர்ணன் பார்த்தனிடம் - அர்ஜுனனிடம் - கருணையற்றவன் என்பது பொருள். குதாதா என்பதற்கு கு - பூமியை, தாதா - கொடுப்பவன் என்பது கருத்து. வாமனனுக்கு உலகம் முழுதும் வழங்கினானன்றோ ! உனது கணவனோ ஹிரண்யாக்ஷன் என்ற அரக்கனை அழித்தவன் என்பது கருத்து. வழங்குபவர்களாகப் புகழ்பெற்ற ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு குறை இருப்பதால் வள்ளலுக்கு வேண்டிய குணங்கள் பூர்ணமாகப் பெற்றவள் நீயொருத்தியே பிறரிலர்.

12

आमोदजुष्टं मधुकालयोगात्
फलं ददानं भजतामभीष्टम् ।
शाखाशतोदारसुपर्णवाहं
देहं रमे कल्पतरुं तवाहुः ॥ १३ ॥

ஆமோதஜுஷ்டம் மதுகாலயோகாத்
பலம் ததானம் பஜதாமபீஷ்டம் ।
ஶாகாஶதோதாரஸுபர்ணவாஹம்
தேஹம் ரமே கல்பதரும் தவாஹு: ॥ 13 ॥

ஹே ரமே - ரமையே !
மதுகால - வஸந்தருதுவுடன்
யோகாத் - எப்போதும் தொடர்பு உள்ளதால்
ஆமோதஜுஷ்டம் - மணமுடையதும்
பஜதாம் - தம்மை அடைந்தவர்கட்கு
அபீஷ்டம் பலம் - அவர் விரும்பிய பயனை
ததானம் - கொடுப்பதும்
ஶாகாஶதேஷு - பல பல கிளைகளில்
உதார - பரவியுள்ள
ஸுபர்ண - அழகிய இலைகளை
வாஹம் - தாங்குவதுமாகிய
தே தேஹம் - உனது சரீரத்தை
கல்பதரும் - கற்பக வ்ருக்ஷமாக
ஆஹு: - பௌராணிகர் சொல்லுகின்றனர்.

இனி இலக்குமிக்குரிய பொருள்

மதுகால - பகவானுடன்

யோகாத் - எப்போதும் சேர்ந்து உள்ளதாய்

ஆநந்த ஜுஷ்டம் - ஆநந்தம் மிகுதியாக உள்ளவளும்

பஜதாம் - தஞ்சமடைந்தவர்க்கு

அபீஷ்டம்பலம் - விரும்பும் பலன்களை

ததாநம் - அளிப்பவரும்

ஶாகாஶத - எண்ணற்ற வேதப் பகுதிகளை தனது உடலாகக் கொண்டுள்ளமையால்

உதாரம் - மஹானான

ஸுபர்ண - கருடனை

வாஹம் - தனக்கு வாஹனமான உடையவனுமான

தவதேஹம் - உன் உடலை

கல்பதருமாஹு: -

லக்ஷ்மியை கற்பகவ்ருக்ஷமாக சிலேடையில் பேசியுள்ளார் கருத்துத் தெளிவானதே. 13

मुदा वदान्याश्रितमब्धिकन्ये
यं किन्नरेशादधिकं करोषि ।
न किं नरेशादधिकः स एष
इतीममाहुर्भुवि हन्त सन्तः ॥ १४ ॥

முதா வதாந்யாஸ்ரிதமப்திகந்யே
யம் கிந்நரேஶாததிகம் கரோஷி ।
ந கிம் நரேஶாததிக: ஸ ஏஷ
இதீமமாஹுர்புவி ஹந்த ஸந்த: ॥ 14 ॥

அப்திகந்யே - கடல் குமரியே !

வதாந்யா - வழங்குபவளாகிய

த்வம் - நீ

புவி - மண்ணுலகில்

யம் ஆச்ரிதம் - தஞ்சமடைந்த எவனை

முதா - ஸந்தோஷத்துடன்

கிந்நரேசாத் - குபேரனைவிட

அதிகம் - மிகுந்த செல்வமுடையவளாக

கரோஷி - செய்கின்றாய்

ஸந்த: - உண்மையே பேசுபவர்களான பெரியோர்களும்

ஸ ஏஷ: - உன்னால் செல்வந்தனாக ஆக்கப்பட்டவன்

கிந்நரேசாத் - குபேரனைவிட

நாதிக: - மிக்க செல்வமுடையவனல்லன்

இதி - என்று

இமம் - இச்செல்வந்தனை

வதந்தி - சொல்கின்றனர்

ஹந்த - ஆச்சரியம்.

உள்ளபடியே பேசுபவர்களான மஹான்களும் உன்னால் செல்வந்தர்களாக்கப் பட்டவனைப் பார்த்து இவன் குபேரனிலும் உயர்ந்தவனு என விரோதமாகப் பேசுகின்றனர். இது ஆச்சரியம் விரோதாபாஸம். நரேசாத் - அரசர்களிலும் அதிக: ந கிம் - உயர்ந்தவன் அன்றோ என்பது பரிஹாரம். *14*

विविधविभवदात्रीमिन्दिरे विश्वधात्रीं
भगवति भवतीं यः सेवते देवतेड्याम् ।
अधिकृतिलवमात्रादन्तरिक्षोन्मुखाक्षा-
नयमगणितसत्त्वानल्पकान्नोपसर्पेत् ॥ १५ ॥

விவிதவிபவதாத்ரீமிந்திரே விச்வதாத்ரீம்
பகவதி பவதீம் ய: ஸேவதே தேவதேட்யாம் ।
அதிக்ருதிலவமாத்ராதந்தரிக்ஷோந்முகாக்ஷா-
நயமகணிதஸத்த்வாநல்பகாந் நோபஸர்ப்பேத் ॥ 15 ॥

ஹே பகவதி - குணங்கள் நிறைந்தவளே !

விவித - பல்வகைகளான

விபவ - செல்வங்களான

தாத்ரீம் - தருபவளும்

விச்வதாத்ரீம் - உலகுக்கெல்லாம் தாயானவளும்

தேவதேட்யாம் - தேவதைகளாலும் பூஜிக்கத் தக்கவளுமாகிய உன்னை

ய: ஸேவதே - எவன் தஞ்சம் அடைகிறானோ

அயம் - அந்த மனிதன்

அதிக்ருதிலவ மாத்ராத் - அல்பமான மிகச் சிறிய அதிகாரத்தைப் பெற்றதாலேயே

அந்தரிக்ஷோந்முக - பூமியில் எவரையும் மதிக்காது ஆகாசத்தையே பார்க்கும்

அக்ஷாந் - கண் உடையவர்களும்

அகணிதஸத்வாந் - மஹான்களையும்

நோபஸர்பேத் - பொருளுக்காக அணுகமாட்டான்.

ச்ரமமின்றி வேண்டியவை எல்லாம் சுகமாகக் கிடைக்கும்போது பாடுபட்டுப் பெறுவதாகிய அல்ப பயனில் எவன் முனைவன். *15*

त्वयि सति भगवत्यां सर्वमिष्टं ददत्यां
किमपि नृपपिशाचं याचते यः कुचेतः ।

फलवति सहकारे भासुरे सत्यदूरे
श्रयति दुरधिरोहं देवि शाकोटकं सः ॥ १६ ॥

த்வயி ஸதி பகவத்யாம் ஸர்வமிஷ்டம் ததத்யாம்
கிமபி ந்ருபபிஶாசம் யாசதே ய: குசேத: ।
பலவதி ஸஹகாரே பாஸுரே ஸத்யதூரே
ச்ரயதி துரதிரோஹம் தேவி ஶாகோடகம் ஸ: ॥ 16 ॥

பகவதி தேவி - பகவந் மஹிஷியே !
ஸர்வமிஷ்டம் - விரும்பியதையெல்லாம்
ததத்யாம் - தருபவளாக
த்வயி ஸத்யாம் - நீ உள்ளபோது
கமபி - ப்ரயோஜநமில்லாத
ந்ருப பிஶாசம் - அரசனாகிய பிசாசத்தை
யாசதே - வேண்டுகிறானோ
ஸ: - அவன்
குசேதா: - துர்புத்தி
பலவதி - மிகுந்த பழங்களை உடைய
ஸஹகாரே - மாமரம்
அதூரே - அருகிலேயே
பாஸுரே ஸதி - விளங்கும் போது
துரதிரோஹம் - ஏற முடியாத
ஶாகோடகம் - பூதவ்ருக்ஷத்தை
ச்ரயதி - அடைகிறவனாவன்

இம்மை மறுமைப் பலன்களைத் தருபவளாக நீ இருக்க உன்னிடம் வேண்டாது அல்பமே அளிப்பவரான அரசரை அணுகுவது பழுத்துக் குலுங்கும் மாமரத்தை விடுத்து எட்டி மரத்திடம் செல்வது போலாகும். 16

प्रपदनजुषां दृष्टादृष्टार्पणैकवदान्ययो-
स्तव चरणयोः सेवामेवाचराणि हरेः प्रिये ।
सकृदपि पुनस्त्रासी नासीय वित्त विवित्सया
परुषवचसां राज्ञां प्राज्ञावमानकृतां गिरः ॥ १७ ॥

ப்ரபதநஜுஷாம் த்ருஷ்டாத்ருஷ்டார்ப்பணைகவதாந்யயோ-
ஸ்தவ சரணயோ: ஸேவாமேவாசராணி ஹரே: ப்ரியே ।
ஸக்ருதபி புநஸ்த்ராஸீ நாஸீய வித்த விவித்ஸயா
பருஷவசஸாம் ராஜ்ஞாம் ப்ராஜ்ஞாவமாநக்ருதாம் கிர: ॥ 17 ॥

ஹரே:ப்ரியே - நாராயணன் மனைவியே !
ப்ரபதநஜுஷாம் - சரணம் அடைந்தவர்களுக்கு
த்ருஷ்டாத்ருஷ்டார்பணே - இம்மை மறுமைப் பயனளிப்பதில்
ஏகவதாந்யயோ: - மிக வள்ளல்களாயுள்ள

தவசரணயோ: - உனது திருவடிகளுக்கு

ஸேவாமேவாசராணி - கைங்கர்யமே செய்கிறேன்

பருஷவசஸாம் - கொடுமையாகப் பேசுபவரும்

ப்ரஜ்ஞாவமாநக்ருதாம் - வித்வான்களையும் பொருள் படுத்தாதவருமான

ராஜ்ஞாம் புர: - மட்டமான அரசர் முன்

புந: - திரும்பவும்

த்ராஸீ - பயந்தவனாய்

வித்தவிவித்ஸயா - பணம் பெற விரும்பியவனாய்

ஸக்ருதபி - ஒருபோதும்

நாஸீய - உட்காராதிருப்பேனே.

உனது திருவடிகளுக்கு ஸேவை செய்வதை விடுத்து அற்பமான அரசர்களிடம் பணத்துக்காகச் செல்லாமலிருக்கும்படி நீ அருள்பாலிப்பாயாக என்கிறார். 17

दृष्टादृष्टदयार्द्रया शिशिरया दत्ताखिलार्थास्त्वया
मातर्वातविधूतवारिदचलश्रीलेशलब्धोन्नतेः ।
दर्पोद्रेकविनर्तितभ्रुपरुषं दन्दह्यमानेक्षणं
दासेरास्यमुपास्य कस्यचिदमी न स्याम हास्या वयम् ॥ १८ ॥

த்ருஷ்டாத்ருஷ்டதயார்த்ரயா ஶிஶிரயா தத்தாகிலார்த்தாஸ்த்வயா
மாதர்வாதநிதூதவாரிதசலஶ்ரீலேஶலப்தோந்நதே: ।
தர்ப்போத்ரேகவிநர்த்திதப்ருபருஷம் தந்தஹ்யமாநேக்ஷணம்
தாஸேராஸ்யமுபாஸ்ய கஸ்யசிதமீ ந ஸ்யாம ஹாஸ்யா வயம் ॥ 18 ॥

ஹே மாத: - தாயே!

வயம் - நாங்கள்

த்ருஷ்டா த்ருஷ்ட தயா - இம்மை மறுமைப் பயன்களை அளிப்பவரும்

தயாஶிஶிரயா - மிக்க தயை உடையவளுமாகிய

த்வயா - உன்னால்

தத்த - அளிக்கப்பட்ட

அகிலார்த்தாஸ்ஸந்த: - எல்லாப் பயன்களுமுடையவராய்

வாத - இழுத்துச் செல்லப்பட்ட

வாரித - மேகம் போல்

சல - நொடியில் அழியக்கூடிய

ஶ்ரீலேஶ - அல்ப செல்வத்தாலே

லப்த - அடையப்பட்ட

உந்நதே: - கர்வமுடையவராய்

தர்போத்ரேக - மிக்க கர்வத்தால்

விநர்தித - துள்ளும்

ப்ரு - புருவமுடையவராய்

பருஷம் - யாசகரால் காணவும் முடியாததும்

தந்தஹ்யமாந - கோபாக்நியால் மிகவும் எரிப்பதுமான

ஈக்ஷணம் - பார்வையை உடையவரும்

கஸ்யசித் தஸ்யோ: - பிறர் பணத்தைத் திருடி செல்வந்தனானவனுமானவன்
ஆஸ்யமுபாஸ்ய - முகம் நோக்கி எதிரில் நின்று
ஹாஸ்யா: - பிறரால் பரிஹாஸம் பண்ணப்பட்டவராய்
ந ஸ்யாம - ஆகமாட்டோமோ
(ததா குரு - அப்படி அருள்)

அல்பமான பணம் பெற்று ஆணவத்துடன் திரியும் திருடர் எதிரில் நின்று யாசிக்காமலிருக்கும் அளவுக்கு அருள்வாயாக என வேண்டுகிறார். 18

कातर्येण कदर्यवर्यनृपतिप्रीतिप्रतीक्षोदितः
कष्टं कष्टमपास्तवास्तव चमत्कारो न मे रोचते ।
रामे वेङ्कटनेतुरद्भुतगुणग्रामे दयामेदुरां
त्वामेव श्रितकामधेनुमसकृत् सा मे स्तुतां भारती ॥ १९ ॥

காதர்யேண கதர்யவர்யந்ருபதிப்ரீதிப்ரதீக்ஷோதித:
கஷ்டம் கஷ்டமபாஸ்தவாஸ்தவ சமத்காரோ ந மே ரோசதே ।
ராமே வேங்கடநேதுரத்புதகுணக்ராமே தயாமேதுராம்
த்வாமேவ ஶ்ரிதகாமதேநுமஸக்ருத் ஸா மே ஸ்துதாம் பாரதீ ॥ 19 ॥

வேங்கடநேது: - திருவேங்கட மலைக்குத் தலைவனான
ராமே - அழகியதும்
அத்புதகுணக்ராமே - ஆச்சரியமான குணக்கூட்டங்களுக்கு இருப்பிடமானவரிடம்
ஸா - முன்பு தோஷமுடையதான
மே பாரதீ - என் வாக்கு
காதர்யேண - கொடுக்க மாட்டானோ என்ற பயத்தால்
கதர்யவர்ய - மிகவும் பாபியான
ந்ருபதி - அரசனின்
ப்ரீதிப்ரதீக்ஷா - மனமகிழ்வை எதிர்பார்த்து
உதித: - இதுவரை சொல்லியதும்
அபாஸ்த - போகிய
வாஸ்தவ - உண்மைப் பொருளை உடையதுமான
சமத்கார: - வேடிக்கையான பேச்சு
மே ந ரோசதே - எனக்குப் பிடிக்கவில்லை
கஷ்டம் கஷ்டம் - பொய் பேசியதற்கு வருந்துகிறேன்
தயாமேதுராம் - தயை நிறைந்த மனமுடையவரும்
ஆச்ரிதகாமதேநும் - தன்னை அடைந்தவர்க்கு யாவற்றையும் அளிப்பவளுமான
த்வாமேவ - உன்னையே
ஸ்துதாம் - குணவர்ணனத்தால் ஸந்தோஷிப்பிக்கட்டும்.

குணக்குன்றான பகவானே முன்பு என் நாக்கு துதிக்காததால் தோஷமுடையதாயிற்று. அது மட்டுமன்று கஞ்சனையெல்லாம் நீ சந்திரன் இந்திரன் என்றெல்லாம் பொய் பேசினேன். அதற்காக வருந்துகிறேன். இனி என் நாக்கு உன்னையே துதித்து உனக்கு ஸந்தோஷத்தை விளைக்கட்டும்.

ஸ்துதம் - ஷ்டுஞ்ஸ்துதௌ என்று தாதுவின் லோட் ப்ரதம புருஷ ஏகவசநம்.

भीमानहं न भीमान् राज्ञां निचयान् श्रयेय घोराज्ञान् ।
कल्पानोकहकटाक्षान् दारान् शौरेर्भजे महोदारान् ॥ २० ॥
इत्यात्रेय गोत्र रघुनाथ दीक्षित तनूज वेंकटाचार्य कृतिषु
लक्ष्मी सहस्रे वदान्य स्तबकः संपूर्णः
॥ शुभम् ॥

பீமாநஹம் ந பீமாந்
ராஜ்ஞாம் நிசயாந் ச்ரயேய கோராஜ்ஞான் ।
கல்பாநோகஹகடாக்ஷான்
தாரான் ஶௌரேர்பஜே மஹோதாரான் ॥ 20 ॥

அஹம் - நான்
கோராஜ்ஞாந் - கொடிய தண்டனை தருபவரான
பீமான் - பயங்கரமான முகமுடைய
ராஜ்ஞாம் - அரசரின்
நிசயான் - ஸமூஹத்தை
பீமான் - பயமுடையவனாய்
ந ச்ரயேய - அணுகமாட்டேன்
கிந்து - ஆனால்
கல்பாநோகஹ கல்பாந் - மிகுதியாக வழங்கும்
மஹோதாராந் - உதாரஸ்வபாவமுள்ள
ஶௌரே: - நாராயணனது
தாரான் - மனைவியை
பஜே - சரணமாகப் பற்றுகிறேன்.

கோயில், சப்தம், வங்கீபுரம், வாஜபேயம், வீராபுரம் ராமாநுஜ தீக்ஷிதரின் குமாரரான வீரபுரம் சடகோபாசாரியரால் இயற்றப்பட்ட ரத்நப்ரபா என்ற லக்ஷ்மீ ஸஹஸ்ர உரையில் பதின்மூன்றாவதான வதாந்ய ஸ்தபகம் முடிவடைந்தது

॥ சுபம் ॥

श्री लक्ष्मीसहस्रम्

यमक स्तबकः १४

யமக ஸ்தபக: 14

यशस्विनीमुपासीय यदुनाथसधर्मिणीम् ।
यमकं कथयन्त्यार्या यत्पदं कल्पशाखिनः ॥ १ ॥

யஶஸ்விநீமுபாஸீய யதுநாதஸதர்மிணீம் ।
யமகம் கதயந்த்யார்யா யத்பதம் கல்பஶாகிந: ॥ 1 ॥

ஆர்யா: - மஹான்கள்

யத்பதம் - எவளின் திருவடிகளை

கல்பஶாகிந: - கல்பவ்ருக்ஷத்துக்கு

யமகம் - பிறருக்கு வழங்கும் விஷயத்தில் உடன்பிறந்தவளாக

கதயந்தி - சொல்கின்றார்களோ

யதுநாத - கண்ணனின்

ஸதர்மிணீம் - பிறரைக் காப்பதாகிய யாகத்தில் துணைவியானவளும் (அதனாலேயே)

யஶஸ்விநீம் - பெரும் புகழ் உடையவளான

ஶ்ரியம் - லக்ஷ்மியை

உபாஸீய - எப்போதும் த்யானம் செய்யக் கடவேன்

ஒரு ச்லோகத்தில் உயிர் எழுத்து மெய்யெழுத்துக்களின் கூட்டத்தைப் பலமுறை திரும்பவும் அமைத்தால் அதற்கு யமகம் எனப் பெயர். இந்த ஸ்தபகத்தில் அப்படி அமைந்துள்ளதால் இதற்கு இப்பெயர் உண்டாயிற்று.

எவளுடைய திருவடிகளை பிறருக்கு ஒன்றை வழங்குவதில் கற்பக வ்ருக்ஷம் போல் தட்டாமல் அளிப்பவளாக உள்ள அம்மரத்தின் உடன் பிறந்தவள் போல் உள்ளாளோ யதுநாதனான கண்ணன் செய்யும் பிறரைக் காப்பதாகிய யாகத்தில் துணைவியாக உள்ளாளோ அதனால் ''யஶஸா ஜ்வலந்தீம்'' என ஸ்ரீ ஸூக்தத்தால் புகழப்பட்டுள்ளாளோ அத்தகைய ஸ்ரீயை உபாஸநம் செய்யக் கடவேன் என்கிறார்.

இந்த ஶ்லோகத்தில் நான்கு பாதங்களின் முதல் எழுத்து ஒன்றாக இருப்பதால் யமகம். 1

दयासंपूर्णहृदया मया कृतमनामया ।
रमा गुणेन परमा स्तवं गृह्णातु वास्तवम् ॥ २ ॥

தயாஸம்பூர்ணஹ்ருதயா மயா க்ருதமநாமயா ।
ரமா குணேந பரமா ஸ்தவம் க்ருஹ்ணாது வாஸ்தவம் ॥ 2 ॥

தயாஸம்பூர்ணஹ்ருதயா - கருணை நிறைந்த மனமுடையவளும்
அநாமயா - தஞ்சமடைந்தவர் நோயை அகற்றுபவளும்
குணேந பரமா - நற்குணங்கள் மிக்கவளும்
ரமா - இலக்குமி
மயா - அடியவனான என்னாலே செய்யப்பட்ட
வாஸ்தவம் - ஏறிட்டுச் சொல்லாத உண்மையான
ஸ்தவம் - தோத்திரத்தை
க்ருஹ்ணாது - ஏற்கட்டும்

கருணைமிக்க உள்ளமுள்ளவளும், சரணமடைந்தவர்களின் துன்பங்களைப் போக்குபவளும், உயர்ந்த குணங்களின் குன்று போன்றவளுமான ரமை அடியவனால் செய்யப்படும் துதியை ஏற்றுக்கொள்ளட்டும். துதி என்பது இருவகை. ஒருவரிடமுள்ள உண்மையான குணங்களைக் கூறுவது மற்றொன்று பிறர் குணங்களை ஒருவன் மேல் ஏற்றிக் கூறுவது என்ற இரு வகையில் இந்த உண்மையான ஸ்தோத்திரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

இதில் நான்கு பாதங்களின் முதலிலும் கடையிலும் ஒரே சொல்லாக உள்ள யமகம். 2

मातस्त्वदङ्घ्रौ मम देहि भक्तिं
मातः परस्मिन् हृदयं प्रसाङ्क्षीत् ।
सा कंसशत्रोर्दयिते शुभेन
साकं चरीकर्त्यशुभप्रशान्तिम् ॥ ३ ॥

மாதஸ்த்வதங்க்ரௌ மம தேஹி பக்திம்
மாத: பரஸ்மிந் ஹ்ருதயம் ப்ரஸாங்க்ஷீத் ।
ஸா கம்ஸசத்ரோர்தயிதே சுபேந
ஸாகம் சரீகர்த்யசுபப்ரசாந்திம் ॥ 3 ॥

ஹே மாத: - தாயே
த்வதங்க்ரௌ - உமது திருவடிகளில்
மம பக்திம் தேஹி - எனக்கு பக்தியை அருள்
மம ஹ்ருதயம் - என் மனம்
அத: பரஸ்மின் - திருவடியைத் தவிர்த்து வேறெதிலும்.
மா ப்ரஸாங்க்ஷீத் - ஈடுபடலாகாது
கம்ஸசத்ரோ: தயிதே - கண்ணன் மனைவியே !

ஸா - அந்த உனது திருவடி பக்தி

ஸஹோபேந யோகம் - ஸம்பத்துடன்

அகபப்ரசாந்திம் - அமங்கல அழிவையும்

சரீகர்த்தி - திரும்பவும் திரும்பவும் செய்கிறது.

தாயே! உன் திருவடித் தாமரைகளிலே பக்தி மட்டும் உன்னால் கொடுக்க வேண்டும். அந்த பக்தி எனது யோக க்ஷேமங்களைக் காத்துக் கொள்ளும்.

இதில் நான்கு அடிகளிலும் முன் இரண்டடிகளில் ஒரு விதமாகவும் பின் இரண்டடிகளில் ஒருவிதமாகவும் அமைந்திருப்பதால் யமகம். 3

रमारमापत्तिमपास्यतान्मे
दयोदयोपेक्षितभक्तमन्तुः ।
मुदामुदारां च दिशेत् समृद्धिं
नतानतापान् कुरुते यदीक्षा ॥ ४ ॥

ரமாரமாபத்திமபாஸ்யதாம் மே
தயோதயோபேக்ஷிதபக்தமந்து: ।
முதாமுதாராம் ச திஶேத் ஸம்ருத்திம்
நதாநதாபான் குருதே யதீக்ஷா ॥ 4 ॥

யதீக்ஷா - எவள் கடாக்ஷம்

நதாந் - பக்தர்களை

அதாபாந் - ஆத்யாத்மிகம் முதலான தாபத்ரயம் இல்லாதவர்களாக

குருதே - செய்கின்றதோ

தயோதய - கருணையின் மிகுதியால்

உபேக்ஷித - கருத்தில் கொள்ளாது ஒதுக்கப்பட்ட

பக்தமந்து: - அடியவர்களின் பாபத்தை உடையவளான

ரமா - இலக்குமி

ஆபத்திம் - ஸம்ஸாரமாகிய விபத்தை

அரம் - சீக்ரமாக

அபாஸ்யதாத் - போக்கடிக்கட்டும்

ரமா, அரம், ஆபத்திம் எனப் பிரித்துப் பொருள் சொல்லப்பட்டது அப்படிப் பிரிக்காது ரமா அரமாபத்திம் எனப் பிரித்தால் அரமையான அக்காளின் (மூதேவியின்) தொடர்பைப் போக்கட்டும் என்ற பொருளும் கிடைக்கும் "அலக்ஷ்மீ: மே நச்யதாம்" என்பது ஸ்ரீ ஸூக்தமல்லவா

இதில் ரமா ரமா, தயோ தயோ, முதா முதா, நதா நதா என இரண்டிரண்டு உயிர் மெய் எழுத்துக்கள் இடையின்றி ஒன்று சேர்ந்துள்ளதால் சேகாநுப்ராஸம் ஆம். 4.

रमे पदाब्जे तव ते मनोरमे
नमेयमुच्चैरितरा गतिर्न मे ।
सुरेश्वरो यद्भजनेन भासुरे
पदे पुना राजति दैत्यलोपदे ॥ ५ ॥

ரமே பதாப்ஜே தவ தே மநோரமே
நமேயமுச்சைரிதரா கதிர்ந மே ।
ஸுரேச்வரோ யத்பஜநேந பாஸுரே
பதே புநா ராஜதி தைத்யலோபதே ॥ 5 ॥

ஹே ரமே - ரமையே!

ஸுரேச்வர: - தேவேந்திரன்

யத்பஜநேந - எச்சரணங்களாகிற தாமரையை ஸேவித்ததால்

பாஸுரே - ப்ரகாசிக்கும்

தைத்ய லோபதே - அரக்கரை அழிக்கவல்ல

பதே - பதவியில் - ஸ்வர்க்கத்தில் என்பது கருத்து

புநரபி - திரும்பவும்

ராஜதி - விளங்குகிறானே

மநோரமே - மநோஜ்ஞரூபமானவளே

தவ தே பதாப்ஜே - அத்தகைய உனது திருவடித்தாமரை

உச்சை: நமேயம் - "பூயிஷ்டாம் தே நம உக்திம் விதேம" என்றபடியே ஆயிரம் முறை வந்திக்கக் கடவேன்

ந மே இதரா கதி: - இதனினும் வேறு உபாயம் எனக்கு இல்லை.

துர்வாஸ சாபத்தால் பதவியை இழந்த இந்திரன் திரும்பவும் இந்திரனைத் தோத்திரம் செய்து இழந்த பதவியைப் பெற்ற வரலாறு கூறப்பட்டது.

ஒவ்வொரு அடிகளின் முதலிலும் கடையிலும் ஒரே மாதிரியான யமகம். 5

उदारविभवा भवामयहरा
हरादिमहिता हिताय कमला ।
सुधौघसदृशा दृशा शुभदया
दयालुरधुना धुनातु दुरितम् ॥ ६ ॥

உதாரவிபவா பவாமயஹரா
ஹராதிமஹிதா ஹிதாய கமலா ।
ஸுதௌகஸத்ருஶா த்ருஶா ஶுபதயா
தயாலுரதுநா துநாது துரிதம் ॥ 6 ॥

உதாரவிபவா - மிகுந்த செல்வமுடையவளும்

பவாமயஹரா - ஸம்ஸாரமாகிய ரோகத்தைப் போக்குபவளும்.

ஹிதாய - நன்மையைப் பெறுவதற்காக.

ஹராதிமஹிதா - ருத்திரன் முதலானவர்களால் பூஜிக்கப்பட்டவளும்.

தயாலு: - மிக்க தயை உடையவளுமான

கமலா - லக்ஷ்மீ

ஸுதௌக - அம்ருதப்பெருக்கோடு

ஸத்ருஶா - ஸமானமானதும்

ஶுபதயா - க்ஷேமத்தை நல்குவதுமான த்ருஷ்டியால்

துரிதம் - பாபத்தை

அதுநா - இப்போதே

துநோது - போக்கட்டும்.

கருத்துத் தெளிவானதே. 6

घनाघनाभस्य घनाघनाशिनः
सदा सदाशारसदा सदार्ढ्यधीः ।
हिताहितार्क्ष्या रहिताहिता मनो-
रमेऽरमेवाचर मे रमे मुदम् ॥ ७ ॥

கநாகநாபஸ்ய கநாகநாஶிந:
ஸதா ஸதாஶாரஸதா ஸதார்ட்யதீ: ।
ஹிதாஹிதார்க்ஷ்யா ரஹிதாஹிதா மநோ-
ரமேऽரமேவாசர மே ரமே முதம் ॥ 7 ॥

மநோரமே - மனதுக்கு இனிமை தரும்

ரமே - இலக்குமியே

கநாகந - நீருண்ட மேகம் போன்ற

ஆபஸ்ய - ஒளியை உடையவனும்

கநஅகநாஶிந: - மிகக் கொடிய பாபங்களை அழித்தவருமான கண்ணனுக்கு

ஸதா - எப்போதும்

ஸத் - நல்லவைகளில்

ஆஶாரஸ - ப்ரீதியை

தா: - தோற்றுவிப்பவளும்

ஸதார்ட்யதீ: - உறுதியான எண்ணமுடையவளும்

ஹித. அஹி தார்க்ஷ்ய - அநுகூலர்களாய் படுக்கையாகவும் வாஹனமாயும் உள்ள ஆதிசேஷ கருடர்களால்

அரஹிதா - விட்டுப் பிரியாதவளும்

தலம் - நீர்

மே - எனக்கு

முதம் - ஸந்தோஷத்தை

அரம் - சீக்கிரமாக

ஆசர - உண்டுபண்ணு.

கருத்துத் தெளிவானதே. பதம் பிரிப்பது கஷ்டம். உரையில் பிரித்துக் காட்டியுள்ளோம்.

ஒவ்வொரு அடிகளிலும் வந்த எழுத்துக்களே திரும்பவும் திரும்பவும் வந்துள. 7

सरोरुहारामगृहां सुमल्लिका-
सरोरुहारां कमलां मधुद्विषः ।
भुजान्तरामोदकरीं नुमः क्षमा-
भुजां तरामोऽनुसृतिं व्यथाम्बुधिम् ॥ ८ ॥

ஸரோருஹாராமக்ருஹாம் ஸுமல்லிகா–
ஸரோருஹாராம் கமலாம் மதுத்விஷ: ।
புஜாந்தராமோதகரீம் நும: க்ஷமா–
புஜாம் தராமோऽநுஸ்ருதிம் வ்யதாம்புதிம் ॥ 8 ॥

ஸரோருஹ - தாமரைக்காட்டில்

ஆராமக்ருஹாம் - வாழ்பவளும்

ஸு - அழகிய

மல்லிகா ஸர - மல்லிகாஸரத்தால்

உரு - இருமடங்காக்கப்பட்ட

ஹாராம் - முத்துமாலையை உடையவளும்

(அத ஏவ - அதனாலேயே)

மதுத்விஷ: - பகவானுடைய

புஜாந்தர - மார்பை

ஆமோதகரீம் - வாஸனை உள்ளதாகச் செய்பவளுமான கமலையை

நும: - நமஸ்கரிக்கின்றோம்

அத: பரம் – பின்பு

வ்யதாம்புதிம் - துன்பக்கடலாகிய

க்ஷமாபுஜாம் - அரசர்களின்

அநுஸ்ருதிம் - ஸேவையை

தராம: - விட்டு விடுவோம்.

தாமரைக் காட்டிலும் பகவான் மார்பிலும் மாறிமாறி வாழ்வதால் பகவான் மார்புதாமரை வாஸனை உடையதாக ஆயிற்று எனக்கொள்க. மற்றவை தெளிவானதே. 8

नृपो निरास्थः सुमनोजने यो
मनोजनेयो न हि तेन मेऽर्थः ।
स्थितां प्रणम्यासमुरस्यहं तु
मुरस्य हन्तुः स्वयमिन्दिरे त्वाम् ॥ ९ ॥

ந்ருபோ நிராஸ்த: ஸுமநோஜநே யோ
மநோஜநேயோ ந ஹி தேந மேऽர்த்த: ।
ஸ்திதாம் ப்ரணம்யாஸமுரஸ்யஹம் து
முரஸ்ய ஹந்து: ஸ்வயமிந்திரே த்வாம் ॥ 9 ॥

இந்திரே - இலக்குமியே !
ய ந்ருப - எந்த அரசன்
மநோஜ - மன்மதனுக்கு
நேய: - அடியவனும்
ஸுமநோஜநே - புலவர் கூட்டத்தில்
நிராஸ்த: - ஆதரவற்றவனாய் இருக்கின்றானோ
தேந - அந்த அரசனால்
மே அர்த்த: - எனக்கு எவ்விதப் பயனும்
நஹி - இல்லையன்றோ
(தஸ்மாத் - எனவே)
அஹம் து - நானோவெனில்
முரஸ்ய ஹந்து: - முராசுரனை அழித்த பகவானுடைய
உரஸி - மார்பில்
ஸ்வயம் ஸ்திதாம் - தாமாகவோ எழுந்தருளியுள்ள
த்வாம் - உம்மை
ப்ரணம்யாஸம் - வணக்கங்களால் ஆராதிக்கிறேன்.

ஸர்வேச்வரனை தமக்கு ஸ்வாதீனனாகக் கொண்டுள்ளமையால் வேண்டியதை முடிக்கவல்ல லக்ஷ்மியே நாம் வணங்க வேண்டியவள் என்கிறார். முன்போன்ற யமகமே இதிலும். 9

दृष्टिर्दयैकावनि ते रमे न-
श्छिनत्तु विष्णोर्वनितेऽरमे नः ।
भवं तवास्येयमपीडनेन
कुतः क्षतिर्मे यमपीडनेन ॥ १० ॥

த்ருஷ்டிர்தயைகாவநி தே ரமே நஶ்-
சிநத்து விஷ்ணோர்வநிதேऽரமேந: ।
பவம் தவாஸ்யேயமபீடநேந
குத: க்ஷதிர்மே யமபீடநேந ॥ 10 ॥

தயைகாவநி - கருணைக்கு முக்கியமான இருப்பிடமே !
விஷ்ணோ: வநிதே - விஷ்ணுவின்
ரமே - மனைவியான லக்ஷ்மியே !
தேத்ருஷ்டி: - உனது கடாக்ஷம்
ந: ஏந: - எங்களது பாபத்தை
அரம் - சீக்ரமாக
சிநத்து - அழிக்கட்டும்
தவ ஈடநேந - உம்மை ஸ்தோத்தரித்தால்
பவம் - ஸம்ஸாரத்தையும்
அஸ்யேயம் - போக்கவல்லவன் ஆவேன்
மே - அத்தகைய எனக்கு
யமபீடநேந - யமனின் துன்புறுத்த
க்ஷதி: குத: - கஷ்டம் ஏது ? 10

कुभूभुजां सम्प्रति माननेन
फलं सुधांशुप्रतिमानने न ।
शुभं प्रयच्छाविकलं कलेश-
स्वसस्त्वहं स्यां विकलङ्कलेशः ॥ ११ ॥

குபூபுஜாம் ஸம்ப்ரதி மாநநேந
பலம் ஸுதாம்ஶுப்ரதிமாநநே ந ।
ஶுபம் ப்ரயச்சாவிகலம் கலேஶ-
ஸ்வஸஸ்த்வஹம் ஸ்யாம் விகலங்கலேஶ: ॥ 11 ॥

கலேஶஸ்வஸ: - சந்திரஸஹோதரீ !
ஸுதாம்ஶுப்ரதிமாநநே - சந்திரன் போன்ற முகமுடையவளே !
ஸம்ப்ரதி - இவ்வுலகில் வாழும் போது
குபூபுஜாம்மாநநேந - ஸாமாந்ய அரசர்களைப் போற்றுவதால்
ந பலம் - யாதொரு பயனுமில்லை
அவிகலம் - ஸம்பூர்ணமான
ஶுபம் - செல்வத்தை
த்வம் - நீர்
ப்ரயச்ச - அடியேனுக்கு அருளும்
யேந - நீர் அருளிய செல்வத்தால்
அஹம் - நான்
விகலங்க லேஶ: - பாபஸம்பந்தம் அற்றவனாய்
ஸ்யாம் - ஆவேனே.

லக்ஷ்மியின் அருளால் கிடைக்கும் செல்வமே நன்மையானது. மற்றவை யாவும் பாபத்தை விளைவிப்பனவே என்பது கருத்து. 11

करोतु मोदं कमला समुन्मिष-
त्कलाविलासा रसिनी विभावसौ ।
कृपानिधौ वेङ्कटशैलनायके
कलाविला साररसिनी विभावसौ ॥ १२ ॥

கரோது மோதம் கமலா ஸமுந்மிஷத்-
கலாவிலாஸா ரஸிநீ விபாவஸௌ ।
க்ருபாநிதௌ வேங்கடஶைலநாயகே
கலாவிலா ஸாரஸிநீ விபாவஸௌ ॥ 12 ॥

ஸமுந்மிஷத் - வ்ருத்தி அடையும்
கலாவிலாஸா - ஸமஸ்த கலைகளின் விலாஸத்தை உடையவளும்
க்ருபாநிதௌ - தயைக்கு இருப்பிடமாயும்
கலௌ - கலிகாலத்தில்
இலா - பூமியிலுள்ள
ஸாரஸிநீ - ஜநங்களாகிய தாமரைக்கு
விபாவஸௌ - சூர்யன் போன்றவரும்
விபௌ - உலகுக்கெல்லாம் தலைவராயுமுள்ள
வேங்கடஶைலநாயகே - வேங்கடம் என்ற மலையின் தலைவரிடம்
ரஸிநீ - அன்பு உடையவளான
அஸௌ - இந்த லக்ஷ்மி
மோதம் - ஸந்தோஷத்தை
கரோது - உண்டு பண்ணட்டும்

ஸமுந்மிஷத்கலாவிலாஸா, ரஸிநீ, விபௌ, அஸௌ, பின் அடியில் கலௌ, இலாஸாரஸிநீ, விபாவஸௌ என்றும் பதம் பிரித்துக் கொள்ள வேண்டும்.

கலாவிலாஸாரஸிநீ என்பது இருமுறைவந்தும், இருமுறையிலும் பொருளுள்ளதாகவே அமைந்துள்ளதால் ஸார்த்தக வர்ணாவ்ருத்தி :- பொருளுள்ள எழுத்துக்களின் மடக்கு எனக் கொள்ள வேண்டும். 12

योगाय यो गायति भावुकेन
रामे वरामेव हरेस्तवाख्याम् ।
नालीकनालीकसवित्रि धाम
तेनाक्षतेनाक्षतमाप्यते तत् ॥ १३ ॥

யோகாய யோ காயதி பாவுகேந
ராமே வராமேவ ஹரேஸ்தவாக்யாம் ।
நாலீகநாலீகஸவித்ரி தாம
தேநாக்ஷதேநாக்ஷதமாப்யதே தத் ॥ 13 ॥

ஹரே: ராமே - பகவன் மஹிஷீ !
நாலீக - அரவிந்தப்பூவை
நாலீக - பாணமாகக் கொண்ட மன்மதனுடைய
ஸவித்ரி - தாயே !
ய: - எவன்
பாவுகேந யோகாய - இம்மை மறுமைகளின் மேன்மையை அடைய
வராம் - மிக உயர்ந்ததான
தவ - உமது
ஆக்யாமேவ - பெயரையே
காயதி - ஓதிக்கொண்டுள்ளானோ
அக்ஷதேந - இவ்வுலகிலும் க்ஷேமத்தை உடைய
தேந - அந்த புருஷனாலேயே
அக்ஷயம் - அழிவற்ற
தத் தாம - அவ்வுலகம்
ஆப்யதே - அடையப்படுகிறது.

எதை விரும்பி உன் பெயரை ஜபம் செய்கிறானோ. அவனுக்கு அது கிடைக்கும் என்பது கருத்து.

ஒவ்வொரு பாதத்தின் முதலிலும் வந்த சொல்லே திரும்பவும் வருவதான ''பாதாதிபாக ஆவ்ருத்தி:'' என்ற யமகம் வந்துள்ளது. 13

नृणां दृशं सार्थयितुं तवाभूद् रमे यदेहा नरमेयदेहा ।
प्राप्ता तदा त्वं फणिराजशैलवनारिकेलां नवनारिकेलाम् ॥ १४ ॥

ந்ருணாம் த்ருஶம் ஸார்த்தயிதும் தவாபூத்
ரமே யதேஹா நரமேயதேஹா ।
ப்ராப்தா ததா த்வம் பணிராஜஶைல-
வநாரிகேலாம் நவநாரிகேலாம் ॥ 14 ॥

ரமே - லக்ஷ்மியே !
ந்ருணாம் - பூமியிலுள்ள மக்களின்
த்ருஶ: - கண்களை
ஸார்த்தயிதும் - பயன் உடையதாக ஆக்க
யதா - எப்போது
தவ - உனக்கு
ஈஹா - ஸங்கல்பம்
அபூத் - உண்டாயிற்றோ
ததா - அப்போது
த்வம் - நீர்
நர - மனிதர்களால்

மேய - காணத்தகுந்த
தேஹா - அர்ச்சாவிக்ரஹத்தை உடையவராய்
நவ - புதிய
நாரிகேலாம் - தென்னஞ்சோலை சூழ்ந்த
பணிராஜசைல - சேஷாத்ரியினுடைய
வநாளி: - காடுகளையும்
கம் - ஜலத்தையும் மிகுதியாக உடைய
இராம் - பூமியை
ப்ராப்தா: - அடைந்தாய்.

மனிதர்களின் கண்களைப் பயனுள்ளவையாக்கவே நீர் அர்ச்சாவிக்ரஹ வடிவம் கொண்டு பகவானுடன் சேஷாத்ரியை அடைந்தீர். பூமியிலுள்ள மக்களைக் காப்பதென்பது முக்கியமன்று, அக்காத்தலை நீர் எங்கிருந்தாலும் செய்ய முடியும். ஆனால் மனிதர் முதலானோர் கண்களைப் பயன் உடையதாக ஆக்குவது நேராக வந்தால் தான் முடியும். ஆகவேதான் இங்கு அவதரித்துள்ளீர்.

ப்ரமேயதேஹா x நரமேயதேஹா, வநாளிகேராம் x நவநாளிகேராம் என யமகம் விரோதாபாஸமாக வந்துள்ளது. 14

त्वयाश्रितस्यात्र परत्र चोच्चैरकारि रा मे नरकारिरामे ।
गोपालकं त्वं नयसे रसं या गवा समेतं नगवासमेतम् ॥ १५ ॥

த்வயாஶ்ரிதஸ்யாத்ர பரத்ர சோச்சை-
ரகாரி ரா மே நரகாரிராமே ।
கோபாலகம் த்வம் நயஸே ரஸம் யா
கவா ஸமேதம் நகவாஸமேதம் ॥ 15 ॥

நரகாரிராமே - கண்ணன் மனைவியே!
யா த்வம் - மிக உயர்ந்த நீ
நக - வாஸம் - பர்வதத்தில் வாழ்க்கையை
ஏதம் - அடைந்தவனும் (சேஷாத்ரியில் வஸிப்பவன் என்பது உண்மைப் பொருள்)
கவா - ஸமேதம் - பசுக்களை மேய்ப்பவனும் (பூமி தேவியுடன் சேர்ந்தவன் என்பது உண்மைப்பொருள்.)
கோபாலகம் - இடையனுக்கிய அரசிகனை - பகவானை என்பது உண்மைப்பொருள்
ரஸம் நயஸே - ரஸிகனாக ஆக்குகின்றாயோ
தயா த்வயா - அத்தகைய உன்னாலே
ஆச்ரிதஸ்ய - உன்னைச் சரணமடைந்த
மே - என் போன்ற அசக்தனுக்கு
அத்ரபரத்ர - இம்மையிலும் மறுமையிலும்
உச்சை: ரா: - உயர்ந்த செல்வம்
அகாரி - உண்டாக்கப்பட்டது.

ரா: - என்ற ஓரெழுத்து ஒரு மொழி செல்வம் என்ற பொருள் உடையது. இடையர் போன்ற அரஸிகர்களையெல்லாம் ரஸிகர்களாக மாற்றுவதாகிய அகடிதகடா ஸாமர்த்யம் உடைய உனக்கு என் போன்றவர்களிடம் கருணைகாட்டுவது ஆச்சரியமில்லை என்பது கருத்து முன் போன்றே விரோதாபாஸ யமகம். 15

शुद्धया त्वदभिधानसहस्रकं यो गिरा जपति ना समन्ततः ।
त्वं विदुर्हरिसखि त्रयीविदो योगिराजपतिना समं ततः ॥ १६ ॥

ஶுத்தயா த்வதபிதாநஸஹஸ்ரகம்
யோ கிரா ஜபதி நா ஸமந்தத: ।
த்வம் விதுர்ஹரிஸகி த்ரயீவிதோ
யோகிராஜபதிநா ஸமம் தத: ॥ 16 ॥

ஹரிஸகி - பகவன் மஹிஷியே!

ய:, நா - எந்த மனிதன்

ஶுத்தயா - பிற எண்ணங்கள் கலக்காத

கிரா - வாக்காலே

த்வதபிதாந ஸஹஸ்ரகம் - உனது ஸஹஸ்ரநாமத்தை

ஜபதி - மெல்லியதாக ஜபிக்கின்றானோ

ஸமந்தத: - அவன் அருகிலுள்ள

த்ரயீவித: - வேதவித்துக்கள்

தத: - அப்படி அவர் ஜபிப்பதாலே

தம் - அம்மனிதனை

யோகிராஜபதிநா - விஷ்ணு ஸஹஸ்ரநாமம் செய்த வ்யாஸருக்குச் சமமாகவோ, லக்ஷ்மீ ஸஹஸ்ரநாமம் செய்த ஸநத்குமாரருக்குச் சமமாகவோ

விது: - அறிகின்றனர்.

எந்த மந்திரத்தை ஜபம் செய்தாலும் அம்மந்திரம் பிறர் காதில் படாமலும், பிற எண்ணங்கள் கலவாமலும் ஜபிக்க வேண்டும் என்பதும் லக்ஷ்மீ ஸஹஸ்ரநாம ஜபம் செய்பவன் மேன்மையை அடைவன் என்பதும் சொல்லப்பட்டதாயிற்று.

வந்த அடியே பொருள் மாறுபாட்டுடன் வருவதாகிய யமகம். 16

दानश्रिया विहसितामरसालये तां
तापापहां जननि तामरसालये ताम् ।
पादद्वयीं स हि भजेद्रुचिरागमांते
यस्यास्ति निर्मलधियो रुचिरागमान्ते ॥ १७ ॥

தாநஶ்ரியா விஹஸிதாமரஸாலயேதாம்
தாபாபஹாம் ஜநநி தாமரஸாலயே தாம் ।
பாதத்வயீம் ஸ ஹி பஜேத்ருசிராகமாம் தே
யஸ்யாஸ்தி நிர்மலதியோ ருசிராகமாந்தே ॥ 17 ॥

ஜநநி தாமரஸாலயே - தாமரையில் வாழும் தாயே !
விஹஸித - பரிஹஸிக்கப்பட்ட
அமரஸாலயா - கல்பவ்ருக்ஷத்தை உடைய
தாநஶ்ரியா - ஔதார்யஸம்பத்துடன்
இதாம் - கூடியதும்
பாபஹாம் - ஸர்வபாபத்தையும் போக்குவதும்
ருசிராகமாம் - அழகிய நடையை உடையதுமான
தவபாதத்வயீம் - உமது இரு திருவடிகளை
ஸ ஹி பஜேத் - அவனே வணங்குவன்
நிர்மலதிய: - தெளிந்த புத்தியை உடைய
யஸ்ய - எவனுக்கு
ஆகமாந்தே - வேதாந்தத்தில்
ருசி: - விருப்பம்
அஸ்தி - இருக்கின்றதோ

நான்கு அடிகளின் கடைசியிலும் பொருள் வேறுபாடு கொண்ட சொற்கள் வந்துள்ளன. *17*

वशितसर्वजगत्पतिरक्षया
दृगशुभं तव लुम्पति रक्षया ।
हृदयमुज्झतु देवि न मामकं
त्वदिनमन्यमितोविनमाम कम् ॥ १८ ॥

வஶிதஸர்வஜகத்பதிரக்ஷயா
த்ருகஶுபம் தவ லும்பதி ரக்ஷயா ।
ஹ்ருதயமுஜ்ஜது தேவி ந மாமகம்
த்வதிநமந்யமிதோவிநமாம கம் ॥ 18 ॥

ஹ்ருதயம், உஜ்ஜது, தேவி, ந, மாமகம், த்வதிநம், அந்யம், இத:, விநமாம, கம், என்பது பதவிபாகம்.

தேவீ - பகவான் மஹிஷியே !

அக்ஷயா - அபாயமற்றதும்

வசிதஸர்வ ஜகத்பதி: - தன்வச
மாக்கிக் கொள்ளப்பட்ட
ஜகத்ரக்ஷகனை உடையதுமான

தவ த்ருக் - உமது கண்

ரக்ஷயா - இஷ்டத்தை
அடைவிப்பதோடு

அபாயம் - அநிஷ்டத்தையும்

லும்பதி - அழித்துவிடுகிறது

மாமகம் ஹ்ருதயம் - எனது மனம்

த்வதிநம் - உன்னுடன் கூடிய
பகவானை

நோஜ்ஜது - எப்போதும்
த்யாநிப்பதாகுக.

இத: - அந்யம் - இவரினும் வேறான

கம் - எவரை

விநமாம - நமஸ்கரிப்போம் ?

தாயே உமது கடாக்ஷம் இஷ்டத்தை அடைவிப்பதோடு அநிஷ்டத்தையும் அகற்றிவிடுகிறது. எனவே இவ்விரண்டிலும் எங்களுக்கு எவ்விசாரமுமில்லை. ஆயின் செய்ய வேண்டியது யாதெனின் மோக்ஷத்துக்காக எப்போதும் பகவானை த்யானித்துக் கொண்டே இருக்க வேண்டும். தேவதாந்தர வந்தனம் செய்யக் கூடாதாதலால் வேறுயாரை வணங்குவோம். 18

त्यजति यच्छुभलाभवती न तान् जननि मत्प्रभृतीन् भवती नतान् ।
मिलति मे न यथा मतिरंहसा मम तथा दयतामतिरंहसा ॥ १९ ॥

த்யஜதி யச்சுபலாபவதீ ந தான்
ஜநநி மத்ப்ரப்ருதீந் பவதீ நதான் ।
மிலதி மே ந யதா மதிரம்ஹஸா
மம ததா தயதாமதிரம்ஹஸா ॥ 19 ॥

ஜநநி - தாயே !

அபலாபவதீ - அடிபணிந்தவரின்
நன்மையையே பரமலாபமாக
எண்ணுபவளாகிய

பவதீ - நீர்

தாந் - பாபிகளாக ப்ரஸித்தரான

மத்ப்ரப்ருதீநபி - என்போன்றவர்

நதாந் - வணங்கியவர்களையும்

தஸ்மாத் - அதனாலே

மே மதி: - என் புத்தி

யதா - எப்படி இருந்தால்

அம்ஹஸா - பாபத்துடன்

ந மிஷதி - சேராமலிருக்குமோ
அதிரம்ஹஸா - வெகு சீக்கிரமாக
ததா - அப்படி
மம - எனக்கு
தயதாம் - அனுக்ரஹம் செய்ய வேண்டும்

அடி பணிந்தவர்களின் நன்மையையே விரும்புபவளாக நீ உள்ளாய். எனவேதான் என் போன்ற பக்தர்களைக் கை விடாதுள்ளாய். எனவே பிழை உண்டானபின் அப்பிழையைப் பொறுப்பதைவிட விரைவாகப் பிழை உண்டாகாமலே தடுப்பது நன்மையாகையால் என்னைப் பிழை செய்ய வொட்டாமல் காக்க வேண்டும் என வேண்டுகிறார். 19

पद्मेऽस्तु तुभ्यं प्रथमा नमस्या स्थिरं फलं हि प्रथमानमस्याः ।
विधाय मान्यामहतामहं तां हराम्यरीणां महतामहन्ताम् ॥ २० ॥

பத்மேऽஸ்து துப்யம் ப்ரதமா நமஸ்யா
ஸ்திரம் பலம் ஹி ப்ரதமாநமஸ்யா: ।
விதாய மாந்யாமஹதாமஹம் தாம்
ஹராம்யரீணாம் மஹதாமஹந்தாம் ॥ 20 ॥

பத்மே - தாமரையில் வாழ்பவளே !
ப்ரதமாநமஸ்யா: - முதல் பூஜை
துப்யம் - உமக்காக
அஸ்து - ஆகக்கடவது
ஹி - ஏனெனில்
அஸ்யா: - இப்பூஜைக்கு
பலம் - ப்ரயோஜநம்
ப்ரதமாநம் - மிகப் பெரியதாகவும் அழிவற்றதாகவும் உள்ளதோ !
மஹதாம் - பெரியோர்களால்
மாந்யாம் - கொண்டாடத்தக்க
தாம் - அப்பூஜையை
விதாய - செய்து
மஹதாம் - ஜயிக்க முடியாத
அரீணாம் - காமம், க்ரோதம் முதலியவற்றின்
அஹந்தாம் - கெட்ட வழிச் செல்லும் ஆணவத்தை
ஹராமி - அழிப்பேன்

உனது பூஜை அளவற்றதாயும் அழிவற்றதாயும் உள்ள பலத்தைத் தருவதாக உள்ளதால் மேன்மையை விரும்புபவனால் உனது பூஜையே முதலில் செய்ய வேண்டும். பின்புதான் பகவானுடைய பூஜையும் என்பது கருத்து.

நான்கு அடிகளின் கடைப்பகுதிகளும் பொருள் வேறுபாடுடைய ஒரே வகையான சொற்களைப் பெற்ற யமகம். 20

भवत्यजेयं तनुतेऽजसेव्या
जनाय लोकं दययैव तं श्रीः ।
भवत्यजे यं तनुतेजसे व्या-
ध्यघोज्झितं मे कुहृदेऽपि दत्ते ॥ २१ ॥

பவத்யஜேயம் தநுதேऽஜஸேவ்யா
ஜநாய லோகம் தயயைவ தம் ஸ்ரீ: ।
பவத்யஜே யம் தநுதேஜஸே வ்யா-
த்யகோஜ்ஜிதம் மே குஹ்ருதேऽபி தத்தே ॥ 21 ॥

ஹே ஸ்ரீ: - லக்ஷ்மியே!
அஜ - ஸேவ்யா - பிறப்பற்றவர்களான ப்ரஹ்ம ருத்ராதிகளால் ஸேவிக்கப்படுபவளான
பவதீ - நீர்
பவத்யஜே - பற்றைவிட்ட
ஜநாய - யோகிகளுக்கு
யம் லோகம் - எந்த உலகை
தநுதே - அளிக்கின்றாயோ
தநு தேஜஸே - அகிஞ்சநராயும்
குஹ்ருதே - கெட்ட மனமுடையவனுமுள்ள
மே - எனக்கும்
வ்யாதி அகோஜ்ஜிதம் - நோய் பாபமற்றதும்
அஜேயம் - என் போன்றவர்களால் பெறமுடியாததுமான
தம் - அதே அப்ராக்ருத லோகத்தை
தயயா - கருணையினாலே
தத்தே - அளிக்கின்றாய்

பக்தருக்கு அளிக்கும் பலனையே ப்ரபன்னருக்கும் அளிக்கின்றாய். இப்படி அளிப்பதற்குக் காரணம் ப்ரபன்னரிடமுள்ள க்ருபையே என்கிறார். 21

निधाय भवती दृशं नवसरोजपत्रायतां
श्रितं हरिपुरन्ध्रि मां हृतनमद्विपत् त्रायताम् ।
न मां किल विना त्वयापदि तमःकदम्बादयः
कठोरहृदयो हरिः खलजनेऽस्मदम्बादयः ॥ २२ ॥

நிதாய பவதீ த்ருஶம் நவஸரோஜபத்ராயதாம்
ஶ்ரிதம் ஹரிபுரந்த்ரி மாம் ஹ்ருதநமத்விபத் த்ராயதாம் ।
ந மாம் கில விநா த்வயாபதி தம:கதம்பாதய:
கடோரஹ்ருதயோ ஹரி: கலஜநேऽஸ்மதம்பாதய: ॥ 22

ஹரிபுரந்த்ரி - பகவன் மஹிஷி
அஸ்மதம்ப - நீநர்களின் தாயே ।
நவஸரோஜ பத்ராயதாம் - அப்போதலர்ந்த தாமரை போல் விசாலமான
த்ருசம் - கடாக்ஷத்தை
நிதாய - செலுத்தி
ஹ்ருதநமத்விபத் - அடியவரின் விபத்தை அபஹரிப்பவளாக
பவதீ - நீர்
ஶ்ரிதம் - அடிபணிந்த
மாம் த்ராயதாம் - அடியேனைக் காத்தருள்க
கலஜநே - என் போன்ற கொடிய மக்கள் விஷயத்தில்
அய: கடோரஹ்ருதய: - இரும்பினும் கடினமான மனமுடையவரும்
அதய: - தயையற்றவருமான
ஹரி: - நாராயணன்
த்வயா விநா - உன் சிபாரிசு இல்லாமல்
மாம் - கொடியவனை என்னை
தம: கதம்பாத் - பாப ராசியிலிருந்து
நாவதி - காப்பாற்ற மாட்டான்
கில - இது நீயும் அறிந்தது தானே.

பகவான் சிக்ஷிப்பதிலேயே கண் உடையவன் என்றும் தாயான லக்ஷ்மிக்குக் குற்றமே தெரியாதாகையால் அவள் கோபத்தைத் தணித்து நமக்கு அருள் செய்விப்பார் என்பதும் புலப்படுத்தப்பட்டது. யமகம் முன்போல். 22

न स माधवस्तव गुणानसमा-
यतनेत्र एव कमलायतने ।
क्षमतेऽभिधातु मतिदक्षमतेः
स्तवनायकः पदुमतिस्तव ना ॥ २३ ॥

ந ஸ மாதவஸ்தவ குணநஸமா-
யதநேத்ர ஏவ கமலாயதநே ।
க்ஷமதே'பிதாது மதிதக்ஷமதே:
ஸ்தவநாய க: படுமதிஸ்தவ நா ॥ 23 ॥

அஸம - ஒப்பற்றதும்
ஆயத - நீண்டதுமான
நேத்ரே - கண்களை உடையவளும்
கமலாயதநே - தாமரையில் வாழ்பவளுமானவளே !
ஸ: - ஸர்வஜ்ஞன் எனப்புகழ் பெற்றவனும்
மா-தவ-ஏவ - ஜ்ஞாநங்களுக்கு இருப்பிடமான உனது கணவனும்
தவ குணாந் - உனது கல்யாண குணங்களை
அபிதாதும் - இவ்வளவு எனச் சொல்வதற்கு
ந க்ஷமதே - சக்தி உடையவனல்லன்
அதிதக்ஷமதே: - மிகக் கூர்மையான மதியை உடைய
தவ ஸ்தவநாய - உன்னை துதிப்பதற்கு
க: நா - எந்த மனிதன்
படுமதி: - ஸமர்த்த புத்தியை உடையவன்.

உன் கல்யாண குணங்கள் இத்துணை என்பதைக் கூற உன் கணவனை நாராயணனும் அறியான். அப்படியிருக்க மனிதனால் எப்படிப் புகழ முடியும் ! எனவே உன்னை துதிப்பதாகிய கிஞ்சித்காரமும் என்னிடம் எதிர்பார்க்காதே என்கிறார். 23

भवती जगदम्ब कृतार्थभवो-
परमा परमा परमाप रमा ।
कुहृदोऽद्रितटीमवनाय कृपा-
महिता महितामहितामहिता ॥ २४ ॥

பவதீ ஜகதம்ப க்ருதார்த்தபவோ-
பரமா பரமா பரமாப ரமா ।
குஹ்ருதோ'த்ரிதடீமவநாய க்ருபா-
மஹிதா மஹிதாமஹிதாமஹிதா ॥ 24 ॥

க்ருதார்த்தபவ உபரமா, பரமா, பரம், ஆப, ரமா, க்ருபாமஹி, தாம், அஹிதாமஹிதாம், அஹிதா எனப்பிரிக்க.

ஜ்கதம்ப - உலகத்தாயே !

க்ருபா-மஹி - தயை பிறப்புக்கு இடமானவனே

க்ருத-ஆர்த்த பவ-உபரமா - சரணமடைந்தவரின் ஸம்ஸாரக் கடலைப் போக்கியவனே !

பரம்-பரமா - மிகவும் உயர்ந்தவனே !

அ-ஹிதா - பகவானுக்கு ஹிதமானவனே !

ரமா - விளையாடும் ஸ்வபாவம் உள்ளவனே !

பவதீ - நீர்

அஹிதா மஹிதாம் - சேஷாத்ரி எனப் புகழ்பெற்ற

தாம் - மலையின் தாழ்வரையை

கு-ஹ்ருத: - நேர்மையற்ற மனம் உடைய என் போன்றவர்களை

அவநாய - காப்பதற்காக

ஆப - அடைந்துள்ளாய்.

ஒன்று போன்ற மூன்றெழுத்துக்கள் கொண்ட பதங்கள் நான்கு இரண்டடிகளின் முடிவில் வந்துள்ளன தோடக வ்ருத்தம். *24*

रमारमारमारमाद्युपासितं यमर्णवात् ।

धियो हरिं वृषाचलोत्तमेतमेतमेत मे ॥ २५ ॥

ரமார மாரமாரமாத்யுபாஸிதம் யமர்ணவாத் ।

தியோ ஹரிம் வ்ருஷாசலோத்தமேதமேதமேத மே ॥ 25 ॥

ரமா, அரம், ஆர, மாரமாத்யுபாஸிதம், வ்ருஷாசலோத்த மேதம், ஏதம், ஏத, மே. என்பது பதப் பிரிவு.

மே தியः - எனது புத்திகளே !

ரமா - லக்ஷ்மி

மார-மாதி உபாஸிதம் - ருத்ரன முதலியவர்களால் ஸேவிக்கப்பட்ட

யம் - எந்த பகவானை

அரம் - சீக்கிரமாக

அர்ணவாத் - ஸமுத்திரத்திலிருந்துத் தோன்றியதும்

ஆர - அடைந்தாளோ

வ்ருஷாசலோத்தமம்-இதம் - வ்ருஷாத்ரியை அடைந்துள்ள

ஏதம் - இந்த பகவானை

ஏத - அடையுங்கள்.

என் எண்ணங்களெல்லாம் ஸ்ரீநிவாஸனைப் பற்றியதாக இருக்க வேண்டும் என்பது கருத்து. மே திய: என்பதற்கு எனது புத்திகளே எனப் பொருள் சொன்னோம். அதுபோல் எனது பெண்களே என அழைத்ததாகவும் தொனிப் பொருள் உண்டு. அப்போது ஸ்ரீயையே வசீகரிக்கும் அழகு பொருந்தியவனை எனது கன்னிகைகள் வரிக்கட்டும் என்ற பொருளும் தோன்றும்.

25

त्रातुमप्रच्युता वारिजातेक्षणा
त्वं नतान् ध्वस्तदेवारिजाते क्षणात् ।
पातकादिन्दिरे पाहि मां शोभित-
श्रीरघध्वान्तलोपाहिमांशोऽभित: ।। २६ ।।

த்ராதுமப்ரச்யுதா வாரிஜாதேக்ஷணா
த்வம் நதாந் த்வஸ்ததேவாரிஜாதே க்ஷணாத் ।
பாதகாதிந்திரே பாஹி மாம் ஶோபித-
ஶ்ரீரகத்வாந்தலோபாஹிமாம்ஶோऽபித: ।। 26 ।।

த்வஸ்த - அழிக்கப்பட்ட

தேவாரி-ஜாதே - தேவர் சத்ருக்களான அசுர ராக்ஷஸாதி ஸமூஹங்களை உடையவளே !

சோபித - நன்கு விளங்கும்

ஶ்ரீ: - இரண்டு விபூதிகளை உடையவளே !

அக-த்வாந்த - லோப = பாபமாகிற இருளைப் போக்குவதில்

அஹிமாம்சோ - சூரியன் போன்றவளே

நதாந் - வணங்கியவர்களை

த்ராதும் - காப்பாற்றுவதில்

க்ஷணாத் - நொடிப்பொழுதும்

அப்ரச்யுதா - வழுவாதவளுமான

த்வம் - நீ

மாம் - பக்தனான என்னை

அபித: பாதகாத் - ஸர்வபாபங்களிலிருந்து

பாஹி - விடுவிப்பாயாக.

அடியின் கடைசி பாகம் திரும்பவும் வருவதாகிய யமகம்.
26

मन्दारामन्दारामं दारा मन्दाराद्-
याधिघ्रा दैत्यारे: शेषाद्रिं तं प्राप्ता: ।
सारावासारावासारावासारावा-
गालीढा शृङ्गाली यस्यार्तान् संभर्तुम् ।। २७ ।।

மந்தாராமந்தாராமம் தாரா மந்தாராத்-
யாதிக்நா தைத்யாரே: ஶேஷாத்ரிம் தம் ப்ராப்தா: ।
ஸாராவாஸாராவாஸாராவாஸாராவா-
காலீடா ஶ்ருங்காலீ யஸ்யார்த்தாந் ஸம்பர்த்தும் ।। 27

மந்தாராமந்தாராமம், தாரா:, மந்தாராத்யதிக்நா:, ஸாராவா, ஸாராவா ஸாரா, வா, ஸாராவா காவீடா, என்பது பத விபாகம்.

யஸ்ய - எந்தத் திருவேங்கடமலையின்
ஶ்ருங்காலீ: - நுனியின் வரிசைகள்
ஸாராவா - சுர, நர, பசு, முதலியவைகளைக் காக்கின்றனவோ
ஸாராபாஸாரா -
ஸார - தூயதான
அபாம் - ஆகாச கங்கை முதலானவற்றின்
ஆஸார: - வீழ்ச்சியை உடையனவாக உள்ளனவோ
ஸாராவா காவீடா -
ஸாராவ - பக்ஷிகளின் சப்தத்தோடு கூடிய
அக - மரங்களாலே
ஆவீடா - வ்யாப்தமாயுள்ளனவோ

மந்தாராமந்தாராமம்-
மந்தாரா - மந்தாரம் என்ற தேவருலகமரத்தை
அமந்த - மிகுதியாகப் பெற்றுள்ள
ஆராமம் - தோட்டத்தையுடையதுமாக உள்ளதோ
தம் - அந்த சேஷாத்ரியை
மந்தாராதிக்நா:
மந்தார - சனி முதலான கெட்ட க்ரஹங்களால் உண்டான
ஆதிக்நா: - மநோவ்யாதியால் துன்பப் படுபவர்களான
ஆர்தாந் - வ்யாதிஸ்தாகளை
ஸந்த்ராதும் - காப்பதற்காக
ஸம்ப்ராப்தா: - அடைந்துள்ளாள்.

ஸாராவா என்பதற்கு ஆரேண ஸக்ஷிதா: ஸாரா:, ஸாராந் அவதீதி ஸாராவா என்பது விக்ரஹம். ஸாராவாஸாரா என்பது ஸாராபாஸாரா எனக் கொள்ளப்பட்டது. வ, ப, என்கிற இரண்டு எழுத்துகளுக்கும் வேறுபாடு கிடையாது பொருள் கொள்ளும்போது, வபயோ: அபேதம் என்பர் இதனை மந்தாராத்யாதிக்நா: என்பது மந்த + அர + ஆதி + க்நா: எனப் பிரியும். மந்தன் = சனி. அர - செவ்வாய், ஆதி முதலிய கெட்ட க்ரஹங்களாலுண்டான ஆதி - மநோவ்யாதி, அதனை, க்நா: - போக்குபவர். தாரா: என்ற சொல்லுக்கு மனைவி எனப் பொருளாக இருந்தாலும் அது புல்லிங்கமாகவே இருக்கும் பகுவசனமாகவே இருக்கும். 27

शमदमौ मदमौव्यहरौ वहन्
मधुरिपुं धुरि पुण्यकृतां स्थित: ।
विनमतीनमतीव तवार्चको
निजगदं जगदम्ब जहाति च ॥ २८ ॥

ஸமதமௌ மதமௌட்யஹரௌ வஹந்
மதுரிபும் துரி புண்யக்ருதாம் ஸ்தித: ।
விநமதீநமதீவ தவார்ச்சகோ
நிஜகதம் ஜகதம்ப ஜஹாதி ச ॥ 28 ॥

விநமதி, இநம், அதீவ, தவ, அர்ச்சக:, நிஜகதம் ஜகதம்ப எனப்பதம் பிரித்துக் கொள்க.

ஹே ஜகதம்ப - உலகத்தாயே!
தவ அர்ச்சக: - உன்னை ஆராதிப்பவர்
மதமௌட்ய ஹரௌ - காமம் க்ரோதம் முதலியன இன்மையை.
வஹந் - தரிப்பவராய்
புண்யக்ருதாம் - ஸுக்ருதிகளுக்குள்
துரி ஸ்தித: - முதன்மை பெற்றவராய்
தவ இநம் - உமது பர்த்தாவான
மதுரிபும் - நாராயணனை
விநமதி - வணங்குகிறார்
நிஜ - தனது
கதம் - வ்யாதியை
அதீவ ஜஹாதி ச - அடியோடு விட்டு விடுகிறார்.

உன்னை வணங்குபவருக்கு மோக்ஷமடைவதற்கு வேண்டிய வழியும், மோக்ஷமும் கைகூடியது என்கிறார்.

ச்ருங்கலா யமகம் பயின்றுள்ளது. ச்ருங்கலா என்றால் சங்கிலி. சங்கிலியில் ஒருவளையத்துடன் மறுவளையம் எப்படித் தொடர்கிறதோ அப்படி சொற்கள் இதில் தொடர்ந்துள்ளன. 28

जननि त्वया परिचरत्सुरकि-
न्नरकान्तया नयजुषा स्तुतया।
हृदि मे विना किमपि कलृप्तनम-
न्नरकान्तया न यजुषा स्तुतया ॥ २९ ॥

ஜநநி த்வயா பரிசரத்ஸுரகி-
ந்நரகாந்தயா நயஜுஷா ஸ்துதயா ।
ஹ்ருதி மே விநா கிமபி க்லுப்தநம-
ந்நரகாந்தயா ந யஜுஷா ஸ்துதயா ॥ 29 ॥

ஹே ஜநநி - தாயே !

பரிசரத் - பணிவிடை செய்யும்

ஸுர கிந்நர காந்தயா - தேவர், கிந்நரர் முதலிய பெண்களாலே

யஜுஷா - யஜுர் வேத வாக்யங்களால்

ஸ்துதயா - விளக்கப்பட்ட மாஹாத்மியத்தை உடையவளும்

க்லுப்த - செய்யப்பட்ட

நமத் - பக்தனுடைய

நரக அந்தயா - நரகத்தின் முடிவை உடையவளும்

நய ஜுஷா - நேர்மையானவளும்

தயா - மிக்க புகழுடையவளுமான

த்வயா விநா - உன்னையன்றின

கிமபி வஸ்து - எந்த ஒரு பொருளும்

மே ஹ்ருதி - என் மனதில்

நாஸ்து - இருக்க வேண்டாம்.

எப்போதும் உன்னையே நினைத்திருக்க வேண்டும் என வேண்டுகிறார். 29

त्वमेव सेव्या सुदृशां तव स्थिरं
रमे यतो यादवनायके बलम् ।
उरो हि शौरेरुदधेस्त्वमग्रही-
रमेयतोयादवनाय केवलम् ॥ ३० ॥

த்வமேவ ஸேவ்யா ஸுத்ருஶாம் தவ ஸ்திரம்
ரமே யதோ யாதவநாயகே பலம் ।
உரோ ஹி ஶௌரேருததேஸ்த்வமக்ரஹீ-
ரமேயதோயாதவநாய கேவலம் ॥ 30 ॥

ஹே ரமே - லக்ஷ்மியே !

யத: - எந்த காரணத்தால்

யாதவ நாயகே - பகவானிடம்

பலம் - ஸர்வசக்தியும் உடைமை

தே த்ருஶைவ - உனது பார்வையாலேயே

ஸ்திரம் - நிலைத்துள்ளதோ

ஹி - எக்காரணத்தால்

அமேய - அளவிட முடியாத

தோயாத் - ஜலமுடைய ஸமுத்திரத்திலிருந்துத் தோன்றி

ஶௌரே: - நாராயணனது

உர: - மார்பை

அவநாய கேவலம் - இந்திரன் போன்றவர்களைக் காப்பதற்காக

அக்ரஹீ: - அடைந்தாயோ

அத: - ஆதலால்

த்வமேவ - நீயே

ஸேவ்யா - வணங்கத்தக்கவளாக

அஸி - ஆகின்றாய்.

வலம் என்ற சொல் வபயோ: அபேதம் என்பதைக் கொண்டு பலம் எனக் கொள்ளப்பட்டது. லக்ஷ்மியின் கடாக்ஷத்தால் தான் பகவான் ஸர்வசக்தனாக உள்ளான் என்பதை "ச்ரத்தயா தேவ: தேவத்வம் அச்நுதே" என்று ச்ருதி கூறுகிறது.

அமேய தோயாத், அவநாய, கேவலம் என்பது பதவிபாகம் அடிகளின் கடைசியில் பொருள் வேறுபாடுடைய ஒரே வகையான சொற்கள் வந்துள. 30

सारसं श्रितवती ससारसं-
मानना हिमकरोपमाननाम् ।
देवतां प्रणमतो मुदेव तां
वेदनादमहितां न वेदना ॥ ३१ ॥

ஸாரஸம் ச்ரிதவதீ ஸஸாரஸம்-
மாநநாம் ஹிமகரோபமாநநாம் ।
தேவதாம் ப்ரணமதோ முதேவ தாம்
வேதநாதமஹிதாம் ந வேதநா ॥ 31 ॥

ஸ ஸாரஸம்மாநநாம் - தனது பர்தாவால் மதிக்கப்பட்டவளும்
ஹிமகர - சந்திரனுடன்
உபம - ஒத்த
ஆநநாம் - முகமுடையவளும்
வேதநாத - வேத கோஷத்தாலே
மஹிதாம் - உபசரிக்கப்பட்டவளும்
ஸாரஸம் - தாமரையில்
ச்ரிதவதீம் - வீற்றிருப்பவளுமான
தாம் தேவதாம் - ஒப்பற்ற தேவதையை
ப்ரணமத: - வணங்குபவனுக்கு
நவேதநா - துக்க ஸம்பந்தமே இல்லாத
முதேவ - சுகமாகிய மோக்ஷமே (கிடைக்கும்).

லக்ஷ்மியை நமஸ்கரிப்பவருக்கு துக்க ஸம்பந்தமில்லாத சாச்வத சுகமான மோக்ஷம் கிட்டும் என்கிறார். 31

सा मयि देयादीक्षां रमार्तरक्षार्थमादद्रे या दीक्षाम्।
यत्पदजलजनतानां सुगमं दिव्यधाम जलजनतानाम् ॥ ३२ ॥

ஸா மயி தேயாதீக்ஷாம் ரமார்த்தரக்ஷார்த்தமாததே யா தீக்ஷாம்।
யத்பதஜலஜநதாநாம் ஸுகமம் திவ்யதாம ஜலஜநதாநாம் ॥ 32 ॥

தேயாத், ரக்ஷாம், ரமா, ஆர்த்த ரக்ஷார்த்தம், ஆததே, யா, தீக்ஷாம், கடைசியில் உள்ள ஜலஜநதாநாம் என்பது பொருள் கொள்ளும் போது ஜட, ஜநதாநாம், என மாறும். டலயோ: அபேதம்.

யா ரமா - எந்த லக்ஷ்மி
ஆர்த்த - தீநர்களை
ரக்ஷார்த்தம் - காப்பதற்கான
தீக்ஷாம் - வ்ரதத்தை
ஆததே - மேற்கொண்டாளோ
யத்பத - எவள் திருவடியாகிய
ஜலஜ - தாமரையை
நதாநாம் - வணங்கிய
ஜட - அறிவிலிகளாகிய
ஜநதாநாமபி - மனிதர்களுக்கும்
திவ்யதாம - மோக்ஷமானது
ஸுகமம் - எளிதில் கிடைக்கவல்லதோ
ஸா - அத்தகையவள்
மயி - என்னிடம்
ரக்ஷாம் - கடாக்ஷத்தை,
தேயாத் - செலுத்தட்டும்

எவள் ஆர்த்தரைக் காப்பதை வ்ரதமாகக் கொண்டவளோ எவள் அறிவிலிகளையும் காப்பவளோ அவள் அறிவிலிகளுள் முதன்மையானவனான என்னைக் காக்கட்டும் என வேண்டுகின்றார். முன் இரண்டடிகளில் ஒரே வகையான யமகமும் பின் இரண்டடிகளில் ஒரே வகையான யமகமும் வந்துள்ளது. டளயோ: அபேதாத் யமகம் பாதிக்கப்படாது. 32

कमले राजीवानां कुले स्थिता त्वं गतिः परा जीवानाम्।
जगदाराध्या यन्ति श्रेयस्त्वां ये कृतादरा ध्यायन्ति ॥ ३३ ॥

கமலே ராஜீவாநாம் குலே ஸ்திதா த்வம் கதி: பரா ஜீவாநாம்।
ஜகதாராத்யா யந்தி ச்ரேயஸ்த்வாம் யே க்ருதாதரா த்யாயந்தி ॥33

ஹே கமலே - தாமரையில் வாழ்பவளே!

ஜீவாநாம் - ஸர்வ ப்ராணிகளுக்கும்

பராகதி: - அடைய வேண்டிய உயர்ந்த இடமாகிருப்

ஜகதாராத்யா - உலகமக்களால் ஆராதிக்கத்தக்க

த்வம் - நீ

ராஜீவாநாம் - தாமரைகளின்

குலே - ஸமூஹத்தில்

ஸ்திதா - வீற்றிருக்கிறாய்

ஈத்ருசீம் - இத்தகைய

த்வாம் - உன்னை

க்ருதாதரா: - பக்தியுடன்

யே - எவர்கள்

த்யாயந்தி - த்யானிக்கின்றனரோ

தே - அவர்கள்

ச்ரேய: - மோக்ஷத்தை

யந்தி - அடைகின்றனர்.

எளியவளாயும் மோக்ஷமளிக்கவல்லவளாயுமுள்ள உன்னை உபாஸிப்பவர்க்கு மோக்ஷத்தில் ஸந்தேஹம் ஏது என்கிறார். *33*

किमपि महोदारेषु प्रथमं मधुवैरिणो महो दारेषु ।
जयति सपर्या यस्य स्थिरफलदात्री सुरद्रुपर्यायस्य ॥ ३४ ॥

கிமபி மஹோதாரேஷு ப்ரதமம் மதுவைரிணோ மஹோ தாரேஷு ।
ஜயதி ஸபர்யா யஸ்ய ஸ்திரபலதாத்ரீ ஸுரத்ருபர்யாயஸ்ய ॥ 34 ॥

ஸுரத்ரு பர்யாயஸ்ய - கல்பக மரம் போன்ற

யஸ்ய - எந்த ஒளியின்

ஸபர்யா - பூஜை

ஸ்திரபலதாத்ரீ - அழிவற்ற பலமாகிய மோக்ஷத்தைத் தருகிறதோ

மஹோதாரேஷு - மிக உயர்ந்தவர்களான

மதுவைரிண: - பகவானுடைய

தாரேஷு - மனைவிகளுக்குள்

ப்ரதமம் - முதன்மையானதான

கிமபிமஹ: - லக்ஷ்மி என்கிற ஒப்பற்ற ஒளி

ஜயதி - உயர்ந்து விளங்குகின்றது.

பகவன் மஹிஷிகளுக்குள் முக்தி தரும் பெருமை லக்ஷ்மி ஒருவளுக்கே உண்டு என்பது கருத்து.

முன் இரண்டடியிலும், பின் இரண்டடி முடிவிலும் ஒரே மாதிரியான சொற்கள் வந்துள்ளன. *34*

विधृतां हरिणाङ्केन
त्वां प्रतिवददाननां हि हरिणाङ्केन ।
प्रणमन् जननि बिडौजा
जनो भुवि स्यात् स्वबन्धुजननिबिडौजाः ॥ ३५ ॥

வித்ருதாம் ஹரிணாங்கேந
த்வாம் ப்ரதிவததாநநாம் ஹி ஹரிணாங்கேந ।
ப்ரணமந் ஜநநி பிடௌஜா
ஜநோ புவி ஸ்யாத் ஸ்வபந்துஜநநிபிடௌஜா: ॥ 35

ஹரிணா, அங்கேந, ப்ரதிவதத் ஆநநாம், ஹரிணாங்கேந, பிடௌஜா:, ஜந:, ஸ்வபந்து ஜநநிபிடௌஜா:, என்பது பதவிபாகம்.

ஹே ஜநநி - தாயே!
ஹரிணா - பகவானாலே
அங்கேந - ஸ்ரீவத்ஸம் என்ற மருவுடன்
உரஸி - மார்பில்
வித்ருதாம் - தரிக்கப்பட்டவளும்
ஹரிணாங்கேந - சந்திரனுடன்
ப்ரதிவதத் - போட்டியிடும்
ஆநநாம் - முகத்தை உடையவளுமான
த்வாம் - உன்னை
ப்ரணமந் - ஸேவிக்கும்
ஜந: - எந்த ஒரு மனிதனும்
ஸ்வபந்துஜநநிபிட - செல்வத்தாலும் உறவினர்களாலும் அடர்ந்த
ஓஜா: - வீட்டை உடையவனாய்
புவ: - பூமிக்கு
பிடௌஜா: - அதிபதியாகவும்
ஸ்யாத் - ஆகக்கடவன். 35

कलशोदधिकन्या यं
पश्यति विद्यात् स तावदधिकन्यायम् ।
जितकथककवितानेन
त्रयीविदा लभ्यते च कवितानेन ॥ ३६ ॥

கலஶோததிகந்யா யம்
பஶ்யதி வித்யாத் ஸ தாவததிகந்யாயம் ।
ஜிதகதககவிதாநேந
த்ரயீவிதா லப்யதே ச கவிதாநேந ॥ 36 ॥

கலஶோததி கந்யா - பாற்கடல் குமரி
யம் - எவனை
பஶ்யதி - அநுக்ரஹிக்கின்றுளோ
ஸ தாவத் - அவன்
அதிகம் ந்யாயம் - அநுகமத்துடன் ந்யாய சாஸ்த்ரத்தை
வித்யாத் - அறிவன்
ஜித கதக விதாநேந - வெற்றி காணப்பட்ட வம்பாடுபவர்களின் தொகுதியை உடையவனாயும்
த்ரயீவிதா - வேத, வேதார்த்தங்களை அறிந்தவனுமான
அநேந - புருஷனாலே
கவிதா - கவிதையியற்றும் சக்தியும்
லப்யதே - அடையப்படும்.

பலவகையான கலைகளும் லக்ஷ்மியின் கடாக்ஷத்தால் ஒருவனுக்கே கிடைக்கின்றன.

அநுகமம் என்பது ந்யாய சாஸ்த்ரத்தில் மிக உயர்ந்த பகுதி. பலபல கருத்துகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது. சூத்திரம் போன்றது. 36

श्रीः सेवानरकेषु
त्वयार्थ्यतां हरिरिताढ्यवानरकेषु ।
मां विनिपात्य न घोराः
शुचो यथा नयति किन्तु पात्यनघोराः ॥ ३७ ॥

ஸ்ரீ: ஸேவாநரகேஷு
த்வயார்த்த்யதாம் ஹரிரிதாட்யவாநரகேஷு ।
மாம் விநிபாத்ய ந கோரா:
ஶுசோ யதா நயதி கிந்து பாத்யநகோரா: ॥ 37 ॥

ஹே ஸ்ரீ: - லக்ஷ்மியே!
த்வயா - நீ வாழ்வதாலே
அநக உரா: - அழகிய மார்பை உடைய
ஹரி: - பகவான்
இத-ஆட்ய வாநரகேஷு - செல்வந்தராகிய குரங்குகளுடன் கூடிய
ஸேவா நரகேஷு - பணிவிடை செய்தல் என்ற நரகத்தில்
விநிபாத்ய - வீழ்த்தி
மாம் - எனக்கு
கோராம் - கொடிய
ஶுச: - துன்பங்களை
யதா ந நயதி - அடைவிக்காமல் எப்படி இருப்பனோ
கிம் து - ஆனால்
பாதி - காப்பாற்றுவனோ
ததா - அப்படி
அர்த்யதாம் - நீ வேண்டுவாயாக.

அநகோரா: என்பதை அநக: + ரா: - என்றும் பிரிக்கலாம். அப்போது பக்தர்களுக்கு அழிவற்ற செல்வம் போன்றவன் பகவான் என்பது பொருளாம்.

பணக்கார அல்பனுக்கு ஏழையைக் கண்டதும் முகத்தில் ஒருவகை விகாரம், உடலில் ஒரு கோணல், துராக்ரஹம் முதலியன உண்டாம். இதனால் அவன் குரங்குக்குச் சமமானவன். அவனுக்கு அடிமையாக இருப்பது நரகமாம், அத்தகைய நரகத்தில் விழும் மாபாபியாக என்னை ஆக்காது, நரகத்தை அடைவிக்காது காத்து என்னை ரக்ஷிக்கும்படி அடியார்களின் அழிவற்ற பக்தியாகிய தனமாம் நாராயணனை நீ ஸமாதானம் செய்வாயாக என வேண்டுகிறார். 37

सततविकाराकल्पं
प्राप्तोऽहं देहमम्ब काराकल्पम् ।
कुभवादाशु भवत्या
स्वमुद्धार्यो रमे सदा शुभवत्या ॥ ३८ ॥

ஸததவிகாராகல்பம்
ப்ராப்தோऽஹம் தேஹமம்ப காராகல்பம் ।
குபவாதாஶு பவத்யா
ஸ்வயமுத்தார்யோ ரமே ஸதா ஶுபவத்யா ॥ 38 ॥

ஹே அம்ப - தாயே !

அஹம் - நான்

ஸதத விகார ஆகல்பம் – எப்போதுமுள்ள ஜன்ம மரண காமாதி வேஷத்தை உடையவனும்

காராகல்பம் – ஜெயிலுக்கு ஸமமான

தேஹம் - உடலை

ப்ராப்த: - அடைந்துள்ளவனுமான நான்

ஸதா ஶுபவத்யா - கல்யாண குணங்களுக்கு மட்டும் இருப்பிடமான

பவத்யா - உன்னாலே

குபவாத் - ஹேயமான ஸம்ஸாரத்திலிருந்து

ஆஶு - சீக்ரமாக

ஸ்வயம் ஏவ - உன்னாலேயே

உத்தார்ய: - விடுவிக்கப்பட வேண்டியவன்.

மனித உடலுக்கு காமக்ரோதாதிகள் தான் அணிகலன்கள் என பரிஹஸிக்கிறார். ஜெயில் எப்படிப் பல வகைத் துன்பங்களுக்கு இருப்பிடமாயும், இஷ்டம் போல் வெளியில் செல்ல முடியாததாயுமுள்ளதோ அதேபோல் உடலும் உள்ளது என்பது கருத்து. 38

सारासाराज्ञान-
स्थानेन किमस्ततेजसा राज्ञा नः ।
श्रीस्त्वयि मानसमेतद्
न्यस्येम विमुक्तयेऽभिमानसमेतम् ॥ ३९ ॥

ஸாராஸாராஜ்ஞாந-
ஸ்தாநேந கிமஸ்ததேஜஸா ராஜ்ஞா ந: ।
ஸ்ரீஸ்த்வயி மாநஸமேதத்
ந்யஸ்யேம விமுக்தயேऽபிமாநஸமேதம் ॥ 39 ॥

ஸாராஸாரா அஜ்ஞாநஸ்தா அநேந - விவேகம் அற்றவனுமும்
(அத ஏவ - அதனாலேயே)
அஸ்ததேஜஸா - பெருமை அற்றவனுமுள்ள
ராஜ்ஞா - சிற்றரசனாலே
ந: - என் போன்ற மோக்ஷ விரும்பிகளுக்கு
கிம் - என்ன பயன் ? என்று
அபிமாந ஸமேதம் - அஹங்காரம் பிடித்த
ஏதத் மாநஸம் - இந்த மனதை
விமுக்தயே - ஸம்ஸாரத்திலிருந்து விடுபடுவதற்காக
த்வயி - ஸர்வசக்தியும் உடைய உன்னிடம்
ந்யஸ்யேம - வைக்கக் கடவோம்.

எங்கள் மனம் ஸர்வ காலமும் உன்னிடமே எப்போதும் இருக்கும்படி நீ அநுக்ரஹம் செய்ய வேண்டும் என்பது கருத்து. 39

व्यक्तिं विन्देमहि ता-
मिन्द्रादिसुरैर्नवारविन्दे महिताम् ।
मध्यमतारकवर्णा-
भिहिता या नखजितोरुतारकवर्णा ॥ ४० ॥

வ்யக்திம் விந்தேமஹி தா-
மிந்த்ராதிஸுரைர் நவாரவிந்தே மஹிதாம் ।
மத்யமதாரகவர்ணை-
ரபிஹிதா யா நகஜிதோருதாரகவர்ணா ॥ 40 ॥

நகஜித உருதாரக வர்ணா - நகங்களின் ஒளியால் வெற்றி பெறப்பட்ட நக்ஷத்ரங்களின் ஒளியை உடையதான

யா - எந்த உருவம்

மத்யம, தாரக அபிஹிதா - ப்ரணவத்தின் நடு எழுத்தால் சொல்லப்பட்டதோ

இந்த்ராதிஸுரை: - இந்திரன் முதலான தேவர்களால்

நவாரவிந்தே - புதிய தாமரைப் பூவில்

மஹிதாம் - பூஜிக்கப்பட்ட

வ்யக்திம் - உருவமுடைய லக்ஷ்மியை

விந்தேமஹி - அடையக் கடவேன்.

ப்ரணவம் என்ற பெயர் ஓம் என்ற எழுத்துக்கு உரியது. அது அ+உ+ம - என்ற மூன்று எழுத்துக்களின் சேர்க்கையால் உண்டானது. இடையில் உள்ள உ என்பது லக்ஷ்மியைச் சொல்வது என்பது மந்த்ர சாஸ்த்ரத்துள் உள்ளது. இந்த்ராதி தேவர்களுக்கும் தேவதையாய் ப்ரணவத்தால் விளக்கப்படுபவளும், ஸர்வாங்க ஸௌந்தரியுமான தேவதையை எனது அபீஷ்ட ஸித்திக்காக ஆராதிக்கிறேன் என்கிறார். 40

हृतसदरिद्रव्याधिश्रितमुच्छिन्नदुर्दरिद्रव्याधिः ।
अतुलकृपा या देवप्रणुता सा रमात्र पायादेव ॥ ४१ ॥

ஹ்ருதஸதரித்ரவ்யாதிஶ்ரிதமுச்சிந்நதுர்தரித்ரவ்யாதி: ।
அதுலக்ருபா யா தேவப்ரணுதா ஸா ரமாத்ர பாயாதேவ ॥ 41 ॥

ஹ்ருத - அபஹரிக்கப்பட்ட

ஸத் - ஸத்புருஷர்களின்

அரி - பகைவரின்

த்ரவ்யா - த்ரவ்யத்தை உடையவளும்.

அதிஶ்ரிதஜந - அடிபணிந்த ஜநங்களின் விஷயத்தில்

உச்சிந்ந - அழிக்கப்பட்ட

துர்தரித்ர - கொடிய தரித்ரர்களின்

வ்யாதி: - வ்யாதியான ஏழ்மையை உடையவளும்

தேவப்ரணுதா - தேவரால் வணங்கப்பட்டவளுமான

யா ரமா - எந்த லக்ஷ்மி

அதுலக்ருபா - ஒப்பற்ற தயையை உடையவளாக உள்ளாளோ

ஸா ரமா - அந்த இலக்குமி

அத்ர - இந்த வைஷ்ணவப் பிறப்பிலே

பாயாத் - காப்பாற்றவே செய்வள்.

குணக்கடலான இலக்குமி மிகவும் தீநனையும் வைணவனையும் அடிபணிந்தவனுமான என்னை எப்படிக் காப்பாற்றுதுவிடுவள் என்பது கருத்து. 41

शोपितभवनदयाग-
स्तन्येशः कचजितोत्प्रभवनदयागः ।
सोऽनभिभवनदयागः
सोढ्वा प्रभवेत् त्वया भवनदयागः ॥ ४२ ॥

ஶோஷிதபவநதயாக-
ஸ்தந்யேஶ: கசஜிதோத்ப்ரபவநதயாக: ।
ஸோऽநபிபவநதயாக:
ஸோட்வா ப்ரபவேத் த்வயா பவநதயாக: ॥ 42 ॥

இனி செய்யுளின் நான்கு அடிகளின் முடிவிலும் ஒரே மாதிரியான செற்கள் வருவதான யமகம்.

சோஷித-பவ-நதயா, அகஸ்தந்யா, ஈச:, கசஜித - உத்ப்ரப-வநத-யாக:, ஸ:, அநபிபவநதயாக:, ஸோட்வா ஆத்ம பவநத:, யாக:, என்பது பதவிபாகம்.

ஸ: ஈஶ: - ப்ரஸித்த ஸர்வேச்வரன்

ஶோஷித பவநதயா - உயர்த்தப்பட்ட ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தை உடையவளும்

அக - மலை போன்ற

ஸ்தந்யா - கொங்கைகளை உடையவளும்

கசஜித - தலை ரோமங்களால் ஜெயிக்கப்பட்ட

உதப்ரப - உயர்ந்த சோபையை உடைய

வநதயா - மேகத்தை உடையவளுமான

பத்மயா - ஸ்ரீயாலே

ஆக: - பாபங்களை

ஸோட்வா - பொருத்துக்கொண்டு

அநபிபவந - தடங்கலற்று பாய்வதான

தயாக: - கருணையை உடையவளாய்

ஆத்ம - தம்முடைய

பவநத - வீடு போன்ற மோக்ஷத்தை அளிப்பதான

யாக: - ப்ரபத்தி என்றும் யாகத்தை உடையவளாய்

அவதி - பாபிகளைக் காப்பாற்றுகிறன்.

பாபிகளை பகவான் காப்பது ஸ்ரீயின் தூண்டுதலாலேயே என்பது கருத்து. 42

त्वां हि सुधी राजयति
स्तुतां स्तवैर्यः प्रमानिधी राजयति ।
भवति स धी राजयति
श्रीस्तं स भुवोऽत्र सोदधीरा जयति ॥ ४३ ॥

த்வாம் ஹி ஸுதீ ராஜயதி
ஸ்துதாம் ஸ்தவைர்ய: ப்ரமாநிதீ ராஜயதி: ।
பவதி ஸ தீ ராஜயதி
ஸ்ரீஸ்தம் ஸ புவோऽத்ர ஸோததீரா ஜயதி ॥ 43 ॥

த்வாம், ஹி, ஸுதீ-ராஜ-யதி, ஸ்துதாம், ப்ரமாநிதீ, ராஜயதி, பவதீ, தீராஜயதி, அத்ர, ஸோததீ:, ஆஜயதி - என்பது பதவிபாகம்.

ப்ரமாநிதி: - உயர்ந்த ஜ்ஞானத்துக்கு இருப்பிடமான
ய: - எவனொருவன்
ஸுதீர அஜ யதி ஸ்துதாம் - நான்முக ருத்ராதிகளாலும் ஸநகாதிகளாலும் ஸ்தோத்ரம் செய்யப்பட்ட
த்வாம் - உன்னை
ஸ்தவை: - ஸ்தோத்ரங்களால்
ராஜயதி - மகிழ்விக்கின்றானோ
ஹே ஸ்ரீ: - லக்ஷ்மியே!
பவதீ - நீர்
தம் - மகிழ்விப்பவரை
தீராஜம் - ப்ருஹஸ்பதியாக ஆக்குகிறாய்
ஸ: - பண்டிதனுக்கப்பட்டவன்
ஸோததீ: - கடலால் சூழப்பட்ட
புவ: - பூமி முழுவதையும்
ஆஜயதி - தன்வசம் ஆக்கிக் கொள்கிறான்.

உன்னை துதிப்பவனுக்கு உயர்ந்த அறிவும் நாற் புறமும் கடல் சூழ்ந்த உலகும் உண்டாகும் என்கிறார். தீராஜயதி என்பதற்கு, தீ - புத்திக்கு, ராஜயதி - அரசராக்குகிறாய் - அதாவது ப்ருஹஸ்பதியாக்குகிறாய் என்பது பொருள். ''தத்கரோதி இதிணிச்'' என்பர் வடமொழியில். 43

भक्ततमानायतया
दृक् तव कमले सुरोत्तमानायत या ।
विश्रुतमानायतया
शमय भवं श्रेयसेऽसमानाय तया ॥ ४४ ॥

பக்ததமாநாயததயா
        த்ருக் தவ கமலே ஸரோத்தமாநாயத யா ।
விச்ருதமாநாயதயா
        சமய பலம் ச்ரேயஸேऽஸமாநாய தயா ॥ 44 ॥

பக்ததமாந், ஆயத, யா, த்ருக், தவ, கமலே, ஸரோத்தமாந், ஆயதயா, விச்ருதமாநா, ஆயதயா, சமய, பலம், ச்ரேயஸே, அஸமாநாய, தயா, எனப்பதவிபாகம் கொள்க.

ஹே ! கமலே - ரமையே !

தவ யா த்ருக் - உனது கடாக்ஷம்

பக்ததமாந் ஸரோத்தமாந் - பக்தர்களான இந்திரன் முதலானவர்களை

ஆயதயா - இழந்த அரசை திரும்பவும் பெற்றதாலே

ஆயத - அடைந்ததோ

விச்ருதமாநா - சிறப்பாக ச்ருதியில் புகழப்பட்ட

ஆயதயா - தொடர்பை உடையதுமான்

தயா - அக்கண்ணாலே

அஸமாநாய ச்ரேயஸே - ஒப்பற்ற மோக்ஷத்துக்காக

பலம் சமய - ப்ரதிபந்தத்தைப் போக்கு. 44

श्रीः परभागवती य-
        म्यभिष्टुता सा मुकुन्दभागवती यम् ।
फणिवृषभागवतीयं
        पश्यति भजते पदं स भागवतीयम् ॥ ४५ ॥

ஸ்ரீ: பரபாகவதீ ய-
        ம்யபிஷ்டுதா ஸா முகுந்தபாகவதீ யம் ।
பணிவ்ருஷபாகவதீயம்
        பச்யதி பஜதே பதம் ஸ பாகவதீயம் ॥ 45 ॥

யமி அபிஷ்டுதா - யோகிகளால் துதிக்கப்பட்டவளும்

முகுந்தபாக் - பகவானின் மார்பிலிருப்பவளும்

(அத ஏவ - அதனாலேயே)

பரபாகவதீ - உயர்ந்த வண்ணத்தை உடையவளுமான

ஸ்ரீ: - லக்ஷ்மி

மாம் - என்னை

அவதி - காக்கின்றாள்

பணி, வ்ருஷப அகவதீ - சேஷாத்ரி, வ்ருஷபாத்ரிகளுக்குத் தலைவியான

இயம் - இந்த லக்ஷ்மி

யம் பச்யதி - எவனை கடாக்ஷிக்கிறாளோ

ஸ: - அவன்

பாகவதீயம் பதம் - பராங்குச பரகாலாதிகள் எழுந்தருளியுள்ள வைகுண்ட லோகத்தை

பஜதே - அடைகிறான்.

எதிரிடையான வண்ணங்களை உடைய இரண்டு பொருள்கள் ஒன்றாகச் சேர்ந்திருப்பதை பரபாகம் என்பர்.

நீல வண்ணமான நீருண்ட மேகத்துள் பொன் போன்ற மின்னல் விளங்குவது பரபாகம் என்பதற்கு எடுத்துக்காட்டாம். இங்கு நீல நிறத்தனானன பகவான் மார்பில் தங்க நிறமுடைய லக்ஷ்மி வாழ்வதைப் பரபாகம் என்றார். 45

तृष्यातनयाचार्यारहितेनान्तस्त्वयाब्धितनया चार्या ।
त्वं चित्त न याचार्याप्रभृतीरितरा नमच्छ्रुतनयाचार्याः ॥ ४६ ॥

த்ருட்யாதநயாசார்யாரஹிதேநாந்தஸ்த்வயாப்திதநயா சார்யா ।
த்வம் சித்த ந யாசார்யாப்ரப்ருதீரிதரா நமச்ச்ருதநயாசார்யா ॥ 46 ॥

த்ருட்யாதநயா, அசார்யா, ரஹிதேந, அந்த:, த்வயா, அப்திதநயா, சார்யா, த்வம் சித்த, ந, யாச, ஆர்யாப்ரப்ருதி:, இதரா:, நமத்ச்ருஶ்ருதநயா சார்யா: என்பது பதவிபாகம்.

ஹே சித்த - மனமே!

த்ருட்யாதநயா - தாஹமாகிற துன்பத்தாலே

ரக்ஷிதேந - விடுபட்ட

த்வயா - உன்னாலே

அசார்யா - ஸ்திரமானவளும்

நமத் - வணங்கியவரும்

ஶ்ருதநய - சாஸ்த்ரம் அறிந்தவர்களுமாகிய பூர்வாசார்யர்களையுடையவளுமான

அப்திதநயா - பாற்கடல் புத்ரியே

அந்த: - தம்முள்

சார்யா - ஸஞ்சரிக்க விடத்தக்க

ஆர்யாப்ரப்ருதீ: - பார்வதீ முதலான

இதரா: - பிற தேவர்களிடம்

ந யாச - உனக்கு வேண்டியதைக் கேளாதே.

சாஸ்த்ரமறிந்தவர்களாலே வணங்கப்பட்ட தெய்வமே நமது வணக்கத்துக்கும் உரியதாகும். 46

मां हरिरामायतया दृशा पुनात्वेनसां विरामाय तया ।
प्रथितरामायतया काकेऽप्यसुरे कृपां परामायतया ॥ ४७ ॥

மாம் ஹரிராமாயதயா த்ருஶா புநாத்வேநஸாம் விராமாய தயா ।
ப்ரதிதராமாயதயா காகேऽப்யஸுரே க்ருபாம் பராமாயதயா ॥ 47

மாம், ஹரி ராமா அயதயா அமாயதயா, ஏநஸாம், விராமாய, தயா, ப்ரதிதரா, அமாய தயா, க்ருபாம்பராம், ஆயத, யா, என்பது பதம்.

அமாயதயா - கபடமற்றவளான
ப்ரதிதரா - மிகப்ரஸித்தவளான
யா - எந்த நீயானவள்
காகாஸுரேபி - மஹாபாபியான காகாசுரனிடமும்
பராம்க்ருபாம் - உயர்ந்த தயையை
ஆயத - அடைந்தாளோ
ஸா ஹரிராமா - அந்த விஷ்ணுபத்நீ
அயதயா - விடப்பட்ட
தயா - அந்த கருணையடிவங்கொண்ட
த்ருஶா - கண்ணாலே
ஏநஸாம் - பாபங்களின்
விராமாய - அழிவின் பொருட்டு
மாம் - என்னை
புநாது - தூயவளுக்கட்டும்.

முன் செய்த பாபம் புத்தியைக் கெடுத்து மேன்மேலும் பாபங்களைச் செய்யத் தூண்டுவதால் அதனை அழிக்க வேண்டுகிறார். 47

राशेर्वारामस्य श्रीस्त्वं दुहिताऽथ चोत्सवारामस्य ।
अवनिभवा रामस्य प्रिया धियं नः सदोषवारामस्य ॥ ४८ ॥

ராஶேர்வாராமஸ்ய ஶ்ரீஸ்த்வம் துஹிதாऽத சோத்ஸவாராமஸ்ய ।
அவநிபவா ராமஸ்ய ப்ரியா தியம் ந: ஸதோஷவாராமஸ்ய ॥ 48 ॥

ஹே ஶ்ரீ: - லக்ஷ்மியே !
அஸ்ய - கண்ணுக்குப் புலப்படுவதான
வாராம்ராஶே: - ஸமுத்ரத்தின்
துஹிதா - பெண்ணாக முதலில் பிறந்தாய்
அத - பின்பு
அவநிபவா - பூமியின் பெண்ணான ஸீதையாகப் பிறந்து
உத்ஸவா ராமஸ்ய ப்ரியா - ராமனின் மனைவியாகி அவன் விருப்பத்தைப் பூர்த்தி செய்தாய்
த்வம் - அத்தகைய நீ
ந: - எங்களது

ஸதோஷவாராம் - குற்றக்குவியல்களை உடைய

தியம் - புத்தியை

அபநுத - அகற்றுவாயாக.

குளிர்ந்த ஸ்வபாவமும், பொறுமையும், பக்தர் விரும்பியதைச் சேர்க்கவல்ல வன்மையுமுள்ளவளாகிய நீ எனது துர்புத்தியை அகற்று என்பது கருத்து. 48

हरिसुरदारुण्ये नःस्थितिमुषि वल्लीवदभूयदारुण्येन ।
भृतवन्दारुण्येनत् त्वीडे दैवतमसङ्गि दारुण्येन ॥ ४९ ॥

ஹரிஸுரதாருண்யே ந: ஸ்திதிமுஷி வல்லீவதபூத்யதாருண்யேந ।
ப்ருதவந்தாருண்யேநத் த்வீடே தைவதமஸங்கி தாருண்யேந ॥ 49

ஹரிஸுரதாருணி, ஏநஸ்திதிமுஷி, வல்லீ, இவ, யத், அபூத், ஆருண்யேந, ப்ருதவந்தாருணி, ஏநத், ஈடே, தைவதம், அஸங்கி, தாருண்யேந, என்பது பதவிபாகம்.

ப்ருதவந்தாருணி - காப்பாற்றப்பட்ட வணங்கிய மக்களை உடையவளே!

ஏநஸ்திதிமுஷி - பாபம் நிலைத்திருக்க விடாதவளே!

ஹரிஸுரதாருணி - பகவானிடம் போல் கல்பக வ்ருக்ஷத்திலும் பத்மவர்ணத்துடனிருக்கும்

யத்தைவதம் - லக்ஷ்மீ ரூபதைவம்

வல்லீவத் அபூத் - கொடி போல் உள்ளதோ

தாருண்யேந அஸங்கி - லௌம்ய ஸ்வபாவம் உள்ளதோ

ஏநத் - இந்த தைவத்தையே

ஈடே - துதிக்கிறேன்

பிற எதையும் தொழாது ஸதா இலக்குமியையே தொழுகின்றேன் என்கிறார். 49

श्रीर्हितकरवाणी यान् पश्यति तेभ्यो नमांसि करवाणीयान् ।
हृतशोकरवाणीयान् हातुमनर्थान्सुमप्रकरवाणीयान् ॥ ५० ॥

ஸ்ரீர்ஹிதகரவாணீ யாந் பஶ்யதி தேப்யோ நமாம்ஸி கரவாணீயாந் ।
ஹ்ருதஶோகரவாணீயாந் ஹாதுமநர்தாந்ஸுமப்ரகரவாணீயாந் ॥ 50

ஹ்ருதபோகரவா - போக்கடிக்கப்பட்ட துன்பத்வநியை உடையவளும்

ஹிதகர - நன்மையை விளைவிக்கும்

வாணீ - ஹிதமான பேச்சை உடையவளுமான

ஸ்ரீ: - இலக்குமி

யாந் பச்யதி - எவரை கடாக்ஷிக்கின்றளோ

தேப்ய: - அவர்களுக்கு

நமாம்ஸி கரவாணி - வணக்கங்களைச் செய்கிறேன்

ஸுமப்ரகர - பூக்களின் ஸமூஹத்தை

பாணீயாந் - பாணமாகக் கொண்ட மன்மதனது

அநர்தான் - தீமைகளை

ஹாதும் - விடுவதற்கு

அணீயாந் - அல்பமான

உபாய: - உபாயமாகும்.

ஸ்ரீ:, ஹிதகரவாணீ, யாந், பச்யதி, தேப்ய:, நமாம்ஸி கரவாணீ, யாந், ஹ்ருதபோகரவா, அணீயாந், ஹாதும், அநர்தான், ஸுமப்ரகரவாணீ, யாந் என்பது பதவிபாகம்.

ஸுமப்ரகரவாணீயாந் என்றவிடத்துள்ள வாணீ என்ற வ, வபயோ: அபேதத்தால் பாணீயாந் எனக் கொள்ளப்பட்டது. 50

महोदयासारभुजात्वयातया
महोदया सारभुजा त्वया तया ।
विलोपकारातिशयास्तदे विभा-
विलोपकारातिशयास्त देवि भा ॥ ५१ ॥

மஹோதயாஸாரபுஜாத்வயாதயா
மஹோதயா ஸாரபுஜா த்வயா தயா ।
விலோபகாராதிபயாஸ்ததே விபா-
விலோபகாராதிபயாஸ்த தேவி பா ॥ 51 ॥

தேவி - பகவானின் மஹிஷியே !

ஜாது - ஒருபோதும்

அயாதயா - பிரியாதவளும்

மஹோதய ஆஸார புஜா - பலவகைச் செல்வங்களின் பல வழிகளின் வரவை அனுபவிப்பவளும்

தயா - புகழ்பெற்றவளுமான

த்வயா - உன்னுலே

மஹ: - சோதி வடிவினனுன பகவான்

தயாஸாரபு - தயையாகிய ஸாரமுடையவனுக ஆக்கப்படுகிருன்.

விலோபகாராதிமயாஸ்ததே விலோபக - உலகை அழிக்கும்	இலோபகாராதிமயா இலை - பூமியிலுள்ள மக்களுக்கு
அராதி - சத்ருக்களின்	உபகார - உதவுவதால்
சய - பாஹு பலத்தின்	அதிமய - சிறந்து விளங்குவளான
அஸ்த - நாசத்தை	பா: - ஒளிவடிவினனுன பகவான்
தே - கொடுப்பவரான	த்வயா - உன்னுலே
விபௌ - பகவானிடம்	ஆஸ்த - இருந்தான்.

ஆயுராரோக்யாதி இம்மைகளை விரும்பும் மக்களால் ஸமர்ப்பிக்கப் படுமவற்றை அனுபவிக்கிருள் என்கிருர் மஹோதயாஸார புஜா என்பதால், பகவான் தயாலுவாக இருப்பதும், உலகுக்குச் செய்யும் உபகாரமும் உன் தீனம் என்கிருர்.

மஹோதயாஸாரபு, ஜாது, அயாதயா, மஹோதயாஸார புஜா, த்வயா, தயா விலோபகாராதிமயாஸ்ததே, விபௌ, இலோபகாராதிமயா, ஆஸ்த, தேவி, பா: என்பது பதவிபாகம். முன் இரண்டடிகளும், பின் இரண்டடிகளும் ஒன்று போலுள்ள யமகம். 51

सुरक्षया देवहिता दशावमा-
सुरक्षयादेव हि तादशाव मा।
मुदा रमे धेहि गिरा विहानता-
मुदारमेधेऽहिगिराविहानता ॥ ५२ ॥

ஸுரக்ஷயா தேவஹிதா த்ருமாமவா-
ஸுரக்ஷயாதேவ ஹி தாத்ருமாவ மா।
முதா ரமே தேஹி கிரா விஹாநதா-
முதாரமேऽதேஹிகிராவிஹாநதா ॥ 52 ॥

ஸுரக்ஷயா, தேவஹிதா, த்ருமா, அவமாஸுரக்ஷயாத், ஏவ, ஹி, தாத்ருமா, அவ, மா, முதா, ரமே, தேஹி, கிரா, விஹாநதாம், உதாரமேதே, அஹிகிரௌ, இஹ, ஆநதா, என்பது பதவிபாகம்.

ரமே - லக்ஷ்மியே !

அவமா - நீசர்களான

அசுர க்ஷயாதேவ - அரக்கர்களை அழித்ததாலேயே

தேவஹிதா: - தேவர்களுக்கு இதமானதும்

தாத்ருஶா - உவமையற்றதும்

ஸுரக்ஷயா - பாதுகாவலை உடையதுமான

த்ருஶா - கண்ணாலே

மா - என்னை

அவ - பாதுகாப்பாயாக

உதாரமேதே - விசாலமான புத்தியை உடையவளே !

இஹ அஹிகிரௌ - இச்சேஷாத்ரியில்

ஆநதா - சிறிது வணங்கிய போதும்

கிரா - வித்யையுடன்

விஹாநதாம் - சேர்ந்திருத்தலை

தேஹி - பலமுடையதாக்கு.

கல்வியைக் கொடுத்து காப்பாயாக என வேண்டுகிறார். 52

केवलं तुच्छविमता हरिणा क्षितवामताः ।
के वलन्तु च्छविमता हरिणाक्षि तवामताः ॥ ५३ ॥

கேவலம் துச்சவிமதா ஹரிணா க்ஷிதவாமதா: ।
கே வலந்து ச்சவிமதா ஹரிணாக்ஷி தவாமதா: ॥ 53 ॥

கே, வலமது, சவிம்தா, ஹரிணா, அக்ஷிதவாமதா:, கேவலம், துச்சவிமதா:, ஹரிணாக்ஷி, தவ, அமதா: எனப்பதவிபாகம்.

சவிமதா - நல்லொளி உடைய

ஹரிணா - பகவானாலே

அக்ஷித - போக்கப்படாத

வாமதா - கோணபுத்தியை உடைய

கே - புருஷர்கள்

வலந்து இங்கே சுற்றிக் கொண்டு கிடக்க

ஹே ஹரிணாக்ஷி - மான் போன்ற கண்ணுடையவளே !

துச்ச - இல்லாதவர்க்கு ஸமமானவரும்

விமதா: - விருத்தமான கோட்பாடுடையவரும்

தவ - உனக்கு

அமதா: - விருப்பமற்றவர்களுமான மனிதர்கள்

கேவலம் - மிகுதியாக

வலேரன் - ஸம்ஸாரத்திலேயே உழலட்டும்.

நாலடிகளும் ஒரே மாதிரியாக இருப்பதாலே இது ஸமுத்தக யமகம் எனப்படும். ''அர்தாப்யாஸ: ஸமுத்தக:'' என்பது அதன் இலக்கணமாம். 53

वैरस्य हानिदानेन मान्यासाध्येन साद्य तु ।
वैरस्यहानिदानेन मान्या साध्येन सा द्यतु ॥ ५४ ॥

வைரஸ்ய ஹாநிதாநேந மாந்யாஸாத்யேந ஸாத்ய து ।
வைரஸ்யஹாநிதாநேந மாந்யா ஸாத்யேந ஸா த்யது ॥54

வைரஸ்ய, ஹாநிதா ந இநமாந்யா, அஸாத்யேந, ஸா, அத்ய, து,
வைரஸ்ய, ஹ, அநிதாநேந, மாம், ந்யாஸாத், த்யேநஸா, த்யது.

வைரஸ்ய - அரஸிகத் தன்மைக்கு
ஹாநிதா - நாசத்தை விளைவிப்பவளும்
இநேந - கணவனாலே
மாந்யா - கொண்டாடப்படுபவளுமான
ஸா - இலக்குமி
அத்ய து - தற்போது
ந்யாஸாத் - பரஸமர்பணம் செய்ததாலே
வைரஸ்ய - நிக்ரஹ ஸங்கல்பத்துக்கு
அநிதாநேந - காரணமின்மையால்
அஸாத்யேந - ஒதுக்க முடியாத
த்யேநஸா - அறிந்தே செய்யும் பாபத்தாலும்
மாம் - என்னை
ந த்யது - ஒதுக்கமுடியாது.

முன்பிறவிகளில் செய்த நன்மை தீமைகளை அநுபவிப்பதற்காகவே உண்டாவது மனிதப் பிறவி. ஒருவன் ஆசார்யனை அடிபணிந்து பரந்யாஸம் செய்து கொண்டால் பகவான் அவனது குற்றங்களைக் களைந்து மோக்ஷமளிப்பார். ஆனால் பரந்யாஸம் செய்து கொண்டபின்பும் இச்செயல் தவறானது. செய்யத் தகாதது எனத் தெரிந்தும் அதைச் செய்தால் ஒருக்கால் மோக்ஷமளியாமல் தள்ளிவிடுவாரோ எனின் அதுவும் முடியாது. அஞ்சேல் என்று தஞ்சமடைந்தவனுக்கு அபயம் அளித்தபின் பின்வாங்கான். பகவான் நாம் செய்யும் தப்புகளைப் பொறுத்து மோக்ஷம் அளிப்பன் என்பது கருத்து. 54

वृषाचलेऽशङ्करतोद्यमान-
वृषाचले शङ्करतोद्यमा न ।
वृषाचलेशं करतोयमान-
याम्व त्यजोवधि दशो गिरस्ते ॥ ५५ ॥

வ்ருஷாசலேऽஶங்கரதோத்யமாந-
வ்ருஷாசலே ஶங்கரதோத்யமா ந ।
வ்ருஷாசலேஶம் கரதோத்யமாந-
யாம்ப த்யஜோவஷ்டி த்ருஶோ கிரஸ்தே ॥ 55 ॥

வ்ருஷாசலே, அஶங்கரதா, உத்யமாநவ்ருஷா, சலே, ஶங்கரதோத்யமா, ந, வ்ருஷாசலேஶம், கரத:, அத்ய, மா, நய, அம்ப, அத்யஜ:, வஷ்டித்ருஶ:, கிர:, தே, என்பது பதவிபாகம்.

அம்ப - தாயே !

வ்ருஷ அசலே - தர்மத்தில் நிலைபெற்று நிற்பவரிடம்

அஶங்கரதா - ஸந்தேஹத்துக்கு பற்றுடையவளும்

உத்யம ஆந வ்ருஷா - புதிய யோகிகளின் யோகத்துக்கு வேண்டிய மநோபலம் முதலியவற்றை அளிப்பவளுமான

த்வம் - நீ

சலே - சஞ்சலமான புத்தியை உடைய என் போன்றவரிடமும்

அஶங்கரத உத்யமா - அமங்கலத்தைச் செய்வதில் முயற்சி உடையவளாக

ந - ஆகமாட்டாய்

அத: - ஆகையாலே

அத்ய - இப்போது

வ்ருஷாசலேஶம் - ஸ்ரீநிவாஸனை

கரேண - கைகளால் பிடித்துக் கொண்டு

மாம் ப்ரதி - என்னிடம்

நய - அழைத்து வா

அத்யஜ: - ஸர்வோத்க்ருஷ்டனை பகவான்

தே - உன்னுடைய

த்ருஶ: - கடாக்ஷத்தையும்

கிரஶ்ச - வாக்குகளையும்

வஷ்டி - விரும்புகிறான்.

''ஶ்ரேயஸ் ஸுக்ருதம் வ்ருஷ:'' என்பது அமரம். அதில் அசலமானவள் - அசையாது இருப்பவள் என்று, வ்ருஷாசலே என்பதன் பொருளாம். வ்ருஷே அசல: வ்ருஷாசல: என்பது விக்ரஹம். சம்கரோதீதி ஶங்கரி, ந ஶங்கரீ அஶங்கரீ, தஸ்யா: பாவ: அஶங்கரதா என்பது விக்ரஹம், பகவான் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் உனது கண்ணாலும், வாக்காலும் கொடுக்கும் அனுமதியை அபேக்ஷிக்கிறார் என்பது கருத்து.

''யஸ்யா: வீக்ஷ்ய முகம் ததிங்கித பராதீந: விதத்தேऽகிலம் என்பது கூரத்தாழ்வான் அருளிச் செயல்.

55

राजीवायतनापरत्रमहतीं कुर्यान्मुदं नः कृपा
राजीवायतनागबाहुरघहृत् कृष्णो न देवोऽपरः ।
रा जीवाय तनाविहापि सुखदा शुद्धा तवैवार्प्यते
राजीवायत नायकं फणिगिरेर्यासौ दयास्रोतसाम् ॥ ५६ ॥

ராஜீவாயதநாபரத்ரமஹதீம் குர்யாந்முதம் ந: க்ருபா
ராஜீவாயதநாகபாஹுரகஹ்ருத் க்ருஷ்ணு ந தேவோऽபர: ।
ராஜீவாய தநாவிஹாபி ஸுகதா ஶுத்தா தவைவார்ப்யதே
ராஜீவாயத நாயகம் பணிகிரேர்யாஸெள தயாஸ்ரோதஸாம் ॥56

ராஜீவாயதநா, பரத்ர, மஹதீம், குர்யாத், முதம், ந:, க்ருபாராஜீவா, ஆயதநாகபாஹு:, அகஹ்ருத், க்ருஷ்ண:, ந, தேவ:, அபர:, ரா, ஜீவாய, தநௌ, இஹ, அபி, ஸுகதா, ஶுத்தா, தயா, ஏவ, அர்ப்யதே, ராஜீவ, ஆயத, நாயகம், பணிகிரே:, யா, அஸௌ, தயாஸ்ரோதஸாம் என்பது பதவிபாகம்.

க்ருபாராஜீவ - கருணையையே தனது உயிராகக் கொண்டவரும்

ஆயதநாகபாஹு: - நீண்ட பருத்த கைகளை உடையவளும்

அகஹ்ருத் - வணங்கியவர் பாபத்தைப் போக்குபவளும்

ராஜீவ - தாமரையில்

ஆயதநா - வாழ்பவளுமாகிய இலக்குமி

பரத்ர - மறுமையில்

மஹதீம் முதம் - ப்ரம்மாநந்தத்தை

ந: - பாபிகளான நமக்கும்

குர்யாத் - அருளுபவளாவள்

க்ருஷ்ண: - பகவானேயெனில்

அபர: - இலக்குமியிலும் தாழ்ந்தவன்

தேவ: - ப்ரம்மாதி தேவர்களும்

ந - அருள வல்லவரல்லர்

யாஸெள - எந்த லக்ஷ்மி

தயாஸ்ரோதஸாம் - தயையாகிய வெள்ளத்தின் தொடர்போல

பணிகிரே: நாயகம் - சேஷாத்ரியின் தலைவனை

ப்ராப - அடைந்தாளோ

தயைவ - அவளாலேயே

இஹ தநௌ - இவ்வுடலில்

ஶுத்தா - தூயதும்

ஸுகதா - அகத்தைத் தருவதுமாகிய

ரா - செல்வமும்

ஜீவாய - வாழ்க்கைக்காக

அர்ப்யதே - அருளப்படுகிறது.

மோக்ஷமளிக்க வேண்டிய பகவான் நமது குற்றத்தைக் கண்டு நம் மீது சீற்றமுடையவராதலாலும் நான்முகன் முதலான பிற தேவர்களால் மோக்ஷமளிக்க முடியாதாதலாலும் ஸ்ரீ பகவான் தயையின் மறுவடிவினளானதால் தாமாகவே தயை நிறைந்தவளாதலாலும், பகவானை மோக்ஷமளிக்கத் தூண்டுபவளாதலாலும் மோக்ஷமளிக்க வேண்டிய சக்தி உடையவளாதலாலும் அவளே இம்மை மறுமைகளின் நன்மைகளை அளிக்கவல்லவள். பிறர் இலர் என்பது கருத்து.

56

कौमारमारचयतः सफलं तपोऽस्य
सा मारमारकनुतस्य वृषाचलेन्दोः ।
रामा रमा रहितकोपतया कृतास्मत्-
क्षेमारमारविसुधांशु जयत्यवन्याम् ॥ ५७ ॥

கௌமாரமாரசயத: ஸபலம் தபோऽஸ்ய
ஸா மாரமாரகநுதஸ்ய வ்ருஷாசலேந்தோ: ।
ராமா ரமா ரஹிதகோபதயா க்ருதாஸ்மத்-
க்ஷேமாரமாரவிஸுதாம்ஶு ஜயத்யவந்யாம் ॥ 57 ॥

கௌமாரம், ஆரசயத:, ஸபலம், தப:, அஸ்ய, ஸா, மாரமாரகநுதஸ்ய, வ்ருஷாசலேந்தோ:, ராமா, ரமா, ரஹித கோபதயா, க்ருதாஸ்மத் க்ஷேமா, ரமா, ஆரவிஸுதாம்ஶு, ஜயது, அவந்யாம் என்பது பதச்சேதம்.

கௌமாரம் - சுப்ரம்மண்யனுல் செய்யப்பட்ட

தப: - தவத்தை

ஸபலம் - பயனுடையதாக

ஆரசயத: - செய்ததாலே

மாரமாரக - சிவனுலே

நுதஸ்ய - தோத்திரம் செய்யப்பட்ட

அஸ்யவ்ருஷாசலேந்தோ: - ஸ்ரீநிவாஸனுடைய

ராமா - பார்யையான

ரமா - லக்ஷ்மி

ரஹிதகோபதயா - கோபமற்று இருப்பதால்

அரம் - சீக்ரமாக

க்ருதா - நிறைவேற்றப்பட்ட

அஸ்மத் - நமது

க்ஷேமாஸதீ - நன்மையை உடையளாய்

ஆரவிஸுதாம்பரா - சூர்ய சந்திரர்கள் உள்ளவரை
அவந்யாம் - இம்மண்ணுலகில்
ஜயது - சிறந்து விளங்கட்டும்.

சுப்ரம்மணியன் செய்த தவத்தைப் பயனுடையதாக ஆக்குவதற்காக பகவான் சேஷாத்ரியில் அவதரித்தார் என்பது வேங்கடகிரி மாஹாத்ம்யத்தில் உள்ளது. 57

सारसेनमहितापहारिकासारसेनमहितापहारिका ।
सारसेन महिताप हारिकानन्तगा जयति यानघा रमा ॥ ५८ ॥

ஸாரஸேநமஹிதாபஹாரிகாஸாரஸேநமஹிதாபஹாரிகா ।
ஸாரஸேந மஹிதாப ஹாரிகாநந்தகா ஜயதி யாநகா ரமா ॥ 58 ॥

ஸா, ரஸேந, மஹிதாபஹாரிகா, ஸாரஸா, இநம், அஹிதாபஹாரிகா, ஸாரஸேநமஹிதா, ஆபஹாரிகாநந்தகா, ஜயதி, யா, அநகா, ரமா, என்பது பதவிபாகம்.

அஹித - சத்ருக்களை
அபஹாரிகா - அழிப்பவளும்
ஸாரஸேந - சுப்ரம்மண்யனாலே
மஹிதா - பூஜிக்கப்பட்டவளும்
ஆப - ஆகாசகங்கை முதலான தீர்த்தங்களால்
ஹாரி - மனோஹரமான
க - சிகரங்களை உடைய
அநந்தம் - சேஷாத்ரியை
கா - அடைந்தவளும்
ரமா - ஆநந்தத்தை விளைவிப்பவளுமான
யா ஸாரஸா - யாதொரு லக்ஷ்மி
அநகம் - குற்றமற்ற
இநம் - நாதனை
ஜயதி - தன் குணங்களால் வசமாக்கிக் கொள்கிறாளோ
யா - அந்த லக்ஷ்மி
ரஸேந - ஆஸ்தையாலே
மஹி - பூமியிலுள்ள ஜநங்களின்
தாப - தாபத்தை
ஹாரிகா - போக்குபவளாகிறாள்.

முதல் மூன்றடிகள் மட்டும் மடக்கி வந்த யமகம். 58

त्वं गतिं जननि येच्छ येवभी
मा नयामितरसामहो दया।
मानयामितरसामहोदया
मानयामितरसामहोदया ॥ ५९ ॥

த்வம் கதிம் ஜநநி யேச்ச யேவபீ
மா நயாமிதரஸாமஹோ தயா।
மாநயாமிதரஸாமஹோதயா
மாநயாமிதரஸாமஹோதயா ॥ 59 ॥

த்வம், கதிம், ஜநநி, யா, இச்சயா, ஏவ, பீமாந், அயாமி தரஸா, மஹோதயா, மாநயாமி தரஸாமஹோதயாம், ஆந, யாம், இதரஸாம், அஹோ, தயா, எனப்பதச் சேதம்.

ஜநநி - தாயே!
த்வம் - நீ
இச்சயைவ - விருப்பத்தாலேயே
மஹோதயா - மிக உயர்ந்த கதியை அளிக்கின்றாய்.
இதரஸாம் - மக்களைக் காக்க சேஷாத்ரியை அடைந்தவளும்
மஹோதயாம் - தெய்வப் பிறவி எடுத்தவளுமான
த்வாம் - உன்னை
தயா - தயையானது
ஆந - பிழைக்க வைத்துள்ளதோ
அஹம் - நான்
பீமான் - ஸம்ஸார பயத்தால்
தரஸா - வேகமாக
தாம் - அத்தகைய உன்னை
அயாமி - சரணமாகப் பற்றுகிறேன்
மாநயாமி - பூஜையும் செய்கிறேன்.

உனது விருப்பம் இருந்தால் போதும் மோக்ஷத்தை அளிக்கின்றாய். மனிதர்களைக் காப்பதற்காகவே பகவானுடன் சேஷாசலத்தை அடைந்துள்ளாய் என்கிறார். 59

मारमातरणिमानमस्यता मा रमातरणिमानमस्यताम्।
मारमातरणिमानमस्यता मारमातरणि मानमस्य ताम् ॥ ६० ॥

மாரமாதரணிமாநமஸ்யதாம் மா ரமாதரணிமாநமஸ்யதாம் ।
மாரமாதரணிமாநமஸ்யதாம் மாரமாதரணி மாநமஸ்ய தாம் ॥ 60 ॥

மாரமாத:, அணிமாநம், அஸ்யதாம், ஆரம், ஆதரணிமாநம, அஸ்யதாம், மா, ரமாதரணிம், ஆநமஸ்யதாம், ஆரம், ஆத, ரணிமாநம், அஸ்ய, தாம் என்பது பதவிபாகம்

மாரமாத: - மன்மதன் தாயான லக்ஷ்மியே !

(தவ - உன்னுடைய)

அணிமாநம் - அணுவளவினளான தன்மையை

அஸ்யதாம் - அழித்து விபத்வத்தை நிலைநாட்டும் எம் ஆசார்யர்களுடைய

ஆரம் - சத்ருஸமூஹத்தை

ஆதரணிமாநம் - கல்பம் முழுதும்

அஸ்யதாம் - அழிப்பாயாக

ரமாதரணிம் - ரமையாகிய படகை

ஆநமஸ்யதாம் - சரணமாகப் பற்றியவர்களின்

ஆரம் - சத்ருஸமூஹம்

அஸ்ய - நாராயணனுடைய

தாம் - கருணையை

மா ஆத - அடையாதிருக்க வேண்டும்

ரணி மாநம் - போரில் வெற்றி பெற்றவர் அடையும் மதிப்பும்

மா ஆத - அடையாதிருக்க வேண்டும் (ஆகுக)

ஆரம் - சனி அங்காரகர்களால் உண்டாம் பீடையை

ஆத - அடைய வேண்டும்.

பகவத் பத்நியாகிய ஸ்ரீக்கு பகவானுக்கு எவை எவை உள்ளனவோ அவையாவும் இவளுக்கும் உண்டு என்பது எல்லா ஆசார்யர்களுடைய கொள்கை என்பது அவரவர் நூல்களிலிருந்துத் தெளிவாகத் தெரிகின்றது. தற்காலத்தே ஒரு சிலர் லக்ஷ்மி பகவானைப் போலாகாள் அவள் நம்மைப் போன்றவளே. தெய்வத்தன்மையாகி எங்கும் பரந்திருப்பது போன்றதெல்லாம் கிடையாது என்கின்றனர். அவர்கள் கருத்தைப் பின்பற்றுபவர்களை நிரஸநம் செய்வாயாக என உலக மாதாவிடம் வேண்டுகின்றார். அஸ்யதாம் என்பது ப்ரார்த்தனையைக் குறிக்கும் சொல் ''தா'' என்ற பெண்பால் சொல் கருணையைக் குறிக்கும் என்கிறது ''கருணையாம் து தா ஸ்த்ரியாம்'' என்ற ரத்நமாலா. ''மா'' என்ற சொல் நிஷேதத்தைக் குறிக்கும் அவ்யயம். அது ''ஆத'' என்ற சொல்லுடன் சேர்ந்து ''மாத' என ஆகி அடைய வேண்டாம் என ஆசம்ஸாயாம் லிட். *60*

कलितमसारमनाशा-
ध्यायामहितं न रामरामान्यम् ।
कलितमसारमनाशा
ध्यायाम हि तं नरामरामान्यम् ॥ ६१ ॥

கலிதமஸாரமநாஶா-
த்யாயாமஹிதம் ந ராமராமாந்யம் ।
கலிதமஸாரமநாஶா
த்யாயாம ஹி தந் நராமராமாந்யம் ॥ 61 ॥

யலிதம், அஸாரம், அநாசாத்யாயாமஹிதம், நராமராமாந்யம், கலிதமஸா, அரம், அநாஶா:, த்யாம, ஹிதம், ந, ராமராம, அந்யம் என பதவிபாகம்.

अस्तोकाध्वरि, कचि घटांबु वादि हंसांबुद कविविद्वन्मणि
वेंकटार्यदीक्षित कृतिपु लक्ष्मीसहस्रे यमकस्तबकः

அநாஶா: - இம்மை இன்பத்தில் பற்றற்ற நாம்
அஸாரம் - உயர்ந்த சுவைபற்றதும்
அநாஶ - அழிவற்ற
ஆதி - வ்யாதிகளின்
ஆராம - பரவுதலுக்கு
ஹிதம் - இடமானதும்
நர - மனிதராலும்
அமா - தேவராலும்
அமாந்யம் - கொண்டாடத் தகாததும்
கலிதமஸா - கலியுகப் பாபத்துடன்
அரம் - போதிய அளவு
கலிதம் - ஸம்பந்தம் உடையதும்
ராமாந்யம் - லக்ஷ்மியிலும் வேறான
ஹிதம் - நன்மையை
ந த்யாயாம - மனதாலும் எண்ணமாட்டோம்.

ராமராம என்பது அப்படி எண்ணுவது வெறுப்புக்கு உரியது எனக் காட்டுகிறது. 61

கோயில் சப்தம் வங்கீபுரம் வாஜபேயம்
வீராபுரம் ராமாநுஜ தீக்ஷிதர் குமாரர்
வீராபுரம் சடகோபாசாரியர் இயற்றிய ரத்நப்ரபா என்கிற **லக்ஷ்மீ ஸஹஸ்ரம்** உரையில் யமகஸ்தபக உரை முடிந்தது – (14)

ஶுபம்

श्रीलक्ष्मी सहस्रे नक्षत्रमाला स्तबकः - १९

आनन्दमैन्दिराः कुर्युरपाङ्गा यत्प्रसंगतः ।
अश्विनीहस्तिसंपन्ना संपदुज्जृम्भते नृणाम् ॥ १ ॥

ஆநந்தமைந்திரா: குர்யுரபாங்கா யத்ப்ரஸங்கத: ।
அஶ்விநீஹஸ்திஸம்பந்நா ஸம்பதுஜ்ஜ்ரும்பதே ந்ருணாம் ॥ 1 ॥

ந்ருணாம் - மனிதருக்கு
யத்ப்ரஸங்கத: - எந்த ஸம்பந்தத்தாலே
அஶ்விநீ - குதிரைகளின் மிகுதியையும்
ஹஸ்தி ஸம்பந்நா - யானைகளின் மிகுதியையுமுடைய
ஸம்பத் - செல்வமுடைமை
உஜ்ஜ்ரும்பதே - மேன்மேலும் மிகுகின்றதோ
தே - அத்தகைய
ஐந்திரா: - லக்ஷ்மியினுடைய
அபாங்கா: - கடைக்கண் பார்வைகள்
ஆநந்தம் - ஸந்தோஷத்தை
குர்யு: - செய்யட்டும்.

இந்த ஸ்தபகத்தில் அஶ்விநீ முதல் ரேவதீ வரையிலான நக்ஷத்திரங்களின் பெயர்களைக் காட்டும் ஶ்லோகங்களை அமைத்துள்ளாராதலால் இந்த ஸ்தபகம் நக்ஷத்ரமாலா ஸ்தபகம் என்ற பெயர் பெற்றது. அதில் முதல் ஶ்லோகம் முதல் பதிமூன்று ஶ்லோகம் வரையுள்ள செய்யுள்களின் அடிகளை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு எழுத்துகளை அதிகமாகக் கொண்டவையாகவும், பதினைந்து முதல் இருபத்தேழு ஶ்லோகம் வரை ஒவ்வொரு அடிகளை ஒவ்வொரு எழுத்து குறைந்த அடிகளாகவும் பதினான்காவதை நடுநாயகமாகக் கொண்ட செய்யுளாகவும் அமைத்துள்ளார்.

ஒருவரை லக்ஷ்மி கடாக்ஷித்தாளாகில் அவர் எண்ணற்ற யானை குதிரைகளையுடைய மாபெரும் செல்வந்தராக வாழ்வர் என்கிறார்.

அஶ்விநீ என்ற சொல் நக்ஷத்ரத்தைக் குறிப்பது. 1

भगवति सुधाब्धिकन्ये भवतीं भूण्णुः प्रपद्येऽहम् ।
परमाभरणीभूतां भुजान्तरे भोगिशैलेन्दोः ॥ २ ॥

பகவதி ஸுதாப்திகந்யே பவதீம் பூஷ்ணு: ப்ரபத்யேஹம் ।
பரமாபரணீபூதாம் புஜாந்தரே போகிஸைலேந்தோ: ॥ 2 ॥

ஸுதாப்தி கந்யே! - பாற்கடல் புத்ரீ!
அஹம் - அடியேன்
பூஷ்ணு: - நீண்ட நாள் நன்னிலையிலிருக்க விரும்பியவனாய்
போகிஸைலேந்தோ: - சேஷாத்ரி நாதனுடைய
புஜாந்தரே - மார்பில்
பரமாபரணீபூதாம் - உயர்ந்த ஆபரணமாயுள்ள
த்வாம் - உன்னை
ப்ரபத்யே - சரணமடைகிறேன்

சேஷாத்ரிநாதன் மார்பில் அணிந்துள்ள ஸர்வ ஆபரணங்களுள்ளும் உயர்ந்த ஆபரணமாய் அவன் மார்பில் எழுந்தருளியுள்ள உன்னை அடியேன் நல்லொழுக்கமுடையவனாய் வாழ அருள்புரிய வேண்டித் தஞ்சம் புகுகின்றேன். ''பரமாபரணீபூதாம்'' என்றவிடத்து பரணீ நக்ஷத்ரத் தோற்றம். 2

निजशिरसि निदधदुच्चैः संपन्मय्यास्तवाम्ब सोदर्यम् ।
अपि सकलविभवदायी ह्यवशीभूतकृत्तिको भिक्षुः ॥ ३ ॥

நிஜஶிரஸி நிதததுச்சை: ஸம்பந்மய்யாஸ்தவாம்ப ஸோதர்யம் ।
அபி ஸகலவிபவதாயீ வஸ்த்ரீபூதக்ருத்திகோ பிக்ஷு: ॥ 3 ॥

அம்ப - தாயே!
வஸ்த்ரீபூத - உடையாக ஆக்கிக்கொண்ட
க்ருத்திக: - யானைத் தோலை உடையவனும்
பிக்ஷு: - பிச்சாண்டியுமான இவன்
ஸம்பந்மய்யா: - செல்வவடிவினளான
தவ - உனது
ஸோதர்யம் - உடன் பிறப்பாக சந்திரனை
நிஜஶிரஸி - தனது தலையில்
நிததபி - வைத்துக்கொண்டதாலேயே
ஸகலவிபவ - அனைத்து வைபவங்களையும்
தாயீ - வழங்கவல்லவனாய்
பவதி - ஆகின்றான்.

ஆடையில்லாததால் யானைத் தோலை உடுத்தினன் என்றும் உணவின்மையால் பிச்சை எடுத்தான் என்றும் பொருள் தோன்றினாலும் உண்மைப் பொருள் அதுவன்று. கஜாசுர ஸம்ஹாரம் செய்தவன் என்பதும் ஆதிபிக்ஷு என்ற பெயர் உடையவன் என்பதும் உண்மைப் பொருளாம். உன்னுடன் நேரிடையான ஸம்பந்தம் இல்லாதிருந்தும் பிறவியில் உன் ஸம்பந்தத்தைப் பெற்ற சந்திரனுடன் பழகியதாலேயே சிவன் ஸமஸ்த செல்வங்களையும் வழங்கவல்லவன் ஆயினன் உனது ஸம்பந்தம் உடையோரின் ஸம்பந்தமும் செல்வமுடைமைக்குக் காரணமாகின்றது. ''க்ருத்திகோ பிக்ஷு:'' என்றவிடத்துக்கு க்ருத்திகைத் தோற்றம். 3

तामसह्यभवतापशान्तये
स्तौमि तामरसवासिनीमहम् ।
वर्णयन्ति यदपाङ्गमालिकां
वासुदेवनिलयाधिरोहिणीम् ॥ ४ ॥

தாமஸஹ்யபவதாபஶாந்தயே
ஸ்தௌமி தாமரஸவாஸிநீமஹம் ।
வர்ணயந்தி யதபாங்கமாலிகாம்
வாஸுதேவநிலயாதிரோஹிணீம் ॥ 4 ॥

அஹம் - அடியேன்
தாமரஸ - தாமரையில்
வாஸிநீம் - வாழ்பவளான
தாம் - லக்ஷ்மியை
அஸஹ்ய - ஸஹிக்க முடியாத
பவதாப - ஸம்ஸாரமாகிய தாபத்தின்
ஶாந்தயே - சாந்திக்காக
ஸ்தௌமி - துதிக்கிறேன்
(ஸந்த: பராசரர் முதலானோர்)
யதபாங்கமாலிகாம் - எவளது கடாக்ஷ பரம்பரையை
வாஸுதேவ - பரவாஸுதேவனுடைய
நிலய - இருப்பிடமான மோக்ஷத்துக்கு
அதிரோஹிணீம் - படிக்கட்டாக
வர்ணயந்தி - கூறுகின்றனரோ.

கருத்துத் தெளிவானதே. "அதி ரோஹிணீம்" என்றவிடத்து ரோஹிணீ நக்ஷத்ரத் தோற்றமாம். 4

तवसुधाम्बुजयाभिमुखं मुखं
मृगशिरोमणिदर्पमुषौ दृशौ ।
विघटकं च वपुस्तडिदुन्नते-
र्भुवनमातरतो न तवोपमा ॥ ५ ॥

தவஸுதாம்பு³ஜயாபி⁴முக²ம் முக²ம்
ம்ருக³ஶிரோமணிதர்ப்பமுஷௌ த்³ருஶௌ ।
விகடகம் ச வபுஸ்தடிது³ந்நதேர்-
பு⁴வநமாதரதோ ந தவோபமா ॥ 5 ॥

புவநமாத: - உலகத்தாயே!
தவமுகம் - உனது முகம்
ஸுதாம்புஜய - சந்திரனை வெற்றி காண்பதில்
அபிமுகம் - நோக்குடையதாக உள்ளது
த்ருஶௌ - கண்கள்
ம்ருகஶிரோமணி - உயர்ந்த மானின்
தர்ப - அழகிய பார்வையின் கொட்டத்தை
முஷௌ - அபஹரிப்பவையாக உள்ளன
வபுஶ்ச - உடலும்
தடித் - மின்னலின்
உந்நதே: - மேன்மையை
விகடகம் - அழிப்பதாக உள்ளது
அத: - ஆதலால்
தவ - உனது முகம் முதலியனவற்றுக்கு
உபமா - உபமான பொருள்
நாஸ்தி - இல்லை.

ஒரு வஸ்துவுக்கு மற்றொரு வஸ்துவைச் சமமாகக் காட்டுவது உபமானம் எனப்படும். முகம், கண், மேனியின் ஒளிகளுக்கு உபமானமாக முறையே சந்திரன், மானின் பார்வை மின்னல்களை உபமானமாகக் கூறுவது கவிகளின் மரபு. ஆகவே அவைகள் உபமானங்கள் எனப்படும். முகம் முதலியன உபமேயம் எனப்படும். இவற்றுள் உபமேயத்திலும் உபமானம் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பது புலவர்கள் கையாண்ட முறை, ஆனால் உலகத்தாயின் முகம் முதலியன அவற்றுக்கு உபமானமாகக் கூறும் பொருள்களிலும் உயர்ந்ததாக

இருக்கின்றன. ஆகவே அவற்றிலும் உயர்ந்த வஸ்து உலகிலேயே இல்லையாதலால் உபமானமே இல்லை.

''ம்ருகசிர:'' என்பது ம்ருகசீர்ஷத்தைக் கூறுகின்றது. 5

वरुणालयेन्द्रतनये करुणार्द्रा-
स्तव लोकमातुरवलोकविशेषाः ।
परितन्यमानदुरितं सततं मा-
मधुना पुनन्तु मधुनाशनकान्ते ॥ ६ ॥

வருணாலயேந்த்ரதநயே வருணார்த்ராஸ்-
தவ லோகமாதுரவலோகவிஶேஷா: ।
பரிதந்யமாநதுரிதஸ்தம்பகம் மா-
மதுநா புநந்து மதுநாஶநகாந்தே ॥ 6 ॥

வருணாலயேந்த்ர - ஸமுத்ரராஜனுடைய
தநயே - பெண்ணே!
லோகமாத: - உலகத்தாயே!
மதுநாஶந - நாராயணனின்
காந்தே - மனைவியே!
கருணா - தயை என்கிற ஜலத்தாலே
ஆர்த்ரா: - நனைந்தவை
அவலோகவிஶேஷா: - சிறந்த பார்வைகள்
அதுநா - இப்பிறவியில்
ஸததம் - எப்போதும்
பரிதந்யமாநதுரிதம் - புத்தி பூர்வமாகச் செய்யும் பாபத்தை உடைய
மாம் - என்னை
புநந்து - பாபமற்றவனாகச் செய்யட்டும்

''கருணார்த்ரா:'' என்றவிடத்து ஆர்த்ரா நக்ஷத்ரத் தோற்றமுள்ளது. 6

शापेन रोपणमुनेः शमितप्रभावो
देवोत्तमो मधुजितो दयिते विषण्णः ।
तन्वंस्तव स्तवबचः स्तबकैः सपर्यां
स्थाने विराजति पुनर्वसुरुद्रसेव्ये ॥ ७ ॥

ஶாபேந ரோஷணமுநே: ஶமிதப்ரபாவோ
தேவோத்தமோ மதுஜித: தயிதே விஷண்ண: ।
த்வம் ஸ்தவ ஸ்தவவச: ஸ்தபகை: ஸபர்யாம்
ஸ்தாநே விராஜதி புநர்வஸுருத்ரஸேவ்யே ॥ 7 ॥

மதுஜித: தயிதே - நாராயண மனைவி!
ரோஷண முநே: - துர்வாஸரின்
ஶாபேந - சாபத்தால்
ஶமித - போக்கப்பட்ட
ப்ரபாவ: - செல்வங்களை உடைய
தேவோத்தம: - இந்திரன்
விஷண்ணஸ்ஸந் - வருந்தியவனாய்
தவ - உமது
ஸ்தவவச: - ஸ்தோத்ரவாக்காகிய
ஸ்தபகை: - பூங்கொத்துகளால்
ஸபர்யாம் - பூஜையை
குர்வந்ஸந் - செய்தவனாய்
புநரபி - மறுபடியும்
வஸு - அஷ்டவஸுக்களாலும்
ருத்ர - பதினொரு ருத்ரர்களாலும்
ஸேவ்யே - வணங்கப்படுவதாகிய
ஸ்தாநே - அதிகாரத்தில்
விராஜதி - விளங்குகிறான்.

துர்வாஸரின் சாபத்தால் இந்திரன் தனது பதவியை இழந்து லக்ஷ்மியை ஸ்தோத்தரித்துப் பின் அவள் அருளால் அப்பதவியை அடைந்தான் என்பது ஸ்ரீவிஷ்ணு புராண வரலாறு.

இதில் புநர்வசு நக்ஷத்திரத் தோற்றமுளது. 7

निगमकथितमायुर्निस्तुलारोग्यभाग्यं
निरवधिकविभूतिं नित्यहृद्यां च विद्याम् ।
भगवति गुणपूर्तिं भासमानां च कीर्तिं
बलिरिपुपदभक्तिं भेजुषां पुष्यसि त्वम् ॥ ८ ॥

நிகமகதிதமாயுர்நிஸ்துலாரோக்யபாக்யம்
நிரவதிகவிபூதிம் நித்யஹ்ருத்யாம் ச வித்யாம் ।
பகவதி குணபூர்த்திம் பாஸமாநாம் ச கீர்த்திம்
பலிரிபுபதபக்திம் பேஜுஷாம் புஷ்யஸி த்வம் ॥ 8 ॥

பஹுலதி - மிக்க குணமுடையவளே!
பேஜுஷாம் - தஞ்சம் அடைந்தவர்கட்கு
நிகமகதிதம் - வேதத்தில் சொல்லப்பட்ட
ஆயு: - நூறு வயதையும்
நிஸ்துல - ஸமமில்லாத
ஆரோக்ய - உடல் நலமாகிய
பாக்யம் - செல்வத்தையும்
நிரவதிக - அளவு கடந்த
விபூதிம் - ஐச்வர்யத்தையும்
நித்யஹ்ருத்யாம் - எப்போதும் நேர்மையான
வித்யாம் - அறிவையும்
குணபூர்த்திம் - நற்குணங்களின் நிறைவையும்
பாஸமாநாம் - பிறருக்கு வழங்குவதால் உண்டாகும்
கீர்த்திம் - புகழையும்
பலிரிபோ: - நாராயணனின்
பத - திருவடிகளில்
பக்திம்: அநுராகத்தையும்
புஷ்யஸி - தோற்றுவிக்கிறாய்.

இச்செய்யுளில் கூறப்பட்ட வயது முதலான யாவும் ஒருவரிடமே காண்பதென்பது மிக அரிது. உனது அருள் இருக்குமேல் ஒரே இடத்தில் கூடச் சேரலாம் என்கிறார்.

''புஷ்யஸி'' என்றவிடத்துப் புஷ்ய நக்ஷத்ரத்தோற்றம். 8

शेषाचलाधीशाङ्गकाश्लेषाचलामोदोन्नतिः
सैषा भवोन्मेषाब्धिसंशोषावहा विश्वप्रसूः ।
तोषाय नः कल्पेत दुर्दोषापहं यस्याः पदं
भाषाशचीमुख्यद्युसद्योषाशिरोभूषायते ॥ ९ ॥

ஶேஷாசலாதீஶாங்ககாஶ்லேஷாசலாமோதோந்நதி:
ஸைஷா பவோந்மேஷாப்திஸம்ஶோஷாவஹா விஶ்வப்ரஸூ: ।
தோஷாய ந: கல்பேத துர்தோஷாபஹம் யஸ்யா: பதம்
பாஷாஶசீமுக்யத்யுஸத்யோஷாஶிரோபூஷாயதே ॥ 9 ॥

ஶேஷாசல - சேஷாத்ரிக்கு
அதீஶ - தலைவனின்
அங்க - திருமேனியை
ஆஶ்லேஷ - பற்றியிருப்பதாலே
அசலா - எப்போதுமிருக்கும்
ஆமோதோந்நதி: - நறுமண மேன்மையை உடையவளும்
பவ - ஸம்ஸாரமாகிய
உந்மேஷாப்தி - வளரும் சமுத்திரத்தை

ஸம்போஷாவஹா - வற்றச் செய்பவளுமாகிய

ஸைஷாவிஸ்வப்ரஸூ: - இவ்விலக்குமி

ந: தோஷாய - நமது ஸந்தோஷத்துக்குக் காரணமாக

ஸம்பத்யதாம் - ஆகுக

துர்தோஷ - கொடிய தீமைகளை

அபஹா - அழிப்பதாகிய

ய்ஸ்யா: - எந்த இலக்குமியினுடைய

பதம் - திருவடிகள்

பாஷா - ஸரஸ்வதீ

ஶசீமுக்ய - இந்திராணி முதலிய

த்யுஸத்யோஷா - தேவமாதுகளுக்கு

ஶிரோபூஷாய தே - தலையலங்காரமாகின்றதோ.

அப்ஸரஸ்த்ரீகள் தமது தீமைகளகல உலகத்தாயை வணங்குகின்றனர் என்பது கருத்து. எட்டு ப்ராஸங்கள் அமைந்த ஶ்லோகம்.

''அங்ககாஶ்லேஷ'' என்றவிடத்து ஆஶ்லேஷ நக்ஷத்திரத் தோற்றம். 9

इहोपास्ते यस्ते चरणकमलद्वन्द्वममलं
स पूज्यः स्वाराज्यं जननि कलयिष्यन्नविकलम् ।
मघोनः साम्राज्यं मदनमथनस्यापि विभवं
तृणप्रायं प्रायो गणयति पदं द्रौहिणमपि ॥ १० ॥

இஹோபாஸ்தே யஸ்தே சரணகமலத்வந்த்வமமலம்
ஸ பூஜ்ய: ஸ்வாராஜ்யம் ஜநநி கலயிஷ்யந்நவிகலம் ।
மகோந: ஸாம்ராஜ்யம் மதநமதநஸ்யாபி விபவம்
த்ருணப்ராயம் ப்ராயோ கணயதி பதம் த்ரௌஹிணமபி ॥ 10

ஜநநி - தாயே!
அமலம் - குற்றமற்ற
தே - உமது
சரணகமலத்வந்த்வம் - இரு திருவடித் தாமரைகளை
ய: உபாஸ்தே - எவன் த்யானிக்கிறானோ
ஸ: பூஜ்ய: - அவன் இங்கு பூஜைக்குரியவனாய்
அவிகலம் - பரிபூர்ணமாக
ஸ்வாராஜ்யம் - வினைகளுக்கு வசப்படாதவனாகின்ற [illegible]
கலயிஷ்யந் - பரமாத்மாவின் ஸ்தானத்தை அநுபவிப்பவனாய்
மகோந: - இந்திரனின்
ஸாம்ராஜ்யம் - பதவியையும்
மதநமதநஸ்ய - சிவனின்
விபவம் - பசுபதியாக இருக்கும் தன்மையையும்
த்ரௌஹிணம் - நான்முகனின்
பதமபி - அண்டாதிபதியாம் தன்மையையும்
த்ருணப்ராயம் - புல்லுக்குச் சமமாக
ப்ராயோ கணயதி - பெரும்பாலும் நினைக்கிறான்.

ஒருவன் ஸம்ஸாரத்தில் உழல்கிறான் எனில் அவன் முற்பிறவியில் செய்த நல்வினைத் தீவினைகளின் பயன்களை அநுபவிப்பதற்கேயாம். மறுபிறவியில் எவன் தாயின் திருவடிகளை த்யானிக்கின்றானோ அவன் அவள் இன்னருளுக்கு இலக்காகி அகர்மவச்யனாய் வினைக்கு வசப்படாதவனாய் மிக உயர்ந்த ஸ்தானமாகிய பரமாத்ம ஸ்தானத்தை அடைகிறான். அதனால் மண்ணுலகத்தவரால் உயர்ந்ததாக மதிக்கப்படும் இந்திரன், சிவன், நான்முகன் என்பவர்களின் பதவிகளும் புல்லுக்குச் சமமாக எண்ணுகிறான்.

மகோந: என்றவிடத்து மகா நக்ஷத்திரத் தோற்றம். 10

आर्यसेवितमक्षयं फलमिष्टमर्यमतारकं
यत् क्षणेन निजेक्षणेन मुदा ददाति सदातनम् ।
तत् तडित्समधाम मङ्गलनाम तामरसालयं
पालयत्विममानमत्सुरयौवतं परदैवतम् ॥ ११ ॥

ஆர்யஸேவிதமக்ஷயம் பலமிஷ்டமர்யமதாரகம்
யத் க்ஷணேந நிஜேக்ஷணேந முதா ததாதி ஸதாதநம் ।
தத் தடித்ஸமதாம மங்கலநாம தாமரஸாலயம்
பாலயத்விமமாநமத்ஸுரயௌவதம் பரதைவதம் ॥ 11 ॥

ஸதாதநம் - முக்காலத்தும் அழியாத
யத் - எந்த தேவதை
ஆர்யஸேவிதம - பெரியோர்களால் வணங்கப்பட்ட தாய்
இஷ்டம் - யாவரும் விரும்புவதாய்
ஆர்யமதாரகம் - நிலைத்திருப்பதாய்
அக்ஷயம் - என்றும் ஒரே தன்மையதான
பலம் - பலனை
நிஜேக்ஷணேந - தனது கடாக்ஷத்தால்
க்ஷணேந - நொடிப் பொழுதில்
முதா - ஸந்தோஷத்துடன்
ததாதி - தருகிறதோ
தடித்ஸமதாம - மின்னல் போன்ற ஒளியுடையதும்
மங்களநாம - நன்மை தரும் பெயரை உடையதும்
ஆநமத் - வணங்கும்
ஸுரயௌவதம் - அப்ஸரஸைகளை உடையதுமான
தத் பரதைவம் - அந்த உயர்ந்த தேவதை
இமம் - துதிப்பவனான அடியேனை
பாலயது - காப்பாற்றட்டும்

யௌவதம் என்பதற்கு யுவதீநாம் ஸமூஹ: யௌவதம் என்று விக்ரஹவாக்யம். தைவதம் என்பதற்கு தேவ ஏவ தேவதா. தேவதைவ தைவதம் என்பது விக்ரஹம். ஆர்யமதாரகம் என்பது, ஆர்யம + தாரகம் எனப் பிரியும் அர்யமா = சூர்யன், அர்யமஸம்பந்தி = சூர்யன் ஸம்பந்தமுடையது. தாரா = நக்ஷத்திரம். தாரகம் = நக்ஷத்ரத்தை உடையது. ஆக சூர்யஸம்பந்தமுடைய நக்ஷத்ரம் என்பது பொருள். அது தான் பூர நக்ஷத்ரம் இதனை வடமொழியில் பல்குநீ என வழங்குவர் "பல்குநீ நக்ஷத்ரம் அர்யமா தேவதா" என்கிறது வேதம். 11

एकेनाञ्जलिनैव कञ्जनिलये सर्वार्थमुर्वीतले
सन्दायाथ मुकुन्दमन्दिरगतिं संतन्वतीं त्वां विना ।
मा रंस्तातिखले चले नृपकुले वागुत्तरा फल्गुनी-
त्यशासेयमहर्निशं तदितरद्याचामि नो जातु चित् ॥ १२ ॥

ஏகேநாஞ்ஜலிநைவ கஞ்ஜநிலயே ஸர்வார்த்தமுர்வீதலே
ஸந்தாயாத முகுந்தமந்தரகதிம் ஸம்தந்வதீம் த்வாம் விநா ।
மர ரம்ஸ்தாதிகலே சலே ந்ருபகுலே வாகுத்தரா பல்குநீ-
த்யாஸாஸேயமஹர்நிஸம் ததிதரத்யாசாமி நோ ஜாது சித் ॥ 12 ॥

கஞ்ஜநிலயே - தாமரையில் வாழ்பவளே
ஏகேந அஞ்ஜலிநைவ - கை கூப்புதல் ஒன்றாலேயே
உர்வீதலே - மண்ணுலகில்
ஸர்வார்த்தம் - பசு புத்ராதி ஸர்வ பலத்தையும்
ஸந்தாய - ப்ரிகுதியாகக் கொடுத்து
அத - இச்சரீரம் அழிந்தபின்
முகுந்தமந்திரகதிம் - வைகுண்ட ப்ரயாணத்தை
ஸந்தந்வதீம் - ஸந்தேஹமின்றிச் செய்பவளாகிய
த்வாம் விநா - உன்னைத் தவிர்த்து
அதிசலே - நிலைத்த புத்தியில்லாத
கலே - அறிவிலியிடமும்
பல்குநி - ஸாரமில்லாத
ந்ருபகுலே - அரசர்களிடமும்
உத்தரா - மிக உயர்ந்த
வாக் - எனது கவிதைகள்
மாரம்ஸ்த - விருப்பம் கொள்ள வேண்டாம்
இதி - என்று
அஹர்நிஸம் - பகலும் இரவும்
ஆஸாஸே - வேண்டுகிறேன்
ததிதரத் - அதுவன்றி வேறு
ஜாது சித் - எப்போதும்
நோ யாசாமி - வேண்டவில்லை.

வேண்டுபவை யாவற்றையும் தருபவளாகிய உன்னை விட்டுத் தாழ்ந்த மனிதரைத் துதிக்கும் புத்தி எனக்கு உண்டாகாமலிருக்க வேண்டும் என வேண்டுகிறார்.

பூரம் உத்திரம் என்ற இரண்டு நக்ஷத்ரங்களுக்கும் பல்குநீ என்றுதான் வடமொழியில் வழக்கு. இரண்டுக்கும் வேற்றுமை தெரிவதற்காக பூரத்தை பூர்வபல்குநீ என்றும் உத்தரத்தை உத்தரபல்குநீ என்றும் வழங்குவர். ''வாகுத்தராபல்குநீ'' என்றவிடத்து உத்தர நக்ஷத்ரத்தோற்றம்.

12

क्षिपतु क्षिप्रमनल्पमप्रतिहतस्तापत्रयं मामकं
भवदावाग्निभयापहस्तव कृपावीक्षासुधानिर्झर: ।
व्यथयन् साधुकदम्बमम्ब विहितप्रौढागमव्याहृति:
शशिन: सोदरि हानिदाघविभव: शान्तिं यतो विन्दति ॥ १३ ॥

க்ஷிபது க்ஷிப்ரமநல்பமப்ரதிஹதஸ்தாபத்ரயம் மாமகம்
பவதாவாக்நிபயாபஹஸ்தவ க்ருபாவீக்ஷாஸுதாநிர்ஜர: ।
வ்யதயந் ஸாதுகதம்பமம்ப விஹிதப்ரௌடாகமவ்யாஹ்ருதி:
ஶஶிந: ஸோதரி ஹாநிதாகவிபவ: ஶாந்திம் யதோ விந்ததி ॥ 13 ॥

கடாக்ஷக் கருத்து

ஶஶிந: ஸோதரி - சந்த்ரனுடன் பிறந்த

அம்ப - தாயே !

ஸாது - ஸாத்விகர்களின்

கதம்பம் - ஸமூஹத்தை

வ்யதயந் - துன்புறுத்துவதும்

விஹித-ப்ரௌட-ஆகம-வ்யாஹ்ருதி: - வேதவிஹிதமான செயல்களைச் செய்யவொட்டாமல் தடுக்கும் சோம்பலைத் தோற்றுவிப்பதும்

ஹாநித-அகவிபவ: - ஸ்வரூபநாசத்தைச் செய்வதுமாகிய பாபக கூட்டம்

யத. - எதனால்

ஶாந்திம் - லயத்தை

விந்ததி - அடைகிறதோ

அப்ரதிஹத: - தடங்கலற்றதும்

பவ - ஸம்ஸாரமாகிய

தாவாக்நி - காட்டுத் தீயின்

பயாபஹ: - பயத்தைப் போக்குவதுமாகிய

தவ - உமது

வீக்ஷா - கடாக்ஷமாகிய

ஸுதாநிர்ஜர: - அமுதப் பெருக்கு

அநல்பம் - மிகுதியான

மாமகம் - எனது

தாபத்ரயம் - மூன்று தாபங்களையும்

க்ஷிபது - அழிக்கட்டும்

அமுதப்பொருள் கருத்து

கதம்பம் - நீப வ்ருக்ஷங்களை

ஸாது - மிகவும்

வ்யதயந் - இலை புஷ்பங்கள் இல்லாமல் செய்து கொண்டும்

விஹித - செய்யப்பட்ட

ப்ரௌட - மிகப் பெரிய

அகம் - மரங்களின்

வ்யாஹ்ருதி: - அழிவை உடையதுமான

நிதாகவிபவ: - வெயிலின் கொடுமை

யத: - எதனால்

ஶாந்திம் - அழிவை

ப்ராப்நோதி - அடைகிறதோ

அப்ரதிஹத: - தடங்கலற்றதும்

அக்நிபயாபஹ: - அக்நியின் பயத்தைப் போக்குவதுமாகிய

நிர்ஜர: - நீர்வீழ்ச்சி என்பது பொருள்.

இச்செய்யுள் சிலேடையில் அமைந்தது. தாயின் கடாக்ஷத்தை அமுதப் பெருக்கோடு ஒப்பிடுகிறார். நிர்ஜர: என்பதற்கு நீர்வீழ்ச்சி என்பது பொருள். தாயின் கடாக்ஷத்தை அமுதமாக உருவஹித்துள்ளார். பாபத்தைக் காட்டுத் தீயாக உருவஹித்துள்ளார். பாபம் வேதவிஹிதமான நற்செயல்களைச் செய்யவொட்டாது தடுத்துச் சோம்பலை மிகுவித்து மேலும் பாபத்தைத் தோற்றுவிக்கும். எனவே ஸாதுக்கள் வருந்துவர். காட்டுத்தீ எப்படி காட்டையே அழித்துவிடுகிறதோ அப்படி பாபம் தூயதாகிய ஆத்மாவுக்கு ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் என மூன்று வகையான இன்னல்களை விளைவித்து ஆத்மாவை அழித்துவிடும். காட்டுத்தீயை அழிப்பது மனிதச் செயலுக்கு உட்பட்டதன்று. பெருமழை பெய்து வெள்ளப் பெருக்கால்தான் முடியும். அன்னையின் அருள் கூடினால்தான் முடியும். ஆகவே ஸம்ஸாரமாகிய பாபத்தை அழிக்கும்படித் தாயை வேண்டுகிறார்.

கதம்பம் என்பதற்குக் கதம்பமரம் என்றும் ஸமூஹம் என்றும் இரு பொருள். விஹித + ப்ரௌட + ஆகம + வ்யாஹதி: எனப் பாபக்கருத்துக்குப் பிரிக்க வேண்டும். ஆகமம் என்றால் வேதம் - அது வேதத்தில் விதிக்கப்பட்ட நற்செயல்களைக் குறிக்கிறது வ்யாஹதி: அழிவு பாபம் நற்செயல்களைச் செய்யவொட்டாது தடுக்கிறது. காட்டுத்தீ விஹித + ப்ரௌட + ஆகம + வ்யாஹதியாக இருக்கும். அகமம் - மரம். ப்ரௌட - பெரிய என்பது பொருள். பாபம் ஹாநித + அக + விபவமாக இருக்கும். அகம் = பாபம். அது ஆத்ம ஹாநியைத் தரும். விபவத்தை - பெருமையை - உடையதாக இருக்கும். தீ என்ற பொருளில் ஹா எனத் தனிப் பதம். நிதாக விபவ:. என்பதற்கு உஷ்ணத்தின் கொடுமை என்பது பொருள்.

சிலேடையணியும் உருவக அணியும் கலந்து வந்துள. ''பயாவ ஹஸ்தவ'' என்றவிடத்து ஹஸ்த நக்ஷத்ரத்தோற்றம்.

13

लोके पाकारिमेके विरचितयजनश्रेणयः प्रीणयन्ते
केचित् त्रासापनुत्त्यै विदधति नृहरेर्योगिवर्याः सपर्याम् ।
अन्ये पाथोधिकन्ये हरपरिचरणं कुर्वते सर्वदेह
त्वामेवामेयरूपां मनसि वयममी सर्वदा भावयामः ॥ १४ ॥

லோகே பாகாரிமேகே விரசிதயஜநஶ்ரேணய: ப்ரீணயந்தே
கேசித் த்ராஸாபநுத்யை விதததி ந்ருஹரேர்யோகிவர்யா: ஸபர்யாம் ।
அந்யே பாதோதிகந்யே ஹரபரிசரணம் குர்வதே ஸர்வதேஹ
த்வாமேவாமேயரூபாம் மநஸி வயமமீ ஸர்வதா பாவயாம: ॥ 14 ॥

பாதோதிகந்யே - கடல் குமரி
லோகே - உலகில்
ஏகே - சுவர்கத்தை விரும்புபவர்
விரசித - செய்யப்பட்ட
யஜநஶ்ரேணய: - பல பல யாகங்களை உடையவராய்
பாகாரிம் - இந்திரன் முதலியவர்களை
ப்ரீணயந்தே - மகிழ்விக்கின்றனர்
கேசித் - மோக்ஷம் விரும்புபவரான
யோகிவர்யா: - யோகிகள்
த்ராஸ அபநுத்யை - ஸம்ஸார பயம் அகல
ந்ருஹரே - பகவானுடைய
ஸபர்யாம் - பூஜையை
விதததி - செய்கின்றனர்

அந்யே - மோக்ஷ காரணமான ஞானத்தை விரும்புபவர்
ஹர - சிவனது
பரிசரணம் - பூஜையை
குர்வதே - செய்கின்றவர்
அமீ வயம் - யாமோவெனில்
அமேயரூபாம் - பகவானை தன்வயமாக்கிக் கொண்டு கீழ்சொன்ன யாவற்றையும் அளிக்கவல்ல உருவமுடையவளான
த்வாமேவ - தேவரீரையே
ஸேவயா - ஸர்வகைங்கர்யங்களையும் செய்துகொண்டு
ஸர்வதா - எப்போதும்
மநஸி மனதில
பாவயாம: - த்யானிக்கிறோம்

ஒவ்வொரு பயனை வேண்டி ஒவ்வொருவர் ஒவ்வொருவரை வணங்குகின்றனர். யாமோவெனின் வேண்டுபவர் வேண்டியயாவற்றையும் வழங்கவல்லவளாக இருப்பதால் உனக்கே எல்லாப் பணிவிடைகளையும் செய்துகொண்டு எப்போதும் மனதில் த்யானம் செய்கிறேன்.

''கேசித்ராஸ'' என்றவிடத்து சித்ரா நக்ஷத்ரத் தோற்றம்.

14

मयि सर्वापकृतिक्षमेऽपि कलयस्वातीव शीतां दयां
हरिकान्ते भुवनोपकारनिरतेष्वन्येषु धन्येष्विव ।
पनसाम्रादिमहीरुहेषु ददती भूरीणि वारीणि सा
विषवृक्षेऽपि मुहुः प्रवर्षति न किं विश्वाम्ब कादम्बिनी ॥ १५ ॥

மயி ஸர்வாபக்ருதிக்ஷமேऽபி கலயஸ்வாதீவ ஶீதாம் தயாம்
ஹரிகாந்தே புவனோபகாரநிரதேஷ்வந்யேஷு தந்யேஷ்விவ ।
பநஸாம்ராதிமஹீருஹேஷு தததீ பூரீணி வாரீணி ஸா
விஷவ்ருக்ஷேऽபி முஹு: ப்ரவர்ஷதி ந கிம் விஶ்வாம்ப காதம்பிநீ ॥ 15

ஹரிகாந்தே - பகவத்பத்நியான
விஶ்வாம்ப - உலகத்தாயே
புவநோபகார - உலகுக்கு உபகாரம் செய்யும்
தந்யேஷு - பாக்யமுடைய
அந்யேஷு இவ - பிறரிடம் போல்
ஸர்வ - எல்லோருக்கும்
அபக்ருதிக்ஷமே - அபசாரம் செய்பவளான
மய்யபி - என்னிடமும்
அதீவஶீதாம் - மிக்க ஸௌக்யம் தரும்
தயாம் - தயையை
கலயஸ்வ - விஸ்தரிப்பாயாக
(ததாஹி - அது பொருத்தமுடையதே)
பநஸ ஆம்ராதி - பலா, மா, முதலான
மஹீருஹேஷு - மரங்களில்
பூரீணி - மிகுதியான
வாரீணி - ஜலத்தை
தததீ - கொடுப்பதான
ஸா - வழங்குவதில் புகழ்பெற்ற
காதம்பிநீ - மேகம்
விஷவ்ருக்ஷேபி - ப்ராணனைப் போக்கும் விஷமுடைய மரத்துக்கும்
முஹு: - அடிக்கடி
ந ப்ரவர்ஷதி கிம் - மழை பெய்வதில்லையா ?

உலக நன்மையைச் செய்யும் பாக்யம் பெற்றவர்களை நீ கடாக்ஷித்து அநுக்ரஹிப்பது போல் உலகத் தீமையைச் செய்பவளான என்னையும் அநுக்ரஹிப்பாயாக. அப்படிச் செய்வது உனக்குப் பொருந்துவதே. ஏனெனில் வள்ளல் தன்மையில் புகழ்பெற்றது மழை. அது உலகுக்குப் பயன்படும் பலா, மா முதலான மரங்களுக்கு ஜலத்தைப் பொழிவது போல் உயிரைப் போக்கவல்ல விஷமுள்ள மரம் செடி முதலியதற்கும் தான் நீரைப் பொழிகின்றது. தகாதவற்கும் கொடுக்கும் கொடை வள்ளல்களுக்கு

அக்கொடை குணத்தையேயன்றோ தோற்றுவிக்கின்றது ! ''கலயஸ்வாதீ'' என்றவிடத்து ஸ்வாதீ நக்ஷத்ரத் தோற்றம். ஒவ்வொரு எழுத்து குறைந்த அடிகளை உடையவை இனி வரும் செய்யுள்கள். 15

पूर्णं वर्णयितुं तवाङ्ग निगमा न प्राभवन् प्राभवं
यस्याः स्वर्गणिका मुदं विदधते दास्येन लास्येन च ।
वाणी सापि विशाखदन्तिमुखयोर्मातापि जातादरे
धन्ये चामरवीजनं रचयतो धत्ते कलाचीं शची ॥ १६ ॥

பூர்ணம் வர்ணயிதும் தவாங்க நிகமா ந ப்ராபவந் ப்ராபவம்
யஸ்யா: ஸ்வர்கணிகா முதம் விததே தாஸ்யேந லாஸ்யேந ச ।
வாணீ ஸாபி விஶாகதந்திமுகயோர்மாதாபி ஜாதாதரே
தந்யே சாமரவீஜநம் ரசயதோ தத்தே கலாசீம் ஶசீ ॥ 16 ॥

அம்ப - தாயே
ஸ்வர்கணிகா: - ரம்பை முதலான பெண்கள்
யஸ்யா: - தேவரீருக்கு
தாஸ்யேந - பணிவிடைகளாலும்
லாஸ்யேந - நடனமாடுதல் முதலாலும்
முதம் - ஸந்தோஷத்தை
விததே - செய்கின்றனர்
ஸா - கல்விக்களஞ்சியமாகிய
வாணீ - ஸரஸ்வதியும்
விஶாகதந்தி முகயோ: - ஆறுமுக விநாயகர்களுக்கு
மாதாபி - தாயான பார்வதியும்
தந்யே - நற்பயனுடையவராயும்
ஜாதாதரே - பக்தியுடையவர்களாயும்
சாமரவீஜநம் ரசயத: - இருபக்கங்களிலும் நின்றுகொண்டு சாமரம் வீசுகின்றனர்.
ஶசீ - இந்த்ராணி
கலாசீம் - தாம்பூல பாத்திரத்தை
தத்தே - தாங்கிக் கொண்டுள்ளாள்
தவ - இத்தகைய பெருமையுடைய உன்னுடைய
பூர்ணம் ப்ராபவம் - ஒப்புயர்வற்ற தலைவியாம் தன்மையை
வர்ணயிதும் - இவ்வளவு என வர்ணிப்பதற்கு
நிகமா: - வேதங்களும்
ந ப்ராபவந் - ஸாமர்த்யம் உடையவைகளாக ஆகவில்லை.

இத்தகைய பெருமை வாய்ந்த உன்னை வர்ணிப்பதற்கு சிற்றறிவினர்களான என் போன்றவர்களால் எப்படி முடியும் என்பது கருத்து.

விஶாக நக்ஷத்ரம் அமைந்துள்ளது இதில். 16

बहुतरमनूराधारयता मुखैरखिलश्रुती-
नलिनजनुषा निर्मातुमहो यदम्ब न शक्यते ।
कथमिह तव स्तोत्रे कवयः शक्ता स्वयमिन्दिरे
जगति शिशवः अशक्यार्थकृतोऽथ वा जननीमुदे ॥ १७ ॥

பஹுதரமநூராதாரயதா முகைரகிலஶ்ருதீ-
நலிநஜநுஷா நிர்மாதுமஹோ யதம்ப ந ஶக்யதே ।
கதமிஹ தவ ஸ்தோத்ரே கவய: ஶக்தா ஸ்வயமிந்திரே
ஜகதி ஶிஶவ: அஶக்யார்த்தக்ருதோऽத வா ஜநநீமுதே ॥17 ॥

பஹுதரமநு: - பல மந்த்ராங்களையுடைய
அகிலஶ்ருதீ: - நான்கு வேதங்களையும்
முகை: - நான்கு முகங்களாலும்
ஆதாரயதா - தரித்துள்ள
நலிநஜநுஷா - நான்முகனாலே
யத்ஸ்தோத்ரம் - லக்ஷ்மியின் குணத்தை வர்ணிக்கும் ஸ்தோத்ரம்
நிர்மாதும் - செய்வதற்கு
ந ஶக்யதே - முடியவில்லையோ
இந்திரே - லக்ஷ்மியே
இஹ - இத்தகைய
தவஸ்தோத்ர - உனது துதியில்
கதம் கவய: - எப்படிக் கவி இயற்றும் ஶக்தி உடையவராவோம்
அதவா - ஆனால்
ஜகதி - உலகில்
ஶிஶவ: - குழந்தைகள்
அஶக்யார்த்தக்ருத - செய்ய இயலாத செயலைச் செய்யும் முயற்சி உடையவர்களாய்
ஜநநீமுதே - தாயின் ஸந்தோஷத்துக்கு இலக்காக
பவந்தி - ஆகின்றனரன்றோ!

வேதங்கள் அளவற்றவை. தனது நான்கு முகங்களாலும் அளவற்ற வேதங்களை நான்முகன் ஓதிக் கொண்டிருப்பவன். அவனாலும் எண்ணற்ற உனது குணங்களை முழுதும் வர்ணிக்க முடியவில்லை. இது வியப்பிற்குரியதன்றோ ! யானோ சிற்றறிவினன். இத்தகைய நான் எப்படி உனது குணங்களைத் துதிக்க முடியும். இதுவும் தக்கதே. ஏனெனின் உலகில் சிறுவர்கள் தம்மால் செய்ய முடியாத செயல்களைச் செய்ய முயன்று அதனைச் செய்ய முடியாதவர்களாகின்றனர். ஆனால் இதனைக் கண்ட தாய்மார்கள் மகிழ்கின்றனரன்றோ ! இது உலகில் காணக்கிடைப்பது தானே. அதேபோல் எனது செயலைக் கண்டு உலகத்தாய் மகிழ்ந்தே தீருவள்.

''மநூராதாரயதா'' என்றவிடத்து அநூராதா - அநுஷம் நக்ஷத்ரத்தோற்றம். 17

त्रस्यत्ताताभिहितवचनत्राणधर्माय सीते
ज्येष्ठैकार्हं रघुपरिबृढे राज्यमुत्सृज्य याते ।
विश्वं त्रातुं त्वमनुचलिता वीरमेनं हि नो चेत्
कस्माद्भस्मीभवतु जगतां कण्टकः पङ्क्तिकण्ठः ॥ १८ ॥

த்ரஸ்யத்தாதாபிஹிதவசநத்ராணதர்மாய ஸீதே
ஜ்யேஷ்டைகார்ஹம் ரகுபரிவ்ருடே ராஜ்யமுத்ஸ்ருஜ்ய யாதே ।
விஸ்வம் த்ராதும் த்வமநுசலிதா வீரமேநம் ஹி நோ சேத்
கஸ்மாத்பஸ்மீபவது ஜகதாம் கண்டக: பங்க்திகண்ட: ॥ 18 ॥

ஸீதே - ஸீதையே !

ரகுபரிப்ருடே - ஸத்யத்தை மீறிவிடுவோமோ என பயந்த

தாத - தந்தையால்

அபிஹித - சொல்லப்பட்ட

வசநத்ராண - சொல்லைக் காப்பாற்றுதல் என்ற

தர்மாய - தர்மத்துக்காக

ஜ்யேஷ்ட ஏக - மூத்தவன் ஒருவனுக்கே

அர்ஹம் - தகுந்ததான

ராஜ்யம் - அரசாட்சியை

உத்ஸ்ருஜ்ய - விடுத்து

யாதே - சென்றபோது

த்வம் - நீ

விஸ்வம் - உலகை

த்ராதும் - காப்பதற்காக

ஏநம் வீரம் - இந்த வீரனை

அநுசலித நோ சேத் - பின் தொடராது இருந்திருப்பின்

ஜகதாம் - உலகங்களுக்கெல்லாம்

கண்டக: - துன்பம் தருபவனுன

பங்க்திகண்ட: - பத்துத் தலையனுன ராவணன்

கஸ்மாத் - எப்படி

பஸ்மீபவது - நாசமடைவன் !

ராமன் காட்டுக்குச் சென்றது பித்ருவாக்ய பரிபாலனத்துக்காகவே. ஆனுல் நீ அவனைப்பின் தொடர்ந்தது ராவண வதத்துக்காகவே. ஆகவே உலக நன்மைக்காக நீ சென்றவளாதலால் நீ உயர்ந்தவளாகின்ருய் என்கிருர்.

ஜ்யேஷ்ட என்பது கேட்டையைக் கூறுகிறது. 18

द्विषत्समूलयेच्छया तवाङ्घ्रिपद्ममिन्दिरे
स्फुरत्सरोजमन्दिरे सुराः पुरा ववन्दिरे।
तदेव संपदे वयं निरापदे तमोभिदे
भजामहे भुजायुगीयुजा नतेन मौलिना ॥ १९ ॥

த்விஷத்ஸமூலயேச்சயா தவாங்க்ரிபத்மமிந்திரே
ஸ்புரத்ஸரோஜமந்திரே ஸுரா: புரா வவந்திரே।
ததேவ ஸம்பதே வயம் நிராபதே தமோபிதே
பஜாமஹே புஜாயுகீயுஜா நதேந மௌலிநா ॥ 19 ॥

ஸரோஜமந்திரே - தாமரையில் வாழும்
இந்திரே - லக்ஷ்மியே!
ஸுரா: - இந்திரன் முதலானோர்
புரா - துர்வாஸ சாபத்தின் போது
ஸ்புரத் - ஒளிவிடும்
தவ - உமது
அங்க்ரிபத்மம் - திருவடித் தாமரையை
த்விஷத் - அரக்கர்களுடைய
ஸமூ - ஸேனையின்
லயேச்சயா - நாசத்தை விரும்பி
வவந்திரே - வணங்கினர்
வயம் - யாம்
ததேவ - அதே திருவடிகளை
நிராபதே - துக்கம் கலசாததும்
தமோபிதே - ப்ரக்ருதி ஸம்பந்தமற்றதுமான
ஸம்பதே - மோக்ஷாநந்தத்துக்காக
புஜாயுகீயுஜா - கூப்பிய கைகளுடனும்
நதேந மௌலிநா - வணங்கிய தலையுடனும்
பஜாமஹே - பணிகின்றோம்.

துர்வாஸர் கொடுத்த மாலையை இந்திரன் வாங்கி யானையின் மத்தகத்தில் வைத்தான் என்பதும் அது அதனை எடுத்துக் காலால் மிதித்ததால் கோபங்கொண்ட துர்வாஸர் இந்திரன் ராஜ்யமழியச் சபித்தார் என்றும் ராஜ்யமிழந்த இந்திரன் லக்ஷ்மியைத் துதித்துத் திரும்பவும் ராஜ்யமடைந்தான் என்பதும் புராண வரலாறு. இந்திரன் உன் திருவடிகளை வணங்கி இம்மை இன்பம் பெற்றான். நானோ அத்திருவடிகளையே மறுமை இன்பம் - மோக்ஷாநந்தம் - பெற வணங்குகிறேன் என்கிறார்.

இதில் மூல நக்ஷத்ரம் உள்ளது. *19*

कलितनियमपूर्वाषाढकाषायचेला
　　यतसकलहृषीका यद्यतीन्द्रा विशन्ति ।
तदपि भजति धाम न्यस्य भारं त्वदङ्घ्रौ
　　मम जननि नृपाशो मादृशो बालिशोऽपि ॥ २० ॥

கலிதநியமபூர்வாஷாடகாஷாயசேலா
　　யதஸகலஹ்ருஷீகா யத்யதீந்த்ரா விஶந்தி ।
ததபி பஜதி தாம ந்யஸ்ய பாரம் த்வதங்க்ரௌ
　　மம ஜநநி ந்ருபாஶோ மாத்ருஶோ பாலிஶோऽபி ॥ 20 ॥

ஹே மம ஜநநி - எனது தாயே !
கலிதநியமபூர்வே - நியமத்துடன் ஏற்கப்பட்ட
ஆஷாட - ந்ரிதண்டங்களையும்
காஷாய சேலா: - காஷாய வஸ்த்ரத்தையுமுடையவர்களும்
யத - அடக்கப்பட்ட
ஸகலஹ்ருஷீகா: - வெளி இந்த்ரியங்களையும் உள் இந்த்ரியங்களையுமுடைய
யதீந்த்ரா: - முனிவர்கள்
யத் - எந்த இடத்தை
விஶந்தி - அடைகின்றார்களோ
ந்ருபாஶ: - அதமனும்
பாலிஶ: - பூர்ண அறிவற்றவனுமான
மாத்ருஶோऽபி - என் போன்றவரும்
த்வதங்க்ரௌ - உமது திருவடித் தாமரையில்
பாரம் ந்யஸ்ய - பக்தி ஸ்தாநத்தில் உம்மை வைத்து ப்ரபத்தி செய்து
தத்தாமாபி - யோகிகளால் கஷ்டப்பட்டு அடையக்கூடிய ஸ்தானத்தையும்
பஜதி - அடைகிறான்.

கருத்துத் தெளிவானதே. பூராட நக்ஷத்ரத் தோற்றமுள்ளது "பூர்வாஷாட" என்றவிடத்து. *20*

सारापदानशतमोदितविश्वदेव-
　　तारापतिस्थमपि भानुसुतेन राज्यम् ।
त्वत्प्राप्तिकार्यसहकारिगिरैव लब्धं
　　कार्योद्यमो हि महतां कमले शिवाय ॥ २१ ॥

ஸாராபதாநஶதமோதிதவிஶ்வதேவ-
　　தாராபதிஸ்தமபி பாநுஸுதேந ராஜ்யம் ।
த்வத்ப்ராப்திகார்யஸஹகாரிகிரைவ லப்தம்
　　கார்யோத்யமோ ஹி மஹதாம் கமலே ஶிவாய ॥ 21 ॥

ஹே கமலே - தாமரையில் வாழ்பவளே

ஸார - மிக உயர்ந்தவைகளான

அபதாநமத - துஷ்ட ஸம்ஹாராதிகள் போன்றவிக்ரம சரித்திரங்களால்

மோதித - ஸந்தோஷிப்பிக்கப்பட்ட

விஶ்வதேவ - ஸமஸ்த தேவதைகளையுமுடையவளான

தாராபதி - தாரை என்பவளின் கணவனுள வாலியினிடமிருந்த

ராஜ்யம் - வாநரர்களின் தலைமை

பாநுஸூநுநே - ஸுக்ரீவனுலே

த்வத்ப்ராப்தி - உன்னை அடைவதற்காகச் செய்ய வேண்டிய

கார்ய - செயலில்

ஸஹகாரிகிரைவ - உதவுகிறேன் என்ற பேச்சாலேயே

லப்தம் - மிக எளிதாக அடையப்பட்டது

ததாஹி - அது யுக்தமே

மஹதாம் - மஹான்களுடைய

உத்யம: - ஒரு கார்ய விஷயத்தில் செய்யப்படும் முயற்சியும்

ஶிவாய - க்ஷேமத்துக்காக ஆகின்றது.

வாலி என்பவன் வானரர்களின் தலைவன். தாரை என்பவளின் கணவன். கிஷ்கிந்தைக்கு அரசன் மாவீரன் தேவர்களுக்குத் துன்பம் விளைவித்து வந்த துந்துபி என்ற அரக்கனை அழித்தவன். ராவணனை வென்று தன் வாலால் சுற்றி எடுத்துப் போய் கடலில் மூழ்கும் போது இப்பூச்சி ஒட்டிக் கொண்டது எனக் கூறி உதறியவன். இத்துணை வீரனாக இருந்தும் தேவருக்கு எத்தொல்லையும் தரவில்லை. ஆகவே தேவருக்கு இவனிடம் அன்பு. கிஷ்கிந்தைக்கு இவன் ராஜாவாக இருந்தால் இவன் தம்பியான ஸுக்ரீவனுக்கு வாநர ராஜ்யம் கிடைப்பதற்கு வழியே இல்லை. இவனுடன் போர் புரிந்து கைப்பற்றுவது என்பதும் முடியாத கார்யம். ஆனால் ராஜ்யம் மிக எளிதாகக் கிடைத்தது. காரணம் மஹான்களுடன் சேர்ந்து பேசிய பேச்சே. அதுவும் கார்யம் முடிந்தபின் அன்று. ராமன் கிஷ்கிந்தையை அடைந்த போது ஸீதையைத் தேடும் செயலில் நானும் துணை புரிகிறேன் என்று சொன்ன பேச்சாலேயே ராஜ்யம் கிடைத்துவிட்டது. இது ந்யாயமே என்கிறார் கவி. அர்த்தாந்தர ந்யாஸம். மஹான்களின் செயலில் நாமும் உதவ வேண்டும் என எண்ணுவதே க்ஷேமத்தை விளைவிப்பதாம்.

''விஶ்வதேவதாரா'' என்பது உத்தராஷாடா நக்ஷத்ரத்தைக் குறிக்கிறது. ''ஆஷாடா நக்ஷத்ரம் விஶ்வேதேவா தேவதா'' என்பது ஶ்ருதி. 21

दुरितं विषह्य निखिलं दयानिधे
परिपाल्यकिञ्चनजनं भवानिति ।
जगदुद्भवादिनिरतस्य शार्ङ्गिणः
श्रवणेऽभिधेहि रहसि स्वयं रमे ॥ २२ ॥

துரிதம் விஷஹ்ய நிகிலம் தயாநிதே
பரிபாத்வகிஞ்சநஜநம் பவாநிதி ।
ஜகதுத்பவாதிநிரதஸ்ய மார்ங்கிண:
ம்ரவணேऽபிதேஹி ரஹஸி ஸ்வயம் ரமே ॥ 22 ॥

தயாநிதே - கருணைக்கு இருப்பிடமானவனே
பவான் - நீர்
அகிஞ்சநம் - வேறு வழி அற்றவனும்
ஜநம் - திருவடித்தாமரைகளைத் தஞ்சம் புகுந்துள்ள இவனை
நிகிலம் - அவனால் செய்யப்பட்ட
துரிதம் - ஸமஸ்த பாபங்களையும்
விஷஹ்ய - பொறுத்துக்கொண்டு
பரிபாது - ஸம்ஸாரபயத்திலிருந்து காப்பீராக
இதி - என்று
ஜகதுத்பவாதிநிரதஸ்ய - உலகப் படைப்பு முதலான எங்கள் பாபத்தைப் போக்கும் செயலிலீடுபட்டுள்ள
மார்ங்கிண: - பகவானது
ம்ரவணே - காதில்
ரஹஸி - ஏகாந்தமாக
ஸ்வயம் - நீயே
அபிதேஹி - சொல்லுவாயாக, அப்படிச் சொல்லாவிடில் ரக்ஷிக்கமாட்டான் என்பது கருத்து.

ம்ரவணே என்றவிடத்து திருவோண நக்ஷத்ரப்ரதீதி: 22

अशक्तोऽस्मि दुःसाधनिष्ठासहस्रेष्वहं कर्मबोधाद्युपायान्तरेषु ।
अतस्तावकीने सुरद्रोरनूने पदे लोकमातः प्रपद्येऽतिभीतः ॥

அசக்தோஸ்மி துஸ்ஸாத நிஷ்டா ஸஹஸ்ரேஷ்
வஹம் கர்ம போதாதி, உபாயாந்தரேஷு ।
அத: தாவகீநே ஸுரத்ரோரநூநே
பதே லோக மாத: ப்ரபத்யேதிபீத: ॥

லோகமாத: - உலகத்தாயே !

துஸ்ஸாத நிஷ்டா ஸஹஸ்ரேஷு - என்போன்றவர்களால் செய்ய முடியாத எண்ணற்ற உபசாரங்களுடன் சேர்ந்த கர்ம யோகாதிகளை

அஶக்தோஸ்மி - செய்யச் சக்தி அற்றவனாக உள்ளேன்

அத: - அப்படிச் சக்தியற்றவனாக இருப்பதால்

அதிபீத: - ஸம்ஸாரத்தில் மிகவும் பயங்கொண்டவனும்

ஸாரத்ரோ: - கல்பகத்தைவிட

அநூநே - குறைவற்ற குண முடைய

தாவகீநே பதே - உமது திருவடிகளை

ப்ரபத்யே - சரணமாக அடைகிறேன். 23

உபாயாந்தார அசக்தனான எனக்கு ஆகிஞ்சந்ய அதிகாரமான ப்ரபத்தியே மோக்ஷம் தரும் என்பது கருத்து தனிஷ்டா என்றதில் அவிட்ட- நக்ஷத்ரப்ரதீதி: (23)

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம் – உரையின் தொடர்ச்சி

ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயத்தில் கி.பி. 1590ல் அரசாணிப்பாலை ஸ்ரீக்ராமத்தில் அவதரித்து மஹாகவியாகவும், செய்த வேள்வியராகவும் எழுந்தருளியிருந்த அதிதீர வேதாந்தியான ஸ்ரீ வேங்கடாத்வரி ஸ்வாமியின் ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம் மிகவும் மங்களமானது. மங்களாநாம் ச மங்களம் ஆன பிராட்டியின் வைபவத்தை ஸ்ரீ ஸ்வாமி தேசிகனின் திருவுள்ளப்படியே யதார்த்தமாக ஸ்தோத்ரம் செய்யும் உயர்ந்த காவ்யம். 25 ஸ்தபகங்கள் உள்ளன. இதற்கு முதன்முதலாக தமிழில் எளிய உரையை ரத்ன ப்ரபா என்ற நாமமிட்டு இதுவரை 15 ஸ்தபகங்கள் ஸ்ரீ உ.வே. வித்வான் வீராபுரம் சடகோபாசார்யர் உரை அருளிவந்தார். இடையில் அந்த ஸ்வாமி திருநாடலங்கரித்து விடவே இந்த உரையை தொடர வேண்டி ஸ்ரீ உ.வே. வித்வான் நாவல்பாக்கம் யஜ்ஞ வராஹாசார்யார் என்கிற நாவல்பாக்கம் கண்ணன் ஸ்வாமியிடம் ப்ரார்த்தித்தோம். உடனே ஒப்புக் கொண்டு இந்தமாதம் முதல் உரையை தொடர்கிறார். இந்த ஸ்வாமி யஜ்வாக்களாகவும், பிரஸித்த ஆசார்யர்களாகவும் விளங்கும் மஹான்களின் உயர்ந்த திருவம்சத்தில் வந்தவர். மஹாவித்வான் நாவல்பாக்கம் ஸ்ரீ.உ.வே. வரதாசார்யர் ஸ்வாமியின் திருக்குமாரர். வேதாத்யாயீ. வேதாந்தீ. பல ஸதஸ்ஸுகளில் எளிமையான ஸம்ஸ்க்ருதத்தில் ஸரளமாக இனிமையாக நெடுநேரம் வாக்யார்த்தம் செய்து ஆநந்திப்பிப்பவர். ஸரள ஸம்ஸ்க்ருத கவி. பரம சாந்தர். ஆத்ம குணங்கள் ப்ரகாசிக்கும் செயல்பாடுள்ளவர். அநுஷ்டாதா. ஹைதராபாத் சென்ட்ரல் யூனிவர்ஸிடியின் கணிதத் துறை தலைமை பேராசிரியர். இந்தியாவின் புகழ்மிக்க மிகப் பெரிய கணித மேதைகளில் ஒருவர். இந்தியாவின் எந்த மூலையிலும் Mathematics Conference இக்கணித மேதையின் சொற்பொழிவு இன்றி அநேகமாகக் கிடையாது. பாரதமெங்கும் விமானத்தில் பறப்பவர். நமக்காக நேரத்தை ஒதுக்கி இந்த உரையைத் தொடர்கிறார். இந்த ஸ்வாமிக்கு மிகப் பல தன்யவாதங்களை ஸமர்ப்பிக்கிறோம்.

—ஸம்பாதகர்

சதய நக்ஷத்திரம்

त्वत्परिग्रहजुषं द्विषन् रमे क्षीयते बहुसहायवानपि ।
तन्निदर्शन मपास्तवारिजः चन्द्रमाश्शतभिषङ्निषेवितः ॥ २४ ॥

த்வத்பரிக்ரஹஜுஷம் த்விஷந் ரமே க்ஷீயதே
பஹுஸஹாயவாநபி ।
தந்நிதர்ஶந மபாஸ்தவாரிஜ: சந்த்ரமாஶ்ஶதபிஷங் நிஷேவித: ॥ 24

रमे - லக்ஷ்மியே !

त्वत्परिग्रहजुषं - உன் அவலம்பத்தை அடைந்தவனை

द्विषन् - த்வேஷிப்பவன்

बहुसहायवानपि - நிறைய துணை உள்ளவனானாலும்

क्षीयते - க்ஷயம் அடைகிறான்.

तन्निदर्शनं - அதற்குச் சான்று

अपास्तवारिजः - தாமரையைத் தகர்த்த

चन्द्रमाः - சந்திரன்

शतभिषक् - निषेवितः சதய நக்ஷத்திரத்தோடு சேர்ந்தவன்/நூறு மருத்துவர்களால் பணி செய்யப்பட்டவன்

திருமகளுக்கு ஆஸநமாகவும் திருக்கையில் அணியாகவும் விளங்குவது தாமரை. அந்த தாமரைப்பூவை வருத்துபவன் சந்திரன். லக்ஷ்மியின் பக்தர்களைப் பகைப்பதன் பலனென்ன ? நாளுக்கு நாள் தேய்ந்து போகும் க்ஷயரோகம் அடைகிறான் சந்திரன். நிறைய நக்ஷத்திரங்கள் துணை இருந்தும் பயனில்லை. நூற்றுக்கணக்கான வைத்தியர்கள் அருகில் இருக்க வேண்டிய நிலை தான். சதபிஷக் என்ற பதத்திற்கு, சதய நக்ஷத்திரம் என்றும் நூறு வைத்தியர்கள் என்றும் இரண்டு அர்த்தங்கள் கொண்டு சுவைபடக் கூறுகிறார். திருமகள் அருள் பெற்றவர்களைப் பகைத்தால் விபரீத விளைவுகள் தான்.

பூரட்டாதி நக்ஷத்திரம்

भगवति यस्य भवद्गुण कीर्तनकम्प्रोष्ठपदमास्यम् ।
भवति हि जगति गतिस्तत् चरणाम्बुज रेणु रस्माकम् ॥ २५ ॥

பகவதி யஸ்ய பவத்குண கீர்த்தநகம் ப்ரோஷ்டபதமாஸ்யம் ।
பவதி ஹி ஜகதி கதிஸ்தச் சரணாம்புஜ ரேணு ரஸ்மாகம் ॥ 25

भगवति - பகவதியே!
यस्य - எவனுடைய
आस्यं - வாய்
भवद्गुण - உமது குணங்களை
कीर्तन - கீர்த்தநம் பண்ணுவதால்
कम्प्र - அசைகின்ற
ओष्ठपदं - உதட்டுப்பகுதி கொண்டதோ
(कीर्तनकं प्रोष्ठपदं - கீர்த்திக்கின்ற பூரட்டாதி நக்ஷத்ரம் ஆகிறதோ)
तच्चरणाम्बुज रेणुः - அவனுடைய அடித்தாமரைத்துகள்
जगति - உலகில்
अस्माकं - நமக்கு
गतिः - கதியாக
भवति हि - ஆகிறதல்லவோ ?

லக்ஷ்மிதேவியின் நற்குணங்களைப் பேசும் பக்தர்களுக்கு நாங்கள் பக்தர்கள். அவர்கள் திருவடிப் பொடியே எங்களுக்குக் கதி. கீர்த்தந-கம்ப்ர-ஓஷ்ட-பதம் என்று பிரித்தால் உதட்டசைவும், கீர்த்தநகம்-ப்ரோஷ்டபதம் என்று பிரித்தால் பூரட்டாதியும் அர்த்தங்கள்.

உத்தரட்டாதி நக்ஷத்திரம்

त्वत्पद मरविन्द गृहे वन्दन्ते हन्त जन्तवो भुवि ये ।
भुवनोत्तर भाद्रपद क्षुण्ण ममीषां गृहद्वारम् ॥ २६ ॥

த்வத்பத மரவிந்த க்ருஹே வந்தந்தே ஹந்த ஜந்தவோ புவி யே।
புவநோத்தர பாத்ரபத க்ஷுண்ண மமீஷாம் க்ருஹத்வாரம் ॥ (26)

अरविन्दगृहे - தாமரையில் வசிப்பவளே!
ये जन्तवः - எந்த ஜந்துக்கள்
त्वत्पदं - உன் திருவடியை
वन्दन्ते - வணங்குகிறார்களோ
अमीषां - இவர்களுக்கு
भुवि - உலகில்
गृहद्वारं - வீட்டு வாயிலானது
भुवनोत्तर - லோகோத்தரமான (உயர்ந்த)
भाद्र - யானைக்கூட்டத்தின்
पद - கால்களினால்
क्षुण्णं - மிதிபட்டதாகிறது.
हन्त - ஆச்சர்யம்.

உன் தாமரை வீட்டில் உன் பாதத்தை வணங்குபவர்கள் தங்கள் வீட்டில் ஐச்வர்யத்தின் அடையாளமாக யானைகளின் நடமாட்டம் பெறுவது ஆச்சர்யம். உத்தர பாத்ரபத என்ற பதத்திற்கு உயர்ந்த யானைக்கூட்டங்களின் கால்கள் என்றும் உத்தரட்டாதி என்றும் இரண்டு அர்த்தங்கள்.

ரேவதி நக்ஷத்திரம்

शिशिरेऽवतीर्य सिन्धौ साकं शीतांशुना पद्मे ।
करुणार्द्रे कान्तहृदि स्थास्नुर्मुष्णासि तापं मे ॥ २७ ॥

சிசிரேऽவதீர்ய ஸிந்தௌ ஸாகம் ஶீதாம்ஶுநா பத்மே ।
கருணார்த்ரே காந்தஹ்ருதி ஸ்தாஸ்நுர் முஷ்ணாஸி தாபம் மே ॥ 27 ॥

शिशिरे - குளிர்ந்த
सिन्धौ - கடலில்
शीतांशुना साकं - சந்திரனோடு கூட
अवतीर्य - அவதரித்து
पद्मे - லக்ஷ்மியே
करुणार्द्रे - கருணையால் ஈரமானவளே
कान्तहृदि - காந்தனின் இருதயத்தில்
स्थास्नुः - நிலை பெற்றவளாய்
मे - என்னுடைய
तापं - தாபத்தை
मुष्णासि - நீக்குகிறாய்

என் தாபங்களைப் போக்க வல்லவள் நீயே. ஏனெனில் நீ குளிர்ந்த கடலில் தோன்றினவள். குளிர்க்கதிர் உடைய சந்திரனோடு கூட உதித்தவள். திருமாலின் ஈர நெஞ்சில் - திருமார்பில் - குடி கொண்டவள். இவ்வளவு குளிர்ச்சி என் தாபத்தை நீக்கத் தேவை. சிசிரே, அவதீர்ய என்ற பதங்கள் சேரும்போது இடையில் ரேவதீ என்ற நக்ஷத்திரப் பெயர் உள்ளது.

கருணார்த்ரே என்பதை பத்மே என்பதற்கு விசேஷணமாகக் கொண்டு, கருணையால் ஈரமானவளே! என்றும் பொருள் கொள்ளலாம்.

நக்ஷத்திர மாலை

संग्रथ्य चित्रैः पदरत्नषण्डैः समर्पिता दास्यजुषा मयैषा ।
नक्षत्रमाला नदराजकन्ये हृद्या त्वदीये हृदये चकास्तु ॥ २८ ॥

ஸங்க்ரத்ய சித்ரை: பதரத்நஷண்டை: ஸமர்பிதா தாஸ்யஜுஷா மயைஷா ।
நக்ஷத்ரமாலா நதராஜகந்யே ஹ்ருத்யா த்வதீயே ஹ்ருதயே சகாஸ்து. (28)

असलीकाध्वरि कवि घटांबु वादिहंसांबुद कविविद्वन्मणि वेंकटार्य दीक्षित कृतिषु श्री लक्ष्मीसहस्रे नक्षत्रमालास्तबकः संपूर्णः

नदराजकन्ये கடலரசனின் கன்னிகையே !
चित्रैः விசித்திரமான
पदरत्नपण्डैः சொல்மணிக்குவியல்களால்
संग्रथ्य நன்றாகக் கோர்த்து
दास्य जुषा அடிமை புகுந்த
मया என்னால்
समर्पिता ஸமர்ப்பிக்கப்பட்ட
एषा இந்த
नक्षत्रमाला நக்ஷத்திரமாலையானது
त्वदीये உன்னுடையதான
हृदये இதயத்தில்
हृद्या மநோஹரமாக
चकास्तु ஒளிரட்டும்.

கடல் மகளே ! அடியேன் சமர்ப்பித்த இந்த நக்ஷத்திரமாலை விசித்திரமான சொற்கள் என்ற ரத்தினங்களாலானது. இருபத்தேழு நக்ஷத்திரங்கள் பெயருடன் இருபத்தேழு சுலோகங்கள் கொண்டது. நன்றாகத் தொடுக்கப்பட்டது.

மணிமாலை மார்பில் விளங்குவது போல மநோஹரமாக இது உம் இருதயத்தில் பிரகாசிப்பதாக. உம் திருவுள்ளத்திற்கு உகந்ததாக ஏற்றுக்கொள்ள வேண்டும். எதுகை மோனைகளால் படிக்கும்போதே இன்பம் பயப்பதால் விசித்திரமானது. மணிமாலைகளில் போன்று சுலோகங்களின் வரிசை சின்ன அளவில் தொடங்கி, கொஞ்சம் கொஞ்சமாகப்பெரிதாகி, நடுப்பகுதியில் மிகப் பெரிதாகி, பிறகு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து, அமைந்திருப்பதாலும் மாத்ராச்சந்தஸ்ஸில் கூட எல்லாப் பாதங்களிலும் சமமான எழுத்து எண்ணிக்கை கொண்டதாலும் நன்றாகக் கோர்க்கப்பட்டதாம் இது.

ரத்நாகரமான ஸமுத்திரத்தின் பெண்ணுக்கு ரத்ந மாலையைக் காட்டிலும் அடியவர்களின் துதிமாலையே ஹ்ருத்யமாகும்.

நக்ஷத்திரமாலா ஸ்தபகம் முடிவுற்றது.

॥ श्रीः ॥

१६ चित्र चरित्र स्तबकः

16. சித்ர சரித்ர ஸ்தபக:

இந்த ஸ்தபகத்தில் பிராட்டியின் சரித்திரத்திலுள்ள அற்புத நிகழ்ச்சிகளை 12 சுலோகங்களில் விவரிக்கிறார்.

1. சரித்திரமே விசித்திரம்

पवित्रं पद्मनाभस्य कलत्रं तत् पुनातु नः ।
विचित्रं त्रिषु लोकेषु चरित्रं यस्य गीयते ॥ १

பவித்ரம் பத்மநாபஸ்ய கலத்ரம் தத் புநாது ந: ।
விசித்ரம் த்ரிஷு லோகேஷு சரித்ரம் யஸ்ய கீயதே ॥ 1

यस्य - எவருடைய
विचित्रं - அற்புதமான
चरित्रं - வரலாறு
त्रिषु लोकेषु - மூவுலகங்களிலும்
गीयते - பாடப்படுகிறதோ
तत् - அந்த
पवित्रं - பவித்திரமான
पद्मनाभस्य कलत्रं - பிராட்டி, பத்மநாப களத்திரமானவள்
नः - நம்மை
पुनातु - பரிசுத்தப்படுத்தட்டும்.

பத்மநாபனின் மனைவியான லக்ஷ்மி தூயவள். தூய்மைப்படுத்துபவள். (லக்ஷ்மி அஷ்டோத்தரத்தில் பவித்ரா என்ற திருநாமத்திற்கும் இதே அர்த்தம்.) அவளுடைய சரித்திரத்தில் அனேக விசித்திர நிகழ்ச்சிகள் உண்டு. (இவற்றுள் சிலவற்றை அடுத்து வரும் சுலோகங்களில் பார்ப்போம்.) அவற்றை மூன்று உலகத்தினரும் புகழ்ந்து பாடுகிறார்கள். அப்படிப்பட்ட பிராட்டி நம்மைத் தூய்மைப் படுத்துவாளாக.

பவித்ரம், களத்ரம், விசித்ரம், சரித்ரம், என்ற சொற்களைப் பாதத்திற்கு ஒன்றாக அமைத்ததில் சொற்சுவை காண்க.

2. நிலத்திலும் நீரிலும் அவதரித்த விந்தை

अप्राकृतेऽपि भगवानवताररूपे
प्रायः प्रजानुगुणमेव करोति जन्म ।
मातस्त्वया हि मथिते प्रथमे हि भूते
चित्रं पुरा जनिरकारि तथा द्वितीये ॥ २

அப்ராக்ருதே(அ)பி பகவாநவதாரரூபே
ப்ராய: ப்ரஜாநுகுணமேவ கரோதி ஜந்ம ।
மாதஸ்த்வயா ஹி மதிதே ப்ரதமே ஹி பூதே
சித்ரம் புரா ஜநிரகாரி ததா த்விதீயே ॥ 2

अवताररूपे - அவதாரத் திருமேனியானது
अप्राकृतेपि - பௌதிகமாக இல்லாமல் அப்ராக்ருதமானாலும்
भगवान् - பெருமாள்
प्रायः - பெரும்பாலும்
प्रजानुगुणमेव - மக்களை ஒத்தே
जन्म करोति - பிறவி எடுக்கிறார்.
मातः - அன்னையே
त्वया - உன்னால்
पुरा - முன்பு
प्रथमे भूते - முதல் பூதமான பூமியானது
विमथिते हि - நன்றாகக் கலக்கப்பட்ட பொழுதல்லவா
जनिः अकारि - பிறவி எடுக்கப்பட்டது ?
तथा - அப்படியே
द्वितीये - இரண்டாவது பூதமான ஜலத்திலும்
चित्रं - என்கிற இது ஆச்சரியம்.

மக்கள் எப்படிப் பிறக்கிறார்கள் ? கர்ப்பவாசம், யோநிஜத்வம், முதலியனவெல்லாம் கொண்டு பிறக்கிறார்கள். பெருமாள் அவதரிக்கும்போது பெரும்பாலும் மக்களை ஒத்தே கௌஸல்யை முதலியோரிடம் பிறக்கிறார். ஆனால் அவருடைய சரீரம் பௌதிகமாக இல்லாமல் அப்ராக்ருதமானது. ''ஜன்ம கர்ம ச மே திவ்யம்'' (பகவத்கீதை 4-6 கீதாபாஷ்யம் முதலியவற்றுள் உள்ள ஸம்ப்ரதாயார்த்தம் இது.) திருமகளோ மேலும் ஒரு படி போகிறாள். ஸீதாவதாரம் எப்படி ? ஜனகர் யாகத்திற்காகப் பூமியைக் கலப்பையால் உழுதபோது அயோநிஜையாகத் தோன்றினாள் ஸீதை. தாயின் கர்ப்பத்தில்

உழுதபோது அயோநிஜையாகத் தோன்றினாள் ஸீதை. தாயின் கர்ப்பத்தில் வசிக்கவில்லை. ஸமுத்ரகந்யா அவதாரமும் கர்ப்ப வாசம் இல்லாமலே தான். தேவாசுரர்கள் கடலைக் கடைந்த போது லக்ஷ்மி அவதரித்தாள். இப்படியாக பஞ்ச பூதங்களில் முதலாவதான பூமியிலிருந்தும் இரண்டாவதான ஜலத்திலிருந்தும் அயோநிஜையாக அவதரித்தது ஆச்சரியம்.

பெரும்பாலும் என்று சொன்னதில் இரண்டு தாத்பர்யங்கள் உண்டு. முதலாவது: பெரும்பாலான அவதாரங்களில் மக்களை ஒத்த படி பிறவி பெருமாளுக்கு; எல்லா அவதாரங்களிலும் என்னலாகாது. நரஸிம்ஹாவதாரத்தில் அயோநிஜர் தானே ? இரண்டாவது: பெரும்பாலும் ஒத்தே என்று அந்வயிக்கலாம். எல்லா விதங்களிலும் மக்களின் பிறவியை ஒத்திருப்பதாகச் சொல்ல முடியாது. கர்மத்தால் பிறவி, கர்மத்திற்குப் பிறவி, முதலிய சில அம்சங்களில் ப்ரஜாநுகுணமாக இல்லாமலே அவதரிக்கிறார்.

விமதிதே பூதே என்பதற்கு 1. பூதம் கடையப்பட்ட பொழுது 2. கடையப்பட்ட பூதத்தில். என்று இரண்டு விதமாகப் பொருள் கொள்ளலாம். இதனால் அவதார காலத்தையும் அவதார ஸ்தலத்தையும் ஒருசேரச் சொன்னதாகும். நிலமோ நீரோ தோன்றுமிடமாக இருந்ததே தவிர, மாத்ருகர்ப்பம் போலே போஷகமாகவோ வர்த்தகமாகவோ இல்லை என்பதாலும் வேறுபாடு. இதனாலும் ப்ரஜாநுகுணமாக இல்லாதது உன் பிறவி.

த்வயா+அவி+மதிதே என்றும் பதம் பிரிக்கலாம். அவி என்றால் மலை. அம்ருதத்திற்காக மந்தர மலையால் பாற்கடலைக் கடைந்த பொழுது அதன் ஸாரமாகத் தோன்றியவள் லக்ஷ்மி. பாற்கடலின் பாலை வெள்ளை நீராகவும் சொல்வதுண்டு.

3. நெருப்பைக் குளிரப் பண்ணின விந்தை

ख्यातो भुवि ज्वलनशीतलिमानुमानं
बाधानुविद्धमिति तार्किकसम्प्रदायः ।
बालानले कमलवासिनि वायुसूनो-
श्चित्रं चकर्थ कृपया शिशिरं त्वमेव ॥ ३

க்யாதோ புவி ஜ்வலநஶீதலிமாநுமாநம்
பாதாநுவித்தமிதி தார்க்கிகஸம்ப்ரதாய: ।
பாலாநலே கமலவாஸிநி வாயுஸூநோஶ்-
சித்ரம் சகர்த்த க்ருபயா ஶிஶிரம் த்வமேவ ॥ 3

ज्वलन शीतलिमा अनुमानं - நெருப்பு குளிர்ந்தது என்ற அனுமானம்
बाधानुविद्धं - ப்ரத்யக்ஷ விரோதத்தால் அடிபட்டுப் போனது
इति - என்று
तार्किक संप्रदायः - தார்க்கிகர்களின் கோட்பாடு
भुवि - உலகில்
चित्रं - ஆச்சரியம்.
ख्यातः - பிரசித்தமானது.
कमलवासिनि - தாமரையில் வசிப்பவளே !
वायुसूनोः - வாயுபுத்ரனான ஹனுமாருடைய
बालानले - வால்நெருப்பிலே
शिशिरत्वमेव - குளிர்ச்சியையே
कृपया - தயையோடு
चकर्थ - பண்ணினாய்.

நெருப்பு சுடும். இது எல்லாருக்கும் தெரியும். அதனால் தான் தர்க்க சாஸ்திரத்தில் தீ சுடாது என்கிற அனுமானம் ப்ரத்யக்ஷபாதிதம் என்று எளிய உதாரணம் கொடுக்கிறார்கள். இது தர்க்கத்தின் ஆரம்பப் பாடங்களிலேயே உள்ளபடியால் உலகில் பிரசித்தமானது. ஆனால் தாமரையாளே ! நீ ஒரு சமயம் அந்தத் தீயையே குளிர்ந்ததாக்கி விட்டாய். ஹனுமானின் வாலில் இட்ட நெருப்பு உன் அருளால் குளிர்ந்து போயிற்று.

சித்ரம் என்ற பதத்தை மூன்று விதமாக அன்வயிக்கலாம். 1. சித்ரம் என்பது தனி வாக்கியம். நீ நெருப்பிலே குளிர்ச்சியைப் பண்ணினாய். இது ஆச்சரியம். 2. சித்ரம் என்பது ஶிஶிரத்வம் என்பதற்கு விசேஷணம். விசித்திரமான குளிர்ச்சியை என்று பொருள். வாலில் பனிக்கட்டி வைத்தது போலிருக்கிறதே என்று

ஹனுமானே சொல்லும்படியான குளிர்ச்சியை. மேலும், ஒரே சமயத்தில் ஒரே நெருப்பு ஒருவருக்குக் குளிர்ந்தும் மற்றவர்களுக்குக் கொடிய வெம்மையுடனும் இருக்கும்படியான விசித்திரக் குளிர்ச்சியை. ப்ரளய காலாக்னியோ என்று அலறிக்கதறி அல்லோலகல்லோலப்பட்டு அமளிதுமளியாய் அரக்கர்கள் தவித்ததும் இதே அக்னியால் தானே ? 3. சித்ரம் என்பது க்ரியாவிசேஷணம். நீ ஆச்சரியமான முறையில் குளிரப்பண்ணினாய். நான் கற்பு நெறி சிறிதும் தவறாத பதிவ்ரதை என்பது உண்மையானால், நான் தவம் புரிந்திருந்தால், ஸ்ரீ ராமபிரானுக்கு நான் ஒருத்தியே மனைவி என்பது உண்மையானல்,.....அக்னியே ! நீ ஹனுமானுக்குக் குளிர்ந்தவனாக ஆகு'' என்று சொல்லி உபஸ்தானம் பண்ணி அல்லவா இதைச் சாதித்தாள் ஸீதை ? ஆக, அற்புதமான குளிர்ச்சியை அற்புதமான ரீதியில் நெருப்புக்கே உண்டாக்கிய அற்புதமிது.

ஏவ என்ற பதத்தை இரண்டு விதமாக அந்வயிக்கலாம். 1. எந்தக் குளிர்ச்சியை அக்னிக்கு அநுமானம் பண்ணக்கூடாதென்று தர்க்கத்தில் விலக்கினரோ அந்தக் குளிர்ச்சியையே ப்ரத்யக்ஷமாகப் பண்ணி விட்டாய். 2. வாயுஸூநோரேவ— ஹனுமானுக்கு மட்டுமே குளிரும்படி பண்ணினாய்.

க்ருபயா—தயையோடு. ''ஸீதையின் இரக்கத்தினாலும் ராமனின் தேஜஸ்ஸினாலும் என் தந்தையிடம் நட்பினாலும் அக்னி என்னைக் கொளுத்தவில்லை'' என்று ஹனுமான் வாக்கு. ஹனுமான் வாலில் தீயிட்ட செய்தியைக் கேட்டவுடன் விரைவாக துக்கம் தீர்த்தாளே — அந்த பரதுக்க நிராசிகீர்ஷைக்குத் தான் தயை என்று பெயர்.

போன சுலோகத்தில் பாலகாண்டத்து அற்புதம் சொன்னர்.

இந்த சுலோகத்தில் ஸுந்தரகாண்டத்து அற்புதம் சொன்னார்.

அடுத்த சுலோகத்தில் யுத்தகாண்டத்து அற்புதம் சொல்லப்போகிறார்.

4. அக்னியில் விழுந்து எழுந்து வந்த விந்தை

निमग्नमग्नौ किल वस्तु भूयो-
ऽप्युन्मज्जतीति क्व नु देवि दृष्टम् ।
वपुर्विचित्रं तव वह्निमग्न-
मुन्मज्जनं मज्जननि प्रपेदे ॥ ४

நிமக்நமக்நௌ கில வஸ்து பூயோ-
(அ)ப்யுந்மஜ்ஜதீதி க்வ நு தேவி த்ருஷ்டம் ।
வபுர்விசித்ரம் தவ வஹ்நிமக்ந-
முந்மஜ்ஜநம் மஜ்ஜநநி ப்ரபேதே ॥ 4

अग्नौ - நெருப்பிலே
निमग्नं किल - முழுகியே போய்விட்ட
वस्तु - ஒரு வஸ்து
भूयोपि - மறுபடியும்
उन्मज्जति - மேலெழுந்து வருகிறது
इति - என்பது
क्व नु दृष्टं எங்கேயும் கண்டதுண்டோ ?
देवि - தேவியே !
मज्जननि - என் அன்னையே !
तव - உன்னுடைய
वपुः - உடல்
वह्निमग्नं - நெருப்பில் அமிழ்ந்ததாய்
उन्मज्जनं - மேலெழுந்து வருவதை
प्रपेदे - அடைந்தது.
विचित्रं - ஆச்சரியம்.

இந்த சுலோகத்தில் ஸீதையின் அக்னிப்ரவேசம் என்ற அற்புதக்கதை பேசப்படுகிறது. நெருப்பிலே விழுந்து மறைந்து போன வஸ்து மறுபடி எழுந்து வந்ததாக எங்கேயாவது உண்டோ ? ஸீதையின் சரித்திரத்தில் தவிர வேறெங்குமே இப்படிக் கண்டதில்லை.

அக்நிப்ரவேசம் பண்ணும்போது அவள் உடல் உருக்கின புதுத் தங்கம் போன்ற நிறத்துடனும் தங்க வேதி போல் இடை சிறுத்த அழகுடனும் இருந்ததாகச் சொல்லுகிறார் வால்மீகி. இதைத் தான் இந்தக் கவி விசித்ரம் வபு: - அற்புத உடல் என்கிறார்.

அந்த உடல் தீயில் விழுந்து மறைந்தது. யஜ்ஞத்தில் பூர்ணாஹுதி போலே, அத்வரத்தில் வஸோர்தாரை போலே, ஸ்வர்க்கத்திலிருந்து தேவதை விழுந்தாற்போலே, என்கிறார் வால்மீகி. மேலும் இந்த தீக்குளித்தல் விபத்தன்று, தற்கொலையன்று. விசித்ரமானது. ''என் ஹ்ருதயம் ராமனை விட்டுச் சிறிதும் நீங்கவில்லை. நான் தூய நடத்தை உள்ளவள். எண்ணத்தாலும் சொல்லாலும் செயலாலும் நான் ராமனை அதிசரிக்கவில்லை - மீறி நடக்கவில்லை. லோகஸாக்ஷியான அக்நி என்னைக் காப்பாற்றட்டும். சூரியன் முதலிய ஸர்வஸாக்ஷிகளுக்கும் என் தூய்மை தெரியும்'' என்று சொல்லித் தன் தூய்மையைப் பறை சாற்றத் தீக்குளித்தாள். இதை இந்தக்கவி 'விசித்திரமாக வஹ்நிமக்நம்' என்கிறார்.

இப்படித் தீக்குளித்த பிறகு அற்புதமான நிகழ்ச்சி நடந்தது. அக்நி பகவானே அவளை உருக்குலையாமல் பொலிவு குன்றாமல் கொண்டு வந்து ராமனிடம் ஸமர்ப்பித்தான். 'இளங்கதிரவனின் நிறம். உருக்குத் தங்க நகைகள். சிவப்புப் புடவை. பால்யப் பருவம். கருத்த சுருண்ட மயிர்க்கற்றை. வாடாத மாலை. வனப்பான நகைகள். முன்பிருந்த அதே அழகு' என்றார் வால்மீகி. இதை இக்கவி விசித்ரமான உந்மஜ்ஜநம் என்கிறார்.

ஆக, விசித்திரமான திருமேனி விசித்திரமாக அக்கினியில் விழுந்து விசித்திரமான எழுச்சி பெற்றது என்பது ஸாரம்.

நிமக்நமக்நௌ என்று முதல் பாதத்திலும் உந்மஜ்ஜநம் மஜ்ஜநநி என்று நாலாம் பாதத்திலும் ப்ராஸம் ரஸ்யம். பூய: என்ற பதத்திற்கு இரண்டு அர்த்தங்கள். இரண்டுமே இங்கு கொள்ளலாம். 1. மறுபடியும். 2. அதிகமாக. ஒரு தடவை தீயில் விழுந்த வஸ்து மறுபடி வெளிவருமா ? மிகுதியாகத் தீயில் விழுந்த வஸ்து வெளிவருமா ? வராது. ஆனால் ஸீதையின் உடல் வெளிவந்தது பொலிவுடன். இது பரமாத்புதம்.

5. ஹிம்ஸித்தவர்களையும் ரக்ஷித்த விந்தை

स्वबाधकान् साधुजनोऽपि शक्तौ
बाधेत पाथोधिसुते जगत्याम् ।
बाधा विधात्री भवती ररक्ष
रक्षःस्त्रियः प्रत्युत वायुपुत्रात् ॥ ५

ஸ்வபாதகான் ஸாதுஜநோ(அ)பி ஶக்தௌ
பாதேத பாதோதிஸுதே ஜகத்யாம் ।
பாதாவிதாத்ரீ பவதீ ரரக்ஷ
ரக்ஷ: ஸ்த்ரிய: ப்ரத்யுத வாயுபுத்ராத் ॥ 5

पाथोधिसुते - ஸமுத்திரத்தின் பெண்ணே !
जगत्यां - உலகத்தில்
साधुजनोपि - நல்லவர் கூட
शक्तौ - சக்தி இருக்கும்போது
स्वबाधकान् - தனக்குத் தீங்கு பண்ணினவர்களை
बाधेत - ஹிம்ஸிப்பர்.
प्रत्युत - அதற்கு மாறாக
बाधा: - ஹிம்ஸைகளை
विधात्री: - பண்ணுகிற
रक्षस्त्रियः - ராக்ஷஸிகளை
वायुपुत्रात् - ஹனுமானிடமிருந்து
भवती ररक्ष - நீர் காத்தீர்.

உலகத்தில் கெட்டவர்கள் எல்லாரையும் ஹிம்ஸிப்பார்கள். நல்லவர்கள் தமக்குத் தீங்கு பண்ணினவர்களை மட்டும் ஹிம்ஸிப்பார்கள். சக்தி இல்லாத போது ஹிம்ஸிக்காமல் இருப்பார்கள். சக்தியுள்ள போது தம்மை ஹிம்ஸித்தவர்களை ஹிம்ஸிப்பார்கள். இது உலக இயல்பு. உம் உயர்ந்த குணம் இதற்கு மாறானது. உம்மைக் கொடுமைப்படுத்திய ராக்ஷஸிகளைக் கூட ரக்ஷித்தீர். அவர்களை ஹனுமான் கொல்ல வந்த போது தடுத்தீர்.

அசோகவனத்தில் ஸீதைக்குக் காவலாளிகளான ராட்சஸிகள் க்ரூரமானவர்கள். குரூபிகள். அருவருப்பானவர்கள். பயங்கரமானவர்கள். ஸீதையைக் கொடூரமாகத் துன்புறுத்தினார்கள். அதட்டினார்கள்.

மிரட்டினார்கள். விழிகளை உருட்டினார்கள். பயமுறுத்தினார்கள். கொல்வோம், குடலை உண்போம், ஈரலைச் சுவைப்போம், இதயத்தைப்பிளப்போம், கழுத்தை நெறிப்போம், என்றெல்லாம் அச்சுறுத்தினார்கள். அழவைத்தார்கள். முஷ்டியைத் தூக்கினார்கள். சூலத்தைச் சுழற்றினார்கள். ஸீதை தற்கொலை பண்ணிக்கொள்ளத் துணியுமளவுக்கு ஹிம்ஸித்தார்கள். இதையெல்லாம் 'பாதா விதாத்ரீ:' என்று கவி குறிப்பிடுகிறார்.

யுத்தம் முடிந்து விட்டது. ராமபிரான் ஜயித்துவிட்டார். ஹனுமான் ஸீதையைத் தர்சிக்க அசோகவனம் வந்தார். அங்கிருந்த ராக்ஷஸிகளைத் கொல்ல விரும்பினார். ஸீதையிடம் அதற்கு அனுமதி கேட்டார். க்ரூர ராட்சஸிகளை, ஸீதையை முன்பு பீடித்தவர்களை, தீவிரஹிம்ஸை பண்ணினவர்களை, தண்டிக்க நினைத்தார். ஆனால் அதற்கு ஸீதை ஒப்புக்கொள்ள வில்லை. அவர்கள் சார்பில் பேசி, அவர்களைக் காப்பாற்ற முற்பட்டாள். இதைத்தான் கவி வாயுபுத்ராத் ரரக்ஷ என்று சொல்கிறார்.

ஸீதையின் மூன்று வாதங்கள்: 1. இவர்கள் வேலைக்காரிகள். ராஜாவின் கட்டளைப்படி நடப்பவர்கள். தாமாகவே பாபம் செய்யவில்லை. 2. யாரையுமே மற்றவர் துன்புறுத்துவதில்லை. என் முன்வினைப்பயன் அவர்களை அப்படிச் செய்ய வைத்து என்னை வாட்டியது. 3. நல்லவர், கெட்டவர், கொல்லத்தகுந்தவர், எல்லோருக்கும் ஆரியர் அருள் புரிய வேணும். உலகில் பிழை செய்யாதவர் எவருமே கிடையாது. இப்படிப்பட்ட உயர்ந்த மனோபாவம் பிராட்டிக்கு மட்டும் தான் வரும். அவள் பொறுமையின் சிகரம். அருளின் எல்லைநிலம். இது அவளுடைய சித்ர சரித்ரம்.

6. பறவைகளுக்கும் பலனளித்த விந்தை

शोकादपेतः स तवावलोकात् पाकारिपाकः किल काक एकः ।
लोकाननेकान् लभते स्म चित्रं नाकाधिपार्थ्यानपि वृद्ध गृध्रः ॥ ६

ஶோகாதபேத: ஸ தவாவலோகாத் பாகாரிபாக: கில காக ஏக:।
லோகாந்நேகான் லபேத ஸ்ம சித்ரம் நாகாதிபார்த்யாநபி வ்ருத்தக்ருத்ர ॥ 6

शोकात् - துயரத்திலிருந்து
अपेतः - நீங்கியது ?
वृद्ध गृध्रः अपि - கிழக்கழுகும்
नाकाधिपार्थ्यान् - இந்திரனாலும் வேண்டிப்பெறத்தக்க
अनेकान् - பல
लोकान् - லோகங்களை
लभते स्म - அடைந்தது.
चित्रं - ஆச்சரியம்.

पाकारिपाकः - பாகன் என்ற அசுரனைக் கொன்ற இந்திரனின் பாகம்-குழந்தை-ஆன
सः - அந்த
एकः - ஒரு
काकः - காக்கை
तव உன்னுடைய
अवलोकात् - கடாட்சத்தால்
किल - அல்லவா

ராமாயணத்தில் காகாஸுர வ்ருத்தாந்தம். சித்ரகூட மலையில் நடந்த நிகழ்ச்சி. இந்திரனின் பிள்ளையாம் ஒரு காகம். ஸீதையின் மார்பகத்தைக் குத்திக் கீறி மாமிசம் உண்டது. அவ்வளவு துணிச்சல். இதை அறிந்த ராமர் அருகில் இருந்த புல்லை எடுத்தார். பிரம்மாஸ்திரத்தை அபிமந்திரித்தார். காகத்தை நோக்கி எய்தார். காகம் பறந்தோடியது. அஸ்திரம் அதைத் துரத்தியது. காகம் மூவுலகும் அலைந்தது. திரிந்தது. உழன்றோடியது. கடைசியில் இளைத்து விழுந்தது ராமனருகிலேயே. ராமபிரான் தயை கொண்டார். காகத்திற்கு உயிர்ப்பிச்சை கொடுத்தார். அதன் வலது கண்ணை மட்டும் அழித்தார். காகம் துயர் நீங்கிச் சென்றது. இந்தக்கதை இந்த ச்லோகத்தின் முதல் பாதியில் சுருக்கமாக உள்ளது.

இரண்டாவது பாதியில் ஜடாயுவின் கதை. கிழட்டுக் கழுகு. ராவணன் ஸீதையைத் தூக்கிக்கொண்டு ஆகாசத்தில் போனபோது அவனைத் தடுத்தது. சண்டையிட்டது. பிராண்டியது. அடிவாங்கியது. கீழே விழுந்தது. குற்றுயிரும் குலையுயிருமாக இருந்த அந்தக் கழுகை ராமர் பிறகு பார்த்தார்.

ஸீதையை ராவணன் அபஹரித்ததாகத் தகவலைச் சொல்லிவிட்டுக் கழுகு உயிர் நீத்தது. ராமர் கழுகுக்கு ஸம்ஸ்காரங்களைப் பண்ணினார். நற்கதி அடைவித்தார்.

யஜ்ஞசீலர்களுக்கு என்ன நற்கதியோ, ஆஹிதாக்நிகளுக்கு எந்த லோகங்களோ, புறமுதுகிடாத வீரர்களுக்கு எவையோ, பூதானம் பண்ணினவர்களுக்கு எந்த லோகங்களோ, இவையெல்லாம் ஜடாயுவுக்குக் கிடைக்குமாறு ராமர் அருள் புரிந்தார். இதைத்தான் இந்தக்கவி இந்திரனும் வேண்டக்கூடிய அனேக லோகங்களைப் பெற்றது என்கிறார். இது ஆச்சரியம்.

இந்த இரண்டுமே——காகம் துயர் நீங்கியதும் கழுகு நற்கதி பெற்றதும் என்ற இரண்டுமே——ஸீதையின் அருட்பார்வையால் தான் என்கிறார் கவி. ராமாயணத்தில் ஸீதையின் கடாக்ஷம் பெற்றவர்களுக்கெல்லாம் ராமர் அனுக்கிரகம் செய்தார். அவதாரதசையில் மட்டுமில்லை. லக்ஷ்மியின் கடாக்ஷம் பெற்றவர்கள் பெருமாள் அனுக்கிரகம் பெறுவர் என்பது ஸம்ப்ரதாயார்த்தம். ஸீதை அருகில் இருந்தால் பெருங்குற்றவாளிகளுக்கும் மன்னிப்பு கிடைக்கும். ஸீதை பிரிந்து தூரத்தில் இருந்தால் வாலிவதம் முதலியன நடக்கும். வானத்திலிருந்து ஸீதையின் பார்வை ரிச்யமுகத்து ஸுக்கிரீவன் மேலொரு க்ஷணம் பட்டதன் பலனாக ஸுக்கிரீவன் ராஜ்ஜியம் பெற்றான். இதையெல்லாம் கருத்தில் கொண்டு 'தவாவலோகாத்' என்றார்.

எல்லாம் உன் கடாட்சத்தினால் தான்.

ஸாரார்த்தம்: 1. பிராட்டியுடன் கூடியிருக்கும்போது பெருமாளை அணுகினால் எவ்வளவு பாபிஷ்டனும் மன்னிப்பு பெறலாம். துயர் நீங்கும். காகக்கதையில் போல. 2. பிராட்டிக்குகந்த கைங்கரியங்கள் பண்ணினால் அளவிலாப் பேரின்பம் கிடைக்கும். ஜடாயுவுக்குப் போல.

மொத்தமுள்ள 44 எழுத்துகளில் 11 தடவை ககரம் வந்ததால் ப்ராஸம் மிகுந்தது.

இந்தச் சொற்சுவையைத் தமிழில் கொண்டு வரும் முயற்சி இதோ:

குற்றம் செய்தது காகம். குற்றுயிராய் விழும் வேகம். இதன் மேலுன்னவலோகம். அதனால் அகன்றது சோகம். என்று உன் கருணையால் உயிர் பிழைத்த காகாசுரன் கதை.

நாகத்துத் தலைவன் நாடும் லோகத்தைக் கழுகு பெற்று போகத்தைத் துய்த்தது — ஆவித் தியாகத்தை உனக்காய்ச்செய்து. என்று ஜடாயுக்கதை.

7.வக்ஷஸ்ஸில் வாஸம் பண்ணும் விந்தை

प्रायस्स्त्रियः पत्युरतिप्रियाश्चेत् पद्मे सदा पार्श्व मुपाश्रयन्ते ।
निरन्तरं त्वं तु निधीयसेऽहो भुजान्तरे भोगिनगेश्वरेण ॥ ७ ॥

ப்ராயஸ் ஸ்த்ரிய: பத்யு ரதிப்ரியாஸ் சேத் பத்மே ஸதா பார்ச்வம் உபாச்ரயந்தே।
நிரந்தரம் த்வம் து நிதீயஸே -ஹோ புஜாந்தரே போகிநகேச்வரேண ॥ 7 ॥

पद्मे தாமரையாளே!
प्रायः பெரும்பாலும்
स्त्रियः பெண்டிர்.
पत्युः கணவனுக்கு
अतिप्रियाश्चेत् மிகவும் பிரியமான்வர்களானால்
सदा எப்பொழுதும்
पार्श्वं பக்கத்தை
उपाश्रयन्ते அடைகிறார்கள்.
त्वं तु நீயோ
भुजान्तरे மார்பில்
निरन्तरं ஸதாஸர்வகாலமும்
निधीयसे வைத்துக்கொள்ளப்படுகிறாய்.
अहो ஆச்சரியம்.
भोगिनगेश्वरेण சேஷாத்ரிநாதனாலே

மனைவி கணவனுக்கு மிகவும் பிடித்தவளாயிருந்தால் அவள் எப்போதும் கணவன் பக்கத்திலேயே இருப்பதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் மார்பின் மேல் ஏறி உட்காருவதில்லை. பதியின் மார்பில் நிரந்தரமாகத் தங்கி விடுவதுமில்லை. ஆனால், லக்ஷ்மி மட்டும் பெருமாள் மார்பில் நிரந்தவாசம் பண்ணுகிறாள். இது ஆச்சரியம்.

பிராட்டி பெருமாளின் திருமார்பில் நித்யவாஸம் செய்கிறாள். பிரிவதே இல்லை. நித்யாநபாயிநீ என்றும் அகலகில்லேனிறையும் என்றும் பூர்வர்கள் சொன்னதை நிரந்தரம் என்ற பதத்தால் சொல்கிறார். இவளைப் பெருமாள் மார்பில் தாங்குகிறார். அவ்வளவு பிரீதி. தன் இதயம் இருக்குமிடத்தில், தன் ப்ராணஸ்தாநத்தில், கௌஸ்துப ரத்தினத்திற்கு அருகில் பொக்கிஷமாக வைத்துக்கொள்கிறார்.

திருவேங்கடமுடையானின் மூலவிக்ரஹத்திலேயே வலது மார்பில் நாச்சியார் இருக்கிறாள். கவசத்தில் மட்டுமின்றி, மூலமூர்த்தியிலேயே இருப்பதால் நிரந்தரம் என்றது பொருத்தம். இதைக்கொண்டு ஸ்ரீராமானுஜர் திருமலையானைச் சிவனென்று சாதிக்க வந்தவர்களை வென்றதாக ஐதிஹ்யமுண்டு.

8. கணவனால் கண்ணில் வைத்துக் காக்கப்படும் விந்தை

कान्तः प्रियां वहति कामवशाद्दृशीति वाङ्मात्रमेव भुवि शुश्रुम वार्धिकन्ये ।
आश्चर्यमब्जनयनो हरिरब्जगा त्वम् युक्तं ततो दृशि बिभर्ति तव प्रियस्त्वाम् ॥८॥

காந்த: ப்ரியாம் வஹதி காமவசாத் த்ருசீதி
வாங்மாத்ரமேவ புவி சுச்ரும வார்திகந்யே ।
ஆஸ்சர்யம் அப்ஜநயநோ ஹரி ரப்ஜகா த்வம்
யுக்தம் ததோ த்ருசி பிபர்தி தவ ப்ரியஸ் த்வாம் ॥ 8 ॥

कान्तः காதலன்	त्वं நீ
प्रियां பிரியமானவளை	अब्जगा தாமரையை அடைந்தவள்
कामवशात् ஆசைவசத்தால்	(இருப்பிடமாக).
दृशि கண்ணில்	ततः ஆகையால்
वहति தாங்குகிறான்	तव உன்னுடைய
इति என்று	प्रियः அன்பான ஹரி
वाङ्मात्रमेव பேச்சு மட்டுமே	त्वां உன்னை
भुवि லோகத்தில்	युक्तं பொருத்தமாக
शुश्रुम கேட்டிருக்கிறோம்	दृशि கண்ணில்
वार्धिकन्ये கடலின் கன்னிகையே!	बिभर्ति தாங்குகிறார்
हरिः பெருமாள்	आश्चर्यं இது ஆச்சரியம்.
अब्जनयनः தாமரைக்கண்ணன்	

அவன் அவளைக் கண்ணில் விழி போலக் காக்கிறான். அவ்வளவு ஆசை அவளிடம். இப்படி உலகு வழக்கு உண்டு. இது வெறும் பேச்சு மட்டுமே. கண்ணில் வைத்துக்கொண்டால் கண்ணை இமை காப்பது போல கவனமாகக் காப்பாற்றலாம். ஆனால் உண்மையிலேயே கண்ணில் வைத்துத் தாங்குவது யாருக்கும் முடியாது. இப்பொழுது ஆச்சரியம்

என்னவென்றால், திருமால் திருமகளை உண்மையாகவே கண்ணில் வைத்து வஹிப்பதாகத் தெரிகிறது. எப்படியென்றால், அவன் புண்டரீகாக்ஷன், அரவிந்தலோசனன், தாமரைக் கண்ணன். அவளோ பத்மாலயா, கமலவாஸினி, தாமரையில் வசிப்பவள். அதனால் திருமாலின் நயனத் தாமரையில் லக்ஷ்மி வசிப்பதால், அவர் அவளைக் கண்ணில் தாங்குகிறார். இங்கு கவி தாமரைக்கண்ணன் என்பதற்கு, தாமரையைக் கண்ணாகக் கொண்டவன், தாமரை போல் கண் உள்ளவன், என்று இரு பொருள்கள் கொண்டு சமத்காரம் பண்ணுகிறார்.

9. அறியாதாரையும் அனுக்கிரகிக்கும் விந்தை

सर्वे किञ्चित्कुर्वतस्स्वानुकूलान् संरक्षन्तः प्रेक्षितास्सिन्धुकन्ये ।
अज्ञल्पज्ञानार्जितागःप्रपञ्चानस्मादृक्षानप्यहो रक्षसि त्वम् ॥ ९ ॥

ஸர்வே கிஞ்சித் குர்வதஸ் ஸ்வாநுகூலாந்
ஸம்ரக்ஷந்த: ப்ரேக்ஷிதாஸ் ஸிந்துகந்யே ।
அஞ்ஜல்யஜ்ஞாந் ஆர்ஜிதாக:ப்ரபஞ்சாந்
அஸ்மாத்ருக்ஷாந் அப்யஹோ ரக்ஷஸி த்வம் ॥ 9 ॥

सर्वे எல்லாரும்
किञ्चित् ஏதோ ஒரு உபகாரத்தை
कुर्वतः பண்ணுகிறவர்களும்
स्वानुकूलान् தனக்கு அனுகூலமானவர்களுமான சிலரை
संरक्षन्तः காப்பாற்றுகிறவர்களாக
प्रेक्षिताः காணப்பட்டார்கள்.
सिन्धुकन्ये ஸமுத்திரத்தின் பெண்ணே!
त्वं நீ
अज्ञल्पज्ञान् கைகூப்பக்கூடத் தெரியாதவர்களும்
आर्जितागःप्रपञ्चान् பாவக்குவியல்களைச் சம்பாதித்தவர்களும் ஆன
अस्मादृक्षानपि எங்களைப் போன்றவர்களையும் கூட
रक्षसि காப்பாற்றுகிறாய்
अहो ஆச்சரியம்.

எல்லாரும் யாரைக் காப்பாற்றுகிறார்கள் தெரியுமா? உலகத்தில் நாம் பார்ப்பதைச் சொல்கிறேன். தனக்கு உதவி புரிபவர்களை, தனக்கு அனுகூலமாகத் தன் கட்சியில் இருப்பவர்களை, ஆபத்திலிருந்து ரக்ஷித்தவர்களை

அயலார்களை, தனக்கு எந்த நன்மையும் பண்ணாதவர்களை, தன் கட்டளையை மீறியவர்களை, தனக்குப் படியாதவர்களை அடியோடு விட்டுவிடுகிறார்கள். இது உலகத்தவர் இயல்பு. ஆனால் நீ அப்படியன்று. எங்கள் போன்றவர்களைக்கூடக் காப்பாற்றுகிறாய். கை கூப்புவது சுலபமான காரியம் தான். ஆனால் அதைக்கூட முறைப்படி செய்யத் தெரியாதவர்கள் நாங்கள். ஏனோ தானோவென்று தப்பும் தவறுமாகக் கை கூப்புவோம். நிறைய பாவச் செயல்களைச் செய்கிறோம். உனக்கு அனுகூலமாக நடப்பதில்லை. இப்படிப்பட்ட எங்களைப் போன்ற பாபிஷ்டர்களைக் கூட நீ காப்பாற்றுகிறாய். ஆச்சரியம்.

10. எங்களைக் கவிஞராக்கிய விந்தை

दृष्ट्वा वेणुं जडमपि जनाः देवि वाचालयन्तः
कृष्णोऽप्येनं मुखरयति चेत् किं पुनस्तत्र चित्रम्।
श्लोकान् मूकानपि च भवती वादयत्यप्रयत्नात्
चित्रं शौरेस्सखि वयममी तत्र दृष्टान्तभूताः ॥ १० ॥

த்ருஷ்டா வேணும் ஜடமபி ஜநா தேவி வாசாலயந்த:
க்ருஷ்ணோப்யேநம் முகரயதி சேத் கிம் புநஸ் தத்ர சித்ரம்।
ஶ்லோகாந் மூகாநபி ச பவதீ வாதயத்யப்ரயத்நாத்
சித்ரம் ஶௌரேஸ் ஸகி வயமமீ தத்ர த்ருஷ்டாந்தபூதா: ॥ 10॥

देवि லக்ஷ்மிதேவியே !
जडं அசேதனமான
वेणुमपि புல்லாங்குழலைக் கூட
वाचालयन्तः ஒலி எழுப்பச் செய்யும்
जनाः ஜனங்கள்
दृष्टाः காணப்பட்டார்கள்.
कृष्णोपि கிருஷ்ணரும்
एनं இதை (குழலை)
मुखरयति चेत् வாசித்தாரென்றால்,
किं पुनः என்ன தான்
तत्र அதில்
चित्रं ஆச்சரியம் ?
मूकानपि ஊமைகளைக் கூட
भवती நீர்
श्लोकान् சுலோகங்களை
अप्रयत्नात् முயற்சி இல்லாமலே எளிதாக
वादयति வாசிக்கச் செய்கிறீர்.

चित्रं ஆச்சரியம்.
शौरेः திருமாலின்
सखि தோழியே !
अमी இந்த
वयं நாங்கள்
तत्र அந்த விஷயத்தில்
दृष्टान्तभूताः உதாரணமானவர்கள்.

ஜனங்கள் புல்லாங்குழலை ஊதி இனிய ஒலிகளை எழுப்புவதைப் பார்த்திருக்கிறோம். அதனால் கண்ணன் குழலூதியதில் வியப்பொன்றுமில்லை. என்னைப்போன்ற மூகர்களைக் கூட கவி பாட வைக்கும் லக்ஷ்மியின் செயல் தான் அற்புதமானது. நாங்களும் ஜடங்கள் தான், வேறொரு வகையில். கையில் எடுப்பது, வாயில் வைப்பது, விரல்களால் மீட்டுவது, முதலிய எந்த ப்ரயத்நமும் இல்லாமலே எங்களை அவள் இசைக்கருவிகளைப் போலே வாசிக்கிறாள். நாங்களும் பதங்களைத் தேடுவது, தப்புகளைத் திருத்துவது, சுவையாக மாற்றங்கள் பண்ணுவது முதலிய எந்த ப்ரயத்நமும் பண்ணாமலே அனாயாஸமாக ஆயிரம் சுலோகங்களைப் பண்ணுகிறோம். அவை தங்குதடையின்றி மடை திறந்தாற்போல வெளிவருகின்றன. இப்படி அவள் பண்ணவைப்பது விந்தை தானே ?

11. அர்ச்சையை விபவம் ஆக்கிய விந்தை

मादृक्ष रक्षण कृते मकराङ्कमातः बाहान्तरे करुणया भवती निविष्टा ।
अर्चात्मना ध्रुवमवस्थित मञ्जनाद्रौ विश्वम्भरं विभवकार्यकरं करोति ॥११॥

மாத்ருக்ஷ ரக்ஷண க்ருதே மகராங்கமாத:
பாஹாந்தரே கருணயா பவதீ நிவிஷ்டா ।
அர்சாத்மநா த்ருவம் அவஸ்திதம் அஞ்ஜநாத்ரௌ
விச்வம்பரம் விபவகார்யகரம் கரோதி ॥ 11 ॥

मकराङ्कमातः மன்மதனின் மாதாவே !
मादृक्षरक्षणकृते என்போன்றவரைக் காப்பாற்றும்பொருட்டு
करुणया கருணையோடு
बाहान्तरे திருமார்பில்
निविष्टा அமர்ந்தவளாய்
भवती நீர்
अञ्जनाद्रौ அஞ்ஜநகிரி என்னும் திருமலையில்
अर्चात्मना அர்ச்சை வடிவில், விக்கிரக ரூபத்தில்
ध्रुवं நிலையாக

अवस्थितं நின்றிருக்கிற

विश्वम्भरं பெருமாளை.

பிரபஞ்சத்தைத் தாங்குகிறவரை.

विभवकार्यकरं விபவ காரியங்களைச் செய்பவராக

करोति பண்ணுகிறீர்

ஸ்ரீரங்கம், திருமலை முதலிய திவ்யதேசங்களில் விக்கிரக வடிவில் இருக்கும் பெருமாளை அர்ச்சாவதாரம் என்பர். ராமர், கிருஷ்ணர், முதலிய அவதாரங்களை விபவாவதாரம் என்பர். அர்ச்சாவதாரக் காரியங்களாவன நித்யபூஜைகளை ஸ்வீகரித்தல், பக்தர்களை அனுக்கிரகித்தல், சிரகாலம் ஸாந்நித்யம் பண்ணுதல் முதலியன. விபவாவதாரக் காரியங்களாவன துஷ்டர்களை அழித்தல், ஸாதுக்களை ரக்ஷித்தல், ப்ரத்யக்ஷமாக ஸம்பாஷித்தல், உடனுக்குடன் பலனளித்தல் முதலியன. திருவேங்கடமுடையான் அர்ச்சைக்காரியங்களுடன் விபவக்காரியங்களையும் பண்ணுகிறார். அவர் ஸன்னிதியில் அர்ச்சா ஸமாதியைக் கடந்து அவ்வப்போது நடக்கும் நிகழ்ச்சிகள் இதற்குச் சான்று. இப்படி அவரை விபவச்செயல்களைப் பண்ணுவிப்பவள் அவர் திருமார்பில் உள்ள பிராட்டியே. அவளால் தான் அவர் ஸ்ரீநிவாஸன் ஆகிறார்; விபவச்செயல்களையும் பண்ணுகிறார்.

நம் மேல் உள்ள கருணையால் லக்ஷ்மி இப்படிப் பண்ணுவிக்கிறாள். ஆச்சரியம்.

விபவகார்யகரம் என்பதற்கு மேலும் மூன்று அர்த்தங்கள் உண்டு. விபவம் என்றால் செல்வம், சம்பத்து. விபவகாரியமென்றால், கோடானுகோடி மக்களைத் தன்பால் ஈர்ப்பது, உண்டியலில் ஏராளமான பணம் சேரும்படி அவர்கள் கேட்டதையெல்லாம் தருவது, குபேரனுக்கு நிகரான செல்வம் சேர்ப்பது, வேறு எந்த க்ஷேத்ரத்திலும் இல்லாத விபவங்களைப் பெறுவது. இவையெல்லாம். பிராட்டியின் ஸாந்நித்யத்தால் தான் இது முடியும் என்பது பிரசித்தம்.

இனி மூன்றாவது அர்த்தம். பவம் என்றால் ஸம்ஸாரம். பவகாரியமென்பது ஜனனம், மரணம் முதலியது. இவை நீங்கப் பெற்றவர்கள் விபவகார்யர்கள். இவர்கள் முக்தாத்மாக்கள். இந்த முக்தர்களைப் பண்ணுகிறார் ஸ்ரீநிவாஸன். அதாவது, தன்னைப் புகலாக அடைந்தவர்களுக்கு மோக்ஷம்

கொடுக்கிறார். இந்த விபவகார்யகரணத்தில், மோக்ஷப்ரதானத்தில், லக்ஷ்மி துணையாக நிற்கிறாள். பெருமாளை மோக்ஷப்ரதராக ஆக்குகிறாள்.

அடுத்து நான்காவது அர்த்தம். பவன் என்றால் சிவன். பவகார்யங்கள் சிவபூஜையில் பண்ணும் காரியங்கள். திருவேங்கடமுடையானைச் சிவனென்று நினைத்துச் சில சைவர்கள் முன்பொரு சமயம் ராஜாவின் துணையோடு பவகாரியங்களைப் பண்ண முற்பட்டார்கள். ஆனால் அவர்கள் திட்டம் பலிக்கவில்லை. எம்பெருமானார் கதையிலும் நல்லான் சக்ரவர்த்தி கதையிலும் இது தொடர்பான குறிப்புகள் உண்டு. அனேக இலக்கியச் சான்றுகளுடனும் புராணச்சான்றுகளுடனும் திருவேங்கடவன் திருமாலே என்று நிர்ணயித்தபொழுது திருமார்பு நாச்சியாரும் முக்கியச்சான்றானபடியால், பவகாரியங்கள் தடுக்கப்பட்டன. ஆகையால், லக்ஷ்மி அவரை விபவகார்யகரராக்கினாள். என் போன்ற ஸ்ரீவைஷ்ணவர்களைக் காப்பாற்றுவதற்காகக் கருணையோடு இப்படிப் பண்ணினாள் லக்ஷ்மி என்கிறார் கவி.

வேறு சில கருத்துகளும் தொனிக்கும்படி அமைத்திருக்கிறார் கவி. ஓடியாடி அலைந்து திரிந்து ஊக்கமும் உழைப்பும் உள்ளவர்களிடம் தான் லக்ஷ்மி வசிப்பாள் என்பது இலக்கியத்திலும் நடைமுறையிலும் கண்ட உண்மை. ஆனால் அர்ச்சாமூர்த்தியாக நிச்சலமாக உள்ளவரிடம் அவள் குடி கொண்டது ஆச்சரியம். இதைத் த்ருவம் அவஸ்திதம் என்ற பதங்களால் உணர்த்துகிறார். அவள் அமர்ந்தபின் அலைவானேன்?

கார்யகரனென்றால் வேலைக்காரன். விச்வம்பரனையே தன் விபவத்திற்குக் கார்யகரனாகப் பண்ணுபவள் லக்ஷ்மி. இதுவும் ஒரு சித்ரசரித்ரம்.

12. எல்லாருக்கும் தாயார் எனக்குத் தனித்தாயாரான விந்தை

विश्वप्रसूरपि त्वं विचित्र मुरगेन्द्र शैलपति कान्ते ।

मन्मात्रासाधारण मातेव विशिष्य पुष्यसि रमे माम् ॥

விச்வப்ரஸூரபி த்வம் விசித்ரம் உரகேந்த்ர சைல பதி காந்தே ।
மந்மாத்ராஸாதாரண மாதேவ விசிஷ்ய புஷ்யஸி ரமே மாம் ॥12॥

अस्तोकाध्वरि कचिघटांबु वादिहंसांबुद कविविद्वन्मणि वेंकटार्यदीक्षितिकृतिषु लक्ष्मीसहस्रे चित्रचरित्रस्तवकः संपूर्णः

उरगेन्द्रशैलपतिकान्ते சேஷசைலபதியின் காந்தையே !
त्वं நீ
विश्वप्रसूरपि முழுப்ரபஞ்சத்திற்கும் அன்னையான போதிலும்
मन्मात्रासाधारणमातेव எனக்கு மட்டும் தனித்து அன்னை போல்
मां என்னை
विशिष्य தனிப்பட விசேஷித்து
पुष्यसि போஷிக்கிறாய்.
रमे லக்ஷ்மியே !
विचित्रं இது ஆச்சரியம்.

லக்ஷ்மியே! நீ ஜகந்மாதா. எல்லாருக்குமே தாயானவள். எல்லாரையுமே போஷிக்கிறாய். ஆனால் எனக்கு மட்டும் தாய் போல என்னை நன்கு போஷிக்கிறாய். புஷ்டியுடன் வளரச் செய்கிறாய். இது ஆச்சரியம். நூறோடு நூற்றொன்று என்று உபேக்ஷை பண்ணாமல், என்னை நீ தனிக்கவனத்துடன் முன்னுக்குக் கொண்டு வருவது ஆச்சரியம் தான். இதே போல் மற்றவர்களும் உன்னால் விசேஷித்துப் போஷிக்கப்படுவதாக நினைத்தால், அப்படி நீ போஷிப்பதும் ஆச்சரியமே. உனக்குப் புஷ்டி என்று பெயரிருப்பது பொருத்தம். எம்பெருமானார் பெரிய கத்யத்தில் அகிலஜகந்மாதரம் அஸ்மந்மாதரம் என்று அருளிச்செய்தார். அதை அடியொற்றுவது இந்த சுலோகத்தின் கருத்து. விஶ்வப்ரஸூ: என்பதற்கு ஜகத்காரணம், உலகைச் சிருஷ்டிப்பவள், என்றும் அர்த்தம் கொள்ளலாம். லக்ஷ்மி அஷ்டோத்தரத்தில் முதல் திருநாமமான ப்ரக்ருதி என்பதும் விஶ்வப்ரஸூ: என்பதன் அர்த்தமாகும். எல்லாருக்கும் ஈன்றெடுத்த தாய் எனக்கு மட்டும் விசேஷ வளர்ப்புத்தாய் என்றும் கருத்து. இப்படி என்னை மட்டும் தனித்துப் போஷிப்பதால் தானே என்னை லக்ஷ்மீஸஹஸ்ரம் பண்ணத் தூண்டி, என்னை இசைக்கருவி போல் மீட்டுகிறாய் ?

நாவல்பாக்கம் ஸ்ரீ.உ.வே யக்ஞவராஹாசார்யர் என்கிற
யக்ஞன் (கண்ணன்) ஸ்வாமியின் லக்ஷ்மீஸஹஸ்ர
சித்ரசரித்ரஸ்தபக தமிழ் உரை முடிவுற்றது.

(தொடரும்)

॥ श्रीः ॥

१७. नामवैभवस्तबकः

17. நாமவைபவஸ்தபகః

இந்த ஸ்தபகத்தில் திருமகளின் திருநாமங்களின் பெருமையை நாற்பத்திரண்டு சுலோகங்களில் வருணிக்கிறார்.

1. ஞானங்களைச் சேர்க்கும் நாமங்கள்

धाम्ना दृश्येय राजीवधाम्ना तेन दयालुना ।
आम्नानं जातुचित् यस्य नाम्नां ज्ञानैर्युनक्ति नः ॥ १ ॥

தா⁴ம்நா த்³ருச்யேய ராஜீவ தா⁴ம்நா தேந த³யாளுநா ।
ஆம்நாநம் ஜாதுசித் யஸ்ய நாம்நாம் ஜ்ஞாநைர் யுநக்தி ந: ॥ 1 ॥

यस्य - எதனுடைய
(எந்த ஒளியினுடைய)
नाम्नां - பெயர்களுடைய
जातुचित् - ஏதோவொருசமயத்தில்
आम्नानं - கீர்த்தித்தல்
नः - நம்மை
ज्ञानैः - அறிவுகளுடன்?
युनक्ति - கூட்டுகிறதோ
तेन - அந்த
दयालुना - அருள்மிக்கதும்
राजीवधाम्ना - தாமரையை
இருப்பிடமாகக் கொண்டதுமான
धाम्ना - (லக்ஷ்மி என்கிற)
ஒளியினாலே
दृश्येय - பார்க்கப்படுவேனாக.

திருமகள் என்கிற தேஜஸ் தாமரையில் உறைவது. அது அருள் மிகுந்தது. அதன் பெயர்களைச் சொன்னாலே நமக்கு ஞானங்கள் கூடும். அதன் பார்வை என் மீது உண்டாகட்டும்.

திருமகளைத் தேஜஸ்ஸென்கிறார். ஸ்ரீ ஸூக்தத்தில் ஜ்வலந்தீம் என்றும் சந்த்ராம் என்றும் ஸூர்யாம் என்றும் சொல்லப்பட்டவளைத் தேஜஸ்ஸென்றது பொருந்தும். தாம

என்ற பதத்திற்கு இரண்டு அர்த்தங்கள். 1. தேஜஸ், ஒளி. 2. இருப்பிடம், ஸ்தாநம். தாமரையைத் தாமமாகக்கொண்ட தாமம் லக்ஷ்மி. அவளுடைய நாமங்களை ஸங்கீர்த்தநம் பண்ணினால் நமக்கு ஞானங்கள் சேரும். தேவர்கள் ஒருவனை ரக்ஷிக்க விரும்பினால் மாடு மேய்ப்பவர் போல் கழியை எடுக்காமல், அவனுக்கு நல்ல புத்தியைக் கொடுப்பதன் மூலம் ரக்ஷிக்கிறார்கள் என்று முனிவர் கூற்று. லக்ஷ்மீநாமகீர்த்தநம் பண்ணுவோரை லக்ஷ்மி நல்லறிவுகளைக் கொடுத்து ரக்ஷிக்கிறாள். அறிவுகள் என்று பன்மை. மோக்ஷாபயோகியான பக்திரூபமான அறிவு மட்டுமின்றி, கல்வியறிவு, நுண்ணறிவு, பகுத்தறிவு, இந்த எல்லாவகை அறிவுகளும் பெறலாம் அவள் பெயர்களை ஜபித்தால். ஜாதுசித் - எப்பொழுதாவது சொன்னால் போதும். ஞானங்கள் சேர்ந்துவிடும். அவ்வளவு எளிய வழி. அவ்வளவு அருள் அவளுக்கு.

தாமபதத்தில் சிலேடைச்சுவை, தா௺ம்நா,தா௺ம்நா, ஆம்நாநம், நாம் நாம் என்று எதுகைச் சுவை, இவை தவிர வேறொரு சுவையும் - பொருட்சுவையும் - கொண்ட சுலோகமிது. உலகில் எல்லாரும் ஒளியின் துணையோடு (கண்ணால் பார்த்து இது இன்னதென்று) அறிவு பெறுவார்கள். ஆனால் ஒளியுருவானவளின் பெயர்களை வாயால் சொல்லி அறிவுகள் பெறலாம் என்றதாலும், அந்த ஒளி (ஜ்யோதிர்மயி லக்ஷ்மி) நம்மைப் பார்க்கட்டும் என்றதாலும் வேடிக்கை. மஹாப்ரபாவசாலியான திருநாமங்களைக் கொண்ட லக்ஷ்மியின் கடாக்ஷத்தை வேண்டுகிறேன் என்பது ஸாரார்த்தம்.

திருமகள் என்றொரு தாமம், தாமரை அவளது தாமம்
சொன்னால் அவளது நாமம், சேர்ந்திடும் அறிவால் க்ஷேமம்.

2. தாபங்களைத் தணிக்கும் நாமங்கள்

अर्णवेन्द्रतनयेऽतिदुस्सहैः दुर्नरेन्द्रगुणवर्णनातपैः ।
आर्तया रसनयाऽद्य शीतलं कीर्तयामि तव नाम कोमलम् ॥ २ ॥

அர்ணவேந்த்ரதநயேதிதுஸ்ஸஹை: துர்நரேந்த்ர குண வர்ணநாதபை: ।
ஆர்த்தயா ரஸநயாத்ய சீதளம் கீர்த்தயாமி தவ நாம கோமளம் ॥ 2 ॥

अर्णवेन्द्रतनये - கடலரசனின் பெண்ணே ! शीतलं - குளிர்ந்ததும்
अतिदुस्सहैः - மிகவும் பொறுக்கமுடியாத कोमलं - மென்மையானதுமான
दुर्नरेन्द्रगुणवर्णनातपैः - கெட்ட அரசர்களின் குணங்களை வருணித்தல் என்னும் வெயில்களால்
आर्तया - துன்பமடைந்த
रसनया - நாக்கினாலே
तव - உன்
नाम - பெயரை
कीर्तयामि - கீர்த்தனம் பண்ணுகிறேன்.

நான் இதற்கு முன் மக்கள் தலைவர்களிடம் ஆள்கின்றனவர்களிடம் - காரியார்த்தமாகப்போய் புகழ்ந்து பேசினதுண்டு. அவர்களில் பலர் துஷ்டர்கள், திமிர்பிடித்தவர்கள். பொல்லாதவர்கள். நம்மைத் துச்சமாக நினைப்பவர்கள். அந்த துர்ந்ரேத்திரர்களிடம் சென்று அவர்களைப் போற்றுவதும் புகழ்வதுமாக ஐயா ! சமுத்திரம் போன்றவனே ! அர்ஜுனன் போன்றவனே ! என்றெல்லாம் துதி பாடினேன். அவர்களுடைய குணங்களை அதியாக வருணித்தேன். (இப்படிப் பொய்கள் சொன்னதாலும், மிகைப்படுத்திப் பேசியதாலும், அற்பர்களை வாழ்த்தியதாலும், ஸ்வல்ப பலன்களுக்காகச் சுயமரியாதையை இழந்ததாலும்) என் நாக்கு தவித்தது. எரிச்சலடைந்தது. சகிக்க முடியவில்லை. உன் குளிர்ந்த திருநாமம் தாபத்தையெல்லாம் தணிப்பது. என் வாட்டம் தீர்கிறது. தண்மை உண்டாகிறது.

அர்ணவேந்த்ரதநயேதி என்பதற்கு இரண்டு அர்த்தங்கள் சொல்லலாம். அர்ணவ - இந்த்ர - தநயே என்றும்

அதி என்றும் பிரித்தால், சமுத்திரராஜனின் மகளே ! மிகவும் என்று பொருள். அர்ணவ என்றும் இந்த்ரதநய என்றும் இதி என்றும் மூன்று பதங்களாகப் பிரித்தால், கடலே காண்டீபனே என்று எனப்பொருள். இந்த இரண்டாம் பொருளில் எப்படியெல்லாம் துர்நரேந்த்ரர்களைப் புகழ்ந்தேன் என்பது சொல்லப்படுகிறது.

தூர்த்தரைப் புகழ்ந்த தாபம்

தீர்த்திட நாவில் தண்மை

சேர்த்திட உன் நாமத்தைக்

கீர்த்தனம் பண்ணுகின்றேன்.

3. அமரர்க்கு மேலாய் ஆக்கும் நாமங்கள்

राजीवगेहे तव मर्त्यराजी राजीवयन्ति व्यसनाब्धिमग्नः ।

नामानि यः कीर्तयते स धन्यो वैमानिकानामपि माननीयः ॥ ३ ॥

ராஜீவகேஹே தவ மர்த்யராஜீ ராஜீவயந்தி
வ்யஸநாப்₃தி₄மக்ந: ।
நாமாநி ய: கீர்தயதே ஸ த₄ந்யோ வைமாநிகாநாமபி மாநநீய: ॥ 3 ॥

मर्त्यराजीः - மனிதர்குழுக்களை
आजीवयन्ति - உயிர்ப்பிக்கின்ற
तव - உன்
नामानि - பெயர்களை
व्यसनाब्धिमग्नः - துன்பக்கடலில் முழுகின
यः - எவன்
कीर्तयते - கீர்த்தனம் பண்ணுகிறானோ
सः - அவன்
धन्यः - தந்யன்.
वैमानिकानामपि - தேவர்களுக்கும்
माननीयः - பாராட்டுக்குரியவன்.

லக்ஷ்மியே ! உன் பெயர்கள் மனிதர் குழாங்களை உய்விக்கவல்லவை. அவற்றைக் கீர்த்தனம் பண்ணுபவனைத் தேவர்கள் கூடக் கொண்டாடுவர்.

தேவர்கள் கூட என்கையில், கூட என்றதற்கு இரண்டு உட்கருத்துகள் உண்டு.

1. தேவர்களே கொண்டாடும்போது மற்றவர் குறித்துக் கேட்பானேன் ? எல்லா நல்லோரும் கொண்டாடுவர்.

2. உலகில் மற்ற மக்கள் எந்த தேவதைகளைப் பூஜிக்கிறார்களோ, அந்தத் தேவர்களே லக்ஷ்மிபக்தர்களைப் பூஜிக்கிறார்கள்.

வைமாநிகர் என்ற பதத்தால் தேவர்களைச் சொன்னதில் இரண்டு உட்கருத்துகள் உண்டு.

1. தேவர்கள் விமானத்தில் செல்பவர்கள். இவனோ கடலில் முழுகியவன். கடல் மட்டத்துக்குக் கீழே இருப்பவனை விமானத்தவர்க்கும் மேலாய் ஆக்குபவை உன் திருநாமங்கள். எவ்வளவு தூரம் உயர்த்துகின்றன என்று வியப்பதற்காக வைமானிக பதத்தைப் பிரயோகித்தார்.

2. இவனை ஸந்மாநத்தவர் மட்டுமின்றி (அதற்கெதிரான) விமாநத்தவர் கூட ஸம்மானிப்பது வேடிக்கை.

தந்யன் என்றால் கொடுத்து வைத்தவன், பாக்கியசாலி, அதிர்ஷ்டக்காரன். இது தவிர, பணக்காரன் என்ற அர்த்தமும் உண்டு. இரண்டு அர்த்தங்களும் இங்கு பொருந்தும். ராஜீவம் (தாமரை), ராஜீ: (வரிசைகளை), ஆஜீவ, என்றிப்படியாக மூன்று தடவை ராஜீ என்ற சொல்லை அமைத்ததாலும், நாமாநி, வைமாநி, நாமபி, மாநநீ, என்று எழுத்துத் தொடர்களை வரவழைத்ததாலும் சொற்சுவை மிகுந்தது.

இவன் கெட்டிக்காரன். தன் உஜ்ஜீவனத்திற்கு எளிதான வழியைத் தெரிந்துகொண்டுவிட்டான். இவன் புண்யாத்மா. இவனைக் கொண்டாடினால் நமக்கும் புண்ணியம். இவன் திருமகளின் அடியான். அதனால் நமக்கு ஸ்வாமி. என்று தேவர்கள் புகழ்கின்றனர்.

4. ஆசைமோசங்களை அழிக்கும் நாமங்கள்

पञ्चेषुचापलपलायनसिद्धमन्त्रं घण्टाविशेषनिनदं कुहनापिशाच्याः ।
कोपानलप्रशमसान्त्वचो मुरारेः के नाम नाम न जपन्ति तवाब्धिकन्ये ॥ ४ ॥

பஞ்சேஷுசாபல பலாயந ஸித்த₄ மந்த்ரம்
க₄ண்டா விஶேஷ நிநத₃ம் குஹநாபிஶாச்யா: ।
கோபாநல ப்ரஶம ஸாந்த்வ வசோ முராரே:
கே நாம நாம ந ஜபந்தி தவாப்₃தி₄கந்யே ॥ 4 ॥

अब्धिकन्ये - ஸமுத்திரத்தின் கன்னிகையே !
पञ्च-इषु-चापल-पलायन-सिद्ध-मन्त्रं - மன்மதனால் வரும் மனோவிகாரங்களை ஓடவைக்கும் ஸித்தமந்திரமானதும்
कुहना-पिशाच्याः - வஞ்சனை என்னும் பிசாசுக்கு
घण्टाविशेष-निनदं - ஒருவகை மணியோசையானதும்
मुरारेः - பெருமானுக்கு
कोप-अनल-प्रशम-सान्त्व-वचः - கோபத்தீயை அணைக்கும் நல்வார்த்தையானதுமான
तव - உன்னுடைய
नाम - திருநாமத்தை
के नाम - எவர் தான்
न जपन्ति - ஜபிக்க மாட்டார்கள் ?

உன் திருநாமத்தை ஜபித்தால் காம ஆசைகள் அழியும். மோசடி எண்ணங்கள் ஒழியும். பெருமானுக்கும் கோபம் தணியும். இத்தகைய உன் பெயரை யார் தான் ஜபிக்க மாட்டார்கள்?

பஞ்சேஷு-பஞ்சபாணன்-ஐங்கணையான்-மன்மதன்.

காதலர்களுக்குள் ஏற்படும் நாட்டம், தவிப்பு, துடிப்பு, ஏக்கம், பிரிவாற்றாமை, நிலைகொள்ளாமை, முதலிய சித்தவிகாரங்களைப் பஞ்சேஷுசாபலமென்கிறார். இந்தச் சாபலத்தை விரட்டுவதில், நம்மிடம் வராமல் பண்ணுவதில், நம்மைவிட்டு ஓடப்பண்ணுவதில், சித்தமந்திரமாக இருப்பது உன் திருநாமம். சித்தமந்திரமென்றால் உடனே பலனளிக்கவல்ல மந்திரம். புரச்சரணம் பண்ணி, நியமநிஷ்டைகளுடன் தியானம் பண்ணி, அநேக ஆவ்ருத்தி ஜபித்து மந்த்ரசித்தி பெற்றவரிடம் சித்தி நிலையிலுள்ள

மந்திரம் போன்றது உன் திருநாமம். அதை ஜபித்தவுடனே சபலங்கள் சமித்துவிடும். காமங்கள் காய்ந்துவிடும். ஒவ்வா உணர்ச்சிகள் ஓடிவிடும். மற்றை நம் காமங்கள் மாறிவிடும். அதனால் உன் திருநாமம் பஞ்ச-இஷு-சாபல-பலாயந-ஸித்த - மந்த்ரம்.

ஸ்ரீ, லக்ஷ்மி, பத்மா, கமலாலயா, இந்திரா என்றெல்லாம் உன் திருநாமத்தை ஒருவன் ஜபித்தால், மன்மதன் 'இவன் எனக்குச் சொந்தத் தாயாரான லக்ஷ்மியைப் புகழ்பவன். இவனுக்கு நான் உதவி செய்ய வேண்டுமேயன்றிக் குந்தகம் விளைவிக்கக்கூடாது. இவனுடைய சிற்றுணர்ச்சிகளைக் கிளறிவிட்டுத் தீங்கு செய்யக்கூடாது. சிருங்கார ரஸத்திற்கு மேலான சாந்தி ரஸத்தை இவன் அடையத் தடையாகக் கூடாது' என்று கருதி விலகிவிடுகிறான்.

குஹநா என்றால் வஞ்சனை, சூதுவாது, தில்லுமுல்லு, பித்தலாட்டம், மோசடி. இது பிசாசு போன்றது. பேய், பிசாசு என்று உருவகப்படுத்தினார். உன் திருநாமத்தைச்சொன்னால் வஞ்சம் வரவே வராது. மோசடி முடங்கிப்போகும். சூது சுண்டிப்போகும். எப்படியானால் பெருமாள் திருவாராதனத்திற்காக மணியடித்தால், அந்த மணியோசையைக்கேட்டு, பேய்பிசாசுகள் பறந்தோடுமோ, அசுரசக்திகள் அகன்றோடுமோ, அது போல, ஸரோஜா, ஹரிணி, சந்த்ரா, சார்ங்கிணி, பத்மினி, முதலிய உன் திருநாமங்களைச் சொன்னால் பறந்தோடிவிடும் குஹநா. மற்றவர்கள் நமக்குச்செய்யும் மோசடியும் நம்மை அண்டாது; மற்றவர்க்கு மோசம் பண்ணும் தீய எண்ணமும் நமக்கு வராது. கண்டாவிசேஷமென்றார். அழைப்புமணி,

சைக்கிள்மணி, அலாரமணி, இவற்றுக்கெல்லாமில்லாத ஒரு சிறப்பு ஆலயமணி, ஆராதனமணி, இவற்றுக்குண்டு. இந்தக் கண்டாவிசேஷங்கள் தான் துஷ்டசக்திகளைத் தூரத் தள்ள வல்லவை. இந்த மணியொலிக்கு ஈடானது உன் திருநாமம்.

மூன்றாவது விசேஷணம். முராரி கோபத்தைத் தணிப்பதென்பது. குற்றவாளிகளான, பிழை புரிந்தவர்களான, பாவிகளான, அபராதிகளான நம் மேல் பெருமாள் நியாயமாகக் கொண்டுள்ள கோபத்தீயை அணைப்பதற்கு, க்ரோதாக்நியைச் சமிப்பதற்கு, நிக்ரஹபுத்தியைத் தடுப்பதற்கு, ஆறுதல் வார்த்தையாக, கெஞ்சும் மொழியாக, ஸாந்த்வ வசனமாக, அநுநயப் பேச்சாக அமைகிறது உன் திருநாமம். அம்ருதா, கோமளா, வேதவல்லி, அம்புஜா, என்றெல்லாம் உன் திருப்பெயர்களைச்சொன்னால், அது பெருமாளுக்குத் தேனாய் இனிக்கும். அதனால் அவர் கோபம் பறந்தோடும். அவரருள் நமக்குக் கிட்டும். இப்படி மூன்று செயல்பாடுகள் உண்டு உன் திருநாமத்திற்கு. இதில் வேடிக்கை என்னவென்றால் ஜபிப்பவனுக்கு வெறும் முணுமுணுப்பாக இருக்கும் ஒரு சொல் ஆசாபாசத்திற்குத் தேத்தே என்று விரட்டுமொலியாகவும், வஞ்சனைப் பேய்க்கு டாங் டாங் என்று மணியொலியாகவும், திருமாலுக்கு ஐயோ பாவம், இவன் மேல் இரக்கம் கொள்ளுங்கள், என்று பரிந்துரையாகவும், ஒன்றே மூன்று விதமான ஒலிவடிவம் பெறுகிறதென்பது.

ஃே நாம நாம என்றவிடத்தில் நாம என்ற பதத்திற்கு இரண்டு அர்த்தங்கள். யார் தான் உன் பெயரை ஜபிக்க மாட்டார்கள் ? எல்லாரும் ஜபிப்பார்கள். கடினமான நியமங்களுடன் மந்த்ரஸித்தி பெறுவதற்கான பொறுமையும் திறமையும் இல்லாதவர்கள் கூட உன் பெயரை ஜபிப்பார்கள்; அது ஸித்தமந்திரமாக இருப்பதால். சூதுவாதுகளில் சிக்கிக் கொண்டு தவிப்பவர்கள் கூட உன் பெயரை ஜபிப்பார்கள்; சிக்கலிலிருந்து விடுபடுவதற்காக குற்றவாளிகள் கூட உன் பெயரை ஜபிப்பார்கள்; தெய்வதண்டனையிலிருந்து தப்புவதற்காக. இப்படி, பொறுமையுள்ளவர்கள், பொறுமையற்றவர்கள், திறமைசாலிகள், திறமை குறைந்தவர்கள். சிக்கியவர்கள், விடுபட்டவர்கள், பாவிகள், புண்யாத்மாக்கள், எல்லாருமே உன் பெயரை ஜபிக்கிறார்கள்.

5. நன்மைகளை நல்கும் நாமங்கள்

आम्नायदुग्धजलधेरमृतं मदम्ब नित्यद्विषां प्रहरणे द्रुहिणास्त्रमन्त्रः ।
नारायणस्य किल नित्यजपस्त्वदीयं नाम प्रगल्भतममभ्युदयं तनोतु ॥ ५ ॥

ஆம்நாயது₃க்த₄ஜலதே₄ரம்ருதம் மத₃ம்ப₃
நித்யத்₃விஷாம் ப்ரஹரணே த்₃ருஹிணாஸ்த்ரமந்த்ர: ।
நாராயணஸ்ய கில நித்யஜபஸ்த்வதீ₃யம்
நாம ப்ரக₃ல்ப₄தமமப்₄யுத₃யம் தநோது ॥ 5 ॥

मदम्ब என் அன்னையே !
आम्नाय—दुग्ध—जलधेः வேதமாகிற பாற்கடலிலிருந்து
अमृतं அம்ருதமானதும்
नित्यद्विषां நித்யசத்ருக்களான காமக்ரோதாதிகளை
प्रहरणे அடிப்பதில்
द्रुहिणास्त्रमन्त्रः ப்ரம்மாஸ்த்ர மந்த்ரமானதும்
नारायणस्य किल பெருமாளுக்கோ
नित्यजपः எப்பொழுதும் ஜபமானதும்
प्रगल्भतमं ஆற்றல் மிக்கதுமான
त्वदीयं உன்னுடையதான
नाम திருப்பெயரானது
अभ्युदयं ச்ரேயஸ்ஸை
तनोतु பரப்பட்டும்

உன் திருநாமம் வேதஸாரமானது. காமம், குரோதம் முதலிய நித்யசத்ருக்களை அழிப்பது. பெருமாளுக்கு உகப்பானது. மிக்க ஆற்றல் பெற்றது. ஏற்றங்களைத் தரட்டும்.

வேதமென்கிற பாற்கடல் என்று ரூபகம். பாற்கடல் போல் விபுலமாக, விசாலமாக, விஸ்தீர்ணமாக, கரைகாணாதபடி

வேதம் இருப்பதாலும், பாற்கடல் போல் கம்பீரமாக, ஆழமாக, முழுவதும் முடியாதபடி வேதம் ஆழ்ந்த கருத்துக்கள் கொண்டு தெரியாத பகுதிகள் உடைத்தானதாலும், பாற்கடலில் கௌஸ்துபம் முதலிய ரத்தினங்கள் இருப்பது போல் வேதத்திலும் விலையிடமுடியாத மந்த்ரரத்னங்கள் இருப்பதாலும், பாற்கடலில் படுத்திருப்பது போல் வேதத்திலும் பெருமாள் உறைவதாலும், ஆம்நாயதுக்கஜலதி என்றவிது பொருத்தமான உருவகம்.

உன் திருநாமமே அமுதம் என்று ரூபகம். பாற்கடலில் ஸாரமாக அமுதம் வெளிவந்தது போல் வேதத்தின் ஸாரப்பகுதியானது உன் திருநாமம். அமுதம் நாவிலிட்டால் இனிப்பது போல் உன் திருநாமமும் நாக்கிற்கு மதுரமானது. ஆயுள், ஆரோக்கியம், புஷ்டி, பலம் முதலிய பண்புகளை எப்படி அமுதம் கொடுக்கவல்லதோ, அது போல் அவற்றை உன் திருநாமமும் கொடுக்கவல்லது. இந்தக் காரணங்களால் இது பொருத்தமான உருவகம்.

நம் நித்யசத்ருக்களை அழிப்பதில் பிரம்மாஸ்த்ர மந்த்ரமானது உன் திருநாமம் என்று அடுத்த உருவகம். நமக்கு ஆறு உட்பகைவர்கள் எப்போதும் நம்முடனே இருக்கிறார்கள். காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்ற இந்த ஆறு பேரையும் ஜயிக்க வேண்டும். இந்த ஆறு பேரும் வலியவர்கள், கொடியவர்கள். சாதாரண ஆயுதங்களால் இவர்களை வீழ்த்த முடியாது. உன் திருநாமமாகிற ப்ரம்ஹாஸ்த்ரம் கொண்டு தான் வெல்ல முடியும். பிரம்மாஸ்திரம் மற்ற எந்த ஆயுதத்தாலும் மாளாதவர்களை மாளவைப்பது. எல்லாத் தரப்பினராலும் மதிக்கப்படுவது. அமோகமானது — வீணே போகாதது. காகாசுரனின் கண்ணழிந்த கதை, ஸமுத்திரராஜன் பாலைவனம் உண்டாக்கிய கதை, ஹனுமான் இந்திரஜித்திடம் கட்டுண்ட கதை, ராவணஸம்ஹாரக்கதை முதலியவற்றில் பிரம்மாஸ்திரத்தின் மேற்சொன்ன மேன்மைகளைக் காணலாம். உன் திருநாமமும் பிரம்மாஸ்திரம் போன்றது. மற்றெந்த வகையிலும் மாளாத நித்யசத்ருக்களை மாய்ப்பது. எல்லோராலும் கௌரவிக்கப்படுவுது. எப்போதுமே வீண்போகாதது.

மூன்றாவதாக உன் திருநாமம் நாராயணனுக்கே நித்தியஜபமானது. இதற்கு மூன்று விதமாகக் கருத்து கொள்ளலாம். 1. உன் விஷயமான ஜபமும் பெருமாள் விஷயமான ஜபமாகும். பெருமாளுடைய கருணையையோ, அவருடைய காந்தியையோ புகழ்ந்தால் அவர் விஷயமாவதுப் போல், அவருடைய ஸ்ரீயைத் துதித்தாலும் அவரைத் துதித்ததாகும். 2. பெருமாளே உன் திருநாமங்களை அடிக்கடி உச்சரிக்கிறார். நாங்கள் மாதாவென்று வாத்ஸல்யம் வேண்டி ஸ்வரக்ஷைக்காகச் ஜபிக்கும் உன் திருநாமங்களை பெருமாள் மஹிஷி என்று வால்லப்யம் கருதி ஜகத்லீலைக்காகச் சொல்கிறார். 3. ஜபங்களில் மூன்று வகை உண்டு. நித்யஜபமென்றும், நைமித்திகஜபமென்றும், காம்யஜபமென்றும். ச்ரியை நம: என்று தொடங்கி மஹாலக்ஷ்ம்யை நம: என்பது வரையிலான உன் பன்னிரண்டு திருநாமங்களையும் கேசவாதி த்வாதச நாமங்களுடன் சேர்த்து நாம் பிரதிதினமும் திருமண் இட்டுக் கொள்ளும்போது ஜபிக்க வேண்டுமென்று சாஸ்திரவிதி உண்டு. நாம் பண்ணும் இந்த நித்யஜபம் ஸ்ரீமந் நாராயணனுக்கே.

ப்ரகல்பதமம்—ஆற்றல் மிக்கது, வலிமை மிகுந்தது, வீர்யவத்தமம். எது ப்ரகல்பதமம் ? உணவுவகைகளில் அம்ருதம். ஆயுதவகைகளில் பிரம்மாஸ்திரம். ஹிதங்களில் பகவத்ப்ரீதி. இந்த மூன்றுமேயானது உன் திருநாமம். என்று முறையே மூன்று பாதங்களின் கருத்து.

அப்யுதயம்—எழுச்சி, ஏற்றம், வளர்ச்சி, ச்ரேயஸ், உயர்வு, மேன்மை. இது நமக்கு மூன்று வகைகளில் ஏற்படும். 1. ஆயுள், ஆரோக்கியம், புஷ்டி முதலியவற்றை அம்ருதம், மருந்து, இவற்றாலும், 2. நற்பண்புகள், மனச்சாந்தி, நிம்மதி, இவற்றை நித்யசத்ரு நாசத்தாலும், 3. தெய்வானுக்கிரகம், பகவத்ப்ரீதி, இவற்றை நித்ய ஜபத்தாலும் பெறலாம். இவை எல்லாவற்றையும் சேர்த்துத் தரவல்லது உன் திருநாமம். போன மூன்று பாதங்களில் சொன்னபடி.

6. நிகமங்களுக்கு நிகரான நாமங்கள்

साम्नां जन्मान्तरमखिलऋग्वर्गसर्गान्तरं वा
पर्यायो वा सकलयजुषां प्रक्रियाऽथर्वणानाम् ।
वेदान्तानां किमु विनिमयो विश्रुतं विश्वमातः
दिव्यं भव्यं दिशति जपतां नाम त्वदीयम् ॥ ६ ॥

ஸாம்நாம் ஜந்மாந்தரமகி$_2$ல ரிக்$_3$வர்க$_3$ஸர்கா$_3$ந்தரம் வா
பர்யாயோ வா ஸகலயஜுஷாம் ப்ரக்ரியாத$_2$ர்வணாநாம் ।
வேதா$_3$ந்தாநாம் கிமு விநிமயோ விஶ்ருதம் விஶ்வமாத:
தி$_3$வ்யம் ப$_4$வ்யம் தி$_3$ஶதி ஜபதாம் தே$_3$வி நாம த்வதீ$_3$யம் ॥ 6

साम्नां ஸாமவேத மந்த்ரங்களுக்கு
जन्मान्तरं மறுபிறவியோ ?
अखिल-ऋक्-वर्ग-अन्तरवा எல்லா ரிக்வேத மந்த்ரங்களின் மறுபடைப்போ ?
सकलयजुषां எல்லா யஜுர்வேத மந்த்ரங்களுக்கும்
पर्यायो वा ஒரே பொருள் கொண்ட இணைச்சொல்லோ ?
आथर्वणानां அதர்வவேதமந்த்ரங்களின்
प्रक्रिया ஒரு வகையோ ?
वेदन्तानां உபநிஷத்துகளுக்கு
विनिमयः किमु மாற்றுப்பண்டமோ ?
विश्वमातः லோகமாதாவே !
दवि தேவியே !
त्वदीयं உன்னுடையதான
विश्रुतं பிரசித்தமான
नाम பெயரானது
जपतां ஜபிக்கிறவர்களுக்கு
दिव्यं தெய்வீகமான
भव्यं க்ஷேமத்தை
दिशति கொடுக்கிறது

எல்லா வேதங்களுக்கும் உபநிஷத்துகளுக்கும் சமமானது உன் திருநாமம்.

ஜபிக்கிறவர்களுக்கு திவ்யமங்களங்களை உண்டாக்குகிறது. வேதங்களின் மறுவடிவமாகத் திருமகள் நாமங்களைச் சொல்வது எப்படிப் பொருந்தும் என்றால்,

வேதங்கள் போல் ஒலிவடிவம் கொண்டதாலும், வேதங்கள் போல் போக்யமானதாலும்,

வேதங்கள் போல் மஹாப்ரபாவம் கொண்டதாலும், வேதங்கள் போல் பரம்பொருளை ப்ரதிபாதிப்பதாலும்,

வேதங்கள் போல் பஞ்சபாதக—உபபாதகங்கள் உட்பட எல்லாப் பாவங்களையும் அழிப்பதாலும்,

வேதங்கள் போல் மங்களமானதாலும், பரிசுத்தமானதாலும்,

வேதங்கள் போல் இம்மை மறுமைப் பலன்களை அளிப்பதாலும்,

வேதங்கள் போல் பராசராதி முனிவர்களாலும் பூர்வாசார்யர்களாலும் புகழப்படுவதாலும்,

வேதங்களுக்குச் சமமானவை அவள் திருநாமங்கள்.

வேதங்களின் ஒரு பகுதியான லக்ஷ்மிநாமங்கள் எப்படி முழுவேதத்திற்குச் சமமாக முடியும் என்று ஆக்ஷேபித்தால், வேதத்தின் ஒரு பகுதியான அதர்வசிரஸ்ஸை ஓதினால் ஸர்வவேத பாராயண புண்ணியம் கிடைக்குமென்று வேதமே சொன்னாற்போல, வேதத்தின் ஒரு பாகமான லக்ஷ்மிநாமங்கள் ஸமஸ்தவேத துல்யமாவதில் தப்பில்லை.

ரிசோ யஜூம்ஷி ஸாமாநி ஸா ஹி ஸ்ரீ ரம்ருதா ஸதாம் என்று வேதத்திலும் ரிக்யஜுஸ்ஸாமரூபிணீ என்று புராணத்திலும் லக்ஷ்மீயையே வேதவடிவினளாகச் சொன்னதால் அவள் நாமங்களை வேதமாகச் சொல்வது விரோதிக்காதோ என்று கேட்டால், மந்த்ரமூர்த்திம் ஹரிம் ஸ்மரேத் என்றவிடத்தில் பெருமாள் மந்த்ரமாகவும் மந்த்ரார்த்தமாகவும் ஆனது போல் லக்ஷ்மியும் அவள் திருநாமமும் என்கிற இரண்டுமே வேதரூபமாகத் தட்டில்லை.

விஃருதம்— விசேஷித்துச் ச்ருதியில் சொல்லப்பட்டது. ஹரிணி, சந்த்ரா, ஆர்த்ரா, லக்ஷ்மி, புஷ்டி, ஸ்ரீ, ஹேமமாலினி, பத்மினி, விஃவப்ரியா, என்று பல திருநாமங்களை வேதம் சொல்லி ஹிரண்யம், பசு, குதிரை, ஆட்கள், கீர்த்தி, செல்வம், காமம், ஸத்யம், உணவு, பிரஜை, என்று இத்தனை பலன்களும் பெறலாம் என்று சொன்னது வேதம்.

விஃருதம்—பிரசித்தமானது. வேதமே லக்ஷ்மீ. வேதங்களே அவள் நாமங்கள் என்கிற கருத்து

உலகப்ரஸித்தமானது. அதனால் தான் அவளை வேதவல்லி என்றும் வேதவதி என்றும் அழைக்கிறோம். வேதவாக் என்றும் வேதரூபா என்றும் லக்ஷ்மீஸஹஸ்ரநாமத்திலும் காண்கிறோம்.

விஸ்ருதம் பவ்யம் என்றும் அந்வயிக்கலாம். அவள் தரும் க்ஷேமம் உலகத்தார் எல்லாரும் அறிந்தது தானே ?

திவ்யம் பவ்யம் என்பதற்கு இரண்டு விதமாகப் பொருள் கூறலாம். தேவலோகக்ஷேமம் என்ற மறுமைப்பயன் என்றும் அற்புதமான எதிர்காலம் என்ற இம்மைப்பயன் என்றும் பொருளாகும்.

இவ்வளவு பலனளிக்கும் சப்தமாக இருப்பதால், ஸர்வவேதபாராயணபுண்யத்தை அளிப்பதால், இது ரிக் வேதத்தின் மறுபிறப்போ ? இத்யாதி ஸந்தேஹங்கள் தோன்றுவதாகக் கவியின் கருத்து. அற்புதமான பலன்களைத் தரும் திருநாமங்கள் என்பது பரமதாத்பர்யம்.

திஶதி என்பதற்கு கொடுக்கிறது என்றும் காட்டுகிறது என்றுமான இரண்டு அர்த்தங்களும் இங்கு பொருந்தும்.

7. வியாதிகளை விரட்டும் நாமங்கள்

नामरक्षणपरस्तवोचितं नामरक्षणमपेक्षते रमे ।
यस्तनोति तव नामयोजनं सोऽयमद्भुतमनामयो जनः ॥ ७ ॥

நாமரக்ஷணபரஸ்தவோசிதம் நாமரக்ஷணமபேக்ஷதே ரமே ।
யஸ்தநோதி தவ நாமயோஜநம் ஸோऽயமத்புதமநாமயோ ஜந: ॥ 7 ॥

रमे லக்ஷ்மியே !
तव உன்னுடைய
नामरक्षणपरः திருநாமரக்ஷணத்தில் ஈடுபட்டவன்
नामरक्षणं अपेक्षते 1.நாமரக்ஷணத்தை வேண்டுகிறான் 2. தேவர்களின் கொண்டாட்டத்தை வேண்டுவதில்லை.
उचितं இது யுக்தம்.
यः எவனொருவன்
तव உன்னுடைய
नामयोजनं பெயர் தரிப்பதை
तनोति பண்ணுகிறானோ
सोऽयं அந்த இவன்
अनामयो जनः 1.பெயர் தரிக்காதவன். 2. வியாதி இல்லாத மனிதன்.
अद्भुतं இது ஆச்சரியம்.

உன் திருநாமரக்ஷணம் பண்ணுகிறவர் சுவர்க்க போகத்தைக் கூட விரும்பமாட்டார். உன் பெயர் சூட்டினவர் பிணியின்றி ஆரோக்கியமாக இருப்பார்.

சொற்களில் வேடிக்கைகள் இங்கு அதிகம்.

முதலாவது. நாமரக்ஷணம் என்பதற்கு மூன்று அர்த்தங்கள். நாம — ரக்ஷணம் என்று பிரிந்தால் பெயரைக்காத்தல் என்றும் பெயரால் காப்பு என்றும் பொருள்கள். ந — அமர — க்ஷணம் எனப்பிரித்தால் தேவர்களின் உற்சவமில்லை எனப்பொருள். உன் நாமரக்ஷணம் (திருநாமஜபம்) பண்ணுகிறவன் நாமரக்ஷணத்தை (பெயர் மூலமாக வரும் ரக்ஷையை) விரும்புகிறான். ந — அமரக்ஷணம், சுவர்க்கசுகத்தை நாடுவதில்லை.

இரண்டாவது சிலேடைச்சுவை அநாமயோஜந: என்ற சொல்லில் உள்ளது.

அ — நாம — யோஜந எனப்பிரித்தால் பெயர் சூடாதவன் என்று அர்த்தம்.

அநாமயோ — ஜந: எனப்பிரித்தால் நோயில்லாத மனிதன் என்று அர்த்தம்.

உன் நாமயோஜநம் (பெயர் தரித்தல்) பண்ணினால் அதற்கெதிராக அநாமயோஜந: என்றாகலாமோ ? அப்படி (பிணிகளற்றவராக) ஆவது ஆச்சரியம்.

ஒன்று உசிதம், இன்னொன்று அத்புதம். நாமரக்ஷணம் பண்ணுபவர் நாமரக்ஷணம் வேண்டுவது உசிதம். செய்யும் செயலுக்கேற்ற அபேக்ஷை, கோரின பலனுக்கேற்ற செயல், பொருத்தமானதே. ஆனால் நாமயோஜநம் பண்ணி அநாமயோஜந: என்று ஆவது உசிதமில்லை. செய்யும் செயலுக்கு எதிர்மறையான பலன் கிடைப்பது விசித்திரமாக இருக்கிறது.

இதை ஆலங்காரிகர் விரோதாபாஸாலங்காரம் என்பர். ஏதோ முரண்பாடு இருப்பது போல் மேலெழுந்த வாரியாகத் தோன்றினாலும் வேற்று அர்த்தத்தைப் புரிந்துக் கொண்ட பின் முரணில்லை எனத் தெளியலாம்.

இனி அர்த்த புஷ்டியை ரசிப்போம். லக்ஷ்மி—நாம—ஸங்கீர்த்தனம் என்றொரு தர்மம். தர்மோ ரக்ஷதி ரக்ஷித: என்றொரு முதுமொழி. அதனால் உன் நாமத்தை ரக்ஷிப்பவனை அந்த நாமம் ரக்ஷிக்கும். நாம் நாமத்தை ரக்ஷிப்பதென்றாலென்ன ? அதை மறந்துவிடாமல் நம் மனதைவிட்டு நீங்காதபடி காப்பாற்றிக் கொள்வது, அதைத் தகுந்தவர்களுக்கு உபதேசித்துப் பிற்காலத்திலும் மறையாதபடி ரக்ஷிப்பது, அதை அயோக்கியர்களுக்கும் பகவத்த்வேஷிகளுக்கும் சொல்லாமல் அவர்களிடமிருந்து ரக்ஷிப்பது, சிரத்தையுடனும் நியமங்களுடனும் ஜபித்து அதை வீர்யவத்தரமாக்கி ரக்ஷிப்பது, எச்சி, காக்கு, அம்மு, என்றெல்லாம் சிதைக்காமல் லக்ஷ்மி, கநகா, அலர்மேலாள் என்று சரியாகச் சொல்லி ரக்ஷிப்பது, ஆகிய இவையெல்லாம் நாங்கள் பண்ணும் உன் நாமரக்ஷணத்தில் சேரும். இதற்குப்பலனாக நாங்கள் பெறும் நாமரக்ஷணமும் பலவிதம். பேய்பிசாசுகளிலிருந்து காப்பு, வியாதி வெக்கைகளிலிருந்து விடுதலை, ஆறு உட்பகை வர்களிடமிருந்து தப்பித்தல், மங்களங்கள் பெற்று நல்ல கதியடைதல், என்றெல்லாம் இந்த ஸ்தபகத்தில் சொன்ன ரக்ஷணங்கள்.

சுவர்க்க போகங்களையும் விரும்பாதது ஏன் ? இரண்டு காரணங்கள். இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமாநகருளானே என்று ஆழ்வார் பெருமாள் திருநாமங்களுக்குச் சொன்னது தாயார் திருநாமங்களுக்கும் பொருந்துமாகையால் சுவர்க்கசுகமும் வேண்டாததாகும். இது ஒரு காரணம். அநித்யமான அற்பமான சுவர்க்கப் பேறு வேண்டாம். ஸ்ரீ வைகுண்டமே வேண்டும். என்பது மற்றொரு காரணம். இதை அடுத்த சுலோகத்தில் காணலாம்.

பிராட்டியின் திருநாமத்தைத் தன் பெயராகத் தரிப்பது நம் தாஸ்யத்தை வெளிப்படுத்தும் அடையாளங்களில் ஒன்று. நம்மகத்துச் சிறுமிகளுக்குப் பிராட்டியின் பெயர்களை இடுவோம். அதுவே ஒரு ரக்ஷை. திருமண்காப்பு போலவும் மந்திரித்த தாயத்து போலவும் ப்ரதிஸரபந்தம் போலவும் ஆபத்துகளை விலக்க வல்லது கடவுளின் பெயர் பூணுவது. இப்படி நாமயோஜநத்தைச் சரிவரப் பண்ணினால் புஷ்டியும் துஷ்டியுமான தேவியின் அருளால் ஆமயம் அவர்களை அணுகாது. அநாமயர் ஆவர், உன் பெயரைச் சூடியவரும் சூட்டியவருமான மக்கள் நோயற்ற வாழ்வு பெறுவர்.

8. மோக்ஷ ஆசையை மூட்டும் நாமங்கள்

त्रय्यन्तैकप्रणयिमतयस्तापसाः पापसार्थ
प्रत्यादेशप्रमुदितमहाचेतसस्स्फीतसत्त्वाः ।
नाम श्रीमत्तव किल वलत्कीर्तयः कीर्तयन्तः
मातर्मुक्तौ विहितकुतुका मोदयन्ते प्रियं ते ॥ ८ ॥

த்ரய்யந்தைகப்ரணயிமதயஸ்தாபஸா: பாபஸார்த$_2$
ப்ரத்யாதே$_3$ஶப்ரமுதி$_3$தமஹாசேதஸஸ்ஸ்பீ$_2$தஸத்த்வா: ।
நாம ஸ்ரீமத்தவ கில வலத்கீர்தய: கீர்தயந்த:
மாதர்முக்தௌ விஹிதகுதுகா மோத$_3$யந்தே ப்ரியம் தே ॥ 8॥

मातः அன்னையே !
त्रय्यन्तैकप्रणयिमतयः வேதாந்தத்தில் மட்டும் ஆசை கொண்ட அறிவினரும்
तापसाः தபஸ்விகளும்
पाप—सार्थ—प्रत्यादेश—प्रमुदित—महा—चेतसः பாவமூட்டைகளை நிராகரிப்பதால் மகிழ்ந்த பெரிய மனது கொண்டவர்களும்
स्फीतसत्त्वाः ஸத்வகுணம் அதிகம் கொண்டவர்களும்
तव உன்
श्रीमत् சீர்மிக்க
नाम பெயரை
कीर्तयन्तः किल ஸங்கீர்த்தனம் பண்ணிக்கொண்டல்லவா
वलत्कीर्तयः புகழ் சூழ்ந்தவராய்
मुक्तौ மோக்ஷத்தில்
विहितकुतुकाः ஆவல்கொண்டவராய்
ते உன்
प्रियं அன்பான பெருமானை
मोदयन्ते மகிழ்விக்கிறார்கள்.

வேதாந்திகள், முனிவர்கள், புண்யபுருஷர்கள், விசாலமனம் கொண்டவர்கள், ஸாத்விகர்கள், புகழாளர்கள், முமுக்ஷுக்களான பரமைகாந்திகள், எல்லாருமே உன் நாமஸங்கீர்த்தனம் பண்ணி உன் நாதனை மகிழ்விக்கிறார்கள்.

ஏதோ பணத்தாசை பிடித்தவர்கள், விரக்தி இல்லாதவர்கள், வியாபாரிகள், இம்மையில் இன்பம் வேண்டுவோர், இவர்கள் மட்டுமே திருமகள் திருநாமங்களைத் துணை கொள்வதாக நினைக்கக்கூடாது. விரக்தர்களும் மோக்ஷார்த்திகளும் திவ்யதம்பதி ப்ரீதிக்காக லக்ஷ்மிநாமங்களைக் கீர்த்திக்கிறார்கள்.

வேறு விதமாக அந்வயித்து இப்படியும் பொருள் சொல்லலாம். உன்னுடைய சிறப்பு மிக்க திருநாமத்தைக் கீர்த்தனம் பண்ணுபவர்கள் அதன் பலனாகக் காலக்ரமேண அறிவு முதிர்ந்து வேதாந்தத்தில் மட்டும் ஆசை கொள்கிறார்கள். தவம் செய்கிறார்கள். பாவமூட்டைகளைக் கழிக்கிறார்கள். மகிழ்ந்த பரந்த மனம் கொள்கிறார்கள். ஏராளமாக ஸத்வகுணம் பெறுகிறார்கள். புகழ் அவர்களைத் தானாகவே சென்றடைகிறது. அவர்களுக்கு மோக்ஷாபிலாஷை ஏற்படுகிறது. உன் திருநாமங்களைப் பாடிப் பெருமாளுக்கு உகப்பு பண்ணுகிறார்கள். அவர்களுடைய ஜ்ஞானம், தபஸ், பாபநாசம், உதாரமனம், ஸத்வ அபிவிருத்தி, கீர்த்தி, மோக்ஷேச்சை, பகவத்ப்ரீதி, எல்லாவற்றுக்கும் காரணமானது உன் நாமங்களைப் பாடியது.

கடைசிப் பாதத்திற்கு வேறொரு அர்த்தமும் சொல்லலாம். முக்தௌ என்றால் மோக்ஷதசையில் என்று அர்த்தம். மோக்ஷத்தில் கூட அவர்கள் உன் நாமங்களைப் பாடியல்லவா திருமாலை உவகை கொள்ளச் செய்கிறார்கள்? அவ்வளவு சிறப்பு மிக்கது உன் நாமம்.

ப்ராஸச்சுவை கொண்ட சுலோகமிது. ஒவ்வொரு பாதத்திலும் கடைசி ஏழு எழுத்துகளில் ஓர் ஈரெழுத்துத் தொடர் திரும்பி வந்துள்ளது. தாபஸா: பாபஸா என்றும் சேதஸஸ்பீதஸத் என்றும் கீர்தய: கீர்தயந் என்றும் தயந்தே ப்ரியந்தே என்றும்.

9. ஏழுமலையானுக்கு எழில் சேர்க்கும் நாமங்கள்

भास्वद्वर्णं वृषगिरिपतेर्भावुकं तन्वता ते
धाम्ना धाम स्फुरति जलधेः पुत्रि नाम्ना च नाम ।
रम्यं हर्म्यस्थलमपि महीरक्षिणश्शैलतुङ्गम्
दीपारोपं रजनिषु विना देवि देदीप्यते किम् ॥ ९ ॥

பா₄ஸ்வத்வர்ணம் வ்ருஷகிரிபதேர்பா₄வுகம் தந்வதா தே
தா₄ம்நா தா₄ம ஸ்பு₂ரதி ஜலதே₄: புத்ரி நாம்நா ச நாம ।
ரம்யம் ஹர்ம்யஸ்த₂லமபி மஹீரக்ஷிணஶ்ஶைலதுங்கம்
தீ₃பாரோபம் ரஜநிஷு விநா தே₃வி தே₃தீ₃ப்யதே கிம் ॥ 9 ॥

जलधेः சமுத்திரத்தின்
पुत्रि பெண்ணான லக்ஷ்மியே !
वृषगिरिपतेः திருவேங்கடமுடையானின்
भास्वद्वर्णं 1 ஒளிரும் நிறமுடைய
2. ஆதித்யவர்ணமான
धाम 1. திருமேனியானது
2. தேஜஸ்ஸானது
भावुकं மங்களத்தை
तन्वता பண்ணுகிற
ते உனது
धाम्ना 1. திருமேனியாலே
2. தேஜஸ்ஸினாலே
स्फुरति பிரகாசிக்கிறது.
भास्वद्वर्णं அழகிய எழுத்துக்
கொண்ட
नाम च (ஸ்ரீநிவாஸன் என்ற)
பெயரும்
नाम्ना (உன்) பெயராலே
(பிரகாசிக்கிறது)
देवि தேவியே !
रम्यं அழகானதும்
शैलतुङ्गं மலைப் போல்
உயரமானதுமான
महीरक्षिणः அரசனுடைய
हर्म्यस्थलमपि மாளிகையும் கூட
रजनिषु இரவுகளில்
दीपारोपं विना
விளக்கேற்றுவதில்லாவிட்டால்
देदीप्यते किं ஒளிர்கிறதா என்ன ?

திருவேங்கடமுடையானின் திருமேனி உன் திருமேனியால் மேலும் பிரகாசிக்கிறது. அவருடைய ஸ்ரீநிவாஸன் என்ற பெயரில் ஸ்ரீ என்ற உன்னுடைய பெயர் இருப்பதால் மேலும் விளங்குகிறது. ராஜாவின் அழகான உயரமான அரண்மனை கூட விளக்கேற்றி வைத்தால் தானே ராத்திரியில் ஒளிரும் ? விளக்குப் போன்றவள் நீ

தா₃ம என்ற பதத்திற்குப் பல அர்த்தங்கள் உண்டு. அதில் ஒன்று சரீரம். திருமலையானின் விக்கிரகத்திற்கு எழிலூட்டுவது திருமார்புநாச்சியார். தா₃ம என்பதற்கு இரண்டாவது அர்த்தம் தேஜஸ் என்பது. உன்னுடைய ஒளியால் அவன் ஒளி கூடுகிறது. தா₃ம என்பதற்கு மூன்றாவது அர்த்தம் இருப்பிடம் என்பது. இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் என்று சொல்லப்பட்ட க்ஷேத்ரங்கள் உன் தேஜஸ்ஸால் விளங்குகின்றன. மொத்தத்தில் அவருடைய தா₃மம் உன்னுடைய தா₃மத்தால் பிரகாசமடைகிறது. பா₄ஸ்வத்வர்ணம் என்ற விசேஷணப் பதம் இந்த மூன்று அர்த்தங்களையும் ஸூசிக்கிறது. ஆதித்யவர்ணம் பரமபதநாதனுக்கு. ஒளிரும் நிறம் வேங்கடத்தானுக்கும்.

வர்ணம் என்ற பதத்திற்கும் இங்கே இரண்டு அர்த்தங்கள். வண்ணம், நிறம் என்று ஒன்று. எழுத்து என்று இன்னொன்று. ஸ்ரீ, நி, முதலியவை பா₄ஸ்வத்வர்ணங்கள். அவற்றை உடைய ஸ்ரீநிவாஸன் என்ற திருநாமம் ஸ்ரீ என்ற உன்னுடைய திருநாமத்தால் பிரகாசமடைகிறது.

அவர் தாமம் உன் தாமத்தாலே ஒளிகொண்டது. அவர் நாமம் உன் நாமத்தாலே.

இதற்கு ஒரு திருஷ்டாந்தம். அழகான உயரமான அரசமாளிகை போன்றது பெருமாள் திருமேனி. அதில் ஏற்றிவைத்த விளக்கு போன்றது உன் திருமேனி.

மாளிகையும் விளக்கும் பிரியலாம். அதனால் திருஷ்டாந்தத்தில் குறையுண்டு. பெருமாளின் ஸ்ரீ எப்போதும் அவருடன் இருப்பதால் அவரை விளக்கற்ற ஹர்ம்யம் போல் குறை சொன்னதாகாது. லோகைகதீபாங்குராம் என்றும் ஹர்ம்யதலமங்களதீபரேகாம் என்றும் பூர்வர்கள் சொன்னதை அநுசரிக்கிறார் இக்கவி.

10. சுஷ்கச் சொல்லிலும் சுவை கூட்டும் நாமங்கள்

अप्यस्माकं वचनमचमत्कारि कंसारिकान्ते
प्राज्ञास्वाद्यं भवति भवतीनामधेयानुषङ्गात् ।
कर्पूरादिस्थिरपरिमळद्रव्यसाचिव्यभूम्ना
निर्गन्धे स्यादपि सुरभिता निम्बकाष्ठस्य चूर्णे ॥ १० ॥

அப்யஸ்மாகம் வசநமசமத்காரி கம்ஸாரிகாந்தே
ப்ராஜ்ஞாஸ்வாத்யம் ப₄வதீநாமதே₄யாநுஷங்காத் ।
கர்பூராதிஸ்திரபரிமளத்ரவ்யஸாசிவ்யபூ₄ம்நா
நிர்கந்தே₄ ஸ்யாதபி ஸுரபி₄தா நிம்பகாஷ்ட₂ஸ்ய சூர்ணே ॥

कंसारिकान्ते கம்ஸனைக் கொன்றவனின் காந்தையான லக்ஷ்மீயே !
अस्माकं எங்களுடைய
अचमत्कारि ரஸமில்லாத
वचनं अपि வார்த்தை கூட
भवती-नामधेय-अनुषङ्गात् பூஜ்யையான உன் பெயர் ஸம்பந்தத்தால்
प्राज्ञास्वाद्यं அறிஞர்களால் அநுபவிக்கத் தக்கதாக
भवति ஆகிறது
कर्पूर—आदि—स्थिर—परिमळ—द्रव्य—साचिव्य—भूम्ना கற்பூரம் முதலிய நிலைத்த வாசனை கொண்ட பொருள்களின் துணை அதிகமானதால்
निर्गन्धे வாசனையில்லாத
निम्बकाष्ठस्य வேப்பங்குச்சியின்
चूर्णे अपि பொடியில் கூட
सुरभिता நறுமணம்
स्यात् இருக்கும்.

எங்களுக்குச் சுவைபடப் பேசத் தெரியாது. எங்கள் ரஸமற்ற வசனங்கள் கூட உன் திருநாமங்களைச் சேர்த்துப் பேசும் போது அறிவாளிகளும் ரசிக்கத் தக்கதாகின்றன. கற்பூரம் போன்றதொரு வாசனைப் பொருளைக் கலந்தால் வேப்பங்குச்சிப்பொடி கூட மணப்பது போலிது. வேம்புப் பொடிப் போல் எங்கள் வார்த்தைகள். நறுமணம் போல் கவிசமத்காரங்கள். கற்பூராதி போல் உன் திருநாமம். இடையிடையே உன் திருநாமம் வருவதால் தான் இந்த லக்ஷ்மீஸஹஸ்ரக் காவ்யம் கூடப் பண்டித போக்யமாக உள்ளது. பூவுடன் சேர்ந்து நாரும் மணப்பது போல், கற்பூரத்துடன் சேர்ந்து வேம்பும் மணப்பது போல், உன் திருநாமத்துடன் சேர்ந்து எங்கள் கவிதைகளும் மணக்கின்றன. போக்யமாகின்றன.

திருமகளின் பெயரைச் சேர்ப்பதால் கவிதைச் சுவை கூடும் என்கிறார் கவி. இந்தச் சுலோகத்தையே பாருங்களேன்! இது எப்படி ப்ராஜ்ஞாஸ்வாத்யமாக ஆயிற்று ? சொல்லழகும் அர்த்தபுஷ்டியும் பொருத்தமான திருஷ்டாந்தாலங்காரமும் இருப்பதால். இதற்கெல்லாம் காரணம் சம்ஸாரிகாந்தையே என்று விளித்து அவள் திருநாமத்தைக் கோர்த்து அவளருள் பெற்றமை என்று கவியின் கருத்து. இந்தக் காரணத்தால் தான் லக்ஷ்மீஸஹஸ்ரத்தின் ஒவ்வொரு சுலோகத்திலும் அவள் திருநாமத்தைத் தவறாமல் கீர்த்திக்கிறார்.

இங்கு பவதீநாமதேயம் என்ற ஸமாஸம் உள்ளது. பவதீ என்ற ஸர்வநாம ஸ்த்ரீலிங்கசப்தம் நீ என்ற அர்த்தம் கொண்டது ஸமாஸத்தில் பவந்நாமதேயம் என்றாக வேண்டும். கவி இலக்கணப்பிழை செய்து விட்டார் என்று நினைத்து லக்ஷ்மீஸஹஸ்ர-நாகராக்ஷரப்பதிப்புகளில் பவதி பவதீநாமதேய என்பதை ப்ரபவதி பவந்நாமதேய என்று திருத்திவிட்டார்கள். ப்ராசீனமான க்ரந்தாக்ஷரபுஸ்தகத்தில் பவதி பவதீநாமதேய என்றே உள்ளது. ஸர்வநாமசப்தமில்லாத வேறொரு அர்த்தம் கொண்ட பவதீ என்ற சொல் உண்டு. பூஜ்யை என்று அர்த்தம். இது ஸம்ப்ரதாயமுறைப் பண்டிதர்களுக்குத் தெரியும். இந்த ஸூக்ஷ்மம் தெரியாத ஒரு பண்டிதர் ஸ்ரீஸ்துதியிலுள்ள

பஞ்சபாதலாக்ஷா என்ற ப்ரயோகம் பிழையானதென்று மருண்டார், தேசிகன் தப்பு பண்ணிவிட்டார் என்று காஞ்சியில் அச்சிட்டுப் ப்ரசாரம் பண்ணிக் கொக்கரித்தார். அப்போது, மற்ற சில பண்டிதர்கள் அவருக்கு உண்மையை உணர்த்திய நிகழ்ச்சி நாற்பதைம்பது வருஷங்களுக்கு முன்பு நடந்தது. பட்டர், தேசிகன், முதலிய பூர்வாசார்யர்களின் ப்ரயோகரஸமறிந்த வேங்கடாத்வரியின் கவிதையைத் திருத்த வேண்டிய அவசியமில்லை.

இறையவளே உன் பெயரை இடையிடையே என் பேச்சில் இணைத்ததனால் இது கூட இணையில்லாக் கவிதையாம்.

11. களைப்பைக் களையும் நாமங்கள்

अम्बा लक्ष्मी रमृतसहभू रब्धिराजन्यकन्या
पद्मा विश्वम्भरसहचरी पद्मसद्मा रमेति ।
यो नामैवं पिबति भवतीनामनामामृतौघं
तस्यैवाहुर्जननि सुलभां संसृतिश्रान्तिशान्तिम् ॥ ११ ॥

அம்பா₃லக்ஷ்மீ ரம்ருதஸஹபூ₄ரப்₄தி₄ராஜந்யகந்யா
பத்₃மா விஶ்வம்ப₄ரஸஹசரீ பத்₃மஸத்₃மா ரமேதி।
யோ நாமைவம் பிபதி ப₄வதீநாமநாமாம்ருதௌக₄ம்
தஸ்யைவாஹுர்ஜநநி ஸுலபா₄ம் ஸம்ஸ்ருதிஶ்ராந்திஶாந்திம் ॥11

जननि தாயே

अम्बा தாயார்

लक्ष्मीः லக்ஷ்மி

अमृतसहभूः அம்ருதத்திற்கு உடன்பிறந்தாள்

अब्धिराजन्यकन्या சமுத்திரராஜனின் கன்னிகை

पद्मा தாமரையாள்

विश्वम्भरसहचरी எல்லா உலகையும் தாங்குகிறவனின் துணைவி

पद्मसद्मा தாமரையில் இருப்பவள்

रमा ரமா

इति என்று

एवं இப்படி

यो नाम எவனொருவனேலும்

भवती-नाम-नाम-अमृत-ओघं பூஜ்யையான உமது திருநாமம் என்கிற அமுத வெள்ளத்தை

पिबति குடிக்கிறானோ

तस्य-एव அவனுக்குத்தான்

संसृति-श्रान्ति-शान्तिं ஸம்ஸார-ஆயாஸங்கள் -தீர்வதை

सुलभां எளிதானதாக

आहुः சொல்கிறார்கள்

பிரிவுக்கும் பாசத்திற்கும் ஏக்கத்தால் களைப்பா ? அம்பா என்று திருநாமத்தைச் சொல்லுங்கள். பசிதாகம், அழுக்கு, வறுமை, இவற்றால் களைப்பா ? லக்ஷ்மீ என்று திருநாமத்தைச் சொல்லுங்கள். உடற்சோர்வு, புஷ்டிகுறைவு இவற்றால் களைப்பா ? அம்ருதகலஸஹஸ்தா என்று சொல்லுங்கள். வெயில்புழுக்கம், அதிக உணவு, இவற்றால் களைப்பா ? சமுத்ரராஜகந்யா என்று கீர்த்தியுங்கள். விரகதாபம், ஜ்வரம், இவற்றால் களைப்பா ? பத்மா பத்மாலயா என்று கீர்த்தனை பண்ணுங்கள் பாரம் சுமந்ததால் களைப்பா ? விச்வம்பரஸஹசரீ என்ற திருநாமத்தைக் கீர்த்தியுங்கள்.

மனக்கவலை, நிம்மதியின்மை, இவற்றால் களைப்பா ? ரமா என்ற திருநாமத்தைச் சொல்லுங்கள். உங்கள் களைப்பெல்லாம் காணாமல் போகும். உங்கள் ஆயாஸமெல்லாம் அகன்றோடும். உங்கள் சோர்வெல்லாம் சுருண்டோடும். புத்துணர்ச்சி பிறக்கும்.

தன் குழந்தைக்கு வலித்தாலோ பசித்தாலோ தாயானவள் தாலாட்டிப் பாலூட்டி சீராட்டி, செல்லம் கொஞ்சி இளைப்பாற்றி, விடாய் தீர்த்து மகிழ்வித்து மகிழ்கிறாள். ஒரு பிறவிக்கு மட்டும் (டெம்பரரியான) அம்மாவே இவ்வளவு அக்கறை காட்டினால், நமது எல்லாப் பிறவிகளிலும் நமக்கு (பர்மனெண்ட்) அம்மாவான லக்ஷ்மீ நம் களைப்பைக் களைய என்ன தான் பண்ணமாட்டாள் ? அம்பா என்று சொன்னால் போதும்.

ஸ்ரீஸூக்தம் சொல்கிறது: பசி, தாகம், அழுக்கு, இவை அலக்ஷ்மீ (இவற்றுக்கு எதிர்த்தட்டான லக்ஷ்மீயின் அருளால்) நான் இவற்றை அழிக்கிறேன் என்று. லக்ஷ்மீ என்ற பெயரைச் சொன்னாலே களைப்பெல்லாம் பறந்தோடிவிடும்.

அவள் நமக்கெல்லாம் அம்மா. நமக்கிங்கு ஒழிக்க ஒழியாத உறவு இது. அவளுடைய மற்ற உறவுக்காரர் யார் யார் தெரியுமா ? உண்டோருக்குப் பசிப்பிணி நீக்கி, ஆயுள் ஆரோக்கியம் தரும் அம்ருதத்திற்கு உடன்பிறந்தாள் இவள். கடற்கரைக் காற்றாலேயே சோர்வகற்றி இதமளிக்கும் கடலரசனின் பெண் இவள். அதி ஆஹாரம், அதிகக்குடி,

உக்கிரமான ப்ரதிக்ரஹம், உக்கிரமானவர்களிடமிருந்து வாங்குதல் இவற்றால் உண்டாகும் குறைகளைக் கையால் துடைத்துத் தீர்க்க வல்லவளென்று வேதம் புகழும் (அத்யாஶநாத் அதீபாநாத் யச்ச உக்ராத் ப்ரதிக்ரஹாத். தந்நோ வருணோ ராஜா பாணிநா ஹ்யவமர்ஶது...) வருணராஜனின் குமாரியாக அவதரித்தவள் இவள்.

இவளைத் துணைவியாகப் பெற்றவன் (திருமால்) பிரபஞ்சம் முழுதையும் அனாயாசமாகத் தாங்குகிறான்.

இவள் திருநாமங்கள் களைப்பாற்றும் என்பது உறுதி. ரமா என்றாலே மகிழ்விப்பவள் என்றர்த்தம்.

சீர்வேதம் போற்றும் மரல்
மார்வேறும் மங்கையின்
பேர் வேண்டிப் பருகிட்டால்
சோர்வேது வாழ்க்கையில் சொல்.

மூன்றாவது பாதத்தில் மூன்று தடவை மூன்று வெவ்வேறு அர்த்தங்களில் நாம என்ற பதம் இருப்பது சுவாரசியம்.

பிபதி பவதீநாம என்று கிரந்தாக்ஷரப் பதிப்பிலும் பவந்நாம என்று நாகராக்ஷரப் பதிப்பிலும் உள்ளது. இது பற்றிய இலக்கணக்குறிப்பையும் சர்ச்சையையும் பேரன சுலோகத்தின் கீழ் காண்க.

நாமமென்கிற அம்ருதத்தைக் குடிப்பதாகச் சொல்கிறார். வேட்கையுடனும் ரஸாநுபவத்துடனும் கீர்த்தனம் பண்ண வேண்டும் எனக்கருத்து.

ஸம்ஸாரக்களைப்பைக் களைய பல வழிகளுண்டு லக்ஷ்மிக்கு. ஸம்ஸாரத்தையே நீக்கி மோக்ஷம் கொடுத்து விடுவதும் அதிலொரு வழி. ஸ்ரீஸ்துதியில் லக்ஷ்மீ, பத்மா, ஜலதிநய, விஷ்ணுபத்நி, இந்திரா, என்று உன் திருநாமங்களை ஆவ்ருத்தி பண்ணுகிறவர்கள் ஜந்மசக்ரத்தில் உருளுவதில்லை என்று ஸ்வாமி தேசிகன் பணித்ததை அடியொற்றிய கருத்து இது.

தஸ்யைவ — அவனுக்கு மட்டும்தான். லக்ஷ்மீ நாம கீர்த்தனம் பண்ணுபவனுக்கு மட்டும் தான் இப்படி எளிதாகக் களைப்பு நீங்கும். ஊன் வாட வாடத் தவம் செய்து பெறக்கூடிய பலன் இவனுக்குத்தானே எளிதாகக் கிடைக்கிறது ? மற்றவர்க்கு இப்படிச் சுலபமான சுவையான உபாயம் கிடையாது.

12. மறைமந்திர மாற்றான நாமங்கள்

न मुहुर्बहुमन्महे मनून् न च वाचो जरतीरधीरमहे ।
प्रयताः प्रयतामहे वयम् तव नाम्नां हरिपत्नि कीर्त्तने ॥ १२ ॥

ந முஹு³ர்ப³ஹு³மந்மஹே மநூந்
ந ச வாசோ ஜரதீரதீ⁴மஹே ।
ப்ரயதா: ப்ரயதாமஹே வயம்
தவ நாம்நாம் ஹரிபத்நி கீர்த்தநே ॥ 12 ॥

हरिपत्नि ஹரியின் பத்னியே !
वयं நாங்கள்
मनून् மந்திரங்களை
मुहुः அடிக்கடி
न बहुमन्महे பெரிதாகக்கருதுவதில்லை
जरतीः वाचः தொன்மையான வேதங்களையும்
न अधीमहे ஓதுவதுமில்லை
प्रयताः தூயவர்களாய்
तव உன்னுடைய
नाम्नां कीर्तने பெயர்களைக் கீர்த்திப்பதில்
प्रयतामहे முயற்சி செய்கிறோம்

வாகிந்திரியத்தைக்கொண்டு நாம் பண்ணக் கூடிய பகவத்கைங்கர்யங்கள் மூன்றுண்டு. ஜபம், பாராயணம், நாமஸங்கீர்த்தனம் என்று.

இந்த மூன்றில் முதல் இரண்டையும் விட்டுவிட்டு மூன்றாவதை மட்டும் பண்ண முயற்சிக்கிறோம் என்கிறார் கவி. ஏன் ? காரணத்தை நம் ஊகத்திற்கு விட்டு விடுகிறார்.

யோசித்துப் பார்த்தால் சில காரணங்களை அவர் குறிப்பால் உணர்த்தியிருப்பது புரிகிறது.

முதலாவது, கடினமான காரியங்களைப் பண்ணாமல் சுலபமானவற்றைப் பண்ணுவோம். மந்த்ரஜபம் எவ்வளவு கஷ்டம் ? உபதேசம் பெறவேண்டும்- நியமநிஷ்டையுடன் ஜபிக்கவேண்டும்- அங்கந்யாஸ கரந்யாஸங்கள் பண்ணவேண்டும்-மனத்தை ஒருமுகப்படுத்தி மந்த்ரதேவதையைத் தியானம் பண்ண வேண்டும்- அப்பப்பா ! - நம்மாலாகாது. வேதாத்யயனமோ அதைவிடக் கஷ்டம்- பல வ்ருஷங்கள் பயில வேண்டும் - ஸந்தை, திரு,

உரு, என்று ஓயாமல் அப்யஸிக்க வேண்டும்-நெட்டுருப்பண்ண வேண்டும் - மிகுந்த தாரணாசக்தி தேவை - கவலை பாயக்கூடாது - ஸ்வரம் பிறழக்கூடாது - அப்பப்பா! - நம்மால் முடியாது.

நம்மால் முடிந்தது நாமஸங்கீர்த்தனம் மட்டுமே.

இரண்டாவது. மந்த்ரங்கள் ஸித்தி பெற்ற பின்னரே பலனளிக்கும். வேதாத்யயனம் பல வருஷங்கள் பயிற்சி முடிந்த பிறகே கைகூடும். ஆனால் லக்ஷ்மீநாமஸங்கீர்த்தனம் ஆரம்பத்திலேயே, அதைப்பண்ண முயற்சிக்கும் போதே, பலனளிக்கிறதே. இதனால் கீர்த்திக்கிறோம் கீர்த்திக்க என்று சொல்லாமல் முயல்கிறோம் என்றார் கவி. ஸேவாபேக்ஷயே- லக்ஷ்மீயைச் சேவிக்க விருப்பமே- ச்ரேயஸ்ஸைத் தருமென்று ஸ்ரீஸ்துதியில் ஸ்வாமி தேசிகன் சொன்னபடி இது.

மூன்றாவது அதிகப்பலன் கிடைப்பதால். மோக்ஷபர்யந்தமான ஸகலஸுமங்களும் மற்றவற்றில் கிடைக்குமா?

நான்காவது. வயம்- நாங்கள், ஸ்த்ரீபாலர்கள்- மக்கள் மகளிர் உட்பட எல்லாரும் சேர்ந்து பண்ணக்கூடியது நாமகீர்த்தனம் மட்டுமேயன்றோ? உபநயனம் ஆகாதவர்களுக்கு அத்தியயனமேது?

முஹு: என்ற சொல்லால் முதலாவது காரணமும் ப்ரயதாமஹே என்ற சொல்லால் இரண்டாவது காரணமும் வயம் என்ற சொல்லால் கடைசிக்காரணமும் கவியாலேயே ஸூசிதம்.

அத்யந்தம் இயலாமையை ப்ரயதாமஹே என்பதால் சொன்னதாகவும் கொள்ளலாம்.

முஹு: என்பதற்குப் பதில் பஹுஶ: என்று பாடபேதம் உள்ளது. இதில் விரோதபாஸாலங்காரம். நிறைய மந்திரங்களைக் கூட நிறையவாக நினைப்பதில்லை என்று முரண். நிறைய மந்திரங்களைப் ப்குமதிப்பதில்லை என்ற உண்மைப்பொருளில் முரணில்லை.

ப்ரபதா:— இதையும் தூயோமாய் வந்து.தான் பாடுவோம். எச்சில் தீட்டுடன் கீர்த்தனம் பண்ண மாட்டோம். கூடிய வரையில் சுத்தமாக இருப்போம். வாக்குத் தூய்மை இலாமையினாலே மாதவா உன்னை வாய்க்கொள்ள மாட்டேன் என்ற ஆழ்வார் கருத்தை அறிவோம். (உதாரணமாக, ஸந்தியாவந்தனம் பண்ணாமல் அதற்குப்பதிலாகப் பஜனை பண்ணுவது சரியன்று. ஸந்த்யாஹீன: அஶுசி:. சந்தி பண்ணாததால் தூய்மை கெட்ட பிறகு பஜனையும் கீர்த்தனமும் பலனளிக்குமோ ? ப்ரபலமானதொரு உபாயத்தைப் பற்றிக் கொண்டதாலே சாஸ்த்ரவஶ்யதை ஒழியுமோ ?) தூயோமாய்ப் பாட முயற்சிப்போம். கவி மந்த்ரஜபத்தையும் வேதாத்தியயனத்தையும் குறை கூறியதாகக் கொள்ளலாகாது.நஹிநிந்தா ந்யாயம் என்கிற முறையில் கூறுகிறார். அவரே சிறந்த வேதவிற்பன்னர் தான்.

மந்திரங்கள் மொழிய மாட்டோம்.
மறைகளையு மோத மாட்டோம்.
மலர்மங்கை பெயர்கள் சொல்ல
மாசின்றி முயலுகின்றோம்.

13. மறுபிறவிக்கு மருந்தான நாமங்கள்

अनिरास्यमधोक्षजप्रिये भवरोगं बहुलंघनैरपि ।
हरितुं प्रभवन्ति लीलया तव नामौषधिसेविनो नराः ॥ १३ ॥

அநிராஸ்யமதோ,க்ஷஜப்ரியே ப,வரோக,ம் ப,ஹுலங்க,நைரபி ।
ஹரிதும் ப்ரப,வந்தி லீலயா தவ நாமௌஷதி,ஸேவிநோ நரா: ॥ 13 ॥

अधोक्षजप्रिये அதோக்ஷஜன் என்கிற விஷ்ணுவின் ப்ரியையே !
बहुलंघनैः अपि अनिरास्यं 1. நிறைய உபவாஸங்களால் கூடத் தீர்க்க முடியாத 2. நிறைய தாண்டுவதால் கூடத் தள்ள முடியாத 3. அதிகமானதும் கனமானவைற்றால் கூடக் குணப்படுத்த முடியாததுமான
भवरोगं ஸம்ஸாரமென்னும் வியாதியை
तव नाम-ओषधि-सेविनः உன் பெயராகிற மருந்தைப் பயன்படுத்துகிறவர்கள்
नराः மனிதர்கள்
लीलया திறமை பெறுகிறார்கள்.

ஸம்ஸாரம் என்கிற வியாதி கொடியது. பல சிகிச்சைகளாலும் தீராதது. உன் திருநாமமென்னும் மருந்தை உட்கொள்ளுபவரால் மட்டும் அதை எளிதில் தாண்டி வர முடியும்.

நாராயணனின் அன்பே ! நின்
பேராகின்ற மருந்தொன்றை
சீராய் உண்ட நரரெல்லாம்
தீரா நோய்க்கடல் தாண்டினரே..

லங்கனம் என்ற பதத்தை நாம் இன்றைக்கும் இரண்டு அர்த்தங்களில் கையாள்கிறோம்.

ஸமுத்ரலங்கனம் என்கையில் தாண்டுதல் என்று அர்த்தம்.

லங்கநம் பரமௌஷதம் என்னும் பழமொழியில் பட்டினி என்று அர்த்தம்.

பஹு-லம்-களம் என்ற பதங்களைச் சேர்க்கும்போதும் லங்கனம் என்று வருகிறது.

இதைக் கொண்டு இந்தக் கவி வேடிக்கை பண்ணுகிறார்.

பஹு-லங்கனத்தால் (பட்டினியால்) தீராத வியாதியை, பஹு-லங்கனத்தால் (தாண்டிக்குதிப்பதால்) தாண்டமுடியாத ஒன்றை, பஹுலம்-கனங்களால் (பெரிதான எடை உள்ளவற்றால்) சரிப்படுத்த முடியாததை, உன்னுடைய சின்ன நாமமாகிற மருந்தாலே தீர்க்க முடியும், தாண்ட முடியும்.

லீலயா-அனாயாஸமாக, விளையாட்டாக, எளிதாக.

என்ன வேறுபாடு ! மற்ற சிகிச்சைகள் நிறைவானாலும் கனமானாலும் பலனில்லை. நாமௌஷதமோ சின்னதானாலும் எளிதில் பலனளிக்கிறது.

ஏறிக்குதித்து எரப்பேறிப் பாய்ந்தாலும் தாண்ட முடியாததைத் தாண்டவைப்பது உன் நாமம்.

மலையைக் கெல்லியும் எலியைக்கூடப்பிடிக்கமுடியாத நிலையில், மஹாஜயம் தருவது உன் நாமம். இந்தப் பவரோகத்திற்கு இது தான் சரியான மருந்து.

உன் திருநாமத்தைச் சொல்பவர்கள் மறுபிறவியின்றி மோக்ஷம் பெறுகிறார்கள்.

14. இயலாதவர்க்கு இதம் செய்யும் நாமங்கள்

न हि नन्तुमनन्तमीश्महे न च निर्माणकथाऽपि कर्मणाम् ।
कमले कलिभी निवर्तनम् कलयामस्तव नामकीर्तनम् ॥ १४ ॥

ந ஹி நந்துமநந்தமீஶ்மஹே
ந ச நிர்மாணகதா$_2$பி கர்மணாம் ।
கமலே கலிபீ$_4$ நிவர்தநம்
கலயாமஸ்தவ நாமகீர்தநம் ॥ 14 ॥

अनन्तं அநந்தனென்னும் பெயர் கொண்டவரை.
नन्तुं வழிபடுவதற்கு
न ईश्महे இயலாதவர்களாய் இருக்கிறோம்
हि அல்லவா ?
च மேலும்
कर्मणां निर्माण—कथा अपि न யாகயஜ்ஞாதி கர்மங்களை அநுஷ்டிக்கும் பேச்சே கிடையாது.
कमले தாமரையாளே !
कलि—भी—निवर्तनं கலிபயத்தை நீக்குகிற
तव नामकीर्तनं உன் நாமங்களின் ஸங்கீர்த்தனத்தை
कलयामः பண்ணுகிறோம்.

நாங்கள் கையாலாகாதவர்கள். பெருமாளை ஒழுங்காக வழிபடுவதற்கு எங்களால் முடியாது. கர்மாக்களையும் அநுஷ்டிக்கத் துப்பில்லாதவர்கள். கர்மயோகம், பக்தியோகம், ஒன்றும் பண்ண இயலாது. கமலையே ! உன் பெயரை ஸங்கீர்த்தனம் பண்ணுகிறோம். இந்தக் கலிகாலத்தில் அது ஒன்றே எங்கள் பயத்தைத் தீர்க்க வல்லது.

கருமமும் பக்தியும் நாம்
கடினமென்றொதுக்கி விட்டோம்.
கமலையின் நாமம் சொல்லிக்
கலிபயம் நீங்கப் பெற்றோம்.

அசக்தர்களான எங்களை கர்மமும் பக்தியும் பண்ணச் சொல்லலாமா ? குருவி தலையில் பனங்காயை வைக்கலாமா ? எங்களால் இயன்றதை மட்டும் தானே நாங்கள் செய்ய முடியும் ? ஒரு புராண வசனம் சொல்கிறது.

மற்ற யுகங்களில் தபஸ், யாகங்கள் முதலியவற்றால் பெறக்கூடிய பலனைக் கலியுகத்தில் நாமஸங்கீர்த்தனத்தாலேயே பெற முடியும் என்று. ஆகையால் இந்தக் கலியுகத்தில் நாங்கள் உன் பெயர்களைப் பாடுகிறோம். எங்கள் பயம் நீங்குகிறது. நிம்மதியாயிருக்கிறோம்.

இப்படி இயலாதவர்களுக்கு இதம் செய்வது உன் நாமம்.
கையாலாகாதவர்களுக்குக் கை கொடுப்பது உன் நாமம்.
அசக்தர்களுக்கு அபயம் அளிப்பது உன் நாமம்.
தீனர்களுக்கு தைர்யம் தருவது உன் நாமம்.

இந்தக் கலி நிறைய யாக யஜ்ஞங்களைப் பண்ணி அஸ்தோகாத்வரியானவராச்சே, கர்மாநுஷ்டானப் பேச்சுக்கே இடமில்லை என்னலாமோ ? நம்மையெல்லாம் மனத்தில் கொண்டு இப்படிச் சொல்கிறார்.

15. விபத்தை விலக்கும் நாமங்கள்.

विविधानि तवाधुना तु नाम व्यसनान्यब्धिसुते धुनातु नाम ।
अपि यज्जपतः कलावहानि स्युरमून्युज्ज्वलधीकलावहानि ॥ १५ ॥

விவிதாநி தவாதுநா து நாம வ்யஸநாந்யப்திஸுதே துநாது நாம ।
அபி யஜ்ஜபத: கலாவஹாநி ஸ்யுரமூந்யுஜ்ஜ்வலதீகலாவஹாநி ॥ 15

अब्धिसुते கடலின் பெண்ணே !
विविधानि பலவிதமான
व्यसनानि விபத்துகளை, தீய பழக்கங்களை
तव உன்னுடைய
नाम பெயரானது
अधुना तु இப்பொழுதே
धुनातु नाम உதறட்டும்
अपि இதற்கு மேலும்
यत् எதை, எந்த நாமத்தை
जपतः ஜபிக்கிறவனுக்கு
कलौ கலிகாலத்தில்
अमूनि இந்த
अहानि நாட்கள்
उज्ज्वल—धी—कला—
आवहानि ஒளிரும் நல்லறிவின் வளர்ச்சியை உண்டுபண்ணுபவையாக
स्युः ஆகுமே, அந்த நாமம்.

சமுத்திரத்தின் பெண்ணே ! உன் பெயரைச் சொல்லுவதால் பலவிதமான கஷ்டங்கள் பறந்து போகின்றன. கடலரசன் மகளான கமலையின் நாமத்தால் கஷ்டங்கள் எல்லாமே காணாமல் போய்விடும். வ்யஸநம் என்றால் விபத்து என்று முதல் அர்த்தம். பலவகை விபத்துகளென்கிறார். நாள் தோறும் எத்தனை பேருக்கு எத்தனை வித விபத்துக்கள்! இடி விபத்து, குடி விபத்து, வெடி விபத்து, அடிதடி விபத்து, இதெல்லாம் ஒரு வகை. சாலை விபத்து, ரயில் விபத்து, விமான விபத்து என்று மற்றொரு வகை. ஓட்டை விரிசல் விபத்து, கூட்ட நெரிசல் விபத்து, கோட்டை சரிதல் விபத்து, தீ விபத்து, முழுகல் விபத்து, என்பதையெல்லாம் சேர்த்து விவிதாநி வ்யஸநாநி என்கிறார். இவற்றையெல்லாம் உன் பெயர் உதறித்தள்ளும், விலக்கும், விரட்டும்.

வ்யஸநம் என்கிற பதத்திற்கு இன்னொரு அர்த்தமும் உண்டு, தீய பழக்கம் என்று. இதிலேயும் பலவகை. குடிப் பழக்கம், பொடிப் பழக்கம், மது-கள் போதை, மாதுகள் போதை, கூத்துப் பழக்கம், கூத்திப் பழக்கம், புகைப் பழக்கம், பகைப் பழக்கம், கேளிக்கையில் குறி, வேடிக்கைகளில் வெறி, வேட்டை, அரட்டை, வம்பு தும்பு, இதையெல்லாம் உன் பெயர் உதறித் தள்ளும், இப்பொழுதே உதறும்.

இது முதல் இரண்டு பாதங்களின் கருத்து.

மேலும் உன் பெயரை ஜபிப்பவர்களுக்கு நல்லறிவு நாளுக்கு நாள் வளரும்.

உஜ்வல — தீ, என்றால் பிரகாசிக்கிற அறிவு.

கூர்மையான, நுட்பமான அறிவு தான் பிரகாசிக்குமாதலால் அது ஒரு பொருள். இரண்டாவது, பலருக்கும் தெரியும்படி புகழீட்டும் அறிவை உஜ்வலமானதாகக் கருதலாம். மூன்றாவது அர்த்தம்: மோக்ஷதசையில் மட்டும் கிடைக்கும் அஸங்குசிதமான ஜ்ஞானம். இந்த உஜ்வலதீ பெறுவதற்கான ப்ரசோதனத்தைத்தானே காயத்ரி மந்திரமும் சொல்கிறது ? அது இருந்து விட்டால் இம்மையிலும் மறுமையிலும் எல்லாப் பலன்களும் கிடைத்துவிடுமே. இந்த

உஜ்வலபுத்தியை எங்களுக்கு வளர்ப்பது யார் ? கவிசுற்றி வளைத்துப் பேசுகிறார். கலியுகத்தின் இந்த நாட்கள் உன் பெயரை ஜபிப்பவர்க்கு அறிவை வளரப்பண்ணும் என்று. கலியில் நாமஸங்கீர்த்தனம் பெரும்பலனைத் தரும் என்பது புராணசித்தமான கருத்து தான். ஆனாலும் அந்த நாட்களா பலனளிக்கின்றன, அறிவை வளர்க்கின்றன ?

காலக்ரமேண அறிவு முதிர்வதாலும், அனுபவத்தால் வந்த பட்டறிவு என்று மக்கள் கருதுவதாலும், நாளாக ஆக ஜபத்தின் ஸித்தி மேன்மேலும் பெருகுவதாலும் காலம் இங்கு ஸாமாந்யஹேதுவாக மட்டுமின்றி விசேஷஹேதுவாகவும் ஆகிறது. உன் நாமத்தை ஜபிப்பவர்க்கு நாட்கள் அறிவு வளர்ச்சியை ஏற்படுத்துகின்றன.

உததிமகள் நாமத்தை
உதட்டினிலே கொண்டவர்க்கு
உதறலுறும் துன்பங்கள்
உதயமுறு மொளிரறிவே.

இந்தச் சுலோகத்தில் இரண்டு இடங்களில் ப்ராஸமும் ஶ்லேஷமும் சேர்ந்த ரஸம்.

கடைசி அஞ்செழுத்துகளைப் பார்த்தால் முதல் பாதமும் இரண்டாம் பாதமும் ஒன்றாக உள்ளன,துநாது நாம என்று. அர்த்தம் மட்டும் வேறு. மூன்றாம், நான்காம் பாதங்கள் கலாவஹாநி ,என்று முடிகின்றன. அர்த்தம் மட்டும் வெவ்வேறு. கலௌ—அஹாநி என்று பிரித்தால் ஒரு அர்த்தம், கலா—ஆவஹாநி என்று பிரித்தால் இன்னொன்று.

எப்படி வ்யஸனம் என்ற பதத்திற்கு இரண்டு அர்த்தங்கள் சொல்லி விளக்கினோமோ அது போல கலா என்ற பதத்திற்கும் சொல்லலாம்.

கலா என்றால் பிறை, வித்யை என இரண்டு பொருளும் உண்டு. லக்ஷ்மீ நாம ஜபம் புத்தியை வளர் பிறை போல் மேன் மேலும் பொலிவுறச் செய்கிறது. வித்யைகளைக் கொண்டு வந்து குவிக்கிறது. வ்யஸனங்களை உதறித்தள்ளுகிறது. கலைகளை கொண்டு குவிக்கிறது. திரு நாம ஜபம் இரண்டும் செய்யும். உதறும். சேர்க்கும்

16. நாக்கின் தோஷத்தை நாசமாக்கும் நாமங்கள்

राष्ट्रप्रसङ्ग-कुजनस्तुति - राजकार्य-दुस्तर्कवाद - परदूषण - दोषशान्त्यै ।
नारायणप्रियतमे ननु पावनानि नामानि कीर्तयतु ते रसना मदीया ॥१६

ராஷ்ட்ரப்ரஸங்க - குஜநஸ்துதி - ராஜகார்ய -
துஸ்தர்கவாத - பரதூஷண - தோஷஶாந்த்யை ।
நாராயணப்ரியதமே நநு பாவநாநி
நாமாநி கீர்தயது தே ரஸநா மதீயா ॥ 16 ॥

राष्ट्रप्रसङ्ग - நாட்டுநடப்புப் பேச்சுகள்
कुजनस्तुति -கெட்டவர்களைத் துதிப்பது
राजकार्य - அரசியல்
दुस्तर्कवाद -குதர்க்கம் பேசுவது
परदूषण -பிறரைப் பழிப்பது
दोष -ஆகிய குற்றங்களை
शान्त्यै -ஒடுக்குவதற்காக
नारायणप्रियतमे -நாராயணனின் தயிதையான லக்ஷ்மியே !
पावनानि -பரிசுத்தப்படுத்துகின்ற
नामानि -உன் பெயர்களை
मदीया -என்னுடையதான
रसना -நாக்கானது
ननु कीर्तयतु -நிச்சயம் கீர்த்திக்கட்டும்.

என் நாக்கில் நிறைய தோஷங்கள் உள்ளன. ஊர் வம்பு, நீசஸ்துதி, அரசியல், விதண்டாவாதம், பழிசொல்லல் என்று பல குற்றங்களைப் புரிந்தது என் நாக்கு. அந்தக் குற்றங்கள் நீங்க வேண்டுமானால், நாக்கு சுத்தமாக வேண்டுமானால், இந்த நாக்கில் ஒரு பாவந வஸ்துவை வைக்க வேண்டும். நாராயணனின் பிராணநாயகியே ! உன் பெயரை என் நாக்கில் இடுகிறேன். தோஷங்கள் நீங்கிவிடும். தூய்மை உண்டாகும்.

(கங்கா தீர்த்தம், காலைப்பொழுதின் கோதூளி, பசுஞ்சாணம், பாகவதர்களின் ஸ்ரீபாததீர்த்தம், பஞ்சகவ்யம், மந்திரம் சொல்லிக்குழைத்த திருமண், பிரதிஷ்டை பண்ணின பூணூல், என்றிவை போலே உன் திருநாமங்களும் பாவனமானவை.)

நாக்கின் குற்றங்கள் நாசம் பெறவேண்டி

நாராயணகாந்தை நாமம் சொல்லட்டும்.

இங்கே, தான் நாமஸங்கீர்த்தனம் பண்ணுவதாகச் சொல்லாமல் நாக்கைக் கர்த்தாவாக்கினது ஏனோ ? இதுவரையில் நான் கீர்த்திக்கிறேன், நாம் கீர்த்திப்போம் என்று சொல்லி வந்த கவி இப்பொழுது என் நாக்கு கீர்த்திக்கட்டும் என்கிறாரே, ஏன் ? நாக்கு நின்னையல்லால் அறியாது என்று பெரியாழ்வார் சொன்னபடி நிரந்தர அப்பியாசத்தால் தன் முயற்சி இல்லாமலே தன் நாக்கு சொல்லட்டும் என்ற கருத்தாகலாம். அல்லது, நான் வேறு வேலைகள் செய்யும்போது கூட, என் மனது வேறொன்றில் இருந்தாலும் கூட, நாக்கு நாமத்தைச் சொன்ன மாத்திரத்தாலே பலனளிக்க வல்லது உன் நாமம் என்று கருத்தாகலாம்.

தோஷங்கள் நீங்க ப்ரதக்ஷிணப்ரணாமாதிகளான பல வழிகள் இருக்க நாமஸங்கீர்த்தனத்தை மட்டும் சொல்வானேன் ? இந்தக் கேள்விக்கு இதோ பதில். நாக்கு பண்ணின தப்புக்கு நாக்கு தானே பரிஹாரமும் பண்ண வேண்டும் ? கை கால்களின் உதவியை நாடுவானேன் ? சரீரத்தில் எந்த அவயவம் தப்பு பண்ணிற்றோ அதே அவயவம் தான் பரிஹாரம் பண்ண வேண்டும் என்று சாஸ்த்ரார்த்தம் கிடையாது. ஒரு பேச்சு சுவாரசியத்துக்காகச் சொன்னார். பிழை புரிந்தவன் தானே கழுவாய் தேட வேண்டும் ?

(தரையில் எச்சில் பட்டால் அதே இடத்தில் தானே பாவனமான பசுஞ்சாணியை இடுகிறோம் ?

வஸ்திரம் விழுப்பானால், அதிலே தானே பாவனமான நீரைக் கொட்டுகிறோம் ?

உடலில் காயம் பட்டால் காயம் பட்ட இடத்தில் தானே மருந்தைத் தடவுகிறோம் ?

அதே போல், நாக்கில் அசுத்தம் ஏற்பட்டால், அந்த நாக்கில் தானே பாவன வஸ்துவை இட வேண்டும் ?

கடைசியாக இன்னொரு கேள்வி. தூஷண துர்வாதங்களுக்கு இணையாக ராஷ்ட்ர ப்ரஸங்கத்தையும் தோஷமாகச் சொல்லலாமோ ? இதற்கு இரண்டு விதமாகப்

பதில். ப்ரஸங்கம் என்ற பதத்திற்கு இங்கே என்ன அர்த்தமென்றால், அளவுக்கு மீறின நாட்டம், வெளிவர முடியாத அளவுக்கு மிதமிஞ்சின செயல்பாடு, என்று அர்த்தம். த்யூதப்ரஸங்கம், ஸ்த்ரீப்ரஸங்கம் என்னுமாப்போலே. ராஷ்ட்ரப்ரஸங்கமும் தோஷம் தான்.

மேலும், சுலோகத்தின் பூர்வார்த்தம் மொத்தம் நீண்ட ஸமாஸம் கொண்ட ஒரே பதமாக உள்ளதால், யுக்தமானதொரு விபக்தியை நாம் இடையில் கொள்ளலாம். ராஷ்ட்ரப்ரஸங்கம் முதல் பரதூஷணம் வரையான இவற்றால் உண்டான தோஷங்கள் என்று பொருள் கொள்ளத் தடையில்லை. நாட்டு நடப்பு, ஊர் வம்பு, அரட்டைகள், வீண் பேச்சு, பக்ஷபாதப்பேச்சு, தெரியாததைத் தெரிந்தது போல் பேசுவது, உணர்ச்சி வசப்பட்டு அடித்துப் பேசுவது, முதலிய தோஷங்கள் சம்பவிக்கும். குஜநஸ்துதியில், அதிவாதம், அஸத்யவசனம், தன் மரியாதைக்கு ஹானி, ஆகிய இவை சம்பவிக்கும். ராஜகார்யத்தில், அர்த்தகாமப்ராவண்யம், தர்மலோபம், பரபீடை, முதலிய தோஷங்கள் சம்பவிக்கும். துஸ்தர்கவாதத்தில், வெற்றியில் வெறி, நல்ல பண்டிதர்களின் எதிர்ப்பு, வித்யா த்ரோஹம், முதலிய குற்றங்கள் சம்பவிக்கும். பரதூஷணத்தில் பிறருக்குக் கேடு, பண்பாட்டுக்குறைவு, அபசாரம், முதலிய தோஷங்கள் நேரும். ஆகையால் கவி சொன்ன ஐந்திலுமே தோஷங்கள் உண்டு. இவற்றைப் பரிஹரிப்பதற்காக நாமஸங்கீர்த்தனம்.

ஏதேதோ பேசினதால் ஏற்பட்ட குறை நீங்க

எம்மன்னை நாமத்தை என் நாக்கு சொல்லட்டும்.

இங்கு சொன்ன ஐந்து குற்றங்கள் தவிர மேலும் சில நாக்குக்குற்றங்களை அடுத்த இரு சுலோகங்களில் சொல்கிறார்.

17. பொய்யால் பொசுங்கலைப் போக்கும் நாமங்கள்.

प्रादेशसम्मितनिजोदरपूरणार्थैः अत्यर्थमेभिरनृतैरभिदह्यमाना ।
निर्वातु नीरधिसुते रसना त्वदीयैः आख्याशतैरभिमतैरमृतैरिवाऽसौ ॥ १७

ப்ராதே[3]ஶஸம்மிதநிஜோத[3]ரபூரணார்த்தை[2] :
அத்யர்த்த[2]மேபி[4]ரந்ருதைரபி[4]த[3]ஹ்யமாநா ।
நிர்வாது நீரதி[4]ஸுதே ரஸநா த்வதீ[3]யை:
ஆக்[2]யாஶதைரபி[4]மதைரம்ருதைரிவாஸௌ ॥ 17 ॥

नीरधिसुते-சமுத்திரத்தின் பெண்ணே !
प्रादेश-सम्मित-निज-उदर-पूरण-अर्थैः- சிறிய (இரு விரல் நீள) அளவு கொண்ட தன் வயிற்றை நிரப்பும்பொருட்டா
एभिः- இந்த
अनृतैः-பொய்களாலே
अभिदह्यमाना-எரிக்கப்படுகிற
असौ-இந்த
रसना-நாக்கானது
अमृतैः इव अभिमतैः-அம்ருதம் போல் மனதுக்குப் பிடித்த
त्वदीयैः-உன்னுடையதான
आख्याशतैः-பல நூறு நாமங்களால்
निर्वातु-இன்புறட்டும்

கேவலம் வயிற்றுப்பிழைப்புக்காகப் பொய்கள் சொன்னேன். இப்பொழுது பெருந்தவறை உணரும்பொழுது நாக்கு பற்றி எரிகிறது. நெருப்பால் பொசுங்குகிறது. உன்னுடைய பல நூறு நாமங்களை விரும்பிச் சொல்கிறேன். அமுதம் போன்ற அந்த நாமங்களால் நாக்குக்கு இன்பம் கிடைப்பதாக.

பொய்யாலே எரிகின்ற பொல்லாத என் நாக்கில்

பொன்மகளின் நாமங்கள் பொழியட்டும் அமுதம் போல்.

ஏழெட்டு ஶாஸ்த்ரார்த்தங்களை இதில் இயல்பாகச் சொல்கிறார் கவி.

1. நம் நோக்கங்களும் குறிக்கோள்களும் பெரியவையாக, உயர்ந்தவையாக இருக்க வேண்டும். இந்த அற்ப வயிற்றுக்காக அரும்பாடு படலாமோ ?

2. பொய் சொல்வது பெரும்பாவம். வேதம் கற்பித்த ஆசார்யன் அந்தேவாஸியை அநுஶாஸித்துச் சொல்லுபவற்றுள் ஸத்யம் வத என்பது தான் முதலாவது. எதைப் பகவான்கள் பரமமாகச் சொல்கிறார்கள் ? என்ற கேள்வியின் விடைகளில் முதலானது ஸத்யம். (கிம் பகவந்த: பரமம் வதந்தீதி.....ஸத்யம் பரமம் வதந்தி). இது உபநிஷத்து நிர்ணயம். எனவே பொய்யை அறவே விலக்கவேண்டும்.

3. ஏதோ ஒரு நிர்ப்பந்த வசத்தால் தப்பு பண்ணி விட்டால் நல்லவர்கள் அதற்காக நொந்து கொள்வார்கள். வருந்தி நிர்வேதப்படுவார்கள். இந்தப் பச்சாத்தாபத்தாலேயே கால் பங்கு பாவம் கழிந்துவிடும்.

4. தப்பு பண்ணின நல்லோர்க்கு அநுதாபம், உபரமம், பிராயச்சித்தத்தில் உந்முகத்வம், பிராயச்சித்தம், என்கிற நாலு நிலைகளில் கால் கால் பகுதியாகப் பாவம் கழிவதாகச் சாத்திரக் கருத்து. (அநுதாபாத் உபரமாத் ப்ராயஶ்சித்தோந்முகத்வத: ।
தத்பாதபூரணாச்சைவ ஸர்வே நஶ்யந்தி பாதகா: ॥) இங்கு அபிதஹ்யமானா என்ற சொல்லால் அநுதாபத்தை வெளிப்படுத்தினார். அதையடுத்த பாதாவஸாந விராமத்தாலும் கூடுண்டதாகச் சொன்னதாலும் உபரமத்தை ஸூசித்தார். அடுத்து நான் செய்யப்போகும் கார்யவிசேஷத்தால் பாவம் கழியட்டும் என்ற உந்முகத்வத்தை நிர்வாது என்ற சொல்லால் குறித்தார். அடுத்து நீரதிஸூதே என்று சொல்லிப் பிராயச்சித்தத்தைப் பண்ணினார். அப்புறம் என்ன ? நாலாம் பாதத்தில்....தை....தை....தை.... என்கிறார்.

5. அற்பமான வயிற்றுக்காகப் பொய் சொல்லி விட்டேனே என்று குமுறுகிறார். வேறு உன்னதமான லட்சியத்திற்காகப் பொய் சொல்வது சாத்திர சம்மதம். அடைக்கலம் அடைந்தவரைக் காப்பாற்ற, ப்ராணாபத்தைத் தவிர்க்க, பலீயஸ்ஸான ஒரு தர்மத்தை ஸ்தாபிக்க, என்றிவ்வாறான காரணங்களுக்காக பொய் சொல்வதில் தப்பில்லை.

6. இந்த நாக்கு இந்தப் பொய்களால் என்று சொன்னதைக் கவனிக்க வேணும். பிராயச்சித்தம் பண்ணும்போதும் பண்ணுவிக்கும்போதும் இன்னார் செய்த இன்ன குற்றத்திற்காக இதைப் பண்ணுகிறேன் என்று பகிரங்கமாக ஸங்கல்பித்து பண்ண வேண்டும். மேலும் பகிரங்கமாக செய்த பாபங்களுக்கு ரகசியமாகப் பாவ மன்னிப்பு கேட்டால் போதாது.

7. பெருமானுடையவும் தாயாருடையவும் நாம ஸங்கீர்த்தனம் ஸகல பாபங்களையும் போக்கும். பல நூறு

நாமங்களென்கிறார். ஸநத்குமாரஸம்ஹிதையிலுள்ள லக்ஷ்மீஸஹஸ்ரநாமத்தைக் கருத்தில் கொண்டு.

8. ஸ்வயம்ப்ரயோஜனமாகக் கீர்த்தனம் பண்ணவேண்டும். பலன்கள் தாமாக வரும். அபிமதை: என்கிறார். போக்யமான நாமங்கள்.

இனி, இந்தச் சுலோகத்தின் இலக்கியச் சுவையைப் பார்ப்போம்.

அற்பவயிற்றுக்காக அந்ருதத்தால் எரிநாக்கில்

அம்புஜையின் நாமங்கள் அம்ருதம் போல் அமரட்டும்.

அந்ருதம் என்றும் அம்ருதம் என்றும் இரண்டு பதங்கள். ஒரே ஒரு எழுத்தில் தான் வித்தியாசம். சின்ன வித்தியாசம். இரண்டுமே நாக்கிலிடக் கூடியவை. ஆனால்

அந்ருதத்தால் நாக்கு தகிக்கிறது. அம்ருதத்தால் நாக்கு சுகிக்கிறது.

உன் பெயரால் அந்ருதம் அழிகிறது. அம்ருதம் பொழிகிறது.

உன் பெயர் சொல்வதற்கு முன் நாக்கில் அந்ருதம்.

சொன்னவுடன் நாக்கில் அம்ருதம்.

உன் திருநாமம் அந்ருதம் தரும் துன்பத்தைப் போக்கி அம்ருதம் நல்கும் இன்பத்தையும் தரும். நிர்வாது என்ற சொல்லுக்கு சூடு தணியட்டும் என்றும் இன்பம் அடையட்டும் என்றும் இரண்டு பொருள்கள் இங்கே கொள்ளக் கூடும்.

நீரதிஸாதே என்ற விளியும் நெருப்பணைக்கும் சந்தர்ப்பத்தில் பொருத்தமானதாகும்.

18. துஷ்க்ருதிக்கு நிஷ்க்ருதியான நாமங்கள்

अगतिकदेहिदेहिवचनस्तुतिदुःखदशा
कुपितमितम्पचस्तवनदुष्कृतिनिष्कृतयः ।
भवदभिधासुधा भवदवानलतापमुषः
जननि पुनः पुनः परिपुनन्ति जगन्ति रमे ॥ १८ ॥

அக³திகதே³ஹிதே³ஹிவசநஸ்துதிது³:க²தஶா
குபிதமிதம்பசஸ்தவநதுஷ்க்ருதிநிஷ்க்ருதய: ।
ப⁴வத³பிதா⁴ஸுதா⁴ ப⁴வத³வாநலதாபமுஷ:
ஜநநி புந: புந: பரிபுநந்தி ஜகந்தி ரமே ॥ 18 ॥

जननि रमे - அம்மா லக்ஷ்மியே!
अगतिक-देहि-देहि-वचन-स्तुति-
दुःख-दशा-कुपित-मितम्पच-स्तवन-
दुष्कृति-निष्कृतयः - கதியற்ற மக்களின் தா என்ற வார்த்தையைக் கேட்டதால் துக்கதசையால் கோபித்துக்கொண்ட அநேபேக்காடுகளைத் தோத்திரம் செய்யும் தீவினைக்குப் பிராயச்சித்தங்களானவையும்.
भवदावानलतापमुषः - ஸம்ஸாரமென்னும் காட்டுத்தீயின் தாபத்தைத் தீர்ப்பவையுமான
भवदभिधासुधाः - உம் பெயர்களாகிற அமுதங்கள்
पुनः पुनः - மீண்டும் மீண்டும்
जगन्ति - உலகுகளை
परिपुनन्ति - பரிசுத்தமாக்குகின்றன.

ஒருத்தன் கதியற்றவன், நாதியில்லாதவன். பிச்சை எடுக்கிறான், கையேந்துகிறான், தா என்று யாசிக்கிறான், இன்னொருத்தனிடம் போய்க் கெஞ்சுகிறான். அந்த இன்னொருத்தனுக்கு இவனைப் பிடிக்கவில்லை. கோபித்துக் கொள்கிறான். மனமுதிர்ச்சி அற்றவனாயிருக்கிறான். ஆனாலும் இந்த யாசகன் அவனைப் பாராட்டுகிறான். இந்த மாதிரியான பாவங்களுக்குப் பிராயச்சித்தமாக அமைந்தவை உம் திருநாமங்கள். அமுதம் போன்றவை. ஸம்ஸாரதாபத்தை நீக்குபவை. அவை உலகங்களைத் தூய்மைப்படுத்துகின்றன. என்று ஒன்று. துஷ்க்ருதி-நிஷ்க்ருதய: என்பதற்கு இரண்டு விதமாகப் பொருள் கொள்ளலாம். பாவத்திற்குப் பிராயச்சித்தங்கள் கெட்ட காரியங்களை இல்லாமல் பண்ணுபவை என்று மற்றொன்று. இரண்டாம் பொருள்படிக் கிடைக்கும் கருத்து இதோ. பிச்சை எடுத்தல், தகாதவனைத் துதித்தல் முதலிய கூடாச் செய்லகள் இனித் தேவையில்லை. உம் பெயரைச் சொன்னவனுக்கு அத்தகைய நிலை வராது. அவனே செல்வந்தன் ஆகிவிடுவான்.

தாவென்று தலைகுனிந்து தாழ்ந்தோனைத் துதிப்பானேன் ?

தாமரையாள் பேர் சொன்னால் தாரித்ர்யம் தொலையாதோ?

ஏழ்மையால் மட்டுமில்லை. மற்ற காரணங்களாலும் அற்பர்களின் உதவியை நாடுவாருண்டு.

பணமில்லாதவன் பணக்காரனிடம் பணம் தா என்று யாசிக்கிறான். தைரியமில்லாதவன் தீரனிடம் அடைக்கலம் தா என்று யாசிக்கிறான். புத்தியில்லாதவன் புத்திமானிடம் சென்று ஒரு புதுவழி யோசித்துச் சொல்லு என்று யாசிக்கிறான். வோட்டு கேட்கிறான் ஒருவன்; சீட்டு கேட்கிறான் சிறுவன். இதெல்லாமே பெரும்பாலும் அகதிகதேஹி தேஹிவசநம் தான்.

லக்ஷ்மியின் பெயரைச் சொல்பவர்களுக்கு இந்த நிலை வராது. யாரிடமும் கெஞ்ச வேண்டாம்.

மற்றவர்கள் கூட, கண்டவர்களிடம் உதவி நாடலாமோ ?

தராதரம் பார்த்தல்லவா தலைகுனிய வேண்டும் ?

அரைவேக்காடுகளிடம் போய் அவதிப்படலாமோ ?

ஒரு வள்ளலிடம், ஒரு நல்லவனிடம், ஒரு வல்லவனிடம், உபகாரம் கேட்டுப் பெறுவது சரியே.

சரி, போகட்டும். லக்ஷ்மி பெயர் சொன்ன பிறகு உதவிக்காக மிதம்பசர்களிடம் போகவேண்டிய தேவையே வராது. இது முதல் பாதிச்சுலோகத்தின் கருத்து.

இனி இரண்டாவது பாதியில் அவள் நாமம் அம்ருதம் போன்றது என்றும், ஸம்ஸாரதாபம் தீர்ப்பதென்றும், பரிசுத்தப் படுத்துவதென்றும் சொல்கிறாரே, இதெல்லாம் முன் சுலோகங்களிலேயே சொல்லியாச்சே, மறுபடியும் சொல்வானேன் ?

சந்தனம் முதலிய தாபம் தீர்க்கும் பொருள்கள் பாபம் நீக்குவதில்லை

கோதூளி முதலிய பாவனப்பொருள்கள் தாபம் தீர்ப்பதில்லை. தீர்த்தயாத்திரை முதலிய பாபநாச வழிகள் அமுதமாய் இனிப்பதில்லை. இனிப்பான பக்ஷணங்கள் தூய்மைப்படுத்துவதில்லை.

ஆனால் பாவமும் போக்கி, தாபமும் தணித்து, இனிமையாய் இருந்து, புனிதமாயும் பண்ணும் பொருள் உண்டோ ? அபூர்வமாகச் சில உண்டு. அவற்றுள் உன் திருநாமங்கள் பிரதானமானவை.

இந்தச் சேராச் சேர்க்கையை இரண்டாவது பாதியில் சொன்னார்.

இனி இலக்கிய நயங்களைப் பார்ப்போம்.

தேஹி தேஹி என்ற இடத்தில் முதல் தேஹிக்கும் இரண்டாவது தேஹிக்கும் வெவ்வேறு அர்த்தங்கள்.

1. தேஹி என்றால் தேஹமுள்ளவன், உயிர் வாழ் பிராணி. போகி, பாபி, என்ற பதங்கள் போலே.

2. தேஹி என்றால் கொடு என்ற க்ரியாபதம். பாஹி, ஏஹி, என்பவை போலே. கதியற்ற தேஹியானவன் தேஹி என்று இரக்கிறான் என்று சிலேடை வேடிக்கை.

துஷ்க்ருதி நிஷ்க்ருதி என்றும் பிதா ஸுதா என்றும், பவத...பவத என்றும் புந: புந: புநந்தி என்றும் ப்ராஸங்கள். சொற்சுவை இல்லாத பாதமே கிடையாது.

புநந்தி புவநம் என்று ஸ்வாமி தேசிகன் பெருமாள் திருநாமம் சொல்வோருக்குச் சொன்னது

புநந்தி ஜகந்தி என்று தாயார் திருநாமங்களுக்கு எதிரொலிக்கிறது இங்கே.

19. ஜடமதியாலும் ஜபிக்கத்தக்க நாமங்கள்,

श्रुतिफणितिस्थितिस्मृतिपुराणततिश्रवणे
भगवति मादृशां जगति न प्रतिभाति गतिः ।
तदपि तव त्वदीयदयितस्य च नामजपः
भवति कलौ युगे जडधियामपि कामदुधा ॥ १९ ॥

ஶ்ருதிப$_2$ணிதிஸ்தி$_2$திஸ்ம்ருதிபுராணததிஶ்ரவணே
ப$_4$க$_3$வதி மாத்$_3$ருஶாம் ஜக$_3$தி ந ப்ரதிபா$_4$தி க$_3$தி: ।
ததபி தவ த்வதீ$_3$யத$_3$யிதஸ்ய ச நாமஜப:
ப$_4$வதி கலௌ யுகே$_3$ ஜட$_3$தி$_4$யாமபி காமது$_3$கா$_4$ ॥ 19 ॥

भगवति பகவதி லக்ஷ்மியே !
मादृशां என்னை ஒத்தவர்களுக்கு
श्रुतिफणितिस्थितिस्मृतिपुराणततिश्रवणे வேதவாக்கியங்கள் நிலைநிற்பதிலும் ஸ்ம்ருதி புராணகணங்களைக் கேட்பதிலும்
जगति உலகில்
गतिः கதி
न प्रतिभाति தோன்றவில்லை.
तदपि ஆனாலும்
तव உன்னுடையவும்
त्वदीयदयितस्य च உனது அன்பனுடையவும்
नामजपः திருப்பெயர்களை ஜபிப்பது
कलौ युगे கலியுகத்திலே
जडधियामपि மந்தபுத்திகளுக்குக் கூட
कामदुधा விரும்பியதெல்லாம் கறக்கும் காமதேனுவாக
भवति ஆகிறது

பகவதியே ! வேதங்கள், ஸ்ம்ருதிகள், புராணங்கள் இவற்றைக் கேட்கையில் என் போன்றவர்களுக்குக் கதி இருப்பதாகத் தெரியவில்லை. உங்கள் இருவரின் திருநாமஜபம் தான் கலியில் மந்தர்களுக்கும் காமதேனுவாய் உள்ளது.

நிறைய ஶ்ருதி-ஸ்ம்ருதி-புராணங்களைக் கேட்கையில் என் போன்றோருக்குக் கதி தெரியவில்லை என்பதற்கு நான்கு தாத்பர்யங்கள் சொல்லலாம்.

1. நாங்கள் ஜடமதிகள், வேதங்களும் ஸ்ம்ருதிகளும் புராணங்களும் ஏராளமானவை. அவற்றையெல்லாம் கேட்பதற்கு எங்களாலாகாது. அப்படிக் கேட்டாலும் புரியாது.

புரிந்த பகுதிகளிலும் தெளிவில்லை. ஒரே குழப்பம், முன்னுக்குப் பின் முரண் போலத் தோன்றுகிறது. ஸம்சய - விபர்யயங்கள் அதிகம். ப்ராபல்ய - தௌர்பல்ய - விசாரம் பண்ணி எந்த அர்த்தம் சரி என்று தீர்மானம் பண்ணும் திறமை கிடையாது. என் போன்ற சிற்றறிவினருக்கு அவற்றில் கதியில்லை. நாமஜபத்தில் தான் கதி.

2. நிறைய புராணாதிகளைக் கேட்கக்கேட்க என் போன்ற பாவிகளுக்கு வேறு கதி இல்லை என்பது தெரிகிறது. சிசுபாலன் பகவானைப் பழித்தாற் போலே நாங்கள் பாகவதர்களைப் பழிக்கிறோம். ராவணன் ஸீதையைத் தான் அபஹரித்தது தப்பில்லை என்று வாதித்தாற் போலே இந்தக் காலத்தில் இந்தச் சூழ்நிலையில் இப்படிப் பண்ணினால் தப்பில்லை என்று சப்பைக் கட்டு கட்டிக் கொண்டு அசாஸ்த்ரீயமாக நடக்கிறோம். ஹிரண்யகசிபு போலே தீர்மானமான சாஸ்த்ரார்த்தங்களைக் கூட ஒப்புக் கொள்ளாமல் விவதிக்கிறோம். பகீரதனுக்குள்ள விடாமுயற்சியோ, ப்ரஹ்லாதனுக்குள்ள உறுதியோ, த்ரௌபதிக்குள்ள மஹாவிச்வாஸமோ, த்ருவனுக்குள்ள ஜ்ஞானமோ, எதுவும் இல்லாமல் இருக்கிறோம். நாங்கள் புராணக் கதைகளைக் கேட்கும் போது எங்களைப் போன்றோருக்கு நல்ல கதி இல்லை என்பது தெரிகிறது.

ம்ரவணே - கேட்கையில் - என்பதற்கு இரண்டு அர்த்தங்கள். கேட்கின்ற செயலில் என்று ஒன்று. கேட்கும் பொழுது என்று இன்னொன்று. ஆகையால் மேலே சொன்ன இரண்டு கருத்துகள்.

3. நல்ல கதி என்பது பரமபதம். அது வேதத்தால் கிடைக்குமா? சாஸ்த்ரங்களால் கிடைத்துவிடுமா ? உயர்கல்வியால் ? மேதாவிலாசத்தால் ? ஊஹும். அதெல்லாம் இல்லை கதி. எழுத்தறிவில்லாத பாமர மக்களுக்கும் கூட நற்கதி உண்டு. அறிவு குறைந்த மந்தர்களும் கூட நற்கதி பெறமுடியும். பெருமாள் திருவுகப்பு தான் முக்கியம். அதற்கு நாமஸங்கீர்த்தனம் ஒரு வழி. இதையெல்லாம் தெரிந்து கொள்ள ம்ருதி - ஸ்ம்ருதி - புராணங்கள். வேதமே சொல்கிறது: ப்ரவசனத்தினாலேயோ, மேதையினாலேயோ, அதிகக்கல்வியினாலேயோ, கடவுளை அடைந்து விட முடியாது. அவன் நம்மை வரிக்கும் படியானதொரு உபாயத்தைப் பண்ண வேண்டும். (லக்ஷ்மீ நாம ஜபத்தால்

பெருமாள் திருவுள்ளம் உகக்கும் என்பதை அடுத்த சுலோகத்தில் மறுபடி சொல்லப் போகிறார்.)

4. கதி என்பதற்கு போக்கு, நாட்டம் என்று அர்த்தமுண்டு. எங்களுக்கு ஆர்வம் வேத சாஸ்த்ரங்களில் இல்லை. அவற்றைக் குறை சொல்லவில்லை. எங்களுக்குத் திவ்ய தம்பதி நாம ஜபம் தான் பிடித்திருக்கிறது. எங்கள் நாட்டம் புராணச்ரவணத்தில் இல்லை. ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு அபிருசி.

இனி சுலோகத்தின் இரண்டாம் பாதிக்கு வருவோம்.

பெருமாளுடையவும் தாயாருடையவும் நாமங்களை ஜபித்தால் கலியுகத்தில் அறிவிலிகளுக்குக் கூட அபீஷ்டம் எல்லாம் நிறைவேறும். உன்னுடையவும் உன் அன்பனுடையவும் நாம ஜபமே காமதேனுவாகும்.

ஜடதியாமபி - பாமரர்களுக்குக் கூட.

பாமரர்க்கும் காமதேனு பூமகள் தன் நாமமன்றோ ?

வஸிஷ்டர் போன்ற மஹரிஷிகளுக்குக் காமதேனுப் பசு இருந்தாற்போல், நம்மையொத்த பாமரர்க்கும் நாம ஜபமென்ற காமதேனு உண்டு.

நாமஜபமென்ற காமதேனு உண்டு.

ஜடமதியும் ஜனனி பெயர் ஜபம் செய்து ஜயம் பெறலாம்.

அறிவிலியும் அவள் பெயரால் அதிர்ஷ்டத்தை அடைந்திடலாம்.

பேதைகளும் பெருந்தேவி பேர் சொல்லிப் பேறுறலாம்.

மந்தர்களும் மலராள் பேர் மந்திரத்தால் மகிழ்ந்திடலாம்.

கலியுகத்தில் என்பானேன் ? க்ருதயுகத்தில் தவத்தாலும், த்ரேதாயுகத்தில் யாகத்தாலும், த்வாபரயுகத்தில் வழிபாட்டாலும் கிடைக்கும் பலன் கலியுகத்தில் நாம ஸங்கீர்த்தனத்தால் கிடைக்குமென்று புராணக் கூற்று.

ச்ருதி - ஸ்ம்ருதி சுருக்கமாகச் சொல்லாமல் ச்ருதி பணிதி ஸ்திதி ஸ்ம்ருதி என்று நீட்டுவானேன் ?

இதனால் மூன்று கருத்துக்களை முத்தாகச் சொல்லுகிறார்.

1. வேதம் முகஸ்தமாக இருக்க வேண்டும். ஸ்ம்ருதி புராணங்களைப் புஸ்தகம் பார்த்து வாசித்துக் கொள்ளலாம். அதனால் ஸ்திதி என்ற சொல்லை ஶ்ருதிக்கு மட்டும் சொன்னார்.

2. எல்லா ஸ்ம்ருதி புராணங்களும் ப்ரமாணமாகமாட்டா. வேதத்தில் நிலை கொண்டவை மட்டும் சிறந்தவை. ஶ்ருதி பணிதியில் ஸ்திதி கொண்ட ஸ்ம்ருதிபுராணங்கள் என்கிறார்.

3. ஶ்ருதி அர்த்தம் தெரியாமல் பாராயணம் பண்ணினாலும் ப்ரசஸ்தமானது. அதில் வார்த்தைகளின் ஸந்நிவேசத்தை மாற்றக் கூடாது. அதனால் ஶ்ருதி பணிதி ஸ்திதி என்கிறார். மற்றவற்றில் அவ்வளவு நிர்ப்பந்தம் கிடையாது. அர்த்தம் மாறுபடாமல் இருப்பது முக்கியம். நிறைய பாடபேதங்கள் இருப்பினும் ஸஹ்யமே.

முதல் பாதத்தில் தி என்ற எழுத்து ஐந்து தடவை வந்துள்ளது. இரண்டாம் பாதத்திலும் ஐந்து தடவை. பத்து தடவையும் ஒரு உள்பதத்தின் கடைசி எழுத்தாக இருக்கிறது. அதனால் சொற்சுவை கூடுதல்.

20. சாமங்கள் சமங்களாகா நாமங்கள்.

मनसिजतातपाद मनसः परितुष्टिकरम्
जननि समानमेव ननु साम च नाम च ते।
अतिशयमादिमा दपरमेव तथाऽप्ययते
निधनमुपद्रवं च न कदाऽपि यतस्सहते ॥ २० ॥

மநஸிஜ தாதபாத₃ மநஸ: பரிதுஷ்டிகரம்
ஜநநி ஸமாநமேவ நநு ஸாம ச நாம ச தே ।
அதிஶயமாதி₃மாத் அபரமேவ தத₂ாயயதே
நித₄ந முபத்ரவம் ச ந கதா₃பி யதஸ் ஸஹதே ॥ 20 ॥

जननि அன்னையே!

मनसिज-तातपाद-मनसः மன்மதனின் தகப்பனாரான திருமாலின் திருவுள்ளத்திற்கு

अतिशयं மேன்மையை

अयते அடைகிறது

परितुष्टिकरं உகப்பைச் செய்கின்ற
साम च ஸாமவேதமந்த்ரமும்
तव உன்னுடைய
नाम च திருப்பெயரும்
समानं एव ननु சமமேயன்றோ ?
तथाऽपि ஆனாலும்
आदिमात् முன்னதை (சாமத்தை)க் காட்டிலும்
अपरमेव பிந்தியதே (உன் திருநாமமே)
यत: யாதொரு காரணத்தால்
निधनं 1. நிதநம் என்கிற ஸாமப்பகுதியையும் 2. அழிவையும்
उपद्रवं च 1. உபத்ரவம் என்ற ஸாமப்பகுதியையும் 2. தொல்லையையும்
कदाऽपि ஒரு போதும்
न सहते பொறுத்துக்கொள்வதில்லையோ.

பெருமானை உகப்பிப்பதில் ஸாமமந்த்ரங்களும் உன் நாமங்களும் சமமானவை தான்.

ஆனாலும் சாமங்களுக்கில்லாத ஒரு உயர்வு உன் நாமங்களுக்கு உண்டு. நிதநம் என்றும் உபத்ரவம் என்றும் பரிபாஷைச் சொற்கள். இவைகள் ஸாம மந்த்ரங்களில் உள்ள சில பக்திகள் என்ற பிரிவுகளுக்குப் பெயர். சாந்தோக்யோப நிஷத்தில் காணலாம். அதே சொற்களுக்கு உலக வழக்கில் வேறு அர்த்தங்கள். அழிவு என்றும் தொல்லை என்றும். இதைக் கொண்டு வேடிக்கையாகச் சொல்கிறார். ஸாமங்களுக்கு நிதநமும் உபத்ரவமும் உண்டு; உன் நாமங்களுக்குக் கிடையாது; அதனால் ஸாமங்கள் உன் நாமங்களுக்குச் சமங்களாகா. உன் நாமங்களே உயர்ந்தவை.

இந்தச் சுலோகத்தால் நாமறியும் சாஸ்த்ரார்த்தங்கள் நாலுண்டு:

1. எது எது பகவானுக்கு உகப்பாகும் என்று பார்த்துப் பார்த்து நாம் செயல்கள் புரிய வேண்டும். (பகவத் ப்ரீதியே நமக்குப் பரமலக்ஷ்யம். எல்லா நித்யகர்மங்களிலும் ஸ்ரீபகவதாஜ்ஞயா பகவத் ப்ரீத்யர்த்தம் என்று ஸங்கல்பம் பண்ணிக் கொள்கிறோம். விளக்கேற்றல், மாலை கட்டுதல், முதலிய நம்மாழ்வார். காமதேவ: காமபால: என்று ஸஹஸ்ர நாமத்தில் காண்கிறோம். மன்மதனுக்குத் தந்தையான கதை ஸ்ரீமத் பாகவதத்தில் உள்ளது. ருத்திர கோபத்தால் உடல் எரிந்த மன்மதன் ப்ரத்யும்நனாக வடிவு பெற்ற கதை.)

3. ஸாமகானம் பெருமாளுக்கு மிகவும் ப்ரியமானது. (ஏதத் ஸாம காயந்நாஸ்தே என்றபடி ஸ்ரீ வைகுண்டத்தில் முக்தர்களும் ஸாமம் பாடியல்லவா பகவானை மகிழ்விக்கிறார்கள் ? வேதாநாம் ஸாமவேதோஸ்மி என்று கண்ணனே ஸாமத்தின் பெருமையைச் சொன்னான்றோ ?)

4. ஸாமகானத்தைக் காட்டிலும் சிறந்தது லக்ஷ்மீ நாமகானம்.

காமன் தந்தை உகக்கச் சாமங்களினும் சிறந்து

பூமங்கையே உன்றன் நாமங்கள் தரம் மேலாம்.

21. இடிக்கும் இசைக்கும் இணையான நாமங்கள்:

पापाटोपनिदाघवर्जनकृते पर्जन्यगर्जायते

व्याधिव्यालकुले पतत्पतिगरुद्वातूलनादायते ।

दारिद्र्यद्विरदेन्द्र दारणविधौ सिंहाट्टहासायते

पद्मे तावकनाम संसृतिनिशा प्रत्यूषवाद्यायते ॥ २१ ॥

பாபாடோபநிதாகவர்ஜநக்ருதே பர்ஜந்யகர்ஜாயதே
வ்யாதிவ்யாலகுலே பதத்பதிகருத்வா தூலநாதாயதே ।
தாரித்ர்யத்விரதேந்த்ர தாரணவிதௌ ஸிம்ஹாட்டஹாஸாயதே
பத்மே தாவகநாம ஸம்ஸ்ருதிநிஶா ப்ரத்யூஷவாத்யாயதே ॥ 21 ॥

पाप-आटोप-निदाघ-वर्जन-कृते பாவங்களின் ஸம்பந்தம் என்னும் கோடையை ஒழிப்பதற்காக

पर्जन्यगर्जायते பருவமழை மேகத்தின் இடி முழக்கம் போல் செயல்படுகிறது.

व्याधिव्यालकुले வியாதிகள் என்னும் பாம்புகளின் குழுவில்.

पतत्-पति-गरुत्-वातूल-नादायते பக்ஷிராஜனின் இறக்கைப் பெருங்காற்றின் ஒலி போல் செயல்படுகிறது.

உன் திருநாமம் பாவத்தையும் பிணியையும் ஏழ்மையையும் ஸம்ஸாரத்தையும் அழிக்கிறது.

இதை உருவக அணியுடன் சொல்கிறார்.

பாவக் கோடைக்குப் பருவமழை இடியாம். வியாதிப் பாம்புக்குக் கருடவிறகொலியாம்.

வறுமை யானைக்குச் சிங்கக் கர்ஜனையாம். ஸம்ஸார ராத்திரிக்கு விடிவேளை வாத்தியமாம்.

இந்த உருவகங்கள் எவ்வளவு பொருத்தமானவை என்றால்:

பாவம் கொளுத்தும் கோடை போல். வியாதி வருத்தும் வியாளம் போல்.

வறுமை நசுக்கும் யானை போல். ஸம்ஸ்ருதி மருள் இரவு போல்.

ஆனால் அவற்றிலிருந்து தப்பிக்க வழி உண்டு.

கடுமையாய்க் கடிக்கும் கருநாகம் கருடனைக் கண்டால் கழன்றுவிடும்.

கொடியதாய்க் கொளுத்தும் கோடையோ கொட்டும் மழையால் குன்றிவிடும்.

செருச் செயற் சிறந்த யானையும் சிங்கத்தின் சீறலால் சிறுத்து விடும்.

இன்னலாய் இருள் கவிக்கும் இரவும் விடியல் வந்ததும் விரைந்தோடும்.

திருமகளின் திருநாமமாகிற ஒரே ஒலி இடியோசையாகவும், இறக்கைப் புயலாகவும், சிங்கக் கர்ச்சனையாகவும், ஸுப்ரபாத மெல்லிசையாகவும் இடத்திற்கேற்ப மாறுவது விந்தை. அதைக் கேட்டவுடனே

பாவம் பதைபதைக்கும்.

வியாதி விதிர்விதிர்க்கும்.

வறுமை வெலவெலக்கும்.

பிறவி பிசுபிசுக்கும்.

இந்த நான்கும் பயந்து நடுங்கும் உன் திருநாமவொலி இருக்குமிடத்தில்.



22. மங்களங்கள் மங்காமல் மன்ன வைக்கும் நாமங்கள்.

राजीवायतनेति दैत्यजिदुरोरक्षेति लक्ष्मीरिति
क्षीराब्धेर्दुहितेति कैटभरिपोर्दारा इति श्रीरिति ।
श्रेयस्साधनदेवतेति जगतां मातेति सीतेति च
प्रातर्मातरुपास्महे कृतशुभस्थेमानि नामानि ते ॥ २२ ॥

ராஜீவாயதநேதி தைத்யஜிதுரோரக்ஷேதி லக்ஷ்மீரிதி
க்ஷீராப்தேர்துஹிதேதி கைடபரிபோர் தாரா இதி ஸ்ரீரிதி ।
ஶ்ரேயஸ்ஸாதந தேவதேதி ஜகதாம் மாதேதி ஸீதேதி ச
ப்ராதர் மாதருபாஸ்மஹே க்ருதஶுப ஸ்தேமாநி நாமாநி தே ॥22॥

मातः அன்னையே
राजीवायतनेति பத்மநிலயா என்றும்
दैत्य-जित्-उरो-रक्षा-इति அசுரர்களை வென்ற திருமாலின் மார்வுக் காப்பு என்றும்
लक्ष्मीः-इति லக்ஷ்மி என்றும்
क्षीर-अब्धे-दुहिता इति பாற்கடலின் மகள் என்றும்
कैटभ-रिपोः-दाराः इति கைடப சத்ருவின் மனைவி என்றும்
श्रीः इति ஸ்ரீ என்றும்
श्रेयः - साधन - देवता इति ஶ்ரேயஸ்ஸுக்கு உபாயமான தேவதை என்றும்
जगतां माता इति உலகங்களுக்குத் தாய் என்றும்
सीता इति च ஸீதை என்றும்
प्रातः காலைப் பொழுதில்
कृतशुभस्थेमानि மங்களங்களை ஸ்திரமாக நிலைநிறுத்துகிற
ते नामानि உன் திருநாமங்களை
उपास्महे உபாஸிக்கிறோம்

உன்னுடைய நாமங்கள் மங்களங்களை ஸ்திரப்படுத்துகின்றன. பத்மாலயா, விஷ்ணுவக்ஷஸ்தலஸ்திதா, லக்ஷ்மீ, ஸமுத்ரதநயா, ஸ்ரீ, மங்கள தேவதா, ஜகந்மாதா, ஸீதா, இது போன்ற நாமங்களைக் காலைப் பொழுதுகளில் தியானிக்கிறோம்.

அரவிந்தத் தமர்ந்தவளே அலைகடலின் அருமகளே
அசுரரைவெல் அச்சுதனின் அகலத்தில் அணிகாப்பே
அண்டத்திற் கன்னையே அரும்பேற்றை அளிப்பவளே
அருள் வடிவே அரியணங்கே அம்புஜமே ஸீதையே

என்றெல்லாம் சொன்னால் எங்களுடைய ஆயுராரோக்ய ஐச்வர்யாதி ஸகல மங்களங்களும் ஸ்திரமாகின்றன.

அகலாத மங்களத்தை அருளும் உன் நாமங்கள்.
அதனாலே அனுதினமும் அதிகாலை அவை சொல்வோம்.

சொல்வது மட்டுமன்றி, உபாஸ்மஹே, தியானிக்கிறோம் என்கிறார். நாமங்களைத் தியானிப்பதாவது, அர்த்தாநுஸந்தானம் பண்ணி, மனதை அதில் ஒரு முகப்படுத்துவது. உதாரணமாக, ஸ்ரீ என்கிற திருநாமத்திற்கு ஆறு அர்த்தங்களை அனேக இடங்களில் ஸ்வாமி தேசிகன் அருளுகிறார். **வேண்டுரை கேட்டு, மீண்டவை கேட்பித்து, ஈண்டியவினைகள் மாண்டிட முயன்று, தன்னடி சேர்ந்த தமருனை யணுக நின்னுடன் சேர்ந்து நிற்கும் நின் திருவே** என்று மும்மணிக் கோவையில் உள்ளது. நமக்குச் செவிசாய்ப்பவள், பெருமாளுக்குப் பரிந்துரைகளை செவி சாய்க்கப் பண்ணுபவள், தீவினை தீர்ப்பவள், புகலானவள், திருமாலை நித்யமாக ஆஸ்ரயித்தவள், நம்மைப் பெருமாளிடம் ஆஸ்ரயிக்கச் செய்பவள் என்று ஆறு அர்த்தங்கள்.

இதே போல, லக்ஷ்மீ என்பதற்கும் அடையாளமாக நின்று இன்னார் தான் பரதேவதை என்று காட்டுபவள் என்ற அர்த்தம் உண்டு. இவளுடைய அடிச் சுவடுகள் முராரியின் மார்பில் இருப்பதால் வேதாந்தங்கள் தத்வநிஷ்கர்ஷம் பண்ணுகின்றன. என்கிறார் பட்டர், கருமாலைப் பொன்மேனி காட்டாமுன் காட்டும் திருமாலை நங்கள் திரு என்கிறார் பூதத்தாழ்வார்.

ராஜீவாயதநா என்கையில் அநுஸந்திக்கக் கூடிய அர்த்தங்களை அடுத்த ஸ்தபகத்தில் சொல்லப் போகிறார்.

தைத்யஜிதுரோ ரக்ஷா என்பதற்குப் பெருமாளின் மார்பை ரக்ஷையாகக் கொண்டு அதில் பத்திரமாக இருப்பவள் என்ற அர்த்தத்தைக் காட்டிலும் எளிதானதும் சிறந்ததுமான வேறொரு அர்த்தம் உண்டு. இவள் பெருமாள் மார்பில் காப்பாக உள்ளவள். இவள் ரக்ஷையாக இருப்பதால் தான்

பெருமான் தைத்யர்களை ஜயிக்க முடிகிறது. ஜயலக்ஷ்மியான இவள் அவருடைய மார்பில் நித்ய வாஸம் பண்ணும்போது அவர் தைத்யஜித் ஆவதில் வியப்பில்லை.

சில பேர் ஐச்வர்யங்கள் நிலைக்காதவை ஆதலால் லக்ஷ்மி சஞ்சலை என்கிறார்கள். அதற்கு மாறாக இந்தக் கவி சொல்கிறார். ஐச்வர்யங்கள் கிடைப்பதற்கு எப்படி லக்ஷ்மி கடாட்சம் வேண்டுமோ, அதே போல கிடைத்த ஐச்வர்யங்கள் நிலையாகத் தங்குவதற்கும் அவளுடைய திரு நாமங்களை ஜபிப்பது வழியாகும் என்கிறார்.

ப்ராத: காலைப் பொழுதில், உபாஸிக்கிறோம் என்கிறார். உபாஸநம் என்கிற தியானம், ஜபம், க்ரந்த கால க்ஷேபம், இவற்றிற்கெல்லாம் காலைப் பொழுது ஏற்றது. மனஸ்ஸை ஒரு முகப்படுத்தத் தகுந்த தருணம் காலை வேளை.

23. சிறியனவாயினும் சீரிய நாமங்கள்

अश्चत्पञ्चषवर्णमर्णवसुते त्वन्नाम कर्णामृतं
मत्पापानि महत्तराण्यपि मुहुर्मुष्णाति कृष्णाङ्गने।
अक्षीणि प्रतिरुन्धदन्धतमसं गेहेषु भूयिष्ठमपि
अङ्गुष्ठप्रमितैव दीपकलिका हा हन्त नो हन्ति किम् ॥ २३ ॥

அஞ்சத்பஞ்சஷவர்ணம் அர்ணவஸுதே த்வந்நாம கர்ணாம்ருதம்
மத்பாபாநி மஹத்தராண்யபி முஹுர்முஷ்ணாதி க்ருஷ்ணாங்கநே
அக்ஷீணி ப்ரதிருந்ததந்ததமஸம் கேஹேஷு பூயிஷ்டமபி
அங்குஷ்டப்ரமிதைவ தீபகலிகா ஹா ஹந்த நோ ஹந்தி கிம் ॥ 23 ॥

अर्णवसुते கடலின் பெண்ணே !
कृष्णाङ्गने கிருஷ்ணனின் மனைவியே !
अञ्चत्—पञ्चष—वर्णं கோர்வையான அஞ்சாறு எழுத்துகள் (மட்டும்) கொண்டதும்
कर्णामृतं காதுக்கு அமுதமானதுமான
त्वन्नाम உன் பெயரானது
महत्तराणि மேலும் பெரியவையான
मत्—पापानि अपि என் பாவங்களைக் கூட
मुहुः அடிக்கடி
मुष्णाति அபஹரிக்கிறது
अक्षीणि கண்களை
प्रतिरुन्धत् மறைப்பதும்
गेहेषु வீடுகளில்

भूयिष्टं மிக அதிகமானதுமான	दीप–कलिका விளக்குமொட்டானது
अन्धतमसं अपि காரிருளைக் கூட	नो हन्ति किं அழிக்கவில்லையா என்ன ?
अङ्गुष्ठ–प्रमिता एव கட்டைவிரலளவே கொண்ட	हा हन्त வெகு ஆச்சரியம்.

உன்னுடைய நாமங்கள் சிறியவை. அஞ்சாறு எழுத்துகள் தான். அர்ணவஸுதா, ஹரிவல்லபா, கமலாஸநா முதலிய நாமங்கள் ஐந்தாறு எழுத்துக்கள் தானே உள்ளன ?

இதற்கு மாறாக, என்னுடைய பாவங்கள் மிகப் பெரியவை. கொடியவை.

ஆனாலும் உன்னுடைய சின்ன நாமங்கள் என்னுடைய பெரிய பாவங்களையும் போக்கடிக்கின்றன.

இது எப்படி சாத்தியம் என்று முதலில் ஆச்சரியமாக இருக்கிறது.

(எறும்பைக் கொண்டு யானையை விரட்ட முடியுமா ? துரும்பைக் கொண்டு கடலைத் தாண்ட முடியுமா ? அரும்பைக் கொண்டு பாறையைப் பிளக்க முடியுமா ? இரும்பைப் பொடிக்க நெருஞ்சில் முள்ளால் முடியுமா ?)

அபசாரங்கள், துரோகங்கள், வஞ்சனைகள், சாஸ்த்ராதிலங்கநங்கள், என்று பல கொடூரத் தீவினைகள் நான் புரிந்திருக்கிறேன். இதை மத்பாபாநி மஹத்தராணி என்கிறார்.

ஒரு கால் அவற்றை அழித்தாலும் பொல்லாதவனான நான் மேன்மேலும் பாவம் புரிவதால் அடிக்கடிப் பாவநாசம் தேவைப்படும். இதை முஹு: என்ற சொல்லால் குறித்தார். அவ்வளவு சுலபமாக நான் அவற்றிலிருந்து தப்ப முடியாது. பல்லாண்டு காலம் பிராயச்சித்தம் பண்ணவேண்டியிருக்கும். அஞ்சாறு எழுத்துக்களைச் சொல்லி அழிக்கக்கூடுமோ அவ்வளவு பெரிய துரிதங்களை ? சாந்திராயண வ்ரதம் என்றும் ப்ராஜாபத்யகிருச்சிரம் என்றும் இவ்வாறான சிரகால ச்ரமஸாத்தியமான பெரிய பெரிய கழுவாய்கள் அல்லவா பெரிய பெரிய பாவங்களைத் தொலைக்கும் ?

ஆனால் உன் சின்ன திருநாமம் எப்படி என் பெரிய பாவங்களை அழிக்கிறது ? ஆச்சரியமாக உள்ளதே ? என்று முதலில் வியந்தாலும், ஒரு த்ருஷ்டாந்தத்தின் வாயிலாக இதில் ஏதும் வியப்பில்லை எனத் தெரிகிறது.

வீட்டில் பெரிய கூடம் முழுவதும் வியாபித்த இருட்டை, கீழே தரை முதல் மேலே கூரை வரை பரவிய இருளை, அடர்ந்ததும் படர்ந்ததுமான அந்தகாரத்தை, ஒரு மிகச் சிறிய விளக்கின் ஜ்வாலை, நொடிப் பொழுதில் அழித்துவிடுவதில்லையா ? கட்டைவிரல் அளவில் மலர்மொட்டு போன்ற உருவில், சின்னஞ்சிறியதொரு சுடர், பூதாகாரமான இருட்டைக் கூட, கருத்த பெருத்த நிசியிருளைக் கூட, இருந்த இடம் தெரியாமல் முழுமையாக அழித்து விடுவதைப் பார்க்கிறோமே. சிறிய விளக்குச் சுடர் போல் உன் பெயர். கன இருட்டு போல் என் பாவக்குவியல். எல்லாப் பாவங்களும் நிச்சேஷமாகத் தொலைகின்றன உன் பெயரால். இதிலேதும் வியப்பில்லை.

அஞ்சத்பஞ்ச என்றும், வர்ணமர்ணவ என்றும், முஷ்ணாதி க்ருஷ்ணா என்றும், ருந்த,தந்த, என்றும், பூ,யிஷ்டம் அங்குஷ்ட என்றும், ஹந்த ஹந்தி என்றும், ஏராளமான ப்ராஸங்களால் வாசிப்பதற்கு இனிமையான சுலோகம்.

க்ருஷ்ணாங்கநே என்று விளித்தது முஷ்ணாதி என்பதுடன் ப்ராஸத்திற்காக மட்டுமில்லை.

திருடுபவன் க்ருஷ்ணன் என்ற புராணப்பிரசித்தியால், அவன் மனைவி என்று இங்கு சொல்வது பொருத்தம். பிராயச்சித்தங்கள் எல்லாவற்றுள்ளும் க்ருஷ்ணாநுஸ்மரணமே பரம் என்று நாம் நித்யம் சொல்லும் சுலோகம் ஒன்றுண்டு, அதன் படியும், பாபாநி மஹத்தராணி முஷ்ணாதி என்னுமிடத்தில் க்ருஷ்ணாங்கநே என்ற விளி மிகப் பொருத்தம்.

விளக்குகிறி தானாலும் 'விலக்குமது பேரிருளை.
விளங்குமுன திருநாமம் விலக்குவதோ வினைத்திரளை.

24, கஷாயத்தைக் காய்ச்சும் நாமங்கள்

अवितुमुदधिकन्यकेऽचिकित्स्यात् मरणजरादिमयात् महामयान्माम् ।
परमविषममान्तरं कषायम् पचति शुचिर्भवदीयनामवर्गः ॥ २४ ॥

அவிதும் உததிகந்யகேசிகித்ஸ்யாத்
மரணஜராதிமயாத் மஹாமயாத் மாம் ।
பரமவிஷமம் ஆந்தரம் கஷாயம்
பசதி ஶுசிர் ப₄வதீய நாமவர்க: ॥ 24 ॥

उदधिकन्यके சமுத்திரத்தின் மகளே !
अचिकित्स्या மருத்துவத்தால் குணப்படுத்தமுடியாததும்
मरण–जरा–आदि–मयात् மரணம், மூப்பு, முதலியபெற்றாலானதுமான
महा–आमयात् பெரிய வியாதியிலிருந்து
मां என்னை
अवितुं காப்பாற்றுவதற்கு
शुचिः भवदीय–नाम–वर्गः
1. உமது பவித்ரமான திருநாமங்களின் திரளானது,
2. உமது நாமவர்க்கம் என்கிற நெருப்பானது
परमविषमं 1. மிகப் பொல்லாததான.
2. உயர்ந்ததும் தீய பக்கவிளைவுகள் இல்லாததுமான
आन्तरं 1. மனதைச் சேர்ந்த.
2. (பாத்திரத்தின்) உள்ளே உள்ள
कषायं 1. ஆசை உணர்ச்சி
2. கஷாயமருந்தை
पचति 1. வெந்து போகச் செய்கிறது.
2. பக்குவமாகக் காய்ச்சுகிறது.

எனக்கு ஒரு மஹாவியாதி. மரணம், ஜரை, இத்யாதிமயமான வியாதி, அதாவது ஸம்ஸாரரோகம். அதிலிருந்து என்னைக் காப்பாற்றுவதற்காகக் கஷாயம் காய்ச்ச வேண்டும். அதைத் தான் உன் நாமாவளி எனக்குச் செய்கிறது. ஆமாம், கஷாயம் காய்ச்சுகிறது. இந்த வார்த்தைக்கு இரண்டு அர்த்தங்கள். கஷாயம் என்றால் வைத்தியர் கொடுக்கும் திரவமருந்து என்பது எல்லோருக்கும் தெரிந்த அர்த்தம். மருந்துப் பொருளைப் பதினாறு மடங்கு நீருடன் கலந்து அடுப்பில் வைத்து நீண்ட நேரம் வேகச் செய்து சுண்டக் காய்ச்சுவார்கள். கஷாயம் என்ற சொல்லுக்கு இரண்டாவது அர்த்தம், உணர்ச்சி

கொளுத்துகிறது, எரித்து அழிக்கிறது உம் நாமவர்கம். எப்படியோ, வியாதி தீரக் கஷாயம் காய்ச்சுகிறது என்று சொன்னது சரியாகிவிட்டது.

நெருப்பு தானே கஷாயத்தைக் காய்ச்சும், நாமாவளி நெருப்பா என்ன ? என்று யோசிக்க வேண்டாம். அப்படித்தான், நெருப்பின் பெயரான ஶுசி என்பது நாமாவளியிலும் உண்டு. ஶுசி என்பதற்கு நெருப்பு என்றும் தூய்மை என்றும் இரு பொருள்கள். உம் நாமவர்கம் சுசியாயிருப்பது தெரிந்தது தானே ?

இன்னொன்றும் பாருங்கள். வைத்தியர் தரும் கஷாயம் உள்ளுக்கு. (மேலே பூசுவதற்கில்லை) திருநாமம் கொளுத்தும் கஷாயமும் உள் கஷாயம் தான். மன அழுக்கு தானே தஹிக்கப்படுகிறது ? பசதி என்ற சொல்லுக்கு ஒரே அர்த்தமானாலும் அழியும்படி காய்ச்சுகிறது என்றும் சரியான பக்குவத்திற்குக் காய்ச்சுகிறது என்றும் தாத்பர்யபேதம் உண்டு.

இப்படி வைத்தியசாலை நெருப்புக்கும் உம் நாமாவளிக்கும் ஒற்றுமைகள்:

1. இரண்டும் கஷாயம் காய்ச்சுபவை (கஷாயபதத்தின் அர்த்தம் வெவ்வேறு என்பது கிடக்கட்டும்).

2. இரண்டும் ஶுசி (ஶுசிபதத்தின் அர்த்தம் வெவ்வேறு என்பது கிடக்கட்டும்).

3. இரண்டுக்கும் கொடிய வியாதியைத் தீர்ப்பது தான் குறிக்கோள் (ஸம்ஸாரரோகம் என்பது உருவகம் தான் என்பது கிடக்கட்டும்).

4. இரண்டும் காய்ச்சுகிற கஷாயம் ஆந்தரம் தான்.

5. இரண்டு கஷாயமுமே பரமவிஷமம்.

பரம — விஷமம் என்று பிரித்தால், அத்யந்தம் பொல்லாதது (இந்த மனக்கஷாயம்) என்று அர்த்தம்.

பரம் — அவிஷமம் என்று பிரித்தால், சிறந்தது; (பக்க விளைவுகளாக) தீங்கு விளைவிக்காதது என்று அர்த்தம். ஒரு

நல்ல மருந்துக்குத் தேவையான இரு பண்புகள் இவை.

லக்ஷ்மி நாமாவளிக்கும் ஆயுர்வேத அக்கினிக்கும் சிலேடை சுவாரசியமாக அமைந்து விட்டது.

இந்த மாதிரிச் சிலேடைகளை அழகாக அமைப்பதில் நிபுணர் வெங்கடாத்வரி

அடுத்தச் சுலோகத்திலேயே இதே போல் இன்னொன்று.

சொல் வேடிக்கைகள் ஒரு புறம் இருக்கட்டும். விஷயங்களைக் கவனிப்போம்.

1. ஸம்ஸாரம் ஒரு பிணி. அதிலுள்ள சிற்றின்பங்களில் ஏமாற வேண்டாம். சொறிவியாதியில் கூடத்தான் சொறியும் போது இன்பம் கிடைக்கிறது. அதற்காக அதை நாம் விரும்பலாமோ ?

2. அதைத் தீர்க்க வழி மனத்தூய்மை. மனசில் கொந்தளிப்பும் ஆசாபாசங்களும் இருக்கக் கூடாது.

3. இந்த மனத்தூய்மை பெற வழி திருமகளின் நாமாவளியைச் சொல்வது. அது மனக்கஷாயத்தை நெருப்புப் போல் சுட்டெரித்துவிடும்.

4. லக்ஷ்மி தூய்மை வடிவினள். பரிசுத்தத் தன்மை தெய்வத் தன்மைக்கு அடுத்தது என்று ஓர் ஆங்கிலப் பழமொழி உண்டு. பெருமாளுக்கு அடுத்தபடியாகத் தாயார் என்பதன் எதிரொலியாகக் கொள்ளலாம் அதை.

கடும் நோயைக் கழிப்பதற்குக் கஷாயத்தைக் காய்ச்சுகின்ற கனலுக்குச் சமமாகும் கடற்கன்னி நாமங்கள்.

(தொடரும்)



25. பொன் போல் பொலியும் நாமங்கள்

कृतशुभतति धारितं कृतार्थैः
भगवति भोग्यमतीव पावनं च।
अभिदधति सुवर्णमात्मवन्तः
प्रशमितदुर्गति नाम तावकीनम् ॥ २५ ॥

க்ருதஶுபததி தாரிதம் க்ருதார்த்தை:
பகவதி போக்யம் அதீவ பாவநம் ச ।
அபிதததி ஸுவர்ணம் ஆத்மவந்த:
ப்ரஶமிததுர்கதி நாம தாவகீநம் ॥ 25 ॥

भगवति பகவதி லக்ஷ்மியே!
कृतशुभतति மங்களத்தொடரைப் பண்ணுவதும்
कृतार्थैः பாக்கியசாலிகளால்
धारितं சூட்டப்பட்டதும்
भोग्यं மதுரமானதும்
अतीव மிகவும்
पावनं च பரிசுத்தப்படுத்துவதும்
सुवर्ण நல்ல எழுத்துகள் கொண்டதும்
नाम பெயரை
कृतशुभतति சுப நிகழ்ச்சிகளில் பரவி நிற்பதும்
कृतार्थैः பணக்காரர்களாலே
धारितं அணியப்பட்டதும்
भोग्यं போகானுபவத்திற்குத் தகுந்ததும்
अतीव மிகவும்
पावनं च பரிசுத்தமானதும்
प्रशमितदुर्गति ஏழ்மையை ஒடுக்குவதுமான
सुवर्ण தங்கமாக
आत्मवन्तः அறிஞர்கள்
अभिदधति சொல்லுகிறார்கள்

பகவதி லக்ஷ்மியே! உன் பெயர் தங்கம் போலிருக்கிறது. எப்படியென்றால்:

1. இரண்டுமே மங்களவரிசைகளைப் பண்ணுபவை. உன் பெயரைச் சொல்பவர்களுக்கு வரிசை வரிசையாக மங்களங்கள் நிகழ்கின்றன. விவாஹம் முதலிய எல்லாச் சுபங்களும் தங்கத்தைக் கொண்டு தான் நடக்கின்றன.

2. இரண்டுமே க்ருதார்த்தர்களால் பூணப்படுபவை. கிருதார்த்தர் என்பதற்கு இரண்டு பொருள்கள். கொடுத்து வைத்தவர்,

பாக்கியவான்கள், என்று முதல் அர்த்தம். இந்த தந்யர்கள் லக்ஷ்மிநாமங்களைப் பெயராகச் சூட்டுகிறார்கள். பணம் பண்ணினவர்கள் என்று இன்னொரு அர்த்தம். தனிகர்கள் தங்க நகைகளை அணிகிறார்கள். எப்படியோ, இரண்டுமே கிருதார்த்தர்கள் அணிவது.

3. இரண்டுமே போக்யம். திருநாமம் நாக்குக்கும் மனதிற்கும் இனியது. தங்கம் ஆண்டு அனுபவிக்கக் கூடியது. அதனால் தானே மண்ணாசை பெண்ணாசை போல் பொன்னாசை மக்களை ஆட்கொள்கிறது ?

4. இரண்டுமே பரிசுத்திக்குப் பெயர் போனவை. திருநாமங்களால் வாக்குத் தூய்மையும் மனத்தூய்மையும் உண்டாகும். தங்கம் ஸ்வத: சுத்தமானது. புளி–மண்–சாணி இடாமலே வெறுமனே அலம்பினால் சுத்தமாகிறது. மற்றவற்றையும் சுத்தமாக்குகிறது

5. இரண்டுமே சுவர்ணம். வர்ணம் என்றால் எழுத்து. நல்ல எழுத்துக்களாலானதால் திருநாமம் ஸுவர்ணம். தங்கத்திற்கோ சுவர்ணம் என்று பர்யாயமான பெயரே உண்டு.

6. இரண்டுமே துர்க்கதியை ஒழிக்கும். திருநாமம் சொல்பவனுக்கு நரகம் முதலிய தீக்கதி கிடையாது. நாமஸங்கீர்த்தனம் இருக்க, தீக்கதிக்கண் செல்லும் திறம் என்னே ? என்று வினவுகிறார் பொய்கை ஆழ்வார். அது லக்ஷ்மிநாமங்களுக்கும் பொருந்தும் என்கிறார் இந்தக்கவி.

இப்படி ஆறு ஒப்புமைகள் வலுவாக இருப்பதால் தாயாரின் திருநாமங்களுக்கும் தங்கத்திற்கும் சிலேடை போக்யமாக அமைந்துவிட்டது.

க்ருதபாபததி என்பதற்கு வேறொரு அர்த்தமும் சொல்லலாம். விவாஹாதி சுபநிகழ்ச்சிகளில் ததியை–பரவுதலை–பண்ணுவது என்று. ஸ்ரீபகவதாஜ்ஞயா என்ற ஸங்கல்பம் தொடங்கி லக்ஷ்மீ கல்யாணம் வைபோகமே என்ற பாட்டு உட்பட, அஸ்மிந் கேஹே மஹாலக்ஷ்ம்யா: என்னும் ஸ்வஸ்தி முடிய எத்தனை தடவை லக்ஷ்மியின் திருநாமங்கள் ? அதே போல, இமாம் ஸௌவர்ணீம்

தக்ஷிணாம் என்ற அநுஜ்ஞை தொடங்கி, ஹிரண்யகர்ப்பகர்ப்பஸ்தம் ஹேமபீஜம் என்ற தானம் உட்பட எத்தனையோ தடவை தங்கத்திற்குத் தனியிடம் உண்டு. இதனாலும் இவ்விரண்டுக்கும் ஒப்புமை.

ஸுவர்ணம் என்பதற்கு நல்ல எழுத்துகளாலான என்பது இரண்டு அர்த்தங்களில் ஒன்று. அப்படியானால் எழுத்துகளில் நல்லவை கெட்டவை என்ற பாகுபாடு உண்டா ? என்று கேட்டால், ஆமாம், உண்டு. அ என்கிற எழுத்து நல்லது. ம என்கிற எழுத்து நல்லதில்லை. என்றிவ்வாறாக மல்லிநாதர் சொல்லுகிறார்: காவியங்களை நல்ல எழுத்தில் தான் தொடங்க வேண்டும். இதற்கு வர்ணசுத்தி என்று பெயர். ஆனால் லக்ஷ்மியின் பெயரில் தொடங்கினால் எந்த எழுத்தானாலும் பரவாயில்லை என்று முன்னோர் கருத்து.

அதனால் பிராட்டி திருநாமங்களில் எல்லாமே நல்ல எழுத்து தான்.

இப்படிப்பட்ட ச்லேஷாலங்காரத்தால் வந்த ஸாத்குச்யத்தைப் பண்டிதர்கள் மட்டுமே ரசிப்பர். ஆதலால் அறிஞர்கள் திருநாமத்தைத் தங்கம் என்பர் என்கிறார்.

இந்தச் சுலோகத்தில் சொன்ன நல்லுரைகள் வருமாறு:

1. உங்களுக்குச் சோபனபரம்பராவாப்தி வேண்டுமா ? மஹாலக்ஷ்மியின் திருநாமங்களால் அது கிட்டும்.

2. அவள் பெயரைச் சூட்டிக்கொள்ளுங்கள். குழந்தைகளுக்கும் சூட்டுங்கள். அப்படிச் செய்வாரே பாக்யசாலிகள். நம்பி பிம்பியென்று நாட்டுமானிடப் பேர் இட வேண்டாம் என்று ஒரு ஆழ்வார் சொன்னார் அல்லவா ?

3. அவள் நாமத்தைச் சொல்பவர்கள் நரகம் போக மாட்டார்கள். நாரணன் தம்மன்னை நரகம் புகாள் என்று பெரியாழ்வார் சுவைபடச் சொன்னது போல். இந்த நல்லுரையை மறுபடி அடுத்த சுலோகத்தில் வேறு விதமாகச் சொல்லப் போகிறார் கவி.

சுபங்களை நிகழ்த்தலால் சுகிர்திகள் கூடலால்
சுகம் சுசி சேர்ப்பதால் சுவர்ணமாம் திருப்பெயர்.

26. கேட்டாலே கேடு நீக்கும் நாமங்கள்

हरिसखि तव धूतक्लेशभूमानि नामा
न्यहरहरहमुद्यत्भक्तिराकर्ण्य धन्यः ।
जहि दलय बधान छिन्धि भिन्धीति घोरम्
यमभटरटनं तत् भूरि दूरीक्रियासम् ॥ २६ ॥

ஹரிஸகி தவ தூதக்லேஶபூமாநி நாமாநி
அஹரஹரஹம் உத்யத்பக்திராகர்ண்ய தந்ய: ।
ஜஹி தலய பதாந ச்சிந்தி பிந்தீதி கோரம்
யமபடரடநம் தத் பூரி தூரீக்ரியாஸம் ॥ 26 ॥

हरिसखि திருமாலின் தோழியே !
तव உன்னுடைய
धूत-क्लेश-भूमानि அதிகத் துன்பங்களை உதறிய
नामानि பெயர்களை
अहरहः தினந்தோறும்
अहं நான்
उद्यत्-भक्ति உதிக்கும் பக்தி உடையவனாய்
अकार्ण्य கேட்டு
धन्यः பேறு பெற்றேன்.
तत् ஆகையாலே
जहि அடி
दलय வெட்டு
बधान கட்டு
छिन्धि பிள
भिन्धि நொறுக்கு
इति என்கிற
यम-भट-रटनं யமபடர்களின் சத்தத்தை
भूरि நிறைய
दूरीक्रियासं தூரத்தள்ளுவேனாக

ஹரிப்ரியையே ! நான் உன் திருநாமங்களை (பிறர் சொல்லும்போது காது கொடுத்து) கேட்டேன்.

எனக்கு இருந்த ஏராளமான துன்பங்கள் விலகின. இப்படித் துயரங்களை ஒழிக்கும் உன் திருநாமங்களைத் தினந்தோறும் கேட்கலானேன். எனக்குள் லக்ஷ்மிபக்தி உதித்தது. பக்தியுடன் மேன்மேலும் கேட்டு நான் தந்யனானேன். இதன் பயனாக நான் நற்கதி பெறுவேன். யமதூதர்கள் அடி, உதை, குத்து, வெட்டு, பிள, கிழி,

நொறுக்கு, உடை, என்றெல்லாம் சொல்லிக் கொண்டு ஹிம்ஸிப்பார்களாமே, அதிலிருந்து நான் தப்பிவிட்டேன். என் காதில் அந்தக் கோரமான வார்த்தைகள் விழாமலிருக்கட்டும். அந்தப் பயங்கரச் சொற்களை நான் வெகுதூரத்தில் தள்ளுவேனாக.

இப்போது சில இனிய சொற்களை (உன் திருநாமங்களை)க் கேட்டதன் பலனாகப் பிற்காலத்தில் சில கடுஞ்சொற்களை (யமபடர்களிடமிருந்து) கேட்கவேண்டிய நிலை வராமல் போகும். சிந்தி பிந்தி என்ற சொற்கள் க்ரூரமானவை என்று வேதமே சொல்லியது. छिन्धी भिन्धी हन्धी कट् इति वाचः क्रूराणि (தைத், ஆர.7-68) யமலோகயாதனைகளின் கொடுமைகளை வருணிக்கும் புராணங்களைக் கேட்கும் போதே பயமாயிருக்கிறது. உன் நாமங்களைக் கேட்டால் அந்த கோரங்களைக் கேட்க வேண்டாம்.

(குலசேகரர் சொன்னார்: பயப்படாதே மூடமனமே ! யமலோகயாதனைகளை நினைத்துப் பயப்படாதே. இந்தப் பாவங்களாகிற பகைவர்கள் நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது. நமக்கு ஸ்வாமி லக்ஷ்மீதரனல்லவோ ? என்று.) அத்தகைய பெருமை லக்ஷ்மிக்கு.

இந்தக் கவி வேடிக்கையாகச் சொல்லுகிறார். காதில் திருவின் பெயர்கள் முதலில் புகுந்துவிட்டால் பிறகு யமபடரின் கடும் சொற்கள் புக முடியாதாம். ஏதோ முதலில் உள்ளே நுழைந்தவர் தமக்கு வேண்டாதவர் உள்ளே வராதபடி தடுப்பது போல. தடுக்கும் தேவை கூட வராது. யமபடரின் வசவுகள் கிட்டவரவே வராமல் தூரத்தள்ளிப் போகும். (சிங்கம் இருக்கும் குகையில் சிறுநாய் போகத் துணியுமோ ?) பிராட்டியின் பெயர் எந்தக் காதில் போயிற்றோ அந்தக் காதுக்கு அருகில் யமபடமிரட்டல்கள் வருமோ ? யமனே பயந்து நடுங்குவான் அந்தக் காதின் சமீபத்தில் வருவதற்கு. (யமன் சொல்லியிருக்கிறான்: படர்களே ! நான் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் பிரபு இல்லை. அவர்களை நெருங்காதீர்கள் என்று.)

அரியன்பின் அமுதுபெயர் அனுதினமும் கேட்டேன் நான்.
அதனாலே யமபடரின் அவச்சொற்கள் கேளேனே.

இந்தச் சுலோகத்தில் நாமறியும் சாஸ்த்ரார்த்தங்கள் நாலு:

1. கீர்த்தனம் போலே கேட்பது கூட ஒன்பது வகைப் பக்திகளில் ஒன்றாகும். எவன் இதை (ஸஹஸ்ரநாமத்தை) தினமும் கேட்கிறானோ எவன் சொல்கிறானோ, என்ற சுலோகத்தின் (யஇதம் ச்ருணுயாத் நித்யம், ய: சாபி பரிகீர்த்தயேத்) கருத்துப்படி கேட்பதற்கு முக்கியத்துவம் உண்டு.

2. திருநாமங்களைத் தினமும் கேட்டால் பக்தி உண்டாகும். உத்யத்பக்தி என்கிறார்.

3. திருநாமங்களைக் கேட்டால் பல பேறுகளைப் பெறலாம். ஆகர்ண்ய தந்ய: என்கிறார்.

4. நமனும் முற்கலனும் பேச நரகில் நின்றார்கள் கேட்க என்று திருமாலையில் பாசுரத்தில் சொன்னபடி எதேச்சையாகக் கேட்டாலும் நரகத்திலிருந்து விடுதலை அளிப்பது திருநாமம். நாள்தோறும் பக்தியுடன் கேட்பவர் குறித்துக் கேட்பானேன்? யமபடரடநம் தூரீக்ரியாஸம் என்கிறார்.

கேசவனின் மாதின்பேர் கேட்டாலே போதாதோ ?
கேதமிகு நரகத்துக் கேடேதும் கிட்டாதே.



अप्राप्तकालं वचनं बृहस्पतिरपि ब्रुवन् ।
प्राप्नुयात् बुद्ध्यवज्ञानं अपमानं च शाश्वतम् ॥

அந்தந்த நேரத்திற்குப் பொருந்தாததைக் கூறுபவன், பிருஹஸ்பதியாயினும் தன் அறிவின்மையை வெளிப்படுத்துவதுடன் நிலைத்த அவமதிப்பையும் பெறுகிறான்.

27. காமதேனுவாய்க் கறக்கும் நாமங்கள்



स्वपदन्यसनेन चारुवर्णा
सुरवागोष्ठविशुद्धिहेतुभूता।
कमले मम कांक्षितानि
दुग्धे स्तवनार्हा तव नामकामधेनुः ॥ २७ ॥

ஸ்வபதந்யஸநேந சாருவர்ணா
ஸுரவாகோஷ்டவிஶுத்தி₄ஹேதுபூ₄தா ।
கமலே மம காங்க்ஷிதாநி து₃க்தே₄
ஸ்தவநார்ஹா தவ நாமகாமதே₄நு: ॥ 27 ॥

कमले - கமலையே !
चारु-वर्णा - அழகிய வர்ணங்களை (1. எழுத்துகளை, 2. நிறங்களை)க்கொண்டதும்
स्व-पद-न्यसनेन - தன் பதத்தை (1. சொல்லை, 2. அடியை) வைப்பதால்
सुर-वाक्-ओष्ठ-विशुद्धि-हेतु-भूता - தேவர்களின் வாய்களினுடையவும் உதடுகளுடையவும் தூய்மைக்குக் காரணமானதும்
सु-रवा - நல்ல ஒலி உள்ளதும்
गोष्ठ-विशुद्धि-हेतु-भूता - மாட்டுக்கொட்டகையின் தூய்மைக்குக் காரணமானதும்
स्तवनार्हा - போற்றற்குரியதுமான
तव - உன்னுடைய
नामकामधेनुः - பெயர் என்கிற காமதேனுப்பசு
मम - என்னுடைய
कांक्षितानि - விருப்பங்களை
दुग्धे - கறக்கிறது.

இது முதல், ஐந்து சுலோகங்களில் இருபொருட் சொற்களைக்கொண்டு வேடிக்கைகள். இந்தச் சுலோகத்தில் லக்ஷ்மிநாமத்திற்கும் காமதேனுப்பசுவுக்கும் சிலேடை. இரண்டுமே அழகிய வர்ணமுள்ளவை. பெயரில் எழுத்தாகிற வர்ணம். பசுவில் நிறமாகிற வர்ணம். இரண்டுமே பதம் வைப்பதால் பரிசுத்தி பண்ணுபவை. பெயரில் சொல் பதம். பசுவில் கால். இரண்டுமே ஸுரவாகோஷ்டத்துள்ளவை எனலாம். ஸுர -வாக் - ஓஷ்ட என்று பதம் பிரித்தால், தேவர்களின் வாயுதடுகளில் என்று பொருள் ஆகி

திருநாமத்திற்குப் பொருந்துகிறது, தேவர்களும் கீர்த்திப்பதால் ஸு-ரவா என்றும் கோஷ்ட என்றும் பிரித்தால் பசுவுக்குப் பொருந்துகிறது. அம்மே என்று நல்ல சத்தம் கொண்டதாலும், கொட்டகையில் இருப்பதாலும். இரண்டுமே போற்றற்குத் தகுந்தவை. லக்ஷ்மியைப் போற்றுவதற்கு, அவள் நாமங்கள் தகுந்தவை. காமதேனு போற்றத்தக்கது.

இரண்டுமே விரும்பியதெல்லாம் தருபவை.

இப்படி ஐந்து ஸாத்ருச்யங்கள் உள்ளன.

அதனால் உன் பெயர் என்கிற காமதேனு என்ற உருவகம் மிகப்பொருத்தம்.

பதம், வர்ணம், என்பவற்றுக்கு இருவேறு அர்த்தங்கள் இருப்பதாலும், ஸுரவாகோஷ்டம் என்பது இருவேறு வகையாய்ப் பிரிக்கும்போது இருவேறு பொருள் தருவது பண்டிதபோக்யமாயிருப்பதாலும் சுவாரசியம் கூடிவிட்டது. போற்றற்குத் தகுந்தது என்றவிடத்தில் இருபொருட்சொற்கள் இல்லாவிடினும் வெவ்வேறு தாத்பர்யங்களுக்கு இடமளித்ததும் சுவாரசியம்.

இனி அர்த்தவிசேஷங்களைக் காண்போம்.

1. மனிதர்கள் மட்டுமா திருமகள் திருநாமங்களைச் சொல்கிறார்கள் ? இல்லை, தேவர்களும் தான். சொல்லப் போனால், லக்ஷ்மி அஷ்டோத்தரம் முதலியவையெல்லாம் தேவர்களுக்காகத்தான் முதலில் ஏற்பட்டன.

2. வாயுதடுகளில் பொய்புளுகு, கோள்கடுஞ்சொல், வம்புதும்பு, பீத்தல்பேத்தல், இவற்றால் மாசு ஏற்பட்டிருந்தால் கமலையின் நாமத்தைச் சொல்லுங்கள். மாசு நீங்கும். தூய்மை உண்டாகும்.

3. லக்ஷ்மியைத் துதிப்பதற்குப் பல ஸ்தோத்ரங்கள் இருந்தாலும், நாமாவளிகள் மிகத் தகுந்தவை.

4. உங்கள் அபீஷ்டங்கள் எல்லாம் நிறைவேற வேண்டுமா ? காமதேனுவைப் போய்க் கேளுங்கள். எல்லாம்

கிடைக்கும். அல்லது லக்ஷ்மிநாமஸங்கீர்த்தனம் பண்ணுங்கள். இரண்டுக்கும் ஒரே பலன் தான்.

பத்மை பேர் காமதேனுப் பசுவென்று பகர்கின்றோம். பதம் பட்டால் பரிசுத்தி. பலனெல்லாம் பெற்றிடலாம்.

28. வேறு சுவை வேண்டலாகா நாமங்கள்

तव दिव्यनाम्नि मधुरे निराकृत व्यसने स्थितेऽपि रसनेन्द्रियं मम।
रमते रमे कथमहो रसान्तरेषु अथवा तदस्य घटते जडात्मनः ॥ २८॥

தவ திவ்யநாம்நி மது$_4$ரே நிராக்ருத
வ்யஸநே ஸ்தி$_2$தேபி ரஸநேந்த்ரியம் மம ।
ரமதே ரமே கத$_2$மஹோ ரஸாந்தரேஷு
அத$_2$வா தத$_3$ஸ்ய க$_4$டதே ஜலாத்மந: ॥ 28 ॥

रमे - லக்ஷ்மியே !
मधुरे - இனியதும்
निराकृतव्यसने - துன்பத்தைத் தொலைப்பதுமான
तव - உனது
दिव्यनाम्नि - திவ்யமான திருநாமம்
स्थिते अपि - இருக்கும்போது கூட
मम - என்னுடைய
रसनेन्द्रियं - சுவைப்பலனான நாக்கானது
कथं - எப்படி
रसनान्तरेषु - வேறு சுவைகளில்
रमते - இன்புறுகிறதோ ?
अहो - ஐயோ !
अथवा அல்லது ஒருகால்
अस्य - இந்த
जडात्मनः - 1. ஜலமயமான பொருளுக்கு 2. மடையனுக்கு
तत् - அது
घटते - பொருந்தியது தான்.

உன் திருநாமம் திவ்யமானது. மதுரமானது. துன்பம் தீர்ப்பது. அது இருக்கும்போது அதை விட்டுவிட்டு வேறு சுவைகளை நாடுவது மடத்தனம். என் நாக்கு சில சமயங்களில் மற்ற சுவைகளிலும் இன்பம் அடைவது ஏனோ ? யோசித்துப்பார்த்தால் புரிகிறது. அது ஜடாத்மா தானே ? இங்கு ஜடாத்மா என்ற பதத்திற்கு இரண்டு அர்த்தங்கள். ஜடன், மந்தன், மூடன் என்று ஒரு அர்த்தம்,

ல என்ற எழுத்தையும் ட$_3$ என்ற எழுத்தையும் ஒன்றாகக் கொள்ளலாம் என்ற கவிமரபுப்படி ஜலமயமானது,

கிடைக்கும். அல்லது லக்ஷ்மிநாமஸங்கீர்த்தனம் பண்ணுங்கள். இரண்டுக்கும் ஒரே பலன் தான்.

பத்மை பேர் காமதேனுப் பசுவென்று பகர்கின்றோம்.
பதம் பட்டால் பரிசுத்தி. பலனெல்லாம் பெற்றிடலாம்.

28. வேறு சுவை வேண்டலாகா நாமங்கள்

तव दिव्यनाम्नि मधुरे निराकृत व्यसने स्थितेऽपि रसनेन्द्रियं मम।
रमते रमे कथमहो रसान्तरेषु अथवा तदस्य घटते जडात्मनः ॥ २८ ॥

தவ திவ்யநாம்நி மது₄ரே நிராக்ருத
வ்யஸநே ஸ்தி₂தேபி ரஸநேந்த்ரியம் மம ।
ரமதே ரமே கத₂மஹோ ரஸாந்தரேஷு
அத₂வா தத₃ஸ்ய க₄டதே ஜலாத்மந: ॥ 28 ॥

रमे - லக்ஷ்மியே !
मधुरे - இனியதும்
निराकृतव्यसने - துன்பத்தைத் தொலைப்பதுமான
तव - உனது
दिव्यनाम्नि - திவ்யமான திருநாமம்
स्थिते अपि - இருக்கும்போது கூட
मम - என்னுடைய
रसनेन्द्रियं - சுவைப்புலனான நாக்கானது
कथं - எப்படி
रसनान्तरेषु - வேறு சுவைகளில்
रमते - இன்புறுகிறதோ ?
अहो - ஐயோ !
अथवा அல்லது ஒருகால்
अस्य - இந்த
जडात्मनः - 1. ஜலமயமான பொருளுக்கு 2. மடையனுக்கு
तत् - அது
घटते - பொருந்தியது தான்.

உன் திருநாமம் திவ்யமானது. மதுரமானது. துன்பம் தீர்ப்பது. அது இருக்கும்போது அதை விட்டுவிட்டு வேறு சுவைகளை நாடுவது மடத்தனம். என் நாக்கு சில சமயங்களில் மற்ற சுவைகளிலும் இன்பம் அடைவது ஏனோ ? யோசித்துப்பார்த்தால் புரிகிறது. அது ஜடாத்மா தானே ? இங்கு ஜடாத்மா என்ற பதத்திற்கு இரண்டு அர்த்தங்கள். ஜடன், மந்தன், மூடன் என்று ஒரு அர்த்தம்.

ல என்ற எழுத்தையும் ட₃ என்ற எழுத்தையும் ஒன்றாகக் கொள்ளலாம் என்ற கவிமரபுப்படி ஜலமயமானது,

நீராலானது என்று மற்றொரு அர்த்தம். நாக்கிலுள்ள ரஸநேந்திரியம் நீர்மயமானது என்று அறிஞர் கருத்து. அதைக் குறிக்கும் சொல் மக்கு மடையன் என்ற அர்த்தத்தைக் கொடுத்ததால் என் கேள்விக்கு விடை கிடைத்துவிட்டது.

திவ்யமானது இருக்க அதைவிட்டு சாதாரணமானதை நாடுபவன் மடையன் தானே ?

மதுரமானது இருக்க அதை விட்டு கசப்பை நாடுபவன் முட்டாள் தானே ?

துன்பம் தீர்ப்பது இருக்க அதைவிட்டு துன்பம் தருவதை நாடுபவன் மூடன் தானே ?

திவ்யமான பாரிஜாதம் மதுரமாக இல்லை.

மதுரமான கற்கண்டு துயர் தீர்ப்பதில்லை.

துயர் தீர்க்கும் மருந்து திவ்யமாகவோ மதுரமாகவோ இல்லை.

இந்த மூன்று நற்பண்புகளும் ஒருசேரப்பெற்றது உன்திருநாமம்.

இனிய திரு நாமங்கள் இருக்கையிலே அவைவிட்டு
இதர ரஸம் பெறும் நாக்கு இரு பொருளில் ஜடமாகும்.

29. மாலையாகி மாலை மகிழ்விக்கும் நாமங்கள்

त्वन्नामदिव्यकुसुमानि दृढैर्गुणैस्ते संग्रथ्य सौरभविशेषपरिष्कृतानि ।
आमुञ्चतामिह मदीयसरस्वतीयम् मातर्महापुरुषमानसरञ्जनाय ॥ २९ ॥

த்வந்நாம திவ்ய குஸுமாநி த்$_3$ருடை$_4$ர்கு$_3$ணைஸ்தே
ஸங்க்$_3$ரத்$_2$ய ஸௌரப$_4$ விஶேஷ பரிஷ்க்ருதாநி ।
ஆமுஞ்சதாமி$_3$ஹ மதீ$_3$ய ஸரஸ்வதீயம்
மாதர் மஹா புருஷ மானஸ ரஞ்ஜநாய ॥ 29 ॥

நீராலானது என்று மற்றொரு அர்த்தம். நாக்கிலுள்ள ரஸநேந்திரியம் நீர்மயமானது என்று அறிஞர் கருத்து. அதைக் குறிக்கும் சொல் மக்குமடையன் என்ற அர்த்தத்தைக் கொடுத்ததால் என் கேள்விக்கு விடை கிடைத்துவிட்டது.

திவ்யமானது இருக்க அதைவிட்டு சாதாரணமானதை நாடுபவன் மடையன் தானே ?

மதுரமானது இருக்க அதை விட்டு கசப்பை நாடுபவன் முட்டாள் தானே ?

துன்பம் தீர்ப்பது இருக்க அதைவிட்டு துன்பம் தருவதை நாடுபவன் மூடன் தானே ?

திவ்யமான பாரிஜாதம் மதுரமாக இல்லை.

மதுரமான கற்கண்டு துயர் தீர்ப்பதில்லை.

துயர் தீர்க்கும் மருந்து திவ்யமாகவோ மதுரமாகவோ இல்லை.

இந்த மூன்று நற்பண்புகளும் ஒருசேரப்பெற்றது உன்திருநாமம்.

இனிய திரு நாமங்கள் இருக்கையிலே அவைவிட்டு
இதர ரஸம் பெறும் நாக்கு இரு பொருளில் ஜடமாகும்.

29. மாலையாகி மாலை மகிழ்விக்கும் நாமங்கள்

त्वन्नामदिव्यकुसुमानि दृढैर्गुणैस्ते संग्रथ्य सौरभविशेषपरिष्कृतानि ।
आमुञ्चतामिह मदीयसरस्वतीयम् मातर्महापुरुषमानसरञ्जनाय ।। २९ ।।

த்வந்நாம திவ்ய குஸுமாநி த்$_3$ருடை$_4$ர்கு$_3$ணைஸ்தே
ஸங்க்$_3$ரத்$_2$ய ஸௌரப$_4$ விஶேஷ பரிஷ்க்ருதாநி ।
ஆமுஞ்சதாமி$_3$ஹ மதீ$_3$ய ஸரஸ்வதீயம்
மாதர் மஹா புருஷ மாநஸ ரஞ்ஜநாய ॥ 29 ॥

मातः - அன்னையே !

सौरभ - विशेष - परिष्कृतानि - ஒரு வகை ஸௌரபத்தால் (அழகால், வாசனையால்) அலங்கரிக்கப்பட்ட

त्वत् - नाम -दिव्य - कुसुमानि - உன் பெயராகிற திவ்யபுஷ்பங்களை

ते - உனது

दृढैः - உறுதியான

गुणैः - குணங்களால் (பண்புகளால், நூல்களால்)

संग्रथ्य - தொடுத்து

इह - இங்கே

इयं - இந்த

मदीय - सरस्वती - என்னுடையதான ஸரஸ்வதீ (வாக்கு)

महा - पुरुष -मानस - रञ्जनाय - பெருமாளின் திருவுள்ள உகப்புக்காக

आमुञ्चता - சூட்டும்.

லக்ஷ்மிநாமங்களுக்கும் புஷ்பங்களுக்கும் சிலேடை...

அன்னையே ! உன் நாமங்கள் என்னும் பாரிஜாத புஷ்பங்களை மாலையாகக் கட்டி சூடிக் கொள்ளலாம்.

பூமாலையா ? பூவின் மணம் எங்கே ?

தொடுக்க நூல் எங்கே ? சூடும் பெண் எங்கே ?

அதனால் மகிழும் ஆண் எங்கே ?

என்றெல்லாம் கேட்டால் இதோ பதில்கள்:

1. உன் பெயரில் உண்டு.ஸௌரபம் என்ற சொல்லுக்கு இரண்டு அர்த்தங்கள். வாசனை என்றும் அழகு என்றும். உன் பெயரில் சொல்லழகும் பொருளழகும் இருப்பதால் ஸௌரபம் உள்ளது. அதனால் அதை வாசனைப்பூவாகச் சொல்வது பொருத்தமே.

2. உன்னுடைய பெயர்களை நாமாவளியாகத் தொடுக்கும்போது உன் குணங்களைக் கொண்டு வரிசைப்படுத்துகிறோம். குணம் என்ற பதத்திற்கும் இரண்டு அர்த்தங்கள். நற்பண்பு என்றும் கயிறுநூல் என்றும். குணங்களைக் கொண்டு நாமங்களைக் கோர்ப்பதால், நாரைக்கொண்டு மலர் தொடுப்பது போலாகிறது.

அந்த நார் உறுதியில்லாமல் இருந்தால் அவிழ்ந்து மலர்கள் கொட்டிவிடும். உன் குணங்கள் உறுதியானவை.

3. நான் லக்ஷ்மிஸஹஸ்ரம் பாடுகையில் என் இந்த வாக்கானது என் ஸரஸ்வதீ என்கிற பெண். அவள் தான் இந்த மாலையைச் சூடுபவள். லக்ஷ்மிஸஹஸ்ரம் தானே உன் நாமங்களைக் கோர்த்துத் தனக்கு அணியாக வைத்துக் கொண்டுள்ளது ?

4. இதனால் மகிழ்பவன் பெருமாள். என் வாக்கு உன் நாமாவளியைச் சூடுவது அவன் உகப்புக்கு. இப்படியாகப் பெயரும் பாரிஜாதப்பூவும் என்ற இரண்டுமே ஸௌரபம் உடையவை.

இரண்டுமே குணத்தால் கோர்த்தவை.

இரண்டுமே அழகி சூடற்கேற்றவை.

இரண்டுமே மஹாபுருஷனை மகிழ்விப்பவை.

இப்படியாகப் பல ஸாம்யங்களால் சிலேடை வலுவாகிவிட்டது.

மலர்மகளின் நாமமெனும் மலர்மாலை சூடியதால் மங்கையாம் என் வாக்கு மகிழ்விக்கும் மாலையே.

இந்தச் சுலோகத்தில் சொன்ன அர்த்தவிசேஷங்கள் வருமாறு:

1. பிராட்டியின் குணங்கள் திடமானவை. அவளுடைய வாத்ஸல்யம், காருண்யம் முதலிய குணங்கள் உறுதியாக உள்ளன.

2. ஸ்ரீ, லக்ஷ்மி, முதலிய நாமங்களின் பொருளழகை ஏற்கெனவே பார்த்தோம். பத்மஸத்மா, ஜலஜா, ஸுரஸுந்தரி, மலர்மங்கை முதலிய சில நாமங்களில் சொல்லழகும் காண்கிறோம். ஆகையால் நாமங்கள் அழகானவை.

3. சூடுவது மாலை. உகப்பிப்பது மாலை (பெருமானை).

இது வரை சில சுலோகங்களில் சொன்னதன் சுருக்கம் இதோ: பிராட்டியின் திருநாமங்கள் மலர் போன்றவை.

காமதேனு போன்றவை. தங்கம் போன்றவை. வைத்யாக்நி போன்றவை. விளக்கொளி போன்றவை.

30. அழியாப்பலனையும் அளிக்கும் நாமங்கள்

मन्वन्तराण्यम्ब फलं तनीयः तन्वन्ति मन्वन्तरमात्रवर्ति।
आमुष्मिकं शाश्वतमैहिकं च त्वन्नाम किं नाम फलं न दत्ते ॥ ३० ॥

மந்வந்தராண்யம்ப ப$_2$லம் தநீய:
தந்வந்தி மந்வந்தரமாத்ரவர்த்தி ।
ஆமுஷ்மிகம் ஶாஶ்வதம் ஐஹிகம் ச
த்வந்நாம கிம் நாம ப$_2$லம் ந த$_3$த்தே ॥ 30 ॥

अम्ब - அன்னையே !
मन्वन्तराणि - வேறு மந்திரங்கள்
तनीयः - ஸ்வல்பமானதும்
मन्वन्तरमात्रवर्ति - ஒரு மன்வந்தரகாலம் மட்டுமே இருக்கக்கூடியதுமான
फलं - பலனை
तन्वन्ति - பண்ணுகின்றன.
आमुष्मिकं - மறுமைப்பயனையும்
शाश्वतं - அழிவிலாப்பலனையும்
ऐहिकं वा - அல்லது இம்மைப்பயனையும்
किं नाम फलं - எந்தப் பலனைத்தான்
त्वन्नाम - உன் பெயர்
न दत्ते - கொடுக்காது ?

வேறு மந்திரங்கள் குறைந்த பயனைத்தரும். குறித்த காலம் வரை மட்டும் தரும்.

உன் நாமமோ இம்மை மறுமைப்பலனெல்லாம் தரும். சாசுவத பலனையும் தரும். எதைத்தான் தராது ? எல்லாவற்றையும் தரவல்லது.

இங்கு மந்வந்தரம் என்ற பதத்திற்கு இரண்டு அர்த்தங்கள்.

மநு என்றால் மந்த்ரம். மந்வந்தரம் என்றால் வேறொரு மந்திரம். (தேசாந்தரம், காலாந்தரம் இவை போலே).

இது வரை சில சுலோகங்களில் சொன்னதன் சுருக்கம் இதோ: பிராட்டியின் திருநாமங்கள் மலர் போன்றவை.

காமதேனு போன்றவை. தங்கம் போன்றவை.
வைத்யாக்நி போன்றவை. விளக்கொளி போன்றவை.

30. அழியாப்பலனையும் அளிக்கும் நாமங்கள்

मन्वन्तराण्यम्ब फलं तनीयः तन्वन्ति मन्वन्तरमात्रवर्ति।
आमुष्मिकं शाश्वतमैहिकं च त्वन्नाम किं नाम फलं न दत्ते॥ ३०॥

மந்வந்தராண்யம்ப ப$_2$லம் தநீய:
தந்வந்தி மந்வந்தரமாத்ரவர்த்தி ।
ஆமுஷ்மிகம் ஶாஶ்வதம் ஐஹிகம் ச
த்வந்நாம கிம் நாம ப$_2$லம் ந த$_3$த்தே ॥ 30 ॥

अम्ब - அன்னையே !
मन्वन्तराणि - வேறு மந்திரங்கள்
तनीयः - ஸ்வல்பமானதும்
मन्वन्तरमात्रवर्ति - ஒரு மன்வந்தரகாலம் மட்டுமே இருக்கக்கூடியதுமான
फलं - பலனை
तन्वन्ति - பண்ணுகின்றன.
आमुष्मिकं - மறுமைப்பயனையும்
शाश्वतं - அழிவிலாப்பலனையும்
ऐहिकं वा - அல்லது இம்மைப்பயனையும்
किं नाम फलं - எந்தப் பலனைத்தான்
त्वन्नाम - உன் பெயர்
न दत्ते - கொடுக்காது ?

வேறு மந்திரங்கள் குறைந்த பயனைத்தரும். குறித்த காலம் வரை மட்டும் தரும்.

உன் நாமமோ இம்மை மறுமைப்பலனெல்லாம் தரும். சாசுவத பலனையும் தரும். எதைத்தான் தராது ? எல்லாவற்றையும் தரவல்லது.

இங்கு மந்வந்தரம் என்ற பதத்திற்கு இரண்டு அர்த்தங்கள்.

மநு என்றால் மந்த்ரம். மந்வந்தரம் என்றால் வேறொரு மந்திரம். (தேசாந்தரம், காலாந்தரம் இவை போலே).

மந்வந்தரம் என்பது ஒரு கால அளவை. ஸ்வாயம்புவ மந்வந்தரம், வைவஸ்வத மந்வந்தரம், என்னுமாப்போலே. 30,67,24,000 வருஷங்கள் கொண்டது ஒரு மநுவின் பதவிக்காலம். விஷ்ணு புராணத்தில் முதல் அம்சம் மூன்றாம் அத்யாயத்தில் இந்த நிர்ணயம் உள்ளது. மந்வந்தரங்கள் (மற்ற மந்த்ரங்கள்) தரும் பலன் மந்வந்தரகாலத்துக்கு மேல் இல்லை என வேடிக்கை. அர்த்தவிஶேஷங்கள்:

1. இங்கு ஶாஶ்வதபலம் என்று சொன்னது மோக்ஷத்தை. மோக்ஷோபாயத்தில் லக்ஷ்மி பரிந்துரைப்பவளாக உபாயமாகவும் இருக்கிறாள் என்பது தேசிகஸம்பிரதாயம். ஆகையால் அவள் அழியாப்பலனளிப்பவள்.

2. இந்த சாச்வதபலத்தைத் திருவும் திருமாலும் அன்றி மற்றவர் தர முடியாது. அந்த மற்றவர் அற்பப்பலன்களை மட்டுமே தர வல்லவர்.

3. மோக்ஷார்த்த சரணாகதி மந்த்ரமே லக்ஷ்மியின் பெயரைக் கொண்டு ஆரம்பிப்பதால் இந்தச் ஶ்லோகக் கருத்து ஊர்ஜிதமாகிறது.

அற்பப்பலனை அளிக்கின்ற அன்னிய மந்த்ரங்களை
விட்டு
அழியாப் பயனையு மளிக்கின்ற அம்புஜை நாமம்
சொல்லுங்கள்.



अल्पसत्त्वेषु धीराणां अवज्ञैव हि शोभते।

அற்பர்களின் செயல் முறையைப் பொருட்படுத்தாது இருப்பதே தீரர்களுக்கு அழகு.

31. ப்ரணவத்தினும் ப்ரக்ருஷ்டமான நாமங்கள்:-



वर्णत्रयात्मा प्रणवस्स्वनिष्ठाम्
वर्णत्रयीमेव पुनाति युक्तम् ।
एकद्विवर्णाऽपि रमे तवाख्या
चित्रं पुनीते चतुरोऽपि वर्णान् ॥ ३१ ॥

வர்ணத்ரயாத்மா ப்ரணவஸ்ஸ்வநிஷ்டாம்
வர்ணத்ரயீமேவ புநாதி யுக்தம் ।
ஏகத்விவர்ணாபி ரமே தவாக்யா
சித்ரம் புநீதே சதுரோபி வர்ணாந் ॥ 31 ॥

रमे - லக்ஷ்மியே !
वर्ण - त्रय - आत्मा - மூன்று வர்ணங்கள் (எழுத்துகள்) ரூபமான
प्रणवः - ப்ரணவமந்திரமானது
स्वनिष्ठां - தன்னிலுள்ள
वर्णत्रयीं एव - மூன்று வர்ணங்களை (ஜாதியினரை) மட்டுமே
पुनाति - பரிசுத்தப்படுத்துகிறது.
युक्तं - (இது) தகும்.
एक - द्वि - वर्णा - ஓரிரு வர்ணங்கள் (எழுத்துகள் மட்டும்) கொண்ட
तव आख्या - உன் பெயரானது
चतुरः अपि वर्णान् - நாலு வர்ணங்களையுமே
पुनीते - பரிசுத்தப்படுத்துகிறது.
चित्रम् - ஆச்சரியம்.

ரமையே ! பிரணவமந்திரத்தின் பெருமை யாவரும் அறிந்ததே. ஆனால் ஒருவகையில் அதைவிட உயர்ந்தது உன் திருநாமம். அதற்கில்லாத ஒரு சிறப்பு உன் பெயருக்கு உண்டு. எல்லா சாதியினருக்கும் பயனளிப்பது என்கிற சிறப்பு. ஸர்வயோக்யதை என்பது.

பிரணவ மந்திரத்தின் ஒற்றை எழுத்தைப் பிரித்து அ, உ, ம, என்று மூன்று எழுத்துகள் கொண்டதாகச் சொல்வர். அதனால் அது வர்ணத்ரய உருவானது. வர்ணம் என்பதற்கு வேறோர் அர்த்தம் பிராமண க்ஷத்ரியாதி வர்ணம். இந்த மூவர்ண மந்திரத்தை மூவர்ணத்தவர் மட்டுமே ஓதிப் பலனடைவர். இது யுக்தமே. மூன்றுவர்ண மந்திரம் (தன்னுள் அடங்கிய) மூன்று வர்ணங்களை (வேறு அர்த்தம் என்பது கிடக்கட்டும்) பாவனம் பண்ணுவது பொருத்தமே.

ஆனால் உன் பெயரோ ஒன்றோ இரண்டோ வர்ணம் (எழுத்து) கொண்டிருந்தாலும் நாலு வர்ணத்தையும் பாவனமாக்குகிறதே, அது எப்படி ? ஆச்சரியம் தான். உன் பெயரை நாலாவது வர்ணத்தவர் கூடச் சொல்லிப் பலன் அடையத் தட்டில்லை. எம் வியப்பு என்னவென்றால்,

மூன்று வர்ண மந்திரம் மூன்று வர்ண பாவநம்.

இரண்டு வர்ண நாமமோ நாலு வர்ண பாவநம்.

உன் நாமங்களைப் பார்ப்போம். ஸ்ரீ என்றும், உ என்றும், மா என்றும் ஒருவர்ண நாமங்கள். ரமா என்றும், ஜயா என்றும், ஸீதா என்றும் பல இரண்டு வர்ண நாமங்கள்.

க்ரந்தலிபியிலோ நாகரலிபியிலோ கூட்டெழுத்துகளுடன் எழுதும்போது லக்ஷ்மி என்றும் சந்த்ரா என்றும், அம்பா என்றும், பத்மா என்றும் அனேகமுண்டு இரண்டெழுத்துப் பெயர்கள். எம் வியப்பு என்னவென்றால், இருப்பதற்குள்ளே தானே பலன் கிட்டும் ?

சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும் ?

மூன்று வர்ணம் கொண்ட ஒன்று மூன்று வர்ணத்தைப் புனிதப்படுத்துவது சரி.

ஓரிரு வர்ணம் மட்டும் கொண்ட ஒன்று எப்படி நாலு வர்ணத்தைப் புனிதமாக்குகிறது ?

இல்லாததன் மேலெல்லாம் இதன் பலன் ஏற்பட்டால் வ்யவஸ்தை இல்லாது போகாதோ ?

ஓஹோ, வர்ணம் என்பதற்கு இன்னொரு அர்த்தம் இருக்கிறதோ ? அப்படியானால் சரியாகிவிட்டது. இந்த முரண்பாட்டுத் தோற்றத்தை மிகைப்படுத்துவதற்காக நிஷ்டை என்ற சொல்லையும் இரண்டு அர்த்தங்களில் கையாண்டிருக்கிறார் கவி. நிஷ்டை என்றால் இருத்தல், நிலை, ஸ்தானம், என்று ஒரு அர்த்தம். அ, உ, ம, என்ற எழுத்துகளுக்குப் பிரணவத்தில் நிஷ்டை இருக்கிறது. ர, மா,

என்ற எழுத்துகளுக்கு ரமா என்ற நாமத்தில் நிஷ்டை இருக்கிறது.

நிஷ்டை என்பதற்கு இன்னொரு அர்த்தம் ஆழ்ந்த நிலை, உறுதிப்பாடு, ஸித்திநிலை. எந்த ஒரு மந்திரமும் தன்னிடம் நிஷ்டை கொண்டவர்களுக்கு மட்டும் தானே பலனளிக்கும் ? ரமா நாமத்தில் இரண்டு வர்ணங்களுக்குத்தானே நிஷ்டை உள்ளது ? அதெப்படி நாலு வர்ணத்திற்குப் பலன் ? இது ஆச்சரியமன்றோ ? என்று மடக்கிக் கேட்கிறார் கவி.

வார்த்தை வேடிக்கைகள் ஒருபுறமிருக்க சாஸ்த்ரார்த்தங்களை மட்டும் பார்த்தால், இந்தச் சுலோகத்தில் நாமறிவது: 1. எல்லாரும் எல்லாம் மந்த்ரங்களுக்கும் அதிகாரிகள் அல்லர். பரந்த நோக்கு என்ற பெயரில் வரம்புகளை மீறினால் மந்திரங்கள் பலனளிக்கமாட்டா. ப்ரத்யவாயமும் உண்டு. வர்ணத்ரயீமேவ என்ற ஏவகாரத்தால் இதைச் சொன்னார்.

2. லக்ஷ்மிநாமங்களை எல்லாரும் சொல்லலாம். எல்லா ஜாதியினரும் பயன்பெறலாம்.

3. நாமஸங்கீர்த்தனம் தூய்மைப்படுத்தும். தூய்மை போதுமா ? தருமம் முதல் மோக்ஷம் வரை எல்லா வேண்டுமே என்று கேட்டால் அதெல்லாம் தூய்மையில் அடங்கும். எப்படியென்றால், வாக்குத்தூய்மை, மனத்தூய்மை, அர்த்தசுத்தி என்னும் பணத்தூய்மை, ஒழுக்கம், ப்ரகிருதி கழியும் தூய்மை ஆகிற மோக்ஷம், எல்லாமே இந்தத் தூய்மையில் உள்ளடங்கியவை.

4. ப்ரணவத்தில் ஒரு பகுதியாக லக்ஷ்மியின் ஓரெழுத்துத்திருநாமம் இருக்கையில் அது எப்படி ப்ரணவத்தினும் சிறந்ததாகும் என்று ஐயம் வேண்டாம். தனியாக அதை எல்லாரும் சொல்லலாம் ஆகையால் ஸர்வயோக்யதை என்ற பெருமை அதற்கு உண்டு. ப்ரணவத்திற்குக் கிடையாது.

உலகத்தில் நால்வர்ணம் உளதனைவர் உய்வண்ணம்,
உன்பேரோரிரு வர்ணம் உண்டம்மா இது திண்ணம்.

32. சாக்காய்ச் சொன்னாலும் சாதிக்கும் நாமங்கள்:-

व्याजादुपात्तमपि वारिधिराजकन्ये त्वन्नाम कामपि ददाति मुदां समृद्धिम्।
आपीतमुल्वणतपातपतापशान्त्यै दूरीकरोति दुरितान्यति वारि गाङ्गम्॥ ३२॥

வ்யாஜாதுபாத்தமபி வாரிதிராஜகந்யே
த்வந்நாம காமபி ததாதி முதாம் ஸம்ருத்தி₄ம் ।
ஆபீதமுல்பணதபாதபதாபஶாந்த்யை
தூரீகரோதி துரிதாந்யபி வாரி காங்கம் ॥ 32 ॥

ददाति - தருகிறது.
उल्बण- तप - आतप - ताप - शान्त्यै - தீவிரக்கோடை வெயிலின் வெப்பத்தைத் தணிப்பதற்காக
आपीतं - குடிக்கப்பட்ட
गाङ्गं वारि - கங்காஜலமானது
दुरितानि अपि - பாவங்களையும்
दूरीकरोति - தூரத்தள்ளுகிறது.
वारिधिराजकन्ये - கடலரசனின் கன்னிகையே !
व्याजात् - ஒரு வியாஜத்தாலே
उपात्तं अपि - எடுக்கப்பட்ட போதிலும்
त्वन्नाम - உன் பெயர்
कामपि - ஏதோ ஒரு
मुदाम् - மகிழ்ச்சிகளின்
समृद्धिं - செழிப்பை

சமுத்ரராஜனின் பெண்ணே ! உன் பெயரை வேறு சாக்கில் சொன்னால் கூட நற்பலன்கள் கிடைக்கின்றன. ஏதோ ஒரு வ்யாஜத்தால் உன் பெயரைச் சொல்பவர்கள் பெருமகிழ்ச்சியை அடைகிறார்கள். இதற்கு ஆறு விளக்கங்கள் சொல்லலாம்.

1. ஸங்கேதம் என்னும் வியாஜம்.

2. பரிஹாஸம் என்னும் வியாஜம்.

3. குறை சொல்லும் வியாஜம்.

4. வேறு சொல்லில் மறைந்து வந்த வியாஜம்.

5. சொற்கள் சேரும்போது திருநாமம் முளைத்த வியாஜம்.

6. சரியாகச் சொல்லாவிட்டாலும் நாமம் சொல்லும் சாக்கில் ஏதோ சொன்ன வியாஜம்.

(இப்படிப் பலவகை வியாஜங்கள் பாகவதத்தில் சொல்லப்பட்டவை.)

1. உன் பெயர்களால் மற்றவரைக் குறிப்பிடும் வியாஜம். லக்ஷ்மி விலாஸ் பாங்கில் பணம் எடுத்து ராஜலக்ஷ்மி ஸ்டோர்ஸில் சாமான் வாங்கி ஜயா க்லினிக் வழியாக ருக்மிணி வந்தாள் என்று நான் சொன்னேன். நாமஸங்கீர்த்தன எண்ணம் எதுவுமில்லை. அரட்டைப்பேச்சில் லக்ஷ்மி என்றும் ஜயா என்றும் ருக்மிணி என்றும் உன் பெயர்கள் வந்துவிட்டன. அதையே சாக்காகக் கொண்டு நீ பலன் அளிக்கிறாய்.

2. இதையும் விட ஒருபடி மேலே போகிறாய் அருள் புரிவதில். திரு, திரு, என்று சொல்லியே காலம் கழிப்பவன் பின்னால் திருதிருவென்று விழிக்க நேரும் என்று ஒருவன் நாமஸங்கீர்த்தனத்தையே பரிஹஸிக்கிறான். ஆனாலும் அவன் வாயில் வந்த அந்த நாமங்கள் அவனுக்கு நன்மை செய்கின்றன.

3. வேலை தா, சேலை தா, என்று பணக்காரனிடம் யாசிக்காமல் வேதா சீதா என்கிறானே கோவிலில், அவள் தான் இடைச்சிறுக்கி இந்திரா. எப்பொழுதும் லை சொல்லவே மாட்டாளாம். என்று பொடி வைத்துப் பேசிக் குறை கூறுபவன் கூட அந்தச் சாக்கில் இரண்டு திருநாமங்களைச் சொல்லிவிட்டதால் அவனுக்கும் நன்மை.

4. இதற்கும் மேல் ஒரு படி. உன் பெயரை மற்றவர் பெயராக நினைத்தோ, பரிஹாஸத்திற்காகவோ கூடச் சொல்லாதவன் ஒருவன். சீக்கிரமா கிளம்பு. அவசரமாப் போ. ஓரமா நட. தூரமா நில்லு. அப்ரமா பார்க்கலாம். பாரமாயிருக்கா ? பம்பரமாச்சுழல்ரா. என்றெல்லாம் சொல்லும்போது அவன் அறியாமல் ரமா என்கிற திருநாமம் நிறைய தடவை வந்துவிட்டது பேச்சில். அதற்கும் பலன் தரத் துடிக்கிறாள் தாயார்.

5. ஏங்க மலைக்கப்போறீங்க ? கொஞ்சந் திராவகத்தை எடுத்துக் கடைசீ தாம்பாளத்தில் வைக்கலாம். என்ற பேச்சில் கூட கமலை, சந்திரா, சீதா என்கிற பெயர்கள் ஒளிந்து கொண்டிருப்பதால், இந்த வியாஜமே போதும் உன் அருள் பெற. அவ்வளவு பெருமை உன் திருநாமங்களுக்கு.

6. ஒருத்தி பத்மா என்று சொல்ல விரும்புகிறாள். ஆனால் திக்குவாய் ஆனதால் ப ப ப பத்மா என்கிறாள். இன்னொருத்தி கொச்சைவாய்க்காரி. வாயில் ர நுழையாது. தமா, ஹதிப்பியா, ஹதிணி என்கிறாள் உன் பெயர்களைச் சொல்வதாக நினைத்துக் கொண்டு. அவளுக்கும் பலனுண்டு.

வ்யாஜாதுபாத்தம் என்ற தொடருக்கு மூன்று விதமாகக் கருத்து கொல்லலாம்.

1. சொல்லும் நோக்கம் இல்லாமலே வேறொன்றைப்பற்றிய பேச்சில் திருநாமம் வந்த சாக்கே போதும்.

2. திருநாமம் என்கிற சாக்கிலே சொன்ன பிழைச்சொற்கள்.

3. அபிசந்தியுடன் சரியாகச்சொன்ன திருநாமங்கள் கூட வ்யாஜமாத்திரமே. இப்பொழுது ஒரு சந்தேகம். ஏதோ ஒரு சாக்கில் செய்த செயலுக்குப் புண்ணியம் வரலாமோ ? இப்படி எங்கேனும் கண்டதுண்டோ ? இதற்கு ஒரு திருஷ்டாந்தம். கங்கை நீரைப் பருகினால் பாவம் தொலையும். அதை ஒருவன் வேறு பயன் கருதிக் குடித்தாலும் அப்படியே வெயில் சூட்டைத் தணிக்கக் குடித்தாலும், பாவம் போக்கும் எண்ணம் இல்லாமலே குடித்தாலும், தெரியாமலே குடித்தாலும், ஒரு சிறிதே குடித்தாலும், இவன் வேண்டாவிட்டாலும், பாவம் கழியத்தானே செய்யும் ? அந்தந்த பொருளுக்குள்ள வஸ்துஸ்வபாவம் மாறுமோ ? தெரியாமல் தொட்டவர்களையும் நெருப்பு சுடத்தானே செய்யும் ? அதுபோல, எந்தச்சாக்கில் சொன்னாலும் உன் பெயர் நற்பலன் அளித்தே தீரும். என்ன மாதிரியான பலன் ? காமபி முதாம் ஸம்ருத்திம் என்கிறார். வருணிக்க முடியாத ஏதோ ஒரு ஆனந்தச் செழிப்பைத் தரும். (தொடரும்)

இந்தச்சுலோகத்தில் நாமறியும் சாஸ்த்ரார்த்தங்கள்:
1. அர்த்தம் தெரியாமல், பெருமை புரியாமல், வேறெதையோ மனத்தில் கொண்டு சொன்னாலும் லக்ஷ்மிநாமங்களைச் சொன்னால் இன்பங்கள் பெருகும். தெரிந்து முறையாகச் சொன்னால் கேட்கவும் வேண்டுமா?

2. என்னென்ன மகிழ்ச்சிகள் விளையும் என்பதை வருணிக்க முடியாது. அந்த அளவுக்குப் பல்வேறு செழிப்புகள் உண்டாகும், தேவியின் அருளால்.

3. வஸ்துஸ்வபாவம் அதைக் கையாள்பவர்களின் எண்ணப்படி மாறாது.

4. நாம் பண்ணும் நாமஸங்கீர்த்தனம் வ்யாஜமாத்ரமே. ஏதோ பெரிதாகக் கடவுளுக்குக் கொடுத்து அதற்குப் பிரதியாக அவர் நமக்கு அருள் புரியக் கடமைப்பட்டிருப்பதாக நாம் நினைத்துவிடக்கூடாது. திருமகள் நமக்கு அருளுவது கருணையாலேயன்றி நம் தகுதியால் மட்டுமன்று. நமக்கு அவள் தரும் பலன்களுக்கான தகுதி இல்லாவிட்டாலும் நமது கீர்த்தனாதிகளைச் சாக்கிட்டு அவள் கருணையாலே அந்தப் பலன்களையும் அதற்கான தகுதிகளையும் அருளுகிறாள்.

ஏதேனும் ஒரு சாக்கில் ஏமாவின் பேர் சொன்னால்
ஏதேதோ இன்பங்கள் ஏற்றமுறும் இவளருளால்.

33. பதங்களைத் தரும் பதமான நாமங்கள்:-



यो वक्ति देवि पदमेकमपि त्वदीयम्
सर्वाणि तस्य हृदि भान्ति सदा पदानि ।
नित्योन्नतो नृपतिरेव वशीकृतश्चेत्
किंकुर्वते पुरजना इति कः प्रयत्नः ॥ ३३ ॥

யோ வக்தி தேவி பதமேகமபி த்வதீயம்
ஸர்வாணி தஸ்ய ஹ்ருதி பாந்தி ஸதா பதாநி ।
நித்யோந்நதோ ந்ருபதிரேவ வஶீக்ருதஶ்சேத்
கிங்குர்வதே புரஜநா இதி க: ப்ரயத்ந: ॥ 33 ॥

देवि - தேவியே !
यः - எவனொருவன்
त्वदीयं - உன்னுடையதான
पदं - சொல்லை (பெயரை)
एकं अपि - ஒன்றையாவது
वक्ति - சொல்கிறானோ
तस्य - அவனுடைய
हृदि - மனதில்
सर्वाणि - எல்லா
पदानि - சொற்களும்
सदा - எப்பொழுதும்
भान्ति - தோன்றுகின்றன
नित्योन्नतः - என்றும் உயர்ந்த
नृपतिः एव - அரசனே
वशीकृतः चेत् - தன்வயமாக்கப்பட்டால்
पुरजनाः - நகர மக்கள்
किङ्कुर्वते - பணிவிடை செய்கிறார்கள்
इति - என்பதாலே
कः - என்ன (எதற்காக)
प्रयत्नः - முயற்சி ?

ஸ்ரீ தேவியே ! உன்னுடைய பெயர் ஒன்றே ஒன்றைச் சொன்னால் போதும். எல்லாப் பதங்களும் மனதில் தோன்றும். எப்பொழுதும் சரியான சொற்கள் ஸ்புரித்துவிட்டால் ஆசுகவியாகிவிடலாம். எத்தனையோ பதங்கள் இருக்கும்போது, அவற்றுள் ஒன்றான உன் நாமத்தை வசங்கொண்டுவிட்டால் எல்லாமே நம் வழிக்கு வரும். இதற்கு ஒரு திருஷ்டாந்தம். அரசனுக்கு வேண்டியவனாகிவிட்டால் குடிமக்கள் எல்லாரும் விதேயர்கள் அல்லவா ? வேறு முயற்சிகள் எதற்கு ? தேவையே இல்லை. பதங்களுக்குள் ராஜா போல் உன் திருநாமம். அந்த ராஜா இருக்குமிடத்தில் கிங்கரர்களான பிரஜைகள் போல் மற்ற பதங்களெல்லாம்.

இந்தச்சுலோகத்தில் சொன்ன புது அர்த்தம்: சொல்வன்மை பெறவேண்டுமா ? எல்லாச்சொற்களும் இட்ட வழக்காய் இருக்கும் வகையில் புலமை வேண்டுமா ? சொல்லரசனான ஸ்ரீநாமத்தைச் சொல்லுங்கள். ஸ்ரீநாமம் நம் வசமாகும்போது மற்றெல்லாச்சொற்களும் நம் வசம் தான்.

அரசனை வசத்தில் கொண்டால் அனைவரும் ஏவல் செய்வர்.
அன்னை பேர் வசத்தால் சொற்கள் அனைத்துமே வசத்திலாகும்.

பதம் என்பதற்குப் பதவி என்றும் பொருள் கொள்ளலாம். இந்த்ரபதம், பிரம்மபதம், பரமபதம், முதலிய எல்லாப்பதங்களும் மனத்தில் நிழலாடும் திருநாமத்தைச் சொல்பவனுக்கு. அவை இவனுக்குக் கைக்கெட்ட விருப்பதால்.

34. பாக்கியத்தைப் பக்குவமாக்கும் நாமங்கள்:-

क्षमानिधे यम्यधिपाभिधेयम् वचोविधेयं तव नामधेयम् ।
पद्मालये यस्य गुणोदधेऽयम् पचेलिमं विन्दति भागधेयम् ॥ ३४ ॥

க்ஷமாநிதே₄ யம்யதி₄பாபி₄தே₄யம்
வசோவிதே₄யம் தவ நாமதே₄யம் ।
பத்₃மாலயே யஸ்ய கு₃ணோத₃தே₄யம்
பசேளிமம் விந்த₃தி பா₄க₃தே₄யம் ॥ 34 ॥

क्षमानिधे - பொறுமையின் நிதியானவளே !
पद्मालये - தாமரையில் இருப்பவளே !
गुणोदधे - குணக்கடலே !
यमि - अधिप - अभिधेयं - துறவித்தலைவர் சொல்லத்தக்க
तव - உன்
नामधेयं - பெயரானது
यस्य - எவனுக்கு
वचोविधेयं - வாசோவிதேயமாக இருக்கிறதோ
अयं - இவன்
पचेलिमं - பழுத்த
भागधेयं - அதிர்ஷ்டத்தை
विन्दति - அடைகிறான்.

லக்ஷ்மியே ! உன் பெயரை முகஸ்தமாகக் கொண்டவர்களுக்கு அதிர்ஷ்டம் அடிக்கிறது. ஸ்கல பாக்கியங்களும் முதிர்ந்து கிடைக்கின்றன. பெருந்துறவிகள் சொல்லும் நாமதேயம் அல்லவா அது ? நாங்கள் பண்ணின ஸுகிருதங்களைப் பக்குவநிலைக்குக் கொண்டுவருகின்றன திருநாமங்கள்.

இந்தச் சுலோகத்தில் சில ஸம்ப்ரதாயார்த்தங்கள் அடங்கியுள்ளன:

1. இங்கு யம்யதிபர் எனப்படுபவர் ஸநத்குமார மஹரிஷி. அவர் சிறந்த துறவி, நிவ்ருத்தி மார்க்க நிஷ்டர். அவரால் சொல்லப்பட்டது லக்ஷ்மிஸஹஸ்ரநாமம். அதை வாசோவிதேயமாகக் கொண்டவர் எல்லாப்பேறும் பெறுவர். லக்ஷ்மிஸஹஸ்ரநாமத்தின் இறுதியில் பலன் சொல்லுகையில் பாகதேயம் கிடைப்பதாகச் சொன்னார். அதே சொல்லைக் கையாண்டு அதை நினைவுறுத்துகிறார் இந்தக்கவி.

2. நாதாய நாதமுநயே யமிநாம் வராய என்று சொன்னபடி யம்யதிபர் ஸ்ரீமந்நாதமுனிகள். அவருக்கு ஸ்ரீயின் பெயரைக் கொண்டு தொடங்கும் த்வய மந்த்ரம் லக்ஷ்மியின் ஆதேசத்தால் நம்மாழ்வாரால் உபதேசிக்கப்பட்டது. த்வயம் அர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தா என்று சொன்னபடி அதை வாசோவிதேயமாகக்கொண்டவன் பழுத்த பாக்கியமான மோக்ஷத்தை அடைகிறான். யம்யதிபாய அபிதேயம் என்று இங்கே விக்ரஹம். போன அர்த்தத்தில் யம்யதிபேந அபிதேயம் என்று.

3. நம் ஸம்பிரதாயத்தில் லக்ஷ்மிக்கு முழு ஸ்தோத்ரக்கிரந்தத்தை முதன்முதலாக இயற்றியவர் ஆளவந்தார். இவரும் யமி(துறவி)களிற் சிறந்தவர் ஆகலால் யம்யதிபர். அவர் ஸ்ரீரித்யேவ ச நாம தே என்றும் பகவதி என்றும் லோகைகேஸ்வரி என்றும் லோகநாததயிதா என்றும் தாந்தா என்றும் அரவிந்த லோசநமந: காந்தா என்றும் சொல்கிற நாமதேயங்கள் எங்கள் பாக்கியங்களைப் பழுக்கவைக்கின்றன.

இதே போல் யதிராஜர் என்றே ப்ரசித்தரான பகவத்ராமானுஜரை யம்யதிபர் என்பதாகவும், அவர் கத்யசூர்ணிகையில் சொன்ன நாமதேயங்கள், பகவதி, ஸ்ரீதேவி, அகிலஜகந்மாதா, முதலியவற்றை யம்யதிபாபிதேயங்களாகவும் கொள்ளலாம்.

யம்யதிபர்களாலே அபிதேயம் என்று பன்மை தொக்கியதாகக் கொள்வோம். ஸ்ரீமந்நாதமுனி ஸ்ரீமத்யாமுனமுனி ஸ்ரீமத்ராமாநுஜமுனி ரூப முநித்ரயம் என்று ஒரு பிரசித்தமான தொடர் உண்டு. இந்த முநித்ரயம் சொன்ன திருநாமங்களின் மகிமையைப் புகழ்வது இந்தச் சுலோகம்.

தேயம், தேயம் என்று ஆறு தடவை வந்துள்ளது. நாமதேயம், பாகதேயம், விதேயம் என்ற வெவ்வேறு சொற்களில் வந்துள்ளது. நிதே யமீ என்றும் உததே அயம் என்றும் இரு சொற்கள் சேரும்போது தேயம் வந்துள்ளது. இதனால் பாதாந்த அநுப்ராஸத்தின் சுவை கூடியுள்ளது.

இந்தச் சுலோகத்திலுள்ள இன்னும் சில கருத்துகள்:

1. லக்ஷ்மி க்ஷமாநிதி. பொறுமையின் சிகரம். அதனால் தான் நம் குறைகளைப் பொறுத்து நாம ஸங்கீர்த்தனத்திற்குப் பலன் அளிக்கிறாள்.

2. அவள் குணோததி. குணங்களின் கடல், அதனால் தான் நம் சொற்களில் ஏதோ ஒரு சாக்கில் நல்லதைத் தேடித்தேடிப் பலன் அளிக்கிறாள்.

3. பெரிய பெரிய யோகிகளெல்லாம் அவள் திருநாமங்களைச் சொல்லிப் பயனடைகிறார்கள்.

4. புண்ணியம் பண்ணினாலும் அது உடனே பலன் தருமா ? எந்தெந்த வினைகளுக்கு எந்தக் கிரமத்தில் எப்பொழுது பலன் கிடைக்கும் என்பது நம் கையிலில்லை. தாமரையாளின் நாமங்களைச் சொன்னால் புண்ணியம் பரிபாகநிலை அடைந்து பாக்கியங்களை விளைவிக்கிறது. இதைப் பசேலிமம் என்ற சொல்லால் சொன்னார்.

அருந்தவர் சொன்னதேயாம் அன்னையின் நாமதேயம்
அது கொளில் வாக்விதேயம், அடையலாம் பாகதேயம்.

35. உத்தரமாகி உயர்வு தரும் நாமங்கள்:-

स्वनाथनाम्नस्स्वयमुत्तरं सत् तवाभिधानं गुणमादधाति ।
पद्मेक्षणप्रेयसि निर्विगानं प्रमाणमत्र प्रणवं प्रतीमः ॥ ३५ ॥

ஸ்வநாத,நாம்நஸ் ஸ்வயம் உத்தரம் ஸத்
தவாபி,தா,நம் கு,ணமாத,தா,தி ।
பத்மேக்ஷணப்ரேயஸி நிர்வகா,நம்
ப்ரமாணமத்ர ப்ரணவம் ப்ரதீம: ॥ 35 ॥

पद्मेक्षणप्रेयसि - தாமரைக்கண்ணனின் காதலியே !
तव - உன்னுடைய
अभिधानं - பெயரானது
स्व- नाथ - नाम्नः - தன் கணவன் நாமத்திலும்
स्वयं - தான்
उत्तरं - அடுத்ததாக, உயர்ந்ததாக
गुणं - 1. குணசந்தியை 2. மேன்மையை
आदधाति - 1. ஏற்கிறது 2. உண்டுபண்ணுகிறது
अत्र - இதில்
निर्विगानं - இகழ்வில்லாத
प्रमाणं - சான்றாக
प्रणवं - பிரணவமந்திரத்தை
प्रतीमः - அறிகிறோம்.

பெருமாள் திருநாமங்களைக்காட்டிலும் தாயார் திருநாமங்கள் சிறந்தவை. மேன்மை தருபவை. இது எப்படித் தெரியும் என்றால் பிரணவமந்திரத்தின் மூலம் இது தெரிகிறது. உத்தரம் என்ற சொல்லுக்கும் குணம் என்ற சொல்லுக்கும் இரு பொருட்கள் உண்டு. பூர்வம் என்பதற்கு எதிர்ப்பதமான உத்தரம், அடுத்தது, பிந்தியது, என்ற பொருள்படும். உத்தரகாண்டம், பூர்வோத்தரம், உத்தரபல்குநீ, என்பவற்றில் முதலில் சொன்ன அர்த்தம். லோகோத்தரம், தர்மோத்தரம், முதலியவற்றில் இரண்டாவதாகச் சொன்ன அர்த்தம். இப்பொழுது கேள்வி. பெருமாள் திருநாமம் உத்தரமா ? தாயார் திருநாமம் உத்தரமா ? எது சிறந்தது ? அ என்ற பெருமாள் திருநாமத்திற்குப் பிறகு உ என்ற தாயார் திருநாமம் சேர்ந்து ஓ என்றாவதைப் பிரணவ மந்திரத்தில் பார்க்கிறோமே. அங்கு அ பூர்வம். உ உத்தரம். அதனால் தாயார் திருநாமம் தான் உத்தரம் என்பதற்குப் பிரணவம் சான்றாகிவிட்டது. இரண்டு அர்த்தம் கொண்டு வேடிக்கையாகச் சொன்னதிது.

மேலும் ஒன்று. குணம் என்றால் சிறப்பு, மேன்மை என்று ஒரு அர்த்தம். இலக்கண நூல்களில் சாஸ்த்ர பரிபாஷையாக வேறொரு அர்த்தம் அதேங்குண: என்ற பாணிநிஸூத்ரத்தால் சொல்லப்பட்டது..........

(தொடரும்)

(ஐப்பசி தொடர்ச்சி)



இதைச் சுருக்கமாக விளக்குவோம். உயிரெழுத்தில் முடியும் ஒரு சொல் உயிரெழுத்தில் தொடங்கும் அடுத்த சொல்லோடு சேரும்போது பலவகை ஸந்திகள் உண்டு. அவற்றுள் ஒன்று குணஸந்தி என்பது. ஆத்குண: என்ற பாணிநி ஸூத்ரத்தால் சொல்லப்பட்டது. சில உதாரணங்கள்; புருஷ + உத்தமன் = புருஷோத்தமன்; க்ஷீர + உததி = க்ஷீரோததி; நீல + உத்பலம் = நீலோத்பலம்; பூர்வ + உத்தரம் = பூர்வோத்தரம்; இவற்றில் அ + உ = ஓ என்று ஸந்தி வந்துள்ளது. இப்படித்தான் ப்ரணவ மந்த்ரத்திலும். 'அ' என்பதோடு 'உ' சேர்ந்ததால் தானே குணம் (அதாவது குணஸந்தி) வந்தது ? அதனால் தான் சொல்கிறோம். பெருமாள் பேரிலும் உத்தரமாகத் தாயார் பேர் ஆகி குணத்தை (அதாவது உயர்வை) விளைவிக்கிறது என்று. சொல் வேடிக்கை தவிர சொன்ன மாஸ்த்ரார்த்தங்கள் நான்கு.

1. 'அ' என்பது பெருமாள் பெயர். அகாரோ விஷ்ணுவாசக: என்று ப்ரஸித்தம். அகாரார்த்தோ விஷ்ணு: என்கிறது அஷ்ட ச்லோகி. நிகண்டுக்களில் கூட இந்த அர்த்தம் கொடுக்கப்பட்டுள்ளது.
2. 'உ' என்பது லக்ஷ்மியின் பெயர். இது கடச்ருதியில் சொன்ன அர்த்தம். ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்திலும் காட்டப்பட்டது.
3. பெருமாள் தாயார் பெயர்களைச் சேர்த்துத் தொடங்குகிறது ப்ரணவ மந்த்ரம்.
4. திருமகள் திருநாமம் உயர்ந்தது. உயர்வளிப்பதும் கூட.

உன் கணவன் பெயரைவிட உன் பெயரே உத்தரமாம்.
உயர்வு தரும். ப்ரணவமுமிவ் வுண்மைக்குச் சான்றாகும்.

36. புல்லர்க்குப் புரியாத புண்ணிய நாமங்கள்

पद्मे नाम्नां पामरास्त्वत्कानां प्रौढिं विदुर्नैव नामान्तरेभ्यः ।
चक्रीवन्तश्चारुकर्पूरचूर्णं भस्मभ्यः किं विस्मयं प्राप्नुवन्ति ॥ ३६ ॥

பத்³மே நாம்நாம் பாமராஸ்தாவகாநாம்
ப்ரௌடி⁴ம் வித்³யுர்நைவ நாமாந்தரேப்⁴ய: ।
சக்ரீவந்தஸ்சாருகர்பூரசூர்ணே
ப⁴ஸ்மப்⁴ய: கிம் விஸ்மயம் ப்ராப்நுவந்தி ॥ 36 ॥

पद्मे = தாமரையாளே,
तावकानां = உன்னுடையதான,
नाम्नां = பெயர்களுக்கு;
नामान्तरेभ्यः = மற்ற பெயர்களைக் காட்டிலும் (உள்ள);
प्रौढिं பெருமையை;
पामराः = மக்கள்;
न एव विदुः = அறியவே மாட்டார்கள்;
चक्रीवन्तः = கழுதைகள்;
चारु–कर्पूर–चूर्णे = நல்ல கற்பூரப் பொடியில்;
भस्मभ्यः = சாம்பல்களினும்;
विस्मयं = ஆச்சர்யத்தை;
प्राप्नुवन्ति किं = அடைகின்றனவா என்ன ?

பத்மாவே ! பாமரர்களுக்குத் தெரியாது உன் நாமங்களின் பெருமை. மற்ற நாமங்கள் போல அவற்றை நினைத்து விடுவார்கள். கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை ? கழுதைகள் போல் பாமரர்கள் அறிவிலிகள். கற்பூரப் பொடி போல் பெருமை கொண்டவை உன் நாமங்கள். வெற்றுச் சாம்பல்கள் போல் மற்ற நாமங்கள். சாம்பலுக்கு வாசனை இல்லாதது போல் மற்றவர் பெயர்களுக்குப் பெருமை இல்லை. கற்பூர வாசனையைக் கழுதை அறியாதது போல் கமலை பெயர்ப் பெருமையினைக் கடைமக்கள் காண்பதில்லை. இந்த ஶ்லோகத்தில் சொன்ன புதிய அர்த்தங்கள்.

1. பாமரர்கள் கல்வியறிவு இல்லாதவர்கள். அவர்களுக்குத் தெரியாதவை எத்தனையோ உண்டு. உன் நாமப் பெருமையும் அவற்றுள் ஒன்று. பண்டிதர்கள் அப்படியன்று. அவர்கள் ஸநத்குமார வ்ருத்தாந்தம் முதலியவற்றைப் புராணங்களிலிருந்து அறிகிறார்கள். உன் திருநாமப் பெருமையை உணர்கிறார்கள்.

2. பாமரர்கள் உன் திருநாமங்களையும் மற்ற தேவர்களின் திருநாமங்களையும ஸமமாக நினைத்து விடுகிறார்கள். சாம்பலையும் கற்பூரப் பொடியையும் ஸமமாக நினைக்கும் கழுதை போல. அதனால் எல்லாத் தேவருடைய நாமங்களையும் ஸங்கீர்த்தநம் பண்ணுகிறார்கள். பண்டிதர்கள்

அப்படியன்று. திவ்யதம்பதி நாமங்களை மட்டுமே கீர்த்திப்பார்கள்.

3. பாமரர்களுக்கு உன் நாமத்தின் முழுப் பெருமை தெரியாது. பணத் தேவைக்கு மட்டும் அதைச் சொல்வார்கள். பண்டிதர்களோ, இம்மைப் பயன், மறுமைப் பயன், எல்லா வற்றையும் தரவல்ல நாமம் என்று அறிவார்கள்.

4. பாமரர்கள் தங்களகத்துச் சிறுமிகளுக்கு, ரோஜா, லில்லி என்று மலர்களின் பெயர்களையும், பரணி, க்ருத்திகை, என்று நக்ஷத்திரப் பெயர்களையும், ரதி, மதி, என்று மற்றைப் பெயர்களையும் இடுகின்றனர். ஆனால் விஷயம் அறிந்தவர் தாயாரின் பெயர்களையே இடுவர்.

5. பாமரர்களுக்குத் தெரியாது உன் பெயர்ப் பெருமை. அதைச் சொன்னாலும், கேட்டாலும், எண்ணினாலும், சொல்ல முயற்சித்தாலும், கேட்க விரும்பினாலும், பெரும் பயன் உண்டு. மற்ற நாமங்களுக்கு இத்தகைய பெருமை கிடையாது.

6. நாமத்தை ஒரு வ்யாஜ மாத்திரமாகக் கொண்டு நீ கருணையை வர்ஷிக்கக் காத்திருக்கிறாய் என்பது உன் நாமங்களுக்கு மட்டுமுள்ள பெருமை. இது பாமரர்களுக்குத் தெரிவதில்லை. கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுபவர்கள் பாமரர்கள். இதை அடுத்த ச்லோகத்தில் தெளிவாகச் சொல்லப் போகிறார்.

7. மற்றோரின் பெயர்கள் ஸங்கேதமாத்ரம். அடையாளத்துக்கு ஏற்பட்டவை. உன் பெயர்கள் வேதஸாரமானவை. இது தெரியாதவர்கள் பாமரர்கள்.

8. அறியவே மாட்டார்கள். ஸநத்குமாரர் முதல் வெங்கடாத்வரி வரை எத்தனையோ பேர் சொல்லியும் வித்தியாசம் புரிந்து கொள்ளாத பாமரர்கள் லக்ஷ்மிநாம வைபவத்தை அறியவே மாட்டார்கள். அவர்கள் திறன் அவ்வளவுதான்.

பூமகளே உன்னுடைய நாமகளைப் பெருமையினை
பாமரர்கள் அறிவதில்லை. நாமறிவோம் நலமடைவோம்.

கழுதை த்ருஷ்டாந்தத்தில் மூன்று ஸாம்யங்கள் விளைவுகளிலும் உண்டு. கழுதைக்கு வாசனை தெரியாததாலே கற்பூரத்திற்கு ஹானி இல்லை. அது போல் பாமரர்க்குப் பெருமை புரியாததாலே உன் நாமங்களுக்கு எவ்விதக் குறையும் இல்லை. கழுதைக்கும் அதைத் தெரியவைக்க யாரும் முயற்சிப்பதில்லை. அது போல், பாமரர்க்குப் புரியவைக்கும் முயற்சியும் வீணாகும்.

கழுதைகளை யாரும் மதிப்பதில்லை. அது போல உன் திருநாமப் பெருமை அறியாதவர்க்கும் மதிப்பில்லை.

கவிஞர்கள் வீரத்தை வர்ணிக்கும்போது கடினச் சொற்களையும் கொஞ்சுதலைச் சொல்லும் போது சிறு சிறு ம்ருதுச் சொற்களையும் பயன்படுத்துவர். அது போல, பாமரரின் அறியாமையைச் சொல்லும்போது இந்தக் கவி பாமரர்க்குப் புரியாத சில சொற்களைக் கையாளுகிறார். கழுதைக்குக் கர்த்தபம் என்றும் ராஸபம் என்றும் பலர் அறிந்த பதங்களை விட்டுவிட்டு, சக்ரீவாந் என்ற பர்யாயபதத்தை ப்ரயோகிக்கிறார். சாரு கற்பூர சூர்ணே என்பதிலும் பொடி வைத்திருக்கிறார். சாரு என்றால் அழகான எல்லோருக்கும் தெரிந்த அர்த்தம். மணம் கொண்ட என்று இங்கே பொருள்படும். அது சரி. ஆனால் சாரு என்றால் குங்குமப்பூ என்ற அர்த்தம் இருப்பது பலருக்குத் தெரியாது. சாரு கர்பூரம் என்பது குங்குமப்பூ - பச்சைக் கற்பூரக் கலவை. இது உயர்ந்த பரிமளத் த்ரவ்யம். கழுதைக்கென்ன தெரியும் ?

37. வீட்டுநிதி போன்ற விடலாகா நாமங்கள்

जहदिह जननि त्वन्नामधेयं विधेयम् जडमतिरतिरिक्तं शर्मणे कर्म कुर्यात् ।
निधिमनवधिं उच्चैर्निष्कुटस्थं विहाय प्रतिभवनमशङ्कः पर्यटेत् भिक्षितुं कः ॥

ஜஹதி³ஹ ஜநநி த்வந்நாமதே⁴யம் விதே⁴யம்
ஜட³மதி ரதிரிக்தம் ஶர்மணே கர்ம குர்யாத் ।
நிதி⁴மநவதி⁴ம் உச்சைர் நிஷ்குடஸ்த²ம் விஹாய
ப்ரதிப⁴வநம் அஶங்க: பர்யடேத் பி⁴க்ஷிதும் க: ॥37

जननि = தாயாரே;	निष्कुटस्थं = வீட்டிலுள்ள
विधेयं = தன் வசத்திலிருக்கிற;	उच्चैः = உயர்ந்த
त्वन्नामधेयं = உன் பெயரை;	अनवधिं = எல்லையற்ற;
जहत् = விடுகிறவனாய்;	निधिं = நிதியை
जडमतिः = அறிவில்லாதவன்	विहाय = விட்டு; कः = எவன்
अतिरिक्तं = வேறொரு	अशङ्कः = ஶங்கையில்லாமல்
कर्म = கார்யத்தை	प्रतिभवनं = வீட்டுக்கு வீடு
शर्मणे = ஸுகத்திற்காக	भिक्षितुं = பிச்சை எடுக்க
कुर्यात् = பண்ணுவான்	पर्यटेत् = அலைவான் ?

உன் திருநாமம் இருக்க அதை விட்டு வேறு வழிகளில் ஸுகத்தை நாடுபவன் தன் வீட்டில் இருக்கும் புதையலை விட்டுவிட்டுத் தெருப்பிச்சை எடுக்கும் முட்டாளுக்குச் சமமானவன்.

தன் வீட்டு நிதியை விட்டுப் பிறர் வீட்டில் பிச்சை கேட்டுத்
திரிவார்போல் ... பேர் விட்டுப் பிறிதேற்பார் புத்தி மட்டு.

1. லக்ஷ்மி பெயர் விதேயமானது. நம் வசத்தில் இருப்பது. பிறர் உதவி நாடாமலே நமக்குக் கிடைத்துள்ளது. நாம் இட்ட வழக்கில் நம் நாக்கில் புரளக் கூடியது. யாக யஜ்ஞங்கள் போல் நம் ஶக்தியை மீறியதன்று. நா வாயிலுண்டே என்று பொய்கை ஆழ்வார் வினவுவதும் இதனால் தான்.

2. அது வீட்டிலுள்ள புதையல் போன்றது. மதிளேறிக்குதித்து அகழிதாண்டி அல்லற்பட்டுப் பெற வேண்டிய நிலை இன்றி நம் வீட்டிலேயே புதையல் கிடைத்தது போல் நமக்கு எளிதாகக் கிடைத்தது திருநாமம். புதையல் போல் மதிப்புயர்ந்தது. ஏழ்மை தொலைப்பது. சுகம் தருவது.

3. தன் வீட்டில் புதையல் இருப்பது தெரிந்தும், அது தனக்கு விதேயமாக எளிதில் கையாளக் கூடியதாய் இருந்தும், அதைப் பயன்படுத்தாமல் இருப்பவன் அறிவிலி. தனக்குத் தேவை ஏற்பட்டும் அதைப் பயன்படுத்தாமல் பிறரை நாடுபவன் முட்டாள். தன்க்குள்ள நிதியை உபேக்ஷித்து வீடு வீடாகப் பிச்சை எடுப்பவன் படுமுட்டாள். அது போல உன் பெயரைக் கீர்த்திக்காதவன் அறிவிலி. தனக்குச் சுகம் தேவைப்படும் போது கூட உன் பெயரை விட்டு வேறு வழி நாடுபவன் முட்டாள். மேலும், மிகக் கடினமானதும் அவமதிப்பு தருவதுமான செயலைச் செய்பவன் படுமுட்டாள். இருப்பதை விடுதல், இன்னொன்றைச் செய்தல், அதற்காக அலைந்து அவதிப்படுதல், என்று மடமையின் மூன்று பர்வாக்களை முறையே விஹாய, பிக்ஷிதும், பர்யடேத், என்ற மூன்று சொற்களால் சொன்னார்.

வீட்டிலே நிதியை விட்டு வீதியில் பிச்சை கேட்கும்
வீம்பர் உன் நாமம் விட்டு வீண் செயல் வேறு செய்வார்.

4. நிதி அநவதியானது. அளவற்றது. கிடைக்கும் பிச்சையோ சொற்பமானது. மேலும் நிதி உயர்ந்தது. கிடைக்கும் பிச்சையோ தரம் குறைந்தது. இந்த நிதி தன் வீட்டிலேயே உணர்த்துவதற்காக அநவதிம், உச்சை:, நிஷ்குடஸ்தம், என்ற மூன்று பதங்களைப் ப்ரயோகித்தார்.

5. சில பேருக்குத் தான் மடச் செயல் செய்யும்போது ஶங்கை வரும். எளிதான நற்செயலையே செய்யலாமோ? என்று ஐயம் வரும். பிறர் நம்மைத் தூற்றுவரோ ? என்ற ஸந்தேஹமும் உண்டாகும். ஆனால் இந்த ஜடமதிக்கு அது கூட இல்லையே, என்பதை அஶங்க: என்ற பதத்தால் சொல்கிறார்.

6. இங்கு அதிரிக்தம் கர்ம என்றது யாக யஜ்ஞம், தீர்த்த யாத்ரை, முதலிய ஶ்ரம ஸாத்யமான புண்ய செயல்களை நாம ஸங்கீர்த்தனத்தை விட்டு அவற்றைச் செய்வானேன் ? அவை செய்யும்போதும் நாம கீர்த்தன ப்ரதானமாக அவற்றை பண்ணலாமே.

புதையலை விட்டுப் பிச்சை புத்தியில்லாமல் கேட்கும்
புல்லர் போல் நாமம் விட்டுப் புண்ணியம் வேறு செய்வார்.

38. யாகங்களை மோகங்களாக்கும் நாமங்கள்

दयोदधे या तव नामधेयाभिधा सुधेयं यदि तां धयेयम्।
न वाजपेयं कमले जयेयं न वा जपेयं महतोऽपि मन्त्रान्॥ ३८॥

த³யோத³தே⁴ யா தவ நாமதே⁴யா-
பி⁴தா⁴ ஸுதே⁴யம் யதி³ தாம் த⁴யேயம் ।
ந வாஜபேயம் கமலே ஜயேயம்
ந வா ஜபேயம் மஹதோऽபி மந்த்ராந் ॥ 38 ॥

दयोदधे = கருணைக் கடலே!
तव = உன்னுடைய
नामधेय–अभिदा = பெயர் என்ற பெயர் கொண்ட
इयं = இந்த,
सुधा = அம்ருதம்
या = எதுவோ; तां = அதை
यदि धयेयं = குடிப்பேனானால்
वाजपेयं = வாஜபேய யாகத்தை
न यजेयं =(யஜிக்க) பண்ணமாட்டேன்,
महतः = பெரிய;
मन्त्रान् अपि = மந்த்ரங்களையும்.
न जपेयं = ஜபிக்க மாட்டேன்;

கமலையே! உன் நாமங்களாகிற அமுதத்தைப் பருகிய பின் நான் யாக யஜ்ஞங்களையும் பண்ணமாட்டேன். பெரிய பெரிய மந்த்ரங்களையும் ஜபிக்க மாட்டேன். அவையெல்லாம் தேவையில்லை.

செய்யேன் யாக யஜ்ஞத்தை, செப்பேன் வேறு மந்த்ரத்தை,
செய்யாள் நாமதேயத்தைச், சுவைத்தால் ஒக்கும் அமுதத்தை.

1. கருணைக் கடலே என்று விளிக்கிறார். மஹாமந்த்ரங்களும் வாஜபேயாதி யாகங்களுக்கும் கிடைக்கும் பலன் திருமகள் நாமகீர்த்தனத்திற்குக் கிடைப்பதற்குக் காரணம் அவள் கருணைக் கடலாக இருப்பது தான்.

2. 'இந்த' அம்ருதம் என்கிறார். இப்பொழுது கூட என் வாயில் இருக்கும் திருநாமமாகிற அமுதம். இதனால் இது மிக எளிய உபாயம் என்பது குறிக்கப்பட்டது.

3. மற்றவர்கள் எதற்கு வாஜபேயம் முதலிய உயர்ந்த யாகங்களைப் பண்ணுகிறார்கள் ? பிறகு அம்ருதபானம் பண்ணும் நிலை வரும் என்பதால் தானே ? அந்த இனிய பயன் உன் நாமம் சொல்வோர்க்கு இப்பொழுதே கிடைப்பதுடன், மற்றெல்லாப் பலன்களும் உறுதியாகின்றனவே. நான் எதற்கு வாஜபேயமோ மஹாமந்த்ர ஜபமோ பண்ண வேண்டும்? தேவையில்லை.

4. வாஜபேயம் முதலியவற்றை அநுஷ்டித்தவர் இந்தக் கவி. அதன் பயனாக இருக்கலாம் இந்த லக்ஷ்மீ பக்தி. அவள் நாமங்களை அமுதாய் உறிஞ்சும் நிலை வந்த பின் யாக யஜ்ஞங்கள் வேண்டாம் என்கிறார். வாஜபேயம் என்ற தொடர் இரு பொருள்களில் வந்துள்ளது. சிலேடை. யம் என்ற ஓசை ஆறு தடவை வந்துள்ளது. ப்ராஸம். நீ தயா ஸமுத்ரம். உன் பெயர் அம்ருதம். ஸமுத்ரத்தைச் சேர்ந்தது அம்ருதம் என்பது பொருத்தமே. இந்த அம்ருதத்திற்கு நாமதேயம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள் என்பது சமத்காரம்.

வேதா கமலா நாமங்கள், வேண்டி அமுதாய்ப் பருகுங்கள்,
வேண்டாம் யாக யஜ்ஞங்கள், வேண்டாம் பெரிய மந்த்ரங்கள்.

(தொடரும்)

सत्यवादिनं अक्रोधं अध्यात्मप्रवणेन्द्रियम् ।
शान्तं सद्वृत्तनिरतं विद्यान्नित्यरसायनम् ॥



உண்மை பேசுபவன், கோபமில்லாதவன், உள்ளே தன் ஆத்ம நிலையைக் காணப் பொறிகளைச் செலுத்துபவன், அமைதியுள்ளவன், நன்னடை முறையில் ஆர்வமுள்ளவன், நித்திய ரஸாயன முறை கொண்டவன்.

39. அக்ஷரம் தரும் அக்ஷரமான நாமம்.

शरणवरणमन्त्रे शार्ङ्गिणः प्राणकान्ते परमपुरुषनाम्नः प्रागुपादीयमानम् ।
विशदमहिम नाम क्षिप्रं एकाक्षरं ते वितरति जपतामपि एकमेवाक्षरं तत् ॥

ஶரணவரணமந்த்ரே ஶார்ங்கிண: ப்ராணகாந்தே
பரமபுருஷநாம்ந: ப்ராகுபாதீயமாநம் ।
விஶதமஹிம நாம க்ஷிப்ரம் ஏகாக்ஷரம் தே
விதரதி ஜபதாமபி ஏகமேவாக்ஷரம் தத் ॥

शार्ङ्गिणः - ஶார்ங்கம் ஏந்திய பெருமாளுடைய
प्राणकान्ते - உயிர்க் காதலியே !
शरण-वरण-मन्त्रे - ஶரணாகதி மந்த்ரமான த்வயத்தில்
परम-पुरुष-नाम्नः - பெருமாளின் பெயருக்கு
प्राक् - முன்னால்
उपादीयमानम् - கையாளப்படுவதும்
विशद-महिम - தெளிவான பெருமை கொண்டதும்
एकाक्षरं - ஒரே எழுத்தைக் கொண்டதுமான
ते नाम - உன் பெயர்
जपतां अपि - ஜபிப்பவர்களுக்கும்
तत् - அந்த
एकं अक्षरं एव - ஒரு அக்ஷரத்தையே (பரமபதத்தையே)
क्षिप्रं - விரைவில்
वितरति - கொடுக்கிறது.

லக்ஷ்மியே ! ஶரணாகதி மந்த்ரமானது த்வயம். அதில் நாராயண என்ற பெருமாள் பெயருக்கு முன் 'ஸ்ரீ' என்ற உன் பெயர் வருகிறது. அதில் ஒரே ஒரு அக்ஷரம் (எழுத்து) தான் இருக்கிறது. அதை ஜபிப்பவர்களுக்கும் அது ஒன்றேயான அக்ஷரத்தை (ஸ்ரீவைகுண்டத்தை)த் தருகிறது. அக்ஷரம் என்ற பதத்திற்கு இரண்டு அர்த்தங்கள். எழுத்து என்றும், திருநாடு என்றும். அதைக் கொண்டு வேடிக்கையாகச் சொல்கிறார். ஒரு அக்ஷர மந்த்ரம் ஒரு அக்ஷரத்தையே தருகிறது என்று.

'ஸ்ரீ' என்றோர் அக்ஷரமே, தந்திடுமாம் அக்ஷரமே,
ஜபிப்பவர்க்குத் தத்க்ஷணமே, இதன் பெருமை நிச்சயமே.

இந்த ஶ்லோகத்தில் உள்ள சில ஸம்ப்ரதாயார்த்தங்கள்:

1. ஸ்ரீமந்நாராயண என்று தொடங்கும் மந்த்ரத்தைக் கொண்டு ஶரணாகதி பண்ணுவது நம் ஸம்ப்ரதாயம். வேறு சில மந்த்ரங்களும் ஶரணாகதிக்குக் கொள்ளலாமெனச் ஶாஸ்த்ரங்கள் சொன்னாலும் த்வயமந்த்ரம் தான் வழக்கத்தில் இருக்கிறது. அதனால் தான் ஶரணவரண மந்த்ரத்தில் தாயாரின் ஒற்றை எழுத்துப் பெயர் பெருமாளின் பெயருக்கு முன்னர் இருப்பதாகச் சொல்கிறார். நமது ஸம்ப்ரதாயம் தெரியாத சில உரைகளில் இங்கு 'வம்' என்று தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்வதாகவும் அதில் 'உ' என்ற லக்ஷ்மி பெயர் 'அ' என்ற பெருமாள் பெயருக்கு முன் வந்து இக்ஸந்தி பெற்று 'வ' என்று ஆகியதைச் சொல்வதாகவும் எழுதியுள்ளனர். இது ஶரணாகதி மந்த்ரம் இல்லாததால் தங்கள் பொருளுக்கு ஒத்துவருமாறு லக்ஷ்மீ ஸஹஸ்ர மூலத்தையே மாற்றவும் துணிந்தனர். மூலத்தில் எழுத்துப் பிழை இருக்கும் என்று கருதி தாங்கள் அதை மாற்றுவதாகவும் அப்பட்டமாக எழுதி அச்சிட்டனர். க்ரந்தாக்ஷர வ்யாக்யானத்தை அந்த வடக்கத்தியர் பார்த்திருக்க மாட்டார்கள். மரண என்ற சொல்லைக் கொண்டு ஶ்லோகம் தொடங்குவதாக ஒரு மாறுதல். மந்த்ரத்தில் ஒரு எழுத்துப்பெயர் என்பதற்குப் பதில் ஒற்றையெழுத்து மந்த்ரம் என்று மற்றொரு மாறுதல். இரண்டையும் பண்ணி, புதிதாக உரை எழுதினார்கள். பின்னால் வந்த எல்லா பதிப்புகளிலும் இந்தத் தவறான பாடமே தொடர்கிறது. **லிப்கோ பதிப்பிலும் சரி, இன்டெர் நெட்டிலும் சரி, இதே தான். இது திருத்தப்பட வேண்டும்.**

2. பெருமாள் பெயருக்கு முன் தாயார் பெயர் மந்த்ரத்தில் இருப்பது மட்டும் இல்லை. பெருமாளிடம் ப்ரபத்திக்கு முன் தாயாரிடம் ப்ரபத்தி பண்ணுவதும் ஸம்ப்ரதாயம். அந்த வாக்யத்திலும் 'ஸ்ரீ' என்கிற திருநாமம் உள்ளது. ஆகையால் இந்தத் திருநாம உச்சாரணம் மோக்ஷமளிப்பதாகச் சொல்வது பொருந்தும்.

3. அக்ஷரத்தை நினைத்து ஜபம் பண்ணுபவர்களுக்கு அக்ஷரமே கிடைப்பது தத்க்ரது ந்யாயத்திற்குப் பொருந்துகிறது. இப்படி த்யானத்திற்கு விஷயமானதும், கிடைக்கும் பலனும், வேறுபடாமல் இருப்பதை ஏவ (அக்ஷரத்தையே) என்ற பதத்தால் உணர்த்தினார்.

4. அக்ஷரம் என்பதற்குப் பெருமாள் என்ற அர்த்தமும் ஸஹஸ்ரநாமத்தில் ப்ரஸித்தம். அதைக் கொண்டாலும் பாவார்த்தம் மாறவில்லை.

5. ஏகம் என்ற பதத்திற்கும் இரண்டு அர்த்தங்களைக் கவனிக்க வேண்டும். எண்ணிக்கையில் ஒன்று என்பது முதல் அர்த்தம். ஒப்பற்றது என்று இரண்டாம் அர்த்தம். ஒரு என்ற தமிழ்ச் சொல்லுக்குக் கூட இந்த இரண்டு அர்த்தங்கள் உண்டு.

6. விஶதமஹிம என்ற சொல்லில் நம் சம்ப்ரதாய அர்த்தங்களை நினைவு கூர வைக்கிறார். ஸ்ரீ என்ற திருநாமத்தின் பெருமையை எத்தனை ஆசார்யர்கள் கூறுகிறார்கள்? மற்ற ஸம்ப்ரதாயங்களில் இதைச் சொன்னவர் யாரும் தெரியவில்லை. ஆளவந்தார் ''ஸ்ரீரித்யேவ ச நாம தே'' என்கையில் ஸ்ரீ என்பதன் பெருமை பிரஸித்தமாயிருப்பதால் அந்தப் பதத்தின் அர்த்தமான தாயாரின் பெருமை சொல்லொணாதது என்கிறார். ஸ்ரீஸ்தவத்தில் கூரத்தாழ்வாரும் ஒரு முழு ச்லோகமிடுகிறார் ஸ்ரீ என்ற பதத்தின் பெருமைக்கு.

7. ஆறு அர்த்தங்களை 'ஸ்ரீ' என்ற பதத்திற்கு ஸம்ப்ரதாயத்தில் சொல்கிறோம். (நமக்காகப் பெருமாளை) அடைபவள். (உய்வதற்காக நம்மால்) அடையப்படுபவள், (நம் முறையீடுகளைக் காதுகொடுத்துக்) கேட்பவள், (நமக்காகப் பரிந்துரை செய்து பெருமாளைக்) கேட்பிக்கச் செய்பவள், (நம் வினைகளை) அறுப்பவள், (நமக்கும் யோக்யதை உண்டாம்படி) பக்குவப்படுத்துபவள், என்று ஆறு அர்த்தங்கள். ஶாஸ்த்ரங்களில் சொன்னவை. ஸ்வாமி ஸ்ரீ தேஶிகனால் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்திலும், சில்லறை ரஹஸ்யங்களிலும், ஸ்தோத்ர பாஷ்யத்திலும், மும்மணிக்

கோவையிலும், என்று பலமுறை விளக்கப்பட்டவை. இதையெல்லாம் கருத்தில் கொண்டு விபவதமஹிம என்கிறார்.

8. க்ஷிப்ரம் என்கிறார். 'ஸ்ரீ' என்கிற திருநாமம் விரைவில் பலனளிக்கும்.

அடைக்கலமனுவில் சார்ங்கத்தான் அன்பே உன்றன் பேராகும்
அக்ஷரம் ஒன்று ஜபிப்பார்க்கும் அக்ஷரம் ஒன்றைக் கொடுக்கிறது.

40. சாகும் ஸமயத்தில் சார்வான் நாமம்.

कण्ठे कुण्ठितनिस्वने कफचयैः अक्षेषु विक्षेपिषु
स्यूते चेतसि यातनाभिः असुषु क्षिप्रं प्रतिष्ठासुषु ।
सायासाऽपि समुद्रपुत्रि समयाभिज्ञा रसज्ञा मम
त्वन्नामोपहितं हितं जपतु तत् देवस्य नाम स्वयम् ॥ ४०

கண்டே குண்டிதநிஸ்வநே கபசயை: அக்ஷேஷு விக்ஷேபிஷு
ஸ்யூதே சேதஸி யாதநாபி: அஸுஷு க்ஷிப்ரம் ப்ரதிஷ்டாஸுஷு ।
ஸாயாஸாऽபி ஸமுத்ரபுத்ரி ஸமயாபிஜ்ஞா ரஸஜ்ஞா மம
த்வந்நாமோபஹிதம் ஹிதம் ஜபது தத் தேவஸ்ய நாம ஸ்வயம் ॥ 40

समुद्रपुत्रि - ஸமுத்ரத்தின் மகளே!
कण्ठे - கழுத்தில்
कफचयैः - கபக்குவியலால்
कुण्ठित - निस्वने - குரலடைத்துப் போகும்போது
अक्षेषु - இந்த்ரியங்கள்
विक्षेपिषु - தவறும்போது
यातनाभिः - பீடை வேதனைகளாலே
चेतसि - மனம்
स्यूते - பின்னிக் கலந்து போது
असुषु - உயிர்
क्षिप्रं - விரைவாக
प्रतिष्ठासुषु - கிளம்பும்போது
सायासा अपि - களைப்பு கொண்டதாயினும்
समय-अभिज्ञा - சரியான நேரம் அறிந்த
रसज्ञा - என் நாக்கானது
त्वत् - नाम - उपहितं - உன் பெயரோடு சேர்ந்ததும்
हितं - நலம் பயப்பதுமான

देवस्य नाम - பெருமாளின் பெயரை

स्वयं - தானாகவே

जपतु - ஜபிக்கட்டும்.

பல உபாதைகளுடன் நான் சாகும் தறுவாயில் என் நாக்கு உன் பெயரோடு சேர்ந்த பெருமாள் பெயரை ஜபிக்கட்டும். அந்த ஸமயத்தில் குரலும், புலன்களும், மனஸ்ஸும், எதுவுமே நம் ஸ்வாதீனத்தில் இல்லாமல் போகும். இந்த அவலநிலையை நாலு சொற்றொடர்களில் வர்ணிக்கிறார்.

1. கழுத்திலிருந்து குரல் எழும்பாது. கபம் கட்டிக் கொள்ளும், சளிக்கோழை மிகுந்து ஒலி தடைப்படும்.

2. கண், காது முதலியவை செயலிழக்கும். புலன்கள் சிதிலமாகும். திறனற்றுப் போகும்.

3. மனக்கலக்கம் உண்டாகும். வலிவேதனைகளால் எண்ணங்கள் பின்னிக் கொள்ளும். குழப்பமாய் இருக்கும்.

4. உயிர் பிரியத் துடிக்கும். ப்ராணன் போகத்வரிக்கும். உடலை விட்டு நீங்கத் தயார் நிலையிலிருக்கும். அத்தகைய தருணத்தில் 'ஸ்ரீமந் நாராயணா' என்று ஜபிக்கும்படி என் நாக்குக்கு அருள் புரிவாயாக. இந்த ஶ்லோகத்தில் பொதிந்துள்ள அர்த்த விசேஷங்கள்.

முதலாவது : மரண வேதனையை ஆழ்வார் ஆசார்யர்கள் அவ்வப்போது வர்ணிப்பதற்குக் காரணம் அதனால் நமக்கு விரக்தியும், நற்செயலைத் தள்ளிப் போடாமல் பண்ணும் வழக்கமும் ஏற்படும் என்பது. அவர்களை அடியொற்றி வர்ணிக்கிறார்.

1. எய்த்த சொல்லோடீளையேங்கி இருமி என்று கலியன் சொன்னதை குண்டித நிஸ்வநே கபசயை: என்கிறார்.

2. புலன்கள் நைய மெய்யில் மூத்து என்று கலியன் சொன்னதை அசேஷஷு விசேஷபிஷு' என்கிறார்.

3. உள்ளம் எள்கிக் கலங்க என்று கலியன் சொன்னதை ஸ்யூதே சேதஸி என்கிறார்.

4. சாமிடத்து என்றும் அற்றது வாளாள் என்றும் பெரியாழ்வார் சொன்னதை அஸ்ஷ ப்ரதிஷ்டாஸஷ் என்கிறார்.

இரண்டாவது :- மரண காலத்தில் ஏன் ஜபிக்க வேண்டும்? நம்முடைய அடுத்த கதியை நிர்ணயிப்பதில் நம் மரணகால நடவடிக்கைகளுக்குப் பெரும் பகுதி உண்டு. அந்திமஸ்ம்ருதி குறித்துப் பகவத் கீதை முதலான வற்றில் தெளிவாக உண்டு. அந்திமப் பேச்சும் திவ்ய தம்பதி நாமமாக இருக்க வேண்டுகிறார்.

நான்காவது :- அந்திம காலத்தில் நமது புலனறிவு ஸ்ரீமந்நாராயணன் விஷயமாகவே இருக்கவேண்டும். இது தான் சரணமந்திரம் ஓதுவதற்குக் காரணம். அதைத்தான் இங்கு வேண்டுகிறார்.

ஐந்தாவது:- பிராட்டிபெயருடன் இணைந்த பெருமாள் பெயர் என்கிறார். ஸ்ரீஹரி, ராதாக்ருஷ்ணன், ஜானகிராமன், லக்ஷ்மிநாராயணன், என்று ஏராளமாக உண்டு இத்தகையவை. ஆனாலும், ஸ்ரீமந் நாராயணன் என்கிற திருநாமமே இங்கு விவக்ஷிதம். நடைமுறையிலும், விதிவாக்கியங்களிலும் இப்படியே உள்ளது. இதை தத் என்பதால் ஸூசிக்கிறார்.

ஆறாவது:- ஸமயாபிஜ்ஞா என்கிறார். காலமறிந்து செய்யும் செயலுக்குப் பலன் அதிகம். இன்னொரு பொருளும் கருதியிருக்கக் கூடும். ஸமயம் என்றால் உடன்படிக்கை. நீ இப்படிச் செய்தால் நான் இப்படிச் செய்கிறேன் என்று செய்துகொள்ளும் ஒப்பந்தம். வராஹசரமச்லோகத்தில் பெருமாள் இப்படி ஒரு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டிருக்கிறார் நம்முடன். அந்த ஒப்பந்தத்தின்படி நாம் இப்போது செய்யும் ஜபாதிகளின் விளைவாக மரணகாலத்தில் பெருமாள் செய்யும் ஸ்ம்ருதிக்கு அறிகுறி இந்த நாக்கில் தெரியட்டும் என்கிறார். மனதும் இந்திரியங்களும் தளர்ந்தபின் வரும் நாமஸங்கீர்த்தனம் பெருமாள் ஸங்கல்பத்தின் அடையாளம் தானே ? ஸ்வயம் ஜபது என்று தாயாரிடம் வேண்டுவதும் இதையே காட்டுகிறது.

ஏழாவது:- ஹிதம் என்கிறார். நமக்கு நற்கதி அளிப்பது திவ்யதம்பதி நாமகீர்த்தனமே.

41. பரிசுத்தி பண்ணும் பெயர்கள்:-

अभ्यासैः पवमानमन्त्रविततैः अब्लिङ्गभङ्ग्यन्तरैः
आदेशै रघमर्षणस्य यमकै रष्टाक्षरस्येन्दिरे ।
गायत्र्याः पुनरुक्तिभिः परिपणै रोङ्कार पुंसूक्तयोः
शुद्धिं व्याहृतिसोदरैः न भजते को नाम ते नामभिः ॥ ४१ ॥

அப்₄யாஸை: பவமாந விததை:அப்லிங்க ப₄ங்க்யந்தரை:
ஆதேஶை ரகமர்ஷணஸ்ய யமகை ரஷ்டாக்ஷரஸ்யேந்திரே ।
காயத்ர்யா: புநருக்திபி: பரிபணை: ஓங்கார பும்ஸூக்தயோ:
ஶுத்₃தி₄ம் வ்யாஹ்ருதி ஸோதரை: ந ப₄ஜதே கோ நாம தே நாமபி₄: ॥ 41 ॥

इन्दिरे - லக்ஷ்மியே !

पवमान - मन्त्र - विततैः - பவமாநஸூக்தம் என்னும் மந்திரக்கூட்டத்தின்

अभ्यासैः - ஆவ்ருத்திகளும்

अब्लिङ्ग- भङ्गी - अन्तरैः - ஆபோஹிஷ்டா., ஆப. புநந்து. முதலிய மந்திரங்களின் வேற்றுருக்களும்

अघमर्षणस्य - அகமர்ஷண ஸூக்தத்தின்

आदेशैः - ப்ரதிநிதிகளும்

अष्टाक्षरस्य - அஷ்டாக்ஷரத்தின்

यमकैः - இரட்டிப்புகளும்

गायत्र्याः - காயத்திரி மந்திரத்தின்

पुनरुक्तिभिः - மறுமொழிகளும்

ओङ्कार - पुंसूक्तयोः ப்ரணவத்திற்கும் புருஷஸூக்தத்திற்கும்

परिपणैः - முதலீடுகளும்

व्याहृति - सोदरैः வ்யாஹ்ருதிமந்திரங்களின் உடன்பிறந்தவையும் ஆன

ते - உன்

नामभिः - பெயர்களால்

को नाम - எவன் தான்

शुद्धिं - தூய்மையை

न भजते - அடையமாட்டான் ?

தூய்மை அடைவதற்காகச் சொல்லும் மந்திரங்களுள் முக்கியமானவை சில: ஸந்தியாவந்தநத் தொடக்கத்தில் சொல்லும் ஆபோஹிஷ்டா என்கிற மந்திரங்கள், புண்யாஹவாசனத்தில் சொல்லும் பவமாந மந்திரங்கள், ஸ்நாநகாலத்தில் சொல்லும் அகமர்ஷணமந்திரங்கள்,

திருவெட்டெழுத்து மந்திரம், காயத்திரி மந்திரம், ஒற்றையெழுத்துப் பிரணவம், புருஷஸூக்தம், ப்ரோக்ஷிக்கும்போது சொல்லும் வ்யாஹ்ருதி மந்திரம், என்று பல. இவை எல்லாவற்றுக்கும் சமமானவை உன் திருப்பெயர்கள். பரிசுத்தி பண்ணுபவை. இவற்றால் தூய்மை அடையாதவன் எவனுமே கிடையாது.

இந்தக்கவி பரமவைதிகர் ஆனதால் வைதிககர்மங்களில் பரிசுத்திக்காக ஏற்பட்ட மந்த்ரங்கள் என்னென்ன என்பதை அடுக்கித் தருகிறார். முதலில் **பவமாநஸ்ஸுவர்ஜந:** என்ற அநுவாகம். புண்ணியாஹவாசனத்தில் பிரதானமான பகுதி. இந்தக் கர்மம் சுத்தமாவதற்கென்றே ஏற்பட்டது. சரீரசுத்த்யர்த்தம் ஆத்மசுத்த்யர்த்தம் ஸர்வோபகரண சுத்த்யர்த்தம் க்ருஹசுத்த்யர்த்தம் சுத்தி புண்யாஹம் வாசயிஷ்யே என்ற ஸங்கல்பமே இதைத் தெளிவிக்கிறது.

இரண்டாவதாக:- நித்தியம் ஸந்தியாவந்தனம் தொடங்கும்போதெல்லாம் ப்ரோக்ஷணமந்த்ரமாக நாம் சொல்லும் ஆபோஹிஷ்டா: எனத்தொடங்கும் மந்திரங்கள். இதே மந்திரங்களை மந்த்ரஸ்நாநத்திற்கு விதித்திருப்பதால் இவை பரிசுத்திக்கானவை என்பது தெளிவு.

இதே போல மாத்தியாஹ்நிகத்தில் ப்ராஶநமந்த்ரமானதும் அப்லிங்கமே. ஆப: புநந்து என்று தொடங்குவது. அது தூய்மையைப் பண்ணுவது என்பது அதன் பொருளிலிருந்தே தெரிகிறது. ஆபோ வா இதம் முதலிய வேறு சில மந்திரங்களும் இவ்வகையைச் சேர்ந்தவை.

மூன்றாவதாக:- அகமர்ஷணம். ஸ்ரீகோபால தேசிகாஹ்நிகத்தில் தர்மசாஸ்த்ரோக்த ஸ்நாநக்ரமத்தில் காணலாம். மந்த்ரத்திலேயே புநாது என்றும் புநந்து என்றும் அடிக்கடி வருவதாலும், ஸ்நானத்தில் விதித்திருப்பதாலும் இந்த மந்திரங்கள் பரிசுத்தி பண்ணுபவை என்று எளிதில் அறிகிறோம்.

நான்காவதாக:- அஷ்டாக்ஷரம். பவித்ராணாம் பவித்ரம் யோ மூலமந்த்ரஸ் ஸநாதந: என்று மறை சாற்றுகிறார்கள் இது பரிசுத்தி பண்ணுவதை.

ஐந்தாவதாக:- காயத்ரி மந்திரம். இதை ஜபிக்காவிட்டால் அசுத்தி. ஸந்த்யாஹீந: அஶுசி: என்றபடி.

ஆறாவதாக:- பிரணவமந்த்ரமும் புருஷஸூக்தமும். விஶுத்தி: பரமா மதா என்று சொன்ன ஜ்ஞாந விசேஷத்தைத் தருபவை. புருஷ ஸூக்தத்தினுல் பகவானுக்கே திருமஞ்ஜனம் செய்கிறுர்கள்.

ஏழாவதாக:- வ்யாஹ்ருதிமந்த்ரங்கள். தூய்மைப்படுத்த ப்ரோக்ஷிக்கும்போதெல்லாம் மூன்று வ்யாஹ்ருதிகளை ப்ரணவ பூர்வகமாகச் சொல்வது வழக்கம். மொத்தம் ஏழு வ்யாஹ்ருதிகள். ஸர்வப்ராயஶ்சித்தாஹுதியும் வ்யாஹ்ருதி த்ரயம் கொண்டே. இதனால் அறியலாம் இவை பரிசுத்தி பண்ணுவதை.

இந்த ஏழெட்டு வேதப் பகுதிகளுக்கும் சமமானவை உன் பெயர்கள். அவை போலத் தூய்மை பண்ணுபவை.

பவமாந ஸூக்தம் போல் பவித்திரமாம் ப்ரணவம் போல்
பரிசுத்தி பண்ணுபவை பத்மாவின் பெயர்களுமாம்.
அகமர்ஷணத்தைப்போல் அப்லிங்க மந்த்ரம் போல்
அஷ்டாக்ஷரத்தைப்போல் அன்னைபெயர் தூய்தாக்கும்.

42. கடுவினைகளையும் கழுவாய் நாமங்கள்:-

प्रायश्चित्तविशुद्ध्यै प्रायश्चित्तं समस्तपापानाम् ।
गायतु तव नामैषा कमले कलितान्यनिरसना रसना ॥ ४२ ॥

ப்ராயஶ் சித்த விஶுத்த்யை
ப்ராயஶ்சித்தம் ஸமஸ்தபாபாநாம் ।
கா₃யது தவ நாமைஷா
கமலே கலிதாந்யநிரஸநா ரஸநா ॥ 42 ॥

इति अस्तोकाध्वरि कविघटाम्बु वादिहंसाम्बुद वेङ्कटार्यदीक्षितकृतिषु लक्ष्मीसहस्रे नामवैभवस्तबकः सम्पूर्णः

कमले - கமலாதேவியே !
समस्त - पापानां - எல்லாப் பாவங்களுக்கும்
प्रायश्चित्तं - பிராயச்சித்தமான
तव नाम - உன் திருப்பெயரை
एषा - இந்த(என்னுடைய)
रसना - நாக்கானது
कलित - अन्य - निरसना - மற்றவற்றைத் தள்ளுதல் செய்ததாய்
चित्त - विशुद्ध्यै - மனத்தூய்மைக்காக
प्रायः - பெரும்பான்மையாக
गायतु - பாடட்டும்.

கமலையே ! உன் பெயர் எல்லாத் தீவினைகளுக்கும் பிராயச்சித்தமானது. (இப்படி ஸநத்குமாரரும் சொல்லியிருக்கிறார்.) என் நாக்கு இதையே பாடட்டும். வேறொன்றும் பண்ண வேண்டாம் இந்த நாக்கு. மற்ற எல்லாக் காரியங்களையும் தூரத் தள்ளட்டும். பெரும்பாலான நேரங்களில் இதே காரியமாக இருக்கட்டும். இதனால் மனது சுத்தமாகும்.

ப்ராயஶ்சித்தம் என்ற வார்த்தையில் விளையாடுகிறார். நிஷ்க்ருதி அல்லது கழுவாய் என்பது எளிதில் புரியும் அர்த்தம். ப்ராய: சித்தம் என்று இரண்டாகப் பிரித்து வேறு அர்த்தத்திற்கு வழிவகுத்துவிட்டார். நிரஸநா ரஸநா என்ற இடத்தில் இலேசான விரோதம் தட்டுவது போல் செய்ததும் ஒரு அழகு தான். இந்த ச்லோகத்தில் அர்த்தவிசேஷங்கள்:

1. நாமங்களை நாம் என்ன பண்ணவேண்டும் ? கீர்த்திக்கவேண்டும், ரக்ஷிக்கவேண்டும், ஜபிக்கவேண்டும், கேட்கவேண்டும், பெயராகச் சூடவேண்டும், சூட்டவேண்டும், மதித்துப் போற்றவேண்டும், அமுதாகப் பருகவேண்டும், நாக்கிலிட்டுச் சுவைக்க வேண்டும், உபாஸிக்கவேண்டும், துதிக்கப் பயன்படுத்தவேண்டும், வாசோவிதேயமாக நெட்டுருப்பண்ணவேண்டும்,

என்றெல்லாம் இந்த ஸ்தபகத்தில் சொல்லி வந்தார் கவி. முத்தாய்ப்பான கடைசி ச்லோகத்தில் கமலையின் நாமத்தைப் பாடவேண்டும் என்கிறார்.

2. ஆடிப்பாடி அரங்கவோ என்றழைக்கும் என்றார் குலசேகர ஆழ்வார். பண்ணமைத்துப் பாடுவது பக்தியின் பரிவாஹம். உத்தமன் பேர்பாடி என்றாள் ஆண்டாள். அந்தவகையில் நாம் கமலையின் நாமத்தைப் பாடவேண்டும் என்கிறார். மற்றொன்றும் வேண்டாம் என்று ஒதுக்கி உன் பெயரைப் பாடட்டும் என் நாக்கு. இதனால் என்ன பலன் என்று கேட்டால், ''மனமாசு தீரும் அருவினையும்சாரா'' என்று பொய்கை ஆழ்வார் அருளியது போல், சித்தவிசுத்தியும் ஸமஸ்தபாபப்ராயச்சித்தமும் என்கிறார்.

3. ஒவ்வொரு பாபத்திற்கும் ஒவ்வொரு விதமான ப்ராயஶ்சித்தம் இருக்கும். உதாரணமாக, ஸந்தியாவந்தனம் பண்ண நாழியாகிவிட்டால் அதிகப்படி அர்க்கியம் பிராயச்சித்தம் ஆகும். அனேககால ஸாயம்ப்ராதர் ஆஹுதிகளை விட்ட பாவத்திற்கு ப்ராஜாபத்யக்ருச்சரம் ப்ராயச்சித்தம் ஆகும். மித்யாதீத பாபத்திற்கு ஆயிரம் தடவை காயத்ரிஜபம் ப்ராயச்சித்தமாகும். ஆனால் தாயார் திருநாமத்தைப் பாடினால் அது ஸமஸ்தபாபங்களுக்கும் ப்ராயச்சித்தமாகும் என்கிறார்.

4. மனத்தூய்மை மிகவும் முக்கியமான ஒன்று. தாந்தோவ பாவோபஹதாநி கல்க: என்ற ப்ரமாணத்தை மேற்கோள் காட்டி இதை விளக்குகிறார் ஸ்வாமி தேசிகன். இவ்வளவு முக்கியமான சித்தவிசுத்தியைப் பெற வழி கமலையின் பெயரைப் பாடுவது என்கிறார் இந்த ச்லோகத்தில்.

கடுவினையைக் களைந்தோட்டும் கமலையின் பேர் மட்டும்
களிப்புடன் நா பாடட்டும் கல்மஷங்கள் நீங்கட்டும்.

நாவல்பாக்கம் அக்நிஹோத்ரம் நாராயணதாதயார்ய மஹாதேசிகனிடம் கேட்டறிந்து அவரின் பௌத்ரர் நாவல்பாக்கம் கண்ணன் என்கிற யக்ஞவராஹ தாதயார்யர் எழுதிய லக்ஷ்மீஸஹஸ்ர உரையில் நாமவைபவஸ்தபகம் முற்றும்

ஸத்ம வைபவ ஸ்தபகம்

இந்த ஸ்தபகத்தில் திருமகளின் இருப்பிடமான தாமரை மலரின் பெருமையை 40 சுலோகங்களில் வருணிக்கிறார்.

1.திருமகள் தினமும் திகழும் தாமரை.

अरविन्दवनं वन्दे तदहं यदहर्निशम् ।
प्रीतिपूर्वकमध्यास्ते पीताम्बरकुटुम्बिनी ॥ १ ॥

அரவிந்தவநம் வந்தே ததஹம் யதஹர்நிஶம் ।
ப்ரீதிபூர்வகமத்யாஸ்தே பீதாம்பர குடும்பிநீ ॥ 1 ॥

यत् - எதில்
अहर्निशं - பகலிலும் இரவிலும்
प्रीतिपूर्वकं - அன்புடன்
पीताम्बरकुटुम्बिनी - பீதாம்பரனான பெருமாளின் மனைவி
अध्यास्ते - வீற்றிருக்கிறாளோ
तत् - அந்த
अरविन्दवनं - தாமரைக்காட்டை
अहं - நான்
वन्दे - வணங்குகிறேன்.

தாமரைக்காட்டில் லக்ஷ்மி எப்போதும் இருக்கிறாள். (அவளுக்கு பத்மவநாலயா என்ற பெயர் இதனால் வந்தது.) தாமரை அவளுக்கு மிகவும் உகந்தது. (அதனால் பத்மப்ரியா என்ற பெயர் இதனால் தான்.) இப்படிப் பீதாம்பரனின் மனைவிக்கு உகந்த வாஸஸ்தானமான தாமரைக்காட்டை நான் வணங்குகிறேன்.

அஹர்நிஶம்-அல்லும் பகலும்- என்கிறார். லக்ஷ்மியின் நித்யஸாந்நித்யத்தால் தாமரைக்குப் பெருமை. திடீர்ப் பண முதலைகள் போல் தாற்காலிகமான லக்ஷ்மிஸாந்நித்யம் பெற்றவர்க்கு இந்தப் பெருமை கிடையாது.

ப்ரீதிபூர்வகம் - மகிழ்ச்சியுடன் - தாமரையில் உறைகிறாள் லக்ஷ்மி.

யத் என்பதற்கு இரண்டு விதமாகப் பொருள் கொள்ளலாம். எதை, எதில், என்று பொருள் கொண்டால்

மேற்சொன்ன கருத்து. எந்தக் காரணத்தாலென்று பொருள் கொண்டால் கீழ்ச்சொன்னபடி ஆகும்:

திருமகள் தாமரையில் உகப்புடன் வசிப்பதால் நான் தாமரைக்காட்டை வணங்குகிறேன்.

நான் தாமரையை வணங்குவதற்குக் காரணமே அதில் திருமகளின் வாசம் தான். மற்ற மலர்களை நான் வணங்கவில்லையே. தாமரையைக்கூட இந்த வலுவான காரணம் இல்லாவிட்டால் வணங்குவேனா?

இந்தச் சுலோகத்திலிருந்து அறியும் சாஸ்த்ரார்த்தங்கள் இரண்டு:

1. திருமகள் எதிலெல்லாம் வசிக்கிறாளோ, அதெல்லாம் நம் வணக்கத்துக்குரியவை. அதனால் தான் பசுமாட்டின் பிருஷ்டபாகத்தை வணங்குகிறோம். அதனால் தான் திருப்பாற்கடலைத் திவ்யதேசமாக வணங்குகிறோம். அதனால் தான் திருமாலை வணங்குகிறோம். அதே ரீதியில் தாமரையை வணங்குகிறோம்.

2. இன்னும் கேட்கப்போனால், திரு எங்கெங்கெல்லாம் ஏதேனும் ஓருருவில் வசிக்கவில்லையோ, அவற்றை நாங்கள் வணங்குவதில்லை. ''திருவில்லாத் தேவரை'' நாங்கள் தெய்வமாகவே கருதுவதில்லை.

இரவும் பகலும் திருமாலின் இல்லத்தாளே இஷ்டமுடன்
இருக்கை கொள்ளும் தாமரையின் இடத்தைப் போற்றி வணங்குகிறேன்.

2.அன்னையின் ஆலயம் போல் ஆகின்ற தாமரை.

सारसात्मनि तवाम्ब मन्दिरे द्वारपालकजना इवेन्दिरे।
चारुकेसरसुवर्णयष्टिका धारिणः परिवसन्ति षट्पदाः ॥ २ ॥

ஸாரஸாத்மநி தவாம்ப மந்திரே
த்வாரபாலகஜநா இவேந்திரே।

சாருகேஸரஸு॰வர்ணயஷ்டிகா
தா₄ரிண: பரிவஸந்தி ஷட்பதா: ॥ 2 ॥

इव - போல	अम्ब - தாயே
षट्पदाः - வண்டுகள்	इन्दिरे - லக்ஷ்மியே !
चारु- केसर - सुवर्ण - यष्टिका-	तव - உன்னுடைய
धारिणः - அழகிய மகரந்தங்களெனும் தங்கக்கழியைத் தரிப்பவர்களாய்	सारसात्मनि - தாமரை உருவிலுள்ள
परिवसन्ति - சுற்றிலும் வசிக்கின்றன.	मन्दिरे - ஆலயத்தில்
	द्वार-पालक-जनाः- வாயிற்காப்பாளர்கள்

தாயே லக்ஷ்மியே! தாமரைமலர் உன்னுடைய கோயில். அப்படியானால் துவாரபாலகர்கள் எங்கே? அவர்கள் ஏந்தும் தடிகள் எங்கே? என்றால் அவையும் உண்டு. தாமரையில் மகரந்தத் தண்டுகள் உள்ளன. அவற்றைச்சுற்றி வண்டுகள் மொய்க்கின்றன. அந்த வண்டுகள் அந்தத் தடிகளை ஏந்திச் செல்பவை போலத் தோற்றமளிக்கின்றன. ஏதோ ஜயன் விஜயன் முதலிய வாயிற்காப்பாளர்கள் தங்கக் கழிகளைக் கைகளில் ஏந்தி சுற்றி வருவது போலிருக்கிறது.

யஷ்டிகா-தாரிண: என்று பிரிப்பதற்குப்பதில் யஷ்டி-க-ஆதாரிண: என்றும் பிரிக்கலாம். தண்டுகளின் நுனிகளை ஆதாரமாய்க்கொண்டு என்று அர்த்தம் ஆகும். வண்டுகள், நுனிகளில் அமர்ந்து மகரந்தத்தாதுகளில் உள்ள தேனைக் குடிக்கும். அப்போது அந்த மலருக்குள்ளிருக்கும் சிறு தண்டுகள் வண்டுகளைத் தாங்கும். ஆகையால் யஷ்டிகாதாரிண: என்று வண்டுகளைச் சொன்னது இந்த உத்ப்ரேக்ஷையை ஏற்காதவர்களாலும் ஏற்கப்படும். ஸு॰வர்ண என்பதற்கு நல்ல நிறமுடைய என்றும் பொருள் கொள்ளலாம். தங்கம் போலிருப்பதை மறுப்பவரும் இதை மறுப்பதற்கில்லை. எப்படியும் ஸு॰வர்ண யஷ்டிகாதாரிகளான நிலை வண்டுகளுக்கும் உண்டு;

வாயிற்காப்பாளருக்கும் உண்டு. சிலேடையால் ஒப்புமை மேலும் வலுத்துவிட்டது.

திருமகள் தெய்வம், தாமரை அவளது கோயில்.
வண்டுகள் அங்கே காவலர்கள், தாதுத்தண்டுகள் அவர்களது கைத்தடிகள்.

தாமரைப்பூத் துகள்கள் தாங்கிய தண்டுகோல்கள்
தாங்குமிவ் வண்டினங்கள் தாம் மனைக் காவலர்கள்.

3. திருமகளின் திருவடி போன்ற தாமரை

तावकं पदं अभिख्यया रमे वारिजं प्रणिगदन्ति सूरयः ।
प्रौढशोभनखरांशुवैभव प्राप्तमञ्जिम सदालिसेवितम् ॥ ३ ॥

தாவகம் பதம் அபி₄க்ய₂யா ரமே
வாரிஜம் ப்ரணிகதந்தி ஸூரய: ।
ப்ரௌட₄ஶோப₄ நக₂ராம்ஶு வைப₄வ
ப்ராப்தமஞ்ஜிம ஸதாளிஸேவிதம் ॥ 3 ॥

रमे - லக்ஷ்மியே
सूरयः - அறிஞர்கள்
प्रौढ -शोभ- नखर -अंशु-वैभव-प्राप्त-मञ्जिम - பேரழகுடைய நகக் கதிர்ப்பெருமையால் அழகுற்றதும்
सत् - आलि-सेवितं - நல்லோர் வரிசைகளால் வணங்கப்பட்டதும்
अभिख्यया - அழகினால்
वारिजं - தாமரையானதும்
तावकं - உன்னுடையதுமான
पदं - திருவடியை
प्रौढ-शोभन-खरांशु-वैभव-मञ्जिम - பரந்தொளிரும் சூரியன் படர்தலால் அழகுற்றதும்
सदा-अलि-सेवितं - எப்பொழுதும் வண்டுகளால் அடையப்படுவதும்
अभिख्यया - பெயரால்
वारिजं - தாமரையானதும்
तावकं - உன்னுடையதான
पदं - இருப்பிடமானதுமான தாமரையாக
प्रणिगदन्ति - சொல்கிறார்கள்.

லக்ஷ்மியே! உன்னுடைய திருவடியைத் தாமரை என்று அறிஞர்கள் சொல்கிறார்கள். ஏனென்றால்:

1. இரண்டுமே உனக்குப் பதம் ஆனவை.

2. இரண்டுமே அபிக்யையால் தாமரையானவை.

3. இரண்டுமே ப்ரௌடபோபநகராம்சுக்களால் மிளிர்பவை.

4. இரண்டுமே ஸதாலிஸேவிதங்கள்.

தாயார் திருவடிக்கும் தாமரை மலருக்கும் உள்ள இந்த நான்கு ஒப்புமைகளைச் சிறிது கூர்ந்து பார்ப்போம்.

1. பதம் என்றால் அடி என்றும் இருப்பிடம் என்றும் இரண்டு பொருள்கள். ஆகையால் திருவடியும் தாமரை மலரும் அவளுக்குப் பதங்கள்.

2. அபிக்யை என்றால் அழகு என்றும் பெயர் என்றும் இரண்டு பொருள்கள். திருவடி அழகால் தாமரையானது. தாமரை பெயரால் தாமரையானது. இரண்டுமே அபிக்யையால் தாமரையானவை.

3. கராம்சு என்று சூரியனுக்குப் பெயர். அவன் சண்டகிரணன் ஆதலால்.

தாமரைக்கு அழகு சூரியனால் ஏற்படுவது பிரசித்தம். சூரியவெளிச்சத்தால் மலர்வது தாமரை. நகராம்சு என்றால் நகக்கதிர்கள். இவை திருவடியின் அழகைக் கூட்டுகின்றன. வெண்மையாக ஒளிர்வதால்.

4. நல்லோர் வரிசைக்கு ஸதாளி என்று பெயர். வரிசை வரிசையாகப் பெரியோர் ஸேவிக்கிறார்கள் தாயாரின் திருவடியை. அதனால் அது ஸதாளிஸேவிதம். தாமரையும் ஸதா அளிஸேவிதம். எப்பொழுது வண்டு மொய்ப்பதால். அளி என்றால் வண்டு. ஆளி என்றால் வரிசை.

இப்படி நாலு விசேஷணங்களால் சிலேடை சிறக்கிறது.

இந்தச் சுலோகத்தில் நாமறியும் நல்லுரைகள் சில:

1. அறிஞர்கள் சொல்வது ஸமஞ்ஜஸமாய்த் தான் இருக்கும்.

2. கூட்டம் கூட்டமாக நல்லவர்கள் தாயார் திருவடிகளை வணங்குவார்கள்.

அன் னை யின் தி ரு வ டி கள் அம் பு ஜ மென் றி வை நிகர் கள்.
அதன் நாலுகார ணங் கள் அறி வார் கள் அறி ஞர் கள்.

4. உதவிடுவோரை உயர்த்தும் தாமரை

प्रबिभ्रति भवत्पदप्रणयतद्विपर्यासयोः
जना विभवदुर्गती जननि तत्र चोदाहृतिः ।
सहस्रवसुरेधते सरसिजानुकूलो रविः
स भिक्षुकशिरोमणिः श्रयति तत्प्रतीपः क्षयम् ॥ ४ ॥

ப்ரபிப்4ரதி ப4வத்பத3ப்ரணயதத்விபர்யாஸயோ:
ஜநா விப4வது3ர்க3தீ ஜநநி தத்ர சோதா3ஹ்ருதி: ।
ஸஹஸ்ரவஸுரேத4தே ஸரஸிஜாநுகூலோ ரவி:
ஸ பி4க்ஷுகஶிரோமணி: ஶ்ரயதி தத்ப்ரதீப: க்ஷயம் ॥ 4 ॥

जननि - தாயாரே!
जनाः - ஜனங்கள்
भवत्-पद-प्रणय-तत्-
विपर्यासयोः - உம் பதத்தில் பக்தியிலும் அதன் மாற்றிலும் (விளைவாக)
विभव- दुर्गती - செல்வத்தையும் வறுமையையும்
प्रबिभ्रति - சுமக்கிறார்கள்.
तत्र च - அதிலும் இதோ
उदाहृतिः - திருஷ்டாந்தம்.
सरसिजानुकूलः - தாமரைக்கு அநுகூலனான
रविः - சூரியன்
सहस्रवसुः - ஆயிரம் கதிர்களுடன் (பணக்குவியலுடன்)
एधते - விளங்குகிறான்.
तत्प्रतीपः - அதற்கு எதிரான
सः - அந்த சந்திரன்
भिक्षुक-शिरो-मणिः - சிவனின் தலையலங்காரமாக (பிச்சைக்காரா தலைவனாக)
क्षयं - அழிவை
श्रयति - அடைகிறான்.

லக்ஷ்மியின் திருவடியில் அன்பு கொண்டால் அந்த பக்தர்கள் சீரும் சிறப்புமாய் வாழ்வார். இதற்கு நிதரிசனம் சூரியன்.

லக்ஷ்மியின் திருவடியில் மாறான கருத்து, வெறுப்பு, கொண்டவர்கள் அழிந்து போவர். இதற்கு நிதரிசனம் சந்திரன்.

இவ்விரண்டையும் சிலேடைச் சொற்களைக் கொண்டு மூதலிப்போம் இப்போது.

பதம் என்றால் திருவடியும் இருப்பிடமும் அர்த்தங்கள்.

வஸூ என்றால் பணமும் கிரணமும் அர்த்தங்கள்.

ஸஹஸ்ரவஸூ என்றால் ஸஹஸ்கிரணன் என்னும் சூரியனும் மஹாதனிகனும் அர்த்தங்கள்.

க்ஷயம் என்றால் நாசமும் க்ஷயரோகமும் அர்த்தங்கள்.

பிக்ஷூகன் என்றால் பிச்சைக்காரனும் சிவனும் அர்த்தங்கள்.

சிரோமணி என்றால் தலையாயவனும் தலையலங்காரமும் அர்த்தங்கள்.

இப்பொழுது உலகத்தார் அறிந்த ஆறு உண்மைகள்:

லக்ஷ்மியின் பதம் தாமரை.
தாமரையை விரும்புபவன், மலர்விப்பவன், சூரியன்.
அவனுக்கு ஸகஸ்ரகிரணன் என்றும் பெயர்.
தாமரையை வெறுப்பவன், மூடச்செய்பவன், சந்திரன்.
சந்திரனுக்கு க்ஷயரோகம் உண்டு. தேய்பிறையில் அவன் தேய்வது இதனால்.
சிவனின் தலையில் அணியாக இருப்பவன் சந்திரன்.
சந்திரமௌளி என்றும் சந்திரசேகரன் என்றும் சிவனைச் சொல்வது இதனால் தான்.

இந்த ஆறு உண்மைகளையும் மேற்சொன்ன ஆறு சிலேடைப் பதங்களைக் கொண்டு பார்த்தால் நமக்குத் தெரிவதென்ன?

1. லக்ஷ்மியின் திருவடியில் பக்தி கொண்டவன், லக்ஷ்மியின் பதத்தில் (தாமரையில்) அன்பு பூண்ட சூரியன் போல, ஸஹஸ்ரவஸுவாகிறான், பெரிய பணக்காரனாகிறான்.

2. மாறாக, லக்ஷ்மியின் பதத்தில் வெறுப்பு கொண்டவன், லக்ஷ்மியின் பதமான தாமரையில் வெறுப்புடைய சந்திரன் போல, க்ஷயம் அடைவான். அது மட்டுமின்றி பிக்ஷுசிரோமணியும் ஆவான்.

சூரியசந்திரர்களைச் சான்றாகக் காட்டி இரண்டு நல்லுரைகள் விளக்கப்பட்டன.

திருமகள் பதத்தொண்டேற்பார் தினகரன் போல் உயர்வார்.

திருமகள் பதத் தீம்பாளர் திங்கள் போல் தேய்ந்து போவர்.

5. வராஹன் வழியினள் வாழும் தாமரை

कपटकिटिदशायां कैटभारिः क्षमाभाक् प्रभुरकृत यतोऽसौ पङ्कजाते निवासम्।
तदिह भजसि भर्तुः धर्ममेवानुसर्तुम् परमपुरुषकान्ते पङ्कजाते स्थितिं किम् ॥ ५

கபடகிடிதஶாயாம் கைடபா₄ரி: க்ஷமாபா₄க்
ப்ரபு₄ரக்ருத யதோஸௌ பங்கஜாதே நிவாஸம்।
ததிஹ ப₄ஜஸி ப₄ர்துர் த₄ர்மமேவாநுஸர்தும்
பரமபுருஷகாந்தே பங்கஜாதே ஸ்திதிம் கிம் ॥5॥

परमपुरुषकान्ते - புருஷோத்தமனின் காந்தையே!
असौ - இந்த
कैटभारिः - கைடபாசுரனைக் கொன்ற
प्रभुः - பெருமான்
कपट-किटि-दशायां - மாயமாக வராஹாவதாரம் எடுத்த நிலையில்
यतः - எதனால்
क्षमाभाक् - பூதேவியை அடைந்தவராய்
पङ्कजाते - சேற்றுக் குழியலில்
निवासं - வாசத்தை
अकृत - பண்ணினாரோ
तत् - அதனால்
इह - இங்கு
भर्तुः - கணவனின்
धर्मं एव - தருமத்தையே
अनुसर्तुं - பின்பற்றுவதற்காக
क्षमाभाक् - பொறுமை பூண்டவளாய்
पङ्कजाते - தாமரையில்
स्थितिं - இருப்பை
भजसि किं - அடைகிறாயா என்ன?

பரமபுருஷனின் காந்தையே! உன் கணவர் முன்பொருமுறை வராஹாவதாரம் எடுத்தார். அப்பொழுது அவர் செயல்கள் இரண்டு உண்டு:

1. சேற்றுள் அழுந்திய பூமியை மீட்பதற்காகத் தானும் சேற்றுக்குழியலில் இறங்கினார்.

2. க்ஷமாதேவியை, அதாவது பூமியை, கோட்டு நுனியில் தாங்கினார்.

அப்படிப்பட்டவருடைய தருமபத்தினி நீ. தன் கணவனையே அனுசரிப்பவள்.

1.நீ தாமரையில் வசிக்கிறாய். சேற்றில் எழுந்த செந்தாமரையில். பங்கஜாதத்தில்.

அவர் வசித்ததும் பங்கஜாதத்தில் தான். சேற்றுக்குவியலில் என்றும் அர்த்தம்.

2.அவரும் க்ஷமையை (பூமியை)த் தாங்கினார். நீயும் க்ஷமையை(பொறுமையை)த் தாங்குகிறாய். இப்படியாக, ஜாதம், க்ஷமை,என்ற இரண்டு இருபொருட்சொற்களைக் கொண்டு பெருமாளைத் தாயார் அனுசரிப்பதாக நயம்படப் பேசுகிறார்.

இதிலிருந்து நாம் அறியும் நற்கருத்து:

மனைவி அறவழி சென்றால் மட்டும் போதாது. பல தரும வழிகள் உண்டு. கணவன் எந்த அறத்தைச் செய்கிறானோ அதே அறத்தை மனைவியும் செய்யவேண்டும். பர்துர் தர்மம் ஏவ என்பதால் இதைச் சொன்னார்.

பரமனும் ஒருமுறை பன்றியாய்ச் செய்ததை

பத்தினி பங்கஜை பண்ணுகிறாள் ரமை.

<u>6.புதிராயிருக்கும் புதுமலர்த்தாமரை</u>

स्थानं समस्तवसुवृद्धिपुषस्तवापि पद्मं रमे नवसुमत्वं उपैति चित्रम्।
अप्यन्यदद्भुतं अमुष्य तु योऽनुकूलः शश्वद्बिभर्ति वसुमत्वमसौ पतङ्गः ॥ ६

ஸ்தாநம் ஸமஸ்த வஸு வ்ருத்தி புஷஸ் தவாபி
பத்மம் ரமே நவஸுமத்வம் உபைதி சித்ரம்।
அப்யந்யத் அத்புதம் அமுஷ்ய து யோநுகூல:
ஶஸ்வத் பிபர்தி வஸுமத்வம் அஸௌ பதங்க: ॥6॥

रमे- லக்ஷ்மியே!

पद्मं- தாமரையானது

समस्त-वसु-वृद्धि-पुषः- எல்லாச் செல்வங்களின் வளர்ச்சியைப் பண்ணும்

तव- உன்னுடைய

स्थानं अपि- இடம் ஆனாலும்

नवसुमत्त्वं - 1.செல்வம் இல்லாமையை 2. புதுமலர்த்தன்மையை

उपैति- அடைகிறது.

चित्रं - ஆச்சரியம்.

अन्यत् अपि- வேறொன்றும்

अद्भुतं - அற்புதம்.

अमुष्य- இந்தத் தாமரைக்கு

यः- எவன்

अनुकूलः- இணங்கியவனோ

असौ- இந்த

पतङ्गः तु- சூரியனோவெனில்

शश्वत्- எப்பொழுதும்

वसुमत्त्वं- வஸு(கிரணம்) உடைமையை

बिभर्ति- வஹிக்கிறான்.

வஸு என்றால் பணம், செல்வம் என்று ஒரு அர்த்தம்.

கிரணம், கதிர், என்று இன்னொரு அர்த்தம். வஸுவை வளர்ப்பவள் லக்ஷ்மி. அவளுக்கு இடமானது தாமரை. அதனால் வஸுமத்வம், அதாவது பணமுடைமை அதற்கு வரவேண்டும். அதற்கு மாறாக நவ ஸுமத்வம் வரலாமோ? வந்திருக்கிறதே? ந-வஸுமத்வம் என்று பிரிக்காமல் நவ-ஸுமத்வம் என்று பிரித்தால் அர்த்தம் வேறே. புதுப்புஷ்பமாகுகை என்று அர்த்தம். அது புத்தம்புதுப் புஷ்பமாகவல்லவா இருக்கிறது? வஸுமத்வம் வரவேண்டிய இடத்தில் எதிர்மறையான நவஸுமத்வம் வந்திருப்பது ஆச்சரியம்.

இது மட்டுமா? இன்னோர் அற்புதமும் நிகழ்கிறது. இப்படி நவஸுமத்வம் பெற்ற தாமரைக்கு நண்பனான சூரியனுக்கு அதற்கு எதிரிடையான பண்பான வஸுமத்வம் வரலாமோ? வந்திருக்கிறதே? அவன் ஸதா ஸர்வகாலமும் கிரணங்களுடன் இருக்கிறானே, இது அற்புதம்.

இதனால் நாம் அறிவன:

1. லக்ஷ்மியை அடைந்தவருக்கு நாம் அனுகூலமாக இருக்க வேண்டும். அவர்கள் மூலம் நமக்குச் சிறப்புகள் கிட்டும். அவர்களே அடையாத சிறப்புகள் கூட நமக்குக் கிட்டலாம். தாமரைக்குக் கிடைக்காத வஸுமத்வம் சூரியனுக்குக் கிடைப்பது போல். தொண்டரைக் காட்டிலும் உயர்ந்தவர் தொண்டர்தொண்டர்.

2. லக்ஷ்மியின் அருள் பெற்றால் அற்புதங்கள் நிகழும்.

3. அவளருளால் கிடைப்பவை ஒன்றுக்கொன்று எதிர்மறையாய்த் தோன்றினாலும் எல்லாம் நல்லவையே.

4. செல்வங்கள் பலவகை. எல்லாவகைச் செல்வங்களையும் வளர்ப்பவள் பிராட்டி. அதனால் ஸமஸ்த வஸுவ்ருத்தி என்கிறார்.

வஸுவை வளர்ப்பவள் வாழும் மலரோ
வஸுவுடன் இல்லை நவஸுமம் ஏனோ?
வரவால் அதனை மலர்த்தும் ரவியோ
வஸுமான் என்றும் என்பதும் ஏனோ?



आज्ञाफलं ऐश्वर्यम् ।

பேராண்மை என்பது தன் ஆணைக்குப் பிறர் ட்படுவதைப் பொறுத்தது.

आत्मम्भरिः परित्यज्यते कलत्रेणापि ।

சுயலநலமிக்கவன், மனைவியாலும் கைவிடப் பெறுவான்.

7.அன்னங்கள் அண்டி வாழும் தாமரை

सन्मानसोल्लसनदः सदसद्विवेके शक्तस्सरोजनिलये सदनं त्वदीयम्।
शब्दैश्शुभैश्श्रुतिपथं सुखयन् गभीरैः संसेवते जननि हंसगणोऽवदातः ॥ ७

ஸந்மாநஸோல்லஸநத: ஸதஸத்விவேகே
ஶக்த: ஸரோஜநிலயே ஸதநம் த்வதீயம்।
ஶப்தை: ஶுபை: ஶ்ருதிபதம் ஸுகயந் கபீரை:
ஸம்ஸேவதே ஜநநி ஹம்ஸகணோவதாத: ॥7॥

जननि- அன்னையே!

सरोजनिलये- தாமரையில் வசிப்பவளே!

त्वदीयं- உன்னுடையதான

सदनं- இல்லத்தை (தாமரையை)

सत्-मानस-उल्लसन-दः- 1. நல்ல மாநஸ ஸரஸ்ஸுக்கு மெருகு தருவதும் 2. நல்லவர்களின் மனதுகளுக்கு தெம்பு தருவதும்

सत्-असत्-विवेके- நல்லது-கெட்டதைப் பிரிப்பதில்

शक्तः- திறமை உள்ளதும்

शुभैः- மங்களமான

गभीरैः- ஆழ்ந்த, அறிதற்கரிய

शब्दैः- 1. ஒலிகளாலே 2. வேதப்பிரமாணங்களாலே

श्रुतिपथं- 1. செவிவழியை 2. வேதமார்க்கத்தை

सुखयन्- மகிழ்விப்பதும்

अवदातः- 1. வெளுப்பானதும் 2. பரிசுத்தமானதுமான

हंसगणः- 1.அன்னப்பறவைக்கூட்டம் 2. துறவிக்குழு

संसेवते- 1. அடைகிறது 2. வணங்குகிறது.

இப்போது ஆறு வகைகளில் யதிகணத்திற்கும் ஹம்ஸபக்ஷிகணத்திற்கும் ஸாத்ருச்யத்தைப் பார்ப்போம்.

1. ஹம்ஸங்கள் தாமரையை உணவுக்காக நாடுகின்றன, அடைகின்றன. துறவிகள் திருமகள் வசிக்கும் தாமரையைப் பக்தியினால் நாடுகிறார்கள். வணங்குகிறார்கள்.

ஆலயங்களையும் க்ஷேத்ரங்களையும் ஸேவிப்பது போல் லக்ஷ்மியின் ஆலயமான தாமரையையும் ஸேவிக்கிறார்கள்.

2. மழைக்காலத் தொடக்கத்தில் ஹம்ஸபக்ஷிகள் மாநஸ ஸரஸ்ஸுக்குச் செல்வதாகக் கவிமரபு. இந்த ஹம்ஸங்களால் அந்த ஸரஸ்ஸின் அழகு கூடுகிறது. துறவிகளும் நல்லோர்க்கு மாநஸோல்லாஸம் தருபவர்கள். உள்ளத்தில் உவகை ஊட்டுபவர்கள்.

3. ஹம்ஸத்திற்கு ஒரு தனித்திறமை இருக்கிறது. பாலையும் நீரையும் கலந்து கொடுத்தால் பாலை மட்டும் பிரித்துப் பருகுமாம். நீரை மிச்சமாக வைத்து, பாலை மட்டும் பிரிப்பது நம்மாலாகாத ஒரு சக்தி. நல்லதும் கெட்டதும் கலந்து நேர்பட்டாலும் கெட்டதைத் தள்ளிவிட்டு நல்லதை மட்டும் ஏற்றுக் கொள்ளும் திறமை உயர்ந்தோரிடம் உண்டு.

4. ஹம்ஸத்தின் குரல் வளம் எப்படியென்றால் மங்களமாயும் செவிக்கினிதாயும் ஆழ்ந்தும் இருக்கும். துறவிகளின் வார்த்தைகளும் நலம் பயப்பவையாகவும், வேதமார்க்கத்தை சுகப்படுத்துவதாகவும், புரியாத ஆழம் கொண்டவையாகவும் இருக்கும்.

5. ஹம்ஸம் வெள்ளைவெளேரென்றிருக்கும். இந்த நல்ல ஸந்யாஸிகளும் அப்பழுக்கில்லாமல் இருப்பார்கள்.

6. வடமொழியில் ஹம்ஸம் என்ற சொல் இவ்விருவரையும் குறிக்கும். இப்படி ஆறு வகைகளால் ஒப்புமை.

ஸந்மார்க்கம் செழிக்கவென ஸத்கார்யம் பல செய்யும்
ஸந்யாஸிக்குழு வணங்கும் ஸரஸிஜையின் ஸதநத்தை

இந்தச் சுலோகத்தில் நாம் அறியும் நீதிகள்:

1. லக்ஷ்மியின் வாஸஸ்தானங்களையெல்லாம் நாம் வணங்கவேண்டும்.

2. நல்லவர் மனம் களிக்கும்படியான செயல்களை நாம் செய்யவேண்டும்.

3. எல்லாரிடமும் நல்லதும் இருக்கும், கெட்டதும் இருக்கும். நாம் நல்லதை மட்டும் கிரகிக்கவேண்டும். கெட்டதைப் பொருட்படுத்தாமல் தள்ளவேண்டும்.

4. வேதமார்க்கத்திலிருந்து விலகக்கூடாது. அந்த நல்வழியையே இனிதாக்கும்படி வாழவேண்டும்.

5. அப்பழுக்கில்லாமல், மாகமறுவில்லாமல், தூயோமாய் இருக்கவேண்டும்.

6. செயலாலும், திறமையாலும், பண்பாலும், பேச்சாலும், உயரவேண்டும்:-

அன்னைவாழ் மலரைப் போற்றும் அருந்தவ முனிவர் கூட்டம்
அன்னமென்கிற புள் கூட்டம் அன்னதாம் அதனால் ஏற்றம்

8. தாயன்னைத் தனித்துப்பெறத் தகுதியுடைய தாமரை:-

कमले कमलेषु सन्निधत्से सकलेषु स्ववशेषु विष्टपेषु ।
सहजं जननीजनस्य लोके जडजातेषु विशेषवत्सलत्वम् ॥ ८ ॥

கமலே கமலேஷு ஸந்நிதத்ஸே
ஸகலேஷு ஸ்வவஶேஷு விஷ்டபேஷு ।
ஸஹஜம் ஜநநீஜநஸ்ய லோகே
ஜடஜாதேஷு விஶேஷவத்ஸலத்வம் ॥ 8 ॥

कमले - தாமரையானே !

सकलेषु - எல்லா

विषयेषु - இடங்களும்

स्व-वशेषु - தன் வசத்தில் இருக்கும்போது

कमलेषु - தாமரைகளில்

सन्निधत्से - ஸன்னிதானம் கொள்கிறாய்

जड - जातेषु 1. மந்தர்களான மைந்தர்களிடம் 2. நீரில் தோன்றிய தாமரைகளிடம்

विशेष - वत्सलत्वं - தனித்ததொரு வாத்ஸல்யம்

जननी - जनस्य - தாய்மார்களுக்கு

लोके - உலகில்

सहजं - இயல்பானது

கமலையே ! உனக்கு இல்லாத இடமா உலகத்தில் ? எல்லா இடங்களுமே உன் அதீனமானவை தானே ! அப்படியிருக்க, நீ ஏன் தாமரைகளில் வசிக்கவேண்டும் ? எங்கு வேண்டுமானாலும் ஸாந்நித்யம் கொள்ளலாமே ? எனக்கு ஒரு காரணம் தோன்றுகிறது. நீ தாய். தாய்மார்களுக்கு ஒரு உலக இயல்பு என்னவென்றால் தன் குழந்தைகளுக்குள் யார் ஜடமாக இருக்கிறார்களோ அவர்களிடம் தனித்த அன்பு செலுத்துவார்கள். அந்தவகையில் உனக்குத் தாமரைகளிடம் தனித்த அன்பு. அவை ஜடஜாதங்களாயிற்றே ! மூடஜந்துக்கள் என்றொரு அர்த்தம். ஜட என்பதை ஜல என்றும் கொள்ளும் மரபுப்படி, நீரில் தோன்றியவை என்று இன்னொரு அர்த்தம். தாமரை ஜலஜாதமானதால், ஜடங்களிடம் தாய்க்கு வாத்ஸல்யம் அதிகமானதால், நீ தாயானதால், நீ தாமரையை விரும்புவது பொருத்தம். இந்தச் சுலோகத்தினால் நாம் அறியும் நல்லுரை:

அன்னையின் அருள்கிடைக்க அறிவெல்லாம் அவசியமா ?
அறிவின்மை அவளுடைய அன்புபெறும் அருஹதையாம்.
ஜலத்தோன்றல் தாமரை மேல் ஜகந்மாதா இருப்பானேன் ?
ஜடத் தோன்றல் குழந்தை மேல் ஜனனிக்குப் பரிவதிகம்.

9. அத்ருஷ்டம் அடைந்த தாமரை:-

कल्हारोत्पलकैरवादिषु तथा कल्याणि मल्लयादिषु
प्रायस्सत्सु समेषु वस्तुषु परं पद्मानि सद्मानि ते।
भाग्यं कुत्रचिदेव नृत्यतितरां भूयस्सु तुल्येष्वपि
त्वत्कान्ताय सुगन्धिवस्तुषु तुलस्येकैव संरोचते॥ ९॥

கல்ஹாரோத்பல கைரவாதிஷு ததா, கல்யாணி மல்லயாதிஷு
ப்ராயஸ்ஸத்ஸு ஸமேஷு வஸ்துஷு பரம் பத்மாநி ஸத்மாநி தே।
பா,க்யம் குத்ரசிதேவ ந்ருத்யதிதராம் பூ,யஸ்ஸு துல்யேஷ்வபி
த்வத்காந்தாய ஸுகந்தி,வஸ்துஷு துலஸ்யேகைவ ஸம்ரோசதே

कल्याणि - கல்யாணியே!
कल्हार-उत्पल-कैरव-आदिषु - செங்கழுநீர், கருநெய்தல், ஆம்பல் முதலியவைகளும்
वस्तुषु - பொருட்கள்
प्रायः - பெரும்பாலும்
समेषु - (தாமரைக்கு) சமமாக
सत्सु - இருக்கும்போது
पद्मानि परं - தாமரைகள் மட்டுமே
ते - உனக்கு
सद्मानि - இருப்பிடங்கள்
भूयस्सु - ஏராளமானவை
तुल्येषु अपि - சமமாக இருந்தாலும்
कुत्रचित् एव - ஏதோ ஒன்றில் தான்
भाग्यं - அதிருஷ்டம்
नृत्यतितरां - அதிகமாய் நடமாடுகிறது.
सुगन्धि-वस्तुषु - நறுமணப்பொருள்களில்
तुलसी - துழாய் என்கிற
एका एव - ஒன்று தான்
त्वत्-कान्ताय - உன் காந்தனுக்கு
संरोचते - நன்கு பிடித்திருக்கிறது.

எத்தனையோ மலர்கள் உண்டு உலகத்தில். ஏறத்தாழ எல்லாமே சமமானவை தான். செங்கழுநீர்ப்பூ சிறந்தது தான். நெய்தல் பூ நல்லது தான்.

ஆம்பல் பூ அழகியது தான். மல்லிகைப்பூ மணப்பது தான். ஆனால் அடித்தது அதிருஷ்டம் தாமரைப்பூவுக்கு மட்டும். தாமரைப்பூவில் மட்டும் தான் ஸ்ரீதேவி அமர்கிறாள்.

பலப்பல மலரும் மொட்டும் பலபடி சமமாகட்டும்.
பங்கஜ மலர்க்கு மட்டும் பதுமை வாழ் பாக்யம் கிட்டும்.

சமமான தகுதி உள்ள பலரில் யாரோ ஒருவருக்கு மட்டும் பாக்கியம் கிடைக்கிறது. எத்தனையோ பேர் தகுதியினால் எல்லாரையும் விஞ்சிடலாம். எவனோ ஒருவன் மட்டும் தான் எட்டாப் பேற்றை எய்திடுவான். எதற்கும் ஒரு கொடுப்பினை வேண்டும்.

பாருங்களேன், பெருமாளுக்குத் துளஸி மட்டும் அதீதமாகப் பிடித்திருக்கிறதே, எத்தனையோ நறுமணப் பொருள்கள் இருந்தாலும் அவர் துழாயையே விரும்புகிறாரே, அது துழாய்க்குக் கிடைத்த பாக்கியம். அதுபோல தாமரைக்குக் கிடைத்த பாக்கியம் காரணமாக அதில் திரு வசிக்கிறாள். இதில் சில ஸம்ப்ரதாயார்த்தங்கள்:

1. பாக்கியம், அதிருஷ்டம், பேறு, என்றெல்லாம் சொல்கிறோமே, அது வேறொன்றுமில்லை, திவ்யதம்பதிகள் உகப்புதான்.

2. கர்மங்களும் தர்மங்களும் தகுதிகளைத் தரலாம். அவற்றைப் பெருமாளுக்கும் பிராட்டிக்குமாக அனுஷ்டித்தால் அதிருஷ்டம் பெறலாம்.

தகுதிகள் உடையார்க்கெல்லாம் தக்கவாறதிர்ஷ்டம் உண்டோ ?
திருமகள் அருளால் அன்றோ திகழலாம் அதிர்ஷ்டம் பெற்று.

<u>10. நித்யவிபூதிக்கு நிகரான தாமரை:-</u>

त्वद्गेहं कमलं यतस्त्वदविनाभूतस्य विष्णोः पदम्
सूर्यालोकविकासमञ्चति ततः पद्मे मधुस्वादु तत्।
अन्नादोऽहमितीव गीतिनिनदैः श्रुत्यन्तसञ्चारिभिः
कृष्णाकारजुषोऽत्र केचिदनिशं नन्दन्ति लब्ध्वा रसम्॥ १० ॥

த்வத்கேஹம் கமலம் யதஸ்த்வதவிநாபூ₄தஸ்ய விஷ்ணோ: பதம்
ஸூர்யாலோகவிகாஸமஞ்சதி தத: பத்₃மே மது₄ஸ்வாது₃ தத் ।
அத்ராதோ₃ஹமிதீவ கீ₃திநினதை: ச்₂ருத்யந்தஸஞ்சாரிபி₄:
க்ருஷ்ணாகாரஜுஷோத்ர கேசிதநிசம் நந்தந்தி லப்₃த்₄வா ரஸம் ॥ 10 ॥

पद्मे - தாமரையாளே !
त्वत्-गेहं - உன் இல்லமான
कमलं - தாமரையானது
यतः - யாதொரு காரணத்தால்
त्वत्-अविनाभूतस्य - உன்னிடமிருந்து சிறிதும் பிரியாத
विष्णोः - பெருமாளுக்கும்
पदं - இடமோ
ततः - அந்தக் காரணத்தால்
सूर्य-आलोक-विकासं - சூரியவெளிச்சத்தால் மலர்ச்சியை
अञ्चति - அடைகிறது.
सूरि-आलोक-विकासं - நித்யஸூரிகளின் பார்வை பரவுதலை
अञ्चति - பெறுகிறது.
तत् - அது
मधु-स्वादु - 1. தேனால் சுவையுடையது. 2. தேன் போல் இனியது.
अत्र - இதில், இங்கே
कृष्ण-आकार-जुषः - 1. கருநிறம் கொண்ட 2. பெருமாளின் உருவை அடைந்த
केचित् - சிலர்
अनिशं - 1. எப்போதும் 2. இரவே இல்லாதபடி
रसं - 1. சாற்றை 2. ஆனந்தத்தை
लब्ध्वा - அடைந்து
अन्नादः अहं इति इव - 1. உணவுண்பவன் நான் என்று போல 2. அஹமந்நாத: என்பது முதலான
श्रुति-अन्त-सञ्चारिभिः - 1. காதோரங்களில் ஸஞ்சரிக்கின்ற 2. உபநிஷத்துகளில் உலவும்
गीति-निनदैः - பாடல் ஒலிகளால்
नन्दन्ति - மகிழ்கிறார்கள்.

பத்மாவே ! நீயும் பெருமாளும் எப்போதும் பிரியாதவர்கள். அப்படியானால் உன் இடமான தாமரை விஷ்ணுவுக்கும் இடமாகவேண்டாமோ ? அப்படியே தான். ஸ்ரீ வைகுண்டத்திற்கும் தாமரைக்கும் பலவகை ஸாம்யம் இருப்பதால் தாமரையே விஷ்ணுபதம் என்னத்தகும். எப்படி ஸாம்யம் என்றால் ஏழு வாக்கியங்களில் விவரிப்போம். இதற்கு இருபொருட்சொற்களின் துணை இருக்கிறது.

1. ஸௌர்யாலோகம் என்றால் சூரியவெளிச்சம் என்றும் அநந்தகருடாதி ஸூரிகளின் பார்வை என்றும் இரண்டு அர்த்தங்கள். விகாஸம் என்றால் மலர்ச்சி என்றும் படர்தல் என்றும் இரண்டு அர்த்தங்கள். தாமரை சூரியவெளிச்சத்தால் மலர்வதாலும், ஸ்ரீவைகுண்டத்தில் நித்யஸூரிகளின் பார்வை படர்வதாலும் ஸௌர்யாலோகவிகாஸம் இரண்டுக்கும் உண்டு.

2. தாமரையும் மதுஸ்வாது. பரமபதமும் மதுஸ்வாது. எப்படியென்றால் தாமரை தேனினால் இனிப்பது. விஷ்ணுபதம் தேன்போல் இனிப்பது.

3. தாமரையிலும் கிருஷ்ணாகாரம் கொண்டவர் இருக்கிறார்கள். பரமபதத்திலும் அப்படியே. தாமரையில் கருநிற வண்டுகள். பரமபதத்தில் கண்ணனுருக்கொண்ட முக்தர்கள்.

4. இவர்கள் தாமரையில் பெறுவதும் ரஸம். பரமபதத்தில் பெறுவதும் ரஸம். ரஸம் என்றால் சாறு, பருகற்குரிய தேன். ரஸம் என்றால் ஆனந்தம். ரஸம் என்றால் பரம்பொருள்.

5. எப்பொழுது ? அநிஶம். பகலில் என்றும் ஸதா என்றும் இருபொருள். தாமரை பகலில் விகஸிக்கும். பரமபதம் எப்போதும் விகாஸம் உடையது. இரவின்றி முழுப்பகலாய் என்று இன்னொரு அர்த்தம் பரமபதத்திற்குப் பொருந்துவது.

6. இப்படிச் சுவைக்கும்போது அவர்கள் எழுப்பும் ஒலியிலும் ஸாம்யம் இருக்கிறது. வண்டுகளின் ரீங்காரம் தேனாகிய உணவை உண்டதால் வந்ததால் ''அஹம் அந்நாத:'' (நான் சாப்பிடுபவன்) என்று சொல்வது போல் இருக்கிறது. பரமபதத்திலோ அஹமந்நாத: என்று பாடுவதாக வேதாந்தக் கருத்து. ஒன்றையே பாடுவதால் ஒற்றுமை வலுப்படுகிறது.

7. இந்தப் பாட்டு எங்கே ஒலிக்கிறது ? வண்டுகளின் ரீங்காரம் நமது காதோரங்களில் ஒலிப்பதால் ஶ்ருத்யந்தங்களில் என்னலாம். ஶ்ருத்யந்தம் என்றால்

உபநிஷத்து என்று இன்னொரு அர்த்தம். இந்த அஹமந்நாத: என்ற பாட்டு (தைத்திரீய) உபநிஷத்தில் உள்ளது. இப்படி ஏழு வாக்கியங்களால் தாமரை பரமபதத்தை ஒத்திருப்பது தெரிகிறது.

சூர்யாலோக மிளிர்ச்சியுடன் சுவைமிகு தேனைப் பருகுபவர்
ச்ருத்யந்தத்தில் பாடுவதால் ஸ்ரீவைகுண்டம் போல் பத்மம்.

இந்த ச்லோகத்தில் நிறைய வேதவாக்கியங்கின் அர்த்தங்கள் பொதிந்து கிடக்கின்றன.

1. தத் விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய: என்றொரு வேதவாக்கியம். தத் விஷ்ணோ: பதம் அநிசம் ஸூர்யாலோக என்று இந்த ச்லோகத்திலும் பதங்கள். எப்பொழுதும் நித்யஸூரிகள் பரமபதத்தைப் பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள்.

2. விஷ்ணோ: பதே பரமே மத்வ உத்ஸ: என்று இன்னொரு வேதவாக்கியம். விஷ்ணோ: பதம் மதுஸ்வாது என்பது இந்தக் கவியின் வாக்கியம். விஷ்ணுபதம் தேன் போல் இனிப்பதாக அர்த்தம்.

3. ஸக்ருத் திவா ஹைவாஸ்ய பவதி என்று ஒரு வேதவாக்கியம். பரமபதத்தில் எப்போதுமே பகல் தான். இதையே அநிசம் என்ற சொல்லால் குறிக்கிறார்.

4. ரஸோ வை ஸ:. ரஸம் ஹ்யேவாயம் லப்த்வா ஆநந்தீ பவதி என்று இன்னொரு வேதவாக்கியம். ரஸம் என்பது பெருமாள். ரஸத்தை அடைந்து ஆனந்திக்கிறான். இந்தக்கவியும் ரஸம் லப்த்வா நந்தந்தி என்ற அதே சொற்களைக் கையாளுகிறார்.

5. ஏதத் ஸாம காயந்நாஸ்தே என்றும் அஹமந்நாதோ ஒஹமந்நாதோ ஒஹமந்நாத: என்றும் வேதவாக்கியங்கள். அந்நாதோஹம் என்றும் கீதி என்றும் இதையே குறிக்கிறார் இங்கு.

6. அஸௌ வா ஆதித்யோ தேவமது என்றொரு வேதவாக்கியம்.

ஆகாசத்தில் உள்ள சூரியன் சிலருக்கு மதுவானவன். விஷ்ணுபதம் என்பதற்கு ஆகாசம் என்று அர்த்தம் இருப்பதால் சூரியனைச் சிலர், மதுவித்யாநிஷ்டர், அனுபவிப்பதும் ஒரு பொருளாகத் தொனிக்கும்படி ச்லோகத்தை அமைத்திருக்கிறார். இந்த ஆறு வேதவாக்கியங்களின் கருத்துகளை உள்ளடக்கி, சிலேடையால் பெருமாள் ஸ்தானமும் தாயார் ஸ்தானமும் சமம் என்று சாதிக்கிறார் கவி.

தாயாரே தங்கிவரும் தானமெனும் பெருமை பெறும்
தாமரை வை குந்தமெனும் தானத்திற்கொப்பாகும்.

11.நல்வழியில் நடக்கும் தாமரை.

सूर्यालोकदशासु हर्षमयते दोषाकरालोकने
संकोचं भजति श्रितालिषु रमे धत्ते परं जीवनम्।
स्थानं पङ्कमधः करोति वहते नालीकशब्दं च ते
कां वा तावकसन्निधानमहिमा कुर्यान्न चर्यां शुभाम्॥

ஸூர்யாலோகதஶாஸு ஹர்ஷமயதே தோஷாகராலோகநே
ஸங்கோசம் ப⁴ஜதி ஶ்ரிதாலிஷு ரமே த⁴த்தே பரம் ஜீவநம்।
ஸ்தா²நம் பங்கமத⁴:கரோதி வஹதே நாளீகஶப்தம் ச தே
காம் வா தாவகஸந்நிதா⁴நமஹிமா குர்யாந்ந சர்யாம் ஶுபா⁴ம் ॥11॥

रमे லக்ஷ்மியே!

ते உன்னுடைய

स्थानं இடமானது(தாமரை)

सूर्यालोकदशासु 1.சூரிய வெளிச்ச நிலைகளில் 2. நல்லோர் பார்வை நிலைகளில்

हर्ष மலர்ச்சியை, மகிழ்ச்சியை

अयते அடைகிறது.

दोषाकरालोकने 1. நிலா வெளிச்சத்தில், துஷ்டர்கள் பார்க்கையில்

सङ्कोचं சுருக்கத்தை, கூசுவதை

भजति அடைகிறது.

श्रितालिषु 1.அண்டின வண்டுகளில், அண்டினோர் வரிசைகளில்

परं जीवनं 1. உயர்ந்த ஜீவாதாரத்தை (உணவை), 2. உயிரையே, வாழ்வையே

धत्ते தரிக்கிறது.

पङ्कं 1.சேற்றை, பாவத்தை

अधः करोति கீழே தள்ளுகிறது.

नालीक शब्दं च वहते 1.நாளீகம் (தாமரை) என்னும் சொல்லையும் கொண் டுள்ளது. 2. பொய்ப் பேச்சை வகிப்பதில்லை.

तावक -महिमा உன்னுடையதான ஸாந்நித்யத்தின் பெருமை

कां எந்த

शुभां மங்களமான

चर्यां நடத்தையை

वा தான்

न कुर्यात् பண்ணாது? (எல்லா நன்னடத்தையையும் விளை விக்கும்).

லக்ஷ்மியே! எந்த இடத்தில் நீ இருக்கிறாயோ அங்கே நல்லொழுக்கம் வளரும். அப்படியானால்

தாமரைக்கும் நன்னடத்தை உண்டா என்று கேட்டால் ஆமாம் என்கிறோம். நல்லவன் செய்யும்

ஐந்து காரியங்கள் என்னவென்றால்

1. சான்றோரைப் பார்க்கும்போதெல்லாம் மகிழ்ச்சி கொள்வான்.
2. பொல்லாதவரைப் பார்க்க நேரிட்டால் கூசுவான்.
3. தன்னை அண்டி வந்தவர்களை வாழவைப்பான்.
4. குற்றம் குறைகளைக் கீழே தள்ளுவான்.
5. பொய்யே பேச மாட்டான்.

தாமரையும் இந்த ஐந்தையும் செய்வதாகத் தெரிகிறது.

1. சான்றோர் பார்வை என்பது ஸூரிகளின் ஆலோகம், அதாவது ஸூர்யாலோகம். இதே பதத்தை வேறுவிதமாகப் பிரித்தால் ஸூர்ய-ஆலோகம், அதாவது சூரியவெளிச்சம். தாமரை சூரியவெளிச்சத்தில் மகிழ்வதும் மலர்வதும் எல்லாரும் அறிந்ததே.

2. பொல்லாதவர் என்பவர் தோஷங்களுக்கு உறைவிடம் ஆனவர்கள், அதாவது தோஷ-ஆகரர்கள். இதே பதத்தை வேறு விதமாகப் பிரித்தால் தோஷா-கரர் என்கிற சந்திரன்.

சந்திரனைக் கண்டால் தாமரை சுருங்கிக் கூம்புவது எல்லாருக்கும் தெரிந்ததே.

3. தன்னை அண்டினவரின் வரிசை என்பது ச்ரித-ஆலி. இதே பதத்தை வேறு விதமாகப் பிரித்தால் ச்ரித-அளி என்றால், அண்டின வண்டுகள் என்றாகும். தாமரையை வண்டுகள் அண்டுவதும், அந்த வண்டுகள் வாழத் தேவையான தேனைத் தாமரை தருவதும் பிரசித்தம்.

4. குற்றம் குறையைப் பங்கம் என்ற பதத்தால் சொல்லலாம். இதே பதத்திற்கு சேறு என்றும் அர்த்தம். தாமரையின் கீழே சேறு இருக்கும். அதனால் அது சேற்றைக் கீழ்மைப்படுத்தியதாகிறது.

5. பொய் என்பதைக் குறிக்கும் பதம் அளீகம் என்பது. பொய் கலவாத சொல்லை நாளீகசப்தம் என்னலாம். நாளீகம் என்ற பதத்திற்குத் தாமரை என்ற அர்த்தமும் உண்டு. அப்படியானால் தாமரையும் நாளீகசப்தத்தைக் கொண்டது என்பது உண்மை தானே?

லக்ஷ்மியே! இப்படி ஐந்து வகை நல்லொழுக்கங்களும் தாமரைக்கு இருக்கிறது. உன் ஸான்னித்யத்தின் சிறப்பு இது. இருக்கும் இடத்திலெல்லாம் எல்லாவித நல்லொழுக்கங்களையும் விளைவிப்பது உன் பெருமை. எந்த சுபசர்யையைத்தான் அது பண்ணாது? எல்லா நற்செயலையும் பண்ணும்.

இந்த ச்லோகத்தில் நமக்கு நிறைய அறிவுரைகள் உண்டு.

(அ) நல்லொழுக்கம் என்பது மனம், வாக்கு, காயம் என்ற மூன்று கரணங்களையும் சேர்ந்தது. நல்லவர்களையும் தீயவர்களையும் காணும்போது நமக்கு எவ்வகை உணர்வு ஏற்படுகிறது என்பதிலிருந்து மன ஒழுக்கத்தை அறியலாம். பொய் பேசாததிலிருந்து வாக்கின் ஒழுக்கத்தை அறியலாம். அண்டினவர்களை ஆதரிப்பதிலிருந்து மாசுகளை

விலக்குவதிலிருந்தும் உடலொழுக்கத்தை அறியலாம். இந்த மூவகை ஒழுக்கத்தையும் இங்கே கவி சொல்லுகிறார்.

(ஆ) நன்னடத்தை பெறுவது எளிதன்று. தாயார் இருக்குமிடத்தில் அது தானே வரும்.

(இ) தானிழந்த த்ரிலோகஸாம்ராஜ்யத்தை லக்ஷ்மீகடாக்ஷத்தால் திரும்பப்பெற்ற இந்திரன் பாடுகிறான்: ''தாயே! வலிமை, வாய்மை, தூய்மை, முதலிய நற்பண்புகள் யாவும் உன் அருளாலே கிடைப்பவை'' என்று (விஷ்ணுபுராணத்தில்). அதை அடியொற்றிய இந்தக்கவி நாளீகசப்தம் என்பதால் வாய்மையையும் பங்கம் அத: கரோதி என்பதால் தூய்மையையும், தத்தேபரம் ஜீவனம் என்பதால் வலிமையையும் சொல்கிறார் லக்ஷ்மி ஸன்னிதியில் கிடைக்கும் பலன்களாக.

சேர்ந்தவர்க்குதவும் வண்மை
சேற்றினைத் தள்ளும் தூய்மை
செப்பிடும் சொல்லில் வாய்மை
சேர்ப்பவள் மலரில் பத்மை.

(ஈ) லக்ஷ்மி இருக்குமிடத்தில் எல்லா சுபசர்யையும் இருக்கும். சுபச்செயல்களில் எது தான் ஏற்படாது? என்று வினவுகிறார். அவளுடைய இடத்திற்கு அப்படியொரு மஹிமை . பேச்சிலே வித்தை பண்ணி இதை எல்லாரும் அறியச் செய்கிறார் கவி.

தாமரை முதலிய உன்னிடத்தைத்
தாயே சேர்ந்திடும் நன்னடத்தை.

12. தாஸ்யஸ்ரீயைத் தரிக்கும் தாமரை.

धत्ते सदैव शिरसा तव पादरेणूः
पद्मो बिभर्ति तव नाम च पद्ममेतत् ।
वर्वर्ति धारकतया तव हस्तमेव
तद्युक्तमृच्छति तवोज्वल दास्यलक्ष्मीम् ॥ १२ ॥

த⁴த்தே ஸதைவ ஶிரஸா தவ பாதரேணூ:
பத்மே பிபர்தி-தவ நாம ச பத்மமேதத்।
வர்வர்தி தா⁴ரகதயா தவ ஹஸ்தமேவ
தத் யுக்தம் ருச்சதி தவோஜ்வல தாஸ்ய லக்ஷ்மீம் ॥12॥

पद्मे பத்மாவே!
एतत् இந்த
पद्मं தாமரை
तव உன்னுடைய
पादरेणूः திருவடித் துகள்களை
सदा एवं எப்போதுமே
शिरसा தலையாலே
धत्ते தரிக்கிறது.
तव உன்னுடைய
नाम च பெயரையும்
बिभर्ति சுமக்கிறது.
तव உன்னுடைய
हस्तं एव கையையே
धारकतया ஆதாரவஸ்துவாக
वर्वर्ति தேர்ந்தெடுக்கிறது.
तत् ஆகையாலே
तव உன்னுடைய
उज्ज्वलदास्य -लक्ष्मी ஒளிரும் அடிமைச் செல்வத்தை, ஒளிர்கிற முகத்தழகை
ऋच्छति அடைகிறது.
युक्तं இது தகும்.

ஒரு பக்தன் தன் தெய்வத்திற்கு என்னவெல்லாம் செய்வானோ அதையெல்லாம் தாமரை திருமகளுக்குச் செய்கிறது. 1. பக்தன் தன் ஸ்வாமியின் திருவடி பட்ட பொடிகளைத் தன் தலையில் தாங்கி ஏற்பான். (ஆசார்யன் திருவடி ஜோடு சிரமேற்கொள்ளல் முதலிய வழக்கங்களில் இது தெளிவு.) தாமரையும் இதையே செய்கிறது. தன் மகரந்தப் பொடிகளைத் தாயாரின் திருவடிகளில் படவைத்து அந்த அடிப்பொடிகளைத் தன் உச்சிப் பகுதியால் தாங்குகிறது.

2. அடியவன் தன் ஸ்வாமியின் பெயரைச் சூடுவான். (நாம வஹநம் என்பதும் ஒரு தாஸ்ய சிஹ்னம்.) தாமரையும் அதைப் பண்ணுகிறது. பத்மா, கமலா, ஸரோஜா, அம்புஜா, முதலிய பல லக்ஷ்மிநாமங்களை வஹிக்கிறது. பத்மம், கமலம், ஸரோஜம், அம்புஜம், இத்யாதி பெயர்கள் தாமரைக்கு.

3. அடியவன் தன் ஸ்வாமியின் கையையே தாரகமாக நம்புவான். அவர் கையிட்டவழக்காயிருப்பான். அவர் கையில் தன் பாரத்தைப்போட்டு நிச்சிந்தையாக இருப்பான். தாமரையும் அப்படியே. திருமகளின் கையே அதற்கு ஆதாரவஸ்து. கையால் அவள் தாமரையைத் தாங்குகிறாள் அல்லவா? தாமரையை ஏந்திய பத்மஹஸ்தை அவள்.

இப்பொழுது ஒரு குறுக்குக் கேள்வி. பாதரேணு தாங்குதல், நாமவஹனம், தாரகமாகக் கொள்ளல், இவை யெல்லாம் பண்ணுபவரை உலகினர் தாஸ்யம் கொண்டவர் என்பரே, ஆனால் தாமரையை ஏன் அப்படிச் சொல்வதில்லை? இதற்கு ஒரு வேடிக்கையான பதில். உஜ்வலதாஸ்யலக்ஷ்மி கொண்டதாகத் தானே தாமரையை எல்லாரும் சொல்கிறார்கள்? மிளிரும் தாஸ்யம் என்கிற ஸம்பத்து என்று ஒரு அர்த்தம். ஒளிர்கிற ஆஸ்யத்தின் அழகு என்று மற்றொரு அர்த்தம். அழகிகளின் முகத்தைத் தாமரைக்கு ஒப்பிடுகின்றனர் உலகத்தவர். அதனால் தாமரைக்கு உஜ்வலத்-ஆஸ்ய- லக்ஷ்மி இருப்பதாகத்தானனைவரும் சொல்கிறார்கள். இதே பதத்தை வேறு விதமாகப் பிரித்தால் உஜ்வல-தாஸ்ய-லக்ஷ்மி, ஒளிரும் அடிமைச் செல்வம் என்றாகும். இது தாமரைக்குப் பிரசித்தமாகிவிட்டதன்றோ?

அடித் துகள் தலையில் ஏற்றும்
அவள் பெயர் பூண்டும் மற்றும்
அங்கையால் தரிக்கப் பெற்றும்
அடிமையால் மலருக்கேற்றம்.

இந்த ச்லோகத்தில் மூன்று ஸம்ப்ரதாயார்த்தங்கள் பொதிந்துள்ளன:

(அ) தாஸ்யலக்ஷ்மி என்கிற பதம் அடிமைச் செல்வம் என்று பொருள்படும். அடிமையை யாராவது செல்வம் என்பரோ? அடிமைத்தளை, அடிமைத்துயர், என்றல்லவா வழக்கு? என்று கேட்டால், பெருமாளுக்கும் பாகவதர்க்கும் தவிர மற்றவர்க்கு அடிமை துக்ககரம் என்றும் பகவத் பாகவத

தாஸ்யம் மோக்ஷத்திலும் இன்பம் பயக்கும் என்றும் நம் ஸம்ப்ரதாயம். கைங்கர்ய ஸாம்ராஜ்யம் என்றும் தாஸ்ய ஸம்பத்து என்றும் பெரியோர் சொல்வர்.

(ஆ) ஸ்வாமியின் பெயரைப் பூணுவதும் அடிமையின் அடையாளங்களில் ஒன்று. தஸ்யாபி நாமவஹநாத் என்ற பாதுகாஸஹஸ்ர ச்லோகத்திலும் இது ப்ரஸித்தம்.

(இ) தெய்வத்தின் பாத தூளியின் பெருமை அதிகம். தலையால் தாங்குவது நல்லது. விலுப்தமூர்தந்ய என்கிற ஹயக்ரீவ ஸ்தோத்ர ச்லோகத்தில் இது விளக்கப்பட்டுள்ளது.

13. தினகரன் தினமும் திறக்கும் தாமரை :-

प्रातः कृताप्लवविधिः पयसां निधाने ब्रध्नार्चकः शुचिकरो भृततप्तचक्रः ।
उद्घाटयत्युदितविष्णुपदैकसक्तिः विश्वाम्ब पद्ममयसद्मदलाररं ते ॥ १३ ॥

ப்ராத: க்ருதாப்லவிதி: பயஸாம் நிதாநே
ப்ரத்நார்சக: ஶுசிகரோ ப்ருததப்தசக்ர: ।
உத்காடயத்யுதிதவிஷ்ணுபதைகஶக்தி:
விஶ்வாம்ப பத்மமயஸத்மதலாரரம் தே ॥ 13 ॥

विश्वाम्ब - ஜகந்மாதாவே !
प्रातः - காலையில்
पयसां निधाने - பயோநிதியில் (கடலில்)
कृत-आप्लव-विधिः - ஸ்நாநவிதியை அநுஷ்டித்தவனாய்
ब्रध्न-अर्चकः - ஸூர்யன் என்னும் அர்ச்சகன்
शुचि-करः - 1. நெருப்பான கிரணங்கள் உடையவனாய், 2. ஶுத்தமான கைகள் உடையவனாய்
भृत-तप्त-चक्रः 1. தவிக்கின்ற சக்ர வாகப் பறவைகளை (ஆதரத்துடன்) தாங்கு பவனாய், 2. காய்ச்சின சக்ரத்தை (ஸமாச்ரயண அடையாளமாக) தரிப்பவனாய்
उदित-विष्णुपद-एक-सक्तिः - 1 தான் உதித்த ஆகாஶத்தில் மட்டுமே ஒட்டிக் கொள்பவனாய், 2 பெருமைமிக்க பெருமாள் திருவடியில் மட்டுமே பக்தி கொண்டவனாய்
ते - உன்னுடைய
पद्म-मय-सद्म-दल-अररं - தாமரை வடிவான இல்லத்தின் இதழ்என்னும் கதவை
उद्घाटयति - திறக்கிறான்.

தாமரை என்பது தாயார் ஸந்நிதி கர்ப்பக்ரஹம் போலே. தாமரையின் இதழ்கள் அந்தக் கர்ப்ப க்ரஹத்தின் கதவுகள் போலே. இரவில் மூடிய அதன் கதவை அதிகாலை திறக்கும் அர்ச்சகர் போலே ஸூர்யன். அதைத் திறப்பவரின் கை போலே ஸூர்ய கிரணம். ஸூர்ய கிரணம் பட்டு, தாமரை இதழ் விரிவதால் இந்த உருவகம் பொருத்தமாகிறது. ஆனால் ஒரு ஸந்தேஹம் வரலாம். கதவைத் திறப்பவர் கண்டபடி இராமல் ஆறு நியமங்களுடன் இருக்க வேண்டும், ஸூர்யன் அப்படி இருக்கிறானா ?என்று. கர்ப்பக்ருஹத்தின் உட்கதவைக் காலையில் திறப்பவன்.

1. நீராடியபின் வரவேண்டும். (விழுப்புடன் திறக்கக் கூடாது).

2. கையை அலம்பிக் கொண்டு ஶுத்தமான கையுடன் திறக்க வேண்டும்.

3. (ஸமாச்ரயணம் ஆனவராய்) சக்கரப் பொறி ஒற்றியவராய் இருக்க வேணடும்.

4. திறப்பவன் வழிபடாமல் போகக் கூடாது.

5. அவன் பெருமாளிடம் பக்தி கொண்டவனாயிருக்க வேண்டும். நாத்திகர்களைக் கோவிற்பணிகளில் நியமிக்கக் கூடாது.

6. அவன் மற்ற தேவரையும் வணங்குபவனாய் இருக்கக் கூடாது. பல தேவதைகளைச் ஸமமாக வணங்குபவன் இத்தகைய கைங்கர்யங்களுக்கு அநர்ஹன்.

இப்பொழு கேள்வி : இந்த ஆறு தகுதிகளும் ஸூரியனுக்கு உண்டா ? என்று. உண்டு என்பதை உத்ப்ரேக்ஷையாலும் ச்லேடையாலும் ஸாதிக்கிறார் கவி.


1. ஸூர்யன் நீராடிவிட்டுத்தான் வருகிறான். தினந்தோறும் காலையில் அவன் கடலில் குளித்து எழுவதைப் பார்த்ததில்லையா ? ஸமுத்ரஸ்நானம் அல்லவா பண்ணிவிட்டு

வருகிறான். அவன் தாயார் ஸந்நிதிக்கு ? (ஸூர்யோதயத்தின் போது கடலிலிருந்து எழுவது போலிருப்பதை அவனது நித்யாநுஷ்டானமாக உத்ப்ரேக்ஷிக்கிறார் இந்தக் கவி).

2. அவன் தூய கையுடன் தான் வருகிறான் கதவு திறக்க. சுசிக்கு ஒன்றும் குறைவில்லை. சுசிகரன் தான் அவன். இந்தப் பதத்திற்கு இரண்டு அர்த்தங்கள். பரிசுத்தமான கையுள்ளவன் என்பது ஒரு அர்த்தம். அக்நி கிரணன் என்று மற்றொரு அர்த்தம். வெப்பக்கதிர் கொண்டிருப்பதால் அவன் சுசிகரன் என்கிற உண்மையைச் ச்லேடையால் கையலம்பி வந்தவனாகச் சொல்லிச் சுவை கூட்டுகிறார்.

3. ஸமாச்ரயணம் பண்ணின சக்கர அடையாளம் அவனுக்கு உண்டோ ? அதுவா ? சக்ரம் என்று சக்ரவாகப் பக்ஷிக்குப் பெயர். இந்தப் பக்ஷியின் காதல் ஜோடிகள் இரவில் பிரியும். பிரிவாற்றாமல் தவிக்கும். இந்த தப்த சக்ரத்துக்கு ஆறுதலளிப்பார், தாங்குவார் யாரும் இரவில் கிடையாது. ஸூர்யன்உதித்த பின்னரே அவை ஒன்றையொன்று பார்த்து மகிழும். இப்படியாக, தப்தசக்ரத்தைப் பரிப்பவனே ஸூர்யன் தான். இதே சொற்றொடருக்கு 'தீயில் காய்ச்சிய சக்ரத்தைத் தரிப்பவன்' என்று இன்னொரு அர்த்தமும் வருகிறது. எனவே மூன்றாவது தகுதியையும் ஸூர்யன் பெற்றுவிட்டான்.

(தொடரும்)



क्षारं पिबति पयोधेः वर्षत्यंभोधरो मधुरमम्भः ।

மேகம் கடலின் உப்பு நீரைப் பருகிறது. இனிய நீரைப் பொழிகிறது.

4. தாமரையிலுள்ள தேவியை வழிபடுவதற்குத்தான் ஸூர்யன் தினமும் அதை மலர்த்துகிறான். (இதுகவியின் உத்ப்ரேக்ஷை.)

5. அவன் பெருமாள் திருவடியில் பக்தி கொண்டவன். இதுவும் சிலேடையால் நிரூபிக்கப்படுகிறது. விஷ்ணுபதம் என்ற பதத்திற்கு ஆகாயம் என்றும் பெருமாள் திருவடி என்றும் இரண்டு அர்த்தங்கள். ஸக்தி என்ற பதத்திற்கு ஒட்டுதல் என்றும் பக்தி என்றும் இரண்டு அர்த்தங்கள். சூரியன் ஆகாயத்தில் ஒட்டியுள்ளவன் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆக அவனுக்கு விஷ்ணுபதத்தில் ஸக்தி உண்டு. அதனால் தான் சொல்கிறோம், அவன் பெருமாள் திருவடியில் பக்தன் என்று. சரி தானே? உதித என்ற சொல்லை இரண்டு விதமாக அன்வயிக்கலாம். உதயமான வானத்தில் ஒட்டல் என்று உண்மைப்பொருள். விஷ்ணுபத பக்தி தோன்றி வளர்கிறது என்று இங்கு பயனுள்ள பொருள்.

6. வானத்தை விட்டு அவன் நிலத்திற்கு வருவதுண்டோ? இல்லையே? அதனால் அவன் விஷ்ணுபதத்தில் மட்டுமே ஸக்தி கொண்டவன் என்பது தெளியலாம். அதாவது அநந்யபக்தி.

இப்படி ஆறு தகுதிகளும் அமையப்பெற்ற சூரியன் தாமரையை மலர்த்தும் வியாஜத்தில் லக்ஷ்மி கோயிலின் கதவைத் திறந்து வணங்குகிறான் போலும்.

இந்த ச்லோகத்தில் நமக்கு மேலும் சில அறிவுரைகளும் உள்ளன:

1. காலைப்பொழுது பொன்னானது. அதை வீணடிக்காமல் கடவுள் வழிபாட்டுக்குப் பயன்படுத்த வேண்டும். இதை ப்ராத: என்ற சொல்லால் உணர்த்தினார். சூரியன் 'காலங்கார்த்தாலை' லக்ஷ்மிஸந்நிதி கதவு திறப்பது போல் நாமும் அதிகாலையில் ஸத்காரியங்கள் பண்ணவேண்டும்.

2. குளிப்பது தூய்மைக்கு மட்டுமன்று. அது கருமங்களில் நமக்குத் தகுதி ஏற்படுத்துவதற்காகவும் தேவை. கர்மண்யதா ஸித்திக்காக என்று ப்ரதிதினமும் ஸங்கல்பிப்பதாலும் இது தெரிகிறது.

3. குளியலில் பலவகை இருப்பினும் அமிழ்ந்து முழுகுவது சிறந்தது. இதை ஆப்லவ என்ற சொல்லால் சொன்னார்.

4. உலகத்தவர் வழிபடும் சூரியனும் ஒரு அர்ச்சகன் தான் லக்ஷ்மிக்கு. ப்ரத்நார்சக என்கிறார். நாம் இந்த உண்மைத் தத்துவத்தை உணரவேண்டும்.

5. குளிப்பதில் விதிமுறைகள் உண்டு. ஆசமனம், ப்ராணாயாமம், ஸங்கல்பம், ஸாத்விகத்யாகம், ஸமஸ்தஜகதாதாரனிடம் அனுஜ்ஞை, ஸப்தநதிகளின் ஸாந்நித்யப்ரார்த்தனை, கங்கா ஆவாஹனம், ப்ரார்த்தனை, அவகாஹநம், ஸ்நாநாங்கதர்பணம், கடைசி ஆசமனம், புந: ஸாத்விகத்யாகம், என்ற எல்லாம் அடங்கியது ப்ராதஸ் ஸ்நாநம் என்பது. இதை ஆப்லவவிதி: என்ற பதத்தால் ஸூசித்தார்.

6. பெருமாள் ஸந்நிதிக்குப் போகும் போது கைகால்களும் . சுத்தமாக அலம்பிக்கொண்டு போகவேண்டும். பெரியவர்கள் தீர்த்தபாத்திரத்துடன் கோவில் சென்று கைகால் சோதித்துக்கொண்டு உள்ளே நுழைவது வழக்கம் என்பதை அநுஷ்டாதாக்களான மஹான்களுடன் பழகிய பாக்கியம் பெற்றவர்கள் அறிவார்கள். இந்த வழக்கத்தை சுசிகர: என்ற பதத்தால் குறிக்கிறார்.

7. அர்ச்சனை பண்ணுபவர் சக்ராங்கநம் பண்ணிக்கொண்டிருக்கவேண்டும். ஸமாச்ரயணம் ஆகாதவர் உள்ளே தொடுவதில்லை என்ற வழக்கம் தொன்மையானது. புராணங்களில் பேசப்படுவது. இதை ப்ருததப்த சக்ர: என்ற பதத்தால் சொல்கிறார்.

8. பெருமாள் உயர்ந்தவர் என்கிற ஜ்ஞானம் இருந்தால் மட்டும் போதாது. அது பக்தியாகப் பரிணமிக்கவேண்டும். அது அநந்ய பக்தியாக வேண்டும். அது வளர்ச்சி அடையவேண்டும். இதையெல்லாம் உதித -விஷ்ணுபத - ஏக - ஸக்தி: என்ற தொடரால் சொல்கிறார். வெற்று ஜ்ஞானமே போதும் என்ற பிறர் கருத்தை நம் முன்னோர் ஏற்றதில்லை.

கதிரவன் காலையில் உதிப்பான்.
கடலிலே முறைப்படி குளிப்பான்.
கமலமேல் கதவினைத் திறப்பான்.
கமலையைப் பணிவுடன் துதிப்பான்.

14. இறைவனுக்கு இணையான தாமரை.

ब्रह्मा यस्मादजनि वहते चारु पीतांशुकं यत्
सान्द्रामोदं सततं अमृतस्थानमेवाश्रितं च ।
अर्हत्यब्जं तव पदमिदं श्रीनिवासाभिधानम्
मातर्दोषो न भवति मधुस्निग्धता धर्मभूम्नि ॥१४॥

ப்ரஹ்மா யஸ்மாதஜநி வஹதே சாரு பீதாம்ஶுகம் யத்
ஸாந்த்ராமோதம் ஸததம் அம்ருதஸ்தாநமேவாஶ்ரிதம் ச ।
அர்ஹத்யப்ஜம் தவ பதமிதம் ஸ்ரீநிவாஸாபி₄தா₄நம்
மாதர்தோஷோ ந ப₄வதி மது₄ஸ்நிக்த₄தா த₄ர்மபூ₄ம்நி ॥ 14

मातः தாயே!
यस्मात् எதிலிருந்து
ब्रह्मा பிரம்மா
अजनि தோன்றினாரோ
यत् எது
चारु அழகாக
पीतांशुकं 1. பீதாம்பரத்தை 2. மஞ்சள் விதைப் பையை (தாமரைமணியை)
वहते வஹிக்கிறதோ

सान्द्र - आमोदं 1. நிரதிசயமான ஆனந்தம் கொண்டதும். 2. அதிக வாசனை கொண்டதும்.
सततं எப்போதும்
अमृत स्थानां एव 1. அம்ருதத்தின் பிறப்பிடமான பாற்கடலை, அல்லது அம்ருதர்களின் ஸ்தானமான ஸ்ரீவைகுண்டத்தை
2. ஜலப்பிரதேசத்தை
आश्रितं च அடைந்திருப்பதும்

तव உன்னுடைய
पदं இடமானதுமான
इदं இந்த
अब्जं தாமரையானது
श्री - निवास - अभिधानं
ஸ்ரீநிவாஸ (திருவின் இருப்பிடம்)
என்னும் பெயரை
अर्हति (அடையத்) தகுதிபெறுகிறது.
धर्मभूम्नि (இவ்வாறு பொதுவான
இயல்புகள்) ஏராளமாக
இருக்கையில் मधु - स्निग्धता
1. மதுவிடம் நட்பு 2. தேனால் பிசுக்கு
दोषं குறையாக
न भवति ஆகாது.

அன்னையே! தாமரை பகவானுக்கே சமமாகிறது. அப்படியானால் பெருமாளுடைய செயல்களும் இயல்புகளும் தாமரைக்கு உண்டோ எனக்கேட்டால் ஆமாம் என்போம். இதோ மாதிரிக்கு ஆறு:

1. பெருமாளிடமிருந்து பிரம்மா உண்டானார்.

2. பெருமான் பீதாம்பரம் தரித்தவர்.

3. பெருமாள் நிரதிசய ஆனந்தம் கொண்டவர்.

4. பெருமாள் க்ஷீராப்தியிலும் ஸ்ரீவைகுண்டத்திலும் இருப்பவர்.

5. பெருமாளுக்கு ஸ்ரீநிவாஸன் என்று பெயர்.

6. பெருமாள் மதுவை (அசுரனை) க் கொன்றவர்.

இந்த ஆறும் தாமரைக்கும் பொருந்துமோ? அலசிப் பார்ப்போம்.

1. தாமரையிலிருந்து பிரம்மா தோன்றினார் என்பதும் வேதம் கூறும் உண்மை தான்.

2. பீதாம்பரம் என்பதைப் பீதாம்சுகம் என்ற பதத்தால் சொல்லலாம். அம்சுகம் என்றால் வஸ்திரம் என்றும் மலரினுள் உள்ள காய்ப்பகுதி என்றும் இரண்டு அர்த்தங்கள். அதனால் தாமரையும் மஞ்சளான தாமரைமணி வைத்திருப்பதால் இருவரும் பீதாம்சுகதாரிகள் தான்.

3. ஆமோதம் என்ற பதத்திற்கு ஆனந்தம் என்றும் வாசனை என்றும் இரண்டு அர்த்தங்கள். பெருமாள் அளவற்ற ஆனந்தமுள்ளவர் என்பதுபோல் தாமரை மிகுந்த மணம்

கொண்டது என்பதும் பிரசித்தமே. இருவருமே ஆமோதம் மிக்கவர்கள் என்றாயிற்று.

4. பெருமாளின் நித்யவாஸஸ்தானமான திருப்பாற்கடலையும் ஸ்ரீவைகுண்டத்தையும் அம்ருதஸ்தானம் என்ற ஒரே சொல்லால் சொல்லலாம். ஏனென்றால் பாற்கடலிலிருந்து அமுதம் தோன்றியபடியால் அது அம்ருதஸ்தானம். அம்ருதர்கள் இறவாநிலை பெற்ற திவ்யஸூரிகள். அவர்களின் ஸ்தானம் பரமபதம். தாமரை இருப்பதும் அம்ருதஸ்தானத்தில் தான். அம்ருதம் என்றால் ஜலம். நீரில் தானே தாமரை இருக்கும்?

5. ஸ்ரீநிவாஸன் என்றால்என்ன அர்த்தம்? ஸ்ரீ என்கிற லக்ஷ்மியின் வாஸஸ்தானம் என்று தானே? இப்படி அர்த்தம் பார்த்தால், தாமரைக்குக் கூட ஸ்ரீநிவாஸ என்கிற பெயர் பொருத்தமாக இருக்கிறதே?

6. பெருமாள் மது என்னும் அரக்கனைக் கொன்றார். அவர் மதுத்வேஷி. தாமரையும் அப்படியா? என்றால், இல்லை என்னவேண்டியிருக்கிறது. மதுத்வேஷிக்கு மாறாக, மதுஸ்நிக்தமானது தாமரை. மது என்றும் பசைகொண்டது. முதல் பொருள் படி மதுவிடம் நட்புடைய தாமரை மதுஸூதனப் பெருமாளுக்கு நேர்மாறாக இருக்கிறது. இரண்டாம் பொருள்படி பார்த்தால், தேன்பிசுக்குடையது தாமரை என்பது உண்மைப்பொருள். ஆக இதில் ஸாம்யம் இல்லை. போனால் போகட்டும். ஆறு இயல்புகளில் ஐந்து தாமரைக்கும் பெருமாளுக்கும் பொதுவாகி விட்டன. ஒன்றே ஒன்று மட்டும் மாறிப் போய்விட்டது. நிறைய ஒப்புமைகளின் இடையில் ஒரே ஒரு வேற்றுமை தானே? அது பெரிய குறை இல்லை தாயே!, தாமரையைப் பெருமாளுக்குச் சமமாகவே சொல்வோம். அதையும் ஸ்ரீநிவாஸம் என்றே சொல்வோம்.

இந்த ச்லோகத்தில் வேதக்கருத்துகளும் ஆழ்வார் கருத்துகளும் அதிகம்.

1.'' யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்'' என்கிற வேதவாக்கியம் பெருமாளிடமிருந்து பிரம்மா தோன்றியதாகச் சொல்கிறது. நான்முகனை நாராயணன் படைத்தான் என்கிறார் திருமழிசை ஆழ்வார். இதையே ப்ரஹ்மா யஸ்மாதஜநி என்கிறார் இந்தக்கவி.

2.'' ஸ ப்ரஜாபதிரேக: புஷ்கரபர்ணே ஸமபவத்'' என்கிற வேதவாக்கியம் பிரம்மா தாமரைத்தளத்தில் தோன்றியதாகச் சொல்கிறது. நம் ஆழ்வாரும்'' தேவும் எப்பொருளும் படைக்கப் பூவில் நான் முகனைப் படைத்த தேவன்'' என்று இரண்டையும் ஒருங்குபடுத்துகிறார். இந்தக்கவியும் இதையே பெருமாளுக்கும் தாமரைக்கும் சமானதர்மமாகச் சொல்கிறார்.

3. ''பீதகவாடையுடையானை'' என்கிறாள் ஆண்டாள். ''வஹதே சாரு பீதாம்சுகம்'' என்கிறாரிவர்.

4.'' ஆநந்தமய:'' என்கிறது உபநிஷத்து. இதையே '' எண்பெருக்கு அந்நலத்து'' என்கிறார் நம் ஆழ்வார். ஸாந்த்ராமோதம் என்கிறார் இந்தக்கவி.

5. ''ஏததம்ருதம்'' என்று பரம்பொருளைச் சொல்கிறது உபநிஷத்து. ''கன்னலே அமுதே'' என்கிறார் நம் ஆழ்வார். பெருமாளின் ஸ்தானம் அம்ருதஸ்தானம் என்கிறார் இந்தக்கவி. அது மூன்று அர்த்தங்களுடன் பொருந்துகிறது. ''தமேவம் வித்வாந் அம்ருத:'' என்று இறவா நிலையைச் சொல்கிறது வேதம்.

அயனிங்கே தோன்றியதால்
அம்சுகத்தின் மஞ்சளினால்
அம்ருதத்தில் இருப்பதனால்
ஆமோதம் வகிப்பதனால்
அன்னை ஸ்ரீ வசிப்பதனால்
அதிகப் பண்பொப்புமையால்
அதிலொன்று பிறழ்ந்தாலும்
அம்புஜமே ஸ்ரீவாஸன்.

15. அபசாரிகளை அலைக்கழிக்கும் தாமரை.

अहो मुकुन्दसुन्दरि त्वदीयमन्दिराहित :
स्वयं क्षयं व्रजन्नयं क्षिणोति रक्षकानपि ।
सरोरुहद्रुहश्शिवः शिरोधिरोहदुष्कृतात्
विदिक्षु दिक्षु भिक्षुकः स्फुटं नटन्नटाटयते ॥१५॥

அஹோ முகுந்தஸுந்தரி த்வதீயமந்திராஹித:
ஸ்வயம் க்ஷயம் வ்ரஜந்நயம் க்ஷிணோதி ரக்ஷகாநபி ।
ஸரோருஹத்ருஹஶ்ஶிவ: ஶிரோதி₄ரோஹதுஷ்க்ருதாத்
விதிக்ஷுதிக்ஷு பி₄க்ஷுக: ஸ்பு₂டம் நடந்நடாட்யதே ॥15॥

முகுந்தனின் ஸௌந்தரியான லக்ஷ்மியே! உனக்கு மந்திரம் (கோயில்) ஆனது தாமரை. இந்தத் தாமரைக்குத் தீங்கு செய்பவர் யாரானாலும் வருந்த நேரிடும். இதோ ஒரு திருஷ்டாந்தம்: தாமரைக்குத் துரோகியானான் சந்திரன்.

தாமரையை மலரவிடாமல் கூம்பச்செய்பவன் அவன்.

அவனுக்கு என்ன ஆயிற்று தெரியுமா? க்ஷயம் ஏற்பட்டது. தேய்ந்துபோனான்.

அது அவனோடு விட்டதா? இல்லை. அவனைத் தலையில் தாங்கினவனையும் பிடித்தது.

சிவன் அதற்கு முன் மங்களமாகத்தான் இருந்தான் போலும்; பேரிலிருந்து ஊகம்.

ஆனால் இந்தப் பத்மத்ரோஹியான சந்திரன் தன் தலையில் ஏறியபின் பிடித்தது பீடை.

திக்குவிதிக்குகளிலெல்லாம், பிச்சை கேட்டு அலைகிறான். அதற்காகக் கூத்து கூட ஆடுகிறான்.

ஐயோ பாவம், அலைச்சலான அலைச்சல். எல்லார் முன்னிலையிலும் அலையும்படியான நிலை.

मुकुन्द - सुन्दरि முகுந்தனின் ஸௌந்தரியான லக்ஷ்மியே!

त्वदीय - मन्दिर - अहित: உன் கோவிலான தாமரைக்குக் கேடுசெய்யும்

अयं இவன்

स्वयं தானும்

क्षयं அழிவை

व्रजन् அடைந்து

रक्षकान् अपि (தன்னைக்) காப்பாற்றுபவர்களையும்

क्षिणोति அழிக்கிறான்.

सरोरुह - द्रुह: தாமரைக்குத் துரோகியான சந்திரனுடைய

शिरोधिरोह - दुष्कृतात् (தன்) தலையிலேறிய குற்றத்தால்

शिव: சிவன்

दिक्षु திசைகளிலும்

विदिक्षु மூலைத்திசைகளிலும்

भिक्षुक: பிச்சைக்காரனாய்

स्फुटं வெளிப்படையாக

नटन् கூத்தாடிக்கொண்டு

अटाट्यते அலைந்து திரிகிறான்.

अहो ஐயோ பாவம்.

சந்திரன் செய்த அபசாரம் இவன் மேலும் விடிந்தது. (இது கவியின் உத்ப்ரேக்ஷை. உண்மை நிலை வேறு.)

இந்த ச்லோகத்தில் நாம் அறியும் நீதிகள்:

1. நாம் நேரடியாகத் தவறு செய்யாதிருந்தால் மட்டும் போதாது. மற்றவர் செய்த குற்றம் நம்மையும் பாதிக்கலாமாதலால் பெருங்குற்றவாளிகளின் சகவாசமே கூடாது.

2. தாமரையிடம் அபசாரப்படுவது தீங்கு விளைவிக்கும். (இதை நாலாம் ச்லோகத்திலேயே சொல்லியாச்சு.) தாமரையிடம் அபசாரப்படுபவர்களை ஆதரிப்பதும் ஏற்பதும் தலையில் வைத்துக் கொண்டாடுவதும் பெரும் கேட்டை விளைவிக்கும். ஏனென்றால் தாமரை லக்ஷ்மிக்குக் கைங்கர்யம் பண்ணுவது காரணம். லக்ஷ்மி பக்தர்களிடம் வம்புக்குபோகிறவர்களை விலக்கவேண்டும். இல்லையேல் ஆபத்து. பெரிய இடத்துப் பகை எதற்கு?

3. சில பாவங்கள், செய்தவர்களை மட்டுமே வாட்டும். கொடிய பாவங்களோ, செய்தவரையும் அவரைச்

சேர்ந்தவரையும் வாட்டும். ஸம்ஸர்கிணாமபி என்று சொன்னபடி. பாவங்களின் தராதரம் அறிந்து கொடியவற்றை அறவே விலக்கவேண்டும்.

4. ஒருத்தன் பண்ணின பாவத்துக்கு இன்னொருத்தனுக்குப் பலனா? இது சரியில்லையே என்று நினைக்கவேண்டாம். குற்றவாளிக்கு (வேறு குற்றமற்ற காரியங்களிலும்கூட) துணை போவதும் குற்றம் தான். (வன்முறையாளனுக்கு வாடகைக்கு வீடு கொடுப்பதும் குற்றமாவது போல்.) லக்ஷ்மிபக்த்ரிடம் ஏதம் புரிந்தவர்க்கு ஏதும் உதவி செய்யக்கூடாது.

திருமகள் தொண்டர்க்கு ஏதம்
திங்களுக்கதனால் சேதம்.
திரிநயனர்க்கும் கேதம்.
திரியினும் இல்லை சாதம். (தொடரும்)



गुणाः पूजास्थानं गुणिषु न च लिङ्गं न च वयः ।

குணவான்களிடம் அவர்களது குணங்களே பாராட்டுக் குரியவை., ஆண் பெண் என்ற திணையோ வயதோ அல்ல.

16. ஸூரியனுக்கு ஸௌஹ்ருத்தான தாமரை.

त्वद्धाम्नः सरसीरुहस्य च मिथः त्वत्कान्तधामात्मनः
मार्ताण्डस्य च पुण्डरीकनिलये मैत्री निसर्गोदिता ।
कल्याणीं युवयोरियं विवृणुते कैमुत्यनीत्या मिथः
प्रीतिं कामपि भूयसीं अविदिताक्षेपामनौपाधिकीम् ॥१६॥

**த்வத்தா$_4$ம்நஸ் ஸரஸீருஹஸ்ய ச மிதஸ் த்வத்காந்ததா$_4$மாத்மந:
மார்தாண்டஸ்ய ச புண்டரீகநிலயே மைத்ரீ நிஸர்கோதிதா ।
கல்யாணீம் யுவயோரியம் விவ்ருணுதே கைமுத்யநீத்யா மித$_2$:
ப்ரீதிம் காமபி பூ$_4$யஸீம் அவிதிதாக்ஷேபாமநௌபாதி$_4$கீம் ॥16॥**

पुण्डरीक - निलये தாமரையை இலமாகக் கொண்டவளே!
त्वत् - धाम्नः உன் இடமான
सरसीरुहस्य च தாமரைக்கும்
त्वत् - कान्त - धाम्न : உன் கணவனின் இடமான
मार्ताण्डस्य च சூரியனுக்கும்
मिथः ஒருவருக்கொருவர்
मैत्री நட்பு
निसर्ग - उदिता இயற்கையாகத் தோன்றியது
इयं இந்த நட்பானது
युवयोः உங்கள் இருவரிடையே
मिथः பரஸ்பரம்
कल्याणीं மங்களமானதும்
भूयसीं அதிகமானதும்
अविदिताक्षेपां ஆக்ஷேபம் அறியாததும்
अनौपाधिकीं உபாதி(சாக்கு, இடையீடு) இல்லாததுமான
कां अपि ஏதோ ஒரு
प्रीतिं அன்பை
कैमुत्यनीत्या கேட்பானேன் என்கிற நியாயப்படி
विवृणुते விவரிக்கிறது. வெளிப்படுத்துகிறது.

தாமரையில் வசிப்பவளே! உன் இருப்பிடம் தாமரைப்பூ. உன் காந்தனின் இருப்பிடம் சூரியன். நாராயணன் சூரியமண்டலத்து நடுவில் திகழ்பவன் என்று பிரசித்தம்.

உன் இருப்பிடமான தாமரைக்கும் அவன் இருப்பிடமான சூரியனுக்கும் இயற்கையாகவே நட்பு இருக்கிறது. சூரியன் தென்படும்போதெல்லாம் தாமரை மலர்வதும், அவன் இல்லாதபோதெல்லாம் தாமரை குவிவதும், தாமரை மலரும்போது மட்டும் அவன் ஒளிர்வதும், தாமரை கூம்புகையில் சூரியன் மறைவதும், நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். அந்த அளவுக்கு இயற்கையான நட்பு. ஸஹஜமான ஸௌஹார்தம் அவ்விருவருக்கிடையே. தாமரை சூரியனின் ஸுஹ்ருத்து. மிஹிரனின் மித்ரம். இதிலிருந்து நாங்கள் ஊகிப்பது வேறொன்றும் உண்டு. உங்கள் இருவரின் இருப்பிடங்களுக்கிடையே இவ்வளவு ஸௌஹார்த்தம் இருந்தால் உங்களுக்கிடையே எவ்வளவு ப்ரீதி இருக்கும்? பரஸ்பரம் எத்தகைய அன்பு இருக்கும்? அந்த அன்பு நிரவதிகமாகவும், நிருபாதிகமாகவும், நிஷ்ப்ரத்யூஹமாகவும், வர்ணநாதீதமாகவும் அல்லவா இருக்கும்? அதாவது எல்லையற்றும், இடையீடற்றும், தடங்கலற்றும், சொல்லிலடங்காமலும் இருக்கும். திவ்யதம்பதிகளின் இப்படிப்பட்ட ப்ரேமையை வெளிப்படுத்துகிறது தாமரைக்கும் சூரியனுக்கும் உள்ள நட்பு.

அலைமகளின் நிலையத்திற் கெதிரியான
கலைப்பிறையைத் தலைமுடியில் வைத்ததாலே
மலைமகளை மணந்தவனும் மண்டையேந்தி
அலையலையோ அலைகின்றான் அய்யோ பாவம்.

கைமுத்ய நீத்யா என்கிறாரே, அந்த நீதி என்னவென்றால், தாமரைக்கும் சூரியனுக்குமே இவ்வளவு மைத்ரீ இருந்தால், அவற்றில் உறையும் தேவிக்கும் தேவனுக்கும் ப்ரீதி இருப்பதைக் கேட்பானேன் என்பது அது. கிங்கரர்களின் மனநிலையிலிருந்து யஜமானர்களின் மனநிலையை ஊகிக்க முடியும். சூரியனுக்கும் தாமரைக்கும் உள்ள மைத்ரீ (நட்பு) பலவகைப்பட்டது. சில வகைகள் இதோ:

1. பெருமாள் ஆதித்யனாக அவதரித்தபோது லக்ஷ்மி பத்மமாக அவதரித்தாள் என்கிறது விஷ்ணுபுராண வசனம்.

தம்பதியரிடையே உள்ளவகையிலும் இந்த மைத்ரீ உண்டு என்பது தெரிகிறது.

2. ஸூரியமண்டலத்திற்குள் தாமரை ஆஸனத்தில் நாராயணனைத் தியானிக்கிறோம் பிரதிதினமும் ஸந்தியா - உபாஸன முடிவில். இப்படியும் ஒருவகை மைத்ரீ.

3. ஏற்கெனவே சொன்னபடி ஒளிர்வதிலும் மலர்வதிலும் ஸமகாலம் உடைமை என்பது மற்றொரு வெளிப்பாடு இந்த நட்புக்கு.

இந்த ச்லோகத்தில் நாம் அறியும் நீதி என்னவென்றால் கணவன் மனைவியரிடையே அன்பு கீழ்க்கண்ட ஆறு அடைமொழிகளை ஏற்பதாக அமையவேண்டும் என்பது:

1. மங்களமான ப்ரீதி. நன்மை பயப்பது.

2. அதிகமான ப்ரீதி. குறைவற்றது.

3. ஆக்ஷேபமில்லாத ப்ரீதி. இடையூறற்றது.

4. இடையீடு இல்லாத ப்ரீதி. மற்றொன்றுக்காகவன்றி நேரிடையானது.

5. சொல்லவொண்ணாத ப்ரீதி. வருணிக்க இயலாதது.

6. பரஸ்பரம் ப்ரீதி. அன்னியோன்யமானது.

இந்த விசேஷணங்களால், காமவெறிக்காதல், ஆழமற்ற பசப்புக்காதல், கள்ளக்காதல், பணம் பதவிக்காகக் காதல், ஒவ்வாக்காதல், ஒருதலைக்காதல் என்ற ஆறும் முறையே விலக்கப்பட்டன.

கமலம் வாழ் காரிகைக்கும்
கதிரவன் வாழ் காந்தர்க்கும்
கட்டாயம் அன்பிருக்கும்
கறைகுறைகள் அற்றிருக்கும்.

17. மற்றெல்லா மலர்களினும் மேலான தாமரை.

कति न कुसुमम्मन्यान्यन्यानि सन्ति वनेवने
न हि समुदितेष्वप्येतेषु क्षमा कमलोपमा ।
भगवति भवत्सान्निध्येन प्रभोः कमलानि यत्
करचरणदृक्कल्पानीति स्थिरं दधते यशः ॥१७॥

கதி ந குஸுமம்மந்யாந்யந்யாநி ஸந்தி வநேவநே
ந ஹி ஸமுதி₃தேஷ்வப்யேதேஷு க்ஷமா கமலோபமா ।
ப₄கவதி ப₄வத்ஸாந்நித்₄யேந ப்ரபோ₄: கமலாநி யத்
கரசரணத்₃ருக்கல்பாநீதி ஸ்தி₂ரம் த₃த₄தே யஶ: ॥17॥

भगवति பகவதி லக்ஷ்மியே!
कुसुमम्मन्यानि தங்களையும்
பூக்களாக நினைத்துக்
கொண்டிருக்கும்
अन्यानि மற்றவை
वनेवने ஒவ்வொரு காட்டிலும்,
ஒவ்வொரு ஜலத்திலும்
कति எத்தனை
न सन्ति இல்லை? (நிறைய
உண்டு).
एतेषु இவை
समुदितेषु आपि ஒன்றுகூடினாலும்
कमलोपमा தாமரைக்கு நிகர்
न क्षमा தகாது
हि அல்லவா?
भवत्सान्निध्येन உமது ஸாந்நித்யத்தால்
प्रभोः பெருமாளுடைய
कर - चरण- दृक् - कल्पानि கை கால் கண்களுக்கு ஒப்பானவை
इति என்று
स्थिरं நிலையான
यशः புகழை
कमलानि தாமரைகள்
यत् எதனால்
दधते தரிக்கின்றனவோ. (அந்தக் காரணத்தால்.)

எத்தனையோ பூக்கள் உண்டு; காட்டுக்குக் காடு, ஜலத்துக்கு ஜலம் பூக்கள் உண்டு. அவையெல்லாம் பூக்களா? தங்களையும் பூக்களாக அவை நினைத்துக்கொண்டால் போதுமா? அவையெல்லாம் ஒன்றுசேர்ந்தாலும் தாமரைக்கு நிகர் என்னத்தகுமா? தகாது. ஏன் இப்படி யென்றால் சொல்கிறோம். தாமரைக்கு ஒரு நிலையான புகழ் இருக்கிறது. பெருமாளுடைய கை போல, கால் போல கண் போல என்ற புகழ். (இந்த வாக்கியத்திற்கு இரண்டு தாத்பர்யங்கள். பெருமாளின் கைகால்கண்களுக்குத் தாமரையை உவமையாகக் கூறும் பெருமை என்பது ஒன்று. பெருமாளுக்குக் கைகால்கள் போல தாமரையும் அவ்வளவு நெருங்கியது என்ற புகழ் என்பது மற்றொன்று.) இந்தப் புகழ் நிலையானது. பொன்றாதது. (ஏனென்றால் மறைகளிலும் தமிழ்மறைகளிலும் பிரசித்தி பெற்றது.) இவ்வளவு பேரும் புகழும் தாமரை பெற்றது நீ அதில் வீற்றிருப்பதால் தான்.

தாமரைக்கு ஸ்திரமான புகழ் உள்ளதாகக் கவி கூறியதற்குக் காரணங்கள் சில:

1. ''கைவண்ணம் தாமரை வாய் கமலம் போலும் கண்ணிணையும் அரவிந்தம் அடியும் அஃதே'' என்ற திருநெடுந் தாண்டகப் பாசுரத்தை நினைவு கூறும் வகையில் கர சரண த்ருக் கல்பாநி என்கிறாரே, அதுவே ஆழ்வார் பாடல் பெற்ற புகழ் தாமரைக்கு என்று சொல்வதற்குத்தான்.

2. ''தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகம் ஏவம் அக்ஷிணி'' என்று உபநிஷத்தில் தாமரை எப்படி உவமை ஆயிற்றோ அதையே சொல்லி தாமரையின் வேதப்புகழை ஸூசிக்கிறார்.

3. ''அஷ்டதளபத்மாய நம:'' என்பதும் ''பத்மாய நம:'' என்பதும் ஆதாரசக்த்யாதி மந்த்ரங்களில் இருபத்தொன்றாவதும் ஐம்பத்தாறாவதுமான மந்த்ரங்கள். பிரதி தினமும் வைதிகர்களால் இரண்டு தடவை அனுஸந்திக்கப்படுகின்றன. அவ்வளவு புகழ் தாமரைக்கு. ஸந்த்யாவந்தனமுடிவிலும் ஸரஸிஜ ஆஸநத்தில் நாராயணனைத் தியானிக்கிறார்கள், மூன்று வேளைகளிலும். இவ்வளவு ஸ்திரமான யஶஸ் யாருக்குக் கிடைக்கும் ? பெருமாளுக்குக் கை கால் முதலிய உறுப்புகள் போலே அணுக்கமாய் ஆஸனமாகவும் லீலாவஸ்துவாகவும் இருக்கும் தாமரைகளுக்கு மட்டும் தான். மற்றெந்த மலருக்கும் இப்புகழ் இல்லை.

இந்த ச்லோகத்திலிருந்து நாம் அறியும் சில நீதிகள்:

1. பகவத் ஸம்பந்தம் புகழைத் தரும்.

2. புகழுக்குக் காரணமான பகவத்ஸம்பந்தத்தை லக்ஷ்மிஸாந்நித்யம் தரும்.

3. புகழ் எப்பொழுது ஸ்திரமான புகழ் ஆகும் ? அமர இலக்கியங்களில் விஷயமாகும்பொழுது.

4. நாம் ஸ்வாபிமானத்துடன் நம்மை உயர்வாக நினைத்தால் போதாது. குஸுமம்மந்யர்களான மற்ற பூக்கள் போல. ஏணி வைத்தாலும் எட்டாத உயரத்தில் இருப்பவர்களையும் பார்த்து நம் நினைப்பை மாற்றுவது நல்லது.

தாமரைப் போது பொன்றாப் புகழுடன் இருக்கும்போது மற்ற பூக்களும் பூக்களா ?

பூமகள் உறையும் ஒரு போது
புருஷோத்தமன் கால் கண் போன்று
புகழால் நிலைபெற்றுளபோது
பூ வேறு நிகர் இதற்கேது ?

18. ஸமுத்ரகந்யைக்கு ஸமமான தாமரை.

हरेः करस्पर्शनतः प्रहृष्टा पयस्युदीता रुचिरालिकान्ता।
वाराशिकन्ये वसतिस्त्वदीया बिभर्ति युक्तं कमलाभिधानम्॥

ஹரே: கரஸ்பர்சநத: ப்ரஹ்ருஷ்டா பயஸ்யுதீதா ருசிராலிகாந்தா ।
வாராசிகந்யே வஸதிஸ் த்வதீயா பிபர்தி யுக்தம் கமலாபிதாநம் ॥

वाराशिकन्ये ! கடலின் கன்னிகையே !
हरेः - பெருமாளுடைய, 2. ஸூர்யனுடைய
कर-स्पर्शनतः - 1. கையால் தொடுவதால், 2. கிரணங்கள் படுவதால்
प्रहृष्टा - 1. மகிழ்பவளும், 2. மலர்வதும்,
पयसि - 1. பாலில், 2. ஜலத்தில்,
उदीता - 1. உதித்தவளும், 2. தோன்றியதும்,
रुचिर -अलिकान्ता - 1. அழகிய முன்னெற்றி கொண்டவளும், 2. அழகிய வண்டுகளால் விரும்பத்தக்கதுமான,
त्वदीया - உன்னுடையதான,
वसतिः - இருப்பிடமான தாமரை
कमलाभिधानं - 1. கமலே என்கிற பெயரை, 2. கமலம் என்கிற பெயரை, 3. லக்ஷ்மியின் பெயரை
बिभर्ति - தாங்குகிறது
युक्तं - பொருத்தம்.

ஸமுத்ர கந்யையே ! உனக்கு இடமான தாமரை உனக்குச் சமமாகவும் ஆகிறது. நான்கு ஸாத்ருஶ்யங்கள் உள்ளன உனக்கும் தாமரைக்கும்.
1. ஹரியின் கரம் பட்டால் ப்ரஹர்ஷம் அடைவது.
2. பயஸ்ஸில் தோன்றுவது. 3. அழகான அளிகாந்தத் தன்மை 4. கமலாபிதாநம் என்கிற நாலும் உங்கள் இருவருக்குமே அமைந்திருக்கின்றன. எப்படியென்றால் :

1. ஹரி என்றால் விஷ்ணு என்றும் சூரியன் என்றும் இரண்டு அர்த்தங்கள். கரம் என்றால் கை என்றும் கிரணம் என்றும் இரண்டு அர்த்தங்கள். ஸ்பர்ஶநம் என்றால் தொடுவது என்றும் கொடுப்பது என்றும் இரண்டு அர்த்தங்கள். ப்ரஹர்ஷம் என்றால் மகிழ்ச்சி என்றும் மலர்ச்சி என்றும் இரண்டு அர்த்தங்கள். விஷ்ணுவின் பாணிக்ரஹணத்தால் மகிழ்ச்சி லக்ஷ்மிக்கு. ஸூர்யனின்

கிரணம் படுவதால் மலர்ச்சி தாமரைக்கு. இப்படியாக இருவருக்குமே ஹரியின் கரஸ்பர்ஶத்தால் ப்ரஹர்ஷம்.

2. பயஸ் என்றால் பால் என்றும் ஜலம் என்றும் இரண்டு அர்த்தங்கள். லக்ஷ்மி பாலில் (க்ஷீர ஸமுத்ரத்தில்) உதித்தவள். தாமரை நீரில் தோன்றும் பூ. ஆக இருவருக்குமே பயஸ்ஸில் உதயம்.

3. அளிகாந்த என்ற பதத்தை அளிக-அந்த என்று பிரித்தால் வண்டுகளால் ரம்யமானது என்றோ, வண்டுகளுக்கு ரம்யமானது என்றோ அர்த்தம். இப்படியாக, லக்ஷ்மியும் அழகிய அளிகாந்தம் கொண்டவள். தாமரையும் அளிகாந்தமானது. இருவருமே ருசிராளிகாந்தா என்னலாம். ருசிரா ஆளிகாந்தா என்று பிரித்து, ஆளி என்பதற்குத் தோழி, ஸகி, என்று பொருள் கொண்டு, லக்ஷ்மி ஒளிர்பவள், இனியவள், பூதேவி முதலிய தோழிமாரின் அன்புக்குரியவள், என்றும் அர்த்தம் சொல்ல இடமுண்டு.

4. கமலா என்று பெயர் லக்ஷ்மிக்கு. கமலம் என்று பெயர் தாமரைக்கு. ஆக, இருவருக்கும் கமலாபிதாநம் என்னலாம்.

முதலில் சொன்ன மூன்று ஸாத்ருஶ்யங்கள் இருப்பதால் தாமரைக்குக் கமலாபிதாநம் (லக்ஷ்மியின் பெயர்) இருப்பதும் பொருத்தம் தான். விருப்பம், பிறப்பிடம், அழகு, என்று மூன்றிலும் லக்ஷ்மியையே ஒத்திருப்பதால், தாமரைக்கு அவள் பெயர் (அபிதை) பொருத்தமானது தான்.

ஹரியின் கரத்தால் களிப்பாலும்
அவள் போல் பயஸ்ஸில் உதிப்பாலும்
அழகிய அளிகாந்தத்தாலும்
அபிதை கமலம் சரி போலும்.



विद्या राजसु पूज्यते न हि धनं विद्या विहीन: पशु:

கல்வி கற்றோர் அரசர்களாலும் பூஜிக்கப் படுகின்றனர். கல்வி அறிவு இல்லாதவன் மிருகத்திற்கு சமம்.

19. அநுகுணமான அரண்மனையான தாமரை :

भङ्गीसङ्गीत्युदयसुभगं मञ्जुकिञ्जल्कपुञ्ज
स्फारस्थूणं किमपि विकसत्पत्रसच्चित्रभित्ति ।
पर्याश्लिष्टं विमलसरसा कर्णिकास्वर्णपीठम्
पद्मं विद्मः परमनुगुणं सद्म पद्मे भवत्याः ॥ १९

ப்ருங்கீஸங்கீத்யுதயஸுபகம் மஞ்ஜு கிஞ்ஜல்கபுஞ்ஜ
ஸ்பாரஸ்தூணம் கிமபி விகஸத்பத்ரஸச்சித்ரபித்தி ।
பர்யாச்லிஷ்டம் விமலஸரஸா கர்ணிகாஸ்வர்ணபீடம்
பத்மம் வித்ம: பரமநுகுணம் ஸத்ம பத்மே பவத்யா: ॥ 19

पद्मे – *லக்ஷ்மியே !*

भङ्गी - सङ्गीति-उदय-सुभगं - *1. வண்டுகள் கூடி இசை தோன்றுவதால் (செவிக்கு) இனியதும், 2. வண்டுகளின் இன்னிசையால் உதயமங்களம் கொண்டதும்*

मञ्जु - किञ्जल्क - पुञ्ज - स्फार-स्थूणं – *அழகிய கேஸரக் கொத்தாகிற பருத்த தூண்கள் கொண்டதும்*

विकसत् - पत्र - सत् - चित्र - भित्ति - *மலர்கிற இதழ்களாலான நல்ல சித்திரச் சுவர் உடையதும்*

विमल - सरसा - *தெளிந்த நீர் நிலையால்*

पर्याश्लिष्टं - *சூழப்பட்டதும்*

कर्णिका - स्वर्ण - पीठं - *கர்ணிகை என்கிற தங்கபீடம் கொண்டதும் ஆன*

पद्मं - *தாமரையை*

भवत्याः - *உமக்கு*

परं - *மிகவும்*

अनुगुणं - *பொருத்தமான*

किमपि - *ஏதோ ஒரு*

सद्म - *அரண்மனையாக*

विद्मः - *அறிகிறோம்.*

தாமரையை நாங்கள் வெறும் பூவாக நினைப்பதில்லை. பத்மையே ! உமது அரண்மனை எப்படியிருக்கும் என்றால்: 1. போகம், 2. விசாலம், 3. வேலைப்பாடு, 4. பாதுகாவல், 5. ஐச்வர்யம் என்ற இந்த ஐந்தும் மிகுந்ததாக இருக்கும். (சின்ன சின்ன ராணிகளின் அரண்மனைகளைப் பார்த்து இப்படி ஊஹிக்கிறோம்.)

1. காலையில் இசைக்கருவிகளின் மங்களகீதம். 2. பருமனான கம்பங்கள். 3. சுவர்களில் அழகான ஓவியங்கள். 4. சுற்றிலும் அகழி (பிறர் புக முடியாதபடி), 5. தங்கமயமான இவையெல்லாம் தாமரைப்பூவில் உண்டோ என்று கேட்டால் உண்டு என்கிறோம். ஆசனம் (ராணி அமர்வதற்கு) இதைச் சமர்த்திக்க உதயம், சங்கீதம், பத்ரம், பித்தி, சித்ரம், என்கிற பதங்களில் சிலேடையுடன் உருவக அணியையும் பயன்படுத்துகிறார் கவி.

1. ஸங்கீதம் என்றால் இசைக் கருவிகளுடன் இணைந்த வாய்ப்பாட்டு என்று ஒரு அர்த்தம். இது சூர்யோதய காலத்தில் ராணிகளின் அரண்மனைகளில் இருப்பது. இதே ஸங்கீதம் என்ற சொல்லுக்கு பலர் ஒன்று கூடி (கோரஸ் என்பர் ஆங்கிலத்தில்) ஒருங்கே பாடுவது என்றும் பொருளாம். இது தாமரையில் உள்ளது. காலையில் மலர்ந்தவுடன் பெண்வண்டுகள் கூடிப் பாடும் தாமரையில், உதயத்தில் ஸங்கீதம் என்றும் ஸங்கீதத்தின் உதயம் (தோற்றம்) என்றும் இரண்டு அர்த்தங்களும் பொருந்தும், எப்படியோ, அரண்மனையின் மங்களவாத்ய உதயகீதம் ஒருவிதமாகத் தாமரையிலும் இருக்கிறது.

2. தாமரையின் வடிவமைப்பு எப்படி இருக்கிறது ? சுவர்கள் போன்ற இதழ்களுக்குள் தூண்கள் போன்ற தாதுக்காம்புகள்.

3. சித்ரம் என்றால் ஓவியம் என்றும் விசித்திரம் என்றும் இரண்டு அர்த்தங்கள். பித்தி என்றால் சுவர் என்றும் பிளவு என்றும் இரண்டு அர்த்தங்கள். பத்ரம் என்றால் தாள் என்றும் இதழ் என்றும் இரண்டு அர்த்தங்கள். அரண்மனைகளில் ஓவியங்கள் சுவர்களில் நேரடியாகவோ, காகிதம், அட்டை, கான்வாஸ்களிலோ, இருக்கும். தாமரையிலும் பத்ரம் உண்டு. சித்ரமான பித்தியும் உண்டு. இதழ்கள் ஆச்சர்யமான முறையில் அல்லவா ஒன்றோடொன்று பிரிவு பட்டிருக்கின்றன? பத்ரங்களில் (இதழ்களில்) இருக்கிற

ஆச்சர்யமான பிளவை பத்ரஸச்சித்ரபித்தி என்னலாம். இதே பதத்திற்குச் சுவர்களில் தாள்களில் வரைந்த ஓவியங்களும் பொருளாகிறது. இதனாலும் தாமரை அரண்மனை போலாகிறது. இன்னும் கூர்ந்து நோக்கினால், விகஸத்-பத்ர-ஸத்-சித்ர-பித்தி என்று பதத்தின் ஐந்து உட்சொற்களுமே இருபொருட் சொற்கள். விகஸத் என்றால் மலர்கிற என்றும் பரப்படைந்த என்றும் அர்த்தங்கள். ஸத் என்றால் இருக்கிற என்றும் நல்ல என்றும் அர்த்தங்கள். அரண்மனை பக்ஷத்தில், (பெரிய, நீண்ட) பரந்த தாள்களில் நல்ல சித்திரங்கள் கொண்ட சுவர்களை உடைய என்று அர்த்தமாகும். தாமரை பக்ஷத்தில், மலர்கிற இதழ்களில் இருக்கிற விசித்திரமான பிரிவுகள் கொண்ட என்று அர்த்தமாகும். இந்த பிரிவுகள் மலரும்போது மட்டுமே தெரிகின்றன. இரவில் கூம்பியிருக்கும்போது இதழ்களுக்கிடையே பிரிவுகள் இருப்பதில்லை. அதனால் இந்த அடைமொழிகள் பொருத்தமானவை.

4. அரண்மனையைச் சுற்றி அகழி இருப்பது போல் தாமரையைச் சுற்றிலும் நீர்ப்பரப்பு இருப்பது கண்கூடு. ஜலத்தின் நடுவில் தானே தாமரை இருக்கிறது ?

5. தாமரைப் பூவின் நடு மொட்டு தங்கநிறம் கொண்டது. லக்ஷ்மிக்கான ஸ்வர்ணபீடம் போல் இருக்கிறது.

இந்த காரணங்களால் தாமரையை நாங்கள் உமது அரண்மனையாகவே நினைக்கிறோம்.

அகிலத்தின் அரசிக்கே அனுகுணமாய் அழகியதாய்
அகழியிடை அரண்மனை போல் அரவிந்தம் அமைகிறதாம்.

20. அடியார் பெருமையை அறிவிக்கும் தாமரை:-

दुग्धाम्बुराशिदुहितस्तव सन्निधानात्
स्वर्णस्थितिर्भवति हन्त कुशेशयस्य ।
तत्संभवोऽप्यभवदम्ब हिरण्यगर्भः
धन्याः खलु त्वदनुबन्ध्यनुबन्धिनोऽपि ॥ २० ॥

துக்தா₄ம்புராஶிதுஹிதஸ்தவ ஸந்நிதா₄நாத்
ஸ்வர்ணஸ்தி₂திர்ப₄வதி ஹந்த குஶேஶயஸ்ய ।
தத்ஸம்ப₄வோப்யப₄வதம்ப ஹிரண்யகர்ப₄:
த₄ந்யா: க₂லு த்வதநுப₃ந்த்₄யநுப₃ந்தி₄நோபி ॥ 20 ॥

अम्ब - அன்னையே !

दुग्ध- अम्बुराशि - दुहितः - பாற்கடலின் பெண்ணே !

तव - உன்னுடைய

सन्निधानात् - ஸாந்நித்யத்தாலே

कुशेशयस्य - 1. தாமரைக்கு 2. புல்லில் படுக்கும் ஏழைக்கு

स्वर्णस्थितिः - 1. நல்ல ஜலத்தில் இருப்பு 2. தங்கத்தில் இருப்பது

भवति - ஏற்படுகிறது

हन्त - ஆச்சரியம்

तत् - संभवः अपि - அந்தத் தாமரையில் தோன்றியவனும்

हिरण्यगर्भः - 1. பிரம்மாவாக 2. ஹிரண்யத்தில் உள்ளவனாக

अभवत् - ஆனான்

त्वत् - अनुबन्धि - अनुबन्धिनः

अपि - உன்னைச் சேர்ந்தவரைச் சேர்ந்தவர்களும்

धन्याः - பாக்கியசாலிகள், பணக்காரர்கள்

खलु - அல்லவா ?

அம்மா ! பாற்கடலின் பெண்ணே ! நீ இருக்குமிடத்தில் உன்னைச் சேர்ந்தவர்கள் பணக்காரராகிறார்கள். இது மட்டுமில்லை. அவர்களது அடுத்த தலைமுறையினரும் பணக்காரர்களாகவே இருக்கிறார்கள். இதை நாம் தாமரையிலிருந்து தெரிந்துகொள்ளலாம். அது முதலில் குஶேஶயம் தான். குஶேஶயம் என்றால் தாமரை என்றும், புல்லில் படுப்பவன் (தரித்திரன்) என்றும், இரண்டு அர்த்தங்கள். ஆனால் நீ தாமரையில் அமர்ந்தாய். உன் ஸாந்நித்யப் பெருமையால் தாமரைக்கு ஸ்வர்ணஸ்திதி ஏற்பட்டது. ஸ்வர்ணம் என்றால் தங்கம். ஸ்வர்ணஸ் என்றால் ஸு - அர்ணஸ் எனப்பிரித்து நல்ல ஜலம் என்று பொருள். தாமரை நல்ல நீரில் இருப்பதால் அது ஸ்வர்ணஸ்திதி பெற்றது. இதற்குத் தங்கத்தில் நிலை என்ற அர்த்தமும் கிடைப்பதால் ஏழ்மை நிலை நீங்கியது என்னலாம்.

புல்லுக்கு மாறாகப் பொன் சேர்ந்தது அதற்கு. இந்தப் பணக்கார நிலை அடுத்த தலைமுறைக்கும் தொடர்ந்தது. எப்படியென்றால், தாமரையிலிருந்து தோன்றியவன் பிரம்மா. அவன் ஹிரண்யகர்ப்பன் ஆனான். தங்கத்தில் உள்ளவன் என்றோ தங்கத்தை உள்ளடக்கியவன் என்றோ எப்படிப் பொருள் கொண்டாலும் செல்வந்தன் என்று தேறுகிறது. லக்ஷ்மியே ! உன்னைச் சேர்ந்தவர்களைச் சேர்ந்தவர்களும் தந்யர்கள் அல்லவா ? இது தெரிந்த விஷயம் தானே ? இதையே தாமரையும் நிதர்சனமாகத் தெரிவிக்கிறது

செல்வத்தின் தெய்வத்தைச் சேர்ந்தாரும் செல்வந்தர்
சேர்ந்தாரைச் சேர்ந்தாரும் செல்வந்தர் ப்ரம்மா போல்

21. விஷ்ணுவும் விரும்பி வாழும் தாமரை:-

नवसारसवासमाचरन्त्याः तव साधर्म्यमिवाम्ब लब्धुकामः ।
पुरुषः परमस्सदा विधत्ते पुरमध्यस्थितपुण्डरीकवासम् ॥ २१ ॥

நவஸாரஸவாஸமாசரந்த்யா:
தவ ஸாதர்ம்யமிவாம்ப லப்து₄காம: ।
புருஷ: பரமஸ்ஸதா வித₄த்தே
புரமத்₄யஸ்தி₂தபுண்டரீகவாஸம் ॥ 21 ॥

अम्ब - அன்னையே !
नव - सारस - वासं - புதுத் தாமரையில் வசிப்பதை
आचरन्त्याः - பண்ணுகிற
तव - உன்னுடைய
साधर्म्यं - ஸாம்யத்தை
लब्धुकामः - அடைய விரும்புபவன்
इव - போல
परमः पुरुषः - பரமபுருஷனான திருமால்
पुर - मध्य - स्थित - पुण्डरीक - वासं - (ஜீவராசிகளின்) சரீர நடுவில் உள்ள புண்டரீகத்தில் வசிப்பதை
सदा - எப்பொழுதும்
विधत्ते - பண்ணுகிறார்.

அம்மா லக்ஷ்மியே ! நீ புதிய அன்றலர்ந்த தாமரையில் வசிக்கிறாய். உன் கணவனான திருமாலுக்கு உன்னைப் போல் ஆக விருப்பம் போல் இருக்கிறது. உன்னை அனுகரிக்கும் எண்ணம் இருக்கக்கூடும். ஹ்ருதய புண்டரீகத்தில் அவர் எப்போதும் வீற்றிருப்பது இதனுல் தானே ?

புரமத்யம் என்றும் புண்டரீகம் என்றும் ஸ்த என்றும் ஒரே வாக்கியத்தில் உள்ள வேதச் சொற்களைக் கையாளுகிறார் கவி. இதனால் வேதபங்க்தியை நினைவூட்டுகிறார். அவர் இதயத்தாமரையில் இருப்பதும், நீ தாமரையில் வசிப்பதும், இந்த இரண்டுமே வேதம் சொல்லும் உண்மைகள். தாயாரைப் பார்த்து, பெருமாள் அவள் போலச் செய்கிறார் என்பது மட்டும் கவியின் உத்ப்ரேக்ஷை. உலகில் மேன்மை அடைந்தவரைப் பலரும் அனுகரிப்பது ஸஹஜம் தானே ?

புதுத்தா மரைவாசம் புரியும் உனைப்போலே
புரத்தாமரை வாசம் புருஷன் புரிகின்றான்

22. வைகுண்டத்தை விஞ்சிய தாமரை:-

अस्ति ते हरिपुरन्ध्रि नीरज स्थानमित्युदितमास्पदद्वयम् ।
एकमाहुरिह तु त्रिपात्पदम् देवि षट्पदपदं परं पुनः ॥ २२ ॥

அஸ்தி தே ஹரிபுரந்த்₄ரி நீரஜ
ஸ்தா₂நமித்யுதிதமாஸ்பதத்₃வயம் ।
ஏகமாஹுரிஹ து த்ரிபாத்பதம்
தேவி ஷட்பதபதம் பரம் புந: ॥ 22 ॥

देवि- ஸ்ரீதேவியே !
हरिपुरन्ध्रि - ஹரியின் மஹிஷியே !
ते - உனக்கு
नीरजस्थानं - நீரஜஸ்தாநம் (1. தாமரை இடம், 2. ரஜஸ் இல்லாத இடம்)
इति - என்று
आस्पद - द्वयं - இடங்களின் இரட்டை (அதாவது, இரண்டு இடங்கள்)
उदितं - சொல்லப்பட்டதாய்
अस्ति - இருக்கிறது.
इह - இவ்விரண்டில்

एकं तु - ஒன்றையோ
त्रिपात्पदं - முக்கால் இடமாக
आहुः - சொல்கிறார்கள்.
परं पुनः - வேறொன்றையோ என்றால்
षट्पदपदं - 1. ஆறுகால் இடமாக 2 வண்டுகளின் இடமாக
आहुः - சொல்கிறார்கள்.

தேவியே ! நீரஜஸ்தாநம் என்று உனக்கு இரண்டு இடங்கள் இருப்பதாக வேதத்தில் ப்ரஸித்தம். ஒன்று ரஜஸ் இல்லாமல், ஸத்வம் மட்டும் உள்ளதான ஸ்ரீவைகுண்டம். இன்னொன்று நீரஜம் என்ற பெயர் கொண்ட தாமரை. இவ்விரண்டையும் ஒப்பிட்டு எது பெரியது என்று பார்ப்போம். வேதம் சொல்கிறது: ஸ்ரீவைகுண்டம் முக்கால் பங்கு என்று. அதாவது, இந்தப் பிரபஞ்சம் கால் பங்கு, அது முக்கால் பங்கு. அது முக்கால் அளவு இடம் சரி. தாமரை எப்படி ? தாமரை ஆறுகால் இடம் என்கிறோம். வண்டுகளுக்கு ஆறு கால்கள் இருப்பதால், அவற்றிற்கு ஷட்பதம் என்று பெயர். அவை தாமரையில் இருப்பதால் இது ஷட்பதஸ்தாநம். முக்கால் ஸ்தானத்தைப் போல் இரண்டு மடங்காகி விட்டதே ஆறுகால் ஸ்தானம். தாமரை தான் பெரியது. இல்லையா ? (இது வெறும் சமத்காரம் தான். வாஸ்தவத்தில் ஸ்ரீவைகுண்டம் முக்கால் பங்கு என்கையில் சொன்ன கால் வேறு, ஷட்பதத்தில் சொன்ன கால் வேறு.)

இன்னொரு வேடிக்கையும் தொனிக்கிறது. உனக்கு இரண்டு நீரஜஸ்தானங்கள் இருக்கின்றனவே, பெருமாளுக்கு ஒன்று தானே, என்று. நீரஜஸ்தாநம் என்கையில் தமஸ: பரஸ்தாத் என்கிற ச்ருதி விவக்ஷிதம்.

முக்கால் இடமாம் வைகுந்தம் அறுகால் இடமாம் அரவிந்தம்

23. <u>உள்வைத்ததால் உயர்வுபெற்ற தாமரை:-</u>

सुरादिजीवैरमृतैकनिष्ठैः चिराय यैरम्ब विभाव्यसेऽन्तः ।
आलोकमग्र्यं हरिरेषु तन्वन् आमोदमन्यादृशमादधाति ॥ २३ ॥

ஸுராதிஜீவைரம்ருதைகநிஷ்டை$_2$:
  சிராய யைரம்ப$_3$ விபா$_4$வ்யஸேந்த: ।
ஆலோகமக்ர்யம் ஹரிரேஷு தந்வந்
  ஆமோதம் அந்யாத்ருஶம் ஆததா$_4$தி ॥ 23 ॥

अम्ब - அம்மா !

यैः - எந்த

अमृत-एक - निष्ठैः - 1. மோக்ஷம் ஒன்றிலேயே குறிகொண்ட 2. ஜலத்தில் மட்டுமே நிலைகொண்ட

सुरादि - जीवैः - 1. தேவர்கள் முதலிய ஜீவர்களால் 2. நல்ல ரா எனத் தொடங்கிய ஜீவங்களால், அதாவது ராஜீவங்களால், தாமரைகளால்

अन्तः - 1. மனதில் 2. உள்ளே

चिराय - வெகுகாலம்

विभाव्यसे - 1. தியானிக்கப்படுகிறாயோ 2. நிலைநிறுத்தப்படுகிறாயோ

एषु - இவர்களிடம்

हरिः - 1. பெருமாள் 2. சூரியன்

अग्र्यं - 1. உயர்ந்த 2. முதலாவதான

अन्यादृशं - விலக்ஷணமான

आमोदं - 1. ஆனந்தத்தை 2. வாசனையை

आदधाति - ஏற்படுத்துகிறார்.

அன்னையே ! உன்னைத் தியானிப்பவரைக் கடாக்ஷித்து, பெருமாள் நற்கதி கொடுப்பார். இதைத் தாமரைகளுக்கும் உன் பக்தர்களுக்கும் சிலேடையால் விளக்கலாம். ஐந்து ஒப்புமைகள் அவர்களிடையே:

1. இருவருமே ஸுராதி ஜீவர்கள்.

2. இருவருமே அம்ருதைக நிஷ்டர்கள்.

3. இருவருமே உன்னைத் தமக்குள் வைத்துக்கொண்டவர்கள்.

4. இருவருமே ஹரியின் ஆலோகம் பெற்றவர்கள்.

5. அதன் பலனாக இருவருமே உயர்ந்த ஆமோதத்தை அடைபவர்கள்.

இந்த ஐந்தும் எப்படியென்றால், இருபொருள் துணையால்:

1. ஸுர - ஆதி என்று பிரித்தால் தேவர் முதலான ஜீவர்கள் என்றாகும். இதையே ஸு-ரா-ஆதி என்று பிரித்தால், நல்ல ரா என்ற எழுத்தை முதலில் கொண்ட ஜீவங்கள், அதாவது ராஜீவங்களாகும்.

2. அம்ருதம் என்றால் மோக்ஷம் என்றும் ஜலம் என்றும் இரண்டு அர்த்தங்கள். நிஷ்டை என்றால் நிலைபாடு. உன் பக்தர்கள் மோக்ஷம் தவிர வேறெதையும் வேண்டாதவர்கள். தாமரைகள் தண்ணீரில் மட்டுமே இருப்பவை. இருவருமே அம்ருதைக நிஷ்டர்கள்.

3. பக்தர்களும் உன்னைத் தம்முள் நீண்டகாலம் வைத்துத் தியானிக்கிறார்கள். தாமரைகளும் உன்னைத் தம்முள் வைக்கின்றன.

4. பக்தர்களுக்கு ஹரியின் ஆலோகம், பகவத்கடாக்ஷம், அர்க்யமாக, உயர்ந்ததாகக் கிடைக்கிறது. தாமரைகளுக்கும் ஹரியின் ஆலோகம், சூரியவெளிச்சம், அர்க்யமாக, விடிகாலையின் முதல் வெயிலாக, கிடைக்கிறது.

5. இந்த ஆலோகத்தால் பக்தர்களுக்கு விலக்ஷணமான ஆமோதம், அதாவது மோக்ஷாநந்தம் கிடைக்கிறது. தாமரைகளுக்கும் இந்த ஆலோகத்தால் விசேஷமான ஆமோதம், வாசனை உண்டாகிறது. சிலேடை நிறைந்து விட்டது. லக்ஷ்மிபக்தர்களைப் பெருமாள் கடாக்ஷித்து மோக்ஷாநந்தம் தருகிறார் என்றும் சொல்லியாயிற்று. லக்ஷ்மியை உள்ளே கொண்ட தாமரையைச் சூரியன் வெளிச்சம் தந்து வாசனை யூட்டுவது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயம், லக்ஷ்மிபக்தர்க்குப் பெருமான் மோக்ஷமளிப்பது என்பதும் ஊர்ஜிதமாயிற்று. ஒரே வாக்கியத்தால் சிலேடையாகச் சொன்னதால்.

ஆரேனும் நரர் உம்பர் அம்புஜையைத் தியானிப்பர்
ஆண்டவனின் அருள் பெறுவர் ஆனந்த நிலை அடைவர்.

24. நீருக்கு நிகரான தாமரை:-

अदो दधानं कमलाभिधानम् अम्भश्च तज्जं च तदेतदास्ताम् ।
आद्यस्य पुंसः पदमाहुराद्यम् त्वदीयवासं जननि द्वितीयम् ॥ २४ ॥

அதோ ததா$_4$நம் கமலாபி$_4$தா$_4$நம்
அம்ப$_4$ஶ்ச தஜ்ஜம் ச ததேததா$_3$ஸ்தாம் ।
ஆத்$_3$யஸ்ய பும்ஸ: பத$_3$ம் ஆஹுராத்யம்
த்வதீ$_3$யவாஸம் ஜநநி த்$_3$விதீயம் ॥ 24 ॥

जननि - தாயாரே !
अम्भः च - ஜலமும்
तज्जं च - அதில் உண்டான தாமரையும்
कमल - अभिधानं - கமலம் என்ற பெயரை
दधानं - தரிப்பதாய்
समं - ஸமம்.
अदः तत् - இந்த அது
आस्तां - இருக்கட்டும்
आद्यं - (இந்த இரண்டில்) முதலாவதை
आद्यस्य पुंसः - முதல் புருஷனுடைய (கடவுளுடைய)
पदं - இடமாக
आहुः - சொல்கிறார்கள்
द्वितीयं - இரண்டாவதை
त्वदीय-वासं - உன்னுடையதான இருப்பிடமாக
आहुः - சொல்கிறார்கள்.

தாயாரே ! உனக்கும் பெருமாளுக்கும் இப்படியும் ஒரு ஒற்றுமை உண்டு. நீயும் கமலத்தில் வசிக்கிறாய். அவரும் கமலத்தில் வசிக்கிறார். என்று எப்படியென்றால், கமலம் என்ற சொல்லுக்கு, தாமரை என்றும், ஜலம் என்றும் இரண்டு அர்த்தங்கள் உண்டு. (அவர் ஜலத்தில் வசிப்பது ப்ரசித்தம். நாராயணன் என்ற பெயரின் வ்யுத்பத்தியிலும் இதைக் காணலாம்.) இப்படியாக, தாமரைக்கும் ஜலத்துக்கும் இரண்டு ஸாத்ருச்யங்கள்:

1. இரண்டுக்கும் கமலம் என்று பெயர்.

2. இரண்டும் திவ்யதம்பதிகளில் ஒருவருக்கு வாசஸ்தானம்.

ஜலஜத்தின் பேர் கமலம் ஜலத்துக்கும் பேர் கமலம்
ஜலஜம் தான் ஜநநி இடம் ஜலம் அவளின் கணவன் இடம்

25. வழங்கும் வள்ளலான தாமரை:-

क्षमास्वर्णस्फूर्तिं सततमधिगम्यापि कमले
गुणादार्ढ्याच्छब्दं कमपि भजते नालमिति यत् ।
तदेवालङ्कारं नयति नलिनं स्पर्शनवशात्
तनोति ह्यौदार्यं तव जननि सान्निध्यमहिमा ॥ २५ ॥

க்ஷமாஸ்வர்ணஸ்பூ$_2$ர்திம் ஸததமதி$_4$க$_3$ம்யாபி கமலே
குணாதார்ட்$_4$யாச்ச$_2$ப்தம் கமபி ப$_4$ஜதே நாலமிதி யத் ।
ததேவாலங்காரம் நயதி நளிநம் ஸ்பர்ஶநவஶாத்
தநோதி ஹ்யௌதார்யம் தவ ஜநநி ஸாந்நித்$_4$யமஹிமா ॥ 25॥

जननि - தாயே !
कमले - லக்ஷ்மியே !
क्षमास्वर्णस्फूर्तिं - 1. நிலங்களில் நீரில் அசைந்தாடுதலை 2. பூமி, தங்கம், இவற்றின் மினுப்பை
सततं - எப்போதும்
अधिगम्य अपि - அடைந்தும்
गुणादार्ढ्यात् - 1. நூலின் தளர்ச்சியால் 2. பண்புகளில் உறுதியின்மையால்
नालं इति कमपि शब्दं - 1. நாளம் என்ற ஏதோ ஒரு பெயரை 2. போதாது என்ற ஒரு சொல்லை
यत् - எது
भजते - அடைகிறதோ
तत् एव - அதையே
अलङ्कारं - 1. அழகை 2. போதுமென்னலை
नलिनं - தாமரை
स्पर्शनवशात् - 1. தொடுவது காரணமாக 2. கொடுப்பது மூலமாக
नयति - அடைவிக்கிறது.
तव - உன்னுடைய
सान्निध्य - महिमा - இருப்பின் பெருமை
औदार्यं - வள்ளல் தன்மையை
तनोति हि - பரப்புமன்றோ ?

அன்னை லக்ஷ்மியே ! நீ இருக்குமிடத்தில் ஒளதார்யகுணம், வாரிவழங்கும் பண்பு, பரவி விடுமல்லவா ? நீ தாமரையில் இருக்கிறாய். உன் ஸந்நிதான மஹிமையால் தாமரைக்கு ஒளதார்யம் ஏற்பட்டிருக்கிறது. எவ்வளவு ஒளதார்யம் தெரியுமா ? எளிதில் திருப்தி அடையாதவன் கூடப் போதும் என்று சொல்லும் அளவுக்கு வழங்கும் குணம். அத்தகைய குணம் தாமரைக்கு இருப்பதைச் சிலேடையால் ரூதலிப்போம் இந்தத் தாமரைத்தண்டு நிலங்களில் உள்ள நீரில் அசைந்தாடுகிறது. இதை வடமொழியில் சொன்னால், க்ஷமாஸ அர்ணஸ் - ஸ்பூர்தி பெற்றது இந்தத் தண்டு. இதே சொற்றொடரை க்ஷமா-ஸ்வர்ண- ஸ்பூர்தி என்று பிரித்தால், நிலச்சொத்துடனும் பொன்சொத்துடனும் மினுங்குகிறது அது. இவ்வளவு இருந்தும் திருப்திப்படவில்லை. இது போதாது; இன்னும் வேண்டும் என்கிறது அந்தத் தாமரைத்தண்டு. போதாது என்பதற்கு வடசொல் ந அலம் என்பது. இந்த நாளம் என்பது தாமரைத்தண்டுக்குப் பெயரே ஆகிவிட்டது. அது போதாது என்ற சொல் கொண்டது. இப்படிப்பட்ட விடியாமூஞ்சியான தண்டுக்குத் தாமரை மலர் ஸ்பர்சநம் செய்கிறது. தொட்டுத் தொடர்பு கொள்கிறது என்பது வாஸ்தவமான அர்த்தம். தானம் பண்ணுகிறது என்பதும் அர்த்தம். இப்படி ஸ்பர்சநம் பண்ணினால் என்ன ஆகிறது என்றால், அழகு கூடுகிறது. தண்டில் மலர் சேர்ந்தால் அழகு தானே ? அதாவது அலங்காரம் ஆகிறது. அலம் - காரம் என்று பிரித்தால் போதுமாக்குதல் என்று அர்த்தம். எவ்வளவு இருந்தும் போதாதென்றிருந்த தண்டுக்கே போதுமாக்கும் அளவுக்கு ஸ்பர்சநம் பண்ணுகிறது தாமரை. எல்லாம் லக்ஷ்மி - ஸாந்நித்ய -மஹிமை.

ஸ்வர்ண, ஸ்பூர்தி, நாள ஸ்பர்சந, பதங்களில் சிலேடையால் கிடைத்த இந்தக் கருத்து மேலும் வலுப்படுகிறது குணம் என்ற சொல்லில் சிலேடையால்.

குணம் என்றால் நூல் என்றும் நற்பண்பு என்றும் இரண்டு அர்த்தங்கள். தாமரை நாளத்திற்குக் குணத்தில் உறுதி கிடையாது; அதாவது மரங்களின் தண்டுக்குள்ள உறுதி தாமரைத்தண்டுக்கு இல்லை; வெறும் நூல்நூலாக வரும்; இந்த நூல்களும் காற்றுக்கு வளையும் அளவுக்கு உறுதியற்று இருக்கும்; அதனால் தான் அது அசைந்தாடுகிறது. ஸ்பூர்தி என்றால் நடுக்கம் என்றும் மினுக்கு என்றும் இரண்டு அர்த்தங்கள். நாளத்திற்கு ஸ்பூர்தி (நடுக்கம்) எதனாலென்றால், அதன் நூல்களில் உறுதி இல்லாததால். இரண்டாவது அர்த்தத்தில் இது இவ்வாறு ஆகும்: குணங்களில் உறுதி அற்றவன் எவ்வளவு சொத்து இருந்தாலும் திருப்தி அடைவதில்லை. (தாமரை போன்ற) மஹாவதாந்யர்கள் மட்டுமே அவனைத் திருப்திப்படுத்தமுடியும். நீதிகள்: 1. இருப்பதில் மன நிறைவு அடையவேண்டும். சொத்துகள் இருப்பினும் போதாதென்ற மனநிலை கெட்டது.

2. கேட்பவன் போதும் என்னும் அளவுக்குக் கொடுப்பவனே வள்ளல்.

3. லக்ஷ்மி மிகவும் உதாரகுணம் கொண்டவள். உதாரை என்பது அவளுக்குப் பெயராகவே ஆகிவிட்டது. (வேதத்திலும் கூட). அவள் இருக்குமிடத்திலெல்லாம் அந்தக் குணம் இருக்கும். அதனால் தான் தாமரைக்கும் அந்தக் குணம்.

நாளத்திற்கும் அலங்காரம் நாளும் நல்கும் அளவுக்கு
நல்ல குணத்தை நளின மலர் நளினி இருப்பால் பெற்றுள்ளது

<u>26. அத்வைதம் அடைந்தவளின் அதிஷ்டாநமான தாமரை:-</u>

भगवति परब्रह्माद्वैतप्रसङ्गजुषस्तव
प्रथयति लसद्धर्मालीकत्वमत्र हि दर्शनम् ।
त्वमुचितमधिष्ठानं नालीकमाश्रयसे ततः
तव किल सदालोकस्सर्वोऽपि कल्पनगो रमे ॥ २६ ॥

ப₄க₃வதி பரப்ரஹ்மாத்வைதப்ரஸங்க ஜுஷஸ்தவ
ப்ரத₂யதி லஸத்த₄ர்மாளீகத்வமத்ர ஹி தர்ஶநம் ।
த்வமுசிதமதி₄ஷ்டா₂நம் நாளீகமாஶ்ரயஸே தத:
தவ கில ஸதர்லோகஸ்ஸர்வோபி கல்பநகோ ரமே ॥ 26 ॥

भगवति - பகவதியே !

रमे - லக்ஷ்மியே !

पर- ब्रह्म - अद्वैत - प्रसङ्ग - जुषः 1. பரம்பொருளொடு பிரியாமை என்னும் உயரிய சேர்க்கையை அடைந்துள்ள 2. பரப்பிரம்மம் பற்றிய அத்வைத ஸித்தாந்தத்தில் நல்ல பரிசயம் கொண்டுள்ள

तव - உன்னுடைய

दर्शनं - 1. கடாக்ஷமானது 2. ஸித்தாந்தமானது

अत्र - இதில்

लसत् - धर्माळीकत्वं - 1. விளங்கும் அறங்களின் வரிசையுடைமையை 2. தோன்றும் பண்புகளின் பொய்மையை

प्रथयति - 1. பரப்புகிறது

हि- அல்லவா ?

ततः - அதனாலே

त्वं - நீ

उचितं - 1. தகுந்ததான 2. தகுந்தபடி

नाळीकं - 1. தாமரையாகிற 2. பொய்யற்ற

अधिष्ठानं - 1. இருப்பிடத்தை 2. ஆச்ரயத்தை

आश्रयसे - 1. அடைகிறாய் 2. ஏற்கிறாய்.

तव - 1. உன்னுடைய 2. உனக்கு

सदालोकः - 1. நல்ல பார்வை 2. எப்பொழுதும் உலகம்

सर्वः अपि - எல்லாமே

कल्पनगः - 1. கற்பக மரம் 1. கற்பனையைச் சேர்ந்தது

किल - அல்லவா ?

ரமையே ! நீ எப்போதுமே பரம்பொருளைவிட்டுப் பிரிவதே கிடையாது. நீ அவரோடு கொண்டுள்ள உயர்ந்த சேர்த்தியை அத்வைதம், இரண்டற ஒன்றுதல் என்னலாம். இப்படி நீ அத்வைதபரிசயம் கொண்டவள். அத்வைத ஸித்தாந்தத்தில் மூன்று அடிப்படைக் கோட்பாடுகள் உள்ளன. அவையாவன:

1. கடவுளிடம் பண்புகள் ஏதும் உண்மையில் கிடையாது. பிரம்மம் நிர்விசேஷம்.

2. (அவித்யைக்கு) அதிஷ்டானமான பிரம்மம் ஸத்யம்.

3. எப்பொழுதும் உலகம் எல்லாம் கற்பனையே.

இந்த மூன்றும் அத்வைத தர்சனத்தில் (ஸித்தாந்தத்தில்) போல் உன் தர்சனத்திலும் (பார்வையிலும்) காண்கிறோம். 1. பண்புகள்அற்ற பரம்பொருள் தன்மையைத் தர்ம - அளீகத்வம் என்னலாம்.

இதே சொல்லை தர்ம - ஆளீகத்வம் என்று பிரித்தால் அறங்கள் வரிசைகளில் இருப்பதைக்குறிக்கும். லக்ஷ்மிகடாக்ஷத்தின் விளைவாகத் தருமங்கள் அடுக்கடுக்காக ஏற்படுவதால் தர்மாளீகத்வம் இங்குமுண்டு.

2. நீ தாமரையில் வசிக்கிறாய். தாமரைக்கு நாளீகம் என்று பெயர். நாளீகம் உனக்கு அதிஷ்டானம். நாளீகம் என்பதை ந - அளீகம் என்று பிரித்தால் பொய்யில்லை, உண்மை, என்று பொருள். அத்வைதத்தில் அதிஷ்டானமான பரம்பொருள் உண்மை.

3. எப்பொழுதும் உலகமெல்லாம் கற்பனை என்பதை வடமொழியில் சொன்னால் ஸதா லோக: ஸர்வ: கல்பந -க: என்று ஆகும். இதை ஸத் - ஆலோக: ஸர்வ: கல்ப - நக: என்று பிரித்தால், நல்ல பார்வை எல்லாமே கல்பவிருக்ஷம் என்று அர்த்தம். இது உன் விஷயத்தில் சரியாகிறது. உன் கடாக்ஷம் கற்பகத்தரு போல் எல்லாப் பயன்களையும் தருவதால்.

எப்படியோ அத்வைதக் கோட்பாடுகள் மூன்றும் உனக்கும் பொருந்திவிட்டன அல்லவா ? நீ பரம்பொருளுடன் அத்வைதச் சேர்த்தி கொண்டவள் என்பது பொருத்தமே.

அத்வைதப் பிரசங்கம் அதிஷ்டானம் நாளீகம்
அதிலே தர்மாளீகம் ஆ(!) லோகம் கல்பநகம்

(தொடரும்)

27. மூலப்ரக்ருதி போல் முக்கியமாம் தாமரை:-

यत्रोत्तमस्फुरणयन्त्रितचित्तवृत्तौ
नित्योल्लसद्रजसि राजति सारसत्वम्।
स्थानं प्रधानमिदमब्धिसुते यतस्ते
स्थाने तदत्र रमते महदादितत्वम्॥ २७॥

யத்ரோத்தமஸ்பு₂ரணயந்த்ரிதசித்தவ்ருத்தௌ
நித்யோல்லஸத்ரஜஸி ராஜதி ஸாரஸத்வம்।
ஸ்தா₂நம் ப்ரதா₄நமித₃மப்தி₄ஸுதே யதஸ்தே
ஸ்தா₂நே தத₃த்ர ரமதே மஹத₃தி₃தத்வம்॥ 27॥

अब्धिसुते - சமுத்திரத்தின் பெண்ணே !

उत्तमस्फुरण - यन्त्रित - चित्त - वृत्तौ - 1. உத்தமமாக மலர்வதால் கட்டியிழுத்த (காண்போரின்) மனநிலையை உடையதும் 2. எழும் தமஸ்ஸின் துடிப்பால் (ஸம்ஸாரத்தில்) கட்டப்பட்ட (ஜீவர்களின்) மனச்செயல்களை உடையதும்

नित्य - उल्लसत् - रजसि - எப்பொழுதும் விளங்கும் 1. தூளை உடையதும் 2. ரஜோகுணத்தை உடையதுமான

यत्र- எதில் (1. தாமரையில், 2. பிரகிருதியில்)

सारसत्वं - 1. தாமரைத்தன்மை 2. ஸாரமான ஸத்வகுணம்

राजति - விளங்குகிறதோ

इदं - இது

यतः - எதனால்

ते - உன்

प्रधानं- 1. முக்கியமான 2. ப்ரதாநம் என்ற பெயர் கொண்ட

स्थानं - இடமோ

तत् - ஆகையால்

अत्र - இதில்

महदादितत्वं - 1. பெரிய முதல் தத்துவமாகிய கடவுள் 2. மஹத்து முதலிய தத்துவம்

रमते - மகிழ்கிறது.

स्थाने - யுக்தமே.

கடலின் பெண்ணே ! ப்ரதாநம் என்றும் மூலப்ரக்ருதி என்றும் மாயை என்றும் பல பெயர்களால் ஒரு தத்துவத்தைச் சொல்கிறார்களே, அதை ஒத்தது தாமரை. எப்படியென்று பார்க்க, முதலில் இந்தப் ப்ரக்ருதி குறித்து நான்கு முக்கிய உண்மைகள்:

1. ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களாலானது இது.

2. இந்த ஸம்ஸாரத்தில் எல்லா ஜீவராசிகளின் எண்ணங்களும் செயல்களும் இதற்கு வசமானவை.

3. லக்ஷ்மியைச் சேர்ந்தது இது. (லக்ஷ்மி அஷ்டோத்தரத்தில் முதல் திருநாமமே ப்ரக்ருதி என்பதுதான்.)

4. மஹத்து முதலிய தத்துவங்கள் இதிலே (தோன்றியும் லயித்தும்) ரமிப்பவை.

இந்த நான்கும் தாமரைக்கும் பொருந்துவது எப்படியென்றால்:

1. தாமரைக்கு ஸாரஸத்வமும், ரஜஸ்ஸுூம், உத்தமஸ்புரணமும் இருப்பதால், ஸத்வரஜஸ்தமஸ்ஸுூகள் உள்ளதாகக் கொள்ளலாம். ஸாரஸத்வம் என்றால், ஸாரமான ஸத்வத்தைச் சொல்லவில்லை; ஸரஸ்ஸைச் சேர்ந்தமையைச் சொல்கிறோம் என்பது கிடக்கட்டும். ரஜஸ் என்றால், ரஜோகுணத்தைச் சொல்லவில்லை மகரந்தப் பொடிகளைச் சொல்கிறோம் என்பது கிடக்கட்டும். உத்தமஸ்புரணம் என்றால், தமோகுணம் ஸ்புரிப்பதைச் சொல்லவில்லை; உத்தமமாக மலர்வதைச் சொல்கிறோம் என்பதும் கிடக்கட்டும். மூலப்ரக்ருதிக்கு ஸார - ஸத்வமும், ரஜஸ்ஸுூம், உத்-தமஸ்- ஸ்புரணமும் இருக்க, அதே மூன்று பதங்களால் சொல்லுமவை தாமரையிலும் உள்ளனவே ?

2. காண்போர் மனதைக் கவரும் அழகுடைய தாமரை யந்த்ரித சித்தவ்ருத்தி ஆகிறது. சித்தவ்ருத்திக்கு மனநிலை என்று அர்த்தம் கொள்வது போல் எண்ணமும் செயலும் என்று அர்த்தம் கொண்டால் ப்ரக்ருதியும் யந்த்ரிதசித்தவ்ருத்தி தான்.

3. லக்ஷ்மியின் ப்ரதானமான இடம் தாமரை. லக்ஷ்மிக்கு ப்ரதானம் என்கிற இடம் ப்ரக்ருதி.

4. பெரியதும் ஆதியானதுமான கடவுள் என்கிற தத்துவம் தாமரையில் மகிழ்வதாக ''யத்ர பத்மவநாதி ச தத்ர ஸந்நிஹிதோ ஹரி:'' என்று புராணப்பிரசித்தி. மஹத், அஹங்காரம், முதலிய தத்வங்கள் ப்ரக்ருதியில். ஆக, மஹதாதிதத்வம் ரமிப்பது இரண்டுக்கும் பொது.

இந்த நாலு ஒப்புமைகளால், மூலப்ரக்ருதிக்குச் சமமானது தாமரை.

முதல் மூன்றால் ஸாம்யம் ஸித்தித்தபொழுது, பெருமாள் (அல்லது மஹத் முதலிய தத்துவம்) இதில் ரமிப்பது யுக்தம் தான். இதனால் நாம் அறியும் சில உண்மைகள்:

1. தாயார் இருக்குமிடத்தில் பெருமாள் ரமிப்பார்.

2. ப்ரக்ருதிமண்டலம் நம்மை ஆகர்ஷிக்கும், கட்டும்.

3. ப்ரக்ருதி வடிவிலும் இருப்பவள் லக்ஷ்மி.

4. ப்ரக்ருதியிலிருந்து தான் உலகப் படைப்பு.

ரஜஸ் இதில் மிளிர்வதாலும் ரமைக்கிடம் ஆனதாலும்
ரமித்திடும் மஹத்தினாலும் ரசிக்கலாம் ப்ரக்ருதிபத்மம்.
கவர்ச்சியால் மனதை அள்ளும் கமலைக்கே உரிமை உள்ளும்
களிப்புகொள் மஹத்தைக் கொள்ளும் கமலமே ப்ரக்ருதி போலும்.

28. சிங்காசனமாய்ச் சிறக்கும் தாமரை:-

सिंहासनस्थितिजुषस्तव वासयोग्यम्
नित्यं भवेयमिति निश्चयमेत्य नूनम् ।
केसर्यभूत्सरसिजं नरसिंहकान्ते
तद्वेषमेष तनुते तत एव पद्मी ॥ २८ ॥

ஸிம்ஹாஸநஸ்திதிஜுஷஸ்தவ வாஸயோக்யம்
நித்யம் ப₄வேயமிதி நிஸ்சயமேத்ய நூநம் ।
கேஸர்யபூ₄த் ஸரஸிஜம் நரஸிம்ஹகாந்தே
தத்வேஷம் ஏஷ தநுதே தத ஏவ பத்மீ ॥ 28 ॥

नरसिंहकान्ते - நரஸிம்மனின் மனைவியெ !

सिंहासन - स्थिति - जुषः - ஸிம்மாஸனத்தில் அமர்தலை அடைந்த

तव - உன்னுடைய

वासयोग्यं - வாஸத்திற்குத் தகுந்ததாக

नित्यं - எப்போதும்

भवेयं - ஆவேனாக

इति - என்று

निश्चयं - தீர்மானத்தை

एत्य - அடைந்து

सरसिजं - தாமரையானது

केसरि(केसरी) - 1. கேஸரங்கள், தாதுகள், கொண்டதாக 2. சிங்கமாக

अभूत् - ஆயிற்று

नूनं - நிச்சயம்

तत एव - அதனால் தான்

एषः - இந்த

पद्मी - 1. யானை 2. ஸ்ரீநிவாஸன்

तद्वेषं - 1. அதோடு பகையை 2. அந்த வேஷத்தை

तनुते - பண்ணுகிறது, பண்ணுகிறான்.

தாமரையில் ஏன் பூந்தாதுக்கள் உள்ளன ? யானை ஏன் தாமரைகளை துவம்சம் பண்ணுகிறது ? பெருமாள் ஏன் சிங்கவேஷம் (நரசிம்மராக) போட்டார் ? இந்த மூன்று கேள்விகளுக்கும் விடையாக சிலேடை கலந்த உத்ப்ரேக்ஷயுடன் ஒரே பதில் இதோ:

தாமரை லக்ஷ்மிக்காகக் கேஸரியானது தான் இந்த மூன்றுக்குமே காரணம். கேஸரி என்றால் சிங்கம் என்றும் பூந்தாதுக்கள் கொண்டது என்றும் இரண்டு அர்த்தங்கள். தாமரையில் மகரந்தத் தாதுக்கள் இருப்பதால் அது கேஸரியானது வாஸ்தவம். தாமரை சிங்கமாகி விட்டதாகச் சிலேடையால் கிடைத்த பொருள். தாமரை ஏன் சிங்கமாகவேண்டும் ? என்று இதற்கு மேல் ஒரு கேள்வி. அதற்கு உத்ப்ரேக்ஷயாகப் பதில். தாமரை லக்ஷ்மிக்கு

ஆஸனம். அவள் சிங்காஸனத்திற்கு உரியவள். அதனால் தானும் சிங்கமாவது நல்லது என்று தாமரை முடிவு செய்ததாம். அதனால் கேஸரியாயிற்றாம். இப்படிச் சிங்கமானதால் தாமரை மேல் யானைக்குப் பகை ஏற்பட்டதாம். சிங்கத்தின் சத்துரு அல்லவா யானை ? அதனால் தாமரைக் காடுகளில் புகுந்து அழித்து துவம்சம் பண்ணுகிறதாம். இதற்கிடையே தாமரை போலவே பெருமாளும் யோசித்தாராம், லக்ஷ்மியின் ஆசனம் சிங்காசனமாக இருப்பது தானே உசிதம் ? ஸ்ரீநிவாஸனான நன்னிடத்திலும் லக்ஷ்மி வசிப்பதால் தானும் லக்ஷ்மி ஆசனமானதால், தானும் சிங்கமாக வேண்டுமே என்று. அதனால் தான் போலும் நரசிங்காவதாரம்.

ஏன் கமலம் தாதுடைத்து ? ஏன் யானை பகை அதற்கு ?
ஏன் பெருமாள் சிங்க உரு ? எல்லாம் உன் ஆசனமாய்

29. தரித்திரம் நீங்கிய தனிகத் தாமரை:-

अब्जं विधौ द्विषति देव्यमृतैकवृत्ति
कामेन हन्त यदनीयत मार्गणत्वम् ।
तस्य स्वतोऽम्बरमणिस्फुटवस्ववाप्तिः
उल्लासहेतुरभवत्तव सन्निधानात् ॥ २९ ॥

அப்ஜம் விதௌ₄ த்₃விஷதி தேவ்யம்ருதைகவ்ருத்தி
காமேந ஹந்த யதநீயத மார்கணத்வம் ।
தஸ்ய ஸ்வதோம்பரமணிஸ்பு₂டவஸ்வவாப்தி:
உல்லாஸஹேது ரப₄வத் தவ ஸந்நிதா₄நாத் ॥ 29 ॥

देवि - ஸ்ரீதேவியே !
यत् - யாதொரு
अब्जं - தாமரையானது
विधौ - சந்திரன்
द्विषति - துவேஷிக்கும்போது
अमृत -एक - वृत्ति - ஜலத்தில் மட்டும் உள்ளதாய்
कामेन - மன்மதனால்
मार्गणत्वं - அம்புத்தன்மையை
अनीयत - அடைவிக்கப்பட்டதோ

तस्य - அந்தத்தாமரைக்கு
तव - உனது
सन्निधानात् - ஸாந்நித்யத்தால்
स्वतः - தானாகவே
अम्बर - मणि - स्फुट - वसु - अवाप्तिः - வான்மணியின் (சூரியனின்) பளிச்சிடும் கிரண லாபம்
उल्लास - हेतुः - மலர்ச்சிக்குக் காரணமாக
अभवत् - ஆயிற்று
हन्त - ஆச்சரியம்
विधौ - விதியானது
द्विपति - ப்ரதிகூலிக்கும்போது
अमृत - एक - वृत्ति - ஜலம் மட்டும் உணவாய்
यत् - எது
कामेन - ஆசை காரணமாக
मार्गणत्वं - பிச்சைக்கார நிலையை
अनीयत - அடைவிக்கப்பட்டதோ
तस्य- அதற்கு
तव - உன்
सत् निधानात् - இருக்கிற புதையலால்
स्वतः - சொத்து மூலமாக
अम्बर - मणि -स्फुट - वसु - अवाप्तिः - வஸ்த்ரம், ரத்தினம், ஒளிரும் பணம், இவை கிடைப்பது
उल्लास हेतुः - மகிழ்ச்சிக்குக் காரணமாக
अभवत् - ஆயிற்று
हन्त - ஆச்சரியம்.
विधौ - தெய்வம்
द्विपति - அனுகூலமாகாதபோது
अमृत - एक - वृत्ति - कामेन - மோக்ஷத்தில் மட்டும் இருக்க விரும்புபவனால்
यत् - எதனால்
मार्गणत्वं - தேடும் தன்மை
अनीयत - அடைவிக்கப்பட்டதோ
सत् निधानात् - அந்தப் பரப்பிரம்மத்தின் வைத்தலால்
तस्य - அந்த முமுக்ஷுவுக்கு
अम्बर - मणि - स्फुट - वसु - अवाप्तिः - சூரியனைப் பிளக்க அக்நியையடைவது
स्वतः - இயற்கையாகவே
तव - உன்னுடைய
उल्लासहेतुः - முகோல்லாஸத்திற்குக் காரணமாக
अभवत् - ஆயிற்று.
हन्त - ஆச்சரியம்.

தாமரைப்பூ, புதையல் பெற்ற பிச்சைக்காரன், யோகப்ரஷ்டனாகி பிறகு ஸித்தி பெற்றவன், என்கிற மூவருக்கும் ஒருசேரச் சிலேடை. விதௌ, மார்கணம், அம்ருதம், வ்ருத்தி, வஸு, ஸந்நிதானம், என்ற பதங்களில்

ஒவ்வொன்றுக்கும் மூன்று அர்த்தங்கள். காமம், அம்பரம், ஸ்புடம், உல்லாஸம், ஸ்வம், என்ற பதங்களுக்கு இரண்டிரண்டு அர்த்தங்கள். மூவருக்கும் உள்ள ஸாத்ருச்யங்களைப் பார்ப்போம்:

1. தாமரைக்கு விது (சந்திரன்) பகைவன். பிச்சைக்காரனுக்கு விதி எதிரி. யோகப்ரஷ்டனுக்குத் தெய்வானுகூலம் இல்லை. ஆக மூவருக்குமே விதௌ த்விஷதி என்னலாம்.

2. தாமரை அம்ருதத்தில் (ஜலத்தில்) மட்டும் இருக்கும். பிச்சைக்காரன் ஜலத்தால் மட்டுமே உயிர் வாழ்கிறான், வேறு உணவு இல்லாததால். யோகப்ரஷ்டன் அம்ருதத்தை (மோக்ஷத்தை) மட்டுமே நாடுகிறான். ஆக மூவருமே அம்ருதைகவ்ருத்திகள்.

3. தாமரை (காமனால்) மன்மதனால் பாணமாக்கப் பட்டது. ஏழை (காமத்தால்) ஆசையால் பிச்சைக்காரன் ஆகிறான். மோக்ஷத்தில் ஆசையால் கடவுளைத் தேடுகிறான் யோகி. ஆக மூவருமே காமமூலம் மார்கணம் செய்பவர். மார்கணம் என்றால் பாணம் என்றும், பிச்சையெடுத்தல் என்றும், தேடல் - விசாரணை என்றும் மூன்று அர்த்தங்கள்.

4. தாமரையில் லக்ஷ்மியின் ஸந்நிதாநம் (ஸாந்நித்யம்). பிச்சைக்காரனுக்குக் கிடைத்தது ஸத் - நிதாநம் (இருக்கும் புதையல்). யோகிக்கு ஸத் - நிதாநம் (பரம்பொருளை மனதில் நிலைநிறுத்தல்). ஆக மூவர்க்குமே ஸந்நிதாநம்.

5. தாமரைக்கு அம்பரமணியின் (சூரியனின்) ஸ்புடவஸுவால் (ஒளிரும் கதிரால்) உல்லாஸம் (மலர்ச்சி). புதையல் எடுத்தவனுக்கு அம்பரமும் மணியும் பணமும் பெற்றதால் உல்லாஸம் (மகிழ்ச்சி). யோகிக்குச் சூரியமண்டலத்தைக் கீண்டு போகும் அர்ச்சிராதிகதியால் உல்லாஸம் (மோக்ஷாநந்தம்). அதனால் தெய்வத்திற்கும் முகோல்லாஸம். ஆக மூவருக்குமே அம்பரமணி ஸ்புடவஸு பெற்றதால் உல்லாஸம். இந்த ஐந்து காரணங்களால் தாமரை புதையல் பெற்ற ஏழையையும், யோகியையும் ஒத்திருக்கிறது. இதில் சில ஆச்சரியங்கள்: தாமரை தானிருந்த இடத்தை விட்டு நகராமலே இருந்தும், (உன் உடன் பிறந்த) சந்திரனைப் பகைத்துக்கொண்ட போதும், உன் இருப்பால் தானாகவே உல்லாஸம் பெறுவது ஆச்சரியம்.

புதையல் பெற்றவன் இத்தனை நாட்கள் ஜலமாத்ரஜீவியாயிருந்த நிலைக்கு எதிர்மாறாக,

துணிமணிகள், நகைநட்டுகள், சொத்துசுகங்கள், என்று ஸ்புடமாக, பலரறிய, உல்லாஸம் காண்பதும் ஆச்சரியம். யோகி கடவுளை (தன்னுள்) வைத்தவன் அம்ருதைகவ்ருத்தியாய் இருந்துகொண்டே உல்லாஸம் கொள்வதும் ஆச்சரியம்.

இந்த மூவருக்குமே உல்லாஸஹேதுவாக அம்பரமணி என்ற ஒன்றே ஆனதும், அதற்குக்காரணமாக ஸந்நிதாநம் என்ற ஒன்றே ஆனதும் ஆச்சரியம். (அர்த்தங்கள் வெவ்வேறு என்பது கிடக்கட்டும்). பிச்சைக்காரன் பக்ஷத்தில் அம்ருதைகவ்ருத்திகாமேந என்பதற்கு இன்னொரு அர்த்தமும் பொருந்தும். அம்ருதம் என்பது ம்ருதத்திற்கு எதிர்ப்பதம். வ்ருத்தி என்பது இருப்பு. சாகக்கூடாது, உயிர்வாழவேண்டும் என்ற ஒரே விருப்பம் கொண்டவன் அவன்.

இந்த ச்லோகத்தில் நாம் அறியும் உண்மைகள்:

1. லக்ஷ்மியின் ஸாந்நித்யத்தால் விதியையும் வெல்லலாம்.

2. அவள் அருளால் உல்லாஸம் தானே (ஸ்வத:) வரும்.

3. மோக்ஷம் ஒன்றே குறியாய் இருப்பவன் அக்நி முதலாகச் சூரிய மண்டலத்தைக் கீண்டு செல்லும் அர்ச்சிராதிகதியை அடைவான்.

4. மன்மதனின் ஐந்து பாணங்களில் ஒன்று தாமரை.

5. நாம் மோக்ஷம் அடைவதால் உல்லாஸம் நமக்கு மட்டும் என்றில்லை. திவ்யதம்பதிகளுக்கும்தான்.

6. மோக்ஷம் தான் வஸு, செல்வம். அதை அடைந்தால் தான் நிலையான உல்லாஸம்.

7. யோகிகள் விதியால் வழுவினால் திருவுடை நல்லோர் வீட்டில் பிறப்பர். (இப்படி கீதாவாக்யமுண்டு.)

8. யோகிகள் இறைவனைத்தேடுபவர், ப்ரம்மவிசாரம் செய்பவர், என்பதை மார்கணபதத்தாலும், ஸத் என்ற பரம்பொருளை உள்ளத்திருத்துபவர் என்பதை ஸந்நிதாந பதத்தாலும், ''தேரார் நிறை கதிரோன் மண்டலத்தைக் கீண்டு புக்கு ஆராவமுதம் அங்கெய்தி'' என்பதை அம்பரமணிஸ்புட பதத்தாலும் அம்ருதபதத்தாலும் சொல்கிறார்.

காமன் கையில் கணையாகும் கமலம் யோகிக்கிணையாகும்.
கடவுட்கிடமாம் நிலை ஏகும் களிப்பில் கதிரோன் துணையாகும்.

30. வைகறையில் வைதாளிகரை வைத்துள்ள தாமரை:-

उत्फुल्लवारिरुहतल्लजकेलिगेहे सर्वेश्वरस्य दयितां शयितां ननु त्वाम्।
वैतालिका इव गृहीतसुजातगीताः प्रातश्शनैर्मधुकराः प्रतिबोधयन्ति ॥३०॥

உத்பு$_4$ல்ல வாரிருஹ தல்லஜ கேளி கேஹே
ஸர்வேஶ்வரஸ்ய த$_3$யிதாம் ஶயிதாம் நநு த்வாம்।
வைதாளிகா இவ க்ருஹீத ஸுஜாத கீதா:
ப்ராதஶ் ஶநைர் மது$_4$கரா: ப்ரதிபோத$_4$யந்தி ॥ 30 ॥

उत्फुल्ल-वारिरुह-तल्लज-केलि-गेहे- மலர்ந்த பத்மச்ரேஷ்டம் என்னும் லீலாகிருகத்தில்
शयितां- படுத்திருக்கிறவளும்
सर्वेश्वरस्य- ஸர்வேச்வரனான பெருமாளின்
दयितां - அன்பு மனைவியுமான
त्वां- உன்னை
वैतालिकाः इव- வந்திவைதாளிகர் போல
गृहीत सुजातगीताः - நல்ல பாடல்களைக் கொண்டு
प्रातः- காலையில்
शनैः- மெள்ள
मधुकराः- வண்டுகள்
प्रतिबोधयन्ति - எழுப்புகின்றன
ननु- அல்லவா ?

லக்ஷ்மிக்குத் தாமரை கேளிக்ருஹம், லீலாபவனம், விளையாட்டில்லம். அதில் இரவில் படுப்பாளாம் லக்ஷ்மி. காலையில் அவளைத் துயிலெழுப்ப வண்டுகள் வரும். அரசிகளை வைதாளிகர்கள் உதயகீதம் பாடி எழுப்புவது வழக்கம். தாமரையிலும் உண்டு அந்த வழக்கம். வண்டுகள் பாடுகின்றன. வைதாளிகர் போலவே காலையில் பாடுதல், மெள்ளப் பாடுதல், குரலெடுத்துப் பாடுதல், நல்லமுறையில் பாடுதல், என்ற நான்கும் கொண்டு திருப்பள்ளியெழுச்சி பாடுகின்றன வண்டுகள்.

எல்லா ச்லோகங்களிலும் லக்ஷ்மியை அழைக்கும் விளிச்சொல் உண்டே, இந்த ச்லோகத்தில் எங்கே எனத் தேடுவோர் முதல் பாதத்தை நோக்குக. மலர்ந்த உயர்ந்த

தாமரையைக் கேளிகிருஹமாகக் கொண்டவளே ! என்ற விளியாகவும் பொருள் கொள்ளலாம். மற்ற அரசிகளுக்கும் இது பொருந்த வேண்டும் எனக் கருதினால், மலர்ந்த தாமரைகளால் அலங்கரிக்கப்பட்ட லீலாகிருஹத்தில் என்றும் பொருள்தரும் இந்தப் பதம். மற்ற சிற்றரசிகளுக்கே வைதாளிகர் இருக்கையில் ஸர்வேச்வரனின் மனைவிக்குக் கேட்பானேன் ? தாமரை வீட்டில் ராஜோபசாரங்களில் குறைவில்லை.

பதுமத்தில் படுப்பவளைப் பரமனது பத்தினியைப்
பள்ளியெழுப்பப் பாடும் பாடகராம் வண்டினங்கள்.

31. செல்வம் செழிக்கும் தாமரை:-

सहंसकासार बहूर्मिकोज्वला पयोजराजिः प्रतिपन्नकर्णिका ।
सहस्रवस्वाप्तित एधते रमे श्रियश्श्रयन्ते सकलास्त्वदाश्रयम् ॥ ३१ ॥

ஸஹம்ஸகாஸார ப₃ஹூர்மிகோஜ்வலா
 பயோஜராஜி: ப்ரதிபந்நகர்ணிகா ।
ஸஹஸ்ரவஸ்வாப்தித ஏத₄தே ரமே
 ஶ்ரியஶ்ஶ்ரயந்தே ஸகலாஸ் த்வத₃ாஶ்ரயம் ॥ 31 ॥

रमे- லக்ஷ்மியே !
पयोजराजिः - தாமரைவரிசை
सहस्र - वसु - आप्तितः - ஆயிரம் கிரணங்கள் பெற்றதால்
एधते - விளங்குகிறது.
पयोजराजिः - தாமரை ராஜி என்ற பெண்
स - हंसका - சிலம்புடையவளாய்
सार - बहु - ऊर्मिका - நல்ல பல மோதிரங்கள் உடையவளாய்
उज्वला - ஒளிர்பவளாய்
प्रतिपन्न-कर्णिका - காதணி அடைந்தவளாய்
सहस्र-वसु-आप्तितः - ஆயிரக்கணக்கில் பணம் பெற்றதால்
एधते - விளங்குகிறாள்
त्वदाश्रयं - உன்னை ஆச்ரயித்தவனை
सकलाः- எல்லா
श्रियः - செல்வங்களும்
श्रयन्ते - சேர்கின்றன.

ரமையே ! உன்னைச் சேர்ந்தவரை எல்லா செல்வங்களும் சென்றடையும். உன்னை ஆச்ரயித்த தாமரையிலிருந்து இது தெரிகிறது. இந்தப் பயோஜராஜி என்ற பெண்ணுக்கு எவ்வளவு செல்வங்கள் ? பெரிய தனவந்தனை (ஸஹஸ்ரவஸுவை) அடைந்தாள். காலில் தண்டை, கைவிரல்களில் மோதிரங்கள், காதில தோடு, என நகைகள் ஏராளம். மிளிர்ச்சியும் வளர்ச்சியும் உட்பட எல்லாச் செல்வங்களும் அவளுக்கு உண்டு. தாமரைக்கு எப்படி நகைநட்டுகளும் பணக்காரக் கணவனும் ? என்றால் சிலேடையால் ஸமர்த்திக்கிறோம். ஹம்ஸகாஸார என்பதை ஹம்ஸ-காஸார என்று பிரித்தால் அன்னப்பொய்கை என்றாகி தாமரை இருக்கும் இடமாகும். அதையே ஹம்ஸகா-ஸார என்று பிரித்தால் காற்சிலம்பினள் ஸாரமான என்று அர்த்தமாகும். ஊர்மிகா என்ற சொல்லுக்கு மோதிரம் என்று சிற்றலை என்றும் இரண்டு அர்த்தங்கள். ஊர்மி-க என்று பிரித்தால் அலையுள்ள நீர் என்றுமாகும். தாமரை ஊர்மிகத்தில் ஒளிரும். பணக்காரி ஊர்மிகத்தால் ஒளிர்வாள். எல்லாச்செல்வமும் கொண்டவள் நகைகளும் ஒளியும் கொண்டவள். எப்படிப் பார்த்தாலும் ஊர்மிகோஜ்வலத் தன்மை இருவருக்கும் பொது. மேலும், கர்ணிகா என்ற சொல்லுக்கு காதில் அணியும் நகை என்றும் பூவில் உள்ள விதைப்பை என்றும் இரண்டு அர்த்தங்கள். வஸு என்ற பதத்திற்குப் பணம் என்றும் கிரணம் என்றும் இரண்டு அர்த்தங்கள் இருப்பதால், ஸஹஸ்ரவஸு என்ற சொல் கதிராயிரமிரவி எனப்படும் சூரியனையும், ஆயிரக்கணக்கில் பணம் படைத்தவனையும் குறிக்கும். கதிர்க்கற்றையையும் பெரும்பணத்தையும் கூட அர்த்தங்களாகக் கொள்ளலாம். தாமரை சூரியகிரணம் பட்டு மலர்வதாலும், பணக்காரி பெரும்பணம் பெற்றோ, செல்வந்தனைச் சேர்ந்தோ விளங்குவதாலும் இருவருமே ஸஹஸ்ர வஸுவால் வளர்பவராம். இவ்வாறாக, தாமரைக்கும் பணக்காரிக்கும் நான்கு ஸாம்யங்கள்:

1. இருவருமே ஹம்ஸகாஸாரத்தவர்.

2. இருவருமே ஊர்மிகத்தோடு ஜ்வலிப்பவர்.

3. இருவருமே கர்ணிகை கொண்டவர்.

4. இருவருமே ஸஹஸ்ரவஸுவால் விருத்தி அடைபவர்.

தாமரை-ராஜி பணக்காரியைப் பல வகைகளில் ஒத்திருக்கிறது. ரமையே! உன்னைச்சேர்ந்தவரை எல்லாச் செல்வங்களும் வந்து சேரும். பொருட்செல்வம், காந்தி, செல்வந்தரிடம் வாழ்க்கைப்படும் பேறு என்று சொன்ன மூன்றும் நிதர்சனங்கள். மற்றுமுள்ள எல்லாச் செல்வங்களும் சேரும். இந்த ச்லோகத்திலிருந்து நாம் அறிவன:

1. செல்வங்கள் பல உண்டு. அவற்றுள் பொருட்செல்வமும் ஒன்று.

2. எல்லாச் செல்வங்களும் கிடைக்கும் லக்ஷ்மிபக்தர்களுக்கு.

3. பணக்காரக் கணவனைப் பெற விரும்பும் கன்னியர் லக்ஷ்மியை ஆச்ரயிக்கவேண்டும்.

4. ஆபரணங்கள் அழகைக் கூட்டுபவை. அந்தஸ்தையும் காட்டுபவை.

ஆசனமான மலருக்கும் ஆபரணங்கள் பல இருக்கும்.
ஆயிரக்கணக்கில் பணமிருக்கும் ஆச்ரயித்தால் உனை அனைவர்க்கும்.

32. ஆதிசேஷன் போல் ஆகும் தாமரை:-

स ते निवासश्शयनीकृतो वा नाथेन नित्यं नयनीकृतो वा।
फणैस्सहस्रेण वृतो दलैर्वा शेते बिले वा कमले कुशे वा ॥ ३२ ॥

ஸ தே நிவாஸஸ் ஶயநீக்ருதோ வா
நாதேந நித்யம் நயநீக்ருதோ வா।
ப₂ணைஸ் ஸஹஸ்ரேண வ்ருதோ தளைர்வா
ஶேதே பிலே வா கமலே குஶே வா ॥ 32 ॥

कमले- தாமரையாளே !
ते - உன்னுடைய
सः அத்தகைய
निवासः - இருப்பிடமானது
नाथेन - பெருமாளால்
नित्यं - எப்பொழுதும்
शयनीकृतो वा -
படுக்கையாக்கப்பட்டதோ
नयनीकृतो वा - அல்லது
கண்ணாக்கப்பட்டதோ
सहस्रेण - ஆயிரமான
फणीः- படமெடுக்கும்
தலைகளாலோ
दलैः वा - இதழ்களாலோ
वृतः - சூழப்பட்டது.
बिले वा- பொந்திலோ
कुशे वा - குஶத்திலோ
शेते - படுக்கிறது.

கமலையே ! தாமரையையும் ஆதிசேஷனையும் ஒப்பிட்டால் சிறிதே வித்தியாசம்:

1. ஆதிசேஷன் உன் நாதனுக்குச் சயனம். தாமரை உன் நாதனுக்கு நயனம். (ஒரே ஒரு எழுத்தில் தானே வேறுபாடு ?)

2. ஆதிசேஷன் ஆயிரம் தலைகள் கொண்டவர். தாமரை ஆயிரம் தளங்கள் கொண்டது. (கொஞ்சம் தானே வேறுபாடு ?)

3. ஆதிசேஷன் பிலேஶயம். (அதாவது பாம்பு). தாமரை குஶேஶயம். (அதாவது கமலம்). (சிறிது தானே வித்தியாசம் ?)

ஆதிசேஷன், தாமரை என்ற இந்த இரண்டுமே உன் ஆஸனங்கள் தாம்.

தாமரையைப் பார்த்து இது ஆதிசேஷனோ என்று சந்தேகப்படுவதும் சஹஜமே. சயனம் ஒன்று; நயனம் ஒன்று. ஆயிரத்தலை ஒன்று; ஆயிரத்தளம் ஒன்று. பிலத்தில் ஒன்று; ஜலத்தில் ஒன்று.

இதில் நாமறியும் அர்த்தங்களாவன:

1. ஆதிசேஷன் திவ்யதம்பதிகள் இருவருக்கும் நிவாஸமானவர்.

2. தாயாருக்கு பத்மாஸனி, ஸரோஜநிலயா, முதலிய பெயர்கள் ப்ரசித்தமானது போல், பெருமானுக்குப் புண்டரீகாக்ஷன், அரவிந்தலோசனன், முதலிய பெயர்கள் பிரசித்தமானபடியால், கமலையின் நிவாஸம் நாதனின் நயனம் ஆகும்.

3. ஆதிசேஷனுக்குள்ள மதிப்பு தாமரைக்கும் தகும்.

ஆயிரம் முகங்கள் ஏற்கும் ஆதிசேஷனைப் போல் ஆகும்.
ஆசனம் தாயாருக்கும் ஆயிரம் இதழ் விரிக்கும்.

33. மட்டிலா மஹிமை பெற்ற தாமரை:-

श्रीसूक्तं ते जननि नलिनं स्थानं आख्याति मुख्यम्
दृष्टान्तं त्वत्प्रियतमदृशो रन्तरादित्यविद्या ।
जन्मस्थानं तव तनुभुवो धातु राथर्वणादिः
त्वत्सान्निध्यात् क्वचन भवति श्रीरनिम्ना महिम्नाम् ॥ ३३ ॥

ஸ்ரீஸூக்தம் தே ஜநநி நளிநம் ஸ்தா2நம் ஸ்தா2நம் ஆக்2யாதி முக்2யம்
த்3ருஷ்டாந்தம் த்வத்ப்ரியதமத்3ருஶோ ரந்தராதி3த்யவித்3யா।
ஜந்மஸ்தா2நம் தவ தநுபு4வோ தா4து ராத2ர்வணாதி:
த்வத்ஸாந்நித்4யாத் க்வசந ப4வதி ஶ்ரீரநிம்நா மஹிம்நாம் ॥ 33 ॥

जननि - தாயே!
नलिनं - தாமரையை
ते - உன்னுடைய
मुख्यं - முக்கியமான
स्थानं - இடமாக
श्रीसूक्तं - ஸ்ரீஸூக்தமானது
आख्याति - தெரிவிக்கிறது.
त्वत्-प्रियतम-दृशोः - உன் கணவனின் கண்களுக்கு
दृष्टान्तं - எடுத்துக்காட்டாக
अन्तरादित्यविद्या - அந்தராதித்ய வித்யையானது (தெரிவிக்கிறது).

तव - உன்னுடைய
तनुभुवः - மகனான
धातुः - (பிரம்மாவினுடைய)
जन्मस्थानं - பிறப்பிடமாக
आथर्वणादिः - ஆதர்வணம் முதலியது (தெரிவிக்கிறது.)
श्रीः - லக்ஷ்மியே!
त्वत् - सान्निध्यात् - உன் இருப்பால்
क्वचन - ஏதோ ஒன்றில்
अनिम्ना - குறைவற்ற
श्रीः - செழிப்பு
भवति - உண்டாகிறது.

அம்மா லக்ஷ்மியே ! வேதத்தில் பல பகுதிகளில் தாமரை சிறப்பிக்கப்படுகிறது. ஸ்ரீ ஸூக்தம் என்னும் பகுதியில் உனது முக்கிய இடமாகத் தாமரை அறிவிக்கப்படுகிறது. அந்தராதித்யவித்யை என்னும் பகுதியில் பெருமாளின் கண்களுக்கு உவமையாகத்தாமரை சொல்லப்படுகிறது. ஆதர்வணப்பகுதி பிரம்மதேவனின் பிறப்பிடம் தாமரை என்கிறது.

இந்த மூன்றிலுமே உன் சம்பந்தம் உள்ளது. உனக்கு இருப்பிடம், உன் கணவனுக்குக் கண்களுக்கு உபமானம், உன் மகனுக்குப் பிறப்பிடம் என்று.

இவ்வளவு மகிமை தாமரைக்குக் கிடைத்தது எதனால் ? உன் சான்னித்தியத்தால் தான். நீ இருக்குமிடம் எதுவானாலும், அங்கே பெருமைகளுக்குக் குறைவில்லை.

லக்ஷ்மி வசிக்கும் இடங்கள் பல உண்டு. (பசுவின் பிருஷ்டம், செல்வந்தர் மாளிகை, யானையின் மத்தகம் இத்யாதி). இவற்றுள் முக்கியமானது தாமரை மலர். இதை ஸ்ரீஸூக்தம் திரும்பித் திரும்பிச் சொல்லித் தெரிவிக்கிறது. பத்மே ஸ்திதாம் என்று ஒரு தடவை. பத்மாலயே என்று இன்னொரு தடவை.

இன்னொரு வேதவாக்கியம் தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகம் ஏவம் அக்ஷிணீ என்பது. அந்தராதித்ய வித்யை என்னும் உபநிஷத்பாகத்தில் வருவது. தாமரை போன்ற கண்கள் பெருமாளுக்கு என்கிறது. இன்னுமொரு வேதவாக்கியம் ''ப்ரம்ம வை ப்ரம்ஹாணம் புஷ்கரே ஸஸர்ஜ'' என்பது. கடவுள் பிரமனைத் தாமரையில் படைத்தார் என்று. இந்தக் கருத்து தைத்திரீயத்திலும் உள்ளது. ''ஸ ப்ரஜாபதிரேக: புஷ்கரபர்ணே ஸமபவத்'' என்று. இப்படி ஆதர்வணம் முதலியவற்றில் பிரம்மாவின் பிறப்பிடமாகத் தாமரை சொல்லப்பட்டது.

இவ்வளவு பெருமைகள் தாமரைக்குக் கிடைக்கும் காரணம் உன் சான்னித்தியம் தான்.

இந்த ச்லோகத்தில் நாம் அறியும் உண்மைகள் நான்கு:

1. வேதத்துக்கு மேலான ப்ரமாணம் ஒன்றும்

34. சந்திரனுக்குச் சமமான தாமரை:-

शैवालकान्तरगतं तव सद्म विद्मः सारङ्गलाञ्छितवपुर्मिलितामृतौघम्।
पूषाप्तिदत्तरुचि पुंसि नपुंसके च ख्यातस्य मातरिदमब्जपदस्य वाच्यम् ॥ ३४॥

ஶைவாலகாந்தரகதம் தவ ஸத்ம வித்ம:
ஸாரங்கலாஞ்சிதவபுர் மிளிதாம்ருதௌக$_4$ம் ।
பூஷாப்திதத்தருசி பும்ஸி நபும்ஸகே ச
க்$_2$யாதஸ்ய மாதரிதம் அப்ஜபதஸ்ய வாச்யம் ॥ 34 ॥

मातः- அம்மாவே !
शैवाल-क- अन्तर - गतं - சிறு பாசிகளின் நடுவில் இருப்பதும்
सारङ्ग- लाञ्छित -वपुः- வண்டுகளால் அடையாளமிட்ட வடிவுடையதும்
मिळित - अमृत - ओघं - நீர் வெள்ளம் சேர்ந்ததும்
पूषा-आप्ति -दत्त-रुचि - சூரிய உதயத்தால் தரும் காந்தி கொண்டதும்
नपुंसके - நபும்ஸகலிங்கத்தில்
ख्यातस्य - பிரசித்தமான
अब्ज-पदस्य அப்ஜ என்னும் சொல்லுக்கு
वाच्यं - அர்த்தமானதுமான
तव सद्म - உன் வீட்டை
शैव - अलक - अन्तर -गतं - சிவனுடையதான தலைமயிருக்குள் இருப்பதும்
सारङ्ग-लाञ्छित - वपुः - மான் போல் அடையாளமிடப்பட்ட உருவமுள்ளதும்
मिळित- अमृत -ओघं - அமுத வெள்ளம் (கிரணங்களில்) சேர்ந்ததும்
पूषा-आप्ति -दत्त - रुचि - சூரியனைச் சேர்ந்ததால் அவனால் தரப்பட்ட ஒளி கொண்டதும்
पुंसि - ஆண்பாலில்
ख्यातस्य - பிரசித்தமான
अब्जपदस्य - அப்ஜ என்னும் சொல்லுக்கு
वाच्यं च அர்த்தமானதுமான சந்திரனாக
विद्मः - அறிகிறோம்.

அன்னையே ! ஐந்து காரணங்களால் உன் வீடான தாமரையும் சந்திரனும் சமமாகும். இரண்டுமே சைவாலகத்துள் இருப்பவை.

சைவாலகம் என்பதைச் சைவால-கம் என்று பிரித்தால் அற்பமான பாசி என்றும் பாசிநீர் என்றும் அர்த்தங்கள். சைவ - அலகம் என்று பிரித்தால் சிவனின் சடை என்று அர்த்தம். சிவனின் சடையில் சந்திரன் இருப்பதாலும், பாசித்தண்ணீரில் தாமரை இருப்பதாலும், இரண்டுமே சைவாலகத்தில் இருப்பவை.

இரண்டுமே அம்ருதவெள்ளம் சேர்ந்தவை.

அம்ருதம் என்றால் தண்ணீர். அது சூழ்ந்தது தாமரை. நிலவு அமுதமாகப் பொழிவதால் சந்திரனும் அமுதவெள்ளம் சேர்ந்தவனே.

இரண்டுமே ஸாரங்க அடையாளம் பெற்றவை.

ஸாரங்கம் என்றால் வண்டு என்றும் மான் என்றும் அர்த்தங்கள். தாமரைக்கு அடையாளம் வண்டு. சந்திரனில் மான் போன்ற களங்கம்.

இரண்டுமே சூரியனைச் சேர்ந்து ருசி பெற்றவை.

தாமரைக்கு அழகே சூரியகிரணம் பட்டுத்தான். சந்திரனுக்கு ஒளியெல்லாம் சூரியனிடமிருந்து பெற்றது தான். ருசி என்றால் அழகு என்றும் பிரகாசம் என்றும் அர்த்தங்கள்.

இரண்டுமே அப்ஜ என்ற பதத்துக்கு அர்த்தமானவை. அப்ஜம் என்று நபும்ஸகலிங்கமாகச் சொன்னால் தாமரை என்று அர்த்தம். அப்ஜ: என்று புல்லிங்கமாகச் சொன்னால் சந்திரன் அர்த்தம்.

இப்படியாகத் தாமரையைச் சந்திரனாக அறிகிறோம்.

இந்த ச்லோகத்தில் நாம் அறியும் அர்த்தங்கள்:

சூரியன் போலே சந்திரனும் தானே பிரகாசிப்பதாகப் பாமரர்கள் நினைப்பார்கள். ஆனால் விஞ்ஞானிகளுக்குத் தெரியும், சந்திரனுக்கு சுயமான ஒளி கிடையாது.

சூரியவெளிச்சத்தைப் ப்ரதிபலிப்பது மட்டுமே என்று. இந்த உண்மை நமது சாஸ்திரங்களிலும் இருக்கிறது. வேதமே இதைச் சொன்துண்டு ஆதித்யேந சந்த்ரமா பாதி என்று. அதைத்தான் பூஷாப்திதத்தருசி என்கிறார்.

அது சைவாலகத்துள்ளே இருப்பதாலும்
அமிர்தத்தின் வெள்ளமதைச் சேர்ந்ததாலும்
அடையாளம் ஸாரங்கம் ஆனதாலும்
அழகொளியைச் சூர்யனிடம் பெற்றதாலும்
அப்ஜமெனும் சொல்லுடைய அர்த்தத்தாலும்
அம்புலிபோல் அன்னைவீ டறிகின்றோம் நாம்.

35. ஆறடி இடமாய் ஆகின்ற தாமரை:-

कान्तः पदत्रयमितस्थलयाचकस्ते
त्वं त्वम्ब षट्पदमिते निलये निविष्टा।
स्थानान्यथापि विपुलानि समाश्रितानाम्
चित्रं युवां कलयथश्चिरमुच्छ्रितानि॥ ३५॥

காந்த: பதத்ரயமிதஸ்த$_2$ல யாசகஸ்தே
த்வம் த்வம்ப ஷட்பதமிதே நிலயே நிவிஷ்டா ।
ஸ்தா$_2$நாந்யதா$_2$பி விபுலாநி ஸமாஸ்ரிதாநாம்
சித்ரம் யுவாம் கலயத$_2$ஸ் சிரமுச்ச்$_2$ரிதாநி ॥ 35 ॥

अम्ब - அம்மாவே !
ते - உன்னுடைய
कान्तः - கணவன் पद - त्रय - मित-
स्थल - याचकः - மூன்றடியளவு நிலத்தை யாசித்தவர்.
त्वं तु - நீயோவெனில்
षट् -पद-मिते - 1. ஆறடி அளவுள்ள 2. வண்டை அடைந்த
निलये - இருப்பிடத்தில்
निविष्टा - உள் இருக்கிறாய்.
अथापि - ஆனாலும்
युवां - நீங்கள் இருவரும்
विपुलानि - பரந்தவையும்
उच्छ्रितानि - உயர்ந்தவையுமான
स्थानानि- இடங்களை
समाश्रितानां -(உங்களை)

அடைந்தவர்களுக்கு — कलयथः - பண்ணுகிறீர்கள்.
चिरं - நீண்ட காலமாக — चित्रं - ஆச்சரியம்.

அம்மா ! நீ உன் பக்தர்களுக்கு ஏராளமான ஸ்தானங்களை (அதாவது நிலங்களையும் பதவிகளையும் பரலோகங்களையும்) வாரி வழங்குகிறாயே ! அது எப்படி உன்னால் முடிகிறது ? பிறந்த வீட்டுச் சொத்தா ? புகுந்த வீட்டுச் சொத்தா ? யோசித்தால் உன் கணவன் (வாமநாவதாரம் எடுத்து) மூன்றடி நிலத்துக்கே பிச்சை எடுத்தவன். நீயோ ஆறடி ஸ்தானத்தில் அடங்கிக் கிடப்பவள். (ஷட்பதம் என்பதற்கு ஆறடி என்றும் வண்டு என்றும் இரண்டு அர்த்தங்களைக் கையாளுகிறார்.) தனக்கு மிஞ்சித்தானே தானதருமம் ? தனக்கே நிலப் பற்றாக்குறை இருந்தால் தன்னை அண்டினவர்களுக்கெல்லாம் நிறைய நிலங்களைத் தர முடியுமோ ? ஆச்சரியமாக இருக்கிறது. (உண்மையில் ஆச்சரியம் ஏதுமில்லை. ஸகலலோக நாயகி தான் அவள். ஷட்பதமிதே என்று சிலேடையால் வேடிக்கை.) ஷட்பதமிதே என்பதை ஷட்பத-மிதே என்று பிரித்தால், ஆறே அடி அளவுள்ள என்று அர்த்தம். ஷட்பதம்-இதே என்று பிரித்தால் வண்டை அடைந்த என்று அர்த்தம். வண்டை அடைந்த நிலையம் தாமரை.

1. லக்ஷ்மி உதாரை. அவளை அடைந்தவர்களுக்கு உயர்ந்த ஸ்தானங்கள் கிடைக்கும்.

2. திவ்யதம்பதிகள் இருவருமாகச் சேர்ந்து பலப்ரதாநம் பண்ணுகிறார்கள். இதை யுவாம் கலயத: என்று சொல்கிறார்.

3. இந்த நற்பலனளித்தலை அவர்கள் நீண்டகாலமாகச் செய்து வருகின்றனர். ஆஸ்ருஷ்டி. சிரம்.

4. அற்பமானதும் நடுத்தரமானதுமான ஸ்தானங்கள் வேண்டுமானால் மற்ற தெய்வங்களை நாடலாம். ஆனால் விபுலமானதும் உயர்ந்ததுமான ஸ்தானங்களைத் தரவல்லவர் பெருமாளும் பிராட்டியும்.

அடி மூன்றை இரந்தவனும்
அடி ஆறின் மலராளும்
அடியார்க்குப் பண்ணிடுவர்
அதிகம் உயர் பதவிகளை.

36. தாளின் தூளைத் தாங்கும் தாமரை:-

त्वत्पादपङ्कजरजःकणधन्य धन्येषु
अम्भोरुहेषु वसतां अलिपोतकानाम्।
वर्गेषु हन्त जननं वलशासनाद्याः
वाञ्छन्ति किं पुनरमी वयमब्धिकन्ये॥ ३६॥

த்வத் பாத பங்கஜ ரஜ:கண த₄ந்யத₄ந்யேஷு
அம்போ₄ருஹேஷு வஸதாம் அளிபோதகாநாம் ।
வர்கே₃ஷு ஹந்த ஜநநம் வலஶாஸநாத்₃யா:
வாஞ்ச₂ந்தி கிம் புநரமீ வயம் அப்₃தி₄கந்யே ॥ 36 ॥

अब्धिकन्ये - சமுத்திரத்தின் பெண்ணே !

वलशासन-आद्याः - இந்திரன் முதலானவர்கள்

त्वत् -पाद - पङ्कज - रजः -कण - धन्य वर्गेषु - கூட்டங்களில்

- धन्येषु - உன் அடித்தாமரையின் சிறுதூளால் மிகவும் பாக்யசாலிகளான

अम्भो - रुहेषु - தாமரைகளில்

वसतां - வசிக்கிற

अलि-पोतकानां - வண்டுக் குஞ்சுகளின்

जननं - பிறவியை

वाञ्छन्ति - ஆசைப்படுகிறார்கள்.

हन्त - ஆச்சரியம்.

अमी - இந்த

वयं - நாங்கள்

किं पुनः - (குறித்துக்) கேட்பானேன் ?

கடலின் கன்னிகையே ! உன் திருவடித்துகளைத் தாங்கும் பாக்கியம் மஹாபாக்கியம். அது எல்லாருக்கும் எளிதில் கிடைக்காது. தாமரையில் வாழும் சிறு வண்டுகளுக்குக் கிடைத்தது அந்தப் பெறற்கரிய பேறு.

அத்தகைய வண்டுகளின் குழுவில் நாமும் பிறக்கலாமே என்று ஆசைப்படுகிறார்கள் இந்திரன் முதலானோர். தேவாதிதேவர்கள் கூட இப்படி ஆசைப்படும்படி ஆச்சரியான பேறு அது. நாங்கள் அதை ஆசைப்படுவது குறித்துக் கேட்கவேண்டுமா ? இந்திரன் முதலாரோடு ஒப்பிடுகையில் நாங்கள் தாழ்ந்தவர்கள். உயர்ந்தவர்களே விரும்பும் ஒரு நிலையைத் தாழ்ந்தவர்களும் விரும்புவது இயற்கை தானே ? இந்த ச்லோகத்தில் நாம் அறியும் நல்லுரைகள்:

1. தாயார் திருவடித்துகள் பெரும்பேற்றை அளிக்கும். சூர்ணாபிஷேகப்பொடி முதலியவற்றின் பெருமை அறிவோம் நாம். நம் ஸம்பிரதாயத்தில் பாதரேணுவின் பெருமையைப் பரக்கப் பேசுகிறோம். பெருமாளின் பாதரேணுவை ''த்வதங்க்ரி ராஜீவ ரஜ:கணாநாம்'' என்று ஸ்வாமி தேசிகன் அருளியது போலவே'' த்வத்பாதபங்கஜரஜ:கண'' என்று இந்தக்கவியின் பதப்பிரயோகம். தெய்வத்தின் பாதரேணு, ஆசார்யரின் பாதரேணு, பாகவதர்களின் பாதரேணு, இவை ஒவ்வொன்றும் பாதுகாஸஹஸ்ராதிகளால் பாராட்டப் பட்டவை. இவை எல்லாமும் சேர்ந்து தெய்வமாகவும், ஆசார்யையாகவும், பாகவதையாகவும் இருக்கும் லக்ஷ்மியின் பாதரேணுவால் வரும் பாக்கியம் சொல்லிமாளாததலால் தந்யதந்யேஷு என்கிறார் தந்யதந்யர் என்கிற இரட்டைக்கிளவி மஹாதந்யர் என்று பொருள்படும். ராஜராஜர், தேவதேவர், என்பவை போல.

2. தேவேந்திரன் முதலானவர் தாயார் திருவடித்துகளின் பெருமை உணர்ந்தவர்கள். விஷ்ணுபுராணத்தில் இந்திரன் செய்த ஸ்ரீஸ்துதி இந்தக்காரணத்தால் தான்.

3. தாமரையில் வாழும் வண்டுகளுக்கு இந்தப் பாக்கியம் சுலபமாகக் கிடைப்பதால், இந்த்ராதிகள் அந்த வண்டுக்களின் குழுவில் பிறவி எடுக்க விரும்புகின்றனர். ''அடியார்கள் வீட்டில் புழுவாகவேணும் பிறப்பது மேல்'' என்ற ஆளவந்தார் ஸ்ரீ ஸூக்தியை அனுகரித்து

தாமரைகளில் வண்டாகப் பிறக்க விழைவதாகச் சொல்கிறார்.

4. வண்டுப்பிறவி நீசப்பிறவி ஆயிற்றே! இந்திர பதவி உயர்ந்ததாயிருக்க, அவர்கள் ஏன் வண்டாகப் பிறக்க ஆசைப்பட வேண்டும்? என்று கேட்டால், தாயாரின் பாதரேணு வண்டுக்குத் தானே எளிதில் கிடைக்கிறது? இந்தப் பாக்கியம் இந்திரபதவியை விட உயர்ந்ததன்றோ? ''ப்ரஜாபதி பதவியும் வேண்டாம், பசுபதி பதவியும் வேண்டாம்'' என்று தொடங்கும் புராணச்லோகம் இந்தக் கவியின் மனத்தில் நிழலாடுகிறது.

ஊனேறு செல்வத்து என்று தொடங்கும் பதிகத்தில் குலசேகரப் பெருமாளின் தீர்மானமும் இப்படியே.

5. தேவேந்திரன் முதலானோரே அதை ஆசைப்படும்போது நாமெல்லாம் எம்மாத்திரம்? உயர்பதவியில் இருப்பவரைப் பார்த்து நல்லது கெட்டது புரிந்துகொள்பவர் நாம். அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ளுகிறோம், எது மஹாபாக்கியம் என்று.

இந்த மஹாபாக்கியத்தைப் பெற்றது எது? தாமரையா? வண்டா? எதில் தாயாரடிப்பொடிகள் ஒட்டிக்கொண்டுள்ளன? இரண்டிலும். தந்யதந்யேஷு என்ற விசேஷணத்தை அம்போருஹேஷு என்பதிலும் அந்வயிக்கலாம், அளிபோதகவர்கேஷு என்பதிலும் அந்வயிக்கலாம். வண்டுகளின் வர்க்கம் என்னாமல் வண்டுக்குஞ்சுகளின் வர்க்கம் என்பானேன்? கீடஜந்ம என்று ஆளவந்தார் அருளியது போல் இது. உருவத்தில் சிறிதானால் என்ன? வயதில் சிறிதானால் என்ன? அன்னையின் அடிப்பொடியை அடைந்தவர் அன்றோ அதிருஷ்டக்காரர்? என்ற கருத்தை வலுப்படுத்துவதற்காக சின்ன வண்டுகளைச் சொன்னார்.

வனஜையின் அடிப்பொடியால் வருகின்ற பாக்கியத்தை
வகிக்கின்ற தாமரையில் வசிக்கின்ற வண்டுகளின்
வருக்கத்தில் பிறப்பதற்கே வானவர்கோன் முதலானோர்
வாஞ்சை மிகக் கொண்டனரே வாரிதியின் கன்னிகையே!

37. ஆதவனிடமிருந்து ஆரோக்கியம் அடைந்த தாமரை:-

सरोगमुपसेवितेऽप्यहह पूर्णचन्द्रोदये
ज्वरोपहतमम्बुजं तव परिग्रहादिन्दिरे ।
विकासयति विज्वरं विरचयन्नसौ भास्करः
रवेररुजमाप्नुयादिति न पूर्वभाषा मृषा ॥ ३७ ॥

ஸரோகம் உபஸேவிதேப்யஹஹ பூர்ணசந்த்ரோதயே
ஜ்வரோபஹதம் அம்புஜம் தவ பரிக்ரஹாதிந்திரே ।
விகாஸயதி விஜ்வரம் விரசயந்நஸௌ ப₄ாஸ்கர:
ரவேரருஜம் ஆப்நுயாத் இதி ந பூர்வப₄ாஷா ம்ருஷா ॥ 37 ॥

इन्दिरे - லக்ஷ்மியே !
पूर्ण-चन्द्रोदये - 1. முழுதான சந்த்ரோதய மருந்து 2. முழுநிலவின் உதயம்
उपसेविते अपि - 1. உட்கொள்ளப்பட்டபோதிலும் 2. சமீபத்தில் வந்தபோதும்
अहह - ஐயையோ !
सरोगं - 1. வியாதியுடன் கூடியதும் 2. குளத்தை அடைந்ததும்
ज्वर-उपहतं - ஜுரத்தால் பிடிக்கப்பட்டதுமான
अम्बुजं - தாமரையை
असौ भास्करः - இந்தச் சூரியன்
तव - உனது
परिग्रहात् - ஏற்பினால்
विज्वरं - ஜுரம் நீங்கினதாக
विरचयन् - பண்ணிக்கொண்டு
विकासयति - 1. மகிழ்விக்கிறது 2. மலர்த்துகிறது.
रवेः - சூரியனிடமிருந்து
अरुजं - ஆரோக்கியத்தை
आप्नुयात् - அடையவேண்டும்
इति - என்கிற
पूर्व-भाषा - முன்னோர் வார்த்தை
मृषा न - பொய்யன்று

இந்திரையே! ''ஆரோக்யம் பாஸ்கராதிச்சேத்'' என்று ஒரு முதுமொழி உண்டு. சூரியனிடமிருந்து ஆரோக்கியத்தைப் பெறவேண்டும் என்று அர்த்தம். அது பொய்யில்லை, உண்மை தான் என்பதற்குத் தாமரைமலரே சான்று. நோயாளி நோய்வாய்ப்படும்போது முதலில் மருந்து சாப்பிடுவான். அது பலன் அளிக்காமல் ஜுரம்

தொடருமானால், சூரியனை வணங்கி நோய் நீங்கி மகிழ்வான். தாமரையும் அதைத்தான் செய்கிறது. நோய்வாய்ப்பட்டது. எப்படியென்றால், ஸரோகமாயிற்று. ஸ-ரோகம் என்று பிரித்தால் பிணியுடன் கூடியது என்று அர்த்தம். உண்மையில் ஸரோ-கம் என்று பிரித்து, குளத்தை அடைந்தது என்று அர்த்தம் கொள்ளவேண்டும். தாமரை குளத்தில் இருக்கிறது அல்லவா ? அடுத்தபடியாக மருந்து சாப்பிட்டது. வைத்யசாஸ்த்ரத்தில் சந்த்ரோதயம் என்பது ஒரு சிறந்த மருந்தின் பெயர். அதை அரைகுறையாக அன்றி முழுதாக உட்கொண்டது. உண்மையில், சந்திரோதயம் என்ற பதத்திற்கு உலகில் பிரசித்தமான அர்த்தத்தை ஏற்று, முழுநிலா உதித்தபோது அதை நெருங்கியது என்று அர்த்தமாகும். இப்படிச் செய்தபோது என்னவாயிற்று ? ஜ்வரம் நீடித்தது. மருந்து பலனளிக்கவில்லை. வேறு வழியில்லை. சூரியனை நாடியது. சூரியனுக்கும் தாமரையிடம் விசேஷ அபிமானம் உண்டு. லக்ஷ்மியே ! உன்னைச் சேர்ந்த வஸ்து என்பதால் இது. ஜ்வரத்தை நீக்குகிறது. மகிழ்ச்சியை உண்டாக்குகிறது. விகாஸயதி என்பதற்கு வேறொரு அர்த்தம் 'மலர்த்துகிறது' என்று. ஆமாம், சூரியன் தாமரையை மலர்த்துகிறது அல்லவா ?

இப்படியாக நோயாளிக்கும் தாமரைக்கும் பல ஒப்புமைகள்.

1. இரண்டுமே ஸரோகம். (வெவ்வேறு அர்த்தங்களில் என்பது கிடக்கட்டும்.)

2. இருவருமே சந்தரோதயத்தை உபஸேவநம் பண்ணினார்கள். (சந்த்ரோதயம் என்பதற்கு அர்த்தபேதம் கிடக்கட்டும்.)

3. இருவருக்குமே சந்த்ரோதயம் ஜ்வரபாதையை அதிகரித்துவிட்டது.

4. இருவருக்குமே சூரியன் ஜ்வரத்தைப் போக்கினான்.

5. பிறகு இருவருக்குமே விகாஸம் ஏற்பட்டது. (வெவ்வேறு அர்த்தங்களில் என்பது கிடக்கட்டும்.)

இங்கு தாமரைக்குச் சொன்ன ஜ்வரம் என்னவென்றால், கூம்பிப்போவது.

சரோகச்சொல்லின் பொருளாலும் சந்த்ரோதயத்துப் பிணியாலும்
சவிதா போக்கும் ஜ்வரத்தாலும் சமமாம் பத்மம் ரோகிக்கு

இந்த ச்லோகத்தில் நாம் தெரிந்துகொள்பவை சில:

1. பழமொழிகள் உண்மைக்கருத்துகளைச் சொல்பவை. முன்னோர் வார்த்தைகள் பொய்யாவதில்லை.

2. பல வியாதிகள் சூரியனால் நீங்கிவிடும். மருந்தால் நீங்காதவை கூட.

3. மருந்தை முழுமையாகவும் நம்பிக்கையுடனும் ஸ்வீகரிக்கவேண்டும். பூர்ண என்றும் உபஸேவித என்றும் பதங்கள்.

4. நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம். ஜ்வரம் நீங்கினால் மகிழ்ச்சி.

5. சூரியன் லக்ஷ்மிபக்தன். அவனது அருள் பெற்றவர்களை மகிழ்விப்பான்.

பகலவனால் பிணிநீங்கும் பழமொழியும் பொய்யன்று
பத்மினியே பரிக்ரகிக்கும் பத்மமிதைப் பறைசாற்றும்

<u>38. தத்க்ரதுநீதி தழைக்கும் தாமரை</u>

कल्याणधर्मा कमलासनाया: मूर्तिं हि यस्ते मतिमानुपास्ते ।
कन्ये सुधाब्धेः कमलासनत्वम् तस्योचितं तत्क्रतुनीतिभूम्ना ॥ ३८ ॥

கல்யாணத$_4$ர்மா கமலாஸநாயா:
மூர்திம் ஹி யஸ்தே மதிமாந் உபாஸ்தே।
கந்யே ஸுதா$_4$ப்தே$_4$: கமலாஸநத்வம்
தஸ்யோசிதம் தத்க்ரதுநீதிபூ$_4$ம்நா ॥ 38 ॥

सुधाब्धेः - அம்ருதக் கடலின்
कन्ये - பெண்ணே !
कल्याणधर्मा - சுபமான நடத்தை உள்ளவனும்
मतिमान् - புத்திசாலியுமான
यः - எவன்
कमलासनायाः - தாமரையை ஆசனமாகக்கொண்ட
ते - உன்னுடைய
मूर्तिं हि - வடிவத்தையே
उपास्ते - தியானிக்கிறானோ
तस्य - அவனுக்கு
कमलासनत्वं - பிரம்மபதவி
तत्क्रतु-नीति-भूम्ना - தத்க்ரதுந்யாய பலத்தால்
उचितं - தகும்.

அமுதக்கடலில் அவதரித்த அணங்கே ! உன்னை உபாஸிப்பவர்கள் உயர்ந்த நிலைகளை அடைகிறார்கள். தேவத்தன்மை, இந்திரப்பதவி, இதற்கெல்லாம் மேற்பட்டது பிரம்மாவின் பதவி. அதுகூடக் கிடைக்கும் உன்னைத் தியானிப்பவர்களுக்கு. இது இன்னொரு நியாயத்தாலும் ஊர்ஜிதம் ஆகிறது. தத்க்ரதுந்யாயம் என்று உபநிஷத்தில் ஒன்று உண்டு. மனிதன் எந்தவிதமாகத் தெய்வத்தை உபாஸிக்கிறானோ அதே விதமாகத் தானும் ஆகிறான் என்கிறது அது. எண்ணங்களுக்கு அவ்வளவு வலிமை. உபாஸநத்துக்கும் பலனுக்கும் அவ்வளவு நெருங்கிய தொடர்பு. பிரகிருதத்தில் தாமரையில் அமர்ந்தவளாக ஸதா பிராட்டியைத் தியானிப்பவன் அந்த நியாயப்படி, தானும் தாமரையில் அமரும் நிலையை அடையலாகும். கமலாஸனனாகும் அந்த நிலை தானே பிரம்மாவின் பதவி என்பது ? எல்லா மனிதர்களுக்கும் உன்னை உபாஸிக்கும் வாய்ப்போ எண்ணமோ வருவதில்லை. அதற்கு ஒரு கொடுப்பினை இருக்கவேண்டும். அது நற்செயல், நல்லறிவு, இவற்றால்

அமைவது. (கல்யாணதர்மா என்றும் மதிமான் என்றும் சொல்லக்கூடிய நிலையில் இருக்கிற) புண்ணியசாலியும் புத்திசாலியும் ஆனவன் உன்னைத் தியானிக்க முற்படுகிறான். அதன் பலனாக அவன் பிரம்மாவாவதும் உசிதம்தான்.

இந்த ச்லோகத்தில் நாம் அறிபவை:

1. மங்களமான நெறிகளை உடையவன் தான் பிராட்டியை உபாஸிப்பான். மற்றவர்க்கு அதில் நாட்டமும் வராது; வந்தாலும் மனசு ஒருமுகப்படாது.

2. புத்திசாலி தான் பிராட்டியைத் தியானிப்பான். மற்றவர்க்கு வேறு காரியங்கள் முக்கியமாகத் தோன்றும். அற்பப் பலன்கள் அவசியமாகவும் தோன்றும்.

3. அபி கருணே ஜநஸ்ய என்று தொடங்கும் தயாசதக ச்லோகத்தில் 'அபி கமலாஸநத்வம்' என்று சொன்னபடி. பிரம்மாவின் பதவி உயர்ந்தது தான். அதே பதத்தை உபயோகித்திருக்கிறார்.

4. கமலாஸனையைத் தியானித்தால் கமலாஸனன் ஆகலாம் என்று தத்க்ரதுந்யாயப்படியாகுமா ? என்றால் கவியின் சமத்காரம் அப்படி.

5. லக்ஷ்மி உபாஸகர்களும் தர்மத்தை விடலாகாது. கடவுள் பக்தி இருந்தால் மற்ற சாத்திரக் கட்டுப்பாடுகள் வேண்டாம் என்று நினைத்து ஏமாறக்கூடாது. இதற்காகக் கல்யாணதர்மா என்றார்.

அலர்மேலாளைத் தியானித்தால் அலர்மேலோனாய் ஆகிடலாம்
அதுவே தத்க்ரது நீதிக்காம் அறிவாளிகளே அது செய்வர்.

39. மூளும் கோபத்தால் மூடும் தாமரை:-

विच्छिन्नमब्दशतकव्यवधानतो यत्
सन्दर्शनं सहभुवश्शशिनः कदाचित् ।
तत् पद्मवासिनि तदीक्षणवर्जनाय
तस्योदयेषु निजसद्म किमावृणोषि ॥ ३९ ॥

விச்சி$_2$ந்நம் அப்தஶதகவ்யவத$_4$ாநதோ யத்
ஸந்தர்ஶநம் ஸஹபு$_4$வஶ் ஶஶிந: கதாசித் ।
தத் பத்மவாஸிநி ததீக்ஷணவர்ஜநாய
தஸ்யோதயேஷு நிஜஸத்ம கிமாவ்ருணோஷி ॥ 39 ॥

पद्मवासिनि - தாமரையில் வசிப்பவளே !
कदाचित् - சில சமயத்தில்
यत् - எதனால்
सहभुवः - உடன் பிறந்தவனான
शशिनः - சந்திரனுடைய
सन्दर्शनं- பார்வையானது
अब्द-शतक-व्यवधानतः- 1. நூற்றுக்கணக்கான வருஷங்கள் இடைவெளியால் 2. அனேக மேகங்கள் இடைப்பட்டதால்
विच्छिन्नं - அறுபட்டதோ, தடைப்பட்டதோ
तत् - அதனாலே
तत्-ईक्षण-वर्जनाय- அவனைக் காண்பதைத் தவிர்ப்பதற்காக
तस्य- அந்த சந்திரனுடைய
उदयेषु- உதயகாலங்களில், தோன்றும்போதெல்லாம்
निज-सद्म- தன் வீட்டை
आवृणोषि- மூடுகிறாயா
किं - என்ன ?

பத்மத்தில் வசிப்பவளே ! உனக்குச் சகோதரன் சந்திரன். இருவரும் ஒரே பாற்கடலில் உதித்ததால் இந்த உறவு. இவ்வளவு நெருங்கிய உறவினன் பல வருஷங்கள் உன்னைப் பார்க்காமல் இருக்கலாமோ ? கூடாது. சந்திரன் தப்பு பண்ணிவிட்டான். நூறாண்டுகள் பார்ப்பதே இல்லாமல் போச்சு. எப்படி ? அப்தம் என்ற பதத்துக்கு வருஷம் என்றும் மேகம் என்றும் இரண்டு அர்த்தங்கள். வானில் சந்திரன் வரும்போது பல மேகங்கள் மறைப்பதால்

சந்திரனைப் பார்க்க முடிவதில்லை. அனேக அப்தங்களால் பார்வைக்குத் தடை வந்தது. வேறொரு அர்த்தப்படி, அனேக வருஷங்கள் பார்வை இல்லை. வ்யவதானம் என்பதற்குக்கூட இரண்டு அர்த்தங்கள். கால இடைவெளி என்று ஒரு அர்த்தம். பார்வையைத் தடுக்கும் குறுக்கிடும் வஸ்து என்று இன்னொரு அர்த்தம். உண்மையில் நிறைய மேகம் குறுக்கிடுவதால் அப்த-சதக-வ்யவதானம் ஏற்பட்டது. இதே சொற்றொடரின் வேறு அர்த்தப்படி நூறு வருஷங்கள் இடைவெளி ஏற்பட்டது பரஸ்பரம் பார்த்துக்கொள்வதில். இப்படி உறவை முறித்துக்கொள்ளும் சகோதரன் மேல் எந்தச் சகோதரிக்கும் கோபம் வருவது நியாயம் தானே ? அந்தக் கோபத்தை அவனைப் பிறகு காணநேரும்போது வெளிப்படுத்துவதும் நியாயம் தானே ? அதனால் தான் போலும், சந்திரன் தோன்றும்போதெல்லாம் தன் வீட்டுக்கதவை மூடிவிடுகிறாள் லக்ஷ்மி. அவள் வீடு எது ? தாமரை. அதன் கதவு எது ? இதழ்கள். தாமரை இதழ்கள் மூடிக்கொள்கின்றன சந்திரனைக் கண்டதும். புஷ்பம் கூம்பிக் குவிகிறது. இதைக் கதவடைப்பாக உத்ப்ரேக்ஷிக்கிறார் கவி. இதற்குக் காரணமான கோபத்துக்குச் சிலேடையின் உதவியால் காரணம் கூறி இந்த உத்ப்ரேக்ஷையை வலுப்படுத்துகிறார். இப்படி இருக்குமோ என்று கேள்வியாகக் கேட்டு நிறுத்திவிடுகிறார். சந்திரனுடையே அப்தச் சதகமே வந்ததாலே சந்திரன் வரும்போதெல்லாம் சடக்கெனக் கதவைச் சாத்தல்.

இச்ச்லோகத்தில் நாம் அறியும் நீதிகளும் உண்மைகளும்:

1. சகோதரியை அடிக்கடி பார்த்து உறவு கொண்டாடுவது சகோதரனின் கடமை. பரஸ்பரம் பார்த்துக் கொள்வது நின்று போனால் குற்றம் ஆணுடையதே, பெண்ணுடையதில்லை.

2. பலகாலம் பார்க்காமல் இருந்த உறவினரைக் காண நேருகையில் கதவடைப்பது வெறும் கோபத்தினால் மட்டுமன்று. சாத்திரமே அப்படித்தான் சொல்கிறது. ''த்வாதஶாப்தாகதம் பந்தும் ஹடேந ந விலோகயேத்'' என்றொரு வசனம். இதே போல் இன்னொரு வசனம் ஜ்யோதிர்நிபந்தம் என்னும் நூலிலும் உள்ளது. எல்லா உறவினருக்கும் இப்படிக்கிடையாது. ஒரு திருமணமான பெண்ணுக்கும், தூரதேசம் போன அவளது அப்பா - அம்மா - அண்ணன் - தம்பிகளுக்கும் மட்டும் தான். பனிரண்டு வருஷங்களுக்கு மேல் பிரிந்து வந்த உறவினரைத் திடீரென்று பார்க்கக் கூடாதாம். சிறிது சிறிதாக, செய்திப் பரிமாற்றம், பேச்சு, இதற்குப்பிறகு தான் நேரில் பார்க்கலாம். உணர்ச்சிக் கொந்தளிப்பைச் சமாளிக்க இந்த ஏற்பாடு இருக்கலாம்.

3. உறவினரிடையே விரோதங்கள் பிறர் குறுக்கீட்டால் வரக்கூடும்.

4. கதவடைப்பது முதலியவை, பெண்கள் கோபத்தை வெளிப்படுத்தும் வழிகள்.

5. சந்த்ரஸஹோதரீ என்பது தாயாரின் திவ்யநாமங்களில் ஒன்று.

அப்தங்கள் நூறு பார்வை அறுத்ததன் விளைவாய் லக்ஷ்மி
அம்புலி வரும்போதெல்லாம் அம்புஜம் மூடுகின்றாள்.

<u>40. மாலின் மார்பு மாதிரியான தாமரை:-</u>

वारिजवनस्य भाग्यम् वर्णयितुं नैव वयममी शक्ताः ।
कमले तव स्थितौ यत् विकल्पितं वक्षसा समं विष्णोः ॥ ४० ॥

வாரிஜவநஸ்ய பா$_4$க்$_3$யம் வர்ணயிதும் நைவ வயமமீ ஶக்தா: ।
கமலே தவ ஸ்தி$_2$தௌ யத் விகல்பிதம் வக்ஷஸா ஸமம் விஷ்ணோ: ॥ 40 ॥

इति अस्तोकाध्वरि कविघटाम्बु वादिहंसाम्बुद वेङ्कटार्यदीक्षितकृतिषु लक्ष्मीसहस्रे सद्मवैभवस्तबकः सम्पूर्णः

कमले - லக்ஷ்மியே !

वारिज - वनस्य - தாமரைக் காட்டின்
भाग्यं - பாக்கியத்தை
वर्णयितुं - வருணிப்பதற்கு
अमी वयं - இந்த நாங்கள்
न एव शक्ताः - அடியோடு இயலாதவர்கள்.
यत् - எந்தத் தாமரைக்காடானது
तव - உன்
स्थितौ - இருப்பில்
विष्णोः - விஷ்ணுவினுடைய
वक्षसा - மார்போடு
समं - சமமாக
विकल्पितं - விகல்பிக்கப்பட்டதோ.

கமலையே !

தாமரைக்காட்டின் பெருமை வாசாமகோசரம். அதை எங்களால் வருணிக்க முடியாது. முடியவே முடியாது. தாயாரின் இருப்பிடம் எது என்று கேட்டால், விஷ்ணுவின் வக்ஷஸ்தலமோ, அல்லது தாமரைக்காடோ என்கிறார்கள். இப்படிப் பெருமாளின் திருமார்புக்கு இணையாகச் சொன்ன ஒன்றை நாங்கள் எப்படி வருணிக்க முடியும் ?

ஸ்ரீஸ்துதியில் ''ஸ்தாநம் யஸ்யாஸ் ஸரஸிஜவநம் விஷ்ணுவக்ஷஸ்தலம் வா'' என்றுள்ள வரியை ஸ்பஷ்டமாகவே இந்த ச்லோகத்தில் நினைப்பூட்டுகிறார். மேலும் இந்த வரியைப் பற்றியே இந்த ச்லோகம். விஷ்ணு வக்ஷஸ்ஸோடு விகல்பிதம் என்கிறாரே, அது ஸ்வாமி தேசிகனால் ''தாமரைக்காடோ விஷ்ணுவின் வக்ஷஸ்தலமோ'' என்று இங்கே சொன்ன விகல்பத்தைக் குறித்துத் தான். ஸமம் என்ற பதத்துக்கு இரண்டு அர்த்தங்கள் இங்கே பொருந்தும். சமமாக, இணையாக, நிகராக, என்ற அர்த்தம் ஏற்கெனவே சொன்னது. ஸமம் என்கிற அவ்யயச் சொல்லுக்கு உடன், கூட, ஒருங்கே, என்ற அர்த்தமும் உண்டு. வக்ஷஸா ஸமம் என்றால் மார்போடு கூட என்று அர்த்தம். பெருமாள் மார்போடு கூட, தாமரைக்காட்டை அல்லவா விகல்பித்திருக்கிறார் தேசிகன் ? அப்படிப்பட்ட தாமரைக்காட்டின் பேற்றைப் பேசத்தான் ஆகுமோ ? பெருமாள் திருமார்பின் பெருமையை எப்படி எங்களால் வருணிக்கமுடியாதோ, அதுபோலவே ஸரோஜவனத்தின் பாக்கியத்தையும் விவரிக்கமுடியாது.

இந்தச் சுலோகத்தில் நாம் தெரிந்து கொள்பவை:

1. கமலையின் இருப்பிடம் எல்லாமே பாக்கியம் பெற்றவை. (பசுமாட்டின் குதப்பகுதி, யானையின் மத்தகம் என்று சில உண்டு லக்ஷ்மி வாஸஸ்தானங்கள்.)

2. தாமரைக்காட்டையும் விஷ்ணுவக்ஷஸ்ஸையும் மட்டுமே இந்த வகையில் ஸ்வாமி தேசிகன் பாடியிருக்கிறார். ஆகையால் தாமரைக்காட்டுக்குத் தனிச் சிறப்பு. பெருமாள் திருமார்புக்கு இணையாக உண்டு. அநிதர ஸாதாரணமான பாக்கியம்.

3. தெய்வஸாந்நித்யம், பெருமாள் வக்ஷஸ்ஸோடு இணைத்துப் பேசும் சிறப்பு, ஸ்வாமி தேசிகனின் ஸூக்திக்கு விஷயமான பாக்கியம், இத்தனையும் பெற்றது தாமரைக்காடு. நம் வருணனைகளைக் கடந்த பேறு அதற்கு. வர்ணநாதீதமான பாக்கியம்.

4. வயம் அமீ என்கிறார். இந்த நாங்கள் என்பானேன் ? அவதாரபுருஷர்களான தேசிகாதிகளே விகல்பத்தோடு விட்டுவிட்ட பெருமையைச் சாதாரணக் கவிகளான நாங்களா போற்ற முடியும் ?

பெருமாளின் மார்புடனே பெரியோர்கள் புகழ்கின்ற
பெற்றி மிகும் பத்மவனப் பெருமையைப் பாக்கியத்தைப்
பேசவல்ல பெருந்திறனைப் பெறவில்லை பேதையர் நாம்.

நாவல்பாக்கம் அக்நிஹோத்ரம் நாராயணதாதயார்ய
மஹாதேசிகனிடம் நாவல் பாக்கம் யக்ஞவராஹன்
என்கிற கண்ணன் கேட்டறிந்து எழுதிய
லக்ஷ்மீஸஹஸ்ர உரையில்
ஸத்மவைபவஸ்தபகம்
முற்றும்.

லக்ஷ்மீஸஹஸ்ரத்தில் மொத்த ஸ்தபகங்கள் 25. இதுவரை முடிந்த ஸ்தபகங்கள் 18. இன்னும் மீதமுள்ள ஸ்தபகங்கள் 7. மொத்த ச்லோகங்கள் 1018. இதுவரை முடிந்த ச்லோகங்கள் 803. இன்னும் மீதமுள்ள ச்லோகங்கள் 215.

சுபம்

(தொடரும்)

அபீதிஸ்தபக:-19

இந்த ஸ்தபகத்தில் முப்பது ச்லோகங்களில் லக்ஷ்மியால் நமக்குப் பயங்கள் நீங்கித் தைரியம் ஏற்படுவதை வருணிக்கிறார். அவளுடைய அபயஹஸ்தம் நமக்கு அபயம் தருகிறது. அதனால் நமக்கு முப்பதுவகைப் பயங்கள் தொலைகின்றனவாம். அப்படித் தொலையும் பயங்களாக இந்தக் கவி சொல்பவை வருமாறு:

1. வியாதிபயம். 2. விபத்தில் பயம். 3. பலிஷ்டர்கள் துன்புறுத்துவதால் பயம். 4. பெருமாளின் உக்ரரூபத்தில் பயம். 5. கதியற்ற நிலையால் பயம். 6. எங்கள் பாவங்களின் பலனில் பயம். 7. நல்லோர் இணக்கம் இல்லாமல் நடுக்கும் பயம். 8. பதவியில் ஆட்டம் காணும் பயம். 9. பரலோகபயம். 10. உடலச்சிறையில் பயம். 11. கோழையானதால் எதிலும் பயம். 12. தடங்கல்களில் பயம். 13. ஜனன மரண பயம். 14. கோர நரக பயம். 15. துர்குணங்கள் என்னும் பிசாசுகளிடம் பயம். 16. பக்திக்குறைவால் பயம். 17. பிராட்டியை எதிர்த்தால் புல்லிடமும் பயம். 18. கட்டளைகளை மீறுவதால் ஸம்ஸாரத்தில் உழலும் பயம். 19. தேவர்களையும் பயமுறுத்தும் தேவனிடம் பயம். 20. பவக்கடலில் திணறுவதால் பயம். 21. ம்ருத்யுபயம். 22. யமகிங்கரர்களிடம் பயம். 23. நரகயாதனைகளில் பயம். 24. தேசகால மாறுதலால் பண்ணும் குற்றங்களில் பயம். 25. வசமிழந்து காமாதிகளில் சிக்கிய பயம். 26. ப்ரஸித்தர்களும் தவிப்பதை அறிந்து பயம். 27. பரம்பொருளிடம் பயம். 28. பாவக்குவியல்களிடம் பயம். 29. பயங்கரவாதிகளான துருக்கர்களிடம் பயம். 30. துஷ்டர்களிடம் பயம்.

இந்தப் பலவகைப் பயஹேதுக்களிடமிருந்து நமக்குத் தாயார் எப்படிப் பயத்தைப் போக்குகிறாள் என்றால்:

1. நம் பணிவிடையை ஏற்றுப் பலன் அளிக்கிறாள். 2. தேவர்களுக்குக் கட்டளை இடுகிறாள். 3. நலிவிப்பவரைத் தடுக்கிறாள். 4. பெருமாளிடம் இனிமையாகப் பேசுகிறாள்.

5. கண்பார்வையாலேயே வாட்டத்தைத் தீர்க்கிறாள். 6. நமக்காக முறையிடுகிறாள். 7. நல்லோர் சேர்க்கையை உண்டாக்கிப் பதட்டத்தைத் தணிக்கிறாள். 8. உபாஸிப்பவர்களுக்கு அதிருஷ்டம் தருகிறாள். 9. வந்திப்பவர்களுக்குப் பதவிகளை நிலைக்கச் செய்கிறாள். 10. இம்மைப்பலன், மறுமைப்பலன், இரண்டையும் தருகிறாள். 10. தீனபந்துவாகிறாள். 11. தன் கடாக்ஷத்தைப் பெறநினைத்தவுடன் தடைகளை விலக்குகிறாள். 12. அடியவர்க்கு அவலம்பமாக இருந்து ஆதரிக்கிறாள். 13. வாத்ஸல்யத்தைப் பொழிகிறாள். 14. அபயம் அளிப்பதில் மகிழ்கிறாள். 15. அனுக்கிரகிக்கிறாள். 16. பீஷுகர்களின் ஸ்வபாவத்தையே மாற்றிவிடுகிறாள். 17. ஆசார்யையாகி உபதேசிக்கிறாள். 18. ப்ரபத்தி பண்ணுவிக்கிறாள். 19. அச்சுதனை அணுகுவதில் அச்சத்தை அகற்றுகிறாள். 20. சிறுமுயற்சிக்கும் பெரிய பலனை ஏற்படுத்துகிறாள். 21. ஒளிரும் திருமேனியுடன் சேவை சாதிக்கிறாள். 22. தாயாய்க் கருணை புரிகிறாள். 23. தன் கண்ணசைவுகளாலேயே தேவர்களையும் ஆட்டுவிக்கிறாள். 25. குளிர்ந்த பார்வைகளால் நோக்குகிறாள். 26. நம் சரணாகதியை ஏற்கிறாள். 26. ஈரமான மென்மையான இதயம் கொள்கிறாள். 27. பெருமாளைப் பிரியாமல் அவரிடம் (நமக்காக) வசிக்கிறாள். 28. நம்மைக் குழந்தைகளாகக் கருதுகிறாள். 29. காகத்துக்கும் அருள் புரிந்து ஸர்வோத்தரையாக இருக்கிறாள். இந்த முப்பது அர்த்தங்களையும் கவி முப்பது சுலோகங்களில் சொல்வதை இப்போது பார்ப்போம்.

1. பயமும் அபயமும் உபயமும் பயப்பவள்:-

अभयं भयमित्येतत् उभयं सर्वदेहिनाम् ।
यत्सेवातदभावाभ्यां तामहं श्रियमाश्रये ॥ १ ॥

அப₄யம் ப₄யமித்யேதத் உப₄யம் ஸர்வதேஹிநாம் ।
யத்ஸேவா ததப₄ாவாப்₄யாம் தாமஹம் ஶ்ரியமாஶ்ரயே ॥ 1 ॥

अभयं - அச்சமின்மை
भयं - அச்சம்
इति - என்கிற
एतत् - இந்த
उभयं - இரண்டுமே
सर्व-देहिनां - எல்லாப்
பிராணிகளுக்கும்
यत्-सेवा-तत्-अभावाभ्यां - எவளை
ஸேவிப்பதாலும்
ஸேவிக்காததாலும் (வருமோ)
तां - அந்த
श्रियं - லக்ஷ்மியை
अहं - நான்
आश्रये - ஆச்ரயிக்கிறேன்.

லக்ஷ்மியை ஸேவித்தால் பயம் தொலையும். ஸேவிக்காவிட்டால் பயம் உண்டாகும். எல்லா தேகிகளுக்கும் (தேவர் மநுஷ்யர் உட்பட) இதே நிலை தான். அப்படிப்பட்ட லக்ஷ்மியை நான் ஆச்ரயிக்கிறேன். (எனக்கு அபயம் கிடைக்கும்.)

அடிமை செய்தால் அபயம் தருவாள் அது செய்யார்க்கோ அச்சம் வருமாம்
அனைவர்க்குமிதே அமையும் அவளால் அத்தகு திருவை அடைகின்றேன் நான்.

2. தீயால் பயமும் தீயோர் பயமும் தீர்த்தவள்.

भजामि तां त्वां भवरोगभीतिम् पयोधिकन्ये परिहर्तुकामः ।
वह्नेर्भयं वायुभुवो ययैव न्यवारि तस्माच निशाचरीणाम् ॥ २ ॥

ப₄ஜாமி தாம் த்வாம் ப₄வரோகபீ₄திம்
பயோதி₄கந்யே பரிஹர்துகாம: ।
வஹ்நேர் ப₄யம் வாயுபு₄வோ யயைவ
ந்யவாரி தஸ்மாச்ச நிஶாசரீணாம் ॥ 2 ॥

पयोधि - कन्ये - கடலின் கன்னிகையே !
वायुभुवः - ஹநுமானுக்கு
वह्नेः - நெருப்பிடமிருந்தும்
निशाचरीणां - அரக்கிகளுக்கு
तस्मात् च - அந்த
ஹநுமானிடமிருந்தும்
भयं - அச்சம்
यया एव - எவளாலேயே
न्यवारि - தடுக்கப்பட்டதோ
तां - அப்படிப்பட்ட
त्वां - உன்னை
भव - रोग - भीतिं - ஸம்ஸார வியாதி
பயத்தை
परिहर्तुकामः - நீக்கவிரும்பும் நான்
भजामि - அடைகிறேன்.

எனக்கு ஸம்ஸார ரோகத்தால் பயம் வந்திருக்கிறது. இந்த ஸம்ஸாரத்தில் வியாதிகளால் பயம் என்பதொன்று. இந்த ஸம்ஸாரம் என்கிற வியாதியால் பயம் என்பது மற்றொன்று. இரண்டையும் பவரோகபயம் என்னலாம். இந்தப் பயத்தைப் போக்குவதற்காகக் கடலின் பெண்ணே! நான் உன்னைச் சேவிக்கிறேன். ஏனென்றால் எனக்கு ராமாயணக்கதை தெரியும். ஹனுமானுக்கு வாலில் நெருப்பு வைத்தபோது அது அவருக்குச் சுடாமல் குளிர்ந்திருந்ததாம். ஏன் நெருப்பு சுடவில்லை ? என்று அவரே ஆச்சரியப் பட்டாராம். ஸீதையைச் சேவித்துவிட்டு வந்தபின் அல்லவா அவரது வாலில் ராக்ஷஸர்கள் தீ மூட்டினார்கள் ? '' சீதோ பவ ஹநூமத:'' என்று சீதை அக்நியிடம் சொல்லிவிட்டாள். தன் இயற்கையையே மாற்றிக்கொண்டான் அக்நிதேவன். ஹனுமான் போன்ற நல்லவர்களுக்குச் சீதை அருள் புரிவாள். என் போன்ற துஷ்டர்களுக்கு உதவி செய்வாளோ ? என்று பயம். இதிலும் எனக்குத் தெளிவு ஏற்பட்டது அதே ராமாயணத்தில் வேறொரு கதையால். ராவணவதத்துக்குப் பிறகு ஹனுமான் அசோகவனத்துக்கு வந்து சீதையைத் தரிசித்தார். அவளைக் கொடுமைப்படுத்திய அரக்கிகளைக் கொல்வதற்குத் தனக்கு அனுமதி அளிக்கும்படி சீதையை வேண்டினார். ஆனால் கருணாமயியான ஸீதை அனுமதி தரவில்லை. ''அவர்கள் தாமாகக் கொடுமை செய்யவில்லை: ராவணனின் கட்டளையால் செய்தார்கள்; அதனால் அவர்களைத் தண்டிக்கலாகா'' என்று ஸீதை வாதித்தாள். ''யாருமே மற்றவர் செயலால் துன்பம் அடைவதில்லை; அவரவர் வினைப்பயனையே அனுபவிக்கிறார்கள்; இதில் பிறர் ஒரு கருவி மட்டுமே'' என்று உயர்தரமாகத் தத்துவம் பேசினாள் சீதை. ''உலகில் யார் தான் தப்பு செய்யாதவர் ? எல்லாரையும் தண்டித்து மாளுமோ ? எல்லாரிடமும் இரக்கம் காட்டவேண்டும்'' என்று நல்லுரை சொன்னாள்.

''க்ரூரர்களையும் மன்னித்து அவர்களுக்கும் நல்லதே செய்யவேண்டும்'' என்று உபதேசித்தாள். இப்படி நான்கு விதமாகப் பேசி அந்த அரக்கிகளையெல்லாம், தனக்குப் பெருந்துன்பம் விளைவித்த தீயவரையெல்லாம், மன்னித்தாள்; அவர்களை ஹனுமானிடமிருந்து காப்பாற்றினாள். இப்படிப்பட்டவளை ஆச்ரயித்தால் தான் என்போன்ற துஷ்டர்கள் அபயம் பெறமுடியும். ஆகையால் நான் லக்ஷ்மியையே சரணாகப் பற்றுகிறேன்.

அனுமர்க்குத் தீயினின்றும் அரக்கிகளுக் கனுமனின்றும்
அபயத்தை அளித்தவளை அடைக்கலமாய் அடைகின்றேன்.

3. சிங்கப்பிரானின் சீற்றத்தைச் சீர்செய்தவள்:-

प्रह्लादस्य भयं विनेतुमचिरादेकस्य शोकस्पृशो
लोकस्यैव भयङ्करं तव पतिर्जग्राह सैम्हं वपुः ।
त्रैलोक्याम्ब तदीयकोपदहनज्वालास्तु वेलातिगाः
चाटूक्तैरमृतैर्निवार्य भवती चक्रे जगन्निर्भयम् ॥ ३ ॥

ப்ரஹ்லாதஸ்ய ப₄யம் விநேதும் அசிராத் ஏகஸ்ய
ஶோகஸ்ப்ருஶோ
லோகஸ்யைவ ப₄யங்கரம் தவ பதிர் ஜக்₃ராஹ ஸைம்ஹம் வபு: ।
த்ரைலோக்யாம்ப₃ ததீய கோப த₃ஹந ஜ்வாலாஸ்து வேலாதிகா:
சாடூக்தை ரம்ருதைர் நிவார்ய ப₄வதீ சக்ரே ஜக₃ந்நிர்ப₄யம் ॥ 3 ॥

त्रैलोक्याम्ब - மூவுலகுக்கும் தாயே !
शोकस्पृशः - துயரம் கலந்த
प्रह्लादस्य - ப்ரஹ்லாதன் என்கிற
एकस्य - ஒருவனுடைய
भयं - அச்சத்தை
विनेतुं - போக்குவதற்காக
लोकस्य एव - உலகத்துக்கே
भयङ्करं - பயங்கரமான
सैम्हं वपुः - சிங்க வடிவத்தை
तव - உன்னுடைய
पतिः - கணவர்
अचिरात् - விரைவாக
जग्राह - ஏற்றார்.
वेलातिगाः - கரைபுரண்ட

तदीय-कोप-दहन-ज्वालाः तु- அவருடையதான கோபக்கனலின் ஜ்வாலைகளையே	निवार्य - தடுத்து
	भवती - நீர்
	जगत् - உலகை
वाक्तैः - இன்மொழியாகிற	निर्भयं - அச்சமற்றதாக
अमृतैः - அமுதங்களால்	चक्रे - பண்ணினீர்.

மூவுலகுக்கும் அன்னையே ! நீ மூவுலகத்துக்கும் முன்பொருமுறை ஏற்பட்ட பயத்தைப் போக்கினாய். ''த்ரைலோக்யாம்பா'' என்ற பெயர் பொருத்தமானது தான். இது நரசிம்மாவதார சமயத்தில் நடந்த கதை. சிறுவன் ப்ரஹ்லாதனுக்குத் துன்பம் வந்தபோது அவனது பயத்தைப் போக்குவதற்காக அவதரித்தார் உன் கணவர். பயங்கரமான நரசிங்க உருவை எடுத்துக் கொண்டார். அதிவிரைவில் தோன்றினார். ப்ரஹ்லாதன் பயத்தைப் போக்கவேண்டும் என்ற அவரது நோக்கமும், அதில் காலம் தாழ்த்தக்கூடாது என்ற த்வரையும், அதற்காகப் பயங்கரமான ரூபத்தில் அவதரிக்கவேண்டும் என்ற அவரது எண்ணமும், இந்த மூன்றுமே சரியானவை தான். ஆனால் அவருடைய உக்ரரூபத்தைக்காண உலகம் முழுதும் பயந்து நடுங்கியது. ஒருவனுடைய பயத்தைப் போக்க வந்தவரால் உலகமெலாம் பயந்தது. வைத்தியக்கஷ்டத்தை விட வியாதிக்கஷ்டமே பரவாயில்லை என்று ஒரு பழமொழி சொல்வார்களே, அதுபோல் ஆயிற்று. உக்ரநரசிம்மரின் கோபக்கனலில் அலறும் உலகுக்கு யார் அபயம் அளிக்கவல்லவர் ? பெருமாளே பயம் விளைவித்தால் காப்பவர் ஆர் ? லக்ஷ்மியே ! உன்னால் மட்டுமே அது முடிந்தது. நீ பெருமாளிடம் கனிவாகப் பேசினாய். அமுதமொழியால் அவருடைய கோபத்தைத் தணித்தாய். நரசிம்மரின் கோபம் என்னும் நெருப்பை அணைக்கும் நீராய் அமைந்தது உன் சாதுர்யம். (அம்ருதம் என்ற சொல்லை இரண்டு அர்த்தங்களில் கையாண்டிருக்கிறார் ங்கே கவி.) இப்படி முழு உலகின் பயத்தை நீக்கினாள் லக்ஷ்மி.

பெருமாளுக்கும் தாயாருக்கும் உள்ள வாசியை வேடிக்கையாகக் காட்டுகிறார் கவி. ஒருவன் பயத்தைத் தீர்க்க வல்லவர் பெருமாள். உலகின் பயத்தைத் தீர்க்கவல்லவள் தாயார். ஹிரண்யனிடமிருந்து பயத்தைத் தீர்த்தார் பெருமாள். அப்படிப்பட்ட அவரால் ஏற்பட்ட பயத்தையே தீர்த்தாள் தாயார்.

நீரஜையே நரசிம்மர் நெருப்பாகச் சினக்கையில்
நீரன்றோ நன்மொழியாம் நீர்கொண்டு நெருப்பணைத்தீர் ?

4. புகலிலார் புரியும் பிழைகளைப் பொறுக்கச்செய்பவள்:-

अशरणजनक्लेशालोकक्षणोपनतोद्गतेः
स तव हृदयग्लानेर्भीतो जगत्पतिरिन्दिरे ।
अहह विहितं क्षाम्यन्नागस्सहस्रमजस्रमपि
अभयमुभयोरारात्तेभ्यः प्रयच्छति लोकयोः ॥ ४ ॥

அசரண ஜந க்லேசாலோக க்ஷணோபநதோத்கதே:
ஸ தவ ஹ்ருதயக்லாநேர் பீ₄தோ ஜகத்பதி ரிந்திரே ।
அஹஹ விஹிதம் க்ஷாம்யந்நாகஸ் ஸஹஸ்ர மஜஸ்ரமப்
யப₄யமுப₄யோ ராராத் தேப்₄ய: ப்ரயச்சதி லோகயோ: ॥ 5 ॥

इन्दिरे - லக்ஷ்மியே!
अशरण-जन-क्लेश-आलोक-क्षण-उपनत-उद्गतेः- புகலிடமற்ற மக்களின் துயரைக் கண்டவுடன் எழுச்சியடைந்த
तव - உன்
हृदय-ग्लानेः- இதயச்சோர்விலின்றும்
भीतः- பயந்தவராய்
सः- அந்த
जगत्पतिः- ஜகன்னாதன்
अजस्रं- தொடர்ந்து
विहितं - செய்யப்பட்ட
आगस्-सहस्रं अपि- ஆயிரக்கணக்கான குற்றங்களையும்
क्षाम्यन्- மன்னித்துக்கொண்டு
तेभ्यः- அவர்களுக்கு
उभयोः- இரண்டு
लोकयोः- உலகங்களிலிருந்தும்
अभयं - பயமின்மையை
आरात्- அருகில்
प्रयच्छति - கொடுக்கிறார்.
अहह- ஆச்சரியம்.

கதியில்லாத மக்கள் இருக்கிறார்களே, தீனர்களும் அனாதைகளும்; அவர்களுக்குத் துன்பம் நேர்ந்தால், அதைப் பார்த்தவுடனே தீனபந்துவான லக்ஷ்மிதேவிக்குப் பரிவு உண்டாகும். அவள் இதயத்தில் சோர்வு உண்டாகும். ஆனால் அவளுக்குச் சிறிதே மனவருத்தம் ஏற்பட்டாலும் அதற்கு அஞ்சுவார் ஜகந்நாதனான பெருமாள். அதனால் அவர் லக்ஷ்மியின் மனவாட்டத்தைத் தவிர்ப்பதற்காகத் தீனர்களுக்குப் பல வகையிலும் உதவி புரிகிறார். அவர்கள் தொடர்ந்து செய்யும் அளவற்ற தப்புகளையும் மன்னித்துவிடுகிறார். அவர்களுக்கு இஹலோகத்திலும் பரலோகத்திலும் உண்டாகும் பயங்களையெல்லாம் நிவர்த்திக்கிறார். அபயம் அளிக்கிறார்.

பெருமாள் நம் பாவங்களை மன்னிப்பதும், நமக்கு அபயம் அளிப்பதும் நம் தகுதியினால் அன்று. அவருக்கு நம் மேல் உள்ள அதீதக்கருணையாலும் அன்று; நம் மேல் அளவு கடந்த வாத்ஸல்யம் கொண்ட தாயாரான லக்ஷ்மியிடம் அவர் கொண்டுள்ள பிரேமை தான் நமக்கு இந்த நன்மைகளை விளைவிக்கிறது என்று சமத்காரமாகப் பேசுகிறார் கவி. இப்படிச் சொல்வதால், லக்ஷ்மியின் தயையும் வாத்ஸல்யமும், எளியோரிடம் இரக்கமும், பெருமாளிடம் அவளுக்குள்ள வால்லப்யமும், ஒருசேரப் பேசப்பட்டன. இதன் விளைவாக, எளியவர்க்குப் பாவமன்னிப்பு கிடைப்பது மட்டுமின்றி, இம்மையிலும் மறுமையிலும் அபயமும் கிடைக்கிறது.

இந்திரை நம் இன்னல்களால் இதயத்தில் இரங்குகிறாள்.
இதற்கஞ்சி இறையவன் நம் இடர்களைவான் இகபரத்தில்
கதியற்றார் கஷ்டங்கள் கண்டவுடன் கணப்பொழுதில்
கமலை மனம் கலங்குவதால் கடவுள் அதற் கஞ்சபவர்
கணக்கற்ற கடுவினைகள் கடிதாக க்ஷமிக்கின்றார்
கவலையிலை காக்கின்றார் கடலரசன் கன்னிக்காய்

<u>5. மின்னல் ஒளியாள் இன்னல் துடைப்பாள்:-</u>

मुक्तस्त्वया मुह्यति साध्वसं गतः सर्वाम्ब युक्तं खलु साध्वसङ्गतः ।
यस्त्वामुपासीत भयाऽतिचञ्चलाम् चित्रं स धन्यो न भयातिचञ्चलः ॥५॥

முக்தஸ் த்வயா முஹ்யதி ஸாத்₄வஸம் கத:
ஸர்வாம்ப யுக்தம் க₂லு ஸாத்₄வஸங்கத: ।
யஸ்த்வாம் உபாஸீத ப₄யாதிசஞ்சலாம்
சித்ரம் ஸ த₄ந்யோ ந ப₄யாதிசஞ்சல: ॥ 5॥

सर्वाम्ब - எல்லாருக்கும் தாயானவளே!
त्वया - உன்னால்
मुक्तः - கைவிடப்பட்டவன்
साध्वसं - பதட்டத்தை
गतः - அடைந்தவனாய்
मुह्यति - மயங்குகிறான்.
साधु- असङ्गतः - நல்லோரோடு சேர்க்கை இல்லாதவன் (ஆகிறான்)
युक्तं खलु - பொருத்தம் தானே?

यः - எவன்
भया - ஒளியால்
अतिचञ्चलां - மின்னலை மீறின
त्वां - உன்னை
उपासीत - தியானிப்பானோ
सः - அந்த
धन्यः - பாக்கியசாலி
भय-अति-चञ्चलः - பயத்தால் மிகவும் நடுங்குபவனாக
न - இல்லை.
चित्रं - ஆச்சரியம்.

ஸர்வமாதாவான லக்ஷ்மியே! நீ ஒருவனைக் கைவிட்டால், அவனுக்கு மூன்று கேடுகள் விளைகின்றன. ஒன்று, அவன் பதற்றம் அடைகிறான். (என்ன ஆகுமோ என்று அஞ்சுகிறான்.) நல்லவரோடு சேராதொழிகிறான். (ஸத்ஸங்கம் அடைவதற்கே லக்ஷ்மிகடாக்ஷம் வேண்டும்.) மோஹிக்கிறான். (அறியாமையால் மயங்குகிறான்.) இதற்கு நேர்மாறாக உன்னை எவன் மின்னலை விஞ்சிய காந்தி உள்ளவளாக உபாஸிக்கிறானோ, அவன் அதிருஷ்டக்காரனாகிறான். பயத்தால் நடுங்குவதில்லை.

இந்த ச்லோகத்தில் ஸாத்வஸங்கத: என்பதற்கும் பயாதிசஞ்சல: என்பதற்கும் இரண்டிரண்டு அர்த்தங்கள். ஸாத்வஸங்கத: என்று பிரித்தால் பதற்றமடைந்தவன் என்று அர்த்தம். ஸாது அஸங்கத: என்று பிரித்தால், ஸத்ஸங்கம் இல்லாதவன் என்று அர்த்தம். இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று காரணமாவதாகக் கொள்ளலாம். பதற்றமடைபவனோடு நல்லவர் சேர்வதில்லை. நற்சேர்க்கை இல்லாதவர்க்குப் பதற்றம் ஏற்படும்.

பயா அதிசஞ்சலா என்று பிரித்தால் ஒளியால் மின்னலை விஞ்சுபவள் என்று அர்த்தம். வித்யுல்லேகேவ பாஸ்வரீ என்று வேதம் சொல்வது போல். இதையே பய-அதிசஞ்சல என்று பிரித்தால் அச்சத்தால் மிக நடுங்குபவன் என்று அர்த்தம்.

ஒன்று யுக்தம் என்கிறார். இன்னொன்று விசித்ரம் என்கிறார்.

ஸாத்வஸம் அடைபவன் ஸாது- அஸங்கதனாவது யுக்தமே. அதே பதத்தின் இரண்டு அர்த்தங்கள் ஒருவனுக்கு அமைவது பொருத்தமே. ஆனால் மின்னல் போல் ஒளிரும் தாயாரை உபாஸிப்பவன் பயம் நீங்குகிறான் என்கையில், பயாதிசஞ்சலையை உபாஸித்து, எதிர்மாறாக நபயாதிசஞ்சலன் என்று ஆவது ஆச்சரியம், உபாஸித்தபடியே ஆவான் என்கிற தத்க்ரதுந்யாயத்துக்கு முரண்படுவதால்

ஆச்சரியம். இந்த ச்லோகத்தில் நீதிகள்:

1. நற்சேர்க்கை நிம்மதி அளிக்கும். ஸாதுஸங்கம் இல்லாதவர்க்குப் பயம் உண்டாகும்.

2. லக்ஷ்மிகடாக்ஷத்தால் ஸாது ஸங்கமும் அபயமும் ஏற்படும்.

3. தான் பயாதிசஞ்சலை ஆனாலும் (வேறு அர்த்தத்தில்) தன் பக்தர்கள் பயாதிசஞ்சலர் ஆகாதபடி காப்பவள் லக்ஷ்மி.

பத்மையே நீ விட்டால் பதற்றத்தை அடைகின்றான்.
பெரியோரைச் சேராமல் பெருமயக்கம் பெறுகின்றான்.
ஒளிமின்னும் உன்னைத்தன் உபாஸனையில் உடையவனோ
உதறுகிறான் பயநடுக்கம் உன்னதியை உடையவனாய்.

<u>6. இகத்திலும் பரத்திலும் இடர்தொலை இன்பத்தாள்:-</u>

वन्देत मन्देतरनित्यबोधा नन्दे मुकुन्देष्टपुरन्ध्रि यस्त्वाम् ।
अत्रासं अत्रासनं एति सैम्हं चित्रां अमुत्रापि स याति ऋद्धिम् ॥ ६ ॥

வந்தேத மந்தேதரநித்யபோதா
நந்தே முகுந்தேஷ்டபுரந்த்ரி யஸ்த்வாம் ।
அத்ராஸம் அத்ராஸநம் ஏதி ஸைம்ஹம்
சித்ராம் அமுத்ராபி ஸ யாதி ருத்திம் ॥ 6 ॥

मन्द- इतर-नित्य-बोध-आनन्दे - அபரிமிதமான நித்யமான அறிவும் ஆனந்தமும் ஆனவளே!
मुकुन्द-इष्ट पुरन्ध्रि- முகுந்தனின் ப்ரியபத்நியே!
यः - எவன்
त्वां - உன்னை
वन्देत - வணங்குவனோ
सः - அவன்
अत्र - இகலோகத்தில்
अत्रासं - ஆட்டம் காணாத
सैंहं आसनं - சிங்காதனத்தை
एति - அடைகிறான்.
अमुत्र अपि - பரலோகத்திலும்
चित्रां - ஆச்சரியமான
ऋद्धिं - சொல்வத்தை
याति - அடைகிறான்.

லக்ஷ்மியே! நீ அறிவுமயமானவள். ஆனந்த மயமானவள். அளவுகடந்ததும் என்றும் இருப்பதான ஜ்ஞாநந்தமயை. (உன் அறிவும் இன்பமும் அளவிறந்தவை, சாச்வதமானவை என்று ஒரு அர்த்தம். நீயே அத்தகைய

அறிவும் ஆனந்தமும் ஆனவள் என்றும் அர்த்தம்.) மேலும் நீ திருமாலின் பத்தினிகளுள் ப்ரியதமையானவள். ஆகையால் உன்னை வணங்குபவர்க்கு இம்மைப் பயனும் மறுமைப்பயனும், இரண்டுமே நன்கு கிடைக்கின்றன. இவ்வுலகில் ஆட்டம் காணாத சிங்காதனம், அதாவது நிலைத்த பெரும்பதவி கிடைக்கிறது. வேற்றுலகத்தில் ஆச்சரியமான செல்லம் கிடைக்கிறது. த்ராஸம் என்பதற்கு இரண்டு அர்த்தங்கள். ஆடுவது, நடுங்குவது, என்று ஒன்று. பயம், பீதி, என்று ஒன்று. த்ராஸம் இல்லாத ஸிம்மாஸநம் என்கையில் இரண்டு அர்த்தங்களும் பொருந்தும். ஸிம்மாஸனம் ஆடவில்லையென்றால், நிலைத்துள்ள ஆளுமை என்று கருத்து. அவனுக்குப் பகைவர் பயமோ, துரதிருஷ்ட பயமோ, அற்பாயுள் பயமோ இல்லை என்பதும் அர்த்தமாகலாம். அத்ராஸநம் என்பதற்கும் இரண்டு அர்த்தங்கள். அத்ர - ஆஸநம் என்று பிரித்தால் இகலோகத்தில் பதவி என்று அர்த்தம். அ-த்ராஸநம் என்று பிரித்தால் பயமுறுத்தாதபடி என்று அர்த்தம். விசேஷ்யபதம் தேவையானதால் முதல் அர்த்தத்தை மட்டும் கொள்வர் பலர்.

பரலோகச் செல்வம் விசித்திரமாக உண்டாகும் என்கிறார். அப்ராக்ருதமானதால் விலக்ஷணமானது என்ற கருத்து. அல்லது இந்த்ராதி பதவிகளும் இவனுக்கு ஆச்சரியமாக ஏற்படக்கூடும். லக்ஷ்மி உபாஸகனுக்கு அவனே எதிர்பாராத பலவகைச் செல்வங்கள் பரலோகத்திலும் கிடைக்குமாம். மற்ற தேவதைகள் தராததை லக்ஷ்மி எப்படி தரமுடியும்? என்பதை இரண்டு ஸம்போதனச் சொற்களும் தெரிவிக்கின்றன. அவளே பரம்பொருளுக்கு இலக்கணமாகச் சொன்ன ஜ்ஞாநநந்தம் ஆனவள். ஈச்வரகோடியைச் சேர்ந்தவள். ப்ரம்மாதி தேவர்களைப் போல் ஜீவாத்மா அன்று. (இது தேசிக

ஸம்ப்ரதாயம்.) இரண்டாவது காரணம் அவள் திருமாலின் இனிய துணைவி. அவளால் ஆகாதது உண்டோ?

இன்பமே வடிவானாய் இறையவனின் இன் துணையே!
இங்குன்னை இறைஞ்சுபவர் எவராக இருந்தாலும்
இழிவில்லா இருக்கையில் இகவுலகில் இனிதாள்வர்.
இனிப்போகும் உலகத்தும் இருத்திமிகச் சிறந்திடுவர்.

7. சிறியோரைச் சிறைமீட்கும் சீர்கொண்டவள்:-

कारागारादपि किल भृशं तापदे पापदेहे
हन्ताहन्तामतिमतिविपन्मिश्रितामाश्रितानाम् ।
पारावाराधिपतितनये मादृशामीदृशानाम्
हित्वा हि त्वा त्रिजगति गतिर्नेतरा कातराणाम् ॥ ७ ॥

காராகாராதபி கில ப்₄ருஶம் தாபதே₃ பாபதே₃ஹே
ஹந்தாஹந்தாமதிமதிவிபந்மிஶ்ரிதாம் ஆஶ்ரிதாநாம் ।
பராவாராதி₄பதி தநயே மாத்ருஶாம் ஈத்ருஶாநாம்
ஹித்வா ஹி த்வா த்ரிஜக₃தி க₃திர் நேதரா காதராணாம் ॥ 7 ॥

पारावार - अधिपति - तनये - கடலரசனின் குமரியே!
कारागारात् अपि - சிறையைக் காட்டிலும்
ताप -दे किल - துயர் தருவதாகப் பிரசித்தமான
पाप- देह - பாவசரீரத்தில்
हन्त - ஐயோ!
अति - विपत् - मिश्रितां - பெரிய விபத்துகள் கலந்த
अहन्ता - मतिं - அகம்பாவத்தை
आश्रितानां - அடைந்தவர்களும்
कातराणां - கோழைகளுமான
ईदृशानां - இத்தகைய
मादृशानां - என்போன்றோருக்கு
त्वा - உன்னை
हित्वा - விட்டு
इतरा - வேறு
गतिः - புகல்
त्रिजगति - மூவுலகிலும்
न - இல்லை
हि - அல்லவா?

சமுத்திரத்தின் பெண்ணே! நாங்கள் சிறைக்கூடத்தை விடக் கொடியதான கர்மக்ருதமான சரீரத்தில் சிக்கிக்கொண்டவர்கள். (எங்கள் உடல் சிறையை விடத் துன்பம் தருவது.) ஐயோ! நாங்கள் போதாக்குறைக்கு அகந்தை பிடித்தவர்கள். இந்த அகங்காரம் பேராபத்தை விளைவிக்கக் கூடியது. அந்த விபத்துகளிலும், அவற்றுக்கு ஹேதுவான அகம்பாவத்திலும் மாட்டிக் கொண்டவர்கள். மேலும் நாங்கள் கோழைகள். துணிவில்லாதவர்கள். இவ்வளவு பரிதாபமான நிலையில் இருக்கும் எங்களுக்கு உன்னை விட்டால் வேறு கதி ஏது? மூன்று உலகங்களிலும் எம்போன்றவர்க்கு உதவக்கூடியவர் யாருமில்லை. நீ தான் கதி.

கடுஞ்சிறையில் கருமத்தால் கட்டுண்டோம் கோழைகள் யாம்.
கடலரசன் கன்னியலால் கதியில்லை கதறுகிறோம்.

இந்த ச்லோகத்தில் சொன்ன கருத்துகள்:

1. நமது சரீரம் என்ற சிறை மற்ற சிறைகளைக்காட்டிலும் கொடியது. மற்ற சிறைகளில் அடி உதை அதிகமே என்றால், அதுகூட இந்தச் சரீரச்சிறையில் இருப்பதால் தானே அடி உதை வேதனைகள்? மற்ற சிறைகளிலிருந்து தப்பிக்கலாம், சிறையில் அடைத்தவன் தோற்றோ மறைந்தோ இறந்தோ போனபோது. ஆனால் இந்த ஸம்ஸாரச்சிறையில் எங்களை அடைத்த ஸர்வாதிபதி சாச்வதமானவன். மற்ற சிறைகளிலிருந்து தப்பிக்கலாம், அந்தக் கட்டிடம் பாழாகி இடியும் போது. ஆனால் இந்தச் சரீரம் பாழ்படுகையில், உடனே வேறு சரீரச்சிறை வந்துவிடுமாம். இதிலிருந்து விடுதலை என்பது மோக்ஷம். அவ்வளவு எளிதன்று. சிறையிலிருக்கும் நாட்களிலும், தாபத்ரயங்கள் இதில் அதிகம்.

2. ஸம்ஸாரச்சிறை மற்ற காராகாரங்களைவிடக் கொடுமையானது என்பது பலரும் அறிந்ததே.

ஆசார்யர்களும் அனேகக் கிரந்தங்களில் சொன்ன பழைய கருத்தே. கில என்ற பதத்தால் இதைத்தெரிவிக்கிறார் கவி.

3. பாபதேஹம் என்பதற்கு பாவத்தால் வந்த தேகம் என்றோ, பாவத்துக்கான தேகம் என்றோ, பாவமான தேகம் என்றோ பொருள் சொல்லிக் கொள்ளலாம். வினைப்பயனாக ஸம்ஸாரம் என்பது தகுந்த பொருள்.

4. இந்தச் சிறையிலிருந்து நன்னடத்தை காரணமாகத் தண்டனை குறைந்து வெளிவரலாகாதோ என்றால், நாங்கள் அகந்தை கொண்டவர்கள். இதனால் மேன்மேலும் விபத்துகளை ஏற்படுத்திக் கொள்ளுகிறோம். சிறைத் துன்பங்களை அதிகமாக்கிக் கொள்கிறோம்.

5. இதிலிருந்து சொந்த முயற்சியால் மீளலாகாதோ என்றால், நாங்கள் காதரர்கள், தைரியம் அற்றவர்கள், கோழைகள், துணிச்சல் இல்லாதவர்கள்.

6. வேறு தேவதைகளின் உதவியை நாடக்கூடாதோ என்றால், எங்களைப் போலவே அவர்களும் சிறையில் இருக்கிறார்கள். சில அதிகப்படி சலுகைகளுடன் சிறையில் அடைபட்டவர்கள் அவர்கள். அவ்வளவு தான். இதனால் இதரா கதி: ந என்றார். பெருமாளையே கதியாகக் கொள்ளலாமே என்றால் மஹாபாபிகளான நாங்கள் பிராட்டி மூலம் தான் அவரை அணுகமுடியும். இதை ஈத்ருசாநாம் என்பதால் சொன்னார்.

பாழும் அகம் பாவத்தால் பாவ உடல் பாடுறுவோம்.
பாற்கடலின் பெண்ணல்லால் பாரிலெமைக் காப்பாரர்?

காராகாரா என்றும், ஹந்தாஹந்தா என்றும், பாராவாரா என்றும், ஹித்வா ஹித்வா என்றும் பாதாரம்பங்களில் ப்ராஸங்கள். தாபதே பாபதே என்றும், மிஶ்ரிதாமாஶ்ரிதா என்றும், மாத்ருபாமீத்ருபா என்றும், நேதரா காதரா என்றும் பாதங்களின் முடிவுக்கருகிலும்

ப்ராஸங்கள், மதிமதி என்றும், கதிகதி என்றும், இடையிலும் ப்ராஸங்கள்

ஹித்வா என்ற சொல்லில் சிலேடை. க்ருத்வா, மத்வா என்பவை போல த்வா என்னும் விகுதிகொண்ட ஒரே பதமாகக் கொண்டால் 'விட்டுவிட்டு' என்று அர்த்தம். இதையே ஹி என்றும் த்வா என்றும் இரண்டு பதமாகக் கொண்டால், அல்லவா என்றும் உன்னை என்றும் பொருள் படும். உன்னை விட்டால் வேறு கதியில்லை அல்லவா என்று அன்வயம்.

வேகின்றோம் உடற்சிறையில் வேண்டாத அகந்தையுடன்.
வேறில்லை கதி எமக்கு, வேலைமகள் விட்டிட்டால்.

<u>8. தன்விழி தரவே தடைகளைத் தகர்ப்பவள்:-</u>

भावी यस्मिन् भगवति भवद्दृष्टिलेशः कृतार्थे
त्रासो न्यासोपहतविपदस्तस्य न स्यात्कुतोऽपि ।
अस्मिन्नर्थे जननि सुरसासिंहिकादेरभीतो
लङ्कायामप्यविहतगती रामदासः प्रमाणम् ॥ ८ ॥

பா$_4$வீ யஸ்மிந்ப$_4$க$_3$வதி ப$_4$வத்த்$_3$ருஷ்டிலேஶ: க்ருதார்தே$_2$
த்ராஸோ ந்யாஸோபஹதவிபத$_3$ஸ் தஸ்ய ந ஸ்யாத் குதோபி ।
அஸ்மிந்நர்தே$_2$ ஜநநி ஸுரஸாஸிம்ஹிகாதே$_3$ரபீ$_4$த:
லங்காயாமப்யவிஹதக$_3$தீ ராமதாஸ: ப்ரமாணம் ॥ 8 ॥

भगवति - பகவதியே!
जननि - தாயே!
यस्मिन् - எந்த
कृतार्थे - தந்யனிடம்
भवत्- दृष्टि- लेशः - உம் கடாக்ஷத்தில் சிறிது
भावी - ஏற்படப்போகிறதோ
न्यास-उपहत-विपदः - அடைக்கலத்தால் அடிபட்டுப்போன ஆபத்துகளையுடைய
तस्य - அவனுக்கு
कुतः अपि - எங்கிருந்தும்
त्रासः - பயம்
न स्यात् - உண்டாகாது.

सुरसा-सिंहिका-आदेः - ஸுரஸை, ஸிம்ஹிகை, முதலியவரிடமிருந்து
अभीतः - பயமடையாதவரும்
लङ्कायां अपि - லங்கையிலும்
अविहत-गतिः - தடைப்படாத போக்கை உடையவருமான
रामदासः - ராமதாஸனான ஹனுமார்
अस्मिन् - இந்த
अर्थे - விஷயத்தில்
प्रमाणं - சான்றாவார்.

பகவதி லக்ஷ்மியே! உன் கடாக்ஷத்துக்கு எவ்வளவு பெருமை! ஒருவன் மேல் அந்தக் கடாக்ஷம் பட்டபிறகு தான் பலன் என்றில்லாமல், படுவதற்கு முன்னமேயே பலனளிக்கவல்லது உன் பார்வை. உன் கடாக்ஷத்தை நாடி வந்தாலே போதும். இனிமேல் வரப்போகிற உன் அருட்பார்வை அவனை இப்பொழுதே உயர்த்திவிடும். உன் மேல் பாரத்தைப் போட்டு அடைக்கலம் புகுந்த அவனுக்கு வரும் ஆபத்துகளை நீக்கிவிடும். இதற்கான சான்று ராமாயணக் கதையில் உள்ளது. ஹனுமார் உன்னை (சீதையை)த் தேடிப்புறப்பட்டார். சமுத்திரத்தைத் தாண்டலானார். அவருக்குத் தடங்கல்களாக வந்த ஸுரஸா, ஸிம்ஹிகா, முதலிய எதிலுமே அவருக்குப் பயம் இல்லை. பிறர் புகுவதற்கரிய லங்காபுரியில் கூட அவர் தடையின்றி ஸஞ்சரித்தார். யாருக்குமே பயப்படவில்லை. இவ்வளவு அஞ்சாமை அவருக்கு எப்படி வந்தது? எல்லாம் ஸீதாதேவியான உன் மஹிமை தான். உன் கடாக்ஷத்தைப்பெற விரும்பிய ஹனுமார் மேல் உன் கடாக்ஷம் வரப்போகிறது என்பதாலேயே அவருக்குப் பயமின்மையும் ஜயமும் கிடைத்தன. அவ்வளவு பெருமை உன் அருட்பார்வைக்கு. அதைப் பெறப்போகிறவர் எதற்கும் அஞ்சுவதில்லை.

உன் பார்வை வேண்டுமெனும் உத்தேசம் உடையவரே
உபத்ரவங்கள் இல்லாமல் உயர்ந்திடுவர் ஹனுமார் போல்.

இந்த ச்லோகத்தில் சில விசேஷக் கருத்துகள்:-

1. பாவீ (भावी) என்ற பதத்தால் சொல்லவந்த கருத்து:- உன் கடாக்ஷம் வரப்போகிறதென்றால், அதன் நற்பலன்கள் முன்னமே கிடைக்கத் தொடங்கிவிடும் என்பது.

2. லேசः என்ற பதத்தால் சொல்லவந்த கருத்து:- ஒரு சிறிது கடாக்ஷமே ஏராளமான நற்பலன்களை விளைவிக்கும் என்பது.

3. ந்யாஸ என்ற பதத்தால் சொல்லவந்த கருத்து நுண்ணியது. இந்தப் பதத்திற்கு இரண்டு அர்த்தங்கள். ஒன்று சரணாகதி. சரணாகதியால் விபத்துகள் விலகும் உன் கடாக்ஷப்பலனாக. சரணாகதியைப் பண்ணவைத்து விபத்துகளை விலக்கும் வரவிருக்கும் உன் அருட்பார்வை எனக்கருத்து. ந்யாஸ பதத்துக்கு இன்னொரு அர்த்தம் வைப்புப்பொருள். ஹநுமாரிடம் ராமன் மோதிரம் வைப்புப் பொருளாக இருந்தது. அதனால் அவருக்கு ஆபத்துகள் அகன்றன. அதற்குக்கூட ஸீதா கடாக்ஷமே காரணம் என்கிறார்.

4. க்ருதார்த்தே என்ற பதத்தால் சொல்லவந்தது:- இதற்கெல்லாம் ஒரு கொடுப்பினை வேண்டும். பாக்யசாலிகளுக்கு மட்டுமே (முன்னமே பலனளிக்கத் தொடங்கும் மஹாமஹிமை பெற்ற) லக்ஷ்மிகடாக்ஷம் கிட்டும்.

5. குதோபி என்ற பதங்களால் சொல்லவந்த கருத்து:- இந்த லக்ஷ்மிகடாக்ஷபாத்ரமாகப் போகிறவனை யாருமே பயமுறுத்த முடியாது. யாருமே தடுக்கமுடியாது. எங்கிருந்தும் பயமில்லை.

6. ஸுரஸா ஸிம்ஹிகாதே: என்ற பதத்தால் சொல்லவந்த கருத்து:- தடங்கல்கள் இருந்தாலும் பயமில்லை என்பது. ஸுரஸாவும் ஸிம்ஹிகாவும்

பயங்கரமானவர்கள் தான். ஆனால் அவர்களால் ஹனுமானை என்ன பண்ணமுடிந்தது? ஸுரஸா பெரிதாக வாயைத் திறந்துகொண்டு ஹனுமானைச் சாப்பிடத் துணிந்தவள். அவளை ஒரு தந்திரம் பண்ணி, மிகப்பெரிய உருவெடுத்து திடீரென்று உருவைச் சுருக்கி வாயில் புகுந்து வெளிவரும் தந்திரம் பண்ணி, ஹனுமார் வெற்றி அடைந்ததாகக் கதை. ஸிம்ஹிகா என்ற ராக்ஷஸி நிழலைப் பிடித்து ஹனுமானை இழுத்தவள். அவளும் ஹனுமானை விழுங்க வந்தவள். பயமின்றி அவளுள் புகுந்து குடலையும் ஈரலையும் பிடுங்கிக்கொண்டு வெளிவந்தார் ஹனுமார். ஆதே: என்பதால், நல்லெண்ணத்துடன் குறுக்கே வந்த மைநாக பர்வதம், ஊருக்குள்ளே போகக்கூடாதென்று வழிமறித்த லங்கா, எதற்குமே அவர் அஞ்சவில்லை எனக் கருத்து.

சானகியின் பார்வைக்காய்ச் சாகரத்தைத் தாண்டுகையில்
சாதனைகள் செய்திட்டுச் சான்றானார் ஹனுமாரும்.

9. அடியை அடைந்தவர்க்கு அவலம்பமான அன்னை:-

जनिमृतिजराभीष्मात् ग्रीष्मातपोग्रतरात् भवात्
जननि न वयं वित्रस्यामः त्वदंघ्रिं उपाश्रिताः ।
सति बलवदालम्बे स्याद्दुर्बलोऽप्यकुतोभयः
त्रसति मृगयोः किं वा पद्मे मृगो विधुं आश्रितः ॥ ९ ॥

ஜநி ம்ருதி ஜரா பீ$_4$ஷ்மாத் க்$_3$ரீஷ்மாதபோக்$_3$ரதராத் ப$_4$வாத்
ஜநநி ந வயம் வித்ரஸ்யாம: த்வதங்க்$_4$ரி முபாஸ்ரிதா: ।
ஸதி ப$_3$லவத$_3$ாலம்பே$_3$ ஸ்யாத் து$_3$ர்ப$_3$லோப் யகுதோப$_4$ய:
த்ரஸதி ம்ருக$_3$யோ: கிம் வா பத்$_3$மே ம்ருகோ$_3$ விது$_4$ம்
ஆஸ்ரித: ॥

जननि - தாயாரே !
जनि-मृति - जरा - भीष्मात् - பிறப்பு, இறப்பு, மூப்பு, இவற்றால் பயங்கரமானதும்
त्वत्-अङ्घ्रिं - உன் திருவடியை
उपाश्रिताः - அணுகி அடைந்த
वयं - நாங்கள்
न वित्रस्यामः - அஞ்சவில்லை.
बलवत् - आलम्बे - பலசாலிகளின் சார்பு
सति - இருக்கும்பொழுது
दुर्बलः अपि - பலஹீனன் கூட
अकुतोभयः - எதற்கும் அஞ்சாதவனமாக
स्यात् - ஆகிறான்.
पद्मे - தாமரையாளே !
विधुं - சந்திரனை
आश्रितः - அடைந்துள்ள
मृगः - மானானது
मृगयोः - வேடனிடமிருந்து
त्रस्यति या किं - பயப்படுகிறதா என்ன ?

இந்தக் கொடிய ஸம்ஸாரத்தில் எங்களுக்குப் பயமில்லை, தாயாரே ! ஜனனம், மரணம், ஜரை, இவற்றால் பயங்கரமான ஸம்ஸாரம் கோடைவெயிலைக் காட்டிலும் கொடியதாக இருந்தபோதும், நாங்கள் அதற்குப் பயப்படவில்லை. ஏனென்றால், நாங்கள் உன் திருவடியை அடைந்துவிட்டோம். பலசாலியைப் பற்றிக் கொண்டபின் பலஹீனன் கூட எதற்குமே பயப்படாமல் இருப்பான் அல்லவா ? சந்திரனின் மத்தியில் இருக்கும் மான் வேடனுக்குப் பயப்படுகிறதோ ? இல்லையே ! வேடனால் தன்னை ஒன்றும் செய்யமுடியாது என்று நிர்ப்பயமாக இருக்கிறது அந்த மான் - சந்திரனின் களங்கம் என்னும் மான். அதுபோலவே நாங்களும் உன் திருவடியைப் பற்றிக்கொண்டபின் யாரும் எங்களை எதுவும் செய்யமுடியாது என்பதால், ஸம்ஸாரபயம் கூட இல்லாமல் நிர்ப்பயராக இருக்கிறோம்.

பத்மையின் பதத்தை நாம் பற்றாகப் பற்றியதால்
பயங்கரமாய்ப் பற்றியெரி பவத்தினிலும் பயமில்லை.

<u>இந்த ச்லோகத்தில் நாம் அறியும் சில உண்மைகள்:-</u>

1. ஜனனம், மரணம், ஜரை, இவை பயங்கரமானவை. ''பிணிபசி மூப்புத் துன்பம்'' என்றும் ''பிறவிப் பெருந்துயர்'' என்றும் பலரும் கூறுவர். நம்மைக் கொளுத்தும்; வறுத்தெடுக்கும்; தகிக்கும்; வாட்டும்; எனவே கோடை வெயிலினும் கொடியது என்கிறார்.

கோடையிலும் கொடிதாகக் கொளுத்துகிற
கோரபவம் கோமளையின் கழல்பற்றிக் கொண்டவரைக் கொளுத்தாது.

2. உலகில் பலசாலிகளைச் சார்ந்து பலஹீனரும் பயமின்றியிருப்பதைக் காண்கிறோம். இதை வேற்றுப் பொருள் வைப்பணியாக மூன்றாம் பாதத்தில் சொல்கிறார். சொந்த பலம் இல்லாவிட்டாலும் ஆச்ரயபலத்தால் அச்சமின்றி இருக்கலாம்.

அதிகபலம் அடைந்தவரை அவலம்பம் கொண்டவரை
அந்த துணை உள்ள வரை அச்சமுத்த எதுவுமில்லை

இதற்கு ஒரு உதாரணம் சொல்லி விளக்குகிறார்.

சந்திரமண்டலத்தில் நடுவில் இருக்கும் களங்கத்தை ஒரு மானாகக் கூறுவது கவிமரபு. அந்த மான் வேடரிடம் பயப்படாது.

இது போலத்தான் நாமும் பயமில்லாமல் இருக்கிறோம்.

அன்னையின் அடி அடைந்தோம் அவளுக்கு நாம் அடியோம்
அச்சத்தை அகற்றிட்டோம் அபவர்க்கம் அடைந்திடுவோம்.

<u>10. அறமே அறியார்க்கும் அன்போடு அனுக்ரகிப்பவள்:-</u>

अनाघ्राताः श्रौताः स्मृतिभिरुपदिष्टाश्च कमले

समीचां आचारैरपि च विदिता धर्मनिचयाः ।

कथंकारं घोरं नरकं अतियायां इति भयम्
जहामि स्मृत्वा ते जगदवनि वात्सल्यजलधे: ॥ १० ॥

அநாக்₄ராதா: ஶ்ரௌதா: ஸ்ம்ருதிபி₄ ருபதி₃ஷ்டாஸ்ச கமலே
ஸமீசாம் ஆசாரை ரபி ச விதி₃தா த₄ர்ம நிசயா: ।
கத₂ங்காரம் கோ₄ரம் நரகம் அதியாயாம் இதி ப₄யம்
ஜஹாமி ஸ்ம்ருத்வா தே ஜக₃த₃வநி வாத்ஸல்ய ஜலதே₄: ॥10॥

कमले ! - லக்ஷ்மியே !
जगदवनि - உலகத்தைக் காப்பவளே !
श्रौता: - வேதத்தில் உள்ளவையும்
स्मृतिभि: - ஸ்ம்ருதிகளாலே
उपदिष्टा: च - உபதேசிக்கப்பட்டவையும்
समीचां - நல்லோரின்
आचारै: - அனுஷ்டானங்களால்
विदिता: - अपि - அறியப்பட்டவையுமான
धर्म - निचया: - தர்மக்குவியல்கள்
अनाघ्राता: - (என்னால்) வாசனை கூட பார்க்கப்படவில்லை.
अहं - (அத்தகைய) நான்
कथंकारं - எப்படி
घोरं - கொடூரமான
नरकं - நரகத்தை
अतियायां - கடப்பேனோ
इति - என்கிற
भयं - பயத்தை
वात्सल्यजलधे: - வாத்ஸல்யக் கடலான
ते स्मृत्वा - உன்னை எண்ணி
जहामि - விடுகிறேன்.

கமலையே ! எனக்குத் தர்மம் என்பது அடியோடு தெரியாது. ச்ருதிஸ்ம்ருதிகளில் சொன்னதையும் சிஷ்டாசாரத்தில் தெரிந்ததையும் நான் செய்ததே கிடையாது. அதை நான் முகர்ந்து கூடப் பார்த்தது கிடையாது. நான் எப்படி நரகத்திலிருந்து தப்பிக்க முடியும் ? இந்த நரகபயம் வந்தபோது நான் உன்னை ஸ்மரிக்கிறேன். நீ வாத்ஸல்யக்கடல். என் போன்றோர் மீது தாயன்பைப் பொழிகிறாய். என் பயம் தொலைகிறது.

அறமென் கிறதே தெரியாது. அருகே சென்றது கிடையாது
ஆனால் நரகத் துயரேது ? அன்னை யன்பு வற்றாது.

<u>இந்த ச்லோகத்தில் நாம் தெரிந்து கொள்பவை ஆறு:-</u>

1. தர்மங்கள் ஏராளம். க்ருஹஸ்த தர்மம், ஸந்யாஸிதர்மம், குலதர்மம், எனப் பலவகைப்பட்ட வர்ணாச்ரம தர்மங்கள், ஸ்த்ரீதர்மம், ஆஹாரநியமம், ஆஹ்நிகப்ரக்ரியை, ஆசார அனுஷ்டானங்கள், தானதர்மங்கள், ஜபங்கள், ஹோமங்கள், பாராயணங்கள், பிராயச்சித்தங்கள், பூஜை புரஸ்காரங்கள், நித்ய நைமித்திக கர்மங்கள், ஸத்யம் முதலிய ஸாமாந்ய தர்மங்கள், குளம் வெட்டுவது போன்ற பொதுப்பணிகள், என்று எத்தனையோ வகை தர்மங்கள். பெரியோர்கள் சொன்னவை லக்ஷக்கணக்கானவை. இதை தர்மநிசயா: என்ற பதத்தால் தெரிவித்தார்.

2. தர்மங்களைத் தெரிவிப்பவை எவை ? மூன்று சொல்கிறார். முதலாவது வேதம். வேதோகிலோ தர்மமூலம் என்று முதுமொழி. இதில் நேரடியாகச் சொன்ன தர்மங்களுக்கு ச்ரௌத தர்மங்கள் என்று பெயர். ஸந்த்யாவந்தனம், அக்னிஹோத்ரம், ஸ்வாத்யாய ப்ரவசனம், முதலிய பல இதில் அடங்கும். இரண்டாவது ஸ்ம்ருதிகள். (மநுஸ்ம்ருதி, பராசரஸ்ம்ருதி, யாஜ்ஞவல்க்யஸ்ம்ருதி, முதலிய பல இருப்பதால் பன்மையில் சொல்கிறார்.) இவற்றில் சொன்ன தர்மங்களுக்கு ஸ்மார்த்த தர்மங்கள் என்று பெயர். ஔபாஸனம் முதலிய கர்மங்கள், மாதாபித்ருக்களுக்கான ச்ராத்தங்கள், பஞ்சகாலப்ரக்ரியைகள் முதலிய பல இதில் அடங்கும். மூன்றாவது சிஷ்டாசாரம். நல்லவர் நெறி. ப்ரமாணவசனங்கள் கிடைக்காவிட்டாலும், சிஷ்டர்களின் ஒழுக்கம் நமக்கு ப்ரமாணமாக ஏற்கத்தக்கது. க்ரந்தங்களில்

மங்களாசரணம், ஸூக்திகளைச் சேவிக்கும்போது தனியன் அனுசந்தானம், இயல் கோஷ்டி, முதலியவை இதில் அடங்கும். இப்படி மூன்று விதமான ப்ரமாணங்கள் நமக்குத் தர்மத்தைத் தெரிவிப்பவை. குறிப்பாக, ச்ருதிஸ்ம்ருதிகளை மட்டும் ஏற்று, சிஷ்டாசாரத்தை ஏற்காத தற்காலத்தவர் சிலருக்கு மறுப்பாக அமைவது இந்த ச்லோகத்தின் இரண்டாம் பாதம். (இவர்கள் ஏற்ற மனு முதலியோரின் க்ரந்தங்களே சிஷ்டாசாரத்தைப் பின்பற்ற வலியுறுத்துவதால் இவர்களின் வாதம் எடுபடாது.)

3. தர்மாநுஷ்டானம் மிகக் கஷ்டமானது. தபஸ் போன்றது. அதை நாம் பண்ணிவிட்டதாக நினைத்து ஏமாறக்கூடாது. உண்மையில் நாம் தர்மத்தின் வாசனையைக்கூட சரியாக உணரவில்லை. வீசை என்ன விலை என்று கேட்பவர்கள். லக்ஷக்கணக்கான விதி நிஷேதங்களில் ஓரிரண்டை மட்டும் பின்பற்றுவதால் தர்மசீலர்களாகப் பிரமித்துவிடக்கூடாது. நாம் அனுஷ்டிக்கவேண்டியிருந்தும் அவ்வாறு செய்யாத தர்மங்கள் ஏராளம். இதை அநாக்ராதா: என்ற பதத்தால் சொல்கிறார்.

4. சாஸ்த்ரங்களை மீறினால், தர்மத்திலிருந்து வழுவினால் கடுமையான பின்விளைவுகள் உண்டாகும். இதை கோரம் நரகம் என்னும் பதங்களால் தெரிவிக்கிறார். இதிலிருந்து தப்புவது எளிதன்று. இதை கதம் அதியாயாம் இதி பயம் என்ற பதங்களால் தெரிவிக்கிறார்.

5. ஆனால் லக்ஷ்மிபக்தர்களுக்கு இந்தப் பயம் இல்லை. அவர்கள் லக்ஷ்மியை ஸ்மரிப்பதால் நரகபயம் போய்விடும். இதை ஜஹாமி ஸ்ம்ருத்வா தே என்ற பதங்களால் தெரிவிக்கிறார்.

6. அவள் வாத்ஸல்யஸமுத்ரம். தாயன்பின் கடல். கடலில் நீர் மிதமிஞ்சி இருப்பது போல் அவளிடம் வாத்ஸல்யம் மிதமிஞ்சி இருக்கிறது. கடல்நீர் வற்றாதது போல் அவளுடைய வாத்ஸல்யம் குன்றாதது. கடல்நீர் கண்கொள்ளாக் காட்சியானது போல் அவளுடைய வாத்ஸல்யத்தை கவிகள்பாடி மாளவில்லை. கடலானது நீராலும் காற்றாலும் நம் தாபத்தைத் தணிப்பது போல். லக்ஷ்மி வாத்ஸல்யத்தால் நம் நரகபயத்தை நீக்குகிறாள்.

6. ஜகதவநி என்ற விளிச்சொல் இந்தச் சந்தர்ப்பத்தில் மிகப் பொருத்தமானது. உலகத்தாரைக் காப்பாற்றும் எண்ணத்துடன் தான் அவள் ச்ருதிஸ்ம்ருதி தர்மங்களை ஏற்படுத்தியிருக்கிறாள். லக்ஷ்மீதந்த்ரம் முதலிய சாஸ்த்ரங்களில் இது தெரிகிறது. அப்படியும் அவள் கட்டளையை மீறுகிற நமக்கு அவளுடைய வாத்ஸல்யம் ஒன்றே கதி.

அன்னையின் அன்பென்னும் வெள்ளம் அதையெண்ணும் என்றும் என் உள்ளம்
அடையேன் நான் நரகத்துப் பள்ளம் அறமறியா என் மனதும் துள்ளும்

பங்குனி ரேவதி ஸ்ரீ பாதுகாஸஹஸ்ர பாராயணம்

9.4.2005 சனிக்கிழமை சென்னை ஆச்ரமத்தில் 200 பேர் (ஸ்த்ரீரத்னங்கள் உட்பட) காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை அகண்ட ஸ்ரீ பாதுகாஸஹஸ்ர பாராயணம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆத்யக்ஷத்தில் திவ்யமாக நடைபெற்றது. ப்ரதி வருஷம் நடைபெற்று வருகிறது.

11. துர்குணத்தைத் துரத்துவதில் துணையானவள்.

विचित्सा मात्सर्य स्फुरण दुरहङ्कार कुहना–
पिशाचीभ्यो बिभ्यज्जगदभयदानैकनिरताम् ।
नतां भूतेशाद्यैः अपगमित रक्षोगणमदां
प्रपद्ये दासस्त्वां परमपुरुषप्राणदयिते ॥ ११ ॥

விவித்ஸா மாத்ஸர்ய ஸ்பு₂ரண து₃ரஹங்கார குஹநா
பிஶாசீப்₄யோ பி₃ப்₄யஜ் ஜகத₃ப₄ய தா₃நைக நிரதாம் ।
நதாம் பூ₄தேஶாத்₃யை ரபக₃மித ரக்ஷோகண மதா₃ம்
ப்ரபத்₃யே தா₃ஸஸ்த்வாம் பரமபுருஷ ப்ராண த₃யிதே ॥ 11 ॥

परमपुरुष प्राण दयिते
புருஷோத்தமனின் ப்ராணநாயகியே!
विचित्सा-मात्सर्य-स्फुरण-दुरहङ्कार-कुहना-पिशाचीभ्यः பணத்தாசை, த்வேஷம், கோபத்துடிப்பு, கர்வம், மோசடி, முதலிய பிசாசுகளிடமிருந்து
बिभ्यत् பயப்படுகிறவனாய்
जगत् -अभय-दान-एक-निरतां உலகுக்கு அபயம் அளிப்பது ஒன்றிலேயே மகிழ்பவளும்
भूतेशाद्यैः பூதகணநாதர் முதலியோரால்
नतां வணங்கப் பட்டவளும்
अपगमित-रक्षो-गण-मदां நீக்கப்பட்ட ராக்ஷஸக் கூட்டத்துக் கொழுப்பை உடையவளும் ஆன
त्वां உன்னை
दासः அடியேன்
प्रपद्ये சரணமடைகிறேன்.

பரமபுருஷனின் இனிய துணைவியே! என்னைத் துர்குணங்கள் என்கிற பிசாசுகள் பிடித்துக்கொண்டுள்ளன. பணத்தாசை, பகைமை, கோபவெறி, அஹம்பாவம், வஞ்சனை, என்று பல பிசாசுகளிடமிருந்து பயப்படுகிறேன் நான். உலகுக்கெல்லாம் அபயம் அளிப்பவள் நீ. அதே குறியாக இருக்கிறாய். உன்னைப் பூதேசர் முதலானோர் துதிப்பதாலும், அவதாரலீலைகளில் நீ ராக்ஷஸர்களின் கொழுப்பை அடக்கியிருப்பதாலும், உன்னால் இது ஸாத்தியம் என்பது தெரிகிறது. அத்தகைய உன்னை

அடியவனான நான் சரணம் அடைகிறேன். என்னுடைய துர்குணங்களும் தொலையட்டும்.

பரம்பொருளின் பத்தினியே பலர்க்கபயம் பயப்பவளே
பணத்தாசைப் பேய் விடவே பணிகின்றேன் பத்மையே!

இந்த ச்லோகத்தில் கவி கூறியுள்ள ஐந்து கருத்துகள் வருமாறு:

1. காமக்ரோதம் முதலிய துர்குணங்கள் பிசாசுகள் போலே என்கிறார்.

பேய் பிசாசுகள் போல அவை நம்மை வசமிழக்கச்செய்து ஆட்டிப் படைக்கின்றன என்பதாலும், பேய் பிசாசுகள் போல அவற்றின் பிடியில் சிக்கியவர்கள் மீள்வது கஷ்டமாதலாலும், பேய் பிசாசுகள் போல அவை தீங்கு விளைவிப்பதாலும்,

பேய் பிசாசுகளை விரட்டுவது போல அவற்றைத் தெய்வானுக்கிரஹம் கொண்டு விரட்டவேண்டியிருப்ப தாலும் இந்த உருவகம் பொருத்தமானது.

2. இவ்வளவு ஹாநிகரமான துர்குணங்கள் எவை என்று கேட்டால், ஐந்தைச் சொல்கிறார். பணத்தாசை என்பது விவித்ஸா என்று சொன்ன முதலாவதாம். பகை, துவேஷம், பழிதீர்த்தல், என்பதெல்லாம் மாத்ஸர்யம் என்ற இரண்டாவதாம். வெறி, சினம், இதெல்லாம்ஸ்புரணம் என்ற மூன்றாவதாம். கர்வம், திமிர், அகந்தை, இதெல்லாம் துரகங்காரம் என்ற நான்காவதாம். பித்தலாட்டம், தில்லுமுல்லு, சூது சூழ்ச்சி, இதெல்லாம் குஹநா என்ற ஐந்தாவதாம். இந்த ஐந்தும் பெரிய துர்குணங்கள். பிசாசுகள் போல் நம்மைப் பிடித்துக் கொண்டுள்ளன.

பிணக்காசைத் திமிர்வஞ்சப் பிசாசுகளின் பிடி நீங்கப்
பிரமத்தின் ப்ராணஸகிப் பிராட்டியடி பிடிக்கின்றேன்.

3. ஒருவனிடம் ஒரு உதவியை நாடிப் போனால், அவனுக்கு மூன்று இருக்க வேண்டும். நமக்கு உதவுவதில்

விருப்பம், உதவும் வல்லமை, இதற்கு முன் உதவிய முன்னனுபவம் என்ற மூன்று. இப்போது பேய் பிசாசுகளை விரட்டும் உதவியை நாடி நான் தாயாரிடம் போகிறேன். அவளுக்கு இந்த மூன்றும் இருக்கின்றன. அவள் அபயதானைக நிரதா என்பதால் பயம் போக்குவதிலேயே விருப்பம் கொண்டவள் என்பதையும், நதா பூதேசாத்யை; என்பதால் பூதங்களின் தலைவர்கள் கூட அவளுக்குப் பணியாளராயிருப்பதையும், அபகமிதரக்ஷோகணமதாம் என்பதால் இதற்கு முன் அவள் ரக்ஷஸ்ஸுகளை அடக்கியிருப்பதையும் இந்தக்கவி கூறுகிறார். இதனால் இவளைச் சரணடைவதே யுக்தம்.

பூவுலகில் புரட்டுபகைப் பூதம் பேய்ப் பயம் நீங்கப்
பூதேசர் பூசிக்கும் பூமகளைப் போற்றுகிறேன்.

4. பரமபுருஷப்ராணதயிதே ! என்ற விளியிலும் ஒரு பொருத்தம் இருக்கிறது. தாம் த்வாம் தாஸ இதி ப்ரபந்ந இதி ச என்று ப்ரஸித்தமான ஆளவந்தார் ஸூக்தியை நினைவூட்டும் வகையில் ப்ரபத்யே தாஸஸ்த்வாம் என்றும், லோகநாத தயிதே ! என்பதற்குப் பதிலாக பரமபுருஷப்ராணதயிதே ! என்றும் பதங்களைப் ப்ரயோகிக்கிறார் இந்தக் கவி. பிப்யத் என்று இந்த ச்லோகத்திலும் நிர்ப்பய: என்று அந்த ச்லோகத்திலும் இருப்பதையும் காண்கிறோம். பயம் நீங்கப் பரமபுருஷ தயிதையான பிராட்டிக்குத் தாஸனாகி அவளைச் சரணடைய வேண்டும் என்பது பொதுக்கருத்து.

பணத்தாசை பகை முதலாம் பல தீய பண்புகளின்
பயம் தீரப் பரமனது பத்தினியைப் பணிகின்றேன்.

5. ராமர், கிருஷ்ணர், முதலிய அவதாரங்களில் ராக்ஷஸ ஸம்ஹாரம் பண்ணினவள் பிராட்டி என்கிற அபிப்பிராயத்தில் அபகமித ரக்ஷோகணமதாம் என்கிறார். பெருமாளைக் கொண்டு அதைப் பண்ணுவித்தாள். பரமபுருஷனுக்கு இவள் ப்ராணதயிதையானதால் இப்படி

ரக்ஷோவதம் நடந்தது. அதே காரணத்தால் இந்தப் பிசாசுகளின் பயமும் எனக்கு நீங்கட்டுமே.

துர்குண மாயைத் துஷ்டப்பேயைத்
துரத்திடத் தாயைத் தொழுவேன் நாயேன்.

இன்னொரு விசேஷம். பொதுவாக எல்லாரும் பணம் வேண்டி லக்ஷ்மியைத் தொழுவார்கள். ஆனால் அதற்கு மாறாகப் பணத்தாசை போகவேண்டி லக்ஷ்மியைத் தொழுகின்றனர் பரமைகாந்திகளான இந்தக்கவி முதலானோர்.

இதில் ராவணவதத்தைக் குறிப்பாகக் காட்டிய கவி அடுத்த மூன்று ச்லோகங்களில் ராமாயணத்தில் ஸீதையினால் அபீதி (அபயம்) என்பதை விசதமாக வர்ணிக்கிறார்.

12. ஆராதிப்பார்க்கு அபயம் அளிப்பவள்; அந்யபரர்க்கோ அச்சம் அளிப்பவள்.

जन्तोर्हन्त त्रिलोकीजननि ! तव समाराधने साधनेषु
व्यापारेष्वाभिमुख्य त्यजन भजनयोर्भीत्यभीती भवेताम् ।
सुग्रीवं वालिभङ्गे त्वदहितदमनानुन्मुखं रामकोपात्
भीतं पश्चात् त्वदास्थावहन गत भयं तत्र दृष्टान्तयामः ॥ १२ ॥

ஜந்தோர் ஹந்த த்ரிலோகீஜநநி தவ ஸமாராத$_{4}$நே ஸாத$_{4}$நேஷு
வ்யாபாரேஷ்வாபி$_{4}$முக்$_{2}$ய த்யஜந ப$_{4}$ஜநயோர் பீ$_{4}$த்யபீ$_{4}$தீ ப$_{4}$வேதாம் ।
ஸுக்$_{3}$ரீவம் வாலிப$_{4}$ங்கே$_{3}$ த்வத$_{3}$ஹித த$_{3}$மநாநுந்முக$_{2}$ம் ராமகோபாத்
பீ$_{4}$தம் பஶ்சாத் த்வதா$_{3}$ஸ்தா$_{2}$வஹநகத ப$_{4}$யம் தத்ர த்$_{3}$ருஷ்டாந்தயாம: ॥ 12॥

त्रिलोकी -जननि மூவுலகுக்கும் தாயே!
जन्तोः ஜந்துவுக்கு
तव समाराधने உன்னை உகப்பிப்பதில்
साधनेषु பயன்படுகிற
व्यापारेषु செயல்களில்

आभिमुख्य - त्यजन - भजनयोः
அனுகூலத் தன்மையை விடுவதாலும் அடைவதாலும்
भीत्यभीती (முறையே) பயமும் அபயமும்
भवेताम् உண்டாகும்.

हन्त (இது) ஆச்சரியம்.

तत्र அந்த விஷயத்தில்

वालिभङ्गे வாலி வதத்தில் (பிறகு)

त्वत्-अहित-दमन-अनुन्मुखं உன் எதிரியான ராவணனை அடக்குவதில் சிரத்தையில்லாதவனும்

रामकोपात् (அதனால்) ராமனின் சீற்றத்திலிருந்து

भीतं பயந்தவனும்

पश्चात् பிறகு

त्वत्- आस्था-वहन -गत - भयं உன் விஷயத்தில் சிரத்தை மேற்கொண்ட-தால் பயம் நீங்கியவனுமான

सुग्रीवं சுக்கிரீவனை

दृष्टान्तयामः உதாரணமாக்குவோம்.

மூவுலக மாதாவே! உன்னுடைய ஸீதாவதாரக் கதையில் ஸுக்ரீவனுக்கு நடந்த நிகழ்ச்சிகளைக் கொண்டு நாங்கள் தெரிந்து கொள்ளும் நீதி என்னவென்றால்: எந்த ஜந்துவுமே உன்னை உகப்பிக்கப் பயன்படும் செயல்களில் ஈடுபட்டால் பயம் நீங்கும் என்பதும், அத்தகைய செயல்களில் ஈடுபடாது அசிரத்தையாக இருந்தால் பயம் உண்டாகும் என்பதும்.

சுக்ரீவன் வாலியிடம் பயந்து நடுங்கிய காலத்தில் உன் திருவாபரணங்களைப் பெற்று ராமனுக்குக் காட்டிய சிறிய நற்பணியின் விளைவாக அவனுக்குச் சத்ருநாசமும் ராஜ்யமும் கிடைத்தன; பெரும் பயம் தொலைந்தது. பிறகு அவன் உன்னைத் தேடுவதிலும் ராவணனை அடக்குவதிலும் சிரத்தை காட்டாமல் காமக்களியாட்டங்களில் ஈடுபட்டிருந்தபோது, ராமனுக்குக் கோபம் ஏற்பட்டதால், சுக்ரீவனுக்குப் ப்ராணபயம் ஏற்பட்டது. அதன் பிறகு உன் காரியத்தில் சிரத்தை பூண்டு ஹனுமான் மூலமாகத் தேடத் தொடங்கியதும் மறுபடி பயம் நீங்கியது. இதிலிருந்து எங்களுக்குத் தெளிவாகத் தெரிகிறது தாயே! உன் உகப்புக்கான செயல்களைச் செய்தால் பயம் நீங்கும்; செய்யாவிட்டால் பயம் வரும்.

உன்னை உகப்பித்தால் உள்ள பயம் ஒழிந்துவிடும்.
உன்னை உபேக்ஷித்தால் உக்ரபயம் உண்டாகும்.

இந்த ச்லோகத்தில் நாம் அறியும் கருத்துகள் நான்கு:

1. நாம் எப்பொழுதும் லக்ஷ்மிதேவியின் திருவுள்ள உகப்புக்கான திருவாராதனப்பணிகளிலே ஈடுபட வேண்டும். இதுவே பயம் நீங்கச் சிறந்த வழி. இது எல்லா ஜந்துக்களுக்கும் பொதுவான அறிவுரை என்று தெரிவிப்பதற்காக ஜந்தோ: என்ற பதத்தைப் பிரயோகித்தார். சுக்கிரீவன் குரங்கு தானே

ஜந்து எதுவானாலும் ஜலஜைக்குத் தொண்டாற்றி
ஜயம் பெறலாம் பயம் நீங்கி ஜநநி தரும் அருளாலே.

2. ஸுக்ரீவனுக்கு வாலிபயம் நீங்கியது எதனால்? அவன் ஸீதைக்குச் செய்த பணிவிடையால். ஸுக்ரீவனுக்கு ராமபயம் வந்தது எதனால்? அவன் ஸீதைக்குப் பணிவிடை செய்ய மறந்ததால். ஸுக்ரீவனுக்கு ராமபயம் நீங்கிப் புகழ் வந்தது எதனால்? அவன் மறுபடி ஸீதைக்குச் செய்த தொண்டால்.

ஸீதை - ஸேவை கைவிட்டான் சீச்சீ என்று ச்ரமப்பட்டான்.
ஸுதைக்காகச் செயல்பட்டான் ஸுக்ரீவன் பின் சுகப்பட்டான்.

3. இப்படி வரும் பயாபயங்கள் மிகவும் தீவிரமாக இருக்கும். நான் பலிஷ்டனான வாலிக்குப் பயந்து நடுங்குகிறேன். அரண்டுபோயிருக்கிறேன் என்று சொன்ன ஸுக்கிரீவனின் நிலைமையை மாற்றி அப்பாடா! எனக்கு இப்போது தான் நிம்மதி; நான் மகிழ்ச்சி அடைகிறேன் என்று பேச வைத்தது ஸீதைக்கு அவன் மறைமுகமாகச் செய்த சிஶ்ரூஷை. அவன் ஸீதைக்குத் தொண்டு செய்ய வேண்டியிருக்க அதைச் செய்யாமல் வாளாவிருந்தபோது, வாலி கொலையுண்டு போன வழி ஒன்றும் குறுகலானதன்று; வாலியின் வழியில் போகாதே ஸுக்ரீவா என்று ராமன் சீற்றப்பட, ஸேவகனான நான் வரம்பு மீறியிருந்தால் பொறுத்தருளவேணும்; குற்றம் புரியாதவர் எவரும் இல்லை என்று மன்னிப்பு கேட்கும் அளவுக்கு, சிறுமைப்பட

நேர்ந்தது. மறுபடியும் ஸீதைக்கான கைங்கர்யத்தைச் சரிவரச்செய்தபோது பலவிதப் பரிசுப்பொருள்களாலும் ரத்தினங்களாலும் இவர்களது முயற்சியைப் பலனுள்ளதாக்கு விபீஷணா! என்று ராமன் சொல்லும்படி ஸகல ஸம்பத்தும் பெற்றான் ஸுக்கிரீவன்.

4. ஆஸ்தா என்றும் ஆபிமுக்யம் என்றும் பதங்கள் அர்த்தபுஷ்டி கொண்டவை. பிராட்டிக்குப் பணிவிடை செய்வதில் ஆஸ்தை கொள்வதும், அதற்கு அனுகூலமாகச் செயல்படுவதும் தேவை. மனோபாவம் முக்கியம். செய்து முடிப்பது பிற்பாடு கிடக்கட்டும். செய்ய விரும்புவது ஆஸ்தையால். செய்ய முற்படுவது ஆபிமுக்யத்தால். நாம் செய்து முடிப்பதால் அவளுக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை. நமக்குத்தான் பயமும் அபயமும் விளைவுகள். அவளுக்கு அடிமை செய்யும் ஆஸ்தையால் நமக்கு அச்சம் அகலும். போன ச்லோகத்தில் சொன்ன வைதிக ஆசாரங்கள் கூட அவளுக்குச் செய்யும் பணிவிடைகளாக அவள் கருதுகிறாள். இந்தப் பணிவிடைகளை நாம் தொடர்வோம்.

13. ஸைந்யத்தைச் சூன்யமாக்கி புல்லைப் புயலாக்குபவள்.

रक्षस्तोमोऽप्यखिलभयकृत् राघवप्राणकान्ते !
त्रासोत्पत्त्यै न खलु भवति त्वत्पदाब्जानुकूले ।
कष्टं मातः तृणमपि भिये कल्पते त्वत्प्रतीपे
प्राच्ये साक्षी पवनतनयः पश्चिमे काक एकः ॥ १३ ॥

ரக்ஷஸ் ஸ்தோமோபி அகி₂லப₄யக்ருத் ராக₄வப்ராணகாந்தே !
த்ராஸோத்பத்த்யை ந க₂லு ப₄வதி த்வத் பதா₃ப்₃ஜாநுகூலே ।
கஷ்டம் மாதஸ் த்ருணமபி பி₄யே கல்பதே த்வத்ப்ரதீபே
ப்ராச்யே ஸாக்ஷீ பவநதநய: பஶ்சிமே காக ஏக: ॥ 13 ॥

राघव -प्राण- कान्ते ராமனின் உயிரான மனைவியே!

अखिल - भय-कृत् -எல்லாருக்கும் பயம் பண்ணும்

रक्षस् -स्तोमः अपि -ராக்ஷஸர் கூட்டம் கூட

त्वत्-पद-अब्ज-अनुकूले - உன் திருவடித் தாமரைக்கு இணங்கியவர்க்கு

त्रास-उत्पत्त्यै பயம் விளைவிக்க

न भवति खलु இயலாது அல்லவா?

मातः தாயே!

तृणं अपि புல் கூட

त्वत्-प्रतीपे உனக்கு விமுகனானவனிடம்

भिये பயத்துக்கு

कल्पते ஆகிறது.

कष्टं அட கஷ்டமே!

प्राच्ये முன்னதில்

पवन-तनयः ஹனுமார்

साक्षी சான்று.

पश्चिमे பிந்தியதில்

एकः ஒரு

काकः காகம் (சான்றாகும்.)

ஸீதையே! ஹநுமார் உன் பக்தர். ராக்ஷஸர்களின் கோரஸைன்யம் கூட அவரைப் பயமுறுத்த முடியவில்லை. காகாஸுரன் உன்னிடம் அபசாரப்பட்டான். ஒரு சிறிய புல் கூட அவனை விரட்டி விரட்டி அடித்தது. இதிலிருந்து எங்களுக்குப் புரிகிறது. உன்னை எதிர்த்துக்கொண்டால் அற்பங்களிடம் கூடப் பயப்பட வேண்டியிருக்கும். உனக்கு அடிமையானால் ராக்ஷஸர்களிடம் கூட அஞ்சவேண்டாம்.

ராக்ஷஸரால் பயமேது ? ராவணனால் பயமேது ?
ராஜீவை அருள் பெற்றால். ராமரது தூதன் போல்.
புல்லிடமும் பயமுண்டு புள்ளுக்கும் பயமுண்டு.
புஷ்பமகட்கெதிராகப் புன்செயல்கள் செய்வோர்க்கு.

இந்த ச்லோகத்தில் நாம் அறியும் நீதிகள் மூன்று:

1. பிராட்டிக்குப் பக்தனானால் யாருக்கும் பயப்படவேண்டாம். நமோऽஸ்து தேவ்யை ஜநகாத்மஜாயை என்று சொல்லி ஸீதையிடம் தனக்கு இருக்கும் பக்தியைத் தெரிவித்தார் ஹனுமார். பிறகு போர் மூண்டது. பயங்கரமான ராக்ஷஸர்களால் கூட அவரைத் தோற்கடிக்க முடியவில்லை.

அவரை இலக்காக வைத்து ஆயுதங்கள் விழுந்தாலும் அவர் இளைப்போ சளைப்போ இல்லாமல் போரிட்டு வென்றார்.

**இலக்குமிபால் இறைபக்திக் கிலக்கணமாய் இலங்கியவன்
இலங்கையிலே அரக்கர்படைக் கிலக்காயும் இளைத்திலனே.**

2. லக்ஷ்மியிடம் நாம் தப்பித் தவறி அபசாரப்பட்டால், நாம் எதற்கும் பயப்படும் அவலநிலை வரும். இது காகாஸுரனின் கதையிலிருந்து தெரிகிறது.

**காதலியைக் கொத்தியதால் காகுத்தன் கடுஞ்சினத்தால்
காய்புல்லைக் கணையாக்கிக் காகத்தைக் கதறடித்துக்
கடைசியிலே காலில் விழக் கருணையினால் காப்பாற்றிக்
கண்ணழித்த கதை கேட்டோம். கமலை புகழ் கற்றிட்டோம்.**

3. யாருக்கு யாரிடம் பயம் வரும் என்று கேட்டால், அற்பர்களிடம் எவருக்கும் பயம் வராது. பொல்லா அரக்கர்களிடம் எல்லாருக்கும் பயம் வரும் என்பதன்று உண்மை. லக்ஷ்மீபக்தர்களுக்கு யாரிடமும் பயம் வராது. அவளிடம் அபசாரப்பட்டவர்கள் எதைக் கண்டாலும் பயப்பட வேண்டும் என்பது தான் உண்மை.

**ஸீதையிடம் சீண்டியதால் சிறு புல்லும் சீறியது.
பிராட்டியுடல் பிராண்டியதால் புல் கண்ணைப் பிடுங்கியது.**

14. தன் நிலை தெரிந்தவர்க்குத் தண்டனை தவிர்ப்பவள்.

कान्तारे महतीव संसृतिपथे हन्त भ्रमन्तश्चिरं
विष्णोः प्रेयसि ! वानरा इव नरा वेलातिगग्लानयः ।
संपातेरिव सन्मतेरथ गुरोर्बुद्ध्वा स्थितिं तावकीं
आज्ञालङ्घनभीतिमम्ब ! जहति प्राज्ञा हरेस्स्वामिनः ॥ १४ ॥

காந்தாரே மஹதீவ ஸம்ஸ்ருதிபதே, ஹந்த ப்₄ரமந்தஶ் சிரம்
விஷ்ணோ: ப்ரேயஸி ! வாநரா இவ நராவேலாதிக₃க்₃லாநய:
ஸம்பாதேரிவ ஸந்மதேரத₂ கு₃ரோர் பு₃த்₃த்₄வா ஸ்தி₂திம் தாவகீம்
ஆஜ்ஞாலங்க₄ந பீ₄திமம்ப₃ ! ஜஹதி ப்ராஜ்ஞா ஹரேஸ் ஸ்வாமிந: ॥14

विष्णोः பெருமானுக்கு
प्रेयसि ! காந்தையே!
अम्ब ! அன்னையே!
महति பெரிய
कान्तारे इव காட்டிலே போல
संसृति-पथे ஸம்ஸாரமார்க்கத்தில்
चिरं நீண்ட காலம்
भ्रमन्तः திரிபவர்களாய்
हन्त ! ஐயோ பாவம்!
वानरा इव (அங்கதன் முதலிய) குரங்குகள் போன்ற
नराः ஜனங்கள்
वेला- अतिग-ग्लानयः கரைகடந்த (அபரிமிதமான) சிரமம் கொண்டவர்களாய்
सम्पातेः इव ஸம்பாதி போன்ற
सन्मतेः நல்லறிவுள்ள
गुरोः ஆசார்யனிடமிருந்து
अथ பிறகு
तावकीं உன்னுடையதான
स्थितिं நிலையை, இருப்பிடத்தை
बुद्ध्वा அறிந்து கொண்டு
प्राज्ञाः மிகவும் அஜ்ஞர்களும், பேரறிவாளர்களாய்
स्वामिनः தலைவனான
हरेः (ஸுக்ரீவன் என்னும்) குரங்கிடமிருந்து, பெருமானிடமிருந்து
आज्ञा-अतिलङ्घन-भीतिं கட்டளையை மீறியதால் பயத்தை
जहति விடுகிறார்கள்.

ஸ்ரீமத்ராமாயணத்தில் அங்கதன் முதலிய வாநரங்கள் ஸம்பாதி என்னும் கழுகிடம் உதவி பெற்ற கதை இருக்கிறது.

அந்தக் குரங்குகள் போலே ஜனங்கள்.

அவர்கள் அலைந்து திரிந்த காடு போலே இந்த ஸம்ஸாரம்.

அவர்கள் ப்ராயோபவேசம் பண்ணும் அளவுக்குப் பயந்து நடுங்கினாற்போலே ஜனங்களுக்கும் பெரும் பயம். அவர்கள் தலைவனான ஸுக்ரீவன் கட்டளையை மீறியதால் பயப்பட்டது போலே ஜனங்களும் தலைவனான பெருமாளின் கட்டளையான சாஸ்திரத்தை மீறியதால் பயப் படுகிறார்கள். அவர்களுக்கு ஸம்பாதி போலே ஜனங்களுக்கு ஆசார்யன் தொலைதூரம் பார்க்க வல்லவன். அவர்கள் ஸம்பாதியிடமிருந்து ஸீதையின் இருப்பிடத்தைத் தெரிந்துகொண்டது போலே ஜனங்கள் ஆசார்யனிடமிருந்து லக்ஷ்மீயின் நிலையைத் தெரிந்து கொள்கிறார்கள். அவர்கள் கார்யஸித்தி அடைந்து தலைவனின் தண்டனையிலிருந்து தப்பியது போலே ஜனங்கள் ப்ராஜ்ஞர்களாய் ஹரியின் தண்டனையிலிருந்து தப்புகிறார்கள். அன்னையே! உன்னைப் பற்றிப் புரிய வைத்த ஆசார்யோபதேசம் தான் தண்டனை பயத்திலிருந்து விடுவிக்கிறது.

திருமகள் தன்மையைத் திரிபறத் தெரிந்தவர்
திரிந்தவர் திருந்துவர் தண்டனை தப்புவர்.

இந்த ச்லோகத்தில் பல ஸம்ப்ரதாயக் கருத்துகளும் ஸ்வாரஸ்யங்களும் பொதிந்துள்ளன:

1. ஸம்ஸாரம் என்பது பாலைவனக்காடு போன்றது. வெளியே வருவது கஷ்டமாய் இருப்பதாலும், கொடிய விலங்குகள் போன்ற பசிபிணிகள் துன்புறுத் துவதாலும், புதர்களில் மாட்டிக் கொள்வது போல் நாம் புலன்களில் சிக்கிக் கொள்வதாலும், கானல் நீர் போல் நம்மைப் ப்ரமிக்கவைத்து ஏமாற்றுவோர் நம்மைச் சூழ்ந்துள்ளதாலும், செய்வதறியாது நாம் இதில் திகைப்பதாலும், இங்குமங்கும் வ்யர்த்தமாக நாம் அலைந்து திரிய வேண்டியிருப்பதாலும்,

நம்முடைய சக்தி, பலம், ஆரோக்யம், எல்லாம் இங்கே க்ஷீணித்துப் போவதாலும், பலவித இன்னல்கள் மேலிடுவதாலும், இதிலிருந்து எப்போது விடுபடுவோமோ என்று ஏங்க வைப்பதாலும் இந்த உவமை பொருத்தமானது என்பதைத் திருக்கச்சி நம்பிகள் விவரித்திருக்கிறார். ஸம்ஸாரம் எத்தகைய காடு என்பதை சுகர் ஜடபரத உபாக்யானத்தில் மிக விஸ்தாரமாகக் காட்டியுள்ளார்.

இதை காந்தாரே மஹாதீவ ஸம்ஸ்ருதிபதே என்கிறார் இந்தக் கவி.

செல்வது பெரிய காட்டு வழி.
செல்லுக பெரியோர் காட்டும் வழி.

2. நீண்ட காலமாக நாம் ஸம்ஸாரத்தில் அலைகிறோம். இதை ப்ரமந்தஸ்சிரம் என்கிறார். ப்[4]ராம்யந்நிவ வநே ம்ருக[3]: என்றும் அஹோ மே மஹதீ யாதா நிஷ்ப[2]லா ஜந்ம ஸந்ததி: என்றும் நிர்வேதகாரிகைகளில் சொல்கிறபடி அநாதியான ஸம்ஸாரத்தில் உழலுகிறோம் நாம். இந்தக்கருத்து நம் பாரததேசத்தில் பௌத்தர் ஜைநர் உட்பட எல்லாருக்கும் பொதுவானது ஆனாலும் பிற்காலத்தில் தோன்றிய மேலை நாட்டு மதங்களில் இது கிடையாது.

3. குரங்குகள் போன்ற ஜனங்கள் என் கையில் ஓரிடத்தில் நிலைகொள்ளாமல் இடம் விட்டு இடம் தாண்டுகை, க்ஷணசித்தம் க்ஷணபித்தம் என்னும்படி காபேயசித்தமாக மன உறுதி இல்லாமை, கதாநுகதிகோ லோக: என்றபடி பிறர் செய்வதைத் திரும்பிச் செய்கை, முதலிய குறைகளை நினைக்கிறார்.

4. வேலாதிக[3]க்லாநய: என்ற பதத்தில் ஒரு நயம் உள்ளது. வருத்தம் எல்லையில்லாமல் அதிகமாயிருந்தது என்ற அர்த்தம் இரண்டு பக்ஷங்களிலும் பொருந்தும். வேலா என்பது ஸமுத்திரக்கரை. அங்க[3]தர் முதலிய வாநரர்களை ஸமுத்திரக் கரையில் கொண்டு சேர்த்தாள் ஸ்வயம் ப்ரபை[4].

அவர்கள் அதற்கு மேலும் சென்று தேடவேண்டும். ஆனால் காலம் கடந்ததால், அவர்களது துக்கம் தான் கரை கடந்தது.

5. எல்லாரும் குருவாகிவிட முடியாது. அதற்கு முக்கியத்தகுதி ஸந்மதி என்பது. மன்னிய கூர்மதியுடையார் என்பார் ஸ்வாமி தேசிகன் ஆசார்யலக்ஷணம் சொல்லுகையில். இந்த ச்லோகத்தில் ஸம்பாதி போல ஸந்மதி உள்ள குரு என்றுள்ளது. அஸ்மாகமபி ஸௌபர்ணம் திவ்யம் சக்ஷுர் பலம் ததா என்றும் இஹஸ்தோஹம் ப்ரபஸ்யாமி ராவணம் ஜாநகீம் ததா[2] என்றும் ஸம்பாதியே சொன்னபடி திவ்யமான தூரப்பார்வை (ஸம்பாதிக்கு இருந்தது போல்) ஆசார்யனுக்கும் இருக்கவேண்டும். ஜாநாமி வாருணாந் லோகாந் விஷ்ணோஸ் த்ரைவிக்ரமாநபி என்று ஸம்பாதியே சொன்னது போல் அதீந்த்ரிய விஷயங்களில் அறிவு வேண்டும் ஆசார்யனுக்கு. கரிஷ்யே ஸாஹ்யம் உத்தமம் என்று ஸம்பாதி சொன்னபடி, பிறர்க்கு உதவும் மனப்பான்மை வேண்டும் குருவுக்கு. தஸ்யாம் வஸதி வைதேஹீ என்று ஸம்பாதி காட்டிக்கொடுத்தபடி, தெய்வத்தை நமக்குக் காட்டும் திறமை வேண்டும் குருவுக்கு. காட்டுபவரே தேசிகர். கர்ஹிதம் து க்ருதம் கர்ம என்று ஸம்பாதி சொல்வது போல், தவறுகளைக் கண்டிக்கும் குணம் ஆசார்யனுக்கு அவசியம். இவ்வாறாகத் தொலைநோக்கு பேரறிவு, தெய்வதர்சனம், தயை, தவறைக்கண்டித்தல் என்ற ஐந்து ஆசார்யகுணங்களும் ஸம்பாதிக்கு இருந்ததாக வால்மீகி கூறுவதால் ஸம்பாதி போல் குரு என்று இந்தக் கவி சொன்ன உவமை பொருத்தமானது.

6. ஸ்திதி என்ற பதத்தில் ச்லேடை இருக்கிறது. இருப்பு என்றும் நிலைமை என்றும் இரண்டு அர்த்தங்கள். ஸீதையின் ஸ்திதி (அவள் லங்கையில் இருப்பது) ஸம்பாதி மூலம் அங்கதாதியர்க்குத் தெரிந்தது. லக்ஷ்மியின் ஸ்திதி நமக்கு ஆசார்யர்களின் உபதேசத்தால் தெரிகிறது.

பெருமாளை விட்டுப் பிரியாத நித்ய யோகம், ஐகரஸ்யம், ஏகசேஷித்வம், உபாயத்வம், புருஷகாரத்வம், உபேயத்வம், மோக்ஷப்ரதத்வம், ஔதார்யாதி குணங்கள், ஐச்வர்யம் எல்லாம் சேர்ந்து லக்ஷ்மியின் ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளாகநமக்கு உபதேசிக்கின்றனர்.

7. ஆஜ்ஞா என்றால் கட்டளை. அங்கதாதியர் பக்ஷத்தில் இது ஸுக்ரீவாஜ்ஞையைக் குறிக்கும். ஊர்த்வம் மாஸாந்ந வஸ்தவ்யம் வஸந் வத்⁴யோ ப⁴வேந் மம என்கிற ஆணை. ஒரு மாதம் என்கிற காலக்கெடு முடிவதற்குள் திரும்பி வந்தாகவேண்டும் என்ற கட்டளை. உபமேயபக்ஷத்தில் ஆஜ்ஞா என்பது பெருமாளின் கட்டளை. ச்ருதிஸ் ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா என்று பகவான் சொன்னபடி சாஸ்த்ரங்களே அவன் கட்டளைகள்.

8. ஹரி என்ற பதத்துக்கு இரண்டு அர்த்தங்கள். குரங்கு என்றும் விஷ்ணு என்றும். உபமாநத்தில் ஸ்வாமியானவன் ஸுக்ரீவன் என்கிற ஹரி. உபமேயத்தில் ஸ்வாமியானவன் விஷ்ணுவாகிற ஹரி. ஸ்வாமியாகிற ஹரியின் கட்டளையை மீறுவதால் பயம் என்பது இரண்டுக்கும் பொது.

9. ஸுக்ரீவன் கட்டளையை மீறியும் குரங்குகள் அவனிடம் பயத்தை விட்டதற்குக் காரணம் ஸீதையின் இருப்பிடம் தெரிந்தால் தான் என்பது உபமாந வ்ருத்தாந்தத்தில். ஆணைகளை மீறுகிற ஜநங்கள் பெருமாளிடம் பயத்தை விடுவது லக்ஷ்மியின் ஸ்திதியை அறிந்ததால் தான் என்பது ஸம்ப்ரதாயார்த்தம். பிதேவ த்வத்ப்ரேயாந் என்று தொடங்கும் பட்டர் ச்லோகத்திலும் மற்றும் பல இடங்களிலும் விளக்கின கருத்து இது.

10. ப்ராஜ்ஞா: என்ற பதத்தால் சொல்ல வந்த கருத்து என்னவென்றால் ஸம்ப்ரதாய நுணுக்கங்களைக் குருவிடமிருந்து அறிந்த அறிவாளிகள் மட்டும் இப்படிப் பயம் நீங்கப்பெறுவர் என்பதாம். இதை உபமாநபக்ஷத்தில்

அறிவாளிகள் என்ற அர்த்தத்திலோ, ப்ர-அஜ்ஞா: என்று பிரித்தோ பொருந்தவிடலாம் பு⁴த்³த்⁴வா என்றும் ப்ராஜ்ஞா: என்றும் அறிவை இரண்டு முறை சொன்னதில் ஒரு நோக்கம் உண்டு. லக்ஷ்மியின் ஸ்திதியை அறிவதும், அதன் விளைவாக அறிஞர் ஆவதும் வெவ்வேறு.

உன் ஸ்திதியை உணர்ந்ததனால்
உயரறிவால் ஒழியும் பயம்.

15.சிறியவர்க்கும் சிபாரிசு செய்பவள்.

पादाब्जं भजनादिकर्मणि सुरैर्यस्यैव कर्मीकृतं
यो धत्तेऽर्कयमेन्द्रवह्निमरुतां भीतावपादानताम् ।
तस्याप्यम्ब ! सकृत्कृतप्रपदनः तेऽस्मीति याचन् जनो -
प्यत्रासार्पणसंप्रदानमभवत् देवि ! प्रसादेन ते ॥ १५ ॥

பாதா₃ப்ஜம் ப₄ஜநாதி₃கர்மணி
ஸுரை: யஸ்யைவ கர்மீக்ருதம்
யோ த₄த்தே-ர்க யமேந்த்₃ர
வஹ்நி மருதாம்
பீ₄தாவபாதா₃நதாம்।
தஸ்யாப்யம்ப₃! ஸக்ருத் க்ருத
ப்ரபத₃ந: தேऽஸ்மீதி யாசந் ஜநோ
ப்யத்ராஸார்பணஸம்ப்ரதா₃நமப₄வத்தே₃வி
ப்ரஸாதே₃ந தே ॥

अम्ब அம்மா!

देवि தேவியே!

यस्य ! எவருடைய

पादाब्जं एव திருவடித்தாமரை மட்டுமே

भजन-आदि-कर्मणि உபாஸநம் முதலிய கர்மங்களில்

सुरैः தேவர்களால்

कर्मीकृतं செயப்படுபொருளாக்கப்பட்டதோ ?

यः எவர்

अर्क-यम-इन्द्र-वह्नि-मरुतां சூரியன், யமன், இந்திரன், அக்கினி, வாயு, இவர்களுக்கு

भीतौ பயத்தில்

अपादानतां ஹேதுத்தன்மையை

धत्ते தரிக்கிறாரோ ?

तस्यापि அவருக்கே

सकृत् ஒரே ஒரு தடவை

कृत-प्रपदनः மரணாகதி

பண்ணினவனாய்	जनः अपि ஜநம் கூட
ते உன் பொருட்டாய்	अत्रास-अर्पण-संप्रदानं அபயத்தைத்
अस्मि நான்	தரும் பாத்திரமாக
इति என்று	ते உன்னுடைய
याचन् வேண்டுகிற	प्रसादेन அநுக்ரஹத்தால்
	अभवत् ஆயிற்று.

அம்மா ஸ்ரீ தேவியே! புருஷோத்தமனான பெருமாள் எங்கே? இந்த அற்பஜனம் எங்கே? இதற்குக் கூட அவன் அபயம் அளிக்கிறான். நானோ ஒரே ஒரு தடவை ஶரணம் அடைந்ததோடு சரி. பக்தியோகம் பண்ண இயலாதவன். உன் பொருட்டே நான் என்று பெருமாளிடம் யாசிப்பதை மட்டும் செய்தவனுக்கு அவர் அபயம் அளிக்கிறாரே, அது உன்னாலன்றோ? பக்தியோகம் பண்ணும் தேவர்களுக்குக் கூட விளம்பித்துக் கிடைக்கப்போகிற பலனான(மா ஶுச: என்கிற) அபயத்தை இந்த நீசஜந்துவுக்கு அந்த மஹாபுருஷன் தருவது உன் குறுக்கீட்டால் அல்லவா? தாயே! எவனிடமிருந்து சூரியன் முதலியவரும் பயத்துடன் செயல்படுகிறார்களோ, அவர் இந்த ஶரணாகதனுக்கு அபயம் அளிக்கிறார் என்றால், அது உன்னாலே தான்.

அமரர்களுக்கதிபதியாய் அவர்கள் தன தடி தொழவும்
அக்நி முதலானவரை அச்சுறுத்தும் அதிபதியும்
அடைக்கலமாய் அடைந்தவனை அஞ்சேல் என்று அருள்கொடுப்பான்.
அன்னையின் அருளன்றே அதற்கடியாய் அடைகிறது?

இந்த ச்லோகத்தில் மூன்று முக்கியக் கருத்துகளைச் சொல்கிறார்:

1. பகவான் பரமபுருஷன். நாம் அற்பஜந்துக்கள். அவன் முகத்தில் விழிக்கும் தகுதி கூடக் கிடையாது நமக்கு. மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்யாஸம் அவனுக்கும் நமக்கும். இந்த வாசியைத் தெரிவிக்க அவனுக்குச் சில

அடைமொழிகளையும் இடுகிறார். அவனைத் தேவர்களும் உபாஸிக்கிறார்கள். நாமோ உபாஸ்யருமன்று, உபாஸகருமன்று. கேவலம், அகிஞ்சனராய், கையாலாகாதவராய், யாசித்து நிற்பவர். இரண்டாவது, ஸூர்யன் முதலானோர், அவனுக்கு ஏவலாட்களாய், அவனிடம் அச்சத்தால் தத்தம் பணியைச் சரிவரப் பண்ணுகிறார்கள்.

நாம் எங்கே? அவன் எங்கே?

2. தேவர்களுக்கும் நமக்கும் உள்ள வாசி அதிகம். அவர்களில் சிலர் பக்தி பண்ணுபவர்கள். நாம் ப்ரபத்தி பண்ணுபவர்கள். அவர்கள் அஞ்சி வேலை செய்பவர்கள். நாம் ஆணையை மீறியவர்கள். ஆனால் அவர்களுக்கு முன் நமக்கு அபயம் கிடைத்து விடுகிறது. ஏனென்றால் நாம் தாயாரிடம் புருஷகார ப்ரபத்தி பண்ணினவர்கள்.

3. இதில் தாயாரின் பங்கு அதிகம். அவளுடைய சிபாரிசால் தான் திறமைக்குறைவையே ஒரு தகுதியாக ஏற்று ப்ரபந்நர்களுக்கு அபயம் அளிக்கிறான் பகவான். இதை ப்ரஸாதேந தே என்று சொன்னார். அது சரி, அவள் ஏன் சிறியோமான நமக்காகப் பரிந்துரைக்கிறாள்? அவள் அம்மாவானபடியால் - தாயன்பு வழிவதால். இதை அம்ப என்ற பதத்தால் ஸூசித்தார். சாஸ்த்ரம் அறிந்தவர் இந்த ச்லோகத்தில் மேலும் நான்கு ஸ்வரஸார்த்தங்களைச் சொல்லுவர்.

1. இங்கு கர்ம என்ற பதம் இரண்டு அர்த்தங்களில் வந்திருக்கிறது. பஜநாதி கர்மணி என்ற இடத்தில் கர்மம் என்பதற்குச் செயல் என்று அர்த்தம். கர்மீக்ருதம் என்ற இடத்தில் கர்ம என்பது இலக்கணத்தில் இரண்டாம் வேற்றுமைப்பொருளாக வருவது. தேவன் பகவானைப் பஜிக்கிறான் என்ற வாக்கியத்தில் பஜநம் என்ற செயலுக்குத் தேவன் கர்த்தா; பகவான் கர்ம.

ஆக, பஜநம் என்ற கர்மம் பகவானைக் கர்மமாகக்கொண்டது என்று வேடிக்கை பண்ணுகிறார்.

2. வ்யாகரண சாஸ்த்ர வல்லுனர்கள் இதில் பல பரிபாஷைச் சொற்களைக் காணலாம். கர்ம, அபாதாநம், ஸம்ப்ரதாநம், என்ற மூன்றும் விபக்த்யர்த்த ப்ரகரணத்தில் வரும் கலைச்சொற்கள். அவர்களுக்கு உடனே பாணிநி ஸூத்ரங்கள் நினைவுக்கு வரும்.

கர்து ரீப்ஸிததமம் கர்ம
கர்மணி த்[3]விதீயா
கர்மணா யமபி[4]ப்ரைதி ஸ ஸம்ப்ரதாநம்
சதுர்த்தீ ஸம்ப்ரதாநே
த்ருவ மபாயேऽபாதா[3]நம்
அபாதா[3]நே பஞ்சமீ

என்கிற ஸூத்ரங்கள். அதன்படிப் பார்ப்போம். தேவர்கள் பெருமாளடியைப் பஜநம் செய்கிறார்கள். ஸூர்யன் பெருமாளிடம் அஞ்சுகிறான். பெருமாள் ஶரணாகதனுக்கு அபயம் அளிக்கிறார் என்ற மூன்று வாக்கியங்களில் உள்ள மூன்று விபக்திகளை இலக்கணச் சொற்களால் சொன்னால், பஜநத்தின் கர்மம் திருவடி. பயத்தின் அபாதாநம் பகவான். அபயப்ரதாநத்தின் ஸம்ப்ரதாநம் ஶரணாகதன் என்று ஆகும். தேऽஸ்மி என்ற பரஸமர்ப்பணத்தில் ஸம்ப்ரதாநமான பகவான் அபயம் தரும்போது அதற்கு ஸம்ப்ரதாநம் ப்ரபந்நன் என்று சிறு வேடிக்கையும் கலந்தது. பஜநகர்மத்துக்கே கர்மமான ஒருவன் தன்னை ஸம்ப்ரதாநமாக்கினவனையே ஸம்ப்ரதாநமாக்குகிறான் என்றும், பீதிக்கு அபாதாந மானவன் தரும் அபீதிக்கு ப்ரபந்நனே ஸம்ப்ரதாநம் என்றும், சாடுக்தி. இதில் ஒரு ஶ்லேஷை நயமும் கலந்துள்ளது. அபாதாநம், ஸம்ப்ரதாநம் என்ற பதங்களுக்கு வேறு அர்த்தங்களும் இருப்பதால் நயம். அபாதாநம் என்பது வெளியெடுக்கும் செயல். ஸம்ப்ரதாநம் என்பது

முழுமையாகக் கொடுக்கும் செயல். பயம் என்னும் விஷயத்தில் பெருமாள் அபாதாநம் பண்ணினாரா, அபாதாநம் ஆனாரா என்றால் இரண்டும் தான். அபாதாநமானது ஸூர்யாதிகளுக்கும், அபாதாநம் பண்ணினது ஶரணாகதனுக்கும் தெரியும். இதே போல் பெருமாள் அபயத்தை ஸம்ப்ரதாநம் பண்ணினார் என்பதும் சரி; அதற்கு ப்ரபந்நன் ஸம்ப்ரதாநம் ஆனான் என்பதும் சரி. அபி என்ற பதத்தால் இந்த நயங்களை ஸூசிக்கிறார் கவி. அத்ராஸார்பணம் என்பதும் பீ⁴த்யபாத³நம் என்பதும் ஒன்று தானே? (ஸூர்யாதிகளின்) பீ⁴த்யபாதா³நமானவனே பீத்யபாதாநத்தைப் ப்ரபந்நனுக்குப் பண்ணுகிறான்.

3. வேதாந்திகள் இந்த ச்லோகத்தில் வேறொன்றை ரஸிப்பர். இரண்டாம் பாதத்தில் ஸூர்யன், யமன், இந்த்ரன், அக்நி, வாயு, என்று ஐந்து தேவதைகளைச் சொன்னது ஏன்? எட்டு திக்பாலகர்களைச் சொல்லக்கூடாதோ? அல்லது சில கர்மங்களில், (பாலிகாராதனம் முதலியவைகளில்) ப்ரம்மா, இந்திரன், யமன், ஸோமன், வருணன் என்று ஐந்து தேவர்களை ஆவாஹிக்கிறோமே, அந்த ஐவரைச் சொல்லலாமே? ஏதோ மனதில் தோன்றிய ஐந்து தேவதைகளைச் சொல்லி விட்டாரோ? என்கிற ஸந்தேஹம் எழும். தைத்திரீய உபநிஷத்தில் பீஷாऽஸ்மாத் வாத: பவதே என்று தொடங்கி நாலு வாக்கியங்களைப் பார்த்தால், இவர் அங்கிருந்து எடுத்த கருத்து இது என்பது புரியும். யார் யார்

யார் யார் பயப்படுவதாக வேதம் சொல்லிற்றோ அதை அப்படியே சொல்லி விட்டார்.

4. மந்த்ரார்த்தங்களை அறிந்தவர் இந்த ச்லோகத்தில் தே அஸ்மி என்பதில் அஷ்டாக்ஷரார்த்தமும், தேவி ! ப்ரஸாதேந தே என்னுமிடத்தில் புருஷகாரப்ரபத்தி ஸஹிதமான த்வயார்த்தமும், அத்ராஸ அர்பணம் என்னுமிடத்தில் சரமச்லோகார்த்தமும் இருப்பதை ரஸிப்பர்.

ப்ரபத்தியை ஒரே தடவை தான் பண்ணவேண்டும்; தேவர்களுக்கும் பக்தியோகத்தில் அதிகாரம் உண்டு; முதலிய வேறு பல சாஸ்த்ரார்த்தங்களும் அடங்கிய இந்த ச்லோகம் லக்ஷ்மியின் புருஷகாரப் பெருமையை விளக்குவது.

16. எட்டாத இடத்துக்கு ஏறுவதை எளிதாக்குபவள்.

आरोढुं किल यत्सनीडं अमरा बिभ्यत्यहिद्विण्मुखाः
तद्ब्रह्मापि तवाऽऽश्रयेण सुलभीकर्तुं न भीतोऽस्म्यहम् ।
लेढुं डाडिमकल्परत्नखचितं राज्ञः किरीटं रमे
किं वा सर्वदुरासदस्य दयिताकेलीशुकस्त्रस्यति ॥ १५ ॥

ஆரோடு4ம் கில யத்ஸநீடம3 மமரா பி3ப்4யத்யஹித்3விண் முகா2:
தத் ப்3ரஹ்மாபி தவாஶ்ரயேண ஸுலபீ4கர்தும் ந பீ4தோஸ்ம்யஹம் ।
லேடு4ம் டா3டி3ம கல்ப ரத்ந க2சிதம் ராஜ்ஞ: கிரீடம் ரமே
கிம் வா ஸர்வது3ராஸத3ஸ்ய த3யிதாகேலீஶுகஸ் த்ரஸ்யதி ॥ 15 ॥

रमे - ! லக்ஷ்மியே!
यत्सनीडं - எதன் ஸமீபப்பகுதியை
आरोढुं किल - ஏறுவதற்கே
अहिद्विण्मुखाः - இந்திரன் முதலிய
अमराः - தேவதைகள்
बिभ्यति - பயப்படுகிறார்களோ
तत् - அந்த
ब्रह्म अपि - பரப்ரம்ஹத்தையே
तव - உன்னுடைய
आश्रयेण - அவலம்பத்தால்

सुलभीकर्तुं - எளிதாக்கிக் கொள்ள
अहं - நான்
न भीतः अस्मि - பயந்தவனாய் இல்லை.
सर्व-दुरासदस्य - எவராலும் அணுகமுடியாத
राज्ञः - அரசனுடைய
डाडिम-कल्प-रत्न-खचितं - மாதுளைமுத்துகள் போன்ற ரத்நங்கள் பதிக்கப்பட்ட
किरीटं - மகுடத்தை
लेढुं - நக்குவதற்கு
दयिता-केली-शुकः - ப்ரியமனைவியின் விளையாட்டுக்கிளி
किं वा त्रस्यति ? - பயப்படுகிறதா என்ன?

பரப்பிரம்மம் மிக உயர்ந்தது. இந்திரன் முதலான தேவர்கள் கூட அதன் அருகில் செல்ல அஞ்சுகிறார்கள் - ஆனால் ரமையே! நான் உன் துணையால் அதை எளிதாக அடைய அஞ்சாமல் இருக்கிறேன். இதற்கு ஒரு உதாரணம். அனைவரும் அணுகமுடையாத அரசன் அணிந்துள்ள கிரீடத்தில் ஏறி அமர்வதற்கு யாருக்குத் தைரியம் வரும்? ஆனால் ராணி வளர்க்கும் கிளிப்பிள்ளை அந்த மகுடத்தின் மீது உட்கார்ந்து பயமே இல்லாமல் நக்குகிறதே !

எவ்வளவோ ஏற்றமுளார் ஏறாமல் ஏங்குகையில்
எம் பெருமான் எனக்கு மிக எளிதாவான் எம் ரமையால்.

கிளி போல் நான். ராணி போல் லக்ஷ்மி. ராஜா போல் பெருமாள். கிரீடம் போல் பரமபதம். சிற்றரசர் போல் இந்த்ராதி தேவர்கள். சிற்றரசர் செய்ய முடியாத காரியத்தைக் கிளி செய்ய முடியும். கிரீடத்தில் ஏறும் காரியம். நான் லக்ஷ்மியின் வாத்ஸல்யபாத்ரம் ஆனதால் எனக்குச் சுலபம் - பெருமாளிடம் போவது.

மன்னர்க்குள் புலி. மற்றவர்க்குக் கிலி.
மகுடத்தில் கிளி. மகிழ்ச்சியுடன் களி.

இந்த ச்லோகத்தில் சொன்ன கருத்துகள்:

பெருமாள் நெருங்க முடியாதவர். அமரர்களும் அஞ்சுவர் அவரருகில் செல்ல.

முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படலாமோ? நாம் பெருமாளை அணுக விரும்பலாமோ?

விரும்பலாம். திருவின் அடிபற்றிக் கொண்டவர் எளிதாக அவரை அடையலாம்.

அவருக்கு அந்தரங்கராகி விடுவதால்.

அவருக்கு இனியவளின் பரிந்துரையை அவர் மறுக்கமாட்டாததால்.

16.சொற்பம் சொல்லுக்கே சொத்தெல்லாம் சொரிபவள்.

दातव्या स्वयमेव दाशरथये देवीति यो वीतभीः
अग्रे साग्रहं अग्रजस्य कथयन्नार्तो दशास्यानुजः ।
तस्मै त्वद्दयितेन दत्तमभयं प्राज्यं च राज्यं रमे
यत्स्वल्पं व्यसनं भवेत्तव कृते तत् भूयसे श्रेयसे ॥ १६ ॥

தா₃தவ்யா ஸ்வயமேவ தா₃ஶரத₂யே தே₃வீதி யோ வீதபீ₄:
அக்₃ரே ஸாக்₃ரஹம் அக்₃ரஜஸ்யகத₂யந்நார்தோ த₃ஶாஸ்யாநுஜ: ।
தஸ்மை த்வத்₃த₃யிதேந த₃த்தமப₄யம் ப்ராஜ்யம் ச ராஜ்யம் ரமே
யத் ஸ்வல்பம் வ்யஸநம் ப₄வேத் தவ க்ருதே தத் பூ₄யஸே ஶ்ரேயஸே ॥ 16 ॥

रमे ! - லக்ஷ்மியே!
यः - எந்த (விபீஷணன்)
दशास्य-अनुजः - ராவணனின் தம்பி
अग्रजस्य - அண்ணனின்
अग्रे - முன்னிலையில்
वीतभीः - பயம் நீங்கினவனாய்
स्वयं एव - தானாகவே
दाशरथये - ராமனுக்கு
देवी - ஸீதாதேவி
दातव्या - தரப்படவேண்டியவள்
इति - என்று

साग्रहं - பிடிவாதமாக
कथयन् - சொல்லிக்கொண்டு
आर्त: - வருந்தினவனோ
तस्मै - அந்த விபீஷணனுக்கு
त्वत्-दयितेन - உன் ப்ரியனான ராமனால்
अभयं - அபயமும்
प्राज्यं - தாராளமாக
राज्यं च - ராஜ்யமும்
दत्तं - கொடுக்கப்பட்டது.
स्वल्पं - சிறிதாவது
यत् - எந்த
व्यसनं - ஶ்ரமம்
तव कृते - உன் பொருட்டு
भवेत् - ஆகுமோ
तत् - அது
भूयसे - அதிகமான
श्रेयसे - மேன்மைக்காக
भवेत् - ஆகும்.

விபீஷணன் உனக்குச் ஸாதகமாகச் சில வார்த்தைகளை ராவணனிடம் சொல்லிவிட்டான். இதற்காக நீ அவனுக்கு எவ்வளவு பெரிய பலன்களைத் தருவித்தாய், ஸீதையே! அவன் செய்தது ஸ்வல்பம் தானே? ஸீதையைத் தானாகவே ராமனிடம் கொடுத்துவிடு என்றான். அதைப் பயமில்லாமல் பிடிவாதத்துடன் உளமாரச் சொன்னான். அதற்கு இவ்வளவு பலனா? முதலில் அபயப்ரதானம் நடக்கிறது; அப்புறம் யுத்தத்துக்கு முன்னேயே ஒரு பட்டாபிஷேகம் நடக்கிறது; யுத்தம் முடிந்ததும் ராஜ்யம் கிடைக்கிறது; அதுவும் ப்ராஜ்ய (அதிக)மாகக் கிடைக்கிறது. ஓரிரு நல்வார்த்தைகள் சொன்னதற்கு இவ்வளவு நன்மையா?

ராவணன் தம்பி உனக்காக ரமையே பரிந்தான் சிறிதாக.
ராமன் மூலம் அதற்காக ராஜ்யம் தந்தாய் பெரிதாக.

இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், ரமையே! உனக்காகக் கொஞ்சமேனும் ஒருவன் ஶ்ரமப்பட்டால், அவனுக்கு ஏராளமான மேன்மைகள் குவியும் என்று தெரிகிறது.

ஏதோ சிறிது தொண்டினுக்கும்

ஏகப்பட்ட பலன் கிடைக்கும்.

இந்த ச்லோகத்தில் சொன்ன மற்ற நீதிகள்:

1. அதர்மத்தை எதிர்க்கும்போது அஞ்சக்கூடாது. இதை வீதபீ: என்ற பதத்தால் சொன்னார்.

2. தர்மத்தை உரைக்கும்போது தயங்கக்கூடாது. இதை ஸாக்ரஹம் என்ற பதத்தால் சொன்னார்.

3. வாசிக கைங்கர்யத்திலும் மனதையும் ஈடுபடுத்த வேண்டும். இதை ஆர்த: என்பதால் சொன்னார்.

4. லக்ஷ்மீகைங்கர்யத்தைச் சிறிதேனும் செய்யவேண்டும். இதை தவ க்ருதே என்பதால் சொன்னார்.

விபீஷணனுக்குத் தந்த ராஜ்யத்தை ப்ராஜ்யம் ராஜ்யம் என்கிறாரே, ஏன்? வெறும் ப்ராஸத்துக்கு மட்டுமில்லை. இதில் ஒரு ஸம்ப்ரதாயார்த்தமும் உண்டு. இங்கு சொன்ன ராஜ்யம் வெறும் லங்காராஜ்யம் என்று நினைப்பவர்களை ஆபாதரஸிகர்கள் என்கிறார் ஸ்வாமி தேசிகன்.

ஸ தத் ராஜ்யம் மஹத் ப்ராப்ய ராமத[3]த்தம் விபீ[4]ஷண: ।

என்று அதை மஹத்தாகச் சொன்னதாலும்

லப்த்[4]வா குலத[4]நம் ராஜா லங்காம் ப்ராயாந் மஹாயஶா: ॥

என்று அதைக் குலதனத்தோடு கூடியதாகவும் விபீஷணனைப் பெரும் புகழாளனாகவும் சொன்னதாலும்

ஸ்வராஜ்யே வஸ லங்காயாம் மயா த[3]த்தே விபீ[4]ஷண ।
ந த்வாம் த[4]ர்ஷயிதும் ஶக்தாஸ் ஸேந்த்ரா அபி தி[3]வௌகஸ: ॥

என்று அந்த லங்காராஜ்யமானது, தேவர்களும் விழையத் தக்கதாகவும், தேவர்களாலும் அசைக்கமுடியாததாகவும் சொன்னதாலும் அதை ப்ராஜ்யம் ராஜ்யம் என்பர் சில ரஸிகர்கள். ஆனால் பரமரஸிகர்களானநம் ஆசார்யர்கள், லங்காராஜ்யம் ஆநுஷங்கிகமாக வந்ததென்றும், அதைவிட உயர்ந்ததான கைங்கர்ய ஸாம்ராஜ்யம் விபீஷணனுக்குக் கிடைத்ததென்றும் அருளிச் செய்திருக்கிறார்கள். இதையெல்லாம் மனத்தில் கொண்டு ப்ராஜ்யம் ராஜ்யம் என்கிறார் இந்தக்கவி. த்வத்த[3]யிதேந என்பதற்கு ராமனாலே என்றும் ராமன் மூலமாக என்றும் இரண்டு விதமாக அர்த்தம் சொல்லலாம். இரண்டாவதில் கொடுத்தவள் ஸீதையாவாள்.

18. திணறலைத் தீர்க்கத் திகழும் திருமேனியாள்.

तव साधु वर्ष्म नवसारसालये ! भवसागरान्त रवसादमेयुषाम् ।
अभयाय भात्यशुभ यातु दीप्ति हृत् प्रभया सुवर्ण निभया मनोरमम् ॥१८॥

தவ ஸாது₄ வர்ஷ்ம நவஸாரஸாலயே !
ப₄வஸாக₃ராந்த ரவஸாத₃ மேயுஷாம் ।
அப₄யாய பா₄த்யஶுப₄யாதுதீ₃ப்திஹ்ருத்
ப்ரப₄யா ஸுவர்ண நிப₄யா மநோரமம் ॥ 18 ॥

नव-सारस-आलये ! - புதுத்தாமரையில் இருப்பவளே!
तव - உன்னுடைய
साधु - நல்ல
वर्ष्म - திருமேனி
भव-सागर-अन्तः - ஸம்ஸாரக் கடலுக்குள்
अवसादं - துன்பத்தை
एयुषां - அடைபவர்க்கு
अभयाय - அச்சம் நீக்க
भाति - பிரகாசிக்கிறது.
अशुभ-यातु-दीप्ति-हृत् - அமங்களமான பிசாசுகளின் ஒளியை அபஹரிப்பதாகவும்
सुवर्ण-निभया - தங்கம் போன்ற
प्रभया - காந்தியாலே
मनोरमं - மனதைக் கவர்வதாகவும
भाति - பிரகாசிக்கிறது.

புதுத்தாமரையில் வஸிப்பவளே! விபவாவதாரத்திலும் அர்ச்சாவதாரத்திலும் உன் திருமேனி மூன்று வகையில் எங்களுக்குப் பயன் படுகிறது. ஒன்று - ஸம்ஸார ஸமுத்திரத்துக்குள் துன்புறுபவர்களுக்கு அச்சத்தை நீக்குகிறது. (திருமேனியை ஸேவித்தால் புண்ணியம்.) இரண்டு - அமங்களமான பேய்பிசாசுகளை விரட்டுகிறது. மூன்று - தங்கம் போன்ற காந்தியாலே எங்கள் மனதைக் கவர்ந்து எங்களை உன் புகழ்பாடவைக்கிறது.

அலராளே! உன் தேகம் அச்சத்தை அழித்துவிடும். அசுபத்தை அகற்றிவிடும். அழகாலே மனம் கவரும்.

இந்த ச்லோகத்தில் நாம் அறிபவை:

1. திவ்யமங்கள விக்ரஹத்துக்குப் பெருமை அதிகம். விக்கிரக வழிபாட்டை இசையாத நவீன மதங்கள் கிடக்கட்டும். நாம் உருவ வழிபாட்டினால், உயர்வோம். 2. அவள் நவஸாரஸத்தில் இருப்பவள். நாமோ பவஸாகரத்தில் இருக்கிறோம். 3. அசுபயாது என்பதற்கு மூன்று அர்த்தங்கள். அசுபமான 'யாது'. ராவணன் போன்றோர். திருமகளின் வடிவழகு அவர்களின் அழிவுக்குக் காரணமாயிற்று. இது முதல் அர்த்தம். அசுபம் என்கிற ரக்ஷஸ் என்றும் பொருள் கொள்ளலாம். அமங்களமே ஒரு பிசாசு. அதனை விரட்டுவது திருவின் திருமேனி. இது இருக்குமிடத்தில் அது இருக்காது. அசுபயாது என்பது பிரம்மரக்ஷஸ்ஸு முதலியவற்றையும் குறிக்கும். இதையெல்லாம் மங்கவைப்பது அவள் தேகம். 4. அது தங்கம் போல் காந்தி கொண்டது என்பது ஸ்ரீஸூக்தத்தில் முதல் பதத்திலேயே பிரசித்தமான விஷயம். 5. வேரி மாறாத பூமேல் இருப்பாள் வினை தீர்க்குமே என்று ஆழ்வார் அருளியதை நவஸாரஸாலயத்தவள் ஸம்ஸாரபயம் போக்குவதாக இந்தக் கவி சொல்கிறார்.

தங்கம் போன்ற உன் அங்கம் ஸேவித்து
எங்கள் அச்சங்கள் பங்கம் அடையட்டும்.

19. என்னவோ என்றஞ்சும் எனக்கும் இரங்குபவள்.

प्रत्यासीदति मृत्युरन्वहमहो गत्यागतिभ्यां रवेः
पापीयानहमस्मि पापिनि जने कोपी च वैवस्वतः ।
किं किं वा भवितेति वेङ्कटपतेः क्रीडासखि त्रस्यते
मह्यं गर्ह्यतमाय मातरभयं देया दयालो स्वयम् ॥ १९ ॥

ப்ரத்யாஸீத3தி ம்ருத்யு ரந்வஹ மஹோ க3த்யாக3திப்4யாம் ரவே:
பாபீயாநஹமஸ்மி பாபிநி ஜநே கோபீ ச வைவஸ்வத: ।
கிம் கிம் வா ப4விதேதி வேங்கடபதே: க்ரீடா3ஸகி2 த்ரஸ்யதே
மஹ்யம் க3ர்ஹ்யதமாய மாத ரப4யம் தே3யா த3யாளோ ஸ்வயம் ॥

अन्वहं ஒவ்வொரு நாளும்
रवेः சூரியனுடைய
गत्यागतिभ्यां போக்குவரத்துகளால்
मृत्युः யமன்
प्रत्यासीदति நெருங்குகிறான்.
अहो ஐயோ!
पापीयान् மிகப் பாவியாக
अहं நான்
अस्मि இருக்கிறேன்.
पापिनि பாவியான
जने ஜனத்தில்
वैवस्वतः யமன்
कोपी च கோபம் உள்ளவனாகவும் இருக்கிறான்.

किं किं वा என்னென்ன தான்
भविता நிகழும் इति என்று
त्रस्यते பயப்படுகிறவனும்
गर्ह्यतमाय மிக நிந்திக்கத் தக்கவனுமான
मह्यं எனக்கு
मातः அம்மாவே!
वेङ्कटपतेः வெங்கடேசனின்
क्रीडासखि விளையாட்டுத்தோழியே!
दयालो தயாளுவே!
स्वयं தானாகவே
अभयं அபயத்தை
देयाः தருவாயாக.

அம்மா! வெங்கடபதியின் விளையாட்டுத்தோழியே! எனக்குப் பயமாக இருக்கிறது. ஒவ்வொரு நாளும் சூரியன் போவதாலும் வருவதாலும் என் மரணகாலம் நெருங்குகிறது. நானோ பாவம் அதிகம் புரிந்தவன். யமனோ என்னைப் போன்ற பாவிகளிடம் கோபம் கொள்பவன். என்னென்ன நடக்குமோ? என்று அஞ்சுகிறேன். ரொம்ப மோசமான எனக்கு அபயம் தரவேண்டுமம்மா நீ தானாகவே.

பல பாவங்களினாலே பழிக்கத்தக்கவன் நானே.
பயமாயுள்ளது தாயே! பயத்தைப் போக்கிடு நீயே!

இந்த ச்லோகத்தில் நாம் அறியும் உண்மைகள்:

1. சூரியன் உதிப்பதும் மறைவதும் நமக்குச் சாவுக்காலம் நெருங்குவதை உணர்த்துபவை. மீதமுள்ள வாழ்நாளில் ஒரு நாள் குறைந்துபோகிறது. (இதை ப்ரத்யாஸீததி ம்ருத்யு: என்பதால் சொன்னார்.) நந்தந்த்யுதித ஆதித்யே என்று தொடங்கும் ப்ரமாண வசனத்தை நினைவு கூர்கிறார்.

2. நான் மிகப் பாவங்கள் பண்ணினவன். இது நான் பயப்படுவதற்குக் காரணம். பாவம் பண்ணாதவன் மரணத்துக்குப் பயப்படமாட்டான்.

3. யமன் பாவிகளைத் தண்டிப்பவன். அதனால் என்னைப்போன்ற பாவிகளிடம் கோபம் கொள்பவன். யமன் நேர்மையாக இருப்பது என் பயத்தை மிகுதிப்படுத்துகிறது. அந்தக் கோபத்தை நினைத்தால் தான் பயம் அதிகமாகிறது.

4. என்ன தண்டனை என்பது சரிவரத் தெரிந்துவிட்டால் பயம் ஓரளவுக்குள் இருக்கும். அது தெரியாததால் என்ன நடக்குமோ என்ற கிலி நடுக்குகிறது. (இதை கிம் கிம் வா பவிதா என்ற பதங்களால் சொன்னார்). புரியாத திகில் புரிந்த பேராபத்தை விடப் பேரச்சம் தருகிறது.

5. நீ என் பயத்தைப்போக்க முன்வருவாய். நீ அம்மா. நீ தயை கொண்டவள். அபயம் அளிப்பாயாக. (இதை மாதரபயம் தேயா தயாளோ என்பதால் சொன்னார்.)

6. நீயாகவே அபயம் அளித்தால்தான் உண்டு. அதற்கான தகுதியை என்னிடம் எதிர்பார்க்காதே. (இதை ஸ்வயம் என்ற சொல்லால் சொன்னார்).

7. இந்த உலகியலே உனக்கு ஒரு விளையாட்டு தான். (க்ரீடாஸகி என்பதால் இதைச்சொன்னார்).

என்னென்ன நடந்திடுமோ எமனுடைய கோபத்தால்
என்றஞ்சி நடுங்குகிறேன். எனக்கபயம் அருளம்மா!

20. அமரர்க்கும் அபயம் அளிப்பவள்.

परब्रह्मप्राणप्रणयिनि हरब्रह्ममघवन्
मुखानां लेखानामपि भयमभीतिश्च भवतः ।
निमेषोन्मेषाभ्यां तव जननि दृष्ट्योरिति महान्
अयं घण्टाघोषः क इह विमृशेत् मानमपरम् ॥ २० ॥

பரப்₃ரஹ்ம ப்ராண ப்ரணயிநி ஹர ப்₃ரஹ்ம மகவந்
முகா₂நாம் லேகா₂நாம் அபி ப₄யமபீ₄திஸ்ச ப₄வத: ।
நிமேஷோந்மேஷாப்₄யாம் தவ ஜநநி த்₃ருஷ்ட்யோ ரிதி மஹாந்
அயம் க₄ண்டாகோ₄ஷ: க இஹ விம்ருசேந் மாநமபரம் ॥ 20 ॥

पर-ब्रह्म-प्राण-प्रणयिनि பரம்பொருளின் ப்ராணநாயகியே!
हर-ब्रह्म-मघवन्- मुखानां சிவன், பிரம்மா, இந்திரன் முதலிய
लेखानां अपि தேவர்களுக்கும் கூட
भयं பயமும்
अभीतिः च பயமின்மையும்
तव உன்னுடைய
दृष्ट्योः கண்களுடைய
निमेषोन्मेषाभ्यां மூடுவதாலும் திறப்பதாலும்
भवतः ஏற்படுகின்றன
इति என்ற
अयं இது
महान् பெரிய
घण्टा-घोषः மணியோசை.
जननि தாயே!
अपरं இன்னொரு
मानं ப்ரமாணத்தை
कः எவன்
इह இங்கே
विमृशेत् ஆராய்வான்?

பரமனின் துணைவியே! பிரம்மா, சிவன், இந்திரன் முதலிய பெரிய தேவர்களுக்குக் கூட உன் கடாக்ஷம் கிடைத்தால் அபயம். இல்லாதபோது பயம் என்பது தெளிவு. இந்த ஊர்றிந்த உண்மையை மேலும் ஆராயவேண்டிய அவசியமில்லை.

அரனயன் இந்திரற்கும் அன்னையின் விழி தான் நல்கும்
அபயத்தை என்பதற்கும் அன்னியச் சான்றெதற்கு?

இந்தச் ச்லோகத்தில் நாம் அறிபவை:

1. பரப்பிரம்மத்துக்குப் பிராண நாயகியானவள் திருமகள். அவள் கடாக்ஷம் பெற்றவர்கள் பயம் இல்லாமல் நிம்மதியாக இருக்கிறார்கள். அவள் விழிக்குப் புறம்பானவர்களோ பயந்து நடுங்குகிறார்கள். பயமும் அபயமும் அவள் விழியின் மூடல் திறத்தலின் விளைவுகள்.

விஷ்ணுவே விரும்பும் லக்ஷ்மி விழிகளின் விரிதல் மூடல்
விளைவினால் அபயம் பீதி விதி சிவன் விண்ணோர்க்கெல்லாம்.

2. தேவர்களுக்கே இந்த நிலை என்றால் அப்பாவிகளான நமக்குக் கேட்கவும் வேண்டுமோ?

3. இது நாடறிந்த உண்மை. (கண்டாகோஷம் என்கிறார்). ஏதாவது சந்தேகம் இருந்தால் தானே இதற்கான ப்ரமாணங்களை ஆராயவேண்டும்? கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா? லக்ஷ்மி கடாக்ஷத்தால் பயம் நீங்கும் என்பதற்கான வேறு பிரமாணங்களை எவன் ஆராய்வான்? எவனும் ஆராயமாட்டான். எல்லாரும் திருவின் திருவிழிநோக்கை அடைய முற்படுவர். ஐயமறத் தெரிந்ததையே மேன்மேலும் நிரூபிக்க முயல்வது மடமை.

4. வேறு ப்ரமாணங்கள் இல்லாமலில்லை. பலப்பல உண்டு. ஆனால் அதில் விவாதமிருந்தால் தானே அவை தேவை?

ஊரெலாம் அறிந்த ஒன்றை ஊர்ஜிதம் பண்ணுவானேன்?

21. கொடுமை கழியக் குளிரக் காண்பவள்.

घनार्तौ कातान्तः कदननिपुणः किङ्करगणः
भ्रमद्भिर्लोकाम्ब कुधमिव समद्भिश्च नयनैः ।
प्रगल्भां दुर्भीतिं प्रथयति यथा मे न बहुधा
तथा शीतापाङ्गैः प्रसभमनुगृह्णातु भवती ॥ २१ ॥

க₄நார்தௌ கார்தாந்த: கத₃ந நிபுண: கிங்கரக₃ண:
ப்₄ரமத்₃பி₄ர் லோகாம்ப க்ருத₄மிவ வமத்₃பி₄ஶ்ச நயநை: ।
ப்ரக₃ல்பா₄ம் து₃ர்பீ₄திம் ப்ரத₂யதி யதா₂ மே ந ப₃ஹுதா₄
ததா₂ ஶீதாபாங்கை: ப்ரஸப₄ம் அநுக்₃ருஹ்ணாது ப₄வதீ ॥ 21 ॥

लोकाम्ब ஜகந்மாதாவே!
घन-आर्ती பெருந்துயரில்
कदन-निपुण: பீடிப்பதில் வல்ல
कार्तान्त: யமனுடையதான
क्रुधं கோபத்தை
वमद्भि: इव
கக்குவன போல்வனவுமான
नयनै: கண்களாலே
बहुधा பலபடியாக
मे எனக்கு
प्रगल्भां வலியதான
दुर्भीतिं துர்ப்பயத்தை
यथा எப்படி
न प्रथयति விளைக்காமல்
இருக்குமோ
तथा அப்படி
शीत-अपाङ्गै: குளிர்ந்த
கடாக்ஷங்களால்
प्रसभं வலிய
भवती நீர்
अनुगृह्णातु அனுக்கிரகிக்கவேணும்.

உலகுக்கெல்லாம் அன்னையே! சாகும் தறுவாயில் யமகிங்கரர்கள் கோரமான பார்வைகளால் கோபத்தைக்கக்கி என்னை நலிய முற்படும்போது அவ்வாறு நிகழாமல் உம் குளிர்ந்த பார்வைகளால் நீர் என்னை அனுக்கிரகிக்கவேணும்.

குரோதத்தைக் கக்குகிற குரூரக்கண் கிங்கரரால்
குலைநடுக்கக் கொடுமையைக் குளிர்விழியால் தொலையம்மா!

இந்த ச்லோகத்தில் நாம் அறிபவை:

1. யமகிங்கரர்கள் கொடியவர்கள். துன்புறுத்துவதையே ஒரு கலையாகப் பயின்றவர்கள். (இதைக் கதநநிபுண: என்ற பதத்தால் சொல்கிறார்.) கூட்டமாக வந்து பெருந்துயர் விளைவிப்பவர்கள்.

2. யமபடர்களின் கண்கள் குரோதக் கனலைக் கக்குபவை. பயமுறுத்துவதற்காகச் சுழலும் கண்கள் அவை. இதற்கு நேர்மாறாக, அன்னையின் கண்கள் குளிரக் காண்பவை. ஓரக்கண்ணாலேயே அனுக்கிரகத்தைப் பொழிபவை. இந்த வித்தியாசத்தை அறிவிக்கச் சில அடைமொழிகளைப் பிரயோகிக்கிறார் கவி.

சீற்றம் கக்கிச் சுழல்பவை வேறு.

சீதாபாங்கம் சிறப்பது வேறு.

3. நீ வலியவந்து அருள் புரிய வேண்டும். ப்ரஸபம் என்கிறார். துர்ப்பயம் பலபடி அதிகமாயிருந்தாலும் நான் கையாலாகாதவன் ஆதலாலும் நீ ப்ரஸபமாக அனுக்ரஹிக்க வேண்டும்.

4. நீ உலகுக்குத் தாயானதால் எங்கள் தகுதியைக் கணிசியாமல் அன்பு செலுத்தும் குணம் உனக்குண்டு.

உலகத்தின் திருத்தாயே! உயிர்பிரியும் தறுவாயே
உக்கிரரால் பயநோயே உதறிட நீயருள்வாயே

22. நரகபய நடுக்கத்தை நீக்குபவள்

तत्तत्पापव्रजफलतया दारुणैस्तन्यमाना:
यामया: श्रुत्वा मुनिवचनतो यातनाश्चेतनानाम् ।
कामं भीत: कमलनिलये कम्पमानाखिलाङ्ग:
विश्वस्य त्वां अहमशरणो विश्वधात्रीं प्रपद्ये ॥ २२

தத்தத்பாபவ்ரஜபலதயா தாருணைஸ்தந்யமாநா:
யாம்யா: ஸ்ருத்வா முநிவசநதோ யாதநாஸ்சேதநாநாம் ।
காமம் பீத: கமலநிலயே கம்பமாநாகிலாங்க:
விஸ்வஸ்ய த்வாம் அஹமசரணோ விஸ்வதாத்ரீம் ப்ரபத்யே ॥ 22

कमल निलये = தாமரையில் இருப்பவளே! चेतनानां = ஜீவர்களுக்கு तत्तद्-पाप-व्रज-फलतया =

அந்தந்தப் பாவக் கூட்டத்தின் பயனாக
दारुणैः = கொடியவர்களால்
तन्यमानाः = விஸ்தாரமாகப் பண்ணப்படுகிற
याम्याः = யமலோகத்தைச் சேர்ந்த
यातनाः கொடுமைகளை
मुनि-वचनतः = ரிஷிகளின் வசனங்களிலிருந்து
श्रुत्वा = கேட்டு
काम = மிகவும்
भीतः = பயந்தவனாய்
कम्पमान-अखिल-अङ्गः = நடுங்குகிற எல்லா அங்கங்களும் கொண்டவனாய்
अहं = நான்
अशरणः = புகலில்லாமல்
विश्व-धात्रीं = ப்ரபஞ்சத்தின் தாயான
त्वां = உன்னை;
विश्वस्य = நம்பி;
प्रपद्ये = சரணடைகிறேன்.

தாமரையாளே ! எந்ததெந்த பாவத்துக்கு என்னென்ன பலன்கள் யமலோகத்தில் கிடைக்கும் என்று ரிஷிகள் சொல்லியிருக்கிறார்கள். அவை கொடுமையான நரக யாதனைகள் என்று விளக்கியிருக்கிறார்கள். அவற்றைக் கேட்டு நான் மிகவும் பயந்து போயிருக்கிறேன். என் உடம்பெல்லாம் நடுங்குகிறது. ஜகன்மாதாவான உன்னை விச்வஸித்து நான் வேறு புகலில்லாமல் சரணடைகிறேன்.

வினை விளைவாய் யமக்கொடுமை. விரிவஞ்சி நடுங்குகிறேன்
விச்வத்தின் அன்னையே ! விச்வஸித்தேன் உன்னையே !

இந்த ச்லோகத்தில் நாம் அறிபவை

1. எந்தெந்த பாவங்களுக்கு என்னென்ன கொடிய நரக விளைவுகள் என்று சில புராணங்களில் விளக்கியதுண்டு. அவை நம்மை நடுங்க வைப்பவை. நம்மைப் பாவம் செய்யாமல் தடுக்க வைப்பவை. நம்மைப் பயமுறுத்தி சரணாகதியில் முட்டுபவை. இந்த இரண்டு காரணங்களாலும் அந்த முனிவர்களின் புராணவசனங்களைக் கேட்பது நல்லது.

2. நரகத்தில் நமக்கு இழைக்கப்படும் கொடுமைகள் அநியாயமானவை அல்ல. நாமே பாவம் செய்து தேடிக் கொண்டவை. வேறு யாரையும் குறை சொல்வதற்கில்லை.

3. 'அபரண: பீத:' என்ற பதங்களால் சொன்ன கார்ப்பண்யமும் 'விச்வஸ்ய' என்ற பதத்தால் சொன்ன மஹாவிச்வாஸமும் 'ப்ரபத்யே' என்ற பதத்தால் சொன்ன பரணாகதிக்கு முக்கியமான அங்கங்கள்.

4. நான் பண்ணின பாவம் கொஞ்சநஞ்சமன்று. இதை பாபவ்ரஜ என்ற பதத்தால் சொல்கிறார்.

என் வினையின் பயனாக எமலோகப் பயம் போக
எமதன்னை சார்வாக ஏற்றேன் நான் சரியாக

'விச்வஸ்ய' என்ற பதத்தில் சிறிய வேடிக்கை இருக்கிறது. விச்வஸித்து, நம்பி, என்ற ஒரே அர்த்தத்தில் ஆளப்பட்டிருந்தாலும் இன்னொரு அர்த்தம் நினைவுக்கு வரும்படி விச்வதாத்ரீம் என்ற பதம் அருகில் இருக்கிறது. ப்ரபஞ்சத்தினுடைய என்பது இரண்டாவது அர்த்தம். அவள் 'விச்வஸ்ய மாதா'. நான் விச்வஸ்ய ப்ரபந்நன். அர்த்தங்கள் வெவ்வேறு. அழகு!

23. தைந்யம் போக்கித் தைர்யம் தருபவள்.

देशे काले सततविकृतेः देवि देहस्य वृत्ते
दृष्टे शौरे रघजुषि जने तीक्ष्णकोपे च चित्ते ।
भीतिःप्रादुर्भवति महती शक्तिमत्या भवत्याः
कारुण्यार्द्रे मृदुनि हृदये चिन्तिते हन्त धैर्यम् ।२३॥

தே[3]ஶே காலே ஸததவிக்ருதே: தே[3]வி தே[3]ஹஸ்ய வ்ருத்தே
த்[3]ருஷ்டே ஶௌரே ரக[4]ஜுஷி ஜநே தீக்ஷ்ணகோபே ச சித்தே ।
பீ[4]தி: ப்ராது[3]ர்ப[4]வதி ஹ்ருத[3]யே ஶக்திமத்யா ப[4]வத்யா:
காருண்யார்த்[3]ரே ம்ருது[3]நி ஹ்ருத[3]யே சிந்திதே ஹந்த தை[4]ர்யம் ॥ 23

देवि தேவியே !
देशे இடத்திலும்
काले காலத்திலும்
सतत-विकृतेः என்றும் மாறுதல் அடைகிற
देहस्य உடலினுடைய
वृत्ते நடத்தையும்
अघ-जुषि குற்றம் அடைந்த
जने மனிதனிடம்
शौरेः பகவானுடைய
तीक्ष्णकोपे உக்கிரமான கோபம் கொண்ட
चित्ते च திருவுள்ளமும்
दृष्टे காணப்பட்டபொழுது
महती பெரிய
भीतिः பயம்
प्रादुर्भवति உண்டாகிறது.
शक्तिमत्याः ஆற்றல் வாய்ந்த
भवत्याः உம்முடைய
कारुण्यार्द्रे தயையால் ஈரமான
मृदुनि மென்மையான
हृदये இதயமானது
चिन्तिते எண்ணப்பட்டபோது
धैर्यं தைரியம் (உண்டாகிறது.) हन्त ஆச்சரியம்.

தேவியே! நான் என் வசமிழந்து பாவங்களைப் பண்ணிவிடுகிறேன். பாவிகளிடம் பெருமாள் ரோஷம் கொள்கிறார். இவ்விரண்டையும் நினைத்துப் பார்க்கும்போது எனக்குப் பெரிய பீதி உண்டாகிறது. ஆனால் உன்னுடைய அருளுள்ளத்தை நினைத்து ஆறுதலும் ஏற்படுகிறது.

தீவினைப் பிழைகள் பண்ணும்போதும்
தீக்ஷ்ணமாய்ப் பகவான் சினக்கும்போதும்
தீவிரமாகப் பயம் வந்தாலும்
தீராவாருள் பண்பெண்ணியதும்.

இந்த ஶ்லோகத்தில் கூறிய உண்மைகள்:

1.இடத்துக்கிடம் மாறுகிறது உடல்நிலை. நேரத்துக்கு நேரம் மாறுகிறது மனநிலை. தேகம் என்பது மனசுக்கும் உபலக்ஷணம். மாறுவதே ப்ரக்ருதியின் இயல்பு. நாம் என்ன பண்ணமுடியும்? பிழைகள் பலவற்றை நம்மை மீறி நாம் செய்துவிடுகிறோம்.

2.செய்தபிறகு பயம் உண்டாகிறது. பாவம் செய்தவரிடம் பகவானுக்குக் கோபம் பொத்துக் கொண்டுவருகிறது. அந்தக் கோபம் உக்கிரமாக இருக்கிறது. அதை நினைத்தால் நமது பயம் மேலும் அதிகரிக்கிறது. இப்படிப் பாவத்துக்கு அஞ்சுவதே ஒரு நற்பண்பு தான்.

3.லக்ஷ்மியிடம் சக்தியும் தயையும் சேர்ந்து இருப்பதால் நாம் ஆறுதல் அடைகிறோம். ஆற்றல் இல்லாதவரின் இரக்கத்தால் நமக்குப் பயனில்லை. இரக்கமில்லாதவரின் ஆற்றல் தீமை பயக்கும். தயையிலாரின் சக்தி தோஷம். சக்தியிலாரின் தயை வ்யர்த்தம். இரண்டும் கொண்ட திருமகளின் பண்புகளை எண்ணி நாம் ஆறுதல் அடைகிறோம்.

4. லக்ஷ்மியைச் சக்தி உள்ளவள் என்கிறார். பெருமாளின் சக்தியே லக்ஷ்மி தான் என்று சொல்வதுண்டு. அது போகட்டும். இங்கே எந்தச் சக்தியைச் சொல்கிறார்? பெருமாளிடம் நமக்காகப் பரிந்துரைத்து நம்மைக் காக்கும் சக்தி இங்கு விவக்ஷிதம். வாத்ஸல்யத்தோடு நம் துயர் துடைக்க முற்படும் பண்பை ஈரமானதும் மிருதுவானதுமான நெஞ்சம் என்கிறார்.

5. ஹந்த ஆச்சரியம் என்று சொல்லி முடிக்கிறார். நமக்குப் பயமும் தைரியமும் ஒரே சமயத்தில் திவ்ய தம்பதிகளால் ஏற்படுவதால் ஆச்சரியம்.

6. ஆற்றல் என்ற தமிழ்ச்சொல்லுக்கு இரண்டு அர்த்தங்கள் உண்டு. திறமை, சக்தி, சாமர்த்தியம் என்பது ஒன்று. ஆறச்செய்தல், ஆறுதல் அளித்தல்; என்பது மற்றொன்று. இரண்டுமே திருமகளிடம் இருப்பதாகச் சொல்கிறது கடைசி வாக்கியம். (இது கவி கருதாமல் தானே அமைந்து விட்டது).

மாற்றம் அடைவதுஉடல் (இது ச்லோகத்தின் முதல் வரியின் பொருள்)

சீற்றம் அடைபவர் ஹரி. (இது ச்லோகத்தின் இரண்டாவது வரியின் பொருள்)

ஆற்றல் உடையவள் திரு. (இது ச்லோகத்தில் மூன்றாம் வரியின் பொருள்)

ஆற்றல் செய்பவள் திரு. (இது ச்லோகத்தில் நான்காம் வரியின் பொருள்)

24. ஒதுக்கப்பட்டவர்க்கு ஒரே கதியானவள்.

बाधन्ते विषया बहिस्सततमप्यन्तस्तु कामादयः
त्रातुं हन्त विपन्नमर्णवसुते धात्रादयोऽप्यक्षमाः ।
शक्तो यद्यपि केशवस्स तु दुराराधस्स्वयं मद्विधैः
इत्युद्वेगवतो मम क्लमहराऽलोका त्वमेका गतिः ॥ २४ ॥

பா3த4ந்தே விஷயா ப3ஹிஸ் ஸததமப் யந்தஸ்து காமாத3ய:
த்ராதும் ஹந்த விபந்ந மர்ணவஸுதே தா4த்ராத3யோப் யக்ஷமா:
ஸக்தோ யத்3யபி கேஸவஸ் ஸ து து4ராராத4ஸ் ஸ்வயம் மத்3விதை4:
இத்யுத்3வேக3வதோ மம க்லமஹராலோகா த்வமேகா க3தி: ॥ 24 ॥

अर्णवसुते கடலின் பெண்ணே!
बहिः வெளியிலே
विषयाः சப்தாதிவிஷயங்கள்
सततं अपि எப்பொழுதுமே
बाधन्ते பீடிக்கின்றன.
अन्तः तु உள்ளேயோவெனில்
कामादयः ஆசை முதலியவை (பீடிக்கின்றன).
हन्त ஐயோ!
विपन्नं (இப்படி) விபத்தடைந்தவளை
त्रातुं காப்பாற்றுவதற்கு
धात्रादयः अपि பிரம்மா முதலானவர்கள் கூட
अक्षमाः சக்தியற்றவர்கள்.
केशवः பெருமாள்
शक्तो यद्यपि சக்தி உள்ளவர் ஆனாலும்
स तु அவரோ
मद्विधैः என் போன்றோரால்
स्वयं தானாகவே (நேரடியாக)
दुराराधः எளிதில் மகிழ்விக்க முடியாதவர்.
इति என்று
उद्वेगवतः கவலைப்படுகிற
मम எனக்கு
क्लम-हर-आलोका வாட்டம் தணிக்கும் பார்வை கொண்ட
त्वं நீ
एका ஒரே गतिः கதியாவாய்.

வெளியிலே ஒலி, ஒளி, சுவை, மணம், முதலிய விஷயங்கள் என்னை இழுத்துப் பாடாய்ப் படுத்துகின்றன. உள்ளேயோ ஆசை, கோபம், முதலியவை என்னை ஹிம்ஸிக்கின்றன. இத்தகைய விபத்தில் மாட்டிக்கொண்ட என்னைக் காப்பாற்றுவதற்கு பிரம்மா முதலியோராலும் முடியாது. பெருமாளால் இயலும் ஆனாலும் அவர் என் போன்ற பாவிகளால் ஆராதிக்க முடியாதவர். இப்படிக் கவலைப்படுகிற எனக்கு லக்ஷ்மியே! நீ தான் ஒரே கதி. உன் பார்வையாலேயே என் வாட்டத்தைத் தணிக்கிறாய்.

பாடு தான் வெளியே உள்ளே
பாழியில் மாட்டிக்கொண்டேன்.
பாவியைக் காப்பாரில்லை.
பார்வையால் துயர் தீர் அம்மா !

இந்த ஸ்லோகத்தில் சொன்ன கருத்துகள்:

1. ஐந்து புலன்களைப் பிடித்து இழுக்கின்றன அவற்றுக்கான விஷயங்கள். போதாக்குறைக்கு, காம க்ரோதாதிகள் உட்பகைவர்களாக இருந்து நம்மைச்

சிக்கவைக்கின்றன. இப்படி உள்ளேயும் வெளியேயும் பீடை. மத்தளத்துக்கு இருபுறமும் அடி என்ற நிலையில் இருக்கிறோம். இப்படி விபத்தில் மாட்டிக் கொண்டிருப்பதைப் புரிந்து கொள்ளுதல் முதற்படி.

2. இந்த விபத்திலிருந்து நம்மைக் காக்க வல்லவர் யார்? பிரம்மா முதலியவர்களும் ஸமர்த்தரல்லர். ஒருவகையில் அவர்களும் விபத்தில் சிக்கியவர்களே.

3. கேசவனால் நம்மைக் காப்பாற்ற முடியும். ஆனால் அவனை அணுகக்கூட முடியாதபடி பெரும் பாவிகளாக நாம் இருக்கிறோம். அவன் துராராதன் என்பது அவன் குறையில்லை. அவன் நம் போன்ற பாவிகளுக்கு மட்டும் துராராதன். ((மத்விதை: என்ற பதத்தால் சொன்ன கருத்து இது). அவனை நாம் ஆராதிக்க வேண்டுமானால் ''வேதம் வல்லார்களைக் கொண்டு ''முயற்சிக்கலாம். தாயார் மூலம் ஆராதிக்கலாம். நேராக முடியாது. (ஸ்வயம் என்ற பதத்தின் கருத்து இது).

4. தாயாரின் அருட்பார்வை நமது வாட்டத்தைத் தணிக்கிறது. நம் உத்வேகத்தைப் போக்குகிறது. நம் கவலையை நீக்குகிறது. அவள் பெருமாளுக்குப் பரிந்துரைத்து நம்மை விபத்திலிருந்து மீட்கிறாள். ஆதாவது ஸம்ஸாரத்திலிருந்து கரையேற்றுகிறாள்.

5. தாயார் நமக்கு ஒரே கதி. நம்மோடு கூட அதே விபத்தில் சிக்கியவர்களையும், நமக்கு முகம் கொடுத்துக் கூடப் பேசாதவர்களையும் விட்டுவிட்டால் மீதமிருப்பது அவள் ஒருத்தி தான்.

உள்ளும் புறமும் உபாதைகள்
உலுக்கி எடுக்கும் விபத்தொன்றில்
உன்னைத் தவிரக் கடற்பெண்ணே!
உதவிட யாரும் இல்லையே.

சிக்கவைக்கின்றன. இப்படி உள்ளேயும் வெளியேயும் பீடை. மத்தளத்துக்கு இருபுறமும் அடி என்ற நிலையில் இருக்கிறோம். இப்படி விபத்தில் மாட்டிக் கொண்டிருப்பதைப் புரிந்து கொள்ளுதல் முதற்படி.

2. இந்த விபத்திலிருந்து நம்மைக் காக்க வல்லவர் யார்? பிரம்மா முதலியவர்களும் ஸமர்த்தரல்லர். ஒருவகையில் அவர்களும் விபத்தில் சிக்கியவர்களே.

3. கேசவனால் நம்மைக் காப்பாற்ற முடியும். ஆனால் அவனை அணுகக்கூட முடியாதபடி பெரும் பாவிகளாக நாம் இருக்கிறோம். அவன் துராராதன் என்பது அவன் குறையில்லை. அவன் நம் போன்ற பாவிகளுக்கு மட்டும் துராராதன். ((மத்விதை: என்ற பதத்தால் சொன்ன கருத்து இது). அவனை நாம் ஆராதிக்க வேண்டுமானால் ''வேதம் வல்லார்களைக் கொண்டு ''முயற்சிக்கலாம். தாயார் மூலம் ஆராதிக்கலாம். நேராக முடியாது. (ஸ்வயம் என்ற பதத்தின் கருத்து இது).

4. தாயாரின் அருட்பார்வை நமது வாட்டத்தைத் தணிக்கிறது. நம் உத்வேகத்தைப் போக்குகிறது. நம் கவலையை நீக்குகிறது. அவள் பெருமாளுக்குப் பரிந்துரைத்து நம்மை விபத்திலிருந்து மீட்கிறாள். ஆதாவது ஸம்ஸாரத்திலிருந்து கரையேற்றுகிறாள்.

5. தாயார் நமக்கு ஒரே கதி. நம்மோடு கூட அதே விபத்தில் சிக்கியவர்களையும், நமக்கு முகம் கொடுத்துக் கூடப் பேசாதவர்களையும் விட்டுவிட்டால் மீதமிருப்பது அவள் ஒருத்தி தான்.

உள்ளும் புறமும் உபாதைகள்
உலுக்கி எடுக்கும் விபத்தொன்றில்
உன்னைத் தவிரக் கடற்பெண்ணே!
உதவிட யாரும் இல்லையே.

25. இ(மூக்குகளை இராமல்பண்ணும் இந்திரை.

वाल्मीकौ तमसाऽन्वयो वलरिपौ भूयस्तरां मन्यवः
योगस्थे यमसङ्गतिर्दृढगदाऽवाप्तिस्तु नारायणे ।
रुग्णे क्षुद्रहितक्रमो भवकृतं दुःखं रतिप्रेयसि
त्रासः कुत्सितमौक्तिकेषु न पुनस्त्वत्संश्रितेष्विन्दिरे ॥ २५ ॥

வால்மீகௌ தமஸாந்வயோ வலரிபௌ பூ⁴யஸ்தராம் மந்யவ:
யோக³ஸ்தே² யமஸங்க³திர் த்³ருட⁴க³தா³வாப்திஸ்து நாராயணே ।
ருக்³ணே க்ஷுத்³ராஹிதக்ரமோ ப⁴வக்ருதம் து³:க²ம் ரதிப்ரேயஸி
த்ராஸ: குத்ஸிதமௌக்திகேஷு ந புநஸ்த்வத் ஸம்ச்ரிதேஷ்விந்திரே

॥ 25 ॥

इन्दिरे லக்ஷ்மியே!

वाल्मीकौ வால்மீகியிடம்

तमसा-अन्वयः தமஸாநதீ ஸம்பந்தம் (தமோகுண ஸம்பந்தம் என்று இன்னொரு அர்த்தம்).

वलरिपौ இந்திரனிடம்

भूयस्तरां அதிகப்படியாக

मन्यवः யாகங்கள் (கோபங்கள் என்று இன்னொரு அர்த்தம்).

योगस्थे யோகியிடம்

यम-सङ्गतिः யமமென்கிற யோகாங்கத்தின் சேர்க்கை. (யமலோகம் போவது என்று வேறர்த்தம்).

दृढ-गदा-अवाप्तिः तु உறுதியான கதாயுதத்தை அடைவதோ (நோயை அடைவது என்று இன்னொரு அர்த்தம்)

नारायणे நாராயணனிடம்.

रुग्णे வியாதிக்காரனிடம்

क्षुत्-रहित-क्रमः பசியெடுக்காத முறை (வேறு விதமாகப் பதம் பிரித்தால், அற்பர்களுக்கு நல்லது பண்ணும் முறை என்று அர்த்தமாகும்).

भव-कृतं சிவனாலே பண்ணப்பட்ட (ஸம்ஸாரத்தால் பண்ணப்பட்ட என்று இன்னொரு அர்த்தம்).

दुःखं துக்கம்

रति-प्रेयसि ரதிகாந்தனான மன்மதனிடம்.

त्रासः மணிதோஷமானது (பயநடுக்கம் என்று இன்னொரு அர்த்தம்).

कुत्सित-मौक्तिकेषु கெட்ட முத்துகளில்,

त्वत्-संश्रितेषु पुनः உன்னை அடைந்தவர்களிடமோ

न (இவை எதுவுமே) இல்லை.

லக்ஷ்மிபக்தர்களுக்குத் தமோகுணமோ, கோப தாபங்களோ, யமலோகமோ, நோய்நொடிகளோ, அற்ப ஹிதங்களோ, ஸம்ஸாரதுக்கமோ, பயநடுக்கமோ, ஏற்படுவதில்லை. இவை முறையே வால்மீகியிடமும் இந்திரனிடமும், யோகியிடமும், நாராயணனிடமும், நேர்யாளியிடமும், மன்மதனிடமும், கெட்ட முத்திடமும் போய்விட்டன. (இதைச் சிலேடையால் சமர்த்திக்கிறார்.) இதனால் லக்ஷ்மிபக்தர்கள் எவ்வித இழுக்கும் இல்லாமல் விளங்குகிறார்கள்.

1. தமஸா (தமோகுணத்தோடு) இவர்களுக்கு அந்வயம் கிடையாதோ என்று கேட்டால், கிடையாது. வால்மீகிக்குத்தான் அது உண்டு. தமஸாநதியின் தொடர்பு. ஸ்ரீமத்ராமாயணத்தின் வித்தான மா நிஷாத என்ற ச்லோகம் அவதரித்ததே தமஸா நதிக் கரையில் தான். (வால்மீகி லக்ஷ்மிபக்தர் இல்லையா என்று கேட்கவேண்டாம். இதெல்லாம் ஒரு சமத்காரத்துக்கு மட்டும் தான்.)

2. மந்யு (கோபம் அல்லது தைந்யம்) லக்ஷ்மி பக்தர்களுக்குக் கிடையாது. ஆனால் நிறைய மந்யு (யாகம்) இந்திரனிடம் உண்டு. அவன் நூறு யாகங்கள் பண்ணி சதக்ரது என்று பெயர் பெற்றவன்.

3. லக்ஷ்மிபக்தர்கள் யமலோகமே போகமாட்டார்கள். இவர்களுக்கு இல்லாத யமஸங்கதிஎன்பது யோகிகளுக்கு உண்டு. எப்படி யென்றால், யோகத்தின் எட்டு அங்கங்களின் முதலாவது யமம் என்பது. கட்டுப்பாடு என்று அர்த்தம். வேறு அர்த்தங்களும் உண்டு. அஹிம்ஸை, பிரம்ம சரியம், அபரிக்ரஹம், என்ற பல சேர்ந்தது யமம்.

4. கதம் என்றால் நோய். இது கிடையாது லக்ஷ்மிபக்தர்களுக்கு. இவர்களுக்கு இல்லாத கதாவாப்தி நாராயணனுக்கு உண்டு. எப்படியென்றால் கௌமோதகி என்ற கதாயுதத்தை அவன் தரிக்கிறான்.

5.க்ஷுத்ரஹித என்ற சொல்லை க்ஷுத்-ரஹித என்று பிரித்தால், பசியில்லாத என்றும் க்ஷுத்ர-ஹித என்று பிரித்தால், நீசர்களுக்கு ஹிதமான என்றும்-அற்பமான ஹிதம் என்றும் அர்த்தம் ஆகும். லக்ஷ்மிபக்தர்களுக்கு அற்பஹிதம் கிடையாது-இவர்களுக்கு இல்லாத க்ஷுத்ரஹித நிலை நோயாளிகளுக்கு உண்டு; அவர்களுக்குப் பசியெடுக்காததால்.

பவம் என்றால் ஸம்ஸாரம். பவன் என்றால் சிவன். லக்ஷ்மிபக்தர்களுக்குப் பவதுக்கம் கிடையாது. அப்படியானால் பவதுக்கம்(பவனால் வந்த துக்கம்)யாரிடம் உள்ளது என்று கேட்டால், மன்மதனிடம் இருக்கிறது. அவன் சிவனால் எரிக்கப்பட்டான்.

7.த்ராஸம் என்றால் ரத்தினதோஷம் என்றும் பயநடுக்கம் என்றும் இரண்டும் அர்த்தங்கள். லக்ஷ்மி பக்தர்களுக்கு த்ராஸம்(பயம்) கிடையாது. நன்முத்துகள் அல்லாத சில முத்துகளில் த்ராஸம் இருக்கிறது.

இந்திரையின் அடியார்கள்

இழுக்கேதும் அடையார்கள்.

26. ப்ரஹ்மத்தில் ப்ரதிஷ்டையானவள்

हन्त प्राकृतचक्षुराद्यविषये व्यापिन्यनिर्वाच्यतां
प्राप्ते विश्वजनिस्थितिक्षयपुषि ब्रह्मण्यनन्याश्रये ।
मातस्त्वामभयं विधातुमुषितां मन्ये प्रतिष्ठामहं
तस्मिंस्ते दरमन्तरं भवति चेत् कस्यात्र न स्याद्भयम् ॥ २६

ஹந்த ப்ராக்ருதசக்ஷுராத்யவிஷயே வ்யாபிந்யநிர்வாச்யதாம்
ப்ராப்தே விஸ்வஜநிஸ்திக்ஷயபுஷி ப்ரஹ்மண்யநந்யாஸ்ரயே ।
மாதஸ்த்வாமபயம் விதாதுமுஷிதாம் மந்யே ப்ரதிஷ்டாமஹம்
தஸ்மிம்ஸ்தே தரமந்தரம் பவதி சேத் கஸ்யாத்ர ந ஸ்யாத் பயம் ॥ 26

मातः = அன்னையே !
प्राकृतचक्षुराद्यविषये = ஊனக்கண் முதலியவற்றுக்குப் புலனாகாததும்
व्यापिनि = (எங்கும்) பரந்ததும்
अनिर्वाच्यता = சொல்ல வொண்ணா நிலையை
प्राप्ते = அடைந்ததும்
विश्व-जनि-स्थिति-क्षय-पुषि = இந்தப் ப்ரபஞ்சத்தின் தோற்றத்தையும் இருப்பையும் அழிவையும் போஷிப்பதும்
अनन्याश्रये = வேறொன்றால் தாங்கப்படாததுமான
ब्रह्मणि = பரம்பொருளிடத்தில்
अभयं = அச்சமின்மையை
विधातुं = பண்ணுவதற்காக
उषितां = வசிக்கிற
त्वां = உன்னை
प्रतिष्ठां = ப்ரதிஷ்டை என்று
अहं = நான்
मन्ये = கருதுகிறேன்
तस्मिन् = அந்தப் பரம்பொருளில்
ते = உனக்கு
दरं = சிறிது
अन्तरं = இடைவெளி (பிரிவு)
भवति चेत् = நேர்ந்தால்
कस्य = யாருக்கு
अत्र = இங்கே
भयं = அச்சம்
न स्यात् = இருக்காது?

அன்னையே ! தைத்திரீய உபநிஷத்தில் ஒரு கருத்து ப்ரசித்தமானது. பரம்பொருளில் ப்ரதிஷ்டையை அடைவந்தவன் அபயம் அடைவான் என்றும் சிறிது

தடையோ இடைவெளியோ ஏற்பட்டால் பயமடைவான் என்றும் உபநிஷத்து ஓதுகிறது. இந்த வாக்யத்தில் சொன்ன ப்ரதிஷ்டை என்பதற்கு என்ன அர்த்தம்? பாஷ்யகாரர்கள் ஏதாவது அர்த்தம் சொல்லட்டும். எனக்குத் தோன்றுவது என்னவென்றால், லக்ஷ்மிதான் அந்தப் ப்ரதிஷ்டையாக இருக்கக் கூடும். என் புதுக் கருத்துக்குச் ஸாதகமாக மூன்று உண்மைகள் இருக்கின்றன. ப்ரஹ்மத்திடம் நிலைத்து நிற்பவள் என்று அந்தப் பதத்துக்கு அர்த்தம். அவள் லக்ஷ்மியாகத்தானே இருக்க முடியும்? இது முதல் காரணம். அந்தப் ப்ரதிஷ்டையை அடைந்தால் அபயம் கிடைக்கும் என்கிறது உபநிஷத்து. இதனாலும் இது லக்ஷ்மியையே குறிக்கக் கூடும். இது இரண்டாவது காரணம். இந்தப் ப்ரதிஷ்டை கணமும் இறைவனைப் பிரியாமல் இருத்தல் பேசப்படுகிறது. இதனாலும் இது லக்ஷ்மி என்னலாம். அவள் பிரியாமல் இருக்கும் வரை தான் நமக்கு அபயம்.

இந்த ச்லோகத்தில் உபநிஷத்து வாக்யம் பற்றி நேரடியாகப் ப்ரஸ்தாவம் இல்லாவிட்டாலும், இதிலுள்ள பல பதங்கள் அந்த வாக்யத்தை நினைவுபடுத்துகின்றன. அபயம், ப்ரதிஷ்டா, தரம், அந்தரம், பயம், பவதி என்ற ஆறு பதங்களும் அர்த்தங்களும் இங்குள்ளன. அத்ருச்யே என்ற பதத்தின் அர்த்தமாக ப்ராக்ருத சக்ஷுராத்யவிஷயே என்றுள்ளது. அநாத்ம்யே என்ற பதத்துக்குப் பதிலாக வ்யாப்தி என்றுள்ளது. அநிருக்தே என்ற பதத்தின் அர்த்தம் அநிர்வாச்யதாம் ப்ராப்தே என்னப்படுகிறது. அநிலயநே என்பதன் அர்த்தம் அநந்யாச்ரயே என்பதில் உள்ளது. இந்த ச்லோகத்தில் யதா ஹ்யேவைஷ ஏதஸ்மிந்நத்ருச்யே அநாத்ம்யேநிருக்தே நிலயநேபயம் ப்ரதிஷ்டாம் விந்ததே । அத ஸோபயம் கதோ பவதி । யதாஹ்யேவைஷ ஏதஸ்மிந்து தரமந்தரம் குருதே । அத தஸ்ய பயம் பவதி । என்கிற வாக்யங்களைக் கவி கருதுகிறார் என்பதில் ஸந்தேஹம் இல்லை. மற்ற பதங்களுக்கெல்லாம் பாஷ்யத்தில் உள்ளபடியே அர்த்தம் சொல்லி வந்தவர் ப்ரதிஷ்டா என்ற பதத்துக்கு மட்டும் வேறு அர்த்தம் சொல்கிறார். பாஷ்யத்தில்

ப்ரதிஷ்டா என்பதற்கு இடைவிடாமல் த்யானிக்கும் நிஷ்டை என்றுதான் அர்த்தம் சொல்லியிருக்கிறது. இந்தக் கவியோ ப்ரதிஷ்டா என்பதற்கு லக்ஷ்மி என்று அர்த்தம் பொருந்தும் போலிருக்கிறதே என்று மூன்று காரணங்களைக் கொண்டு வாதிக்கிறார். இது ஒரு கவிநயத்துக்கு மட்டுமே. சாஸ்த்ர சர்ச்சைக்கு அன்று; இதை மந்யே என்ற பதத்தால் தெரிவிக்கிறார்.

பிரமத்தில் நிலைப்பதாலும் பிறகபயம் அளிப்பதாலும்
பிரியாமல் இருப்பதாலும் ப்ரதிஷ்டை திருவே தான்

27. தசமுகன் தம்பிக்குத் தஞ்சம் தருவித்தவள்

दशमुखसहजं तं देवि नाम्नाऽर्थतो वाऽपि
उदितमुखविकारं भीतमप्यूष्मणाऽप्तम् ।
अकुरुत रघुवीरस्त्वत्प्रसादप्रभवात्
अभयवितरणेन क्षिप्रमानन्दसान्द्रम् ॥ २७

தஶமுகஸஹஜம் தம் தேவி நாம்நாऽர்த்ததோ வாऽபி
உதிதமுகவிகாரம் பீதமப்யூஷ்மணாऽப்தம் ।
அகுருத ரகுவீரஸ்த்வத்ப்ரஸாதப்ரபாவாத்
அபயவிதரணேந க்ஷிப்ரமாநந்தஸாந்த்ரம் ॥ 27

देवि = தேவியே !

नाम्ना = பெயராலும்

अर्थतो वा अपि = அர்த்தத்தினாலும்

उदितमुखविकारं = 1. தொடக்கத்தில் 'வி' என்ற எழுத்தைக் கொண்டதும் 2. முகத்தில் மாற்றம் அடைந்தவனும்

भीतं = 1. 'பீ' என்ற எழுத்தோடு சேர்ந்ததும், 2. பயந்தவனும்

ऊष्मणाप्तं अपि = 1. ஷ, ண, என்ற எழுத்துகளை அடைந்ததும், 2. தாபத்தோடு கூடியவனும்

दशमुखसहजं = ராவணனின் ஸஹோதரனும் ஆன

तं = அந்த விபீஷணனை

त्वत्-प्रसाद-प्रभावात् = உன் அனுக்ரஹத்தின் பெருமையினால்

क्षिप्रं = விரைவில்

अभय-वितरणेन = அபயம் அளிப்பதால்

आनन्द-सान्द्र = மகிழ்ச்சி மிக்கவனாக
रघुवीरः = ராமர்
अकृत = பண்ணினார்.

ஸீதா தேவியே ! உன் அனுக்ரஹம் இருந்ததால் தான் விபீஷணனுக்கு ராமர் அபயப்ரதானம் பண்ணினார். அதையும் விரைவில் பண்ணினார். அவன் மகிழ்ச்சியில் இருக்கும்படி பண்ணினார். அவன் அவ்வளவு மகிழ்ச்சியை ராமன் மூலம் பெறுவதற்குச் சொந்தத் தகுதி உடையவனன்று. ராவணனுக்குத் தம்பியானவன்; முகம் கோணினவன்; பயந்தாங்கொள்ளி; சிடுமூஞ்சி. இவ்வளவு குறைகள் (சிலேடையால் ஸமர்த்திப்பவை) இருந்தும், அந்த விபீஷணனுக்கு அவ்வளவு மகிழ்ச்சியை ராமர் தந்தார் என்றால், அதற்குக் காரணம் உன் அருள் தான்.

விபீஷணன் என்ற பெயருக்கும், அந்தப் பெயருக்கு அர்த்தமான விபீஷணனுக்கும் சிலேடையாக மூன்று ஒப்புமைகளைச் சொல்கிறார். ஒன்று, முகவிகாரம். முகம் என்றால் ஆரம்பம் என்றும் வதனம் என்றும் இரண்டு அர்த்தங்கள். விகாரம் என்றால், மாறுதல் என்றும் 'வி' எனும் எழுத்து என்றும் இரண்டு அர்த்தங்கள். விபீஷணன் என்கிற பதத்தில் முதலில் 'வி' என்ற எழுத்து இருப்பதால் முகவிகாரம். விபீஷணனுக்கும் ராவணனிடமும் இந்த்ரஜித்திடமும் அவமானப்பட்டதால் முகவிகாரம். இரண்டாவதாக, பீதம். என்ன நடக்குமோ என்ற அச்சம் விபீஷணனுக்கு. ராமர் தன் கட்சியில் சேர்த்துக் கொள்ளாவிட்டால், ஏற்கெனவே ராவணனைப் பகைத்துக் கொண்ட தனக்கு என்ன நேருமோ என்ற திகில். அவனுடைய பெயரும் பீதம் தான். எப்படியென்றால், 'பீ' என்ற எழுத்தோடு கூடியதல்லவா அந்த பெயர்? மூன்றாவதாக, ஊஷ்மணாப்தம். ஊஷ்ம-ண-ஆப்தம் என்று பிரித்து, 'ஷ' என்ற எழுத்தும், 'ண' என் பெயர் ஊஷ்மணாப்தமாகிறது. ஊஷ்மணா - ஆப்தம் என்று பிரித்து தாபத்தோடு கூடியவன் என்று அர்த்தம் சொன்னால், விபீஷணன் ஊஷ்மணாப்தன் ஆகிறான். இப்படியாக மூன்று ஒப்புமைகள் பெயருக்கும் ஆளுக்கும். ஊஷ்ம என்றால் என்ன ? இலக்கணத்தில் ஶஷஸஹா ஊஷ்மாண: என்பர். ஶ,

ஷ, ஸ, ஹ, என்ற நாலு எழுத்துக்களுக்கும் அந்தப் பெயர். இதே ஊஷ்மபதத்துக்கு எரிச்சல் என்றும் அர்த்தம் இருப்பதால். க்ரோதம் என்றோ, தாபம் என்றோ, பொருள் கொள்ளலாம். ஜாதக்ரோதோ விபீஷண: என்ற ராமாயண ச்லோகம் படி இது விபீஷணனுக்கு உண்டு.

அவனுக்கு முகவிகாரம் இருந்ததற்குக் காரணம். அவனுக்கு நேரிட்ட அவமானம். ஸத்துவமற்றவன், தைர்யமற்றவன், வீர்யமற்றவன், பராக்ரமமற்றவன், என்றெல்லாம் இந்த்ரஜித்து அவனை ஏசியதால் அவமானம். த்வாம் து திக் குலபாம்ஸநம், 'சீ' குலத்தையே கெடுப்பவனே என்று ராவணன் வைததால் வந்த அவமானம். "ஸோஹம் பருஷிதஸ்தேந தாஸவச் சாவமாநித:" என்று விபீஷணனே நொந்து கொள்ளும்படியான அவமானம்.

அத்தகைய விபீஷணனுக்கு ராமர் அபயம் அளித்ததற்கு ஸீதையின் அருள் காரணம் என்று இந்த கவி சொல்கிறாரே, ராமாயணத்தில் அப்படிக் காணோமே என்பதற்கில்லை. ஸரமா என்பவள் ஏற்கெனவே ஸீதையிடம் விபீஷணனின் நற்பண்புகளையும், அவன் ஸீதைக்கு அனுகூலனாக இருப்பதையும் சொன்னாள். அன்று முதலே ஸீதைக்கு விபீஷணனிடம் நல்லெண்ணம் ஏற்பட்டது. அவளுடைய இந்த அருள் தான் ஸமயத்தில் விபீஷணனுக்கு உதவியது.

"தஸ்மாத் க்ஷிப்ரம் ஸஹாஸ்மாபி:" என்று ராமாயண ச்லோகம் இருப்பதால் அதே க்ஷிப்ரம் என்ற பதத்தைப் ப்ரயோகிக்கிறார். காத் பபாதாவநிம் ஹ்ருஷ்ட; என்ற ராமாயணத்தில் விபீஷணனின் மகிழ்ச்சியைப் பற்றிப் பேசியதால் இங்கும் ஆநந்தஸாந்த்ரம் என்கிறார். இந்த ச்லோகத்தில் அறியும் ஸம்ப்ரதாயார்த்தம் என்னவென்றால், தகுதியற்றவரும், பயத்தையும் தாபத்தையும் மட்டுமே தகுதியாகக் தாயாரின் அனுக்ரஹம் பெற்றபின் பெருமாளைச் சரணடைந்தால் பலன் கிடைக்கும் என்பது. இதனால் தான் புருஷகார ப்ரபத்தி பண்ணுகிறோம் தாயாரிடம்.

***சீ* என வையப்பட்டவன். *சீ*றமாய் வெளியே வந்தான்**
***சீ*தையின் அருளினாலே *சீ*க்கிரம் அபயம் பெற்றான்**

28. வீக்ஷணத்தால் விளங்கச் செய்பவள்

अल्पश्रुतेभ्य इव राशिमनादिवाचाम्
अंहस्ततिभ्य इह बिभ्यतमर्भकं ते ।
पुण्यैः पुराणवचनैरिव वीक्षणैस्त्वम्
उच्चैर्नृसिंहसखि मामुपबृंहयेथाः ॥ २८ ॥

அல்பச்ருதேப்₄ய இவ ராசிமநாதி₃வாசாம்
அம்ஹஸ்ததிப்₄ய இஹ பி₃ப்₄யதம் அர்ப₄கம் தே ।
புண்யை: புராணவசநைரிவ வீக்ஷணைஸ்த்வம்
உச்சைர்ந்ருஸிம்ஹஸகி₂ மாம் உபப்₃ரும்ஹயேதா₂: ॥ 28 ॥

नृसिंह-सखि- நரசிங்கனின் தோழியே !
अल्पश्रुतेभ्यः- அரைகுறைக் கல்வியாளர்களிடமிருந்து
बिभ्यतं- பயப்படுகிற
वेदानां- வேதங்களுடைய
राशिं इव- குவியலைப் போல
अंहस्ततिभ्यः- பாவங்களின் கூட்டத்திலிருந்து
इह- இங்கே
बिभ्यतं- பயப்படுகிறவனும்
ते- உனது
अर्भकं - குழந்தையுமான
मां - என்னை
पुराण-वचनैः इव - புராண வசனங்கள் போல
पुण्यैः- புண்ணியங்களான
वीक्षणैः- பார்வைகளாலே
त्वं - நீ
उच्चैः- உயர
उपबृंहयेथाः- விளங்கவை.

நரசிம்மப்பெருமாளின் துணைவியே ! அரைகுறைக்கல்வி கொண்டவர் ஆபத்தானவர். அவர்களிடம் வேதங்கள் கூடப் பயப்படுமாம். தப்பு அர்த்தங்கள் சொல்லிச் சிதைத்து விடுவார்களே என்று. வேதங்களுக்கு அந்தப் பயத்தை நீக்குவதற்காக இதிஹாஸபுராணங்கள் உள்ளன. அவை சரியான வேதப்பொருள்களை விளக்குகின்றன. இப்பொழுது அற்பமாகக் கற்றவர் போல என் பாவமூட்டைகள்.

ஆபத்தானவை. பயமுறுத்துபவை. வேதராசி போல் நான். பயப்படுபவன். புராண வசனங்கள் போல் உன் பார்வைகள். புண்ணியமானவை. என் பயத்தைத் தொலைப்பவை. என்னை விளங்கச் செய்பவை. இத்தகைய பார்வைகளால் என்னை உயுர விளங்கச்செய்.

நரசிம்மர் நாயகியே! நலி வினையால் நடுங்குமென்னை

நலம் தருமுன் நோக்குகளால் நன்றாக விளக்கிடுவாய்.

இந்த ச்லோகத்தில் நாம் அறியும் உண்மைகள்:

1. அரைகுறைக்கல்வி ஆபத்தானது. நன்றாகக் கற்றவர் சரியாக அர்த்தம் சொல்லுவார்கள். அது நல்லது. ஒன்றுமே கற்காதவர்கள் எந்த அர்த்தமும் சொல்லமாட்டார்கள். அதனால் பாதகமில்லை. ஆனால் ஒரு சிறிது கற்றுவிட்டு வேதங்களை விளக்க வருபவர்கள் மிக ஆபத்தானவர்கள். தான்தோன்றித்தனமாக அர்த்தங்களைச் சொல்லிச் சுதப்பி விடுவார்கள். குட்டை குழப்புவார்கள். அவர்களிடம் நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

2. ஒரு பிரமாணவசனம் இவ்வாறு இருக்கிறது.

"இதிஹாஸ்புராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத் ।
பிபேத்யல்பச்ருதாத் வேதோ மாமயம் ப்ரதரிஷ்யதி ॥"

இதிலிருந்து அல்பச்ருதர், பிபேதி, புராணம், உபப்ரும்ஹயேத், என்ற பதங்களைக் கடன் வாங்கி அதே கருத்தை இங்கே உவமானமாகக் கூறியிருக்கிறார். அற்பமாக வாசித்தவன் வேதங்களைக் குதறிவிடுவான் என்பதால் அவனிடம் வேதமும் பயப்படும். இதிஹாஸபுராணங்களின் துணையுடன் தான் வேதங்களை நாம் புரிந்துகொள்ளவேண்டும். நமக்கு மேலெழுந்தவாரியாகத் தோன்றும் அர்த்தங்களையெல்லாம் சொல்லி வேதபகவானிடம் அபசாரப்படக்கூடாது.

3. அற்பப்படிப்பாளர் போல் என் பாவக்குவியல்கள். அபாயகரமானவை. குழியில் தள்ளுபவை. ஏமாற்றுபவை. அஞ்சவேண்டியவை. (இதை பிப்யதம் என்ற பதத்தால் சொன்னார்.) ஏராளமாக மலிந்து கிடப்பவை. கூட்டம் கூட்டமாக நிற்பவை. (இதை ததி என்ற பதத்தால் சொன்னார்.)

4. வேதம் போல் நான். மாட்டிக்கொண்டவன். எப்படியெல்லாம் சிதைவு வருமோ என்று பயப்படுபவன். தன்னைக் காத்துக்கொள்ள விரும்புபவன். அதற்காகத் திருமகள் உதவியை நாடுபவன். அவள் எப்படி தேவரூபிணியாய் இருந்து இதிஹாஸபுராணங்கள் மூலம் வேதத்தை ரக்ஷிக்கிறாளோ, அது போல எனக்கும் அவள் துணைநின்று அச்சம் நீக்குகிறாள்.

திரளான தீவினையால் தீவிரமாய்த் திகில் பெற்றேன்
திருமகளின் திருவிழியால் தீரட்டும் திகிலெல்லாம்.

5. புராண வசனங்கள் போல அன்னையின் பார்வைகள். இரண்டுமே புண்ணியமானவை. பவித்திரமானவை (இதைப் புண்யை: என்ற பதத்தால் சொன்னார்.) புராணங்கள் வேத-அர்த்தத்தை விளக்குவது போல் லக்ஷ்மீகடாக்ஷம் நம்மை விளங்கச்செய்யும். அதாவது சிறப்படையச் செய்யும். (இதை உபப்ரும்ஹயேதா: என்ற பதத்தால் சொன்னார்).

6. நான் குழந்தை. (இதை அர்ப்பகம் என்ற பதத்தால் சொன்னார்). பயப்படத் தெரியுமே தவிர, பயத்தைப் போக்கிக்கொள்ளத் தெரியாத குழந்தை. அம்மா தான் குழந்தையின் பயத்தைப் போக்கவேண்டும். அம்மா தான் குழந்தையை விளங்கவைப்பவள்.

7. அவள் பயத்தைப் போக்குவதோடு நிற்பதில்லை. குழந்தையை உயர்த்துகிறாள். அதை நன்கு வளரச்செய்கிறாள். (இதை உச்சை: உபப்ரும்ஹயேதா: என்ற பதத்தால் சொன்னார்).

8. ந்ருஸிம்ஹஸகி என்று இந்த ச்லோகத்தில் விளித்ததிலும் ஒரு உட்கருத்து உண்டு. குழந்தையான பிரகலாதனின் பயத்தைப் போக்கினவர் நரஸிம்மர். அவரது மனைவி அவருடைய உக்கிரத்தன்மையைக் குறைத்து உலகத்தின் பயத்தைப் போக்கினவள். அவள் குழந்தையான என் பயத்தைப் போக்கமாட்டாளா ?

9. வேதங்கள் அநாதியானவை. ஏதோ பத்துப் பன்னிரண்டு ஆயிரங்கள் வருஷங்களுக்கு முன்யாரோ சிலரால் இயற்றப்பட்டவை என்று சில நவீனர்கள் சொல்வதை நாம் ஏற்பதில்லை. (இதை அநாதிவாசாம் என்ற பதத்தால் சொன்னார்).

10. வேதங்கள் ஏராளமானவை. (இதை ராசிம் என்ற பதத்தால் சொன்னார்). இப்பொழுது நமக்குத் தெரிந்த வேதப்பகுதியே மொத்தவேதமும் என்று பிரமிக்கலாகாது.

பாழும் பாவத்தால் பாரில் பயந்த எனைப்
பார்வை படர்த்துவதால் பாலிப்பாய் பதுமையே !

<u>29. துலுக்கர் தரும் தொல்லைகளைத் தொலைப்பவள்:-</u>

दुष्कालानुगुणक्रमैः श्रुतिपथाविष्कारनिष्कासकैः
निष्कारुण्यतमैः तुरुष्कयवनैः निष्कारणद्वेषिभिः ।
कञ्जावासिनि तत्समैरपि जनैस्संजायमानं भयम्
त्वं जालेन दृशां हि तारयसि नः खञ्जानिवाम्भोनिधिम् ॥ २९ ॥

து₃ஷ்காலாநுகுணக்ரமை: ம்ருதிபதா₂விஷ்காரநிஷ்காஸகை:
நிஷ்காருண்யதமைஸ் துருஷ்கயவநைர் நிஷ்காரணத்₃வேஷிபி₄: ।
கஞ்ஜாவாஸிநி தத்ஸமைரபி ஜநைஸ்ஸஞ்ஜாயமாநம் ப₄யம்
த்வம் ஜாலேந த்₃ருமாம் ஹி தாரயஸி ந: க₂ஞ்ஜாநிவாம்போ₄நிதி₄ம் ॥ 29 ॥

कञ्जावासिनि- தாமரையில் வசிப்பவளே !
दुष्काल-अनुगुण-क्रमैः - கெட்ட காலத்துக்குப் பொருந்தும் முறைகளை உடையவரும்
श्रुति-पथ-आविष्कार-निष्कासकैः- வேதமார்க்கம் வெளிப்படுவதை உதறித்தள்ளுபவர்களும்
निष्कारुण्यतमैः- அடியோடு ஈவிரக்கம் இல்லாதவர்களும்
निष्कारण- द्वेषिभिः- காரணமே இல்லாமல் பகைப்பவர்களுமான
तुरुष्क-यवनैः- துலுக்கர்களாலும் யவனர்களாலும்
तत्समैः- அவர்களைப் போன்ற
जनैः अपि- (ஹூணர் முதலிய மற்ற) ஜனங்களாலும்
संजायमानं- உண்டாகிற
भयं- பயத்தை
त्वं - நீ
दृशां- பார்வைகளின்
जालेन- சமூஹத்தால்
खञ्जान् - நொண்டிகளை
अम्भोनिधिं इव - சமுத்திரத்தை (தாண்டுவிப்பது) போல
नः எங்களை
तारयसि - தாண்டுவிக்கிறாய்
हि- அல்லவா ?

தாமரையில் வாழ்பவளே ! இங்கே மிலேச்சர்களின் ஹிம்ஸை தாங்கமுடியாமல் இருக்கிறது. அவர்கள் குரூரமானவர்கள். எங்கள் போதாதகாலம், அவர்களுக்கு வேறு சிலரும் துணைபோகிறார்கள். எங்களுடைய இந்த பயத்தையும் நீ தான் தீர்க்கிறாய்.

துஷ்டத் தனத்தால் துணிந்தார்கள் துலுக்கர் தொடங்கித் தீயோர்கள்
துன்பம் தொல்லை தந்தார்கள் துயரைத் திருவே துடைக்கின்றாள்.

இந்த ச்லோகத்தில் சில வரலாற்று உண்மைகளும் சில நீதிகளும் இருக்கின்றன:

1. நம் நாட்டின் மேல் படையெடுத்த துலுக்கர்களும் வெள்ளைக்காரர்களும் நியாயமான முறையில் ஜயிக்கவில்லை. அவர்கள் கொடூரமான வழிகளைக் கையாண்டார்கள். இதை நான்கு விசேஷணங்களால் தெரிவிக்கிறார் கவி.

ஒன்று, கலிகாலக் கொடுமை என்னும்படி அக்கிரமங்களைப் பண்ணினார்கள். நேர்மையே கிடையாது. இரண்டு, நமது வைதிகநெறியைத் தலைதூக்கவிடாமல் துவம்ஸம் பண்ணினார்கள். மதவெறி பிடித்து இந்த மண்ணுக்குச் சொந்தமான பண்பாட்டை நாசம் செய்தார்கள். மூன்று, சிறிதும் மனிதாபிமானமோ, தயை தாக்ஷிண்யமோ இல்லாமல் கொன்று குவித்தார்கள். நான்கு, காரணமில்லாமலே பகை உணர்ச்சி கொண்டு அட்டூழியம் பண்ணினார்கள். இத்தகைய கொடியவர்களிடமிருந்து எங்களுக்குள்ள பயம் சொல்லிமுடியாது.

2. அந்தக் கொடியவர்களான வெளிநாட்டவருடன் சேர்ந்துகொண்டு அவர்களுக்குச் சமமாக இன்னும் சிலரும் அக்கிரமங்களில் ஈடுபட்டார்கள். இதை தத்ஸமைரபி ஜநை: என்ற பதங்களால் சொன்னார். 3. இந்தப் பயத்திலிருந்து மீளும் திறமை எங்களுக்கு அடியோடு கிடையாது. இதை கஞ்ஜாதிவ என்ற உவமானத்தால் தெரிவிக்கிறார். கடலைக் கடக்க நொண்டியால் முடியுமா? தரையிலேயே சரிவர நடக்க முடியாத நொண்டி கடலில் எவ்வளவு நீந்தமுடியும்?

4. இவ்வளவு கொடூரங்களையும் மீறி, சிறிது ஸநாதனதர்மமும் மிகுந்திருக்கிறது என்றால், அதற்குத் தாமரையாளே! உன் கடாக்ஷமே காரணமாகும். உன் பார்வை பட்டதால் தான் நாங்கள் பயக்கடலைத் தாண்டியிருக்கிறோம். லக்ஷ்மி அஷ்டோத்தரத்தில் ஸர்வோபத்ரவ வாரிணீ என்ற நூற்று நாலாவது திருநாமத்துக்கு விளக்கமானது இந்த ச்லோகம் என்னலாம்.

தாங்கவொணாத் தொல்லைகளால் தாபத்தால் தவிப்போர்க்குத்
தாமரையில் தங்குகிற தாயாரால் தாரணமாம்.

<u>30. அபயம் அளிப்பதில் அனைவரிற் சிறந்தவள்:-</u>

का काऽभयप्रदेति प्रश्नो यद्याचकस्समस्तपदः ।

स्वयमुत्तरतां धत्ते रमा समस्तोत्तरा विराजति सा ॥ ३० ॥

கா காப₄யப்ரதே₃தி ப்ரஶ்னோ யத்₃வாசகஸ் ஸமஸ்தபத₃: ।
ஸ்வயமுத்தரதாம் த₄த்தே ரமா ஸமஸ்தோத்தரா விராஜதி ஸா ॥ 30 ॥

इति अस्तोकाध्वरि कचिघटाम्बु वादिहंसाम्बुद वेङ्कटार्यदीक्षितकृतिषु लक्ष्मीसहस्रे अभीतिस्तवकः सम्पूर्णः

का का- எந்தெந்த ஸ்திரீ
अभयप्रदा - அபயம் அளிப்பவள் ?
इति - என்கிற
प्रश्नस्य - கேள்விக்கு
काक-अभय-प्रदा- காகத்துக்கு அபயம் அளித்தவள்
इति-என்று
समस्तपदः- ஸமாஸமாகச் சேர்ந்த பதமானது
यद्वाचकः- எவளைச் சொல்வதாய்
स्वयं- தானே
उत्तरतां- பதில்தன்மையை
धत्ते- தரிக்கிறதோ
सा - அந்த
रमा- லக்ஷ்மியானவள்
समस्त-उत्तरा- எல்லாரினும் மேம்பட்டவளாக
विराजति- விளங்குகிறாள்.

எவள் எவள் அபயம் அளிப்பவள் என்று கேள்வி. இதை வடமொழியில் சொன்னால் கா கா அபயப்ரதா என்று ஆகும். இதையே சேர்த்துச் சொன்னால் காகாபயப்ரதா என்றாகும். இதை ஒரே பதமாக ஸமாஸத்தால் கொண்டால் காகத்துக்கு அபயம் அளித்தவள் என்று அர்த்தம் கிடைக்கும். இது கேள்விக்கு விடையாகிவிட்டது. இதனால் கேள்வியான வாக்கியமே அர்த்தபேதத்தால் பதிலாகவும் ஆகிவிட்டது. தன்னைக் குத்திக் குதறிய காகத்தைக்கூட மன்னித்து அபயம் அளித்த சீதாப்பிராட்டி தான் அபயமளிப்பவள் என்கிற உண்மை ஊர்ஜிதமாகிவிட்டது. இந்த லக்ஷ்மி எல்லாரைக் காட்டிலும் சிறந்தவளாக விளங்குகிறாள்.

காகத்துக் கருள் தந்த காகுத்தன் மனைவியினும்
காருண்யம் மிக்கவராய்க் காசினியில் எவருமிலை

இந்த ச்லோகத்தில் சொல் வேடிக்கையை ரசிக்கவேண்டும். காகா, ஸமஸ்தம், உத்தரம், என்ற மூன்று

பதங்களும் இரண்டிரண்டு அர்த்தங்களில் ஆளப்பட்டிருக்கின்றன.

கா காபயம் என்றால் எவளெவள் அபயம் என்றும் காக்கைக்கு அபயம் என்றும் இரு பொருட்கள். ஸமஸ்தம் என்றால் எல்லாம் என்றும் ஸமாஸத்தால் சேர்ந்த சொற்றொடர் என்றும் இரு பொருட்கள். உத்தரம் என்றால் பதில் என்றும் உயர்ந்தது என்றும் இரண்டு பொருட்கள். இலக்கணத்தில் விக்கிரகவாக்கியம் என்றும் ஸமாஸவாக்கியம் என்றும் சொல்கிறோமே, அதன்படி ஸமாஸம் கொண்ட பதமானது (காகாபயப்ரதா என்பது) இங்கே பதிலாக அமைந்தது. இப்படி ஸமஸ்தமானது உத்தரமாகி அது ஸீதையைச் சொல்வதால், ஸமஸ்தத்தை உத்தரமாக உடையவள் ஸீதை என்றாகிறது. சுருக்கமாக ஸீதையை ஸமஸ்தோத்தரா என்னலாம். இந்த ஸமஸ்தோத்தரா என்ற பதத்துக்கு எல்லாரினும் மேம்பட்டவள் என்றும் அர்த்தம் கிடைக்கிறது. ஆகையால் ஸீதையின் உயர்வு, அவள் ஸர்வோத்தரை என்பது, வேறு எவருக்கும் இல்லாத சிறப்பு, நிச்சயமாகத் தெரிகிறது. வேறு யாருக்கு ஸமஸ்தபதம் கேள்விக்கு உத்தரமாகிறது ? ஆகையால் ஸீதை மட்டுமே ஸர்வோத்தரை. என்று கவியின் வாதம். இப்படிச் சொல்விளையாட்டால் எல்லோரிலும் உயர்ந்தவளாக நிரூபிக்கப்பட்ட லக்ஷ்மி நன்றாக விளங்குகிறாள் என்று சொல்லி அபீதிஸ்தபகத்தை முடிக்கிறார்.

நாவல்பாக்கம் அக்நிஹோத்ரம் நாராயணதாதயார்ய மஹாதேசிகனிடம் கேட்டறிந்து நாவல்பாக்கம் கண்ணன் என்கிற யக்ஞவராஹ தாஸன் எழுதிய லக்ஷ்மீஸஹஸ்ர உரையில் அபீதிஸ்தபகம் முற்றும்.

லக்ஷ்மீஸஹஸ்ரத்தில் மொத்த ஸ்தபகங்கள் 25.

இதுவரை முடிந்த ஸ்தபகங்கள் 19.

இன்னும் மீதமுள்ள ஸ்தபகங்கள் 6.

மொத்த ச்லோகங்கள் 1018.

இதுவரை முடிந்த ச்லோகங்கள் 833.

இன்னும் மீதமுள்ள ச்லோகங்கள் 185.

லக்ஷ்மீஸஹஸ்ரத்தில் இருபதாவது ஸ்தபகமானது

பரிஸங்க்யாஸ்தபகம்:-

இந்த ஸ்தபகம் தேவதாந்தர பரிஸங்க்யா ஸ்தபகம் என்றும் வழங்கப்படும். இதில் முப்பது சுலோகங்கள் உள்ளன. மற்ற தேவதைகளை விலக்கி லக்ஷ்மியை மட்டுமே தொழுவோம் என்று வார்த்தை வேடிக்கைகளாலும் தகுந்த உவமைகளாலும் விளக்குகிறுர் கவி இந்த ஸ்தபகத்தில். பரிஸங்க்யா என்பது ஒரு கலைச்சொல், சாஸ்திர பரிபாஷை. மீமாம்ஸா சாஸ்திரத்தில், விதி, நியமம், பரிஸங்க்யா, என்று மூன்று சொல்வர். ஆலங்காரிகர்களும் பரிஸங்க்யா என்று ஒரு அணியைச் சொல்வர். இரண்டிலும் பரிஸங்க்யா என்பதில், மற்றவை தவிர்த்து, ப்ரஸ்துதத்தை ஏற்பது, என்ற பொருள் அடங்கும். அதன்படி, இதரதேவர்களை நாடாமல், லக்ஷ்மியை ஆச்ரயிப்பதைக் குறித்து இந்த ஸ்தபகத்தில் பேசுகிறார்.

1. ரக்ஷையில் தக்ஷையானவள்

वन्दारुरक्षणे दक्षां वन्दे गोविन्दसुन्दरीम् ।
यत्प्रसादादृते देवाः सर्वे रक्षितुमक्षमाः ॥ १ ॥

வந்தாருரக்ஷிணே த³க்ஷாம் வந்தே கோவிந்தஸு¤ந்தரீம் ।
யத்ப்ரஸாத³ாத்³ருதே தேவாஸ் ஸர்வே ரக்ஷிதுமக்ஷமா: ॥ 1 ॥

वन्दारु- रक्षणे - வணங்குபவரைக் காப்பாற்றுவதில்
दक्षां- கெட்டிக்காரியும்
गोविन्द-सुन्दरीं - கோவிந்தனின் அழகியமனைவியுமானவளை
वन्दे - வணங்குகிறேன்.

यत्-प्रसादात्-ऋते - எவளது அனுக்கிரகம் இல்லாவிடில்
सर्वे - எல்லா
देवाः- தேவர்களும்
रक्षितुं-காப்பாற்றுவதற்கு
अक्षमाः - ஸாமர்த்தியமற்றவர்களோ.

லக்ஷ்மியின் அருள் இல்லாவிட்டால் மற்ற தேவர்களால் ரக்ஷிக்க முடியாது. அந்த லக்ஷ்மி மட்டும் அடியார்களைக் காக்க வல்லவள். அத்தகைய கோவிந்த ஸௌந்தரியை நான் வணங்குகிறேன்.

ரமையைத் தொழுவேன். ரட்சை பெறுவேன்.

லக்ஷ்மியின் அருள் இல்லாவிட்டால் தேவர்கள் ரக்ஷிக்க முடியாது என்கிறாரே. இதில் லக்ஷ்மியின் அருள் யாருக்கு அவசியம் என்கிறார்? ரக்ஷகரான தேவர்களுக்கா? ரக்ஷ்யரான நமக்கா? காப்பவர்க்கா, காக்கப்படுபவர்க்கா? இருவருக்கும் தான். அதனால் இரண்டு கருத்துகள் கிடைக்கின்றன. ஒன்று, அவளது அருளைப் பெறாத தேவர் யாரையுமே ரக்ஷிக்க முடியாது. இரண்டு அவளுடைய அருளைப்பெறாதவர்களை யாருமே ரக்ஷிக்க முடியாது.

முதல் கருத்து என்னவென்றால்,

எவளருளை ஏற்காத எல்லோரும் எவரேனும்
எமைக் காக்க இயலாதோ என் வணக்கம் அவளுக்கு

இதற்கென்ன காரணம் என்று ஆராய்ந்தால்,

ரக்ஷகராம் தேவர்களும் ரக்ஷிக்கும் திறன் பெறவே
ரமையருளை வேண்டுவதால் ரக்ஷைக்காய் ரமை பணிவேன்.

லக்ஷ்மியின் பிரசாதத்தை ஏற்காதபொழுது இந்திரன் பட்டபாடு புராணங்களில் பிரசித்தம். அப்போது த்ரிலோகஸம்ரக்ஷணம் பண்ணமுடியாமல் ஓடி ஒளிந்தான் என்று கதை.

இரண்டாம் கருத்து என்னவென்றால்,

இலட்சுமியின் இன்னருளே இல்லாமல் இருப்பவரை
இமையவரும் இறையேனும் இரட்சிக்க இயலாது.

இந்தக் கருத்து த்வயி சாரக்ஷதி ரக்ஷகை: கிமந்யை: என்பது போலாகும்.

தேவர்களே தேவையில்லாதபடி தெய்வமானவள்:-

अम्ब त्वया हन्त शरीरभाजाम् अरक्षितानामपि रक्षितानाम् ।
देवा मुदे वा पुनरापदे वा भवन्ति किन्ते बलिवैरिकान्ते ॥ २ ॥

அம்ப₃ த்வயா ஹந்த ஶரீரப₄ாஜாம்
அரக்ஷிதாநாம் அபி ரக்ஷிதநாம் ।
தே₃வா முதே₃ வா புநராபதே₃ வா
ப₄வந்தி கிம் தே ப₃லிவைரிகாந்தே ॥ 2 ॥

बलिवैरि कान्ते - பலியின் சத்ருவான விஷ்ணுவின் காந்தையே !
अम्ब- அன்னையே !
त्वया - உன்னால்
अरक्षितानां - காக்கப்படாத
शरीर- भाजां - பிராணிகளுடைய
मुदे वा - மகிழ்ச்சிக்கோ
त्वया- உன்னால்
रक्षितानां- காக்கப்பட்டவருடைய
आपदे अपि वा- துன்பத்துக்குமோ
ते - அந்த
देवाः - தேவர்கள்
भवन्ति कि- ஆவார்களா என்ன ?
(ஆக மாட்டார்கள்)
हन्त - ஐயோ பாவம்.

தாயே ! உன்னை மீறி என்ன பண்ண முடியும் மற்ற தேவதைகளால் ? நீ ரக்ஷிக்காதவரை அவர்கள் ரக்ஷித்து விட முடியுமா ? நீ ரக்ஷிப்பவரை அவர்கள் துன்புறுத்தத் தான் முடியுமா ? இரண்டுமே அவர்களால் இயலாத காரியம். ஐயோ பாவம் அவர்கள். ! அன்னையின் அருள்பெற்றால் அமரர்களால் ஆபத்தோ ? அவளருளே அற்றவருக் கமரர்களின் ஆதரவோ ? கிடையாது. இந்த ச்லோகத்தில் சொன்ன சில கருத்துகள் வருமாறு:

1. வாமனாவதாரத்தில் பெருமாள் பிரம்மசாரியாக இருந்ததால் லக்ஷ்மியைப் பிரிந்திருந்ததாக நினைக்கவேண்டாம். அப்பொழுதும் அவருடைய திருமார்பில் மான்தோலுக்கடியில் அவள் மறைந்து

இருந்தாள். இதை நினைவுறுத்துகிறார் பலிவைரிகாந்தே என்ற பதத்தால்.

2. பிராட்டியால் கைவிடப்பட்டவர்களை எந்தத் தேவரும் காப்பாற்ற முடியாது. (காகாஸுரன் மூன்று உலகங்களும் அலைந்து திரிந்து காப்பார் இல்லாமல் கீழே விழுந்தது இதனால் தான்.)

3. பிராட்டியால் காப்பாற்றப்படுபவர்க்கு எவருமே தீங்கு செய்ய முடியாது. (அம்ருதமதன காலத்தில் தன் பார்வை ஒன்றாலேயே தேவர்களுக்கெல்லாம் லக்ஷ்மி ஆனந்தத்தை உண்டாக்கியபோது மஹாபலிஷ்டர்களான அசுரர்கள் எல்லாம் தேவர்களுக்குத் தீங்கு செய்ய முனைந்தும் முடிந்ததோ ? முடியவில்லையே.)

தாயாரின் தயவிருந்தால் தேவர்கள் தொல்லை தரார்.
தாயாரின் தயவின்றேல் தேவர்கள் தூக்கிவிடார்.

4. அப்படியானால் தேவர்களால் என்ன பயன் ? மற்ற தேவர்களை வணங்கத் தேவையே இல்லாது போனால் இந்த்ராதி தேவர்கள் எதற்காக இருக்கிறார்கள் ? என்றால் பதில்: ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மற்ற தேவர்கள் தேவையில்லை. சிறிய இம்மைப் பயன்களை நாடும் அவைஷ்ணவர்கள் மற்ற தேவரிடமிருந்து பயன் பெறலாம். ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் தேவர்கள் உதவுவது இரண்டு வகைகளில். ஒன்று, திவ்யதம்பதிகளின் கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலம், பிராட்டியின் அருள் பெற்றோர்க்கு மகிழ்ச்சியையும், அது இல்லாதார்க்குத் துன்பத்தையும் விளைவிப்பதில் தத்தம் கடமையைச் செய்வர் தேவர்கள். அவர்களால் மாற்றிச் செய்ய முடியாது என்பது இந்தச் ச்லோகத்தின் ஸாரம். இரண்டு, நம்முடன் சேர்ந்து அவர்களும் தாயாரை வணங்கிப் பயன் பெற்று நமக்கு வழிகாட்டிகளாகவும் ஆகிறார்கள். அவள் அவர்களுக்கும் சேர்ந்து தான் தாயார் என்பதை ஶரீரபாஜாம் அம்ப என்ற விளியால் தெரிவிக்கிறார்.

5. பலிவைரிகாந்தே என்ற விளியிலும் இதே கருத்து தொனிக்கிறது. தேவர்களுக்குப் பலிசக்ரவர்த்தியால் வந்த ஆபத்தை நீக்கி மகிழ்ச்சியை ஏற்படுத்த வந்த வாமனாவதாரத்திலும் அந்த வாமனனுக்குக் காந்தையாகத் திருமார்பில் மான்தோல் மறைவில் வீற்றிருந்து தேவர்களை ரக்ஷித்தவள் இவள். தாங்களே தத்தளிப்பவர் (தேவர்) பிறரை கரையேற்ற முடியுமோ ?

6. தேவர்கள் வரம் தர வல்லவர்கள் தான். மகிழ்ச்சியையும் ஆபத்தையும் விளைவிக்க வல்லவர்கள் தான். இதை மறுக்கவில்லை. ஆனால் யாரிடம் அவர்களது சாமர்த்தியம் செல்லுபடியாகும் என்பதில் வரம்பு இருக்கிறது. லக்ஷ்மிபக்தர்களிடம் அவர்கள் வாலாட்ட முடியாது. லக்ஷ்மியிடம் அபசாரப்பட்டவர்களுக்கு அவர்களால் உதவவும் முடியாது.

இவள் நம்மை இரக்கத்தால் இரட்சித்தால்
இமையவரும் இன்னல்தர இயலாது
இவளுடைய இரட்சையை இழந்திட்டால்
இமையவரும் இன்பம்தர இயலாது.

<u>அக்கினிதேவன்போல் அல்லாமல் அருள்பவள்:-</u>

शीतस्वभावां भवतीं श्रितेभ्यः दिव्यां समृद्धिं ददतीमतीत्य ।
उपासकध्वंसकं उष्णमग्निम् उपासते के जगदम्ब लोके ॥ ३ ॥

ஶீதஸ்வபாவாம் பவதீம் ஶ்ரிதேப்ய:
திவ்யாம் ஸம்ருத்திம் ததீம் அதீத்ய ।
உபாஸகத்வம்ஸகம் உஷ்ணம் அக்நிம்
உபாஸதே கே ஜகதம்ப லோகே ॥ 3 ॥

जगदम्ब - உலகத்தின் தாயே !
शीत-स्वभावां - குளிர்ந்த இயல்பு கொண்டவளும்
श्रितेभ्यः - (தன்னை) அடைந்தவர்களுக்கு
दिव्यां - திவ்யமான
समृद्धिं - செழிப்பை

दद्‌ती- கொடுப்பவளும் ஆன

भवती -உம்மை

अतीत्य- தாண்டி

उपाश्रित-ध्वंसकं - அண்டினவரை அழிப்பவனும்

उष्णं -சுடுபவனும் ஆன

अग्निं - நெருப்புத் தேவனை

लोके - உலகில்

के - எவர்

उपासते - வழிபடுகிறார்கள் ?

ஜகன்மாதாவே ! உமக்கும் அக்கினிதேவனுக்கும் இரண்டு முக்கியமான வேறுபாடுகள் உள்ளன. அக்கினி வெப்பம் மிக்கவன். லக்ஷ்மியோ அதற்கு மாறாக, குளிர்ந்த பண்பு கொண்டவள். அக்கினி தன்னை அடைந்த வஸ்துக்களை (விறகு முதலியவற்றை) எரித்து அழிப்பவன். லக்ஷ்மியோ அதற்கு மாறாக, தன்னை அடைந்தவர்கட்குத் தெய்விகச் செழிப்பைத் தருபவள். எவ்வளவு வேறுபாடு ? உம்மை விட்டு அக்கினியை யாராவது வழிபடுவாரா ? உலகில் எவருமே அப்படிச் செய்யமாட்டார்கள்.

உன் தண்மையால் உலகின் தாயே ! உனதடியாரை உயர்த்துகிறாயே உஷ்ண உபத்ரவம் உள்ள அக்கினியை உலகில் எவர் தான் உபாசிப்பவரே ?

<u>இந்த ச்லோகத்தில் அறியும் சில உண்மைகள்:-</u>

1. சிலர் குளிர்ந்த பண்பு கொண்டவர். ஈர நெஞ்சம் கொண்டவர். அவர்களை உலகம் வழிபடும். இதற்கு மாறாக சிலர் சுட்டெரிப்பவர். வெம்மை மிக்கவர். அவர்களை உலகம் போற்றாது. நாம் ஈர நெஞ்சினராக இருப்பது நல்லது. இதை ஶீதஸ்வபாவாம் என்ற பதத்தால் சொன்னார்.

2. அண்டினவரைக் காப்பது என்பது முக்கியமான தருமம். அக்கினிதேவன் இதைச் செய்வதில்லை. கிட்ட வந்தாலே கொளுத்தி விடுகிறான். ஆகையால் அவன் வழிபாட்டுக்கு உரியவன் அன்று. இதை உபாச்ரித த்வம்ஸகம் என்ற பதத்தால் சொன்னார்.

நெஞ்சீரம் இலாதவரை நெருங்கிட்டால் தகிப்பவரை
நெருப்பென்னும் தேவதையை நெறியாக நினைப்பார் ஆர் ?

3. பிராட்டி ஆச்ரிதர்களைக் காப்பாற்றுவதோடு நிற்காமல் அவர்களுக்குத் திவ்வியமான ஸம்ருத்தியைத் தருபவள். யஸ்யாம் ப்ரபூதம் காவோ என்று தொடங்கி ஸ்ரீ ஸூக்த வரியில் இது பிரசித்தம். கீர்த்திம்ருத்திம் ததாது மே என்றதும் இதனால் தான். இதை திவ்யாம் ஸம்ருத்திம் தததீம் என்ற தொடரால் சொன்னார்.

செகத்துக்கு மாதாவை சரணடைந்தால் காப்பவளை
செழிப்பெல்லாம் சேர்ப்பவளை செய்யாளைப் பணிவோம் நாம்.

4. பிராட்டியைத் தாண்டி அக்கினியை உபாஸிப்பரோ? என்று கேட்கையில் தாண்டி என்பதன் கருத்து என்னவென்றால், நம் அருகிலேயே இருந்து நமக்கு அன்னையாக இருந்து நமது கூக்குரலுக்குச் செவி சாய்ப்பவளைத் தாண்டி இன்னொருவரிடம் போகலாமோ என்பதாகும்.

5. நாம் யாரை உபாஸிக்கவேண்டும் ? உறவில் உயர்ந்தவரை (ஜகதம்ப என்பதாலும்), உதவி புரிபவரை (தததீம் என்பதாலும்), உள்ளம் குளிர்ந்தவரை (சீதஸ்வபாவாம் என்பதாலும்,) உபாஸிக்க வேண்டும் என்கிறார்.

6. லக்ஷ்மியைத் தாண்டி அக்கினியை எவர் உபாஸிப்பர் ? என்று கேட்கிறாரே, அப்படியானால், லக்ஷ்மியைத் தாண்டாமல் அக்கினி வழிபாடு என்று ஒன்று இருக்கிறதா என்ன ? ஆமாம், இருக்கிறது. பரமைகாந்திகள் பண்ணும் ஹோமங்களிலும் யாகங்களிலும் அக்நிசரீரகனாகப் பரமனைத் தியானிப்பது வழக்கம். பிரம்மசாரியின் ஸமிதாதானத்தில் முதல் ஹோமமந்த்ரம், ஸாயமௌபாஸனத்தில் முதல் ஹோமமந்த்ரம், வைச்வதேவத்தில் முதல் ஹோமமந்த்ரம், அநாஜ்ஞாதத்ரயம் என்னும் ப்ராயச்சித்த ஹோம மந்த்ரங்கள், என்று ஏராளமாக

அக்நிமந்த்ரங்கள் அநுஷ்டானத்தில் இருக்கின்றன. இந்த விஹித கருமங்களையெல்லாம் பகவத்ப்ரீத்யர்த்தமாக நாம் பண்ணும்போது லக்ஷ்மிகைங்கர்யத்தில் அடங்கிவிடுவதால் அப்பொழுது பண்ணும் அக்நிசரீரக பகவத்த்யாநம் லக்ஷ்மியைத் தாண்டிச் செய்ததாகாது. மநீஷீ வைதிகாசாரம் மநஸாபிந லங்கயேத் என்ற லக்ஷ்மியின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்ததாகும்.

7. ரிக்வேதத்தில் முதல் மந்திரமே அக்நிதேவனின் பெருமையைச் சொல்லுகிறது. இப்படிப்பட்ட அக்நியை உபாச்ரித த்வம்ஸகன் என்று இந்தக் கவி உபாலம்பம் (வசை) பண்ணலாமோ ? என்று கேட்டால், இங்கே பரம தாத்பர்யம் திருவின் புகழ் பாடுவது. அதற்காக மற்ற தேவரை மட்டம் தட்டுவது நஹி நிந்தா ந்யாயம் என்கிறபடி வெறும் கவி சமத்காரத்துக்கு மட்டுமே. நாம் தேவதாந்தரங்களை வணங்கவும் வேண்டாம்; நிந்திக்கவும் வேண்டாம்; உண்மை நிலை உணர்ந்தால் போதும்.

குளிர்நெஞ்சம் கொண்டவளை குறையின்றிக் கொடுப்பவளை
குவலயத்தின் தாயாரைக் கும்பிடுவோம் குணமடைவோம்.

வாயுதேவன் போலன்றி வாழவைப்பவள்:-

अज्ञातदर्पि अमिते विभवेऽपि दीन बन्धुं विहाय भवतीं भवतोऽप्यवन्तीम्।
सख्युश्शुचेरपि समाप्तिदं अम्ब कार्श्ये कस्तं प्रभञ्जनं इहार्चतु गन्धवाहम्॥ ४॥

அஜ்ஞாதத்₃ருப்திம் அமிதே விப₄வேபி தீ₃ந
பந்து₄ம் விஹாய ப₄வதீம் ப₄வதோப்யவந்தீம்।
ஸக்₂யுஶ்ஶுசேரபி ஸமாப்தித₃ம் அம்ப₃ கார்ஶ்யே
கஸ்தம் ப்ரப₄ஞ்ஜநம் இஹார்சது க₃ந்த₄வாஹம் ॥ 4 ॥

अम्ब - தாயே !
अमिते - அளவற்ற
विभवे अपि - செல்வத்திலும்
अज्ञात-दर्पि - திமிரை அறியாதவளும்
दीन-बन्धुं- எளியவர்க்கு உதவுபவளும்
भवत: अपि - ஸம்ஸாரத்திலிருந்து கூட
अवन्तीं- காப்பாற்றுபவளும் ஆன
भवतीं- உம்மை
विहाय- விட்டு
सख्यु:- நண்பனான
शुचे: अपि- 1. தூய்மையாளனுக்கும் 2. நெருப்புக்கும்
कार्श्ये- இளைக்கையில்
समाप्ति-दं- முடிவு தருபவனும்
प्रभञ्जनं- 1. முறிப்பவனும் 2. பெருங்காற்றும்
गन्ध-वाहं - 1. வாசனையை வகிப்பவனும் 2. திமிர்பிடித்தவனும் ஆன
तं - அந்த வாயுவை
इह - இங்கு
क: - எவன்
अर्चतु- அருச்சிக்கட்டும் ? (ஒருவரும் அருச்சிக்க வேண்டாம்.)

அன்னையே ! வாயுதேவன் உனக்கு நேர் மாறான குணங்களைக் கொண்டவன். மூன்று முக்கிய வேற்றுமைகள் உள்ளன, உமக்கும் அவனுக்கும். அளவற்ற செல்வம் இருந்தும் கூட நீர் அடியோடு கர்வம் இல்லாமல் இருக்கிறீர். அவனோ, வாசனையைப் பரப்புவதால் கந்தவாஹன் என்று பெயர் பெற்று, அதே பதத்தின் மற்றொரு அர்த்தப்படி, திமிர் பிடித்தவனாக இருக்கிறான். நீர் எளியவர்களுக்கு உதவுகிறீர்.

அவனோ, தம் நண்பனான நெருப்புக்குக் கூட அழிவைப் பண்ணுவான், அந்த நெருப்பு குறைந்து இருந்தால். மூன்றாவதாக, நீர் எங்களை ஸம்ஸாரத்திலிருந்து கூடக் காக்கிறீர். அவனோ, புயலாக வரும்போது மரங்களை முறிப்பதால் ப்ரபஞ்ஜனன் என்றே பெயர் பெற்றவன். அவனை யார் அருச்சிப்பார்கள் ? கர்விஷ்டனை, எளிமையில் அழிப்பவனை, முறிப்பவனை, எவருமே வணங்க மாட்டார்கள் அல்லவா ? அதுவும் உம்மை விட்டு, அவனை அருச்சிப்பது அடியோடு தகாது.

எளியோரை முடிப்பவனை எதனையும் முறிப்பவனை
எக்காளம் செய்பவனை எவர் துதிப்பார் வாயுவினை ?

இந்த ச்லோகத்தில் அறியும் நீதிகள்:-

1. கர்வம் கொள்ளலாகாது. அதிலும் விசேஷித்து, செல்வம் பெருகும்போது, அடியோடு கர்வம் இல்லாமல் இருக்க வேண்டும். ''பெருக்கத்து வேண்டும் பணிவு'' என்பர் நீதிநூலார். இதனை ''அஜ்ஞாதத்ருப்திம் அமிதே விபவேபி'' என்கிறார். ஏழ்மையில் கர்வமின்றி இருப்பது சுலபம். ஆனால் அளவற்ற வசதி படைத்திருந்தும் கர்வத்தின் சுவடே இல்லாமல் இருப்பது கஷ்டம்.

2. நாம் யாரோடு உறவாட வேண்டும் ? சாதாரண மனிதர்கள் வலியோரிடமும் தனிகரிடமும் இணக்கம் கொண்டு பயனடைவர். ஆனால் சான்றோர்கள் அப்படியன்று. ஏழை எளியவர்களுக்கு, தீனர் திக்கற்றவர்க்கு, பந்துவாக நின்று உதவுவார்கள். இதைத் தீனபந்து என்ற பதத்தால் சொல்கிறார்.

3. நல்லவனுக்கும் தீயவனுக்கும் முக்கியமான வித்தியாசம் ஒன்று உண்டு. நல்லவன் எல்லாரையும் காப்பாற்றுவான். தீயவனோ எல்லார்க்கும் முடிவு கட்டி விடுவான். இதனை அவந்தீம் என்றும் ஸமாப்திதம் என்றும் இரண்டு பதங்களால் சொல்கிறார்.

4. ஒரு நண்பன் தூய்மை இழந்து, ஒழுக்கம் கெட்டுப்போனால், அவனுடைய நட்பையே உதறித்தள்ளலாம் ஆனால் நல்ல பண்புள்ள நண்பனுக்குத் தீங்கு செய்யலாமோ ? கூடவே கூடாது. இதை ஸு॰சேரபி என்பதால் தெரிவிக்கிறார்.

5. எப்போது நண்பனுக்கு உதவவேண்டும் என்பதிலும் அறிவுரை உண்டு. நண்பன் செழித்திருக்கும்போது அவனுக்கு உதவி தேவையில்லாமல் இருக்கலாம்; தேவைப்பட்டாலும் பலபேர் உதவ முன்வருவர். ஆனால் அவன் சிறுக்கும்போது, இளைத்துப்போகும்போது, அவனுக்கு உதவி தேவைப்படும்போது உதவுபவன் தான் உண்மையான நண்பன். இதை கார்ஸ்யே என்ற பதத்தால் உணர்த்துகிறார்.

6. நாம் யாரைப் போற்றி வணங்க வேண்டும் ? அதற்கான தகுதி உள்ளவரை, நற்பண்பாளரை, நம்மைப்போன்ற எளியவர்க்கு பந்துவை, நம்மைக்காப்பாற்ற முன் வருபவரை, வணங்க வேண்டும். கொழுப்பு மிக்கவரை, முரட்டுத்தனம் கொண்டவரை, சமயத்தில் காலை வாரிவிடுபவரைப் போற்றக்கூடாது. இதை கஸ்தம் அர்ச்சது என்ற பதங்களால் தெரிவிக்கிறார்.

7. திருமகளை நாம் அருச்சிக்க வேண்டும். இதற்கு மூன்று காரணங்களைச் சொல்கிறார். அவள் அமிதமான (அளவிறந்த) விபவம் (செல்வம்) கொண்டவளாயிருந்தும் தீய பண்பு இல்லாதவள் என்பது முதல் காரணம். (உலகிலும் இப்படிப்பட்ட மனிதர்களை நாம் போற்ற வேண்டும். செல்வந்தராயிருந்தும் செருக்கில்லாதவர்கள் அபூர்வ மனிதர்கள்.) இரண்டாவது காரணம் என்ன வென்றால், நாம் தீனர்களாகவும் அவள் தீனபந்துவாகவும் இருப்பது. மூன்றாவது காரணம், அவள் நம்மைக் காப்பாற்றுகிறாள் என்பது. காப்பாற்ற இயலாதவர்களையோ, முடிந்தாலும் காப்பாற்ற முன்வராதவர்களையோ, முன்வந்தாலும், காப்பாற்றும் செயலை முடிக்காதவர்களையோ, நாம்

தொழுது என்ன பயன் ? வேண்டாம்; திருமகளையே தொழுவோம்.

8. லக்ஷ்மியை விட்டுவிட்டு வாயுவை அருச்சிக்க வேண்டாம் என்கிறார். ஶ்ரிய:பதியின் ப்ரீதிக்காக நாம் பண்ணும் விஹிதகர்மங்களில் வாயவ இதம் ந மம இத்யாதிகளைச் சொல்லத் தயக்கம் வேண்டாம்; லக்ஷ்மியை விடாமல் அவளது கைங்கரியங்களில் ஒன்றாக உட்படுத்திச் சொன்னால். இந்த எட்டு நீதிகளைத் தவிர, இந்த ச்லோகத்தில் சில இலக்கிய நயங்களும் உள்ளன. சிலவற்றைப் பார்ப்போம்.

1. விபவே, பவதீம், பவத: என்ற மூன்று சொற்களில் பவ என்ற பகுதி இருந்தாலும் அர்த்தங்கள் வெவ்வேறாக ஒரு நயம்.

2. சுசி, கந்தம், ப்ரபஞ்ஜநம், என்ற மூன்று பதங்களிலும் சிலேடை நயம். சுசி என்பதற்குத் தூயவன் என்றும் நெருப்பு என்றும் இரண்டு அர்த்தங்கள். கந்தம் என்பதற்கு வாசனை என்றும் கொழுப்பு (கந்த ஹஸ்தீ என்றால் மதயானை என்பது போல) என்றும் இரண்டு அர்த்தங்கள். ப்ரபஞ்ஜநன் என்றால் புயற்காற்று என்றும் உடைப்பவன் என்றும் இரண்டு அர்த்தங்கள். வாயுவை மட்டம் தட்டுவதற்கு இந்த மூன்று சிலேடைகளையும் பயன்படுத்துகிறார். அவன் சுசியையே அழிப்பவன், கந்தம் பிடித்தவன், ப்ரபஞ்ஜனன் என்று மூன்று வசவுகள்.

3. நெருப்பையும் காற்றையும் நண்பர்களாகச் சொல்வது கவிமரபு. மருத்ஸகன் என்று அக்கினிக்கு ஒரு பெயரே இதனால் தான் வந்தது. தீ பரவுவதற்குக் காற்று துணை புரிவதாலும், காற்று அடியோடு இல்லாத வெற்றிடத்தில் நெருப்பு எரியமுடியாது என்று பரிசோதனைகள் நிரூபிப்பதாலும், வாயுவை அக்கினியின் நண்பனாகச் சொல்வது பொருத்தமான வழக்கு தான். இதே

வாயு விளக்குத்தீ போன்றதொரு சிறு நெருப்பை அணைத்துவிடுகிறது. நாம் வாயால் ஊதி விளக்கை அணைக்கும்போதும் தீபத்தை வீதியில் எடுத்துச் செல்லும்போதும் கண்கூடாக இதைப் பார்க்கிறோம். தன் நண்பனான நெருப்பு பெரிதாய் வளர்ந்தபோது அவனுக்கு உதவி புரிவதும், சிறிதாய்ச் சுருங்கியபோது அவனை ஒழித்துக்கட்டுவதும் நல்ல நண்பனுக்கு அழகா ? துர்மித்ரன் இந்த வாயு என்று உபபாதிப்பது இன்னொரு கவிநயம்.

अज्ञाततृप्ति என்ற பாடம் நாகராக்ஷரப் பதிப்பில் இருந்தாலும் அர்த்தம் ஸ்வரஸமாக இல்லை. நிறைய விபவம் அளித்தும் திருப்தியுறாமல் மேலும் அளிக்க விரும்புபவள் என்ற உரையில் ''அளித்து'' என்ற கருத்தைச் சொல்லும் பதம் மூலத்தில் காணாததால் இந்த அஸ்வாரஸ்யம்.

திமிரேதும் தெரியாதாள் தீனர்களுக்குறவாவாள்
தீய பவம் தீர்த்திடுவாள் திருமகளே துதிக்குரியாள்

5. பாசஹஸ்தன் போலன்றிப் பாதுகாப்பவள்

यमविषयगतिस्स्यात् यद्गृहीतस्य जन्तोः
अमतिरमुमुपास्तां अप्रभुं पाशहस्तम् ।
जननि परिगृहीतत्राणजातादरां त्वां
अहमखिलनियन्त्रीं अब्जहस्तां प्रपद्ये ॥ ५ ॥

யமவிஷயக₃திஸ்ஸ்யாத் யத்க்₃ருஹீதஸ்ய ஜந்தோ:
அமதிரமுமுபாஸ்தாம் அப்ப்ரபு₄ம் பாஶஹஸ்தம் ।
ஜநநி பரிக்₃ருஹீத த்ராணஜாதாத₃ரம் த்வாம்
அஹமகி₂லநியந்த்ரீம் அப்₃ஜஹஸ்தாம் ப்ரபத்₃யே ॥ 5 ॥

जननि - தாயே !
यत्- गृहीतस्य - எந்த வருணனாலே கைக்கொள்ளப்பட்ட
जन्तोः - பிராணிக்கு
यम-विषय-गतिः - யமலோகம் போவது
स्यात्- நேருமோ
अमुं - இந்த

अप्रभुं - 1. நீருக்கு அதிபதியானவனும் 2. பிரபுவாக இல்லாதவனும்
पाश-हस्तं - கையில் கயிறு வைத்திருப்பவனுமான வருணனை
अमतिः - அறிவிலி
उपास्ताम् - தொழட்டும்.
परिगृहीत-त्राण-जात-आदरां - ஏற்றுக்கொண்டவர்களைக் காப்பாற்றுவதில் உண்டான ஆதரவை உடையவளும்
अखिल-नियन्त्रीं - எல்லாரையும் அடக்கி ஆள்பவளும்
अब्ज-हस्तां - தாமரைக் கையினளும் ஆன
त्वां - உன்னை
अहं - நான்
प्रपद्ये - சரணடைகிறேன்.

அன்னையே ! வருணன் ஜலத்துக்கு அதிபதி. அவனிடம் மூன்று பெருங்குறைகள் இருக்கின்றன. ஆடுமாடுகளோ மனிதரோ ஜலத்துள் முழுகிவிட்டால் யமலோகம் போய்விடுவர். இரண்டாவதாக, அவன் பிரபுவாக இருப்பதில்லை. (இது சிலேடையினால் தெரிகிறது. பிரபுவாகாதவனையும் நீரின் தேவனையும் அப்ரபு என்ற சொல்லால் சொல்வர்.) மூன்றாவதாக, அவன் கையில் பாசாயுதத்தை வைத்துக் கொண்டிருக்கிறான். இது அவனுடைய பொல்லாத்தனத்துக்கு அறிகுறி. இப்படிப்பட்ட வருணனை அறிவில்லாதவரே வணங்குவர். ஆனால் நான் அதற்கு எதிரான இயல்புகளைக்கொண்ட உன்னையே சரணடைகிறேன். நீ சார்ந்தவர்களைக் காப்பதில் ஆதரம் காட்டுபவள். அகில உலகுக்கும் ஈச்வரியானவள். தாமரையைக் கையில் ஏந்தியவள். இந்த மூன்று விதங்களாலும் வருணனினின்றும் மாறுபட்டவள். உன்னை வணங்குகிறேன்.

இந்த ச்லோகத்தில் நமக்கு ஆறு அறிவுரைகள் உள்ளன:

1. நீர் நிலைகளில் விழுந்து மரிப்பது துர்மரணம் ஆகும். அது நரகத்துக்கு வழி வகுக்கும். நாம் எக்காரணத்தைக் கொண்டும் துர்மரணத்தைத் தேடிக்கொள்ளக்கூடாது.

2. சிலர் தம்மை நாடி வந்தவரை அமுக்கி அழித்து

விடுவார்கள்; கடல் முதலிய நீர்நிலைகள் தமக்குள் அத்துமீறி வரும் பிராணிகளை மாய்த்து விடுகின்றன. அத்தகையவரைப் போற்றக்கூடாது. இதற்கு மாறாக இன்னும் சிலர் தம்மை நாடி வந்தவர்களை எப்படியெல்லாம் காப்பாற்றலாம் என்று ஆதரவோடு செயல்படுவார்கள்; திருமகள் போல. அத்தகையவரை நாம் புகலாக அடையவேண்டும்

3. யாரை உபாஸிக்கலாம், யாரை உபாஸிக்கவேண்டாம், என்பதைப் பாகுபடுத்திப் புரிந்துகொள்வது அறிவாளரால் மட்டுமே முடியும். அறிவற்றவன் (அமதி) வருணன் போன்ற அன்னியதேவதைகளை உபாஸிப்பான்.

4. மற்றவர் பண்ணுவதையே நாம் பண்ணுவது நல்லதன்று. உலகில் மற்ற தேவர்களை வழிபடுபவர்கள் அனேகர் இருந்தாலும், நாம் திவ்யதம்பதிகளை மட்டுமே சரணடைவோம்.

5. அந்தந்த தேவதைகளின் இயல்புகளை அவர்கள் கையிலேந்தும் பொருள்களைக் கொண்டே நாம் அறிந்துகொள்ளவேண்டும். வருணன் பாசாயுதம் என்னும் கயிற்றைக் கையில் வைத்திருப்பவன். அது கட்டிப்போடவும் ஹிம்ஸிக்கவும் பயன்படும். திருமகளோ தாமரையை ஏந்துகிறாள். அது அவளது மென்மையையும் நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்தும்.

6. சிலரைக் கட்டும் திறன் உள்ள வருணனை விட எல்லாரையுமே நியமிக்கும் மஹாலக்ஷ்மி நமக்குச் சரணமாவாள். அதைப் புரிந்து கொள்ளாதவர் வருணனையே வழிபடட்டும் (உபாஸ்தாம் என்று பதம்). நாம் அவர்களைத் தடுக்க வேண்டாம். ''அவரவர் தமதம தறிவறி வகைவகை அவரவர் இறையவர் எனவடி அடைவர்கள்'' என்ற நிலையில் ''அவரவர் விதிவழி அடைய நின்றனரே'' என்று நாம் ஆட்சேபிக்காமல் இருந்துவிடுவோம்.

மரணம் தரும் வருணனையும்

மதியில்லார் மதிக்கட்டும்.

இந்தச் சுலோகத்தில் சில இலக்கியநயங்களும் உள்ளன:

1. அப்ப்ரபும் என்ற சொல்லில் சிலேடை. அப்-ப்ரபும் என்று பிரித்தால் ஜலத்துக்குத் தேவதை என்று அர்த்தம். அ-ப்ரபும் என்று பிரித்தால் அஸமர்த்தன், வக்கில்லாதவன், என்று அர்த்தம். முதல் அர்த்தம் உண்மைக்கும், இரண்டாம் அர்த்தம் தற்பொழுதைய வசவுக்கும் ஒத்துவரும்.

2. நியந்த்ரீ என்ற சொல்லிலும் சிறியதொரு நயம் காணலாம். கட்டும் கயிறு வருணனிடம். ஆனால் கட்டியாள்பவள் இவள் தானே ? என்று தொனிக்கிறது. யம என்ற பதத்துக்கும் கட்டுப்பாடு என்ற அர்த்தம் இருப்பதும் க்ருஹீத (பிடிபட்ட) என்ற பதமும் இச்சுவையைக் கூட்டுகின்றன. வருணனின் கையில் கயிறு. பிடிபட்டவரைக் கட்டிப்போடும் பழக்கம். ஆனால் எல்லாமே இவளுடைய கட்டுக்குள்.

3. தாமரையை இங்கு அப்ஜம் என்ற சொல்லால் குறித்ததும் ஒரு சுவைக்காக. அவன் அப்புக்குப் பிரபுவானாலும், அப்ஜம் (அப்பில் தோன்றியது) இவள் கையில் தான். அவன் என்ன பண்ணமுடியும் ? அ-ப்ரபு தான்.

4. வேதஸாஹித்யத்தை நினைவுகூறும் வகையில் சொற்களை அமைத்திருப்பதையும் கவனிக்கவேண்டும். ''வாருணோ வா அச்வ:'' என்று சொல்லிய பின் ''யமலோகமேவைநம் கமயதி'' என்றது வேதம். இதை அடியொற்றி ''யமவிஷய கதிஸ்ஸ்யாத் யத்க்ருஹீதஸ்ய ஜந்தோ:'' என்கிறார் இவர். (இங்கு சொன்ன ஜந்து அச்வமேதயாகத்துக் குதிரை என்று பொருள் கொள்வதில் பொருத்தம் உண்டு.)

வருணன் பிடித்துக் கொள்பவன் என்கிறது வேதம் பல இடங்களில். ''வருணக்ருஹீதா வை ஸ்தாவரா:'' என்றும், வருணஸ்த்வேநம் க்ருஹ்ணீயாத்'' என்றும், ''வருணோ வா ஏதம் க்ருஹ்ணாதி'' என்றும் பல இடங்களில் இதைக் காண்கிறோம். அதன்படி இந்தக்கவியும் யத்க்ருஹீதஸ்ய என்கிறார். வருணனது பாசம் பொல்லாதது என்றும் அதிலிருந்து விடுபடுவது கஷ்டம் என்றும் வேதம் சொல்கிறது. ''இமம் விஷ்யாமி வருணஸ்ய பாஶமித்யாஹ। வருணபாஶாதேவைநாம் முஞ்சதி'' முதலிய வேத வாக்கியங்களில் இது பிரசித்தம். அதனால் பாசஹஸ்தம் என்று ஒரு வசையாகச் சொல்கிறார். ''ஆபோ வருணஸ்ய பத்நய ஆஸந்'' என்கிறது வேதம். அதனால் வருணனை அப்ப்ரபு என்கிறார். ''அஸ்யேஶாநா ஜகதோ விஷ்ணுபத்நீ'' என்று வேதம் சொன்னதைப் பின்பற்றி அகிலநியந்த்ரீம் என்கிறார். ''தாம் பத்மநேமீம் ஶரணமஹம் ப்ரபத்யே'' என்று வேதம் சொன்னபடியே ''அஹம் அப்ஜஹஸ்தாம் ப்ரபத்யே'' என்கிறார். இப்படி வேதக்கருத்துக்கள் அதிகமாக நிழலாடுவது இந்தச்ச்லோகத்தின் இன்னொரு சிறப்பு. இமம் மே வருண என்ற மந்திரம் சொல்லி பிரதிதினமும் ஸாயம்ஸந்தியை உபாஸனத்தில் வருணனுக்கு இடம் இருக்கிறதே என்று ஆக்ஷேபிக்கவேண்டாம். வருணனே! என் உயிரைப் பறிக்காதே என்று அந்த மந்திரத்தைச் சொன்னகையோடு ஶ்ரிய: பதியைத் தியானிப்பது வழக்கம். இது இந்த ச்லோகத்தின் கருத்தை மேலும் வலுப்படுத்துகிறது.

அடைந்தவரின் அவனத்தில் ஆதரவை அளிப்பவளை
அகிலத்துக் கதிபதியை அம்புஜையை அடிபணிவேன்

6. சூரியன் போலன்றிச் சூடு தணிப்பவள்:-

कुर्वाणं परुषैः करैः कुवलयक्लेशं भृशं सद्गण
श्रीहार्यभ्युदयं तमम्ब तपनं केचिन्नमस्कुर्वताम् ।
विश्वानन्दकरीं वयं तु विदुषां विश्वाधिकां सम्पदम्
तन्वानां प्रणमेम तत्रभवतीं तापत्रयध्वंसिनीम् ॥ ६ ॥

குர்வாணம் பருஷை: கரை: குவலயக்லேஶம் ப்₄ருஶம் ஸத்கண-
ஶ்ரீஹார்யப்₄யுதயம் தமம்ப தபநம் கேசிந்நமஸ்குர்வதாம் ।
விஶ்வாநந்தகரீம் வயம் து விதுஷாம் விஶ்வாதிகாம் ஸம்பதம் ।
தந்வாநாம் ப்ரணமேம தத்ரப₄வதீம் தாபத்ரயத்₄வம்ஸிநீம் ॥ 6 ॥

अम्ब - அம்மா !
परुषैः - உக்கிரமான
करैः - கிரணங்களாலே
कुवलय-क्लेशं 1. குவலய மலரின் வாட்டத்தை. 2. நிலவுலகில் வருத்தத்தை
भृशं - மிகவும்
कुर्वाणं - பண்ணுகிறவனும்
सत् - गण - श्री - हारि - अभ्युदयं - 1. நக்ஷத்திரக் கூட்டத்தின் அழகை நீக்கும் உதயத்தைக் கொண்டவனும் 2. நல்லோர் திரளின் செழிப்பை நீக்கும் எழுச்சியை உடையவனும் ஆன
तं - அந்த
तपनं - சூரியனை
केचित् - ஒரு சிலர்
नमस्कुर्वतां - வணங்கட்டும்.
वयं तु - நாங்களோ
विश्व -आनन्द -करीं - பிரபஞ்சத்துக்கு மகிழ்ச்சியைப் பண்ணுபவளும்
विदुषां - அறிஞர்க்கு
विश्व-अधिकां - எல்லாவற்றையும் மிஞ்சின
सम्पदं - செல்வத்தை
तन्वानां - பண்ணுபவளும்
ताप-त्रय-ध्वंसिनीं - மூவகைத் தாபங்களையும் அழிப்பவளும் ஆன
तत्रभवतीं - பூஜ்யையான உம்மை
प्रणमेम - வணங்குவோமாக.

அம்மா ! சூரியனுக்கும் உமக்கும் மூன்று முக்கிய வேறுபாடுகள் உள்ளன. முதலாவதாக, அவன் கொடிய கிரணங்களால் குவலயத்துக்கு வருத்தம் தருபவன். நீரோ

ஸகலருக்கும் மகிழ்ச்சியளிப்பவர். இரண்டாவதாக, அவன் ஸத்துகளுக்கு (நக்ஷத்திரங்களுக்கு) ஒளியில்லாமல் பண்ணுபவன். நீரோ ஸத்துகளுக்கு (நல்லோருக்கு) மோக்ஷாநந்தத்தையே தருபவர். மூன்றாவதாக, அவன் தாபம் செய்பவன். நீரோ தாபம் தீர்ப்பவர். அவனைச் சிலர் வணங்கினால் நாங்கள் உம்மையே வணங்குவோம்.

குவலயத்தைக் குவிப்பவனும் குழுவொளியைக் குறைப்பவனும்
கொளுத்துவதால் கொடியவனும் கதிரவன் ஆம் நாம் வணங்கோம்.

இதில் கரம், குவலயம், ஸத், விச்வ, தாபம், அப்யுதயம், என்ற ஆறு பதங்களில் சிலேடை.

கரம் என்றால் கிரணம் என்றும் கப்பம் என்றும் இரண்டு அர்த்தங்கள். குவலயம் என்றால் உருண்ட பூமி என்றும் நீலோத்பலமலர் என்றும் இரு அர்த்தங்கள். ஸத் என்றால் விண்மீன்கள் என்றும் நல்லவர்கள் என்றும் இரண்டு அர்த்தங்கள். விச்வம் என்றால் பிரபஞ்சம் என்றும் பெருமாள் என்றும் இரண்டு அர்த்தங்கள். தாபம் என்றால் கொளுத்தல் என்றும் கஷ்டம் என்றும் இரண்டு அர்த்தங்கள். அப்யுதயம் என்றால் தோற்றம் என்றும் வளர்ச்சி என்றும் இரண்டு அர்த்தங்கள். இந்தச் சிலேடையால் சூரியன் மூன்று வகைகளில் துஷ்டன் என்று மூதலிப்போம்.

1. ஒரு அரசன் கொடிய வரிச்சுமையால், பாரைப் பாடுபடுத்தினால் அவன் நல்லவனா ? சூரியன் அதைத் தான் செய்கிறான். அவனது வரிவிதிப்பு குரூரமோ என்றால், ஆமாம். அவனுடைய கரங்கள் (கிரணங்கள்) பருஷமானவை தாம். அதனால் பூமி துன்புறுகிறதா என்றால், ஆமாம். குவலயம் (கருநெய்தல் மலர்) கிலேசம் அடைகிறது.

2. ஒருவனது வளர்ச்சி நல்லவர் திரளை நலியச் செய்யுமானால், அவன் நல்லவனா ? கிடையாது. சூரியன் அப்படியா என்றால், ஆமாம். சூரியன் உதிக்கும்போதே நக்ஷத்திரங்கள் சோபையிழக்கின்றன. இப்படி ஸத்துகளின் செல்வத்தை அபஹரிப்பவன் சூரியன்.

3. சூரியனுக்குத் தபநன் என்றே பெயர். அவன் கொளுத்துபவன்.

இந்த மூன்று காரணங்களால் துஷ்டனான சூரியனைச் சில பேர் வணங்கினாலும் நாங்கள் வணங்கமாட்டோம். (ஆரோக்கியம் பெற சூரியநமஸ்காரமும், பிரதிதினமும் ஸந்தியாவந்தனத்தில் பண்ணும் ஸூர்யநாராயணர் வழிபாடுமிதனால் விலக்கியதாகாது. காம்யகர்மங்களைப் பண்ணுவர் பண்ணட்டும். நித்யகர்மங்களை நாம் செய்வோம். ஆனால் ஸ்ரிய:பதி ஸேவையாக ஸந்த்யாவந்தனாதிகள் அமையும்.) நாங்கள் திருமகளைத்தான் வணங்குவோம். ஏனென்றால் அவள் இந்த மூன்றிலுமே சூரியனுக்கு எதிர்மறையானவள்.

1. அவள் விச்வத்துக்கு ஆனந்தம் அளிப்பவள். ஆனந்தகரீ என்பதால், மகிழ்ச்சி தரும் (சுமையற்ற) வரிவிதிப்பு செய்பவள் என்றுமாம். விச்வம் என்று பெருமாளின் ஆயிரம் திருநாமங்களில் முதன் முதலானது. அவள் பெருமாளுக்கு இன்பம் அளிப்பதாலும் விச்வாநந்தகரீ ஆகிறாள். இவளுக்கும் சூரியனுக்கும் உள்ள முதல் வேறுபாடு இப்படிப் பலவிதமாக உறுதியாகிறது.

2. திருமகள் நல்லோரின் பிரகாசத்தைக் குறைப்பதில்லை. மாறாக, வித்வான்களுக்கு (உபாஸகர்களுக்கு) எல்லாவற்றையும் விஞ்சின மோக்ஷாநந்தத்தையே தருகிறாள்.

3. நமது மூன்று வகைத் தாபங்களையும் த்வம்ஸம் செய்கிறாள் லக்ஷ்மி. ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்று தாபங்கள் மூன்றுவகைப்படும். வியாதிகள், விலங்குத்தொல்லைகள், இயற்கை விபத்துகள் என்று மூன்று வகைகளுக்கு உதாரணங்களாம். இவற்றையெல்லாம் அழிப்பவள் லக்ஷ்மி. கர்மே தாபத்ரய விரசிதே என்ற ஸ்ரீஸ்துதி வரியிலும் இது சொல்லப்படுகிறது.

இந்த ச்லோகத்தில் சொன்ன ஆறு நீதிகள்:-

அரசர்கள் அதிக வரி போட்டுக் குடிமக்களைத் துன்புறுத்தக் கூடாது. நம் கைகளால் உலகில் இன்பம் பெருக வேண்டுமேயன்றி, துன்பம் விளையக்கூடாது. நல்லவர்களின் பிரகாசம் குன்றும்படி நாம் நடந்து கொள்ளக் கூடாது. நம் வளர்ச்சி நல்லோர் திரளின் செல்வத்தைப் பெருக்கவேண்டும். பிறரைக் கொளுத்தி எடுக்கக்கூடாது. எல்லோருக்கும் மகிழ்ச்சியைப் பண்ணவேண்டும்.

விச்வாநந்தம் விளைவிப்பாள் வீட்டுச்செல்வம் வருவிப்பாள்
வியாதிவகையை விரட்டிடுவாள் விமலை அடியை விடமாட்டோம்.

7. இந்திரன் போல் இல்லாமல் இடர் தீர்ப்பவள்:-

हरिसखि शतमन्युं वायसस्य स्वसूनो
रपि विपदपनीतावक्षमं नो यजेय ।
अहं अविदितमन्युं हन्त तस्य स्वशत्रो
रपि परिहृतभीतिं त्वां शुभां आश्रयेयम् ॥ ७ ॥

ஹரிஸகி$_2$ ஶதமந்யும் வாயஸஸ்ய ஸ்வஸூநோ
ரபி விபத$_3$பநீதா வக்ஷமம் நோ யஜேய ।
அஹம் அவிதி$_3$தமந்யும் ஹந்த தஸ்ய ஸ்வஶத்ரோ
ரபி பரிஹ்ருதபீ$_4$திம் த்வாம் ஶுப$_4$ாம் ஆஶ்ரயேய ॥ 7 ॥

हरिसखि- ஹரியின் தோழியே !
स्व-सूनोः- தன் மகனான
वायसस्य- காக்கைக்கு
अपि- கூட
विपत्-अपनीतौ - ஆபத்தை நீக்குவதில்
अक्षमं- சக்தியில்லாத
शतमन्युं - இந்திரனை
नो यजेय - யஜிக்க மாட்டோமாக.
स्व-शत्रोः- தன் பகைவனான
तस्य अपि - அந்தக் காக்கைக்கும்
परिहृत-भीतिं - அச்சத்தைத் தொலைத்தவளும்
हन्त- ஆச்சரியம் !
अविदित-मन्युं- கோபமே தெரியாதவளும்
शुभां - மங்களமானவளும் ஆன
त्वां- உன்னை
अहं - நான்
आश्रयेय - ஆச்ரயிப்பேனாக.

நான் இந்திரனை யஜிக்கமாட்டேன். ஹரிஸகியே ! உன்னைத்தான் ஆச்ரயிப்பேன். ஏனென்றால், இந்திரன் ஶதமந்யு. நூறு யாகங்களால் பதவி பெற்று சதக்ரது என்ற பெயர் பெற்றவன். மந்யு என்ற பதத்துக்கு கோபம் என்ற அர்த்தமும் இருப்பதால், அவன் பெருங்கோபக்காரன் என்றாகிறது. அது போகட்டும். ராமாயணக்கதையில் அவன் மகன் காகாஸுரனாக வந்து உனக்குத் தொல்லை தந்தபோது ராமர் விடுத்த புல்லான பிரம்மாஸ்த்ரத்திலிருந்து காகத்தைக் காப்பாற்ற முடியவில்லை அந்த இந்திரனால். தன் சொந்த மகனையே காப்பாற்ற வக்கில்லாத இந்திரன் எங்களையெல்லாமா காப்பாற்றப் போகிறான் ? அவனை நம்பிப் பயனில்லை. நான் உன்னைத்தான் பற்றுவேன். ஏனென்றால் நீ இந்திரனுக்கு நேர்மாறானவள். கோபம் என்றால் என்ன என்றே தெரியாதவள். தன் பகைவனான அதே காகாஸுரனைக்கூட இரக்கத்துடன் காப்பாற்றியவள். மிகவும் மங்களமானவள். அதனால் நீயே எனக்குப் புகல்.

இதில் நமக்கு நாலு நீதிகள்:

கோபக்காரர்களை ஆராதிக்காலாகாது. இயலாதவர்களைப் பூஜித்துப் பயனில்லை. இரக்கமுடையவளை, பகைவர்க்கும் அருள் புரிபவளை அடி பணிவது நல்லது. அருள், ஆற்றல், மங்களம் மூன்றும் ஒரே இடத்தில் அமைவது அபூர்வம். ஶுபாம் ஹிரண்யப்ராகாராம் என்றும் நமாமி மங்களாம் தேவீம் என்றும் கருணாம் லோகமாதரம் என்றும் ஸர்வோபத்ரவவாரிணீம் என்றும் லக்ஷ்மிக்கு இந்த மூன்றும் ஒருசேர அமைந்திருப்பதாகப் பிரசித்தி. இந்திரனுக்கோ இந்த மூன்றில் ஒன்று கூட இல்லை.

மந்யு என்ற ஒரே ஒரு பதத்தில் மட்டும் சிலேடை இருக்கிறது. யாகம் என்றும் கோபம் என்றும் இரண்டு அர்த்தங்கள். இந்திரன் நூறு - மந்யுக் காரன். இலக்குமியோ மந்யுவே இல்லாதவள். பல யாகங்களுக்குக் கர்த்தாவான இந்திரன் என் யாகத்துக்குக் கர்மாவாக வேண்டாம். அவனை

நான் பூஜிக்கமாட்டேன். ராமாயணத்தில் ''ஸ பித்ரா ச பரித்யக்த:'' என்றுள்ளது. தன் சொந்த மகனையே கைவிட்டவன் இந்திரன். திருமகளோ பகைவரையும் கைவிடாதவள். இந்திரன் சில சமயங்களில் பிரம்மஹத்யை, கௌதமர் சாபம் முதலிய அமங்களங்களுக்கு ஆளானவன். இலக்குமியோ என்றும் மங்களமானவள். இந்த மூன்று வேறுபாடுகளையும் அறிந்த நான் இவளைத்தான் ஆச்ரயிப்பேன். இந்திரன் என்மேல் இரக்கம் கொள்வானோ மாட்டானோ ? அவன் சதமந்யுவாயிற்றே என்று முதல் தயக்கம். அப்படி என்மீது அவன் இரங்கினாலும் அவன் என்னைக்காக்க முடியுமோ முடியாதோ ? தன் மகனையே காக்கமுடியாமல் கைவிட்டவனாயிற்றே அவன் ? இது இரண்டாவது தயக்கம். அப்படிக்காக்க முடிந்தாலும் அது நமக்கு நல்லதோ இல்லையோ ? அவன் ஒன்றும் மங்களதேவதை இல்லையே ? இது மூன்றாவது தயக்கம். இறுதியில் முடிவெடுத்துவிட்டேன். அவன் வேண்டாம். அந்த இந்திரனை நான் ஆராத்ய தெய்வமாக ஏற்காவிட்டாலும் எனக்கு வழிகாட்டியாக ஏற்கிறேன். அவன் லக்ஷ்மிஸ்தோத்ரத்தைப் பற்றி ''ஸகல விபூத்யவாப்தி ஹேது'' என்று சொல்லியிருப்பதால் அதன்படி நான் லக்ஷ்மியைத் துதிக்கிறேன்.

இரட்சிக்க இயலாத இந்திரனை பஜியேன் நான்.
இகலவர்க்கும் இரக்கமுடை இந்திரையை இறைஞ்சிடுவேன்.

<u>8. குபேரனைப்போலன்றிக் கொடைவள்ளலானவள்:-</u>

प्रौढैश्वर्यजुषोऽपि यस्य सुहृदा भिक्षाकृता नोज्झिता
यत्र श्रीदपदं वदन्ति विबुधा रूढ्याऽश्वकर्णादिवत् ।
यक्षं तं यजतामधीर्वयममी त्वामिष्टदात्रीं स्तुमः
मातर्लक्ष्मि महाविभूतिकमठो यस्यास्सखा ते हरिः ॥ ८ ॥

ப்ரௌடை,ஶ்வர்யஜுஷோபி யஸ்ய ஸுஹ்ருதா பி,க்ஷாக்ருதா நோஜ்ஜி,தா

யத்ர ஸ்ரீத3பத3ம் வத3ந்தி விபு3தா4 ரூட்4யாஸ்வ கர்ணாதி3வத் ।
யக்ஷம் தம் யஜதாமதீ4ர் வயமமீ த்வாமிஷ்ட தா3த்ரீம் ஸ்துமஃ
மாதர்லக்ஷ்மி மஹாவிபூ4திகமடோ2ர் யஸ்யாஸ்ஸகா2 ஹரிஃ ॥ 8 ॥

मातः - அன்னையே !

लक्ष्मि - லக்ஷ்மியே !

प्रौढ- ऐश्वर्य -जुषः अपि - மிகுந்த ஐச்வர்யம் அடைந்திருக்கும்

यस्य - எந்தக் குபேரனுடைய

सुहृदा - நண்பனான சிவனாலே

भिक्षाकता - பிச்சைக்காரத்தனம்

न उज्झिता - விடப்படவில்லையோ,

यत्र - எந்தக் குபேரன் விஷயத்தில்

श्री-द-पदं - தநதன் என்கிற சொல்லை

अश्वकर्ण-आदि - वत् - அஸ்வகர்ணம் முதலியது போல

रूढ्या - இடுகுறியால்

विबुधाः - புலவர்கள்

वदन्ति - சொல்கிறார்களோ,

तं - அந்த

यक्षं - யக்ஷனை

अधीः - புத்தியில்லாதவன்

यजतां - ஆராதிக்கட்டும்.

अमी - இந்த

वयं - நாங்கள்

इष्ट -दात्रीं - விரும்பியதைத் தருகிற

त्वां - உன்னை

स्तुमः - துதிக்கிறோம்.

यस्याः - எத்தகைய

ते - உனக்கு

सखा - நண்பனான

हरिः - ஹரியானவர்

महा-विभूतिक-मठः - பெருஞ்செல்வம் கொண்ட மடம் உடையவரோ

महा-विभूति-कमठः - பெரிய வைபவம் கொண்ட ஆமையோ.

தாயாரே ! குபேரன் பெரும் செல்வந்தன் தான். மறுக்கவில்லை. ஆனாலும் அவனுடைய சிறந்த நண்பனான சிவன் பிச்சைக் காரனாகவே இருக்கிறான். தான் செல்வந்தனாயிருந்தும் தன் நண்பன் பிக்ஷுவாக இருப்பது குபேரனுக்கு இழுக்கல்லவா ? இவன் நண்பனுக்கு உதவாதவன் என்றல்லவா தெரிகிறது ? இந்தக் குபேரனுக்குத் தநதன் என்ற பெயர் வழக்கில் இருக்கிறது. பணத்தை அள்ளித் தருபவன் என்று இந்தப் பெயருக்கு

அர்த்தம். ஆனால் உண்மையில் குபேரன் அப்படிப்பட்ட வள்ளல் இல்லை. அஶ்வகர்ணம் என்ற பெயர் குதிரைக்காதுடன் சம்பந்தமில்லாத ஒன்றுக்குப் பெயரானாற்போலே இதுவும் ஒரு இடுகுறிப்பெயர் மட்டுமே. அந்தக் குரேபன் ஒரு யக்ஷன்; தேவர்களுள் தாழ்ந்ததொரு ஜாதியினன். அவனை அறிவிலி துதிக்கட்டும். நாங்கள் துதிக்கமாட்டோம். இந்த நாங்கள் விரும்பியதையெல்லாம் தருகின்ற உன்னைத்தான் துதிக்கிறோம். நீ குபேரனிடமிருந்து மூன்று விதங்களிலும் மாறுபட்டு விளங்குகிறாய். முதலாவதாக உன்னுடைய நண்பனை நீ பிச்சைக்காரனாக வைப்பதில்லை. மாறாகப் பெரும் செல்வந்தனாக்குகிறாய். ஹரி உன் நண்பன். அவன் எவ்வளவு செல்வம் படைத்தவன் தெரியுமா ? ஒரு பணக்கார மடமே வைத்திருக்கிறான். எப்படி என்கிறாயா ? (தொடரும்)

பெரிய செல்வமுடைய மடம் என்பதை ஸம்ஸ்கிருதத்தில் சொன்னால் மஹா-விபூதிக-மடம் என்று ஆகும். மஹா- விபூதிக- மடம் அவனுக்கு ஏது என்கிறாயா? இதே பதத்தை வேறு விதமாகப் பிரித்தால் மஹா-விபூதி-கமட என்றாகிறது. இதற்கு மஹாமஹிமை பொருந்திய கூர்மம் என்று அர்த்தம். இத்தகைய கூர்மாவதாரம் எடுத்தவர் ஹரி. ஆகையால் உன் நண்பர் பெரும் செல்வந்தர் என்பது வார்த்தை வேடிக்கையாலும் ஊர்ஜிதமாகிவிட்டது. உனக்குள்ள தநதாந்யகரீ முதலிய பெயர்கள் காரணப் பெயர்கள். நீ உண்மையிலேயே ஸர்வ அபீஷ்டங்களையும் தருகிறாய். அதனால் உன்னையே இந்த நாங்கள் துதிக்கிறோம்.

மஹாவிபூதிகமட என்ற பதத்தின் இரண்டு அர்த்தங்கள் புரியாததால் சிலர் மஹாவிபூதிரநக என்று பாடத்தை மாற்றி அச்சிட்டு விட்டார்கள். முந்தைய பாடமே ஸ்வரஸமானது. இந்த ச்லோகத்தில் நமக்கு ஐந்து நீதிகள் தெரிகின்றன.

1. செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல் என்பர் நீதிநூலார். தான் செல்வந்தனாயிருந்தும் தன் நண்பனைப் பிச்சைக்காரனாக வைத்திருத்தல் அழகன்று. நம் செல்வத்தை நாலு நண்பர்களுடன் பகிர்ந்துகொள்வது நல்லது. அல்லது ஒரு சிறிதாவது நண்பர்களுக்கு உதவுவது முறை. அடியோடு உதவாமல் நண்பனைப் பிச்சாண்டியாக வைத்துத் தான் மட்டும் பெருந்தனிகனாக இருப்பது தீய பண்பையே காட்டும்.

2. வெறும் பெயர்களைப் பார்த்து நாம் ஏமாறக்கூடாது. குபேரனுக்குத் தநதன் என்று பெயர். உண்மையில் அவன் தனத்தை வாரி வழங்கும் வள்ளல் அன்று. அஶ்வகர்ணம் என்று ஒரு மரத்துக்குப் பெயர். அதற்கும் அச்வத்தின் (குதிரையின்) கர்ணத்துக்கும் (காதுக்கும்) எந்தத் தொடர்பும் தெரியவில்லை. (ஆட்டுக்கு அஜ என்ற பிரம்மாவின் பெயரும், தவளைக்கு ஹரி என்ற விஷ்ணுவின் பெயரும்

கழுதைக்குக் கர்தப என்ற சிவனின் பெயரும் இருந்த மாத்திரத்திலேயே அவை அவர்போல் ஆகுமோ என்றொரு ஸுபாஷித நீவீ ச்லோகம்.) பேரைப் பெரிதாக வைத்துக்கொண்டால் போதுமான

3. உலகில் அறிவிலி (அஜ்ஞ:) அதிகம் இருக்கலாம். அத்தகையோர் குபேரனை வணங்கவும் செய்யலாம். அதை நாம் ஆட்சேபிக்க வேண்டாம். ஊர் மொத்தத்தையும் சீர்திருத்துவது நம் வேலையா என்ன? (யக்ஷம் தம் யஜதாம்.)

குணம் கெட்ட குபேரனையே
குமதிஜனம் கும்பிடட்டும்.

4. ஜபம் பண்ணும்போது தனிமை நல்லது. ஸ்தோத்ரம் பண்ணும்போது பலர் சேர்ந்து சொல்வது நல்லது. வயமமீ ஸ்தும: என்று பன்மையால் இதைத் தெரிவிக்கிறார்.

5. தன்னைத் துதிப்பவர்களுக்கு இஷ்டத்தையெல்லாம் தருபவள் அன்னை இலக்குமி. இஷ்டதாத்ரீ என்கிறார். ஸகல ஃபல ஸீமா ஸார்வபௌமா பவந்தி என்கிற ஸ்வாமி தேசிகன் ஸூக்திக்கும் இதே தாத்பர்யம். இப்படிப்பட்டவளை அல்லவா நாம் துதிக்கவேண்டும்?

இஷ்டமெலாம் ஈந்திடும் நம்
இலக்குமியை இறைஞ்சிடுவோம்.

9. நிலவைப்போலன்றி நிஷ்களங்கமானவள்.

प्रौढिर्यस्य हि पूर्वपक्षविदिता यो लुप्तचूडामणिः
यश्चाहीनमुखेन दूषितकलः तं कः कलङ्काश्रयम् ।
अञ्चेत् सोमं अपामरः श्रुतिशिरस्सिद्धान्त सिद्धोन्नतिम्
पद्मे काङ्क्षितदां बुधस्तुतकलां त्वां निष्कलङ्कां विना ॥ ९ ॥

ப்ரௌடி⁴ர் யஸ்ய ஹி பூர்வபக்ஷவிதி³தா யோ லுப்த⁴சூடா³மணி:
யஶ்சாஹீநமுகே²ந தூ³ஷிதகல: தம் க: கலங்காஶ்ரயம் ।
அஞ்சேத் ஸோமம் அபாமர: ஶ்ருதிஶிரஸ் ஸித்தா⁴ந்த ஸித்தோ⁴ந்நதிம்
பத்³மே காங்க்ஷிததா³ம் பு³த⁴ ஸ்துதகலாம் த்வாம் நிஷ்கலங்காம் விநா ॥ 9 ॥

पद्मे தாமரையாளே!

यस्य எந்த சந்திரனுடைய

प्रौढिः வளர்ச்சியானது

पूर्वपक्ष-विदिता 1. சுக்கிலபக்ஷத்தில் 2. வாதத்தின் முன் பகுதியான பூர்வபக்ஷத்தில் மட்டும் அறியப்பட்ட,

यः எந்த சந்திரன்

लुब्ध- चूडामणिः 1. வேடுவனின் தலையில் மணிபோல, 2. கருமிகளுள் தலை சிறந்தவனோ,

यः - எந்த சந்திரன்,

अहीनमुखेन - 1. உயர்ந்தோர் வாயால் 2. பாம்பரசனான ராஹுவின் முகத்தால்

दूषित-कलः च 1. இழுக்குற்ற பிறைகளோடு கூடினவனுமோ 2. குறைகொண்ட வித்தைகளை உடையவனுமோ,

कलङ्काश्रयं 1. களங்கமுடைய 2. மாசுபட்ட,

तं அந்த,

सोमं சந்திரனை,

कः எந்த,

अपामरः பாமரனல்லாதவன்,

अञ्चेत् பூஜிப்பான்?

श्रुति-शिरस्-सिद्धान्त-सिद्ध-उन्नतिं உபநிஷத் ஸித்தாந்தத்தில் ஸித்தித்த உயர்வை உடையவளும்,

काङ्क्षित-दां விரும்பியதைத் தருபவளும்

बुध-स्तुत-कलां பண்டிதர்கள் போற்றும் கலைகளை உடையவளும்,

निष्कलङ्कां பழியே இல்லாதவளுமான,

त्वां உன்னை,

विना விட்டு.

பத்மையே! உன்னை விட்டு யார் சந்திரனைப் பூஜிப்பார்கள்? உனக்கும் அவனுக்கும் நான்கு பெரிய வேறுபாடுகள் உள்ளன. முதலில் உனக்குள்ள நான்கு சிறப்புகள் என்னவென்றால்,

1. உபநிஷித்து ஸித்தாந்தத்தில் உன் உயர்வு ஸித்தமானது.

2. வேண்டியதையெல்லாம் தருபவள் நீ.

3. பண்டிதர்கள் உன் கலைகளைப் பெரிதும் போற்றுகிறார்கள்.

4. உனக்கு எந்தக் களங்கமும் கிடையாது.

இந்த நாலு சிறப்பியல்புகளும் சந்திரனுக்குக் கிடையாது என்பது மட்டும் இல்லை. இதற்கு விபரீதமான இயல்புகள் அவனுக்கு இருக்கின்றன. இதைச் சிலேடையால் மூதலிப்போம்.

1. சந்திரனின் வளர்ச்சி முன்பக்ஷத்தில் மட்டும் தான் தெரியும். அடுத்தபக்ஷத்தில் தேய்ந்து போவது தெரிகிறது. பூர்வபக்ஷத்துக்கு (இன்னொரு அர்த்தத்தில்) நேர்மாறானது ஸித்தாந்தம். மறைமுடியின் ஸித்தாந்தத்தில் உன் உயர்வு ஸித்திக்கிறது. அவன் வளர்வு பூர்வபக்ஷத்தில். இதிலிருந்தே தெரிய வில்லையா, யார் சிறந்தவர் என்று? பூர்வபக்ஷக் கருத்துகள் வாதத்தின் முடிவில் அடிபட்டுப்போகுமே. ஸித்தாந்தம் தானே நிலைக்கும்? அதனால் சந்திரனின் பெருமை வாதத்தில் ஆரம்ப பகுதியோடு நின்றுவிடும். பூர்வபக்ஷம் என்பதற்கு சுக்கிலபக்ஷம் என்றும் வாதத்தில் முதல் கட்சி என்றும் இரண்டு அர்த்தங்களால் இது விளங்குகிறது.

2. லுப்தன் என்றால் வேடன் என்றும் கருமி என்றும் இரண்டு அர்த்தங்கள். சந்திரன் லுப்தனான (வேடுவனான) சிவனின் தலையலங்காரம். இதே பதத்துக்கு இன்னொரு அர்த்தம் கருமிகளில் தலயாயவன் என்று. நீயோ அதற்கு நேர்மாறானவள். விரும்பியதையெல்லாம் தருபவள்.

3. சந்திரனின் கலைகளை அறிஞர் போற்றாதது இருக்கட்டும். உயர்ந்தோர் தூஷிக்கவும் செய்கிறார்கள். எப்படியென்றால், அஹீந என்ற பதத்துக்கு அஹி-இந என்று பிரித்தால் பாம்புகளில் பெரியவன் என்று ஆகி ராஹு என்று அர்த்தமாகும். இதையே அ-ஹீந என்று பிரித்தால் ஹீனர்களல்லாதவர், உயர்ந்தவர் என்று அர்த்தமாகும். கலை என்பதற்கும் வித்யை என்றும் பிறை என்றும் இரண்டு அர்த்தங்கள். கிரகணகாலத்தில் சந்திரனின் பிறையை ராஹு கெடுப்பது தெரிந்த விஷயம். அதனால் அஹீநர் தூஷிக்கும் கலைகள் சந்திரனுடையவை. உயர்ந்தவர் பழிக்கும் கலைகள்

அவனுடையவை என்று பொருள் கிடைக்கிறது. ஆனால் திருமகளின் கலைகளோ, அறிஞர் துதிப்பவை. (ஆச்ரித ரக்ஷணாதிகள் அவளுக்குக் கைவந்த கலைகள்.)

4. சந்திரனுக்கு நடுவில் களங்கம் இருப்பது நம் கண்ணுக்கே தெரிகிறது. களங்கம் என்பதற்கு அபவாதம், பழி, மாசு என்ற அர்த்தங்கள். சந்திரனுக்கு வேறொரு வகையிலும் களங்கம் உண்டு. குருபத்தினியிடம் தகாத முறையில் நடந்து கொண்டது முதலிய பழி. ஆனால் திருமகளோ அப்பழுக்கில்லாதவள்.

இப்படியாக நாலு வகைகளில் சந்திரனும் லக்ஷ்மியும் விருத்த சுபாவம் கொண்டவர்கள். லக்ஷ்மியை விட்டுவிட்டு சந்திரனை வழிபடுபவன் பாமரனாகத்தான் இருக்கமுடியும்.

கருமியாய்க் காணலாலும்
களங்கமே கருத்ததாலும்
கலைகளில் குறைபாட்டாலும்
கற்றவர் மதியைப் போற்றார்.

இந்த ச்லோகத்தில் நமக்குச் சில நீதிகள்:

1. எல்லாக் காரியத்துக்கும் ஏதோ ஒரு கும்பலில் பாராட்டும் வரவேற்பும் கிடைத்து விடலாம். ஆனால் யார் பாராட்டுகிறார்கள் என்பது முக்கியம். அறிஞர்கள் கொண்டாடும்படி நடக்கவேண்டும். உயர்ந்தவர் பழிக்கும்படி நடக்கக் கூடாது.

2. உலோபியாய் இருந்தால் யாரும் சீந்தமாட்டார்கள். வள்ளலாயிருந்தால் எல்லோரும் கௌரவிப்பார்கள்.

3. கலைகளைக் கற்றால் மட்டும் போதாது. அவை தேயாமல் பாதுகாக்கவும் வேண்டும்; புதர்கள் துதிக்கும்படி பயன்படுத்தவும் வேண்டும்.

4. நம் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படாதபடி நாம் வாழவேண்டும்.

5. பாமரனுக்கும் அறிவாளிக்கும் வேறுபாடு என்னவென்றால், அறிவாளி தராதரங்களை ஒப்பிட்டுச் சீர்தூக்கிப்பார்த்து, யாரை வழிபடலாம் என்று சரியான முடிவெடுப்பான்; பாமரனுக்கு அதெல்லாம் தெரியவே தெரியாது.

மதி என்ற தமிழ்ச்சொல்லுக்கு மூன்று அர்த்தங்கள் இருப்பதால் இந்த ச்லோகத்தின் முக்கிய அர்த்தத்தை இப்படியும் சுவாரசியமாகச் சொல்லலாம்: **''மதியுளார் மதியை மதியார்.''** இதற்கு நேர்மாறாக லக்ஷ்மி.

இஷ்டமெலாம் ஈந்திடும் நம்

இலக்குமியை இறைஞ்சிடுவோம்.

10. நவக்கிரகம் போலின்றி நலம் மட்டும் நல்குபவள்.

पद्मे येषां उच्चभावो न नित्यः
ये सर्वेऽपि स्थानभेदेन तीक्ष्णाः ।
यष्टुस्तुष्टिर्न ग्रहांस्तानतस्त्वाम्
नित्यौन्नत्यां नौमि सर्वत्र मृद्वीम् ॥ १० ॥

பத்மே யேஷாம் உச்சபா₄வோ ந நித்ய:
யே ஸர்வேபி ஸ்தா₂நபே₄தே₃ந தீக்ஷ்ணா: ।
யஷ்டுஸ்துஷ்டிர் ந க்₃ரஹாம்ஸ்தாநதஸ்த்வாம்
நித்யௌந்நத்யாம் நௌமி ஸர்வத்ர ம்ருத்₃வீம் ॥ 10 ॥

பத்மையே! நான் நவக்கிரகங்களை வணங்கமாட்டேன்; உன்னைத்தான் வணங்குவேன். ஏனென்றால் அவர்களிடம் இரண்டு பெருங்குறைகள் உள்ளன. ஒன்று, அவர்கள் உச்சத்திலிருப்பது சில காலத்துக்கு மட்டுமே. ஜோதிட நூல்களில் சூரியன் மேஷராசியில் உச்சம், சந்திரன் விருஷபராசியில் உச்சம் என்றெல்லாம் சொல்லி யிருக்கிறார்களே, அந்தந்த ராசிகளை விட்டு நகரும்போது உச்சநிலை இல்லாமல் போகிறது. அவர்களுடைய

உச்சத்தன்மை சாசுவதமாக இல்லை. கொஞ்சநாள் மட்டும் உயர்வு கொண்டவரை ஏன் வணங்க வேண்டும்? இது போகட்டும்; இதைவிடக் கொடியதும் உண்டு அவர்களிடம். அந்த ஒன்பது பேரில் ஒருவராவது ஸதா மென்மையானவர் என்பது கிடையாது. ஒருநாள் இன்றேல் ஒருநாள் உக்கிரமாகி விடுவார். நீசராசியில் வந்தால் குரூரர் ஆகிறார்கள். ஒருசீரான சுபாவம் இல்லாத அவர்களை வணங்குவானேன்?

உச்சத்தில் நிலையாதாரை உக்கிரமாய் ஒடுக்குவாரை
உவகைக்கும் உதவாதாரை ஒதுக்கிடுவேன் கோள்கள் தம்மை.

இதற்கு நேர்மாறாக நீ இருக்கிறாய். எப்பொழுதுமே சாச்வதமான உயர்வு உன்னுடையது. எல்லா இடங்களிலும் எல்லார் விஷயங்களிலும் கடுமையே கலவாமல் மென்மையானவள் நீ. உன்னையே வணங்குகிறேன்.

இரண்டு நீதிகள் இந்த ச்லோகத்தில்.

1. உயர்வு இரண்டு வகையானது. இயல்பானதும் நிலையானதும் ஆனது ஒன்று. வந்தேறியானதும் தாற்காலிகமானதும் மற்றொன்று. நாம் முதல் வகை உயர்வை மட்டுமே மதிக்கவேண்டும்.

2. சில பேருக்குக் குணம் இடத்துக்கிடம் மாறும். ஓரிடத்தில் மென்மையாகவும் இன்னோரிடத்தில் வன்மையாகவும் நடந்து கொள்வார்கள். ஆனால் உண்மையில் பெருமை உடையவர் எல்லா இடங்களிலும் மிருதுவாக இருப்பார்கள். அவர்களே நம் வணக்கத்துக்குரியவர்கள்.

என்றென்றும் உயர்ந்தவளாய் எங்கெங்கும் மென்மையுடன்
எண்ணிடிலே துஷ்டி தரும் என் திருவை ஏத்துகிறேன்.

पद्मे பத்மாவே!
येषां எந்த நவக்கிரகங்களுக்கு
उच्चभाव: உச்சநிலை
न नित्य:
நிலைத்திருப்பதில்லையோ
ये எவர்கள்
सर्वे अपि எல்லாருமே
स्थान-भेदेन இட மாறுபாட்டால்
तीक्ष्णा: குரூரமானவர்களோ
तान् அந்த
ग्रहान् கோள்களை
यष्टु: யஜிப்பவனுக்கு
तुष्टि: ஸந்தோஷம்
न கிடையாது.
अत: ஆகையால்
नित्य-औन्नत्यां நிலையான உயர்வு உடையவளும்
सर्वत्र எல்லாரிடத்திலும்
मृद्वीं மென்மை கொண்டவளுமான त्वां உன்னை
नौमि வணங்குகிறேன். 10

11. முருகன் போலன்றி முழுப்பலன் தருபவள்

शाखावृन्दप्रथितविभवां सत्सुपर्णाधिरोहाम्
त्वामस्तुत्वा जलनिधिभुवं कल्पवल्लीमतल्लीम्।
आकाङ्क्षन्त: फलमविकलं देव्यपर्णोद्भवं के
संसेवेरन् शरवणभवं स्थाणुजातं विशाखम्॥ ११॥

ஶாகாப்₃ருந்த₃ ப்ரதி₂த விப₄வாம் ஸத்ஸுபர்ணாதி₄ரோஹாம்
த்வாமஸ்துத்வா ஜலநிதி₄பு₄வம் கல்பவல்லீ மதல்லீம் ।
ஆகாங்க்ஷந்த: ப₂லமவிகலம் தே₃வ்யபர்ணோத்₃ப₄வம் கே
ஸம்ஸேவேரந் ஶரவணப₄வம் ஸ்தா₂ ணுஜாதம் விஶாக₂ம் ॥ 11 ॥

देवि தேவியே!
शाखा-बृन्द-प्रथित-विभवां 1. கிளைகளின் கூட்டங்களில் பிரசித்தமான செல்வம் பெற்றதும் 2. வேதசாகைக் கூட்டங்களில் பிரசித்தமான வைபவம் கொண்டவளும்
सत्-सुपर्ण-अधिरोहां 1. இருக்கும் நல்ல இலைகளில் ஏற்றம் பெற்றதும் 2. நல்ல கருடனில் ஏறுபவளும்
जलनिधिभुवं கடலில் தோன்றியவளும்
कल्प-वल्ली-मतल्लीं உயர்ந்த கற்பகக்கொடியுமான
त्वां உன்னை
अस्तुत्वा துதிக்காமல்
अविकलं முழுதான
फलं பலனை

आकाङ्क्षन्तः விரும்புகிற

के எவர்

अपर्णोद्भवं 1. இலை தோன்றாததும் 2. பார்வதிகுமாரனும்

शरवणभवं 1. அம்புக்காட்டில் உண்டானதும் 2. சரவணத்தில் தோன்றியவனும்

विशाखं 1. கிளை இல்லாதவனும் 2. விசாகன் என்ற பெயர் கொண்டவனும்

स्थाणुजातं கம்பங்களின் சமூகமானதுமான ஒன்றை 2. சிவனின் புதல்வனுமான ஒருவனை

संसेवेरन् சேவிப்பார்கள்?

ஸ்ரீ தேவியே! நீ நாலு விதமாகக் கற்பகக்கொடியை ஒத்திருக்கிறாய். 1. கற்பகமரம் கிளைகிளையாக செல்வங்களைத் தாங்கும். ஆடை ஆபரணங்களெல்லாம் அதில் பூத்துக்குலுங்கும் என்று பிரசித்தி. இப்படி சாகைகளில் விபவம் கொண்ட கற்பகம் போலவே லக்ஷ்மியும் சாகைகளில் விபவம் கொண்டவள். எப்படியென்றால், வேதசாகைகளில் அவளுடைய வைபவம் பிரசித்தமாய் இருக்கிறது.

2. கற்பகம் நல்ல இலைகளுடன் உயரமாய் இருக்கும். அதனால் ஸுபர்ணமும் மேலேறுவதும் கொண்டது கற்பகம். நீயும் ஸுபர்ணன் என்கிற கருடன் மேல் ஏறினவள். ஆக இருவருமே ஸுபர்ணாதிரோஹம் உடையவர்கள்.

3. கற்பகம், திருமகள் இருவருமே பாற்கடலில் தோன்றியவர்கள்.

4. நினைத்ததைத் தருவதால் லக்ஷ்மியும் கற்பகமும் சமம்.

கடலினில் பிறந்ததாலும், கிளைகளில் கிளர்ந்ததாலும், கவி புகழ் சுபர்ணத்தாலும், கற்பகம் கமலை போதும்.

இப்படிக் கற்பகத்தைப் பல விதங்களிலும் ஒத்திருக்கிற உன்னைத் துதிக்காமல் முழுப்பலனை விரும்புபவர் யாரும் வேறொரு தெய்வத்தைச் சேவிக்க மாட்டார்கள். அதிலும் குறிப்பாக சுப்பிரமணியனைச் ஸேவிக்கவே மாட்டார்கள். ஏனென்றால், அவன் இந்த நாலு விதங்களிலுமே கற்பகத்துக்கு நேர் எதிரானவன். எப்படியென்றால், 1.

கற்பகத்துக்கு நிறைய கிளைகள். அவனுக்கோ கிளையே கிடையாது என்ற பொருள்படும்படி விசாகன் என்று பெயர்.

2. நிறைய இலைகள் இருக்கும் கற்பகத்துக்கு நேர்மாறாக, இலையே இல்லாமல் தோன்றியவன் என்று பொருள் வரும்படி அபர்ணையின் மகன் அவன்.

3. பாற்கடலுக்கு நேர்மாறாக அம்புக்காட்டில் தோன்றியதால் சரவணபவன் என்று அவனது பெயர்.

4. கொடியுடன் கூடிய கற்பகத்துக்கு மாறாக, வெறும் மரக்கட்டைக்கூட்டம் என்று அர்த்தம் வரும்படி, ஸ்தாணுவான சிவனிடம் தோன்றியவன் அவன்.

இப்படி எல்லா விதங்களாலும் கற்பகத்துக்கு எதிரான முருகனைத் துதித்தால் முழுப்பலன் கிடைக்குமா? நிறைய கிளைகளும் இலைகளுமுள்ள மரத்தில் பழங்களும் இருக்கும். வெறும் கட்டையில் இருக்குமோ?

கிளைகள் எதுவும் கிடையாதாம்.

இலைகள் எதுவும் இருக்காதாம்.

மலையின் பேரன் முருகனிடம்

குலையாய்ப் பழங்கள் கிடைத்திடுமோ?

இந்த ச்லோகத்து நீதி: முழுமையாகப் பலனடைய விருப்பமானால் லக்ஷ்மியைத் துதிக்கவேண்டும்.

அரைகுறையாகக் கிடைத்தால் போதும் என்றால் பிற தெய்வங்களைத் துதிப்பர்.

இதை அவிகலம் என்ற பதத்தால் சொன்னார்.

தேவியை மட்டும் தொழுவோம்.
தேவையை முழுதும் பெறுவோம்.

12. வேழமுகன் போலன்றி வேதவழி நடத்துபவள்

त्वां कृतश्रुतिपथप्रवर्तनाम् सज्जनादरकृदाननां विना।
निर्भिश्रुतिविचालनं रमे साधुवारणमुखं श्रयेत कः ॥ १२ ॥

த்வாம் க்ருதஶ்ருதிபத₂ப்ரவர்தநாம்
ஸஜ்ஜநாத₃ரக்ருதா₃நநாம் விநா।
நிர்மிதஶ்ருதிவிசாலநம் ரமே
ஸாது₄வாரணமுக₂ம் ஶ்ரயேத க: ॥ 12 ॥

रमे லக்ஷ்மியே!
कृत-श्रुति-पथ-प्रवर्तनां வேதவழியை ஏற்படுத்திப் பரப்புபவளும்
सज्जन-आदर-कृत्-आननां நல்லவர்களுக்கு ஆதரவு பண்ணும் முகம் உடையவளுமான
त्वां உன்னை
विना விட்டு
निर्मित-श्रुति-विचालनं 1. ஶ்ருதிக்கு ஆட்டம் பண்ணுபவனும் 2. காதை ஆட்டுபவனும்
साधु-वारण-मुखं 1. நல்லவர்களைத் தடுக்கும் முகம் கொண்டவனும் 2. நல்ல யானை முகம் கொண்டவனும் ஆன பிள்ளையாரை कः எவன் श्रयेत ஆச்ரயிப்பான்?

ரமையே! உனக்கும் பிள்ளையாருக்கும் இரண்டு பெரிய வித்தியாசங்கள். ஒன்று, நீ வேதமார்க்கத்தைப் பிரவர்த்திக்கிறாய். அவனோ ஶ்ருதியை ஆட்டி அசைத்து விடுகிறான். எப்படியென்றால், ஶ்ருதி என்று வேதத்துக்கும், காதுக்கும் பெயர். யானை காதை மட்டும் அசைக்கும் பழக்கம் கொண்டது. (மனிதர்களால் இது முடியாது). இரண்டாவது பெரிய வித்தியாசம் என்னவென்றால், நீ நல்லவர்களை ஆதரிக்கும் முகம் கொண்டவள். அவனோ நல்லவர்களுக்குத் தடை பண்ணுவான். எப்படியென்றால், வாரணம் என்ற பதத்துக்கு யானை என்றும் தடுத்தல் என்றும் இரண்டு அர்த்தங்கள். எனவே நல்ல யானைமுகம் கொண்ட பிள்ளையாரை ஸாதுவாரணமுகன் என்பர். இதற்கு சாதுக்களைத் தடுக்கும் முகத்தவன் என்று அர்த்தம்.

சுருதிகளை அசக்கலாலும் சுஜனர்களைத்தடுப்பதாலும்
சுபலக்ஷ்மிக்கெதிராய்ச் சேர்வார் சும்மா யார் பிள்ளையாரை?

இந்த இரண்டு வித்தியாசங்களும் இருக்கையில் எவன் உன்னை விட்டுவிட்டு ஆனைமுகத்தானை ஆச்ரயிப்பான்? எவனுமே உன்னை உபேக்ஷித்து விநாயகனை ஸேவிக்கமாட்டான்.

இந்த ச்லோகத்தில் நமக்குத் தெரிய வரும் சில கருத்துகள்:

1. வேதமார்க்கத்தை லக்ஷ்மி ப்ரவர்த்திப்பது பல வகைகளால் ஆகும். முதலில் ஆசார்ய பரம்பரையில் இடம் பெற்று இதை ஸ்ரீமத் வேத மார்க்கம் ஆக்குகிறாள். விஷ்வக்ஸேனருக்கு ஆணையிட்டு நம்மாழ்வார் நாதமுனி வழியாக ஸம்ப்ரதாயத்தைப் பரப்புகிறாள். லக்ஷ்மீ தந்த்ரத்தில் சொன்னபடி வைதிகாசாரத்துக்காக வாதிடுகிறாள். இதையெல்லாம் கருதி, ஶ்ருதி பதப்ரவர்த்தகையாக லக்ஷ்மியை இந்தக்கவி சொல்கிறார்.

2. நல்லவர்களை ஆதரிப்பது முகத்திலேயே தெரியவேண்டும். கண்டதும் முகமலர்ச்சி, இன்சொல், அன்பு, உகப்பு, எல்லாமே முகத்தில் தெரிபவை.

ஆரணிநெறிப்பணி ஆற்றிடுவாள்.
ஆன்றோர்களையே ஆதரிப்பாள்.
ஆழிப்பெண்ணை விட்டு அதனால்
ஆனைமுகனை ஆர் அடைவார் ?

13. பவானி போலன்றிப் பவத்தைப் போக்குபவள்.

दुर्गां परे गाढभवानुषङ्गाम्
शिलोच्चयादभ्युदितां श्रयन्ताम्
भक्त्येकलभ्यां भवसिन्धुनावम् ।
सुधाब्धिजे त्वां तु वयं श्रयामः ॥ १३ ॥

து$_3$ர்கா$_3$ம் பரே கா$_3$ட$_4$ப$_4$வாநுஷங்கா$_3$ம்
ஶிலோச்சயாத் அப்$_4$யுதி$_3$தாம் ஶ்ரயந்தாம் ।
ப$_4$க்த்யேகலப்$_4$யாம் ப$_4$வஸிந்து$_4$நாவம்
ஸுதா$_4$ப்$_3$தி$_4$ஜே த்வாம் து வயம் ஶ்ரயாம: ॥ 13 ॥

सुधाब्धिजे அமுதக்கடலில் அவதரித்தவளே!
गाढभवानुषक्तां 1. நெருக்கமாகச் சிவனோடு கூடினவளும் 2. ஸம்ஸாரபந்தத்தை இறுக்கமாக உடையவளும்
शिलोच्चयात् உயரமான மலையிலிருந்து
अभ्युदितां தோன்றியவளும்
दुर्गां 1. துர்க்கை என்ற பெயர் கொண்டவளும் 2. அடைவதற் கரியவளுமானவளை
परे பிறர்
श्रयन्तां ஆச்ரயிக்கட்டும்.
भक्ति-एक-लभ्यां பக்தி ஒன்றி னாலேயே அடையக்கூடிய வளும்
भव-सिन्धु-नावं ஸம்ஸார சமுத்திரத்துக்குக் கப்பலானவளும் ஆன
त्वां तु உன்னையே
वयं நாங்கள்
श्रयामः அடைகிறோம்.

தாயே! உனக்கும் துர்க்காதேவிக்கும் மூன்று முக்கிய வேற்றுமைகள் இருக்கின்றன. பவ ஸம்பந்தம் குறித்ததொன்று; பிறப்பிடம் குறித்து இன்னொன்று. எளிதில் அணுகத்தக்கமை குறித்து மூன்றாவது. 1. பவம் என்கிற ஸம்ஸாரம் ஸாகரம் போல இருக்கிறது. அதைத்தாண்ட உதவும் கப்பல் போல் நீ இருக்கிறாய். இதற்கு மாறாக பவனோடு (சிவனோடு) நெருக்கமாகக் கட்டுண்டவள் துர்க்கை. இப்படி வார்த்தையில் சிலேடையால் நீங்கள் இருவரும் எதிரும் புதிருமாய் இருப்பது தெரிகிறது.

2. நீ அமுதக் கடலில் பிறந்தாய். உன் சுபாவமும் அதற்கேற்றபடி இருக்கிறது. அவளோ மலையின் பெண்ணாகப் பிறந்தாள். சுபாவமும் கடினமாக இருக்குமோ?

3. நீ பக்தி மாத்திரத்துக்கு வசமாகி அடையப்படுகிறாய். அவளோ அப்படியன்று. எளிதில் அடையமுடியாதவள். துர்க்கை என்ற பெயருக்கே இந்த அர்த்தம்.

இந்த மூன்று வேறுபாடுகளையும் அறிந்த நாங்கள் உன்னையே தொழுவோம். மற்றவர்கள் வேண்டுமானால் துர்க்கையைத் தொழட்டும்.

பக்திக்காட் படுவதாலும்பவக்கடலைத்தாண்டற்காயும்
பாற்கடலில் பிறந்ததாலும் பத்மையடி பணிகின்றோம் நாம்.

இந்த ச்லோகத்தில் மூன்று கருத்துகள்.

1. பவத்தை ஒழிக்க விரும்பும் நாங்கள் பவனோடு நெருங்கியணைந்த பவானியைத் தொழலாமோ? பவப்ராப்தி வேண்டுபவர் அன்றோ அவ்வாறு செய்யலாம்? இரட்டை அர்த்தத்தால் இந்த வேடிக்கை.

2. மக்களின் சுபாவங்கள் பிறப்பிடத்திலிருந்தே தெரிந்துவிடும். அமுதக்கடலில் தோன்றியவள் லக்ஷ்மி. அவள் குளிர்ந்தவளாயும், ஈரநெஞ்சினளாயும், இனியவ ளாயும், வள்ளலாயும், பரந்த பான்மை கொண்டவளாயும் இருக்கிறாள். துர்க்கையோ மலைப்பாறையில் பிறந்தவள். அவள் கடினமாயும், ஈரமற்றும், பாறைபோல் உறுதியாயும் இருப்பாளோ என்னவோ?

3. அணுக முடியுமா என்பது ஆச்ரயணீயதைக்கு முக்கியம். லக்ஷ்மியை பக்தி ஒன்றாலேயே அணுகிவிடலாம். ஆனால் பார்வதியோ துர்க்கை என்றே பெயர் கொண்டிருக்கிறாள். எளிதில் போக முடியாத இடத்துக்குத் துர்க்கம் என்று வழக்கு. அவளிடம் நாங்கள் ஆச்ரயிக்கமாட்டோம்.

பவத்தொடர்புள்ளதாலும் பாறையில் பிறந்ததாலும்
பற்றுவதரியதாலும் பார்வதி பக்கம் போகோம்.

14. சிவனைப் போலன்றிச் சிந்தனைக்கினியவள்.

स्थानं यस्य श्मशानं सततमनुचरो भूतवेतालवर्गः
चेलं चर्म स्रगस्थ्नां ततिरहह तमप्युग्रमेके भजन्ताम्।
पद्मे पद्मे स्थितां त्वां असकृदनुसृतां देवतायौवतेन
ध्यायेम क्षौमभाजं वयमनुदिनं आमुक्तमुक्ताकलापाम्॥ १४॥

ஸ்தா₂நம் யஸ்ய ஸ்மசாநம் ஸததமநுசரோ பூ₄தவேதாளவர்க₃:
சேலம் சர்ம ஸ்ரக₃ஸ்த்₂நாம் ததிரஹஹ தமப்யுக்₃ரமேகே ப₄ஜந்தாம் ।
பத்மே பத்மே ஸ்திதாம் த்வாம் அஸக்ருத₃நுஸ்ருதாம் தே₃வதாயௌவதேந
த்₄யாயேம க்ஷௌமபா₄ஜம் வயமநுதி₃நமா முக்தமுக்தாகலாபாம். ॥ 14 ॥

पद्मे தாமரையாளே!
यस्य எவனுக்கு
स्थानं இருப்பிடம்
श्मशानं சுடுகாடோ,
सततं எப்போதும்
अनुचर: பின் தொடர்வது
भूत-वेताळ-वर्ग: பூதபிசாசுகளின் கூட்டமோ,
चेलं உடையானது
चर्म தோலோ,
स्रक् மாலையானது
अस्थ्नां எலும்புகளின்
तति: குவியலோ,
तं அப்படிப்பட்ட
उग्रं अपि உக்கிரன் என்கிற சிவனையும்
एके ஒரு சிலர்
भजन्तां ஸேவிக்கட்டும்.
अहह ஐயோ கஷ்டமே!
पद्मे தாமரையில்
स्थितां இருப்பவளும்
असकृत् அடிக்கடி
देवता-यौवतेन தேவதைகளின் தருணிகளால்
अनुसृतां பின்தொடரப் பட்டவளும்
क्षौम-भाजं வெண்பட்டுடையைப் பெற்றவளும்
आमुक्त-मुक्ता-कलापां முத்துமாலை அணிந்தவளுமான
त्वां உன்னை
अनुदिनं நாள்தோறும்
वयं நாங்கள்
ध्यायेम தியானம் செய்வோமாக.

பத்மையே! உனக்கும் சிவனுக்கும் ஐந்து பெரிய வேறுபாடுகள் இருக்கின்றன. இருப்பிடத்திலும், கூட்டாளிகளிலும், உடையிலும், மாலையிலும், பெயரிலும், மிகப் பெரிய வேறுபாடுகளைக் காண்கிறோம்.

1. அவன் சுடுகாட்டில் இருப்பவன். நீயோ தாமரையில் இருப்பவள்.

2. அவன் பின்னால் பூதங்களும் பிசாசுகளும் கூட்டமாக இருக்கும் எப்போதும். உன் பின்னாலோ அடிக்கடி அப்ஸரஸ் முதலிய தெய்வநங்கையர் பணிவுடன் வருவார்கள்.

3. அவன் உடுத்துவது யானைத்தோல்; நீ உடுத்துவதோ வெண்பட்டு.

4. அவன் எலும்புகளைக் கோர்த்து மாலையாக அணிகிறான். நீயோ முத்துமாலைகளை அணிகிறாய். 5. அவன் பெயரிலேயே உக்கிரமானவன். நீயோ மென்மை கொண்ட மலரின் பெயரை உடையவள். இப்படி மலைக்கும் மடுவுக்கும் போன்ற வாசி தெளிவாகத் தெரிந்தும் சிலர் சிவனை வழிபட்டால், அது அவர்கள் இஷ்டம். நாங்களோ, உன்னையே அனுதினமும் தியானித்துப் பயன்பெறுவோம்.

இந்த ச்லோகத்தின் சில முக்கியக் கருத்துகள்.

1. ''பஜந்தாம்'' என்ற பதத்தால் சொல்லவந்த கருத்து என்னவென்றால், சிவன் முதலிய தேவதாந்தரங்களை வழிபடுபவர்களை நாம் ஆட்சேபிப்பதில்லை. அவர்கள் செயலைப் பெரும் குற்றமாகவும் நினைப்பதில்லை. ஸேவிக்கட்டுமே என்கிறோம். இதனால் நாளடைவில் விஷ்ணுபக்தியும் உண்டாகும் என்று ஹரிவம்சாதி புராணங்கள் சொல்வதை அறிவோம்.

2. ஆனால் ''அஹஹ'' என்று சொன்னதன் கருத்து என்னவென்றால், ஐயோ பாவமே என்று அவர்களிடம் பரிதாபப் படுகிறோம்.

3. நாங்கள் (வயம்) என்று சொன்னதன் கருத்து என்னவென்றால், விவரமறிந்த நாங்கள் லக்ஷ்மியைத் தியானிப்போம் என்பது. சுடுகாடு, பிசாசு, யானைத்தோல், எலும்புமாலை இவை எவ்வளவு அமங்களமானவை என்பதையும், தாமரை, தேவகன்னிகை, வெண்பட்டு, முத்துமாலை, இவையெல்லாம் எவ்வளவு மங்களமானவை என்பதையும் அறிந்துள்ள நாங்கள் என்று கருத்து.

4. ''அநுதிநம்'' என்று தினமும் கருத்து என்னவென்றால் இது எங்கள் ஆஹ்நிகத்திலேயே உள்ளது என்பது. தினமும் தியானிப்போம் தாமரையாளை. ஸ்ரீ சூர்ணமிடும் மந்திரங்களிலும், ஸ்ரீவத்ஸவநமாலாஸ்ரீ என்று காயத்ரீஜபத் தியானத்திலும், தேவீபூஷாதிஜுஷ்ட: என்று அஷ்டாக்ஷரத் தியானத்திலும், ஶ்ரீம் ஶ்ரியை நம: என்று ஆதாரசக்தித் தியானத்திலும், இதே போல வேறு மந்திரங்களுக்கான தியானத்திலும் நாங்கள் லக்ஷ்மியைத் த்யானம் செய்வது வழக்கம். ஒரு நாளைக்கு ஏழெட்டு சந்தர்ப்பங்களிலாவது வைதிக வைணவர்களான எங்களுக்கு லக்ஷ்மியைத் தியானம் பண்ணுவது வழக்கத்தில் வந்துவிட்டது.

5. பத்மே பத்மே என்று சொன்னதில் சிறிய வேடிக்கை உண்டு. முதல் 'பத்மே'க்கு தாமரையாளே என்று விளியும், இரண்டாவது 'பத்மே'க்கு தாமரையில் என்ற ஏழாம் வேற்றுமை அர்த்தமும் கொள்ளவேண்டும். தமிழில் வேறுபாடு தெரிந்தாலும் வடமொழியில் இரண்டுக்கும் பத்மே என்ற பதமே.

சுடுகாட்டில் சுற்றுவதால் சுபமின்றிச் சுட்டெரிக்கும்
சிவனையும் சில பேர்கள் சிறப்பித்துச் செல்லட்டும்.

மலரின்மேல் மன்னியநம் மாதாவை மங்களத்தின்
தெய்வத்தைத் தினந்தோறும் தியானித்துத் திகழ்வோம் நாம்.



अर्के चेन्मधु विन्देत किमर्थं पर्वतं व्रजेत् ।

கொல்லையில் தேன் கிட்டுமானால் மலைக்கு ஏன் செல்ல வேண்டும்.

अक्रोधेन जयेत्क्रोधम् ।

கோபப்படக் கூடாதென்ற எண்ணவலிவால் கோபத்தை வெல்லலாம்.

15. பிரமன் போலன்றிப் பிறப்பால் பெரியவள்.

नाभिजातमधरिकृतहंसम् जन्तवः कतिपये कलयन्ताम्।
सेवते जगति हंसगतिं त्वाम् सिन्धुनन्दिनि सुधीरभिजाताम्॥ १५

நாபி ஜாதம் அத ரீக்ருத ஹம்ஸம்
ஜந்தவ: கதிபயே கலயந்தாம் ।
ஸேவதே ஜக தி ஹம்ஸக திம் த்வாம்
ஸிந்து நந்திநி ஸுதீ ரபி ஜாதாம் ॥ 15 ॥

सिन्धु-नन्दिनि ஸமுத்திரத்தின் செல்லப்பெண்ணே!
नाभिजातं 1. கொப்பூழிலிருந்து தோன்றியவனும் 2. நற்குடிப்பிறப்பு இல்லாதவனும்
अधरीकृत-हंसं 1. ஹம்ஸத்தைக் கீழே (வாஹனமாக) பண்ணினவனும் 2. நல்ல துறவியைக் கீழ்ப் படுத்தியவனுமான பிரம்மாவை
कतिपये சில
जन्तवः ஜந்துக்கள்
कलयन्तां எண்ணட்டும்.
हंसगतिं 1. அன்னநடை உடையவளும் 2. நல்ல துறவிகளின் வழியைப் பின்பற்றுபவளும்
अभिजातां உயர்குடிப்பிறந்தவளும் ஆன
त्वां உன்னை
जगति உலகில்
सुधीः நல்லறிவாளன்
सेवते வணங்குகிறான்

பாற்கடலின் பெண்ணே! பிரம்மாவுக்கும் உனக்கும் இரண்டு முக்கிய வித்தியாசங்கள் இருக்கின்றன. பிறவியிலும் நடத்தையிலுமாக. ஒன்று, அவன் நாபிஜாதன். நாபி-ஜாதன் என்று பிரித்தால் (பத்மநாபனின்) நாபிக்கமலத்தில் உண்டானவன் என்று அர்த்தம். ஆனால் இதையே ந-அபிஜாதன் என்று பிரித்தால் நல்ல குலப்பிறப்பு இல்லாதவன் என்று ஆகி பிரம்மாவுக்கு ஒரு குறையை வெறும் வார்த்தையால் சொன்னதாகும். ஆபிஜாத்யம் என்பது உலகில் காணப்படுவது. பிரம்மாவும் நாபிஜாதரானால் அவர் நடத்தையிலும் கோளாறு உண்டோ என்று பரிசீலிப்போம். அவருக்கு ஹம்ஸம் வாஹனமாக இருக்கிறது. ஆகையால் ஹம்ஸர் என்ற சொல்லுக்கு நல்ல ஸந்யாஸிகள் என்றுமொரு அர்த்தம். ஹம்ஸர்கள்

மதிப்புக்குரியவர்கள். அவர்களைக் கீழே வைத்து நாம் மேலே நிற்பது அபசாரம். அபிஜாதர்கள் இப்படியெல்லாம் பண்ணமாட்டார்கள். ஆனால் நாபிஜாதான பிரம்மா இந்தத் தப்புக் காரியத்தைப் பண்ணுகிறார். இந்தக் குறைகள் உள்ள பிரம்மாவையும் சில ஜந்துக்கள் எண்ணட்டும்; தியானிக்கட்டும்; த்ரிமூர்த்திஸாம்யவாதிகள் வணங்கட்டும். ஆனால் அறிவாளியாய் இருப்பவன் குடிப்பிறப்புக்கும் ஹம்ஸர்களுக்குத் தரும் மதிப்புக்கும் முக்கியத்துவம் கொடுப்பான். அதனால் இவ்விரண்டு குறை கொண்ட பிரம்மாவைத் தொழமாட்டான்.

அபிஜாதன் அல்லாதான் அயனென்பான் அதனாலே
அம்ஸல ரயும் அவமதிப்பான் அறிவாளி தொழானவனை.

பின்னே யாரைத் தொழுவான்? லக்ஷ்மியைத்தான். ஏனென்றால், இவ்விரண்டு அம்சங்களிலும் அவள் சிறந்தவள். அவள் அபிஜாதையாகவும் இருக்கிறாள்; ஹம்ஸர்களையும் மதிக்கிறாள். பாற்கடலின் பெண்ணானதால் அவள் அபிஜாதை. தவிரவும், அபிஜாதா என்றால் வேறு அர்த்தமும் உண்டு. தூய்மை கொண்டவள், பெருமை பெற்றவள் என்று. ஹம்ஸர்களை அவள் எப்படி மதிக்கிறாள் என்றால் அவள் ஹம்ஸகதியாய் இருக்கிறாள். ஹம்ஸர்கள் போகும் வழியில் போகுபவன் அவர்களை மிகவும் மதித்தவனாகிறான் அல்லவா? உண்மையான அர்த்தங்கள் வேறு இரண்டு உள்ளன. ஹம்ஸ கதி என்கிற பதத்திற்கு அன்ன நடை கொண்டவள் லக்ஷ்மி. அழகான, மெதுவான, லலிதமான நடையை அன்னநடை அதாவது ஹம்ஸகதி என்பார்கள். இதுலக்ஷ்மிக்கு இருக்கிறது. தவிரவும், ஹம்ஸர்கள் என்ற உயர்ந்த ஸந்யாஸிகளுக்கு அவள் கதியாகிறாள், ப்ராப்யமாகிறாள். திவ்யதம்பதிகளை அடைவதன்றோ அவர்களது குறிக்கோள்? இப்படி இரண்டு வகையில் ஹம்ஸகதியாகிவிட்ட லக்ஷ்மி, ஹம்ஸர்களை அனுஸரிப்பதாகவும் இதே பதத்துக்கு அர்த்தம்

கிடைப்பதால், ஹம்ஸர்களை மதிக்காதவளாகச் சொல்வதற்கில்லை. இவ்வாறாக, நான்முகனுக்குள்ள இரண்டு குறைகளும் லக்ஷ்மிக்கு இல்லை என்று சொற்பொருள் அறிந்த புலவனான ஸுதீ தெரிந்து கொள்வதால், அவன் லக்ஷ்மியையே ஸேவிக்கிறான்.

இந்த ச்லோகத்தில் சில முக்கியக் கருத்துகள்:

உயர்குடிப்பிறப்பு என்பது விசேஷமானது. ஆன்றோரை மதிக்கும் பண்பு அநபிஜாதருக்கு ஏற்படுவதில்லை. நாம் அதை முயன்றாவது ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

ஜந்தவ: என்ற பதத்தின் கருத்து என்னவென்றால், பிறவி பெற்று மட்டுமேயன்றி அறிவு பெறாததாக இருக்கும் சிலர் அநபிஜாதர்களையும் வணங்குவர் என்பது.

ஸுதீ: என்ற பதத்தால் விளக்கவந்த கருத்து என்னவென்றால், குலம், ஒழுக்கம், என்ற இரண்டிலும் சீர்தூக்கிப்பார்த்துத் தராதரம் அறிய வல்ல நிபுணன் லக்ஷ்மியைத்தான் ஸேவிப்பான் என்பது. கலயந்தாம் என்ற பதத்தால் சொல்லவந்த கருத்து என்னவென்றால் போதுமான அறிவில்லாதவன் நான்முகனையே தொழுவதால் நமக்கேதும் ஹானியில்லை என்பது. அதரீகரணம் என்பது இரண்டு அர்த்தங்களில் வந்துள்ளது. தன் கீழே இருக்கும்படி வைத்துக்கொள்வது, சிறுமைப்படுத்துவது, என்று.

ஸிந்துநந்திநி என்ற விளி அபிஜாதாம் என்பதற்குக் காரணமாகவும் அமையும்படி பொருத்தமானது.

அர்ணவத்தின் அருமகளை அபிஜாதை ஆனவளை
அன்னநடை அன்னையையே அறிவாளி அடிபணிவான்.

<u>16. தேவதாந்தரத்தைத் தேவையில்லாமல் பண்ணுபவள்.</u>

चित्तवृत्तिरिह कञ्जमन्दिरे धून्वतीं दुरितपुञ्जमिन्दिरे ।
सिद्धये जननि सेवतान्तराम् त्वामनाकलितदेवतान्तराम् ।। १६ ।।

சித்தவ்ருத்திரிஹ கஞ்ஜமந்தி₃ரே
த்₄நவதீம் து₃ரித புஞ்ஜம் இந்தி₃ரே ।
ஸித்₃த₄யே ஜநநி ஸேவதாந்தராம்
த்வாமநாகலித தே₃வதாந்தராம் ॥ 16 ॥

कञ्जमन्दिरे தாமரையை நிலயமாகக் கொண்டவளே!
इन्दिरे இந்திரையே!
जननि தாயே!
दुरित- पुञ्जं பாவக்கொத்தை
घ्नतीं உதறித்தள்ளுபவளும்
अनाकलित-देवतान्तरां வேறு தெய்வத்தைக் கருதாதவளுமான
त्वां உன்னை
चित्तवृत्तिः மன நிலையானது
सिद्धये பலன் கைகூடுவதற்காக, மோக்ஷஸித்திக்காக
इह இங்கு
सेवतान्तरां நன்றாக ஸேவிக்கட்டும்

தாமரை நிலையத்தாளே! தாயே! இந்திரையே! வேறெந்த தேவதையும் உனக்கு ஈடு கிடையாது. நீ அவர்களை எண்ணிக்கூடப் பார்க்கவேண்டாம். என்னுடைய மனது உன்னை மட்டுமே வணங்கட்டும். நீ எல்லா பாவங்களையும் போக்குகிறாய். மோக்ஷம் வரையிலான எல்ல ஸித்திக்கும் உன்னை ஸேவிப்பது உபாயமாகிறது. அதனால் மேலும் நன்றாக உன்னைத் தொழட்டும் என் மனம். இதுகாறும் பதிமூன்று தேவதைகளை ஒவ்வொருவராகப் பழித்தும் விலக்கியும் வந்தார் கவி.

அக்கினி வேண்டாம். அண்டினால் அழிப்பவன்.
வாயுவும் வேண்டாம். வாழ்வை முறிப்பவன்.
வருணன் வேண்டாம். உயிரை மாய்ப்பவன்.
சூரியன் வேண்டாம். சுட்டே யெரிப்பவன்.
இந்திரன் வேண்டாம். இயலாதவனவன்.
குபேரன் வேண்டாம். குணத்தால் கெட்டவன்.
சந்திரன் வேண்டாம். நீசம் பெறுபவர்.
முருகன் வேண்டாம். முழுப்பலன் தாரான்.
வேழமுகன் வேண்டாம். வேதத்தை அசக்குவான்.
பவானி வேண்டாம். பவபந்தம் போக்காள்.

சிவனும் வேண்டாம். சுபத்தைத் தவிர்ப்பான்.
அயனும் வேண்டாம். அபிஜாதனாகான்.

சொன்னவர், சொல்லாதவர் எல்லார்க்கும் சேர்த்துச் சீர்பாடுகிறார் இந்த ச்லோகத்தில். வேறெந்தத் தேவதையுமே வேண்டாம். லக்ஷ்மியை மட்டும் ஸேவிக்கலாம்.

இதற்குப் பல காரணங்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் சொல்லுகிறார்.

அவள் பாவக்குவியலை உதறுபவள். ஸித்தியைத் தருபவள். நமக்குத் தாயானவள். பிற தேவதைகளை ஏறெடுத்தும் பாராதவள். இந்த ச்லோகத்தின் முக்கியக் கருத்துகள் சில:

புஞ்ஜம் என்ற பதத்தால் சொல்ல வந்தது யாதெனில், நம் பாவங்கள் ஏராளமானவை என்பது. தூந்வதீம் என்ற பதத்தால் சொன்னது யாதெனில், அனாயாஸமாக அவள் நம் பாவங்களை ஒரே உதறலில் தொலைப்பாள் என்பது.

சித்தவ்ருத்தி என்ற பதத்தால் சொன்னது யாதெனில், உடலாலும் வாயாலும் வணங்கினால் போதாது; மனதில் பக்தி முக்கியம் என்பது.

இஹ என்ற பதத்தால் சொன்னது யாதெனில், இங்கேயே இப்போதே வணங்கவேண்டும். பிறகு வேறோரிடத்தில் ஸேவிக்கலாம் என்று தள்ளிப்போடக் கூடாது என்பது.

ஜநநி என்ற பதத்தால் சொல்ல வந்தது யாதெனில், நாம் அவளது குழந்தைகள் என்கிற ஒழிக்கவொண்ணா உறவு இருப்பது தேவதாந்தரத்தைச் சேவிக்காமல் இருப்பதை வலுப்படுத்துகிறது என்பது. ஸேவதாம் என்று நிறுத்தாமல் அதற்கு மேல் தராம் என்று சேர்த்ததன் கருத்து யாதெனில், இதுவரை ஸேவித்தது அடியோடு போதாது; இன்னும் அதிகமாக வணங்கவேண்டும் என்பது

-வேறெந்தத் தேவதையும்

வேண்டாமென்றொதுக்கிடுவோம்.
வேண்டிற்றைத் தருகின்ற
வேலைமகள் வழிபடுவோம்.

17. அவையினர் நடுவே அரசன் போன்றவள்.

यद्यादधासि करुणां यदि वा न पद्मे
किं दैवतैस्त्वदितरैरपवर्गलिप्सोः ।
तुष्टो यदि क्षितिपतिर्यदि वा न तुष्टः
किं नाम शौरिसखि पारिषदैर्विवित्सोः ।। १७ ।।

யத்₃யாத₃தா₄ஸி கருணாம் யதி₃ வா ந ந பத்₃மே
கிம் தை₃வதைஸ் த்வதி₃தரை ரபவர்க₃லிப்ஸோ: ।
துஷ்டோ யதி₃ க்ஷிதிபதிர் யதி₃ வா ந துஷ்ட:
கிம் நாம ஶௌரிஸகி₂ பாரிஷதை₃ர் விவித்ஸோ: ॥

पद्मे தாமரையாளே!
शौरिसखि ஶௌரி என்கிற பெருமாளின் தோழியே!
करुणां அருளை
आदधासि यदि புரிகிறாயானாலும்
वा அல்லது
न यदि இல்லாவிட்டாலும்
त्वदितरैः உன்னையன்றி பிற
दैवतैः தெய்வங்களால்
अपवर्ग-लिप्सोः மோக்ஷமடைய விரும்புபவனுக்கு
किं ஆவதென்ன?
क्षितिपतिः அரசன்
तुष्टो यदि மகிழ்ந்தானானாலும்
वा அல்லாது
न तुष्टः यदि மகிழவில்லையானாலும்
पारिषदैः சபையில் இருப்பவர்களால்
विवित्सोः பணம் விரும்புபவனுக்கு
किं नाम என்ன தான் ஆகும்?

த்ரிவர்க்கத்தில் சேராததான புருஷார்த்தம் அபவர்க்கம் என்கிற மோக்ஷம். பத்மையே! இந்த மோக்ஷத்தை விரும்புபவனுக்கு மற்ற தெய்வங்களால் எந்தப் பயனும் கிடையாது. நீ அருள் புரிந்தால் பலன் கிடைக்கும். நீ அருள் புரியாவிட்டால் கிடைக்காது. இரண்டு விகல்பகோடி

களிலும் அந்யதேவதைகளால் ஆவது ஒன்றுமில்லை. நீ அருள் புரிந்தால் அவர்கள் எதற்கு? நீ அருள் புரியாவிடில் அவர்களால் முடிந்தது என்ன? இரண்டு வகையிலும் உதவாக்கரைகள் அவர்கள்.

அன்னையருள் அடைந்தவரே அபவர்க்கம் அடைந்திடுவர்.
அதுவன்றேல் அதுவுமிலை. அன்னியரால் ஆவதென்ன?

இதற்கு ஒரு உதாரணம். அரசர்கள் யாசகர்களுக்குப் பணம் தரும்போது சபை நடுவே தருவது வழக்கம். ஒரு இரவலன் ராஜஸபைக்குப் போய்ப் பணத்தை யாசிக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அரசன் மனமுவந்து கொடுத்தால் அவன் பணம் பெறுவான். அரசன் மனமுவக்கவில்லையேல் அவனுக்குப் பணம் கிடைக்காது. அங்குள்ள மற்றவர்கள் வெறுமனே பார்த்திருப்பவர்கள். அரசன் தரும் பணத்தைத் தடுக்கவோ, அரசன் தராத பணத்தைக் கொடுக்கவோ, அவர்களுக்கு உரிமை கிடையாது. அது போலத்தான் தேவதாந்தரங்களும். தாங்களாக ஒருவனுக்கு மோக்ஷம் தரவும் முடியாது. தாயார் அருள் புரிந்து தந்தால் அதைத் தடுக்கவும் முடியாது. அரசனால் வேறு காரியங்களுக்காக நியமிக்கப் பட்டவர்கள் அவையில் அமர்ந்திருப்பது போல, இந்தத் தேவதைகளும் இருக்கிறார்களத்தனை. அதற்கு மேல் அவர்களிடம் நாம் எதுவும் எதிர்பார்க்கக் கூடாது.

அரசனிடம் அருத்தத்தை அடைய வரும் ஆண்டிக்கு
அரசவையில் அமர்ந்திருக்கும் அன்னியரால் என்ன பயன்?

இந்த ச்லோகத்தில் சில முக்கியக் கருத்துகள்:

தாயாரின் அருளாலல்லது அபவர்க்கத்தைப் பெற முடியாது.

அபவர்கலிப்ஸோ: என்ற பதத்தால் சொல்வது என்னவென்றால், வேறு அற்பப் பலன்களை அன்னிய தேவதைகள் தரக்கூடுமானாலும் அபவர்க்கத்தை அவர்கள் தரமுடியாது என்பது.

த்வதிதரை: என்றவிடத்தில் பெருமாளையும் தாயாரையும் தவிர்ந்த மற்றவர்களால் என்று அர்த்தம். கிம் நாம என்ற பதத்தின் தாத்பர்யம் யாதெனில், இதரதேவதைகளால் பண்ணக்கூடியது ஒன்றுமே இல்லை என்பது. அரசன் மனம் வைத்தால் தான் உண்டு. அதே அரசனிடம் பணத்துக்குக் கையேந்தி நிற்கும் அவையினரா இந்த யாசகனுக்கு உதவப்போகிறார்கள்? அரசவையில் அப்படி உதவ அவர்களுக்கு அதிகாரம் தான் உண்டா? உன்னருள் உண்டெனில் உதவப் பிறரேன்? உன்னருள் இன்றேல் உதவுவார் உண்டா?

|| श्रीः ||

ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன்

மாத புஷ்ய திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

ஸ்ரீமத் ஆண்டவன் நியமனப்படி, மாத புஷ்ய திருநக்ஷத்ர மஹோத்ஸவம் பெங்களூர், ஜெயநகர் ஆச்ரமத்தில் 2.5.06 முதல் 4.5.06 வரை வேத ப்ரபந்த பாராயணங்களோடு சீரும் சிறப்பாக நடைந்தேறியது. 4.5.06 அன்று மாத புஷ்ய தினத்தன்று ஸ்ரீமத் பெரியாண்டவன் மற்றும் ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவனுக்கு வேத ப்ரபந்த பாராயணங்களோடு திருமஞ்ஜனமும் விசேஷமாக நடைபெற்றது.

சாத்துமுறைக்கு முன்னர் ஸ்ரீ.உ.வே. S. க்ருஷ்ணமாச்சார் வித்வான் உ.வே. H.R. ஸ்ரீதர் ஸ்வாமி, வித்வான் ஸ்ரீ.உ.வே E.S. முகுந்த் (ஹைத்ராபாத்) ஆகியோர், திருக்குடந்தை ஆண்டவன் பற்றிய தங்களது சிறந்த அநுபவங்களை நம்மிடையே பகிர்ந்துகொண்டனர். சிஷ்யர்கள் மற்றும் பக்தகோடிகள் இந்த மஹோத்ஸவத்தில் கலந்துக் கொண்டு, தீர்த்த ப்ரஸாதங்களைப் பெற்று ஆனந்தக் கடலில் மூழ்கினர்.

18. தீபம் வேண்டாத் தினகரன் போன்றனள்.

दृष्टादृष्टेप्सितपुषि भवत्पादपद्मावलम्बे
दिष्टया लब्धे क इह भजतां देवतां भूष्णुरन्याम्।
दृष्टे स्पष्टं ननु दिनकरे दृश्यसन्दर्शनार्थम्
दीपारोपव्यसनमजडो देवि कस्स्वीकरोति॥ १८॥

த்₃ருஷ்டாத்₃ருஷ்டேப்ஸிதபுஷி ப₄வத்பாத₃பத்₃மாவலம்பே₃
தி₃ஷ்ட்யா லப்₃தே₄ க இஹ ப₄ஜதாம் தே₃வதாம் பூ₄ஷ்ணுரந்யாம்।
த்₃ருஷ்டே ஸ்பஷ்டம் நநு தி₃நகரே த்₃ருஶ்யஸந்த₃ர்சநார்த₂ம்
தீ₃பாரோபவ்யஸநமஜடோ₃ தே₃வி கஸ்ஸ்வீகரோதி ॥ 18 ॥

देवि ஸ்ரீதேவியே!
दृष्ट-अदृष्ट-ईप्सित-पुषि புலனாவதும் புலனாகாததுமான (எல்லா) விருப்பங்களையும் நிறைவேற்றும்
भवत्-पाद-पद्म-अवलम्बे உமது திருவடித் தாமரையின் பிடிப்பானது
दिष्टया நல்ல வேளையாக
लब्धे கிடைத்தபொழுது
इह இங்கே
भूष्णुः முன்னேற்றத்தை விரும்புபவன்
कः எவன்
अन्यां வேறொரு
देवतां தெய்வத்தை
भजतां அடையபட்டும்?
दिनकरे சூரியன்
स्पष्टं தெளிவாக
दृष्टे காணப்பட்டபோது
दृश्य-सन्दर्शनार्थम् பொருள்களைக் காண்பதற்காக
दीप-आरोप-व्यसनं விளக்கேற்றும் சிரமத்தை
अजडः அறிவுள்ள
कः எவன்
स्वीकरोति ஏற்கிறான்
ननु இல்லையா?

ஸ்ரீதேவியே! எங்களுடைய கோரிக்கைகள் இரண்டு விதமானவை. செல்வம், மக்கட்பேறு, முதலிய திருஷ்ட பலன்களைக் கோருவது முதல் வகை, சுவர்க்கம், மோக்ஷம், நல்ல அடுத்த பிறவி, முதலிய அதிருஷ்டபலன்களைக் கோருவது இரண்டாவது வகை. இந்த இரண்டு

வகைகளிலுமே வேண்டியதையெல்லாம் வளப்படுத்துபவள் நீ. உன்னுடைய திருவடித்தாமரைகளைப் பிடித்துக் கொண்டால், எங்களுக்கு எல்லா வேண்டுதல்களும் நிறைவேறு கின்றன. அதிருஷ்டவசமாக எங்களுக்கு இப்படியொரு அவலம்பம், பற்றுக்கோல், கிடைத்திருக்கிறது.

கண்டதும் காணாவென்றும் கருதிய பலன்களெல்லாம்
கமலையின் காலைப் பற்றிக் களிப்புடன் கிடைக்கக் கண்டோம்.

இந்நிலையில் எவன் வேறு தேவதையைத் தொழுவான்? தன் முன்னேற்றத்தில் நாட்டமுள்ளவன், வளத்தை விரும்புபவன் எவனுமே வேறு தேவதைகளை நாடிப்போகமாட்டான். ஏன், அவர்களும் திருஷ்டபலன்களைத் தரமாட்டார்களோ என்று கேட்டால், தருவார்கள்; ஆனால் தரத்தில் மிகுந்த வேறுபாடு இருக்கும். உதாரணத்துக்குச் சூரியனும் விளக்குகளும் போல. எல்லாமே வெளிச்சம் தரும். ஆனாலும் சூரிய வெளிச்சம் நன்றாகக் கிடைக்கும் தருணத்தில் எவராவது பொருள்களைக்காண விரும்புபவர் சிறு விளக்குகளை ஏற்ற முனைவரோ? அறிவுள்ளவன் எவனாவது பகலொளி நடுவே தீபத்தை ஏற்றுவதற்கு வீண்முயற்சிகள் செய்வானோ? உன் பாதாவலம்பம் சூரியவெளிச்சம் போல்; மற்ற தேவதைகளின் அருள் விளக்கொளி போல்: முந்தையது இல்லாதபோது பிந்தியது தேவைப் படலாம். ஆனால் எங்களுக்கு உன் திருவடியாகிற பற்றுக்கோல் கிடைத்துவிட்டது. இனியும் நாங்கள் பிற தெய்வங்களை நாடுவது சரியன்று. பகல்வெயிலில் விளக்கேற்றிப் பொருள் பார்க்கும் முட்டாள்களாக நாங்கள் ஆகமாட்டோம். தேவதாந்தரங்களைத் தொழமாட்டோம்.

வெய்யிலின் வெளிச்சம் நிற்க வேறொரு வெளிச்சம் வேண்டி
விளக்கினை வீணாய் ஏற்றும் வெறும் ஜடராகமாட்டோம்.

19. பாறை இல்லாத பயிர்நிலம் போன்றவள்.

तव जननि जयन्त्याशशाश्वतैश्वर्यदात्र्याः
परिमितफलदात्रीर्देवतास्सेवते कः ।
फलभरनतसस्यां प्रास्य चोळक्षितिं किम्
प्रकटमटति विन्ध्यप्रान्तभूमीरमूढः ॥ १९ ॥

தவ ஜநநி ஜயந்த்யாஶ் ஶாஶ்வதைஶ்வர்யதா₃த்ர்யா:
பரிமித ப₂லதாத்ரீர் தே₃வதாஸ் ஸேவதே க: ।
ப₂லப₄ரநதஸஸ்யாம் ப்ராஸ்ய சோளக்ஷிதிம் கிம்
ப்ரகடம் அடதி விந்த்₄யப்ராந்த பூ₄மீரமூட₄: ॥ 19 ॥

जननि அன்னையே!
जयन्त्याः வெற்றியடைபவளும்
शाश्वत-एश्वर्य-दात्र्याः அழியாத ஐச்வர்யத்தைத் தருபவளுமான
तव உன் (முன்னிலையில்)
परिमित-फल-दात्रीः குறைந்த பலனளிக்கும்
देवताः (பிற) தெய்வங்களை
कः எவன்
सेवते ஸேவிக்கிறான்?
फल-भर-नत-सस्यां கதிரின் சுமையால் குனிந்த பயிர்களை உடைய
चोळ-क्षितिं சோழநாட்டை
प्रास्य ஒதுக்கிவிட்டு
विन्ध्य-प्रान्त-भूमीः விந்தியப் பிரதேச நிலத்தை
अमूढः மூடனாயில்லாதவன்
प्रकटं பலரறிய
अटति किं அலைகிறானா என்ன?

தாயே! நீ ஜயலக்ஷ்மி. வெற்றிவாகை சூடுபவள். ஐச்வர்யத்தை அளிப்பவள். மோக்ஷத்தை நிலையான ஐச்வர்யம் என்பர். அதையும் தரவல்ல நீ இருக்க, அன்னிய தேவதைகளை எவன் ஸேவிப்பான்? இதற்கு ஒரு திருஷ்டாந்தம். செழிப்பான சோழமண்டலத்தில் வசிப்பவன் ஒருவன். நிலவளத்தைப் பயன்படுத்திப் பயிரிட்டு மகிழ்வதன் பெருமை புரிந்தவன். அவன் விந்தியமலைப் பிராந்தத்தில் அலைந்து திரிய முற்படுவானோ? தன் தேவை தனக்குக் கிடைத்திருக்கும்போது, அது இல்லாத இடம் சென்று அதற்காகவே அலைவானோ? மூடன் மட்டுமே அப்படிச் செய்வான்.

அழியாச் செல்வம் அளிக்கின்ற அன்னை இருக்க அயலாரை
அண்டித் தொழுவான் அடிமுட்டாள் அடவிக்குள்ளே அலைவான் போல்.

அமூடன் என்றதன் கருத்து, அழியாச்செல்வத்தைத் தருபவள் இருக்கக் குறைந்த பலனை நாடிப்போகும் அளவுக்கு அறிவிலியாக இல்லாதவன் என்பது.

ப்ரகடம் என்றதன் கருத்து, தன் அறியாமையைப் பலரறிய வெளிப்படுத்தலாமோ என்பது. அடதி என்றதன் கருத்து, சிரமப்படாமல் பயன்பெறும் வழி இருக்க, அலைச்சலும் உளைச்சலும் தேவையா என்பது. ப்ராஸ்ய என்பதன் கருத்து, தானே கிடைத்த அதிருஷ்டத்தை வலிய உதறித் தள்ளலாமோ என்பது. சாச்வதைச்வர்யம் என்றதன் கருத்து, பணமும் பதவியும் மட்டுமில்லாமல், அழியாச்செல்வமான வீடும் தருபவள் திருமகள் என்பது. சோளக்ஷிதிம் என்றதன் கருத்து சோழநன்னாடு சோறுடைத்து என்ற பழமொழிப்படி செழிப்பான நிலம் என்பது. பலபரநத என்றதன் கருத்து பயிர்களில் தானியங்கள் அதிகமாக அதிகமாக, பணிவும் வளைவும் கூடும் என்பது. பரிமித என்றதன் கருத்து, அற்பப்பலன்களுக்கும் சாச்வதப் பலன்களுக்கும் வாசியை எண்ணிப்பார்க்கவேண்டும் என்பது. பரிமிதபலதாத்ரீ என்றதன் கருத்து, நிறைய தருவதும், நிறைவைத் தருவதும் மற்ற தேவதைகளுக்கு முடியாது என்பது.

விளைச்சல் மிக்க சோழநிலம் விட்டு வெளியே வெகுதூரம்
விந்தியக்காட்டில் விதை போட வீணாய்த் திரிவான் முட்டாளே.

20. தேங்குநீர் போலன்றித் தேவநதி போன்றவள்.

तव जलनिधिकन्ये दैवतैः पामरोऽन्यैः
कलयतु समतां अप्यन्ततः किं ततस्ते ।
दरमपि गरिमाणं दर्दुरोऽकर्दमायाः
विबुधपुरतटिन्या वेत्ति किं पल्वलेभ्यः ॥ २० ॥

தவ ஜலநிதி₄கந்யே தை₃வதை: பாமரோந்யை:
கலயது ஸமதாமப் யந்தத: கிம் ததஸ்தே ।
த₃ரமபி க₃ரிமாணாம் த₃ர்து₃ரோ கர்த₃மாயா:
விபு₃த₄புரதடிந்யா வேத்தி கிம் பல்வலேப்₄ய: ॥ 20 ॥

जलनिधि- कन्ये ஸமுத்திரத்தின் மகளே!
अन्यैः மற்ற
दैवतैः தெய்வங்களோடு
तव உனது
समतां अपि சமத்தன்மையைக்கூட
पामरः கல்வியில்லாதவன்
कलयतु கருதட்டும்.
अन्ततः முடிவில்
ततः அதனால் ते உனக்கு
किं என்ன?
अकर्दमायाः சேறே இல்லாத
विबुध-पुर-तटिन्याः தேவநகரத்து நதிக்கு
पल्वलेभ्यः குட்டைகளிலிருந்து
गरिमाणं பெருமையை
दर्दुरः தவளை
दरं अपि சிறிதாவது
वेत्ति किं தெரிந்து கொள்கிறதா என்ன?

கடலின் கன்னிகையே! உனக்கும் பிற தேவதைகளுக்கும் உள்ள வித்தியாசம் மலைக்கும் மடுவுக்கும் போல. ஆனால் அதை அறியாத பாமரர்களும் இருக்கிறார்கள். அவர்கள் உன்னையம் மற்ற தெய்வங் களையும் சமமாகக் கருதுகிறார்கள். அதனால் உனக்கென்ன குறை? ஒன்றுமில்லை.

கடலினது கன்னிகை போல் கண்டபிற தேவதையை,
கல்லாதான் கருதியதால் கடைசியிலே கமலைக்கென்?

திருஷ்டாந்தம் ஒன்று. தேவலோகநகரத்தில் கங்கை பிரவஹிக்கிறது. பூமியில் நிறைய குட்டைகளும் உள்ளன. எல்லாமே நீர்நிலைகள் தான். தேவநதியில் சேறே கிடையாது; ஆனால் குட்டையில் வசிக்கும் தவளைக்குத் தெரியவில்லை. அது குட்டையும் கங்கையும் சமம் தான் என்று நினைக்கிறது. அதனால் கங்கைக்குக் குறை வந்துவிடுமா?

ஸமதாமபி என்றவிடத்தில் அபி என்றதன் கருத்து, சமமாகக்கூட நினைக்கட்டும்; சமமென்கிற அதிவிபரீதமான தப்பெண்ணம் கூட ஏற்படட்டும்; அதனாலென்ன? என்பது.

அந்தத: என்றதன் கருத்து, ஆரம்பத்தில் பாமரனின் கருத்து நம் மனதைச் சலிப்பித்தாலும், இறுதியில் அது சொள்ளை என்று புரிந்துவிடும் என்பது.

கிம் ததஸ்தே என்றதன் கருத்து, இந்தப் பாமரனின் அபிப்பிராயத்தால் லக்ஷ்மிக்கு எந்த ஹானியும் இல்லை; அந்தப் பாமரனுக்குத்தான் அறியாமை என்கிற இழிவு என்பது.

அகர்தமாயா: என்றதன் கருத்து, சுவர்க்கநதியில் சேறு இருக்காது என்பது; சேற்றுக்குட்டைகளுக்கும் வானாற்றுக்கும் மிகப்பெரிய வித்தியாசமாகும் இது என்பதாம்.

விபுதபுரதடிந்யா: என்றதன் கருத்து, இழுக்கற்றமை போல நல்ல இடத்தை அடைந்தமையும் பெருமைக்குக் காரணமாகும் என்பது.

தர்துர: என்ற தன் கருத்து, மிகப் பெரிதான வாசிகளையும் அறியும் திறமை இல்லாத மண்டூகங்கள் உலகில் இருக்கத்தான் இருக்கின்றன என்பது.

தரமபி என்றதன் கருத்து, கொஞ்சமாவது அறிவு இருந்தால் கொஞ்சமாவது வாசி தெரியுமே, குட்டைக்கும் கங்கைக்கும்? என்பது நீளத்தில், அகலத்தில், ஆழத்தில், தூய்மையில், புனிதத்தன்மையில், இனிமையில், கலங்காமையில், தண்மையில், வெண்மையில், வற்றாமையில், என்று எத்தனையோ அம்சங்களில் ஏராளமான வாசிகள் எல்லாருக்கும் தெளிவாகத் தெரியும்போது, சிறிது கூட இந்த வித்தியாசங்களைத் தவளை தெரிந்து கொள்ளவில்லையே என்பது. இதே போல

லக்ஷ்மிக்கும் மற்ற தேவர்க்கும், பெருமையில், கருணையில், திறமையில், எளிமையில், எழிலில், வண்மையில், என்றிப்படி ஏராளமான வேறுபாடுகள் அறிஞர்க்குத் தெரிந்தாலும், கொஞ்சம் கூடப் பாமரனுக்குத் தெரிவதில்லை.

ஆகாசகங்கை போல லக்ஷ்மி; சேற்றுக்குட்டைகள் போல மற்ற தேவதைகள்; தவளை போல ஸாம்யவாதி. இந்த ச்லோகத்து நீதிகள் சில;

1. சில பாமரர்களுக்குப் பெரிய பெரிய வாசிகள் கூடப் புரிவதில்லை. சேற்றுக்குட்டையிலுள்ள தவளை அந்தக் குட்டையைப் பெரியதொரு ஜலராசியாக நினைக்கிறது. தராதரங்கள் தெரிவதற்குக் கொஞ்சம் அறிவு தேவை. லக்ஷ்மியையும் இந்த்ராதிகளையும் சமமாக நினைப்பவன் இந்தத் தவளை போலத்தான்.

2. நீசர்கள் மதிக்காததால் குறையொன்றுமில்லை. எல்லாருடைய மரியாதையும் தேவையில்லை. அறிஞர் மதித்தால் கௌரவம். பாமரர் மதிக்காததால் இழுக்கொன்றும் இல்லை. கழுதைக்குக் கருப்பூர வாசனை தெரியாததால் கருப்பூரத்துக்கு என்ன இழிவு?

3. பாமரர்களைப் பின்பற்றலாகாது. அவர்களுடைய அபிப்பிராயங்களை அலட்சியம் பண்ணவேண்டும். இதை கலயது கிம் தத: என்ற பதங்களால் சொல்கிறார்.

4. எல்லாத் தெய்வமும் சமம்; எல்லாக் குலமும் சமம்; எம்மதமும் சம்மதம்; என்பதெல்லாம் அதிவாதங்கள். துவேஷம் வேண்டாம்; அவமதிக்கவேண்டாம்; கர்வம் வேண்டாம் என்பதற்காகச் சொன்ன அதிவாதங்கள்.

உண்மையில் உயர்வு தாழ்வுகள் இல்லாமலில்லை.

மலராளுக்கிணையாக மற்ற ஒரு தேவதையை
மதிக்கின்ற மனிதர்க்கு மதி மட்டம் மண்டூகம்.

21. நீசதேவதை போலன்றி நிறைசெல்வத்தை நீளத் தருபவள்.

विष्णोः पत्नि भवत्प्रसादविरहव्यावर्तमानश्रियाम्
सम्पत्तिष्ठति सा न दीर्घमुदिता या क्षुद्रदेवार्चनैः ।
अन्नालाभत एव शुष्कवपुषां कुक्षौ पुनः पीनता
कष्टश्वासनिरोधनैरुपनता कालं कियन्तं वसेत् ॥

விஷ்ணோ: பத்நி ப[4]வத்ப்ரஸாத[3]விரஹ வ்யாவர்தமாந ஶ்ரியாம்
ஸம்பத் திஷ்டதி ஸா ந தீ[3]ர்க்க[4]முதி[3]தா யா க்ஷுத்[3]ரதே[3]வார்ச்சநை:।
அந்நாலாப[4]த ஏவ ஶுஷ்கவபுஷாம் குக்ஷௌ புந: பீநதா
கஷ்டஶ்வாஸ நிரோத[4]நை ருபநதா காலம் கியந்தம் வஸேத் ॥ 21 ॥

विष्णोः விஷ்ணுவின்
पत्नि மனைவியே!
भवत्-प्रसाद-विरह-व्यावर्तमान-श्रियां
உம் அருள் இன்மையினால்
புரளும் செல்வம்
உடையார்க்கு
क्षुद्र-देव-अर्चनैः அற்பமான
தேவதைகளை
அருச்சிப்பதால்
या யாதொரு
सम्पत् செல்வம்
उदिता தோன்றியதோ
सा அது
दीर्घं நீண்ட காலத்துக்கு
न तिष्ठति நிற்பதில்லை.
अन्न-अलाभतः एव உணவு
கிடைக்காததாலேயே
शुष्क-वपुषां வற்றிய உடல்
கொண்டவர்க்கு
कष्ट-श्वास-निरोधनैः சிரமப்பட்டு
மூச்சடக்கல் களால்
उपनता வந்தடைந்த
पीनता பருமனானது
कुक्षौ पुनः வயிற்றிலேயோ
कियन्तं कालं எவ்வளவு காலம்
वसेत् இருக்கும்?

விஷ்ணு பத்நியே! உன் அருள் இல்லாதவரின் செல்வம் நிலையில்லாமல் தாறுமாறாகப் புரளும். வேறு தேவதைகளை அருச்சித்துப் பெற்ற செல்வம் நீண்ட காலம் நிலைக்காது. இதற்கு ஒரு உதாரணம். உணவில்லாமல் வாடுகிறான் ஒருவன். வயிறு ஒட்டிப்போய்விட்டது. இந்த

நிலையைப் பரிகஹக்க இரண்டு வழிகள் உண்டு. அன்னம் உட்கொண்டு பசி தீர்வது ஒன்று. மூச்சுக்காற்றை உள்ளுக்குள் வலிய இழுத்து வயிறு நிறையச் செய்வது இன்னொன்று. முதல் வழி சுவைமிக்கது. இரண்டாம் வழியோ சிரமமானது. முதல் வழியில் உண்மையிலேயே பசி அடங்கும். இரண்டாவது வழியில் ஒருசில நிமிடங்களுக்கு மட்டும் வயிறு பருக்கும். முதல் வழி போன்றது திருமகளை நாடிப் பெரும் பயன் பெறுவது. இரண்டாம்வழி போன்றது மற்ற தேவதைகளை நாடி அற்பப்பலன்களைப் பெறுவது. இரண்டும் கிடைக்கக் கூடுமானால் எதை நாடலாம்?

உள்ளிழுக்கும் வாயுவினால் உதரத்தை நிரப்புவதால்

உப்புசத்தை அடைந்திட்டால் உப்பலுக்கு நிலை உண்டா?

உணவு உட்கொள்வது போல் லக்ஷ்மியைத்தொழுவது; காற்றை உட்கொள்வது போல் பிற தேவரைத் தொழுவது. இந்த உபமானத்தில் நாலு பொருத்தங்கள் இருக்கின்றன. வயிறு உப்பினால் போதும்? உடலுக்குப் புஷ்டி வேண்டாமா? அது காற்றைக் குடிப்பதால் வருமா? இப்படிப் பலனில் உள்ள வேறுபாடு முதல் பொருத்தம். லக்ஷ்மிக்கே புஷ்டி என்று பெயர். அன்னத்தை அன்னலக்ஷ்மியாக எண்ணுவது மரபு. இதனாலும் இந்தப் பொருத்தம் உறுதிப்படுகிறது. உபாய தசையிலேயே (பலன்கருதி உபாயம் செய்யும்போதே) இன்பம் பயப்பது அன்னமும் லக்ஷ்மிபக்தியும். காற்றும் அந்யதேவபக்தியும் அவ்வாறு கிடையாது. இது இரண்டாவது பொருத்தம். இது தவிர எளிதில் பலன் என்றும் நீண்டகாலப் பலன் என்றும் மேலும் இரு பொருத்தங்கள் வெளிப்படையாகவே பேசப்பட்டன.

இந்த ச்லோகத்தில் நாம் அறியும் சில உண்மைகள்:

1. உணவு கிடைக்கும்போது கூட காற்றால் வயிற்றை நிரப்பித் தாற்காலிகமாக மகிழும் மடையனுக்கும், தாயாரின் அருளை வேண்டாமல் பிற தேவதைகளை வணங்கி அற்பப் பலன்களைப் பெறும் மண்டுவுக்கும், அதிக வாசி கிடையாது.

2. ஒரே பலனை அடைய இரண்டு உபாயங்கள் இருப்பது போல் முதலில் தோன்றினாலும், அவ்விரண்டு உபாயங்களினால் கிடைக்கும் பலன்களின் தாரதம்யத்தையும் புரிந்துகொள்ள வேண்டும்.

3. எந்தப் பிணிக்கும் நிலையான பரிகாரத்தைத் தேடவேண்டும். சிறிது நேரம் விடுபட்டால் போதும் என்று சில்வான வழிகளை மேற்கொள்ளலாகாது.

4. க்ஷுத்ரதேவதைகளால் வரும் பலன் வயிற்று உப்புசம் போல் க்ஷணிகமாகவும் பிரமையை ஏற்படுத் துவதாகவும் இருக்கும். நீண்ட நேரம் தாக்குப் பிடிக்காது. அதில் ஏமாறாமல் பிராட்டியின் அருளையே வேண்டுவோம்.

உத்தமனின் பத்தினியே! உனையன்றி மற்ற பல
உம்பரையே உபாஸித்தால் உறுசெல்வம் நிலைக்காதே.

விஷ்ணோ: பத்நி என்றதன் கருத்து என்னவென்றால், ''இவ்வுலகை ஆள்பவள் விஷ்ணுபத்நி'' என்ற வேதவாக்கியத்தை நினைவூட்டி அவளுக்கும் க்ஷுத்ரதேவதைகளுக்கும் உள்ள வாசியைப் புரிய வைப்பதாகும்.

பவத்ப்ரஸாதவிரஹ என்றதன் கருத்து என்னவென்றால், ''லக்ஷ்மி சஞ்சலையானவள்; நிலைத்திருக்க மாட்டாள்'' என்ற உலகவழக்கு தவறானது; அவள் அருளைப் பெறாதவர்க்கு மட்டுமே செல்வம் நிலைகுலையும்; என்பதாகும்.

வ்யாவர்தமாந என்றதன் கருத்து என்னவென்றால், செல்வம் புரளுகிறது; நிலைகுலைந்து தடுமாறுகிறது: நிலைக்காமல் சரிகிறது. என்பதாகும்.

க்ஷுத்ர என்பதன் கருத்து என்னவென்றால், பிற தேவதைகள் மிகவும் அற்பமானவர்கள். நீண்ட காலம் நிலைக்கும் செல்வத்தைத் தர வக்கற்றவர்கள்; பிராட்டியின்

காலதூசுக்கு ஈடாகார் என்பதாகும். கஷ்டஶ்வாஸநிரோத என்றதன் கருத்து என்னவென்றால், வயிறு நிரம்பும்படி மூச்சை இழுத்துக்கொள்வது எளிதன்று; உப்புப்பெறாத பலனுக்கு இவ்வளவு கஷ்டப்படுவது தகுமா? என்பதாகும். கியந்தம் காலம் என்றதன் கருத்து என்னவென்றால், கிடைத்த பலன் நீடிக்காது; எவ்வளவு காலம் நிலைக்கும்? கணநேரத்தில் காற்றோடு போய் மறைந்துவிடும்; என்பதாகும்.

அன்னையின் அருள் விலக்கி அன்னியதேவதை என்னும்
அற்பர்களை அருச்சித்தும் அடைகின்ற சிறுசெல்வம்
அரும்பாடு பட்டு வரும். அவசரமாய் அகன்றுவிடும்.

22. ஒருத்தியாய் ஒளிர்ந்து ஒப்புரவு பண்ணுபவள்

कल्याणं भवती करोति भजतामेकाऽपि लोकाम्ब यत्
संभूयाऽपि च देवतान्तरशतं नैतद्विधातुं क्षमम् ।
राकाचन्द्रिकयैकयाऽपि सुकरं विश्वप्रजाह्लादनम्
नैकाभिर्ननु तारकाभिरपि वा नो शक्यनिष्पादनम् ॥ २२

கல்யாணம் ப⁴வதீ கரோதி ப⁴ஜதாம் ஏகாபி லோகாம்ப³ யத்
ஸம்பூ⁴யாபி ச தே³வதாந்தரசதம் நைதத் விதா⁴தும் க்ஷமம்।
ராகாசந்த்ரிகயைகயாபி ஸுகரம் விஶ்வப்ரஜாஹ்லாத³நம்
நைகாபி⁴ர் நநு தாரகாபி⁴ரபி வா நோ சக்யநிஷ்பாத³நம் ॥ 22

लोकाम्ब உலகின் அன்னையே!
भवती நீர்
एका अपि ஒருவரே ஆனாலும்
भजतां பக்தர்களுக்கு
यत् யாதொரு
कल्याणं மங்களத்தை
करोति பண்ணுகிறீரோ
एतत् இதை
विधातुं பண்ணுவதற்கு
देवतान्तर-शतं நூறு தேவதாந்தரங்கள்
सम्भूय अपि च ஒன்று சேர்ந்தாலும் கூட
न क्षमं இயலாதது.
एकया अपि ஒரே ஒரு
राका-चन्द्रिकया பௌர்ணமி நிலவால்
सुकरं எளிதில் பண்ணக்கூடிய

विश्व-प्रजा-आह्लादनं எல்லா மக்களையும் மகிழ்வித்தல் என்பது
नैकाभि: ஏராளமான
तारकाभि: अपि वा நக்ஷத்திரங்களாலும் கூட
नो शक्य- निष्पादनं உண்டுபண்ண முடியாது
ननु அல்லவா?

ஜகன்மாதாவே! நீரோ ஒரே ஒருவர். தேவதாந்தரங்களோ நிறைய பேர். ஆனாலும் பக்தர்களுக்கு நீர் செய்யும் அளவுக்கு நன்மையை அவர்களால் செய்யமுடியாது. அத்தனைப் பேரும் ஒன்றுகூடினாலும் ஆகாத காரியம் அது. இப்படிப் பலபேர் கூடிச்செய்தாலும் முடியாததை ஒருவர் சாதிப்பதை உலகில் எங்கேனும் கண்டதுண்டா என்றால் சொல்கிறோம். பௌர்ணமி சந்திரன் ஒருவனேயானாலும், அவனைச் சுற்றி உள்ள நக்ஷத்திரங்கள் ஏராளமாக இருந்தாலும், எல்லா மக்களுக்கும் நிலவு அளிக்கும் மகிழ்ச்சியை எல்லா நக்ஷத்திரங்களும் சேர்ந்தும் தர முடியாதல்லவா? சந்திரன் போல் லக்ஷ்மீ. நக்ஷத்திரங்கள் போல் தேவதாந்தரங்கள். இந்த திருஷ்டாந்தம் நாலு வகைகளில் பொருந்தும். முதலில் எண்ணிக்கைப் பொருத்தம். சந்திரன் ஒன்றேயாவது போல் லக்ஷ்மியும் ஒருவளே. நக்ஷத்திரங்கள் நூற்றுக்கணக்கில் இருப்பது போல் தேவதாந்தரங்களும் நூற்றுக்கணக்கில் உள்ளவை. இரண்டாவதாக இனப்பொருத்தம். சந்திரனும் நக்ஷத்திரங்களும் ஒரே இனத்தைச் சேர்ந்தவை. ஆகாயத்தில் ஒளிரும் ஜோதிகள் அவை. அது போல லக்ஷ்மியும் இந்திராதி தேவதைகளும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். தேவதைகள் என்னும் இனம். மூன்றாவதாகச் செயலாற்றலில் பொருத்தம். சந்திரனுக்குள் செயல்திறன், மக்களைக் குளிர்கிரணங்களால் மகிழ்விக்கும் திறமை, நக்ஷத்திரங்களுக்குக் கிடையது. அதேபோல, பக்தர்களுக்கு மங்களங்களைப் பண்ணும் திறமை, லக்ஷ்மிக்கு இருக்குமளவு பிற தேவதைகளுக்குக் கிடையாது. நான்காவதாக, பரஸ்பர ஸம்பந்தம். நக்ஷத்திரங்கள் சந்திரனுக்கு (மனைவியர் போல) அடங்கியிருப்பது போல லக்ஷ்மிக்கு அடங்கியவர்கள்

அன்னியதேவதைகள். இந்த நாலு பொருத்தங்களாலும், இந்தத் திருஷ்டாந்தம் ஏற்புடையதாம்.

ஒருநூறு விண்மீன்கள் ஒன்றாகச் சேர்ந்தாலும்
ஒரு நிலவின் தண்மைக்கு ஒப்பாக ஆகிடுமோ?
ஒருநூறு பிறதேவர் ஒருங்காக இணைந்தாலும்
ஒருலக்ஷ்மி திறனுக்கு ஒப்பாக ஆவாரோ?

இந்த ச்லோகத்தில் நாம் அறியும் உண்மை: எண்ணிக்கை முக்கியமன்று; வல்லமையே முக்கியம். திறமையற்ற பலரைக்காட்டிலும் ஆற்றல் படைத்த ஒருவனே சிறந்தவன்.

கல்யாணம் என்றதன் கருத்து என்னவென்றால், பொன்னும் பொருளும் புகழும் பதவியும் ஐச்வர்யமும் ஆனந்தமும் மோக்ஷமும் ஆகிய எல்லா மங்களங்களையும் அளிப்பவள் லக்ஷ்மி என்பது.

ஏகா என்றதன் கருத்து என்னவென்றால், பிறர் துணை நாடாமல், அவள் ஒருத்தியாகவே இதையெல்லாம் பக்தர்களுக்கு அளிப்பதனால் அவள் ஒப்பற்றவள் என்பது.

விச்வப்ரஜா என்றதன் கருத்து எல்லோருக்கும் பலன் கிட்டும்; வேண்டியவன் வேண்டாதவன் என்ற பாகுபாடு கிடையாது; பக்ஷபாதம் இல்லை என்பது.

ஹ்லாதநம் என்றதன் கருத்து இது: சந்திரன் தண்மையால் மகிழ்விப்பதை நாம் அறிவோம்; வெறும் பார்வையால் மனமகிழ்ச்சியை ஏற்படுத்துபவள் லக்ஷ்மி என்று புராணப்பிரஸித்தி. ஆஹ்லாதஜநநீ என்று அவள் திருநாமங்களில் ஒன்று. சந்த்ரா என்பது மற்றொன்று. அதனால் அவளை நினைத்து, சந்திரன் தரும் ஆஹ்லாதத்தைப் பேசியது பொருத்தம்.

ஸுகரம் என்றதன் கருத்து அனாயாஸமாக, எளிதாக, கூட்டம் கூடும் தேவை இன்றி, இந்த மகிழ்வித்தலைப் பண்ண முடியும் என்பது.

நநு என்றதன் கருத்து இது ஸாரநிந்த விஷயம் தானே? இதில் ஒன்றும் அபிப்பிராயபேதம் கிடையாதே என்பதாகும்.

செய்யவள் நம் செகன்மாதா செய்கின்ற சுபமெல்லாம்
செய்யவே முடியாதோர் சேர்ந்தாலும் பிற தேவர்.

23. வேற்றுதேவரை வெறுக்கப் பண்ணுபவள்.

ननु तव पदाम्भोजद्वन्द्वे निविष्टमना मनाक्
अपि न तनुते देवेष्वन्येष्वमेदुरमादरम् ।
ललितमृदुले लब्धास्वादे रसालकपल्लवे
कलयति पिकः कञ्जावासे करीरदलानि किम् ॥ २३

நநு தவ பதா[3]ம்போ[4]ஜ த்[3]வந்த்[3]வே நிவிஷ்டமநா மநாக்
அபி ந தநுதே தே[3]வேஷ்வந்யேஷ்வமேது[3]ரம் ஆத[3]ரம் ।
லலிதம்ருது[3]ளே லப்[3]தா[4]ஸ்வாதே[3] ரஸாலகபல்லவே
கலயதி பிக: கஞ்ஜாவாஸே கரீ த[3]ளாநி கிம் ॥ 23

कञ्जावासे தாமரையில் வசிப்பவளே!	अमेदुरं ஸ்வல்பமும்
तव உன்னுடைய	आदरं ஆதரவை
पद-अम्भोज-द्वन्द्वे திருவடித்தாமரை இணையில்	न तनुते பண்ணுவதில்லை
मनाक् अपि சிறிதேனும்	ननु அல்லவா?
निविष्टमनाः மனதை வைத்தவன்	ललित-मृदुले அழகிய மெல்லிய
अन्येषु மற்ற	रसालक-पल्लवे மாந்தளிரில்
देवेषु தேவர்களிடம்	लब्ध-आस्वादे சுவைகண்டபிறகு
	पिकः குயிலானது
	करीर-दलानि மூங்கில் இலைகளை
	कलयति किं கருதுமா என்ன?

பத்மாஸநியே! உனக்கு அடியவனாகி உன் திருவடியில் பற்று கொண்டவன் தேவதாந்தரங்களைச் சிந்துவதே கிடையாது என்பது யுக்தம் தானே? மெல்லிய மாந்தளிரின் ருசி கண்ட குயில் மூங்கில் இலையை திரும்பும் பார்க்குமோ?

மாந்தளிர் போல் மலராள். முள்செடியும் மூங்கிலும் போன்றவர் மற்ற தேவர்கள். குயில் மாமரத்துத் தளிரை மட்டுமே ரசித்துத் தின்னும். கரீரத்தின் இலையைக் கருதவே கருதாது. அத்தகைய குயில் போன்றவன் லக்ஷ்மிபக்தன். லப்தாஸ்வாதே என்றதன் கருத்து என்னவென்றால் மாந்தளிரின் சுவையறியாத பருவத்தில் மூங்கிலையும் மதித்திருக்கலாம்; ஆனால் ரஸம் அறிந்த குயில் கரீரத்தைக் கிஞ்சித்தும் கருதாது; என்பதாம்.

நநு என்றதன் கருத்து என்னவென்றால் ஸ்ரீ வைஷ்ணவர்கள் தேவதாந்தரங்களை மதிப்பதில்லை என்பது உலகமறிந்த விஷயம் என்பது.

அமேதுரம் ஆதரம் என்றதன் கருத்து என்னவென்றால், உபாஸநமோ, பூஜையோ பண்ணாதது மட்டுமின்றி ப்ரதக்ஷிண ப்ரணாமங்களைக் கூட மற்ற தேவதைகளுக்குப் பண்ணமாட்டார்கள் என்பதாம். கலயதி கிம் என்றதன் கருத்து ஏறெடுத்தும் பார்க்காது என்பது. இந்த புறக்கணிப்பில் உறுதி இருப்பதால் மனத்தாலும் நினைப்பதில்லை என்பதாகும். இந்த பஹிஷ்காரத்துக்குச் ஶாஸ்த்ர விதி மட்டும் காரணம் அன்று; மனம் ஒப்பாமையும் காரணமாம் என்பது.

மாந்தளிரை மாந்திய பின் மாதுரியம் அறிந்த குயில்
மாறான மூங்கிலிலை மனத்தாலும் நினைத்திடுமோ?
மாமலராள் மலரடியில் மனம் வைத்த மாந்தர்கள்
மாறியொரு தேவதையை மதிகொண்டு மதிப்பாரோ?

(தொடரும்)

24. நாணல் போலன்றி நாவாய் போன்றவள்.

मातः ! पद्मे ! मृत्युमत्येतुकामः
मुक्त्वा कस्त्वां मानयेत्क्षुद्रदेवान् ? ।
प्रौढां नावं प्रास्य सिन्धुं तरिष्यन्
काशस्तम्बालम्बनं कश्चिकीर्षेत् ? ।। २४

மாத: ! பத்³மே ! ம்ருத்யுமத்யேதுகாம:
முக்த்வா கஸ்த்வாம் மாநயேத் க்ஷுத்³ரதே³வாந்?।
ப்ரௌடா⁴ம் நாவம் ப்ராஸ்ய ஸிந்தும் தரிஷ்யந்
காஶஸ்தம்பாலம்பநம் கஶ்சிகீர்ஷேத்?।। 24

मातः = அன்னையே !
पद्मे != தாமரையாளே !
मृत्युं = மரணத்தை
अत्येतुकामः = தாண்ட விரும்புபவன்
कः = எவன்?
त्वां = உன்னை
मुक्त्वा = விட்டு
क्षुद्र-देवान् = அற்பமான தேவர்களை
मानयेत् = மதிப்பான்?
सिन्धुं = ஸமுத்ரத்தை
तरिष्यन् = கடக்க விரும்பும்
कः = எவன்
प्रौढां = மிகவும் உறுதியான
नावं = கப்பலை
प्रास्य = தள்ளிவிட்டு
काश-स्तम्ब-आलम्बनं = நாணல் கற்றையைப் பிடித்துக் கொள்வதை
चिकीर्षेत् = பண்ண விரும்புவான்?

அம்மா லக்ஷ்மியே ! ஸம்ஸாரம் என்னும் ஸமுத்ரத்தைத் தாண்ட நீ கப்பல் போல் இருக்கிறாய். க்ஷுத்ர தேவதைகள் நாணல் கற்றை போல் இருக்கிறார்கள். ஸம்ஸாரிகள் கடலில் தத்தளிப்பவர்கள். கரை சேர விரும்புபவர்கள். உறுதியான கப்பலை விட்டுவிட்டு மிதந்துவரும் வைக்கோலைப் பிடித்துக் கொண்டால் கரை சேர முடியுமோ? முடியாது. அது போலவே உன்னை விட்டுவிட்டு

மற்ற தைவங்களை அவலம்பித்தாலும் ஸம்ஸாரத்திலிருந்து விடுபட முடியாது.

கடலிலே தத்தளிப்போன் கப்பலை விட்டு நாணல்
கற்றையைப் பிடித்துக் கொண்டால் கடப்பது முடியாதன்றோ?

நாணல் போல் சில்லறைத் தேவதைகள் என்பதில் மூன்று பொருத்தங்கள். நாணலும் கடலில் தத்தளிப்பது போல இந்த்ராதி தேவர்களும் ஸம்ஸாரத்தில் உழல்பவர்களே. நாணல் உறுதியற்று இருப்பது போலே க்ஷுத்ர தேவர்களும் உறுதியும் கரை சேர்க்கும் திறனும் இல்லாதவர்கள். நாணல் மதிப்புக் குறைந்தது போலே இந்தத் தேவர்களும் அற்பர்கள்.

ம்ருத்யும் அத்யேதுகாம: என்றதன் கருத்து: கடலைத் தாண்ட விரும்பாத உயிரினங்களும் உண்டு. அவற்றைப் பற்றி இங்கே சொல்லவில்லை. விரும்புபவன் கப்பலை விடலாமா?

ப்ராஸ்ய என்றதன் கருத்து : கப்பல் அருகில் இருக்கும்போது அதை விட்டுவிட்டுப் புல்லை பிடிப்பாகப் பற்றலாமோ? என்பது. கப்பல் கிடைக்காது போனால் புல்லையாவது பிடிப்பது மடத்தனம் அன்று. ஆனால் கிடைத்த கப்பலை விடலாமோ?

ப்ரௌடாம் என்றதன் கருத்து : வலிமை கொண்டதும் அளவில் பெரியதும் கரை சேர்ப்பதற்கான ஸாதநங்களால் சிறந்ததுமான கப்பலை விடலாமோ என்பது. ஓட்டைப் படகை விடலாம். நல்ல கப்பலை வேண்டாம் என்று தள்ளலாமோ?

கப்பலை விட்டு நாணல் பிடிப்பவன் புத்தி கோணல்
தெய்வம் வேறு பேணல் என்பதும் அது போல் கோணல்.

25. ஸாதாரணர் போலன்றி ஸாம்ராஜ்யம் தருபவள்

सन्दत्ते सकृदर्चिताऽपि भवती साम्राज्यमत्यूर्जितम्
त्वद्भिन्नैस्तु किमस्ति देवि ! बहुधाऽप्यासेवितैर्दैवतैः ।
संशुद्धिं सकृदीक्षितोऽपि दिशति श्रीरामसेतुर्नृणाम्
अर्थः कोऽस्ति तटाकसेतुशतकैरश्रान्तदृष्टैरपि ॥ २५

ஸந்த³த்தே ஸக்ருத³ர்சிதாऽபி ப⁴வதீ ஸாம்ராஜ்யமத்யூர்ஜிதம்
த்வத்³பி⁴ந்நைஸ்து கிமஸ்தி தே³வி ப³ஹுதா⁴ऽऽப்யாஸேவிதைர்-
தை³வதை:।
ஸம்ஶுத்³தி⁴ம் ஸக்ருதீ³க்ஷிதோऽபிதி³ஶதி ஸ்ரீராமஸேதுர்ந்ருணாம்
அர்த²: கோஸ்தி தடாகஸேதுஶதகைரஶ்ராந்த த்ருஷ்டைரபி ॥ 25

देवि = ஸ்ரீதேவியே !
भवती = நீர்
सकृत् = ஒரே ஒருதடவை
अर्चिता अपि = அர்ச்சிக்கப் பட்டாலும்
अत्यूर्जितं = மிகச் சிறந்த
सांराज्यं = ஸாம்ராஜ்யத்தை
सन्दत्ते = நன்கு தருகிறீர்.
त्वत् भिन्नैः = உன்னைத்தவிர மற்ற
दैवतैः तु = தெய்வங்களாலோ
बहुधा = பலபடியாக
आसेवितैः अपि = ஸேவிக்கப்பட்டாலும்
किं अस्ति = ஆவது என்ன இருக்கிறது?
सकृत् = ஒரே ஒரு தடவை
ईक्षितः अपि = பார்க்கப் பட்டாலும்
श्रीराम-सेतुः = ஸ்ரீராமர் (கட்டிய) ஸேது
संशुद्धिं = தூய்மையை
नृणां = மக்களுக்கு
दिशति = தருகிறது.
अश्रान्त-दृष्टैः अपि = ஓயாமல் பார்க்கப்பட்டாலும்
तटाक-सेतु-शतकैः = நூற்றுக் கணக்கான ஏரியணைகளால்
कः = என்ன
अर्थः = ப்ரயோஜனம்
अस्ति = இருக்கிறது?

ஸ்ரீ தேவியே ! உமக்கும் மற்ற தேவர்களுக்கும் உள்ள வாசி ஸ்ரீராம ஸேதுவுக்கும் மற்ற அணைக்கட்டுகளுக்கும் உள்ள வாசி போன்றது. உம்மை ஒரே ஒரு தடவை

அர்ச்சித்தாலே போதும்; செழித்துக் கொழிக்கும் ஸாம்ராஜ்யத்தையே நீர் கொடுத்து விடுகிறீர். மற்ற தேவர்களை நிறைய தடவை நிறைய விதமாக வழிபட்டாலும் அவர்களால் ஆவது என்ன? ஒன்றுமில்லை. ஸ்ரீ ராம ஸேதுவை ஒரே ஒரு தடவை பார்த்தாலே போதும். பாவங்கள் தொலைவதால் பரிசுத்தி ஏற்படும். ஆனால் நூற்றுக் கணக்கில் இருக்கின்ற மற்ற நீர்த் தேக்கங்களின் அணைக் கட்டுகளால் என்ன பயன்? ஓயாமல் பார்த்தாலும் எந்தப் ப்ரயோஜனமும் கிடையாது.

பார் இராம ஸேது பார்த்து விட்ட போது
பாவ நாச ஹேது பாரில் இணை ஏது?

ஸக்ருத் என்றதன் கருத்து என்னவென்றால், திரும்பத் திரும்ப வழிபடும் தேவை இல்லாமலேயே விரைவில் பலனளிக்க வல்லமை உண்டு என்பதாம்.

அத்யூர்ஜிதம் என்றதன் கருத்து கிடைக்கும் பலன் கொஞ்ச நஞ்சமன்று. கிடைக்கும் அரசாட்சி எப்பை சப்பையன்று. அதிகமாகச் செல்வம் கொழிப்பது; அபிவிருத்தி பெற்றது; என்பதாம். ஸாம்ராஜ்யம் என்பதன் கருத்து, இவன் ராஜாவாவது மட்டுமின்றி, அதைவிடப் பெரியதாக, ஸம்ராட் ஆகிறான் என்பதாம்.

ஸத்தத்தே என்றால், கொடுக்கிறாள் என்பதோடு நிறுத்தாமல், வாரி வழங்குகிறான் என்று சொன்னதாகும்.

பஹுதா என்றதன் கருத்து, வணங்குதல், துதித்தல், த்யாநித்தல், அர்ச்சித்தல், உபசரித்தல், ஆராதித்தல், வலம் வருதல், காணிக்கை ஸமர்ப்பித்தல், நிவேதித்தல், கீர்த்தித்தல், ஜபித்தல், முதலிய பல வழிகளில் வழிபடுவதைச் சொல்வதாம்.

ஈக்ஷித: என்ற பதத்தால் சொல்வது என்னவென்றால், பார்த்த மாத்ரத்திலேயே பலனளிப்பது ராமஸேது என்பதாம். ஸமுத்ரஸ்நாநம், ராமர் ஸ்தோத்ரம் அதெல்லாம்

அப்புறமிருக்கட்டும், திருவணையைத் தர்சித்த மாத்திரத்தால் பாவங்கள் ஒழியும்; பரிபூர்த்தி ஏற்படும் என்று ப்ரமாணங்கள் பகர்கின்றன.

அர்த்த: கோஸ்தி? என்ற வினாவின் கருத்து என்னவென்றால், மற்ற அணைக் கட்டுகள் நீர்ப்பாசனத்துக்கோ வெள்ளத் தடுப்புக்கோ பயன்பட்டாலும், அவற்றைப் பார்ப்பவர்க்கு என்ன பயன் கிடைக்கப் போகிறது? என்பதாம்.

அப்ராந்த என்பதன் அர்த்தம் ஓயாமல் அநவரதமாக என்பதாம். ஏதோ ஒரே காணலில் பலனில்லாவிடினும் நிறைய தடவை பார்த்தால் பலன் கிடைக்குமோ என்று ப்ரமிக்க வேண்டாம்; ஓயாமல் பார்த்தாலும் பலனேதும் இல்லை என்பதாம்.

ராமஸேதுவுக்கும், லக்ஷ்மிக்கும் ஒப்புமை நான்கு வகைகளில்; மற்ற தேவதைகளும் மற்ற அணைகளும் நூற்றுக் கணக்கில் இருக்கலாம். லக்ஷ்மியும் ஒருத்தி தான்; ராமஸேதுவும் ஒன்றுதான். இப்படி எண்ணிக்கையில் ஒப்புமை. தம் இனத்தாருள் தனித்து நிற்றல் என்பது.

ஒரே ஒரு தரிசனம், ஒரே ஒரு அர்ச்சனை போதும்; பலன் கிடைத்து விடும். இப்படி எளிய உபாயம் என்பதால் ஒப்புமை. ஸாம்ராஜ்யமே கிடைத்துவிடும் என்றும் பாவங்கள் அழிந்து தூய்மை உண்டாகும் என்றும் பெரிய பலன்களைத் தருவது மூன்றாவது ஒப்புமை. வேறெந்தத் தேவர்க்கும், வேறெந்த ஸேதுவுக்கும், இப்படிப்பட்ட பெருமை கிடையாது என்பது நாலாம் ஒப்புமை.

அன்னையைத் தொழுதால் ராஜ்யம்
அன்னியரெல்லாம் பூஜ்யம்

26. பணத்தில் பற்றைப் பறிப்பவள்.

देवि ! त्वत्पदपद्मवन्दनधना दुर्दैवतोपासना
लब्धं मुग्धवधूकटाक्षतरलं नैवाद्रियन्ते धनम् ।

वेधा विष्टपचित्रसृष्टिपटुधीरर्थक्रियादूरगम्
व्यामोहावहं ऐन्द्रजालिकजगत् सृष्टं किमु श्लाघते ? ॥ २६

தே³வி ! த்வத்பத³பத்³மவந்த³நத⁴நா து³ர்தே3வதோபாஸநா
லப்³த⁴ம் முக்³த⁴வதூ⁴கடாக்ஷதரளம் நைவாத்³ரியந்தே த⁴நம் ।
வேதா⁴ விஷ்டபசித்ரஸ்ருஷ்டிபடுதீ⁴ரர்த்த²க்ரியாதூ³ரக³ம்
வ்யாமோஹாவஹம் ஐந்த்³ரஜாலிகஜக³த் ஸ்ருஷ்டம் கிமு ஶ்லாக⁴தே? ॥

देवि ! = ஸ்ரீதேவியே !
त्वत्-पद-पद्म-वन्दन-धनाः =
உன் அடித் தாமரையை
ஸேவிப்பதையே
தனமாயுடையவர்
दुर्देवता-उपासना-लब्धं =
கெட்ட தெய்வங்களை
உபாஸிப்பதால்
அடையப்பட்டதும்
मुग्ध-वधू-कटाक्ष-तरलं
=இளம் பெண்ணின் பார்வை
போல் சஞ்சலமானதுமான
धनं = செல்வத்தை
न एव आद्रियन्ते =
பொருட்படுத்துவதே இல்லை

विष्टप-चित्र-सृष्टि-पटु-धीः =
உலகத்தின் விசித்ரப் படைப்பில்
வல்ல அறிவுடைய
वेधाः = ப்ரஹ்மதேவன்
अर्थ-क्रिया-दूर-गं =பயனுக்கும்
செயலுக்கும் தூரமாகி விட்டதும்
व्यामोहावहं =மயங்கிப்
ப்ரமிக்கும்படியான,
सृष्टं =படைக்கப்பட்டதுமான,
ऐन्द्रजालिक-जगत्
=மாயாஜாலக் காரனின்
உலகத்தை
श्लाघते किमु =
கொண்டாடுகிருரா என்ன?

ஸ்ரீ தேவியே ! பணம் பெரிதன்று. நல்லோர் உன் திருவடியைத் தொழுவதையே தனமாகக் கருதுகிருர்கள். துர்தேவதைகளை வழிபடுவதால் கிடைக்கும் பணத்தை அவர்கள் லக்ஷ்யம் செய்வதே இல்லை. அது வந்த வேகத்திலேயே போய்விடும். நிலையாய் இருக்காது. ஏன் இந்த வேறுபாடு? உலகத்தவர் மதிக்கும் பணம் இந்தப் பெரியோருக்குத் துச்சமாவானேன்? என்றால் அதற்கு ஒரு

த்ருஷ்டாந்தம். ஒரு மந்த்ரவாதி மாயாஜாலத்தில் கைதேர்ந்தவன். திடீரென்று பூவையும் பக்ஷியையும் உண்டு பண்ணிக் காட்டுகிறான். எல்லா ஜநங்களும் வியக்கிறார்கள். ஆனால் படைப்புக் கடவுளான ப்ரஹ்மன் வியப்பதில்லை; கொண்டாடுவதில்லை. அவன் இதைவிட விசித்ரமான ப்ரபஞ்சத்தையே படைக்கவல்லவன். அவன் ஏன் இந்தச் சிறு படைப்புகளுக்கெல்லாம் பாராட்டு தெரிவிப்பான்? அது போலத்தான் பரமைகாந்திகளும் அவர்களுக்குத் திருமகளின் திருவடித் தாமரைகளைப் பிடித்துக் கொண்டதால் பெரும் பேறு கிடைத்து விட்டது. மோக்ஷம் கூட நிஶ்சயம். எதற்கிந்த ஸாதாரணப் பணம்? அழியாச் செல்வம் அடைந்த பின் அழியும் செல்வத்தை யார் மதிப்பார்கள்?

ப்ரமிப்பூட்டும் மாயைகளைப் பிற மாயாவி பண்ணட்டும்
ப்ரபஞ்சத்தைப் படைத்திட்ட பிரமன் அதைப் பாராட்டான்.

வந்தந தநா: என்றதால் சொல்லும் கருத்து என்னவென்றால், வெவ்வேறு பேருக்கு வெவ்வேறு வஸ்துக்கள் தநமாகும். ரிஷிகள் தபோதநர்கள், லௌகிகர்கள் பணத்தைத் தநமென்பர். பரமைகாந்திகளான ஸ்ரீ வைஷ்ணவர்க்குப் பிராட்டியின் திருவடிகளே தநமாகும் என்பதாம்.

துர்தேவதோபாஸநா என்பதால் சொல்லும் கருத்து யாதெனில் பணம் பெறப் பல வழிகள் உண்டு. அற்ப தேவதைகளை வழிபட்டுப்பணம் பெறுவது ஸாத்யமே. ஆனால் அந்தப் பணம் நிலைத்து நிற்காது, என்பதாம்.

முக்த வதூ கடாக்ஷ தரளம் என்பதால் சொல்வது யாதெனில் இளமையின் நுழைவாயிலில் இருக்கும் பெண் வெட்கம் மேலிடுவதால் காதலையும் மறைப்பவள். அவளுடைய பார்வை ஓரிடத்தில் நில்லாமல் இங்குமங்குமாக அலை பாயும். வெட்கம் காரணமாக வெவ்வேறு திசைகளில் சஞ்சலப்படும். நிலையாத

செல்வத்துக்கு இளம் பெண்ணின் வெட்கப் பார்வையை உவமையாகச் சொல்கிறார்.

சித்ர ஸ்ருஷ்டி என்றதன் கருத்து யாதெனில், இந்த ப்ரபஞ்சத்தில் எத்தனை விசித்ர வஸ்துக்கள் விசித்ர ரீதியில் படைக்கப் பட்டுள்ளனவோ, இதையெல்லாம் படைக்கும் திறன் உள்ளவன் ப்ரஹ்மா என்பதாகும்.

அர்த்தக்ரியா தூரகம் என்றதன் கருத்து யாதெனில், மந்த்ரவாதியின் படைப்பான பட்சியையோ, பூவையோ எதற்கும் பயன்படுத்த முடியாது. எதிலும் செயல்படுத்தவும் முடியாது. ப்ரமிப்புத் தோற்றம் மட்டுமே என்பதாகும்.

வ்யாமோஹாவஹம் என்றால் பொய்யான புலனறிவைத் தருவது என்று பொருள். இது ப்ரஹ்மஸ்ருஷ்டியிலிருந்து காட்டும் இரண்டாவது வேறுபாடு. இவ்விரு குறைபாடுகளும் இல்லாமல் படைக்க வல்லவன் பிரமன்.

ஶ்லாகதே கிமு ? என்றதன் தாத்பர்யம் யாதெனில், தன்னால் பண்ண வொண்ணாத கார்யத்தைப் பண்ணுபவர்களைப் பாராட்டுவது தானே வழக்கம்? ப்ரஹ்மா எதற்கு மந்த்ரவாதியைப் பாராட்டுவார்? அவருக்கு அவனை விட நன்றாக ஒரு குறையுமின்றி விசித்ரமாகப் படைக்கத் தெரியுமே என்பதாகும்.

மாயப் படைப்பென்றும் மாயாப் படைப்பன்று.
மாயும் படைப்பென்று மாதா அடி ஒன்று.

27. பாம்பைப் போலன்றி பாதபம் போல் பாலிப்பவள்

सत्यप्यागसि संश्रितान् करुणया संरक्षसि त्वं रमे !
क्षोदिष्ठादपराधतोऽपि भजते कुप्यन्ति देवाः परे ।
छेत्तॄणामपि तापमम्ब ! हरते शाखी निजच्छायया
गाढस्पर्शत एव पोषकमपि घ्नन्ति क्रुधा पन्नगाः ॥ २७

ஸத்யப்யாகஸி ஸம்ச்ரிதாந் கருணயா ஸம்ரக்ஷஸி த்வம் ரமே!
க்ஷோதிஷ்டாதபராததோபி பஜதே குப்யந்தி தேவா: பரே।
சேத்த்ருணாமபி தாபமம்ப! ஹரதே சாகீ நிஜச்சாயயா
காடஸ்பர்சத ஏவ போஷகமபி க்நந்தி க்ருதா பந்நகா: ॥ 27

रमे ! = ரமையே!
अम्ब அம்மாவே!
आगसि குற்றம்
सति अपि இருக்கும்போதும்
संश्रितान् ஆச்ரயித்தவர்களை
त्वं = நீ
करुणया = அருளினால்
संरक्षसि = காப்பாற்றுகிறாய்.
क्षोदिष्ठात् = மிக அற்பமான
अपराधतः अपि = பிழை காரணமாகவும்
परे = மற்ற
देवाः தேவர்கள்
भजते = பக்தனிடம்
कुप्यन्ति = கோபம் கொள்கிறார்கள்.
शाखी = கிளைகொண்ட மரமானது
छेत्तॄणां अपि = அறுப்பவர்களுக்குக் கூட
निजच्छायया = தன் நிழலினால்
तापं = வெய்யிலின் தாபத்தை
हरते = போக்குகிறது
पन्नगाः = பாம்புகள்
गाढ-स्पर्शतः एव = நெருக்கமாகத் தொடுவதாலேயே
पोषकं अपि = போஷிப்பவரைக் கூட
क्रुधा = கோபத்தால்
घ्नन्ति = கொல்கின்றன.

அம்மா ரமையே! உனக்கும் மற்றதேவதைகளுக்கும் குணத்தாலும் முக்ய வேறுபாடு இருக்கிறது. உனக்குக் கோபமே வராது. குற்றம் புரிந்தபோதிலும் ஆச்ரயிப்பவர்களை நீ அருளினால் காப்பாற்றுகிறாய். மற்ற தேவர்கள் அவ்வாறன்று. தம் பக்தன் சிறிது குற்றம்

புரிந்தாலும் கோபித்துக் கொள்வார்கள். நீ இளமரம் போன்றவள். அவர்களோ பாம்புகள் போன்றவர்கள். இளமரம் நிழல் கொடுக்கும். தன்னை அண்டினவர்க் கெல்லாம் நிழல் தரும். தன்னையே வெட்டிச்சாய்க்க வருபவர்க்கும் நிழல் தந்து வெயிலின் தாபத்தைத் தீர்க்கும். பாம்புகளோ இதற்கு நேர்மாறானவை. கொன்றுவிடும். நெருக்கமாகக் கட்டியே மாய்த்துவிடும். நெருங்கப் பிடித்த மாத்ரத்தால் வெகுண்டு கடித்துவிடும். தன்னைப் போஷித்து வளர்த்தவனையே கூடக் கோபத்தால் கொல்லும். அவரவர் ஸ்வபாவம் அப்படி. இரண்டு உவமைகள். தருபோல் திரு என்று ஒன்று. பன்னகர் போல் அன்னியர் என்பது மற்றொன்று.

> தன்னடியில் தங்குபவர் தப்புகளைச் செய்தாலும்
> தன் நிழலைத் தருகின்ற தரு போன்றாள் திருமகளாம்
> சின்ன பிழை செய்தாலும் சீறிவரும் பாம்பைப்போல
> சினம் மிக்கார் சீர்கெட்டார் சில்வானை தேவர்களாம்.

இந்த ஶ்லோகத்தில் அபி என்ற பதம் நாலு பாதங்களிலும் வந்திருக்கிறது. கூட என்று அர்த்தம். குற்றவாளிக்குக் கூட அருள்பவள் திருமகள். *(நல்லவர்க்கு அருள் புரிவாள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?)*

சிறு பிழைக்குக் கூடச் சினமடையும் தேவதாந்தரம் *(மற்றதைவங்கள் (பெருங்குற்றங்களை மன்னிக்கமாட்டார் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?)*

வெட்டுபவனுக்குக் கூட நிழல் தரும் இளமரம் *(வளர்ப்பவனுக்கும் நிழல் தரும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?)*

போஷித்து வளர்த்தவனைக் கூடக் கொன்றுவிடும் பாம்பு. *(முன்பின் தெரியாதவரைக் கொல்லும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?)*

இந்த ஶ்லோகத்து நீதிகள் :— 1. இன்னா செய்தார்க்கும் இனியவே செய்க. நிழல்மரம் போல். 2. சிறியோர் செய்த

சிறுபிழை எல்லாம் பெரியோர் ஆகில் பொறுப்பது கடனே 3. அண்டினவரிடம் பரிவு காட்டவேண்டும் 4. உதவி செய்யும்போது பாரபக்ஷம்(பாகுபாடு) இல்லாமல் எல்லோருக்கும் உதவவேண்டும்.

ஸம்ஶ்ரிதாந் என்ற பதத்தின் கருத்து தபஸ்விகளையும் யோகிகளையும் புண்ய புருஷர்களையும் மட்டுமின்றி, தன்னை அடைந்தவர்களையெல்லாம் லக்ஷ்மி காப்பாற்றுகிறாள் என்பது. கருணயா என்ற பதத்தின் கருத்து இப்படி அவள் காப்பாற்றுவதற்கு நமது தகுதியோ அவளது தேவையோ காரணமன்று; அவளது கருணையே காரணம் என்பது. ஸம்ரக்ஷஸி என்ற பதத்தில் ஸம் என்ற உபஸர்கத்தின் கருத்து கேட்டதை மட்டும் கொடுத்து நிறுத்தாமல் நன்றாகக் காப்பாற்றுகிறாள் என்பது. தருதல், தடுத்தல், ஆற்றுதல், ஆதரித்தல், பரிந்துரைத்தல், ஏற்றல், கேட்டல், கேட்பித்தல், வினைமாய்த்தல், மன்னித்தல், கடாக்ஷித்தல், ஸந்நிதி கொள்ளல், என்று எதெதெல்லாம் பண்ணினால் ரக்ஷணமோ அதையெல்லாம் பண்ணுகிறாள். க்ஷேத்ராதிஷ்டாத் என்ற பதத்தின் கருத்து என்னவென்றால், சிறு பிழை, தடுமாற்றம், கவனக் குறைவு, உபசாரக் குறை, கால விளம்பம், மனமொருங்காமை, முதலிய சின்னச் சின்ன குற்றங்களுக்கெல்லாம் கூடக் கோபித்துக் கொள்கிறார்கள் தேவதாந்தரங்கள் என்பதாம்.

நிழல்மரம் எப்படி வந்தவர்க்கெல்லாம் நிழல் தருமோ, அப்படியே தாயாரும் அண்டினவரை யெல்லாம் காக்கிறாள். நிழல்மரம் எப்படிக் - கொடிய வெய்யிலின் தாபத்தையும் தணிக்குமோ, அப்படியே தாயாரும் கொடுந்துயர்களைப் போக்குகிறாள். நிழல்மரம் எப்படிப் பாரபக்ஷமின்றி எல்லோருக்கும் நிழல் தருமோ, அப்படியே தாயாரும் பக்ஷபாதமில்லாமல் இருக்கிறாள். ஆகையால் இந்த உவமை நன்கு பொருந்துகிறது. இது போல, கோபம் மிகுதல், பழைய உதவிகளை மறத்தல், சிறு பிழையைப் பெரிதாக் கொள்ளல், என்ற தீய பண்புகள், பாம்புக்கும் இதர தேவதைகளுக்கும் பொதுவென்கிறார்.

அன்னையின் அருளால் அழிவது பாபம்.
அன்னியர் அடிக்கடி கொள்வது கோபம்.
ஆலமரத்தடி தீர்ப்பது தாபம்.
ஆளை மாய்த்திடும் அரவின் கோபம்.

28. எளிதிலேயே ஏராளமாய்த் தருபவள்

सुभूयानायासस्सुखमगुरु दुर्दैवतजुषाम्
प्रयासः क्षोदीयान् फलमतिमहत् त्वां तु भजताम् ।
लघिष्ठो लाभस्स्यात् लवणवणिजां श्रान्तिरधिका
भवत्यल्पो यत्नः फलमलघु कर्पूरवणिजाम् ॥ २९

ஸு்பூயாநாயாஸஸ்ஸு்கமகுரு துர்தைவதஜு்ஷாம்
ப்ரயாஸ: க்ஷோதீயாந் பலமதிமஹத் த்வாம் து பஜதாம் ।
லகிஷ்டோ லாபஸ்ஸ்யாத் லவணவணிஜாம் ஶ்ராந்திரதிகா
பவத்யல்போ யந்த: பலமலகு கர்பூரவணிஜாம் ॥ 28

दुर्दैवतजुषां = கெட்ட தெய்வங்களை அடைபவர்க்கு
आयासः = ஶ்ரமம்
सुभूयान् = மிக அதிகம்.
सुखं = பலனான ஸு்கம்
अगुरु = பெரிதன்று.
त्वां = உன்னை
भजतां तु = அடைபவர்க்கோ
प्रयासः = ஶ்ரமம்
क्षोदीयान् = மிகக் குறைவு.
फलं = பலனோ
अतिमहत् = மிகப் பெரியது.
लवणवणिजां = உப்பு வ்யாபாரிகளுக்கு
लाभः = லாபம்
लघिष्ठः = வெகுவும் குறைவாக
स्यात् = இருக்கும்
श्रान्तिः = படும்பாடு
अधिका = அதிகம்
कर्पूरवणिजां = கற்பூர வியாபாரி களுக்கு
यत्नः = முயற்சி,
अल्पः = குறைவாகவும்,
फलं = பலன்
अलघु = குறைவற்றதாகவும்
भवति = ஆகிறது

துர்தைவதங்களை வழிபடுவோர்க்கு ஶ்ரமங்கள் அதிகம். ஆனால் பலன்கள் குறைவு. (மலையைக் கெல்லி

எலியைப் பிடிப்பானேன்?) உன்னை வழிபடுபவர்க்கோ அதிகம் ஶ்ரமப் படாமலேயே ஏராளமான பலன்கள் கிடைக்கின்றன. இது சரியோ? உழைப்புக்கேற்ற ஊதியம் என்பது தானே சரியான நியதி? என்று சிலர் ஸந்தேஹப்படலாம். இந்த ஸந்தேஹம் தீர ஒரு உவமை. உலகில் வெவ்வேறு துறைகளில் உழைப்புக்கும், லாபத்துக்கும் உள்ள விகிதம் வெவ்வேறாக இருப்பதையும் காண்கிறோம். உதாரணமாக உப்பு வ்யாபாரி அதிகப் ப்ரயாசைப்பட்டும் குறைந்தலாபம் அடைகிறான். கற்பூர வ்யாபாரி குறைவாகப் பாடுபட்டு நிறைய லாபம் அடைகிறான். கற்பூர வ்யாபாரி போல் லக்ஷ்மி பக்தர்கள். உப்பு வ்யாபாரிபோல் தேவதாந்தர பக்தர்கள்.

திருமகளைத் தொழுதால் குறைந்த ஆயாஸம் நிறைந்த ஆதாயம்,
பிற தெய்வம் தொழுதால் நிறைந்த ஆயாஸம்,குறைந்த ஆதாயம்.

கெட்டிக்காரர்கள் எதில் ஆதாயம் அதிகமோ, எதில்ஆயாஸம் குறைவோ, அதைத்தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். தேவதாந்தரங்களை வழிபடுவதில் ஆயாஸம் அதிகம் என்றது தீ மிதித்தல், அலகு குத்தல், ரத்தம் பூசல், உயிர்ப் பலி கொடுத்தல், என்றுஎத்தனையோ பாடுகள் பட வேண்டியிருப்பதால். ஆதாயம் குறைவு என்றது எதனால் என்றால், இவ்வளவு ப்ரயாஸைக்குப் பிறகு கிடைப்பது மோக்ஷமோ ஸாம்ராஜ்யமோ இல்லை; கேவலம் பகைவர்க்குத் தீங்கு, பழிவாங்கல், பிள்ளை குட்டிகள், பணவரவு, போன்ற சின்னச் சின்ன பலன்கள் மட்டுமே கிடைக்கும். திருமகளைத் தொழுவதில் ஆயாஸம் குறைவென்றது நாமஸங்கீர்தநம் ப்ரதக்ஷிணம், ப்ரணாமம், அஞ்ஜலி, புஷ்ப கைங்கர்யம், போன்ற லகுவான செயல்களாய் இருப்பதால். பலன் அதிகம் என்றது குறைவற்ற தநதாந்ய ஸம்ருத்தி, அளவிலா ஐஶ்வர்யம், அறிவு, கல்வி, வீரம், தூய்மை, பொன், புகழ், என்று ஏராளமான பலன்கள் அதிகமாகக் கிடைப்பதால். உப்பு

வ்யாபாரிக்குப் ப்ரயாஸை, அதிக பாரம் சுமக்க வேண்டியிருப்பதாலும், தண்ணீரில் கரையாமல் காப்பது கஷ்டமாதலாலும், அலைச்சல் அதிகம் ஆனதாலும். ஆதாயம் குறைவென்றது உப்பின் விலை என்றும் குறைவானபடியாலும், இந்த வ்யாபாரத்தில் நிறைய பேர் போட்டியிடுவதாலும். கற்பூர வ்யாபாரிக்குப் பாடு குறைவென்றது வாணிபப் பொருளின் எடை குறைவானதாலும், எடுத்துச் செல்வது எளிதானதாலும். ஆதாயம் அதிகமாவது நல்ல விலைக்குப் போவதாலும், வஸ்து அரிதாய் இருப்பதாலும். உப்பு வ்யாபாரியையும் கற்பூர வ்யாபாரியையும் ஒப்பிடுவது ஒரு பழமொழி காரணமாக.

இலக்குமியால் இலாபம் கிட்டும். இதரர்களால் இன்னல் மட்டும்

29. ராவணன் போலன்றி வீடணன் போல் ஆக்குபவள்

स्थास्नु श्रेयस्स भजति रमे ! यः पदं त्वत्कृपायाः
बाधोदर्कं विभवमुपयात्यन्यदेवोपसेवी ।
दृष्टान्तोऽन्त्ये गिरिशभजनप्राप्तभूतिर्दशास्यः
तद्भ्राताऽऽद्ये तव करुणया लब्धनिष्पङ्कसम्पत् ॥ २९

ஸ்தாஸ்நு ஶ்ரேயஸ்ஸ பஜதி ரமே ! ய: பதம் த்வத்க்ருபாயா:
பாதோதர்கம் விபவமுபயாத்யந்யதேவோபஸேவீ ।
த்ருஷ்டாந்தோऽந்த்யே கிரிஶபஜநப்ராப்தபூதிர்தஶாஸ்ய:
தத்பாதாऽऽத்யே தவ கருணயா லப்தநிஷ்பங்கஸம்பத் ॥

रमे ! = ரமாதேவியே !
यः = எவனொருவன்
त्वत्-कृपायाः = உன் அருளுக்கு
पदं = பாத்திரமானவனோ
सः = அவன்
स्थास्नु = நிலைபெற்ற
श्रेयः = நன்மையை
भजति = அடைகிறான்.
अन्य-देव-उपसेवी = வேறொரு தேவதையைப் பணிபவன்
बाधोदर्कं = பிற்காலத்தில் இன்னல் பயக்கின்ற

विभवं = செல்வத்தை
उपयाति = அடையப்
பெறுகிறுன்.
अन्त्ये = கடைசியில்
சொன்னதில்
दृष्टान्तः = எடுத்துக்காட்டு
गिरिश-भजन-प्राप्त-भूतिः =
ஶிவனை வணங்கிப் பெற்ற
செல்வம் உடைய
दशास्यः = தஶமுகன்
(ராவணன்)
आद्ये = முதலாவதில்
तव = உனது
करुणया = அருளால்
लब्ध - निष्पङ्क - सम्पत्
= அடையப்பட்ட
களங்கமற்ற செல்வம்
கொண்டவன்
तद्भ्राता = அவன் தம்பி
(விபீஷணன்).

ரமையே! உன் அருளுக்கு இலக்கானவர் நிரந்தரமான செல்வத்தைப் பெறுவர். வேறொரு தேவதையைப் பணிபவர் பெறும் செல்வம் பின்னர் அடிபட்டுப் போகும்-நிலைக்காது. இதற்கு எடுத்துக் காட்டாக ராவணனையும், விபீஷணனையும் சொல்லலாம். ராவணன் ஶிவனை வணங்கி ஐஶ்வர்யம் பெற்ருன். பல நாட்கள் அநுபவித்தாலும், அது அவனுடைய நாஶத்துக்குக் காரணமாயிற்று. அவன் தம்பி விபீஷணனோ ஸீதாதேவிக்கு உகந்ததைச் செய்ய முற்பட்டான். அவனுக்கும் லங்காராஜ்யம் கிடைத்தது. சிரஞ்ஜீவியாக நெடுநாட்கள் நிலைத்து அநுபவிப்பது மட்டுமின்றி, இந்த ராஜ்யம் குற்றம் குறை இல்லாமலும் அமைந்தது. மேலும் பகவத் கைங்கர்ய ஸாம்ராஜ்யமும் கிடைத்தது. இதிலிருந்தே தெரியவில்லையா, நீ அருளும் செல்வத்துக்கும், தேவதாந்தரம் அருளும் செல்வத்துக்கும் உள்ள வாசி? இந்த ஶ்லோகத்தில் நமக்கு மூன்று நீதிகள்.

1. நாம் ந்யாயமான வழியில் மட்டுமே செல்வத்தை ஈட்ட வேண்டும். இதை நிஷ்பங்கஸம்பத் என்கிருர் இந்தக் கவி. ராவணன் பல பராக்ரமத்தால் குபேரனிடமிருந்து புஷ்பகவிமானத்தைப் பிடுங்கிக் கொண்டான். ராமனிடமிருந்து ஸீதை என்னும் செல்வத்தை அபஹரித்தான். விபீஷணன் அப்படியன்று. அவனுக்குக்

கிடைத்த ஸம்பத் தர்ம வழியில் கிடைத்தது. நன்கொ பெற்ருல் கூட நல்ல வழியில் ஸம்பாதித்ததை மட்டு ஏற்பர் பெரியோர்.

2. ஐஶ்வர்யம் அடையும்போது அதன் பின் விளைவு எண்ணித் தீங்கு பயப்பதை விலக்கிவிட வேண்டு தற்பொழுது ஸுகத்தையும் எதிர்காலத்தில் துக்கத்தை தரக் கூடியதானால் அது வேண்டாம். இதை பாதோதர் என்கிருர் இந்த கவி. சில ஸமயங்களில் நல்ல வழி ஈட்டிய பணம் கூட துர்ஜன ஸஹவாஸத்தா துர்விநியோகத்தாலும் தீங்குகளை விளைவிக்கல அப்படிப்பட்ட விபவம் வேண்டாம்.

3. பிராட்டியின் அருள் இருந்தால் தான் நிஷ்ப ஸம்பத் கிடைக்கும்; நிலை பெற்ற நன்மையும் கிடைக் மநுஷ்ய யத்நத்தில்மட்டும் மாளாத நம்பிக்கை வேண்டா

பூதி என்ற சொல்லுக்குச் செல்வம் என்றும், பஸ் (சாம்பல்) என்றும் இரண்டு அர்த்தங்கள் உண்டு. ஶிவ வணங்கிய ராவணனுக்கு முதலில் கிடைத்தது செல் என்கிற பூதி. இறுதியில் மிஞ்சியது சாம்பல் என்கிற பூதி.

ஸ்தாஸ்நு ஶ்ரேயஸ் என்பதற்கு மோக்ஷம் என் அர்த்தம் சொல்லலாம். இது தேவதாந்தரத்திடம் கிடைக் கிடைக்காது. இலக்குமியின் அருளால் மட்டு கிடைக்கும்.

ஸ்தாஸ்நு ஶ்ரேயஸ் என்றால் பொன்றாத பொக்கிஷ அழியாத அத்ருஷ்டம், மங்காத மஹத்வம், நிலைய நன்மை, மாளாத மேன்மை; இது திருவின் திருவரு பெற்றவர்க்குக் கிட்டும். பாதோதர்க விபவம் என்றா இடைஞ்சல் தரும் செல்வம், வருத்தம் தரும் வள தொல்லை தரும் சொத்து; இது மற்ற தேவதைக ஸேவிப்பவர்களுக்குக் கிடைக்கும்.

மன்னும் மேன்மை மலராளால் மங்கும் மேன்மை மற்றவரா

30. நீசஸேவை போலன்றி நிதி போன்றவள்

त्वां मातरुपासीनाः न देवतान्तरं उपासते सन्तः।
लब्धे निधौ निरवधौ कदर्यजनसेवनं सहन्ते के ?॥ ३० ॥

த்வாம் மாதருபாஸீநா: ந தேவதாந்தரம் உபாஸதே ஸந்த:।
லப்தே நிதௌ நிரவதௌ கதர்யஜநஸேவநம் ஸஹந்தே கே? ॥ 30

इति अस्तोकाध्वरि कचिघटाम्बु
वादिहंसाम्बुद वेङ्कटार्यदीक्षितकृतिषु लक्ष्मीसहस्रे
परिसंख्यास्तबकः सम्पूर्णः

मातः = அன்னையே !
त्वां = உன்னை
उपासीनाः = வழிபடுகிற,
सन्तः = நல்லோர்,
देवतान्तरं = வேறொரு தேவதையை
न उपासते = வழிபடுவதில்லை.
निरवधौ = அளவற்ற
निधौ = நிதியானது
लब्धे = கிடைத்தபோது
कदर्य-जन-सेवनं = கருமி ஜநத்திடம் பணிந்து பணி செய்வதை
के = எவர்
सहन्ते = பொறுத்துக் கொள்கிறார்கள் ?

அம்மா ! உன்னை வழிபடும் நல்லவர்கள் ஸ்ரீ வைஷ்ணவர் எனப்படுவர். இவர்கள் தேவதாந்தரத்தை வழிபடமாட்டார்கள். அது ஶாஸ்த்ர விருத்தம் என்பதால் மட்டுமன்று. தேவையில்லை என்பதாலும் கூட. நிரவதிகமான நிதி கிடைத்த பிறகு யாராவது கருமிக்குக் கைகட்டிப் பணி செய்வார்களா ? **ஸந்த:** என்றது பரமைகாந்திகளை. அவர்கள் மறந்தும் புறம் தொழா மாந்தர் ஆகையால் **ந தேவதாந்தரம் உபாஸதே** என்கிறார்.

லப்தே என்றதன் கருத்து என்னவென்றால், இந்த நிதி கிடைப்பதற்கு முன் பிழைப்புக்கு வழி தேடி உலோபியிடம் பணி செய்திருக்கலாம். ஆனால் நிதி கிடைத்த பிறகு அப்படிச் செய்வார்களா? என்பதாம். **நிரவதௌ** என்றதன் கருத்து என்னவென்றால், குறைந்த நிதி கிடைக்கப் பெற்றவர்

கதர்யஸேவையைத் தொடர வேண்டியிருக்கலாம். நிறைந்த நிதி பெற்றவர்க்கு இந்த நீச ஸேவை தேவையில்லையே என்பதாம். கே ஸஹந்தே என்றதன் கருத்து என்ன வென்றால், மிக அஸஹ்யமானது, நீச ஸேவை. நல்லோருக்குப் பணிவிடை செய்வதில் இன்பம் இருக்கும். ஸாதாரணர்க்குப் பணி செய்வதைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் க்ருபணர்க்குப் பணி செய்வது தாங்கவொண்ணாததாய் இருக்கும் என்பதாம். அவதி என்ற வடசொல்லுக்கு எல்லை, முடிவு, என்று அர்த்தம். நிரவதியான நிதி என்கிறார். அவதி என்கிற தமிழ்ச் சொல்லுக்கோ, அரும்பாடு, அவஸ்தை, தொல்லை என்று அர்த்தம் !

அன்னை அளிப்பது அவதி அற்ற நிதி

அன்னியர் அளிப்பது நிதி அற்ற அவதி.

கடந்த பதிநான்கு ஶ்லோகங்களிலும் உள்ள பதிநான்கு த்ருஷ்டாந்தங்களை ஒரு சேரப் பார்த்து ரஸிக்கலாம்.

திருமகள் அரசவையில் அரசன் போன்றவள்; தேவதாந்தரங்கள் மற்ற அவையினர் போன்றவர்கள்.

திருமகள் ஸூர்யன் போன்றவள்; தேவதாந்தரங்கள் பகல் விளக்கு போன்றவர்கள்.

திருமகள் சோழவளநாடு போன்றவள்; தேவதாந்தரங்கள் விந்தியமலைக்காடு போன்றவர்கள்.

திருமகள் கங்கை போன்றவள்; தேவதாந்தரங்கள் சேற்றுக் குட்டை போன்றவர்கள்.

திருமகள் பசித்தவனுக்கு அன்னம் போன்றவள்; தேவதாந்தரங்கள் முரட்டு மூங்கிலிலை போன்றவர்கள்.

திருமகள் கடலிடைக்கப்பல் போன்றவள். தேவதாந்தரங்கள் நாணல் கற்றைப் போன்றவர்கள். உப்பல் காற்று போன்றவர்கள்.

திருமகள் முழு நிலவு போன்றவள்; தேவதாந்தரங்கள் நட்சத்திரங்கள் போன்றவர்கள்.

திருமகள் இனிய மாந்தளிர் போன்றவள்; தேவதாந்தரங்கள் நாணல்கற்றை போன்றவர்கள்.

திருமகள் ஸ்ரீராமஸேது போன்றவள்; தேவதாந்தரங்கள் ஸாதாரண அணைக்கட்டுகள் போன்றவர்கள்.

திருமகள் ப்ரம்மா போன்றவள். தேவதாந்தரங்கள் மந்த்ரவாதி மாயக்காரர்கள் போன்றவர்கள்.

திருமகள் நிழல்மரம் போன்றவள்; தேவதாந்தரங்கள் பாம்பு போன்றவர்கள்.

திருமகள் வாணிபப்பொருள்களுள் கற்பூரம் போன்றவள்; தேவாந்தரங்கள் உப்பு போன்றவர்கள்.

திருமகள் விபீஷணனது போன்ற செல்வம் தருபவள்; தேவதாந்தரங்கள் ராவணனது போன்றதைத் தருபவர்கள்.

திருமகள் நிதி போன்றவள்; தேவதாந்தரங்கள் நீசஸேவை போன்றவர்கள்.

நாவல்பாக்கம் அக்நிஹோத்ரம் நாராயண தாதயார்ய மஹாதேஶிகனிடம் கேட்டறிந்து எழுதிய

லக்ஷ்மீ ஸஹஸ்ர உரையில் பரிஷங்க்யாஸ்தபக உரை முற்றும்.

லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தில் மொத்த ஸ்தபகங்கள் 25
இதுவரை முடிந்த ஸ்தபகங்கள் 20.
இன்னும் மீதமுள்ள ஸ்தபகங்கள் 5
மொத்த ஶ்லோகங்கள் 1018.
இதுவரை முடிந்த ஶ்லோகங்கள் 863.
இன்னும் மீதமுள்ள ஶ்லோகங்கள் 155

* * *

21. தஶாவதார ஸ்தபகம்

பகவானின் பத்து அவதாரங்களிலும் லக்ஷ்மியின் துணையால் வரும் சிறப்பை வர்ணிக்கிறார்-

பத்து அவதாரங்களுக்கும் பொதுவாக முதல் ஶ்லோகம்.

மத்ஸ்ய அவதாரத்தில் லக்ஷ்மியின் பங்கு குறித்து மூன்று ஶ்லோகங்கள்.

கூர்ம அவதாரத்தில் லக்ஷ்மியின் பங்கு குறித்து ஒரு ஶ்லோகம்.

வராஹாவதாரத்தில் லக்ஷ்மியின் பங்கு குறித்து இரண்டு ஶ்லோகங்கள்.

நரஸிம்ஹாவதாரத்தில் லக்ஷ்மியின் பங்கு குறித்து ஐந்து ஶ்லோகங்கள்.

வாமநாவதாரத்தில் லக்ஷ்மியின் பங்கு குறித்து நான்கு ஶ்லோகங்கள்.

பரசுராமாவதாரத்தில் லக்ஷ்மியின் பங்கு குறித்து மூன்று ஶ்லோகங்கள்.,

ராமாவதாரத்தில் லக்ஷ்மியின் பங்கு குறித்து ஐந்து ஶ்லோகங்கள்.

பலராமாவதாரத்தில் லக்ஷ்மியின் பங்கு குறித்து ஒரு ஶ்லோகம்.

க்ருஷ்ணாவதாரத்தில் லக்ஷ்மியின் பங்கு குறித்து ஐந்து ஶ்லோகங்கள்.

கல்கி அவதாரத்தில் லக்ஷ்மியின் பங்கு குறித்து மூன்று ஶ்லோகங்கள்.

பத்து அவதாரங்களிலும் சேர்த்து லக்ஷ்மியின் பங்கு குறித்து மூன்று ஶ்லோகங்கள்.

என்றிப்படி முப்பத்தாறு ஶ்லோகங்கள் இந்த ஸ்தபகத்தில் இருக்கின்றன.

1. அவதாரங்களில் அவலம்பமானவள்

दशास्वप्यवतारेषु देवो यद्रूपसंश्रयात्।
साधयामास कार्याणि सतां तस्यै श्रियै नमः ॥ १

தமஸ்வப்யவதாரேஷு தேவோ யத்ரூபஸம்ச்ரயாத்।
ஸாதயாமாஸ கார்யாணி ஸதாம் தஸ்யை ச்ரியை நம: ॥ 1

दशसु अपि अवतारेषु = பத்து அவதாரங்களிலும்
यत्-रूप-संश्रयात् = எவளது வடிவம் சேர்ந்ததால்
देवः = தேவன்
सतां = நல்லோர்களின்
कार्याणि = கார்யங்களை
साधयामास = நிறைவேற்றினாரோ
तस्यै = அந்த
श्रियै = ஸ்ரீ தேவிக்கு
नमः = நமஸ்காரம்.

பகவானின் அநேக அவதாரங்களில் மத்ஸ்யாவதாரம் முதல் கல்கியவதாரம் வரையிலான பத்தும் தசாவதாரங்கள் என்று ப்ரஸித்தி பெற்றவை. இந்தப் பத்து அவதாரங்களிலும் லக்ஷ்மியின் துணை கொண்டுதான் கார்யங்களைச் ஸாதிக்கிறார் பகவான். அத்தகைய லக்ஷ்மிக்கு வணக்கம். தசஸ்வபி என்பதில் அபி என்றதன் கருத்து என்னவென்றால் ஒன்று விடாமல் பத்து அவதாரங்களிலும் லக்ஷ்மியை ஆச்ரயித்தே நற்கார்யங்கள் கைகூடின என்பதாம்.

தேவ: என்றதிலும் ஒரு கருத்து உண்டு. விளையாடுபவன் என்று அர்த்தம். அவதாரங்கள் எல்லாம் அவனது லீலைகளே.

ஸதாம் என்றதன் கருத்து என்னவென்றால், நல்லோரைக் காப்பதே இவ்வவதாரங்களின் முக்ய நோக்கம் என்பது. துஷ்டர்களைக் கொல்வது கூட இரண்டாம் பக்ஷம் தான்.

யத்ரூப ஸம்ச்ரயாத் என்பதற்கு இரண்டு விதமாக அர்த்தம் சொல்லலாம். லக்ஷ்மியாகிற அவலம்பம் (பற்றுக்கோல்) இருப்பதால் என்று ஒன்று. லக்ஷ்மியின் வடிவத்தைப் பற்றியதால் என்று இன்னொன்று.

ஸத்கார்யங்கள் பண்ணுவதில் பகவானுக்கு லக்ஷ்மியின் ஸம்ஸ்ரயம் இருப்பதாகச் சொன்னதில் பல உட்கருத்துகள் உள்ளன. அவள் பரிந்துரைப்பதால் தான் ஸத்துகளின் கார்யங்களைப் பகவான் நிறைவேற்றுகிறான் என்பது ஒன்று. ஶக்தி ஸ்வரூபிணியான அவளால் தான் அச்செயல்களை பண்ணி முடிக்கும் வல்லமை பெறுகிறான் என்பது இரண்டாவது. ஸாது பரித்ராணம் என்பது ஒரு யாக தீக்ஷை போல் இருப்பதால், அதில் பத்நியின் பங்கு இன்றியமையாததாகிறது என்பது மூன்றாவது. அவனுடைய அவதார லீலைகளுக்கு ரஸம் கூட்டுபவள் லக்ஷ்மி என்பது நான்காவது. இப்படிப் பல காரணங்களால், லக்ஷ்மி ஸம்பந்தத்தால் பகவானுக்கு அவதார பலஸித்தி ஏற்படுவதாகச் சொல்கிறார்.

தேவியும் உடன் சேர்ந்ததனால் தான்
தேவன் நற்பணி சாதித்தான்.

* * *

2. அருட் பெருக்கை அளித்தவள்.

देवि ! त्वया लब्धदयारसेन देवेन मात्स्यं वपुराश्रितेन ।
आश्चर्यमष्टश्रुतिरप्यनष्टश्रुतित्वमापद्यत पद्मजन्मा ॥ २

தேவி த்வயா லப்ததயாரஸேந
தேவேந மாத்ஸ்யம் வபுராஶ்ரிதேந ।
ஆஶ்சர்யமஷ்டஶ்ருதிரப்யநஷ்ட-
ஶ்ருதித்வமாபத்யத பத்மஜந்மா ॥

देवि ! = ஸ்ரீதேவியே !

त्वया = உன்னால்

लब्ध-दया-रसेन = அருள் ரஸத்தை அடைந்தவரும்

मात्स्यं वपुः = மீன் வடிவத்தை

आश्रितेन = அடைந்தவருமான

देवेन = தேவனான பகவானால்

पद्मजन्मा = தாமரையில் தோன்றிய பிரமன்

अष्ट-श्रुतिः अपि = எட்டு - காதுக்காரன் ஆனாலும்

अनष्टश्रुतित्वं = 1. எட்டு காதுக் காரனாய் இல்லாமையை. 2. வேதத்தைத் தொலைத்தவனாய் இராமையை

आपपात = அடைந்தான் आश्चर्यं = (இது) ஆம்சர்யம்.

மத்ஸ்ய அவதாரத்தில் பகவான் ப்ரஹ்மதேவனுக்குத் தொலைந்து போன வேதங்களை மீட்டுக் கொடுத்தான். இப்படிப் ப்ரஹ்மாவுக்கு உதவுவதற்காக மீனாய் அவதரிக்கும் அளவுக்குப் பகவானுக்கு அருள் சுரக்கக் காரணமானவள் லக்ஷ்மி.

ப்ரஹ்மாவை அஷ்டம்ருதி என்கிறார். அவருக்கு நான்கு தலைகள் இருப்பதால் நான்முகன், சதுராநநன், என்றெல்லாம் பெயர் உண்டு. நான்கு தலைகள் இருந்தால் எத்தனை காதுகள் இருக்கும்? ஒவ்வொரு தலைக்கும் இரண்டு காதுகள் வீதம் மொத்தம் நாலிரண்டு எட்டு காதுகள் இருக்கும் அல்லவா? அதனால் தான் அவரை அஷ்டம்ருதி என்கிறார். ம்ருதி என்றால் காது என்று அர்த்தம். இதற்கடுத்து, அநஷ்டம்ருதி என்ற பதத்தில் இரு பொருட் சுவை இருக்கிறது. ஆதி இல்லாதது அநாதி; அந்தம் இல்லாதவன் அநந்தன்; அங்கம் இல்லாதவன் அநங்கன்; இதெல்லாம் போல் அஷ்டம்ருதி இல்லாதவன் அநஷ்டம்ருதி என்று சொல்லாய்வாளர் சொல்வர். இந்தப் பதத்தையே அ-நஷ்ட-ம்ருதி என்று பிரித்து, ம்ருதி என்பதற்கு வேதம் என்ற ப்ரஸித்தமான அர்த்தத்தை ஏற்றால், வேதத்தைத் தொலைக்காதவன் என்று அர்த்தம் கிடைக்கும். அஷ்டம்ருதியான (எட்டுக் காதுக் காரனான) ப்ரஹ்மா நஷ்டம்ருதியானபோது (வேதங்களைத் தொலைத்த பொழுது) வேதங்களை மீட்டுக் கொடுத்து, அவனை அநஷ்டம்ருதியாக ஆக்கினார் பெருமான். அஷ்டம்ருதியானவனே அதற்கு எதிராக அநஷ்ட ம்ருதியானான் என்று முரண்பாட்டுத் தோற்றம் (விரோதாபாஸம்). அதனால் ஆம்சர்யம் என்கிறார். வேறு அர்த்தம் புரிந்த பிறகு விரோதமில்லை என்று தெரிகிறது.

எட்டுக்காதன் என்கிறவன் எதிராய் மாறிப்போய் விட்டான்.
எதனாலென்றால் மீன் தேவன் எழில்மறை மீட்டுத் தந்திட்டான்.

ஶ்ருதி என்ற பதத்துக்கு, வேதம் என்றும், காது என்றும் இரண்டு அர்த்தங்கள் இருப்பதைக் கொண்டு, வேடிக்கைகள் பண்ணுவது பல கவிகளின் வழக்கம். இந்த ஸ்தபகத்தில் மறுபடியும் கல்கி அவதாரத்தை வர்ணிக்கும்போது இந்த வார்த்தையில் வேடிக்கை தொடர விருக்கிறது.

ரஸம் என்ற பதத்திலும் வேடிக்கை இருப்பது கூர்ந்து கவனித்தால் தெரியும். ரஸம் என்றால் சாறு என்றும் ஸாரம் என்றும் பொருள் கொண்டு, தயாரஸத்தால் மத்ஸ்யமூர்த்தி உதவினார் என்று அர்த்தம் சொன்னோம். இதோடு நிறுத்தாமல் வேறொன்றும் சொல்லலாம். ரஸம் என்றால் ஜலம் என்றும் அர்த்தம். இது மீனுக்கு இன்றியமையாத வஸ்து. மத்ஸ்யாவதாரத்துக்குத் தேவையான தயை என்னும் ஜலம் இவளால் கிடைத்ததாம்; **த்வயா லப்த தயா ரஸேந** என்கிறார் இதை. இதற்கு முன் ஶ்லோகத்தில் ஒவ்வொரு அவதாரத்திலும் லக்ஷ்மியை அவலம்பித்ததாகச் சொன்னது, ரஸம் என்பதற்கு ஜலம் என்று அர்த்தம் சொல்லும்போது தெளிவாகிறது. இந்த ரஸம் இல்லாமல் மீன் வாழவே முடியாதே, தேவியே!

அயனுக்கருளிட மீன் அவதாரம்.
அதற்கும் உன்னால் நீர் ஆதாரம்.

இது தவிர ரஸம் என்பதற்கு வேறொரு அர்த்தமும் இங்கு பொருந்துகிறது. ரஸவித்தை, ரஸவாதம், முதலிய பதங்களில் பார்க்கலாம். இரும்பைத் தங்கமாக்குவது போன்ற ஆஶ்சர்யங்களை விளைவிப்பது ரஸம் என்கிற வஸ்து. இங்கு அஷ்டஶ்ருதியை அநஷ்டஶ்ருதியாக ஆக்கும் ஆஶ்சர்யத்துக்கு எந்த ரஸம் காரணமாயிற்று என்றால், லக்ஷ்மியாலே பெருமாளுக்குக் கிடைத்த **தயாரஸம்** என்கிறார். ரஸத்தினாலே மத்ஸ்யமூர்த்தியாலே ப்ரஹ்மாவுக்கு வேதம் கிடைத்தது என்று இந்தத் தாத்பர்யத்திலும், ரஸமடைந்த மத்ஸ்யமூர்த்தியாலே ப்ரஹ்மாவுக்கு வேதம் கிடைத்தது என்று போன தாத்பர்யத்திலும், கொள்ளவேண்டும். ரஸேந

என்றது கரணத்தில் த்ருதீயையா, விஶேஷணமானதால் த்ருதீயையா என்பதில் இவ்விரு தாத்பர்யங்களிலும் வேறுபாடு இருக்கிறது.

3. மீட்கின்ற மீன்கண்ணாள்

भूयिष्ठां तव दृष्टिरेव कमले ! भूतिं चिरात्प्रोषितां
भूयोऽप्यानयति क्षणादिति नृणां व्यक्तं घृणावारिधिः ।
देवस्तावकदृष्टिरूपमनघं मीनावतारे वहन्
धात्रेऽदत्त सतां श्रियं श्रुतिमयीं दैत्योपनीतां पुनः ।। ३

பூயிஷ்டாம் தவ த்ருஷ்டிரேவ கமலே ! பூதிம் சிராத் ப்ரோஷிதாம்
பூயோऽப்யாநயதி க்ஷணாதிதி ந்ருணாம் வ்யக்தம் க்ருணாவாரிதி: ।
தேவஸ்தாவகத்ருஷ்டிரூபமநகம் மீநாவதாரே வஹந்
தாத்ரேऽதத்த ஸதாம் ஶ்ரியம் ஶ்ருதிமயீம் தைத்யோபநீதாம் புந: ॥ 3

कमले = கமலையே !
भूयिष्ठां = மிக அதிகமானதும்
चिर-प्रोषितां = வெகுகாலம் தொலைவில் சென்றதுமான
भूतिं = செல்வத்தை
तव = உன்னுடைய
दृष्टिः एव = விழியே
क्षणात् = நொடிப் பொழுதில்
भूयः अपि = மீண்டும்
आनयति = கொண்டு வருகிறது
इति = என்று
नृणां = மனிதர்களுக்கு
व्यक्तं = நன்கு தெரியும்.

घृणा-वारिधिः = கருணைக் கடலான
देवः = தேவன் பகவான்
तावक-दृष्टि-रूपं = உன்னுடையதான விழியின் வடிவை
मीन-अवतारे = மீன் அவதாரத்தில்
वहन् = வஹித்துக் கொண்டு
सतां = நல்லோருக்கு
श्रियं = செல்வமானதும்
दैत्य – अपनीतां = அஸுரனால் அபஹரிக்கப்பட்டதும்
श्रुति-मयीं = வேதமயமானதுமானதை
धात्रे = ப்ரஹ்மாவுக்கு
पुनः = மறுபடியும்
अदत्त = கொடுத்தார்.

தாமரையாளே! மீன் போன்ற உனது விழி, இழந்த செல்வத்தை மீட்டுத் தரும் என்பது ஊரறிந்த உண்மை. இதே போல இழந்த செல்வமான வேதத்தைப் பெற்றுத்தர, பகவான் மீனாகவே பிறந்து ப்ரஹ்மாவுக்கு மீட்டுத் தந்தது பொருந்துகிறது.

மீன் போன்ற வடிவாலே மீட்கும் உன் கண் போலே
மீனான படியாலே மீட்டான் நான்மறை மாலே.

பெருமாள் ஏன் மீனாய்ப் பிறந்தார்? ப்ரஹ்மாவுக்கு வேதம் தொலைந்து போயிற்று; யாரோ ஒரு அஸுரன் திருடிக் கொண்டு விட்டான். பெருமாளிடம் முறையிட்டார். வேதம் என்பது நல்லவர்களின் செல்வம்; வேதமே சொன்ன உண்மை இது. (இதற்குப் பின் ஒரு ஶ்லோகத்தில் இது குறித்து விளக்கப் போகிறார்). செல்வம் பறிபோனால் மீட்பது எப்படி? இந்த விஷயத்தில் திறமைஶாலி லக்ஷ்மி தான். எனவே அவளைப் பார்த்து இதைக் கற்றுக் கொள்ள முற்பட்டார் பெருமாள். அவளைக் கூர்ந்து கவனித்தார். அவள் எப்படிச் செல்வத்தைப் பலருக்கும் வரவழைத்துத் தருகிறாள் என்பதைக் கவனமாகப் பார்த்தார். அவள் கண் பார்வை போன இடத்திலெல்லாம் செல்வம் புரள்கிறது. மீன் போன்றவை அவளுடைய கண்கள். மீன் வடிவத்துக் கண்களால் அவள் நிகழ்த்தும் அற்புதங்களை அறிந்து கொண்டார். சரி, நாமும் மீன் வடிவம் எடுத்துக் கொண்டால் செல்வமாகிற வேதத்தை மீட்டுத்தர முடியும் என்று கணக்குப் போட்டார். மத்ஸ்ய அவதாரம் எடுத்தார். வேதங்களை மீட்டார். திருப்பிக் கொடுத்தார் ப்ரஹ்மாவுக்கு. இது கவியின் உத்ப்ரேக்ஷை!

திருமாலே மீனானார்.	திருவின் கண் போலானார்.
திருவாகும் மறை தன்னைத்	திருடிட்ட தீயவனை
திறமையால் வென்றிட்டார்.	திரும்ப அவர்க்களித்திட்டார்.

21. தசாவதார ஸ்தபகம்

இந்த ச்லோகத்தில் நாம் அறியும் நீதிகள்: தகுதி உள்ளவரைத் தலைக்கு மேல் தூக்கி வைத்துக் கொள்வதும், தடைகளைத் தகர்த்தெறிவதும், தாமதமின்றிச் செயல் புரிவதும், தானே முன்வந்து உதவுவதும், நல்ல பண்புகளாகும். வராஹாவதாரத்தில் இப்படிப் பண்ணினதாக, சிரஸி, ஹதாமராரி, அசிராத், ஸ்வயம், என்ற பதங்களால் கவி தெரிவிக்கிறார்.

மலராளை மார்பில் தாங்கியது போதாதென்று அவள் அம்சமான பூமியைத் தலையிலும் தாங்கினாரா என்ன என்பது கவியின் உத்ப்ரேக்ஷை.

ஸரஸிஜ நிலயப் பெண்ணை உரஸ்ஸினில் வைத்த பின்னை
சிரஸ்ஸினில் பூமியன்னை அரசியை வைத்தார் என்னை?

7. தங்கையான தரணியைத் தாங்கப் பண்ணினவன்.

वैतेयेन बलात् पयोधिजठरं देवी मही प्रापिता
मातस्ते स्वसृभावमेव यदगादेकोदरस्थानतः ।
तस्मादेव कृतादरेण तरसा दामोदरेण स्वयम्
दध्रेऽसौ कुहनावराहवपुषा देवेन दंष्ट्राञ्चले ।। ७ ।।

मातः அம்மாவே!, वैतेयेन அஸுரனால், बलात् பலாத்காரமாக, पयोधि- जठरं கடலின் வயிற்றை, प्रापिता அடைவிக்கப்பட்ட, देवी मही பூமிதேவியானவள், एक -उदर- स्थानतः ஒரே வயிற்றில் இடத்தால், ते உனக்கு, स्वसृ- भावं एव தங்கைத் தன்மையையே यत् எதனால், अगात् அடைந்தாளோ, तस्मात् एव அந்தக் காரணத்தாலேயே, कृत - आदरेण ஆதரவு பண்ணினவரும் तरसा வேகத்தோடு, कुहना - वराह - वपुषा மாயப்பன்றி வடிவம் கொண்டவருமான, दामोदरेण தாமோதரன் என்கிற देवेन தேவனா

லே, दंष्ट्राञ्चले பல்லின் முற்பகுதியில், असौ இவள், स्वयं தானே दधे தாங்கப்பட்டாள்.

அம்மாவே! வராஹப் பெருமான் பூமிதேவியைத் தாங்குவதற்கு இன்னொரு காரணமும் தோன்றுகிறது. அவருக்கு உன் மேல் உள்ள காதல் காரணமாக உன்னைச் சேர்ந்தவரிடமும் மதிப்பு மேலிடுகிறது. பூமிதேவி ஒரு விதத்தில் உனக்குத் தங்கையானவள். எப்படியென்றால் நீ கடலரசனின் பெண். பூமிதேவியும் கடலுக்குள் அமிழ்த்தப்பட்டபோது, அவளும் கடலின் வயிற்றில் இருந்தவள். ஒரே வயிற்றிலிருந்து வெளிவந்தபடியால் நீங்கள் இருவரும் ஸஹோதரிகள். இந்தக் காரணத்தினாலேயே பகவானுக்குப் பூதேவியை மிகப் பிடிக்கும்.

உததி தனில் உதித்தவளே! ஒருநாத்து இருப்பாளே
உனக்குந்தப் பார்மகளே உடன்பிறந்தாள் ஆனாளே.

இந்தக் காரணத்தால் பூமியை அவர் மிகவும் ஆதரிப்பவரானார். வராஹாவதாரம் எடுத்து, பல்முனைப்பில் பூமியைத் தரித்தார். அவளுக்கு இப்படி உந்நத ஸ்தானத்தை வழங்கியதற்குக் காரணம் அவளுக்கும் உனக்கும் உள்ள உறவுமுறை தான். தாயாருக்கு உறவென்றால் தாமோதரன் தாங்கிப் பிடிப்பார்.

இந்த ச்லோகத்து நீதிகள் சில:

1. சில நல்லோரை எதிர்த்துப் பொல்லாப்பு பண்ணினாலும் அது அவர்களுக்கு நன்மையிலேயே முடியும். ஹிரண்யாக்ஷன் என்கிற அஸுரன் பூதேவிக்குத் தீங்கு செய்ய முற்பட்டான். அவளைக் கடலுக்குள் அமிழ்த்தினான். இது இறுதியில் அவளுக்கு நன்மையாகவே முடிந்தது. ஒரு விதத்தில் அவளைத் தாயாரின் தங்கையாக ஆக்கிவிட்டான் அந்த அஸுரன், தன்னையும் அறியாமல். அதனால் பெருமாள் வராஹாவதாரம் எடுத்து அவளைத் தாங்கினார். நல்லவர்க்கு இழைக்கப்படும் அநீதி அவர்களுக்கு மேலும் நன்மையை ஏற்படுத்தும்.

2. இறைஞுபவர்க்கு உதவி செய்வதில் தாமதம் கூடாது. பூதேவியின் துன்பத்தைக் களைவதற்குப் பகவான் வேகமாக வராஹ வடிவெடுத்தார்.

3. ஸத் காரியங்களைத் தானே பண்ணுவதற்கும், பிறர்மூலம் செய்விப்பதற்கும் வாசியுண்டு. சிறந்தவரைப் பாராட்டும்போது தானே நேரடியாகப் பாராட்டவேண்டும். மற்றவர் மூலம் கொண்டாடச் செய்தால் போதாது. பூதேவியை வராஹப் பெருமாள் தானே தாங்குகிறார்.

தாயே! உன் தங்கையென்றே தம்ஷ்ட்ரத்தால் தாங்கவென்றே
தான் ஆனார் பன்றியென்றே தாமோதரன் முயன்றே.

ஜடரம் என்றதன் கருத்து, எப்பொழுதுமே கடல் சூழ்ந்திருக்கும் பூமியைக் கடலின் வயிறு என்னத்தக்க உட்பகுதிக்குள் அமிழ்த்திவிட்டான் என்பதாம்.

தரஸா என்ற பதத்துக்கு இரண்டு அர்த்தங்களும் இங்கு பொருந்தும். பலத்துடனும் வேகத்துடனும் என்று. பூமியைத் தாங்க வேகத்தையும் வலிமையையும் காட்டினார். மிகப்பெரிய பூமியை இடந்து எடுப்பதும் தூக்கி வைத்துக் கொள்வதும் எளிய செயலா என்ன?

தஸ்மாதேவ என்ற பதங்களின் கருத்து, ஸ்ரீதேவிக்குத் தங்கையான காரணத்தால்தான் இவ்வளவு ஆதரம் காட்டினார் என்பதாம். இல்லாவிடில் பார்மகள் கடலுள் அமிழ்வதற்கு முன்னம் பூமியை மணந்தாரா? பூவராஹன் ஆனாரா? எல்லாம் அவள் கடலின் வயிற்றை அடைந்த பிறகு தானே நடத்தினார்? உன் தங்கை ஆவதற்கு முன் இந்த ஆதரவைக் காட்டவில்லையே? இதனால் நாங்கள் ஊஹிக்கிறோம் – பெருமாள் பூமியிடம் காட்டிய ஆதரவுக்கு, அவள் உன் தங்கையானதே காரணமென்று. குஹநா என்ற பதத்தின் கருத்து. பகவானின் அவதாரமென்பது வேஷமும் அபிநயமும் மட்டுமேயன்றி உண்மையாகச் ஸுகதுக்கங்களும் வெற்றி தோல்விகளும் பெறுவதற்காக அல்ல

என்பதாம். ஸ்வயம் என்ற பதத்தின் கருத்து, தானே முன் வந்து பூமியை வஹித்தார் என்பதாம்; தன் விருப்பம் அல்லவா இதனால் நிறைவேறுகிறது? பிறர் துணையின்றி என்பதுமாம். அஞ்ஜஸே என்றதன் கருத்து, தான் அப்படித் தரணிதேவியைத் தாங்குவதை ஊர் உலகு அறியும்படி, வெளிப்படையாகப் பண்ணினார் என்பது. ஒளிவு மறைவு எதுவும் இல்லை.

மஹியும் நீயும் ஏகோதரத்தென்றே.
மதித்து வஹித்தார் தாமோதரன் அன்றே.

8. சிங்கரின் சினத்தைத் தணித்தவள்.

पद्मे चक्रभृतो नृसिंहवपुषः प्रह्लादसंक्लेशन –
क्रूरापुण्यहिरण्य देह दलनावेलातिवेलोदयः ।
रोषाग्निश्शमितस्त्वया बत पयोराश्येकशोष्योऽपि तत्
पुत्र्या शक्तिरुदेति कारणगता प्रायेण कार्येष्वपि ॥ ८ ॥

பத்மே சக்ரப்ருதோ ந்ருஸிம்ஹவபுஷ: ப்ரஹ்லாத ஸங்க்லேசந
க்ரூராபுண்யஹிரண்ய தேஹ தலநா வேலாதிவேலோதய: |
ரோஷாக்நிச் சமிதஸ் த்வயா பத பயோராச்யேகசோஷ்யோऽபி தத்
புத்ர்யா சக்திருதேதி காரணகதா ப்ராயேண கார்யேஷ்வபி ||8||

पद्मे *தாமரையாளே!* चक्रभृतः *சக்ராயுதத்தை ஏந்திய* नृ - सिंह - वपुषः *நரஸிம்ம உருவம் கொண்டவருடைய* प्रह्लाद - संक्लेशन - क्रूर - अपुण्य - हिरण्य - देह - दलना - वेला - अतिवेल - उदयः *ப்ரஹ்லாதனைத் துன்புறுத்தும் கொடும்பாவியான ஹிரண்யனுடைய தேஹத்தைப் பிளக்கும் வேளையில் பொங்கியெழுகிற,* रोष - अग्निः *கோபக் கனல்* पयो - राशि - एक - शोष्यः अपि *கடலால் மட்டுமே தணிக்கக் கூடியதானாலும்,* तत् - पुत्र्या *அந்த ஸமுத்திரத்தின் பெண்ணான* त्वया *உன்னால்,* शमितः *அணைக்கப்பட்டது* बत *ஆச்சர்யம்.* कारण - गता *காரணவஸ்துவில் உள்ள* शक्तिः *ஆற்றலானது,* प्रायेण *பெரும்பாலும்* कार्येषु अपि *தன் கார்யவஸ்துக்களிலும்* उदेति *உண்டாகிறது.*

பத்மையே! (இதுவரை பார்த்த மூன்று அவதாரங்களில் போலன்றி) அதற்கடுத்ததான நரஸிம்மாவதாரத்தில் உன் பங்கு அதிகமாகவே இருக்கிறது- ஹிரண்யகசிபுவைக் கொன்றபிறகு நரஸிம்மருக்குப் பொங்கியெழுந்த கோபத்தை உன்னால் மட்டுமே தணிக்க முடிந்தது.

சக்ரப்ருத: என்ற பதம், சக்ராயுதம் இருந்தும் கூட அதை உபயோகிக்காமல் ஹிரண்யகசிபுவின் உடலை நகங்களால் பிளந்ததை நினைவுறுத்துவதற்காக.

ந்ருஸிம்ஹவபுஷ: என்ற பதம், மேல்பாதி சிங்கமும் கீழ்ப்பாதி மனிதனுமான ஆச்சரியமானதொரு சரீரத்தைக் குறிப்பதற்காக.

ப்ரஹ்லாத லக்லேசாத க்ரூர என்றதன் கருத்து என்ன வென்றால், மலையிலிருந்து உருட்டுதல், கடலில் மூழ்கடித்தல், விஷம் உண்ணச் செய்தல், பாம்புகளால் கடிப்பித்தல், முதலிய கொடூரச் செயல்களைச் செய்தவன் ஹிரண்யன் என்பதாகும்.

தேஹ தளநா என்றது, தலையறுத்தல், அம்பால் துளைத்தல், கதாயுதத்தால் அடித்தல், என்றவையெல்லாம் இல்லாமல் உடலை நகத்தால் பிளந்தே கொன்றுவிட்ட கதையைக் கூறுவதாம்.

வேலா என்ற சொல்லில் சிலேடை இருக்கிறது. பொழுது என்றும் கரை என்றும் இரண்டு அர்த்தங்கள். நரஸிம்மரின் கோபம் வேளையில் வந்ததா, வேலம் தாண்டி (கரைகடந்து) வந்ததா என்றால், இரண்டும் தான். பிளக்கும் வேளையில் வேலாதீதமாக வந்தது.

அதிவேல என்றதன் கருத்து, அந்தக் கோபம் அளவுக்கதிக மாய், மிதமிஞ்சி, கரைகடந்து, வரம்பு மீறிக் கட்டுக்கடங்காமல், பொங்கியெழுந்தது என்பதாம்.

ரோஷவஹ்நி என்றதன் கருத்து, கோபத்தால் நெருப்பு போல் பொறி தெறிப்பதாலும், நெருப்பு போல் உக்ரமானதாலும், நெருப்பு போல் நெருங்க முடியாததாலும், நெருப்பு போல் அழிக்க வல்லதாலும்; ரோஷமாகிற நெருப்பு என்று உருவகப் படுத்துவதாம்.

சமித என்ற பதத்தின் கருத்து. அந்தக் கோபக்கனல் தணிக்கப் பட்டது. அணைக்கப்பட்டது, அடக்கப்பட்டது, ஆற்றப்பட்டது, என்பதாம். உக்கிர நரஸிம்மரை நெருங்க முடியாமல் தேவர்கள் உட்பட எல்லாரும் பயப்பட்ட போது, லக்ஷ்மி அவரை நெருங்கி அவரது மடியில் அமர்ந்து, அவரை லக்ஷ்மீ நரஸிம்மராக்கி, ஆறுதல் வார்த்தைகளைப் பேசி, குழைந்து. கெஞ்சி, கொஞ்சி, குலாவி கோபத்தைத் தணிய வைத்த கதை புராணங்களில் ப்ரஸித்தம்.

பயோராஸ்யேவ, கடலால் மட்டுமே, என்றதன் கருத்து என்னவென்றால் இது; குறைந்த நெருப்பானால் கொஞ்சம் ஜலத்தால் அணைக்க முடியும்; ஆனால் நரஸிம்மரின் கோபத் தீ மிக அதிகமானதால், ஸமுத்ரஜலம் மொத்தம் கொட்டினால்தான் அது தணியும் என்பதாம்.

அதிக கோபக்கனல் அணைக்கக் கடலின் புனல்.

தத்புத்ர்யா என்றதன் கருத்து, எந்த ஸமுத்ரம் முழுதுமாக தீயணைக்கத் தேவைப்படுமோ, அந்த ஸமுத்ரத்தின் திறமையை யெல்லாம் எடுத்துக் கொண்டு ஸமுத்திரத்தின் மகளாக இதற்கு முன்னமேயே அவதரித்திருக்கும் உன்னாலன்றி இப்பணி நிறைவேறாது என்பதாம்.

கடலுக்குத் தீயை அணைக்கும் ஆற்றல்.
கடற்கன்னி அணைத்துச் சினத்தை ஆற்றல்.

(ஆற்றல் என்றால் திறமை என்றும் ஆறப்பண்ணுதல் என்றும் அர்த்தங்கள்; அணைத்தலுக்கும் நெருப்பில்லாமல்

பண்ணுதல் என்றும் ஆலிங்கனம் பண்ணுதல் என்றும் இரண்டு அர்த்தங்கள்.) ப்ராயேண என்ற பதத்தின் கருத்து இது; பெரும்பாலும் காரணவஸ்துவின் தனித்திறன் அதிலிருந்து உண்டான வஸ்துவிலும் இருக்கும். ஆனாலும், சில இடங்களில் இதற்கு விதிவிலக்கும் உண்டு என்பதாம். இந்தக் கதையையே எடுத்துக் கொள்ளுங்களேன். ஸமுத்திரத்துக்கு லக்ஷ்மி போலத்தான் ஹிரண்யனுக்கு ப்ரஹ்லாதன். ஆனால் அப்பாவுக்கும் பிள்ளைக்கும் ஸ்வபாவத்தில் எத்தனை வேறுபாடு? அப்பா விஷ்ணுத்வேஷி; பிள்ளை விஷ்ணுபக்தன். அப்பா கொடியவன்; பிள்ளை மென்மையான பண்பு கொண்டவன். இப்படி எவ்வளவோ!

காரணமும் கார்யமும் என்றதன் அர்த்தம் என்னவென்பதை உதாரணங்களின் மூலம் பார்க்கலாம். குடம் என்னும் கார்ய வஸ்துவுக்கு மண் என்பது காரணவஸ்து. துணி என்னும் கார்ய வஸ்துவுக்கு நூல் என்பது காரண வஸ்து. காரணவஸ்துவிலிருந்து உண்டாவது கார்யவஸ்து. ஸமுத்திரத்திலிருந்து திருமகள் உண்டானதால் ஸமுத்ரம் காரணம், லக்ஷ்மி கார்யம் என்கிறார்.

காரணத்துக்குள்ள குணமும் திறனும் கார்யத்துக்கு வரும் என்பதை நாம் பல இடங்களில் பார்க்கிறோம். விதை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா? புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? முதலிய பழமொழிகளில் காணும் பேருண்மை இது. காரணவஸ்துவுக்குள்ள திறமைகள் கார்ய வஸ்துவிலும் காணப்படுவது இயல்பு.

இந்தப் பொது நியதியைச் சொல்லி, தற்பொழுதைய திருஷ்டாந்தத்தில் பொருந்தும்படிப் பொதுவாகப் பேசுவதற்கு வேற்றுப்பொருள் வைப்பணி என்று பெயர். கடல் நீர் மொத்தம் கொட்டினால் அணைக்கக்கூடிய பெருந்தீயைக் கடலின் மகளான லக்ஷ்மியால் அணைக்க முடிந்தது. பெருந்தீயை அணைக்கும்

ஆற்றல் கடலுக்குள்ளது கடலிலிருந்து உண்டான லக்ஷ்மிக்கும் அமைந்து விட்டது என்று சமத்காரம் பண்ணுகிறார். கரும்பின் இனிப்பு வெல்லத்தில் வருவது போலவும், பராசரரின் ஜ்ஞானமும் வ்யாஸருக்கும் வந்தது போலவும், காரணத்தின் சக்தி கார்யத்துக்கு வருவது பொதுவிதி; அதன்படி கடலின் நியமிக்கும் திறன் லக்ஷ்மிக்கு வந்து விட்டது என்கிறார்.

அசுரனுக்கதிகம் த்வேஷம் அவன் வெகுளலுக்கு ஆணி வேஷம்.
அளவை மீறிய ரோஷம் அடக்கத் திருமகள் நேசம்.

9. ஹிரண்யனைக் கொன்றவன் மடியில் ஹிரண்யவர்ணையானவள்.

शरण्यभूतां श्रुतिरिन्दिरे यां हिरण्यवर्णां हरिणीमभाषीत्।
सा दिव्यसिंहस्य हिरण्यभेत्तुः निश्शङ्कमङ्के रमसे कथं त्वम्॥९॥

சரண்ய பூதாம் ச்ருதிரிந்திரே யாம்
ஹிரண்யவர்ணாம் ஹரிணீமபாஷீத் |
ஸா திவ்யஸிம்ஹஸ்ய ஹிரண்யபேத்து:
நிச்சங்கம் அங்கே ரமஸே கதம் த்வம் ||9||

இந்திரையே! உன்னைப் பற்றி வேதம் ஓதும்போது மூன்று உண்மைகளைச் சொன்னது. நீ ஹிரண்யவர்ணம் கொண்டவள் என்பது ஒன்று- நீ ஹரிணி என்பது இரண்டாவது. நீ புகலானவள் என்பது மூன்றாவது. இங்கே நரஸிம்மாவதாரத்தில் உன் பங்கைப் பார்த்தால் இந்த மூன்றில் இரண்டுக்கு எதிர்த்தட்டாக இருக்கிறது. ஹிரண்யவர்ணாம் என்றும் யஸ்யாம் ஹிரண்யம் விந்தேயம் என்றும் ஸ்ரீஸூக்தம் உன்னை ஹிரண்ய நிறத்தவளாகவும், ஹிரண்யம் தருபவளாகவும் ஓதியதற்கு நேர்மாறாக, ஹிரண்யனைக் கொன்றவன் மடியில் மகிழ்கிறாய். ஹிரண்யம் என்றால் தங்கம்; ஹிரண்யன் என்பவன் அஸுரன். இது ச்லேடைக்கு வழி வகுத்துவிட்டது.

மேலும் ஹரிணி என்ற சொல்லுக்கு ஹரிபத்நீ என்றும் பெண்மான் என்றும் இரண்டு அர்த்தங்கள். உன்னை ஹரிணீ என்று ஸ்ரீஸூக்தம் ஓதியது. அதன்படி நீ பெண்மானானால், சிங்கத்தைக் கண்டதும் ஓட்டம் பிடிக்கவேண்டாமோ? நரசிங்கரின் மடியில் பயமில்லாமல் உட்கார்ந்து மகிழ்வது எப்படி? புரியாத புதிராக இருக்கிறதே!

ஶரண்யபூதாம் என்றதன் கருத்து, ஶரணமஹம் ப்ரபத்யே என்ற ஸ்ரீஸூக்த வாக்கியத்திலிருந்து தெரிவது. நமக்கெல்லாம் புகலானவள், அடைக்கலம் அளிப்பவள், சரணடையத்தக்கவள், என்பது. ஶ்ருதி என்ற பதத்தின் கருத்து, தவறே சொல்லாத வேதத்தின் பகுதியான ஸ்ரீஸூக்தத்தில் "ஹிரண்ய- வர்ணாம் ஹரிணீம்" என்று தொடக்கத்திலேயே ஓதியிருப்பதால், அதை மறுப்பதற்கில்லை என்பது. ஹிரண்யபேத்து: என்ற பதத்தின் கருத்து, ஹிரண்யத்தை வாரி வழங்கும் தாயாருக்கு நேர்மாறாக, ஹிரண்யனைக் கீறிக் கொல்லும் நரஸிம்மரின் செயலைக் காட்டுவதற்காகவாம்.

நிஸ்ஸங்கம் என்ற பதத்தின் கருத்து, சீறும் சிங்கத்தின் மடியில் அச்சமே இல்லாமல் குட்டிமான் உட்காருமோ? அவ்வாறு அமரநேர்ந்தால் அஞ்சி நடுங்காதோ? என்பதாம்.

ரமஸே என்ற பதத்தின் கருத்து, பயப்படாதது மட்டுமின்றி ஆனந்தப்படவும் செய்கிறாய் என்பது. அவர் அங்கத்தில் அமர்வதில் அளவற்ற ஆனந்தம் அடைகிறாய். மாலோலனின் மடியில் மன்னிய மங்கையாகி மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறாய்.

கதம் என்ற கேள்வியின் கருத்து. எப்படி இது ஸாத்யமாகிறது உனக்கு? என்று வியப்புடன் வினவுவதாம். மான் போன்ற நீ மருளாமல் சிங்கமுகனின் மடியில் மகிழ்வது எப்படி?

கமலை நிறமோ தங்கம், கணவன் முகமோ சிங்கம்.
ஹரிணியின் இடம் அவர் அங்கம். அருமறைக்குண்டோ பங்கம்?

★★★

10. கடவுளையும் கட்டிப்போட்டவள்

अवनमेव सदा कलयन् गजव्यसनभङ्गकृदद्भुतकेसरी ।
हरिणलक्षणदृष्टिरयं त्वयाऽप्यबलयाम्ब गुणेन वशीकृतः ॥ १० ॥

அவநமேவ ஸதா கலயந் கஜ-
வ்யஸந பங்கக்ருதத்புதகேஸரீ।
ஹரிணலக்ஷணத்ருஷ்டிரயம் த்வயா-
ப்யபலயாம்ப! குணேந வஶீக்ருத: ।। 10

अम्ब- அம்மாவே! सदा- எப்பொழுதும் अवनं एव- 1.காடில்லாத இடத்தையே 2. காப்பாற்றுதலையே कलयन्- பண்ணுகிறவரும் गज-व्यसन-भङ्ग-कृत् யானையின் இடருக்கு அழிவைப் பண்ணினவரும், हरिण- लक्षण-दृष्टिः 1. மான் அடையாளம் கொண்ட சந்திரனைக் கண்ணாகக் கொண்டவரும் 2. மானைக் காப்பதில் நோக்கு கொண்டவரும், अबलया- 1. பெண்மகளான 2. பலஹீனமான त्वया अपि- உன்னால் கூட गुणेन- நற்குணத்தால் . கயிற்றால் वशीकृतः- வஶப்படுத்தப் பட்டவருமான अयं-இவர் अद्भुत- केसरी - அற்புதமான சிங்கம்.

தாயே! இந்த நரஸிம்மரை அற்புதச் சிங்கம் என்கிறார்களே, அது ரொம்ப சரி. இதற்கு நாலு காரணங்களைச் சொல்லலாம். பொதுவாகச் சிங்கம் பெரும்பாலான ஸமயங்களில் காட்டிலே யே வாஸம் பண்ணும். இந்த நரஸிம்மர் என்னும் சிங்கமோ அதற்கு நேர்மாறாக இருக்கிறது. வனத்தில் இருக்காமல் ஸதாஸர்வகாலமும் அவநத்திலேயே இருக்கிறது. அவநம் என்றால் காடில்லாத இடம் என்றும் ரக்ஷணம் என்றும் இரண்டு அர்த்தங்கள். நரஸிம்மர் ரக்ஷணம் (காப்பாற்றுதல்) பண்ணுவதால் எப்போதும் அவநத்தில் இருக்கிறார். இது முதல் அற்புதம். இரண்டாவதாக வழக்கமாகச் சிங்கங்கள் யானைகளை நடுநடுங்கவைக்கும். ஆனால் அதற்கு மாறாக, இந்த நரஸிம்மர்

என்கிற சிங்கமோ, முன்பொருகால் கஜேந்திரன் என்கிற யானைக்கு நேர்ந்த இடரைத் தீர்த்ததாம். சிங்கமாயிருந்தும் யானையின் துன்பத்தைத் தொலைத்தது இரண்டாவது அற்புதம். போதாக்குறைக்கு மான்களிடம் வழக்கத்துக்கு மாறாகச் செயல்படுகிறது. பொதுவாகச் சிங்கங்கள் மான்களைக் குத்திக் குதறும். இந்த நரஸிம்மர் என்னும் சிங்கமோ மான்களை ரக்ஷிப்பதில் நோக்கு கொண்டது. எதனால் இதை மான்-ரக்ஷண-நோக்கு கொண்டதாகச் சொல்கிறோம் என்றால், ரக்ஷணம் என்பதை லக்ஷணம் என்றும் சொல்லலாமாகையால், மான்-லக்ஷண-நோக்கு என்பதற்கு மானை அடையாளமாகக் கொண்ட சந்திரனைக் கண்ணாகக் கொள்ளல் என்று அர்த்தம் வரும்; நரஸிம்மருக்குச் சந்திரன் ஒரு கண் என்கின்றனர். எனவே அவர் மான்-ரக்ஷண- நோக்கம் கொண்டவராய், அற்புதச் சிங்கம் ஆகிறார். நாலாவதாக இன்னொரு அற்புதம். வலிமை மிக்க சிங்கத்தை வழிக்குக் கொண்டு வருவதோ, கட்டிப்போடுவதோ, அடக்கி ஆளுவதோ, மிகக் கஷ்டம். பலஶாலிகளால் மட்டுமே அவ்வாறு பண்ணமுடியும். அதுவும் பெரிய வலிய இரும்பாலான ஆயுதங்கள் மூலமே சிங்கத்தை நம் வஶத்துக்குக் கொண்டு வரமுடியும். ஆனால் இந்த நரஸிம்மர் என்கிற சிங்கமோ, இதற்கு நேர் மாறாக இருக்கிறது. அபலையான திருமகளால் வஶப்படுத்தப்படுகிறது. அபலை என்றால் ஸ்த்ரீ என்றும் வலிமையற்றவள் என்றும் இரண்டு அர்த்தங்கள். இந்த அபலையும் எப்படி இச்சிங்கத்தை வஶப்படுத்துகிறாள் என்று பார்த்தால், குணத்தால் ஈர்க்கிறாள். குணம் என்றால் நல்ல பண்பு என்றும் கயிறு என்றும் இரண்டு அர்த்தங்கள். கயிற்றால் வஶப்படுத்த முடியுமோ சிங்கத்தை? கயிற்றுக்கு வஶப்படுமோ சிங்கம்? ஆனால் இந்த அற்புதச் சிங்கம் குணத்துக்கு வஶப்படுகிறதே! இந்த நாலு காரணங்களாலும், நரஸிம்மரை அற்புதச் சிங்கம் என்று சொல்லவேண்டும்.

அவநத்தில் எண்ணத்தாலும், ஆனையைக் காத்ததாலும்,

அரிணாங்கன் நோக்கத்தாலும், அபலையால் அடக்கலாலும் அற்புதமாம் அந்தச் சிங்கம்.

லக்ஷ்மீஸஹஸ்ரத்தில் நரஸிம்மர் நான்கு காரணங்களால் அற்புதச் சிங்கமானதைச் சொல்வது எப்படிப் பொருந்தும் என்றால், லக்ஷ்மியின் குணத்துக்கு அவர் வஶப்பட்டதை நாலாவது காரணமாகச் சொல்லியிருப்பதால் இது லக்ஷ்மியைத் துதித்ததாகும்.

அவநமேவ ஸதா என்பதில் ஏவ என்றும் ஸதா என்றும் சொன்னதன் கருத்து வருமாறு: நரஸிம்மர் எப்போதும் ரக்ஷணமே பண்ணுகிறார். அவதாரகாலத்துக்கு முன்னமேயே தொடங்கி அவதாரத்துக்குப் பிறகு வரை ப்ரஹ்லாதனை ரக்ஷித்தார். கோவில்களில் அர்ச்சாமூர்த்தியாக, நம்மையெல்லாம் இன்றும் ரக்ஷிக்கிறார். இது தவிர இன்னொரு கருத்து என்னவென்றால், ஸாதாரணச் சிங்கம் எப்போதும் காடில்லாத இடத்திலேயே இருக்குமோ? இருக்காது. ஏதோ ஒரு ஸமயம் வேண்டுமானால் காட்டுக்கு வெளியே இருக்கலாம்; பெரும்பாலான நேரங்களில் காட்டுக்குள்ளே தான் இருக்கும் என்பதாம்.

கஜவ்யஸநம் என்றது எதை என்றால், **பதக முதலை வாய்ப்பட்ட களிறு கதறிக் கைகூப்பி ஆதிமூலமே என்று கத்திக் கூச்சலிடும்படியான துயரத்தைச் சொல்கிறார்.**

பங்கக்ருத் என்ற பதத்தின் கருத்து என்னவென்றால், ஆதிமூலமே என்ற கூக்குரலுக்குச் செவிசாய்த்து ஓடோடி வந்து முதலையைக் கொன்று கஜேந்த்ரனைக் காப்பாற்றும் செயல் புரிந்தவர் என்பதைத் தெரிவிக்கவாம். மேலும், ஸாதாரணச் சிங்கங்கள் **கஜவ்யஸநத்தை** அதிகப்படுத்தும்; இந்த அற்புதச் சிங்கமோ **கஜவ்யஸநத்தைத்** தகர்த்தெறிகிறது என்று வேறுபாட்டைக் காண்பிக்கவுமாம்.

சந்திரனை நரஸிம்மரின் கண்ணாகச் சொல்வது ஏனென்றால், **தபநேந்த்வக்நிநயநः** என்று ஸ்வாமி தேசிகன் அருளியபடி,

ஸூர்யனும் சந்த்ரனும் அக்நியும் நரஸிம்மருக்குக் கண்களாக இருப்பதாகப் புராணங்கள் கூறுவதாலாம்.

சந்த்ரனை **ஹரிணலக்ஷணன்** என்பது ஏனென்றால், நிலவின் நடுவிலுள்ள களங்கத்தை மான் என்றோ முயல் என்றோ சொல்வது கவிமரபாதலாலும், இதனால் **ஹரிணாங்கன், ம்ருகாங்கன், ஶஶாங்கன்** என்றெல்லாம் சந்த்ரனுக்குப் பெயர்கள் வரும்படி இது பழகிவிட்ட கருத்தாதலாலும். **ரக்ஷண** என்பதும் **லக்ஷண** என்பதும் ஒரே பதம் போலக் கருதி, ஶ்லேடையாக அர்த்தம் சொல்வது ஏனென்றால், ரலயோரபேத: என்று ஶ்லேடைக் கவிதைகளில் ர என்ற எழுத்தும் ல என்ற எழுத்தும் ஒன்றேயாகக் கருதப்படுவது வழக்கமாதலால்.

த்ருஷ்டி என்ற பதத்திற்கு இரட்டை அர்த்தம் நேரடியாக இல்லாதபோதும், இரட்டை அர்த்தம் தாத்பர்யத்தில் வருவது எப்படியென்றால், தமிழிலும் நோக்கு என்பதற்குக் கண்பார்வை என்றும், கருத்து என்றும் இரு அர்த்தங்கள் வருவது போல், வடமொழி, ஆங்கிலம், முதலிய பல மொழிகளிலும் இதே மாதிரி இருப்பதாலாம்.

அபலயா என்ற பதத்தின் கருத்து என்னவென்றால், ஸ்த்ரீயான லக்ஷ்மியால் தான் நரஸிம்மரைச் ஶாந்தப்படுத்த முடிந்தது; பலஶாலிகளான இந்த்ரன் முதலிய தேவர்களெல்லாம் அஞ்சி நடுங்கின வேளையில் ஓர் அபலை அல்லவா அவரை வஶப்படுத்தினாள் என்று சொல்லவாம். பலஹீநர்களால் சிங்கத்தை வழிக்குக் கொண்டுவர முடியாது என்ற உண்மையிலிருந்து மாறுபட்டிருப்பதைத் தெரிவிக்கவுமாம்.

குணேந என்ற பதத்தின் கருத்து என்னவென்றால், வீரத்தாலும் கல்வியாலும் வலிமையாலும் வஶப்படுத்த முடியாத கடவுளை பக்தி முதலிய பண்புகளால் கவர்ந்துவிட முடியும் என்பதாம். ஆடுமாடுகள் போன்ற பலஹீநஜந்துக்களைக் கயிற்றால் கட்டிவைக்க முடியும்; **சிங்கத்தை நூல்கயிற்றால் கட்டுவதைக் கண்டதுண்டோ?** என்பதைச் சொல்லவுமாம்.

வஶீக்ருத என்ற பதத்தின் கருத்து என்னவென்றால், பக்தர்களுக்குப் பகவான் வஶப்படுபவன் என்பதாம். அல்லது தாயார் ஸ்வாதீநபதிகையான நாயகி என்பதாம். யஸ்யா வீக்ஷ முகம் தத்இங்கித பராதீநோ விதத்தே அகிலம் என்று கூரத்தாழ்வான், பிராட்டியின் முகக்குறிப்புக்கு அதீநமாகப் பகவான் செயல்படுவதாகச் சொல்கிறார். உனக்காக உன் பதி எதைத்தான் செய்யமாட்டார்? என்று வினவுகிறார் தாயாரிடம் பட்டர். இதையெல்லாம் அடியொற்றி இந்தக்கவியும் தவயா குணைர வஶீக்ருத: என்கிறார்.

சிங்கங்களுக்குள் நரஸிம்மரை அற்புதச் சிங்கமாகச் சொல்வது பூர்வர்களின் கருத்தாகும். காமாஸி காஷ்டகத்தின் முதல் ஶ்லோகமுடிவில் ஸ்வாமி தேசிகன் அத்புதகேஸரீ என்றார். இந்தக்கவி அதே பதத்தைப் ப்ரயோகிக்கிறார். ஸத்யம் விதாதும் என்று தொடங்கும் புராணஶ்லோகத்தில் அத்யத்புதம் ரூபம் உத்வஹந் என்றும், விசித்ரம் அஹோ கிமேதத் ந்ரும்ருகேந்த்ரரூபம் என்று இன்னொரு புராணஶ்லோகத்திலும், லோகாத்புதரூபகேஸரீ என்று மாங்கள்யஸ்தவத்திலும், முநிவர்கள் சொல்லியிருப்பதை அநுவதிக்கவுமாம்.

இந்த ஶ்லோகத்தில் நான்கு நீதிகளை நாம் அறிகிறோம்.

1. வலியவரைக் கூட நற்பண்புகளால் வஶப்படுத்த முடியும்.

2. ஸிம்ஹவநந்யாயம் என்று ஒன்றுண்டு. என்னதான் சிங்கராஜாவானாலும் காட்டில் இருக்கும் வரைதான் பத்திரமாக இருக்கலாம். காட்டுக்கு வெளியே வந்தால் மாட்டிக்கொள்ள வேண்டியதாகும். இடமறிதல் முக்கியம்.

3. கருணையும் இரக்கமும் கூட அளவுக்கு மிஞ்சினால் ஆபத்தில் முடியும். எதிரிகளுக்கும் உதவி புரிந்து, எல்லோரையும் காக்க முற்படுபவர் எளிதில் கட்டுப்படுவர்.

4. தோற்றத்துக்கேற்ற தீரச் செயல்கள் பண்ணினால் தான் ஸ்வதந்த்ரமாக வாழமுடியும்.

அவநத்தில் தங்கும் ஆனையிடரப் பங்கம்.
அபலைக்கும் அடங்கும். அற்புதமிச் சிங்கம்.

11. விஷ்ணுவின் விந்தையால் வியப்பவள்.

हर्यक्षोऽयं हरिरिति वचस्त्वस्य नाभूतऽपूर्वम्
न प्रह्लादोपचयकरता नो हिरण्याङ्गदत्वम् ।
तस्मादस्मज्जननि परमं विस्मयं ते विधातुम्
नाथोऽपूर्वं किमिह जगृहे नारसिंहं शरीरम् ।। ११ ।।

ஹர்யக்ஷோயம் ஹரிரிதி வசஸ்த்வஸ்ய நாऽபூதபூர்வம்
ந ப்ரஹ்லாதோபசயகரதா நோ ஹிரண்யாங்கதத்வம் ।
தஸ்மாதஸ்மஜ்ஜநநி! பரமம் விஸ்மயம் தே விதாதும்
நாதோऽபூர்வம் கிமிஹ ஜக்ருஹே நாரஸிம்ஹம் ஶரீரம் ।।11।।

अस्मत्- जननि- எங்கள் அன்னையே! **अयं-** இவர் (விஷ்ணு), **हर्यक्षः-** 1. ஸூர்யசந்த்ரர்களைக் கண்ணாகக் கொண்டவர் 2. பசுமஞ்சள் நிறத்தில் விழி கொண்டவர் **इति-** என்கிற **वचः तु-** வார்த்தையோ **अस्य-** இவருக்கு, **अभूतपूर्वं-** இதற்குமுன் இராதது **न-** இல்லை. **प्रह्लाद- उपचय- करता-** 1. ப்ரஹ்லாதனுக்கு மேன்மை பண்ணும் தன்மை. 2. மகிழ்ச்சியை வளர்க்கும் தன்மை **न-** (இதற்கு முன் இராதது) இல்லை. **हिरण्य- अङ्गदत्वं** ஹிரண்யகஶிபுவின் உடலைக் கீறும் தன்மை 2. தங்கத் தோள்வளை உடைத்தானமை **नो** (புதிது) இல்லை. **तस्मात्-** ஆகையால் **ते -** உனக்கு **परमं-** மிகுந்த **विस्मयं** ஆச்சரியத்தை, **विधातुं-** ஏற்படுத்துவதற்காக **नाथः-** நாதனானவர், **अपूर्वं-** முன்பு எப்போதும் இல்லாத **नारसिंहं-** மனிதனும் சிங்கமும் கலந்த, **शरीरं-** உடலை **इह-** இங்கே **जगृहे-** எடுத்துக் கொண்டாரா **किं-** என்ன?

எங்கள் தாயாரே! இது வரை நிகழ்ந்திராத ஒரு கார்யத்தைச்

செய்து உன்னை வியப்பில் ஆழ்த்த விரும்பினார் பகவான். வேஷம் போடுதல், விசேஷமாய் அநுக்ரஹித்தல், எதிரிகளைப் பிளத்தல், இதுபோல எதுவும் பண்ணத் தயாராயிருந்தார். பிராட்டியான உன் வியப்புக்காக, அவர் பண்ணும் கார்யத்தைச் சொன்ன மாத்திரத்திலேயே உனக்கு ஆச்சரியம் தோன்ற வேண்டும் என்று அவாவினார். கபிலநிறத்துக் கண்களுடன் சிங்கமாக வேஷம் போடலாமா என்று முதலில் யோசித்தார். அதாவது ஹர்யக்ஷனான ஹரி என்று சொல்லும்படி வேஷம். ஆனால் இது ஒன்றும் கேட்ட மாத்திரத்தில் புதிதாகத் தோன்றாது. ஹர்யக்ஷனான ஹரி என்பதற்கு ஸூர்யசந்த்ரர்களைக் கண்க ளாய்க் கொண்ட விஷ்ணு என்று வேறொரு அர்த்தம் இருப்பதால், இது ஏற்கனவே இருப்பதால், உனக்கு விந்தையாய் இருக்காது. நரஸிம்மாவதாரகாலத்தில் நடந்த ஸம்பவம் இது. ப்ரஹ்லாத-அபிவ்ருத்தி ஸமாசாரமும் உனக்குப் புதிதாகத் தோன்றாது. உனக்கு ப்ரஹ்லாதத்தை (மகிழ்ச்சியை) அதிகமாக ஏற்கனவே அவர் பண்ணி வருபவர் தானே? ஹிரண்யனின் அங்கத்தைக் கிறுவதும் கேட்டவுடன் உனக்கு வியப்பை ஏற்படுத்தாது. ஏனென்றால்- இதை ஹிரண்ய - அங்க- தன் ஆனார் என்ற வார்த்தையால் தெரிவிக்கும்போதும், தங்கத்தில் அங்கதம் என்னும் தோள்வளை அணிந்தவன் என்று பொருள்படுவதால், இது ஏற்கனவே தெரிந்தது தானே என்று உனக்குத் தோன்றி விடும். இதெல்லாம் கிடக்கட்டும். பாதி மனிதனும் பாதி சிங்கமுமாய் ஒரு அபூர்வமான வடிவெடுத்துக் கொண்டால், நரஸிம்ஹ ரூபத்தைக் கேட்ட மாத்திரத்திலேயே, முன்பின் கேட்டிராத விந்தையாகி உனக்கு வியப்பை விளைவிக்கும். அதனால் தான், உனக்காகத்தான், பகவான் நரசிம்மவடிவத்தை எடுத்துக் கொண்டாரோ?

ஆழ்த்திட வியப்பில் தாயே உன்னை, ஆளரியாகிட்டாரா என்னை?

இந்த ஶ்லோகத்தில் ஹரி என்ற பதம் நாலு அர்த்தங்களில் வந்திருக்கிறது. விஷ்ணு என்றும், ஸூரியன் என்றும், சந்த்ரன் என்றும், பசுமஞ்சள் நிறம் என்றும் நாலு அர்த்தங்கள். பிங்கநிறக்

கண்ணுடன் கூடிய சிங்கம் என்பதை, ஹர்யக்ஷனான ஹரி என்னலாம். ஸூர்யசந்த்ரர்களைக் கண்களாய்க்கொண்ட விஷ்ணுவையும் ஹர்யக்ஷனான ஹரி என்னலாம்.

பெருமாளுக்குச் சந்த்ரஸூர்யர்களைக் கண்களாகச் சொல்வது ப்ரஸித்தம். சந்த்ரஸூர்யௌ ச நேத்ரே என்று ஸஹஸ்ரநாமத்யாநஶ்லோகத்திலும் இருக்கிறது.

அபூதபூர்வம் என்ற பதத்தின் கருத்து வருமாறு: முன்பின் நடந்திராத நிகழ்ச்சி தான் விஸ்மயத்தை விளைவிக்கும். ஏற்கனவே கேள்விப்பட்ட நிகழ்ச்சி அதே மாதிரி பல முறை நிகழ்ந்தால் ஆச்சர்யத்தை விளைவிப்பதில்லை என்பதாம்.

ப்ரஹ்லாத என்ற பதத்துக்கு இரண்டு அர்த்தங்கள். ஹிரண்யகஶிபுவின் புத்திரன் என்று முதல் அர்த்தம்; மகிழ்ச்சி என்று இரண்டாம் அர்த்தம். ப்ரஹ்லாதனுக்கு வளர்ச்சியை உண்டுபண்ணுவது இதற்குமுன் நிகழாமல் நரஸிம்மாவதார காலத்தில் மட்டும் நிகழ்வது தான். ஆனாலும் இன்னொரு அர்த்தப்படி, இது ஏற்கனவே நிகழ்ந்துவிட்டது. மகிழ்ச்சியின் பெருக்கத்தை ஏற்கனவே பிராட்டிக்கு அளித்திருக்கிறார் பகவான். ஆகையால் ப்ரஹ்லாத- உபசயம் பண்ணினதால் காணாததைக் கண்ட வியப்பு ஏற்படாது.

ஹிரண்யன், அங்கதம், என்ற பதங்களுக்கும் இரண்டிரண்டு அர்த்தங்கள். ப்ரஹ்லாதனின் தந்தைக்கும் ஹிரண்யன் எனப்பெயர்; தங்கத்துக்கும் ஹிரண்யம் என்று பெயர். உடலைக் கீறுபவனுக்கும் அங்கதன் என்றும் பெயர். பாஹுவின் மேற்பகுதியில் அணியும் ஆபரணத்துக்கும் அங்கதம் என்று பெயர். ஹிரண்யகசிபுவின் உடலைக் கீறியது அபூதபூர்வமான (முன்னர் நடந்திராத) நிகழ்ச்சியாயினும் ஹிரண்யாங்கதரானமை, தங்கத்தோள்வளை அணிந்தமை, ஏற்கனவே நிகழ்ந்திருப்பதால் வியப்புக்குரியதன்று.

தஸ்மாத் என்றதன் கருத்து: இந்த மூன்றில் ஒன்றுமே புதிதாக இல்லாத காரணத்தால் என்பதாம். ஹர்யக்ஷஹரியாவதோ,

ப்ரஹ்லாதோபசயம் பண்ணுவதோ, ஹிரண்யாங்கதராவதோ, எதுவுமே புதிதன்று. மூன்றுமே ஏற்கனவே நடந்துவிட்டது என்ற காரணத்தால், புதிதாக ஒன்றை நிகழ்த்திக்காட்ட விரும்பினார் என்பதாம்.

விஸ்மயம் தே விதாதும் என்றதன் கருத்து வருமாறு: பகவானுக்கு அவதாரங்கள் முதலிய எல்லாமே லீலைதான். பிராட்டியை மகிழ்விப்பதும் இந்த லீலைகளின் நோக்கங்களில் ஒன்று. எப்படி வேஷம் போட்டால், எப்படிக் கார்யம் பண்ணினால், அவளுக்கு ஆச்சரியம் உண்டாகும் என்று பார்த்துப் பார்த்துப் பண்ணுவது தகும். உலகில் பிரபுக்கள் தத்தம் மனைவிகளுக்குப் புதுப்புது விந்தைகளைக் காண்பித்து மகிழ்விப்பதைக் காண்கிறோம். நரஸிம்மவேஷமும் அது போல ஒன்று என்று கவியின் உத்ப்ரேக்ஷை.

பரமம் என்ற பதத்தின் கருத்து என்னவென்றால், நரஸிம்மரூபத்தால் பிராட்டிக்கு ஏற்படும் வியப்பு மட்டற்றது; மஹத்தரமானது; மடியில் அமரவைப்பது; என்பதாம்.

அபூர்வம் என்ற பதத்தின் கருத்து என்னவென்றால், இது போன்றதொரு விசித்திர ரூபம் இதற்குமுன் இருந்ததில்லை. இதுவே முதல் தடவை; என்பதாம்.

ஜக்ருஹே கிம் என்றதன் கருத்து; இந்தக் காரணத்தால் தான் நரஸிம்ம வடிவம் எடுத்துக் கொண்டாரா என்ன? அப்படித்தான் இருக்கும். மற்றவர் வேறு காரணங்கள் சொன்னாலும், அதையெல்லாம் விட இது தான் நம்பத்தகுந்தது. உனக்கு ஆச்சரியம் வரவழைப்பதற்காகத்தான் இப்படிப் பண்ணியிருப்பார் அல்லவா? என்று வினவுவதாம்.

ஏதோ ஓர் புதுவடிவை
ஏன் ஏற்றார் இது விந்தை.
ஏ தாயே! உன் வியப்பை
ஏற்றிடவோ அவராசை?

12. நரஸிம்ஹர் போல் நடத்திக் காட்டுபவள்

तत्तादृक्षहिरण्यदाननिरतौ भक्ताभिरक्षाकृते
सत्कीर्तिं हरितां मुखे खलजनत्रासावहामाश्रितौ ।
किञ्चोदञ्चदनेकपापहरणक्रीडोचितालोकनौ
देवि ! स्तौमि मिथस्समानचरितौ दिव्यौ युवां दम्पती ॥ १२

தத்தாத்$_3$ருக்ஷஹிரண்யதா$_3$நநிரதௌ ப$_4$க்தாபி$_4$ரக்ஷாக்ருதே
ஸத்கீர்திம் ஹரிதாம் முகே$_2$ க$_2$லஜநத்ராஸாவஹாமாஸ்ரிதௌ ।
கிஞ்சோத$_3$ஞ்சத$_3$நேகபாபஹரணக்ரீடோ$_3$சிதாலோகநௌ
தே$_3$வி ஸ்தௌமி மித$_2$ஸ்ஸமாநசரிதௌ தி$_3$வ்யௌ யுவாம் த$_3$ம்பதீ ॥ 12

देवि = தேவியே!

भक्त - अभिरक्षा - कृते = தொண்டர்களைக் காப்பாற்றுவதற்காக

तत्तादृक्ष - हिरण्य - दान - निरतौ = அப்படிப்பட்ட ஹிரண்யனைப் பிளப்பதில், அத்தகைய தங்கத்தைக் கொடுப்பதில், ஈடுபாடு கொண்டவர்களும்,

खल-जन-त्रास-आवहां = துஷ்டர்களுக்குப் பயத்தை உண்டுபண்ணும்

सत्-कीर्तिं = நற்புகழை

हरितां = திக்குகளின்

मुखे = தொடக்கத்தில்

खल-ज-नत्रास-आवहां = துஷ்டனின் பிள்ளைக்கு அபயம் உண்டுபண்ணுவதும்

सत्-कीर्तिं = நல்ல புகழ் கொண்டதுமான

हरितां = சிங்கத்தன்மையை

मुखे = முகத்தில்

आश्रितौ = அடைந்திருப்பவர்களும்

किंच = மேலும்

उदञ्चत्-अनेकपाप-हरण-क्रीडा-उचित-आलोकनौ = கிளம்புகிற நிறைய பாவங்களைப் போக்கடிக்கிற விளையாட்டுக்குத் தகுந்ததான பார்வை கொண்டவர்களும்

उदञ्चत्-अनेकप-अपहरण-क्रीडा-उचित-आलोकनौ = எகிறுகிற யானைகளை அழிக்கிற யுத்தவிளையாட்டுக்கேற்ற பார்வை கொண்டவரும்

मिथः = ஒருவருக்கொருவர்

समान-चरितौ = ஒரே மாதிரியான செயல்கள் கொண்ட

दिव्यौ दम्पती = திவ்ய தம்பதிகளான

युवां = உங்கள் இருவரையும்

स्तौमि = துதிக்கிறேன்.

ஸ்ரீ தேவியே! நீயும் நரஸிம்ஹரும் ஒரே மாதிரியான சரிதம் கொண்டவர்கள். எப்படியென்றால் மூன்று முக்ய நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம். பக்தனான ப்ரஹ்லாதனைக் காப்பாற்றுவதற்காக நரஸிம்ஹர் வீராதிவீரனான

ஹிரண்யனைப் பிளப்பதில் குறியாயிருந்தார். அதாவது பக்தரக்ஷணத்துக்காக ஹிரண்யதாநம் பண்ணினார். இதே கார்யத்தை நீயும் தான் பண்ணுகிறாய். ஹிரண்யதாநம் என்பதற்கு அர்த்தம் தான் வேறு. ஹிரண்யனைப் பிளப்பது நரஸிம்ஹர் பக்ஷத்திலும், தங்கத்தை வாரி வழங்குவது உன் பக்ஷத்திலும். எப்படியோ, நீங்கள் இருவரும் இந்தக் கார்யத்தைப் பண்ணுகிறீர்கள். இன்னொரு கார்யமும் இதே போல. கலஜனான ப்ரஹ்லாதனுக்கு நத்ராஸமான அபயத்தை அளிக்கவல்லதும், நற்புகழ் பெற்றதுமான சிங்கத் தன்மையை முகத்தில் கொண்டிருக்கிறார். இந்தக் கார்யம் உனக்கேது என்று முதலில் தோன்றினாலும், பதங்களின் வேற்று அர்த்தங்களைக் கொண்டு நீயும் இதைப் பண்ணுவதாகக் காண்கிறோம். எப்படியென்றால், கலஜநத்ராஸ என்பதை வேறுவிதமாகப் பிரித்தால், கல-ஜந-த்ராஸ என்று பிரித்தால், துர்ஜநர்க்குப் பயம் என்றாகும். உன்னுடைய நற்புகழ் துர்ஜநருக்குப் பயத்தை உண்டுபண்ணுகிறது. அது திக்கெட்டும் பரவியிருப்பதால், ஹரிதாம் முகே என்று ஆகிறது. முகத்தில் சிங்கத் தன்மையை என்பதற்கும், ஹரிதாம் முகே என்று சொல்லலாம். சரியாகிவிட்டது. நரஸிம்ஹர் செய்யும் இரண்டாவது கார்யத்தையும் (முகத்தில் சிங்கத் தன்மை அடைவதையும்) நீ செய்ததாகிவிட்டது. மூன்றாவதாக அவர் பண்ணும் கார்யம் யானைகளை விரட்டும் அளவுக்கு உக்ரமான பார்வை கொண்டிருப்பது. உனக்கு உக்ரப் பார்வை கிடையாததால் இந்தச் செயலை நீ செய்யாவிடினும், ஶ்லேஷை மூலம் நீ இதைச் செய்வதாக ஸாதலிப்போம். எப்படியென்றால், அநேக பாபஹரண என்பதை அநேகப-அபஹ-ரண என்று பிரிக்காமல், வேறு விதமாக அநேக-பாப-ஹரண என்று பிரிப்போம். நிறைய பாவங்களை அழித்தல் என்று அர்த்தம் கிடைக்கும். அதற்கேற்ற பார்வை உன்னிடம் இருக்கத்தான் இருக்கிறது. ஏதோவிதமாக, நரஸிம்ஹருடைய சரிதமும் உன் சரிதமும், ஒன்றாகிவிட்டது. இப்படிப்பட்ட திவ்ய தம்பதிகளான உங்கள் இருவரையும் நான் துதிக்கிறேன்.

இரணிய தானத்தாலும் இரும்புகழ் முகத்தினாலும்
இருவிழி விளையாட்டாலும் இருவரும் இணை என்றாகும்.

ஹிரண்யனைத் தத்தாத்ருக்ஷ ஹிரண்யன் என்று சிறப்பித்தது ஏனென்றால், அவன் தவத்தாலும், வரத்தாலும், வலிமையாலும், ஈடிணை இல்லாதவனாய் இருந்த காரணத்தாலாம்.

அவனைப் பிளப்பதில் நரஸிம்ஹர் நிரதர் (ஆர்வத்துடன் ஈடுபட்டவர்) என்றது எதனாலென்றால், அதற்காக பீஷணரூபம் எடுத்துக் கொண்டதுமின்றி, அட்டஹாஸம் பண்ணுவது, கோபக்கனல் தெறிப்பது, புருவத்தை நெறிப்பது, கிழித்தெறிய அவஸரப்படுவது, ஒன்றோடொன்று போட்டி போட்டுக்கொண்டு கைகள் ஹிரண்யனைக் கிழிக்கத் துடிப்பது, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டவர் இந்தக் கவியாதலால்.

தாயார் தங்கம் மட்டுமின்றி, வித்யை, வீரம், தனதான்யம், ஜயம், ஐஶ்வர்யம், எல்லாவற்றையும் கொடுப்பவளாயிருக்க, அவளை ஹிரண்யதானம் பண்ணுபவளாக இந்தக் கவி ஏன் சொல்லுகிறார் என்றால், ஸ்ரீ ஸூக்தம், முதலில் அவளை ஹிரண்யம் தருபவளாகச் சொல்லிவிட்டு, அதன் பிறகு பசுக்களையும் குதிரைகளையும் தாஸிகளையும் செல்வத்தையும் புகழையும் மங்களத்தையும் தருபவளாகச் சொன்னதால் ஹிரண்யத்துக்கு முதலிடம் கொடுத்ததால் இவ்வாறு சொல்கிறார். மேலும், கநகதாரா ஸ்தோத்ரக் கதை, ஸ்வாமி தேஶிகனின் ஸ்ரீஸ்துதிக்குத் தங்கம் வர்ஷித்த கதை, இவற்றிலெல்லாம், அவள் உடனே தங்கம் தருவதாகப் ப்ரஸித்தியும் உண்டு. பக்தர்களை ரக்ஷிப்பதற்காக ஹிரண்யதானம் பண்ணுகிறாள் என்று இந்தக் கவி சொன்னதும் இந்தக் கதைகளினால் ஊர்ஜிதமாகிறது. இதைத் தத்தாத்ருக்ஷ ஹிரண்யதானம் என்று சிறப்பிப்பானேன் என்னில், ஸ்ரீஸூக்தத்தில் ஹிரண்யம் ப்ரபூதம் என்ற பதங்களால், இவளை ஏராளமான தங்கம் தருபவளாகச் சொன்னதாலாம். அல்லது தத்தாத்ருக்ஷம் என்பதை

ஹிரண்யத்தில் அந்வயிக்காமல் தாநத்தில் அந்வயிக்கலாம். உடனே கொடுப்பது, உவந்து கொடுப்பது, உனக்கு இன்னும் என்ன பிடிக்கும் என்று கேட்டுக் கொண்டே சிரித்த முகத்துடன் (ஸ்ரீஸ்துதியில் சொன்னபடி) கொடுப்பது, நிறையக் கொடுப்பது, இதெல்லாம் இருப்பதால், தத்தாத்ருக்ஷு ஹிரண்யதான நிரதா என்கிறார்.

பக்தாபிரக்ஷாக்ருதே என்பானேன் என்னில், நரஸிம்ஹர் ஹிரண்யனைக் கிழித்ததும், பக்தனை (ப்ரஹ்லாதனை) ரக்ஷிப்பதற்காக; தாயார் ஸ்வர்ணம் பொழிவதும் பக்தர்களைக் காப்பாற்றுவதற்காக. நரஸிம்ஹர் முகத்தில் சிங்கமாய் இருப்பதற்குப் புகழ் உள்ளதாக ஸத்கீர்த்திம் என்ற பதத்தால் சொல்கிறாரே, இதன் கருத்து யாதெனில், நாரஸிம்ஹவபு: ஸ்ரீமாந் என்று ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரத்திலும், அழகியான் தானே அரியுருவன் தானே என்று ஆழ்வார் பாடலிலும் மற்றும் பல இடங்களிலும், இந்தச் சிங்க முகத்துக்குத் தனிப்புகழ் கிடைத்திருப்பதாலாம்.

ப்ரஹ்லாதனின் தந்தையைக் கலன் என்பானேன் என்னில், அவன் துஷ்டனாகவும், க்ரூரனாகவும், சொந்தப் பிள்ளையையே ஹிம்ஸிப்பவனாகவும், செருக்கு உடையவனாகவும் இருந்ததாலாம்.

நரஸிம்ஹரின் சிங்கத் தன்மை ப்ரஹ்லாதனுக்கு அபயம் அளித்ததாகச் சொல்வது ஏன் என்னில் ஸ்வாமி தேஶிகன் ஸடாபடலபீஷணே என்ற ஶ்லோகத்தில் அருளியபடி, இந்தச் சிங்கமுகமே ப்ரஹ்லாதனுக்கு வாத்ஸல்யம் நிரம்பிய கடாக்ஷத்தைப் பொழிந்ததாலாம்.

ப்ரஹ்லாதனுக்கு அபயம் அளித்ததாக நேரடியாகச் சொல்லாமல் துஷ்டனின் பிள்ளைக்கு அபயம் அளித்ததாக (கலஜ என்ற பதத்தால்) சொல்வானேன் என்றால், அவனுக்கு அபயம் தேவைப்படக் காரணம் அவனது தந்தை க்ரூரனாக இருந்தமை தான் என்பதாலாம்.

லக்ஷ்மியின் புகழ் திக்குகளின் முகத்தில் இருப்பதாகச் சொல்வதன் தாத்பர்யம் என்னவென்றால், அது எல்லாத் திசைகளிலும் பரவியிருப்பதால், திசையின் தொடக்க இடம் வரை சென்றதாகச் சொல்வது தகுமாதலாலாம்.

லக்ஷ்மியின் புகழ் துஷ்டர்களை அச்சுறுத்துவதாகச் சொல்வதன் கருத்து என்னவென்றால், துஷ்டத் தனம் என்கிற **அலக்ஷ்மி**யை லக்ஷ்மி அழிப்பவளாதலால் அவளது புகழ் இவர்களைப் பயமுறுத்துமென்பதாம். ஸத்கீர்திம் என்கிற பதத்தை எதில் அந்வயிப்பது என்றால், இரண்டு விதமான அந்வயங்கள். நல்ல புகழுடைய என்று பஹுவ்ரீஹியாக்கி, ஹரிதா என்ற பெயர்ச் சொல்லுக்கு அடைமொழியாக்க வேண்டும் நரஸிம்ஹர் பக்ஷத்தில். லக்ஷ்மி பக்ஷத்திலோ நற்புகழ் என்ற விசேஷ்யமாக்கி (கலஜநத்ராஸாவஹாம் என்பது மட்டும் விசேஷணம்) அது திங்முகத்தில் என்று அந்வயிப்பது. யானையை அநேகபம் என்பானேன் என்னில் அது வாயாலும் தும்பிக்கையாலும் குடிப்பதால் த்விபம் என்றும் அநேகபம் என்றும் கோசங்களில் ஏறிய பெயர்கள்.

நரஸிம்ஹரின் கண்களை ரணக்ரீடைக்கு உசிதமாகச் சொல்வானேன் என்னில், அவை உருட்டி விழிக்கப்படுவதாலும், உக்ரமாக இருப்பதாலும், கோபத் தீயைக் கக்குவதாலும்.

நம்முடைய பாபங்களை உதஞ்சத் பாபங்கள் என்றும் அநேக பாபங்கள் என்றும் சொன்னது எதனால் எனில், அவை மேன்மேலும் பெருகுவதாலும், அடக்க முடியாமல் எழுவதாலும், எண்ணிக்கையிலும் அதிகமாக இருப்பதாலுமாம்.

அந்தப் பாவங்களைப் போக்கடிக்கும் விளையாட்டுக்கேற்ற பார்வை திருமகளிடம் இருப்பதாகச் சொல்வதன் கருத்து என்னவென்றால், அவலீலையாக-அநாயாஸமாக, அவள் திருக்கண்பட்ட மாத்ரத்தில் இந்தப் பாவங்களெல்லாம் பறந்தோடும் என்பதாம்.

மிதஸ்ஸமாந சரிதௌ என்றதன் கருத்து யாதெனில், ஹிரண்யதாநம் பண்ணுவது, கலஜநத்ராஸம் பண்ணுவது, க்ரீடோசிதமான பார்வை கொள்வது, எல்லாமே பெருமாளுக்கும் தாயாருக்கும் பொதுவானவை என்பதாம். பதங்களுக்கு அர்த்தம் வெவ்வேறு சொல்ல வேண்டும் என்பது கிடக்கட்டும். திவ்யதம்பதிகள் இருவரையும் தான் துதிப்பதாகச் சொல்வதன் கருத்து என்னவென்றால், ஒருவரை மட்டும் துதிக்கலாமென்று நினைத்து, அது யாரை என்று தீர்மானிப்பதற்காக இருவருடைய சரிதங்களையும் ஆராயும்போது, இருவரும் ஸமாநசரிதர்களாய் இருப்பதால் இருவரையுமே துதிக்கிறேன் என்கிறார். இந்த ஶ்லோகத்தில் கடினமான இரட்டை அர்த்தச் சொற்கள் நிறைய உள்ளன. ஹிரண்ய, தாந, ஸத், ஹரிதாம், முகம், கலஜநத்ராஸம், அநேகபாபஹரணம், என்ற ஏழு பதங்களிலும் இரட்டை அர்த்தங்களைப் புகுத்தியுள்ளார். இவற்றுள் முதல் ஐந்தையும் இரட்டைப் பொருள்களுடன் மற்ற கவிகளும் கையாண்டதுண்டு. ஆனால் கடைசி இரண்டும் இந்தக் கவி மட்டுமே சமத்காரமாகச் செய்தவையாம்.

சிங்கமுகத்துச் செங்கண்மால் செங்கமலத்துச் செய்யாள் போல்
செய்கைகளெல்லாம் செய்வதனால் சேர்த்திருவரையும்சேவிப்பேன்.

இத்துடன் நரஸிம்ஹாவதாரப் பகுதி முடிந்தது. அடுத்த நாலு ஶ்லோகங்களில் வாமநாவதாரத்தில் திருமகளின் பங்கு குறித்துப் பார்ப்போம்.

13. மாணியின் மான்தோலில் மறைக்கப்பட்டவள்.

वक्षस्स्थामपि वर्णितानुसृतये कृष्णाजिनेनाऽऽवृणोत्
देवस्त्वामिति वर्णयन्ति कतिचित् ब्रूमो वयं त्विन्दिरे।
भव्यं वामनरूपमेत्य भगवान् भाग्यं हरिष्यन् बलेः
एनं कर्तुमगोचरं शुभपुषां त्वद्दीक्षितानामिति ॥ १३

வக்ஷஸ்ஸ்தா₂மபி வர்ணிதாநுஸ்ருதயே க்ருஷ்ணாஜிநேநாऽऽவ்ருணோத்
தே₃வஸ்த்வாமிதி வர்ணயந்தி கதிசித் ப்₃ரூமோ வயம் த்விந்தி₃ரே।

ப₄வ்யம் வாமநரூபமேத்ய ப₄கவாந் பா₄க்யம் ஹரிஷ்யந் பலே:
ஏநம் கர்த்துமகோசரம் ஶுப₄புஷாம் த்வத்₃வீக்ஷிதாநாமிதி ॥ 13

इन्दिरे! = இந்திரையே!
वक्षः-स्थां अपि = மார்பில் இருப்பவளானாலும்
वर्णिता-अनुसृतये = ப்ரஹ்மசர்யத்தைப் பின்பற்றுவதற்காக
देवः = பகவான்
त्वां = உன்னை
कृष्ण-अजिनेन = மான்தோலினால்
आवृणोत् = மறைத்தார்
इति = என்று
कतिचित् = ஒரு சிலர்
वर्णयन्ति = வர்ணிக்கிறார்கள்.
वयं तु = ஆனால் நாங்களோ
ब्रूमः = (வேறுவிதமாக) சொல்கிறோம்
भव्यं = மங்களமான
वामन-रूपं = குறளுருவை
एत्य = அடைந்து
भगवान् = பெருமாள்
बलेः = பலிசக்ரவர்த்தியின்
भाग्यं = அத்ருஷ்டத்தை
हरिष्यन् = அபஹரிக்க விரும்புகிறவராய்
शुभ-पुषां = மங்களங்களை வளர்க்கும்
त्वत्-वीक्षितानां = உன் கடாக்ஷங்களுக்கு
अगोचरं = நிலமாகாதபடி
एनं = இந்த பலியை
कर्तुं = பண்ணுவதற்காக
इति = என்று
ब्रूमः = சொல்கிறோம்

லக்ஷ்மியே ! ஒரு நிகழ்ச்சிக்குக் காரணம் சொல்வதில் அபிப்ராயபேதம் வருகிறது. வாமனாவதாரத்தில் ப்ரஹ்மசாரி வடிவத்தில் பலியிடம் பகவான் மூவடிமண் இரக்கச் சென்றபோது மார்பில் இருந்த உன்னை மான் தோலினால் மறைத்தார் என்ற புராண நிகழ்ச்சி ஒன்று. இதற்கு என்ன காரணம் ? ஏன் மறைத்தார் வாமனர் ? இதற்குப் பௌராணிகர்கள் சொல்லும் காரணம் என்ன என்றால், லக்ஷ்மியை மறைக்காவிடில் பிச்சைக்கேட்டு வந்திருப்பவர் மஹாவிஷ்ணுதான்; உண்மையான ப்ரஹ்மசாரி அன்று; என்று பலிக்குத் தெரிந்துவிடும். இதனால் தன் கார்யம் கெட்டுப் போகும். இப்படி ஆகாமல் இருப்பதற்காக, மார்பில்இருந்த திருமகளை மான்தோலால் மூடிக்கொண்டார் பெருமாள். இப்படி இவர்கள் சொல்லும் காரணம் சரியானாலும், நாங்கள் இதைவிட முக்யமாக இன்னொரு காரணம் சொல்கிறோம். இப்படி மான்தோலினால் மறைக்காமல் இருந்தாரானால், மார்பில் இருந்த திருமகளின் கடாக்ஷம் எதிரே நிற்கும் பலியின் மேல் விழுந்துவிடும்.

அப்படி விழுந்தால், பலிக்கு மங்களங்கள் மேன்மேலும் பெருகும். அவனுடைய மூவுலக ஸாம்ராஜ்யம் அவனுக்கே நிலைத்துப் போகும். தான் வாமனனாய் அவதரித்த கார்யம் கெட்டுப்போகும். இதனால்தான் க்ருஷ்ணாஜிநத்தால் மூடிக் கொண்டார் என்று காரணம் சொல்கிறோம் நாங்கள்.

மார்வகத்து மங்கையை மான்தோலால் மாணியவன்
மறைத்தான் தான் மாணியென மற்றவர்கள் மதித்தற்காய்.
மற்றுமொரு காரணத்தை மதிகொண்டு மொழிகின்றோம்
மலராளின் மலர்விழியால் மங்களமேன் ? பலிக்கென்று.

வக்ஷஸ்ஸ்தாம் என்ற பதத்தின் கருத்து என்ன வென்றால், லக்ஷ்மி வாமநனின் மார்பில் இருந்தாள்; அவதார நிலையிலும் அவளது அண்மை அகலவில்லை. இது நமக்கு எப்படித் தெரியும் என்றால், அவள் அவரோடு என்றுமே இணை பிரியாது இருப்பவள் என்று பொதுவாகச் சொல்வது மட்டுமன்றி, புராணங்கள் குறிப்பாக வாமனனின் மார்பில் அவள் இருந்ததையும் சொல்கின்றன.

வர்ணிதாநுஸ்ருதயே என்றதன் கருத்து என்னவென்றால், எந்த வேஷம் போட்டாலும், ஒழுங்காகப் போடவேண்டும். அரைகுறையாகப் போட்டால் பாதியிலேயே குட்டு வெளிப்பட்டுவிடும். இப்பொழுது போடும் ப்ரஹ்மசாரி வேஷத்தில் நாச்சியார் வெளியே தெரியக் கூடாது என்று விழிப்புடன் இருந்தார் என்பதாம்.

க்ருஷ்ணாஜிநேந என்றதன் கருத்து என்னவென்றால், **ப்ரஹ்மசாரிகள் பூணூல் போல் தோளில் அணிந்துகொள்ளும் மான் தோல் வாமனருக்கு வேறுவகையிலும் பயன்பட்டது என்பதாம். சரியான வேஷம் போட்டால், இடுப்பில் மிஞ்சிக் கயிறு, மார்பில் மான்தோல், கையில் பலாஶத்தண்டு, இவையெல்லாம் ப்ரஹ்மசாரிகளுக்கு அடையாளமாவதால், இதையெல்லாம் தரிக்க வேண்டும்.**

ஆவ்ருணோத் என்றதன் கருத்து என்னவென்றால், பிறருக்குத் தெரியாதபடி மூடி மறைத்தார் என்பதாம். தெரிந்தால் இவரது வண்டவாளம் தேவைக்கு முன்னதாக

அம்பலமாகிவிடும். அதனால் திரைபோட்டு மூடுவது போல் மூடிவிட்டார் திருமகளை என்பதாம்.

த்வாம் என்றதன் கருத்து என்னவென்றால், இவர் தான் விஷ்ணு என்று ஸந்தேஹத்துக்கிடமே இல்லாமல் உலகுக்குப் பறைசாற்றும் அடையாளமாக இருக்கிற உன்னை என்பதாம். ப்ரஹ்மசாரி வேஷத்துக்கு அடியோடு ஒத்து வராமல், அவரது மார்பில் கொலுவிருக்கும் உன்னை என்பதாம். விழிபோகும் இடங்களிலெல்லாம் விபவத்தை விளைவிக்கும் உன்னை என்பதுமாம். இந்த மூன்று காரணங்களாலும் அவஶ்யம் மூடப்பட வேண்டிய உன்னை என்பது ஸாரம்.

கதிசித் என்றது யார் யாரை என்றால் க்ருஷ்ணாஜிநேந ஸம்வ்ருண்வந் வதூம் வக்ஷஸ்தலாலயாம் (க்ருஷ்ணாஜிநத்தால் வக்ஷஸ் தலத்தில் இருக்கும் வதுவை மறைத்துக் கொண்டு) என்று சொன்ன புராண கர்த்தாவையும், பிக்ஷோசிதம் ப்ரகடயந் ப்ரதமாஶ்ரமம் த்வம் க்ருஷ்ணாஜிநம் யவநிகாம் க்ருதவாந் ப்ரியாயா: (பிக்ஷை எடுப்பதற்கேற்ற முதல் ஆஶ்ரமத்தை வெளிப்படுத்திக் கொண்டு நீ மான்தோலை மனைவிக்குத் திரையாக்கினாய்) என்று சொன்ன வேதாந்த தேஶிகரையும் இதுபோன்ற வேறு சில கவிகளையுமாம்.

வயம் என்று தன் கோஷ்டியில் சேர்த்துக்கொண்டது யார் யாரை என்றால், அறிவால் ஆராய்ந்து உத்ப்ரேக்ஷை பண்ண வல்லவர்கள்; திருமகள் கடைக்கண் பார்வையின் சிறப்பை அறிந்த அடியார்கள்; தேஶிகன் முதலிய பூர்வாசார்யர்களின் திருவுள்ளம் அறிந்தவர்கள்; இவர்களையெல்லாம் தன்னுடன் சேர்த்துக் கொண்டு நாங்கள் என்கிறார்.

து என்ற ஒற்றை எழுத்துச் சொல்லின் கருத்து என்னவென்றால், மற்றவரினின்றும் மாறுபட்ட வகையில் நாம் காரணம் சொல்வோம் என்பதாம். நமது உத்ப்ரேக்ஷை மேலும் ரஸ்யமாயிருக்கும் என்பதுமாம். இதனாலென்று இதரர்கள் இன்னொன்றை இயம்பட்டும்; நன்கறிந்த நாங்களிதை நயம்படவே நவில்கின்றோம் என்று வாசியைக் காண்பிக்க இந்தச் சொல்.

வாமன வடிவத்தைப் பவ்யமானதாகச் சொன்னது ஏனென்றால் இரண்டு விதமாக இதை விளக்கலாம். பவ்யம் என்பதற்கு அழகானது என்றும் நன்மை பயப்பது என்றும் இரண்டு அர்த்தங்கள். வாமனரூபம் அழகானதென்றும் நமக்கு மங்களங்களைத் தருவதென்றும் இரண்டுமே இங்கு பொருந்தும்; மாங்கல்ய ஸ்தவத்தில் அவ்வாறு கூறியிருப்பதாலும், ஆழ்வார் பாசுரங்களும் அப்படியே கூறுவதாலும்.

பாக்யம் ஹரிஷ்யந் என்றதன் கருத்து என்னவென்றால், தேவேந்த்ரனையும் அடக்கி, மூவுலகையும் ஆளும் அத்ருஷ்டத்தைப் பெற்றிருந்த பலிசக்ரவர்த்தியின் பாக்யத்தை அபஹரித்து மீண்டும் இந்த்ரனுக்கே செல்வத்தை அளிக்க விழைந்தார் வாமனர் என்பதாம்.

ஶுபபுஷாம் என்றதன் கருத்து என்னவென்றால், லக்ஷ்மியின் அருட்பார்வைகள் ஶுபங்களைப் போஷித்து வளர்ப்பவை; ஸ்ரீமந் மந்த கடாக்ஷ லப்த விபவ ப்ரஹ்மேந்த்ர கங்காதராம் என்றபடி, லேசான கடாக்ஷத்தால் பெரிய பெரிய பதவிகளை அளிப்பவள் அவள்; அபாங்கா பூயாம்ஸோ யதுபரி என்ற ஶ்லோகத்தில் பட்டரும், யஸ்யாம் யஸ்யாம் திஶி என்ற வரிகளில் தேஶிகனும், விளக்குவது போல் அதீதமாக மங்களங்களைப் பண்ணும் பார்வைகள் என்பதாம்.

விழி பலி மேல் விழுந்திடுமேல்
விபவம் மேல் விளைந்திடுமே.

அகோசரம் கர்தும் என்றதன் கருத்து என்னவென்றால், திருமகளின் பார்வைக்கு நிலமாகாதபடி பண்ண வேண்டி என்பதாம். தப்பித் தவறி ஒரு சிறிது அவளது பார்வை பட்டுவிட்டாலும், ஸகல ஸௌபாக்யங்களும் வந்து குவியும் என்பது பகவானுக்குத் தெரியும். ஆதலால் பலியின் மேல் அவளது பார்வை படக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார் என்பதாம்.

திருமகளின் திருட்டியினைத் திரைபோட்டுத் தடுத்திட்டார்
மலர்மகளின் மகிழ்விழியை மான்தோலால் மறைத்திட்டார்
பதுமையவள் பார்வையினைப் பலிக்கின்றிப் பதுக்கிட்டார்
ஒளிமயையின் ஓரவிழி ஒளிராமல் ஒளித்திட்டார்.

14. வாமனனின் வக்ஷஸ்ஸில் வாழ்பவள்

वर्णित्वमर्णवसुते ! वहताऽपि गूढं
वक्षस्स्थले न निहिता वनमालिना चेत् ।
कस्त्रीण्यदास्यत पदान्यपि याचतेऽस्मै
कस्माज्जगत्त्रयतया च विवृद्धिरेषाम् ॥ २४

வர்ணித்வமர்ணவஸுதே ! வஹதாऽபி கூடம்
வக்ஷஸ்ஸ்தலே ந நிஹிதா வநமாலிநா சேத் ।
கஸ்த்ரீண்யதாஸ்யத பதாந்யபி யாசதேऽஸ்மை
கஸ்மாஜ்ஜகத்த்ரயதயா ச விவ்ருத்திரேஷாம் ॥ 24

अर्णव-सुते ! = ஸமுத்ரத்தின் மகளே!
वर्णित्वं = ப்ரஹ்மசர்யத்தை
वहता = வஹிக்கிற
वनमालिना = வநமாலையணிந்த ஹரியினாலே
गूढं अपि = மறைவாகவேனும்
वक्षः-स्थले = மார்பிடத்தில்
निहिता = வைக்கப்பட்டவளாக
न चेत् = இல்லையானால்
त्रीणि = மூன்று
पदानि = அடிகளை
याचते = பிக்ஷையெடுக்கும்
अस्मै अपि = இவருக்கும்
कः = எவன்
अदास्यत = கொடுப்பான்?
एषां = இந்த அடிகளுக்கு
जगत्-त्रयतया = மூவுலகும் உடைத்தாகும்படி
विवृद्धिः च = வளர்ச்சியும்
कस्मात् = எதனால் ஆகும்?

கடலின் கன்னியே ! வாமனப் ப்ரஹ்மசாரி வேஷத்தில் கூட விடாமல், ஒளிவுமறைவாகவேனும் உன்னை மார்பில் வைத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் என்ன? பரரூபத்தில் லக்ஷ்மியை இறக்கிவைத்துவிட்டு அவதார ரூபத்தில் லக்ஷ்மியில்லாமலே வரக் கூடாதோ என்று கேட்டால் சொல்கிறோம் - இந்த அவதாரத்தில் இவருக்கு லக்ஷ்மி கடாக்ஷம் மிகவும் தேவைப்படுகிறது. அவள் அருகிலேயே இருந்து துணைபுரிந்தால் தான் அவதார ப்ரயோஜனம் நிறைவேறும். இவளைப் பிரிந்து இவர் மட்டும் வந்திருந்தால்,

மூன்றடி மண்ணைக் கூட இவருக்கு யார் பிச்சையிடுவார்? அப்படி மண் கிடைத்தாலும், அடிகளால் மூவுலகையும் தாவிப்பாயும் அளவுக்கு வளர்ச்சி எப்படி ஏற்பட்டிருக்கும்? இதற்கெல்லாம், பிராட்டியின் துணை அல்லவா காரணம்?

வாரிதியின் கன்னிகையை லக்ஷஸ்ஸில் வைக்காமல்
வனமாலி வாமனராய் வந்திருந்தால் வளர்வாரா?

வர்ணித்வம் என்ற பதத்தின் கருத்து என்னவென்றால், பெண்டிருடன் ஒண்டக் கூடாத நிலையான ப்ரஹ்மசர்யாஶ்ரமத்துக்கு அடியோடு ஒவ்வாதது மார்பில் மனைவியைத் தாங்குவது என்பதாம். **வஹதாபி** என்றவிடத்தில் **அபி** என்றதன் கருத்து என்னவென்றால், மற்ற நேரங்களில் மலரவளை மார்பில் ஏற்றிக் கொண்டு கும்மாளமடித்தாலும், மாணிவேடம் போடும்போது மட்டுமாவது அவளில்லாமல் இருக்கலாமே? அப்போது கூட அவளை ஏன் விடாமல் கட்டிக் கொண்டிருக்கிறார்? என்பதாம். இதே **அபி** என்ற பதத்தைக் கூடம் என்பதுடன் சேர்த்தும் பொருள் கூறலாம். பத்தினியைப் பொத்திக் கொண்டும் போர்த்திக் கொண்டும் இவ்வளவு ச்ரமப்படுவானேன்? ஸ்ரீ வைகுண்டத்திலேயே பத்திரமாக விட்டுவிட்டு வந்திருக்கலாமே?

வக்ஷஸ்ஸ்தலே கூடம் என்றதன் கருத்து என்னவென்றால், வேறொரு இடத்தில் ஒளித்துவைக்க முடியாதபடி, மார்பிலேயே மறைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்பதாம். அவளுக்கு அது நிரந்தர வாஸஸ்தானம்; எந்த ராஜா எந்தப் பட்டணம் போனாலும் அவளுக்கு இடம் அது.

வநமாலிநா என்ற பதத்தின் உட்கருத்து என்னவென்றால் வனமாலை அணிந்தவரான ஹரி வாமனாவதாரம் எடுக்கும்போது அந்த மாலையைக் கழற்றி விட்டுத்தானே வந்தார்? சங்கு சக்ரங்கள் முதலிய ஆயுதங்கள் இல்லாமலே

தானே வந்தார்? அதுபோல, திருமார்பு நாச்சியாரும் இல்லாமலே வந்தால் ஸௌகர்யமாய் இருந்திருக்குமே, ஏன் அப்படிப் பண்ணவில்லை? என்பதாம்.

யாசகனுக்கு எவன் கொடுப்பான் என்பதன் கருத்து என்னவென்றால், உலகில் யாசகரைப் ப்ரபுக்கள் அவமதிப்பதைக் காண்கிறோம். ஒரு பிச்சைக்காரன் தன் சுயமர்யாதையை இழக்காமல் ப்ரபுவிடம் தானம் பெறுவதற்குக் கூடத் திருமகளின் அருள் தேவை என்பதாம். தவிரவும், மிகக் குள்ளனாயிருந்தாலும் பலியைக் கவரும் அளவுக்கு முகப் பொலிவு ஏற்படுத்தவும் திருமகளின் துணை தேவை என்பதாம்.

பதாந்யபி யாசதே என்னுமிடத்தில் உள்ள அபியை இரண்டு விதமாக அன்வயிக்கலாம். கேட்பது கொஞ்சமானாலும் கொடுப்பவர் யார்? என்று ஒன்று. யாசித்தாலும் கொடுப்பவர் யார்? என்று இன்னொன்று.

விவ்ருத்தி என்ற பதத்தின் கருத்து என்னவென்றால் பெருவளர்ச்சி என்பதாம். முன்பின் கண்டிராதபடி மூவுலகும் போதாதபடி திருவடியும் திருமேனியும் அற்புதமாக வளர்ந்தது.

கஸ்மாத் என்றதன் கருத்து என்னவென்றால் விசேஷமான லக்ஷ்மீ கடாக்ஷம் இல்லாவிட்டால் இத்தகைய வளர்ச்சி ஏற்படுமா? திருமார்பிலேயே அவள் தங்காவிட்டால் இந்த அளவுக்குக் கடாக்ஷம் பண்ணியிருக்க முடியுமா? வேறெந்த உபாயமும் இத்தகைய அபிவிருத்தியைத் தர முடியுமா? என்பதாம். இதையெல்லாம் தீர யோசித்துப் பார்த்துத்தான் ஶ்ரமப்பட்டாவது, மார்பில் லக்ஷ்மியுடன் வாமநாவதாரம் பண்ணலாமென்று முடிவெடுத்தார் பகவான்.

சிறிய வருவாய்கள் தொடங்கி, பெரிய வளர்ச்சிகள் வரை எல்லாவற்றுக்கும் திருவின் அருள் எல்லோருக்கும் தேவைப்படுகிறது என்பது ஸாரம்.

எம்பெருமான் மார்பின் கண் இல்லையேல் கடலின் பெண்,
எவன் தருவான் மூவடி மண்? எப்படித் தான் செல்லும் விண்?

15. உள்ளத்தில் வைப்பவரை உயர்த்துபவள்.

दैत्यादेत्य हि कुप्रतिग्रहमहो वृद्ध्या च पुष्णंस्तनुं
गोत्रघ्नावरजो मृषावटुरधः पातं च दातुर्दिशन्।
पात्राकारमगादधावलिहृतो हृद्यम्ब ! ते धारणात्
धात्रा सञ्जगृहे तदस्य शिवतासम्पादकं पादकम्॥ १५॥

தைத்யாதேத்ய ஹி குப்ரதிக்ரஹமஹோ வ்ருத்த்யா ச புஷ்ணம்ஸ்தநும்
கோத்ரக்நாவரஜோ ம்ருஷாவடுரத: பாதம் ச தாதுர்திஶந்।
பாத்ராகாரமகாததாவலிஹ்ருதோ ஹ்ருத்யம்ப ! தே தாரணாத்
தாத்ரா ஸஞ்ஜக்ருஹே ததஸ்ய ஶிவதாஸம்பாதகம் பாதகம்॥ 15

अम्ब = அம்மாவே।

दैत्यात् = அஸுரனிடமிருந்து

कु-प्रतिग्रहं = 1. கெட்டதாகத் தானம் வாங்குவதை 2. பூதானம் வாங்குவதை

एत्य हि = அடைந்தல்லவா

अहो = ஐயோ

वृद्ध्या = 1. வட்டி மூலம் 2. வளர்ச்சியால்

तनुं = உடலை

पुष्णन् च = போஷித்துக் கொண்டும்

गोत्र-घ्न-अवरजः = 1. குலத்தைக் கெடுக்கும் நீசப் பிறவியாய் 2. இந்த்ரனுக்குத் தம்பியாய்

मृषा-वटुः = 1. வெளிவேஷத்துக்கு மட்டும் ப்ரஹ்மசாரியாய், 2. ப்ரஹ்மசாரி வேஷம் போட்டவனாய்

दातुः = தானம் பண்ணினவனுக்கு

अधः = पातं 1. அதோகதியை, வீழ்ச்சியை 2. பாதாளத்தில் விழுவதை

दिशन् च = காண்பித்துக் கொண்டும், தந்துகொண்டும்,

हृदि = 1. மனதில் 2. ஹ்ருதய ஸ்தானமான மார்பில்

अध-आवलि-हृतः = பாவ வரிசைகளைப் போக்குகிற

ते = உன்னுடைய

धारणात् = 1. த்யானத்தால், 2. தாங்குவதால்,

पात्र-आकारं = ஸத்பாத்ரத்தன்மையை

पातृ-आकारं = ரக்ஷக ரூபத்தை

अगात् = அடைந்தார்.

तत् = ஆகையாலே

शिवता सम्पादकं = 1. மங்களத் தன்மையை, 2. ஶிவனாகும் நிலையை, ஏற்படுத்துவதான
पाद-कं = திருவடி நீர் என்னும் ஸ்ரீபாத தீர்த்தமானது
अस्य = இவருடைய
धात्रा = ப்ரஹ்மாவினால்
सञ्जगृहे = நன்கு ஏற்கப்பட்டது.

அம்மா ! உன்னை த்யானிப்பவர் பாவிகளானாலும் பரிஶுத்தி பெறுவர். நீ பாவ வரிசைகளை அபஹரிப்பது மட்டுமன்றி, உன்னைத் த்யானிக்கும் பாவிகளை மற்றவர் போற்றும் அளவுக்கு உயர்த்திவிடுகிறாய். இது வாமநாவதாரக் கதையிலிருந்து தெரிகிறது. ஐந்து பெரும்பாவங்கள் பண்ணினவர் ஒருவர். தீயோர் பணத்தைத் தானமாக வாங்கிக் கொள்வது, வட்டிப் பணத்தில் பிழைப்பது, குலத்துக்குக் கோடாரியாய் நீசப் பிறவியாய் இருப்பது, வடுவாக வெளிவேஷம் போடுவது, தனக்குக் கொடுத்துதவிய வரையே கீழே தள்ளுவது, என்ற குற்றங்களைப் புரிந்தவர். ஆனால் அவர் உன்னை இதயத்தில் இருத்தினார். அதற்குக் கைமேல் பலன் கிடைத்து. ஸத்பாத்ரமானார். இவருடைய திருவடிநீர் கூட மங்களம் தருமென்று ப்ரஹ்மாவால் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இப்படி ஒரு பாவி பாவநனான கதை வாமநாவதாரக் கதையில் காணோமே என்று மருள வேண்டாம். இருபொருட் சொற்களின் உதவியால் வாமனருக்கே இந்த நிலை என்று முதலிப்போம். அவர் பலியிடம் பூதானம் வாங்கினார். பூதானம் வாங்குவதைக் கு-ப்ரதிக்ரஹம் என்னலாம். ஏனென்றால் கு என்று பூமிக்குப் பெயர். குப்ரதிக்ரகம் என்ற இதே பதத்துக்கு **அஸத்ப்ரதிக்ரஹம்** என்றும் அர்த்தம் இருப்பதால் இது குற்றமாகிறது.

இரண்டாவதாக, **வ்ருத்தி** என்ற பதத்துக்கு வளர்ச்சி என்றும் வட்டி என்றும் இரண்டு அர்த்தங்கள். வாமனர் த்ரிவிக்ரமராக வளர்ந்தபோது வளர்ச்சியினால் ஶரீர போஷணம் பண்ணியதால், வட்டித் தொழிலால் ஜீவிப்பவர் என்ற அர்த்தமும் கிடைக்கிறது.

மூன்றாவதாக, இந்த்ரன் மலைகளைப் பிளந்ததால் அவனுக்குக் கோத்ரக்நன் என்று பெயர். அவனுக்குத் தம்பியானதால் வாமனர் கோத்ரக்ந -அவரஜர் ஆகிறார். கோத்ரம் என்பதற்குக் குல கோத்ரம் என்றும், அவர என்பதற்குத் தாழ்ந்த என்றும் அர்த்தங்களும் இருப்பதால், இவர் குலத்தைக் கெடுக்கும் நீசப் பிறவி என்றாகிறது.

நான்காவதாக, வாமனர் உண்மையில் ப்ரஹ்மசாரியன்று; திருமகள் கேள்வன் ஆனவர். இந்த அவதாரத்தில் மட்டும் வடுவாய் நடிக்கிறார். இதனால் வெளிவேஷம் போடும் ப்ரஹ்மசாரி என்றதாகிறது.

ஐந்தாவதாக, தனக்குத் தந்து உதவியவனையே தள்ளி அமுக்கும் துர்குணம் நன்றி கொல்லல் என்பது. வாமனர் தனக்குத் தானம் செய்த பலியையே பாதாளத்தில் விழச் செய்தவர்.

இந்த ஐந்து குற்றங்கள் புரிந்திருந்தும் வாமனர் ஒரே ஒரு புண்யகார்யம் பண்ணினார். லக்ஷ்மி த்யானம் என்கிற ஸத்கார்யம். இதைப் பண்ணினதாகத் தெரியவில்லையே என்று கேட்டால், திருமகளை இதயத்தில், மார்பில், வைத்திருக்கிறார் அல்லவா? என்று விடையிறுப்போம். அதன் பலனாக அவர் பாவம் நீங்கப் பெற்றது மட்டுமின்றி, ஸத்பாத்ரமும் ஆனார்; தன் ஸ்ரீபாத தீர்த்தம் மாங்கள்யம் தரும் அளவுக்குப் புண்ய புருஷரும் ஆனார்; ப்ரஹ்மாவே அந்த நீரை ஸ்வீகரித்தார். ஸத்பாத்ரமானது எப்படி என்றால், பாத்ராகாரம் என்பதற்கு இன்னொரு அர்த்தப்படி, ரக்ஷகரானார்; மும்மூர்த்திகளின் நடுவே காக்கும் கடவுளாக இந்த உபேந்த்ரமூர்த்தி விஷ்ணுவானார். மேலும், இவருடைய திருவடி ஸத்யலோகம் வரை சென்றபோது ப்ரஹ்மதேவன் ஸ்ரீபாத தீர்த்தம் சேர்த்ததும், அதைத் தலையில் தாங்கியதால் ஶிவன் மங்களமாகி அதனால் ஶிவனானதும், புராணங்களில் ப்ரஸித்தம். இவ்வளவு மேன்மைகளுக்கும் காரணமானது உன்னை இதயத் திருத்தினமை. ஆகையால் பாவிகளான

நாங்களும் திருமகளைத் த்யானித்து நற்கதி பெறுவோம்.

உன்னையே சேர்ந்தவர்கள் உள்ளத்தில் கொண்டவர்கள்
உதறிடுவர் தீவினைகள் உயர்வையும் அடைவார்கள்.

இந்த ச்லோகத்தில் நமக்கு நிறைய நீதிகள் உள்ளன :

1. ஆஸுர ப்ரக்ருதிகளிடம் தானம் வாங்கலாகாது. நல்லவர்களிடமிருந்து மட்டுமே வாங்கிக் கொள்ளலாம். நாய் விற்ற காசு குரைக்காது என்கிற பழமொழி ஶாஸ்த்ரத்துக்கு ஒவ்வாது. நாம் ஈட்டும் பணம் நல்லோரிடமிருந்து பெற்றதா என்பது முக்யம். **குலடாஷண்டபதித வைரிப்ய: காகிணீமபி** என்ற ப்ரமாணத்தைக் காட்டி இதை விளக்குகிறார் ஸ்வாமி தேஶிகன் ஒரு க்ரந்தத்தில்.

2. **குப்ரதிக்ரஹம்** என்ற பதத்திலும் நமக்கு ஒரு நீதி இருக்கிறது. அறு தொழில் அந்தணர்களின் ஒரு தொழிலாக ப்ரதிக்ரஹம் என்பது இருந்தாலும், கண்டதையும் தானமாகப் பெறலாகாது. ப்ரதிக்ரஹ தோஷம் வராதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

3. வட்டிக்குக் கடன் கொடுத்து அந்த வட்டிப் பணத்தின் மூலம் பிழைப்பு நடத்துவது பெரும்பாவம். ஸ்ம்ருதிகளில் நிஷித்தமாகச் சொல்லப்பட்ட தொழில் அது. உடலை வளர்க்க வேறு பல உபாயங்கள் உள்ளன. குஸீதவ்ருத்தி வேண்டாம்.

4. நமது குலகோத்திரத்துக்கு நாம் இழிவை ஏற்படுத்தக் கூடாது. நம் முன்னோர்களின் பெருமைக்கு ஏற்ற வகையில் நாம் நடத்தை கொண்டிருத்தல் அவச்யம்.

5. ப்ரஹ்மசர்யவ்ரதம் மேற்கொள்ளும்போது உண்மையிலேயே உள்ளூர அப்படி இருக்க வேண்டும்; வேஷம் மட்டும் போட்டால் போதாது. நடத்தையும் சரியாய் இருக்க வேண்டும்.

6. உதவி புரிந்தவருக்குத் த்ரோஹம் பண்ணக் கூடாது. நன்றி கொல்வது பெரும் பாவம்.

7. எல்லாப் பாவங்களுக்கும் ப்ராயஶ்சித்தமாவது திருமகளை நினைப்பது. ஏற்கெனவே விளக்கிய இரட்டைப் பொருட் சொற்கள் கு, **வ்ருத்தி, கோத்ரம், ஶிவம்**, முதலியவை. இதைத் தவிர **ஹ்ருத்** என்ற பதமும் இந்த ஶ்லோகத்தில் இரண்டு அர்த்தங்களில் கையாளப்பட்டுள்ளது. அபஹரிப்பவள் என்று ஒரு அர்த்தம். ஹ்ருதயம் என்று இன்னொன்று. **ஹ்ருதோ ஹ்ருதி** என்று அடுத்தடுத்து இரண்டு அர்த்தங்களை வைத்து நயத்தை விளைவிக்கிறார் கவி.

ஸம்பாதகம் பாதகம் என்ற இடத்தில் யமகத்தைக் காண்கிறோம். பாதாரம்பங்களில் **தைத்யா, கோத்ரா, பாத்ரா, தாத்ரா** என்ற ப்ராஸத்தையும் பார்க்கிறோம்.

பாத்ராகாரம் என்பதற்குப் பதில் **வாமாகாரம்** என்று பாடபேதம் உண்டு. **வாம** என்ற சொல்லுக்கும் இரண்டு அர்த்தங்கள் உண்டு. அழகான என்றும், ப்ரதிகூலமான என்றும்.

வாமனாவதாரக் கதையில் ஏழு பகுதிகள் இந்த ஶ்லோகத்தில் காண்பிக்கப்பட்டுள்ளன. உபேந்த்ரனாக அவதாரம், மூவடி மண் வேண்டல், அவதாரத்திலும் திருமகளை மார்பில் தரித்தல், த்ரிவிக்ரமனாய் உலகளத்தல், கங்காவதரணம், ஶிவன் மங்களமாதல், பலியின் தலையில் அடிவைத்தல், என்கிற ஏழு பகுதிகள். பகவான் அதிதிக்கும் காஶ்யபருக்கும் பிள்ளையாக, இந்த்ரனுக்குத் தம்பியாகப் பிறந்தார். இதனால் உபேந்த்ரன் எனப் பட்டார். மாணிக்குறளுருவாய் அபிநயம் பண்ணினார். பலிசக்ரவர்த்தியிடம் சென்று யாசகம் பண்ணினார். இப்படிப் ப்ரஹ்மசாரி வேஷம் போட்டபோதும் அவரது மார்பில் லக்ஷ்மியைத் தரித்திருந்தார். அவரை ஸத்பாத்ரமாகக் கருதினான் அந்த அரசன். பூதானம் பெற்றுக் கொண்டார். பிறகு மிகப் பெரிய உருவத்தை எடுத்துக் கொண்டு த்ரவிக்ரமன் ஆனார். உலகளந்தார். தன் லோகத்துக்கு வந்த

இவரது திருவடியைப் ப்ரஹ்மா பாத்யஜலம் ஸமர்ப்பித்து உபசரித்தார். அது கங்காஜலமாகப் பெருகியது. அதைப் பின்பொரு ஸமயத்தில் ஶிவன் தலைமேல் ஏற்க வேண்டி வந்தது. அதுகாறும் ப்ரஹ்மாவின் தலையறுத்த பாவம், கையில் மண்டையோட்டை ஏந்திப் பிச்சைக்காரனாய்த் திரிதல், சுடுகாட்டில் வசித்தல், முதலியவற்றால் அமங்களம் மிகுந்த ஶிவன் இந்தக் கங்கை நீரைத் தலையில் தாங்கியபின்னரே ஶிவனாயினான். இந்தக் கதை நிற்க, பழைய கதையையே தொடர்வோம். மூவுலகமும் மூவடிக்குப்போதாததால் பலியின் தலையில் அடியை வைத்தார். அவனைப் பாதாள உலகில் அழுங்கச் செய்தார். இவ்வளவு கதையையும் இந்த ஶ்லோகத்தில் அடக்கிச் சொல்லியிருக்கிறார் கவி. இதைச் சொல்லும்போது வார்த்தைகளில் சமத்காரங்களைப் பண்ணி, திருமகளை உள்ளத் திருத்தியதால் பாவங்கள் நீங்கி மேன்மைகள் பெற்றதாக வேறொரு அர்த்தம் கிடைக்கும்படி அமைத்திருக்கிறார்.

திருமகளைத் த்யானித்தால் தீவினைகள் தேய்ந்து விடும்.
மலர்மகளை மனத்திட்டால் மஹிமை மிகும் மதிப்பு வரும்.
நீரஜையை நினைப்பதனால் நீசத்வம் நீங்கிவிடும்.
இலக்குமியை இதயத்தில் இருத்திட்டால் இழுக்கழியும்.

16. புருஷனின் பொடிப் பேச்சுக்குப் புன்னகைப்பவள்.

वासस्ते क्व वटो गुहास्वशनमप्याकाङ्क्षितं ते धनं
मां जानीह्यघनाशनादरमये किं ते विवाहे स्पृहा ।
मा स्त्री मे दिश गां पदत्रयमितां लोकत्रयी सा ममे-
त्युक्तीर्दिव्यवटोर्निशम्य तदुरस्यम्ब त्वया ! सिस्मये ॥ १६

வாஸஸ்தே க்வ வடோ குஹாஸ்வஶநமப்யாகாங்க்ஷிதம் தே தநம்
மாம் ஜாநீஹ்யகநாஶநாதரமயே கிம் தே விவாஹே ஸ்ப்ருஹா ।
மா ஸ்த்ரீ மே திஶ காம் பதத்ரயமிதாம் லோகத்ரயீ ஸா மமே-
த்யுக்தீர்திவ்யவடோர்நிஶம்ய ததுரஸ்யம்ப ! த்வயா ஸிஸ்மயே ॥ 16

अम्ब = அம்மாவே !
वटो = சிறுவனே
ते = உனது
वासः = வஸிப்பு.
गृहासु = குகைஹகளிலே
घनं = மிகுதியாக
अशनं = உணவு
ते = உனக்கு
आकाङ्क्षितं अपि = விரும்பப்பட்டதா என்ன?
मां = என்னை
अ-घन-अशन-आदरं = மிகுதியான உணவில் ஆர்வமில்லாதவனாக
अघ-नाशन-आदरं = பாவத்தை அழிப்பதில் ஆர்வம் கொண்டவனாக
जानीहि अये = அறிந்திடய்யா.
ते = உனக்கு
विवाहे = திருமணத்தில்
स्पृहा किं = விருப்பமா என்ன?
मे = எனக்கு
स्त्री = பெண்டு
मा = 1. லக்ஷ்மி 2. வேண்டாம்
पद-त्रय-मितां = மூன்றடி அளவுடைய
गां = பூமியை
पद-त्रयं इतां = மூன்று கால்கள் கொண்ட
गां = பசுமாட்டை
दिश = கொடு
सा = அது
मम = எனக்கு
लोक-त्रयी = மூவுலகாகும்.
इति = என்றிப்படி
दिव्य-वटोः = தெய்வச் சிறுவனின்
उक्तीः = பேச்சுகளை
निशम्य = கேட்டு
तत्-उरसि = அவரது மார்பில்
त्वया = உன்னால்
सिस्मये = புன்னகை பண்ணப்பட்டது.

அம்மாவே ! வாமனருக்கும் பலிச்சக்ரவர்த்திக்கும் நடந்ததாக இதோ ஒரு கற்பனை உரையாடல் :

பலி :- சிறுவனே ! நீ எங்கு வசிக்கிறாய் ?

வாமனர் :- குஹைகளிலே.

பலி :- (உபநிஷத்தில் சொன்னபடி தஹரக் குஹைக்குள் வஸிக்கும் பரமாத்மா என்பதைப் புரிந்துகொள்ளாமல்).

தனக்குள் :- ஓ, காட்டுக் குஹைகளில் வஸிப்பவனோ? உனக்கு என்ன வேண்டும்? ஏராளமாக உணவில் (சுநாஸநத்தில்) நாட்டமா?

வாமனர் :- மாறுக அகநாபஸநத்தில் நாட்டம் எனக்கு.

பலி :- (பாவங்களை நசிப்பதில் என்ற அர்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல்) ஓ, அதிக உணவில் நாட்டம் இல்லை என்கிறாயோ?) சரி, கல்யாணத்தில் உனக்கு ஆசையோ?

வாமனர் :- எனக்குப் பெண்டு மா.

பலி :- (மா என்றால் லக்ஷ்மி என்பதைப் புரிந்துகொள்ளாமல் தனக்குள்) ஓ, மனைவி வேண்டாமோ?

வாமனர் :- மூன்றடி மண் கொடு; அதுவே எனக்கு மூவுலகமாகும்.

பலி :- (மூவடியால் மூவுலகத்தையும் அளக்கப் போகிறார் என்பதைப் புரிந்து கொள்ளாமல், மூன்று கால் பமா என்று ஒரு அர்த்தம் வருவதையும் புரிந்துகொள்ளாமல், தனக்குள்) ஓ, உனக்கு ஆசை அதிகமில்லாததால் மூவடி நிலத்தையே மூவுலகமாகப் பாவிப்போயோ?

இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்தாள் வாமனனின் மார்பில் பதுங்கியிருந்த லக்ஷ்மி. தன் கணவர் சொன்ன உத்தரங்களில் சாதுர்யம் மிகுந்திருப்பது அவளுக்குப் புரிந்தது. தான் ஸர்வாந்தராத்மா என்பதையும், தனக்கு லக்ஷ்மியே மனைவி என்பதையும், தான் பாவங்களைத் தொலைத்துக் கட்டுபவன் என்பதையும், மூவடிகளால் மூவுலகையும் அளக்கவல்லவன் என்பதையும் மறைக்காமல் சொல்லிவிட்டார். ஆனாலும் வேறு அர்த்தங்கள் இருப்பதால் பலிக்கு உண்மை புரியவில்லை. இதையெல்லாம் மார்பில் மறைந்து கேட்டுக் கொண்டிருந்த லக்ஷ்மிக்கோ சிரிப்பாய் வருகிறது. ஆனாலும் அடக்கிக் கொள்கிறாள், தான் ரகசியமாய் இருப்பது பலிக்குத் தெரிந்துவிடக் கூடாது அல்லவா? ஆனாலும் புன்னகை மட்டும் பண்ணுகிறாள்.

பொடிப்பயலாய் உன் புருஷன் பொடிவைத்துப் பேசுவதன்
பொருளெல்லாம் புரிந்ததனால் புன்னகை நீ புரிகின்றாய்.

இத்துடன் வாமனாவதாரப் பகுதி முடிந்தது.

அடுத்தது பரசுராமாவதாரம்.

தஶாவதார ஸ்தபகம்

17. தரணியைத் தக்ஷிணையாய்த் தரவைத்தவள்

श्रीमान्निस्स्व इवैष वामनतनुः प्रत्यग्रहीद्गां क्रता-
वित्थं दुग्धपयोधिजे ! तव परीहासोक्तिभिर्लज्जितः ।
अंशेनार्पितसन्निधिर्भृगुपतौ पूर्वावतारार्जितां
तामेनां पुनरध्वरे स भगवान्नूनं ददावृत्विजे ॥ १७

ஶ்ரீமாந் நிஸ்ஸ்வ இவைஷ வாமநதநு: ப்ரத்யக்[3]ரஹீத் கா[3]ம் க்ரதௌ
இத்த[2]ம் து[3]க்[3]த[4] யோதி[4]ஜே தவ பரீஹாஸோக்திபி[4]ர் லஜ்ஜித: ।
அம்ஶேநார்பிதஸந்நிதி[4]ர் ப்[4]ருகுபதௌ பூர்வாவதாரார்ஜிதாம்
தாமேநாம் புநரத்4வரே ஸ ப[4]க[3]வாந் நூநம் த[3]தா[3]வ்ருத்விஜே ॥ 17

दुग्ध-पयोधि-जे = பாற்கடலில் உண்டானவளே !
श्रीमान् = செல்வந்தனா யிருந்தும்
निस्स्वः इव = தரித்ரன் போல
एषः = இவன்
वामन-तनुः = குள்ள உருவம் கொண்டவனாய்
क्रतौ = யாகத்தில்
गां = பூமியை, பசுவை
प्रत्यग्रहीत् = தாநம் வாங்கினான்
इत्थं = என்றிப்படி
तव = உன்னுடைய
परीहास = उक्तिभिः = எள்ளல் பேச்சுக்களால்
लज्जितः = வெள்கியவனாய்
भृगु-पतौ = ப்ருகுவம்ஶத் தலைவனான பரசுராமரிடம்
अंशेन = அம்ஶத்தால்
अर्पित-सन्निधिः = ஸாந்நித்யம் தந்தவராய்
पूर्व-अवतार-अर्जितां = முன்னவதாரத்தில் ஸம்பாதிக்கப்பட்ட
तां அந்த
एनां = இதை (பஶுவை, நிலத்தை)
सः = அந்த
भगवान् = பகவான்
अध्वरे = யாகத்தில்
ऋत्विजे = ரித்விக்கான காஶ்யபருக்கு
पुनः = திரும்பி
ददौ = கொடுத்தார்.
नूनं = நிஶ்சயம்

பாற்கடலின் பெண்ணே ! வாமநாவதாரத்திற்கும் அதற்கடுத்ததான பரசுராமாவதாரத்திற்கும் ஒரு வேறுபாட்டைக் கவனிக்கலாம். வாமனர் பூதானம் வாங்கினார். பரஶுராமர் பூதானம் கொடுத்தார். இரண்டு நிகழ்ச்சிகளுமே யாகத்தில் நடந்தவை. பலிசக்ரவர்த்தியின் யாகத்தில் பூமியைக் கொடுத்தவன் பலி; வாங்கியவர் வாமனர். பரஶுராமரின் யாகத்தில் பூமியைக் கொடுத்தவர் பரசுராமர்; வாங்கியவர் காஶ்யபர். என் ஊஹம் என்னவெனில், திருமகளின் எள்ளலுக்கு வெட்கப்பட்டுத்தான் முன்னவதாரத்தில் தானமாகப் பெற்ற பூமியைப் பின்னவதாரத்தில் தானமாகக் கொடுத்து விட்டார் என்று. என்ன எள்ளல் என்றால், லக்ஷ்மி இவரை இப்படிப் பரிஹஸித்திருப்பாள். உண்மையில் செல்வந்தனாக இருந்தும் கூட, இவன் குள்ளவடிவம் எடுத்துக்கொண்டு பலியின் யாகத்துக்குப் போய் பிச்சைகேட்டு நிலத்தைப் பெற்றானே, வெட்கக் கேடு! என்று. தீக்ஷிதனிடமிருந்து கோதாநம் வாங்கிய குறையும், நிஷித்தத்தைச் செய்ததால், லஜ்ஜைக்குக் காரணமாகிறது. இந்த வெட்கத்தால் கூனிக்குறுகியதால் தான் வாமன வடிவமோ? அதற்கு மேல், மனைவியின் ஏளனப் பேச்சும் சேர்ந்துகொண்டது. இதற்கொரு மாற்று பண்ணியே ஆகவேண்டும். ஒரு அவதாரத்தில் ஏற்பட்ட குறையை இன்னொரு அவதாரத்தில் தீர்ப்பது தகும். யாகதீக்ஷாகாலத்துக் குறையை யாக தீக்ஷாகாலத்தில் தீர்ப்பது தகும். இவ்வாறெல்லாம் யோசித்தோ என்னவோ, ஜமதக்நி குமாரனாக அம்ஶாவதாரம் எடுத்து, முடிவில் யாகதீக்ஷை பண்ணிக் கொண்டு, தான் முன்னவதாரத்தில் தானமாகப் பெற்ற அதே பூமியைத் திரும்பவும் இன்னொருவருக்குக் கொடுத்தார். இதற்கெல்லாம் காரணம் லக்ஷ்மியின் பரிஹாஸமாகத்தான் இருக்கும் என்று ஹேது-உத்ப்ரேக்ஷை.

இந்த ஶ்லோகத்து நீதிகள் :

1. யாசிப்பது (பிச்சை எடுப்பது, இரப்பது) என்பது எள்ளற்குரிய செயல். கூனிக் குறுகிப் போக

வேண்டியிருக்கும். வாசஜ ந யாசாமஹே! என்று கம்பீரமாக இருப்பர் பெரியோர்.

2. பரிஹாஸங்களுள் பெருத்த வெட்கத்தைத் தருவது எதுவென்றால், பெண்டிரின் பரிகாசம். மனைவியே எள்ள ஆரம்பித்துவிட்டால் உபேக்ஷிக்காமல் செயல் புரிய வேண்டும்.

3. குடும்பத்திற்கு ஒவ்வாத கார்யத்தைப் பண்ணக் கூடாது. லக்ஷ்மீபதியாய் இருப்பவன் பிச்சை கேட்கலாமோ? கேட்டுப் பெற்றால் அதைத் திருப்பித் தந்தே ஆக வேண்டும்.

4. யாக தீக்ஷை பண்ணிக் கொண்டவனிடமிருந்து ஊர் உலகமறியத் தானம் வாங்கிக் கொள்வது லஜ்ஜைக்குரியது; நிஷித்தமும் கூட.

5. ஒரு தவறுக்குக் கழுவாய் செய்வதானால் அதே ரீதியில் செய்வது பொருந்தும். தானம் வாங்கிய குறை நீங்க, தானம் கொடுக்கலாம். யாக ஸபையில் நடந்தத்தை ஈடுகட்ட இன்னொரு யாகஸபையில் ப்ரதியான செயலைப் பண்ணலாம்.

6. எள்ளலுக்கு லஜ்ஜிப்பது, நாணடைவது, நல்லது. மாற்றுச் செயலில் நம்மை அது தூண்டும்.

காச்யப முனிவருக்குக் காசினியைக் கொடுத்ததற்குக் காரணம் உன் எள்ளலுக்குக் காதலியின் நாணாகும்.

18. வீரத் திருவாய் வினைரை வீழ்த்தியவன்

बाहाकल्पे भृगुकुलपतेर्वज्रकल्पे कुठारे
सङ्ग्रामेषु त्रिपुरसखि ते सन्निधाने भजन्त्याः ।
क्रोधोन्मेषक्षपितविमतक्षोणिपश्रेणिलक्ष्म-
ग्रीवोत्थासृग्घुसृणमसृणं गात्रमत्यर्थशोणम् ॥

பாஹாகல்பே ப்ரு[4]கு[3]குலபதேர்வஜ்ரகல்பே குடா[2]ரே
ஸங்க்[3]ராமேஷு த்ரியுக[3]ஸகி தே ஸந்நிதா[4]நம் ப[4]ஜந்த்யா: ।
க்ரோதோ[4]ந்மேஷக்ஷபிதவிமதக்ஷோணிபஶ்ரேணிலக்ஷ.
க்[3]ரீவோத்தா[2]ஸ்ருக்[3]கு[4]ஸ்ருணமஸ்ருணம் கா[3]த்ரமத்யர்த்த[2]ஶோணம் ॥

त्रियुग-सखि = த்ரியுகனின் தோழியே !
भृगु-कुल-पतेः = ப்ருகு வம்ஸத் தலைவரான பரசுராமரின்
बाहा-आकल्पे = தோளுக்கு அணியானதும்
वज्र-कल्पे = வஜ்ராயுதம் போன்றதுமான
कुठारे = கோடாலியில்
सङ्ग्रामेषु = யுத்தங்களில்
सन्निधानं = ஸாந்நித்யத்தை (இருப்பை)
भजन्त्याः = அடைந்திருக்கிறவளான
ते = உன்னுடைய
गात्रं = திருமேனியானது
क्रोध-उन्मेष-क्षपित-विमत-क्षोणिप-श्रेणि-लक्ष-ग्रीवा-उत्थ-असृक्-घुसृण-मसृणं = கோபத்தின் எழுச்சியால் பொசுக்கப்பட்ட பகையரசர் வரிசைகளின் லக்ஷம் கழுத்துகளில் கிளம்பும் ரத்தக் குங்குமப் பூச்சு கொண்டதாய்
अत्यर्थ-शोणं = மிகவும் சிவந்தது.

த்ரியுகன் என்ற திருநாமம் கொண்ட பகவானின் தோழியான லக்ஷ்மியே ! பரசுராம அவதாரத்திலும் நீ கூடவே இருந்தாய். அவருடைய கோடாலியில் வீரலக்ஷ்மியாய்க் குடியிருந்தாய். அதனால் தான் அந்தக் கோடாலியால் அழகும் வெற்றியும் அவருக்குக் கூடின. அவருடைய தோளுக்கு அணிகலனாக இருந்த கோடாலி யுத்த காலங்களில் உன் ஸாந்நித்யத்தால் மேலும் பொலிவு பெற்றது. அவருக்குக் கோபம் பொங்கியபோது லக்ஷக் கணக்கில் பகைவர்களான அரசர்கள் மடிந்தார்கள். அவர்களது ரத்தம் குங்குமக் குழம்பு போல அந்தக் கோடரியில் பூச்சு பெற்றது. கோடரியில் வீற்றிருக்கும் உன் வடிவின் சிவப்பு நிறத்தை இந்தச் செம்பூச்சு அதிகப்படுத்தியது.

ப்ருகுகுலபதி என்றதால், ப்ருகுவின் வம்ஶத்தில் ஏராளமானவர் இருந்தாலும், அவர்களுக்கெல்லாம் தலைவர் என்னலாம்படி விளங்கியவர் பரஶுராமர் ஒருவரே என்கிறார்.

பாஹுகல்பே என்றதால், ஆயுதமான கோடாலி அவருக்கு அணிகலனாகவும் ஆனதைச் சொல்கிறார். அதனாலன்றோ அவரது அழகு கூடிற்று? அதையன்றோ அவர் யுத்தம் இல்லாத காலங்களிலும் ஏந்திக் கோவில்களில் ஸேவை ஸாதிக்கிறார்?

வஜ்ரகல்பே என்றதால், அந்தக் கோடாலி வஜ்ரம் போல மிகக் கடினமாகவும் கொடூர விளைவுகளை ஏற்படுத்துவதாகவும் இருந்ததைச் சொல்கிறார்.

ஸங்க்ராமேஷு என்றதால், இருபத்தொரு தடவை க்ஷத்ரியர்களை வெட்டி மடித்து ரத்தவெள்ளம் பாய்ச்சிய கோர யுத்தங்களைச் சொல்கிறார்.

ஸந்திதாநம் என்றதால் அந்த யுத்த காலங்களிலெல்லாம் வீரலக்ஷ்மியின் ஸந்நிதியாக அந்தக் கோடாலி ஆனதைச் சொல்கிறார். அப்போதும் பெருமானை விட்டுத் தாயார் பிரியாததையும் தெரிவிக்கிறார்.

க்ரோதோத்மேஷு என்றதால் தந்தையான ஜமதக்நி அக்ரமமாகக் கொடூரமாகக் கொலையுண்டதால் வெகுண்ட பரஶுராமருக்குப் பொங்கியெழுந்த கோபம் கட்டுக் கடங்காமல் இருந்ததைச் சொல்கிறார்.

க்ஷோணீபப்ரேணிலக்ஷ என்றதால் அந்தக் கோடரியால் வெட்டுண்டு வரிசை வரிசையாக மாண்டுபோன வேந்தர்கள் லக்ஷக் கணக்கில் இருந்ததைச் சொல்கிறார்.

அஸ்ருக்குங்குமே என்பதால், ரத்தமும் குங்குமச்சாறு போலச் சிவப்பாகவும் அடர்த்தி மிகுந்தும் அழகூட்டுவதாகவும் அமைவதைச் சொல்கிறார்.

அத்யர்த்தஶோணம் என்பதால், ஏற்கெனவே சிவப்பாயிருந்த வடிவம் இந்தக் குங்குமப் பூச்சால் மேலும் கூடுதலான செந்நிறம் பெற்றதைச் சொல்கிறார். காஷ்மீரத்துக் குங்குமப்பூவைக் குழைத்துக் தடவினாற் போல் அல்லவா இருந்தது?

கோபத்தின் பொங்குதலால் கோடரியின் தாக்குதலால்
கோவேந்தர் மாண்டதும் நீ கோடரியில் இருந்ததனால்.
குரூரப் போராம் குருதிச் சேறும்
குங்குமச் சாறும் கூடின சிவப்பாம்.

19. சேராததையும் சேர்க்கவல்ல செல்வமகள்

बिभ्राणे स्वधितिं समिद्धरणतो मन्युप्रपोषक्षमम्
लोके शास्त्रविचक्षणे नृपकुले ज्याधर्म संस्थाकरे।
भेजाते ननु दुर्घटार्थघटिनि त्वद्वीक्षणाद्भार्गवे
सामानाधिकरण्यमर्णवसुते ! ब्राह्मण्यराजन्यते॥

பி3ப்4ராணே ஸ்வதி4திம் ஸமித்3த்4ரணதோ மந்யுப்ரபோஷக்ஷமம்
லோகே ஶாஸ்த்ரவிசக்ஷணே ந்ருபகுலே ஜ்யாத4ர்ம ஸம்ஸ்தா2கரே ।
பே4ஜாதே நநு து3ர்க4டார்த2க4டிநி த்வத்3வீக்ஷணாத்4பா4ர்க3வே
ஸாமாநாதி4கரண்யமர்ணவஸுதே! ப்3ராஹ்மண்யராஜந்யதே ॥

अर्णव-सुते = கடலின் மகளே!
अघटित-अर्थ-घटिनि = சேராத பொருளையும் சேர்ப்பவளே!
समित् हरणतः = ஸமித்துகளை எடுப்பதால்
समिद्ध-रणतः = கொழுந்துவிட்டெரியும் யுத்தத்தால்
मन्यु-प्रपोष-क्षमं = 1. யாகத்தை, 2. கோபத்தை, வளர்க்க வல்ல
स्वधितिं = கோடரியை
बिभ्राणे = சுமக்கிறவரும்
लोके = உலகில்
शास्त्र-विचक्षणे = ஶாஸ்த்ரங்களில் வல்லுனரும்
नृप-कुल-इज्या-धर्म-संस्था-करे = ராஜ வம்சத்துக்கும் யாகரூபமான தர்மங்களை வ்யவஸ்தை பண்ணுகிறவரும், அல்லது அக்நிஷ்டோமம்

முதலிய ஸம்ஸ்தைகளைப் பண்ணுகிறவரும்.
लोकेश अस्त्र विचक्षणे =
ப்ரஹ்மாஸ்த்ரத்தில் கெட்டிக்காரரும்,
नृपकुले = அரசர் குழுவில்
ज्यर-धर्म-संस्थाकरे = தானமும் வில்லாலும் ஸமாப்தி பண்ணுகிறவருமான
भार्गवे = பரசு ராமரிடத்தில்
त्वत् - वीक्षणात् = உன் பார்வையால்
ब्राह्मण्य-राजन्यते = ப்ராஹ்மணத் தன்மை, க்ஷத்ரியத் தன்மை என்ற இரண்டும்
सामानाधिकरण्यं = ஒரே இடத்தில் இருப்பை
भेजाते = அடைந்தன
ननु = அல்லவா?

கடலின் மகளே ! நீ அகடித கடநா ஸாமர்த்யம் கொண்டவள். சேராதவற்றைச் சேர்ப்பிக்கும் ஆற்றல் படைத்தவள். இது பரசுராமர் கதையில் தெரிகிறது. உன் கடாக்ஷத்தால் நல்ல ப்ராஹ்மண்யமும் உயர்ந்த க்ஷத்ரியத் தன்மையும் ஒரே இடத்தில் சேர்ந்தன. பரசுராமரிடத்தில் இவை இரண்டுமே இருந்தன. இது சேராச் சேர்க்கை. இதற்கு உன் பார்வை தான் காரணம். ப்ராஹ்மண்ய பலம் மிகுந்தும், இருபத்தொரு தலைமுறை க்ஷத்ரியர்களை வேறறுத்த பலமும் பரசுராமரிடத்தில் இருந்ததால் இது சேராச் சேர்க்கை. இதையே சிலேடை மூலமாகவும் விளக்கலாம். ப்ராஹ்மணனும் கோடரி வைத்திருப்பான்; க்ஷத்ரியனும் வைத்திருப்பான். உபயோகம் தான் வெவ்வேறு. ப்ராஹ்மணனுக்கு பலாச மரக்குச்சி போன்ற ஸமித்துகளை மரங்களிலிருந்து வெட்டிக் கொண்டுவந்து ஹோமம் பண்ணுவதற்காகச் சிறியதொரு கோடரி பயன்படும். இந்தப் பரசுராமருக்கோ யுத்தத்தில் ஆயுதமாகப் பயன்பட்டது. இது வெவ்வேறாயிருந்தாலும் ஒரு வகையால் ஒன்றே என்று மூதலிப்போம். எப்படியென்றால், ஸமித்தைக் கொண்டு வந்து யாகத்தை வளர்ப்பதையும், யுத்தபூமியில் கோபத்தை வளர்ப்பதையும் ஒரே சொற்றொடரால் சொல்லமுடியும். ஸமித்தரணத்தால் மந்யு வளர்ச்சி என்பது ஒரு சொற்றொடர். ஸமித் என்றும் ஹரண என்றும் பிரித்துப் பொருள் சொன்னால் குச்சி எடுத்து வந்து யாகம் வளர்த்தல் என்று

அர்த்தம். ஸமித்த என்றும் **ரணம்** என்றும் பிரித்தால் எரிகிற யுத்தத்தில் சினத்தை வளர்த்தல் என்று அர்த்தம். **மந்யு** என்ற பதத்துக்கு யாகம் என்றும் கோபம் என்றும் இரண்டு அர்த்தங்களும், அதைக் கொண்டு எத்தனையோ கவிகள் பண்ணியுள்ள வேடிக்கைகளும் ப்ரஸித்தம். **ஸமித்தரணம்** என்பதில் சிலேடை மட்டும் அவ்வளவு ப்ரஸித்தமன்று. ஆக, யாகம் பண்ணும் ப்ராஹ்மணன் கோடரியால் பண்ணுவதும், பரசுராமர் யுத்தத்தில் கோடரியால் பண்ணுவதும் ஒரே கார்யம் ஆகிவிட்டது; ஸமித்தரணத்தால் மந்யு வளர்க்கும் கார்யம். பின்னே என்ன? ப்ராஹ்மண்யமும் ராஜந்யதையும் ஒரே இடத்தில் சேர்ந்தாயிற்று. இதற்கு மேலும் இன்னொரு விதத்திலும் இது நடக்கிறது. ப்ராஹ்மணன் ஶாஸ்த்ரங்களில் வல்லவனாகவும் அரசர்களுக்கும் யாக யஜ்ஞங்களைப் பண்ணி வைப்பவனாகவும் இருப்பான். உயர்ந்த க்ஷத்ரியனோ, ப்ரஹ்மாஸ்த்ர ப்ரயோகம் அறிந்தவனாகவும் நாணையும் வில்லையும் கொண்டு எதிரிகளை மாய்ப்பவனாகவு மிருப்பான். இந்தத் தொழில் வேறுபாட்டை மறைத்து ஒரே தொழிலாகச் சொல்ல முடியுமோ என்றால் அதுவும் ஶ்லேஷையால் முடியும். லோகேஶாஸ்த்ரம் என்ற பதத்தை **லோகே** என்றும் **ஶாஸ்த்ரம்** என்றும் பிரித்தால் உலகில் ஶாஸ்த்ர வல்லமையைச் சொல்லி ப்ராஹ்மணனது தொழிலைக் கூறும். இதையே **லோகேஶ அஸ்த்ர** என்று பிரித்தால் ப்ரஹ்மாஸ்த்ர வல்லமையைச் சொல்லி க்ஷத்ரியன் தொழிலைக் கூறும். இது மட்டுமன்று. **குலேஜ்யாதர்மஸம்ஸ்தை** என்ற சொற்றொடரும் இதற்கு உதவுகிறது. **குல இஜ்யா தர்ம ஸம்ஸ்தை** என்று பிரித்தால் யஜ்ஞ ஸம்ஸ்தைகளைப் பண்ணும் அந்தணர் தொழிலைக் கூறும். இதையே **குலே ஜ்யா தர்ம ஸம்ஸ்தா** என்று பிரித்தால் கூட்டத்தில் நாணாலும் வில்லாலும் அழிக்கும் க்ஷத்ரியத் தொழிலைக் கூறும். **ஸம்ஸ்தை** என்பதற்கு ஸ்தாபனம் என்னும் அர்த்தம் இப்பொழுதும் வழக்கில் இருக்கிறது. ஆனால் ஒழித்துக் கட்டுதல் என்ற இன்னொரு அர்த்தம் நிகண்டுக்காரர்களாலும் மற்ற கவிகளாலும் கையாளப்பட்டதே. **குலேஜ்யா** என்பதை இரண்டு விதமாகப் பிரித்து ஶ்லேடையை வலுப்படுத்துவது

இந்தக் கவி மட்டும் பண்ணியது. எப்படியோ, இரண்டுமே கோடரியின் உதவியால் ஸமித்தரணத்தால் மந்த்ர வளர்ப்பதாலும், லோகே சாஸ்த்ரவல்லமையாலும், ராஜகுலேஜ்யாதர்ம ஸம்ஸ்தை பண்ணுவதாலும், ஸமமாகிவிட்டன. ப்ராஹ்மண்யமும் ராஜந்யதையும் ஒரே மாதிரியாகி விட்டன. பிராட்டியின் பார்வையால் அவ்விரண்டும் பரசுராமரிடத்தில் ஒருங்கே அமைந்துவிட்டன. சேராததும் சேர்ந்துவிட்டது. எல்லாம் தாயாரின் மஹிமை.

பார்க்கவே என்ற பதத்தில் புஷ்டி இருக்கிறது. பரசுராமே என்றோ ஜாமதக்ந்யே என்றோ ஒரு பர்யாய பதத்தைப் ப்ரயோகித்தால் கிடைக்காத ஒரு அர்த்தம் பார்க்கவே என்பதில் கிடைக்கிறது. தாயார் பார்க்கவி. அவள் ப்ருகு வம்சத்தைக் கடாக்ஷிப்பவள். ஆகையால் அவளது பார்வையால் வரும் சேராச் சேர்க்கை பார்க்கவருக்கு வரும். வெறும் ச்லேஷையால் மட்டும் அன்றி, அவள் பார்வையால் அல்லவா அகடிதகடநம் ஏற்பட்டது என்கிறார் இந்தக் கவி.

ஸாமாநாதிகரண்யம் என்றால் ஒரே அதிகரணத்தை (இருக்கும் இடத்தை) உடைய நிலை என்று அர்த்தம். இது ப்ராஹ்மண்யத்துக்கும் ராஜந்யதைக்கும் இருக்காது. ப்ராஹ்மணனாகவும் க்ஷத்ரியனாகவும் ஒருவரே இருக்க முடியாது. ஆனால் மூன்று சொற்றொடர்களில் இரண்டிரண்டு அர்த்தங்களை வைத்து, பரசுராமரிடத்தில் இவ்விரண்டிற்கும் ஸாமாநாதிகரண்யத்தை ஸ்தாபித்து விட்டார் கவி. அதற்குப் பிறகும் தானே ஆக்ஷேபித்துக் கொள்கிறார், எப்படி ப்ராஹ்மண்யமும் ராஜந்யதையும் ஒருவரிடத்திலேயே இருப்பது ஸாத்யம்? என்று. இது கூடாதது. இதையும் கூட வைப்பது தாயாரின் பார்வை. அவள் அகடிதகடநா ஸாமர்த்தியம் உள்ளவள் என்று நம்மை நம்ப வைக்கிறார் இதன் மூலமாக.

ஸம்ஸ்தா என்ற பதத்திலும் செறிவு அதிகம்.

அக்நிஷ்டோமம், அதிராத்ரம், அத்யக்நிஷ்டோமம், உக்த்யம், ஷோடஶீ, வாஜபேயம், அப்தோர்யாமம், என்ற ஏழையும் ஸப்த ஸம்ஸ்தைகள் என்பர் ஶ்ரௌதம் அறிந்தவர். (அகராதிகளில் இந்த அர்த்தம் இல்லாவிட்டால் என்ன?) ராஜகுலத்திலும் இந்த ஸம்ஸ்தைகளைப் பண்ணுவிப்பவன் ப்ராஹ்மணன் தானே?

தர்மம் என்ற பதத்தை வில் என்கிற அபூர்வமான அர்த்தத்தில் கையாளுகிறார். மிகச் சில ப்ரயோகங்களே கிடைக்கின்றன. அகராதிகளில் இந்த அர்த்தங்களைச் சொன்னதுண்டு. சிலேடைக்கு வாகாக இருப்பதால் ஏற்றுக் கொண்டு சுவைப்போம். கர்ம என்று பாடபேதம் பண்ண வேண்டிய தேவையில்லை. புரியாத சிலர் பாடத்தையே மாற்றுகிறார்கள்.

கோடரி மந்யுவை வளர்க்க வல்லது என்பதில், மந்யுவுக்கு இரண்டு அர்த்தங்கள் பார்த்தோம். அதன்படி இரண்டு தாத்பர்யங்கள். யாகத்தை வளர்ப்பது, ஹோமத்தீயை வளர்க்கும் குச்சியை வெட்டிக் கொண்டு வருவதாலாம். ஆயுதமான கோடரி கோபத்தை வளர்ப்பது வேறொரு விதத்தில். கையில் ஆயுதம் இருக்கிற காரணத்தாலேயே ஶத்ருக்களை வெட்டும் உணர்ச்சி தூண்டப்படும். பரஶு, குடாரம், என்ற பர்யாய பதங்களை இடாமல், ஸ்வதிதி என்ற பதத்தைக் கவி இந்த ஶ்லோகத்தில் மட்டும் கையாண்டதிலும் ஒரு பொருத்தம் உண்டு. ஸமித்தையும் யாகத்தையும் ஸம்ஸ்தைகளையும் பேசுமிடத்தில் வேதத்தில் அடிக்கடி கையாளப்படும் ஆயுதப் பெயரான ஸ்வதிதி என்பதே பொருந்தும்.

அர்ணவஸுதையின் அருட்பார்வையினால்
அகடித கடநம் அமைந்திட்டதனால்
அந்தணர் பான்மையும் அரசர் பான்மையும்
அந்தோ ஒருவர் பால் அமைந்தன ஒருங்கே.

பரஶுராமாவதாரத்துக்கான ஶ்லோகங்கள் முடிந்துவிட்டன.

20. தலை பத்தையும் தஹிக்கப் பண்ணுபவள்.

पञ्चास्यत्वजुषा पुरा भगवता योऽसौ हिरण्यासुरः
पञ्चत्वं गमितस्स एव जननि ! स्पर्धाभिवृद्धाग्रहः ।
भूत्वा तद्द्विगुणाननो जितजगद्भूयस्त्वदागोऽग्निना
दग्धो हन्त! चतुर्मुखास्त्रनिहतोऽप्येकाननस्य प्रभोः ॥

பஞ்சாஸ்யத்வஜுஷா புரா ப4க3வதா யோ-ஸௌ ஹிரண்யாஸுர:
பஞ்சத்வம் க3மிதஸ்ஸ ஏவ ஜநநி ! ஸ்பர்தா4பி4வ்ருத்3தா4க்3ரஹ: ।
பூ4த்வா தத்3த்3விகு3ணாநநோ ஜிதஜக3த்3பூ4யஸ்த்வதா3கோ3-க்3நிநா
த3க்3தோ4 ஹந்த ! சதுர்முகா2ஸ்த்ரநிஹதோ-ப்யேகாநநஸ்ய ப்ரபோ4: ॥ 20

जननि : தாயே !
पुरा = முன்பொருகால்
पञ्चास्यत्व - जुषा = சிங்கத் தன்மையை அடைந்த, ஐந்துமுகத் தன்மையை அடைந்த
भगवता = பகவானாலே
यः = எந்த
असौ = இந்த
हिरण्यासुरः = ஹிரண்யகசிபு என்கிற அஸுரன்
पञ्चत्वं = சாவை
गमितः = அடைவிக்கப்பட்டானோ,
स एव = அவனே
स्पर्धा - अभिवृद्ध - आग्रहः = போட்டியால் அதிகரித்த பிடிவாதம் கொண்டவனாய்
तत् द्विगुण आननः - அதைக் காட்டிலும் இருமடங்கு முகங்கள் கொண்டவனாக,
भूत्वा = ஆகி
जित - जगत् = உலகை வென்றவனாய்
भूयः = மறுபடியும்
त्वत् - आगः - अग्निना = உன்னிடம் அபசாரப்பட்ட பாவநெருப்பால்
दग्धः = கொளுத்தப்பட்டவனாய்
एक - आननस्य अपि = ஒரே முகமுடைய
प्रभोः = ப்ரபுவான ராமருடைய
चतुर्मुख - अस्त्र - निहतः = நான்முக அஸ்த்ரத்தால் கொல்லப்பட்டான்.
हन्त ! = ஆச்சர்யம்.

ஐந்து ச்லோகங்களால் ராமாவதாரத்தில் லக்ஷ்மியின் பங்கை வர்ணிக்கத் தொடங்குகிறார். அன்னையே ! முன்பொரு ஸமயத்தில் ஹிரண்யகசிபு என்ற அஸுரனாயிருந்தவன் தான் பிற்காலத்தில் ராவணனாகப் பிறந்தான் என்று புராண

வழக்கு. அவன் ஏன் பத்துத்தலைக்காரனாகத் தோன்றினான்? எனக்கு ஒன்று தோன்றுகிறது. தான் ஹிரண்யகசிபுவாக இருந்தபோது தன்னைக் கொன்ற பகவான் சிங்கமாய், அதாவது பஞ்சாஸ்யனாய் வந்தான். பஞ்சாஸ்யன் என்பதற்கு ஐந்துமுகக்காரன் என்று வேறொரு அர்த்தம். இதை வைத்து யோசித்தான் அந்த அஸுரன். அஸுரர்களுக்கே உள்ள போட்டியும் ஆக்ரஹமும் அவனுக்கு அதிகம், ஐந்து தலைகள் என்ன? அதைப்போல் இரண்டுமடங்காய் பத்து தலைகளுடன் தோன்றலாம் என்று அவனுக்குத் தோன்றியது. அதிக ஆக்ரஹம். விடுவதாய் இல்லை. பகவானிடம் பழி தீர்க்க எண்ணம். பத்துத் தலைகளுடன் ராவணனாக வந்து விட்டான். ராமனுக்கோ ஒரே ஒரு முகம் தான். அவர் பழைய கணக்கையே போட்டார். ஐந்து முகங்கள் இருந்தால் பஞ்சத்வத்தை (சாவை, ஐந்தின் தன்மையை) அடைவிக்க முடியும் என்று. அதற்காக அவருக்கு மேலும் நான்கு முகங்கள் தேவைப்பட்டன. ப்ரஹ்மாஸ்த்ரத்தைப் ப்ரயோகித்தார். அது நான்முக அஸ்த்ரம். ஆகையால் கணக்கு சரியாகிவிட்டது. (ஒரு வேடிக்கைக்குத் தான்.) ராவணனைக் கொல்ல முடிந்தது. ஆனால் ஒன்றும் நாலும் அஞ்சு தானே? எப்படிப் பத்து முகத்தவனைக் கொல்ல முடியும்? என்று வேறு சிலர் ப்ரமித்தனர். உண்மை என்னவென்றால், ராவணன் ஸீதையிடம் அபசாரப்பட்டதால் ஏற்கனவே எரிந்த மாதிரிதான். ஏதோ ராமரின் ப்ரஹ்மாஸ்த்ரம் என்கிற வ்யாஜம் மட்டுமே சாவுக்குப் போதும். ராமர் போட்ட கணக்கு வேண்டாம்; ராவணன் போட்ட கணக்கும் வேண்டாம். ஸீதாபசாரம் என்ற ஒன்று போதும் அவனது விநாஶத்துக்கு. இல்லையெனில் அஞ்சாலே பத்து தொலைந்த ஆச்சர்யத்தை எப்படி விளக்குவீர்? எல்லாம் பிராட்டியின் பெருமையால் தான்.

ஜித ஜகத் என்ற பதத்தின் கருத்து என்னவென்றால், ஜகத்தையெல்லாம் ஜயித்தாலும், ஜநநி ஜாநகியிடம் ஜம்பம் பலிக்காது என்பதாம்.

அன்னையே உன்னிடத்தில் அபசாரப்பட்டதினால்
அனலெரித்த பிற்பாடே அஞ்சென்ன பத்தென்ன ?

(உலகத்தின்) தலைவியிடம் வாலாட்டிய பின் தலைகள் அஞ்சானாலும் பத்தானாலும் ஒன்று தான்.

ஸீதையைச் சீண்டிச் சீரழிந்த சிறுக்கனுக்குச் ஶிரஸ்ஸுகளாலே சிறப்பென்ன ?

பத்நித் தாயிடம் பாவப்பட்டுப் பற்றி எரியும் போது பத்து தலைகளால் பயன் என்ன ?

எம் தாயிடம் ஏதப்பட்டு எரிபவர்தலை எண்ணிக்கை என்னவானால் என்ன ?

இலக்குமிபால் இரும்பிழையால் இடருற்றார் தலை ஈரைந்தோ இன்னொன்றோ இருந்தால்தானென்ன ?

21.த்ரோஹிகளைத் த்வம்ஸிப்பவள்.

सप्ताश्वान्वयशालिना दशरथप्रासोदयेनापि ते
नेत्रापत्तिविवर्जितेन कमले ! मुक्तद्विपेन्द्रेण च ।
निस्सङ्ख्याश्वकुलो रथायुतयुतो निस्सीमपत्तिच्छदः
त्वद्द्रोहादगणेयकुञ्जरगणोऽप्यस्तो रणे रावणः ॥

ஸப்தாஶ்வாந்வயஶாலிநா தஶரதப்ராஸோதயேநாபி தே
நேத்ராபத்திவிவர்ஜிதேந கமலே ! முக்தத்விபேந்த்ரேண ச ।
நிஸ்ஸங்க்யாஶ்வகுலோ ரதாயுதயுதோ நிஸ்ஸீமபத்திச்சத:
த்வத்த்ரோஹாத் அகணேயகுஞ்ஜர கணோऽப்யஸ்தோ ரணே ராவண: ॥

कमले = கமலையே !

सप्त - अश्व - अन्वय - शालिना = 1.ஸூர்ய வம்ஶம் உள்ளவனும், 2.ஏழு குதிரைகளின் தொடர்பு உள்ளவனும்

दश - रथ - प्रास - उदयेन = 1.தஶரதனிடம் பெற்ற தோற்றம் உடையவனும். 2.பத்து தேர்களினால் அடைந்த எழுச்சி கொண்டவனும்

पत्ति - विवर्जितेन = காலாட்படை அடியோடு இல்லாதவனும்

आपत्ति - विवर्जितेन = ஆபத்துக்கள் இல்லாதவனும்

मुक्त - द्विपेन्द्रेण = 1.பெரிய யானைகளை விட்டுவிட்டவனும் 2.கஜேந்த்ரனுக்கு மோக்ஷம் கொடுத்தவனுமான

ते नेत्रा = உன் தலைவனால்

निस्सङ्ख्य - अश्व - कुल: = எண்ணற்ற குதிரைக் கூட்டம் கொண்டவனும்

रथ - अयुत - युत: = பத்தாயிரம் தேர்களோடு கூடினவனும்

निस्सीम - पत्ति - छट: = எல்லையில்லாத காலாட்படைக் குவியல் உடையவனும்

अगणेय - कुञ्जर - गण: = எண்ண முடியாத யானைக் கூட்டங்களைக் கொண்டவனும் ஆன

रावण: अपि = ராவணன் கூட.

त्वत् - द्रोहात् = உனக்குத் துரோகத்தால்

रणे = போரில்

अस्त: = தள்ளப்பட்டான்.

கமலையே ! ராமனுக்கும் ராவணனுக்கும் நடந்த போரில் சதுரங்க ஸைந்யம் யாருக்கு அதிகம் ? குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை, யானைப்படை,என்ற நான்கு பிரிவுகளைச் சதுரங்கமாகச் சொல்வர். **ரத கஜ துரக பதாதி** என்பர். ஒவ்வொன்றாக ஒப்பீடு செய்வோம். முதலில் குதிரைப்படையை ஒப்பிட்டால்,ராமனுக்கு ஏழே ஏழு குதிரைகளோடு ஸம்பந்தம். ராவணனுக்கோ எண்ணற்ற குதிரைகள். ராமனுக்கு ஏழு எப்படி என்றால், **ஸப்தாஶ்வன்** (ஏழு குதிரைக்காரன்) என்று ஸூர்யனுக்குப் பெயர். அந்த வம்ஶத்தவன் ராமன். அதனால் **ஸப்தாஶ்வ அந்வயம்** கொண்டவன். **அந்வயம்** என்றால் வம்ஶம் என்பது தவிர ஸம்பந்தம் என்று இன்னொரு அர்த்தம். ஏழே ஏழு குதிரைகள் ராமனுக்கு; கணக்கில்லாமல் குதிரைகள் ராவணனுக்கு. முதல் ஒப்பீடு முடிந்தது.

இரண்டாவதாக,தேர்கள் எத்தனை என்று பார்ப்போம். தஶரத என்ற பதத்துக்குப் பத்து தேர்கள் என்று அர்த்தம். தஶரதகுமாரனான ராமனுக்கு பத்து தேர்கள் மூலம் உதயம் (தோற்றம், வளர்ச்சி) என்னலாம். ராவணனுக்கோ பத்தாயிரம் தேர்கள். பத்து எங்கே ? பத்தாயிரம் எங்கே ? இரண்டாவது ஒப்பீடும் ஆயிற்று.

மூன்றாவதாக, காலாட்களைப் பார்ப்போம். பத்தி என்றால் காலாள். ஆபத்தி என்றால் ஆபத்து. ஆபத்தே இல்லாத தலைவனால் என்பதை தேத்ராபத்தி விவர்ஜிதேந என்னலாம். ஆ என்ற எழுத்து ஸந்தியில் மறைந்து விட்டது. காலாளே இல்லாத தலைவனாலே என்று அர்த்தம் கிடைக்கிறது. இது ராமனின் நிலை. ராவணனுக்கோ எல்லையில்லாமல் காலாட்படை குவிந்து கிடக்கிறது. மூன்றாவது ஒப்பீடும் முடிந்தது.

நான்காவதாக, யானைப்படைகளை ஒப்பிடுவோம். ராமர் முன்பொரு காலத்தில் கஜேந்த்ரமோக்ஷம் பண்ணியவர். (முதலை வாயில் சிக்கிய காலால் அவதியுற்று ஆதிமூலமே என்று கத்தியபோது முதலையைக் கொன்று யானையை விடுவித்தவர்.) அதனால் பெரிய யானை எதுவும் இல்லாதவர் என்று அர்த்தமாகிறது. யானை தான் விடுபட்டுப் போயிற்றே! இதற்கு மாறாக, ராவணனோ கணக்கற்ற யானைக் கூட்டங்களை உடையவன். நாலாவது ஒப்பீடும் ஆகிவிட்டது.

நான்கிலுமே ராமனை விட ராவணனே அதிகப் படை கொண்டவன் என்று தெரிகிறது. வித்தியாஸம் கொஞ்சநஞ்சமன்று. ராமனுக்கு ஏழு குதிரைகள், பத்து தேர்கள், பூஜ்யம் காலாட்கள், பூஜ்யம் யானைகள், ராவணனுக்கோ எண்ணற்ற குதிரைகள், பத்தாயிரம் தேர்கள், எல்லையில்லாக் காலாட்கள், கணக்கில் அடங்கா யானைகள், எப்படியிருக்கிறது வாசி?

இப்படியிருந்தும் போரில் ராவணன் முடிந்து போனான் என்றால் அதற்குக் காரணம் என்ன? படைபலம் அன்று என்பது வெட்டவெளிச்சம். வேறேதோ காரணம் இருக்க வேண்டும். அது என்ன என்பதை நான் சொல்கிறேன். ஸீதைக்கு இழைத்த த்ரோஹம் தான் காரணம். அவன் பிராட்டியிடம் பட்ட அபசாரம் தான் அவனுடைய விநாசத்துக்கு வழிவகுத்தது. படை எல்லாம் பெயருக்குத்

தான். ஒரு சாக்கு மட்டுமே. வெளிக்கு வாநரஸைந்யங்களின் வீரம் காரணமாகத் தோன்றும். உண்மையில் பிராட்டியிடம் செய்த பிழை தான் ராவணனை யுத்தத்தில் வீழ்த்தியது. **அந்வயம், ஸப்தாஶ்வன், உதயம், தஶரதன், நேத்ராபத்தி, முக்தன்** என்ற ஆறு பதங்களிலும் இரு பொருள் வேடிக்கைகள். **ரத-அயுத-யுதன் என்கிறாரே, அயுதனா, யுதனா ?** என்று முரண்பாட்டுத் தோற்றவணி. அயுத என்பதற்கு, கூடாத என்று பொருள் இங்கே கொள்ளாமல் பத்தாயிரம் என்று பொருள் கொள்வதால் முரணமைதி. எவ்வளவு படைகள் ராவணனுக்கு இருந்தும் வெற்றி கிடைக்கவில்லை.

பிராட்டியிடம் பிழைபுரிந்தால் பிளக்குமுடல் பிய்ந்து விடும்.
குதிரைப்படை குவிந்தாலும் குதறல் தான் குமுறல் தான்.
தேர்ப்படைகள் திரண்டாலும் தொல்லை தான் திணறல் தான்.
காலாட்கள் குழுமிடினும் கவிழல் தான் கதறல் தான்.
ஆனைப்படை அதிகரித்தும் அலறல் தான் அவலம் தான்.
முழுப்படையும் முயன்றாலும் முக்கல் தான் முனகல் தான்.
நாற்படையும் நகர்ந்தாலும் நசுங்கல் தான் நாசம் தான்.
பெரும்படையால் பொருதிடினும் பொசுங்கல் தான் புரளல் தான்.
திருமகட்குத் தீங்கெண்ணில் தீமை தான் த்வம்ஸம் தான்

22.பாவகனைப் பாவநமாக்குபவள்.

रघुवरकृतशङ्काभङ्गदम्भेन लङ्का-
मिषभुगशुचिसद्मास्वादनैः कृष्णवर्त्मा ।
अशुचिरिह भवत्या पावितो देवि ! सत्या
स वहति शुचिसंज्ञां तद्वदन्त्यन्यथाऽज्ञाः ॥ २२

ரகு⁴வரக்ருதஶங்காப⁴ங்க³த³ம்பே⁴ந லங்கா-
மிஷபு⁴க³ஶுசிஸத்³மாஸ்வாத³நை: க்ருஷ்ணவர்த்மா ।
அஶுசிரிஹ ப⁴வத்யா பாவிதோ தேவி ! ஸத்யா
ஸ வஹதி ஶுசிஸம்ஜ்ஞாம் தத் வத³ந்த்யந்யதா² அஜ்ஞா: ॥ 22 ॥

देवि ஸ்ரீதேவியே !

लङ्का - आमिष - भुक् - अशुचि - सद्म - आस्वादनै: லங்கையிலுள்ள மாமிசபக்ஷிகளின் (ராக்ஷஸர்களின்) அசுத்தமான வீடுகளை ருசித்ததால்

कृष्ण - वर्त्मा அக்நி, கருத்த வழியான்

अशुचि: அசுத்தமானவன்

रघुवर - कृत - शङ्का - भङ्ग - दम्भेन ராமன் கொண்ட ஸந்தேஹத்தை முறியடிக்கும் வ்யாஜத்தால்

इह - இங்கே

सत्या - பதிவ்ரதையான

भवत्या - உம்மாலே

पावित: - தூய்மைப்படுத்தப்பட்ட

स: - அவன் शुचि - संज्ञां ஶுசி (தூயவன்) என்ற பெயரை

वहति - வஹிக்கிறான்.

तत् - அதை

अज्ञा: - அறிவிலிகள்

अन्यथा - மாற்றி

वदन्ति - சொல்கிறார்கள்.

ஸ்ரீ தேவியே ! ஸீதையின் அக்நிப் பிரவேஶக் கதையில் ஒரு விவாதம். யாருக்கு யாரால் பரிஶுத்தி ? நெருப்பில் விழுந்ததால் ஸீதைக்குப் பரிஶுத்தி என்று பலர் சொல்லுகிறார்கள். அவர்களெல்லாம் அஜ்ஞர்கள்; அறியாதவர்கள். மாற்றிச் சொல்லுகிறார்கள். உண்மை என்னவென்றால் அக்நிக்குத் தான் ஸீதையால் பரிஶுத்தி. அவன் அதற்கு முன் தூய்மைக் குறைவான உணவை உண்டிருந்தான். அதற்குப் பரிஹாரமாக அதி பவித்ரமான ஒன்றை உட்கொண்டாலல்லது தூய்மையைத் திரும்பப் பெறலாகாதபடி அஶுத்தமாகியிருந்தான். எதனாலென்றால் லங்காபுரியில் ராக்ஷஸர்களின் வீடுகளைக் கபளீகரணம் பண்ணியிருந்தான். இதனால் ஏற்பட்ட அஶுத்தி நீங்க (நாம் தின்னலாகாததைத் தின்ன நேர்ந்தால் அதன் பிறகு பஞ்சகவ்யம் சாப்பிடுவது போலே) மிகத் தூய பொருள் ஒன்றை உட்கொள்ள வேண்டும். அப்படி மற்றவரையெல்லாம் தூய்மைப்படுத்தும் நெருப்பையே புனிதப்படுத்தக்கூடிய வஸ்து என்னவென்று ஆலோசித்தால், பவித்ராணாம் பவித்ரம் என்று சொல்லத்தக்க ஸீதாதேவி அக்நியையும் பரிஶுத்தப்படுத்த வல்லவள் என்று தோன்றியது. ஆனால் ஸீதையால் அக்நி தூய்மையடைய வேண்டுமானால் அக்நி ஸீதையை விழுங்க வேண்டுமே.

என்ன பண்ணலாம் ? இது எப்படி ஸாத்யம் ? யோசித்தால் ஒரு வழி தெரிந்தது. உலகத்தாரெல்லாம் அக்நியால் மனிதருக்குப் பரிஶுத்தி என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். (ஸீதையால் அக்நிக்கும் ஶுத்தி என்பது அவர்களுக்குப் புரியாது.) போகட்டும். ஸீதைக்குத் தான் தூய்மை தேவைப்படுவது போல் நடித்து விடலாம். ராமன் ஸீதையின் நடத்தையை ஸந்தேஹிப்பது போல ஒரு நிகழ்ச்சி நடக்கட்டும். ஸீதை நெருப்பில் குதிக்கட்டும். அதிசயமாகத் திரும்பி எழுந்து வரட்டும். உலகத்தாரெல்லாம் நெருப்பால் பரிசுத்தமானாள் ஸீதை என்று சொல்லட்டும். ஒருவருக்கும் நஷ்டம் இல்லை. அக்நி பகவானுக்கு மட்டும் பெருத்த ஆதாயம். தன் அசுத்தம் நீங்குவதுடன் புனிதத் தன்மையே வந்துவிடும். இதற்கு முன் லங்காதஹநத்தில் கண்டதையும் கபளீகரம் செய்த அசுத்தியெல்லாம் போய்விடும். ஸாக்ஷாத் ஸ்ரீ தேவியையே தனக்குள் வைத்ததால் அதி பவித்திரமான நிலை உண்டாகும். இதற்குமுன் தனக்கிருந்த **க்ருஷ்ணவர்த்மா** (தீயவழியான்) என்ற அவப்பெயருக்கு மாறாக **ஶுசி** (தூயவன்) என்ற நல்ல பெயரும் உண்டாகும். என்றெல்லாம் தீர்க்கமாக யோசித்து ஸீதையின் அக்நி ப்ரவேஶ நிகழ்ச்சிக்கு முழு ஒத்துழைப்பு அளித்து நடத்திக்கொடுத்து நற்பயன் பெற்றான் அந்த அக்நித்தேவன். விவரம் புரியாத மக்கள் இன்றும் கூட **அக்நியில் விழுந்து ஸீதை பரிசுத்தி பெற்றாள்**என்று மாற்றிச் சொல்கிறார்கள். **ஸீதையை அக்நியில் விழச் செய்ததால் அக்நிக்குப் பரிசுத்தி** என்ற உண்மை அறிஞர்களுக்கு மட்டுமே தெரியும். நீங்களே பாருங்களேன், அக்னிக்குக் **க்ருஷ்ணவர்த்மா** என்ற கெட்ட பெயரும், (புகையால் கருப்பான வழி கொண்டவன் என்ற தாத்பர்யம் தனியே கிடக்கட்டும்) **ஶுசி** என்ற நல்ல பெயரும் நிகண்டுக்களிலும் அகராதிகளிலும் கோசங்களிலும் பார்க்கிறோமே, இதில் **ஶுசி** என்ற பெயர் மஹாலக்ஷ்மியுடையது தானே ! (லக்ஷ்மி அஷ்டோத்தரத்தில் பாருங்கள்) எனக்கென்னவோ ஸீதையின் அக்நிப்ரவேசத்துக்கு அப்புறம் தான் இந்த ஶுசி என்ற தாயார்

பெயர் நெருப்புக்கும் ஒட்டிக் கொண்டிருக்குமோ என்று தோன்றுகிறது. அதற்கு முன் அவன் அஶுசி. அன்று முதல் அவனும் ஶுசி.

தாயார் தீயால் தூயாளா? தீ தான் தாயால் தூயானா?

தீயான் முதலில் தீ தானாம். தாயாரால் அவன் தூய்தானான்.

ஶங்கா, லங்கா என்றும், **ஸத்மா, வர்த்மா** என்றும், **வத்யா, ஸத்யா** என்றும் **ஸம்ஜ்ஞா, அஜ்ஞா** என்றும் ப்ராஸத்தைக் கவனிக்கலாம். ஒவ்வொரு பாதத்தின் முடிவிலும் உள்ள ஒலி அந்தந்தப் பாதத்தின் நடுவில் இணையான ஒலியுடன் பதத்தைப் பெறுவதைப் பார்க்கிறோம். இதனால் ச்லோகத்தைப் படிக்கும் போது ஶ்ராவ்யமாக இருக்கிறது.

இந்த ச்லோகத்தில் நாம் அறியும் நீதிகள் சில:

1. நமக்கு ஶுத்தியும் அஶுத்தியும் நாம் உண்ணும் உணவால் ஏற்படும். குணங்களெல்லாம் கூட நம் உணவால் மாறும். தப்புவழியில் கூட அது நம்மைச் சில ஸமயங்களில் செலுத்தும். ஆஹாரநியமங்களை உபேக்ஷிக்க வேண்டாம்.

2. உண்ணக்கூடாததை உண்டுவிட்டால் அதற்குப் பரிஹாரமும் சாத்திரத்தில் விதித்தபடி பண்ணிக் கொள்ளலாம். திரும்பவும் ஆஹாரநியமத்தோடு வாழலாம்.

3. உலகத்தில் அறிஞர்களும் உண்டு; அறிவிலிகளும் உண்டு. ஒரே நிகழ்ச்சியை இரு சாரார் இரு விதமாகப் புரிந்து கொள்வதும் உண்டு. இன்னும் சொல்லப்போனால், நேர் எதிரிடையாகப் புரிந்து கொள்பவரும் உண்டு. அஜ்ஞர்கள் (அறிவிலிகள்) புரிந்து கொள்ளாமல் மறுப்பு சொல்கிறார்கள். (இதை **அந்யதா வதந்தி** என்பதால் சொல்கிறார்.)

4. பதிவ்ரதைகள் மஹாமஹிமை கொண்டவர்கள். அவர்கள் பட்ட இடம் எல்லாம் புனிதப்படும். (இதை **ஸத்யா பாவித:** என்பதால் சொல்கிறார்.)

5. பெரியோர்களின் செயல்கள் சில நமக்குப் புரிவதில்லை. உள்நோக்கங்கள் வேறாக ஸூக்ஷ்மமாக இருக்கும். அண்ணல் ராமனின் செயலும் அப்படியே (இதை **ஶங்கா பங்க தம்பேந** என்பதால் தெரிவிக்கிறார்.)

23. செயற்கரிய செயல்களைச்செய்யவைப்பவன்

अखण्डं कोदण्डं प्रभुरदलयत्खण्डपरशोः

अगृह्णाद्रामस्य प्रसभमपि चाऽकुण्ठपरशोः ।

अबध्नादप्युद्रां निधिमथ दशग्रीवमवधीत्

महाश्चर्याश्चर्यास्त्वयि कृतधियोऽस्याऽम्ब ! सुकराः ॥ २३

அக²ண்டம் கோத³ண்டம் ப்ரபு⁴ரத³லயத்க²ண்டபரஶோ:

ரக்³ருஹ்ணாத்³ராமஸ்ய ப்ரஸப⁴மபி சாऽகுண்டப²ரஶோ: ।

அப³த்⁴நாத³ப்யுத்³நாம் நிதி⁴மத தஶக்³ரீவமவதீ⁴த்

மஹாஶ்சர்யாஶ்சர்யாஸ்த்வயி க்ருததி⁴யோऽஸ்யாம்ப³ ! ஸுகரா: ॥

अम्ब = அம்மா!

प्रभुः = ப்ரபுவான ராமர்

खण्डपरशोः = சிவனுடைய

अखण्डं = முழுதான பெரிதான

कोदण्डं = வில்லை

अदलयत् = ஒடித்தார்.

अकुण्ठ-परशोः = தடைபடாத கோடரியை உடைய

रामस्य = பரசுராமருடைய

कोदण्डं अपि = வில்லையும்

प्रसभं = பலாத்காரமாக

अगृह्णात् = (பிடுங்கி) எடுத்துக் கொண்டார்.

उद्रां निधिं अपि = ஸமுத்ரத்தையும்

अबध्नात् = (ஸேதுவால்) கட்டினார்.

अथ = பிறகு

दशग्रीवं = ராவணனை

अवधीत् = கொன்றார்.

महा-आश्चर्याः = மிகவும் ஆச்சர்யமான

चर्याः = செயல்பாடுகள்

त्वयि = உன்னிடம்

कृत-धियः = புத்தி பண்ணின

अस्य = இந்த ராமருக்கு

सुकराः = எளிதில் செய்யக் கூடியவை.

அம்மா லக்ஷ்மியே ! ராமர் எத்தனையோ அஸாத்யமான கார்யங்களையெல்லாம் பண்ணினார். பிறரால் பண்ண முடியாத பெரிய பெரிய ஸாதனைகளை எல்லாம் நிகழ்த்தினார். இதோ நான்கு உதாரணங்கள்- சிவ தநுஸ்ஸை முறித்தார்.

பரசுராமரின் வில்லைப் பிடுங்கிக் கொண்டார். கடலில் அணை கட்டினார். ராவணனைக் கொன்றார். அவரால் எப்படி இதையெல்லாம் செய்ய முடிந்தது? என்னைக் கேட்டால் நீ கொடுத்த தெம்பு தான் என்பேன். ஸீதையான உன்னை மனதில் நினைக்கும் போதெல்லாம் ராமருக்கு அதீதமான ஆற்றல் வந்துவிடுகிறது. உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதற்காகச் சிவ தனுர்பங்கம். கூட வரும் நீ பயந்துவிடக் கூடாதே என்பதற்காகப் பரஶுராம கர்வபங்கம். உன்னைத் திரும்ப அடைய வேண்டுமே என்பதற்காக ஸேதுபந்தம். உன் மகிழ்ச்சிக்காக ராவணவதம். அரும் பெரும் செயல்கள் எல்லாமே உன் பொருட்டுத்தான்; உன்னால் தான். நீ அவரது எண்ணத்தில் இருந்ததால்தான், இவற்றை அவர் அநாயாஸமாக, எளிதாக ஸாதித்தார். இந்த அருஞ் செயலின் விளைவு ஸீதையின் மகிழ்ச்சி என்பதனால் மட்டுமே அவர் அதியான உத்ஸாஹத்துடன் ஸாதனைகளைப் புரிந்தார்.

யதர்த்தம் அம்போநிதி ரமந்த்யபந்தி ச என்ற ஆளவந்தார் ஸூக்தியையும் கிமிவ ந பதி: கர்த்தா த்வச்சாடு சஞ்சு மநோரத: என்ற பட்டர் ஸூக்தியையும் அடியொற்றி அமைத்த ஶ்லோகம் இது. அவதாரத்து அற்புதங்கள் எல்லாம் திருமகளின் உகப்புக்காக என்பது நமது பூர்வாசார்யர்கள் அருளிய கருத்தாகும். ஆனால் இதைச் சொல்லுகையில் இந்தக் கவி ஒருபடி மேலே போகிறார். எப்படியென்றால் இதோ ஒரு வித்தியாஸம். லக்ஷ்மியை உத்தேசித்துப் பகவான் எதையும் செய்வார் என்பது இவரும் பூர்வர்களும் சொல்லும் பொதுவான விஷயம். அவ்வாறு ஸாதனைகளுக்கு உத்தேஶ்யமாக இருப்பவள் அதற்கு உபாயமாகவும் இருக்கிறாள். அவள் மனத்தில் இருப்பது கார்யஸித்திக்கு உறுதுணையாகிறது என்பது இவர் அதிகப்படியாகச் சொல்வது. அவளுக்காக அவளின் துணையால் அரிய பணிகளை அவர் செய்வார் என்பது கருத்து. ந ஹி மாநுஷமாத்ரேண ஸேன ராகவோர த்குடவிக்ரம: । யேந பத்தஸ்ஸமுத்ரே ச ஸ ஸேது: பரமாத்புத: ॥ என்று மால்யவான் ராவணனிடம் பேசுகிறார்.

இவ்வளவு அற்புதமான ஸேதுபந்தம் அதிமானுஷச் செயல் என்கிறார்.

அத்யத்புதம் அசிந்த்யம் ச ந தர்கிதமிதம் மயா என்று ஜநக மஹாராஜர் வியக்கும்படியான ஸாதனையாம் ராமரின் ஶிவதநுர்பங்கம்.

நைநம் ஸூர்ய: ப்ரதபதி பார்ஶ்வே வாதி ந மாருத: என்று அமரர்களே அதிஶயப்படும்படியான ஆற்றல் படைத்த ராவணனைக் கொல்வதும் அற்புதச் செயலே.

பரஶுராம கர்வபங்கமும் **த்வாம் அப்ரதிமகர்மாணம் அப்ரதித்வந்த்வம் ஆஹவே** என்ற பாராட்டுக் குரியவனாக ராமனை ஆக்கிய அற்புதச் செயலாகும்.

இந்த நான்கு ஸாதனைகளையும் ஸீதையை மனத்தில் இருத்தும் ராமர் தவிர வேறே யாருமே பண்ண முடியாது. அவ்வளவும் ஸீதையின் மஹிமை.

அரன் வில் ஒடித்ததும் அவளுக்காய்
ஆணவம் அடக்கலும் அவளுக்காய்
அப்தியை அடைத்ததும் அவளுக்காய்
அரக்கனைக் கொன்றதும் அவளுக்காய்
பசுபதி வில்லினை ஒடித்தலும்,
பரசுடை முனிதிமிர் அடக்கலும்,
பரவையை அணையினால் அடைத்தலும்,
பத்தெனு தலைகளை உதிர்த்தலும்,
பதுமையைப் புத்தியில் இருத்தலால்.

24. தணலுக்குத் தண்மை தருபவள்

सङ्कल्पतस्तव समीरसुते हि सीते !
शीतो बभूव दहनश्चिरमेधमानः ।
मातर्जगद्भ्रमनिवृत्तिकृते विशन्त्यां
शीतः कुतस्स न भवेत् त्वयि देवि साक्षात् ॥ २४

ஸங்கல்பஸ்தவ ஸமீரஸுதே ஹி ஸீதே !
ஶீதோ ப³பூ⁴வ த³ஹநஶ்சிரமேத⁴மாந: ।

மாதர்ஜக³த்³ப்⁴ரமநிவ்ருத்திக்ருதே விஶந்த்யாம்
ஶீத: குதஸ்ஸ ந ப⁴வேத் த்வயி தே³வி ! ஸாக்ஷாத் ॥ 24

देवि सीते ! = ஸீதா தேவியே !
तव = உன்னுடைய
सङ्कल्पत: हि = எண்ணத்தினால் அல்லவா
समीर-सुते = வாயு குமாரனிடத்தில்
चिरं = நீண்ட காலமாக
एधमान: = வளர்கிற
दहन: = நெருப்பானது
शीत: = குளிர்ந்ததாக
बभूव = ஆயிற்று.
मात: ! = அன்னையே !
जगत्-भ्रम-निवृत्ति-कृते = உலகின் மருளை நீக்குவதற்காக
साक्षात् त्वयि = நீயே நேரடியாக
विशन्त्यां = ப்ரவேஶிக்கும்போது
स: = அந்த நெருப்பு
शीत: = குளிர்ந்ததாக
कुत: = ஏன்
न भवेत् = ஆகாது?

அம்மா ஸீதாதேவியே ! வாயு புத்ரனான ஹநுமானுக்கு அரக்கர்கள் வாலிலிட்ட நெருப்பு குளிர வேண்டும் என்று நீ நினைத்தாய். உடனே அது குளிர்ந்து அவருக்கு ஹிதமாக இருந்தது. பின் பொருமுறை நீயே நெருப்பில் குதித்தாய். அது உன்னைச் சுடுமா? நீ பூ கூட வாடாமல் வெளிவந்தாய். இதில் வியப்பு ஏன் குறைகிறது என்றால், நீ நினைத்த மாத்ரத்திலேயே இன்னொருத்தனுக்குச் சுடாமலிருக்கும் நெருப்பு நீயே தீயில் புகுந்தபோது சுடாததில் ஆஶ்சர்யம் இல்லை. ஸங்கல்பத: என்றதால், ஶீதோ பவ ஹநூமத: என்று எண்ணிய மாத்ரத்திலேயே ஆஞ்ஜநேயருக்கு நெருப்பு குளிர்ந்து விட்டதைச் சொல்கிறார். ஸீதை வேறேதும் செய்து விடவில்லை. ஆணையிடவில்லை; அதட்டி மிரட்டவில்லை; கெஞ்சிக் கேட்கவில்லை; ஜபஹோமங்கள் பண்ணவில்லை; நேரே வந்து ஹநுமானைப் பார்க்கக் கூட இல்லை. தூரத்தில் இருந்தபடியே மனதாலேயே இந்த அற்புதத்தை நிகழ்த்தி விட்டாய்.

ஹி என்றதால், ஸீதாதேவியின் ஸங்கல்பத்தால் தான் இந்த அற்புதம் நடந்தது என்பது யாவரும் அறிந்ததே

என்பதைச் சொல்கிறார். இதில் ஹநுமாருடையவோ ராமருடையவோ அக்நியினுடையவோ பங்கு குறைவே. இந்த அற்புத நிகழ்ச்சிக்கு முழுக்க முழுக்க ஸீதாதேவியின் எண்ணம் தான் காரணம் என்பது உலகறிந்த விஷயம்.

அக்நி என்றோ மருத்ஸகன் என்றோ ஹவ்யவாஹநன் என்றோ பர்யாயபதங்களை இடாமல், தஹநன் என்று சொன்னதிலும் ஒரு நோக்கம் உண்டு. கொளுத்துவதையே ஸ்வபாவமாகக் கொண்டவன் தன் ஸ்வபாவத்துக்கு விருத்தமாகச் செயல்படவும் தயங்கவில்லை ஸீதாதேவியின் மஹிமையால்.

வஸ்துஸ்வபாவம் மாறுவது கஷ்டம் என்று மூன்று நாட்கள் ராமனுக்குப் பணியாமல் வாளாவிருந்த ஸமுத்ரராஜனைப் போலன்றி, ஸீதையின் எண்ணத்தால் வஸ்து ஸ்வபாவத்தை உடனேயே மாற்றிக் கொண்டு ஸீதையின் மஹிமையை நன்கு வெளிப்படுத்தியது தஹநன் ஸீதன் என்பதால் தெரிகிறது.

சிரம் என்ற பதத்திலும் பொருட்செறிவு உண்டு. தீ மிதிவிழா போன்ற காலங்களில் சிறிது நேரம் தணலின் மேல் வேகமாக ஓடிவிட்டால் கொளுத்துவது மட்டுப்படுத்தும். அதுபோலன்றி, பல மணி நேரம் வாலில் நெருப்பு எரிந்தும் சுடாமல் இருந்தது விந்தை தான்.

ஏதமாத: என்ற பதத்திலும் கருத்து உண்டு. நீறு பூத்த நெருப்பாகவோ, அணைந்து கொண்டிருக்கும் நெருப்பாகவோ இருந்தால் கொளுத்தாமல் இருப்பதில் ஆச்சர்யம் இல்லை. ஆனால் கொழுந்து விட்டெரியும் நெருப்பு, பிற இடங்களிலெல்லாம் குபுகுபுவென்று பற்றிக் கொள்ளும் நெருப்பு ஒருவருக்கு மட்டும் சுடாமல் இருப்பது விந்தையன்றோ!

இங்கு ஜகத்ப்ரமம் என்று சொன்னது எந்த மருளை என்று கேட்டால், ஸீதை ராவணன் வீட்டில் பல மாதங்கள் இருந்தபடியால் அவள் நெறி தவறியிருக்கலாம்; பரிஶுத்தி

குறைந்தவளாய் இருக்கலாம்; ராக்ஷஸன் அவளைச் சும்மா விட்டு வைத்திருக்க மாட்டான்; முன்பிருந்த ஸீதைக்கும் ராவண க்ருஹ வாஸத்துக்குப் பிந்தைய ஸீதைக்கும் நெறியில் வாசி இருக்கலாம்; என்றெல்லாம் உலகத்தவர் மருள்வதை ஜகத்ப்ரமம் என்கிறார்.

நிவ்ருத்தி என்றது எதை என்றால், ஐயோ, நாம் தவறாக நினைத்தோமே, நெருப்பையே சுட்டுப் பொசுக்கும் அளவுக்குக் கற்புக் கனல் அல்லவா ஸீதை? என்று மருளை மாற்றித் தெளிவடைவதைச் சொல்லும் பதம் இது.

ஸாக்ஷாத் த்வயி என்றதால் சொல்லவந்த கருத்து என்னவென்றால், நீ சிபாரிசு பண்ணுபவர்களுக்கெல்லாம் உதவி புரிபவன், நேரடியாக நீயே வந்தால் உதவ மாட்டானா? நீ எண்ணினால் இன்னொருத்தனுக்குக் கூடச் சுடாதவன் உனக்குச் சுடுவானா? உன்னுடைய தாஸர்களுக்கெல்லாம் கீழ்ப்படிபவன் உனக்குக் கீழ்ப்படியானா? என்பதாம்.

ஏன் ஆகமாட்டான் ? என்று கேட்பதன் கருத்து என்னவென்றால், நிச்சயமாகக் குளிர்ந்தவன் ஆவான்; இதில் எள்ளவும் ஸந்தேஹம் இல்லை என்பதாம். ஹநுமானுக்கே ஜில்லென்றிருந்த நெருப்பு ஸீதைக்குச் சுடாது என்பதில் என்ன ஸந்தேஹம் ? ஸீதையின் மனமறிந்து பிறனுக்குச் சுடாத தீ ஸீதைக்கும் சுடாது என்பதில் ஐயம் என்ன?

எண்ணியதாலே தண்ணிய தீயே
நண்ணியபோதும் தண்ணியதாம்.
எவளுடைய எண்ணத்தால் எரிக்காதோ இதரரையும்
எரி அவளை எரிக்காது. எள்ளளவும் ஏன் ஐயம்?
சீதை நினைத்தால் சீதப்படும் தீ
சீதை குதித்தால் சீதப்படாதா?

இத்துடன் ராமாவதாரப் பகுதி முடிந்தது. அடுத்து பலராமாவதாரத்தில் பிராட்டியின் பங்கைப் பார்ப்போம்.

25. ஏழைக்கும் ஏற்றத்தை ஏற்படுத்துபவள்

नीलाम्बरो हलधरो ननु हन्त भास्वत्
भूभेदनैकरसिकश्शुभशालिवृत्तिः ।
श्यामाकलाभरत एष विवृद्धमोहो
भोगी बभूव भुवनाम्ब ! तव प्रसादात् ॥ २५

நீலாம்ப3ரோ ஹலத4ரோ நநு ஹந்த பா4ஸ்வத்
பூ4பே4த3நைகரஸிகஶ்ஶுப4ஶாலிவ்ருத்தி: ।
ஶ்யாமாகலாப4ரத ஏஷ விவ்ருத்3த4மோஹோ
போ4கீ3 ப3பூ4வ பு4வநாம்ப3 ! தவ ப்ரஸாதா3த் ॥ 25

भुवन-अम्ब ! = ஜகந்மாதாவே!
नीलाम्बरः = (அழுக்காய்) கறுத்த ஆடை உடுத்துபவனும்
हलधरः = கலப்பையை வைத்திருப்பவனும்
भास्वत् - भू - भेदन - एक - रसिकः = ஸூர்ய வெளிச்சம் படும் நிலத்தை உழுவதிலேயே நாட்டம் உடையவனும்
शुभ-शालि-वृत्तिः = நல்ல பயிர்களாலேயே பிழைப்பவனும்
श्यामाक-लाभ-रतः = ஸாமை (தானியவகை) கிடைப்பதிலேயே ஆசை வைப்பவனும்
विवृद्ध-मोहः = அதிகரித்த அறியாமை கொண்டவனுமான
एषः = இவன்
तव = உன்னுடைய
प्रसादात् = அனுக்ரஹத்தால்
भोगी = லாபமுள்ளவனாக
बभूव = ஆனான்

ननु = அல்லவா?
हन्त ! = ஆச்சர்யம்.
नीलाम्बरः = நீல வண்ணப்பட்டு உடுத்தியவரும்
हलधरः = கலப்பையை ஆயுதமாகத் தரிப்பவரும்
भास्वत्-भू-भेदन- एक-रसिकः = ஸூர்யனின் மகளான யமுனையை (கலப்பையால் இழுத்து) பிளப்பதில் தனி ரஸிகரும்
शुभ-शालि-वृत्तिः = மங்களம் விளங்கும் நடத்தை கொண்டவரும்
श्यामा-कला-भरतः = நடுத்தர வயதுப் பெண்ணின் கலை நிறைந்ததால்
विवृद्ध-मोहः = போதை ஏறியவரும் ஆன
एषः = இந்தப் பலராமர்
भोगी = ஆதிசேஷன் என்னும் பாம்பாக
तव = ஸ்வாமினியான உன்னுடைய
प्रसादात् = அனுக்ரஹத்தால்
बभूव = பதத்தை பெற்றார்.

ஜகந்மாதாவே ! உன் ப்ரஸாதம் இருந்தால் ஏழையும் பணக்காரனாவான். தரித்ரனும் போகியாவான். பலராமாவதாரக் கதையிலும் இது ஊர்ஜிதமாகிறது. ஏழை உழவன் ஒருவன், துணி மலின்மானதால் கருத்திருக்கும் அவனுக்கு. கையில் கலப்பையை ஏந்தியிருப்பான். மரத்தோப்பு நிழல் பகுதியை விட்டுவிட்டு வெயில் வரும் இடமான நிலத்தில் உழுவான். உழவுத் தொழில் ஒன்றையே நாடுவான். வேறெதிலும் ரஸனை கிடையாது. நல்ல தானியக் கதிர்களால் அவன் பிழைப்பு. தினையோ குறுந்தானியமோ கிடைத்தாலும் போதும் அவனுக்கு. அறியாமை அதிகம். இப்படிப்பட்டவன் கூட உன் அநுக்ரஹத்தால் ஸகல ஸௌபாக்யங்களும் பெற்று வாழலாம். இது உண்மை தானே? ஏழையானவன் பணக்காரனாவதற்கு லக்ஷ்மீ கடாக்ஷம் மட்டுமே வேண்டும். படிப்பறிவோ வீரமோ எதற்கு? இது உண்மை என்பது பலராமரிடமிருந்து நமக்குத் தெரிகிறது. அவர் நீலப்பட்டு உடுத்தியவர். (அழுக்கில்லை; வெள்ளை மேனிக்குப் பாங்காக இருக்குமென்று நீலப்பட்டு).கையில் கலப்பை ஏந்தியவர். (உழவர் அன்று; அவருக்கு அது ஆயுதம்). ஸூர்ய புத்ரியான யமுனையைக் கிறியவர். (இப்படி ஒரு கதை மஹாபாரதத்தில்). லோக க்ஷேமத்துக்குப் பணி புரிபவர். ரேவதி என்ற அவரது மனைவி நடு யௌவநத்தவள். அவளுடன் இன்புறும்போது அவர் மது அருந்திப் போதை அடைவார். இதையெல்லாம் சரியான பதங்களில் இருபொருட்கள் கொண்டால் முன் சொன்ன ஏழை போலவே இருந்தவர். இவர் லக்ஷ்மியின் ப்ரஸாதத்தை அடைந்தவர் என்பதும் போகியானவர் என்பதும் ப்ரஸித்தம். போகி என்று பாம்புக்கும் பெயர். பாம்பரசனான ஆதிசேஷன் பலராமராக அவதரித்ததால் இவர் போகி. ஆதிசேஷன் பிராட்டியின் அநுக்ரஹம் பெற்றவன் என்பதும் தெரிந்ததே.

இனி இருபொருட் சொற்களைப் புரிந்து கொள்வோம். பூ என்பதற்குப் பூமி என்றும் உண்டானவன் (மகன்) என்றும் இரண்டு அர்த்தங்கள். பாஸ்வத்பூ என்றால் வெயில் நிலம்

என்றும் ஸூர்ய புத்ரியான யமுனை என்றும் அர்த்தங்கள். வெயில் நிலத்தைக் கீறுபவன் உழவன். யமுனையைக் கீறுபவர் பலராமர். இருவரும் பாஸ்வத்பூ பேதநம் பண்ணுபவர்களே.

ஶாலி என்றால் விளங்குபவன் என்று குணஶாலி, பாக்யஶாலி, முதலிய பதங்களில் நமக்குத் தெரியும். தாந்யக்கதிருக்கும் ஶாலி என்று பெயர். வ்ருத்தி என்றால் பிழைப்பு என்றும் செயல் என்றும் இரண்டு அர்த்தங்கள். குடியானவன் ஶுபஶாலிவ்ருத்தி; நல்ல நெற்கதிரைக் கொண்டு பிழைப்பவன். பலராமர் வேறொரு அர்த்தத்தில் ஶுபஶாலிவ்ருத்தி. மங்களத்தால் விளங்கும் பணிகளைப் புரிபவர்.

ஶ்யாமாக-லாப-ரத: என்றும் *ஶ்யாமா-கலா-பர-த:* என்றும் இரண்டு விதமாக ஒரே சொற்றொடர் பிரிகிறது; முதல் விதமாகப் பிரிக்கும்போது, விவசாயிக்கு நல்ல விளைச்சல் கிடைப்பதில் ஆசை என்பதும், இரண்டாம் விதமாகப் பிரிக்கும்போது, பலராமனுக்குச் ஶ்ருங்கார லீலைகளால் மோஹம் என்பதும் பொருள்களாம்.

பலராமர் ஏற்கெனவே போகியாக (பாம்பாக) இருக்க, லக்ஷ்மீ கடாக்ஷத்தால் போகி என்றது பொருந்துமோ என்றால், அவருக்கு ஸ்ரீ வைகுண்டத்தில் கிடைக்கும் போகம் பிராட்டியும் பெருமாளும் அருளுவதல்லவா? ஆயினும், பலராமாவதாரத்தில் லக்ஷ்மியின் பங்காக இதைச் சொல்லலாகுமோ என்றால், சொல்கிறோம். வேறொரு அர்த்தப்படி உழலில் உழைப்பவன் லக்ஷ்மீ கடாக்ஷத்தால் போகியாவது தெரிகிறது. இதே பதங்களின் வேறொரு அர்த்தப்படி பலராமர் லக்ஷ்மீ ப்ரஸாதத்தால் போகியாகிறார் என்ற அர்த்தமும் கிடைக்கிறது. ஶ்லேஷையால் பலராமாவதாரத்தில் திருமகளின் பங்கு வலுவாக அமைந்துவிட்டது. இந்த ஶ்லோகத்து நீதிகள்.

1. உழவுத் தொழில் உயர்ந்தது. இதில் உழைப்பவர்க்கு லக்ஷ்மீ கடாக்ஷம் கிட்டும்.

2. பாடுபட்டு உழைப்பவர் துணியில் மாசுபடாமல் மினுக்க

முடியாது. உடையின் வெண்மையை விட உழைப்பின் திண்மை அவர்களுக்கு முக்யம்.

3. நல்ல விளைச்சலுக்கு ஸூர்ய வெளிச்சம் தேவை. மரநிழலில் உழுது விதைத்தால் ஏமாற நேரும்.

4. செய்யும் தொழிலில் ஒரு முனைப்பு தேவை. ஒரே ஸமயத்தில் பல குறிக்கோள்கள் வேண்டாம்.

5. கள்ளும் காரிகையும் மோஹிப்பிப்பவை. தெய்வத் துணையாலல்லது அவற்றிலிருந்து மீள்வது கடினம்.

6. தொழில்களில் நல்லவை கெட்டவை உண்டு. சுபமான தொழில் புரிந்தால் திருவினருள் கிட்டும்.

7. உழைப்புக்கேற்ற ஊதியமும், உபரியாக உத்தம ஸுகமும் கிடைப்பது திருமகளின் துணையாலாம்.

8. குடியானவனும் சரி, குடிகாரனும் சரி; கும்பிட்டால் லக்ஷ்மியை, குறையற்ற போகம் அடையலாம். இந்த ஶ்லோகத்தில் பலராமர் குறித்துக் கூறியதை இவ்வாறு சுருக்கிச் சொல்லலாம்-

கருந்துணி உடுத்திய தேகம்.

கலப்பைப் பணியில் வேகம்.

கள்குடித் ததனால் மோகம்.

கமலையின் அருளால் போகம்.

இந்த ஶ்லோகத்தில் விவசாயியைக் குறித்துக் கூறியதை இப்படிச் சுருக்கிச் சொல்லலாம்.

அவனியை உழுகிற உழைப்பு.

அறுவடைக் கதிரால் பிழைப்பு.

அறியாமையால் பழிப்பு.

அன்னை அருளால் கொழிப்பு.

அடுத்த ஐந்து ஶ்லோகங்களில் க்ருஷ்ணாவதாரத்தில் லக்ஷ்மியின் பங்கை வர்ணிக்கிறார்.

26. பொன்னிறம் போன்றவற்றாலும் பொருத்தமானவள்.

श्यामा त्वमम्ब ! दयितश्च तवैष कृष्णः

गाङ्गेययोगमुदितस्स च रुक्मिणी त्वम् ।

त्वं स्वादुवाक्स च युवा मधुरोदितश्रीः

दाम्पत्यमेतदनुरूपमतो मिथो वाम् ॥ २६

ச்யாமா த்வமம்ப ! தயிதச்ச தவைஷ க்ருஷ்ண:

காங்கேயயோகமுதிதஸ்ஸ ச ருக்மிணீ த்வம் ।

த்வம் ஸ்வாதுவாக் ஸ ச யுவா மதுரோதிதச்ரீ:

தாம்பத்யமேததநுரூபமதோ மிதோ வாம் ॥ 26

अम्ब = அம்மா !

त्वं = நீ

श्यामा = கறுத்தவள், நடு யௌவனப் பருவத்தவள்

तव = உன்னுடைய

दयितः = பிரியனான

एषः = இவன்

कृष्णः = க்ருஷ்ணன், கருப்பானவன்

सः = அவன்

गाङ्गेय - योग - मुदितः = பொன் சேர்ந்ததால் மகிழ்ந்தவன், பீஷ்மரோடு கூடியதால் மகிழ்ந்தவன்.

त्वं च = நீயும்

रुक्मिणी = ருக்மிணி, தங்கம் உள்ளவள்.

त्वं = நீ

स्वादु = वाक् = இனிய பேச்சு உள்ளவள்.

सः = அந்த युवा च = இளைஞனும்

मधुर - उदित - श्रीः = இனிய பேச்சுடையவன்

मधुरा - उदित - श्रीः = மதுரையில் வளர்ந்த செல்வம் உடையவன்.

अतः = ஆகையாலே

वां = உங்கள் இருவருக்கும்

मिथः = பரஸ்பரம்

एतत् = இந்த

दाम्पत्यं = கணவன் மனைவி முறை

अनुरूपं = பொருத்தமானது.

அம்மா! ருக்மிணியான உனக்கும் க்ருஷ்ணனான உன் கணவனுக்கும் தாம்பத்யம் மிகப் பொருத்தம் உள்ளது. நிறப்பொருத்தம், வயதுப் பொருத்தம், பொன்னால் பொருத்தம், பண்புப் பொருத்தம், எல்லாம் உண்டு. அவன் கருப்பன்; நீயோ பொன்னிறத்தாள்; நிறப் பொருத்தம் இல்லையே என்ன வேண்டாம். ஸ்யாமா என்ற பதத்துக்கு, கருத்தவள் என்றும் நடுயௌவனத்தில் இருப்பவள் என்றும் இரண்டு அர்த்தங்கள் இருப்பதால் நீயும் ஸ்யாமையே. அது போகட்டும். ருக்மிணி பெயராலேயே பொன்னியாய் இருக்க, கண்ணனுக்கும் இவளுக்கும் பொன்னால் பொருத்தம் உண்டோ என்று கேட்டால் சொல்வோம். காங்கேய என்ற பதத்துக்குத் தங்கம் என்றும் பீஷ்மர் என்றும் இரண்டு அர்த்தங்கள் உண்டு. பீஷ்மரின் யோகத்தால் மகிழும் க்ருஷ்ணரை, காங்கேய யோக முதிதர் என்னலாம். பொன் சேர்ந்ததால் மகிழ்ந்தவர் என்ற பொருள் கிடைத்து விட்டது. செல்வப் பொருத்தத்தை ஒப்புக் கொண்டாலும், வேறொரு பொருத்தம் இல்லையே; கண்ணன் மதுரையில் ராஜ்யலக்ஷ்மி பெற்றவன். இவளோ அதற்கு முன்னரே லக்ஷ்மியன்றோ? என்று கேட்டால், மதுரோதிதஸ்ரீ என்பதற்கு இனிய பேச்சழகு என்று வேறொரு அர்த்தமும் இருப்பதால் அது ருக்மிணிக்கும் இருப்பதால், இந்த வகையில் வாசியோ என்ற ஸந்தேஹமும் தொலைந்தது. இவளும் யுவாவாக இருப்பதால் ஸ்யாமாவுக்குப் பொருத்தம் என்பதும் தேறும். ஆக உனக்கும் க்ருஷ்ணனுக்கும் தாம்பத்யம் பலப் பல பொருத்தங்களுடன் அமைந்துள்ளது.

நான்கு பதங்களுக்கு இரட்டை அர்த்தங்கள். ஸ்யாமா, காங்கேயம், மதுரா, உதிதம், என்ற நான்கு. இது தவிர யோகம் என்ற பதத்துக்கும் சேர்க்கை, த்யான நிலை, என்று இரண்டு அர்த்தங்கள் கொள்வது தகும். ருக்மிணீ என்பதற்கும் இரண்டு அர்த்தங்கள் (பிராட்டியின் பெயர் ஒன்று; ருக்மம் எனப்படும் தங்கத்தை உடையவள் என்று இன்னொன்று). பெயர்கள் மூலமாகவும் பொருத்தங்கள் எப்படியென்றால், க்ருஷ்ணன்

என்பது அவன் பெயர். அதே அர்த்தத்தைத் தரும் ஶ்யாமா என்ற பதத்தின் இன்னொரு அர்த்தப்படி நீ இருக்கிறாய். அந்த இன்னொரு அர்த்தம் யுவதி என்பது. அதற்கேற்ப அவனும் யுவா. ருக்மிணீ என்று உன் பெயர். அதே அர்த்தத்தைத் தரும் காங்கேய யோகம் என்ற பதத்தின் இன்னொரு அர்த்தப்படி அவன் இருக்கிறான். அந்த இன்னொரு அர்த்தம் பீஷ்மரின் த்யான விஷயமாய் மகிழ்வது என்பது. அது உனக்கும் பொது.

தங்கத்துக்கும் பீஷ்மருக்கும் காங்கேயப் பெயருக்குக் காரணம் ஒன்று தான். கங்கையிடமிருந்து தோற்றம் காரணம். இதில் உள்ள ஶ்லேடையைக் கவனிக்காதவர்கள் "**காங்கேய யோக முதிதா ஸ ச ருக்மிணீமே:** என்று இரண்டாம் பாதத்தில் மாறுதல் செய்து அச்சிட்டிருக்கிறார்கள். இந்த மாறுதலால் சுவை குறைகிறது. நாம் க்ரந்தாக்ஷரப் பதிப்பின் படியே பாடத்தை ஏற்போம்.

கருமை போல் சியாமையாள் நீ கனகமும் கொண்டவள் நீ.
கனிநிகர்ப் பேச்சினாள் நீ. கண்ணனுக்கேற்றவள் நீ.

27. மன்மதனை மகனாய்க் கொண்டவள்

रामानुषङ्गविहृती रचिताभिलाष
मातस्त्रिलोचनजितं भवती मनोज्ञम् ।
पित्रा समानगुणमात्मभुवं प्रसूय
पञ्चायुधं कमपि रुक्मिणि ! लब्धहर्षा ॥ २७

ராமாநுஷங்கவிஹ்ருதெள ரசிதாபிலாஷம்
மாதஸ்த்ரிலோசநஜிதம் பவதீ மநோஜ்ஞம் ।
பித்ரா ஸமாநகுணமாத்மபுவம் ப்ரஸூய
பஞ்சாயுதம் கமபி ருக்மிணீ ! லப்தஹர்ஷா ॥ 27

मातः = அன்னையே

राम-अनुषङ्ग-विहृतौ = பலராமனோடு சேர்ந்து விளையாடுவதில்

रामा-अनुषङ्ग-विहृतौ = மகிழ்விப்பவளோடு தொடர்பு கொண்டு விளையாடுவதில்

रचित-अभिलाषं = ஆசையை உள்ளவனும், ஆசையை விளைவிப்பவனும்,

त्रिलोचनजितं = முக்கண்ணனை வென்றவனும், முக்கண்ணனால் வெல்லப்பட்டவனும்

मनोज्ञं = அந்தராத்மாவை அறிபவனும், மனங்கவர் அழகனும்

आत्मभुवं = ஸ்வயம்புவானவனும், மநஸிஜன் ஆனவனும்

पञ्चायुधं = ஐம்படையானும், ஐங்கணையானும்

पित्रा = தந்தையோடு

समानं = நிகரானவனும் ஆன

कमपि = யாரோ ஒருவனை, அற்புதப் பேர்வழியை

प्रसूय = மகனாய்ப் பெற்று

भवती = நீர்

लब्ध-हर्षा = மகிழ்ச்சி அடைந்தவர்

அன்னையே ! நீர் ருக்மிணியாக அவதரித்தபொழுது மன்மதன் உமது குழந்தையாகப் ப்ரத்யும்நன் என்ற பெயரில் தோன்றினான். அந்த ப்ரத்யும்நன் தன் தந்தையான க்ருஷ்ணனை ஒத்தவன். எப்படியென்றால் ஐந்து வகைகளில் என்கிறோம்.

இருவருமே ராமாநுஷங்க விளையாட்டில் ஆசை பண்ணுபவர்கள். (வெவ்வேறு அர்த்தங்களில்).

இருவருமே த்ரிலோசந ஜயக்காரர்கள். (வெவ்வேறு அர்த்தங்களில்).

இருவருமே மநோஜ்ஞர்கள். (வெவ்வேறு அர்த்தங்களில்).

இருவருமே ஆத்மபூக்கள். (வெவ்வேறு அர்த்தங்களில்).

இருவருமே பஞ்சாயுதர்கள் (வெவ்வேறு ஐந்து ஆயுதங்கள்).

இப்படித் தன் தந்தைக்கு ஐந்து வகைகளிலும் ஸமமான ப்ரத்யும்நனை மகனாகப் பெற்று நீர் பெரு மகிழ்ச்சி அடைகிறீர்.

க்ருஷ்ணனுக்குப் பலராமனோடு கூடிக் கூடி விளையாடுவதில் ஆசை. க்ருஷ்ணஸ்ய தா: கேளய: என்று முடியும் தஶாவதார ஸ்தோத்ர ஶ்லோகத்திலும் இது பேசப்பட்ட விஷயம். இதனால் க்ருஷ்ணன் ராம - அநுஷங்க - விளையாட்டுகளில் ஆசை உடையவன். மன்மதன் பக்ஷமாக அர்த்தம் சொல்லும்போது, ராமா என்றால் இன்பம் பண்ணுபவள் என்று அர்த்தம் சொல்லி, அத்தகையவளோடு தொடர்பு கொண்டு காமலீலைகள் பண்ணுவதில் நமக்கு ஆசையை விளைவிப்பவன் மந்மதன் என்கிற அர்த்தத்தில், ராமா - அநுஷங்க - ரசித - அபிலாஷன் என்று மன்மதனைச் சொல்லலாம். ராமா என்று பெண்பாலாகச் சொல்லாமல் இன்புறும் ஆணையும் பெண்ணையும் சேர்த்து ராம என்று சொல்வதற்கும் இலக்கணம் இடம் கொடுக்கும். எப்படியோ க்ருஷ்ணனுக்கும் மந்மதனுக்கும் பொதுவான விஶேஷணம் ஒன்று பார்த்தாயிற்று.

இருவருமையே த்ரிலோசந ஜிதம் என்று இரண்டாம் வேற்றுமை ஒருமையில் சொல்வது கூடும். எப்படியென்றால், த்ரிலோசநன் என்பவன் முக்கண்ணனான ஶிவன். அவனைப் பாணாஸுர யுத்தத்தில் க்ருஷ்ணன் ஜயித்தபடியால் (இந்த்ராஜித், மதுஜித் என்ற பதங்கள் போலே) த்ரிலோசநஜித் என்று க்ருஷ்ணன் ஆகிறார். த்ரிலோசநஜிதம் என்றால் க்ருஷ்ணனை என்று அர்த்தம் ஆகும். வேறொரு பக்ஷத்தில் த்ரிலோசநஜிதன் மன்மதன்; ஏனென்றால் மன்மதனைக் கொளுத்திவிட்டான் மூன்றும் கண்ணால் ஶிவன். எரிந்து போய் அநங்கனானான் மன்மதன். மறுபடி ப்ரத்யும்நனாகப் பிறந்தபோதுதான் புத்துடல் கிடைத்தது. இதனால் த்ரிலோசநஜிதம் என்றால் மன்மதனை என்று அர்த்தமாகும். ஜித் - ஜிதௌ - ஜித: என்கிற ஶப்தரூபமும் ஜித: ஜிதௌ ஜிதா: என்கிற ஶப்தரூபமும் த்விதீயைக வசநத்தில் ஜிதம் என்று ஏகரூபமாக வருவது இங்கு [illegible]).

[illegible]

மூன்றாவதாக, மநோஜ்ஞும் என்றால் அழகானது என்று அர்த்தம். அழகிற் சிறந்தவன் மந்மதன். மநோ என்றும் ஜ்ஞும் என்றும் பிரித்துப் பார்த்தால் மனதை அறிந்தவனைச் சொல்லும். எல்லார் மனதையும் அறிந்தவன் க்ருஷ்ணன். ஆக இருவரையும் மநோஜ்ஞராகச் சொன்னது சரி.

நான்காவதாக, ஆத்மபூ என்று, தானே தோன்றிய பகவானையும், மனதில் தோன்றும் காமத்தையும், சொல்லலாம் என்பது கோஶங்களில் உள்ளது.

ஐந்தாவதாக, க்ருஷ்ணனுக்கு ஶங்கு, சக்ரம், கதை, வில், கத்தி என்கிற ஐந்தும், பாஞ்சஜந்யம், ஸுதர்ஶனம், கௌமோதகீ, ஶார்ங்கம், நந்தகம் என்ற பெயர்களுடன், பஞ்சாயுதமாக இருப்பது புராண ப்ரஸித்தம். மன்மதனுக்கும் ஐந்து மலர்கள் ஐந்து அம்புகளாக இருப்பதாகக் கவிமரபு. அரவிந்தம், அஶோகம், சூதம், நவமல்லிகை, நீலோத்பலம், என்கிற ஐந்து மலர்கள் காமவேளின் அம்புகளானவை. எப்படியோ இருவரும் பஞ்சாயுதர்கள். பஞ்ச பாண: என்று காமனின் இன்னொரு பெயர்.

இந்த ஐந்து ஒப்புமைகளாலே க்ருஷ்ணனை நிகர்த்தவன் மன்மதன். அவனை மகனாகப் பெறுவதில் ருக்மிணிக்கு ஹர்ஷமாம். எரிந்துபோய் ஏங்குபவனுக்கு உதவி செய்த மகிழ்ச்சியும், கண்ணன் போலே இருப்பவனை மகனாய்ப் பெற்ற மகிழ்ச்சியும், இருக்காதா பின்னே?

ஆசையைப் பண்ணலாம் ஆத்மபூ ஆவதாலும்
ஆயுதம் ஐந்ததாலும் ஆயினர் இருவர் துல்யம்.

இந்த ஶ்லோகத்தில் ஆத்மபூ என்பதற்கு மூன்று அர்த்தங்கள். ஸ்வயம்பூ என்று ஸஹஸ்ரநாமத்தில் பெயர் பெற்ற விஷ்ணு, மன்மதன், மகன் என்பவை அர்த்தங்கள். ஆத்மபூ போல் இருக்கும் ஆத்மபூவை ஆத்மபூவாகப் பெற்றாள் ருக்மிணி. அதனால் அவளுக்கு ஹர்ஷம்.

மணாளன் போல் மன்னுகிற மலர்க்கணையான் மன்மதனை
மலர்மங்கை மகனாக்கி மட்டின்றி மகிழ்ந்தாளாம்.

28. பகவத் கீதை போல் பாவிக்கத் தக்கவள்

गम्भीरभावाहि कृतार्थक्लृप्त
सम्पन्नटीका श्रुतिमञ्जुसूक्तिः ।
गीतेव कृष्णाननसौरभज्ञा
ध्येयाऽसि मातः शुभयोगभाजाम् ॥ २८

கம்பீரபாவாஹி க்ருதார்த்த க்லுப்த
ஸம்பந்நடீகா ச்ருதிமஞ்ஜுஸூக்தி: ।
கீதேவ க்ருஷ்ணாநநஸௌரபஜ்ஞா
த்யேயாऽஸி மாத: சுபயோகபாஜாம் ॥ 28

मातः = அம்மாவே!
गम्भीर - भावा = ஆழ்ந்த உள்ளர்த்தங்கள் கொண்டதும்
अहि - कृत - अर्थ - क्लृप्त - सम्पन्न - टीका = பாம்பால் (ஆதிசேஷனான பகவத் ராமானுஜரால்) பண்ணப்பட்ட பொருளாக்கல்களால் செறிப்படைந்த (ஸ்ரீபாஷ்யம் என்ற) உரையை உடையதும்
श्रुति - मञ्जु - सूक्तिः = வேதம் போல் இனிய நல்லுரை கொண்டதும்
कृष्ण - आनन - सौरभ - ज्ञा = கண்ணனது திருவாயின் பரிமளத்தை அறிந்ததும்
शुभ - योग - भाजां = மங்களமான யோகத்தை அடைந்தவர்களுக்கு
ध्येया = த்யானிக்கத்தக்கதுமான

गीता इव = பகவத் கீதை போல
गम्भीर - भावा = ஆழ்ந்த மனோபாவங்களைக் கொண்டவளும்
कृतार्थ - क्लृप्त - सम्पत् - नटीका = பாக்யசாலிகளுக்குக் கல்பிக்கப்பட்ட செல்வக் கூத்தை உடையவளும்
श्रुति - मञ्जु - सूक्तिः = காதுக்கு இனிய நல்வார்த்தைகள் உள்ளவளும்
कृष्ण - आनन - सौरभ - ज्ञा = கண்ணன் திருமுகத்தின் பரிமளம் அறிந்தவளும்
शुभ - योग - भाजां = அதிருஷ்டசாலிகளுக்கு
ध्येया = த்யானிக்கத் தக்கவளுமாக
असि = இருக்கிறாய்
हि = அல்லவா?

அம்மா ருக்மிணியே ! நீ பகவத் கீதை போல் இருக்கிறாய். எப்படியென்றால் இதோ ஐந்து ஸாத்ருஶ்யங்கள் (ஒப்புமைகள்).

இருவருமே கம்பீர பாவம் கொண்டவர்கள்.
இருவருமே க்ருதார்த்த க்லுப்த ஸம்பந்நடிகையர்.
இருவருமே ஶ்ருதி மஞ்ஜூ ஸூக்திகள்.
இருவருமே கண்ணனின் வதனத்தின் மணம் அறிந்தவர்கள்.
இருவருமே ஸோபயோகம் உள்ளவர்களால் அணுகத்தக்கவர்கள்.

இந்த ஐந்து ஸாம்யங்களையும் சற்று விளக்குவோம். கம்பீரபாவம் என்றால் எளிதில் விளங்காத அரிய உட்கிடக்கைகள். இது பகவத் கீதை முதலிய கஹனமான க்ரந்தங்களிலும் உண்டு; திருமகள் போன்ற லோகோத்தரையான ஸௌந்தரிகளிடமும் உண்டு. ஶ்ருங்கார பாவங்களும் கம்பீரமானவை.

இரண்டாவதாக க்ருதார்த்த க்லுப்த ஸம்பந்நடிகா என்பது, ஸ்ரீபாஷ்யகாரர் அர்த்த கல்பனத்தைப் பண்ணுவதால் அவரது கீதாபாஷ்யம் ஸம்பன்னமாக, ஸம்ருத்தமாக, இருக்கிறது. லக்ஷ்மி பக்ஷத்தில், அவள் தன்யர்களுக்குச் செல்வம் கூத்தாடும்படிப் பண்ணுகிறாள். இருவருமே ஸம்பந்நடிகா.

மூன்றாவதாக, இருவருமே வேத நல்லுரையாளர். கீதை, வேதம் போல் ஸூக்திகளைக் கொண்டது. வேதம் போல் ப்ராமாண்யம் மிக்கதும், வேதம் போல் மதிப்புக் குரியதும், வேதம் போல் புகழ் பெற்றதும், வேதம் போல் பகவானால் ஓதப்பட்டதும், வேதம் போல் கருத்தாழம் கொண்டதாயும் இருப்பதால் கீதையை ஶ்ருதி மஞ்ஜூஸூக்தி என்கிறார். பிராட்டியையும் இதே அடைமொழியால் சொல்வது எப்படித் தகும் என்றால், அவளே வேதஸூக்தி ஆவதாலும், வேதத்தில் அழகான ஸ்ரீஸூக்தத்துக்கு அவள் விஷயமானதாலும், வேதம் போல் இனிய பேச்சுகள் கொண்டிருப்பதாலும், வெவ்வேறு விசித்ர வாக்யங்களால் அவளைச் சொல்லும் இப்பதம். ஶ்ருதி என்பதற்குக் காது என்று

இன்னொரு அர்த்தமும் உண்டு. செவிக்கினிய செஞ்சொல் பேசுபவள் என்ற வகையிலும் திருமகளுக்கு அடைமொழியாகும்.

நான்காவதாக, இருவருமே கண்ணனது திருமுக மண்டலத்தின் வாசனை அறிந்தவர்கள். அவர் வாயிலிருந்தே கீதை வெளிவந்ததாலும், அவரது முகத்தை முகர்ந்து முத்தமிடுபவள் திருமகளாதலாலும் இது சரியாகிறது.

ஐந்தாவதாக, ஶுபயோகம் கொண்டவர் லக்ஷ்மி த்யாநமும் கீதா - அத்யயநமும் பண்ணுவார்கள். இதற்கெல்லாம் ஒரு அத்ருஷ்டம் வேண்டும் என்பதைச் ஶுபயோகபாஜாம் என்பதால் தெரிவிக்கிறார். அல்லது கர்மயோகம் பக்தியோகம் முதலியவற்றில் ஈடுபட்டவர்கள் கீதையை ஓதி அதன்படி பண்ணுவர் என்றும், ஜ்யோதிஷ ஶாஸ்த்ரப்படி ராஜயோகம், தநயோகம், உள்ளவர் லக்ஷ்மி த்யானம் பண்ணுவர் என்றும் அர்த்தம் சொல்லலாம்.

இந்த ஐந்து ஒப்புமைகளால் கீதையும் ருக்மிணியும் ஸமம். நாம் கீதையைப் படிப்போம். ருக்மிணியைத் த்யானிப்போம். அஹி (ஆதிஶேஷன்) கீதாபாஷ்யம் பண்ணியிருப்பது நம் ஸம்ப்ரதாயத்தவர்க்கு மட்டுமே தெரியுமாகையால் மற்றவர்கள் பாவாஹி என்பதற்குப் பதில் கோவாஹி என்று பாடம் போட்டு க்லிஷ்டமாக அர்த்தம் சொல்கிறார்கள்.

ஆழ்ந்த நுண் பாவத்தாலும், ஆடு மா செல்வத்தாலும்,
ஆரணத்தழகினாலும், அன்னை நீ கீதை போலும்.
கருத்தினில் காம்பீர்யத்தால் கண்ணனின் வாய்மணத்தால்
கவின்மிகு நல்வார்த்தையால் கமலையே கீதையாவாள்.

உள்ளம், உரை, செயல், இந்த மூன்றிலும் உயர்ந்தவள் லக்ஷ்மீ. கம்பீரபாவா என்பதால் உள்ளத்துயர்வையும், ஶ்ருதிமஞ்ஜுஸூக்தி என்பதால் உரையுயர்வையும், ஸம்பத் - நடீகா என்றதால் செயலுயர்வையும் கூறினார்?

பாவம் என்பதற்கு உட்கருத்து என்றும், மனோபாவம் என்றும் இரண்டு அர்த்தங்கள்.

அர்த்தம் என்பதற்குச் சொற்பொருள் என்றும் செல்வமாகிய பொருள் என்றும் இரண்டு அர்த்தங்கள்.

ஶ்ருதி என்பதற்கு வேதம் என்றும் காது என்றும் இரண்டு அர்த்தங்கள்.

யோகம் என்பதற்கு த்யானம் என்றும் அத்ருஷ்டம் என்றும் இரண்டு அர்த்தங்கள்.

இந்த நாலு பதங்களிலும் இரட்டை அர்த்தத்தால் சமத்காரம் பண்ணின கவிகள் பலருண்டு.

இந்த ச்லோகத்தில் இந்நான்கையும் தவிர மூன்று இரட்டை அர்த்தச் சொற்கள் பதங்களை வெவ்வேறு விதமாகப் பிரிப்பதால் வருபவை. பாவாஹி என்னுமிடத்தில் பாவாவுக்குப் பிறகு அஹி என்று பிரித்து அந்த க்ருத என்று தொடங்கும் அடுத்த பதத்தோடு ஸமாஸம் பெறவைத்து, அஹி-க்ருத என்று ஆக்கினால் ஸீதை விஷயமாகும். ஹி என்று தனிப்பதமாக்கி க்ருத என்று தொடங்கும் பதத்தோடு ஸமாஸப்படுத்தாமல் வைத்தால் லக்ஷ்மீ விஷயமாகும். இரண்டாவதாக ஸம்பந்நடீகா என்பதை ஸம்பத்-நடீ-கா என்று பிரித்துச் செல்வத்தைக் கூத்தாடப் பண்ணுபவள் என்றால் லக்ஷ்மீ விஷயமாகும். இதையே ஸம்பந்ந-டீகா என்று பிரித்து நிறைவேறிய உரையுடையது என்று பொருள் கொண்டால் ஸீதை விஷயமாகும். மூன்றாவதாக ஸௌரபஜ்ஞாத்யேயா என்பதை இரு வெவ்வேறு பதங்களாகப் பிரிக்கும் போது, இரண்டாம் பதம் த்யேயா என்பதா அத்யேயா என்பதா? த்யேயா என்பது லக்ஷ்மிக்கும் அத்யேயா என்பது ஸீதைக்கும்

பொருந்தும். இப்படிப் பதம் பிரிப்பதில் வேறுபாட்டால் வரும் இரட்டையர்த்தங்களை மற்ற கவிகள் கையாள்வது அபூர்வம். இந்த ச்லோகத்து நீதிகள் சில:

உயர்வுக்கழகு (மனம், வாக்கு, காயம் என்ற) முக்கரணப் பண்புயர்வு.

மனத்துக்கழகு உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்றபடி கம்பீரமான எண்ணங்கள்.

வாக்குக்கழகு செவிக்கினிமையாகப் பேசுதல் (ச்ருதி மஞ்ஜு*)

செயலுக்கழகு வாரி வழங்குதல். (க்லுப்த ஸம்பத்)

நூலுக்கழகு உட்கருத்தாழம். (கம்பீர பாவா)

உரைநூற்கழகு பொருள்வளம் காட்டுதல் (அர்த்த க்லுப்த ஸம்பந்ந)

த்யானத்துக்கழகு பரம்பொருள் பற்றல் (த்யேயா ரூபயோகபாஜாம்)

யோகம் புரிந்திடப் படிப்பது கீதையை.
யோகம் அடித்திடத் துதிப்பது லக்ஷ்மியை.

29. துணைவனுக்குத் துலையானவள்.

घनमहा नवनीतहृदाश्रित व्रजविपत्तिहरा हरिवल्लभे ! ।
प्रबलभद्रविकासविधायिनी त्वमयसे निजवल्लभ तुल्यताम् ॥ २९

கநமஹா நவநீதஹ்ருதாச்ரித
வ்ரஜவிபத்திஹரா ஹரிவல்லபே !।
ப்ரபலபத்ரவிகாஸவிதாயிநீ
த்வமயஸே நிஜவல்லப துல்யதாம் ॥ 29

हरि-वल्लभे = ஹரியின் வல்லபையான லக்ஷ்மியே! | உத்தமங்கள் கொண்டவள் நீ; மேகம் போல் காந்தி கொண்டவன் அவன்.

घन-महा = நெருக்கமான नवनीत-हृत् = வெண்ணெய்

போன்ற இதயத்தாள் நீ; வெண்ணெய் திருடுபவன் அவன்.

आश्रित-व्रज-विपत्ति-हरा = ஶரணடைந்தவர் கூட்டத்தில் விபத்துகளை நீக்குபவள் நீ. தான் சேர்ந்த வ்ரஜபூமியின் விபத்துகளைப் போக்குபவன் அவன்.

प्रबल-भद्र-विकास-विधायिनी = மிகப் ப்ரபலமான மங்களமலர்ச்சியை (மோக்ஷத்தை)ப் பண்ணுபவள் நீ. பலபத்ரனின் வளர்ச்சியைப் பண்ணுபவன் அவன்.

त्वं = நீ.

निज-मन्मथतुल्यतां = தன் காந்தனுக்குச் சமத் தன்மையை

अयसे = அடைகிறாய்.

ஹரிவல்லபையே ! நீ ஹரிக்கு ரொம்பவும் வல்லபையானதாலோ என்னவோ அவன் போலவே ஆகிறாய். எப்படியென்றால் ?

இருவருமே கநமஹர்கள் (வெவ்வேறு அர்த்தப்படி).

இருவருமே வெண்ணெய் ஹ்ருத்துகள். (வெவ்வேறு அர்த்தப்படி).

இருவருமே ஆஶ்ரித வ்ரஜத்தின் விபத்தை நீக்குபவர்கள் (வெவ்வேறு அர்த்தப்படி).

இருவருமே ப்ரபலபத்ர விகாஸம் பண்ணுபவர்கள் (வெவ்வேறு அர்த்தப்படி).

இவற்றை இப்போது விளக்குவோம்.

கநம் என்று மேகத்துக்கும் பெயர்; நெருக்கமான என்றும் அர்த்தம். **மஹஸ்** என்றால் காந்தி. **மஹம்** என்றால் கொண்டாட்டம். நீ நெருக்கமான, அடிக்கடியான, இடைவெளி குன்றந்த, உத்ஸவங்கள் கொண்டவள். உன் மணாளனும் கருத்த மேகம் போன்ற காந்தி கொண்டவன். இப்படி இருவருமே **கநமஹர்கள்**.

ஹ்ருத் என்றால் இதயம் என்றும் அபஹரிப்பவன் என்றும் இரண்டு அர்த்தங்கள். நீ வெண்ணெய் போன்று இளகிய இதயம் கொண்டவள், அவன் வெண்ணெய்த் திருடன். இருவரும் **நவநீதஹ்ருத்**.

வ்ரஜம் என்றால் கூட்டம் என்றும் **வ்ரஜபூமி** (குழந்தைக் கண்ணன் வஸித்த ஊரின் பெயர்) என்றும் இரண்டு அர்த்தங்கள். உன்னைச் சேர்ந்தவர் கூட்டத்தை நீ காக்கிறாய். ஆபத்துகளை அகற்றுகிறாய். தான் அடைந்திருக்கும் வ்ரஜபூமிக்கு வரும் ஆபத்துகளை அவன் நீக்குகிறான். உதாரணமாக இந்த்ரன் கோபத்தால் பெருமழை பெய்தபோது கோவர்த்தன மலையைத் தூக்கிக் கண்ணன் ஆயர்களை ரக்ஷித்தான்;

பலபத்ரன் என்று பலராமனுக்கும் பெயர். உயர்ந்த மங்களத்துக்கும் பெயர். நீங்கள் இருவரும் **பலபத்ர விகாஸத்தைப்** பண்ணுகிறீர்கள், வெவ்வேறு அர்த்தப்படி. **ப்ரபல பத்ரவிகாஸம்** என்று மோக்ஷத்தைச் சொல்லலாம். அதையும் பண்ணுபவள் லக்ஷ்மி. இந்த ச்லோகத்தில் **வல்லப** என்கிற பதம் இரண்டு முறை வந்துள்ளது; **ஹரிவல்லபே** என்றும் **நிஜவல்லபம்** என்றும்; திருமாலுக்குப் பிராட்டியும், பிராட்டிக்குத் திருமாலும் அந்யோந்யம் (ஒருவருக்கொருவர்) வல்லபர்கள்; காதல் கொண்டவர்கள்; ஆகையால் இருவரும் நாளடைவில் ஒத்த பண்பினர் ஆவதில் வியப்பில்லை.

விபத்தினை விலக்கலாலும், விகாஸத்தை விளைத்தலாலும்,

வெண்ணெயாய் வேட்பதாலும் வல்லபன் போல நீயும்.

இத்துடன் க்ருஷ்ணாவதாரப் பகுதி முடிந்தது. அடுத்த மூன்று ச்லோகங்களில் கல்கி அவதாரத்தில் லக்ஷ்மியின் பங்கை வர்ணிக்கிறார்.

30. முக்திக்ஷேத்ரங்கள் மொத்தமுமானவள்.

प्रायोध्यानगरीयसां सुमनसां मायातमश्छेदिनी
त्वं काञ्चीमधुरावलग्नसरणिः क्षोभादवन्ती जगत्।
सम्भोगैस्स्वदसे स्म देवि ! जलधेरुद्वीचिकाशीकरे
स्वैरं द्वारवतीपुरे विहरते कृष्णाय तृष्णायतेः ॥ ३० ॥

ப்ராயோ த்யாநகரீயஸாம் ஸுமநஸாம் மாயாதமச்சேதிநீ
த்வம் காஞ்சீமதுராவலக்நஸரணி: க்ஷோபாஜ்ஜகத்யவந்தீ ।
ஸம்போகைஸ்ஸ்வதஸே ஸ்ம தேவி! ஜலதேருத்வீசிகாசீகரே
ஸ்வைரம் த்வாரவதீபுரே விஹரதே க்ருஷ்ணாய த்ருஷ்ணாயதை: ॥30

देवि = ஸ்ரீதேவியே!

प्रायः = பெரும்பாலும்

ध्यान-गरीयसां = த்யானத்தால் பெருமை மிக்கவர்களான

सुमनसां = பண்டிதர்களுக்கு

माया-तमः-छेदिनी = ப்ரக்ருதி மாயை என்னும் இருளை அறுத்தெறிபவளும்,

काञ्ची-मधुर-अवलग्न-सरणिः = மேகலையால் அழகிய இடுப்பு வழியை உடையவளும்

क्षोभात् = கலக்கத்திலிருந்து

जगत् = உலகத்தை

अवन्ती = காப்பவளும் ஆன

त्वं = நீ

जलधेः = கடலின்

उद्वीचिका-शीकरे = உயரும் அலைகளின் திவலைகள் கொண்ட

द्वारवती-पुरे = த்வாரகை நகரில்,

स्वैरं = இஷ்டப்படி,

विहरते = விளையாடுகிற

कृष्णाय = க்ருஷ்ணனுக்கு

तृष्णा-आयतैः = இச்சையால் நீண்ட

सम्भोगैः = ஸம்போகங்களால்

स्वदसे स्म = இனித்தாய்.

ருக்மிணி தேவியே! நீ த்யானம் பண்ணும் பண்டிதர்க்கு மோக்ஷம் தருகிறாய்; அவர்களது மாயையைக் கிழிக்கிறாய். உன் இடுப்பில் ஒட்டியாணம் அழகாய் இருக்கிறது. நீ உலகத்தைக் குழப்பத்திலிருந்து காக்கிறாய். அலைகள் உயரக் கிளம்பும் த்வாரகையில் தன்னிஷ்டப்படி விளையாடும் க்ருஷ்ணனுடன் ச்ருங்கார லீலைகள் மூலம் நீ அவனுக்குச் சுவையூட்டுகிறாய். இவ்வாறாக, பக்தர்களுக்கும், தனக்கும், உலகுக்கும், கணவனுக்கும், உன்னால் பெரும் பலன்கள் ஏற்படுகின்றன.

இந்த ச்லோகத்தில் இன்னொரு விசேஷம் என்னவென்றால் ஏழு முக்தி க்ஷேத்ரங்களின் பெயர்களும் ஒளிந்து கொண்டிருக்கின்றன. **அயோத்யா மதுரா மாயா காசீ காஞ்சீ ஹ்யவந்திகா : புரீ த்வாரவதீ சைவ ஸப்தைதா: முக்திதாயிகா:** என்று வசனம். இந்த ஏழு நகரங்களுள் அயோத்யா நகரியும், மாயாவும் முதல் வரியிலும், காஞ்சியும் மதுரையும் அவந்தியும் இரண்டாம் வரியிலும், காசி மூன்றாம் வரியிலும், த்வாரவதீ கடைசிவரியிலும் இருப்பதைக் காணலாம். இந்த ஏழில், **த்வாரவதீ** மட்டும் ஒரே அர்த்தத்தில், உள்ளபடியே வந்ததாம். அங்கே க்ருஷ்ணன் விளையாடுகிறார். நாலு ஊர்களின் பெயர்கள் வேற்று அர்த்தங்களில் வந்துள்ளன.

மாயா என்றால் வட இந்தியாவில் ஒரு க்ஷேத்ரத்தின் பெயர்; ப்ரக்ருதி மாயைக்கும் பெயர். **காஞ்சி** என்றால் ஒரு தென்னிந்திய க்ஷேத்ரத்துக்கும் பெயர்; பெண்களின் இடுப்பணியான ஒட்டியாணமும் அர்த்தமாம்.

மதுரா என்றால் க்ருஷ்ணனின் அவதார க்ஷேத்ரத்தின் பெயர்; இனிமையான, அழகான, என்ற பொருள்களும் உண்டு.

அவந்தீ என்றால் உஜ்ஜயினீ என்றும் காப்பாற்றுபவள் என்றும் இரண்டு அர்த்தங்கள்.

இந்த ச்லோகத்தில் இந்த நாலு ஊர்ப் பெயர்களும் இரண்டாவதாகச் சொன்ன அர்த்தங்களில் வந்துள்ளன.

இது தவிர அயோத்யா, காசி என்ற இரண்டும் சொற்களின் ஸந்தியால் இங்கு வந்துள்ளன.

ப்ராயோ-த்யார்த என்னுமிடத்தில் **அயோத்யா** வருகிறது. **அயோத்யா நகரீ** என்று கூடக் காணலாம். **விசிகா, ப்கர** என்ற சொற்கள் சேரும்போது **காசீ** வருகிறது.

எப்படியோ ஏழு ஊர்களும் இந்த ஶ்லோகத்தில் சொல்லப்பட்டு விட்டன.

மாயையை நீக்குபவள் நீ. **காஞ்சியை** அணிந்தவள் நீ. **மதுரையாய்** உள்ளவள் நீ. **த்வாரகையில்** இருப்பவள் நீ. **அவந்தியாய்** ஆனவள் நீ. **அயோத்யா** உன் தொண்டரிடம் தொக்கி மறைந்துள்ளது.

காஶீ உன்னூர்க் கடலலையில் தொக்கி மறைந்துள்ளது. **ஆக ஏழு முக்தி க்ஷேத்ரங்கள் மொத்தமும் உன் வசம்.**

உத்வீசிகா ஶீகரே என்று த்வாரகைக்கு அடைமொழி இட்டது ஏன் தகும் என்றால் கடல் சூழ்ந்த இந்த நகரத்தில் கடலலைகள் உயர எழுந்துத் திவலைகள் தெறிப்பதாலாம்.

க்ஷோபாத் அவந்தீ ஜகத் என்று உலகைக் கலக்கத்திலிருந்து காப்பாற்றுபவளாக லக்ஷ்மியைச் சொன்னது ஏன் தகும் என்றால் அவள் ஶ்ரீ வைஷ்ணவ ஆசார்ய பரம்பரையில் பெருமாளுக்கு அடுத்தபடியாக ஸ்தானம் வஹித்து **விஷ்வக்ஸேனர், நம்மாழ்வார், நாதமுனிகள்,** என்ற குருபரம்பரை மூலமாக உலகைக் காத்தருள்வதாலாம். அல்லது அவளது ஸாந்நித்ய மாத்ரத்தாலேயே மூவுலகிலும் குழப்பம் நீங்குவதால் **த்ரைலோக்யம் ந த்வயா த்யாஜ்யம், மூவுலகத்தை விட்டுச் செல்லாதே** என்று இந்த்ரன் மன்றாடி அவளிடம் வரமாகக் கேட்டபடி, மூவுலகையும் காப்பவள் என்றுமாம். இவளை **மாயாதமஶ்சேதிநீ** என்றது ஏன் தகும் என்றால், ப்ரக்ருதிமாயையை அறுத்தெறிந்து மோக்ஷத்தைத் தருபவள் ஆதலாலாம்.

த்யாநகரீயஸாம் என்கிற அடைமொழியை **ஸுமநஸாம்** என்ற பதத்துக்கு இட்டதின் கருத்து என்னவென்றால், வெறும் தத்வஜ்ஞானத்தால், வாக்யத்துக்கு அர்த்தம் புரிந்த மாத்ரத்தால், மோக்ஷம் கிடைத்துவிடாது; அந்த ஜ்ஞானம் பக்திரூபமாகி த்யானமாகிப் பெருமை சேர்க்கும்போது மட்டும் தான், அத்தகைய ஜ்ஞானிகளுக்கு மட்டும்தான், மோக்ஷம்

கிடைக்கும் என்கிற ஸத்ஸம்ப்ரதாயத்தைத் தெளிவிப்பதற்காம்.

ப்ராய: என்னும் முதல் பதத்தின் கருத்து என்னவென்றால், பெரும்பாலும் பக்தியோகத்தால் மோக்ஷம் என்பதாம்; ப்ரபத்தியும் பக்திஸ்தானத்தில் பகவானை நிறுத்தியல்லவா மோக்ஷஸாதனம் ஆகிறது? பெரும்பாலும் என்பதை இரண்டு விதமாக அன்வயிக்கலாம். மோக்ஷம் பெறுபவரில் பெரும்பாலோர் பக்தியோகிகள் என்பது சற்று முன் சொன்னது. பக்தி யோகிகளில் பெரும்பாலோர் மோக்ஷம் அடைவர் என்பது இரண்டாவது. ஏன் எல்லாரும் அடையாரோ ? என்றால், **ஸாத்யோபாயமான** பக்தி ப்ரபத்திகளுடன் **ஸித்தோபாய**மும் தேவைப்படும்; பகவத் ப்ரீதியே முக்ய **உபாயம்** என்பதாம்.

கரீயஸாம் என்ற பதத்தின் கருத்து என்னவென்றால், வறட்டு ஜ்ஞானத்தால் பெருமை இல்லை; பகவத் த்யானத்தால் தான் அறிவுக்கே பெருமை என்பதாம்.

மாயாதமஸ் என்பதற்கு இரண்டு விதமாக அர்த்தம் சொல்லலாம். மாயா என்றும் தமஸ் என்றும் சொல்லப்படும் ப்ரக்ருதி என்பது ஒரு அர்த்தம். மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாத் என்றதும் தமஸ: பரஸ்தாத் என்றதும் காண்க. மாயை என்னும் ப்ரக்ருதியையும், அதன் தொடர்பால் வந்த அறியாமை என்னும் இருளையும் என்று இரண்டாம் அர்த்தம். இவ்விரண்டையும் அறுத்தெறிபவள் லக்ஷ்மி.

விஹரதே என்ற அடைமொழியின் தாத்பர்யம் என்னவென்றால் அவதாரங்கள் யாவும் பகவானுக்கு விஹாரங்கள் (விளையாட்டுகள்) மாத்திரமே; நமது பிறவிகள் போல் ஸுகதுக்கானுபவம் கிடையாது என்பதாம்.

ஸ்வைரம் என்ற வினை எச்சத்தின் தாத்பர்யம் என்னவென்றால், நாமெல்லாம் கர்மவசப்பட்டுப் பிறவா நிற்க, அவன் மட்டும் எதற்கும் வசப்படாமல் தன்னிசையாக அவதார லீலைகளைப் பண்ணுகிறான் என்பதாம்.

ஸ்வதஸே என்றதன் கருத்து என்னவென்றால், இந்தப் பகவதனுபவத்தால் நமக்குக் கிடைக்கும் ஆனந்தம் ஒருபுறம் இருக்க, அவனுடைய ப்ரீதியும், அவன் பயனாளியாவதும் முக்யமென ஸம்ப்ரதாயக் கருத்து என்பதாம்.

த்ருஷ்ணயதை: என்ற கடைசிப் பதத்தின் தாத்பர்யம் என்னவென்றால், வேட்கை கொள்வதால் நீண்ட காம ஸம்போகங்கள் அவஸரமான க்ஷணிக ஸம்போகங்களிலும் உயர்ந்தவை; பகவதனுபவம் நீண்ட நேரம் நிலைப்பதும், அதற்கடியாக நாம் பகவானிடம் வேட்கை கொள்வதும் நல்லது என்பதை நமக்கு மார்க்க தர்சிநியாய்க் காட்டுபவள் லக்ஷ்மி என்பதாம்.

ஏழு நகரங்களின் பெயர்களுள் த்வாரவதீ என்கிற த்வாரகை தவிர மற்ற ஆறு பதங்களுக்கும் வேறு அர்த்தம் சொன்னோம். த்வாரவதீ என்பதற்கும் வேறு அர்த்தம் இங்கு பொருந்துமாகிலும், பெரியோர்கள் அவ்வர்த்தத்தை உபேக்ஷிப்பர்.

ஏற்ற மிகு க்ஷேத்ரங்கள் ஏழினது பெயர்களையும்
ஏதோவோர் விதத்தாலே ஏற்றுவகை தந்தாய் நீ.



31. கல்கிக்குக் கருணை வரக் காரணமானவள்.

म्लेच्छान् जयानकरवानपि मूर्च्छयित्वा
निर्वापयिष्यति कलिं हविराध्वरं च ।
कल्की तमांसि परिपास्यति भूसुरांश्च
पद्मे ! भवद्वचनपल्लवितानुकम्पः ॥ ३१

ம்லேச்சாந் ஜயாநகரவாநபி மூர்ச்சயித்வா
நிர்வாபயிஷ்யதி கலிம் ஹவிராத்வரம் ச ।
கல்கீ தமாம்ஸி பரிபாஸ்யதி பூஸுராம்ஶ்ச
பத்மே ! பவத்வசநபல்லவிதாநுகம்ப: ॥ 31

पद्मे = தாமரையாளே !
भवत् - वचन - पल्लवित - अनुकम्पः
= உமது பேச்சால் தளிர்த்த தயை உடையவராய்
कल्की = கல்கி
जयानक-रवान् = வெற்றிக்கான கோஷங்களை
मूर्च्छयित्वा = வளர்த்து உயர்த்தி
म्लेच्छान् अपि = ம்லேச்சர்களையும்
मूर्च्छयित्वा = மோஹிக்கச் செய்து.
कलिं = கலியுகத்தை.
निर्वापयिष्यति = அணைக்கப் போகிறார்-முடிவு கட்டப் போகிறார்.
आध्वरं = யாகத்தைச் சேர்ந்த
हविः = ஹோமப் பொருளையும்
निर्वापयिष्यति = பிரிக்கப் போகிறார்; அல்லது ஸமர்ப்பிக்க வைக்கப் போகிறார்.
तमांसि = இருள்களை
परिपास्यति = குடிக்கப் போகிறார்.
भूसुरान् च = ப்ராஹ்மணர்களையும்
परिपास्यति = காப்பாற்றப் போகிறார்.

பத்மையே ! கல்கி பகவானுக்குக் கருணை வருவதே உமது பேச்சினால் தான். இந்தக் கருணையின் விளைவாக அவர் பண்ணும் கார்யங்கள் ஆறு. துருக்கர், யவனர் முதலிய ம்லேச்சர்களை மயக்குகிறார் என்பது ஒன்று. வெற்றி முழக்கம் இடுகிறார் என்பது இரண்டாவது. கலியுகத்தை

முடித்துவிடுகிறார் என்பது மூன்றாவது. யாகத்தின் ஹோமப் பொருள்களை நிர்வாபம் செய்விக்கிறார் என்பது நான்காவது. இருள்களைக் குடித்து ஒளிகளைத் தருகிறார் என்பது ஐந்தாவது. அந்தணர்களைக் காக்கிறார் என்பது ஆறாவது. இந்த ஆறையும் சொல்லும்போது இரட்டைப் பொருட் சொற்களைப் பயன்படுத்தி இந்தக் கவி மூன்று வினைச் சொற்களால் ஆறு தொழில்களையும் சுருக்கிச் சொல்கிறார் என்பது வேடிக்கை. மூர்ச்சை என்ற பதத்துக்கு மயக்கம் என்றும் உயர்த்துதல் என்றும் இரண்டு அர்த்தங்கள். ஜயகோஷங்களையும் மூர்ச்சிக்கப் பண்ணுகிறார்; ம்லேச்சர்களையும் மூர்ச்சிக்கப் பண்ணுகிறார் என்று முதல் இரண்டு கார்யங்களையும் ஒரே வினைச் சொல்லால் சொல்கிறார். இதே போல நிர்வாபணம் என்ற சொல்லுக்கு மடியப்பண்ணுதல், குவியலிலிருந்து தனியே பிரித்தல் (இது மீமாம்ஸா ஶாஸ்த்ரத்தில் சொன்ன அர்த்தம்), ஸமர்ப்பிக்கப் பண்ணுதல், என்ற அர்த்தங்கள். இவர் கலியுகத்தையும் நிர்வாபணம் (முடிவு கட்டுவது) பண்ணுகிறார். யாகத்து ஹவிஸ்ஸையும் நிர்வாபணம் பண்ணுகிறார். மூன்றாவதும் நாலாவதுமான இரு கார்யங்களை ஒரே வினைச் சொல்லால் சொல்ல முடிந்தது. அடுத்ததாக பாஸ்யதி என்ற பதத்துக்குப் பானம் பண்ணப் போகிறார் என்றும் பாலநம் பண்ணப் போகிறார் என்றும் இரண்டு அர்த்தங்கள். (பிபதி என்றும் பாதி என்றும் நிகழ் காலத்தில் வெவ்வேறு ரூபங்கள் கொண்டாலும், எதிர் காலத்தில் பாஸ்யதி என்று ஒரே தாதுரூபம் வரும்). கல்கி இருட்டுகளையும் பாஸ்யதி; ப்ராஹ்மணர்களையும் பாஸ்யதி. ஐந்தாவதும் ஆறாவதுமான இரு கார்யங்களையும் ஒரே வினைச் சொல்லால் சொல்ல முடிந்தது. இப்படி ஒரே வார்த்தை தளிர் விட்டுக் கொண்டு தொடர்ந்து ஆடியது என்பதையும் வசந பல்லவித அநு கம்ப: அபவத் என்று சொல்லலாம். இது நாலாம் பாதத்தில் சொன்னதற்கு மற்றொரு அர்த்தம் ஆகிறது.

யஜுஸ் ஸம்ஹிதையில் பல இடங்களில் நிர்வபேத் என்ற பதத்தைக் காண்கிறோம். ஐந்த்ரம் சரும் நிர்வபேத் என்றும் புரோடாசமஷ்டாகபாலம் நிர்வபேத் என்றும் இப்படியாகப் பல. இந்த ச்ரௌதகர்மங்களையெல்லாம் கல்கி பகவான் நடக்கப் பண்ணுவார் என்பது நிர்வாபயிஷ்யதி என்ற பதத்தின் கருத்தாகும்.

தமஸ்ஸுகள் எனப்பட்டவை எவையெனில், இருட்டு, வ்யாமோஹம், அறியாமை, தமோ குணம், என்று பல அர்த்தங்கள் தமஸ் என்ற பதத்துக்கு இருப்பதால், இவற்றையெல்லாம் கல்கி நீக்கப் போகிறார் என்றதாம்.

தமஸ்ஸை நீக்குவது என்ற அர்த்தத்தில் குடிப்பது என்றது ஏனோ என்று கேட்டால், விளக்கு தான் பருகிய இருட்டைப் புகையாகக் கக்குகிறது என்கிற கவி ப்ரயோகமும், அழிப்பதைக் கபளீகரம் செய்வதாகச் சொல்லும் உலக வழக்கும் இவ்வாறு கூறுவதைச் சரியாக்குகின்றன.

இப்படி மூர்ச்சயித்வா என்ற பதத்தில் உள்ள ச்லேஷையைக் கவனிக்காத சிலர் ஜயாநகரவாந் என்ற பதத்துக்குப் பதில் பயாநகரவாந் என்று அச்சிட்டு ம்லேச்சாந் என்பதற்கு விசேஷணமாக்கி, உரை எழுதியிருக்கிறார்கள். ஆனால் ப்ராசீந க்ரந்தாக்ஷர புஸ்தகத்தில் உள்ள பாடமே ஸ்வரஸமாக இருப்பதால் அது இங்கு கொடுக்கப்பட்டது.

> ம்லேச்சரை மயக்கலும் மிடற்றொலி முழக்கமும்
> கலியுகம் முடித்தலும் காரிருள் குடித்தலும்
> அவியினைப் பிரித்தலும் அந்தணர் காத்தலும்
> கல்கியின் கார்யம் கமலையின் கருணையால்.

கல்கி அவதாரத்தில் ம்லேச்சரை மாய்த்ததும், ஜயகோஷம் பண்ணினதும், கலியுகத்தை முடித்ததும், புராணங்களில் ப்ரஸித்தமானதால் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் மற்ற மூன்றும், அதாவது - ஹவிஸ்ஸினைப் பிரித்ததும், இருட்டினை ஒழித்ததும், அந்தணரைக் காத்ததும்,

எதற்காக இங்கே சொல்கிறார் என்று சிலர் கேட்கலாம். கல்கிபகவான் கடைசியில் அஶ்வமேதயாகம் பண்ணினதாகக் கதை இருப்பதால் ஹவிஸ்ஸை நிர்வாபணம் பண்ணுவது சரியாகும்; தவிரவும் கலியின் அதர்மத்தால் குன்றிப் போயிருந்த வேள்விகளையெல்லாம் மறுபடி க்ருதயுக தர்மப்படி செழிக்கப் பண்ணினதாலும் இது சரியாகும். இருட்டழித்ததும் கலியின் தமஸ்ஸை நீக்கியதால் சரியாகும். த்விஷா ஸ்புட தடித்குண: என்று தயாஶதகத்தில் ஆசார்யன் அருளிய படியும் இது சரியாம். கலியின் கொடுமையால் வருந்திய அந்தணரைக் காப்பாற்றுவதாகச் சொன்னதும் பொருந்தும். இதற்கெல்லாம் கருணையே காரணம் என்று வ்ருஷாத்ரி ஹயஸாதிந: எனத் தொடங்கும் தயாஶதக ஶ்லோகத்திலும் காணலாம். இந்தக் கருணை பத்மாவின் பேச்சால் ஏற்பட்டது என்கிறாரே, இது எப்படி ? என்றால், அவள் தூண்டுதலாலேயே அவதாரங்கள் நடைபெறுவதாலும், இந்த ஶ்லோகத்தில் வேறு அர்த்தப்படி பவத்-வசந- பல்லவித- அநு-கம்ப என்பது சரியாவதாலும் இதை ஒப்புக் கொள்ள வேண்டும். பவத் என்பதற்கு ஆகிற என்றும் அர்த்தம்.

அதிகமாய்க் கோஷம் பண்ணல் அத்வரம் செழிக்கப் பண்ணல்
அந்தணர் ரக்ஷை பண்ணல் அன்னையே எல்லாம் உன்னால்.
கடுமையாய்க் கொடியோர் மாய்த்தல் கலியினை முடித்துத் தீர்த்தல்
கல்கியாய் தமஸ் குடித்தல் கமலைசொல் தளித்ததால் தான்.

32. வனத்துக்கு வளத்தை வருவிப்பவள்.

மாதவற்கு மாட்சி தரும் மாஹாவநீ.

मलिनकलिकालेर्षैः शाखापरिक्षपदूषितैः
अपगतसदामोदैरत्रासुहृद्यवनैर्वृते ।
शमयितुमनाः शाखिग्लानिं भविष्यति माधवो
जलनिधिभुवा वृद्धिं लब्धा त्वया च महावनि ! ॥ ३२

மலிநகலிகாலேஶை: ஶாகா₂பரிக்ஷய தூ₃ஷிதை:
அபக₃த ஸதா₃மோதை₃ ரத்ராஸுஹ்ருத்₃யவநைர் வ்ருதே ।
ஶமயிதுமநாஶ் ஶாகி₂க்₃லாநிம் ப₄விஷ்யதி மாத4வோ
ஜலநிதி₄பு₄வா வ்ருத்தி₄ம் லப்₃தா₄ த்வயா ச மஹாவநி ! ॥ 32

महा-अवनि = உற்சவங்களைக் காப்பவளே!

मलिन-कलि-काल-ईशै: = பொல்லாத கலிகாலத்தரசர்களாலும்

शाखा-परिक्षय-दूषितै: = வேதம் க்ஷீணிப்பதால் கெட்டுப் போனவர்களாலும்

अपगत-सत्-आमोदै: = நல்லோரின் மகிழ்ச்சியை நலியப் பண்ணினவர்களாலும்

असु-हृत्-यवनै: = உயிரை எடுக்கும் யவனர்களாலும்

वृते = சூழப்பட்ட

अत्र = இவ்விடத்தில்

शाखि-ग्लानिं = வேதியரின் வாட்டத்தை

शमयितुमना: = நீக்க நினைப்பவராய்

माधव: = மாதவன்

भविष्यति = எதிர்காலத்தில்

जलनिधि-भुवा = ஸமுத்ரத்தின் மகளான

त्वया च = உன்னாலும்

वृद्धिं = முன்னேற்றத்தை

लब्धा = அடையப் போகிறார்.

இனி இரண்டாவது அர்த்தம்.

महा-वनि = பெரிய வநஸ்தலியே!

मलिन-कलिका-लेशै: = அழுக்கடைந்த சிறுசிறு மொக்குகளாலும்

शाखा-परिक्षय-दूषितै: = கிளைகள் சுற்றிலும் க்ஷயமடைவதால் கெடுதல்களாலும்

अपगत-सत्-आमोदै: = நீங்கிப் போன நறுமணங்களாலும்

अ-सु-हृद्य-वनै: = மனதுக்குப் பிடிக்காத காடுகளாலும்

वृते = சூழப்பட்ட

अत्र = இந்த இடத்தில்

शाखि-ग्लानिं = மரங்களின் வாட்டத்தை

शमयितुमन: = தீர்க்க எண்ணுகிறதாய்

माधव: = வஸந்த காலமானது

भविष्यति = ஆகப்போகிறது.

जल-निधि-भुवा = நீர் நிலைநிலத்தோடு கூட

त्वया = பெரிய வநஸ்தலியான உன்னாலே

वृद्धिं = வளர்ச்சியை

लब्धा = அடையப்போகிறது.

கொண்டாட்டங்களைக் காப்பாற்றுகிற லக்ஷ்மியே ! கலியின் முடிவில் அரசர்கள் துஷ்டர்களாய் இருப்பார்கள். வேதங்கள் க்ஷீணமாகும். நல்லவர்கள் வருந்துவர். ம்லேச்சர்கள் உயிரை வாங்குவர். அத்தகைய இவ்வுலகத்தில் அந்தணர்களது வாட்டத்தைத் தீர்ப்பதற்காக மாதவன் கல்கியாக அவதரிக்கப் போகிறார். ஸமுத்ர குமாரியான உன்னால் அவர் வளரப் போகிறார்.

இது ச்லோகத்தின் முதல் அர்த்தம்.

பெரிய நிலப்பகுதியே ! வஸந்தருது வருவதற்கு முன் மரங்களில் மொட்டுகள் மிகக் குறைவாகவே இருக்கும். அவையும் மலினம் அடைந்திருக்கும். கிளைகள் இலையுதிர்ந்தபடியால் க்ஷீணித்துப் போயிருக்கும். நறுமணம் வீசாது. தோப்புகள் ரம்யமாக இருக்க மாட்டா. இத்தகையதோர் இடத்தில் மாதவமாதம் (வைகாசி) வரும். வந்தவுடன் நீர்நிலைகள் கொண்ட நிலப்பகுதிகளில் மரங்களின் வாட்டம் தீர்ந்து விடும். மாதவமாதத்துக்கே ஒரு சிறப்பு ஏற்படும்.

இந்த ச்லோகத்தில் சிலேடை அதிகம்.

ஶாகா, ஆமோதம், பவிஷ்யதி, மாதவன், பூ, என்ற ஐந்து பதங்களும் இரட்டைப் பொருட் சொற்கள். ஶாகா என்றால் மரக்கிளை என்றும் வேதப்பிரிவு என்றும் இரண்டு அர்த்தங்கள்.

ஆமோதம் என்றால் மகிழ்ச்சி என்றும் வாசனை என்றும் இரண்டு அர்த்தங்கள்.

பவிஷ்யதி என்றால் வரவிருக்கும் காலத்தில் என்றும் ஆகப்போகிறது என்றும் இரண்டு அர்த்தங்கள்.

மாதவன் என்றால் திருமால் என்றும் வைகாசி மாதம் என்றும் இரண்டு அர்த்தங்கள்.

பூ என்றால் நிலம் என்றும் உண்டானவன் என்றும் இரண்டு அர்த்தங்கள்.

ஶாகி என்றால் மரம் என்றும் வேதம் என்றும் இரண்டு அர்த்தங்கள்.

இப்படியுள்ள இரட்டைப் பொருட்சொற்கள் தவிர இன்னும் சில சொற்களைச் சேர்க்கும்போதும் வெவ்வேறு விதமாகப் பிரிக்கும் போதும் வரும் இரட்டைப் பொருட்களும் உண்டு. கலிகாலேஶ என்பதை கலி-கால-ஈஶ என்று பிரித்தால் கலிகாலத்து மன்னர் என்று அர்த்தம். கலிகா-லேஶ என்று பிரித்தால் மொட்டுகளில் கொஞ்சம் என்று அர்த்தமாகும். மஹாவநி என்ற பதத்தை மஹ-அவநி என்று பிரித்தால் கொண்டாட்டங்களைக் காப்பவளே ! என்று அர்த்தம். மஹா-வநி என்று பிரித்தால் பெரியதொரு தோப்புள்ள இடமே ! என்று அர்த்தம்.

இந்த இரட்டை அர்த்தங்களைக் கொண்டு கலி முற்றிய காலத்துக்கும் இலையுதிர் காலத்துக்கும் சிலேடையாக முழு ச்லோகமும் அமைகிறது. (கூடவே லக்ஷ்மியின் மஹிமையும் வெளிப்படுகிறது.)

இரண்டிலுமே மலினமான கலிகாலேஶ தோஷம். (அர்த்தம், தான் வெவ்வேறு.)

இரண்டுமே ஶாகா பரிக்ஷய தூஷிதங்கள். (அர்த்தம் தான் வெவ்வேறு.)

இரண்டுமே அபகத ஸதாமோதங்கள். (அர்த்தம் தான் வெவ்வேறு.)

இரண்டுமே அலஹ்ம்ருத்யவந வ்ருதங்கள். (அர்த்தம் தான் வெவ்வேறு.)

இரண்டிலுமே ஶாகிகளின் வாட்டம் மாதவன் தோற்றத்தால் அடங்கும். (அர்த்தம் தான் வெவ்வேறு.)

இரண்டிலுமே அந்த மாதவன் விளங்குவது ஜலநிதிபூவால் தான். (அர்த்தம் தான் வெவ்வேறு.)

இவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

இலையுதிர்காலம் வஸந்தத்துக்கு முற்பட்ட ஶிஶிரருது. இப்பருவத்தில் கலிகைகள், அதாவது மலர் மொட்டுகள், மரங்களில் அபூர்வமாக ஒன்றிரண்டு தான் இருக்கும். அவையும் மலினமாய் ப்ரகாசம் அற்று இருக்கும். ஆகையால் மலிந-கலிகா-லேசம் கொண்டவையாய் இருக்கும் வனங்கள். மலினரான, அதாவது ஒழுக்கங்கெட்ட, கலிகால ஈசர்கள், அதாவது அரசர்கள், இருப்பர் என்பது இரண்டாம் பக்ஷத்தில் அர்த்தம்.

கலி முற்றுங்கால் வேதசாகைகள் ஓதுவாரன்றி க்ஷீணித்துப் போகும். ஶிஶிரருதுவில் மரக்கிளைகள் இலைகளை உதிர்த்து விடுவதால் க்ஷீணித்துப் போகும். இரண்டையும் ஶாகாபரிக்ஷயம் என்னலாகும்.

இதனால் ஏச்சுக்குரியதாகும் கலிகாலமும் ஶிஶிரருதுவுமாகிய இரண்டும்.

கலிகாலத்தில் உள்ள நல்லவர்கள் ஆமோதமில்லாமல், அதாவது மகிழ்ச்சி குன்றியவர்களாய், சுற்றிலும் நிகழும் அக்ரமங்களைச் ஸஹிக்கவொண்ணாமல் மனம் வெதும்புபவர்களாய், இருப்பர். ஶிஶிரருதுவில் தோப்புகளும் ஆமோதமில்லாமல், அதாவது நறுமணம் வீசாமல், இருக்கும். மலர்கள் பூக்காத நாட்களில் வாஸனை எங்கிருந்து வரும் ? ஆக இரண்டுமே அபகதஸதாமோதங்கள்.

அ-ஸுஹ்ருத்துக்களான, அதாவது எதிரிகளான, அஸு-ஹ்ருதுக்களான, அதாவது கொலையாளிகளான, யவனர்களால், அதாவது ம்லேச்சர்களால், நிரம்பும் கலிகாலம். பெருந்தோப்பும் அஸுஹ்ருத்யமான, அதாவது ஸுஹ்ருத்யமில்லாத, அதாவது மநோரமமாக இல்லாத, வநமாயிருக்கும். இப்படி இரண்டுமே அஸுஹ்ருத்யவநம்.

பாகிக்லாநியைச் சமிக்கும் எண்ணத்துடன், அதாவது மரங்களைத் தளிர்ப்பிக்கும் எண்ணத்துடன், மாதவன், அதாவது வஸந்தன், வருவான். இரண்டாம் பக்ஷ அர்த்தத்திலும், பாகிக்லாநியைச் சமிக்கும் எண்ணத்துடன், அதாவது வேதியர்களைத் தழைக்கச் செய்யும் ஸங்கல்பத்துடன் மாதவன், அதாவது திருவின் மணாளன், கல்கியாய் அவதரிக்கப் போகிறார். இவ்வகையிலும் இரண்டும் ஒத்தவை. இந்த ஒப்புமைகளுக்கு எல்லாம் சிகரம் வைத்தது போல் மற்றொன்று. வஸந்தன் தன் செயலில் ஸித்தி பெற உதவுவது நீர் நிலைகள் கொண்ட நிலப்பகுதியாம். ஜலநிதிபூவால் அபிவிருத்தி அந்த மாதவனுக்கு. அதே போலத் திருமால் என்னும் மாதவனுக்கும் கல்கியாய் வந்தபோது ஜலநிதிபூவால் அபிவிருத்தி எப்படியென்றால் ஸமுத்ரத்திலிருந்து உண்டான லக்ஷ்மியால் மேன்மை. இவ்வாறாகக் கலிகாலத்துடன் சிசிரருதுவுக்கு ஒப்புமையைச் சொல்லிப் பார்க்கும் போது கல்கி பகவானுக்குத் திருமகளால் மேன்மை உண்டாவதும் ஸித்தித்துவிட்டது.

இந்த ச்லோகத்து நீதிகள்:

மன்னவர் மலினராவார் மறைகளும் மங்கிப் போகும்.
மகிழ்ச்சியை விடுவர் நல்லார் மக்களை மடிப்பர் பொல்லார்.

இது கலிகால வர்ணனை. காலம் கெட்டுப் போனதற்கான அடையாளங்கள் நான்கு.

1. ஆள்பவர்கள் பொல்லாதவர்களாய் இருப்பது.

அதாவது துர்ஜனர்கள் ஆட்சியைக் கைப்பற்றுவது. (மலிந கலிகால ஈஶ)

2. வேதவித்யை நலிந்து போவது. அதாவது தொழில் திறமைகளை மட்டுமே கல்வி எனத் தவறாகக் கருதுவது. (ஶாகாபரிக்ஷயம்)

3. நற்பண்பாளர் மகிழாதிருப்பது. அதாவது நல்லோர் வாடுவது. (அபகத ஸதாமோத)

4. ஸர்வஸாதாரணமாகக் கொலைகள் நிகழ்வது. அதாவது வன்முறையாளர் பெருகுவது. (அஸஹ்ருத்)

வனமெல்லாம் வறளாமல் வனப்பு தரும் வஸந்தனுக்கு
நீர் நிலைகள்நிரம்புகிற நிலம் துணையாய் நிற்பது போல்
மாவேறி மறம் மாய்த்து மாபெரிய மாற்றம் செய்
மாதவனின் மாண்புயர மலர்வாழும் மாது துணை.

33. கல்கியின் கருமங்களால் களிப்பவள்.

वातव्रात इवाऽवधूतकलिको मातर्महारण्यवत्
खड्गी तापसवत् कृतार्थजननः कल्की मुदे देवि ! ते।
अम्लेच्छां स्वयमातनिष्यति महीं आन्ध्रीयजिह्वामिव
स्वामी स श्रुतिमार्गगानिह जनान् कर्ताऽथ शब्दानिव ॥ ३३

வாதவ்ராத இவாऽவதூ₄தகலிகோ மாதர்மஹாரண்யவத்
க₂ட்₃கீ₃ தாபஸவத் க்ருதார்த்தஜநந: கல்கீ முதே₃ தே₃வி ! தே ।
அம்லேச்சாம் ஸ்வயம் ஆதநிஷ்யதி மஹீம் ஆந்த்₄ரீயஜிஹ்வாமிவ
ஸ்வாமீ ஸ ஶ்ருதிமார்க₃கா₃நிஹ ஜநாந் கர்தாऽத₂ ஶப்₃தா₃நிவ ॥ 33 ॥

मातः देवि = அன்னையே ! தேவியே !

वातव्रातः इव = காற்றுஸமூஹம் போலே

अवधूत कलिकः = 1. கலியை உதறுபவராயும், 2. மொட்டுகளை உதிர்ப்பதாயும்.

महा-आरण्य-वत् = பெரிய காடு போலே

खड्गी = 1. கத்தியை உடையவராயும், 2. கட்கம் எனப்படும் ஒரு மான்வகையை உடையதாயும்,

तापसवत् = தவம் புரிபவர் போலே

कृतार्थ-जननः = 1. பிறவிப்பயன் பெற்றவராயும்.
2. பொருள்களைப் படைப்பவராயும்.
3. க்ருதயுகத்துக்காய்ப் பிறப்பவராயும்.
ते = உன்னுடைய
मुदे = மகிழ்ச்சிக்காக
आन्ध्रीय-जिह्वां इव = தெலுங்கர்களின் நாக்கைப் போலே
महीं = பூமியை
अश्लेष्मां = 1.ம்லேச்சர்கள் இல்லாதபடி, 2.புளிப்பில் விருப்பம் கொண்டபடி
स्वयं = தானாகவே
आसनिष्यति = பண்ணப்போகிறார்
सः स्वामी = அந்த உடைமையாளர்
शब्दान् इव = ஒலிகளைப் போலே
जनान् = மக்களை
इह = இங்கே
श्रुति-मार्ग-गान् = ஆரண நெறியில் செல்பவர்களாக
आसनिष्यति = பண்ணப்போகிறார்.

அம்மா ஸ்ரீ தேவியே! உன் மகிழ்ச்சிக்காகக் கல்கி புயல் போலவும், காடு போலவும், தபஸ்வி போலவும் ஆகிறார்; பூமியைத் தெலுங்கர் நாக்கு போலவும், மக்களை ஒலி போலவும் ஆக்குவார். இவ்வாறெல்லாம் பண்ணுவது உன் விநோதத்துக்காகவேயாம்.

காற்று போல் ஆவதாலும் காடு போல் ஆவதாலும்
காடர் போல் ஆவதாலும் காந்தையின் களிப்பு மேலும்.

புயல் போல ஆவது எப்படியென்றால், புயல் மொட்டுக்களை உதிர்ப்பது போல் இவர் கலிகாலத்தை உதறுகிறார். கலிக என்ற பதத்துக்கு மலர் மொட்டு என்றும் அற்பக்கலிகாலம் என்றும் அர்த்தம் இருப்பதால், கல்கியும் புயலும் ஒரே கார்யத்தைப் பண்ணினதாகிறது.

கட்கம் என்ற பதத்துக்குக் கத்தியும் ஒரு வளைவிலங்குவகையும் அர்த்தமாவதால் கட்கம் உடைமை கல்கிக்கும் காட்டுக்கும் பொதுவாகிறது. ஆகையால் பெருங்காடு போலக் கல்கி.

கல்கி ஒரு தபஸ்வி போல் ஆவது எப்படியென்றால், தன் தவவலிமையால் ஜந்மஸாபல்யம் பெறுவதாலும், வஸ்துக்களை உண்டுபண்ணுவதாலும் தபஸ்வி க்ருதார்த்தஜந்மம் கொண்டவர். கல்கியையும் அவ்வாறே சொல்லலாம்; அர்த்தம் தான் வேறு; க்ருதயுகத்துக்காகப் பிறந்தவர் என்று அர்த்தம். அவர் பூமியை ஆந்த்ரர் நாக்கு போல ஆக்குவது எப்படியென்றால், இரண்டும் அம்லேச்சை உள்ளதாவதால். அ-ம்லேச்சா என்று பிரித்தால் ம்லேச்சர்கள் இல்லாதது என்றும், அம்ல-இச்சா என்று பிரித்தால், புளிப்பை விரும்புவதும் என்றும் அர்த்தமாகும். புளிப்பை விரும்பும் தெலுங்கர் நாக்கைப் போல் நிலவுலகையும் அம்லேச்சையாக்கினார் கல்கி.

கடைசியாக மக்களை ஒலிகள் போல் ஆக்கியது எப்படியென்றால், இரண்டும் ஶ்ருதிமார்கத்தில் போவதாலாம். ஶ்ருதி என்பதற்கு வேதம் என்றும் காது என்றும் இரண்டு அர்த்தங்கள். ஒலிகள் காது வழியில் போகும். ஜனங்களை வேதவழியில் போகப்பண்ணினார் கல்கி.

இவ்வாறாக, கலிகம், கட்கம், க்ருதம், அம்லேச்சா, ஶ்ருதி என்ற பதங்களில் இரட்டை அர்த்தங்களால் சமத்காரம் கல்கி அவதாரத்தில் ஏற்பட்டது.

கலியைத் தள்ளலும் கட்கம் ஏந்தலும்
கல்கியாய்ப் பிறத்தலும் கமலை களிக்கவாம்.

இத்துடன் கல்கியவதாரப்பகுதி முடிந்தது. இனி வரும் மூன்று ஶ்லோகங்களில் பத்து அவதாரங்களையும் சேர்த்துப் பேசித் திருமகளின் பங்கை வர்ணிக்கிறார்.

34. அவதாரங்களை அபாங்கத்தில் அடக்கியவள்.

मात्स्यज्योतिपि मन्दरक्षणपरेऽनन्तोचहर्षावहे
हर्यास्यस्पृशि चारुवर्णिनि कृताशेषाधिकोपक्रिये ।

एणश्रीमुषि कामपालविभवे कृष्णे कलिध्वम्सने
देवि ! त्वद्दयितावतारदशकं ध्यायाम्यपाङ्गे तव ॥ ३४ ॥

மாத்ஸ்யஜ்யோதிஷி மந்த₃ரக்ஷணபரே அநந்தோச்சஹர்ஷாவஹே
ஹர்யாஸ்யஸ்ப்ருஶி சாருவர்ணிநி க்ருதாஸேஷாதி₄கோபக்ரியே ।
ஏணஸ்ரீமுஷி காமபாலவிப₄வே க்ருஷ்ணே கலித்₄வம்ஸநே
தே₃வி ! த்வத்த₃யிதாவதார த₃ஸகம் த்₄யாயாம்யபாங்கே₃ தவ ॥ 34 ॥

देवि = ஸ்ரீ தேவியே !
मात्स्य-ज्योतिषि = மீன் போல் மின்னுவதும்
मन्द-रक्षण-परे = எளியவரைக் காப்பதில் ஈடுபட்டதும்
अनन्त-उच्च-हर्ष-आवहे = பகவானுக்குப் பெருமகிழ்ச்சியை அளிப்பதும்
हरि-आस्य-स्पृशि = ஹரியின் முகத்தைத் தொடுவதும்
चारु-वर्णिनि = அழகிய நிறம் கொண்டதும்
कृत-अशेष-अधिक-उपक्रिये = எல்லாருக்கும் நிறைய உபகாரம் பண்ணுவதும்
एण-श्री-मुषि = மானின் அழகைத் திருடுவதும்
काम-पाल-विभवे = காதலை வளர்க்கும் மஹிமை கொண்டதும்
कृष्णे = கருத்ததும்
कलि-ध्वम्सने = தகராறுகளை அழிப்பதும் ஆன
तव अपाङ्गे = உன் கடைக்கண்ணில்
मात्स्य-ज्योतिषि = மீனாய் மிளிரும் மத்ஸ்யாவதாரத்திலும்
मन्दर-क्षण-परे = மந்தரமலையின் உத்ஸவத்தில் ஈடுபட்ட கூர்மாவதாரத்திலும்
अनन्ता-उच्च-हर्ष-आवहे = பூதேவிக்கு உயர மகிழ்ச்சி அளித்த வராஹரிடத்திலும்
हर्यास्य-स्पृशि = சிங்கமுகத்தைத் தொடும் நரஸிம்மரிடத்திலும்
चारुवर्णिनि = அழகிய மாணுருவான வாமநனிடத்திலும்
कृत-अशेष-आधि-कोप-क्रिये = எல்லாருக்கும் மன உளைச்சலையும் சினச்செயலையும் பண்ணின பரசுராமரிடத்திலும்
एण-श्री-मुषि = மாரீசமானின் எழிலை அபஹரிக்கும் ராமரிடத்திலும்
कामपाल-विभवे = காமபாலன் என்று பெருமை பெற்ற பலராமரிடத்திலும்
कृष्णे = க்ருஷ்ணரிடத்திலும்
कलि-ध्वम्सने = கலியுகத்தை அழிக்கும் கல்கியிடத்திலும் ஆக
त्वत्-दयित-अवतार-दशकं = உன் ப்ரியனின் பத்து அவதாரங்களையும்
ध्यायामि = த்யானம் பண்ணுகிறேன்.

ஸ்ரீ தேவியே ! உன் கடைக்கண் பார்வை திருமாலின் பத்து அவதாரங்களையும் ஒத்திருக்கிறது-

எப்படி என்றால்,

மீன் போன்ற கண்ணில் மிளிர்வதால் மத்ஸ்யாவதாரத்து மீன் மிளிர்ச்சி இதற்குண்டு.

மந்தர்களை ரக்ஷிப்பதால் கூர்மரின் மந்தர (மலை) க்ஷணம் (விழா) இதிலுண்டு.

அநந்தனுக்குப் பெருமகிழ்ச்சி தருவதால் வராஹரின் அநந்தைக்கு உயர்மகிழ்ச்சி தரல் இதிலுண்டு.

பார்வை ஹரியின் முகத்தில் விழுவதால் நரஸிம்மரின் ஹரிமுக (சிங்கமுக)த் தொடர்பு இதற்குண்டு.

வர்ணங்கள் அழகானதால் வாமநரின் வர்ணித்தன்மை (ப்ரம்மசர்யம்) இதிலுண்டு.

அதிக உபக்ரியை (உதவி) பண்ணுவதால் பரசுராமரின் ஆதி(மநநோய்) கோபக்ரியை இதற்குண்டு.

மான்விழியை ஒத்ததால், ராமரின் (மாரீச) மானழிகொழித்தல் இதற்குண்டு.

காதல் ததும்புவதால் காமபாலன் எனப்படும் பலராமரின் விபவம் இதற்குண்டு.

கருத்ததால் க்ருஷ்ணர் தன்மை இதற்குண்டு.

தோஷமொழிப்பதால் கல்கியின் கலிநாஶநத் தன்மை இதற்குண்டு.

இப்படிப் பத்து அவதாரங்களையும் சேர்த்துத் திருமகளின் அபாங்கத்தில் த்யானிக்க முடிகிறது.

இந்த ச்லோகத்தில் கையாளப்பட்டுள்ள இரட்டை அர்த்தச் சொற்கள், மந்தரக்ஷணம், அநந்தா, உச்ச, ஆவஹ, ஹரி, வர்ணம், கோபக்ரியா, க்ருஷ்ண, கலி என்பவையாம்.

மந்தரக்ஷணம் என்றால் மந்தர்களைக் காப்பாற்றுதல் என்றும் மந்தரமலை விழா என்றும் அர்த்தங்கள்.

அநந்தன் என்றால் பகவான்; அநந்தா என்றால் பூதேவி.

உச்ச என்றால் அதிகமான என்றும் உயர ஏறிய என்றும் அர்த்தங்கள்.

ஆவஹ என்றால் உண்டுபண்ணுகிற என்றும் சுமக்கிற என்றும் அர்த்தங்கள்.

ஹரி என்றால் திருமால் என்றும் சிங்கம் என்றும் இரண்டு அர்த்தங்கள்.

வர்ணி என்றால் நிறமுள்ளது என்றும் ப்ரம்மசாரி என்றும் அர்த்தங்கள்.

க-உபக்ரியா என்று பிரித்தால் உதவி என்றும், சேர்த்தால் கோபச்செயல் என்றும் அர்த்தங்க்ள்.

க்ருஷ்ண என்றால் கருப்பான என்றும் கண்ணன் என்றும் அர்த்தங்கள்.

கலி என்றால் வம்புச்சண்டை என்றும் நான்காவது யுகம் என்றும் அர்த்தங்கள்.

இந்தப் பதங்களின் முதல் அர்த்தங்களை மட்டும் எடுத்துக் கொண்டால் இந்த ச்லோகத்தின் மூன்று வரிகளும் தாயாரின் அருள்விழி பற்றியதாகும். இரண்டாம் அர்த்தங்களை மட்டும் எடுத்துக் கொண்டால் இதே வரிகள் திருமாலின் தசாவதார நிகழ்ச்சிகளைப் பற்றியதாகும். இப்படிச் சொற்களால் ஒப்புமை இருப்பதால், தாயாரின் திருவிழியில் திருமாலின் பத்து அவதாரங்களையும் த்யாநிக்கலாம் என்கிறார்.

பத்தவதாரமும் பதுமையின் பார்வையில்
பதுங்கியதாகப் பகர்வது பாங்காம்.

(தொடரும்)

35. தசாவதாரத்தைத் தன்வடிவில் தாங்குபவள்

कृष्णः केशो दृगेषा झषतनुरधरो मन्दरागं हि धत्ते
सौकर्यं दोष्ण्युरोजे किल मुखहरिता मध्यमात्ता वलिश्रीः ।
रामाग्र्यं त्वं नितम्बः प्रथयति यमुनादर्पहृद्रोमवल्ली
धत्ते जङ्घाभिरामत्रियमिह कलिहृत्पादपद्मं तव श्रीः ॥ ३५

க்ருஷ்ண: கேசோ த்ருகேஷா ஜ்ஷதநுரதரோ மந்த்ராகம் ஹி தத்தே
ஸௌகர்யம் தோஷ்ண்யுரோஜே கில முகஹரிதா மத்யமாத்தா வலிஸ்ரீ: ।
ராமாக்ர்யத்வம் நிதம்ப: ப்ரதயதி யமுநாதர்பஹ்ருத்ரோமவல்லீ
தத்தே ஜங்காபிராமத்ரியமிஹ கலிஹ்ருத்பாதபத்மம் தவ ஸ்ரீ: ॥ 35

श्रीः = ஸ்ரீதேவியே!

तव = உன்னுடைய

केशः = கூந்தல்

कृष्णः = 1. கறுத்தது 2. க்ருஷ்ணனானது.

एषः = இந்த.

दृक् = விழியானது.

झष-तनुः = மீன்வடிவம் உடையது. மத்ஸ்யாவதாரமானது.

अधरः = உதடு.

मन्दरागं = 1. சிறிது சிவப்பை 2. மந்தர மலையை (கூர்மாவதாரம் போல்).

धत्ते हि = தரிக்கிறதல்லவா?

दोष्णि = தோளில்.

सौकर्यं = 1. நல்ல வகை உடைமை. 2. வராஹத் தன்மை.

उरोजे = மார்பகத்தில்.

मुख-हरिता = 1. நுனியில் பசுமை. 2. முகத்தில் ஸிம்ஹத் தன்மை (நரஸிம்ஹம் போல்).

किल = அல்லவா?

मध्यं = இடைப் பகுதியை (வயிற்றை).

वलिश्रीः = 1. மடிப்பழகு. 2. பலியின் செல்வம்.

आत्ता = அடைந்தது (த்ரிவிக்ரமாவதாரம் போல).

नितम्बः = ப்ருஷ்டபாகம்.

रामाग्र्यत्वं = 1. மகளிரில் உயர்வை. 2. ராமர்களுக்குள் முதல் தன்மையை (பரசுராமத் தன்மையை).

प्रथयति = பரப்புகிறது.

रोम-वल्ली = மயிர்க் கொடி.

यमुना-दर्प-हृत् = யமுனையின் கொழுப்பை அடக்குவது (பலராமர் போல).

जङ्घा = கணுக்கால்,

इह = இங்கே,

अभिराम-श्रियं = 1. அழகிய சோபையை, 2. ராமனின் சோபையை,

धत्ते = தரிக்கிறது.

पाद-पद्मं = அடித்தாமரை.

कलि-हृत् = கலியை தீர்ப்பது (கல்கி அவதாரம் போல).

ஸ்ரீ தேவியே ! உன்னுடைய பத்து அங்கங்களில் உன் மணாளனின் பத்து அவதாரங்கள் உள்ளன போலும். எப்படியென்றால், 1. கேசம் கருப்பாயிருப்பதால் அதில் க்ருஷ்ணாவதாரம்.

2. கண், மீன் போல் இருப்பதால் அதில் மத்ஸ்யாவதாரம்.

3. உதடு லேசாகச் சிவந்திருப்பதால், மந்த ராகத்தைத் தரிக்கிறது. மந்தராகம் என்றால் மந்தரமலை என்று இன்னொரு அர்த்தம். மந்தரமலையைத் தரிப்பவர் கூர்மாவதாரத்துப் பெருமான். அதனால் உன் உதட்டில் கூர்மாவதாரத்தைக் காணலாம்.

4. உன் தோளில் வராஹாவதாரத்தைக் காணலாம். எப்படியெனில், ஸௌகர்யம் என்ற பதத்துக்கு நல்ல கை உடைமை என்றும் பன்றித் தன்மை என்றும் இரண்டு அர்த்தங்கள். முதலாவது ஸு-கரத் தன்மை; இரண்டாவது ஸூகரத் தன்மை. முதலாவது உன் தோளில் இருப்பது; இரண்டாவது வராஹாவதாரத்துத் திருமாலிடம் இருப்பது; இரண்டிலும் இருப்பது ஸௌகர்யம் என்ற ஒன்றேயாதலால் உன் தோளில் வராஹாவதாரம் என்னலாம்.

5. உன் மார்பகத்தின் நுனி கருத்ததால் முகஹரியானது. முக ஹரியாய், முகத்தில் சிங்கமாய் உள்ள நரஸிம்ஹத் தன்மை அதில் என்னலாம்.

6. உன் வயிற்றில் மடிப்புகள் உள்ளன. அவ்வழகை

வலிஸ்ரீ என்னலாம். கவிமரபுப்படி இதை பலிஸ்ரீ என்று படித்தால், பலிசக்ரவர்த்தியின் செல்வம் என்று அர்த்தம். அது த்ரிவிக்ரமனை அடைந்தபடியால் உன் வயிற்றுப் பகுதியில் த்ரிவிக்ரமாவதாரம் இருப்பதாகத் தெரிகிறது.

7. உன் நிதம்பப் பகுதி (ஆஸனப் ப்ருஷ்டம்) அழகிகளில் சிறந்தவளானமையைப் பறைசாற்றுவதாய், ராமாக்ர்யத் தன்மையைத் தெரிவிக்கிறது. இதே சொல்லை 'ராமா' என்று பிரிக்காமல் 'ராம' என்று பிரித்தால், மூன்று ராமர்களுக்குள் முதல்வரான பரசுராமரின் தன்மையைச் சொல்லும். இப்படியாக உன் நிதம்பத்தில் பரசுராமாவதாரம் இருக்கும்.

8. உன் ரோமவல்லி கருத்தும் நேர்கோட்டிலும் இருப்பதால் யமுனையின் அழகை விஞ்சுகிறது. தன் கலப்பையால் யமுனையை இழுத்துக் கொழுப்படக்கிய பலராமர் போல யமுநாதர்பஹ்ருத்.

9. உன் கணுக்கால் அபிராமமாய் (முன்னும் பின்னும் இருபுறமும் கவர்ச்சியுடன்) இருப்பதால் அங்கு ராமாவதாரம்.

10. உன் அடித்தாமரை கலியை அழிப்பதால் அங்கே கல்கியவதாரம்.

இப்படிப் பத்து அவதாரங்களும் பத்து அவயவங்களில்.

இந்த ச்லோகத்தில் இரட்டை அர்த்தப் பதங்கள் பல.

க்ருஷ்ண என்றால் கருப்பு என்றும் கண்ணன் என்றும் இரண்டு அர்த்தங்கள்.

மந்தராகம் என்றால் லேசான சிவப்பு என்றும் மந்தரமலை என்றும் இரண்டு அர்த்தங்கள்.

ஸௌகர்யம் என்றால் நல்ல கை கொண்டமை என்றும் பன்றித் தன்மை என்றும் இரண்டு அர்த்தங்கள். வேறொரு அர்த்தமும் உண்டு; இங்கு தேவையில்லை.

முகம் என்ருல் நுனி என்றும் முகம் என்றும் இரண்டு அர்த்தங்கள்.

ஹரி என்றால் பசுமை நிறம் என்றும் சிங்கம் என்றும் இரண்டு அர்த்தங்கள்.

வலி என்றால் மடிப்பு என்றும் பலிச்சக்ரவர்த்தி என்றும் இரண்டு அர்த்தங்கள்.

ராமாக்ர்யத்வம் என்றால் பெண்டிருள் முதன்மை என்றும் ராமர்களுள் முதன்மை என்றும் இண்டு அர்த்தங்கள். கலி என்றால் கல்மஷம் என்றும் கலியுகம் என்றும் இரண்டு அர்த்தங்கள். முதலில் சொன்ன அர்த்தங்களை எடுத்துக் கொண்டால் திருமகளின் அங்கங்களுக்குப் பொருந்தும். இரண்டாவதாகச் சொன்ன அர்த்தங்களை எடுத்துக் கொண்டால் திருமாலின் அவதாரங்களுக்குப் பொருந்தும். எப்படியோ பத்து அவதாரங்களும் லக்ஷ்மியின் அங்கங்களில் என்று நிரூபித்தாயிற்று.

மத்ஸ்யாவதாரம் கண்ணில்,
கூர்மாவதாரம் உடட்டில்,
வராஹாவதாரம் தோளில்
நரஸிம்ஹாவதாரம் ஸ்தநத்தில்
வாமநாவதாரம் வயிற்று மடிப்பில்
பரஶுராமாவதாரம் நிதம்பத்தில்.
ராமாவதாரம் கணுக்காலில்
பலராமாவதாரம் நாபிக்குக் கீழான மயிர்வரியில்
க்ருஷ்ணாவதாரம் குழற்கற்றையில்
கல்கியவதாரம் திருவடியில்

ஏன் அவதாரங்களை இந்த வரிசையில் சொல்லாமல், க்ருஷ்ணாவதாரத்தில் தொடங்கி ஏதோ ஒரு வரிசையில் சொல்கிறூர்? என்றுகேட்டால், அவயவங்களைக் கேஶாதி பாதாந்தமாக இறங்கு வரிசையில் சொல்வதால் ஒரு க்ரமம் ஏற்பட்டிருக்கிறது.

பத்து அவதாரங்களும் திருமகளின் திருமேனியில் இருப்பதாகச் சொல்வதன் தாத்பர்யம் என்ன? அவள் இவ்வவதாரங்களுக்குக் காரணம் மட்டுமன்று; ஸஹசரியாய்க் கூடவே அவதரித்துத் துணையானது மட்டுமன்று; அத்தனையையும் தன் திருமேனியில் தாங்கும் மஹாஶக்தி பொருந்தியவளும் கூட என்பதாம்.

எந்தெந்த அவயவங்களுக்கு என்னென்ன அழகு என்பதும் இந்த ஶ்லோகத்திலிருந்து தெரிகிறது.

கூந்தலுக்கழகு கருமை, கண்ணுக்கழகு மீன்வடிவம், உதட்டு கழகு இளஞ்சிவப்பு, தோளுக்கழகு கையழகு, ஸ்தநத்துக்கழகு நுனி கறுத்தில், வயிற்றுக்குஅழகு மடிப்பு, ரோமராஜிக்கழகு கறுத்து நேர்கோட்டில் இருத்தல், ப்ருஷ்டத்துக்கழகு பரந்து முன்னிருத்துவது, கணுக்காலுக்கு அழகு இருபுறமும் கவர்ச்சி, பாதத்துக்கு அழகு ஆஶ்ரயித்தவரின் கஷ்டத்தை நீக்குவது, இந்தப் பத்து அழகுகளும் திருமகளுக்கு உண்டு.

பத்து அவயவத்தே பத்து அவதாரமும்
பதுமைக்கு இருப்பதால் பற்றுக அவள் தாள்

—★—

36. கொழுநனைக் கொண்டாடுபவள்

विदितगुणालङ्करणं विचित्ररचनाविचक्षणप्रेक्षम् ।
कविमिव कृतदशरूपकं अरविन्दगृहेऽभिनन्दसि मुकुन्दम् ॥ ३६

விதிதகுணாலங்காரணம் விசித்ரரசநாவிசக்ஷணப்ரேக்ஷம் ।
கவிமிவ க்ருததசரூபகம் அரவிந்தக்ருஹேऽபிநந்தஸி முகுந்தம் ॥

इति अस्तोकाध्वरि कवि घटाम्बु वादिहंसाम्बुद
वेङ्कटार्यदीक्षितकृतिषु लक्ष्मीसहस्रे दशावतारस्तबकः सम्पूर्णः

—*—

अरविन्द-गृहे = தாமரை இல்லத்தாளே !
विदित-गुण- अलङ्करणं = புகழ்பெற்ற பண்புகளை அணியாகக் கொண்டவனும்
विचित्र-रचना-विचक्षण-प्रेक्षं = விசித்ரமாகப் படைப்பதில் வல்ல ஸங்கல்பம் கொண்டவனும்
कृत-दश-रूपकं = பத்து உருவங்களைப் பண்ணியவனும் ஆன
मुकुन्दं = முகுந்தனை
विदित-गुण-अलङ्करणं = குணங்களையும் அலங்காரங்களையும் அறிந்தவனும்
विचित्र-रचना-विचक्षण-प्रेक्षं = விசித்ரமாகப் படைப்பதில் வல்ல அறிவு கொண்டவனும்
कृत-दश-रूपकं = பத்து ரூபகவகைகளைப் பண்ணியவனும் ஆன
कविं इव = கவியைப் போல
अभिनन्दसि = பாராட்டுகிறாய்.

தாமரையில் வஸிப்பவளே ! நீ பத்து அவதாரங்கள் பண்ணின பதியைப் பாராட்டுகிறாய். அவர் ப்ர ஸித்தமான (அருள், ஆற்றல் முதலிய) நற்குணங்களை அணியாகப் பூண்டவர். விசித்ரமான உலக ஸ்ருஷ்டியை ஸங்கல்பத்தாலே பண்ண வல்லவர். தானே (மீன், ஆமை, முதலிய) பத்து உருவங்களைப் பண்ணிக் கொண்டவர். இக்காரணங்களால் கவிஞனுக்கு ஒப்பானவர். ஏனென்றால் கவிஞனும் (ஶ்லேஷம், ப்ரஸாதம் முதலிய) காவ்ய குணங்களையும் (உவமை, உருவகம் முதலிய) அலங்காரங்களையும் அறிந்தவன். விசித்ரமாகக் காவ்ய நாடகங்களைப் படைக்கும் அறிவு பெற்றவன். ஆலங்காரிகர்கள் சொல்லும் தஶரூபகம் என்ற பத்து வகை நாடகங்களையும் பண்ணுபவன். இப்படிக் கவியை ஒத்திருக்கும் கடவுளைக் கொண்டாடுகிறாய் நீ.

இந்த ஶ்லோகத்தில் கவியும் கடவுளும் ஸமம் என்கிறார். இதே கருத்தைப் பூர்வர்களும் கூறியதுண்டு. கவிஞன், கடவுள் என்ற இருவருமே குணங்களும் அலங்காரங்களும் மிக்கவர்கள். இருவருமே விசித்ரமாகப் படைப்பவர்கள்.

இருவருமே பத்து ரூபகம் பண்ணுபவர்கள். இருவருமே தாமரையாளின் பாராட்டுக் குரியவர்கள். ஆனால் விதித, குணம், அலங்கரணம், ப்ரேக்ஷா, ரூபகம், என்ற பதங்களில் இரட்டை அர்த்தங்கள்.

விதிதம் என்றால் புகழ் வாய்ந்தது என்றும் அறியப்பட்டது என்றும் இரண்டு அர்த்தங்கள்.

குணம் என்றால் நற்பண்பு என்று அர்த்தம். பகவானுக்கு ஜ்ஞாநம், பலம், முதலியன. காவ்யத்துக்கு அர்த்த புஷ்டி, இனிமை, முதலியன.

அலங்கரணம் என்றால் அணி. பகவானுக்குக் கௌஸ்துபம், கிரீடம் முதலியன. காவ்யத்துக்கு உவமை, உருவகம், முதலியன.

ப்ரேக்ஷா என்றால் ஸங்கல்பரூபமான பார்வை என்றும், அறிவு, என்றும் இரண்டு அர்த்தங்கள்.

ரூபகம் என்றவால் மீன், ஆமை, முதலிய வடிவம் என்றும், நாடகம், ப்ரகரணம், முதலிய பத்து காவ்யவகைகளும் அர்த்தங்கள்.

இந்த ஶ்லோகத்து நீதிகள் :

1. கவி கடவுளுக்கு ஸமம்.

2. செய்யுள்எழுதுபவன் எல்லாம் கவியாவதில்லை. நிறைய அலங்காரங்களுடன் புனைய வேண்டும்; விசித்ரமாகப் படைக்க வேண்டும்; பலவகைக் காவ்யங்களைப் பண்ண வேண்டும். அத்தகையவனே பாராட்டுக்குரிய கவி.

3. நல்ல கவிக்கு லக்ஷ்மீகடாக்ஷம் கிட்டும்.

4. லக்ஷ்மியின் பாராட்டைப் பகவானும் பலனாகக் கருதுவார்.

இதில் பகவானின் விதித குணங்களாகச் சொன்னவை எவையென்றால், அறிவு, பலம், ஆளுமை, வீர்யம், ஶக்தி,

தேஜஸ் என்ற ஆறுமாம். அல்லது பகவத் ராமாநுஜர் கத்யத்தில் அருளியபடி ஜ்ஞாந பல ஐஶ்வர்ய வீர்ய ஶக்தி தேஜஸ் ஸௌஶீல்ய வாத்ஸல்ய மார்தவ ஆர்ஜவ ஸௌஹார்த ஸாம்ய காருண்ய மாதுர்ய காம்பீர்ய ஔதார்ய சாதுர்ய ஸ்தைர்ய தைர்ய ஶௌர்ய பராக்ரம ஸத்யகாம ஸத்ய-ஸங்கல்ப க்ருதித்வ க்ருதஜ்ஞதாதிகளான அநேகங்களாம்.

பகவானின் விதித அலங்கரணங்களாகச் சொன்னவை எவையென்றால், கிரீட மகுட சூடாவதம்ஸ மகரகுண்டல க்ரைவேயக ஹார கேயூர கடக ஸ்ரீவத்ஸ கௌஸ்துப முக்தாதாம உதரபந்தந பீதாம்பர காஞ்சீகுண நூபுராதிகளாம்.

காவ்ய குணங்களாகச் சொல்லப்பட்டவை எவையென்றால், மம்மடன் சொன்னவை, மாதுர்யம், ஓஜஸ், ப்ரஸாதம், என்ற மூன்றாம். அல்லது தண்டி சொன்ன பத்தாம்.

காவ்ய அலங்காரங்களாகச் சொல்லப்பட்டவை எவையென்றால், உவமையணி, உருவகவணி, உயர்வு நவிற்சியணி, முரண்பாட்டுத் தோற்றவணி, வேற்றுப் பொருள் வைப்பணி, அத்யாபதேஶம், ஸமாஸோக்தி, பரிகரம், முதலிய அர்த்தாலங்காரங்களும், அநுப்ராஸம், சித்ரபந்தம், முதலிய ஶப்தாலங்காரங்களுமாம்.

பத்து ரூபகங்கள் எவையென்றால், நாடகம், ப்ரகரணம், பாணம், வ்யாயோகம், ஸமவகாரம், டிமம், ஈஹாம்ருகம், அங்கம், வீதி, ப்ரஹஸநம் என்ற பத்துமாம்.

பகவான் பண்ணின பத்து ரூபங்கள் எவையென்றால், மீனோடாமை கேழல் கோளரியாய் வாமனக் குறளாய் மழுப்படை முனியாய்ப் பின்னுமிராமர் இருவராய்ப் பாரில் துன்னிய பரந்தீர் துவரை மன்னனுமாய்க் கலி தவிர்த்து அருளும் கற்கியாய் என்று ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் ஸாதித்தபடி பத்து அவதாரவடிவங்களாம்.

பார்வையால் விசித்ரமான உலகைப் படைத்ததென்பது ஏனென்றால், ததைக்ஷத பஹு ஸ்யாம் என்ற உபநிஷத்

வாக்யமும், அதை அநுஸரித்து ப்ரஹ்மஸூத்ரத்து ஈக்ஷத்யதிகரணமும் ஸங்கல்ப ரூபமான பார்யைால் ஸ்ருஷ்டி நடைபெற்றதாக விளக்குவதாலாம்.

பார்புகழும் பண்பணிந்து பார்வையினால் படைத்திட்டுப்
பத்துருவம் பண்ணுவார்க்குப் பதுமையாள் பாராட்டு.

இந்த ஸ்தபகத்தின் முப்பத்தாறு ச்லோகங்களின் கருத்துகளை முடிவில் இவ்வாறு சுருக்கலாம். திருமகளின் உறுதுணையால் தான் திருமாலின் அவதாரங்களில் கார்யஸித்தி ஏற்பட்டது. திருமகளின் தயாரஸம் தான் திருமாலின் மத்ஸ்யாவதாரத்து மீனுக்கு உயிர் நாடியான ஜலம்.

திருமகளின் அருட்பெருக்கால்தான் இவ்வவதாரம் மூலம் ப்ரஹ்மாவுக்கு வேதம் திரும்பக் கிடைத்தது. திருமாலின் ரஸவாத வித்தையால் தான் நஷ்டச்ருதியே அநஷ்ட ச்ருதியாகிய விந்தை நிகழ்ந்தது.

திருமகளின் மீன்விழி தொலைந்த செல்வத்தைத் திரும்பப் பெற்றுத் தருவதை உணர்ந்ததால் தான் திருமால் தானும் மீனுருக்கொண்டு தொலைந்த வேதத்தைத் தேடித் தந்தார்.

திருமகளின் ஸ்ரீ என்ற பெயர் பூண்டு வேதம் அடிமை ஏற்றதால் தான் திருமால் ஆர்வத்துடன் அதைக் கரைசேர்த்தான்.

திருமகளிடம் உள்ள அமந்த ராகம் காரணமாகத் தான் திருமால் ஆமையாய் மந்தரமலையைத் தாங்கினான்.

திருமகளை மார்பில் தாங்கியவன் அவள் அம்சமான பூமியைத் தலையிலும் தாங்க விருப்பத்தால் தான் வராஹாவதாரம் பண்ணினான்.

திருமகளுக்குத் தங்கையெனும்படி கடலில் முழுகி வெளிவந்ததால் தான் நிலமங்கையை வராஹன் ஆதரித்துக் கோட்டிடைக் கொண்டான்.

திருமகளின் தீயணைக்கும் திறன் தந்தையான கடலிடமிருந்து வந்ததால் தான் நரஸிம்ஹனின் கோபக் கனலை அணைக்க முடிந்தது.

திருமகள் ஹிரண்யவர்ணையாய் இருந்தும் ஹிரண்யனைப் பிளந்த நரஸிம்ஹன் மடியில் அமர்ந்தது அவள் ஶரண்யையாக இருப்பதால் தான்.

திருமகள் ஹரிணியாய் இருந்தும் நரசிங்கத்தின் மடியில் பயமின்றி அமர்ந்தது நம்மைக் காப்பதில் உள்ள ஆர்வத்தால் தான்.

திருமகள் அபலையாய் இருந்தும் அவள் வலையில் நரசிங்கம் மாட்டியது அது அற்புதச் சிங்கம் ஆனதால் தான்.

திருமகளுக்கு வேடிக்கை காட்டுவதற்காகத் தான் திருமால் விசித்ரமான நரசிங்க உருவத்தை ஏற்றான்.

திருமகள் போல் தானும் ஆகவிரும்பியதால் தான் நரசிங்கன் ஹிரண்யதாநம் முதலியவற்றைப் பண்ணினான்.

திருமகளின் அருள்விழி பலியின் மீது படாமல் தடுப்பதற்காகத்தான் வாமநன் மான்தோலால் மார்வகத்து மங்கையை மறைத்துக் கொண்டான்.

திருமகள் மார்பில் தங்கியதால் தான் வாமநனுக்கு வரவும் வளர்ச்சியும் உண்டாயின.

திருமகளை உள்ளத்திருத்தியதால் தான் குப்ரதிக்ரஹம் முதலிய பிழைகளைச் செய்திருந்தும் த்ரிவிக்ரமனின் அடிநீர் சிவத் தன்மை அளித்தது.

திருமகள் ரஸிக்கும்படி பலியின் கேள்விகளுக்குச் சமத்காரமாகப் பதில் சொன்னதால் தான் வாமநன் தப்பமுடிந்தது.

திருமகளின் ஏளனத்துக்கு வெள்கித்தான் முன்னவதாரத்தில் தவறாகப் பெற்ற நிலத்தைப் பரசுராமன் தானம் செய்துவிட்டான்.

திருமகள் கோடரியில் வீரலக்ஷ்மியாக வீற்றபடியால் தான் பரசுராமன் பகைவரை வெல்ல முடிந்தது.

திருமகளின் பார்வையால் தான் பரசுராமன் ப்ராஹ்மண்யமும் ராஜந்யமும் ஒருங்கே பெறமுடிந்தது.

திருமகளிடம் அபசாரப்பட்டதால் தான் பத்துத் தலையானும் ஒரு தலையானிடம் சிக்கிச் சாக நேர்ந்தது.

திருமகளுக்குத் த்ரோஹம் இழைத்ததால் தான் பெரும் படையாளியான ராவணனும் சிறுபடையாளனிடமும் தோற்க நேர்ந்தது.

திருமகளை உட்கொண்டு அக்நி தூய்மையடைய வேண்டும் என்பதற்காகத்தான் ஸீதையின் அக்நிப் ப்ரவேச நிகழ்ச்சி நடந்தது.

திருமகளை உத்தேசித்துத்தான் ராமன் சிவதநுர்பங்கம் ஸேதுபந்தம் முதலிய செயற்கரிய செயல்களைச் செய்தான்.

திருமகளின் ஸங்கல்பத்தால் தான் அநுமனின் வாலில், இட்ட தீ குளிர்ந்தது; அவளே தீயில் குதித்தபோது எரிக்காததில் வியப்பில்லை.

திருமகளின் அனுக்ரஹத்தால் உழவன் செல்வந்தனாவது போலத்தான் பலராமன் போகியானான்.

திருமகளுக்கேற்ற கணவனாக முயன்றதால் தான் கண்ணன் சில கார்யங்களைச் செய்தான்.

திருமகள் தன் மகிழ்கச்சிக்காகத் தான் மன்மதனைத் தந்தைக்கேற்ற தனயனாகப் பெற்றெடுத்தாள்.

திருமகள் பலவகையிலும் பகவத் கீதைக்குச் சமமாகிறாள்.

திருமகள் பலவகையிலும் க்ருஷ்ணனுக்குத் துல்யமாகும்படிக் கார்யங்களைப் பண்ணுகிறாள்.

திருமகள் ஏழு முக்திக்ஷேத்ரங்களும் தானேயாகும்படி கண்ணனுடன் விளையாடுகிறாள்.

திருமகளின் சொற்களால் அருள் தளிர்த்ததால் தான் கல்கி கெட்டதையெல்லாம் அழிக்கிறார்.

திருமகளால் வளர்ச்சியடைவதால் தான் கல்கி பெருங்காடு போலச் செழிக்க முடிகிறது.

திருமகளின் மகிழ்ச்சிக்காகத்தான் கல்கி அரும்பெரும் பணிகளை ஆற்றுகிறார்.

திருமகளின் அபாங்கத்தில் (கடைக் கண்ணில்) திருமாலின் பத்து அவதாரங்களும் குடிகொண்டுள்ளன.

திருமகளின் உடலுறுப்புகளில் திருமாலின் பத்து அவதாரங்களும் உள்ளன.

திருமகள் பத்து அவதாரங்களைப் பண்ணின திருமாலைப் பாராட்டுகிறாள்.

நாவல்பாக்கம் அக்நிஹோத்ரம் நாராயணதாதயார்ய மஹாதேஶிகனிடம் நாவல்பாக்கம் வ. யஜ்ஞவராஹ தாதயார்யன் என்கிற கண்ணன் கேட்டறிந்து எழுதிய

லக்ஷ்மீ ஸஹஸ்ர உரையில் தஶாவதாரஸ்தபகம் முற்றும்.

லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தில் மொத்த ஸ்தபங்கள் 25

இதுவரை முடிந்த ஸ்தபங்கள் 21

இன்னும் மீதமுள்ள ஸ்தபங்கள் 4

மொத்த ச்லோகங்கள் 1018

இதுவரை முடிந்த ஶ்லோகங்கள் 869

இன்னும் மீதமுள்ள ஶ்லோகங்கள் 149.

22. சித்ரஸ்தபகம்

இந்த ஸ்தபகத்தில் ஐம்பத்தொன்பது ஶ்லோகங்கள் திருமகளைக் குறித்துச் சித்ரக் கவி பாடுகிறார். சித்ரக் கவி என்பது எழுத்து வேடிக்கை, புதிர், பந்தங்கள், முதலிய பல வகைகளில் சமத்காரம் பண்ணுவதாக அமையும்.

1. கழலில் கொத்தணிந்த கமலை

कमलायतनां चित्ते कलये यत्पदाम्बुजम्।
चिरं विबुध सन्मौलि चित्रस्तबकभूषितम्॥ १

கமலாயதநாம் சித்தே கலயே யத்பதாம்புஜம் ।
சிரம் விபுதஸந்மௌலி சித்ரஸ்தபக பூஷிதம் ॥ 1 ॥

यत्-पद-अम्बुजं = எவளுடைய திருவடித் தாமரை
चिरं = வெகு காலம்
विबुध-सन्मौलि-चित्र-स्तबक-भूषितं = தேவர்கள் தலைகளின் அழகிய பூங்கொத்துக்களால் பூஷிக்கப்பட்டதோ
कमल-आयतनां (அந்த) தாமரை இல்லத்தாளை
चित्ते - மனதில்
कलये = பண்ணுகிறேன்
विबुध-सन्मौलि-चित्र-स्तबक-भूषितं = பண்டிதர்களின் நல்ல தலையில் சித்ர ஸ்தபகம் என்கிற இந்தப் பகுதியாலே அணியுடையதாகும்படி.
चित्ते = மனதில்
कलये = ஏற்பாடு பண்ணிக் கொள்கிறேன்.

தாமரையில்லத்தாளை நான் த்யானிக்கிறேன். சித்ர ஸ்தபகத்தைத் தொடங்கும் இத்தருணத்தில், அவளைச் சித்ர ஸ்தபகத்தாளாகவே த்யானிக்கிறேன். தேவர்களின் நல்ல ஶிரஸ்ஸுகளில் உள்ள பலவிதப் பூங்கொத்துகள் இவளது திருவடிகளுக்கு அணியாகின்றன. ஆகையால் ஏற்கெனவே சித்ரஸ்தபக பூஷிதமான திருவடி கொண்டவளை என்னுடைய சித்ர ஸ்தபகத்தாலும் அலங்கரிப்பதற்காகத் த்யானம் பண்ணுகிறேன். ஏற்கெனவே உள்ள சித்ரஸ்தபகம் என்னும் பூங்கொத்து, விபுதர் மௌளியைச் சேர்ந்தது; அதாவது

தேவர்கள் தலையில் சூடியது. அவர்கள் திருவின் திருவடிகளை வணங்கும்போது அவ்வடிகளுக்கு அணியாவது. நான் பண்ணும் சித்ர ஸ்தபகம் என்னும் லக்ஷ்மீ ஸஹஸ்ரப் பகுதியும் இவ்விரண்டு வகையிலும் ஒத்துள்ளன. இதுவும் விபுதர்களின், அதாவது பண்டிதர்களின், மௌளியில் இருப்பது எவ்வாறென்றால் அவர்கள் இதை ஸரஸமா வஹிக்கிறார்கள்; இதன் அருமை பெருமைகளை அறிந்து தலையால் தாங்குகிறார்கள். இதுவும் திருவின் திருவடிக்கு அணியாவது எங்ஙனம் என்றால் நான் அத்திருவடிகளில் இதை ஸமர்ப்பித்து விட்டதாலாம்.

விபுத, சித்ர, என்கிற பதங்களில் இரட்டை அர்த்தங்கள்.

விபுதர்கள் என்னும் தேவர்கள் தலைப் பூங்கொத்தால் திருமகளடியை அணிவிப்பவர்கள்.

விபுதர்கள் என்னும் பண்டிதர்கள் சித்ரஸ்தபகம் என்னும் இக்காவியப் பகுதியால் திருமகள் அடியை அணிவிப்பவர்கள்.

தேவர் மௌளியில் இருப்பது சித்ரமான, பல வகைகளிலான, ஸ்தபகம், பூங்கொத்து. அறிஞர்கள் தலைமேல் தாங்கிக் கொண்டாடுவது, விசித்ர வேடிக்கைகள் கொண்ட இந்தச் செய்யுட் கொத்து. இரண்டுமே அவளடியில் அலங்காரம் ஆகுபவை.

அம்புஜும் என்றதன் கருத்து என்னவென்றால், ஏற்கெனவே மலராயிருக்கும் திருவடியில், ஏற்கெனவே மலர் மேல் இருக்கும் திருவடியில், மேலும் மலர்க் கொத்தால் அழகு என்பதாம்.

சிரம் என்றதன் கருத்து, மற்ற ஸ்தபகங்களை விடச் சமத்காரங்கள் நிறைந்திருப்பதால் இந்த ஸ்தபகத்தை வெகுகாலம் பண்டிதர்கள் தலையில் கொள்வர் என்பதாம். விபுதர்கள் திருகு'களை அவஸரமின்றி நீண்ட காலமாய்

அடிபணிகிறார்கள் என்பதுமாம். விபுத என்றதன் கருத்து பண்டிதர் அல்லாதார்க்குப் புரியாத வார்த்தை ஜாலங்கள் சித்ரஸ்தபகத்தில் இருப்பதால், பண்டிதர் மட்டுமே இந்த ஸ்தபகத்தைத் தலையில் சூட்டிக்கொள்ள முடியும் என்பதாம்.

ஸத் என்றதன் கருத்து, திருமகள் திருவடியை அணிவிக்கும் முடி மட்டுமே நல்ல முடி என்பதாம்.

மௌளி என்றதன் கருத்து, தலைமேல் தாங்கும்படி சித்ரஸ்தபகம் உயர்ந்தது என்பதாம்.

பூஷிதம் என்றதன் கருத்து, இது திருவடிக்கு அலங்காரம் ஆகும்படி, ஶப்த சித்ரங்களாலும் அர்த்த சித்ரங்களாலும் அழகியது என்பதாம்.

சித்ரஸ்தபகம் என்ற பதம், இந்த ஸ்தபகத்தில் பல சித்ரங்கள், சமத்காரங்கள் இருப்பதைக் குறிப்பிட்டுக் காட்டலாம். வழக்கமாகப் பெரும்பாலும் இக்காவ்யத்திலிருக்கும் ஶ்லேஷப்ராஸங்களுக்கும் இங்கே குறைவில்லை என்பதைக் காட்ட, முதல் ஶ்லோகத்திலேயே மோனைகளையும் ஶ்லேடைகளையும் புகுத்திவிட்டார்.

சிரகாலம் விபுதர்களும் சிரங்களினால் தொழும் அடியும்
சித்ரக் கொத்தணியட்டும் சித்தத்தில் கொள்வோம் நாம்.

— ★ —

2. வாணியும் வழிபடும் வாரிஜை

वेदानि सर्वशास्त्राणि विभाव्य भवतीं रमे।
दास्यं यस्यास्तवोपैति देवी साऽपि सरस्वती ॥ २

வேதாநி ஸர்வஶாஸ்த்ராணி விபாவ்ய பவதீம் ரமே।
தாஸ்யம் யஸ்யாஸ்தவோபைதி தேவீ ஸாऽபி ஸரஸ்வதீ ॥ 2

रमे = லக்ஷ்மியே!	तव = உனக்கு
यस्याः = எந்த	दास्यं = அடிமையை

सा = அப்படிப்பட்ட

सरस्वती देवी अपि = ஸரஸ்வதி தேவி கூட

उपैति = அடைகிருளோ

भवतीं (அந்த) உம்மை

सर्वशाणि- எல்லா ஶாஸ்த்ரங்களையும்,

विभाव्य-நன்குயோசித்துப் பார்த்து

वेदानि = அறிவேனாக; த்யானிப்பேனாக.

ரமாதேவியே ! எல்லா ஶாஸ்த்ரங்களேயும் ஆராய்ந்து அதன் பலனாக நான் உம்மை உபாஸிப்பேன். வாக்தேவியான ஸரஸ்வதியே உமக்கு அடியவள் ஆகிருள்.

ஸர்வஶாஸ்த்ராணி விபாவ்ய என்றதன் கருத்து என்னவென்றால், ஶாஸ்த்ரங்களே நன்ருக ஆராய்ந்தால், திரும்பத்திரும்ப விசாரம் பண்ணினால், ரமாதேவியைத் த்யானிப்பது நல்லதென்று புரியும் என்பதாம்.

ஆலோட்ய ஸர்வஶாஸ்த்ராணி என்று தொடங்கும் வ்யாஸரின் ஶ்லோகத்தை அதே பதத்தையிட்டு நினைவுறுத்துகிருர். யாரைத் த்யானிக்க வேண்டும் என்பது ஶாஸ்த்ர விசாரத்தால் அறிவது என்பது இரண்டிலும் பொதுவான விஷயம்.

ஸாऽபி ஸரஸ்வதீ என்றதன் கருத்து என்னவென்றால், இந்த ஶாஸ்த்ர வாக்குகளுக்கெல்லாம் அதி தேவதையான ஸரஸ்வதீ தேவியே உன் அடியவள் ஆதலால் ஶாஸ்த்ரவிசாரம் பண்ணுபவர்கள் உன் அடியவராவது யுக்தமே என்பதாம்.

வேறு விதமாகவும் அன்வயிக்கலாம். **பவதீம்** விபாவ்ய **ஸர்வஶாஸ்த்ராணி வேதாநி** என்று. உம்மைத் த்யாநித்து எல்லா ஶாஸ்த்ரார்த்தங்களேயும் அறிவேனாக என்று பொருள் கிடைக்கும், கல்விக் கடவுளான ஸரஸ்வதியை வழிபட்டாலன்றோ ஶாஸ்த்ரங்களே அறியமுடியும்? என்று கேட்டால், உத்தரம் - உத்தரார்த்தத்தில். ஸரஸ்வதியும் உம் அடியவளானதால், உம்மைத் த்யானித்துக் கல்வியறிவு

பெறுவேன் என்கிறார். இன்னுமொன்று. ஆசார்ய பரம்பரையில் பெருமாளுக்கு அடுத்தபடியான தாயாரை வழிபட்டு, ஶாஸ்த்ரார்த்தங்களை அறியப் புகுவது தகும்.

ஶாஸ்த்ரங்களை ஆலோசித்து உம்மைத் த்யாநிப்பேனாக என்பது முதல் தாத்பர்யம்.

உம்மைத் த்யானித்து ஶாஸ்த்ரங்களை அறிவேனாக என்பது இரண்டாம் தாத்பர்யம்.

ஶாஸ்த்ரஜ்ஞானத்துக்கு உபாயமும் நீரே; பலனும் நீரே; என்று திரண்ட பொருள்.

வேதாநி என்ற பதம் பெயர்ச் சொல்லா? வினைச் சொல்லா? பக்கத்திலேயே உள்ள ஶாஸ்த்ராணி என்ற பதத்துடன் ஏகரூபமாய் இருப்பதால் பெயர்ச் சொல்லாகக் கருதி வேதங்களை என்று அர்த்தம்சொல்லத் தோன்றும் முதலில் பிறகு ''வேதங்களையும் எல்லா சாத்திரங்களையும் பர்யாலோசனைபண்ணி ரமையே, உம்மை'' என்கிற வாக்யம் முடிவு பெறாமல், ஒரு வினைச் சொல்லை வேண்டி நிற்கும். வினைச் சொல்லைக் காணோமே என்று மருள வைப்பதால் இந்த ஶ்லோகத்தில் சித்ரம் (சமத்காரம்) தொடங்கிவிட்டது. **வேதாநி** என்பது க்ரியாபதம் ஆகலாம் என்பது முதலில் ஸ்புரிக்காமல், பின்னரே நம் மனதில் தோன்றும். வேதத்தைச் சொல்லும் **வேத:** என்பது புல்லிங்க ஶப்தம்.

உயர் நூல்கள் உரைத்ததெலாம் உணர்ந்தாய்ந்து தேறியதால்
உம்மையே ரமையே ! நான் உபாஸிப்பேனாகட்டும்.

3. பெருமை தரும் பெருந்தேவி

कमले ! देवदेवस्य महिषि ! त्वं स्तुतक्रमे।
विमले ! देवि ! देह्यस्य महितत्वं नतस्य मे ॥ ३


கமலே தேவதேவஸ்ய மஹிஷி த்வம் ஸ்துதக்ரமே ।
விமலே தேவி தேஹ்யஸ்ய மஹிதத்வம் நதஸ்ய மே ॥ 3

कमले = தாமரையாளே !
देवदेवस्य = தேவர்க்கும் தேவனான திருமாலின்
नतस्य = வணங்கின
अस्य = இந்த
महिषि = நாயகியே !
स्तुत-क्रमे = துதிக்கப்பட்ட கார்யக்ரமம் கொண்டவளே !
विमले = நிர்மலமானவளே !
देवि = ஸ்ரீ தேவியே !
त्वं = நீ
मे = எனக்கு
महितत्वं = கொண்டாடத் தக்கமையை
देहि = கொடு.

கமலேயே ! விமலேயே ! தேவதேவனின் பட்டத்து ராணியே ! உன்னுடைய செயல்முறையை எல்லாரும் போற்றுகிறார்கள். இவ்வளவு உயர்ந்தவளான உன்னை மிகவும் தாழ்ந்தவனான நான் வணங்குகிறேன். என்னுடைய தாழ்ச்சியை ஒழித்து எனக்கும் சிறப்புகளைத் தா.

எனக்கு மஹிதத்வம் தந்தால் அக்ரமம் ஆகாது. உன்னை வணங்கின என்னைத் தூக்கிவிட்டதாகுமத்தனை. உன் க்ரமத்தை எல்லோரும் துதிப்பதால், இதையும் பண்ணிவிடு.

இந்த ச்லோகத்தில் என்ன விசேஷம் என்றால், இது கோமுத்ரிகா பந்தத்தில் அமைந்துள்ளது. முதல் பாதியில் ஒன்றுவிட்டு ஒன்றாக எழுத்துகளை எடுத்துக் கொண்டால், ம, தே, தே, ஸ்ய, ஷி, த்வம், மே, என்று த, மே, என்று எட்டு எழுத்துகள் வருகின்றனவே. இதே எட்டு எழுத்துகள் தான் இரண்டாம் பாதியிலும் வருகின்றன. இந்த மாதிரியாகச் செய்யுள் புனைவது கஷ்டம் என்றான் தண்டி என்னும் மஹாகவி. இந்தச் சிறப்பைக் கீழ்க் கண்டவாறு படம் போட்டும் காண்பிக்கலாம்.



மஹிஷியே திருமாலுக்கு !
மஹிதனாய் என்னையாக்கு

4. பாவம் நீக்கிப் பாலிப்பவள்

पाहि देवि ! कलशोदधेस्सुते ! देहि पापविलयं दयानिधे ! ।
शेषशायिदयिते ! तमोमुषं शेमुषीं कलय नस्सुशोभनाम् ॥ ४

பாஹி தேவி ! கலஶோததேஸ்ஸுதே ! தேஹி பாபவிலயம் தயாநிதே ! ।
ஶேஷஶாயிதயிதே ! தமோமுஷம் ஶேமுஷீம் கலய நஸ்ஸுஶோபநாம் ॥ 4

देवि = ஸ்ரீதேவியே !
कलशोदधे: = பாற்கடலின்
सुते = மகளே !
दयानिधे = அருள் நிதியே !
शेष-शायि-दयिते = ஆதிஶேஷனில் படுத்திருப்பவனின் மனைவியே !
न: = எங்களை
पाहि = காப்பாற்று.
पाप-विलयं = பாவங்களின் அழிவை
देहि = கொடு.
तमो-मुषं = தீக்குணத்தை நீக்குவதும்
सु-शोभनां = மிக மங்களமானதுமான
शेमुषीं = புத்தியை
न: = எங்களுக்கு
कलय = பரவப் பண்ணு.

லக்ஷ்மியே ! பாற்கடலின் பெண்ணே ! ஶேஷஶாயியின் ப்ரியையே ! உன்னிடம் மூன்று வேண்டுகோள்கள். எங்களை ரக்ஷிக்க வேண்டும்; எங்கள் பாவத்தைத் தொலைக்க வேண்டும்; எங்களுக்கு நல்ல புத்தியைத் தரவேண்டும் என்று.

இப்போது கஷ்டம் வராதபடி ரக்ஷிப்பது நிகழ்காலத்துக்கு; இதற்கு முன் பண்ணின தீவினைகளைத் தொலைப்பது இறந்தகாலச் செயல்கள் ஹிம்ஸை பண்ணாமல் இருப்பதற்கு; நல்ல புத்தி தருதல் எதிர்காலக்ஷேமத்துக்கு. சுருங்கச் சொன்னால் முக்காலத்துக் கஷ்ட ஹேதுக்களும் இல்லாதபடி நிகழ்காலத்தில் பண்ணு என்று ப்ரார்த்தனை.

இந்த ஶ்லோகத்தில் என்ன விஶேஷம் என்றால், முதல் பாதத்தில் உள்ள பதினொரு எழுத்துகளும் மற்ற பாதங்களில்

திரும்ப வந்திருக்கின்றன. **பாஹி தே** என்று முதல் பாத ஆரம்பம். அதைத் திருப்பிப் போட்டு **தேஹிபா** என்று இரண்டாம் பாத ஆரம்பம். முதல் பாதத்தின் மற்ற எட்டு எழுத்துகளும் மீண்டும் எங்கே வந்துள்ளன என்பதைத் தேடுவது சிறுவர் கேளிக்கை போல. இப்படி மீண்டும் வரும் எழுத்துக்களைக் கோடிட்டுக் காட்டலாம்.

தே[3] ஹி பா ப வி ல்யம் து[3]யாநி தே[4] ।
பேஷமாயிது[3]யிதே தமோமுஷம்
பேமுஷீம் கலய ந ஸ்ஸுபோப[4]நாம் ॥ 4

இந்த அணிக்கு கூ[3]ட[4]ப்ரதமம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். முதல் பாதத்தில் **கமலோதுதே** என்று சில பதிப்புகளில் அச்சிட்டிருப்பது தவறு.

பாற்கடல் மகளே ! பாலனம் பண்ணு.
அருளின் நிதியே ! அருவினை அகற்று.
பேஷமாயிநியே ! பேமுஷி தந்திடு
திருமகளே ! எம் தீக்குணம் திருடு.

5. மாலின் மார்பில் மாண்புடன் மன்னுபவள்

संश्रितानवितुमास्थया दयासारिणीह दिगधीशसेविता ।
स्वप्रियस्य कलयन्त्युरः पदं सम्पदं दिशतु सा हरिप्रिया ॥ ५

ஸம்ஶ்ரிதாந் அவிதும் ஆஸ்தயா தயாஸாரிணீஹ திகதீசஸேவிதா ।
ஸ்வப்ரியஸ்ய கலயந்த்யுர: பதம் ஸம்பதம் திசது ஸா ஹரிப்ரியா ॥ 5

संश्रितान् = ஆம்ரயித்தவர்களை
अवितुं = காப்பாற்றுவதற்கு
आस्थया = ஆஸ்தையோடு
दयासारिणी = அருளைப் பொழிகிறவளாய்,
इह = இங்கே
दिक् = திக்பாலகர்களால்
अधीश देविता = தொழப்பட்ட
सा = அப்படிப்பட்ட
हरिप्रिया = திருமாலின் ப்ரியையான திருமகள்
स्वप्रियस्य = தன் காந்தனின்
उरः = மார்பை
पदम् = மார்பை

कलयन्ती = பண்ணுபவளாய்

संपदं = செல்வத்தை

दिशतु = கொடுக்கட்டும்.

திருமகள் தன் பக்தர்களையெல்லாம் ரக்ஷிப்பதில் ஆவல் கொண்டவள். அருள் பொழிபவள். எண்டிசைப் பாலகர்களும் அவளை வணங்குகின்றனர். தன் காந்தனின் மார்பகத்தில் இடம் கொண்டவள். ஹரிக்கு ப்ரியமானவள். நமக்குச் செல்வத்தைக் கொடுக்கட்டும்.

அவள் ஸம்பத்தைக் கொடுக்கத் தேவையானதெல்லாம் அவளிடம் உள்ளன. நம்மிடம் வாத்ஸல்யமும் தயையும் இருப்பதாலும், ஸம்பத்துக்கு அதிபதிகளான குபேராதிகள் திக்பாலர்களாய் அவளை ஸேவித்துக் கொண்டிருப்பதாலும், ஸம்பந்நாராயணன் அவளுக்கு இருப்பதாலும், அவள் நமக்கு ஸம்பத்தைத் தருவாள்.

இந்த ஶ்லோகத்தில் ஒரு விஶேஷம் என்னவென்றால் நாலாம் பாதத்தில் உள்ள பதினொரு எழுத்துக்களும் மற்ற மூன்று பாதங்களிலும் பிரிந்து பிரிந்து வந்திருக்கின்றன. இந்த அணியைக் கூடசதுர்த்தம் என்பர். எழுத்துகள் எங்கெங்கே மறைந்துள்ளன என்று கண்டுபிடிப்போமா?

ஸம்ஶ்ரிதாந் அவிது மாஸ்த²யா தயா—
ஶாரீணீ ஹரி³ ககுபஶம ஸேவிதா ।
ஸ்வப்ரியஸ்ய கல்யந்த்யுர: பத³ம்

சேர்ந்தவரைக் காப்பவளாம் சேவிக்கப் பட்டவளாம்
சேண்மார்பைச் சேர்ந்தவளாம் செல்வத்தைச் சேர்ப்பவளாம்.

6. ஶேஷாசலத்துக்குச் சேகரமானவள்.

श्रीरशेषजगदार्तिहारिणी शेषशैलतटशेखरायिता ।
राजसे जननि रक्षणाय नः सागरेन्द्रतनये ! सनातनी ॥ ६

ஶ்ரீரஶேஷஜகதார்திஹாரிணீ ஶேஷஶைலதடஶேகராயிதா ।
ராஜஸே ஜநநி ரக்ஷணாய ந: ஸாகரேந்த்ரதநயே ! ஸநாதநீ ॥

सागरेन्द्र-तनये ! = ஸமுத்ர ராஜனின் குமாரியே !
श्रीः = லக்ஷ்மியே !
जननि = அன்னையே !
अशेष-जगत्-आर्ति-हारिणी = எல்லா உலகத்தாரின் துயர் நீக்குபவளாயும்
सनातनी = என்றும் இருப்பவளாயும் ஆன நீ
नः = எங்களுடைய
रक्षणाय = பாதுகாப்புக்காக
शेष-शैल-तट-शेखरायिता = சேஷாசலபூமிக்கு உச்சியணியாக
राजसे = விளங்குகிறாய்.

தாயே ! கடலரசனின் குமாரியே ! நீ என்றும் இருப்பவள். எல்லார் துயரையும் துடைப்பவள். எங்களைக் காப்பதற்காக வேங்கட மலையுச்சிக்கு அழகு சேர்த்துக் கொண்டு விளங்குகிறாய். அதனால் எங்களைக் காப்பாற்று.

எல்லார் துயரையும் போக்குவாளோ? பக்தர் துயரை மட்டுமேயன்றோ போக்குவாள்? என்று கேட்டால், அ-சேஷ என்று பிரித்து விஷ்ணுபக்தர்கள் என்று அர்த்தம் சொல்லக்கூடும்.

கடலில் உதித்து, மலையில் வசித்து, ஸர்வஜகத்துக்கும் உதவுபவள் நீ. நீ திருமலையில் எழுந்தருள உத்தேசமே எங்கள் ரக்ஷணம் தான்.

இந்த ச்லோகத்தில் விசேஷம் என்னவென்றால், மவர்க்க எழுத்துகளே இல்லாததால் உதட்டின் செயல் இல்லாமலே முழு ச்லோகத்தையும் வாசிக்க முடிகிறது. உ, ஊ, வ, முதலிய எழுத்துகளும், அநுஸ்வாரமும் கூட இல்லாததால், உதட்டுக்கு அடியோடு வேலையே இல்லை. இத்தகைய சித்ரத்தை நிரோஷ்ட்யம் என்பர். உதடு படாதது என்று அர்த்தம்.

என்றைக்கும் இருக்கிறவள் எல்லார்க்கும் உதவுபவள்
எங்களையே காக்கவென ஏழுமலை ஏறியவள்.
உததிக்கு மகளாவாள் உலகுக்குத் துயர் தீர்ப்பாள்
உள்ளுபவர் காக்க மலை உச்சியினில் உள்ளவளாம்.

7. வினைகளை விலக்குபவள்

हरेः प्रिये भगवतो हृतसंश्रितसाध्वसा।

अन्वहं क्रियमाणानां अम्हसां संहतीरयात् ॥ ७

ஹரே: ப்ரியே பகவதோ ஹ்ருதஸம்ச்ரிதஸாத்வஸா ।

அந்வஹம் க்ரியமாணாநாம் அம்ஹஸாம் ஸம்ஹதீரயாத் ॥ 7

भगवतः = பகவானுடைய

प्रिये ! = ப்ரியையான லக்ஷ்மியே !

हृत-संश्रित-साध्वसा = பணிந்தவர்களின் பரபரப்பை நீக்குபவளாய்

अन्वहं = நாள்தோறும்

क्रियमाणानां = பண்ணப்படுகிற

अम्हसां பாவங்களுடைய

संहतीः = கூட்டங்களை

रयात् = வேகமாக

हरेः = போக்குவாயாக.

விஷ்ணு பத்நியே ! உன்னை அடைந்தவர்க்கெல்லாம் நீ நிம்மதி அளிக்கிறாய். அவர்களது பரபரப்பும் பதட்டமும் உன்னை ஆம்ரயித்தவுடனே காணாமல் போகின்றன. நாங்களும் உன்னை ஆம்ரயித்தவர்கள். ஆனால் ப்ரதி தினமும் பாபம் பண்ணுகிறோம். இந்தப் பாவங்களையெல்லாம் நீ வேகமாக அபஹரிக்க வேண்டும். ஏன் இந்த வேகம் தேவை என்றால், பாவங்கள் வெகுவேகமாகக் குவிகின்றன. இந்த ம்லோகத்தில் விமேஷம் க்ரியா வஞ்சிகா என்கிற சொல்லணியாகும். ஹரே: என்கிற முதல் பதம் ஷஷ்ட்யந்தமான பெயர்ச் சொல் போல் இருக்கிறது. அண்மையில் உள்ள பகவத: என்பதோடு ஸமாந விபக்திகமாகி, ப்ரியே என்பதில் எளிதில் அந்வயிக்கலாகிறது. ஆனால் க்ரியாபதம் எங்கே? கடைசிப்பதம் கடைசியில் இருப்பதாலும், இயாத், பூயாத், முதலியவற்றோடு ஏகரூபமாக இருப்பதாலும், அயாத் என்று ஒரு க்ரியாபதமே இருப்பதாலும், அது தான் இங்கு வினைச் சொல்லோ என்ற ப்ரமம் உண்டாகிறது. உண்மையில் ரயாத் என்று பஞ்சம்யந்தமான பெயர்ச்சொல் அது. முதல் பதமான

ஹரே: என்பது தான் க்ரியாபதம்-கச்சே: பிபே: என்பன போல. இவ்வாறு படிப்பவரை ஏமாற்றுவதால் க்ரியா வஞ்சிகா என்னும் சொல்லணி இங்கே.

திருமகளே ! தினந்தோறும்

தீவினையைத் தீர்ப்பாயே.

8. எல்லா விபக்திகளிலும் ஏற்றம் மிக்கவள்

पायान्मामुरसावितश्रियमुमाराध्यां प्रपद्येतमाम्

को वा न स्थिरमश्नुते शमधनोऽप्यालोकितो जातुचित् ।

वेदान्तैर्विनुताङ्घ्रये न किमुतः श्रेयो नतिं तन्वताम्

सेवामो रसयामि मानस ! सदा भक्त्यावहावादरम् ॥ ८

பாயாந்மாமுரஸாவிதஶ்ரியமுமாராத்யாம் ப்ரபத்யேதமாம்

கோ வா ந ஸ்திரமஶ்நுதே ஶமதநோ-ப்யாலோகிதோ ஜாதுசித் ।

வேதாந்தைர்விநுதாங்க்ரயே ந கிமுத: ஶ்ரேயோ நதிம் தந்வதாம்

ஸேவாமோ ரசயாமி மாநஸ ! ஸதா பக்த்யாவஹாவாதரம் ॥ 8

असौ = இந்த

उ: = லக்ஷ்மி

मां = என்னை

पायात् = காப்பாற்றட்டும்

इत-श्रियं = செல்வம் அடைந்தவளும்

आराध्यां = ஆராதிக்கத் தக்கவளுமான

उं = லக்ஷ்மியை

प्रपद्येतमां = மிகவும் தொழுகிறேன்.

या = லக்ஷ்மியாலே

जातुचित् = ஏதோ ஒரு காலத்தில்

आलोकित: = கடாக்ஷிக்கப்பட்டவன்

क: = எவன்

स्थिरं = நிலையான

शं = ஸுகத்தை

न अश्नुते = அடையவில்லை?

दान्तै: = புலனடக்கம் கொண்டவர்களால்

विनुत-अङ्घ्रये = தொழப்பட்ட திருவடிகளை உடைய

ये = லக்ஷ்மிக்கு

किं न = எது இல்லை?

नतिं = வணக்கத்தை	सदा = எப்போதும்
तन्वतां = பண்ணுபவர்களுக்கு	भक्त्या = பக்தியோடு
उतः = லக்ஷ்மியுடைய	औ = லக்ஷ்மியினிடத்தில்
सेवां = கைங்கர்யத்தை	आदरं = மர்யாதையை
रचयामि = பண்ணுகிறேன்.	वह = வஹி.
मानस ! = நெஞ்சமே !	

லக்ஷ்மி என்னைக் காப்பாற்றட்டும். லக்ஷ்மியை நான் ஶரணமடைகிறேன் லக்ஷ்மியால்ஶாஶ்வத லோகம் கிடைக்கும் லக்ஷ்மிக்கு எது தான் இல்லை? லக்ஷ்மியிடமிருந்து முக்தி பெறலாம். லக்ஷ்மியின் கைங்கர்யத்தைப் பண்ணுகிறேன் மனமே ! லக்ஷ்மியிடத்தில் பக்தியைத் தாங்கு.

உ என்ற ஒற்றையெழுத்துச் சொல்லுக்கு லக்ஷ்மி என்று அர்த்தம். இதற்குப் பல வேற்றுமை உருபுகள் வரும்போது உம் என்றும் வா என்றும் இத்யாதியான ஶப்தரூபங்களையும், அந்தச் சொற்களெல்லாம் வேற்றுச் சொற்களில் மறைந்துகொண்டிருப்பதையும் அட்டவணையிட்டுக் காட்டுவோம்.

லக்ஷ்மி	உ:	உரஸா
லக்ஷ்மியை	உம்	உமாராத்யாம்
லக்ஷ்மியால்	வா	கோ வா
லக்ஷ்மியின் பொருட்டு	வே	வேதாந்தை:
லக்ஷ்மியிடமிருந்து	உத	கிமுத ஶ்ரேய:
லக்ஷ்மியினுடைய	ஓ:	ஸேவாமோ ரசயாமி
லக்ஷ்மியினிடத்தில்	ஔ	வஹௌவாதரம்

நடு வரிசையும் கடைசி வரிசையும் வடமொழிச் சொற்களாக உள்ளனவே. அவ்விரண்டினுள், இடது பக்கத்தில் (அதாவது நடு வரிசையில்) காணும் சொற்கள் (உ:, உம், வா, முதலியவை) அப்ரஸித்தமானதாலும், வலது பக்கத்தில் காணும் சொற்கள் நாம் அடிக்கடி புழங்கும் பதங்களாய் இருப்பதாலும், இடது பக்கத்தில் இருப்பவை முதலில்

ஸ்புரிப்பதில்லை. ஆனால் சரியாக அன்வயம் கிடைக்காததைப் பார்த்த பிறகு, நாம் இங்கு என்ன பொடி வைத்திருக்கிறார் என்று நோண்டுகிறோம். அப்போது இடது பக்கத்துச் சொற்கள் மனதில் ஸ்புரிக்கின்றன. ஶ்லோகமும் முழுதாக அர்த்தமாகிறது. இந்த வேடிக்கைக்கு விபக்திவஞ்சநா என்று பெயர்.

திரு காக்கட்டும். திருவைச் சரணடை.
திருவால் இன்பம். திருவுக்கெல்லாம்.
திருவினின்றுயர்வு. திருவின் திருப்பணி.
திரு பால் மதிப்பு கொள். திருவே நீ துணை.

9. விளக்கம் தரும் விளக்கானவள்

कालीनाननालीका राधिता हि हिताधिरा ।
मा या सा मम सायामा काऽपि दीप्रप्रदीपिका ॥ ९

காளீநாநநநாளீகா ராதிகா ஹி ஹிதாதிரா ।
மா யா ஸா மம ஸாயாமா காऽபி தீப்ரப்ரதீபிகா ॥ 9

या = எந்த
मा = லக்ஷ்மியானவள்
काली-इन-आनन-नालीक - आराधिका = பார்வதீபதியால் வாயாலும் தாமரையாலும் ஆராதிக்கப்பட்டாளோ
हित-अधि-रा = ஏற்படுத்தப்பட்ட பெரும் செல்வம் உடையவளோ
काऽपि - ஏதோ ஒரு (சொல்ல முடியாத)
दीप्र-प्रदीपिका = ஒளிரும் விளக்கானவளோ
सा हि = அவள் அல்லவா
मम = எனக்கு
स-आयामा = நீட்சியோடு கூடியவள்

திருமகளை உமாபதி கூடத் ஸ்தோத்ரமும், அர்ச்சனையும் செய்து ஆராதிக்கிறான் (அவ்வளவு சிறப்பு). அவளிடம் செல்வம் அதிகமாக வைக்கப்பட்டுள்ளது (அவள் செல்வத்துக்கு அதிபதியானவள்). அவள் விவரிக்கவொண்ணாத ஒளிர்விளக்கு (தமஸ்ஸை நீக்குபவள்). அத்தகைய திருமகள் எனக்கு தீர்க்கமாய் இருக்கட்டும் (நெடுநாள் ஸாந்நித்யம் கொள்ளட்டும்).

இந்த ஸ்லோகத்தில் விசேஷாம்சம் என்னவென்றால், நாலு பாதங்களில் ஒவ்வொன்றையும் திருப்பி வாசித்தால் மாறுபடாமல் இருப்பது. காளீநாந என்பது முதல் பாதத்தின் பாதி. இதைத் திருப்பினால், நநாளீகா என்று வரும். இது முதல் பாதத்தின் அடுத்த பாதி. ஆகையால் இதைப் பாதபாதிப் ப்ரதிலோமம் என்னலாம். இதே மாதிரி நாலு பாதங்களிலும் உள்ளது. ராதிதா ஹி ஹிதாதிரா என்பதைத் திருப்பி வாசித்தால் ராதி தாஹி ஹிதாதிரா என்பதே கிடைக்கும்.

இவ்வளவு விசித்ரத்தைப் பண்ண வேண்டுமானால், அதிகப் புழக்கத்தில் இல்லாத பதங்களை ஆளுதல், அபூர்வமான ஸமாஸங்களைப் பண்ணுதல், என்ற சிலவற்றை நாம் ஸஹித்துக் கொள்ளவேண்டும். இங்கே இநன் என்றால் தலைவன் என்பதும், ரா என்றால் செல்வம் என்பதும், ஹிதாதிரா என்பதற்கு ஹிதா அதிகா ரா யஸ்யாம் ஸா என்று விக்ரஹவாக்யம் என்பதும், இவ்வாறு ஏற்கத்தக்கனவாகின்றன.

இம்மாதிரியான ஸ்லோகங்களுக்குப் பலர் பல விதமாகப் பொருள் உரைப்பதும் உண்டு. மாதிரிக்கு இதோ சில. க என்றால் ப்ரஹ்மா. காலீந என்றால் ப்ரஹ்மாவிடம் சிறிது ஒன்றிப்போன என்று அர்த்தம். திருமகளின் முகத்தாமரை அவளது குழந்தையான ப்ரஹ்மாவிடம் சிறிது லயிப்பதால், அவள் காலீநாநந நாளீகா எனப்படுகிறாள்.

க என்றால் ஜலம். மற்ற தாமரைகளெல்லாம் ஜலத்தில் அடிக்கடி லீனமாகும்- மறையும். ஜலத்தில் மறையாத தாமரை வேண்டுமென்றால், திருமகளின் முகத்தாமரையைச் சொல்லலாம். ஆகையால் அவள் க-அலீந-ஆநந-நாலீகா.

ரா என்றால் கொடுப்பவள் என்று அர்த்தம். நமக்கு ஹிதத்தை அதிகமாகக் கொடுப்பவள் ஹிதாதிரா எனப்படுகிறாள்.

அஹிஹிதன் என்றால் பாம்பில் தன்னை வைத்தவன். அவன் ஶேஷஶாயியான திருமால். அவனைப் பதவஹநாதிகளால் ஆராதிப்பவள் திருமகள். ஆகையால் அவள் ராதிதாஹிஹிதா.

ஹித என்றால் வைக்கப்பட்ட என்று அர்த்தம். பக்தர்களிடம் நிறைய செல்வத்தை வைப்பதால், லக்ஷ்மி ஹிதாதிரா ஆகிறாள்.

மூன்றாம் பாதத்தில் பாடபேதம் சில பதிப்புகளில் காண்கிறோம். சில உரைகளிலும். யா மா ஸா மம ஸாமயா என்று இன்னொரு பாடம். ஸாமயா என்றால் ஸாம-ஆயா என்று பிரித்து, நல்வார்த்தைகளில் வரவுள்ளவள் என்று பொருள் சொல்கின்றனர். இனிக்கப் பேசுபவரிடத்தில் இலக்குமி வருவாள் என்ற கருத்தாகலாம்.

ஸா மாயா என்று தனிப்பதங்களாக்கி அவள் ப்ரக்ருதியாகிறவள் என்றும் பொருள் உரைக்கலாம்.

ஸா அமாயா என்று பதம் பிரித்து அவள் கபடமற்றவள் என்று பொருள் கூறுவாரும் உண்டு.

ஸாமத்தை அடைபவள் என்று பொருள் காட்டி, அவள் ஶாந்தமே உருவானவள் என்று தாத்பர்யம் சொல்வதும் உண்டு.

கடைசிப் பாதத்துக்கு மட்டும் எல்லோரும் ஒரே அர்த்தத்தையே சொல்கின்றனர். திருமகளைத் திருவிளக்காகச் சொல்வது, லோகைக தீபாங்குரா என்றும், மங்களதீபரேகாம் என்றும், பூர்வாசார்யர்கள் சொன்னபடியேயாம். இப்படியாகப் பல பொருட்கள் இருப்பதால் இச்சிறு ஶ்லோகத்தில் பன்னிரு அர்த்தங்கள் அடங்கியுள்ளன.

1. லக்ஷ்மி மங்களதீபமானவள். இருளையும் மருளையும் நீக்குபவள்.
2. அவள் வர்ணனைக்கு அடங்காதவள்.

3. அவள் ப்ரக்ருதி ஸ்வரூபிணீ.
4. அவள் கள்ளம் கபடு அற்றவள்.
5. இனிக்கப் பேசுபவர்களிடம் லக்ஷ்மி ஸாந்நித்யம் இருக்கும்.
6. அவளுடைய சிரஸாந்நித்யம் நமக்கு வாய்க்க வேண்டும்.
7. அவள் ஹிதத்தை அதிகமாய்த் தருபவள்.
8. அவள் செல்வத்துக்கெல்லாம் அதிதேவதை ஆனாள்.
9. அவள் பகவானை ஆராதிப்பவள்.
10. அவனை ஆராதிப்பவர்களுக்கு நன்மைகள் அதிகம்.
11. உமையாள் மணாளன் அவளை ஆராதிப்பவர்களில் ஒருவன்.
12. சதுர்முகப் ப்ரஹ்மாவும் அவளுக்குக் குழந்தை.

விடையவற்கருள்பவள் விழுப்பம் தருபவள்
விளக்காய் இருப்பவள் விளங்குக என்னுள்.

—★—

10. சத்ருவைச் செகுத்துச் ஸௌக்யம் செய்பவள்

सा स्यादरिहाख्यासौ सौख्याहारिदयारसा।
मेयकायधरा माता तामाराधय काय मे॥ १०

ஸா ஸ்யாதரிஹாக்யாஸௌ ஸௌக்யாஹாரிதயாரஸா ।
மேயகாயதரா மாதா தாமாராதய காய மே ॥ 10

स्यात् = படுவேகமாக
अरि-हृ-आख्या = பகைவர்களை அழிக்கும் திருநாமங்களை உடையவளும்
सौख्य-आहारि-दया-रसा = ஸௌக்யத்தைக் கொண்டு வருகிற அருள் ரஸம் கொண்டவளும்
सा = ப்ரஸித்தமானவளும்
मेय-काय-धरा = அறியத்தக்க திருவடிவம் ஏற்பவளும்
माता = அன்னையானவளும்
असौ = இவள்.
मे = என்னுடைய
काय ! = உடலே !
तां = அவளை
आराधय = வழிபடு.

இவளுடைய திருநாமங்கள் நம் பகைவர்களை (காமம் க்ரோதம் முதலியவற்றை) ஒழித்துக்கட்டும். இவளுடைய க்ருபைப் பெருக்கு நமக்கு ஸௌக்யத்தைக் கொண்டுவந்து கொடுக்கும். இவளது திருவடிவம் வேதம் முதலிய ப்ரமாணங்களால் காணலாம்படிப் பரமபதத்திலும் நம் கண்ணுக்குப் புலனாம்படி கோவிலிலும் இருக்கும். அவளை (அர்ச்சனை, ப்ரதக்ஷிணம், ப்ரணாமம் முதலியவற்றால்) ஆராதிப்பாய் என் உடலே!

இந்த ஶ்லோகத்தில் என்ன விசித்ரம் என்றால் முதல் பாதத்தைத் திருப்பிப் போட்டால் இரண்டாம் பாதம் கிடைக்கும். மூன்றும் பாதத்தைத் திருப்பிப் போட்டால் நான்காம் பாதம் கிடைக்கும். இவ்வளவு விசித்ர அமைப்பு ஒரு ஶ்லோகத்தில் வரவேண்டுமானால் பொருள் கூறுகையில் சிறிது தூரான்வயத்தையும் ஏகதேஶாந்வயத்தையும் பொறுத்துக்கொள்ளத் தகும். **ரயாத்** என்பதை **ஆராதய** என்பதில் அந்வயித்தால் தூரான்வயம். **ரயாத்** என்பதை **அரிஹா** என்பதில் அன்வயித்தால் **ஏகதேஶ அந்வயம்**. முதல் யோஜனையில் ஆராதிப்பதற்கு த்வரைப்படுத்துவது **த்வர யாவந்ந பித்யதே** என்றாற்போலே உடலின் நிலையாமையைக் கருதியாம். இரண்டாவது யோஜனையில் பகைவர்களைப் படுவேகமாக அழிப்பதாய்ச் சொல்வது **ஸிம்ஹத்ரஸ்தைர் ம்ருகைரிவ** என்றாற்போலே நாமஸங்கீர்த்தனப் பெருமையைப் பறை சாற்றவாம்.

காய மே என்பதற்கு **என் உடலே!** என்று விளியாகப் பொருள் சொல்லாமல். வேறு விதமாகப் பொருள் கொள்வாரும் உளர். **மே** என்று மட்டும் விளி; அறிவே என்று அர்த்தம். **காய** என்பது **க** என்ற சொல்லின் நான்காம் வேற்றுமை வடிவம். ஸுகத்துக்காக எனப் பொருள். யாரை ஆராதிக்க வேண்டும்? எதற்காக ஆராதிக்க வேண்டும்? எந்தக் கருவியால் ஆராதிக்க வேண்டும்? என்ற மூன்றையும் சொல்கிறது கடைசிப்பாதம்.

இப்படிப்பல பொருள்கள் இருப்பதால் இந்தச் சிறு ச்லோகத்திலும் பன்னிரு கருத்துக்கள் உள்ளன.

1. லக்ஷ்மி (உலகுக்கே) அன்னையானவள்.

2. அவளை ஆராதித்தால் ஸுகம் கிடைக்கும்.

3. அவளை ஆராதிப்பதில் வாக்குக்குப் பங்குண்டு; நாமஸங்கீர்த்தனம் பண்ண வேண்டும்.

4. அவளை ஆராதிப்பதில் உடலுக்குப் பங்குண்டு; காயத்தை விளித்துச் சொல்வது தகும்.

5. அவளை ஆராதிப்பதில் புத்திக்குப் பங்குண்டு; அதை விளித்து இதைச் சொல்வது தகும்.

6. அவளை ஆராதிக்க த்வரைப்பட வேண்டும்; விளம்பம் கூடாது.

7. அவளுடைய திருநாமங்களைச் சொன்னால் பகைவர் விரைவில் பட்டொழிவர்.

8. அவளுடைய அருள் நமக்கு இன்பத்தைக் கொணர்விக்கும்.

9. அவளுக்குத் திவ்யமங்கள விக்ரஹம் இருப்பது ப்ரமாணங்களால் தெரிகிறது.

10. அவள் நமக்காகக் கோவில்களில் கண்ணுக்குப் புலப்படும்படி இருக்கிறாள்.

11. நம் உடலையும் அறிவையும் நாம் கட்டளையிடும்படி நம் வசத்தில் வைத்திருக்க வேண்டும்.

12. அவளது தயை த்ரவமாய்ப் பெருகும்.

அரிகளை அழிக்கும் நாமத்தாள்.

அருளால் ஸௌக்யம் அமைத்திடுவாள்.

அன்னை அறிதகு வடிவத்தாள்.

அறிவே அவளை ஆராதி. (தொடரும்)

11. நினைத்ததை நிறைவேற்றுபவள்.

कारिताभिमता चित्तावासे हारितमा रमा ।
मारमातरि हासेवात्ता चितामभितारिका ॥११॥

காரிதாபி,மதா சித்தா வாஸே ஹாரிதமா ரமா ।
மாரமாதரிஹாஸேவாத்தா சிதாமபி,தாரிகா ॥ 11 ॥

हारि-तमा = மிகவும் கவர்ச்சி கொண்ட
रमा= லக்ஷ்மியானவள்.
चित्त-आवासे= மனமென்னும் இல்லத்தில்.
कारित-अभिमता= இஷ்டமானதைப் பண்ணுவிப்பவள்.
मार-मातरि= மன்மதனின் மாதாவான இவளிடம்.
चितां= ஆத்மாக்களுக்கு.
आत्ता= வாய்த்துள்ள.
सेवा= கைங்கரியம்
अभितारिका= கடைத்தேற்றுவது.
हा= ஆச்சரியம்.

தன் வாத்ஸல்யத்தாலும் அருளாலும் நம்மையெல்லாம் கவர்ந்திழுப்பவள் லக்ஷ்மியன்னை. நம் மனோரதத்தை நிறைவேற்றுபவள். இவள் மன்மதனின் தாயாயிருப்பினும் இவளிடம் நாம் ஆற்றும் தொண்டுப்பணி நம்மைக் கடைத்தேற்றும் என்பது ஆச்சரியம்.

இந்த ஶ்லோகத்தில் என்ன விசேஷம் என்றால், முதல் பாதியைத் தலைகீழாக வாசித்தால் இரண்டாம் பாதி கிடைக்கும்.

மனதில் இஷ்டப்பட்டதைப் பண்ணுபவள் என்பதற்கு மூன்று தாத்பர்யங்கள் கொள்ளலாம். பக்தர்களான நாம் என்னென்ன மனோரத(இஷ்ட)ங்களை ஆசைப் படுகிறோமோ, அதையெல்லாம் நிறைவேற்றி வைப்பவள் என்பது முதல் தாத்பர்யம். அவள் இஷ்டப்பட்டதை நம் மனதில் பண்ணுபவள்; மற்றை நம் காமங்கள் மாற்றுபவள்; என்பது இரண்டாவது தாத்பர்யம். நமக்கு அபீஷ்டத்தைத் தன் மனதில் ஸங்கல்பிப்பவள் என்று மூன்றாம் தாத்பர்யம்.

சித்தாவஹேஸ என்பதற்கு வேறு அர்த்தங்கள் சொல்பவர்களும் உண்டு. சித் என்றால் சேதனம்; சித்தா என்றால் சைதந்யம்; சித்தா-ஆவாஸம் என்றால் சைதன்யத்துக்கு இருப்பிடமானது; சேதனவஸ்து எல்லாவற்றிலும் என்று அர்த்தம். எல்லாருக்கும் ஸர்வாபீஷ்ட பலப்ரதை என்றதாயிற்று.

இன்னுமொரு அர்த்தம் சித்தாவோஸே என்ற பதத்தை விளிச் சொல்லாகக் கொள்வதால் அமையும்.

நாங்கள் த்யானிக்கும்போது எங்கள் மனதில் அமர்பவளே! என்று அழைப்பதாக அர்த்தம் இதே போல மார - மாதரி-ஹா-ஸேவா என்று பிரிக்காமல் மாரமாத:-இஹ - ஆ- ஸேவா என்று பதம் பிரிப்பாரும் உளர். மன்மதனின் அன்னையே! இங்கே சிறியதொரு கைங்கர்யமானது இவ்வளவு பெரிய பலன் அளிக்கிறதே என்றாகும்.

ஹா- என்று வியப்புக்கு இரண்டு காரணங்கள். மன்மதனுக்குத் தொண்டு புரிபவர் ஸம்ஸாரத்தைக் கடக்காமல் அமுங்கிப் போவார்கள். மேலும் ஸம்ஸாரத்தில் சிக்குவார்கள் என்பது ப்ரஸித்தமாயிருக்க மன்மத மாதாவுக்குத் தொண்டு செய்தால் அதற்கு எதிரான பலன் கிடைக்கிறது என்பது வியப்பு. நாம் விரும்பும் பலன் வேறாயினும் அதை நிறைவேற்றுபவள் கூடவே கடப்பித்தலையும் நாம் கேளாமலே கூடப்பண்ணுகிறாள் என்பதாலும் வியப்பு.

ஆத்தா என்பதை ஸேவாவுக்கு அடைமொழியாக்கி, வாய்த்துள்ள பணி என்று பொருள் சொன்னோம். இன்னொரு விதமாக, ஆத்தா என்பதை ரமாவுக்கு அடைமொழியாக்கி, திருப்பணிகளால் அடையப்பட்ட லக்ஷ்மி நம்மைக் கடைத்தேற்றுவாள் என்றும் சொல்லலாம். அவளே உபாயமாகவும் உபேயமாகவும் ஆகிறாள்; வழியாகவும் பலனாகவும் ஆகிறாள்; என்று சொன்னதாகும். லக்ஷ்மிகைங்கர்யத்தால் ஸம்ஸாரத்தைக் கடந்தவர்கள்

பெறுகின்ற பலன் என்னவென்று கேட்டால் அதுவும் சிறந்த லக்ஷ்மீகைங்கர்யமே என்றதாயிற்று.

சித்தாவாஸே காரிதே என்று அன்வயிப்பதும் தகும். உள்ளத்திருத்தப்பட்டவள் என்று பொருளாகும். **ஹாரி-தமா-ரமா** என்று பதம் பிரிக்காமல் **ஹாரித-மார-மா** என்று பிரித்தால் இன்னொரு பொருட்சுவையும் கிடைக்கும். மன்மதனுக்குத் தாயாயிருப்பினும், நம்மிடமிருந்து மன்மதனை விரட்டுவிப்பவள் லக்ஷ்மி என்று புது அர்த்தம்.

ஆத்தாசிதாம் என்பதை **ஆத்தா- அசிதாம்** என்று பிரித்து, அவள் பணியைச் சேர்ந்த அசேதனங்களுக்குக் கூட உயர்நிலை உண்டாம் என்று பொருள் உரைப்பர் சிலர். அவளுடைய திருக்கோவில், படிக்கட்டு, மண்டபம். எல்லாம் நம் வணக்கத்துக்குரியதாகிறதன்றோ? மேலும் **படியாய்க்கிடந்துன் பவளவாய் காண்பேனே** என்றும் **ஏதேனும் ஆவேனே** என்றும் சொன்னபடி அவள் **கடாக்ஷபாத்ரமான** அசேதனங்களும் உயர்ந்தவையேயாம் என்று தாத்பர்யம்.

இப்படிப் பல அர்த்தங்கள் இருப்பதால் இந்தச் சிறு ஶ்லோகத்தில் பன்னிரு விஷயங்கள் அடங்கியுள்ளன:

1. நமக்கு இஷ்டமானதைத் தருவாள்.
2. தனக்கு இஷ்டமானதை நம் எண்ணத்தில் தோற்றுவிப்பாள்.
3. நம் மனதில் உறைவாள்.
4. நமக்கு அனுகூலமாக ஸங்கல்பிப்பாள்.
5. நம் மனதைக் கொள்ளை கொள்ளுவாள்.
6. காமத்தை விரட்டியடிப்பாள்.
7. சிறு தொண்டுக்கும் பெரும்பலன் அளிப்பாள்.
8. சேதனர்களையெல்லாம் கடைத்தேறப் பண்ணுவாள்.
9. தானே உபாயமும் பலனுமாய் இருப்பாள்.
10. த்யானிப்பவர்களுக்கு அபிமத(இஷ்ட)மாயிருப்பாள்.

11. தன் பார்வைக்கு இலக்கான அசேதனங்களையும் கடைத்தேற்றுவாள்.

12. மாரன் (காமன்) அபிமதனாயினும், இவள் காரிதாபிமதையாயினும், ஹாரிதமாரனாவாள்.

இஷ்டத்தை நிறைவிப்பாள். இச்சைகளை மாற்றுவிப்பாள். இதயத்தில் இருந்தருள்வாள். இதயத்தைக் கவர்ந்திடுவாள். இங்கே நம் பணியேற்பாள். இனி நம்மைத் தாண்டுவிப்பாள். இழியிச்சை நீக்குவிப்பாள். இருபலனாறிரண்டாவாள்.

12. துதிக்குரியாள் துணைநிற்பாள்.

काऽपि मा सरसा सात्रा भिलापाकरनामका ।
कायिनारिहनासेव्या ग्र्यनावा स्तुतिवाचया ॥ १२ ॥

காபி மா ஸரஸா ஸாத்ரா பிலாபாகரநாமகா ।
காயிநாரிஹநாஸேவ்யா க்ர்யநாவா ஸ்துதிவாசயா ॥ 12 ॥

काऽपि = வர்ணிக்கவொண்ணாத
मा = லக்ஷ்மீ
सरसा = அருட்பெருக்குடையவள்.
सा = புகழ் பெற்றவள்.
अत्र = இங்கே
अभिलाप-आकर-नामका = கீர்த்திக்கக் குவியலான திருநாமங்களைக் கொண்டவள்.
अग्र्य-नावा = சிறந்த ஓடமான.
स्तुति-वाचया = துதிப்பேச்சாலே.
कायिना = சரீரம் உள்ளவனாலே.
सेव्या = ஸேவிக்கத் தக்கவள்.
अरि-हरा = பகைவரைப் போக்குபவள்.

லக்ஷ்மிக்கு நிறைய நாமங்கள் உள்ளன. அவற்றைக் கீர்த்திப்பது நல்லது. அவளைத் துதிப்பது மனிதர்களுக்குச் சிறந்த ஓடம் போலாகும். அவள் பகைவரை வெல்பவள்.

இந்த ச்லோகத்தில் விசேஷம் என்னவென்றால், இதை முழுதுமாகத் தலைகீழாக வாசித்தால் இன்னொரு அர்த்தமுள்ள ச்லோகம் கிடைக்கும்; அதுவும் லக்ஷ்மீ விஷயமாக இதற்கடுத்த ச்லோகமாக இருக்கிறது என்பதாம்.

ஆகரம் என்ற சொல்லுக்கு மூன்று அர்த்தங்கள். சுரங்கம் என்றும், குவியல் என்றும், ச்ரேஷ்டம் என்றும். இந்த மூன்றுமே இங்கு பொருந்தும். அவளைக் கீர்த்திப்பதற்குச் சுரங்கம் போன்றவை அவளது நாமங்கள்; தோண்டத்தோண்ட மேன்மேலும் கிடைப்பவை; நிறையப் புதைந்து கிடப்பவை; வல்லுனர்களால் மட்டுமே வெளிக்கொணர முடிபவை. இது முதல் அர்த்தம். துதிக்காகக் குவியலாய்க் கிடப்பவை. ஸஹஸ்ரநாமமே கூட உண்டு. ஸநத்குமாரரின் லக்ஷ்மீஸஹஸ்ரநாமத்தில் இல்லாத பல நாமங்களும் இந்த லக்ஷ்மீஸஹஸரத்தில் சொன்னவை உண்டு. இது இரண்டாம் அர்த்தம்.

பேச்சுக்களுள் சிறந்தவை திருமகளின் திருநாமங்கள் தான். மற்ற வார்த்தைகளெல்லாம் அந்த அளவுக்கு மதிப்பு பெறாதவை. இது மூன்றாவது அர்த்தம்.

இவளுக்கு வாத்ஸல்யம் ததும்புவதால், அன்பு பெருகுவதால், உள்ளம் உருகுவதால், அருள் பொழிவதால், இவளை ஶரணா என்பது பொருந்தும்.

இவள் விஷயமான ஸ்தோத்ரத்தை (இந்த லக்ஷ்மீஸஹஸ்ரம் போன்றவற்றை) சிறந்த ஓடமாகச் சொல்வதும் பொருந்தும். இதன் மூலம் நாம் துக்கக் கடலை, ஸம்ஸார ஸாகரத்தை, மாயைச்சேற்றைத் தாண்டிவிட முடிவதால். வாயிலுண்டே என்ற பாடலில் ஒரு ஆழ்வார் கூறியபடி, துதிப்பதற்குத் தேவையான சரீரமும், வார்த்தையும் இருக்கும்போது, துதிக்காமல் இங்கேயே தத்தளிப்பவர்கள், சரீரமும் படகும் அருகிலிருந்தும், கடல் நீரில் தத்தளிப்பவர் போலவாம்.

இவளை அரிஹரா என்கிறாரே, இவள் எந்தப் பகைவரைப் போக்குகிறாள்? என்றால், காமம்,க்ரோதம் முதலிய உட்பகைவர்களையும், வாழ்க்கையில் நம்மை த்வேஷிப்பவர்களையும், முன்னேற்றத்துக்கு

முட்டுக்கட்டையாயும் முட்களாயும் இருப்பவர்களையும் திருமகள் தொலைத்துக் கட்டிவிடுவாள். இவளை ஸேவிக்கத்தக்கவள் என்றது ஏனென்றால், உயர்வும், உதவும் குணமும், உதவும் திறனும்,உதவவேண்டிய உறவும், உதவினால் பெரும் பயன் உண்டாவதும், ஒருங்கே அமையப் பெற்றதால். பெரிய மலை உயர்ந்திருந்தாலும் ஸேவிக்கத் தக்கதன்று. பக்கத்து வீட்டுக்காரன் உதவும் பண்பு உள்ளவனாயினும், கையாலாகாதவன் ஆதலால் ஸேவ்யனன்று.பக்கத்து நாட்டு அரசன் உபகாரியாயினும் நமக்கு உதவமாட்டான் ஆகையால் ஸேவ்யனன்று. எல்லாக் காரணங்களாலும் லக்ஷ்மீயே ஸேவ்யை என்ற தாத்பர்யத்தில் ஸேவ்யா என்கிறார்.

இந்த ஶ்லோகத்தில் பொதிந்துள்ள கருத்துகளைச் சுருக்குவோம்:

1. உடல் படைத்த பலனே லக்ஷ்மியைத் துதிப்பது தான்.
2. கரை தாண்டுவிக்கும் படகுகளில் மிகச் சிறந்தது லக்ஷ்மீஸ்தோத்ரம் ஆகும்.
3. ஸேவிக்கத் தக்கமை லக்ஷ்மிக்குப் பல காரணங்களால் உண்டு.
4. அதில் ஒரு காரணம் அவள் ஸரஸா என்பது, விரஸர்கள் அசேவ்யர்கள்.
5. அவளைப் பற்றி வர்ணித்து மாளாது சிறிது வர்ணித்தபிறகு காமி என்று சொல்லி நிறுத்த வேண்டியது தான்.
6. அவளுக்கு ஏராளமான திருநாமங்கள் புதையலாய், சுரங்கமாய், குவியலாய் இருப்பவை.
7. வார்த்தைகளுள் சிறந்தது அவளது திருநாமம்தான்.
8. அவளை ஸேவிப்பவர்களைப் பகைவர்கள் நெருங்க முடியாது.
9. மா என்பதும், ஸா என்பதும், கா என்பதும் அவளது பெயர்கள்.

10. இங்கேயே நாம ஸங்கீர்த்தனம் பண்ணலாம். உசிதஸ்தலத்தை தேடி வேறெங்கும் போகவேண்டாம்.
ஏதோ ஓர் பண்புடையாள். ஏராளம் பெயருடையாள்.
ஏதலரைப் போக்கிடுவாள். ஏத்துனரை கரை சேர்ப்பவள்.

—★—

13.அச்சத்தை அழிப்பவள்.

या च वाति स्तुवानाग्र्य व्यासेरा हरिनायिका ।
कामनारकपालाभि त्रासासारसमापिका ॥१३॥

யா ச வாதி ஸ்துவாநாக்₃ர்ய வ்யாஸேரா ஹரி நாயிகா ।
காமநாரகபாலாபி₄த்ராஸாஸாரஸமாபிகா ॥ 13 ॥

या च= எவளும்.

हरि नायिका=திருமாலின் துணைவியோ

स्तुवान-अग्र्य-व्यास-इरा: =துதிப்பவர்களுள் சிறந்தவரான வ்யாஸரது வார்த்தைகளை

वाति=மணம் வீசுகிறாளோ

काम-नारक-पाल-अभि-त्रास-आसार-समापिका காமம் என்கிற நரகக் காவலனால் நாலாபக்கங்களிலும் அச்சம் பெருகுவதை முடித்துக்கட்டுபவளே! உன் மேல் இதிஹாஸபுராணங்களின் வாசனை வீசுகிறது.ஏனெனில் அவையும் உன் தோத்திரங்களை அடக்கியவை. காமம் நம்மைப் பாவங்களைப் பண்ணச்செய்து நரகத்தின் நுழைவாயிலுக்கு நம்மைச் செலுத்துவதால் அதை ஒருவிதத்தில் நரகக் காவலன் என்னத்தகும். அதனால் ஏற்படும் பயம் பல திசைகளிலிருந்தும் பெருக்கெடுத்து வரும் வேளையில் அதற்கு ஒரு முடிவு கட்டுபவள் நீ. இந்த ச்லோகத்தின் விசேஷம் இதைத் தலைகீழாக வாசித்தால் போன ச்லோகம் வருகிறது என்பதாகும். இப்படி இயற்றுவது அரிதாதலால், (இரா என்றால் வாக்கு; இது முதலான) அபூர்வபதங்களையும் அர்த்தங்களையும் அறியும் வாய்ப்பு நமக்கு. பலர் பலவிதமாக அர்த்தம் சொல்ல இடம் கொடுக்கும்

ச்லோகங்கள் இத்தகையவை. இதோ சிலரது விளக்கங்கள்: வாதன் என்றால் வாயுபகவான். அவனுடைய குமாரனான ஹநுமானை மாருதி என்பது போல் வாதி என்பதும் தரும். இந்த வாதியைப் பாராட்டிப் பேசுகிற ஸீதை வாதிஸ்துவானா எனப்படுகிறாள். மேலும் மாருதியைத் துதிப்பவர் பலர். அவர்களுள் சிறந்தவர் வ்யாஸர். வாயு குமாரனான பீம ஸேநனைப் புகழ்ந்தெழுதியதாலும் வ்யாஸர் வாதிஸ்துவாநாக்ர்யர் ஆகிறார். அந்த வேத வ்யாஸரிடம் இருக்கும் ரா=செல்வம்,வேதமெனும் செல்வம், இந்த மஹாலக்ஷ்மிதான் ஆகையால் இவள் வ்யாஸே ரா ஆகிறாள் இது முதல் பாதிக்கு இரண்டாம் பொருள். இரண்டாம் பாதிக்கும் வேறு பொருள் கூற இடம் உண்டு. நாரகபாலஸ்தின் என்கிறவன் யமன். எனக்கு ஒரு பக்கம் மன்மதனிடமிருந்தும் இன்னொரு பக்கம் யமனிடமிருந்தும் பயம் ஏற்படுவதால் அமித்ராஸம்(பல பக்கத்துக்கு பயம்) அதிகமாய் இருக்க அதை முடிவுக்கு கொண்டு வருபவள் லக்ஷ்மீ. காமனும், யமனும் என்னை ஹிம்ஸிக்காமல் பண்ணுபவள், இஹத்திலும் பரத்திலும் நன்மை செய்பவள் என்று தாத்பர்யம்.

இப்படிப் பல அர்த்தங்களால் சிறு ச்லோகத்திலும் ஏராளமான தாத்பர்யங்கள் கிடைக்கின்றன.

1. வ்யாஸரின் இதிஹாஸ புராண வார்த்தைகளுக்கு மணமூட்டுபவள் லக்ஷ்மீ.
2. தானே வேதமாக நின்று, வேத வ்யாஸரிடம் ஸம்பத்தியானவள் லக்ஷ்மீ.
3. ஹரிச்ரேஷ்டனான ஹநுமானை பாராட்டுகிற ஹரிநாயிகை லக்ஷ்மீ.(ஹரி என்பதற்கு இரு பொருட்கள்.)
4. நமக்கு ம்ருத்யுபயத்தை ஒழிப்பவள் லக்ஷ்மீ.
5. நம்மை நரகத்திற்கு செலுத்தும் காமபீடையை தொலைப்பவள் லக்ஷ்மீ.

6. காமத்தையும் யம பயத்தையும் போல எல்லா அஸாரங்களையும் ஸமாப்தி பண்ணுபவள் லக்ஷ்மீ. (வேறொரு பதச்சேதத்தால் இவ்வர்த்தம்.)

7. ஹரியின் நாயகியானவள் லக்ஷ்மீ.

8. காமபாலனான ஹரியிடமிருந்தும் நரகபாலனான யமனிடமிருந்தும் நம் பயத்தை அழிப்பவள் லக்ஷ்மீ.

முன்னுனைத் துதிப்பதற்கு
முயன்றவர்க்குள்ளே வ்யாஸர்
முக்கியர் அவருடைய
மொழிமணம் வீசுகின்றாய்.

14.துர்ஜநர்களைத் துரத்துபவள்.

अच्छभावा फणिशये जगन्नाथे झषाङ्कदा ।
आरूढाघखलापीडोच्चाटा त्रृद्धिं हि सौति मा ॥ १४ ॥

அச்சப$_4$ாவா பணிஶயே ஜக$_3$ந்நாதே$_2$ ஜஷாங்கத$_3$ா ।
ஆரூட$_3$ாக$_4$ க$_2$லாபீடோச்சாட$_4$ா ருத்திம் ஹி ஸௌதி மா ॥ 14 ॥

अच्छ-भावा= தெளிவான எண்ணமுள்ளவளும்.
फणि-शये= சேஷசாயியான
जगन्नाथे= ஜகந்நாதனிடம்.
झष-अङ्क-दा= மன்மத லீலை தருபவளும்
आरूढ-अघ-खल-आपीडा-उच्चाटा= ஏறிய பாவமுள்ள போக்கிரிகளின் ஹிம்ஸையைப் பெயர்த்தெறிகிறவளுமான.
मा= லக்ஷ்மீ.
त्रृद्धिं= செழிப்பை
सौति= விளைவிக்கிறாள்.
हि= அல்லவா?

லக்ஷ்மீ குழம்பாமல் தெளிந்த எண்ணங்களை உடையவள். திருமாலுக்குப் பாம்புப்படுக்கையில் காமலீலாரஸத்தைத் தருபவள். பாவம் முற்றிய போக்கிரிகளின் ஹிம்ஸையை நிர்மூலனம் பண்ணுபவள். அவள் செழிப்பை உண்டுபண்ணுகிறாள்.

இந்த ஶ்லோகத்தில் என்ன விசேஷம் என்றால் முப்பத்திரண்டு எழுத்துக்களில் எதுவுமே மீண்டும்

வரவில்லை எந்த மெய்யெழுத்தும் இரண்டுமுறை வரவில்லை. மொத்தம் முப்பத்துமூன்று மெய்யெழுத்துக்கள் மொழியில் உள்ளனவே. அவற்றுள் மூன்றைத்தவிர எல்லாமே வந்துள்ளன. இந்த விசித்ரத்தை **அநாவ்ருத்தவ்யஞ்ஜநம்** என்கிற ஶப்தசித்ரமாகக் கூறுவர்.

பணிஶயே என்பதற்கு இரண்டுவிதமான பொருள் கூறலாம். பாம்பில் படுத்திருப்பவனிடம் என்று ஒன்று, பாம்புப் படுக்கையிலே என்று மற்றொன்று. இரண்டும் இங்கு பொருந்தும். **கல-ஆ-பீடா** என்று பிரிக்காமல் **கல-ஆபீட** என்று பிரித்தால் அர்த்தம் வேறு. போக்கிரி ஶிகாமணிகள்- அதாவது அதிதுஷ்டர்கள் என்று அர்த்தம் அவர்களை வெட்டிச் சாய்த்துவிடுவாளாம் லக்ஷ்மீ. **ஶாந்திரஸம்,ஶ்ருங்காரரஸம், ரௌத்ரரஸம்** என்ற மூன்றுமே ததும்புபவள் லக்ஷ்மீ. முதலாவது தொண்டர்களிடத்திலும் இரண்டாவது கணவனிடத்திலும் மூன்றாவது கலர்கள் (துஷ்டர்கள்)இடத்திலும் அவளால் வெளியிடப்படும். இந்த மூன்றுமே நமக்கு செல்வச் செழிப்பிற்கு ஹேதுவாகின்றன. சில பதிப்புகளில் இந்த ஶ்லோகத்தின் கடைசி எழுத்து **மா** என்பதற்குப் பதிலாக **ஸா** என்று இருக்கிறது. அர்த்தத்திற்கு ஒத்துவரும். ஆனாலும் அது தவறான பாடம். இந்த ஶ்லோகத்துச் சொல்வேடிக்கையைப் புரிந்து கொண்டவர்களுக்கு அந்தத் தவறு எளிதில் புரியும். **ஸௌதி** என்ற பதத்தில் ஸகாரம் வந்து விட்டதே. மறுபடியும் **ஸா** என்று வரக்கூடாது அல்லவா? **மா** என்பதே சரியான பாடம். அந்த எழுத்து ஶ்லோகத்தில் வேறெங்கும் வரவில்லை.

இந்த ஶ்லோகத்தில் வராத மெய்யெழுத்துக்கள் **ஞ்,ட்$_2$,ப்$_3$** என்கிற மூன்று மட்டுமே இந்த மூன்றையும் விட்டுவைப்பானேன் என்று சிலருக்கு ஆர்வம் பொங்கியது போலும்! ஆகையால் பாடபேதங்கள் பண்ண முற்பட்டனர். **ருத்திம்** என்பதற்குப் பதில் **பு$_3$த்திம்** என்று போட்டுச் சுலபமான மூன்றில் ஒன்றை வரவழைத்துவிட்டார்கள். மூன்றாம் பாத ஆரம்பத்தில் **ஆரூட** என்றிருப்பதை **டா$_2$ரூட**

என்று மாற்றி டூ என்கிற ஒற்றை எழுத்து பதத்திற்கு ஒரு கோஶத்தின் உதவியுடன் கஷ்டப்பட்டு அர்த்தம் சொல்லி, விட்டுபோன மூன்றில் இரண்டாவதையும் வரவழைத்துவிட்டார்கள். மேலும் ஜகந்நாதே என்ற பதத்திற்கு முன் மாறுதல் பண்ணி ஞ் என்கிற எழுத்தையும் வரவழைத்தார்கள். இப்படி எல்லாம் பண்ணினால் க்லிஷ்டமாகவேனும், முப்பத்துமூன்று மெய்யெழுத்துக்களையும் ஒன்று விடாமல் இந்த ஶ்லோகத்தில் கொண்டு வந்த சொல் வேடிக்கையும் நடக்கிறது. ஆனால் க்லேஶமில்லாமலே வெகு ஸஹஜமாக முப்பது மெய்யெழுத்துக்களை ஒரே ஶ்லோகத்தில் எதுவும் திரும்ப வராமல் அமைத்த பாங்கே பாராட்டுக்குரியது தான்; பாடபேதங்கள் எல்லாம் வேண்டாம். பலவிதமாக அர்த்தம் சொல்ல முடிவதால் இந்த ஶ்லோகத்தில் எட்டு கருத்துகள் அடங்கியுள்ளன:

1. லக்ஷ்மியின் அபிப்ராயம் ஸ்வச்சமாக இருக்கும். குழம்பியிருக்காது.
2. லோகநாதனுக்கும் லீலாரஸம் சேர்ப்பவள் இவள்.
3. போக்கிரித்தலைவர்கள் பண்ணும் ஹிம்ஸைகள் நம்மை அண்டாதபடி அவற்றைத் தடுப்பவள்.
4. இன்னும் சொல்லப்போனால் அந்தத் துஷ்டசிகாமணிகளையே இருக்குமிடம் தெரியாமல் பண்ணிவிடுவாள்.
5. நம்மைப் போலன்றி அவள் திருமாலிடம் தெளிந்த எண்ணம் கொண்டவள்.
6. அவள் செல்வச் செழிப்பை ஸ்ருஷ்டிக்க வல்லவள்.
7. திருமாலுக்குக் காமரஸத்தையும் கொடுப்பாள்! காமனைப் பிள்ளையாகப் பெற்றும் கொடுப்பாள்!
8. கருத்துத்தெளிவு, பகவானிடம் வாத்ஸல்யம், தீயவரை ஒறுத்தல், என்கிற மூன்றாலும் நமக்குச் செழிப்பு பண்ணுவாள்.

கருத்தினில் கலங்காத்தன்மை கணவன்பால் காதல் அண்மை கலிடம் கடுமை நம்மைக் காக்கவே கமலை வண்மை.

(தொடர்ச்சி)

15. உடலில் உறுதியை உண்டாக்குபவள்

दार्ढ्यदा मम हे देहे सात्रासा लल मेऽन्तिमे ।
खेदिखेऽहह याने या तार्क्ष्येताद्य च तान्तताम् ॥ १५

தார்ட்யதா மம ஹே தேஹே ஸாத்ராஸா லல மே5ந்திமே ।
கேதிகேஹஹ யாநே யா தார்க்ஷ்யேதாத்ய த்ய
தாந்ததாம் ॥ 15

हे मे = ஓ லக்ஷ்மியே !
मम = என்னுடைய
देहे = உடலில்
दार्ढ्य-दा = உறுதியைக் கொடுப்பவளாய்
स-अत्रासा = அபயஹஸ்தத்தோடு கூடியவளாய்
लल = கொஞ்சு.
मे = என்னுடைய
अन्तिमे = இறுதிபானதும்
खेदि-खे = துயருள்ள புலன்கள் கொண்டதுமான
याने = பயணத்தில்
या = யாதொருவளான நீ
तार्क्ष्य-इता = கருடனால் சென்றவளோ,
அந்த நீ
अद्य = இப்பொழுது
तान्ततां = வாட்டத்தை,
च = வெட்டிப் போடு
अहह = அடக்கஷ்டமே

திருமகளே ! நீ எனக்கு என்னென்ன பண்ண வேண்டும் தெரியுமா? நிறைய வேண்டுகிறேன். ஆரோக்யத்தைத் தரவேண்டும். வஜ்ரசரீர ஸித்திரஸ்து என்று ஒரு ஆசீர்வாதம் பண்ணுவார்களே, அது போல உடற்கட்டு வாய்க்கச் செய்ய வேண்டும். உன் அபயஹஸ்தம் மூலம் அஞ்சல் அஞ்சல் அஞ்சல் 1என்று அளிக்க வேண்டும். மேலும் என்னிடம் வாத்ஸல்ய மிகுதியால் குழந்தையுடன் விளையாடுவது போல் கொஞ்ச வேண்டும். என்னுடைய மரண காலத்தில், புலன்கள் துன்பப்படும்போது, கருடவாஹனத்தில் ஏறிவந்து ரக்ஷிக்க

வேண்டும். என்னுடைய வாட்டத்தைக் கண்டதுண்டமாக வெட்டிப்போட வேண்டும். இவ்வாருக ஆரோக்யம் அளித்தல், அபயம் அளித்தல், அன்பைப் பொழிதல், துயரம் துடைத்தல், துணையாய் நிற்றல், என்ற பலவற்றையும் எனக்காகப் பண்ண வேண்டும். இந்த ஸ்லோகத்தில் உள்ள அற்புதங்களில் ஒன்று இதைத் திருப்பி, கடைசி எழுத்திலிருந்து முதல் எழுத்து வரையாகப் படித்தால் வரும் இன்னொரு ஸ்லோகத்துக்கும் அர்த்தம் உண்டு என்பது. அந்த ஸ்லோகம் வருமாறு-

தரந்ததாம் த்யஜ த்யஜ தாங்க்ஷ்பேதா யாதேயா ஜைம கேதிகே ।
பேர்த்தி மே லல ஸாத்ராணா தேஜ தேஜே மம தார்ட்யதா ॥

என்பதாகும். இதில் உள்ள பதங்களும், தார்ட்யதா என்று தொடங்கும் உள்ள ஸ்லோகத்துப் பதங்களும் ஒன்றே என்பது மேலுமொரு அற்புதம். ராகவ யாதவீயம் முதலிய நூல்களில் உள்ள விசித்ர ஸ்லோகங்கள் திருப்பி வாசித்தால் வேறு பதங்களுடன் வேறொரு அர்த்தமுள்ள ஸ்லோகத்தைக் கொடுக்கும். ஆனால் இதில் ஸ்லோகத்தைத் திருப்பி வாசித்தால் வேறு ஸ்லோகம் வந்தாலும், இதே பதங்களே வேறொரு வரிசைக் க்ரமத்தில் வருகின்றன. இது அற்புதம். இதற்குக் கவி பண்ணின உபாயம் என்னவென்று புரிந்துகொள்ள முடிகிறது. சில ஈரெழுத்துப் பதங்களும் சில மூவெழுத்துப் பதங்களும் திருப்பிப் போட்டாலும் மாருதவையாக எடுத்துக் கொண்டார். அத்தகைய பதங்களை மட்டும் கோர்த்து முழு ஸ்லோகத்தையும் பண்ணிவிட்டார். தமிழிலும், இத்தகைய பதங்கள் நிறைய உண்டு. பாப்பா, மாமா, விகடகவி, தேருவருதே, மாடுபாடுமே, தாயேதா, தேடுதே, தாத்தா, காக்கா, தந்த,தேவாதே,மாயமா, என்று நிறைய உதாரணங்கள் காட்டலாம். ஆனால் இந்த மாதிரிச் சொற்களை மட்டும் வைத்து நீண்ட வாக்யம் அமைக்க முடியுமா? முடிந்தாலும் அதை முழுச் செய்யுளாக்க முடியுமா? இந்தக் கவி இந்த அற்புதத்தை அனாயாசமாகப் பண்ணியிருக்கிறார் இந்த ஸ்லோகத்தில். இது ரொம்பக் கஷ்டம் ஆயிற்றே என்று உரையாசிரியர்கள்

வியக்கிறார்கள். சரி, இனி அர்த்தத்தை அலசுவோம்- லக்ஷ்மியிடம் போய்த் தனக்கு உடலுறுதியை வேண்டுகிறாரே, அது தகுமோ? அவளிடம் செல்வம் வேண்டுவது பொருந்தும்; ஆரோக்யம் பாஸ்கராத் இச்சேத் என்று மூதுரையும் உண்டு என்று ஆட்சேபிக்க வேண்டாம். ஶரீராரோக்யம் ஐஶ்வர்யம் என்று தொடங்கும் விஷ்ணுபுராண ஶ்லோகத்தில் தேவேந்த்ரன் நமக்கு வழிகாட்டுகிறான், ஆரோக்யத்தை மஹாலக்ஷ்மியிடமிருந்து பெறலாம் என்கிற விஷயத்தில்.

அபயத்தோடு கூடினவள் என்று அவளைச் சொல்வது தகும். நம்மைப் போன்ற நீசர்களுக்கும் பெரும் குற்றவாளிகளுக்கும் உதவுவதற்கு இந்த்ராதி தேவர்களும் பயப்படலாம், பின் விளைவுகளை எண்ணி - ஆனால் மலர்மகள் அஞ்ச வேண்டியதே இல்லை. குழந்தைகளுக்கு உதவுவதில் தாயாருக்கு என்ன அச்சம்? தான் அஞ்சாதது மட்டுமின்றி நம் அச்சத்தையும் தீர்ப்பவள் அவள். அந்திம ப்ரயாணத்தில் ஐம்புலன்களும் க்ஷேமடையும்; இப்போது வாட்டம் தீர் என்று வேண்டுவது அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன் என்று பெரியாழ்வார் ப்ரக்ரியைப்படியாகும்.

இந்த்ரியங்கள் இன்னலினால் இறுதியிலே இழிபடுங்கால்
இந்திரையே! உன் வரவால் இறந்தவுடன் அருள்வாள் மால்.

அஹஹ என்றது மரண வேதனையை நினைத்து ஐயையோ என்று சொல்வதாகவும் கொள்ளலாம். வேகமாகக் கருடனில் ஏறி வரும் தாயாரின் அன்பை நினைத்து ஆச்சர்யப் படுவதாகவும் கொள்ளலாம். யாநே என்பதற்கு ப்ரயாணத்தில் என்று அர்த்தம் சொல்லாமல் வாஹனத்தில் என்று அர்த்தம் சொல்பவரும் உளர்; அவர்கள் க்ஷதிகே யாநே என்று அன்வயிக்காமல், யாநே தார்க்ஷ்யேதா என்று அந்வயிக்கிறார்கள்.

தார்க்ஷ்யேதா என்றதன் கருத்து என்னவென்றால், உதவிக்கு ஓடோடி வருவாள்; கருடனிலேறிப் பறந்து வருவாள்; என்பதாம்.

அத்ய என்று பதம் பிரிக்காமல் த்ய என்று பிரிப்பவரும் உளர்; அவர்கள் த்ய த்ய என்று இரண்டு தடவை இருப்பதால், வெட்டு வெட்டு என்று அர்த்தம் சொல்கிறார்கள். இதில் வேறொரு ஔசித்யமும் (தகுதியும்) இருக்கிறது. ச்லோகத்தைத் திருப்பிப்போடும்போது, அத்ய என்ற பதத்தைக் கொண்டு வர முடியாது; பதங்கள் மாறுவதில்லை என்ற நியமம் மீறப் படாமலிருக்க த்ய த்ய என்றே சொல்லலாம். பாடபேதங்கள் பல உண்டு. திருப்பிப் போட்டாலும் மாறாத மூன்றெழுத்துப் பதங்கள் தேவை என்கிற ஸூக்ஷ்மத்தைப் புரிந்து கொண்டு, மேந்தி மே என்பதற்குப் பதில், மேதிமே என்று ஒரு பதிப்பிலும், மேபிமே என்று இன்னொரு பதிப்பிலும் அச்சிட்டுள்ளனர். அதி மே என்பதற்கு அதிக அழகுள்ளவளே என்று ச்ரமப்பட்டு அர்த்தம் சொல்லுகிறார்கள். தந்ததாம் என்பதற்குப் பதில் தாமிதாம் என்று க்ரந்தாக்ஷரப் பதிப்பில் பாடம்; அர்த்தத்தில் மாறுதல் இல்லை. ஸந்த்ராஸ என்னுமிடத்தில் முதலில் ஸா என்று தனிப் பதமாகப் பிரித்து உரை எழுதியவர்களும் உண்டு.

உறுதியுடை உடற்கட்டும் உம் அன்பால் கிட்டட்டும்.
உயிர் போகும் காலத்தும் உபத்ரவத்தை நீர் வெட்டும்.
வாத்ஸல்யம் பொங்கட்டும். வாட்டமெலாம் தீரட்டும்.
வளிஜை புன்னோறட்டும். வந்தென்னைக் காக்கட்டும்.

— ★ —

16. தீவினைக்குத் தீ மூட்டுபவள்

मयि ते पदभक्तेऽस्मिन् प्रसीद कमले! हिते!।
तेजसा दह शक्ते त्वं क्षिप्रमुग्रदघं मम ॥ १६ ॥

மயி தே பதபக்தேऽஸ்மிந் ப்ரஸீத கமலே! ஹிதே!।
தேஜஸா தஹ ஶக்தே த்வம் க்ஷிப்ரமுத்யதகம் மம ॥ 16

कमले = தாமரையாளே!	ते = உன்னுடைய
शक्ते = ஶக்திஸ்வரூபிணியே!	पद-भक्ते = திருவடித் தொண்டனான
हिते = ஹிதமானவளே!	अस्मिन् = இந்த

मयि = என்னிடத்தில்
प्रसीद = அனுக்ரஹி.
मम = என்னுடைய
उद्यत्-अघं = உதிக்கிற பாவத்தை
त्वं = நீ
क्षिप्रं = அவஸரமாக
तेजसा = ப்ரபாவத்தாலே,
நெருப்பாலே
दह = கொளுத்து.

நான் உன் திருவடியில் பக்தி பூண்டவன். உனக்கு அனுகூலனானவன். கமலையே ! இந்த அடியேனிடம் அனுக்ரஹம் பண்ணு. நான் பாவி, என் பாவங்கள் புதிது புதிதாக முளைக்கின்றன. உன் தேஜஸ்ஸினால் என் பாவத்தை விரைவாக எரித்து விடு. நீயே மக்திஸ்வரூபிணியாதலால் நீ எரிக்க வல்லவள்.

பதபக்தே என்றதன் கருத்து - உன்னை உபாஸிக்கவோ, விதிப்படி ஆராதிக்கவோ கூட வக்கில்லாத நான் உன் திருவடித் தொண்டன் என்ற மாத்திரத்தாலேயே உன் அனுக்ரஹத்தைக் கோருகிறேன் என்பதாம்.

அஸ்மிந் என்றதன் கருத்து - இதோ அருகில் உள்ளவன் நான்; இந்த ஸாமீப்யத்தையே உபாயமாகக் கருதி நீ அனுக்ரஹிக்கலாகாதோ, என்பதாம்.

ஹிதே என்ற பதத்துக்கு இரண்டு அர்த்தங்கள் சொல்லலாம். ஹிதமானவளே என்று ஒன்று; அனுகூலனான என்னிடத்தில் என்று இன்னொன்று. (இப்படி விளியாகவும் ஏழாம் வேற்றுமை ஒருமையாகவும் இருபொருள் படும் பதங்கள் நிறைய ஸ்வாரஸ்யம் தருவதை தயாமதகத்தில் ம்ருதுஷ்ம்ருதயே என்ற ச்லோகத்தில் காணலாம்).

தேஜஸா என்பதற்கும் இரண்டு அர்த்தங்கள். நெருப்பு என்று ஒன்று; ப்ரபாவம்என்று மற்றொன்று. உன் ப்ரபாவத்தால் கொளுத்து என்றது இந்த இரட்டை அர்த்தத்தால் யுக்தமாகிறது.

க்ஷிப்ரம் என்றால் விரைவாக என்று பொருள். இதை இரண்டு விதமாக அந்வயிக்கலாம்: விரைவாக முளைக்கும்


பாவம் என்றும், விரைவாகக் கொளுத்து என்றும், நீ விரைவாகச் செயல்பட வில்லையென்றால், தீவினைகள் மூட்டை மூட்டையாகக் குவிந்து விடுமே என்கிற அச்சம்.

உத்யத் என்றதன் கருத்து, முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும் என்பதாம். சற்று தளிர்க்க விட்டாலும், பாடாய்ப் படுத்தும் பாவங்கள் என்று கருத்து.

ஶக்தியே என்று தாயாரை இங்கு விளிப்பது ஏனென்றால், தீவினையைத் தீயிலிட்டது போல் கொளுத்துவதற்கும், அதையும் விரைவாகக் கொளுத்துவதற்கும், அதையும் உதிக்கும்போதே மாய்ப்பதற்கும், மற்றவர்களால் ஆகாது; ஶக்திஸ்வரூபியான உன்னால் தான் முடியும் என்று கருத்து.

இந்த ஶ்லோகத்தில் ஒரு ஶப்தசித்ரம் இருக்கிறது. ஒன்று விட்டு ஒன்றாக எழுத்துகளை எடுத்தால், 1,3,5,7,9,11 ஆம் எழுத்துகள் ம, தே, த, க்தே, ப்ர, த என்பவை. இதே எழுத்துகள் மீண்டும் வந்துள்ளன. 13,16ம் 17ம், 20,23,26,29,32 ஆம் எழுத்துகளாக; அதாவது இரண்டு விட்டு ஒன்றாக. இதற்கு த்விஶ்ருங்காடக சக்ரபந்தம் என்று பெயர். இதை இப்போது விளக்குவோம்.

கமலேயே! உன்னுடைய காலில் விழும் என்னுடைய
கடுவினைகள் நன்கெரியக் கடுவருள் புரிவாயே.




த்விஸ்ருங்காடக சக்ரபந்தம் என்பதில் பூர்வார்த்தம் (ஸ்லோகத்தின் முதல் பாதி) எந்த எழுத்தில் முடிகிறதோ, அதே எழுத்திலேயே உத்தரார்த்தம் (பின் பாதி) தொடங்க வேண்டும்.

உத்தரார்த்தம் எந்த எழுத்தில் முடிகிறதோ அதே எழுத்தில் பூர்வார்த்தம் தொடங்கவேண்டும். ஒரே மையம் கொண்ட இரண்டு வட்டங்களை வரைந்து கொண்டு, உள் வட்டத்தில் ஸ்லோகத்தின் முதல் பன்னிரண்டு எழுத்துகளை எழுத வேண்டும். வெளிவட்டத்தில் *14,15,18,19,21,22,24, 25,27,28,30,31* ஆம் எழுத்துகளை எழுத வேண்டும். ஒன்று விட்டு இரண்டாக வரும். ஏற்கெனவே சொன்னபடி 16ம் 11ம் ஒன்றாகவும் வெளிவட்டத்தில் வராததாகவும் இருக்கும். இப்படியாக மொத்தம் உள்ள முப்பத்திரண்டு எழுத்துகளில், உள்வட்டத்தில் பன்னிரண்டும், வெளிவட்டத்தில் பன்னிரண்டும் இருக்கும், மீதி எட்டும் ஏற்கெனவே உள் வட்டத்தில் வந்த எழுத்துகள் திரும்பவும் வந்தவையாக இருக்கும். இரு வட்டச் சித்திரத்தில் இருபத்துநாலு எழுத்துக்களை எழுதியபிறகு, அவற்றை எந்த வரிசையில் வாசிக்க வேண்டும் என்பதைக் தெரிவிப்பதற்காக ஆறு இடங்களில் இரண்டிரண்டு கோடுகள் இருக்கும். இவ்விடங்கள் நாற்சந்திகளாய் இருக்க, இவற்றுள் இரண்டு நுழைவாயில் போல் இருக்கும். இப்பொழுது படத்தைப் பாருங்கள்.தமிழில் இதே போல் பண்ண முயன்றால், படிப்படியாகப்போகலாம். முதலில் மூவெழுத்துப் பதங்களும் நாலெழுத்துப் பதங்களும் ஜதை ஜதையாக வைத்துக்கொள்வோம். பேரவை, பேசுபவை

கிணறு, கிழியறு

என்பன போல; இருபதங்களுக்கும் முதல் எழுத்தும் ஒன்றே; கடைசி எழுத்தும் ஒன்றே.

இதற்கடுத்த படியாக ஐந்தெழுத்துச் சொற்றொடரும், ஏழெழுத்துத் தொடரும்.



முதலெழுத்தும் ஒன்றே; நடுவெழுத்தும் ஒன்றே; கடைசி எழுத்தும் ஒன்றே.

உதாரணம் : அலைமகளே, அழகு மலராளே.

இதற்குமேல் இன்னும் கொஞ்சம் நீட்ட முயல்வோம்.

அலைமகளே தலைவியே என்பதொன்று; அழகு மலராளே கமலையே தாயே என்பது இன்னொன்று. இதை மேலும் நீட்டி முழுச் செய்யுளும் பண்ணுவது கஷ்டம். நாம் நிறுத்தி விடுவோம். வேங்கடாத்வரி முழுதாகப் பண்ணியிருக்கிறார். அதுதான் இந்த ஸ்லோகம்.

இனி அர்த்தத்தின் ஸாரம் என்னவென்றால்,

கமலையே உன்னுடைய கலவில் விழும் என்னுடைய
கடுவினைகள் நன்கெரியக் கடுகவருள் புரிவாயே.

— ★ —

17. அவலநிலை அச்சத்தை அகற்றுபவள்

भजेमहि हरेः कान्तां कारुण्यरसपूरिताम् ।
भवामयहरां कामं कार्पण्यत्रासहारिणीम् ॥

ப₄ஜேமஹி ஹரே: காந்தாம் காருண்ய ரஸ பூரிதாம் ।
ப₄வாமயஹராம் காமம் கார்பண்ய த்ராஸ ஹாரிணீம் ॥

हरेः = திருமாலின்
कान्तां = காதலியும்
कारुण्य-रस-पूरितां= அருள் ரஸம் நிரம்பியவளும்
भव-आमय-हरां = ஸம்ஸார நோயைப் போக்குபவளும்
कामं = மிகவும்
कार्पण्य-त्रास-हारिणीं = அவலத்தால் வரும் அச்சத்தைத் தொலைப்பவளும் ஆன லக்ஷ்மியை
भजेमहि = வணங்குவோமாக.

ஹரிப்ரியையை நாம் அடைவதற்கு மூன்று காரணங்கள். அவள் (நம்மை உதாஸீனப் படுத்தாமல்) நம் மேல் அருள் பொழிகிறாள். அவள் நமது பிறவிப் பெரும்பிணியைத் தீர்க்கிறாள். அவள் நம் தைந்யத்தைத் தொலைக்கிறாள்; நமக்குத் தெம்பூட்டுகிறாள். நமக்கு மூன்று விதமாக உதவி புரிபவளை வணங்குவது நல்லது.

பஜேமஹி என்று பன்மையில் சொன்னதன் கருத்து நாம் பலரும் சேர்ந்து பயன்பெறலாம் என்பதாம்.


கார்ப்பண்ய த்ராஸம் என்பதற்கு இரண்டு விதமாக அர்த்தம் சொல்லலாம். அவலத்தால் உண்டான அச்சம் என்பது ஒன்று. அவலநிலையும் அச்ச நிலையும் என்று இன்னொன்று. தைர்ய லக்ஷ்மியாய்க் கார்ப்பண்யத்தை நீக்குபவளும், வீரலக்ஷ்மியாய்ப் பயத்தை நீக்குபவளும் ஒருவளேயன்றோ?

காமம் என்ற அவ்யயத்தைப் பல விதம் ஆக அந்வயிக்கலாம். மிகவும் பயத்தைப் போக்குபவள் என்றே, மிகவும் பிணியைத் தீர்ப்பவள் என்றே, மிகவும் பக்தி பண்ணுகிறோம் என்றே.

இந்த ஸ்லோகத்தில் ஒரு ஸப்தசித்ரம் இருக்கிறது. என்னவென்றால். முதல் பாதியில் உள்ள பதினாறு எழுத்துகளில் ஒன்றுவிட்டு ஒன்றாக எட்டு எழுத்துகளை எடுத்துக் கொண்டால், இதே எட்டு எழுத்துகள் இரண்டாம் பாதியிலும் வந்திருப்பதைக் காணலாம்.

இதற்குமுன் கமலே! தேவதேவஸ்ய என்ற. கோமுத்ரிகாபந்த ஸ்லோகத்துக்கும் இதற்கும் சிறிய வித்தியாசம் தான். அங்கே இரட்டைப்படை எழுத்துகள் திரும்பி வருகின்றன. இங்கே ஒற்றைப்படை எழுத்துகள் திரும்பி வருகின்றன.

இதை இப்படி? படம் போட்டு விளக்கலாம்.



அரிக்கு மிப் பிடித்தவளை
அருள் சாறு நிறைந்தவளை
அவலநிலை தொலைப்பவளை
அடிபணிவோம் நாம் அவளை.

18. மாலையணிந்த மாதாவானவள்.

मावतादत्र परमा मारपस्वाक्षिकालिमा।
मालिकाभिस्समेता मा माता मे विधुतावमा ॥ १८ ॥

மாவதாத் அத்ர பரமா மாரப ஸ்வாக்ஷி காலிமா।
மாலிகாபி4ஸ் ஸமேதா மா மாதா மே விது4தாவமா ॥ 18 ॥

परमा உயர்ந்த செல்வம் கொண்டவளும்
मार-प-स्व-अक्षि-कालिमा மன்மதனைக் காக்கும் தன் விழிக்கருமை கொண்டவளும்
मालिकाभिः மாலைகளோடே
समेता கூடியவளும்
मे எனது
माता அன்னையும்
विधुत-अवमा நீசர்களை உதறியவளும் ஆன
मा திருமகள்
अत्र இங்கே
मा என்னை
अवतात् காப்பாற்றட்டும்.

திருமகள் என்னைக் காப்பாற்றட்டும். அவள் மிக உயர்ந்திருப்பதாலும், நீசர்களையெல்லாம் உதறித் தள்ளுபவர் ஆதலாலும், என்னைக் காக்க மாட்டாளோ என்று அச்சம் ஒரு பக்கம் இருந்தாலும், அவள் மன்மதனைக் காப்பதாலும், எனக்கு அன்னையாய் இருப்பதாலும், நம்மைக் காக்கவென்றே திவ்யமங்கள விக்ரஹத்தில் மாலைகளுடனே ஸேவை ஸாதிப்பதாலும், என்னை ரக்ஷிப்பாள் என்ற நம்பிக்கை பிறக்கிறது. இந்நிலவுலகிலேயே ரக்ஷணத்தை அவள் தொடங்கட்டும்.

இந்த ச்லோகம் அஷ்டதல பத்மபந்தத்தில் அமைந்தது.

மா என்கிற எழுத்தை நடுவில் கர்ணிகையில் எழுதவேண்டும்.

முதல் தளத்தில்	வதா
இரண்டாம் தளத்தில்	தத்ர

மூன்றாம் தளத்தில்	பர
நான்காம் தளத்தில்	ஸ்வாக்ஷி
ஐந்தாம் தளத்தில்	காலி
ஆறாம் தளத்தில்	பிஸ்ஸ
ஏழாம் தளத்தில்	மேதா
எட்டாம் தளத்தில்	விது

இவ்வாறு எழுதிக்கொண்ட பின், மையத்திலிருந்து தொடங்கி முதல் மூன்று தளங்களை வாசித்து மையத்தில் முடித்தால் முதல் பாதம் கிடைக்கும்.

மையத்திலிருந்து தொடங்கி மூன்றாவது நாலாவது ஐந்தாவது தளங்களை வாசித்து மையத்தில் முடித்தால் இரண்டாம் பாதம் கிடைக்கும்.

மையத்திலிருந்து தொடங்கி ஐந்தாவது ஆறாவது ஏழாவது தளங்களை வாசித்து மையத்தில் முடித்தால் மூன்றாம் பாதம் கிடைக்கும்.

மையத்திலிருந்து தொடங்கி ஏழாவது எட்டாவது முதலாவது பாதங்களை வாசித்து மையத்தில் முடித்தால் நான்காம் பாதம் கிடைக்கும்.


ஒவ்வொரு பாதத்துக்கும் மூன்று இதழ்கள் தேவையானாலும், நான்கு பாதங்களுக்கும் எட்டு இதழ்கள் போதுமானதற்குக் காரணம், நாலு இதழ்களை இருமுறை படிப்பதாலாம்.

ஒவ்வொரு பூவிதழுக்கும் இரண்டு எழுத்துக்கள் வீதம் எட்டு பூவிதழ்களில் 16 எழுத்துகளும், நடு கர்ணிகையில் ஒன்றுமாக 17 எழுத்துக்கள் மட்டுமே எழுதுகிறோம். சில எழுத்துகளைத் திரும்பவும் படிக்க வேண்டி வருவதால் மொத்தம் 32 எழுத்துகளாகும்.

மத்திய எழுத்தை எட்டு தடவையும்,

ஒற்றைப் பட்டை இதழ்களில் உள்ள எட்டு எழுத்துக்களை இரண்டிரண்டு தடவையும், மற்ற எட்டு எழுத்துக்களையும் ஒவ்வொரு தடவையும் படிக்க நேர்வதால்,

1★8 + 8★2 + 8★1 = 32 என்று கணக்கு சரியாகி விட்டது.



அஷ்ட தள பத்ம பந்தம்

இதையே நாலு அரங்கள் கொண்ட சக்ர வடிவில் எழுதி, சதுரர சக்ரபந்தம் என்று சொல்வதும் உண்டு. கீழேயுள்ள படத்தைப் பார்க்கவும்.

மாலை அணிந்தவள் மாரனைக் காப்பவள்
மாதா வானவள் மாசைத் தொலைப்பவள்
பரமையானவள் பாரினில் என்னைப்
பரிரக்ஷிக்கப் பார்ப்பாளாக

ஸ்ரீ ஸூக்தத்தில் ஸுவர்ண ரஜத ஸ்ரஜாம் என்றும் பத்மமாலினீம் என்றும் இருப்பதை மாலிகாபிஸ் ஸமேதா ஸா என்பதாலும்,

அபூதிமஸம்ருத்திம் ச ஸர்வாந்நிர்ணுத என்றிருப்பதை விதுதாவமா என்பதாலும்,

மே குலே மாதரம் என்றிருப்பதை மே மாதா என்பதாலும்,

ராஷ்ட்ரேஸ்மிந் என்றிருப்பதை அத்ர என்ற பதத்தாலும்,

ஈஶ்வரீம் ஸர்வபூதாநாம் என்றிருப்பதைப் பரமா என்ற பதத்தாலும் நினைவூட்டுகிறார்.

இவளுடைய விழிக் கருமையை மார-ப-ஸ்வ-அக்ஷி-காலிமா என்று சொல்வது நான்கு வகைகளில் பொருந்தும்:

மன்மதனைக் காக்கும் இவளது விழிக் கருமை. எப்படியென்றால், மன்மதன் இவளது (ருக்மிணியினுடைய) குழந்தை. தன் குளிர்ந்த கடாக்ஷத்தால் குழந்தையின் மீது வாத்ஸல்யத்தைப் பொழிவதால் அவளது விழிக்கருமை மன்மதனைக் காக்கிறது. இது முதல் கருத்து.

இரண்டாவது கருத்து வருமாறு: இவளது கண்ணழகில் சொக்கிப் போகிறான் திருமால். மன்மதன் இவளது கண்ணின் கருமையில் தான் பதுங்கியிருக்கிறானோ என்னும்படி வசீகரமான கண். கொள்ளையழகு. இருட்டில் பதுங்குவது ஒளிபவர்களுக்கு வழக்கம்; (ஒளியில் ஒளிய முடியுமோ என்று வேடிக்கையாகச் சொல்வர்.) ஒளிவதற்கு வேண்டிய கருமை இவளது கண்ணில் இருப்பதால் மன்மதன் அச்சமின்றி அங்கே காக்கப்படுகிறான்.

அடுத்து மூன்றாவது தாத்பர்யம். மாரபன் என்றால் காமதேவ: காமபால: என்று ஸஹஸ்ரநாமத்தில் சொல்லப்பட்ட விஷ்ணு. அவனுக்கு ஸ்வம் என்றால் சொத்தாகவும் ஆஸ்தியாகவும் ஆன வஸ்து. திருமகளின் விழியே திருமாலின் ஆஸ்தி என்கிறார். இதை அவன் முயன்று ரக்ஷித்துப் பெரும்பயன் பெறுவதால் இதை ஆஸ்தியாகச் சொல்வது தகும். அபாங்கா பூயாம்ஸோ யதுபரி பரம் ப்ரஹ்ம ஸமபூத் என்ற பெரியோர் வாக்குப்படி, திருமாலின் உயர்வுகள் எல்லாம் திருமகளின் திருக்கண்பார்வையிலிருந்தே கிடைப்பவை; அதை அவனது சொத்து என்னல் தகும்.

மேலும், லக்ஷ்மீநேத்ரோத்பலஸ்ரீ ஸதத பரிசயாதேஷ ஸம்வர்த்தமாந என்கிற தேசிகஸூக்திப்படி, இவளது விழிக்கருமை தான் அவனது உடற்கருமையைச் செழிக்கச் செய்கிறது. ஆகையால் மாரபனுக்காகத் தன் விழியில் கருமை கொண்டவள் அவள். மாரபகாளிமாவுக்கு ஸ்வாக்ஷிகாளிமா புஷ்டி பண்ணுகிறது.

இது நாலாவது கருத்து.

மன்மதனுக்கு வாழிடம் என்னும்படி கொள்ளையழகும் கவர்ச்சியும் கொண்ட **கண்.**


மன்மதனாகிற தன் குழந்தைக்குப் பாதுகாப்பு தரும் **கண்.**

மன்மதன் ஒளிந்துகொள்ளப் போதுமான இருட்கருமையை விழியில் கொண்ட **கண்.**

மன்மதபாலன் என்னும் திருமாலுக்கு ஆஸ்தியான கண்.

மன்மதபாலன் என்னும் திருமாலின் கருமையைப் புஷ்டி பண்ணும் கருங்**கண்.**

என்று மாரபஸ்வாக்ஷிகாளிமா என்ற பதத்தின் கருத்துக்களின் சுருக்கம் ஆகும்.



சதுரர சக்ர பந்தம்.

19. பொறுமையோடு பொலிபவள்.

क्षमासमागमाभीमा रामाणामादिमा समा ।
क्षामाक्षेमा रमानामा प्रमासीमासु माति मा ॥ १९ ॥


க்ஷமாஸமாகமாபீமா ராமாணாமாதிமா ஸமா ।
க்ஷாமாக்ஷேமா ரமாநாமா ப்ரமாஸீமாஸு மாதி மா ॥ 19 ॥

क्षमा-समागम-अभीमा பொறுமையின் சேர்க்கையால் பயங்கரமாய் இல்லாதவளும்
रामाणां பெண்டிருக்கு
आदिमा முதல்வளும்
समा நடுநிலை கொண்டவளும்
क्षाम-अक्षेमा இளைத்துப் போன தீங்குகளை உடையவளுமான
रमा-नामा ரமை என்னும் பெயராள்
प्रमा-सीमासु அறிவின் எல்லைகளில்
मा माति அளக்கிறாளன்று; அடங்கவில்லை.

திருமாலிடம் அஞ்சும் பாவிகள் கூடத் திருமகளிடம் அஞ்சுவதில்லை. ஏனெனில் அவள் பொறுமையோடு ஒன்று சேர்ந்தவள். நாரீஜனங்களுக்குள் முதலானவள். வைஷம்யமோ பாரபக்ஷமோ இல்லாதவள்.

தீங்குகளைக் குறைப்பவள். தாழ்வுகளைத் தொலைப்பவள். அந்த ரமாதேவி நம் அறிவின் அளவுக்குள் எட்டாதவள்.

மா என்கிற ஒரே எழுத்து பதினாறு தடவை வந்துள்ளது. ஒன்று விட்டு ஒரு எழுத்து மா தான். பதினாறு இதழ்கள் கொண்ட தாமரைப் பூவில் மா என்ற எழுத்தைக் கர்ணிகையிலும், மற்ற எழுத்துக்களை இதழுக்கு ஒன்றாகவும் எழுதி வாசிக்கக் கூடும் ஆதலால் இதை ஷோடசதல பத்ம பந்தம் என்பர்.



ஷோடச தள பத்ம பந்தம்

இனி வேறு அர்த்தங்களும் ஸ்வரஸமாகக் கிடைப்பதைப் பார்ப்போம். க்ஷமாஸமாகமா என்ற முதல் பதத்துக்கு, பொறுமை கூடியவள் என்று அர்த்தம் சொல்லாமல், பூமியிலிருந்து நன்றாக வந்தவள் என்று ஸீதாவதாரக் கதையை அர்த்தமாகக் கொள்வதும் தகும். நிலவுலகில் வந்து அவதரித்தவள் என்ற அர்த்தமும் உசிதமே. ஆதிமாஸமா என்னும் இடத்தில் ஸமா என்று பதம் பிரிக்காமல் அஸமா என்று பிரித்து, ஒப்பற்றவள் என்று அர்த்தம் கொள்வதும் தகும். க்ஷாமாக்ஷேமா என்பதற்குப் பதில் க்ஷமாக்ஷேமா என்று பாடபேதமும் உண்டு; பூமிக்கு க்ஷேமத்தை, அதாவது உலகமங்களத்தைப் பண்ணுபவள்

என்று அர்த்தம். மாதி என்பதற்கு உள்ளுறைகிறாள் என்று அர்த்தம் இருப்பதால், தத்வஜ்ஞானத்தின் எல்லையுள் உள்ள லக்ஷ்மி என்றும் நாலாம் பாதத்துக்கு அர்த்தம் சொல்லலாம். ஸு-ம-அதி-மா என்று பதம் பிரித்து, மலரை விஞ்சிய அழகுடையாள் அறிவின் எல்லையானவள் என்றும் இந்தக் கடைசிப் பாதத்துக்குப் பொருள் கொள்ளலாம். ரமாநாமா என்னுமிடத்தில் அநாமா என்றும் பதம் பிரிக்கலாம். இதற்கு இரண்டு பொருள்கள். ஆமமாயில்லாதவள், பக்குவப்பட்டவள், என்று ஒரு அர்த்தம். ஆமமேயில்லாதவள், ஆரோக்கியம் தருபவள், என்று இன்னொரு அர்த்தம்.

இதையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் திருமகளைப் பற்றிப் பதினைந்து செய்திகளைத் தெரிவிக்கிறது இந்த ச்லோகம்:

1. அவள் பூமியிலிருந்து தோன்றியவள்.

2. அவள் பூமியில் அவதரித்தவள்.

3. அவள் பொறுமையோடு கூடியவள்.

4. அவளிடம் நாம் அஞ்ச வேண்டாம்.

5. அவள் பெண்டிரில் முதன்மை பெற்றவள்.

6. அவள் ஆதிலக்ஷ்மி.

7. அவள் பக்ஷபாதமற்றவள்.

8. அவள் ஈடிணை அற்றவள்.

9. அவளால் அக்ஷேமம் அழிந்து விடும்.

10. அவளால் உலகத்துக்கு க்ஷேமம்.

11. அவளுக்கு ரமா என்றும் மா என்றும் பெயர்கள்.

12. அவள் அறிவின் எல்லைநிலம்; தத்வஜ்ஞானத்தின் காஷ்டையில் உள்ளவள்.

13. அவள் அறிவின் எல்லைக்குள் அகப்படாதவள்.

14. அவள் மலரினும் அழகியவள்.

15. அவள் பக்குவப்பட்டவள்; பக்குவப்படுத்துபவளும் கூட. மேலும் அவள் அநாரோக்யத்துக்கு (ஆரோக்யமற்ற தன்மைக்கு) எதிரியாதலால் அநாமா எனப்படுகிறாள்.

இந்தப் பதினைந்துக்கு மேலும் அர்த்தங்கள் ஒளிந்திருப்பதாகச் சிலர் க்லிஷ்ட(கஷ்ட)மாகக் கூறுவதுண்டு.

16. அநாமா என்றால் தாழ்வற்றவள் என்று அர்த்தம்.

17. ஸுமாதி என்றால் நல்ல தாயாக நடத்தை கொள்பவள் என்று அர்த்தம்.

18. பீமா என்றால் பகைவர்க்குப் பயங்கரமானவள் என்று அர்த்தம்.

என்றிப்படிப்பல. வேங்கடாத்வரியின் சிறியதொரு ச்லோகத்திலும் ஏராளமான கருத்துக்கள் எளிதில் கிடைக்கின்றன.

க்லேசமே இல்லாமல் ஒன்றுவிட்டொரு எழுத்தாய் மா என்கிற ஒரே எழுத்தை வரவழைத்தது தனியாற்றல். தமிழில் ஸமான மாகுமா என்றும் விமானமாளுவாள்? என்றும் நாமும் சிறிச்சிறிதே முயலக்கூடும்; முழு ச்லோகமும் இவ்வாறே அமைப்பது கவிவரர்களுக்கு மட்டுமே ஸாத்தியம்.

அச்சத்துக்கிடமாய் ஆகாள் அங்கனையர்க் காதியாவாள்
அல்லலை அவிப்பாள் லக்ஷ்மி அறிவெல்லைக்கு அகப்படாளே.
அவனியில் அவதரிப்பாள் அனைவர்க்கும் நடுவாய் நிற்பாள்
அலரினும் அழகு மிக்காள் ஆருமே ஒப்பே இல்லாள்.

20. அரக்கியரிடையும் அருட்பெருக்குள்ளவள்.

दयासारा साहितासा या शुभामतिपालिता ।
साभाकारा भावपा हि रामरामा विभाति सा ॥ २० ॥

தயாஸாரா ஸாஹிதாஸா யா ஶுபா மதிபாலிதா।
ஸாபாகாரா பாவபா ஹி ராமராமா விபாதி ஸா ॥ 20

या = எவள் (எந்த ஸீதை)
दयासारा = அருட்பெருக்குள்ளவளாயும்
अहित-असा = தீயவரை திரஸிப்பவளாகவும்
शुभा = மங்களமானவளாகவும்
अमति-पालिता = அறிவிலிகளால் காவல் காக்கப்பட்டவளாகவும்
आस = இருந்தாளோ,

सा = அவள்
स-आभ-आकारा = ஒளியுடன் கூடிய உருவம் உடையவளாகவும்
भाव-पा = உயிரினங்களைக் காப்பவளாயும்
राम-रामा = ராமனை மகிழ்விப்பவளாகவும்
विभाति = விளங்குகிறாள்
हि = அல்லவா?

அசோகவனத்தில் அரக்கியர் புடைசூழ அவதிக்குள்ளான போதும், அவர்கள் பால் இரக்கம் காட்டிய ஸீதையைப் பற்றிய ஶ்லோகம் இது. அவள் அருட்பெருக்குள்ளவள். (கொடிய அரக்கியரையும் அனுமனிடமிருந்து காப்பாற்றியவள்.) அஹிதனான ராவணனை ஒதுக்கித் தள்ளியவள். (அவன் வழிக்கு இணங்காதது மட்டுமின்றி அவனைப் புல்லாகக் கருதி அவமதித்தவள்.) மங்களமானவள். அவளுடைய மஹிமையை அறியாத அரக்கிகளால் காவல் காக்கப்பட்டவள். ஒளிரும் வடிவழகு கொண்டவள். ஜீவராசிகளையெல்லாம் காப்பவள். ராமனை மகிழ்விப்பவர்கள். மிகப் புகழ்பெற்று விளங்குகிறாள். அரைச்சுழல் யமகம் என்னும் அதிகடினமான சித்ரபந்தத்தில் அமைந்துள்ள பாடல் இது.

1	2	3	4	5	6	7	8
	10	11	12	13	14	15	
		19	20	21	22		
			28	29			

மொத்தமுள்ள முப்பத்திரண்டு எழுத்துக்களில் இருபது மட்டும் மேற்காட்டிய இருபது இடங்களில் இஷ்டப்படி அமைத்துக் கொள்ளலாம். மீதமுள்ள பன்னிரண்டும் (இதே எழுத்துக்களை வேறொரு வரிசையில்) எவ்வாறு அமைத்தால் இதே ஶ்லோகத்தை வேறு விதமாக வாசித்தாலும் மாறுபடாதோ அப்படிப் பண்ணவேண்டும். வேறு விதமாக வாசிப்பது எப்படியென்றால், மேலுள்ள எட்டுப் பெட்டிகளில், முதல் பெட்டியை மேலிருந்து கீழாகவும், பிறகு கடைசிப் பெட்டியைக் கீழிருந்து மேலாகவும் வாசித்தால் முதல் பாதம் வரவேண்டும். இதே போல் இரண்டாவது பெட்டியை மேலிருந்து கீழாக வாசித்தபின் ஏழாவது பெட்டியைக் கீழிருந்து மேலாக வாசித்தால் இரண்டாவது பாதம் வரவேண்டும். இதேபோல் மூன்றாவதும் ஆறாவதுமான பெட்டிகளில் மூன்றாம் பாதமும், நாலாவது ஐந்தாவது பெட்டிகளில் கடைசிப் பாதமும் வரவேண்டும். இந்த ஶ்லோகத்தில் இப்படி வருவதைப் பார்க்கலாம்.

த	யா	ஸா	ரா	ஸா	ஹி	தா	ஸா
↓	↓	↓	↓	↑	↑	↑	↑
யா	ஸௌ	பா	ம	தி	பா	லி	தா
↓	↓	↓	↓	↑	↑	↑	↑
ஸா	பா	கா	ரா	பா	வ	பா	ஹி
↓	↓	↓	↓	↑	↑	↑	↑
ரா	ம	ரா	மா	வி	பா	தி	ஸா

இந்த மாதிரி ஒரு ஶ்லோகம் நாம் பண்ணவேண்டுமென்றால் கீழ்க்கண்ட பன்னிரண்டு நிபந்தனைகளை ஏற்படுத்திக் கொண்டால் போதும்.

ஒன்பதாம் எழுத்து = இரண்டாம் எழுத்து.

பதினாறாம் எழுத்து = ஏழாம் எழுத்து.

பதினேழாம் எழுத்து = மூன்றாம் எழுத்து.

பதினெட்டாம் எழுத்து = பதினொன்றாம் எழுத்து.

இருபத்து மூன்றாம் எழுத்து = பதினாலாம் எழுத்து.

இருபத்து நான்காம் எழுத்து = ஆறாம் எழுத்து.

இருபத்தைந்தாம் எழுத்து = நாலாம் எழுத்து.

இருபத்தாறாம் எழுத்து = பன்னிரண்டாம் எழுத்து.

இருபத்தேழாம் எழுத்து = இருபதாம் எழுத்து.

முப்பதாம் எழுத்து = இருபத்தொன்றாம் எழுத்து.

முப்பத்தொன்றாம் எழுத்து = பதின்மூன்றாம் எழுத்து.

முப்பத்திரண்டாம் எழுத்து = அஞ்சாம் எழுத்து.

இந்தப் பன்னிரண்டும் அமைந்துவிட்டால் தானாகவே அரைச்சுழல் **யமகம்** என்கிற **சித்ர பந்தம்** அமைந்துவிடும். ஶ்லோகம் வ்ருத்தத்திற்கு ஒட்டிவருவதும், லக்ஷ்மீ விஷயமாக அர்த்தம் கிடைப்பதும் முக்கியம். எளிதன்று. இந்தக்கவி இந்த அற்புதத்தைப் பண்ணிக்காட்டிவிட்டார். அதனால் ஶ்லோகத்தை இரண்டு பாதைகளில் ஒரே விதமாக வாசிக்க முடிகிறது. இனி அர்த்த விசேஷங்களைப் பார்ப்போம்.

தயாஸாரா என்பதற்கு தயையை ஸாரமாகக் கொண்டவள், அதைத் தனமாகக் கொண்டவள், என்று ஒரு அர்த்தமும், தயையின் **ஆஸாரம்** (பெருக்கு, வழிந்தோடல்) கொண்டவள் என்று இன்னொரு அர்த்தமும் கிடைக்கும். தாத்பர்யார்த்தம் ஒன்றே தான். திருவுக்கு அருள் அதிகம் என்பது.

அஹித - ஆஶா என்று பிரிக்காமல் **அஹிதா - ஆஶா** என்று பிரித்தால், எதிரிகளை நிரஸிப்பவள் என்பதற்குப் பதிலாக

அஹித்தன்மையை அதாவது துஷ்டத்தனத்தை நிரஸிப்பவள் என்று அர்த்தமாகும். நம்மை நல்லவராக்குபவள் என்ற புதிய அர்த்தம் கிடைக்கும்.

பாவபா என்கையில் பாவம் என்பதற்கு ஜீவராஸி என்று அர்த்தம் சொல்லாமல் உள்ளக் கிடக்கை என்றும் அர்த்தம் சொல்லலாம். நம்முடைய மனோ பாவத்தை அவள் பாலனம் பண்ணுகிறாள். மனோபாவம் சீர்கெடாதபடி ரக்ஷிக்கிறாள் என்று தாத்பர்யம். நம் முன்னேற்றத்துக்கு இது மிக முக்கியம். இப்படிச் சொல்லும் அர்த்தங்களுக்குச் சேர அமதி பாலிதா என்று பிரிக்காமல் மதிபாலிதா என்று பிரித்தோமானால், நம்முடைய மதியில் த்யானவிஷயமாய் அழிக்காமல் பார்த்துக் கொண்டோமானால், அவ்வாறு த்யானத்தில் பாலிக்கப்பட்ட அவள் நமக்குப் பல நன்மைகளைப் பண்ணுகிறாள் என்று தாத்பர்யம். இப்படியாக, நமது த்யானத்தில் உள்ள ஸீதை விஷயமாகவும் முழு ஶ்லோகத்துக்கும் கருத்து கூறலாம்; அஶோகவனத்து ஸீதை விஷயமாகவும் கூறலாம்.

இந்த ஶ்லோகத்தில் ஸீதைக்குச் சொன்ன பதினாறு சிறப்புகள் எவையெனில்:

1. அவள் தயை வழிபவள். அரக்கியரையும் காத்தவள் அன்றோ? தயா - ஆஶயா.
2. அஹிதனான ராவணனைத் திரஸ்கரித்தவள். அவனுடைய விநாசஹேது. அஹித - அஸா.
3. கல்யாணீ என்றும் அநிந்திதா என்றும் அனுமன் புகழும் அளவுக்கு மங்களமானவள். ஶுபா.
4. அவளுக்குப் பாதுகாவல் பண்ணின அரக்கிகள் அமதிகள்; கற்புக்கனலின் மஹிமையை அறியாதவர்களால் காவல் காக்கப்பட்டவள் ஸீதை. அமதிபாலிதா.
5. பாஸ்கரேண ப்ரபா யதா என்னும்படி ப்ரபையானவள் ஸீதை. ப்ரபாவாந் ஸீதயா தேவ்யா என்பார் ஸ்வாமி ஸ்ரீ தேசிகன். ஸாபாகாரா.

6. அவள் தன்னுடைய பாவத்தை (ஸதா ராமசிந்தையாய் இருப்பதை) ஒரு தவமாகப் போற்றிக் காத்து வந்தாள். என்னுடைய மனோபாவத்தை மாற்ற முடியாது என்று ஸீதையே சொல்கிறாள் ஸுந்தரகாண்டத்தில். இதனால் அவள் பாவபா.

7. அவள் ராமத்யானத்திலேயே மகிழ்ந்ததாலும், ராமனுக்கு ராமையாக (இனியாளாக) இருந்ததாலும் அவள் ராமராமா.

8. அத்தனை பெருமை வாய்ந்த ஸீதை சுடர் விட்டுப் பிரகாசிக்கிறாள். விபாதி ஸா.

இப்படி அசோகவனத்து ஸீதையைக் குறித்து எட்டு வார்த்தைகள் சொன்னாற்போலவே பக்தர்களின் த்யான விஷயமான ஸீதையைக் குறித்தும் இதே ஸ்லோகத்தில் எட்டு கருத்துகள் உள்ளன.

அவை வருமாறு:

9. அவள் தயா - ஸாரா. தயையே ஸாரமானவள்.

10. நம்மிடம் உள்ள நச்சுத்தன்மையை, க்ரூரத்தன்மையை, அவள் நிரஸனம் பண்ணுவதால் அவள் அஹி - தா - ஆஸா.

11. அவள் ஸுபமானவள். நமக்கு க்ஷேமம் பண்ணுவாள்.

12. பக்தர்கள் அவளைத் தம் புத்தியில் நழுவாமல் இறுத்துகிறார்கள். அவள் மதிபாலிதா.

13. அவள் ஜ்யோதிர்மயீ. சந்த்ராம் ப்ரபாஸாம் யஸஸா ஜ்வலந்தீம் என்னப்படுபவள். ஸாபாகாரா.

14. நமது மனோபாவங்களை நேரான தடத்தில் செலுத்தி, ரக்ஷிப்பதால் அவள் பாவபா.

15. அவள் ராமராமையான ஸீதையாகத் த்யானிக்கப் படுகிறாள்.

16. அவள் மனதில் தோன்றுகிறாள். விபாதி என்பதற்கு இது இன்னொரு அர்த்தம்.

தயாஸாரா என்பதற்குப் பாடபேதமாக ரஸாஸாரா என்று தொடங்கி அதற்கேற்ப வேறு சில எழுத்துக்களையும், மாற்றி

சில பதிப்புகளில் அச்சிட்டிருக்கிறார்கள். ஆனால் ஸாமிதாஸா முதலியவற்றுக்கு அர்த்தம் சொல்வதற்குக் க்லேசமாய் இருப்பதால் அந்த அலசல் இப்போது வேண்டாம்.

கருணைமயி யாவாள் கதிருருவம் கொண்டாள்
கடியவரைக் கடிவாள் கல்யாணி ஸீதையவள்
ஒன்றுமுளம் காப்பாள் ஒன்னாரை ஒறுப்பாள்
ஒளியுருவம் உடையாள் ஒளிர்கின்றாள் மனதில்.

21. அரிகளுக்கு அச்சம் தருபவள்; உரியவர்க்கு உச்சம் தருபவள்.

समुद्रजोन्नतान् कुर्यात् सा नस्संसारतारिका ।
समुद्रजोन्वितान् कीर्यात् पुनस्त्रासान्वितारिका ॥ २१ ॥

ஸமுத்₃ரஜோந்நதாந் குர்யாத் ஸா நஸ்ஸம்ஸாரதாரிகா ।
ஸமுத்ரஜோந்விதாந் கீர்யாத் புநஸ்த்ராஸாந்விதாரிகா ॥ 21

समुद्र-जा = கடலிலிருந்து தோன்றியவள்
संसार-तारिका = ஸம்ஸாரத்தைத் தாண்டுவிப்பவள்
सा = பிரஸித்தமான அவள்
नः = நம்மை
उन्नतान् = உயர்ந்தவர்களாக
स-मुत् = மகிழ்ச்சியுடன்
कुर्यात् = பண்ணட்டும்
रजोऽन्वितान् पुनः = தோஷம் உள்ளவர்களையோ
त्रास-अन्वित-अरिका = பயங்கொண்ட பகைவர்களை உடையவள்
कीर्यात् = சிதறடிக்கட்டும்.

ஸமுத்ர கன்னிகையானவள் நம்மை உயர்த்தட்டும்; தீயவரை நலியச் செய்யட்டும்.

அவள் ஸமுத்திரத்திலிருந்து உயரக்கிளம்பி வந்தவளாதலால், ஸம்ஸாரக் கடலிலிருந்து நம்மைத் தாண்டுவிக்கவும், உயர்த்தவும் வுல்லவள் என்பது தொனிக்கிறது.

ஸமுத் என்பதை இரண்டு விதமாக அன்வயிக்கலாம். முதல் வேற்றுமையாகக் கொண்டால் அவள் ஆனந்தம்

உள்ளவள் என்று அர்த்தம். க்ரியாவிசேஷணமாகக் கொண்டால், நம்மை மகிழ்ச்சியுடன் உயர்த்தட்டும் என்று அர்த்தம். நம் உயர்வால் அவள் மகிழ்வாள் என்று தாத்பர்யம்.

ரஜஸ் என்பதற்கு ரஜோகுணத்தை அர்த்தமாகக் கொண்டால், அவள் பண்பு கெட்டவர்களைச் சிதறடிக்கட்டும் என்று அர்த்தம். ரஜஸ் என்பதற்குத் தும்புதூசு என்று பொருள் கொண்டால், அவள் மாசுபட்டவர்களை வீசி இரைக்கட்டும் என்று அர்த்தம். இவ்வகையால் அவள் நமக்கு உதவட்டும்.

போன ச்லோகத்தில் மாதி மா என்பதால் அளவுக்கு அடங்காமல் அனந்தமாய் இருப்பதையும், இந்த ச்லோகத்தில் ஸமுத் என்றதால் அவள் ஆனந்தமயியாக இருப்பதையும், போன ச்லோகத்தில் ப்ரமாஸீமா என்றதால் அவள் ஜ்ஞானமயியாய் இருப்பதையும், கவி கூறியுள்ளார்.


சீர்யாத் என்பதற்குப் பதில் க்ரௌர்யாத் என்று பாடம் உண்டு. க்ரூரத் தன்மையினால் என்று அர்த்தம். ரஜஸ் கூடியவர்கள் என்பதில் இதை அன்வயிக்கலாம்.

தீயவரை ஒடுக்குவது நம்மை உயர்த்துவதற்கு வழியாதலால் முழு ச்லோகத்தையும் ஒரே வாக்கியமாகக் கொண்டு பொருள் உரைப்பாரும் உளர்.


இந்த ச்லோகத்தில் உள்ள சித்ரத்தைச் சரபந்தம் என்று சிலரும் ஹாரபந்தம் என்று சிலரும் சொல்கிறார்கள். முதல் பாதியில் உள்ள இரட்டைப் படை எழுத்துகள் எல்லாம் இரண்டாம் பாதியில் மாறாமல் வந்திருப்பதைக் காணலாம். இந்த ஸ்தபகத்தின் மூன்றாம் ச்லோகத்தில் பார்த்த கோமுத்ரிகா பந்த அமைப்பு இதிலும் உள்ளது. அதற்கு மேலும் சில வரைமுறைகளுக்கு உட்பட்டிருக்கிறது. முதற்பாதியின் முதல் நாலு எழுத்துகளும் இரண்டாம் பாதியிலும் முதல் நாலு எழுத்துக்களாக உள்ளன. இப்படி இரண்டு பாதிகளும் ஒரே நாலெழுத்துப் பதத்தால் (ஸமுத்ரஜோ என்பதால்) தொடங்குவது போலவே, ஒரே மூன்றெழுத்துப் பதத்தால் (தாரிகா என்பதால்) முடிகின்றன.

இப்படியாகப் பூர்வார்த்தத்துக்கும் உத்தரார்த்தத்துக்கும் வேறுபாடு, ஐந்தாவது, ஏழாவது, ஒன்பதாவது, பதினொன்றாவது, பதின்மூன்றாவது, என்ற ஐந்தே ஐந்து எழுத்துக்களில் மட்டும் தான். ஆயினும், இரண்டு பாதிகளும் லக்ஷ்மீ விஷயமாக இரண்டு வெவ்வேறு கருத்துக்களைக் கூறுகின்றன என்பது விந்தையான அமைப்பு. இதை இப்படிப் படம் போட்டுக் காண்பிக்கலாம்.

இதைச் சரபந்தம் என்று சொல்பவர்கள் அம்பு போல இப்படிப் படம் போடுகிறார்கள்:



இதையே ஹாரபந்தம் என்று சொல்பவர்கள் முத்துமாலை போல இப்படிப் படம் போடுகிறார்கள்.



இனி அர்த்தங்களுக்கு வருவோம்.

முதல் பாதியில் நல்லவரைக் காப்பதையும் இரண்டாவது பாதியில் தீயவரைத் தண்டிப்பதையும் சொன்னதால் பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம் என்று சொன்னது ஸமுத்ரகந்யா என்கிற அவதாரத்திலும் ஆகட்டும் என்கிறார்.

ஸா என்றதால் அவள் மிகப்புகழ் பெற்றவள் என்கிறார்.

நஃ என்றதால் ஸமுத்ரகந்யாவதாரத்துக்கு இன்னும் பரிஸமாப்தி ஏற்படாததால் நாமும் அவ்வவதாரத்து ஸாதுபரித்ராணப் பலனைப் பெறலாம் என்கிறார்.

தாரிகா என்றதால், ஸமுத்ரத்திலிருந்து கரைக்கு வந்தவளுக்கல்லவா தெரியும், நம்மை ஸம்ஸாரத்திலிருந்து கரையேற்றுவது எப்படியென்று, என்பதை ஸூசிக்கிறார்.

ஸமுத் என்றதால், இவ்வாறு நம்மைக் கரையேற்றுவதிலும், தீயவர்களை அச்சுறுத்துவதிலும் அவளுக்கு மகிழ்ச்சி என்கிறார்.

வேறு விதமாக அன்வயித்தால், மகிழ்ச்சியோடு ரஜோகுணம் கொண்டவர்களை, அவள் சிதறடிக்கட்டும் என்கிறார். தம் ரஜோகுணத்துக்காக நிர்வேதப்படும் மக்களை அச்சுறுத்த வேண்டாம். அதிலேயே திளைத்து மகிழ்பவர்களை மட்டும் அச்சுறுத்தட்டும்.

கீர்யாத் என்ற பதம் ரஜஸ்ஸின் இன்னொரு அர்த்தத்துக்குப் பொருந்துவதால் இங்கு யுக்தமாகிறது.

தும்புதூசிகளைப் பறக்கவைப்பது போல அனாயாஸமாக அவர்களைச் சிதறப் பண்ணட்டும் என்கிறார். அவர்கள் கூடிக் கொட்டம் அடிக்காதபடி, சிதறிச் சீரழியட்டும்.

புதஃ என்றது வேறுபாட்டைக் காண்பிப்பதற்காக. ஒரு சிலரைக் கரைதாண்ட வைப்பவள் வேறு சிலரையோ வாரி இறைக்கிறாள் என்கிற வாசியைச் சொல்கிறார்.

த்ராஸ என்றதால் இவளுடைய அரிகளுக்கு இவளிடம் இருக்கும் பயத்தைச் சொல்கிறார்.

அரிகள் ஆச்ரித விரோதிகளும், நமது உட்பகைவர்களான காமாதிகளுமாம். இந்த அரிகள் அவளிடம் பயந்து நடுங்குவர்.

ரக்ஷித்தெம்மை உயர்த்தட்டும்.
ரமை பவக் கரைசேர்ப் பிக்கட்டும்.
ரஜஸ் உள்ளாரை இரைக்கட்டும்.
ரிபுவைப் பயத்தால் நடுக்கட்டும்.

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

22. விழியால் வினை தீர்ப்பவள்.

इन्दिरा भासुरा पद्ममन्दिराघधरापहा ।
हापराधहरा दृष्ट्या सा पराभा सुरादृता ॥ २२

இந்திரா பாஸுரா பத்ம மந்திராகதராபஹா ।
ஹாபராதஹரா த்ருஷ்ட்யா ஸா பராபா ஸுராத்ருதா ॥

इन्द्रिरा = லக்ஷ்மியானவள்

भासुरा = ஒளிர்பவளாகவும்

पद्म-मन्दिरा = தாமரை ஆலயத்தாள் ஆகவும்

अघ-धर-अपहा = பாவிகளைத் தொலைப்பவள் ஆகவும்

दृष्ट्या = பார்வையினாலே

अपराध-हरा = குற்றங்களை நீக்குபவள் ஆகவும்

पर-आभा = உயர்ந்த காந்தி கொண்டவள் ஆகவும்

सुर-आदृता = தேவர்களால் ஆதரிக்கப்பட்டவளாகவும்

सा = ப்ரஸித்தமானவள் ஆகவும் இருக்கிறாள்

हा = அப்பப்பா!

இவள் இந்திரை. தாமரை இல்லத்தவள். ப்ரகாசிப்பவள். பாவிகளையும் தொலைப்பவள்; பாவங்களையும் தொலைப்பவள். இவள் கண்பார்வை ஒன்றே போதும். அவ்வாறு பாவங்களை ஒழிப்பதற்கு. மிகவும் உயர்ந்த காந்தி கொண்டவள். தேவர்கள் இவளைத் துதிக்கிறார்கள்.

இது முரஜபந்தத்தில் அமைந்துள்ள ஸ்லோகம். கீழுள்ள படத்தைப் பார்க்கவும்.

இ	ந்தி	ரா	பா	ஸு	ரா	ப	த்ம
ம	ந்தி	ரா	க	த	ரா	ப	ஹா
ஹா	ப	ரா	த	ஹ	ரா	த்ரு	ஷ்ட்யா
ஸா	ப	ரா	பா	ஸு	ரா	த்ரு	தா

இவ்வாறு எழுதிக் கொண்டபிறகு, இதை வேறுவிதமாக வாசித்தாலும் மாறுபடாமல் இருப்பதைக் காண்கிறோம். முரசு

என்னும் வாத்தியத்துக்கு கயிற்றால் குறுக்கே கட்டுகள் போட்டால் போல் கற்பனை பண்ணிக் கொண்டு, அந்தக் கயிற்றுக்கோடு வழியே வாசிப்போம். இதோ பாருங்கள். முதல் வரிசை மூலையாகவும் வாசிக்கலாம் என்பதை.

இ	ந்தி	ரா	பா	ஸௌ	ரா	ப	த்ம
	ந்தி					ப	
		ரா			ரா		
			பா	ஸௌ			

இது போல இரண்டாவது வரியையும் வேறொரு வழியில் வாசிக்கலாம் என்பதை அடுத்த படம் காட்டுகிறது. மூன்றாவதும் அவ்வாறே.

	ந்தி	ரா											ரா	ப	
ம			க									த			ஹா
ஹா			த									ஹ			ஷ்டயா
	ப	ரா											ரா	த்ரு	

ஒரு வட்டத்தில் வருகிறது. ஒரு கோட்டுக்குப் பதிலாக.

ம என்பதில் தொடங்கி ப்ரதக்ஷிணமாக வாசித்தால் இரண்டாம் வரி.

அடுத்த வட்டத்தில் ஹா என்பதில் தொடங்கி அப்ரதக்ஷிணமாக வாசித்தால் மூன்றும் வரி.

இரண்டாவது மூன்றுவது பாதங்களை இன்னொரு விதமாகவும் வாசிக்கலாம் என்பதை அடுத்த படம் காட்டுகிறது.

	ந்தி	ரா			ரா	ப	
ம			க	த			ஹா

மேலே இரண்டாம் வரி. கீழே மூன்றும் வரி.

ஹா			த	ஹ			ஷ்டபா
	ப	ரா			ரா	த்ரு	

கடைசியாக நான்காம் வரிக்கும் வேறொரு முரசுக் கயிற்று வழி உண்டு.

			பா	ஸா			
		ரா			ரா		
	ப					த்ரு	
ஸா	ப	ரா	பா	ஸா	ரா	த்ரு	தா

இரண்டாவது மூன்றாவது வரிகளுக்கு வேறொரு வழியும் சொல்லக் கூடும்.

இரண்டாம் வரியில் நாலு எழுத்துக்கள் ஆனவுடன் மூன்றாம் வரியின் நாலாவது எழுத்துக்குப் போய் அங்கிருந்து தலைகீழாக வாசித்து மூன்றாம் வரியின் ஆரம்பத்தில் முடித்தால் இரண்டாம் பாதம் கிடைக்கும். இதே போல் மூன்றாம் பாதத்துக்கும் மாற்றுவழி உண்டு. இதோ படம்.

ம →	த்ரீ →	ரா →	க ↓	க ←	ரா ←	ப ←	ஹா
ஹா ←	ப ←	ரா ←	தி	ஹ →	ரா →	த்ரு →	ஷ்டபா

இப்படியெல்லாம் பல வழிகளில் மாறாமல் ஒரு ச்லோகம் வரவேண்டுமானால் அப்படிப் புனைவதற்கு என்ன உபாயம் என்பதையும் ஆலங்காரிகர்கள் ஆராய்ந்து சொல்லியிருக்கிறார்கள். படிப்படியாக அந்த உபாயத்தை நாமும் கற்றுக் கொள்ளலாம்.

நாலு பாதங்களிலும் மூன்றாவதும் ஆறாவதுமான எழுத்துகள் (மொத்தம் எட்டு இடங்களில்) ஒன்றேயாக அமைத்துக் கொள்ளவும். இந்த ஶ்லோகத்தில் அந்த எழுத்து ரா என்பது.

		ரா			ரா	
		ரா			ரா	
		ரா			ரா	
		ரா			ரா	

அடுத்து முதல் பாதத்து நடு நாலு எழுத்துகள் நாலாம் பாதத்திலும் நடு நாலாக வரும்படி அமைக்கவும். இந்த ஶ்லோகத்தில் ராபாஸுரா என்றுள்ளது.

கூடவே, இரண்டாம் பாதத்துக் கடைசி நாலு எழுத்துகளை வலமிருந்து இடமாக மாற்றி வாசித்தால் மூன்றாம் பாதத்து முதல் நாலு எழுத்துகள் வருமாறு அமைத்துக் கொள்ளவும். இந்த ஶ்லோகத்தில் **தராபஹா** என்றும் **ஹாபராத** என்றும் உள்ளன.

		ரா	பா	ஸு	ரா		
		ரா		த	ரா	ப	ஹா
ஹா	ப	ரா	த		ரா		
		ரா	பா	ஸு	ரா		

அடுத்ததாக, முதலிரண்டு பாதங்களிலும் இரண்டாம் எழுத்து ஒன்றாய் இருக்கட்டும். இங்கே **ந்தி** என்பது. ஏழாம் எழுத்தும் ஒன்றாய் இருக்கட்டும். இங்கே ப என்பது.

இதே போல மூன்றாம் நான்காம் பாதங்களிலும் இரண்டாம் எழுத்து ஒன்றாய் இருக்கட்டும்.

இங்கே ப என்பது. ஏழாம் எழுத்தும் ஒன்றாய் இருக்கட்டும். இங்கே த்ரு என்பது.

	ந்தி	ரா	பா	ஸூ	ரா	ப	
	ந்தி	ரா		த	ரா	ப	ஹா
ஸா	ப	ரா	த		ரா	த்ரு	
	ப	ரா	பா	ஸூ	ரா	த்ரு	

மீதமுள்ள எட்டு கட்டங்களில் எந்த எழுத்தை வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளலாம். முரஜபந்த ஶ்லோகம் உருவாகி விடும். அர்த்தம் வரவழைக்க வேண்டுமே, அதுதான் கஷ்டம்.

மொத்தமுள்ள முப்பத்திரண்டு எழுத்துகளில், ஒன்று எட்டு தடவை வரும்.

இன்னொன்று நாலு தடவை வரும்.

ஆறு எழுத்துகள் இரண்டிரண்டு தடவை வரும்.

எட்டு எழுத்துகள் ஒரே தடவை வரலாம்.

1 x 8 + 1 x 4 + 6 x 2 + 8 x 1 = 32 என்று கணக்கு சரியாகி விட்டது.

	2	★	4	5	★	?	
	2	★		9	★	?	8
8	?	★	9		★	7	
	?	★	4	5	★	7	

இதன்படி பார்த்தால் பதினாறு எழுத்துகள் முப்பத்திரண்டு இடங்களைப் பிடித்துக் கொண்டுள்ளன.

முரஜபந்தத்தின் மர்மம் புரிந்துவிட்டது. முடிந்தால் நாமும் முயலலாம்.

முரஜபந்தத்தில் பலவகைகள் இருப்பதால் இன்னொரு கவியின் முரஜபந்தம் வேறு மாதிரியாக இருந்தாலும் தப்பில்லை.

இனி அர்த்தத்துக்கு வருவோம். பார்வையால் பாவம் போக்குபவள் என்றதில் இரண்டு கருத்துகள். அவளுடைய பார்வை நம் மேல் பட்டால் நம் பாவம் போகும் என்பது ஒன்று. நம் பார்வை அவள் மீது பட்டால், அதாவது நாம் அவளைத் தரிசித்தால், நம் பாவம் போகும் என்பது இன்னொன்று. இரண்டுக்குமே ப்ரமாணபலம் இருப்பதால் இரண்டு தாத்பர்யங்களையும் ஏற்கலாம். இதே போல் பராபா என்ற பதத்துக்கும் இரண்டு விதமாக அர்த்தம் சொல்லலாம். பரா என்றால் உயர்ந்தது; ஆபா என்றால் காந்தி; பஹுவ்ரீஹியாக்கி உத்க்ருஷ்டமான காந்தி கொண்டவள் என்று முதல் அர்த்தம். பரன் என்றால் திருமால். அவனுக்குக் காந்தியானவள் என்று பஹுவ்ரீஹி யாக்காமலேயும் அர்த்தம் சொல்லலாம். ப்ரபாவாந் ஸீதயா தேவ்யா முதலிய பல இடங்களில் திருமால் என்னும் சுடருக்குத் திருமகளைக் காந்தியாகச் சொல்வதால் இது பொருந்தும்.

ஸுராத்ருதா என்பதற்கும் இரண்டு விதமாகப் பொருள் கொள்ளலாம். இவளை அமரர்கள் ஆதரிக்கிறார்கள். ஆராதிக்கிறார்கள், என்பது முன் சொன்னது; இவள் அமரர்களை ஆதரிக்கிறாள்; ரக்ஷிக்கிறாள் என்பதும் அர்த்தமாகலாம் என்பார் உளர்.

அம்புஜத்து அமர்ந்தவள். அகங்களை அழிப்பவள்.
அவற்கொளி ஆனவள். அமரர் ஆ தரிப்பவள்.

लोभमूलानि पापानि।



பேராசை மூலமாகத்தான் பாபமனைத்தும் உண்டாகிறது.

वादे वादे वर्धते वैरवृद्धिः।

வாதாட வாதாட வளரும் சண்டைப் பூசல்.

ஸ்ரீ லக்ஷ்மீஸஹஸ்ரம்

23. அவனியில் தோன்றி அவநீ ஆனவள்.

काकाननदे देवि विपापाहहभूभू
  राराददरा राममना नाम महे हे ।
यायाम मखे खेददनानाघघनाना
  त्वं त्वङ्गदादाववनी नीततमा मा ॥ २३

காகாநநதே தேவி விபாபாஹஹ பூ$_4$பூ$_4$
ராராத$_3$த$_3$ரா ராமமநா நாம மஹே ஹே।
யாயாம மகே$_2$ கே$_2$தத நாநாக$_4$க$_4$நாநா
த்வம் த்வங்க$_3$ க$_3$தா$_3$தா$_3$வவநீ நீததமா மா ॥

काक-अनन-दे = காகத்துக்கு மூச்சு கொடுத்தவளே!
अङ्ग देवि = ஏய் ஸீதாதேவியே!
नाम-महा-ईहे = பணிவில் பெரிதும் விருப்பம் உள்ளவளே!
त्वं = நீ
वि-पापा = பாவம் இல்லாதவள்.
भू-भूः = பூமியில் உண்டானவள்.
आरात् = பகைவர் கூட்டத்திலிருந்து
अ-दरा = பயம் இல்லாதவள்.
राम-मनाः = ராமனிடத்தில் மனம் கொண்டவள்.
खेद-द-नाना-अघ-अना = துயர் தரும் பல்வகைப் பாவங்களால் அடர்ந்தவரை வாழ்விப்பவள்.
गद-आदौ तु = வியாதி முதலியவற்றிலோ
अवनी = காப்பாற்றுபவள்.
नीततमाः = தமஸ்ஸைப் போக்குபவள்.
मा = மா என்பவள்.
अहह = அடடா!
मम = என்னுடைய
खे = புலனில்
यायाः = போவாயாக.

ஸ்ரீ ஸீதா தேவியே! நீ (மஹா அபசாரம் பண்ணின) காகத்துக்கும் உயிர்ப்பிச்சை இட்டவள். சிறிதும் களங்கமே இல்லாதவள். நிலத்திருந்து தோன்றியவள். கோரமான பகைக்குழுவிடமும் பயமில்லாதபடி, ராமனையே ஸதா நினைத்துக் கொண்டிருப்பவள். பணிந்து போவதில் அதிகமாக ஆர்வம் கொண்டவள். நம்மை நலிவிக்கும்

நானாவிதப் பாவங்களால் நிறைந்த நம்மையும் நலியாமல் வாழவைப்பவள். பிணி முதலியன ஹிம்ஸிக்காதபடி காப்பாற்றுபவள். இருளை அகற்றுபவள். மா எனப்படுபவள். என் மனதில் வருவாயாக.

இந்த ச்லோகத்தில் உள்ள வேடிக்கை இதை முதன்முறை படிக்கும்போதே தெரிந்து விடுகிறது. ஒவ்வொரு எழுத்தும் இரட்டித்து வந்துள்ளது. முதல் எழுத்தே இரண்டாம் எழுத்தும் மூன்றாம் எழுத்தே நாலாம் எழுத்தும். இப்படி இருபத்தெட்டு தடவை ஜோடிகள். கடைசியாக, ஐம்பத்தைந்தாம் எழுத்தே ஐம்பத்தாறாம் எழுத்தும்.

காகாநநதே என்ற பதத்தின் உட்பதம் ஆநநம் என்றோ அநநம் என்றோ இருக்கலாம். அதன்படி அர்த்தம் வேறுபடும். காகத்துக்கும் முகம் கொடுத்தவளே! விமுகையாக இல்லாதவளே! நீ பராமுகமாய் இருந்தால் உயிர் போய் இருக்குமே, என்று ஒரு கருத்து. காகத்துக்கு உயிர் கொடுத்தவளே என்று நேரடியாகச் சொல்வது இரண்டாம் பொருள். காகாஸுரன் பிழைத்துப் போகட்டும் என்று காத்தவள் ஸீதாதேவி.

அவள் விபாபா. பாவமற்றவள். அக்னிப்பிரவேச நிகழ்ச்சியில் ஊர்ஜிதமானது இது. அவள் பூபூ என்பதற்கு இரண்டு கருத்துகள். நிலவுலகில் (மஹாலக்ஷ்மியே ஸீதையாக) அவதரித்தவள் என்று ஒன்று. பூமியிலிருந்து (ஜநக மஹாராஜர் யாகத்துக்காக உழுதபோது) தோன்றியவள் என்பது மற்றொன்று.

ஆராத் என்பதற்கும் இரண்டு அர்த்தங்கள். விரைவில் என்று பொருள்படும் அவ்யயமாகக்கொண்டு, வருவாயாக என்ற வினையில் இணைக்கலாம். அல்லது அரிகளின் குழு ஆரம். அதிலிருந்து என்று அர்த்தம் சொல்லி அதரா என்பதில் இணைக்கலாம். அதரா என்றால் அஞ்சாதவள் என்று அர்த்தம். ராமனிடம் உள்ள மஹாவிச்வாஸத்தால் ஸீதை

எந்தப் பகைவர்க்கும் அஞ்சவில்லை. நாமமஹேமஹே என்பதற்கும் இரண்டு விதமாக அர்த்தம் சொல்லலாம். நாமம் என்றால் திருநாமம். மஹம் என்றால் உத்ஸவம். திருநாமத்திரு விழாவில் யாயாம போவோமாக என்று அன்வயம். அல்லது, நாமம் என்றால் ப்ரணாமம், வணங்கல். அதில் மஹேஹை என்றால் பெருவிருப்பம். நாம் பணிவதில் அவளுக்கு ஆர்வம் என்றோ, அவளே ராமனுக்குப் பணிவதில் ஆர்வம் கொண்டவள் என்றோ, ராவணன் கூட ராமனிடம் பணிய வேண்டும் என்று பேரவா கொண்டவள் என்றோ, பல கருத்துகளில் ஒன்றை ஏற்கலாம்.

துயர்தரும் நானாவிதப் பாவங்கள் நிறைந்தவர் நாம். இதை இரண்டு சொற்களுடன் அன்வயிக்கலாம். அநா என்பதில் அன்வயித்து நம்மை வாழ்விப்பவள் அவள் என்று அர்த்தம் சொன்னோம். அவ்வாறு கொள்ளாமல், யாயாம என்ற வினையிலும் அன்வயிக்கலாம். நாம் அவளது திருநாமத் திருவிழாவில் போவோமாக. நா மகே- யாகத்தில் போகவேண்டாம். என்று பொருள் உரைப்பாரும் உளர்.

கதம் என்றால் பிணி. ஆதி என்றதால், பிறவி, மூப்பு, மரணம், முதலியவற்றைக் கொள்வோம். இவற்றில் அவநீயாக, ரக்ஷிப்பவளாக இருக்கிறாள் இவள்.

நீததமாமா என்பதற்கும் இரண்டு விதமாக அர்த்தம் சொல்லலாம். (இவற்றை சிலேடை என்பதில்லை. கவி இதில் ஏதோ ஒரு பொருளைக் கருதியிருப்பார். இரண்டையும் கருதத் தேவையில்லை.) இரண்டிலும் நீதம் என்றால் வெளித்தள்ளப்பட்டது என்று அர்த்தம். தமஸ், இருள், அறியாமை, இதைத் தள்ளுபவள் மா என்று ஒரு அர்த்தம். மா என்றாள் லக்ஷ்மி, அமா என்றால் அலக்ஷ்மி. அது இவளால் பெரிதும் நீக்கப்பட்டது. கோரதமம், தீவ்ரதமம், என்ற சொற்களில் போலே நீததமம் என்பதிலும் தமப் ப்ரத்யயம் மிக அதிகம் என்ற அர்த்தத்தில்.

யாயாம மகே என்பதற்கும் இரண்டு விதமாக அர்த்தம் சொல்லலாம். கம் என்றால் இந்த்ரியம், புலன், இங்கு கண்ணையோ மனதையோ குறிக்கும். என் புலனில் நீ போ, என்கிறார். என் மனதில் இரு என்றோ, என் கண்ணுக்குத் தரிசனம் கொடு என்றோ வேண்டுகிறார். இது முதல் அர்த்தம். யாயா: மம கே என்று பிரித்துக் கிடைப்பது இது. யாயாம மகே என்று வேறு விதமாகப் பிரித்தால், யாகத்தில் நாம் மீண்டும் மீண்டும் போவோமாக என்றதாம். திருநாமத்திருவிழா என்னும் யாகத்தில் நாம் போவோம்.

அங்க என்பதற்கும் இரண்டு விதமாக அர்த்தம் கொள்ளலாம். அது விளிப்பொருளில் வரும் அவ்யயம் என்று முதல் அர்த்தம். அங்கம் என்றால் உடல். அடுத்த பதத்துடன் ஸமாஸம். அங்ககதம் என்றால் உடற்பிணி. அதினின்றும் காப்பவள் நீ. ஆரோக்ய லக்ஷ்மியானவள்.

பணிவினை விழைபவள். பிணியினில் காப்பவள்.
பாவமே அற்றவள். பாரிலே தோன்றினாள்.

★ ★ ★

24. அஞ்சினவரின் அவலத்தை அகற்றுபவள்.

मारमाता हि भात्युग्र रविमा हितभाग्रमा ।
मानिताविधिभीतानां हृतदुर्वृत्युरुभ्रमा ॥२४॥

மாரமாதா ஹி பா₄த்யுக்₃ர ரவிமா ஹிதபா₄க்₃ரமா ।
மாநிதா விதி₄பீ₄தாநாம் ஹ்ருத து₃ர்வ்ருத்யுருப்₄ரமா ॥ 24

मार-माता = மன்மதனுக்குத் தாயானவள்

रमा = லக்ஷ்மியானவள்

उग्र-रवि-मा = கொடியவர்களுக்குச் சூரியனின் சோபை கொண்டவள்.

हित-भाक् = ஹிதத்தை அடைகிறவள்.

मानिता = கௌரவிக்கப்பட்டவள்.

विधि = भीतानां = விதியிடம் பயந்தவர்களுக்கு

हृत-दुर्वृत्ति-उरु-भ्रमा = ஏழ்மைப் பெருந் துயரைப் போக்குபவள்.

भाति हि = பிரகாசிக்கிறாள் அல்லவா?


மன்மதமாதாவான ரமை உக்ரர்களுக்குக் கொளுத்தும் லஶர்யனாக இருப்பினும் ஹிதத்தையே அடைந்தவள். பூஜிக்கப்பட்டவள். ஏழ்மையைப் போக்குபவள். விதியினின்றும் பயந்தவர்களுக்கு நிம்மதி அளிப்பவள்.

இந்த ஶ்லோகம் கருடகதிசக்ரபந்தம் என்ற கட்டமைப்பு கொண்டது.

ஒரே மையம் கொண்டதாக மூன்று வட்டங்களை வரைந்து கொள்ளவும் முதல் வட்டம் மூன்றினுள் மிகப் பெரியது. அதில் பத்து எழுத்துக்கள் வரும். மற்ற இரண்டிலும் தலா ஐந்து எழுத்துக்கள் வரும். மொத்தமுள்ள முப்பத்திரண்டில் இருபதுக்கு இடம் சொல்லியாயிற்று. மீதி பன்னிரண்டும் வந்த எழுத்துகளே திரும்பி வரும். அதுவும் சில வ்யவஸ்திதமான இடங்களில் இவ்வாறு திரும்பி வரும். இதைப் புரிந்து கொள்ளக் கீழுள்ள படத்தைப் பார்க்கவும்.

நடு வட்டத்து உச்சியில் தொடங்கி, உள்வட்டத்திலும் நடுவட்டத்திலும் ப்ரதக்ஷிணமாக எழுத்துக்களை இட வேண்டும். நடுவட்டத்திலிருந்து உள் வட்டத்துக்குப் போகும்போதெல்லாம் மிகக் கிட்டின இடத்துக்குப் போக வேண்டும். உள்வட்டத்திலிருந்து நடுவட்டத்துக்குப் போகும்போதெல்லாம் மிகக் கிட்டினதுக்கு அடுத்ததுக்குப் போக வேண்டும். நடுவ்ட்டத்தில் ஒன்று, உள்வட்டத்தில் அடுத்த இரண்டு, மறுபடி நடுவட்டத்தில் ஒன்று, உள்வட்டத்தில் இரண்டு, என்றிப்படி ஐந்து தடவை பண்ணினால், 15 எழுத்துகள் ஆகிவிடும். பத்து இடங்களில் 15 எழுத்துகள் வந்ததால் அவற்றுள் ஐந்து திரும்பி வந்தவையாம். பதினாறாவது ஆரம்பித்த இடத்துக்கே வந்து சேரும்படி வரும். இதற்குள் இரண்டு சுற்றுகள் முடிந்திருக்கும். இதுவரை வெளிவட்டத்துக்கே வரவில்லை. உத்தரார்த்த எழுத்துகளில் பத்து வெளிவட்டத்தில் வரும். நடுவட்டத்தில் முன்போலவே தொடங்கி, வெளிவட்டத்தில் இரண்டு, நடுவட்டத்தில்

ஒன்று, மறுபடி வெளிவட்டத்தில் இரண்டு, நடுவட்டத்தில் ஒன்று, என்றிப்படியாக முழுச் சுற்றையும் முடித்தால், தொடங்கின இடத்துக்கே வந்து நிற்போம்.



இது வெற்றிகரமாக அமையவேண்டுமானால், சிற்சில இடங்களில் ஒரே எழுத்து மீண்டும் வரவேண்டும். உதாஹரணமாக, உத்தரார்த்தத்து நாலாம் எழுத்தும் பூர்வார்த்தத்துப் பத்தாம் எழுத்தும் ஒன்றாகும். இதோ முழுமையாக நியமங்கள்:

முதல் பாதத்து எட்டெழுத்துகள் இஷ்டப்படி இருக்கலாம்.

இரண்டாம் பாதத்தில் (ஒன்பதாவது முதல் பதினாறாவது வரையான எழுத்துகளில்) அவ்வளவு ஸ்வாதந்த்ர்யம் கிடையாது.

ஒன்பதாவது எழுத்தும் இரண்டாவது எழுத்தும் ஒன்றேயாக வேண்டும். இந்த ச்லோகத்தில் இது ர என்ற எழுத்து.

பதினொன்றாவது எழுத்தும் மூன்றாவது எழுத்தும் ஒன்றேயாக வேண்டும். இந்த ச்லோகத்தில் இது மா என்ற எழுத்து.

பன்னிரண்டாவது எழுத்தும் ஐந்தாவது எழுத்தும் ஒன்றேயாக வேண்டும். இந்த ச்லோகத்தில இது ஷி என்ற எழுத்து.

பதினாலாவது எழுத்தும் ஆறாவது எழுத்தும் ஒன்றேயாக வேண்டும். இந்த ச்லோகத்தில் இது பா4 என்ற எழுத்து.

பதினைந்தாவது எழுத்தும் எட்டாவது எழுத்தும் ஒன்றேயாக வேண்டும். இந்த ச்லோகத்தில் இது க்ர என்கிற எழுத்து.

கடைசியாகப் பதினாறாவது எழுத்தும் முதல் எழுத்தும் ஒன்றேயாக வேண்டும். இந்த ச்லோகத்தில் இது மா என்ற எழுத்து.

ஆக, இரண்டாம் பாதத்து எட்டு எழுத்துகளில் ஆறுக்கு மேற்கூறிய நியமங்கள். மற்ற இரண்டே இரண்டு மட்டும் இஷ்டப்படி அமைத்துக் கொள்ளலாம். இனி பின்பாதிக்கு வருவோம். உத்தரார்த்தத்தில் உள்ள பதினாறு எழுத்துகளில் (பதினேழாவது முதல் முப்பத்திரண்டாவது வரையானவற்றுள்) ஆறு எழுத்துக்களுக்கு நிர்ப்பந்தங்கள் உண்டு. அவை எவையெனில்:

பதினேழாவது எழுத்தும் முதல் எழுத்தும் ஒன்றேயாக வேண்டும். இந்த ச்லோகத்தில் இது மா என்ற எழுத்து.

இருபதாவது எழுத்தும் பத்தாவது எழுத்தும் ஒன்றேயாக வேண்டும். இந்த ச்லோகத்தில் இது வி என்ற எழுத்து.

இருபத்து மூன்றாவது எழுத்தும் நாலாவது எழுத்தும் ஒன்றேயாக வேண்டும். இந்த ச்லோகத்தில் இது தா என்ற எழுத்து.

இருபத்தாறாவது எழுத்தும் பதின்மூன்றாவது எழுத்தும் ஒன்றேயாகவேண்டும். இந்த ச்லோகத்தில் இது த என்ற எழுத்து.

இருபத்தொன்பதாவது எழுத்தும் ஏழாவது எழுத்தும் ஒன்றேயாக வேண்டும். இந்த ச்லோகத்தில் இது த்யு என்ற எழுத்து.

முப்பத்திரண்டாவது எழுத்தும் முதல் எழுத்தும் ஒன்றேயாக வேண்டும். இந்த ச்லோகத்தில் இது மா என்ற எழுத்து.


இந்த நியமங்கள் அமைந்துவிட்டால், கருடகதிசக்ரபந்தம் தானே அமைந்து விடும். படம் போடாமலே கூடப் பண்ணிவிடலாம். அது எப்படி என்பது கீழ்க்கண்ட படத்தின் மூலம் புரிகிறது.

1	2	3	4	5	6	7	8
	10			13			
	18	19		21	22		24
25		27	28		30	31	

மேலே காட்டிய இருபது எழுத்துகள் இஷ்டப்படி இருக்கலாம். மிச்சமுள்ள 12 எழுத்துகள் இந்த இருபதிலிருந்தே எப்படி வர வேண்டும் என்பதை அடுத்த படம் காட்டுகிறது.

1	2	3	4	5	6	7	8
2	10	3	5	13	6	8	1
1	18	19	12	21	22	4	24
25	13	27	28	7	30	31	1

இதை ஞாபகம் வைத்துக்கொள்ள மூன்று வட்டங்களின் படம் உதவும். கீழே பார்க்கவும் :-



இப்பொழுது அர்த்தங்களில் ஓரிரு சிறப்புகளைக் காண்போம்.

உக்ரரவியாய் இருப்பவளை ஹிதபாக் என்று உடனே சொன்னதன் கருத்து என்னவென்றால், அவள் தீயோரை ஒறுப்பதும் நன்மைக்காக என்பதைக் காட்டவாம். யாருடைய நன்மைக்கு? இரண்டு விடைகள். நல்லோருடைய நன்மைக்காகத் தீயோரைத் தண்டிப்பது ஒன்று. தீயோரின் நலம் கருதி அவர்களைத் தண்டிப்பது இன்னொன்று. இரண்டு விதத்தால் அவள் எல்லோருக்கும் ஹிதம் பண்ணுபவள். நம் ஹிதத்தையே தனக்கு அனுகூலமாகக் கருதுவதால் ஹிதம் பண்ணுபவளே ஹிதம் அடைபவள் ஆகிறாள். வேறொரு அர்த்தமும் சொல்வதுண்டு. உக்ரரவி என்பவர் திருமால். அவரிடம் திருமகள் உறைவதால் அவர் மா - ஆஹிதர் அதாவது மாஹிதர் ஆகிறார்; ஸ்ரீநிவாஸர் என்று அர்த்தம். அவரை அடைந்தவள் உக்ரரவி மாஹித பாக்.

அவள் துர்கதிப் பெருஞ்சிரமத்தைக் களைவதாகச் சொன்னதற்கு மூன்று தாத்பர்யங்கள். துர்கதி என்றால்

ஏழ்மை; அதனால் விளையும் பெரிய சிரமத்தை, பெரும்பாட்டை, அவன் நீக்குகிறாள் என்பது ஒன்று. துர்கதி என்றால் நரகம். துர்கதி என்னும் பெரிய சிரமத்தை அவள் நீக்குகிறாள். துர்கதியையும் சிரமத்தையும் நீக்குகிறாள் என்பது மூன்றாவது யோஜனை.

விதிக்குப் பயந்தவர்கள் என்கிறாரே, இங்கே விதி என்பதற்கு என்ன அர்த்தம் என்றால் இரண்டு விடைகள். தலைவிதி என்பதொன்று. சாத்திரவிதி என்பது இன்னொன்று. தன் கருமங்களின் விளைவுகள் எப்படியிருக்குமோ என்று பயந்தவர்களைச் சொல்கிறார்.

ஷுபாதி என்பதற்குப் பதில் ஷுமாதி என்று பல பதிப்புகளில் பாடம். இது கருடகதிசக்ரபந்தத்துக்கு ஒட்டாததால் ஏற்பதற்கில்லை. ஷ்ருத என்பதற்குப் பதில் துத என்றோ தூத என்றோ பாட பேதங்கள் நாகரப் பதிப்புகளில் உள்ளவை; அவற்றை ஏற்பதில் தவறில்லை. இருபத்தைந்தாவது எழுத்து இஷ்டப்படி இடக்கூடியது. திரும்பிவரத் தேவையற்றதுமானபடியால் சக்ரபந்தத்துக்குக் குந்தகம் இல்லை. தாத்பர்யார்த்தத்திலும் பெரிய மாறுதல் இல்லை.

மாரனின் மாதாவாவாள்
மாந்தருக்கு இதமே செய்வாள்
மாலுரத்து உறைவாள் இன்னல்
மாய்ப்பவள் மாண்பு மிக்காள்.

வ்யாஸம், செய்திகள் அனுப்பும் ஸ்வாமிகளுக்கு.....

ஆங்கில மாதம் முதல் தேதிக்குப் பிற்பாடு நம் கைக்குக் கிடைக்கும் எந்தச் செய்தியும், கட்டுரையும் ஸ்ரீ ரங்கநாத பாதுகாவில் உடனடியாக இதழில் ப்ரசுரிக்க முடியவில்லை. அவஸரத்தில் சேர்க்கப்படும் விஷயங்களால் ஸங்கடங்களும்/அச்சுப் பிழைகளும் மலிந்து வருந்தச் செய்கின்றன. அதனால் இந்த விஷயத்தில் ஸ்வாமிகளின் ஒத்துழைப்பைக் கோருகிறேன். ---ஸம்பாதகர்

25. பாமரர்க்குப் படகானவள்.

पामराज्ञानतरिका छायापा सम्मतातुला
तापनोदनहासैका रमा नतसुरावतात्

பாமராஜ்ஞாநதரிகா சா₂யாபா ஸம்மதாதுலா ।
தாபநோத₃நஹாஸைகா ரமா நதஸுராவதாத் ॥

पामर-अज्ञान-तरिका பாமரர்களின் அறியாமைக்குப் படகானவளும் ,
छाया-पा காந்தியைப் பாலிப்பவளும்,
सम्मता ஒப்புக்கொள்ளப்பட்டவளும்,
अतुला இணையற்றவளும்,
ताप-नोदन-हासा தாபத்தைத் தீர்க்கும் முறுவல் கொண்டவளும்,
एका ஒருத்தியானவளும்
नत-सुरा தொழுகிற தேவர்களை உடையவளும் ஆன
रमा இலக்குமி
अवतात् காப்பாற்றட்டும்.

பாமரர்களைக் கரையேற்றும் படகானவள் லக்ஷ்மி. நிழலாய் நின்று காப்பவள் அவள். இவ்வகையில் ஸர்வஸம்மதமானவள். ஈடிணையற்றவள். ஒரு புன்முறுவலாலேயே தாபங்களையெல்லாம் தீர்க்க வல்லவள். முக்கியமானவள். வணங்கும் வானவர்களை உடையவள். அத்தகைய ரமை நம்மைக் காப்பாற்றட்டும்.

இந்த ஶ்லோகம் ப்ரதிபாத துரங்க பந்தம் என்ற அமைப்பில் உள்ளது. (முழுத் துரங்கபந்தம் என்பதற்கில்லை. துரங்க பத பந்தம் என்று சிலர் சொல்கிறார்கள்.) சதுரங்க விளையாட்டில் குதிரையின் கதிக்கான விதிமுறைப்படி வேறு வரிசையில் வாசித்தால் அடுத்த ச்லோகம் வரும். இதற்காக இந்த ச்லோகத்தைக் கீழ்க்கண்டவாறு சதுரங்கப் பலகையில் எழுதிக் கொள்வோம்.

பா	ம	ரா	ஜ்ஞா	ந	த	ரி	கா
சா	யா	பா	ஸம்	ம	தா	து	லா
தா	ப	நோ	த	ந	ஹா	ஸை	கா
ர	மா	ந	த	ஸ	ரா	வ	தாத்

இப்போது குதிரையின் கதி முதல் எழுத்தான **பா** என்பதில் தொடங்குகிறது. அடுத்த எழுத்து என்ன? குதிரை எந்தக் கட்டத்துக்குப் போகலாம்? பலகையைப் பார்த்தால் முதல் கட்டத்திலிருந்து குதிரை பதினொன்றாம் கட்டத்துக்கோ பதினெட்டாம் கட்டத்துக்கோ போக முடியும். வேறெந்தக் கட்டத்துக்கும் இப்போது போகமுடியாது. பதினெட்டாம் கட்டத்துக்குப் போவோம். அதில் **ப** என்கிற எழுத்து. இது புது ச்லோகத்தில் இரண்டாம் எழுத்து. அடுத்த எழுத்து என்ன? குதிரை அடுத்ததாக எந்தக் கட்டத்துக்குப் போகக்கூடும்? பலகையைப் பார்த்தால், 3,12,28 என்பவற்றுள் ஏதோ ஒன்றுக்குப் போகக்கூடும். பன்னிரண்டாம் கட்டத்துக்குப் போனால் ஸம் என்ற எழுத்து கிடைக்கும். இது புது ச்லோகத்தின் மூன்றாம் எழுத்து.

1	2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31	32

இவ்வாறாக அமைத்துக் கொண்டே போனால், **பாபஸம்ஹாரிகா ராது** என்ற (அடுத்த ச்லோகத்து) முதல் பாதம் கிடைக்கிறது.

இப்படியே பதின்மூன்றாம் கட்டத்தில் ஆரம்பித்து இரண்டாம் பாதம் வரும். நாலாம் கட்டத்தில் ஆரம்பித்து மூன்றாம் பாதம் வரும். ஒன்பதாம் கட்டத்தில் ஆரம்பித்துக்

குதிரைக்கதியில் போனால் நாலாம் பாதம் வரும். இதனால் இதைப் பிரதி பாதத் துரங்க பந்தம் என்கிறோம்.

இனி அர்த்தத்தை அலசுவோம். **அஜ்ஞாந தரிகா** என்பதற்கு இரண்டு விதமாகக் கருத்து சொல்லலாம். பாமரர்கள் புலமையற்றவர்கள். **அஜ்ஞாநர்கள்** அறியாதவர்கள். அவர்களுக்குப் படகானவள் லக்ஷ்மி. அல்லது அஜ்ஞாநத்துக்குப் படகு. அறியாமையில். தத்தளிக்கும் நாம் அறியாமையிலிருந்து வெளியேறுவதற்கு உதவும் படகு. இரண்டும் ஒரே தாத்பர்யத்தில் முடிவுறும்.

சாயாபா என்பதற்கும் இரண்டு அர்த்தங்கள். காந்தியைக் கருக்கழியாமல் பாலிப்பவள் என்பது ஒன்று. நிழல் மூலம் நம்மைப் பாலிப்பவள் என்பது இன்னொன்று. நிழல் என்பது வாட்டம் தீருமிடம். **சாயாபா** என்பதற்குப் பதில் **சாயாயா** என்று சில பதிப்புகளில் பாடம். எவள் நிழலோ அவள் என்றர்த்தம். இப்படி ஒரு எழுத்தை மாற்றினால், அடுத்த ஶ்லோகத்திலும் மாற்ற வேண்டி வரும். மந்தஹாஸத்தால் தாபம் போவது இரு வழிகளிலாம். ஹாஸம் நிலவு போல் குளிர்விப்பதால் தாபம் போகிறது என்பதொன்று. ஹாஸம் அனுக்கிரஹத்துக்கு அறிகுறியாதலால் நம் தாபத்ரயமும் விரைவில் தீர்ந்துவிடும் என்பது மற்றொன்று.

படகாயும் நிழலாயும் நிலவாயும் அவள் இருப்பதால் அமரர்களும் அவ்வளை வணங்குகிறார்கள். இதே காரணங்களால் அவள் நம்மைக் காக்கட்டும்.

நதஸ¬ரா என்பதற்குப் பதில் **நதது॒ரா** என்று பாடபேதம். வணங்கினவர்களின் பளுவை உடையவள் என்று அர்த்தம். அவர்களது சுமையைப் பொறுப்பாக இவள் வஹிப்பாள். நாம் பரந்யாஸம் பண்ணினால் அவள் பரஸ்வீகாரம் பண்ணுவதால் அவள் **நதது॒ரா**.

பாமரர்க்கும் படகாவாள் பாலனம் செய் பொலிவுடையாள்
பணிந்தவரின் பளுவேற்பாள் பரிரக்ஷை பண்ணட்டும்.
நிழலாவாள் நிகரற்றாள் நிலவொத்த முறுவலினாள்
நிர்ஜரரை நியமிப்பாள் நீரஜையே நமைக் காப்பாள்.

26. மனத்துக்கினிய மாதாவானவள்.

पापसंहारिका रातु मनोज्ञा ननसम्मता ।
ज्ञानपामा दयाज्ञाता छामापापपरादरा ॥ २६ ॥

பாபஸம்ஹாரிகா ராது மநோஜ்ஞா நநஸம்மதா ।
ஜ்ஞாநபாமா தயாஜ்ஞாதா சாமாபாபபராதரா ॥ 26 ॥

पाप-संहारिका = தீவினைகளை மாய்ப்பவளும்
मनोज्ञा = மனம் கவர்பவளும்
न न सम्मता ஒப்புக்கொள்ளப் படாதவளாய் இல்லாதவளும்
ज्ञानपा அறிவின் மூலம் காப்பவளும்
मा = ப்ரகிருதி வடிவினளும்
ज्ञाता ப்ரஸித்தம் ஆனவளும்
अच्छा நிர்மலமானவளும்
अपापा இழுக்குகள் அற்றவளும்
परा உயர்ந்தவளும்
अ-दरा அச்சம் அற்றவளும்
मा மாதாவுமான லக்ஷ்மீ
दया: அருள்களை
रातु கொடுக்கட்டும்.

மா என்னும் அவள் பாபங்களை ஸம்ஹரிப்பவள். மனத்துக்கினியவள். ஸர்வஸம்மதமானவள். அறிவை ரக்ஷிப்பவள்; அறிவால் ரக்ஷிப்பவள். அறியப்பட்டவள். தெளிவானவள். கேடற்றவள். உயர்ந்தவள். பயமற்றவள். அருளைக் கொடுக்கட்டும்.

இந்த ஶ்லோகத்தில் என்ன விசேக்ஷம் என்றால், இதில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் போன ஶ்லோகத்தில் இருப்பது; வரிசை மட்டும் வேறு. குதிரைக் கதியால் பாதங்கள் அமைந்திருப்பதைப் போன ஶ்லோகத்தில் விளக்கியாயிற்று.

பாபஸம்ஹாரிகா, மநோஜ்ஞாநநஸம்மதா, ஜ்ஞாநபா, மா, தயாஜ்ஞாதா, பராதரா, என்ற ஆறுக்கும் இரண்டிரண்டு அர்த்தங்கள் சொல்லலாகும். அப்படிச் சொன்னால் திருமகளின் பன்னிரண்டு நற்பண்புகள் சொல்லப்படும். எப்படியென்றால்:

பாபஸம்ஹாரிகா என்பதற்கு முதல் அர்த்தம் பாவங்களைத் தொலைத்துக் கட்டுபவள் என்பது. **பூ மேல் இருப்பாள் வினை தீர்க்குமே** என்று ஆழ்வார் அருளிய கருத்து இது.

பாபஸம்ஹாரிகா என்கிற இதே பதத்துக்கு இன்னொரு அர்த்தம், பாபர்களை, அதாவது பாவிகளை, அழிவிப்பவள் என்பது. தன் கணவன் மூலமாக ராவணாதிகளை அழியச் செய்பவள். **மநோஜ்ஞா ந ந ஸம்மதா** என்பதற்கு முன்னர் கூறிய அர்த்தம். உள்ளம் கவர்பவளாயும், நிச்சயமாக ஒப்புக்கொள்ளப்பட்டவளாயும் இருப்பவள் என்பது. இப்போது கூறும் இரண்டாவது அர்த்தத்துக்கு **மநோஜ்ஞ-ஆநந-ஸம்மதா** என்று பிரித்துக்கொள்ள வேண்டும். உள்ளம் கவரும் திருமுகமண்டலத்தாலே ஸம்மதமானவள் என்று அர்த்தம். **மநஃ்ஶிலாயாஸ் திலக** என்று ராமாயணத்தில் ஸீதைக்குச் சொன்னபடி, **மநோஜ்ஞா** என்கிற வஸ்துவாலான திலகத்தை முகத்தில் ஸம்மதித்தவள் என்று மூன்றாவது அர்த்தமும் பொருந்தும்.

ஜ்ஞானம் பாதி என்றோ, **ஜ்ஞாநேந** பாதி என்றோ, விக்ரஹம் சொல்லி, அறிவைக் காப்பவள், அறிவால் காப்பவள், என்று இரு கருத்துக்களை வரவழைக்கலாம். அறிவை ரக்ஷிப்பதாவது, மூளை மழுங்காமல், கல்வி மறக்காமல், வித்யை மறையாமல், ரக்ஷிப்பது. அறிவால் ரக்ஷிப்பதாவது, **யம் ஹி ரக்ஷிதும் இச்சந்தி புத்த்யா ஸம்யோஜயந்தி தம்** என்ற ஶ்லோகத்தில் சொன்னபடி, நமக்கு அறிவைத் தந்து அதன் மூலமாக ரக்ஷணம் பண்ணுவது.

தயாஜ்ஞாதா என்பதை ஸமஸ்தபதமாகக் கொண்டு, அருளினால் விக்யாதி பெற்றவள் என்று பொருள் கொள்வார் உளர். ''அருள் எனும் சீர் ஓர் அறிவையானது என'' என்ற தேசிகஸூக்திப்படி, அருள் என்றே அறியப்பட்டவள் இவள் என்பது இரண்டாம் அர்த்தம். அவளது அருளால் அன்றி அவளை அறியமுடியாது ஆகையால் அவள் தயாஜ்ஞாதா என்பதும் தகும். தன் தயையால் நம் ஜ்ஞானவிஷயம் ஆனவள் என்றவிது மூன்றாவது அர்த்தம். **மா** என்பதற்குப் ப்ரக்ருதி என்றும் **தாயார்** என்றும் **வித்யாலக்ஷ்மி** என்றும் அர்த்தங்கள் இருப்பதால் இரண்டு தடவை **மா** என்று ச்லோகத்தில் சொன்னதில் கூறியது கூறல் என்னும் குறை இல்லை. **பராதரா** என்பதைப் **பரா** என்றும் **அதரா** என்றும் இரண்டு பதங்களாகப் பிரிக்காமல், **பர-ஆதரா** என்று ஒரே ஸமஸ்தபதமாகக் கொண்டு, மிகுந்த ஆதரவு கொண்டவள் என்று ஒரு அர்த்தமும், பரனான திருமாலிடம் ஆதரம் கொண்டவள் என்று இன்னொரு அர்த்தமும், பகைவர்களிடமிருந்து பயம் இல்லாதவள் என்று மூன்றாவது அர்த்தமும், கொள்ள இடமுண்டு.

தயைகளைத் தரட்டும் என்கையில், எப்படிப்பட்ட தயைகளை என்றால் பாபஸம்ஹாரிகைகளான தயைகளை என்றும் **ஜ்ஞாநபாக்**களான தயைகளை என்றும் அன்வயம் கொள்வதும் உசிதம். சில பதங்களில் விஸர்கத்துடன் பதச்சேதம் பண்ணவேண்டும்.

நநஸம்மதா என்பதற்குப் பதில் **நதஸம்மதா** என்ற நாகராக்ஷரப் பதிப்புப் பாடம் சரியன்று. அது **துரங்கபத**பந்தத்துக்கு ஒத்து வராதது காரணம். மற்ற பாடபேதங்களை இப்போது அலச வேண்டாம்.

அருவினை தீர்ப்பவள் அழகிய திருமகள்
அறிவால் காப்பவள் அளிக்கட்டும் அருள்

॥ श्रीः ॥

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

27. கொட்டிக் கொட்டிக் கொடுப்பவள்.

रमा सदा दासमार मानदाननदानमा ।

सदाशया याशदास दानयागयानदा ॥ २७

ரமாஸதா₃ தா₃ஸமார மாநதா₃நநதா₃நமா ।
ஸதா₃ஶயா யாஶதா₃ஸ தா₃நயாக₃யாநதா₃ ॥27

रमा = ரமாதே₃வி

सदा = எப்பொழுதும்

दास=मार=मान-दा = அடியார்க்கு மன்மதனால் பெருமையைத் தருபவள்

अनन-द-आनमा = மூச்சைத் தரும் சிறுவணக்கத்துக் குரியவள்

सत्-आशयाय = நல்லெண்ணத்தவர்க்கு

आश-दा = உணவு தருபவள்

स-दान-याग-ग-यान-दा = தானத்தோடும் யாகத்தோடும் கூடியவர்களைச் சேரும் வாஹனாதிகளைக் கொடுப்பவள்.

சிற்றின்பம், அன்னம், வாஹனம், உயிர்மூச்சு, எது வேண்டுமானாலும் ரமையின் அருளால் நமக்குக் கிடைக்கும்.

இந்த ஶ்லோகத்தில் நிறைய ஶப்தசித்ரங்கள் இருக்கின்றன :-

1. எந்தப் பாதத்தையும் திருப்பி வாசித்தாலும் மாறுபடாமல் அதே பாதம் கிடைக்கும்.

2. இதற்கும் மேலாக, ஸர்வதோபத்ரம் என்ற சித்ரபந்தம் இருக்கிறது.

3. த்விஸ்வரம் என்கிற நியமமும் உள்ளது. அதாவது இரண்டு உயிரெழுத்துகள் மட்டுமே உள்ளன. அ ஆ மட்டுமே உண்டு. இ ஈ முதலியன கிடையாது.

4. எட்டு எழுத்துக்கள் மட்டுமே திரும்பதிரும்ப வருவதால் 32 ஆகி உள்ளன.

5. உரப்பு எழுத்துகளே இல்லை.

6. சவர்க எழுத்துகளும் டவர்க்க எழுத்துக்களும் அடியோடு கிடையாது.

ஸர்வதோபத்ரத்தை விளக்குவதற்காக எட்டு வரிகளில் ஒவ்வொன்றிலும் எட்டு கட்டங்களை வரைந்து, முதல் பாதத்தை முதல் வரியில் கட்டத்துக்கொரு எழுத்தாக எழுதிக் கொள்ளவும். இதே போல் இரண்டாம் பாதத்தை இரண்டாவது வரியிலும், மூன்றுவதை மூன்றுவதிலும், நாலாவதை நாலாவதிலும் எழுதியதும், முழு ச்லோகமும் நாலு வரிகளில் முடிந்தது. அடுத்த நாலு வரிகளில் மறுபடியும் இதே ச்லோகத்தின் பாதங்களை மாற்றி எழுதிக்கொள்ளவும். அதாவது முதல் பாதம் கடைசி வரியில்; இரண்டாவது பாதம் அதற்கு முன் வரியில்; மூன்றும் பாதம் அதற்கும் முன் வரியில்; நாலாம் பாதம் மிச்சமுள்ள வரியில்.

இப்போது மேலிருந்து கீழாக வாசித்தாலும், இடமிருந்து வலமாக வாசித்தாலும், ஒரே மாதிரியாக இருக்கிறது. அது மட்டுமின்றி, கீழிருந்து மேலாக வாசித்தாலும், வலமிருந்து இடமாக (உருதுவை வாசிப்பது போல) வாசித்தாலும், மாறுதல் இல்லை.

ர	மா	ஸ	தா	தா	ஸ	மா	ர
மா	ந	தா	ந	ந	தா	ந	மா
ஸ	தா	ய	யா	யா	ய	தா	ஸ
தா	ந	யா	க	க	யா	ந	தா
தா	ந	யா	க	க	யா	ந	தா
ஸ	தா	ய	யா	யா	ய	தா	ஸ
மா	ந	தா	ந	ந	தா	ந	மா
ர	மா	ஸ	தா	தா	ஸ	மா	ர

இந்த மாதிரி அமைப்பதற்கு என்ன உபாயம் என்பதை இப்போது புரிந்து கொள்வோம்.

முதல் எழுத்தும் எட்டாம் எழுத்தும் ஒன்றேயாக இருக்க வேண்டும். இந்த ஶ்லோகத்தில் இது ர என்கிற எழுத்து.

இரண்டாம் எழுத்து, ஏழாம் எழுத்து, ஒன்பதாம் எழுத்து, பதினாறும் எழுத்து, என்ற நாலும் ஒன்றேயாக இருக்க வேண்டும். இந்த ஶ்லோகத்தில் இது மா என்கிற எழுத்து.

மூன்றும் எழத்து, ஆறும் எழுத்து, பதினேழாம் எழுத்து, இருபத்துநாலாம் எழுத்து, இந்த நாலும் ஒன்றேயாக இருக்க வேண்டும். இந்த ஶ்லோகத்தில் இது ஸ என்கிற எழுத்து.

நாலாம் எழுத்து, ஐந்தாம் எழுத்து, இருபத்தைந்தாம் எழுத்து, முப்பத்திரண்டாம் எழுத்து, என்கிற நாலும் ஒன்றேயாக இருக்க வேண்டும். இந்த ஶ்லோகத்தில் இது தா என்கிற எழுத்து.

பத்தாம் எழுத்தும், பதினைந்தாம் எழுத்தும் ஒன்றேயாக இருக்க வேண்டும். இந்த ஶ்லோகத்தில் இது ந என்கிற எழுத்து.

பதினொன்றும் எழுத்து, பதினாலாம் எழுத்து, பதினெட்டாம் எழுத்து, இருபத்துமூன்றும் எழுத்து, ஆகிய இந்த நாலும் ஒன்றேயாக இருக்க வேண்டும். இந்த ஶ்லோகத்தில் இதுவும் தா என்கிற எழுத்து.

பன்னிரண்டாம் எழுத்து, பதின்மூன்றும் எழுத்து, இருபத்தாறும் எழுத்து, முப்பத்தொன்றும் எழுத்து, ஆகிய நாலும் ஒன்றேயாக இருக்க வேண்டும். இந்த ஶ்லோகத்தில் இது மறுபடி ந என்கிற எழுத்து.

பத்தொன்பதாம் எழுத்தும் இருபத்திரண்டாம் எழுத்தும் ஒன்றேயாக இருக்க வேண்டும். இந்த ஶ்லோகத்தில் இது ப என்கிற எழுத்து.

இருபதாம் எழுத்து, இருபத்தொன்றும் எழுத்து, இருபத்தேழாம் எழுத்து, முப்பதாம் எழுத்து, ஆகிய நாலும் ஒன்றேயாக இருக்க வேண்டும். இந்த ஶ்லோகத்தில் இது யா

என்கிற எழுத்து. இருபத்தெட்டாம் எழுத்தும் இருபத்தொன்பதாம் எழுத்தும் ஒன்றேயாக இருக்க வேண்டும். இந்த ஶ்லோகத்தில் இது க என்கிற எழுத்து.

இந்த நியமங்கள் அமைந்துவிட்டால் தானே ஸர்வதோபத்ரம் அமைந்துவிடும்.

இதை ஜ்ஞாபகம் வைத்துக்கொள்ள ஒரு உபாயத்தைப் பார்ப்போம்.

பத்து பெட்டிகளில் மட்டும் அதற்கான எண்ணை எழுதிக்கொள்வோம். எந்தப் பத்தில் என்ருல் கீழுள்ள படத்தைப் பார்க்கவும். ஒரு முக்கோண வடிவில் இருப்பதால் எளிதில் நினைவில் இருத்தலாம்.

1	2	3	4
	10	11	12
		19	20
			28

பிறகு மூலைக் கோட்டில் *1,10,19,28* எண்ணுள்ள பெட்டிகளைச் சேர்க்கும் கோட்டில் ஒரு கண்ணுடி இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டு, ப்ரதிபிம்பங்களை எழுதவும். இப்போது இவ்வாருகும்.

1	2	3	4
2	10	11	12
3	11	19	20
4	12	20	28

இப்பொழுது இன்னொரு கண்ணுடி கீழ்மேலாக உள்ள கம்பங்களில் நடுக்கம்பத்தில் இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டு மறுபடி ப்ரதிபிம்பங்களை எழுதவும். இப்போது இப்படியாகும்.

தருகிறது. மாநதன் என்பவன் திருமால்; அமாநீ மாநதோ மாந்ய: என்று ஸஹஸ்ரநாமத்தில் மாநத: என்ற திருநாமத்தைப் பெற்றவன். பாவிகளான நமக்கு அவன் முகம் கொடான். நமக்கு எளிதில் கிடைக்காத மாநத-ஆநநம் இவளுடைய ஆநநத்தால் தான் நமக்குக் கிடைக்கிறது. நம்மிடம் விமுகனாயிராமல் அபிமுகனாகப் பெருமாள் ஆகும்படிப் பண்ணுகிற ஆநநத்தை உடையவள் லக்ஷ்மி. இது இரண்டாவது அர்த்தம். நாம் இவளை வணங்கினால் இவள் நமக்குத் திருமாலின் ஸௌமுக்யத்தைப் பெற்றுத் தருவாள் என்று சிறிது மாற்றத்துடனும் சொல்லலாம். ஆநநமே யஸ்யா: ஸா என்னாமல் ஆநநமே யஸ்யை ஸா என்று விக்ரஹம் பண்ணிக்கொள்ள வேண்டும். இதுவும் இரண்டாவது அர்த்தத்தின் இன்னொரு பேதம். இவள் நமக்கு மாநதா (பெருமை அளிப்பவள்) மட்டுமன்று. ஆநநதா கூட; முகம் கொடுப்பவள். அநமாவும் கூட. அமா இல்லாதவள். ஆநமா என்று பிரிக்காமல் அநமா என்று பிரிக்கிறோம். அமா என்றால் அலக்ஷ்மி, அவலக்ஷணம் அசிங்கம், மூதேவி குரூபம், அழகின்மை, அவம், அவத்யம். இதற்கெல்லாம் எதிர்த்தட்டானவள் லக்ஷ்மி. இவள் அதனால் அநமா. இப்படி மானதையாகவும் ஆநநதையாகவும், அநமையாகவும் இருப்பவள் என்பது மூன்றாவது அர்த்தம். அடுத்ததாக ஆநந-தாந-மா என்றும் பிரிக்கலாம். இவள் எப்படிப்பட்ட வள்ளல் தெரியுமா? இவளது முகத்திலேயே தானக்களை சொட்டுகிறது. வள்ளல்களுக்குள்ள தனிப்பட்ட முகக்களை இவளுக்கு இருக்கிறது. தாநஶோபை கொண்டவள் இவள். இது நான்காவது அர்த்தம். இவள் நமக்கு முகம் கொடுத்தாளானால், ஸமூஹத்தில் நமக்கு மதிப்பும் அந்தஸ்தும் உயரும். எனவே இவள் மாநத ஆநந தா. அநமா என்றது முன்போல. இது ஐந்தாவது அர்த்தம்.

அடுத்த பதம் ஸதாஶயாபயாஶயதா என்பது. ஆஶயம் என்றால் எண்ணம். ஸதாஶயன் நல்லெண்ணக்காரன். அவனுக்கு ஆஶயத்தை, அதாவது உணவைக் கொடுப்பவள் அன்னலக்ஷ்மி. இது ஏற்கெனவே சொன்ன முதல் அர்த்தம். ஸதாஶய-அபய-ஆஶய-தா என்று பிரித்தால், நல்லெண்ணத்தவர்க்கு அபயம் என்னப்படும் மங்களவிதியையும் ஆஶயம் எனப்படும்

உணவையும் தருபவள். ஸௌபலக்ஷ்மியும் அன்னலக்ஷ்மியும் ஆனவள். அல்லது ஆய-ஆஶ-தா என்று பிரித்தால், அவர்களுக்கு வரவையும் உணவையும் அளிப்பவள். தனலக்ஷ்மியும் அன்னலக்ஷ்மியும் ஆனவள் என்பதாம். இது இரண்டாவது அர்த்தம். நமக்கு நல்லெண்ணத்தையும் மங்களச் செயலேயும் உணவையும் தருபவள் என்பது மூன்றும் அர்த்தம். ஸதாஶயா என்று தனிப்பதமாக்கி, பிறகு அயாஶதாஸ என்று சேர்த்துக்கொள்ளலாம். இவள் நல்ல அபிப்ராயம் கொண்டவள். அயம் என்கிற ஶோபனத்தில் (மங்களகார்யத்தில்) ஆசை கொண்டவர்கள் அயாஶர்கள். ஆயத்தில் ஆசை கொண்டவர்கள் ஆயாஶர்கள். இப்படிப்பட்ட தாஸர்கள் அயாஶதாஸர்களும், ஆயாஶதாஸர்களும். அவர்களுக்கு இவள் வாரி வாரி வழங்குகிறுள் என்பது நாலாம் பாதத்தில் சொல்வது. இது நான்காவது அர்த்தம். ஸ ஏவ ஸோம்ய என்ற உபநிஷத்வாக்யப்படி, ஸத் என்றுல் பரம்பொருள். அவனே எண்ணத்தில் இருத்தித் த்யானிப்பவர்கள் ஸதாஶயர்கள். அவர்களுக்கு உணவு எது என்றுல், மோக்ஷத்தில் பரம்பொருளே உணவாகும். இந்த உணவை இவள் அளிப்பவள்; மோக்ஷாநந்தத்தைத் தருபவள் என்று அர்த்தம். இது ஐந்தாவது அர்த்தம். அடுத்த பாதத்தில் தர்மத்துக்கும் உபாயமாய் இருப்பதைச் சொல்கிறுர். போன ஶ்லோகத்தில் காமத்துக்கும். ஆக நாலு புருஷார்த்தங்களுக்கும் இவளே உபாயம் என்று சொன்னதாயிற்று.

கடைசியாக ஸதாநயாககயாநதா என்கிற பதம். தானங்கள், யாகங்கள், இவற்றேடு கூடினவர்கள் ஸதாநயாகர்கள். தர்மிஷ்டர்கள். அவர்களே அடையும் யாநம் தேர், யானே, முதலியது. யாநம் என்றது ஸகல ஐஶ்வர்யத்துக்கும் உபலக்ஷணம். இதையெல்லாம் தருபவள் லக்ஷ்மி. இது ஏற்கெனவே சொன்ன முதல் அர்த்தம். ஸதாநர்களுக்கும் (கொடையாளிகளுக்கும்) யாககர்களுக்கும் (யஜ்வாக்களுக்கும்) யாநத்தை (கதியை), சேருமிடத்தை, தருபவள் இவள். இது இரண்டாவது அர்த்தம். இன்னும் அர்த்தங்களும் இருக்கலாம். சொல்லி மாளாது.

உயிர்மூச்சைத் தருவாள் உள்ளத்தில் நல்லாள்
உணவையும் தருவாள் உயர்கதியும் தருவாள்.

28. கற்பகமான கடற்கன்னி.

समर्थयस्व सकल क्षितिस्थितिविनिर्मितिम् ।
मुमुक्षुद्रुरुमुत् समुद्रदुहितस्स्वयम् ॥२८॥

ஸமர்த்₂யஸ்வ ஸகல க்ஷிதிஸ்தி₂திவிநிர்மிதிம் ।
முமுக்ஷுத்₃யுத்₃ருருமுத் ஸமுத்₃ரது₃ஹிதஸ்ஸ்வயம் ॥28॥

समुद्र - दुहितः கடலின் மகளே!

मुमुक्षु - द्यु - द्रुः மோக்ஷார்த்திகளுக்குக் கற்பகமரமாயும்

उरु - मुत् அதிக ஆனந்தமாயும் உள்ள நீ स्वयं தானாகவே

सकल - क्षिति - स्थिति - विनिर्मितिं எல்லா உலகின் பாலனத்தைப் பண்ணுவதை

समर्थयस्व ஏற்படுத்து.

கடலரசனின் திருமகளே! நீயே மோக்ஷம் வேண்டுவோருக்கு எல்லாம் தரும் கற்பகத் தருவாய் இருக்கிறாய். நீயே பேரானந்தம். எல்லா உலகுக்கும் இருப்பையும் படைப்பையும் ஸமர்த்தித்துக் கொண்டிரு.

இந்த ச்லோகத்தில் என்ன விசேஷம் என்றால், முதல் பாதத்தில் உள்ள எட்டு எழுத்துகளும் அ என்ற ஒரே உயிரெழுத்தை உடையவை. எல்லாமே க,ங,ச,ஞ, வரிசையில் வருபவை. ஸ,ம,த,ய,வ, மறுபடி ஸ,க,ல, என்பவை அந்த எட்டும். இரண்டாம் பாதத்தில் இ என்ற ஒரே உயிரெழுத்து. எல்லாமே கி,ஙி,சி,ஞி, வரிசையில் வருபவை. க்ஷி,தி, மறுபடி தி, மறுபடி தி,வி,நி,மி, மறுபடி தி, என்று எட்டு. மூன்றாம் பாதத்திலோ உ என்ற ஒரே உயிரெழுத்து எட்டு தடவை. கு,ஙு,சு,ஞு, வரிசையில் வருபவை. மு, மறுபடி மு,க்ஷு, யு, இரண்டு தடவை ரு, அதன்பின் மற்றொருமுறை மு, என்று எட்டு. நாலாம் பாதத்திலும் அகரமும் உகரமும் மட்டுமே உயிரெழுத்துகள். இதனால், ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ, முதலிய மற்ற உயிரெழுத்துகள் இல்லாமலே முழு ச்லோகமும் முடிகிறது. மூன்று உயிரெழுத்துகள் மட்டுமே கையாளப் பட்டிருப்பதால் இதை

த்ரிஸ்வரம் என்பர். அதிலும் பாதத்துக்கு ஒன்றாகக் கையாண்டிருப்பது அபூர்வமான சித்ரம்.

இனி அர்த்தத்துக்கு வருவோம். ஸமுத்திரம் முழுநிலத்தின் இருப்புக்கும் நிர்மாணத்துக்கும் துணையாவது தெரிந்த விஷயம். ஸமுத்திரத்தின் மகளான நீயும் அதைப் பண்ணவேண்டும் என்று பிரார்த்தனை. ஸமுத்திரத்திலிருந்து கற்பகமரம் வந்ததாகச் சொல்வர். ஸமுத்திரத்தின் பெண்ணான நீயே கற்பகமரம் போல் ஆகிறாய். ஸமுத்திரக்கரைக்கு ஜனங்கள் மகிழ்ச்சிக்காகப் போவது வழக்கம். ஸமுத்திரத்தின் மகளான நீயோ பெருமகிழ்ச்சி வெள்ளமாக இருக்கிறாய். நீ ஸமுத்திரத்தின் மகள் என்பது பல வகையிலும் பொருத்தமே.

கடலின் மகளே கற்பகத் தருவே
களிப்பின் வடிவே காத்திடு உலகை.

29.திங்கள் திருமுகத்தாள்.

पारावाराज्जाता माता पायात्पायात्त्रासाद्दासान् ।
साराकाराजास्याख्याता साराकारा नागागाप्ता
॥२९॥

பாராவாராஜ்ஜாதா மாதா பாயாத் பாயாத் த்ராஸாத் தாஸாந்।
ஸாராகாராஜாஸ்யாக்யாதா
ஸாராகாரா நாகாகாப்தா ॥29॥

पारावारात् ஸமுத்திரத்திலிருந்து
जाता உண்டானவளும்
माता அன்னையும்
राका - राज - आस्या சந்திரன் போன்ற முகம் கொண்டவளும்
त्रासात् பயத்திலிருந்து
पायात् காப்பாளாக.

ख्याता புகழ்பெற்றவளும்
सार - आकारा அழகிய வடிவினளும்
नाग - अग - आप्ता மோக்ஷகிரியை அடைந்தவளும் ஆன
सा ஆவள்
दासान् அடியவர்களை
अपायात् அபாயரூபமான

கடலின் குமாரி. நமக்கெல்லாம் அன்னை. நம் தாபம் தீரும்படி நிலவொத்த முகத்தாள். நம்மைக் காப்பதற்காகவே திருமலைக்கு வந்துள்ளவள். நமக்குத் தரிசனம் தருவதற்காக அழகிய திருமேனி கொண்டவள். நம்மை அடியாராக ஏற்று ஸ்வாமிநியாய் இருப்பவள். நம்மை அவள் அபாயத்திலிருந்தும் அச்சத்திலிருந்தும் காப்பாற்றட்டும்.


காப்பாற்றுவதற்கு வேண்டிய உறவுமுறை இருப்பதை **மாதா** என்ற பதத்தால் சொன்னார். காப்பாற்றுவதற்கு வேண்டிய வல்லமை இருப்பதை **க்யாதா** என்ற பதத்தால் ஸூசிப்பித்தார். காப்பாற்றுவதற்கு வேண்டிய முனைப்பிருப்பதை **நாகாகாப்தா** என்ற பதத்தால் சொன்னார். காப்பாற்றுவதற்கு வேண்டிய அருள் இருப்பதை **ராஜாஸ்யா** என்ற பதத்தால் சொன்னார். காப்பாற்றுவதற்கு வேண்டிய நிலையை இருப்பதை **த்ராஸாத்** என்ற பதத்தால் சொன்னார். காப்பாற்றுவதற்கு நாம் வேண்டுகோள் விடுப்பதை **பாயாத்** என்ற பதத்தால் சொன்னார்.

இந்த ச்லோகத்தில் என்ன சித்ரம்? என்ற கேட்டால் மூன்று விசேஷங்களைச் சொல்லலாம்.

1. முப்பத்திரண்டு தடவையும் **ஆ** என்கிற ஒரே உயிரெழுத்து வந்துள்ளது; **இ,ஈ,உ,ஊ** முதலிய மற்றெந்த உயிரெழுத்தையும் காணோம். இந்த வேடிக்கைக்கு **ஏகஸ்வரம்** என்று பெயர். போன ஶ்லோகத்தில் **அ,இ,உ** என்ற மூன்று மட்டும் வந்தன; அதைவிட இது மேல் படி. தமிழில் இந்த மாதிரி வாக்கியத்துக்கு உதாரணம்; **தாமாய் வாக்கால் தாயார் பாராட்டாதார் பாழாவார்.**

2. அது தவிர விசித்திரமானதொரு ப்ராஸமும் இருக்கிறது. **பாராவாரா, ஜாதாமாதா, பாயாத் பாயாத், த்ராஸாத் தாஸாந், ஸாராகாரா,** மறுபடியும் **ஸாராகாரா,** என்று ஆறு நாலெழுத்துச் சொற்றொடர்களிலும் ஒரே மாதிரியான ப்ராஸம் என்னவென்றால், இரண்டாம் எழுத்தும் நாலாம் எழுத்தும் ஒன்றாக இருப்பது என்பது.

3. இரண்டு மரங்கள் பின்னிக்கொண்டிருப்பது போலவோ,



30. தமஸ்ஸைத் தாண்டுவிப்பவள்.

रमे रामे मुराराते: मारमातरतीतरे ।
ततं तिमिरमेतत्सु मतितोतितरामि ते ॥ ३०

ரமே ராமே முராராதே: மாரமாதரதீதரே ।
ததம் திமிரமேதத்து மதிதோதிதராமி தே ॥ 30

रमे ! லக்ஷ்மியே!
मुराराते: முராரியின்
रामे! காந்தையே!
मार - मात: மன்மதனின் தாயே!
अति - इतरे மற்றவர்களை விஞ்சியவளே!
ततं பரந்திருக்கிற
एतत् இந்த

तिमिरं तु இருளையோ

ते உன்

मतित: புத்தியால்

अतितरामि தாண்டுகிறேன்.

நீயோ ரமை. உன் கணவனோ முராரி. உன் மகனோ மன்மதன். இத்தகைய நீ எனக்குக் கொடுத்த அறிவின் துணையால் நான் இருளைத் தாண்டி வெளிச்சத்துக்கு வருகிறேன்.

இருளில் வீழ்த்துபவனாகிய மன்மதன் உன் மகனாக இருப்பதால் உன் அருளினால் நான் இருளைக் கடக்க முடிகிறது. இருளுக்கு அப்பால் அழைத்துச் செல்பவர் உன் கணவனாய் இருப்பதால் இது ஸாத்தியம் ஆகிறது. நீ அருளாவிட்டால் இவ்வளவு பரந்த இருளை என்னால் கடக்கவே முடியாது. நீ மற்றவர்கள் போல் இராமல் ஸர்வாதிஸாயினியாய் இருந்து எனக்கும் உதவுகிறாய்.

இருளைத் தாண்டுவது என்றால் என்ன? **தமஸ: பரஸ்தாத்** என்று உபநிஷத் ஸ்ரீவைகுண்டத்தை இருளுக்கு அப்பால் உள்ளதாகக் கூறியதால், இருளைத் தாண்டுவது பரமபதம் போவதாகும். **தமஸோ மா ஜ்யோதிர்கமய** என்ற உபநிஷத்வாக்கியப்படி, இருளைத்தாண்டினால் பரஞ்ஜோதியை அடையலாம்.

உன் புத்தியால் நான் தாண்டுகிறேன் என்றதற்கு மூன்று விதமாகத் தாத்பர்யங்கள் சொல்லலாம். 1. நீ கொடுத்த புத்தியால் என்பது ஒன்று. (என் புத்தியே உன்னுடையதுதானே! **ஸ்வ-தத்த ஸ்வ-தியா** என்று **ந்யாஸதஸகத்தில்** சொன்னபடி இது.) 2. உன் விஷயமான ஜ்ஞானத்தால், என் புத்தியில் நீ த்யானவிஷயமானதால், என்பது மற்றொன்று. (கடஜ்ஞானம் படஜ்ஞாநம் என்பது போல உன் ஜ்ஞானம் என்றால் உன் விஷயமான ஜ்ஞானம் அர்த்தமாகும்.) 3. நான் கடைத்தேறவேண்டும் என்று நீ ஸங்கல்பித்ததால், என்பது மூன்றாவது. (நான் தாண்டவேண்டும் என்று நீ நினைப்பதால் நான் தாண்ட முடிகிறது) என்னறிவே உன்னதுதான்; என்னறிவில்

நீ விஷயம்; உன் எண்ணம் எனக்குதவும்; என்றிந்த மூன்று கருத்துகளைச் சுருக்கிச் சொல்லலாம். ஏதத் என்றதால் இதோ இருக்கிறதே ஸம்ஸாரம் என்றும் அறியாமை என்றும் இருட்டு என்றுச் சுட்டிக்காட்டுவதாகக் கொள்ளலாம். ததம் என்றதால் இவ்விருட்டு மிதமிஞ்சி, அதிகமாகப் பரந்திருப்பதாகச் சொல்கிறார்.

இந்த ஶ்லோகத்தில் என்ன விசித்திரம் என்றால் மூன்றே மூன்று மெய்யெழுத்துகளை மட்டும் வைத்து எளிய பதங்களால் ஶ்லோகத்தை முடித்து விட்டார் என்பதாம். இதிலுள்ள முப்பத்திரண்டு எழுத்துகளும் ர,ரா,ரி,ரீ, வரிசையிலோ, ம,மா,மி,மீ, வரிசையிலோ, த,தா, தி,தீ, வரிசையிலோ மட்டும் வருபவை. தமிழில் மூன்றே மெய்யெழுத்துகளில் வாக்கியம் அமைக்க நாமும் முயலலாம். இதோ ஒரு முயற்சி. 1. பகுதி பகுத்துப் பதிப்பித்த புதுப் புத்தகத்தே பக்கத்துக்குப் பத்து தப்பு. 2. வைரத்தை ராத்திரி தராதே வைத்திரு. 3. வரவைத் தெரிவித்து வருத்தத்தைத் தராதே. இப்படிப் புனைவது ஸ்வாரஸ்யமாகத்தான் இருக்கிறது.

அனங்கனது அன்னையே! அச்சுதனின் ஆரணங்கே!
அருளியவுன் அறிவாலே ஆரிருளுக்கு அப்பாலே.

31. வளம் ஊட்டும் வராஹபத்தினி.

काले किलालौकिकैक कोलकालालके लल ।
कलिकाकालकल्लोलाकुललोकालिलालिका ॥३१॥

காலே கிலாலௌகிகைக கோலகாலாலகே லல ।
கலிகாகாலகல்லோலாகுலலோகாலிலாலிகா ॥ 31

अलौकिक-एक-कोल-काल-अलके அப்ராக்ருதமான ஒரு வராஹனின் கருங்குழலியே!
काले किल சரியான சமயத்தில் அல்லவா
कलि-काकाल-कल्लोल-आकुल-लोक-आलि-लालिका கலியென்னும் கெட்ட காலத்தின் வீச்சினால் கலவரமடைந்த உலக வரிசைக்குத் தெம்பூட்டுபவளாய்
लल விளையாடு.

ஒரு கால விசேஷத்தில் அப்ராக்ருதமான ஒப்பற்ற கோல வராஹத்தின் மனைவியானவளே! கரிய கூந்தல் கொண்டவளே! உன்னுடைய லீலை கலி காலக் கோலாஹலத்தால் கலவரமான உலகுக்கு அதிலிருந்து மீள்வதற்கான தெம்பை அளிக்கிறது. அப்படிப்பட்ட லீலையைப் பண்ணு.

இந்த ச்லோகத்தில் எல்லா எழுத்துகளும் க,கா,கி,கீ, வரிசையிலோ, அல்லது ல,லா,லி,லீ, வரிசையிலோ இருப்பவை. இதை த்விவ்யஞ்ஜநம் என்பவர். இரண்டே மெய்யெழுத்துகள் கொண்டது என்று அர்த்தம். தமிழில் இதோ ஒரு உதாரணம். 1. திப்பி தித்தித்தது; புத்தி தப்பித்தது. இதோ இன்னுமொரு உதாரணம்: 2. கலிகோலாகலக் கலக்கலாலுலகைக் குலுக்கிக் காக்க லீலை. இன்னும் சில உதாரணங்கள் 3. தாவித்தாவித் தூவ விதை தேவை. 4. கட்டிக்காட்டுக் கிட்டிக் கூட்டுக கெட்டுக்குட்டுக கேட்டுக் கொட்டுக. 5. துரத்தத்துரத்தத் திரி தேரை தீர்த்தத்தே. 6. பூட்டப்பட்ட பெட்டி போட்டுப் பாட்டி பட்ட பாடப்பப்பா! இரண்டே மெய்யெழுத்துகளில் நீண்ட வாக்யத்தை அமைப்பது ஸ்வாரஸ்யமாத்தான் இருக்கிறது. அடுத்த ச்லோகத்தில் இன்னும் விசித்திரம். ஒரே ஒரு மெய்யெழுத்தால் முழு ச்லோகமும்.

அலௌகிக என்றதால், அப்ராக்ருதமான சுத்தஸத்வமயமான திவ்யமான அவதாரத்திருமேனியைச் சொல்கிறார். அவதாரரஹஸ்யத்தில் **இவ்விக்ரஹங்கள் ஶுத்தஸத்வமயங்கள்** என்று ஸ்வாமி தேசிகன் அருளியபடியாம். ஏக என்றதால் ஒப்பற்ற திருமேனியைச் சொல்கிறார். **வாராஹம் ஆஸ்திதவதோ வபுரத்புதம் தே** என்றருளியபடி, அற்புதமான திருமேனி. கோல என்றால் வராஹன். **மீநாக்ருதே கமடகோல** என்ற ச்லோகத்தில் போலே. **கோலே** என்று பாடாந்தரம். வராஹனிடம் விளையாடு என்று அன்வயிக்கலாம். இவ்வவதாரத்தில் லக்ஷ்மி விஹரிப்பதை, லக்ஷ்மீ வராஹன் என்ற திருநாமத்தாலும். **கோலமலர்ப்பாவைக்கன்பாகிய என் அன்பேயோ, கோலவராஹம் ஒன்றாய்** என்ற ஆழ்வார் பாசுரத்தாலும் அறிகிறோம். **காலாலகே** என்றால் கருங்குழலியே என்று விளி. **மைத்தகுமா மலர்க்குழலாய் வைதேவீ** என்ற பெரியாழ்வார் பாசுரத்தில் போலே. வராஹாவதாரம் கலிகாலத்தில் இல்லையே, இந்த ச்லோகத்தில் எப்படி வராஹமஹிஷி கலிகாலக் கலவரத்தைக் களைவதாகக் கூறுகிறார்? என்றால்,

வராஹக்ஷேத்ரத்தில் திருமலையில் வராஹமஹிஷியானவளன்றோ, கலியுகக்கடவுளான திருவேங்கடமுடையானின் பத்மாவதித்தாயாராய், இந்த **லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தின்** காவ்யநாயகியாகிறாள்? **காகாலம்** என்று கெட்ட காலத்தைச் சொல்வது, கெட்ட புருஷனைக் காபுருஷன் என்றும், கெட்ட வழியைக் **காபதம்** என்றும் சொல்வது போலவாம். லோகாலி என்றது, ஈரேழு புவனங்களையும் (பூலோக புவர்லோகாதிகளையும் அதல பாதாலாதிகளையும்) குறிப்பதாம். இவள் உலகங்களை லாலிப்பதாகச் சொல்வது **விநஷ்டப்ராயம் அபவத் த்வயேதாநீம் ஸமேதிதம்** என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் சொன்னபடியாம். இவளுடைய வாத்ஸல்யம் மிக்க லீலை இல்லாவிட்டால் கலியின் கொடுமையில் உலகமெல்லாம் சிக்கியே கிடக்கும். கில என்று ப்ரஸித்தியைச் சொன்னது, வேதத்தில் கூட வராஹாவதாரம் ப்ரஸித்தமாய் இருப்பதைக் காட்டவாம்.

காலவிசேஷத்தில் கோலவராகத்தின்
காதலி! கலியுஹத்தின் காலக் கேட்டாலே
காசினி கலங்காதே காத்திடு க்ருபையாலே.

|| ஸ்ரீ: ||

ஆழ்வார் திருநகரி நம்முடைய ஆண்டவன் ஆச்ரமத்தில் (கடந்த 2 வருடங்களாக) ஸ்வாமி தேசிகன் புரட்டாசி ச்ரவணத்தன்று 9.10.08 அன்று ஸேவாகாலம் தேசிக ப்ரபந்தம் ஸேவித்து பெருமாளுக்கு விசேஷ தளிகைகள் கண்டருளப் பண்ணி கோஷ்டி விநியோகம் நடைபெற்றது. அன்றைய தினம் ஸ்வாமி தேசிகன் மாடவீதி வலம் வந்து ஸ்வாமி நம்மாழ்வார் எம்பெருமான் ஆதிநாதர், மங்களாஸாசனம் ஆகி பின்னர் மாலையில் ஆஸ்தானம் எழுந்தருளுகிறுர். ஸௌகர்யமுள்ளவர்கள் அவசியம் ஆழ்வார் திருநகரி சென்று நம் ஆச்ரமத்தில் தங்கி ஸ்வாமி தேசிகன் புரட்டாசி ஶ்ரவணம் ஆழ்வார் மங்களாஶாஸனத்தில் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம். கீழநத்தம் ஸ்ரீமான் கோபால் ஸ்ரீனிவாஸ அய்யங்கார் ஸ்வாமி நம் ஆஶ்ரமத்திற்குப் புதிய பீரோ ஸமர்ப்பித்துள்ளார். ஆஶ்ரம மேனேஜர் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸ தாத்தம் ஏற்பாடுகளைச் செய்தார்.

—ஸ்ரீ கார்யம்.

32. தங்கத்தைத் தருபவள்.

ररोररेररुरोरुरूरुरुरुरोररे।
रेरेरारेराररेरारोरारिरिरारिरा ॥३२॥

ரரோரரே ரருரோ ருரூருரு ருரோரரே ।
ரே ரே ராரேராரரரே ராரேராரிரிராரிரா ॥32॥

रे रे ஜனங்களே!

र-र-इरा - र - इ - रारि - रि - रा நெருப்பு போல் கொடியவனும் குடிகாரனும் காமவசப் பட்டவனுமானவனின் அழிவைத் தருபவளும்

अरि-रा வண்டுக்கூந்தல் கொண்டவளும்

उरु-ऊरुः பருத்த தொடை கொண்டவளுமான

उः லக்ஷ்மியானவள்

र-रोः ர என்கிற எழுத்துக்கே பயந்தவனும்

अर-रुरोः வேகம் கொண்ட மானுமானவனுக்கு

अरेः பகைவனான ராமனுடைய

उरः-अररे மார்புக்கதவத்தில்.

रा-अरेः தங்கக் கொத்துக்காக

आर சரணடைந்தேன்.

ராவணன் கனல் போல் கொடியவன். குடிகாரன். காமவசப்பட்டவன். அவனுக்கு அழிவை உண்டுபண்ணியவள் ஸீதை. வண்டு போல் கருத்த கூந்தல் கொண்டவள். பருத்த தொடை உடையவள். மாரீசன் ர என்ற எழுத்தில் தொடங்கும் பதத்தைகக் கேட்டாலே ராமனை நினைத்து நடுங்குபவன். மானாய் வந்தவன். அவனுக்குப் பகைவன் ராமன். அந்தத்திருமாலின் மார்புக் கதவில் இருப்பவள் லக்ஷ்மி. அவளை நான் சரணடைந்தேன். எனக்குச் செல்வம் கொழிப்பதற்காக.

இந்த ஸ்லோகத்தில் ஒரே ஒரு மெய்யெழுத்து, ர் என்பது, மட்டுமே வந்துள்ளது. முப்பத்திரண்டு தடவை.

இதற்கு முன் ஶ்லோகத்தில் இரண்டு மெய்யெழுத்துகள்; அதற்கும் முந்தியதில் மூன்று மெய்யெழுத்துகள். இதிலோ ஒன்றே ஒன்று. இவ்வளவு கடினமான வரையறையைக் கொண்டால், அபூர்வமான, அதிகப் புழக்கத்தில் இல்லாத, பதங்களைக் கையாள்வதைக் குறை சொல்ல முடியாது. தமிழில் ஒற்றை மெய்யெழுத்துப் பதத்துக்கு உதாரணம் : தித்தித்தது. அரிய பதங்களையும் சேர்க்கலாம் என்றால்: 1. துத்தத்தது தத்தத்தது தித்தித்தது. துத்தத்தது என்றால் துத்தம் என்னும் உலோகத்தில் உள்ளது. இந்த ரீதியாக அர்த்தம் சொல்வது கஷ்டம். அது போலத்தான் இந்த ச்லோகத்துக்கும் அர்த்தம் சொல்வது கஷ்டமாய் இருக்கிறது. ஆனாலும் புலமை உடைய உரையாசிரியர்கள் ஸ்வாரஸ்யமாக அர்த்தம் கண்டுள்ளார்கள். அதைப் பின்பற்றி மேலே ஒருவாறாகப் பொருள் கூறப்பட்டது. இதோ மேலும் சில உதாரணங்கள்: 2. தத்திதைத்தித் தாதி தைத்ததைத் தா. 3. காக்கை கக்குகைக்குக் கொக்கு(உ)கக்குகை. இந்தக்கவிக்கு இது எப்படி ஸாத்தியமாயிற்று? பலரும் அறிந்த சில சொற்களில் ர் என்ற ஒரே மெய்யெழுத்து கொண்டவற்றை எடுத்துக் கொண்டார்:

அரி என்றால் பகைவன்.; உரு என்றால் பெரிய.

ஊரு என்றால் தொடை. உரஸ் என்றால் மார்பு.

உரரம் என்றால் கதவுப்பலகை.

ரே என்பது பலரை அழைக்கும் விளி.

ருரு என்பது ஒருவகை மான்.

இரா என்றால் போதையூட்டும் திரவம்.

அதன்பிறகு அதிகப் புழக்கத்தில் இல்லாத சில ஒற்றையெழுத்துப் பதங்களை எடுத்துக் கொண்டார்.

ர என்றால் நெருப்பு என்றும் க்ரூரத்தன்மை என்றும் அர்த்தங்கள்.

ரா என்றால் தங்கம்.

ரு என்றால் பயம்.

இ என்றால் மன்மதன்.

உ என்றால் லக்ஷ்மி.

ரா பண்ணுவது என்றால் கொடுப்பது.

ரி பண்ணுவது என்றால் அழிப்பது.

அதன்பிறகு ரலயோரபேதம் என்னும் நியாயப்படி லகரத்தை ர என்று மாற்றிக் கொள்ளலாம் எனக்கொண்டு சில பதங்களை எடுத்துக்கொண்டார்.

அளி என்றால் வண்டு; அரி என்றும் சொல்லலாம்.

லாலி என்றால் தீவிரமாய் ஈடுபடுபவன்; ராரி என்றும் சொல்லலாம்.

அலி என்றால் வரிசை; அரி என்றும் சொல்லலாம்.

இதுமாதிரியுள்ள சுமார் இருபது பதங்களைக் கோத்தார்; தனி உயிரெழுத்துகள் ஸந்தியில் மறையும்படி அமைத்தார்; கவிதை புனைந்து விட்டார். எல்லா எழுத்துகளம் ர,ரா,ரி,ரீ வரிசையில் வந்துவிட்டன.

இந்த மாதிரி ச்லோகங்களுக்கு அர்த்தத்தைப் பலர் பலவிதமாகச் சொல்வதில் வியப்பில்லை; பண்டிதர்கள் புகுந்து விளையாடிவிடுவார்கள். இதோ சில உதாரணங்கள். அராரே: என்றால் ஓடும் பகைவரைக் கொண்டவனுடைய, அதாவது பகைவரை விரட்டுபவனுடைய. இராரிரா என்றால் அக்நிப்ரவேசம் பண்ணின ஸீதை; இதில் இராரி என்றால் நீருக்கெதிரியான நெருப்பு. அரு: என்றால் பயமற்றவள். அல்லது பயம் போக்குபவள். ரரேரா என்றால் பணத்தைத் தரும் வாக்குள்ளவள்; அதாவது, செல்வத்தை வரமாக வாக்கினால் அளிப்பவள். இதெல்லாம் வரும்படி சில பாடபேதங்களைப் பண்ணி, ல என்ற எழுத்தை ர என்ற எழுத்தாகக் கொள்ளும் கிலேசம் இல்லாமலே அர்த்தம் சொல்வதும் உண்டு.

ராக்ஷஸ மான் வதம் செய்த ராகவனின் ராமையிவள்
ராவணனை ரணத்தழித்தாள் ரமை என்னை ரக்ஷிப்பாள்.

—★—

33. என் அறிவுக்கு எட்டியவள்.

मामाममाममेमामा मामूमामेममामामे ।
मामामेमिमिमे माम ममोमामाममामिमाम् ॥ ३३॥

மாமாமமாமமேமாமா மாமூமாமேமமாமமே ।
மாமாமேமிமிமே மாம மமோமாமாமமாமிமாம். ॥ 33

मम என்
इमां இந்த
मां புத்தியை
मा லக்ஷ்மி
आम வந்தடைந்தாள்.
अमूं இவளை
आम (என் புத்தி) வந்தடைந்தது.
ए லக்ஷ்மியே!
मां லக்ஷ்மியையும்
अं விஷ்ணுவையும்
आमेम வந்தடைவோமாக.
अमां மறதியை
मा एमि அடையமாட்டேன்.
मां மோக்ஷகாலத்தை
मिमे அளந்தெண்ணுகிறேன்.
अमम: என்னுடையதன்று என்னும் ஸாத்விகத்யாகம் கொண்டவளாய்
मा-मां புத்திவிஷயமான
मां பூஜையை
अमामि அனுஷ்டிக்கிறேன்.

இதோ என் புத்தி இருக்கிறதே. (விசித்திரமாக **லக்ஷ்மீஸஹஸ்ரம்** பண்ணும் புத்தி) இதை நெருங்கி வந்துவிட்டாள் தாயார் லக்ஷ்மி. இந்தப்புத்தியும் அவளை நோக்கிச் சென்றுவிட்டது. (திவ்யதம்பதிகளை) திருவையும் திருமாலையும் அணுகும்படி லக்ஷ்மியே! நீ அருளுக. உன்னை மறவாமல் மனத்திலிருத்துவேன். இன்றோ நாளையென்று எண்ணிக்கை பண்ணிக்கொண்டு மோக்ஷவேளையை எதிர்நோக்குகிறேன். பண்ணும் கருமங்களிலெல்லாம் எனக்கன்று என்று ஸாத்விகத்யாகத்துடன், அறிவால் உபசரிக்கிறேன். (அதுவே இந்த **லக்ஷ்மீஸஹஸ்ர**மாகப் பரிணமிக்கிறது.)

மாமாமமாமமேமாமா என்ற முதல் வாக்கியத்தின் கருத்து வருமாறு: **சித்ரஸ்தபகம்** போல ஒரு கவிதை புனைவது எளிதன்று. என் புத்தியில் லக்ஷ்மியின் ஸாந்நித்யம் இருப்பதால் தான் இது முடிகிறது என்பதாம். இந்தப் புத்தி என்பதில் **இந்த** என்பதன் கருத்து என்னவென்றால். இப்போது சொல்வேடிக்கைகளின் மூலம் **ஏகவ்யஞ்ஜனம்** முதலிய சித்ரங்கள் மூலம் லக்ஷ்மியைத் துதிக்கும் இந்தப் புத்தி என்பதாம். **ஆமாமூம்** என்ற இரண்டாம் வாக்கியத்தின் கருத்து வருமாறு: இந்த லக்ஷ்மீஸாந்நித்யத்தின் பலனாக என் நல்லறிவு அவளை

அடைந்தது; அவள் விஷயமாகத் தியானமும் கவனமும் கொண்டது. (கவனம் என்பது ஒருமுனைப்பு என்று பொருள்படும் தமிழ்ச் சொல்லுமாகும்; கவிபாடுதல் என்று பொருள்படும் வடமொழிச் சொல்லுமாகும் இவ்விரண்டு அர்த்தங்களும் இங்கு பொருந்தும்.)

அமேமாமாமமே என்ற மூன்றாம் வாக்கியத்தின் கருத்து வருமாறு: நாமெல்லாருமாகச் சேர்ந்து, (**லக்ஷ்மீஸஹஸ்ரம்** இயற்றுபவருடன் படித்து ரசிப்பவர்களும் ஒன்றுகூடி) திருவையும் திருமாலையும் அணுகுவோமாக. லக்ஷ்மியே! நீ இப்படி எங்களை அணுகப் பண்ணு. **மாமாமேமி** என்ற நாலாம் வாக்கியத்தின் கருத்து வருமாறு: **மறப்பனோ இனி யான் என் மணியையே** என்று ஆழ்வார் அருளியபடி, நான் மறக்காதிருக்கிறேன். **மாமிமே** என்கிற ஐந்தாம் வாக்கியத்தின் கருத்து வருமாறு: வேளையை எதிர்நோக்குகிறேன். மோக்ஷகாலத்தைப் ப்ரதீக்ஷிக்கிறேன். ஒன்று இரண்டு என்று நாட்களை எண்ணுகிறேன். **அமம:** என்றதன் கருத்து வருமாறு: **ந மம,** எனக்கில்லை, எல்லாம் பகவத்ப்ரீதிக்கே என்கிற **ஸாத்விக த்யாக** மனப்பான்மை கொண்டுள்ளேன். **மாமாம் மாமமாமி** என்ற ஆறாவதும் கடைசியானதுமான வாக்கியத்தின் கருத்து வருமாறு: இவளுக்குச் சரீரத்தாலும் வாக்கினாலும் பூஜோபசாரங்களைப் பண்ணுவது போலவே, இப்போது புத்தியால் ஸம்மானம் பண்ணுகிறேன்.

புத்தியாலேயே பூஜோபசாரங்களைப் பண்ணுவதாகச் சொல்கிறாரே, எப்படி ? உடலால் (ப்ரதக்ஷிணம் முதலியன) பண்ணுவதும், மனத்தால் (தியானம் முதலியன) பண்ணுவதும், வாக்கினால் (தோத்திரம் முதலியன) பண்ணுவதும் நமக்கெல்லாம் தெரியும். புத்தியால் பண்ணும் லக்ஷ்மிகைங்கரியம் என்பது எது? **லக்ஷ்மீஸஹஸ்ர** சித்ரஸ்தபகத்தை அதிசாதுர்யத்துடன் இயற்றுவதும், அதை நாமெல்லாரும் மர்மங்களோடு புரிந்துகொண்டு ரஸிப்பதும், தாயாருக்கு நாம் புத்தியால் பண்ணும் கைங்கரியங்களில் சேரும். அதை இந்தக்கவி இப்போது பண்ணுவதாகக் கூறுவது மிகப் பொருத்தம்.

மா என்ற பெண்பால் ஒருமைச்சொல்லுக்கு ஆறு அர்த்தங்களை இந்த ச்லோகத்தில் பயன்படுத்தியுள்ளார். **லக்ஷ்மி, அன்னை, அறிவு, அளவு, வேளை, ஸம்மானம்,** என்ற ஆறு அர்த்தங்களும் நிகண்டுக்காரர்கள் சொன்னவை; ஆறு வாக்கியங்களில் ஒவ்வொரு வாக்கியத்திலும் **மா** என்ற பதத்தை அமைத்ததோடு மட்டுமன்றி, ஒவ்வொன்றிலும் ஒவ்வொன்றாக ஆறு அர்த்தங்களையும் கொண்டது விசேஷம். **அம்** என்றொரு வினையடி. அணுகுவது அர்த்தம். அதனடியாக, ஆம என்றும், **ஆமேம** என்றும், **அமாமி** என்றும் மூன்று ப்ரயோகங்களைப் பண்ணியிருக்கிறார். மற்றபடி **மம, ஏமி, இமாம், அமூம்,** முதலியவை எல்லாரும் அடிக்கடி பயன்படுத்தும் பதங்களே. இவற்றையெல்லாம் சேர்த்து, ஆறு வாக்கியங்களிலும் மகர ஒற்று தவிர வேறெந்த ஒற்றெழுத்தும் வராமல், முப்பத்திரண்டு தடவை மகர ஒற்று வரப்பண்ணி, **ஏகவ்யஞ்ஜநம்** (ஒற்றை ஒற்று) என்ற சித்ரச்லோகத்தை இயற்றிவிட்டார். தமிழில் ஒற்றையொற்று வாக்கியத்துக்கு உதாரணம், கொக்கைக் காக்கக் **கொக்கொக்க** என்பதாம். இதேபோல் முழுச்செய்யுளையும் ஒரே பொருள் பற்றிப் புனைவது நம் போன்றாரால் ஆகாது. தெய்வானுக்ரஹம் பெற்ற மஹாகவிகள் மட்டுமே இவ்வாறு இயற்ற வல்லவர். **வேங்கடாத்வரி**யும் அவர்களுள் ஒருவர். ஏகவ்யஞ்ஜநமாகவே இரண்டு ச்லோகங்களைத் தாயார் விஷயமாகப் பாடி வெற்றி கண்டுள்ளார்.

இவ்வளவு ஸ்வாரஸ்யமான ச்லோகத்தைப் பண்டிதர்கள் விட்டுவைப்பார்களா? வெவ்வேறு விதமாக அர்த்தம் சொல்லித் தத்தம் புலமையை வெளிப்படுத்தியுள்ளார்கள். வேண்டுமானால் சில எழுத்துகளை மாற்றியமைத்துக் கொண்டு பாடபேதத்தைக் கல்பிக்கவும் அவர்கள் தயங்கவில்லை. இதோ சில கருத்துகள்: **மம்** என்றால் விஷம். ம: என்றால் வேளை. மமே என்றால் விஷவேளையில் என்றாகிறது. ஸம்ஸாரத்தில் அல்லது மரணகாலத்தில் என்று கருத்து. **அமா** என்றால் கூடவே (**அமாவாஸ்யை** என்ற பதத்தில் போல). **அமா-அமா** என்றால் கூடவே அணுகுபவள். நாம் பெருமாளை அணுகும்போது நமக்குப் பரிந்து நம்முடன் கூடவே இவளும் அணுகுவதால்

இவள் **அமாமா.** அல்லது எனக்குத் துணையாக எங்கும் வருவதால் இவள் மம **அமாமா.** மா என்றால் ப்ரமாணம்; மா என்றால் அளவு; மாமா என்றால் ப்ரமாணவிஷயமாக முக்கிய ப்ரமேயமானவள். ம: என்றால் சந்திரன்; மா என்றால் அழகு; மமா என்றால் நிலவழகி. அம் பண்ணுவது என்றால் சாப்பிடுவது; அமா என்றால் கூட; அமாமா: என்றால் உடனுண்பவர்கள், குடும்பத்தார். **பிப்பலம் ஸ்வாத்வத்தி** என்று உபநிஷத்தில் சொன்னபடி ஸம்ஸாரத்தில் கட்டுண்டு கிடப்பவர்கள் சாப்பிடுபவர்கள். ப்ரஹ்மருத்ராதிகள் என்னோடு கூடச் சாப்பிடுபவர்கள். அவர்களை மா அமாமி, அணுகமாட்டேன்; தஞ்சமாகக் கொள்ள மாட்டேன்; உன்னைத்தான் தஞ்சம் புகுவேன் என்று கருத்து. மா என்றால் ப்ரமா; அம என்றால் அடைந்தவொன்று; மாம: என்றால் வேதம்; ஆமமே என்றால் பேசியது; வேதம் இவளைப் பற்றிப்பேசியது என்று அர்த்தம். என்றிப்படிப்பல.

இந்த ச்லோகத்து நீதிகள்: 1. புத்தியை எதெதிலோ செலுத்துவதை விட அன்னையிடம் செலுத்துவது நல்லது. 2. தனியே தொழுவதும் நல்லது; பலருடன் கூடித் தொழுவதும் நல்லது. 3. சில விஷயங்களில் மறதி கூடாது. 4. தனக்கென்று நற்செயல்களைப் பண்ணக்கூடாது. மமபாவம் அற்றிருக்க வேண்டும். 5. மோக்ஷகாலத்தை வரவேற்க வேண்டும். 6. அறிவைக் கொண்டும் கைங்கரியங்களைப் பண்ணக்கூடும். 7. அதுவாக வாய்க்கும் வரை காத்திராமல் நாமே அணுகிக் கைங்கர்யம் புரிய வேண்டும். 8. உற்றார் உறவினரை உதறியும் தெய்வத்தை அணுகல் தகும். 9. மற்ற தேவதைகளை அணுகுவதில் பயனில்லை. 10. தாயாரின் புருஷகாரம் (சிபாரிசு) உதவும்.

என்னறிவை எட்டியவள் எண்ணமறாதேகியவள்
எனக்கில்லை என்கின்ற என் பூஜை ஏற்குமவள்.

—★—

34. முழுநிலா போல் முகத்தழகி.

मामानमामानमामा मानमाननमानमा ।
नमानमामानमान मानमाननमानमा ॥३४॥

மாமாநமாமாநமாமா மாநமாநநமாநமா ।
நமாநமாமாநமாந மாநமாநநமாநமா ॥ 34

मां லக்ஷ்மியை
आनमाम வணங்குவோமாக.
अनमा-म-अमान-म-आनन-मा-
अनमा பௌர்ணமி சந்திரனுக்கு இழுக்கு ஊட்டும் முகத்தழகால் செழித்தவள்.
मा லக்ஷ்மி.
मानं கர்வத்தை **न आम** அடையவில்லை.
अनमा பணிவற்றவள் **न** அன்று
मान-मानन-मा பெருமை பாராட்டும் எண்ணத்தவள் **न** அன்று
मा தாயார்.

நாமெல்லோரும் திருமகளை வணங்குவோமாக. அவள் பௌர்ணமி நிலவையும் தோற்கடிக்கும் அழகிய திருமுகம் கொண்டவள். நமக்கும் முகம் கொடுப்பாள். நாம் அணுகமுடியாதபடியான கர்வம் சிறிதும் இல்லாதவள். திருமாலிடம் பணிவு கொண்டவள். பெருமை பாராட்டிக் கொள்ளும் எண்ணமே அவளுக்குக் கிடையாது. நமக்கு அன்னை அவள். இவ்வளவு காரணங்கள் இருப்பதால் அவளை நாம் வணங்குவோம்.

காரியம் கைகூடுவதற்காகச் சிடுமூஞ்சிக்காரர்களைச் சிந்தி அசிங்கப்படுவானேன்? நிலவின் பொலிவுடை முகத்தாளை வணங்கலாமே! கர்விஷ்டர்களுக்குப் பணிவானேன்? கர்வமே இல்லாதவளை வணங்கலாமே! வணங்காமுடிகளை வாழ்த்துவானேன்? பணிவுப் பண்பினளைப் பணியலாமே! பீற்றிக் கொள்பவர்களைப் போற்றுவானேன்? தற்பெருமை பாராட்டாதவளைத் துதிக்கலாமே! மற்ற மன்னர்களுக்கும் தனிகர்களுக்கும் தலை குனிவானேன்? திருமகளுக்குத் தலைவணங்கலாமே!

இந்த ச்லோகத்தில் என்ன விசித்திர அமைப்பு என்று கேட்டால், மிகக் கடினமான நாலு ஸாதனைகள் கலந்திருப்பதைச் சொல்லியாக வேண்டும். முதல் வகை ஸ்வாரஸ்யம்: மா, ந, என்ற இரண்டே எழுத்துகளைத் திரும்பத் திரும்ப எழுதி முழு ச்லோகத்தையும் முடித்து விட்டார். பதினெட்டு தடவை மா; பதினாலு தடவை ந. இது

போன ச்லோகத்தை விட அதிக நிர்ப்பந்தம் கொண்டது. அதில் ஒற்றையொற்று என்கிற நிர்ப்பந்தம் இருந்தாலும், ம, மா, மி, மூ, மே, மோ, ம், என்று ஏழு எழுத்துகள் இருந்தன. இந்த ச்லோகத்திலோ இரண்டே இரண்டு தான். தமிழில் இப்படியொரு வாக்கியம் அமைக்க முயலுவோமா? 1. மாடுமாடுமா? (மாடு கூட ஆட்டம் போடுமா என்று அர்த்தம்.) 2. காயாயாகா. (காயாக ஆகாமல் பூவாகவே நின்று விடும் என்று அர்த்தம்.) 3. காக்காகாக் காக்கா. (சோலைக்கு ஆகாத காகம் என்று அர்த்தம்.) இப்படியெல்லாம் முயற்சித்தாலும் ஐந்தாறு எழுத்துகளுக்கு மேல் வாக்கியம் நீளவில்லையே. இந்தக் கவிஞரோ முப்பத்திரண்டு எழுத்துகள் வரை நீட்டி வெற்றி கண்டிருக்கிறாரே! இன்னும் தீவிரமாக முயற்சிப்போம். இதோ நீண்டதொரு உதாரணம்: 4. வா வா மாமா, மாவா மாவாமாமாமாமா? (வருக வருக மாமனே, (பெருவிபத்தில்) குதிரையும் பசுவும் தூள்தூளாகும், ஆமாம் என்கிறாயா? என்று அர்த்தம்.) இப்படியெல்லாம் முயன்று பார்த்தால் வெங்கடாத்வரியின் ஸாதனையின் அருமை நமக்குப் புரிகிறது.

இரண்டாம் வகை ஸ்வாரஸ்யம்: முதல் பாதத்தை வலமிடமாக வாசித்தாலும் மாறாமல் இருக்கிறது. சொல்லப்போனால், நாலு பாதங்களிலும் இந்த விசித்திரம் இருக்கிறது. இதன் அருமையைப் புரிந்து கொள்வதற்காகத் தமிழில் முயலுவோம். திருப்பி வாசித்தாலும் மாறாதபடி அர்த்தமுள்ள வாக்கியங்கள் உண்டோ? ஏற்கனவே சற்று முன்பு மாடுமாடுமா என்றொன்று பார்த்தோம். அதைத் திருப்பி வாசித்தாலும் மாடுமாடுமா என்று தான் வருகிறது. ஐந்து எழுத்துகளுக்கு மேலும் நீளமாக இப்படியொரு வாக்கியம் அமையுமோ? இதோ ஒரு உதாரணம்: மேயுமா மாடுமோடுமா மாயுமே (மேய்கிற பெரிய மாடு கூட ஓடுமா? மாய்ந்துவிடுமே என்று அர்த்தம்.) இடமிருந்து வலமாக வாசித்தாலும், வலமிருந்து இடமாக வாசித்தாலும், இந்தப் பதினோரெழுத்துகள் கொண்ட வாக்கியத்தில் மாற்றமே

இல்லை. இத்தகையதொரு விசித்திரத்தை இந்த ச்லோகத்தில் நான்கு தடவை காண்கிறோம்.

மூன்றாம் வகை ஸ்வாரஸ்யம்: இரண்டாம் பாதமும் நான்காம் பாதமும் ஒரே மாதிரி இருக்கின்றன. ஒரே வாக்கியம் திரும்பி வருகிறது. ஆனால் அர்த்தம் மட்டும் வேறு. ஒரே நீண்ட வாக்கியத்தை வெவ்வேறு விதமாகப் பதம் பிரிப்பதால் அர்த்தம் வெவ்வேறாக வருவது விசித்திரம். மாநமாநநமாநமா என்பது அந்த வாக்கியம். மாந - ம - ஆநந - மா - அநமா என்று பிரித்து திங்கள் போன்ற திருமுகத்தாள் என்று அர்த்தம் சொன்னோம். இதே வார்த்தை நாலாம் பாதத்தில் வரும்போது, மாந-மாநந-மா-ந-மா என்று பிரித்து தற்பெருமை பாராட்டிக் கொள்ளல் இல்லாதவள் லக்ஷ்மி என்று அர்த்தம் சொன்னோம். இந்த விசித்திரத்தை உணர்ந்து பாராட்டுவதற்காகத் தமிழில் இப்படி ஒரு வாக்கியம் அமைக்க முயற்சிப்போம். ஒரே வாக்கியத்தை இரண்டு விதமாகப் பதம் பிரிக்கும்போது வெவ்வேறு அர்த்தங்கள் வரவேண்டும். நாமடங்காப்பழி என்கிறார் நம்மாழ்வார். நாக்கு மடங்காதபடியான அவதூறு என்று அர்த்தம், நா - மடங்கா என்று பிரிக்கும்போது. இந்தப் பழிக்கு நாம் அடங்கிவிடமாட்டோம் என்பது வேறு அர்த்தம், நாம்-அடங்கா என்று பதம் பிரிக்கும்போது. அரசனால் ஆளப்படுபவர் யார்? என்பதற்கும், போதை ஏற என்ன வழி? என்பதற்கும் ஒரே விடை: குடிகள். குடிமக்கள் என்றும், கள்ளைக் குடி என்றும் இரண்டு அர்த்தங்கள். விழுந்தமுக்கு என்றொரு வாக்கியம். விழுந்து அமுக்கு என்று பிரித்தால் ஒரு அர்த்தம். விழும் தமுக்கு என்று பிரித்தால் வேறொரு அர்த்தம். இவற்றில் கிடைக்கும் சுவையை இந்த ச்லோகத்திலும் நாம் அனுபவிக்கிறோம்.

நாலாம் வகை ஸ்வாரஸ்யம்: ஸர்வதோபத்ரம் என்றொரு விசித்திரபந்த வகையை ஏற்கனவே இருபத்தைந்தாவது ச்லோகத்தில் கண்டோம். அது இந்த ச்லோகத்திலும் அமைந்திருக்கிறது. கீழ்க்கண்டவாறு கட்டம் கட்டி எழுத்துகளை எழுதியபின் இடமிருந்து வலமாகவும்,

வலமிருந்து இடமாகவும், மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேலாகவும், வாசித்துப் பார்த்தால், மாறாமல் ஏகரூபமாக இருப்பது தெரிகிறது.

மா	மா	ந	மா	மா	ந	மா	மா
மா	ந	மா	ந	ந	மா	ந	மா
ந	மா	ந	மா	மா	ந	மா	ந
மா	ந	மா	ந	ந	மா	ந	மா
மா	ந	மா	ந	ந	மா	ந	மா
ந	மா	ந	மா	மா	ந	மா	ந
மா	ந	மா	ந	ந	மா	ந	மா
மா	மா	ந	மா	மா	ந	மா	மா

இந்த நாலு ஸ்வாரஸ்யங்களையும் ஒரே ச்லோகத்தில் சேர்த்துப் புகுத்தியிருப்பது மிகப்பெரிய ஸாதனையாகும்.

இனி வேறு சில அர்த்தங்களையும் பார்ப்போம். அ-மாந-மா என்றால் அளவற்ற காந்தி கொண்டவன் என்று அர்த்தம். மாம் ஆநம என்றால் என்னையை வணங்கு என்று அர்த்தம். ஆ-மாந-ம என்றால் நாலாபக்கத்திலும் அளவுகொண்ட (அதாவது முழுதான) நிலவு என்று அர்த்தம். அநமா என்பதற்கு அ என்னும் விஷ்ணுவுக்கு மட்டும் பணிபவன் என்று அர்த்தம். மாந-மாநநம் மா மா நம என்றால் கர்வம் பாராட்டுபவனை வணங்கவே வணங்காதே என்று அர்த்தம். ஆநமா: என்றால் முழுச்சாப்பாடு பெறாத தரித்திரன் என்று அர்த்தம். நமாந என்றால் கௌரவம் பெறாதவனே என்று விளி.

சந்திரனைப்போன்ற முகம் என்னாமல், சந்திரனுக்கே இழுக்கை ஏற்படுத்தும் முகக்களை என்கிறார். சந்திரன் இந்த அளவுக்கு அழகும் காந்தியும் பெறவில்லையே என்று அவனைப் பிறர் ஏசும்படி வைக்குமாம் இவன் திருமுகம். இது ம-அமாந-ம-ஆநந-மா என்றதன் தாத்பர்யம். அநமச என்பதற்குப் பௌர்ணமி என்று அர்த்தம் எப்படிக்கிடைக்கும் என்றால், அமா என்பது அமாவாசை என்று பொருள்பட,

அதற்கு நேரெதிர்த்தட்டான பௌர்ணமி அநமா என்னப்படும். சாப்பாட்டுக்கில்லாதவனே! மதிப்பு பெறாதவனே! திருமகளை வணங்கு, என்று சொன்னதன் தாத்பர்யம் என்னவென்றால், பொருளும் புகழும், உணவும் உடையும், மதிப்பும் மரியாதையும், திருமகளை வணங்குபவர்களுக்குக் கிடைக்கும் என்பதாம். கர்விஷ்டர்களுக்குப் பணியவே பணியாதே என்றதன் தாத்பர்யம், அவ்வாறு பணிவது அவர்களுக்கும் கேடு, உனக்கும் கேடு என்பதாம். அவர்களுக்குக் கேடு, திமிர் மேலும் அதிகமாகும் ஆதலால் உனக்குக் கேடு. சுயமரியாதையை இழக்கவேண்டியிருப்பதாலும், வேண்டிய பலன் கிடைக்காததாலும். திருமகளை வணங்ினாலோ, அவனுக்கும் உகப்பு, உனக்கும் கைமேல் பலன் என்பதாம்.

மதியொத்த முகத்தாளை மாதாவை வணங்குவதால்
மதிப்பேறும். மதிகெட்ட மற்றவரை வணங்காதே.

*

22. சித்ரஸ்தபகம்

இந்த ஸ்தபகத்தில் ஐம்பத்தொன்பது ச்லோகங்கள் திருமகளைக் குறித்துச் சித்ரக் கவி பாடுகிறார். சித்ரக் கவி என்பது எழுத்து வேடிக்கை, புதிர், பந்தங்கள், முதலிய பல வகைகளில் சமத்காரம் பண்ணுவதாக அமையும்.

1. கமலக் கொத்தணிந்த கமலை

कमलायतनां चित्ते कलये यत्पदाम्बुजम् ।
चिरं विबुध सन्मौलि चित्रस्तबकभूषितम् ॥ १

கமலாயதநாம் சித்தே கலயே யத்பதாம்புஜம் ।
சிரம் விபுதஸந்மௌலி சித்ரஸ்தபக பூஷிதம் ॥ 1 ॥

यत्-पद-अम्बुजं = எவளுடைய திருவடித் தாமரை
चिरं = வெகு காலம்
विबुध-सन्मौलि-चित्र-स्तबक-भूषितं = தேவர்கள் தலைகளின் அழகிய பூங்கொத்துக்களால் பூஷிக்கப்பட்டதோ
कमल-आयतनां (அந்த) தாமரை இல்லத்தாளை
चित्ते - மனதில்
कलये = பண்ணுகிறேன்
विबुध-सन्मौलि-चित्र-स्तबक-भूषितं = பண்டிதர்களின் நல்ல தலையில் சித்ர ஸ்தபகம் என்கிற இந்தப் பகுதியாலே அணியுடையதாகும்படி
चित्ते = மனதில்
कलये = ஏற்பாடு பண்ணிக் கொள்கிறேன்.

தாமரையில்வத்தாளை நான் த்யானிக்கிறேன். சித்ர ஸ்தபகத்தைத் தொடங்கும் இத்தருணத்தில், அவளைச் சித்ர ஸ்தபகத்தாளாகவே த்யானிக்கிறேன். தேவர்களின் நல்ல சிரஸ்ஸுகளில் உள்ள பலவிதப் பூங்கொத்துகள் இவளது திருவடிகளுக்கு அணியாகின்றன. ஆகையால் ஏற்கெனவே சித்ரஸ்தபக பூஷிதமான திருவடி கொண்டவளை என்னுடைய சித்ர ஸ்தபகத்தாலும் அலங்கரிப்பதற்காகத் த்யானம் பண்ணுகிறேன். ஏற்கெனவே உள்ள சித்ரஸ்தபகம் என்னும் பூங்கொத்து, விபுதர் மௌலியைச் சேர்ந்தது; அதாவது

தேவர்கள் தலையில் சூடியது. அவர்கள் திருவின் திருவடிகளை வணங்கும்போது அவ்வடிகளுக்கு அணியாவது. நான் பண்ணும் சித்ர ஸ்தபகம் என்னும் லக்ஷ்மீ ஸஹஸ்ரப் பகுதியும் இவ்விரண்டு வகையிலும் ஒத்துள்ளன. இதுவும் விபுதர்களின், அதாவது பண்டிதர்களின், மௌளியில் இருப்பது எவ்வாறென்றால் அவர்கள் இதை பரிரலா வஹிக்கிறார்கள்; இதன் அருமை பெருமைகளை அறிந்து தலையால் தாங்குகிறார்கள். இதுவும் திருவின் திருவடிக்கு அணியாவது எங்ஙனம் என்றால் நான் அத்திருவடிகளில் இதை ஸமர்ப்பித்து விட்டதாலாம்.

விபுத, சித்ர, என்கிற பதங்களில் இரட்டை அர்த்தங்கள்.

விபுதர்கள் என்னும் தேவர்கள் தலைப் பூங்கொத்தால் திருமகளடியை அணிவிப்பவர்கள்.

விபுதர்கள் என்னும் பண்டிதர்கள் சித்ரஸ்தபகம் என்னும் இக்காவியப் பகுதியால் திருமகள் அடியை அணிவிப்பவர்கள்.

தேவர் மௌளியில் இருப்பது சித்ரமான, பல வகைகளிலான, ஸ்தபகம், பூங்கொத்து. அறிஞர்கள் தலைமேல் தாங்கிக் கொண்டாடுவது, விசித்ர வேடிக்கைகள் கொண்ட இந்தச் செய்யுட் கொத்து. இரண்டுமே அவளடியில் அலங்காரம் ஆகுபவை.

அம்புஜம் என்றதன் கருத்து என்னவென்றால், ஏற்கெனவே மலராயிருக்கும் திருவடியில், ஏற்கெனவே மலர் மேல் இருக்கும் திருவடியில், மேலும் மலர்க் கொத்தால் அழகு என்பதாம்.

சிரம் என்றதன் கருத்து, மற்ற ஸ்தபகங்களை விடச் சமத்காரங்கள் நிறைந்திருப்பதால் இந்த ஸ்தபகத்தை வெகுகாலம் பண்டிதர்கள் தலையில் கொள்வர் என்பதாம். விபுதர்கள் இருகு 'களை அவஸரமின்றி நீண்ட காலமாய்

அடிபணிகிறார்கள் என்பதுமாம். விபுத என்றதன் கருத்து பண்டிதர் அல்லாதார்க்குப் புரியாத வார்த்தை ஜாலங்கள் சித்ரஸ்தபகத்தில் இருப்பதால், பண்டிதர் மட்டுமே இந்த ஸ்தபகத்தைத் தலையில் சூட்டிக்கொள்ள முடியும் என்பதாம்.

ஸத் என்றதன் கருத்து, திருமகள் திருவடியை அணிவிக்கும் முடி மட்டுமே நல்ல முடி என்பதாம்.

மௌளி என்றதன் கருத்து, தலைமேல் தாங்கும்படி சித்ரஸ்தபகம் உயர்ந்தது என்பதாம்.

பூஷிதம் என்றதன் கருத்து, இது திருவடிக்கு அலங்காரம் ஆகும்படி, ஸப்த சித்ரங்களாலும் அர்த்த சித்ரங்களாலும் அழகியது என்பதாம்.

சித்ரஸ்தபகம் என்ற பதம், இந்த ஸ்தபகத்தில் பல சித்ரங்கள், சமத்காரங்கள் இருப்பதைக் குறிப்பிட்டுக் காட்டலாம். வழக்கமாகப் பெரும்பாலும் இக்காவ்யத்திலிருக்கும் ச்லேஷப்ராஸங்களுக்கும் இங்கே குறைவில்லை என்பதைக் காட்ட, முதல் ச்லோகத்திலேயே மோனைகளையும் ச்லேடைகளையும் புகுத்திவிட்டார்.

சிரகமலம் விபுதர்களும் சிரங்களினால் தொழும் அடியும்
சித்ரக் கொத்தணியிட்டுச் சிந்தத்தில் கொள்வோம் நாம்.

— ★ —

2. வாணியும் வழிபடும் வனிதை

वेदानि सर्वशास्त्राणि विभाव्य भवती रमे ।
दास्यं यस्यास्तवोपैति देवी साऽपि सरस्वती ॥ २

வேதானி ஸர்வசாஸ்த்ராணி விபாவ்ய பவதீம் ரமே ।
தாஸ்யம் யஸ்யாஸ்தவோபைதி தேவீ ஸாऽபி ஸரஸ்வதீ ॥ 2

रमे = லக்ஷ்மியே!	तव = உனக்கு
यस्याः = எந்த	दास्यं = அடிமையை

सा = அப்படிப்பட்ட

सरस्वती देवी अपि = ஸரஸ்வதி தேவி கூட

वयीति = அடைகிறேனே

भवती (அந்த) உம்மை

सर्वशाणि- எல்லா ஶாஸ்த்ரங்களையும்.

विभाव्य-நன்குயோசித்துப் பார்த்து

वेदानि = அறிவேனாக; த்யானிப்பேனாக.

ரமாதேவியே ! எல்லா ஶாஸ்த்ரங்களையும் ஆராய்ந்து அதன் பலனாக நான் உம்மை உபாஸிப்பேன். வாக்தேவியான ஸரஸ்வதியே உமக்கு அடியவள் ஆகிறாள்.

ஸர்வஶாஸ்த்ராணி விபாவ்ய என்றதன் கருத்து என்னவென்றால், ஶாஸ்த்ரங்களை நன்றாக ஆராய்ந்தால், திரும்பத்திரும்ப விசாரம் பண்ணினால், ரமாதேவியைத் த்யானிப்பது நல்லதென்று புரியும் என்பதாம்.

ஆலேக்ய ஸர்வஶாஸ்த்ராணி என்று தொடங்கும் வ்யாஸரின் ஶ்லோகத்தை அதே பதத்தைவிட்டு நினைவுறுத்துகிறார். யாரைத் த்யானிக்க வேண்டும் என்பது ஶாஸ்த்ர விசாரத்தால் அறிவது என்பது இரண்டிலும் பொதுவான விஷயம்.

ஸைவ ஸரஸ்வதீ என்றதன் கருத்து என்னவென்றால், இந்த ஶாஸ்த்ர வாக்குகளுக்கெல்லாம் அதி தேவதையான ஸரஸ்வதீ தேவியே உன் அடியவள் ஆதலால் ஶாஸ்த்ரவிசாரம் பண்ணுபவர்கள் உன் அடியவராவது யுக்தமே என்பதாம்.

வேறு விதமாகவும் அன்வயிக்கலாம். பவதீம் விபாவ்ய ஸர்வஶாஸ்த்ராணி வேதானி என்று. உம்மைத் த்யானித்து எல்லா ஶாஸ்த்ரார்த்தங்களையும் அறிவேனாக என்று பொருள் கிடைக்கும், கல்விக் கடவுளான ஸரஸ்வதியை வழிபட்டாலன்றோ ஶாஸ்த்ரங்களை அறியமுடியும்? என்று கேட்டால், உத்தரம் - உத்தரார்த்தத்தில். ஸரஸ்வதியும் உம் அடியவளானதால், உம்மைத் த்யானித்துக் கல்வியறிவு

பெறுவேன் என்கிறார். இன்னுமொன்று. ஆசார்ய பரம்பரையில் பெருமாளுக்கு அடுத்தபடியான தாயாரை வழிபட்டு, ஶாஸ்த்ரார்த்தங்களை அறியப் புகுவது தகும்.

ஶாஸ்த்ரங்களை ஆலோசித்து உம்மைத் த்யாநிப்பேனாக என்பது முதல் தாத்பர்யம்.

உம்மைத் த்யானித்து ஶாஸ்த்ரங்களை அறிவேனாக என்பது இரண்டாம் தாத்பர்யம்.

ஶாஸ்த்ரஜ்ஞானத்துக்கு உபாயமும் நீரே; பலனும் நீரே; என்று இரண்டு பொருள்.

வேதாதி என்ற பதம் பெயர்ச் சொல்லா? வினைச் சொல்லா? பக்கத்திலேயே உள்ள ஶாஸ்த்ராணி என்ற பதத்துடன் ஏகரூபமாய் இருப்பதால் பெயர்ச் சொல்லாகக் கருதி வேதங்களை என்று அர்த்தம்சொல்லத் தோன்றும் முதலில் பிறகு "வேதங்களையும் எல்லா சாத்திரங்களையும் பர்யாலோசனைபண்ணி ரமையே, உம்மை" என்கிற வாக்யம் முடிவு பெறாமல், ஒரு வினைச் சொல்லை வேண்டி நிற்கும். வினைச் சொல்லைக் காணுமே என்று மருள வைப்பதால் இந்த ஶ்லோகத்தில் சித்ரம் (சமத்காரம்) தொடங்கிவிட்டது. வேதாதி என்பது க்ரியாபதம் ஆகலாம் என்பது முதலில் ஸ்புரிக்காமல், பின்னரே தம் மனதில் தோன்றும். வேதத்தைச் சொல்லும் வேது என்பது புல்லிங்க ஶப்தம்.

உயர் நூல்கள் உரைத்ததெலாம் உணர்ந்தாய்ந்து தேறியதால் உம்மையே ரமையே! நான் உபாஸிப்பேனாகட்டும்.

3. பெருமை தரும் பெருந்தேவி

कमले! देवदेवस्य महिषि! त्वं स्तुतक्रमे।
विमले! देवि! देवस्य महिषीत्वं नतस्य मे॥ ३


கமலே தேவதேவஸ்ய மஹிஷி த்வம் ஸ்துதக்ரமே।
விமலே தேவி தேவஸ்ய மஹிஷீத்வம் நதஸ்ய மே ॥ 3

कमले = தாமரையாளே!
देवदेवस्य = தேவர்க்கும் தேவனான திருமாலின்
नतस्य = வணங்கின
अस्य = இந்த
महिषि = நாயகியே!
स्तुत-क्रमे = துதிக்கப்பட்ட க்ரமம் கொண்டவளே!
विमले = நிர்மலமானவளே!
देवि = ஸ்ரீ தேவியே!
त्वं = நீ
मे = எனக்கு
महित्वं = கொண்டாடத் தக்கமை
देहि = கொடு.

கமலையே! விமலையே! தேவதேவனின் பட்டத்து ராணியே! உன்னுடைய செயல்முறையை எல்லாரும் போற்றுகிறார்கள். இவ்வளவு உயர்ந்தவளான உன்னை மிகவும் தாழ்ந்தவனான நான் வணங்குகிறேன். என்னுடைய தாழ்ச்சியை ஒழித்து எனக்கும் சிறப்புகளைத் தா.

எனக்கு மஹிதத்வம் தந்தால் அக்ரமம் ஆகாது. உன்னை வணங்கின என்னைத் தூக்கிவிட்டதாகுமத்தனை. உன் க்ரமத்தை எல்லோரும் துதிப்பதால், இதையும் பண்ணிவிடு.

இந்த ஸ்லோகத்தில் என்ன விசேஷம் என்றால், இது கோமூத்ரிகா பந்தத்தில் அமைந்துள்ளது. முதல் பாதியில் ஒன்றுவிட்டு ஒன்றாக எழுத்துகளை எடுத்துக் கொண்டால், ம, தே, தே, ஸ்ய, ஹி, த்வம், மே, என்று த, மே, என்று எட்டு எழுத்துகள் வருகின்றனவே. இதே எட்டு எழுத்துகள் தான் இரண்டாம் பாதியிலும் வருகின்றன. இந்த மாதிரியாகச் செய்யுள் புனைவது கஷ்டம் என்றுன் தண்டி என்னும் மஹாகவி. இந்தச் சிறப்பைக் கீழ்க் கண்டவாறு படம் போட்டும் காண்பிக்கலாம்.



மஹிஷியே திருமாலுக்கு !
மஹிமைகளைப் என்னென்பேன்

4. பாவம் நீக்கிப் பாலிப்பவள்

पाहि देवि ! कलशोदधेस्सुते ! देहि पापविलयं दयानिधे ! ।
शेषशायिदयिते ! तमोमुषं शेमुषीं कलय नस्सुशोभनाम् ॥ ४

பாஹி தேவி ! கலசோததேஸ்ஸுதே ! தேஹி பாபவிலயம் தயாநிதே ! ।
சேஷசாயிதயிதே ! தமோமுஷம் சேமுஷீம் கலய நஸ்ஸுசோபநாம் ॥ 4

देवि = ஸ்ரீதேவியே !
कलशोदधेः = பாற்கடலின்
सुते = மகளே !
दयानिधे = அருள் நிதியே !
शेष-शायि-दयिते = ஆதிசேஷனில் படுத்திருப்பவனின் மனைவியே !
नः = எங்களை
पाहि = காப்பாற்று.
पाप-विलयं = பாவங்களின் அழிவை
देहि = கொடு.
तमो-मुषं = இருட்டை நீக்குவதும்
सु-शोभनां = மிக மங்களமானதுமான
शेमुषीं = புத்தியை
नः = எங்களுக்கு
कलय = உண்டு பண்ணு.

லக்ஷ்மியே ! பாற்கடலின் பெண்ணே ! சேஷசாயியின் ப்ரியையே ! உன்னிடம் மூன்று வேண்டுகோள்கள். எங்களை ரக்ஷிக்க வேண்டும்; எங்கள் பாவத்தைத் தொலைக்க வேண்டும்; எங்களுக்கு நல்ல புத்தியைத் தரவேண்டும் என்று.

இப்போது கஷ்டம் வராதபடி ரக்ஷிப்பது நிகழ்காலத்துக்கு; இதற்கு முன் பண்ணின தீவினைகளைத் தொலைப்பது இறந்தகாலச் செயல்கள் ஹிம்ஸை பண்ணாமல் இருப்பதற்கு; நல்ல புத்தி தருதல் எதிர்காலக்ஷேமத்துக்கு. சுருங்கச் சொன்னால் முக்காலத்துக் கஷ்ட ஹேதுக்களும் இல்லாதபடி நிகழ்காலத்தில் பண்ணு என்று ப்ரார்த்தனை.

இந்த ச்லோகத்தில் என்ன விசேஷம் என்றால், முதல் பாதத்தில் உள்ள பதினொரு எழுத்துகளும் மற்ற பாதங்களில்

திரும்ப வந்திருக்கின்றன. பாஹி தே என்று முதல் பாத ஆரம்பம். அதைத் திருப்பிப் போட்டு தேஹிபா என்று இரண்டாம் பாத ஆரம்பம். முதல் பாதத்தின் மற்ற எட்டு எழுத்துகளும் மீண்டும் எங்கே வந்துள்ளன என்பதைத் தேடுவது சிறுவர் கேளிக்கை போல. இப்படி மீண்டும் வரும் எழுத்துக்களைக் கோடிட்டுக் காட்டலாம்.

தே³ஹி பா ப ஹி ஸ்யாம் த³யாஸி தே⁴ ।
ஸேவ்யமானதி³ஶி தே நமோமுகம்
ஸேவ்யமுகம் கலய ந ஸ்ஸஹ ஸேவ்யபா⁴நாம் ॥ 4

இந்த அணிக்கு கூ³ட⁴ப்ரதமம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். முதல் பாதத்தில் ஹமஸேதநே என்று சில பதிப்புகளில் அச்சிட்டிருப்பது தவறு.

பாற்கடல் மகளே ! பாலனம் பண்ணு.
அருளின் நிதியே ! அருள்வினை ஆற்று.
ஸேவ்யமானநிதியே ! ஸேவ்யமுகம் தந்திடு
திருமகளே ! எம் தீக்குணம் திருடு.

5. மாலின் மார்பில் மாண்புடன் மன்னுபவள்

संश्रितानवितुमास्थया दयासारिणीह दिगधीशसेविता ।
स्वप्रियस्य कलयन्नुरः पदं सम्पदं दिशतु सा हरिप्रिया ॥ ५

ஸம்ச்ரிதாந் அவிதும் ஆஸ்தயா தயாஸாரிணீஹ திகதீசஸேவிதா ।
ஸ்வப்ரியஸ்ய கலயந்நுர: பதம் ஸம்பதம் திசது ஸா ஹரிப்ரியா ॥ 5

संश्रितान् = ஆச்ரயித்தவர்களை
अवितुं = காப்பாற்றுவதற்கு
आस्थया = ஆவலோடு
दयासारिणी = அருளைப் பொழிகிறவளாய்,
इह = இங்கே
दिक् = திக்பாலகர்களால்
अधीश देविता = தொழப்பட்ட
सा = அப்படிப்பட்ட
हरिप्रिया = திருமாலின் ப்ரியையான திருமகள்
स्वप्रियस्य = தன் காந்தனின்
उरः = மார்பை
पदम् = மார்பை

कलयन्ती = பண்ணுபவளாய்

संपदं = செல்வத்தை

दिशातु = கொடுக்கட்டும்.

திருமகள் தன் பக்தர்களையெல்லாம் ரக்ஷிப்பதில் ஆவல் கொண்டவள். அருள் பொழிபவள். எண்டிசைப் பாலகர்களும் அவளை வணங்குகின்றனர். தன் காந்தனின் மார்பகத்தில் இடம் கொண்டவள். ஹரிக்கு ப்ரியமானவள். நமக்குச் செல்வத்தைக் கொடுக்கட்டும்.

அவள் ஸம்பத்தைக் கொடுக்கத் தேவையானதெல்லாம் அவளிடம் உள்ளன. நம்மிடம் வாத்ஸல்யமும் தயையும் இருப்பதாலும், ஸம்பத்துக்கு அதிபதிகளான குபேராதிகள் திக்பாலர்களாய் அவளை ஸேவித்துக் கொண்டிருப்பதாலும், ஸம்பந்நாராயணன் அவளுக்கு இருப்பதாலும், அவள் நமக்கு ஸம்பத்தைத் தருவாள்.

இந்த ச்லோகத்தில் ஒரு விசேஷம் என்னவென்றால் நாலாம் பாதத்தில் உள்ள பதினேழு எழுத்துக்களும் மற்ற மூன்று பாதங்களிலும் பிரிந்து பிரிந்து வந்திருக்கின்றன. இந்த அணியைக் கூடசதுர்த்தம் என்பர். எழுத்துகள் எங்கெங்கே மறைந்துள்ளன என்று கண்டுபிடிப்போமா?

ஸம்ச்ரிதாந் அவிது மாஸ்த²யா தயா—
ஸூரிபி⁴ர் ஹரிதி³க் ஈச்வர ஸேவிதா ।
ஸ்வாமிநீ யஸ்ய கல்யந்த்யபூ: பத³ம்

சேர்ந்தவரைக் காப்பவளாம் சேவிக்கப் பட்டவளாம்
சேண்மரச்பச் சேர்ந்தவளாம் செல்வத்தைச் சேர்ப்பவளாம்.

6. சேஷசைலத்துக்குச் சேகரமானவள்.

श्रीरशेषजगदार्तिहारिणी शेषशैलतटशेखरार्चिता ।

राजसे जननि रक्षणाय नः सागरेन्द्रतनये ! सनातनी ॥ ६

ஸ்ரீரசேஷஜகதார்த்திஹாரிணீ சேஷசைலதடசேகரார்ச்சிதா ।
ராஜஸே ஜநநி ரக்ஷணாய ந: ஸாகரேந்த்ரதநயே ! ஸநாதநீ ॥

सागरेन्द्र-तनये ! = ஸமுத்ர ராஜனின் குமாரியே !
श्रीः = லக்ஷ்மியே !
जननि = அன்னையே !
अशेष-जगत्-आर्ति-हारिणी = எல்லா உலகத்தாரின் துயர் தீர்ப்பவளாயும்
सनातनी = என்றும் இருப்பவளாயும் ஆன நீ
नः = எங்களுடைய
रक्षणाय = பாதுகாப்புக்காக
शेष-शैल-तट-शेखरायिता = சேஷமலையுச்சிக்கு உச்சியணியாக
राजसे = விளங்குகிறாய்.

தாயே ! கடலரசனின் குமாரியே ! நீ என்றும் இருப்பவள். எல்லார் துயரையும் துடைப்பவள். எங்களைக் காப்பதற்காக வேங்கட மலையுச்சிக்கு அழகு சேர்த்துக் கொண்டு விளங்குகிறாய். அதனால் எங்களைக் காப்பாற்று.

எல்லார் துயரையும் போக்குவாளோ? பக்தர் துயரை மட்டுமேயன்றோ போக்குவாள்? என்று கேட்டால், அ-ஸேஷ என்று பிரித்து விஷ்ணுபக்தர்கள் என்று அர்த்தம் சொல்லக்கூடும்.

கடலில் உதித்து, மலையில் வசித்து, ஸர்வஜகத்துக்கும் உதவுபவள் நீ. நீ திருமலையில் எழுந்தருள உத்தேசமே எங்கள் ரக்ஷணம் தான்.

இந்த ச்லோகத்தில் விசேஷம் என்னவென்றால், மவர்க்க எழுத்துகளே இல்லாததால் உதட்டின் செயல் இல்லாமலே முழு ச்லோகத்தையும் வாசிக்க முடிகிறது. ப, ம, வ, முதலிய எழுத்துகளும், அநுஸ்வாரமும் கூட இல்லாததால், உதட்டுக்கு அடியோடு வேலையே இல்லை. இத்தகைய சித்ரத்தை நிரோஷ்ட்யம் என்பர். உதடு படாதது என்று அர்த்தம்.

என்றைக்கும் இருக்கின்றவள் எல்லோர்க்கும் உதவுபவள்
எங்களையே காக்கவென ஏழுமலை ஏறியவள்.
உததிக்கு மகளானவள் உலகுக்குத் துயர் தீர்ப்பவள்
உன்னுபவர் காக்க மலை உச்சியினில் உள்ளவளாம்.

7. வினைகளை விலக்குபவள்

हरेः प्रिये भगवतो हृतसंश्रितसाध्वसा।
अन्वहं क्रियमाणानां अंहसां संहतीरयात्॥ ७

ஹரே: ப்ரியே பகவதோ ஹ்ருதஸம்ச்ரிதஸாத்வஸா ।
அந்வஹம் க்ரியமாணாநாம் அம்ஹஸாம் ஸம்ஹதீரயாத் ॥ 7

भगवतः = பகவானுடைய
प्रिये ! = ப்ரியையான லக்ஷ்மியே!
हृत-संश्रित-साध्वसा = பணிந்தவர்களின் பரபரப்பை நீக்குபவளாய்
अन्वहं = நாள்தோறும்
क्रियमाणानां = பண்ணப்படுகிற
अंहसां பாவங்களுடைய
संहतीः = கூட்டங்களை
रयात् = வேகமாக
हरेः = போக்குவாயாக.

விஷ்ணு பத்நியே ! உன்னை அடைந்தவர்க்கெல்லாம் நீ நிம்மதி அளிக்கிறாய். அவர்களது பரபரப்பும் பதட்டமும் உன்னை ஆஶ்ரயித்தவுடனே காணாமல் போகின்றன. நாங்களும் உன்னை ஆஶ்ரயித்தவர்கள். ஆனால் ப்ரதி தினமும் பாபம் பண்ணுகிறோம். இந்தப் பாவங்களையெல்லாம் நீ வேகமாக அபஹரிக்க வேண்டும். ஏன் இந்த வேகம் தேவை என்றால், பாவங்கள் வெகுவேகமாகக் குவிகின்றன. இந்த ஶ்லோகத்தில் விசேஷம் க்ரியா வஞ்சிகா என்கிற சொல்லணியாகும். ஹரே: என்கிற முதல் பதம் ஷஷ்ட்யந்தமான பெயர்ச் சொல் போல் இருக்கிறது. அண்மையில் உள்ள பகவத: என்பதோடு ஸமாந விபக்திகமாகி, ப்ரியே என்பதில் எளிதில் அந்வயிக்கலாகிறது. ஆனால் க்ரியாபதம் எங்கே? கடைசிப்பதம் கடைசியில் இருப்பதாலும், ஸ்யாத், பூயாத், முதலியவற்றோடு ஏகரூபமாக இருப்பதாலும், அயாத் என்று ஒரு க்ரியாபதமே இருப்பதாலும், அது தான் இங்கு வினைச் சொல்லோ என்ற ப்ரமம் உண்டாகிறது. உண்மையில் ரயாத் என்று பஞ்சம்யந்தமான பெயர்ச்சொல் அது. முதல் பதமான

ஹைரே: என்பது தான் க்ரியாபதம்-கச்சே: மேப: என்பவை போல. இவ்வாறு படிப்பவரை ஏமாற்றுவதால் க்ரியா வஞ்சிகா என்னும் சொல்லணி இங்கே.

திருமகளே ! தினந்தோறும்

நீ வினையைத் தீர்ப்பாயே.

8. எல்லா விபக்திகளிலும் ஏற்றம் மிக்கவள்

पायान्मामुरसावितश्रियमुमाराध्यां प्रपद्येतमाम्
को वा न स्थिरमश्नुते शमघनोऽप्यालोकितो जातुचित् ।
वेदान्तैर्विनुताह्वये न किमुतः श्रेयो नतिं तन्वताम्
सेवामो रमयामि मानस ! सदा भक्त्यावहावादरम् ॥ ८

பாயாந்மாமுரஸாவிதச்ரியமுமாராத்யாம் ப்ரபத்யேதமாம்
கோ வா ந ஸ்திரமச்நுதே சமதநோ-ப்யாலோகிதோ ஜாதுசித் ।
வேதாந்தைர்விநுதாஹ்வயே ந கிமுத: ச்ரேயோ நதிம் தந்வதாம்
ஸேவாமோ ரமயாமி மாநஸ ! ஸதா பக்த்யாவஹாவாதரம் ॥ 8

असौ = இந்த
उः = லக்ஷ்மி
मां = என்னை
पायात् = காப்பாற்றட்டும்
इत-श्रियं = செல்வம் அடைந்தவரும்
आराध्यां = ஆராதிக்கத் தக்கவருமான
उं = லக்ஷ்மியை
प्रपद्येतमां = மிகவும் தொழுகிறேன்.
वा = லக்ஷ்மியாலே
जातुचित् = ஏதோ ஒரு காலத்தில்
आलोकितः = கடாக்ஷிக்கப்பட்டவன்
कः = எவன்
स्थिरं = நிலையான
शं = சுகத்தை
न अश्नुते = அடையவில்லை?
दान्तैः = புலனடக்கம் கொண்டவர்கள்
विनुत-अह्वये = தொழப்பட்ட திருவடிகளை உடைய
ये = லக்ஷ்மிக்கு
किं न = எது இல்லை?

नतिं = வணக்கத்தை
तन्वतां = பண்ணுபவர்களுக்கு
ऊतः = லக்ஷ்மியுடைய
सेवां = கைங்கர்யத்தை
रचयामि = பண்ணுகிறேன்.
मानस ! = நெஞ்சமே !
सदा = எப்போதும்
भक्त्या = பக்தியோடு
वी = லக்ஷ்மியினிடத்தில்
आदरं = மர்யாதையை
वह = வஹி.

லக்ஷ்மி என்னைக் காப்பாற்றட்டும். லக்ஷ்மியை நான் சரணடைகிறேன் லக்ஷ்மியால்சாஸ்வத லோகம் கிடைக்கும் லக்ஷ்மிக்கு எது தான் இல்லை? லக்ஷ்மியிடமிருந்து முக்தி பெறலாம். லக்ஷ்மியின் கைங்கர்யத்தைப் பண்ணுகிறேன் மனமே ! லக்ஷ்மியிடத்தில் பக்தியைத் தாங்கு.

ஊ என்ற ஒற்றையெழுத்துச் சொல்லுக்கு லக்ஷ்மி என்று அர்த்தம். இதற்குப் பல வேற்றுமை உருபுகள் வரும்போது ஊம் என்றும் வா என்றும் இத்யாதியான சப்தரூபங்களையும், அந்தச் சொற்களெல்லாம் வேற்றுச் சொற்களில் மறைந்துகொண்டிருப்பதையும் அட்டவணையிட்டுக் காட்டுவோம்.

லக்ஷ்மி	ஊ:	ஊரஸ
லக்ஷ்மியை	ஊம்	உபாஸ்தகம்
லக்ஷ்மியால்	வா	கோவா
லக்ஷ்மியின்பொருட்டு	வே	வேதாந்தை:
லக்ஷ்மியிடமிருந்து	ஊத	கிமுத ச்ரேய:
லக்ஷ்மியினுடைய	வ:	ஸேவாமேரசயாமி
லக்ஷ்மியினிடத்தில்	வி	வஹஸாதரம்

நடு வரிசையும் கடைசி வரிசையும் வடமொழிச் சொற்களாக உள்ளனவே. அவ்விரண்டினுள், இடது பக்கத்தில் (அதாவது நடு வரிசையில்) காணும் சொற்கள் (ஊ:, ஊம், வா, முதலியவை) அப்ரஸித்தமானதாலும், வலது பக்கத்தில் காணும் சொற்கள் நாம் அடிக்கடி புழங்கும் பதங்களாய் இருப்பதாலும், இடது பக்கத்தில் இருப்பவை முதலில்

ஸ்புரிப்பதில்லை. ஆனால் சரியாக அன்வயம் கிடைக்காததைப் பார்த்த பிறகு, நாம் இங்கு என்ன பொடி வைத்திருக்கிறார் என்று தோண்டுகிறோம். அப்போது இடது பக்கத்துச் சொற்கள் மனதில் ஸ்புரிக்கின்றன. ஶ்லோகமும் முழுதாக அர்த்தமாகிறது. இந்த வேடிக்கைக்கு விபக்திவஞ்சநா என்று பெயர்.

திரு காக்கட்டும். திருவைச் சரணடை.
திருவால் இன்பம். திருவுக்கெல்லாம்.
திருவினின்றுயர்வு. திருவின் திருப்பணி.
திரு பால் மதிப்பு கொள். திருவே நீ துணை.

9. விளக்கம் தரும் விளக்கானவள்

काळीनाननाळीका राधिता हि हिताधिरा ।
मा या सा मम सायामा काऽपि दीप्रप्रदीपिका ॥ ९

காளீநாநநாளீகா ராதிகா ஹி ஹிதாதிரா ।
மா யா ஸா மம ஸாயாமா காऽபி தீப்ரப்ரதீபிகா ॥ 9

या = எந்த
मा = லக்ஷ்மியானவள்
काळी-इन-आनन-नाळीक - आराधिका = பார்வதீபதியால் வாயாலும் தாமரையாலும் ஆராதிக்கப்பட்டாளோ
हित-अधि-रा = ஏற்படுத்தப்பட்ட பெரும் செல்வம் உடையவளோ
काऽपि - ஏதோ ஒரு (சொல்ல முடியாத)
दीप्र-प्रदीपिका = ஒளிரும் விளக்கானவளோ
सा हि = அவள் அல்லவா
मम = எனக்கு
स-आयामा = நீட்சியோடு கூடியவள்

திருமகளை உமாபதி கூடத் ஸ்தோத்ரமும், அர்ச்சனையும் செய்து ஆராதிக்கிறான் (அவ்வளவு சிறப்பு). அவளிடம் செல்வம் அதிகமாக வைக்கப்பட்டுள்ளது (அவள் செல்வத்துக்கு அதிபதியானவள்). அவள் விவரிக்கவொண்ணாத ஒளிர்விளக்கு (தமஸ்ஸை நீக்குபவள்). அத்தகைய திருமகள் எனக்கு தீர்க்கமாய் இருக்கட்டும் (நெடுநாள் ஸாந்நித்யம் கொள்ளட்டும்).

இந்த ஶ்லோகத்தில் விசேஷாம்சம் என்னவென்றால், நாலு பாதங்களில் ஒவ்வொன்றையும் திருப்பி வாசித்தால் மாறுபடாமல் இருப்பது. காளிநாந என்பது முதல் பாதத்தின் பாதி. இதைத் திருப்பினால், நநாளிகா என்று வரும். இது முதல் பாதத்தின் அடுத்த பாதி. ஆகையால் இதைப் பாதபாதிப் ப்ரதிலோமம் என்னலாம். இதே மாதிரி நாலு பாதங்களிலும் உள்ளது. ராதிநா ஹஸி ஹிதாதிரா என்பதைத் திருப்பி வாசித்தால் ராதி நாஹஸி ஹிதாதிரா என்பதே கிடைக்கும்.

இவ்வளவு விசித்ரத்தைப் பண்ண வேண்டுமானால், அதிகப் புழக்கத்தில் இல்லாத பதங்களை ஆளுதல், அபூர்வமான ஸமாஸங்களைப் பண்ணுதல், என்ற சிலவற்றை நாம் ஸஹித்துக் கொள்ளவேண்டும். இங்கே இநன் என்றால் தலைவன் என்பதும், ரா என்றால் செல்வம் என்பதும், ஹிதாதிரா என்பதற்கு ஹிதா அதிகா ரா யஸ்யாஸ் ஸா என்று விக்ரஹவாக்யம் என்பதும், இவ்வாறு ஏற்கத்தக்கவையாகின்றன.

இம்மாதிரியான ஶ்லோகங்களுக்குப் பலர் பல விதமாகப் பொருள் உரைப்பதும் உண்டு. மாதிரிக்கு இதோ சில. க என்றால் ப்ரஹ்மா. காலீந என்றால் ப்ரஹ்மாவிடம் சிறிது ஒன்றிப்போன என்று அர்த்தம். திருமகளின் முகத்தாமரை அவளது குழந்தையான ப்ரஹ்மாவிடம் சிறிது லயிப்பதால், அவள் காலீநாநந நாலீகா எனப்படுகிறாள்.

க என்றால் ஜலம். மற்ற தாமரைகளெல்லாம் ஜலத்தில் அடிக்கடி லீனமாகும் - மறையும். ஜலத்தில் மறையாத தாமரை வேண்டுமென்றால், திருமகளின் முகத்தாமரையைச் சொல்லலாம். ஆகையால் அவள் க-அலீந-ஆநந-நாலீகா.

ரா என்றால் கொடுப்பவள் என்று அர்த்தம். தமக்கு ஹிதத்தை அதிகமாகக் கொடுப்பவள் ஹிதாதிரா எனப்படுகிறாள்.

அஹிஹிதன் என்றால் பாம்பில் தன்னை வைத்தவன். அவன் ஶேஷஶாயியான திருமால். அவனைப் பதஹலநாதிகளால் ஆராதிப்பவள் திருமகள். ஆகையால் அவள் ராதிதாஹிஹிதா.

ஹித என்றால் வைக்கப்பட்ட என்று அர்த்தம். பக்தர்களிடம் நிறைய செல்வத்தை வைப்பதால், லக்ஷ்மி ஹிதாதிரா ஆகிறாள்.

மூன்றாம் பாதத்தில் பாடபேதம் சில பதிப்புகளில் காண்கிறோம். சில உரைகளிலும். யா மா ஸா மம ஸாமாயா என்று இன்னொரு பாடம். ஸாமாயா என்றால் ஸாம-ஆயா என்று பிரித்து, நல்வார்த்தைகளில் வரவுள்ளவள் என்று பொருள் சொல்கின்றனர். இனிக்கப் பேசுபவரிடத்தில் இலக்குமி வருவாள் என்ற கருத்தாகலாம்.

ஸா மாயா என்று தனிப்பதங்களாக்கி அவள் ப்ரக்ருதியாகிறவள் என்றும் பொருள் உரைக்கலாம்.

ஸா அமாயா என்று பதம் பிரித்து அவள் கபடமற்றவள் என்று பொருள் கூறுவாரும் உண்டு.

ஸாமத்தை அடைபவள் என்று பொருள்காட்டி, அவள் ஶாந்தமே உருவானவள் என்று தாத்பர்யம் சொல்வதும் உண்டு.

கடைசிப் பாதத்துக்கு மட்டும் எல்லோரும் ஒரே அர்த்தத்தையே சொல்கின்றனர். திருமகளைத் திருவிளக்காகச் சொல்வது, லோகைக தீபாங்குரா என்றும், மங்களதீபரேகாம் என்றும், பூர்வாசார்யர்கள் சொன்னபடியேயாம். இப்படியாகப் பல பொருட்கள் இருப்பதால் இச்சிறு ஶ்லோகத்தில் பன்னிரு அர்த்தங்கள் அடங்கியுள்ளன.

1. லக்ஷ்மி மங்களதீபமானவள். இருளையும் மருளையும் நீக்குபவள்.
2. அவள் வர்ணனைக்கு அடங்காதவள்.

3. அவள் ப்ரக்ருதி ஸ்வரூபிணீ.
4. அவள் கள்ளம் கபடு அற்றவள்.
5. இனிக்கப் பேசுபவர்களிடம் லக்ஷ்மி ஸாந்நித்யம் இருக்கும்.
6. அவளுடைய சிரஸாந்நித்யம் நமக்கு வாய்க்க வேண்டும்.
7. அவள் ஹிதத்தை அதிகமாய்த் தருபவள்.
8. அவள் செல்வத்துக்கெல்லாம் அதிதேவதை ஆனாள்.
9. அவள் பகவானை ஆராதிப்பவள்.
10. அவளை ஆராதிப்பவர்களுக்கு நன்மைகள் அதிகம்.
11. உமையாள் மணாளன் அவளை ஆராதிப்பவர்களில் ஒருவன்.
12. சதுர்முகப் ப்ரஹ்மாவும் அவளுக்குக் குழந்தை.

விடையவற்கருள்பவள் விருப்பம் தருபவள்
விளக்காய் இருப்பவள் விளங்குக என்னுள்.

—★—

10. சத்ருவைச் செகுத்துச் ஸௌக்யம் செய்பவள்

सा स्यादरिहाख्यासौ सौख्याहारिदयारसा ।
मेयकायधरा माता तामाराधय काय मे ॥ १०

ஸா ஸ்யாதரிஹாக்யாஸௌ ஸௌக்யாஹாரிதயாரஸா ।
மேயகாயதரா மாதா தாமாராதய காய மே ॥ 10

स्यात् = படுவேமாக
अरि-हृ-आख्या = பகைவர்களை அழிக்கும் திருநாமங்களை உடையவளும்
सौख्य-आहारि-दया-रसा = ஸௌக்யத்தைக் கொண்டு வருகிற அருள் ரஸம் கொண்டவளும்
सा = ப்ரஸித்தமானவளும்
मेय-काय-धरा = அறியத்தக்க திருவடிவம் ஏற்பவளும்
माता = அன்னையானவளும்
असौ = இவள்.
मे = என்னுடைய
काय ! = உடலே!
तां = அவளை
आराधय = வழிபடு

இவனுடைய திருநாமங்கள் நம் பகைவர்களை (காமம் க்ரோதம் முதலியவற்றை) ஒழித்துக்கட்டும். இவனுடைய க்ருபைப் பெருக்கு நமக்கு ஸௌக்யத்தைக் கொண்டுவந்து கொடுக்கும். இவனது திருவடிவம் வேதம் முதலிய ப்ரமாணங்களால் காணலாம்படிப் பரமபதத்திலும் நம் கண்ணுக்குப் புலனாம்படி கோவிலிலும் இருக்கும். அவனை (அர்ச்சனை, ப்ரதக்ஷிணம், ப்ரணாமம் முதலியவற்றால்) ஆராதிப்பாய் என் உடலே!

இந்த ச்லோகத்தில் என்ன விசித்ரம் என்றால் முதல் பாதத்தைத் திருப்பிப் போட்டால் இரண்டாம் பாதம் கிடைக்கும். மூன்றாம் பாதத்தைத் திருப்பிப் போட்டால் நான்காம் பாதம் கிடைக்கும். இவ்வளவு விசித்ர அமைப்பு ஒரு ச்லோகத்தில் வரவேண்டுமானால் பொருள் கூறுகையில் சிறிது தூராந்வயத்தையும் ஏகதேசாந்வயத்தையும் பொறுத்துக்கொள்ளத் தகும். ரயாத் என்பதை ஆராதய என்பதில் அந்வயித்தால் தூராந்வயம். ரயாத் என்பதை அரீந் என்பதில் அந்வயித்தால் ஏகதேச அந்வயம். முதல் வேற்றுமையில் ஆராதிப்பதற்கு த்வரைப்படுத்துவது த்வர யாயந்த பித்யதே என்றாற்போலே உடலின் நிலையாமையைக் குறிக்கும். இரண்டாவது வேற்றுமையில் பகைவர்களைப் படுவேகமாக அழிப்பதாய்ச் சொல்வது [illegible] என்றாற்போலே நாமஸங்கீர்த்தனப் பெருமையைப் பறை சாற்றுவதாம்.

காய மே என்பதற்கு என் உடலே! என்று விளியாகப் பொருள் சொல்லாமல், வேறு விதமாகப் பொருள் கொள்வாரும் உளர். மே என்று மட்டும் விளி; அறிவே என்று அர்த்தம். காய என்பது க என்ற சொல்லின் நான்காம் வேற்றுமை வடிவம். ஸுகத்துக்காக எனப் பொருள். யாரை ஆராதிக்க வேண்டும்? எதற்காக ஆராதிக்க வேண்டும்? எந்தக் கருவியால் ஆராதிக்க வேண்டும்? என்ற மூன்றையும் சொல்கிறது கடைசிப்பாதம்.

இப்படிப்பல பொருள்கள் இருப்பதால் இந்தச் ஸ்லோகத்திலும் பன்னிரு கருத்துக்கள் உள்ளன.

1. லக்ஷ்மி (உலகுக்கே) அன்னையானவள்.
2. அவளை ஆராதித்தால் ஸுகம் கிடைக்கும்.
3. அவளை ஆராதிப்பதில் வாக்குக்குப் பங்குண்டு; நாமஸங்கீர்த்தனம் பண்ண வேண்டும்.
4. அவளை ஆராதிப்பதில் உடலுக்குப் பங்குண்டு; காயத்தை விளித்துச் சொல்வது தகும்.
5. அவளை ஆராதிப்பதில் புத்திக்குப் பங்குண்டு; அதை விளித்து இதைச் சொல்வது தகும்.
6. அவளை ஆராதிக்க த்வரைப்பட வேண்டும்; விளம்பம் கூடாது.
7. அவளுடைய திருநாமங்களைச் சொன்னால் பகைவர் விரைவில் பட்டொழிவர்.
8. அவளுடைய அருள் நமக்கு இன்பத்தைக் கொணர்விக்கும்.
9. அவளுக்குத் திவ்யமங்கள விக்ரஹம் இருப்பது ப்ரமாணங்களால் தெரிகிறது.
10. அவள் நமக்காகக் கோவில்களில் கண்ணுக்குப் புலப்படும்படி இருக்கிறாள்.
11. நம் உடலையும் அறிவையும் நாம் கட்டளையிடும்படி நம் வசத்தில் வைத்திருக்க வேண்டும்.
12. அவளது தயை த்ரவமாய்ப் பெருகும்.

அரிகளை அழிக்கும் நாமத்தாள்.

அருளால் ஸௌக்யம் அமைத்திடுவாள்.

அன்னை அறிதகு வடிவத்தாள்.

அறிவே அவளை ஆராதி. (தொடரும்)

11. நினைத்ததை நிறைவேற்றுபவள்.

कारिताभिमता चित्ताभासे हारितमा रमा ।
मारमातरि हासेवाऽऽत्ता चितामभितारिका ॥११॥

காரிதாபி₄மதா சித்தா பா₄ஸே ஹாரிதமா ரமா ।
மாரமாதரிஹாஸேவாத்தா சிதாமபி₄தாரிகா ॥ 11 ॥

हारि-तमा = மிகவும் கவர்ச்சி கொண்ட.
रमा = லக்ஷ்மியானவள்.
चित्त-आभासे = மனமென்னும் இல்லத்தில்.
कारित-अभिमता = இஷ்டமானதைப் பண்ணுவிப்பவள்.
मार-मातरि = மன்மதனின் மாதாவான இவளிடம்.
चितां = ஆத்மாக்களுக்கு.
आत्ता = வாய்த்துள்ள.
सेवा = கைங்கர்யம்
अभितारिका = கடைத்தேற்றுவது.
हा = ஆச்சரியம்.

தன் வாத்ஸல்யத்தாலும் அருளாலும் நம்மையெல்லாம் கவர்ந்திழுப்பவள் லக்ஷ்மியன்னை. நம் மனோரதத்தை நிறைவேற்றுபவள். இவள் மன்மதனின் தாயாயிருப்பினும் இவளிடம் நாம் ஆற்றும் தொண்டுப்பணி நம்மைக் கடைத்தேற்றும் என்பது ஆச்சரியம்.

இந்த ச்லோகத்தில் என்ன விசேஷம் என்றால், முதல் பாதியைத் தலைகீழாக வாசித்தால் இரண்டாம் பாதி கிடைக்கும்.

மனதில் இஷ்டப்பட்டதைப் பண்ணுபவள் என்பதற்கு மூன்று தாத்பர்யங்கள் கொள்ளலாம். பக்தர்களான நாம் என்னென்ன மனோரத(இஷ்ட)ங்களை ஆசைப் படுகிறோமோ, அதையெல்லாம் நிறைவேற்றி வைப்பவள் என்பது முதல் தாத்பர்யம். அவள் இஷ்டப்பட்டதை நம் மனதில் பண்ணுபவள்; மற்றை நம் காமங்கள் மாற்றுபவள்; என்பது இரண்டாவது தாத்பர்யம். நமக்கு அபீஷ்டத்தைத் தன் மனதில் ஸங்கல்பிப்பவள் என்று மூன்றாம் தாத்பர்யம்.

சித்தாவாஸே என்பதற்கு வேறு அர்த்தங்கள் சொல்பவர்களும் உண்டு. சித் என்றால் சேதனம்; **சித்தா** என்றால் சைதந்யம்; **சித்தா-ஆவாஸம்** என்றால் சைதன்யத்துக்கு இருப்பிடமானது; சேதனவஸ்து எல்லாவற்றிலும் என்று அர்த்தம். எல்லாருக்கும் ஸர்வாபேஷ்ட பலப்ரதை என்றதாயிற்று.

இன்னுமொரு அர்த்தம் **சித்தாவேஸே** என்ற பதத்தை விளிச் சொல்லாகக் கொள்வதால் அமையும்.

நாங்கள் த்யானிக்கும்போது எங்கள் மனதில் அமர்பவளே! என்று அழைப்பதாக அர்த்தம் இதே போல மார - மாதரி -ஹா -ஸேவா என்று பிரிக்காமல் மாரமாத:-இஹ - ஆ- ஸேவா என்று பதம் பிரிப்பாரும் உளர். மன்மதனின் அன்னையே! இங்கே சிறியதொரு கைங்கர்யமானது இவ்வளவு பெரிய பலன் அளிக்கிறதே என்றாகும்.

ஹா- என்று வியப்புக்கு இரண்டு காரணங்கள். மன்மதனுக்குத் தொண்டு புரிபவர் ஸம்ஸாரத்தைக் கடக்காமல் அமுங்கிப் போவார்கள். மேலும் ஸம்ஸாரத்தில் சிக்குவார்கள் என்பது ப்ரஸித்தமாயிருக்க மன்மத மாதாவுக்குத் தொண்டு செய்தால் அதற்கு எதிரான பலன் கிடைக்கிறது என்பது வியப்பு. நாம் விரும்பும் பலன் வேறாயினும் அதை நிறைவேற்றுபவள் கூடவே கடப்பித்தலையும் நாம் கேளாமலே கூடப்பண்ணுகிறாள் என்பதாலும் வியப்பு.

ஆத்தா என்பதை ஸேவாவுக்கு அடைமொழியாக்கி, வாய்த்துள்ள பணி என்று பொருள் சொன்னோம். இன்னொரு விதமாக, **ஆத்தா** என்பதை ரமாவுக்கு அடைமொழியாக்கி, திருப்பணிகளால் அடையப்பட்ட லக்ஷ்மி நம்மைக் கடைத்தேற்றுவாள் என்றும் சொல்லலாம். அவளே உபாயமாகவும் உபேயமாகவும் ஆகிறாள்; வழியாகவும் பலனாகவும் ஆகிறாள்; என்று சொன்னதாகும். லக்ஷ்மிகைங்கர்யத்தால் ஸம்ஸாரத்தைக் கடைந்தவர்கள்

பெறுகின்ற பலன் என்னவென்று கேட்டால் அதுவும் சிறந்த லக்ஷ்மீகைங்கர்யமே என்றதாயிற்று.

சித்தாவாலே கனிதா என்று அன்வயிப்பதும் தகும். உள்ளத்திருத்தப்பட்டவள் என்று பொருளாகும். ஹாரி-தமா-ரமா என்று பதம் பிரிக்காமல் ஹரித-மார-மா என்று பிரித்தால் இன்னொரு பொருட்சுவையும் கிடைக்கும். மன்மதனுக்குத் தாயாயிருப்பினும், நம்மிடமிருந்து மன்மதனை விரட்டுவிப்பவள் லக்ஷ்மி என்று புது அர்த்தம்.

ஆத்தாசிதாம் என்பதை ஆத்தா- ஆசிதாம் என்று பிரித்து, அவள் பணியைச் சேர்ந்த அசேதனங்களுக்குக் கூட உயர்நிலை உண்டாம் என்று பொருள் உரைப்பர் சிலர். அவளுடைய திருக்கோவில், படிக்கட்டு, மண்டபம், எல்லாம் நம் வணக்கத்துக்குரியதாகிறதன்றோ? மேலும் படியாய்க்கிடந்துன் பவளவாய் காண்பேனே என்றும் ஏதேனும் ஆவேனே என்றும் சொன்னபடி அவள் கடாக்ஷபாத்ரமான அசேதனங்களும் உயர்ந்தவையேயாம் என்று தாத்பர்யம்.

இப்படிப் பல அர்த்தங்கள் இருப்பதால் இந்தச் சிறு ச்லோகத்தில் பன்னிரு விஷயங்கள் அடங்கியுள்ளன:

1. நமக்கு இஷ்டமானதைத் தருவாள்.
2. தனக்கு இஷ்டமானதை நம் எண்ணத்தில் தோற்றுவிப்பாள்.
3. நம் மனதில் உறைவாள்.
4. நமக்கு அனுகூலமாக ஸங்கல்பிப்பாள்.
5. நம் மனதைக் கொள்ளை கொள்ளுவாள்.
6. காமத்தை விரட்டியடிப்பாள்.
7. சிறு தொண்டுக்கும் பெரும்பலன் அளிப்பாள்.
8. சேதனர்களையெல்லாம் கடைத்தேறப் பண்ணுவாள்.
9. தானே உபாயமும் பலனுமாய் இருப்பாள்.
10. த்யானிப்பவர்களுக்கு அபிமத(இஷ்ட)மாயிருப்பாள்.

11. தன் பார்வைக்கு இலக்கான அசேதனங்களையும் கடைத்தேற்றுவாள்.

12. மாரன் (காமன்) அபிமதனாயினும், இவள் வனிதாபிமதையாயினும், ஹரிதுமாரனாவாள்.

இஷ்டத்தை நிறைவிப்பாள். இச்சைகளை மாற்றுவிப்பாள். இதயத்தில் இருந்தருள்வாள். இதயத்தைக் கவர்ந்திடுவாள். இங்கே நம் பணியேற்பாள். இனி நம்மைத் தாண்டுவிப்பாள். இழிபிச்சை நீக்குவிப்பாள். இருபலனாயிரண்டாவாள்.

12 குதிக்குரியாள் குவைநிற்பாள்.

काऽपि मा सरसा सात्रा भिलापाकरनामका ।
कायिनारिहरासेव्या ह्यनावा स्तुतियाचया ॥ १२ ॥

காபி மா ஸரஸா ஸாத்ர பிலாபாகரநாமகா ।
காயிநாரிஹராஸேவ்யா ஹ்யநாவா ஸ்துதியாசயா ॥ 12 ॥

काऽपि = வர்ணிக்கவொண்ணாத
मा = லக்ஷ்மீ
सरसा = அருட்பெருக்குடையவள்.
सा = புகழ் பெற்றவள்.
अत्र = இங்கே
अभिलाप-आकर-नामका = கீர்த்திக்கக் குவியலான திருநாமங்களைக் கொண்டவள்.
अग्र्य-नावा = சிறந்த ஓடமான.
स्तुति-याचया = துதிப்போலே.
कायिना = சரீரம் உள்ளவனாலே.
सेव्या = சேவிக்கத் தக்கவள்.
अरि-हरा = பகைவரைப் போக்குபவள்.

லக்ஷ்மிக்கு நிறைய நாமங்கள் உள்ளன. அவற்றைக் கீர்த்திப்பது நல்லது. அவளைத் துதிப்பது மனிதர்களுக்குச் சிறந்த ஓடம் போலாகும். அவள் பகைவரை வெல்பவள்.

இந்த ஶ்லோகத்தில் விசேஷம் என்னவென்றால், இதை முழுதுமாகத் தலைகீழாக வாசித்தால் இன்னொரு அர்த்தமுள்ள ஶ்லோகம் கிடைக்கும்; அதுவும் லக்ஷ்மீ விஷயமாக இதற்கடுத்த ஶ்லோகமாக இருக்கிறது என்பதாம்.

ஆகாரம் என்ற சொல்லுக்கு மூன்று அர்த்தங்கள். சுரங்கம் என்றும், குவியல் என்றும், ச்ரேஷ்டம் என்றும். இந்த மூன்றுமே இங்கு பொருந்தும். அவளைக் கீர்த்திப்பதற்குச் சுரங்கம் போன்றவை அவளது நாமங்கள்; தோண்டத்தோண்ட மேன்மேலும் கிடைப்பவை; நிறையப் புதைந்து கிடப்பவை; வல்லுனர்களால் மட்டுமே வெளிக்கொணர முடிபவை. இது முதல் அர்த்தம். துதிக்காகக் குவியலாய்க் கிடப்பவை. ஸஹஸ்ரநாமமே கூட உண்டு. ஸநத்குமாரரின் லக்ஷ்மீஸஹஸ்ரநாமத்தில் இல்லாத பல நாமங்களும் இந்த லக்ஷ்மீஸஹஸ்ரத்தில் சொன்னவை உண்டு. இது இரண்டாம் அர்த்தம்.

பேச்சுக்களுள் சிறந்தவை திருமகளின் திருநாமங்கள் தான். மற்ற வார்த்தைகளெல்லாம் அந்த அளவுக்கு மதிப்பு பெறாதவை. இது மூன்றாவது அர்த்தம்.

இவளுக்கு வாத்ஸல்யம் ததும்புவதால், அன்பு பெருகுவதால், உள்ளம் உருகுவதால், அருள் பொழிவதால், இவளை ஸரஸா என்பது பொருத்தும்.

இவள் விஷயமான ஸ்தோத்ரத்தை (இந்த லக்ஷ்மீஸஹஸ்ரம் போன்றவற்றை) சிறந்த ஓடமாகச் சொல்வதும் பொருந்தும். இதன் மூலம் நாம் துக்கக் கடலை, ஸம்ஸார ஸாகரத்தை, மாயைச்சேற்றைத் தாண்டிவிட முடிவதால். கனியிலுண்டே என்ற பாடலில் ஒரு ஆழ்வார் கூறியபடி, துதிப்பதற்குத் தேவையான சரீரமும், வார்த்தையும் இருக்கும்போது, துதிக்காமல் இங்கேயே தத்தளிப்பவர்கள், சரீரமும் படகும் அருகிலிருந்தும், கடல் நீரில் தத்தளிப்பவர் போலவாம்.

இவளை அரிஹரா என்கிறாரே, இவள் எந்தப் பகைவரைப் போக்குகிறாள்? என்றால், காமம்,க்ரோதம் முதலிய உட்பகைவர்களையும், வாழ்க்கையில் தம்மை த்வேஷிப்பவர்களையும், முன்னேற்றத்துக்கு

முட்டுக்கட்டையாயும் முட்களாயும் இருப்பவர்களையும் திருமகள் தொலைத்துக் கட்டிவிடுவாள். இவளை ஸேவிக்கத்தக்கவள் என்றது ஏனென்றால், உயர்வும், உதவும் குணமும், உதவும் திறனும்,உதவவேண்டிய உறவும், உதவினால் பெரும் பயன் உண்டாவதும், ஒருங்கே அமையப் பெற்றதால். பெரிய மலை உயர்ந்திருந்தாலும் ஸேவிக்கத் தக்கதன்று. பக்கத்து வீட்டுக்காரன் உதவும் பண்பு உள்ளவனாயினும், கையாலாகாதவன் ஆதலால் ஸேவ்யனன்று.பக்கத்து நாட்டு அரசன் உபகாரியாயினும் நமக்கு உதவமாட்டான் ஆகையால் ஸேவ்யனன்று. எல்லாக் காரணங்களாலும் லக்ஷ்மியே ஸேவ்யை என்ற தாத்பர்யத்தில் ஸேவ்யா என்கிறார்.

இந்த ஶ்லோகத்தில் பொதிந்துள்ள கருத்துகளைச் சுருக்குவோம்:

1. உடல் படைத்த பலனே லக்ஷ்மியைத் துதிப்பது தான்.
2. கரை தாண்டுவிக்கும் படகுகளில் மிகச் சிறந்தது லக்ஷ்மீஸ்தோத்ரம் ஆகும்.
3. ஸேவிக்கத் தக்கமை லக்ஷ்மிக்குப் பல காரணங்களால் உண்டு.
4. அதில் ஒரு காரணம் அவள் ஸரஸா என்பது. விரஸர்கள் அசேவ்யர்கள்.
5. அவளைப் பற்றி வர்ணித்து மாளாது சிறிது வர்ணித்தபிறகு காபி என்று சொல்லி நிறுத்த வேண்டியது தான்.
6. அவளுக்கு ஏராளமான திருநாமங்கள் புதையவாய், சுரங்கமாய், குவியலாய் இருப்பவை.
7. வார்த்தைகளுள் சிறந்தது அவளது திருநாமம்தான்.
8. அவளை ஸேவிப்பவர்களைப் பகைவர்கள் நெருங்க முடியாது.
9. மா என்பதும், ஸா என்பதும், கா என்பதும் அவளது பெயர்கள்.

10. இங்கேயே நாம ஸங்கீர்த்தனம் பண்ணலாம்.
உசிதஸ்தலத்தை தேடி வேறெங்கும் போகவேண்டாம்.
ஏதோ ஓர் பண்புடையாள். ஏராளம் பெருநடையாள்.
ஏதலரைப் போக்கிடுவாள். ஏத்துனரை கரை சேர்ப்பவள்.

---

13. அச்சத்தை அழிப்பவள்.

या च वाति स्तुवानाग्र्य व्यासेरा हरिनायिका ।
कामनारकपालाभि त्रासासारसमापिका ॥१३॥

யா ச வாதி ஸ்துவாநாக்ர்ய வ்யாஸேரா ஹரி நாயிகா ।
காமநாரகபாலாபி த்ராஸாஸாரஸமாபிகா ॥ 13 ॥

या च = எவளும்.

हरि नायिका = திருமாலின் துணைவியோ

स्तुवान-अग्र्य-व्यास-इराः = துதிப்பவர்களுள் சிறந்தவரான வ்யாஸரது வார்த்தைகளை

वाति = மணம் வீசுகிறதோ

काम-नारक-पाल-अभि-त्रास-आसार-समापिका காமம் என்கிற நரகக் காவலனால் நாலாபக்கங்களிலும் அச்சம் பெருகுவதை முடித்துக்கட்டுபவளே! உன் மேல் இதிஹாஸபுராணங்களின் வாசனை வீசுகிறது. ஏனெனில் அவையும் உன் தோத்திரங்களை அடக்கியவை. காமம் நம்மைப் பாவங்களைப் பண்ணச்செய்து நரகத்தின் நுழைவாயிலுக்கு நம்மைச் செலுத்துவதால் அதை ஒருவிதத்தில் நரகக் காவலன் என்னத்தகும். அதனால் ஏற்படும் பயம் பல திசைகளிலிருந்தும் பெருக்கெடுத்து வரும் வேளையில் அதற்கு ஒரு முடிவு கட்டுபவள் நீ. இந்த ச்லோகத்தின் விசேஷம் இதைத் தலைகீழாக வாசித்தால் போன ச்லோகம் வருகிறது என்பதாகும். இப்படி இயற்றுவது அரிதாதலால், (இரா என்றால் வாக்கு; இது முதலான) அபூர்வபதங்களையும் அர்த்தங்களையும் அறியும் வாய்ப்பு நமக்கு. பலர் பலவிதமாக அர்த்தம் சொல்ல இடம் கொடுக்கும்

ச்லோகங்கள் இத்தகையவை. இதோ சிலரது விளக்கங்கள்: வாதன் என்றால் வாயுபகவான். அவனுடைய குமாரனான ஹநுமானை மாருதி என்பது போல் வாதி என்பதும் தகும். இந்த வாதியைப் பாராட்டிப் பேசுகிற ஸீதை வாதிஸ்துவாணா எனப்படுகிறாள். மேலும் மாருதியைத் துதிப்பவர் பலர். அவர்களுள் சிறந்தவர் வ்யாஸர். வாயு குமாரனான பீம ஸேநனைப் புகழ்ந்தெழுதியதாலும் வ்யாஸர் வாதிஸ்துவாநாக்யர் ஆகிறார். அந்த வேத வ்யாஸரிடம் இருக்கும் ர:=செல்வம்,வேதமெனும் செல்வம், இந்த மஹாலக்ஷ்மிதான் ஆகையால் இவள் வ்யாஸை ரா ஆகிறாள் இது முதல் பாதிக்கு இரண்டாம் பொருள். இரண்டாம் பாதிக்கும் வேறு பொருள் கூற இடம் உண்டு. நாரகபாலஸ்தின் என்கிறவன் யமன். எனக்கு ஒரு பக்கம் மன்மதனிடமிருந்தும் இன்னொரு பக்கம் யமனிடமிருந்தும் பயம் ஏற்படுவதால் அமித்ராஸம்(பல பக்கத்துக்கு பயம்) அதிகமாய் இருக்க அதை முடிவுக்கு கொண்டு வருபவள் லக்ஷ்மீ. காமனும், யமனும் என்னை ஹிம்ஸிக்காமல் பண்ணுபவள். இஹத்திலும் பரத்திலும் நன்மை செய்பவள் என்று தாத்பர்யம்.

இப்படிப் பல அர்த்தங்களால் சிறு ச்லோகத்திலும் ஏராளமான தாத்பர்யங்கள் கிடைக்கின்றன.

1. வ்யாஸரின் இதிஹாஸ புராண வார்த்தைகளுக்கு மணமூட்டுபவள் லக்ஷ்மீ.
2. தானே வேதமாக நின்று, வேத வ்யாஸரிடம் ஸம்பத்தியானவள் லக்ஷ்மீ.
3. ஹரிச்ரேஷ்டனான ஹநுமானை பாராட்டுகிற ஹரிநாயிகை லக்ஷ்மீ.(ஹரி என்பதற்கு இரு பொருட்கள்.)
4. நமக்கு ம்ருத்யுபயத்தை ஒழிப்பவள் லக்ஷ்மீ.
5. நம்மை நரகத்திற்கு செலுத்தும் காமபீடையை தொலைப்பவள் லக்ஷ்மீ.

6. காமத்தையும் யம பயத்தையும் போல எல்லா அலாரங்களையும் ஸமாப்தி பண்ணுபவள் லக்ஷ்மீ. (வேறொரு பதச்சேதத்தால் இவ்வர்த்தம்.)

7. ஹரியின் நாயகியானவள் லக்ஷ்மீ.

8. காமபாலனான ஹரியிடமிருந்தும் நரகபாலனான யமனிடமிருந்தும் நம் பயத்தை அழிப்பவள் லக்ஷ்மீ.

முன்னுரைத் துதிப்பதற்கு
முயன்றவர்க்குள்ளே ஃபயலர்
முக்கியர் அவருடைய
மொழிமலாம் லீகின்றாய்.

14. துர்ஜநர்களைத் துரத்துபவள்.

अच्छभावा फणिशये जगन्नाथे स्मराङ्कदा ।
आरूढाघखलापीडोच्चाटा पुष्टिं हि सीति मा ॥१४॥

அச்சபா₄வா பணிஶயே ஜக₃ந்நாதே₂ ஸ்மராங்கதா₃ ।
ஆரூடா₄க₄ க₂லாபீடோச்சாடா₄ புஷ்டிம் ஹி ஸௌதி மா ॥ 14 ॥

अच्छ-भावा = தெளிவான எண்ணமுள்ளவளும்.
फणि-शये = சேஷசாயியான
जगन्नाथे = ஜகந்நாதனிடம்.
स्मर-अङ्क-दा = மன்மத லீலை தருபவளும்
आरूढ-अघ-खल-आपीडा-उच्चाटा = ஏறிய பாவமுள்ள போக்கிரிகளின் ஹிம்ஸையைப் பெயர்த்தெறிகிறவளுமான.
मा = லக்ஷ்மீ.
पुष्टिं = செழிப்பை
सीति = விளைவிக்கிறாள்.
हि = அல்லவா?

லக்ஷ்மீ குழம்பாமல் தெளிந்த எண்ணங்களை உடையவள். திருமாலுக்குப் பாம்புப்படுக்கையில் காமலீலாரஸத்தைத் தருபவள். பாவம் முற்றிய போக்கிரிகளின் ஹிம்ஸையை நிர்மூலம் பண்ணுபவள். அவள் செழிப்பை உண்டுபண்ணுகிறாள்.

இந்த ஶ்லோகத்தில் என்ன விசேஷம் என்றால் முப்பத்திரண்டு எழுத்துக்களில் எதுவுமே மீண்டும்

வரவில்லை எந்த மெய்யெழுத்தும் இரண்டுமுறை வரவில்லை. மொத்தம் முப்பத்துமூன்று மெய்யெழுத்துக்கள் மொழியில் உள்ளனவே. அவற்றுள் மூன்றைத்தவிர எல்லாமே வந்துள்ளன. இந்த விசித்ரத்தை அநாவ்ருத்தவ்யஞ்ஜநம் என்கிற ஶப்தசித்ரமாகக் கூறுவர்.

பணிஶயே என்பதற்கு இரண்டுவிதமான பொருள் கூறலாம். பாம்பில் படுத்திருப்பவனிடம் என்று ஒன்று, பாம்புப் படுக்கையிலே என்று மற்றொன்று. இரண்டும் இங்கு பொருந்தும். கல-ஆ-பீடா என்று பிரிக்காமல் கல-ஆபீட என்று பிரித்தால் அர்த்தம் வேறு. போக்கிரி ஶிகாமணிகள்- அதாவது அதிதுஷ்டர்கள் என்று அர்த்தம் அவர்களை வெட்டிச் சாய்த்துவிடுவாளாம் லக்ஷ்மீ. ஶாந்திரஸம்,ஶ்ருங்காரரஸம், ரௌத்ரரஸம் என்ற மூன்றுமே ததும்புபவள் லக்ஷ்மீ. முதலாவது தொண்டர்களிடத்திலும் இரண்டாவது கணவனிடத்திலும் மூன்றாவது கலர்கள் (துஷ்டர்கள்)இடத்திலும் அவளால் வெளியிடப்படும். இந்த மூன்றுமே நமக்கு செல்வச் செழிப்பிற்கு ஹேதுவாகின்றன. சில பதிப்புகளில் இந்த ஶ்லோகத்தின் கடைசி எழுத்து மஃ என்பதற்குப் பதிலாக ஸஃ என்று இருக்கிறது. அர்த்தத்திற்கு ஒத்துவரும். ஆனாலும் அது தவறான பாடம். இந்த ஶ்லோகத்துச் சொல்வேடிக்கையைப் புரிந்து கொண்டவர்களுக்கு அந்தத் தவறு எளிதில் புரியும். ஸௌரதி என்ற பதத்தில் ஸகாரம் வந்து விட்டதே. மறுபடியும் ஸஃ என்று வரக்கூடாது அல்லவா? மஃ என்பதே சரியான பாடம். அந்த எழுத்து ஶ்லோகத்தில் வேறெங்கும் வரவில்லை.

இந்த ஶ்லோகத்தில் வராத மெய்யெழுத்துக்கள் ஞ்,ட்,ப், என்கிற மூன்று மட்டுமே இந்த மூன்றையும் விட்டுவைப்பானேன் என்று சிலருக்கு ஆர்வம் பொங்கியது போலும்! ஆகையால் பாடபேதங்கள் பண்ண முற்பட்டனர். ருத்திம் என்பதற்குப் பதில் பூத்திம் என்று போட்டுச் சுலபமான மூன்றில் ஒன்றை வரவழைத்துவிட்டார்கள். மூன்றாம் பாத ஆரம்பத்தில் ஆகுட என்றிருப்பதை டாகுட

என்று மாற்றி டூ என்கிற ஒற்றை எழுத்து பதத்திற்கு ஒரு கோசத்தின் உதவியுடன் கஷ்டப்பட்டு அர்த்தம் சொல்லி, விட்டுபோன மூன்றில் இரண்டாவதையும் வரவழைத்துவிட்டார்கள். மேலும் ஜகந்நாதே என்ற பதத்திற்கு முன் மாறுதல் பண்ணி ஞ என்கிற எழுத்தையும் வரவழைத்தார்கள். இப்படி எல்லாம் பண்ணினால் க்லிஷ்டமாகவேணும், முப்பத்துமூன்று மெய்யெழுத்துக்களையும் ஒன்று விடாமல் இந்த ஶ்லோகத்தில் கொண்டு வந்த சொல் வேடிக்கையும் நடக்கிறது. ஆனால் க்லேசமில்லாமலே வெகு ஸஹஜமாக முப்பது மெய்யெழுத்துக்களை ஒரே ஶ்லோகத்தில் எதுவும் திரும்ப வராமல் அமைத்த பாங்கே பாராட்டுக்குரியது தான்; பாடபேதங்கள் எல்லாம் வேண்டாம். பலவிதமாக அர்த்தம் சொல்ல முடிவதால் இந்த ஶ்லோகத்தில் எட்டு கருத்துகள் அடங்கியுள்ளன:

1. லக்ஷ்மியின் அபிப்ராயம் ஸ்வச்சமாக இருக்கும். குழம்பியிருக்காது.
2. லோகநாதனுக்கும் கிலாரஸம் சேர்ப்பவள் இவள்.
3. போக்கிரித்தலைவர்கள் பண்ணும் ஹிம்ஸைகள் நம்மை அண்டாதபடி அவற்றைத் தடுப்பவள்.
4. இன்னும் சொல்லப்போனால் அந்தத் துஷ்டசிகாமணிகளையே இருக்குமிடம் தெரியாமல் பண்ணிவிடுவாள்.
5. நம்மைப் போலன்றி அவள் திருமாலிடம் தெளிந்த எண்ணம் கொண்டவள்.
6. அவள் செல்வச் செழிப்பை விருத்தியாக்க வல்லவள்.
7. திருமாலுக்குக் காமரஸத்தையும் கொடுப்பாள்! காமனைப் பிள்ளையாகப் பெற்றும் கொடுப்பாள்!
8. கருத்துத்தெளிவு, பகவானிடம் வாஞ்சையும்,தீயவரை ஒறுத்தல், என்கிற மூன்றாலும் நமக்குச் செழிப்பு பண்ணுவாள்.

கருத்தினில் கலங்காத்தன்மை கனைவண்பால் காதல் அண்மை கயவரிடம் கடுமை நம்மைக் காக்கவே கமலை வண்மை.

(தொடர்ச்சி)

15. உடலில் உறுதியை உண்டாக்குபவள்

दार्ढ्यदा मम हे देहे सात्रासा लल मेऽन्तिमे ।
खेदिखेऽहह याने या तार्क्ष्यैताथ छ तान्तताम् ॥ १५

தார்ட்யதா மம ஹே தேஹே ஸாத்ராஸா லல மேऽந்திமே ।
கேதிகேऽஹஹ யாநே யா தார்க்ஷ்யேதாத்ய த்யை
தாந்ததாம் ॥ 15

हे मे = ஓ லக்ஷ்மியே!
मम = என்னுடைய
देहे = உடலில்
दार्ढ्य-दा = உறுதியைக் கொடுப்பவளாய்
स-अत्रासा = அபயஹஸ்தத்தோடு கூடியவளாய்
लल = கொஞ்சு.
मे = என்னுடைய
अन्तिमे = இறுதியானதும்

खेदि-खे = துயருள்ள புலன்கள் கொண்டதுமான
याने = பயணத்தில்
या = யாதொருவளான நீ
तार्क्ष्य-इता = கருடனால் சென்றவளோ, அந்த நீ
अथ = இப்பொழுது
तान्ततां = வாட்டத்தை.
छ = வெட்டிப் போடு
अहह = அடக்கடமே

திருமகளே! நீ எனக்கு என்னென்ன பண்ண வேண்டும் தெரியுமா? நிறைய வேண்டுகிறேன். ஆரோக்யத்தைத் தரவேண்டும். வஜ்ரஸரீர ஸித்திரஸ்து என்று ஒரு ஆஶீர்வாதம் பண்ணுவார்களே, அது போல உடற்கட்டு வாய்க்கச் செய்ய வேண்டும். உன் அபயஹஸ்தம் மூலம் அஞ்சல் அஞ்சல் அஞ்சல் ! என்று அளிக்க வேண்டும். மேலும் என்னிடம் வாத்ஸல்ய மிகுதியால் குழந்தையுடன் விளையாடுவது போல் கொஞ்ச வேண்டும். என்னுடைய மரண காலத்தில், புலன்கள் துன்பப்படும்போது, கருடவாஹனத்தில் ஏறிவந்து ரக்ஷிக்க

வேண்டும். என்னுடைய வாட்டத்தைக் கண்டதுண்டமாக வெட்டிப்போட வேண்டும். இவ்வாருக ஆரோக்யம் அளித்தல், அபயம் அளித்தல், அன்பைப் பொழிதல், துயரம் துடைத்தல், துணையாய் நிற்றல், என்ற பலவற்றையும் எனக்காகப் பண்ண வேண்டும். இந்த ஶ்லோகத்தில் உள்ள அற்புதங்களில் ஒன்று இதைத் திருப்பி, கடைசி எழுத்திலிருந்து முதல் எழுத்து வரையாகப் படித்தால் வரும் இன்னொரு ஶ்லோகத்துக்கும் அர்த்தம் உண்டு என்பது. அந்த ஶ்லோகம் வருமாறு-

தாந்ததாம் த்ய த்ய தார்க்ஷ்யேதா யாநேயா ஹைஹை கேதிகே ।
மேந்தி மே லல ஸாத்ராஸா ஹேஹை தேஹே மம தார்ட்யதா ॥

என்பதாகும். இதில் உள்ள பதங்களும், தார்ட்யதா என்று தொடங்கும் உள்ள ஶ்லோகத்துப் பதங்களும் ஒன்றே என்பது மேலுமொரு அற்புதம். ராகவ யாதவீயம் முதலிய நூல்களில் உள்ள விசித்ர ஶ்லோகங்கள் திருப்பி வாசித்தால் வேறு பதங்களுடன் வேறொரு அர்த்தமுள்ள ஶ்லோகத்தைக் கொடுக்கும். ஆனால் இதில் ஶ்லோகத்தைத் திருப்பி வாசித்தால் வேறு ஶ்லோகம் வந்தாலும், இதே பதங்களே வேறொரு வரிசைக் க்ரமத்தில் வருகின்றன. இது அற்புதம். இதற்குக் கவி பண்ணின உபாயம் என்னவென்று புரிந்துகொள்ள முடிகிறது. சில ஈரெழுத்துப் பதங்களும் சில மூவெழுத்துப் பதங்களும் திருப்பிப் போட்டாலும் மாருதவையாக எடுத்துக் கொண்டார். அத்தகைய பதங்களை மட்டும் கோர்த்து முழு ஶ்லோகத்தையும் பண்ணிவிட்டார். தமிழிலும், இத்தகைய பதங்கள் நிறைய உண்டு. பாப்பா, மாமா, **விகடகவி, தேருவருதே, மாடுபாடுமோ, தாயேதா, தேடுதே, தாத்தா, காக்கா, தந்த,தோலாதோ,மாயமா,** என்று நிறைய உதாரணங்கள் காட்டலாம். ஆனல் இந்த மாதிரிச் சொற்களை மட்டும் வைத்து நீண்ட வாக்யம் அமைக்க முடியுமா? முடிந்தாலும் அதை முழுச் செய்யுளாக்க முடியுமா? இந்தக் கவி இந்த அற்புதத்தை அனாயாசமாகப் பண்ணியிருக்கிருர் இந்த ஶ்லோகத்தில். இது ரொம்பக் கஷ்டம் ஆயிற்றே என்று உரையாசிரியர்கள்

விலக்கிறார்கள். சரி, இனி அர்த்தத்தை அலசுவோம்- லக்ஷ்மியிடம் போய்த் தனக்கு உடலுறுதியை வேண்டுகிறாரே, அது தகுமோ? அவளிடம் செல்வம் வேண்டுவது பொருந்தும்; ஆரோக்யம் பாஸ்கராத் இச்சேத் என்று முதுரையும் உண்டு என்று ஆட்சேபிக்க வேண்டாம். ஸரீராரோக்யம் ஐஸ்வர்யம் என்று தொடங்கும் விஷ்ணுபுராண ஸ்லோகத்தில் தேவேந்த்ரன் நமக்கு வழிகாட்டுகிறான், ஆரோக்யத்தை மஹாலக்ஷ்மியிடமிருந்து பெறலாம் என்கிற விஷயத்தில்.

அபயத்தோடு கூடியவள் என்று அவளைச் சொல்வது தகும். நம்மைப் போன்ற நீசர்களுக்கும் பெரும் குற்றவாளிகளுக்கும் உதவுவதற்கு இந்த்ராதி தேவர்களும் பயப்படலாம், பின் விளைவுகளை எண்ணி - ஆனால் மலர்மகள் அஞ்ச வேண்டியதே இல்லை. குழந்தைகளுக்கு உதவுவதில் தாயாருக்கு என்ன அச்சம்? தான் அஞ்சாதது மட்டுமின்றி நம் அச்சத்தையும் தீர்ப்பவள் அவள். அந்திம ப்ரயாணத்தில் ஐம்புலன்களும் சேதமடையும்; இப்போது வாட்டம் தீர என்று வேண்டுவது அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன் என்று பெரியாழ்வார் ப்ரக்ரியைப்படியாகும்.

> இந்த்ரியங்கள் இன்னலினால் இறுதியிலே இழிபடுங்கால்
> இந்திரையே! உன் வரவால் இறந்தவுடன் அருள்வாய் மகிழ்.

அஹோ என்றது மரண வேதனையை நினைத்து ஐயையோ என்று சொல்வதாகவும் கொள்ளலாம். வேகமாகக் கருடனில் ஏறி வரும் தாயாரின் அன்பை நினைத்து ஆச்சர்யப் படுவதாகவும் கொள்ளலாம். யானே என்பதற்கு ப்ரயாணத்தில் என்று அர்த்தம் சொல்லாமல் வாஹனத்தில் என்று அர்த்தம் சொல்பவரும் உளர்; அவர்கள் கேதிகே யானே என்று அன்வயிக்காமல், யானே தார்க்ஷ்யேந என்று அந்வயிக்கிறார்கள்.

தார்க்ஷ்யேந என்றதன் கருத்து என்னவென்றால், உதவிக்கு ஓடோடி வருவாள்; கருடனிலேறிப் பறந்து வருவாள்; என்பதாம்.

அத்ய என்று பதம் பிரிக்காமல் த்ய என்று பிரிப்பவரும் உளர்; அவர்கள் த்யத்ய என்று இரண்டு தடவை இருப்பதால், வெட்டு வெட்டு என்று அர்த்தம் சொல்கிறார்கள். இதில் வேறொரு ஔசித்யமும் (தகுதியும்) இருக்கிறது. ச்லோகத்தைத் திருப்பிப்போடும்போது, அத்ய என்ற பதத்தைக் கொண்டு வர முடியாது; பதங்கள் மாறுவதில்லை என்ற நியமம் மீறப் படாமலிருக்க த்ய த்ய என்றே சொல்லலாம். பாடபேதங்கள் பல உண்டு. திருப்பிப் போட்டாலும் மாறாத மூன்றெழுத்துப் பதங்கள் தேவை என்கிற ஸூக்ஷ்மத்தைப் புரிந்து கொண்டு, மேத்தி மே என்பதற்குப் பதில், மேதிமே என்று ஒரு பதிப்பிலும், மேபிமே என்று இன்னொரு பதிப்பிலும் அச்சிட்டுள்ளனர். அதி மே என்பதற்கு அதிக அழகுள்ளவளே என்று ச்ரமப்பட்டு அர்த்தம் சொல்லுகிறார்கள். தந்ததம் என்பதற்குப் பதில் தாம்தம் என்று க்ரந்தாக்ஷரப் பதிப்பில் பாடம்; அர்த்தத்தில் மாறுதல் இல்லை. ஸைத்ராஸை என்னுமிடத்தில் முதலில் ஸை என்று தனிப் பதமாகப் பிரித்து உரை எழுதியவர்களும் உண்டு.

உறுதிப்புலை... உடைக்கட்டும் உன் அருளால் கிட்டட்டும்.
உயிர் பெருகும் காலத்தும் உபத்ரவத்தை நீ வெட்டும்.
வாத்ஸல்யம் பொங்கட்டும். வாட்டமெல்லாம் தீரட்டும்.
வளமை புள்ளோறட்டும். வந்தெல்லைக் காக்கட்டும்.

— ★ —

18. தீவினைக்குத் தீ மூட்டுபவள்

मयि ते पदभक्तेऽस्मिन् प्रसीद कमले! हिते! ।
तेजसा दह शक्ते त्वं क्षिप्रमुपद्रवं मम ॥ १६ ॥

மயி தே பத3ப4க்தே'ஸ்மிந் ப்ரஸீத3 கமலே! ஹிதே! ।
தேஜஸா த3ஹ ச'க்தே த்வம் க்ஷிப்ரமுபத்3ரவம் மம ॥ 18

कमले = தாமரையாளே!
शक्ते = சக்தி வடிவினளே!
हिते = ஹிதமானவளே!
ते = உன்னுடைய
पद-भक्ते = திருவடித் தொண்டனை
अस्मिन् = இந்த

मयि = என்னிடத்தில்	त्वं = நீ
प्रसीद = அநுக்ரஹி.	क्षिप्रं = அவஸரமாக
मम = என்னுடைய	तेजसा = ப்ரபாவத்தாலே,
वर्धत्-अघं = உதிக்கிற பாவத்தை	நெருப்பாலே
	दह = கொளுத்து.

நான் உன் திருவடியில் பக்தி பூண்டவன். உனக்கு அநுகூலனானவன். கமலையே ! இந்த அடியேனிடம் அநுக்ரஹம் பண்ணு. நான் பாவி, என் பாவங்கள் புதிது புதிதாக முளைக்கின்றன. உன் தேஜஸ்ஸினால் என் பாவத்தை விரைவாக எரித்து விடு. நீயே சக்திஸ்வரூபிணியாதலால் நீ எரிக்க வல்லவள்.

பதபக்தே என்றதன் கருத்து - உன்னை உபாஸிக்கவோ, விதிப்படி ஆராதிக்கவோ கூட வக்கில்லாத நான் உன் திருவடித் தொண்டன் என்ற மாத்திரத்தாலேயே உன் அநுக்ரஹத்தைக் கோருகிறேன் என்பதாம்.

அஸ்மிந் என்றதன் கருத்து - இதோ அருகில் உள்ளவன் நான்; இந்த ஸாமீப்யத்தையே உபாயமாகக் கருதி நீ அநுக்ரஹிக்கலாகாதோ, என்பதாம்.

ஹிதே என்ற பதத்துக்கு இரண்டு அர்த்தங்கள் சொல்லலாம். ஹிதமானவளே என்று ஒன்று; அநுகூலனான என்னிடத்தில் என்று இன்னொன்று. (இப்படி விளியாகவும் ஏழாம் வேற்றுமை ஒருமையாகவும் இருபொருள் படும் பதங்கள் நிறைய ஸ்வாரஸ்யம் தருவதை தயாஶதகத்தில் ம்ருதுஸ்மிதகயே என்ற ச்லோகத்தில் காணலாம்).

தேஜஸா என்பதற்கும் இரண்டு அர்த்தங்கள். நெருப்பு என்று ஒன்று; ப்ரபாவம் என்று மற்றொன்று. உன் ப்ரபாவத்தால் கொளுத்து என்றது இந்த இரட்டை அர்த்தத்தால் யுக்தமாகிறது.

க்ஷிப்ரம் என்றால் விரைவாக என்று பொருள். இதை இரண்டு விதமாக அந்வயிக்கலாம். விரைவாக முளைக்கும்


பாவம் என்றும், விரைவாகக் கொளுத்து என்றும், நீ விரைவாகச் செயல்பட வில்லையென்றால், தீவினைகள் மூட்டை மூட்டையாகக் குவிந்து விடுமே என்கிற அச்சம்.

உத்யந் என்றதன் கருத்து, முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும் என்பதாம். சற்று தளிர்க்க விட்டாலும், பாடாய்ப் படுத்தும் பாவங்கள் என்று கருத்து.

ஶக்தியே என்று தாயாரை இங்கு விளிப்பது ஏனென்றால், தீவினையைத் தீயிலிட்டது போல் கொளுத்துவதற்கும். அதையும் விரைவாகக் கொளுத்துவதற்கும், அதையும் உதிக்கும்போதே மாய்ப்பதற்கும், மற்றவர்களால் ஆகாது; ஶக்திஸ்வரூபியான உன்னால் தான் முடியும் என்று கருத்து.

இந்த ஶ்லோகத்தில் ஒரு ஶப்தசித்ரம் இருக்கிறது. ஒன்று விட்டு ஒன்றாக எழுத்துகளை எடுத்தால், 1,3,5,7,9,11 ஆம் எழுத்துகள் ம, தே, த, க்தே, ப்ர, த என்பவை. இதே எழுத்துகள் மீண்டும் வந்துள்ளன. 13,16ம் 17ம், 20,23,26,29,32 ஆம் எழுத்துகளாக; அதாவது இரண்டு விட்டு ஒன்றாக. இதற்கு த்விஶ்ருங்காடக சக்ரபந்தம் என்று பெயர். இதை இப்போது விளக்குவோம்.

கமலையே! உன்னுடைய கடைக்கண் விழும் என்னுடைய
கடுவினைகள் நன்கெரியக் கடுகருள் புரிவாயே.




நிஸ்ருங்காடக சக்ரபந்தம் என்பதில் பூர்வார்த்தம் (ஸ்லோகத்தின் முதல் பாதி) எந்த எழுத்தில் முடிகிறதோ, அதே எழுத்திலேயே உத்தரார்த்தம் (பின் பாதி) தொடங்க வேண்டும்.

உத்தரார்த்தம் எந்த எழுத்தில் முடிகிறதோ அதே எழுத்தில் பூர்வார்த்தம் தொடங்கவேண்டும். ஒரே மையம் கொண்ட இரண்டு வட்டங்களை வரைந்து கொண்டு, உள் வட்டத்தில் ஸ்லோகத்தின் முதல் பன்னிரண்டு எழுத்துகளை எழுத வேண்டும். வெளிவட்டத்தில் 14,15,18,19,21,22,24, 25,27,28,30,31 ஆம் எழுத்துகளை எழுத வேண்டும். ஒன்று விட்டு இரண்டாக வரும். ஏற்கெனவே சொன்னபடி 16ம் 17ம் ஒன்றாகவும் வெளிவட்டத்தில் வராததாகவும் இருக்கும். இப்படியாக மொத்தம் உள்ள முப்பத்திரண்டு எழுத்துகளில், உள்வட்டத்தில் பன்னிரண்டும், வெளிவட்டத்தில் பன்னிரண்டும் இருக்கும், மீதி எட்டும் ஏற்கெனவே உள் வட்டத்தில் வந்த எழுத்துகள் திரும்பவும் வந்தவையாக இருக்கும். இரு வட்டச் சித்திரத்தில் இருபத்துநாலு எழுத்துக்களை எழுதியபிறகு, அவற்றை எந்த வரிசையில் வாசிக்க வேண்டும் என்பதைக் தெரிவிப்பதற்காக ஆறு இடங்களில் இரண்டிரண்டு கோடுகள் இருக்கும். இவ்விடங்கள் நாற்சந்திகளாய் இருக்க, இவற்றுள் இரண்டு நுழைவாயில் போல் இருக்கும். இப்பொழுது படத்தைப் பாருங்கள். தமிழில் இதே போல் பண்ண முயன்றால், படிப்படியாகப்போகலாம். முதலில் மூவெழுத்துப் பதங்களும் நாலெழுத்துப் பதங்களும் ஜதை ஜதையாக வைத்துக்கொள்வோம். பேரவை, பேசுபவை

கிளைறு, கிழிபறு

என்பன போல; இருபதங்களுக்கும் முதல் எழுத்தும் ஒன்றே; கடைசி எழுத்தும் ஒன்றே.

இதற்கடுத்த படியாக ஐந்தெழுத்துச் சொற்றொடரும், ஏழெழுத்துத் தொடரும்.



முதலெழுத்தும் ஒன்றே; நடுவெழுத்தும் ஒன்றே; கடைசி எழுத்தும் ஒன்றே.

உதாரணம் : அலைமகளே, அழகு மலராளே.

இதற்குமேல் இன்னும் கொஞ்சம் நீட்டமுயல்வோம்.

அலைமகளே தலைவியே என்பதொன்று; அழகு மலராளே கமலையே தாயே என்பது இன்னொன்று. இதை மேலும் நீட்டி முழுச் செய்யுளும் பண்ணுவது கஷ்டம். நாம் நிறுத்தி விடுவோம். வேங்கடாத்வரி முழுதாகப் பண்ணியிருக்கிறார். அதுதான் இந்த ச்லோகம்.

இனி அர்த்தத்தின் ஸாரம் என்னவென்றால்,

கமலையே உன்னுடைய காலில் விழும் என்னுடைய
கடுவினைகள் தன்கெரியக் கடுகவருள் புரிவாயே.

— ★ —

17. அவலநிலை அச்சத்தை அகற்றுபவள்

भजेमहि हरेः कान्तां कारुण्यरसपूरिताम् ।
भवामयहरां कामं कार्पण्यत्रासहारिणीम् ॥

ப$_4$ஜேமஹி ஹரே: காந்தாம் காருண்ய ரஸ பூரிதாம் ।
ப$_4$வாமயஹராம் காமம் கார்பண்ய த்ராஸ ஹாரிணீம் ॥

हरेः = திருமாலின்
कान्तां = காதலியும்
कारुण्य-रस-पूरितां= அருள் ரஸம் நிரம்பியவளும்
भव-आमय-हरां = ஸம்ஸார நோயைப் போக்குபவளும்
कामं = மிகவும்
कार्पण्य-त्रास-हारिणीं = அவலத்தால் வரும் அச்சத்தைத் தொலைப்பவளும்
ஆன லக்ஷ்மியை
भजेमहि = வணங்குவோமாக.

ஹரிப்ரியையை நாம் அடைவதற்கு மூன்று காரணங்கள். அவள் (நம்மை உதாஸீனப் படுத்தாமல்) நம் மேல் அருள் பொழிகிறாள். அவள் நமது பிறவிப் பெரும்பிணியைத் தீர்க்கிறாள். அவள் நம் தைந்யத்தைத் தொலைக்கிறாள்; நமக்குத் தெம்பூட்டுகிறாள். நமக்கு மூன்று விதமாக உதவி புரிபவளை வணங்குவது நல்லது.

பஜேமஹி என்று பன்மையில் சொன்னதன் கருத்து நாம் பலரும் சேர்ந்து பயன்பெறலாம் என்பதாம்.


கார்ப்பண்ய த்ராஸம் என்பதற்கு இரண்டு விதமாக அர்த்தம் சொல்லலாம். அவலத்தால் உண்டான அச்சம் என்பது ஒன்று. அவலநிலையும் அச்ச நிலையும் என்று இன்னொன்று. தைர்ய லக்ஷ்மியாய்க் கார்ப்பண்யத்தை நீக்குபவளும், வீரலக்ஷ்மியாய்ப் பயத்தை நீக்குபவளும் ஒருவளேயன்றோ?

காமம் என்ற அவ்யயத்தைப் பல விதம் ஆக அந்வயிக்கலாம். மிகவும் பயத்தைப் போக்குபவள் என்றோ, மிகவும் பிணியைத் தீர்ப்பவள் என்றோ, மிகவும் பக்தி பண்ணுகிறோம் என்றோ.

இந்த ஸ்லோகத்தில் ஒரு பப்தசித்ரம் இருக்கிறது. என்னவென்றால். முதல் பாதியில் உள்ள பதினாறு எழுத்துகளில் ஒன்றுவிட்டு ஒன்றாக எட்டு எழுத்துகளை எடுத்துக் கொண்டால், இதே எட்டு எழுத்துகள் இரண்டாம் பாதியிலும் வந்திருப்பதைக் காணலாம்.

இதற்குமுன் கமலே ! தேவதேவஸ்ய என்ற. கோமூத்ரிகாபந்த ஸ்லோகத்துக்கும் இதற்கும் சிறிய வித்தியாசம் தான். அங்கே இரட்டைப்படை எழுத்துகள் திரும்பி வருகின்றன. இங்கே ஒற்றைப்படை எழுத்துகள் திரும்பி வருகின்றன.

இதை இப்படி? படம் போட்டு விளக்கலாம்.



அரிக்கு யிப் பிடித்தவளை
அருள் சாறு நிறைந்தவளை
அவனியிலே தெளிப்பவளை
அடி பணிவோம் நாம் அவளை.

18. மாலையணிந்த மாதாவானவள்.

मावतादत्र परमा मारपस्वाक्षिकालिमा ।
मालिकाभिस्समेता मा माता मे विधुताघमा ॥ १८ ॥

மாவதாத் அத்ர பரமா மாரப ஸ்வாக்ஷி காலிமா ।
மாலிகாபி4ஸ் ஸமேதா மா மாதா மே விது4தாகமா ॥ 18 ॥

परमा உயர்ந்த செல்வம் கொண்டவளும்
मार-प-स्व-अक्षि-कालिमा மன்மதனைக் காக்கும் தன் விழிக்கருமை கொண்டவளும்
मालिकाभिः மாலைகளோடே
समेता கூடியவளும்
मे எனது
माता அன்னையும்
विधुत-अघमा தீங்களை உதறியவளும் ஆன
मा திருமகள்
अत्र இங்கே
मा என்னை
अवतात् காப்பாற்றட்டும்.

திருமகள் என்னைக் காப்பாற்றட்டும். அவள் மிக உயர்ந்திருப்பதாலும், தீங்களையெல்லாம் உதறித் தள்ளுபவர் ஆதலாலும், என்னைக் காக்க மாட்டாரோ என்று அச்சம் ஒரு பக்கம் இருந்தாலும், அவள் மன்மதனைக் காப்பதாலும், எனக்கு அன்னையாய் இருப்பதாலும், நம்மைக் காக்கவென்றே திவ்யமங்கள விக்ரஹத்தில் மாலைகளுடனே ஸேவை ஸாதிப்பதாலும், என்னை ரக்ஷிப்பாள் என்ற நம்பிக்கை பிறக்கிறது. இத்திலவுலகிலேயே ரக்ஷணத்தை அவள் தொடங்கட்டும்.

இந்த ச்லோகம் அஷ்டதல பத்மபந்தத்தில் அமைந்தது.

மா என்கிற எழுத்தை நடுவில் கர்ணிகையில் எழுதவேண்டும்.

முதல் தளத்தில் வதா
இரண்டாம் தளத்தில் தத்ர

மூன்றாம் தளத்தில் பர

நான்காம் தளத்தில் ஸ்வாக்ஷி

ஐந்தாம் தளத்தில் கலி

ஆறாம் தளத்தில் பிஸ்ஸ

ஏழாம் தளத்தில் மேதா

எட்டாம் தளத்தில் விது

இவ்வாறு எழுதிக்கொண்ட பின், மையத்திலிருந்து தொடங்கி முதல் மூன்று தளங்களை வாசித்து மையத்தில் முடித்தால் முதல் பாதம் கிடைக்கும்.

மையத்திலிருந்து தொடங்கி மூன்றாவது நாலாவது ஐந்தாவது தளங்களை வாசித்து மையத்தில் முடித்தால் இரண்டாம் பாதம் கிடைக்கும்.

மையத்திலிருந்து தொடங்கி ஐந்தாவது ஆறாவது ஏழாவது தளங்களை வாசித்து மையத்தில் முடித்தால் மூன்றாம் பாதம் கிடைக்கும்.

மையத்திலிருந்து தொடங்கி ஏழாவது எட்டாவது முதலாவது பாதங்களை வாசித்து மையத்தில் முடித்தால் நான்காம் பாதம் கிடைக்கும்.


ஒவ்வொரு பாதத்துக்கும் மூன்று இதழ்கள் தேவையானாலும், நான்கு பாதங்களுக்கும் எட்டு இதழ்கள் போதுமானதற்குக் காரணம், நாலு இதழ்களை இருமுறை படிப்பதாலாம்.

ஒவ்வொரு பூவிதழுக்கும் இரண்டு எழுத்துக்கள் வீதம் எட்டு பூவிதழ்களில் 16 எழுத்துகளும், நடு கர்ணிகையில் ஒன்றுமாக 17 எழுத்துக்கள் மட்டுமே எழுதுகிறோம். சில எழுத்துகளைத் திரும்பவும் படிக்க வேண்டி வருவதால் மொத்தம் 32 எழுத்துகளாகும்.

மத்திய எழுத்தை எட்டு தடவையும்,

ஒற்றைப் பட்டை இதழ்களில் உள்ள எட்டு எழுத்துக்களை இரண்டிரண்டு தடவையும், மற்ற எட்டு எழுத்துக்களையும் ஒவ்வொரு தடவையும் படிக்க நேர்வதால்,

1★8 + 8★2 + 8★1 = 32 என்று கணக்கு சரியாகி விட்டது.



அஷ்ட தள பத்ம பந்தம்

இதையே நாலு அரங்கள் கொண்ட சக்ர வடிவில் எழுதி, சதுரர சக்ரபந்தம் என்று சொல்வதும் உண்டு. கீழேயுள்ள படத்தைப் பார்க்கவும்.

மாலை அணிந்தவள் மாரனைக் காப்பவள்
மாதா வானவள் மாசைத் தொலைப்பவள்
பரமையானவள் பாரினில் என்னைப்
பரிரக்ஷிக்கப் பார்ப்பாளாக

ஸ்ரீ ஸூக்தத்தில் ஸுவர்ண ரஜத ஸ்ரஜாம் என்றும் பத்மமாலினீம் என்றும் இருப்பதை மாலிகாயில் ஸமேதா ஸா என்பதாலும்,

அபூதிமஸம்ருத்திம் ச ஸர்வாந்நிர்ணுத என்றிருப்பதை விதுதாவமா என்பதாலும்,

மே குலே மாதரம் என்றிருப்பதை மே மாதா என்பதாலும்,

ராஷ்ட்ரேஸ்மிந் என்றிருப்பதை அத்ர என்ற பதத்தாலும்,

ஈஶ்வரீம் ஸர்வபூதாநாம் என்றிருப்பதைப் பரமா என்ற பதத்தாலும் நினைவூட்டுகிறார்.

இவளுடைய விழிக் கருமையை மார-ப-ஸ்வ-அக்ஷி-காலிமா என்று சொல்வது நான்கு வகைகளில் பொருந்தும்:

மன்மதனைக் காக்கும் இவளது விழிக் கருமை. எப்படியென்றால், மன்மதன் இவளது (ருக்மிணியினுடைய) குழந்தை. தன் குளிர்ந்த கடாக்ஷத்தால் குழந்தையின் மீது வாத்ஸல்யத்தைப் பொழிவதால் அவளது விழிக்கருமை மன்மதனைக் காக்கிறது. இது முதல் கருத்து.

இரண்டாவது கருத்து வருமாறு: இவளது கண்ணழகில் சொக்கிப் போகிறான் திருமால். மன்மதன் இவளது கண்ணின் கருமையில் தான் பதுங்கியிருக்கிறானோ என்னும்படி வசீகரமான கண். கொள்ளையழகு. இருட்டில் பதுங்குவது ஒளிபவர்களுக்கு வழக்கம்; (ஒளியில் ஒளிய முடியுமோ என்று வேடிக்கையாகச் சொல்வர்.) ஒளிவதற்கு வேண்டிய கருமை இவளது கண்ணில் இருப்பதால் மன்மதன் அச்சமின்றி அங்கே காக்கப்படுகிறான்.

அடுத்து மூன்றாவது தாத்பர்யம். மாரபன் என்றால் காமதேவ: காமபால: என்று ஸஹஸ்ரநாமத்தில் சொல்லப்பட்ட விஷ்ணு. அவனுக்கு ஸ்வம் என்றால் சொத்தாகவும் ஆஸ்தியாகவும் ஆன வஸ்து. திருமகளின் விழியே திருமாலின் ஆஸ்தி என்கிறார். இதை அவன் முயன்று ரக்ஷித்துப் பெரும்பயன் பெறுவதால் இதை ஆஸ்தியாகச் சொல்வது தகும். அபாங்கா பூயாம்ஸோ யதுபரி பரம் ப்ரஹ்ம ஸமபூத் என்ற பெரியோர் வாக்குப்படி, திருமாலின் உயர்வுகள் எல்லாம் திருமகளின் திருக்கண்பார்வையிலிருந்தே கிடைப்பவை; அதை அவனது சொத்து என்னல் தகும்.

மேலும், லக்ஷ்மீநேத்ரோத்பலஶ்ரீ ஸதத பரிசயாதேஷ ஸம்வர்த்தமாந என்கிற தேசிகஸூக்திப்படி, இவளது விழிக்கருமை தான் அவனது உடற்கருமையைச் செழிக்கச் செய்கிறது. ஆகையால் மாரபனுக்காகத் தன் விழியில் கருமை கொண்டவள் அவள். மாரபகாளிமாவுக்கு ஸ்வாஸிகாளிமா புஷ்டி பண்ணுகிறது.

இது நாலாவது கருத்து.

மன்மதனுக்கு வாழிடம் என்னும்படி கொள்ளையழகும் கவர்ச்சியும் கொண்ட கண்.


மன்மதனாகிற தன் குழந்தைக்குப் பாதுகாப்பு தரும் கண். .

மன்மதன் ஒளிந்துகொள்ளப் போதுமான இருட்கருமையை விழியில் கொண்ட கண்.

மன்மதபாலன் என்னும் திருமாலுக்கு ஆஸ்தியான கண்.

மன்மதபாலன் என்னும் திருமாலின் கருமையைப் புஷ்டி பண்ணும் கருங்கண்.

என்று மாரபஸ்வாஸிகாளிமா என்ற பதத்தின் கருத்துக்களின் சுருக்கம் ஆகும்.



சதுரர சக்ர பந்தம்.

19. பொறுமையோடு பொலிபவள்.

क्षमासमागमाभीमा रमाणामादिमा समा।
क्षामाक्षेमा रमानामा प्रमासीमासु माति मा ॥ १९ ॥


க்ஷமாஸமாகமாபீமா ரமாணாமாதிமா ஸமா।
க்ஷாமாக்ஷேமா ரமாநாமா ப்ரமாஸீமாஸு மாதி மா ॥ 19 ॥

क्षमा-समागम-अभीमा பொறுமையின் சேர்க்கையால் பயங்கரமாய் இல்லாதவளும்
रमाणां பெண்டிருக்கு
आदिमा முதல்வளும்
समा நடுநிலை கொண்டவளும்
क्षाम-अक्षेमा இளைத்துப் போன தீங்குகளை உடையவளுமான
रमा-नामा ரமை என்னும் பெயராள்
प्रमा-सीमासु அறிவின் எல்லைகளில்
मा माति அளக்கிறாளன்று: அடங்கவில்லை.

திருமாலிடம் அஞ்சும் பாவிகள் கூடத் திருமகளிடம் அஞ்சுவதில்லை. ஏனெனில் அவள் பொறுமையோடு ஒன்று சேர்ந்தவள். நாரீஜனங்களுக்குள் முதலானவள். வைஷம்யமோ பாரபக்ஷமோ இல்லாதவள்.

தீங்குகளைக் குறைப்பவள். தாழ்வுகளைத் தொலைப்பவள். அந்த ரமாதேவி நம் அறிவின் அளவுக்குள் எட்டாதவள்.

மா என்கிற ஒரே எழுத்து பதினாறு தடவை வந்துள்ளது- ஒன்று விட்டு ஒரு எழுத்து மா தான். பதினாறு இதழ்கள் கொண்ட தாமரைப் பூவில் மா என்ற எழுத்தைக் கர்ணிகையிலும், மற்ற எழுத்துக்களை இதழுக்கு ஒன்றாகவும் எழுதி வாசிக்கக் கூடும் ஆதலால் இதை ஷோடசதல பத்ம பந்தம் என்பர்.



ஷோடச தள பத்ம பந்தம்

இனி வேறு அர்த்தங்களும் ஸ்வரஸமாகக் கிடைப்பதைப் பார்ப்போம். க்ஷமாஸமாகமா என்ற முதல் பதத்துக்கு, பொறுமை கூடியவள் என்று அர்த்தம் சொல்லாமல், பூமியிலிருந்து நன்றாக வந்தவள் என்று ஸீதாவதாரக் கதையை அர்த்தமாகக் கொள்வதும் தகும். நிலவுலகில் வந்து அவதரித்தவள் என்ற அர்த்தமும் உசிதமே. ஆதிமாஸமா என்னும் இடத்தில் ஸமா என்று பதம் பிரிக்காமல் அஸமா என்று பிரித்து, ஒப்பற்றவள் என்று அர்த்தம் கொள்வதும் தகும். க்ஷாமாக்ஷேமா என்பதற்குப் பதில் க்ஷமாக்ஷேமா என்று பாடபேதமும் உண்டு; பூமிக்கு க்ஷேமத்தை, அதாவது உலகமங்களத்தைப் பண்ணுபவள்

என்று அர்த்தம். மாதி என்பதற்கு உள்ளுறைகிறாள் என்று அர்த்தம் இருப்பதால், தத்வஜ்ஞானத்தின் எல்லையுள் உள்ள லக்ஷ்மி என்றும் தாலாம் பாதத்துக்கு அர்த்தம் சொல்லலாம். ஸு-ம-அதி-மா என்று பதம் பிரித்து, மலரை விஞ்சிய அழகுடையாள் அறிவின் எல்லையானவள் என்றும் இந்தக் கடைசிப் பாதத்துக்குப் பொருள் கொள்ளலாம். ரமாநாமா என்னுமிடத்தில் அநாமா என்றும் பதம் பிரிக்கலாம். இதற்கு இரண்டு பொருள்கள். ஆமமாயில்லாதவள், பக்குவப்பட்டவள், என்று ஒரு அர்த்தம். ஆமமேயில்லாதவள், ஆரோக்கியம் தருபவள், என்று இன்னொரு அர்த்தம்.

இதையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் திருமகளைப் பற்றிப் பதினைந்து செய்திகளைத் தெரிவிக்கிறது இந்த ச்லோகம்:

1. அவள் பூமியிலிருந்து தோன்றியவள்.

2. அவள் பூமியில் அவதரித்தவள்.

3. அவள் பொறுமையோடு கூடியவள்.

4. அவளிடம் நாம் அஞ்ச வேண்டாம்.

5. அவள் பெண்டிரில் முதன்மை பெற்றவள்.

6. அவள் ஆதிலக்ஷ்மி.

7. அவள் பக்ஷபாதமற்றவள்.

8. அவள் ஈடிணை அற்றவள்.

9. அவளால் அக்ஷேமம் அழிந்து விடும்.

10. அவளால் உலகத்துக்கு க்ஷேமம்.

11. அவளுக்கு ரமா என்றும் மா என்றும் பெயர்கள்.

12. அவள் அறிவின் எல்லைநிலம்; தத்வஜ்ஞானத்தின் காஷ்டையில் உள்ளவள்.

13. அவள் அறிவின் எல்லைக்குள் அகப்படாதவள்.

14. அவள் மலரினும் அழகியவள்.

15. அவள் பக்குவப்பட்டவள்; பக்குவப்படுத்துபவளும் கூட. மேலும் அவள் அநாரோக்யத்துக்கு (ஆரோக்யமற்ற தன்மைக்கு) எதிரியாதலால் அநாமா எனப்படுகிறாள்.

இந்தப் பதினைந்துக்கு மேலும் அர்த்தங்கள் ஒளிந்திருப்பதாகச் சிலர் க்லிஷ்ட (கஷ்ட)மாகக் கூறுவதுண்டு.

16. அநாமா என்றால் தாழ்வற்றவள் என்று அர்த்தம்.

17. ஸுமாதி என்றால் நல்ல தாயாக நடத்தை கொள்பவள் என்று அர்த்தம்.

18. பீமா என்றால் பகைவர்க்குப் பயங்கரமானவள் என்று அர்த்தம்.

என்றிப்படிப்பல. வேங்கடாத்வரியின் சிறியதொரு ச்லோகத்திலும் ஏராளமான கருத்துக்கள் எளிதில் கிடைக்கின்றன.

க்லேசமே இல்லாமல் ஒன்றுவிட்டொரு எழுத்தாய் மா என்கிற ஒரே எழுத்தை வரவழைத்தது தனியாற்றல். தமிழில் ஸமான மாகுமா என்றும் விமானமாகுவாள்? என்றும் நாமும் சிறிச்சிறிதே முயலக்கூடும்; முழு ச்லோகமும் இவ்வாறே அமைப்பது கவிவரர்களுக்கு மட்டுமே ஸாத்தியம்.

அச்சத்துக்கிடமாய் ஆகாள் அங்கனையர்க் காதியாவாள்
அல்லலை அளிப்பாள் லக்ஷ்மி அறிவெல்லைக்கு அகப்படாளே.
அவனியில் அவதரிப்பாள் அனைவர்க்கும் நடுவாய் நிற்பாள்
அலரினும் அழகு மிக்காள் ஆருமே ஒப்பே இல்லாள்.

20. அரக்கியரிடையும் அருட்பெருக்குள்ளவள்.

दयासारा साहितासा या शुभामतिपालिता ।
साभाकारा भावपा हि रामरामा विभाति सा ॥ २० ॥


தயாஸாரா ஸாஹிதாஸா யா ஶுபா மதிபாலிதா
ஸாபாகாரா பாவபா ஹி ராமராமா விபாதி ஸா ॥ 20

या = எவள் (எந்த ஸீதை)
दयासारा = அருட்பெருக்குள்ளவளாயும்
अहित-असा = தீயவரை நிரஸிப்பவளாகவும்
शुभा = மங்கலமானவளாகவும்
अमति-पालिता = அறிவிலிகளால் காவல் காக்கப்பட்டவளாகவும்
आस = இருந்தாளோ,
सा = அவள்
स-आभ-आकारा = ஒளியுடன்கூடிய உருவம் உடையவளாகவும்
भाव-पा = உயிரினங்களைக் காப்பவளாயும்
राम-रामा = ராமனை மகிழ்விப்பவளாகவும்
विभाति = விளங்குகிறாள்
हि = அல்லவா?

அசோகவனத்தில் அரக்கியர் புடைசூழ அவதிக்குள்ளானபோதும், அவர்கள் பால் இரக்கம் காட்டிய ஸீதையைப் பற்றிய ஶ்லோகம் இது. அவள் அருட்பெருக்குள்ளவள். (கொடிய அரக்கியரையும் அனுமனிடமிருந்து காப்பாற்றியவள்.) அஹிதனான ராவணனை ஒதுக்கித் தள்ளியவள். (அவன் வழிக்கு இணங்காதது மட்டுமின்றி அவனைப் புல்லாகக் கருதி அவமதித்தவள்.) மங்களமானவள். அவளுடைய மஹிமையை அறியாத அரக்கிகளால் காவல் காக்கப்பட்டவள். ஒளிரும் வடிவழகு கொண்டவள். ஜீவராசிகளையெல்லாம் காப்பவள். ராமனை மகிழ்விப்பவர்கள். மிகப் புகழ்பெற்று விளங்குகிறாள். அரைச்சுழல் யமகம் என்னும் அதிகடினமான சித்ரபந்தத்தில் அமைந்துள்ள பாடல் இது.

1	2	3	4	5	6	7	8
	10	11	12	13	14	15	
		19	20	21	22		
			28	29			

மொத்தமுள்ள முப்பத்திரண்டு எழுத்துக்களில் இருபது மட்டும் மேற்காட்டிய இருபது இடங்களில் இஷ்டப்படி அமைத்துக் கொள்ளலாம். மீதமுள்ள பன்னிரண்டும் (இதே எழுத்துக்களை வேறொரு வரிசையில்) எவ்வாறு அமைத்தால் இதே ஸ்லோகத்தை வேறு விதமாக வாசித்தாலும் மாறுபடாதோ அப்படிப் பண்ணவேண்டும். வேறு விதமாக வாசிப்பது எப்படியென்றால், மேலுள்ள எட்டுப் பெட்டிகளில், முதல் பெட்டியை மேலிருந்து கீழாகவும், பிறகு கடைசிப் பெட்டியைக் கீழிருந்து மேலாகவும் வாசித்தால் முதல் பாதம் வரவேண்டும். இதே போல் இரண்டாவது பெட்டியை மேலிருந்து கீழாக வாசித்தபின் ஏழாவது பெட்டியைக் கீழிருந்து மேலாக வாசித்தால் இரண்டாவது பாதம் வரவேண்டும். இதேபோல் மூன்றாவதும் ஆறாவதுமான பெட்டிகளில் மூன்றாம் பாதமும், நாலாவது ஐந்தாவது பெட்டிகளில் கடைசிப் பாதமும் வரவேண்டும். இந்த ஸ்லோகத்தில் இப்படி வருவதைப் பார்க்கலாம்.



இந்த மாதிரி ஒரு ஶ்லோகம் நாம் பண்ணவேண்டுமென்றால் கீழ்க்கண்ட பன்னிரண்டு நிபந்தனைகளை ஏற்படுத்திக் கொண்டால் போதும்.

ஒன்பதாம் எழுத்து = இரண்டாம் எழுத்து.

பதினாறாம் எழுத்து = ஏழாம் எழுத்து.

பதினேழாம் எழுத்து = மூன்றாம் எழுத்து.

பதினெட்டாம் எழுத்து = பதினொன்றாம் எழுத்து.

இருபத்து மூன்றாம் எழுத்து = பதினாலாம் எழுத்து.

இருபத்து நான்காம் எழுத்து = ஆறாம் எழுத்து.

இருபத்தைந்தாம் எழுத்து = நாலாம் எழுத்து.

இருபத்தாறாம் எழுத்து = பன்னிரண்டாம் எழுத்து.

இருபத்தேழாம் எழுத்து = இருபதாம் எழுத்து.

முப்பதாம் எழுத்து = இருபத்தொன்றாம் எழுத்து.

முப்பத்தொன்றாம் எழுத்து = பதின்மூன்றாம் எழுத்து.

முப்பத்திரண்டாம் எழுத்து = அஞ்சாம் எழுத்து.

இந்தப் பன்னிரண்டும் அமைந்துவிட்டால் தானாகவே அரைச்சுழல் யமகம் என்கிற சித்ர பந்தம் அமைந்துவிடும். ஶ்லோகம் வ்ருத்தத்திற்கு ஒட்டிவருவதும், லக்ஷ்மீ விஷயமாக அர்த்தம் கிடைப்பதும் முக்கியம். எளிதன்று. இந்தக்கவி இந்த அற்புதத்தைப் பண்ணிக்காட்டிவிட்டார். அதனால் ஶ்லோகத்தை இரண்டு பாதைகளில் ஒரே விதமாக வாசிக்க முடிகிறது. இனி அர்த்த விசேஷங்களைப் பார்ப்போம்.

தயாஸாரா என்பதற்கு தயையை ஸாரமாகக் கொண்டவள், அதைத் தனமாகக் கொண்டவள், என்று ஒரு அர்த்தமும், தயையின் ஆஸாரம் (பெருக்கு, வழிந்தோடல்) கொண்டவள் என்று இன்னொரு அர்த்தமும் கிடைக்கும். தாத்பர்யார்த்தம் ஒன்றே தான். திருவுக்கு அருள் அதிகம் என்பது.

அஹித - ஆஸா என்று பிரிக்காமல் அஹிதா - ஆஸா என்று பிரித்தால், எதிரிகளை நிரஸிப்பவள் என்பதற்குப் பதிலாக

அஹித்தன்மையை அதாவது துஷ்டத்தனத்தை நிரஸிப்பவள் என்று அர்த்தமாகும். நம்மை நல்லவராக்குபவள் என்ற புதிய அர்த்தம் கிடைக்கும்.

பாவபா என்கையில் பாவம் என்பதற்கு ஜீவராஶி என்று அர்த்தம் சொல்லாமல் உள்ளக் கிடக்கை என்றும் அர்த்தம் சொல்லலாம். நம்முடைய மனோபாவத்தை அவள் பாலனம் பண்ணுகிறாள். மனோபாவம் சீர்கெடாதபடி ரக்ஷிக்கிறாள் என்று தாத்பர்யம். நம் முன்னேற்றத்துக்கு இது மிக முக்கியம். இப்படிச் சொல்லும் அர்த்தங்களுக்குச் சேர அமதி பாலிதா என்று பிரிக்காமல் மதிபாலிதா என்று பிரித்தோமானால், நம்முடைய மதியில் த்யானவிஷயமாய் அழிக்காமல் பார்த்துக் கொண்டோமானால், அவ்வாறு த்யானத்தில் பாலிக்கப்பட்ட அவள் நமக்குப் பல நன்மைகளைப் பண்ணுகிறாள் என்று தாத்பர்யம். இப்படியாக, நமது த்யானத்தில் உள்ள ஸீதை விஷயமாகவும் முழு ஶ்லோகத்துக்கும் கருத்து கூறலாம்; அஶோகவனத்து ஸீதை விஷயமாகவும் கூறலாம்.

இந்த ஶ்லோகத்தில் ஸீதைக்குச் சொன்ன பதினாறு சிறப்புகள் எவையெனில்:

1. அவள் தயை வழிபவள். அரக்கியரையும் காத்தவள் அன்றோ? தயா - ஆர்த்ரா.
2. அஹிதனான ராவணனைத் திரஸ்கரித்தவள். அவனுடைய விநாசஹேது. அஹித - அஸஹ.
3. கல்யாணீ என்றும் அநிந்திதா என்றும் அனுமன் புகழும் அளவுக்கு மங்களமானவள். ஶுபா.
4. அவளுக்குப் பாதுகாவல் பண்ணின அரக்கிகள் அமதிகள்; கற்புக்கனலின் மஹிமையை அறியாதவர்களால் காவல் காக்கப்பட்டவள் ஸீதை. அமதிபாலிதா.
5. பாஸ்கரேண ப்ரபா யதா என்னும்படி ப்ரபையானவள் ஸீதை. ப்ரபாவாந் ஸீதயா தேவ்யா என்பார் ஸ்வாமி ஶ்ரீ தேசிகன். ஸபாஸுரா.

6. அவள் தன்னுடைய பாவத்தை (ஸதா ராமசிந்தையாய் இருப்பதை) ஒரு தவமாகப் போற்றிக் காத்து வந்தாள். என்னுடைய மனோபாவத்தை மாற்ற முடியாது என்று ஸீதையே சொல்கிறாள் ஸுந்தரகாண்டத்தில். இதனால் அவள் பாவபா.

7. அவள் ராமத்யானத்திலேயே மகிழ்ந்ததாலும், ராமனுக்கு ராமையாக (இனியாளாக) இருந்ததாலும் அவள் ராமராமா.

8. அத்தனை பெருமை வாய்ந்த ஸீதை சுடர் விட்டுப் பிரகாசிக்கிறாள். விபாதி ஸா.

இப்படி அஹோகவனத்து ஸீதையைக் குறித்து எட்டு வார்த்தைகள் சொன்னாற்போலவே பக்தர்களின் த்யான விஷயமான ஸீதையைக் குறித்தும் இதே ஶ்லோகத்தில் எட்டு கருத்துகள் உள்ளன.

அவை வருமாறு:

9. அவள் தயா - ஸாரா. தயையே ஸாரமானவள்.

10. நம்மிடம் உள்ள நச்சுத்தன்மையை, க்ரூரத்தன்மையை, அவள் நிரஸனம் பண்ணுவதால் அவள் அஹி - த்ர - ஆஸா.

11. அவள் ஸுரூபமானவள். நமக்கு க்ஷேமம் பண்ணுவாள்.

12. பக்தர்கள் அவளைத் தம் புத்தியில் நழுவாமல் இருத்துகிறார்கள். அவள் மதிபாலிதா.

13. அவள் ஜ்யோதிர்மயீ. சந்த்ராம் ப்ரபாஸுராம் ஜ்வலந்தீம் என்னப்படுபவள். ஸாபாஸுரா.

14. நமது மனோபாவங்களை நேரான தடத்தில் செலுத்தி, ரக்ஷிப்பதால் அவள் பாவபா.

15. அவள் ராமராமையான ஸீதையாகத் த்யானிக்கப் படுகிறாள்.

16. அவள் மனதில் தோன்றுகிறாள், விபாதி என்பதற்கு இது இன்னொரு அர்த்தம்.

தயாஸாரா என்பதற்குப் பாடபேதமாக ரஸாஸாரா என்று தொடங்கி அதற்கேற்ப வேறு சில எழுத்துக்களையும், மாற்றி

சில பதிப்புகளில் அச்சிட்டிருக்கிறார்கள். ஆனால் ஸாமிதாஸா முதலியவற்றுக்கு அர்த்தம் சொல்வதற்குக் க்லேசமாய் இருப்பதால் அந்த அலசல் இப்போது வேண்டாம்.

கருணைமயி யவாள் கதிருருவம் கொண்டாள்
கடியவரைக் கடிவாள் கல்யாணி ஸீதையவள்
ஒன்றுமுளம் காப்பாள் ஒன்னாரை ஒறுப்பாள்
ஒளியுருவம் உடையாள் ஒளிர்கின்றாள் மனதில்.

21. அரிகளுக்கு அச்சம் தருபவள்; உரியவர்க்கு உச்சம் தருபவள்.

समुद्रजोन्नतान् कुर्यात् सा नस्संसारतारिका ।
समुद्रजोन्वितान् कीर्यात् पुनस्त्रासान्वितारिका ॥ २१ ॥

ஸமுத்₃ரஜோந்நதாந் குர்யாத் ஸா நஸ்ஸம்ஸாரதாரிகா ।
ஸமுத்ரஜோந்விதாந் கீர்யாத் புநஸ்த்ராஸாந்விதாரிகா ॥ 21

समुद्र-जा = கடலிலிருந்து தோன்றியவள்
संसार-तारिका = ஸம்ஸாரத்தைத் தாண்டுவிப்பவள்
सा = ப்ரஸித்தமான அவள்
नः = நம்மை
उन्नतान् = உயர்ந்தவர்களாக
स-मुत् = மகிழ்ச்சியுடன்
कुर्यात् = பண்ணட்டும்
रजोऽन्वितान् पुनः = தோஷம் உள்ளவர்களையோ
त्रास-अन्वित-अरिका = பயங்கொண்ட பகைவர்களை உடையவள்
कीर्यात् = தெறுபக்கட்டும்.

ஸமுத்ர கன்னிகையானவள் நம்மை உயர்த்தட்டும்; தீயவரை நலியச் செய்யட்டும்.

அவள் ஸமுத்திரத்திலிருந்து உயரக்கிளம்பி வந்தவளாதலால், ஸம்ஸாரக் கடலிலிருந்து நம்மைத் தாண்டுவிக்கவும், உயர்த்தவும் வல்லவள் என்பது தொனிக்கிறது.

ஸமுத் என்பதை இரண்டு விதமாக அன்வயிக்கலாம். முதல் வேற்றுமையாகக் கொண்டால் அவள் ஆனந்தம்

உள்ளவன் என்று அர்த்தம். க்ரியாவிசேஷணமாகக் கொண்டால், நம்மை மகிழ்ச்சியுடன் உயர்த்தட்டும் என்று அர்த்தம். நம் உயர்வால் அவள் மகிழ்வாள் என்று தாத்பர்யம்.

ரஜஸ் என்பதற்கு ரஜோகுணத்தை அர்த்தமாகக் கொண்டால், அவள் பண்பு கெட்டவர்களைச் சிதறடிக்கட்டும் என்று அர்த்தம். ரஜஸ் என்பதற்குத் தும்புதூசு என்று பொருள் கொண்டால், அவள் மாசுபட்டவர்களை வீசி இறைக்கட்டும் என்று அர்த்தம். இவ்வகையால் அவள் நமக்கு உதவட்டும்.

போன ச்லோகத்தில் மாஹி மா என்பதால் அளவுக்கு அடங்காமல் அனந்தமாய் இருப்பதையும், இந்த ச்லோகத்தில் ஸமுத் என்றதால் அவள் ஆனந்தமயியாக இருப்பதையும், போன ச்லோகத்தில் ப்ரமாஸிமா என்றதால் அவள் ஜ்ஞானமயியாய் இருப்பதையும், கவி கூறியுள்ளார்.


சீர்யாத் என்பதற்குப் பதில் க்ரௌர்யாத் என்று பாடம் உண்டு. க்ரூரத் தன்மையினால் என்று அர்த்தம். ரஜஸ் கூடியவர்கள் என்பதில் இதை அன்வயிக்கலாம்.

தீயவரை ஒடுக்குவது நம்மை உயர்த்துவதற்கு வழியாதலால் முழு ச்லோகத்தையும் ஒரே வாக்கியமாகக் கொண்டு பொருள் உரைப்பாரும் உளர்.


இந்த ச்லோகத்தில் உள்ள சித்ரத்தைச் சரபந்தம் என்று சிலரும் ஹாரபந்தம் என்று சிலரும் சொல்கிறார்கள். முதல் பாதியில் உள்ள இரட்டைப் படை எழுத்துகள் எல்லாம் இரண்டாம் பாதியில் மாறாமல் வந்திருப்பதைக் காணலாம். இந்த ஸ்தபகத்தின் மூன்றாம் ச்லோகத்தில் பார்த்த கோமூத்ரிகா பந்த அமைப்பு இதிலும் உள்ளது. அதற்கு மேலும் சில வரைமுறைகளுக்கு உட்பட்டிருக்கிறது. முதற்பாதியின் முதல் நாலு எழுத்துகளும் இரண்டாம் பாதியிலும் முதல் நாலு எழுத்துக்களாக உள்ளன. இப்படி இரண்டு பாதிகளும் ஒரே நாலெழுத்துப் பதத்தால் (ஸமுத்ரஜோ என்பதால்) தொடங்குவது போலவே, ஒரே மூன்றெழுத்துப் பதத்தால் (தாரிகா என்பதால்) முடிகின்றன.

இப்படியாகப் பூர்வார்த்தத்துக்கும் உத்தரார்த்தத்துக்கும் வேறுபாடு, ஐந்தாவது, ஏழாவது, ஒன்பதாவது, பதினொன்றாவது, பதின்மூன்றாவது, என்ற ஐந்தே ஐந்து எழுத்துக்களில் மட்டும் தான். ஆயினும், இரண்டு பாதிகளும் ஸ்லேஷ விஷயமாக இரண்டு வெவ்வேறு கருத்துக்களைக் கூறுகின்றன என்பது விந்தையான அமைப்பு. இதை இப்படிப் படம் போட்டுக் காண்பிக்கலாம்.

இதைச் சரபந்தம் என்று சொல்பவர்கள் அம்பு போல இப்படிப் படம் போடுகிறார்கள்:



இதையே ஹாரபந்தம் என்று சொல்பவர்கள் முத்துமாலை போல இப்படிப் படம் போடுகிறார்கள்.



இனி அர்த்தங்களுக்கு வருவோம்.

முதல் பாதியில் நல்லவரைக் காப்பதையும் இரண்டாவது பாதியில் தீயவரைத் தண்டிப்பதையும் சொன்னதால் பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம் என்று சொன்னது ஸமுத்ரகத்ர என்கிற அவதாரத்திலும் ஆகட்டும் என்கிறார்.

ஸா என்றதால் அவன் மிகப்புகழ் பெற்றவன் என்கிறார்.

நு: என்றதால் ஸமுத்ரகந்யாவதாரத்துக்கு இன்னும் பரிஸமாப்தி ஏற்படாததால் நாமும் அவ்வவதாரத்து ஸாதுபரித்ராணப் பலனைப் பெறலாம் என்கிறார்.

தாரிகா என்றதால், ஸமுத்ரத்திலிருந்து கரைக்கு வந்தவளுக்கல்லவா தெரியும், நம்மை ஸம்ஸாரத்திலிருந்து கரையேற்றுவது எப்படியென்று, என்பதை ஸூசிக்கிறார்.

ஸமுத் என்றதால், இவ்வாறு நம்மைக் கரையேற்றுவதிலும், தீயவர்களை அச்சுறுத்துவதிலும் அவளுக்கு மகிழ்ச்சி என்கிறார்.

வேறு விதமாக அன்வயித்தால், மகிழ்ச்சியோடு ரஜோகுணம் கொண்டவர்களை, அவள் சிதறடிக்கட்டும் என்கிறார். தம் ரஜோகுணத்துக்காக நிர்வேதப்படும் மக்களை அச்சுறுத்த வேண்டாம். அதிலேயே திளைத்து மகிழ்பவர்களை மட்டும் அச்சுறுத்தட்டும்.

கிர்யாத் என்ற பதம் ரஜஸ்ஸின் இன்னொரு அர்த்தத்துக்குப் பொருந்துவதால் இங்கு யுக்தமாகிறது.

தும்புதூசிகளைப் பறக்கவைப்பது போல அனாயாஸமாக அவர்களைச் சிதறப் பண்ணட்டும் என்கிறார். அவர்கள் கூடிக் கொட்டம் அடிக்காதபடி, சிதறிச் சீரழியட்டும்.

புத: என்றது வேறுபாட்டைக் காண்பிப்பதற்காக; ஒரு சிலரைக் கரைதாண்ட வைப்பவள் வேறு சிலரையோ வாரி இறைக்கிறாள் என்கிற வாசியைச் சொல்கிறார்.

த்ராஸ என்றதால் இவளுடைய அரிகளுக்கு இவளிடம் இருக்கும் பயத்தைச் சொல்கிறார்.

அரிகள் ஆச்ரித விரோதிகளும், நமது உட்பகைவர்களான காமாதிகளுமாம். இந்த அரிகள் அவளிடம் பயந்து நடுங்குவர்.

ரக்ஷித்தெம்மை உயர்த்தட்டும்.
ரமை பவக் கரைசேர்ப் பிக்கட்டும்.
ரஜஸ் உள்ளாரை இரைக்கட்டும்.
ரிபுவைப் பயத்தால் நடுக்கட்டும்.

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

22. விழியால் வினை தீர்ப்பவள்.

इन्दिरा भासुरा पद्ममन्दिराघधरापहा ।
हापराधहरा दृष्ट्या सा पराभा सुरादृता ॥ २२

இந்திரா பாஸுரா பத்ம மந்திராகதராபஹா ।
ஹாபராதஹரா த்ருஷ்ட்யா ஸா பராபா ஸுராத்ருதா ॥

इन्दिरा = லக்ஷ்மியானவள்
भासुरा = ஒளிர்பவளாகவும்
पद्म-मन्दिरा = தாமரை ஆலயத்தாள் ஆகவும்
अघ-धर-अपहा = பாவிகளைத் தொலைப்பவள் ஆகவும்
दृष्ट्या = பார்வையினாலே
अपराध-हरा = குற்றங்களை நீக்குபவள் ஆகவும்
पर-आभा = உயர்ந்த காந்தி கொண்டவள் ஆகவும்
सुर-आदृता = தேவர்களால் ஆதரிக்கப்பட்டவளாகவும்
सा = ப்ரஸித்தமானவள் ஆகவும் இருக்கிறாள்
हा = அப்பப்பா!

இவள் இந்திரை. தாமரை இல்லத்தவள். ப்ரகாசிப்பவள். பாவிகளையும் தொலைப்பவள்; பாவங்களையும் தொலைப்பவள். இவள் கண்பார்வை ஒன்றே போதும். அவ்வாறு பாவங்களை ஒழிப்பதற்கு. மிகவும் உயர்ந்த காந்தி கொண்டவள். தேவர்கள் இவளைத் துதிக்கிறார்கள்.

இது முரஜபந்தத்தில் அமைந்துள்ள ச்லோகம். கீழுள்ள படத்தைப் பார்க்கவும்.

இ	ந்தி	ரா	பா	ஸு	ரா	ப	த்ம
ம	ந்தி	ரா	க	த	ரா	ப	ஹா
ஹா	ப	ரா	த	ஹ	ரா	த்ரு	ஷ்ட்யா
ஸா	ப	ரா	பா	ஸு	ரா	த்ரு	தா

இவ்வாறு எழுதிக் கொண்டபிறகு, இதை வேறுவிதமாக வாசித்தாலும் மாறுபடாமல் இருப்பதைக் காண்கிறோம். முரஜ

என்னும் வாத்தியத்துக்கு கயிற்றுல் குறுக்கே கட்டுகள் போட்டால் போல் கற்பனை பண்ணிக் கொண்டு, அந்தக் கயிற்றுக்கோடு வழியே வாசிப்போம். இதோ பாருங்கள். முதல் வரிசை மூலையாகவும் வாசிக்கலாம் என்பதை.

இ	ந்தி	ரா	பா	ஸா	ரா	ப	த்ம
	ந்தி					ப	
		ரா			ரா		
			பா	ஸா			

இது போல இரண்டாவது வரிசையும் வேறொரு வழியில் வாசிக்கலாம் என்பதை அடுத்த படம் காட்டுகிறது. மூன்றாவதும் அவ்வாறே.

	ந்தி	ரா											ரா	ப	
ம			க									த			ஹா
ஹா			த									ஹ			ஷ்டபா
	ப	ரா											ரா	த்ரு	

ஒரு வட்டத்தில் வருகிறது. ஒரு கோட்டுக்குப் பதிலாக.

ம என்பதில் தொடங்கி ப்ரதக்ஷிணமாக வாசித்தால் இரண்டாம் வரி.

அடுத்த வட்டத்தில் ஹா என்பதில் தொடங்கி அப்ரதக்ஷிணமாக வாசித்தால் மூன்றாம் வரி.

இரண்டாவது மூன்றாவது பாதங்களை இன்னொரு விதமாகவும் வாசிக்கலாம் என்பதை அடுத்த படம் காட்டுகிறது.

	ந்தி	ரா			ரா	ப	
ம			க	த			ஹா

மேலே இரண்டாம் வரி. கீழே மூன்றாம் வரி.

ஹா			த	ஹ			ஷ்டபா
	ப	ரா			ரா	த்ரு	

கடைசியாக நான்காம் வரிக்கும் வேருெரு முரகக் கயிற்று வழி உண்டு.

			பா	ஸ			
		ரா			ரா		
	ப					த்ரு	
ஸா	ப	ரா	பா	ஸ	ரா	த்ரு	தா

இரண்டாவது மூன்ருவது வரிகளுக்கு வேருெரு வழியும் சொல்லக் கூடும்.

இரண்டாம் வரியில் நாலு எழுத்துக்கள் ஆனவுடன் மூன்றும் வரியின் நாலாவது எழுத்துக்குப் போய் அங்கிருந்து தலைகீழாக வாசித்து மூன்ரும் வரியின் ஆரம்பத்தில் முடித்தால் இரண்டாம் பாதம் கிடைக்கும். இதே போல் மூன்ரும் பாதத்துக்கும் மாற்றுவழி உண்டு. இதோ படம்.

ம →	த்தி →	ரா →	த ↓	க ↓ ←	ர ←	ப ←	ஹா
ஹா ←	ப ←	ர ←	த	ஹ →	ரா →	த்ரு →	ஷ்டபா

இப்படியெல்லாம் பல வழிகளில் மாருமல் ஒரு ச்லோகம் வரவேண்டுமாளுல் அப்படிப் புனைவதற்கு என்ன உபாயம் என்பதையும் ஆலங்காரிகர்கள் ஆராய்ந்து சொல்லியிருக்கிருர்கள். படிப்படியாக அந்த உபாயத்தை நாமும் கற்றுக் கொள்ளலாம்.

நாலு பாதங்களிலும் மூன்றாவதும் ஆறாவதுமான எழுத்துகள் (மொத்தம் எட்டு இடங்களில்) ஒன்றேயாக அமைத்துக் கொள்ளவும். இந்த ஸ்லோகத்தில் அந்த எழுத்து ரா என்பது.

		ரா			ரா	
		ரா			ரா	
		ரா			ரா	
		ரா			ரா	

அடுத்து முதல் பாதத்து நடு நாலு எழுத்துகள் நாலாம் பாதத்திலும் நடு நாலாக வரும்படி அமைக்கவும். இந்த ஸ்லோகத்தில் ராபாஸா-ரா என்றுள்ளது.

கூடவே, இரண்டாம் பாதத்துக் கடைசி நாலு எழுத்துகளை வலமிருந்து இடமாக மாற்றி வாசித்தால் மூன்றாம் பாதத்து முதல் நாலு எழுத்துகள் வருமாறு அமைத்துக் கொள்ளவும். இந்த ஸ்லோகத்தில் நராபஹா என்றும் ஹாபராந என்றும் உள்ளன.

		ரா	பா	ஸா	ரா		
		ரா		ந	ரா	ப	ஹா
ஹா	ப	ரா	ந		ரா		
		ரா	பா	ஸா	ரா		

அடுத்ததாக, முதலிரண்டு பாதங்களிலும் இரண்டாம் எழுத்து ஒன்றாய் இருக்கட்டும். இங்கே ந்தி என்பது. ஏழாம் எழுத்தும் ஒன்றாய் இருக்கட்டும். இங்கே ப என்பது.

இதே போல மூன்றாம் நான்காம் பாதங்களிலும் இரண்டாம் எழுத்து ஒன்றாய் இருக்கட்டும்.

இங்கே ப என்பது. ஏழாம் எழுத்தும் ஒன்றாய் இருக்கட்டும். இங்கே த்ரு என்பது.

	ந்தி	ரா	பா	லா	ரா	ப	
	ந்தி	ரா		த	ரா	ப	ஹா
ஸா	ப	ரா	த		ரா	ந்கு	
	ப	ரா	பா	லா	ரா	ந்கு	

மீதமுள்ள எட்டு கட்டங்களில் எந்த எழுத்தை வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளலாம். முரஜபந்த ஸ்லோகம் உருவாகி விடும். அர்த்தம் வரவழைக்க வேண்டுமே, அதுதான் கஷ்டம்.

மொத்தமுள்ள முப்பத்திரண்டு எழுத்துகளில், ஒன்று எட்டு தடவை வரும்.

இன்னொன்று நாலு தடவை வரும்.

ஆறு எழுத்துகள் இரண்டிரண்டு தடவை வரும்.

எட்டு எழுத்துகள் ஒரே தடவை வரலாம்.

1 x 8 + 1 x 4 + 6 x 2 + 8 x 1 = 32 என்று கணக்கு சரியாகி விட்டது.

	3	★	4	5	★	7	
	3	★		8	★	7	6
6	7	★	9		★	7	
	9	★	4	5	★	7	

இதன்படி பார்த்தால் பதினாறு எழுத்துகள் முப்பத்திரண்டு இடங்களைப் பிடித்துக் கொண்டுள்ளன.

முரஜபந்தத்தின் மர்மம் புரிந்துவிட்டது. முடிந்தால் நாமும் முயலலாம்.

முரஜபந்தத்தில் பலவகைகள் இருப்பதால் இன்னொரு கவியின் முரஜபந்தம் வேறு மாதிரியாக இருந்தாலும் தப்பில்லை.

இனி அர்த்தத்துக்கு வருவோம். பார்வையால் பாவம் போக்குபவள் என்றதில் இரண்டு கருத்துகள். அவளுடைய பார்வை நம் மேல் பட்டால் நம் பாவம் போகும் என்பது ஒன்று. நம் பார்வை அவள் மீது பட்டால், அதாவது நாம் அவளைத் தரிசித்தால், நம் பாவம் போகும் என்பது இன்னொன்று. இரண்டுக்குமே ப்ரமாணபலம் இருப்பதால் இரண்டு தாத்பர்யங்களையும் ஏற்கலாம். இதே போல் பராபா என்ற பதத்துக்கும் இரண்டு விதமாக அர்த்தம் சொல்லலாம். பரா என்றால் உயர்ந்தது; ஆபா என்றால் காந்தி; பஹுவ்ரீஹியாக்கி உத்க்ருஷ்டமான காந்தி கொண்டவள் என்று முதல் அர்த்தம். பரன் என்றால் திருமால். அவனுக்குக் காந்தியானவள் என்று பஹுவ்ரீஹி யாக்காமலேயும் அர்த்தம் சொல்லலாம். ப்ரபாவாந் ஸீதயா தேவ்யா முதலிய பல இடங்களில் திருமால் என்னும் சுடருக்குத் திருமகளைக் காந்தியாகச் சொல்வதால் இது பொருந்தும்.

ஸுராத்ருதா என்பதற்கும் இரண்டு விதமாகப் பொருள் கொள்ளலாம். இவளை அமரர்கள் ஆதரிக்கிறார்கள். ஆராதிக்கிறார்கள், என்பது முன் சொன்னது; இவள் அமரர்களை ஆதரிக்கிறாள்; ரக்ஷிக்கிறாள் என்பதும் அர்த்தமாகலாம் என்பாருளர்.

அம்புஜத்து அமர்ந்தவள். அகங்களை அழிப்பவள்.
அவற்கொளி ஆனவள். அமரர் ஆ தரிப்பவள்.

लोभमूलानि पापानि।



பேராசை மூலமாகத்தான் பாபமனைத்தும் உண்டாகிறது.

वादे वादे वर्धते वैरवृद्धिः।

வாதாட வாதாட வளரும் சண்டைப் பூசல்.

23. அவனியில் தோன்றி அவநீ ஆனவள்.

काकाननदे देवि विपापाहहभूभू
रारादरा राममना नाम महे हे ।
यायाम मखे खेददनानाघनाना
त्वं त्वद्गदाद्यवनी नीततमा मा ॥ २३

காகாநநதே தேவி விபாபாஹஹ பூ4பூ4
ராராத3ரா ராமமநா நாம மஹேஹே।
யாயாம மகே2 கே2தத3 நாநாக4நாநா
த்வம் த்வங்க3 க3தா3தா3வவநீ நீததமா மா ॥

काक-अनन-दे = காகத்துக்கு ஜீவன் கொடுத்தவளே!
अहह देवि = ஐய் ஸீதாதேவியே!
नाम-महा-ईहे = பணிவில் பெரிதும் விருப்பம் உள்ளவளே!
त्वं = நீ
वि-पापा = பாவம் இல்லாதவள்.
भू-भूः = பூமியில் உண்டானவள்.
आरात् = பகைவர் கூட்டத்திலிருந்து
अ-दरा = பயம் இல்லாதவள்.
राम-मनाः = ராமனிடத்தில் மனம் கொண்டவள்.
खेद-द-नाना-अघ-अना = துயர் தரும் பல்வகைப் பாவங்களால் அடர்ந்தவரை வாழ்விப்பவள்.
गद-आदी तु = வியாதி முதலியவற்றிலோ
अवनी = காப்பாற்றுபவள்.
नीततमाः = தமஸ்ஸைப் போக்குபவள்.
मा = மா என்பவள்.
अहह = அடடா!
मम = என்னுடைய
खे = புலனில்
यायाः = போவாயாக.

ஸ்ரீ ஸீதா தேவியே! நீ (மஹா அபசாரம் பண்ணின) காகத்துக்கும் உயிர்ப்பிச்சை இட்டவள். சிறிதும் களங்கமே இல்லாதவள். நிலத்திருந்து தோன்றியவள். கோரமான பகைக்குழுவிடமும் பயமில்லாதபடி, ராமனையே ஸதா நினைத்துக் கொண்டிருப்பவள். பணிந்து போவதில் அதிகமாக ஆர்வம் கொண்டவள். நம்மை நலிவிக்கும்

நானாவிதப் பாவங்களால் நிறைந்த நம்மையும் நலியாமல் வாழவைப்பவள். பிணி முதலியன ஹிம்ஸிக்காதபடி காப்பாற்றுபவள். இருளை அகற்றுபவள். மா எனப்படுபவள். என் மனதில் வருவாயாக.

இந்த ச்லோகத்தில் உள்ள வேடிக்கை இதை முதன்முறை படிக்கும்போதே தெரிந்து விடுகிறது. ஒவ்வொரு எழுத்தும் இரட்டித்து வந்துள்ளது. முதல் எழுத்தே இரண்டாம் எழுத்தும் மூன்றாம் எழுத்தே நாலாம் எழுத்தும். இப்படி இருபத்தெட்டு தடவை ஜோடிகள். கடைசியாக, ஐம்பத்தைந்தாம் எழுத்தே ஐம்பத்தாறாம் எழுத்தும்.

காகாநநதே என்ற பதத்தின் உட்பதம் ஆநநம் என்றோ அநநம் என்றோ இருக்கலாம். அதன்படி அர்த்தம் வேறுபடும். காகத்துக்கும் முகம் கொடுத்தவளே! விமுகையாக இல்லாதவளே! நீ பராமுகமாய் இருந்தால் உயிர் போய் இருக்குமே, என்று ஒரு கருத்து. காகத்துக்கு உயிர் கொடுத்தவளே என்று நேரடியாகச் சொல்வது இரண்டாம் பொருள். காகாஸுரன் பிழைத்துப் போகட்டும் என்று காத்தவள் ஸீதாதேவி.

அவள் விபாபா. பாவமற்றவள். அக்னிப்பிரவேச நிகழ்ச்சியில் ஊர்ஜிதமானது இது. அவள் பூபூ என்பதற்கு இரண்டு கருத்துகள். நிலவுலகில் (மஹாலக்ஷ்மியே ஸீதையாக) அவதரித்தவள் என்று ஒன்று. பூமியிலிருந்து (ஜநக மஹாராஜர் யாகத்துக்காக உழுதபோது) தோன்றியவள் என்பது மற்றொன்று.

ஆராத் என்பதற்கும் இரண்டு அர்த்தங்கள். விரைவில் என்று பொருள்படும் அவ்யயமாகக்கொண்டு, வருவாயாக என்ற வினையில் இணைக்கலாம். அல்லது அரிகளின் குழு ஆரம். அதிலிருந்து என்று அர்த்தம் சொல்லி அதரா என்பதில் இணைக்கலாம். அதரா என்றால் அஞ்சாதவள் என்று அர்த்தம். ராமனிடம் உள்ள மஹாவிச்வாஸத்தால் ஸீதை

எந்தப் பகைவர்க்கும் அஞ்சவில்லை. நாமமஹோமஹோ என்பதற்கும் இரண்டு விதமாக அர்த்தம் சொல்லலாம். நாமம் என்றால் திருநாமம். மஹம் என்றால் உத்ஸவம். திருநாமத்திரு விழாவில் யாயாம போவோமாக என்று அன்வயம். அல்லது, நாமம் என்றால் ப்ரணாமம், வணங்கல். அதில் மஹோமஹோ என்றால் பெருவிருப்பம். நாம் பணிவதில் அவனுக்கு ஆர்வம் என்றோ, அவனே ராமனுக்குப் பணிவதில் ஆர்வம் கொண்டவன் என்றோ, ராவணன் கூட ராமனிடம் பணிய வேண்டும் என்று பேரவா கொண்டவன் என்றோ, பல கருத்துகளில் ஒன்றை ஏற்கலாம்.

துயர்தரும் நானாவிதப் பாவங்கள் நிறைந்தவர் நாம். இதை இரண்டு சொற்களுடன் அன்வயிக்கலாம். அந: என்பதில் அன்வயித்து நம்மை வாழ்விப்பவன் அவன் என்று அர்த்தம் சொன்னோம். அவ்வாறு கொள்ளாமல், யாயாம என்ற வினையிலும் அன்வயிக்கலாம். நாம் அவனது திருநாமத் திருவிழாவில் போவோமாக. நரகே- யாகத்தில் போகவேண்டாம். என்று பொருள் உரைப்பாரும் உளர்.

கதம் என்றால் பிணி. ஆதி என்றதால், பிறவி, மூப்பு, மரணம், முதலியவற்றைக் கொள்வோம். இவற்றில் அவத்யாக, ரக்ஷிப்பவனாக இருக்கிறான் இவன்.

நீத்தமமா என்பதற்கும் இரண்டு விதமாக அர்த்தம் சொல்லலாம். (இவற்றை சிலேடை என்பதில்லை. கவி இதில் ஏதோ ஒரு பொருளைக் கருதியிருப்பார். இரண்டையும் கருதத் தேவையில்லை.) இரண்டிலும் நீதம் என்றால் வெளித்தள்ளப்பட்டது என்று அர்த்தம். தமஸ், இருள், அறியாமை, இதைத் தள்ளுபவன் மா என்று ஒரு அர்த்தம். மா என்றான் லக்ஷ்மி, அமா என்றால் அலக்ஷ்மி. அது இவனால் பெரிதும் நீக்கப்பட்டது. கோரதமம், தீவ்ரதமம், என்ற சொற்களில் போலே நீததமம் என்பதிலும் தமப் ப்ரத்யயம் மிக அதிகம் என்ற அர்த்தத்தில்.

யாயாம மகே என்பதற்கும் இரண்டு விதமாக அர்த்தம் சொல்லலாம். கம் என்றால் இந்த்ரியம், புலன். இங்கு கண்ணையோ மனதையோ குறிக்கும். என் புலனில் நீ போ, என்கிறார். என் மனதில் இரு என்றோ, என் கண்ணுக்குத் தரிசனம் கொடு என்றோ வேண்டுகிறார். இது முதல் அர்த்தம். யாயா: மம கே என்று பிரித்துக் கிடைப்பது இது. யாயாம மகே என்று வேறு விதமாகப் பிரித்தால், யாகத்தில் நாம் மீண்டும் மீண்டும் போவோமாக என்றதாம். திருநாமத்திருவிழா என்னும் யாகத்தில் நாம் போவோம்.

அங்க என்பதற்கும் இரண்டு விதமாக அர்த்தம் கொள்ளலாம். அது விளிப்பொருளில் வரும் அவ்யயம் என்று முதல் அர்த்தம். அங்கம் என்றால் உடல். அடுத்த பதத்துடன் ஸமாஸம். அங்ககதம் என்றால் உடற்பிணி. அதிலின்றும் காப்பவள் நீ. ஆரோக்ய லக்ஷ்மியானவள்.

பணிவினை விழைபவள். பிணியினில் காப்பவள்.
பாவமே அற்றவள். பாரிலே தோன்றினாள்.

★ ★ ★

24. அஞ்சினவரின் அவலத்தை அகற்றுபவள்.

मारमाता हि भात्युग्र रविमा हितभाग्रमा ।
मानिताविधिभीतानां हृतदुर्वृत्युरुभ्रमा ॥ २४ ॥

மாரமாதா ஹி பாத்யுக்ர ரவிமா ஹிதபாக்ரமா ।
மாநிதா விதிபீதாநாம் ஹ்ருத துர்வ்ருத்யுருப்ரமா ॥ 24

मार-माता = மன்மதனுக்குத் தாயானவள்
रमा = லக்ஷ்மியானவள்
उग्र-रवि-मा = கொடியவர்களுக்குச் சூரியனின் சோபை கொண்டவள்.
हित-भाक् = ஹிதத்தை அடைகிறவள்.
मानिता = கௌரவிக்கப்பட்டவள்.
विधि = भीतानां = விதியிடம் பயந்தவர்களுக்கு
हृत-दुर्वृत्ति-उरु-भ्रमा = ஏழ்மைப் பெருந் துயரைப் போக்குபவள்.
भाति हि = பிரகாசிக்கிறாள் அல்லவா?


மன்மதமாதுவான ரமை உக்ரர்களுக்குக் கொளுத்தும் ஸூர்யனாக இருப்பினும் ஹிதத்தையே அடைந்தவன். பூஜிக்கப்பட்டவன். ஏழ்மையைப் போக்குபவன். விதியினின்றும் பயந்தவர்களுக்கு நிம்மதி அளிப்பவன்.

இந்த ஶ்லோகம் கருடகதிசக்ரபந்தம் என்ற கட்டமைப்பு கொண்டது.

ஒரே மையம் கொண்டதாக மூன்று வட்டங்களை வரைந்து கொள்ளவும் முதல் வட்டம் மூன்றினுள் மிகப் பெரியது. அதில் பத்து எழுத்துக்கள் வரும். மற்ற இரண்டிலும் தலா ஐந்து எழுத்துக்கள் வரும். மொத்தமுள்ள முப்பத்திரண்டில் இருபதுக்கு இடம் சொல்லியாயிற்று. மீதி பன்னிரண்டும் வந்த எழுத்துகளே திரும்பி வரும். அதுவும் சில வ்யவஸ்திதமான இடங்களில் இவ்வாறு திரும்பி வரும். இதைப் புரிந்து கொள்ளக் கீழுள்ள படத்தைப் பார்க்கவும்.

நடு வட்டத்து உச்சியில் தொடங்கி, உள்வட்டத்திலும் நடுவட்டத்திலும் ப்ரதக்ஷிணமாக எழுத்துக்களை இட வேண்டும். நடுவட்டத்திலிருந்து உள் வட்டத்துக்குப் போகும்போதெல்லாம் மிகக் கிட்டின இடத்துக்குப் போக வேண்டும். உள்வட்டத்திலிருந்து நடுவட்டத்துக்குப் போகும்போதெல்லாம் மிகக் கிட்டினதுக்கு அடுத்ததுக்குப் போக வேண்டும். நடுவட்டத்தில் ஒன்று, உள்வட்டத்தில் அடுத்த இரண்டு, மறுபடி நடுவட்டத்தில் ஒன்று, உள்வட்டத்தில் இரண்டு, என்றிப்படி ஐந்து தடவை பண்ணினால், 15 எழுத்துகள் ஆகிவிடும். பத்து இடங்களில் 15 எழுத்துகள் வந்ததால் அவற்றுள் ஐந்து திரும்பி வந்தவையாம். பதினாறாவது ஆரம்பித்த இடத்துக்கே வந்து சேரும்படி வரும். இதற்குள் இரண்டு சுற்றுகள் முடிந்திருக்கும். இதுவரை வெளிவட்டத்துக்கே வரவில்லை. உத்தரார்த்த எழுத்துகளில் பத்து வெளிவட்டத்தில் வரும். நடுவட்டத்தில் முன்போலவே தொடங்கி, வெளிவட்டத்தில் இரண்டு, நடுவட்டத்தில்

ஒன்று, மறுபடி வெளிவட்டத்தில் இரண்டு, நடுவட்டத்தில் ஒன்று, என்றிப்படியாக முழுச் சுற்றையும் முடித்தால், தொடங்கின இடத்துக்கே வந்து நிற்போம்.



இது வெற்றிகரமாக அமையவேண்டுமானால், சிற்சில இடங்களில் ஒரே எழுத்து மீண்டும் வரவேண்டும். உதாஹரணமாக, உத்தரார்த்தத்து நாலாம் எழுத்தும் பூர்வார்த்தத்துப் பத்தாம் எழுத்தும் ஒன்றாகும். இதோ முழுமையாக நியமங்கள்:

முதல் பாதத்து எட்டெழுத்துகள் இஷ்டப்படி இருக்கலாம்.

இரண்டாம் பாதத்தில் (ஒன்பதாவது முதல் பதினாறாவது வரையான எழுத்துகளில்) அவ்வளவு ஸ்வாதந்த்ர்யம் கிடையாது.

ஒன்பதாவது எழுத்தும் இரண்டாவது எழுத்தும் ஒன்றேயாக வேண்டும். இந்த ச்லோகத்தில் இது ர என்ற எழுத்து.

பதினொன்றாவது எழுத்தும் மூன்றாவது எழுத்தும் ஒன்றேயாக வேண்டும். இந்த ச்லோகத்தில் இது மா என்ற எழுத்து.

பன்னிரண்டாவது எழுத்தும் ஐந்தாவது எழுத்தும் ஒன்றேயாக வேண்டும். இந்த ச்லோகத்தில இது ஷி என்ற எழுத்து.

பதினாலாவது எழுத்தும் ஆறாவது எழுத்தும் ஒன்றேயாக வேண்டும். இந்த ச்லோகத்தில் இது பா4 என்ற எழுத்து.

பதினைந்தாவது எழுத்தும் எட்டாவது எழுத்தும் ஒன்றேயாக வேண்டும். இந்த ச்லோகத்தில் இது க்ர என்கிற எழுத்து.

கடைசியாகப் பதினாறாவது எழுத்தும் முதல் எழுத்தும் ஒன்றேயாக வேண்டும். இந்த ச்லோகத்தில் இது மா என்ற எழுத்து.

ஆக, இரண்டாம் பாதத்து எட்டு எழுத்துகளில் ஆறுக்கு மேற்கூறிய நியமங்கள். மற்ற இரண்டே இரண்டு மட்டும் இஷ்டப்படி அமைத்துக் கொள்ளலாம். இனி பின்பாதிக்கு வருவோம். உத்தரார்த்தத்தில் உள்ள பதினாறு எழுத்துகளில் (பதினேழாவது முதல் முப்பத்திரண்டாவது வரையானவற்றுள்) ஆறு எழுத்துக்களுக்கு நிர்ப்பந்தங்கள் உண்டு. அவை எவையெனில்:

பதினேழாவது எழுத்தும் முதல் எழுத்தும் ஒன்றேயாக வேண்டும். இந்த ச்லோகத்தில் இது மா என்ற எழுத்து.

இருபதாவது எழுத்தும் பத்தாவது எழுத்தும் ஒன்றேயாக வேண்டும். இந்த ச்லோகத்தில் இது வி என்ற எழுத்து.

இருபத்து மூன்றாவது எழுத்தும் நாலாவது எழுத்தும் ஒன்றேயாக வேண்டும். இந்த ச்லோகத்தில் இது தா என்ற எழுத்து.

இருபத்தாறாவது எழுத்தும் பதின்மூன்றாவது எழுத்தும் ஒன்றேயாகவேண்டும். இந்த ச்லோகத்தில் இது த என்ற எழுத்து.

இருபத்தொன்பதாவது எழுத்தும் ஏழாவது எழுத்தும் ஒன்றேயாக வேண்டும். இந்த ச்லோகத்தில் இது நபு என்ற எழுத்து.

முப்பத்திரண்டாவது எழுத்தும் முதல் எழுத்தும் ஒன்றேயாக வேண்டும். இந்த ச்லோகத்தில் இது ம என்ற எழுத்து.


இந்த நியமங்கள் அமைந்துவிட்டால், கருடகதிசக்ரபந்தம் தானே அமைந்து விடும். படம் போடாமலே கூடப் பண்ணிவிடலாம். அது எப்படி என்பது கீழ்க்கண்ட படத்தின் மூலம் புரிகிறது.

1	2	3	4	5	6	7	8
	10			13			
	18	19		21	22		24
25		27	28		30	31	

மேலே காட்டிய இருபது எழுத்துகள் இஷ்டப்படி இருக்கலாம். மிச்சமுள்ள 12 எழுத்துகள் இந்த இருபதிலிருந்தே எப்படி வர வேண்டும் என்பதை அடுத்த படம் காட்டுகிறது.

1	2	3	4	5	6	7	8
2	10	3	5	13	6	8	1
1	18	19	12	21	22	4	24
25	13	27	28	7	30	31	1

இதை ஞாபகம் வைத்துக்கொள்ள மூன்று வட்டங்களின் படம் உதவும். கீழே பார்க்கவும் :-



இப்பொழுது அர்த்தங்களில் ஓரிரு சிறப்புகளைக் காண்போம்.

உக்ரரவியாய் இருப்பவனை ஹிதபாக் என்று உடனே சொன்னதன் கருத்து என்னவென்றால், அவன் தீயோரை ஒறுப்பதும் நன்மைக்காக என்பதைக் காட்டவாம். யாருடைய நன்மைக்கு? இரண்டு விடைகள். நல்லோருடைய நன்மைக்காகத் தீயோரைத் தண்டிப்பது ஒன்று. தீயோரின் நலம் கருதி அவர்களைத் தண்டிப்பது இன்னொன்று. இரண்டு விதத்தால் அவன் எல்லோருக்கும் ஹிதம் பண்ணுபவன். நம் ஹிதத்தையே தனக்கு அனுகூலமாகக் கருதுவதால் ஹிதம் பண்ணுபவனே ஹிதம் அடைபவன் ஆகிறான். வேறொரு அர்த்தமும் சொல்வதுண்டு. உக்ரரவி என்பவர் திருமால். அவரிடம் திருமகள் உறைவதால் அவர் மா - ஆஹிதர் அதாவது மாஹிதர் ஆகிறார்; ஸ்ரீநிவாஸர் என்று அர்த்தம். அவரை அடைந்தவன் உக்ரரவி மாஹித பாக்.

அவன் துர்கதிப் பெருஞ்சிரமத்தைக் களைவதாகச் சொன்னதற்கு மூன்று தாத்பர்யங்கள். துர்கதி என்றால்

ஏழ்மை; அதனால் விளையும் பெரிய சிரமத்தை, பெரும்பாட்டை, அவள் நீக்குகிறாள் என்பது ஒன்று. துர்கதி என்றால் நரகம். துர்கதி என்னும் பெரிய சிரமத்தை அவள் நீக்குகிறாள். துர்கதியையும் சிரமத்தையும் நீக்குகிறாள் என்பது மூன்றாவது யோஜனை.

விதிக்குப் பயந்தவர்கள் என்கிறாரே, இங்கே விதி என்பதற்கு என்ன அர்த்தம் என்றால் இரண்டு விடைகள். தலைவிதி என்பதொன்று. சாத்திரவிதி என்பது இன்னொன்று. தன் கருமங்களின் விளைவுகள் எப்படியிருக்குமோ என்று பயந்தவர்களைச் சொல்கிறார்.

ஷிபாதி என்பதற்குப் பதில் ஷிமாதி என்று பல பதிப்புகளில் பாடம். இது கருடகதிசக்ரபந்தத்துக்கு ஒட்டாததால் ஏற்பதற்கில்லை. ஷ்ருத என்பதற்குப் பதில் துத என்றோ தூத என்றோ பாட பேதங்கள் நாகரப் பதிப்புகளில் உள்ளவை; அவற்றை ஏற்பதில் தவறில்லை. இருபத்தைந்தாவது எழுத்து இஷ்டப்படி இடக்கூடியது. திரும்பிவரத் தேவையற்றதுமானபடியால் சக்ரபந்தத்துக்குக் குந்தகம் இல்லை. தாத்பர்யார்த்தத்திலும் பெரிய மாறுதல் இல்லை.

மாரனின் மாதாவாவாள்
மாந்தருக்கு இதமே செய்வாள்
மாலுரத்து உறைவாள் இன்னல்
மாய்ப்பவள் மாண்பு மிக்காள்.

வ்யாஸம், செய்திகள் அனுப்பும் ஸ்வாமிகளுக்கு.....

ஆங்கில மாதம் முதல் தேதிக்குப் பிற்பாடு நம் கைக்குக் கிடைக்கும் எந்தச் செய்தியும், கட்டுரையும் ஸ்ரீ ரங்கநாத பாதுகாவில் உடனடியான இதழில் ப்ரசுரிக்க முடியவில்லை. அவஸரத்தில் சேர்க்கப்படும் விஷயங்களால் ஸங்கடங்களும்/அச்சுப் பிழைகளும் மலிந்து வருந்தச் செய்கின்றன. அதனால் இந்த விஷயத்தில் ஸ்வாமிகளின் ஒத்துழைப்பைக் கோருகிறேன். ---ஸம்பாதகர்

25. பாமரர்க்குப் படகானவள்.

पामराजानतरिका छायापा सम्मतातुला
तापनोदनहासैका रमा नतसुरा वतात्

பாமராஜ்ஞாநதரிகா சா₂யாபா ஸம்மதாதுலா।
தாபநோதநஹாஸைகா ரமா நதஸுராவதாத்॥

पामर-अजान-तरिका	ताप-नोदन-हासा தாபத்தைத்
பாமரர்களின் அறியாமைக்குப்	தீர்க்கும் முறுவல்
படகானவளும்,	கொண்டவளும்,
छाया-पा காந்தியைப்	एका ஒருத்தியானவளும்
பாலிப்பவளும்,	नत-सुरा தொழுகிற
सम्मता	தேவர்களை உடையவளும்
ஒப்புக்கொள்ளப்பட்டவளும்,	ஆன
अतुला இணையற்றவளும்,	रमा இலக்குமி
	अवतात् காப்பாற்றட்டும்.

பாமரர்களைக் கரைசேற்றும் படகானவள் லக்ஷ்மி. நிழலாய் நின்று காப்பவள் அவள். இவ்வகையில் ஸர்வஸம்மதமானவள். ஈடிணையற்றவள். ஒரு புன்முறுவலாலேயே தாபங்களையெல்லாம் தீர்க்க வல்லவள். முக்கியமானவள். வணங்கும் வானவர்களை உடையவள். அத்தகைய ரமை நம்மைக் காப்பாற்றட்டும்.

இந்த ச்லோகம் ப்ரதிபாத துரங்க பந்தம் என்ற அமைப்பில் உள்ளது. (முழுத் துரங்கபந்தம் என்பதற்கில்லை. துரங்க பத பந்தம் என்று சிலர் சொல்கிறார்கள்.) சதுரங்க விளையாட்டில் குதிரையின் கதிக்கான விதிமுறைப்படி வேறு வரிசையில் வாசித்தால் அடுத்த ச்லோகம் வரும். இதற்காக இந்த ச்லோகத்தைக் கீழ்க்கண்டவாறு சதுரங்கப் பலகையில் எழுதிக் கொள்வோம்.

பா	ம	ஏா	த்ரூ	ந	த	ரி	கா
ஸா	யா	பா	லம்	ம	தா	து	லா
தா	ப	ஹோ	த	ந	ஹா	லை	கா
ர	மா	ந	த	லா*	ஏா	வ	தாத்

இப்போது குதிரையின் வீதி முதல் எழுத்தான பா என்பதில் தொடங்குகிறது. அடுத்த எழுத்து என்ன? குதிரை எந்தக் கட்டத்துக்குப் போகலாம்? பலகையைப் பார்த்தால் முதல் கட்டத்திலிருந்து குதிரை பதினொன்றாம் கட்டத்துக்கோ பதினெட்டாம் கட்டத்துக்கோ போக முடியும். வேறெந்தக் கட்டத்துக்கும் இப்போது போகமுடியாது. பதினெட்டாம் கட்டத்துக்குப் போவோம். அதில் ப என்கிற எழுத்து. இது புது ச்லோகத்தில் இரண்டாம் எழுத்து. அடுத்த எழுத்து என்ன? குதிரை அடுத்ததாக எந்தக் கட்டத்துக்குப் போகக்கூடும்? பலகையைப் பார்த்தால், 3,12,28 என்பவற்றுள் ஏதோ ஒன்றுக்குப் போகக்கூடும். பன்னிரண்டாம் கட்டத்துக்குப் போனால் லம் என்ற எழுத்து கிடைக்கும். இது புது ச்லோகத்தின் மூன்றாம் எழுத்து.

1	2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31	32

இவ்வாறாக அமைத்துக் கொண்டே போனால், பாபலம்ஹாரிகா ஈது என்ற (அடுத்த ச்லோகத்து) முதல் பாதம் கிடைக்கிறது.

இப்படியே பதின்மூன்றாம் கட்டத்தில் ஆரம்பித்து இரண்டாம் பாதம் வரும். நாலாம கட்டத்தில் ஆரம்பித்து மூன்றாம் பாதம் வரும். ஒன்பதாம் கட்டத்தில் ஆரம்பித்துக்

குதிரைக்கதியில் போனால் நாலாம் பாதம் வரும். இதனால் இதைப் பிரதி பாதத் துரங்க பந்தம் என்கிறோம்.

இனி அர்த்தத்தை அலசுவோம். அஜ்ஞாந தரிகா என்பதற்கு இரண்டு விதமாகக் கருத்து சொல்லலாம். பாமரர்கள் புலமையற்றவர்கள். அஜ்ஞாநர்கள் அறியாதவர்கள். அவர்களுக்குப் படகானவள் லக்ஷ்மி. அல்லது அஜ்ஞாநத்துக்குப் படகு. அறியாமையில் தத்தளிக்கும் நாம் அறியாமையிலிருந்து வெளியேறுவதற்கு உதவும் படகு. இரண்டும் ஒரே தாத்பர்யத்தில் முடிவுறும்.

சாயாபா என்பதற்கும் இரண்டு அர்த்தங்கள். காந்தியைக் கருக்கழியாமல் பாலிப்பவள் என்பது ஒன்று. நிழல் மூலம் நம்மைப் பாலிப்பவள் என்பது இன்னொன்று. நிழல் என்பது வாட்டம் தீருமிடம். சாயாபா என்பதற்குப் பதில் சாயாயா என்று சில பதிப்புகளில் பாடம். எவள் நிழலோ அவள் என்றர்த்தம். இப்படி ஒரு எழுத்தை மாற்றினால், அடுத்த ஶ்லோகத்திலும் மாற்ற வேண்டி வரும். மந்தஹாஸத்தால் தாபம் போவது இரு வழிகளிலாம். ஹாஸம் நிலவு போல் குளிர்விப்பதால் தாபம் போகிறது என்பதொன்று. ஹாஸம் அனுக்கிரஹத்துக்கு அறிகுறியாதலால் நம் தாபத்ரயமும் விரைவில் தீர்ந்துவிடும் என்பது மற்றொன்று.

படகாயும் நிழலாயும் நிலவாயும் அவள் இருப்பதால் அமரர்களும் அவளை வணங்குகிறார்கள். இதே காரணங்களால் அவள் நம்மைக் காக்கட்டும்.

நதஸ்வரா என்பதற்குப் பதில் நததுரா என்று பாடபேதம். வணங்கினவர்களின் பளுவை உடையவள் என்று அர்த்தம். அவர்களது சுமையைப் பொறுப்பாக இவள் வஹிப்பாள். நாம் பரந்யாஸம் பண்ணினால் அவள் பரஸ்வீகாரம் பண்ணுவதால் அவள் நததுரா.

பாமரர்க்கும் படகாவாள் பலனாம் செய் பொலிவுடையாள்
பணிந்தவரின் பணிவேற்பாள் பரிரக்ஷை பண்ணட்டும்.
நிழலாவாள் நிகரற்றாள் நிலவொத்த முறுவலினாள்
நிர்ஜரரை நியமிப்பாள் நீரஜையே நமைக் காப்பாள்.

26. மனத்துக்கினிய மாதாவானவள்.

पापसंहारिका रातु मनोज्ञा ननसम्मता ।
ज्ञानपामा दयाज्ञाता छामापापापरादरा ॥ २६ ॥

பாபஸம்ஹாரிகா ராது மனோஜ்ஞா நநஸம்மதா ।
ஜ்ஞாநபாமா தயாஜ்ஞாதா ச்சாமாபாபாபராதரா ॥ 26 ॥

पाप-संहारिका = தீவினைகளை மாய்ப்பவளும்
मनोज्ञा = மனம் கவர்பவளும்
न न सम्मता ஒப்புக்கொள்ளப் படாதவளாய் இல்லாதவளும்
ज्ञानपा அறிவின் மூலம் காப்பவளும்
मा = ப்ரக்ருதி வடிவினளும்
ज्ञाता ப்ரஸித்தம் ஆனவளும்
अच्छा நிர்மலமானவளும்
अपापा இழுக்குகள் அற்றவளும்
परा உயர்ந்தவளும்
अ-दरा அச்சம் அற்றவளும்
मा மாதாவுமான லக்ஷ்மீ
दयाः அருள்களை
रातु கொடுக்கட்டும்.

மா என்னும் அவள் பாபங்களை ஸம்ஹரிப்பவள். மனத்துக்கினியவள். ஸர்வஸம்மதமானவள். அறிவை ரக்ஷிப்பவள்; அறிவால் ரக்ஷிப்பவள். அறியப்பட்டவள். தெளிவானவள். கேடற்றவள். உயர்ந்தவள். பயமற்றவள். அருளைக் கொடுக்கட்டும்.

இந்த ச்லோகத்தில் என்ன விசேஷம் என்றால், இதில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் போன ச்லோகத்தில் இருப்பது; வரிசை மட்டும் வேறு. குதிரைக் கதியால் பாதங்கள் அமைந்திருப்பதைப் போன ச்லோகத்தில் விளக்கியாயிற்று.

பாபலுண்டாகிகா, மநோஜ்ஞாநநஸம்மதா, த்ராணபா, ஸா, நயாஜ்ஞாதா, பராதரா, என்ற ஆறுக்கும் இரண்டிரண்டு அர்த்தங்கள் சொல்லலாகும். அப்படிச் சொன்னால் திருமகளின் பன்னிரண்டு நற்பண்புகள் சொல்லப்படும். எப்படியென்றால்:

பாபலுண்டாகிகா என்பதற்கு முதல் அர்த்தம் பாவங்களைத் தொலைத்துக் கட்டுபவள் என்பது. பூ மேல் இருப்பாள் வினை தீர்க்குமே என்று ஆழ்வார் அருளிய கருத்து இது.

பாபலுண்டாகிகா என்கிற இதே பதத்துக்கு இன்னொரு அர்த்தம், பாபர்களை, அதாவது பாவிகளை, அழிப்பவள் என்பது. தன் கணவன் மூலமாக ராவணாதிகளை அழியச் செய்பவள். மநோஜ்ஞா ந ந ஸம்மதா என்பதற்கு முன்னர் கூறிய அர்த்தம். உள்ளம் கவர்பவளாயும், நிச்சயமாக ஒப்புக்கொள்ளப்பட்டவளாயும் இருப்பவள் என்பது. இப்போது கூறும் இரண்டாவது அர்த்தத்துக்கு மநோஜ்ஞ-ஆநந-ஸம்மதா என்று பிரித்துக்கொள்ள வேண்டும். உள்ளம் கவரும் திருமுகமண்டலத்தாலே ஸம்மதமானவள் என்று அர்த்தம். மநஶ்ஶிலாயாஸ் திலக என்று ராமாயணத்தில் ஸீதைக்குச் சொன்னபடி, மநஶ்ஶிலா என்கிற வஸ்துவாலான திலகத்தை முகத்தில் ஸம்மதித்தவள் என்று மூன்றாவது அர்த்தமும் பொருந்தும்.

த்ராணம் பாதி என்றோ, த்ராணேந பாதி என்றோ, விக்ரஹம் சொல்லி, அறிவைக் காப்பவள், அறிவால் காப்பவள், என்று இரு கருத்துக்களை வரவழைக்கலாம். அறிவை ரக்ஷிப்பதாவது, மூளை மழுங்காமல், கல்வி மறக்காமல், வித்யை மறையாமல், ரக்ஷிப்பது. அறிவால் ரக்ஷிப்பதாவது, யம் து ரக்ஷிதும் இச்சந்தி புத்த்யா ஸம்யோஜயந்தி தம் என்ற ஸ்லோகத்தில் சொன்னபடி, தமக்கு அறிவைத் தந்து அதன் மூலமாக ரக்ஷணம் பண்ணுவது.

தயாஜ்ஞாதா என்பதை ஸமஸ்தபதமாகக் கொண்டு, அருளினால் விக்யாதி பெற்றவள் என்று பொருள் கொள்வார் உளர். ''அருள் எனும் சீர் ஓர் அங்கனையானது எவ'' என்ற தேசிகஸூக்திப்படி, அருள் என்றே அறியப்பட்டவள் இவள் என்பது இரண்டாம் அர்த்தம். அவளது அருளால் அன்றி அவளை அறியமுடியாது ஆகையால் அவள் தயாஜ்ஞாதா என்பதும் தகும். தன் தயையால் தத்ஜ்ஞானவிஷயம் ஆனவள் என்றவிது மூன்றாவது அர்த்தம். மா என்பதற்குப் ப்ரக்ருதி என்றும் தாயார் என்றும் வித்யாலக்ஷ்மி என்றும் அர்த்தங்கள் இருப்பதால் இரண்டு தடவை மா என்று ச்லோகத்தில் சொன்னதில் கூறியது கூறல் என்னும் குறை இல்லை. பராதரா என்பதைப் பரா என்றும் அதரா என்றும் இரண்டு பதங்களாகப் பிரிக்காமல், பர-ஆதரா என்று ஒரே ஸமஸ்தபதமாகக் கொண்டு, மிகுந்த ஆதரவு கொண்டவள் என்று ஒரு அர்த்தமும், பரனான திருமாலிடம் ஆதரம் கொண்டவள் என்று இன்னொரு அர்த்தமும், பகைவர்களிடமிருந்து பயம் இல்லாதவள் என்று மூன்றாவது அர்த்தமும், கொள்ள இடமுண்டு.

தயைகளைத் தரட்டும் என்கையில், எப்படிப்பட்ட தயைகளை என்றால் பாபஸம்ஹாரிகைகளான தயைகளை என்றும் ஜ்ஞாபகங்களான தயைகளை என்றும் அன்வயம் கொள்வதும் உசிதம், சில பதங்களில் விஸர்கத்துடன் பதச்சேதம் பண்ணவேண்டும்.

நதஸம்மதா என்பதற்குப் பதில் நதஸம்மதா என்ற நாகராக்ஷரப் பதிப்புப் பாடம் சரியன்று. அது ஆரம்பபதபத்தத்துக்கு ஒத்து வராதது காரணம். மற்ற பாடபேதங்களை இப்போது அலச வேண்டாம்.

அருவினை தீர்ப்பவள் அழகிய திருமகள்
அறிவால் காப்பவள் அளிக்கட்டும் அருள்

|| श्रीः ||

ஶ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

27. கோட்டிக் கொட்டிக் கொடுப்பவள்.

रमा सदा दासमार मानदाननदानमा ।

सदाशया याम्रदास दानयागगमानदा ॥ २७

ரமாஸதா$_3$ தா$_3$ஸமார மாநதா$_3$நநதா$_3$நமா ।
ஸதா$_3$ஶயா யாம்ரதா$_3$ஸ தா$_3$நயாக$_3$க$_3$மாநதா$_3$ ॥27

रमा = ரமாதே$_3$வி

सदा = எப்பொழுதும்

दास=मार=मान-दा = அடியார்க்கு மன்மதனால் பெருமையைத் தருபவள்

अनन-द-आनमा = மூச்சைத் தரும் சிறுவணக்கத்துக் குரியவள்

सत्-आशयाय = நல்லெண்ணத்தவர்க்கு

आम्र-दा = உணவு தருபவள்

स-दान-याग-ग-मान-दा = தானத்தோடும் யாகத்தோடும் கூடியவர்களைச் சேரும் வாஹனாதிகளைக் கொடுப்பவள்.

சிற்றின்பம், அன்னம், வாஹனம், உயிர்மூச்சு, எது வேண்டுமானாலும் ரமையின் அருளால் நமக்குக் கிடைக்கும்.

இந்த ஶ்லோகத்தில் நிறைய ஶப்தசித்ரங்கள் இருக்கின்றன :-

1. எந்தப் பாதத்தையும் திருப்பி வாசித்தாலும் மாறுபடாமல் அதே பாதம் கிடைக்கும்.

2. இதற்கும் மேலாக, ஸர்வதோபத்ரம் என்ற சித்ரபந்தம் இருக்கிறது.

3. த்விஸ்வரம் என்கிற நியமமும் உள்ளது. அதாவது இரண்டு உயிரெழுத்துகள் மட்டுமே உள்ளன. அ ஆ மட்டுமே உண்டு. இ ஈ முதலியன கிடையாது.

4. எட்டு எழுத்துக்கள் மட்டுமே திரும்பத்திரும்ப வருவதால் 32 ஆகி உள்ளன.

5. உரப்பு எழுத்துகளே இல்லை.

6. சவர்க்க எழுத்துகளும் டவர்க்க எழுத்துக்களும் அடியோடு கிடையாது.

ஸர்வதோபத்ரத்தை விளக்குவதற்காக எட்டு வரிகளில் ஒவ்வொன்றிலும் எட்டு கட்டங்களை வரைந்து, முதல் பாதத்தை முதல் வரியில் கட்டத்துக்கொரு எழுத்தாக எழுதிக் கொள்ளவும். இதே போல் இரண்டாம் பாதத்தை இரண்டாவது வரியிலும், மூன்றாவதை மூன்றாவதிலும், நாலாவதை நாலாவதிலும் எழுதியதும், முழு ச்லோகமும் நாலு வரிகளில் முடிந்தது. அடுத்த நாலு வரிகளில் மறுபடியும் இதே ச்லோகத்தின் பாதங்களை மாற்றி எழுதிக்கொள்ளவும். அதாவது முதல் பாதம் கடைசி வரியில்; இரண்டாவது பாதம் அதற்கு முன் வரியில்; மூன்றும் பாதம் அதற்கும் முன் வரியில்; நாலாம் பாதம் மிச்சமுள்ள வரியில்.

இப்போது மேலிருந்து கீழாக வாசித்தாலும், இடமிருந்து வலமாக வாசித்தாலும், ஒரே மாதிரியாக இருக்கிறது. அது மட்டுமின்றி, கீழிருந்து மேலாக வாசித்தாலும், வலமிருந்து இடமாக (உருதுவை வாசிப்பது போல) வாசித்தாலும், மாறுதல் இல்லை.

ஸ்ரீ	மா	ஸா	தா	தா	ஸா	மா	ஸ்ரீ
மா	ந	தா	ந	ந	தா	ந	மா
ஸா	தா	ஹா	யா	யா	ஹா	தா	ஸா
தா	ந	யா	க	க	யா	ந	தா
தா	ந	யா	க	க	யா	ந	தா
ஸா	தா	ஹா	யா	யா	ஹா	தா	ஸா
மா	ந	தா	ந	ந	தா	ந	மா
ஸ்ரீ	மா	ஸா	தா	தா	ஸா	மா	ஸ்ரீ

இந்த மாதிரி அமைப்பதற்கு என்ன உபாயம் என்பதை இப்போது புரிந்து கொள்வோம்.

முதல் எழுத்தும் எட்டாம் எழுத்தும் ஒன்றேயாக இருக்க வேண்டும். இந்த ஸ்லோகத்தில் இது ச என்கிற எழுத்து.

இரண்டாம் எழுத்து, ஏழாம் எழுத்து, ஒன்பதாம் எழுத்து, பதினாறும் எழுத்து, என்ற நாலும் ஒன்றேயாக இருக்க வேண்டும். இந்த ஸ்லோகத்தில் இது மா என்கிற எழுத்து.

மூன்றும் எழுத்து, ஆறும் எழுத்து, பதினேழாம் எழுத்து, இருபத்துநாலாம் எழுத்து, இந்த நாலும் ஒன்றேயாக இருக்க வேண்டும். இந்த ஸ்லோகத்தில் இது ஊ என்கிற எழுத்து.

நாலாம் எழுத்து, ஐந்தாம் எழுத்து, இருபத்தைந்தாம் எழுத்து, முப்பத்திரண்டாம் எழுத்து, என்கிற நாலும் ஒன்றேயாக இருக்க வேண்டும். இந்த ஸ்லோகத்தில் இது நா என்கிற எழுத்து.

பத்தாம் எழுத்தும், பதினைந்தாம் எழுத்தும் ஒன்றேயாக இருக்க வேண்டும். இந்த ஸ்லோகத்தில் இது ந என்கிற எழுத்து.

பதினொன்றும் எழுத்து, பதினாலாம் எழுத்து, பதினெட்டாம் எழுத்து, இருபத்துமூன்றும் எழுத்து, ஆகிய இந்த நாலும் ஒன்றேயாக இருக்க வேண்டும். இந்த ஸ்லோகத்தில் இதுவும் நா என்கிற எழுத்து.

பன்னிரண்டாம் எழுத்து, பதின்மூன்றும் எழுத்து, இருபத்தாறும் எழுத்து, முப்பத்தொன்றும் எழுத்து, ஆகிய நாலும் ஒன்றேயாக இருக்க வேண்டும். இந்த ஸ்லோகத்தில் இது மறுபடி ந என்கிற எழுத்து.

பத்தொன்பதாம் எழுத்தும் இருபத்திரண்டாம் எழுத்தும் ஒன்றேயாக இருக்க வேண்டும். இந்த ஸ்லோகத்தில் இது ஸ என்கிற எழுத்து.

இருபதாம் எழுத்து, இருபத்தொன்றும் எழுத்து, இருபத்தேழாம் எழுத்து, முப்பதாம் எழுத்து, ஆகிய நாலும் ஒன்றேயாக இருக்க வேண்டும். இந்த ஸ்லோகத்தில் இது யா

என்கிற எழுத்து. இருபத்தெட்டாம் எழுத்தும் இருபத்தொன்பதாம் எழுத்தும் ஒன்றேயாக இருக்க வேண்டும். இந்த ஸ்லோகத்தில் இது க என்கிற எழுத்து.

இந்த நியமங்கள் அமைந்துவிட்டால் தானே ஸர்வதோபத்ரம் அமைந்துவிடும்.

இதை ஞாபகம் வைத்துக்கொள்ள ஒரு உபாயத்தைப் பார்ப்போம்.

பத்து பெட்டிகளில் மட்டும் அதற்கான எண்ணை எழுதிக்கொள்வோம். எந்தப் பத்தில் என்றால் கீழுள்ள படத்தைப் பார்க்கவும். ஒரு முக்கோண வடிவில் இருப்பதால் எளிதில் நினைவில் இருத்தலாம்.

1	2	3	4
	10	11	12
		19	20
			28

பிறகு மூலைக் கோட்டில் 1,10,19,28 என்றுள்ள பெட்டிகளைச் சேர்க்கும் கோட்டில் ஒரு கண்ணாடி இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டு, ப்ரதிபிம்பங்களை எழுதவும். இப்போது இவ்வாறாகும்.

1	2	3	4
2	10	11	12
3	11	19	20
4	12	20	28

இப்பொழுது இன்னொரு கண்ணாடி கீழ்மேலாக உள்ள கம்பங்களில் நடுக்கம்பத்தில் இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டு மறுபடி ப்ரதிபிம்பங்களை எழுதவும். இப்போது இப்படியாகும்.

தருகிறது. மாநதன் என்பவன் திருமால்; அமாநீ மாநதோ மாந்யோ என்று ஸஹஸ்ரநாமத்தில் மாநத: என்ற திருநாமத்தைப் பெற்றவன். பாவிகளான நமக்கு அவன் முகம் கொடான். நமக்கு எளிதில் கிடைக்காத மாநத-ஆநநம் இவளுடைய ஆநமத்தால் தான் நமக்குக் கிடைக்கிறது. நம்மிடம் விமுகனாயிராமல் அபிமுகனாகப் பெருமான் ஆகும்படிப் பண்ணுகிற ஆநமத்தை உடையவள் லக்ஷ்மி. இது இரண்டாவது அர்த்தம். நாம் இவளை வணங்கினால் இவள் நமக்குத் திருமாலின் ஸௌமுக்யத்தைப் பெற்றுத் தருவாள் என்று சிறிது மாற்றத்துடனும் சொல்லலாம். ஆநமோ யஸ்யாஸ்ஸா என்னாமல் ஆநமோ யஸ்யை ஸா என்று விக்ரஹம் பண்ணிக்கொள்ள வேண்டும். இதுவும் இரண்டாவது அர்த்தத்தின் இன்னொரு பேதம். இவள் நமக்கு மாநதா (பெருமை அளிப்பவள்) மட்டுமன்று. ஆநநதா கூட; முகம் கொடுப்பவள். அநமாவும் கூட. அமா இல்லாதவள். ஆநமா என்று பிரிக்காமல் அநமா என்று பிரிக்கிறோம். அமா என்றால் அலக்ஷ்மி, அவலக்ஷணம் அசிங்கம், மூதேவி குரூபம், அழகின்மை, அவம், அவத்யம். இதற்கெல்லாம் எதிர்த்தட்டானவள் லக்ஷ்மி. இவள் அதனால் அநமா. இப்படி மானதையாகவும் ஆநநதையாகவும், அநமையாகவும் இருப்பவள் என்பது மூன்றாவது அர்த்தம். அடுத்ததாக ஆநந-தாந-மா என்றும் பிரிக்கலாம். இவள் எப்படிப்பட்ட வள்ளல் தெரியுமா? இவளது முகத்திலேயே தானங்களை சொட்டுகிறது. வள்ளல்களுக்குள்ள தனிப்பட்ட முகக்களை இவளுக்கு இருக்கிறது. தாநசோபை கொண்டவள் இவள். இது நான்காவது அர்த்தம். இவள் நமக்கு முகம் கொடுத்தாளானால், ஸமூஹத்தில் நமக்கு மதிப்பும் அந்தஸ்தும் உயரும். எனவே இவள் மாநத ஆநந தா. அநமா என்றது முன்போல. இது ஐந்தாவது அர்த்தம்.

அடுத்த பதம் ஸதாசயாசதா என்பது. ஆசயம் என்றால் எண்ணம். ஸதாசயன் நல்லெண்ணக்காரன். அவனுக்கு ஆசத்தை, அதாவது உணவைக் கொடுப்பவள் அன்னலக்ஷ்மி. இது ஏற்கெனவே சொன்ன முதல் அர்த்தம். ஸதாசய அச ஆச-தா என்று பிரித்தால், நல்லெண்ணத்தவர்க்கு ஆசிஸ் என்னப்படும் மங்களவிதியையும் ஆசா: எனப்படும்

உணவையும் தருபவள். ஸம்பலக்ஷ்மியும் அன்னலக்ஷ்மியும் ஆனவள். அல்லது ஆய-ஆயம-தா என்று பிரித்தால், அவர்களுக்கு வரவையும் உணவையும் அளிப்பவள். தனலக்ஷ்மியும் அன்னலக்ஷ்மியும் ஆனவள் என்பதாம். இது இரண்டாவது அர்த்தம். நமக்கு நல்லெண்ணத்தையும் மங்களச் செயலையும் உணவையும் தருபவள் என்பது மூன்றும் அர்த்தம். ஸதாமயா என்று தனிப்பதமாக்கி, பிறகு அயாமதாஸ என்று சேர்த்துக்கொள்ளலாம். இவள் நல்ல அபிப்ராயம் கொண்டவள். அயம் என்கிற மேஸாபனத்தில் (மங்களகார்யத்தில்) ஆசை கொண்டவர்கள் அயாமமர்கள். ஆயத்தில் ஆசை கொண்டவர்கள் ஆயாமமர்கள். இப்படிப்பட்ட தாஸர்கள் அயாமதாஸர்களும், ஆயாமதாஸர்களும். அவர்களுக்கு இவள் வாரி வாரி வழங்குகிறுள் என்பது நாலாம் பாதத்தில் சொல்வது. இது நான்காவது அர்த்தம். ஸ ஏவ ஸோம்ய என்ற உபநிஷத்வாக்யப்படி, ஸத் என்றால் பரம்பொருள். அவனை எண்ணத்தில் இருத்தித் த்யானிப்பவர்கள் ஸதாமயர்கள். அவர்களுக்கு உணவு எது என்றால், மோக்ஷத்தில் பரம்பொருளே உணவாகும். இந்த உணவை இவள் அளிப்பவள்; மோக்ஷானந்தத்தைத் தருபவள் என்று அர்த்தம். இது ஐந்தாவது அர்த்தம். அடுத்த பாதத்தில் தர்மத்துக்கும் உபாயமாய் இருப்பதைச் சொல்கிறுர். போன ச்லோகத்தில் காமத்துக்கும். ஆக நாலு புருஷார்த்தங்களுக்கும் இவளே உபாயம் என்று சொன்னதாயிற்று.

கடைசியாக ஸதாநயாககயாநதா என்கிற பதம். தானங்கள், யாகங்கள், இவற்றோடு கூடினவர்கள் ஸதாநயாகர்கள். தர்மிஷ்டர்கள். அவர்களை அடையும் யாநம் தேர், யானை, முதலியது. யாநம் என்றது ஸகல ஐச்வர்யத்துக்கும் உபலக்ஷணம். இதையெல்லாம் தருபவள் லக்ஷ்மி. இது ஏற்கெனவே சொன்ன முதல் அர்த்தம். ஸதாநர்களுக்கும் (கொடையாளிகளுக்கும்) யாககர்களுக்கும் (யஜ்வாக்களுக்கும்) யாநத்தை (கதியை), சேருமிடத்தை, தருபவள் இவள். இது இரண்டாவது அர்த்தம். இன்னும் அர்த்தங்களும் இருக்கலாம். சொல்லி மாளாது.

உயிர்ப்பூர்சைத் தருவாள் உள்ளத்தில் நல்லகல்
உணவையும் தருவாள் உயர்கதியும் தருவாள்.

28. கற்பகமான கடற்கன்னி.

समर्थयस्व सकल क्षितिस्थितिविनिर्मितिम् ।
मुमुक्षुयुदुरुग्मुत् समुद्रदुहितस्त्वयम् ॥२८॥

ஸமர்த₂யஸ்வ ஸகல க்ஷிதிஸ்தி₂திவிநிர்மிதிம் ।
முமுக்ஷுத்₂யுது₃ருமுத் ஸமுத்₃ரது₃ஹிதஸ்ஸ்வயம் ॥28॥

समुद्र - दुहित: கடலின் மகளே!
मुमुक्षु - द्यु - द्रु: மோக்ஷார்த்திகளுக்குக் கற்பகமரமாயும்
उरु - मुत् அதிக ஆனந்தமாயும் உள்ள நீ स्वयं தானாகவே
सकल - क्षिति - स्थिति - विनिर्मितिं எல்லா உலகின் பாலனத்தைப் பண்ணுவதை
समर्थयस्व ஏற்படுத்து.

கடலரசனின் திருமகளே! நீயே மோக்ஷம் வேண்டுவோருக்கு எல்லாம் தரும் கற்பகத் தருவாய் இருக்கிறாய். நீயே பேரானந்தம். எல்லா உலகுக்கும் இருப்பையும் படைப்பையும் ஸமர்த்தித்துக் கொண்டிரு.

இந்த ச்லோகத்தில் என்ன விசேஷம் என்றால், முதல் பாதத்தில் உள்ள எட்டு எழுத்துகளும் அ என்ற ஒரே உயிரெழுத்தை உடையவை. எல்லாமே க,ஞ்,ச,ஞ, வரிசையில் வருபவை. ஸ,ம,த,ய,வ, மறுபடி ஸ,க,ல, என்பவை அந்த எட்டும். இரண்டாம் பாதத்தில் இ என்ற ஒரே உயிரெழுத்து. எல்லாமே கி,வி,சி,ஞ்ரி, வரிசையில் வருபவை. க்ஷி,தி, மறுபடி தி, மறுபடி தி.வி,நி,மி, மறுபடி தி, என்று எட்டு. மூன்றாம் பாதத்திலோ உ என்ற ஒரே உயிரெழுத்து எட்டு தடவை. கு,ஙு,சு,ஞு, வரிசையில் வருபவை. மு, மறுபடி மு,க்ஷு, யு, இரண்டு தடவை ரு, அதன்பின் மற்றொருமுறை மு, என்று எட்டு. நாலாம் பாதத்திலும் அகரமும் உகரமும் மட்டுமே உயிரெழுத்துகள். இதனால், ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ, முதலிய மற்ற உயிரெழுத்துகள் இல்லாமலே முழு ச்லோகமும் முடிகிறது. மூன்று உயிரெழுத்துகள் மட்டுமே கையாளப் பட்டிருப்பதால் இதை

த்ரிஸ்வரம் என்பர். அதிலும் பாதத்துக்கு ஒன்றாகக் கையாண்டிருப்பது அபூர்வமான சித்ரம்.

இனி அர்த்தத்துக்கு வருவோம். ஸமுத்திரம் முழுநிலத்தின் இருப்புக்கும் நிர்மாணத்துக்கும் துணையாவது தெரிந்த விஷயம். ஸமுத்திரத்தின் மகளான நீயும் அதைப் பண்ணவேண்டும் என்று பிரார்த்தனை. ஸமுத்திரத்திலிருந்து கற்பகமரம் வந்ததாகச் சொல்வர். ஸமுத்திரத்தின் பெண்ணான நீயே கற்பகமரம் போல் ஆகிறாய். ஸமுத்திரக்கரைக்கு ஜனங்கள் மகிழ்ச்சிக்காகப் போவது வழக்கம். ஸமுத்திரத்தின் மகளான நீயோ பெருமகிழ்ச்சி வெள்ளமாக இருக்கிறாய். நீ ஸமுத்திரத்தின் மகள் என்பது பல வகையிலும் பொருத்தமே.

கடலின் மகளே கற்பகத் தருவே
களிப்பின் வடிவே காத்திடு உலகை.

29. திங்கள் திருமுகத்தாள்.

पारावाराज्जाता माता पायात्पायात्त्रासाद्दासान् ।
साराकाराजास्याख्याता साराकारा नागागाप्ता
॥२९॥

பாராவாராஜ்ஜாதா மாதா பாயாத் பாயாத் த்ராஸாத் தாஸாந்।
ஸாராகாராஜாஸ்யாக்யாதா ஸாராகாரா நாகாகாப்தா ॥29॥

पारावारात् ஸமுத்திரத்திலிருந்து
जाता உண்டானவளும்
माता அன்னையும்
राका - राज - आस्या சந்திரன் போன்ற முகம் கொண்டவளும்
ख्याता புகழ்பெற்றவளும்
सार - आकारा அழகிய வடிவினளும்
नाग - अग - आप्ता மேருகிரியை அடைந்தவளும் ஆன
सा அவள்
दासान् அடியவர்களை
अपायात् அபாயரூபமான
त्रासात् பயத்திலிருந்து
पायात् காப்பளாக.

கடலின் குமாரி. நமக்கெல்லாம் அன்னை. நம் தாபம் தீரும்படி நிலவொத்த முகத்தாள். நம்மைக் காப்பதற்காகவே திருமலைக்கு வந்துள்ளவள். நமக்குத் தரிசனம் தருவதற்காக அழகிய திருமேனி கொண்டவள். நம்மை அடியாராக ஏற்று ஸ்வாமிநியாய் இருப்பவள். நம்மை அவள் அபாயத்திலிருந்தும் அச்சத்திலிருந்தும் காப்பாற்றட்டும்.


காப்பாற்றுவதற்கு வேண்டிய உறவுமுறை இருப்பதை மாதா என்ற பதத்தால் சொன்னார். காப்பாற்றுவதற்கு வேண்டிய வல்லமை இருப்பதை க்ஷமாதா என்ற பதத்தால் ஸூசிப்பித்தார். காப்பாற்றுவதற்கு வேண்டிய முனைப்பிருப்பதை நகாகாப்தா என்ற பதத்தால் சொன்னார். காப்பாற்றுவதற்கு வேண்டிய அருள் இருப்பதை ராஜாஸ்யா என்ற பதத்தால் சொன்னார். காப்பாற்றுவதற்கு வேண்டிய நிலைமை இருப்பதை த்ராணாத் என்ற பதத்தால் சொன்னார். காப்பாற்றுவதற்கு நாம் வேண்டுகோள் விடுப்பதை பாபாத் என்ற பதத்தால் சொன்னார்.

இந்த ச்லோகத்தில் என்ன சித்ரம்? என்று கேட்டால் மூன்று விசேஷங்களைச் சொல்லலாம்.

1. முப்பத்திரண்டு தடவையும் ஆ என்கிற ஒரே உயிரெழுத்து வந்துள்ளது; இ,ஈ,உ,ஊ முதலிய மற்றெந்த உயிரெழுத்தையும் காணோம். இந்த வேடிக்கைக்கு ஏகஸ்வரம் என்று பெயர். போன ச்லோகத்தில் அ,இ,உ என்ற மூன்று மட்டும் வந்தன; அதைவிட இது மேல் படி. தமிழில் இந்த மாதிரி வாக்கியத்துக்கு உதாரணம்; தாராய் வாக்கால் தாயார் பாராட்டாதார் பாழாவார்.

2. அது தவிர விசித்திரமானதொரு ப்ராஸமும் இருக்கிறது. பாராவாரா, ஜாதாமாதா, பாபாத் பாபாத், த்ராணாத் த்ராணாத், காராகாரா, மறுபடியும் காராகாரா, என்று ஆறு நாலெழுத்துச் சொற்றொடர்களிலும் ஒரே மாதிரியான ப்ராஸம் என்னவென்றால், இரண்டாம் எழுத்தும் நாலாம் எழுத்தும் ஒன்றாக இருப்பது என்பது.

3. இரண்டு மரங்கள் பின்னிக்கொண்டிருப்பது போலவோ,



30. தமஸ்ஸைத் தணிப்பவள்.

रमे रामे मुरारातेः मारमातरतीतरे ।
ततं तिमिरमेतत्तु मतितोतितरामि ते ॥ ३०

ரமே ராமே முராராதே: மாரமாதரதீதரே ।
ததம் திமிரமேதத்து மதிதோதிதராமி தே ॥ 30

रमे ! லக்ஷ்மியே!
मुराराते: முராரியின்
रामे! காந்தையே!
मार - मात: மன்மதனின் தாயே!
अति - इतरे மற்றவர்களை விஞ்சியவளே!
ततं பரந்திருக்கிற
एतत् இந்த

तिमिरं तु இருளையோ

ते உன்

मतित: புத்தியால்

अतितरामि தாண்டுகிறேன்.

நீயோ ரமை. உன் கணவனோ முராரி. உன் மகனோ மன்மதன். இத்தகைய நீ எனக்குக் கொடுத்த அறிவின் துணையால் நான் இருளைத் தாண்டி வெளிச்சத்துக்கு வருகிறேன்.

இருளில் வீழ்த்துபவனாகிய மன்மதன் உன் மகனாக இருப்பதால் உன் அருளினால் நான் இருளைக் கடக்க முடிகிறது. இருளுக்கு அப்பால் அழைத்துச் செல்பவர் உன் கணவனாய் இருப்பதால் இது ஸாத்தியம் ஆகிறது. நீ அருளாவிட்டால் இவ்வளவு பரந்த இருளை என்னால் கடக்கவே முடியாது. நீ மற்றவர்கள் போல் இராமல் ஸர்வாதிபமாயினியாய் இருந்து எனக்கும் உதவுகிறாய்.

இருளைத் தாண்டுவது என்றால் என்ன? தமஸ: பரஸ்தாத் என்று உபநிஷத் ஸ்ரீவைகுண்டத்தை இருளுக்கு அப்பால் உள்ளதாகக் கூறியதால், இருளைத் தாண்டுவது பரமபதம் போவதாகும். தமஸோ மா ஜ்யோதிர்கமய என்ற உபநிஷத்வாக்கியப்படி, இருளைத்தாண்டினால் பரஞ்ஜோதியை அடையலாம்.

உன் புத்தியால் நான் தாண்டுகிறேன் என்றதற்கு மூன்று விதமாகத் தாத்பர்யங்கள் சொல்லலாம். 1. நீ கொடுத்த புத்தியால் என்பது ஒன்று. (என் புத்தியே உன்னுடையதுதானே! ஸ்வ-தத்த ஸ்வ-தியா என்று ந்யாஸதசகத்தில் சொன்னபடி இது.) 2. உன் விஷயமான ஜ்ஞானத்தால், என் புத்தியில் நீ த்யானவிஷயமானதால், என்பது மற்றொன்று. (கடஜ்ஞானம் படஜ்ஞாநம் என்பது போல உன் ஜ்ஞானம் என்றால் உன் விஷயமான ஜ்ஞானம் அர்த்தமாகும்.) 3. நான் கடைத்தேறவேண்டும் என்று நீ ஸங்கல்பித்ததால், என்பது மூன்றாவது. (நான் தாண்டவேண்டும் என்று நீ நினைப்பதால் நான் தாண்ட முடிகிறது) என்னறிவே உன்னதுதான்; என்னறிவில்

நீ விஷயம்; உன் எண்ணம் எனக்குதவும்; என்றிந்த மூன்று கருத்துகளைச் சுருக்கிச் சொல்லலாம். ஏதத் என்றதால் இதோ இருக்கிறதே ஸம்ஸாரம் என்றும் அறியாமை என்றும் இருட்டு என்றுச் சுட்டிக்காட்டுவதாகக் கொள்ளலாம். ததம் என்றதால் இவ்விருட்டு மிதமிஞ்சி, அதிகமாகப் பரந்திருப்பதாகச் சொல்கிறார்.

இந்த ச்லோகத்தில் என்ன விசித்திரம் என்றால் மூன்றே மூன்று மெய்யெழுத்துகளை மட்டும் வைத்து எளிய பதங்களால் ச்லோகத்தை முடித்து விட்டார் என்பதாம். இதிலுள்ள முப்பத்திரண்டு எழுத்துகளும் ர,ரா,ரி,ரீ, வரிசையிலோ, ம,மா,மி,மீ, வரிசையிலோ, த,தா, தி,தீ, வரிசையிலோ மட்டும் வருபவை. தமிழில் மூன்றே மெய்யெழுத்துகளில் வாக்கியம் அமைக்க நாமும் முயலலாம். இதோ ஒரு முயற்சி. 1. பகுதி பகுத்துப் பதிப்பித்த புதுப் புத்தகத்தே பக்கத்துக்குப் பத்து தப்பு. 2. வைரத்தை ராத்திரி தராதே வைத்திரு. 3. வரவைத் தெரிவித்து வருத்தத்தைத் தராதே. இப்படிப் புனைவது ஸ்வாரஸ்யமாகத்தான் இருக்கிறது.

அனங்கனது அன்னையே! அச்சுதனின் ஆரணங்கே!
அருளியவுன் அறிவாலே ஆரிருளுக்கு அப்பாலே.

31. வளம் ஊட்டும் வராஹபத்னி.

काले किलालौकिकैक कोलकालालके लल ।
कलिकाकालकल्लोलाकुललोकालिलालिका ॥३१॥

காலே கிலாலௌகிகைக கோலகாலாலகே லல ।
கலிகாகாலகல்லோலாகுலலோகாலிலாலிகா ॥ 31

अलौकिक-एक-कोल-काल-अलके அப்ராக்ருதமான ஒரு வராஹனின் கருங்குழலியே!
काले किल சரியான சமயத்தில் அல்லவா
कलि-काकाल-कल्लोल-आकुल-लोक-आलि-लालिका கலியென்னும் கெட்ட காலத்தின் வீச்சினால் கலவரமடைந்த உலக வரிசைக்குத் தெம்பூட்டுபவளாய்
लल விளையாடு.

ஒரு கால விசேஷத்தில் அப்ராக்ருதமான ஒப்பற்ற கோல வராஹத்தின் மனைவியானவளே! கரிய கூந்தல் கொண்டவளே! உன்னுடைய லீலை கலி காலக் கோலாஹலத்தால் கலவரமான உலகுக்கு அதிலிருந்து மீள்வதற்கான தெம்பை அளிக்கிறது. அப்படிப்பட்ட லீலையைப் பண்ணு.

இந்த ச்லோகத்தில் எல்லா எழுத்துகளும் க,கா,கி,கீ, வரிசையிலோ, அல்லது ல,லா,லி,லீ, வரிசையிலோ இருப்பவை. இதை த்விவ்யஞ்ஜநம் என்பவர். இரண்டே மெய்யெழுத்துகள் கொண்டது என்று அர்த்தம். தமிழில் இதோ ஒரு உதாரணம். 1. திப்பி தித்தித்தது; புத்தி தப்பித்தது. இதோ இன்னுமொரு உதாரணம்: 2. கலிகோலாகலக் கலக்கலாகுலகைக் குலுக்கிக் காக்க லீலை. இன்னும் சில உதாரணங்கள் 3. தாவித்தாவித் தூவ விதை தேவை. 4. கட்டிக்காட்டுக் கிட்டிக் கூட்டுக கெட்டுக்குட்டுக கேட்டுக் கொட்டுக. 5. தூரத்தத்தூரத்தத் திரி தேரை தீர்த்தத்தே. 6. பூட்டப்பட்ட பெட்டி போட்டுப் பாட்டி பட்ட பாடப்பப்பா! இரண்டே மெய்யெழுத்துகளில் நீண்ட வாக்யத்தை அமைப்பது ஸ்வாரஸ்யமாத்தான் இருக்கிறது. அடுத்த ச்லோகத்தில் இன்னும் விசித்திரம். ஒரே ஒரு மெய்யெழுத்தால் முழு ச்லோகமும்.

அலௌகிக என்றதால், அப்ராக்ருதமான சுத்தஸத்வமயமான திவ்யமான அவதாரத்திருமேனியைச் சொல்கிறார். அவதாரரஹஸ்யத்தில் இவ்விக்ரஹங்கள் சுத்தஸத்வமயங்கள் என்று ஸ்வாமி தேசிகன் அருளியபடியாம். ஏக என்றதால் ஒப்பற்ற திருமேனியைச் சொல்கிறார். வாராஹம் ஆஸ்திதவதோ வபுரத்புதம் தே என்றருளியபடி, அற்புதமான திருமேனி. கோல என்றால் வராஹன். மீநாக்ருதே கமடகோல என்ற ச்லோகத்தில் போலே. கோலே என்று பாடாந்தரம். வராஹனிடம் விளையாடு என்று அன்வயிக்கலாம். இவ்வவதாரத்தில் லக்ஷ்மி விஹரிப்பதை, லக்ஷ்மீ வராஹன் என்ற திருநாமத்தாலும். கோலமலர்ப்பாவைக்கன்பாகிய என் அன்பேயோ, கோலவராஹம் ஒன்றாய் என்ற ஆழ்வார் பாசுரத்தாலும் அறிகிறோம். கலாலகே என்றால் கருங்குழலியே என்று விளி. மைத்தகுமா மலர்க்குழலாய் வைதேவீ என்ற பெரியாழ்வார் பாசுரத்தில் போலே. வராஹாவதாரம் கலிகாலத்தில் இல்லையே, இந்த ச்லோகத்தில் எப்படி வராஹமஹிஷி கலிகாலக் கலவரத்தைக் களைவதாகக் கூறுகிறார்? என்றால்,

வராஹக்ஷேத்ரத்தில் திருமலையில் வராஹமஹிஷியானவளன்றோ, கலியுகக்கடவுளான திருவேங்கடமுடையானின் பத்மாவதித்தாயாராய், இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தின் காவ்யநாயகியாகிறாள்? காகாலம் என்று கெட்ட காலத்தைச் சொல்வது, கெட்ட புருஷனைக் காபுருஷன் என்றும், கெட்ட வழியைக் காபதம் என்றும் சொல்வது போலவாம். லோகாலி என்றது, ஈரேழு புவனங்களையும் (பூலோக புவர்லோகாதிகளையும் அதல பாதாலாதிகளையும்) குறிப்பதாம். இவள் உலகங்களை லாலிப்பதாகச் சொல்வது விநஷ்டப்ராயம் அபவத் த்வயேதாநீம் ஸமேதிதம் என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் சொன்னபடியாம். இவளுடைய வாத்ஸல்யம் மிக்க லீலை இல்லாவிட்டால் கலியின் கொடுமையில் உலகமெல்லாம் சிக்கியே கிடக்கும். கில என்று ப்ரஸித்தியைச் சொன்னது, வேதத்தில் கூட வராஹாவதாரம் ப்ரஸித்தமாய் இருப்பதைக் காட்டவாம்.

காலவிசேஷத்தில் கோலவராகத்தின்
காதலி! கலியுகத்தின் காலக் கேட்டாலே
காசினி கலங்காதே காத்திடு க்ருபையாலே.

॥ ஸ்ரீ: ॥

ஆழ்வார் திருநகரி நம்முடைய ஆண்டவன் ஆச்ரமத்தில் (கடந்த 2 வருடங்களாக) ஸ்வாமி தேசிகன் புரட்டாசி ச்ரவணத்தன்று 9.10.08 அன்று ஸேவாகாலம் தேசிக ப்ரபந்தம் ஸேவித்து பெருமாளுக்கு விசேஷ தளிகைகள் கண்டருளப் பண்ணி கோஷ்டி விநியோகம் நடைபெற்றது. அன்றைய தினம் ஸ்வாமி தேசிகன் மாடவீதி வலம் வந்து ஸ்வாமி நம்மாழ்வார் எம்பெருமான் ஆதிநாதர், மங்களாஸாசனம் ஆகி பின்னர் மாலையில் ஆஸ்தானம் எழுந்தருளுகிறார். ஸௌகர்யமுள்ளவர்கள் அவசியம் ஆழ்வார் திருநகரி சென்று நம் ஆச்ரமத்தில் தங்கி ஸ்வாமி தேசிகன் புரட்டாசி ஸ்ரவணம் ஆழ்வார் மங்களாஸாஸனத்தில் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம். கீழநத்தம் ஸ்ரீமான் கோபால் ஸ்ரீனிவாஸ அய்யங்கார் ஸ்வாமி நம் ஆஸ்ரமத்திற்குப் புதிய பீரோ ஸமர்ப்பித்துள்ளார். ஆஸ்ரம மேனேஜர் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸ தாத்தம் ஏற்பாடுகளைச் செய்தார். —ஸ்ரீ கார்யம்.

32. தங்கத்தைத் தருபவள்.

ररोरेररुरोरूरूररुरोररे ।
रैरेरारेराररेरारोरारिरिरारिरा ॥३२॥

ரரோரேரரே ரருரோ ரூரூருரு ருரோரரே ।
ரே ரே ரரேரேரரரே ரரேரோரரிரிரரிரா ॥32॥

रै रै ஜனங்களே!

र-र-इरा - र - इ - रारि - रि - रा நெருப்பு போல் கொடியவனும் குடிகாரனும் காமவசப் பட்டவனுமானவனின் அழிவைத் தருபவளும்

अरि-रा வண்டுக்கூந்தல் கொண்டவளும்

उरु-ऊरु: பருத்த தொடை கொண்டவளுமான

र: லக்ஷ்மியானவள்

र-रौ: ர என்கிற எழுத்துக்கே பயந்தவனும்

अर-रुरो: வேகம் கொண்ட மானுமானவனுக்கு

अरे: பகைவனான ராமனுடைய

उर:-अररे மார்புக்கதவத்தில்.

रा-अरे: தங்கக் கொத்துக்காக

आर சரணடைந்தேன்.

ராவணன் கனல் போல் கொடியவன். குடிகாரன். காமவசப்பட்டவன். அவனுக்கு அழிவை உண்டுபண்ணியவள் ஸீதை. வண்டு போல் கருத்த கூந்தல் கொண்டவள். பருத்த தொடை உடையவள். மாரீசன் ர என்ற எழுத்தில் தொடங்கும் பதத்தைக் கேட்டாலே ராமனை நினைத்து நடுங்குபவன். மானாய் வந்தவன். அவனுக்குப் பகைவன் ராமன். அந்தத்திருமாலின் மார்புக் கதவில் இருப்பவள் லக்ஷ்மி. அவளை நான் சரணடைந்தேன். எனக்குச் செல்வம் கொழிப்பதற்காக.

இந்த ஶ்லோகத்தில் ஒரே ஒரு மெய்யெழுத்து, ர் என்பது, மட்டுமே வந்துள்ளது. முப்பத்திரண்டு தடவை.

இதற்கு முன் ஸ்லோகத்தில் இரண்டு மெய்யெழுத்துகள்; அதற்கும் முந்தியதில் மூன்று மெய்யெழுத்துகள். இதிலோ ஒன்றே ஒன்று. இவ்வளவு கடினமான வரையறையைக் கொண்டால், அபூர்வமான, அதிகப் புழக்கத்தில் இல்லாத, பதங்களைக் கையாள்வதைக் குறை சொல்ல முடியாது. தமிழில் ஒற்றை மெய்யெழுத்துப் பதத்துக்கு உதாரணம் : தித்தித்தது. அரிய பதங்களையும் சேர்க்கலாம் என்றால்: 1. துந்தத்தது தந்தத்தது திந்தித்தது. துந்தந்தது என்றால் துத்தம் என்னும் உலோகத்தில் உள்ளது. இந்த ரீதியாக அர்த்தம் சொல்வது கஷ்டம். அது போலத்தான் இந்த ச்லோகத்துக்கும் அர்த்தம் சொல்வது கஷ்டமாய் இருக்கிறது. ஆனாலும் புலமை உடைய உரையாசிரியர்கள் ஸ்வாரஸ்யமாக அர்த்தம் கண்டுள்ளார்கள். அதைப் பின்பற்றி மேலே ஒருவாறாகப் பொருள் கூறப்பட்டது. இதோ மேலும் சில உதாரணங்கள்: 2. நந்திநதைத்தித் நுதி நைத்நதைத் நட. 3.காக்கை கக்குகைக்குக் கொக்கு(உ)கக்குகை. இந்தக்கவிக்கு இது எப்படி ஸாத்தியமாயிற்று? பலரும் அறிந்த சில சொற்களில் ர் என்ற ஒரே மெய்யெழுத்து கொண்டவற்றை எடுத்துக் கொண்டார்:

அரி என்றால் பகைவன்.; உரு என்றால் பெரிய.

ஊரு என்றால் தொடை. உரஸ் என்றால் மார்பு.

உராம் என்றால் கதவுப்பலகை.

ரே என்பது பலரை அழைக்கும் விளி.

ருரு என்பது ஒருவகை மான்.

இரா என்றால் போதையூட்டும் திரவம்.

அதன்பிறகு அதிகப் புழக்கத்தில் இல்லாத சில ஒற்றைமெய்யெழுத்துப் பதங்களை எடுத்துக் கொண்டார்.

ர என்றால் நெருப்பு என்றும் க்ரூரத்தன்மை என்றும் அர்த்தங்கள்.

ரா என்றால் தங்கம்.

ரு என்றால் பயம்.

ரீ என்றால் மன்மதன்.

ஈ என்றால் லக்ஷ்மி.

ரா பண்ணுவது என்றால் கொடுப்பது.

ரீ பண்ணுவது என்றால் அழிப்பது.

அதன்பிறகு ரலயோரபேதம் என்னும் நியாயப்படி லகரத்தை ர என்று மாற்றிக் கொள்ளலாம் எனக்கொண்டு சில பதங்களை எடுத்துக்கொண்டார்.

ஆளி என்றால் வண்டு; அரி என்றும் சொல்லலாம்.

லாலி என்றால் தீவிரமாய் சுடுபடுபவன்; ராரி என்றும் சொல்லலாம்.

ஆலி என்றால் வரிசை; அரி என்றும் சொல்லலாம்.

இதுமாதிரியுள்ள சுமார் இருபது பதங்களைக் கோத்தார்; தனி உயிரெழுத்துகள் ஸந்தியில் மறையும்படி அமைத்தார்; கவிதை புனைந்து விட்டார். எல்லா எழுத்துகளும் ர,ரா,ரி,ரீ வரிசையில் வந்துவிட்டன.

இந்த மாதிரி ச்லோகங்களுக்கு அர்த்தத்தைப் பலர் பலவிதமாகச் சொல்வதில் வியப்பில்லை; பண்டிதர்கள் புகுந்து விளையாடிவிடுவார்கள். இதோ சில உதாரணங்கள். அராரே: என்றால் ஓடும் பகைவரைக் கொண்டவனுடைய, அதாவது பகைவரை விரட்டுபவனுடைய. இராரீர என்றால் அக்நிப்ரவேசம் பண்ணின ஸீதை; இதில் இராரி என்றால் நீருக்கெதிரியான நெருப்பு. அரு: என்றால் பயமற்றவன். அல்லது பயம் போக்குபவன். ரரேர என்றால் பணத்தைத் தரும் வாக்குள்ளவன்; அதாவது, செல்வத்தை வரமாக வாக்கினால் அளிப்பவன். இதெல்லாம் வரும்படி சில பாடபேதங்களைப் பண்ணி, ல என்ற எழுத்தை ர என்ற எழுத்தாகக் கொள்ளும் கிலேசம் இல்லாமலே அர்த்தம் சொல்வதும் உண்டு.

ராக்ஷஸ மான் வதம் செய்த ராகவனின் ராமையாகியவள்
ராவணனை ரணத்தழித்தான் ரமை என்னை ரக்ஷிப்பாள்.

—★—

33. என் அறிவுக்கு எட்டியவள்.

मामाममाममेमामा मामूमामेममाममे ।
मामामेमिमिमे माम ममोमामाममामिमाम् ॥३३॥

மாமாமமாமமேமாமா மாமூமாமேமமாமமே ।
மாமாமேமிமிமே மாம மமோமாமாமமாமிமாம். ॥ 33

मम என்
इमां இந்த
मां புத்தியை
मा லக்ஷ்மி
आम வந்தடைந்தாள்.
अम् இவளை
आम (என் புத்தி) வந்தடைந்தது.
ए லக்ஷ்மியே!
मां லக்ஷ்மியையும்
अं விஷ்ணுவையும்
आमेम வந்தடைவோமாக.
अमां மறதியை
मा एमि அடையமாட்டேன்.
मां மோக்ஷகாலத்தை
मिमे அளந்தெண்ணுகிறேன்.
अममः என்னுடையதன்று என்றும் ஸாத்விகத்யாகம் கொண்டவளாய்
मा-मां புத்திவிஷயமான
मां பூஜையை
अमामि அனுஷ்டிக்கிறேன்.

இதோ என் புத்தி இருக்கிறதே. (விசித்திரமாக லக்ஷ்மீஸஹஸ்ரம் பண்ணும் புத்தி) இதை நெருங்கி வந்துவிட்டாள் தாயார் லக்ஷ்மி. இந்தப்புத்தியும் அவளை நோக்கிச் சென்றுவிட்டது. (இவ்வதம்பதிகளை) திருவையும் திருமாலையும் அணுகும்படி லக்ஷ்மியே! நீ அருளுக. உன்னை மறவாமல் மனத்திலிருத்துவேன். இன்றோ நாளையோவென்று எண்ணிக்கை பண்ணிக்கொண்டு மோக்ஷவேளையை எதிர்நோக்குகிறேன். பண்ணும் கருமங்களிலெல்லாம் எனக்கன்று என்று ஸாத்விகத்யாகத்துடன், அறிவால் உபசரிக்கிறேன். (அதுவே இந்த லக்ஷ்மீஸஹஸ்ரமாகப் பரிணமிக்கிறது.)

மாமாமமாமமேமாமா என்ற முதல் வாக்யத்தின் கருத்து வருமாறு: சித்ரஸ்தபகம் போல ஒரு கவிதை புனைவது எளிதன்று. என் புத்தியில் லக்ஷ்மியின் ஸாந்நித்யம் இருப்பதால் தான் இது முடிகிறது என்பதாம். இந்தப் புத்தி என்பதில் இந்த என்பதன் கருத்து என்னவென்றால். இப்போது சொல்வேடிக்கைகளின் மூலம் ஏகவ்யஞ்ஜனம் முதலிய சித்ரங்கள் மூலம் லக்ஷ்மியைத் துதிக்கும் இந்தப் புத்தி என்பதாம். ஆமாமும் என்ற இரண்டாம் வாக்யத்தின் கருத்து வருமாறு: இந்த லக்ஷ்மீஸாந்நித்யத்தின் பலனாக என் நல்லறிவு அவளை

அடைந்தது; அவள் விஷயமாகத் தியானமும் கவனமும் கொண்டது. (கவனம் என்பது ஒருமுனைப்பு என்று பொருள்படும் தமிழ்ச் சொல்லுமாகும்; கவிபாடுதல் என்று பொருள்படும் வடமொழிச் சொல்லுமாகும் இவ்விரண்டு அர்த்தங்களும் இங்கு பொருந்தும்.)

அமேமமாமமமே என்ற மூன்றாம் வாக்கியத்தின் கருத்து வருமாறு: நாமெல்லாருமாகச் சேர்ந்து, (லக்ஷ்மீஸஹஸ்ரம் இயற்றுபவருடன் படித்து ரசிப்பவர்களும் ஒன்றுகூடி) திருவையும் திருமாலையும் அணுகுவோமாக. லக்ஷ்மியே! நீ இப்படி எங்களை அணுகப் பண்ணு. மாமமாமேமமி என்ற நாலாம் வாக்கியத்தின் கருத்து வருமாறு: மறப்பனோ இனி யான் என் மணியையே என்று ஆழ்வார் அருளியபடி, நான் மறக்காதிருக்கிறேன். மாமிமே என்கிற ஐந்தாம் வாக்கியத்தின் கருத்து வருமாறு: வேளையை எதிர்நோக்குகிறேன். மோக்ஷகாலத்தைப் ப்ரதீக்ஷிக்கிறேன். ஒன்று இரண்டு என்று நாட்களை எண்ணுகிறேன். அமம: என்றதன் கருத்து வருமாறு: ந மம, எனக்கில்லை, எல்லாம் பகவத்ப்ரீதிக்கே என்கிற ஸாத்விக த்யாக மனப்பான்மை கொண்டுள்ளேன். மாமாம் மாமமமாமி என்ற ஆறாவதும் கடைசியானதுமான வாக்கியத்தின் கருத்து வருமாறு: இவளுக்குச் சரீரத்தாலும் வாக்கினாலும் பூஜோபசாரங்களைப் பண்ணுவது போலவே, இப்போது புத்தியால் ஸம்மானம் பண்ணுகிறேன்.

புத்தியாலேயே பூஜோபசாரங்களைப் பண்ணுவதாகச் சொல்கிறாரே, எப்படி ? உடலால் (ப்ரதக்ஷிணம் முதலியன) பண்ணுவதும், மனத்தால் (தியானம் முதலியன) பண்ணுவதும், வாக்கினால் (தோத்திரம் முதலியன) பண்ணுவதும் நமக்கெல்லாம் தெரியும். புத்தியால் பண்ணும் லக்ஷ்மிகைங்கரியம் என்பது எது? லக்ஷ்மீஸஹஸ்ர சித்ரஸ்தபகத்தை அதிசாதுர்யத்துடன் இயற்றுவதும், அதை நாமெல்லாரும் மர்மங்களோடு புரிந்துகொண்டு ரஸிப்பதும், தாயாருக்கு நாம் புத்தியால் பண்ணும் கைங்கரியங்களில் சேரும். அதை இந்தக்கவி இப்போது பண்ணுவதாகக் கூறுவது மிகப் பொருத்தம்.

மா என்ற பெண்பால் ஒருமைச்சொல்லுக்கு ஆறு அர்த்தங்களை இந்த ச்லோகத்தில் பயன்படுத்தியுள்ளார். **லக்ஷ்மி, அன்னை, அறிவு, அளவு, வேளை, ஸம்மானம்,** என்ற ஆறு அர்த்தங்களும் நிகண்டுக்காரர்கள் சொன்னவை; ஆறு வாக்கியங்களில் ஒவ்வொரு வாக்கியத்திலும் மா என்ற பதத்தை அமைத்ததோடு மட்டுமன்றி, ஒவ்வொன்றிலும் ஒவ்வொன்றாக ஆறு அர்த்தங்களையும் கொண்டது விசேஷம். அம் என்றொரு வினையடி. அணுகுவது அர்த்தம். அதனடியாக, ஆம என்றும், **ஆமேம** என்றும், அமாமி என்றும் மூன்று ப்ரயோகங்களைப் பண்ணியிருக்கிறார். மற்றபடி **மம, ஏமி, இமாம், அமூம்,** முதலியவை எல்லாரும் அடிக்கடி பயன்படுத்தும் பதங்களே. இவற்றையெல்லாம் சேர்த்து, ஆறு வாக்கியங்களிலும் மகர ஒற்று தவிர வேறெந்த ஒற்றெழுத்தும் வராமல், முப்பத்திரண்டு தடவை மகர ஒற்று வரப்பண்ணி, **ஏகவ்யஞ்ஜநம்** (ஒற்றை ஒற்று) என்ற சித்ரச்லோகத்தை இயற்றிவிட்டார். தமிழில் ஒற்றையொற்று வாக்கியத்துக்கு உதாரணம், கொக்கைக் காக்கக் **கொக்கொக்க** என்பதாம். இதேபோல் முழுச்செய்யுளையும் ஒரே பொருள் பற்றிப் புனைவது நம் போன்றாரால் ஆகாது. தெய்வானுக்ரஹம் பெற்ற மஹாகவிகள் மட்டுமே இவ்வாறு இயற்ற வல்லவர். **வேங்கடாத்வரி**யும் அவர்களுள் ஒருவர். ஏகவ்யஞ்ஜநமாகவே இரண்டு ச்லோகங்களைத் தாயார் விஷயமாகப் பாடி வெற்றி கண்டுள்ளார்.

இவ்வளவு ஸ்வாரஸ்யமான ச்லோகத்தைப் பண்டிதர்கள் விட்டுவைப்பார்களா? வெவ்வேறு விதமாக அர்த்தம் சொல்லித் தத்தம் புலமையை வெளிப்படுத்தியுள்ளார்கள். வேண்டுமானால் சில எழுத்துகளை மாற்றியமைத்துக் கொண்டு பாடபேதத்தைக் கல்பிக்கவும் அவர்கள் தயங்கவில்லை. இதோ சில கருத்துகள்: **மம்** என்றால் விஷம். மः என்றால் வேளை. மமே என்றால் விஷவேளையில் என்றாகிறது. ஸம்ஸாரத்தில் அல்லது மரணகாலத்தில் என்று கருத்து. அமா என்றால் கூடவே (**அமாவாஸ்யை** என்ற பதத்தில் போல). அமா-அமா என்றால் கூடவே அணுகுபவள். நாம் பெருமாளை அணுகும்போது நமக்குப் பரிந்து நம்முடன் கூடவே இவளும் அணுகுவதால்

இவள் அமாமா. அல்லது எனக்குத் துணையாக எங்கும் வருவதால் இவள் மம அமாமா. மா என்றால் ப்ரமாணம்; மா என்றால் அளவு; மாமா என்றால் ப்ரமாணவிஷயமாக முக்கிய ப்ரமேயமானவள். ம: என்றால் சந்திரன்; மா என்றால் அழகு; மமா என்றால் நிலவழகி. அம் பண்ணுவது என்றால் சாப்பிடுவது; அமா என்றால் கூட; அமாமா: என்றால் உடனுண்பவர்கள், குடும்பத்தார். பிப்பலம் ஸ்வாத்வத்தி என்று உபநிஷத்தில் சொன்னபடி ஸம்ஸாரத்தில் கட்டுண்டு கிடப்பவர்கள் சாப்பிடுபவர்கள். ப்ரஹ்மருத்ராதிகள் என்னோடு கூடச் சாப்பிடுபவர்கள். அவர்களை மா அமாமி, அணுகமாட்டேன்; தஞ்சமாகக் கொள்ள மாட்டேன்; உன்னைத்தான் தஞ்சம் புகுவேன் என்று கருத்து. மா என்றால் ப்ரமா; அம என்றால் அடைந்தவொன்று; மாம: என்றால் வேதம்; ஆமமே என்றால் பேசியது; வேதம் இவளைப் பற்றிப்பேசியது என்று அர்த்தம். என்றிப்படிப்பல.

இந்த ச்லோகத்து நீதிகள்: 1. புத்தியை எதெதிலோ செலுத்துவதை விட அன்னையிடம் செலுத்துவது நல்லது. 2. தனியே தொழுவதும் நல்லது; பலருடன் கூடித் தொழுவதும் நல்லது. 3. சில விஷயங்களில் மறதி கூடாது. 4. தனக்கென்று நற்செயல்களைப் பண்ணக்கூடாது. மமபாவம் அற்றிருக்க வேண்டும். 5. மோக்ஷகாலத்தை வரவேற்க வேண்டும். 6. அறிவைக் கொண்டும் கைங்கரியங்களைப் பண்ணக்கூடும். 7.அதுவாக வாய்க்கும் வரை காத்திராமல் நாமே அணுகிக் கைங்கர்யம் புரிய வேண்டும். 8. உற்றார் உறவினரை உதறியும் தெய்வத்தை அணுகல் தகும். 9. மற்ற தேவதைகளை அணுகுவதில் பயனில்லை. 10. தாயாரின் புருஷகாரம் (சிபாரிசு) உதவும்.

என்னறிவை எட்டியவள் எண்ணமறாதேகியவள்
எனக்கில்லை என்கின்ற என் பூஜை ஏற்குமவள்.

—★—

34. முழுநிலா போல் முகத்தழகி.

मामानमामानमामा मानमाननमानमा ।
नमानमामानमान मानमाननमानमा ॥३४॥

மாமாநமாமாநமாமா மாநமாநமாநமா ।
நமாநமாமாநமாந மாநமாநமாநமா ॥ 34

मां லக்ஷ்மியை
आनमाम வணங்குவோமாக.
अनमा-म-अमान-म-आनन-मा-
अनमा பௌர்ணமி சந்திரனுக்கு இழுக்கு ஊட்டும் முகத்தழகால் செழித்தவள்.
मा லக்ஷ்மி.
मानं கர்வத்தை न आम அடையவில்லை.
अनमा பணிவற்றவள் न அன்று
मान-मानन-मा பெருமை பாராட்டும் எண்ணத்தவள் न அன்று
मा தாயார்.

நாமெல்லோரும் திருமகளை வணங்குவோமாக. அவள் பௌர்ணமி நிலவையும் தோற்கடிக்கும் அழகிய திருமுகம் கொண்டவள். நமக்கும் முகம் கொடுப்பாள். நாம் அணுகமுடியாதபடியான கர்வம் சிறிதும் இல்லாதவள். திருமாலிடம் பணிவு கொண்டவள். பெருமை பாராட்டிக் கொள்ளும் எண்ணமே அவளுக்குக் கிடையாது. நமக்கு அன்னை அவள். இவ்வளவு காரணங்கள் இருப்பதால் அவளை நாம் வணங்குவோம்.

காரியம் கைகூடுவதற்காகச் சிடுமூஞ்சிக்காரர்களைச் சிந்தி அசிங்கப்படுவானேன்? நிலவின் பொலிவுடை முகத்தாளை வணங்கலாமே! கர்விஷ்டர்களுக்குப் பணிவானேன்? கர்வமே இல்லாதவளை வணங்கலாமே! வணங்காமுடிகளை வாழ்த்துவானேன்? பணிவுப் பண்பினளைப் பணியலாமே! பீற்றிக் கொள்பவர்களைப் போற்றுவானேன்? தற்பெருமை பாராட்டாதவளைத் துதிக்கலாமே! மற்ற மன்னர்களுக்கும் தனிகர்களுக்கும் தலை குனிவானேன்? திருமகளுக்குத் தலைவணங்கலாமே!

இந்த ச்லோகத்தில் என்ன விசித்திர அமைப்பு என்று கேட்டால், மிகக் கடினமான நாலு ஸாதனைகள் கலந்திருப்பதைச் சொல்லியாக வேண்டும். முதல் வகை ஸ்வாரஸ்யம்: மா, ந, என்ற இரண்டே எழுத்துகளைத் திரும்பத் திரும்ப எழுதி முழு ச்லோகத்தையும் முடித்து விட்டார். பதினெட்டு தடவை மா; பதினாலு தடவை ந. இது

போன ச்லோகத்தை விட அதிக நிர்ப்பந்தம் கொண்டது. அதில் ஒற்றையொற்று என்கிற நிர்ப்பந்தம் இருந்தாலும், ம, மா, மி, மூ, மே, மோ, ம், என்று ஏழு எழுத்துகள் இருந்தன. இந்த ச்லோகத்திலோ இரண்டே இரண்டு தான். தமிழில் இப்படியொரு வாக்கியம் அமைக்க முயலுவோமா? 1. மாடுமாடுமா? (மாடு கூட ஆட்டம் போடுமா என்று அர்த்தம்.) 2. காயாயாகா. (காயாக ஆகாமல் பூவாகவே நின்று விடும் என்று அர்த்தம்.) 3. காக்காகாக் காக்கா. (சோலைக்கு ஆகாத காகம் என்று அர்த்தம்.) இப்படியெல்லாம் முயற்சித்தாலும் ஐந்தாறு எழுத்துகளுக்கு மேல் வாக்கியம் நீளவில்லையே. இந்தக் கவிஞரோ முப்பத்திரண்டு எழுத்துகள் வரை நீட்டி வெற்றி கண்டிருக்கிறாரே! இன்னும் தீவிரமாக முயற்சிப்போம். இதோ நீண்டதொரு உதாரணம்: 4. வா வா மாமா, மாவா மாவாமாமாமாமா? (வருக வருக மாமனே, (பெருவிபத்தில்) குதிரையும் பசுவும் தூள்தூளாகும், ஆமாம் என்கிறாயா? என்று அர்த்தம்.) இப்படியெல்லாம் முயன்று பார்த்தால் வெங்கடாத்வரியின் ஸாதனையின் அருமை நமக்குப் புரிகிறது.

இரண்டாம் வகை ஸ்வாரஸ்யம்: முதல் பாதத்தை வலமிடமாக வாசித்தாலும் மாறாமல் இருக்கிறது. சொல்லப்போனால், நாலு பாதங்களிலும் இந்த விசித்திரம் இருக்கிறது. இதன் அருமையைப் புரிந்து கொள்வதற்காகத் தமிழில் முயலுவோம். திருப்பி வாசித்தாலும் மாறாதபடி அர்த்தமுள்ள வாக்கியங்கள் உண்டோ? ஏற்கனவே சற்று முன்பு மாடுமாடுமா என்றொன்று பார்த்தோம். அதைத் திருப்பி வாசித்தாலும் மாடுமாடுமா என்று தான் வருகிறது. ஐந்து எழுத்துகளுக்கு மேலும் நீளமாக இப்படியொரு வாக்கியம் அமையுமோ? இதோ ஒரு உதாரணம்: மேயுமா மாடுமோடுமா மாயுமே (மேய்கிற பெரிய மாடு கூட ஓடுமா? மாய்ந்துவிடுமே என்று அர்த்தம்.) இடமிருந்து வலமாக வாசித்தாலும், வலமிருந்து இடமாக வாசித்தாலும், இந்தப் பதினோரெழுத்துகள் கொண்ட வாக்கியத்தில் மாற்றமே

இல்லை. இத்தகையதொரு விசித்திரத்தை இந்த ச்லோகத்தில் நான்கு தடவை காண்கிறோம்.

மூன்றாம் வகை ஸ்வாரஸ்யம்: இரண்டாம் பாதமும் நான்காம் பாதமும் ஒரே மாதிரி இருக்கின்றன. ஒரே வாக்கியம் திரும்பி வருகிறது. ஆனால் அர்த்தம் மட்டும் வேறு. ஒரே நீண்ட வாக்கியத்தை வெவ்வேறு விதமாகப் பதம் பிரிப்பதால் அர்த்தம் வெவ்வேறாக வருவது விசித்திரம். மாநமாநநமாநமா என்பது அந்த வாக்கியம். மாந - ம - ஆநந - மா - அநமா என்று பிரித்து திங்கள் போன்ற திருமுகத்தாள் என்று அர்த்தம் சொன்னோம். இதே வார்த்தை நாலாம் பாதத்தில் வரும்போது, மாந-மாநந-மா-ந-மா என்று பிரித்து தற்பெருமை பாராட்டிக் கொள்ளல் இல்லாதவள் லக்ஷ்மி என்று அர்த்தம் சொன்னோம். இந்த விசித்திரத்தை உணர்ந்து பாராட்டுவதற்காகத் தமிழில் இப்படி ஒரு வாக்கியம் அமைக்க முயற்சிப்போம். ஒரே வாக்கியத்தை இரண்டு விதமாகப் பதம் பிரிக்கும்போது வெவ்வேறு அர்த்தங்கள் வரவேண்டும். நாமடங்காப்பழி என்கிறார் நம்மாழ்வார். நாக்கு மடங்காதபடியான அவதூறு என்று அர்த்தம், நா - மடங்கா என்று பிரிக்கும்போது. இந்தப் பழிக்கு நாம் அடங்கிவிடமாட்டோம் என்பது வேறு அர்த்தம், நாம்-அடங்கா என்று பதம் பிரிக்கும்போது. அரசனால் ஆளப்படுபவர் யார்? என்பதற்கும், போதை ஏற என்ன வழி? என்பதற்கும் ஒரே விடை: குடிகள். குடிமக்கள் என்றும், கள்ளைக் குடி என்றும் இரண்டு அர்த்தங்கள். விழுந்தமுக்கு என்றொரு வாக்கியம். விழுந்து அமுக்கு என்று பிரித்தால் ஒரு அர்த்தம். விழும் தமுக்கு என்று பிரித்தால் வேறொரு அர்த்தம். இவற்றில் கிடைக்கும் சுவையை இந்த ச்லோகத்திலும் நாம் அனுபவிக்கிறோம்.

நாலாம் வகை ஸ்வாரஸ்யம்: ஸர்வதோபத்ரம் என்றொரு விசித்திரபந்த வகையை ஏற்கனவே இருபத்தைந்தாவது ச்லோகத்தில் கண்டோம். அது இந்த ச்லோகத்திலும் அமைந்திருக்கிறது. கீழ்க்கண்டவாறு கட்டம் கட்டி எழுத்துகளை எழுதியபின் இடமிருந்து வலமாகவும்,

வலமிருந்து இடமாகவும், மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேலாகவும், வாசித்துப் பார்த்தால், மாறாமல் ஏகரூபமாக இருப்பது தெரிகிறது.

மா	மா	ந	மா	மா	ந	மா	மா
மா	ந	மா	ந	ந	மா	ந	மா
ந	மா	ந	மா	மா	ந	மா	ந
மா	ந	மா	ந	ந	மா	ந	மா
மா	ந	மா	ந	ந	மா	ந	மா
ந	மா	ந	மா	மா	ந	மா	ந
மா	ந	மா	ந	ந	மா	ந	மா
மா	மா	ந	மா	மா	ந	மா	மா

இந்த நாலு ஸ்வாரஸ்யங்களையும் ஒரே ச்லோகத்தில் சேர்த்துப் புகுத்தியிருப்பது மிகப்பெரிய ஸாதனையாகும்.

இனி வேறு சில அர்த்தங்களையும் பார்ப்போம். அ-மாந-மா என்றால் அளவற்ற காந்தி கொண்டவள் என்று அர்த்தம். மாம் ஆநம என்றால் அன்னையை வணங்கு என்று அர்த்தம். ஆ-மாந-ம என்றால் நாலாபக்கத்திலும் அளவுகொண்ட (அதாவது முழுதான) நிலவு என்று அர்த்தம். அநமா என்பதற்கு அ என்னும் விஷ்ணுவுக்கு மட்டும் பணிபவள் என்று அர்த்தம். மாந-மாநநம் மா மா நம என்றால் கர்வம் பாராட்டுபவனை வணங்கவே வணங்காதே என்று அர்த்தம். ஆநமா: என்றால் முழுச்சாப்பாடு பெறாத தரித்திரன் என்று அர்த்தம். நமாந என்றால் கௌரவம் பெறாதவனே என்று விளி.

சந்திரனைப்போன்ற முகம் என்னாமல், சந்திரனுக்கே இழுக்கை ஏற்படுத்தும் முகக்களை என்கிறார். சந்திரன் இந்த அளவுக்கு அழகும் காந்தியும் பெறவில்லையே என்று அவனைப் பிறர் ஏசும்படி வைக்குமாம் இவள் திருமுகம். இது ம-அமாந-ம-ஆநந-மா என்றதன் தாத்பர்யம். அநமா என்பதற்குப் பௌர்ணமி என்று அர்த்தம் எப்படிக்கிடைக்கும் என்றால், அமா என்பது அமாவாசை என்று பொருள்பட,

அதற்கு நேரெதிர்த்தட்டான பௌர்ணமி அநுமா என்னப்படும். சாப்பாட்டுக்கில்லாதவனே! மதிப்பு பெறாதவனே! திருமகளை வணங்கு, என்று சொன்னதன் தாத்பர்யம் என்னவென்றால், பொருளும் புகழும், உணவும் உடையும், மதிப்பும் மரியாதையும், திருமகளை வணங்குபவர்களுக்குக் கிடைக்கும் என்பதாம். கர்விஷ்டர்களுக்குப் பணியவே பணியாதே என்றதன் தாத்பர்யம், அவ்வாறு பணிவது அவர்களுக்கும் கேடு, உனக்கும் கேடு என்பதாம். அவர்களுக்குக் கேடு, திமிர் மேலும் அதிகமாகும் ஆதலால் உனக்குக் கேடு. சுயமரியாதையை இழக்கவேண்டியிருப்பதாலும், வேண்டிய பலன் கிடைக்காததாலும். திருமகளை வணங்கினாலோ, அவளுக்கும் உகப்பு, உனக்கும் கைமேல் பலன் என்பதாம்.

மதியொத்த முகத்தாளை மாதாவை வணங்குவதால்
மதிப்பேறும். மதிகெட்ட மற்றவரை வணங்காதே.

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

35. மாயாவும் அமாயாவுமான மா.

मायामायामयामाया मायामायामयामाया ।
मायामायामयामाया मायामायामयामाया ॥ ३५॥

மாயா மாயாமாயாமாயா மாயா மாயாமாயாமாயா ।
மாயா மாயாமாயாமாயா மாயா மாயாமாயாமாயா ॥35॥

आय-अमा - अय - अमा: அறிவிலும் அறியாமையிலும் (முறையே) வரவும் ஏழ்மையும் கொண்ட நாங்கள்

माया - मायां மாயாஜாலம் போல ஆச்சர்யமான

यां எந்த मां லக்ஷ்மியை

आय விஷ்ணுவுக்காக आयाम சரணடைந்தோமோ

आ-माया ப்ரக்ருதி ஸம்பந்தம் இல்லாத या எந்த मा லக்ஷ்மி

आयाम - आयाम - अयां நீளநீளத்தை அடைந்த

मायां அறிவை आया அடைந்தவளோ

आम - अय - अमाया அவள் அரைவேக்காடுகளுக்கும் நற்பணியில் சூதுவாதில்லாதவள்.

நாங்கள் அறியாமை நீங்கப்பெற்று அறிவு வரப்பெற்றவர்கள். அதனால் தான் திருமாலை அடைவதற்காகத் திருமகளைச் சரணடைந்தோம். அவள் எல்லாம் அறிந்தவள். ஆனால் அரைவேக்காடுகளுக்கும் கூட நலம் புரிவதில் எவ்விதக் கபடமும் இல்லாதவள்.

திருமாலுக்காகத் திருமகளை அடைந்தோம் என்பதற்கு இரண்டு தாத்பர்யங்கள். திருமாலை அடைய வேண்டும் என்ற நோக்கம் ஈடேறுவதற்காக லக்ஷ்மியிடம் புருஷகாரப்ரபத்தி பண்ணினோம் என்பது ஒன்று. நாங்கள் திருமகளின் அடியார்களாய் இருப்பது எங்களுக்காக மட்டுமன்று; திருமாலின் உகப்புக்காகவும் தான்; சாத்திரம் விதித்த நற்செயல்களை நாங்கள் பண்ணுவதால் அவர் மகிழ்வாரன்றோ? அதனால் அவருக்காகவும் நாங்கள் திருவை வணங்குகிறோம். இது இரண்டாம் கருத்து.

அரைவேக்காடுகளுக்கும் கூட என்றதன் கருத்து என்னவென்றால் இதோ - உலகின் பலரும் இரண்டுங்கெட்டான் ஆனவர்களுக்கு நல்லது பண்ணும்போது, அவர்களை ஏமாற்றுகிறார்கள்; அவர்களுக்குத் தெரியாமல் கள்ளம் கபடம் கொள்கிறார்கள்; அவர்களுக்கு உண்மையாக உதவுவதில்லை. ஆனால் திருமகள் அவ்வாறன்று; முதிராதவர்களுக்குக்கூடச் சூதில்லாமல் நன்மை பண்ணுவாள். உலகில் அறிவு வளர வளர மாந்தருக்குக் கள்ளங்கபடமும் வளர்கிறது. ஆனால் திருமகளோ அறிவுச்சுடராய் இருந்தும் கள்ளங்கபடமில்லாமல் இருக்கிறாள்.

தம்மை அறியாமை நீங்கி அறிவு வரப்பெற்றவராகக் கூறிக்கொள்வது எதனாலென்றால், இதுகாறும் திருமகளைத் தொழாமலிருந்ததன் காரணமான அறியாமை இப்போது தொலைந்ததாலன்றோ இன்றவளைச் சரணம் புக்கது? அதையும் திருமாலுக்காக என்று பாவிக்கும் அறிவு இப்போதல்லவோ ஏற்பட்டது? லக்ஷ்மியை மாயாஜாலம் போல் ஆச்சர்யமானவள் என்றது ஏன்? ப்ரக்ருதிஸ்வரூபையான அவளை மாயா என்ன வேண்டியிருக்க அமாயா என்றது எதிராகச் சொன்னதும் ஏன்? என்ற இரண்டு கேள்விகளுக்கும் விடை: ப்ரக்ருதியானவளே, ப்ரக்ருதிக்கு அப்பாற்பட்டும் நிற்பதாலும், தேவமாயேவ நிர்மிதா என்று கீதையைச் சொன்னது போல் அற்புதவடிவு கொண்டதாலும், மாயாவும், அமாயாவும், மாயா போல் மாயாவும் ஆக ஒருத்தியே ஆகிறாள்.

நீளநீளம் என்றால் வெகுநீளம் என்று அர்த்தம். கோரகோரம், ஸாரஸாரம், என்பவற்றில் போல. அல்லது நீளத்தின் நீளம், நீண்டிருக்கும் நீளம், என்றும் பொருள் கொள்ளலாம். இங்கு நீளநீளத்தை அடைந்த புத்தி திருமகளுடையது என்று கொண்டால், அவள் ஸர்வஜ்ஞை என்று சொன்னதாகும்; இந்தக் கவியினுடையது என்று கொண்டால், அது சித்ரஸ்துதிகள் புனையும் அளவுக்கு வளர்ந்திருப்பதையும் அதில் லக்ஷ்மி வந்திருப்பதையும் சொன்னதாகும்.

இனி வேறுவிதமாகப் பொருளுரைத்தலும் கூடும். மாயா என்றால் அவித்யை; ஆமம் என்றால் பிணி; ஆயாமம் என்றால் நீட்சி; சேர்த்தால் மாயாமாயாமாய என்பதற்கு அவித்யைப் பிணி நீட்டிப்புக்கு என்று பொருள்; வயிற்றுவலிக்குச் சுக்கு என்பது போல ரோகநீட்சிக்குத் திருமகளைத் தொழல். யம என்றால் காக்கை; யாம என்றால் காக்கைத் தொடர்புடைய நிகழ்ச்சி; யாம ஆயாமா என்றால் காக்கை நிகழ்ச்சியில் விஸ்தாரம் கொண்டவள்; காகக்கதையில் விரிந்த பண்பினள் என்றபடி. ஸீதையின் பொறுமை, பதிவால்லப்யம் (பதியின் மீது பற்று), இளைத்து விழுவோரிடம் தாயன்பு, இன்னா செய்தோர்க்கும் இனியது செய்யும் பண்பாடு, முதலிய விரிவுகள் எல்லாம் காகவ்ருத்தாந்தத்தில் தெரிபவை தானே? ஆகையால் இவள் யாம ஆயாமா ஆகிறாள். மா என்றால் லக்ஷ்மி; மாயா: என்றால் லக்ஷ்மியினுடைய என்று அர்த்தம். மாயா என்றால் க்ருபை; மாயா மாயா என்றால் திருமகளின் திருவருள் என்றாகிறது. யமம் என்றால் அடக்கிக் கொள்ளும் திறன்; ஆயம் என்றால் நற்பணி; யாமமான ஆயம் என்றால் யமத்தோடு தொடர்புடைய மங்களக்கார்யம், அஷ்டாங்கயோகம் முதலியவை; இவற்றில் அமாயா என்றால் புத்தியின்மை; நம் புத்தி நல்லதிலே போகவில்லை; இப்படி மந்தமதியினரையும் இவள் அமிக்கிறாள்; அணுகுகிறாள்; அநுக்ரஹிக்கிறாள்; ஆகையால் இவள் யாம - ஆய - ஆமாய - ஆமா ஆகிறாள். யாம - ஆயக் - காரர்களையும் ஆமாயாக்காரர்களையும் அணுகுபவள் என்றும் பொருள் கூறலாம். யோகிகளை அணுகுவது உபேயமாகவும் பலனாகவும் தானேயாவதாலாம். அறிவிலிகளை அணுகுவது அவர்களுக்கு உபாயமாகலாமே, அவர்களுக்கு நல்வழி காட்டலாமே, என்ற அவாவினாலாம். இப்படியாகத் திருமகள் மா (அன்னை) ஆகிறாள்; மாயா (விஷ்ணுசக்தி) ஆகிறாள்; யாமாயாமா ஆகிறாள்; யாமாயாமாயாமாவும் ஆகிறாள். ஆயம் என்றால் வரவு; ஆயத்தில் அமாயர்கள் என்றால் வரவில் பற்றற்றவர்கள்; தனலாபாதிகளில்

நோக்கில்லாத நாம் அவனை யாம, அடைக்கலமாக அடைவோமாக. ஆயாம - ஆயர்கள் ஆவோம்; அதாவது நிளத்தை வருமானத்தில் கொண்டவர்களாவோம்; அதாவது பணக்காரர்களாவோம். என்றும் பொருள் கூறலாம். இப்படிப்பல வழிகளில் அர்த்தம் சொல்வதால் இந்த ச்லோகத்தில் பத்துக்கும் மேற்பட்ட கருத்துகள் ஒளிந்து கொண்டுள்ளன; தேடிக் கண்டுபிடிக்கும் விளையாட்டு போல் இருக்கிறது இந்த ச்லோகத்துக்கு அர்த்தம் சொல்வது.

1. அவள் அன்னையானவள்

2. அவள் செல்வமானவள்.

3. அவள் சக்தியானவள்.

4. அவள் ப்ரக்ருதியானவள்.

5. அவள் ப்ரக்ருதியைக் கடந்தவள்.

6. அவள் அற்புதமானவள்.

7. அவள் அறியாமையைத் தொலைத்தவர்களால் ஆச்ரயிக்கப்படுபவள்.

8. அவளை அடைக்கலம் புகுந்தே திருமாலை அடைய முடியும்

9. அவளை அடைக்கலம் புகுந்தால் திருமாலுக்கு உகப்பாகும்.

10. அவள் நம்மைப் பணக்காரர்களாக ஆக்குவாள்.

11. காகாஸுரன் கதையில் அவளைப் பற்றி விஸ்தாரமாகத் தெரிகிறது.

12. கட்டுப்பாடில் புத்தி போகாத மாந்தர்களுக்கும் அவள் அநுக்ரஹிப்பாள்.

13. அவள் அருள் மிக்கவள்.

14. அவள் ஸர்வஜ்ஞை.

15. அவள் அரைவேக்காடுகளை அவமதிப்பதில்லை.

16. அதிகப் புத்தியில் லக்ஷ்மி வந்தால் மட்டுமே இவ்வாறு சித்ரஸ்தபகம் பண்ணமுடியும்

17. அவளை ஆச்ரயித்தால் அறிவு வளரும்.

18. அவள் யோகிகளையும் அநுக்ரஹிக்கிறாள்.

இந்த ச்லோகத்தில் இரண்டே இரண்டு எழுத்துகள்

மாறிமாறி வந்து மொத்த ச்லோகத்தையும் நிரப்பிவிட்டன. தமிழில் இத்தகைய உதாரணம்: தாராதாராதாராதா என்பதற்கு தராமல் ஆராதா ராதாவே எனப் பொருள் உரைக்கலாம். மாமாமாமாமாமா என்பதற்கு நாங்களாகவேயாகும் மாயனே என்று பொருள் உரைக்கலாம். யானையானையானை என்பதற்கு நான் ஐந்து யானைகள் கொண்டவனை என்று அர்த்தம் சொல்லலாம். இதே மாதிரி முப்பத்திரண்டு எழுத்துள்ள முழு ச்லோகத்துக்கும் பொருள் வருவது மட்டுமின்றி அது ஒரே விஷயத்தைக் குறித்து ஒட்டும்படி அமையுமோ? அதைத்தான் இந்த ச்லோகம் ஸாதித்திருக்கிறது.

மாயா என்ற பதத்துக்கு ஐந்து அர்த்தங்கள்; ப்ரக்ருதி, இந்த்ரஜாலம், ஆச்சர்யப்பொருள், அறிவு, அருள் என்று. இவ்வைந்து அர்த்தங்களையும் ஒருங்கே கையாண்டிருக்கிறார் இங்கு.

மாயையின் தேவதையை மாயை போல் இருப்பவளை
மாயையாய் இருப்பவளை மாயையை வளர்ப்பவளை
மாயையே அற்றவளை மாதாவாய் இருப்பவளை
மாதை நாம் புகலடைந்தோம் மாலின் உகப்புக்காக.

—★—

36. கடவுளுக்குக் காப்பானவள்.

मा सा रक्षा परस्यावनगगनवत्यापुणस्याशाहेमा
माहेशस्यास्य्यनाकादिपददपदित्येपयन्ती हतामा।
माता हन्तीति सूते रचिततताचिरस्यानुकूल्याप्तनामा
मानावल्या प्रकृष्टं परममरपप्रीतिरक्षारसामा॥

மா ஸா ரக்ஷா பரஸ்யாவந க³க³நவத்யாது⁴ணஸ்யாஶாஹேமா
மாஹேஶஸ்யாஸ்த்²யநாகாதி³பத³த³பதி³த்யேஷ²யந்தீ ஹதாமா ।
மாதா ஹந்தீதி ஸூதே ரசிதததசிரஸ்யாநுகூல்யாப்தநாமா
மாநாவல்யா ப்ரக்ருஷ்டம் பரமமரபப்ரீதிரக்ஷாரஸாமா ॥ 36

ஸா அப்படிப்பட்டவளான மா லக்ஷ்மியானவள்
பரஸ்ய பரமனுக்கும் ஆரக்ஷா திருக்காப்பானவள்.

अवन-ग-गगन-वती (தன்) பாதுகாப்பில் வானத்தையும் வைத்துக்கொண்டவள்.

आघुण-स्व-आशा-हेमा தன்னிடம் ஆசையுடன் சுழல்கிற தங்கம் கொண்டவள்.

माहेश-स्वास्थ्य-नाक-आदि-पद-स्व-पद பேராளுமை, ஆரோக்யம், சுவர்க்கம் முதலிய ஸ்தானம், இவற்றையெல்லாம் தருகிற திருவடி கொண்டவள்

इति என்கிற காரணத்தால்

एधयन्ती (நம்மெல்லோரையும்) வளர்ப்பவள். हत-अमा ஏழ்மையைத் தொலைப்பவள்.

माता உலகளந்தவன் हन्ति தண்டிக்கிறான் इति என்கிற காரணத்தால்

रचित-नत-चिरस्थ-आनुकूल्य-अवनामा நமஸ்கரிப்பதால் பரந்த நிலைத்த க்ஷேமத்தைப் பண்ணுபவள்.

मान-भावल्या அளவுகளின் வரிசையாலே प्रकृष्टं உயர்ந்த

परमं உத்தமமான ஒன்றை (ஆனந்தத்தை) सूते உண்டு பண்ணுகிறாள்.

अमर-प-प्रीतिः தேவேந்த்ரனிடம் அநுக்ரஹம் கொண்டவள்.

अ-क्षार-सामा இனிய நல்வார்த்தை கொண்டவள்.

மாலுக்கும் காப்பு ஆனவள். விண்ணோர்களை ரக்ஷிப்பவள். தங்கம் அவளை விரும்பிச் சுழலும். அவளது திருவடியைப் பற்றியவர்களுக்கு இறையாண்மையும் ஆரோக்யமும் பரலோகப்பேறும் பிறவும் கிடைக்கும். இவ்வாறாக நம்மை வளர்ப்பவள் அவள். நம் வறுமையைத் தொலைப்பவள். பகவான் குற்றவாளிகளைத் தண்டிக்கிற காரணத்தால் பலரும் இலக்குமியையே தொழுது பலனடைகிறார்கள். அவள் அதிகமாகவும் நீண்ட நாள் நிலைப்பதாகவும் க்ஷேமத்தைத் தருகிறாள். உத்தரோத்தரமாக அளவில் அடுக்கிச்சொன்ன உயர்ந்த ஆனந்தத்தையும் அவள்

உண்டுபண்ணுகிறாள். தேவேந்திரனும் அவள் அநுக்ரஹத்தை நாடிப் பெற்றவனே. இவள் இனிமையாக நல்லுரைகளைப் பேசுபவள்.

திருமகளைத் திருமாலுக்கு மனைவி என்றோ திருமாலுக்கு அடியவள் என்றோ சொல்லக்கூடுமாயிருக்க, திருமாலுக்குக் காப்பு என்று சொன்னது ஏனெனில், காப்புத் தாயத்து போல் திருமாலின் மார்பில் அவள் அணியப்படுவதாலும், அவள் ஸாந்நித்யம் இருக்குமிடத்திலெல்லாம் ரக்ஷை ஏற்படுவதாலும், அவள் அகலாதிருப்பதற்கும் பகவான் எப்போதுமே ஆனந்தம் பெறுவதற்கும் தொடர்பு இருப்பதாக ஸஹிப்பதில் பொருத்தம் இருப்பதாலும், திருவைத் திருமாலின் ஆரக்ஷையாக, காப்புக்கிழங்காக, வர்ணித்தது தகும்.

அவந-க-ககநவத் என்று அவளால் ரக்ஷணம் வானுக்குக் கிடைத்ததாகச் சொல்வது சரியோ? வானவர்க்கு என்றல்லவா சொல்ல வேண்டும்? என்று கேட்டால், ஊர் சிரித்தது என்றால் ஊரார் சிரித்தனர் என்று அர்த்தமாவது போல, வானம் ரக்ஷை பெற்றது என்றால் வானவர் ரக்ஷை பெற்றனர் என்று அர்த்தமாகும். தவிரவும், இதே பதத்துக்கு வானவர் ரக்ஷை பெற்றதாக அர்த்தம் நேரடியாகவும் கிடைக்கும் என்கிறார்கள் இலக்கணப் புலவர்கள். மண்ணவர் விண்ணவர் வானோர் எல்லாருக்கும் ரக்ஷை கிடைக்கையில், வானவர் (மட்டும்) ரக்ஷை அடைந்ததாகச் சொல்வது சரியோ என்று கேட்டால், ஸுரா விலோகிதா தேவா: என்ற ச்லோகத்தில் தேவர்களுக்குத் தனிப்பட்ட லக்ஷ்மீகடாக்ஷம் கிடைத்ததாகவும் அதன் பலனாக அவர்கள் லாபமடைந்ததாகவும் புராணம் கூறுவதால் இது சரியாகும்.

தங்கம் இவளிடம் சுற்றிச் சுழல்வதாகக் கூறுவதன் தாத்பர்யம் என்னவென்றால், இவள் ஹேமமாலினியானதால், இவள் திருமேனியில் தங்கம் புரளுகிறது என்பதாம். தங்கத்துக்கு இவள் மேல் ஆசை என்பது பொருந்துமோ? என்றால் இவள் எதெதை விரும்பி ஸ்வீகரிக்கிறாளோ அவையெல்லாம் இவளது ஸம்பந்தத்தால்

மங்களமாவதை அறிந்த தங்கம், தன்னை மற்றவரெல்லாம் விரும்பிப் போற்றும் பெருமை தனக்குத் திருமகளால் கிடைத்துள்ளபடியால், அந்தப் பொன்மகளைப் பொன்னே விரும்புகிறது என்பது கருத்தாம்.

திருமகளின் திருவடி, வெற்றியையும், செல்வத்தையும், இன்ன பிற பலன்களையும் தரவல்லதாயிருக்க, முதன்முதலில் ஆளுமையையும் ஆரோக்யத்தையும் தருவதாகச் சொல்வானேன் என்றால், ஆயுராரோக்யம் ஐஸ்வர்யம் என்று தொடங்கும் புராண ச்லோகத்தில், இவ்விரண்டையும் லக்ஷ்மீஸேவைப் பலன்களில் முதலிரண்டாகச் சொன்னதை நினைவுறுத்தற்காக இருக்கலாம்.

நாகாதிபதம் என்றவிடத்தில் ஆதி என்ற பதத்தால் சொல்லப்படும் பதங்கள் (வேறு அர்த்தத்தில்) எவையெனில், ப்ரம்மபதம், இந்த்ரபதம், முதலியனவாம். அவற்றை இவள் தருவதாகச் சொல்லாமல் இவளுடைய திருவடி அவற்றைத் தருவதாகக் கூறியது ஏன் என்று கேட்டால், இவள் எல்லாருக்கும் தராமல், தன் திருவடியை அடைந்தவர்களுக்கு மட்டும் தருவதால், அத்திருவடியே அவற்றைத் தருவதாகக் கூறுவது பொருந்துமாதலாலும், பதம் பதத்தைத் தரும் என்பதில் ச்லேடைச் சுவை இருப்பதாலும், கவிநயம் கருதி இவ்வாறு கூறுகிறார்.

இவளை ஏதயந்தீ என்று கூறியதன் கருத்து என்னவென்றால், இவள் மேன்மேலும் நலம் பயந்து நம்மை வளர்க்கிறாள்; உயர்த்துகிறாள்; மேம்படுத்துகிறாள்; என்பதாம். ஹந்தாமா என்றதன் கருத்து என்னவென்றால், இவள் வறுமையை ஒழிக்கிறாள்; ஏழ்மையை அழிக்கிறாள்; மூதேவியை முறிக்கிறாள்; என்பதாம்.

மாதா ஹந்தி என்பதன் கருத்து என்னவென்றால், பகவான் நம்மை ஒறுக்கிறார்; நம் பாவங்களுக்கேற்ற தண்டனை கொடுக்கிறார்; சிக்ஷிக்கிறார்; (திருமகள் அவ்வாறன்று) என்பதாம். இதி என்றதன் கருத்து என்னவென்றால், இப்படிக் கர்மாநுகுணபலப்ரதனாகப்

பகவான் இருப்பது நம்மைத் தாயாரிடம் பணியப்பண்ணும் காரணமாக இருக்கிறது; தாயார் நம்மிடம் மேலும் பரிவு கொள்ளக் காரணமாகிறது என்பதாம்.

அவளை நாம் பணிவதன் பலன் ததமாயும் சிரஸ்தமாயும் இருப்பதாகச் சொன்னதன் கருத்து என்னவென்றால், மற்றவர்களிடம் பணிந்தால் சிறியதொரு பலன் தாற்காலிகமாகச் சிறிது நேரத்துக்குக் கிடைக்கும்; மாறாக, இவளிடம் குனிந்தால், விபுலமாகவும், நீண்டகாலம் நிலைப்பதாகவும் க்ஷேமம் கிடைக்கும் என்பதாம். மோக்ஷம் என்கிற அழியாப் பலனையும் சொன்னதாகக் கொள்ளலாம்.

ப்ருநாகல்மா ப்ரக்ருஷ்டாம் என்றது மனிதனின் அதிகபக்ஷ ஆனந்தத்தை ஒரு அலகாகக் கொண்டு ஆரம்பித்து, அதை விட நூறு மடங்கு, அதையும் விட நூறு மடங்கு, என்று பெருக்கிக்கொண்டே போய், கடைசியாகப் ப்ரம்மானந்தத்தைக் கூறிய தைத்திரீய உபநிஷத்து பேசிய பேரானந்தமாகும். இதுவே மோக்ஷம்.

இவள் எல்லாப் பக்தர்களுக்கும் அநுக்ரஹிக்கச் செய்தேயும், அமரபதீந் என்று தேவேந்த்ரனை அநுக்ரஹித்ததாகச் சொன்னது ஏனென்றால், நமஸ்யே ஸர்வபூதாநாம் என்று தொடங்கி ஸ்தோத்ரம் பண்ணின தேவேந்திரனிடம் பரிதுஷ்டோஸ்மி தேவேச என்று கூறி, திருமகள் விசேஷமாக அவனுக்கு அநுக்ரஹித்து வரம் கொடுக்க முன்வந்து கொடுத்ததாலாம்.


அருக்ஷாக்ஷரா என்றதன் கருத்து என்னவென்றால், அவள் ஒருபோதுமே க்ஷரமாகப் பேசுவதில்லை; ந கஞ்சிந்நாபராத்யதி முதலிய இனிய வார்த்தைகளையே பேசுகிறாள் என்பதாம்.

இந்த ச்லோகத்தில் லக்ஷ்மிக்கு அடைமொழியாகச் சொன்ன பலவற்றுள் நாலுக்கு வேறு விதமாக அர்த்தம் சொல்வதும் உண்டு. உபநும் என்பதற்கு அவகாசம் என்று பொருள் கொள்ளலாம்; நம்மை ரக்ஷிப்பதற்கு அவகாசத்தை அவள் ஏற்படுத்திக் கொள்வாள்; அதற்கான அவகாசத்தை நாம் ஏற்படுத்தாமல் பாவமே பண்ணினாலும் கூட, அவள் யத்ருச்சாஸுக்ருதம் முதலியவற்றைத் தேடி நம்மை

ரக்ஷிப்பாள் என்று கருத்து. ஆகுணம் என்பதற்குக் கழுகுவதை அர்த்தமாகக் கொள்ளாமல், சிறு பூச்சி வரையிலுமாக என்றும் அர்த்தம் கொள்ளலாம்; ஸ்வாபம: என்பதற்குத் தன்பால் ஆசைகொண்ட ஒன்று என்று அர்த்தம் சொல்லாமல், ஸ்வ - ஆபம் எனப்பிரிக்காமல், ஸு- ஆபம் என்று பிரித்து, நல்ல உணவு என்று பொருள் கொள்ளலாம்; ஆகுணஸ்வாபஹேமா என்பதற்கு, எறும்பினும் சிறிய பூச்சி தொடங்கி எல்லா ஜந்துக்களுக்கும் உயிர் தரிக்கத் தேவையான உணவை மட்டுமின்றி, போக்ய வஸ்துக்களான பொன் போன்றவற்றையும் தல்குவதற்காகத் தன்னிடம் கொண்டவள் என்று அர்த்தமாகும். அல்லது ஹேமா என்பது அவள் பெயர். அவள் சிறு ஜந்துக்களுக்கும் உணவுடையவள்; என்னலாம். அல்லது, நல்ல ஆசை கொண்டவர்கள் ஸ்வாபர்கள்; அவர்கள் பூச்சிகளாயினும் கூட, அவர்களுக்குத் தங்கமானவள் இவள்; ஆசைகளை நிறைவேற்றுவாள்; என்றும் பொருள் கொள்ளலாம். மஹோபஸ்வாஸ்த்யம் என்பதற்கு மஹோபஸம்பந்தம் கொண்ட நிலை (பெரிய ஆளுமை)யும் ஆரோக்யமும் என்று அர்த்தம் கொள்ளாமல், மஹோபஸம்பந்தமான ஸ்வாஸ்த்யம் என்று கொள்வது மேலும் ஸஹஜமாய்க் கிடைக்கும் பொருளாம். ஸ்வாஸ்த்யம் என்பதற்கு ஸ்வர்க்கத்திலிருப்பவரின் தன்மை என்கிற அர்த்தமும் இங்கு பொருந்தும். ஓதாமா என்பதை ஓத - அம என்று பிரிக்காமல், ஓத - ஆமா என்று பிரித்தால், ஆமத்தை அதாவது பிணியைப் போக்குபவள் என்ற பொருள் கிடைக்கும். அமரபப்ரீதி கொண்டவளாக இவளைச் சொல்லுமிடத்தில் அமரபன் என்றால் தேவநாதன்; அமரப்ரபு என்றும், ஸுரேபன் என்றும், ஸுராத்யக்ஷன் என்றும், ஸஹஸ்ரநாமத்தில் உள்ள திருநாமங்களின்படி, திருமாலே அமரபன் அவனிடம் காதல் கொண்டவள் என்று பொருள் கொள்வதும் தகும். ப்ரீதி: - அக்ஷர - ஸமா என்று பதம் பிரிக்காமல் ப்ரீதி - ரக்ஷா - ரஸா - மா என்று பதம் பிரிப்பதும் பொருந்தும். அநுக்ரஹத்திலும் ரக்ஷிப்பதிலுமே ரஸம் கொண்டவள் லக்ஷ்மி என்று அர்த்தமாகும்.

பாடபேதங்களுள் ஒன்றை மட்டும் குறிப்பிட்டாக வேண்டும். ஸூதே என்ற வினைச்சொல்லுக்குப் பதில் ஸூதிம் என்று பாடாந்தரம். மாதா ஸூதிம் ஹந்தி என்று அன்வயித்து, அன்னை நம் பிறவியை மாய்க்கிறான் என்று அர்த்தம் சொல்வது எளிது. ஆனால் அடுத்த வாக்கியத்துக்கு வினைச்சொல் இல்லாது போகும். இதற்காக பரமம் என்பதையும் ப்ரக்ருஷ்டம் என்பதையும், இரண்டாம் வேற்றுமைச் சொற்களாகக் கொள்ளாமல், வினையெச்சமாக்கி, உயர்ந்தபடியாக என்று அர்த்தம் சொல்லி, வேறொரு அடைமொழியில் ஒட்டவைக்க வேண்டும். மற்ற பாடபேதங்களையும் அர்த்தபேதங்களையும் இப்போது அலசவேண்டாம்.

(தொடரும்)



ஸ்ரீ லக்ஷ்மீஸஹஸ்ரம்

இந்த ஶ்லோகம் சித்ரஸ்தபகத்தில் வரும்படி. இதில் என்ன விசேஷம் என்றால், பல வேடிக்கைகளைச் சொல்லலாம்:

1. ஒவ்வொரு பாதத்திலும் முடிவிலுள்ள நான்கு எழுத்துக்களைத் திருப்பி வாசித்தால் அடுத்த பாதத்தின் முதல் நாலு எழுத்துக்கள் கிடைக்கும்; உதாரணமாக ஸ்வாமஹேமா என்பதைத் திருப்பினால் மாஹேமஸ்வா ஆகிறது. நந்தீஹதாமா என்பதைத் திருப்பினால் மாதாஹநந்தீ என்றாகிறது; ஸ்யாவநாமா என்று மூன்றும் பாதக் கடைசியில் உள்ளதைத் திருப்பினால் மாநாவஸ்யா என்று நாலாம் பாத ஆரம்பம் கிடைக்கிறது; ஶ்லோகக்கடைசியில் உள்ள க்ஷாரஸாமா என்பதைத் திருப்பினால் மாஸாரக்ஷா என்று ஶ்லோகத்தின் ஆரம்பம் கிடைக்கிறது.

2. மேலும் ஒவ்வொரு பாதத்திலும் நடு ஏழு (எட்டாவது முதல் பதினாலாவது வரை) எழுத்துக்களைத் திருப்பி வாசித்தால் மாறுபாடே இல்லை. வநககககநவ என்பதைத் திருப்பி வாசித்தாலும் அதே தான் நிபதநதநபநி நிபதநதநபநி என்று இரண்டாம் வரியிலும் இப்படியே; திருப்பினாலும் அதே நிபதநதநபநி தான்; ரசிநநநசிர என்பதும் அப்படியே; பரமமமரப என்பதும் அப்படியே; தமிழில் விகடகவி, மோரு போருமோ, தேரு வருதே, மாமாடுமோடுமாமா, என்கிற பதங்கள் போல இவை.

3. ஒவ்வொரு பாதத்தின் நட்டநடுவில் ஒரே எழுத்து மூன்று முறை வருகிறது; க3க3க3 என்று முதல் வரியில்; த3த3த3 என்று இரண்டாம் வரியில்; நநந என்று மூன்றாம் வரியில்; மமம என்று நான்காம் வரியில்.

4. நாலு பாதத்தின் ஆரம்ப எழுத்துகளும் முடிவெழுத்துகளுமாக உள்ள எட்டு எழுத்துகளும் (மா என்ற) ஒரே எழுத்தாக அமைந்திருக்கிறது. மேற்சொன்ன நாலுவகை வேடிக்கைகளுடன் ஸ்ரக்தரா வ்ருத்தத்தில் பண்ணும்

ஶ்லோகம் எல்லாம் அஷ்டதளபத்மபந்தம் என்ற சித்திரக்கட்டுக்கு உட்பட்டதாகத் தானே அமைந்துவிடும். எட்டு இதழ்கள் கொண்ட தாமரை மலரை வரைந்து அதில் எழுத்துகளை வைத்து ப்ரதக்ஷிணமாக வாசித்தால் ஶ்லோகம் கிடைக்கும். மொத்தமுள்ள 21 x 4 = 84 எழுத்துகளில் நாற்பத்தொன்பது எழுத்துகள் மட்டுமே இஷ்டப்படி அமைக்கக்கூடியவை. ஆகையால் பத்மபந்தத்துக்காக நாம் வரையப்போகும் தாமரைப்பூவில் 49 எழுத்துகள் மட்டுமே வைக்கப்பட்டிருக்கும். (உள்ளிதழ்கள் எட்டில் ஒவ்வொன்றிலும் மூன்று; வெளியிதழ்கள் எட்டில் ஒவ்வொன்றிலும் மூன்று; நடுவில் ஒன்று.) மற்ற முப்பத்தைந்து ஸ்தானங்களில் எழுத்துகள் அந்த நாற்பத்தொன்பதிலிருந்தே மேற்சொன்ன வ்யவஸ்தைகளின் படி, திரும்பி வருபவை. எந்த முப்பத்தைந்து ஸ்தானங்களில் இந்தக் கட்டுப்பாடு என்பதைப் படத்தில் நட்சத்திரக்குறிகளில் காணலாம். (படம் சென்ற இதழில் காண்க)

										★	★	★	★								★
★	★	★	★							★	★	★	★								★
★	★	★	★							★	★	★	★								★
★	★	★	★							★	★	★	★					★	★	★	★

இதற்கெல்லாம் மேலாக இன்னொரு வேடிக்கையையும் இதில் புகுத்தியிருக்கிறார். இந்தத் தாமரைப்பூவில் ஒரு குறிப்பிட்ட வட்டத்தில் எழுத்துகளை வாசித்தால் ரகுநாதஸுதாக்ருதி என்று வருகிறது. இது ரகுநாதர் என்பவரின் மகளின் (வெங்கடாத்வரியின்) க்ருதி என்று பொருள்படுகிறது. கவி ஸாமர்த்தியமாகத் தன் முத்திரையைப் பதித்துவிட்டார். இவ்வளவு சமத்காரமாக அமைத்த ஶ்லோகத்தை வேறொருவர் களவாடி உரிமை கொண்டாடினால் பிடிபட்டு விடுவார்கள். இதன்படி பார்த்தால், ஏதமாந்தீ என்பதற்கும் பதிலாக அர்த்தமாந்தீ என்று நாகராக்ஷரப்பதிப்பில் கொடுத்துள்ள பாடபேதம் ஏற்கத்தக்கதேயாம்.

தாமரை மலரின் மத்தியில் மா என்ற எழுத்தை வைத்து, அதில் லக்ஷ்மீ ஸாந்நித்யத்தைக் காட்டியதும், ரகுநாதஸூநுக்ருதி என்பதை வெளிச்சுற்றில் வைத்து, அவனை லக்ஷ்மீஸஹஸ்ரம் சொல்லி வலம் வருவதைக் காட்டியதும், விசேஷம்.

வாசிக்கும்போது நடுக்கர்ணிகையில் உள்ள மா என்ற எழுத்தில் ஆரம்பித்து முதல் இதழில் வரிசையாக வாசித்து வரும்போது, இதழ்நுனியில் ர என்ற எழுத்து வந்தவுடன் இறக்கத்தில் எழுத்துகளை வாசித்து க3 என்ற எழுத்து கர்ணிகைக்கு அருகில் உள்ளது வரும்போது அதை மூன்று முறை வாசித்து, வந்த வழியே திரும்பி, அடுத்த இதழில் ஏறி, நுனியில் கு4 என்ற எழுத்து வரை போய், பிறகு இறங்கி நடுவில் மா என்பதில் முடிக்க வேண்டும். முதல் பாதம் முடிந்திருக்கும். இதே போல அடுத்த இரண்டு இதழ்களில் இரண்டாம் பாதத்தை வாசிக்கலாம். இரண்டு அடுத்தடுத்த இதழ்களை எடுத்தால் மூன்று எழுத்துகள் இரண்டுக்கும் பொதுவாக இருக்கும். மொத்தம் வாசித்த பிறகு, எட்டு இதழ்களின் நுனியெழுத்துகளை மட்டும் ப்ரதக்ஷிணமாக வாசித்தால் கவியின் பெயர்முத்திரை கிடைக்கும். சென்ற இதழில் படத்தைப் பார்க்கவும். பத்மபந்தத்தில் பல வகைகள் உண்டு; இந்த ச்லோகத்தில் உள்ளதற்குக் கவிநாமாங்கித கோணாஸ்ப்ருஷ்டகர்ணிக அஷ்டதள பத்மபந்தம் என்று பெயர்.

பரமனுக்குக் காப்பவள்.
பதங்கள் தரும் பதமுடையாள்.
பணிந்தவர்க்குப் பலனாகப்
பரமபதம் தருவிப்பாள்.

37. மணாளனின் மடியில் மலராள்

वक्त्रावेक्षितकर्म कुक्षितिभुजां नो सर्वथा यद्दृशाम्
पत्यङ्कस्थितिमत्र विन्दति भयं सा हर्तुमूर्ज्वर्थिनाम् ।
भिक्षाटस्वमलात्मदुर्गतिहराजस्रं मता नः परा
राजीवावसथा पराधिभिदुरा शान्तात्मनां भासुरा॥ ३७

வக்த்ராவேக்ஷிதகர்ம குக்ஷிதிபு₄ஜாம் நோ ஸர்வதா₂ யத்₃ருஶாம்
பத்யங்கஸ்தி₂திமத்ர விந்த₃தி ப₄யம் ஸா ஹர்தும்ருஜ்வர்தி₂நாம் ।
பி₄க்ஷாடஸ்வமலாத்மது₃ர்க₃திஹராஜஸ்ரம் மதா ந: பரா
ராஜீவாவஸதா₂பராதி₄பி₄து₃ரா ஶாந்தாத்மநாம் பா₄ஸுரா ॥ 37

यद्दृशां எவளைப் பார்க்கிறவர்களுக்கு कु-क्षिति-भुजां கெட்ட ராஜாக்களின் वक्त्र-अवेक्षित-कर्म முகத்தைப் பார்க்கும் செயல் सर्वथा எப்படியும் नो கிடையாதோ सा அவள் भिक्षाट-सु-अमल-आत्म-दुर्गति-हरा பிச்சைக்கு அலையும் நல்ல தூய உள்ளத்தவரது ஏழ்மையை நீக்குபவள். अजस्रं எப்போதுமே नः நம் मता தியான விஷயம் ஆனவள். परा உயர்ந்தவள். राजीव-आवसथा தாமரை நிலையத்தாள். अपराधि-भिदुरा குற்றவாளிகளைப் பிளப்பவள். शान्त-आत्मनां அடங்கிய மனத்தவர்க்கு भासुरा ஒளிர்பவள். ऋजु-अर्थिनां நேராக விரும்புபவர்களுக்கு भयं பயத்தை हर्तुं நீக்குவதற்கு अत्र இங்கு पति-अङ्क-स्थितिं கணவனின் மடியில் இருப்பை विन्दति அடைகிறாள்.

இவளைப் பார்த்தவர்களுக்குக் கெட்ட அரசர்களைக் காண வேண்டிய தேவையே ஏற்படாது. பிச்சையெடுத்துத் திரிபவர்கள் கூட சித்தசுத்தியுடன் இவளை ஸேவித்தால் இவள் அவர்களது வறுமையைப் போக்கிவிடுவாள். ஸதா நாம் இந்த உத்தமியைத் த்யானிக்க வேண்டும். இந்தத் தாமரையாள் குற்றவாளிகளைப் பிளப்பாள்; மனவடக்கம் கொண்டவர்களுக்கோ ப்ரகாசிப்பாள். நேராகவே யாசகர்களுக்குப் பயத்தைப் போக்குவாள். இங்கு தன் மணாளனின் மடியில் அமர்ந்திருக்கிறாள்.

குக்ஷிதிபுஜாம் என்னுமிடத்தில் குபுத்ரர், என்னும் பதங்களிலே போல கு என்பதற்குக் கெட்ட என்றர்த்தம். கெட்ட அரசர்கள் என்றிங்கே சொல்லப்படுபவர், கருணை இல்லாமல் பணம் மட்டும் படைத்தவர், கொடுங்கோலர், யாசகர்களை அவமதித்துக்கொண்டே கொடுப்பவர். அவர்களைச் சென்று காணும் பரிதாபநிலை துரத்ருஷ்டக்காரர்களுக்கு ஏற்படும். ஆனால் லக்ஷ்மீ கடாக்ஷம் சிறிதேனும் பெற்றவர்களுக்கு அந்த நிலை ஏற்படவே ஏற்படாது.

ஸர்வதா என்றதன் கருத்து என்னவென்றால், ஒருகாலும் அப்படி ஆகாது என்பதாம்; இவளைப் பார்த்தாயிற்றென்றால் அந்த அற்ப அரசர்களை ஒருகாலும் பார்க்க வேண்டியிருக்காது. நிச்சயமாக இவள் தன்னை வந்து பார்த்தவர்களின் தரத்தை உயர்த்துவாள்.

அத்ர என்றால் இந்தத் திருவேங்கடமலையில் என்று பொருளாம். ருஜ்வர்திநாம் என்பதற்கு இரண்டு விதமாக அர்த்தம் சொல்லலாம். ஸரளமாக யாசிப்பவர்களுக்கு என்று நாம் முதலில் சொன்ன அர்த்தம். மஹாபாரதத்து ஸாம்பன் முனிவரிடம் ஏளனமாக ஸந்தேஹம் கேட்டது போலே இல்லாமல், நேர்மையாக யாசிப்பவர்க்கு என்று அர்த்தம்; நேர்மையாக இரப்பது என்றால், அவளுடைய மேன்மையையும் தன் தாழ்மையையும் புரிந்து கொண்டு யாசிப்பது; அவளே கதி என்ற உணர்வுடன் அகிஞ்சனனாக யாசிப்பது. இது முதல் அர்த்தம். இரண்டாவது அர்த்தத்தில் ருஜு என்பது தனிப்பதம். ஆர்ஜவத்துடன் என்ற இது பயத்தைப் போக்குவதில் அன்வயிக்கும். யாசகர்களின் பயத்தை இவள் நேர்மையுடன் நீக்குகிறாள்; தட்டிக் கழிப்பதில்லை; கோணல்வழியில் போவதில்லை; ஆர்ஜவத்துடன் உதவுகிறாள்.

ஹர்தும் என்ற பதத்தின் தும் விகுதியின் கருத்து என்னவென்றால், இவள் இதற்காகவே இங்கு இருக்கிறாள்; நம்மைப்போன்ற யாசகர்களின் பயத்தை நீக்குவதற்காகவே இந்த க்ஷேத்ரத்தில் இருக்கிறாள்; நமக்குப் பகவானிடம் உள்ள அச்சத்தையும் போக்குவதற்காகவே அவன் மடியில் வீற்றிருக்கிறாள்; நாம் நிர்ப்பயராக வாழ்வதற்காகவே இவள் அர்ச்சாவதாரம் பண்ணியிருக்கிறாள்; என்பதாம்.

பிக்ஷூ என்ற பதத்தின் கருத்து என்னவென்றால், ஏழ்மையின் அடிமட்டத்தில் இருப்பவரையும் அலட்சியப்படுத்தாமல், உதவி புரிவாள்; சாப்பாட்டுக்கில்லாமல் பிச்சையெடுத்துத் திரிபவர்களையும் ஒரு பொருட்டாக மதித்து உதவுவாள்; என்பதாம்.

அமலாத்ம என்ற பதத்தின் கருத்து என்னவென்றால், வறியவர்களிலும் சிலர் தீய சுபாவம் கொண்டவர்கள்; அவர்களை விட்டுவிட்டு, மனமாசற்ற ஏழைகளுக்கு மட்டுமே திருமகள் துணைநிற்பாள் என்பதாம். மனதுக்கு மலமாவது, காமக்ரோதங்களும், நாத்திகநாட்டமும், இன்ன பிறவுமாம். இவை இல்லாதவர்க்கு இவள் துர்க்கதியைப் போக்குவாள். துர்க்கதியைப் போக்குவதாவது, நற்கதியைத் தருவது; இவ்வாழ்வில் தனத்தையும் பதவியையும் தருவது; பரலோகத்திலும் நற்பேறு தருவது; இதைச்செய்பவள் இவள்.

அஜஸ்ரம் மதா என்பதன் கருத்து என்னவென்றால், நமக்குப் பணமோ பதவியோ தேவைப்படும்போது மட்டும் திருமகளை நினைப்பதும், மற்ற நேரங்களில் கேளிக்கைகளில் ஈடுபடுவதும், என்று இல்லாமல் எப்போதும் தெய்வசிந்தை உள்ள நமக்கு அவள் இவ்வாறு துணை நிற்பாள் என்பதாம்.

அவள் குற்றவாளிகளைப் பிளப்பவள் என்பதன் கருத்து என்னவென்றால், லோககண்டகர்களாய், ஸமூஹ விரோதிகளாய்ச் செயல்படுபவர்களைச் சின்னாபின்னம் ஆக்குவதும், இவள் நம் பயத்தை நீக்கும் வழிகளில் ஒன்றாகும் என்பதாம்.

மனவடக்கம் கொண்டவர்க்கு இவள் ப்ரகாசிக்கிறாள் என்பதன் கருத்து என்னவென்றால், மனத்தைக் கட்டுப்படுத்தினால் இவளை ஸாக்ஷாத்கரிப்பது கூட ஸாத்தியமாகும்; மநஸா து விபஶ்யந்தே என்றல்லவா இறைநிலையை உபநிஷத்து கூட ஓதுகிறது? அதற்கும் மேலான பலன் உண்டோ? என்பதாம்.


சித்ரஸ்தபகத்தில் சேரும்படி இந்த ச்லோகத்தில் என்ன விசேஷம் என்றால், இது மஹாசக்ரபந்தம் என்ற கட்டமைப்பு கொண்டது. ஆறு அரங்கள் (ஆரங்கள்) கொண்ட வண்டிச் சக்கரத்தை வரைந்து கொள்வோம். சக்கரத்தின் வெளிவட்டத்தை நேமி என்போம். ஒவ்வொரு அரத்திலும் ஒன்பது எழுத்துகளை எழுதுவோம். மையவட்டத்தில் ஒரு எழுத்து. முதல் அரம், மையம், நான்காம் அரம், இவற்றைச்

சேர்த்தால் வரும் நேர்பாதையை முதல் வீதி என்போம். இந்த முதல் வீதியில் 9+1+9=19 எழுத்துகளுக்கு இடம் இருக்கும். முதல் பாகத்தில் உள்ள பத்தொன்பது எழுத்துகளை இந்த வீதியில் எழுதுவோம். இதே போல (ப்ரதக்ஷிணமாக) இரண்டாம் அரம், மையம், ஐந்தாம் அரம், இவை சேர்ந்து இரண்டாம் வீதி. இதில் இரண்டாம் பாதத்தை எழுதிக் கொள்வோம். இதேபோல, மூன்றாம் அரம், மையம், ஆறாம் அரம், இவை சேர்ந்த மூன்றாம் வீதியில் மூன்றாம் பாதத்தை எழுதிக்கொள்வோம். கடைசியாக நாலாம் பாதத்தை நேமி என்கிற வெளிவட்டத்தில் எழுதுவதற்கான முறை வருமாறு: இந்த வட்டத்தில் பதினெட்டு கட்டங்கள் இருக்கும். அவற்றுள் ஆறு கட்டங்கள் ஆறு அரங்களைச் சேர்ந்திருக்கும். ஒரு ஆரத்துக்கும் அடுத்த ஆரத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் புதிதாக இரண்டு கட்டங்கள் இருக்கும்; ஆக மொத்தம் 18 கட்டங்கள் நேமியில். கடைசி ஆரத்தில், அதாவது மூன்றாம் பாதம் முடியும் இடத்தில் தொடங்கி ப்ரதக்ஷிணமாக நேமியில் நாலாம் பாத எழுத்துகளை வரிசையாக எழுதிக்கொண்டே வந்து ஆரம்பித்த இடத்திலேயே முடிக்க வேண்டும். இந்த விந்யாஸம் (வைப்பு) ஈடேற வேண்டுமானால், மொத்தமுள்ள 76 எழுத்துகளில் 67க்கு மட்டுமே கட்டங்கள் இருப்பதால் 9 எழுத்துகள் திரும்பி வரும்படியாக, சில நிபந்தனைகள் அவசியம். அவை வருமாறு 1. முதல் மூன்று பாதங்களிலும் நடு எழுத்து (பத்தாவது எழுத்து) ஒன்றேயாக இருக்க வேண்டும். இந்த ஶ்லோகத்தில் இது தி என்ற எழுத்து. (இது சக்கரத்தின் மையத்தில் வரும் எழுத்து.) 2.முதல் மூன்று பாதங்களின் முதல் எழுத்துகளும் நாலாவது பாதத்தில் முறையே நாலாவது, ஏழாவது, பத்தாவது, எழுத்துகளாகத் திரும்பி வரவேண்டும். இந்த ஶ்லோகத்தில் இவை வ, ப, ஸ்ரீ, என்ற எழுத்துகள். 3.முதல் மூன்று பாதங்களின் கடைசி எழுத்துகளும் நாலாவது பாதத்தில் முறையே பதின்மூன்றாவது, பதினாறாவது, முதலாவது, எழுத்துகளாகத் திரும்ப வரவேண்டும். இந்த ஶ்லோகத்தில் இவை ஸாம், நாம், ரா, என்பவை. 4.நாலாம் பாதத்தின்

தொடக்க எழுத்தும் கடைசி எழுத்தும் ஒன்றேயாக இருக்கவேண்டும். இந்த ஶ்லோகத்தில் இது ரா என்ற எழுத்து. இந்த நாலு நிபந்தனைகளுக்கு உட்பட்டு சார்தூலவிக்ரீடிதவ்ருத்தத்தில் ஶ்லோகம் எழுதினால் அது தானாகவே சக்ரபந்தத்தில் வந்துவிடும்.

இதற்கும் மேலாக இந்த ஶ்லோகத்தில் வேறொரு சிறப்பும் இருக்கிறது. சக்ரபந்தத்தைக் கவனித்தால், நேமி என்கிற வெளிவட்டம் தவிர எட்டு வட்டங்களை ஏற்படுத்திக்கொள்ளலாம். இந்த எட்டில் ஒவ்வொரு வட்டத்திலும் ஆறு எழுத்துகள் இருக்கும். இந்த ஆறும் ஆறு ஆரங்களிலிருந்து, ஆரத்துக்கு ஒன்றாக வந்திருக்கும். இதில் மூன்றாவது வட்டத்திலும் ஆறாவது வட்டத்திலும் படித்தோமானால், வேங்கடயஜ்வந: லக்ஷ்மீஸஹஸ்ரம் என்று அர்த்தம். இவ்வாறாகக் கவியின் பெயரும் காவியத்தின் பெயரும் இடப்பட்டிருப்பதால் இதை கவிகாவ்யநாமாங்கித மஹாசக்ரபந்தம் என்பர். கீழேயுள்ள படத்தைப் பார்க்கவும்.

கண்ணாலே கண்டவரின் கஷ்டநிலை கடிபவளாம்.
கணவன்மடி அமர்ந்தவளாம் கமலத்தில் வசிப்பவளாம்
பயம் போக்குவதற்கென்றே பதியோடே இருப்பவளாம்
பரிசுத்த மனத்தவரின் பரிதாபம் தீர்ப்பவளாம்.



38. வேதம் தொழும் வேங்கடத்தான்

आर्तं वेदयमीड्यसारमहिमश्रीवत्सगौकस्स्पृश
त्रेताङ्कस्थिरमां तनु त्वममलाप्ता तं गिरिं वीन्द्रपा ।
यत्राटानलसप्रतापमचलद्दासे हरीन्दुस्स्थले
वन्यार्थव्रजकल्पकक्रमतया ज्ञानप्रदा नासि न ॥ ३८

ஆர்தம் வேதயமீட்யஸாரமஹிம ஸ்ரீவத்ஸகௌகஸ்ஸ்ப்ருஶ
த்ரேதாங்கஸ்திரமாம் தநு த்வமமலாப்தா தம் கிரிம் வீந்த்ரபா ।
யத்ராடாநலஸப்ரதாபமசலத்தாஸே ஹரீந்துஸ்ஸ்தலே
வந்த்யார்யவ்ரஜகல்பகக்ரமதயா ஜ்ஞாநப்ரதா நாஸி ந ॥ 38

वेद-यमि-ईड्य-सार-महिम - வேதங்களாலும் யோகிகளாலும் துதிக்கப்படும் ஸாரமான மஹிமை கொண்ட;

श्रीवत्स-ग-ओकः = ஸ்ரீவத்ஸத்தைப் பெற்றவனின் திருத்தலத்தை

स्पृश = தொடு.

आर्तं = வருந்துகிற என்னை

त्रेता-अङ्क-स्थिर-मां = த்ரேதாக்நியின் அருகில் மன்னிய செல்வம் கொண்டவனாக

तनु = ஆக்கு.

त्वं = நீ

अमला = அழுக்கற்றவள்.

तं = அப்படிப்பட்ட

गिरिं = திருமலையை

आप्ता = வந்தடைந்தவள்.

वि-इन्द्र-पा = அநாதைகளைக் காப்பவள்.

अचलत्-दासे = சலனமில்லாத அடியவர்களைக் கொண்ட

यत्र = எங்கே

अनलस-प्रतापं = அதிக ஆற்றல் உடையவராய்

हरि-इन्दुः = திருமால் என்னும் சந்திரன்

आट = ஸஞ்சரித்தாரோ

स्थले = அத்திருத்தலத்தில்

आर्य-व्रज-कल्पक-क्रमतया = நல்லோர் குழுவுக்குக் கற்பகம் என்னும் க்ரமத்தில்

वन्द्या = தொழத் தக்கவளாய்

ज्ञान-प्रदा = அறிவளிப்பவளாய்

न असि न = இருக்கிறாய்; இல்லாமலில்லை

திருவேங்கடம் என்னும் திருத்தலம் பெருமை வாய்ந்தது. வேதங்களாலும், யோகிகளாலும் போற்றப்படுவது. எம்பெருமானின் ஸ்வயம் வ்யக்த க்ஷேத்ரமானது. இதில் நீ ஸாந்நித்யம் கொள்ளு. வருந்துகிறவனைச் செல்வந்தனாக்கு; அக்நிஹோத்ரிகளுக்கு அழியாச் செல்வத்தைக் கொடு. அநாதரக்ஷணம் பண்ணுபவளாய் அந்த மலைக்கு வந்துள்ள நீ அப்பழுக்கற்றவள். அந்த மலையில் பகவானின் சக்தி அதிகமாய்த் தெரிகிறது. அடியவர் அசங்காத இடம் அது. அங்குள்ள நல்லோர் கூட்டம் நம்மால் தொழத்தக்கது. அங்கு நீ கற்பகத்தருவாய் அறிவளிக்கிறாய். இது நிச்சயம்.

இந்த ஶ்லோகத்தில் திருவேங்கடமலைக்கு ஆறு சிறப்புகளை அடுக்குகிறார் :- 1. அது வேதத்தாலும், யோகிகளாலும் போற்றப்படுவது; 2. அது ஸாரமான மஹிமை கொண்டது. 3. அது ஸ்ரீவத்ஸாங்கனின் திருத்தலமானது; 4. அங்குள்ள அடியவர்கள் எதற்கும் ஆட்டம் காணுவதில்லை. 5. அங்கு மற்ற திவ்யதேசங்களிற்காட்டிலும் அதிகமாக பகவானின் ஶக்தி வெளிப்படுகிறது. 6. அங்குள்ள நல்லோர் குழு நம் வணக்கத்துக்குரியது.

அத்தகைய திருமலையில் உறையும் திருமகளுக்கும் ஆறு சொல்கிறார் :- 1. அவள் அமலா; 2. அவள்

ஆப்தையானவள்; 3. அவள் நாதியற்றவர்களைக் காப்பாற்றுபவள்; 4. அவள் நல்லோர்க்குக் கற்பகமானவள்; 5. அவள் ஸ்பர்சத்தால் வேங்கடவனின் ப்ரதாபத்தை அதிகப்படுத்துபவள்; 6. அவள் அங்கு இல்லாமல் இருப்பதேயில்லை.

நேராகவும் மறைமுகமாகவும் ஆறு ப்ரார்த்தனைகளையும் பண்ணுகிறார். - 1. துயரை நீக்கு; 2. ஸாந்நித்யம் பண்ணு; 3. அழியாச் செல்வத்தைப் பண்ணு; 4. அநாதையைக் காப்பாற்று; 5. நல்லோர் திரளை ஏற்படுத்து; 6. அறிவளி.

வேதயமீட்ய என்பதற்கு மூன்று விதமாகப் பொருள் உரைக்கலாம். வேதங்களும், யோகிகளும் திருமலையைத் தொழுவதாகச் சொன்னது முதல் பொருள். ஸ்வாத்யாயயோகநயநா: என்ற தேசிக வாக்குப்படி வேதயமிகள் என்கிறவர் முதலாழ்வார்கள். இவர்கள் திசைதிசையின் வேதியர்கள் சென்றிறைஞ்சும் வேங்கடமே என்று வேதத்தால் வேங்கடவன் போற்றப்படுவதையும், பல வேதியர்கள் திரளாய்க் குழுமி வேங்கடத்தில் இறைஞ்சுவதையும் கூறியுள்ளார்கள். அதே கருத்துக்களை வேதவசட்ய என்றும் வந்த்ய-ஆர்ய-வ்ரஜ என்றும் இந்தக் கவியும் கூறுகிறார். அவர்கள் வேங்கடத்தை மால் உகந்த ஊர் என்றார்கள். இவரும் ஸ்ரீவத்ஸசேகாக என்கிறார். தேன் கலந்து நீட்டும் திருவேங்கடம் என்றும், வெற்பென்று வேங்கடம் பாடும்" என்றும் பலவாறாகச் சொன்னதை ஸாரமஹிம என்ற பதத்தால் கூறுகிறார். ஆகையால் முதலாழ்வார்பாடிய வேங்கடம் என்று இரண்டாவது அர்த்தம். வேதமாயும் யமீட்யமாயும் இருப்பது என்பது மூன்றாவது அர்த்தம். வேங்கடத்தையே வேதவெற்பு என்று கூறுவதால் இது பொருந்தும்.

அக்நேதாங்கஸ்திரா என்ற பதத்தால், அழியாச் செல்வம் அக்நி ஹோத்ரத்தால் கிடைப்பதாக இந்த

அக்நிஹோத்ரி கூறுவது சரியா, ஸ்வர்க்கமன்றோ அதன் பலன்? என்று கேட்டால், எந்த நித்யகர்மத்தையும் பகவத் ப்ரீத்யர்த்தமாகச் செய்யும் பரமைகாந்திகளுக்கு, அழியாச் செல்வமே பலனாகக் கிடைக்கும் என்பதாம்.

ஆப்தா என்ற பதத்துக்கு இரண்டு அர்த்தங்கள் இங்கு பொருந்தும். (மலையை) அடைந்தவன் என்பது ஏற்கெனவே கூறிய பொருள். நம்பத் தகுந்தவன் என்பது இரண்டாவது பொருள்.

வீந்த்ரபா என்பதற்கும் இரண்டு அர்த்தங்கள் ஸஹஜமாகக் கிடைப்பதில்லை. இந்த்ரன் என்றால் நாதன், தலைவன். இந்த்ரன் இல்லாதவர்கள் வீந்த்ரர்கள், அநாதைகள். அவர்களைக் காப்பாற்றுபவன் வீந்த்ரபா. இது முதலில் சொன்ன அர்த்தம். வி என்றால் பக்ஷி. வீந்த்ரன் என்றால் பறவைகளின் அரசனான கருடன். அவனுக்கும் ஸ்வாமிநியாய் இருந்து ரக்ஷிப்பவள் லக்ஷ்மி. இது இரண்டாவது அர்த்தம்.

திருமலையில் பாகவதர்கள் அசலர்கள் என்பதற்கு இரண்டு தாத்பர்யங்கள். கொள்கைகளில் ஆட்டம் காணுவதில்லை. வழுவிலாவடிமை செய்பவர்கள் என்பது முதலில் சொன்ன அர்த்தம். பல அடியவர்கள் படியாய்க் கிடந்தும், தம்பகமாய் நின்றும், செண்பகமாய் நின்றும், எம்பெருமான் திருமலை மேல் ஏதேனும் ஆயும், திருப்பணிகள் புரிவதாகக் குலசேகரர் கூற்றுப்படி, இவர்கள் அசலத்தாலர்கள் என்பது இரண்டாவது கருத்து. ஆகமத்திலும் வேங்கடத்து மரங்களெல்லாம் பாகவதர்கள் என்று கூறியிருப்பது இதற்கு வலுவூட்டுகிறது. அசலத்தாலே என்பதற்கு வேறு கருத்து கூறுவாரும் உளர். பக்தஜனங்கள் மாறி மாறி வந்துகொண்டே இருப்பதால் அவர்கள் இல்லாத நேரமே இல்லை; தாஸர்கள் இருந்தவண்ணமே இருக்கிறார்கள்; என்பது இவ்வர்த்தம்.

அநலஸப்ரதாபம் என்பதற்கும் இரண்டு விதமாக அர்த்தம் சொல்லலாம். அலஸம் என்றால் மந்தம். அதற்கெதிரானது அநலஸம். அமந்தமான, அதாவது அதிகமான ஆற்றல் என்று அர்த்தம் கிடைக்கும். இது முதல் அர்த்தம். அநலம் என்றால் நெருப்பு. நெருப்பு போல் ஸப்ரதாபம் சூடு கூடியது என்பது இரண்டாம் அர்த்தம். அது எப்படி இந்து போன்ற ஹரிக்கு நெருப்பு போல் சூடு வரும் என்று முரண்பாட்டுத் தோற்ற அணி. வேறு அர்த்தப்படி, அவரது சக்தி அதிகமாகத் தெரிகிறது என்று பொருள் கொண்டு முரணமைதி. ஆர்த்தம் அநலஸப்ரதாபம் தநு என்று அந்வயித்துத் துயருறும் என்னை ஆற்றல் மிக்கவனாக்கு என்று அர்த்தம் கூறுபவரும் உண்டு.

ஹரியை இந்து (சந்திரன்) என்கிறீரே! இது எப்படி என்று கேட்டால், ஸஹஸ்ரநாமத்தில் அம்ருதாம்ஸூத்பவன் என்றும் சந்த்ராம்ஸு: என்றும் ஸோமன் என்றும் பெயர்கள் இருப்பதாலும், குளிர்ச்சி, தாபம் தீர்த்தல், தெம்பூட்டல், முதலிய பண்புகள் திருமாலுக்கும் திங்களுக்கும் பொதுவாக இருப்பதாலும், விஷ்ணுபுராணத்தில் இந்தக் கருத்து இருப்பதாலும், இந்து தன் நிலவுடன் இலங்கு தன்மையினை என்று மும்மணிக் கோவையில் தேசிக ஸூக்தியாலும், ஹரியை இந்துவாகக் கூறியது பொருத்தம்.

வந்த்யார்யவ்ரஜகல்பகம் என்றதற்கும் மூன்று விதமாக அர்த்தங்கள் சொல்லலாம். வந்திகளான ஆர்யர்கள் என்றால் ஸ்தோத்ரம் பண்ணும் பெரியோர்கள் என்று அர்த்தம். வந்த்யர்களான ஆர்யர்கள் என்றால், தொழத்தக்க பெரியோர்கள் என்று அர்த்தம். இவர்களின் திரளுக்குக் கற்பகம். இது தவிர, வந்த்யா என்று தனிப்பதமாகவும் பிரிக்கலாம். தொழத்தக்கவள், பெரியோர் திரளின் கற்பகம், என்று தனி அடைமொழிகளாகும்.

கல்பகம் என்பதற்குக் கற்பக வ்ருக்ஷம் என்பது மட்டுமின்றி, எது ஏற்படுத்துகிறதோ அது என்றும் அர்த்தம் உண்டு. ஆகையால் கல்பகத்ருமதய: என்பதன் கருத்து என்னவென்றால், இவள் தரும் அறிவு, சான்றோர் திரளை ஏற்படுத்துகிறது; சான்றோர்களை வந்திகளாக்குகிறது; இவள் அறிவை அருளாவிடில், லக்ஷ்மீ ஸஹஸ்ரம் முதலிய ஸ்தோத்ரங்களைப் பண்ணத்தான் ஆமோ? என்பதாம்.

இல்லாமலில்லை என்று ஆணித்தரமாகச் சொன்னதன் கருத்து என்னவென்றால், பிராட்டி திருச்சானூரில் தனிக்கோவில் நாச்சியாராக இருப்பவள், திருமலையில் இல்லை என்று மருண்டுவிட வேண்டாம்; ஸ்ரீவத்ஸத்தருகில் இவள் ஸ்பர்ஸத்தால் அன்றோ, திருமாலின் அதீதமான ஆற்றல் இங்கு வெளிப்படுகிறது? என்பதாம்.

அந்விதா: என்று நாகராக்ஷரப்பதிப்பில் தீர்க்கமாகக் கொண்டுள்ள பாடம் தப்பு; அஷ்டார சக்ரபந்தத்து வேற்று ச்லோகத்துக்குச் சேராது.


இந்த ஶ்லோகத்தில் அஷ்டாரசக்ரபந்தம் அமைந்திருப்பது எப்படியென்றால், எல்லாப் பாதங்களிலும் நடு எழுத்து ஒன்றாக அமைய வேண்டும்; இந்த ஶ்லோகத்தில் இது ம என்கிற எழுத்து. மஹிம என்பதன் ஆரம்பத்திலும், த்வம் அமலா என்பதன் ஸந்தியிலும், ப்ரதாபம் அசலித் என்கிற ஸந்தியிலும், க்ரம என்ற பதத்தின் முடிவிலும் வந்துள்ள ம என்கிற எழுத்து இது. ஒவ்வொரு வரியிலும் இந்த நடு எழுத்துக்கு முன் ஒன்பது எழுத்துக்களும், பின் ஒன்பது எழுத்துக்களும் உள்ளன. எட்டு ஆரங்கள் கொண்ட சக்ரத்தில் மையத்தில் ம என்கிற நடு எழுத்தையும், ஒவ்வொரு ஆரத்திலும் வரிசையாக ஒன்பது எழுத்துகளையும் எழுதினால் ஶ்லோகம் மொத்தம் முடிந்துவிடும். ஆனால் வேடிக்கை இனிமேல் தான் இருக்கிறது! இப்பொழுது எட்டு ஆரங்களிலும் உள்ள முதல் எழுத்துகளைக் கோர்த்தால்

அவை ஒரு வட்டத்தில் வரும். இந்த ச்லோகத்தில் ஆத்ரேயவம்ஸஸம்பவஸேநு என்று வருகிறது. என்ன ஆச்சர்யம் ! இதுவும் பொருளுள்ள சொற்றொடராக இருக்கிறது. இது மட்டுமன்று- இதே போல் மூன்றும் எழுத்துகள் கொண்ட வட்டத்தை வாசித்தால் வேங்கடார்ய கவீந்துநா என்றும், ஆறும் எழுத்துகளின் வட்டத்தில் மீமாம்ஸகாவதம்ஸேந என்றும் எட்டாம் எழுத்துகளின் வட்டத்தில் வாசித்தால் ஸாநுதா கமலாலயா - என்றும் வர, இதையெல்லாம் சேர்த்தால், அடடா ! இன்னொரு முழு ச்லோகமே கிடைக்கிறது. அந்த ச்லோகத்துக்கு இந்தச் சந்தர்ப்பத்துக்குச் சேர அர்த்தமும் அமைகிறது. அது வருமாறு- ஆத்ரேய வம்ஸத்தில் குடியைக் காப்பவராக, வேங்கடார்யர் என்கிறவர், கவிகளுக்குள் இந்துவாக இருந்தார். (வேறு யாருமல்ல, இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தைப் பண்ணுகிறவர்தான்). அவர் மீமாம்ஸகர்களுள் தலைசிறந்தவர். அவரால் கமலாலயாவான அப்படிப்பட்ட திருமகள் துதிக்கப்பட்டாள் என்பது. அவர் மீமாம்ஸகராயிருந்ததால் வேதார்த்தங்களை அலசிப் பார்க்க முடிந்தது. கவீந்துவாகவும் இருந்ததால் நாமெல்லோரும் ரஸிக்கும்படி காவ்யம் இயற்றவும் முடிந்தது. அந்தக் காவ்யமே இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரம்.

இப்படி ஒரு பெரிய ச்லோகத்துள் இன்னொரு வரிசையில் இன்னொரு சிறிய ச்லோகம் அகப்பட்டுக் கொள்ளும்படி அற்புதமாகச் சித்ரபந்தம் அமைத்துவிட்டது. இது எப்படி முடிந்தது? அதற்கான விடையும் பெரிய ச்லோகத்து நாலாம் பாதத்தில் உள்ளது. வந்திக்கத் தக்கவளான அவள், தம் லோர் ஏற்படுத்தும் க்ரமப்படி, அந்தக் க்ரமத்தில் அமையும்படி, அறிவையும் கொடுக்கிறவள். க்ரமம் என்றால் வரிசை, கல்பக க்ரமம் என்றால் ஏற்படுத்தும் வரிசை, ஆர்யவ்ரஜம் என்றால்

மஹாமேதாவிகளான ஆலங்காரிகர்களின் (சித்ரபந்தங்களுக்கு வரைமுறைகளை வகுத்துக் கூறிய நல்லவர்களின்) கூட்டம்; அவர்கள் ஏற்படுத்தியுள்ள அஷ்டார சக்ர க்ரமப்படி இந்த ச்லோகத்தில் வந்திக்கத் தக்கவனும் (வந்த்யா) இவன்; அதற்கான ஜ்ஞானத்தைத் தருபவனும் அவன். (தன் சொல்லால் தான் தன்னைக் கீர்த்தித்த என்று ஆழ்வார் அருளியது போல). இது நாலாம் பாதத்தின் இன்னொரு அர்த்தம். லக்ஷ்மீ கடாக்ஷத்தால் இந்தச் சித்ரபந்தம் க்ரமப்படி அழகாக அமைந்துவிட்டது என்பதையும் ச்லோகத்துக்குள்ளேயே சொல்லிவிட்டார்.

வேதியர்கள் போற்றுகிற வேங்கடத்தில் வாழுபவள்.
வெவ்வேறு க்ரமத்தாலும் வேடிக்கைத் துதிக்குரியாள்.



அஷ்டார சக்ர பந்தம்

38. கலியிலே காப்பவள்

वेषं कलिविकटाशुभ हरमार्यत्राणदं वृषाद्रौ त्वम् ।
श्रीरयसे करुणारस पालितलोका हरस्यजस्रमकम् ॥

வேஷம் கலிவிகடாசுப ஹரமார்யத்ராணதம் வ்ருஷாத்ரௌ த்வம் ।
ஸ்ரீரயஸே கருணாரஸ பாலிதலோகா ஹரஸ்யஜஸ்ரமகம் ॥

श्रीः = ஸ்ரீ தேவியே!
करुणा-रस-पालित-लोका = அருளின் சுவையால் உலகங்களைக் காக்கிற
त्वं = நீ
कलि-विकट-अशुभ-हरं = கலியின் கொடுமையால் வந்த அசுபத்தை நீக்குவதும்
आर्य-त्राण-दं = நல்லவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதுமான
वेषं = வேஷத்தை
वृषाद्रौ = திருவேங்கடமலையில்
अयसे = அடைகிறாய்.
अजस्रं = எப்போதுமே
अकं = துன்பத்தை
हरसि = நீக்குகிறாய்.

ஸ்ரீ தேவியே! நீ உன் அருட்பெருக்கால் உலகத்தைக் காக்கிறாய். அதன் ஒரு படியாக, திருமலையிலும் ஒரு அர்ச்சாவதார வேஷம் போட்டுக் கொண்டுள்ளாய். கீதையில் சொன்னபடி இந்த அவதாரத்திலும், ஸாதுபரித்ராணமும் அதற்காகத் துஷ்டவிநாசமும் பண்ணுகிறாய். எப்பொழுதுமே துன்பத்தைத் துடைக்கிறாய்.

வேஷம் என்றதன் கருத்து என்னவென்றால், தசாவதார ஸ்தோத்திரத்தில் நிர்வர்தயந் பூமிகாம் என்றும்

நாநாக்ருதிர் நாயிகா என்றும் முதல் ச்லோகத்தில் சொன்னபடி, எல்லா அவதாரங்களுமே அபிநயங்கள்தாம். ஸ்ரீநிவாஸனுக்குத் துணைவியான பத்மாவதி அவதாரமும் இந்த வேஷங்களில் ஒன்று என்பதாம்.

கலி என்றதன் கருத்து என்னவென்றால், இந்த அவதாரம் கலௌ வேங்கடநாயக: என்ற புராணப் ப்ரஸித்திப்படி கலிகாலத்துக்கே ஏற்பட்டதென்பதாம்.

விகட என்றதன் கருத்து, கலியின் கோலாஹலத்தால் ஏற்படும் அபாயங்கள் எத்தனையோ வகைகளில் இருப்பதைப் புராணங்கள் கூறுவதை நினைவுபடுத்தலாம். விகட என்ற பதத்துக்கு இரண்டு அர்த்தங்கள்; கொடிய என்றும் விசாலமாய் மிகுந்த என்றும்; இரண்டும் இங்கு ஒத்துவரும்.

அபாயஹரம் என்றதன் கருத்து அபூதிமஸம்ருத்திம் ச என்று ஸ்ரீ ஸூக்தத்தில் சொன்னது போல் எல்லா அமங்களங்களையும் தொலைக்க வல்லவள் ஸ்ரீதேவி என்பதாம்.

ஆர்தத்ராணதம் என்றதன் கருத்து துஷ்டநிக்ரஹமும் கூட ஸாதுபரித்ராணத்துக்காகத்தான் என்பதைக் கூறலாம்.

கருணாரஸத்தைக் கூறியது ஸ்ரீநிவாஸஸ்ய கருணாமிவ ரூபிணீம் என்றுள்ள நிலையைத் தெரிவிப்பதாம். அது ஜலம் போல் ப்ரவஹிப்பதைக் கூறுவதுமாம். ஸம்பாலித என்றது செடி கொடிகளுக்கு நீர் பாய்ச்சி வளர்ப்பது போல், இவள் உலகங்களுக்குக் கருணையைப் பாய்ச்சி வளர்க்கிறாள் என்பதற்காம். பாலிதலோகா என்றது பாலித ஸப்தலோகீம் என்ற பட்டர் ஸூக்தியை நினைக்கவுமாம்.

அஜஸ்ரம் என்றதன் கருத்து, காலவிசேஷத்துக்குக் காத்திராமல், மீன மேஷம் பார்க்காமல், ஸதாஸர்வகாலமும் துயர் துடைப்பவள் என்பதாம்.

கம் என்றால் ஸுகம்; அதற்கெதிராக அகம் என்றால் துக்கம். அதை நீக்குபவள் திருமகள். காக்கப்படுவது லோகம்; இதிலும் க என்ற எழுத்து உண்டு. காக்கும் வழி கருணையால்; இதிலும் க என்ற எழுத்து உண்டு. ஆகையால் க என்ற எழுத்துக்கெதிரான அகம் தொலைந்து விடும் என்றொரு வேடிக்கையையும் காட்டியிருக்கிறார்.

அபாயம் நீக்கல், ஆர்யரைக் காத்தல், ஆன்மலை வருதல், அருளைப் பெருக்கல், அகிலம் காத்தல், அவலம் களைதல், என்கிற ஆறும் அவள் இந்த அவதாரத்தில் செய்பவை என்பது ஶ்லோகத்தின் ஸாரம்.

இது தவிர ஒரு சித்ரபந்தமும் உண்டு. கீழ்க்கண்டவாறு ஒன்பது வரிசைகளில் கட்டங்களை அமைத்துக் கொண்டு இந்த ஶ்லோகத்து எழுத்துக்களைக் கட்டத்துக்கொன்றாக, வரிசையாக எழுதிக் கொள்ளவும். முதல் வரிசையில் நடுக்கட்டத்தில் ஒரு எழுத்து மட்டும். இரண்டாம் வரிசையில் நடுவில் மூன்று கட்டங்களிலும், மூன்றாம் வரிசையில் நடுவில் ஐந்து கட்டங்களிலும், என்றிப்படி இரண்டிரண்டாகக் கூட்டிக் கொண்டே நடு வரிசை (ஐந்தாவது) வரை போகவும். பிறகு இரண்டிரண்டாகக் குறைத்துக் கொண்டே கடைசி வரிசையில் ஒரு கட்டத்தில் மட்டும் எழுதவும். இதற்குக் கவாக்ஷபந்தம் என்று பெயர். ஜன்னல் போல ஒரு அமைப்பு. 1 + 3 + 5 + 7 + 9 + 7 + 5 + 3 + 1 = 41 என்ற கணக்கில் மொத்தம் நாற்பத்தொரு எழுத்துக்கள் கொண்ட ஶ்லோகம் இவ்வாறு எழுதுவதற்கு ஒத்துவரும். 41 என்பது ஒற்றைப்படையாக இருப்பதால் எழுத்துக் கணக்கீடு - வ்ருத்தம் எதுவும் இதற்குச் சரிப்படாது. மாத்ராச்சந்தஸ்ஸான ஆர்யாவில் புனைந்துள்ளார். 12 + 16 + 12 + 18 = 60 மாத்திரைகள் என்று கணக்கு. இதில் என்ன விசித்திரம் இருக்கிறதென்றால், இவ்வாறு இடமிருந்து வலமாக எழுதி முடித்தவுடன் நடுக்கட்டங்களை மட்டும் மேலிருந்து கீழாக வாசித்தால்

அர்த்தமுள்ள புதுச்சொற்றொடர் கிடைக்க வேண்டும். இந்த ச்லோகத்தில் இது வேங்கடார்ய ஸ்ரீ ஸஹஸ்ரகம் என்பது. கவியின் பெயரும் காவ்யத்தின் பெயரும் இவ்வாறு இந்த ச்லோகத்தில் ஒளிக்கப்பட்டுள்ளன.

ஜன்னலின் நடுமையத்தில் ஸ்ரீ என்ற எழுத்தை வைத்து மங்களமாகக் பண்ணியிருப்பதும் விசேஷம்.

					वे				
				प	ङ्क	लि			
			पि	क	टा	शु	भ		
		ह	र	मा	र्य	श्रा	ण		
	भू	षा	ह्री	त्प	श्री	र	प	से	क
		रु	णा	र	स	पा	लि	त	
			लो	का	हृ	र	स्प		
				ज	स्र	मे			
					कम्				

கவாக்ஷ பந்தம்

கார்மேகம் ஒத்தவனாம், கருணைதனைப் பொழிபவனாம்,
கலிக்கொடுமை களைபவனாம். கஷ்டமெலாம் கடிபவனாம்.
உலகத்தைக் காப்பதற்காய் உருவேஷம் பூண்டவனாம்.
உத்தமரைக் காப்பவனாம். உபத்ரவத்தைத் தொலைப்பவனாம்.

40. மணாளனின் மனதில் மலர்ந்தவள்.

जयति सा जलधीश्वरकन्यका भवभयातुरमादृशपालिनी।
विकसिता रमणस्य कृपावतो मनसि पालयतो व्यसनानतम् ॥ ८०

ஜயதி ஸா ஜலதீச்வரகந்யகா
பவபயாதுரமாத்ருசபாலிநீ ।
விகஸிதா ரமணஸ்ய க்ருபாவதோ
மநஸி பாலயதோ வ்யஸநாநதம் ॥

भव-भय-आतुर-पालिनी = ஸம்ஸார பயத்தால் துன்புறும் என்போன்றோரைக் காக்கிற

सा = அந்த

जलधि-ईश्वर-कन्यका = கடலரசனின் பெண்

व्यसन-आनत = துயரத்தால் தொங்கிப் போனவனை

पालयतः = பாதுகாக்கிற

कृपावतः = அருளாளனான

रमणस्य = அன்பனின்

मनसि = மனதில்

विकसिता = மலர்ந்தவளாய்

जयति = ஜயிக்கிறாள்.

என்போன்றோர்கள் பவபயத்தில் பீடிக்கப்பட்டவர்கள். எங்களைக் காப்பாற்றுபவள் ஸமுத்ரராஜனின் திருமகள். துக்கத்தில் தொங்கிப் போனவனை ரக்ஷிப்பதற்கு அருளும் வேங்கடரமணனின் உள்ளத்தில் மலர்ந்து கொண்டே அவள் ஜயிக்கிறாள்.

ஜயதி என்றதன் கருத்து, திருமாலின் மனத்தில் என்றுமே நீங்காமல் இருந்தபோதிலும், அடியவர்களின் அல்லலை நீக்க அருளும் காலத்தில் வெற்றிவாகையுடன்

இருக்கிறாள் என்பதாம். ஸா என்பதன் கருத்து, நற்குடிப் பெருமை, அடியார்க்கு அருளும் பண்பு, மாலின் மார்பிலும் மனதிலும் மன்னிய மஹிமை, என்று இந்த ச்லோகத்தில் சொன்ன பெருமைகளையெல்லாம் கொண்டவள் என்பதாம். விகஸிதா என்றதன் கருத்து, தன் காந்தன் அடியார்க்கு அருளும்போது அவள் பூரிப்படைவதால், மலர்ச்சியுடன் மனதில் இருக்கிறாள் என்பதாம். மநஸி என்றதன் கருத்து, இவளை மனத்தில் கொண்டமை, அவன் நமக்கு அருள் புரியக் காரணமாகிறது என்பதாம். இவளன்றோ நமக்காகப் பரிபவள்? இவளிடம் மையலாலன்றோ மால் நமக்கு அருள் புரிவது? வ்யஸநத்தால் ஆநதவானவதற்கு இரண்டு தாத்பர்யங்கள். மூஞ்சியைத் தொங்கப் போட்டுக் கொண்டு, தொய்வுடன் இருப்பது ஒன்று. பணிவு காரணமாகக் குனிவது ஒன்று. இவ்விரண்டும் நமக்கு விசன நேரத்தில் ஏற்படுவது. இந்நிலையில் நம்மைக் கருணையால் காக்கிறான் ஸ்ரீரமணன். அவன் திருவுள்ளத்தில் இவள் மலர்வது நம் போன்றோரைக் காக்கும் வழிகளில் ஒன்றாகும்.

இந்த ச்லோகத்தில் என்ன சித்ரம் இருக்கிறது ? என்றால் தனியாகப் பார்த்தால் ஒன்றுமில்லை. ஆனால் அடுத்த ச்லோகத்துடன் சேர்த்துப் படித்தால் ஒரு வேடிக்கை தெரிகிறது. இந்த ச்லோகத்து இரண்டாவது, நாலாவது, ஆறாவது, என்ற இரட்டைப்படை எழுத்துக்கள் அப்படியே அடுத்ததிலும் இருக்கின்றன. முதலாவது, மூன்றாவது முதலிய ஒற்றைப்படை எழுத்துக்களை மட்டும் மாற்றியமைத்து, வேறொரு விருத்தத்தில் ச்லோகம் அமைத்திருப்பது விசித்திரம்.

கஷ்டத்தில் குனிந்தவர்பால் கருணைகொளும் காந்தனது கருத்தில்மலர் காரிகையாம் கடலரசன் கன்னிகையாம்.

—*—

41. தேகத்தில் தேசுடைய தேவதை

कायभासा चलद्विश्वमुत्कलिका देवता या स्फुरत्यादृता पावनी ।
लोकमाता मम त्रस्यतः पापतो ज्ञानमापादयत्वव्यया नाथितम् ॥

காயபாஸா சலத்விச்வமுத்கலிகா தேவதா யா ஸ்புரத்யாத்ருதா பாவநீ ।
லோகமாதா மம த்ரஸ்யத: பாபதோ ஜ்ஞாநமாபாதயத்வவ்யயா நாதிதம் ॥

काय-भासा = உடலின் ஒளியால்

या = எந்த

देवता = தேவதை

स्फुरति = மின்னுகிறாளோ

लोकमाता = அந்த ஜகன்மாதா

चलत्-विश्व-मुत्-कलिका = நடுங்கும் ப்ரபஞ்சத்துக்கு மகிழ்ச்சியைப் பண்ணுபவள்.

आदृता = ஆதரிக்கப்பட்டவள்.

पावनी = தூய்மைப்படுத்துபவள்

अव्यया = தேய்வற்றவள்.

पापतः = பாவத்திலிருந்து

त्रस्यतः = நடுங்குகிற

मम = எனக்கு

नाथितं = ப்ரார்த்திக்கப்பட்ட

ज्ञानं = அறிவை

आपादयतु = உண்டுபண்ணட்டும்.

தன் உடம்பிலுள்ள தேஜஸ்ஸால் அவள் மின்னுகிறாள். பயந்து நடுங்கும் ப்ரபஞ்சத்துக்கு அவள் நிம்மதி அளிக்கிறாள். அவளை உலகினர் ஆதரவுடன் ஆராதிக்கிறார்கள். அவள் உலகைத் தூய்மைப்

படுத்துகிறுன். உலகுக்கெல்லாம் அன்னையானவள். நான் பாவத்தால் நடுங்குகிறேன். இந்நடுக்கம் நீங்குவதற்கத் தேவையான அறிவை அவளிடம் யாசிக்கிறேன். அத்தகைய அறிவை அவள் எனக்கு உண்டாக்குவாளாக. அவள் க்ஷீணித்தல் என்பதே இல்லாதவள்.

காயபாஸா என்பதன் கருத்து, சந்த்ராம் ப்ரபாஸாம் என்றும் ஜ்வலந்தீம் என்றும் ஸ்ரீ ஸூக்தத்தில் சொன்னபடி உடலுடையவள் என்பதாம். ஒளிர்வதற்காகத் திருவாபரணங்களை அபேக்ஷிக்காமல் ஸ்வயமாகவே ஒளிரும் திருமேனி கொண்டவள் என்பதுமாம்.

சலத்விச்வம் என்றதன் இரண்டாவது கருத்து விநஷ்டப்ராயமபவத் என்று ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் சொன்னபடி, போய்விடுகிற ப்ரபஞ்சம் என்பதாம்.

முத்கல்பிகா என்றதன் கருத்து, த்வயோதாநீம் ஸமேதிதும் என்றபடியும், ஆஹ்லாதஜநநீ என்ற திருநாமப்படியும், மகிழ்ச்சியூட்டுபவள் என்பதாம்.

ஸ்புரதி என்றதன் கருத்து, வித்யுல்லேகேவ பாஸ்வரா என்றபடி மின்னுகிறுள் என்பதாம். பாவநீ என்றது, அவளுக்கு ஸாக்ஷி பெயர் இருக்கும்படி, பரிசுத்தி பண்ணுபவள் என்பதாம்.

பாவ நடுக்கத்தை அறிவளித்துத் தீர்ப்பது எங்ஙனம் என்றுல், செய்த பாவத்துக்கு என்ன கழுவாய் என்கிற அறிவும், இனிப்பாவம் செய்யாதிருக்க என்ன வழி என்கிற அறிவும், பாவத்திலிருந்து விடுதலை தரும் முழுவறிவு நிலையான மோக்ஷமும், இவளால் கைகூடும் என்பதாம். யாசித்ததை உண்டுபண்ணட்டும் என்றதன் கருத்து என்னவென்றுல், ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே என்கிற ப்ரமாணவசனப்படி, நான் ப்ரார்த்தித்தாலல்லது கிடைக்காது என்றறிந்து வேண்டினேன்; அவள்

தருவானாக என்பதாம். இந்த ச்லோகத்தில் சரிபாதி எழுத்துக்கள். அதாவது மொத்தமுள்ள 46 எழுத்துக்களில் 24 எழுத்துகள், அதாவது ஒன்றுவிட்டு ஒன்றாக வரும் எழுத்துகள், போன ச்லோகத்திலிருந்து எடுத்தவை. இரண்டையும் சேர்த்துக் கீழ்க்காட்டியபடி எழுதினால் கோமூத்ரிகாபந்தம் அமைந்திருப்பது தெரியும்.

உலகுக்கு மாதாவாம், உடலொளியால் மின்னுபவளாம்.
உதறலும் எனக்கில்லை உண்டாக்க வல்லவளாம்.

—*—

42. பிழைகளைப் பொறுப்பவள்.

विदिता निगमे विषमेषुतनौ रसिके निरता वृषभाद्रिविभौ ।
मम दास्यवतो विमलावसथे कृपया दुरितं सहसे कमले ।। ४२

விதிதா நிகமே விஷமேஷுதநௌ ரஸிகே நிரதா வ்ருஷபாத்ரிவிபௌ
மம தாஸ்யவதோ விமலாவஸதே க்ருபயா துரிதம் ஸஹஸே கமலே ॥ 42

विमल-आवसथे = நிர்மலமான இருப்பிடம் கொண்டவளே!

कमले = தாமரையாளே!

निगमे = வேதத்தில்

विदिता = ப்ரஸித்தமான நீ

विषम-इषु-तनौ = மன்மதனுருவிலும் ப்ரஸித்தமானவன்.

रसिके = சுவையறிந்த

वृषभाद्रि-विभौ = எருதுமலை நாயகனிடம்

निरता = ரதி கொண்டவள்.

दास्यवतः = அடிமைபூண்ட

मम = என்

दुरितं = பாவத்தை

कृपया = தயையினால்

सहसे = சகித்துக் கொள்கிறாய்.

கமலையே ! உன் இருப்பிடம் விமலமானது. நீ வேதப்ரஸித்தமானவள். மன்மதமன்மதனும் ரஸிகனுமான திருவேங்கடமுடையானிடம் நீ ரமிப்பவள். அடியவனான என் பிழையைத் தயை செய்து பொறுத்தருளுகிறாய்.

வேதப்ரஸித்தி எப்படியெல்லாம், ஸ்ரீஸூக்தாதிகளில் மிக உயர்த்திக் கூறியபடியாலாம். விமலமான இருப்பிடம் என்றதன் கருத்து என்னவென்றால், விஷ்ணுவக்ஷஸ், தாமரைக்குளம், முதலிய பவித்ரஸ்தானம் என்பது மட்டுமின்றி, இவள் இருக்குமிடமெல்லாம் விமலமாகிவிடும் என்பதைக் கோகுதத்தில் (பகலின் பின்புறத்தில்) காண்பதால், இவள் விமலமான வீடு கொண்டவள் என்பதாம். அருள், பொறுமை, என்ற பண்புகள் இரண்டும் இவளிடம் உள்ளன; குறிப்பாக அடியவனான என் பிழை விஷயத்தில் இவ்விரண்டும் செயல்படுகின்றன.

தனியாக இந்த ச்லோகத்தில் சித்ரபந்தம் ஏதும் இல்லாவிடினும் அடுத்த ச்லோகத்தையும் சேர்த்துப் பார்க்கும்போது ஏற்படும் சித்ரபந்தத்தைப் பின்னர் விளக்குவோம்.

ஆரணத்தில் அறிவித்த ஆள்மலேசன் அணங்காளாய்
அடியேனின் அபராதம் அருளாலே பொறுக்கின்றாய்.

—•—

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

43. செல்வம் சேர்க்கும் செய்யாள்.

समस्तसेव्या सदरिक्षयादिकृत् लसद्विलासा विभवप्रदा मम ।
रविप्रभा त्वं वृषरक्षिके स्फुर स्तुतक्रमे देवि जगद्धिता भुवि ॥४३॥

ஸமஸ்தஸேவ்யா ஸதரிக்ஷயாதிக்ருத்
லஸத் விலாஸா விபவப்ரதா மம ।
ரவிப்ரபா த்வம் வ்ருஷரக்ஷிகே ஸ்புர
ஸ்துதக்ரமே தேவி ! ஜகத்திதா புவி ॥43॥

वृष-रक्षिके *தர்மத்தைக் காப்பவளே !* देवि *ஸ்ரீதேவியே!*
त्वं நீ, समस्त-सेव्या *எல்லோராலும் ஸேவிக்கத் தக்கவள்.*
सत्-अरि-क्षय-आदि-कृत् *நல்லோரின் பகைவரை அழித்தல் முதலியதைப் பண்ணுபவள்.*
लसत्-विलासा *விளங்குகிற அழகம்சம் கொண்டவள்.* मम *எனக்கு*
विभव-प्रदा *செல்வத்தை வழங்குபவள்.* रवि-प्रभा *ஸூர்யன் போல் தேஜஸ் கொண்டவள்.*
स्तुत-क्रमे *துதிக்கப்பட்ட முறைமை உடையவளே!*
जगत् - हिता *உலகத்துக்கு இதமானவளாக* भुवि *நிலவுலகில்* स्फुर *பிரகாசி.*

உன்னைப்பற்றி இதோ ஒன்பது வாக்கியங்கள் ஸ்ரீதேவியே ! நீ தர்மத்தை ரக்ஷிக்கிறாய். எல்லோராலும் வணங்கப்படுகிறாய். நல்லோரின் பகைவர்களை அழிக்கிறாய். அழகம்சங்களால் விளங்குகிறாய். எனக்கும் செல்வத்தைத் தருகிறாய். சூரியன் போலப் பிரகாசிக்கிறாய். உன் முறைமையை எல்லாரும் போற்றுகிறார்கள். உலகனைத்துக்கும் இதம்

பண்ணுகிறாய். நிலவுலகில் நீண்டகாலம் பிரகாசித்துக் கொண்டிரு.

ஸேவ்யா என்பதன் கருத்து என்னவென்றால், இம்மைப்பயன் நாடுவோர், மறுமைப்பயன் வேண்டுவோர், மோக்ஷார்த்தீ, என்ற எல்லா வகுப்பினருமே திருமகளை ஸேவிக்கிறார்கள் என்பதாம். இந்த்ராதி தேவர்கள், ஸநகாதி முனிவர்கள், யாமுநாதி குருக்கள், பணித்தானைக்காரர்கள், என்று எல்லோருமே ஸேவிக்கிறார்கள் என்பதுமாம். வெறும் கைகூப்பலோடு நிற்காமல், தலைவணங்கி ஸேவிக்கத்தக்கவள் என்றும் இப்பதத்துக்கு அர்த்தம் உண்டு.

வைரீ என்றதன் கருத்து, நல்லோரின் பகைவரைத் தம் பகைவராய்ப் பாவித்து அழிப்பவன் என்பதாம். ஆதி என்ற பதத்தால், பகைவரை அழிப்பது தவிர நல்லோர்க்கு மேலும் பல உதவிகளைச் செய்கிறவன் என்கிறார். அறிவளித்தல், பயம் போக்கல், நிம்மதி கொடுத்தல், என்று எத்தனையோ.

விலாஸம் என்ற சொல்லுக்கு இரண்டு முக்கிய அர்த்தங்களை இங்கே கொள்ளலாம். க்ரீடை, விளையாட்டு என்பது ஒரு பொருள். முற்கூறிய வைரிக்ஷயம் முதலியன இவனது விளையாட்டில் அடங்கும். இத்தகைய விளையாட்டினால் உல்லஸிப்பான் இவன். விலாஸம் என்பதற்குப் பெண்மை மிளிரும் அழகும் பொருளாகும். இதனாலும் இவன் விளங்குகிறான்.

இவன் தர்மத்தை ரக்ஷிப்பதாகச் சொன்னது முற்கூறிய வைரிக்ஷயத்தின் வாயிலாகவும், இவன் தரும் பொருட்செல்வத்தைப் பயன்படுத்தி அறம் செழிப்பதாலும், தர்மதேவதையும் இவனது ரத்யகோடியில் இருப்பதாலும், இவ்வாறாகப் பலவகைகளில் பொருந்தும்.

ஸ்துதக்ரமே என்றதன் கருத்து வருமாறு: இவளது ஒழுகுமுறையை, மஹாபாரதாதிகளில் இவளே வெளியிட்ட க்ரமத்தை, வ்யவஸ்தையை, எல்லோரும் புகழ்கிறார்கள். இவள் அடிவைத்த இடமெல்லாம் போற்றப்படுகிறது என்கிற அர்த்தமும் மிகப் பொருந்தும்.

இவளை ஜகத்ஹிதா என்றது இவளுக்கு *ஸர்வபூதஹிதப்ரதா* என்கிற திருநாமம் அஷ்டோத்தரத்தில் ப்ரஸித்தமாயிருப்பதாலும், லோகக்ஷேமத்திற்க்காகவே திருமலையில் இவள் வந்துள்ளதாலும், யுக்தமாகிறது. நித்யவிபூதியில் இருப்பது போதாது; இந்தப் பூலோகத்திலும் குறிப்பாகத் திருவேங்கடத்திலும் இவள் இனிமேலும் ப்ரகாசிக்கவேண்டும் என்பது இந்த ச்லோகத்துப் பிரார்த்தனை.

இப்போது போன ச்லோகத்துடன் சேர்த்து வரும் சித்ரபந்தத்தை விளக்குவோம். போன ச்லோகத்தின் முதலெழுத்து இந்த ச்லோகத்தில் கடைசி எழுத்து. போன ச்லோகத்தின் மூன்றாம் எழுத்து இந்த ச்லோகத்தில் கடைசியிலிருந்து மூன்றாம் எழுத்து. இப்படியே ஐந்தாம் எழுத்து, ஏழாம் எழுத்து, என்று எல்லா ஒற்றைப்படை எழுத்துகளும். ஒன்றோ இரண்டோ அல்ல. இருபத்துநாலு எழுத்துகள் இப்படி வந்திருக்கின்றன. போனச்லோகத்தை நேர்வரிசையிலும் இந்த ச்லோகத்தைத் தலைகீழ் வரிசையிலும் எழுதினால் கோமூத்ரிகாபந்தம் வரும்.

44. நல்லோர் நாடும் நாயகி.

नाशितापत्तिना नाकसद्मादिना नादिनेत्राधुना नाथिनीं विष्णुना ।
नापचारादिनानामयात्सज्जना नावितुं मां विना नाश्रयान्यागना ॥४४॥

நாஶிதாபத்திநா நாகஸத்மாதிநா
நாதிநேத்ராதுநா நாதிநீம் விஷ்ணுநா ।
நாபசாராதிநாநாமயாத் ஸஜ்ஜநா-
நாவிதும் மாம் விநா நாஶ்ரயாந்யாகநா ॥44॥

नाशित-आपत्तिः ஆபத்துகளை அழிப்பவரும்

नाक-सत्-आदिमः தேவர்களுள் முதல்வரும்

अनादि-नेता ஆதியே இல்லாத தலைவருமான

विष्णुना திருமாலோடு नायिनीं நாதனுள்ளவளான मां லக்ஷ்மியை

विना தவிர अधुना இப்பொழுது

अपचार-आदि-नाना-आमयात् அபசாரம் காரணமான பலவித நோயிலிருந்து

सज्जनान् நல்லவர்களை आवितुं சக்தியும் காப்பதற்கு न கிடையாது.


आश्रय-अन्या ஆச்ரயமாகாத வேறொருத்தி न धन्या கிடமானவள் அன்று.

[illegible] என்கிறவள் விஷ்ணுவை நாதனாகக் கொண்டவள். அந்த விஷ்ணு ஆபத்துகளை அழிப்பவர்; அமரர்களுக்கு ஆதியானவர்; அநாதியான தலைவர். அவருக்கு வல்லபயான திருமகளே நல்லோரை நாலாபக்கங்களிலும் காப்பாற்றுகிறாள். நானாவித அபசாரங்களால் நேரிடும் பிணிகளிலிருந்து காக்கிறாள். அவளைத்தவிர வேறு யாரும் இவ்வாறு செய்வதில்லை; செய்யவும் முடியாது. புகலாக இல்லாதவர்கள், ஆச்ரயிக்கத் தகாதவர்கள், உறுதியாக இருப்பதில்லை; அவர்களை அணுக வேண்டாம். லக்ஷ்மியையே ஆச்ரயிப்போம்.

பெருமானை நாசிதாபத்தி என்பது ஏனென்றால் [illegible] ஆபத்திலிருந்து [illegible] அவர் இருப்பதாலாம். அவரைத் தேவர்களுள் முதல்வராகச் சொன்னது ஏனென்றால் தேவானாம் விஷ்ணு: பரம: என்று வேதமே அவ்வாறு கூறுவதாலாம். ஆதி என்று

சொன்னவுடனே அவரை அநாதி என்றது ஏனென்றால், அவர் மூலகாரணமாயிருப்பவர்; அவருக்கு மூலமாக வேறொன்றும் கிடையாது; என்பதைக் காட்டவுமாம். ஆதியும் அநாதியுமாக ஒருவரைச் சொல்வதில் விரோதாபாஸ அலங்காரத்துக்காகவுமாம். அநாதிநேதா என்பதற்கு இரண்டு கருத்துகள். நித்யவஸ்துக்களுக்கெல்லாம் தலைவர் என்பதும், அநாதியான தலைவர் என்பதும். பிணிகளுக்கெல்லாம் காரணமாக அபசாரத்தைச் சொல்கிறாரே, அசுத்தி, பூர்வஜந்மபாபம், அபத்யம், என்று வேறு பலவும் உண்டே, என்று கேட்டால், இவையும் அபசாரத்திலே முடிவுறுவதாகவோ, அபசாரத்தின் விளைவுகளாகவோ இருப்பதால், ஶரீரரக்ஷணம் பண்ணச் சொல்லும் ஶாஸ்த்ரத்தை மீறுவதும் அபசாரமேயாகையால், வ்யாதி, மநோவ்யாதி, ஸம்ஸாரமாகிற வ்யாதி, என்று பலவகைகள் இருப்பதாலாம்; ஒவ்வொன்றிலும் அவாந்தரமாகப் பல வகைகள் இருப்பதாலுமாம். லக்ஷ்மியைத் தவிர வேறு கதி கிடையாது என்கிறாரே, பகவான் இல்லையோ? என்று கேட்டால், அவரும் லக்ஷ்மியைத் தவிர்த்தால் புகலாகமாட்டார் என்று கருத்து.

நாலாம் பாதத்துக்கு நாலு விதமாக அர்த்தம் சொல்லலாம். பதவுரையில் சொன்னது முதல் வழி. அநாஸ்ரயாநாம் ஸஜ்ஜநாநாம் என்று அன்வயித்து, அகதிகர்களான நல்லோருக்கு இவளொருத்தியே கதி என்று அர்த்தம் சொல்லி, யா அநகா என்று பிரித்து, எந்த லக்ஷ்மி மிகவும் ஸரணமானவளோ என்று பொருள் கொள்வது இரண்டாம் வழி. அநாஸ்ரயா அந்யா என்று பிரித்து தனக்கே ஆச்ரயம் காணாத வேறொருத்தி நமக்குத் திடமான தாங்கியாவாளோ? என்றுரைப்பது மூன்றாம் வழி. சில நாகராக்ஷரப்பதிப்புகளில் பாடத்தைச் சிறிது மாற்றிச்சொல்வது நான்காம் வழி.



இந்தச்லோகத்தில் நா என்கிற ஒரு எழுத்து பதினாறு தடவை, ஒவ்வொரு பாதத்தின் தொடக்கத்திலும் இறுதியிலுமாக வந்திருப்பது நம் பார்வையிலிருந்து தப்ப முடியாது. மொத்தமுள்ள 48 எழுத்துகளில் மூன்றிலொரு பங்கு ஒரே எழுத்தாக இருப்பதால் வாசிக்கும்போதே இது தெரிந்துவிடும். எட்டிதழ்த் தாமரையில் மையத்துக்கர்ணிகையில் நா என்கிற எழுத்தை வைத்து, ஒவ்வொரு இதழிலும் ப்ரதக்ஷிணமாக ஒவ்வொரு பாதத்தை எழுதினால் இன்னொரு வேடிக்கையும் புரியும். தாமரையிதழ்களின் நுனிகளில், ஒவ்வொரிதழுக்கு ஒன்று என வரும் எட்டு எழுத்துகளையும் சேர்த்துப் படித்தால் வேறொரு வாக்கியம் கிடைக்கிறது. பத்மோத்ராவிராஜமாநபா என்பது அது. மதிப்புக்குரிய பத்மாதேவி இந்தத் தாமரையில் தோன்றினாள் என்று அந்த வாக்கியத்துக்கு அர்த்தம். அப்படியொரு விசித்திரத்தை உள்ளடக்கிய அஷ்டதள பத்மபந்தம் இது.

45. பிணியிலாப் பேறு பெறுவிப்பவள்.

भक्तिजिह्वासुधा नित्यमिष्टक्रिया
कारिका कारिकाकारिकाकारिका ।
सा शुभा यासि मे त्वं समृद्धिं रमे
नामयानामयानामयानामया ॥ ४५

பக்திஜிஹ்வாஸுதா நித்யமிஷ்டக்ரியா
காரிகா காரிகாகாரிகாகாரிகா ।
ஸா சுபா யாஸி மே த்வம் ஸம்ருத்திம் ரமே
நாமயாநாமயாநாமயாநாமயா ॥ 45

रमे = ரமாதேவியே!

भक्ति-जिह्वा-सुधा = பக்தி எனும் நாக்குக்கு அமுதம் போன்றவள்.

नित्य என்றும்

इष्ट-क्रिया-कारिका = விரும்பும் செயல் செய்விப்பவள்.

कारिका-कारि-काक-अरिका = துிம்மை பண்ணும் காகத்தைப் பகையாகக் கொண்டவள்.

शुभा =மங்களமானவள்.

सा = அந்தகைய

त्वं = நீ

मे = எனக்கு

समृद्धिं = செழிப்பை

यासि नाम = அடையத்தான் அடைவிருய்

या = எந்த நீ

अनामयानां = பிணியில்லாத

अयानां = நற்செயல்கள்

अया = அடையவளோ!

நாக்குக்கு அமுதம் சுவை பயப்பது போலே, பக்திக்கு நீ போக்யமாகிறாய் ரமாதேவியே! உன் ப்ரீதிக்காக நாங்கள் அநுஷ்டிக்கும் க்ரியைகளையெல்லாம் உண்மையில் நீதான் பண்ணுவிக்கிறாய். துன்புறுத்தும் காகமொன்று உன் பகைவாய் முளைத்தது. அதற்கும் எனக்கும் நீ மங்களத்தைப் பண்ணுகிறாய். தொய்தொடியில்லாமல், நற்பணிகளின் செழிப்பை நீ எனக்குப் பண்ணுகிறாய்.

அலசிப் பார்த்தால் இந்த ச்லோகத்தில் பிராட்டியின் பத்துப் பன்னிரண்டு பெருமைகள் பேசப்படுகின்றன. முதலாவது, பக்தியில் அவள் போக்யமானவள் என்பது. இங்கு பக்திஜிஹ்வக என்றும் பக்தஜிஹ்வா என்றும், பக்திசிஹ்ந என்றும் பாட பேதங்கள் உள்ளன. நாவுக்கு அமுதம் போல் பக்திக்கு அவள் இனிமையையும் புஷ்டியையும் இறவாமையையும் ஊட்டுபவள்; அவளால் நமது பக்தி மகிழ்ச்சி பயப்பதாகவும், தெம்புள்ளதாகவும், அழியாததாகவும் இருப்பதால், அவளை பக்திக்கு அம்ருதமாகக் கூறுவது பொருந்தும். பக்தர்களின் நாக்கில் அவள் நாமம் இருக்கும்; பக்தியில் அவளே இருப்பாள்; ஆகையால் நாக்கில் அம்ருதம் போல் பக்தியில் லக்ஷ்மி என்கிறார்.

நித்யமும் இஷ்டமான கர்மங்களை அவள் பண்ணுவிப்பதாகச் சொல்வதன் கருத்து என்னவென்றால், ஸாத்விக த்யாகத்தில் ஸ்வஸ்மை ஸ்வப்ரீதயே ஸ்வயமேவ காரயதி என்று சொல்கிறபடி, தனக்கு இஷ்டத்துக்காக, நம்மைக் கொண்டு தானே க்ரியைகளைப் பண்ணுவிக்கிறாள் என்பதாம். நாம் பண்ணும் நித்ய கர்மங்களில் நமக்கு அபிருசியை ஏற்படுத்தி, இஷ்ட க்ரியைகளாகப் பண்ணுவிப்பவள் என்பதுமாம்.

காரிகா என்றால் தாங்கமுடியாத தொல்லை, சித்ரவதை, யமயாதனை. விததார ஸ்தநாந்தரே என்று வால்மீகி சொன்னபடி ஹிம்ஸை (காரிகா) பண்ணின

காகத்தை இவன் அரியாக (பகைவனாக) உடையவன். அந்தக் காகத்திடமும் கருணை கொண்டவனை, இவ்வாறு கூறலாமோவெனில், ஆரம்பத்தில் காக்கை இவனிடம் பகைமை பூண்டிருந்ததைச் சொல்கிறார். இவன் அரி என்னவில்லை. அல்லது காரிகா - காரிகா - அகாரிகா என்று பிரித்து, ஹிம்ஸை பண்ணுகிற அற்பர்களுக்கும் ஹிம்ஸை பண்ணாதவன் என்று பொருள் கொள்ளலாம். அல்லது ஹிம்ஸை பண்ணின காகத்துக்குப் பகைவனான ராமன் காரிகா-காரி-காக-அரி. அவனுக்கு கம் என்கிற ஸுகத்தைத் தன்னிடம் கொண்டவள் காரிககாரிககாரிகா என்று ஸீதாதேவியைச் சொல்லலாம். காளிகா என்று புது மேகக் கூட்டத்துக்குப் பெயர். ரவும் லவும் ஒன்றே என்றபடி, காரிகா என்பதும் புது மேகக் குவியலாகும். இம்மேகத்தின் உருவம் பூண்டது காரிகா-ஆகாரி. கருத்துத் திரண்டு சுருண்ட உருவம் பிராட்டியின் கூந்தலுக்கு. கம் என்றால் தலை இங்கு கேசத்தைக் கூறும். கார்மேகக் குவியல் போன்ற கூந்தலுடையவள் காளிகா-ஆகாரி-கா ஆகிறாள்.

ஸாபாய யாஸி என்று பிரித்து மங்களமானவள் எனக்கு ஸம்ருத்தியை அடைகிறாய் என்று அர்த்தம் சொன்னோம். ஸாபாய அஸி என்று பதம் பிரித்து என் மங்களத்துக்காகவே நீ இருக்கிறாய் என்று பொருள் கொள்வது மேலும் தகும்.

ஆமயம் என்றால் பிணி. இதற்கெதிராக அநாமயம் என்றால் ஆரோக்யம். அயம் என்றால் நற்பணி. இவற்றுக்கெல்லாம் ஸம்ருத்தியை அடைகிறாய் என்பது ஒரு அர்த்தம். அல்லது, அநாமயாநாம் என்பதை அயாநாம் என்பதற்கு அடைமொழியாக்கி, நற்பணிகளுக்கு எந்தக் கோளாறும் வராதபடி, ஆமயமில்லாத அயங்களின் ஸம்ருத்தியைப் பண்ணுகிறாய் என்பதும் உசிதம். அயா: (அடைந்தாய்) என்று பதம் பிரித்து உரை நூல் ஒன்றில் உள்ளது. அப்போது மற்ற பதங்களைப் பிரிப்பது மேலும் சிக்கலாகிறது. ஸஹஜமான அர்த்தத்துடன் மட்டும் திருப்தி கொள்வோம்.

யமகம் என்கிற சித்ரம் இரண்டாவது பாதத்திலும் நாலாவது பாதத்திலும் நிறையவே இருக்கிறது. ஒரே மூன்றெழுத்துப் பதம் நாலு தடவை தொடர்ந்து வந்துள்ளது. காரிகா என்பது நாலு தடவை. நாயயா என்பது நாலு தடவை.

தொண்டர் நாக்கமுதாவாய்.
தொழிலிஷ்டம் செய்விப்பாய்.
தொல்லை தரில் தொலைவிப்பாய்.
தொய்வின்றிச் சுபம் தருவாய்.

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

46. வாக்கு வன்மையை வருவிப்பவள்.

गृहाणि नस्त्वं परमे रमेरमे
ह्यपाकृतापावधिकाधिकाधिका।
जडा अपि त्वन्नयनायनायना:
अहो नृकर्णोत्सवदा वदावदा: ॥ ४६

க்ருஹாணி நஸ்த்வம் பரமே ரமேரமே
ஹ்யபாக்ருதாபாவதிகாதிகாதிகா ।
ஜடா அபி த்வந்நயநாயநாயநா:
அஹோ ந்குகர்ணோத்ஸவதா வதாவதா: ॥ 46

परमे = உயர்ந்த
रमे = லக்ஷ்மியே !
त्वं = நீ
न: = எங்களுடைய
गृहाणि = இல்லங்களை
अरं = விரைவில்
एहि = வந்தடை.
अपाकृत-अपावधिक-आधिका = நீ எல்லையற்ற மநநோயை நீக்குபவள்.
अधिका = மேம்பட்டவள்.
जडा: अपि = மக்குகள் கூட
त्वत्-नयन-अयन-अयना: = உன் கண்வழியை அடைந்தவர்களாய்
वदावदा: = பேச்சாளர்களாகி
नृ-कर्ण-उत्सव=दा: = மக்களின் காதுகளுக்கு இன்பம் பயப்பவர்கள்.
अहो = ஆச்சர்யம் !

பரமதேவதையான லக்ஷ்மியே ! நீ எங்கள் இல்லங்களில் வந்து குடிகொள். எங்கள் மனநோய் இப்போது அளவின்றி இருக்கிறது. உன் ஸாந்நித்யத்தால் அது தொலையும். அது மட்டுமன்று. மக்குகள் கூடஉன்

கடாக்ஷத்துக்கு இலக்கானால் பேச்சுத் திறமை பெற்றவர்களாகி, மக்களின் காதுகளைமகிழ்விக்க வல்லவர்கள் ஆகிறார்கள்.

ரமே ரமே ரமே என்றும், திகா திகா திகா என்றும், நயா நயா நயா என்றும், ஷதா ஷதா ஷதா என்றும், ஒவ்வொரு பாதத்தின் முடிவிலும் யமகம் அமைத்திருப்பது இந்த ச்லோகத்துச் சித்ரம் ஆகும்.

ஆதி என்றால் மனநோய்; கவலை, உளைச்சல், பித்து, துராஹங்காரம், இதெல்லாம் நம்மை உலுக்கி எடுக்கின்றன. அவை அபாவதிகமாக, அதாவது திரவதிகமாக, ஏராளமாக, இருக்கின்றன. எங்கள் க்ருஹங்களில் லக்ஷ்மி ஸாந்நித்யம் இருந்தால், இவையெல்லாம் பறந்து போய்விடும். நிம்மதி உண்டாகும். அவள் கடாக்ஷம் விழுமிடத்தில் சென்று, அதற்கு இலக்காகிவிட்டால், புலமை கூட வந்துவிடும். ஜடர்கள் கூட வாக்குவன்மை பெற்று விடுவார்கள். கேட்பவரின் காதுகளுக்கு உத்ஸாஹம் ஏற்படும்படிப் பேசவல்லவர் ஆவார்கள். இந்த சித்ரஸ்தபகம் கேட்பவரையெல்லாம் மகிழ்விக்கிறதே, இதற்குக் காரணம் அவளது கடாக்ஷப் பாதையில் நான் இருந்ததாலன்றோ என்று கவி கருதுகிறார். சொந்த அநுபவத்தை உத்தரார்த்தத்தில் கொட்டியிருக்கிறார்.

கர்ணேஷுத்ஸவதா என்றதன் கருத்து, செவிக்கினிதாய், கேட்டாரைப் பிணிக்கும் தகையவாய், பேச்சாற்றல் பெறுவார்கள் என்பதாம். ஜடா அபி என்றதன் கருத்து, உன் கடாக்ஷப் பாதையில் வருவதற்கு முன் ஒரு சிறிதும் வாக்கு வன்மையே பெற்றிராத பாமரர்களும் மூடர்களும் கூட உன் அருட்பார்வையின் விளைவாகப் பெரியதொரு மாற்றத்தைப் பெறுவார்கள் என்பதாம். அயநா: என்றதன் கருத்து - அந்தப் பார்வை வழியில் வருவதே போதும், உன் கடாக்ஷம் லவலேசம் படுவதே போதும், இந்தப் பலன் கிடைப்பதற்கு; மற்றபடி உபாஸனம், ஸ்தோத்ரம்,

தொழுகை, இதெல்லாம் கூட அதிகப்படியாம், என்பதாகும். அரம் என்ற பதத்தின் கருத்து - இனியும் தாமதித்தால் எங்களால் தாங்க முடியாது; விரைவிலே எங்கள் க்ருஹங்களில் உன் ஸாந்நித்யம் ஏற்படட்டும், என்பதாம்.

அஹோ என் தன் கருத்தை மூன்று விதமாகச் சொல்லலாம். ஜடர்கள் கூடத் தங்கள் மடமை நீங்கப் பெற்று, வதாவதர்கள் (பேச்சுத் திறன் உள்ளவர்கள் ஆகி மக்கள் காதுகளை மகிழ்விக்கிறார்களே; இது ஆச்சர்யம் என்பது ஏற்கெனவே சொன்ன அர்த்தம். புலவர்களுக்கும் கஷ்டமாயிற்றே, பேச்சால் கவர்வது என்பது, தனிப் பெரும் திறமை ஆயிற்றே, இது மந்தமதிகளுக்குக் கூட (பண்டிதர்கள் ஆகாவிட்டாலும்) திருமகள் கடாக்ஷத்தால் அமையப் பெறுவது வியப்பாக இருக்கிறதே, என்று இரண்டாம் கருத்து. கண்ணின் வழிபட்டவர்கள் வாக்கில் சிறந்து காதுக்கு உற்சவம் பண்ணுவது வியப்பன்றோ, வெவ்வேறு இந்த்ரியங்கள் ஆயிற்றே அவை; அஹோ! என்று மூன்றும் கருத்து.

மக்குகட்கும் மதி பெருக்கி மகிழ்விக்கும் மொழி தருவாள்.
மனநோயை மாற்றிடுவாள் மலராள் எம் மனை வருக.

க்ருஹாணி என்ற முதல் பதத்தில் ஒரே ஒரு எழுத்தை மட்டும் மாற்றி, க்ருஹாண என்றாக்கி, ஒரு பாடபேதம் உண்டு. இந்த மாறுதலால் பெயர்ச்சொல் வினைச்சொல்லாக மாறுவது மட்டுமின்றி, புதிதான ஒரு தாத்பர்யமும் கிடைக்கிறது. ந: என்ற அடுத்த பதத்துக்கு எங்களுடைய என்றும், எங்களை என்றும், இரண்டு அர்த்தங்களும் இருப்பது இதற்குத் துணை புரிகிறது எங்களின் இல்லங்களுக்கு விரைவில் வா, என்பதற்குப் பதிலாக, விரைவில் வா, எங்களை ஏற்றுக்கொள், என்று அர்த்தம் கிடைக்கிறது. எங்களை உன்னிடம் அர்ப்பித்து விட்டோம். நீ ஸ்வீகரிக்க வேண்டும், என்று வேண்டியதாகிறது. பரமே

என்பதற்குப் பரமமானவளே என்று விலியாக அர்த்தம் சொல்லாமல், பரமனிடத்தில் என்று அர்த்தம் சொல்வாரும் உண்டு. எங்களை ஏற்றுக் கொண்டவுடனே பரமனிடத்தில் விரைவில் வா என்றோ, பரமனிடத்தில் எங்களை ஏற்றுக்கொள், விரைவில் வா என்றோ, பரமனிடத்தில் வதாவதா (பேச்சுத் திறமை கொண்டவளாகி) என்றோ, அன்வயித்து, அவளுடைய சிபாரிசு வேண்டும் என்று ப்ரார்த்திப்பதாக அர்த்தம். அதாவது புருஷகார ப்ரபத்தி பண்ணுவதாக அர்த்தம்.

விழிவழியில் வந்தவர்க்கு
வித்வத்வம் விளைப்பவளே !
விரட்டுக எம் மனநோயை
விரைவில் எமை ஏற்றிடுக.

இந்தப் பொருட்குச்சேர இரண்டாம் பாதத்துக்கு அர்த்தம் சொல்வதானால், மனநோய் என்பதற்கு, தேஹாத்மாபிமானம், ஸ்வதந்த்ராத்ம ப்ரமம், முதலிய மருட்சிகளையும், அம்மருவின் விளைவான பிணிகளையும் பொருளாகக் கொள்ளலாம்.

ஏதுமறியாரையும் ஏரார் நாவலராக்கும்
ஏற்றமிகு ரமையே நீ ஏற்றுக்கொள் எங்களையும்.

—★—

47. அடியார்களை அபிரக்ஷிப்பவள்.

सा मा मा पातु कृपया क्षमदा भास्वराळका ।
दासावनी वरमहा भाविता नारदादिना ॥ ४७

ஸா மா மா பாது க்ருபயா க்ஷமதா பாஸ்வராளகா ।
தாஸாவநீ வரமஹா பாவிதா நாரதாதிநா ॥ 47

शम-दा = சாந்தியைத் தருபவளும்

भास्वर-अलका = ஒளிரும் கேசம் உடையவளும்

दास-अवनी = தொண்டர்களைக் காப்பவளும்

वर-महाः = உயர்ந்த ஜ்யோதி கொண்டவளும்

नारद-आदिना = நாரதர் முதலியோரால்

भाविता = த்யானிக்கப்பட்டவளுமான

सा = அந்த मा = லக்ஷ்மீ

मा = என்னை दयया = அருளால்

पातु = காப்பாற்றட்டும்.

அருள் மிக்கவள். அடக்கம் அளிப்பவள். அழகிய கூந்தலாள். அடியாரைக் காப்பவள். அதிகம் ஒளிர்பவள். நாரதர் முதலிய தேவர்ஷிகளால் த்யானிக்கப்படுபவள். அத்தகைய லக்ஷ்மீ என்னைக் காக்கட்டும். இந்த ச்லோகத்தில் தனியே சித்ரபந்தம் எதுவும் கிடையாது. ஆனால் அடுத்த ச்லோகத்தில் எல்லா இரட்டைப்படை எழுத்துகளும் இந்த ச்லோகத்தில் உள்ளவையே வருகின்றன, அதே வரிசையில்; ஆனால் வ்ருத்தம் மாறியிருக்கிறது. இதற்குப் பிந்நவ்ருத்த கோமூத்ரிகா பந்தம் என்று பெயர். இதை முன்பேயும் பார்த்துள்ளோம். ஒற்றைப்படை எழுத்துகள் அதற்கடுத்த ச்லோகத்தில். இவ்வாறாக மூன்று ச்லோகங்களையும் சேர்த்து ஒரு விசித்ரம். இந்த மூன்று ச்லோகங்களிலும் ஒவ்வொரு பாதியிலும் பதினாறு எழுத்துகள் என்ற ஒரே எண்ணிக்கை இருந்தாலும், மூன்றும் வெவ்வேறு மெட்டுகளில் அமைந்திருப்பதும் விசித்ரம்.

முப்பத்திரண்டு எழுத்துகளில் நாலே நாலு தவிர மீதியெல்லாம் அ அல்லது ஆ என்றிருப்பதால், ஒசைநயம் இருப்பதும் ஒரு விசேஷம்.

அவளை மா என்ற பதத்தால் சொன்னது ஏனெனில், மாதா காப்பது போல் என்னைக் காக்கட்டும் என்று வேண்ட, மாதா என்றும் லக்ஷ்மி என்றும் இரண்டு அர்த்தங்களைக் கொண்ட பதம் பயன்படும் ஆதலாலாம். தயயா என்றதன் கருத்து என்னவென்றால், என் பக்திக்கோ கைங்கர்யத்துக்கோ காத்திராமல், தன் அருளாலே காக்கட்டும் என்னவாம். பாஸ்வராலகா என்று குழலை மினிர்வதாகச் சொன்னது, இதற்கு முன் ஸௌந்தர்யஸ்தபகத்தில் வர்ணித்தபடியாம். தாஸாவநி என்ற அடைமொழி, நீ அடியவர்களுக்கு அவனம் பண்ணுபவவாயிற்றே, அடியேனுக்கும் அருள் புரியாயோ, என்று குறிப்புணர்த்துவதற்காகவாம். பரமஹா: என்றது, அவளை ஜ்வலந்தீ என்றும் ஜ்யோதிர்மயீ என்றும் முன்மொழிகள் கூறுவதாலாம். பாவிதா நாதாதிபா என்றது, அமரமுனிகளின் அகப்புலனுக்கு அகப்படுபவள் அவள் என்பதாலாம். பக்தி ஸூத்ரத்தை இயற்றியவர் நாரதர் ஆதலால் அவர் முதலாகப் பலராலும் உபாஸிக்கப்பட்டவள் என்கிறார்.

மா பாது என்பதற்குப் பதில் மாம் பாது என்றால் தப்பர்த்தத்துக்கு இடம் தராமல் மிக நன்றாயிருக்குமே; ஏன் மா பாது என்கிறார்? என்றால், அடுத்ததுக்கடுத்த ஶ்லோகத்துடன் ப்ரதிலோமகோமூத்ரிகாபந்தம் அமைய மா என்ற எழுத்தே சரியாகுமாதலாலாம். லக்ஷ்மியை மனவடக்கமும் திம்மதியும் விளைவிப்பவளாகச் சொன்னது, அவள் நம்மைக் காக்கும் வழிகளில் இதுவும் ஒன்றானதாலாம்.

தேவமுனி தியானிக்கும் தேவதையாய்த் தாயாராய்
தேஜஸ்ஸாய்த் திகழும் ஸ்ரீ தேவி எனைத் தயையால் கா.

—★—

48. ஆபத்துகளை அறுப்பவள்.

क्षेमातापाप्तिदभा या कमला भासुरालोका ।
सासावानीतरसा हा भुवि लूनापदाताना ॥ ४८

க்ஷேமாதாபாப்திதபா யா கமலா பாஸுராலோகா ।
ஸாஸாவாநீதரஸா ஹா புவி லூநாபதாதாநா ॥48

या = எந்த, कमला =தாமரையாள், क्षेम-अताप-आप्ति-द-भा = க்ஷேமத்தையும் குளிர்ச்சியையும் பெறுவதைத் தரும் காந்தி கொண்டவளும், भासुर-आलोका =ஒளிரும் கண்ணுடையவளுமோ

सा = அந்த , असौ = இவள், भुवि = நிலவுகில்

आनीत-रसा = ரஸத்தைக் கொண்டுவந்தவள்.

लून-आपत्-आताना =ஆபத்துகள் பரவுவதை அறுக்கிறவள்.

हा =ஆச்சர்யம்.

நன்மையும் தண்மையும் ஒருசேரக் கிடைக்கும்படியான காந்தி கொண்டவள் கமலை. மிளிரும் கண்ணுடையவள். பூமியில் மகிழ்ச்சியைக் கொண்டு வருபவள். ஆபத்துகள் பரவாதபடி அறுத்தெறிபவள்.

ஸூர்யகிரணம் தாபத்தைப் பண்ணும்; சந்த்ர கிரணம் குளிர்ச்சியைப் பண்ணும்; திருமகளின் காந்தியோ க்ஷேமத்தையும் குளிர்ச்சியையும் சேர்த்துக் கொடுக்கும். இந்த வாசியைக் கூறுகிறார் க்ஷேமாதாபாப்திதபா என்ற பதத்தால்.

பாஸுராலோகா என்று இவளது கண்மிளிர்ச்சியை இங்கே கூறுவானேன் என்றால் முதல் பாதத்தில் சொன்ன குளிர்ச்சிக்கும், மூன்றாம் பாதத்தில் சொன்ன மகிழ்ச்சிக்கும், நாலாம் பாதத்தில் சொன்ன நிகழ்ச்சிக்கும், இரண்டாம் பாதத்தில் சொன்ன (கண்)மிளிர்ச்சியே காரணம் ஆவதாலாம்.

கண்ணுக்கு இங்கே ஆலோகம் என்ற பதம் இடுவானேன் என்றால், உத்தரார்த்தத்தில் பூலோகத்தையும் ரஸாலோகத்தையும் ப்ரஸ்தாவிப்பதால், இங்கே பாஸா-ராலோகம் யுக்தமென்பதாலாம்.

ஆநீதரஸா என்பதற்கு மூன்று அர்த்தங்கள்.

ரஸம் என்றால் மகிழ்ச்சி.ரஸன் என்றால் பரமாத்மா.

ரஸா என்றால் பாதாளலோகம்.

இவள் பூமியில் ரஸம் கொண்டு வந்தாள் என்றால், நமக்கெல்லாம் ஆபத்துகளைக் களைந்து மகிழ்ச்சி வருவிக்கிறாள் என்று கருத்து.

இவள் பூமியில் ரஸனைக் கொண்டுவந்தாள் என்றால் அவனை (ராமனாகவும், க்ருஷ்ணனாகவும் பலபடியாக) அவதரிக்கப் பண்ணினாள் என்று அர்த்தம். லக்ஷ்மீ ஸம்பந்தத்தால் தான் அவதாரங்கள் நடைபெறுகின்றன என்பதை ரமாஸஹசரம் அஹிதேள ரகுதுர்ணையந்த்யா என்றும் த்வம் அவதார்ய லக்ஷ்மீதரம் என்றும் தயாஶதகத்தில் தேஶிகன் காட்டியதை அடியொற்றி, இங்கிவனை புவி ஆநீதரஸா என்கிறார்.

இவள் பூமியில் ரஸாலோகம் கொண்டுவந்தாள் என்றால் ஹா, அப்படியா, என்று வியப்புக்காக மட்டும். (உண்மைக்கருத்து கிடையாது). இதை ஹா என்ற பதத்தால் சொல்கிறார்.

ஆபத்தின் பரவலை அறுக்கிறவள் என்கிறாரே, அவ்வளவு பலமும் ஶக்தியும் உண்டோ என்றால், ஆநீ. தரஸா. என்று பிரித்து, பலமாக அறுப்பவள் என்கிறார். இந்த்ராணீ, பவாநீ என்ற பதங்கள் போல, ஆநீ என்றால் அ என்கிற திருமாலின் துணைவி, என்று அர்த்தம் சொன்னால் அது க்லிஷ்டமாகும். இலக்கணம் இடம் தருமா? அந்த அர்த்தம் வேண்டாம்.

சித்ர பந்தத்தை விவரிப்போம்.

இந்த ஶ்லோகத்து இரண்டாம் எழுத்தும் போன ஶ்லோகத்து இரண்டாம் எழுத்தும் ஒன்றே ; மா என்பது, இந்த ஶ்லோகத்து நான்காம் எழுத்தும் போன ஶ்லோகத்து நான்காம் எழுத்தும் ஒன்றே; பர என்பது. இந்த ஶ்லோகத்து ஆறாம் எழுத்தும் போன ஶ்லோகத்து ஆறாம் எழுத்தும் ஒன்றே; த என்பது. இப்படியாகப் பதினாறு எழுத்துக்களில் ஸாம்யம் பார்க்கிறோம். ஆகையால் இரண்டு ஶ்லோகத்துக்குமாகச் சேர்த்து இப்படியொரு கட்டமைப்பில் படம் போட முடிகிறது.

காந்தியினால் நற்குளிர்ச்சி.
கமலையின் கண்மிளிர்ச்சி
கொணர்ந்ததுவோ பெருமகிழ்ச்சி
கொடுவிபத்துகளின் வீழ்ச்சி.

—★—

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

49. அரக்கரை அளித்தவள்.

आदित्यैरर्च्येताग्र्याभा धीमज्जीवस्तवाह्लादा ।
सा लक्ष्मीस्स्वश्रीदा क्लेश ग्लायद्यातु स्तोमावासा ॥ ४९

ஆதி³த்யைரர்ச்யேதாக்³ர்யாபா
தீ⁴மஜ்ஜீவஸ்தவாஹ்லாதா³ ।
ஸா லக்ஷ்மீஸ்ஸ்வஶ்ரீதா³ க்லேஶ
க்³லாயத்³யாது ஸ்தோமாவாஸா ॥ 49

आदित्यैः ஸூர்யர்களால் தேவர்களால்
अर्च्या அர்ச்சிக்கத் தக்கவள்.
धीमत्-जीव-स्तवाह्लादा - அறிவாளியான ப்ராணிகளின் துதியால் மகிழ்பவள்.
सा = அந்த
लक्ष्मीः = திருமகள்,
स्वः श्री-दा = வானுலகச் செல்வத்தைத் தருபவள்.
क्लेश-ग्लायत्-यातु-स्तोम-आवासा = துயரில் துவளுகிற அரக்கர் கூட்டத்தில் நிலைத்தவள்.

இவளுக்குக் காந்தி மிக ச்ரேஷ்டமாக இருப்பதால் பன்னிரண்டு ஸூர்யர்களும் கூட இவளை அர்ச்சிக்கிறார்கள். இவளுக்கு எல்லா ஸ்தோத்ரங்களும் மகிழ்ச்சி தருமாயினும், புத்தியைச் செலுத்தி விசேஷமாகப் பண்ணுகிற (இந்த சித்ர ஸ்தபகம் போன்றதான) ஸ்தோத்ரங்கள் மிகவும் மகிழ்ச்சி தரும். அந்த லக்ஷ்மி ஒரு காலத்தில் ஸ்வர்க்க லோகத்துக்குச் செல்வம் தருவதற்காக இலங்கையில் அரக்கர்கள் நடுவில் வஸித்தாள்; அவர்களை வாட்டி வருத்தினாள்.

ஆதித்யார்ச்யா என்றதன் கருத்து - ஸூர்யர்களின் காந்தி கூட இவளது காந்திக்குக் கீழ்ப்பட்டதாதலால் இவளை அவர்கள் அர்ச்சிக்கிறார்கள் என்பதாலாம். அல்லது எல்லாத் தேவர்களும் அதிதியின் புத்ரர்களாய் ஆதித்யர்கள்; இவளை ஆராதிக்கிறார்கள் என்பதாம்.

ஸ்ரீமஞ்ஜீவன் என்றால் அறிஞரான மாந்தர் என்றோ ப்ருஹஸ்பதி என்றோ அர்த்தம் கிடைக்கும். முதல் அர்த்தத்தைக் கொண்டால், நாமெல்லோரும் நம் அறிவைப் பயன்படுத்தி, அழகான (லக்ஷ்மீ ஸஹஸ்ரம் போன்ற) ஸ்தோத்ரங்களால் அவளைத் துதித்தால் பிராட்டிக்குப் பெருகப்பு ஏற்படும் என்கிறார். இரண்டாம் அர்த்தப்படி, தேவகுருவான ப்ருஹஸ்பதி தான் பிராட்டியைத் துதிப்பதுமன்றி, தன் சிஷ்யனான இந்த்ரனையும் துதிக்கச் செய்தார் என்ற புராணக் கதை இருப்பதால், அதனால் திருமகள் உகந்ததைக் கூறுகிறார்.

ஸ்வஸ்ரீயைக் கொடுப்பவள் என்கிற இடத்தில் ஸ்வஸ்ரீ என்பதற்கு மூன்று அர்த்தங்கள் சொல்லலாம். ஸ்வ: என்றால் ஸ்வர்க லோகம். வானுலகில் செல்வம் குறையும்படி ராவணன் அட்டஹாஸம் பண்ணிய பொழுது, இலங்கையில் அசோகவனத்தில் ஸீதை வஸித்து, வானுலகச் செல்வத்தைக் கொடுத்தாள் என்பது முதல் அர்த்தம். நமக்கெல்லாம் ஸ்வர்க்காதி ஸுகங்களைக் கொடுப்பவள் அவள் என்பது இரண்டாம் அர்த்தம். ஸ்வ-ஸ்ரீ என்று பிரித்து தன் திரு, அதாவது திருவுக்கும் திரு, எனப்படுகிற திருமாலை நமக்குத் தருபவள்; அதாவது மோக்ஷம் தருபவள் என்று மூன்றாம் அர்த்தம்.

க்லேச-க்ஷபித்-யாது-ஸ்தோம-ஆவாஸா என்கிற கடைசிப் பதத்தில் எந்த உட்பதத்துக்கும் இரட்டைப் பொருள் கொள்ளாவிடினும், மூன்று விதமாகத் தாத்பர்யம் சொல்லலாம்; யாதுஸ்தோமாவாஸம் என்கிறது அரக்கர்களின் நகராகிய இலங்கை. அது க்லேசப்பட்டு அழிந்து போகக் காரணமானவள் ஸீதை. இவளாலன்றோ, ஹநுமான் இலங்கையை எரிப்பதும், ராமன் ராக்ஷஸர்களை அழிப்பதும் ஸாத்யமாயிற்று? இது முதல் அர்த்தம். இவள் அசோகவனத்தில் க்லேசப்பட்டாள்; அதன் விளைவாக ராக்ஷஸ நகரம் வாடி வதங்க வேண்டியதாயிற்று; இது

இரண்டாவது அர்த்தம். இவள் அரக்கியர் கூட்டத்திடையே க்லேசத்தால் வாடிக் கொண்டு வஸித்தாள்; இவளுக்கு ஆவாஸம் அங்கே. (இதன் விளைவாக ஸ்வர்கத்தில் செல்வம் கூடியது. ராவணவதம் மூலம்). இது மூன்றாவது அர்த்தம்.

இனி சித்ரபந்தத்தை விளக்குவோம். இதற்கு முந்தைய இரண்டு ச்லோகங்களுடன் சேர்ந்து இது கோமூத்ரிகா பந்தத்தில் ஒரு விசேஷத்தைத் தரும். இந்த மூன்றில் முதலாவதான ஸா மா என்னும் ச்லோகத்தில் பதினாறு எழுத்துகள் அடுத்த ச்லோகத்தில் வந்ததாகச் சொன்னோமே, மீதமுள்ள பதினாறு எழுத்துகளும் இந்த ச்லோகத்தில் வந்துள்ளன. ஆனால் தலைகீழ் வரிசையில் இருக்கின்றன. முதல் ச்லோகத்து முதல் எழுத்தும் இந்த ச்லோகத்தின் கடைசி எழுத்தும் ஒன்றே; ஸா என்பது. முதல் ச்லோகத்து மூன்றாம் எழுத்தும் இந்த ச்லோகத்தில் கடைசியிலிருந்து மூன்றாம் எழுத்தும் ஒன்றே; மா என்பது. இத்யாதியாக, பதினாறையும் பார்த்துக் கொள்ளலாம். இந்த மூன்று ச்லோகங்களும் சேர்ந்து 32 x 3 =96 எழுத்துக்களில் முதல் ச்லோகத்து முப்பத்திரண்டும் திரும்பி வந்தவை ஆதலால், 64 எழுத்துகளை மட்டும் எட்டுக்கெட்டான கட்டங்களில் எழுதிக் கொண்டு, மூன்று ச்லோகங்களையும் வாசிப்பது எப்படி என்று பார்ப்போம்.

ஸா	மா	மா	பா	து	த்ரு	ய	யா
க்ஷே	வா	தா	ஸ்தோ	ப்தி	த்$_3$யா	பா$_3$	க்$_3$லா
ப	ம	தா$_3$	பா$_4$	ஸ்வ	ரா	ல	கா
க	க்லே	ஸா	ஸ்ரீ	ஸு	க்ஷ்மீ	லோ	ஸா
தா$_3$	ஸா	வ	நீ	வ	ர	ம	ஹா
ஸா	ஹ்லா	வா	ஸ்தா	த	க்ஷீ	ஸா	தீ
பா$_4$	ஷி	தா	நா	ர	தா$_3$	தி$_3$	நா
பு$_4$	க்ர்யா	ஹூ	ர்ச்யே	ப	தைய	தா	ஆ

முதல் வரியில் ஆரம்பித்து, ஒன்று விட்டு ஒரு வரியை வாசித்தால் முதல் ச்லோகம். இரண்டாம் வரி முதல் கட்டத்தில் ஆரம்பித்து, கோமூத்ரிகா ரீதியில் வாசித்தால் இரண்டாம் ச்லோகம். கடைசிக் கட்டத்தில் ஆரம்பித்து, தலைகீழாக, கோமூத்ரிகா ரீதியில் வாசித்தால் மூன்றும் ச்லோகம். கோமூத்ரிகா என்றால் மேலும் கீழுமாக மாற்றி மாற்றிப் போக வேண்டியிருக்கும்.

இப்பொழுது இன்னொன்றைக் கவனிப்போம். ஒரே ச்லோகத்தில் முன் பாதியும் பின் பாதியும் (பாதி எழுத்துகள் ஸமமாவதால்) கோமூத்ரிகையாக அமைவது கோமூத்ரிகாபந்தம், இதை. மூன்றும் ச்லோகத்தில் பார்த்தோம். இதற்கு மேலாக, இரண்டு ச்லோகங்கள் ஒன்றோடொன்று கோமூத்ரிகா ரீதியில் பின்னிக் கொண்டவையாய் வெவ்வேறு வ்ருத்தங்களில் அமைக்கப்பட்டிருந்தால் பிந்நவ்ருத்த கோமூத்ரிகா பந்தம் என்று பெயர். இதை 40, 41 ச்லோகங்களில் பார்த்தோம். இதற்கு அடுத்தபடியாக, முதல் ச்லோகத்தை நேராகவும், இரண்டாவது ச்லோகத்தைத் தலைகீழாகவும் வாசிக்கும் போது இவ்வாறு கோமூத்ரிகா பந்தத்தில் பின்னியிருந்தால், வ்ருத்தங்களும் வெவ்வேறாயிருந்தால், பிந்நவ்ருத்த ப்ரதிலோம கோமூத்ரிகா பந்தம் என்று பெயர். இதை 42, 43, ச்லோகங்களில், பார்த்தோம். இப்போது மூன்று வெவ்வேறு வ்ருத்தங்களில், மூன்று ச்லோகங்களில், முதலிரண்டும் நேராக வாசிக்கும் போது, மூன்றாவதைத் தலைகீழாக வாசிக்கும்போதும், கோமூத்ரிகை போல் பின்னிக் கொண்டிருந்தால், பிந்த வ்ருத்த அநுலோம ப்ரதிலோம கோமூத்ரிகா பந்தம் என்னலாம். இதை 47, 48, 49 ச்லோகங்களில் பார்த்தோம். கட்டுப்பாடுகள் அதிகமாகிக் கொண்டே போவதையும் கவி உத்தரோத்தரமாகச் சமாளிப்பதையும் பார்த்தோம்.

ஆசித்தார்க் கச்சமயிலன் ஆமையால் அருமையன்.
அறிஞர்களின் அருள் துதியால் ஆற்றலைத்து அமைகிறவான்.

அமரர் திரு அளித்திடுவாள் அரக்கர் குலம் அழித்திடுவாள்
அவள் லக்ஷ்மி தன் திருவை அளித்திடுவாள் அந்தமையாள்.

—★—

50. தேன்மொழியாளான தேவதேவி.

मासवासरसाराव वरा सारसवासमा ।
मासवासरसाराव वरा सारसवासमा ॥ ५०

மாஸவாஸரஸாராவ வரா ஸாரஸவாஸமா ।
மாஸவாஸரஸாராவ வரா ஸாரஸவாஸமா ॥ 50

आसव-आस-रस-आराव-वरा = தேனைத் தள்ளும் சுவை மொழியால் உயர்ந்தவள்

मा = லக்ஷ்மீ,

सारस-वास-मा = தாமரையில் வாசத்தால் அழகுள்ளவள்

मास-वासर-सार-अव-वरा = மாதங்களையும் கிழமைகளையும் நகர்த்துகிற ஸூர்யனைக் காக்கும் வரம் கொண்டவள் ஸாரமான பூஜைகளை உடையவள்.

असमा = இணையற்றவள்.

இவள் தேனை வெல்லும் மொழியினாள். தாமரையில் அமர்வதால் கூடிய அழகுள்ளவள். சித்திரை முதலிய மாதங்களும் ஞாயிறு முதலிய கிழமைகளும் எந்தச் ஸூர்யனால் நகர்கின்றனவோ, அந்தக் கதிரவனையும் காக்கும் வரம் கொண்டவள். இவளைப் பூஜிப்பதே ஸாரமான பூஜை. இவளுக்கு ஈடிணையே கிடையாது.

இவள் ஸூர்யனுக்கு வரம் தருவதாக இங்கு சொல்வது, போன ச்லோகத்தோடு ஒட்டுகிறது. இப்போது வேறு அர்த்தங்களும் கிடைப்பதைப் பார்ப்போம். அவரா - அவரா என்று பிரித்தால், (தன் அடியார்க்குப்) பகைவனிடம் வரம் இல்லாதவள்;

அவனுக்கு நல்லது பண்ண மாட்டான் என்றர்த்தம். அ-வரா என்று பிரித்தால், அ என்னும் திருமாலை மட்டுமே வரனாக, தன்னிலும் உயர்ந்தவனாகக் கொண்டவள்; என்றர்த்தம். ஆ-ஸாரஸ-வாஸ-மா என்று பிரித்தால், வந்திருக்கிற கமலாவாஸனையும், (ப்ரம்மாவையும்) மனையும் (ருத்ரனையும்) ஸேவார்த்தியாக உடையவள் என்று அர்த்தம். ஸாரஸ-வாஸ-மா என்பதற்குத் தாமரையில் வாஸத்தால் இவளுக்கு அழகு என்றோ, தாமரையில் இவளது வாஸத்தால் தாமரைக்கு அழகு என்றோ, இரண்டையும் கூற இடமுண்டு. ஆஸவம் என்றால் கள். அதில் இவள் ஸரஸையாக, களை கொண்டவளாக இல்லை; மூதேவிக்குத்தான் அதில் களை; ஆகையால் லக்ஷ்மி ஆஸவ-அஸாரஸா என்றும் அர்த்தம் சொல்லலாம்.

முதல் பாதத்தைத் திருப்பி வாசித்தால் இரண்டாம் பாதம் கிடைக்கிறது. பூர்வார்த்தமும் உத்தரார்த்தமும் ஏகரூபமாய் இருக்கிறது. ஆகையால் முதல் பாதம் மற்ற பாதங்களை நிர்ணயித்து விடுகிறது. கோமூத்ரிகாபந்தம் அமைந்து விடுகிறது; அதற்கு மேலும், நாலே நாலு ஒற்றெழுத்துகள் திரும்பத் திரும்ப வருகின்றன. அ, ஆ என்ற இரண்டைத் தவிர வேறு உயிரெழுத்துகளே வரவில்லை. உரப்பெழுத்தே கிடையாது. தமிழில் எழுதி வாசித்தாலும், உச்சரிப்பில் பேதம் கிடையாது. இவ்வளவு விசித்ரங்கள் கொண்ட ச்லோகம் இது.

இரவியையும் இரட்சிப்பாள்.
இகல்வரை இகழ்ந்திடுவாள்.
இருப்பிடத்துக் கெழில் சேர்ப்பாள்.
இன்மொழியாள் இணையில்லாள்.

—★—

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

51. மென்மையும் மேன்மையும் பெற்றவள்.

पद्मे वासोऽप्यहह सुमनःकोमलं क्रान्तिकृत्ते
पद्मे वासोऽप्यतिमृदुतनोस्साहसेनेति सिद्धे ।
आयासि त्वं न कथमधुना चित्रकूटाश्मचारात्
आयासि त्वं तदिह कृपया सह्यतां साहसं मे ॥ ५१

பத்₃மே வாஸோ-ப்யஹஹ ஸுமந: கோமலம் க்ராந்திக்ருத்தே
பத்₃மே வாஸோ-ப்யதிம்ருது₃தநோஸ்ஸாஹஸேநேதி ஸித்₃தே₄
ஆயாஸி த்வம் ந கத₂மது₄நா சித்ரகூடாஸ்மசாராத்
ஆயாஸித்வம் ததிஹ க்ருபயா ஸஹ்யதாம் ஸாஹஸம்மே ॥

पद्मे = தாமரையாளே!
सुमनःकोमल = மலரிலும் மென்மையுள்ள
वासः अपि = உடை கூட
अति-मृदु-तनोः = மிகவும் ம்ருதுவான திருமேனி கொண்ட
ते = உனக்கு
क्रान्ति-कृत् = வாட்டத்தை ஏற்படுத்தும்.
पद्मे = தாமரையில்
वासः अपि = வசிப்பதும்கூட
अहह = அப்பப்பா!
साहसेन = துணிச்சலால்
इति = என்று
सिद्धे = தீர்மானமானபின்
चित्रकूट-अश्म-चारा = மலைப் பாறைகளில் ஸஞ்சரிப்பதால்

आयासित्वं = ஆயாஸம் அசதியாக உடைய தன்மை.
त्वं = நீ
कथं = எப்படி
न आयासि = அடையாமல் இருக்கிறாய்?
अधुना = இப்பொழுது
चित्र-कूट-अश्म-चारात् = சித்ரபத்தங்களிலும் கூட விசித்ரங்களான பாறைகளில் போல உன்னை ஸஞ்சரிக்க வைப்பதால்
मे = என்னுடைய
तत् = அந்த
साहसं = துணிச்சல்
इह = இங்கே
कृपया = தயையாலே
सह्यतां = ஸகிக்கப்படட்டும்.

தாமரையாளே ! உன் திருமேனி மிகவும் ஸௌகுமாரமானது. அதிக மென்மை கொண்டது. மலரினும் மெல்லிய புடவை கூட உன் திருமேனிக்கு வாட்டம் தரும். அவ்வளவு ஏன்? உன் இருப்பிடமான தாமரை மலரே கூட உனக்கு வாட்டத்தை ஏற்படுத்தக் கூடும். அப்பப்பா ! நீ மிகவும் துணிச்சலோடு கூடத்தான் வாஸம் பண்ணுகிறாய். இது இவ்வாறிருக்க, உன் ஸீதாவதாரகாலத்தில் சித்திர கூடமலைப் பாறைகளிலெல்லாம் நீ நடந்தாயே, நீ நிச்சயமாகக் களைப்பு மேலீட்டை அடைந்திருப்பாய், இப்பொழுது நான் ஒரு துணிச்சல் கார்யம் பண்ணுகிறேன். லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தில் சித்ரபந்தத்தைப் புனைகிறேன். மிகக் கடினமான செய்யுள்களில் உன்னை ஸஞ்சரிக்க வைக்கிறேன். என்னுடைய இந்த அபசாரத்தை நீ தயை செய்து பொறுத்தருள வேண்டும்.

ரமே என்றும், லக்ஷ்மீ: என்றும் மாத: என்றும் எத்தனையோ விளிச் சொற்கள் இருக்க, இங்கு பத்மே என்ற பதத்தைப் ப்ரயோகிப்பானேன் என்றால், வேறோரர்த்தத்தில் இதே பதம் அடுத்த பாதத்தில் வந்து அழகூட்டுவதற்காகவாம். வஸ்த்ரம் என்று சொல்வதற்கு சேலம் என்றும், க்ஷௌமம் என்றும் துகூலம் என்றும் வஸ்த்ரம் என்றும் பல பதங்கள் இருக்கையில் இங்கு வாஸஸ் என்ற பதத்தைப் ப்ரயோகிப்பானேன் என்றால், அடுத்த பாதத்தில் வேறொரு அர்த்தத்தில் இதே பதத்தை இட்டு யமக அழகைக் கூட்டுவதற்காகவாம்.

தாமரை பட்டாலே வாடி விடும் திருமேனி என்று கூறுவது மிகையன்றோ என்றால், ஆமாம், இது அதிசயோக்தி அலங்காரம், மிகைநவிற்சியணி, எனப்படுவது. பூர்வாசார்யர்களுள் ஒருவரான பட்டர் இதே பிராட்டியின் திருமேனியின் மென்மையை இதே போல, பாதாருந்துதமேவ பங்கஜரஜ:, (எங்களுக்கு முள் குத்தினால் கால் வலிப்பது போல, உனக்குத் தாமரைத் தூள் பட்டால்

கால் வலிக்குமே) என்று கூறியதை அடியொற்றி இவ்வாறு கூறுகிறார்.

முதல் பாதத்தில் அபி என்ற பதத்தின் கருத்து என்னவென்றால், பூவினும் மெல்லிய புடவையே பூமகள் மேனியை வாட்டுமென்றால், மற்ற புடவைகளைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமோ? என்பதாம். அஹஹ என்ற பதத்தின் கருத்து, அப்பப்பா ! அவ்வளவு மென்மையா, எண்ணிப் பார்க்கவே முடியவில்லையே என்பதாம். இரண்டாம் பாதத்தில் அபி என்ற பதத்தின் கருத்து என்னவென்றால், உடல் முழுதும் போட்டு உடுத்திக் கொள்ளும் புடவை கிடக்கட்டும், கீழே ஆஸநமாக இருக்கும் மலருக்குக் கூட மென்மை போதவில்லையே என்பதாம். ஸாஹஸைந என்ற பதத்தின் கருத்து என்னவென்றால், போர்வீரர்கள் மார்பில் பகைவரின் பாணத்தைப் பாய்ச்சிக் கொள்ள அஞ்சாமல் துணிச்சல் கொள்வது போலவும், கஷ்டமான கார்யங்களைப் பண்ணுவதற்கு நாங்கள் துணிச்சல் கொள்வது போலவும், நீ துணிச்சலோடு தாமரையில் வஸிக்கிறாய் என்பதாம். ஸித்தே என்றதன் கருத்து, இப்படி நிர்ணயமாகி விட்டபடியால், நீ எங்களுக்காக வேறு சில ஸாஹஸங்களையும் பண்ணுவாய் என்று நம்புகிறோம் என்பதைக் காட்டவாம்; இந்த ஸித்தி (தீர்மானம்) இல்லாவிட்டால் நாங்கள் உன் அருகில் வரவும் அஞ்சுவோம். உன் ஸாஹஸ ஸ்வபாவத்தை நம்பித்தான் நான் இந்தக் காவ்யத்தையே உனக்குப் பண்ணுகிறேன். என்பதாம். சித்ரகூட என்பானேன்? தண்டகாரண்யம் என்றோ, கொடுங்காடு என்றோ வேறு பதத்தை இட்டிருக்கலாகாதோ என்றால், சித்ரகூடம் என்ற பதத்துக்கு இன்னொரு அர்த்தத்திலும் விவக்ஷை இருப்பதால், அந்தப் பதத்தை இடுகிறார். அம்பகாராத் நகதும் என்ற பதங்களின் கருத்து என்னவென்றால் மலரின் மகரந்தமே மலராளுக்கு முள்ளாய் குத்துமெனில் கல்லும் முள்ளும் குத்தாதோ எனக்

காட்டவாம். அதுநா சித்ரகூட என்றபதம் இங்கு பொருந்தாதே. இப்பொழுதா சித்ரகூடத்தில் இருக்கிறான் என்று கேட்டால் இப்பொழுது சித்ரஸ்பகத்தில் வேறொரு சித்ரகூடத்தில் இருக்கிறான் என்று பதில் அல்லது, சித்ரகூடமே திருவேங்கடமலையாக வந்திருப்பதாக ஒரு புராணம் கூறுவதால், இப்போதும் சித்ரகூடத்தில் இருக்கிறான் என்பதுமாம். நத் என்பதற்கு அந்த ஸாஹஸம் என்று அர்த்தம் சொல்வதற்குப் பதிலாக ஆகையாலே என்று அர்த்தம் கொள்வது மேலும் தகும். நீ ஸாஹஸக்காரியாகையாலே, நீ ஸஹிக்கக் கூடியவள் ஆகையாலே, என் துணிச்சலையும் தான் ஸஹித்துக் கொள்ளேன், என்று வேண்டுதல். தன் செயலை ஸாஹஸம் மே என்று துணிச்சல் செயலாகச் சொல்வானேன் என்றால், ப்ரம்மாதி தேவர்களும் ஸநகஸநந்தநாதி முனிவர்களும், ஸ்தோத்ரம் பண்ணிக் கொண்டிருக்கும்போது, அதே பிராட்டிக்கு இளைய புன் கவிதை தரும் ஸாஹஸத்தில் மேற்படியாக, இதுவரைபோலன்றி இந்த ஸ்தபகத்தில் கடினமான, க்லிஷ்டமான, கூடமான, வேடிக்கையான, அர்த்தங்களையெல்லாம் சித்ரபந்தங்களில் புகுத்தி, இந்தக் க்லிஷ்டமான பாதையில் பிராட்டியையும் நடக்கவைப்பது ஸாஹஸம் என்ற கருத்திலாம். க்ருபயா என்றதன் கருத்து, ''இவன் நம்மை உபசரிக்கும் நோக்கத்தில் அல்லவா சித்ரஸ்தபகத்தை இயற்றுகிறான், மூளைக்கு வேலை தரும் வேடிக்கைப் பாக்கள் என்னை உகப்பிக்கும் என்று (48ம் ப்லோகத்தில்) சொல்லியல்லவா இந்தக் கைங்கர்யத்தைப் பண்ணுகிறான், என்றால் இதைச் ஸஹித்துக் கொள்ளமுடியுமே'', என்று தயை பண்ணவேண்டும் என வேண்டுகிறார்.

மலர் வாட்டும் மென்மையாள்
மலைப்பாதை நடக்குங்கால்
மலைக்காமல் இருந்ததனால்
மன்னிப்பாள் என் செயலை.

ஆயாஸி த்வம் ஸாஹஸம் என்பதை ஸா த்வம் ஹஸம் ஆயாஸி என்று அன்வயித்து, அந்தகைய நீ சிரிப்படைகிறாய், என்று பொருள் கொள்வது, சித்ரஸ்தபக வேடிக்கைகளுக்குப் பொருந்தும் பொருளாகும். எப்படிக் களைப்படையாமல் இருக்கிறாய் என்ற கேள்விக்கான பதிலாக சித்ர வேடிக்கைகளால் சிரிப்படைகிறாய் என்று உத்தரத்தை உள்ளடக்கிய கேள்வியாகக் கொண்டு, இன்னொரு வேடிக்கையையும் பண்ணிவிட்டார்.

சித்திரகூடத்தேயும் சிதையாய் ஸஞ்சரித்தாய்.
சித்ரங்கள் கூடங்கள் சிரிப்புடனே ஏற்காயோ?

இவ்வாறாக ஐந்து பதங்களில் இரட்டை அர்த்தங்களுடன் விளையாடியிருப்பதை இந்த அட்டவணையில் காணலாம்.

பத்மே	தாமரையாளே	தாமரையில்
வாஸ:	உடை	வசிப்பது
சித்ரகூடம்	ஒரு மலையின் பெயர்	விசித்திரக் கவிதைகளின் குவியல். சித்பந்தங்களும் தந்திரப் புதிர்களும்
ஆயாஸித்வம்	களைப்படைந்த தன்மை	அடைகிறாய் நீ.
ஸஹஸம்	துணிச்சல்	அந்தகையவள் சிரிப்ப

சித்திர பந்தத்தேகிச்
சிரிப்படை பதனாலன்றோ
சிறிதுமே வருந்தாதென்றன்
சிறுமையைச் சகித்துக் கொண்டாய்.

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

52. வேதவிரோதிகளுக்கு வேண்டாதவள்

नियतं नमांसि विदधीमहि ते निगमप्रतीपमनसामहिते ।
जगदम्ब ! जम्भरिपुणा महिते मुनयो जपन्ति तव नाम हि ते ॥ ५२

நியதம் நமாம்ஸி விததீமஹி தே
நிகமப்ரதீபமநஸாமஹிதே ।
ஜகதம்ப ஜம்பரிபுணா மஹிதே
முநயோ ஜபந்தி தவ நாம ஹி தே ॥ 52

जगत्-अम्ब = லோகமாதாவே !
जम्भ-रिपुणा = ஜம்பனின் பகைவனான இந்திரனாலே
महिते = கொண்டாடப்பட்டவளே!
निगम-प्रतीप-मनसा = வேதவிருத்தமான எண்ணம் கொண்டவர்க்கு
अहिते = நலம் புரியாதவளே !
नियतं = எப்போதும்
ते = உனக்கு
नमांसि = ப்ரணாமங்களை
विदधीमहि = பண்ணக் கடவோம்.
हि = ஏனென்றால்
ते = அந்தப் ப்ரஸித்தமான
मुनयः = முனிவர்கள்
तव = உனது
नाम = பெயரை
जपन्ति = ஜபிக்கிறார்கள்.

ஜகத்மாதாவே! இந்திரனாலும் துதிக்கப்பட்டவளே! வேதத்துக்கு எதிரான கருத்து கொண்டவர்களுக்கு ஹிதம் பண்ணாதவளே! நாங்கள் எப்போதும் உனக்கே நமஸ்காரங்களைப் பண்ணுவோமாக. ஸநத்குமாரர் முதலிய மஹர்ஷிகளும் உன் நாமத்தை அல்லவா ஜபிக்கிறார்கள்?

நியதம் என்றதன் கருத்து, ஸதாஸர்வகாலமும் திருமகளையே தொழுவோம்; வேறு யாரையும் தொழ வேண்டியதில்லை; என்பதாம். வேதத்தை எதிர்ப்பவர்களை இவள் வெறுக்கக் காரணம், இவளே வேதஸ்வரூபிணீ ஆனதாலும், வேதவிதிகள் இவளது கட்டளைகள்

ஆனதாலும் மந்த்ரே வைஷ்ணவாசாரம் மநஸாபி ந லங்கயேத் என்று லக்ஷ்மீதந்த்ரத்தில் இவளே திருவாய்மலர்ந்திருப்பதாலும், வேதவிரோதிகள் எல்லாம் லக்ஷ்மீ விரோதிகள் ஆவதாலாம். இந்த்ரனால் மஹிதை என்பதன் கருத்து - ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் நமஸ்யே ஸர்வபூதாநாம் ஜநநீம் என்று தொடங்கித் துதித்ததாலும், தேவீபாகவதத்தில் அதே இந்த்ரன் நம: கமலவாஸிந்யை என்று தொடங்கித் துதித்ததாய் உள்ளதாலும், நமஸ்தேஸ்து மஹாமாயே என்று தொடங்கும் மஹாலக்ஷ்ம்யஷ்டகத்தையும் அதே தேவேந்த்ரன் பண்ணியுள்ளதாக வழக்காறு இருப்பதாலும், திருமகளின் பக்தர்களுள் இந்திரனுக்கு முதலிடம் உண்டு என்பதாம். இவ்விடத்தில் ஜகதம்ப என்ற விளியிட்டதன் கருத்து, ஒரு ஸ்தோத்ரத்தில் தொடக்கத்திலேயே ஸர்வபூதாநாம் ஜநநீம் என்றும், இன்னொரு ஸ்தோத்ரத்தில் முடிவில் ஜகந்மாதர் மஹாலக்ஷ்மி நமோஸ்து தே என்றும், இன்னொன்றில் சரிபாதியில் ஸர்வேஷாம் ச பரா மாதா என்றும், காணப்படுவதால் இவள் ஜகந்மாதா என்பது ஜம்பரிபுஸ்தோத்ரங்களின் ஸாரம் என்ற கருத்தாலாம். தே முநய: என்று இங்கு சொல்லப்பட்டவர்கள் யாரென்றால், முன்பொரு ஶ்லோகத்தில் பாவிதா நாரதாதிபி: என்று சொல்லப்பட்ட நாரதாதியரும், இவளுக்கு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் பண்ணின ஸநத்குமாரர் முதலியோருமாம். அவர்களை இங்கு முன்மாதிரியாகக் காட்டுவதற்கும் காரணம் உண்டு. தேவர்களின் தலைவனான இந்த்ரன் பண்ணுவது என்னவென்று பார்க்கிறோம். பிறகு மஹாமஹர்ஷிகள் பண்ணுவது என்னவென்பதையும் பார்க்கிறோம்; தேவர்களும் ரிஷிகளும் ஒன்றே பண்ணுகிறார்கள்; அது லக்ஷ்மியைத் துதிப்பது என்பது; என்று புரிந்துகொள்கிறோம்; நாமும் அவர்களைப் பின்பற்றி உயரவாமே என்று விழைகிறோம்.

கடைசியில் உள்ள ஶ்ரியே என்று பதத்துக்கு மூன்று விதமாக அர்த்தம் சொல்லலாம். ஶ்ரீ என்றும் தே என்றும்

பிரித்துச் சொன்னது முதல் அர்த்தம். ஹிதமானவளே என்று விளிப்பதாகக் கொள்வது இரண்டாம் அர்த்தம். ஹிதத்தில் என்பது மூன்றாவது அர்த்தம்; உன் நாமஜபம் ஹிதத்தில் சேர்ந்தது.

நாங்கள் வேதாபிமானிகள் ஆவதும், நீ லோகமாதா ஆவதும், எங்கள் வழிகாட்டிகள் இந்த்ரன் முதலியோராய் இருப்பதும், எப்போதும் உன்னையே தொழுவதற்குக் காரணங்கள் ஆகின்றன.

நாலு பாதங்களிலும் முடிவில் மஹிதே என்று ஒரே மாதிரி வந்திருப்பதும், அர்த்தம் சொல்லும்போது நாலுக்கும் நாலு விதமாகச் சொல்ல வேண்டியிருப்பதும், ச்லோகத்தின் கால் பங்கு இந்த யமகத்திலேயே அடங்குவதும், விசித்திரமாக இருப்பதால் இந்த ச்லோகம் சித்ரஸ்தபகத்தில் வந்துள்ளது.

உலகத்தின் மாதாவே !
உம்பர் தொழும் உத்தமியே !
உன்பெயரைப் பலர் ஜபிப்பர்,
உனையென்றும் பணிவோமே

—★—

53. மலம் மாய்க்கும் மலராள்

भयानकमलालयन्नतिभयेन जिह्वामिमाम्
स्तवैर्न कमलालयं हुतभुगुष्णया तृष्णया ।
भजेय कमलालयं त्वहमितः परं तन्महो
धुताधिकमला लयं न हि भजन्ति यत्संश्रयाः ॥ ५३ ॥

பயாநகமலாலயந்நதிபயேந ஜிஹ்வாமிமாம்
ஸ்தவைர்ந கமலாலயம் ஹுதபுகுஷ்ணயா த்ருஷ்ணயா।
பஜேய கமலாலயம் த்வஹமித: பரம் தந்மஹோ
துதாதிகமலா லயம் ந ஹி பஜந்தி யத்ஸம்ச்ரயா: ॥ 53

भयानकं = பயங்கரமான
कं = எவனை
इमां = இந்த
जिह्वां = நாக்கை
अति-भयेन = மிகுந்த அச்சத்தாலே
अलालयन् = வற்றடித்துக்கொண்டு
हुतभुक्-चष्णया = கனல் போல் சூடான
तृष्णया = பணத்தாசையோடு
स्तवैः = தோத்திரங்களால்
न अलालयं = நான் பாராட்டவில்லை?

इतः परं तु = இனிமேலோ
अहं = நான்
कमलालयं = தாமரையை இருப்பிடமாகக் கொண்ட
तत् = அந்த
महः = தேஜஸ்ஸை
भजेय = அடைவேனாக
यत्-संश्रयाः = எதை அவலம்பித்தவர்கள்
धुत अधिकमलाः = அதிகமான அழுக்கை உதறியவர்களாகி
लयं = நாசத்தை
न हि भजन्ति = அடைவதே இல்லையோ?

நான் இத்தனை நாளாகப் பேராசை பிடித்தவனாய் இருந்தேன். என் ஆசை குபுகுபுவென்று கனலாய் எரிந்தது. பயங்கர மனிதர்களையெல்லாம் பாராட்டித் துதித்தேன். அச்சமிகுதியால் நாக்கு வறண்டு போயிற்று. இனிமேல் நான் அவ்வாறு பண்ணமாட்டேன். தாமரையில் வீற்றிருக்கும் ஒளியை மட்டுமே தொழுவேன். இந்த ஒளியை ஆச்ரயித்தவர்கள் மலம் நீங்கப் பெறுகிறார்கள். அவர்களுக்கு நாசம் ஏற்படுவதே இல்லை.

உத்யோகத்தில் மேலதிகாரியும், அரசாங்கத்தில் மேற்பதவி வகிப்பவரும், இரவலர்க்குப் பிச்சையிடுபவரும், பயங்கரப் பேர்வழிகளாக இருப்பார்கள். திமிர் அதிகம். உதவி கேட்டு வருபவரை அலட்சியப்படுத்தி அச்சம் விளையும்படி முறைப்பார்கள். இவர்களைப் பயாநகர் என்கிறார். நாமெல்லோரும் கார்யார்த்தமாக அத்தகையோரை நாடிக் கொண்டுதான் இருக்கிறோம். சில சமயங்களில் அவர்களோடு அளவளாவுவதற்குள் பயத்தினால் நாக்கு வறண்டு போகிறது. இதை ஜிஹ்வாம் அலாலயந் என்கிறார். ஸ்வா

என்றால் உமிழ்நீர். ஆஸ்யம் என்றால், உமிழ்நீர் நாக்கில் இல்லாமல் பண்ணிக்கொண்டு என்று அர்த்தம். நாக்கை வறளச் செய்து கொண்டு என்று தாத்பர்யம்.

இருந்தாலும் பாழும் ஆசை பொங்கிப் பெரிகிறது; அணைவதில்லை; இதை ஓமூதபுருஷ்ணயா த்ருஷ்ணயா என்கிறார்.; அவர்களையும் பாராட்டுகிறோம், புகழ்கிறோம். அப்படிப் பண்ணினால் தானே நமக்குக் கார்யம் கைகூடும்? அதற்காக அவர்களைத் துதிக்கிறோம். இதை ஸ்தவை: அலாலயம் என்கிறார்.

இப்போது புரிகிறது. அதெல்லாம் வேண்டாம் என்று. துதிக்கத் தகாதவர்களைப் போய்த் துதிப்பானேன்? இனிமேல் என்னிடம் மாற்றம் ஏற்பட்டு விட்டது. தாயாரை மட்டுமே தொழுவேன். அதன் பயனாய் என் ப்ரக்ருதி மலமெல்லாம் நீங்கும். இனி அழிவே இல்லை. வளர்ச்சி மட்டும்தான். ஸம்ஸாரமே இல்லை; மோக்ஷம் தான். இதை லயம் ந பஜாந்தி என்பதால் சொல்கிறார்.

து என்ற பதம் வாசியைக் காட்டுகிறது. இதற்கு முன் நிலைக்கும் பின் நிலைக்கும் வாசி (வேறுபாடு). யாரை ஆச்ரயிக்கிறோம் என்கிறதிலும் வாசி; அவர் ஸ்வபாவத்திலும் வாசி; நம் உணர்விலும் வாசி; கிடைக்கும் பலனிலும் வாசி.

நாக்கு வறள்வானேன்? நரனைத் துதிப்பானேன்?
நாயகியைத் தொழுவேன். நாசம் இனியில்லை.

இந்த ச்லோகத்தில் என்ன சித்ரம் என்றால், கமலாலயம் என்ற பதம், ஒவ்வொரு பாதத்திலும் (நாலாவது முதல் எட்டாம் எழுத்து வரையிலாக) வந்துள்ளது. நாலுக்கும் நாலு விதமாக அர்த்தம். பதத்தைப் பிரிப்பதே வெவ்வேறு விதமாக இருக்கிறது. கம் ஆஸ்யந் என்றொன்று. கம் ஆஸ்யம் என்றொன்று. கமலா - ஆலயம் என்றொன்று. க மலா: லயம் என்றொன்று. முதலாவதிலும் நாலாவதிலும் கம் என்பது முந்தைய பதத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும். வேடிக்கைதான். போன

ச்லோகத்தைவிட அதிகப்படி. போன ச்லோகத்தில் மூன்றெழுத்துப் பதம் நாலு தடவை வந்தது. இதிலோ ஐந்தெழுத்துப் பதம். போன ச்லோகத்தில் கால் பங்கு ச்லோகம் யமகத்தில் அடங்கியது. இந்த ச்லோகத்திலோ கால் பங்குக்கும் மேல்

கமலாலயம் என்பதற்கு விதவிதமாக அர்த்தம் சொல்வதை ரஸித்த ரசிகர்கள் மேலும் கூடச் சில பொருள்களைச் சொல்லி விளையாடுகிறார்கள். மல்-ஆலயம் என்று பிரித்தால், இந்த உடல் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும் என்றபடியிருப்பதால் சரீரத்தைச் சொல்லும். இந்த உடல் துவக்கையே ஒழித்துவிடலாம், தாயாரைப் பஜித்தால் என்கிற அர்த்தம் கிடைக்கிறது. இது தவிர இன்னுமொன்று. கமலையின் ஆலயமானதால் ஸமுத்ரத்துக்குக் கமலாலயம் என்று பெயர். ஆதி, கமலாலயம் என்றால் கவலைக் கடல்; மனநோய் என்கிற ஸமுத்ரம். இது ஒழிகிறது லக்ஷ்மியின் தொண்டர்களுக்கு. இப்படிப் பலப்பல அர்த்தங்களுக்கு இடம் கொடுக்கிறது இந்த ச்லோகம்.

மனிசரை அர்ச்சத்தால் மதித்துத் துதித்தேன் முன்.
மலரவளைத் தொழுவேன். மனக்கவலை ஒழியும்.

54. அறிவை அள்ளி அளிப்பவள்.

हयरूपधरो य आस मस्ते श्रितलोकः कलयामुना समस्ते ।

जुषते धिषणाविकासमस्ते दुरिते देवि भवद्रुशा समस्ते ॥ ५४

ஹயரூபதரோ ய ஆஸ மஸ்தே
ச்ரிதலோக: கலயாமுநா ஸமஸ்தே ।
ஜுஷதே திஷணாவிகாஸமஸ்தே ।
துரிதே தேவி ! பவத்த்ருசா ஸமஸ்தே ॥ 54

देवि = ஸ்ரீதேவியே !
यः = எவர்
मस्ते = தலையில்
हय-रूप-धरः = குதிரை வடிவம் தரித்தவராக
आस = இருந்தாரோ
अमुना = இந்த ஹயக்ரீவரோ
कलया = கலையினாலே
समः = ஸமமாக

ते = உன்னுடைய

श्रित-लोकः = பக்தஜனனும் ஆகிறான்.

भवत्-दृशा = உமது கடாக்ஷத்தாலே

समस्ते = எல்லா

दुरिते = பாவமும்

अस्ते = தள்ளப்பட்டபொழுது

धिषणा-विकासं = அறிவு மலர்ச்சியை

जुषते = அடைகிறான்.

ஸ்ரீதேவியே ! உன்னை ஆஶ்ரயித்தவன் ஹயக்ரீவன் போலே ஸர்வஜ்ஞன் ஆகிறான். எப்படியென்றால், அதற்குக் குந்தகமாயிருந்த எல்லாப் பாவங்களும், உன் அருட்பார்வையால் தொலைந்தவுடன், இயல்பாகவே ஜ்ஞான-விகாஸம் ஏற்பட்டு விடுகிறது.

விகாஸம் என்றதன் கருத்து வேதாந்த ஸம்ப்ரதாயம் அறிந்தவர்களுக்கு எளிதில் புரியும். ஜீவன் இயல்பாகவே ஸர்வஜ்ஞன்தான். ப்ரக்ருதியில் உழலும்போது, அறிவு குன்றியுள்ளதத்தனை. இவனது பாவமெல்லாம் தீர்ந்தினால், மோக்ஷத்தில் இயல்பான நிலை கிடைக்கும். ஹயக்ரீவன் போல் இவனும் யாவுமறிபவனாவான்.

இந்த ச்லோகத்திலும் யமகம் என்கிற சித்ரம். ஸமஸ்தே என்கிற பதம் நாலு பாதங்களிலும் கடைசியில் வந்துள்ளது. நாலுக்கும் நாலுவித அர்த்தம். ஸ-மஸ்தே என்று முதல் பாதத்தில் பிரிக்க வேண்டும். ஸம: தே என்று இரண்டாம் பாதத்தில். ஸம் அஸ்தே என்று மூன்றும் பாதத்தில். ஸமஸ்தே என்று முழுப் பதமாக நாலாம் பாதத்தில். ச்லோகத்தில் கால் பங்குக்கு மேல் யமகத்தில் அடங்கும் விசித்திரமும் தொடர்கிறது.

ஸமஸ்தே	ஆஸ-மஸ்தே	இருந்தார் தலையில்
ஸமஸ்தே	ஸம: தே	ஸமமாகிறான் உன்னுடைய
ஸமஸ்தே	விகாஸம் அஸ்தே	மலர்ச்சியை தள்ளப்பட்டபொழுது
ஸமஸ்தே	ஸமஸ்தே	எல்லா

அருட்பார்வை படுவதால் அருவினைகள் தொலைவதனால்
அறிவு அகலால் மலர்வதனால் அயமுகனுக்கிணையாவான்.

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

55. மின்னொளி மேனியாள்

जननि! तटित्प्रभवपुषे प्रभवपुषे सम्पदां नमस्तुभ्यम्।

वशितवृषाचलविभवे चलविभवे मा स्म मां प्रवर्तयथाः ॥ ५५

ஜநநி! தடித்ப்ரபவபுஷே ப்ரபவபுஷே ஸம்பதாம் நமஸ்துப்யம்।
வசிதவ்ருஷாசலவிபவே சலவிபவே மா ஸ்ம மாம் ப்ரவர்தயதா:॥ 55

जननि = தாயாரே!
तटित्-प्रभ-वपुषे - மின்னல் போல் ஒளிகொண்ட திருமேனியை உடையவளும்,
सम्पदां = செல்வங்களுக்கு
प्रभव-पुषे = தோற்றத்தைப் போஷிப்பவளும்
वशित-वृषाचल-विभवे = வ்ருஷகிரி விபுவை வசப்படுத்தியவளும் ஆன
तुभ्यं = உனக்கு
नमः = நமஸ்காரம்
चल-विभवे = நிலையற்ற செல்வத்தில்
मां = என்னை
मा स्म प्रवर्तयथाः = செலுத்தாதே.

அன்னையே! நீ அழகி, மின்னல் காந்தி கொண்டது உன் திருமேனி. எல்லாச் செல்வங்களுக்கும் தோற்றுவாயும், போஷிப்பவளும் நீயே. (இந்தக் காரணங்களால்) நீ ஏழுமலையீசனை உன் வசத்தில் வைத்துக் கொண்டிருக்கிறாய். உன்னை நான் வணங்குகிறேன். என்னை நீ அழியாச் செல்வத்தில் மட்டும் செயல் புரியவை. அழியும் செல்வத்தில் செயல் புரிவிக்காதே.

தடித்ப்ரப என்றதன் கருத்து, வித்யுல்லேகேவ பாஸ்வரா என்று வேதத்தில் வேறொரு ஸந்தர்ப்பத்தில் கூறியுள்ளபடி மின்னொத்த மேனியள் என்பதாம்.

இரண்டாம் பாதத்தில் ப்ரபவபுஷே என்ற பதத்தால் சொன்னது என்னவென்றால், செல்வம் உண்டாவதற்கும் லக்ஷ்மி கடாக்ஷம் தேவை; அப்படி உண்டான செல்வம் புஷ்டியுடன் வளர்வதற்கும் அவள் கடாக்ஷம் தேவை; என்பதாம்.

இவள் வசத்தில் விபு இருப்பதற்கு இவள் நடித் ப்ரபையாய் இருப்பதும், ஸம்பத்ப்ரபவபுட் ஆக இருப்பதும் ஒருவகையில் காரணங்களாம். அழகாலும் திறமையாலும் அவனைக் கவர்ந்து தானிட்ட வழக்காக வைத்திருக்கிறான் என்பதாம்.

நாலாம் பாதத்தில் சலவிபவே என்றதன் கருத்து வருமாறு: நமக்கு வாய்க்கக் கூடிய விபவங்களில் இருவகை உண்டு. அழியும் செல்வம் என்றும் அழியாச் செல்வம் என்றும். பசுபுத்ராதிச் செல்வம் அழியும் செல்வம்; ஸ்வர்கமும் இதில் சேர்ந்ததே. இறைநிலை, ஸ்ரீ வைகுண்டம், என்பது அழியாச் செல்வம். நமக்கு அழியும் செல்வம் (சல விபவம்) வேண்டாம். நம்முடைய செயல்பாடுகள் அழியாச் செல்வத்துக்காக இருத்தல் நலம். ஆனால் நம் விருப்பத்தையும் மீறி, நம் வயமிழந்து, நாம் பலகாலும் அழியும் செல்வத்துக்கான செயல்களில் இழிகிறோம். இதைத் தவிர்ப்பதற்காக, திருமகளிடம் வேண்டுகிறார் ப்ரவர்தயதா: என்று. நம் செயல்களைச் சரியான பாதையில் செலுத்துக என்று அவளிடமே வேண்டுகிறார். சலவிபவத்தில் என் ப்ரவ்ருத்தி இல்லாதபடி பண்ணு என்று இறைஞ்சுகிறார். இது நாலாம் பாதத்தின் கருத்து.

இந்த ஶ்லோகம் முதல் கடைசி வரையில் உள்ள ஐந்து ஶ்லோகங்களிலும் ஓரே மாதிரியான சித்ரம் இருக்கிறது. அதற்கு ஶ்ருங்கலாயமகம் என்று பெயர். முதல் பாத முடிவில் வந்த சொற்றொடரே இரண்டாம் பாத ஆரம்பத்திலும் வேறோர் அர்த்தத்தில் வரும். அதே போல மூன்றாம் பாத இறுதித் தொடரே நான்காம் பாதத் தொடக்கத் தொடராக வேற்று அர்த்தத்தில் அமையும். இது தான் ஶ்ருங்கலாயமகம் என்கிற சங்கிலி-ப்ராஸம் ஆகும். இந்த ஶ்லோகத்தில் ப்ரபவபுஷே என்பது முதற்பாதத்து முடிவிலும், இரண்டாம் பாதத்து ஆரம்பத்திலும் வந்துள்ளது. அதே போல, மூன்றாம் பாதத்து முடிவிலுள்ள சலவிபவே என்பது நாலாம் பாத ஆரம்பத்திலும்

இருக்கிறது. இந்த நுட்பத்தைப் புரிந்து கொள்ளாத சில பதிப்பாளர்கள் தடித்பாவபுஷே என்று பாடத்தை மாற்றி அச்சிட்டுவிட்டார்கள். நாலாம் பாதத்திலும் சங்கிலி யமகத்தின் அளவைக் குறைத்து வேறு பாடம் அச்சிட்டுவிட்டார்கள். இங்கு கொடுத்த பாடமே சரி.

விண்ணில் வரு மின்னல் போல் விளங்குகிற வடிவுடையாய்
விடைமலையின் விபுலை வசம் வைத்துள்ளாய் வணங்குகிறேன்.
சென்னி மிகச் செல்வங்கள் சேர்ப்பிப்பாய் செழிப்பிப்பாய்
செல்கின்ற செல்வத்தில் செயல்புரியச் செய்யாதே.

—•—

58. பிறப்பறுக்கும் பிராட்டி

हृतसुखवारिजनिलयं वारिजनिलयं रमाभिधं ज्योतिः ।
हृदय सदा नम महितं न मम हितं तदितरेषु पतनं ते ॥

ஹ்ருதஸுகவாரிஜநிலயம் வாரிஜநிலயம் ரமாபிதம் ஜ்யோதி: ।
ஹ்ருதய ஸதா நம மஹிதம் ந மம ஹிதம் ததிதரேஷு பதநம் தே ॥ 58

हृदय = நெஞ்சே!	ज्योतिः = பேரொளியை
हृत-सुख-वारि-जनि-लयं = ஸுகத்தைத் தடுக்கும் ஜனன மரணங்களை நீக்குகிறதும்	सदा = எப்போதும்
वारिज-निलयं = தாமரையை இருப்பிடமாய்க் கொண்டதும்	नम = வணங்கு.
महितं = கொண்டாடப்பட்டதும்	तत्-इतरेषु = அதைத் தவிர வேறிடங்களில்
रमा-अभिधं = ரமா என்ற பெயர் கொண்டதுமான	ते = உன்னுடைய
	पतनं = விழுதல்
	मम = எனக்கு
	न हितं = நல்லதன்று.

என் இதயமே! நீ ரமா என்கிற ஜோதியை எப்போதும் வணங்கு. மோக்ஷானந்தத்துக்குத் தடையாக இருக்கும் பிறப்பிறப்புகளை நீக்கும் ஜோதி அது. தாமரையில் வாழும் ஜோதி அது. மஹிதமான ஜோதி அது. அதை விட்டு நீ

வேற்றிடங்களில் விழுவது எனக்கு நலம் பயக்காது. தாயாரை மட்டுமே ஸேவி.

வாரி என்ற பதத்தில் சிலேடை. தண்ணீர் என்று ஒரு அர்த்தம். எது வாரணம் பண்ணுகிறதோ, தடுக்கிறதோ, அது வாரி. காரி (எது பண்ணுகிறதோ அது), சாரி (எது நடக்கிறதோ அது) என்பவை பாபகாரி, பாதசாரி, முதலிய பதங்களில் வருவது போல, ஸங்கவாரி என்றால் ஸங்கத்தைத் தடுக்குமொன்று என்று பொருளாகும். ஜநி என்கிற பிறப்பும் லயம் என்கிற மரணமும் மோக்ஷம் என்கிற ஸங்கத்தைத் தடுப்பவை. அவற்றை நீக்கும் ஜோதி ரஸை என்ற பெயர் கொண்டது. அது வாரிஜ நிலயத்தில் இருப்பது. ஸங்கமாக வாரிஜநிலயமான ஒன்று ஸங்கவாரிஜநிலயத்தைப் போக்குகிறது என்பது முரண்பாட்டுத் தோற்றம். வாரிஜ - நிலயம் என்று ஓரிடத்திலும் வாரி-ஜநி-லயம் என்று இன்னோரிடத்திலும் பிரித்துப் பொருள் கூறுவதால் முரணமைதி.

நெஞ்சை விளித்து வேண்டுவது, தொழுதெழு என் மனமே என்று ஆழ்வார் காட்டிய வழியாகும். வாரிஜநிலயம் ஹ்ருதஸங்கவாரி என்பதும் பூ மேலிருப்பான் வினைதீர்க்குமே என்று ஆழ்வார் கூறிய கருத்தே. தேவதாந்தரபஜநம் பரமைகாந்தியான எனக்கு இதமன்று என்பது நாலாம் பாதக் கருத்து. அதனால் பிறப்பிறப்பு அறுகாது என்பதாலும், மேன்மேலும் பிறப்பிறப்பில் முடக்கிப் போடுவதால் தீமை விளைவிக்கும் என்பதாலும் ந ஹிதம் என்கிறார்.

முன் ச்லோகத்தில் போலவே சங்கிலி யமகம். முதல் பாதத்து முடிவிலுள்ள வாரிஜநிலயம் என்கிற ஆறெழுத்துச் சொற்றொடர் இரண்டாம் பாத ஆரம்பத்தில் திரும்பவருகிறது. அதேபோல மூன்றாம் பாத முடிவில் உள்ள நமமஹிதம் என்கிற ஐந்தெழுத்துச் சொற்றொடர்

நாலாம் பாத ஆரம்பத்தில் திரும்ப வருகிறது. பதம் பிரிக்கும் விதமும் வேறு; அர்த்தமும் வேறு.

இன்பத்தைத் தடுக்கின்ற இறப்பையும் பிறப்பையும் இல்லாமல் பண்ணுகிற இலக்குமியைத் தாமரையில் இருப்பவளை எப்பொழுதும் இதயமதே ! நீ வணங்கு. இதரரிடம் போவதும் என் இதத்துக்காய் ஆகாது.

—★—

57. ப்ரபந்நரின் பிழை பொறுப்பவள்

प्रपदनभारत्यागो भारत्यागोन्मुखस्य सोढ्वा मे ।
कमले रक्षसि कलितो रक्षसि कलितोग्रदुष्कृतेभयदा ॥ ५७

ப்ரபதநபாரத்யாகோ பாரத்யாகோந்முகஸ்ய ஸோட்வா மே।
கமலே ! ரக்ஷஸி கலிதோ ரக்ஷஸி கலிதோக்ரதுஷ்க்ருதேபயதா ॥ 57

कमले = தாமரையாளே !
भारत्यागोन्मुखस्य = பாரஸமர்ப்பணத்தில் எதிர்நோக்குகிற
मे = என்னுடைய
प्रपदन - भारती - आगः = ப்ரபத்தி வார்த்தையில் பிழையை
सोढ्वा = ஸஹித்து
कलित-उग्र-दुष्कृते = கொடிய பாவம் பண்ணினவனிடத்தில்
अभय-दा = அபயமளிக்கும் நீ
कलितः = கலிக்கொடுமையிலிருந்து
रक्षसि = காப்பாற்றுகிறாய்.

கமலையே ! நீ உக்ரமான அபராதம் புரிந்த ரக்ஷஸ்ஸுக்குக் கூட அபயம் அளிப்பவள். ஆகையால் என்னையும் காப்பாற்றுகிறாய். எனக்குக் கலிக்கொடுமை நேராமல் ரக்ஷிக்கிறாய். நான் சரணாகதியில் நோக்குடன் வார்த்தை சொல்லும்போது அதிலுள்ள பிழையைப் பொறுத்து, என்னைக் காக்கிறாய்.

எத்தனையோ கொடிய குற்றங்களைப் புரிந்த பின்னர் சரணாகதி பண்ணுகிறேனே, அப்போது பேசும் வார்த்தைகளிலும் குற்றம் இருக்கும். செயல் குற்றத்தை

மன்னிக்கக் கோரும்போது வாக்குக் குற்றம் உண்டாகிறது. பார-த்யாகம் பண்ணும்போது பாரதீ-ஆக: வந்துவிடுகிறது. நீ அதை ஸஹித்து என்னைக் காப்பாற்றுகிறாய்.

உக்ரமான பாவம் பண்ணின ரக்ஷஸ் என்று இங்கு யாரைச் சொல்கிறார்? இதில் கருத்து வேறுபாடு உண்டு. காகாஸுரனை என்பர் சிலர். அவன் ஸீதை மார்பில் காயம் ஏற்படுத்தவும் துணிந்தான். அவன் ராக்ஷஸனோவெனில், ராக்ஷஸன் போல் கொடியவனாதலால், ரக்ஷஸ் என்னல் தகும். அவனுக்கும் அபயம் அளித்தாள் ஸீதை. அல்லது அசோகவனத்தில் மிரட்டி அச்சுறுத்திய ராக்ஷஸிகளையும் உக்ரதுஷ்க்ருதிகளான ரக்ஷஸ் என்னலாகும். ஜாத்யேகவசநம்; அவர்களுக்கு ஹநுமானிடமிருந்து அபயம் அளித்தவள் ஸீதை. அல்லது பலாத்கரித்து அபஹரித்து வந்த ராவணனையும் கூறலாம். அபயதா என்று பிரிக்காமல் பயதா என்று பதம் பிரிக்க வேண்டும். அவனுக்குப் பயம் தந்தாள் ஸீதை. மரணபயம். அத்தகையவள் என்னைக் காக்கிறாள். நான் பரந்யாஸத்துக்கு முன்வந்தது இதற்குக் காரணம். இல்லாவிட்டால், அந்தக் காகாஸுரனுக்கும் ராவணனுக்கும் சளைத்தவளா நான்? இல்லை; அவர்கள் போன்றவள் தான். ஆயினும், சரணாகதிக்கு முன்வந்தால் ரக்ஷிப்பாள் என்று ராமாயணக் கதையில் தெரிகிறது. அதனால் தான் என்னை ரக்ஷிக்கிறாள்.

இந்த ச்லோகத்திலும் சங்கிலி - யமகம். எட்டு மாத்திரைகள் நாலெழுத்துகள் கொண்ட சொற்றொடர் திரும்பி வரும் என்று யமகத்தின் அளவு இக்கடைசி மூன்று ச்லோகங்களிலும் ஒரே மாதிரியாக இருக்கிறது. பாரத்யாகோ பாரத்யாகோ என்றும், ரக்ஷஸி கஸிதோ ரக்ஷஸி கஸிதோ என்றும் யமகம். முதல் ரக்ஷஸி வினைச் சொல்; ரக்ஷிக்கிறாய் என்று அர்த்தம். இரண்டாம் ரக்ஷஸி ஏழாம் வேற்றுமைப் பெயர்ச் சொல்; ராக்ஷஸனிடத்தில் என்று அர்த்தம். முதல் கஸித: கஸியிடமிருந்து என்று

பொருள்படும்; இரண்டாவது கலித உக்ர என்ற பதங்கள் சேருகையில் வந்தது. கலித என்பதற்குப் பண்ணப்பட்ட என்று அர்த்தம்.

சரணம் உனை அடையுங்கால் கமையிறக்கி வைக்குங்கால்
சொற்குற்றம் நேருங்கால் சலிக்கின்றாய் அதன் பின்னால்
கடுவினையர் வினைக்கூடக் காக்கின்ற வழக்கத்தால்
கலியினின்றும் எனைக் கூடக் கமலையே காக்கின்றாய்

—★—

58. இரண்டு ரக்ஷாபாயத்திலும் கின்டு.

कृतहिंसारम्भान्तं सारं भान्तं रमे तवापाङ्गम् ।
अर्थितरक्षोपाये रक्षोपाये पटो निधेहि मयि ॥ ५८

க்ருதஹிம்ஸாரம்பாந்தம் ஸாரம் பாந்தம் ரமே தவாபாங்கம் ।
அர்த்திதரக்ஷோபாயே ரக்ஷோபாயே படோ நிதேஹி மயி ॥ 58

रमे = ரமாதேவியே!

रक्षोपाये = ரக்ஷிக்கவைத் தூரத்தள்ளுவதில்

पटो = கெட்டிக்காரியே!

कृतहिंसा आरम्भ अन्त = ஹிம்ஸையை முயற்சிப்பவர்களுக்கு முடிவு கட்டுபவளே!

सारं = விசேஷமாக

भान्तं = ஒளிர்கிற

तव = உன்னுடைய

अपाङ्गं = கடைக்கண் பார்வையை

अर्थित रक्षा उपाये = காக்கும் வழியை வேண்டுகிற

मयि = என் மீது

निधेहि = வை.

க்ருத ஹிம்ஸா ஆரம்ப அந்தம் என்பதற்கு வெவ்வேறு விதமாக விக்ரஹவாக்யம் சொல்லி, ஆரம்பம் என்பதற்கு இரண்டு அர்த்தங்கள் சொல்லி, இந்த ஐந்து அர்த்தங்களையும் வரவழைக்கலாம். 1. இன்னல் தர முயற்சி பண்ணுபவர்களுக்கு நாபமம் கொண்டது. 2. இன்னலின் தொடக்கத்திலேயே முடிவைப் பண்ணுவது. 3. இன்னல் முயற்சியினருக்கு முடிவு பண்ணுவது. 4. இன்னல் பண்ணுவோரின் முயற்சியைக் குலைப்பது. 5. ஹிம்ஸையின்

ஆரம்பத்துக்கு முடிவு பண்ணுவது. க்ருத என்பதை ஹிம்ஸையில் அந்வயிப்பதா, ஆரம்பத்தில் அன்வயிப்பதா? அந்தத்தில் அந்வயிப்பதா? என்பதில் நமக்கு ஸ்வாதந்த்ர்யம் இருப்பதால் இத்தனை அர்த்தங்கள் கிடைக்கின்றன. துஷ்டரை அழிப்பது, துஷ்டத்தனத்தை அழிப்பது, துஷ்டநாசத்தைத் தன்னிடம் கொண்டது, என்று மூன்றுவிதமாக லக்ஷ்மீகடாக்ஷப்பெருமையை ஒரே பாதத்தில் ஒரே பதத்தில் பேச முடிந்துவிட்டது. ஸாரம் என்பதை வினையெச்சமாகக் கொண்டு, ஸாரமாக, அதாவது உயர்ந்த வகையில், என்று அர்த்தம் சொல்லி பாந்தம் என்பதில் அன்வயித்தால், நன்றாகப் ப்ரகாசிக்கிற அபாங்கம் என்ற பொருள் கிடைக்கும். ஸாரம் என்பதைப் பெயரெச்சமாக்கி, ஸாரமான, அதாவது உத்க்ருஷ்டமான, என்று அர்த்தம் சொல்லி, அபாங்கம் என்பதில் அந்வயித்தால், உத்கர்ஷம் கொண்டதும் ப்ரகாசிப்பதுமான அபாங்கம் என்று தாத்பர்யம் கிடைக்கும். ரக்ஷோபாயே என்பதற்கு நாலு அர்த்தங்கள்: 1. ரக்ஷஸ்ஸுக்கு அபாயத்தில் 2. ரக்ஷைக்கு உபாயத்தில், 3. ரக்ஷைக்கு உபாயம் உள்ளவளே! 4. ரக்ஷஸ்ஸுக்கு அபாயம் உள்ளவளே! உன் கடைக்கண்ணை என் மீது வை என்று வேண்டுகிறார். இதனால் எனக்கு ஐந்து விளைவுகள் ஏற்படும்; 1. என் ரக்ஷைக்கு ஒரு உபாயம் கிடைக்கும். 2. என்னிடமிருந்து ரக்ஷஸ்ஸுகள் ஓடிவிடுவார்கள். 3. என்னை ஹிம்ஸிக்க முயல்பவர்கள் அழிவார்கள். 4. நான் யாரையாவது ஹிம்ஸிக்க முற்பட்டால், அந்த ஆரம்பமே முடிவடையும்; நான் நல்லவனாவேன். 5. எனக்கு ஹிம்ஸை பண்ணத் தொடங்குபவர்களும், அந்த ஹிம்ஸையை நிறுத்திக் கொள்வார்கள். இவ்வளவும் லக்ஷ்மீ கடாக்ஷத்தின் விளைவுகள்.

ஹிம்சையை ஒழித்துவிடும். இராக்கதரைத் துரத்திவிடும்.
இரக்ஷைக்கு வழிவகுக்கும். இரமையே கடைக்கண் வை.

जनं अनुकम्पारम्या कं पारम्यात् रमे ! न मोदयसि ।
कृतहितयाचित्राणा या चित्राणां निधिस्त्वमखिलानाम् ॥ ५९

इति अस्तोकाध्वरि कवि कण्ठीरव वादिहंसाम्बुद वेङ्कटाचार्यकृतिषु

लक्ष्मीसहस्रे चित्रस्तबकः सम्पूर्णः ।

ஜநம் அநுகம்பாரம்யா கம் பாரம்யாத் ரமே ந மோதயஸி ? ।
க்ருதஹிதயாசித்ராணா யா சித்ராணாம் நிதிஸ்த்வமகிலாநாம் ॥

रमे = ரமாதேவியே ! பண்ணுகிற

अनुकम्पा रम्या = அருளழகியாய்

पारम्या = மேன்மையால்

कं जनं = எந்த ஜனத்தை

न मोदयसि = மகிழ்விக்கவில்லை?

कृतहितयाचित्राणा = ஹிதத்தை வேண்டுபவர்களுக்கு ரக்ஷணம்

या = எந்த

त्वं = நீ

अखिलानां = எல்லா

चित्राणां = சித்ரங்களுக்கும்

निधिः = நிதியாக இருக்கிறுயோ.

ரமையே ! உன் வடிவழகு கிடக்கட்டும்; உன் அருளழகு அதையும் விஞ்சுகிறது. அதன் மூலமாக, நீ எல்லாரையும் மேன்மையால் மகிழ்விக்கிறாய். உன்னால் பயனடையாதவரே கிடையாது. உன்னை அணுகி யார் யார் ஹிதத்தை வேண்டுகிறாரோ அவர்கள் எல்லாரையும் ரக்ஷிக்கிறாய். நீ எல்லாச் சித்ர காவ்யங்களுக்கும் நிதியாக இருக்கிறாய்.

அருளாலே அழகு என்றதன் கருத்து- இந்த அருளால் தொண்டர்களை சேர்த்தல், அருளுக்கு ஏங்கும்படி அவர்களைச் செய்தல், அருளிலேயே அவர்களை மயக்கல், முதலியவற்றாலாம்; அல்லது அருளால் அவன் முகப் பொலிவே கூடுவதாலாம். பாரம்யத்தால் மகிழ்வித்தல் என்பதற்கு இரண்டு தாத்பர்யங்கள். தன் பரத்வத்தால்

அவர்களை மகிழ்விக்கும் ஆற்றல் இருப்பதால், மகிழ்வித்தல் என்பதொன்று; அவர்களைப் பரமர்களாக்கி, பல துறைகளில் உயர்வளித்து, அதன் மூலமாக மகிழ்வித்தல் என்பது இன்னொன்று. க்ருதஹிதயாசித்ராணு என்றால் ஹிதத்தை வேண்டுவோர்க்கு ரக்ஷையைப் பண்ணுபவள் என்று அர்த்தம்; ஹிதத்தை வேண்டுபவர்க்கு ஹிதத்தைப் பண்ணுவது கூடுமாயிருக்க, ரக்ஷையைப் பண்ணுவானேன் என்றால், இவள் பண்ணும் ரக்ஷையே அவர்களுக்கு ஹிதமாவதாலாம். இதில் ஒரு முக்ய நீதியும் அடங்கியிருக்கிறது. எனக்குப் பணம் கொடு, பிள்ளை கொடு, என்றெல்லாம் யாசிக்கிற சிற்றறிவாளர்களுக்கு அவள் அந்தந்த வஸ்துவைக் கொடுத்து வாளாவிருக்கலாம்; ஆனால் எனக்கு எது ஹிதமோ அது எனக்குத் தெரியாது; அதை நீயே அறிந்து பண்ணு; என்று யாசிப்பவர்களை அவள் துணைநின்று ரக்ஷிக்கிறாள் என்பதாம். எல்லாச் சித்ரங்களுக்கும் என்பதால் எவ்வெவற்றைச் சொல்கிறார் என்றால் இந்தச் சித்ரஸ்தபகத்தில் ப்ரயோகித்த சித்ரங்கள் எல்லாவற்றுக்கும் அவளே வைப்புப் பொருள் என்கிறார். அவை யாவன :

இரண்டாவது ச்லோகத்தில் புனைந்த அபஸப்தாபாஸம் (சொற்பிழைத் தோற்றம்) என்கிற சித்ரம்.

மூன்றாவது ச்லோகத்தில் புனைந்த கோமூத்ரிகாபந்தம் என்கிற சித்ரம்.

நாலாவது ச்லோகத்தில் புனைந்த ப்ரதமபாத கூடம் (முதலடிமறைவு) என்கிற சித்ரம்.

ஐந்தாவது ச்லோகத்தில் புனைந்த சதுர்த்த பாத கூடம் (நாலாமடி மறைவு) என்கிற சித்ரம்.

ஆறாவது ச்லோகத்தில் புனைந்த நிரோஷ்ட்யம் (உதடொட்டாமை) என்கிற சித்ரம்.

ஏழாவது ஶ்லோகத்தில் புனைந்த க்ரியாவஞ்சநம் (வினைச்சொல் ஏமாற்றல்) என்கிற சித்ரம்.

எட்டாவது ஶ்லோகத்தில் புனைந்த ஸப்தவிபக்திவஞ்சநம் (ஏழு வேற்றுமைகளிலும் ஏமாற்றல்) என்கிற சித்ரம்.

ஒன்பதாவது ஶ்லோகத்தில் புனைந்த அர்த்த பாதாநுலோமப்ரதிலோமம் (பாதி பாதத்தை வலமிருந்து இடமாக வாசித்தாலும் மாறாமை) என்கிற சித்ரம்.

பத்தாவது ஶ்லோகத்தில் புனைந்த அர்த்த ஶ்லோகாநுலோமப்ரதிலோமம் என்கிற சித்ரம்.

பதினோராவது ஶ்லோகத்தில் புனைந்த அநுலோமப்ரதிலோமம் என்கிற சித்ரம்.

பன்னிரண்டாவது பதின்மூன்றுவது ஶ்லோகங்களில் புனைந்த ஶ்லோகத்வய அநுலோம ப்ரதிலோமம் என்கிற சித்ரம்.

பதினாலாவது ஶ்லோகத்தில் புனைந்த அநதிரிக்தபதபதார்த அநுலோமப்ரதிலோமம் என்கிற சித்ரம்.

பதினைந்தாவது ஶ்லோகத்தில் புனைந்த அநாவ்ருத்த வ்யஞ்ஜநம் என்கிற சித்ரம்.

பதினாறாவது ஶ்லோகத்தில் புனைந்த த்விஶ்ருங்காடக சக்ரபந்தம் என்கிற சித்ரம்.

பதினேழாவது ஶ்லோகத்தில் புனைந்த த்விசதுஷ்க சக்ரபந்தம் என்கிற சித்ரம்.

பதினெட்டாவது ஶ்லோகத்தில் புனைந்த சதுரார சக்ரபந்தமும் சதுர்தளகர்பத்வாதஶ தளபத்ம பந்தமும் என்கிற சித்ரம்.

பத்தொன்பதாவது ஶ்லோகத்தில் புனைந்த ஷோடஶதளபத்ம பந்தமும் த்விசதுஷ்க சக்ரபந்தமும் என்கிற

சித்ரம்.

இருபதாவது ஶ்லோகத்தில் புனைந்த அர்தப்ரகயமகம் என்கிற சித்ரம்.

இருபத்தொன்றாவது ஶ்லோகத்தில் புனைந்த ஶரபந்தம் என்கிற சித்ரம்.

இருபத்திரண்டாவது ஶ்லோகத்தில் புனைந்த முரஜ பந்தம் என்கிற சித்ரம்.

இருபத்து மூன்றாவது ஶ்லோகத்தில் புனைந்த ஸஜாதீய நிரந்தர யமகம் என்கிற சித்ரம்.

இருபத்து நாலாவது ஶ்லோகத்தில் புனைந்த கருடகதி சக்ரபந்தம் என்கிற சித்ரம்.

இருபத்தைந்தாவது இருபத்தாறாவது ஶ்லோகங்களில் புனைந்த ப்ரதிபாத துரங்க பந்தம் என்கிற சித்ரம்.

இருபத்தேழாவது ஶ்லோகத்தில் புனைந்த ஸர்வதோபத்ரமும் த்விஸ்வரமும் என்கிற சித்ரம்.

இருபத்தெட்டாவது ஶ்லோகத்தில் புனைந்த த்ரிஸ்வரம் என்கிற சித்ரம்.

இருபத்தொன்பதாவது ஶ்லோகத்தில் புனைந்த ஏகஸ்வரம் என்கிற சித்ரம்.

முப்பதாவது ஶ்லோகத்தில் புனைந்த த்ரி வ்யஞ்ஜநம் என்கிற சித்ரம்.

முப்பத்தொன்றாவது ஶ்லோகத்தில் புனைந்த த்விவ்யஞ்ஜநம் என்கிற சித்ரம்.

முப்பத்திரண்டாவது முப்பத்து மூன்றாவது ஶ்லோகங்களில் புனைந்த ஏகவ்யஞ்ஜநம் என்கிற சித்ரம்.

முப்பத்து நாலாவது ச்லோகத்தில் புனைந்த ஸர்வதோபத்ரமும் த்விபாக்ஷரமும் ஏகவிபாக்ஷரம் என்கிற சித்ரம்.

முப்பத்தைந்தாவது ச்லோகத்தில் புனைந்த த்வ்யக்ஷரம் என்கிற சித்ரம்.

முப்பதாறுவது ச்லோகத்தில் புனைந்த கவிநாமாங்கித கோணாஸ்ப்ருஷ்ட கர்ணிக அஷ்டதளபத்ம பந்தம் என்கிற சித்ரம்.

முப்பத்தேழாவது ச்லோகத்தில் புனைந்த கவிகாவ்யநாமாங்கித மஹா சக்ரபந்தம் என்கிற சித்ரம்.

முப்பத்தெட்டாவது ச்லோகத்தில் புனைந்த அஷ்டார சக்ரபந்தம் என்கிற சித்ரம்.

முப்பத்தொன்பதாவது ச்லோகத்தில் புனைந்த கவாக்ஷ பந்தமும் ரத பந்தமும் என்கிற சித்ரம்.

நாற்பதாவது நாற்பத்தொன்றுவது ச்லோகங்களில் புனைந்த பிந்நவ்ருத்தாநுலோம கோமூத்ரிகாபந்தம் என்கிற சித்ரம்.

நாற்பத்திரண்டாவது ...வது ச்லோகங்களில் புனைந்த பிந்நவ்ருத்தாநுலோம கோமூத்ரிகா பந்தம் என்கிற சித்ரம்.

நாற்பத்துநாலாவது ச்லோகத்தில் புனைந்த வாக்யாந்தரகர்பித அஷ்டதளபத்ம பந்தம் என்கிற சித்ரம்.

நாற்பத்தைந்தாவது ச்லோகத்தில் புனைந்த யமகபூர்ணபாதத்வயம் என்கிற சித்ரம்.

நாற்பத்தாறுவது ச்லோகத்தில் புனைந்த ப்ரதிபாத யமகம் என்கிற சித்ரம்.

நாற்பத்தேழாவது நாற்பதெட்டாவது நாற்பத்தொன்பதாவது ச்லோகங்களில் புனைந்த

பிந்தஸ்ருத்தாநுலோம ப்ரதிலோம கோமூத்ரிகாபந்தம் என்கிற சித்ரம்.

ஐம்பதாவது ஶ்லோகத்தில் புனைந்த அநுலோமப்ரதிலோமமும் த்விஸ்வரமும் சதுர்வ்யஞ்ஜநமும் என்கிற சித்ரம்.

ஐம்பத்தொன்றாவது ஶ்லோகத்தில் புனைந்த பாதாதி ப்ராஸம் என்கிற சித்ரம்.

ஐம்பத்திரண்டாவது ஐம்பத்து நாலாவது ஶ்லோகங்களில் புனைந்த பாதாந்த ப்ராஸம் என்கிற சித்ரம்.

ஐம்பத்து மூன்றாவது ஶ்லோகத்தில் புனைந்த பாதமத்யப்ராஸம் என்கிற சித்ரம்.

ஐம்பத்தைந்தாவது முதல் ஐம்பத்தொன்பதாவது வரையான கடைசி ஐந்து ஶ்லோகங்களில் புனைந்த ஶ்ருங்கலா யமகம் என்கிற சித்ரம்.

என்கிற இவையெல்லாம்

அருளாலே அழகியவள். ஆனந்தம் அளிப்பாள்.
அனைத்துவகைச் சித்ரங்கள் அடங்கிய ஓர் நிதியாவாள்.

தாவல்பாக்கம் அக்நிஹோத்ரம் தாராயணதாதயார்ய மஹாதேஶிகனிடம் தாவல்பாக்கம் கண்ணன் (எ) யஜ்ஞவராஹ தாதாசார்யர் கேட்டறிந்து எழுதிய லக்ஷ்மீஸஹஸ்ர உரையில் சித்ரஸ்தபகம் முற்றும்.

லக்ஷ்மீஸஹஸ்ரத்தில் மொத்த ஸ்தபகங்கள் 25.

இதுவரை முடிந்த ஸ்தபகங்கள் 22.
இன்னும் மீதமுள்ள ஸ்தபகங்கள் 3.
மொத்த ஶ்லோகங்கள் 1018.
இதுவரை முடிந்த ஶ்லோகங்கள் 958.
இன்னும் மீதமுள்ள ஶ்லோகங்கள் 60.

—★—

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

இருபத்துமூன்றுவது ஸங்கீர்ண ஸ்தபகம்

இந்த ஸ்தபகத்தில் முப்பது ச்லோகங்களில் பல்வேறு வகைகளில் (ஒரே தலைப்புக்குள் அடங்காதபடி) தாயாரைத் துதிக்கிறார்.

1. அனைத்துக் குணங்களும் அமையப் பெற்றவள்.

समस्तगुणविस्तार समावेशनिवेशनम् ।
वन्देऽरविन्दनिलयं वरदं परदैवतम् ॥

ஸமஸ்தகுணவிஸ்தார ஸமாவேசநிவேசநம் ।
வந்தே(அ)ரவிந்தநிலயம் வரதம் பரதைவதம் ॥

समस्त-गुण-विस्तार-समावेश-निवेशनं = எல்லா நற்பண்புகளுக்கும் பரந்ததும் சேர்ந்து தங்கக் கூடியதுமான இருப்பிடமானதும்

अरविन्द निलयं = தாமரையை இருப்பிடமாகக் கொண்டதும்

वरदं = வரம் அளிப்பதுமான

पर दैवतं = பரதேவதையை

वन्दे = வணங்குகிறேன்.

தாயாரிடம் எல்லாக் குணங்களும் நிறைய சேர்ந்திருக்கின்றன. தாமரையில் வசிக்கின்ற அவள் நமக்கு வரம் அளிக்கும் பரதேவதை ஆவாள். அவளை நான் வணங்குகிறேன்.

ஸமஸ்தகுண என்றதன் கருத்து வருமாறு ; இதுவரையும் லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தில் காருண்யம் என்ற குணத்துக்காக ஒரு ஸ்தபகமும், ஸௌந்தர்யம் என்ற குணத்துக்காக ஒரு ஸ்தபகமும், பொறுமை என்கிற குணத்துக்காக ஒரு ஸ்தபகமும், ஔதார்யம் (வண்மை) என்கிற குணத்துக்காக ஒரு ஸ்தபகமும், என்றிப்படியெல்லாம் பிரித்துக் கவி பாடி, கிட்டத்தட்ட ஆயிரம் ச்லோகங்களை நெருங்கும்போது, இன்னும் ஏராளமான குணங்கள் பாக்கியிருப்பதால், ஒரே ஒரு ஆயிரம் ச்லோகங்களுக்குள் அவற்றை லேசாகவேனும் வர்ணிப்பது அசாத்யமாகையால்,

எல்லாவற்றையும் சேர்த்து ஒரே ச்லோகத்தில் சொல்வது தவிர வேறு வழி இல்லாததால், எல்லாக் குணங்களையும் ஒருசேர இங்கு கூறுவதற்காகவாம். தவிரவும், அழகு, காந்தி, மென்மை, முதலிய வடிவத்துக் குணங்களும், வாத்ஸல்யம் என்கிற தாயன்பு, ஸௌலப்யம் என்கிற எளிமை, ஸௌசீல்யம் என்கிற நீர்மை, முதலிய ஆத்ம குணங்களும், என்றிவ்வாறாகப் பல வகைகளில் மண்டிக்கிடப்பதைக் கூறுவதற்காகவுமாம்.

விஸ்தார என்றதன் கருத்து, ஒவ்வொரு நற்பண்பும் கொஞ்ச நஞ்சமாக இல்லாமல், நிறைய அதிகமாக இருக்கின்றன என்பதாம்.

ஸமாவேஶ என்றதன் கருத்து வருமாறு : உலகில் இந்த நற்பண்புகளைத் தனித் தனியே பலரிடம் காண்கிறோம். ஆனால் இவ்வெல்லா நற்பண்புகளும் ஒரு வ்யக்திக்கே சேர்ந்து வாய்ப்பதில்லை; பிராட்டிக்கோ இவையெல்லாம் ஒன்றுகூடி ஒரே இடத்தில் இருக்கின்றன என்பதாம்.

நிவேஶநம் என்றதன் கருத்து வருமாறு : மற்றவர்களுக்குச் சில நற்குணங்கள் வந்தேறியதாவோ தாற்காலிகமாகவோ இருக்கலாம்; ஆனால் இந்தப் பரதேவதைக்கு அவ்வாறன்று; அக்குணங்களின் உறைவிடமே இவள் தான்; இங்கிருந்துதான்; இவள் போட்ட பிச்சையால்தான், மற்ற சிலருக்கும் நல்ல குணங்கள் அமைகின்றன என்பதாம்.

அரவிந்த நிலயம் என்றதன் கருத்து, எல்லா குணங்களுக்கும் நிலயமான இவளுக்கு அரவிந்தம் நிலயம் ஆகின்றது; ஒன்று ஸமவாய ஸம்பந்தத்தால்; இன்னொன்று ஸம்யோக ஸம்பந்தத்தால்; என்ற வேற்றுமையை ரஸிப்பதற்காகவாம்.

பரந்த பல பண்புகளின் பதமாவாள் பலன் தருவாள்.
பதுமம் வாழ் பரதெய்வம். பணிகின்றேன் அவளை நான்.

2. வைதர்ப்பம் போல் வைகும் மங்கை

औदार्यशेवधिः अनिन्दितकान्तिसिन्धुः
ओजःप्रसादनिधिः उज्ज्वलसौकुमार्या ।
वैदर्भरीतिरिव वारिधिराजकन्ये!
श्लाघापदं भवसि सारविदां कवीनाम् ॥ २

ஔதார்யஶேவதி: அநிந்திதகாந்திஸிந்து:
ஓஜ:ப்ரஸாதநிதி: உஜ்ஜ்வலஸௌகுமார்யா ।
வைதர்பரீதிரிவ வாரிதிராஜகந்யே !
ஶ்லாகாபதம் பவஸி ஸாரவிதாம் கவீநாம் ॥ 2

वारिधिराजकन्ये = கடலரசனின் கன்னிகையே !

औदार्यशेवधिः = ஔதார்யம் என்கிற குணத்தின் பொக்கிஷமானவள்.

अनिन्दित कान्ति सिन्धुः = பழிப்பற்ற காந்தி என்னும் குணத்தின் கடலானவள்.

ओजःप्रसादनिधिः = அறிவுக்கும் உள்ளவுகப்புக்கும் நிதியானவள்.

उज्ज्वल सौकुमार्या = ஒளிரும் மென்மை கொண்டவள்.

वैदर्भरीतिः इव = வைதர்ப்பம் என்னும் காவியநடை போல

सारविदां = ஸாரத்தை அறிந்த

कवीनां = கவிஞர்களுடைய

श्लाघापदं = பாராட்டுக்கு இடமாக

भवसि = ஆகிறாய்.

ஸமுத்ரராஜனின் மகளே ! ஆலங்காரிகர்கள் காவ்ய சைலிகளை வகைப்படுத்தும்போது, வைதர்ப்பீ என்றொரு நடைக்குப் பெயரிட்டிருக்கிறார்கள். அந்த நடையில் ஔதார்யம், காந்தி, ஓஜஸ், ப்ரஸாதம், ஸௌகுமாரதா, என்ற கலைச் சொற்களை விளக்கி, அவை மலிந்த சைலியை வைதர்ப்பசைலி என்கிறார்கள். இந்தக் கலைச் சொற்களின் வேறொரு அர்த்தப்படி பார்த்தால் நீ அவற்றைக் கொண்டிருக்கிறாய். வள்ளல் தன்மை, வடிவத் தொளி, அறிவளிக்க அருளுதல், மென்மை, இவை

யாவும் உன்னிடம் உள்ளன. அதனால், ஸாரத்தை அறிந்த கவிஞர்கள் வைதர்ப்பரீதியை ஆதரிப்பது போலவே உன்னையும் ச்லாகிக்கிறார்கள்.

ஔதார்யம் என்பது என்ன? எழுத்துக்கோவை விகடமாக அமைந்து, சொல்லமைப்பிலேயே ஆடல் நடைபெறுவது போல அமைந்தால், அந்தச் செய்யுளில் ஔதார்யம் இருப்பதாகச் சொல்வார்கள். கேட்டவர்களுக்கெல்லாம் வாரி வழங்கும் கொடைப்பண்புக்கும் ஔதார்யம் என்று பெயர். முதலாவது அர்த்தத்தில் வைதர்ப்பீரீதியிலும், இரண்டாவது அர்த்தத்தில் மஹாலக்ஷ்மியிடமும் இந்த ஔதார்யம் நிறையக் காணப்படுகிறது.

காந்தி என்றால் பளிச்சிடுதல். சொற்கட்டு பளிச் சென்றிருப்பது செய்யுள் நடையில்; வடிவம் பளிச்செனமின்னுவது லக்ஷ்மியிடம்.

ஓஜஸ் என்றால் என்ன? கூட்டுச் சொற்கள் நிறையவாகித் தடபுடலாக இருப்பது காவ்யத்தில் ஓஜஸ். உற்பத்தித் திறன் என்பதும் ஜ்ஞானம் என்பதும் லக்ஷ்மியிடம் ஓஜஸ்.

ப்ரஸாதம் என்றால் என்ன? எளிதில் அர்த்தம் புரியும்படி சிக்கலில்லாமல் இருப்பது காவியத்தில் ப்ரஸாதம்; அன்பும் மனமலர்ச்சியும் கொண்டு; நன்மைகள் புரியத் தயாராக இருப்பது தாயாரிடம் ப்ரஸாதம்.

ஸௌகுமார்யம் என்பது என்ன? உரப்பெழுத்துகளைக் குறைத்து, மிருதுவான அக்ஷரங்களைப் பெரும்பாலும் கையாள்வது காவ்யத்தில் ஸௌகுமார்யம். மென்மை என்பது தாயாரிடம் ஸௌகுமார்யம்.

ச்லாகாபதம் என்பதன் கருத்து வருமாறு: நல்ல கவிகள் வைதர்ப்ப ரீதியை ஆதரிப்பது வழக்கம். இதற்கு மாறான கௌடரீதியை ஆதரிப்பதில்லை. இவ்வகையிலும்

வைதர்ப்பரீதிக்கும் லக்ஷ்மீக்கும் இன்னொரு ஒப்புமை கிடைத்துவிட்டது. நல்ல கவிஞர்கள் லக்ஷ்மியைத் துதிக்கிறார்கள் என்பதால், யார் இந்தக் கவிகள் என்றால், லக்ஷ்மீ ஸஹஸ்ரநாமம் அருளிய ஸநத்குமாரர், இந்த்ர க்ருத லக்ஷ்மிஸ்தோத்ரம் எழுதிய பராசரர், கநகதாரா ஸ்தோத்ரம் இயற்றிய ஆதிசங்கரர், சதுஶ்லோகீ இயற்றிய ஆளவந்தார், கத்ய சூர்ணிகை இயற்றிய ராமாநுஜர், ஸ்ரீஸ்தவம் இயற்றிய கூரத்தாழ்வான், ஸ்ரீ ஸ்துதி இயற்றிய வேதாந்த தேசிகர், ஸ்ரீ குணரத்ந கோஶம் இயற்றிய பராசரபட்டர், இப்போது லக்ஷ்மீ ஸஹஸ்ரம் இயற்றிக் கொண்டிருக்கும் வேங்கடாத்வரி, எல்லாருமே திருமகளைக் கொண்டாடும் கவிகளாம். இந்தக் கவிகளை ஸாரவித் என்றதன் கருத்து என்னவென்றால், உலகில் எத்தனையோ கவிகள், மலையையும் மரத்தையும் மலரையும் மடுவையும் மட்டும் வர்ணித்து நிறுத்திவிடுகிறார்களே, அவர்கள் ஸாரமறியாதவர்கள்; மாறாக மலரவளைப் போற்றும் துதிப்பாடல்களை இயற்றிய கவிகள் ஸாரமறிந்தவர்கள்; ஸம்ஸாரம் அஸாரம் என்றும் வைகுந்தமே ஸாரம் என்றும் அறிந்தவர்கள் என்பதாம்.

கடலரசன் கன்னிகையாள் காந்தியுடைக் கடலானவள்.
காவியத்து நடைபோல்வாள். கவிஞர் துதிக்கிடமானவள்.
வைப்பாவாள் வண்மைக்கு வையலிலா ஒளியுடையாள்
வையத்துக் கவி போற்றும் வைதர்ப்பநடை போல்வாள்.

—•—

3. நாடகக் கலை போல் நாதனோடிருப்பவள்.

आरम्भमेत्य महनीयममोघयत्ना
प्राप्त्याशया श्रितपदा परमेप्सितस्य ।
नित्यं फलं कलयसे नियतात्मभाजा
नाथेन नाटककलापरिपाटिकेव ॥ ३

ஆரம்பமேத்ய மஹநீயமமோகயத்நா
ப்ராப்த்யாஶயா ஶ்ரிதபதா பரமேப்ஸிதஸ்ய ।
நித்யம் பலம் கலயஸே நியதாப்திபாஜா
நாதேந நாடககலாபரிபாடிகேவ ॥ 3

परम-ईप्सितस्य = முக்யக் குறிக்கோளான பரமபதத்தை

प्राप्ति-आशया = அடையும் விருப்பத்தால்

श्रित-पदा = அடையப்பட்ட திருவடிகளை உடையவள்.

महनीय = கொண்டாடத்தக்க

आरम्भं = தொடக்கத்தை

एत्य = அடைந்து

अमोघ-यत्ना = வீணாகாத முயற்சி கொண்டவள்.

नियत-आप्ति-भाजा = என்றுமே ஆப்தனான

नाथेन = நாதனான பகவானாலே

नित्यं = எப்போதுமே

फलं = பலனை

कलयसे = ஏற்படுத்துகிறாய்

नाटक=कला=परिपाटिका इव = நாடகக் கலையின் முறை போல.

நாட்ய ஶாஸ்த்ரத்தில் ஆரம்பம், யத்நம், பதம், பரமேப்ஸிதம், நியதாப்தி, நாதன், என்பவை கலைச் சொற்கள். இதே பதங்களுக்கு உலகரீதியான அர்த்தங்களும் உண்டு. இதன்படி பார்த்தால் நீ நாடகக் கலையின் ப்ரகாரத்தை ஒத்திருக்கிறாய். தங்கள் உயர்ந்த குறிக்கோள் நிறைவேறுவதற்காக, அல்லது தீவ்ரமனோரதம் கைகூடும் என்கிற நம்பிக்கையோடு, பக்தர்கள் உன் திருவடியை ஆச்ரயிக்கிறார்கள். அவர்களுக்காக நீயும் சிறந்ததொரு தொடக்கத்தைப் பண்ணுகிறாய். உன் முயற்சி என்றுமே வீணாவதில்லை. உன் நாதன் உனக்கு என்றுமே ஆப்தனாக இருப்பதால். நீ என்றுமே பலனைத் தருகிறாய்.

ஆரம்பம் என்றால் என்ன? கதாநாயகன் கதாநாயகியிடம் கொள்ளும் காதலின் முதற்படியான ஆவலுக்கு. விளம்பத்தை ஸஹிக்காத தீவ்ர வேட்கைக்கு, ஆரம்பம் என்று பெயராம். இது நாட்ய ஶாஸ்த்ரத்தில் அர்த்தம். உலகியலில் தொடக்கம் என்று அர்த்தம்.

யத்நம் என்றால் என்ன? நினைத்ததை ஸாதிப்பதற்காக வேகத்துடன் செயல்படுவதற்கு நாட்ய ஶாஸ்த்ரத்தில் ப்ரயத்நம் என்று பெயராம். உலகியலில் முயற்சி என்று அர்த்தம்.

ப்ராப்த்யாஶா என்றால் என்ன? இதுவும் ஒரு கலைச் சொல். இதற்கும் இலக்கணம் கூறும் ஶ்லோகம் ஒன்றுண்டு. அதன்படி தன் காரியம் கைகூடுவதற்கான உபாயங்களையும் அபாயங்களையும் எண்ணி, ஈடேறுவதில் ஸந்தேஹத்துடன் நம்பிக்கை வைப்பதற்கு ப்ராப்த்யாஶா என்று பெயர்.

நியதாப்தி என்பதும் ஒரு பரிபாஷைச் சொல். அபாயம் இனியில்லை; கார்யம் கைகூடும் என்று நிச்சயிப்பதற்கு நியதாப்தி என்று பெயராம்.

நாதன்,பதம், இவை கூடக் கலைச் சொற்களே. நாதன் என்பது நாடகத்தின் கதாநாயகனைக் குறிப்பது. பதம் என்பது அந்தந்த மனோபாவங்களுக்கேற்றபடி, அரங்கத்தில் காலடி வைப்புகளைக் கூறும்.

நாடகபரிபாடியிலும் ஆரம்பம் மஹநீயமாயிருக்கும்; லக்ஷ்மியிடமும் அப்படியே.

நாடகபரிபாடியிலும் யத்நம் அமோகமாயிருக்கும்; லக்ஷ்மியிடமும் அப்படியே.

நாடகபரிபாடியிலும் ப்ராப்த்யாஶையோடு பதந்யாஸம் சேரும்; லக்ஷ்மியிடம் அப்படியே.

நாடகபரிபாடியிலும் நியதாப்தி கொண்ட நாதன் இருப்பான்; லக்ஷ்மியிடம் அப்படியே.

நாடகபரிபாடியிலும் நித்யம் பலன் கிடைக்கும்; லக்ஷ்மியிடம் அப்படியே.

பதங்களின் அர்த்தங்கள் மட்டுமே வேறு. இவ்வாறாக, நாடகக் கலை முறையை ஒத்திருக்கிறாள் திருமகள்.

தோன்றுமவா நிறைவேறத் தொண்டர் தொழும் திருவடியாள்.
தொடக்கத்தே சிறப்புடையாள். தோலாத முயற்சியினாள்.
நாடியதை நிறைவேற்ற நாடிவரும் அடியுடையாள்.
நாதன் துணை நிதமுடையாள் நாடகம் போல் முறையுடையாள்.

—★—

4. ந்யாய மாஸ்த்ரத்தின் நல்ல ஹேதுவுக்கு நிகரானவள்.

व्याप्त्या प्रसिद्धा श्रितपक्षपाता बाधानभिज्ञा प्रतिपक्षशून्या ।
समीहितं साधयसि ध्रुवं नः सद्धेतुवत् दुग्धपयोधिकन्ये ! ॥

வ்யாப்த்யா ப்ரஸித்தா ஶ்ரிதபக்ஷபாதா
பாதாபிஜ்ஞாந ப்ரதிபக்ஷஶூந்யா ।
ஸமீஹிதம் ஸாதயஸி த்ருவம் ந:
ஸத்தேதுவத் துக்தபயோதிகந்யே ॥

दुग्ध पयोधि कन्ये = பால் ஸமுத்ரத்தின் பெண்ணே !
व्याप्त्या = எங்கும் வ்யாபித்திருப்பதால்
प्रसिद्धा = புகழ் பெற்றவளும்
आश्रित पक्षपाता = தன்னை அடைந்தவர்கள் பால் பரிவு கொண்டவளும்
बाध अनभिज्ञा = பாதிக்கப்படுவதையே அறியாதவளும்
प्रतिपक्ष शून्या = எதிராளிகளே இல்லாதவளும் ஆன நீ
नः = எங்களுக்கு
समीहितं = விரும்பியதை
सद्धेतुवत् = நல்ல ஹேது போல
ध्रुवं = நிச்சயமாக
साधयसि = ஸாதிக்கிறாய்.

பாற்கடலின் மகளே ! நீ எங்கும் நிறைந்தவள் என்று புராண ப்ரஸித்தி கொண்டவள். உன்னை அண்டினவர்களிடம் பரிவு காட்டுபவள். உனக்குத் தடைகளும் கிடையாது; எதிரிகளும் கிடையாது. நீ எங்களுக்கு வேண்டியதைச் சாதித்துத் தருகிறாய். ந்யாய மாஸ்த்ரத்தில் உள்ள கலைச் சொற்கள் மூலம் இதைச் சொல்லிப் பார்த்தால், நீ ஒரு ஸத்-ஹேது போல இருக்கிறாய்.

ஹேதுவாதம் மூலம் ஒன்றைச் ஸாதிக்க வேண்டுமானால், நல்லதொரு ஹேது அதை ஸாதித்துக் கொடுக்கும். அந்த ஹேது எப்போது நல்லதாகும் என்றால், 1. அது வ்யாப்தியால் ப்ரஸித்தமாய் இருக்க வேண்டும்.

2. பக்ஷத்தில் அந்த ஹேது இருக்க வேண்டும். 3 அந்த ஹேதுவுக்குப் பாதிப்பு இருக்கக் கூடாது. 4. அதற்குப் ப்ரதிபக்ஷமாக இன்னொரு ந்யாயப்ரயோகம் இருக்கக் கூடாது. இந்த நாலும் அமையப் பெற்றால் அது ஸத் ஹேதுவாகி இஷ்டமான, ஸாத்யத்தை ஸாதித்துக் கொடுக்கும். உதாஹரணமாக, மலையிலுள்ள புகையைப் பார்த்து, அங்கு நெருப்பு இருக்கும் என்று அனுமானிக்கும்போது, புகை இருக்கும் இடத்தில் எல்லாம் நெருப்பு இருக்கும்என்பது வ்யாப்தி; இப்போது புகை இருக்கும் இடமான மலை பக்ஷம்; மலையில் நெருப்பு இல்லை என்பதற்கு வேறொரு ப்ரமாணம் கிடைத்தால் இந்த ஹேது பாதிதமாகும்; மலையில் நெருப்பில்லை என்பதைச் ஸாதிப்பதற்கு வேறொரு ஹேது பாதிதமாகும்; மலையில் நெருப்பில்லை என்பதைச் ஸாதிப்பதற்கு வேறொரு ஹேது கிடைத்தால் இது ப்ரதிபக்ஷம் கொண்டதாகும்; இப்படிப் பாதகமோ ப்ரதிபக்ஷமோ இல்லாமல், மலையில் ஹேதுவான புகை இருந்து, வ்யாப்தியும் ப்ரஸித்தமானால், மலையில் நெருப்பு இருப்பது நிஶ்சயம் என்று ஸாதிக்கலாகும்.

வ்யாப்த்யா ப்ரஸித்தா என்றதன் கருத்து- யதா ஸர்வகதோ விஷ்ணு: இத்யாதியான புராண வசனங்களில் விஷ்ணு போலவே லக்ஷ்மியும் உலகெங்கும் வ்யாபித்தவள் என்று கூறியதைக் கூறத் தேஶிக ஸம்ப்ரதாயக் கருத்தை வலியுறுத்தவாம். பக்ஷபாதம் என்பதற்கு இரண்டு அர்த்தங்கள். பக்ஷத்தில்,ஸாத்யத்தை எதில் ஸாதிக்க வேண்டுமோ அதில், ஹேது இருப்பது; என்பது ஒரு அர்த்தம். பரிவு, தனித்த அனுக்ரஹம், என்பது இன்னொரு அர்த்தம். முதலாவது ஸத்-ஹேதுவிலும் இரண்டாவது தாயாரிடமும் இருக்கிறது.

இப்போது லக்ஷ்மிக்கும் நல்ல ஹேதுவுக்கும் நாலு ஒப்புமைகள். வ்யாப்தி இருப்பது முதல் ஒப்புமை (அர்த்தம் வெவ்வேறானாலும்). ஶ்ரிதபக்ஷபாதம் இருப்பது

இரண்டாம் ஒப்புமை (அர்த்தம் வெவ்வேருனாலும்). பாதகம் இல்லாதது மூன்ருவது ஒப்புமை. ப்ரதிபக்ஷம் இல்லாதது நான்காம் ஒப்புமை. இத்த நாலும் அமைந்த பிறகு ஐந்தாவதும் அமைந்துதானே ஆக வேண்டும்? நல்ல ஹேது ஸாத்யத்தைத் தீர்மானித்துத் தருவது போல லக்ஷ்மியும் நிச்சயமாக நாம் விரும்பியதைச் சாதித்துத் தருகிருள்.

தர்க்க ஸங்க்ரஹத்தில் ஸவ்யபிசார விருத்த ஸத்ப்ரதிபக்ஷ அஸித்த பாதிதா: பஞ்ச ஹேத்வாபாஸா: என்று சொன்ன ஐந்து ஹேது தோஷங்களும் இல்லை என்பதை முறையே வ்யாப்தா, ஸ்ரிதபக்ஷபாதா, ப்ரதிபக்ஷஸஹ்யா, ப்ரஸித்தா, பாதாநபிஜ்ஞா, என்ற அடைமொழிகளால் கூறியிருப்பது நோக்கத்தக்கது.

ப்ரஸித்தியுடன் வ்யாபித்தாள். ப்ரபன்னர் பால்
பரிவுடையாள்.
ப்ரதிபக்ஷம் இல்லாதாள். ப்ரியப்பட்டதைத் தருவாள்.
ஸர்வத்ர வ்யாபித்தாள் ஸத்ஹேது போல்கின்ருள்
ஸந்தேகம் இல்லாமல் ஸாதிப்பாள் விரும்பியதை.

—★—

5. இலக்கணக் கல்வி போல் இருக்கும் லக்ஷ்மி.

प्रकृतिरुचिरमूर्तिः प्रत्ययानां विधात्री
समधिकगुणवृद्धिः साधुतां आदधाना ।
सृजसि पदमजाद्यैरीप्सितं द्रागनन्त-
स्थिरफणितिविधेया शब्दविद्येव पद्मे ॥ ५

ப்ராக்ருதிருசிரமூர்த்தி: ப்ரத்யயாநாம் விதாத்ரீ
ஸமதிககுணவ்ருத்தி: ஸாதுதாம் ஆததாநா ।
ஸ்ருஜஸி பதமஜாத்யைரீப்ஸிதம் த்ராகநந்த-
ஸ்திரபணிதிவிதேயா ஶப்தவித்யேவ பத்மே ॥ 5

पद्मे = தாமரையாளே!

प्रकृति-रुचिर-मूर्तिः = இயற்கையாகவே அழகிய வடிவம் உடையவளும்

प्रत्ययानां = எண்ணங்களுக்கு, நம்பிக்கைகளுக்கு, அறிவுகளுக்கு

विधात्री = படைப்பவளும்

समधिक-गुण-वृद्धिः = மிக அதிகமான குணங்களை வளர்ப்பவளும்

साधुतां = நல்ல பண்பை

आदधाना = பண்ணுபவளும்

अनन्त-स्थिर-फणिति-विधेया = எல்லையற்ற ஸ்திரமான சொற்களான வேதங்களுக்கு முக்யக் கருத்தானவளும் ஆன நீ

प्रकृति-रुचिर-मूर्तिः = அடி (பகுதி)ச் சொல்லினாலே அழகிய வடிவம் கொண்டதும்

प्रत्ययानां विधात्री = விகுதிச் சொற்களை விதிப்பதும்

समधिक-गुण-वृद्धिः = குணம், வ்ருத்தி, என்னும் எழுத்துத் திரிபுகளால் அதிகமானதும்

साधुतां आदधाना = (பதங்களின்) பிழையின்மையைப் பண்ணுவதும்

अनन्त-स्थिर-फणिति-विधेया = ஆதிசேஷனின் ஸ்திரமான மஹாபாஷ்யத்துக்கு வசப்பட்டதும் ஆன

शब्द-विद्या इव = இலக்கணக் கல்வி போல

अजाद्यैः = 1. அஜன் (ப்ரஹ்மா) முதலியவர்களால் 2. அச் (உயிரெழுத்துகள்) முதலியவற்றால்

ईप्सितं = அடைய விரும்பப்பட்ட

पदं = 1. ஸ்தானத்தை, பதவியை, 2. சொல்லை

द्राक् = உடனே

सृजसि = உண்டு பண்ணுகிறாய்.

பத்மையே ! நீ இலக்கணக் கல்வி போலே ஐந்தாறு காரணங்களாலே ஆகிறாய். இலக்கணத்திலே ப்ரக்ருதி என்னும் மூலச் சொல் ஒவ்வொரு பதத்துக்கும் வடிவழகைத் தருவது போல, நீ ப்ரக்ருதியாகவே (இயல்பாகவே) வடிவழகு பெற்றிருக்கிறாய். இலக்கணத்தில் ப்ரத்யயங்கள், விகுதிகள், விதிக்கப்படுமென்றால், அதேபோல நீயும் ப்ரத்யயங்களை (த்யானகாலத்து எண்ணங்களை) ஏற்பாடு பண்ணுகிறாய். இலக்கணத்தில் குணம் என்றும் வ்ருத்தி என்றும் எழுத்துத்

திரிபுகளான கலைச் சொற்கள் நிறைய இருப்பதுபோலே, நீயும் குணங்களின் வளர்ச்சியை அதிகமாகக் கொண்டிருக்கிறாய். இலக்கணம் சொற்பிழையின்மையை ஏற்படுத்துவது போலே, நீயும் ஸாதுத்தன்மையை ஏற்படுத்துகிறாய். இலக்கணம் அனந்தனின் (ஆதிசேஷனின் அவதாரமான பதஞ்ஜலியின்) ஸ்திரமான மஹாபாஷ்யம் என்னும் நூலுக்குக் கட்டுப்பட்டிருப்பது போல, நீயும் அனந்தன் என்கிற பகவானின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டிருப்பது போல, நீயும் அனந்தன் என்கிற பகவானின் வார்த்தைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறாய். இலக்கணமும் அஜாதிகளாலே (அச்செழுத்து முதலியவற்றால்) தேவையான பதத்தை உண்டுபண்ணிக் கொடுக்கும். நீயும் அஜாதிகளால் (அயன் முதலியோரால்) பெற விரும்பப்படும் பதத்தை (ஸ்தானத்தை) உண்டுபண்ணித் தருகிறாய். நீ இலக்கணக்கல்வி போலே பயன்படுபவள்.

ப்ரக்ருதி ருசிரமான வடிவு என்பதற்கு மூன்று தாத்பர்யங்கள் சொல்லலாம். 1. தாயாரின் வடிவம் இயல்பாகவே அழகானது என்றதன் கருத்து, திருவாபரணங்களை அபேக்ஷிக்காமலே ஸௌந்தர்யம் கொண்டது என்பதாம். 2. தாயாரின் அஷ்டோத்தரத்தில் முதல் திருநாமமே ப்ரக்ருதி என்பது. மூலப்ரக்ருதி என்கிற சர்க்கும் வடிவம் இலக்குமியினுடையது. 3. சொற்களில் ப்ரக்ருதி என்றும் ப்ரத்யயம் என்றும் வெவ்வேறு பகுதிகள் இருக்கும். உதாரணமாக க்ருதி என்ற சொல்லில் க்ரு என்பது ப்ரக்ருதி: தி என்பது ப்ரத்யயம். இந்த ப்ரக்ருதிச் சொல் வெவ்வேறு ப்ரத்யயங்களுடன் சேர்ந்து, க்ருத்வா, கர்தும், கரோதி, என்று வெவ்வேறு பதங்களைத் தரும்.

பத்மாவும் இலக்கணக்கல்வியும், ப்ரத்யயங்களை விதிப்பதாகக் கூறுவதிலும் மூன்று கருத்துகள்; 1. ப்ரத்யயம் என்றால் அறிவு. அதைத் தருபவள் லக்ஷ்மி. 2. ப்ரத்யயம்

என்றால் நம்பிக்கை. அதை உண்டுபண்ணுவள் லக்ஷ்மி. 3. ப்ரத்யயம் என்றால் பதங்களில் உள்ள விகுதி. அதை விதிப்பது இலக்கணக் கல்வி.

குணவ்ருத்தி அதிகமாக இருப்பது என்பதற்கும் மூன்று தாத்பர்யங்கள் : 1. கருணை, பொறுமை, முதலிய பண்புகள் லக்ஷ்மியிடம் அதிகமாக இருக்கின்றன. 2. லக்ஷ்மியால் நமக்கெல்லாம் குணம் வளர்கிறது. 3. அதேங்குண: என்றும் வ்ருத்திராதைச், என்றும் பாணிநி ஸூத்ரங்களால் கூறப்பட்ட எழுத்துத் திரிபு வகைகள், ஸந்திப்ரகரணத்தில் மட்டுமின்றி, தத்திதப்ரகரணம் முதியலிவற்றிலும் வருவதால், குணமும் வ்ருத்தியும் இலக்கணக் கல்வியில் அதிகம். இந்த ஶ்லோகத்திலேயே வித்யா என்ற பதமும் இவ என்ற பதமும் சேரும்போது வித்யேவ என்று ஆகும்போது யே என்று எழுத்து வந்தது குணம் என்பதால். அத்ய என்ற பதமும் ஏவ என்ற பதமும் சேர்ந்து அத்யைவ என்றாகும்போது யை என்ற எழுத்து வந்தது வ்ருத்தி என்பதால், இப்படி குணமும் வ்ருத்தியும் இலக்கணத்தில்; குணத்தின் வ்ருத்தி இலக்குமியிடம்.

அநந்தஸ்திரபணிதி என்பதற்கு நாலு அர்த்தங்கள் : 1. அனந்தன் பெருமாள். அவனுடைய சொல். 2. அனந்தமானதும் ஸ்திரமானதுமான சொல் வேதம் என்பது. 3. அனந்தன் பகவான். அவனுடைய ஸ்திரமான கூற்று வேதம். 4. அனந்தன் ஆதிசேஷன் பதஞ்ஜலியாக அவதரித்தவர். அவருடைய நூல் மஹாபாஷ்யம் என்பது.

பதம் ஸ்ருஜதி என்பதற்கும் இரண்டு கருத்துகள் : 1. லக்ஷ்மி ப்ரஹ்ம லோகம் முதலிய ஸ்தானங்களைத் தருகிறாள். 2. இலக்கணம் எழுத்துகளின் மூலம் சொற்களைத் தருகிறது.

அழகியநல் வடிவினளாம் அதிக குணம் அமைப்பவளாம்
அயன்முதலோர் அவாவியதை அளிப்பவளவ் அம்புஜையாம்.

—★—

6. மீமாம்ஸை போல், மிகுந்த மோஹத்தை மாய்ப்பவள்.

अधिकरणविचारारम्भसीदद्विपक्षम्
किमपि विशदयन्त्या कृत्स्नवेदार्थतत्वम् ।
गलति गहनकर्मालम्बनं एम्हजालम्
कमलमुखि ! भवत्या कर्ममीमांसयेव ॥

அதிகரண விசாரரம்பஸீதத்விபக்ஷம்
கிமபி விஶதயந்த்யா க்ருத்ஸ்நவேதார்ததத்வம் ।
கலதி கஹநகர்மாலம்பநம் ஏம்ஹஜாலம்
கமலமுகி ! பவத்யா கர்மமீமாம்ஸயேவ ॥

कमल-मुखि ! = தாமரை போன்ற முகம் உடையவளே!
अधिक-रण-वि-चार-आरम्भ-सीदत्-विपक्षं = அதிகமாக யுத்தத்தில் பக்ஷிமேல் ஸஞ்சரித்து முயல்வதால் ஹிம்ஸையடைகிற பகைவர்களை உடையதும்
किमपि = வர்ணிக்க முடியாத ஏதோவொரு
कृत्स्न-वेद-अर्थ-तत्वं = முழு வேதத்தின் அர்த்த உண்மையை
विशदयन्त्या = தெளிவுபடுத்துகிற
कर्म-मीमांसया इव = கர்ம மீமாம்ஸா ஶாஸ்த்ரந்தானே போல
गहन-कर्म-आलम्बनं = 1. அறியவொண்ணாத வினைகளைப் பிடிப்பாகக் கொண்ட, 2. அறிய வொண்ணாத யாக யஜ்ஞங்களைப் பிடிப்பாகக் கொண்ட
एम्ह-जालं = 1. அறியாமை வலையானது 2. குழப்பவலையானது
गलति = நழுவுகிறது.

தாமரை முகத்தாளே! நீ மீமாம்ஸா ஶாஸ்த்ரம் போல இருக்கிறாய். அதில் ஒவ்வொரு அதிகரணத்திலும் விசாரத்தின் தொடக்கத்தில் இரண்டு கட்சிகள் இருக்கும். வேதவாக்யங்களுக்கு என்ன அர்த்தம் என்று அலசப்படும். உண்மைப் பொருள் தெளிவாகும். யாகம் முதலிய கர்மங்கள் பற்றிய குழப்பம் தீரும். அத்தகைய மீமாம்ஸா ஶாஸ்த்ரத்துக்கு நீ ஸமமாவது எப்படியென்றால் சொல்கிறோம். நீயும் வேதத்தின் முழுப் பொருளாய், பரம தாத்பர்யமாய், இருக்கிற பகவானை விசதமாகக் காட்டுகிறாய். அந்த அர்த்த தத்வத்துக்கு அதிகரணம்

உண்டா? விசாரம் உண்டா? ஆரம்பம் உண்டா? த்விபக்ஷம் உண்டா? என்று கேட்டால் ஆமாம் என்று சிலேடையால் ஸமர்த்திக்கலாம். திருமால் போரில் எதிரிகளை மாய்ப்பவர். பெரும்போர் அதிக - ரணம் ஆகும். அந்த அதிகரணத்தில் கருடன் மேல் ஸஞ்சரிப்பார். வி என்று பறவைக்குப் பெயர் ஆதலால் வி-சாரம் நடைபெறுகிறது. ஆரம்பம் என்ற பதத்துக்குத் தொடக்கம் என்றும் முயற்சி என்றும் இரண்டு அர்த்தங்கள். விஷ்ணு ஆரம்பம் (இரண்டு அர்த்தங்களிலும்) பண்ணுகிறார் யுத்தத்தில், அதன் விளைவாக விபக்ஷம் (பகைப்படை) மாய்கிறது. அதில் (மீமாம்ஸையில்) த்விபக்ஷம் இருக்கிறது. இதில் விபக்ஷம் மடிகிறது; இவ்விரண்டையும் **ஸீதத்விபக்ஷம்** என்ற ஒரே சொற்றொடரால் சொல்ல முடிகிறது. இவ்வாறாக மீமாம்ஸையும் நீயும் ஸமமாகிவிட்டபடியால் இரண்டுக்கும் ஒரே பயனை எதிர் பார்க்கலாம். மீமாம்ஸைக்குப்பயன் என்ற ஒரே சொற்றொடரால் சொல்ல முடிகிறது. ஜ்யோதிஷ்டோமம் முதலிய யாகங்களை அனுஷ்டிக்கும்போது வரும் ஸந்தேஹங்கள் தீரும் என்பது. நீ தரும் பலன் வினைகள் விளைவிக்கும் மோஹத்தை அகற்றுவது என்பது. இரண்டையும் கர்மமோஹநாசம் என்ற ஒரே சொற்றொடரால் சொல்ல முடிகிறது. இதனால் ஸாம்யம் மேலும் உறுதியாகிறது.

இந்த ஶ்லோகத்தில் அதிகரணம், விசாரம், ஆரம்பம், ஸீதத், அர்த்தம், கர்மம், என்ற பதங்களில் இரட்டைப் பொருட்கள், அதிகரண என்றதன் கருத்து; மீமாம்ஸா ஶாஸ்த்ரம் பல அதிகரணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இது அத்யாயம், ஸர்க்கம், என்று மற்ற ஶாஸ்த்ரங்களில் விபாகம் இருப்பது போலாம். 12 அத்தியாயங்களில் ஒவ்வொன்றிலும் பல அதிகரணங்கள் இருக்கும். ஒவ்வொரு அதிகரணத்திலும், விஷயம், ஸந்தேஹம், பூர்வபக்ஷம், ஸமாதானம், ப்ரயோஜனம் என்ற ஐந்தும் இருக்கும். விசாரத்தின் ஆரம்பத்திலேயே இப்படியா

அப்படியா என்று இரண்டு கட்சிகள் கொண்ட ஸந்தேஹம் முன்வைக்கப்படும். இதைக் காட்டும் வகையில் அதிகரண - விசார - ஆரம்ப - த்விபக்ஷ என்ற வார்த்தைகளை அமைத்திருக்கிறார். இதையே பகவான் விஷயமாகச் சொல்லும்போது, அதிக ரண என்று பிரித்துவிடுகிறோம். அதிக என்பதை ரண என்பதில் அன்வயித்தால், நிறைய யுத்தம் என்றாகும். காலநேமியுத்தம் முதலிய பல யுத்தங்கள். அதிக என்பதை விசார என்பதில் அன்வயித்தால் நிறைய புள்ளூர்தல் (கருடவாஹனனாய் இருத்தல்) என்று அர்த்தம். அதிக என்பதை ஸீதத் என்பதில் அன்வயித்தால், பகைவர்கள் அதிகமாக மடிவர் என்று அர்த்தம். இப்படிப் பலவகை அன்வயத்துக்கும் இடம் தரும்படிக் கூட்டுச் சொல்லே அமைத்திருக்கிறார்.

ஆரம்ப என்றதின் கருத்து : இரண்டு கட்சிகள் விசாரத்தின் தொடக்கத்தில் இருக்கும். விசாரம் முடிந்த பிறகு ஒரு கட்சி விழுந்துவிடும்; ஒன்று தான் மிஞ்சும்; என்பதைத் தெரிவிப்பதற்காம். வேறொரு அர்த்தம் சொல்லும்போது, திருமாலின் முயற்சியால் பகைவர் மடிவர் என்று பொருள்படும்; அல்லது யுத்தத்தின் தொடக்கத்திலேயே பகை அழியும் என்றுமாம்.

விமதயந்த்யா என்றதன் கருத்து; லக்ஷ்மிதான், பரம்பொருள் இன்னார் என்பதைத் தெளிவுபடுத்துகிறாள். அவன் ஸ்ரிய:பதி என்ற ஆகாரத்தாலே மற்ற தெய்வங்களை வ்யாவர்த்தித்து நமக்குத் தெளிவு பிறக்கிறது. மீமாம்ஸா பக்ஷத்தில் அர்த்தம் சொல்லும்போது, வேதவாக்யங்களின் அர்த்தத்தைத் தெளிவுபடுத்தும் உத்தேசத்துடனே தோன்றியது அது.

வேதார்த்த தத்வம் என்றதன் கருத்து: வேதவாக்யங்களுக்குச் சொல்லவேண்டிய உண்மையான அர்த்தம் என்று மீமாம்ஸா பக்ஷத்தில். வேதத்தின் தாத்பர்ய பூதமான பரதத்வம் என்பது வேறொரு பக்ஷத்தில்.

க்ருத்ஸ்ந என்றதன் கருத்து என்ன? முழுதும் என்று ஒரே அர்த்தம். கர்ம மீமாம்ஸை எப்படி முழு வேதத்துக்கும் அர்த்தம் தெரிவிக்கும்? கர்ம காண்டப் பகுதிக்கு மட்டும்தானே தெரிவிக்கும் என்று ஆக்ஷேபம் வந்தால் ஸர்வ வேதப்ரதிபாத்யனே கர்ம காண்டப்ரதிபாத்யனாக இருப்பதைக் கவி இவ்வாறு தெரிவிக்கிறார் என்னலாம்.

கர்மமோஹம் என்றதன் கருத்து; புண்ய பாபரூப கர்மங்களால் வந்த ஸம்ஸார மோஹம் என்று ஒரு பக்ஷத்தில். யாக யஜ்ஞாதி கர்ம ப்ரயோகங்களில் வரும் குழப்பம் என்று இன்னொரு பக்ஷத்தில்.

கலதி என்றதால் அனாயாஸமாக, அவலீலையாக, மோஹம் நீங்கிவிடுகிறது, உன்னாலே என்கிறார்.

மறைப்பொருளைத் தெளிவிப்பாள். மலர்முகத்தாள் மீமாம்ஸை மாதிரியே ஆனவளாம். மாய்ப்பவளாம் மோஹத்தை.

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

7. ஶாரீரக ஶாஸ்த்ரத்துக்கு ஸமானமானவள்.

चतुराकृतिलक्षणाभिरामा परदेवस्य गुणान् प्रदर्शयन्ती ।
उपदर्शयसेऽपवर्गमार्गं मम शारीरकभारतीव मातः ॥ ७

சதுராக்ருதிலக்ஷணாபிராமா பரதேவஸ்ய குணாந் ப்ரதர்ஶயந்தீ ।
உபதர்ஶயஸேऽபவர்கமார்கம் மம ஶாரீரகபாரதீவ மாத: ॥ 7

मातः = அன்னையே !
चतुः-आकृति-लक्षण-अभिरामा = நாலுவகைக் தலைப்புகளால் அழகியதும்
परदेवस्य = பரதேவதையின்
गुणान् = பண்புகளை
प्रकाशयन्ती = தெரியப்படுத்துவதுமான
शारीरक-भारती इव = ஶாரீரக ஶாஸ்த்ரத்து வாணி போல
चतुरा = கெட்டிக்காரியும்
आकृति-लक्षण-अभिरामा = வடிவில் ஸாமுத்ரிகா லக்ஷணங்களால் அழகியவளாயும்
परदेवस्य = பரதேவதையான திருமாலின்
गुणान् = பண்புகளை
प्रदर्शयन्ती = ப்ரகாஶப்படுத்துபவளாயும் உள்ள நீ
मम = எனக்கு
अपवर्ग-मार्गं = முக்திவழியை, அர்ச்சிராதிமார்க்கத்தை
उपदर्शयसे = காட்டுகிறாய்.

அம்மா! ஶாரீரகம் என்ற ஶாஸ்த்ரத்தின் வாணி போல நீ மூன்று விதங்களில் ஆகிறாய். அது நாலு அத்யாயங்களாகப் பகுக்கப்பட்டிருப்பதால் சதுராக்ருதிலக்ஷணா. நீ ஸமர்த்தையாகவும் வடிவழகு கொண்டவளாயும் இருப்பதால் சதுராக்ருதிலக்ஷணா. அது பரம்பொருளின் குணங்களை (ஸத்யத்வம் ஜ்ஞாநத்வம், அநந்தத்வம் முதலிய குணங்களை உபாஸநத்துக்காக) அறிவிக்கும். நீயும் பரதேவதையின் குணங்களை (பொறுமை, கருணை, முதலிய பண்புகளை) மிளிரப் பண்ணுகிறாய். அது மோக்ஷவழியான அர்ச்சிராதி

மார்க்கத்தைக் காட்டும். நீயும் மோக்ஷ வழியை, அதாவது மோக்ஷோபாயத்தை எங்களுக்குக் காட்டுகிறாய்.

சதுராக்ருதிலக்ஷணு என்ற பதத்துக்கு மூன்று அர்த்தங்கள் சொல்லலாம். நாலுவகைத் தலைப்புகள் கொண்டது, நாலு அத்தியாயங்கள் கொண்டது என்று ஶாரீரக ஶாஸ்த்ரத்துக்குப் பொருந்தும் அர்த்தம். காரணாத்யாயம் அவிரோத அத்யாயம், ஸாதநாத்யாயம், பலாத்யாயம், என்று அதில் நாலு அத்யாயங்கள். சதுரா என்று தனிப் பதமாகப் பிரித்துவிட்டால், கெட்டிக்காரியாகவும், வடிவில் ஸாமுத்ரிகா லக்ஷணங்கள் பொருந்தியவளாகவும் இருப்பவள் என்பது தாயாருக்குப் பொருந்தும். சதுராக்ருதி என்பவன் சதுராத்மா சதுர்வ்யூஹ: என்று ஸஹஸ்ரநாமத்தில் சொல்லப்பட்ட விஷ்ணு. அவனுக்கு அழகிய லக்ஷணமாக, அடையாளச் சின்னமாக, ஆகிறவள் என்பது மூன்றாவது அர்த்தம்.

இங்கு விஷ்ணு என்றோ நாராயணன் என்றோ சொல்லாமல் பரதேவன் என்று சொன்னதற்குக் காரணம் என்னவென்றால், ஶாரீரக ஶாஸ்த்ரத்தின் ப்ரதான க்ரந்தமாகிற ப்ரஹ்ம ஸூத்ரத்தில், பராத்து என்றும், பராபித்யாநாத் என்றும், [illegible] ப: என்றும், பற்பல இடங்களில் ப்ரஹ்மத்தைப் பரன் என்ற பதத்தால் கூறுவதால், ஶாரீரகம் பரனின் குணத்தைப் ப்ரகாஶப்படுத்துவதாகக் கூறுவது பொருந்துமாதலால், அதே பரபதத்தைக் கையாள்கிறார்.

அபவர்க்கமார்க்கம் என்னுமிடத்தில் மார்க்கம் என்பதில் இரட்டைப் பொருள் இல்லாவிடினும், இரண்டு தாத்பர்யங்கள் கிடைக்கின்றன; உபாயம், ஸாதனம், என்று ஒன்று; ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குப் போகும் வழி என்று இன்னொன்று. மோக்ஷத்துக்கு உபாயத்தை லக்ஷ்மி காண்பிக்கிறாள்; அதே மோக்ஷத்துக்கு வழித் தடத்தைச் சொல்லும் ஶாரீரகத்தின் நாலாம் அத்யாம்.

சதுரரையவள் பரம்பொருளின் சால்பு பறைசாற்றுபவள்.
சரீரச் சம்பந்தச் சாத்திரத்துச் சமமாவாள்.

-----★-----

8. வேதம் போலே வடிவம் கொண்டவள்

सुवर्णश्रीरम्यं शुभकरपदर्चं श्रुतिकुलम्
भवद्रूपं चेदं भवति महितं ब्राह्मणगणैः ।
तयोरित्थं भेदः स्फुरति तटिनीजानितनये
बुधेन्द्रैरध्येयं प्रथममितरद्ध्येयमिति च ॥ 8

ஸுவர்ணஸ்ரீரம்யம் சுபகரபதர்சம் ச்ருதிகுலம்
பவத்ரூபம் சேதம் பவதி மஹிதம் ப்ராஹ்மணகணை: ।
தயோரித்தம் பேத: ஸ்புரதி தடிநீஜாநிதநயே ।
புதேந்த்ரைரத்யேயம் ப்ரதமமிதரத்த்யேயமிதி ச ॥ 8

तटिनी-जानि-तनये - நதிகளின் கணவனின் மகளே!
श्रुति-कुलं = வேதத்திரளும்
भवत्-रूपं च = உன் வடிவமும்
सुवर्ण-श्री-रम्यं = 1. நல்லெழுத்துச் சோபையால் அழகியதாகவும் 2. பொற்செல்வத்தால் அழகியதாகவும்
शुभ-कर-पदर्चं = 1. மங்களங்களை விளைவிக்கும் பதங்களையும் ருக்குகளையும் கொண்டதாகவும், 2. மங்களங்களை விளைவிக்கும் திருவடியாச்சினையைக் கொண்டதாகவும்
ब्राह्मण-गणैः = வேதியர் கூட்டங்களால்
महितं = கொண்டாடப்பட்டதாகவும்
भवति = ஆகிறது.
तयोः = அவ்விரண்டிலும்
इत्थं = இப்படி
भेदः = வித்யாஸம்
स्फुरति = பளிச்சிடுகிறது
प्रथमं = முதலானது
बुध-इन्द्रैः = பண்டித ச்ரேஷ்டர்களால்
अध्येयं = ஓதத் தக்கது.
इतरत् = இன்னொன்று
ध्येयं = த்யானிக்கத்தக்கது
इति च = என்றும்.

நதிபதியான ஸமுத்ரத்தின் மகளே! உன் திருமேனியையும் வேதத்தையும் ஒப்பிட்டால் மூன்று

ஒற்றுமைகளும் ஒரு வேற்றுமையும் தெரிகின்றன. இரண்டுக்கும் ஸௌவர்ணஶ்ரீ அழகு தருகிறது என்பது முதல் ஒற்றுமை. வேதத்துக்கு நல்ல வர்ணங்களின், எழுத்துகளின், ஶ்ரீ சோபை. உன் வடிவுக்கு ஸௌவர்ணத்தின், தங்கத்தின், ஶ்ரீ ஸம்பத்து. அடுத்ததாக, இரண்டுக்கும் பதர்ச்சா என்பது எங்களுக்கு ஸௌபம் தரும். பத்-ருசா என்று பிரித்தால், சொற்களும் மந்த்ரமும் வேதத்தில். பத்-அர்ச்சா என்று பிரித்தால் பாதத்தில் பண்ணும் அர்ச்சனை லக்ஷ்மியிடம். இது இரண்டாவது ஒற்றுமை. மூன்றாவதாக, இரண்டையும் ப்ராஹ்மணர்கள் போற்றுவார்கள். இந்த மூன்று ஒற்றுமைகள் இருந்தபோதிலும், ஒன்று அத்யேயமாகவும் இன்னொன்று த்யேயமாகவும் இருப்பது வித்யாஸம். ஒன்றை அத்யயநம் பண்ண வேண்டும்; இன்னொன்றை த்யானம் பண்ண வேண்டும்.

தாயாரின் திருவடிவத்துக்கு ஸௌவர்ணஶ்ரீ இருப்பது இரண்டு வகைகளிலாம். ஹிரண்மயவர்ணாம் என்றபடி பொன்னிறத்தால் ஒன்று; ஸுவர்ணரஜதஸ்ரஜாம் என்றபடி அணிகலனால் மற்றொன்று. வேதத்துக்கு ஸௌவர்ணஶ்ரீ இருப்பது நல்ல அகாராதி வர்ணங்களாலாம். வேதத்தில் உள்ள எழுத்தை நல்ல ஹரிநாமம் என்று முனிவர்கள் விளக்கியபடியாம். அவ்வெழுத்துக்களால் அழகு எப்படியென்றால், வர்ணக்ரமங்களில் கூறுகிறபடி சரியாக உச்சரிக்கப்படும் எழுத்தே (அதன் பொருளைக் காட்டிலும் சிறியதாய்) அழகூட்டுவதாலாம்.

தாயாரின் திருவடியில் அர்ச்சனையை மங்களகரம் என்றது யுக்தமானாலும், வேதத்தின் பதத்தையும் மந்த்ரத்தையும் மங்களகரம் என்றது ஏன்? என்றால் ஸா ஹி ஶ்ரீரம்ருதா ஸதாம் என்ற வேத வாக்யத்தையொட்டி மஹர்ஷிகள் வேதப் பதங்களை மங்களகரமாகக் கூறுவதாலாம்.

ப்ராஹ்மணகணம் என்ற பதத்துக்கும் இரண்டு அர்த்தங்கள் கொள்வது யுக்தம். வேதத்திலேயே ப்ராஹ்மணர்கள் என்றொரு பகுதி. இந்தப் பகுதியில் வேதத்தின் சிறப்பும் லக்ஷ்மியின் ரூப மஹிமையும் பேசப்படுகின்றன. என்றொரு அர்த்தம். வேதியர் கூட்டத்திலும் இவ்விரண்டும் பாராட்டப்படுகின்றன என்பது இரண்டாவது அர்த்தம்.

இவ்விரண்டுக்கும் வித்யாசமாகச் சொன்னது என்னவென்றால், ஒன்று ஓதப்படுவது, இன்னொன்று ஓரப்படுவது, என்பதாம். தமிழில் சொல்லிப் பார்த்தால் வித்யாசம் மட்டும் தெரிந்தாலும் முரண் ஏதும் தெரியவில்லை. ஸம்ஸ்க்ருதத்தில் சொன்னால் முரண் கூட உண்டு. ஒன்று அத்யேயம்; இன்னொன்று த்யேயம். த்யேயத்துக்கு எதிர்ப்பதமன்றோ அத்யேயம் என்பது. இப்படி விரோதகர்ப்பிதமான பேதமாக இருப்பதால் இந்தப் பேதம் ஸ்புரிப்பதாக, பளிச்செனத் தெரிவதாக, எழுதுகிறார்.

சுவர்ணஸ்ரீ சேர்ந்ததனால் சுப பதர்ச்சச் சொற்பொருளால்
சுருதிக்குச் சமமான சுபவடிவம் கொண்டவள் நீ?

—★—

9. அமுதத்தின் ஆறு அனையவள்.

व्याकोषवारिजधरां द्विजराजसेव्याम्
अव्याहतां अमृतशैवलिनीमिव त्वाम्।
निस्सीमसंसृतिनिदाघविदाहतप्ताः
केचित् सुधाब्धितनये ! कृतिनो भजन्ते ॥ ९

வ்யாகோசவாரிஜதராம் த்விஜராஜஸேவ்யாம்
அவ்யாஹதாம் அம்ருதஸைவலிநீமிவ த்வாம் ।
நிஸ்ஸீமஸம்ஸ்க்ருதிநிதாகவிதாஹதப்தா:
கேசித் ஸுதாப்திதநயே க்ருதிநோ பஜந்தே ॥

सुधा-अब्धि-तनये = அமுதக் கடலின் மகளே!

व्याकोच-वारिज-धरां = மலர்ந்த தாமரையைத் தரிப்பவளும்

द्विज-राज-सेव्यां = 1. அந்தணர்களாலும் அரசர்களாலும் ஸேவிக்கத் தக்கவரும், 2. உயர்ந்த பறவைகளால் அடையத் தக்கதும்

अ-व्याहतां = 1. தடையற்றவளும், 2. மத்தால் கடையப்பட்டதும் ஆன

त्वां = உன்னை

अमृत-दीर्घिकां इव = (இந்தக் காரணங்களால்) அமுத நதி போல இருப்பவளை

निस्सीम-संसृति-निदाघ-विदाह-तप्ताः = எல்லையற்ற ஸம்ஸாரக் கோடையின் கொளுத்தலால் அவிந்து போனவர்கள்

केचित् = ஏதோ சில

कृतिनः = பாக்யஶாலிகள்

भजन्ते = அடைகிறார்கள்.

அமுதவாழியின் மகளே! உனக்கும் அமுதநதிக்கும் பல ஒப்புமைகள். அமுதநதியில் தாமரை மலர்ந்திருப்பது போல, நீயும் மலர்ந்த தாமரையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறாய். அமுதவாற்றை, (த்விஜராஜர்கள்) உயர்ந்த பக்ஷிகள் சென்றடைவது போல, உன்னையும் த்விஜராஜர்கள் (வேறு அர்த்தத்தில்; அந்தணர்களும் அரசர்களும்) வந்தடைகின்றனர். அமுதவாறு அவி என்னும் மத்தால் கடையப்படுவதால் அவ்யாஹதம் ஆகிறதென்றால் நீ வேறொரு அர்த்தத்தில் அவ்யாஹதமாக இருக்கிறாய்; எந்த எதிர்ப்புத் தடையும் இல்லாமல் இருக்கிறாய். கோடைச் சூடு தாங்காதவர்கள் அமுதவாற்றில் தாபம் தணித்துக் கொள்வது போல, ஸம்ஸாரச் சூட்டில் வெந்தவர்கள் உன்னிடம் தாபம் தீர்த்துக் கொள்ளலாம். மற்ற ஆறுகள் போலன்றி அமுதவாறு ஒரு சில பாக்யவான்களுக்கு மட்டும் கிட்டுமாப்போலே, சில பாக்யஶாலிகள் மட்டும் உன்னை வந்து ஆஶ்ரயிக்கிறார்கள்.

தாமரையைத் தரிப்பது என்கிற பதத்தில் இரட்டைப் பொருள் இல்லாவிட்டாலும் லக்ஷ்மி கையால் தரிப்பதும், அமுதவாறு, தாமரையின் உற்பத்தியிடமாய்த் தரிப்பதும் வெவ்வேறு வகைகளிலாம். அந்தணர்களும் அரசர்களும்

லக்ஷ்மியை ஸேவிப்பது வெவ்வேறு காரணங்களாலாம். பரம்பொருளென்றும் ஸ்வாமிநி என்றும் த்விஜர்கள் ஸேவிப்பர்; ஐச்வர்ய தேவதை என்றும் தநதாந்ய ஸம்ருத்திகரீ என்றும் அரசர்கள் ஸேவிப்பர்; அமுதவாற்றை உயர்ந்த பறவைகள் அணுகும். ஸேவிப்பது என்றால் வணங்குவது என்றும் சென்றடைவது என்றும் அர்த்தங்கள் இருப்பதால் இரண்டையும் ஒரே பதத்தால் சொல்ல முடிந்தது. ஸாதாரண ஆற்றங்கரை மரங்களில் ஸாதாரணப் பக்ஷிகள் வசித்தால், அமுதவாற்றங்கரையில் மிக உயர்ந்த இனத்துப் பறவைகள் வசிக்கும்; அவற்றை த்விஜராஜர் என்கிறார்.

அப்யாஸ்ருதாம் என்றும் அபி ஆஸ்ருதாம் என்றும் இரண்டு விதமாகப் பிரித்தால், ஒரே பதம் லக்ஷ்மி விஷயமாகவும், அமுதவாற்று விஷயமாகவும் வெவ்வேறு பொருள்களைத் தருகிறது. தடைப்படாதது; மத்தால் கலக்கப்பட்டது. கடைசிப் பாதத்து நீதி; லக்ஷ்மிபக்தி பண்ணுவதற்குப் பாக்யம் இருக்க வேண்டும்.

அம்புஜத்தைத் தரிப்பவளை அமுதநதி அனையவளை அளவற்ற ஸம்ஸ்ருதியில் அமிழ்ந்துள்ளார் அடைகின்றார்.

—★—

10. காரணம் இன்றியே கருணை புரிபவள்.

वात्सल्यं तव राघवप्रणयिनि व्याचष्ट काकासुरः
शक्तिं दुर्घटसाधनीं हनुमतः शीतस्स वातानलः ।
औदार्यं त्वदपाङ्गलब्धविभवोल्लासा महेन्द्रादयः
कारुण्यं कृपया वयं तु विभुणा निर्हेतुकं रक्षिताः ॥ १०

வாத்ஸல்யம் தவ ராகவப்ரணயிநி வ்யாசஷ்ட காகாஸுர:
சக்திம் துர்கடஸாதநீம் ஹநுமத: சீதஸ்ஸ வாதாநல: ।
ஔதார்யம் த்வதபாங்கலப்தவிபவோல்லாஸா மஹேந்த்ராதய:
காருண்யம் க்ருபயா வயம் து விபுணா நிர்ஹேதுகம் ரக்ஷிதா: ॥ 10

राघव-प्रणयिनि = ராகவனின் காதலியே!

तव = உன்னுடைய

वात्सल्यं = தாயன்பை

दुर्घट-साधनीं = கூடாததைக் கூட்டுவிக்கும்

शक्तिं = ஆற்றலை

हनुमतः = ஹநுமானுடைய

शीतः = குளிர்ந்த

सः = அந்த

वाल-अनलः = வாலில் நெருப்பு

औदार्यं = வண்மையை

त्वत्-अपाङ्ग-लब्ध-विभव-उल्लासाः = உன் கடைக்கண்களால் அடையப்பட்ட செல்வ உல்லாஸங்களை உடைய

कृपणाः = கைம்முதலற்றவர்கள்

विगुणाः = குணம் கெட்டவர்கள்

कारुण्यं = (உன்) கருணையை (வெளிக்காட்டுகிறோம்). எவ்வாறெனில்

निर्हेतुकं = காரணம் இல்லாமலே

रक्षिताः = காப்பாற்றப்பட்டோம்.

ஸீதையே! உன் வாத்ஸல்யம் காகாஸுரக் கதையில் விளங்கியது. உன் அகடிதகடநா ஸாமர்த்யம் ஹநுமான் வால் நெருப்பு குளிர்ந்ததால் விளங்கியது. உன் வண்மை தேவேந்த்ரனைக் கடாக்ஷித்தபோது செல்வம் பெருகியதால் விளங்கியது. உன் கருணையை இவ்வாறு வெளிக்காட்டுவதற்கு நாங்கள் இருக்கிறோம். தகுதியல்லாத அகிஞ்சனர்களான எங்களையும் காரணம் இல்லாமலே நீ காப்பாற்றுவதால் உன் கருணை விளங்குகிறது.

மற்றவர்களை, தகுதி படைத்தவர்களை, உன் ரக்ஷையைப் பெறுவதற்கான நற்செயல்களைப் புரிந்தவர்களை, அதன் காரணமாக நீ காப்பாற்றினால் உன் கருணை வெளிப்படுமா? அத்தகுதிகள் எதுவுமே இல்லாமல், காரணமில்லாமல், எங்களை நீ காப்பாற்றினாலன்றோ உன் கருணை உலகுக்கு வெளிச்சமாகும்? உன் வாத்ஸல்யத்தை வெளிப்படுத்தக் காகாஸுரன் இருந்தாற்போலே, உன் தனித் திறனை வெளிப்படுத்துவதற்கு ஹநுமான் வால்நெருப்பு இருந்தாற்போலே, உன் வள்ளல் தன்மையை

வெளிப்படுத்த மஹேந்த்ரன் இருந்தாற்போலே, உன் காருண்யத்தை வெளிப்படுத்துவதற்கு நாங்கள் இருக்கிறோம்.

தாமஸ்லோக் ககளைகளி ர் தளிந்திறஷேவா அனுமானி ர் தானச்சீர் இந்த்ரனி..ர் தலையனையக் கா' பெ..ங்களி..ர்.

அன்னை மொழி அன்பை முன் அசுரனொரு காக்கையும்
அகமதனில் சேர் ஆற்றலியின் அனுமன் வால் அக்கினியும்
அபாங்கத்து ஆண்மையை அவரேசன் போன்றோர்
அருளைப் பார்க்கப் பெற்றோம் அகிஞ்சனராம் நாங்களுமே.

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

1. குறைகளைக் குணமாக்கும் கூறுடையாள்

दोषौघश्शरणं जगाम गुणतामादित्सुरङ्गानि ते
कौटिल्यं किमपि भ्रुवौ कठिनता कल्याणि वक्षोरुहौ ।
दारिद्र्यं बत मध्यभागमधरं रागस्तमः कुन्तलान्
चाञ्चल्यं दृशमम्ब ! मन्दगतिता पादौ मुखं मुग्धता ॥ ११

தோஷௌகச்சரணம் ஜகாம குணதாமாதித்ஸுரங்காநி தே
கௌடில்யம் கிமபி ப்ருவௌ கடிநதா கல்யாணி வக்ஷோருஹௌ ।
தாரித்ர்யம் பத மத்யபாகமதரம் ராகஸ்தம: குந்தலாந்
சாஞ்சல்யம் த்ருசமம்ப மந்தகதிதா பாதௌ முகம் முக்ததா ॥ 11

कल्याणि = மங்களமானவளே!
अम्ब = அம்மா!
दोष-ओघः = தோஷங்களின் கூட்டம்
गुणतां = குணத் தன்மையை
आदित्सुः = எடுத்துக்கொள்ள விரும்பி
ते = உன்னுடைய
अङ्गानि = உடலுறுப்புகளை
शरणं = புகலாக
जगाम = அடைந்தது.
किमपि = ஏதோவொரு (சொல்லமுடியாத)
कौटिल्यं = கோணல் தன்மையானது
भ्रुवौ = இரு புருவங்களையும்

कठिनता = கடினத் தன்மையானது
वक्षोरुहौ = இரண்டு ஸ்தனங்களையும்
दारिद्र्यं = ஏழ்மையானது
बत = கஷ்டமே!
मध्यभागं = இடுப்புப் பகுதியையும்
रागः = 1. ஆசையானது, 2. செம்மையானது
अधरं = உதட்டையும்
तमः = 1. தமோகுணமானது, 2. இருளானது
कुन्तलान् = கூந்தல்களையும்
चाञ्चल्यं = நிலையாமல் அசைந்து கொண்டே இருத்தல்

என்பது
दशं = கண்ணையும்
मन्द-गतिता = மந்தப் போக்குடைமை என்பது
पादौ = பாதங்களையும்
मुग्धता = 1. கள்ளமின்மை, 2. அசட்டுத்தனம்
मुखं = முகத்தையும்
जगाम = அடைந்தது.

அம்மா கல்யாணியே ! தோஷங்களின் ஸமூஹமானது நற்பண்பை எடுத்துக்கொள்ள விரும்பி உன் அவயவங்களைப் புகலடைந்தது. கோணல் உன் புருவங்களையும், கடினத் தன்மை உன் மார்பகங்களையும், ஏழ்மை உன் இடுப்பையும், ராகம் உன் உதட்டையும், தமஸ் உன் கூந்தலையும், ஸஞ்சலத் தன்மை உன் கண்ணையும், மந்தகதித்தன்மை உன் பாதங்களையும், மூக்தத் தன்மை உன் முகத்தையும் அடைந்தது.

நேர்மையின்மை, அநார்ஜவம், குடிலத் தன்மை, வக்ரத்வம் என்றெல்லாம் சொல்லப்படுகிறவொரு கெட்ட குணம், வளைந்திருத்தல், கோணல், என்ற அர்த்தத்தில், உன் புருவங்களை வந்தடைந்தது. புருவங்களில் கோணலழகு.

கடினத் தன்மை, ஈவிரக்கமின்மை, நிர்தாக்ஷிண்யம், கல்நெஞ்சத் தனம், என்றெல்லாம் சொல்லப்படுகிறவொரு கெட்ட குணமானது, திண்மை, தொய்வின்மை, தொளதொளப்பின்மை, உறுதி, என்கிற பொருளில் வந்து, உன் மார்பகங்கள் இரண்டையும் அடைந்தது. ஸ்தனங்களி திட்பம்.

ஏழ்மை, தாரித்ர்யம், பற்றாக்குறை, செல்வமின்மை, என்றெல்லாம் சொல்லப்படுகிற இன்னொரு கெட்ட குணமானது, அளவில் சிறுத்தமை, மெலிவு, என்கிற பொருளில் உன் இடையை வந்தடைந்தது. இடுப்பு மெலிவழகு பெற்றது.

ராகம், பசைப்பற்று, ஆசை, காமம், என்றெல்லாம் சொல்லப்படுகிற இன்னொரு கெட்ட குணமானது,

செம்மை, இளஞ்சிவப்பு நிறம், என்கிற வேறொரு அர்த்தத்தில், உன் உதடுகளை வந்தடைந்தது. உதடுகளுக்குச் சிகப்பழகு.

தமோகுணம், தீய பண்பு, என்கிற இன்னொரு கெட்ட குணமான, கருமை, இருட்டு, என்கிற வேறொரு அர்த்தத்தில் உன் கூந்தலை வந்தடைந்தது. கூந்தலுக்குக் கருப்பழகு.

சாஞ்சல்யம், பணத்தாசை, சபலத்வம், நப்பாசை, மாறிக் கொண்டே இருத்தல், க்ஷணசித்த க்ஷணபித்தம், என்றெல்லாம் சொல்லப்படுகிற இன்னொரு கெட்ட குணமானது, சஞ்சல பாவம், தரளத் தன்மை, கண்ணோட்டம், என்கிற அர்த்தத்தில் உன் கண்களை வந்தடைந்தது. கண்களில் அசைவழகு.

மந்தகதி, சோம்பல், சுறுசுறுப்பின்மை, மந்தர்கள் நாடல், அறிவுக் குறை, என்றெல்லாம் சொல்லப்படுகிற இரு கெட்ட குணங்களும் சேர்ந்து மெல்ல நடை, அன்ன நடை, என்ற அர்த்தத்தில் உன் கால்களை வந்தடைந்தது. கால்களில் நடையழகு.

அசட்டுத் தன்மை, அறியாத் தனம், கெட்டிக் காரத்தனமில்லாமை, மௌக்த்யம், என்கிற இன்னொரு கெட்ட குணமானது, இளமை ததும்பல், பெண்மைக்குரிய மடமென்னும் பண்பு, பால்வடியும் முகம், கள்ளம்கபடமின்மை, என்கிற பொருளில் உன் முகத்தை வந்தடைந்தது. முகத்தில் பொலிவு.

இவ்வாறு கெட்ட குணங்களெல்லாம் எந்த ஆதாயத்துக்காக உன்னுடைய அங்கங்களை வந்தடைந்திருக்கின்றன? ஒருகால் நற்பண்பை எடுத்துக் கொண்டு நலமடைய விரும்பியதால் இருக்குமோ? அப்படித்தான் இருக்கும். ஏதோவொரு பேருதவியை நாடியன்றோ புகலடைவார்கள்?

ராகம், தமஸ், என்ற பதங்களில் மட்டுமின்றி, மரணம் என்ற பதத்திலும் இரட்டைப் பொருள் உண்டு. இருப்பிடமாகக் கொண்டதை, புகலாகப் பற்றினதாகச் சொல்லி, அதற்குக் கவிநயத்தால் ஒரு காரணமும் கற்பிப்பதற்கு இந்தச் ச்லேடை உதவியது.

அம்மாவே ! அவத்யங்கள் அவம் தீர அவளாவுற்றுன்
அம்சத்தை அடைந்ததனால் அவை குணமாய் ஆயினவாம்

—•—

12. கவியாக்கிக் காயகராக்குபவள்

कृतस्त्वया देवि ! कृपाकटाक्ष लेशैरहं श्लोककृदर्भकोपि ।
परं त्वहं श्लोककृदित्यभीक्ष्णं कदा नु गायेयमिति प्रतीक्षे ॥ १२

க்ருதஸ்த்வயா தேவி க்ருபாகடாக்ஷ
லேசைரஹம் ச்லோகக்ருதர்பகோபி ।
பரம் த்வஹம் ச்லோகக்ருதித்யபீக்ஷ்ணம்
கதா நு காயேயமிதி ப்ரதீக்ஷே ॥

தேவியே ! குழந்தையான நான் உன் க்ருபா கடாக்ஷ லேசத்தாலே இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ர ச்லோகங்கள்

देवि = ஸ்ரீதேவியே !
अहं = நான்
अर्भकः अपि = குழந்தையானாலும்
त्वया = உன்னால்
कृपा-कटाक्ष-लेशैः = சிறிது அருட் பார்வைகளால்
श्लोक-कृत् = ச்லோகங்களைப் பண்ணுபவனாக
कृतः = ஆக்கப்பட்டேன்.
परं तु = ஆனாலும், இதற்கு மேலோ
अहं श्लोककृत् इति = அஹம் ச்லோகக்ருத் என்று
अभीक्ष्णं = மிகவும்
कदा नु = எப்பொழுது நான்
गायेयं = பாடுவேனோ
इति = என்று
प्रतीक्षे = எதிர் நோக்குகிறேன்.

பண்ணுமளவுக்குக் ச்லோக க்ருத் ஆகிவிட்டேன். இனிமேல் உபநிஷத்தில் சொன்னபடி அஹம் ச்லோகக்ருத் என்று பரமபதத்தில் நிறையவாகப் பாடும் நிலை கிடைத்துவிடும். அப்படிப் பாடுவது எப்போதோ என்று நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

த்வயா க்ருத: - நானாகவா லக்ஷ்மீ ஸஹஸ்ரம் பண்ணுகிறேன்? இல்லை. நீ தான் பண்ணுவிக்கிறாய். உன்னால் நான் ச்லோகக்ருத் ஆக்கப்பட்டேன்.

லேசைய: :- உன் ரொம்ப கொஞ்சமான கடாக்ஷமும் போதும், என்னைப் போன்ற கவிகளை உருவாக்குவதற்கு. (அதிகக் கடாக்ஷம் பெற்றவர் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?)

அர்பக: :- நான் குழந்தை, திறமைகள் அற்றவன், உன் வாத்ஸல்யத்துக்கு இலக்கானவன்.

பரம் :- என்பதற்கு மூன்று அர்த்தங்கள். ஆனாலும், இனிமேல், என்பவை ஏற்கனவே சொன்னவை. பரம்பொருளை என்ற அர்த்தமும் இங்கு பொருந்தும், விண்ணாட்டில் அவளையல்லவா நித்யரும் முக்தரும் பாடுகிறார்கள்?

ச்லோகக்ருத் :- என்பதற்கு இரண்டு அர்த்தங்கள். ச்லோகங்களைப் பண்ணுகிற கவிஞன் என்று ஒன்று. புகழ் பாடுபவன் என்று மற்றொன்று. முதலாவது ஏற்கனவே எனக்குக் கிடைத்துவிட்டது. இரண்டாவது பரமபதத்தில் வருவது, அதுவும் கிடைத்துவிடும்.

கதா நு :- ஆளவந்தார் ஸ்தோத்ரத்தில் கதா கதா என்று கதறியபடி, ப்ரதிஜ்ஞை பண்ணுகிறேன்.

கண்ணாலே நான் கவியானேன்
கமலே உன்தன் கருணையினால்
பண்ணோ பாடிப் பரமனை நான்
பரமபதத்தில் பணிவேனோ !

13. பாவங்களை மாயமாக்கி மறைப்பவள்

आगस्ततिं मे किमदृश्यविद्यां अध्यापयस्यब्धिसुते ! तथा त्वम् ।
स विश्वतश्चक्षुरधोक्षजोऽपि न पश्यति व्यक्ततमां यथैनाम् ॥ १३

ஆகஸ்ததிம் மே கிம் அத்ருஶ்யவித்யாம்
அத்யாபயஸ்யப்திஸுதே ! ததா த்வம் ।
ஸ விஶ்வதஶ்சக்ஷுரதோக்ஷஜோऽபி
ந பஶ்யதி வ்யக்ததமாம் யதைநாம் ॥

अब्धि-सुते = கடலின் மகளே!
मे = என்னுடைய
आगः ततिं = குற்றக் குவியலுக்கு
यथा = எப்படியானால்
विश्वतः - चक्षुः = எல்லாப் புறத்திலும் கண் கொண்டவரும்
अधोक्षजः = அதோக்ஷஜருமான
सः = அந்தப் பெருமான்
अपि = கூட
एनां = இதை
व्यक्त-तमां = மிகத் தெளிவாக
न पश्यति = பார்க்கவில்லையோ
तथा = அப்படி
अदृश्य-विद्यां = காணாமற் போகும் வித்யையை
त्वं = நீ
अध्यापयसि किं = கற்பிக்கிறாயா என்ன?

அப்தியின் மகளே! என்னுடைய பாவக் குவியலுக்கு நீ மாயமந்த்ரத்தைக் கற்றுக் கொடுக்கிறாயா என்ன? விஶ்வதஶ்சக்ஷு:, அதாவது நாலா பக்கங்களிலும் கண்ணுள்ளவன் என்றும், அதோக்ஷஜன், அதாவது கீழ்மட்டத்திலும் பார்வையோடு உண்டானவன் என்றும், பெயர் கொண்டவனுக்குக் கூட, (பெருமானுக்குக் கூட) தெளிவாகப் பார்க்க முடியாதபடி, என் குற்றக் குவியலை மறையப் பண்ணிவிட்டாயே!

அத்ருஶ்யவித்யா எதிரேயே இருந்தால் கூட பிறர் கண்ணுக்குப் புலனாகாதபடியான மாயக் கல்வி.

விஶ்வதஶ்சக்ஷு :- உபநிஷத்தில் பகவானுக்கு இட்ட

அடைமொழி. எல்லா இடத்திலும் கண்ணுள்ளன் என்று நேர்ப் பொருள். எதுவும் அவன் பார்வையிலிருந்து தப்ப முடியாது என்பது தாத்பர்யம்.

அதோக்ஷஜன் ஸஹஸ்ரநாமத்தில் ஒரு திருநாமம். இந்த்ரியங்களைக் கீழ்த்தள்ளினவன், வென்றவன், என்று பொருள். ஒருகாலும் குறைந்து போகாதவன் என்பது ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் சொன்ன பொருள். உண்மையான அர்த்தங்கள் இவ்வாறிருப்பினும், கீழ்க் கண்ணுள்ளவனாக உண்டானவன் என்பது இங்கு மட்டும் சமத்காரத்துக்காகச் சொல்லும் அர்த்தம்.

அபி நிறைய கண்கள் இருந்தாலும், எல்லாப் பக்கத்திலும் கண்கள் இருந்தாலும், பகவானால் என் குறைகளைப் பார்க்க முடியாமல் பண்ணுகிறாய்.

அத்யாபயஸி நீ ஆசிரியை. குற்றக் குவியல் உன் மாணவி. மறையப் பண்ணும் வித்தைநீ கற்றுத் தரும் பாடம். கிம். அப்படியா என்ன? நீ கற்பிக்கிறாயா என்ன? நான் அப்படி உத்ப்ரேக்ஷிக்கிறேன்.

அபி யதா ததா பகவானுக்குக் கூடப் புலனாகாத அளவுக்கு, அவ்வளவு அதிகத் திறமை, நீ கற்பிக்கும் அந்த அத்ருஶ்யவித்தைக்கு.

ந பஶ்யதி பார்க்கவில்லை. பகவான் என் குற்றக் குவியலைப் பார்த்தால், என்னை மன்னிப்பானா? அவிஜ்ஞாதா என்றாகிவிட்டான் பகவான் உன்னால்.

வ்யக்ததமாம் :- தெளிவாகக் காணவில்லை. அரைகுறையாக, மங்கலாகத் தெரிகிறதோ என்னமோ. திருமகளடியாரின் குற்றங்கள் முழுமையாகத் திருமாலுக்குக் கூடப் புலப்படுவதில்லை.

கண்ணு யிருந்தாலும் காணுதபடி வித்தை
கசடுகளின் குவியற்குக் கற்பிக்கிறாயோ நீ?

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

रक्षेति नाथसविधे तव गाढमुक्तिः
 यद्युद्गता मम भवेत्तत एव मुक्तिः ।
एतावति श्रितमनोरथपूरणेऽस्मिन्
 कृष्णप्रिये! ननु तथापि कियान् विचारः ॥ १४

ரக்ஷேதி நாத²ஸவிதே⁴ தவ காட⁴முக்தி:
யத்³யுத்³க³தா மம ப⁴வேத்தத ஏவ முக்தி: ।
ஏதாவதி ஶ்ரிதமநோரத²பூரணே஽ஸ்மிந்
க்ருஷ்ணப்ரியே நநு ததா²பி கியாந் விசார: ॥ 14

कृष्ण-प्रिये ! = க்ருஷ்ணனின் ப்ரியையே!
रक्ष = என்று
नाथ-सविधे = நாதனின் அருகில்
तव = உன்னுடைய
उक्तिः = பேச்சு
गाढं = அழுத்தமாக
उद्गता यदि = கிளம்பிற்றானால்
ततः एव = அதனாலேயே
मम = எனக்கு
मुक्तिः = மோக்ஷம்
भवेत् = ஏற்படும்.
श्रित-मनोरथ-पूरणे = ஆஶ்ரிதரின் அபிலாஷையை நிறைவேற்றுவது
एतावति = இவ்வளவேயானபொழுது
तथापि = ஆனாலும்
अस्मिन् = இதில்
कियान् = எவ்வளவு
विचारः ननु = யோசனையோ?

க்ருஷ்ணனின் ப்ரியையே! உன் நாதனின் அருகில் சென்று "ரக்ஷி" என்று நீ உறுத்திச் சொன்னால், அதுவே போதும்; எனக்கு முக்தி கிடைத்துவிடும். உன்னை ஆஶ்ரயித்த என் ஆசையை நிறைவேற்றுவது இவ்வளவு இருந்த போதிலும், தயக்கம் ஏனோ?

நாதஸவிதே உனக்கு நாதனானவன் எங்களுக்கும் நாதனானாலும், அவனருகில் அணுக்கம் பெற்றவள் நீ.

நாங்கள் அவனருகில் அணுகுவதே கஷ்டம். நீதான் எனக்கு உதவ வேண்டும்.

தவ ''ரக்ஷ'' என்கிற இதே வார்த்தையை நாங்கள் சொன்னால் அவன் பாராமுகனாகிறான். எங்கள் சொல் எடுபடாது. உன் உக்திதான் கார்யகரமாகும்.

காடம். அழுத்திச் சொல்வது, உறுத்திச் சொல்வது, உன்னால் முடியும்; உனக்கு அவன் வல்லபனாயிருப்பதால். வேறு யாருமே அவனிடம் காடமாகவோ காட்டமாகவோ பேசிவிட முடியாது.

தத ஏவ ரக்ஷ என்கிற இரண்டெழுத்து வார்த்தை உன்னிடமிருந்து கிளம்பினாலே போதும். அதனாலேயே பெரும்பலன் கிடைத்துவிடும்.

ஏதாவதி - இவ்வளவு எளிதானது. நீ ஒரு வார்த்தை சொன்னால் போதுமே.

க்ருஷ்ணப்ரியே - நீ அவனுக்கு ப்ரியையாக இருப்பதாலன்றோ அவன் உன் வார்த்தைக்குக் கட்டுப்படுகிறான்?

ததாபி - நீ செய்ய வேண்டியது ஶ்ரமமில்லாத கார்யம்; ஒரே ஒரு வார்த்தை சொல்லும் கார்யம் என்றிருந்தாலும். ''அது வீண் போகாது. உன் சொல்லுக்கு மதிப்பதிகம். நிஶ்சயமாகப் பலன் கிடைக்கும்'' என்றிருந்தாலும்.

கியாந் விசார: - எவ்வளவு விசாரம்? ரக்ஷ என்கிற வார்த்தையைச் சொல்லலாமா வேண்டாமா? இப்போது சொல்லலாமா, அப்புறம் சொல்லலாமா? என்றெல்லாம் யோசித்துக் கொண்டிருப்பானேன்?

நான் பண்ணுவது உன்னிடம் பக்தி.
நீ பண்ணுவது அவனிடம் உக்தி.
நான் பெறுவதோ விரைவில் முக்தி.
நீ கொண்டனை இத்தனை சக்தி.

15. கலுஷம் கலவாத கார்ய காரணீ.

यद्युन्निनीषसि यदूद्वहवल्लभे मां
कर्माणि कारय तदा कलुषोज्झितानि ।
नैर्घृण्यमेषि यदि वा न ततोऽपि दूये
नैराश्यमेव हि सुखं निगदन्ति सन्तः ॥ १५

யத்^{3}யுந்நிநீஷஸி யதூ^{3}த்^{3}வஹவல்லபே^{4} மாம்
கர்மாணி காரய ததா^{3} கலுஷோஜ்ஜி^{4}தாநி ।
நைர்க்^{4}ருண்யமேஷி யதி^{3} வா ந ததோபி தூ^{3}யே
நைராஶ்யமேவ ஹி ஸுக^{2}ம் நிக^{3}த^{3}ந்தி ஸந்த: ॥ 15

यदु-उद्वह-वल्लभे = யதுநாதனின் வல்லபையே!
मां = என்னை
उन्निनीषसि यदि = உயரத்தூக்க விரும்பினாயானால்
तदा = அப்பொழுது
कलुष-उज्झितानि = குற்றம் நீங்கிய
कर्माणि = கருமங்களை
कारय = பண்ணுவி
वा = அல்லது
नैर्घृण्यं = கருணையின்மையை
एषि यदि = அடைகிறாயானால்
ततः अपि = அதனாலும்
न दूये = வருந்தமாட்டேன்.
सन्तः = நல்லோர்கள்
नैराश्यं एव = பற்றற்ற நிலையையே
सुखं = ஆனந்தம் என்று
निगदन्ति हि = சொல்கிறார்கள் அல்லவா?

யதுநாதனின் காந்தையே! நீ என்னைத் தூக்கிவிட விரும்பினால், தீம்பு கலவாத செயல்களை என்னைப் பண்ணுவி. மாறாக, என்னிடம் நீ தயையில்லாமல் இருந்தால், அதற்கும் நான் வருந்தவில்லை. பற்றற்றால் பரமஸுகம் என்றல்லவா நல்லோர் சொல்கிறார்கள்?

உந்நிநீஷஸி : உபநிஷத்தில் ஏஷ ஹ்யேவ ஸாது கர்ம காரயதி யமேப்யோ லோகேப்ய உந்நிநீஷதி என்ற வாக்யத்திலிருந்து மூன்று பதங்களையும் கடன் வாங்கி

அர்த்தத்தையும் அனுவதித்திருக்கிறார். பகவானுக்குச் சொன்னதைத் தாயாருக்குச் சொன்னது வித்தியாஸம். யதுநாத்வஹவல்லபே ! நீ யதுநாதனின் வல்லபை; அவன் போகும் வழியில் போகுபவள். அதே போல நீயும் பண்ணு.

சுாரய - நானாகப் பண்ணக் கூடியது எதுவுமில்லை. நீதான் என் செயல்களைப் பண்ணுவிக்க வேண்டும்,

கலுஷ - மந்த்ரலோப, க்ரியாலோப, த்ரவ்யலோப, ஶ்ரத்தாலோப, ஆதிகளால் வரும் கேடுகள்.

கர்மாணி - விஹித கர்மங்களையும் ஸாமாந்யமான கார்யங்களையும்,

ததோऽபி - தயாளுவான உனக்கே நைர்க்ருண்யம் (அருளின்மை) உண்டாகும்படி என் நடத்தை இருந்தாலும், என் மீது நீ வெறுப்படைந்தாலும், உன் வெறுப்பின் விளைவுகள் கொடியவை என்று நான் அறிந்திருந்தாலும்,

ந தூயே - வருந்திப் பயனில்லாதபடியால் நான் வருந்தமாட்டேன். நீ நிராகரித்துவிட்டால் எதுவும் ஸித்திக்காது என்று தெரிந்தபடியாலும், நல்லோர் கூற்றுப்படி இதுவும் ஏமாற்றத்தால் வந்த வைராக்யமும் நல்லதானபடியாலும்,

நைராஶ்யம் - இந்தப் பதத்துக்கு இரண்டு அர்த்தங்கள். நம்பிக்கையிழத்தல் என்பதொன்று; பற்றற்ற நிலை என்பது அடுத்தது. நீயே என்னைக் கைவிட்டுவிட்டால், நான் நம்பிக்கை இழப்பேன். நிராசைப்படுவேன். வேறொரு அர்த்தத்தில் பார்த்தால் இது நல்லது தானே?

ஸந்த: - ஆசையே துக்கத்துக்குக் காரணம் என்பதை அறிந்த நல்லோர்கள்,

நிகதந்தி - ''அற்றது பற்றெனில் உற்றது வீடுயிர்'' முதலிய ஸூக்திகளில் சொல்கிறார்கள்.

அபி - நீ அருள் புரிந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி. இரண்டு பக்ஷத்திலும் நான் வருந்தமாட்டேன்.

கலுஷோஜ்ஜிதாநி - பல தாத்பர்யங்கள் சொல்லலாம். (1) முன் சொன்னபடி, கேடில்லாக் கருமங்கள். (2) எந்தக் கர்மங்களால் கலுஷங்கள் நீங்குமோ அவை. மனோநைர்மல்யம் தரும் யஜ்ஞாதி கர்மங்கள். (3) ப்ராயஶ்சித்தங்கள்.

தூக்கிவிட நினைத்தால் நீ துரிதமிலாச் செயல் புரிவி,
துளியருளும் இன்றெலும் துக்கிக்க மாட்டேன் நான்.
கைதூக்கிவிட விரும்பின் கலுஷமிலாச் செயல் புரிவி
கருணை கொளாவிட்டாலும் கஷ்டமெதும் படமாட்டேன்.

—★—

16. தன்னிடம் பக்தியைத் தரக் கூடியவள்.

नैवापवर्गमतिदुर्गममर्थये त्वां
न स्वर्गमम्ब! न ततोप्यपरं च सौख्यम् ।
अभ्यर्थये हरिसखि! त्वयि भक्तिमात्रं
अत्रापि चिन्तयसि चेदथ किं करोमि? ॥ १६

நைவாபவர்க³மதிது³ர்க³மமர்த²யே த்வாம்
ந ஸ்வர்க³மம்ப! ந ததோப்யபரம் ச ஸௌக்²யம் ।
அப்⁴யர்த²யே ஹரிஸகி! த்வயி ப⁴க்திமாத்ரம்
அத்ராபி சிந்தயஸி சேதத² கிம் கரோமி? ॥ 16

अम्ब! = அம்மா!
हरि-सखि! = ஹரியின் தோழியே!
अतिदुर्गमं = கிடைத்தற்கு மிக அரிதான
अपवर्गं = மோக்ஷத்தை
त्वां = உன்னை
न एव अर्थये = ப்ரார்த்திக்கவே இல்லை.
स्वर्गं = ஸ்வர்க்கத்தை
न = இல்லை.
ततः अपि = அதைக் காட்டிலும்
अपरं = கீழ்ப்பட்டதான, பிறிதான
सौख्यं च = இன்பத்தையும்

கேட்கவில்லை.

त्वयि = உன்னிடம்

भक्ति-मात्रं = பக்தியை மட்டும்

अभ्यर्थये = ப்ரார்த்திக்கிறேன்

अत्र अपि = இதிலும் கூட

चिन्तयसि चेत् = யோசிக்கிறுயானால்

अथ = பிறகு

किं करोमि = என்ன பண்ணுவேன்?

அம்மா! மிகவும் அடைவதற்கரிதான அபவர்க்கத்தை நான் யாசிக்கவே இல்லை. ஸ்வர்க்கத்தையோ வேறொரு ஸௌக்யத்தையோ நான் இரந்து கேட்கவில்லை. ஹரி ஸகியே! உன்னிடம் பக்தியை மட்டும்தான் வேண்டுகிறேன். இதில் கூட நீ யோசித்துக் கொண்டிருந்தால் நான் என்ன பண்ணுவேன்?

அதிதுர்கமம் - ''யோகிநாமப்யகம்யம்'' முதலிய வசனங்களின்படி பார்த்தால் மோக்ஷத்துக்குப் போவது கடினம் என்று தெரிகிறது.

நைவ - கேட்கவே மாட்டேன். எனக்கு மோக்ஷம் கொடு என்று என்னைப் பயனடைபவனாக்கி உன்னிடம் யாசிக்கவே மாட்டேன்.

அபரம் ஸௌக்யம் - ஐஹிகலோகங்கள், பசுபுத்ராதி லாபங்கள், இவற்றையும் தாவென்று கேட்கமாட்டேன்.

ஹரிஸகி! - நீ ஹரியின் தோழி. உன்னிடம் பக்தி கொண்டால் அவருக்கு உகப்பு என்பது எனக்கு தெரியும்.

பக்திமாத்ரம் - ஒன்றே ஒன்றைத்தான் யாசிக்கிறேன். உன்னிடம் எனக்கு பக்தி ஏற்படவேண்டும் என்பதை மட்டும்தான். இதுவொன்றால் மற்றதெல்லாம் தானே கிடைக்கும் என்று தெரியும்.

சிந்தயஸி சேத் - தரலாமா, வேண்டாமா, இழுக்கடிக்கலாமா, பரீக்ஷிக்கலாமா, என்றெல்லாம் யோசிப்பாயானால்,

கிம் கரோமி - நான் பண்ணக் கூடியதென்ன? முக்தியைக் கேட்காமல் பக்தியைக் கேட்டாலும் நீ யோசித்தாயானால், நான் என்ன பண்ணலாம்? நீயாகக் கொடுத்தாலன்றி, தானே எனக்குப் பக்தி உண்டாகுமா?

பரமபதம் வேண்டவில்லை.
பரஸௌக்யம் வேண்டவில்லை.
பக்தி மட்டும் வேண்டுகிறேன்.
பண்ணுவதென் யோசித்தால்?

—★—

17. அற்புதமான ஆற்றலை அடைந்தவள்.

मा कोपं कुरु मातरेकमधुना जल्पामि धृष्टो वचः
शक्तिः कर्तुमकर्तुमन्यथयितुं जागर्ति येयं त्वयि ।
तल्लेशो मम चेदसेस्त्यदमृतं सर्वाननेष्यं क्षणात्
विभो नैवमुपेक्षसे घनकृपा कस्मात्त्वमस्मानिति ॥ १७

மா கோபம் குரு மாதரேகமது^{4}நா ஜல்பாமி த்^{4}ருஷ்டோ வச:
ஶக்தி: கர்துமகர்துமந்யத^{2}யிதும் ஜாக^{3}ர்தி யேயம் த்வயி ।
தல்லேஶோ மம சேதஸேஸ்த்யத^{3}ம்ருதம் ஸர்வாநநேஷ்யம் க்ஷணாத்
விபோ^{4} நைவமுபேக்ஷஸே க^{4}நக்ருபா கஸ்மாத்த்வமஸ்மாநிதி ॥ 17

मातः = தாயே!
कोपं मा कुरु = கோபித்துக் கொள்ளாதே.
धृष्टः = துணிச்சல்காரனும்
एकं = ஒரு
वचः = வார்த்தையை
जल्पामि = பேத்துகிறேன்,
कर्तुं = பண்ணுவதற்கும்
अकर्तुं = இல்லாமல் பண்ணுவதற்கும்
अन्यथयितुं = மாற்றியமைப்பதற்கும்
या = எந்த
शक्तिः = திறமை
इयं = இதோ
त्वयि = உன்னிடம்
जागर्ति = (விழித்து) இருக்கிறதோ
तत्-लेशः = அதன் சிறுபகுதி
मम = எனக்கு
असेत्स्यत् चेत् = வாய்க்குமானால்

सर्वान् = எல்லாரையும்
कस्मात् = எதனால்
क्षणात् = நொடிப் பொழுதில்
अस्मान् = எங்களை
अमृतं = இறவாநிலைக்கு
एवं = இப்படி
अनेष्यं = அழைத்துப் போயிருப்பேன்.
उपेक्षसे = உபேக்ஷிக்கிறாய்?
घन-कृपा = நிறைந்த அருளுள்ள
इति = என்று
त्वं = நீ
न विद्मः = அறியோம்.

அம்மா ! உன்னுடைய அதீத ஆற்றலை அறிந்து வியக்கும் நான் துணிச்சல்காரனாகி ஒரு வார்த்தை சொல்கிறேன். அதைக் கேட்டு நீ கோபித்துக்கொள்ளாதே. படைப்பதற்கும் அழிப்பதற்கும் மாறுவதற்கும் உனக்கிருக்கும் வல்லமையில் ஒரு லவலேசம் எனக்கு வாய்க்குமானால் எல்லாரையுமே நான் மோக்ஷத்துக்கு அழைத்துப் போயிருப்பேன். இவ்வளவு திறமை உனக்கிருந்தும், நீ அருள் பொழிபவளாயிருந்தும், எங்களை உதாஸீனப்படுத்துகிறாயே, அது ஏன் என்று புரியவில்லை.

த்ருஷ்ட: - நான் துணிந்தவன், விஷமி. இல்லாவிட்டால் தைர்யமாக உன்னிடம் இப்படிப் பேசுவேனா?

ஜல்பாமி - உளறுகிறேன். ஸர்வமோக்ஷப்ரஸங்கம் என்பது பற்றிய ஶாஸ்த்ரக் கருத்தை அறிந்தவர்கள் இப்படிப் பேசலாமா?

மா கோபம் குரு - என் பேச்சு சினத்தைச் சீண்டுவதானாலும், என்னிடம் கோபிக்காதே. இப்படிப் பீடிகை போட்ட பின்னர்தானே நான் என் தப்பு வாதத்தை முன்வைக்கப் போகிறேன்.

ஜாகர்தி - ஸதாஸர்வகாலமும் மறையாமல் இருக்கிறது.

தல்லேஶ: - அது அபார ஆற்றல். அதன் சிறு பகுதியே போதும், ஸர்வமோக்ஷப்ரதானத்துக்கு.

ஸர்வாந் - யோக்யதை, அயோக்யதையைக் கணிசிக்காமல், எல்லாரையுமே,

க்ஷுணத் - காலம் தாழ்த்தாமல் உடனேயே, சக்தி அப்படிப்பட்டது.

கருக்ருபா - நீ அபாரகருணாம்புதி.

ந வித்ம: - எங்களுக்குத் தெரியவில்லை. குற்றவாளிகளைத் தண்டிக்காமல், நல்லோரோடொக்க, நற்பதம் வழங்குவது, கருணையாகாது என்கிற நுட்பம் எங்களுக்கு விளங்கவில்லை.

உபேக்ஷஸே - நீ உபேக்ஷிக்கிறாய், எங்களை உதாஸீனப்படுத்துகிறாய், என்று நினைக்கிறேன்.

உன் திறனில் ஒரு லவத்தை உடைத்தேனானால்
உலகோரை உடன் முக்திக்குயர்த்துவேன் நான்
உறுவருளை உடையவள் நீ உபேக்ஷிப்பானேன்?
உறுத்தித்தான் உளறுகிறேன் உளம் சீறாதே.

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

18. எல்லாக் குணங்களும் ஏராளமாய்க் கொண்டவள்.

सौन्दर्यस्य निधिर्मुदामुदयभूः सम्पत्तिमञ्जूषिका
कान्तीनां निलयः कलाजलनिधिः क्षान्तेर्निशान्तस्थली ।
दाक्षिण्यस्य शरण्यसद्म कमले दातृत्वविश्रान्तिभूः
आस्थानी यशसां प्रपासि सतृषां आद्यस्य पुम्सो धनम् ॥ १८

ஸௌந்தர்யஸ்ய நிதிர்முதாமுதயபூ: ஸம்பத்திமஞ்ஜூஷிகா
காந்தீநாம் நிலய: கலாஜலநிதி: க்ஷாந்தேர்நிசாந்தஸ்தலீ ।
தாக்ஷிண்யஸ்ய சரண்யஸத்ம கமலே தாத்ருத்வவிச்ராந்திபூ:
ஆஸ்தாநீ யசஸாம் ப்ரபாஸி ஸத்ருஷாம் ஆத்யஸ்ய பும்ஸோ தநம் ॥

कमले = கமலையே !
सौन्दर्यस्य = அழகின்
निधिः = நிதியாகவும்
सम्पत्ति-मञ्जुषिका = செல்வப் பெட்டியாகவும்
कान्तीनां = மேனிமினுப்புகளுக்கு
निलयः = நிலையமாகவும்
कला-जलनिधिः = கலைகளின் கடலாகவும்
क्षान्तेः = பொறுமையினுடைய
निशान्त-स्थली = உறையும் இடமாகவும்
दाक्षिण्यस्य = தாக்ஷிண்யத்தினுடைய
शरण्य-सद्म = புகல்வீடாகவும்
दातृत्व-विश्रान्ति-भूः = வண்மையின் ஓய்விடமாகவும்
यशसां = புகழ்களுடைய
आस्थानी = சபையாகவும்
स-तृषां = தாகமெடுத்தவர்களுக்கு
प्रपा = தண்ணீர்ப் பந்தலாகவும்
आद्यस्य पुम्सः = முதல்வனுக்கு (பகவானுக்கு)
धनं = பணமாகவும்
असि = இருக்கிறாய்.

கமலையே ! நீ அழகின் நிதி. இன்பங்களின் தோற்றுவாய். செல்வத்தின் பெட்டகம். மினிர்ச்சியின்

நிலயம். கலைகளின் கடல். பொறுமையின் உறைவிடம். தாக்ஷிண்யத்தின் புகலிடம். வள்ளல் தன்மையின் ஒய்வறை. புகழின் ஸபாமண்டபம். தாஹக்காரர்களுக்குத் தண்ணீர்ப் பந்தல். ஆதிபுருஷனுக்குத் தனம்.

அழகினுடைய அருங்கலம் நீ ஆனந்தத்து ஆலயம் நீ.
காந்திகளின் கட்டிடம் நீ. கலைகளுக்குக் கடலும் நீ.
பெருஞ்செல்வப் பெட்டகம் நீ.
பொறுமையின் பொக்கிஷம் நீ.
தாக்ஷிண்யம் தங்கிடம் நீ. தாகமுளார் தண்ணீர் நீ.
புகழ்கட்குப் பேரவை நீ. பாமனுக்குப் பணமும் நீ.
வள்ளன்மை வாழ்விடம் நீ. வாரிஜையே ! எல்லாம் நீ.

---★---

19. மூலிகையும் மாலிகையும் ஆனவள்.

मोहोन्मूलनमूलिका भवजुषां मोक्षाध्वनिश्श्रेणिका
चेतश्शुद्धिविधानसिद्धगुटिका चिन्तातमश्चन्द्रिका ।
विद्याविभ्रमशालिकाऽसि कमले विष्णोरुरोमालिका
मातस्त्वं मम पारिजातलतिका मोदाम्बुधेर्वीचिका ॥ १९

மோஹோந்மூலநமூலிகா பவஜுஷாம் மோக்ஷாத்வநிச்ச்ரேணிகா
சேதச்சுத்திவிதாநஸித்தகுடிகா சிந்தாதமச்சந்த்ரிகா ।
வித்யாவிப்ரமசாலிகாऽஸி கமலே விஷ்ணோருரோமாலிகா
மாதஸ்த்வம் மம பாரிஜாதலதிகா மோதாம்புதேர்வீசிகா ॥

19

मातः = அம்மா !

कमले = கமலையே !

त्वं = நீ

मोह-उन्मूलन-मूलिका = மோஹத்தைக் களைந்தெறியும் மூலிகை ஆகவும்

भव-जुषां = ஸம்ஸாரத்தை அடைந்தவர்களுக்கு

मोक्ष-अध्व-निश्रेणिका = மோக்ஷவழிக்கான ஏணியாகவும்

चेतः-शुद्धि-विधान-सिद्ध-गुटिका = மனத் தூய்மை ஏற்படுத்தும் சித்தக் குடிகையாகவும்
चिन्ता-तमः चन्द्रिका = கவலையிருளுக்கு நிலவாகவும்
विद्या-विभ्रम-शालिका = கல்வியின் உல்லாஸ மைதானமாகவும்
वीचिका = அலையாகவும்
असि = இருக்கிறாய்.
विष्णोः = திருமாலுக்கு
उरो-मालिका = மார்வகத்து மாலையாகவும்
मम = எனக்கு
पारिजात-लतिका = பாரிஜாதக் கொடியாகவும்
मोदः-अम्बुधेः = மகிழ்ச்சிக் கடலின்

அம்மா கமலையே ! மூலிகையாலே போல உன்னால் எங்கள் மோகம் வேரறுக்கப்படுகிறது. ஏணி வைத்தாற்போலே உன் மூலம் நாங்கள் மோக்ஷத்துக்கு ஏறமுடிகிறது. சித்தர் குடிகை மருந்து விசித்திரப் பலன்களை அளிப்பதுபோல் நீ மனத்தூய்மையை விளைவிக்கிறாய். நிலவால் இருள் அகல்வது போலே உன்னால் எங்கள் கவலைகள் நீங்குகின்றன. எங்கள் கல்விகள் உன் சாலையில் விளையாடுகின்றன. விஷ்ணுவுக்கு மார்பகத்து மாலையாகவும் எனக்கு எல்லாம் தரும் பாரிஜாதக் கொடியாகவும் இன்பவெள்ளத்தின் அலையாகவும் நீ இருக்கிறாய்.

மோகம் தீர்க்கும் மூலிகை நீ. மோட்சம் ஏற்றும் ஏணியும் நீ.
சித்தச் சுத்திக் குடிகை நீ. சிந்தை விரட்டும் சந்த்ரிகை நீ.
வித்யை விளையும் சாலை நீ. விஷ்ணுவின் உரத்தில் மாலை நீ.
மாதா எனக்குக் கற்பகம் நீ. மகிழ்ச்சிக் கடலின் அலையும் நீ.

—★—

20. விதவிதமாய் விசேஷிக்கும் விலக்ஷை கொண்டவள்.

विकासः पुण्यानामपि च विकचाम्भोरुहरुचाम्
विवर्तो हर्षाणां विततिरमृतानां परिणतिः ।

विकारः कारुण्यामृतजलधिवीचीपरिषदाम्
विकल्पः कल्पद्रोर्जननि तव वीक्षा विजयते ॥ २०

விகாஸ: புண்யாநாமபி ச விகசாம்போருஹருசாம்
விவர்தோ ஹர்ஷாணாம் விததிரம்ருதாதநாம் பரிணதி: ।
விகார: காருண்யாம்ருதஜலதிவீசீபரிஷதாம்
விகல்ப: கல்பத்ரோர்ஜநநி தவ வீக்ஷா விஜயதே ॥ 20

जननि = தாயே !
पुण्यानां = மலர்ச்சியாகவும்
अपि च = மேலும்
विकच-अम्भोरुह-रुचां = மலர்ந்த தாமரைகளின் காந்திகளுக்கு
विवर्तः = வேற்றுருவாகவும்
हर्षाणां = ஆனந்தங்களுக்கு
विततिः = பரிணாமமாகவும்
कारुण्य-अमृत-वीची-परिषदां = அருளமுத அலைக் கோஷ்டிகளுக்கு
विकारः = திரிபாகவும்
कल्प-द्रोः = கற்பக மரத்தின்
विकल्पः = மாற்றாகவும்
तव = உன்னுடைய
वीक्षा = பார்வை
विजयते = வெல்கிறது.

தாயே ! புண்யத்தின் பலனாகக் கிடைப்பது உன் கடாக்ஷம். தாமரை போல் கவர்வது. மகிழ்ச்சிகளால் நீண்டது. அமுதத்தின் மாற்றுவடிவம். கருணைக் கடலின் அலைவரிசைகளே உருமாறி வந்தது போல. அருளாழியின் அலைகளுக்கு மாற்றுவடிவம் ஆனது. கற்பகத்துக்குப் பதிலாக ஈடு கொடுப்பது. அப்படிப்பட்ட உன் பார்வை ஜயிக்கிறது.

அரியது; அழகியது; இனியது; இன்பம் தருவது; அலைபாய்வது; அருள்வது; அளிப்பது; வெல்வது; என்ற எட்டு பண்புகள் உன் பார்வைக்கு இருக்கின்றன.

புண்ணியத்தின் பூப்புருவாய் மலர்மலரையின் மறுவுருவாய்
ஆனந்தத்தமைப்பாகி அமுதத்தின் அயலுருவாய்

அருட்கடலின் அலைத்திரிபாய் அம்மா உன் அருட்பார்வை உம்பர்மரத்துவமையாய் விதவிதமாய் வெல்கிறது.

—★—

21. அறிவையளித்து அகிஞ்சனரை ஆதரிப்பவள்.

प्रज्ञालतानां किमुपघ्नयष्टिः पणायतां कामगवी कवीनाम् ।
प्रपञ्चमातस्त्वमकिञ्चनानाम् प्राणप्रतिष्ठा परमासि काष्ठा ॥ २१

ப்ரஜ்ஞாலதாநாம் கிமுபக்நயஷ்டி:
பணாயதாம் காமகவீ கவீநாம் ।
ப்ரபஞ்சமாதஸ்த்வமகிஞ்சநாநாம்
ப்ராணப்ரதிஷ்டா பரமாஸி காஷ்டா ॥ 21

प्रपञ्च-मातः = அகிலாண்டத்தின் அன்னையே !
त्वं = நீ
प्रज्ञा-लतानां = அறிவென்னும் கொடிகளுக்கு
उपघ्न-यष्टिः किं = கொழுகொம்பா என்ன?
पणायतां = துதிக்கிற
कवीनां = கவிகளுக்கு
कामगवी किं = காமதேனுவா என்ன?
अकिञ्चनानां = கைம்முதலற்றவர்களுக்கு
प्राण-प्रतिष्ठा किं = உயிர்நிலையா என்ன?
परमा = உயர்ந்த
काष्ठा = மேல்நிலையாக
असि = இருக்கிறாய்.

ப்ரபஞ்சத்தின் மாதாவே ! கொடிக்குப் பற்றுக்கொம்பு போலவோ அறிவுக்கு நீ?

உன்னைப் பற்றினால்தான் அறிவு ஸ்திரப்படும் .துதிக்கும் கவிஞர்களுக்கு நீ காமதேனுவோ ? கோரினதெல்லாம் அவர்களுக்குக் கொடுக்கிறாயே . ஏழைகளுக்கு நீ உயிர் நிலையோ? நீ இன்றேல் அவர்கள் வாழவே முடியாதே . எல்லா விதமாகவும் நீ உயர்ந்த எல்லைக்கோல்.

கொடியாகும் அறிவுக்குக் கொழுகொம்புக் கோலோ நீ?
கதைக்கின்ற கவிகட்குக் காமதேனுப் பசுவோ நீ?
ஒன்றுமிலா ஒருவற்கும் உயிர்நிலையாய் ஆனாய் நீ.
ஏற்றமிகும் எல்லைக்கோல் எல்லார்க்கும் தாயாம் நீ.

—★—

22. மருந்தும் விருந்தும் ஆனவள்.

अस्मादृशामभ्युदयाङ्कुरो वा नाथस्य पद्मे नयनोत्सवो वा ।
दिव्यौषधं वा दुरितामयानां पारं परं वा भवती भवाब्धेः ॥ २२

அஸ்மாத்ருஶாம் அப்யுதயாங்குரோ வா
நாதஸ்ய பத்மே நயநோத்ஸவோ வா ।
திவ்யௌஷதம் வா துரிதாமயாநாம்
பாரம் பரம் வா பவதீ பவாப்தே: ॥ 22

पद्मे = தாமரையாளே !
भवती = நீர்
अस्मादृशां = எம் போன்றோருக்கு
अभ्युदय-अङ्कुरो वा। = எழுச்சி முளையோ?
नाथस्य = நாதனான திருமாலுக்கு
नयन-औषधं वा = திவ்வியமான மருந்தோ?
भव-अब्धेः = பிறவிக் கடலுக்கும்
पारं परं वा = எதிர்க்கரையோ?

நீ என்னைப் போன்றவர்களுக்கு எழுச்சிமுளை. உன்னால் எங்களுக்கு மேன்மை உண்டாகிறது. நீ பெருமானின் கண்களுக்கு உத்ஸவம். உன்னால் அவர் கண்களுக்கு விருந்து கிடைக்கிறது. நீ பாவமும் பிணியும் தீர்க்கும் அருமருந்து. உன்னால் வ்யாதிகளும் நீங்குகின்றன. தீவினைகளும் மாய்கின்றன. நீ பிறவிக் கடலின் அக்கரை. உன்னால் ஸம்ஸார ஸமுத்ரத்தைத் தாண்டி விடுகிறோம்.

எம்போன் றோரின் எழுச்சி முளையோ?
எம்பெரு மானுக் கெழிலார் விழவோ?
ஏதம் எதிர்க்கும் ஏற்ற மருந்தோ?
எம் பவத்துக்கும் எதிர்க்கரை நீயோ?

23. விண்ணோர் மாதரை விதவையாகாது வைப்பவள்.

ताटङ्करक्षां त्रिदशाङ्गनानाम् तरङ्गिणीजानितपः फलं श्रीः ।
दारिद्र्यविद्रावणमूलविद्याम् जगुर्जगन्नायकनायिकां त्वाम् ॥ २३

தாடங்கரக்ஷாம் த்ரித³ஶாங்க³நாநாம்
தரங்கிணீஜாநிதப:ப²லம் ஶ்ரீ: ।
தா³ரித்³ர்யவித்³ராவணமூலவித்³யாம்
ஜகு³ர் ஜக³ந்நாயகநாயிகாம் த்வாம் ॥ 23

श्रीः ஸ்ரீதேவியே !
त्रिदश-अङ्गनानां தேவமாதர்களுக்கு
ताटङ्क-रक्षां காதணிகளைக் காப்பவள் என்றும்
तरङ्गिणी - जानि-तपः-फलं ஆறுகளின் கணவனான ஸமுத்திரத்தின் தவப்பயன் என்றும்
दारिद्र्य-विद्रावण-मूल-विद्यां ஏழ்மையை விரட்டும் மூலமந்த்ரம் என்றும்
जगत्-नायक-नायिका உலகுகளின் தலைவனுக்குத் தலைவி என்றும்
त्वां உன்னை जगुः பாடுகிறார்கள்.

ஸ்ரீ தேவியே ! உன்னைப் பலவாறாகப் பாடுகிறார்கள். தேவர்களின் உயிரைக்காப்பதால், தேவமாதுகளின் மாங்கல்ய பூஷணங்களைக் காப்பவள் என்கிறார்கள். (அந்த மாதுகளுக்கு வைதவ்யம் வராமல் காப்பாற்றுபவள்.) நதிகளுக்கெல்லாம் மணாளனான கடலரசன் செய்த கடுந்தவத்தின் பயன் நீ என்கிறார்கள். (அவனுக்கு நீ மகளாகக் கிடைத்திருக்கிறாயே!) வறுமையை விரட்டவல்ல மூலமந்த்ரமானவள் நீ என்கிறார்கள். ஜகன்னாதனுக்கும் நாயகியானவள் என்கிறார்கள். நீ ரக்ஷையா, பலனா, வித்யையா நாயிகையா என்றால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றாக எல்லாமாகிறாய்.

அமரர்களின் அணங்குகளின் அணிகலனை அளிப்பவள் நீ.
அர்வணத்தின் அரசனுடை அருந்தவத்தின் அரும்பயன் நீ.

அல்லல்களை அகற்றுகிற அடிப்படையாம் அறிவும் நீ.
அகிலத்தை ஆள்பவனின் அரசியும் நீ திருமகளே !

—✱—

24. ஆகமங்கள் அனைத்துக்கும் ஆஸ்தியானவள்.

परिष्कृतिं पङ्कजकाननानाम् परायणं नः शरणागतानाम् ।
सन्तः शकुन्तध्वजसुन्दरि ! त्वाम् सर्वस्वमाहुः सकलागमानाम् ॥२४

பரிஷ்க்ருதிம் பங்கஜகாநநாநாம்
பராயணம் ந: ஶரணாக³தாநாம் ।
ஸந்த: ஶகுந்தத்⁴வஜஸுந்த³ரி! த்வாம்
ஸர்வஸ்வமாஹு: ஸகலாக³மாநாம் ॥ 24

शकुन्त-ध्वज-सुन्दरि பட்சிக்கொடியோனின் பத்தினியே!
पङ्कज-काननानां தாமரைக்காடுகளின்
परिष्कृतिं அணிகலன் என்றும்
शरणागतानां அடைக்கலம் புகுந்த
नः எங்களுடைய
परायणं மேல்கதி என்றும்
सकल-आगमानां எல்லா ஆகமங்களுக்கும்
सर्वस्वं முழு ஆஸ்தி என்றும்
त्वां உன்னை
सन्तः நல்லோர்கள்
आहुः சொல்கிறார்கள்.

பறவைக்கொடியோனின் பத்தினியான ஸௌந்தரியே! தாமரைக்காடுகளுக்கு அணிகலனானவள் என்றும். புகலடைந்த எங்களுக்கு உயர்கதியானவள் என்றும் எல்லா வேதங்களும் முழுப்பொக்கிஷம் என்றும் உன்னை நல்லவர்கள் கூறுகிறார்கள்.

உன்னால் தாமரைக்காடுகளின் அழகு கூடுகிறது. சரணமடைந்த எங்களுக்கு நீயே பரமகதி. எல்லா வேதங்களுக்கும் நீ ஸர்வஸ்வம். இவ்வாறெல்லாம் நல்லோர்கள் நவில்கிறார்கள்.

அம்புஜ வனத்தின் அணிகலன் என்றும்
அடைக்கலம் புகுந்தோர்க் குயர்கதி என்றும்
அனைத்தாரணத்தின் ஆஸ்தியேயென்றும்
அறிஞர் உன்னை அறிவித் திடுவர்.

25. கொடும் துயர்களைக் கொல்பவள்.

परिकर्म विनिर्मलं मुरारेः प्रतियत्नं प्रतिबुद्धशेमुषीणाम् ।
भवतीं भवतीक्ष्णयातनानाम् अभिचाराहुतिमाहुरब्धिकन्ये ! ॥ २५

பரிகர்ம விநிர்மலம் முராரே:
ப்ரதியத்நம் ப்ரதிபு[3]த்[3]த[4]ஶேமுஷீணாம் ।
ப[4]வதீம் ப[4]வதீக்ஷ்ண யாதநாநாம்
அபி[4]சாராஹுதிமாஹுரப்[3]தி[4]கந்யே ॥ 25

अब्धि-कन्ये கடலின் மகளே !
मुरारेः முராரியினுடைய
विनिर्मलं அப்பழுக்கில்லாத
परिकर्म உடலணியாகவும்
प्रतिबुद्ध-शेमुषीणां தெள்ளறிவாளரின் அறிவுகளுக்கு
प्रतियत्नं பண்பூட்டல் என்றும்
भव-तीक्ष्ण-यातनानां பிறவியின் கொடிய வேதனைகளுக்கு
अभिचार-आहुतिं மாய்த்தொழிக்கும் ஹோமம் என்றும்
भवतीं உம்மை
आहुः சொல்கிறார்கள்.

அப்திகந்யையே ! முராரிக்கு அழகூட்டும் தூய அணிகலன் ஆகிறீர். தத்வஜ்ஞானத்தில் தெளிவு பிறந்தவர்களின் அறிவு உம்மால் மேலும் பொலிவடைகிறது. ஸம்ஸாரத்துக்கங்களுக்கு நீர் அபிசார - ஆஹுதி போலிருந்து அழிக்கிறீர். இப்படியெல்லாம் சொல்கிறார்கள்.

அகமுடையான் அகலத்தில் அணிகலனாய் அமர்ந்தவளாம்.
அறிஞர்களின் அறிவுகளுக் கழகு மிக அளிப்பவளாம்,
அல்லல்களை அறுக்கின்ற அபிசார ஆஹுதியாம்.
அம்புதியின் அருமகளே ! அவையனைத்தும் நீ என்பர்.

---

26. அன்னமோ அழகுக்கொடியோ ஆனவள்.

मुनिमानस राजहंसिका वा मुरभित्कल्पक मञ्जुमञ्जरी वा ।
श्रुतिपञ्जरदिव्यसारिका वा जननि ! त्वं गुणरत्नपेटिका वा ॥ २६

முநி மாநஸ ராஜஹம்ஸிகா வா
முரபி⁴த் கல்பக மஞ்ஜு-மஞ்ஜரீ வா ।
ஶ்ருதிபஞ்ஜர தி³வ்யஸாரிகா வா
ஜநநி த்வம் கு³ணரத்நபேடிகா வா ॥ 26

जननि தாயே !
त्वं நீ
मुनि-मानस-राज-हंसिका वा
முனிவர் மனம் என்னும் மாநஸஸரஸ்ஸில் ராஜஹம்ஸமோ ?
मुर-भित् - कल्पक - मञ्जु - मञ्जरी वा முராரி என்னும் கற்பக மரத்தின் அழகிய கொடியோ ?
श्रुति-पञ्जर-दिव्य-सारिका वा
வேதம் எனும் கூண்டின் திவ்விய மைனாப்பறவையோ ?
गुण-रत्न-पेटिका वा நற்குணங்கள் என்னும் ரத்தினங்களின் பெட்டியோ ?

ஜநநியே ! முனிவர்களின் மனதை மாநஸஸரஸ்ஸாகச் சொன்னால், உன்னை அதில் ராஜஹம்ஸமாகச் சொல்லலாம். (அங்கு நீ நடமாடுவதாலும், விளையாடுவதாலும்) (மாநஸம் என்பதற்கு உள்ளம் என்றும், இமயத்தில் உள்ள ஒரு ஏரி என்றும் இரண்டு அர்த்தங்களையும் கொண்டு ரஸிக்க வேண்டும்.) முராரியைக் கற்பகமரமாகச் சொன்னால் உன்னை அதில் கொடியாகச் சொல்லாம். (அதைத் தழுவுவதாலும், அதற்கு அழகூட்டுவதாலும்) அல்லது திருமால் என்னும் கற்பகமரத்தின் பூங்கொத்தாக உன்னைச் சொல்லலாம். (அவன் வடிவத்தில் ஒரு பகுதியாக ஒன்றியிருப்பதாலும், மணமும் மென்மையும் அழகும் கொண்டிருப்பதாலும்) மஞ்ஜரி என்ற பதத்துக்கு இரண்டு அர்த்தங்களும் பொருந்தும் வேதத்தைக் கூண்டாகச் சொன்னால் உன்னை, மைனாப்பறவையாகச் சொல்லலாம். (அதற்குள் இருப்பதாலும், அதன் ஒலி உன்னுடையதாதலாலும்) நல்ல குணங்களை ரத்தினங்களாகச் சொன்னால், உன்னைப் பேழையாகச் சொல்லலாம். (அவை உன்னிடம் இருப்பதாலும், அவற்றை நீ பாதுகாப்பதாலும்.)

முனிவர்களின் மாநஸத்தில் அன்னமோ நீ !
மாலென்னும் மரத்துக்கு மஞ்ஜரியோ நீ !
மெய்ம்மறையாம் கூண்டுக்குள் மைனாவோ நீ !
பண்புகளாம் மணிகளுக்குப் பேழையோ நீ !

— ❋ —

27. மின்னும் மேனியாள்

प्रतिसृष्टिरियं तडिल्लतानाम् परिणामो नु शिरीषमञ्जरीणाम् ।
प्रतिभाति हृदि त्वदीयमूर्तिः परिवृत्तिर्हरिपत्नि काञ्चनानाम् ॥ २७

ப்ரதிஸ்ருஷ்டிரியம் தடில்லதாநாம்
பரிணாமோ நு மிரீஷமஞ்ஜரீணாம் ।
ப்ரதிபா⁴தி ஹ்ருதி³ த்வதீ³யமூர்த்தி:
பரிவ்ருத்திர் ஹரிபத்நி ! காஞ்சநாநாம் ॥ 27

हरि-पत्नि ! ஹரியின் பத்தினியே ।	शिरीष-मञ्जरीणां = சிரீஷ மலர்க் கொத்துகளின்
इयं இந்த	परिणामो नु = பரிணாமமோ?
त्वदीय-मूर्तिः உன்னுடையதான வடிவு	काञ्चनानां = தங்கங்களின்
तडित्-लतानां மின்னற்கொடிகளுக்கு	परिवृत्तिः = பண்டமாற்றோ?
	हृदि = இதயத்தில் (என்று)
प्रति-सृष्टिः नु மாற்றுப்படைப்போ?	प्रतिभाति = தோன்றுகிறது.

ஹரிபத்நியே ! உன் திருமேனி மின்னற்கொடிகளின் மறுபடைப்போ? அனிச்ச மலர்கொத்தின் பரிணாமமோ? தங்களுக்குச் சமமான மாற்றுப் பண்டமோ? என்றெல்லாம் மனதில் தோன்றுகிறது. உன் திருமேனியின் பளபளப்பும் மென்மையும் பொலிவும், அதற்குவமையாக, மின்னலையும், மலர்க்கொத்தையும், பொன்னையும், கூறவைக்கின்றன.

மின்னற்கொடியின் மறுபடைப்போ?
மென்மலர்க்கொத்தின் மேல் திரிபோ?
மாற்றுப் பொன்னின் மாற்றுருவோ?
மாலின் மனைவி ! உன் மூர்த்தி.

23. குற்றத்துக்குக் கோடரியானவள்.

प्रस्तावना भुवनपालननाटकस्य

प्राच्या दिशो धवलिमापि च कालरात्रेः ।

दुर्गर्वसर्वरजनीचरधूमकेतुः

दोषद्रुमस्य परशुस्तव देवि! रूपम् ॥ २८

ப்ரஸ்தாவநா புவநபாலநநாடகஸ்ய

ப்ராச்யா திஶோ தவளிமாபி ச காலராத்ரே: ।

துர்கர்வஸர்வரஜநீசரதூமகேது:

தோஷத்ருமஸ்ய பரஶுஸ்தவ தேவி ! ரூபம் ॥ 28

देवि = ஸ்ரீ தேவியே !

तव = உன்

रूपं = உருவம்

भुवन-पालन-नाटकस्य = லோகரக்ஷண நாடகத்தின்

प्रस्तावना = தொடக்கப் பகுதி.

कालरात्रेः = காளராத்ரிக்கு

प्राच्याः दिशः = கிழக்குத் திக்கின்

धवलीमा = வெளுப்பு

दुर्गर्व-सर्व-रजनी-चर-धूमकेतुः = துர்கர்வங்களாகிற எல்லா ராக்ஷஸர்களுக்கும் வால்நக்ஷத்திரம்.

दोष-द्रुमस्य = தோஷம் என்னும் மரத்துக்கு

परशुः = கோடரி.

தேவியே! உன் வடிவு லோகஸம்ரக்ஷண நாடகத்துக்கு ஆரம்பப்பகுதி. (இங்குதான் உலகத்தைப் பாதுகாப்பது ஆரம்பிக்கிறது). காளராத்ரியின் கிழக்கு வெளுப்பு. (இனி இருள் இல்லை என அகற்றுவது). பொல்லாத் திமிர்கள் என்னும் ராக்ஷஸர்களுக்கு வால் நக்ஷத்திரம். (அழிவுக்கால அறிகுறி). குற்றம் என்னும் மரத்துக்குக் கோடாலி. (வெட்டிவிடும்). உன் வடிவத்தால் காப்பு கிடைக்கும்; இருட்டு தொலையும்; திமிர் அடங்கும்; குற்றம் வெட்டுண்ணும். உன் வடிவு எங்களுக்கு என்னென்ன பண்ணும் தெரியுமா?

இரட்சை பண்ணும். இருளை நீக்கும்.
இறுமாப்படக்கும். இழுக்கை வெட்டும்.

29. ஆசைப்பிசாசை அகற்றுபவள்.

आलानयष्टिरसि योगिमनोगजानां
आशापिशाचपरिमोचनमन्त्रविद्या ।
कालान्तलोकगमनप्रतिरोधमुद्रा
कारुण्यपुण्यतटिनी कमलालये ! त्वम् ॥ २९

ஆலாநயஷ்டிரஸி யோகி³மநோகஜாநாம்
ஆஶாபிஶாச பரிமோசந மந்த்ரவித்யா ।
காலாந்தலோக க³மந ப்ரதிரோத⁴ முத்³ரா
காருண்யபுண்யதடிநீ கமலாலயே ! த்வம் ॥ 29

कमलालये = தாமரை ஆலயத்தாளே!
त्वं = நீ
योगि-मनो-गजानां = யோகிகளின் மனதென்னும் யானைகளுக்கு
आलान-यष्टिः = கட்டுமரமாக
असि = ஆகிறாய்.
आशा-पिशाच-परिमोचन-मन्त्र-विद्या = ஆசை என்னும் பிசாசிலிருந்து விடுபடுவதற்கான மந்த்ரவித்யை.
कालान्त-लोक-गमन-प्रतिरोध-मुद्रा = யமலோகம் செல்வதைத் தடுக்கிற முத்திரை.
कारुण्य-पुण्य-तटिनी = கருணையின் புண்ணிய நதி.

கமலாலயே ! யோகிகளின் மனம் அலையாமல் ஒரே இடத்தில் இருப்பதற்கு உதவும் கட்டுமரம் நீ. (உன் துணையால் அவர்கள் மனம் ஒருமிப்பதாலும், அவர்கள் மனம் உன்னருகே கட்டுண்டிருப்பதாலும்). ஆசையென்னும் பிசாசை விரட்டியடிக்கும் மந்த்ரவித்யை நீ. (உன்னால் ஆசை தொலைவதாலும், இது வாசிகமாகவும் நடைபெறுவதாலும்). யமலோகம் போவதைத் தடுக்கும் முத்திரை நீ. (உன் அடையாளம் கொண்டவர்களெல்லாம் யமலோகம் போகாததாலும், இது நரகத்தைத் தவிர்க்க முன்னேற்பாடாக இருப்பதாலும்) அருட்பெருக்குப் புண்ணியநதி நீ. (உன் அருள் பொங்கிப் பெருகி

வழிவதாலும், இதில் குளித்தவர்கள் புண்ணியாத்மாக்கள் ஆவதாலும்).

ஆலாத யஷ்டியும் நீ. ஆசைப் பேய் ஓட்டியும் நீ.
அந்தகனை அணுகவிடாது அருள் பெருகும் ஆறும் நீ.

30. தொலையாத ஸுகத்துக்குத் தொடக்கமானவள்.

शरदं तमोघनानां शाश्वतसुखसम्पदामुपोद्धातम् ।
शरणं व्रजामि कमले ! शौरिवशीकारमूलिकां भवतीम् ॥ ३०

ஶரதம் தமோக⁴நாநாம்
ஶாஶ்வத ஸுக²ஸம்பதாமுபோத்காதம் ।
ஶரணம் வ்ரஜாமி கமலே !
ஶௌரிவஶீகாரமூலிகாம் பவதீம் ॥ 30

इति अस्तोकाध्वरि काचि कवि वादिहम्साम्बुद
वेङ्कटाचार्यकृतिषु लक्ष्मीसहस्रे प्रकीर्णस्तबकः सम्पूर्णः ।

कमले = கமலையே !
तमो-घनानां = தமஸ் என்னும் மேகங்களுக்கு
शरदं = ஶரத்காலம் ஆனவளும்,
शाश्वत-सुख-सम्पदां = நிலையான இன்பங்களுக்கும் செல்வங்களுக்கும்
उपोद्घातं = தொடக்கமானவளும்
शौरि-वशीकर-मूलिका = பகவானுக்கு வசியமருந்தானவளும் ஆன
भवतीं = உம்மை
शरणं = புகலாக
व्रजामि = அடைகிறேன்.

கமலையே ! தமோகுணம் என்னும் மேகங்களுக்கு நீர் ஶரத்காலம். (நீர் இருக்கும்போது தமோகுணம் இருப்பதில்லை; நீர் வந்தவுடனே அது விலகிவிடுகிறது. இலையுதிர்காலம் வந்தவுடனே மழைமேகங்கள் விலகிவிடுவது போல). நிலையான சுகச் செல்வங்களுக்கு நீர் தொடக்கம். (உம்மை அடைந்தபின் இன்பமும் நிலைக்கும்; செல்வமும் நிலைக்கும்). பகவானை வசீகரிக்கும் மருந்து நீர்.

(இரண்டு கருத்துகள். நீர் பகவானை வசீகரித்துள்ளீர். நாங்கள் பகவானை வசீகரிப்பதும் உம் மூலமாகவே ஸாத்தியம்). உம்மை நான் சரணமடைகிறேன்.

இருள்மேகங்களின் இலையுதிர்காலம்.
இன்பம் நிலைத்திட இனியாரம்பம்.
இறைவனை இழுக்கும் மூலிகையும் நீர்.
இதனால் உம்மைச் சரணடைகின்றேன்.

நாவல்பாக்கம் அக்நிஹோத்ரம் நாராயணதாதயார்ய மஹாதேசிகனிடம் அடியேன் யஜ்ஞவராஹ தாதாயார்யன் என்கிற நாவல்பாக்கம் கண்ணன் கேட்டறிந்து எழுதிய லக்ஷ்மீ ஸஹஸ்ர உரையில் ப்ரகீர்ண ஸ்தபகம் முற்றும்.

லக்ஷ்மீஸஹஸ்ரத்தில் மொத்த ஸ்தபகங்கள் 25.
இதுவரை முடிந்த ஸ்தபகங்கள் 23.
இன்னும் மீதமுள்ள ஸ்தபகங்கள் 2.
மொத்த ச்லோகங்கள் 1018.
இதுவரை முடிந்த ச்லோகங்கள் 988.
இன்னும் மீதமுள்ள ச்லோகங்கள் 30.

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

நிர்வேத ஸ்தபகம்

இந்த ஸ்தபகத்தில் பன்னிரண்டு ஶ்லோகங்களில் தன் வாழ்க்கையில் வெறுப்பை வாரிக்கொட்டி, வாரிஜையை வணங்குகிறார்.

1. வெறுப்பை ப் போக்குபவள்

शरणीकरणीयाङ्घ्रिं शश्वत्तापत्रयातुरैः ।
सर्वनिर्वेदशमनीं समस्तजननीं नुमः ॥ १

तापत्रय-आतुरैः = மூவகைத் தாபங்களால் துன்புறுபவர்களால்
शश्वत् = எப்போதும்
शरणीकरणीय-अङ्घ्रिं = புகலாகப் பண்ணத்தக்க திருவடியை உடையவளும்
सर्व-निर्वेद-शमनीं = எல்லா வெறுப்புகளையும் ஒழிப்பவளும் ஆன
समस्त-जननीं = அகிலமாதாவை
नुमः = வணங்குகிறோம்.

மூவகைத் தாபங்களால் துயருறுகின்றவர்கள் தாயாரின் திருவடிகளைப் புகலாகப் பற்றிக்கொள்வது தகும். அவள் எல்லா நிர்வேதங்களையும் மாய்ப்பவள். எல்லாருக்கும் அன்னை. அவளை நாம் வணங்குகிறோம்.

நாம் அவளை வணங்குவதற்கான மூன்று காரணங்களை மூன்று அடைமொழிகளில் ஸூசிக்கிறார். அவளை அணுக முடியும்; அவளால் நிர்வேதம் ஒழியும்; அவள் நமக்கு உதவும் உறவுமுறை கொண்டவள்; என்ற மூன்று காரணங்கள். மூவகைத் தாபங்கள் எவையென்றால், ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம், என்ற தாபத்ரயம்.

அலைந்திடும் மக்களால் அனைத்துப் பொழுதிலும்
அடைக்கலம் புகத்தகும் அடியினை உடையவள்,

அனைத்து வெறுப்பையும் அழித்திட வல்லவள். அனைவர்க்கன்னை. அவளை வணங்குவோம்.

—*—

வாழ்நாளை வீணாக்கியவன்

अनुपासित तावकाङ्घ्रिपद्मा न्यपरामृष्ट परावरस्थितीनि ।
जगदम्ब ! वृथैव जीर्यतो मे समतीतानि हि जन्मनां शतानि ॥ २

அநுபாஸித தாவகாங்க்[4]ரிபத்மாநி
அபராம்ருஷ்ட பராவர ஸ்தி[2]தீநி ।
ஜக[3]தம்ப[3] வ்ருதை[2]வ ஜீர்யதோ மே
ஸமதீதாநி ஹி ஜந்மநாம் ஶதாநி ॥ 2

जगदम्ब = ஜகந்மாதாவே !
वृथा एव = வீணாகவே
अनुपासित-तावक-अङ्घ्रि-पद्मानि = உனது அடித் தாமரைகளை உபாஸிக்காதவையாகவும்
अपरामृष्ट-पर-अवर-स्थितीनि = கீழ்நிலை மேல்நிலைகளை ஆராயாதவைகளாகவும்
जन्मनां = பிறவிகளின்
शतानि = நூறுகள்
समतीतानि हि = கழிந்துவிட்டனவே.

ஜகந்மாதாவே ! உன் அடித்தாமரைகளை உபாஸிக்காமலும், உயர்வு தாழ்வு நிலைகளை ஆராயாமலும், வீணாகவே கிழவனாகிறேன் நான். இவ்வாறே நூற்றுக்கணக்கான பிறவிகள் எனக்குக் கழிந்துவிட்டனவே!

முற்பிறவிகளில் தாயாரின் திருவடியை உபாஸிக்கவில்லை என்பது இப்போது எப்படித் தெரியும் என்றால், இப்பிறவி எடுத்திருப்பதிலிருந்தே தெரிகிறது. உயர்நிலை தாழ்நிலைகளை எண்ணிப் பார்க்கவில்லை என்றது ஏனென்றால், எண்ணிப் பார்த்திருந்தால், என்றைக்கோ

திருமகளை உபாஸித்திருப்பேனே என்பதாலாம். தாழ்ந்த சிற்றின்பங்களை உயர்ந்த பேரின்பங்களோடு ஒப்பிடாததாலல்லவா நிறைய பிறவிகளை வீணடிக்கிறேன்? வீணாகவே என்றதேனென்றால், மறுமைப் பயனுக்காக எதுவும் பண்ணாமலே என்றபடியாம். நூற்றுக்கணக்கான பிறவிகள் கழிந்தது எப்படித் தெரியும் என்றால் அநாதியாக ஸம்ஸரித்துப் போந்ததாலாம்.

உன்னடிமலரை உபாஸிக்காமலும்
உயர்வு தாழ்வுகளை உணர்ந்துகொள்ளாமலும்
உலகுக்கம்மா ! உபயோகமிலா
துருண்டோடினவே பிறவிகள் நூறுகள்.

—★—

3. ஆட்டும் புலன்களுக்கு அடியவன் ஆனவன்.

अपवर्गकथापथातिगानाम् अनुदासीनहृषीककिङ्कराणाम् ।
दिवसा बहवो वृथैव याताः तव सानन्दमुपासनं विना नः ॥ ३

அபவர்க^{3}கதா^{2} பதா^{2}திகா^{3}நாம்
அநுதா^{3}ஸீந ஹ்ருஷீககிங்கராணும் ।
தி^{3}வஸா ப^{3}ஹவோ வ்ருதை^{2}வ யாதா:
தவ ஸாநந்த^{3}ம் உபாஸநம் விநா ந: ॥ 3

अपवर्ग-कथा-पथ-अतिगानां = மோக்ஷப் பேச்சின் வழிக்கே வராதவர்களும்

अनुदासीन-हृषीक-किङ्कराणां = மும்முரமான இந்திரியங்களுக்கு வேலைக்காரர்களும் ஆன

नः = உன்னுடைய

उपासनं विना = உபாஸனம் இல்லாமல்

बहवः = ஏராளமான

दिवसाः = நாட்கள்

वृथा एव = வீணாகவே

याताः = கழிந்தன.

மோக்ஷம் என்கிற பேச்சின் வழியில் கூட வராதவர்கள் நாங்கள், எங்கள் இந்த்ரியங்கள் மும்முரமாக வேலை பண்ணும்போது நாங்கள் அவற்றுக்கு அடிமையானவர்கள். நாங்கள் உன்னை உபாஸிப்பது இன்பம் பயப்பது என்று தெரிந்தும் அப்படிப் பண்ணாமல் இருப்பவர்கள். பலப் பல நாட்கள் எங்களுக்க வீணாகிவிட்டன.

இந்த்ரியங்களுக்குக் கிங்கரர்கள் என்றது. அவை இழுத்த இழுப்புக்குப் போவதாலும், அப்படிப் பண்ணுவதையே தொழிலாகக் கொண்டிருப்பதாலுமாம். மோக்ஷப் பேச்சின் வழியிலிருந்து விலகியதாகக் கூறுவது, அதற்காகப் பண்ண வேண்டியதைப் பண்ணாமல் வெகு தூரத்திலேயே இருப்பதாலாம்.

பரகதியின் பேச்சுக்கே பாதை தப்பிப்
பறக்கின்ற புலன்களுக்குப் பணியாளானோம்.
பத்மையிடம் பக்தியெனப் பண்ணோம். எங்கள்
பல நாட்கள் பழுதாயே போயாயிற்று.

—✱—

4. போக்கிரியாய்ப் போனவன்.

अवधीरितसाधुसङ्गमानाम्
अपचारेषु च बद्धकङ्कणानाम् ।
कथमन्यतमं कृपानिधे ! माम्
कमले ! हन्त वृथा कृथाः खलानाम् ॥ ४

அவதீ[4]ரித ஸாது[4] ஸங்க[3]மாநாம்
அபசாரேஷு ச பத்[3]த[4]கங்கணாநாம் ।
கத[2]மந்யதமம் க்ருபாநிதே[4] ! மாம்
கமலே ! ஹந்த ! வ்ருதா[2] க்ருதா: க[2]லாநாம் ॥ 4

कमले ! = கமலையே !
कृपा-निधे ! = கருணையின் நிதியே !
अवधीरित-साधु-सङ्गमानां = நல்லோர் சேர்க்கையைத் திரஸ்கரித்தவர்களும்
अपचारेषु = அபசாரங்களில்
बद्ध-कङ्कणानां च = கங்கணம் கட்டிக்கொண்டவர்களும் ஆன
खलानां अन्यतमं = போக்கிரிகளுள் ஒருவனாக
मां = என்னை
कथं = எப்படி
वृथा = வீணாக
कृथा: = பண்ணினாய்?
हन्त ! = ஐயோ !

கமலையே ! நீ அருளின் நிதியாக இருந்தும் கூட, என்னை எப்படிப் போக்கிரி யாக்கினாய்? நல்லோர் இணக்கத்தைப் புறக்கணிப்பவர்களும், அபசாரங்களில் கங்கணம் கட்டிக்கொண்டவர்களுமான போக்கிரிகளுள் ஒருவனாக என்னை ஆக்கிவிட்டாயே ஐயோ !

கொஞ்சம் ஸத்ஸங்கம் ஏற்பட்டால், இப்படி அபசாரங்களைப் பண்ணமாட்டார்கள். ஆனால் அடியோடு ஸத்ஸங்கமே இல்லாமல் அபசாரங்களைத் தீவிரத் தொழிலாகப் பண்ணிக் கொண்டிருக்கிறார்களே போக்கிரிகள், அவர்களுள் ஒருவனாக என்னையும் ஆக்கிவிட்டாயே !

துச்சப்படுத்தித் தூயோரைத்
துஷ்க்ருதம் அதியாய்ப் பண்ணுகிற
துஷ்டர்களிடையில் எனை வைத்தாய்
துக்கிக்கின்றேன் கமலையே !

—*—

5. அல்லாடி அவஸ்தைப்பட்டவன்

स्मारं स्मारं मलिनविषयान् मानसं मेऽवसन्नम्
चारं चारं प्रतिखलगृहं जातखेदौ च पादौ ।

कारं कारं कुजनविनुतिं क्लेशिता हन्त ! जिह्वा !
वारं वारं वनजनिलये किं नु विज्ञापयेयम् ।। ५

ஸ்மாரம் ஸ்மாரம் மலிநவிஷயாந் மாநஸம் மேஅவஸந்நம்
சாரம் சாரம் ப்ரதிக[2]லக்[3]ருஹம் ஜாதகே[2]தெள ச பாதெ[3]ள ।
காரம் காரம் குஜநவிநுதிம் க்லேஶிதா ஹந்த ஜிஹ்வா
வாரம் வாரம் வநஜநிலயே ! கிம் நு விஜ்ஞாபயேயம் ॥ 5

वनज-निलये = தாமரைநிலயத்தவளே !

मलिन-विषयान् = மாசுபட்ட விஷயங்களை

स्मारं स्मारं = நினைத்து நினைத்து

मे = என்னுடைய

मानसं = மனஸ்ஸானது

अवसन्नं = துன்புற்றது.

प्रति-खल-गृहं = ஒவ்வொரு போக்கிரியின் வீட்டுக்கும்

चारं चारं = நடந்து நடந்து

पादौ च = கால்களும்

जात-खेदौ = கஷ்டமடைந்தவை.

कुजन-विनुतिं = கெட்ட ஜனங்களுக்குப் பணிவதை

कारं कारं = பண்ணிப் பண்ணி

जिह्वा = நாக்கானது

क्लेशिता = வாட்டப்பட்டது.

हन्त = ஐயோ !

वारं वारं = திரும்பத் திரும்பி

किं नु = எதைத்தான்

विज्ञापयेयम् = விண்ணப்பிப்பேனோ?

தாமரையில் இருப்பவளே ! மலினமான விஷயங்களை எண்ணி எண்ணி என் மனது நொந்து கிடக்கிறது. போக்கிரிகள் வீட்டுக்குப் போய்ப்போய் என் கால்கள் கழண்டு கிடக்கின்றன. துஷ்டர்களுக்குப் பணிந்து பணிந்து துதித்து என் நாக்கு வாடிக் கிடக்கிறது. ஐயோ ! திரும்பத் திரும்ப நான் என்னத்தைச் சொல்வேன்?

மலிநவிஷயாந் என்றது அசுத்தத் தீனிகளையும் ஆபாஸக் காக்ஷிகளையும் இந்த்ரியக் கிளர்ச்சிப் பொருள்களையும் சிற்றின்பவஸ்துக்களையுமாம். ஸ்மாரம்

ஸ்மரம் என்றது இவற்றைப் பலகாலும் எண்ணியெண்ணி அவாவியும் ஆசைபோட்டும் அபேக்ஷித்தும் எதிர்பார்த்தும் ஏங்கியும் இருந்த நிலையைச் சொல்வதாம். அவலந்தம் என்றது, வருந்தியது தான் மிச்சமே தவிர உருப்படியான பலன் ஒன்றையும் காணோம் என்றதாம். மலிந விஷயத்தை நினைக்காமல் உத்தம விஷயத்தை (உன்னையோ உன் காந்தனையோ பாகவதர்களையோ மற்ற ஸத்விஷயங்களையோ) நினைத்திருந்தால் இப்படி மனது மறுகாமல் இருக்கலாமே என்று இப்போதுதான் புரிகிறது.

ப்ரதிகலக்ருஹம் :- என்றது, ஏராளமான போக்கிரிகளின் வீட்டுக்கு ஒவ்வொன்றாக ஒன்றுவிடாமல் போய்ப்போய் நின்று கால் தேய்ந்ததைச் சொல்லலாம். சரம் சாரம் என்றது ஒவ்வொரு போக்கிரியிடம் நடையாய் நடந்ததைச் சொல்லும். உழைத்து ஓடாய்த் தேய்ஞ்சாச்சு. ஜாதகேதௌ என்றது, கால் தேய்ந்தது தான் மிச்சம்; கார்யம் ஒன்றும் ஆகவில்லை என்பதற்காம். இதே கால்களை உன் கோவிலை ப்ரதக்ஷிணம் பண்ணவைத்திருந்தால் எவ்வளவோ இஷ்டங்கள் கைகூடியிருக்குமே என்று இப்போதுதான் புரிகிறது.

குஜநவிநுதிம் என்றது, அற்பர்களை, குத்ஸிதர்களை, துர்ஜனங்களை, பணிந்தும் புகழ்ந்தும் பாடியதைக் கூறும். காரம் காரம் என்றது அடிக்கடி இப்படித் தகாதவரைத் துதித்ததைக் கூறும். ஹந்த என்றது இதனால் இம்மைக்காவது இம்மியாவது பலன் கிடைத்திருந்தால் பரவாயில்லை. காசுக்கும் போதாமல், வீணாகவே நாக்கு வாடியதுதான் மிச்சம் என்பதற்காகவாம். இதே நாக்கால் உன் பெருமையை அன்றைக்கே பாடியிருந்தால் அமோகமான பலன்களை ஏற்கெனவே பெற்றிருக்கலாமே என்பது இப்போதுதான் புரிகிறது.

வாரம் வாரம் என்றது, திரும்பித் திரும்பி விண்ணப்பிக்க வாய்ப்பு கொடுத்தாலும், நான் என்னுடைய தீம்புகளையும் பொல்லாப்புகளையும் வ்யர்த்த

ப்ரயத்நங்களையும் சொல்வதைத் தவிர உருப்படியாக ஒரு ஸத்கார்யத்தைப் பண்ணினதாக விண்ணப்பிக்க முடிய வில்லையே என்பதாம். கிந்து என்றது, வேறென்னத்தைச் சொல்ல? என்று அலுத்துக்கொண்டதாம்.

மனசு, பாதம், நாக்கு, என்ற மூன்றையும் பாதத்துக்கொன்றாக மூன்று செய்யுளடிகளில் சொன்னது, மனோவாக்காயம் என்ற மூன்று கரணங்களாலும், தப்பையே பண்ணினதைச் சொல்லலாம். வரஜலதியே! என்பதற்குப் பதிலாக வரஜலநிதே! என்று பாடபேதம். வரங்களின் ஸமுத்திரமே என்று அர்த்தம். நிறைய ஏராளமான வரங்களை கொடுக்கடிக் கூடியவளே என்று கருத்து. முக்கரணங்களாலும் முழுக்கமுழுக்க மோசக் காரியமே பண்ணினதை நினைத்து நிர்வேதப்படுகிறார். இன்னும் வாய்ப்பு கிடைத்தாலும் திருத்திக்கொள்ள முடியாமல் நாய் வாலை நிமிர்த்த முடியாத நிலையிலே இருப்பதையும் கடைசிப் பாதத்தில் ஸூசகமாகக் கூறுகிறார். அவஸாதம், கேதம், க்லேஶம், என்ற மூன்று பதங்களையிட்டு மூன்று கரணங்களுக்கு நேர்ந்துள்ள அவலத்தை விளக்குகிறார். அடக் கஷ்டமே என்று அங்கலாய்ப்பு ஹந்த என்ற பதத்திலே.

மலினத்தால் மனம் மறுகும்
மதியார் பால் மாயும் மால்.
மந்தர்துதி மடியும் நா.
மலரவளே! என் சொல்வேன்?

—※—

6. இறந்திறந்து பிறப்பவன்

विहितमखिलं त्यक्त्वा कृत्वा च गर्हितमन्वहम्
तदुचितफलान्यत्रामुत्राप्यहो कलयन्नहम् ।
गुणगणनिधे ! मृत्वा मृत्वा कियन्ति युगानि वा
मुरविजयिनो जाये ! जायेय मोहभयातुरः ॥ ६

விஹிதமகிலம் த்யக்த்வா க்ருத்வா ச கர்ஹிதமந்வஹம்
ததுசிதபலாந்யத்ராமுத்ராப்யஹோ கலயந்நஹம் ।
குணகணநிதே ! ம்ருத்வா ம்ருத்வா கியந்தி யுகாநி வா
முரவிஜயிநோ ஜாயே ஜயேய மோஹபயாதுர: ॥ 6

गुण-गण-निधे ! = *நற்பண்புகளின் கூட்டத்துக்கு நிதியானவளே !*
मुर-विजयिन: = *முரனை வென்றவனின்*
जाये ! = *மனைவியே !*
विहितं = *விதிக்கப்பட்டதை*
अखिलं = *எல்லாம்*
त्यक्त्वा = *விட்டுவிட்டும்*
गर्हितं = *பழிக்கப்பட்டதை*
अन्वहं = *நாள்தோறும்*
कृत्वा च = *பண்ணியும்*
तत् -उचित-फलानि = *அதற்கேற்ற பலன்களை*
अत्र = *இங்கேயும்*
अमुत्र च = *பரலோகத்திலேயும்*
कलयन् = *ஏற்படுத்திக்கொண்டு*
अहं = *நான்*
कियन्ति = *எத்தனை*
युगानि वा = *யுகங்களைத்தான்*
मृत्वा मृत्वा = *மரித்து மரித்து*
मोह-भय-आतुर: = *மோஹத்தாலும் பயத்தாலும் பீடிதனாய்*
जायेय = *பிறப்பேனோ?*

முராரியின் மனைவியே ! குணக் கூட்டங்களின் நிதியே ! நான் சாத்திரத்தில் விதித்ததையெல்லாம் பண்ணாமல் விடுகிறேன். பழித்ததையெல்லாம் ப்ரதிதினமும் பண்ணுகிறேன். அதன் வினைவாக, இம்மையிலும் மறுமையிலும் அனுபவிக்கிறேன். யுகயுகமாக இறந்திறந்து பிறக்கிறேன். மோஹத்திலம் பயத்திலும் உழல்கிறேன்.

குணகணநிதே என்றதன் கருத்து - *நீ இவ்வளவு குணவதியாக இருந்தும் நான் உன்னை நாடாமல் தவிக்கிறேனே என்பதாம். பொறுமை, கருணை, முதலிய ஏராளமான குணங்கள் உன்னிடம் குவிந்துள்ளன.*

அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள எனக்குத் தெரியவில்லை.

முராவிஜயிநோ ஜாயே - என்ற விளியின் கருத்து - நீ முராரிக்குக் காந்தையாய் இருப்பதால் உன் மூலம் அவரிடம் பலன் பெறுவது ஸாத்தியமாயிருந்தும் நான் வாய்ப்பை நழுவ விடுகிறேனே என்பதாம்.

விஹிதமகிலம் - என்றதன் கருத்து ஶாஸ்த்ர விதிகளை எல்லாவற்றையும் மீறுகிறேன் என்பதாம். கொஞ்சமும் விஹிதத்தைப் பண்ணாமல், ஒட்டுமொத்தமாக எல்லாவற்றையும் த்யஜித்து விட்டேனே என்ற புலம்பலாம். **க்ருத்வா ச கர்ஹிதம்** என்றது, பண்ணவேண்டியதைப் பண்ணாததோடு நிறுத்தாமல், பண்ணக் கூடாததையும் பண்ணி, அக்ருத்யாநாம் ச கரணம் க்ருத்யாநாம் வர்ஜநம் ததா என்று இருபடியாகக் கெட்டுப்போனதைச் சொல்லலாம். **அந்வஹம்** என்றது, பொழுது விடிந்தால், பொழுது போனால், தப்புப் பண்ணுவதே தொழில் எனக்கு என்பதாம்.

ததுசிதபலாநி என்றது என் தீயச் செயல்களின் விளைவுகளை நான் அனுபவித்தாக வேண்டிய நிர்பந்தத்துக்கு நீ என்ன பண்ணுவாய் என்பதாம். **அத்ராமுத்ர ச** என்றது, பூலோகத்திலும் நரகாதிகளிலும் என்றதாம். பூலோகத்தில் வியாதி வெக்கைகளாலும், பந்து வியோகாதிகளாலும் துக்கம், பரலோகத்தில் நரகயாதனைகளாலும், லோகாந்தர வீழ்ச்சிகளாலும் கஷ்டம். கலயந் பாவங்களைப் பண்ணினவனையே அதன் பலன்களையும் பண்ணினவனாகச் சொல்லலாமோ? பகவானல்லவா பலன் தருகிறார்? என்றால் இரண்டு பதில்கள். பலன் பண்ணுவதாவது பலனை நுகர்வது என்றொன்று. இந்தப் பலன்கள் பாவங்களால் ஏற்பட்டபடியால், இவற்றைத் தானே விளைவித்துக் கொண்டவன் என்பது இரண்டாவது.

ம்ருத்வா ம்ருத்வா ஜாயேய என்றது நடைப்பிணமாகவும் முழுப்பிணமாகவும் ஆகி ஜந்மமரணச் சுழலில் சிக்கித் தவிக்கிறேன் என்பதாம். கியந்தி யுகாநி என்றது அநாதிகாலமாக ஸம்ஸரித்துப் போந்து, இதே மாதிரியே அல்லலுறுகிறேன், என்று விடிவோ? என்பதைச் சொல்வதாம். மோஹபயாதுர: என்றது, தப்பு செய்யும்போது மோஹத்தால் பண்ணிவிட்டு, அதன் பிறகு பயத்தால் நடுங்குவதைக் கூறுவதாம். இவ்வாறு நிர்வேத(வருத்த)ப்படுகிறார்.

விஹிதமெலாம் விட்டிட்டேன்.
விருத்த வினை புரிந்திட்டேன்.
வினைவுகளை அனுபவிக்க
வீய்ந்தொழிந்து பிறக்கின்றேன்.

குறிப்பு :- சென்றமாதம் லக்ஷ்மீ ஸஹஸ்ரம் அச்சாணதில் கம்ப்யூட்டர் அச்செழுத்துக்கள் அலமலமாக மாறி அதிகம் பிழை ஏற்பட்டு விட்டதால் சரி செய்து மீண்டும் இந்தமாதம் அதே ச்லோகங்களுடன் அச்சிடப்பட்டுள்ளன. க்ஷமிக்கவும்.

விலாஸ மாற்றம்

விலாஸ மாற்றம் செய்பவர்கள் "**ஒவ்வொரு ஆங்கில மாத கடைசிக்குள்**" விலாஸ மாற்றத்தை தெரியப்படுத்த வேண்டும். "**மாதக் கடைசிக்குப் பிறகு வரும் விலாஸ மாற்றம் அதற்கு அடுத்தமாதம் தான் நடைமுறைப்படுத்தப்படும்**". தற்போதைய விலாஸம், புதிய விலாஸம் இரண்டையும் எழுத வேண்டும்.

வருடசந்தா ரூ 200/- 20 வருட சந்தா ரூ 3000/-

சந்தாவை மணியார்டர் மூலம் அனுப்புவதை தவிர்க்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி:
ஸ்ரீ ரங்கநாத பாதுகா, 31, தேசிகாச்சாரி ரோடு,
மைலாப்பூர் சென்னை 600 004, போன்: 24993658

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

நிர்வேத ஸ்தபக:

तृणत्याजं त्यक्त्वा त्रिजगति कलत्रादिविषयान्
प्रणत्या ते देव्याः कतिकति गतिं यान्ति कृतिनः ।
अहं त्वेवं तावत् विषयविषयन्त्रेषु पतितो
विषीदन् संसारे विपदवसरे रोदिमि रमे ॥ ७

த்ருணத்யாஜம் த்யக்த்வா த்ரிஜகதி கலத்ராதிவிஷயாந்
ப்ரணத்யா தே தேவ்யா: கதிகதி கதிம் யாந்தி க்ருதிந: ।
அஹம் த்வேவம் தாவத் விஷயவிஷயந்த்ரேஷு பதிதோ
விஷீதந் ஸம்ஸாரே விபதவஸரே ரோதிமி ரமே ॥ 7

रमे = ரமையே !
त्रिजगति = மூவுலகத்திலும்
तृण-त्याजं = புல்லை ஒதுக்குவது போல
त्यक्त्वा = விட்டுவிட்டு
देव्याः = தேவியான
ते = உன் ஸம்பந்தமான
प्रणत्या = வணக்கத்தாலே
कतिकति = எத்தனையெத்தனையோ
कृतिनः = பாக்யசாலிகள்
गतिं = நற்கதியை
यान्ति = அடைகிறார்கள்.
अहं तु तावत् = நானோவென்றால்
एवं = இப்படி
विषय-विषय-यन्त्रेषु = விஷயம் (நுகர்பொருள்) என்னும் விஷப் பொறிகளில்
पतितः = விழுந்தவனாய்
संसारे = ஸம்ஸாரத்தில்
विषीदन् = வருந்திக் கொண்டு
विपत्-अवसरे = விபத்துக்காலத்தில்
रोदिमि = அழுகிறேன்.

ரமையே ! மூவுலகத்திலும் மனைவி முதலிய விஷயங்களைப் புல்லை ஒதுக்குவது போல் ஒதுக்கி, உன்னை வணங்கி எத்தனையெத்தனையோ பேர் திவ்ய கதியை அடைகிறார்கள். ஆனால் நானோ இப்படி விஷயம் என்னும் விஷ யந்த்ரத்தில் விழுந்து ஸம்ஸாரத்தில் அழுங்கி விபத்துக்காலத்தில் அழுகிறேன்.

த்ருணத்யாஜும் என்றதன் கருத்து : நமக்குப் புல் துச்சம், பொன் உயர்வு, பதர் துச்சம்; தானியம் உயர்ந்தது. மண்ணாங்கட்டி துச்சம்; மாடமாளிகை உயர்ந்தது. அந்த மஹான்களுக்கோ, எல்லாப் புலனின்பங்களுமே புல் போலத் துச்சம். தநிதராணி த்ருணாய மேநே என்ற நிலை என்பதாம்.

விஷயம் என்பது சிற்றின்பப் பொருள். அதை விஷ யந்த்ரமாக உருவகிப்பது பொருத்தம். விளைவு தீயதாயிருப்பது, மாட்டிக் கொண்டால் வெளிவருவது கஷ்டமாயிருப்பது. அருகில் வந்தாலே பிடித்திழுத்து மாட்டவைப்பது, ஆரம்பத்தில் இனித்து நாளடைவில் இம்ஸிப்பது, என்ற பலவும் சிற்றின்பப் பொருளுக்கும் நச்சுப் பொறிக்கும் (விஷ யந்த்ரம்) பொதுவாய் இருப்பதால், இந்த உருவகம் பொருந்துகிறது.

த்ரிஜகதி என்பானேன் என்றால், இந்த விஷய சுகம் நிலவுலகில் மட்டுமின்றி மூவுலகத்திலும் பரவியிருப்பது. மோக்ஷத்தில் தான் இதிலிருந்து முழுமையாகத் தப்பமுடியும். உன்னை வணங்கி உயர்கதி பெற்றவர்கள் மூவுலகத்திலும் உள்ளனர் என்பதும் கருத்து.

த்ருணத்யாஜும் என்றதன் கருத்து, புல்லும் பதரும் போன்று துச்சப் பொருள்களை சிந்தாமல் ஒதுக்குவது போல, விஷய ஸுகங்களையும் ஒதுக்குவதைப் பற்றிக் கூறலாம். விஷயங்கள் பல விருக்கச் செய்தேயும், களத்ராதி என்று முதலாவதாகக் களத்ர சுகத்தைக் கூறுவானேன் என்றால்; ஆபாசக் காட்சி கண்ணை ஈர்க்கும்; ஆபாசப் பாட்டு காதை ஈர்க்கும்; பரிமளம் மூக்கை ஈர்க்கும்; இனிப்புப் பக்ஷணம் நாக்கை ஈர்க்கும்; கைகால் பிடித்துவிடல் தடவல் வருடல் தோலை ஈர்க்கும்; ஆனால் பெண்ணாசை இந்த ஐந்தையுமே ஈர்க்கும்; (இது திருக்குறள் காமத்துப் பாலில் உள்ள கருத்து) என்பதால் அதற்கு முதலிடமாம்.

புலனின்பத்தை விட்டு உன்னை வணங்கியதால் நற்கதி என்கிறாரே, இதற்கு இரண்டு தாத்பர்யங்கள். ஒன்று, புலனின்பங்கள் உன்னை வணங்குவதற்குத் தடையானவை; அவற்றை விட்டவர் உன்னை வணங்கி நற்கதி பெறுவர்; என்பது. இரண்டாவது, புலனின்பங்களை ஒதுக்குவது எளிதன்று; உன்னை வணங்குவதால் அவற்றை ஒதுக்க முடிகிறது. அதன் பிறகு நற்கதி கிடைக்கிறது; என்பது அந்வயத்தை மாற்றிக் கிடைக்கும் கருத்து.

கதிகதி என்றதன் கருத்து வருமாறு : உன்னை வணங்கி நற்கதி பெற்றவர்கள் ஏராளமான பேர்; நிறைய காலங்களில் நிறைய பேர் பயன்பெற்றிருக்கிறார்கள் என்பதாம். முனிவர்கள், அமரர்கள், ஆசார்யர்கள், பக்தர்கள், என்று எத்தனையோ பேர். இவர்களைக் க்ருதிந: என்றதன் கருத்து, இவர்கள் புண்யசாலிகள், பாக்யசாலிகள், கொடுத்து வைத்தவர்கள், தந்யர்கள், என்பதாம்.

அஹம் து என்கையில் து பதம் வேறுபாட்டைக் குறிக்கும். அவர்கள் விஷயங்களை வெறுத்தவர்கள்; நானோ விஷயங்களில் சிக்குண்டவன். அவர்கள் நற்கதி அடைந்தவர்கள்; நானோ ஸம்ஸாரத்தில் உழல்பவன். அவர்கள் கொடுத்து வைத்தவர்கள்; நான் வருந்தி அழுபவன். இந்த மூன்று வேறுபாடுகளையும் வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார்.

ஏவம் என்றதன் கருத்து, இதோ இப்போது இந்த நிர்வேதஸ்தபகத்து ச்லோகங்களின் மூலம் கதறியழுகிறேனே என்பதாம்.

விபதவஸரே என்றதன் கருத்து வருமாறு; சிற்றின்பம் நுகரும்போது ஹாய்யாக இருந்துவிட்டு, அதன் விளைவாக ஆபத்து வந்தபோது மட்டும் கதறுகிறேனே; தப்பு பண்ணும்போது உணராமல் தீமை வரும்போது மட்டும் கத்துகிறேனே என்பதாம்.

விஷயத்தை விட்டிட்டு விழுந்துன்னை வணங்கியதால்
விண்ணுலகத் கதி பெற்று விளங்குபவர் எத்தனை பேர்,
விஷயசுகம் என்கின்ற விஷப் பொறியில் விழுந்திட்டேன்.
விபத்து வரும் வேளையில் விழுந்துவிழுந்தழுகின்றேன்,

—✱—

8. திருமகளைத் த்யானிக்காதவன்.

जननि महति वंशे जन्म लब्धं ततः किम्
विशदमवगते वा वेदशास्त्रे ततः किम् ।
सदसि कथकदर्पस्सादितो वा ततः किम्
भवजलधितरिस्त्वं भाविता चेन्न चित्ते ॥ ८

ஜநநி மஹதி வம்பே ஜந்ம லப்தம் தத: கிம்
விஶதமவகதே வா வேதஶாஸ்த்ரே தத: கிம் ।
ஸதஸி கதகதர்பஸ்ஸாதிதோ வா தத: கிம்
பவஜலதிதரிஸ்த்வம் பாவிதா சேந்ந சித்தே ॥ 8

जननि = தாயே !
महति = பெரிய
वंशे = குலத்தில்,
जन्म = பிறவி,
लब्धं = பெறப்பட்டது
ततः = அதனால்
किं = என்ன?
वेद-शास्त्रे = வேதமும் ஶாஸ்த்ரமும்
विशदं = தெளிவாக
अवगते = அறியப்பட்டன
ततः = அதனுல்
किं = என்ன?
सदसि = சபையிலே
कथक-दर्पः = வாதிகளின் கொழுப்பு
सादितः वा = மாய்க்கவும் பட்டது.
ततः = அதனால்
किं = என்ன?
भव-जलधि-तरिः = ஸம்ஸார ஸாகரத்தின் படகான
त्वं = நீ
चित्ते = மனதில்
न भाविता चेत् = த்யானிக்கப் படவில்லையானால்.

ஜநநியே ! பெரிய குலத்தில் பிறவி கிடைத்தது. அதனாலென்ன? வேதத்தையும் ஶாஸ்த்ரத்தையும் தெளிவாகக் கற்றாயிற்று. அதனாலென்ன? ஸபைகளிலே வாதிகளின் கொழுப்பை அடக்கியாயிற்று. அதனால்தான் என்ன? ஸம்ஸாரஸாகரத்தின் ஓடமான நீ மனதில் த்யானிக்கப்படவில்லையென்றால் எல்லாம் வ்யர்த்தம்.

பெரும்பாலான உலகத்தார் லக்ஷ்மீத்யானத்தை உபாயமாகக் கொண்டு இம்மைப் பலன்களைப் பயனாகக் கருதுகிறார்கள். ஆனால் லக்ஷ்மி த்யானத்தையே தம் குடிப்பிறப்புக்கும் கல்விக்கும் புலமைக்கும் பலனாகக் கருதுவர் பெரியோர். அதன்படி வினவுகிறார். உயர்குடிப் பிறப்பால், திருமகளிடம் பக்தி உண்டாக வேண்டும். ஆளவந்தார் ராமானுஜர் தேஶிகர் முதலிய லக்ஷ்மீ பக்தர்களின் வழித் தோன்றல்களுக்கு இயல்பாகவே பக்தி ஏற்படும். அப்படி ஏற்படாவிட்டால் அந்தக் குடிப்பிறப்பால், குலப் பெருமையால் என்ன பயன்? என்பது முதல் கேள்வி. மஹதி வம்ஶே ஜந்ம என்பது, ஜநித்வாஹம் வம்ஶே மஹதி என்ற ஸ்ரீஆளவந்தார் ஸ்ரீ ஸூக்தியை ஸ்மரிப்பதற்கும், ஆத்ரேய வாதிஹம்ஸாம்புவாஹ,கச்சி கடாம்பு, என்ற பிருதுகளைப் பெற்று ராமானுஜருடைய அந்தரங்கஶிஷ்யர், தேஶிகனுடைய ஆசார்யர், முதலிய மஹாபுருஷர்களால் பூஷிதமான தன் வம்ஶத்தை ஸ்மரிப்பதற்குமாம்.

வேதஶாஸ்த்ரே என்று வேதத்தையும் ஶாஸ்த்ரத்தையும் வெவ்வேறாகக் கூறுகிறாரே, வேதமும், ஶாஸ்த்ரமும் ஒன்றேயன்றோ என்றால், கோபலீவர்த ந்யாயத்தில், வேதமும் மற்ற வேதாங்காதி ஶாஸ்த்ரமும் என்ற கருத்திலாம். கல்வியின் பயனே கடவுளைத் தொழுவே என்ற கருத்து வட நூலாருக்கும் தமிழ் நூலாருக்கும் பொது. கற்றதனாலாய பயனென்கொல் என்ற திருக்குறளை ஒட்டியே இவரும் வினவுகிறார். பிராட்டியைத்

த்யானிக்காதவர்களுக்குக் கல்வியால் என்ன பயன்? இது இரண்டாவது கேள்வி.

வாதத்திறமை, பாண்டித்யம், பேச்சாற்றல், இவையெல்லாம் லக்ஷ்மீ பக்தியில் அல்லவா பர்யவஸிக்க வேண்டும்? பக்தியில் முடிவடையாமல், வெறும் வாதப் போர் வெற்றியோடு நின்றுவிட்டால், வாதித்துப் பயன் என்ன? பரமப்ரயோஜநத்தை எட்டாமல் சிறுபயன்களோடு நின்றுவிட்டால், அதுவும் வீணானதிலே சேருமன்றோ? இது மூன்றாவது பாதத்துக் கேள்வி.

குலத்தையும் பாழ்படுத்தி, கல்வியையும் பாழாக்கி, புலமையையும் வீணாக்கி, தாயைத் தொழாமல் இருப்பானேன்?

வம்சத்தால் என்ன பயன்? வாசிப்பால் என்ன பயன்?
வாதம் வென்றென்ன பயன்? வனஜையை வணங்கிலேயேல்

9. அலைந்து அல்லல் பட்டவன்

अटित्वा दुर्देशान् सदसि च नटित्वा क्षितिभुजाम्
पठित्वा दीनोक्तीरपि फलमलब्ध्वातिचपलः ।
अपारैर्व्यापारैरलसतनुराराधनमहो
भवत्या हित्वाहं बलवदवसीदामि कमले ॥ ९

அடித்வா துர்தேசாந் ஸதஸி ச நடித்வா க்ஷிதிபுஜாம் ।
பதித்வா தீநோக்தீரபி பலமலப்த்வாதிசபல: ।
அபாரைர் வ்யாபாரைரலஸதநுராராதநமஹோ
பவத்யா ஹித்வாஹம் பலவதவஸீதாமி கமலே ॥ 9

कमले = கமலையே !
दुर्देशान् = கெட்ட தேசங்களை
अटित्वा = அலைந்து
क्षितिभुजां = அரசர்களுடைய
सदसि = சபையில்
नटित्वा = நடித்து
दीनोक्तीः अपि = பரிதாப வார்த்தைகளையும்
पठित्वा = படித்து
फलं = பயனை
अलब्ध्वा = அடையாமல்
अति-चपलः = மிகவும்

ஆசைக்காரனாய்
अपारैः = ஏராளமான
व्यापारैः = செயல்களாலே
अलस-तनुः = களைத்து மந்தமாகிப் போன உடல் கொண்டவனாய்
भवत्याः = உம்முடைய
आराधनं = திருவாராதனத்தை
हित्वा = விட்டொழித்து
अहं = நான்
बलवत् = தீவ்ரமாக
अवसीदामि = துன்புறுகிறேன்
अहो = ஐயோ !

கமலையே ! கஷ்டமான தேசங்களுக்கெல்லாம் போய் அலைந்தேன்; அரசர்களின் அவைகளிலே நடித்தேன்; தீனமான பேச்சுகளையெல்லாம் படித்துப் பேசினேன். பலனைப் பெறாமல் ஏமாந்தேன். மிகவும் சபலமாக இருந்தேன். அபாரமான வியாபாரங்களைப் பண்ணினேன். உடம்பு கழன்றது. உன்னுடைய திருவாராதனத்தைப் பண்ணாமல், ஐயோ ! இப்போது தீவ்ரமாகக் கஷ்டப்படுகிறேன்.

அடித்வா என்றதன் கருத்து, அஸௌகர்யமான ப்ரயாணங்களை மேற்கொண்டு, வாஹன வசதியில்லாமல் பல காத தூரம் நடந்து, அலைச்சல் பட்டேன் என்பதாம். துர்தேஶாந் என்றது கெட்ட தேசங்களைக் குறிக்கும். போகக் கூடாது ஊர்கள், மிலேச்ச தேஶங்கள், ஸௌகர்யக் குறைவான ஊர்கள், சிற்றூர்கள், காட்டூர்கள், இவற்றுக்கெல்லா போனேன்.

நடித்வா என்றதன் கருத்து, தெரியாததெல்லாம் எனக்குத் தெரிந்தது போலக் காட்டிக் கொண்டு, இல்லாத பெருமையெல்லாம் அந்த அரசனுக்கு இருப்பது போலப் பாராட்டிக் கொண்டு, அந்தப் பொய்களுக்குத் தக்கவாறு அங்க சேஷ்டைகளையும் பண்ணிக் கொண்டிருந்தேன். இதை நடித்தல் என்பதே தகும்.

தீநோக்தீ: என்றதன் கருத்து, என் ஏழ்மையை மிகைப்படுத்தி, லஜ்ஜையை விட்டுப் பிச்சை கேட்டு, பரிதாபமாகப் பேசிய பேச்சுகளைக் குறிக்கும்.

பலமலப்த்வா என்றது, இவ்வளவு அலைந்தும் இவ்வளவு நடித்தும் இவ்வளவு இறங்கியும் இரங்கியும், அதற்கேற்ற பயனை அடையாமல், ஏதோ கொஞ்சமான பொருளையே பெற்று ஏமாற்றம் அடைந்தேன் என்பதாம். என் தகுதியை அந்த அரசர்கள் புரிந்து கொள்ளவில்லை.

அதிசபல: என்றதன் கருத்து, எனக்கு ஆசை அதிகமாகவே இருந்தது; அதே மாதிரியான முயற்சிகளை மேன்மேலும் பண்ணத் தூண்டியது அந்த ஆசை.

அபாரைர் வ்யாபாரை: என்றதன் கருத்து; நிறைய வேலைகளைப் பண்ணினேன். நெடும் பயணங்கள் பண்ணினேன்; நிறைய வேடிக்கைப் பேச்சுகளைத் தயார் பண்ணிக் கொண்டேன்; கைநீட்டித் தானம் வாங்கினேன்; பல்லிளித்தேன்; பீற்றிக்கொண்டேன்; புலமையை வாரியிறைத்தேன்; பிறரோடு போட்டியிட்டேன்; பொருளீட்டுவதற்காக என்னென்னவோ பண்ணினேன்.

அலஸதநு: என்றதன் கருத்து; இப்போது வயதாகிவிட்டதால் உடல் மந்தித்து விட்டது; முன்பிருந்த சுறுசுறுப்பு இல்லை; பரபரப்பாகக் கார்யங்கள் பண்ண முடியவில்லை; ஓடியாடி உழைக்க உடல் ஒத்துழைக்கவில்லை.

ஆராதநம் ஹித்வா என்றதன் கருத்து; எத்தனையோ நாட்கள் வெளியில் கார்யார்த்தமாகப் போவதற்காகத் திருவாராதனத்தைக் கூட அவசர அவசரமாக முடித்திருக்கிறேன்; சில நாட்களில் பண்ணவேகூட இல்லை; அப்படி ஓடியிருக்கிறேன்.

அஹோ என்றதன் கருத்து; அன்றைக்கே உன் திருவாராதனத்தில் அதிக நேரம் செலவழித்திருந்தால் இன்று இன்னும் நல்ல நிலையில் இருந்திருக்கலாமே; ஐயோ இப்போது மிகவும் துன்பப்படுகிறேன்.

அலைந்தேன். ஆட்டம் போட்டேன்.
இருந்தேன். இச்சைகொண்டேன்.
உழைத்தேன் ஓடாய்த் தேய்ந்தேன்
அய்யய்யோ அல்லல் இன்று.

ஸ்ரீ லக்ஷ்மீஸஹஸ்ரம்

10. அரசுப்பணியில் அவஸ்தைப்பட்டவன்

निरन्तरमरुन्तुदैर्निरयवेदनापादनात्
दुरासदधराभुजां अलमपावनैस्सेवनैः ।
रमे! ननु रमेत मे दुरितमोचके मेचके
घनस्तनि! मनस्त्वया घटितनर्मणि ब्रह्मणि ॥ १०

நிரந்தரமருந்துதைர்நிரயவேத₃நாபாத₃நாத்
து₃ராஸத₃த₄ராபு₄ஜாம் அலம் அபாவநைஸ்ஸேவநை: ।
ரமே! நநு ரமேத மே து₃ரிதமோசகே மேசகே
க₄நஸ்தநி! மநஸ்த்வயா க₄டிதநர்மணி ப்₃ரஹ்மணி ॥ 10

रमे = ரமையே !
निरन्तरं = ஸதாஸர்வகாலமும்
निरय-वेदना-आपादनात् = நரகதுக்கத்தை உண்டுபண்ணுவதால்
अरुन्तुदैः = மர்மத்தைப் பிளப்பவையும்
अपावनैः = இழுக்குடையவையுமான
दुरासद-धराभुजां = அணுகற்கரிய அரசர்களின்
सेवनैः = சேவைப் பணிகளாலே
अलं = போதும்

घन-स्तनि = நெருக்கமான ஸ்தனங்கள் கொண்டவளே !
दुरित-मोचके = பாவங்களிலிருந்து விடுவிப்பதும்
मेचके = கறுத்ததும்
त्वया = உன்னாலே
घटित-नर्मणि = இன்பம் சேர்ந்ததுமான
ब्रह्मणि = பரம்பொருளிடம்
मे = என்னுடைய
मनः = மனது
रमेत ननु = இன்புறும் அல்லவா?

ராஜாக்களுக்கு ஸேவை பண்ணினதெல்லாம் போதும், எப்போதும் தீவ்ரமாய் வலிப்பவை. நரக வேதனை தருபவை. நெருங்கமுடியாத அரசர்களிடம் பணிவிடை பண்ணுவதே தூய்மையைக் கெடுத்துவிடும். ரமையே !

திண்ணிய மார்பகம் கொண்டவளே ! அந்த ராஜஸேவநங்கள் வேண்டாம். என் மனசு மாறிவிட்டது. பாவங்களிலிருந்து விடுவிக்கிற கரும்பொருளான பரம்பொருள் உன்னோடு சேர்ந்து விளையாடி உகக்கிறதாமே, அந்த ப்ரஹ்மத்தில் என் மனது ரமிக்குமல்லவா?

ராஜஸேவையை அபாவநமாக, அசுத்தமாகக் கூறுவதன் கருத்து என்னவென்றால், ஸேவா ஶ்வவ்ருத்திராக்யாதா என்றபடி அது நாய்ப் பிழைப்பானதாலும், அஸேவ்யஸேவா என்பது அதர்மமானதாலும், அதில் அக்ரமங்களுக்கு உடந்தை போதல், ஸ்வரூபவிரோதமாகக் கூழைக்கும்பிடு போடுதல், தன் பாகவதச் சீர்மையைக் குறைப்படுத்தல், முதலிய பல இழுக்குகள் ஏற்படுவதாலுமாம்.

அதில் துக்கம் அதிகம் என்று கூறுவதன் கருத்து, வசவுகள், அவமானங்கள், காயக்லேசங்கள், மன உளைச்சல்கள், அச்சநடுக்கங்கள், அதிகத் தண்டனைகள், அநியாயக் கொடுமைகள், இவையெல்லாம் மலிந்திருப்பதாலாம்.

ரமேத என்ற பதத்தின் கருத்து, நீ எந்தப் பகவானை ரமிக்கப் பண்ணுகிறாயோ, அதே பகவானிடம் நானும் ரமிக்க மாட்டேனோ என்று அவளையே கேட்பதற்காம். நநு (அல்லவா) என்று அவளைக் கேட்பதன் கருத்து, நீ நினைத்தால் தானே அது கைகூடும் என்பதாம். கடிதநர்மணி என்றதன் உட்கருத்து. லக்ஷ்மீ ஸம்பந்தத்தால் அவன் இன்புறுவதாலன்றோ வெளிப்படையாகவே இந்த ஶ்லோகத்தில் கூறியிருக்கிறார்.

ரமையே ! உன் மணாளனை அனுபவிக்க விரும்புகிறேன்; அதற்கும் உன் துணையையே நாடுகிறேன்.

வேதனை தருகிற வேந்தர் ஸேவைவேண்டாம் வேண்டாம்.
கடுவினை களையும் கருப்புக்கடவுள் களிப்பு கொடாரோ?

11. ஆறுதலை அடைபவன்.

நிர்வேதஸ்தபகத்துக்கு முடிவுகட்டும் இரண்டு ச்லோகங்களில் நிர்வேதத்துக்கும் முடிவுகட்டுகிறார். அடுத்த ஸ்தபகத்து சரணாகதியை இங்கேயே தொடங்கியும் விடுகிறார்.

जनित हृदवसादं शुष्कनिर्वेदवादम्
जननि जहदकार्यं शश्वदालम्ब्य धैर्यम्।
शरणमिह भजेयं संश्रितान्यैरजेयम्
दनुजभिदमुदारं तं भवत्या सदारम्॥ ११

ஜநித ஹ்ருதவஸாதம் சுஷ்கநிர்வேதவாதம்
ஜநநி ஜஹதகார்யம் சஶ்வதாலம்ப்ய தைர்யம் ।
சரணமிஹ பஜேயம் ஸம்ச்ரிதாந்யைரஜேயம்
தநுஜபிதமுதாரம் தம் பவத்யா ஸதாரம் ॥ 11

जननि = தாயே!
जनित-हृत्-अवसादं = மனத்துயரத்தை உண்டுபண்ணுவதும்
शुष्क-निर्वेद-वादं = வறட்டு வெறுப்புப் பேச்சையும்
अकार्यं = தப்புக் கார்யத்தையும்
जहत् = விடுகிறவனாகி
शश्वत् = எப்போதும்
धैर्यं = தைர்யத்தை
आलम्ब्य = பற்றிக் கொண்டு
संश्रित-अन्यैः = ஆச்ரயிக்காதவர்களால்
अजेयं = வெல்லமுடியாதவனும்
दनुज-भिदं = அசுரர்களைப் பிளப்பவனும்
उदारं = வள்ளலும்
भवत्या = உம்மாலே
स-दारं = மனைவியாளனும் ஆன
तं = அவனை
इह = இங்கு
शरणं = புகலாக
भजेयं = அடைவேனாக.

ஜநநியே! ஜநநம் உள்ளவர்க்கெல்லாம் உள்ளத்தை ஹிம்ஸிப்பதும், வீணானதும், வறண்டதுமான வெறுப்புப் பேச்சை விட்டுவிட்டு, அடிக்கடி தைர்யத்தை

அவலம்பித்துக்கொண்டு, பெருமாளைச் சரணடைவேனாக. அவன் உன்னாலே ஸதாரன். அஸுரரைப் பிளந்த உதாரன். ஆஶ்ரிதரல்லாதார்க்கு வெல்லலாகாதவன். அத்தகையவனை, நீ ஜநநியாக இருக்கிற தைர்யத்தில், நான் புகலடைகிறேன்.

நிர்வேதத்தைத் துறப்பதற்கு மூன்று பதங்களால் மூன்று காரணங்களைச் சொல்கிறார். மன உளைச்சல் ஏற்படுத்தும் நிர்வேதம் வேண்டாம் என்பது முதல் காரணம். வறட்டுத் தனம் கொண்டது வேண்டாம் என்று இரண்டாவது காரணம். தப்புக் காரியம் கூடாது என்பது மூன்றாவது காணம். ஶரணாகதிக்குத் தேவையான விஶ்வாஸத்துக்குப் பூர்வமாகத் தைர்யம் வேண்டியிருப்பதும் மேலுமொரு காரணம்.

வாட்டும் மனதை வறட்டும் பேச்சை
விலக்கத் தக்கது வெறுப்பை விடுவோம்.

பெருமாளுக்கு, ஶரண்யனுக்கு, நான்கு அடைமொழிகள் இடுகிறார். அவன் ஆஶ்ரிதர்களுக்கு எளியனாயினும் பிறர்க்கு அரியன்; பத்துடை அடியவர்க் கெளியவன் பிறர்கரியன் என்ற திருவாய்மொழியை நினைவு கூரும்படி உள்ளது. அடியவர் அவனை வென்றுவிடலாம். பிறர் முடியாது. அவன் அசுரர்களை மாய்ப்பவன்; அனைத்தையும் அடியவர்க்கு அருளும் வள்ளல்; ஸ்ரீமந் நாராயணன் என்று பெயர் வரும்படி தாயாரே ! உம்முடைய மணாளன். இப்படியாக ஶரண்யதைக்கு உறுப்பான நாலு நற்பண்புகள் வாய்க்கப் பெற்றவன்; இதரரால் வெல்லவொகாமை, ப்ரதிகூலரைப் பிளக்கும் ஆற்றல், வேண்டிற்றெல்லாம் தரும் கொடைப் பண்பாடு, லக்ஷ்மீ விஶிஷ்டத்வம், என்ற நாலு பண்புகள். இத்தகைய பகவானைச் சரணம் அடைவேனாக.

அசுரரை மாய்ப்பவன் அள்ளித் தருபவன்
அந்யர்க்கரியவன் அன்னைக்குரியவன்
அவனை(ப் புகல்) அடைவோம்.

12. குளிர் கடாக்ஷத்தால் குளிப்பாட்டப்படுபவன்

निर्विण्णमब्धिकन्ये! निरीक्ष्य मां शीतलैरपाङ्गलवैः ।
अभिषिञ्चसि बलिवञ्चकचरणद्वयशरणवरणसाम्राज्ये ॥ १२

நிர்விண்ணம் அப்தி4கந்யே
நிரீக்ஷ்ய மாம் ஶீதலைரபாங்க3லவை: ।
அபி4ஷிஞ்சஸி ப3லிவஞ்சக
சரணத்3வய ஶரணவரண ஸாம்ராஜ்யே ॥ 12

इति अस्लोकाध्वरि कवि घटाम्बु शादिहम्साबुद वेङ्कटाचार्यकृतिषु
लक्ष्मीसहस्रे निर्वेदस्तबकः सम्पूर्णः ।

अब्धि-कन्ये = கடலின் குமாரியே!
निर्विण्णं = வெறுப்படைந்த
मां = என்னை
निरीक्ष्य = உற்றுப் பார்த்து
शीतलैः = குளிர்ந்த
अपाङ्ग-लवैः = கடைக்கண் துளிகளாலே
बलि-वञ्चक-चरण-द्वय-शरण-वरण-साम्राज्य = பலிச்சக்ரவர்த்தியை வஞ்சித்தவனின் அடியிணைகளைப் புகலாக வரிக்கின்ற மஹாராஜ்யத்திலே
अभिषिञ्चसि = அபிஷேகம் பண்ணுகிறாய்.

கடலின் கன்னிகையே! நொந்துகிடக்கும் என்னை குளிர்ந்த கடைக்கண் துளிகளாலே குளிப்பாட்டுகிறாய். பலியை ஏமாற்றிய பகவானின் திருவடியிணைகளில் ஶரணம் புகுந்தவர்களின் ஸாம்ராஜ்யத்தில் என்னை அபிஷேகம் பண்ணிவைக்கிறாய்.

நிர்விண்ணம் என்பது வெறுப்புத் தாபத்தால் குளிர்நீருக்கு ஏங்குவதைக் குறிப்பதாலும், ஶரணாகதிக்குத் தேவையான ஆகிஞ்சந்யத்தை ஏற்படுத்தும் நிலையைக் குறிப்பதாலும், இந்த ஸ்தபகத்து முக்கியக் கருத்தானதாலும், இங்கு பொருத்தமான அடைமொழியாகிறது.

அப்திகந்யே என்று கடலின் மகளாக விளிப்பது, ஜலதேரிவ ஸீததா என்று ப்ரஸித்தமானபடி குளிர்ச்சி இவளுடைய அபாங்கத்துக்கு இயல்பாகத் தந்தைவழிச் சொத்தாக அமைந்தது என்று குறிக்கலாம்; என்னை வெப்பம் தீர நீராட்டுவதற்குத் தண்ணீர்ப் பஞ்சம் இல்லை எனத் தெரிவிக்கவுமாம்.

அபிஷேகம் பண்ணுவதாகக் கூறுவானேன் என்றால், கடைக்கண் பார்வை நீர்போல் பாய்ந்து என்னிடம் வருவதாலும், கிடைக்கவிருக்கும் மோக்ஷ ஸாம்ராஜ்யத்துக்குப் பட்டாபிஷேகம் ஆரம்பத் திருவிழாவாய் இருப்பதாலும் பொருந்துகிறது.

பகவானின் திருவடியை இங்கு கூறும் வாமநாவதாரத்தை நினைவு படுத்துவானேன் என்றால், சிறிதாயிருந்து பெரிதாயும் வளர்ந்த திருவடி, நமக்குக் கிடைக்கும் எளிமையும், ஸாம்ராஜ்யம் கொடுக்கும் பெருமையும் ஒருசேரப் பெற்றிருப்பதில் விந்தையில்லை என்பதைக் காண்பிக்கும்.

அடைக்கலம் புகுந்தோர்க்கொரு ஸாம்ராஜ்யத்தைக் கூறுவது, ஸ ஸம்ராட் பவதி என்கிற உபநிஷத்வாக்யப்படியான மோக்ஷ ஸாம்ராஜ்யத்தைக் கூறலாம். இந்தப் பட்டாபிஷேகத்தைத் திருமகள் பண்ணிவைப்பதாகக் கூறுவது புருஷகார ப்ரபத்தியை முன்னிட்டு இது நடப்பதாலாம். உபாயமாவதிலும் அவள் உண்டென்றுமாம்.

அம்புதியின் அருமகளே! அவதியுறும் அடியேனை
அவலோகம் பண்ணுகிறாய். அபாங்கத்தின் அமுதத்தால்
அச்சுதனின் அடியிணையில் அடைக்கலத்தார் ஆட்சியிலே
அபிஷேகம் பண்ணுகிறாய்.

நிர்வேதஸ்தபகம் முடிந்து மரணுககதிஞஸ்தபகம் வரப் போவதை ஸூசித்தாயிற்று.

நாவல்பாக்கம் அக்நிஹோத்ரம் நாராயணதாதயார்ய மஹாதேசிகனிடம் கேட்டறிந்து நாவல்பாக்கம் கண்ணன் என்கிற யஜ்ஞவராஹ தாததேசிகன் எழுதிய லக்ஷ்மீ ஸஹஸ்ர உரையில் நிர்வேத ஸ்தபகம் முற்றும்.

லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தில் மொத்த ஸ்தபங்கள் 25
இதுவரை முடிந்த ஸ்தபகங்கள் 24.
இன்னும் மீதமுள்ள ஸ்தபகங்கள் 1
மொத்த ஶ்லோகங்கள் 1018.
இதுவரை முடிந்த ச்லோகங்கள் 1000
இன்னும் மீதமுள்ளச்லோகங்கள் 18.

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

இருபத்தைந்தாவது பலஸ்தபகம்

இந்தக் கடைசி ஸ்தபகத்துக்குப் பல ஸ்தபகம் என்றும் ஶரணாகதி ஸ்தபகம் என்றும் பெயர்கள். இதில் முதல் பத்து ஶ்லோகங்களால் ஶரணாகதி பண்ணுகிறார். கடைசி எட்டு ஶ்லோகங்களில் லக்ஷ்மீ ஸஹஸ்ரத்துக்கு முடிவுரையும் பல ஶ்ருதியும் எழுதுகிறார். முதல் பத்து ஶ்லோகங்களில் ஶரணாகதியை அதன் ஐந்து அங்கங்களுடன் பண்ணுபவராய், கீழ்க்கண்டவாறு விஷயங்களைப் பகுத்துக்கொள்கிறார்.

1. தொடக்கம்.
2. ஆநுகூல்ய ஸங்கல்பம்.
3. ப்ராதிகூல்ய வர்ஜநம்
4.-5. மஹா விஶ்வாஸம்.
6. கோபத்ருத்வவரணம்.
7. கார்ப்பண்யம்.
8. புருஷகாரப்ரபத்தி.
9. பரந்யாஸம்.
10. க்ருதக்ருத்யனானமை.

1. பாவம் போக்கும் பாற்கடற் பெண்

दुग्धां दुग्धाम्बुधेः पुत्री दुरितापहरा मम ।
शार्ङ्गिणश्चरणाम्भोज शरणागतसम्पदम् ॥

துக்தாம் துக்தாம்புதே: புத்ரீ துரிதாபஹரா மம ।
ஶார்ங்கிணஶ்சரணாம்போஜ ஶரணாகதஸம்பதம் ॥

दुरित-अपहरा = பாவங்களைப் போக்குகிறவளான
दुग्ध - अम्बुधेः = பால் ஸமுத்ரத்தின்;
पुत्री = மகள்;
शार्ङ्गिणः = சார்ங்கபாணியினுடைய
चरण-अम्भोज-शरणागत-सम्पदं = திருவடித் தாமரைகளின் புகலடைந்தவர்களின் செல்வத்தை

मम = எனக்கு दुग्धां = கரக்கட்டும்.

பாவங்களைப் போக்குகிறவள் , பாற்கடலின் பெண், பகவானின் திருவடித் தாமரையில் புகலடைவது என்கிற செல்வத்தை அவள் எனக்குப் பொழியட்டும்.

துக்தாம் - *கறக்கட்டும் கரக்கட்டும். பாற்கடலின் பெண் பால் போலப் பொழியட்டும். (பலதாம் குருதாம் என்பவை போலே) இந்த வினைச் சொல் (க்ருதாம், ரசிதாம் என்பவை போலே) ஒரு பெயர்ச் சொல் போல் இருந்து மருளவைக்கும்.*

துரிதாபஹரா- *என் ப்ரபத்திக்குத் தடங்கலாயிருந்த பாவங்களைத் தீர்ப்பவள். துரிதத்தைத் தொலைக்கின்ற துக்தாப்தி துஹிதையவள். பாவத்தைப் போக்குபவள் பாற்கடலின் புத்ரியவள்.*

ஸம்பதம் - *லக்ஷ்மி செல்வமளிப்பவள் என்று ப்ரஸித்தமாயிருக்க, நம் ஶரணாகதியை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்று அவளிடம் கேட்பானேன் என்றால், ஶரணாகதர்களின் கைங்கர்யச் செல்வமும் அவள் அளிக்கின்ற தலையாய செல்வங்களில் ஒன்று என்கிறார். பகவானின் பதமலரில் பரந்யாஸம் பண்ணியவர் பணக்காரர். ஶரணாகதி ஸம்பதம் என்றும் பாடம். ஒரே எழுத்தில் மாறுதல். அடைக்கலம் புகுவது என்பதே செல்வம்.*

தான் ஶரணாகதி பண்ணுகையில் முதலில் லக்ஷ்மியை அதை நிறைவேற்ற வேண்டுகிறார். மூன்று விதங்களில் அதை அவள் நிறைவேற்றுவாள். முதலில் அதற்குக் குறுக்காக நிற்கும் பாவங்களைத் தொலைப்பாள். இரண்டு, அது நிறைவேறச் சிபாரிசு பண்ணுவாள். மூன்று, தானே அதன் பலனை அளிப்பாள்.

அருவினையை அகற்றுகிற அம்புதியின் அரும்புதல்வி
அச்சுதனின் அடிமலரில் அடைக்கலமாய் அடைந்தவரின்
ஐஶ்வர்யம் அனைத்தையும் அடியேனுக் களிக்கட்டும்.

2. அடவியில் அலைபவனையும் அநுகூலன் ஆக்குபவள்

धावन्तमुच्चतरदुर्विषयाटवीषु
सारङ्गशावमिव शश्वदपाङ्गजालैः ।
मामच्युतस्य महिषि प्रसभं गृहीत्वा
नित्यं विधेहि युवयोरनुकूलवृत्तिम् ॥ २

தாவந்தமுச்சதரதுர்விஷயாடவீஷு
ஸாரங்கஶாவமிவ ஶஶ்வதபாங்கஜாலை: ।
மாமச்யுதஸ்ய மஹிஷி ப்ரஸபம் க்ருஹீத்வா
நித்யம் விதேஹி யுவயோரநுகூலவ்ருத்திம் ॥ 2

अच्युतस्य = அச்சுதனின்
महिषि = பத்தினியே !
सारङ्ग-शावं इव = மான்குட்டியைப் போல
धावन्तं = ஓடுகிற
मां = என்னை
शश्वत् = எப்போதும்
अपाङ्ग-जालैः = கடைக்கண் வலைகளாலே
प्रसभं = பலாத்காரமாக
गृहीत्वा = பிடித்து
नित्यं = எப்போதும்
युवयोः = உங்கள் இருவருக்கும்
अनुकूल-वृत्तिं = அநுகூலமான நடத்தை கொண்டவனாக
विधेहि = பண்ணு.

அச்சுத பத்தினியே ! மான்குட்டி காடுகளிலே துள்ளி விளையாடுவது போல, நான் துர்விஷயங்களில் புகுந்து விளையாடுகிற துஷ்டன். என்னை நீ உன் கடைக்கண் என்னும் வலைகளாலே பலாத்காரமாகப் பிடித்துப் பழக்கி உனக்குக் கீழ்ப்படிந்தவனாக ஆக்கிக் கொள்.

இந்த ஶ்லோகத்தில் உவமை - உருவகத் - தொடர் வருமாறு; துர்விஷயங்களாகிற காடுகள். மான்குட்டி போல நான். உன் அபாங்கமாகிற வலை. நீ பிராணிகளைப் பிடித்துப் பழக்குபவள்.

துர்விஷயங்களாவன புலன்களை இழுக்கும் கெட்ட வஸ்துக்கள்; ஆபாஸக் காட்சி, அசிங்கப்பாடல், சாராயம், முதலியன. இவற்றைக் காடுகளாகக் கூறியதேன்? காடுகள் போல் ஏராளமாக வளர்ந்திருப்பதாலும், காடுகள் போல நம்மை வழிதப்ப வைப்பதாலும், காடுகள் போல் தீங்கிழைப்பதாலும் என்னலாம்.

உச்சதர. மேன்மேலும் அதிகமான துர்விஷயங்கள். ஒரு துர்விஷயம் இன்னொரு பெரிய துர்விஷயத்தில் மாட்டி உச்சதரமாக்குகிறது.

ஸாரங்கஶாவமிவ :- நான் மான் குட்டி போல இருப்பது எப்படியென்றால், துள்ளித் திரிவதாலும், அறியாத்தனம் அதிகமாயிருப்பதாலும், பிடிப்பது கஷ்டமாதலாலும், என்னலாம்.

அபாங்கஜாலே: : கடைக்கண்ணை வலையாகச் சொல்வானேன்? கண்ணின் ஒளிக் கதிர்கள் வலை நூல்கள் போலிருப்பதாலும், அதில் சிக்கியவர் வெளிவரமுடியாததாலும், அதை வீசுபவள் பலரை வஶீகரிப்பதாலும், என்னலாம்.

அச்சுதஸ்ய மஹிஷி :- அச்சுதன் என்றால் நழுவவிடாதவன். அவனுடைய மஹிஷியான உனக்கும் அந்தக் குணம் இப்போது என் விஷயத்தில் தேவை. நான் திமிறிக் கொண்டு ஓடினாலும், நீ என்னை நழுவவிடக் கூடாது.

தாவந்தம் :- நான் ஒரு இடத்திலும் இருப்பு கொள்ளாமல் ஓடுபவன். என்னைப் பிடிப்பது கஷ்டம். உன்னிடம் பிடிபடும் விருப்பம் இப்போது தோன்றினாலும், அது எப்போதும் இருப்பதில்லை.

ப்ரஸபம் :- பலாத்காரமாக என்னைப்பிடி. நான் திமிறிக் கொண்டு ஓடினாலும் வலியப்பிடி. முதலில் பிடித்தால் தானே அப்புறம் பழக்கமுடியும்?

யுவயோ: பிராட்டியும் பெருமாளுமான திவ்யதம்பதிகள் இருவருக்கும்.

அநுகூலவ்ருத்தி : நீ சொன்னதைக் கேட்டு அதன்படி நடக்கும் பழக்கம். கட்டளைக்குக் கீழ்ப்படியும் நடத்தை. ஶாஸ்த்ரவஶ்யனாக இருப்பது. மாலை சாத்துதல் திருவிளக்கு ஏற்றுதல் முதலிய கைங்கர்யங்கள் அநுகூல வ்ருத்தியில் அடங்கும்.

விதேஹி : நீ என்னை இப்படிப் பண்ணு. ஶரணாகதியின் ஐந்து அங்கங்களில் முதலாவதான ஆநுகூல்யஸங்கல்பம் எனக்கு ஸித்திக்கும்படிப் பண்ணு. நானாக அநுகூலனாக வேண்டும் என்று காத்துக்கிடக்க வேண்டாம். காட்டுமிருகத்தைப் பிடித்துப் பழக்கி, காக்ஷிச்சாலை மிருகமாகவோ வீட்டு மிருகமாகவோ வித்தை பண்ணும் விலங்காகவோ ஆக்குவதுபோல் நீ என்னை ஆக்கு.

துர்விஷயக்காடுகளில் துள்ளும் மான்குட்டிக்குத்
துலையான எனைப்பிடித்துத் துணை விலங்காய் ஆக்கிக்கொள்

—★—

3. குழியில்விழும் குழந்தையைக் காப்பவள்

मातर्हिताहितविवेकविहीनमेतम्
मन्दं मुकुन्दवरवर्णिनि मामनार्यात् ।
मार्गान्निवर्तयितुमर्हसि मङ्क्षु माता
कूपे निपित्सुमपि डिम्भमुपेक्षते किम् ॥ ३ ॥

மாதர் ஹிதாஹித விவேக விஹீநமேதம்
மந்தம் முகுந்தவரவர்ணிநி மாமநார்யாத் ।
மார்காந் நிவர்தயிதுமர்ஹஸி மங்க்ஷு மாதா
கூபே நிபித்ஸுமபி டிம்பம் உபேக்ஷதே கிம்? ॥ 3

मातः = அம்மா

मुकुन्द-वर-वर्णिनि = முகுந்தனின் பேரழகியே !

हित-अहित-विवेक-हीनं = நன்மை தீமையைப் பிரித்தறியும் திறன் இல்லாதவனும்

मन्दं = மட்டியுமான

एतं = இந்த

मां = என்னை,

अनार्यात् = பண்பற்ற

मार्गात् = வழியிலிருந்து

निवर्तयितुं अर्हसि = திருப்ப வேண்டும்.

कूपे = கிணற்றிலே

निपित्सुं अपि = விழ விரும்பினாலும்

डिम्भं = குழந்தையை

मङ्क्षु = விரைவாக

माता = தாய்

उपेक्षेत किं = உபேக்ஷிக்கிருளா என்ன?

அம்மா முகுந்தனின் ஸௌந்தரியே ! நான் எது ஹிதம், எது அஹிதம், என்று பிரித்தறிய மாட்டாத மந்தன். என்னைத் தீய வழியிலிலிருந்து நீ திருப்பவேண்டும். கிணற்றில் விழ விரும்பும் குழந்தையை அன்னை காக்காமல் விடுவாளோ?

இந்த ச்லோகத்தில் ப்ராதிகூல்யவர்ஜனம் என்கிற இரண்டாவது அங்கமும் தாயாரே பண்ணித்தர வேண்டும்? என்கிறார்.

ஹிதாஹிதவிவேகம் *:- எது நமக்கு நல்லது எது கெட்டது என்று பாகுபடுத்திப் புரிந்துகொள்ளும் பகுத்தறிவு, அது இருந்தால் நான் ஏன் தப்புத்தண்டாவுக்கெல்லாம் போகப் போகிறேன்? கெட்டதையே நல்லதென்று ப்ரமிப்பதால் தானே நான் தீய வழியில் நடக்கிறேன்?*

மந்தம் *- அறிவு குறைந்தவனை. அறிவு நிறைய இருந்தால் ஹிதமும் அஹிதமும் பிரித்துப் பார்க்கத் தெரிந்திருக்குமே .*

ஏதம் *- இதோ உன் அருகில் நிற்கிறேனே நான். உன்னிடம் மன்றாடுகிறேனே. இந்த என்னை.*

அநார்யாத் மார்காத் - நல்லோர் நடவாத வழி. பண்பற்ற வழி. நான் விரும்பிப்போகும் வழி. ப்ரதிகூலமார்க்கம். ஜகந்யாத்- என்று பாடபேதம். நீசமான என்று அர்த்தம்.

நிவர்தயிதுமர்ஹஸி. திருப்பியழைத்துக் கொண்டு வரவேண்டும். தீவழி விலக்கப் பண்ணவேண்டும்.

நிபித்ஸூம். கிணற்றில் விழுந்தால் மண்டை உடையும் என்ருே, திரும்ப மேலே ஏறிவர முடியாதென்ருே அறியாத குழந்தையை, ஆழத்தில் என்ன இருக்கிறது என்ற ஆவலாலோ, விழுவதே விளையாட்டு என்ற எண்ணத்தாலோ, விருப்பத்துடன் விழவிருக்கும் குழந்தையை.

உபேக்ஷதே கிம் அதன் ஆசையைக் கெடுப்பானேன் என்ருே, தனக்கிஷ்டமானதைப் பண்ணட்டும் என்ருே, விழுகிற குழந்தையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பாளோ? மாட்டாள். அதிவேகமாகப் பாய்ந்து சென்று குழந்தையை விழாமல் பிடித்துத் தாங்குவாள்.

மங்க்ஷூ. அதி ஶீக்ரமாக, காலம் தாழ்த்தாமல், குழந்தை கூப்பிடட்டும் என்று காத்திராமல், விரைவாகப் பதற்றத்துடன் செயல்படுகிருள் தாய்.

கிணற்றுச்சேறு போல அநார்ய மார்க்கம். புதைபட வைப்பது. குழந்தை போல நான். அறியாதவன். மாதா நீ.

இதமெதுவும் தெரியாமல் இழுக்குவழி நடக்குமெனை
இழுத்தே வா இலக்குமியே ! இளிப்பாதை திருப்பிவிடு.
இச்சித்துக் கிணற்றுக்குள் இறங்கிவிழும் குழவியைத்தான்
இரக்ஷிக்க முயலாமல் இருப்பாளா குழவியின் தாய்?

—★—

4. நம்பினவரை நலியாதவள்

विश्वस्य धात्रि भवती परिपास्यतीति
[illegible] चराम:

निःश्रेयसं गमय वा निरयं नयेर्वा
कीर्तिं लभस्व यदि वा महतीमकीर्तिम् ॥ ४

விஶ்வஸ்ய தாத்ரி பவதீ பரிபாஸ்யதீதி
விஶ்வஸ்ய ஸம்யகபயம் து வயம் சராம: ।
நி:ஶ்ரேயஸம் கமய வா நிரயம் நயேர்வா
கீர்த்திம் லபஸ்வ யதி வா மஹதீமகீர்திம் ॥4

विश्वस्य = ப்ரபஞ்சத்தின்
धात्रि = அன்னையே !
भवती = நீர்
परिपास्यति = காப்பாற்றுவீர்
इति = என்று
सम्यक् = நன்றாக
विश्वस्य = நிம்பி
अभयं तु = பயமே இல்லாமல்
वयं = நாங்கள்
चरामः = நடமாடுகிறோம்.
निःश्रेयसं वा = நல்ல கதியையாவது
गमय = அடைவி (அல்லது)
निरयं वा = நரகத்தையாவது
नयेः = அழைத்துப்போ
कीर्तिं = புகழை
लभस्व = அடை.
यदि वा = அல்லது
महती = பெரிய
अकीर्तिं = அபகீர்த்தியை (அடை).

ப்ரபஞ்சம் முழுதுக்கும் மாதாவானவளே ! நீர் காப்பாற்றவிருக்கிறீர் என்று திடமாக நம்பி நாங்கள் பயமே இல்லாமல் ஸஞ்சரிக்கிறோம். நீ உயர்ந்த கதியைக் கொடுத்தாலும் சரி, அல்லது நரகத்தில் தள்ளினாலும் சரி. நீ எங்களைக் காப்பாற்றி, புகழையாவது பெறு; அல்லது எங்களை வீழ்த்தி அபகீர்த்தியையாவது பெறு. அது உன் இஷ்டம்.

ஶரணாகதியின் அங்கங்களுள் ஒன்றான மஹாவிஶ்வாஸத்தை ஸம்யக் விஶ்வஸ்ய என்பதனால் கூறுகிறார்.

தாத்ரி - *நீ தாயாயிற்றே, குழந்தைகளை நிச்சயம் காப்பாற்றுவாய்*

அபயம் து. துளிக் கூட பயமில்லாமல், காக்கும் பொறுப்பை உம்மிடம் வைத்துவிட்டு, அதில் சிறிதும் ஸந்தேஹமில்லாததால், கவலையேயில்லாமல் இருக்கிறோம்.

கீர்த்திம் லபஸ்வ. தகுதியற்றவனைக் கூட தரத்தில் உயர்த்துபவள், அண்டி வந்தவனுக்கெல்லாம் அபவர்க்கம் (மோக்ஷம்) அளிப்பவள். அடிபணிந்தவர்க்கு அள்ளியள்ளிக் கொடுப்பவள், சேய்களுக்கெல்லாம் சேமம் செய்பவள், என்ற புகழைப் பெறு.

மஹதீம் அகீர்த்திம் வா. அல்லது நம்பி வந்தவனைக் கூட நட்டாற்றில் விட்டவள் என்ற பெரிய அபக்யாதியைப் பெறு.

வயம் து. எங்களுக்கென்ன, மோக்ஷமானாலும் நரகமானாலும் சரி. உனக்குத்தான் கீர்த்தி வேண்டுமா பெரிய அபகீர்த்தி வேண்டுமா என்பதை நீயே முடிவு பண்ணிக் கொள்ளு. நாங்கள் பண்ணக் கூடியது மஹாவிச்வாஸம் மட்டுமே. அதைப் பண்ணியாச்க. இனிமேல் நீ பண்ணவேண்டியது என்னவோ, உன் இஷ்டப்படி பண்ணு.

நம்பிக்கை வைத்தவனை நற்கதியில் செலுத்தாமல்
நரகத்தில் தள்ளுவதால் நலிவதுமுன் புகழ் தானே?



मुक्ताफलैः किं मृगपक्षिणां च, मिष्टान्नपानं किमु गर्दभानाम्।
अन्धस्यदीपो बधिरस्य गीतं मूर्खस्य किं शास्त्रकथाप्रसङ्गः ॥

விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் முத்துக்களினால் என்ன ப்ரயோஜனம், கழுதைகளுக்கும் அருசுவை உணவை ருசிக்க முடியுமா ? விளக்கினால் குருடனுக்கு உபயோகமில்லை. செவிடனுக்கு இனிய இசையை அனுபவிக்க முடியுமா ? அறிவில்லாத சாஸ்த்ர நுணுக்கங்களை எடுத்துக் கூறுவதினால் பயனுண்டோ.

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

5. நிச்சயமாக நிஃஶ்ரேயஸத்தைப் பண்ணுபவள்

उच्चैरकृत्रिमगिरो यदि नाब्धिघोषाः
उन्मादिनां फणितयः स्मृतयश्च नो चेत् ।
नारायणप्रणयिनीं नमतो मम त्वाम्
नैश्श्रेयसी न भविता कथमम्ब सम्पत् ॥ ६

உச்சைரக்ருத்ரிமகிரோ யதி நாப்திகோஷா:
உந்மாதிநாம் பணிதய: ஸ்ம்ருதயஶ்ச நோ சேத் ।
நாராயணப்ரணயிநீ நமதோ மம த்வாம்
நைஶ்ரேயஸீ ந பவிதா கதமம்ப ஸம்பத் ॥ 6

अम्ब = அம்மா!
उच्चैः = உரக்க
अकृत्रिमगिरः = வேதவாக்குகள்
अब्धिघोषाः = கடலிரைச்சல்களாக
यदि न = இல்லையென்றால்,
स्मृतयः च = ஸ்ம்ருதிகள்
उन्मादिनां = பைத்தியக்காரர்களின்
फणितयः = வார்த்தைகளாக
नो चेत् = இல்லையென்றால்,
नारायण-प्रणयिनी = நாராயணனின் காதலியான
त्वां = உன்னை
नमतः = வணங்குகிற
मम = எனக்கு
नैः श्रेयसी सम्पत् = மோக்ஷச் செல்வம்
कथं = எப்படி
न भविता = உண்டாகாமல் போகும்?

அம்மா! வேதங்கள் வெறும் கடலிரைச்சல்கள் அல்லவே? ஸ்ம்ருதிகள் வெறும் பித்துப்பிதற்றல்கள் இல்லையே? அப்படியானால் நாராயண காந்தையான உன்னை நமஸ்கரிக்கிற எனக்கு மோக்ஷம் எப்படிக் கிடைக்காமல் போகும்? நிச்சயமாகக் கிடைக்கும்.

உச்சை: = உரக்க வேதங்களிலும் ஸ்ம்ருதிகளிலும் பலகாறும் தெளிவாக ஆணித்தரமாகச் சொன்னதெல்லாம் பொய்க்குமா? பொய்க்காது. அதனால், தாயாரைத் தொழுபவர்களுக்கு மோக்ஷம் கிடைத்தே தீரும்.

அக்ருத்ரிமகிர: - யாராலும் செய்யப்படாத நூலான வேதங்கள். அபௌருஷேய க்ரந்தங்கள். ஸ்ரீஸூக்தம் முதலிய வேதப் பகுதிகள் லக்ஷ்மியின் பெருமையைப் பறைசாற்றுகின்றன. ஸ்ம்ருதிகள் புராணங்களுக்கும் உபலக்ஷணம். இவை லக்ஷ்மியை விமுக்திபலதாயிநீ என்று வர்ணிக்கின்றன.

அப்திகோஷா: - கடலிரைச்சல்கள் வெறும் கோஷங்கள் மட்டுமேயாகி, எந்தக் கருத்தையும் தெரிவிக்கும் கூற்றுகள் இல்லை என்பது உலகறிந்த விஷயம். வேதங்கள் உரக்கக் கோஷிப்பதும் அப்படியிருக்குமா? இருக்காது. அவை உண்மைக் கூற்றுகளாகத்தான் இருக்கும்.

முதல்பாதத்தில் அர்த்தமற்ற சத்தங்களைச் சொன்னார். இரண்டாவதில் தப்பர்த்த உளறல்களைச் சொன்னார். நகதம் - அபௌருஷேய க்ரந்தங்களையும், அவற்றை நினைவுபடுத்தி முனிவர்கள் கூறியதையும் இவ்விரண்டு வகைகளிலும் சேர்க்க முடியாததால் தனக்கு லக்ஷ்மிஶரணாகதியில் மஹாவிஶ்வாஸம் ஏற்படுகிறது என்கிறார்.

உததிக்கூச்சலா உயர்வேதங்கள்?
உன்மத்தர்களா ஸ்ம்ருதிக்காரர்கள்?
உன்னை வணங்கும் எனக்கபவர்க்கம்
உண்டாகாமல் எப்படிப்போகும்?

6. வினைதீர்த்து விடுவிப்பவள்

गीतोपदेशगुरुपत्नि कृतागसो मे
गोप्त्री त्वमेव भवताद्भवतापभाजः ।
आत्मावनेऽप्यकुशलैरपरैस्सुरैः किम्
बद्धस्स्वयं किमु विमोचयिता वतान्यम् ॥ ६

கீதோபதேஶகுருபத்நி க்ருதாகஸோ மே
கோப்த்ரீ த்வமேவ பவதாத்பவதாபபாஜ: ।
ஆத்மாவநேப்யகுஶலை ரபரைஸ் ஸுரை: கிம்
பத்த: ஸ்வயம் கிமு விமோசயிதா பதாந்யம் ॥ 6

गीता-उपदेश-गुरु-पत्नि = கீதாசார்யனின் பத்னியே!
कृत-आगसः = குற்றம் புரிந்தவனும்
भव-ताप-भाजः = ஸம்ஸாரத்தில் சுடுண்டவனுமான
मे = எனக்கு
त्वं एव = நீயே
गोप्त्री = ரக்ஷகையாக
भवतात् = ஆகுக.
आत्म-अवने अपि = தம்மைக் காத்துக்கொள்வதில் கூட
अकुशलैः = அஸமர்த்தர்களான
अपरैः = மற்ற
सुरैः = தேவர்களால், स्वयं தானே
बद्धः கட்டுண்டவன்
किं = என்ன?
अन्यं = வேறொருவனை
विमोचयिता किमु = விடுவிப்பானா என்ன?
बत = அடக்கஷ்டமே!

கீதோபதேஶம் பண்ணினவனின் பத்தினியே ! நான் பாவம் பண்ணிப் பவத்தில் தவிப்பவன். எனக்கு நீயே ரக்ஷகையாக ஆகவேண்டும். தம்மையே காத்துக்கொள்ள வக்கில்லாத மற்ற தேவதைகளாலே ஆவதென்ன? ஐயோ ! தானே கட்டுண்டவன் பிறருக்குக் கட்டவிழ்ப்பானா?

கீதோபதேச குருபத்நி ! *எந்தக் கீதையில் ஸம்ஸார தாபத்திலிருந்து ரக்ஷணத்திற்கான உபாயம் விளக்கப்பட்டிருக்கிறதோ அதை உபதேசித்தவன் உன்னுடைய மணாளனாயிற்றே !*

க்ருதாகஸோ மே *:- என் தாபத்துக்குக் காரணம் என் பாபம். இதில் கடவுளைக் குறைகூற மாட்டேன்.*

ஸ்வயம் பத்த: - *நான் எந்த ஸம்ஸாரத்தில் கட்டுண்டிருக்கிறேனோ அதே ஸம்ஸாரத்தில் என்னைப் போலவே கர்மபாசத்தில் கட்டுண்டவர்கள் அல்லவா மற்ற தேவர்கள் எல்லாரும்?*

அந்யம் : தன்னிடம் காட்டாத பரிவைப் பிறரிடம் காட்டுவரோ?

அபரை: ஸுரை :- இந்த்ராதி தேவர்கள் நிறைய பேர் இருக்கிறார்களே அவர்களால் கிம் ஆவதென்ன? ஒன்றுமில்லை. அவர்கள் வக்கில்லாதவர்கள்.

பத அடக்கஷ்டமே ! இது தெரியாமல் பிற தேவதைகளை நாடுகிறார்களே மந்த ஜனங்கள். தானே சிக்கியவன் பிறரை விடுவிக்கமாட்டான் என்பதால் அந்தக் தேவர்களும் ஐயோ பாவம், என்ன செய்வார்கள்? அவர்களும் பரிதாபத்துக்குரியவர்கள்.

தாயே நீயே என் தாபம் தீர்த்திடுக.

தாமே கட்டுண்டார் தாவி அவிழ்ப்பாரோ?

—★—

7. அபராதநிதியான அடியேனை அடைந்தவள்.

कर्माहृतिर्मतिरुपास्तिरिति प्रतीतै
र्मुक्तो मुकुन्दसुविलासिनि मुक्त्युपायैः ।
अस्मादृशस्तव जगत्यनुकम्पनीयो
नानापराधनिधिरम्ब न लभ्यतेऽन्यः ॥ ७

கர்மாஹ்ருதிர் மதிருபாஸ்திரிதி ப்ரதீதைர்
முக்தோ முகுந்தஸுவிலாஸிநி முக்த்யுபாயை: ।
அஸ்மாத்ருஶஸ்தவ ஜயத்யநுகம்பநீயோ
நாநாபராதநிதிரம்ப ந லப்யதேऽந்ய: ॥ 7

अम्ब = அம்மா !

मुकुन्द-विलासिनी = முகுந்தனின் மஹிஷியே !

कर्माहृतिः = கர்மாநுஷ்டாநம்

मतिः = ஜ்ஞாநயோகம்

उपास्तिः = பக்தியோகம்
इति = என்று
प्रतीतैः = ப்ரஸித்தமான
मुक्ति-उपायैः = மோக்ஷோபாயங்களாலே
मुक्तः = விடப்பட்டவன் நான்
अस्मादृशः = என் போன்றவன்
तव = உனக்கு
अनुकम्पनीयः = அருள் புரியத்தக்கவன்
नाना-अपराध-निधिः = பலவிதக் குற்றங்களின் குவியலிடமாக
अन्यः = வேறொருவன்
जगति = உலகத்தில்
न लभ्यते = கிடைக்கமாட்டான்.

முகுந்தனின் அழகியே ! முக்திக்கு மூன்று உபாயங்கள். கர்மயோகம், ஜ்ஞானயோகம், பக்தியோகம், என்று ப்ரஸித்தமானவை. இவையெல்லாம் எனக்குக் கிடையாது. நீ பலவகைக் குற்றக்குவியல் கொண்டவனும் அருள் புரியத் தக்கவனுமாக ஒருவனைத் தேடிக் கொண்டிருந்தால் என் போல் வேறொருவன் கிடைப்பது அரிது. எனக்கே தயை பண்ணு.

முக்த: - முக்தனாவதற்கு என்ன உபாயங்களோ அவற்றை விட்டதால் அவற்றால் முக்தன் என்று சொல் வேடிக்கை. முக்திக்கான உபாயங்கள் மூன்றையும் விட்டால் என்ன? உன் தயைக்கு இலக்காவதற்கான தகுதி இருக்கிறதே; குற்றம் புரிந்து கதறுபவன் என்கிற தகுதி. என்று பொருள் வேடிக்கை.

அநுகம்பநீய: - மோக்ஷத் தகுதி இருக்குமிடத்தில் தயைக்குத் தகுதி இருக்காதே. என் போன்ற நீசர்களே தயநீயர்கள்.

நாநா பகவதபசார பாகவதாபசார அஸஹ்யாபசார என்று கத்யத்தில் அடுக்கியது போல் எத்தனையோ வகைக் குற்றங்களைப் புரிந்தவன் நான். இதையே இப்போது தகுதியாகக் கருதி.

அபராதநிதி: - அஹமஸ்மி அபராத சக்ரவர்த்தி என்று ஆசார்யன் அருளியது போல நாநாபராதநிதி என்ற பிருதம் எனக்குத் தகும்.

அந்ய: இவ்வளவு தயநீயன் வேறொருவன் கிடைப்பானோ? வேறு எவனும் கொஞ்சம் புண்யசாலியாகவோ கொஞ்சம் அறிவாளியாகவோ கொஞ்சம் பக்திமானாகவோ இருப்பான்; என்னளவு பரிதாபப்படத் தக்கவன் அல்லன். இதில் என்னை விஞ்ச யாராலும் முடியாது. நானே உன் அருளுக்குச் சிறந்த இலக்கு.

ஜகதி - உலகெல்லாம் தேடினாலும் என்னளவு நீசன் கிடைக்க மாட்டான்.

ந லக்ஷ்யதே - யதி ந தயிஷ்யஸே ததோ தயநீயஸ் தவ நாத துர்லப: என்கிற ஆளவந்தார் ஸ்தோத்ரக் கருத்து. நான் உன் தயைக்குக் கிடைத்தற்கரிய வஸ்து. வந்திருக்கும் என்னை நீ பயன்படுத்திக்கொள்.

கர்மம் ஞானம் பகதியிலாமல்

கடுவினைக்கெல்லாம் கருவூலம் நான்.

கருணைக் கிலக்காய் என்னைப் போன்றோன்

கமலை! உனக்குக் கிடைக்கானே.

---

8. தேற்றுவதில் தேத்தாங்கொட்டையானவள்

पापार्थकोप कलुषीकृतनाथचेतः

पाथः प्रसादनविधौ कतकायितोक्तिम् ।

योऽहं भवामि सभयो यदुनाथयोषे

तां त्वामनन्यशरणश्शरणं प्रपद्ये ॥ ९

பாபார்த்தகோப கலுஷீக்ருதநாதசேத:
பாத: ப்ரஸாதநவிதௌ கதகாயிதோகதிம் ।
யோऽஹம் பவாமி ஸபயோ யதுநாதயோஷே
தாம் த்வாமநந்யஶரண: ஶரணம் ப்ரபத்யே ॥

यदुनाथ-योषे = க்ருஷ்ணனின் மனைவியே!
पाप-अर्थ-कोप-कलुषीकृत-नाथ-चेतः - पाथः - प्रसादन - विधौ = பாபம் காரணமான கோபத்தால் கலங்கின சித்தம் என்ற ஜலத்தைத் தெளிவிக்கும் செயலில்
कतकायित - उक्तिं = தேத்தாங்கொட்டை போல் செயல் புரிகிற பேச்சை உடைய
तां = அந்த
त्वां = உன்னை
यः = எவன்
स भयः = பயத்தோடு கூடினவனாக
भवामि = ஆகிறேனோ
अहं = அந்த நான்
अनन्य-शरणः = வேறு புகல் அற்றவனாய்
शरणं = புகலாக
प्रपद्ये = அடைகிறேன்.

யதுநாதனின் மனைவியே ! என்னுடைய பாவம் காரணமாக உன் நாதனுக்குக் கோபத்தால் மனம் கலங்குகிறது. எனக்குப் பயம் உண்டாகிறது. கலங்கின ஜலத்தைக் தெளிவய வைப்பதற்குத் தேத்தாங்கொட்டை இருப்பது போல, நாதனின் கலங்கின சித்தத்தைத் தெளியவைப்பது உன் பேச்சு. ஆகையால் வேறு புகலில்லாத நான் உன்னையே புகலாகப் பற்றுகிறேன்.

பாபார்தகோபம் - *என் பாபமும் அவன் கோபமும் ஒன்றுக்கொன்று காரணமாகின்றன.*

ஸபய: - *என்ன தண்டனை கிடைக்குமோ என்ற பயம் எனக்கு.*

ப்ரபத்யே - *புருஷகார ப்ரபத்தி பண்ணுகிறேன்.*

தாம் - *அப்பேற்பட்ட உன்னை. பேச்சால் சினமாற்றவல்ல உன்னை. என் பயத்தைப் போக்கவல்ல உன்னை.*

அநந்யஶரணா: - வேறு போக்கிடமில்லாதவனாய். பாவியாகையால் பகவானிடம் நேரடியாகப் போகமுடியாது. இந்த்ராதிகளிடம் போய்ப்பனில்லை. ஆகையால் நீ ஒருத்தியே புகல்.

பரம்பரா ரூபகம். பாபம் ஆகிற சேறு. கோபம் ஆகிற கலங்கல். பகவானின் சேதஸ் ஆகிற ஜலம். தாயாரின் பேச்சு ஆகிற தேத்தாங்கொட்டை. சேறு கலக்கத்துக்கு காரணம்; அது போல, என் பாவம் அவன் கோபத்துக்குக் காரணம். ஜலத்தில் கலக்கம்; அது போல, மனத்தில் கோபம். தேத்தாங்கொட்டையால் கலக்கம் நீங்கும், தெளிவு உண்டாகும்; அது போல, தாயாரின் பேச்சால் கோபம் நீங்கும், அனுக்ரஹம் உண்டாகும். (தெளிவு, அனுக்ரஹம், என்ற இரண்டுக்கும் ப்ரஸாதம் என்று பெயர்).

தேவன் மனதில் நீர்க்கலங்கல்
தெளிவிப் பதிலே உன்பேச்சு
தேத்தாங் கொட்டை போலென்று
தேவி யுனைச்சர ணடைகின்றேன்.

வருந்துகிறோம்



விளக்குடி ஸ்ரீமான் சம்பத் ஸ்வாமி என்கிற வேதாந்த தேசிகாச்சார் ஸ்வாமி 23.12.2010 ஆசார்யன் திருவடி அடைந்தார். ஸ்ரீமத் ஆக்கூர் ஆண்டவன் திருவடியை ஆச்ரயித்தவர். நம் ஆச்ரமத்திற்கு சொந்தமான நிலத்தின் சாகுபடியை கவனித்துவந்தவர். மிகுந்த ஆசார்ய பக்தி கொண்டவர். தம்முடைய 94வது திருநக்ஷத்ரத்தில் ஆசார்யன் திருவடி அடைந்தது கேட்டு வருந்துகிறோம். அவர் குடும்பத்தினரையும் ஆசார்ய பக்தியில் ஈடுபடித்தியது ஸ்வாமியின் ஆசார்ய பக்தியை காட்டுகிறது. —ஸ்ரீகார்யம்

9. அறிவளித்து அர்ப்பணம் பண்ணுவிப்பவள்

निरतिशयविभूते देवि निष्किञ्चनोऽहम्
भवदवपरितप्तो भास्वरानन्दमूर्ते ।
त्वदुपजनितबोधस्त्वज्जुषः कैटभारेः
चरणनलिनयोर्मामेनमद्यार्पयामि ॥ ९

நிரதிஶயவிபூதே தேவி நிஷ்கிஞ்சநோऽஹம்
பவதவபரிதப்தோ பாஸ்வராநந்தமூர்தே ।
த்வதுபஜநிதபோதஸ்த்வஜ்ஜுஷ: கைடபாரே:
சரணநலிநயோர்மாமேநமத்யார்பயாமி ॥ 9

निरतिशय-विभूते - இதைவிட மேலான தில்லை எனும்படி அதிக விபவம் கொண்டவளே!
देवि - தேவியே !
अहम् - நான்
अकिञ्चनः - ஒன்றுமேயில்லாதவன்.
भास्वर-आनन्द-मूर्ते = ஒளிருகிற ஆனந்தவடிவே !
भव-दव-परितप्तः = (நான்) ஸம்ஸாரக்காட்டுத்தீயில் வெந்தவன்.
त्वत्-उपजनित-बोधः = உன்னால் உண்டுபண்ணப்பட்ட அறிவை உடையவன்.
त्वत्-जुषः = உன்னோடு ஸமேதரான
कैटभ-अरेः = கைடபாரியான பகவானுடைய
चरण-नलिनयोः = திருவடித் தாமரைகளில்
एनं = இந்த
मां = என்னை
अद्य = இப்போது
अर्पयामि = ஸமர்ப்பிக்கிறேன்.

லக்ஷ்மி தேவியே ! நீ நிரதிஶயமான ஐஶ்வர்யம் கொண்டவள். நானோ அதற்கு நேர்மாறாக ஒன்றுமேயில்லாதவன். நீ ஒளிரும் ஆனந்தவடிவினள். நானோ அதற்கு நேர்மாறாக, ஸம்ஸாரக் காட்டுத்தீயில் வெந்துபோனவன். ஏதோ உன் தயவாலே கொஞ்சம் புத்தி வந்தது எனக்கு. அதனால் உன்னோடு கூடிய பகவானுடைய அடியிணைகளில் அடைக்கலம் புகுந்து ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணுகிறேன்.

நிரதிஶயவிபூதே ! உனக்கும் எனக்கும் மலைக்கும் மடுவுக்கும் போல வித்தியாசம். உன் ஐஶ்வர்யம் நிரதிஶயமானது. நானோ ஒன்றுமேயில்லாதவன்.

த்வதுபஜநிதபோத: - இன்றைக்குச் சரணாகதி பண்ணும் புத்தி எனக்கு ஏற்பட்டிருக்கிறதே. இது கூட நீ போட்ட பிச்சைதான்.

த்வஜ்ஜுஷ: = உபாயதசையோடு பலதசையோடு வாசியற ஒரு மிதுநமே நமக்கு உத்தேஶ்யம் என்ற ஸம்ப்ரதாய ஸூக்ஷ்மம் அறிந்தவன் நான். ஆகையால் உன்னோடு கூடிய பகவான் என்கிற திவ்ய தம்பதியிடம் ஆத்மநிக்ஷேபம் பண்ணுகிறேன்.

சரணநளிநயோ: - இப்படி ஶ்ரிய:பதியான நாராயணன் திருவடிகளே உபாயதசைஶயிலும் பல தசைஶயிலும் உபஜீவ்யங்கள் என்றல்லவா ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தின் கடைசி கத்யவாக்யம். ஆகையால் திருவடிகளில் ஸமர்ப்பிக்கிறேன்.

ஏநம் மாம் - இப்படிக் கைம்முதலற்றவனும் வெந்துபோனவனுமான என்னை அர்ப்பிக்கிறேன். இதற்கு முன் ஐந்து ஶ்லோகங்களில் சொன்னபடி ஐந்து அங்கங்களுடன் கூடிய என்னை அர்ப்பிக்கிறேன்.

அத்ய - இப்போது ஆத்மாவை ஸமர்ப்பிக்கிறேன். இதே புத்தி நிலைக்குமா என்று தெரியாது. என்றாலும் சரணாகதி க்ஷணகாலம் ஒரே தடவை பண்ணவேண்டிய செயல் அல்லவா? அதை இப்போது பண்ணுகிறேன்.

அர்பயாமி - அங்கியான ந்யாஸத்தைப் பண்ணுகிறேன்.

நிரதிசய விபவத்தாய் ! நிறையின்பவொளி வடிவே !
நிஷ்கிஞ்சனன் நீசன் நீ தந்த அறிவுடையேன்.
இலக்குமியே ! உனைச் சேர்ந்த இறைவனது இணையடியில்
இன்றைக்கே வைக்கின்றேன் இந்தவெனதான்மாவை.

10. எனக்கு எல்லாம் நிறைவேற்றியவள்

महति भवती मामार्याणां कुले समजीजनत्
भवपथपरिश्रान्तं छायातरूननयद्गुरून् ।
शरणवरणं साङ्गं शौरावचीकरदिन्दिरे
किमिह बहुना सम्पूर्णो मे चिरेण मनोरथः ॥ १०

**மஹதி பவதீ மாமார்யாணும் குலே ஸமஜீஜநத்
பவபதபரிஸ்ராந்தம் சாயாதருந் அநயத் குருந் ।
ஶரணவரணம் ஸாங்கம் ஶௌராவசீகரதிந்திரே
கிமிஹ பஹுநா ஸம்பூர்ணோ
மே சிரேண மநோரத: ॥ 10**

इन्दिरे = இந்திரையே !
भवती = நீர்
मां = என்னை
महति = பெரிய
कुले = குலத்தில்
अजीजनत् = பிறப்பித்தீர்.
भव-पथ-परिश्रान्तं = ஸம்ஸார மார்க்கத்தில் களைத்தவனை
गुरून् = ஆசார்யர்கள் என்கிற
छाया - तरून् = நிழல்மரங்களை
अनयत् = அழைத்துச் சென்றீர்.
शौरौ = பகவானிடத்தில்
साङ्गं = அங்கங்களுடன் கூடின
शरण-वरणं = சரணாகதியை
अचीकरत् = பண்ணுவித்தீர்
किं इह बहुना = நிறைய ஏன் இங்கு?
मे = என்னுடைய
चिरेण = நீண்ட காலத்திய
मनोरथः = ஆசை
सम्पूर्णः = நிறைவேறிவிட்டது.

இந்திரையே ! நீர் என்னைப் பெரியோரின் உயர்ந்த வம்ஶத்தில் பிறக்கவைத்தீர். ஸம்ஸார வழியில் களைத்துப் போன என்னை ஆசார்யர்கள் என்னும் நிழல் மரங்களுக்கு அழைத்துச் சென்றீர். பகவானிடத்தில் ஐந்து அங்கங்களுடன் கூடிய சரணாகதியையும் பண்ணிவைத்தீர். இனி நிறைய எதற்கு? என் நீண்டநாள் மனோரதம் நிறைவேறியாயிற்று.

ஆர்யாணாம் குலே - *நற்குடிப் பிறப்பு என்னும் பெருமையைக் கொடுத்தீர். ஆசார்ய புருஷர்களின் குலம்.*

எழுபத்துநாலு ஸிம்ஹாஸநாதிபதிகளின் குலங்களுள் ஒரு குலம். ரஹஸ்ய ஸிம்ஹாஸநாதிபதிகள் குலம். தற்காலத்து ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவருக்கும் ஸ்ரீபாஷ்ய ஆசார்யபரம்பரையில் இருக்கிற அப்புள்ளாரின் குலம். கிடாம்பி ஆச்சான், கிடாம்பி அப்புள்ளார், முதலிய மஹநீயர்களின் குலத்தில் அல்லவா நான் பிறந்துள்ளேன்?

சாயாதரூந் - ஆசார்யர்கள் நிழல்மரங்கள் போல. வெயிலில் வாடின சிஷ்யர்களுக்கு வாட்டம் தீருமிடம் ஆனவர்கள். குரூந் - ஆத்ரேய ரகுநாததீக்ஷிதர் என்கிற என் தந்தை. அஸ்தோகாத்வரி அப்பயகுரு என்ற அவரது தந்தை. காஞ்சி தாதார்யர் என்ற அவரது மாமா, இந்த ஆசார்யர்களெல்லாம் எனக்கு ஆசார்யர்களாகவும் ப்ராசார்யர்களாகவும் வாய்த்தது என் பரமபாக்யம்.

ஸாங்கம் அசீகரத் - போன ஆறு ச்லோகங்களில் ஒவ்வொன்ருக வர்ணித்தபடி எல்லா அங்கங்களுடன் ப்ரபத்தி பண்ணுவித்தீர்.

கிமிஹ பஹுநா. நிறைய சொல்வானேன். ப்ரபத்தியால் விளைந்த நிம்மதியை நிறையவாகச் சொல்லக் கூடுமானாலும் தேவையில்லை. சிரேண மநோரத: இந்த ப்ரபத்தி என் நெடுநாளைய ஆசையாக இருந்தது. இன்று கைகூடியது. உம்முடைய அனுக்ரஹத்தாலே.

ஆன்ருேர் குடியில் பிறப்பித்தீர் ஆசாரியரை அடைவித்தீர்
அடைக்கலத்தையும் புகுவித்தீர் ஆசை நிறைவேறிற்றம்மா
சான்ருேர் குலத்தில் சன்மத்தால் சாயாதருவைச் சேர்ந்ததனால்
சரணுகதியைச் செய்ததனால்சகலம் உம்மால் சம்பூர்ணம்.

—★—

11. இறைவன் இதனால் இன்புறட்டும்.

हृद्यं पद्यसहस्रमेतदनघं संशृण्वतः कम्पतात्
मोदेनादिमशाब्दिकस्य फणिनो मूर्ध्नां सहस्रं मुहुः ।

तत्कालोदितचारुमारुतधुतत्वत्केलिगाढश्रमम्
प्रत्नं सम्प्रति मे प्रसीदतु रमे ! पक्षीन्द्रवाहं महः ॥ ११

ஹ்ருத்யம் பத்யஸஹஸ்ரமேததநகம் ஸம்ச்ருண்வத: கம்பதாத்
மோதேநாதிமசாப்திகஸ்ய பணிநோ மூர்த்நாம் ஸஹஸ்ரம் முஹு: ।
தத்காலோதிதசாருமாருததுதத்வத்கேலிகாடச்ரமம்
ப்ரத்நம் ஸம்ப்ரதி மே ப்ரஸீதது ரமே பக்ஷீந்த்ரவாஹம் மஹ: ॥ 11

रमे = லக்ஷ்மியே !
हृद्यं = இதயத்துக்குப் பிடித்ததும்
अनघं = குற்றமற்றதுமான
मे = என்னுடைய
एतत् = இந்த
पद्य-सहस्रं = செய்யுள்களின் ஆயிரத்தை
संशृण्वतः = நன்றுகக் கேட்பவரும்
आदिम- शाब्दिकस्य = முதல் இலக்கணக்காரரும்
फणिनः = பாம்பானவருமான ஆதிசேஷருடைய
मूर्ध्नां = தலைகளுடைய
सहस्रं = ஆயிரம்
मुहुः = அடிக்கடி
मोदेन = ஆனந்தத்தாலே
कम्पतात् = ஆடியசங்கட்டும்
तत्-काल-उदित-चारु-मारुत-धुत-त्वत्-केलि-गाढ-श्रमं = அந்த ஸமயத்தில் உண்டான அழகான காற்றாலே தள்ளப்பட்டும் உன்னோடு விளையாடியதாலானதுமான தீவிர களைப்பை உடையதும்
प्रत्नं = பழையதும்
पक्षि-इन्द्र-वाहं = பக்ஷிராஜனான கருடனை வாஹனமாகக் கொண்டதுமான
महः = தேஜஸ்ஸானது
सम्प्रति = இப்போது
मे = என் மீது
प्रसीदतु = அனுக்ரஹிக்கட்டும்.

ரமையே ! என் லக்ஷ்மீ ஸஹஸ்ரம் குற்றமற்றது. உள்ளமுகப்பது. இதைக் கேட்டு முதல் வையாகரணான ஆதிசேஷன் கூட மகிழ்ந்த தன் ஆயிரம் தலைகளையும் அசைக்கட்டும். அப்போது எழுகிற மெல்லிய காற்று பகவான் மேல் வீசட்டும். உன்னோடு விளையாடியதால் அவருக்குண்டான தீவிரக் களைப்பு அந்தக் காற்றாலே போகட்டும். அதனால் என் மீது அந்தப் பழைய பக்ஷி வாஹந தேஜஸ் (பகவான்) அனுக்ரஹம் பண்ணட்டும்.

ஹ்ருத்யம் - லக்ஷ்மீ விஷயமான ஸ்துதியாய் இருப்பதாலே ஹ்ருத்யம். குணங்களும் அணிகளும் ப்ராஸங்களும் யமகங்களும் சித்ரங்களும் அழகாயிருப்பதாலே ஹ்ருத்யம். பகவானுக்கும் ரஸிகர்களுக்கும் உள்ளவுவப்பை ஏற்படுத்துவது.

அநகம் தோஷமில்லாதது. இலக்கணப்பிழையோ அர்த்தம் தப்பிப்போன பிழையோ இல்லாதது லக்ஷ்மீ ஸஹஸ்ரம். ஸம்ஶ்ருண்வத: நன்றாகக் கேட்பார் ஆதிசேஷர். பாம்புச் செவி அவருக்கு. தன் ஸ்வாமிக்கு ஸ்தோத்ரம் என்பதாலும், அநகமாயும் ஹ்ருத்யமாயும் இருப்பதாலும் லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தை நன்றாகக் கேட்பார். மோதேந - கேட்கிற ஆதிசேஷருக்கு மகிழ்ச்சி. இதனால் காவ்யப்ரபஞ்சமே களைகட்டப்போகிறது என்கிற மகிழ்ச்சி. ஆதிமஶாப்திகஸ்ய பாணிநியும் பதஞ்ஜலியும் மற்றும் பலரும் ஶப்தஶாஸ்த்ரத்து ப்ரவர்த்தகர்கள் அவதரித்தது கிடக்கட்டும். ஆதிஶேஷரே இலக்கணக் கல்வியின் முதல் ப்ரவர்த்தகர். ஶாப்திகர்கள் காவ்யங்களில் பிழை காண வல்லவர்கள். அவர்களுள் முதல்வனே கூட என் லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தை ஆமோதிப்பார்.

மூர்த்நாம் ஸஹஸ்ரம் அவருக்குத் தலைகள் ஆயிரம். இதில் ஶ்லோகங்கள் (பத்யங்கள்) ஆயிரம். இந்த ஆயிரத்தைக் கேட்டு அந்த ஆயிரம் ஆடட்டும். கம்பதாம். ஒப்புக்கொள்வதாலும், பலே பேஷ் என்று பாராட்டுவதாலும், தலைகள் ஆடட்டும். தத்காலோதிதசாருமாருத. ஆயிரம் தலைகள் அசங்கினால் காற்று வீகமன்றோ? இதமான காற்றாக அது இருக்கும். நுத. அந்தக் காற்று பகவானுக்குக் களைப்பாற்றும் காற்றாகும். உன்னோடு விளையாடியதால் உண்டான களைப்பு தீவ்ரமாக இருந்தாலும், ஆஸனமான பாம்பின் ஆயிரம் தலைகள் ஆடுவதால் வீசுகிற காற்று தீவிரக் களைப்பையும் நீக்கிவிடும். ப்ரஸீதது. ஏற்கெனவே லக்ஷ்மீ பக்தர்களை

அனுக்ரஹிக்க கூடிய பகவான் இப்போது இதமான காற்றுக்குக் காரணமான லக்ஷ்மீ ஸஹஸ்ர கர்த்தா என்று என்மீது விசேஷமாக அனுக்ரஹிக்கட்டும்.

ஆசுகளில்லா ஆயிரமிதனை ஆகர்ணித்ததும் ஆதியாம் சேஷனின்
ஆயிரம் தலைகள் ஆனந்தத்தால் ஆடட்டும். அதால் ஆகிய காற்றால்
ஆண்டவன் களைப்பும் ஆறுவதாலே அடியேனையவர் அநுக்ரகிக்கட்டும்.

—*—

12. பொறாதார் போகட்டும் புலவர் பூரிக்கட்டும்.

येयं नाद्रियते कृतिः कतिपयैरीर्ष्यागृहीतैर्जनैः
चित्रं सैव विपश्चितामकलुषे चित्ते विधत्ते मुदम् ।
विश्वस्याम्ब ! मनो दुनोति दयिताविश्लेषिणां या नृणाम्
नो किं कोकिलकाकली भवति सा तोषाय योषाजुषाम् ॥ १२

யேயம் நாத்ரியதே க்ருதி: கதிபயைரீர்ஷ்யாக்ருஹீதைர்ஜநை:
சித்ரம் ஸைவ விபஶ்சிதாமகலுஷே சித்தே விதத்தே முதம் ।
விஶ்வஸ்யாம்ப ! மநோ துநோதி தயிதாவிஶ்லேஷிணாம் யா ந்ருணாம்
நோ கிம் கோகிலகாகலீ பவதி ஸா தோஷாய யோஷாஜுஷாம் ॥ 12

विश्वस्य = ப்ரபஞ்சத்தின்
अम्ब = மாதாவே !
या = எந்த
इयं कृतिः = இந்தப் படைப்பு (லக்ஷ்மீ ஸஹஸ்ரம்)
कतिपयैः = ஒருசில
ईर्ष्या-गृहीतैः = பொறுமை பிடித்த
जनैः = ஜனங்களாலே
न आद्रियते = ஆதரிக்கப்படவில்லையோ
सा एव = அதுவே
विपश्चितां = பண்டிதர்களின்
अकलुषे = மாசற்ற
चित्ते = மனதில்
चित्रं = ஆச்சரியமாக
मुदं = இன்பத்தை
विधत्ते = பண்ணுகிறது.
या எந்த
कोकिल-काकली - குயிலின் கூவலானது
दयिता - विश्लेषिणां = காதலியைப் பிரிந்த
नृणां = மனிதர்களுடைய
मनः = மனதை

दुनोति = பிளக்கிறதோ

सा = அது

योषा-जुषां = பெண்டோடு கூடியவர்க்கு

तोषाय = ஸந்தோஷத்துக்கு

भवति = ஆகிறது.

नो किं = இல்லையா என்ன?

இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தைச் சில பொறாமை பிடித்த ஜனங்கள் ஆதரிக்கவில்லை. இதே லக்ஷ்மீ ஸஹஸ்ரம் பண்டிதர்களின் கள்ளமற்ற மனதில் இன்பத்தை விளைவிக்கிறது. ஆச்சர்யம். (ஒரே வஸ்து சிலருக்கு அநாதரத்தையும் சிலருக்கு மகிழ்ச்சியையும் விளைவிப்பது ஆச்சர்யம்). காதலியைப் பிரிந்த காதலர்களுக்கு மனதைப் பிளக்கிறது குயிலின் கூவல். அதே, பெண்டோடு கூடியவர்களுக்கு இன்பம் பயக்கவில்லையா என்ன?

ஈர்ஷ்யா எந்தச் சாதனையையும் பிறருடையதை ஸஹிக்க மாட்டார்கள் பொறாமை பிடித்தவர்கள். அப்படிப்பட்டவர் இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தையும் குறை கூறுவார்கள். ஆதரிக்கமாட்டார்கள். போகட்டும். ஸ வை. ஆனால் எந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரம் பொறாமையாளரால் சீந்தப்படவில்லையோ, அதே லக்ஷ்மீ ஸஹஸ்ரம். சித்ரம். ஒரே வஸ்து சிலருக்கு வெறுப்பையும், சிலருக்கு விருப்பையும் ஏற்படுத்துகிறது என்பது முதலில் ஆச்சர்யமாக இருக்கிறது. விபஸ்சிதாம். பண்டிதர்களுக்குப் போக்யமானது. இதிலுள்ள ஸூக்ஷ்மங்களை, வேடிக்கைகளை, புரிந்துகொள்ள வல்லவர்களுக்கு. அகலுஷே. அநாதரத்துக்குக் காரணமான பொறாமை என்கிற மாக இல்லாதது. கள்ளம் கபடற்ற மனக. யா ஸா எந்தக் குயிலிசை விரஹதாபம் கொண்டவரைப் பாடாய்ப் படுத்துகிறதோ அதே குயிலிசை கூடியிருக்கும் காதலரை மகிழ்விக்கிறது. நோ கிம். இல்லையா என்ன? ஒன்றே

சிலருக்குத் துன்பத்தையும் சிலருக்கு இன்பத்தையும் தருவதாக உதாரணம் இருக்கத்தான் இருக்கிறது. குயிலிசை மாதிரி லக்ஷ்மீ ஸஹஸ்ரமும் இருக்கட்டுமே.

அழுக்காறுடையார் அகற்றிப்போயினும்
அறிஞர்களையிது அகமகிழ்விக்கும்.
பிரிந்தோர் மனதைப் பிளக்கும் பிகவொலி
பிரியாதார்க்குப் பிடிக்கும் தானே?

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

बहुस्तबकभासुरस्तव नवस्तवस्वस्तरुः
प्रशस्तविबुधस्तुतस्त्रियुगनायिके वस्तुतः ।
समस्तमपि वाञ्छितं वितनुते सदानन्दन
स्थितिस्सुरभिलै रसैरपि दिशो दशामोदयन् ॥ १३

பஹுஸ்தபகபாஸுரஸ்தவ நவஸ்தஸ்வஸ்தரு:
ப்ரஸஸ்தவிபுதஸ்துதஸ்தரியுகநாயிகே வஸ்துத: ।
ஸமஸ்தமபி வாஞ்சிதம் விதநுதே ஸதாநந்தந
ஸ்திதிஸ்ஸுரபிலை ரஸைரபி திஸோ தஸாமோதயந் ॥ 13

त्रियुग नायिके = த்ரியுகனின் நாயகியே !
बहु-स्तबक-भासुरः = நிறைய ஸ்தபகங்களோடு, பூங்கொத்துகளோடு, பிரகாசிப்பதும்
प्रशस्त-विबुध-स्थितिः = கொண்டாப்பட்ட பண்டிதர்களால், தேவர்களால் போற்றப்பட்டதும்
सदा-नन्दन-स्थितिः = 1. நல்லோரை மகிழ்விக்கும் நிலை கொண்டதும், 2. எப்பொழுதும் நந்தனம் எனும் தோட்டத்தில் இருப்பதும்
सुरभिलैः = மணம் கமழும்
रसैः अपि = ரஸங்களாலும்
दश = பத்து
दिशः = திசைகள்
आमोदयन् - 1. கமழப்பண்ணிக் கொண்டு, 2. மகிழப்பண்ணிக் கொண்டு,
तव = உன்னுடைய
नव-स्तव-स्वस्तरुः = புது ஸ்தோத்ரமாகிற கற்பக மரம்
वस्तुतः = உண்மையில்
समस्तं = எல்லா
वाञ्छितं अपि = விரும்பியதையும்
वितनुते = பண்ணுகிறது

த்ரியுகன் என்கிற பகவானின் நாயகியே ! உன் புதிய ஸ்தோத்ரமாகிய லக்ஷ்மீ ஸஹஸ்ரம் என்பது கல்ப வ்ருக்ஷம். கற்பக மரத்தில் பூங்கொத்துகள் என்கிற ஸ்தபகங்கள் நிறைய இருக்குமென்றால், இதில் ப்ராரம்பஸ்தபகம், ப்ராதுர்பாவ ஸ்தபகம், முதலிய இருபத்தைந்து ஸ்தபகங்கள் இருக்கின்றன. அதைச் சிறந்த

தேவர்கள் என்னும் விபுதர்கள் போற்றுவர் என்றால், இதைச் சிறந்த பண்டிதர் என்னும் விபுதர் போற்றுவர். அது ஸதா நந்தநம் என்னும் ஸ்வர்க்கத் தோட்டத்தில் இருப்பதால் ஸதாநந்தநஸ்திதி என்றால், இதில் ஸத்-ஆநந்தந ஸ்திதி, அதாவது நல்லவர்களை மகிழ்விக்கும் நிலை. அது மலர்மணத்தாலே ஸௌரபிளம் என்றால் இது ஸ்வாரஸ்யத்தாலே ஸௌரபிளம். அது பழச்சாறுகளுடைத்து; இது காவ்யரஸங்களுடைத்து. அது பத்து திக்குகளையும் வாசனையால் ஆமோதப் படுத்து மென்றால் இது பத்து திசைகளையும் மகிழ்வித்து ஆமோதப்படுத்தும். அது போலவே இதுவும் உண்மையிலே விரும்பயதையெல்லாம் நிறைவேற்றும்.

பஹுஸ்தபக :- லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தில் இருபத்தைந்து உட்பிரிவுகள் இருக்கின்றன. அவற்றுக்கு ஸ்தபகங்கள் என்று பெயர் வைத்திருக்கிறார் இந்த கவி. பாதுகாஸஹஸ்ரத்தில் பத்ததிகள் என்று பெயர். மற்ற கவிகள் ஸர்க்கங்கள் என்றும் அத்யாயங்கள் என்றும் உல்லாஸங்கள் என்றும் பத்ததிகள் என்றும் வெவ்வேறு பெயர்கள் வைத்திருக்க, இவர் ஸ்தபகங்கள் என்று பெயர் வைத்ததற்கு என்ன காரணம் இருக்கும்? லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தை ஒரு மரமாகவும் அந்த மரத்தில் இவையெல்லாம் பூங்கொத்துகளாகவும் ஏற்கெனவே ரூபணம் பண்ணிக் கொண்டிருக்கிறார். அதை இந்த ஶ்லோகத்தில் வெளிப்படையாகச் சொல்கிறார்.

நவஸ்தவ : ஏற்கெனவே பராஶரரின் ஸ்ரீ ஸ்துதி, ஶங்கரரின் கநகதாரா ஸ்தோத்ரம், யாமுநரின் சதுஶ்ஶ்லோகீ, ராமாநுஜரின் கத்ய சூர்ணிகை, கூரேஶரின் ஸ்ரீஸ்தவம், பட்டரின் ஸ்ரீ குணரத்நகோஶம். தேசிகனின் ஸ்ரீ ஸ்துதி, என்று ஏராளமான ஸ்தோத்ரங்கள் உனக்கு ப்ராசீன ஸ்தவங்கள். இது புது ஸ்தவம். மேலும் நவ என்பதற்கு ஒன்பது என்றும் அர்த்தம். மூன்றுயுகனின் மனைவியான

உனக்கு ஒன்பது ஸ்தோத்ரம் பண்ணி பத்துத் திக்கிலும் ஆமோதம் வந்தால் எத்தனை இஷ்டம் நிறைவேறும் என்று யாராவது கணக்குப் புதிர் போட்டால், எல்லா இஷ்டமும் நிறைவேறும் என்று சரியான உத்தரம். இந்த வேடிக்கைக்காக நவ என்ற பதத்தைக் கையாளுகிறார்.

ப்ரஶஸ்தவிபுதஸ்துத :- இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தைப் பண்டித ஶ்ரேஷ்டர்களெல்லாம் பாராட்டுகிறார்கள். ப்ராஸங்களுக்காகவும் யமகங்களுக்காகவும் ஶ்லேஷங்களுக்காகவும் இந்த ஶ்லோகத்தில் உள்ளது போன்ற ஸமாலோக்திகளுக்காகவும், போன ஶ்லோகத்தில் இருப்பது போன்ற த்ருஷ்டாந்தங்களுக்காகவும், அதற்கு முன் ஶ்லோகத்தில் இருப்பது போன்ற உத்ப்ரேக்ஷைகளுக்காகவும், அர்த்த புஷ்டிக்காகவும், சித்ர பந்தங்களுக்காகவும், பண்டித ஶ்ரேஷ்டர்களின் பாராட்டைப் பெறுகிறது இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரம். உயர்ந்தவர்களின் பாராட்டன்றோ நல்லது? ஸாமாந்ய ஜனங்கள் என்ன சொன்னாலும் அதில் பெருமைப்பட என்ன இருக்கிறது?

வஸ்துத: : உண்மையாகவே. மீதி நாலு ஸாம்யங்கள், ஸ்தபக, விபுத, ஸதாநந்தந, ஆமோத, என்கிற பதங்களின் இரட்டை அர்த்தங்களால் மட்டும் அமைந்தவை. ஐந்தாவதான ஸாம்யமோ உண்மையாகவே, லக்ஷ்மீ ஸஹஸ்ரம் கல்பவ்ருக்ஷம் போலவே விரும்பியதையெல்லாம் தருகிறது. நவஸ்தவமானபடியாலே நவஸ்துத: அபீஷ்டஸித்தி என்று நினைக்காதீர். வஸ்துத: அபீஷ்டஸித்தி உண்டாகும்.

தஶ திஶ: :- கர்ணாடகத்தில் ஒருவர், காசியில் ஒருவர், கும்பகோணத்தில் ஒருவர், குக்ராமத்தில் ஒருவர், என்று பல பேர் வரிந்து கட்டிக் கொண்டு வ்யாக்யானங்களை எழுதுமளவுக்குப் பல திக்குகளிலும் பரவிய கீர்த்தி லக்ஷ்மீ

ஸஹஸ்ரத்துக்கு. பாஸாரமானது; ஸாரபிளமானது; ஸாரதருவாவது கலபம் தானே?

உன் ஸ்தபகம் ஒளிர்வதனால் உயர் விபுதர் துதிப்பதனால்
உறைவிடத்து நந்தனத்தால் உன் புதிய ஸ்தவமிதுவும்
ஆசையெலாம் நிறைவேற்றும் ஆமோதம் உண்டாகும்.
ஆகையால் கற்பகம் போல் ஆகுமிந்தக் காவியமும்.

—★—

14. அறிஞர்களுக்கதிமதுரம் அயலாரை அச்சுறுத்தும்

श्लोकाः श्लाघावसरतरलीभूतवेधःपुरन्ध्री
चूडागुच्छप्रसृमरमधुस्रोतसा जातसाम्यः ।
विश्वाम्ब त्वद्गुणपरिचयो वीततन्द्रान् सुधीन्द्रान्
प्रीणन्त्येते मम परमनोभैरवा धीरवादाः ॥ १४

ச்லோகா: ச்லாகாவஸரதரலீபூதவேத: புரந்த்ரீ
சூடாகுச்ச ப்ரஸ்ருமர மதுஸ்ரோதஸா ஜாதஸாம்யா: ।
விச்வாம்ப த்வத்குணபரிசயே வீததந்த்ராந் ஸுதீந்த்ராந்
ப்ரீணந்த்யேதே மம பரமநோபைரவா தீரவாதா: ॥ 14

विश्वाम्ब = ப்ரபஞ்சத்தின் அன்னையே ஞ
श्लाघा-अवसर-तरलीभूत-वेधःपुरन्ध्री-चूडा-गुच्छ-प्रसृमर - मधु- स्रोतसा - கொண்டாடும் வேளையில் அசங்குகிற ஸரஸ்வதியின் தலைப்பூங்கொத்திலிருந்து பெருகுகிற தேனோடு
जात-साम्याः - ஸமத்வம் பெற்ற
मम - என்னுடைய
एते = இந்த
श्लोकाः - ச்லோகங்கள்
त्वत्-गुण-परिचये - உன் குணங்களோடு பழகுவதில்
वीत-तन्द्रान् - சோம்பலற்ற
सु-धी-इन्द्रान् - பேரறிஞர்களை
प्रीणन्ति - உகப்பிக்கின்றன
धीर-वादाः - அதட்டல் பேச்சுகளாய்
पर-मनो-भैरवाः - பிறர் மனதுக்குப் பயங்கரமானவை.

அகிலத்தின் அன்னையே ! என் இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தை ஸரஸ்வதி கொண்டாடும்போது ஆடுவதால் அவளுடைய தலைப்பூங்கொத்துகளிலிருந்து பெருகும் தேனருவியை ஒத்திருக்கின்றன என்னுடைய இந்த ஶ்லோகங்கள். உன் குணங்களோடு சோம்பாமல் பழகுகிற பேரறிஞர்கள் இதனால் மகிழ்கிறார்கள். பிறர்க்கோ இவை அச்சுறுத்தும் அதட்டல்களாக இருக்கின்றன.

ஶ்லாகா நம் கடாக்ஷம் பெற்ற ஒருவன் லக்ஷ்மீ கடாக்ஷமும் பெறும்படி இவ்வளவு அழகாகக் கவிதை இயற்றியிருக்கிறானே என்று பாராட்டு. இவன் தன்னையும் பிறரையும் லக்ஷ்மீ பக்தர்களாக்கும்படி காவியமியற்றி லோகோபகாரியாகி நற்பணி புரிகிறானே என்று பாராட்டு. நம் ஸ்வாமிநியான லக்ஷ்மியைத் துதிக்கிறானே என்று பாராட்டு.

ஜாதஸாம்யா: : தேனருவியை ஒத்திருப்பது மூன்று வகைகளில். தேன் போல் இனிப்பதாலும் அருவி போல் வேகமாகப் பெருகுவதாலும் அந்தத் தேனருவி வாணீ-ஸம்பந்தம் பெற்றிருப்பது போல் இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரமும் உன் ஸம்பந்தம் பெற்றிருப்பதாலும், மூன்று முக்கிய காரணங்களால் இந்த ஸாம்யம்.

குணபரிசயே : இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தைப் படிப்பவர்கள் அவளுடைய பொறுமை, அருள், அழகு, வண்மை, என்ற ஒவ்வொரு குணத்துக்கும் இதில் ஒரு ஸ்தபம் இருப்பதால், அந்தக் குணங்களில் பெரிதும் ஈடுபடுவதால் குணபரிசயம் அதிகமாகிறது.

வீததந்த்ராந் - சோம்பலைவிட்டு இதைப் படிப்பவர்கள் மகிழ்கிறார்கள். சோம்பேறிகளுக்குக் குண பரிசயமும் ஏற்படுவதில்லை. மனமகிழ்ச்சியும் ஏற்படுவதில்லை.

ஸுதீந்த்ராந் - நல்லறிவில் வல்லவர்கள் மட்டுமே இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தின் மூலம் மகிழ்ச்சி பெறமுடியும். இதில் உள்ள இரட்டைப் பொருட்களையும் சித்ரபந்தங்களையும் ரஸிக்கத் தெரியாத ஸாமாந்ய ஜனங்களை இந்தக் காவியம் மகிழ்விக்காது.

ப்ரீணந்தி - அந்த அறிஞர்களுக்கு ப்ரீதி அதிகமாகிறது. ஸரஸ்வதியின் தலைமலரிலிருந்து பெருகிய தேன் போல் இருந்தால் இன்பம் கிடைக்காதா பின்னே? அந்தத் தேன் பெருகக் காரணமாயும் இருந்தால் ப்ரீதி ஏற்படாதா பின்னே? தம் தெய்வமான லக்ஷ்மியை உகப்பிக்கிற ஶ்லோகங்கள் என்ற காரணத்தால் தொண்டர்களை உகப்பிக்கும் அல்லவா?

ஏதே - இந்த ஶ்லோகங்கள். நீங்கள் இப்போது வாசித்துக் கொண்டிருக்கும் ஶ்லோகம் உட்பட லக்ஷ்மீ ஸஹஸ்ரத்து ஶ்லோகங்கள். இந்த ஶ்லோகத்தில் உள்ள உத்ப்ரேக்ஷையை ஸரஸ்வதி ஶ்லாகிப்பாள்.

பர - பிறர். லக்ஷ்மியிடம் பக்தியில்லாதவர். அயலார். அறிவிலிகள். பைரவா: பயங்கரமானவை. ஒவ்வொரு ஶ்லோகமும் அவர்களுக்கு ஒரு வசவு, அதட்டல், திட்டு, அச்சுறுத்தல். அறிவிழந்தோ சோம்பிப் போயோ திருமகளை ஆராதிக்காதவர்கள் இந்த ச்லோகங்களைக் கேட்டால் உண்மை நிலை அறிந்து அலறுவார்கள். ஒரு ச்லோகம் பக்தர்களுக்கு மதுரமாயும் அயலாருக்கு அதட்டலாயும் இருக்கும்.

வாழ்த்துகிற வேளையிலே வாணிதலை மலர்ச்செண்டில்
வழிகின்ற மதுபோலே வருமெனது கவிதைரசம்
உலகத்தின் தாயாரே ! உன் பண்பில் ஊன்றியவர்க்
குகப்புதரும் மற்றவர்க்கோ உள்ளச்சம் உண்டாக்கும்.

—★—

15. பரிசைத் தேடும் பகவான்

अम्ब त्वद्गुणलेशपेशलमिदं डिम्भस्य मे जल्पितम्
साकं लोकपतिस्त्वया निशमयन्नाकं विधातुः पदम् ।
मोक्षं चाननुरूपमेव गणयन् मोदान्महोदारधीः
मन्ये सम्प्रति पारितोषिकमसावन्वेषयन्मे हरिः ॥ १५

அம்ப த்வத்குணலேஶபேஶலமிதம் டிம்பஸ்ய மே ஜல்பிதம்
ஸாகம் லோகபதிஸ்த்வயா நிஶமயந்நாகம் விதாது: பதம்।
மோக்ஷம் சாநநுரூபமேவ கணயந் மோதாந்மஹோதாரதீ:
மந்யே ஸம்ப்ரதி பாரிதோஷிகமஸாவந்வேஷயந் மே ஹரி: ॥ 15

अम्ब - அம்மா !
त्वत्-गुण-लेश-पेशलं - உன் குணங்களோடு சிறிது கலந்து அழகானதும்
डिम्भस्य - குழந்தையான
मे - என்னுடைய
जल्पितं - உளறலுமான
इदं - இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தை
त्वया साकं - உன்னோடு கூட
निशमयन् - கேட்டு
लोकपतिः - ஜகந்நாதன்
पदं - ஸ்தானத்தையோ
मोक्षं च - மோக்ஷத்தையுமோ கூட
अननुरूपं एव - தகாததாவே
गणयन् - எண்ணி
मोदात् - மகிழ்ச்சியாலே
महोदारधीः - மிகவும் வள்ளலான அறிவுடைய
असौ - இந்த
हरिः - ஹரியானவர்
सम्प्रति - தற்பொழுது
अन्वेषयन् - தேடுகிறவர்
मन्ये - (என்று) நினைக்கிறேன்.

அம்மா ! உன் குணங்களோடு லேசாகக் கலந்திருப்பதாலே, குழந்தையான என் பேத்தலைக்கூட, உன்னோடு கூடக் கேட்டு ஜகந்நாதன் மகிழ்கிறார். ஸ்வர்க்கத்தையோ ப்ரஹ்மலோகத்தையோ மோக்ஷத்தையோ கூட இதற்குத் தகுந்த பரிசாகாததாக எண்ணி, இப்போது எனக்கொரு பரிகப் பொருளைத் தேடிக்கொண்டிருக்கிறார் மஹா வதான்யரான இந்த ஹரி என்று நான் நினைக்கிறேன்.

த்வயா ஸாகம் : உன்னோடு கூட இருக்கும்போது அவருக்கு எல்லாவற்றிலும் மனமகிழ்ச்சி உண்டாகும். அதனால் என் லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தைக் கேட்டு மனமகிழ்கிறார். அந்த மகிழ்ச்சிக்குக் காரணம் என் தகுதியோ என் காவியத்தின் சிறப்போ அன்று. வேறு மூன்று காரணங்கள். அதில் உன் குணம் கலந்திருப்பது முதல் காரணம். செல்லக் குழந்தையான நான் மழலை போல் பேத்துவது இரண்டாவது காரணம். நீ அருகில் இருக்கும்போது மூன்றாவது காரணம். இந்த மூன்று காரணங்களால் மோதம் உண்டாகிறது அவருக்கு.

அநநுரூபம் : பொருந்தாதது. இந்த்ரலோகம், ப்ரஹ்மலோகம், ஸ்ரீ வைகுண்டம், எதுவுமே இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரத்துக்கு ஈடான பரிசாகாது. இவ்வாறு அவர் நினைப்பதற்குக் காரணம் காவியத்துச் சிறப்பு என்னமாட்டேன். வேறு இரண்டு காரணங்கள். அவர் மஹோதாரர். ஒரு சின்ன அஞ்ஜலிக்கே கூட ஸர்வஸ்வத்தையும் பதிலாகத் தருபவர். (அஞ்ஜலி வைபவம் என்கிற நூலில் காணலாம்). போதாக்குறைக்கு நீ வேறு கூடவே இருக்கிறாய். நீயோ ஒரு அஞ்ஜலிக்கே பரமபதத்தைக் கொடுத்தும் போதாதென்று நினைப்பவள் என்று ப்ரஸித்தி. (ஐஶ்வர்யம் அக்ஷரகதிம் பரமம் பதம் வா என்று தொடங்கும் ஸ்ரீ குணரத்நகோஶம் காண்க). நீ அருகில் இருந்தால் உன் பதியின் ஔதார்யம் அதிகமாகும். இப்படியாக அவரே மஹோதாரராக இருப்பதும் மஹோதாரையான உன் பக்கத்தில் இருப்பதும் அவரை இப்படி எண்ணவைக்கின்றன. எனக்கு என்ன பரிசு தரலாம் என்று தேடுகிறார் போலும்.

மந்யே :- இது என் உத்ப்ரேக்ஷை. உண்மையன்று. உண்மையில் மோக்ஷத்திலும் மேம்பட்ட பரிசு உண்டோ?

உன் குணத்தின் வேஶத்தால் உலகரசன் இதைக் கேட்டு
உவகையுடன் உன்னோடே உசிதம் தரத் தேடுகிறான்.
வாரிஜையின் இத்துதிக்கு வானுலகம் போதாது.
வைகுண்டம் போதாது. வாரி எதை வழங்கிடலாம்

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

16. காமதேனுவின் பால் குடிக்கக் கூலி கேட்பவன்

समस्तगुणशेवधेरमृतकल्पसूक्तेस्तव
स्तवस्य परिशीलनात् फलमुपैति यः प्रार्थितम् ।
लभेत यदि वेतनं सुरभिदुग्धदोहाज्जनः
स काममुपमीयते जननि तेन नैवेतरः ॥ १६

ஸமஸ்தகுணஶேவதேரம்ருதகல்பஸூக்தேஸ்தவ
ஸ்தவஸ்ய பரிஶீலநாத் பலமுபைதி ய: ப்ரார்த்திதம் ।
லபேத யதி வேதநம் ஸுரபிதுக்ததோஹாஜ்ஜந:
ஸ காமமுபமீயதே ஜநநி தேந நைவேதர: ॥ 16

जननि = தாயே

समस्त-गुण-शेवधेः = எல்லா குணங்களுக்கும் இருப்பிடமானவளும்

अमृत-कल्प-सूक्तेः = அமுதம் போன்ற நல்ல பேச்சு கொண்டவளுமான

तव = உன்னுடைய

समस्त-गुण-शेवधेः = எல்லா குணங்களுக்கும் இருப்பிடமானதும்

अमृत-कल्प-सूक्तेः = அம்ருதம் போன்ற நல்லுரையுமான

स्तवस्य = (லக்ஷ்மீ ஸஹஸ்ரம் என்ற) ஸ்தோத்ரத்தின்

परिशीलनात् = ஆய்வு மூலமாக

यः = எவனொருவன்

प्रार्थितं = விரும்பிய

फलं = பலனை

उपैति = பெறுகிறானோ

सः = அவன்

सुरभि-दुग्ध-दोहात् = காமதேனுவின் பாலைக் கறப்பது மூலம்

वेतनं = கூலியை

जनः = ஒரு ஜநம்

यदि लभेत = பெறுவானானால்

तेन = அவனோடு

कामं = நன்றாக

उपमीयते = ஒப்பிடப்படுகிறான்

इतरः = வேறு யாரும்

न एव = கிடையவே கிடையாது

ஜநநியே ! நீ அருள், பொறுமை, அழகு, முதலிய எல்லாக் குணங்களோடும் கூடியிருப்பது போன்று இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரமும் இனிமை, தெளிவு, அர்த்த புஷ்டி முதலிய எல்லாக் குணங்களோடும் கூடியிருக்கிறது. நீ அம்ருதம் போன்ற இனிய பேச்சு கொண்டிருப்பது போன்று இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரமும் அமுதம் போல் இனிய ஸூக்திகளைக் கொண்டுள்ளது. உன் ஸ்தோத்ரத்தைப் பரிசீலிப்பதற்கோ அனுஸந்திப்பதற்கோ வேறு பயனை நாடத் தேவையில்லை. அது ஸ்வயம் போக்யமானது. இருந்தாலும் இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தின் மூலமாக வேறு பயனை நாடிப் பெறுவோரும் உண்டு. அவர்கள் யாரைப் போன்றவர் என்றால், காமதேனுவிடம் பால் கறக்கப் போனவனுக்குக் கறவைக் கூலியும் கிடைத்தால் அவனைப் போன்றவன் இந்தப் பேர்வழி. வேறுயாரும் இப்படி இல்லை.

ஸமஸ்தகுணஸேவதே :- எல்லா நற்குணங்களுக்கும் வைப்பிடமானவள். இவளிடம் இல்லாத குணத்துக்கு நற்குணம் என்ற பேரே கிடையாது. யத் லோகே ஸதித்யுச்யதே தத்ஸர்வம் த்வததீநமேவ என்று விளக்குவார் இக்கருத்தைக் கூரத்தாழ்வார். உன் பொறுமையை வர்ணிக்க க்ஷாந்திஸ்தபகமும், உன் அழகை வர்ணிக்க ஸௌந்தர்யஸ்தபகமும், உன் கருணையை வர்ணிக்க காருண்யஸ்தபகமும், உன் மாங்கள்யத்தை வர்ணிக்க மாங்கல்யஸ்தபகமும், உன் இறையாண்மையை வர்ணிக்க ஐஶ்வர்ய ஸ்தபகமும், உன் கொடையாண்மையை வர்ணிக்க ஔதார்ய ஸ்தபகமும் என்று இயற்றிவந்த நான் இப்படி எல்லாம் மாளாது என்றல்லவா ஸமஸ்த குணவிஸ்தார என்று ஒரு ஸ்தபகத்தையே தொடங்கினேன்? ஸேவதே: குணங்களின் நிதி நீ. குணங்கள் ரத்தினங்கள் பொளிருக்க நீ அவற்றின் பேழை போல, கருவூலம் போல. இதனாலன்றோ பூர்வாசார்யர்களுள் ஒருவர் ஸ்ரீ குணரத்நகோஶம் என்ற துதி

நூலை இயற்றினார்? ஸமஸ்தகுணஸேவதே: ஒரு காவியத்துக்கு இருக்க வேண்டிய குணங்கள் எவ்வெவையென்றால், ஶ்லேஷ: ப்ரஸாதஸ் ஸமதா மாதுர்யம் என்றிவ்வாறாக ஆலங்காரிகர்கள் கணக்கிட்டு வைத்திருக்கிறார்கள். அந்தக் குணங்கள் எல்லாவற்றுக்கும் நிதியானது இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ர காவ்யம்.

அம்ருதகல்பஸூக்தே: தாயார் லக்ஷ்மீயின் வாக்கு அம்ருதம் போல. இதற்குப் பல காரணங்கள். அம்ருதம் இனிப்பது போல அவள் வாக்கும் இனிக்கும். அம்ருதம் புஷ்டியும் ஆரோக்யமும் தருவது போல அவள் வசனமும் ஹிதம் பண்ணும். அம்ருதம் தேவர்களுக்கு மட்டும் கிடைப்பது போல அவளுடைய புருஷகாரவசனமும் ஶரணாகதர்கள் என்கிற பாக்யஶாலிகளுக்கு மட்டுமே கிடைக்கும். அம்ருதம் உயிர்ப்பிப்பது போல அவள் ஸூக்தியும் ப்ராணாத்ம ஸஞ்ஜீவநியாயிருக்கும். நமக்கு அநுகூலமாக அவள் பகவானிடம் கூறும் பரிந்துரை நமக்கு அம்ருதகல்பமானது. இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தில் திருமகளைப் புகழ்ந்து பேசிய ஆயிரக்கணக்கான புகழ்ச்சிகளில் இது கடைசியானது என்பதால் மிக முக்கியமானது. அம்ருதகல்பஸூக்தே: இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரம் என்கிற என்னுடைய ஸூக்தி அம்ருதம் போல விபுதபோக்யமானது. அம்ருதம் போல அதிமதுரமானது.

பரிஶீலநாத் இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தைச் சும்மா படித்தால் போதாது. பாராயணம் பண்ணினால் போதாது. அர்த்தங்களைப் பரிஶீலிக்க வேண்டும். ப்ராஸங்களையும் ஶ்லேஷங்களையும் சித்ரங்களையும் ஆராய்ந்தறிய வேண்டும்.

பலமுபைதி : விரும்பிய பலனைப் பெறலாம் இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரபரிஶீலநத்தால். கண்பார்வை இழந்தவர் கண்பார்வை பெறலாம். (இந்தக் கவியே இதன்மூலம் கண் பார்வை பெற்றதாக ஒரு செவிவழிச் செய்தி நிலவி

வருகிறது). விவாஹப்ராப்தி ஸத்புத்ரப்ராப்தி மங்களாவாப்தி என்று பல பலன்களைப் பெறலாம். இப்படி விரும்பும் பலனை கூலிக்கு நேராக இந்த ஶ்லோகத்தில் கூறி இடித்துரைத்தாலும், பலன்கள் கிடைக்கும் என்பதை மறுப்பதற்கில்லை.

உபமீயதே : இந்த உவமைமாலையில் நாலு அடுக்குகள். 1. காமதேனு போல லக்ஷ்மியும் லக்ஷ்மீ ஸஹஸ்ரமும், 2. அதன் பால் போல அவள் அருளும் லக்ஷ்மீ ஸஹஸ்ர காவியச் சுவையும். 3. கறப்பவன் போல லக்ஷ்மீ பக்தனும் லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தை வாசிப்பவனும், 4. கூலி போல சிலவான பலன்கள்.

காமம் : இந்த நாலு உவமைகளும் கச்சிதமாகப் பொருந்துவதை ரசிக்க வேண்டும். காமதேனு நினைத்ததைக் கொடுக்கும். நிறையவாய்க் கொடுக்கும். நிச்சயம் கொடுக்கும். விரைவாய்க் கொடுக்கும். இந்தக் காரணங்களால் லக்ஷ்மியும் லக்ஷ்மீ ஸஹஸ்ரமும் காமதேனுவைப் போல். பசுவிடம் இயற்கையாகவே பால் சுரப்பது போல லக்ஷ்மியிடம் இயற்கையாகவே அருள் சுரக்கிறது. லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தில் இயல்பாகவே சுவை ததும்புகிறது. பசும்பால் இனிமையும் புஷ்டியும் கொண்டது போல, லக்ஷ்மி ஸுகத்துக்கும், ஹிதத்துக்கும் ஹேதுவாகிறாள். லக்ஷ்மீ ஸஹஸ்ரம் ரஸிப்பதற்கும் புருஷார்த்தத்துக்கும் ஹேதுவாகிறது. கறவைப் பசுவிடமிருந்து பால், கறப்பவனிடம் வருவது போல லக்ஷ்மியிடமிருந்து அருள் பக்தனிடம் வந்தடைகிறது. லக்ஷ்மீ ஸஹஸ்ரத்திலிருந்து சுவை ரஸிகனிடம் வந்தடைகிறது. கறப்பதற்கு முயற்சி தேவைப்படுவது போல லக்ஷ்மி க்ருபைக்கும் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே என்கிற கணக்கில் வ்யாஜமாத்ரமாகவேனும் புருஷப்ரயத்நம் தேவை. லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தை ரஸிப்பதற்கும் உரை நூலைப் படிப்பது, வித்வான்களிடம்

அர்த்தம் கேட்பது, போன்ற முயற்சிகள் நன்றாம். கூலி பாலை விட அற்பமானது போல, லக்ஷ்மீக்ருபையோ லக்ஷ்மீ ஸஹஸ்ர பரிசீலனமோ தரக் கூடிய பலன்களை விட நாம் ப்ரார்த்திக்கும் பலன்கள் அத்யல்பமாயிருக்கும். இப்படியெல்லாம் சொல்லிப் பார்த்து உவமைப் பொருத்தத்தை ரசிக்க வேண்டும்.

நேதர: - லக்ஷ்மீ ஸஹஸ்ரத்திலிருந்து சிறு பலன்களைக் கேட்டுப் பெறுபவனுக்கு ஒப்பானவன் வேறு யாருமில்லை. எதைக் கேட்டாலும் தரவல்ல காமதேனுவிடம் கறப்பதற்குக் கூலி கேட்பவன் மட்டுமே இவனுக்கு இணையானவன். அசட்டுத்தனத்தில் இணையானவன். காமதேனுவையே பார்த்திராதவன், காமதேனுவிடமிருந்து பெரும்பலன்கள் பெற்றவன், காமதேனுவிடம் பால் கறக்கக் கூலி கேட்காதவன், இவர்களெல்லாம் இந்த அசட்டுக்கு இணையாக மாட்டார்கள்.

அளைத்துக்குணமிக்க அமுதம் அளையவிதில்
அளைந்து பருகுங்கள் அபீஷ்டம் அடையுங்கள்.
கரபிப்பகவின் பால் கரக்கின்ற பால் கறக்க
கவல்பக் கூலி வரில் சுகத்தோ டது பெறுங்கள்.

—*—



वचसा मधुरेणैव रम्यमास्यं विभूष्यते ।
उ□ानमिव पुष्पेण सौरभाढ्येन पेशलम् ॥

மணமிக்க பூவால் தோட்டம் இனிது மணப்பதுபோல் இனிய பேச்சால்தான் வாய் மணக்கிறது.

व्यथां विधाय पूर्वाह्णे जाल्मोऽन्यस्य सुदुःखदाम् ।
पराह्ण एव तां पश्यत्यात्मन्येव निपातिताम् ॥

துஷ்டன் முற்பகலில் பிறருக்குத் துன்பம் விளைவிப்பான். பிற்பகலில் அத்துன்பம் தன்மேல் விழுந்து அழுத்துவதைக் காண்பான்.

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

17. பாடிப் பலன் பெறலாம்

सानन्दं ये सरसमनसस्स्वादु लक्ष्मीसहस्रम्
जेगीयन्ते जगति जनितश्रीनिवासप्रसादम् ।
शान्तत्रासां विततिममितां शर्मणां निर्मिमाणा
तेषामेषा विहरतितरामिन्दिरा मन्दिरेषु ॥ १७

ஸாநந்தம் யே ஸரஸமநஸஸ்ஸ்வாது லக்ஷ்மீஸஹஸ்ரம்
ஜேகீயந்தே ஜகதி ஜநிதஸ்ரீநிவாஸப்ரஸாதம் ।
ஶாந்தத்ராஸாம் விததிமமிதாம் ஶர்மணாம் நிர்மிமாணா
தேஷாமேஷா விஹரதிதராமிந்திரா மந்திரேஷு ॥ 17

जनित-श्रीनिवास-प्रसादं - ஸ்ரீநிவாஸரின் அனுக்ரஹத்தை உண்டுபண்ணுகிற
लक्ष्मीसहस्रं - லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தை
ये - எவர்கள்
जगति - உலகத்தில்
सरस-मनसः - ரஸத்தோடு கூடின மநஸ் உடையவர்களாய்
सानन्दं - மகிழ்ச்சியோடு
स्वादु - இனிமையாக
जेगीयन्ते - மீண்டும் மீண்டும் பாடுகிறார்களோ
मन्दिरेषु - வீடுகளிலே
एषा - இந்த
इन्दिरा - லக்ஷ்மியானவள்
शर्मणां - சுகங்களுடைய
अमितां - அதிகமான
विततिं - பரப்பை
शान्त-त्रासां - பயம் நீங்கியதாக
निर्मिमाणा - அமைக்கிறவளாய்
विहरतितरां - மிகவும் விளையாடுகிறாள்

இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தைப் பாடினால், மறுபடி மறுபடிப் பாடினால், ஸ்ரீநிவாஸனின் அனுக்ரஹம் கிட்டும். பாடும்போதே மகிழ்ச்சி கிடைக்கும். மனதில் கவை ததும்பும். ருசிகரமாயிருக்கும். அச்சம் நீங்கும். க்ஷேமங்கள் அதிகமாகும். இந்தப் பலன்களையெல்லாம்

லக்ஷ்மி அமைத்துத் தருவாள். பாடுபவர்களின் இல்லங்களில் லக்ஷ்மி புகுந்து விளையாடுவாள்.

ஸாநந்தம் - மகிழ்ச்சியோடு பாடுவது ஏனென்றால், இதிலுள்ள மெட்டுகளும், ப்ராஸங்களும், பாடுபவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாலாம்.

ஸரஸமநஸ: - மனசில் ரஸம் ததும்புவது ஏனென்றால், இதிலுள்ள ஸ்லேக்ஷமார்த்தங்களும் வேடிக்கைகளும் மனதில் சுவையைக் கூட்டுவதாலாம். இதனால் பெறப்போகும் பெரும்பலன்களை எண்ணிப் பார்ப்பதாலுமாம்.

ஸ்வாது - லக்ஷ்மீ ஸஹஸ்ரம் இனிய காவ்யம். இதை இனிமையாகப் பாடுவர்க்கு நிறைய பயன்கள்.

ஜேகீயந்தே - ஒருமுறைக்குப் பலமுறையாகப் பாடுகிறார்கள். மீண்டும் மீண்டும் பாடுகிறார்கள். பாடுவதே இன்பம் தருவதாலும், பாட்டுக்குப் பலன் கிடைப்பதாலும்.

ஜகதி - பாடுபவர்க்கு மட்டுமின்றி கேட்பவர்க்கும், ஆமோதிப்பவர்க்கும், ஏற்பாடு பண்ணுபவர்க்குமாக, பலருக்கும் பலன் கிடைப்பதால், உலகில் ஸ்ரீநிவாஸ ப்ரஸாதம் ஏற்படுகிறது.

ஸ்ரீநிவாஸ ப்ரஸாதம் - திருவேங்கடமுடையானின் திருவருள். லக்ஷ்மியின் வாஸத்தால் ஏற்படும் அனுக்ரஹம் என்று இரண்டு அர்த்தங்களும் பொருந்தும். லக்ஷ்மியைத் துதித்தால் ஸ்ரீநிவாஸனுக்கு ப்ரீதி. அழகிய கவிதையைப் பாடினால் கவிம் புராணம் என்று பாடப்பட்டவனுக்கு ப்ரீதி.

ஶாந்தத்ராஸாம் - பொதுவாக இன்பம் பரவும் இடத்திலெல்லாம் த்ராஸமும் இருக்கும். இந்த இன்பம் எப்போது பறிபோகுமோ என்ற அச்சமும், தனது சுகம் இன்னொருவரது துக்கத்தோடு கலந்தது என்கிற பயம் ஏற்படுவது வழக்கமாயிருக்க, லக்ஷ்மீ கடாக்ஷத்தால் வந்த க்ஷேமத்துக்கு மட்டும் துக்கம் கலவாமை என்கிற சிறப்பு இருக்கிறது.

அமிதாம் - கொஞ்சநஞ்சமன்று. அமோகமான ககம்.

விததிம் - தனக்கு மட்டுமாகக் குறுகியதன்று. ஸகுடும்பமாக அடையும் க்ஷேமம். ஒரு விதமாகக் குறுகாமல், ஆயுராரோக்யம் ஐஸ்வர்யம் என்று பல படிகளில் பரந்த க்ஷேமம்.

நிர்மிமாணா - நிர்மாணம் பண்ணுபவள். புதிது புதிதாக அமைத்துத் தருபவள்.

விஹரதிதராம் :- லக்ஷ்மி இல்லத்தில் விளையாடியதால் தான் லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தைப் பாடுகிற நல்லெண்ணம் ஏற்பட்டது. பாடியதன் பலனாக லக்ஷ்மியின் விஹாரம் மேலும் அதிகரிக்கிறது.

இருநிலத்தில் இறையவனின் இன்னருளை இருப்பிக்கும்
இலக்குமியின் ஸஹஸ்ரத்தை இனிமையுடன் இசைப்பவரின்
இல்லத்தில் இந்திரையாள் இன்பத்தைப் பொழிந்தச்சம்
இல்லாத க்ஷேமத்தை ஈந்து விளையாடுகிருள்.

—*—

18. படியுங்கள் பலன் பெறுங்கள்

पौत्रेणात्रेयगोत्राभरणनयाचणश्रीनिवासाध्वरीन्दोः
श्रीमद्रामांघ्रि भक्तिप्रमुदितरघुनाथार्ययज्वात्मजेन ।
वेदान्ताचार्यपादाम्बुज विहितहृदा वेङ्कटार्येण क्लृप्तम्
रम्यं लक्ष्मीसहस्रं पठत दृढतरं नित्यकल्याणकामाः ॥ १८

பௌத்ரேண ஆத்ரேயகோத்ராபரண நயசண ஸ்ரீநிவாஸாத்வரீந்தோ:
ஸ்ரீமத்ராமாங்க்ரிபக்திப்ரமுதித ரகுநாதார்ய யஜ்வாத்மஜேந ।
வேதாந்தாசார்ய பாதாம்புஜ விஹிதஹ்ருதா வேங்கடார்யேண க்லுப்தம்
ரம்யம் லக்ஷ்மீஸஹஸ்ரம் படத த்ருடதரம் நித்யகல்யாணகாமா: ॥ 18

इति अस्तोकाध्वरि कवि घटाम्बु वादिहम्साम्बुद वेङ्कटाचार्यकृतिषु
लक्ष्मीसहस्रे फलस्तबकः सम्पूर्णः ।

आत्रेय-गोत्र-आभरण-नय-चण-श्रीनिवास-अध्वरि-इन्दोः - ஆத்ரேய கோத்ரத்துக்கு அணிகலனும் ந்யாயநிபுணருமான ஸ்ரீநிவாஸர் என்ற யஜ்வ சந்த்ரரின்

पौत्रेण - மகனின் மகனும்

श्रीमत्-राम-अङ्घ्रिद्वन्द्व-भक्ति-प्रमुदित-रघुनाथार्य-यज्व-आत्मजेन - ஸ்ரீராமர் திருவடியில் பக்தியால் மகிழ்ந்த ரகுநாதார்யர் என்னும் மகியின் புத்ரனும்

वेदान्ताचार्य-पादाम्बुज-निहित-हृदा - வேதாந்ததேசிகனின் திருவடித் தாமரையில் வைக்கப்பட்ட இதயத்தைக் கொண்டவருமான

वेङ्कटार्येण - வெங்கடார்யன் என்பவரால்

क्लृप्तं - இயற்றப்பட்டதும்

रम्यं - அழகானதுமான

लक्ष्मीसहस्रं - லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தை

नित्य-कल्याण-कामाः - எப்போதும் மங்களத்தை விரும்புபவர்களே !

दृढतरं - மிகவும் உறுதியாக

पठत - படியுங்கள்.

இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தை எழுதிய வெங்கடாத்வரி என்பவர் ஸ்ரீநிவாஸாத்வரியின் குமாரரான ரகுநாதாத்வரியின் குமாரர் ஆவார். ஆத்ரேய கோத்ரத்துக்கே அணிகலனாகவும் ந்யாய ஶாஸ்த்ரத்தில் நிபுணராகவும் இருந்தவர் ஸ்ரீநிவாஸாத்வரி. இவருடைய குமாரரான ரகுநாத யஜ்வா ஸ்ரீ ராமபக்தர். இவருடைய குமாரரும் லக்ஷ்மீ ஸஹஸ்ரகர்த்தாவுமான வெங்கடாத்வரி வேதாந்த தேசிகனின் பாதாம்புஜத்தில் மனம் வைத்தவர். இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரம் ரம்யமானது. எப்போதும் மங்களத்தை விரும்பபவர்களே ! இதைப் படியுங்கள்.

ஆத்ரேய.... ஒருவருக்குப் பெருமை குலத்தாலோ ஜ்ஞானத்தாலோ அநுஷ்டானத்தாலோ வரக் கூடும். இந்த மூன்றாலும் பெருமை பெற்றவர் ஸ்ரீநிவாஸாத்வரி. இதை ஆத்ரேயகோத்ராபரணம், ந்யாயநிபுணர், அத்வரிகளுக்குள்

சந்த்ரன், என்ற மூன்று அடைமொழிகளால் காட்டுகிறார்.

நிஹிதஹ்ருதா தினமும் வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம், ஸதா ஹ்ருதி என்ற தனியனினால் ப்ரார்த்திக்கிறபடி தேசிகனைத் த்யானிக்கிற மனம் கொண்டவர். வெங்கடாத்வரியுடைய தந்தைக்கு ராமபக்தி அதிகம் என்றால் இவருக்கு தேசிக பக்தி அதிகம்.

தானே யாகங்கள் பண்ணியிருப்பதைச் சொல்லிக் கொள்ளாமல் தம் தந்தையாரும் பாட்டனாரும் பண்ணினதை மட்டும் சொன்னது, பணிவு காரணமாகவும், ஸ்ரீ பாஷ்யகார தேசிகாதி ஸாம்யம் கூறும் காரணமாகவுமாம்.

ரம்யம் - ப்ராஸத்தாலும் ஶ்லேஷையினாலும் சித்ரத்தாலும் அலங்காரத்தாலும் அழகியது. நித்யமங்களகாமர்கள் இதைப் படிக்க வேண்டும்.

த்ருடதரம் - என்பதை இரண்டு இடங்களில் அன்வயிக்கலாம். உறுதியாக, அசங்காமல், நித்ய கல்யாணம் வேண்டுபவர், உறுதியாக (தயக்கமில்லாம்) லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தைப் படியுங்கள்.

ஆத்ரேய கோத்ரத்தின் ஆபரணம் போன்றவொரு
ஆசானின் மகன் மகனார் ஆக்கியவிவ் வாயிரத்தை
ஆடாத மங்களத்தில் ஆசையுடை யாரெல்லாம்
ஆதரித்துப் படியுங்கள், அபீஷ்டத்தை அடையுங்கள்.

—*—

நாவல்பாக்கம் அக்நிஹோத்ரம் நாராயணதாதயார்ய மஹாதேஶிகனிடம் கேட்டறிந்து நாவல்பாக்கம் கண்ணன் என்கிற யஜ்ஞ தாததேசிகன் எழுதிய லக்ஷ்மீஸஹஸ்ர உரையில் பலஸ்தபகம் (ஶரணாகதி ஸ்தபகம்) முற்றும்.

லக்ஷ்மீ ஸஹஸ்ரம் ஸம்பூர்ணம்.

॥ श्रीः ॥

श्रियै नमः

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

ஸம்பாதகரின் குறிப்பு: ஸ்ரீ அரசாணிப்பாலை வேங்கடாத்வரி மஹாகவியால்அருளப் பட்ட பரம மங்கள காவ்யமான ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தின் வ்யாக்யானம் 1992 ஆங்கீரஸ வர்ஷம் சித்திரை மாதம் ஸ்ரீ வீராபுரம் ஶடகோபாசார்யரின் தமிழ் உரையுடன் நம் பாதுகையில்வெளியிட ஆரம்பிக்கப் பெற்றது. மொத்தம் 25 ஸ்தபகங்கள் அடங்கிய இந்த அத்புதமான காவ்யம் 15 ஸ்தபகங்கள் வெளியிடப் பட்டிருந்த நிலையில் ஸ்ரீ வீராபுரம் ஶடகோபாசார்யர் ஸ்வாமி பரமபதித்தார். 2002 செப்டம்பர் சித்ரபானு புரட்டாசி மாதம் மூதல் இந்த வ்யாக்யானத்தை நாவல்பாக்கம் ஸ்ரீ உ வே கண்ணன் என்கிற யஜ்ஞ தாதாசார்யர் பரமக்ருபையுடன் நம் ப்ரார்த்தனையை ஏற்று வாசகர்கள் அனைவரும் கொண்டாடி மகிழும்படி அத்யத்புதமாக வ்யாக்யானம் செய்து சென்ற இதழில் நம் பாதுகையில் ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ர வ்யாக்யானத்தை பூர்த்தி செய்தார். ஸ்ரீ. உ.வே. நாவல்பாக்கம் கண்ணன் ஸ்வாமி ஹைதராபாத் யூனிவர்சிடியின் துணைவேந்தர். மிகப் பெரிய பொறுப்பில் உள்ளவர். பரிபூர்ண அனுஷ்டாதா. மஹா பண்டிதர். ஆத்மகுணமூள்ள மஹான்களுக்கு நிதர்சனமான உதாஹரண புருஷர். தளும்பாத நிறைகுடம். ஏராளமான கடமைகளின் கமைக்கு இடையில் தவறாமல் நமக்கு இந்த உரையைத் தயாரித்து அனுப்பி மஹா பெரிய உபகாரம் செய்துள்ளார். இந்த ஸ்வாமிக்கு எத்தனை தன்யவாதங்கள் ஸமர்ப்பித்தாலும் நிச்சயமாகப் போதாது. இவர் எழுதி வந்த உரையின் அருமை சொல்லி மாளாது. உரை எழுதுவதற்கு இந்த உரையைக் கொண்டுதான் இலக்கணம் வகுக்க வேண்டும் என்று கூட அடியேனுக்குத் தோன்றுகிறது. இந்த லக்ஷ்மீஸஹஸ்ர உரையை

வாசித்தால் ஆனந்தப் படாதவர்களோ வியக்காதவர்களோ கிடையாது. மீண்டும் ஸ்ரீ நாவல்பாக்கம் கண்ணன் ஸ்வாமிக்கு அநேக தன்யவாதங்களையும் மங்களாஶாஸனங்களையும் ஸமர்ப்பிக்கிறோம். நம் பாதுகையில் நிச்சயமாக தொடர்ந்து பல நல்ல விஷயங்களை அளித்து வருவார் என்று வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். இன்னொரு விஷயம். இந்த உரையை முதலில் ரத்னப்ரபா என்ற பெயரிட்டு 1992 ல் நம் பாதுகையில் வெளியிடத் தொடங்கிய ஸ்ரீ வீராபுரம் ஶடகோபாசார்யர் 2002 ல் பரமபதிப்பதற்கு சில தினங்களுக்கு முன் அத்தனை தள்ளாமையிலும் அடியேனிடம் ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தின் கடைசி ஸ்தபகமான ஶரணாகதிஸ்தபகத்தின் உரையை எழுதித் தந்தார். இதனை பாதுகாத்து வைத்திருந்தேன். சென்ற இதழில் நாவல்பாக்கம் ஸ்ரீ கண்ணன் ஸ்வாமி இந்த ஸ்தபகத்திற்கும் உரையை முடித்துள்ளார். ஆயினும் ஸ்ரீவீராபுரம் ஶடகோபாசார்யர் ஸ்வாமி கடைசியாக அடியேனிடம் கொடுத்த இந்த ஸ்தபகத்தின் உரையையும் வெளியிட உத்தேசித்து இரண்டு மூன்று மாதங்களில் பூர்த்தி செய்ய எண்ணியுள்ளேன். ஆதலால் ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தின் 25 ஆவது ஸ்தபகமான ஶரணாகதிஸ்தபகம் மீண்டும் தொடர்கிறது.

ஶரணாகதி ஸ்தபக:-25

शरणागति स्तबकः-25

दुग्धां दुग्धाम्बुधेः पुत्रि ! दुरितापहरा मम ।
शार्ङ्गिणः चरणाम्भोज शरणागति संपदम् ॥

துக்தாம் துக்தாம்புதே: புத்ரி ! துரிதாபஹரா மம ।
ஶார்ங்கிண: சரணாம்போஜஶரணாகதிஸம்பதம் ॥ 1

துக்தாம்புதே: புத்ரி ! - பாற் கடலின் பெண்ணே !
மம - என்னுடைய
துரித்தாபஹரா - பாபத்தைப் போக்குபவளாய்
சார்ங்கிண: - நாராயணனுடைய
சரணம்போஜ - திருவடித் தாமரைகளில் செய்யும்
சரணாகதி - ப்ரபத்தி என்னும்
ஸம்பதம் - செல்வத்தை
துக்தாம் - மூடித்துவைப்பாயாக

தாம் செய்த பாபங்கள் அனைத்தையும் மறந்து நாராயணனடிக் கீழ் சேர்ப்பிக்கத் தாயை இந்த ஸ்தபகத்தில் ஶரணம் புகுகின்றாராதலின் இது ஶரணாகதி ஸ்தபகம் எனப் பெயர் பெற்றது.

உலக மக்கள் யாவரும் இலக்குமி நாராயணர்களின் மக்களே. அவர் அனைவரையும் காத்து மோக்ஷமளிக்கத் தயாராகவுள்ளனர். இருப்பினும் அவரவர் செய்யும் பாபம் மோக்ஷமளிக்கத் தடங்கலாகவுள்ளது. எனவே ஆசார்யனை அணுகி அவர் மூலமாக உலகத்தாயிடம் ஶரணாகதி செய்தால் அவர் நம்மீது தயை கொண்டு நம்மை மன்னிக்கும்படி நாராயணனிடம் வேண்டுவள். அதன்பின் நாராயணனைத் தஞ்சம் புகுந்தால் அவன் நமது பாபத்தை மன்னித்து அளவிலா ஆநந்தமயமான மோக்ஷத்தை அளிப்பான். அதனைப் பெற ஶரணாகதி வழி கோலுவதால் அதுவே பெருஞ் செல்வம் போலாகின்றது. இச்செல்வத்தை நீ அருள வேணுமென வேண்டுகின்றார்.

—★—

धावन्त मुच्चतर दुर्विषयाटवीषु
सारङ्गशावमिव शश्वदपाङ्ग जालैः ।
मामच्युतस्य महिषि ! प्रसभं गृहीत्वा
नित्यं विधेहि युवयोः अनुकूल वृत्तिम् ॥

தாவந்த முச்சதர துர்விஷயாடவீஷு
ஸாரங்க ஶாபமிவ ஶஶ்வதபாங்க ஜாலை: ।
மாமச்யுதஸ்ய மஹிஷி! ப்ரஸபம் க்ருஹித்வா
நித்யம் விதேஹி யுவயுவயோ: அநுகூல வ்ருத்திம் ॥ 2

அச்யுதஸ்ய மஹிஷி - *அச்யுதனின் மஹிஷியே !*
உச்சதர - *அளவிடமுடியாத*
துர்விஷய - *கெட்ட நடத்தையாகிய*
அடவீஷு - *காடுகளில்*
ஶஶ்வத் - *அடிக்கடி*
தாவந்தம் - *ஓடும்*
ஸாரங்க ஶாபமிவ - *மான்குட்டி போன்ற*
மாம் - *என்னை*
அபாங்க - *உனது கடாக்ஷமாகிய*
ஜாலை: - *வலைகளால்*
ப்ரஸபம் - *பலாத்காரமாக*
க்ருஹீத்வா - *பிடித்து மோக்ஷத்தில் சேர்த்து*
நித்யம் - *எப்போதும்*
அநுகூல வ்ருத்திம் - *விருப்பமான கைங்கர்யங்களைச் செய்பவனாக*
விதேஹி - *செய்யக் கடவாய்*

நாராயணன் மனைவியே ! நான் ஐம்பொறிகளுக்கும் அடிமையாகியும் உள்ளேன். ஐந்து பொறிகளும் தத்தமக் குரிய புலன்களில் என்னை விருப்பம் போல் இழுத்துச் செல்கின்றன. ஒவ்வொரு புலனும் ஒவ்வொரு பெருங் காடாம். காட்டின் துன்பமறியாது, மான் குட்டிகள் தமது இஷ்டம் போல் காடுகளில் திரிவது போல் நானும் புலனாம் காடுகளில் விருப்பம் போல் திரிந்து கொண்டிருக்கிறேன். மிகவும் வேகமாகப் பாய்ந்தோடும் தன்மையதல்லவா மான் குட்டியாம் பொறி-அதிலும் புலனாம் பெருங் காட்டில் பாய்வதற்கா கேட்க வேண்டும்? எனவே அதைப் பிடிப்பது எளிதல்ல. உனது கருணையாகிய வலையைக் கொண்டே பிடிக்க வேண்டும். அதிலும் ஒரு வலையைக் கொண்டு பல திசைகளில் திரியும் அதை எப்படிப் பிடிக்கமுடியும்? உனது கடைக் கண் பார்வையாம் ஜாலை: வலைகளால்தான் பிடிக்க முடியும். பல திசைகளில் பல வலைகளை வேயவேண்டும். அப்போதுதான் அது சிக்கும். இப்படி நீ வலைகளை வீசி முயற்சியும் மிகுதியாகச் செய்து பலாத்காரமாகப் பிடித்து

தம்பதிகளான நீவிர் வாழுமிடம் சேர்த்து உங்களுக்கு மனமகிழ்ச்சி தரத் தக்கதாய் உங்களுக்கு விருப்பமான கைங்கர்யங்களை எப்போதும் செய்து வாழும்படியருளி உங்களது விளையாட்டுக் கருவியாக ஆக்கிக் கொள்வாயாக.

—★—

मातर्हिताहित विवेक विहीनमेनं
मन्दं मुकुन्द वरवर्णिनि ! मां जघन्यात् ।
मार्गान्निवर्तयितुमर्हसि मंक्षु माता
कूपे निपित्सुमपि डिंभमुपेक्षसे किम् ? ॥

மாதர் ஹிதாஹித விவேக விஹீந மேநம்
மந்தம் முகுந்த வரவர்ணிநி மாம் ஜகந்யாத் ।
மார்காத் நிவர்தயிது மர்ஹஸி மங்க்ஷு மாதா
கூபே நிபித்ஸு மபி
டிம்பமுபேக்ஷஸே கிம்? ॥ 3

முகுந்தவர வர்ணிநி - முகுந்தனாம் கணவனிடம் பக்தி பூண்ட
மாத: - மூவுலகத்தாயே
மந்தம் - அறிவற்றவனும் ஆதலாலேயே
ஹிதாஹித விவேக விஹீநம் - நல்லதல்லாததை நல்லதாக எண்ணித் தகாதன செய்து கொண்டிருக்கும்
மாம் - என்னை
ஜகந்யாத் - தாழ்ந்ததான
மார்காத் - வழியிலிருந்து
நிவர்தயிதும் - தடுப்பதற்கு
அர்ஹஸி - தகுதியுடையையாகிறாய்
மாதா - தாய்
கூபே - கிணற்றில்
மங்க்ஷு - சீக்கிரத்தில்
நிபித்ஸும் - விழும்தருவாயிலுள்ள
டிம்பம் - குழந்தையை
உபேக்ஷதே கிம் - எடுக்காமலிருப்பளோ?

கணவனான முகுந்தனிடம் மிகவுமன்பு கொண்டவரும் மூவலகுக்கும் தாயாகவுமுள்ள உனக்கு நானும் ஒரு குழந்தையல்லவா? இது நல்லதாதலால் செய்யத்தக்கது, இது நல்லதல்லதாதலால் செய்யத் தகாதது என்ற பகுத்தறிவு குழந்தைக்கு உண்டோ? எனவே உனது

குழந்தையாகிய நானும் நீயதையெல்லாம் நல்லதென வெண்ணித் தப்பாது செய்து வருகிறேன். இப்படிக் கெட்ட வழியில் செல்லும் என்னை அதனின்றும் மாற்றுவது உனது கடமையல்லவா? சற்று நேரத்தில் கிணற்றில் விழவிருக்கின்ற தமது குழந்தையை தாய் எவளேனும் ஓடிச் சென்று அதனைக் காப்பாற்றாமல் வாளாவிருப்பளோ? அங்ஙனமிருப்பளேல் அவள் தாயாவாளோ? எனவே என் தாயாகிய நீ அடியேனைக் காத்து உனதன்புக்குரிய முகுந்தனிடம் சேர்ப்பாயாக.

—★—

विश्वस्य धात्रि भवती परिपास्यतीति
विश्वस्य सम्यगभयन्तु वयं चरामः ।
निश्रेयसं गमय वा निरयं तयेर्वा
कीर्तिं लभस्व यदि वा महती मकीर्तिम् ॥ ४

விஸ்வஸ்ய தாத்ரி பவதீ பரிபாஸ்யதீதி
விஸ்வஸ்ய ஸம்யகபயந்து வயம் சராம: ।
நிஸ்ரேயஸம் கமய வா நிரயம் தயேர்வா
கீர்த்திம் லபஸ்வ யதி வா மஹதீ மகீர்த்திம் ॥ 5

விஸ்வஸ்ய தாத்ரி - உலகத்தாயே
வயம் - உனது குழந்தைகளாகிய நாங்கள்
பவதீ - நீர்
பரிபாஸ்யதி - காக்கவே செய்வீர்
இதி - என்று
ஸம்யக் விஸ்வஸ்ய - உறுதியுடன் நம்பி உம்மைப் பணிந்து
அபயம் - ஸம்ஸார பயமற்றவர்களாய்
சராம: - எங்களிஷ்டம் போல் வாழ்கின்றோம்
நிஸ்ரேயஸம் கமய வா - மோக்ஷத்தையாவது அடைவி அல்லது
நிரயம் நயேர் வா - நரகத்தையாவது அடைவி (அதனால்)
யதி வா - அல்லது
மஹதீம் அகீர்த்திம் - மிகப் பெரிய இகழ்வை யாவது
லபஸ்வ - அடைவாயாக

தாயே நானும் என்போன்ற பிறரும் உனது குழந்தைகள். தாய்க்குத் தம் சேய்களைக் காத்தல் கடமையன்றோ? அதுபோல் குழந்தை செய்யும்

குற்றங்களைப் பொறுப்பதும் அவள் இயல்புதானே. எனவே தாயாகிய நீ கட்டாயம் ஸம்ஸார பயத்தினின்றும் காப்பாய் என்ற உறுதியான எண்ணத்துடன் எங்களுக்குத் தோன்றியவை எல்லாம் செய்து கொண்டு இஷ்டம்போல் வாழ்கின்றோம். எனவே உன் குழந்தைகளாகிய நாங்கள் செய்யும் குற்றங்களை மறந்து மோக்ஷத்தைத் தருவதோ அன்றி குற்றத்தைக் கண்டு சீற்றங் கொண்டு நாகத்தை அடைவிப்பதோ எது வேண்டுமானாலும் செய். ஆனால் ஒன்றுமட்டும் நினை. மோக்ஷத்தைத் தந்தாயேல் பாபிகளையும் காத்தாய் என உன்னை உலகம் போற்றும். நரக மடைவித்தாயேல் தம் குழந்தை என்று கூடப் பாராமல் இப்படியொரு தாய் தண்டிப்பளோ? தாயா அவள்? என உலகம் தூற்றும். எது விருப்பமோ, எது நல்லதெனத் தோன்றுகிறதோ அதை அடையம்மா.

उच्चैः अकृत्रिमगिरः यदि नाब्धि घोषाः
उन्मादिनां फणितयः स्मृतयश्च नोचेत् ।
नारायण प्रणयिनीं नमतो ममा त्वां
नैश्रेयसी न भविता कथमम्ब सम्पत् ॥

உச்சைரக்ருத்ரிம கிர: யதி நாப்தி கோஷா:
உந்மாதிநாம் பணிதய: ஸ்ம்ருதயஶ்ச நோ சேத் ।
நாராயண ப்ரணயிநீம் நமதோ மம த்வாம்
நைஶ்ரேயஸீ ந பவிதா கதமம்ப ஸம்பத் ॥6

அம்ப - தாயே
உச்சை: - உயர்ந்த
அக்ருத்ரிம கிர: - வேதாந்த வாக்குகள்
அப்தி கோஷா: - கடலோசைபோல் பயனற்ற ஓசைகளாக
யதி ந - இல்லாமற் போமேயாகில்
ஸ்ம்ருதய: - கீதை போன்ற ஸ்ம்ருதிகளும்
உந்மாதிநாம் - மதம் பிடித்தவரின்
பணிதய: - வாக்குகளாக
நோ சேத் - இல்லாமற் போமேயாகில்
நாராயண - நாராயணனின்
ப்ரணயிநீம் - மனைவியான
த்வாம் - உன்னை
நமத: - வணங்குகின்ற
மம - எனக்கு
நைஶ்ரேயஸீ ஸம்பத் - மோக்ஷமாம் செல்வம்
கதம் - எப்படி
ந பவிதா - கிடைக்காமற் போம்.

வாரீர் கவியே! நீர் பேசுவனவெல்லாம் கேழ்ப்பதற்கு அழகாகத் தானுள. மோக்ஷமளிக்கும் சக்தி எனக்கில்லையே. நீர் இப்படி என்னை வற்புறுத்தின் நானென் செய்வது? என லக்ஷ்மீ கேழ்ப்பதாகக் கொண்டு விடையளிக்கிறார் இந்த ச்லோகத்தால்.

தாயே பல பல வேதாந்த வாக்யங்கள் நீர் நாராயணனை விட்டுப் பிரியாது அவனுடன் ஒன்றியுள்ளமையால் அவனுக்குள்ள கல்யாண குணங்கள் யாவும் உமக்குமுள்ளனவென ஓதுகின்றனவே! அவ்வாக்யங்களுக்கெல்லாம் பொருளே கிடையாதா? கடலோசைபோல் சத்தம் செய்வதுதான் அவற்றின் பயனா? உமது புகழ்பாடும் பகவத் கீதை போன்ற ஸ்ம்ருதிகளும் மதம் பிடித்தவனின் முறண்பட்ட பேச்சுபோல் பயனற்றவைதானா? அப்படியின்றி அவை உண்மை உரைப்பனவாயின் உலகுக்கு மூல காரணமாயும் மோக்ஷம் விரும்புபவர்களால் த்யானிக்கப்படுபவனுமான நாராயணன் மனைவியாம் உம்மை சரணமாகப் பற்றிய எங்களுக்கு மோக்ஷச் செல்வம் எப்படிக் கிட்டாதுபோம்? அப்படிப் போமேல் மோக்ஷம் தருபவளாக உமது புகழ்பாடுமந்த வேதாந்த வாக்யங்களும் ஸ்ம்ருதிகளும் ஸம்பந்தமில்லாத பேச்சைப் பேசுவனவாக ஆவதால் அவைகளுக்கு எள்ளும் நீரும் விடவேண்டிவரும்.



यदतुच्छमनायासं अनुपाधि गतभ्रमम् ।
तत्तत्कल्पनाऽतीतं तत्सुखायैव कल्पते ॥

எதெதெல்லாம் துச்சமானதாக இல்லையோ, கஷ்டமானதில்லையோ, சார்புடையதில்லையா, பேதமை கொண்டதில்லையோ, பற்பல கற்பனை கொண்டதில்லையோ அதெதெல்லாம் சுகத்தையளிப்பவையே.

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம்

गीतोपदेशगुरु पत्नि कृतागसो मे
गोप्त्री त्वमेव भवतात् भवताप भाजः ।
आत्मावनेपि अकुशलैः अपरैः सुरैः किं
बद्धः स्वयं किमु विमोचयिता बतान्यम् ॥

கீதோபதேஶகுரு பத்நி க்ருதாகஸோ மே
கோப்த்ரீ த்வமேவ பவதாத் பவதாப பாஜ: ।
ஆத்மாவநேபி அகுஶலை: அபரை: ஸுரை: கிம்
பத்த: ஸ்வயம் கிமு விமோசயிதா பதாந்யம் ॥

கீதோபதேச குரு = **கீதையை உபதேஶம் செய்ததால் ஆசார்யன் ஆகிய கண்ணனின்**
பத்நி = **மனைவியே**
க்ருதாகஸ: = **பல பாபங்களைச் செய்தவனும்**
பவதாப பாஜ: = **ஸம்ஸாரமென்னும் வெப்பத்தை அடைத்துள்ளவனுமான**
மே = **என்னை**
கோப்த்ரீ = **காப்பவளாக**
த்வமேவ பவிதா = **நீயே ஆவாயாக**
ஆத்மாவநேபி = **தம்மைக் காப்பாற்றிக்கொள்ளவதற்கு**
அகுசலை: = **திறமையற்ற**
அபரை: ஸுரை: = **நான்முகன் முதலாய தேவர்களால்**
கிம் = **என்ன பயன் கிட்டும்?**
ஸ்வயம் பத்த: = **கட்டுண்டு கிடக்கும் ஒருவன்**
அந்யம் = **கட்டுண்ட பிறனை**
கிமுவிமோசயிதா பத = **விடுவிக்கவல்லவனோ? ஆச்சர்யம்**

பிற தெய்வங்களைத் தொழாது என் ஒருவனையே தொழுபவர்களை நான் எல்லா பாபங்களினின்றும் விடுவித்துக் காப்பேன் என்று அர்ஜுனனுக்கு ஸர்வ தர்மான் என்பதால் உபதேசித்தானல்லவா கண்ணன். அவன் சொன்ன சொல் அவன் மனைவியான உன்னையும் சார்ந்ததல்லவா? எனவே பாபியாய் ஸம்ஸாரமென்னும்

வெம்மையால் துன்பமடைந்த என்னை நீயே காக்க வேண்டும். காப்பவர் வேறெவருமிலர். இந்திரன் முதல் நான்முகக் கடவுளாகவுள்ள தேவரனைவரும் என்போல் கட்டுண்டு கிடப்பவரே. அவர் செய்த நன்மையால் சற்று மேன்மை பெற்றுள்ளனரேயன்றி ஸம்ஸாரிகள் என்பதில் எனக்கும் அவர்களுக்கும் வாசியில்லையே. தமது தளையை விடுவித்துக் கொள்ளவியலாது தாமே கட்டுண்டுள்ள அவர்களால் எனது தளையை எப்படி விடுவிக்க முடியும்? கைகால்கள் கட்டப்பட்டு கிடப்பவன் அத்தகைய பிறரை எப்படி விடுவிக்கமுடியும் அக்கட்டிலிருந்து?

—★—

कर्माहृतिः मतिरुपास्तिरिति प्रतीतैः
मुक्तो मुरान्तक विलासिनि मुक्त्युपायैः ।
अस्मादृशस्तव जगत्यनुकम्पनीयो
नानापराध निधिरम्ब न लभ्यतेऽन्यः ॥ ७

கர்மாஹ்ருதி: மதிருபாஸ்திரிதி ப்ரதீதை:
முக்தோ முராந்தக விலாஸிநி முக்த்யுபாயை: ।
அஸ்மாத்ருஶஸ்தவ ஜக்த்யநுகம்பநீயோ
நாநாபராத நிதிரம்ப ந லப்யதே-ந்ய: ॥ 7

முராந்தக விலாஸிநி = **நாராயணன் மனைவியான**

அம்ப = **தாயே**

கர்மாஹ்ருதி: = **வேதத்தால் விதிக்கப்பட்டதைச்செய்தல் என்னும் கர்மயோகம்**

மதி: = **ஜ்ஞாநயோகம்**

உபாஸ்தி: = **பக்தியோகம்**

இதி ப்ரதீதை: = **என்று வேதாந்தங்களில் ப்ரஸித்தமாயுள்ள**

முக்த்யுபாயை: = **மோக்ஷத்துக்கு வழி வகுப்பவைகளின்றும்**

அநுகம்பநீய: = **தேவரீர் தயை ஒன்றினால் மட்டும் மோக்ஷம் அடைவிப்பிக்க வேண்டியவனுமான**

அஸ்மாத்ருஶ: = **என் போன்ற**

அந்ய: = **பிறனொருவன்**

தவ = **உமக்கு**

ஜகதி = **இவ்வுலகில்**

ந லப்யதே = **கிடைக்கமாட்டான்.**

மோக்ஷத்தை அடைவதற்கு கர்ம யோகம் ஜ்ஞாந யோகம், பக்தியோகம் என மூன்று உபாயங்கள் - வழிகள் - வேதாந்தத்தில் ப்ரஸித்தி பெற்றவையாயுள்ளன. ஜீவாத்மா பரமாத்மாவுக்கு அடிமை, பரமாத்மாதான் தலைவன்; என்று வேதாந்தத்திலோதப்பட்ட சேஷ சேஷிபாவ ஜ்ஞானத்துடன் வேதத்தில் விதித்துள்ள நித்ய நைமித்திக கர்மாக்களை அவற்றுக்குரிய பலனை எதிர்பார்க்காமல் பகவானுடைய ப்ரீதிக்காகவே அவற்றைச் செய்தல் கர்மயோகமாம். இப்படிச் செய்வதால் மனம் தெளிவடைந்து அதை அடக்கியாளுவதற்கு வேண்டிய திறமை கிடைக்கும். பின் பரிசுத்த ஜீவாத்மாவை ஐம்பொறிகளை அடக்கி த்யானம் செய்ய வேண்டும். இது ஜ்ஞான யோகம் எனப்படும். இதனால் ஜீவாத்மாவைக் கண்ட பின் பரமாத்மாவை த்யானிக்க வேண்டும். இதுவே பக்தி யோகமாம். இந்த பக்தி யோகத்தால் பரமாத்மாவைக் காண முடியும். சாஸ்த்ர ஜ்ஞானமும் வேதாந்த ஜ்ஞானமும் அடியேனுக்கின்மையால் கர்ம யோகம் செய்யத் தகுதியற்றவனாயுள்ளேன். கர்ம யோகம் கை கூடிய பின்னன்றோ ஜ்ஞான யோகத்தைச் செய்ய வேண்டும்? முதலதே இல்லாத போது மற்றைய இரண்டுக்கும் வழியேது? மேலும் அளவில்லா குற்றங்களைச் செய்து மஹா பாபியாயுமுள்ளேன். எனவே உமது தயை ஒன்றாலேயே மோக்ஷம் அடைவிப்பிக்க வேண்டியவனடியேன். உலகில் என்னைப் போன்ற பிறனொருவன் கிடைக்கவே மாட்டான். ஆகவே உம்மைத் தஞ்சம் புகுந்த என்மீது தயை கூர்ந்து என்னை மோக்ஷத்தில் சேர்ப்பிப்பீராக. அப்படிச் சேர்ப்பிக்காவிடில் பிறர் மீது இரக்கங்கொண்டு அவரைக் காப்பதையே, தமது உயிராகக் கொண்ட உமது தயை உயிரற்று மாய்ந்து போம்.

—★—

पापोत्थ कोप कलुषीकृत नाथचेतः
पाथः प्रसादनविधौ कतकायितोक्तिम् ।
योहं भवामि स भवन्यदुनाथ योषे
तं त्वामनन्यशरणः शरणं प्रपद्ये ॥ ८

பாபோத்த கோப கலுஷீக்ருத நாதசேத:
பாத: ப்ரஸாதநவிதௌ கதகாயிதோக்திம் ।
யோஹம் பவாமி ஸ பவந் யதுநாத யோஷே
தம் த்வா மநநந்யஶரண: ஶரணம் ப்ரபத்யே ॥

யதுநாதயோஷே - **கண்ணனின் மனைவியே!**

பாப - **பகவதபசாரம் பாகவதாபசாரம் முதலிய பல குற்றங்களால்**

உத்த = **உண்டான**

கோப = **கோபத்தால்**

கலுஷீக்ருத = **கலக்கமடைந்த**

நாதசேத: = **நாராயணன் மனமாகிய**

பாத: = **கலத்தை**

ப்ரஸாதநவிதௌ = **தெளிவிப்பதில்**

கதகாயித = **தேத்தான் கொட்டை போன்ற**

உக்திம் = **பேச்சையுடைய**

தம் த்வாம் - **மிக்க பெருமையை உடைய உன்னை**

அஹம் - **நான்**

அநந்ய சரண: - **வேறு காப்பவர் அறவனாய்**

யோஹம் பவாமி ஸ பவந் = **இப்போது எந்நிலையிலுள்ளேனோ அதே நிலையிலேயே**

ஶரணம் ப்ரபத்யே = **சரணமாகப் பற்றுகிறேன்.**

தாயே உனது கணவனான நாராயணன் மனம் அப்பழுக்கற்றுத் தெளிந்து தூயதாய மணலூற்று நீர் போன்றது. அத்தகைய மனமும் நான் செய்த பகவதபசார பாகவதாபசாரங்கள் போன்ற எண்ணற்ற கொடுமைகளால் மிகக் கலங்கிவிட்டது. அதைத் தெளிவித்தேயாக வேண்டும். உலகில் கலங்கிய நீரைத் தெளிவிக்க தேத்தாங்கொட்டை என்ற விதையை அரைத்து அவ்விழுதைத் தண்ணீரில் கலப்பர். அந்நீர் உடன் தெளிவதோடு மிக்க இனிமையாயுமிருக்கும். கலங்கிய நாராயணன் மனமாம் நீருக்கு உமது பேச்சு தேத்தாங்கொட்டை போன்றது. வேறு

காப்பவரற்றவனான அடியேன் இத்தகைய பெருமை வாய்ந்த தேவரீரை அவன் மனக்கலக்கத்தைப் போக்க வேண்டிச் சரணம் புகுகிறேன். தாம் செய்த பாபத்தைப் போக்க ஒரு சிலர் செய்யும் ஸேது ஸ்நாநம் போன்ற ப்ராயச்சித்தம் செய்யாமல், நல்லவனோ, தீயவனோ இப்போது எந்நிலையிலுள்ளேனோ அந்நிலையிலேயே தஞ்சம் புகுகிறேன். சரணாகதிக்கு அசைக்கமுடியாத நம்பிக்கையாம் - மஹாவிச்வாஸம் இன்றியமையாதன்றோ ! அது உளது. ப்ராயச்சித்தம் செய்யப் புகின் கால தாமதம் நேருமன்றோ ! அதைப் பொறாத அடியேன் உன்னை இப்போதே அடைக்கலமாகப் பற்றுகிறேன்.

—★—

निरतिशयविभूतेः देवि निष्किंचनोहं
भवदव परितप्तो भास्वरानन्द मूर्तेः ।
त्वदुपजनित बोधः त्वज्जुषः कैटभारेः
चरण नलिनयोर्मां तत्स्वमेवार्पयामि ॥ ९

நிரதிஶயவிபூதே: தேவி நிஷ்கஞ்சநோஹம்
பவதவ பரிதப்தோ பாஸ்வராநந்த மூர்தே: ।
த்வதுபஜநித போத: த்வஜ்ஜுஷ: கைடபாரை:
சரண நலிநயோர்மாம் தத்ஸ்வமேவார்பயாமி ॥ 9

ஹே தேவி = நாராயணன் மனைவியே

த்வதுபஜநித = உன்னால் உண்டு பண்ணப்பட்ட

போத: = சரணாகதிக்கு வேண்டிய அறிவையுடையவனும்

நிஷ்கிஞ்சந: = கைம்முதலற்றமை என்ற ப்ரபத்திக்கு வேண்டிய உறுப்பை உடையவனும்

பவதப = ஸம்ஸாரமாகிய காட்டுத் தீயால்

பரிதப்த: = மிகவும் துன்பமடைந்தமையால் மோக்ஷத்தில் விருப்பமுள்ளவனுமான அடியேன்

நிரதிசய = ஒப்பற்ற

விபூதே: = நித்ய விபூதி லீலாவிபூதி என்ற செல்வங்களை உடையவனும்

பாஸ்வர = கண்ணைப் பறிக்கும் ஒளிமிக்கதும்

ஆநந்தமூர்த்தே: = ஆநந்தமயமானது மான உருவத்தை யுடையவனுமான

கைடபாரே: = திருவேங்கடமுடையானது

சரணநலிநயோ: = திருவடித் தாமரைகளில்

தத்ஸ்வம் ஏவ = அவனது சொத்தான

மாம் = என்னை

அர்பயாமி = ஸமர்ப்பிக்கிறேன்.

—★—

महति भवती मामार्याणां कुले समजीजनत्
भवपथ श्रान्तः छायातरून् अनयद्गुरून् ।
शरणवरणं सांगं शौरौ अचीकरदिन्दिरे
किमिह बहुना संकीर्णो मे चिरेण मनोरथः ॥ १०

மஹதி பவதீ மாமார்யாணும் குலே ஸமஜீஜநத்
பவபத ச்ராந்த: சாயாதருந் அநயத்குருந் ।
ஶரணவரணம் ஸாங்கம் ஶௌரௌ அசீகரதிந்திரே
கிமிஹ பஹுநா ஸங்கீர்ணோ மே சிரேண மநோரத: ॥10

இந்திரே = இலக்குமியே

பவதீ = இந்நூலால் புகழப் பட்ட நீ

மாம் = அடியேனை

ஆர்யாணாம் = ஆசார்யர்களாக ஏற்கத் தகுதிபெற்ற

மஹதி குலே = உயர்ந்த குலத்தில்

ஸமஜீஜநத் = தோன்றுவித்தாய்

பவபத = ஸம்ஸாரமாம் நடைபாதையில்

ச்ராந்த = நடந்து நடந்து களைப்படைந்தவர்களுக்கு

சாயாதருன் = அக்களைப்பைப் போக்கத் தக்க நிழலுள்ள மரம் போன்ற

குருந் = ஆசார்யர்களை

அநயத் = சேர்த்துவைத்தாய்

ஶௌரௌ = ஸ்ரீமந் நாராயணனிடத்தில்

ஸாங்கம் = ஐந்து அங்கங்களுடன் கூடிய

ஶரணவரணம் = ப்ரபத்தியை

அசீகரத் = ஆசார்யர் மூலமாகச் செய்துவித்தாய்

கிமிஹ பஹுநா = பலவாறு பேசி

சிரேண = வெகு காலம் நான் எதிர் பார்த்த

மநோரத: ஸங்கீர்ண: = எண்ணங்கள் முடிவுற்றன.

ஜகந்மாதா தமக்குச் செய்த அனைத்து உதவிகளையும் கவி நினைவு கூறுகின்றாரிதில் ! அனைவர் மதிப்புக்கும்

உரியவர்களும், நல்லறிவும் நல்லொழுக்கமும், மிக்கவர்களும், ஆசார்யனாக ஏற்கத் தக்க தகுதிவாய்ந்தவர்களுமான பலரைப் பெற்ற உயர்ந்த குலத்தில் எனக்குப் பிறப்பையளித்தாய். ஸம்ஸாரமாம் வெயில் மிக்க பாதையில் திரிந்து உழன்றவெனக்கு அத்துன்பத்தைப் போக்கும் தன்மையுடைய ஆலமரம் போன்ற ஆசார்யன் தொடர்பை உண்டாக்கி, அவர் மூலமாக உங்கள் திருவடிகளில் சரணாகதி பண்ணுவைத்தாய். இதன் மேன்மை என்னென்பது ! இதனின்றும் வேறென்ன வேண்டும்? பல பேசி என்? வெகு நாட்களாக நான் எதிர்பார்த்திருந்த எனது எண்ணங்கள் யாவும் முடிந்தன.

॥ श्रीः ॥

பரஹுகதி ஸ்தபக:

हृद्यं पद्य सहस्रमेतदनघं संशृण्वतः कम्पतां
मोदेनादिम शाब्दिकस्य फणिनः मूर्ध्नां सहस्रं मुहुः ।
तत्कालोदित चारुमारुत धुतत्वत्केलि गाढ श्रमं
प्रत्नं सम्प्रति मे प्रसीदतु रमे पक्षीन्द्र वाहं महः ॥

ஹ்ருத்யம் பத்ய ஸஹஸ்ரமேததநகம் ஸம்ஶ்ருண்வத: கம்பதாம்
மோதேநாதிம ஶாப்திகஸ்ய பணிந: மூர்த்நாம் ஸஹஸ்ரம் முஹு: ।
தத்காலோதித சாருமாருத துத த்வத்கேலி காட ஶ்ரமம்
ப்ரத்நம் ஸம்ப்ரதி மே ப்ரஸீதது ரமே பக்ஷீந்த்ர வாஹம் மஹ: ॥

ரமே = லக்ஷ்மீ!
ஹ்ருத்யம் = மனதைக் கவர்வதும்
அநகம் = காவியக் குற்றங்கள் இல்லாமலிருப்பது மாகிய
பத்ய ஸஹஸ்ரம் ஏதத் = ஆயிரம் பாடலான இந்நூலை
ஸம்ஶ்ருண்வத: = கேட்டுக்கொண்டிருந்த
ஆதிமஶாப்திகஸ்ய = வடமொழிக்கு முதலில் இலக்கணம் வகுத்தவரான
பணிந: = ஆதி சேஷனுடைய
மூர்த்நாம் ஸஹஸ்ரம் = ஆயிரம் தலைகளும்
முஹு: = அடிக்கடி
மோதேந கம்பதாம் = ஆனந்தமிகுதியால் ஆடட்டும்
ப்ரத்நம் = முதலிடைகடையற்றதும்
பக்ஷீந்த்ர வாஹம் = கருடனை வாஹனமாகக் கொண்டதுமான
மஹ: -தேஜஸ்ஸானது
தத் கால = தலைகளை ஆட்டும் காலத்தில்
உதித = உண்டான
சாருமாருத = இனிய காற்றால்
துத = போக்கப்பட்ட
த்வத்கேலி = உன்னுடன் விளையாடியதால் உண்டான
காட ஶ்ரமம் = ஶ்ரமத்தை உடையதாய்
ஸம்ப்ரதி - இப்போது
மே = எனக்கு
ப்ரஸீதது = ப்ரஸந்நமாகட்டும்

குறைக் கூறல் மிகுபடக் கூறல், கூறியது கூறல், முதலிய காப்பியக் குற்றங்களற்றதும், சொற்கவை, பொருட் கவை, அணியழகு, உள்ளுறை பொருள் முதலாய காப்பியச் சுவைகளைப் பெற்றதும் அடியேனால் இயற்றப் பெற்றதும், படிப்பவர் கேட்பவர் மனதைக் கவரத் தக்கதுமான இக்காப்பியத்தை அடியேன் ஸ்ரீமந்

நாராயணனிடம் விஜ்ஞாபிக்கும் போது அந்நாராயணனுடைய படுக்கையாய் அருகிலேயே இருப்பவரும், மிக்க கவனத்துடன் கேட்பவரும், ''பதஞ்ஜலி'' என்ற பெயருடன் இவ்வுலகில் பிறந்து ''மஹாபாஷ்யம்'' என்ற நூலை இயற்றி வடமொழி இலக்கணத்தை முதன் முறையாக உலகத்தில் பரவச் செய்தவரும் ஆயிரம் தலைகளை உடையவருமான ஆதிசேஷன் தமது தலைகளிலுள்ள ரத்தினங்களால் ஒலிமிக்க ஆயிரம் தலைகளையும் இக்காப்பியத்தைக் கேட்ட ஆனந்த மிகுதியால் அடிக்கடி ஆட்டட்டும். அப்படி ஆட்டும் போது தோன்றிய காற்றால், உன்னுடன் விளையாடியதால் தோன்றிய நாராயணன் உடல் வாட்டம் தீரட்டும். அதன்பின் மகிழ்ந்த மனம் உடைய நாராயணன் இவ்வுலக இன்பத்தையும் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தையும் அடியேனுக்கு அருளட்டும் என வேண்டுகின்றார்.

येयं नाद्रियते कृतिः कतिपयैः ईर्ष्या गृहीतैर्जनैः
चित्रं सैव विपश्चितामकलुषे चित्ते विधत्ते पदम् ।
विश्वस्यांब मनोदुनोति दयिता विश्लेषिणां या नृणां
नो किं कोकिल काकलीभवति सा तोषाय योषा जुषाम् ॥

யேயம் நாத்ரியதே க்ருதி: கதிபயை: ஈர்ஷ்யா க்ருஹீதைர் ஜநை:
சித்ரம் ஸைவ விபஸ்சிதாமகலுஷே சித்தே விதத்தேபதம் ।
விஸ்வஸ்யாம்ப மநோ துநோதி தயிதா விஸ்லேஷிணாம் யா ந்ருணாம்
நோ கிம் கோகில காகலீபவதி ஸா தோஷாய யோஷா ஜுஷாம் ॥

விச்வஸ்ய அம்ப = உலகத்தாயே
யா இயம் க்ருதி: = எனது இந்நூல்
ஈர்ஷ்யா க்ருஹீதை: = அசூயை பொறாமை முதலிய குற்றம் பொருந்திய
கதிபயை: = சில
ஜநை: = மக்களால்
நாத்ரியதே = ஆதரிக்கப்படவில்லை.
ஸைவ = இந்நூலே
அகலுஷே = எக்குற்றமுமில்லாத
விபஸ்சிதாம் = எல்லாம் வல்ல அறிவுடையாருடைய
சித்தே = மனதில்
பதம் = இருப்பை
விதத்தே = பெறுகின்றது.

சித்ரம் = இது மிக்க வியப்புக்குரியது.
யா கோகில காகலீ = கோகிலத்தின் எந்த இனிய மதுரத்தொனி
தயிதா விச்லேஷிணாம் த்ருணாம் மந: = மனைவியைப் பிரிந்தார் மனதை
துநோதி = வாட்டுகின்றதோ
ஸா = அதே தொனி
யோஷாஜுஷாம் = மனைவியுடன் சேர்ந்து வாழ்பவர்களுக்கு
தோஷாய = மகிழ்ச்சிக்கு உரியதாக
தோ பவதி கிம் = ஆகவில்லையா என்ன?

மிகவுயர்ந்த நுண்மாண் நுழைபுலம் மிக்கவரால் போற்றத்தக்க இக்காப்பியத்தை புல்லறிவினர் சிலர் கைக்கொள்ளவில்லையாவது குற்றமாகாதென இனியதொரு எடுத்துக் காட்டால் ஸமர்த்திக்கின்றார். தாயே எனது இந்த நூலைப் படித்துப் புரிந்துகொள்வதற்கு வேண்டிய அறிவற்றவரும் பொறாமை பொச்சரிப்பு முதலிய குற்றம் படைத்தவரும் ஆதரிக்க வில்லையேல் அதில் வியப்பில்லை. அது இயல்பே. ஏனெனில் அது இந்நூலைக் கற்றுத் துறை போகியவர் சிரமேற்கொண்டு கொண்டாடுகின்றனரே.

இனிய வஸந்த காலத்தில் ''பஞ்சமம்'' என்ற உயர்ந்த ஓசையில் குயில் இனிமையாகக் கூவுகிறது. இவ்வோசை தலைவியை விட்டுப் பிரிந்து வாழ்பவனை வாட்டுகிறது. மனைவியோடு வாழ்பவனுக்கு மனமகிழ்ச்சியை வளர்க்கிறது. இதில் குயிலின் மீதா குறை. அறிவின்மையும் அறிவுடைமையு மன்றோ காரணம், மனைவி போலாம் நல்லறிவு அற்றவர் துன்புறுகின்றனர். அவளாம் நல்லறிவுடையோர் மகிழ்கின்றனர்.

தலைவியைப் பிரிந்தவருக்கு குயிலினோசை துன்பம் தருவதாகக் கூறுவது கவி மரபு.

अम्ब त्वद्गुणलेश पेशलमिदं डिम्भस्य मे जल्पितं
साकं लोक पतिस्त्वया निशमयन् नाकं विधातुः पदम्।
मोक्षं चाननुरूपमेव गणयन् मोदान्महौदार्यवान्
मन्ये संप्रति पारितोषिकमसावन्वेषते यं हरिः ॥

அம்ப த்வத்குணலேஶ பேஶலமிதம் டிம்பஸ்ய மே ஜல்பிதம்
ஸாகம் லோக பதிஸ்த்வயா நிஶமயந் நாகம் விதாது: பதம் ।
மோக்ஷம் சாநநுரூபமேவ கணயந் மோதாந்மஹௌதார்யவாந்
மந்யே ஸம்ப்ரதி பாரிதோஷிகமஸா வந்வேஷதே யம் ஹரி: ॥ (13)

इत्यात्रेय वेङ्कटार्य कृतिषु लक्ष्मीसहस्रे शरणागति स्तबकः

ग्रन्थश्च समाप्तः

*

அம்ப = தாயே !
மஹௌதார்யவாந் = வள்ளல் தன்மையுடையவனும்
லோகப்தி: = அனைத்துலகங்களுக்கும் தலைவனுமான
அயமஸௌ = கண் கூடாகக் காணப்படும்
த்வத்குண லேசபேசலம் = கணக்கிலடங்கா உனது குணக் கடலின் சிறிய தொடர்பால் மதுரமானதும்
டிம்பஸ்ய = பேசும் தகுதி பெறாத சிறு குழந்தை போன்ற
மே = என்னுடையதுமான
ஜல்பிதம் = பொருளற்ற பேச்சை
த்வயா ஸாகம் = உன்னுடன் சேர்ந்து
நிசமயந் = கேட்பவராய்
நாகம் = சுவர்கத்தையும்
விதாது: = நான்முகனுடைய
பதம் = பதவியையும்
மோக்ஷம் ச = மிகவுயர்ந்த மோக்ஷ ஸாம்ராஜ்யத்தையும் கொடுத்தாலும்
அநநுருபமேவ கணயந் = ஈடு ஆகாது என எண்ணினவனாய்
ஸம்ப்ரதி = தற்போது
மோதாந் = மகிழ்வால்
பாரிதோஷிகம் = இதற்கீடான வெகுமதியை
அந்வேஷதே = தேடுகிறுன் என்று
மந்யே = எண்ணுகிறேன்.

தாயே ! நான் உனது சிறு குழந்தை ஸரியாகப் பேசும் தகுதி வாய்க்கப் பெறாதவன். ஏதோ என் வாய்க்கு வந்தபடி உன்னைப் பற்றிப் பிதற்றினேன். இதை உனது கணவன் உன்னுடன் சேர்ந்து கேட்டான். அதனால் அவன் மிக மகிழ்ச்சியடைந்தான் போலும். தமது மக்கள் மழலையினும் பெற்றோர் மனதைக் கவரத் தக்கது பிறிதொன்றில்லையல்லவா? ''குழல் இனிது யாழ் இனிதென்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்'' என்பதல்லவா திருக்குறள். இங்ஙனம் பேசிய எனது பேச்சுக்கு ஈடாக எதேனும் வெகுமதி தரவெண்ணினான்.

முதலில் சுவர்கம் தரலாமா என எண்ணினான். அது இதற்கு ஈடாகாது என எண்ணினான். பின் அதனினு முயர்ந்த நான்முகவுலக இன்பத்தைத் தரலாம் என எண்ணியிருப்பன். அதுவும் போதாது எனத் தோன்றியிருக்கும்; ஸரி, எல்லாவற்றினுமுயர்ந்த மோக்ஷத்தையே கொடுக்கலாமே என எண்ணியிருப்பன்; இம்மூன்றுமே ஒரு சேரக் கொடுத்தாலும் ஈடாகாது என எண்ணி என்ன இதற்குச் சமமானது இருக்கிறதென யோசனை செய்கின்றான் போலும். எனவேதான் வாய்திறவாது இதோ நின்று கொண்டிருக்கின்றான் எனக் கவி கற்பனை செய்கின்றார்.

கோயில், சப்தம், வங்கீபுரம், வீராபுரம் சடகோபாசார்யர் இயற்றிய ரத்ந ப்ரபா என்னுமுரையில் ஶரணாகதி ஸ்தபகம் முடிவடைந்தது.

ஸ்ரீ லக்ஷ்மீ ஸஹஸ்ரம் நூலும் முடிவுற்றது.

(குறிப்பு-- இன்னும் 5 ச்லோகங்கள் உண்டு. அவை ஏற்கனவே அச்சிடப்பட்டு ஸ்ரீ நாவல்பாக்கம் யஜ்வும் ஸ்வாமியின் உரையுடன் பூர்த்தி செய்யப் பட்டுள்ளது. இந்த உரை ஆசிரியர் இத்துடனேயே முடித்து விட்டார் என அறிக. -- ஸம்பாதகர்)